விசுவாசிகளின்

# வேதாகம விளக்கவுரை

## புதிய ஏற்பாடு

இரண்டாம் பகுதி

அப்போஸ்தலர் முதல்
கொலோசெயர் வரை

விசுவாசிகளின்

# வேதாகம விளக்கவுரை

## புதிய ஏற்பாடு

இரண்டாம் பகுதி

அப்போஸ்தலர் முதல்
கொலோசெயர் வரை


**வில்லியம் மெக்டொனால்டு**

பதிப்பாசிரியர் ஆர்தர் ஃபார்ஸ்டட்

தமிழாக்கம்
இரா. மாணிக்கவாசகம்



மோரியா
ஊழியங்கள்

Library of Congress Cataloging - in - Publication Data
**விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை**
**புதிய ஏற்பாடு இரண்டாம் பகுதி**
**அப்போஸ்தலர் முதல் கொலோசெயர் வரை**
*ஆசிரியர் :* **வில்லியம் மெக்டொனால்டு**
*தமிழாக்கம் :* **இரா. மாணிக்கவாசகம்**
*பதிப்பு எண் 57*
*முதல் பதிப்பு 2013*
ISBN 978-93-81016-37-2
*விலை ரூபாய் 585*

*இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூரு வெளியிட்டுள்ள*
*தமிழ் பவர் மொழிபெயர்ப்பு* (Tamil O.V)
*இவ்விரிவுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*இந்நூல் காப்புரிமை பெற்றது. மதிப்புரைக்காகவும் ஆய்வுக்காகவும் மட்டுமே இந்நூலின் பகுதிகளைப் பயன்படுத்தலாம். இந்நூலினை நகல் எடுப்பதும், வேறு தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இதன் உள்ளடக்கத்தைச் சேமித்து வைப்பதும், ஊடக மாற்றம் செய்வதும் தடைசெய்யப்படுகிறது.*

**Believer's Bible Commentary in Tamil N.T. Part 2**
**Acts to Colossians**
**© William MacDonald 2013**
Publication No. 57/2013
ISBN 978-93-81016-37-2
Price Rs. 585/-

*All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any other means - electronic, mechanical, photocopy, recording or otherwise - without prior permission of the publisher except for brief quotations in critical reviews or articles.*

*Published by*

**Moriah Ministries**
Post Box No. 2540,
57/51, East Park Road,
Shenoy Nagar, Chennai,
India - 600 030.

**Moriah Ministries**
C/o Bethany Gospel Hall
16, North St., Mannarpuram,
Tiruchirapalli,
India - 620 020 .

moriahministries@gmail.com
Phone: 91-044-2664 5010

*Typeset & Cover Design: Moriah Ministries.*

# பதிப்பகத்தார் உரை

ஆண்டவரும் ஈடேற்றாளருமாகிய இயேசு கிறிஸ்துவின் புகழ்ச்சியை முன்னிட்டு அரும் தொண்டாற்றிய திருவாளர் வில்லியம் மெக்டொனால்டு இயற்றிய **"விசுவாசிகளின் வேதாகம விளக்கவுரை"** இரண்டு உன்னத நோக்கங்களைக் கொண்டுள்ளது.

முதலாவது, பற்றுடைய கிறிஸ்தவப் பெருமக்கள், தங்களுடைய உள்ளங்களில் திருமறையின்மீது ஆழ்ந்த அன்பும் இடைவிடாத விருப்பமும் கொண்டவர்களாகவும், ஆங்கு புதைந்துள்ள அரிய முத்துக்களைத் தேடி எடுக்கக்கூடிய நாட்டத்தைப் பெற்றவர்களாகவும் விளங்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது, திருமறையின் நாயகராகிய கிறிஸ்துவின் தொண்டர்கள் முறையான சீடத்துவப் பயிற்சியைப் பெற்று, நிறைவான மனிதராக வாழ்வதற்குரிய ஆக்கக்கூறுகளை ஏற்று, தங்களுடைய வாழ்க்கையில் முழுமுதல்வராகிய கிறிஸ்துவை வாழ்ந்துகாட்ட வேண்டும் என்பதாகும். இவ்விரண்டு நோக்கங்களையும் சீர்பொருந்திய வகையில் இவ்விளக்கவுரை தன்னகத்தே கொண்டுள்ளது என்போமாகில், அது மிகையாகாது.

திருமறைக்கான விளக்கவுரையின் தேவையை நாம் மறுக்க முடியாது. பல்வேறு கருத்து வேறுபாடுகளும், கள்ள போதனைகளும் மிகுந்துள்ள இக்காலகட்டத்தில் திருமறைக் கோட்பாடுகளை நன்கு அறிவதற்கும், உள்ளங்களில் எழுகிற ஐயங்களை அகற்றுவதற்கும் தவறற்ற தெளிவான விளக்கவுரை இன்றியமையாததாகும். அவ்வகையில் இவ்விளக்கவுரை தமிழ்க் கிறிஸ்தவ மக்களுக்கு அரியதொரு செல்வமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

திருமறையின் முதன்மையைக் குறித்து இவ்விரிவுரை ஆசிரியர் கூறிய கருத்து:

> "திருமறைக்கு எழுதப்பட்டுள்ள அனைத்து விளக்கவுரைகளையும்விட திரு வசனமே முதன்மையான இடத்தைப் பெறுகிறது. அது தூய ஆவியானவரால் நம் உள்ளத்தில் சுடர்விட வேண்டும். அதுவின்றி வாழ்வில்லை, தூய்மை இல்லை, ஆண்டவர் ஏற்கும் ஊழியமுமில்லை. அதனையே நாம் வாசிக்க வேண்டும், படிக்கவும் மனனம் செய்யவும் வேண்டும், ஆழ்ந்து தியானிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். மெய்யான ஆன்மீக வாழ்க்கைக்கும் அறிவுக்கும் கீழ்ப்படிதலே தகும்"

இந்நூலாசிரியர் திருமறை நூல்கள் அனைத்திற்கும் செறிவுமிக்க வகையில் விளக்க உரையை எழுதி வழங்கியுள்ளார். ஆயினும் இவ்விளக்கவுரை முழுவதையும் தமிழாக்கம் செய்து ஒருங்கே வழங்குவது எங்களுடைய ஆற்றலுக்கு மேற்பட்ட செயல் என்று நாங்கள் எண்ணியவர்களாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன் நான்கு நற்செய்தி நூல்களுக்கான விளக்கவுரையை முதல் பாகமாக வெளியிட்டோம். அதனைத் தொடர்ந்து இப்பொழுது அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் தொடங்கி கொலோசெயருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய மடல் வரையுள்ள நூல்களுக்கான விளக்கவுரையை வெளியிடுகிறோம். இதன் மூன்றாம் பகுதியும் விரைவில் வெளிவரும். இம்முயற்சியை எழுத்தின் முதல்வராகிய இறைமைந்தன் ஆசிர்வதிக்க இறைஞ்சுகிறோம்.

**குறிப்பு:** இவ்விளக்கவுரையில் தடித்த எழுத்துக்களில் காணப்படும் சொற்களும் சொற்றொடர்களும் அந்தந்த வேத வசனங்களின் பகுதிகளாகும்.

இவ்விளக்கவுரைக்கான பதிப்பாசிரியர் உரையை முதல் பாகத்தில் காண்க.

# பொருளடக்கம்


பதிப்பகத்தார் உரை v

அப்போஸ்தலர் நடபடிகள் 1

அப்போஸ்தலனாகிய பவுல்

ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம் 153

கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் 269

கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம் 381

காலத்தியருக்கு எழுதின நிருபம் 469

எபேசியருக்கு எழுதின நிருபம் 517

பிலிப்பியருக்கு எழுதின நிருபம் 605

கொலோசெயருக்கு எழுதின நிருபம் 649


## ஆய்வுக்கட்டுரைகளின் பட்டியல்


அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் காணப்படும் மன்றாட்டுகள் 11

வீட்டு சபைகளும் சபைக்கு இணை நிறுவனங்களும் 25

கிறிஸ்தவமும் அரசாங்கமும் 41

விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைக் குறித்த விளக்கம் 54

திருச்சபையின் பொது அங்கத்தினர் சார்புடைய ஊழியம் 57

திருப்பணியாற்றும் கலைத்திறன் 83

உள்ளூர் சபையின் தன்னாட்சி 90

தெய்வீக வழிநடத்துதல் 93

அற்புதச் செயல்கள் 95

மரபு ஒழுங்குகளுக்குப் புறம்பான சமயச்சொற்பொழிவு மேடைகள் 103

அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் செய்தி 142

சந்திக்கப்படா புறச்சமயத்தினர் 165

பாவத்தைக் குறித்த விளக்கம் 178

தேவனுடைய இறையாண்மையும் மனிதனுடைய பொறுப்பும் 221

நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தும் கொள்கை 511

தெய்வீகத் தெரிந்தெடுப்பு 525

ஒப்புரவு 666

கிறிஸ்தவ இல்லம் 694

## வரைபடங்களின் பட்டியல்


அப்போஸ்தலர் நடபடிகள்- பொதுவான கண்ணோட்டம் 152
ஆதித் திருச்சபையின் வரலாறு 152
பவுலின் முதலாவது ஊழியப் பயணம் 708
பவுலின் இரண்டாவது ஊழியப் பயணம் 709
பவுலின் மூன்றாவது ஊழியப் பயணம் 710
பவுல் கைதியாக ரோமாபுரிக்கு மேற்கொண்ட பயணம் 711


## நிழற்படங்களின் பட்டியல்


பண்டைய எபேசு அரங்கம் 268
பண்டைய ரோமாபுரி அரங்கம் 268
தியானாள் கோவிலும், சிலையும் 380
கொரிந்துப் பட்டணத்து அப்பொல்லோ கோவில் 648
பண்டைய பிலிப்பி பட்டணம் 648
எருசலேம் 707
மார்ஸ்மேடை 712

# அப்போஸ்தலருடைய நடபடிகள்

## முன்னுரை

"கிறிஸ்துவே கருப்பொருளாகத் திகழ்கிறார், சபை வழியாகத் திகழ்கிறது, ஆவியானவர் அதற்கான வலிமையாக விளங்குகிறார்" – W. கிரகாம் ஸ்க்ரோஜி

### 1. வேத நூல்வரிசையில் தனிச்சிறப்புமிக்க இடம்

தூய ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்ட சபையின் வரலாற்று நூல் அப்போஸ்தலருடைய நடபடிகள் மட்டுமே ஆகும். மேலும் இது முதலாவது சபை வரலாற்று நூலாகும். விசுவாசத்தின் தொடக்க நாட்களின் வரலாற்றைத் தொகுத்துரைக்கும் முதன்மையான நூலும் இதுவேயாகும். பிற நூட்கள் யாவும் லூக்கா எழுதின இந்நூலிலிருந்து எடுத்து, சில பாரம்பரிய வழக்குகளோடு சேர்த்து எழுதியவை (பற்பல கற்பனைக் கதைகளும் அவற்றில் இடம் பெற்றுள்ளன). இந்நூல் இல்லையெனில் நாம் முற்றிலும் தடுமாற்றத்திற்குட்பட்டுவிடுவோம். நற்செய்தி நூல்களில் காணப்படும் நமது கர்த்தருடைய வாழ்க்கையிலிருந்து மடல்களை நோக்கி நேரடியாகச் செல்வது ஒரு பெரிய இடைவெளியைத் தாண்டிச் செல்வதற்கு ஒப்பாகும். அத்திரு மடல்கள் எந்தக் கூட்டத்தாருக்கு எழுதப்பட்டவை? அந்தச் சபைகள் எவ்வாறு தோன்றின? இக்கேள்விகளுக்கும் இன்னும் பல கேள்விகளுக்கும் இந்நூல் விடையளிக்கிறது. கிறிஸ்துவின் வாழ்க்கைக்கும், திருமடல்களில் கற்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்து நிறைந்த வாழ்க்கைக்கும் இந்நூல் ஒரு பாலமாக அமைந்திருப்பதோடு, யூத மார்க்கத்திற்கும் கிறிஸ்தவத்திற்கும் மற்றும் நியாயப்பிரமாணத்திற்கும் கிருபைக்கும் இடையே இடைமாறுபாட்டுக்குரிய இணைப்பாகவும் விளங்குகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலை விளக்குவதில் சிரமத்தை ஏற்படுத்தும் கூறுகளில் இந்த இடைமாற்றமே முக்கியமானதாகும். அதாவது எருசலேமைச் சுற்றியிருந்த மிகச்சிறிய யூத அமைப்பு, படிப்படியாக உலகத்தின் எல்லைகளெங்கும் விசுவாச மார்க்கமாக விரிவாக்கம் பெறுவதே இந்த இடைமாற்றம் ஆகும். அவ்வாறு அந்த மார்க்கம் உலகப்பேரரசின் தலைநகரை நோக்கிப் பீடு நடை போட்டது.

### 2. நூலாசிரியர்

லூக்கா நற்செய்தி நூல் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் ஆகிய இரண்டின் ஆசிரியரும் ஒருவரே. இதனைப் பெரும்பாலும் யாவரும் ஒப்புக்கொள்கிறார்கள். மூன்றாவது நற்செய்தி நூலின் ஆசிரியர் லூக்கா எனில், அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் ஆசிரியரும் அவரே ஆவார். இவ்வாக்கியத்தை முன்பின் மாற்றியும் கூறலாம் (லூக்கா நற்செய்தி நூலுக்கான முன்னுரையைக் காண்க).

இந்நூலை லூக்கா எழுதினார் என்பதற்கான ***புறச்சான்றுகள்*** பழைமை வாய்ந்தவை, வலிமை படைத்தவை. இது மிகவும் பரவலான கருத்தாகவும் விளங்குகிறது. மார்சியன் என்பார் லூக்காவுக்கு எழுதிய முன்னுரையும் (C. 160-180), முரடோரியன் வேதநூல் தொகுப்பும் (C. 170-200), மற்றும் தொடக்க கால சபைப் பிதாக்கள் ஐரேனியஸ், அலெக்சாந்திரியா கிளமண்ட், தெர்த்தூலியன், ஓரிஜன் யாவரும் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் ஆசிரியர் லூக்கா என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். சபை வரலாற்றில் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தவர்கள் யாவரும், குறிப்பாக யூசுபியஸ் மற்றும் ஜெரோம் என்னும் அதிகாரபூர்வமான எழுத்தாளர்களும் இக்கருத்தை ஒப்புக்கொள்கிறார்கள்.

இந்நூலின் எழுத்தாளர் லூக்கா என்பதற்கான ***அகச்சான்று,*** மூன்றத்தனையாய்க் காணப்படுகிறது. இந்நூலின் தொடக்கத்தில், ஆசிரியர் தனது முந்தைய படைப்பைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். மேலும் அவர் இந்நூலை தேயோப்பிலுவுக்குச் சமர்ப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. லூக்கா 1:1-4 ஆகிய வசனங்கள் மூன்றாவது நற்செய்தி நூலே அந்த விவரங்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இந்நூலின் மொழிநடை, கருணையுடன் கூடிய தோற்றப்பொலிவு, சொல்

லாட்சி, பாவமன்னிப்பு வலியுறுத்தப்படுல், மற்றும் பல சிறு சிறு விவரங்கள் யாவும் இரண்டு படைப்புகளுக்கிடையேயுள்ள இணக்கத்தை எடுத்துரைக்கின்றன. மற்ற மூன்று நற்செய்தி நூல்களோடு லூக்கா எழுதிய நற்செய்தி நூலையும் ஒருங்கிணைத்துக் காணுதல் தவிர்க்கப்படுமானால், இவ்விரண்டு நூல்களும் முதல் மற்றும் இரண்டு கொரிந்தியர் நூல்களைப் போன்று இணைந்து காணப்படும்.

இரண்டாவதாக, பவுல் மேற்கொண்ட பயணத்தின்போது உடன் பயணம் மேற்கொண்ட ஒருவரே அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் ஆசிரியர் என்பதை இந்நூலின் வாசகம் தெளிவுபடுத்துகிறது. இவ்வுண்மை "நாங்கள்" என்று எழுதப்பட்டுள்ள முக்கியமான பகுதிகளின் மூலமாக அறியப்படும் (16:10-17; 20:5-21:18; 27:1-28:16). இந்த நிகழ்ச்சிகளின்போது நூலாசிரியர் உடனிருந்தார் என்பது தெளிவு. இது "புனைகதை" என்று விளக்க மளிக்கும் நம்பிக்கையற்றோரின் முயற்சி வீணானதே. எழுதியவை யாவும் உண்மையானவை என்று மெய்ப்பிக்கப்படும் பொருட்டு "நாங்கள், எங்கள்" போன்ற சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்போமாகில் இத்தகைய சொற்கள் மிகக் குறைவாகவும், நேர்த்தியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதன் காரணம் என்ன? "நாங்கள்" என்னும் சொல்லுக்குள்ளாக "நான்" என்று குறிப்பிடவேண்டிய பகுதிகளில் பெயர் எதுவும் சொல்லப்படாததன் காரணம் என்ன?

இறுதியாக, பவுலுடன் பயணம் செய்த மற்ற வருடைய பெயர்கள் படர்க்கையில் சொல்லப்பட்டுள்ளன. அவர்கள் யாவரையும், மற்றும் அந்தப் பயணங்களின்போது அவருடன் இல்லாதவர்களையும் நீக்கிப் பார்க்கும்போது விடுபட்டவர் லூக்கா என்பதும், அவரே இந்நூலாசிரியர் என்பதும் மிகத் தெளிவாகப் புலப்படும்.

### 3. எழுதப்பட்ட காலம்

புதிய ஏற்பாட்டு நூல்களில், சில நூட்கள் எப்பொழுது எழுதப்பட்டவை என்பதில் முக்கியத்துவம் இல்லையெனினும், அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் எழுதப்பட்ட காலம் மிக முக்கியமானதாகும். ஏனெனில் இதுவே சபை வரலாற்று நூல், மேலும் வரலாற்று நூல்களில் இதுவே முதன்மையானது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் எழுதப்பட்ட காலத்தைக் குறித்து மூன்று விதமான கருத்துகள் முன்மொழியப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு இந்நூலை எழுதியவர் லூக்கா என்பதை ஒப்புக்கொள்வோருடைய கருத்து, பிறிதொன்று இந்நூலை எழுதியவர் லூக்கா என்பதை மறுப்போருடைய கருத்து.

1. இந்நூலின் ஆசிரியர் லூக்கா என்பதை மறுத்துரைப்போர், இந்நூல் எழுதப்பட்ட காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்று கருதுகிறார்கள். ஆனால் லூக்கா கி. பி. 80 அல்லது 85 -ஐயும் தாண்டி வாழ்ந்திருப்பார் என்பது ஐயத்திற்கிடமானது. தாராளக் கொள்கையைச் சார்ந்த சில அறிஞர்கள் இந்நூலாசிரியர், ஜோஸபஸ் எழுதிய பழங்காலத்துச் சின்னங்கள் (கி. பி. 93) என்னும் நூலிலிருந்து எடுத்து எழுதியுள்ளார் என்று கருதுகிறார்கள். தெயுதாஸ் (அப். 5:36) என்பவனைப் பற்றி இரு எழுத்தாளர்களும் எழுதியுள்ளார்கள் என்றும், அவை ஒன்றுபோல உள்ளன என்றும் அவர்கள் தங்களுடைய கருத்துக்கு ஆதாரமாகக் கூறியிருப்பதை ஒப்புக்கொள்ள முடியாது. அங்கு எந்த நிகழ்ச்சியிலும் பலத்த ஒற்றுமையைக் காணவியலாது.

2. கி. பி. 70 - 80 -க்கு இடையே அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் எழுதப்பட்டது என்று பெரும்பாலரால் கருதப்பட்டு வருகிறது. இக்கருத்து, மாற்கு நற்செய்தி நூலை லூக்கா பயன்படுத்தினார் என்னும் எண்ணத்திற்குச் சாதகமாயிருக்கிறது (பெரும்பாலும் கி. பி. 60 -க்கு மேற்பட்ட காலத்திலிருந்து).

3. அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் வரலாறு எப்பொழுது முடிவடைந்ததோ, அதற்குப் பிறகு உடனடியாக லூக்கா இதனை எழுதினார் என்னும் கருத்து வலுவான ஆதாரமுடையதாயிருக்கிறது. அதாவது, பவுல் முதல்முறை ரோமாபுரியில் சிறை வைக்கப்பட்டிருந்த தருணத்தில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கும்.

லூக்கா மூன்றாவது நூலை எழுதத் திட்டமிட்டிருந்தார் என்று எண்ணுவதற்கு இடமுண்டு (ஆனால் அதில் தேவனுடைய சித்தம் இல்லை என்பது தெளிவு). ஆகவேதான் கி. பி. 63 -க்குப் பின்னர் கி. பி. 70 -க்கு முன்னர் நடந்த பேரழிவு நிகழ்ச்சியை (கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்த நிகழ்ச்சி) அவர் இந்நூலில் எழுதவில்லை. ஆயினும் அவர் அந்த நிகழ்ச்சியைப் பற்றி எதுவும் குறிப்பிடாதது, இந்நூல் அதற்கு முன்னரே எழுதப்பட்டது என்னும் கருத்தை வலுப்படுத்துகிறது: ரோம் நகரம் தீயில் எரிந்த பிறகு நீரோ மன்னன் மூர்க்கத்தனமாகக் கிறிஸ்தவர்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகள் (64); ரோம அரசுக்கு

எதிராக யூதர்கள் போர் தொடுத்த நிகழ்ச்சி (66-70); பேதுருவும் பவுலும் தியாக மரணம் அடைந்த நிகழ்ச்சிகள் (65-75 க்கும் இடைப்பட்டது); யூதர்களும் எபிரயெக் கிறிஸ்தவர்களும் மனமுவந்து போவ தற்குக் காரணமான எருசலேம் நகர அழிவு. இவை யாவற்றையும் கருத்திற்கொண்டு காணுங்கால், பவுல் ரோமாபுரிச் சிறையில் இருந்தபோதே லூக்காஅப்போஸ்தலருடைய நடபடிகள் நூலை எழுதினார் என்று பெரும்பாலும் கணிக்கலாம் (கி.பி. 62 அல்லது கி.பி. 63).

## 4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் ஜீவனோடும் செயல்களோடும் துடிப்புடனும் விளங்குகிறது. இங்கே தூய ஆவியானவரின் செயலாக்கத்தைக் காண்கிறோம்: சபை உருவாக்கப்படுதல், சபை வல்லமை பெறுதல், அதனுடைய எல்லை கடந்த செயலில் விரிவாக்கம் அடைதல். ஆவியானவர் தமது இறையாண்மையின் மூலமாக வெற்றி வாய்ப்பற்ற மனிதர்களைக் கொண்டு, மிகவும் அஞ்சத்தக்க தடைகளை மீறி, விதிகளுக்குப் புறம்பான வழிமுறைகளைப் பயன்படுத்தி, குறிப்பிடத்தக்க விளைவுகளை உண்டுபண்ணிய உன்னதமான நிகழ்ச்சிகளை நாம் இந்நூலில் காண்கிறோம்.

நற்செய்தி நூல்களில் எங்கே விவரங்கள் முடிவடைகின்றனவோ, அங்கே இந்நூல் தொடங்குகிறது. தொடர்ந்து இந்நூல் உயிர்த் துடிப்புடன் கூடிய நிகழ்ச்சிகளின் விவரங்களின் ஊடாக நம்மை விரைவாக அழைத்துச் செல்லுகிறது. குழந்தைப் பருவத்தில் இருந்த சபையின் கொந்தளிப்பு மிகுந்த ஆண்டுகளை இந்நூல் விவரிக்கிறது. குறுகிய காலத்தில் பெரும் மாற்றங்கள் உண்டான நாட்களின் விவரங்களை இந்நூல் எடுத்துரைக்கிறது. அந்தக் காலத்தின்போது தான் புதிய ஏற்பாட்டுச் சபை யூத மார்க்கத்தின் சவ ஆடைகளைக் களைந்து போட்டது. மேலும், கிறிஸ்துவுக்குள்ளாக யூதரும் புறவினத்தாரும் ஒன்றெனக் காணப்படுகின்ற புதிய கூட்டுறவின் தனிச் சிறந்த குணவியல்பை இச்சபையில் காணவியலும். இதன் காரணமாக, "ஈசாக்கு தாய்ப்பால் குடிக்கும் பழக்கத்தை மறந்த காலம்" என்று இந்நூல் மிகச்சரியாக அழைக்கப்படுகிறது.

இந்நூலை நாம் படிக்கும் வேளையில், தேவன் செயல்களை நடப்பிக்கும் காலத்தில் உண்டாகும் ஒருவித ஆவிக்குரிய எழுச்சியின் உணர்வுகளை நாம் அனுபவிக்கிறோம். அதே நேரத்தில் அச்செயல்களுக்கு எதிராகப் பாவமும் சாத்தானும் கொண்டுவருகிற எதிர்ப்புகளாலும் தடைகளாலும் ஏற்படுகிற உளஅலைவுகளையும் உணர்கிறோம்.

இந்நூலின் முதல் பன்னிரண்டு அதிகாரங்களில், பேதுரு முக்கிய பங்கை வகிக்கிறார். அந்நாட்களில் அவர் மிக உற்சாகத்துடன் இஸ்ரவேல் நாட்டிற்கு நற்செய்தியை வழங்கினார். 13-ஆம் அதிகாரத்திலிருந்து பற்றார்வம் மிகுந்தவரும், ஆவியின் ஏவுதல் பெற்றவரும், சோர்வுறாமல் உழைத்தவருமாகிய புறவினத்தாரின் அப்போஸ்தலனாகிய பவுல் முதன்மையான இடத்தை அடைகிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் ஏறத்தாழ முப்பத்துமூன்று ஆண்டுக்கால நிகழ்ச்சிகளை விவரிக்கிறது. "மிகவும் எளிமையான மனிதர்கள் அடங்கிய சிறு கூட்டம் உலகத்தை அசைத்தது. அவர்களுடைய பகைஞர் அனல் தெறிக்கும் கண்களுடன், இந்த மனிதர்கள் 'உலகத்தைத் தலைகீழாக மாற்றிவிட்டார்கள்' என்று கூறினார்கள்" என்று J. B. பிலிப்பு மனித வரலாற்றில் ஒப்பிடக்கூடாத இந்தக் காலத்தைக் குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.

## பொருட்சுருக்கம்

**1. எருசலேம் சபையின் வரலாறு (அதி. 1-7)**

அ. உயிர்த்தெழுந்த கர்த்தர் ஆவியானவரைக் குறித்து அருளிய வாக்குறுதி (1:1-5)

ஆ. விண்ணுலகு ஏகிய கர்த்தர் திருத்தூதுவர்களுக்குக் கொடுத்த கட்டளை (1:6-11)

இ. ஜெபத்தோடு எருசலேமில் காத்திருந்த சீடர்கள் (1:12-26)

ஈ. பெந்தெகொஸ்தே நாளும் திருச்சபையின் பிறப்பும் (2:1-47)

உ. முடவன் குணப்படுதலும், இஸ்ரவேலுக்கு எதிராகப் பேதுரு குற்றஞ்சாட்டுதலும் (3:1-28)

ஊ. சபை துன்புறுதலும் வளர்ச்சியடைதலும் (4:1-7:60)

**2. யூதேயாவிலும் சமாரியாவிலும் சபை நிறுவப்படுதல் (8:1-9:31)**

அ. சமாரியாவில் பிலிப்பு ஆற்றிய திருப்பணி (8:1-25)

ஆ. பிலிப்பு மற்றும் எத்தியோப்பிய அண்ணகன் (8:26-40)

இ. தர்சுப் பட்டணத்து சவுல் மனமாற்றம் அடைதல் (9:1-31)

**3. உலகின் எல்லைகள் எங்கும் சபை விரிவாகுதல் (9:32-28:31)**

அ. புறவின மக்களுக்குப் பேதுரு நற்செய்தி அறிவித்தல் (9:32 -11:18)

ஆ. அந்தியோகியாவில் சபை நிறுவப்படுதல் (11:19-30)

இ. ஏரோதின் கொடுமைகளும் அவனுடைய மரணமும் (12:1-23)

ஈ. பவுல் கலாத்தியா நாட்டிற்கு மேற்கொண்ட முதலாவது ஊழியப் பயணம் (12:24-14:28)

உ. எருசலேமில் சபையின் ஆலோசனை மன்றம் (15:1-35)

ஊ. பவுல் மேற்கொண்ட இரண்டாவது ஊழியப் பயணம்: ஆசியா மைனர் மற்றும் கிரேக்கு (15:36-18:22)

எ. பவுல் மேற்கொண்ட மூன்றாவது ஊழியப்பயணம்: ஆசியா மைனர் மற்றும் கிரேக்கு (18:23-21:26)

ஏ. பவுல் கைதுசெய்யப்படுதலும் விசாரிக்கப்படுதலும் (21:27-26:32)

ஐ. பவுல் ரோமாபுரிக்குப் பயணம் செய்தலும், கப்பற்சேதமும் (27:1-28:16)

ஒ. பவுலின் வீட்டுக் காவலும், ரோமாபுரி யூதர்களுக்குச் சாட்சிபகர்தலும் (28:17-31)

## பொருட்சுருக்க அட்டவணை

<table>
<tr><td>கருத்து</td><td colspan="2">எருசலேமில் சாட்சி</td><td>யூதேயா சமாரியாவில் சாட்சி</td><td colspan="2">பூமியின் கடைசி எல்லைவரை சாட்சி</td></tr>
<tr><td>வரலாறு</td><td colspan="2">கி.பி. 33 முதல் கி.பி. 35 வரை<br>2 ஆண்டுகள்</td><td>கி. பி. 35 முதல் கி. பி. 48 வரை<br>13 ஆண்டுகள்</td><td colspan="2">கி. பி. 48 முதல் கி. பி. 62 வரை<br>14 ஆண்டுகள்</td></tr>
<tr><td>தலைப்பு</td><td>திருச்சபையின் வல்லமை</td><td>திருச்சபையின் வளர்ச்சி</td><td>திருச்சபையின் விரிவாக்கம்</td><td>பவுலின் மூன்று பயணங்கள்</td><td>பவுல் கைது, ரோமாபுரிப் பயணம்</td></tr>
<tr><td rowspan="2">பகுப்பு</td><td colspan="2">யூதர்</td><td>சமாரியர்</td><td colspan="2">புறவினத்தார்</td></tr>
<tr><td colspan="2">பேதுரு</td><td>பிலிப்பு</td><td colspan="2">பவுல்</td></tr>
<tr><td>வசனம்</td><td>1:1 - 2:47</td><td>3:1-7:60</td><td>8:1-12:25</td><td>13:1-21:16</td><td>21:17-28:31</td></tr>
<tr><td>இடம்</td><td colspan="2">எருசலேம்</td><td>யூதேயா சமாரியா</td><td>உலகின் எல்லைகள்</td><td>ரோமாபுரி</td></tr>
<tr><td>வளர்ச்சி</td><td colspan="2">வெற்றி</td><td>இடைக் காலம்</td><td colspan="2">பயணமும் பாடுகளும்</td></tr>
</table>

விளக்கவுரை

## 1. எருசலேம் சபையின் வரலாறு [அதி. 1-7]

### அ. உயிர்த்தெழுந்த கர்த்தர் ஆவியானவரைக் குறித்து அருளிய வாக்குறுதி [1:1-5]

**1:1-2** ஒரு நினைவூட்டுதலுடன் அப்போஸ்தல ருடைய நடபடிகள் நூல் தொடங்குகிறது. "லூக்கா எழுதின நற்செய்தி" என்று நாம் இப்பொழுது அறிந்திருக்கிற நூலை, மனதிற்கினிய மருத்து வராகிய லூக்கா ஏற்கனவே தெயோப்பிலுவுக்கு எழுதியிருந்தார் (லூக்கா 1:1-4 வசனங்களைக் காண்க). கர்த்தராகிய இயேசு விண்ணுலகேகிச் செல்வதற்குச் சற்று முன்னர், தம்முடைய சீடர் களுக்கு அருளிய வாக்குறுதியின்படி அவர்கள் தூய ஆவியினால் திருமுழுக்குப் பெறுவார்க ளென அந்த நற்செய்தி நூலின் இறுதி வசனங் களில் அவர் தெயோப்பிலுவிடம் கூறியிருந்தார் (லூக்கா 24:48-53).

இப்பொழுது, லூக்கா அந்த விவரங்களைத் தொடரவிருக்கிறார். ஆகவே கிளர்ச்சி பெருக் கிடும் அவ்வாக்குறுதியை நோக்கிப் பின்னோக் கிச் சென்று, அதனையே அவர் தமது இரண்டா வது நூலுக்குத் தொடக்கமாகக் கொண்டிருக் கிறார். அச்செய்தி இந்நூலுக்குத் தொடக்கமாக விளங்குதல் சாலவும் பொருத்தமானதே. ஆவி யானவரின் பெருஞ்சாதனை நடபடிகள் நூலில் வெளிப்படுதற்கு முன்னர் அவரைக் குறித்த வாக்குறுதி நற்செய்தி நூலில் கருவுருவில் மறைத்துவைக்கப்பட்டிருந்தது. லூக்கா தனது நற்செய்தி நூலை **முதலாம் பிரபந்தம்**, அதாவது முதல் நூல் என்று கூறுகிறார். அந்நூலில் இயேசு **செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின** யாவற்றையும் அவர் பதிவு செய்து கொடுத்துள் ளார். இயேசு விண்ணுலகிற்குச் சென்றபின், தூய ஆவியானவர் மூலமாக அவர் தொடர்ந்து செய்த வற்றையும் உபதேசித்தவற்றையும் லூக்கா விவரமாய் எழுதலானார்.

செயலாற்றுவதும், உபதேசித்தலும் கர்த்தரு டைய ஊழியமாகத் திகழ்ந்தது என்பது கவனிக் கத்தக்கது. கடமையின்றி கோட்பாடு இல்லை; நடைமுறையில் செயல்படுத்தப்படாத கொள்கை யும் இல்லை. தாம் கற்பித்தவற்றின் உயிரூட்ட முள்ள திருவுருவாக நமது இரட்சகர் விளங்கி னார். தமது வாழ்வில் கைக்கொண்டவற்றையே அவர் பிரசங்கித்தார்.

இரட்சகர் விண்ணுலகிற்குச் சென்ற நிகழ்ச்சி யோடு, லூக்கா தமது முதல் நூலை முடித்தார் என்பது தெயோப்பிலுவின் நினைவில் இருந்திருக் கும். அந்நிகழ்ச்சி இங்கு, அவர் **எடுத்துக்கொள் ளப்பட்டார்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (தமிழில் இரண்டு இடங்களிலும் எடுத்துக்கொள்ளப்பட் டார் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.) கர்த்தர் செல் வற்குமுன் தமது பதினோரு **அப்போஸ்தலருக் கும்** பரிவுமிக்க அறிவுரை வழங்கினார் என்பதும் அவருடைய நினைவில் இருந்திருக்கும்.

**1:3** கர்த்தர் உயிர்த்தெழுந்த நிகழ்வுக்கும், அவர் விண்ணுலகம் சென்ற நிகழ்வுக்கும் இடைப் பட்ட **நாற்பது நாளளவும்** தமது மாணாக்கருக் குக் காட்சியளித்து, தாம் சரீரத்தில் உயிர்த்தெழுந்த தற்கான உறுதியான சான்றுகளை வெளிப்படுத்தி னார் (யோவான் 20:19,26; 21:1,14 ஆகிய வசனங் களைக் காண்க).

இந்த நாட்களில் அவர் **தேவனுடைய ராஜ்யத் துக்குரிய** விவரங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார். தேவன் எங்கே அரசராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாரோ அந்த அரசைக் குறித்தே அவர் முதன்மையான அக்கறை கொண்டிருந் தார். இவ்வுலக அரசுகளைக் குறித்து அவர் அத்த கைய அக்கறை கொள்ளவில்லை.

திருச்சபையும் **இராஜ்யமும்** ஒன்றென நினைத்து நாம் குழப்பமடையலாகாது. கர்த்தராகிய இயேசு தம்மை இஸ்ரவேல் நாட்டின் அரசராக அறிவித் தார். ஆனால் இஸ்ரவேலோ அவரைப் புறக்கணித் தது (மத். 23:37). அதன் காரணமாக, இஸ்ரவேல் எப்பொழுது மனந்திரும்பி அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்ளுமோ அதுவரை அவர் இப்புவியில் தமது அரசை வெளிப்படையாக நிறுவும் நிகழ்ச்சி யைத் தள்ளிவைத்துவிட்டார் (அப். 3:19-21).

இப்பொழுதோ அரசர் இங்கில்லை. ஆயினும் கண்களுக்குப் புலப்படாத ஓரரசை அவர் இப்புவி யில் உடையவராயிருக்கிறார் (கொலோ. 1:13) தங்களைக் குடிமக்களாக அவரிடம் ஒப்புவித் திருக்கிறவர்கள் யாவரும் சேர்ந்ததே அவ்வரசு (மத். 25:1-12). ஒரு பொருளில், தான் ஒரு கிறிஸ் தவன் என்று உரிமை பாராட்டுகிற எவனும் அந் நாட்டுக் குடிமகன் ஆவான். எனினும் அதன் உண்மையான பொருளில், மறுபடியும் பிறந்தவர் கள் மட்டுமே அந்நாட்டின் குடிமக்கள் ஆவார்கள் (யோவான் 3:3,5). மத்தேயு 13 -ஆவது அதிகாரத் தில் அவ்வரசின் தற்கால நிலைமை விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

திருச்சபை முற்றிலும் புதியது. பழைய ஏற்பாட் டுத் தீர்க்கதரிசனத்தில், அதனை ஆய்வுப்பொரு ளாகக் காணமுடியாது (எபே. 3:5). பெந்தெகொஸ்தே

நாள்முதல் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப் படும் நாள் வரையிலுமுள்ள இடைப்பட்ட காலத் தில் விசுவாசிகளாக இருக்கிற அனைவரும் சேர்ந்ததே திருச்சபையாகும். கிறிஸ்துவின் மண வாட்டி என்னும் நிலையில், ஆயிரமாண்டு ஆட்சி யின் போது கர்த்தருடன் அது ஆளுகை செய்யும். மேலும், என்றென்றும் அவருடைய மகிமையில் அது பங்கு பெற்றிருக்கும். மகா உபத்திரவ காலத் தின் முடிவில் கிறிஸ்து அரசராகத் திரும்பவும் இப் புவிக்கு வந்து, எதிரிகள் யாவரையும் அழித்து, தமது அரசை நிறுவுவார் (சங். 72:8).

எருசலேமைத் தலைநகராகக் கொண்டு அவர் புரியும் ஆட்சி ஓராயிரம் ஆண்டுகள் மட் டுமே தொடரும் (வெளி. 20:4). ஆயினும், தேவனு டைய பகைஞர் யாவரும் இறுதியில் அழிக்கப்படு வர், எதிர்ப்புகள் யாவும் நீங்கும், தடைகள் அகற்றப்படும். விண்ணகத்திலிருந்து அவர் புரியும் ஆட்சி என்றென்றும் நிலைபேறுடையதாக விளங்கும் (2 பேதுரு 1:11).

**1:4,5** இயேசுவின் மாணாக்கர் யாவரும் **எரு சலேம்** நகரத்தில் ஓர் அறையினில் ஒருமித்துக் கூடிவந்திருந்தபோது, கர்த்தர் அவர்களைச் சந்தித்த நிகழ்ச்சியைக் குறித்து லூக்கா இங்கே விவரிக்கிறார். அவர்கள் **எருசலேமைவிட்டுப் போகாமல்** அங்கேயே தங்கியிருக்க வேண்டு மென்று உயிர்த்தெழுந்த கர்த்தர் அவர்களுக்குக் **கட்டளையிட்டார்**. அவர்கள் தங்கியிருக்க **எருசலேம்** நகரம் தெரிந்தெடுக்கப்பட்டதைக் குறித்து அவர்கள் வியப்படைந்தார்கள். அவர் களைப் பொருத்தமட்டில் வெறுப்பும், உபத்திரவ மும் நிறைந்த நகரமாகவே அந்நகரம் விளங் கியது!

ஆம், **பிதாவின் வாக்குத்தத்தம்** எருசலேம் நகரில்தான் நிறைவேற வேண்டும். எங்கே இரட் சகர் சிலுவையில் அடிக்கப்பட்டாரோ, அங்கு தான்ஆவியானவரின் வருகை நிகழ வேண்டும். அங்கே அவர் வருகைபுரிவது, இறைமைந்தனை மனிதன் ஏற்க மறுத்ததற்கு எதிராகச் சான்றுபக ரும். பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் சத்திய ஆவியான வர் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். இந்நிகழ்ச்சி முதலில் **எருசலேமில்தான்** நிகழும். தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு சீடர்கள் எங்கே கர்த்தரைக் கைவிட்டு ஓடினார் களோ, அந்நகரத்திலேயே அவர்கள் தூய ஆவி யானவரைப் பெறுவார்கள். வலிமையற்றவர்களா கவும், கோழைகளாகவும் நடந்துகொண்ட சீடர் கள் அதே இடத்தில் வலிமைபெற்று அச்சம் நீங்கினவர்களாக மாறவேண்டும்.

இரட்சகர் திருவாய் மலர்ந்தருளிய **பிதாவின் வாக்குத்தத்தத்தை** இங்கு சீடர்கள் கேட்டது முதன்முறையன்று. இப்புவியில் அவர் திருப்பணி ஆற்றிய காலமனைத்தும், சிறப்பாக மேலறை உரையாடலின்போது, வரவிருந்த தேற்றரவாள ரைக் குறித்து அவர் கூறியிருந்தார் (லூக்கா 24:49; யோவான் 14:16,26; 15:26; 16:7,13 - ஆகிய வசனங்களைக் காண்க).

இப்பொழுதோ, அவர்களை அவர் இறுதியா கச் சந்தித்தபோது, அவ்வாக்குறுதியை மீண்டும் எடுத்துரைத்தார். அவர்களில் சிலர் **யோவான்** தண்ணீரினாலே கொடுத்த **ஞானஸ்நானத்தைப்** பெற்றிருந்தனர். ஆயின் யோவான் கொடுத்த திரு முழுக்கு வெளிப்படையானதும், சரீர சம்பந்த மானதுமாயிருந்தது. சில நாட்களுக்குள்ளாக,[2] அவர்கள் **பரிசுத்த ஆவியினாலே ஞானஸ் நானம்** பெறுவார்கள். அத்திருமுழுக்கோ உள் ளார்ந்ததும் ஆவிக்குரியதுமாகும். அவர்கள் பெற்ற முதலாவது திருமுழுக்கு, மனந்திரும்பிய இஸ்ரவேல் நாட்டின் பங்கோடு அவர்களை ஒருங்கிணைத்துக் காட்டியது. இரண்டாவது திருமுழுக்கோ, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை யோடு அவர்களை இணைத்து, திருப்பணிக்குத் தேவையான வலிமையைத் தந்தருளும்.

**சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே அவர்கள் ஞானஸ்நானம் பெறுவார்கள்** என்று இயேசு அவர்களுக்கு வாக்குறுதி நல்கினார். அங்கு அக்கினி ஞானஸ்நானத்தைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை (மத். 3:11,12; லூக்கா 3:16,17). அவிசுவாசிகள் பெறவிருக்கிற ஆக்கினைத் தீர்ப்பையே அக்கினி ஞானஸ் நானம் சுட்டிக்காட்டுகிறது. இது இனிமேல் நிகழவிருக்கிற நிகழ்ச்சியாகும்.

### ஆ. விண்ணுலகு ஏகிய கர்த்தர் திருத்தூதுவர் களுக்குக் கொடுத்த கட்டளை (1:6-11)

**1:6** இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி, பெரும் பாலும் பெத்தானியாவுக்கு எதிரே அமைந்திருந்த ஒலிவ மலையில் நடந்திருக்கக் கூடும். இந்த இடத்திலிருந்துதான் கர்த்தராகிய இயேசு விண்ணுலகிற்குச் சென்றார் (லூக்கா 24:50,51).

ஆவியானவரின் வருகையைக் குறித்துச் சீடர் கள் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். மேசியா வின் மகிமை நிறைந்த ஆட்சியோடு ஆவியான வர் பொழிந்தருளப்படுவதை இணைத்து வருவது

ரைப்போன் யோவேல் பேசியவற்றை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். "சில நாட்களுக்குள்ளாக" ஆவியானவர் தரப்படுவார் என்று கர்த்தர் முதலில் சொன்னதால், அவர் தமது **இராஜ்யத்தை** வெகுவிரைவில் நிறுவுவாரென அவர்கள் எண்ணினார்கள். இப்புவியில் கிறிஸ்து தமது அரசை உடனடியாக நிறுவப்போகிறார் என்று அவர்கள் எதிர்பார்த்ததை அவர்களுடைய கேள்வி வெளிப்படுத்தியது.

**1:7** இப்புவியில் கர்த்தர் தமது அரசை வெளிய ரங்கமாக நிறுவப்போகிறார் என்று அவர்கள் எதிர் பார்த்த தவறை அவர் திருத்தவில்லை. அப்படிப் பட்ட நம்பிக்கை நியாயமானதாகவே இருந்தது. இப்பொழுதும் அது நியாயமானதாகவே இருக் கிறது. அவருடைய அரசு எப்பொழுது நிறுவப்படும் என்பதை **அறிவது** அவர்களுக்கு அப்பாற்பட்ட விஷயம் என்று மட்டுமே அவர் கூறினார். திருத் தந்தையின் **ஆதீனத்திலே** அந்த நாள் தீர் மானிக்கப்பட்டுள்ளது. அதனை வெளிப்படுத்த அவர் திருவுளம் கொள்ளவில்லை.

"**காலங்களும் வேளைகளும்**" என்னும் சொற் றொடர் இஸ்ரவேல் நாட்டில் இனி நிகழவிருக்கும் தேவன் முன்னுரைத்த பல்வேறு நிகழ்ச்சி களையே குறிக்கிறது. கிறிஸ்துவின் ஆயிர மாண்டு ஆட்சி நிறுவப்படுவதற்கு முந்தைய மிக நெருக்கடியான நாட்களையும், அவ்வரசு நிறுவப் படும் நிகழ்ச்சியையும் இச்சொற்றொடர் குறிப்பிடு கிறது என்பதை யூதப் பின்னணியைச் சேர்ந்த சீடர்கள் எளிதில் புரிந்துகொண்டனர்.

**1:8** அரசு நிறுவப்படும் நாளைக்குறித்து அவர் கள் கொண்டிருந்த ஆவலை அடக்கி ஆட்கொண்ட வராக, இயேசு கிறிஸ்து அவர்களுடைய கவ னத்தை உடனடியாக நிகழ வேண்டியவற்றை நோக்கித் திருப்பினார். அவர்கள் ஆற்றவேண்டிய திருப்பணியின் இயல்பும் எல்லையுமே அவரு டைய பேச்சின் கருப்பொருளாயிருந்தன. அவர்கள் **சாட்சிகளாயிருக்க** வேண்டுமென்பதே அதன் இயல்பாகும். **எருசலேமிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும்** சாட்சிகளா யிருக்க வேண்டுமென்பதே அதன் எல்லை களாகும்.

ஆனால் முதலில் அவர்கள் **பரிசுத்த ஆவியின் பலத்தைப்** பெறவேண்டும். கிறிஸ்தவச் சான்றுக்கு இந்த வல்லமை மிகவும் முக்கியம் வாய்ந்ததும், தவிர்க்க முடியாததுமாகும். ஒருவன் உயர்ந்த ஆற்றலும், கடுமையான பயிற்சியும், பரந்த அனுபவமும் பெற்றவனாயிருக்கலாம். ஆயின் அவன் ஆவிக்குரிய வல்லமை அற்ற வனாயிருப்பானென்றால் பயனற்றவனாவான். இதற்கு மாறாக ஒருவன் படிப்பறிவற்றவனாகவும், கவர்ச்சியற்றவனாகவும், நாகரிகமற்றவனாகவும் இருக்கலாம். எனினும் **பரிசுத்த ஆவியின்** வல்லமையினால் அணிவிக்கப்பட இடங்கொடுப் பானெனில், அவன் தேவனுக்கென்று கொழுந்து விட்டு எரிவதைக் காண உலகம் திரண்டுவரும். அச்சமுற்றிருந்த சீடர்கள் சான்றுபகர **பெலன டைய** வேண்டியதாயிருந்தது. நற்செய்தியை அறிவிக்க அவர்களுக்குத் தூய்மையான துணி வும் தேவையாயிருந்தது. **பரிசுத்த ஆவி** அவர் களிடத்தில் **வந்தபோது** அவர்கள் **பெலனடைந் தனர்**.

பொருட்செறிவுமிக்க வகையில் தேவனுடைய கிருபையின் முன்னேற்பாட்டுடன், அவர்களு டைய சாட்சி எருசலேமில் தொடங்கவேண்டும். எங்கே நம்முடைய கர்த்தர் சிலுவையில் அறை யப்பட்டாரோ அந்தநகரமே முதன்முதலாக மனந் திரும்பி அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதற் கான அழைப்பைப் பெறவேண்டும்.

அதன் பிறகு, **எருசலேமை** முதன்மையான நகரமாகக் கொண்டதும், யூத மக்கள் நிறைந்தது மான பாலஸ்தீன நாட்டின் தென் பகுதியாகிய **யூதேயாவில்** சாட்சி அறிவிக்கப்படவேண்டும்.

அடுத்து, யூதர்களால் வெறுக்கப்பட்டவர் களும், அவர்களுடன் எவ்வித உறவும் கொள் ளாதவர்களுமாகிய கலப்பின மக்கள் வாழ்ந்து வந்த பாலஸ்தீன நாட்டின் நடுப்பகுதியாகிய **சமாரியாவில்** சாட்சி விளங்கவேண்டும்.

அதன்பிறகு, அந்த நாட்களில் அறியப்பட்டி ருந்த **பூமியின் கடைசி எல்லைவரை** நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். இதுகாறும் சமயச் சிறப் புரிமை பெற்றிராத புறவின நாடுகளே, பூமியின் கடைசிபரியந்தம் என்று இங்கே குறிப்பிடப்பட் டுள்ளன. இவ்வாறு கர்த்தருடைய சாட்சி தொடர்ந்து வளர்ந்து பெருகும் எல்லைகளின் பொதுவான வரலாற்றை அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் காணவியலும்.

1. எருசலேமில் சாட்சி (அதி. 1-7)
2. யூதேயா மற்றும் சமாரியாவில் சாட்சி (8:1-9:31)
3. பூமியின் கடைசி எல்லைவரை சாட்சி அறி விக்கப்படுதல் (9:32-28:31)

**1:9** இவ்வாறு நமது இரட்சகர் தமது மாணாக் கருக்குக் கட்டளை கொடுத்த உடனேயே **அவர் உயர** விண்ணகத்திற்கு **எடுத்துக்கொள்ளப்பட்**

**டார். அவர் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது.** வேதம் கூறுவது இவ்வளவே. இத்தனை வியத்தகு உன்னத நிகழ்ச்சி, ஆயினும் எளிமையாகவும் அமைதியாகவும் விவரிக்கப்பட்டுள்ளது! திருமறை எழுத்தாளர்கள் நிகழ்ச்சிகளை விவரித்துக் கூறுமிடத்துக் கடைப்பிடிக்கிற கட்டுப்பாடு, வேதம் தூய ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. வழக்கத்திற்கு மாறான நிகழ்ச்சிகளை விவரிக்கும் எழுத்தாளர்கள் இத்தகைய அடக்கத்தைக் கைக்கொள்ளுவது இயல்புக்கு அப்பாற்பட்டதாகும்.

**1:10** அதிர்ச்சியளிக்கக்கூடிய எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று அப்பொழுது நடந்தது. **வெண்மையான வஸ்திரந்தரித்த இரண்டுபேர்** அங்கு தோன்றிய அந்நிகழ்ச்சியை லூக்கா சிறிதளவும் வியப்பைத் தெரிவிக்காமல் விளக்கிக் கூறுகிறார். அவர்கள் இருவரும் பூமியில் மனித உருவில் காட்சியளிக்கக்கூடிய தேவதூதர்கள் என்பதில் ஐயமில்லை. பெரும்பாலும் அவர்கள் கர்த்தர் உயிர்த்தெழுந்தபின் கல்லறையின் அருகில் தோன்றிய தேவதூதர்களாகவே இருந்திருக்க வேண்டும் (லூக்கா 24:4).

**1:11** "**கலிலேயராகிய மனிதரே**" என்று அந்த தேவதூதர்கள் சீடர்களை அழைத்தார்கள். யூதாஸ்காரியோத் நீங்கலாக மற்ற அனைத்து மாணாக்கரும் கலிலேயாக் கடலுக்கு மேற்கு திசையிலிருந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை நாம் அறிவோம்.

சீடர்கள் வானத்தை நோக்கிப் பார்த்தவர்களாகத் தங்களை மறந்த நிலையில் நின்று கொண்டிருந்தார்கள். தேவதூதர்களின் அழைப்பு அவர்களுடைய மயக்க நிலையிலிருந்து எழுப்பிற்று. அவர்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்? அது துக்கமா, தொழுகையா அல்லது அதிர்ச்சியா? இம்மூன்றும் கலந்த நிலை என்பதில் ஐயமில்லை. எனினும் அவர்கள் உள்ளத்தைத் துக்கம் அதிகமாகத் தாக்கியிருக்கும். ஆகவே ஆறுதல் அளிக்கக்கூடிய வார்த்தை அவர்களிடம் உரைக்கப்பட்டது. விண்ணகம் சென்ற கர்த்தர் மீண்டும் வருவார்.

கர்த்தர் இவ்வுலகில் தமது அரசினை நிறுவுவதற்காக, இரண்டாவது முறையாக வருவார் என்னும் வாக்குறுதி இங்கு மிகத்தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்நிகழ்ச்சி விசுவாசிகள் நடுவானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியன்று. அரசாட்சி புரிவதற்காகக் கர்த்தர் இவ்வுலகிற்கு வருகை புரிவதே இங்கு கூறப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. ஒலிவ மலையிலிருந்து கர்த்தர் வானத்திற்கு ஏறிச்சென்றார் (வச. 12). | 1. ஒலிவ மலைக்கு அவர் மீண்டும் வருவார் (சக. 14:4). |
| 2. அவர் தாமே வானத்திற்குச் சென்றார். | 2. அவர் தாமே மீண்டும் இவ்வுலகிற்கு வருவார் (மல். 3:1). |
| 3. கண்கள் காணும்படி அவர் வானத்திற்குச் சென்ற நிகழ்ச்சி நடைபெற்றது. | 3. கண்கள் காணும்படி அவர் மீண்டும் வருவார் (24:30). |
| 4. ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது (வச. 9). | 4. அவர் வானத்தின் மேகங்கள்மேல் வருவார் (மத். 24:30). |
| 5. மகிமையோடு அவர் வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். | 5. வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் அவர் திரும்ப வருவார் (மத். 24:30). |

### இ. ஜெபத்தோடு எருசலேமில் காத்திருந்த சீடர்கள் (1:12-26)

**1:12** *மிகுந்த சந்தோஷத்தோடே* சீடர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்தார்கள் (லூக்கா 24:52). "இறையன்பினின்று வீசிய ஒளி அவர்களுடைய இருதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தது. இன்னல்கள் கடலலையெனப் பெருகி அவர்களைச் சூழ்ந்துகொண்ட போதிலும் அவர்கள் பெற்ற ஒளியின் காரணமாக அவர்களுடைய முகங்கள் சுடரொளி போன்று பிரகாசித்தன."

**ஒலிவமலை என்னப்பட்ட மலையிலிருந்து** கெதரோன் பள்ளத்தாக்கின் வழியாக எருசலேம் நகருக்கு அவர்கள் திரும்பினார்கள். அவர்கள் மேற்கொண்ட பயணம் முக்கால் கல் தொலைவுதான். புதிய ஏற்பாட்டு நாட்களில் **ஓய்வுநாளில்** யூதனொருவன் இதனைக் காட்டிலும் கூடுதலான தொலைவு பயணம் செய்யக்கூடாது.

**1:13** நகருக்குள் நுழைந்த சீடர்கள், தாங்கள் **தங்கியிருந்த மேல்வீட்டில் ஏறினார்கள்.**

தேவ ஆவியானவர் நான்காவது முறையாகச் சீடர்களின் பெயரைப் பட்டியலிட்டு இங்கு தந்துள்ளார். இதுவே அவர் அவ்வாறு கூறுகிற கடைசி முறையுமாகும் (மத். 102-4; மாற்கு 3:16-19; லூக்கா 6:14-16). ஆனால் இம்முறை யூதாஸ்காரியோத்

தின் பெயர் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டுவிட் டது. காட்டிக்கொடுத்தவன் அவனுக்கு நியமிக் கப்பட்ட அழிவை நோக்கிச் சென்றுவிட்டான்.

**1:14** சீடர்கள் யாவரும் ஒருமித்துக் கூடிய செயல் **ஒருமனப்பாட்டுடன்** கூடியதாக இருந்தது. ஒருமனப்பாடு என்னும் சொல் அப்போஸ்தலரு டைய நடபடிகள் நூலில் பதினோரு முறை இடம் பெற்றுள்ளது. ஆசிர்வாதத்தைப் பெறுவதற்கான இரகசியத்தின் திறவுகோல்களில் இதுவும் ஒன்று. ஒருமனப்பாட்டுடன் சகோதரர்கள் எங்கே வாசம் பண்ணுகிறார்களோ, அங்கே தேவன் ஆசிர் வாதத்தையும், ஜீவனையும் கட்டளையிடுகிறார் (சங். 133).

"**ஜெபத்திலும்... தரித்திருந்தார்கள்**" என்னும் சொற்கள் இரண்டாவது திறவுகோலாக விளங்கு கிறது. அன்று போலவே இன்றும் மக்கள் மன்றா டும் வேளையில் தேவன் செயல்புரிகிறார். சாதார ணமாக நாம் ஜெபம் செய்வதைத் தவிர வேறு செயல் களையே செய்கிறோம். ஆனால் தேவனுடைய சமுகத்தில் நாம் காத்திருந்து, வேறு வழியில்லை என்பதை உணர்ந்தவர்களாக, நம்பிக்கையுடன், ஆர்வமிகுதியுடன், நிதானத்துடன் ஒருமித்து ஜெபம் செய்யும்போது, தேவ ஆவியானவரு டைய புத்தூக்கம் தரவல்லதும் செயலாற்றத் தூண்டுவதுமான வலிமை பொழிந்தருளப்படும்.

*ஒருமனப்பாடும் ஜெபமும் பெந்தெ கொஸ்தே நிகழ்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன* என்பதை இதனினும் கூடுதலாக வலி யுறுத்திக் கூறமுடியாது.

அந்த இடத்தில் சீடர்களுடன் பெயர்குறிப் பிடப்படாத சில பெண்களும் கூடி வந்திருந்தார் கள் (பெரும்பாலும் அவர்கள் இயேசுவைப் பின் தொடர்ந்து வந்த பெண்களாகத்தான் இருக்க வேண்டும்). மேலும், **இயேசுவின் தாயாகிய மரி யாளும், அவருடைய சகோதரரும்** அங்கிருந் தனர். நமது கவனத்தை ஈர்க்கக்கூடிய பல குறிப்பு கள் இங்கு இடம் பெற்றுள்ளன.

1. புதிய ஏற்பாட்டில் கடைசி முறையாக **மரியா ளின்** பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. "மரியாளைத் தொழுதுகொள்ளும் செயலை இவ்வுண்மை கண்டனம் செய்கிறது" என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சீடர்கள் *அவளிடத்தில்* ஜெபம் செய்யவில்லை; *அவளோடு சேர்ந்து* அவர் கள் ஜெபம் செய்தனர். தூய ஆவியின் வரத் தைப் பெறும்படி அவர்களோடு மரியாளும் காத்திருந்தாள்.

2. **இயேசுவின் தாயாகிய மரியாள்** என்றே அவள் இங்கு அழைக்கப்படுகிறாள். "தேவனுடைய தாய்" என்று அவள் அழைக்கப்படவில்லை. மனிதராக இருந்தபோது, இயேசு என்னும் பெயரை நமது கர்த்தர் பெற்றிருந்தார். அவர் மரியாளிடம் மனிதராகப் பிறந்தார். ஆகவே அவள் **இயேசுவின் தாய்** என்று அழைக்கப்பட் டது மிகவும் பொருத்தமானதாகும். திருமறை யில் எங்குமே அவள் தேவனுடைய தாய் என்று அழைக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்து மெய் யான தேவனாக இருக்கிறார். ஆயினும் தேவ னுக்கு ஒரு மானிடத் தாய் இருப்பதாகப் பேசுவது முற்றிலும் தவறானதாகவும், திருமறை உப தேசத்திற்கு முரண்பாடானதாகவும் இருக்கிறது. தேவன் என்னும் நிலையில் அவர் நித்திய காலமாக இருக்கிறார்.

3. மரியாளின் பெயரைத் தொடர்ந்து, இயேசு வின் சகோதரர்கள் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். இ.்.து அவர்கள் மரியாள் பெற்றெடுத்த பிள்ளை கள் என்பதையும், இயேசுவின் ஒருதாய் மக்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது. மரியாள் என்றென்றும் கன்னியாகவே இருந்தாள் என் றும், இயேசுவைப்பெற்றபின் வேறு பிள்ளை களை அவள் பெறவில்லை என்றும் சிலர் கொண் டிருக்கிற கருத்தை இந்த வசனம் மட்டுமின்றி வேறு பல வசனங்களும் மறுத்துரைக்கின்றன (எடுத்துக்காட்டாக மத். 12:46; மாற்கு 6:3; யோவான் 7:3,5; 1 கொரி. 9:5; கலா. 1:19 மற்றும் சங். 69:8 ஆகிய வசனங்களைக் காண்க).

**1:15** ஒருநாள், **ஏறக்குறைய நூற்றிருபது சீடர்கள்** ஓரிடத்தில் **கூடியிருந்தபோது**, மேசியா வைக் காட்டிக்கொடுத்தவனைப் பற்றி பழைய ஏற்பாடு கூறும் விவரங்களை எடுத்துரைக்கும்படி **பேதுரு** ஏவப்பட்டார்.

**1:16,17** தனது உரையின் தொடக்கத்திலேயே, பேதுரு **யூதாசைக் குறித்து தாவீது** எழுதிய தீர்க்கதரிசன வசனங்களைக் கூறி அவை நிறை வேறவேண்டுமெனக் குறிப்பிட்டார். எனினும் அவர் அந்த **வேதவாக்கியத்தைக்** கூறுவதற்கு முன், பன்னிருவரில் ஒருவனாக யூதாஸ் பங்கு வகித்து, அப்போஸ்தல ஊழியத்தைச் செய்த போதிலும், அவன் **இயேசுவைக் கைது செய்த வர்களுக்கு வழிகாட்டினான்** என்னும் உண்மை யைக் குறிப்பிட்டார். மிகக்கொடூரமான செயலை அவன் செய்திருந்த போதிலும், பேதுரு அதனை நிதானமாய்க் குறிப்பிட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும். வேண்டுமென்றே தெரிந்தெடுத்துச்

செய்த செயலின் மூலமாக யூதாஸ் துரோகி யானான். கர்த்தரை ஒருவன் அவருடைய பகை ஞரிடம் விற்றுப்போடுவான் என்னும் தீர்க்கதரி சனத்தை அவன் இவ்வாறு நிறைவேற்றினான்.

**1:18,19** இந்த இரண்டு வசனங்களும் லூக்கா வால் இடைப்பிறவரலாக எழுதப்பட்டதேயொழிய, பேதுருவின் செய்தியில் இடம்பெறவில்லை. யூதாசின் மரணம் வரையிலான சரித்திரபூர்வமான உண்மைகளை இப்பகுதி விவரித்துக் கூறுகிறது. இதன் வாயிலாக அவனுடைய இடத்தில் வேறொருவர் நியமிக்கப்படுவதற்கான வழியை யும் இது வகுத்துத் தருகிறது.

யூதாசின் மரணத்தைக் குறித்து இங்கு சொல்லப்பட்டுள்ள விவரங்களுக்கும், மத்தேயு 27:3-20 ஆகிய பகுதியில் காணப்படும் விவரங் களுக்கும் எவ்வித முரண்பாடும் இல்லை. அவன் முப்பது வெள்ளிக் காசுகளைப் பிரதான ஆசாரிய ரிடமும் மூப்பர்களிடமும் தூக்கி எறிந்த பிறகு, அவன் வெளியே சென்று நான்றுகொண்டு செத் தான் என்று மத்தேயு நூல் கூறுகிறது. பிரதான ஆசாரியரே அந்தப் பணத்தைக்கொண்டு அந் நியர் அடக்கம் பண்ணப்படுவதற்கான நிலத்தை வாங்கினார்கள்.

அவன் ஒரு **நிலத்தைச் சம்பாதித்தான்**, **தலைகீழாக விழுந்தான், வயிறு வெடித்து குடல்களெல்லாம் சரிந்து போயிற்று** என்று எல்லா உண்மைகளையும் இங்கு அப்போஸ்தல நடபடிகள் நூலில் லுக்கா குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு விவரங்களையும் ஒன்றுகூட்டிக் காணுங்கால், உண்மையில் நிலத்தைக் கிரை யம் செய்தது பிரதான ஆசாரியரே ஆவர் என்பது புலப்படும். ஆயினும் அந்தப் பணம் யூதாசுக்குச் சொந்தமானது. ஆகவே **யூதாஸ் நிலத்தைச் சம்பாதித்தான்** என்னும் சொற்றொடர், பிரதான ஆசாரியர் அவனுடைய பிரதிநிதிகளாகச் செயல் பட்டனர் என்னும் பொருளையே கொண்டிருக் கிறது. கல்லறையில் இருந்த ஒரு மரத்தில் அவன் நான்றுகொண்டு செத்தான். ஒருவேளை அந்தக் கயிறு அறுந்து, அவனுடைய சரீரம் தலைகீழாக விழுந்து, குடல்களெல்லாம் சரிந்து போயிருக்கும்.

இந்தச் செய்தி எருசலேம் குடிமக்களுக்குத் தெரியவந்தபோது, குயவனின் நிலம் "**இரத்த நிலம்**" என்னும் அர்த்தமுடைய **அக்கெல்தமா** என்று பெயர்பெற்றது.

**1:20** விவரங்களை அளிக்கும் நோக்கத்துடன் லூக்கா எழுதிய இப்பகுதிக்குப் பிறகு பேதுருவின் செய்தி இங்கு தொடர்கிறது. முதலாவது, இயேசு வைக் காட்டிக்கொடுத்தவனைப் பற்றி தாவீது தனது சங்கீதத்தில் (69:25) குறிப்பிட்டிருந்ததை பேதுரு விவரித்தார், "**அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம் பண்ணாதிருப்பானாக.**"[3]

பின்னர், அவர் தொடர்ந்து நிகழவிருந்த தீர்க்க தரிசனத்தைக் குறித்துப் பேசினார், "**அவனுடைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன்**" (சங். 109:8). யூதாஸ் கைவிட்டுச் சென்ற பிறகு, அவனுடைய இடத்தில் வேறொரு வர் நியமிக்கப் பட வேண்டும் என்பதை அப்போஸ்தலனாகிய பேதுரு அறிந்துகொண்டார் என்பதை இது காட்டு கிறது. தேவனுடைய வார்த்தைக்கு அவர் கீழ்ப் படிய விருப்பம்கொண்டது நல்லது.

**1:21,22** தெரிந்தெடுக்கப்படுபவர் யாராயிருந் தாலும் கீழ்க்காணும் இரண்டு நிபந்தனைகளை நிறைவுசெய்ய வேண்டும்:

1. கிறிஸ்துவின் மூன்றாண்டுக் கால வெளியரங் கமான ஊழியத்தின்போது, அதாவது யோவா னால் அவர் ஞானஸ்நானம் பெற்ற நாள் முதற்கொண்டு அவர் விண்ணுலகுக்கு எடுத் துக்கொள்ளப்பட்ட நாள் வரையிலும், அவரும் சீடர்களோடு உடன் இருந்தவராக இருக்க வேண்டும்.

2. கர்த்தர் உயிரோடு எழுந்ததைக் குறித்து சாட்சி கூறுவதற்கு அவர் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

**1:23-26** இத்தகுதிகளைக் கொண்டிருந்த யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப் பட்ட யோசேப்பு மற்றும் மத்தியா ஆகிய இருவரு டைய பெயர்கள் முன்மொழியப்பட்டன. ஆனால் இவர்களில் யாரைத் தெரிந்தெடுப்பது? கர்த்தர் யாரைத் தெரிந்தெடுப்பார் என்பதை அறியும்படி, அப்போஸ்தலர்கள் இதனைக் கர்த்தரிடமே ஒப்பு வித்தார்கள். பிறகு அவர்கள் சீட்டுப்போட்டார் கள். தனக்குரிய இடமாகிய நித்திய அழிவை நோக் கிச் சென்றுவிட்ட யூதாசுக்குப் பதிலாக மத்தியா தெரிந்தெடுக்கப்பட்டார்.

இங்கு இரண்டு கேள்விகள் எழுவது இயற் கையே:

1. சீடர்கள் மத்தியாவின் பெயரை அறிவித்தது சரியானதா? காலியான இடத்தை தேவனே அப்போஸ்தலனாகிய பவுலைக்கொண்டு நிரப் பும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டாமா?

2. கர்த்தருடைய சித்தத்தை அறிய சீடர்கள் சீட்டுப்போட்டது முறையானதா?

முதல் கேள்வியைப் பொருத்தமட்டில் அப்போஸ்தலர்கள் தவறாக நடந்துகொண்டார்கள் என்று சுட்டிக்காட்ட எவ்வித ஆதாரமுமில்லை. அவர்கள் நீண்ட நேரத்தை ஜெபத்தில் செலவிட்டார்கள். அவர்கள் வேதத்திற்குக் கீழ்ப்படிய ஆர்வம் கொண்டிருந்தார்கள். யூதாசின் இடத்தை நிரப்ப வேறொருவரைத் தெரிந்துகொள்வதில் அவர்கள் ஒருமனப்பாட்டுடன் செயல்பட்டார்கள். மேலும் இந்தப் பன்னிருவரின் ஊழியத்தினின்றும் பவுல் பெற்ற ஊழியம் வேறுவகையானதாக இருந்தது. மேலும், பவுல் யூதாசின் இடத்தை நிரப்புவதற்குக் குறிக்கப்பட்டவர் என்ற குறிப்பை நாம் எங்கும் காண்கிறதில்லை. இயேசு கிறிஸ்து இவ்வுலகில் இருந்தபோது, இஸ்ரவேலுக்குப் பிரசங்கிக்கும்படி இப்பன்னிருவரையும் தெரிந்துகொண்டார். ஆனால் பவுலோ புறவினத்தவருக்கு ஊழியம் ஆற்றும்படி, கிறிஸ்து மகிமையடைந்த பிறகு அழைக்கப்பட்டவராவார்.

சீட்டுப்போடுதல் என்னும் முறை தேவனுடைய சித்தத்தை அறிவதற்கான பழக்கமாக பழைய ஏற்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. "சீட்டு மடியிலே போடப்படும்; காரிய சித்தியோ கர்த்தரால் வரும்" (நீதி. 16:33).

ஆகவே மத்தியா தெரிந்தெடுக்கப்பட்ட செயல் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதே ஆகும். மேலும் அந்நிகழ்ச்சிக்குப் பிறகு அப்போஸ்தலர்கள் பன்னிருவர் என்று அழைக்கப்பட்டதாலே இது உறுதியாகிறது (அப். 6:2 -ஐக் காண்க).

## அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் காணப்படும் மன்றாட்டுகள்

ஜெபத்தின் மூலம் வெற்றிபெறுதல் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் ஒரு பாடமாகத் திகழ்கிறது. சீடர்கள் இரண்டு வேறுபட்ட தருணங்களில் ஜெபித்தார்கள் என்னும் உண்மையை ஏற்கனவே நாம் முதல் அதிகாரத்தில் கண்டோம். மேலறையில் அவர்கள் ஏறெடுத்த மன்றாட்டின் விடையை பெந்தகொஸ்தே நாளில் பெற்றார்கள். யூதாசின் இடத்தை நிரப்புவதற்கான வழிநடத்துதலை நாடி அவர்கள் ஏறெடுத்த மன்றாட்டுக்கு விடை, மத்தியாவின் பெயரில் சீட்டு விழுந்ததன் மூலமாகத் தரப்பட்டது. இதுபோன்ற இன்னும் பல நிகழ்ச்சிகளை இந்நூல் முழுவதும் தொடர்ந்து நாம் காணலாம்.

பெந்தெகொஸ்தே நாளில் மனமாற்றம் பெற்ற யாவரும் ஜெபம் பண்ணுதலில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (2:42). இவ்வித ஜெப ஐக்கியம் தொடர்ந்து காணப்படுவதற்கு ஏற்ற மிகச்சிறந்த சூழ்நிலை அன்று நிலவியதை அடுத்துவரும் வசனங்கள் விவரிக்கின்றன (43-47).

பேதுருவும் யோவானும் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, விசுவாசிகள் வசனத்தைச் சொல்லுவதற்கு தைரியம் கிடைக்கத்தக்கதாக ஜெபித்தார்கள் (4:29). அதன் விளைவாக அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள் (4:31).

ஏழுபேர் தெரிந்தெடுக்கப்பட்டு, பொருளாதார விஷயங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், பன்னிருவராகிய சீடர்கள் தங்களுடைய நேரத்தை இடைவிடாமல் ஜெபம் பண்ணுவதிலும் போதிக்கிற ஊழியத்திலும் செலவிட வேண்டும் என்றும் ஆலோசனை கூறினார்கள் (6:3,4). அதன் பிறகு அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள் (6:6). அடுத்த வசனம் நற்செய்தி புதிய வகையில் வியத்தகு வெற்றி பெற்றதைக் குறிப்பிடுகிறது.

தான் இரத்த சாட்சியாக மரணம் அடைவதற்கு முன் ஸ்தேவான் ஜெபித்தான் (7:60). அந்த மன்றாட்டுக்கு விடையை 9- ஆவது அதிகாரம் குறிப்பிடுகிறது. அந்த நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்த தர்சு நகரத்தைச் சேர்ந்த பவுல் மனமாற்றம் பெற்றார்.

விசுவாசித்த சமாரியருக்காக பேதுருவும் யோவானும் ஜெபம் செய்தார்கள். அதன் விளைவாக அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் (8:15-17).

தர்சுப் பட்டணத்தானாகிய சவுல் மனமாற்றம் அடைந்த பிறகு, யூதாவின் வீட்டில் இருந்து மன்றாடினார். அந்த மன்றாட்டுக்குப் பதில் கூறும் வகையில் தேவன் அவரிடத்தில் அனனியாவை அனுப்பினார் (9:11-17).

யோப்பா பட்டணத்தில் பேதுரு ஏறெடுத்த மன்றாட்டின் விளைவாக தொற்காள் உயிரோடு எழுப்பப்பட்டாள் (9:40). அதன் காரணமாகப் பலர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் (9:42).

புறவினத்தானாகிய கொர்நேலியு ஜெபித்தான் (10:2); அவனுடைய ஜெபம் தேவனுடைய சமுகத்தில் நினைவுகூரப்பட்டது (10:4). அப்பொழுது ஒரு தேவதூதன் அவனுக்குத் தரிசன

மாகி, சீமோன் பேதுரு என்னும் பெயருடைய மனிதனை அழைத்து வரும்படி அறிவுறுத்தினான் (10:5). அடுத்த நாள் பேதுரு ஜெபித்தார் (10:9). அவருடைய ஜெபத்துக்கு விடையாக விண்ணுல கக் காட்சி தரப்பட்டது. கொர்நேலியுவுக்கும் மற்ற புறவினத்தவருக்கும் இறையரசின் கதவு திறக்கப் படுவதற்கு அக்காட்சியே வழிகோலிற்று.

பேதுரு சிறையில் அடைக்கப்பட்டபோது, அவ ருக்காகக் கிறிஸ்தவர்கள் மிகுந்த ஊக்கமாக ஜெபித்தார்கள் (12:5). அதிசயமான வகையில் தேவன் அவரைச் சிறைச்சாலையிலிருந்து விடு வித்துத் தமது பதிலைத் தந்தார். மன்றாடியவர்களே அதைக்கண்டு திகைத்துப்போனார்கள் (12:6-17).

அந்தியோகியாவில் தீர்க்கதரிசிகளும் போத கர்களும் உபவாசமிருந்து ஜெபித்தார்கள் (13:3). பவுலும் பர்னபாவும் மேற்கொண்ட முதலாவது ஊழியப் பயணத்தை அவர்களே தொடங்கிவைத் தார்கள். அந்தப் பயணத்தைக் குறித்துச் சொல் லப்பட்ட கூற்று: "மன்றாட்டின் விளைவாக வெளிப் பட்ட வல்லமை மிகுந்த ஊழியங்களிலேயே மிகவும் வலிமை வாய்ந்த ஊழியம் இதுதான். ஏனெனில் பவுலும் பர்னபாவும் நசெய்திப் பணி யாளர்களாகச் செயலாற்றி நிறைவேற்றிய இந்தத் திருப்பணியே பூமியின் எல்லைகளைச் சென்ற டைந்தது. நாமும் இதன் வாயிலாகவே கிறிஸ்து வைக் கண்டடைந்தோம்."

பவுலும் பர்னபாவும் திரும்பி வந்தபோது லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா ஆகிய பட்டணங்களில் விசுவாசித்த கிறிஸ்தவப் பெருமக் களுக்காக ஜெபித்தார்கள் (14:23). அவர்களில் ஒருவன் தீமோத்தேயு. அந்த ஜெபத்தின் விடை யாக அல்லவோ, பவுலும் சீலாவும் இரண்டாவது ஊழியப் பயணத்தை மேற்கொண்டபோது அவர் களுடன் தீமோத்தேயும் சேர்ந்துகொண்டான்?

பிலிப்பு பட்டணத்துச் சிறைச்சாலையில் பவுலும் சீலாவும் ஏறெடுத்த நடுஇரவு ஜெபத்தின் காரணமாக பூமியதிர்ச்சி ஏற்பட்டது. மேலும் சிறைச்சாலைக்காரனும் அவனுடைய வீட்டாரும் மனமாற்றம் பெற்றார்கள் (16:25-34).

மிலேத்து தீவில் எபேசுப் பட்டணத்து மூப்பர் களுடன் சேர்ந்து பவுல் ஜெபம் பண்ணினார் (20:36); அதன் காரணமாக அவர்கள் தங்களுடைய பாசத் தையும், பவுலை மீண்டும் இந்த வாழ்க்கையில் காணமுடியாது என்ற எண்ணத்தினால் ஏற்பட்ட துக்கத்தையும் உருக்கமான முறையில் வெளிப் படுத்தினார்கள்.

தீரு பட்டணத்துக் கிறிஸ்தவர் கடற்கரையில் பவுலைச் சந்தித்து அவருடன் சேர்ந்து ஜெபித் தார்கள் (21:5). அவர்களுடைய ஜெபங்களே பவுலுடன் ரோமாபுரிவரை சென்று கொலையாளி களின் திட்டத்தை முறியடித்தன.

கப்பற்சேதத்துக்கு முன் பவுல் வெளிப்படை யாக ஜெபித்து, உணவுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தினார். நம்பிக்கையிழந்த மாலுமிகளும் உடன் பயணிகளும் அதன் நிமித்தம் திடமனப்பட் டார்கள் (27:35,36).

மெலித்தா தீவில் நோய்வாய்ப்பட்டிருந்த அத் தீவின் முதலாளியின் தகப்பனுக்காகப் பவுல் ஜெபித்தார். அதன் விளைவாக நோயுற்றவன் அற்புதமாகக் குணமானான் (28:8).

ஆகவே ஆதிநாட்களில் இருந்த சபைகள் ஜெபம் சூழ்ந்த நிலையில் செயல்பட்டன என்பது தெளிவு. கிறிஸ்தவர் மன்றாடும் வேளையில் தேவன் கிரியை செய்கிறார்.

### ஈ. பெந்தெகொஸ்தே நாளும் திருச்சபையின் பிறப்பும் (2:1-47)

**2:1** கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு நிழ லான முதற்பலன் பண்டிகை முடிந்த ஐம்பதாவது நாளில், தூய ஆவியானவரின் வருகைக்கு அடை யாளமாக **பெந்தெகொஸ்தே** பண்டிகை கொண் டாடப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள **பெந்தெ கொஸ்தே நாளில்** சீடர்கள் யாவரும் **ஓரிடத்தில்** கூடி **வந்திருந்தார்கள்**. பெந்தெகொஸ்தே பண்டிகையை விவரிக்கும் வேதபகுதியை அவர் கள் தங்களுடைய உரையாடலுக்கு ஆதார மாகத் தெரிந்துகொண்டார்கள் என்றே தோன்று கிறது.அது அந்தநாளுக்குப் பொருத்தமான விவாதப்பொருளே ஆகும் (லேவி. 23:15-16 ஆகிய வசனங்களைக் காண்க). அல்லது, "இதோ சகோ தரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் இன்பமுமானது" என்னும் சங்கீதத்தை (133) அவர்கள் பாடியிருப்பார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

**2:2** தூய ஆவியானவரின் வருகையில், கேட்ப தற்கு ஒரு முழக்கம், காண்பதற்கு ஒரு காட்சி, அனுபவிப்பதற்கு ஓர் அற்புதம் ஆகியவை அடங்கி யிருந்தன. கேட்பதற்கு ஒரு முழக்கம் - பலத்த காற்று அடிக்கிற **முழக்கம்போல வானத்திலி ருந்து சடுதியாய் ஒரு முழக்கம்** உண்டாகி அந்த **வீடு முழுவதையும் நிரப்பிற்று.** தூய ஆவியானவருக்கு அடையாளமாக விளங்கும் எளிதில் ஒழுகிச் செல்லக்கூடிய பல பொருட்

களில் ஒன்று **காற்று** (எண்ணெய், தீ, நீர்). இ.ீது அவருடைய ஒப்பற்ற ஆற்றலையும், நம்மால் முன்னறிந்து கூறுவதற்கு இயலாதவகையில் அவர் செயல்படுவதையும் வெளிப்படுத்துகிறது.

**2:3** காண்பதற்கு ஒரு காட்சி - **அக்கினி மயமான பிரிந்த நாவுகள்** காணப்பட்டு சீடர்கள் **ஒவ்வொருவர் மேலும்** அமர்ந்தன. அங்கே அக்கினி நாவுகள் என்று சொல்லப்படவில்லை, **அக்கினி மயமான நாவுகள்** என்றே சொல்லப்பட்டுள்ளது.

இந்த வியத்தகு நிகழ்ச்சியையும் அக்கினி ஞானஸ்நானத்தையும் ஒன்று என நினைத்து நாம் நம்முடைய மனதைக் குழப்பிக்கொள்ளக் கூடாது. ஆவியின் ஞானஸ்நானமும் அக்கினி ஞானஸ்நானமும் திருமறையில் ஒரே இடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் (மத். 3:11,12; லூக்கா 3:16,17), அவை இரண்டும் வெவ்வேறானவை, ஒன்றோடொன்று தொடர்பற்றவை. முதலாவது ஆசிர்வாத ஞானஸ்நானம், இரண்டாவது நியாயத்தீர்ப்பு. முதலாவது விசுவாசிகளிடத்தில் மாற்றம் உண்டாக்கியது, மற்றதோ அவிசுவாசிகளைப் பாதிக்கப்போகிற ஒன்று. முதலாவது ஞானஸ்நானத்தின் மூலமாக தூய ஆவியானவர் விசுவாசிகளினிடத்தில் குடியிருக்கிறார். அவர்கள் வல்லமை பெற்று, திருச்சபை உருவானது. இரண்டாவது ஞானஸ்நானத்தின் மூலமாக அவிசுவாசிகள் அழிவை அடைவார்கள்.

மனமாற்றம் பெற்றவர்களும், மனமாற்றம் பெறாதவர்களுமாகிய இரு கூட்டத்தாரும் ஒன்றாக வந்திருந்தபோது (மத். 3:6,7 - வசனங்களைக் காண்க.) அவர்களோடு பேசிய யோவான் ஸ்நானகன், அவர்களுக்குக் கிறிஸ்து ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கப்போவதாகக் கூறினார் (மத். 3:11). ஆனால் மெய்யாக மனமாற்றம் பெற்றவர்கள் தனித்திருந்த போது (மாற்கு 1:5), அவர்களுக்குக் கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று அவர் கூறினார் (மாற்கு 1:8).

அவ்வாறாயின் **அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள்** (அப். 2:3) என்னும் சொற்றொடரின் பொருள் என்ன? **நாவுகள்** பேசுவதைக் குறிக்கின்றன என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பிறநாட்டு மொழிகளைப் பேசும் அறபுத வரத்தை அன்று அப்போஸ்தலர்கள் பெறவிருந்தனர் என்பதை அது குறிப்பிட்டிருக்கக் கூடும். **அக்கினி** தூய ஆவியானவரைக் குறிப்பிடுவதாகப் பொருள்கொள்ளலாம். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து வெளிப்பட்ட துணிவும், தீவிரமும், உற்சாகமும் உடைய பிரசங்கத்தையும் இது குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

உற்சாகமிக்க பிரசங்கத்தை இது குறிப்பிடுகிறது என்னும் கருத்து சரியானதாகத் தோன்றுகிறது. ஏனெனில் உற்சாகமானது ஆவியில் நிறைந்த வாழ்க்கையின் இயல்பு நிலையாகும். மேலும் அதன் விளைவாகத் தவிர்க்கவியலாத படி சாட்சிபகர்வது நிகழும்.

**2:4** அனுபவிப்பதற்குரிய அற்புதம் - **ஆவியினால்** நிரப்பப்படும் நிலையே பெந்தெகொஸ்தே நாளுடன் தொடர்புடைய அனுபவம் ஆகும். அதனைத் தொடர்ந்து அவர்கள் **வெவ்வெறு பாஷைகளில்** பேசினார்கள்.

இதுகாறும் தேவ ஆவியானவர் சீடர்களோடு **உடன்** இருந்தார். ஆனால் இப்பொழுதோ அவர் அவர்களுக்கு **உள்ளே** குடியிருக்கத் தொடங்கினார் (யோவான் 14:17). மனிதர்களுடன் தூய ஆவியானவர் ஈடுபடும் முறையில் முக்கியமான திருப்பம் ஏற்பட்டதை இவ்வசனம் இவ்வாறு சுட்டிக்காட்டுகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆவியானவர் மனிதர்கள்மேல் வந்தார். ஆனால் அப்பொழுது அவர் அவர்களைத் தமது குடியிருப்பாகத் தெரிந்துகொள்ளவில்லை (சங். 51:11). பெந்தெகொஸ்தே நாள்முதல் தேவ ஆவியானவர் மனிதர்களிடத்தில் நிரந்தரமாகக் குடியிருக்கிறார். அன்று அவர் என்றென்றைக்கும் அவர்களுடன் இருக்கும்படியாக வந்தார் (யோவான் 14:16).

பெந்தெகொஸ்தே நாளில் விசுவாசிகளிடத்தில் பரிசுத்த ஆவியானவர் வந்து குடியிருக்கத் தொடங்கியது மட்டுமின்றி, அவராலே அவர்கள் நிரப்பப்பட்டார்கள். நாம் இரட்சிப்படையும் அதே தருணத்தில் தேவனுடைய ஆவி நம்மிடத்தில் வந்து தங்க ஆரம்பிக்கிறார். ஆனால் ஆவியினால் நிரப்பப்பட நாம் திருமறையைப் படிக்க வேண்டும், தியானத்திலும் ஜெபத்திலும் நீண்ட நேரத்தைச் செலவிடவேண்டும். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும்.[5] இன்றைய நாளில் தூய ஆவியினால் நிரப்பப்படுதல் தானாக நிகழுமென்றால், "ஆவியினால் நிறைந்து ... கீழ்ப்படியுங்கள்" என்று நாம் அறிவுறுத்தப்பட வேண்டிய அவசியமில்லையே (எபே. 5:18).

பெந்தெகொஸ்தே நாளில் தூய ஆவியானவரின் வருகையால் விசுவாசிகள் கிறிஸ்துவின்

சரீரமாக, அதாவது திருச்சபையாக உருவெடுத்தனர்.

நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் -எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு - எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (1 கொரி. 12:13). இதுமுதற்கொண்டு விசுவாசிக்கிற யூதர்களும் புறவினத்தவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரே புதிய மனிதனாகவும், ஒரே சரீரத்தின் அவயவங்களாகவும் மாற்றம் பெறுவார்கள் (எபே. 2:11-12).

**பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்ற** சீடர்கள், **ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்**. தொடர்ந்து வருகிற வசனங்களைக் காணும்போது, அவர்கள் இதுவரை கற்றிராததும், உண்மையாகவே வழங்கி வந்ததுமான பிறநாட்டு மொழிகளில் பேசுவதற்கான ஆற்றல் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்பது தெளிவு. அவர்கள் பேசியவை கருத்தற்ற பிதற்றலோ, மெய்மறந்த நிலையில் பேசிய பேச்சோ அல்ல. அந்த நாட்களில் உலகின் பல்வேறு பகுதிகளில் வழக்கத்தில் இருந்த குறிப்பிட்ட சில மொழிகளில்தான் அவர்கள் பேசினார்கள். அப்போஸ்தலர் பிரசங்கித்த சத்தியத்துக்குச் சான்றாகக் கொடுக்கப்பட்ட அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் ஆகியவற்றில் வெவ்வேறு **பாஷைகளில்** பேசும் வரமும் ஒன்று (எபி. 2:34). அந்த நாளில் புதிய ஏற்பாடு எழுதப்படவில்லை. இப்பொழுதோ, தேவனுடைய திருமறையானது முழுவதும் எழுத்து வடிவில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நிலையில், அடையாள வரங்கள் பெரும்பாலும் நம்மைவிட்டு அகன்றுவிட்டன. (ஆயினும், ஒப்பற்ற வல்லமையுடைய தேவ ஆவியானவர் விரும்பினால், இன்னும் அப்படிப்பட்ட வரங்களைப் பயன்படுத்த முடியும் என்பதே உண்மை.)

பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்ற ஒருவர் நிச்சயமாகப் **பாஷைகளைப்** பேசும் வரத்தையும் பெற்றிருக்கவேண்டும் என்று கூறுவதற்கு ஆதரவாக, பெந்தெகொஸ்தே நாளில் **பாஷைகள்** பேசப்பட்டன என்னும் இந்த நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறக்கூடாது. அது உண்மையானால், கீழ்க்காணும் நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களில் பாஷைகளைப் பற்றிய குறிப்பு எதுவும் சொல்லப்படவில்லை:

1. மூவாயிரம் பேர் மனமாற்றம் பெற்ற நிகழ்ச்சி (அப். 2:41).
2. ஐயாயிரம் பேர் மனமாற்றம் பெற்ற நிகழ்ச்சி (அப். 4:4).
3. சமாரியர் பரிசுத்த ஆவியைப் பெற்ற நிகழ்ச்சி (அப். 8:17).

உண்மையில் **பாஷைகளாகிய** வரம் நிகழ்ந்த விவரம், அப்போஸ்தலர்களுடைய நடபடிகள் நூலில், மேற்கூறிய சந்தர்ப்பத்தைத் தவிர கீழ்க்கண்ட இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது:

1. புறவினத்தவர் கொர்நேலியுவின் வீட்டில் மனமாற்றம் பெற்றபோது (அப். 10:46).
2. எபேசுப் பட்டணத்தில் யோவானுடைய சீடர்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெற்றபோது (அப். 19:6).

இந்த நான்காவது வசனத்திற்கான விளக்கத்தை நிறைவு செய்தவற்குமுன், வேதமாணாக்கரிடத்தில், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்து, அதாவது அது எத்தனை தடவை நிகழ்ந்தது என்பது பற்றியும், அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என்பதை நாம் சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஆவியின் ஞானஸ்நானம் எப்பொழுதெல்லாம் நிகழ்கிறது என்பதுபற்றி சிலருடைய கருத்துகள் பின்வருமாறு:

1. அது ஒரே ஒருமுறைதான் நடைபெற்றது. அதாவது பெந்தெகொஸ்தே நாளில் மட்டுமே அந்நிகழ்ச்சி நடைபெற்றது. அந்நேரத்தில் கிறிஸ்துவின் சரீரம் உருப்பெற்றது. மேலும் அன்றிலிருந்து எல்லா விசுவாசிகளும் ஞானஸ்நானத்தின் நன்மைக்குள்ளாகப் பிரவேசிக்கிறார்கள்.
2. அது மூன்று அல்லது நான்கு படிகளாக நிறைவேறியது-பெந்தெகொஸ்தே நாளில் (அதி. 2); சமாரியாவில் (அதி. 8); கொர்நேலியுவின் வீட்டில் (அதி. 10); எபேசுப் பட்டணத்தில் (அதி. 19).
3. ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுகிற நேரங்களிலெல்லாம் இது நிறைவேறுகிறது.

ஆவியின் ஞானஸ்நனத்தின் விளைவு, ஒவ்வொரு தனிநபரிடமும், பொதுவாக அவர்கள் இரட்சிக்கப்பட்ட நிகழ்ச்சிக்குப் பிறகு, “கிருபையின் இரண்டாவது கிரியையாக” நிறைவேறி, முழுமையான பரிசுத்தமாக்கப்படுதலை அவரவரிடத்தில் ஏற்படுத்துகிறது என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இந்தக் கருத்துக்குத் திருமறையின் ஆதரவு இல்லை. நாம் ஏற்கனவே குறிப்பிட்

டதுபோல, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக விசுவாசிகள்:

1. திருச்சபையாக ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறார்கள் (1 கொரி. 12:13)

2. வல்லமையினால் அணிவிக்கப்பட்டிருக்கிறார்கள் (அப். 1:8).

**2:5-13** பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடும்படி, அன்றைய நாளில் அறியப்பட்டிருந்த உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், **தேவபக்தியுள்ள யூதர்கள் எருசலேம்** நகரில் கூடிவந்திருந்தார்கள். என்ன நடந்தது என்ற செய்தியைக் கேட்டபோது அவர்கள் யாவரும் அப்போஸ்தலர் தங்கியிருந்த வீட்டுக்குத் திரண்டு வந்தார்கள். அன்று போலவே இன்றும், தேவனுடைய ஆவியானவர் செயலாற்றுகிற வேளைகளில் மனிதர்கள் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள்.

**திரளான ஜனங்கள்** அந்த வீட்டை வந்தடைந்தபோது, அதற்கு முன்னரே அப்போஸ்தலர் பற்பல பாஷைகளைப் பேசிக்கொண்டிருந்தைக் கண்டார்கள். கலிலேயாவைச் சேர்ந்த சீடர்கள் இவ்விதமாக வெவ்வேறு நாடுகளில் வழங்கிவந்த பல மொழிகளில் பேசியதைக் கேட்ட பார்வையாளர்கள் திகைத்து நின்றார்கள். யாரெல்லாம் பேசினார்களோ அவர்களிடமே இந்த அற்புத நிகழ்ச்சி நடந்தது; கேட்டவர்களிடம் அற்புதம் நிகழவில்லை. கேட்டவர்கள் பிறப்பின்படி யூதராயிருந்தாலும், யூதமார்க்கத்தைத் தழுவியவர்களாயிருந்தாலும், அவர்கள் கிழக்கு தேசத்தாரோ மேற்கு தேசத்தாரோ அல்லது வடக்கு தேசத்தாரோ தெற்கு தேசத்தாரோ யாராயிருந்தாலும் ஒவ்வொருவரும் **தங்கள் தங்கள் பாஷையிலே தேவனுடைய மகத்துவங்களைக்** குறித்து சீடர்கள் பேசுவதைக் கேட்டார்கள். **"பாஷை"** என்று 6 மற்றும் 8 ஆகிய வசனங்களில் நாம் காணும் மூலமொழிச் சொல்லிலிருந்தே "பேச்சுவழக்கு" என்னும் சொல் பிறந்தது.

வெவ்வேறு மொழி பேசக்கூடிய மக்கள் யாவரும் ஒரே நேரத்தில் நற்செய்தியைக் கேட்க வேண்டும் என்பது பெந்தெகொஸ்தே நாளில் பாஷைகளாகிய வரம் அருளப்பட்டதன் ஒரு நோக்கமாகும் என்பதைப் பெரும்பாலோர் ஒப்புக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, "தேவன் தமது நியாயப்பிரமாணத்தை ஒரு நாட்டுக்கு ஒரு மொழியிலே வழங்கினார்; ஆனால் அவர் தமது நற்செய்தியைப் பல நாடுகளுக்குப் பல மொழிகளிலே வழங்கினார்" என்று ஒரு நூலாசிரியர் எழுதுகிறார்.

ஆனால் இந்த வேதபகுதி மேற்கூறிய கருத்தை ஆதரிக்கிறதில்லை. வெவ்வேறு பாஷைகளில் பேசியவர்கள் **தேவனுடைய மகத்துவங்களையே** அறிவித்தார்கள் (2:11). இ.ந்து இஸ்ரவேல் மக்களுக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்டது (1 கொரி. 14:21,22). கேட்ட மக்கள் வியந்து அதிசயிக்க வேண்டும் என்பதே அதன் நோக்கமாயிருந்தது. ஆனால் பேதுரு அதற்கு மாறாகப் பெரும்பாலோர் பேசிவந்த மொழியிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். எல்லோரும் அந்த மொழியைப் பேசாதவர்களாயினும், பெரும்பாலோர் அவருடைய செய்தியைப் புரிந்துகொண்டார்கள்.

வெவ்வேறு பாஷைகளில் சீடர்கள் பேசியதைக் கேட்ட மக்கள், அதைக் குறித்து வெவ்வேறு வகையாக எண்ணினார்கள். அதில் சிலருக்கு ஆழ்ந்த விருப்பம் உண்டானதுபோலத் தோன்றிற்று. வேறு சிலர் **மதுபானத்தால்** அப்போஸ்தலர் **நிறைந்திருந்ததாக** எண்ணினார்கள். சீடர்கள் தங்களுக்கு அப்பாற்பட்ட வல்லமைக்கு உட்பட்டிருந்தார்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்கள் மதுபானத்திற்கு அல்ல, பரிசுத்த ஆவியின் அதிகாரத்திற்கே உட்பட்டிருந்தார்கள்!

வியத்தகு ஆவிக்குரிய நிகழ்ச்சி எதுவாயினும், அதற்கு இயற்கையின் அடிப்படையில் விளக்கமளிக்க மனந்திரும்பாத மனிதர்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறார்கள். ஒரு முறை தேவனுடைய சத்தம் வானத்திலிருந்து கேட்டபோது, அதனை இடிமுழக்கம் என்று சிலர் கூறினார்கள் (யோவான் 12:28,29). இப்பொழுதோ, ஆவியானவரின் வருகையால் உண்டான உற்சாகமிக்க நிகழ்வுகளை அவிசுவாசிகள் ஏளனத்தோடு **மதுபான நிறைவின்** விளைவுகள் என்றார்கள். "ஒளிபொருந்திய பொருட்களை இவ்வுலகம் மங்கச் செய்கிறது, புகழ்ச்சிக்குரியவர்களைத் தூசிக்கும் கீழாக இழுத்துச் செல்லுகிறது" என்று ஸ்கில்லர் என்பார் கூறினார்.

**2:14** ஆணையினாலும் சாபத்தினாலும் தன்னுடைய கர்த்தரை மறுத்துரைத்த சீடன், இப்பொழுது அங்கு திரண்டிருந்த மக்களிடத்தில் உரையாற்ற முன்வந்தார். இப்பொழுது அவர் துணிவற்றவரோ தடுமாற்றமுற்றவரோ அல்லர், அவர் சிங்கத்தைப்போன்று அஞ்சாநெஞ்சம் உடையவராக மாறிவிட்டார். அந்தப் பெந்தெகொஸ்தே நாள் அவரை அவ்வாறு மாற்றிவிட்

டது. இப்பொழுது **பேதுரு** ஆவியினால் நிரப்பப் பட்டவராக விளங்கினார்.

பிலிப்பு செசரியாவில் இருந்தபோது பேதுரு விடம் விண்ணக அரசின் திறவுகோல்களைத் தரவிருப்பதாகக் கர்த்தர் வாக்குறுதி தந்தார் (மத். 16:19). இங்கே அத்திறவுகோல்களைக்கொண்டு பேதுரு யூதர்களுக்கு கதவைத் திறப்பதாகக் காண்கிறோம் (அப். 2:14). பிற்பாடு 10 -ஆவது அதி காரத்தில் அவர் புறவினத்தவருக்கு கதவைத் திறப்பதைக் காணமுடியும்.

**2:15** முதலாவதாக, அன்றைய தினத்தில் நடைபெற்ற வழக்கத்துக்கு மாறான நிகழ்ச்சிகள் யாவும் மதுபான வெறியால் உண்டானவையல்ல என்பதை அப்போஸ்தலன் விளக்கிக் கூறினார். அப் பொழுது காலை 9.00 மணி. அந்தக் காலை வேளை யிலே அத்தனை மனிதர்கள் குடித்து **வெறிகொண் டிருக்க** மாட்டார்கள். மேலும் பண்டிகை நாட் களில் ஜெபாலயப் பயிற்சி மேற்கொண்டவர்கள் காலை 10.00 மணி வரையிலோ நண்பகல் வரை யிலோ உண்ணவும் குடிக்கவும் மாட்டார்கள். அந்த நேரம் அன்றைய தினத்தில் பலிசெலுத்தப் படும் நேரத்தைப் பொருத்துக் கணக்கிடப்படும்.

**2:16-19** தேவனுடைய ஆவியானவர் **தீர்க்க தரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட படியே** ஊற்றப்பட்டார். அதுவே வழக்கத்துக்கு மாறான நிகழ்ச்சிகளுக்குக் காரணம் (யோவேல் 2:28 -ஐக் காண்க).

உண்மையில் யோவேல் உரைத்த தீர்க்க தரிசனம் யாவும் பெந்தெகொஸ்தே நாளில் நடை பெறவில்லை. பதினேழு முதல் இருபது வரை யிலான வசனங்களில் சொல்லப்பட்டுள்ள வியத் தகு காட்சிகள் பல அந்தநேரத்தில் நடக்க வில்லை. **கடைசி நாட்களில்,** அதாவது **கர்த்தரு டைய பெரிதும் பிரகாசமுமான நாள் வருமுன்னே** நடக்கப் போகிறவற்றின் முன்நிகழ்வுகள் மட்டுமே பெந்தெகொஸ்தே நாளில் நடைபெற்றன. யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருந் தால், அதன் பிறகு வாக்குறுதி ஏன் தரப்பட வேண்டும்? (3:19) அவ்வாறு இஸ்ரவேல் நாடு முழுவதுமாக மனந்திரும்பி, தாங்கள் குத்தின வரை ஏற்றுக்கொண்டிருந்திருக்குமானால், அவர் மீண்டும் உடனடியாக வந்து, கர்த்தருடைய நாளைக் கொண்டுவந்திருப்பார் அல்லவா?

வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள ஒரு தீர்க்கதரிசனத்தில் ஒருபகுதி நிறைவேறுதல் உடனடியாகவும் அதனுடைய முழுமையான நிறைவேறுதல் பிற்காலத்திலும் நடைபெறும் என்னும் விதிக்கு யோவேல் தீர்க்கதரிசன மேற் கோள் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தேவனுடைய ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் ஊற்றப்பட்டார். எனினும் அன்று அவர் மாம்சமான யாவர்மேலும் என்று சொல்லப்பட்ட வண்ணம் ஊற்றப்படவில்லை. இத்தீர்க்கதரிச னத்தின் முழுமையான நிறை வேறுதல் உபத்திர வகால முடிவின்போது நடைபெறும். மகிமை நிறைந்தவராகக் கிறிஸ்து மீண்டும் வருமுன்னர், உயர வானத்திலே **அற்புதங்களும்** தாழ பூமி யிலே **அதிசயங்களும்** நிகழும் (மத். 24:29,30). அதன்பிறகு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தமது பகைஞரை ஒடுக்கும்பொருட்டும், தமது அரசை நிறுவும்பொருட்டும் இப்புவியில் தோன்றுவார். ஆயிரமாண்டு ஆட்சியின் தொடக்கத்தில் தேவ ஆவியானவர் **மாம்சமான யாவர் மேலும்** ஊற் றப்படுவார். புறவினத்தவராயினும், யூதராயினும் யாவர்மேலும் ஆவியானவர் ஊற்றப்பட்டு, அந்த நிலைமை, ஆயிரமாண்டு ஆட்சிக் காலம் முழு வதும் தொடரும். ஆண் பெண் வேற்றுமை, வயது வேற்றுமை அல்லது சமுதாய ஏற்றத்தாழ்வு எதுவு மின்றி ஆவியானவரின் பல்வேறு வகையான வெளிப்பாடுகள் அருளப்படும். அப்பொழுது தோன்றும் தரிசனங்களும் சொப்பனங்களும் மக்கள் பெறுகின்ற ஞானத்தைக் குறிப்பிடுகின் றன. தீர்க்கதரிசனங்கள் அந்த ஞானத்தை மற்ற வர்களுக்குப் பகிர்ந்தளிப்பதைக் குறிப்பிடுகின் றன. வெளிப்படுத்துதல் மற்றும் கற்பித்தல் ஆகிய வரங்கள் வெளிப்படையாகக் காட்சியளிக்கும். யோவேல் கூறிய கடைசி நாட்களில் இவையாவும் நிகழும் (வச. 17). இவை யாவும் இஸ்ரவேலின் **கடைசி நாட்களில்** நடைபெறுமேயொழிய சபை யின் கடைசிநாட்களில் அல்ல என்பதில் ஐயத் திற்கு இடமேதுமில்லை.

**2:20 கர்த்தருடைய நாள் வருமுன்னே** வானத் தில் அற்புதங்கள் நிகழுமென்று மிகத்தெளி வாய்ச் சொல்லப்பட்டுள்ளது. கர்த்தர் தம்முடைய பகைஞரை அழிக்கவும், வல்லமையோடும் பெரி தான மகிமையோடும் ஆளுகை செய்யவும் அவர் இவ்வுலகிற்குத் திரும்பி வரும் நிகழ்ச்சியே கர்த்த ருடைய நாள் என்று இங்கு குறிப்பிடப்பட்டிருக் கிறது என்பதை இந்த வேதபகுதியின் பின்னணி எடுத்துரைக்கிறது.

**2:21** யோவேல் தீர்க்கதரிசன நூலிலிருந்து மேற்கோளை எடுத்துரைத்த பேதுரு, **கர்த்தரு டைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்** என்னும்

வாக்குறுதியோடு தன் உரையை முடித்தார். கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கிறதினாலே இரட்சிப்பு எல்லா மனிதருக்கும் அருளப்படுகிறது என்னும் கொள்கையின் அடிப்படையிலான இந்த நற்செய்தி எக்காலத்துக்கும் உரியதாக விளங்குகிறது. **கர்த்தருடைய நாமம்** என்னும் சொற்றொடர் கர்த்தருடைய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய நிலையைச் சுட்டிக்காட்டுவதாகும். ஆகவே **கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல்** என்பது, அவரையே விசுவாசத்திற்கு மெய்யான இலக்காகவும் இரட்சிப்படைவதற்கு ஒரே வழியாகவும் கொண்டு அவரைத் **தொழுது கொள்ளுதலே** ஆகும்.

**2:22-24** ஆனால் அந்தக் கர்த்தர் யார்? அவர்கள் சிலுவையில் அறைந்த இயேசுவே கர்த்தரும் கிறிஸ்துவும் ஆவார் என்னும் திகைப்பூட்டும் செய்தியை பேதுரு அடுத்து அறிவிக்கப்போகிறார். முதலில் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றியும், அதன் பிறகு அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், விண்ணுலகு ஏகுதல், இறுதியாக பிதாவாகிய **தேவன்** தமது **வலதுபாரிசத்திலே** அவரை மகிமையடையச் செய்தல் ஆகியவை பற்றியும் பேதுரு எடுத்துரைத்தார். **இயேசு** இன்னும் யூதேயாவிலுள்ள கல்லறையில் இருப்பதாக அவர்கள் எண்ணிக்கொண்டிருந்தால், அந்தத் தவறான எண்ணத்தை அவர்களுடைய உள்ளங்களிலிருந்து பேதுரு அகற்றப்போகிறார்! அவர்களால் கொலை செய்யப்பட்டவர் இப்பொழுது விண்ணுலகில் இருக்கிறார், இத்தருணத்திலும் அவர்களால் அவருடன் இணக்கம் கொள்ள முடியும்.

தொடர்ந்து அப்போஸ்தலன் எழுப்பிய வாதம் ஊற்றென ஓடுகிறதைக் காணலாம்: **தேவனுடைய** வல்லமையால் **நசரேயனாகிய இயேசு** நடப்பித்த **அற்புதங்களினால்** தாம் தேவனிடத்திலிருந்து வந்த மனிதர் என்பதை வெளிப்படுத்தினார் (வச. 22). **தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும், அந்த இயேசுவை** அவர் யூத மக்களின் கரங்களிலே ஒப்புக்கொடுத்தார். அவர்களோ அவரை நியாயப்பிரமாணமற்ற புறவினத்தவரிடம் **சிலுவையில் ஆணியடித்துக் கொலை** செய்யும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். **தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை** மரித்தோரிலிருந்து உயிரோடு **எழுப்பினார். மரணத்தினால்** அவரை ஒரு சிறைக்கைதியைப் போல **கட்டக்கூடாதிருந்தது.**

1. தேவனுடைய பண்பு அவர் உயிருடன எழ வேண்டும் என்று வற்புறுத்தியது. பாவமற்றவர் பாவிகளுக்காக மரித்தார். கிறிஸ்து ஆற்றிய மீட்பின் செயலில் தேவன் முழு மனநிறைவு கொண்டார் என்பதை மெய்ப்பிக்கும் வகையில், அவர் அவரை உயிருடன் எழுப்பவேண்டும்.

2. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களும் அவருடைய உயிர்த்தெழுதலை முன்னறிவித்துள்ளன. இந்தவொரு குறிப்பையே பேதுரு பின்வரும் வசனங்களில் வற்புறுத்திப் பேசுகிறார்.

**2:25-27** கர்த்தருடைய வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் மகிமையடைதல் ஆகியவைபற்றி தாவீது 16 - ஆவது சங்கீதத்தில் தீர்க்கதரிசனமாக எழுதிவைத்தான்.

வரையறைக்கு உட்படாத நம்பிக்கையும் உறுதியும் உடையவராகத் தமது திருத்தந்தையுடன் ஒருக்காலும் தொடர்பு அறுபடாத வகையில் வாழ்ந்த ஒருவராகவே அவருடைய வாழ்க்கையைப் பற்றி தாவீது விவரித்தான். அவருடைய இருதயம், நாவு, மாம்சம் யாவையும் களிப்பினாலும் **நம்பிக்கையினாலும்** நிறைந்திருந்தன.

அவருடைய சாவைப் பொருத்தமட்டில், தேவன் அவருடைய **ஆத்துமாவைப் பாதாளத்தில் விடார்,** அவருடைய **பரிசுத்தர்** தமது **அழிவைக் காணவிடார்** என்பதாக தாவீது முன்னறிந்தான். அதாவது, கர்த்தராகிய இயேசுவின் ஆத்துமா உடலற்ற நிலையில் விடப்படாது, அவருடைய உடலும் சிதைந்துபோகாது. (பூமியின் தாழ்விடங்களில் உள்ள சிறையில் காவலிலுள்ள உடலற்ற ஆவிகளிடமாய்க் கர்த்தராகிய இயேசுதாம் மரணமடைந்த பிறகு சென்றார் என்பதை மெய்ப்பிக்க இந்த வசனத்தை நாம் பயன்படுத்தக் கூடாது. அவருடைய ஆத்துமா பரலோகத்திற்குச் சென்றது[7] - லூக்கா 23:43 - அவருடைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டது.)

**2:28** கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசிய தாவீது, தேவன் அவருக்கு ஜீவமார்க்கங்களைத் தெரியப்படுத்துவார் என்று நம்பிக்கை தெரிவித்தான். "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்" (சங். 16:11) என்று தாவீது எழுதினான். இந்த வசனத்தில் அதனையே பேதுரு மேற்கோள் காட்டினார், **"ஜீவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர்."** இங்கே எதிர்காலத்தை இறந்த காலமாகப் பேதுரு மாற்றினார். உயிர்த்

தெழுதல் ஏற்கனவே நிகழ்ந்துவிட்டது, ஆகவே தூய ஆவியனாவர் காலத்தை மாற்றும்படியாக அவருக்குக் கட்டளையிட்டார் என்பது வெளிப்படை.

இப்பொழுது இரட்சகர் பெற்றுள்ள மகிமை யைக் குறித்து தாவீது, **"உம்முடைய சந்நிதானத் திலே என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர்"** என்று முன்னுரைத்தான். இதனையே 16 - ஆவது சங்கீதம் 11 -ஆவது வசனம், "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" என்று கூறுகிறது.

**2:29** தன்னைக் குறித்து தாவீது இவ்வாறு பேசியிருக்க முடியாது என்று பேதுரு இங்கு வாதாடுகிறார். ஏனெனில் தாவீதின் சரீரம் அழி வைக் கண்டது. அந்த நாட்களில் இருந்த யூதர் கள் தாவீதின் கல்லறை எங்கே இருந்தது என்பதை நன்கறிந்திருந்தார்கள். அவன் உயி ரோடு எழவில்லை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

**2:30,31 தாவீது** இந்தச் சங்கீதத்தை எழுதிய போது, **அவன் தீர்க்கதரிசியாக இருந்தே** இதனைச் **சொன்னான்.** தன்னுடைய **சிங்கா சனத்தில்** என்றென்றும் **வீற்றிருக்கும்படி** தனது **சந்ததியிலே** ஒருவரை **தேவன் எழுப்புவார்** என்னும் வாக்குறுதியை அவன் நினைவுகூர்ந் தான். அந்த ஒருவர் மேசியாவே ஆவார் என்பதை உணர்ந்த **தாவீது**, அவர் இறந்தாலும் அவரு டைய **ஆத்துமா** உடலற்ற நிலையில் **விட்டு விடப்படுவதில்லை** என்றும், அவருடைய உடல் அழிவைக் காணாது என்றும் அறிந்தான்.

**2:32,33** தன்னைக் கேட்டுக்கொண்டிருந்த யூதர்கள் திகிலடையத்தக்கபடி தான் ஏற்கனவே சொன்ன அறிக்கையை, பேதுரு மீண்டும் கூறி னார். **தாவீது** முன்னுரைத்த மேசியா நாசரேத் தூர் **இயேசுவே** ஆவார். **தேவன்** அவரை இறந் தோரிலிருந்து உயிருடன் **எழுப்பினார்**. அவரு டைய உயிர்த்தெழுதலுக்கு அப்போஸ்தலர் யாவ ரும் கண்களால் கண்ட சாட்சிகளாக இருந்த கார ணத்தால் அவர்கள் அதைக்குறித்துச் சான்று பகர்ந்தார்கள். கர்த்தராகிய இயேசு உயிர்த் தெழுந்ததைக் தொடர்ந்து, **தேவன்** அவரைத் தமது **வலதுகரத்தினாலே உயர்த்தினார். பிதாவினாலே** வாக்குரைக்கப்பட்ட வண்ணம் இப்பொழுது **பரிசுத்த ஆவியானவர்** அனுப்பப்பட் டார். அந்த நாளில் நிறைவுற்ற நிகழ்ச்சியின் விளக்கமாக இது உரைக்கப்பட்டது.

**2:34,35** மேசியா மகிமைப்படுத்தப்பட்டதைப் பற்றி தாவீது முன்னுரைக்கவில்லையா? சங்கீதம் 110:1 -லும் தாவீது தன்னைக் குறித்துப் பேசவில்லை. மாறாக, **"நான் உம்முடைய சத்து ருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என் வலதுபாரிசத்தில் உட் காரும்"** என்று யெகோவா மேசியாவிடம் உரைத் ததை அவன் மேற்கோளிட்டுக் காட்டினான். (இவ்விரண்டு வசனங்களைக் கூர்ந்து கவனிப் போமானால், கிறிஸ்து மகிமையடைந்த நிகழ்ச் சிக்கும், அவர் தமது பகைஞரை அழித்து அரசை நிறுவுவதற்காக வரும் நிகழ்ச்சிக்கும் இடையே காலஇடைவெளி இருப்பதை அறியலாம்.)

**2:36** மறுபடியும், **"தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கின இந்த இயேசுவை நீங்கள் சிலுவையில் அறைந்தீர்கள்"** என்னும் அறிக்கை அவர்கள்மீது இடிபோல விழுந்தது (கிரேக்க மொழி வேதாகமத்தில் உள்ள சொற்களின் வரிசையில் மேலே எழுதப்பட்டுள்ளது). இதைக் குறித்து பெங்கேல் என்பார், "பேச்சின் இறுதியில் விஷக்கொடுக்கு வைக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் - **"இந்த இயேசுவை நீங்கள் சிலுவை யில் அறைந்தீர்கள்."** தேவனால் அபிஷேகம் பெற்றவரை அவர்கள் **சிலுவையில் அறைந்தார் கள்.** பரிசுத்த ஆவியானவர் வருகை புரிந்தமை, இயேசு விண்ணுலகில் மகிமைப்படுத்தப்பட்டார் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது. (யோவான் 7:39 - ஆம் வசனத்தைக் காண்க).

**2:37** கேட்டவர்கள் உடனடியாகத் தங்களு டைய குற்றங்களை உணர்ந்து பதிற்செயல்புரி யும் வண்ணம் தூய ஆவியானவரின் வல்லமை சிறந்து விளங்கியது. பேதுரு அவர்களை அழைக்கவுமில்லை, அவர்களிடத்தில் முறை யிடவுமில்லை. ஆனால் அவர்களோ "நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கதறினார்கள். அந்தக் கேள்வி அவர்களுடைய உள்ளத்தில் ஏற்பட்ட ஆழமான குற்றவுணர்வினால் எழுந்ததே யாகும். அவர்கள் கொன்ற இயேசு, தேவனுடைய அன்பின் குமாரன் என்பதை அவர்கள் இப் பொழுது உணர்ந்து கொண்டார்கள்! இறந்தோரி லிருந்து உயிரோடு எழுப்பப்பட்ட இந்த இயேசு விண்ணுலகுக்கு உயர்த்தப்பட்டார். இது இவ் வாறிருக்க, இந்தக் குற்றவுணர்வுகொண்ட கொலைகாரர்கள் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து எவ்வாறு தப்பிக்க முடியும்?

**2:38** அவர்கள் **மனந்திரும்பி ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து**

**வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும்** என்று பேதுரு பதிலுரைத்தார். முதலாவது அவர்கள் குற்றம்புரிந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்; பின்னர் தங்களுக்கு எதிராக தேவனுடைய பக்கமாகச் சார்ந்து அவர்கள் **மனந்திரும்ப** வேண்டும்.

அதைத் தொடர்ந்து அவர்கள் பாவமன்னிப்புக் கென்று (அல்லது பாவமன்னிப்புக்காக) ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். முதல்முறை யாக நாம் இந்த வசனத்தைப் படிக்கும்போது, ஞானஸ்நானத்தின் மூலமாகவே மனிதனால் இரட்சிப்பைப் பெறமுடியும் என்று இது போதிப்பதாகத் தோன்றுகிறது. இந்த வசனத்தின் மிகச் சரியான பொருள் அதுதான் என்று பலர் வலியுறுத்திக் கூறவும் செய்கின்றனர். ஆனால் அந்த விளக்கம் தவறு என்பதை நாம் கீழ்க்காணும் விவரங்களினால் அறியலாம்:

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மீது கொள்ளும் விசுவாசத்தின் மூலமாகவே ஒருவரால் இரட்சிப்படைய முடியும் என்று புதிய ஏற்பாட்டு வேத பகுதிகள் பல வலியுறுத்திக் கூறுகின்றன (எடுத்துக்காட்டாக யோவான் 1:12; 3:16; 6:47; அப். 16:31; ரோமர் 10:9). ஏராளமான வசனங்களைச் சான்றாகக் கொண்டிருக்கும் ஓர் உண்மையை ஓரிரு வசனங்கள் மறுத்துரைக்கா.
2. சிலுவையில் தொங்கிய கள்வன் ஞானஸ்நானம் பெறாதவனாயிருந்தும், அவனுக்கு இரட்சிப்பு வாக்களிக்கப்பட்டது (லூக். 23:34).
3. நமது இரட்சகர் எவருக்கேனும் ஞானஸ்நானம் கொடுத்தாக வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. இ.ந்து அவ்வளவு இன்றியமையாத தேவையாக இருந்தால், அவர் ஞானஸ்நானம் கொடுக்காதது புதுமையே.
4. ஞானஸ்நானமே இரட்சிப்பைப் பெறுவதற்கான வழி என்பது உண்மையாயின், ஒரு சிலருக்கு மட்டும் ஞானஸ்நானம் கொடுத்ததற்காக அப்போஸ்தலனாகிய பவுல் நன்றி செலுத்திய செயல் விநோதமானதாகக் காணப்படும் (1 கொரி. 1:14-16).

பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக ஞானஸ் நானம் பெறவேண்டும் என்று யூதர்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது (அப். 22:16 - ஆம் வசனத்தைக் காண்க). இந்த உண்மையில், இப்பகுதியைப் புரிந்து கொள்வதற்கான இரகசியம் அடங்கியிருக்கிறது என்று நாம் நம்புகிறோம். மகிமையின் கர்த்தரை யூத நாடே சிலுவையில் அறைந்தது. "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" (மத். 27:25) என்று யூத மக்கள் கூக்குரலிட்டிருந்தார்கள். இவ்விதமாக மேசியாவின் மரணத்திற்கான தண்டனையைத் தாங்கள் ஏற்றுக்கொள்வதாக இஸ்ரவேல் மக்கள் கூறியிருந்தார்கள்.

இப்பொழுது அந்த யூதர்களில் சிலர் தங்களுடைய குற்றத்தை உணர்ந்துகொண்டார்கள். மனந்திரும்புதலின் மூலமாக அவர்கள் தங்களுடைய பாவத்தை தேவனிடத்தில் அறிக்கை செய்தார்கள். கர்த்தராகிய இயேசுவைத் தங்களுடைய இரட்சகராக விசுவாசித்ததன் மூலமாக, அவர்கள் மறுபடியும் பிறந்து, பாவங்களுக்கான நித்திய மன்னிப்பைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் வெளியரங்கமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதன் மூலமாக, கர்த்தரை சிலுவையில் அறைந்த *நாட்டுடன்* அவர்கள் கொண்டிருந்த தொடர்பை அறுத்துக்கொண்டார்கள்; மேலும் *கர்த்தரோடு* தங்களை இணைத்துக் கொண்டார்கள். கிறிஸ்துவை அவர்கள் நிராகரித்த பாவம் (அவர்களுடைய ஏனைய பாவங்களும்) கழுவப்பட்டதற்கு, அத்திருமுழுக்கு வெளியரங்கமான அடையாளமாக விளங்கியது. அ.ந்து அவர்களை யூத ஆதாரத்திலிருந்து கிறிஸ்தவ ஆதாரத்திற்கு மாற்றியது. ஆனால் ஞானஸ்நானம் அவர்களை இரட்சிக்கவில்லை. கிறிஸ்துவின்மீது கொண்டிருக்கும் விசுவாசமே இரட்சிப்பைத் தரவல்லது. இதற்கு மாறான வகையில் போதிப்பது வேறொரு சுவிசேஷத்தைப் போதிப்பதாகும். அது சாபத்தை உண்டாக்கும் (கலா. 1:8,9).

திருவாளர் ரைரி **பாவமன்னிப்புக்கென்று** பெறும் ஞானஸ்நானம் என்னும் சொற்றொடருக்கு வேறொரு விளக்கத்தைத் தந்துள்ளார்:

> பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பது இச்சொற்றொடரின் பொருளன்று. கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தினால் பாவமன்னிப்பு உண்டாகும் என்னும் உண்மை புதிய ஏற்பாடு எங்கிலும் சொல்லப்பட்டுள்ளது. அது ஞானஸ்நானத்தினால் உண்டாவதில்லை. பாவங்கள் மன்னிக்கப்பட்டதன் காரணமாகவே ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பதே இதன்

பொருளாகும். கிரேக்க மொழியில் eis (for) என்றும் முன்னிடைச்சொல் "இதன் காரணமாக" என்னும் பொருள்படும். இப்பொருளை இங்கு மட்டுமின்றி மத்தேயு 12:41 போன்ற பகுதிகளிலும் காணமுடியும். யோனாவின் பிரசங்கத்தின் காரணமாக (யோனாவின் பிரசங்கத்திற்காக என்பது இதன் பொருளன்று) நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள் என்பதே அவ்வசனத்தின் பொருளாகும். பெந்தெகொஸ்தே நாளில் கூடின திரளான மக்களுடைய மனந்திரும்புதல் பாவங்களுக்கான மன்னிப்பைக் கொண்டுவந்தது. அவ்வாறு அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதன் காரணமாக, அவர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டார்கள்.[8]

அவர்கள் மனந்திரும்பி **ஞானஸ்நானம்** பெற்றால், அவர்கள் **பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவார்கள்** என்று பேதுரு அவர்களுக்கு வாக்குறுதி தந்தார். மேற்கூறிய வரிசை இன்றைய நாட்களுக்கும் பொருந்தும் என்று நாம் வலியுறுத்துவோமானால், சபையின் தொடக்க காலத்தில் அதைக் குறித்த தேவனுடைய ஆட்சி முறையை நாம் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்றாகிவிடும். அப்போஸ்தல நடபடிகள் நூலில் நான்குவகையான இனத்தைச் சேர்ந்த மக்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்றும், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதைப் பொருத்தமட்டில் ஒவ்வொரு வகுப்பாருக்கும் வெவ்வேறு வரிசைமுறை குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் *கிறிஸ்துவாகிய பிரதிநிதி* என்னும் நூலில் H. P. பார்கர் என்பார் திறம்படக் கூறியுள்ளார்.

இந்த வசனத்தில் (அப். 2:38) **யூதக் கிறிஸ்தவர்களைப்** பற்றி நாம் படிக்கிறோம். அவர்களைப் பொருத்த வரிசை முறையானது:

1. மனந்திரும்புதல்.
2. நீரில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம்.
3. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல்.

அப்போஸ்தல நடபடிகள் 8:14-17 ஆகிய வசனங்களில் *சமாரியர்* மனமாற்றம் பெற்ற நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பொழுது நிறைவேறிய நிகழ்ச்சிகளின் வரிசை முறையானது:

1. அவர்கள் விசுவாசித்தார்கள்.
2. அவர்கள் தண்ணீர் திருமுழுக்குப் பெற்றார்கள்.
3. அப்போஸ்தலர் அவர்களுக்காக ஜெபித்தார்கள்.
4. அப்போஸ்தலர் அவர்கள்மீது தங்களுடைய கைகளை வைத்தார்கள்.
5. அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:44-48 ஆகிய வசனங்களில் ***புறவினத்தவருடைய*** மனந்திரும்புதல் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு காணும் வரிசை முறையைக் கவனியுங்கள்:

1. விசுவாசம்.
2. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுதல்.
3. நீரில் ஞானஸ்நானம் பெறுதல்.

நான்காவது வகுப்பார் ***யோவான் ஸ்நானகனின் சீடர்களாயிருந்த*** விசுவாசிகள் (அப். 19:1-7):

1. அவர்கள் விசுவாசித்தார்கள்.
2. அவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.
3. அப்போஸ்தலனாகிய பவுல் அவர்கள்மீது தன் கைகளை வைத்தார்.
4. அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்.

அப்போஸ்தல நடபடிகள் நூலில் இரட்சிப்புக்கான நான்கு வகையான வழிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன என்பதுதான் இதன் பொருளா? நிச்சயமாக இல்லை. இரட்சிப்பானது கர்த்தரிடத்தில் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் உண்டாயிற்று, உண்டாகிறது, எக்காலத்திலும் அவ்வாறுதான் உண்டாகும். ஆனால் ஒரு கால கட்டத்திலிருந்து மற்றொரு காலகட்டத்திற்கு மாற்றம்பெறும் இடைப்பட்ட காலத்தில், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும் போது நடைபெறும் நிகழ்ச்சிகளில் வேறுபாடுகள் இருந்தன. இவையாவும் அப்போஸ்தல நடபடிகள் நூலில் எழுதிவைக்கப்பட்டுள்ளன. தேவனால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேறுபட்ட நிகழ்ச்சிகளுக்கான காரணத்தை அவரே அறிவார். ஆனால் அதை நமக்கு அவர் வெளிப்படுத்தவில்லை.

அவ்வாறாயின், மேற்கூறிய முறைகளில் எது நமக்குப் பொருந்தும்? இஸ்ரவேல் ஒரு நாடாக விளங்கி மேசியாவை நிராகரித்தன் காரணமாக யூதமக்கள் தாங்கள் பெற்றிருந்த தனி உரிமைகளை இழந்துபோய்விட்டார்கள். தேவன் புறவின

அப்போஸ்தலனாகிய பவுல்

# ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம்

## முன்னுரை

"கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆலயம்" – ஃபிரட்ரிக் கோடட்

### 1. வேத நூல்வரிசையில் தனிச் சிறப்புமிக்க இடம்

பவுல் எழுதிய மடல்களில் ரோமருக்கு எழுதின மடல் எல்லா நிலைகளிலும் முதன்மையான இடத்தை வகிக்கின்றது என்று கூறுவோமெனில் அது சரியான கூற்றே. ரோமாபுரிக்கு பவுல் வருகை புரிந்த நிகழ்வோடு நடபடிகள் நூல் முடிவடை கிறது. அந்நகரில் இருந்த கிறிஸ்தவர்களைக் காணும் முன்னர், அப்போஸ்தலன் அங்குள்ள சபைக்கு எழுதிய இம்மடலைத் தொடக்கமாகக் கொண்டு, மடல்களைக் கொண்ட புதிய ஏற்பாட்டு வேத பகுதி தொடர்வது சாலவும் பொருத்த மானதே. ஐயத்திற்கு இடமின்றி, புதிய ஏற்பாட்டி லேயே இறையியல் பற்றி எடுத்தியம்பும் மிகவும் இன்றியமையாத நூல் ரோமர் மடலாகும். தேவனு டைய திருமறையில் காணக்கூடிய முறையான கிறிஸ்தவ இறையியல் உபதேசத்திற்கு, மிக நெருங்கிய வண்ணம் இறையியல் உபதேசம் இங்கு வகுத்துத் தரப்பட்டுள்ளது.

வரலாறு பூர்வமாக, வேத நூல்களில் மிகுந்த பயன் விளைவித்த நூல் ரோமர் மடலாகும். ரோமர் 13:13,14 ஆகிய வசனங்களைப் படித்த திருவாளர் அகஸ்டின் மனமாற்றம் பெற்றார் (கி. பி. 380). "தேவ நீதி" மற்றும் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்னும் சொற்றொடர்களின் பொரு ளைத் திருவாளர் மார்டின் லுத்தர் இறுதியாகப் புரிந்துகொண்டபோது புரட்டஸ்ட்டன்ட் சீர்திருத்த இயக்கம் நிறுவப்பட்டது (கி. பி. 1517).

லண்டன் மாநகரில், அல்டெர்ஸ் கேட் தெரு வில் இருந்த மொராவியன் வீட்டுச் சபையில், ரோமர் மடலுக்கு லுத்தர் எழுதிய விளக்கவுரை யின் முன்னுரையைத் திருவாளர் ஜான் வெஸ்லி படித்தபோது இரட்சிப்பின் உறுதியைப் பெற்றார் (கி. பி. 1738). "இந்த மடலை ஒருவர் புரிந்துகொள் ளும் வேளையில், முழு வேதத்தையும் புரிந்து கொள்வதற்கான வழி அவருக்குத் திறக்கிறது" என்று திருவாளர் ஜான் கால்வின் எழுதினார்.

### 2. நூலாசிரியர்

இம்மடல் புறவினத்தவருடைய அப்போஸ்தல னால் இயற்றப்பட்டது என்று கிறிஸ்தவ மூல ஆதா ரக் கொள்கையாளர்கள் நம்பிக்கை கொண்டுள் ளார்கள். இக்கருத்தை வேத புரட்டர்களும், தீவிர எதிர்ப்பாளர்களும்கூட ஒரு காலத்தில் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். உண்மையில் வேதப்புரட்ட ரான மார்சியான் என்பவரே, இந்நூலின் ஆசிரியர் பவுல் என்று குறிப்பிட்டு எழுதியவர்களில் முதலா வது எழுத்தாளர் ஆவார். கிறிஸ்தவ மூல ஆதா ரக் கொள்கையாளர்களான ரோமாபுரி கிளமண்ட், இக்னேஷியஸ், ஜஸ்டின் மார்டையர், பாலிகார்ப், ஹிப்போலிடஸ் மற்றும் ஐரேனியஸ் ஆகியோர் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளனர். முரடோரியன் வரிசையும் இந்நூல் பவுலால் எழுதப்பட்டது என்றே கூறுகிறது.

இம்மடலைப் பவுல் எழுதியதற்கான அகச் சான்றுகள் மிக வலிமையோடு விளங்குகின்றன. இந்நூலில் காணப்படும் இறையியல் உண்மை கள், சொல்வன்மை, உயிர்த்துடிப்பு யாவும் இதன் ஆசிரியர் பவுலே என்று தெளிவாய்த் தெரிவிக் கின்றன. பவுல் இதனை எழுதியதாக முதல் வசனம் ஐயத்திற்கிடமின்றிக் கூறினாலும் (1:1) நம்பிக்கையற்றோரின் ஐயத்தைப் போக்கு வதற்கு அது போதுமானதாக இல்லைபோலும். ஆயினும் இவ்வுண்மை தொடர்ந்து பல வசனங் களில் குறிப்பிடப்பட்டுள்ளது (15:15-20). அப் போஸ்தல நடபடிகளோடு நெருங்கிய தொடர்பு டைய பல குறிப்புகள் இந்நூலில் காணப்படுவது மறுத்துரைக்கக் கூடாதபடி மெய்ப்பிக்கும் சான்று எனக் கூறலாம். இவை திட்டமிட்டுச் சேர்க்கப் பட்டவையும் அல்ல, செயற்கையானவையாகத் தோன்றவும் இல்லை. பரிசுத்தவான்களுக்காகத் திரட்டப்பட்ட நிதி, காயு ஏரஸ்து ஆகியோரைப் பற்றிய குறிப்பு, நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்ட ரோமாபுரிப் பயணம் ஆகிய குறிப்புகள் இதன் ஆசிரியர் பவுல் என்பதற்கான சான்றுகளாக

விளங்குகின்றன. இம்மடலை பவுல் சொல்லக் கேட்டு எழுதியவர் தெர்தியு ஆவார்.

### 3. எழுதப்பட்ட காலம்

எருசலேம் நகரில் வாழ்ந்த ஏழ்மையான பரிசுத்தவான்களுக்கு ஈவாகக் கொடுக்கும்படி நிதி திரட்டப்பட்டதன் தொடக்கத்தைக் கொரிந்தியர் மடல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அந்தப் பணம் இப்பொழுது ஆயத்தமாகிவிட்டது. ஆகவே கொரிந்தியருக்கு எழுதிய இரு மடல்களுக்குப் பின்னரே ரோமர் எழுதப்பட்டது என்பது உறுதி. கொரிந்துப் பட்டணத்திலிருந்தே இம்மடல் எழுதப்பட்டிருக்கும் என்று வேத அறிஞர்கள் முடிவு செய்யக் காரணமாக, அதன் துறைமுகம் கெங்கிரேயா (16:1), இன்ன பல குறிப்புகள் இம்மடலில் காணக் கிடக்கின்றன. தனது மூன்றாவது ஊழியப் பயணத்தின் முடிவில் மூன்று மாதங்கள் கொரிந்து நகரில் பவுல் தங்கியிருந்தார். அவருக்கு எதிராகச் செய்யப்பட்ட சூழ்ச்சியின் காரணமாக அவர் அங்கிருந்து துரத்தப்பட்டார். அதற்கு முன்னர் அந்தக் குறுகிய காலத்தில் இம்மடல் எழுதப்பட்டது. இந்நிகழ்ச்சி இதனுடைய காலத்தை கி. பி. 56 என்று வகையறுக்கிறது.

### 4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

கிறிஸ்தவம் எங்ஙனம் ரோமாபுரியைச் சென்றடைந்தது? இதற்குரிய விடையினை நம்மால் உறுதிபடக்கூற முடியாவிடினும், பெந்தெகொஸ்தே நாளில் எருசலேம் பெருநகரில் மனந்திரும்பிய ரோமாபுரி யூதர்கள் தங்களுடன் அந்நகருக்கு நற்செய்தியை ஏந்திச் சென்றிருப்பார்கள் என்று கருதக்கூடும். அது கி. பி. 30 -இல் நடந்த நிகழ்ச்சியாகும் (அப். 2:10 -ஐக் காண்க).

இருபத்தாறு ஆண்டுகளுக்குப் பின்னர் கொரிந்து நகரிலிருந்து பவுல் இம்மடலை எழுதும் வரை, அவர் அந்நகருக்குச் சென்றதில்லை. 16 -ஆவது அதிகாரத்தில் நாம் காண்கிறபடி அங்கு வாழ்ந்த ஒரு சில கிறிஸ்தவர்களை அவர் முன்னமே அறிந்திருந்தார். துன்புறுத்தல் காரணமாகவும், நற்செய்தியை ஏந்திச் செல்லும் நோக்குடனும் அல்லது தங்களுடைய வாழ்க்கையின் தேவைகளை நிறைவுசெய்யும் பொருட்டும் அன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் ஓரிடம் விட்டு வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றார்கள். ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள், யூதர்கள் புறவினத்தவர்கள் ஆகிய இரு பின்னணியையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

இறுதியில் கி.பி. 60 -இல் பவுல் ரோமாபுரியைச் சென்றடைந்தார். ஆயின் அது அவர் எதிர்பார்த்த வண்ணம் நிகழவில்லை. கிறிஸ்து இயேசுவுக்காக அவர் சிறைக் கைதியாக அங்கு சென்றார்.

இம்மடல் ஓர் உயர்தரப் படைப்பாகும். இரட்சிக்கப்படாதவர்கள் பாவத்தின் விளைவாக அடைந்துள்ள அவல நிலையையும், அவர்களது இரட்சிப்பிற்காக தேவன் உண்டுபண்ணின நீதியுடைய திட்டத்தையும் இது விளக்கிக் காட்டுகிறது. விசுவாசிகள் கிறிஸ்துவோடு இணைக்கப்படுகின்ற உண்மையையும், தூய ஆவியினால் பெறுகின்ற வெற்றியையும் குறித்து இளம் விசுவாசிகள் இங்கு கற்றறிகிறார்கள். மேலும், கிறிஸ்தவக் கோட்பாடுகள், வரும்முன் உரைத்தல், நடைமுறைக் கொள்கைகள் ஆகியவை பற்றிய உண்மைகள் பல பரந்த வானவில்லைப் போன்று இந்நூலில் விரிந்து கிடக்கின்றன. இவை முதிர்ந்த விசுவாசிகளுக்கு முடிவுறா மகிழ்வூட்டும் செல்வங்களாகும்.

பவுலுக்கும் அவரை எதிர்த்துத் தருக்கம் செய்த ஒருவருக்கும் இடையே நடந்த உரையாடலாக இம்மடலைப் பகுத்துக் காண்போமெனில் இம்மடலை மிகச் சிறந்த முறையில் கற்றறியலாம். நற்செய்தியைப் பவுல் கூறும் தறுவாயில் எதிர்வாதி எல்லாவித எதிர்ப்புகளையும் எழுப்புவதை நாம் காணவியலும். ஒவ்வொரு கேள்விக்கும் அப்போஸ்தலன் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து விடைபகர்வதையும் நம்மால் கண்டுணர முடியும். அவ்வாறு அவர் கூறி முடிக்குங்கால் நற்செய்தியைக் குறித்து மனிதனுடைய உள்ளத்தில் தோன்றக்கூடிய ஒவ்வொரு சிந்தனைக்கும் விடை கிடைத்துவிடுகிறது.

சில நேரங்களில் எதிர்வாதங்கள் தெளிவாகச் சொல்லப்படுகின்றன. சில நேரங்களில் அவை குறிப்பினால் அறியப்படும். வெளிப்படையாகச் சொல்லப்படினும், குறிப்பினால் உணர்த்தப்படினும் அவையாவும் நற்செய்தியைப் பற்றியதாகவே இருக்கின்றன. அந்த நற்செய்தியானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் பெறுகிற இரட்சிப்பைப் பற்றியதாகும். அது நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளால் உண்டாவதில்லை.

இம்மடல் பிரதானமாக பதினோரு கேள்விகளோடு தொடர்புடையதாக இருக்கிறது என்பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்போமாக: (1) இம்மடலின் ஆய்வுப்பொருள் யாது? (1:1,9,15,16); (2) நற்செய்தி என்பது யாது? (1:1-17); (3) மனிதர்களுக்கு நற்செய்தி ஏன் தேவைப்படுகிறது? (1:18-3:20); (4)

தூய தேவனால் துன்மார்க்கரான பாவிகள் நற் செய்தியைக் கொண்டு எங்ஙனம் நீதிமான்களாக ஆக்கப்படுகிறார்கள்? (3:21-31); (5) பழைய ஏற் பாட்டில் கற்பிக்கப்பட்டுள்ள உபதேசங்களோடு நற்செய்தி உடன்பாடு உடையதாக இருக்கிறதா? (4:1-25); (6) நீதிமானாக்கப்படுவதால் ஒரு விசு வாசியின் வாழ்வினில் உண்டாகும் நன்மைகள் யாவை? (5:1-21); (7) கிருபையினால் விசுவாசத் தைக் கொண்டு இரட்சிப்பு உண்டாகிறது என்னும் நற்செய்தி உபதேசம், மனிதனைப் பாவத்தோடு வாழும்படி அனுமதிக்கிறதா அல்லது அவனைப் பாவம் செய்யும்படித் துண்டுகிறதா? (6:1-23); (8) கிறிஸ்தவனுக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் இடையே உள்ள உறவு யாது? (7:1-25); (9) தூய வாழ்க்கைக்கான ஆற்றலைக் கிறிஸ்தவன் எவ் வாறு அடைகிறான்? (8:1-39); (10) புறவினத்த வருக்கும் யூதருக்கும் இரட்சிப்பானது ஒரேவித மான நற்செய்தியில் வாக்களிக்கப்பட்டிருக்கு மானால் தேவனுடைய பூமிக்குரிய மக்களாகிய யூதருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை அவர் தகர்த்துவிட்டார் என்பதுதான் அதன் பொருளா? (9:1-11:36); (11) கிருபையினால் நீதி மான்களாக்கப்பட்டவர்கள் தங்களுடைய அனு தின வாழ்க்கையில் அதனை எங்ஙனம் பிரதி பலித்துக் காட்ட வேண்டும்? (12:1-16:27).

மேற்கூறிய பதினோரு கேள்விகளுடனும், அவற் றுக்கான பதில்களுடனும் நாம் கொண்டிருக்கிற ஈடுபாடு, இந்த இன்றியமையாத மடலைக் குறித்து நடைமுறைக்குப் போதுமான அறிவை நமக்குத் தரக்கூடியதாக இருக்கிறது. "இம்மடலின் ஆய்வுப் பொருள் யாது?" என்னும் முதல் கேள்விக்கு, "நற் செய்தி" என்பதே பதில். இதில் எவ்வித ஐயமு மில்லை. அந்த விடைக்குறிப்பைச் சொல்வதற்கு பவுல் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. முதல் பதினாறு வசனங்களில் அதனை நான்கு முறை அவர் குறிப்பிடுகிறார் (வச.1, 9, 15, 16).

இந்த விடை இரண்டாவது கேள்விக்கு வழி வகுக்கிறது, "நற்செய்தி என்பது யாது?" சுவி சேஷம் என்பதற்கு நற்செய்தி என்பதே பொருளா கும். ஆயினும் முதல் பதினேழு வசனங்களில் நற்செய்தியைக் குறித்த ஆறு முக்கியமான உண் மைகளை அப்போஸ்தலன் நம்மிடத்தில் கூறு கிறார். (1) அதனுடைய ஆதாரம் தேவன் (வ. 1); (2) தீர்க்கதரிசன பழைய ஏற்பாட்டு வசனங்களில் அது வாக்குரைக்கப்பட்டுள்ளது (வ. 4); (3) அது தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியாகும் (வ. 4); (4) அது இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனா யிருக்கிறது (வ. 16); (5) அது எல்லா மனிதர்களுக் கும் உரியது, யூதர்களுக்கும் புறவினத்தவர் களுக்கும் உரியது (வ. 16); (6) அது விசுவாசத் தினால் மட்டுமே பெறக்கூடியது (வ. 17). இதனை முன்னுரையாகக் கொண்டு, இந்த வசனங்களை விளக்கமாகக் காண்போம்.

## பொருட்சுருக்கம்

**1. கோட்பாட்டு விளக்கம்: தேவனுடைய நற்செய்தி (அதி. 1-8)**

அ. நற்செய்தி அறிமுகம் (1:1-15)
ஆ. நற்செய்தியின் பொருள் (வரையறை) (1:16,17)
இ. உலக முழுவதற்கும் நற்செய்தியின் அவசியம் (1:18-3:20)
ஈ. நற்செய்தியின் அடிப்படைக்கூறுகளும் நிபந்தனைகளும் (3:21-31)
உ. நற்செய்திக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள இணக்கம் (4:1-25)
ஊ. நடைமுறை வாழ்வில் நற்செய்தி தரும் பயன்கள் (5:1-11)
எ. ஆதாமின் பாவத்தின்மீது கிறிஸ்துவின் கிரியை பெற்ற வெற்றி (5:12-21)
ஏ. தூய வாழ்க்கைக்கு நற்செய்தி காட்டும் வழி (அதி. 6)
ஐ. விசுவாசியின் வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்தின் இடம் (அதி. 7)
ஒ. தூய வாழ்க்கைக்கான வல்லமை தூய ஆவியானவரே ஆவார் (அதி. 8)

**2. காலப் பாகுபாட்டு விளக்கம் - நற்செய்தியும் இஸ்ரவேலும் (அதி. 9-11)**

அ. இஸ்ரவேலின் கடந்த காலம் (அதி. 9)
ஆ. இஸ்ரவேலின் நிகழ்காலம் (அதி. 10)
இ. இஸ்ரவேலின் எதிர்காலம் (அதி. 11)

**3. கடமை ஆற்றுதல்: நற்செய்தியை வாழ்ந்து காட்டுதல் (அதி. 12-16)**

அ. தனிநபர் ஒப்புவித்தல் (12:1,2)
ஆ. ஆவிக்குரிய வரங்களினால் கடமை ஆற்றுதல் (12:3-8)
இ. சமுதாயத் தொடர்புடைய கடமைகள் (12:9-21)
ஈ. அரசுடன் தொடர்புடைய கடமைகள் (13:1-7)
உ. எதிர்காலத்தைக் குறித்த பொறுப்புகள் (13:8-14)
ஊ. பிற விசுவாசிகளுடன் தொடர்புடைய கடமைகள் (14:1-15:13)
எ. பவுலின் முன்னேற்பாடுகளில் கிறிஸ்தவ வாழ்க்கை (15:14-33)
ஏ. பிறர் மேன்மை அறிந்து பாராட்டுதலில் கிறிஸ்தவ வாழ்க்கை (16:1-27)

## பொருட்சுருக்க அட்டவணை

| கருத்து | தேவன் அருளிய நற்செய்தி | | | நற்செய்தியும் இஸ்ரவேலரும் | | | நற்செய்தியை வாழ்ந்துகாட்டுதல் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தலைப்பு | போதனை | | | காலப் பாகுபாடு | | | கடமை | |
| | நற் செய்தியின் அவசியம் | நற் செய்தியின் வெற்றி | நற் செய்தியின் வல்லமை | இஸ்ரவேலரின் பங்கு (தொடர்ந்தெடுப்பு) | இஸ்ரவேலரின் இன்றைய நிலை (புறக்கணிப்பு) | இஸ்ரவேலரின் வருங்கால நிலை (மீட்கப்படுதல்) | கிறிஸ்தவரது கடமைகள் | கிறிஸ்தவரது சுயாதீனம் |
| பகுப்பு | பாவம் | இரட்சிப்பு | தூய்மை யாகுதல் | இறையாண்மை | | | அனுபவமாக்குதல் | |
| வசனம் | 1:1 - 3:20 | 3:21-5:21 | 6:1-8:39 | 9:1-33 | 10:1-21 | 11:1-36 | 12:1-13:14 | 14:1-16:27 |

## 1. கோட்பாட்டு விளக்கம்: தேவனுடைய நற்செய்தி (அதி. 1-8)

### அ. நற்செய்தி அறிமுகம் (1:1-15)

**1:1 பவுல்** தன்னை *விலைக்கு வாங்கப்பட்ட வராகவும், அழைக்கப்பட்டவராகவும்* **பிரித்தெடுக்கப்பட்டவராகவும்** அறிமுகப்படுத்து கிறார். இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரன் (அடிமை) என்னும் சொற்றொடர் விலைக்கு வாங்கப்பட்ட நிலையைக் குறிப்பாய் உணர்த்துகிறது. தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் இரட்சகரின் சிறப்புத் தூதுவர் என்ற நிலைக்கு **அப்போஸ்தலனாக அழைக்கப்பட்டவராகப்** பவுல் விளங்குகிறார். புறவினத்தவருக்கு **சுவிசேஷத்தைக்** கொண்டுபோகும்படியாகப் பவுல் பிரித்தெடுக்கப்பட்டவராகவும் உள்ளார் (அப். 9:15; 13:2 - காண்க). கிறிஸ்துவின் விலைமதிக்க முடியாத திரு இரத்தத்தினால் நாமும் விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறோம்; அவரது இரட்சிப்பின் வல்லமைக்குச் சாட்சிகளாக விளங்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்; செல்லுமிடமெங்கும் நற்செய்தியை அறிவிக்கும்படி பிரித்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்.

**1:2 ரோமாபுரியிலுள்ள** பரிசுத்தவான்கள் அனைவருக்கும் இம்மடல் எழுதப்பட்டது ஆகும். இது மற்ற மடல்களைப் போன்று ஒரு சபைக்கு மட்டும் எழுதப்பட்டது அன்று. அந்நகரில் பல சபை கூடுகைகள் இருந்தன என்பதை இம்மடலின் கடைசி அதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. அந்நகரில் வாழ்ந்த அனைத்துப் பரிசுத்தவான்களையும் உள்ளடக்கியே இவ்வாழ்த்து கூறப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற குருதியினால் மீட்கப்பட்ட அனைவரும் **தேவப்பிரியர், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள்** ஆகிய இனிய பெயர்களுக்குப் பொருத்த முடையவர்களாய் இருக்கின்றனர். இத்தகைய நன்மையைப் பெற்ற மக்கள் சிறந்ததொரு வகையில் தெய்வீக அன்பிற்குப் பாத்திரவான்களாகத் திகழ்கின்றனர். மேலும் இவ்வுலகினின்று தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள்; இதுவே **பரிசுத்தவான்கள்** என்பதன் பொருளாகும்.

**1:3** பவுலின் தனித்தன்மை வாய்ந்த வாழ்த்தில் கிருபையும் சமாதானமும் ஒன்றாக இணைந்துள்ளன. கிரேக்கருடைய வாழ்த்துரையில் மிகவும் முக்கியமானது கிருபை (Charis), யூத மக்களுடைய பாரம்பரிய வாழ்த்துச்சொல் சமாதானம் (Shalom) ஆகும். விசுவாசிகளாகிய யூதரும் புறவினத்தாரும் கிறிஸ்துவுக்குள் இப்பொழுது ஒரு புதிய மனிதனாக இருக்கிறார்கள் என்னும் உண்மையைப் பவுல் கூறும் செய்தி தன்னகத்தே கொண்டிருப்பதால், இவ்வாறு ஒன்றாக இணைக்கப்பட்ட வாழ்த்து மிகப்பொருத்தமானதே ஆகும்.

இங்கு காணும் **கிருபை,** ஒரு மனிதன் இரட்சிக்கப்படுதவற்குத் தேவையான கிருபையன்று. (பவுலின் மடலைப் பெற்றுக்கொண்ட ரோமாபுரியர் ஏற்கனவே இரட்சிப்படைந்தவர்களாவர்). கிறிஸ்தவ வாழ்விற்கும் ஊழியத்திற்கும் தேவையான ஆற்றலையும் வல்லமையையும் தருகிற கிருபையே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. தேவனோடு உடன்பாடு கொள்வதற்குத் தேவையான **சமாதானம்** இங்கு சொல்லப்படவில்லை (பரிசுத்தவான்கள் யாவரும் விசுவாசத்தினால் நீதிமான்களாக ஆக்கப்பட்டபோது அந்தச் சமாதானத்தைப் பெற்றுள்ளார்கள்). கலக்கமுற்ற இந்தச் சமுதாயத்தின் நடுவில் வாழும் பரிசுத்தவான்களின் உள்ளத்தை ஆளுகிற தேவ **சமாதானமே** இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. **நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்தும் கிருபையும் சமாதானமும்** உண்டாயின என்னும் கூற்று, குமாரன் பிதாவோடு கொண்டிருக்கிற சமத்துவத்தை மிகுந்த பலத்தோடு சுட்டிக்காட்டுகிறது. அவ்வாறு குமாரன் பிதாவிற்குச் சமமானவராக இல்லாதிருந்தால் **கிருபையையும், சமாதானத்தையும்** அருளுகின்ற செயலில் இருவரையும் இணைத்துக் கூறியிருப்பது பொருளற்றதாகிவிடும். "பிதாவிடத்திலிருந்தும் ஆபிரகாம் லிங்கனிடத்திலிருந்தும் கிருபையும் சமாதானமும் உண்டாயின" என்று சொல்லுவதற்கு அது ஒப்பாகிவிடும்.

**1:4,5** நற்செய்தியானது முற்றிலும் புதுமையானது என்றோ, தங்களுடைய ஆவிக்குரிய மரபிற்கு எவ்விதத்திலும் சம்பந்தம் அற்றது என்றோ இம்மடலைப் படிக்கும் யூதர்கள் எவரும் நினைக்கலாகாது என்ற எண்ணம்கொண்ட பவுல், பழைய ஏற்பாட்டுத் **தீர்க்கதரிசிகள்** இதனை மிகத் தெளிவாக **வாக்குத்தத்தத்தினாலும்** (உபா. 18:15; ஏசா. 7:14; எபி. 2:4), மாதிரிகள் மற்றும் அடையாளங்களினாலும் (எ. கா., நோவாவின்

பேழை, வெண்கல சர்ப்பம், பலி முறைகள்) வெளிப்படுத்தியுள்ளனர் என்று குறிப்பிடுகிறார்.

இந்தச் சுவிசேஷமானது **தேவகுமாரனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த** நற்செய்தியாகும். அவர் **மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவர்** (இ.ந்.து அவருடைய மனித இயல்பைப் பற்றியதாகும்). மாம்சத்தின்படி என்னும் சொற்றொடர், அவர் மனிதரிலும் மேலானவர் என்பதைக் குறிப்பாய் உணர்த்துகிறது. இந்தச் சொற்றொடர் அவருடைய மனித இயல்பைக் குறிக்கிறது. கிறிஸ்து மனிதராக மட்டுமே இருப்பாரென்றால், அவருடைய இவ்வியல்பைத் தனிச்சிறப்புடன் சொல்ல வேண்டிய தேவையில்லை. அவர் மனிதராக மட்டுமின்றி வேறொருவராகவும் இருப்பதால்தான் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அவர் மனிதரிலும் மேலானவர் என்றே இந்த வசனம் கூறுகிறது.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **தேவனுடைய சுதனென்று பலமாய் ரூபிக்கப்பட்டவர்** என்று இங்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் போதும், அவருடைய அற்புத நிகழ்ச்சிகள் நிறைந்த ஊழியத்தின் போதும், இவரைத் தூய ஆவியானவர் தனிச்சிறப்புடன் வெளிப்படுத்திக் காட்டினார். அதுவே இங்கு **பரிசுத்தமுள்ள ஆவியின்படி** என்று சொல்லப்பட்டுள்ளது. தூய ஆவியானவரின்[1] வல்லமையால், இரட்சகர் நிறைவேற்றிய மகத்தான அற்புதங்கள் அவர்தாமே தேவனுடைய சுதன் என்று உறுதிப்படுத்துகின்றன. **தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்டார்** என்று நாம் படிக்கும் போது, அவருடைய சொந்த உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது என்று நாம் நினைப்பது இயற்கையே. ஆனால், "மரித்தவர்களின் உயிர்த்தெழுதலினாலே" என்பதே எழுத்தின்படியான மொழிபெயர்ப்பாகும். ஆகவே, யவீருவின் மகள், நாயீன் ஊர் கைம்பெண்ணின் மகன் மற்றும் லாசரு ஆகியோரை இயேசு கிறிஸ்து உயிரோடு எழுப்பியதையும் அப்போஸ்தலன் நினைவுகூர்ந்திருக்கக் கூடும். ஆயினும், கர்த்தருடைய உயிர்த்தெழுதலையே இது முதலாவதாய்க் கருத்தில் கொண்டிருக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இயேசு **தேவனுடைய குமாரன்** என்று நாம் கூறுகிற வேளையில், மற்ற எவரைப் போலுமின்றி அவர் ஒரு குமாரனாய் இருக்கிறார் என்றே பொருள் கொள்கிறோம். தேவனுக்குப் பல குமாரர்கள் இருகின்றனர். எல்லா விசுவாசிகளும் அவருடைய புத்திரர்களே ஆவார்கள் (கலா. 4:5-7). தேவ தூதர்களும் புத்திரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் (யோபு 1:6; 2:1). ஆனால் இயேசு கிறிஸ்துவோ ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த நிலையில் தேவனுடைய குமாரனாக இருக்கிறார். நம்முடைய கர்த்தர் தம்முடைய பிதா என்று தேவனைக் குறிப்பிட்டபோது, தேவனோடு அவர் தம்மைச் சம நிலைப்படுத்தியதை யூதர்கள் சரியாகப் புரிந்து கொண்டார்கள்.

**1:6** சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களை **இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்கள்** என்று பவுல் குறிப்பிடுகின்றார். அவர்களுடைய இரட்சிப்பிற்கான முதற்படியை தேவனே எடுத்துத் தொடங்கினார் என்பதை இது வலியுறுத்துகிறது.

**1:7** இயேசு கிறிஸ்துவாகிய நமது கர்த்தரின் மூலமாகவே பவுல் கிருபையைப் பெற்றார் (தகுதியற்ற பவுலை அந்தக் கிருபை இரட்சித்தது). **அப்போஸ்தல ஊழியத்தையும்** அவர் அந்தக் கிருபையின் வாயிலாகவே பெற்றார். **எங்களுக்குக்கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச்செய்திருக்கிறார்** என்று பவுல் கூறுகிறபோது, 'எங்கள்' என்ற சொல் அவர் ஒருவரையே குறிக்கிறது என்பதை நாம் அறிகிறோம். ஒரு நூலின் ஆசிரியர் என்னும் நிலையில் எங்கள் என்னும் பன்மைச் சொல்லை அவர் பயன்படுத்தியுள்ளார். **சகல ஜாதிகள்** என்ற சொற்றொடர் புறவின மக்களைக் குறிக்கிறது. ஆகவே, அச்சொற்றொடரோடு தன்னை இணைத்து அப்போஸ்தலன் என்று அவர் கூறியிருப்பதால், அவர் வேறு அப்போஸ்தலர் எவரையும் குறிக்கவில்லையென்றும் தன்னை மட்டுமே குறிப்பிடுகிறார் என்றும் தெளிவாகிறது. சகல ஜாதிகளுக்கும் விசுவாசக் கீழ்ப்படிதலுக்கான அழைப்பைக் கொடுக்கும்படி பவுல் நியமிக்கப்பட்டார். மனம் வருந்தி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதே நற்செய்திக்குக் கீழ்ப்படிதல் என்பதாகும் (அப். 20:21). அவருடைய நாமத்திற்காக அதாவது அவரைப் பிரியப்படுத்தி, அவரை மகிமைப்படுத்துவதே இச்செய்தி உலகம் முழுவதும் பறைசாற்றப்படுவதன் இலக்காயிருந்தது.

**1:8** தனது மடல்களைப் படிப்போரிடத்தில் போற்றுதற்குரிய இயல்புகள் எவையெல்லாம் காணப்படுகின்றனவோ, கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அவற்றிற்காக அவர்களைப் பாராட்டி எழுதத் தொடங்குவது அப்போஸ்தலனது சிறப்பாகும். (இ.ந்.து நாம் அனைவரும் பின்பற்றுவதற்

குரிய நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும்!) ரோம் நகரக் கிறிஸ்தவர்களது விசுவாசம் **உலகமெங்கும்** பாராட்டிப் பேசப்பட்ட காரணத்தினால், மத்தியஸ்தர் மூலமாக பவுல் **தேவனை** ஸ்தோத்தரிக்கிறார். அதாவது, ரோமப் பேரரசில் அந்தக் கிறிஸ்தவர்களது நற்சான்று போற்றிப் பேசப்பட்டு வந்தது. அந்நாட்களில் மத்தியதரைக் கடலைச் சுற்றியிருந்த நாடுகளில் வாழ்ந்த மக்களின் எண்ணத்தின்படி ரோமப் பேரரசே முழு உலகமாகக் கருதப்பட்டது.

**1:9** ரோம் நகரக் கிறிஸ்தவர்கள் மனிதர்களுக்கு முன்பாகத் தங்களது ஒளியைப் பிரகாசிக்கச் செய்த காரணத்தினால், அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபிக்கும்படி பவுல் ஏவப்பட்டார். தனது **ஜெபங்கள்** இடைவிடாமல் தொடர்ந்தமைக்கு **தேவனையே** அவர் **சாட்சியாக** அழைக்கிறார். ஏனெனில் வேறு எவரும் அதனை அறியமாட்டார்களே. ஆனால் தேவனே அதனைஅறிவார். அந்த தேவனையே அவர், **குமாரனுடைய சுவிசேஷத்தினாலே** தன் **ஆவியோடு சேவித்தார்**. பவுல் ஆற்றிய சேவை, சமயச் சார்புடைய சுவையற்ற வேலையன்று. அது முடிவில்லா சடங்குகளாலும், பொருள் உணராமல் ஒப்புவிக்கும் மந்திரங்களாலும், மனப்பாடமாய்க்கூறும் ஜெபங்களாலும் நிறைந்தது அன்று. அந்த ஊழியம் எழுச்சிமிக்க பணியாக விளங்கியது. அது நம்பிக்கையுள்ள மன்றாட்டுகளால் நிறைந்திருந்தது. மனவிருப்பத்தோடு கூடியதும், தன்னையே முற்றிலுமாக ஒப்புவித்ததும், அயர்ச்சியற்ற உழைப்பினால் நிறைந்ததும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் உன்னதமான முறையில் அன்புகூரும் ஆவியினால் அனல் ஊட்டப்பெற்றதுமாக அவ்வூழியம் திகழ்ந்தது. இறைமகனுடைய நற்செய்தியை எங்கும் பறைசாற்றும் வகையில் அது ஆர்வம் மேலிட்ட நிலையில் விளங்கியது.

**1:10-12** ரோமாபுரியில் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்திய பவுல், அவர்களைக் கூடிய விரைவில் சந்திக்க வேண்டுமென்ற வேட்கையுடன் தனது மன்றாட்டை ஏறெடுத்தார். எல்லாவற்றையும் போலவே, அவருடைய பயணம் **தேவனுடைய சித்தத்தினாலே** நிகழ வேண்டுமென்று அவர் விரும்பினார்.

அவர்கள் மேலும் **ஸ்திரப்படுவதற்காக** அவர்களுக்கு ஆவிக்குரிய வகையில் உதவி செய்வதே அவரை வலியுறுத்தும் விருப்பமாயிருந்தது. "இரண்டாவது ஆசிர்வாதத்தை" அவர்களுக்கு அவர் அருள வேண்டும் என்ற சிந்தனைக்கு இங்கு இடமேதுமில்லை. அல்லது அவர்களது தலையின் மீது கரங்களை வைத்துச் சில ஆவிக்குரிய வரங்களை அவர்களுக்குத் தர வேண்டும் என்றும் அவர் எண்ணங்கொள்ளவில்லை (தீமோத்தேயுவின் தலையில் அவர் கரத்தை வைத்து அவ்வாறு செய்த போதிலும், அந்தப் பொருளை இந்த வசனம் தருகிறதில்லை 2 தீமோ. 1:6). திருமறை வார்த்தைகளினாலே அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியடைவதற்கு அவர் உதவ வேண்டும் என்றே எண்ணங்கொண்டார்.

ரோமாபுரி மக்களை அவர் சந்திப்பதால், அவர்களும் பவுலும் ஆசிர்வாதத்தைப் பெறுவார்கள் என்று அவர் தொடர்ந்து விளக்கம் அளிக்கிறார். அவர்களுடைய **விசுவாசத்தினால்** அவர் **ஆறுதல் அடைவார்.** அவர்களும் அவருடைய விசுவாசத்தினால் ஆறுதல் அடைவார்கள். மொத்தத்தில் அறிவு பரிமாற்றம் பெற்று, சமுதாயத்தில் ஆவிக்குரிய மேம்பாடு காணப்படும். "இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்" (நீதி. 27:17). தாழ்மை மற்றும் அருள் பாலிக்கும் பண்பு ஆகிய குணங்களைப் பவுல் கொண்டிருந்ததைக் கண்டுணருங்கள் - மற்ற பரிசுத்தவான்களின் மூலமாக ஆவிக்குரிய உதவியைப் பெறுவதற்கு அப்பாற்பட்டவர் என்று பவுல் தன்னைக் குறித்துக் கருதவில்லை.

**1:13** ரோமாபுரிக்குச் செல்லவேண்டுமென்று அவர் **பலமுறை யோசனையாயிருந்தார். ஆயினும்** அவர் அங்கு செல்வதற்குத் **தடையுண்டாயிற்று.** ஒருவேளை மற்ற இடங்களுக்கு அவர் உடனடியாகச் சென்று அங்கு செய்ய வேண்டியவற்றை நிறைவேற்றும்படி அத்தடைகள் உண்டாயிருக்கக்கூடும். அல்லது பவுல் ரோமாபுரிக்குச் செல்லக்கூடாதபடி தூய ஆவியானவரே நேரடியாகத் தடை செய்திருக்கலாம். அல்லது சாத்தானுடைய எதிர்ப்பினால் அந்தத் தடை உண்டாயிருக்கும். **புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே** அவர் **பலனை அடைந்தது போல** ரோமாபுரியில் வாழ்ந்த புறவினத்தவர்களுக்குள்ளும் சில **பலனை அடையும்படி** அவர் விரும்பினார். அடுத்துவரும் இரண்டு வசனங்கள் சுட்டிக்காட்டுவதுபோல, நற்செய்தியினால் உண்டாகும் விளைவையே **பலன்** என்று அவர் இங்கு குறிப்பிடுகிறார். ரோமாபுரி நகர விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் ஊன்றக்கட்டப்படுவதைக் காண, அவர் வாஞ்சையுடையவராக இருந்தார் என்பதை 10, 11- ஆவது வசனங்கள் நமக்கு

வெளிப்படுத்துகின்றன. மேலும், ரோமப் பேரரசின் தலைநகரில் சில ஆத்துமாக்கள் ஆதாயப்படுத் தப்படுவதைக் காணவும் அவர் வாஞ்சையுடைய வராயிருந்தார்.

**1:14** கிறிஸ்துவைத் தன்னகத்தே உடைய வராயிருக்கும் ஒருவர், உலகத்தின் மிக முக்கிய மான தேவைக்குரிய பதிலை உடையவராயிருக் கிறார். பாவம் என்னும் நோய் குணமடைவதற் கான சிகிச்சையையும், நித்திய நரகத்தின் கொடுமைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற் கான வழியையும், தேவனோடு என்றென்றும் உடன் இருந்து களிகூருவதற்கான உறுதியையும் அத்தகைய மனிதர் அறிந்திருக்கிறார். இந்த மேன்மையான நிலை, எத்தகைய பண்பாட்டின ருக்கும் நற்செய்தியைப் பகிர்ந்து அளிக்கத்தக்க தெய்வீகப் பொறுப்பை உடையவராக அவரை ஆக்குகிறது. இவர்களை **அந்நியர்கள்** (பண்பாடு அற்றவர்கள்) என்னும் சொல்லால் பவுல் குறிப் பிடுகிறார். படிப்பறிவு உடையவர்களுக்கும் அதா வது **ஞானிகளுக்கும் மூடருக்கும்** நற்செய்தி கூற வேண்டியவராகவும் அவர் இருக்கிறார். இந் தப் பொறுப்பின் அவசியத்தை உணர்ந்த பவுல் "நான் கடனாளியாயிருக்கிறேன்" என்று குறிப்பிடு கிறதைக் காண்க.

**1:15** அந்தக் கடனை நிறைவேற்றும்படி **ரோமாபுரியில் இருக்கிறவர்களுக்கு** தேவன் அளித்த வல்லமையின்படியே அவர் **சுவிசேஷத் தைப் பிரசங்கிக்க விரும்பினார்.** ரோம் நகரில் வாழ்ந்த விசுவாசிகளுக்கு அவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்பினார் என்பது இதன் பொரு ளன்று. இந்த வசனம் அத்தகைய பொருளுடை யது போன்று தோன்றினாலும், அவர்கள் ஏற் கனவே நற்செய்தியை ஏற்றுக்கொண்டவர்களா னதால், அதை அவர்களுக்குப் பிரசங்கிக்க வேண்டியதில்லை என்பது தெளிவு. ஆனால், அம்மாநகரில் மனம் திரும்பாத புறவின மக்களி டத்தில் நற்செய்தியை அறிவிக்கவே அவர் ஆயத்தமாயிருந்தார்.

### ஆ. நற்செய்தியின் பொருள் [வரையறை] [1:16,17]

**1:16** தேவனுடைய நற்செய்தியானது யூதர் களுக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பைத்திய மாயும் இருந்தபோதிலும் ஆடம்பரமான ரோமா புரியில் அதனை அறிவிக்க பவுல் வெட்கப்பட வில்லை. ஏனெனில் அச்செய்தியானது **இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது** என்று அவர் அறிந்திருந்தார். அதாவது, தமது குமாரனை விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் தேவன் தமது வல்லமையால் எங்ஙனம் இரட் சிக்கிறார் என்பதை அச்செய்தி எடுத்தியம்பு கிறது. மேலும் அந்த வல்லமை யூதர்களிடத் திலும் கிரேக்கர்களிடத்திலும் ஒரேவிதமாக வியா பித்திருந்தது.

**முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்** என்னும் வரிசையில் நற்செய்தியின் விரிவாக்கம் அப்போஸ்தலர் நடபடிகள் காலத்தில் வரலாற்றுப் பூர்வமாக நிறைவேறிற்று. தேவனுடைய முந்தைய காலத்து மக்களாகிய யூதர்களிடத்தில் நீடித்த நன்றிக்கடன் உடையவர்களாக நாம் இருக்க வேண்டும் என்றாலும், அவர்களிடத்தில் முதலா வதாக நற்செய்திப்பணி ஆற்றிய பின்னரே, புற வின மக்களிடம் நற்செய்திப் பணியைச் செய்யச் செல்ல வேண்டுமென்னும் நிபந்தனை இல்லை. ஒரேவிதமான கொள்கையின் அடிப்படையி லேயே இந்நாட்களில் தேவன் யூதருடனும் கிரேக்கருடனும் ஈடுபடுகிறார். அவர்களிடத்தில் சொல்ல வேண்டிய செய்தியிலும், அவர்களோடு ஈடுபட வேண்டிய காலகட்டத்திலும் எவ்வித வேறுபாடும் இப்போது இல்லை.

**1:17** நீதி என்னும் சொல் முதன் முதலாக இம்மடலில் இங்கே இடம்பெற்றிருக்கிறது. ஆகவே இதன் பொருளைக் காணச் சற்று நிதானிப்போம். புதிய ஏற்பாட்டில் இச்சொல் பல்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும், இதனுடைய மூன்று பயன்களை மட்டும் நாம் இங்கு காண லாம்.

முதலாவதாக, சரியானதும் நீதியானதும் முறையானதும் மற்றும் தமது எல்லா குணநலன் களுக்கு ஏற்றதுமாயிருக்கிறவற்றை எப்பொழு தும் செய்கிற தேவனுடைய குணவியல்பினை விளக்கிக்கூற இச்சொல் பயன்படுத்தப்பட்டுள் ளது. தேவன் நீதிபரராயிருக்கிறார் என்று நாம் கூறுகின்ற வேளையில், அவரிடத்தில் எவ்விதத் தவறும், நேர்மையற்ற தன்மையும், முறைகேடும் இல்லை என்றே பொருள்கொள்கிறோம்.

இரண்டாவதாக, துன்மார்க்கரான பாவிகளை நீதிமான்களாக்குகிற தேவனுடைய செயல் முறையானது தேவநீதி என்று குறிப்பிடப்பட்டுள் ளது. துன்மார்க்கரை நீதிமான்களாக ஆக்கிய பின்னரும், அவர் நீதிபரராகவே விளங்குகிறார். ஏனெனில் இயேசு கிறிஸ்து பாவமற்ற பதில் ஆளாக தேவனுடைய நியாயமான தீர்ப்பின் அனைத்துக் கூறுகளையும் நிறைவேற்றி, செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடித்திருக் கிறார்.

கடைசியாக தமது குமாரனிடத்தில் விசுவாசம் கொண்டவர்களுக்கு தேவன் தந்தருளுகிற நிறைவான தகுநிலையானது தேவநீதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது (2 கொரி. 5:21). தம்மில் தாமே நீதியற்றவர்களாகிய மனிதர்களை, கிறிஸ்துவின் நிறைவில் நீதிமான்களாக தேவன் கண்டு, அவர்களை நீதிமான்களாகவே நடத்துகிற விதம் தேவ நீதியாகும். அதாவது அந்த மனிதர்களுடைய கணக்கில் தேவநீதி வரவுவைக்கப்பட்டுள்ளது.

இங்கே, 17 -ஆம் வசனத்தில் காணப்படும் தேவநீதி என்னும் சொற்றொடர் என்ன பொருளை உடையதாயிருக்கிறது? மேற்கூறிய மூன்று பொருட்களில் எப்பொருளையும் அது கொண்டிருக்கக் கூடியதாக இருப்பினும், தேவநீதி என்னும் சொற்றொடர் இங்கே, பாவிகளை நீதிமான்களாக்குகிற தேவனுடைய செயல்முறையைக் குறிப்பதாகவே தோன்றுகிறது.

அந்த தேவநீதி நற்செய்தியில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. முதலாவதாக, பாவம் தண்டிக்கப்பட வேண்டுமென்று தேவநீதி கோருகிறதென்பதை நற்செய்தி நம்மை அறிவுறுத்துகிறது. அந்த தண்டனை நித்திய மரணமேயாகும். என்றாலும் தேவநீதி என்ன எதிர்பார்க்கிறதோ, அதனை தேவனுடைய அன்பு தந்தருளியிருக்கிறது என்று அது தொடர்ந்து கூறுகிறதை நாம் கேட்கிறோம். பாவிகளுக்குப் பதில் ஆளாக மரணத்தை அடைந்து, தண்டனையை முற்றிலுமாகச் செலுத்தித் தீர்க்கும்படி, தம்முடைய குமாரனை இவ்வுலகிற்கு தேவன் அனுப்பினார். அவருடைய நீதியான கோரிக்கைகள் முழுவதுமாகச் செலுத்தித் தீர்க்கப்பட்டிருக்கிற நிலையில், இப்பொழுது எவரெல்லாம் கிறிஸ்துவின் கிரியையை ஏற்றுப் பயன் பெறுகிறார்களோ அவர்கள் யாவரையும் தேவன் நீதியாக இரட்சிக்கிறார்.

தேவநீதியானது **விசுவாசத்தினால் உண்டாகி விசுவாசத்திற்கென்று வெளிப்படுத்தப்படுகிறது. "விசுவாசத்தினால் உண்டாகி விசுவாசத்திற்கென்று"** என்னும் சொற்றொடர் (1) தேவனுடைய உண்மையுள்ள தன்மையிலிருந்து நம்முடைய விசுவாசத்திற்கு என்றோ, (2) விசுவாசத்தின் ஒரு நிலையிலிருந்து விசுவாசத்தின் மற்றொரு நிலைக்கு என்றோ, (3) தொடக்கத்திலிருந்து முடிவு வரை விசுவாசத்தினால் என்றோ பொருள்படக்கூடும். இவற்றுள் மூன்றாவது பொருளே பெரும்பாலும் சரியானதாகத் தோன்றுகிறது. ஒருவரது கிரியையின் அடிப்படையில் அவருடைய கணக்கில் தேவநீதி வரவு வைக்கப்படுகிறதில்லை. அதனைச் சம்பாதிக்கவோ, தகுதியினால் பெறவோ முயற்சி செய்கிறவர்களுக்கும் அது தரப்படுகிறதில்லை. விசுவாசம் என்னும் கொள்கையின் அடிப்படையிலேயே தேவநீதி வெளிப்படுகிறது. வருமுன் உரைப்போன் ஆபகூக் உரைத்த **"தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"** என்னும் தெய்வீக ஆணைக்கு முற்றிலும் உடன்பட்டதாக இது விளங்குகிறது (ஆப. 2:4). விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டவர்கள் வாழ்வார்கள் என்னும் பொருளுடையதாக இக்கூற்று அமைந்திருக்கிறது.

இம்மடலின் முதல் பதினேழு வசனங்களில், தான் எடுத்துக்கொண்ட விவாதப் பொருளை அறிமுகப்படுத்தி, அதனுடைய முக்கியமான விவரங்களில் சிலவற்றை பவுல் சுருக்கமாகத் தந்துள்ளார். "மனிதர்களுக்கு நற்செய்தி ஏன் தேவைப்படுகிறது?" என்னும் முக்கியமான மூன்றாவது கேள்விக்கு அவர் இப்பொழுது விடைபகரத் தொடங்குகிறார். நற்செய்தியின்றி மனிதர்கள் இழந்துபோன நிலையில் இருக்கிறார்கள் என்பதே அக்கேள்விக்கு அளிக்கத்தக்க சுருக்கமான விடையாகும். எனினும் இந்தப் பதில் நான்கு புதிய கேள்விகளை எழுப்புகிறது: (1) ஒருக்காலும் நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத புறச்சமயத்தினர் இழந்துபோனவர்களா? (1:18-32). (2) யூதர்களுக்குள்ளும் புறவினத்தவர்களுக்குள்ளும் இருக்கிற சுய நீதி நன்னடத்தையாளர்கள் இழந்துபோனவர்களா? (2:1-16). (3) பூமிக்குரிய வகையில் தேவனுடைய மக்களாகத் தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்கள் இழந்துபோனவர்களா? (2:17-3:8). (4) எல்லா மனிதர்களும் இழந்துபோனவர்களா? (3:9-20).

### இ. உலக முழுவதற்கும் நற்செய்தியின் அவசியம் (1:18–3:20)

**1:18** "மனிதர்களுக்கு நற்செய்தி ஏன் தேவைப்படுகிறது?" என்னும் கேள்விக்கான பதிலை இங்கே நாம் காண்கிறோம். தங்களுடைய நேர்மையற்ற நடத்தையினாலும், நேர்மையற்ற வாழ்க்கையினாலும் **சத்தியத்தை அடக்கி வைக்கிற மனுஷருடைய** பொல்லாங்கிற்கு **விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.** இந்நிலையில் நற்செய்தியின்றி மனிதர்கள் இழந்துபோன நிலையில் இருக்கிறார்கள். ஆகவே மனிதர்களுக்கு இந்த நற்செய்தி அவசியமாயிருக்கிறது. ஆயின், தேவனுடைய கோபம் எங்ஙனம் மனிதர்களிடத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது? இப்பகுதியில் இதற்கான பதில் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதர்

களை அசுத்தத்திற்கும் (1:24), இழிவான இச்சை ரோகங்களுக்கும் (1:26), கேடான சிந்தைக்கும் (1:28) தேவன் ஒப்புக்கொடுத்தார். ஆயினும் இடை யிடையே மனித வரலாற்றில் புகுந்து, அவர்களது பாவத்திற்கு எதிராகத் தம்முடைய கோபத்தைத் தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதும் உண்மையே. எடுத்துக்காட்டுகளாகச் சில நிகழ்ச் சிகள்: ஜலப்பிரளயம் (ஆதி. 7); சோதோம் கொமாரோ அழிக்கப்பட்ட நிகழ்ச்சி (ஆதி 19). கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோர் தண் டனை அடைந்த நிகழ்ச்சி (எண். 16:32).

**1:19** "ஒருக்காலும் நற்செய்தியைக் கேள்விப் பட்டிராத புறச்சமயத்தினர் இழந்து போனவர் களா?" அவர்கள் பெற வேண்டிய அறிவைப் பெறாததின் நிமித்தம் அல்ல, வெளிச்சத்தைப் பெற்றிருந்தும் அதை விசுவாசிக்க மறுத்துரைப் பதன் அடிப்படையில் அவர்கள் இழந்துபோனவர் களாகவே இருக்கிறார்கள். தேவனால் படைக்கப் பட்டிருக்கிறவற்றின் மூலமாக **தேவனைக் குறித்து அறிந்துகொள்வது அவர்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.** தம்மைக் குறித்து வெளிப்படுத்தாமல் தேவன் அவர்களைக் கைவிட வில்லை.

**1:20 உலகமுண்டானது முதற்கொண்டு,** எல்லோரும் காணத்தக்கதாக தேவனுடைய **காணப்படாத** இரண்டு குணவியல்புகள் வெளிப் படுத்தப்பட்டுள்ளன: **அவருடைய நித்திய வல் லமை** மற்றும் தெய்வத்தன்மை அல்லது **தேவத் துவம்** என்பவையே அவை. தெய்வத்தன்மை என்னும் சொல்லையே பவுல் இங்கே பயன்படுத்து கிறார். அது கர்த்தருடைய உளவாம் தன்மையைக் குறிப்பதைக் காட்டிலும், அவரது குணவியல் பையே சுட்டிக்காட்டுகிறது. அவரது உள்ளார்ந்த தெய்வ நிலையைக் குறிப்பதைக் காட்டிலும், அவருடைய மகிமை பொருந்திய இயல்புகளையே சுட்டிக்காட்டுகிறது. அவருடைய தெய்வநிலை ஐயத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

இங்கே மேற்கொள்ளப்பட்ட வாதம் மிகத் தெளிவானதாகும்: படைப்புகள் தம்மைப் படைத்த படைப்பாளர் ஒருவர் இருக்கிறார் என்பதைத் திட்ட வட்டமாகக் கூறுகின்றன. வடிவமைக்கப்பட்ட ஒரு பொருள் தன்னை வடிவமைத்தவர் ஒருவர் இருக் கிறார் என்று உறுதிபடக் கூறுகிறது. கதிரவனை யும், நிலவையும், விண்மீன்களையும் நோக்கிப் பார்ப்பவர் எவராயினும் இறைவன் ஒருவர் இருக் கிறார் என்பதை அறிந்துகொள்ளக் கூடும்.

"புறச்சமயத்தினரைப் பற்றி என்ன கூறுவது?" என்னும் வினாவிற்கு **அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை** என்றே விடைபகர வேண்டும். படைக் கப்பட்டவற்றின் மூலமாக தேவன் தம்மை அவர் களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால், அவர்களோ தாங்கள் பெற்ற வெளிப்பாட்டிற்கு ஏற்றபடி நடந்துகொள்கிறதில்லை. ஆகவே, ஒருக் காலும் கேள்விப்பட்டிராத இரட்சகரை மறுத் துரைப்பதின் மூலமாக அவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடைகிறதில்லை. மாறாக தேவனைக் குறித்து அறிந்த அறிவிற்கு உண்மையற்றபடி நடந்துகொள்வதினாலேயே அவர்கள் ஆக்கி னைத் தீர்ப்பு அடைகின்றனர்.

**1:21** அவருடைய செயல்களின் மூலமாக **தேவனை அறிந்தும், அவரை தேவனென்று அவர்கள் மகிமைப்படுத்தவுமில்லை;** அவர் செய்த செயல்களுக்காக அவருக்கு அவர்கள் நன்றி செலுத்தவுமில்லை. மாறாக, **வீணான** தத்துவங்களுக்கும், பிற தெய்வங்களைக் குறித்த ஊகங்களுக்கும் மனிதர்கள் தங்களை ஒப்புவித் தனர். அதன் விளைவாகத் தெளிவாகக் காண்ப தற்கும் சிந்திப்பதற்கும் உரிய ஆற்றலை அவர் கள் இழந்து போயினர். "வேண்டாமென்று ஏற்றுக் கொள்ளப்படாத ஒளி மறுக்கப்பட்ட ஒளியாகும்." காண விரும்பாதோர் காணும் ஆற்றலை இழந்து போவார்கள்.

**1:22** ஞானம் என்று தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட அறிவினாலே, மனிதர்கள் மிகுதியான தற்செருக்கில் வளர்ந்தனர். அவ்வாறு வளர வளர அவர்கள் அறியாமைக்குள்ளும் பகுத்தறிவற்ற தன்மைக்குள்ளும் வீழ்ந்து போயினர். தேவனை அறிகிற அறிவை மறுத் துரைப்போரின் குணவியல்புகளாக இந்த இரண்டு பண்புகளும் இருக்கின்றன - பொறுத்துக்கொள்ள இயலாத அளவிற்கு தற்செருக்கு உடையவராய் அவர்கள் இருக்கின்றனர், அதே நேரத்தில் அவர் கள் ஆழ்ந்த அறியாமைக்குள் வீழ்ந்துபோன வர்களாகவும் இருக்கின்றனர்.

**1:23** கீழான உருவ அமைப்பிலிருந்து படிப்படி யாகப் பரிணாம வளர்ச்சி அடைகிறவனாக, உரு வாக்கப்படாமல், சீரிய சன்மார்க்க ஒழுங்கு உடையவனாகவே "ஆதி மனிதன்" உருவாக்கப் பட்டான். உண்மையுள்ளவரும், கால அளவிற்கு உட்படாதவரும், **அழிவில்லாதவருமான தேவனை** தேவனென்று ஒப்புக்கொள்ளாமல், மதிகெட்டதும் இழிவானதுமான சிலை வணக்கத் திற்கு அவன் தன்னை ஒப்புவித்தான். இந்தப்

பகுதி முழுவதும் பரிணாம வளர்ச்சி பொய்யுரை என்பதை எடுத்தியம்புகிறது.

மனிதன் இயல்பாகவே கடவுள் நம்பிக்கை உடையவனாக இருக்கிறான். தொழுதுகொள்வதற்கு அவனுக்கு ஒரு பொருள் தேவை. ஜீவனுள்ள தேவனை தொழுதுகொள்ள அவன் மறுத்துரைத்தபோது, **மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள்** போன்றவற்றைப் பிரதிபலித்துக் காட்டும் கடவுளர்களைத் தனக்கென்று மரத்தினாலும் கல்லினாலும் உருவாக்கினான். கீழ்நோக்கிச் செல்லும் இறங்கு முகத்தை இங்கு காண்பீர்களாக. **மனுஷர்கள் பறவைகள் ஊரும் பிராணிகள்.** மனிதன் எதைத் தொழுதுகொள்கிறானோ அதைப் போலவே மாறுகிறான் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். தேவத்துவத்தைக் குறித்த அவனுடைய கருத்து தாழ்நிலை நோக்கி ஏகுகின்ற காரணத்தினால் அவனுடைய ஒழுக்கமும் நடத்தையும் தாழ்நிலை நோக்கியே செல்கின்றன. அவனுடைய கடவுள், ஒரு ஊரும் பிராணியாக இருக்குமென்றால், தன் விருப்பப்படி வாழவே அவன் முற்படுவான். தொழுது கொள்கிற ஒன்றைக் காட்டிலும் தொழுதுகொள்கிறவன் தன்னைத் தாழ்வாகக் கருதுவான் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். தேவனுடைய சாயலிலும் அவருடைய ரூபத்தின்படியேயும் படைக்கப்பட்ட மனிதன் ஊரும் பாம்புகளைக் காட்டிலும் இழிநிலைக்குச் சென்றுவிட்டான்.

மனிதன் சிலைகளை வணங்கும்போது, பேய்களையே வணங்குகிறான். புறவினத்தவர் பலியிடுகிறவற்றை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று பவுல் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார் (1 கொரி. 10:20).

**1:24 தேவன்** மனிதனை **ஒப்புக்கொடுத்தார்** என்று மும்முறை இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளது. அவர் **அவர்களை அசுத்தத்திற்கும்** (1:24), இழிவான இச்சை ரோகங்களுக்கும் (1:26), கேடான சிந்தைக்கும் (1:28) **ஒப்புக்கொடுத்தார்.** இதனை வேறு சொற்களில் கூறுவோமாயின், மனிதனுடைய ஆளுமையின் சிறப்பிற்கு முற்றிலும் எதிராகவே தேவகோபம் இயக்கிவிடப்பட்டது.

அவர்களது இருதயத்தில் தோன்றின பொல்லாங்கான இச்சைகளின் காரணமாக அவர்களை தேவன் பற்பல சிற்றின்பச் சீர்கேடுகளுக்கு ஒப்புவித்தார். அவையாவன கூடா ஒழுக்கம், திருமணத்திற்கு முன்னமே கூடுதல், ஒழுக்கக்கேடு, விலைமகள் முறைமை, காமவெறி போன்று இன்னும் பல. அவர்களது வாழ்க்கை சிற்றின்பக் களியாட்டமாக மாறி, அவர்கள் தங்களது சரீரங்களை அவமானப்படுத்திக்கொண்டார்கள்.

**1:25** முதலில் அவர்கள் சத்தியத்தைக் கைக் கொள்ளாமல் விடுத்து, சிலை வணக்கம் என்னும் பொய்யாக அதனை மாற்றிய காரணத்தினால் அவர்களை அவர் கைவிட்டார். சிலை என்பது ஒரு பொய்யாகும். மகிமையுள்ள தேவனுக்குத் தவறான பிரதிநிதியாகவும் அது விளங்குகிறது. படைக்கப்பட்ட ஒரு பொருளின் உருவத்தையே சிலையாக ஒரு மனிதன் தொழுதுகொள்கிறான். அதன் காரணமாகப் படைப்பாளரை அவன் அவமானப்படுத்தி, கனவீனப்படுத்துகிறான். அவமானத்திற்கல்ல, நித்தியமாக கனத்திற்கும் மகிமைக்குமே தகுதியுடையவராகவே அவர் திகழ்கிறார்.

**1:26** இதே காரணத்திற்காக, ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும்படி மனிதர்களை இழிவான நிலைக்கு **தேவன் ஒப்புவித்தார்.** ஒருபாற் புணர்ச்சியில் ஈடுபடும் பெண்கள், இயற்கைக்கு மாறான கலவியில் ஈடுபட்டும் வெட்கமின்றித் திரிகின்றனர்.

**1:27 ஆண்களும்** தங்களுடைய இயல்பான அனுபவத்தினின்று நெறிபிறழ்ந்து ஒருபாற் புணர்ச்சியில் ஈடுபடுகிறவர்களாக மாறிப்போயினர். தேவனால் ஏற்படுத்தப்பட்ட திருமண உறவுகளிலிருந்து விலகி, காமவெறி கொண்டவர்களாக ஆணோடே ஆண் சேரும் ஓரினச் சேர்க்கையில் அவர்கள் ஈடுபடுகின்றனர். அதன் காரணமாக அவர்களது பாவம் அவர்களுடைய சரீரங்களிலும் ஆத்துமாக்களிலும் பேரழிவை உண்டுபண்ணியுள்ளது. நோய்கள், குற்ற உணர்வு, தன்னியல்பில் பாதிப்புகள் போன்றவை தேளின் கொடுக்கு போன்று அவர்களைக் கொட்டியுள்ளன. ஒருவர் இப்பாவத்தைச் செய்துவிட்டுத் தப்பித்துக் கொள்ளலாம் என்னும் கருத்தினை இது தவறென்று உறுதிப்படுத்துகிறது.

ஓரினச் சேர்க்கை ஏதோ ஒரு நோய் என்று கருதி, மனிதர்கள் அதன் கேட்டினைக் குறித்துச் சிந்திக்காமல் விட்டுவிடுகின்றனர். அது மாற்று வாழ்க்கை முறை என்றும் சிலர் கருதுகின்றனர். ஒழுக்கத்தைக் குறித்து இவ்வுலகம் கொண்டிருக்கின்ற தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளாமல், கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்தையினால் வழிநடத்தப்பட வேண்டும். பழைய ஏற்பாட்டின்படி இந்தப் பாவம் மரண ஆக்கினையினால் தீர்க்கப்பட்டது (லேவி. 18:29, 20:13). இப்பழக்கம் மரண ஆக்கினைக்கே தகுதியானது என்று புதிய

ஏற்பாடாகிய இங்கும் உரைக்கப்பட்டுள்ளது. ஒரு பாற் சேர்க்கையை மிகவும் கேவலமான பாவம் என்று வேதம் கூறுகிறது. ஒருபாற் சேர்க்கையில் ஈடுபட்ட தீவிரவாதிகளின் கலகத்தின் காரணமாக சோதோம், கொமாரா பட்டணங்கள் இப்பூமியில் இல்லாதபடி தேவனால் அழிக்கப்பட்ட நிகழ்ச்சி இதற்குத் தெளிவான சான்றாக விளங்குகிறது (ஆதி. 19:4-25).

மனம் வருந்தி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லாப் பாவிகளுக்கும், நற்செய்தியானது எங்ஙனம் பாவ மன்னிப்பையும் கருணையையும் தந்தருளுகிறதோ, அவ்வண்ணமே ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் மக்களுக்கும் அது பாவ மன்னிப்பையும் கருணையையும் தர முன் வருகிறது. இவ்வகைக் கொடுமையான பாவத்தில் வீழ்ந்துபோன கிறிஸ்தவர்கள், தங்களுடைய பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிடுவதினால் பாவமன்னிப்பைப் பெற்று முந்தின நிலைக்கு மீண்டும் வருவதற்கு ஏதுவுண்டு. தேவனுடைய வார்த்தைக்கு விருப்பத்துடன் கீழ்ப்படிவோருக்கு இப்பழக்கத்திலிருந்து முற்றிலுமான விடுதலை உண்டு. இப்பாவத்தில் ஈடுபட்டோரிடம் தொடர்ந்து நல்லாலோசனை கூறுவது மிகவும் இன்றியமையாததாகும்.

இயல்பாகவே சிலர் ஓரின நாட்டம் உடைய வராக இருக்கின்றனர் என்பதை மறுப்பதற்கில்லை. வீழ்ந்துபோன மனுக்குலம் எவ்விதமான அக்கிரமத்தையும் நெறி பிறழ்ந்த செயலையும் செய்ய வல்லதாய் இருக்கிறது என்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. அவ்வித நாட்டம் உடைய வராய் இருப்பதினால் மட்டும் ஒருவர் அப்பாவத்தைச் செய்துவிடுவதில்லை. அந்நாட்டத்திற்கு இணங்கி, அச்செயலில் ஈடுபடுவதினாலேயே அவர் அப்பாவத்தைச் செய்கிறார். இச்சோதனையை எதிர்த்து நின்று நிலையான வெற்றி பெறத் தூய ஆவியானவர் வலிமையைத் தந்தருளுகிறார் (1 கொரி. 10:13). மனந்திரும்பக் கூடாத படி ஓரினச் சேர்க்கையாளர்கள் அவ்வகைப் பாவத்தில் கட்டுண்டு கிடக்க வேண்டியதில்லை என்பதற்குக் கொரிந்துப் பட்டணத்தில் இருந்த விசுவாசிகளில் சிலர் எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தனர் (1 கொரி. 6:9-11).

**1:28** படைப்பாளராகவும், தாங்குகிறவராகவும், மீட்பராகவும் தேவன் திகழ்கிறார் என்னும் அறிவினைப் பற்றிக்கொள்ள மனிதர்கள் மறுத்தால், நீண்டதொரு பட்டியலாகச் சொல்லப்பட்டுள்ள பற்பல அக்கிரமச் செயல்களைச் செய்யும் படி **தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.** இயல்பான தன்மையுள்ள மனிதன் பரிணாம வளர்ச்சிக் கொள்கையின் மீது அளவு கடந்த வகையில் கவரப்பட்டவனாக இருக்கிறான் என்பதற்கான நுண்ணறிவு விளக்கத்தை இவ்வசனம் தருகிறது. அவர்கள் இவ்வாறு கவரப்பட்டிருப்பதற்கான காரணம் அவர்களது விருப்பத்தைச் சார்ந்ததாக இருக்கின்றதேயொழிய, உண்மையை அறியவேண்டுமென்ற ஆய்வுத்திறத்தைச் சார்ந்ததாக இல்லை. **தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு** விருப்பமில்லை. பரிணாம வளர்ச்சிக்குரிய சான்றுகள் அந்த அளவிற்குத் தவிர்க்க இயலாதபடி உறுதியுடையவையாக இருப்பதினால் அக்கொள்கையை நம்பும்படியாக அவர்கள் கட்டாயப்படுத்தப்படவில்லை. மாறாக, தேவனை முற்றிலுமாகத் தவிர்ப்பதற்கு, இப்பிரபஞ்சத்தின் தொடக்கத்தைக் குறித்த சில விளக்கங்கள் அவர்களுக்குத் தேவைப்படுவதினாலேயே அக்கொள்கையை மனிதர்கள் நம்புகின்றனர். தேவன் இருப்பாரென்றால், ஒழுக்கத்தின் அடிப்படையில் அவருக்குத் தங்களைக் குறித்த கணக்கை ஒப்புவிக்க வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள்.

**1:29** தேவனை விட்டு விலகிப்போன மனிதனது இயல்பினை எடுத்தியம்பும் பாவச் செயல்களின் பட்டியல் இங்கு தரப்பட்டுள்ளது. எப்பொழுதாவது அவற்றில் வீழ்ந்துவிடுகிறவனாக மட்டுமின்றி, இப்பாவங்களை *முழுவதுமாக* அவன் தன்னகத்தே உடையவனாயிருக்கிறான். மனிதன் என்னும் நிலைக்குத் தகுதியற்ற பாவங்களைச் செய்யும் படி அவன் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறான். **அநியாயம்** (நேர்மையற்ற செய்கை); **வேசித்தனம்**[2] (திருமணத்திற்குப் புறம்பே கூடுதல், திருமணத்திற்கு முன்னரே கூடுதல், இன்னும் பல சிற்றின்பச் சீர்கேடுகள்); **துரோகம்** (தீமை செய்வதில் தீவிரம்); **பொருளாசை** (பேராசை, இன்னும் அதிகம் வேண்டுமென்னும் இடைவிடாத அவா); **குரோதம்** (மற்றவர்களுக்கு கேடு விளைவிக்க விருப்பம், பகைமை); **பொறாமை** (பிறர் மீது எரிச்சலடைதல்); **கொலை** (திட்டமிட்டு சட்டத்திற்குப் புறம்பாகப் பிறரைக் கொலை செய்தல், கோபத்தினாலோ வேறு குற்றங்களைச் செய்யும் போதோ கொலை செய்தல்); **வாக்குவாதம்** (சச்சரவு, சண்டை, பூசல்); **வஞ்சகம்** (சூழ்ச்சி, காட்டிக் கொடுத்தல், சதியாலோசனை); **வன்மம்** (கெட்ட எண்ணம், காழ்ப்புணர்ச்சி, எதிர்ப்புணர்ச்சி, கசப்பு).

**1:30 புறங்கூறுகிறவர்கள்** (மறைமுகமாகப் பழிசாற்றுதல்); **அவதூறு பண்ணுகிறவர்கள்** (வெளிப்படையாகப் பழிசாற்றுதல், மற்றவர்களை இழித்துரைத்தல்); **தேவ பகைஞர்** (தேவனை வெறுத்தல்); **துராகிருதம் பண்ணுகிறவர்கள்** (ஏளனம், அவமானப்படுத்துதல்); **அகந்தையுள்ளவர்கள்** (பெருமை, இறுமாப்பு); வீம்புக்காரர் (வீறாப்பு, தற்புகழ்ச்சி); **பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்கள்** (தொல்லை கொடுத்தல், புதுவிதமான பொல்லாங்கு செய்தல்); **பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்கள்** (பெற்றோர்களின் அதிகாரத்தை எதிர்த்துக் கலகம் செய்தல்);

**1:31 உணர்வில்லாதவர்கள்** (ஒழுக்க ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் பகுத்தறிவு அற்றவர்கள், மனச்சாட்சி அற்ற தன்மை); **உடன்படிக்கையை மீறுகிறவர்கள்** (தங்கள் நோக்கத்திற்காக வாக்குறுதிகளையும், ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும், வணிக ஒப்பந்தங்களையும் மீறுதல்); **சுபாவ அன்பில்லாதவர்கள்** (உறவுகளின் அடிப்படையில் செய்ய வேண்டிய கடமைகளை முற்றிலுமாகத் தவிர்த்தல்); **இணங்காதவர்கள்**[3] (சமாதானப்படுத்த இயலாதவர்கள், விட்டுக்கொடுக்காதவர்கள்); **இரக்கமில்லாதவர்கள்** (கொடூரம், பழிக்குப்பழி வாங்குதல், பரிவற்ற தன்மை).

**1:32** சிற்றின்பத்தைத் தவறான முறையில் பயன்படுத்துகிறவர்களும் (1:24), நெறிபிறழ்ந்த வகைச் சிற்றின்பத்தில் ஈடுபடுகிறவர்களும் (1:26,27), சொல்லப்பட்டுள்ள பிற பாவங்களைச் செய்கிறவர்களும், இவையாவும் தவறு என்பதை உள்ளார்ந்த வகையில் அறிந்திருப்பது மட்டுமின்றி, இதன் காரணமாகத் தாங்கள் **மரணத்திற்கே பாத்திரர்** என்றும் அறிந்திருக்கிறார்கள். இந்தப் பாவங்கள் மதிநுட்பத்தின்படியும் சட்டப்படியும் பாவங்கள் அல்லவென்று அவர்கள் வாதிட்டாலும், இதுவே தேவனுடைய தீர்ப்பு என்பதையும் அவர்கள் அறிவார்கள். இவ்விதத் துன்மார்க்கமான செயல்களைச் செய்வதினின்று அவர்களுடைய அறிவு அவர்களைத் தடுப்பதில்லை. மற்றவர்களோடு இணைந்து இச்செயல்களை அவர்கள் ஊக்குவிக்கின்றனர்; மற்றும் அப்படிப்பட்டவர்களிடம் பாவத்தின் கூட்டாளிகள் என்னும் எண்ணத்தோடு தோழமை பாராட்டுகின்றனர் என்பதே உண்மை.

## சந்திக்கப்படா புறச்சமயத்தினர்

அவ்வாறாயின் "ஒருக்காலும் நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத புறச்சமயத்தினர் இழந்து போனவர்களா?" என்னும் கேள்விக்கு தேவன் தருகிற விடை யாது? படைப்பின் மூலமாக புறச்சமயத்தினர் பெற்ற வெளிச்சத்திற்கு உகந்த வண்ணம் அவர்கள் வாழாததே அவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பாயிற்று. அவர்கள் சிலை வணக்கம் செய்கிறவர்களாயினர். அதன் விளைவாக அவர்கள் இழிவான வாழ்க்கைக்கும் ஒழுக்கக் கேட்டிற்கும் தங்களை ஒப்புவித்தனர்.

தேவன் தருகின்ற வெளிச்சத்தின்படி ஒரு புறவினத்தவன் வாழ்வானாயின் அவனுடைய நிலை என்ன? அதாவது அவன் சிலைகளை எரித்து விட்டு, மெய்யான தேவனைத் தேடுகிறவனாயிருந்தால் அவனுடைய நிலை என்ன?

இந்தப் பொருள் குறித்து நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்னும் நோக்கமுடைய கிறிஸ்தவர்கள் இருவிதக் கருத்துகள் உடையவர்களாக இருக்கின்றனர்.

தேவனுடைய படைப்புகளின் மூலமாக அவரைக் குறித்துப் பெற்ற வெளிச்சத்தில் ஒரு புறச்சமயத்தினன் வாழ்வானாயின், அவனிடத்தில் சுவிசேஷ ஒளியை தேவன் அனுப்புவார் என்று சிலர் கருதுகின்றனர். இதற்கு கொர்நேலியு ஒரு எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டப்படுகிறான். அவன் தேவனைத் தேடுகிறவனாக இருந்தான். அவனுடைய ஜெபங்களும் தருமங்களும் தேவனுடைய சமுகத்தில் நினைவுகூர்தலாக வந்தெட்டின. எவ்வாறு இரட்சிப்பைப் பெறுவது என்பதைச் சொல்லித்தர, பின்னர் அவனிடத்திற்கு பேதுருவை தேவன் அனுப்பினார் (அப். 11:14).

தேவனுடைய படைப்புகளில் இருந்து அவரைக் குறித்துப் பெற்ற வெளிச்சத்தில் ஒரு மனிதன் வாழ்ந்து, சுவிசேஷத்தைக் கேட்கும் முன்னர் மரணமடைவானாயின், கிறிஸ்து கல்வாரியில் நிறைவேற்றிய செயலின் அடிப்படையில், தேவன் அவனை இரட்சிப்பார் என்று மறு கூட்டத்தார் நம்புகின்றனர். கிறிஸ்துவின் கல்வாரிச் செயலைக் குறித்து அவன் எவ்வித அறிவும் அற்றவனாயிருந்தும், தேவனைக் குறித்துத் தான் பெற்ற வெளிச்சத்தின் அடிப்படையில் அவன் வாழும் காரணத்தினால், கிறிஸ்துவின் செயலின் பயனை அவனுடைய கணக்கில் வரப்பெற்றவனாக தேவன் கணக்கிடுவார். கல்வாரி நிகழ்ச்சிக்கு முன்னர் வாழ்ந்த மக்களை தேவன் இவ்விதமாகவே இரட்சித்தார் என்று இக்கருத்துடையோர் குறித்துக் காட்டுகின்றனர். வயதுக்குத் தகுந்த அறிவு வளர்ச்சி அற்றவர்கள், மூளை வளர்ச்சியற்றவர்கள், தங்களுடைய வாழ்க்கை

யைக் குறித்துக் கணக்கு ஒப்புவிக்கத்தக்க வயதினை எட்டாத குழந்தைகள் ஆகியோரை இவ்விதமாகவே தேவன் இன்னமும் இரட்சிக்கிறார் என்று இவ்விதக் கருத்துடையோர் கூறுகின்றனர்.

கொர்நேலியுவின் எடுத்துக்காட்டினைக் கொண்டு முதலாவது கருத்து ஆதரிக்கப்படுகிறது. கிறிஸ்து மரணமடைந்து உயிர்த்தெழுந்த பின்னர் உள்ள தற்கால காலகட்டத்திற்கு இரண்டாவது கருத்து ஏற்புடையதாகக் கருதப்படுவதற்கு வேதத்தில் எவ்வித ஆதாரமுமில்லை. மேலும், தீவிர முயற்சியுடன் நற்செய்திப் பணி ஆற்றுவதை இக்கருத்து வலுக்குன்றச் செய்து விடுகிறது.

புறச்சமயத்தினர் இழந்து போனவர்களாக இருக்கின்றனர் என்றும் அவர்களுக்கு நற்செய்தி அவசியமாயிருக்கிறது என்றும் பவுல் விளக்கிக் காட்டிய பின்னர், இரண்டாவது வகை மக்களை நோக்கி அவர் திரும்புகிறார். இந்த வகுப்பார் யார் என்பதில் சற்று கருத்து வேறுபாடு நிலவுகிறது. யூதருக்குள்ளும் புற இனத்தவருக்குள்ளும் இருக்கிற சுயநீதி நன்னடத்தையாளர்களைக் குறித்தே பவுல் இங்கு பேசுகிறார் என நாம் கருதுகிறோம். மற்றவர்களது நடத்தையைக் குறைகூறி அவர்களைக் குற்றவாளிகளாகத் தீர்க்கிறதினாலே இவர்கள் சுயநீதி நன்னடத்தையாளர்கள் என்பதை முதல் வசனம் தெளிவுபடுத்துகிறது. (ஆயினும் இந்த மனிதர்கள் மற்றவர்கள் செய்யும் அதே குற்றங்களைச் செய்கிறவர்களாக இருக்கின்றனர்). யூதர்கள் மற்றம் புறவினத்தவர் ஆகிய இரு சாராரிடமும் பவுல் இங்கே பேசுகிறார் என்பதை 9, 10, 12, 14, 15 ஆகிய வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஆகவே, "*யூதருக்குள்ளும் புறவினத்தவர்களுக்குள்ளும் இருக்கிற சுயநீதி நன்னடத்தையாளர்கள் இழந்து போனவர்களா?*" என்னும் கேள்வி நீதிமன்றத்தில் இப்பொழுது எழுப்பப்படுகிறது. "ஆம், அவர்களும் இழந்து போனவர்களே" என்னும் பதிலை இப்பகுதியில் நாம் காண்கிறோம்.

**2:1** நாகரிகமற்றபடி வாழும் மனிதர்களோடு தங்களை ஒப்பிட்டு, தாங்கள் நாகரிகமானவர்கள், படிப்பறிவுள்ளவர்கள், பண்பாளர்கள் என்று கூறி, பிறரை இழிவாகக் கருதும் மனிதர்களே இந்த இரண்டாம் வகுப்பினர் ஆவர். புறச் சமயத்தினரை அவர்களது இழிவான நடத்தையைக் கொண்டு குற்றம் சுமத்துகிற இக்கூட்டத்தார், அதே குற்றங்களைச் சற்று பகட்டான முறையில் செய்கின்ற காரணத்தினால் இவர்களும் குற்றவாளிகளேயாவர். தன்னிடத்தில் உள்ள குற்றங்களைக் காணாமல், பிறரிடம் மிக விரைவாகக் குற்றம் காணும் தன்மை வீழ்ந்துபோன மனிதனுடைய இயல்பாகும். மற்றவர்கள் செய்கிறபோது அருவருக்கத் தக்கதாகவும் வெறுப்பூட்டுவதாகவும் காணப்படும் செயல்கள், தன்னிடத்தில் மதிக்கத்தக்கவையாக இம்மனிதனுக்குத் தோன்றுகின்றன. இவ்வகை மனிதன் பிறரிடம் காணப்படும் பாவங்களைக் **குற்றமாகத் தீர்க்கிறபடியால்**, சரியான செயலுக்கும் தவறான செயலுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்திருக்கிறான். தன்னுடைய மனைவியை வேறு ஒருவன் இரகசியமாய்க் களவாடுவது தவறென்று இவன் அறிந்திருப்பானாயின், பிறனுடைய மனைவியை இவன் இரகசியமாய்க் களவாடுவது தவறு என்பதையும் இவன் அறிவான். ஆகவே, மற்றவர்களிடம் காணப்படும் பாவங்களைக் குற்றமாகத் தீர்க்கிற ஒருவன் அதே குற்றங்களைத் தானும் செய்கிறபோது, போக்குச் சொல்ல இடமற்றவனாக இருக்கிறான்.

பண்பாடற்ற புறவினத்தவர்களின் பாவங்கள் எத்தன்மை உடையவையாக இருக்கின்றனவோ, அவை போன்றே பண்பாடுடைய மனிதர்களின் பாவங்களும் உள்ளன. இந்நூலில் சொல்லப்பட்டுள்ள அனைத்துப் பாவங்களையும் தான் செய்யவில்லையென்று நன்னடத்தையாளர்களில் ஒருவன் கூறினாலும், கீழ்க்காணும் உண்மைகளை அவன் நினைவுகூர வேண்டியவனாக இருக்கிறான்.

1. முன்னே சொல்லப்பட்ட அனைத்துப் பாவங்களையும் அவன் செய்யத் திறம் கொண்டவனாக இருக்கிறான்.
2. ஒரு கற்பனையை மீறுகிற ஒருவன், எல்லாக் கற்பனைகளையும் மீறினவனாகக் கருதப்பட்டு, குற்றமுடையவனாகிறான் (யாக். 2:10).
3. தனது சிந்தனையில் செய்த ஒரு பாவத்தை ஒருவன் ஒருக்காலும் தனது வாழ்வில் செய்திருக்கமாட்டான். ஆனால் சிந்தனையில் பாவம் செய்வதும் வேதத்தில் தடை செய்யப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் விபச்சாரம் செய்தவனாகவே கருதப்படுவான் (மத். 5:28).

**2:2 தேவனுடைய நியாயத்தீர்ப்பைக்** குறித்த பாடத்தை, தன்னில் தானே மன நிறைவுடைய நன்னடத்தையாளன் கற்றிட வேண்டியவனாயிருக்கிறான். இவ்வதிகாரத்திலுள்ள 2 முதல் 16 வரை உள்ள வசனங்களில் அப்பாடத்தை அப்போஸ்தலன் சொல்லித் தருகிறார்.

**தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின் படியே இருக்கிறது** என்பது அப்பாடத்தின் முதற் குறிப்பாகும். நிறைவற்றதும் சரியற்றதுமான ஆதாரத்தைத் கொண்டோ, வெறும் சூழ் நிலையை மட்டும் ஆதாரமாகக் கொண்டோ இத் தீர்ப்பு வழங்கப்படுகிறதில்லை. மாறாக சத்தியத் தின்படியே, நிறைவான சத்தியத்தின்படியே இத் தீர்ப்பு வழங்கப்படும். சத்தியமற்ற வேறொன்றை யும் இது சார்ந்திருப்பதில்லை.

**2:3** இரண்டாவதாக, மற்றவர்களிடம் காணப் படும் பாவங்களைக் குற்றமாகத் தீர்க்கிறவர்கள், அதே குற்றங்களைத் தாங்களும் செய்கின்ற காரணத்தால் **தேவனுடைய நியாயத்தீர்ப்பிலி ருந்து தப்பித்துக்கொள்ள இயலாது.** மற்றவர் களைக் குற்றந்தீர்க்கிற ஆற்றல், அவர்களது குற்றத்திலிருந்து அவர்களை விடுவிக்காது.

*மனந்திரும்பி மன்னிக்கப்பட்டாலொழிய* தேவனுடைய நியாயத் தீர்ப்பிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள இயலாது.

**2:4** *தேவனுடைய நியாயத்தீர்ப்பு சில வேளைகளில் தாமதிக்கிறது* என்று அடுத்தபடி யாக நாம் கற்கிறோம். **அவருடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம்** ஆகியவற்றின் சான்றா கவே இத்தாமதம் இருக்கின்றது. இரக்கத்தோடு தம்மைப் பாவிகளின் நண்பராகப் பகிர்ந்தளித்த தன்மையே அவருடைய தயவு ஆகும். ஆயினும் அம்மக்களுடைய பாவத்தோடு அவர் எவ்விதப் பங்கும் கெள்ளவில்லை. மனிதனுடைய ஒழுக்கக் கேட்டின் நிமித்தமும், தேவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிற செயலின் நிமித்தமும் அவர் அவனைத் தண்டிக்காமல் அவருடைய **பொறுமை யின்** மூலமாக அத்தண்டனையை, நிறுத்தி வைத்திருக்கிறார். மனிதனுடைய செயல்கள் சின மூட்டக்கூடியவையாக இருக்கின்றன. ஆயினும் அவர் சினமடையாமல் வியத்தகு வகையில் தம் மைக் கட்டுப்படுத்திக்கொள்கிறார். இத்தன்மையே **நீடிய சாந்தம்** என்று அழைக்கப்படுகிறது.

அவருடைய இறையருள், பாதுகாப்பு, பேணிக் காக்கும் தன்மை ஆகியவற்றில் காணப்படும் **தேவதயவு** மனிதன் **குணப்படுவதை** நோக்க மாகக் கொண்டிருக்கிறது. "ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டு மென்று" அவர் காத்துக்கொண்டிருக்கிறார் (2 பேதுரு 3:9).

**குணப்படுதல்** (மனந்திரும்புதல்) என்னும் சொல் ஒருவர் பின்புறமாகத் திரும்பி, பாவத்திற் குத் தனது முதுகைக் காண்பித்து, எதிர் திக்கில் செல்லுதல் என்று பொருள்படும். "உள்ளத்தில் மாற்றம் அடைந்து, மனப்பான்மையில் மாற்றம் அடைந்து, அதன் விளைவாகச் செயலில் மாற்றம் அடைவதே மனந்திரும்புதலாகும்."[4] தனக்கும் தன்னுடைய பாவத்திற்கும் எதிராக ஒருவர் தேவனுடைய கட்சியில் சேர்ந்துகொள்வதையே இது குறிக்கிறது. ஒருவர் தன்னுடைய அறிவின் அடிப்படையில் பாவத்தை ஒத்துக்கொள்வதற் கும் மேலாக இது இருக்கிறது. இ.ந்து அவரது மனச்சாட்சியின் ஈடுபாட்டை உள்ளடக்கியதாக இருக்கிறது. "என்னுடைய மனச்சாட்சி உணர்ந் தது, என்னுடைய பாவத்தை நான் ஒப்புக்கொண் டேன்" என்று இக்கருத்தினை ஜான் நியூட்டன் எடுத்தியம்பியுள்ளார்.

**2:5** நான்காவதாக, *குற்றங்களின் பெருக்கத் தினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு ஏற்ற நிலையை மனிதன் அடைவதைக்* குறித்து நாம் கற்கிறோம். பொன்னையும் வெள்ளியையும் பொக்கிஷமாகக் குவித்துக் கொள்வதுபோன்று, பாவிகள் தங்கள் இருதயத்தில் கடினப்பட்டு, மனந்திரும்பாமல் தங்களுக்கென்று **கோபாக் கினையைக் குவித்துக்** கொள்வதைப் பவுல் இங்கு சித்திரமாக வரைந்து காட்டுகிறார். பெரிய வெள்ளைச் சிங்காசனத்தில் வீற்றிருந்து நீதி யுள்ள தீர்ப்பை அந்நாளிலே இறுதியாக வெளிப் படுத்தும்போது, தேவனுடைய **கோபாக்கினையே** அவர்களது பொக்கிஷமாக வெளிப்படும் (வெளி. 20:11-15). அந்த நாளிலே **தேவனுடைய நீதி யுள்ள தீர்ப்பு** ஒருசார்பு அற்றதாகவும், நேர்மை யற்ற தன்மை சிறிதேனும் இராததாகவும், முற்றி லும் **நீதியுள்ள தீர்ப்பாகவும்** வெளிப்படும்.

**2:6** தொடர்ந்து வரும் ஐந்து வசனங்களில் *தேவனுடைய நியாயத் தீர்ப்பானது ஒருவரது கிரியைக்குத் தக்கதாய் விளங்கும்* என்று பவுல் நினைவுபடுத்துகிறார். தனது சிறந்த நற்குணங் களைக் குறித்து ஒருவன் மேன்மைபாராட்டக் கூடும். அவன் தனது இனத்தின் மீதோ, நாட்டின் மீதோ நம்பிக்கை கொண்டவனாக இருக்கலாம். அவனுடைய மூதாதையருக்குள் பலர் தேவ மனிதர்களாகத் திகழ்ந்தனர் என்றும் அவன் வாதிடலாம். ஆயினும் அவனுடைய *சொந்த நடத்தைக்கு* ஏற்பவே அவன் தீர்க்கப்படுவான். மேற்கூறிய ஏதொரு சிறப்பும் அவன் பெறும் நியாயத்தீர்ப்பின்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. அவனுடைய கிரியை களே தீர்ப்பின் காரணக்கூறுகளாக அமையும்.

6 முதல் 11 வரையுள்ள வசனங்களைத் தனியாக நாம் படிப்போமென்றால், கிரியை யினால் இரட்சிப்பு உண்டாகிறது என்று இங்கு போதிக்கப்படுவதாக நாம் எளிதில் முடிவுசெய்து விடுவோம். நற்செயல்புரிகிறவர்கள் அதன் பய னாக நித்திய வாழ்வினைப் பெறுவார்கள் என்று இப்பகுதி கூறுவது போன்று *தோன்றுகிறது.*

இப்பகுதிக்கு இவ்வாறு பொருள்கொள்வோ மாயின், இரட்சிப்பு கிரியையினால் அன்றி விசு வாசத்தினாலேயே உண்டாகிறது என்று மற்ற வேத பகுதிகள் யாவும் வலியுறுத்திப் போதிக்கிற உண்மைக்கு இது முற்றிலும் மாறுபட்ட கருத் தாகிவிடும் என்பதை நாம் உணரவேண்டும். இரட் சிப்பு உண்டாவதற்கு விசுவாசம் அல்லது நம் பிக்கை மட்டும் நிபந்தனையாக விதிக்கப்பட்டிருக் கிறது என்று புதிய ஏற்பாட்டில் 150 இடங்களில் காணமுடியும் என்று சா.்.பர் என்பார் குறிப்பிடுகிறார். எந்த ஒரு வேதபகுதியும், அதனை நாம் சரியாகப் புரிந்துகொள்வோமாயின், மிகுதியான சான்று களோடு சொல்லப்பட்டுள்ள உண்மைக்கு எதிரா கப் பேசுவதில்லை என்பதை அறியக்கடவோம்.[5]

அவ்வாறாயின் இந்த வேதபகுதியின் பொருள் யாது? ஒரு மனிதன் மீண்டும் பிறப்பதற்கு முன்னர் அவனிடத்தில் நற்செயல்கள் தொடங்குவ தில்லை என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். "தேவனுக்கேற்ற கிரியைகளை நடப் பிக்கும்படி நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று வினவிய மக்களுக்கு, "அவர் அனுப்பின வரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" என்று இயேசு கிறிஸ்து விடைபகர்ந்தார் (யோவான் 6:28,29). ஆகவே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதே ஒருவர் செய்யத்தக்க முதலாவது நற்கிரியை ஆகும். மேலும், ஒருவர் இரட்சிப்பைச் சம்பாதிப் பதற்கான மேன்மைதாங்கிய ஒரு கிரியையாக விசுவாசம் இல்லை என்பதை நாம் தொடர்ந்து நினைவுகூர வேண்டும். ஆகையால் இரட்சிக்கப் படாதவர்களை அவர்களது செயல்களைக் கொண்டு நியாயம் தீர்ப்போமாயின், மதிக்கத் தக்க எவ்விதச் சான்றும் அவர்களிடத்தில் இல்லை என்றே சொல்லியே ஆகவேண்டும். அவர்களு டைய நீதி என்று கருதப்படுகிற அனைத்துச் செயல் களும் அழுக்கான கந்தைகளாகவே காணப்படும் (ஏசா. 64:6). இயேசு கிறிஸ்துவை அவர்கள் கர்த்த ராக விசுவாசிக்காததே அவர்களை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும் பாவமாக விளங்குகிறது (யோவான் 3:18). அதற்கு அப்பால், அவர்கள் செய்த செயல்கள் அவர்கள் அடையவிருக்கிற தண்டனையின் அளவை நிர்ணயிக்கக்கூடியவை யாக விளங்கும் (லூக்கா 12:47, 48).

தங்களுடைய கிரியைகளுக்குத் தக்கபடி விசுவாசிகள் நியாயம் தீர்க்கப்பட்டால் அதன் விளைவு எப்படி இருக்கும்? இரட்சிப்பைச் சம் பாதிக்கத்தக்கதாகவோ, அதற்குத் தாங்களே தகுதியுடையவர்கள் என்று சொல்லத்தக்க தாகவோ எந்தவொரு நற்கிரியையையும் அவர் களால் காண்பிக்க முடியாது. அவர்கள் இரட் சிப்படைவதற்கு முன்னர் ஆற்றிய நற்செயல்கள் அனைத்தும் பாவமானவையாகவே காணப்படும். இப்பொழுதோ, தேவனே அவர்களுக்கு எதிராக ஏதொரு குற்றத்தையும் காண இயலாதபடி அந் தப் பாவங்கள் அனைத்தையும் இயேசு கிறிஸ்து வின் குருதி நீக்கிவிட்டது. இரட்சிப்படைந்த பின்னர் அவர்கள் நற்செயல்களைச் செய்யத் தொடங்குகின்றனர் - அவை உலகத்தாருடைய பார்வையில் நற்செயல்களாகத் தோன்றவேண்டு மென்ற அவசியமில்லை. ஆனால் அவற்றை தேவன் பார்க்கிறபோது, நற்செயல்களாக அவை காணப்படும். தாங்கள் பெற்ற இரட்சிப்பின் விளை வாகவே அவர்கள் நற்செயல்களைச் செய்கிறார் களேயொழிய, ஏதோ பாராட்டைப் பெறும் நோக் கங்களுக்காக அவற்றைச் செய்கிறதில்லை. கிறிஸ்துவின் நியாயாசனத்தில் அவர்களது நற் செயல்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவர்களது உண்மையுள்ள ஊழியத்தின் அடிப்படையில் வெகுமதிகள் வழங்கப்படும்.

எனினும், இந்த வேத பகுதி அவிசுவாசிகளைப் பற்றியதாக இருக்கிறதென்றும், விசுவாசிகளைக் குறித்ததன்று என்றும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

**2:7** கிரியைகளுக்கு ஏற்ப நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் என்பதை விளக்கும் வண்ணம், **சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியா மையையும் தேடுகிறவர்களுக்கு** தேவன் **நித் திய ஜீவனை அளிப்பார்** என்று பவுல் இங்கே கூறுகிறார். **சோர்ந்து போகாமல் நற்கிரியை களைச்** செய்கிறதினாலே ஒருவர் இரட்சிக்கப்படு வார் என்பது இதன் பொருளன்று என்று ஏற்கனவே நாம் விளக்கிக் கூறினோம். அவ்வாறு பொருள் கொள்வோமாயின் அது வேறொரு சுவிசேஷ மாகிவிடும். எவரொருவரும் இயல்பாகவே சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்கிறவராக வாழ இயலாது. தேவ வல்லமையினால் மட்டுமே

அத்தகைய வாழ்க்கையை வாழ முடியும். அப்படி வாழும் ஒருவர் ஏற்கனவே விசுவாசித்து, கிருபையினாலே இரட்சிக்கப்பட்டவராக இருப்பார். அவர் **மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறார்** என்னும் உண்மை அவர் ஏற்கனவே மறுபடியும் பிறந்தவர் என்பதைக் காட்டுகிறது.

அப்படிப்பட்டவர் விண்ணகத்தின் **மகிமையை** நாடுகிறவராக இருக்கிறார்; தேவனிடத்திலிருந்து வருகிற **கனத்தை** அவர் தேடுகிறார் (யோவான் 5:44). உயிர்த்தெழுந்த சரீரத்தின் இயல்பாகவே **அழியாமை** விளங்குகிறது (1 கொரி. 15:53, 54). விண்ணகத்தின் சுதந்தரம் அழியாததும் மாசற்றதும் வாடாததுமாக இருக்கிறது. இவற்றையே அவர் தேடுகிறார் (1 பேது. 1:4).

மனந்திரும்பின அனுபவத்தின் சாட்சியை வெளிப்படுத்திக் காட்டும் அனைவருக்கும் **நித்திய ஜீவனை** தேவன் அருளுவார். புதிய ஏற்பாட்டில் நித்திய ஜீவன் பல்வேறு வகைகளில் விளக்கப்பட்டுள்ளது. இரட்சிக்கப்பட்ட அத்தருணத்திலேயே நாம் பெறும் நமது உடைமைப் பொருளாக அது விளங்குகிறது (யோவான் 5:24). மகிமையின் சரீரத்தை அடையப்போகிற எதிர்காலத்திற்குரிய உடைமைப்பொருளாகவும் அது சொல்லப்பட்டுள்ளது (இந்த வசனத்திலும், ரோமர் 6:22 - லும்). விசுவாசத்தின் மூலமாக நாம் அடைகிற உடைமையாக நித்திய ஜீவன் இருப்பினும் சில இடங்களில் உண்மையுள்ள வாழ்க்கையின் பலனாக இது பேசப்படுகிறது (மாற்கு 10:30). எல்லா விசுவாசிகளும் **நித்திய ஜீவனைப்** பெறுவார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் சிலரோ மற்றவர்களைக் காட்டிலும் மேலான நிலையில் அதனை அனுபவித்துக் களிகூரக் கூடியவராகத் திகழ்வார்கள். **ஜீவனின்** குணவியல்பாக அது விளங்கும். பரிபூரண **ஜீவனாக** அதனை வழங்குவதாக இரட்சகர் வாக்குறுதி தந்துள்ளார் (யோவான் 10:10). அது கிறிஸ்துவின் சொந்த ஜீவனேயாகும் (கொலோ. 1:27).

**2:8 சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதற்கு** மாறாக, **அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை** வழங்கப்படும். அவர்கள் சுயமேன்மையை நாடுகிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் **சத்தியத்திற்குக் கீழ்ப்படிகிறதில்லை**. நற்செய்தி அழைப்பிற்கு அவர்கள் ஒருக்காலும் ஆம் என்று விடைபகர்வதில்லை. மாறாக, அநியாயத்தைத் தங்களது எஜமானனாகக் கொண்டு, அதற்குக் கீழ்ப்படிவதையே தெரிந்துகொள்கிறார்கள். சண்டையிடுதல், சினத்துடன் வாதாடுதல், கீழ்படியாமை ஆகியவை அவர்களது வாழ்க்கையின் குணவியல்புகளாக இருக்கின்றன - அவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதற்கு இவை உறுதியான ஆதாரங்களாக உள்ளன.

**2:9** இரண்டு வகை மனிதர்களையும், அவர்களது செயல்களையும் குறித்து தேவன் கொடுக்க விருக்கிற தீர்ப்பினைக் குறித்து அப்போஸ்தலன் மீண்டும் இங்கு எடுத்துரைக்கிறார். ஆயினும் அதன் வரிசையை இப்பொழுது மாற்றிக் கூறுகிறார்.

**பொல்லாங்கு செய்கிற எவருக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்** என்பதே அத்தீர்ப்பு. அவர்களது பொல்லாங்கான செயல்கள், அவர்களது பொல்லாத இருதயமாகிய அவநம்பிக்கையையே வெளிப்படுத்துகிறது என்பதை நாம் வலியுறுத்திக் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். கர்த்தரைக் குறித்து ஒருவன் எவ்வித மனப்பான்மை உடையவனாக இருக்கிறானோ, அதற்கு ஏற்றவாறே அவனுடைய செயல்களும் வெளிப்படும்.

**முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்** என்று வரிசைப்படுத்திக் கூறியிருப்பதிலிருந்து *அவரவர் தாங்கள் பெற்ற உரிமைகள் மற்றும் வெளிச்சம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள்* என்பது விளங்குகிறது. பூமியில் தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்ற நிலையில் யூதர்கள் சிலாக்கியத்தைப் பெற்றவர்கள் ஆவர். இந்தப் பொருளிலேயே **முன்பு** என்று அவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு முதன்மையான பொறுப்பு உண்டு. 12 முதல் 16 வரை உள்ள வசனங்களில், தேவனுடைய நியாயத் தீர்ப்பின் இந்த அம்சம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

**2:10** அந்தத் தீர்ப்பானது எவன் நன்மை செய்கிறானோ, அவன் யூதனாயினும் கிரேக்கனாயினும், அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமுமாக விளங்கும். தேவனைப் பொருத்தமட்டில், எவனொருவனும் முதலாவதாகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொண்டு அவர்மீது நம்பிக்கை வைக்காவிடில் நன்மை செய்கிறவனாகக் காணப்படான்.

**முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்** என்னும் கூற்று ஒருதலைச் சார்பு உடையது என்னும் பொருளோடு சொல்லப்படவில்லை. ஏனெனில்

அடுத்த வசனத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு பட்சபாதமற்றது என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, நற்செய்தி அறிவிக்கப்பட்ட கால வரிசையையே இக்கூற்று சுட்டிக் காட்டுகிறது என அறியக்கடவோம். இதனை முதல் அதிகாரம் 16 ஆவது வசனத்தில் காண்கிறோம். முதலாவது யூதர்களுக்கே நற்செய்தி அறிவிக்கப்பட்டது. முதல் விசுவாசிகளும் யூதர்களே ஆவர்.

**2:11** தேவனுடைய நியாயத் தீர்ப்பானது *முகத்தாட்சண்யமற்றது* என்பது மற்றுமொரு சத்திய மாகும். இவ்வுலக நீதி மன்றங்களில், அழகானவர்கள், செல்வந்தர்கள் மற்றும் செல்வாக்கு மிக்கவர்கள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆனால், **தேவனோ** பாரபட்சமற்ற தன்மையில் மிகவும் கண்டிப்பானவர். இனமோ, இடமோ, முகமோ தேவனிடத்தில் எவ்விதச் செல்வாக்கையும் உண்டுபண்ணுவதில்லை.

**2:12** மேற்கூறிய வண்ணம், 12 முதல் 16 வரையுள்ள வசனங்களில் காண்கிறபடி, தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒருவர் பெற்ற வெளிச்சத்தின் அடிப்படையிலேயே அவரிடத்தில் வழங்கப்படும் என்னும் சத்தியம் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இரு வகை மக்களைக் குறித்து இங்கு பேசப்பட்டுள்ளது; நியாயப்பிரமாணத்திற்கு உட்படாதவர்கள் (புறவினத்தவர்கள்); நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் (யூதர்கள்). தேவனுடைய சபையில் இடம்பெறாத மக்கள் அனைவரும் இவ்வித இருவகுப்பாராக இங்கு பிரிக்கப்பட்டுள்ளனர் (மனுமக்கள் மூன்று வகுப்பாராகப் பகுக்கப்பட்டுள்ளதை 1 கொரி.10:32 -இல் காண்க).

**எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ் செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள்.** "நியாயப்பிரமாணமில்லாமல் நியாயந்தீர்க்கப்படுவார்கள்" என்று இங்கே சொல்லப்படவில்லை. **நியாயப்பிரமாணம் இல்லாமல் கெட்டுப்போவார்கள்** என்றே எழுதப்பட்டுள்ளது. கர்த்தர் என்ன வெளிப்பாட்டை அவர்களுக்குக் கொடுத்தாரோ அதன்படியே அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்கள் பெற்ற வெளிப்பாட்டிற்கு ஏற்ப வாழாத காரணத்தினால் அவர்கள் கெட்டுப்போவார்கள்.

**எவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களாய் பாவஞ்செய்கிறார்களே, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்பு அடைவார்கள்.** அவர்கள் அதற்குக் கீழ்ப்படியவில்லையெனில் அவர்களும் கெட்டுப் போவார்கள். முழுவதுமான கீழ்ப்படிதலையே நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கிறது.

**2:13** ஒருவர் வெறுமனே நியாயப்பிரமாணத்தை உடையவராக இருப்பதில் எவ்விதப் பயனும் இல்லை. நிறைவானதும் இடையறாதுமான கீழ்ப்படிதலையே நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கிறது. நியாயப்பிரமாணம் என்ன சொல்லுகிறது என்பதை அறிந்திருப்பதால் மட்டும் ஒருவர் நீதிமானாகக் கருதப்படமாட்டார். நியாயப்பிரமாணத்தின் மூலம் ஒருவர் நீதிமானாகக் கருதப்பட வேண்டுமெனில், அப்பிரமாணங்கள் முழுமைக்கும் அவர் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். ஆனால் எல்லா மனிதர்களும் பாவிகளாக இருக்கின்ற காரணத்தினால் அவ்விதமாகக் கீழ்ப்படியக் கூடாதவர்களாக இருக்கின்றனர். ஆகவே இந்த வசனம் கருத்தளவிலான குறைவற்ற முழுமை நிலையைச் சித்திரிக்கின்றதேயொழிய மனித முயற்சியினால் அடைகிற நிலையைக் குறிப்பதில்லை.

நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளுவதால் மனிதனால் நீதிமானாக முடியாது என்று புதிய ஏற்பாடு திட்டவட்டமாகக் கற்பிக்கிறது (அப். 13:39; ரோமர் 3:20; கலா. 2:16, 21; 3:11). நியாயப்பிரமாணத்தின் மூலம் ஒருவராவது இரட்சிக்கப்பட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கவில்லை. ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து ஒரு மனிதன் அனைத்துப் பிரமாணங்களையும் முழுமையாகக் கடைபிடித்தாலும், அதன் மூலம் அவன் நீதிமானாக முடியாது. ஏனெனில் அவனுடைய முந்தின வாழ்க்கையைக் குறித்து தேவன் தீர்ப்பு செய்ய வேண்டும். ஆகவே **நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்** என்று இவ்வசனம் கூறுகையில், நியாயப்பிரமாணம் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறது, மேலும் தனது பிறந்த நாள் முதற்கொண்டு எவனொருவன் அதற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து, அதனைப் பூரணமாக நிறைவேற்றுகிறானோ அவனே நீதிமானாக்கப்படுவான் என்னும் பொருளையே இது கொண்டிருக்கிறது. ஆயினும் எவரொருவரும் அத்தகைய நிலையில் இருந்ததில்லை என்பதே, கடினமான உண்மையாகும்.

**2:14** பதினான்கு மற்றும் பதினைந்தாவது வசனங்கள் வேறுபொருள் பற்றிப்பேசும் இடையிலே வந்த வசனங்களாகும். அவை 12 ஆவது வசனத்தைப் பின்னோக்கிக் காண்கின்றன. ஆங்கு, புறவினத்தவர் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ்

செய்து நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப் போவார்கள் என்று கற்றோம். நியாயப்பிரமாணம் புறவினத்தவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையே. எனினும், எது சரி, எது தவறு என்று அறியக்கூடிய உள்ளார்ந்த அறிவை அவர்கள் உடையவராய் இருக்கிறார்கள். பொய் கூறுவது, திருடுவது, ஒழுக்கக்கேடு, கொலை போன்றவை தவறு என்பதை அவர்கள் தங்களது உள்ளுணர்வினால் அறிந்திருக்கிறார்கள். ஓய்வு நாளைக் குறித்த கற்பனையை மட்டுமே அவர்கள் உள்ளுணர்வினால் அறியாமலிருக்கிறார்கள். ஆனால் அக்கற்பனை சடங்குகளுக்குரிய ஒன்றேயொழிய, நன்னெறியைச் சார்ந்தது அன்று.

**ஆகவே நியாயப்பிரமாணம் இல்லாத புறவினத்தவர்கள்... தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்** என்னும் முடிவுக்கே நாம் வரவேண்டியவர்களாயிருக்கிறோம். நன்னெறி சார்ந்த உள்ளுணர்வின் அடிப்படையில், புறவினமக்கள் சரியானது தவறானது என்று வகைப்படுத்தி, தாங்களே கோட்பாடுகளை உருவாக்கிக்கொள்கின்றனர்.

**2:15 நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று** அவர்கள் **காண்பிக்கிறார்கள்.** அவர்களுடைய இருதயங்களில் *நியாயப்பிரமாணமே* எழுதப்படவில்லை, அதற்கு ஏற்ற கிரியையே எழுதப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணமானது இஸ்ரவேலருடைய வாழ்க்கையில் என்னென்ன கிரியைகளை நடப்பிக்கவேண்டுமென்று திட்டமிடப்பட்டதோ, அவை புறவினத்தவர் வாழ்க்கையில் ஓரளவு வெளிப்பட்டன. தங்களுடைய பெற்றோரை மதிக்க வேண்டும் என்று புறவினத்தவர்கள் அறிந்திருக்கிறார்கள். **நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை** அவர்களது **இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது** என்பதற்கு இவ்வுண்மை நல்லதொரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. சில செயல்கள் தவறானவை என்பதையும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள். **அவர்களுடைய மனச்சாட்சியே** அவர்களை எச்சரித்து அறிவுரை கூறும் உபகரணமாக விளங்குவதால், நன்னெறி சார்ந்த உள்ளார்ந்த அறிவுடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது. தாங்கள் செய்யும் செயல்களில் எவை சரியானவை, எவை தவறானவை என்று தங்களுடைய சிந்தனையால் முடிவு செய்து, அவற்றைக் **குற்றமுண்டு குற்றமில்லையென்று** அவர்கள் தீர்க்கிறார்கள். மேலும் சில செயல்களை அனுமதிக்கிறார்கள், சில செயல்களைத் தடைசெய்கிறார்கள்.

**2:16** பன்னிரண்டாம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற சிந்தனையின் தொடர்ச்சியாகவே இவ்வசனம் விளங்குகிறது. நியாயப்பிரமாணம் இல்லாதவர்களும் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களும் எப்பொழுது நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று இவ்வசனம் கூறுகிறது. அவ்வாறு கூறுகிற தருணத்தில், தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்த கடைசிப் பாடத்தையும் இப்பகுதி போதிக்கிறது - வெளியரங்கமான பாவத்தை மட்டுமின்றி **மனிதர்களுடைய அந்தரங்கங்களையும்** கணக்கில் கொண்டே நியாயத்தீர்ப்பு வழங்கப்படும் என்று இவ்வசனம் போதிக்கிறது. இப்பொழுது மறைமுகமாகச் செய்யப்படுகிற பாவங்கள் அனைத்தும், கிறிஸ்துவின் பெரிய வெள்ளைச் சிங்காசனத் தீர்ப்பின்போது வெளியரங்கமாகும். அந்தத் தெய்வீக நேரத்தில் **இயேசு கிறிஸ்துவே** நியாயாதிபதியாகத் திகழ்வார். ஏனெனில் நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் பிதாவானவர் அவருக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22). **என் சுவிசேஷத்தின்படியே** என்று பவுல் கூறுகிறபோது, "இவ்வாறே என்னுடைய சுவிசேஷம் கற்பிக்கிறது" என்றே பொருள் கொள்கிறார். **என் சுவிசேஷம்** என்னும் சொற்றொடர், பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தைக் குறிக்கிறது. பிற அப்போஸ்தலர் யாவரும் இந்த நற்செய்தியையே பிரசங்கித்தனர்.

**2:17** மூன்றாவது வகுப்பாராகிய யூதர்களுக்குப் பதில் அளிக்க, "நியாயப்பிரமாணத்தைப் பெற்ற யூதர்களும் இழந்து போனவர்களா?" என்னும் கேள்வியை இப்பொழுது அப்போஸ்தலன் எடுத்துக்கொள்கிறார். "ஆம், அவர்களும் இழந்து போனவர்களே" என்பதே அக்கேள்விக்குரிய விடையாக இருக்கிறது.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு தங்களைப் பாதிக்காது என்று யூதர்கள் பலர் எண்ணிக்கொண்டிருந்தார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எந்த யூதனையும் தேவன் நிச்சயமாக நரகத்திற்கு அனுப்பமாட்டார் என்றே அவர்கள் நினைத்தார்கள். மாறாக, புறவினத்தவர் நரக அக்கினிக்கு உரியவர்களாக விளங்குவார்கள் என்றும் எண்ணினார்கள். ஆனால் புறவினத்தவர்களோ, யூதர்களைக் காட்டிலும் சில சூழ்நிலைகளில் தேவனிடத்தில் நெருங்கியிருக்கிறார்கள் என்னும் உண்மையை வெளிப்படுத்தி, யூதர்களது தவறான எண்ணத்தைப் பவுல் முறியடிக்க முற்படுகிறார்.

தேவனோடு நெருங்கியவன் என்று தன்னைக் குறித்து ஒரு யூதன் கருதுவதற்குக் காரணமான

மேலான சிலாக்கியங்களை முதலில் விவாதத் திற்கு பவுல் எடுத்துக்கொள்கிறார். **யூதன்** என்ற பெயரை அவன் பெற்றிருந்தான். அதன் காரண மாக, பூமிக்குரிய வகையில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களில் ஓர் அங்கமாக அவன் இருந்தான். அவன் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்து இளைப்பாறினான். இளைப்பாறுவதற் காக அது ஏற்படுத்தப்படவில்லை. மாறாக அவனு டைய மனச்சாட்சியைத் தட்டியெழுப்பி பாவத்தை உணர்த்த வேண்டும் என்பதற்காகவே அது ஏற்படுத்தப்பட்டது. அவன் **தேவனைக்** குறித்து, உண்மையான ஒரே தேவனைக் குறித்து, மேன்மை பாராட்டினான். அந்த தேவன் இஸ்ர வேல் நாட்டோடு தனிச்சிறப்பு வாய்ந்த முறையில் உடன்படிக்கை ஏற்படுத்தியிருந்தார்.

**2:18** தேவனுடைய **சித்தத்தை** அவன் அறிந் திருந்தான். அந்தச் சித்தத்தைக் குறித்த பொது வான அம்சங்கள் யாவும் திருமறையில் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளன. நன்னெறிசார்ந்த மேன் மைகளை அளவிட நியாயப்பிரமாணத்தினால் கற்பிக்கப்பட்டு **நன்மை தீமையை** வகையறுத் துக் கூறுகிறவனாக அவன் விளங்கினான்.

**2:19** நன்னெறி சார்ந்தவற்றிலும் ஆவிக்குரிய வற்றிலும் **குருடராக** இருப்போருக்கு **வழிகாட்டி யாகவும், அந்தகாரத்தில்** இருப்போருக்கு **வெளிச்சமாகவும்** தன்னைக்குறித்து அவன் எண்ணிப் பெருமைப்பட்டான்.

**2:20 பேதைகளைச்** சீர்படுத்த தானே தகுதி படைத்தவன் என்றும், கல்வியறிவு அற்ற **குழந் தைகளுக்குச்** சொல்லித்தருகிற ஆசிரியனாக வும் அவன் தன்னை நினைத்துக்கொண்டான். அறிவையும் சத்தியத்தையும் குறித்த எல்லாக் கூறுகளையும் நியாயப்பிரமாணம் அவனுக்குத் தந்திருந்தது.

**2:21** பெருமை பாராட்டிக்கொள்ளத்தக்க இந்த மேன்மைகள் யூதனுடைய வாழ்க்கையை ஒருபோதும் மாற்றவில்லை. அவனிடத்தில் இவை யாவும் இனம், சமயம், அறிவு ஆகியவற்றில் பெரு மையை உண்டாக்கினவேயொழிய, அதற்கு ஏற்ற நன்னெறி வாழ்க்கையை உண்டாக்க வில்லை. அவன் மற்றவர்களுக்குப் போதித்த பாடங் களைத் தனது இருதயத்தில் ஏற்றுக்கொள்ள வில்லை. திருடுவதற்கு எதிராக அவன் போதித் தான். ஆனால் அவன் தான் செய்த போதனை யின் அடிப்படையில் வாழவில்லை.

**2:22 விபசாரம்** செய்யாதே என்று அவன் தடைவிதித்தபோது, "நான் சொல்லுவது போலச் செய், நான் செய்வது போலச் செய்யாதே" என்று கூறுவதற்கு ஒப்பாயிருந்தது. **விக்கிரகங்களை** வெறுத்து **அருவருத்த** அவன் **கோவில்களைக் கொள்ளையிடத்** தயங்கவில்லை; ஒருவேளை புறவினத்தவரின் கோவில்களை உண்மை யாகவே அவன் கொள்ளையிட்டிருக்கக் கூடும்.

**2:23** நியாயப்பிரமாணத்தைத் தனது உடை மைப் பொருளாக நினைத்து அவன் மேன்மை பாராட்டினான். ஆனால் அதில் கொடுக்கப்பட் டுள்ள புனிதமான கற்பனைகளை **மீறிநடந்து தேவனை** அவமதித்தான்.

**2:24** அவனிடத்தில் ஒன்றிணைந்து காணப் பட்ட மேலான பேச்சும், தாழ்வான நடக்கையும் **புறவினத்தவர் தேவனுடைய நாமத்தைத்** தூஷிக்கக் காரணமாயின. கர்த்தரைப் பின்பற்று கிறவர்கள் என்று தங்களைக் குறித்துப் பறை சாற்றிய யூதர்கள், எல்லா மனிதர்களும் எப் பொழுதும் செய்கிறது போலவே அவரைப் பரீட் சித்தனர். ஏசாயாவின் காலத்தில் இது உண்மை யாக நடந்தது (ஏசா. 52:5). இன்றைய நாளிலும் இது உண்மையாகவே இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் இவ்வாறு கேட்போமாக, "இயேசு கிறிஸ்து ஒருவரையே காட்சியாகக்கொண்டு, உன்னில் அவரைக் காணவிழையும் மனிதர்கள், உன்னில் என்ன காண்கிறார்கள்?"

**2:25** நியாயப்பிரமாணத்தில் மேன்மைபாராட் டிய யூதன் **விருத்தசேதனம்** என்னும் சடங்கின் மீதும் மேன்மைபாராட்டினான். யூத ஆண்கள் அனைவரும் தங்களது நுனித்தோலை அகற்றும் ஒரு சிறிய அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்டனர். அதுவே விருத்தசேதனம் ஆகும். தேவன் ஆபிர காமோடு ஏற்படுத்தின உடன்படிக்கைக்கு அடை யாளமாக அவர் இதனை நிறுவினார் (ஆதி. 17:9-14). உலகத்திலிருந்து தேவனுக்கென்று மனிதர் கள் பிரித்தெடுக்கப்பட்டதை இது வெளிப்படுத்து வதாயிருந்தது. நாட்கள் செல்லச்செல்ல இந்த அறுவைச் சிகிச்சையைப் பெற்றவர்கள் என்னும் நிலையில் யூதர்கள் தங்களைக் குறித்து மேன்மை பாராட்டிக்கொண்டார்கள். அதனிமித்தம் இறு மாப்புக்கொண்ட யூதர்கள், புறவினத்தவரை விருத்தசேதனமில்லாதவர்கள் என்று கூறி அவமதித்தார்கள்.

**விருத்தசேதனத்தை** மோசேயின் **நியாயப் பிரமாணத்தோடு** இணைத்துப் பேசிய பவுல், கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கையோடு அந்தச் சின்னம் இணைந்து காணப்பட்டால் மட்டுமே அது வழு வற்ற அடையாளமாகக் கருதப்படும் என்று குறிப்

பிடுகிறார். வெறுமனே சடங்குகளில் தேவன் ஆர்வமுடையவர் அல்லர். உள்ளான தூய்மை யுடன் இணைந்து சமயச்சடங்குகள் நிறைவேற் றப்பட்டாலொழிய, தேவன் அதில் மனநிறைவு அடைகிறதில்லை. ஆகவே விருத்தசேதனத் தைப் பெற்ற யூதன் நியாயப்பிரமாணத்தை மீறி நடந்தால் விருத்தசேதனம் அற்றவனாகவே கருதப்படுவான்.

இந்தப் பகுதியில் பிரமாணத்தைக் கடைப் பிடிப்பவர்கள் அல்லது அதன்படி செய்கிறவர்கள் என்று அப்போஸ்தலன் முழுமையுமான பொரு ளோடு குறிப்பிடவில்லை.

**2:26** புறவினத்தவன் ஒருவன் **நியாயப்பிர மாணத்திற்குக்** கீழ்ப்பட்டவனாக இல்லாதிருந் தும், அப்பிரமாணங்கள் அறிவுறுத்தும் நன்னெறி களைக் கடைப்பிடிப்பானாகில் அவனுடைய **விருத்தசேதனமின்மை**, பிரமாணங்களை மீறி நடக்கும் யூதனின் விருத்தசேதனத்தை விட மேலானதாக ஏற்றுக்கொள்ளப்படும். அந்த நிலையில் புறவினத்தவனுடைய இருதயம் விருத்தசேதனம் அடைந்ததாகக் கருதப்படும். மேலும் அதுவே தேவ பார்வையில் உயர்வாக எண்ணத் தகுந்த நிலையாகும்.

**2:27 வேத எழுத்தும் விருத்தசேதனமும்** உள்ளவனாயிருந்தும் யூதன் நியாயப்பிரமாணத் தைக் கைக்கொள்ளாததாலும் விருத்தசேதன முள்ள வாழ்க்கையை வாழாததினாலும், அதா வது பிரித்தெடுக்கப்பட்டதும் பரிசுத்தமானதுமான வாழ்க்கையை வாழாததினால், புறவினத்தவனு டைய நன்னடத்தை அந்த யூதனைக் குற்றப் படுத்துகிறது.

**2:28** தன்னுடைய இரத்த நாளங்களில் ஆபிர காமின் இரத்தம் ஓடுகிறவனாகவும், தன்னுடைய சரீரத்தில் விருத்தசேதனத்தின் அடையாளம் உடையவனாகவும் இருக்கிற ஒருவன் தேவனு டைய கணக்கின்படி ஒரு உண்மையான யூதன் அல்லன். இவை இரண்டையும் உடையவனா யிருந்தும் ஒருவன், நன்னெறி சார்புடையவற்றில் இப்பூமியில் காணும் அழுக்கடைந்த கழிவுப் பொருளாக விளங்கக் கூடும். இனம், சமயம் போன்ற வெளியரங்கமான சிறப்புகளினால் தேவன் தடு மாறுவதில்லை. உள்ளான நேர்மையையும் பரிசுத்தத்தையுமே அவர் நாடுகிறார்.

**2:29** ஆபிரகாமின் வழித்தோன்றல் உண்மை யான யூதன் அல்லன். மாறாக, தெய்வீக சுபா வத்தைத் தன் வாழ்க்கையில் வெளிப்படுத்துகிற வனே உண்மையான யூதன். விசுவாசிகள் யாவரும் யூதர்கள் என்று இப்பகுதி போதிக்கிற தில்லை. சபையானது தேவனுடைய இஸ்ரவேல் என்றும் இது போதிக்கிறதில்லை. யூதப் பெற்றோ ருக்குப் பிறந்தவர்களைப் பற்றியே பவுல் இங்கு பேசுகிறார். யூத குலப் பிறப்பும், விருத்தசேதன மாகிய சமயச் சடங்கும் போதா என்று அவர் இங்கு வலியுறுத்துகிறார். அதற்கு ஏற்ற உள்ளான அனுபவமே தேவை.

உண்மையான **விருத்தசேதனம் இருதயத் தோடு** சம்பந்தம் உடையது - எழுத்தின்படி செய் யப்படுகிற நுனித்தோல் நீக்கம், உண்மையான விருத்தசேதனம் அன்று. பழமையானதும், ஆவி யினால் மீண்டும் பிறவாததுமான இயல்பை அகற்றுவதற்காக நிகழ்த்தப்படும் ஆவிக்குரிய அறுவைச் சிகிச்சையே மெய்யான விருத்த சேதனம் ஆகும்.

வெளியரங்கமான அடையாளத்தையும், உள் ளான கிருபையையும் ஒன்றிணைத்து வெளிப் படுத்துகிறவர்கள் மனிதர்களிடத்திலிருந்து புகழ்ச்சியைப் பெறாவிட்டாலும் தேவனுடைய புகழ்ச்சியைப் பெறுவார்கள். இக்கடைசி வசனத் தில் சொல்லாட்சியின் மேன்மையை மூலமொழி யில் காணமுடியும். புகழ்ச்சி என்னும் பொருளு டைய "யூதா" என்னும் சொல்லிலிருந்தே யூதன் என்ற சொல் பிறந்தது. உண்மையான **யூதனு டைய** குணவியல்பு, **தேவனாலே புகழப்படக்** கூடியதாக உள்ளது.

**3:1** யூதர்களுடைய குற்றங்களைக் குறித்து, இந்த அதிகாரத்தின் முதல் எட்டு வசனங்களில் அப்போஸ்தலன் தொடர்ந்து கூறுகிறார். அப் பொழுது, யூதர்களின் ஆதரவாளர் அங்கு தோன்றி அப்போஸ்தலனை எதிர்த்து, குறுக்குக் கேள்விகளைத் தொடுக்கிறார். கேள்விகள் தொடர்வதைக் காணுங்கள்:

**எதிர்த்து வாதிடுபவர்:** இரண்டாம் அதிகாரம் 17 முதல் 27 வரையுள்ள வசனங்களில் காணப் படும் உம்முடைய கூற்று உண்மையானால் **யூத னாக** ஒருவன் இருப்பதன் **மேன்மை என்ன? விருத்தசேதனம்** செய்துகொள்வதினால் உண் டாகும் **பிரயோஜனம் என்ன**?

**3:2 பவுல்:** யூதர்கள் பல சிலாக்கியங்களை உடையவர்களாக இருக்கின்றனர் என்பது உண் மையே. இவற்றில் மிகவும் முதன்மையானது **தேவனுடைய வாக்கியங்களேயாகும்**. திரு மறையின் பழைய ஏற்பாடு அவர்களாலே எழுதப் படுவதற்கும், பாதுகாக்கப்படுவதற்கும் அவர்களி டத்தில் ஒப்புவிக்கப்பட்டது. இந்த மகத்தான

சிலாக்கியத்தைப் பெற்ற இஸ்ரவேலர் செய்த பதில் யாது? அவர்களது விசுவாசமின்மை பயங்கரமான நிலையில் வெளிப்பட்டதே அவர்கள் தந்த பதிலாகும்.

**3:3 எதிர்த்து வாதிடுபவர்:** எல்லா யூதர்களும் விசுவாசிக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்வோம். அவ்வாறாயின் தாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தேவன் பின்சென்றுவிடுவாரோ? இஸ்ரவேல் மக்களைத் தெரிந்துகொண்டவர் அவரே. அதுமட்டுமின்றி அவர்களோடு அவர் உறுதியான உடன்படிக்கையும் செய்துகொண்டார். சிலருடைய **அவிசுவாசம், தேவன்** தம் வார்த்தைகளிலிருந்து விலகிச் செல்வதற்கு வழி வகுக்குமோ?

**3:4 பவுல்: அப்படியாக்கமாட்டாது!** உண்மையானவர் தேவனா அல்லது மனிதனா என்னும் கேள்வி எழும்போதெல்லாம் **தேவனே** உண்மையானவர், **எந்த மனிதனும் பொய்யன்** என்னும் கொள்கையின் அடிப்படையிலேயே நாம் வாதத்தைத் தொடர வேண்டும். "தேவனே, நீர் கூறுகிற அனைத்தும் முற்றிலும் உண்மையாயிருக்கிறது என்பதே எப்பொழுதும் நிலைநிறுத்தப்பட வேண்டும். பாவமுள்ள மனிதன் உம்மைக் கேள்வி கேட்டு விசாரிக்கும் ஒவ்வொரு தருணத்திலும் நீரே நியாயமானவர் என்று மெய்ப்பிக்கப்பட வேண்டும்" என்னும் பொருள்பட சங்கீதம் 51:4 - ஐ தாவீது எழுதினான். தேவனுடைய வார்த்தைகளின் உண்மையை மெய்ப்பிக்கக் கூடியவையாகவே நமது பாவங்கள் செயல்புரிகின்றன.

**3:5 எதிர்த்து வாதிடுபவர்:** அவ்வாறாயின் தேவன் நம்மை ஆக்கினைக்கு உட்படுத்துவது ஏன்? **நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை** அதிக மகிமையுள்ளதாகப் பிரகாசிக்கச் செய்யுமெனில் **தேவன்** எவ்வாறு தம்முடைய **கோபாக்கினையை** நம்மீது செலுத்தலாம்? (இங்கு சாதாரண மனிதனைப் போல பவுல் வாதாடுகிறதைக் காண்க.)

**3:6 பவுல்:** இந்த வாதம் கருத்தோடு ஆராயப்படுவதற்குத் தகுதியானதல்ல. எந்த ஒரு காரியத்திலாவது தேவன் நியாயமற்றவராக இருப்பாரெனில், அவர் **உலகத்தை நியாயந்தீர்ப்பதற்குத்** தகுதியானவராக இருக்க முடியுமா? எனினும் அவர் நம்மை நியாயந்தீர்ப்பார் என்று நாம் அனைவரும் ஒப்புக்கொள்கிறோமே.

**3:7 எதிர்த்து வாதிடுபவர்:** என்னுடைய பாவம் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருமானால், அதாவது என்னுடைய **பொய்யினால்** அவருடைய **சத்தியம்** மெய்ப்பிக்கப்படுமாயின் அல்லது மனிதனுடைய கோபம் அவருக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவருமானால், மனிதனைப் பாவி என்று இப்போது அவர் குற்றப்படுத்துவதேன்?

**3:8 "நன்மை வரும்படிக்குத் தீமை செய்வோமாக"** என்று வாதத்திற்காக நான் சொல்லலாம் அல்லவா?

**பவுல்:** இடையில் நான் குறுக்கிட்டுச் சொல்ல விரும்புகிறேன். கிறிஸ்தவர்கள் இவ்வாறு வாதாடுகின்றனர் என்று **சிலர்** குற்றஞ் சுமத்துகின்றனர். உண்மையில் இது தவறாகப் பழி சுமத்துவதாகும்.

**எதிர்த்து வாதிடுபவர்:** "நன்மை வரும்படிக்குத் தீமை செய்வோமாக" என்று நான் கூறினால் அது தருக்கரீதியாகச் சரியாகத்தானே இருக்கும்?

**பவுல்:** இதைக் குறித்து நான் சொல்லக்கூடியது யாதெனில், இவ்வாறு பேசுகிற மக்கள் **ஆக்கினைத்** தீர்ப்பு அடைவதற்கு முற்றிலும் தகுதியுடைவராக இருக்கின்றனர்.

(எதிர்த்து வாதிட்டவருடைய இந்தக் கடைசித் தர்க்கம் மதியற்ற தன்மையுடையதாகத் தோன்றுகிறது. ஆயினும், தேவனுடைய கிருபையின் நற்செய்திக்கு எதிராக இக்குற்றம் தொடர்ந்து சுமத்தப்படுகிறது. "கிறிஸ்துவின் மீது பற்றும் விசுவாசத்தினால் நீங்கள் இரட்சிக்கப்படுவது உண்மையானால், எங்கும் சென்று எப்படிப்பட்ட பாவத்திலும் வாழலாம். மனிதனுடைய பாவத்திற்கு மேலாக தேவனுடைய கிருபை பெருகுகிறது என்பதால் நீங்கள் மிகுதியாகப் பாவத்தைச் செய்யச்செய்ய அவருடைய கிருபையும் பெருகும்" என்று மனிதர்கள் கூறுகின்றனர். இந்த எதிர்வாதத்திற்கான பதிலை அப்போஸ்தலன் ஆறாவது அதிகாரத்தில் கூறுகிறார்.)

**3:9 எதிர்த்து வாதிடுபவர்:** அப்படியானால், பாவிகளான பிறவினத்தவரைக் காட்டிலும் யூதர்களாகிய **நாங்கள் விசேஷித்தவர்கள்** என்று நீர் கூறுகிறீரா?

இந்தக் கேள்வி சில மொழிபெயர்ப்புகளில் "யூதர்களாகிய நாங்கள் புறவினத்தவரைக் காட்டிலும் இழிந்தவர்களா?" என்று காணப்படுகிறது. கேள்வி எதுவாக இருப்பினும் விடை ஒன்றுதான். யூதர்களும் புறவினத்தவரும் ஒருவரில் ஒருவர் மேலானவருமில்லை, இழிந்தவருமில்லை. அனைவரும் பாவிகளே.

பவுல் வழங்குகின்ற உரையில் காணப்படும் அடுத்த கேள்விக்கு இந்த வாதம் நம்மை வழி

நடத்துகிறது. புறச்சமயத்தினரும், சுயநீதி நன்ன டத்தையாளர் (யூதராயினும், புறவினத்தவரா யினும்), யூத மரபினர் அனைவரும் இழந்து போன வர்களே என்று அவர் ஏற்கனவே மெய்பித்துள் ளார். "எல்லாரும் இழந்து போனவர்களா?" என்னும் அடுத்த கேள்வியை நோக்கி பவுல் இப்பொழுது செல்கிறார்.

**3:10** இவ்வுண்மையை நிலைநாட்டுவதற்கு மேலும் சான்று தேவையெனில் அதனைப் பழைய ஏற்பாட்டில் காணலாம். மனிதர்களாகிய பெற் றோர்களுக்குப் பிறந்த எந்த மனிதனையும் பாவம் தாக்கியிருக்கிறது என்பதை முதலில் காண்போம் (3:10-12). பின்னர், அந்த மனிதனின் ஒவ்வொரு அவயவத்தையும் பாவம் தாக்கியிருக்கிறது என் பதைக் காண்போம் (3:13-18). இதன் பொழிப்புரை **"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை"** (சங். 14:1) என்பதாகும்.

**3:11** "தேவனைச் சரியான முறையில் புரிந்து கொண்டவன் ஒருவனும் இல்லை. **தேவனைத் தேடுகிற மனிதன்** எவனுமில்லை" (சங். 14:@2). தன்னிச்சையாகச் செயல்படும்படி மனிதனை கைவிட்டுவிட்டால், வீழ்ந்துபோன மனிதன் தேவனை ஒருக்காலும் தேடமாட்டான். ஒருவன் தேவனைத் தேடுகிறவனாக இருக்கிறான் என் றால், அது தூய ஆவியானவருடைய செயல் பாடாகவே இருக்கிறது.

**3:12** "தேவனை விட்டு **எல்லாரும்** வழிவிலகிப் போய்விட்டனர். மனுக்குலம் அனைத்தும் கெட் டுப்போய்விட்டது. நல்வாழ்க்கை வாழ்கிறவன் ஒருவனுமில்லை, **ஒருவனாகிலும் இல்லை**" (சங். 14:3).

**3:13** "மனிதர்களுடைய குரல்வளை **திறக்கப் பட்ட பிரேதக்குழி**. அவர்களுடைய பேச்சு எப்பொழுதும் வஞ்சகம் உடையதாயிருக்கிறது" (சங். 5:9). "நஞ்சு நிறைந்த உதடுகளிலிருந்து அவர்களது உரையாடல் வெளிப்படுகிறது" (சங். 140:3).

**3:14** "அவர்களது வாய்கள் **சபிப்பினாலும்** கபடத்தினாலும் நிறைந்திருக்கின்றன" (சங். 10:7).

**3:15** "அவர்களுடைய **கால்கள்** கொலை செய்யும்படி **தீவிரிக்கின்றன**" (ஏசா. 59:7).

**3:16** "அவர்கள் அழிவையும், **நிர்ப்பந்தத்தை யும்** ஏற்படுத்துகிறார்கள்" (ஏசா. 59:7).

**3:17** "**சமாதானம்** உண்டுபண்ணுவது என் பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்" (ஏசா. 59:8).

**3:18** "அவர்கள் **தெய்வபயம்** அற்றவர்களா யிருக்கிறார்கள் (சங். 36:1).

மனுக்குலத்தை ஊடுருவிப் பார்க்கும் தேவனு டைய ஒளிக்கீற்றாக இப்பகுதி விளங்குகிறது. உலகம் முழுவதும் நேர்மையற்றதாயிருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது (3:10). தேவனை அறியாத மனிதன் அவரைச் சார்ந்து கொள்ளாமல் தன்னிச்சையாக இருக்கின்றான் (3:11). தன் வழிகளில் அவன் அலைந்து திரி கிறான், அவனால் எவ்விதப் பயனுமில்லை, அவனிடத்தில் எவ்வித நன்மையுமில்லை (3:12). மனிதனுடைய குரல்வளை அழுகி நாற்றமெடுக் கிறது. அவனுடைய நாவு வஞ்சனையால் நிறைந் திருக்கிறது, அவனுடைய உதடு நச்சுத்தன்மை உடையது (3:13). அவனுடைய வாய் சபிப்பினால் நிறைந்திருக்கிறது (3:14). அவனுடைய கால்கள் கொலைசெய்யப் பாய்ந்தோடுகின்றன (3:15). பிரச்சினைகளையும் அழிவையுமே அவன் ஏற் படுத்துகிறான் (3:16). எவ்வாறு சமாதானத்தை உண்டாக்குவது என்பதை அவன் அறியாதிருக் கிறான் (3:17). தேவனை அவன் பொருட்படுத்து வதில்லை (3:18). மனிதன் முற்றிலுமாகச் சீர்கெட்டநிலையில் இருக்கிறான் என்று இங்கே நாம் காண்கிறோம். அதாவது, பாவம் மனுக் குலம் முழுவதையும் பாதித்திருக்கிறது; மனிதனு டைய அனைத்துக் கூறுகளையும் அது பாதித் திருக்கிறது. எல்லாப் பாவங்களையும் எல்லா மனிதர்களும் செய்ததில்லை என்பது உண் மையே. ஆயினும் அனைத்துப் பாவங்களையும் செய்யவல்ல *ஆற்றல்* படைத்தவனாக அவனு டைய இயல்பு இருக்கிறது.

பாவங்களின் பட்டியலை முற்றிலுமாகக் கொடுக்க பவுல் விரும்பியிருந்தால் கீழ்க்கண்ட யாவற்றையும் அவர் கொடுத்திருக்கக் கூடும். *சிற்றின்பச் சீர்கேட்டுப் பாவங்கள்:* விபசாரம், ஓரினச்சேர்க்கை, பெண்கள் ஒருபாற் சேர்க்கை யில் ஈடுபடுதல், நெறிபிறழ்ந்த வெறிச்செயல், விலங்குபோன்ற காமவெறி, வேசித்தனம், கற்பைச் சூறையாடுதல், காமவெறிகொண்ட கதை, படம் போன்றவற்றில் நாட்டம், இழிந்த சொற்களை கொண்ட கதை ஆகியன. *போர்க் காலப் பாவங்கள்:* ஒன்றுமறியா மக்களைக் கொலை செய்தல், கொடுமைகள் இழைத்தல், நச்சுவாயுக் கூடங்கள், தீச்சூளைகள், சித்ர வதைக் கூடங்கள், துன்புறுத்தும் வழிமுறைகள், கொடுமை செய்து மகிழ்தல். *வீடுகளில் நடக் கும் பாவங்கள்:* கணவன் மனைவி உண்மை

யற்ற தன்மை, திருமண முறிவு, மனைவியை அடித்தல், மனதிற்குக் கொடுமை விளைவித்தல், சிறுவர் கொடுமை. இவற்றோடு இன்னும் பல பாவங்கள், கொலை, வெட்டி முடமாக்குதல், திருட்டு, கொள்ளையிடுதல், பண மோசடி, பொருட்களை அடித்து உடைத்துப்போடுதல், தவறான முறையில் செல்வாக்கைப் பயன்படுத்திப் பொருள் ஈட்டுதல், இலஞ்ச ஊழல் ஆகியன. மேலும் *பேச்சில் செய்யப்படும் பாவங்கள்:* தேவநிந்தனை, கெட்டசிந்தனையைத் துண்டுகிற நகைச்சுவை. காமவெறியைத் துண்டும் பேச்சு, சபித்தல், தேவனை அவதூறாகப் பேசுதல், பொய், புறம்பேசுதல், வம்புச்பேச்சு, மற்றவர்களைக் குறைவு படுத்துதல், முணுமுணுத்தல், குறைசொல்லுதல். *தனிப்பட்ட பாவங்கள்:* குடிவெறி, போதை மருந்துகளுக்கு அடிமைப்படுதல், தற்பெருமை, பொறாமை, இச்சித்தல், நன்றியற்ற தன்மை, சீர்கேடான சிந்தனை வாழ்க்கை, பிறரை வெறுத்தல், கசப்புணர்வு. இந்தப் பட்டியலுக்கு முடிவில்லை. பொது இடங்களை மாசுபடுத்துதல், குப்பைகளை வெளியே கொட்டுதல், இனவெறி, சுரண்டிப் பிழைத்தல், வஞ்சகம், காட்டிக்கொடுத்தல், வாக்குறுதியை நிறைவேற்றாதிருத்தல் இன்னும் பல. மனிதன் சீர்கெட்டவனாக இருக்கிறான் என்பதற்கு இன்னும் சான்றுகள் தேவையா?

**3:19** இஸ்ரவேல் நாட்டிற்கு நியாயப்பிரமாணத்தை தேவன் கொடுத்தபோது, மனித இனத்திற்கு ஒரு மாதிரியாகவே அவர் அதைப் பயன்படுத்தினார். அவர் இஸ்ரவேல் தோல்வி அடைந்ததாகக் கண்டு, எல்லா மனிதர்களும் தோல்வி அடைந்ததாக மிகச் சரியாகக் கருதினார். கிணற்றிலிருந்து சிறிதளவு நீரை எடுத்துச் சோதித்துப் பார்க்கும் சுகாதார ஆய்வாளர், அது மாசுபட்டிருக்கிறது என்று கண்டு, அதை மாதிரியாகக் கொண்டு அந்தக் கிணறு முழுவதும் மாசுபடிந்தது என்று தீர்ப்பு வழங்குவது போன்று இதுவும் இருக்கிறது.

ஆகவே, **நியாயப்பிரமாணம்** பேசுகிறபோது, **நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிருக்கிறவர்களுடனேயே** பேசுகிறது, அதாவது இஸ்ரவேல் மக்களோடு பேசுகிறது என்று பவுல் விளக்கும் தறுவாயில், **வாய்கள் யாவும் அடைக்கப்படும் படிக்கும்,** அவர்கள் யூதராயினும் புறவினத்தவராயினும், **உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்பிற்குக்** கீழாகக் கொண்டு வரப்படுவார்கள் என்றே விளக்குகிறார்.

**3:20 நியாயப்பிரமாணத்தைக்** கைக்கொள்வதினாலே ஒருவனும் **நீதிமானாக்கப்படுவதில்லை.** மனிதர்கள் நீதிமான்களாக ஆக்கப்படுவதற்காக நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாமல் **பாவத்தை அறிகிற அறிவு** உண்டாகும் பொருட்டே கொடுக்கப்பட்டது. அதாவது *இரட்சிப்பை அறிகிற அறிவைப்* பெறுவதற்காக அல்ல, **பாவத்தை அறிகிற அறிவைப்** பெறும்படியே அது தரப்பட்டது.

நேரான கோடு எவ்வாறு இருக்கும் என்பதை நாம் அறிந்தால் மட்டுமே வளைந்த கோடு என்றால் என்ன என்பதை நம்மால் அறியமுடியும். நியாயப்பிரமாணம் நேரான கோடாக இருக்கிறது. அதனோடு தன்னை ஒப்பிட்டுப்பார்க்கும் மனிதன் தான் எவ்வளவு கோணலானவன் என்பதை அறிகிறான்.

ஒரு கண்ணாடியில் நமது முகத்தைப் பார்க்கும்போதே அதில் எவ்வளவு அழுக்கு இருக்கிறதை என்பதை நம்மால் அறிய முடியும். ஆனாலும் அந்தக் கண்ணாடி அழுக்கடைந்த முகத்தைக் துய்மைப்படுத்தாது. ஒருவருக்குக் காய்ச்சல் இருக்கிறதா என்பதைக் கண்டறிய வெப்பமானி உதவுகிறது. ஆனால் அந்த வெப்பமானியை விழுங்குவதன் மூலமாக அந்த மனிதன் உடல் நலம் பெறமாட்டான்.

பாவம் நியாயப்பிரமாணத்தினால் கடிந்து கொள்ளப்படும்போது, நியாயப்பிரமாணம் நல்லதென்று காண்கிறோம். ஆனால் பாவத்திலிருந்து ஒருவரை இரட்சிப்பதற்கு அது எவ்விதத்திலும் பயனற்றதாக இருக்கிறது. "நியாயப்பிரமாணம் மனிதனை அச்சுறுத்துகிறதாக இருக்கிறதே யொழிய, நீதிமானாக்குகிறதில்லை." நியாயப்பிரமாணம் இவ்விதமாகச் செயல்புரிகிறது என்று லுத்தரும் மொழிந்துள்ளார்.

### ஈ. நற்செய்தியின் அடிப்படைக்கூறுகளும் நிபந்தனைகளும் (3:21-31)

**3:21** ரோமருக்கு எழுதிய மடலின் கருப்பொருளின் பகுதிக்கு இப்பொழுது நாம் வந்திருக்கிறோம். தூய தேவனால் துன்மார்க்கரான பாவிகள் நற்செய்தியைக் கொண்டு எங்ஙனம் நீதிமான்களாக ஆக்கப்படுகிறார்கள் என்னும் கேள்விக்கு அப்போஸ்தலன் இங்கே விடை கூறுகிறார்.

**நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி** வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறித் தன் பதிலை அவர் தொடங்குகிறார். அதாவது, நேர்மையற்ற பாவிகளை, நீதியான முறையில் இரட்சிக்கின்ற தேவன் வகுத்த ஒரு திட்டத்தின் செயல்பாடு **வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது** என்பதே இதன் பொருளாகும். ஆயின் நியாயப்பிரமாணத்

தைக் கைக்கொள்ளச் செய்து இரட்சிப்பை அவர் நிறைவேற்றவில்லை. தேவன் பரிசுத்தராய் இருக்கின்ற காரணத்தினால் பாவத்தை அவர் பொறுத்துக்கொள்கிறதில்லை. அதனைக் கண்டும் காணாததுபோலவோ, காணாமல் கண்களை மூடிக்கொண்டோ அவர் இருப்பதில்லை. அவர் அதனைத் தண்டித்தே ஆகவேண்டும். மேலும் அந்த தண்டனை மரணமேயாகும். என்ற போதிலும், பாவிகளை தேவன் நேசிக்கிறவராக இருக்கிறார். அவர் மனிதனை அத்தண்டனையிலிருந்து இரட்சிக்கவும் விரும்புகிறார். இங்கு ஒரு தடுமாற்றமான நிலை உண்டாகிறது. தேவனுடைய நீதி பாவியின் சாவைக் கோருகிறது. ஆனால், பாவியினுடைய நித்திய மகிழ்ச்சியையே அவருடைய அன்பு நாடுகிறது. தமது நீதியை விட்டுக் கொடுக்காமல் பாவிகளை எவ்வாறு தேவன் இரட்சிக்கிறார் என்பதை நற்செய்தி வெளிப்படுத்துகிறது.

இந்த நீதியுள்ள திட்டமானது **நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் சாட்சியாக** வெளிப்பட்டிருக்கிறது. பாவநிவர்த்திக்காக இரத்தம் சிந்த வேண்டும் என்பதைக் குறிக்கும் பலிமுறையில் காணப்படும் மாதிரிகளாலும் நிழலுருவங்களாலும் அத்திட்டம் முன்னுரைக்கப்பட்டது. மேலும் நேரடியான தீர்க்கதரிசனங்கள் மூலமாகவும் அது முன்னுரைக்கப்பட்டது (எ.கா., ஏசாயா 51:5,6,8; 56:1; தானி. 9:24).

**3:22** நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதன் அடிப்படையில் இந்த நீதியுள்ள இரட்சிப்பைப் பெற முடியாது என்று 21 - ஆவது வசனம் கூறுகிறது. **இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே** அதனைப் பெறுகிறோம் என்று அப்போஸ்தலன் இங்கே கூறுகிறார். ஜீவனுள்ள கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே பாவத்திலிருந்து பாதுகாக்கும் இரட்சகராக இருக்கிறார் என்றும், விண்ணுலகத்திற்குச் செல்ல அவர் ஒருவரே நம்பிக்கையாக இருக்கிறார் என்றும் முற்றிலுமாக நம்புவதே இங்கே விசுவாசம் என்று அழைக்கப்படுகிறது. அது திருமறையில் காணப்படுகிற கிறிஸ்துவைப் பற்றிய ஆளுமையையும், அவருடைய செயல்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்ட வெளிப்பாடேயாகும்.

கும்மிருட்டிலே தாவிக்குதிப்பதல்ல விசுவாசம். மாறாக, உறுதியான சான்றை அது எதிர்பார்க்கிறது. அந்தச் சான்றினை தேவனுடைய தவறில்லாத திருமறையில் காணமுடியும். விசுவாசம் தர்க்கத்திற்குப் பொருத்தமற்றதுமன்று, பகுத்தறிவுக்கு ஒவ்வாததுமன்று. படைப்பாளரைப் படைப்புகள் நம்புவதைப் பார்க்கிலும் பகுத்தறிவுக்கு ஏற்றது உண்டோ?

இரட்சிப்பைச் சம்பாதிப்பதற்கோ, தமது உரிமையாகப் பெறுவதற்கோ ஒருவருக்குத் தகுதியான நிலையைத் தருகிற மேலான நற்கிரியையாக விசுவாசம் விளங்குவதில்லை. கர்த்தரை விசுவாசித்த ஒருவன் அதன் காரணமாகத் தன்னைக் குறித்து மேன்மை பாராட்ட இடமில்லை. அவரை விசுவாசிக்காதவனே *மதியீனனாக* இருக்கிறான்.

இந்த இரட்சிப்பு **விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும்**[6] உண்டாகும் என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். இந்த இரட்சிப்பு எல்லோருக்கும் கிடைக்கக் கூடியது, எல்லோருக்கும் மனமார்ந்து தரப்படுகிறது, எல்லோருக்கும் போதுமானது என்னும் பொருளோடுதான் **எவர்களுக்குள்ளும்** என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. எனினும் இது **விசுவாசிக்கிற** மனிதர்களுக்குள்ளே மட்டுமே பலிக்கக் கூடியதாக இருக்கிறது. அதாவது, ஐயத்திற்கு இடமற்ற முறையில் தெளிவான ஆக்கப்பூர்வ விசுவாசத்தினாலே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களுடைய வாழ்க்கையில் மட்டுமே இது பலிக்கக் கூடியதாக இருக்கிறது. பாவமன்னிப்பு எல்லோருக்கும் உண்டாயிருக்கிறது, ஆனால் ஒரு தனி மனிதன் ஏற்றுக்கொள்கிறபோதே அது அவனுடைய உரிமையாகிறது.

இரட்சிப்பு எல்லோருக்கும் கிடைக்கக் கூடியது என்று பவுல் கூறுகிறபோது, புறவினத்தவர்களையும் யூதர்களையும் சேர்த்தே அவர் குறிப்பிடுகிறார். ஏனெனில் இப்பொழுது **வித்தியாசமே இல்லை**. யூதனுக்கு எவ்வித சிலாக்கியமுமில்லை, புறவினத்தவனுக்கு எவ்வித அனுகூலமற்ற நிலையுமில்லை.[6]

**3:23** மனித இனம் முழுமைக்கும் நற்செய்தி அவசியமாகும். ஆகவே அது உலகளாவிய நிலையில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. **எல்லோரும் பாவஞ்செய்து**[7] **தேவ மகிமையற்றவர்களாக** இருப்பதினாலே நற்செய்தி மனித இனம் முழுமைக்கும் அவசியமாயிருக்கிறது. ஆதாமுக்குள்ளாக **எல்லோரும்** பாவஞ்செய்திருக்கின்றனர். அவன் பாவஞ்செய்தபோது, தன் வழித்தோன்றல் அனைவருடைய பிரதிநிதியாகவே பாவஞ்செய்தான். ஆனால், மனிதர்களோ, தங்களது சுபாவத்தின்படி பாவிகளாக இருப்பது மட்டுமின்றி, தங்களுடைய *நடைமுறை வாழ்க்கையிலும்* பாவிகளாகவே இருக்கிறார்

கள். தம்மில்தாமே மனிதர்கள் தேவமகிமை அற்றவர்களாக இருக்கிறார்கள்.

## பாவத்தைக் குறித்த விளக்கம்

பரிசுத்தத்திலும், பரிபூரணத்திலும் தேவனுடைய அளவுகோலுக்குக் குறைவான ஏதொரு சிந்தனையும், சொல்லும், செயலும் பாவமாகும். குறித்த இலக்கைத் தவறவிடுவது அல்லது இலக்கிற்குக் குறைவானது என்றும் இது பொருள்படும். ஒரு செவ்விந்தியன் எய்த அம்பு இலக்கைச் சென்று அடையாமல் சற்று முன்புறத்தில் விழுந்தது. உடனே அவன், "ஆ, நான் பாவம் செய்தேன்" என்று கூறினான். அவனுடைய மொழியில்,[8] பாவம் என்ற சொல் குறைவுபடுவது என்னும் பொருளைத் தருகிறது.

பிரமாணத்தை மீறுகிறது பாவமாகும் (1 யோவா. 3:4). படைக்கப்பட்டோராகிய மனிதர்கள் படைப்பாளராகிய தேவனுடைய சித்தத்தை எதிர்த்துச் சிந்திப்பதும் பாவமே. தவறு என்று அறிந்தவற்றைச் செய்வது மட்டும் பாவமல்ல; நன்மையாதென்று அறிந்தும் அதனைச் செய்யாதிருப்பதும் பாவமே (யாக். 4:17). விசுவாசத்தினால் செய்யப்படாத அனைத்துச் செயல்களும் பாவமாகும் (ரோமர் 14:23). ஒருவனுடைய பகுத்தறிவின்படி ஒரு செயலைக்குறித்து ஐயம் ஏற்பட்டும், அதனை அவன் செய்வானாயின் அது அவனுக்குப் பாவமாகும். அதாவது ஒரு செயலைக் குறித்து தெளிவான மனச்சாட்சி அற்றவனாக இருந்தும், அவன் அதனை முனைந்து செய்வானாகில் பாவம் செய்கிறவனாகவே கரு தப்படுவான்.

"அநீதியெல்லாம் பாவந்தான்" (1 யோவான் 5:7). "தீய நோக்கம் (மதியீனமான எண்ணம்) பாவமாம்" (நீதி. 24:9). மனதில் பாவம் தொடங்குகிறது. அவ்வெண்ணத்தை ஊக்கம் பெறச் செய்து, அதில் களிகூர்ந்து, அதனைச் செயலாகச் செய்கிறபோது அது மரணத்தைப் பிறப்பிக்கும். பாவம் சிந்தனையில் தோன்றுகிறபோது கவர்ச்சிமிக்கதாயிருக்கிறது. ஆனால் அதைச் செய்த பிறகோ அருவருப்பாகத் தோன்றும்.

சிலநேரங்களில் பாவத்தையும் பாவங்களையும் பவுல் வேறுபடுத்திப் பேசுகிறார். நாம் செய்த தவறுகளே பாவங்களாகும். பாவம் (ஒருமைச் சொல்) நமது தீய இயல்பைக் குறிக்கிறது. அதாவது நாம் யாராக இருக்கிறோம் என்பதை அது குறிக்கிறது. நாம் யாராக இருக்கிறோம், நம்முடைய பாவ இயல்பை நாம் செய்த எல்லாப் பாவங்களோடும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நம்முடைய இயல்பு மிகவும் கீழானதாக இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவோ நமது தீய சுபாவத்திற்காகவும், தீய செயல்களுக்காகவும் மரித்தார். நம்முடைய பாவங்களை தேவன் மன்னிக்கிறார். ஆனால் நமது பாவத்தை தேவன் மன்னிக்கிறதாக வேதம் ஓரிடத்திலும் சொல்லவில்லை. மாறாக, அவர் பாவத்தை மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் (நியாயம் தீர்த்தார்) என்பதே உண்மை (ரோமர் 8:3).

பாவத்திற்கும் மீறுதலுக்கும் வேறுபாடு இருக்கிறது. அறிந்த பிரமாணத்திற்கு விரோதமாக நடப்பது மீறுதல் எனப்படும். திருடுவது அடிப்படையிலேயே பாவமாகும். அது தன்னில்தானே குற்றமாக இருக்கிறது. ஆனால் திருடுவதைச் சட்டம் தடை செய்திருக்கும்போது அது மீறுதலாகவும் விளங்குகிறது. "நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை" (ரோமர் 4:15).

எல்லா மனிதர்களும் பாவஞ்செய்து, தொடர்ந்து தேவ மகிமையற்றவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை பவுல் மெய்ப்பித்துக் காட்டிய பின்னர் அதற்குரிய பரிகாரத்தை வழங்குகிறார்.

**3:24 இலவசமாய் அவருடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.** பாவிகளை எவ்வாறு தேவன் நீதிமான்களாக்குகிறார் என்பதை நற்செய்தியானது விளக்குகிறது. அது இலவசமான அன்பளிப்பாகவும், தகுதியற்றோருக்கு வழங்கப்படும் அருட்கொடையாகவும் இருக்கிறது. ஆனால் நீதிமான்கள் ஆக்கப்படுதல் என்பதன் பொருள் என்ன?

நீதிமானாக ஒருவர் எண்ணப்படுதல் அல்லது அறிக்கைசெய்தல் என்பதே *நீதிமானாக்கப்படுதல்* என்னும் சொல்லின் பொருளாகும். எடுத்துக்காட்டாக, ஒரு பாவி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறபோது, அந்தப் பாவியை நீதிமான் என்று தேவன் பிரகடனப்படுத்துகிறார். இந்தப் பொருளிலேயே அந்த வார்த்தை பெரும்பாலும் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும், தேவனுடைய வார்த்தையை நம்பி அதற்குக் கீழ்ப்படிந்து ஒரு மனிதன் தேவனை நீதிபரராக அறிக்கை செய்யக்கூடும் (லூக்கா 7:29- ஐக் காண்க). அதாவது, தேவன் கூறுகிறவற்றிலும் செய்கிறவற்றிலும் நீதிபரராய் இருக்கிறார் என்று அவன் அறிக்கை செய்கிறான்.

மேலும் ஒரு மனிதன் தன்னை நீதிமானாகக் காண்பிக்கலாம் (லூக்கா 10:29). அதாவது தான்

நீதிமான் என்று அவன் குரல் எழுப்பலாம். ஆயின் அது தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதாகவே இருக்கிறது. அதைத் தவிர வேறொன்றும் அங் கில்லை.

நீதிமானாக்குதல் என்பது உண்மையாகவே ஒரு மனிதனை நீதிமானாக *மாற்றுகிறது* இல்லை. தேவனை நாம் நீதிபரராக மாற்ற முடியாது. அவர் ஏற்கனவே நீதிபரராக விளங்குகிறார். ஆகவே நாம் அவரை நீதிபரர் என்று அறிக்கை செய்யலாம். ஒரு விசுவாசியை தேவன் பாவமற்றவனாக *மாற்று கிறதில்லை*. தன்னில்தானே அவனை அவர் நீதி மானாக மாற்றுகிறது இல்லை. மாறாக, அவனுடைய கணக்கில் நீதியை தேவன் வரவு வைக்கிறார். "உண்மையாகவே நீதிமான்களாக இல்லாத பாவி களை, நீதிமான்கள் என்று தேவன் அழைத்து அவர்களை நீதிமான்களாக்குகிறார் - அவர்களி டத்தில் பாவம் இருக்கிறபோது அவற்றை அவர் எண்ணாமல் விட்டுவிடுகிறார். அவர்களிடத்தில் நீதி இல்லாதபோது, நீதி இருப்பதாக எண்ணுகிறார்" என்று திருவாளர் A. T. பியர்சன் கூறியுள்ளார்.[9]

ஒரு பாவியை *ஒருக்காலும் பாவமே செய் யாத நீதிமானாகக் கருதுதல்* என்றே இதற்குப் பொதுவாக பொருள் கூறப்படுகிறது. ஆயினும் இதனை முழுமையான வரையறை என்று சொல்லுவதற்கு இயலாது. விசுவாசிக்கிற ஒரு பாவியை தேவன் நீதிமானாக்கும்போது, அவன் பெறவேண்டிய தண்டனையிலிருந்து அவனை விடுவிப்பது மட்டுமின்றி, தமது சொந்த நீதியால் அவனை உடுத்துவிக்கிறார். இவ்விதமாகவே அவன் விண்ணுலகிற்கு முற்றிலும் தகுதியுடைய வனாக ஆக்கப்படுகிறான். 'குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டவன் அதற்குக் கூடுதலாக ஏற்றுக் கொள்ளப்படுதலும், மன்னிக்கப்பட்டவன் அதற் குக் கூடுதலாக விண்ணுலகிற்குத் தகுதியாக்கப் படுதலும் நீதிமானாக்கப்படுதலில் அடங்கும்."[10] குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் அக்குற்றத்தி லிருந்து விடுதலை பெறுவதே விடுவிக்கப்படுதல் ஆகும். அதற்கு மேலாக நீதி அவனுக்குத் தந்தரு ளப்படுதலே நீதிமானாக்கப்படுதல் ஆகும்.

துன்மார்க்கரான பாவிகளின் பாவங்களுக்கான முழு தண்டனையையும் தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலமாகக் கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து செலுத்தித் தீர்த்திருப்ப தால், தேவன் பாவிகளை நீதிமான்கள் என்று அறிக்கை செய்கிறார். விசுவாசத்தினால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதன் அடிப்படையில் பாவிகள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

கிரியைகளினாலே மனிதன் நீதிமானாக்கப் படுகிறான் என்று யாக்கோபு தனது மடலில் கற் பிக்கிறபோது (யாக். 2:24), நற்செயல்களினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்னும் பொருள்பட அவர் கூறவில்லை. விசுவாசத்தோடு நற்செயல் களும் இரட்சிப்படைவதற்குத் தேவை என்றும் அவர் கூறவில்லை. மாறாக, இவ்வகை விசுவாசம் ஒரு மனிதனிடத்தில் நற்செயல்களை உண்டாக் கும் என்றே கூறினார்.

தேவனுடைய மனதிலேயே நீதிமானாக்கப் படுதல் என்னும் கணக்கீடு நடைபெறுகிறது என்பதை நாம் அறியவேண்டியது மிகவும் முக் கியமானதாகும். ஒரு விசுவாசியின் உணர்ச்சி யல்ல இது; வேதம் அவ்வாறு கூறுவதால் இது நடந்துவிட்ட ஒன்று என்று அவன் அறிகிறான். 'இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற அனைவரை யும் தமது செயலின் மூலமாக நீதிமான்கள் என்று தேவன் அறிக்கை செய்வதே நீதிமானாக்குதல் ஆகும். இது தேவனுடைய மனதில் நடைபெறு கிறது. விசுவாசியின் நரம்பு மண்டலத்திலோ, அவனுடைய உணர்ச்சி வயப்பட்ட இயல்பிலோ நடைபெறுகிறதில்லை" என்று திருவாளர் C. I. ஸ்கோ.்பீல்ட் இதற்கு விளக்கம் தந்துள்ளார்.

ரோமர் 3:24 - இல், நாம் **இலவசமாய் நீதி மான்களாக** ஆக்கப்படுகிறோம் என்று அப் போஸ்தலன் கற்பிக்கிறார். நாம் சம்பாதிக்கக் கூடிய அல்லது விலைக்கு வாங்கக்கூடிய ஒரு பொருளாக இது இல்லை. மாறாக, அன்பளிப் பாகத் தரக்கூடியதாகவே இது இருக்கிறது.

தேவனுடைய **கிருபையினாலே** நாம் **நீதி மான்களாக்கப்படுகிறோம்** என்று தொடர்ந்து இங்கு கற்கிறோம். நம்மிடத்தில் எவ்விதத் தகுதியும் இல்லை, இது முற்றிலும் அதற்கு அப் பாற்பட்டது என்பதை இச்சொற்றொடர் தெளி வாகக் கூறுகிறது. நம்மைப் பொருத்தமட்டில் இது நம்முடைய தகுதிக்கு அப்பாற்பட்டது. இதனை நம் முயற்சியினால் பெறவோ விலை கொடுத்து வாங்கவோ முடியாது.

நம்முடைய உள்ளத்தில் ஏதொரு குழப்பமும் தோன்றாதிருக்க, நீதிமானாக்கப்படுதலில் அடங்கி யுள்ள ஆறு வகையான கூறுகளை விளக்க முற் படுகிறோம். இக்கூறுகள் புதிய ஏற்பாட்டில் காணப் படுகின்றன. நாம் கிருபையினால் நீதிமான்கள் ஆக்கப்பட்டிருக்கிறோம் என்று இங்கே சொல்லப் பட்டிருக்கிறது. விசுவாசத்தால், இரத்தத்தால், வல்லமையால், தேவனால் மற்றும் கிரியையால் நாம் நீதிமான்களாப்பட்டிருக்கிறோம் என்றும்

திருமறையில் சொல்லப்பட்டிருக்கிறது. எனினும் இவற்றுள் எவ்வித எதிர்மறையான பொருளோ முரண்பாடோ இல்லை.

1. நாம் கிருபையினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் - நம்மிடத்தில் இதைப் பெறுவதற்கான தகுதி ஒன்றுமில்லை என்பதே இதன் பொருளாகும்.
2. நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக் கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5:1) - கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொண்டு இதனை நாம் பெறவேண்டும் என்பதே இதன் பொருளாகும்.
3. நாம் இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 5:9) - நாம் நீதிமான்களாக்கப்படும்படி நமது இரட்சகர் செலுத்திய விலையை இது குறிக்கிறது.
4. நாம் தேவ வல்லமையால் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் (ரோமர் 4:24, 25) - கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பிய அதே வல்லமையை இது குறிக்கிறது.
5. நாம் தேவனால் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் (ரோமர் 8:33) - அவரே நம்மை நீதிமான்களாகக் கணக்கிடுபவர்.
6. நாம் கிரியைகளினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் (யாக். 2:24) - நாம் செய்யும் நற்செயல்களினால் நாம் நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம் என்பது இதன் பொருளன்று. நாம் நீதிமான்களாக்கப்பட்டிருப்பதற்கு நமது நற் செயல்களே சான்றாக விளங்குகின்றன.

மீண்டும் 3:24 - ஆம் வசனத்திற்குத் திரும்புவோம். **கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு** நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று நாம் வாசிக்கிறோம். பிணையப்பணத்தைச் செலுத்தி மீண்டும் விலைக்கு வாங்குவதே **மீட்பு** என்பதன் பொருளாகும். பாவம் என்னும் அடிமைச் சந்தையிலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மை விலைகொடுத்துத் திரும்பப் பெற்றிருக்கிறார். பரிசுத்தமும் நீதியும் நிறைந்த தேவனுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி மனநிறைவு அடையச் செய்யும்படி பிணையப்பணமாக இயேசு கிறிஸ்துவின் இரத்தம் செயல்பட்டது. "யாருக்கு அந்தப் பிணையப் பணம் செலுத்தப்பட்டது?" என்று எவரேனும் கேட்பாரெனில் முக்கியமான உண்மையைத் அவர் தவற விட்டுவிட்டார் என்றே சொல்லவேண்டும். தேவனுக்கோ சத்தானுக்கோ ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்தப்பட்டதாக வேதம் எங்கும் கூறவில்லை. மீட்புத்தொகை எவரொருவருக்கும் கொடுக்கப்படவில்லை. அது கருத்தளவிலான ஒரு தீர்வாகும். அதனை நீதியின் அடிப்படையாகக் கொண்டு தேவன் துன்மார்க்கரை இரட்சிக்கிறார்.

**3:25,26** கிறிஸ்து இயேசுவை **தேவன் கிருபாதாரபலியாக ஏற்படுத்தினார். கிருபாதார பலியின்** மூலமாகவே நீதி நிறைவேறுகிறது, தேவனுடைய கோபாக்கினை தவிர்க்கப்படுகிறது. மேலும் ஏற்புடைய பலியின் அடிப்படையில் இரக்கம் பாராட்டப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் மூன்றுமுறை கிறிஸ்து ஒரு கிருபாதார பலியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கிறவர்கள் யாவரும் அவர் சிந்திய இரத்தத்தினாலே இரக்கத்தைக் கண்டடைகிறார்கள் என்று இங்கே ரோமர் 3:25, 26 ஆகிய வசனங்களில் நாம் கற்கிறோம். நம்முடைய பாவங்களையும், சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகக் கிறிஸ்து 1 யோவான் 2:2 - ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்ய அவருடைய கிரியை போதுமானதாக இருக்கிறது; ஆனாலும் அவர் மீது நம்பிக்கை வைக்கிறவர்களுக்கே அது பலிக்கும். இறுதியாக, 1 யோவான் 4:10 - இல், நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாரார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே தேவனுடைய அன்பு வெளிப்பட்டிருக்கிறது என்று காண்கிறோம்.

'தேவனே, பாவியாகிய என்மேல் கிருபாதார பலியாகச் செயல்படும்' என்பதே எழுத்தின்படி ஆயக்காரனுடைய மன்றாட்டாக இருந்தது (லூக். 18:13). தன்னுடைய தீமை பெருகிய குற்றத்திற்குத் தண்டனையைத் தான் செலுத்த வேண்டும் என்று கோராமல் தன்னிடத்தில் கருணை காட்ட வேண்டுமென்றே அவன் தேவனிடம் வேண்டினான்.

"அன்றியும், அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக (கிருபாதார பலியாகத் திகழ்வதற்காக), தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது" என்னும் வசனத்திலும் (எபி. 2:17). **கிருபாதாரபலி** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (தமிழில் அச்சொல் கையாளப்படவில்லை).

தண்டனையைச் செலுத்தி நிவர்த்தி செய்தல் என்னும் பொருளிலேயே கிருபாதாரபலி என்னும் சொல் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

*கிருபாதார பலி* என்னும் சொல்லிற்குப் பழைய ஏற்பாட்டு இணைச்சொல் *கிருபாசனம்* என்பதாகும். கிருபாசனமே உடன்படிக்கைப் பெட்டியின் மூடியாக விளங்கியது. பாவ நிவர்த்தி நாளிலே பலி செலுத்தப்பட்ட மிருகத்தின் இரத்தத்தைப் பிரதான ஆசாரியன் கிருபாசனத்தின் மீது தெளித்தான். அதன் காரணமாக பிரதான ஆசாரியனின் பாவங்களும் இஸ்ரவேல் மக்களின் பாவங்களும் நிவர்த்தி செய்யப்பட்டன, அதாவது மூடப்பட்டன.

கிறிஸ்து கிருபாதாரபலியாக விளங்கி நமக்காகப் பாவநிவர்த்தி செய்தபோது இதனைக் காட்டிலும் கூடுதலாக நிறைவேற்றினார். அவர் நம்முடைய பாவங்களை மூடினது மட்டுமின்றி முற்றிலுமாக அவற்றை நம்மைவிட்டு நீக்கினார்.

**கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக தேவன்** கிறிஸ்துவை **ஏற்படுத்தினார்** என்று பவுல் இங்கே கூறுகிறார். அவருடைய இரத்தத்தின் மீது நமது விசுவாசத்தை வைக்க வேண்டுமென்று அவர் சொல்லவில்லை. நமது விசுவாசத்தின் கருப்பொருளாகிய *கிறிஸ்துவினிடத்திலேயே* நாம் விசுவாசம் கொள்ள வேண்டும். உயிர்தெழுந்தவரும் ஜீவனுள்ளவருமாகிய கிறிஸ்து இயேசு ஒருவரே இரட்சிக்கக் கூடியவராய் இருக்கிறார். கிருபாதார பலியின் மூலம் நாம் பாவநிவர்த்தியை அடைவதற்கு அவர் மீது பற்றும் **விசுவாசம்** நிபந்தனையாக இருக்கின்றது.

கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட செயல் முந்தின **பாவங்களை** மன்னித்து தேவனுடைய **நீதியை** விளங்கச் செய்தது. கிறிஸ்து மரணம் அடைவதற்கு முன்பு நடந்த பாவங்களை இது குறிக்கிறது. ஆதாம் முதல் கிறிஸ்துவரை, அவர் கொடுத்த வெளிப்பாட்டின் அடிப்படையில் அவர் மீது விசுவாசம் வைத்தவர்களைத் தேவன் இரட்சித்தார். எடுத்துக்காட்டாக, ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ஆதி. 15:6). ஆனால் இதனை எவ்வாறு தேவனால் நீதியாகச் செய்யக்கூடும்? பாவமற்ற பதிலாள் இன்னும் பலியாகச் செலுத்தப்படவில்லை. நிறைவான பலியின் இரத்தத்தை இன்னும் அவர் சிந்தவில்லையே. கிறிஸ்து இன்னும் மரிக்கவில்லை என்றும் இதைச் சொல்லலாம். கடன் இன்னும் தீர்க்கப்படவில்லை. அவ்வாறாயின் பழைய ஏற்பாட்டுக் காலத்து விசுவாசிகளாகிய பாவிகளை தேவன் எவ்வாறு இரட்சிக்க முடியும்?

கிறிஸ்து அப்பொழுது மரிக்கவில்லை எனினும் அவர் *மரிப்பார்* என்பதை தேவன் அறிந்த வராக, இனி நடக்கவிருக்கும் கிறிஸ்துவின் கிரியையின் அடிப்படையில் அவர்களை அவர் இரட்சித்தார். கல்வாரியைக் குறித்துப் பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் அறியாதிருந்தாலும், *தேவன்* அதனை அறிந்திருந்தார். அவர்கள் தேவனை விசுவாசித்தபோது, கிறிஸ்துவின் கிரியையின் விலையை அவர்களுடைய கணக்கிலே அவர் வரவு வைத்தார். இனிமேல் செலுத்தவிருந்த விலையின் அடிப்படையில் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். அவர்கள் கல்வாரியை எதிர்நோக்கினார்கள், நாமோ அதைப் பின்னோக்கிக் காண்கிறோம்.

**தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக் குறித்து** என்று பவுல் கூறியுள்ளது, கிருபாதார பலியாகிய பாவ நிவர்த்தியை நிறைவேற்றி கிறிஸ்து தேவனுடைய நீதியை விளங்கச் செய்தார் என்னும் பொருள்படவே சொல்லப்பட்டுள்ளது. ஒரு தனி மனிதன் இரட்சிப்படைவதற்கு முன்னர் செய்த பாவங்களைக் குறித்துப் பவுல் இங்கு பேசவில்லை. அவ்வாறு சிலர் தவறாக நினைக்கின்றனர். அவ்வாறு பொருள் கொள்வோமெனில் ஒருவனது இரட்சிப்புக்கு முன்னர் நடந்த பாவங்களைக் கிறிஸ்து கவனித்துக்கொள்வார் என்றும், அவனுடைய மறுபிறப்பிற்குப் பின்னர் அவன் செய்யும் பாவங்களுக்கு அவனே பதில் சொல்லியாக வேண்டும் என்றும் பொருளாகிவிடும். அவ்வாறில்லை, கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்னர் தேவன் இரட்சித்த மனிதர்களின் பாவங்களைக் குறித்து தேவன் பொறுத்துக் கொண்டதாகத் தோன்றுகிறது; அதைக் குறித்தே பவுல் இங்கு பேசுகிறார். தேவன் அந்தப் பாவங்களைப் பொறுத்துக் கொண்டதாகவோ காணாததுபோலவோ தோன்றுகிறது. அப்படியில்லை என்று பவுல் இங்கே உறுதிபடக் கூறுகிறார். அப்பாவங்களுக்கு பிராயச்சித்தத்தை முற்றிலுமாக கிறிஸ்து நிறைவேற்றுவார் என்று தேவன் அறிந்து, அதன் அடிப்படையில் அவர் மனிதர்களை இரட்சித்தார்.

ஆகவே பழைய ஏற்பாட்டுக் காலம் தேவன் **பொறுமையாயிருந்த** காலமாகும். பாவத்தின் மீது அவர் செலுத்த வேண்டிய தீர்ப்பைக் குறைந்தது 4000 ஆண்டுகள் நிறுத்தி வைத்திருந்தார். பின்னர் காலம் நிறைவேறினபோது பாவத்தைச் சுமக்கும்படி தமது குமாரனை தேவன் அனுப்பினார். கர்த்தராகிய இயேசு நமது பாவங்களை ஏற்றுக்கொண்டபோது, நீதியாக தேவன் தம்முடைய பரிசுத்த கோபாக்கினையைத் தமது அன்பின் குமாரன் மீது கட்டவிழ்த்துவிட்டார்.

இப்பொழுதோ கிறிஸ்துவின் மரணம் தேவனுடைய **நீதியைப்** பிரகடனம் செய்தது. தேவன் **நீதியுள்ளவர்**. ஏனெனில் பாவத்தின் தண்டனையை முழுவதுமாகச் செலுத்தவேண்டும் என்று கோரினார். துன்மார்க்கருடைய பாவங்களைப் பொறுத்துக்கொள்ளாமலும், தம்முடைய நீதியை விட்டுக் கொடுக்காமலும் பாவிகளை தேவன் நீதிமான்களாக்க ஏதுவுண்டாக்கும்படி முழுமையான பதிலாள் பலியாக மரணம் அடைந்து உயிர்த்தெழுந்துள்ளார். இவ்வுண்மையைக் கவிதை வடிவில் புனைந்துள்ளார் திருவாளர் ஆல்பர்ட் மிட்லேன்.

குறைவற்ற கிறிஸ்தரசர்
சிந்திட்ட செங்குருதி
இறைத்தந்தை நிறைவான
நீதியினைப் பகர்ந்திடுதே!

இறைமைந்தன் கொலையுண்ட
நெடுமரமாம் குறுக்கையினில்
நிறைவான கிருபைதனைக்
கண்டிடுவோம் மறுத்திடாமல்.

தூய்மைநிறைக் கடவுளவர்
குற்றங்கள் பொறுத்திடாரே
மாந்தனது குற்றங்கள்
அவன்சாவை வேண்டிடுதே.

மனுக்குலத்தார் செய்திட்ட
குற்றங்கள் பலப்பலவாம்
அனைத்தையுமே ஏற்றிட்டார்
தம்தோளில் இறைமைந்தன்.

குறையனைத்தும் எடுத்துரைத்து
நம்பிவந்தோர் வாழ்வுதனில்
பரிவிரக்கம் பொழிந்திடவே
மறுப்பிறப்பைப் பெற்றிட்டார்.

கிறிஸ்தேசு குருதிசிந்தி
கடன்முற்றும் தீர்த்திட்டார்
குறைவிலாமல் இரட்சித்தார்
நீதிநிறை இறையரசர்!

திருத்தந்தை மைந்தனுடன்
புதுஉறவை அடைந்தநானும்
மறக்காமல் புகழ்பாடித்
தலைவணங்கித் தொழுதிடுவேன்!

**3:27** இந்த வியத்தகு இரட்சிப்பின் திட்டத்திலே **மேன்மை பாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டது,** அது புறம்பே தள்ளப்பட்டது, அதற்குத் தடை விதிக்கப்பட்டது. **எந்தக்** கொள்கையின் அடிப்படையில் மேன்மை பாராட்டல் **நீக்கப்பட்டது**? கிரியாப்பிரமாணத்தினாலேயோ? **அல்ல.** கிரியையின் மூலமாக இரட்சிப்பைப் பெற முடியுமெனில் எல்லாவகைத் தற்புகழ்ச்சிக்கும் அது வழிவகுக்கும். **விசுவாசம்** என்னும் கொள்கையின் அடிப்படையில் இரட்சிப்பு உண்டாகிற காரணத்தினால் **மேன்மை பாராட்டலுக்கு** அங்கே இடமில்லை. "நான் அனைத்துப் பாவங்களையும் செய்தேன், இயேசு கிறிஸ்து எல்லா இரட்சிப்பையும் செய்தார்" என்று நீதிமானாக்கப்பட்ட மனிதன் கூறுகிறான். சுய உதவியையும், சுய முன்னேற்றத்தையும், சுய இரட்சிப்பையும் உண்மையான விசுவாசம் ஏற்க மறுத்து கிறிஸ்துவையே ஒரே இரட்சகராக நோக்கிப் பார்க்கிறது. இரட்சிப்பின் கவிதை மொழியைக் காணுங்கள்:

வெறுங்கையாய் வந்தஎன்னை
அன்புடனே ஏற்றிடுவீர்
குறுக்கையினைப் பற்றிடவே
ஆவலுடன் ஓடிவந்தேன்!
நிருவாணியாய் அலைந்தஎன்னை
நீதிகொண்டு உடுத்துவிப்பீர்!

கிருபையினைப் பொழிந்திடுவீர்
உதவிடுவார் எவருமில்லை
உருண்டோடும் நீரூற்றைத்
தேடித்திரிந்த பறவைநானே
குருதிகொண்டு கழுவிடுவீர்
பரமன்இயேசு, பிழைத்திடுவேன்!

- அகஸ்டஸ் ஆ. டாப்லேடி

**3:28 ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்** என்று வலியுறுத்திக் கூறி மேன்மை பாராட்டுவதற்கு எவ்விதக் காரணமுமில்லை என்று பவுல் கூறுகிறார்.

**3:29** நற்செய்தி தேவனை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறது? அவர் **யூதருக்கு மாத்திரமா தேவன்**? அல்ல, **புறவினத்தவருக்கும் தேவனாக** இருக்கிறார். மனுக்குலத்தின் ஓரினத்திற்காகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரிக்கவில்லை.

அனைத்துலகப் பாவிகளுக்காகவும் அவர் மரணம் அடைந்தார். யூதராயினும் புறவினத்தவராயினும் எவரொருவர் நாடுகிறாரோ அவரை இந்த இலவச இரட்சிப்பு சென்றடையும்.

**3:30** ஒருவர் யூதருக்கென்றும் மற்றொருவர் புறவினத்தவருக்கு என்றும் இரண்டு தேவர்கள் இல்லை. மனுக்குலம் அனைத்திற்கும் **தேவன் ஒருவரே**, இரட்சிப்பின் வழியும் ஒன்றே. **விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும்** அவர் நீதிமான்களாக்குகிறார். "ஆல்", "மூலம்"[11] என்று வெவ்வேறான இரு இடைச் சொற்களைப் பயன்படுத்தியிருப்பதன் காரணம் எதுவாயிருப்பினும், நீதிமானாக்கப் பயன்படுத்தப்பட்ட காரணப்பொருளில் எவ்வித வேறுபாடும் இல்லை, இரண்டிலும் **விசுவாசமே** காரணப் பொருளாகும்.

**3:31** இன்னும் ஒரு முக்கியமான கேள்வி பதில் கூறப்படாமல் எஞ்சி நிற்கிறது. விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு உண்டாகிறது என்றும், அது நியாயப்பிரமாணத்தினாலே உண்டாகிறதில்லை என்றும் விளக்கிக் கூறினோம். அவ்வாறாயின் நியாயப்பிரமாணம் பயனற்றதா? அது புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்றா? நியாயப்பிரமாணத்திற்கு இடமில்லாதபடி, அதனை நற்செய்தி புறம்பே அடித்துச்சென்றுவிட்டதா? **அப்படியல்ல; நியாயப்பிரமாணத்தை** நற்செய்தியானது **நிலைநிறுத்துகிறது.** எவ்வாறெனில்:

பரிபூரண கீழ்ப்படிதலை நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கிறது. நியாயப்பிரமாணம் மீறப்படுவதற்கான தண்டனை கண்டிப்பாகக் கொடுக்கப்பட வேண்டும். அந்த தண்டனை மரணமே. நியாயப்பிரமாணத்தை மீறியவன் அத்தண்டனையைச் செலுத்துவானெனில், நித்தியமாக அவன் இழந்துபோனவனாவான். மீறப்பட்ட பிரமாணத்திற்காகக் கிறிஸ்து மரித்து தண்டனையைச் செலுத்தித் தீர்த்தார் என்பதை நற்செய்தி விளக்குகிறது. அது ஏதோ அசட்டை செய்யவேண்டிய ஒன்று என்று அவர் விட்டுவிடவில்லை. அவர் கடனை முற்றிலுமாகச் செலுத்தித் தீர்த்துவிட்டார். நியாயப்பிரமாணத்தை மீறிய எவனொருவனும், தனக்குப் பதிலாக இயேசு கிறிஸ்து அதற்குரிய தண்டனையைச் செலுத்தித் தீர்த்து விட்டார் என்னும் உண்மையை சுதந்தரித்துக் கொள்ளலாம். நியாயப்பிரமாணத்தின் கோரிக்கை முழுவதுமாக நிறைவேற்றப்படவேண்டும் என்றும், அது நிறைவேறிவிட்டது என்றும் கூறி இரட்சிப்பின் நற்செய்தி அப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறது.

### உ. நற்செய்திக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள இணக்கம் (4:1-25).

"*பழைய ஏற்பாட்டில் கற்பிக்கப்பட்டுள்ள உபதேசங்களோடு நற்செய்தி உடன்பாடு உடையதாக இருக்கிறதா?*" என்னும் முக்கியமான ஐந்தாவது கேள்வியைப் பவுல் தனது விவாதப்பொருளாக இங்கு எடுத்துக்கொள்கிறார். இக்கேள்விக்கான பதில் யூதர்களைப் பொருத்தமட்டில் மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே, பழைய ஏற்பாட்டு உபதேசங்களுக்கும், புதிய ஏற்பாட்டு நற்செய்திக்கும் இடையே நிறைவான இணக்கம் உண்டாயிருக்கிறது என்பதை இங்கு அப்போஸ்தலன் தெளிவாக விளக்குகிறார். நீதிமானாக்கப்படுதல் எக்காலத்திலும் விசுவாசத்தையே சார்ந்திருக்கிறது.

**4:1** இஸ்ரவேல் வரலாற்றில் புகழ்பெற்ற மனிதர்கள் இருவரை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு தனது விவாதப் பொருளைப் பவுல் மெய்ப்பிக்கிறார். அவர்கள் ஆபிரகாமும் தாவீதுமே ஆவார்கள். இவ்விருவரோடு பெரிதான உடன்படிக்கைகளை தேவன் ஏற்படுத்தியிருந்தார். அவ்விருவரில் ஒருவன் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவன். மற்றவனோ அது கொடுக்கப்பட்டு, பல நூற்றாண்டுகள் சென்றபின் வாழ்ந்தவன். ஒருவன் தான் விருத்தசேதனம் அடைவதற்கு முன்னமே நீதிமானாக்கப்பட்டவன். இரண்டாவது சொல்லப்பட்டவன் விருத்தசேதனம் பெற்ற பின்னரே நீதிமானாக்கப்பட்டான்.

யூத மக்கள் யாவராலும் முற்பிதா என்று அழைக்கப்பட்ட **ஆபிரகாமைக்** குறித்து முதலாவது காண்போம். மாம்சத்தின்படி[12] அவன் அடைந்த அனுபவம் யாது? ஒரு மனிதன் நீதிமானாக்கப்படுவது எவ்வாறு என்பதைப்பற்றி அவன் அறிந்து கொண்டது என்ன?

**4:2 ஆபிரகாம் கிருபைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில்**, அவன் மேன்மை பாராட்டுவதற்குக் காரணங்கள் இருந்தன என்றே கூறவேண்டும். அவ்வாறாயின் நீதிமான் என்னும் தகுதிநிலையை தன்னுடைய கிரியைகளால் அவன் சம்பாதித்துக் கொண்டதற்காக **தேவனுக்கு முன்பாக** அவன் தானே தன்னுடைய முதுகில் தட்டிக்கொடுத்துக்கொள்ளலாம். ஆயின் அது முற்றிலும் கூடாததாகக் காணப்படுகிறது. தேவனுக்கு

முன்பாக மேன்மைபாராட்டுவதற்கு எவருக்கும் இடமில்லை (எபே. 2:9). தன்னுடைய செயல்களினால் தான் நீதிமானாக்கப்பட்டவன் என்று ஆபிரகாம் சொல்லிப் பெருமைப்படுவதற்குத் திருமறையில் எவ்விதச் சான்றும் இல்லை அல்லவா.

"ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டான் என்று யாக்கோபு 2:21 - ஆம் வசனம் கூறுகிறதல்லவா?" என்று யாரேனும் ஒருவர் நம்மிடம் வாதாடலாம். ஆம், அது அவ்வாறுதான் கூறுகிறது. ஆனால் அது முற்றிலும் வேறு ஒரு பொருளோடு எழுதப்பட்டுள்ளது. எண்ணிலடங்காத சந்ததியை அவன் பெறுவான் என்ற வாக்கை அடைந்தபோது அவன் அதனை விசுவாசித்தான். அத்தருணத்திலேயே அவன் நீதிமானாக்கப்பட்டான் என்று ஆதியாகமம் 15:6 கூறுகிறது. அந்நிகழ்ச்சி நடந்து 20 அல்லது 30 ஆண்டுகளுக்குப் பின்னர் தனது குமாரனாகிய ஈசாக்கை தேவனுக்குத் தகனபலியாக ஒப்புக்கொடுக்கத் தொடங்கின கிரியையின்போது அவன் நீதிமானாக்கப்பட்டதாக, அதாவது நீதிமான் என்று மெய்ப்பிக்கப்பட்டதாக யாக்கோபு எழுதிய மடலில் காண்கிறோம். அவனுடைய கீழ்ப்படிதலாகிய நடக்கை, அவனது விசுவாசத்தின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியது. விசுவாசத்தினாலேயே அவன் நீதிமானாக்கப்பட்டான் என்ற சத்தியத்தின் வெளிப்படையான செயல்முறை நிரூபணமாக அந்நிகழ்ச்சி விளங்கியது.

**4:3** ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டதைக் குறித்து **வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது?** "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" என்றே திருமறை கூறுகிறது (ஆதி. 15:6). ஆபிரகாமுக்கு தேவன் வெளிப்பட்டு, அவன் எண்ணிலடங்கா சந்ததியைப் பெறுவான் என்று வாக்குறுதி கொடுத்தார். முற்பிதாவாகிய ஆபிரகாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டான். தேவனோ அதை அவனுக்கு **நீதியாக** எண்ணினார். அதாவது ஆபிரகாம் தன் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டான். அது அந்த அளவிற்கு எளியதே. கிரியைகளுக்கு அதில் எவ்வித இடமுமில்லை. அங்கே கிரியைகளைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவுமில்லை.

**4:4** இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்து, கிரியைகளுக்கும் விசுவாசத்திற்கும் உள்ள வேறுபாட்டினை எடுத்துரைக்கும் வியத்தகு அறிக்கையை நம்முன் இவையாவும் கொண்டுவருகின்றன.

இவ்வாறு எண்ணிப்பாருங்கள்: ஒருவன் தன்னுடைய வாழ்க்கையின் தேவைகளுக்காக வேலை **(கிரியை)** செய்கிறான். அவன் தன்னுடைய **கூலியைப்** பெறுவதற்கு உரிமை பெற்றிருக்கிறான். அதனை அவன் சம்பாதித்திருக்கிறான். அவன் தன்னுடைய கூலியைப் பெறும்போது தன் எஜமானனுக்கு முன்னர் பணிந்து குனிந்து அளவு கடந்த மரியாதை செலுத்த வேண்டியதில்லை. அந்தக் கூலியைப் பெறுவதற்குத் தான் தகுதியுடையவன் அல்லன் என்றோ, தனது எஜமானன் பாராட்டின தயவிற்காக நன்றி என்றோ அவன் கூறத்தேவையில்லை. ஆம், அதற்காக அவன் நன்றி கூறக் கடமைப்பட்டவன் அல்லன். தான் செலவிட்ட நேரத்திற்காகவும், உழைப்பிற்காகவும் திரும்பக் கிடைத்த ஈடு என்று கருதி அப்பணத்தைத் தனது பைக்குள் வைத்துக்கொண்டு வீடு திரும்புகிறான்.

ஆனால் நீதிமானாக்கப்படுதலின் செயல்முறை மேற்கூறியதிலிருந்து முழுவதும் வேறுபட்டதாயிருக்கிறது.

**4:5 ஒருவன்** நீதிமானாக்கப்படுவதற்கு முன்னால், அதற்காக எந்தச் **செயலையும் செய்யவில்லை** என்பது அதிர்ச்சியளிக்கக்கூடியதாகத் தோன்றுகிறது. அவன் தனக்குத்தானே இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியும் என்னும் எண்ணத்தை அடியோடு விட்டுவிடுகிறான். தன்னிடத்தில் தனிப்பட்ட மேன்மையோ சிறப்போ இல்லையென்று அவன் ஒப்புக்கொள்கிறான். தன்னால் செய்ய வல்ல மிகச்சிறந்த உழைப்புகள் யாவும், தேவனுடைய நீதியான கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதவை என்பதை அவன் ஒப்புக்கொள்கிறான்.

அதற்கு மாறாக, ***துன்மார்க்கரை நீதிமானாக்குகிறவரிடத்தில் அவன் விசுவாசம் வைக்கிறான்***. அவன் கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டு நம்பிக்கை வைக்கிறான். தேவனுடைய வார்த்தைகளை எவ்வித மாற்றமும் இன்றி அவ்வாறாகவே ஏற்றுக்கொள்கிறான். நாம் ஏற்கனவே விளக்கமாக அறிந்திருக்கிறபடி இதில் எந்தவொரு மேன்மைபாராட்டக் கூடிய கிரியையும் இல்லை. அவன் கொண்ட விசுவாசத்திலும் எந்த மேன்மையும் இல்லை; ஆனால் அவனுடைய *விசுவாசத்தின் கருப்பொருளிலேயே மேன்மை இருக்கிறது.*

***துன்மார்க்கரை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறான்*** என்று சொல்லப்

பட்டிருப்பதைச் சற்று உற்றுநோக்குங்கள். தான் மற்றவர்களைப் போன்று கெட்டவனில்லை என்றும், கொடுக்கப்பட்ட பொற்கட்டளையை நிறைவேற்றுவதற்காகப் பெருமுயற்சி செய்ததாகவும் அவன் முறையிடுகிறதில்லை. அவன் ஒரு துன்மார்க்கனாகவே வருகிறான். தேவனுடைய கிருபையினிடத்தில் தன்னை அர்ப்பணித்தவனாகவே அவன் வருகிறான்.

இதனுடைய விளைவு யாது? **அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படுகிறது.** அவன் கிரியை செய்யாமல் அதற்குப் பதிலாக நம்பிக்கை கொண்டவனாக வந்த காரணத்தினால், அவனுடைய கணக்கில் **நீதியை** தேவன் வரவு வைக்கிறார். உயிர்தெழுந்த கிறிஸ்துவின் மேன்மையின் மூலமாக, தேவன் அவனை நீதியினால் அணிவிக்கிறார். இவ்வண்ணம் அவன் தேவனுக்கும் விண்ணுலகிற்கும் தகுதியுடையவனாக அவரால் மாற்றம் அடைகிறான். அதுமுதல் அவனை தேவன் கிறிஸ்துவுக்குள் காண்கிறார், அதன் அடிப்படையில் அவனை ஏற்றுக்கொள்கிறார்.

இவற்றை நாம் தொகுத்து உரைப்போமாயின், துன்மார்க்கரே நீதிமானாக்கப்படக் கூடியவர்கள் ஆவர் - அது நல்லவர்களுக்குத் தரப்படுவது அன்று. அது கிருபையேயாகும் - கடனன்று. அது விசுவாசத்தினால் பெறக் கூடியதாகும் - கிரியையினால் பெறுவதன்று.

**4:6** தனது ஆய்வினை மெய்ப்பிக்க இப் பொழுது பவுல், **தாவீதை** நோக்கித் தன் கருத்தைத் திருப்புகிறார். இந்த வசனம் **அந்தப்படி** என்று தொடங்குகிறது. தாவீதின் அனுபவம் ஆபிரகாமின் அனுபவத்தைப் போன்றது என்பதையே இவ்வார்த்தை சுட்டிக் காட்டுகிறது. ஒருவனுடைய சொந்தக் **கிரியை ஏதும் இல்லாமல்** தேவன் எந்தப் பாவியை நீதிமானாக எண்ணுகிறாரோ அவனே களிகூரும் மனிதன் என்று இஸ்ரவேலின் இனிய பாடகன் கூறியுள்ளான். மிகுதியான சொற்களைக்கொண்டு தாவீது இதனைக் கூறவில்லையெனினும் சங்கீதம் 32:1, 2 ஆகிய வசனங்களை மேற்கோள் காட்டி இவ்வுண்மையை அப்போஸ்தலன் வெளிக்கொணர்கிறார்.

**4:7 எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்.**

**4:8 எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான்.**

இந்த வசனங்களில் பவுல் எதனைக் காண்கிறார்? முதலாவதாக, கிரியைகளைக் குறித்து தாவீது அங்கு ஒன்றும் சொல்லவில்லை என்பதைக் கண்டார். பாவமன்னிப்பானது மனிதனது முயற்சியினால் பெறுவதன்று என்றும் தேவனுடைய கிருபையைச் சார்ந்தது என்றும் குறித்துக் கொண்டார். இரண்டாவதாக, எவனுடைய பாவத்தைத் தேவன் **எண்ணாதிருக்கிறாரோ,** அவன் அவருக்கு முன்பாக நீதிமான் என்னும் தகுநிலையை அடைகிறான் என்பதையும் அவர் அறிந்துகொண்டார். இறுதியாக, துன்மார்க்கரை தேவன் நீதிமானாக்குகிறதையும் கண்டார். விபசாரம் மற்றும் கொலை ஆகிய செயல்களைச் செய்து தாவீது குற்றமுடையவனாயிருந்தான். ஆயினும், இவ்வசனங்களில் அவன் நிறைவானதும் இலவசமானதுமான மன்னிப்பின் இனிமையைச் சுவைத்தான் என்பதையும் பவுல் அறிந்து கொண்டார்.

**4:9** ஆனால், விருத்தசேதனம் பெற்றவர்கள் மட்டுமே நீதிமான்களாக்கப்படக் கூடியவர்கள் என்ற எண்ணத்தினால் ஆட்கொள்ளப்பட்டு, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாகிய தங்களுக்கு, தேவனுடைய நீதிமான்களாக்கப் படுதல் என்னும் செயலில் தனி இடம் உண்டு என்னும் சிந்தனை யூதர்களுடைய உள்ளத்தில் இன்னும் ஒளிந்துகொண்டிருந்தது என்றே தோன்றுகிறது. ஆனால் அப்படியல்லவென்று காண்பிக்க அப்போஸ்தலன் ஆபிரகாமின் அனுபவத்தைச் சுட்டிக்காட்டுகிறார். "விசுவாசிக்கிற யூதர்களுக்கு மட்டுமே நீதியானது கணக்கிடப்படுமா அல்லது விசுவாசிக்கிற புறவினத்தவருக்கும் அது கணக்கிடப்படுமா?" என்னும் கேள்வியை அவர் தொடுக்கிறார். ஆபிரகாமை எடுத்துக்காட்டாகக் கூறியிருப்பதால் யூதர்கள் மட்டுமே நீதியுடையோராய்க் கணக்கிடப்படுவர் என்று எண்ணத் தோன்றுகிறது.

**4:10** நம்மில் பலர் ஒருபோதும் கவனிக்காமல் விட்டிருக்கக்கூடிய ஒரு வரலாற்று உண்மையை பவுல் இங்கு பற்றிக்கொள்கிறதை நாம் காண்கிறோம். ஆபிரகாம் **விருத்தசேதனம்** அடைவதற்கு முன்னரே (ஆதி. 17:24), நீதிமானாக்கப்பட்டான் (ஆதி. 15:6). **விருத்தசேதனம் இல்லாதவனாயிருந்தபோதே** இஸ்ரவேல் நாட்டின் தகப்பன் நீதிமானாக்கப்படக் கூடுமானால், "விருத்தசேதனம் அடையாத பிற புறவினத்தவர் ஏன் நீதிமான்களாக்கப்பட முடியாது?" என்னும் கேள்வி எழுகிறது. உண்மையான பொருளில் புறவினத்தவனாக இருந்த நிலையிலேயே ஆபிரகாம் நீதி

மானாக்கப்பட்டான். ஆகவே, விருத்தசேதன மில்லாமல் மற்ற புறவினத்தவர்களும் நீதிமான் களாக ஆக்கப்பட முடியும் என்னும் உண்மை பளிச்சென்று புலப்படுகிறது. இதனை இங்கு பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

**4:11** ஆகவே, ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்ட தற்கு அவன் பெற்ற **விருத்தசேதனம்** காரணம் அல்லவென்பது புலனாகிறது. தன்னுடைய விசு வாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டதற்கு அவன் மாம்சத்திலே பெற்ற வெளிப்படையான **அடை யாளமாகவே** அது விளங்கிற்று. விருத்தசேத மானது தேவனுக்கும் இஸ்ரவேல் நாட்டிற்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் வெளி யரங்கமான சான்று என்பதே அதனுடைய அடிப் படைப் பொருளாகும். ஆனால், ஆபிரகாம் விசு வாசத்தினாலே தேவனால் நீதிமானாக எண்ணப் பட்டதைக் குறிக்கும்படி, அதனுடைய பொருள் இங்கே விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

விருத்தசேதனம் *அடையாளமாக* மட்டுமின்றி *முத்திரையாகவும்* கொடுக்கப்பட்டது. **விருத்த சேதனம் இல்லாத காலத்தில் அவன் விசுவாசத் தினாலே அடைந்த நீதிக்கு அதை முத்திரை யாகப்** பெற்றான். அடையாளம் எதைக் குறிப்ப தற்காகக் கொடுக்கப்பட்டதோ அது இன்னும் அனுபவமாக இருக்கிறது என்பதை நினைவூட்டும் சின்னமாக விளங்குகிறது. முத்திரையானது எதைக் குறிக்கிறதோ அதை உண்மையென உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி, சான்று கூறுகிறது அல்லது அதற்கு உத்திரவாதம் அளிக்கிறது. தேவன் ஆபிரகாமை அவனுடைய விசுவாசத்தின் காரணமாக நீதிமானாக எண்ணி நடத்தியதை விருத்தசேதனம் அவனுக்கு உறுதிப்படுத்தியது.

ஆபிரகாம் **விசுவாசத்தினால் அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனம்** விளங் கிற்று. அவனுடைய விசுவாசம் நீதியாய் விளங் கிற்று என்றோ விசுவாசத்தினால் அவன் நீதியை அடைந்தான் என்றோ, இதனை இருவகைகளில் பொருள் கொள்ளலாம். இரண்டாவதாகக் கூறப் பட்டுள்ளதே சரியான பொருளாகத் தோன்று கிறது. அதாவது **நீதிக்கு முத்திரையாக** விளங்கிய **விருத்தசேதனம்** அவனுடைய **விசுவாசத்தின்** உரிமையாக இருக்கிறது; அல் லது **நீதிக்கு முத்திரையாக** விளங்கிய **விருத்த தேசனம் விசுவாசத்தின்** அடிப்படையில் அவன் பெற்ற ஒன்று என்பதே.

விருத்தசேதனம் பெறுவதற்கு முன்னரே ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டதால் **விருத்தசேத னம் இல்லாத மற்றவர்களுக்கு அவன் தகப்ப னாக** விளங்குகிறான். அதாவது, விசுவாசிக்கிற புறவினத்தவருக்கு அவன் தகப்பனாகிறான். அவர்களும் அவனைப் போன்றே விசுவாசத் தினால் நீதிமான்களாக்கப்பட முடியும்.

விசுவாசிக்கிற புறவினத்தவருக்கு ஆபிரகாம் தகப்பனாக விளங்குகிறான் என்று சொல்லும் போது, அவர்கள் அவனுடைய வழித்தோன்றல் என்று அங்கே சொல்லப்படவில்லை. அவனு டைய விசுவாசத்தின் மாதிரியை அவர்கள் பின் பற்றுவதினாலே மட்டுமே அவர்கள் அவனுடைய பிள்ளைகள் என்று எளிய முறையில் இங்கு உண்மை சொல்லப்பட்டிருக்கிறது. தங்களுடைய முன் மாதிரியாகவும் எடுத்துக்காட்டாகவும் அவ னைப் பின்பற்றுவதினாலே அவர்கள் அவனு டைய பிள்ளைகளாகிறார்கள். விசுவாசிக்கிற புற வினத்தவர் தேவனுடைய இஸ்ரவேலராகின்றனர் என்றும் இப்பகுதி போதிப்பதில்லை. இயேசு கிறிஸ்துவை மேசியாவாக நம்பி, அவரைத் தங் களது கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள் கிற யூதர்களே தேவனுடைய இஸ்ரவேலர் ஆவார்கள்.

**4:12** மற்றொரு காரணத்திற்காகவும் ஆபிர காம் **விருத்தசேதனத்தைப்** பெற்றான் - விருத்த சேதனத்தை அடைந்திருப்பதோடு, அவன் **விருத்த சேதனம் இல்லாத காலத்தில் அடைந்த விசு வாசப்** பாதையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிறவர்களாயிருக்கும் யூதர்களின் **தகப்பனா யிருக்கும்படிக்கும்** அதனைப் பெற்றான்.

ஆபிரகாமின் சந்ததி என்பதற்கும் ஆபிர காமின் பிள்ளைகள் என்பதற்கும் ஒரு வேற்றுமை உண்டு. "நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்" என்று பரிசேயர்களைப் பார்த்துக் கூறிய இயேசு கிறிஸ்து தொடர்ந்து, "நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிர காமின் கிரியைகளைச் செய்வீர்களே" என்றும் கூறினார் (யோவான் 8:37, 39). எனவே சரீரத்தில் பெறும் விருத்தசேதனம் மேன்மையாகக் கருதப் படுவதற்கு ஏற்றதன்று என்று இங்கே பவுல் வலி யுறுத்துகிறார். ஜீவனுள்ள தேவனிடத்தில் **விசு வாசம்** கொண்டிருத்தல் அவசியமாகும். **விருத்த சேதனம் பெற்றவர்களுக்குள்** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்புகிறவர்களே தேவனு டைய உண்மையான இஸ்ரவேலர் ஆவர்.

மேற்கூறியவற்றைத் தொகுத்துரைப்போ மாயின், ஆபிரகாம் தேவனை விசுவாசித்து வாழ்ந்த காலகட்டத்தில், ஒரு சமயம் விசுவாசத்

தோடு விருத்தசேதனம் இல்லாத நிலையும், மற்றொரு சமயம் அந்த விசுவாசத்தோடு விருத்த சேதனம் பெற்ற நிலையும் இருந்தன. இந்தச் சத்தியத்தின் அடிப்படையில் விசுவாசிக்கிற புற வினத்தவரும், விசுவாசிக்கிற யூதரும் ஆபிர காமைத் தங்களுடைய தகப்பன் என்றும், அவ னோடு தங்களை இணைத்துக் கொண்டவர் களாக, தாங்கள் அவனுடைய பிள்ளைகள் என்றும் உரிமைகோரத் தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதைப் பவுல் தனது கூரிய கண்கள்கொண்டு நோக்குகிறார்.

**4:13** "தருக்க ரீதியாகவும், வேதத்தின் அடிப்படை யிலும் எதிர்த்து வாதிடக்கூடிய ஒவ்வொருவரை யும் முறியடிக்க, பவுல் தன் விவாதத்தை அதன் கடுமை குறையாமல் தொடர்கிறார்."[13] ஆசிர் வாதம் நியாயப்பிரமாணத்தின் மூலமாகவே வந் தது; ஆகவே, நியாயப்பிரமாணத்தை அறியாத புறவினத்தவர் சபிக்கப்பட்டவர்கள் என்று கூறும் எதிர்வாதத்திற்கு அப்போஸ்தலன் இப்பொழுது பதில் தர வேண்டியவராயிருக்கிறார் (யோவான் 7:49 - ஐக் காண்க).

**உலகத்தைச் சுதந்தரிப்பான்** என்னும் வாக்குறுதியை **ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும்** தேவன் அளித்தபோது, சில சட்டதிட்டங்களை அவர்கள் பின்பற்றவேண்டும் என்னும் நிபந்தனையோடு அதனை அவர் தர வில்லை. (வாக்குறுதி தரப்பட்டு 430 ஆண்டுகள் வரை நியாயப்பிரமாணம் தரப்படவில்லை - கலா. 3:17). அவ்**வாக்குறுதி** கிருபையினாலே எந்த நிபந்தனையுமின்றி அளிக்கப்பட்ட ஒன்றாகும் - எவ்வித **விசுவாசத்தினாலே** இன்றைய நாட் களில் தேவனுடைய **நீதியை** நாம் பெறுகி றோமோ அதே விசுவாசத்தினாலே அந்நாளில் அந்த வாக்குறுதியும் பெறக்கூடியதாயிருந்தது.

விசுவாசிக்கின்ற புறவினத்தவருக்கும் அது போலவே விசுவாசிக்கிற யூதர்களுக்கும் அவன் தகப்பனாயிருக்கும்படி உலகத்தின் சுதந்தர வாளி என்று கூறப்பட்டான் (4:11,12). யூத மக்க ளுக்கு மட்டுமின்றி, பற்பல இனத்தினருக்கும் தகப்பனாயிருக்கும்படி அவன் அவ்வாறு அழைக் கப்பட்டான் (4:17,18). ஆபிரகாமின் சந்ததியாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சர்வலோகப் பேரரசின் செங்கோலை ஏந்தியவராக அரசர் களுக்கெல்லாம் அரசராகவும், கர்த்தர்களுக் கெல்லாம் கர்த்தராகவும் ஆளுகை செய்யும் காலத்தில் இந்த வாக்குறுதி அதனுடைய முழுப் பொருளில் நிறைவேறும்.

**4:14** தேவனுடைய ஆசிர்வாதத்தைத் தேடு கிறவர்கள், குறிப்பாக நீதிமானாக்கப்படுதல் என் னும் ஆசிர்வாதத்தைத் தேடுகிறவர், நியாயப் பிரமாணத்தின் மூலம் அதனைப் பெறுவார்களெ னில், **விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத் தத்தமும் அவமாகும்.** விசுவாசம் என்னும் கோட் பாடானது, நியாயப்பிரமாணத்திற்கு முற்றிலும் எதிராக இருப்பதால் விசுவாசம் புறக்கணிக்கப்பட் டுப்போம். **விசுவாசம்** *நம்பிக்கையைச்* சார்ந்த ஒரு விஷயமாகும். ஆனால் **நியாயப்பிரமாணமோ** *கிரியையைச்* சார்ந்த ஒன்றாகும். ஒருவராலும் நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளால் அடை யக்கூடியதாக வாக்குத்தத்தம் இருக்குமானால், அது பயனற்ற வாக்குத்தத்தமாகும்.

**4:15** ஆசிர்வாதத்தை அல்ல, **கோபாக்கினை யையே நியாயப்பிரமாணம்** உண்டாக்குகிறது. அதில் கூறப்பட்டுள்ள கட்டளைகளை எவ்விதக் குறைபாடும் இன்றி, தொடர்ந்து நிறைவேற்றக் கூடாமல் தோல்வி அடைகிறவர்களை அது குற் றப்படுத்துகிறது. ஒருவரும் அதனை நிறைவேற்ற இயலாதாகையால் நியாயப்பிரமணத்திற்குக் கீழானவர்கள் யாவரும் சாவுக்கென்று தீர்க்கப் பட்டிருக்கின்றனர். சாபத்தை அடையாதபடி நியா யப்பிரமாணத்திற்குக் கீழாக இருப்பது இயலாத நிலையாகும்.

ஆனால் **நியாயப்பிரமாணம் இல்லாவிட் டால் மீறுதலும் இல்லை**. அறிந்த **நியாயப்பிர மாணங்களை** மீறுவதே **மீறுதல்** என்னும் சொல் லின் பொருளாகும். எங்கே நியாயப்பிரமாணம் இல்லையோ அங்கே *பாவம்* இல்லையென்று பவுல் கூறவில்லை. ஒரு செயலுக்கு எதிராக எவ்விதச் சட்டமும் இல்லாமலேயே, அது இயல் பாகவே தவறானதாக இருக்கக்கூடும். ஆனால், ஒரு சாலையில் "வேகம் 20 கி. மீ" என்ற அறிவிப்புப் பலகை இருக்குமென்றால் அதை மீறி வேகமாகச் செல்வது அச்சட்டத்தை மீறுவதாகும்.

நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருப்பதாலே, தாங்கள் ஆசிர்வாதத்தைப் பெற்றிருப்பதாக யூதர் கள் எண்ணினார்கள். ஆனால் அவர்கள் சுதந் தரித்துக்கொண்டதெல்லாம் **மீறுதலே** ஆகும். **மீறுதலாகக்** காணத்தக்கதாக தேவன் நியாயப் பிரமாணத்தைக் கொடுத்தார். அல்லது பாவத்தை அதனுடைய முழு பாவத்தன்மையோடும் காணும் படி தேவன் பிரமாணத்தைக் கொடுத்தார் என்றும் கூறலாம். பாவம் நிறைந்த பழிகாரர் இரட்சிப்பை அடையத்தக்க வழியாக நியாயப்பிரமாணத்தை அவர் ஒருக்காலும் திட்டமிடவில்லை!

**4:16** நியாயப்பிரமாணமானது நீதிமானாக்குகிற வழியை உண்டுபண்ணாமல், தேவனுடைய கோபாக்கினையையே உண்டுபண்ணுவதால், **கிருபையினாலே விசுவாசத்தைக்**கொண்டு மனிதர்களை இரட்சிக்க அவர் முடிவு செய்தார். **விசுவாசம்** என்னும் எளிய செயலின் மூலமாக, துன்மார்க்கராகிய பாவிகளுக்கு அவர்களுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட நித்தியவாழ்வு என்னும் ஈவை இலவசமாகக் கொடுக்க அவர் முடிவுசெய்தார்.

இவ்வகையில், **எல்லாச் சந்ததியாருக்கும்** ஜீவனுள்ள **வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கிறது**. இங்கே இரண்டு சொற்களை நாம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம் "*நிச்சயம்*" மற்றும் "*எல்லா*". முதலாவதாக, **வாக்குத்தத்தமானது** நிச்சயமாயிருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நீதிமானாக்கப்படுதல் நியாயப்பிரமாணக் கிரியைகளைச் சார்ந்ததாக இருக்குமென்றால், ஒருவன் தான் செய்த நற்செயல்கள் போதுமான அளவும் சரியான முறையிலும் செய்யப்பட்டுள்ளனவா என்பதை அறியாத காரணத்தினால், அவன் நிச்சயமுடையவனாக இருக்க முடியாது. இரட்சிப்பைச் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணி அதைத் தேடுகிற எவனொருவனும் முழு நிச்சயத்தை அனுபவிக்க இயலாது. ஆனால், ஒருவன் விசுவாசிக்கிறதினாலே அவனுக்கு இரட்சிப்பு இலவசமான ஈவாக அருளப்படுகிறபோது, தேவனுடைய திருவார்த்தைகளின் அதிகாரத்தின் அடிப்படையில், தான் இரட்சிக்கப்பட்டிருப்பதைக் குறித்து நிச்சயமுடையவனாக அவனால் இருக்க முடியும்.

இரண்டாவதாக, **வாக்குத்தத்தமானது எல்லாச் சந்ததியாருக்கும் நிச்சயமாயிருக்க** வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் - **நியாயப்பிரமாணம்** கொடுக்கப்பட்ட யூதர்களுக்கு மட்டுமின்றி, **ஆபிரகாம்** செய்தது போன்று கர்த்தரிடத்தில் நம்பிக்கை கொண்ட எல்லாப் புறவினத்தவருக்கும் அந்த நிச்சயம் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். **நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாம்** - அதாவது, விசுவாசிக்கிற **எல்லா** யூதருக்கும் புறவினத்தவருக்கும் அவன் தகப்பனாவான்.

**4:17** மெய்யான விசுவாசிகள் அனைவருக்கும் ஆபிரகாம் தகப்பனாக இருப்பதை உறுதிசெய்யும் நோக்குடன் ஆதியாகமம் 17:5 - ஆம் வசனத்தை இடைப்பிறவரலாக (அந்த வேதபகுதியின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட வேறொரு செய்தி) பவுல் இங்கே புகுத்தியுள்ளார்: "**அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன்**." இவ்வுலகில் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக இஸ்ரவேலரைத் தேர்ந்தெடுத்தது, அவருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு மட்டுமே உரியன என்னும் பொருளைத் தருகிறதில்லை. எங்கெல்லாம் தேவன் விசுவாசத்தைக் கண்டாரோ அப்பொழுதெல்லாம் அந்த விசுவாசத்தைக் கனப்படுத்துவதையே அவர் நோக்கமாகக் கொண்டிருந்தார். இவ்வுண்மைகளை வெளிப்படுத்தும் வகையில் பவுல் பழைய ஏற்பாட்டிலிருந்து பல வசனங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து இங்கே மேற்கோள் காட்டுகிறார்.

**"தான் விசுவாசித்தவருக்கு முன்பாக"** என்னும் சொற்றொடர், "நம் எல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாம்..." என்று முந்தின வசனத்தில் சொல்லப்பட்டுள்ள சிந்தனையின் தொடர்ச்சியாக இருக்கிறது. இரண்டிற்கும் இடையே உள்ள தொடர்பு யாதெனில்: தான் (ஆபிரகாம்) விசுவாசித்தவருக்கு முன்பாக (தேவனுடைய பார்வையில்) நம் எல்லாருக்கும் தகப்பனாக ஆபிரகாம் திகழ்கிறான்; அவரே **மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாத** பொருட்களை ஏற்கனவே **இருக்கிறவைகளைப்போல** அழைக்கிறவருமானவர். தேவனுடைய குணவியல்புகளை அறிந்திட, தொடர்ந்து வருகிற சொற்றொடர்களை உற்று நோக்கினால் அவற்றைக் காண இயலும். **மரித்தோரை உயிர்ப்பிக்கிற** தேவன் - அதாவது, ஆபிரகாமும் சாராளும் சரீரத்தில் இன்னும் சாகவில்லை; ஆயினும் பிள்ளையற்றவர்களும், பிள்ளை பெறக்கூடாதபடி வயது முதிர்ந்தவர்களுமாக அவர்கள் இருந்தார்கள் (4:19 - ஆம் வசனத்தைக் காண்க). **இல்லாதவைகளை** ஏற்கனவே **இருக்கிறவைகளைப்போல் அழைக்கிற** தேவன் - அதாவது, பற்பல இனங்களைக் கொண்ட எண்ணிலடங்கா சந்ததி இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

**4:18** வாக்குறுதியானது தேவகிருபையினாலேயே தரப்பட்டது என்பதை நிச்சயப்படுத்தும் படிக்கும், அது எல்லாச் சந்ததியாருக்கும் நிச்சயமாய் இருக்கும்படிக்கும் பவுல் முந்தைய வசனங்களில், ஆபிரகாமுக்கு நியாயப்பிரமாணத்தின் மூலமாக வாக்குறுதி கிடைக்கவில்லையென்றும் அது விசுவாசத்தினாலேயே கிடைத்தது என்றும் வலியுறுத்தியுள்ளார். உயிர்த்தெழுதலின் தேவனிடத்தில் ஆபிரகாம் விசுவாசமாயிருந்தான் என்னும் உண்மையைக் குறித்துச் சிந்திக்க மேற்கூறிய வசனங்கள் நம்மை வழிநடத்துவது இயல்பே. விண்மீன்களைப்போலவும், மணல்

எண்ணிக்கை போலவும் ஆபிரகாமின் சந்ததி விளங்கும் என்று தேவன் அவனுக்கு வாக்குறுதி அளித்தார். மனித இயல்பின்படி கூறுவோமெனில், அவன் எவ்வித நம்பிக்கையும் அற்றவனாகவே இருந்தான். ஆனால் மனித இயல்பின்படி **நம்பு கிறதற்கு சற்றேனும் ஏதுவில்லாதிருந்தும்** ஆபிரகாம் **விசுவாசித்தான்**. அதாவது, ஆதியாக மம் 15:5 - இல் **"உன் சந்ததி இவ்வளவாயிருக் கும்"** என்று தேவன் அளித்த வாக்குறுதியின் படியே, **தான் அநேக ஜாதிகளுக்கு தகப்பனா கப்** போவதை அவன் **நம்பினான்**.

**4:19** பெரும் சந்ததியைப் பெறுவான் என்னும் வாக்குறுதி முதன் முறையாக ஆபிரகாமிற்குக் கிடைத்தபோது அவன் எழுபத்தைந்து நிரம்பின வனாயிருந்தான் (ஆதி. 12:2-4). அந்த வயதில் உடற்கூறுகளின் அமைப்பின்படி தந்தையா வதற்கு வலிமை உடையவனாக அவன் இருந் தான். அதன் பின்னரே, அவன் இஸ்மவேலைப் பெற்றதனால் இது வெளிப்படையாகத் தெரிகிறது (ஆதி. 16:1-11). ஆனால் ஆபிரகாமிற்கு நூறு வயதானபோது அந்த வாக்குறுதி புதுப்பிக்கப்பட் டது. அந்தச் சமயத்தைக் குறித்தே இங்கு பவுல் பேசுகிறார் (ஆதி. 17:15-21). அப்போது தேவனு டைய அற்புத வல்லமையினாலன்றி புதியதொரு வாழ்வினை உருவாக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால் தேவனோ அவனுக்கொரு மகனைத் தருவதாக வாக்களித்தார். தேவன் அருளிய வாக்கை ஆபிரகாம் நம்பினான்.

**தன் சரீரம்** ஏற்கனவே **செத்துப்போனதை யும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதை யும்** அவன் **எண்ணாதிருந்தான்**.[14] **விசுவாசத் திலே** அவன் **பலவீனமாயிருக்கவில்லை**. இந்நிலையானது மனிதனுடைய பேச்சின்படி முற்றிலும் நம்பிக்கையற்றதாகும். எனினும் ஆபிரகாம் விசுவாசம் உடையவனாயிருந்தான்.

**4:20** வாக்குத்தத்தமானது ஒருபோதும் நிறை வேறாது என்றே தோற்றமளித்தது. ஆயினும் அத்தோற்றம் அவனைத் தள்ளாடச் செய்ய வில்லை. தேவன் அதைச் *சொன்னார்*. ஆபிரகாம் அதை *விசுவாசித்தான்*. அத்துடன் அது *முடிவ டைந்துவிட்டது*. தேவன் பொய் சொல்ல முடி யும் என்பது ஆபிரகாமைப் பொருத்தமட்டில் நடை பெறாது. அது ஒன்றுதான் நடைபெறக்கூடாத செயலாகும். ஆபிரகாமின் விசுவாசமோ வலிமை பொருந்தினதாகவும் உயிரூட்டம் உடையதாக வும் இருந்தது. தேவன் வாக்களித்த செயல், நிகழக்கூடியவை அல்லது சாத்தியக்கூறுகள் ஆகியவற்றின் கொள்கைக்கு எதிரானதாக இருந்தபோதிலும் அவ்வெதிர்ப்பினை மாற்றி அச் செயலை நிகழச்செய்பவர் என்று ஆபிரகாம் நம்பி அவரைச் சார்ந்து இவ்வாறு தேவனை **மகிமைப் படுத்தினான்**.

**4:21** எவ்வாறு தேவன் தாம் கூறிய வாக்குறு தியை நிறைவேற்றுவார் என்பதை ஆபிரகாம் அறி யாதிருந்தான். ஆனால் அது முக்கியமற்றதாகும். தாம் **வாக்குத்தத்தம்பண்ணினதை** தேவன் **நிறைவேற்ற** முற்றிலும் **வல்லவராயிருக்கிறார்** என்று எல்லாவித உறுதியும் உடையவனாக அவன் தேவனை அறிந்திருந்தான். ஒருபுறம் அது மிகவும் வியத்தகு நம்பிக்கையாகவும், மறுபுறம் அவ்வாறு நம்புவது பகுத்தறிவுக்கு ஏற்ற செயலாகவும் விளங்குகிறது. ஏனெனில் அண்டசராசரத்தில் முழு நிச்சயமாய் நிகழக்கூடியது தேவனுடைய வார்த்தையேயாகும். அவ்வாறு ஆபிரகாம் நம்பு வதில் எவ்வித ஆபத்தும் இல்லை!

**4:22** தாம் கூறிய வார்த்தைகளை அவ்வண் ணமே ஏற்றுக்கொண்ட ஒரு மனிதனைக் கண்ட டைந்ததில் தேவன் களிகூர்ந்தார். எப்பொழுதும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவ்வாறு களிகூரு கிறவராகவே அவர் இருக்கிறார். ஆகையால் அதனை அவர் அவனுடைய கணக்கில் **நீதியாக** வரவு வைத்தார். ஒரு காலத்தில் பாவமும் குற்ற மும் வரவாக எழுதி வைக்கப்பட்டிருந்த அவனு டைய கணக்கில், இப்பொழுது தேவனுடைய பார்வையில் நீதியைத் தவிர வேறொன்றும் காணப் படவில்லை. ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து அவன் விடுவிக்கப்பட்டுவிட்டான். அவனுடைய விசு வாசத்தின் மூலம் அவன் தூய தேவனால் நீதி மானாக்கப்பட்டவனானான்.

**4:23** அவன் விசுவாசத்தினால் நீதிமானாக்கப் பட்ட வரலாற்றுச் செய்தி **அவனுக்காக மாத்திரம் எழுதப்பட்டதன்று**. அவனுக்காகவும் அது எழுதப் பட்டதாக ஒரு விதத்தில் தோன்றுகிறது - ஆக் கினையிலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக அவன் இப்பொழுது பெற்றிருக்கிற நிறைவான தகுதி நிலை ஆகியவற்றின் நிரந்தர மான ஆவணமாக அது விளங்குகிறது. ஆனால் அது **நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது**.

**4:24 நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின** தேவனை நாம் **விசுவாசிக்கும்**போது, நம்முடைய விசுவாசமும் நீதியாக எண்ணப்படும். ஒரே ஒரு வேற்றுமை இதுவே: செத்துப்போனதிற்கு தேவன் உயிரைக் *கொடுப்பார்* என்று ஆபிரகாம் விசுவாசித்தான்

(அதாவது, அவனுடைய பலவீனமான சரீரத்திற்கும், மலடாய் இருந்த சாராளின் கர்ப்பத்திற்கும் அவர் உயிரைத் தருவார் என்று அவன் விசுவாசித்தான்). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பி ஜீவனை தேவன் கொடுத்தார் என்று நாம் நாம் விசுவாசிக்கிறோம். இதனைத் திருவாளர் C. H. மெக்கின்டோஷ் விளக்கிக் கூறுகிறார்:

> ஒரு வாக்குறுதியின்மீது நம்பிக்கை வைக்கும் படியாக, ஆபிரகாம் அழைக்கப்பட்டான். நாமோ நிறைவேற்றி முடிவு பெற்ற நிகழ்ச்சி ஒன்றினை நம்பும்படியான நற்பேற்றைப் பெற்றிருக்கிறோம். இனி நடக்கவிருக்கிற ஒன்றை முன்னோக்கிப் பார்க்கும்படியாக அவன் அழைக்கப்பட்டான். மீட்பின் திட்டத்தை நிறைவேற்றி உயிர்த்தெழுந்து வானங்களில் உன்னதமானவரின் வலதுபுறத்தில் மகிமையடைந்த இரட்சகர் வீற்றிருக்கிறார் என்னும் மெய்ப்பொருளால் சான்று பெற்றதும் ஏற்கனவே நடந்து முடிந்ததுமான நிகழ்ச்சியைப் பின்னோக்கிப் பார்க்கும்படியாக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.[15]

4:25 கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்**. நம்முடைய பாவங்களுக்காக, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக என்னும் இரண்டு பொருளோடும் "ஆக" என்னும் இடைச்சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (கிரேக்கம்-dia). ஆயினும் இரண்டிலும் அச்சொல் வெவ்வெறு பொருளுடைதாயிருக்கிறது. **நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக** அவர் **எழுப்பப்பட்டும் இருக்கிறார்** - அதாவது நாம் நீதிமான்களாக்கப்படுவதற்குக் கிறிஸ்து ஆற்றிய செயலில் தேவன் முழு மனநிறைவு அடைந்திருக்கிறார். முதல் குறிப்பில் நம்முடைய பாவங்களே பிரச்சினைக்குக் காரணம். இரண்டாவது குறிப்பில் நாம் நீதிமான்களாக்கப்படுதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் விளைவேயாகும் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. கிறிஸ்து கல்லறையிலேயே தொடர்ந்து இருந்திருப்பாரென்றால், நீதிமான்களாக்கப்படுதல் என்னும் விளைவு உண்டாயிருக்காது. அவரது உயிர்த்தெழுதல், வேலை முடிவடைந்து விட்டது என்பதை எடுத்துரைக்கிறது. இரட்சகர் நிறைவேற்றி முடித்த பாவப்பரிகாரச் செயலில் தேவன் முடிவில்லா மனநிறைவு அடைந்திருக்கிறார் என்பதை அது வெளிப்படுத்துகிறது.

### ஊ. நடைமுறை வாழ்வில் நற்செய்தி தரும் பயன்கள் [5:1-11]

நீதிமானாக்கப்படுதலைக் குறித்து பவுல் தன்னுடைய வாதத்தை வலுப்படுத்தி முன்னேறிச் செல்லும் வகையில், "*நீதிமானாக்கப்படுவதால் ஒரு விசுவாசியின் வாழ்வினில் உண்டாகும் நன்மைகள் யாவை?*" என்னும் இன்னொரு கேள்வியை எடுத்துக்கொள்கிறார். நீதிமானாக்கப்படுதல் உண்மையாகவே தன் பணியினை ஆற்றுகின்றதா? என்றும் இதனைக் கேட்கலாம். ஆம் என்னும் உரத்த ஒலியே அவருடைய விடையாக இருக்கிறது. விசுவாசிகள் அடைந்திருக்கின்ற முக்கியமான ஏழு பயன்களை, தொடர்ச்சியாக அவர் விளக்கிக் கூறுகின்றார். கிறிஸ்துவின் மூலமாகவே இந்தப் பயன்கள் விசுவாசிகளைச் சென்றடைகின்றன. தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராக விளங்கும் அவர் மூலமாக தேவனுடைய ஈவுகள் மனிதனைச் சென்றடைகின்றன.

5:1 **விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற** நாம் யாவரும் பெற்று அனுபவிக்கிற முதலாவது நற்பயன், **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் பெற்றிருக்கிற சமாதானமே** ஆகும். போர் முடிவடைந்துவிட்டது. பகைமை ஒழிந்துவிட்டது. நம்முடைய ஆத்துமாக்களுக்கும் தேவனுக்கும் இடையே இருந்த பகைமைக்குக் காரணமாயிருந்த யாவும் கிறிஸ்துவின் அரிய செயலினால் நீக்கப்பட்டுவிட்டன. எதிரிகளாயிருந்த நாம் அற்புதமான கிருபையினால் தேவனுக்கு நண்பர்களாக மாற்றமடைந்து விட்டோம்.

5:2 மேலும், *சொல்லி முடியாத நற்பேற்றை தேவனிடத்திலிருந்து பெற்று* அனுபவிக்கத் தக்க வகையில் நெருங்கிப் **பிரவேசிக்கும்** சிலாக்கியத்தையும் நாம் பெற்றிருக்கிறோம். நாம் தேவனுடைய அன்புக்குரியவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். ஆகவே, அவருடைய சொந்த அன்பின் குமாரனைப் போன்றே தேவனுக்கு நெருக்கமானவர்களும் அன்பானவர்களுமாயிருக்கிறோம். பிதாவானவர் தமது பொற்செங்கோலை நம்மிடத்தில் நீட்டி, நம்மை அந்நியர்களாக அழைக்காமல், தமது குமாரர்களாக வரவேற்கிறார். தேவனுக்கு முன்பாக நம்முடைய நிலைமையின் ஒவ்வொரு அம்சத்தையும் **இந்தக் கிருபை** என்னும் நற்பேறுமிக்க தகுதிநிலை தழுவிக்கொள்கிறது; அதாவது, நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், அவரைப்போன்று நிறை

வானவர்களும் நிலையானவர்களுமான தகுதி நிலையைப் பெற்றிருக்கிறோம்.

அது போதாதென்று *நாம் மேலும்* **தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.** தேவனுடைய மகிமை நிறைந்த சுடரொளியை நோக்கிப் பார்க்கிறவர்களாக மட்டுமின்றி, நாமும் மகிமையோடு திகழ்கிறவர்களாகக் காணப்படும் நேரத்தை மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம் என்பதே இதன் பொருளாகும் (யோவான் 17:22; கொலோ. 3:4 ஆகிய வசனங்களைக் காண்க). அந்த நம்பிக்கையின் முழுச் சிறப்பையும் இவ்வுலகில் இருக்கும்போது நம்மால் புரிந்து கொள்ள முடியாது. நித்தியத்தின் எல்லாக் காலத்திலும் அதனுடைய வியத்தகு சிறப்பு நம்மை விட்டுக் கடந்து செல்வதுமில்லை.

**5:3,4** நீதிமான்களாக்கப்படுவதினால் நமக்குக் கிடைக்கின்ற நான்காவது நற்பயன், நாம் **உபத்திரவங்களிலும் மேன்மை பராட்டுகிறவர்களாக** விளங்குவதேயாகும் - தற்காலத்தில் அனுபவிக்கிற துக்கத்தில் அல்ல, பிற்காலத்தில் அடையவிருக்கிற மேன்மைகளைப் பாராட்டுகிறோம் (எபி. 12:11 - ஐக் காண்க). உபத்திரவத்தோடு மகிழ்ச்சியும் ஒரே நேரத்தில் ஒன்றுசேர்ந்து விளங்கும் என்னும் கூற்று, கிறிஸ்தவ விசுவாசத்தில் மிகவும் களிப்பூட்டக்கூடியதும் புரிந்துகொள்வதற்கு இயலாததுமான முரண்பாடான கூற்றுகளில் ஒன்றாகும். மகிழ்ச்சிக்கு எதிரானது உபத்திரவம் அல்ல; பாவமேயாகும். **உபத்திரவத்தினால்** உண்டாகும் துணை விளைவுகளில் ஒன்று **பொறுமை** அல்லது உறுதியுடைமையாகும். நாம் உபத்திரவம் அற்றவர்களாயிருப்போமெனில் நம்மில் **பொறுமையை** வளர்த்துக் கொள்ள முடியாது.

பொறுமையானது **பரீட்சையை** உண்டாக்கும் என்று பவுல் தொடர்ந்து விளக்கம் அளிக்கிறார். நமக்கு எதிராக உண்டாகும் உபத்திரவங்களைத் தாங்கிய வண்ணம் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அவரை நோக்கினவர்களாக நாம் செயல்படுவதை அவர் காண்கிறபோது, நம்முடைய உறுதிக்கு நற்சான்றின் முத்திரையை வழங்குகிறார். நாம் சோதிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறோம். நாம் இவ்விதமாக ஒப்புதலைப் பெறுகிறபோது **நம்பிக்கையால்** நிரப்பப்படுகிறோம். நம்முடைய பண்பை வளர்க்கும்படி, அவர் நம்முடைய வாழ்க்கையில் செயல் ஆற்றுகிறார் என்று நாம் அறிகிறோம். நமக்குள்ளாகத் தொடங்கப் பெற்ற நற்செயல் முடிவுவரை அவரால் நடந்தேறும் என்னும் நம்பிக்கையை இது தருகிறது (பிலி. 1:6).

**5:5 நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.** நாம் ஒன்றின் மீது நம்பிக்கையாயிருந்து அதை அடையாமல் போவோமென்றால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தும் அல்லது நாம் ஏமாற்றமடைவோம். ஆனால் நமது இரட்சிப்பைக் குறித்த நம்பிக்கை ஒருபோதும் நம்மை வெட்கப்படுத்தாது. நாம் ஒருக்காலும் ஏமாற்றம் அடையப் போவதில்லை. அல்லது ஒரு பொய்யான உறுதியைச் சார்ந்திருந்தோம் என்ற நிலைமை உண்டாகாது. இவ்வளவு உறுதியுடையவர்களாக நாம் எவ்வாறு இருக்க முடியும்? ஏனெனில், **நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. "தேவ அன்பு"** என்னும் சொற்றொடர் நாம் தேவனிடத்தில் கொண்டிருக்கும் அன்பையும், அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பையும் குறிக்கக் கூடியதாகும். இரண்டாவது சொல்லப்பட்ட பொருளையே அச்சொற்றொடர் இங்கு குறிக்கிறது. ஏனெனில் தேவன் நம்மீது கொண்டிருக்கும் அன்பைக் குறித்த பெரிதான சான்றுகள் சில, 6 முதல் 20 வரையிலான வசனங்களில் பட்டியலிட்டுக் கூறப்பட்டுள்ளன. நாம் விசுவாசித்தபோது நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய அன்பைக் குறித்து இங்கு சொல்லப்பட்டிருக்கிற நற்பேறுகளால் நம்முடைய இருதயங்களை வெள்ளப்பெருக்கென நிரப்புகிறார். இதன் காரணமாக, அவர் நம்மைப் பாதுகாத்து விண்ணுலகிற்குக் கொண்டு செல்வார் என்னும் உறுதி உடையவராய் இருக்கிறோம். பரிசுத்த ஆவியானவரை நீங்கள் பெற்றவுடன், தேவன் உங்களிடத்தில் அன்புகூருகிறார் என்று அறிவீர்கள். மனித இனத்தைப் பாதுகாக்க "யாரோ ஒருவர் மேலே இருக்கிறார்" என்னும் தெளிவற்றதும், மனித அறிவிற்குப் புலப்படாத உணர்ச்சியும் அல்ல அது. தனிநபராகிய உங்களிடத்தில் உண்மையாகவே தேவன் அன்புகூருகிறார் என்னும் உறுதியான நம்பிக்கையை உள்ளத்தின் ஆழத்தில் நீங்கள் பெற்று மகிழ்வீர்கள்.

**5:6** ஆறு முதல் இருபது வரையுள்ள வசனங்களில் சிறியதில் தொடங்கிப் பெரியதைச் சுட்டிக் காட்டி தனது தர்க்கத்தைப் பவுல் தொடங்குகிறார். பாவிகள் என்னும் நிலையில் நாம் தேவனுக்கு எதிரிகளாயிருக்கும்போது, அவர் நம்மீது அன்பு

கூர்ந்தாரெனில், நாம் அவருக்குச் சொந்தமான வர்களாக இருக்கும் இக்காலத்தில் அவர் நம் மைப் பாதுகாத்துக்கொள்வது அதிக நிச்சயமல் லவா? இ.்.து நீதிமான்களாக்கப்பட்டுள்ள நாம் அடைந்திருக்கிற, "*கிறிஸ்துவுக்குள் நித்திய பாதுகாப்பை நாம் பெற்றிருக்கிறோம்*" என்னும் ஐந்தாவது பயனைச் சுட்டிக்காட்டுகிறது. தான் எடுத்துக்கொண்ட ஆய்வுப்பொருளை விரித்துரைக்கும் பொருட்டு "அதிக" என்னும் சொல்லை ஐந்து முறை அப்போஸ்தலன் இப் பகுதியில் அறிமுகப்படுத்துகிறார்.

கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது "அதிக" நிச்சயமாமே (5:9).

அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது "அதிக" நிச்சயமாமே (5:10).

கிருபையினாலே வரும் ஈவும், அநேகர்மேல் "அதிகமாய்ப்" பெருகியிருக்கிறது (5:15).

ஜீவனை அடைந்து ஆள்வார்களென்பது "அதிக" நிச்சயமாமே (5:17).

பாவம் பெருகின இடத்தில் கிருபை "அதிக மாய்ப்" பெருகிற்று (5:20).

6, 7 மற்றும் 8 ஆகிய வசனங்களில் **நாம்** எத்த கையவர்களாக **இருந்தபோது** (பெலனற்றவர் களாக, அக்கிரமக்காரராக, பாவிகளாக) **கிறிஸ்து** நமக்காக **மரித்தார்** என்பதைப் பவுல் வலியுறுத்து கிறார். 9 மற்றும் 10 ஆகிய வசனங்களில் எத்த கையவர்களாக நாம் இருக்கிறோம் என்பதை அவர் வலியுறுத்துகிறார் (கிறிஸ்துவின் இரத்தத் தால் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம், அவருடைய மரணத்தினாலே ஒப்புரவாக்கப்பட்டி ருக்கிறோம்). அதன் பயனாக ஏற்பட்ட உறுதி, அதாவது நம்மை நமது இரட்சகர் என்ன செய்யப் போகிறார் என்பதும் இங்கே வலியுறுத்தப்பட்டுள் ளது (கோபாக்கினைக்கு நீங்கலாக நம்மை இரட் சிக்கிறார், அவருடைய ஜீவனாலே காக்கப்படு கிறோம்).

முதலாவதாக, நாம் வலுவிழந்தவர்களாக வும், உதவியற்றவர்களாகவும், **பெலனற்றவர் களாகவும்**, நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள இயலாதவர்களாகவும் இருந்தோம் என்று நினைவுபடுத்தப்பட்டிருக்கிறோம். ஆனால் முன் குறித்த காலத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்புவிக்கு வருகை புரிந்து மனிதர்களுக்காக மரித்தார். நல்ல மனிதர்களுக்காக அவர் மரணம் அடைந்தார் என்று சிலர் நினைத்துக்கொள் கிறார்கள், **அக்கிரமக்காரருக்காகவே** அவர் மரணம் அடைந்தார். தேவனிடத்தில் பரிந்துரை செய்யப்படுவதற்கு நம்மிடத்தில் ஏதொரு நற் குணமும் மேன்மையும் இல்லை. நாம் முற்றிலும் தகுதியற்றவர்களாயிருந்தோம். ஆனாலும் நாம் அந்நிலையில் இருந்தபோதே **கிறிஸ்து** நமக் காக **மரித்தார்**.

**5:7** இந்தத் தெய்வீக அன்பின் செயல் மனித னுடைய அனுபவத்தின்படி எல்லாவற்றிலும் தனிச்சிறப்பு வாய்ந்ததும் ஒப்புயர்வற்றதுமாயிருக் கிறது. சராசரி மனிதனுடைய வாழ்வு அவன வனுக்கு மதிப்பு மிக்கதாகும். தகுதியற்ற ஒரு வனுக்காக தன்னுயிரை ஒருவன் தூக்கியெறிந்து விட மாட்டான். எடுத்துக்காட்டாக ஒரு கொலை காரனுக்காகவோ, ஒழுக்கக்கேடு நிறைந்தவனுக் காகவோ, கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த வனுக்காகவோ அவன் சாக விரும்பமாட்டான். உண்மையில், நேர்மையானவனும், நம்பத்தகுந்த வனும், ஆனால் பரிவிரக்கமற்றவனுமான, ஒரு **"நீதிமானுக்காகவும்"** கூட அவன் **மரிப்பதற்குத்** தயங்குவான். இயல்பிற்கு அப்பாற்பட்ட ஒரு சூழ் நிலையில் ஒரு **"நல்லவனுக்காக"**, அதாவது நட்பும் அன்பும் பாராட்டுபவனும், நேசிக்கப்படத் தக்கவனுமாகிய ஒருவனுக்காக அவன் மரிக்கக் கூடும்.

**5:8 தேவனுடைய அன்பு** முழுவதுமாகத் தெய்வத்தன்மை வாய்ந்ததும், வேற்றுலகத்தைச் சேர்ந்ததுமாகும். **நாம் பாவிகளாயிருக்கையில்** நமக்காக மரணமடையும்படி அவர் தமது அன் பின் குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பி, அவர் **நம்மீது வைத்த** வியத்தகு **அன்பை** வெளிப்படுத் திக் காட்டினார். இவ்வாறு அவர் ஏன் செய்தார் என்னும் கேள்வியை நாம் எழுப்புவோமென்றால், அதற்கான விடையைக் காண அவருடைய சித் தத்தின் இறையாண்மையைத்தான் நோக்கிப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட அன்பைப் பெறுவ தற்கான எந்த நன்மையும் நம்மிடத்தில் இல்லை.

**5:9** இப்பொழுதோ புதிய வகையிலான தகுதி கள் நம்மிடத்தில் விளங்குகின்றன. குற்றமுள்ள பாவிகளாக நாம் இனி ஒருபோதும் கருதப்பட மாட் டோம். கல்வாரியில் இரட்சகர் சிந்திய விலை மதிக்க இயலா மேன்மை வாய்ந்த செங்குருதி யினாலே நீதிமான்களாக தேவனால் கணக்கிடப் பட்டுள்ளோம். பாவிகளாயிருந்த நாம் நீதிமான் களாக்கப்படுவதற்காக அவ்வளவு பெரிய விலையை அவர் செலுத்தியிருக்கிறார் என்றால், **கோபாக் கினைக்கு நீங்கலாக** நாம் கிறிஸ்துவாலே **இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா?**

அவருடைய சகாயத்திற்குள் நம்மைக் கொண்டு வருவதற்கு அவ்வளவு பெரிய விலையை ஏற் கனவே கொடுத்துத் தீர்த்தவர், இறுதியில் நாம் அழிந்து போகும்படி கைவிடுவது சாத்திய மாகுமா?

**கோபாக்கினைக்கு நீங்கலாக இரட்சிக்கப் படுவது** என்னும் சொற்றொடர் "கோபாக்கினை யிலிருந்து இரட்சிக்கப்படுவது" என்றோ, "கோபாக் கினையோடு உள்ள எல்லாவிதத் தொடர்பிலிருந் தும் விடுவிக்கப்படுவது" என்றோ பொருள்படும். இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள இடைச்சொல் (Gk. apo) இக்காலத்திலும் நித்தியத்திலும் கோபாக்கினையோடு உள்ள எல்லாவிதத் தொடர்பிலிருந்தும் விடுவிக்கப்படுவது என்னும் பொருளையே தருகிறது.

**5:10** நாம் எத்தகையவராயிருந்தோம் எத்த கையவராயிருக்கிறோம் என்று முன்னர் கூறிய பொருளை மீண்டும் சிந்தித்துப் பார்ப்போம். **நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம்** என்பதே அது. முன்னர் நாம் கர்த்தரிடத்தில் பகைமை கொண்டிருந்தோம். அவ்வாறு இருப்பது போதும் என்ற மனதோடு இருந்தோம். நம்முடைய மனப் போக்கின்படி வாழ்ந்த காலத்தில் அவரோடு ஒப்புரவாக வேண்டும் என்ற தேவையை உணரா திருந்தோம். அந்த நிலையைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம் - தேவனுடைய **சத்துருக்கள்**!

நம்முடைய போக்கிற்கு தேவன் இடங்கொடுக் காமல், தமது தூய கிருபையை வெளிக்காட்டும் படி அவர் நமது வாழ்க்கையில் குறுக்கிட்டார். நமக்குப் பதில் ஆளாக கிறிஸ்து மரித்ததால், தேவனிடத்தில் நாம் கொண்டிருந்த பகைமை நீங்கிற்று - அதாவது நமது பாவங்கள் நீங்கின. கிறிஸ்துவின் மீது நாம் கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் நாம் தேவனோடு **ஒப்புரவாக்கப் பட்டோம்**.

நம்முடன் ஒப்புரவாகுதலை இவ்வளவு பெரிய விலைகொடுத்து வாங்கிய தேவன், நம்மை எப்பொழுதாவது நழுவவிடுவது சாத்தியமாகுமா? **அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால்** - அவருடைய மரணம் முற்றிலும் வலுவிழந்த நிலைக்கு அடையாளமாயிருக்கிறது. அவ்வாறி ருக்க தேவனுடைய வலதுபுறத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்துவின் இப்போதைய முடிவில்லா வல்லமை மிக்க ஜீவன் நம்மை இறுதிவரை காக்காமல் விட்டுவிடுமோ? அவருடைய **மரணம்** நம்மை இரட்சிக்கும்படி அவ்வளவு வல்லமை உடைய தாக இருக்குமெனில், **அவருடைய ஜீவன்** நம் மைக் காத்துக்கொள்வதற்கு எவ்வளவு அதிக வல்லமையுடையதாக விளங்கும்!

**5:11** நாம் இப்பொழுது நீதிமானாக்கப்படுதலின் ஆறாவது நற்பயனைக் காணவிருக்கிறோம்: **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூல மாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்**. நமக்கு அவர் அளித்த ஈவு களில் மட்டுமின்றி, அவற்றை அளித்தவரிடத் திலும் நாம் களிகூருகிறவர்களாயிருக்கிறோம். நாம் இரட்சிப்படைவதற்கு முன்னர், வேறு இடங் களில் மகிழ்ச்சியடைந்தவர்களாக இருந்தோம். இப்பொழுதோ, அவரை நாம் **நினைவுகூரும்** போதெல்லாம் மகிழ்ச்சியில் திளைக்கிறோம். அவரை **மறக்கும்போதோ** நாம் துக்கமடை கிறோம். தேவனிடத்தில் களிகூரும்படி இப்பொழுது நாம் பெற்றிருக்கிற அற்புதமான மாற்றத்தை உண்டுபண்ணியது எது? அதுவே **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** செயலாகும். நாம் பெற்றி ருக்கிற எல்லா நற்பேறுகளைப் போலவே, இந்த மகிழ்ச்சியை அவர் மூலமாய்க் கிடைக்கப் பெற்றி ருக்கிறோம்.

**இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின** என்னும் சொற்றொடரில் நாம் அனுபவிக்கிற ஏழாவது நற்பயனைக் காண் கிறோம்.[16] இரட்சகரின் பலிமரணத்தின் மூலமாக தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலை நாட்டப்பட்டுள்ள இணக்கமே **ஒப்புரவாகுதல்** என்பதாகும். பாவத்தின் நுழைவு மனிதனுக்கும் தேவனுக்கும் இடையில் மனவேறுபாட்டையும், மனமுறிவையும், பகைமையையும் உண்டு பண்ணிவிட்டது. மனமுறிவை உண்டு பண்ணின பாவத்தைத் தொலைத்து தம்மிடத்தில் விசுவாசம் கொள்கிற அனைவரையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனோடு இணக்கம் பெறச்செய் கிறார். இப்பொருளை விட்டு அடுத்த பகுதிக்குச் செல்லும் முன்னர், தேவனுக்கு மனிதனோடு ஒப்புரவாக வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். மனிதனே ஒப்புரவாக வேண்டியவன்; ஏனெனில் அவனே தேவனோடு பகைமை கொண்டிருந்தான்.

### எ. ஆதாமின் பாவத்தின்மீது கிறிஸ்துவின் கிரியை பெற்ற வெற்றி (5:12-21)

**5:12** ஐந்தாவது அதிகாரத்தின் எஞ்சிய பகுதி இம்மடலின் முந்தைய பகுதியை அடுத்து வரும்

மூன்று அதிகாரங்களுடன் இணைக்கும் ஒரு பால மாக அமைந்திருக்கிறது. ஆதாமின் மூலமாகப் பெற்ற ஆக்கினை, கிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கும் நீதிமான் என்னும் நிலைமை மற்றும் ஆதாமின் செயலின் மூலம் அடைந்த மனவேத னையும் இழப்பும், அவற்றை மிஞ்சி நிற்கும் கிறிஸ்து வின் கிரியையினால் உண்டாகும் நற்பேறு ஆகிய வற்றை எடுத்துரைத்து இம்மடலின் முதல் பகுதி யோடு இது இணைந்துள்ளது. நீதிமானாக்கப்படு தல் என்னும் பொருளிலிருந்து பரிசுத்தமாக்கப்படு தலைக் குறித்தும், பாவச் செயல்களைப் பற்றிய பொருளிலிருந்தும் மனித இயல்பான பாவத்தைக் குறித்தும் இப்பகுதி எடுத்துரைத்து பின்வரும் 6 - 8 அதிகாரங்களுடன் இணைந்துள்ளது.

முந்தின படைப்பிற்குள்ளாக இருக்கும் அனைத்து மனிதர்களுடைய கூட்டாட்சித் தலை வனாக அல்லது பிரதிநிதியாக ஆதாம் இவ்வச னங்களில் சித்தரித்துக் காட்டப்படுகிறான். புதிய படைப்பிற்குள்ளாக இருக்கும் அனைத்து மனிதர் களுடைய கூட்டாட்சித் தலைவராகக் கிறிஸ்து அறிமுகப்படுத்தப்படுகிறார். தனக்குக் கீழாக இருக்கும் அனைவருடைய பிரதிநிதியாக, கூட் டாட்சித் தலைவர் விளங்குகிறார். எடுத்துக்காட் டாக, ஒரு மசோதாவை சட்டமாக்கும்படி ஒரு நாட் டின் குடியரசுத் தலைவர் கையெழுத்திடும்போது அவர் அந்நாட்டின் அனைத்து மக்களுடைய பிரதிநிதியாகவும் விளங்குகிறார்.

அதுவே ஆதாமின் கிரியையிலும் நடந்தது. **இவ்வுலகத்திலே** மனிதன் அடைகிற **மரணம் பாவத்தின்** விளைவாகவே ஏற்பட்டது. **எல்லா மனி தர்களும்** அவனுக்குள் **பாவஞ்செய்தபடியால்** ஆதாமின் வழித்தோன்றல்கள் அனைவருக்கும் மரணம் பொதுவானதாயிற்று. அவர்கள் யாவரும் தத்தம் வாழ்க்கையில் தனிப்பட்ட பாவங்களை யும் செய்திருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் அதைக்குறித்து இங்கு சொல்லப்பட வில்லை. ஆதாம் செய்த பாவம் பிரதிநிதித்துவச் செயலாகும் என்பதே பவுல் வலியுறுத்துகிற குறிப் பாகும். ஆகையால், அவனு டைய வழித்தோன் றல்கள் அனைவரும் அவனுக்குள் **பாவம் செய்த வர்களாகவே** எண்ணப்படுகின்றனர்.

இவ்வுலகில் ஆதாம் அல்ல, ஏவாளே முதல் பாவத்தைச் செய்தவள் என்று யாராவது மறுத் துரைக்கலாம். அது உண்மைதான், ஆயினும் ஆதாமே முதலில் படைக்கப்பட்டவன். ஆதலால், தலைமைத்துவம் அவனுக்குக் கொடுக்கப்பட் டது. ஆகவே அவனே, அவனுடைய சந்ததியார் அனைவருடைய பிரதிநிதியாகவும் செயல்பட் டான் என்றே காணப்படுகிறது.

ஆதாமின் பாவம் ஆவிக்குரிய மரணத்தைக் கொண்டுவந்ததெனினும் *சரீரப்பிரகாரமான* மரணத்தையே அப்போஸ்தலனாகிய பவுல் **மர ணம் எல்லோருக்கும் வந்தது** என்று கூறுகிறார் (13, 14 ஆகிய வசனங்களைக் காண்கையில் சரீரத்தின்படியான மரணமே அங்கு குறிப்பிடப்பட் டுள்ளது.)

இந்த வேதபகுதியை நாம் படிக்கையில், சில கேள்விகள் எழுவதைத் தவிர்க்க இயலாது. ஆதாம் பாவம்செய்த காரணத்தினால் அவனுடைய வழித் தோன்றல்கள் அனைவரையும் பாவிகள் என்று தீர்க்கிறது நியாயமா? பிறப்பிலேயே பாவிகளாக இருப்பதினால் மனிதர்களை தேவன் ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கிறாரா? அல்லது அவர்கள் தங் கள் வாழ்வில் உண்மையாகவே செய்த பாவங் களுக்காக அவர் அவர்களை ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கிறாரா? மனிதர்கள் பாவ இயல்புடன் பிறந்திருக்கிறார்கள்; பாவிகளாகப் பிறந்திருப்ப தாலேயே அவர்கள் பாவம் செய்கிறார்கள். அவ் வாறாயின் அவர்கள் செய்கிற பாவங்களுக்கு அவர் களை தேவன் பொறுப்பாளிகளாக்குவது முறை யாகுமா?

வேதஅறிஞர்கள் இப்பிரச்சினைகளோடும், இன்னும் இதுபோன்ற பல பிரச்சினைகளோடும் போராடி விடைகாண முயன்று பற்பல வியத்தகு முடிவுகளுக்கு வந்திருக்கிறார்கள். இருந்தபோதி லும், சில *உண்மைகள் நிச்சயமானவை* என் பதை நாம் அறிந்திருக்க வேண்டும்.

முதலாவதாக, இயல்பினாலும், செயலினா லும் எல்லா மனிதர்களும் பாவிகளாக இருக் கிறார்கள் என்றே வேதம் கற்பிக்கிறது. மனிதர் களைப் பெற்றோராகக் கொண்டு பிறந்த ஒவ் வொருவனும் ஆதாமின் பாவத்தைச் சுதந்தரித் துக்கொண்டுள்ளான்; மேலும், வேண்டுமென்றே தெரிந்தெடுத்து அவர்கள் பாவச்செயல்களையும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, பாவத்தின் சம்பளம் மரணம் என்பதை நாம் அறிவோம் - சரீரத்தில் உண்டா கும் மரணம், நித்தியமாக தேவனை விட்டுப் பிரிந் திருத்தல் ஆகிய இரண்டையும் இது குறிக்கும்.

ஆனால் தமது விருப்பமின்றி ஒருவரும் பாவத் திற்குரிய தண்டனையைச் செலுத்த வேண்டிய தேவையில்லை. இது மிகவும் முக்கியமான குறிப்பாகும். பாவிகளுக்குப் பதிலாக மரணத்தை ஏற்றுக்கொள்ளும்படி, மிகப் பெரிய விலையாக

தேவன் தமது குமாரனை அனுப்பினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாகவே பாவத்திலிருந்து இரட்சிப்பையும், அதனுடைய தண்டனையிலிருந்து விடுதலையையும் ஒருங்கே அவர் இலவசமாக அருளுகிறார்.

மனிதன் மூன்று அடிப்படைக் காரணங்களுக்காக ஆக்கினைத் தீர்ப்பு அடைகிறான். அவை யாவன: அவன் பாவ இயல்பு உடையவனாக இருக்கிறான்; ஆதாமின் பாவம் அவன்மீது சுமத்தப்பட்டுள்ளது. தனது பாவச்செயல்களின் காரணமாகவும் அவன் பாவியாகத் தீர்க்கப்படுகிறான். என்றாலும் அவனுடைய இரட்சிப்புக்கென்று தேவன் வகுத்த மீட்பின் ஏற்பாட்டினை மறுத்துரைப்பதே, அவனுடைய பாவங்களில் மகுடம் போன்றதாகும்.

"ஒருக்காலும் நற்செய்தியைக் கேட்டிராத மக்களுடைய நிலை என்ன?" என்று ஒருவர் வினவலாம். இக்கேள்விக்கான விடை ஓரளவு முதல் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக சர்வலோகத்தின் நியாயாதிபதி நீதியைச் செய்கிறவராகவே இருக்கிறார் என்னும் உண்மையை நாம் சார்ந்துகொள்வோமாக (ஆதி. 18:25). நீதியற்ற முறையிலோ நேர்மையற்ற படியோ அவர் ஒருக்காலும் நடந்துகொள்ளமாட்டார். நம்முடைய மங்கிய விழிகளுக்குச் சில நிலைமைகள் பிரச்சினைகளாகத் தோன்றினாலும், அவருக்கு அவை பிரச்சினைகள் அல்ல. கடைசி வழக்கு விசாரிக்கப்பட்டு நீதிமன்றக் கதவுகள் சடுதியில் அடைபடும் வேளையில், கொடுக்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து முறையிட எவரொருவருக்கும் சட்ட ஒழுங்கின்படி ஏதொரு சான்றும் இருக்காது.

**5:13** ஆதாமின் பாவம் மனித இனம் முழுவதையும் தாக்கியிருக்கிறது என்பதைப் பவுல் இப்பொழுது விளக்கிக் காட்டுகிறார். ஆதாம் தொடங்கி சீனாய் மலையிலே **நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுதவற்கு முன்புவரை பாவம் உலகத்திலிருந்தது** என்று முதலாவதாக அவர் குறிப்பிடுகின்றார். ஆனால் அந்தக் காலத்தில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய பிரமாணம் இல்லாதிருந்தது. வாய்மொழியாக தேவனிடத்திலிருந்து தெளிவாகக் கட்டளையை ஆதாம் பெற்றிருந்தான். அதன் பின்னர் பல நூற்றாண்டுகள் கழித்து வரையறுக்கப்பட்ட வகையில் பத்துக் கட்டளைகள் தெய்வீகப் பிரமாணமாக எழுதிக் கொடுக்கப்பட்டன. ஆனால் இடைப்பட்ட காலத்தில் தேவனிடத்திலிருந்து சட்டதிட்டங்களை மனிதன் பெற்றிருக்கவில்லை. ஆகையால் அக்காலத்தில் **பாவம்** இருந்தபோதும், ***மீறுதல்*** இல்லை. ஏனெனில் அறிந்த பிரமாணங்களை மீறி நடப்பதே மீறுதல் எனப்படும். தடைசெய்யக்கூடிய **நியாயப்பிர மாணம் இல்லாதிருந்ததால் பாவம்** மீறுதலாக **எண்ணப்படவில்லை.**

**5:14** ஆயினும் நியாயப்பிரமாணம் இல்லாதிருந்த காலத்தில் **மரணம்** ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. ஏனோக்கு ஒருவன் நீங்கலாக எல்லா மனிதர்களையும் **மரணம்** ஆட்கொண்டது. ஆதாமிற்கு ஒப்பாக, இந்த மனிதர்கள் யாவரும் தேவனுடைய தெளிவான கட்டளையை மீறிய காரணத்தினால் இறந்தார்கள் என்று உங்களால் சொல்ல முடியாது. அவ்வாறாயின் அவர்கள் ஏன் மரணம் அடைந்தார்கள்? அதனுடைய விடை குறிப்பாய்த் தோன்றுகிறது: ஆதாமுக்குள் அவர்கள் பாவம் செய்த காரணத்தினால் அடைந்தார்கள். இது முறையற்றது என்று தோன்றுமாயின், இது இரட்சிப்போடு சம்பந்தம் அற்றது என்பதை நினைவிற்கொள்ளுங்கள். கர்த்தரிடத்தில் விசுவாசம் உடையவர் யாவரும் நித்திய காலத்திற்கென்று இரட்சிக்கப்பட்டனர். அவர்களுடைய கூட்டாட்சித் தலைவனாகிய ஆதாமின் பாவத்திற்காக அவன் இறந்ததைப் போன்றே அவர்களும் சரீரத்தில் இறந்தார்கள். கூட்டாட்சித் தலைவன் என்ற நிலையில் ஆதாம் **பின்பு வந்தவருக்கு**, அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு **முன் அடையாளமானவன்**. இந்த இரண்டு கூட்டாட்சித் தலைவர்களைப் பற்றிய பொருளை தொடர்ந்து வரும் வசனங்களில் பவுல் விரிவாக்கம் செய்கிறார். அவர்களுக்குள்ளான ஒற்றுமைகளையல்ல பெரும்பாலும் வேறுபாடுகளைப் பற்றியே அவர் கூடுதலாகப் பேசுகிறார். கீழ்வரும் பொருளைப்பற்றி அவர் விளக்கம் அளிக்கப் போகிறார்:

> ஆதாமின் பிள்ளைகள் கிறிஸ்துவில் அடைந்தநல்
> அருட்பேறு வெள்ளம்போல் கணக்கினில் அடங்கிடா,
> முதற்தந்தை இழந்ததோ கொஞ்சமே அறியீரோ!
> இவர்தந்த நற்பயன்கள் விஞ்சியே பொழிந்தன!

**5:15** ஆதாமின் மீறுதலுக்கும், கிறிஸ்து வினால் பெறுகிற கிருபைவரத்திற்கும் உள்ள வேறுபாடே முதலாவது வேறுபாடாகும். முதல் மனிதனுடைய மீறுதலினால் **பலர் மரித்தார்கள்**. இங்கு **பலர்** என்று குறிப்பிட்டிருப்பது ஆதாமின் வழித்தோன்றல்களையே ஆகும். இங்கு சொல்லப்பட்டுள்ள மரணம் ஆவிக்குரிய மரணத்தையும் சரீரத்தின்படியான மரணத்தையும் குறிக்கிறது.

**கிருபையினாலே வரும் ஈவு அநேகர்மேல்** மிகுதியாகப் பெருகுகிறது. பாவிகளாகிய இனத் தார்மீது **தேவனுடைய கிருபையினால்** வெளிப் பட்டதே இந்த வியத்தகு இலவச ஈவு. **இயேசு கிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபை யினாலே** இது சாத்தியமாயிற்று. எதிர்த்து நின்று கிளர்ச்சி செய்கிற மனுக்குலமாகிய படைப்பிற் காக அவர் மரணம் அடைந்ததே அவரது ஆச் சரியமான கிருபையின் செயலாகும். அவருடைய பலிமரணத்தின் மூலமாக நித்திய ஜீவனாகிய ஈவு அநேகருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வசனத்தில் *அநேகர்* என்று இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இரண் டும் ஒரே கூட்டத்தினரைக் குறிப்பதில்லை. ஆதா மின் மீறுதலினால் மரணத்திற்கு உட்பட்ட அனை வரையும் முதல் **அநேகர்** குறிக்கிறது. இரண்டா வது அநேகர் புது சிருஷ்டிப்பின் அங்கங்களாகிய அனைவரையும் குறிக்கிறது. அவர்களுடைய கூட்டாட்சித் தலைவராக கிறிஸ்து விளங்குகிறார். தேவனுடைய கிருபை எவர்கள் மீது அதிகமாகப் பெருகியிருக்கிறதோ அவர்கள் யாவரும் அதனுள் அடங்குவார்கள் - அதாவது உண்மையான விசுவாசிகளிடத்தில் தேவ கிருபை பெருகியிருக் கிறது. தேவனுடைய கிருபையானது அனைவர் மீதும் பொழியப்பட்டிருந்தாலும், இரட்சகரை விசு வாசித்தவர்கள் மட்டுமே அதனைத் தங்களுக்கு உரியதாக்கிக் கொண்டார்கள்.

**5:16** ஆதாமின் பாவத்திற்கும் கிறிஸ்துவின் **கிருபைவரத்திற்கும்** இடையே உள்ள மற்று மொரு முக்கியமான வேறுபாடு இங்கு சொல்லப் பட்டுள்ளது. ஆதாமின் ஒரே குற்றம் தவிர்க்க முடி யாத **ஆக்கினையைக்** கொண்டுவந்தது. அக்குற் றத்திற்குக் கொடுக்கப்பட்ட தீர்ப்பு "ஆக்கினைத் தீர்ப்பாகும்." அதற்கு மாறாக கிறிஸ்துவின் **கிருபை வரமோ** ஒரு குற்றத்தை மட்டுமின்றி **அநேக குற்றங்களை** நீக்கி, "குற்றச்சாட்டிலிருந்து விடு தலை" என்னும் தீர்ப்பை வழங்கிற்று. ஒரே குற்றம் கொண்டுவந்தது பயங்கரமான பேரழிவு என்றும், அநேக குற்றங்களிலிருந்து பெற்ற மீட்பு மிகவும் பெரிதானது என்றும், ஒரே குற்றத்தினால் பெற்ற தீர்ப்பு **ஆக்கினை** என்றும் அநேக குற்றங்களிலி ருந்து பெற்ற மீட்பினால் அடைந்தது **நீதி விளங் கும் தீர்ப்பு** என்றும் கூறி ஆதாமின் பாவத்திற்கும் கிறிஸ்துவின் கிருபை வரத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை பவுல் சிறப்பிக்கிறார்.

**5:17 ஒருவனுடைய மீறுதலினாலே மரணம் ஆண்டுகொண்டிருக்கிறது.** அந்த மரணம் கொடுங்கோல் ஆட்சி புரிகிறவனுக்கு ஒப்பாகச் செயல்புரிகிறது. ஆனால் கிருபை மிக்க **நீதி யாகிய ஈவினால்** எல்லா விசுவாசிகளும் **இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள்**. அந்த ஈவு பரிபூரணமாக நிரம்பி வழியும் கிருபையாகத் திகழ்கிறது.

இந்தக் கிருபை எத்தனை மேன்மை வாய்ந் தது பாருங்கள்! மரணமாகிய கொடுங்கோல் மன்னனுடைய பிடியிலிருந்து நாம் மீட்கப்பட்டது மட்டுமின்றி, இக்கால வாழ்விலும் நித்தியத்தில் பெறவிருக்கிற நன்மைகளையும் எண்ணி அனுப விக்கும் மன்னர்களாக அரசாளுகிறோம். உண் மையாக நாம் இதனைப் புரிந்து போற்றுகிறவர் களாக இருக்கிறோமா? விண்ணுலக அரசுரிமை யைப் பெற்றவர்களாக நாம் வாழ்கிறோமா? அல்லது இந்த உலகத்தின் பெருந்திரளுக்குள் பணிந்து கிடக்கிறோமா?

**5:18** ஆதாமின் **மீறுதல்** அனைத்து மனிதர் களுக்கும் **ஆக்கினையைக்** கொண்டுவந்தது. ஆனால் கிறிஸ்துவின் **நீதியாகிய** செயலி னாலே, எல்லோருக்கும் ஜீவனை அளிக்கும் நீதி உண்டானது. இங்கு **நீதியினாலே** என்று சொல் லப்பட்டிருக்கும் செயல் இரட்சகரின் வாழ்க்கை யைக் குறிப்பதன்று. அல்லது நியாயப்பிரமாணத்தை அவர் கைக்கொண்டதுமன்று. மாறாக, பதில் ஆளாக அவர் கல்வாரியில் மரித்த செயலையே அது குறிக்கிறது. இதுவே **ஜீவனை அளிக்கும் நீதியைக்** கொண்டுவந்தது - அதாவது **நீதியின்** விளைவே **ஜீவன்** ஆகும் - அந்த ஜீவனை **எல்லா மனிதருக்கும்** அது கொண்டு வந்தது.

இவ்வசனத்தில் "எல்லா மனுஷர்" என்னும் சொற்றொடர் இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள் ளது. ஆயினும் இந்த இரண்டும் ஒரே கூட்டத் தினரைக் குறிப்பதில்லை. ஆதாமிற்குள் உட்பட்ட அனைவரையும் முதலில் சொல்லப்பட்டுள்ள **எல்லா மனுஷர்** என்னும் சொற்றொடர் குறிக் கிறது. இரண்டாவது சொல்லப்பட்டுள்ள **எல்லா மனுஷர்** என்னும் சொற்றொடர் கிறிஸ்துவுக் குள்ளான அனைவரையும் குறிக்கிறது. இதனை முந்தின வசனத்தில் சொல்லப்பட்டுள்ள "கிருபை யின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூர ணத்தையும் *பெறுகிறவர்கள்...*" என்னும் சொற் களாலே அறியலாம். *ஈவானது விசுவாசத்தி னாலே பெறப்படவேண்டும்.* கர்த்தரை நம்பு கிறவர்கள் மட்டுமே ஜீவனை அளிக்கும் நீதியைப் பெறுவார்கள்.

**5:19** தேவனுடைய கட்டளைக்கு ஆதாம் **கீழ்ப் படியாததினாலே அநேகர் பாவிகளாக்கப்பட் டது** எவ்வாறோ அது **போலவே,** பிதாவிற்குக் கிறிஸ்து **கீழ்ப்படிந்ததாலே** அவரிடத்தில் நம் பிக்கை கொண்ட யாவரும் **நீதிமான்கள்** என்று அறிக்கை செய்யப்படுகின்றனர்.

உலகத்தினர் முழுவதும் இரட்சிப்படைவர் என்னும் கொள்கையை ஆதரிப்போர் இந்த வச னங்களைத் தங்களுடைய கொள்கையை மெய்ப் பிக்க சான்றாகக் கொள்வது பயனற்றதாகும். இந்த வேதபகுதி இரண்டு சமுதாயத் தலைமைத் துவத்தைப் பற்றியதாகும். ஆதாமின் பாவம் எங்ங னம் "அவனுக்குள்ளாக" இருக்கும் மனிதர்களைத் தாக்கம் அடையச் செய்கிறதோ, அதுபோலவே, கிறிஸ்துவின் நீதியான செயல் "அவருக்குள் ளாக" இருக்கும் மக்களுக்கே பயனளிக்கும்.

**5:20** நியாயப்பிரமாணத்தைச் சுற்றியே அனைத் தும் சுழன்றுவரும் என்று எண்ணிய யூத எதிர் வாதிக்குப் பவுல் கூறிய அனைத்து உண்மை களும் அதிர்ச்சியளித்தன. பாவமும் இரட்சிப்பும் நியாயப்பிரமாணத்தை மையமாகக் கொண்டிரா மல் இரண்டு சமுதாயத் தலைவர்களையே சார்ந் துள்ளன என்பதை அவன் இப்பொழுது கற்றுக் கொள்கிறான். அவ்வாறு அறியுங்கால், "நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது ஏன்?" என்னும் கேள்வியைக் கேட்கும்படி அவன் ஏவப்படுகிறான். **மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது** என்று அப்போஸ்தலன் பதில் உரைக் கிறார். அது பாவத்தின் தொடக்க காரணம் அல்ல. ஆயினும் பாவமானது தேவனுக்கு எதிரான மீறு தல் என்பதை அது வெளிப்படுத்தியது. பாவத்தி லிருந்து அது இரட்சிக்காமல், பாவத்தின் பயங்கர மான அனைத்துக் கூறுகளையும் அது வெளிப் படுத்தியது. ஆயினும், அனைத்து மனிதர்களு டைய பாவத்தைக் காட்டிலும் தேவனுடைய கிருபை பெரியது என்பது மெய்ப்பிக்கப்பட்டுள் ளது. **பாவம் பெருகின இடத்தில்,** தேவனுடைய **கிருபை** கல்வாரியில் **அதிகமாய்ப் பெருகிற்று!**

**5:21** எல்லா மனிதர்களுக்கும் மரணத்தை வரு வித்த பாவத்தின் ஆளுகை இப்பொழுது முடிவுக் குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. அதற்குப் பதி லாக **நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவன்** கொடுக் கப்பட்டு கிருபையானது ஆளுகை செய்கிறது. **நீதியினாலே** கிருபை ஆளுகை செய்கிறது என்பதைக் குறித்துக்கொள்ளுங்கள். தேவனு டைய பரிசுத்தத்தின் எல்லா எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்பட்டுவிட்டன. நியாயப்பிரமாணத் திற்குரிய தண்டனை செலுத்தப்பட்டுவிட்டது. ஆகவே தங்களுக்குப் பதிலாளாகக் கிறிஸ்துவை ஏற்று அவரது தகுதியின் அடிப்படையில் வேண்டி வருவோர் அனைவருக்கும் இப்பொழுது நித்திய ஜீவனை அருளக்கூடியவராக தேவன் திகழ் கிறார்.

"பாவம் உலகத்தில் பிரவேசிக்கும்படி தேவன் அனுமதித்தது ஏன்?" என்னும் வழக்கமாய்க் கேட் கப்படுகிற கேள்விக்கான விடையின் ஒரு பகுதியை நாம் இவ்வசனங்களில் பெறக்கூடும். பாவம் உல கத்தில் பிரவேசித்ததன் காரணத்தினாலே கிறிஸ்து வின் பலி செலுத்தப்பட்டது; அதன் மூலமாக தேவன் அதிக மகிமையடைந்தார், மனிதனும் அதிக ஆசிர்வாதத்தைப் பெற்றிருக்கிறான். இதுவே அக்கேள்விக்குரிய விடையாகும். வீழ்ந்து போகாத ஆதாமுக்குள்ளாக நமது நிலைமை எவ்வாறு இருக்குமோ அதனைக் காட்டிலும் கிறிஸ்துவுக்குள்ளாக நமது நிலை மேலானதாக இருக்கும். ஆதாம் பாவம் செய்யாமல் இருந்திருப் பானானால் ஏதேன் தோட்டத்தில் தொடர்ந்து வாழ்ந்து வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டி ருப்பான். ஆனால் மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளையாக அவன் ஆவதற்குரிய வழியைப் பெற்றிருக்க மாட்டான். தேவனுடைய சுதந்தரனா கவும், கிறிஸ்துவின் உடன் சுதந்தரனாகவும் மாறியிருக்க முடியாது. விண்ணுலகில் ஒரு வீட் டினை வாக்குறுதியாகப் பெற்றிருக்க முடியாது. கிறிஸ்துவோடு எப்பொழுதும் இருக்கக் கூடிய நிலையை அடையமுடியாது. எக்காலத்திலும் அவருக்கு ஒப்பாகவும் இருக்க முடியாது. இந்த நற்பேறுகள் யாவும் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின்** மீட்பின் செயலின் **மூலமாகவே** வந்தன.

### ஏ. தூய வாழ்க்கைக்கு நற்செய்தி காட்டும் வழி (அதி. 6)

எல்லா மனிதர்களுடைய பாவத்திற்கும் மேலாக, கிருபை மிகுதியாய்ப் பெருகிற்று என்று ஐந்தாவது அதிகாரத்தின் முடிவில் பவுல் உரைத்த கூற்று வேறொரு இன்றியமையாத கேள் வியை எழுப்புகிறது. "*கிருபையினால் விசு வாசத்தைக் கொண்டு இரட்சிப்பு உண்டா கிறது என்னும் நற்செய்தி உபதேசம், மனி தனைப் பாவத்தோடு வாழும்படி அனுமதிக் கிறதா அல்லது அவனைப் பாவம் செய்யும் படித் தூண்டுகிறதா?*"

இல்லை என்று வலியுறுத்திக் கூறும் மறுப்பே அதன் விடையாகும். ஆறாவது அதிகாரம் முதல்

எட்டாவது அதிகாரம் வரை அந்த விடை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆறாவது அதிகாரத்தில் அந்த பதில் மூன்று முக்கியமான சொற்களை மையாக வைத்து விளக்கப்படுகிறது. அவை யாவன: அறிதல் (வச. 3, 6), *எண்ணுதல் அல்லது மனத்திற்கொள்ளுதல்* (வச. 11), *ஒப்புக் கொடுத்தல்* (வச. 13).

விசுவாசியின் தகுதி நிலைக்கும், இருப்பு நிலைக்கும் உள்ள வேறுபாடுகளை நாம் புரிந்து கொள்வோமாயின் பவுலின் வாதத்தைப் பின் பற்றி அறிய ஏதுவாகும். கிறிஸ்துவுக்குள்ளாக அவன் பெற்றிருக்கிற நிலையே தகுதி நிலை யாகும். அனுதின வாழ்வில் அவன் யாராக வாழ் கிறான் அல்லது யாராக வாழ வேண்டும் என்பதே நடைமுறை நிலையாகும்.

கிருபையானது நம்மைத் தகுதி நிலைக்குள் வைத்து அதற்கு உகந்த வண்ணம் வாழும்படி கற்பிக்கிறது. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற காரணத்தினால் நமது தகுதிநிலை முற்றிலும் நிறைவானதாக இருக்கிறது. நம்முடைய தகுதி நிலைக்கு ஏற்ப நடைமுறை வாழ்க்கை தொடர்ந்து முன்னேற்றம் அடைய வேண்டும். நாம் நமது இரட்சகரை விண்ணுலகில் காணும்வரை முழுமையான நிறைவை அடைய முடியாது; எனினும் இந்த இடைப்பட்ட காலத்தில் அவருடைய சாயலுக்கு ஒப்பாக அதிகமதிகமாக மாற்றம் பெற வேண்டும்.

கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழு தலிலும் அவரோடு நாம் இணைக்கப்பட்டுள் ளதை முதலாவது எடுத்துரைத்து, இந்தப் பெரி தான உண்மையின் வெளிச்சத்தில் நடக்கும்படி அப்போஸ்தலன் நமக்கு அறிவுரை நல்குகிறார்.

**6:1** தன்னுடைய வாதத்திற்கு ஒரு இறுக்க மான பிடி கிடைத்துவிட்டது என்று கருதிய யூத எதிர்வாதி தனது கேள்விக்கணையைத் தொடுக்க ஆயத்தமாகிறார். மனிதனுடைய பாவம் தேவனு டைய கிருபையை அதிகமாய்க் காணும்படி வெளிக் கொணர்கிறது என்பதே கிருபையின் நற்செய்தி யாகும், அவ்வாறாயின் **கிருபையானது** ஏராள மாய்ப் பெருகி வழியட்டும் என்று **நாம் பாவத் திலே நிலைநிற்கலாமா**?

இக்கேள்வியை இக்காலச் சொற்களில் கூறு வோமெனில் அது கீழ்வருமாறு அமையும்: "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு மனிதர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று நீர் கூறுகிறீர். மேலும் அது நியாயப்பிரமாணத் தினால் உண்டாவதில்லை என்றும் கூறுகிறீர். இரட்சிக்கப்படுவதற்காக நீங்கள் செய்ய வேண்டி யது யாவும் விசுவாசம் ஒன்றுதான் என்றால், நீங் கள் மனம்போனபடி பாவத்தில் வாழலாம் அல்லவா?" பரிசுத்த வாழ்விற்குக் கிருபையானது போதுமான தூண்டுதலாக விளங்குவது இல்லை என்பதே இவ்வாதத்தின் கருத்தாகும். ஆகவே நியாயப்பிர மாணத்தின் தடைகளுக்குள் மனிதனை உட் படுத்த வேண்டும் என்றும் இது கூறுகிறது.

**நாம் பாவத்தில் நிலைநிற்கலாமா?** என்னும் முதல் கேள்விக்கு இந்த அதிகாரம் நான்கு விடை களைத் தந்து, தேவையான நல்லாலோசனை நல்குகிறது.

1. நீங்கள் பாவம் செய்ய முடியாது, ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக் கிறீர்கள். இது காரணத்தைக் கூறுகிறது (வச. 1-11).
2. நீங்கள் பாவம் செய்யத் தேவையில்லை, ஏனெனில் கிருபையினால் பாவத்தின் ஆளுகை முறிக்கப்பட்டுவிட்டது. இது வேண்டுதலைச் சமர்ப்பிக்கிறது (வச. 12-14).
3. நீங்கள் பாவம் செய்யக்கூடாது, ஏனெனில் அது மீண்டும் பாவத்தை உங்களுடைய எஜ மானனாகக் கொண்டுவரும். இது கட்டளை யிடுகிறது (வச. 15-19).
4. நீங்கள் பாவம் செய்யாதிருத்தல் நன்று. ஏனெ னில் அவ்வாறு பாவம் செய்வீர்களானால் அது பேரழிவில் முடியும். இது ஓர் எச்சரிக்கை (வச. 20-23).[17]

**6:2 பாவத்துக்கு மரித்த நாம்** பாவத்தைத் தொடர்ந்து செய்ய முடியாது என்பது பவுல் தரு கிற முதலாவது பதிலாகும். இந்தக் கூற்று தகுதிநிலை அடிப்படையிலான உண்மையாகும். இயேசு கிறிஸ்து பாவத்திற்கு மரித்தபோது அவர் நமது பிரதிநிதியாக மரித்தார். அவர் நமக்கு பதில் ஆளாக மட்டும் மரிக்கவில்லை - அதாவது நமக் காக அல்லது நமது ஸ்தானத்தில் மட்டும் மரிக்க வில்லை. அவர் நமது பிரதிநிதியாகவும் மரித்தார் - அதாவது நாம் மரித்ததுபோல அவர் மரித்தார். ஆகையால் அவர் சிலுவையில் மரித்தபோது நாமும் மரித்தோம். பாவத்தின் எல்லாக் கேள்வி களுக்கும் அவர் ஒட்டுமொத்தமாக மரித்தார். அதனை எவ்வித மாற்றத்திற்கு இடமுமின்றி முடிவுகட்டிவிட்டார். கிறிஸ்துவுக்குள் இருக்கிற அனைவரையும் பாவத்திற்கு மரித்தவர்களாகவே தேவன் காண்கிறார்.

விசுவாசி பாவமற்றவன் என்பது இதன் பொரு ளன்று. கிறிஸ்துவின் மரணத்தில் அவரோடு

அவன் இணைக்கப்பட்டவனாயிருக்கிறான். அதாவது கிறிஸ்துவின் மரணம் என்ன பொருளுடையதாக இருக்கிறதோ அது அவனுக்கும் பொருந்தும் என்பதே இதன் பொருள்.

**6:3** பவுல் அளிக்கும் விளக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள முதலாவது முக்கியமான சொல் **அறிதல்** என்பதாகும். தொடர்ந்து பாவத்தைச் செய்வது விசுவாசிகளின் நெறிமுறைக்கு ஒவ்வாத முரண்பாடு என்று காண்பிக்க ஞானஸ்நானத்தைப் பற்றிய பொருளை அவர் இங்கு அறிமுகப்படுத்துகிறார். "எந்த ஞானஸ்நானத்தை அவர் குறிப்பிடுகிறார்?" என்பதே உடனடியாக எழும் கேள்வி. ஆகவே முன்னுரையாக சிறு விளக்கம் ஒன்றைத் தருவது அவசியம்.

ஒரு மனிதன் இரட்சிக்கப்படுகிறபோது, அவன் **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்** பெறுகிறான். அதாவது அவருடைய மரணத்திற்குள்ளாகவும் உயிர்த்தெழுதலுக்குள்ளாகவும் கிறிஸ்துவோடு இணைக்கப்படுகிறான். இதுவும் ஆவிக்குள்ளான (அல்லது ஆவியினால் பெறுகிற) ஞானஸ்நானமும் ஒன்றல்ல. ஆயினும் இரண்டு ஞானஸ்நானங்களும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன. ஆவிக்குள்ளான ஞானஸ்நானம் விசுவாசியை கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாக இடம்பெறச் செய்கிறது (1 கொரி.12:13). இது மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானம் அல்ல. **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகப் பெறும் ஞானஸ்நானம்** யாதெனில், விசுவாசியானவன் கிறிஸ்துவோடு மரித்தும், அவரோடு உயிர்த்தெழுந்தும் இருக்கிறான் என்று தேவனால் கணக்கிடப்படுகிறான் என்பதேயாகும்.

ஞானஸ்நானத்தைக் குறித்து இங்கு பவுல் பேசுகிறபோது, ஆவிக்குரிய நிலையில் கிறிஸ்துவோடு நாம் ஒன்றாக இணைக்கப்படுவதையும், அவ்வுண்மை நீரில் பெறுகிற திருமுழுக்கில் படவுருவக் காட்சியாக வெளிப்படுவதையும் அவர் எண்ணிப்பார்க்கிறார். அவருடைய வாதம் முன்னேறிச் செல்கிறபோது, அவரது மடலைப் படிக்கும் வாசகர்கள் எவ்வாறு "அடக்கம்பண்ணப்பட்டனர்" "கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில்" எவ்வாறு "இணைக்கப்பட்டனர்" என்றெல்லாம் கூறுவதால், அந்த வாதம் மிகக் குறிப்பிடத்தக்க வகையில் நீரில் பெறுகிற திருமுழுக்கை நோக்கிச் செல்கிறதாகக் காணப்படுகிறது.

திருமுழுக்கு பெறாத விசுவாசியைக் குறித்து, புதிய ஏற்பாடு சிந்தித்துப் பார்க்கிறதேயில்லை. அந்நிலை புதிய ஏற்பாட்டின் வழக்கத்திற்கு முரண்பட்டதாக இருக்கிறது. மனமாற்றம் பெற்ற யாவரும் ஞானஸ்நானத்திற்கு உடனடியாகத் தங்களை ஒப்புவிப்பார்கள் என்றே அது கருதுகிறது. இதன் காரணமாகவே "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" என்று விசுவாசத்தைக் குறித்தும் ஞானஸ்நானத்தைக் குறித்தும் ஒரே மூச்சில் நமது கர்த்தர் பேசினார் (மாற்கு 16:16). இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியமில்லையெனினும், அது மாற்றுதற்கியலாத வெளிப்படையான அடையாளமாக இருக்கிறது.

**6:4** நீரில் பெறுகிற **ஞானஸ்நானம்** கிறிஸ்துவுக்குள்ளாக்கும் **ஞானஸ்நானத்திற்குக்** காட்சிப்பொருள் விளக்கமாக இருக்கிறது. விசுவாசியானவன் மரணத்தின் இருண்ட நீருக்குள்ளாக (கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் மனிதருக்குள்) மூழ்குவதையும், புதிதான ஜீவனுள்ளவனாக நடக்கும்படி கிறிஸ்துவுக்குள்ளான புது மனிதனாக எழுவதையும் அது படவுருவில் காட்டுகிறது. ஒரு விசுவாசி ஞானஸ்நானம் பெறுகிறபோது, தன்னுடைய முந்தின சுயத்தின் அடக்க நிகழ்ச்சியில் கலந்துகொள்வது போன்று தோற்றமளிக்கிறது. அவன் நீருக்குள்ளாகச் செல்கிறபோது, "ஆதாமின் பாவமுள்ள மகனாக நான் இருந்ததெல்லாம் சிலுவையில் அறையப்பட்டு இறந்து போயிற்று" என்றே கூறுகிறான். அவன் நீரிலிருந்து வெளியே வருகிறபோது, "பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று கூறுகிறான் (கலா. 2:20 - ஐக் காண்க).

"திருச்சபையின் தொடக்க காலத்தில் நீருக்குள் மூழ்கச் செய்தே ஞானஸ்நானம் கொடுத்தனர் என்பதை மனதிற்கொள்ளாவிடில் இந்த வேதபகுதியைப் புரிந்துகொள்ள இயலாது" என்று கோனிபியர் மற்றும் ஹௌசன் என்பார் கூறியுள்ளனர்.

**புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி** நம்மை மாற்றியிருப்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே என்று தொடர்ந்து கூறுகிற பவுல், **பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்** என்றும் கூறுகிறார். தேவனுடைய நிறைவான தெய்வீகக் குணநலன்களாகிய நீதி, அன்பு, நேர்மை இன்னும் பல யாவும், கர்த்தரை மரித்தோரிலிருந்து எழுப்பும்படி தேவனை வேண்டின என்பதே இதனுடைய பொருளாகும். மேதகைமை வாய்ந்த இரட்சகரின் ஆளுமையைக் கருத்திற்கொள்ளுங்

கால், அவரை மரித்த வண்ணமாகக் கல்லறைக் குள் விட்டுவிடுவது தேவனுடைய குணநலன் களுக்கு ஒவ்வாத செயலாகிவிடும். தேவன் அவரை எழுப்பினார். மேலும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு நாம் இணைக்கப்பட்ட வர்களாக இருக்கின்ற காரணத்தினால், **புதிதான ஜீவனுள்ளவர்களாய் நாம் நடக்க** முடியும், **நடக்கவும் வேண்டும்**.

**6:5** எவ்வாறு **அவருடைய மரணத்தின் சாயலில் நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களாக** இருக்கிறோமோ, அவ்வாறே அவருடைய **உயிர்த்தெழுதலின் சாயலிலும்** அவருடன் **இணைக்கப்பட்டிருப்போம்.** அவருடைய **மரணத்தின் சாயல்** என்னும் சொற்றொடர் ஞானஸ்நானத்தின்போது விசுவாசிகள் நீருக் குள் மூழ்கும் செயலைக் குறிக்கிறது. கிறிஸ்து வுடன் அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்ட செயல், ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உண்மையாகவே நடந்தேறியது. அப் பொழுது நடந்த நிகழ்ச்சியின் "சாயலாகவே" ஞானஸ்நானம் காணப்படுகிறது.

நாம் நீருக்குள்ளாக மூழ்குவது மட்டுமின்றி, **அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலில்** நீரிலிருந்து வெளியே வரவும் செய்கிறோம். இந்த வசனத்தின் இரண்டாவது பகுதியில் சாயல் என்ற சொல் மூல மொழியிலே இடம்பெறவில்லை. எனினும் நிறைவான பொருளைத் தரும்படி அச்சொல் சேர்க்கப்பட்டிருப்பது அவசியமே.

எவ்வாறு **அவருடைய மரணத்தின் சாயலில்** கிறிஸ்துவோடு **நாம் இணைக்கப்பட்டிருக் கிறோமோ** (நீருக்குள் மூழ்குதல்), அவ்வாறே அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் அவருடன் **இணைக்கப்பட்டிருப்போம்** (நீரிலி ருந்து வெளியே எழுந்து வருதல்). **இணைக்கப் பட்டிருப்போம்** என்னும் சொல் எதிர்காலத்தைக் குறிக்கவேண்டிய அவசியமில்லை. ஹாட்ஸ் என்பார் இதனை விளக்குகிறார்:

> இனிமேல் நடக்கவிருக்கிற ஒரு நிகழ்ச்சியை இது குறிப்பதில்லை. ஒன்றன்பின் ஒன்று நிச்சய மாக நடைபெறும் என்னும் வரிசை முறை யிலே காரண காரியங்களைக் கொண்டு ஏற் படுத்தப்பட்ட தொடர்பாகவோ இது சொல்லப்பட் டிருக்கிறது. முதலாவது நடக்குமென்றால் இரண் டாவது தொடர்ந்து தானாகவே நிறைவேறும்.[18]

**6:6** கிறிஸ்துவுடனேகூட **நம்முடைய பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டதென்று** நாம் ஞானஸ்நானத்தின்போது அறிக்கை செய்கிறோம். ஆதாமின் பிள்ளைகளாயிருந்த நிலையை **நம்முடைய பழைய மனுஷன்** என்னும் சொற்றொடர் குறிக்கிறது. அதாவது நம்முடைய பழைய பொல்லாங்கு, மீண்டும் பிறவாத சுயம், முந்தின வழக்கங்கள், இச்சைகள் யாவுமே பழைய மனிதன்தான். நாம் மனமாற்றம் அடைந்தபோது பழைய மனிதனைக் களைந்து புதிய மனிதனை அணிந்துகொண்டோம். இது அழுக்கான கந்தையைக் களைந்துவிட்டு, தூய் மையான ஆடையை அணிந்து கொள்வதற்கு ஒப்பாகும் (கொலோ. 3:9,10).

கல்வாரியில் **பழைய மனிதன்** சிலுவையில் அறையப்பட்டதென்பது, **பாவ சரீரம்** செயலற்றுப் போகும்படியாக ஆக்கப்பட்டது என்று பொருள் படும். பாவ சரீரம் என்பது உடலைக் குறிப்ப தில்லை. மாறாக, ஒரு மனிதனை ஆளுகின்ற, கொடுங்கோல் மன்னனாக உருவகப்படுத்தப் பட்டுள்ள, உள்ளார்ந்த நிலையில் குடியிருக்கும் பாவத்தையே அது குறிக்கிறது. பாவ சரீரம் **ஒழிந்துபோகும் பொருட்டாக** என்பது *ஆளுகை செய்யும் நிலையிலிருந்து தள்ளிவிடப்படு தல் அல்லது செயலற்றுப்போகுதல்* என்று பொருள்படும். **நாம் இனிப்பாவத்துக்கு ஊழி யஞ்செய்யாதபடிக்கு** என்பதே அந்தச் சொற் றொடரின் பொருளாக இருக்கிறது. நம்மை ஆளும் கொடுங்கோல் மன்னனாகிய பாவத்தின் அதிகாரம் முறிக்கப்பட்டுவிட்டது.

**6:7 மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடு தலையாக்கப்பட்டிருக்கிறானே**. காவல்துறை அதிகாரியைக் கொலை செய்த குற்றத்திற்காக ஒருவன் மரண தண்டனை அடையவேண்டும் என்று தீர்ப்பு விதிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளு வோம். அந்த தண்டனையின்படி அவன் மரணம் அடைந்த உடனே அந்தப் **பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்படுகிறான்** (எழுத்தின்படி "நீதிமானாக்கப்படுகிறான்"). தண்டனை செலுத் தப்பட்டு வழக்கு முடிவடைந்து விடுகிறது.

இப்பொழுதோ நாமும் கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவோடு மரித்திருக்கிறோம். நாம் செலுத்த வேண்டிய தண்டனை செலுத்தப்பட்டு விட்டது. மேலும் பாவத்தின் மரணப்பிடியும் உடைத்தெறி யப்பட்டுவிட்டது. பாவத்தினால் சிறைப்பிடிக்கப் பட்டவர்களாக இனி நாம் உதவியற்றவர்களா யிருக்கப் போவதில்லை.

**6:8 கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தது** உண்மையின் ஒரு பக்கமாகும். அதன் மறுபக்கம்

**அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம்** என்பதாகும். நாம் பாவத்துக்கு மரித்தோம், நீதிக்குப் பிழைத்திருக்கிறோம். பாவம் நம்மீது கொண்டிருந்த ஆளுகை தகர்த்தெறியப்பட்டுவிட்டது. இப்புவியில் வாழும் இக்காலத்திலேயே கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வாழ்வினில் பங்கு வகிக்கிறவர்களாக விளங்குகிறோம். நித்திய காலமுழுவதும், அவ்வாழ்வினில் பங்கு வகிப்போம். அவருடைய திருப்பெயர் வாழ்த்தப்படுவதாக!

**6:9** உயிர்த்தெழுந்த கிறிஸ்து மீண்டும் ஒருக்காலும் மரிப்பதில்லை என்னும் உண்மையை நம்முடைய நம்பிக்கை சார்ந்திருக்கிறது. **மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.** மூன்று பகலும் மூன்று இரவும் மரணமானது அவர்மீது ஆளுகை செலுத்தியது. ஆனால் அந்த ஆளுகை கடந்து சென்றுவிட்டது. கிறிஸ்து இனி ஒருபோதும் மரிப்பதில்லை.

**6:10** நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **மரித்தது, பாவத்தின்** எல்லாவிதக் கூறுகளுக்காகவும் **ஒரேதரம் மரித்தார்.** பாவத்தின் கோரிக்கைகள், அதன் ஊழியங்கள், அதன் எதிர்பார்ப்புகள், அதன் தண்டனை யாவற்றுக்கும் **அவர் மரித்தார்.** அவர் ஆற்றிய செயலை, மீண்டும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதபடி நிறைவாகச் செய்து, கணக்கைத் திட்டவட்டமான முடிவிற்குக் கொண்டு வந்து விட்டார். இப்பொழுது **அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.** அவர் எப்பொழுதும் தேவனுக்கென்றே வாழ்ந்தார் என்று ஒரு பொருளில் சொல்லமுடியும். ஆனால் இப்பொழுதோ, உயிர்த்தெழுந்த ஒருவராக, ஒரு புதுவகை உறவோடு **தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.** அவர் இப்பொழுது வாழ்கிற புதிய நிலை, பாவம் உட்புகக்கூடாத ஒன்றாகும்.

நாம் தொடர்ந்து படிக்கும் முன்பாக, முதல் பத்து வசனங்களை மீண்டும் தொகுத்துக் காண்போம். இந்தப் பகுதியின் பொதுவான கருப்பொருள் *பரிசுத்தமாக்கப்படுதல்* என்பதேயாகும். அதாவது தூய வாழ்விற்கான தேவனுடைய ஒழுங்கு இங்கு கற்பிக்கப்பட்டுள்ளது. நமது தகுதி நிலையைப் பொருத்தமட்டில் நாம் கிறிஸ்துவோடு மரித்தவர்களாகவும், அவரோடு உயிர்த்தெழுந்தவர்களாகவும் இருக்கிறோம். இது ஞானஸ்நானத்தில் படவுருவாய்க் காணப்படுகிறது. கிறிஸ்துவோடு நாம் அடைந்த மரணம், ஆதாமின் மக்கள் என்னும் நமது வரலாற்றை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது. நமது பழைய மனிதன் சீர்திருத்தம் அடையவேண்டும் என்பது தேவனுடைய தீர்ப்பல்ல. மரணமே அதற்கு அவர் அளித்த தீர்ப்பாகும். இப்பொழுது புதிதான ஜீவனுள்ளவர்களாய் நாம் நடக்கும்படி உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறோம். நம்மீது செலுத்தப்பட்ட பாவத்தின் கொடுங்கோல் ஆட்சி தகர்த்தெறியப்பட்டுவிட்டது. ஏனெனில் இறந்துபோன ஒருவன் மீது அது ஆதிக்கம் செலுத்த முடியாது. இப்பொழுது தேவனுக்கென்று வாழ நாம் விடுதலை பெற்றிருக்கிறோம்.

**6:11** நம்முடைய கிறிஸ்துவுக்குள்ளான *தகுதிநிலை சார்ந்த* உண்மையை பவுல் இது காறும் விளக்கினார். இப்பொழுது நமது நடைமுறை வாழ்வினில் அது எங்ஙனம் ஆக்கபூர்வமாக விரிவாக்கம் அடைகிறது என்பதைக் கூற விழைகிறார். நாம் நம்மைப் **பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ள வேண்டும்.**

**நம்மைக் குறித்து தேவன் கூறுவது உண்மையென்**று ஏற்றுக்கொண்டவர்களாக, அந்த உண்மையின் வெளிச்சத்தில் செயல்படுவதே இங்கு எண்ணிக்கொள்ளுதல் என்பதன் பொருளாகும். இதைக்குறித்து ரூத் பாக்ஸன் என்பார் எழுதுகிறார்:

> ரோமர் 6:6 – ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற கூற்றை நம்புவதும், ஒருவருடைய தனிப்பட்ட இரட்சிப்பில் அக்கூற்று உண்மையாக விளங்குகிறது என்று அறிவதுமே இதன் பொருளாகும். மிகக் குறிப்பிடத்தக்க வகையில் அந்த வசனத்தை விசுவாசிக்கும் செயலைச் செய்ய வேண்டுமென்று இது எதிர்பார்க்கிறது. பழைய மனிதனைக் குறித்த மாற்றமில்லாத எண்ணத்தை அந்த விசுவாசம் நமக்குள் உருவாக்குகிறது. அதன்படி அந்தப் பழைய மனிதனை தேவன் சிலுவையில் கிறிஸ்துவுடன் அறையுண்டவனாகக் காண்கிறார், அதுபோல நாமும் காண்கிறோம். கிருபை அந்த மனிதனை எந்த இடத்தில் வைத்திருக்கிறதோ, அதே இடத்தில் அவன் தொடர்ந்து இருக்கும்படியாக அந்த விசுவாசம் இயங்குகிறது. அந்தப் பழைய மனிதனாகிய "நான்" வாழ்வதற்கு எவ்விதத்திலும் தகுதி அற்றவன் என்றும், நம்மீது அந்தப் பழைய மனிதன் செலுத்திய ஆதிக்கம் யாவும் களையப்பட்டுவிட்டன என்றும், அவன் தேவனால் ஆக்கினைக்கு உட்படுத்தப்பட்டு தீர்க்கப்பட்டுவிட்டான் என்றும் நமது இருதயங்களில்

> உளமார நாம் ஒப்புதல் அளித்துவிட்டோம் என்பதே இதன் பொருள். ஆகவே இந்த உண்மையில் நாம் ஈடுபாடு கொள்ள வலியுறுத்தப்படுகிறோம். பழைய மனிதன் சிலுவையில் அறையுண்டுவிட்டான் என்று எண்ணிக்கொள்வதே நடைமுறைப் பரிசுத்த வாழ்க்கைக்கு முதல்படி ஆகும்.[19]

சோதனை வருங்கால் ஒரு இறந்துபோன மனிதனைப்போல நாம் நடந்து கொள்வோமானால், **பாவத்திற்கு மரித்தவர்களாக** நம்மைக் குறித்து **எண்ணிக்கொள்கிறோம்** என்பது அதன் பொருளாகும். அகஸ்டின் என்பவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்னர் அவருடைய காமக்கிழத்தியாக விளங்கிய பெண், ஒருநாள் அவரைக் கண்டு அவரிடத்தில் நெருங்கிவந் தாள். ஆனால் அவரோ அவளை விட்டு விலகி வேகமாகத் திரும்பிச் சென்றார். அவளோ, "அகஸ்டின் நான்தான், நான் தான்!" என்று கூவிய வண்ணம் அவரைத் தொடர்ந் தாள். அகஸ்டின் தன் தலையைச் சற்று திருப்பி, "ஆம் எனக்குத் தெரியும், ஆனால் இப்பொழுது நான் அவனல்ல" என்று சொல்லி நடையைத் துரிதப்படுத்தினார்.[20] இப்பொழுது நான் **பாவத்திற்கு மரித்து, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறேன்** என்பதே அவர் கூறிய விடையின் பொருளாகும். இறந்து போன மனிதனுக்கும் ஒழுக்கக்கேடு, புறங்கூறுதல், பொய்சொல்லுதல், ஏமாற்றுதல் போன்ற ஏதொரு பாவத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

இப்பொழுது நாம் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக** இருக்கிறோம். நாம் பரிசுத்தத்திற்கும், ஆராதனைக்கும், ஜெபத்திற்கும், ஊழியத்திற்கும் மற்றும் கனிகொடுத்தலுக்குமென்று அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதே இதன் பொருளாகும்.

**6:12** நமது பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டுவிட்டான், நம்மீது கொடுங்கோல் ஆட்சி புரிந்த பாவம் அரியணையிலிருந்து தள்ளப்பட்டுவிட்டது, பாவத்தில் சிறையுண்டு உதவியற்ற நிலையிலிருந்த நாம் இப்பொழுது அந்நிலையில் இல்லை, இவை யாவற்றையும் 6:6 -ஆம் வசனத்தில் கண்டோம். கிறிஸ்துவுக்குள்ளான தகுதி நிலையின் அடிப்படையில் யாராக இருக்கிறோம் என்பதை அறிந்த நாம், அதற்கு ஏற்றவண்ணம் நமது நடைமுறை வாழ்க்கையையும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்று இங்கே அறிவுறுத்தப்பட்டுள்ளோம். நம்முடைய **சாவுக்கேதுவான சரீரங்களில்** பொல்லாங்கான இச்சைகளுக்குக் கீழ்ப்படிந்து **பாவம் ஆளுகிறதற்கு** இடம் கொடுக்கக்கூடாது. கல்வாரியில் அடைந்த மரணத்தின் மூலமாக பாவத்தின் ஆளுகை முடிவடைந்துவிட்டது. நாம் அதனை இப்பொழுது ஆக்கபூர்வமாகச் செயல்படுத்தவேண்டும். அதற்கு நமது ஒத்துழைப்பு அவசியம். தேவனால் மட்டுமே நம்மைப் பரிசுத்தமாக ஆக்கமுடியும்; ஆயினும் நம்முடைய விருப்பத்தோடு கூடிய ஈடுபாடு இன்றி அதனை அவரால் செய்ய முடியாது.

**6:13** இது நம்மை மூன்றாவது முக்கியமான **ஒப்புக்கொடுத்தல்** என்னும் சொல்லினிடத்திற்குக் கொண்டுவருகிறது. நம்முடைய **அவயவங்களைப் பாவத்திற்கு ஒப்புக்கொடுக்கக் கூடாது.** அவற்றைப் பாவத்தைச் செய்யும் ஆயுதங்களாகவோ கருவிகளாகவோ நாம் பயன்படுத்தலாகாது. நம்முடைய அவயவங்களை தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள்ளாகத் திசைதிருப்பி, நீதியைச் செய்யும்படியாக அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். நாம் மரணத்திலிருந்து ஜீவனுள்ளவர்களாக எழுப்பப்பட்டவர்களாமே. மேலும் புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படி 6:4 - ஆம் வசனத்தில் நாம் நினைவுபடுத்தப்பட்டுள்ளோம்.

**6:14** விசுவாசிகளாகிய நம்மைப் **பாவம்** ஏன் **மேற்கொள்ளக் கூடாது** என்பதற்கான இன்னொரு காரணம் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டுவிட்டான் என்பது முதலாவது காரணமாகும் (6:6). நாம் **நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதே** இரண்டாவது காரணமாகும்.

நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக இருக்கும் மனிதன் மீது பாவம் ஆதிக்கம் செலுத்துகிறது. அவன் என்ன செய்யவேண்டும் என்று நியாயப்பிரமாணம் சொல்லுகிறதேயொழிய, அதைச் செயலாற்றக் கூடிய வலிமையை அது தருகிறதில்லை. தடைசெய்யப்பட்டுச் செயலற்றுக் கிடக்கிற இச்சைகளைச் செய்யும்படி வீழ்ந்துபோன மனித இயல்பு தூண்டிவிடுகிறது. "தடைசெய்யப்பட்ட கனி இனிக்கும்" என்னும் பழைய கதையே இது.

கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிற மனிதனைப் **பாவம் மேற்கொள்ளமாட்டாது.** விசுவாசியானவன் பாவத்திற்கு இறந்துவிட்டான். தூய வாழ்க்கைக்குத் தேவையான வல்லமையாக, உள்ளுறையும் பரிசுத்த ஆவியானவரை அவன் பெற்றிருக்கிறான். தண்டனையைக் குறித்த அச்சத்தினா

லன்றி, இரட்சகரின் அன்பின் நிமித்தம் அவன் பரிசுத்தமாய் வாழத் தூண்டுதல் அடைகிறான். கிருபை ஒன்று மட்டுமே உண்மையாகப் பரிசுத் தத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கிறது. "அடக்குமுறை ஒருவனைப் பாவத்திலிருந்து விடுதலை செய்வதில்லை. தெய்வீகத் தூண்டு தலே அவனைப் பாவத்திலிருந்து விடுவிக்கிறது. சீனாய் மலை அல்ல, கல்வாரி மலையே பரிசுத்த வான்களை உருவாக்குகிறது" என்ற டென்னி என்பார் கூறியுள்ளார்.[21]

**6:15 கிருபைக்குப்** பயப்படுகிறவர்கள் மட்டுமே, அது பாவம் செய்வதற்குச் சுதந்தரம் அளிக்கிறது என்று உறுதியாய்க் கருதுகிறார்கள். இந்தக் கேள்வியை எழுப்பி, அதற்கு நேருக்கு நேராய் எதிர்நின்று, அதனை உறுதியாய் பவுல் மறுக் கிறார். நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து விடு தலையாக்கப்பட்டிருக்கிறோம். ஆயினும் நாம் கட்டுப்பாடு அற்றவர்களல்ல. கர்த்தருக்கு எதிரா கப் பாவம் செய்வதற்கல்ல, அவருக்கு ஊழியம் செய்வதற்கே நாம் விடுதலை பெற்றிருக்கிறோம்; இதுவே **கிருபை** என்பதன் பொருளாகும்.

"தொடர்ந்து நாம் பாவத்தைச் செய்யலாமா?" என்பதே 6:1 - ஆம் வசனத்தில் கண்ட கேள்வி யாகும். "கொஞ்சம் **பாவம் செய்யலாமா?**" என்பதே இங்கு கேட்கப்படும் கேள்வி. "**கூடாதே**!" என்னும் அதிர்ச்சியளிக்கிற விடையே இரண்டு கேள்விகளுக்குமான பதிலாகும். எந்த ஒரு பாவத் தையும் தேவனால் பொறுத்துக்கொள்ள முடியாது.

**6:16** ஒருவரை நாம் எஜமானாகக் கருதி அவருக்கு நம்மை ஒப்புவிக்கும் போது, அவருக்கு அடிமைகளாகிவிடுகிறோம் என்பது ஓர் எளிய உண்மையாகும். அதுபோல, நம்மை நாம் பாவத் திற்கு விற்றுவிட்டால், பாவத்திற்கு **அடிமை களாகி** விடுகிறோம்; அந்த வழியின் முடிவில் நித்திய **மரணம்** காத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு மாறாக, தேவனுக்குக் கீழ்ப்படிவதை நாம் தெரிந்துகொண்டோமானால், அதன் விளை வாகப் பரிசுத்த வாழ்க்கையைப் பெறுவோம். குற்ற உணர்வு, அச்சம் மற்றும் மனவேதனை ஆகியவற்றால் பாவத்தின் அடிமைகள் கட்டுண்டு கிடக்கிறார்கள். ஆனால் தேவனுடைய ஊழியக் காரரோ தங்களுடைய இயல்பு எதை விரும்பு கிறதோ அதைச் செய்யும்படி விடுதலை பெற்றி ருக்கிறார்கள். நீங்கள் விடுதலை பெற்றவராய் வாழச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருக்கும்போது, அடிமையாக விளங்க வேண்டுவதென்ன?

**6:17** "ஒரு காலத்தில் நீங்கள் பாவத்திற்கு ஊழியக்காரராய் இருந்தீர்கள். ஆனால் கிறிஸ்தவ உபதேசங்கள் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட போது அவற்றின் செயல் விளைவுகளுக்கு உண் மையான முறையில் நீங்கள் இடம் கொடுத்தீர் கள்" (JBP). தங்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட கிருபை யின் நற்செய்திக்கு, இம்மடலில் பவுல் எழுதியி ருக்கிற **உபதேசங்கள்** உட்பட ரோமாபுரிக் கிறிஸ்தவர்கள் தங்களைச் சமர்ப்பித்தார்கள்.

**6:18** சரியான உபதேசம் கடமையைச் சரியா னபடி செய்ய வழிநடத்த வேண்டும். பாவத்தி னின்று விடுதலையாக்கப்பட்ட அவர்கள், அந்த உண்மைக்கு ஏற்றபடி **நீதிக்கு அடிமைகளா னார்கள். பாவத்தினின்று விடுதலையாக்கப் பட்ட** என்னும் சொற்றொடர், அவர்கள் அதன் பிறகு பாவ சுபாவம் அற்றவர்களாக இருந்தார்கள் என்னும் பொருளைத் தருவதில்லை. அவர்கள் அதற்குப் பின்னர் எந்தப் பாவச்செயலையும் செய்யவில்லை என்பதும் அதன் பொருளன்று. அவர்களுடைய வாழ்வில் பாவமானது ஆதிக்கம் செலுத்தும் நிலையிலிருந்து இப்பொழுது விடு தலை பெற்றுள்ளார்கள் என்பதையே இவ்வசனத் தின் பின்னணி நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

**6:19** நீதியின் அடிமைகளைக் குறித்து அப் போஸ்தலன் பேசினார். ஆனாலும், நீதியுள்ள வராய் வாழ்கிறவர்கள் உண்மையாக அடிமைத் தனத்தில் வாழ்கிறதில்லை என்பதை அவர் உணர்கிறார். "மனிதர் முறையில் பேசினாலன்றி, நடைமுறை நீதி அடிமைத்தனமாகாது."[22] பாவத் தைத் தங்களுடைய வாழ்க்கையில் கொண்டிருக் கிறவர்கள் பாவத்துக்கு அடிமைகளாயிருக் கிறார்கள். ஆனால் குமாரனால் விடுதலை பெற்ற வர்கள் மெய்யாகவே விடுதலை பெற்றிருக்கிறார் கள் (யோவான் 8:34, 36).

**அடிமைகள்** மற்றும் எஜமானன் ஆகியோருக் கிடையில் இருக்கின்ற உறவை, உவமையாகப் பயன்படுத்தி **மனுஷர் பேசுகிற பிரகாரமாய்** பவுல் சத்தியத்தை விளக்குகிறார். அவர்களுடைய **மாம்ச பலவீனத்தினிமித்தம்** அனுதின வாழ்க்கை யில் காணப்படுகிற நிகழ்ச்சிகளை அவர் பயன் படுத்துகிறார்.தெளிவற்ற சொற்களைப் பயன் படுத்திச் சத்தியங்கள் சொல்லப்படுமாயின், அவர் களது அறிவாற்றல் ஆவிக்குரிய நிலை ஆகிய வற்றின் குறைபாட்டினால், அவர்களால் புரிந்து கொள்ள இயலாது என்று கருதி அவர் இவ்வாறு செய்கிறார். அவ்வப்போது சத்தியங்கள் எடுத்துக் காட்டுகளால் விளக்கப்பட வேண்டியதாயுள்ளன.

அவர்களுடைய மனமாற்றத்திற்கு முன்னர் விசுவாசிகள் தங்களுடைய சரீரங்களை எல்லா விதத **அசுத்தத்திற்கும்** அதாவது ஒன்றன்பின் ஒன்றாக எல்லாப் பொல்லாங்குகளுக்கும் **அடிமைகளாக** ஒப்புக்கொடுத்திருந்தனர். இப்பொழுதோ அவர்களுடைய வாழ்க்கை மெய்யான பரிசுத்தமாய் இருக்கும்படி அதே சரீரங்களை **நீதிக்கு அடிமைகளாக** ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

**6:20 பாவத்திற்கு** அவர்கள் **அடிமைகளாக இருந்த காலத்தில்** அவர்கள் அறிந்திருந்த ஒரே விடுதலை, **நீதியிலிருந்து** நீங்கின நிலைமை மட்டுமேயாகும். எல்லாவிதப் பொல்லாங்களினாலும் கட்டப்பட்டு, எல்லாவித நன்மைகளுக்கும் நீங்கி இருக்கக்கூடிய நிலைமை மிகவும் கேடுற்ற நிலையாகும்!

**6:21** அவர்கள் இரட்சிக்கப்படாதிருந்த காலத்தில் அவர்களுடைய செயல்கள் எவையெவை என்று பட்டியலிடும்படியாகப் பவுல் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறார் (நமக்கும் அது ஓர் அறைகூவலாயிருக்கிறது). அச்செயல்களின் பலன்கள் இப்பொழுதோ **வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களாகும்**. மார்கஸ் ரெய்ன்.'.போர்ட் என்பார் அவ்விதப் பட்டியல் ஒன்றை எழுதியுள்ளார். அது கீழ்வருமாறு:

> 1. திறமைகள் பாழாக்கப்படுகின்றன 2. பாசங்கள் வீழ்த்தப்படுகின்றன 3. காலங்கள் வீணாக்கப்படுகின்றன 4. செல்வாக்குகள் தவறாகப் பயன் படுத்தப்படுகின்றன 5. உற்ற நண்பர்களுக்குத் தீங்கிழைக்கப்படுகின்றன 6. சிறந்த உரிமைகள் மீறப்படுகின்றன 7. அன்பு புண்படுத்தப்படுகிறது. குறிப்பாக தேவ அன்பு புண்படுத்தப்படுகிறது. இவை யாவற்றையும் ஒரே சொல்லால் தொகுத்துரைத்தால் – "வெட்கக் கேடு"[23]

**அவற்றின் முடிவு மரணமே**. "ஒவ்வொரு பாவமும் மனிதனை மரணத்தை நோக்கி வழி நடத்துகிறது. அதில் அவன் தொடர்ந்து நிலை நிற்பானாயின் மரணமே அதன் இலக்கும் கனியுமாயிருந்து அதிலேயே முடிவடைகிறது" என்று A. T. பியர்சன் என்பார் கூறியுள்ளார்.[24]

**6:22** மனமாற்றம் ஒரு மனிதனின் நிலைமையை முற்றிலும் மாற்றம் பெறச் செய்கிறது. அவனுடைய எஜமானனாயிருந்த பாவத்தினின்று அவன் இப்பொழுது விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமையாக விளங்க அவன் விருப்பங்கொள்கிறான். அதனுடைய விளைவோ இக்காலத்தில் தூய்மையான வாழ்க்கையும், பயணத்தின் **முடிவில் நித்திய ஜீவனுமாகும்.** விசுவாசியானவன் இப்பொழுதே **நித்திய ஜீவனை** உடையவனாயிருக்கிறான் என்பது உண்மையே. ஆனாலும் இந்த வசனம் அதனுடைய நிறைவைக் குறிக்கிறது. உயிர்த்தெழுந்த மகிமையின் சரீரத்தையும் அது குறிக்கிறது.

**6:23** கீழ்க்கண்ட தெளிவான முரண்பாடுகளைக் கூறி தனது பொருளை அப்போஸ்தலன் தொகுத்துரைக்கிறார்:

இரண்டு எஜமானர்கள்

- **பாவம்** மற்றும் **தேவன்**

இரண்டு வழிமுறைகள்

- **சம்பளம்** மற்றும் **கிருபைவரம்**

இரண்டு பின்விளைவுகள்

- **மரணம்** மற்றும் **நித்தியஜீவன்**

ஒரு மனிதரில் நித்திய ஜீவன் உண்டாயிருக்கிறது. அவரே **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. கிறிஸ்துவுக்குள்ளாக** இருக்கும் யாவரும் **நித்திய ஜீவனை** உடையவராக இருக்கின்றனர். இது எவ்வளவு எளிமையாயிருக்கிறது!

### ஐ. விசுவாசியின் வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்தின் இடம் [அதி. 7]

தவிர்க்க இயலாத கேள்வி ஒன்று எழுவதை அப்போஸ்தலன் இப்பொழுது எதிர்நோக்குகிறார்: *கிறிஸ்தவனுக்கும் நியாயப்பிரமாணத்திற்கும் இடையே உள்ள உறவு யாது?* யூத விசுவாசிகளைத் தன்னுடைய மனதில் நினைத்தவராகவே பவுல் இக்கேள்விக்கு விடை பகர்கிறார். ஏனெனில் இஸ்ரவேலருக்கே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. எனினும் நீதிமான்களாக ஆக்கப்பட்ட பின்னர் தங்களுடைய நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான விதியாக நியாயப்பிரமாணத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று மதியீனமாகக் கருதுகிற புறவினத்தவருக்கும் இங்கு தரப்படும் பதில் பொருந்தும்.

தேவனுடைய பிள்ளையாக இருக்கும் ஒருவன் மீது பாவ இயல்பு செலுத்தி வந்த கொடுங்கோல் ஆட்சி, மரணத்தின் மூலமாக முடிவுற்றது என 6-ஆவது அதிகாரத்தில் கற்றோம். அது போலவே நியாயப்பிரமாணத்தின் ஆளுகைக்குக் கீழாக இருந்தவர்களிலும், அந்த மரணம் முந்தின ஆளுகையை முடிவு கட்டிவிட்டது என்று இப்பொழுது காண இருக்கிறோம்.

**7:1** இந்த வசனம், "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறீர்கள்" என்னும் 6:14 -ஆம் வசனத்தோடு இணைந்த ஒன்றாகும். அல்லது **ஒரு மனிதன் உயிரோடு இருக்கும்** வரைக்குமே **நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்ற** உண்மையை நீங்கள் அறியாமல் இருக்கிறீர்களா? நியாயப்பிரமாணத்தின் அடிப்படைக் கொள்கையை அறிந்த மக்களோடு இப்பொழுது பவுல் உரையாடுகிறார். இறந்துபோன ஒரு மனிதனிடத்தில் **நியாயப்பிரமாணம்** சொல்லுவதற்கு ஒன்றுமில்லை என்பதை அவர்கள் அறிவார்கள்.

**7:2** திருமண உடன்படிக்கையை எவ்வாறு மரணமானது முறிவடையச் செய்கிறது என்பதைக் கூறி இதனை விளக்குகிறார். **ஒரு ஸ்திரீ** தன்னுடைய **புருஷன் உயிரோடிருக்குமளவும்** திருமணத்தைப் பற்றிய **நியாயப்பிரமாணத்தில் அவனுக்கு உட்பட்டிருக்கிறாள்**. அவன் **மரிப்பானானால்** அவள் அந்தப் **பிரமாணத்திலிருந்து விடுதலையாகிறாள்**.

**7:3** தன்னுடைய **புருஷன் உயிரோடிருக்கையில்** ஒரு பெண் **வேறொரு மனிதனை விவாகம் பண்ணினால்**, அவள் விபசாரம் செய்த குற்றத்திற்கு ஆளாகிறாள். என்றாலும் அவளுடைய புருஷன் மரித்த பின்பு வேறொருவனை மீண்டும் திருமணம் செய்துகொள்வதற்கு அவள் **விடுதலை பெற்றிருக்கிறாள்**. அது ஒரு தவறான செயல் என்று கருதப்படவும் மாட்டாது, குற்ற உணர்வும் ஏற்படாது.

**7:4** இந்த எடுத்துக்காட்டினைப் பயன்படுத்தி விளக்க முற்படுங்கால், சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு விவரத்தையும் எழுதப்பட்டிருக்கிறபடியே எடுத்துக்கொள்ளக்கூடாது. உதாரணமாக இங்கு காணும் கணவன் மனைவி ஆகிய இருவரில் ஒருவரும் நியாயப்பிரமாணத்தைக் **குறிப்பதில்லை**. கணவன் மனைவிக்குள்ளான உறவு எவ்வாறு அவர்களில் ஒருவரது மரணத்தினால் முறிவடைகிறதோ அதுபோல ஒரு விசுவாசியானவன் கிறிஸ்துவோடு மரித்த காரணத்தினால் அவ்விசுவாசியின் மீது நியாயப்பிரமாணத்திற்கு இருந்த ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிடுகிறது.

நியாயப்பிரமாணம் இறந்துவிட்டதாகப் பவுல் இங்கு **சொல்லவில்லை** என்பது குறிப்பிடத்தக்கது. பாவத்தைக் கண்டித்துணர்த்தும் ஊழியத்தை அது முறையாகச் செய்துகொண்டிருக்கிறது. கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு முன்னர் யூதர்களாக இருந்தவர்களை மனதிற்கொண்டே இந்தப்பகுதியில் "நாம்" என்னும் சொல்லை அவர் பயன்படுத்துகிறார்.

நாம் **கிறிஸ்துவின் சரீரத்தினாலே, நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களாக** ஆக்கப்பட்டிருக்கிறோம். **சரீரத்தினாலே** என்னும் சொல் கிறிஸ்து தம்மை மரணத்திற்கு ஒப்புவித்ததைக் குறிக்கிறது. இப்பொழுது நாம் நியாயப்பிரமாணத்தோடு இணைந்தவர்கள் அல்லர், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். அதாவது மரணத்தினாலே ஒரு திருமண உறவு முறிவடைந்து போயிற்று, இன்னொரு திருமண உறவு உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்பொது **நாம் நியாயப்பிரமாணத்திற்கு** விடுதலையாகி, **தேவனுக்கென்று கனிகொடுக்கக் கூடியவர்களாக** இருக்கிறோம்.

**7:5** இங்கே **கனிகள்** என்று குறிப்பிடப்பட்டவை, **மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில்** நாம் உண்டுபண்ணினவற்றை நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகிறது. **"மாம்சத்திற்கு உட்பட்டிருந்த"** என்னும் சொற்றொடர் "சரீரத்தில்" என்னும் பொருளில் சொல்லப்படவில்லை. **மாம்சத்திற்கு உட்பட்டிருந்த** என்னும் கூற்று, நாம் இரட்சிப்படைவதற்கு முன்னர் இருந்த நிலையைக் குறிக்கிறது. அப்பொழுது நமது மாம்சமே தேவனுக்கு முன்பாக நாம் கொண்டிருந்த நிலைக்கு ஆதாரமாயிருந்தது. நாம் எத்தகையவராக இருந்தோமோ அந்த நிலையையும், நாம் என்னென்ன செயல்களைச் செய்தோமோ அவற்றையுமே, நம்மை தேவன் ஏற்றுக்கொள்வதற்கு ஆதாரங்களாகச் சார்ந்திருந்தோம். **மாம்சத்திற்கு உட்பட்டிருந்த** நிலைமை, "கிறிஸ்துவுக்குள்ளான" நிலைமைக்கு எதிர்மாறானது ஆகும்.

நம்முடைய மனந்திரும்புதலுக்கு முன்னர் **நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகளாலே** ஆளப்பட்டிருந்தோம். அந்தப் பாவங்களுக்குத் தொடக்க காரணம் நியாயப்பிரமாணம் அன்று. ஆனால் அப்பாவச்செயல்களின் பெயர்களை எடுத்துரைத்து, அவற்றைத் தடை செய்து பின்னர் அவற்றைச் *செய்தவற்கான* பேராவலை அது தூண்டிவிடுகிறது!

இந்தப் பாவ இச்சைகள் நம்முடைய சரீரத்தின் அவயவங்களில் வெளிப்பட்டு, சோதனைகளுக்கு நாம் இடம் கொடுத்தபோது, மரணத்தை விளைவிக்கும் நச்சுக் கனிகளை உண்டுபண்ணினோம். இவற்றை மாம்சத்தின் கிரியைகள் என அப்போஸ்தலன் வேறொரு இடத்தில் கூறுகிறார்: "விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,

விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களி யாட்டுகள் முதலானவைகளே" (கலா. 5:19-21).

**7:6** நாம் மனமாற்றம் பெற்ற தருணத்திலே நடந்த பல வியத்தகு நிகழ்ச்சிகளில் ஒன்று **நியா யப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்ட தாகும்**. நாம் கிறிஸ்துவோடு மரித்ததினால் ஏற் பட்ட விளைவுகளில் இதுவும் ஒன்று. அவர் நம்மு டைய பிரதிநிதியாக மரணம் அடைந்ததால் நாமும் அவரோடு **மரித்தோம்**. நியாயப்பிர மாணத்தின் பயங்கரமான தண்டனையைத் தமது மரணத்தின் மூலமாகச் செலுத்தி, அதன் கோரிக் கைகள் அனைத்தையும் அவர் நிறைவேற்றி விட்டார். ஆகவே நியாயப்பிரமாணத்தினின்றும், தவிர்க்க இயலாத அதனுடைய சாபத்தினின்றும் நாம் விடுதலை பெற்றிருக்கிறோம். ஒரு குற்றத் திற்கு இரண்டு தண்டனைகள் தரப்படமாட்டா:

> ஒருமுறை பிணையாள் குருதியைச் சிந்திட
> மனநிறை வடைந்த நீதியின் இறைவன்
> மறுமுறை என்னிடம் ஒறுப்பினைக் கேளார்!
> அகஸ்டஸ் ஆ. டாப்லேடி

**பழமையான எழுத்தின்படியல்ல, புதுமை யான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக** நாம் இப்பொழுது விடுதலை பெற்றிருக்கிறோம். அச்சத்தினால் அல்ல, அன்பினாலே ஊழியம் செய்யும்படி நாம் ஊக்கம் பெற்றிருக்கிறோம். அது அடிமைத்தனத்தின் ஊழியம் அன்று, விடுதலையின் ஊழியமாகும். விதிமுறைகளை யும் சமயச் சடங்குகளையும் நுணுக்கமாக ஒரு அடிமையின் இயல்போடு எல்லாவற்றையும் கடைப் பிடிக்க வேண்டுமென்ற கேள்விக்கு இடமே யில்லை, மாறாக தேவனுடைய மகிமைக்காக வும் மற்றவர்களுடைய நன்மைக்காகவும் நமக் குள்ளாக எழும் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தோடு செயலாற்றுகிறவர்களாக இருக்கிறோம்.

**7:7** மேற்கூறிய யாவற்றையும் நோக்கும்போது பவுல் நியாயப்பிரமாணத்தைக் **குறை கூறுவதா கத்** தோன்றுகிறது. விசுவாசிகள் யாவரும் பாவத் திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் மரித்துவிட் டார்கள் என்று அவர் கூறியிருப்பதால் நியாயப்பிர மாணம் தீமையானது என்ற எண்ணம் உருவா யிருக்கக் கூடும். ஆயின் அதில் எவ்வித உண்மையுமில்லை.

7 முதல் 13 -ஆம் வசனம் வரைக்கும் தான் இரட்சிக்கப்படுவதற்கு முன்னர் தன்னுடைய வாழ்க்கையில் நியாயப்பிரமாணம் ஆற்றிய நற் பணியைப் பற்றி பவுல் விளக்குகிறார். நியாயப் பிரமாணமானது தன்னில்தானே பாவமுடையது இல்லையென்றும், ஒரு மனிதனிடத்தில் **பாவம் உள்ளது என்பதை வெளிப்படுத்துவது** மட்டுமே அதன் ஊழியம் என்றும் அவர் இங்கே வலியுறுத்து கிறார். அவருடைய இருதயம் எவ்வளவாக இழிந்த நிலையில் இருந்தது என்பதை அந்த நியாயப்பிரமாணமே இடித்துரைத்துக் குற்றப் படுத்தியது. மற்ற மனிதர்களோடு ஒப்பிட்டுப்பார்க் கையில் அவர் நன்கு மதிக்கத்தக்கவராகக் காணப்பட்டார். ஆனால் தேவனுடைய நியாயப் பிரமாணமானது தனது கோரிக்கைகளால் வலி மையோடு எழுந்து அவரைக் கண்டித்துணர்த்திய போது, அவர் மறுமொழி கூற இயலாதபடி குற்றந் தீர்க்கப்பட்டார்.

**இச்சியாதிருப்பாயாக** என்னும் பத்தாவது கற் பனையே அவருக்குப் பாவத்தை வெளிப்படுத் திற்று. இச்சையானது மனதில் உருவாகிறது. மிக வும் அருவருக்கத் தக்கதும் ஒழுக்கக் கேடானது மான பாவங்களை பவுல் செய்திராவிடினும் அவரு டைய சிந்தனை வாழ்க்கை களங்கமடைந்திருந் தது. கெட்ட செயல்களைப் போன்றே கெட்ட சிந்த னையும் பாவம் நிறைந்தது என்று இப்பொழுது அவர் அறிந்துகொண்டார். அவர் மாசுபடிந்த சிந்தனை வாழ்க்கையை உடையவராயிருந்தார். ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவருடைய வெளி யரங்கமான வாழ்க்கை அவ்வளவு குற்றமற்றதாக இருந்ததெனினும் அவருடைய உள்ளார்ந்த வாழ்க்கை வெறுக்கத்தக்கவற்றின் இருப்பிடமாக இருந்தது.

**7:8 பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது.** இச்சை என்பது தகாதவற்றின் மீது கொள்கிற ஆசையைக் குறிக்கிறது. எல்லாவித தீய ஆசைகளையும் நியாயப்பிரமாணமானது தடை செய்கிறபோது, மனிதனுடைய ஒழுக்கங் கெட்ட இயல்பு அச்செயல்களைச் செய்யும்படி யாக கொழுந்துவிட்டு எரிகிறது. எடுத்துக்காட் டாக, "எல்லாவித காமவிகார நினைவுகளையும் உங்களுடைய உள்ளத்தினின்று அகற்றிவிட வேண்டும். சிற்றின்ப அவாவூட்டுகிற கற்பனையுல கில் உங்கள் காலத்தைக் கழித்திட வேண்டாம்" என்பதே நியாயப்பிரமாணம் சொல்லுவதாகும். அதாவது கீழ்த்தரமானதும் ஒழுக்கக் கேடானதும் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுகிறதுமான சிந் தனை வாழ்க்கையை நியாயப்பிரமாணம் தடை

செய்கிறது. ஆயினும் இப்பாவ சிந்தனையை வெற்றிகொள்ளத் தேவையான வலிமையை அது தருகிறதில்லை. ஆகையால் நியாயப்பிரமாணத்துக்குக் கீழாக இருக்கும் மனிதர்கள், காம விகாரக் கற்பனையுலகில் அதிக அளவில் ஈடுபட்டவர்களாக இருப்பதே அதன் விளைவாக இருக்கிறது. ஒரு செயலானது தடை செய்யப்படும் வேளையில் வீழ்ந்துபோன மனித இயல்பு அதைச் செய்தவற்கு அதிக ஆவலுடையதாக இருக்கிறது என்பதை அவர்கள் உணர்கின்றார்கள். "திருட்டுத் தண்ணீர் தித்திக்கும், அந்தரத்தில் புசிக்கும் அப்பம் இன்பமாயிருக்கும்" (நீதி. 9:17).

ஒப்பிட்டுப் பார்க்கும்போது, **நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்கிறது** என்றே கூறவேண்டும். பாவ இயல்பானது உறங்குகிற நாய்க்கு ஒப்பாக இருக்கிறது. நியாயப்பிரமாணம் அதனருகே வந்து, "செய்யாதே" என்று கூறியவுடன் அந்த நாய் சீறி எழுந்து தடை செய்யப்பட்டதை மிகுதியாகச் செய்கிறது.

**7:9** நியாயப்பிரமாணமானது கண்டித்து, குற்றப்படுத்துவதற்கு முன்னர் பவுல் **ஜீவனுள்ளவராயிருந்தார்**. அதாவது அவருடைய பாவ இயல்பு நியாயப்பிரமாணத்தினால் உணர்த்தப்படுவதற்கு முன்னர், ஒப்பிடுகையில் செயலற்ற தாயிருந்தது. மேலும் தன் இருதயம் அக்கிரமத்தினால் நிறைந்திருக்கிறது என்பதை அறியாமல் அவர் பேருவகையுடன் இருந்தார்.

**கற்பனை வந்தபோது** - அதாவது, அவரைக் குற்றஞ்சாட்டி வீழ்த்தும் வண்ணம் அந்தக் கற்பனை வந்தபோது அவருடைய பாவ இயல்பு கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. அக் கற்பனைக்குக் கீழ்ப்படிய அவர் முயற்சி செய்யச் செய்ய, பெருந்தோல்வியையே கண்டார். தன்னுடைய சொந்த குணவியல்பினாலும், முயற்சியினாலும் இரட்சிப்பை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கைக்கு அவர் **மரித்தவரானார்**. தான் இயல்பாகவே நற்குணம் படைத்தவர் என்ற எண்ணத்திற்கு அவர் **மரித்தவரானார்.** நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் வாயிலாக, தான் நீதிமானாக முடியும் என்ற எண்ணத்திற்கும் அவர் **மரித்தவரானார்**.

**7:10 ஜீவனுக்கு ஏதுவான கற்பனையே**, உண்மையில் தனக்கு **மரணத்தை** உண்டாக்கும்படி மாறிப்போவதை அவர் கண்டறிந்தார். கற்பனையாது **ஜீவனை** அடைவதற்கு ஏதுவாக இருக்கிறது என்று அவர் கூறுவதன் பொருள் என்ன? லேவியராகமம் 18:5 -ஆம் வசனத்தை இது பின்னோக்கிப் பார்க்கச் செய்கிறது, அங்கே, "ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான், நான் கர்த்தர்" என்று தேவன் கூறினார். *குறைபாடற்ற நிலையில்* நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறவர்களுக்கு, அது ஜீவனைத் தருவதாக வாக்குறுதி அளித்தது. "வேலியைத் தாண்டி கூண்டின் அருகில் வராதீர்கள்" என்று சிங்கம் அடைக்கப்பட்டிருக்கிற கூண்டிற்கு வெளியே அறிவிப்புப் பலகை கூறுகிறது. அதற்குக் கீழ்படிந்தால் அந்தக் கட்டளை வாழ்வைத் தரும். அதற்குக் கீழ்ப்படியாமல் சிங்கத்தைக் கொஞ்சும்படி அதனருகே செல்லுகிற குழந்தை மரணத்தையே சந்திக்கும்.

**7:11** நியாயப்பிரமாணத்தைக் குற்றம் சுமத்தக் கூடாது என்று பவுல் இங்கு மீண்டும் வலியுறுத்துகிறார். நியாயப்பிரமாணம் தடைசெய்ததைச் செய்யும்படியாக உள்ளுறையும் **பாவமே** அவரைத் தூண்டிவிட்டது. தடைசெய்யப்பட்ட கனி அவ்வளவு கேடானது அல்லவென்றும், அது மகிழ்ச்சியைக் கொண்டுவரும் எனவும், பின்னர் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்றும் கூறி பாவமே அவரை வஞ்சித்தது. அவருக்கு நன்மையாகத் திகழக்கூடிய இன்பங்களை தேவன் அவருக்கு கிடைக்கவொட்டாமல் செய்திருக்கிறார் என்றும் அது ஆலோசனை தந்தது. தான் இரட்சிப்பைப் பெறுவதற்குத் தகுதிபடைத்தவர் என்றோ, தன்னால் அதனைச் சம்பாதிக்க முடியும் என்றோ அவர் கொண்டிருந்த நம்பிக்கையை, அந்தப் பாவம் **கொன்றது**.

**7:12 நியாயப்பிரமாணம்** தன்னில்தானே **பரிசுத்தமுள்ளதுதான்**. அதில் உள்ள ஒவ்வொரு **கற்பனையும் பரிசுத்தமாகவும் நீதியாகவும் நன்மையாகவும் இருக்கிறது**. நியாயப்பிரமாணத்தில் எவ்விதத் தவறும் இல்லை என்பதை நாம் தொடர்ந்து நம்முடைய சிந்தனையில் நினைவுகூர வேண்டியவர்களாயிருக்கிறோம். தம்முடைய மக்களுக்குத் தமது சித்தத்தை வெளிப்படுத்துவதற்கென அது தேவனால் கொடுக்கப்பட்டதாகையால் அது முற்றிலும் நிறைவானதாகும். நியாயப்பிரமாணத்தைச் செயலாற்ற வேண்டிய "மூலப்பொருட்களிலேயே" ஆற்றல் குறைவு காணப்படுகிறது: அதாவது ஏற்கனவே பாவிகளாக இருக்கிற மனிதர்களிடத்தில் அது கொடுக்கப்பட்டது. தங்களுடைய பாவத்தை அறிந்துகொள்வதற்கு நியாயப்பிரமாணம் அவர்

களுக்குத் தேவையாக இருந்தது. ஆனால் அதற்கும் மேலாக, அவர்கள் அடைய வேண்டிய தண்டனையிலிருந்தும் பாவத்தின் அதிகாரத்திலிருந்தும் அவர்களை மீட்க ஓர் இரட்சகர் தேவைப்பட்டார்.

**7:13** முந்தின வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இங்கு **நன்மையானது** என்னும் சொல் நியாயப்பிரமாணத்தையே குறிக்கிறது. "நியாயப்பிரமாணம் எனக்கு மரணமாயிற்றோ?" என்னும் கேள்வியை இங்கு பவுல் எழுப்புகிறார். "நியாயப்பிரமாணம் பவுலை (நம் எல்லோரையும் கூட) மரணத்துக்குள்ளாக்கின குற்றவாளி?" என்பதே அதன் பொருளாகும். அதன் விடை **அப்படியல்ல** என்பதாகும். **பாவமே** குற்றவாளியாகும். நியாயப்பிரமாணம் பாவத்தைத் தொடங்கிவைக்கவில்லை. ஆனால் பாவத்தின் எல்லாவித ஒழுக்கக்கேட்டையும் நிறைவாய்க் காட்டுவது நியாயப்பிரமாணமேயாகும். "பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது" (3:20). ஆனால் எல்லாம் அத்துடன் முடிவடைந்துவிடுகிறதில்லை. தேவனுடைய பரிசுத்த பிரமாணம் ஒரு செயலைத் தடைசெய்கிறபோது, மனிதனின் பாவ இயல்பு அதற்கு என்ன பதில் உரைக்கிறது? அதனுடைய விடையை நாம் நன்கு அறிவோம். இதுவரை செயலற்ற நிலையில் இருந்த பாவ இச்சை இப்பொழுது கொழுந்துவிட்டு எரிகிறது. ஆகவே பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவ முள்ளதாயிற்று.

பவுல் இங்கு சொல்லியிருப்பதற்கும் 7:10 - ஆம் வசனத்தில் சொல்லியிருப்பதற்கும் முரண்பாடு இருப்பதுபோல் தோன்றுகிறது. அங்கே நியாயப்பிரமாணமானது மரணத்துக்கு ஏதுவாயிற்று என்று கூறினார். இங்கே அது தனக்கு மரணமாகவில்லை என்று மறுக்கிறார். இதுவே சிக்கலுக்கான தீர்வு: ஒருபுறம் நியாயப்பிரமாணம் முந்தின இயல்பை முன்னேற்றம் அடையச் செய்ய இயலாததாக இருக்கிறது. மறுபுறம் அது பாவத்தைச் செய்வதற்குக் காரணமாக விளங்கவில்லை. எவ்வாறு ஒரு வெப்பமானி ஓரிடத்தின் வெப்ப அளவைக் காட்டுகிறதோ அதுபோல நியாயப்பிரமாணமானது பாவத்தை வெளிப்படுத்திக் காட்டக்கூடியதாக இருக்கிறது. ஆனால், வெப்பச் சீர்நிலைக் கருவி எவ்வாறு ஓரிடத்தின் வெப்பத்தின் அளவைச் சீராக வைத்திருக்கிறதோ அதுபோல அந்த நியாயப்பிரமாணம் பாவத்தைக் கட்டுப்படுத்தும் சாதனமாக செயல்படுவதில்லை.

ஆனால் நடைபெறுவது யாது? தடைசெய்யப்பட்டுள்ள எல்லாச் செயல்களையும் வீழ்ந்துபோன மனித இயல்பு தனது உள்ளுணர்வினாலே, செய்தே தீரவேண்டுமென விரும்புகிறது. இவ்வாறு ஒரு பாவியின் வாழ்க்கையில் செயலற்றுக் கிடக்கும் இச்சைகளை எழுப்பிவிட பாவமானது நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்துகிறது. அந்த மனிதன் அதனை எதிர்த்து அதிகமாக முயற்சி செய்யச் செய்ய, இன்னும் அதிகக் கேவலமான நிலைக்குச் சென்று முடிவில் தனது எல்லா நம்பிக்கையையும் இழக்கக் கூடிய நிலைமைக்குப் வந்துவிடுகிறான். இவ்வாறு, ஏதாவது முன்னேற்றம் காணமுடியும் என்று அவன் கொண்டிருந்த நம்பிக்கை ஒழிந்து போவதற்கே நியாயப்பிரமாணம் காரணமாயிருக்கிறது. மேலும் அவனுடைய முந்தின இயல்பில் இதுவரை காணாத அளவிற்குப் பாவம் பெருகியுள்ளதையே அவன் காண்கிறான்.

**7:14** இதுகாறும் தனது வாழ்க்கையில் முன்னர் நடந்த ஒரு நிகழ்ச்சியை - அதாவது, நியாயப்பிரமாணம் ஆற்றிய ஊழியத்தினாலே பாவம் கடிந்து கொள்ளப்பட்டு உண்டான மனஅதிர்ச்சிக்குரிய நெருக்கடியான நிலையில் பெற்ற அனுபவத்தைப் பற்றி அப்போஸ்தலன் விளக்கிக்கொண்டிருந்தார். அவர் மறுபடியும் பிறந்த பின்னர் அவருடைய வாழ்க்கையில் உண்டான ஓர் அனுபவத்தை இப்பொழுது நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்தி விளக்குகிறார். அதாவது இரண்டு இயல்புகளுக்கிடையிலான போராட்டத்தைப் பற்றியும், தனது சொந்த பலத்தினால் உள்ளுறையும் பாவத்தின் அதிகாரத்திலிருந்து மீட்பைப் பெற இயலாத நிலையைக் குறித்தும் அவர் பேசுகிறார். **நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது** என்று பவுல் ஒப்புக்கொள்கிறார், அது தன்னில்தானே பரிசுத்தமாயிருக்கிறது என்றும், மனிதனுக்கு ஆவிக்குரிய பயனை அளிக்க அது பொருத்தமுடையதாக இருக்கிறது என்றும் அவர் தொடர்ந்து கூறுகிறார். ஆனால் அவரோ தன்னுடைய வாழ்க்கையில், உள்ளுறையும் பாவத்தின் அதிகாரத்திலிருந்து வெற்றிபெற முடியாத நிலையில் இருக்கும் காரணத்தினால் **மாம்சத்துக்குரியவராக இருக்கிறார்** என்பதையும் உணர்கிறார். அவர் **பாவத்திற்குக் கீழாக விற்கப்பட்டவராக** இருக்கிறார். பாவத்தை எஜமானனாகக் கொண்டு அதற்கு ஓர் அடிமையைப்போல விற்கப்பட்டதாக அவர் எண்ணிக்கொள்கிறார்.

**7:15** கிறிஸ்துவினுடைய மரணத்திலும் அவருடைய உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்

பட்டுள்ள உண்மையை அறியாத ஒரு விசுவாசி யின் வாழ்க்கையில் தொடரும் போராட்டத்தைக் குறித்து அப்போஸ்தலன் இப்பகுதியில் விளக்கு கிறார். பரிசுத்தத்தை நாடி, சீனாய் மலையில் மீது ஏறுகிற அந்த மனிதனுடைய இரண்டு இயல்பு களுக்குள்ளாக நிகழும் போராட்டமே அது. ஹேரி .'.போஸ்டர் என்பார் அதனை விளக்குகிறார்:

> தன்னுடைய சொந்த ஆற்றலைக்கொண்டு பரி சுத்தத்தை அடைய முயற்சி செய்யும் ஒரு மனி தனை இங்கு காண்கிறோம். தேவனுடைய பரி சுத்தத்தையும், நீதியையும், நன்மையான கற் பனைகளையும் (வச. 12) நிறைவேற்ற தன்னு டைய எல்லா பலத்தையும் கொண்டு அவன் பேராடுகிறான். அந்தப் போராட்டத்தில் வெற்றி யடைய அவன் மேற்கொள்கிற முயற்சிகள் பெருகப் பெருக அவனுடைய நிலைமை அதி கக் கேடடைகிறது, முடிவில் தோல்வியையே சந்திக்கிறான். வீழ்ந்துபோன மனித இயல்பில் பாவத்தை வென்று பரிசுத்தமாக வாழ இய லாது என்பதில் வியப்பேதுமில்லை.[25]

நான், என், என்னிடத்தில், எனக்குள், என்னை ஆகிய தன்மைப் பெயர்ச் சொற்கள் முதன்மைப் படுத்திக் கையாளப்பட்டிருக்கிறதைக் கவனியுங் கள். 9 முதல் 25 வரையிலான வசனங்களில் நாற் பதுக்கும் மேற்பட்ட முறை அச்சொற்கள் இடம் பெறுகின்றன! ரோமர் 7 - ஆம் அதிகாரத்தைப் படிப்போர் "நான்" என்னும் சொல்லால் தாக்கம் அடைவது சாத்தியமே. தன்னைக் குறித்துத் தானே நுணுகிக் காண முயன்று, சுயத்தில் வெற்றியடைய நினைக்கும் மனிதன் அதில் வெற்றி பெற இயலாது.

இன்றைய நாட்களில் கிறிஸ்தவ மனநோய் ஆலோசகர்கள் தங்களிடத்திற்கு வரும் நோயா ளிகள் தங்களைத் தாங்களே நுணுகிக் காண வேண்டுமென்று ஆலோசனை நல்குகின்றனர் என்பது வருத்தத்திற்குரியது. அதன் விளைவாக அவர்களது பிரச்சினை அதிகமாகிறதேயொழிய குறைகிறதில்லை. தாங்கள் கிறிஸ்துவோடு மரித் தவர்கள் எனவும், புதிதான ஜீவனுள்ளவர்களாக நடக்கும்படி அவரோடு உயிரோடு எழுந்தவர்கள் எனவும் விசுவாசிகள் அறிவது அவசியம். தங்களு டைய மாம்சம் முன்னேற்றம் காணவேண்டும் என்று முயற்சி செய்வதற்குப் பதிலாக, அதனை இயேசு கிறிஸ்துவின் கல்லறைக்கு அனுப்பிவிட வேண்டும்.

இரண்டு இயல்புகளுக்கும் இடையிலான போராட்டத்தை விவரிக்கும் வண்ணம், **நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை** என்று பவுல் கூறுகிறார். அவரே இரண்டு மனிதர்களாகச் செயல்பட்டார். தான் விரும்பாததைச் செய்கிற வராகவும் தான் வெறுக்கிறதை நடப்பிக்கிறவராக வும் அவர் விளங்கியதை அவராலேயே அறிய முடிந்தது.

**7:16** அவருடைய மேலான பகுத்தறிவு அவரு டைய செயல்களைக் குற்றப்படுத்துகிறது, அச் செயல்களை நியாயப்பிரமாணமும் குற்றப்படுத்து கிறது. ஆகவே அவர் தனக்கு எதிராக நியாயப் பிரமாணத்தின் பக்கம் சாய்கிறார். மேலும் நியாயப்பிரமாணம் **நல்லதென்று** தன்னுடைய உளமார்ந்த ஒப்புதலைத் தருகிறார்.

**7:17** கிறிஸ்துவுக்குள்ளான புதிய மனிதன் குற்றவாளி அல்லவென்றும், அவனுக்குள்ளாகக் குடியிருக்கும் பாவம் நிறைந்த ஒழுக்கமற்ற முந் தின இயல்பே குற்றவாளி என்றும் முடிவுக்கு வர இது வழிநடத்துகிறது. ஆனால் நாம் இங்கு மிகவும் கவனமுடையவர்களாக இருக்க வேண் டும். நாம் பாவத்தைச் செய்து விட்டு, உள்ளுறை யும் பாவத்தின் மீது பழி சுமத்தி, தப்பித்துக்கொள் ளக் கூடாது. நாம் செய்கிற செயல்களுக்கு நாமே பொறுப்பாளியாவோம். "பிறர் மீது குற்றத்தைத் தள்ளிவிடு" என்னும் கூற்றை நாம் பயன்படுத்தக் கூடாது. அவருடைய பாவ சுபாவத்தின் ஆதாரத் தைப் பவுல் தொடர்ந்து பின்சென்று பிடிக்கிறாரே யொழிய அதை அவர் பொறுத்துக்கொள்ள வில்லை.

**7:18** பவுல் இங்கு கற்றுக்கொண்டதை நாம் கற்கும் வரை பரிசுத்தத்தில் வளர்ச்சியைக் காண முடியாது. **அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமா யிருக்கிறதில்லை**. இங்கே **மாம்சம்** என்று சொல் லப்பட்டிருப்பது ஆதாமினிடத்திலிருந்து வழிவழி யாய்ப் பெற்றுக்கொண்ட, பொல்லாங்கானதும் கேடு நிறைந்ததுமான இயல்பாகும். இ.'.து எல்லா விசுவாசிகளிடமும் இன்னும் காணப்படுகிறது. ஒவ்வொருவரும் செய்கிற பொல்லாங்கான செயல்களுக்கு இதுவே ஆதாரமாயிருக்கிறது. அதில் ஏதொரு நன்மையும் இல்லை.

இதனை நாம் கற்றிடும் வேளையில், நமது முந்தின இயல்பில் ஏதேனும் நன்மையைக் காண முடியுமா என்று தேடிப்பார்ப்பதிலிருந்து நாம் விடு படுவோம். அங்கே ஏதொரு நன்மையும் இல்லை யென்று அறிவதனால், மனச்சோர்வு அடைவதி னின்று நாம் விடுபடுவோம். அது நம்மை நாமே நுணுகிப் பார்க்கும் செயலிலிருந்து நம்மை விடு

விக்கும். தன்னையே ஆராய்ந்து பார்க்கும் செயலில் எவ்வித வெற்றியும் இல்லை. நம்மை நாமே பார்க்கும் ஒவ்வொரு முறையும், கிறிஸ்துவைப் பத்து முறை நோக்கிப் பார்க்க வேண்டும் என்று பரிசுத்தமாய் வாழ்ந்த ஸ்காட்லாந்து இராபர்ட் முர்ரே மேக்செய்னி என்பார் கூறினார்.

மாம்சத்தின் உதவியற்ற நிலையை உறுதி செய்யும் வகையில், நல்லது எதுவோ அதைச் செய்வதற்குத் தனக்கு விருப்பம் இருந்த போதிலும், அந்த விருப்பத்தைச் செயலாக மாற்றவதற்குத் தன்னிடத்தில் ஏதொரு ஆதாரமும் இல்லை யென்று சொல்லி அப்போஸ்தலன் வருந்துகிறார். படகின் உள்ளேயே நங்கூரத்தை இட்டிருப்பதே பிரச்சினைக்குக் காரணமாகும்.

**7:19** இவ்வாறாக அவ்விரு இயல்புகளுக்கும் இடையிலான போராட்டம் கடுஞ்சீற்றம் அடைகிறது. தான் செய்ய விரும்புகிற ஏதொரு **நன்மையையும்** அவரால் செய்ய இயலவில்லை என்பதை அவர் அறிவதோடு, தான் வெறுக்கிற **தீமையைச்** செய்கிறவராகவும் அவர் இருக்கிறார். முரண்பாடுகள் மற்றும் ஒன்றுக்கொன்று பொருந்தாத நிலை ஆகியவற்றின் ஒட்டுமொத்தமாக அவர் இருக்கிறதைக் காண்கிறார்.

**7:20** இவ்வசனத்தைக் கீழ்க்காணும்படியாக அதன் பொழிப்புரையைத் தருவோம்: "அந்தப்படி நான் (புதிய இயல்பு) விரும்பாததை நான் (முந்தின இயல்பு) செய்தால், நான் (அந்த நபர்) அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது." பவுல் தனது குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவுமில்லை, தட்டிக் கழிக்கவும் இல்லை என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அவர் பாவமிழைக்கிற போது, புதிய மனிதனின் விருப்பத்தினால் அதை அவர் செய்யவில்லை என்றும், அவருக்குள்ளாகக் குடியிருக்கும் பாவத்தின் அதிகாரத்திலிருந்து விடுதலையை அவர் கண்டடையவில்லை என்றுமே அவர் கூறுகிறார்.

**7:21** தன்னுடைய நல்ல விருப்பங்கள் யாவும் தோல்வியடையும்படி செயல் விளைவிக்கிற ஒரு கொள்கை அல்லது **பிரமாணம்** தனக்குள் இயங்குகிறதை அவர் காண்கிறார். எது நன்மை பயக்குமோ அதைச் செய்ய அவர் விருப்பம் கொள்ளும்போது, அது பாவமாகவே முடிவடைகிறது.

**7:22** அவருடைய புதிய இயல்பைப் பொருத்தமட்டில், **தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல்** மனமகிழ்ச்சி உடையவராக இருக்கிறார். நியாயப்பிரமாணமானது பரிசுத்தமானது என்பதை அவர் அறிவார். மேலும் அது தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாக இருக்கிறது என்பதையும் அவர் அறிவார். தேவனுடைய சித்தத்தையே செய்ய அவர் விரும்புகிறார்.

**7:23** ஆனால், அவருடைய வாழ்க்கையிலே அதற்கு எதிராகச் செயல்படுகிற வேறொரு பிரமாணத்தை அவர் காண்கிறார். அது புதிய இயல்புக்கு எதிராகப் போராடுகிறது, மேலும் அவருக்குள்ளாகக் குடியிருக்கும் **பாவத்திற்கு** அது அவரைச் சிறைப்படுத்துகிறது. இதனைக் குறித்து ஜார்ஜ்கட்டிங் என்பார் எழுதுகிறார்:

> உள்ளான மனிதனில் நியாயப்பிரமாணத்தின் மேல் மனமகிழ்ச்சி உடையவராக அவர் விளங்கினாலும், வெற்றிக்கான எவ்வித ஆற்றலையும் அது தருவதில்லை. செயல்படுத்தக் கூடாதது என்று தேவனால் சொல்லப்பட்டுள்ள ஒன்றை அவர் நிறைவேற்ற முயற்சி செய்கிறார் என்றும் இதனைக் கூறலாம். அதாவது, தேவனுடைய பரிசுத்த நியாயப்பிரமாணத்திற்கு மாம்சத்தைக் கீழ்ப்படுத்த அவர் முயற்சி செய்கிறார். மாம்சம் மாம்சத்திற்குரியவற்றைச் சிந்திக்கிறது என்பதையும், தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு, ஏன் தேவனுக்கும்கூட முற்றிலும் எதிராக அது இருக்கிறது என்பதையும் அவர் கண்டறிகிறார்.[26]

**7:24** புகழ்பெற்றதும், நாவன்மைமிக்கதுமான புலம்பல் பாடலொன்று பவுலின், உள்ளத்திலிருந்து வெளிப்படுகிறது. அழுகி நாற்றமெடுக்கக்கூடிய ஒரு சரீரம் தன்னுடைய முதுகில் கட்டி வைக்கப்பட்டிருக்கிறதுபோன்று அவர் உணர்கிறார். அந்தச் சரீரம் எல்லா ஒழுக்கக்கேடும் நிறைந்த முந்தின இயல்பேயாகும். பெருந்துயரத்தில் ஆழ்ந்து தவிக்கும் அவர், வெறுப்புண்டாக்குகிறதும் அருவருப்பானதுமான அடிமைத்தனத்திலிருந்து தன்னால் விடுதலை பெறமுடிய வில்லையே என்று அங்கலாய்க்கிறார். வேறு வெளியே எங்கிருந்தாவது அவருக்கு உதவி கிடைத்தாக வேண்டும்.

**7:25** இந்த வசனம் பொங்கி எழும் நன்றியறிதலோடு தொடங்குகிறது. அதனை இரண்டு வகையாகப் புரிந்து கொள்ளலாம். "விடுதலை **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** மூலமாக வருவதால் நான் **தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்**" என்றோ, முந்தின வசனத்தில் காணப்படுகிற நிர்ப்பந்தமான மனிதனாக இனி இருக்கப்போவது இல்லை என்னும் காரணத்திற்காக, கர்த்தராகிய இயேசு **கிறிஸ்துவின் மூலமாக** தேவனை பவுல் ஸ்தோத்தரிக்கிறதாகவோ இதற்கு நாம் பொருள் கொள்ளலாம்.

விடுதலையை அனுபவிப்பதற்கு முந்தைய நாட்களில் இரண்டு இயல்புகளுக்கிடையே நடைபெற்ற போராட்டத்தைக் குறித்து தொகுத்துரைக்கும் வாசகமான மீதி வசனங்கள் விளங்குகின்றன. புதிப்பிக்கப்பட்ட **மனதினாலே**, (அல்லது புதிய இயல்பினாலே) **தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயே** (அல்லது முந்தின இயல்பினாலே) **பாவப்பிரமாணத்துக்கும்** விசுவாசியானவன் ஊழியம் செய்கிறான். அடுத்த அதிகாரத்திற்குச் செல்லும் வரை அவ்விடுதலையின் விவரங்களை நாம் அறிந்துகொள்ள இயலாது.

**ஒ. தூய வாழ்க்கைக்கான வல்லமை தூய ஆவியானவரே ஆவார் (அதி. 8)**

பரிசுத்த வாழ்க்கையைப் பற்றிய பொருள் தொடர்கிறது. "கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு உண்டாகிறது என்னும் நற்செய்தி உபதேசம், மனிதனைப் பாவத்தோடு வாழும்படி அனுமதிக்கிறதா அல்லது அவனைப் பாவம் செய்யும்படித் தூண்டுகிறதா?" என்னும் கேள்விக்கு ஆறாம் அகிகாரத்தில் பவுல் விடை பகர்ந்தார். "கிறிஸ்தவர்கள் பரிசுத்த வாழ்க்கையை மேற்கொள்ள நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று நற்செய்தி கூறுகிறதா?" என்னும் கேள்வியை ஏழாவது அதிகாரத்தில் அவர் எதிர்கொண்டார். "தூய வாழ்க்கைக்கான ஆற்றலை கிறிஸ்தவன் எவ்வாறு அடைகிறான்?" என்பதே இப்பொழுது எழுந்துள்ள கேள்வி.

ஏழாவது அதிகாரத்தில் முதன்மையாகக் கையாளப்பட்ட, தன்மைநிலை பெயர்ச்சொற்கள் (Personal Pronouns) பெரும்பாலும் மறைந்துவிடுவதை நாம் இந்த அதிகாரத்தின் தொடக்கத்திலேயே காண்கிறோம். இங்கு பரிசுத்த ஆவியானவரே முதன்மையான நபராகத் திகழ்கிறார். இந்தப் பகுதியை அறிந்துகொள்வதற்கு இது ஒரு முக்கியமான குறிப்பாகும். எவ்வித உதவியுமின்றி நாமாகவே வெற்றியை அடைய முடியாது; நமக்குள்ளாகக் குடியிருக்கும் தூய ஆவியானவரே நமது வெற்றியாக இருக்கிறார். A. J. கார்டன் என்பார் ஆவியானவரின் ஏழு பயன்களைப் பட்டியிலிட்டுத் தந்துள்ளார்: ஊழியத்தில் விடுதலை (வச.2); ஊழியத்திற்கான வல்லமை (வச. 11); பாவத்தின்மேல் வெற்றி (வச. 13); ஊழியத்திற்குத் தேவையான அறிவுபுகட்டுதல் (வச. 14); குமாரர்களெனச் சான்று பகர்தல் (வச. 16); ஊழியத்தில் துணை (வச. 26); ஜெபத்தில் துணை (வச. 26).

**8:1** நம்பிக்கை இழந்த நிலை மற்றும் தோல்வி மனப்பான்மை ஆகிய பள்ளத்தாக்கிலிருந்து சிகரத்தின் கொடுமுடிக்கு ஏறியவராக அப்போஸ்தலன் இப்பொழுது, **"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை"** என்று வெற்றி முழக்கமிடுகிறார். இதனை நாம் இரு வகைகளில் புரிந்துகொள்ளலாம்.

முதலாவதாக, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய பாவத்தைப் பொருத்தமட்டில் எவ்விதத்திலும் நமக்குத் தெய்வீக **ஆக்கினைத் தீர்ப்பில்லை**. முதல் மக்கள் தலைவனாகிய ஆதாமுக்குள்ளாக நாம் இருந்த காலத்தில் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டவர்களாயிருந்தோம். ஆனால் இப்பொழுது நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். ஆகையால், அவர் எவ்வாறு ஆக்கினைத் தீர்ப்பிற்கு அப்பாற்பட்டவராயிருக்கிறாரோ, அதுபோலவே நாமும் ஆக்கினைத் தீர்ப்பிற்கு அப்பாற்பட்டவர்களாயிருக்கிறோம். ஆகவே இத்தகைய அறைகூவலை விடுக்கக் கூடியவராக நாம் இருக்கிறோம்:

கருணைமிகு இரட்சகரின்
அருகில் செல்லுங்கள்,
திருத்தந்தை மதிப்பினின்று
அவரை விலக்குங்கள்,
குற்றங்குறை ஒன்றையேனும்
சுட்டிக் காட்டுங்கள்,
பின்னரென்னைக் குற்றவாளி
என்று சொல்லுங்கள்.
W. N. டாம்கின்ஸ்

இதனை வேறொரு பொருளிலும் புரிந்து கொள்ளலாம். ஏழாவது அதிகாரத்தில் பவுல் விவரித்திருப்பது போன்று நம்மை நாமே குற்றந்தீர்க்க வேண்டிய தேவையில்லை. அதாவது, ஏழாவது அதிகாரத்தின் அனுபவத்திற்குள்ளாகக் கடந்து செல்கிறவர்களாக நாம் காணப்படலாம், அந்நிலையில் நமது சொந்த முயற்சியினால் நியாயப்பிரமாணத்தின் கற்பனைகளை நிறைவேற்றக் கூடாதவர்களாக இருந்திருக்கலாம், ஆனால் நாம் அதே நிலையில் இருக்கவேண்டிய தேவையில்லை. ஏன் நமக்கு **ஆக்கினைத் தீர்ப்பில்லை**[27] என்று இரண்டாவது வசனம் விளக்கம் அளிக்கிறது.

**8:2** ஆவியானவருடைய **ஜீவ** பிரமாணம் **இயேசு கிறிஸ்துவினாலே என்னைப் பாவம் மரணம் ஆகியவை பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.** இவையிரண்டும் ஒன்றுக்

கொன்று எதிரான பிரமாணங்கள் அல்லது ஒழுக்க நெறிகளாகும். பரிசுத்த ஆவியானவரின் தனிச் சிறப்பு வாய்ந்த ஒழுக்கநெறி, விசுவாசிகளின் தூய வாழ்க்கைக்கான ஆற்றலைத் தருகிறது. நமக்குள்ளாகக் குடியிருக்கும் பாவத்தின் ஆக்கம் மனிதனை மரணத்தின் படுகுழிக்குள் தள்ளி விடுகிறது. இது புவிஈர்ப்பு சக்தியின் விதிக்கு ஒப்பாக இருக்கிறது. ஒரு பந்தை நீங்கள் மேல் நோக்கி எறிவீர்கள் என்றார் அது சற்று நேரத்தில் கீழ்நோக்கி வந்துவிடும். ஏனெனில் அதனால் இடப்பெயர்ச்சி செய்யப்படும் காற்றைவிட அது கூடுதலான எடை உடையதாக இருப்பதால் அவ் வாறு கீழே விழுந்துவிடுகிறது. ஒரு உயிருள்ள பறவையும், அது இடப்பெயர்ச்சி செய்யும் காற்றை விட எடை கூடுதலானதே. ஆனால் அதை நீங்கள் உயர எறிகிறபோது அது பறந்து சென்று விடு கிறது. அந்தப் பறவையில் செயல்படும் ஜீவ பிரமாணம் புவிஈர்ப்பு சக்தியின் விதிக்கு மேலாகச் செயல்படுகிறது. இதுபோலவே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஜீவனைத் தூய ஆவியானவர் விசு வாசிக்கு அளித்து **பாவம் மரணம் ஆகியவற்றின் பிரமாணத்தினின்று விடுதலையாக்குகிறார்**.

**8:3** நியாயப்பிரமாணத்தின் புனிதமான கற் பனைகளை மனிதர்கள் நிறைவேற்றுவதற்குரிய ஆற்றலை அது தரவில்லை. ஆனால் நியாயப்பிர மாணம் எங்கே தோல்வியடைந்ததோ, அங்கே கிருபை வென்றது. அது எவ்வாறு நிகழ்ந்தது என்பதைக் காண்போம்!

பரிசுத்த வாழ்க்கையை **நியாயப்பிரமாணத் தினால் உருவாக்க முடியவில்லை.** ஏனெனில் அது **மாம்சத்தினாலே பலவீனமாயிருந்தது.** இந்தப் பிரச்சினை வீழ்ந்துபோன மனித இயல்பில் இருந்ததேயொழிய நியாயப்பிரமாணத்தில் இல்லை. ஏற்கனவே பாவிகளாக இருந்தவர் களும், கீழ்ப்படிவதற்கு வலிமை அற்றவர்களு மான மனிதர்களிடம் நியாயப்பிரமாணம் பேசியது. ஆனால் தேவனோ **தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாக அனுப்பி** அதில் தலையிட்டார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவ மாம்சத்தோடு வரவில்லை என்பதையும், **பாவ மாம்சத்தின் சாயலாகவே** வந்தார் என்பதையும் நாம் கவனத்தோடு குறித்துக்கொள்ள வேண்டும். அவர் பாவஞ்செய்யவில்லை (1 பேதுரு 2:22); அவர் பாவம் அறியாதவர் (2 கொரி. 5:21); அவரி டத்தில் பாவமில்லை (1 யோவான் 3:5). ஆனால் அவர் மனித உருவில் இவ்வுலகிற்கு வந்ததி னாலே, பாவமுள்ள மனிதனைப் போன்று தோற்ற மளித்தார். பாவத்திற்குரிய பலியாக, கிறிஸ்து **மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளா கத் தீர்த்தார்**. நம்முடைய பாவங்களுக்காக மட்டுமின்றி (1 பேதுரு 3:18) பாவ இயல்பிற்காகவும் அவர் மரித்தார். அதாவது, நாம் என்னென்ன *செய்திருக்கிறோமோ* அவற்றிற்காக மட்டு மின்றி, நாம் எத்தகையவராக *இருக்கிறோமோ* அதற்காகவும்கூட அவர் மரித்தார். அவ்வாறு அவர் மரித்ததின் மூலம் **மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.** நம்முடைய பாவ இயல்பு மன்னிக்கப்பட்டதாக எங்கும் சொல் லப்படவில்லை, அது **ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டுவிட்டது**. நாம் *செய்த* பாவங்களோ மன்னிக்கப்பட்டுவிட்டன.

**8:4 மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி** இப்பொழுது **நிறைவேறுகிறது**. நம்முடைய வாழ்க்கையின் கட்டுப்பாட்டை நாம் தூய ஆவி யானவரிடத்தில் ஒப்புவிக்கும்போது, தேவனிடத் திலும், நம்முடைய அயலகத்தாரிடத்திலும் அன்பு கூரும்படியான வலிமையை அவர் தருவார். இந்தக் கற்பனைகளைத்தானே நியாயப்பிர மாணம் எதிர்பார்க்கிறது.

இந்த முதல் நான்கு வசனங்களிலே, 5:12 முதல் 7:25 வரையிலான வசனங்களில் தான் எடுத்தியம்பிய வாதத்தின் கூறுகளை அப்போஸ் தலன் ஒன்று சேர்க்கிறார். இது தனித்தனியாக இருந்த இழைகள் ஒன்றாக இணைக்கப்படு வதற்கு ஒப்பாயிருக்கிறது. 5:12- 21 ஆகிய வசனங் களில் ஆதாம் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் மக்கள் தலைமைத்துவம் பற்றிய கருத்து விவா திக்கப்பட்டது. ஆதாமோடு இணைக்கப்பட்டிருந்த காரணத்தினால் மரபுவழியாய் நாம் பெற்றிருந்த ஆக்கினைத்தீர்ப்பு, கிறிஸ்துவோடு நாம் இணைக் கப்பட்டிருக்கிற காரணத்தினால் நீக்கப்பட்டு விட்டது என்பதை இங்கு 8:1 - இல் அவர் விவாதித் தார். நம்முடைய இயல்பில் குடிகொண்டிருக்கும் பாவத்தின் பயங்கரத்தைப்பற்றி 6 மற்றும் 7 ஆகிய அதிகாரங்களில் அவர் விவாதித்தார். ஆவி யானவருடைய ஜீவ பிரமாணம் இயேசு கிறிஸ்து வினால், பாவம் மரணம் என்பனவற்றின் பிரமாணத்தினின்று நம்மை விடுதலை ஆக்கி யிருக்கிறது என்று அவர் இங்கு வெற்றிமுழக்க மிடுகிறார். நியாயப்பிரமாணத்தைக் குறித்த எல்லா விவரங்களையும் ஏழவாது அதிகாரத்தில் அவர் எடுத்துரைத்து விளக்கமளித்தபின்னர், ஆவியானவருடைய கட்டுப்பாட்டிற்குள்ளாகக்

கொண்டுவரப்பட்ட வாழ்க்கையில் நியாயப்பிர மாணத்தின் கற்பனைகள் நிறைவேற்றம் அடை கின்றன என்று கூறுகிறார்.

**8:5 மாம்சத்தின்படி நடக்கிறவர்கள்**, அதா வது மனந்திரும்பாத மனிதர்கள் **மாம்சத்திற் குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்**. அவர்கள் எவ்வித முன்யோசனையுமின்றி, உள்ளத்தில் எழுகிற உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்கிறார் கள். தங்களுடைய கேடுற்ற இயல்பின் விருப்பங் களை நிறைவு செய்யும்படியாக அவர்கள் வாழ் கிறார்கள். குறுகிய ஆண்டுகளில் மண்ணிற்குள் மறைந்துவிடக் கூடிய உடம்பிற்காகவே அவர்கள் வாழ்கிறார்கள்.

**ஆவியின்படி நடக்கிறவர்கள்**, அதாவது மெய்யான விசுவாசிகள், மாம்சத்திற்கும் இரத்தத் திற்கும் மேலாக எழுந்து, நித்தியத்திற்கான வற்றிற்காக வாழ்கிறார்கள். அவர்களோ திரு மறை வசனங்களினாலும், ஜெபத்தினாலும், தொழுகையினாலும், கிறிஸ்தவ ஊழியத்தினா லும் தங்களை நிரப்பிக்கொள்கிறார்கள்.

**8:6 மாம்ச சிந்தை** - அதாவது, வீழ்ந்துபோன மனித இயல்பின்மீது உளமார பற்றுக்கொள்ளு தல் **மரணத்தை** விளைவிக்கும். இக்கால அனுப வத்தையும் முடிவான நித்தியத்தையும் பொருத்த மட்டில் அது மரணமேயாகும். மிகுதியான நஞ் சினை உட்கொள்ளுவது போன்று, மரணத்தை வருவிக்கத் தக்க எல்லாவிதச் செயல்திறத்தை யும் அது உடையதாயிருக்கிறது.

ஆனால் **ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்**. மெய்யான ஜீவனுக்கும், தேவ னுடைய சமாதானத்துக்கும், மனக்கலக்கமற்ற வாழ்க்கைக்கும் தேவனுடைய ஆவியானவர் உத்தரவாதம் கொடுக்கிறார்.

**8:7** மாம்சத்தின் நினைவுகள் யாவும் **தேவனுக்கு விரோதமான பகையாக** இருக்கின்ற காரணத் தினால் அது மரணமாயிருக்கிறது. பாவியானவன் தேவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறவனாக வும் அவருக்கு பகைஞனாகவும் இருக்கிறான். அதற்குச் சான்று ஏதேனும் தேவையென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறை யுண்டதே மிகவும் தெளிவான சான்றாக விளங்கு கிறது. மாம்ச சிந்தையானது **தேவனுடைய நியா யப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிகிறதில்லை**. தேவனுடைய சித்தத்தை அது நாடாமல் தனது சொந்த சித்தத்தையே அது நாடுகிறது. அவரு டைய விதிகளுக்குக் கீழ்ப்படிய மனமின்றி, அது தனக்குத்தானே எஜமானனாக விளங்கவேண்டு மென்று விரும்புகிறது. தேவனுடைய நியாயப்பிர மாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கக் கூடாத இயல்பை அது உடையதாயிருக்கிறது. அதன்மீது மன விருப்பம் இல்லாதது மட்டுமின்றி அதை நிறை வேற்றுவதற்குரிய ஆற்றலும் அதற்கு இல்லை. தேவனுக்கு முன் மாம்சம் செத்ததாயிருக்கிறது.

**8:8** ஆகவே, **மாம்சத்திற்கு உட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள்** என்பதில் எவ்வித வியப்புமில்லை. அதைக் குறித் துச் சிந்தித்துப் பாருங்கள்! இரட்சிக்கப்படாத ஒரு மனிதன் தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய இயலாதவனாயிருக்கிறான். சமயச்சடங்குகள், ஒப்புவித்த ஊழியங்கள், தியாகச் செயல்கள் எதுவாக இருப்பினும் அவற்றின் மூலம் அவனால் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. முதலாவ தாக குற்றமுள்ள பாவியின் இடத்தை அவன் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் மிகத் தெளிவான முறையில் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னரே அவன் தேவனுடைய மகிழ்ச்சியான அங்கிகாரத்தைப் பெறமுடியும்.

**8:9** ஒருவன் மறுபடியும் பிறக்கும்போது, அவன் **மாம்சத்துக்குட்பட்டவனாயிராமல் ஆவிக்குட் பட்டவனாகிறான்.** அவனுடைய வாழக்கையின் சார்புநிலை மாறிவிடுகிறது. மீன் நீரில் வாழ்கிறது. மனிதன் காற்றில் வாழ்கிறான், அதுபோலவே விசுவாசியானவன் ஆவியில் வாழ்கிறான். அவன் ஆவியானவருக்குள் வாழ்கிறது மட்டுமின்றி, ஆவி யானவர் அவனுக்குள் வாழ்கிறார். அவனுக்குள் **கிறிஸ்துவின் ஆவி** குடியிராவிடில், அவன் கிறிஸ்துவினுடையவனல்லன். கிறிஸ்துவின் ஆவி என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது பரிசுத்த ஆவியானவரைப் பற்றியதா என்னும் கேள்வி எழு மாயினும் இவ்வசனத்தின் பின்னணியைப் பார்க் குங்கால், இரண்டு சொற்றொடர்களும் ஒருவரையே குறிக்கின்றன என்றே கொள்ளவேண்டும்.

**8:10** ஆவியின் ஊழியத்தினாலே கிறிஸ்து உண்மையில் விசுவாசிக்குள்ளாக இருக்கிறார். பாவத்தினிமித்தம் மரணத்திற்கு உட்பட்டிருக்கிற நம்முடைய சரீரங்களில் ஜீவனும் மகிமையும் நிறைந்த கர்த்தர் குடியிருக்கிறார் என்னும் உண்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இவ் வசனத்தில் சொல்லப்பட்டிருப்பதாகத் தோன்று வது போன்று தாங்கள் இன்னும் சாகவில்லையே என்று சிலர் வாதிடலாம். அது சரியன்று, மரணத் தின் சக்திகள் ஏற்கனவே மனித உடம்புகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய

வாழ்நாட் காலத்தின்போதே கர்த்தருடைய வருகை நிகழ்ந்தால் ஒழிய, அவர்களது சாவைத் தவிர்க்க முடியாது.

இப்படிப்பட்ட சரீரத்திற்கு எதிராக, **ஆவியானது**[28] **நீதியினிமித்தம் ஜீவனாயிருக்கிறது.** ஒரு காலத்தில் இந்த ஆவியானது தேவனுக்குச் செத்தாயிருந்தது. ஆனால் இப்பொழுதோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியுடைய செயலாகிய அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலமாகவும், மேலும் தேவநீதி நம்முடைய கணக்கில் வரவுவைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும், அந்த ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறோம்.

**8:11** நம்முடைய சரீரங்கள் இன்னும் மரணத்திற்கு உட்பட்டதாயிருக்கின்றன என்னும் நினைவு நாம் திகிலடைவதற்கும் நம்பிக்கை இழப்பதற்கும் காரணமாயிருக்கத் தேவையில்லை. **கிறிஸ்துவை மரித்தோலிருந்து எழுப்பினது** போல நம்முடைய **சாவுக்கேதுவான சரீரங்களையும்** அவர் **உயிர்ப்பிப்பார்** என்பதற்கு, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய சரீரங்களில் குடியிருக்கிறார் என்னும் உண்மை உறுதியளிக்கிறது. இதுவே நம்முடைய மீட்பின் கடைசிச் செயலாக இருக்கிறது. அதாவது இரட்சகரின் சரீரம் எவ்வாறு மகிமை அடைந்ததோ அது போலவே நம்முடைய சரீரங்கள் மகிமை அடையும் செயலே மீட்பின் கடைசி நிகழ்வாகும்.

**8:12** இவ்விதமாக மாம்சத்திற்கும் ஆவிக்கும் பெருத்த வேறுபாடு இருக்கின்ற காரணத்தினால் நாம் என்ன முடிவிற்கு வரமுடியும்? **மாம்சத்தின்** கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து **பிழைப்பதற்கு,** நாம் அதற்குக் கடமைப்பட்டவர்கள் அல்லர். பொல்லாங்கு நிறைந்ததும் ஒழுக்கக்கோடானதுமான முந்தின இயல்பு நமக்கு எப்பொழுதும் இடையூறு அளிக்கிறது. ஒரு சிறு நன்மையைக் கூட அது ஒருக்காலும் செய்ததில்லை. கிறிஸ்து நம்மை இரட்சிக்காமல் விட்டிருப்பாரெனில், மாம்சமானது நம்மை மிகவும் ஆழமானதும், இருள் நிறைந்ததும், வெப்பம் மிகுந்ததுமான நரகத்திற்கு இழுத்துச் சென்றிருக்கும். அப்படிப்பட்ட எதிரிக்கு நாம் கடமைப்பட்டவர்கள் அல்லவே.

**8:13 மாம்சத்தின்படி பிழைக்கிற** மனிதர்கள் சரீரத்தில் மட்டுமின்றி நித்தியத்திற்கும் **சாவை** அடைந்தே தீர வேண்டும். **மாம்சத்தின்படி பிழைப்பது** இரட்சிப்படையாத நிலையைக் குறிக்கிறது. இவ்வுண்மை மிகத்தெளிவாக 8:4,5 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கிறிஸ்தவர்களானவர்களிடம் பவுல் இதைக் கூறவேண்டிய அவசியம் என்ன? அவர்களில் சிலர் முடிவில் இழந்துபோவார்கள் என்பதை இது குறிக்கிறதோ? இல்லை, ஒவ்வொரு சபைக் கூட்டங்களிலும் ஒருசிலர் மெய்யான இரட்சிப்பைப் பெறாதவர்களாக இருக்கக்கூடும் என்று நினைவு கொண்டவராக, எச்சரிப்பின் சொற்களையும், தன்னையே சோதித்து அறிவதற்குத் தேவையான வார்த்தைகளையும் அவ்வப்போது தனது மடல்களில் அப்போஸ்தலன் சேர்த்துள்ளார். மெய்யான விசுவாசிகளின் தனிச்சிறப்பு வாய்ந்த இயல்பினை இவ்வசனத்தின் எஞ்சிய பகுதி விவரிக்கின்றது. பரிசுத்த **ஆவியானவருடைய** செயலாக்கத்தினாலே **சரீரத்தின் செய் கைகளை** அவர்கள் அழிக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் நித்திய ஜீவனை அனுபவிக்கின்றார்கள். இவ்வுலகினை விடுத்து அவர்கள் செல்லும்போது நிறைவான வாழ்விற்குள் நுழைவார்கள்.

**8:14** மெய்யான விசுவாசிகளைப்பற்றி இன்னொரு வகையிலே விளக்கிக் கூறவேண்டுமானால், அவர்கள் **தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறவர்கள்** என்றே சொல்லவேண்டும். சிறப்புமிக்க சில கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையிலே நிகழ்கின்ற வியத்தகு தெய்வீக வழிநடத்துதல்களைப் பவுல் இங்கு குறிப்பிடவில்லை. மாறாக மெய்யான **தேவனுடைய புத்திரர்கள்** அனைவரையும் குறித்த உண்மையையே அவர் இங்கு பேசுகிறார். அதாவது அவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்கள். அவர்கள் எந்த அளவிற்குத் தங்களைத் தூய ஆவியானவருக்கு ஒப்புவித்திருக்கிறார்கள் என்பது இப்பகுதியின் விவாதப் பொருள் அல்ல. அவர்கள் மனமாற்றம் பெற்றபோது உண்டான உறவையே இது சார்ந்திருக்கிறது.

தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படுவதையே புத்திரத்துவம் குறிக்கிறது. பொதுவாக குடும்பங்களில் வயதுக்கு வந்தவர்கள் சில உரிமைகளையும் கடமைகளையும் உடையவராய் விளங்குகிறார்கள். அது போன்றே தேவ குடும்பத்தில் விசுவாசிகள் உரிமைகளையும் கடமைகளையும் உடையவராய் இருக்கிறார்கள். ஆவிக்குரிய சுதந்தரத்தைப் பெறுவதற்கு ஒரு புதிய விசுவாசி குறிப்பிட்ட காலம்வரை பொறுத்திருக்க வேண்டிய தேவையில்லை. இது ஒருவர் இரட்சிப்படைகின்ற தருணத்திலேயே நிகழ்கின்ற செயலாகும். ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் யாவருக்கும் இது பொருந்தும்.

**8:15** நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் வாழ்வோர் வயதுக்கு வராத சிறு குழந்தைகளுக்கு ஒப்பாவார்கள். வேலைக்காரர்களைப்போன்று அவர்கள் அடக்கிவைக்கப்படுகிறார்கள். தண்டனையை அடைவோம் என்ற அச்சத்தில் அவர்கள் இருளுக்குள் வாழ்கிறார்கள். ஆனால் ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது, அடிமைத்தனத்துக்குள் மீண்டும் பிறப்பதில்லை. தேவனுடைய குடும்பத்திற்குள் அவர் கொண்டுவரப்படுகிறபோது, அடிமையாக அவர் வருவதில்லை. மாறாக, **புத்திர சுவிகாரத்தின் ஆவியைப்** பெறுகிறார். அதாவது, தேவனுடைய குடும்பத்தில் அவர் வயதுக்கு வந்த மகனாகவே இடம் பெறுகிறார். மெய்யான ஆவிக்குரிய உள்ளுணர்வினாலே அவர் தேவனை நோக்கிப்பார்த்து **"அப்பா, பிதாவே"** என்று அழைக்கிறார். **அப்பா** என்னும் அராமிக் மொழிச்சொல் மொழிபெயர்ப்பில் அதனுடைய சரியான பொருளைத் தருகிறதில்லை. "பப்பா" என்றோ "டாடி" என்றோ தந்தையை மிக நெருக்கமான முறையில் அழைப்பதற்கு அது ஒப்பாகும். (தமிழில் "அப்பா" என்னும் சொல் அந்நெருக்கத்தை உணர்த்தக் கூடியதாயிருக்கிறது). தேவனை அப்பா என்று நெருக்கமான முறையில் அழைப்பதற்கு நாம் தயங்கினாலும், கணக்கிலடங்கா மகிமை பொருந்திய அவர் நமக்கு மிக நெருக்கமானவராக இருக்கிறார் என்னும் உண்மை மறுக்க இயலாததாகும்.

**புத்திர சுவிகாரத்தின் ஆவி**[29] என்னும் சொற்றொடர், ஒரு விசுவாசியானவன் தேவனுடைய மகன் என்னும் முறையில் பெற்றிருக்கிற உயர் நிலையை அறியச் செய்யும் தூய ஆவியான வரைக் குறிக்கிறது. அல்லது **அடிமைத்தனத்தின் ஆவிக்கு** எதிரான சுவிகாரத்தைப் பெற்றிருக்கிறோம் என்ற அறிவையோ மனப்பான்மையையோ இது குறிக்கிறது என்று சொல்லலாம்.

ரோமருக்கு எழுதிய மடலில் **சுவிகாரம்** என்னும் சொற்றொடர் மூன்று பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு விசுவாசிகளுடைய வாழ்க்கையில் தூய ஆவியானவர் உண்டுபண்ணுகிற மகன் என்னும் உணர்வை அது குறிக்கிறது. 8:23 -ஆம் வசனத்தில் இஸ்ரவேலுக்கு தேவன் அளித்த பதவியாகிய குமாரன் என்னும் பெயரைக் குறிக்கும்படி அது ***பின்னோக்கிப்*** பார்க்கிறது (யாத். 4:22).

கலாத்தியர் 4:6 மற்றும் எபேசியர் 1:6 ஆகிய வசனங்களில் இச்சொற்றொடர் "புத்திர ஸ்தானத்தைக்" குறிக்கிறது. வளர்ச்சி அடைந்தவர்களும் வயதுக்கு வந்தவர்களும் சிலாக்கியங்களையும் பொறுப்புகளையும் உடையவராக இருக்கிறார்கள். அதுபோல விசுவாசிகள் யாவரும் அவ்விதக் கடமையுணர்ச்சியுள்ள பிள்ளைகளுக்குரிய ஸ்தானத்தில் அமர்த்தப்படுவதை இது குறிக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறான்; தேவனே தந்தையாக விளங்குகிற குடும்பத்தில் அவன் பிறக்கிறான். ஆனால் ஒவ்வொரு விசுவாசியும் மகனாக இருக்கிறான்; வயதுக்கு வந்த மனிதனாக வளர்ச்சியைப் பெற்ற ஒருவன் பல சிலாக்கியங்களைப் பெற்றிருப்பது போன்று அவன் ஒரு சிறப்பான உறவை தேவனோடு அடைந்திருக்கிறான்.

நம்முடைய சமுதாயத்தில் என்ன பொருளில் புத்திர சுவிகாரம் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறதோ அந்தப் பொருளில் அச்சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை - வேறொரு பெற்றோருக்குப் பிறந்த குழந்தையைத் தங்களுடைய குழந்தையாக ஏற்றுக்கொள்வதையே நம்முடைய சமுதாயம் புத்திர சுவிகாரம் என்று அழைக்கிறது.

**8:16** புதியதாகப் பிறந்த விசுவாசி தேவனுடைய புத்திரன் என்னும் ஆவிக்குரிய உள்ளுணர்வைப் பெறுகிறான். அதுவே உண்மையென்று பரிசுத்த ஆவியானவர் அவனிடம் கூறுகிறார். அவன் தேவனுடைய குடும்பத்தில் உறுப்பினனாக இருக்கிறான் என்று **ஆவியானவர்தாமே** அந்த விசுவாசியினுடைய **ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்**. தேவ வார்த்தையை மூல ஆதாரமாகக் கொண்டே அவர் அதைச் செய்கிறார். ஒரு கிறிஸ்தவன் வேதத்தைப் படிக்கின்றபோது, அவன் இரட்சகரை நம்புகின்ற காரணத்தினால், அவன் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறான் என்று ஆவியானவர் அந்த உண்மையை உறுதிப்படுத்துகிறார்.

**8:17** தேவனுடைய குடும்பத்தில் உறுப்பினர் என்ற நிலையானது கொண்டுவருகிற நற்பேறுகள் மனதைத் திகைக்கச் செய்கின்றன. தேவனுடைய **பிள்ளைகள்** அனைவரும் **தேவனுடைய சுதந்தரராவர்**. ஒரு சுதந்தரவாளி முடிவாக தனது தந்தையினுடைய சொத்துகளை அடைந்தே தீரவேண்டும். அந்த உண்மையே இங்கு சொல்லப்பட்டுள்ளது. பிதாவினுடையது அனைத்தும் நம்முடையது. அவை யாவற்றையும் இதுவரை நாம் அடைந்து அனுபவிக்கவில்லை. ஆயினும் எதிர்காலத்தில் அவற்றை நாம் அனுபவிக்கப் போவதை எதுவும் தடைசெய்யாது. மேலும் நாம்

**கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராய்** இருக்கிறோம். அவர் இப்புவியின் ஆளுகையைப் பெற்றிட அரசராக வரும்போது, திருத்தந்தையின் உடைமைகள் யாவற்றிலும் அவருடன் பங்கு கொள்வோம்.

வீரதீரச் செயல்களினாலே பாடுகளை அனுபவித்தால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகும் என்று ஒரு நிபந்தனையைக் கூறும் பொருட்டு, **கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்** என்று பவுல் இங்கு கூறவில்லை. பாடுகளை மிகுதியாக, அனுபவித்து அதில் வெற்றிகண்ட மேன்மையான மக்கள் சிலரைக் குறிக்கும்படியாகவும் அவர் இதை எழுதவில்லை. மாறாக, கிறிஸ்தவர்கள் அனைவரையும் பாடுகள் அனுபவிக்கிறவர்கள் என்றும், கிறிஸ்துவுடன் **மகிமைப்படுகிறவர்கள்** என்றும் அவர் காண்கிறார். இச்சொற்றொடரில் "ஆல்" என்னும் விகுதி "ஆகையால்" என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்துவுக்காகச் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் கூடுதலாகப் பாடுகள் அனுபவித்திருப்பது உண்மையே. அதனிமித்தம் அவர்கள் பெறுகிற வெகுமதி மற்றும் மகிமை ஆகியவற்றின் அளவு வேறுபடும். ஆனால் இயேசு கிறிஸ்துவை யாரெல்லாம் கர்த்தரும் இரட்சகருமாக அறிக்கை செய்கிறார்களோ, அவர்கள் யாவரும் அவமானத்தோடும் நிந்தையோடும் உலகத்தின் பகைமையை அனுபவிக்கிறவராவர் என்றே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது.

**8:18** பரம சேனைக்கு முன்பாகக் கிறிஸ்து நம்மை அழைத்து வந்து வெளியரங்கமாக அறிக்கை செய்யும் வேளையில், கிறிஸ்துவுக்காக நாம் அனுபவிக்கிற மிகப் பெரிய அவமானம் வெறும் அற்ப விஷயமாகக் காணப்படும். நெற்றியில் ஜீவ கிரீடம் அணிந்து இரட்சகரால் சிறப்பிக்கப்படும்போது, அவர்கள் கிறிஸ்துவுக்காக உயிரைத் துறந்து அனுபவித்த வேதனைகள் யாவும் ஒரு சிறு முள் குத்தியதற்கு ஒப்பாகத் தோன்றும். இக்காலத்தில் நாம் அடைகிற பாடுகள் அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம் என்றும், ஆனால் பெற விருக்கிற மகிமையோ அதிகமான நித்திய கனத்துக்குரியது என்றும் பவுல் வேறொரு இடத்தில் கூறியிருக்கிறார் (2 கொரி. 4:17). வரவிருக்கிற மகிமையைப் பற்றி விவரித்துக் கூறும்போதெல்லாம், அந்த மேலான எண்ணத்தின் பளுதாங்காமல் அவருடைய சொற்கள் வளைந்து போயின.[30] நாம் பெறவிருக்கிற மகிமையின் மேன்மையை உணர்ந்து மகிழ்வோமாயின், செல்லும் வழியில் சந்திக்கிற பாடுகள் அற்பமானவை என்று கணக்கிடுவோம்.

**8:19** இந்த உலகம் அதிசயிக்கும் வகையில் நாம் **தேவனுடைய புத்திரராக** வெளிப்படப் போகிற நேரத்தைக் காண **சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடு** எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது என்று பவுல் இந்தப் படைப்பை இலக்கிய நயத்துடன் ஓர் ஆளுருவாக்கி வர்ணிக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆளுகை செய்யும்படி மீண்டும் வரும்போது நாமும் அவருடன் திரும்பி வருவோம். அச்சமயத்தில் இது நிறைவேறும்.

நாம் ஏற்கனவே **தேவனுடைய புத்திரராக** இருக்கிறோம். ஆயினும் இவ்வுலகம் அதை அறியவும் இல்லை, அங்கிகரிக்கவும் இல்லை. என்றாலும் இவ்வுலகம் சிறந்ததொரு நாளை எதிர்நோக்கியிருக்கிறது. அது மாவரசன் தமது பரிசுத்தவான்களுடன் மீண்டும் வந்து ஆளுகை செய்வதற்கு முன்னர் நிறைவேறாது. "தேவனுடைய குமாரர்கள் தங்களுக்குச் சொந்தமான இடத்திற்கு வருகை புரியும் வியத்தகு காட்சியைக் காண, படைப்பு முழுவதும் விழிப்புடன் காத்திருக்கிறது" (JBP).

**8:20,21** ஆதாம் பாவம் செய்தபோது, அவனுடைய மீறுதலானது, மனித இனத்தை மட்டுமின்றி, உயிருள்ளவை உயிரற்றவை ஆகிய எல்லா **சிருஷ்டியையும்** பாதித்துவிட்டது. இந்த பூமி சபிக்கப்பட்டது. காட்டு மிருகங்கள் கொடூர மரண மடைந்தன. பறவைகள், விலங்குகள், மீன் இனங்கள், பாம்பு வகைகள் யாவற்றையும் நோய் தாக்கியுள்ளது. மனிதனுடைய பாவத்தின் விளைவு அதிர்ச்சி அலையைப் போன்று படைப்பு முழுவதும் ஊடுருவிப் பாய்ந்துள்ளது.

**அந்தச் சிருஷ்டியானது மாயைக்கும்**, ஏமாற்றத்திற்கும், ஒழுங்கின்மைக்கும் **கீழ்ப்பட்டிருக்கிறது.** அது தனது சொந்த விருப்பத்தினாலே அல்ல தேவனுடைய ஆணையினாலே அவ்வாறு ஏற்பட்டுள்ளது. முதல் மக்கள் தலைவனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையே இதற்குக் காரணம்.

ஏதேன் தோட்டத்தில் நிலவிய நிறைவான சூழ்நிலையை, படைப்பு பின்னோக்கிப் பார்க்கிறது. பின்னர், பாவம் நுழைந்ததால் ஏற்பட்ட பேரழிவைக் கண்ணோட்டமிடுகிறது. மீண்டும் அந்த நிறைவான நிலைமையை அடையக்கூடும் என்ற நம்பிக்கையை அது உடையதாயிருக்கிறது. அவ்விதமாக **சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக**

**கப்பட்டு** அப்பொற்காலச் சுதந்தரத்தை அனுப விக்கின்றபோது நாம் **தேவனுடைய பிள்ளை களுக்குரிய மகிமையோடு** வெளிப்படுவோம்.

**8:22** வருத்தம் அனுபவிக்கிறதும், விம்மி அழுகிறதும், பாடுகள்படுகிறதுமான உலகில் நாம் வாழ்கிறோம். **சர்வசிருஷ்டியானது ஏகமாய்த் தவித்து**, குழந்தை பெறுகிறபோது அடைகிற வேதனைக்கு ஒப்பான வேதனை அனுபவிக்கிறது. இயற்கையின் பாடல், அழுகையின் இசையோடு தொனிக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் பூமி யானது பெருத்த துயரத்துக்குட்பட்டிருக்கிறது. சாவின் கொடுமை ஒவ்வொரு உயிரினத்தையும் அலைக்கழிக்கிறது.

**8:23** விசுவாசிகளுக்கு இதிலிருந்து விலக் கில்லை. அவர்கள் **ஆவியின் முதற்பலன்களாக** விளங்கி, மீட்பைப் பெறுவார்கள் என்று வாக் களிக்கப்பட்டிருப்பினும், மகிமையின் நாளை எதிர்நோக்கித் தவிக்கின்றனர். பரிசுத்த **ஆவியே முதற்பலன்களாக** இருக்கிறார். கைப்பிடி நிறைய முதிர்ந்த கதிர் பின்வரும் அறுவடைக்கு எங்ஙனம் அச்சாரமாய், அதாவது உறுதிமொழியாய்த் திகழ்கிறதோ அதுபோலவே முழு வாரிசு உரிமை யும் நமக்குரியது என்பதற்குப் பரிசுத்த ஆவியான வர் அச்சாரமாக விளங்குகிறார்.

குறிப்பிடத்தக்க வகையில், வரப்போகிற **புத்திரசுவிகாரத்திற்கும், சரீரம் மீட்கப்படு தலுக்கும்** அவர் அச்சாரமாயிருக்கிறார் (எபே. 1:14). ஒரு பொருளில் நாம் ஏற்கனவே புத்திரசுவி காரத்தைப் பெற்றிருக்கிறோம். அதாவது தேவனு டைய குடும்பத்தில் அவருடைய பிள்ளைகளாக இடம் பெற்றிருக்கிறோம். ஆனால் நாம் மகிமை யின் சரீரத்தைப் பெறுகின்ற வேளையில் புத்திர சுவிகாரத்தை அடைவோம் என்பது அதனுடைய முழுப்பொருளையும் சுட்டிக்காட்டுகிறது. இதுவே **நம்முடைய சரீர மீட்பு** என்றும் சொல்லப்பட்டிருக் கிறது. நம்முடைய ஆவியும் ஆத்துமாவும் ஏற் கனவே மீட்பைப் பெற்றிருக்கின்றன. நாம் விண் ணுலகிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்ற வேளை யில் நமது சரீர மீட்பைப்பெறுவோம் (1 தெச. 4:13-18).

**8:24** இப்படிப்பட்ட **நம்பிக்கையுள்ள** மனப் பான்மையுடன் **நாம் இரட்சிக்கப்பட்டிருக் கிறோம்**. நாம் மனந்திரும்பின அதே சமயத்தில் இரட்சிப்பின் பயன்கள் யாவற்றையும் பெற வில்லை. பாவம், பாடுகள், நோய்கள், மரணம் ஆகியவற்றிலிருந்து முற்றுமுடிய மீட்பைத் தொடக்கத்திலிருந்தே நாம் எதிர்நோக்கி வரு கிறோம். ஏற்கனவே இவை யாவற்றையும் பெற்றி ருப்போமானால், அவற்றை இனி பெறப்போகி றோம் என்ற நம்பிக்கை நமக்குத் தேவை யில்லை. எதிர்காலத்திற்கு உரியவை எவையோ அவற்றிலேயே நாம் நம்பிக்கை கொண்டிருக் கிறோம்.

**8:25** பாவத்தின் சமுகத்திலிருந்தும், அதனால் விளையும் கேடுகளிலிருந்தும் மீட்பைப் பெறு வோம் என்ற நம்பிக்கை தேவனுடைய வாக்குறு தியை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆகவே அதனை ஏற்கனவே அடைந்துவிட்டோம் என்பது போன்ற உறுதியுடையதாக அது இருக்கிறது. ஆகவே **அது வருகிறதற்கு** நாம் **பொறுமை யோடே காத்திருப்போம்**.

**8:26** இப்படிப்பட்ட மகிமை நிறைந்த நம்பிக் கையினாலே நாம் தாங்கப்பட்டுவருவதுபோலவே, ஆவியானவரும் நமது பலவீனங்களில் நம்மைத் தாங்கிவருகிறார். அவ்வப்போது நமது ஜெப வாழ்க்கையில் நாம் தடுமாற்றம் அடைகிறோம். எவ்வாறு **வேண்டிக்கொள்ளவேண்டும்** என் பதை நாம் **அறியாமல் இருக்கிறோம்**. தன்னலம் நாடி, அறியாமையோடும், குறுகிய மனப்பான்மை யோடும் நாம் மன்றாடுகிறோம். ஆனால் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்யும் பொருட்டு ஆவியானவர் நம்முடனே கூடவந்து **பெருமூச்சு களோடு நமக்காக** வேண்டுதல் செய்கிறார். அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. இந்த வசனத்தின்படி நாமல்ல, ஆவியானவரே பெரு மூச்சு விடுகிறார். நாம் பெருமூச்சு விடுவதும் உண்மையே.

இங்கே ஒரு மறைபொருள் அடங்கியிருக் கிறது. உன்னதமான ஒருவரும், ஆற்றல்மிகுந்த சேனையும் நமக்காக சேவை புரிகின்றதும், காணக்கூடாததுமான ஆவிக்குரிய உலகிற்குள் நாம் சற்று நுழைந்து பார்க்கிறோம். இவை யாவற் றையும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை யெனினும், சில நேரங்களில் பெருமூச்சானது மிகுந்த ஆவிக்குரிய ஜெபம் என்று அறிந்து கணக் கிலடங்கா அளவு உற்சாகத்தைப் பெற முடியும்.

**8:27** மனிதனுடைய **இருதயங்களை** தேவன் **ஆராய்ந்து பார்க்கிறவராக** இருக்கிறபடியால், **ஆவியின் சிந்தை இன்னதென்று** அவரால் விளக்கிக் கூறமுடியும். அந்தச் சிந்தை பெருமூச் சின் சத்தத்தை வெளிப்படுத்துவதாக இருந்த போதிலும் அதன் பொருளை அவர் அறிவார். தூய ஆவியானவர் நமக்காக ஏறெடுக்கிற மன்றாட்டு கள் யாவும் **தேவனுடைய சித்தத்தின்படியே** இருக்கும் என்னும் உண்மை மிகவும் இன்றியமை

யாததாகும். அவை எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தின்படியே இருக்கின்ற காரணத்தினால், அவை எப்பொழுதும் நமக்கு நன்மை பயக்கின்ற வையாகவே காணப்படும். அடுத்த வசனம் பல உண்மைகளை நமக்கு விளக்கிக் கூறுகிறது.

**8:28** தேவனுடைய **தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்** அவரிடத்தில் **அன்புகூருகிறவர்களுக்கு** அவர் **சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக** வழிநடத்துகிறார். எப்பொழுதும் இது போல நடக்கிறதாகத் தோன்றுவதில்லை! கடுந்துயரங்கள், துக்கங்கள், தோல்விகள், ஏமாற்றங்கள், உற்றாரின் மரணங்கள் ஆகிய பாடுகளை நாம் அடைகிற வேளையில் இவற்றிலிருந்து என்ன நன்மைகள் பிறக்கும் என்று அதிசயிக்கிறோம்.

ஆனால் கீழ்வரும் வசனங்கள் அதற்குரிய விடையைத் தருகின்றன: தேவன் நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கின்ற யாவும், அவருடைய குமாரனுக்கு ஒப்பாக நாம் மாறவேண்டும் என்னும் திட்டத்திற்கு உட்பட்டவையே. இதனை நாம் அறிந்திடுவோமாயின், நமது ஜெபங்களில் எழுகின்ற கேள்விக்குறியை அகற்றிவிடுவோம். சந்தர்ப்ப சூழ்நிலை, அதிர்ஷ்டம், விதி போன்ற மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்திகளினாலே நமது வாழ்க்கை கட்டுப்படுத்தப்படுகிறதில்லை. மாறாக நம் ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட முறையில் தொடர்புடைய கர்த்தரின் கட்டுப்பாட்டிலேயே யாவும் நிகழ்கின்றன. அவர் நம்மிடத்தில் "தயை பாராட்டக் கூடாதபடி அன்பற்றவரோ, தவறிழைக்கக் கூடியபடி ஞானமற்றவரோ இல்லை."

**8:29** அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்ப்பதற்காக வரையப்பட்ட தேவ திட்டத்தின் மாட்சிமை நிறைந்த பீடுநடையை இப்பொழுது பவுல் பின்தொடர்ந்து செல்கிறார்.

முதலாவதாக, தேவன் நம்மை அநாதியாக முன்னறிந்திருக்கிறார். இது வெறும் அறிவுபூர்வமானது மட்டுமன்று. அறிவுபூர்வமாக *யாரெல்லாம்* இப்புவியில் பிறப்பார்கள் என்று அவர் அறிவார். ஆனால், **தம்முடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு** அவர் **எவர்களை முன்குறித்தாரோ** அவர்களையே அவருடைய முன்னறிவு அணைத்துக் கொண்டது. ஆகவே இந்த முன்னறிவு திருநோக்கம் உடையதாகும். அந்த நோக்கம் நிறைவேறாமல் போகாது. ஒருநாள் இவர்கள் யாவரும் மனம்வருந்தி விசுவாசிப்பார்கள் என்று தேவன் எவரைக் குறித்து அறிந்திருந்தாரோ அவர்களை அவர் **முன்னறிந்திருக்கிறார்** என்று சொல்வது முழுமையாகாது. உண்மையில் அவருடைய முன்னறிவே அவர்களுடைய மனம் வருந்துதலையும், விசுவாசத்தையும் உறுதி செய்கிறது.

அந்தத் துன்மார்க்கரான பாவிகள், கிருபையின் அற்புதத்தால், ஒருநாள் கிறிஸ்துவின் சாயலாக மாற்றம் பெறுவார்கள் என்னும் உண்மை, தேவனுடைய வெளிப்பாட்டில் மிகவும் திகைக்கச் செய்யும் உண்மைகளில் ஒன்றாகும். உண்மையில் தேவனுக்குரிய தனி இயல்புகளை நாம் பெறுவோம் என்பதோ, கிறிஸ்துவின் முகச்சாயலையாவது பெறுவோம் என்பதோ இதன் பொருளன்று. ஆனால் பாவத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்றவர்களாகவும், அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பான சரீரங்களைப் பெற்றவர்களாகவும், *நன்னெறி ஒழுக்கத்தில்* அவருக்கு ஒப்பானவர்களாகவும் நாம் விளங்குவோம் என்பதே அதன் பொருளாகும்.

அந்த மகிமையின் நாளிலே, அவரே **அநேகம் சகோதரருக்குள்ளே முதற்பேறானவராக** விளங்குவார். அவர் வரிசையிலும் புகழிலும் முதலிடம் வகிப்பார் என்பதே **முதற்பேறானவர்** என்னும் சொற்றொடரின் பொருளாகும். சமமானவர் பலருக்குள் அவர் ஒருவரல்லர். அவருடைய சகோதர சகோதரிகளுக்குள்ளே அவர் ஒப்புயர்வற்ற புகழுக்குரிய இடத்தைப் பெற்றிருப்பார்.

**8:30** நித்தியத்தில் **முன்குறிக்கப்பட்ட** ஒவ்வொருவரும் குறித்த காலத்தில் **அழைக்கப்பட்டும்** இருக்கிறார்கள். அவ்வாறு அழைக்கப்பட்ட ஒருவர் நற்செய்தியைக் கேட்பது மட்டுமின்றி, அதற்கு உகந்த பதிலை அளிக்கிறவராகவும் இருக்கிறார். ஆகவே அந்த அழைப்பு பயன் விளைவிக்கிற அழைப்பாக இருக்கிறது. எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்; அது தேவனுடைய பொதுவான அழைப்பு (மேலும் அது உண்மையான அழைப்பேயாகும்). ஆனால் சிலரே அதற்குரிய பதிலைச் செய்கின்றனர்; அதுவே (மனமாற்றத்தை உண்டுபண்ணுகிற அழைப்பு) தேவனுடைய பயன்தரும் அழைப்பாக இருக்கிறது.

அவ்வாறு பதிற்செய்கை புரிகிற யாவரும் **நீதிமான்களாக்கவும்பட்டிருக்கின்றனர்**. அதாவது தேவனுக்கு முன்பாக முற்றிலும் நீதியான தகுதிநிலையைப் பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்துவின் தகுதிகளின் மூலமாக அவர்கள் தேவனுடைய நீதியின் ஆடைகளால் அணிவிக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள்

கர்த்தருடைய சமுகத்திற்கு வருவதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள்.

**நீதிமான்களாக்கப்பட்டவர்கள் மகிமையும்** அடைந்திருக்கிறார்கள். நாம் **இன்னும்** உண்மையாகவே *மகிமைப்படுத்தப்படவில்லை*. அது நிச்சயமாக நடைபெறப்போவதால் இறந்த காலத்தை தேவன் பயன்படுத்தி அதனை விளக்குகிறார். மகிமையடைந்த நிலையை நாம் ஏற்கனவே பெற்றிருப்பது போன்று அது உறுதிபடைத்ததாக இருக்கின்றது!

விசுவாசியானவன் நித்திய பாதுகாப்பை உடையவனாக இருக்கிறான் என்பதைக் கூறும் வலுவான புதிய ஏற்பாட்டுப் பகுதிகளில் இதுவும் ஒன்று. தேவனால் முன்னறியப்பட்டு, முன்குறிக்கப்பட்ட பலகோடி மனிதர்களில் ஒவ்வொருவரும் **அழைக்கப்படுவார்கள், நீதிமான்களாக்கப்படுவார்கள்** மற்றும் **மகிமைப்படுத்தப்படுவார்கள்**. எவரொருவரும் விட்டுவிடப்படமாட்டார்! யோவான் 6:37 -ஆம் வசனத்தில் உள்ள "யாவும்" என்ற சொல்லை ஒப்பிட்டுக் காணுங்கள்.

**8:31** முரிக்கப்படமுடியாத பொற்சங்கிலி போன்ற மீட்பின் உண்மையைக் குறித்து நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, அதனுடைய இறுதியான கருத்தைத் தவிர்க்க இயலாது! தேவன் நம்மைத் தமக்கென்று குறித்து, பிரித்துக் கொண்டார் என்னும் பொருளில், **தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால்** எவராலும் **நமக்கு விரோதமாக** வெற்றிபெற முடியாது.[31] நமக்காக சர்வ வல்லவர் செயலாற்றுகிறபடியால், குறைவான வலிமை படைத்த ஏதொன்றும் அவருடைய திட்டத்தைத் தோற்கடிக்க முடியாது.

**8:32 தம்முடைய சொந்த குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரைக் கொடுத்தவர்**. என்ன அற்புதமான சொற்கள்! இந்தச் சொற்களோடு நாம் கொண்டிருக்கிற நெருக்கமான பரிச்சயம் அவற்றின் பிரகாசத்தை மங்கச் செய்யவோ, தேவனை ஆராதிக்கும்படி ஊக்குவிக்கும் ஆற்றலைக் குன்றச்செய்யவோ நாம் அனுமதிக்கக் கூடாது. இழந்துபோன மனித இனம் பாவமற்ற பதில்ஆள் ஒருவராலே இரட்சிக்கப்பட வேண்டியதாயிருக்க, சர்வலோகத்தின் தேவன் தமது இருதயத்தின் உன்னத பொக்கிஷமானவரைத் தராதிருக்க மனதின்றி, நமக்காக அவமானத்திற்கும் இழப்பிற்கும் உரிய மரணத்திற்கு அவரை ஒப்புவித்தார்.

இதிலிருந்து புறப்பட்டு வரும் வாதம் தடுத்து நிறுத்த இயலாத வலிமை படைத்ததாயிருக்கிறது. ஏற்கனவே மிகவுயர்ந்த அன்பளிப்பைத் தந்த தேவன், அதைக்காட்டிலும் குறைந்த மதிப்புள்ள வேறு அன்பளிப்புகளைத் தராதிருப்பாரோ? ஏற்கனவே மிகப்பெரிய விலையைச் செலுத்திய அவர், குறைவான விலையைத் தரத் தயங்குவாரோ? நம்முடைய இரட்சிப்பைப் பெறுவதற்கு இவ்வளவு தூரம் இறந்கிவந்த பின்னர், தம்முடைய கரத்திலிருந்து நம்மை அவர் நழுவவிடுவாரோ?

"அவர் அருளுவது எப்படி? இது நம்பிக்கையற்ற பேச்சு. அவர் அருளாதிருப்பது எப்படி? இது நம்பிக்கையின் பேச்சு" என்று மொழிந்தார் திருவாளர் மெக்கின்டோஷ்.[32]

**8:33** இன்னும் நீதிமன்ற அரங்கின் பின்னணியில்தான் நாம் இருக்கின்றோம். ஆயினும் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் காணப்படுகிறது. நீதிமானாக்கப்பட்ட பாவி இன்னும் கூண்டிலே நின்று கொண்டிருக்க ஓர் அறைகூவல் அங்கே விடுக்கப்படுகிறது. இவரிடத்தில் குற்றம் உண்டென்று கூற யாரேனும் இருப்பின் முன்னுக்கு வந்து கூறலாம் என்பதே அந்த அழைப்பு. ஆனால், அங்கு ஒருவரும் வரவில்லை! அவரிடத்தில் குறையுண்டு என்று எவ்வாறு சொல்ல முடியும்? தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைத் தேவன் நீதிமான்களாக ஆக்கிய பின்பு **யாரால் குற்றஞ் சாட்ட** முடியும்?

இந்த வசனத்திலும் இதற்கடுத்த வசனத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிற பதிலுக்கு முன்னால் "ஒருவராலும் கூடாது. ஏனென்றால்" என்னும் சொற்களை நாம் சேர்ப்போமானால், பொருளை மிகத்தெளிவாக அறிய முடியும். இந்த வசனம் இவ்வாறு காணப்படும்: **தேவன் தெரிந்து கொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்?** *ஒருவராலும் கூடாது. ஏனென்றால், தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்.* அவ்வாறு இந்தச் சொற்களை நாம் சேர்க்கவில்லையென்றால் ஏதோ தேவனே தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்மீது குற்றச்சாட்டினைக் கொண்டுவருவாரோ என்று தோன்றுகிறது. அதைத்தானே பவுல் இங்கு மறுத்துரைக்கிறார்!

**8:34** இன்னும் ஓர் அறைகூவல் ஒலிக்கிறது! யாராவது இவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க முடியுமா? *ஒருவராலும் கூடாது. ஏனென்றால்*, பிரதிவாதிக்காக **கிறிஸ்து** ஏற்கனவே **மரித்தார்**, மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்துமிருக்கிறார். இப்பொழுது அவர் **தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறார்**. அவர் நமக்காக

வேண்டுதலும் செய்கிறார். எல்லாவித நியாயத் தீர்ப்பிற்கும் உள்ளாக்கப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அந்தப் பிரதிவாதியின் மீது குற்றத் தீர்ப்பை வழங்காமல் அவருக்காக வேண்டுதல் செய்கிறார். இத்தகைய நிலையில் அந்த மனிதனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு வழங்க வேறு எவரிடமும் சட்டப்படியான சான்று ஏதாவது இருக்கவும் கூடுமோ?

**8:35,36** இப்பொழுது விசுவாசம் தனது கடைசி அறைகூவலை விடுக்கிறது: நீதிமானாக்கப்பட்ட வரை **கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிக்கக்** கூடியவர், இங்கு யாரேனும் இருக்கிறாரா? மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளில், தேவனுடைய அன்பினின்று பிரிக்கக்கூடிய பாதகமான நிகழ்ச்சி ஏதேனும் நடந்தது உண்டோ என்று அறியும்படி பரிசோதனை செய்யப்பட்டது. ஆனால் ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. கதிரிலிருந்து மணியைப் பிரித்தெடுக்க, தடியால் நையப் புடைக்கிறது போன்ற **உபத்திரவம்**, அந்த மணியைத் தூள்தூளாக அரைப்பது போன்ற வியாகுலம், மனத்திற்கும் சரீரத்திற்கும் கடும் வேதனை உண்டாக்கவல்ல அரக்கத்தனமான வேதனை, கொடூரம் நிறைந்த **துன்பம்** இவை யாவும் கர்த்தருக்காகத் துணிந்துநின்ற மனிதர்களிடத்தில் பாடுகளையும் மரணத்தையும் வருவிப்பதில்லை. தொடர்ந்து அரித்தெடுத்து சித்ரவதைக்குள்ளாக்கி எலும்புக் கூடுபோன்று நலிந்து எடை இழக்கச் செய்யும் பயங்கரப் பேய்ப் **பசியும்** ஒன்றும் செய்ய இயலாது. வறுமையினாலும், இடர்ப்பாட்டிலிருந்து காப்பாற்றப்பட முடியாத நிலையினாலும், தற்காத்துக்கொள்ள இயலாத நிலையினாலும் ஏற்படுகிற **நிர்வாணம்**, அல்லது உடனடியாக ஏற்படக்கூடியதும் மிகப்பெரிய ஆபத்தை உண்டாக்கக் கூடியதுமான **நாசமோசம்,** இரக்கமற்றதும், கடுமையானதும் மரணத்தை வருவிக்கக் கூடியதுமான **பட்டயம்** ஆகியவற்றால் ஒன்றும் செய்ய இயலாது.

கிறிஸ்துவின் அன்பினின்று மேற்கூறியவற்றில் ஏதாவது ஒன்று விசுவாசியைப் பிரித்திருக்குமென்றால், அழிவை ஏற்படுத்தக்கூடிய துண்டிப்பு வெகுமுன்னரே நிகழ்ந்திருக்கும். ஏனெனில் கிறிஸ்தவனின் வாழ்க்கையே உயிரோடு மரிப்பதாகும். கர்த்தரோடு இணைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் **எந்நேரமும் கொல்லப்படுகிறோம்** என்றும், **அடிக்கப்படுகிறதற்காகத்** தீர்மானிக்கப்பட்ட **ஆடுகளைப்போல** இருக்கிறோம் என்றும் இதன் நிமித்தமே சங்கீத ஆசிரியன் கூறியிருக்கிறான் (சங். 44:22).

**8:37** கிறிஸ்துவின் அன்பினின்று இவை நம்மைப் பிரிப்பதற்கு மாறாக, நாம் அவரிடத்தில் நெருங்கி வருவதற்கே உதவிபுரிகின்றன. நாம் **ஜெயங்கொள்கிறவர்கள்** மட்டுமல்ல, **முற்றும் ஜெயங்கொள்கிறவர்களுமாயிருக்கிறோம்**.[33] அஞ்சத்தக்க சக்திகளை நாம் வெற்றி பெறுவது மட்டுமின்றி, அதன் மூலம் தேவனுக்கு மகிமையையும் கொண்டு வருகிறோம். அது பிறருக்கு ஆசிர்வாதமாய்த் திகழ்கிறது, நமக்கு நன்மையாய் விளங்குகிறது. நம்முடைய எதிரிகளிலிருந்து அடிமைகளை உண்டாக்குகிறோம். குறுக்கிடும் தடைக்கற்களை உயரச் செய்வதற்கான படிகளாக மாற்றுகிறோம்.

இவையாவும் நம்முடைய சொந்த வலிமையினால் நிகழ்வதில்லை. மாறாக **நம்மில் அன்பு கூருகிறவராலே** எல்லாம் நடக்கும். கசப்பிலிருந்து இனிப்பையும், பலவீனத்திலிருந்து பலத்தையும், சோகத்திலிருந்து வெற்றியையும், கடும் வேதனையிலிருந்து ஆசிர்வாதத்தையும் கொண்டு வருவது கிறிஸ்துவின் வல்லமையே.

**8:38** அப்போஸ்தலன் இன்னும் தனது தேடுகிற பணியை முடிக்கவில்லை. தேவனுடைய அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கத்தக்க ஏதாவது ஒன்று கிடைக்குமா என்று இப்பிரபஞ்சம் முழுவதையும் அவர் துருவித் தேடிப் பார்க்கிறார். அதன் பின்னர் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து பார்த்து, அதனால் இயலாது என்று முடிவுசெய்து நிராகரிக்கிறார்.

**மரணமும்,** பேரச்சம் விளைவிக்கக் கூடிய அதன் தன்மையும்;

**ஜீவனும்,** அதனுடைய மாயக் கவர்ச்சிகளும்;

**தேவதூதர்களும் அதிகாரங்களும்,** வல்லமையிலும் அறிவிலும் இயற்கைக்கு அப்பற்பட்ட நிலைகளும்,

**வல்லமைகள்,** கொடுங்கோல் ஆட்சிபுரியும் மனிதர்களும், இன்னல் விளைவிக்கும் தூதர்களும்,

**நிகழ்காரியங்களும்,** நம்மீது நொறுங்கி விழக் கூடியவையும்,

**வருங்காரியங்களும்,** எழுந்து வரக்கூடி தீமைகளும்,

**8:39 உயர்வுகளும் தாழ்வுகளும்,** நிலங்களையும் விண்வெளியையும் சார்ந்த உலகங்கள், கண்களுக்கு மறைவான ஆற்றல்கள் யாவும் உட்பட[34] எல்லாம் நம்மை தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்க இயலாது. ஏதொன்றும் விட்டுப்போகாமல் இருக்கும்படி பவுல் **வேறெந்த**

**சிருஷ்டியும்** என்று இறுதியில் சேர்த்து முடிக் கிறார்.

பவுல் ஆற்றிய தேடும் பணியின் முடிவு, **நம்மு டைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாதென்னும்** உறுதியேயாகும்.

தங்களுடைய உயிரைத் தியாகமாகக் கொடுத்து மாண்டோரின் இன்ப கீதமாகவும், உயிர்த்தியாக வாழ்க்கையை வாழ்ந்தோரின் வீர காவியமாகவும் வெற்றியின் இந்த வீர முழக்கம் இருந்துவந்திருக்கிறது என்பதில் யாதொரு வியப்புமில்லை.

## 3. காலப் பாகுபாட்டு விளக்கம் - நற்செய்தியும் இஸ்ரவேலும் [அதி. 9-11]

### அ. இஸ்ரவேலின் கடந்த காலம் [அதி. 9]

"இரட்சிப்பானது புறவினத்தவருக்கும் யூதருக் கும் ஒரேவிதமாக நற்செய்தியில் வாக்களிக்கப் பட்டிருக்கிறது என்று கூறுகிறீர்கள். அவ்வாறா யின் தேவனுடைய பூமிக்குரிய மக்களாகிய யூத ருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை அவர் தகர்த்துவிட்டார் என்பதுதான் அதன் பொருளா?" என்று எதிர்த்து வாதிடும் யூதருக்கு, பவுல் அளிக் கும் விடையினை 9 முதல் 11 வரையிலுள்ள அதி காரங்களில் காண்கிறோம். இஸ்ரவேலின் கடந்த காலத்தையும் (அதி. 9), அதன் நிகழ்காலத்தை யும் (அதி. 10), அதன் எதிர்காலத்தையும் (அதி. 11) குறித்த விளக்கங்களை அந்த விடையில் காணலாம்.

தேவனுடைய இறையாண்மையைக் குறித் தும் மனிதனுடைய பொறுப்பினைக் குறித்தும் இத் திருமறைப் பகுதி மிகவும் ஆழமாக வலியுறுத்து கிறது. தேவன் தம்முடைய இறையாண்மையில் மனிதர்களைத் தெரிந்தெடுக்கிறார் என்னும் உண்மையை எடுத்தியம்பும் வேத பகுதிகளில் ரோமர் 9 - ஆவது அதிகாரம் மிகவும் முக்கியமான தாகும். அடுத்த அதிகாரம் அதனைச் சமநிலைப் படுத்தும், மனிதனுடைய பொறுப்பு என்னும் தத்துவத்தை அதே விறுவிறுப்புடன் பேசுகிறது.

### தேவனுடைய இறையாண்மையும் மனிதனுடைய பொறுப்பும்

தேவன் இறையாண்மை உடையவர் என்ற கூற்றை, இப்பிரபஞ்சத்தின் மீது அவர் சகல அதி காரமும் உடையவர், தமது விருப்பத்தின்படி எதை வேண்டுமானாலும் அவர் செய்யலாம் என் னும் பொருள்படவே நாம் கூறுகிறோம். இருந்த போதிலும், அவர் தேவனாக இருக்கின்ற காரணத் தினால் தவறிழைக்க மாட்டார், நீதியற்றதும் நேர்மையற்றதுமான ஏதொரு செயலையும் செய்ய மாட்டார் என்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகவே தேவன் இறையாண்மை உடையவர் என்று நாம் கூறுகிறபோது, தேவனை தேவனா கவே கருதுகிறோம். இந்த உண்மையை எண்ணி நாம் அச்சம் அடையவோ வருத்தம் கொள்ளவோ தேவையில்லை. இது மகிமை பொருந்திய சத்திய மாகவும் அவரைத் தொழுதுகொள்வதற்குக் காரணமாகவும் திகழ்கிறது.

தேவன் தம்முடைய இறையாண்மையில் சில மனிதர்களைத் தமக்குச் சொந்தமாகத் தெரிந்து கொண்டார். தேவன் தம்முடைய இறையாண்மை யில் மனிதர்களைத் தெரிந்தெடுக்கிறார் என்று கற்பிக்கும் அதே வேதம், மனிதனுடைய பொறுப்பு களைப் பற்றியும் கற்பிக்கிறது. இரட்சிப்புக்கென்று தேவன் மனிதர்களைத் தெரிந்தெடுக்கிறார் என் பது எவ்வாறு உண்மையோ அதுபோலவே அந்த மனிதர்களும் இரட்சிக்கப்படுவதற்கென்று தங்க ளுடைய சித்தத்தில் தெளிவான செயல் ஒன்றைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். "பிதாவான வர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்" என்னும் சொற்களில் இரட்சிப்பில் தேவனு டைய பக்கத்தைக் காண்கிறோம். அதனைத் தொடர்ந்து வரும் சொற்களில் மனிதனுடைய பக் கத்தைக் காண்கிறோம். "என்னிடத்தில் வருகிற வனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37). உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்து வுக்குள் நம்மை தேவன் தெரிந்துகொண்டதால் விசுவாசிகளாகிய நாம் களிகூருகிறோம் (எபே. 1:4). விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவச மாய் வாங்கிக்கொள்வான் என்ற உண்மையிலும் அதே உறுதியோடு கூடிய நம்பிக்கை உடைய வராக நாம் இருக்கின்றோம் (வெளி. 22:17). இந்த இரண்டு உண்மைகளையும் திருவாளர் D. L. மூடி என்பார் ஓர் எடுத்துக்காட்டினாலே விளக்கினார்: இரட்சிப்பின் வாசலண்டை நாம் வருகிறபோது, அதன் முன்புறத்தில் எழுதப்பட்டிருக்கிற "விருப் பம் உள்ளவராக இருக்கிற எவர் ஒருவரும் உள்ளே வரலாம்" என்னும் சொற்களைக் காண்கிறோம். அந்த வாசல் வழியாக நுழைந்து பின்பக்கம் திரும்பிப் பார்க்கும்போது, "தேவனுடைய முன்னறி வின்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்னும் சொற்கள் கதவின் பின்பக்கம் எழுதப்பட்டிருக்கிற தைக் காண்கிறோம். இவ்வாறாக, மனிதனுடைய பொறுப்பைக் குறித்த உண்மை, இரட்சிப்பின் வாசலின் அருகில் அவர்கள் வருகிறபோது அவர்

களை எதிர்கொள்கிறது. தேவன் தமது இறை யாண்மையில் மனிதர்களைத் தெரிந்துகொள் கிறார் என்னும் ஒரு குடும்பத்தின் சத்தியம் அவ் வாசல் வழியாக ஏற்கனவே உள்ளே நுழைந்தவர் களுக்கு உரியதாக வெளிப்படுகிறது.

தமக்கென்று சிலரைத் தெரிந்தெடுத்த தேவன், அதே சமயத்தில் எல்லா மனிதர்களுக்கும் இரட் சிப்பை அருளுவதாக எங்ஙனம் உண்மையான அழைப்பை விடுக்கமுடியும்? இந்த இரு உண்மை களுக்கும் இடையே இருக்கும் கருத்து வேற்று மையை அகற்றி இணக்கம் உண்டாக்குவது எங் ஙனம் சாத்தியமாகும்? உண்மை யாதெனில், இவ் விரண்டிற்குமிடையே இணக்கத்தை நம்மால் உண்டுபண்ண முடியாது. மனிதனுடைய எண்ணத் தின்படி இவ்விரண்டும் முரண்பாடானவையே. ஆயினும் இவ்விரண்டு உபதேசங்களையும் வேதாகமம் கற்பிக்கிறது. ஆகவே நாம் இரண்டை யும் நம்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது சிந்தைக்குக் கடினமாகத் தோன்றும் இவ் வுண்மை தேவனுக்குக் கடினமானதல்லவென்று அறிந்து நாம் மனநிறைவுகொள்ள வேண்டும். இணை கோடுகளுக்கு ஒப்பாக விளங்கும் இவ் விரண்டு சத்தியங்களும் நித்தியத்தில்தான் ஒன்றிணையும்.

யாரெல்லாம் இரட்சகரிடம் நம்பிக்கைகொள் வார்கள் என்பதைத் தம்முடைய முன்னறி வினாலே அறிந்த தேவன் அவர்களை இரட்சிப்புக் கென்று தெரிந்துகொண்டார் என்று கூறி, தேவனு டைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பையும் மனித னுடைய பொறுப்பையும் இணங்கச்செய்யும்படி சிலர் முயற்சி மேற்கொண்டுள்ளார்கள். "தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை முன் குறித்திருக்கிறார்" என்னும் வசனத்தையும் (ரோமர். 8:29) "தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு..." என்னும் வசனத்தை யும் (1 பேதுரு 1:2) அடிப்படையாகக் கொண்டு அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள். ஆனால் தேவ னுடைய முன்னறிவு வெறும் முன்னறிவு மட்டு மல்ல என்பதையும் அதுவே ஒன்றைத் *தீர்மானிக் கின்ற அறிவு* என்பதையும் அவர்கள் காணத் தவறி விடுகின்றார்கள். யாரெல்லாம் இரட்சகரை நம்புவார்கள் என்பதை அவர் முன்னதாகவே அறிந்திருக்கிறார் என்பது மட்டுமின்றி, சிலரைத் தம்மிடம் தமக்கென்று இழுத்துக்கொண்டவராக இந்த விளைவை அவர் *முன்தீர்மானித்திருக்கிறார்.*

சிலரை இரட்சிப்புக்கென்று தேவன் தெரிந்து கொண்டிருந்தாலும், ஒருவரையும் அவர் நரகத் திற்கென்று தெரிந்துகொள்ளவில்லை. தேவனு டைய தெரிந்தெடுப்பை வேதம் கற்பிக்கிறது, ஆயினும் தேவனுடைய புறக்கணிப்பை அது போதிப்பதில்லை என்றும் இதனை வேறு வகையா கக் கூறலாம். "ஆசீர்வாதத்திற்கென்று சிலரை தேவன் தெரிந்தெடுப்பாராயின், மற்றவர்களை அவர் அழிவுக்கென்று தெரிந்தெடுப்பது அவசிய மல்லவா" என்று சிலர் மறுத்துரைக்கலாம். ஆயின் அது உண்மையன்று! தன்னுடைய சொந்தப் பாவத்தின் காரணமாகவே மனித இனம் முழுவதும் அழிவிற்குப் பாத்திரமாக இருக்கிறதேயொழிய, மனிதர்களுக்கு எதிராகக் கொடுங்கோன்மையான ஆணை எதையும் தேவன் பிறப்பிக்கவில்லை. எல்லாரும் நரகத்திற்குச் செல்லும்படி தேவன் அனு மதித்தால், அவர்களுக்கு எது தகுதியானதோ அதையே அவர்கள் பெறுவார்கள். அவ்வாறு செய்திருப்பின் அது நியாயமானதாகவே இருந் திருக்கும். "அழிவை நோக்கிச் சென்றுகொண்டி ருக்கும் மக்களில் சிலரைத் தெரிந்துகொள்வதற் காக இறையாண்மையுள்ள தேவன் தம்மைத் தாழ்த்தி இறங்கி வருவது சரியாகுமா?" என்பதே இப்பொழுது எழும் கேள்வி. ஆம், அவர் அவ்வாறு தான் செய்கிறார் என்பது அதன் விடையாகும். மேற்கூறிய யாவும் நம்மைக் கீழ்க்கண்ட முடிவிற் குக் கொண்டுவருகிறது: இரட்சிக்கப்படாத மனிதர் கள் தங்களுடைய சொந்தப் பாவத்தினாலும், பணிவற்ற இயல்பினாலும் இழந்து போனவர் களாக இருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட மனிதர் களோ தேவனுடைய கிருபை மிகுந்த இறையாண் மையினாலே இரட்சிப்பைப் பெற்றுள்ளார்கள்.

இரட்சிப்படைந்த மனிதனுக்கு, தேவனுடைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பைக் குறித்த பொருள், இடைவிடாத வியப்பிற்குக் காரணமாக விளங்குகிறது. ஒரு விசுவாசி தன்னைச் சூழ வாழ்கிற மனிதர்களைக் காணுமிடத்து, தன்னைக் காட்டிலும் நற்குணம் உடையோரையும், உயர்ந்த தகுதி படைத்தவர்களையும், மேலான செயல் திறம் கொண்டவர்களையும் தன்னுடன் ஒப்பிட்டுப் பார்த்து, "என்னை ஏன் கர்த்தர் தெரிந்து கொண் டார்?" என வினவுகிறான். இதனைக் கவிதை வடிவில் பாடுகிறார் திருவாளர் ஐசக் வாட்ஸ்:

கனிவுடன் அழைத்திடும்
குரலினைக் கேட்டிட
அடிமையைப் படைத்தீர்
காரணம் அறிந்திலன்!
திருச்சித்தம் அறியாமல்
அலைந்திடும் மாந்தர்கள்

வறுமையின் வழியினில்
வாழ்வற்றுப் போனதேன்?

"தேவன் என்னைத் தெரிந்தெடுக்கவில்லை யென்றால் நான் என்ன செய்யமுடியும்" என்று வினவி, தங்களுடைய அவிசுவாசத்திற்கு தேவனுடைய தெரிந்தெடுப்பை இரட்சிக்கப்படாதோர் காரணமாகக் கூறலாகாது. தங்களுடைய பாவத்திற்கென்று மனம் வருந்தி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதினால் மட்டுமே தாங்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை அவர்களால் அறிந்துகொள்ள முடியும் (1 தெச. 1:4-7). அதேவிதமாக நற்செய்திப் பணியின் மீது கொண்டிருக்க வேண்டிய மனப்பூர்வமான ஆர்வம் அற்றவர்களாகக் கிறிஸ்தவர்கள் இருப்பதற்கு தேவனுடைய தெரிந்தெடுப்பைக் காரணமாகக் கூறக்கூடாது. "அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயின், எவ்வாறேனும் இரட்சிப்படைவர்" என்று நாம் கூறுவது தகுதியானது அன்று. யாரெல்லாம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை தேவன் ஒருவரே அறிவார். எல்லா மக்களுக்கும் விடுக்கப்பட்டுள்ள தேவனுடைய இரட்சிப்பின் அழைப்பு உண்மையானதாக இருக்கின்ற காரணத்தினால் உலகம் முழுவதற்கும் நற்செய்தியை அறிவிக்கும்படி நாம் கட்டளை பெற்றிருக்கிறோம். தங்களுடைய இருதயக் கடினத்தின் நிமித்தமே மக்கள் நற்செய்தியைப் புறக்கணிக்கின்றனர். உலகம் முழுவதற்கும் விடுவிக்கப்பட்டுள்ள தேவனுடைய அழைப்பு உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறப்பட்டது அன்று.

இந்தப் பொருள்பற்றி எழக்கூடிய இரண்டு ஆபத்துக்களை நாம் தவிர்க்க வேண்டும். ஒன்று, இந்தச் சத்தியத்தின் ஒரு பகுதியை மட்டும் பற்றிக் கொள்வதாகும். அதாவது, ஒருவன் இரட்சிப்பை அடைவதற்காக எதைத் தெரிந்தெடுப்பது என்பதில் அவன் எவ்விதப் பொறுப்பும் இல்லாதவனாக இருக்கிறான் என்று கருதி, தேவனுடைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பில் நம்பிக்கை கொள்வதாகும். இரண்டாவது, மனிதனுடைய பொறுப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, மற்றதைக் கருத்தில்கொள்ளாமல் விட்டுவிடுவதாகும். தேவ வசனத்தின் அடிப்படையில் காண்கிறபோது, தேவனுடைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பையும், மனிதனுடைய பொறுப்பையும் சமநிலை உறுதியோடு நம்புவதே முறையானது. வேதத்தில் கூறியுள்ள இந்த உபதேசங்களைப் பற்றிக் கொள்வதற்கு இதுவே சீரிய வழியாகத் திகழ்கிறது.

ஒன்பதாவது அதிகாரத்தில் இப்பொருள் பற்றிய விளக்கத்தை இனிய அப்போஸ்தலன் விளக்குவதைக் காண விழைவோம்.

**9:1** முன்பு இஸ்ரவேல் தேவனிடத்திலிருந்து பெற்ற மகிமைநிறை அழைப்பையும், பின்பு அது மேசியாவைப் புறக்கணித்ததின் நிமித்தம் அவரால் தள்ளப்பட்டதையும் பவுல் எண்ணிப் பார்க்கையில், அவருடைய மனம் மிகுந்த துக்கத்தினாலும் இடைவிடாத வேதனையாலும் நிறைந்திருக்கிறது.

**9:2** யூதர் மற்றும் புறவினத்தார் ஆகிய இரு கூட்டத்தாருக்கும் உரித்தானது என்று பவுல் உறுதிபடக் கூறியிருப்பதால், அவர் காட்டிக் கொடுப்பவராகவும், கொள்கை மாறுகிறவராகவும், துரோகியாகவும் அவர்களுக்குத் தோற்றமளிக்கிறார். அவ்வெண்ணத்தை அகற்றும்படி, யூதமக்கள்மீது தான் கொண்டிருக்கும் தணியாத பற்றினை ஆழ்ந்த துக்கத்துடன் கூடிய சூளுரையாகக் கூறுகிறார். அவர் **உண்மையைப்** பேசுகிறாரேயொழிய **பொய்** சொல்லவில்லை. **பரிசுத்த ஆவியுடன்** அவருடைய **மனச்சாட்சி** கொண்டுள்ள ஐக்கியத்தின் அடிப்படையில் அவர் தான் சொல்லுவது உண்மையென்று உறுதியளிக்கிறார்.

**9:3** தன்னுடைய உடன் பிறப்புகளாகிய யூதர்கள் இரட்சிப்பை அடையும் பொருட்டு தான் **சபிக்கப்படுவதையும்**, அதாவது தனது சொந்த இரட்சிப்பை இழந்து கிறிஸ்துவினிடத்திலிருந்து துண்டிக்கப்படுவதையும் கூட ஏற்றுக்கொள்ள விரும்புவதாக அவர் கூறுகிறார். தன்னையே மறுதலிக்கும் இந்த வலிமைமிக்க கூற்றில் மிகவும் உயர்ந்த அன்பை நாம் உணர்கிறோம் - தன்னுடைய நண்பர்களுக்காக உயிரையும் ஒருவன் துறக்கும்படி அவனை நெருக்குகிற அன்பே அவ்வன்பாகும் (யோவான் 15:13). மனந்திரும்பிய யூதன் தனது இனத்தாரின் மனந்திரும்புதலுக்காக அடைகிற பெரிதான உளப்பாரத்தை இங்கு நம்மால் உணர முடிகிறது. "ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என்பேரைக் கிறுக்கிப்போடும்" என்று மோசே தன் இனத்தாருக்காக ஏறெடுத்த மன்றாட்டினை இது நினைவுபடுத்துகிறது (யாத். 32:32).

**9:4** பவுல் இவ்விதமாகத் தன் இனத்தாருக்காகப் புலம்புகிறபோது, அவர்களுடைய மகிமைக்குரிய நற்பேறுகள் அவருடைய சிந்தனைக்குக் காட்சிப் பொருளாகக் கடந்து செல்கின்றன. **அவர்கள் இஸ்ரவேலரே**. அவர்கள் தேவனால்

தெரிந்துகொள்ளப்பட்ட தொன்மையான இனத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

இஸ்ரவேல் நாட்டினை தேவன் தமது குமாரனாக *சுவிகரித்துக்கொண்டார்* (யாத். 4:22). எகிப்தினின்று அவர் தம் மக்களை மீட்டுக்கொண்டார் (ஓசியா 11:1). இஸ்ரவேலுக்கு அவர் தகப்பன் ஆவார் (உபா. 14:1), எப்பிராயீம் அவருடைய முதற் குமாரன் (எரே. 31:9) (இஸ்ரவேலின் மறுபெயராக எப்பிராயீம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.)

இஸ்ரவேலரின் நடுவில் தேவனுடைய சமுகம் இருந்தது என்பதற்கும், அவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து அவரே அவர்களை வழிநடத்தினார் என்பதற்கும் செக்கினா என்னும் மேகத்திலான **மகிமை** அடையாளமாக விளங்கிற்று.

புறவினத்தவரோடு அல்ல, இஸ்ரவேலோடு தான் தேவன் **உடன்படிக்கை** செய்தார். எடுத்துக்காட்டாக, எகிப்து நதிமுதல் ஐபிராத்து நதி மட்டுமான நாட்டினை இஸ்ரவேலுக்குத் தருவதாக உறுதிசெய்யும் பாலஸ்தீன உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (ஆதி. 15:18). "என்றென்றும் நிலையானதும், எதிர்காலத்தில் மனமாற்றத்தை உண்டுபண்ணுவதும், மனம்வருந்தும் எஞ்சிய சிறு கூட்டத்திற்கு ஆசிர்வாதத்தை நல்குவதுமான" புது உடன்படிக்கையை இஸ்ரவேல் மக்களோடு ஏற்படுத்தப்போவதாக அவர் உறுதியளித்துள்ளார் (எரே. 31:31-40).[35]

இஸ்ரவேலருக்கே **நியாயப்பிரமாணம்** கொடுக்கப்பட்டது. அவர்களே அதைப் பெற்றவர்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தோடும் ஆலயத்தோடும் சம்பந்தப்பட்ட விரிவான சமயப்பணிகளும் **தேவ ஆராதனையும்** இஸ்ரவேல் மக்களுக்கே கொடுக்கப்பட்டன. ஆசாரியத்துவமும் அவர்களுக்கே கொடுக்கப்பட்டது.

மேலே சொல்லப்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கும் கூடுதலாக, இஸ்ரவேலுக்கு அமைதியையும், பாதுகாப்பையும், செல்வத்தையும் அருளுவதாகக் கூறும் எண்ணிக்கையில் அடங்கா **வாக்குத்தத்தங்களையும்** தேவன் கொடுத்துள்ளார்.

**9:5** இஸ்ரவேலின் முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யாக்கோபின் பன்னிரண்டு குமாரர்கள் யாவரும் தங்களுக்கே சொந்தமானவர்கள் என்று அந்நாடு உரிமை பாராட்டுவது முறையே. எல்லாவற்றிற்கும் மேலாக, இப்பிரபஞ்சத்தின்மீது இறையாண்மை உடைய வராகிய மேசியா, **என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்** ஆவார். ஆயினும் அவர் மனித மரபுவழியின்படி இஸ்ரவேலரே ஆவார். நமது இரட்சகருடைய தெய்வீகத்தையும் மனித நிலையையும் ஐயத்திற்கு இடமின்றி எடுத்துரைக்கும் வேத பகுதியாக இது விளங்குகிறது. (சில வேத மொழிபெயர்ப்புகள் இவ்வசனத்தின் வேகத்தைக் குறைத்துவிடுகின்றன. எடுத்துக்காட்டாக RSV மொழிபெயர்ப்பு சரியானதல்ல என்று கூற இயலாது. ஆயினும் ஆவிக்குரிய பகுத்தறிவோடு மற்ற வேதபகுதிகளையும் இதனையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது KJV, NKJV போன்ற பழைய மொழிபெயர்ப்புகள் பொருத்தமானவையாகத் தோன்றுகின்றன.[36]

**9:6** தெய்வத்தன்மை பற்றிய புதியதொரு கடினமான பிரச்சினையை இப்பொழுது அப்போஸ்தலன் சந்திக்க வேண்டியதாயிருக்கிறது. தம்முடைய மக்களாக இஸ்ரவேலரை இப்புவியில் தேவன் தெரிந்தெடுத்து அவர்களுக்கு அளித்த வாக்குறுதியானது, அவர்களுடைய தற்போதைய நிராகரிப்பினாலும், அவர்களும் புறவின மக்களும் சமநிலையில் தேவனிடத்திலிருந்து ஆசிர்வாதத்தைப் பெறமுடியும் என்னும் நிலைமையினாலும், செயலற்றுப் போய்விடும் என்பது எவ்வாறு சாத்தியமாகும்? தேவன் தமது வாக்குறுதியை மீறுவதாக இது அமையாது என்று பவுல் வலியுறுத்துகிறார். தேவன் எப்பொழுதும் தமது இறையாண்மைத் தெரிந்தெடுப்பைத் தமது வாக்குறுதியின் அடிப்படையில் நிறைவேற்றுகிறாரேயொழிய, மரபுவழியாய்ச் செய்கிறதில்லையென்று தொடர்ந்து அவர் உறுதிப்படுத்துகிறார். ஒருவன் **இஸ்ரவேல்** நாட்டில் பிறப்பதினால் மட்டும் வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளியாக முடியாது. **இஸ்ரவேல்** நாட்டில் விசுவாசிகளாகிய எஞ்சிய சிலரை தேவன் தமக்கென்று கொண்டுள்ளார்.

**9:7** ஆபிரகாமின் வழித்தோன்றல்கள் **எல்லோரும்** அவனுடைய **பிள்ளைகளாகக்** கணக்கிடப்படவில்லை. எடுத்துக்காட்டாக இஸ்மவேல் **ஆபிரகாமின் சந்ததியாவான்**. எனினும் வாக்குறுதியைப் பெற்ற சந்ததி ஈசாக்கின் மூலமாக வந்ததேயொழிய இஸ்மவேலின் வழியில் தோன்றவில்லை. **"ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்"** என்பதே தேவன் அளித்த வாக்குறுதி (ஆதி. 21:12). இந்த மடலின் 4:12 - ஆம் வசனத்திற்குக் கொடுத்த விளக்கவுரையில், விசுவாசிக்காத யூதரோடு இயேசு கிறிஸ்து ஆற்றிய உரையாடலில் இதே வேறுபாட்டை அழகுற வெளிப்படுத்தியதைக் குறிப்பிட்டோம். அந்நிகழ்ச்சி

யோவான் 8:33-39 ஆகிய வசனங்களில் காணப் படுகிறது. அந்த யூத அவிசுவாசிகள், "நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம்" என்று கிறிஸ்துவினிடத்தில் கூறினார்கள் (வச. 33). இதை ஏற்றுக்கொண்ட இயேசு கிறிஸ்து, "நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்" என்று கூறினார் (வச. 37). "ஆபிரகாமே எங்கள் பிதா" என்று அவர்கள் கூறினபோதோ "நீங்கள் ஆபிர காமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே" என்று கர்த்தர் பதிலுரைத்தார் (வச. 39). அதென்னவெனில் அவர்கள் ஆபிரகாமின் வழித்தோன்றல்களாக இருந்தபோதிலும், ஆபிரகாமின் விசுவாசம் அவர் களுக்கு இல்லை. ஆகவே அவர்கள் அவனு டைய ஆவிக்குரிய பிள்ளைகள் அல்லர்.

**9:8** சரீரப்பிரகாரமான வழித்தோன்றல்கள் மேன்மையாகக் கருதப்படமாட்டார்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு சில குறிப்பிடத்தக்க **வாக்குறுதிகளைப்** பெற்றவர்களே உண்மை யான இஸ்ரவேலர் ஆவர். அவர்கள் அவருடைய **பிள்ளைகளாக** குறிக்கப்பட்டவர்கள். இந்த இறையாண்மைத் தெரிந்தெடுப்பை ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரிடத்தில் விளங்கின தாக நாம் காண்கிறோம்.

**9:9** ஆபிரகாமுக்கு தேவன் காட்சியளித்து, அவர் **குறித்த காலத்தில்** மீண்டும் **வருவதாக வும்**, அச்சமயத்தில் **சாராளுக்கு** ஒரு **குமாரன்** இருப்பான் என்றும் வாக்குரைத்தார். அந்தக் **குமாரனே**, ஈசாக்கு. மெய்யாகவே அவன் வாக் குத்தத்தின் குமாரனும், இயற்கைக்கு அப்பாற் பட்டு பிறந்த குழந்தையுமாக இருந்தான்.

**9:10** தேவனுடைய தெரிந்தெடுப்பின் இன்னொரு எடுத்துக்காட்டினை யாக்கோபில் காண்கிறோம். **ஈசாக்கு, ரெபெக்காள்** ஆகியோரே அவனுடைய பெற்றோர்கள். ஆயின், **ரெபெக்காள்** ஒன்றல்ல இரண்டு குழந்தைகளைத் தன் வயிற்றில் சுமந்தாள்.

**9:11 பிள்ளைகள் பிறக்கிறதற்கு** முன்னமே, ஓர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஆகவே அந்தக் குழந்தைகளுடைய தகுதியான செய்கைகளுக் கும் அந்த அறிக்கையானது பிறப்பிக்கப்படுதவற் கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. அது முற்றி லும் தேவனுடைய தெரிந்தெடுப்பைச் சார்ந்தே இருந்தது. அந்தத் தெரிந்தெடுப்பு அவருடைய சொந்தச் சித்தத்தை அடிப்படையாகக் கொண்டி ருந்ததேயொழிய, அப்பிள்ளைகளினுடைய நடத் தையையோ திறமையையோ அடிப்படையாகக் கொண்டதாயிருக்கவில்லை. **தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவரு டைய தீர்மானம்** என்னும் சொற்றொடர், தேவனு டைய இறையாண்மையின் சித்தத்தின்படியும், மனமகிழ்ச்சியின்படியும் அவர் பகிர்ந்தளிக்கும் அருளப்பாட்டின் தீர்மானம் என்று பொருள்படும்.

யாக்கோபு என்னென்ன செய்வான் என்பதை தேவன் முன்னறிந்ததன் காரணமாக அவனை அவர் தெரிந்தெடுக்கவில்லை என்னும் கருத்து இவ்வசனத்தில் உள்ளடங்கியிருப்பதை நாம் அறிகிறோம். **கிரியைகளினாலே** அவருடைய தெரிந்தெடுப்பு நிகழவில்லை என்று இவ்வசனம் மிகத்தெளிவாகக் கூறுகிறது.

**9:12 மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ் செய்வான்** என்பது தேவனுடைய தீர்மானமாக இருந்தது. யாக்கோபின் அடிமை என்னும் ஸ்தானத்தை ஏசா பெறுவான் என்று சொல்லப் பட்டது. *இப்பூமிக்குரிய மகிமைக்கும் சிலாக் கியத்திற்கும்* உரிய வகையில் யாக்கோபு தெரிந்து கொள்ளப்பட்டான். அவ்விரட்டைப் பிள்ளை களில் ஏசா முதற்பிறந்தவன். முறைப்படி அந்தப் பதவிக்கு ஏற்ற நன்மதிப்பிற்கும் நற்பேறுகளுக் கும் அவனே உரிமை உடையவன். ஆனால் தேவனுடைய தெரிந்தெடுப்பு அவனை விட்டு அகன்று யாக்கோபினிடத்தில் தங்கியது.

**9:13** தேவனுடைய இறையாண்மைத் தெரிந் தெடுப்பை இன்னும் சற்றுக் கூடுதலாக வலியுறுத் திக்கூற மல்கியா 1:2,3 -ஆகிய வசனங்களை பவுல் மேற்கோள் காட்டுகிறார். **"யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்."** இஸ்ர வேல், ஏதோம் என்னும் இரண்டு நாடுகளைக் குறித்து இங்கே தேவன் பேசுகிறார். அந்த இருநாடுகளுக்கும் முறையே **யாக்கோபு** மற்றும் **ஏசா** தலைவர்கள் ஆவர். மேசியாவும், மேசியா வின் அரசாட்சியும் இஸ்ரவேலுக்கு உரியதாகும் படி தேவன் அந்நாட்டைப் பிரித்தெடுத்தார். ஏதோ மிற்கோ அப்படிப்பட்ட வாக்குறுதி கொடுக்கப்பட வில்லை. மாறாக, அதன் மலைகள் பாழாகவும், அதனுடைய சுதந்தரம் வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பத்தினுடையதாகவும் ஆக்கப்பட்டன (மல். 1:3; எரே. 49:17,18; எசே. 35:7-9 ஆகிய வசனங்களைக் காண்க).

மேற்கோள் காட்டப்பட்ட மல்கியா 1:2,3 ஆகிய வசனங்கள், இரண்டு நாடுகளை தேவன் நடத்திய விதத்தை எடுத்தியம்புகின்றன. ஆயினும் தனிப் பட்ட மனிதர்களை அவர் தம்முடைய இறையாண் மைத் தெரிந்தெடுப்பின் மூலம் தெரிந்துகொள்

கிறார் என்னும் கொள்கையை வலியுறுத்தவும் இவ்வசனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன்** என்னும் கூற்றை, **மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான்** என்று தேவன் தமது இறையாண்மையின் அதிகாரத்தில் இட்ட ஆணையின் அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டும். யாக்கோபிற்குக் கொடுக்கப்பட்ட முன்னுரிமை, அன்பின் செயலாக இங்கே விவரிக்கப்பட்டிருக்கிறது. அதனோடு *ஒப்பிட்டுப்பார்க்குங்கால்* ஏசாவைப் புறக்கணித்தது வெறுப்பென காணப்படும். எவ்வித இரக்கமுமின்றி கொடூரமான முறையில் ஏசாவைப் பழிவாங்கவேண்டுமென்று தேவன் அவனிடத்தில் பகைமையுணர்வு கொண்டிருந்தார் என்பது இதன் பொருளன்று. மாறாக, யாக்கோபைக் காட்டிலும் ஏசாவினிடத்தில் தேவன் குறைவாக அன்பு கொண்டிருந்தார். இது யாக்கோபை அவர் தமது இறையாண்மையில் தெரிந்தெடுத்ததன் மூலம் தெளிவாகிறது.

இந்த வேதப்பகுதியானது *பூமிக்குரிய ஆசிர்வாதத்தைப்* பற்றியதாக இருக்கிறதேயொழிய நித்திய வாழ்வைப் பற்றியதன்று. ஏதோமை தேவன் வெறுத்தார் என்பதால் தனிப்பட்ட ஏதோமியர் *இரட்சிக்கப்படமாட்டார்கள்* என்பது அதன் பொருள் ஆகாது. அவர் இஸ்ரவேலினிடத்தில் அன்பாயிருந்தார் என்னும் கூற்று, யூதர்கள் தனிப்பட்ட முறையில் இரட்சிப்படையவேண்டிய *அவசியமில்லை* என்னும் பொருளையும் தருவதில்லை. (ஏசா சில பூமிக்குரிய ஆசிர்வாதங்களைப் *பெற்றான்* என்று அவனே சான்று பகர்வதை ஆதி. 33:9 -இல் கண்டுணர்க.)

**9:14** தேவனுடைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பைப்பற்றிய அப்போஸ்தலனுடைய போதனை பலவித எதிர்ப்புகளை எழுப்பும் என்று அவர் மிகச்சரியாக எதிர்பார்த்தார். தேவன் முறை தவறாக நடந்து கொள்கிறார் என்று இன்னமும் மனிதர்கள் குறைகூறுகிறார்கள். அவர் சிலரைத் தெரிந்து கொள்வாராயின் மற்றவர்களை நிச்சயமாய் அழிவுக்கென்றே நியமித்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் வாதாடுகிறார்கள். எல்லாவற்றையும் வெகுகாலத்திற்கு முன்னமே தேவன் தீர்மானித்துவிட்டாரெனில், பின்னர் அதைக் குறித்து ஒருவரும் ஒன்றும் செய்ய இயலாது; இவ்விதம் மனிதர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதினால் தேவன் நீதியற்றவர் என்றும் அவர்கள் வாதாடுகிறார்கள்.

தேவனிடத்தில் எவ்வித **அநீதியும்** இல்லையென்று தனது கடும் எதிர்ப்பினைப் பவுல் தெரிவிக்கிறார். எனினும் தேவனுடைய இறையாண்மையை அவர் விட்டுக்கொடுக்காமல் அதனை எதிர்ப்போர் ஏற்றுக்கொள்வதற்கு உகந்த வகையில், அதை இன்னும் கூடுதலான உற்சாகத்துடனும், அதைக்குறித்து எவ்வித மனவருத்தமுமின்றி மீண்டும் எடுத்துரைக்கிறார்.

**9:15** மோசேயினிடத்தில் தேவன் கூறிய சொற்களை முதலாவதாக அவர் மேற்கோள் காட்டுகிறார், "எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன் மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன்" (யாத். 33:19 -ஆம் வசனத்தைக் காண்க). விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் கர்த்தரும், மகா உன்னதமானவருமாகிய தேவன் இரக்கத்தையும் உருக்கத்தையும் காண்பிக்க அதிகாரமற்றவர் என்று யாரால் சொல்ல முடியும்?

எல்லா மனிதர்களும் அவரவருடைய சொந்தப் பாவத்தினாலும், அவநம்பிக்கையினாலும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமே விட்டுவிடப்பட்டிருந்தால் *எல்லோரும்* அழிந்தே போவார்கள். நற்செய்தி அழைப்பினை அனைவருக்கும் உண்மையான முறையில் விடுத்ததோடு இவ்வாறு ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட மக்களில் சிலரைத் தம்முடைய கிருபைக்குப் பங்காளர்களாக தேவன் தெரிந்துகொள்கிறார். ஆயின், அவர் நீதியற்ற முறையில் மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துவிட்டார் என்பது அதன் பொருளன்று. அவர்கள் வாழ்நாள் முழுவதும் பாவிகளாக விளங்கி நற்செய்தியை நிராகரித்த காரணத்தினால் ஆக்கினைக்குள்ளாக ஏற்கனவே தீர்க்கப்பட்டுவிட்டார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தேவனுடைய கிருபையை எண்ணி நன்றி செலுத்தக்கடவர்கள். இழந்து போனவர்களோ தங்களைத் தவிர வேறு எவரையும் குறைகூற இயலாதவராக இருக்கிறார்கள்.

**9:16** தங்களுடைய சித்தத்தின் வல்லமையினாலோ, முயற்சி மிக்க உழைப்பினாலோ மனிதர்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றின் முடிவு தீர்மானிக்கப்படாமல், **இரங்குகிற தேவனாலேயே** அது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதுவே இந்தப் பொருள் பற்றிய முடிவாகும்.

**விரும்புகிறவனாலும் அல்ல** என்று பவுல் கூறியிருப்பதினாலே, ஒருவனது இரட்சிப்பில்

அவனுடைய விருப்பத்திற்கு எவ்விதச் சம்பந்தமு மில்லை என்பது பொருளன்று. "விருப்பமுள் ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்" (வெளி. 22:17) என்னும் வசனத்தில் காண்பிக்கப்பட்டிருப்பதுபோல, நற் செய்தி அழைப்பு ஒருவனது விருப்பத்தை நோக் கியே விடுக்கப்பட்டுள்ளது. விசுவாசிக்காத யூதர் கள் தம்மிடத்தில் வருகிறதற்கு **விருப்பமற்றவர் களாக** இருக்கிறார்கள் என்பதை இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திக் காட்டினார் (யோவான் 5:40). **ஓடுகிறவனாலும் அல்ல** என்று பவுல் கூறியிருப்பதினாலே, இடுக்கமான வாசல் வழி யாக உட்புக நாம் முயற்சி செய்ய வேண்டும் என்பதை அவர் மறுத்துரைக்கிறார் என்பது பொருளன்று (லூக். 13:24). ஒரு குறிப்பிட்ட அளவு ஆர்வமும் விருப்பமும் தேவையாயிருக்கின்றன. ஆனால் மனிதனுடைய விருப்பமும் அவனுடைய ஓட்டமும் தீர்மானிக்கும் ஆக்கக்கூறுகளாக விளங்குவதில்லை; இரட்சிப்பு கர்த்தருடையது. திருவாளர் மொர்கன் கூறுகிறார்:

> நம்முடைய விருப்பமும் நம்முடைய ஓட்டமும் நமக்கு வேண்டிய இரட்சிப்பைப் பெற்றுத் தருவ தில்லை. இரட்சிப்பினால் உண்டாகும் நற்பேறு களுக்குள் உட்புகுவதற்கு அவை நம்மைத் தகுதியாக்குவதுமில்லை...நமக்குள்ளாகத் தானாகவே இரட்சிப்படைவதற்கான விருப்பம் உண்டாவதில்லை. அதைப் பெறுவதற்கான முயற்சியும் தானாகவே நம்மிடத்தில் உண்டா வதில்லை. மனிதனுடைய இரட்சிப்பிற்குத் தேவையான ஒவ்வொன்றும் தேவனிடத்தி லேயே தொடங்குகிறது.[37]

**9:17** சிலரிடத்தில் காண்பிக்கப்படும் இரக்கத் தில் மட்டுமின்றி மற்றவர்கள் கடினப்படுகிறதிலும் தேவனுடைய இறையாண்மை காணப்படுகிறது. **பார்வோன்** அதற்கோர் எடுத்துக்காட்டாகக் குறிப் பிட்டுக் காட்டப்பட்டுள்ளான்.

எகிப்திய மன்னன் பிறந்த பொழுதோ அழி வுக்கு நியமிக்கப்பட்டுவிட்டான் என்னும் குறிப்பு ஒன்றையும் நாம் இங்கு காணமுடியாது. நடந்தது என்னவென்று காண்போம். அவன் தன் இளவய தில் பொல்லாங்கு நிறைந்தவனாகவும், கொடூர மானவனாகவும், பிடிவாதம் மிக்கவனாகவும் விளங்கினான். மிகவும் ஆழ்ந்த எச்சரிப்புகள் அவனுக்குக் கொடுக்கப்பட்ட போதிலும், அவன் தன் இருதயத்தைத் தொடர்ந்து கடினப்படுத்திக் கொண்டிருந்தான். அப்பொழுதே அவனை தேவன் அழித்துப் போட்டிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. மாறாக, தமது **வல்லமையை** வெளிப்படுத்திக் காட்டும்படியும், அவன் மூலமாக அவருடைய நாமம் உலகெங்கி லும் விளங்கும்படியும் அவனை அவர் உயிரோடு பாதுகாத்து வைத்தார்.

**9:18** ஒவ்வொரு முறையும் பார்வோன் தனது இருதயத்தைக் கடினப்படுத்திய பின்பு அதற்குரிய தண்டனையாக அவனுடைய இருதயத்தை தேவன் கூடுதலாகக் கடினப்படுத்தினார். பனியை உருகச் செய்யும் அதே ஞாயிறு களிமண்ணை இறுகச் செய்கிறது. நொருங்குண்ட இருதயம் உடையோருக்கு இரக்கத்தை வெளிப்படுத்தும் அதே தேவன், பாவத்தைக் குறித்து மனம் வருந் தாதவர்களுடைய இருதயங்களைக் கடினப் படுத்தவும் செய்கிறார். ஏற்றுக்கொள்ளப்படாத கிருபை மறுக்கப்பட்ட கிருபையாகும்.

தாம் விரும்புகிற எவரிடம் வேண்டுமானாலும் இரக்கத்தை வெளிப்படுத்திக் காண்பிக்க தேவன் அதிகாரம் உடையவராக இருக்கிறார். மேலும் தாம் விரும்புகிற எவரை வேண்டுமானாலும் அவர் கடினப்படுத்தலாம். ஆயின் அவர் தேவனாக இருக்கின்ற காரணத்தினால் நீதியற்ற முறையில் நடந்துகொள்வதில்லை.

**9:19** தம்முடைய விருப்பப்படி எதைச் செய்வ தற்கும் அதிகாரம் உடையவராக தேவன் இருக் கிறார் என்று பவுல் வலியுறுத்திக் கூறுவதால், புதியதொரு எதிர்வாதம் எழுகின்றது. **அவர் சித் தத்திற்கு** எதிர்த்து நின்று எந்த மனிதனும் வெற்றி பெற இயலாதாகையால் அவர் ஒருவரிடத்திலும் **குற்றம் பிடிக்கக்** கூடாது என்பதே அந்த வாதம். எதிர்வாதம் செய்பவரைப் பொருத்தமட்டில் தெய் வீகச் சதுரங்கப் போட்டியில் எவ்வித உதவியும் இன்றித் தனித்து நிற்கும் காய்க்கு ஒப்பாகவே மனிதன் உதவியற்றவனாக இருக்கிறான். தன்னு டைய முடிவை மாற்றிட ஒருவனாலும் கூடாது. அதைக்குறித்து ஒன்றும் சொல்ல இயலாதவனா கவும் இருக்கிறான்.

**9:20** படைப்பாளரிடம் குற்றம் கண்டுபிடிக்கத் துணியும் மனிதனின் ஆணவத்தை முதலாவதாக, அப்போஸ்தலன் கடிந்துகொள்கிறார். பாவத் திலும் அறியாமையிலும் நிறைந்தவனும், வலிமை யற்றவனும், காலத்திற்கும் எல்லைக்கும் உட் பட்டவனுமாகிய **மனிதன் தேவனோடு** எதிர்த்து நின்று தர்க்கம் செய்யவும், அவருடைய வழி களைக் குறித்த ஞானத்தையோ நியாயத் தையோ எவ்விதத்திலும் கேள்வி கேட்கவும் இயலாதவனாக இருக்கின்றான்.

**9:21** தேவனுடைய இறையாண்மையை மெய்ப்பிக்கும் பொருட்டு அடுத்ததாக **குயவன்** மற்றும் **களிமண்ணைப்** பற்றிய ஓர் உவமையை எடுத்துக்காட்டாக அவர் கூறுகிறார். ஒருநாள் குயவன் தன்னுடைய பட்டறைக்கு வந்து தரையில் குவிந்து கிடக்கும் உருவமற்ற களிமண்ணைக் காண்கிறான். கைநிறையக் களிமண்ணை அதி லிருந்து எடுத்து சக்கரத்தின் மீது வைத்துச் சுழற்றி அழகிய **பாத்திரமாகச்** செய்கிறான். அவ்வாறு செய்வதற்கு அவனுக்கு அதிகாரம் உண்டல்லவா?

தேவனே அந்தக் **குயவனாக** இருக்கிறார். பாவம் நிறைந்த மனுக்குலமே அந்தக் **களிமண்.** அதை அவ்வாறே விட்டிருந்தால், அது முழுவதும் நரகத்திற்கே செல்லும். அதை அவ்வாறே விட்டி ருந்தாலும் அந்தக் குயவன் முழுவதும் நீதி யுடையவராகவும் நேர்மையானவராகவும் காணப் படுவார். ஆனால் அதற்கு மாறாக, தம்முடைய இறையாண்மையில் பாவிகளாகிய சிலரைத் தெரிந்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அவர்களை இரட்சித்து, தம்முடைய குமாரனு டைய சாயலுக்கு ஒப்பாக அவர் மாற்றுகிறார். அவ் வாறு செய்தற்கு அவருக்கு அதிகாரம் உண்டா? மற்றவர்களை அவர் நேர்மையற்ற முறையில் நரகத்திற்கு நியமிக்கவில்லை என்பதை நினைவு கூருங்கள். தங்களுடைய சொந்த விருப்பத்தி னாலும் அவநம்பிக்கையினாலும் அவர்கள் ஏற் கனவே தங்களை அழிவுக்கென்று நியமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொஞ்சம் களிமண்ணையெடுத்து ஒரு **கன மான செயலுக்கான பாத்திரமாகவும்**, வேறு கொஞ்சம் களிமண்ணையெடுத்து கனவீனமாக **செயலுக்கான பாத்திரமாகவும்** செய்வதற்கு தேவனுக்கு முழு **அதிகாரம்** உண்டு. எல்லோ ருமே தகுதியற்றவர்களாக இருக்கும் சூழ்நிலை யில், அவர் விரும்பும்போது தமது ஆசிர் வாதத் தைப் பொழியவும், அவர் விரும்பும்போது தமது ஆசிர்வாதத்தை நிறுத்தி வைக்கவும் அவரால் முடியும். "எல்லோரும் அபாத்திரர்களாக இருக் கின்றபோது, அதிகபட்சம் ஒருவருக்கும் அவர் தீங்கிழைக்கக் கூடாது என்று மட்டுமே வேண்டிக் கொள்ள முடியும்" என்று திருவாளர் பார்னஸ் என்பார் எழுதியிருக்கிறார்.[38]

**9:22,23** மாறுபட்ட விருப்பங்கள் கொண்ட பெரிய குயவனைப்போல **தேவன்** இங்கு படவுரு வில் காட்டப்படுகிறார். ஒருபுறம், அவர் பாவத் தைத் தண்டிக்கும்படி **தமது கோபத்தைக் காண்பிக்கும்** பொருட்டு **தமது வல்லமையை** வெளிப்படுத்துகிறார். மறுபுறம், அவர் **அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத் திரங்கள்மேல்** தம்முடைய பொறுமையைக் காட் டும்படியான விருப்பத்துடன் இருக்கிறார். முதற் கண் அவர் நீதியில் கண்டிப்பானவராகவும், இரண்டாவதாக இரக்கத்தில் **நீடிய பொறுமை** உடையவராகவும் இருக்கிறார் என்னும் வேறுபாட் டினை இது காண்பிக்கிறது. "துன்மார்க்கரை உடனடியாக தேவன் தண்டிப்பாராயின் அதில் அவருடைய நீதி விளங்கும். அதற்குப் பதிலாக அவர்களிடத்தில் தமது நீடிய பொறுமையைக் காண்பிப்பாராயின் அவர்மீது யாரால் குற்றம் சுமத்த முடியும்?" என்பதே இங்கு ஏறெடுக்கப் படும் தர்க்கமாயிருக்கிறது.

**அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக் கினைப் பாத்திரங்கள்** என்னும் சொற்றொட ரைக் கூர்ந்து நோக்குங்கள். தங்களுடைய பாவங்களின் நிமித்தம் தேவனுடைய **கோபாக் கினைக்கு** உள்ளானவர்களே **கோபாக்கினைப் பாத்திரங்கள்** ஆவர். தங்களுடைய சொந்தப் பாவத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும், முரட் டுத் தன்மையினாலும் அவர்கள் **அழிவுக்கு எத்தனமாக்கப்பட்டிருக்கிறார்களேயொழிய** தேவனுடைய நீதியற்ற ஆணை எதுவும் அதற்குக் காரணமன்று.

நித்திய **மகிமைக்காக எத்தனமாக்கும்** பொருட்டு முன்னதாகவே தாம் தெரிந்துகொண்ட மக்களிடத்தில் தேவன் **தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்த** விருப்பம் உடையவராக இருப்பாரென்றால் யாரால் அதை எதிர்த்து நிற்க முடியும்? C. R. எட்மன் என்பார் கொடுத்துள்ள விளக்கம் இங்கு குறிப்பிடத்தக்க வகையில் உதவி செய்யக்கூடியதாக இருக் கிறது.

> இரட்சிப்படைய வேண்டிய மனிதர்களை ஆக் கினைக்குள்ளாகத் தீர்க்கும்படியாக தேவனு டைய இறையாண்மை செயல்படவில்லை. அதற்கு மாறாக அழிவுக்குப் பாத்திரமானவர் கள் இரட்சிப்படையும்படியான விளைவையே அது உண்டுபண்ணுகிறது.[39]

அழிவுக்கென கோபாக்கினைப் பாத்திரங் களை தேவன் ஆயத்தப்படுத்தவில்லை. ஆனால் **மகிமைக்கென கிருபா பாத்திரங்களை** அவர் ஆயத்தப்படுத்துகிறார்.

**9:24** யூதர்களிலிருந்தும் புறவினத்தவர்களிலிருந்தும் **அழைக்கப்பட்ட** கிறிஸ்தவர்களாகிய நாமே அந்தக் கிருபா பாத்திரங்கள் என்று பவுல் இங்கு குறிப்பிட்டுக் காண்பிக்கிறார். தொடர்ந்து வருகின்றவற்றிற்கு இது அடித்தளமாக விளங்குகிறது. அதாவது, இஸ்ரவேல் நாட்டினரில் எஞ்சிய சிறுபான்மையினரைத் தவிர, மற்ற யாவரையும் ஒதுக்கிவிட்டு, **புறவினத்தவர்களினின்று** நற்பேறு அடைவதற்கென்று சிலர் அழைக்கப்பட்டுள்ள செய்தியானது இதனைத் தொடர்ந்து கூறப்பட்டுள்ளது.

**9:25** யூதர்கள் எதிர்பாராவண்ணம், ஆச்சரியப்படத்தக்க வகையில் புறவினத்தவர்களுடைய அழைப்பு நிகழவில்லை என்பதைக் காண்பிக்கும் பொருட்டு, அப்போஸ்தலன் ஓசியாவின் நூலிலிருந்து இரண்டு வசனங்களை மேற்கோளாகக் காட்டுகிறார். முதலாவதாக ஓசியா 2:23 -ஆம் வசனத்தை அவர் எடுத்தாள்கிறார், **"எனக்கு ஜனங்கள் அல்லாதவர்களை என்னுடைய ஜனங்கள் என்றும், சிநேகிக்கப்படாதிருந்த வளைச் சிநேகிக்கப்பட்டவள் என்றும் சொல்லி அழைப்பேன்."** ஓசியாவின் நூலில், உண்மையில், இந்த சொற்கள் இஸ்ரவேலரைக் குறிக்கின்றனவே யொழிய புறவினத்தவரைக் குறிப்பதில்லை. இஸ்ரவேல் மக்கள் மீண்டும் தேவனுடைய மக்களாகச் சீர்படுத்தப்படுவதற்கான காலத்தை எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால், இந்த வசனத்தை மேற்கோள்காட்டி இது புறவினத்தவர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பைக் குறிக்கிறது என்று பவுல் கூறுகிறார். இவ்வாறு அடிப்படை மாற்றத்தை உண்டாக்க பவுலுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? முன்னதாக தூய ஆவியானவரால் ஏவப்பெற்ற ஒரு வசனத்தை, வேறு பொருள்படக் கூறவும், கையாளவும் ஆவியானவருக்கு அதிகாரம் உண்டு என்பதே இக்கேள்விக்கான விடையாகும்.

**9:26** இரண்டாவது மேற்கோள் ஓசியா 1:10 -ஆம் வசனமாகும்: **"நீங்கள் என்னுடைய ஜனங்கள் அல்லவென்று சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள்."** தேவனுடைய நல்லெண்ணத்தை இஸ்வேலர் மீண்டும் பெறுவார்கள் என்னும் பொருள்படவே இந்த வசனம் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. புறவினத்தவர்களை இது அங்கு குறிப்பதில்லை. ஆயினும், மீண்டுமாக, புறவினத்தவர்களைத் தம்முடைய குமாரர்களாக தேவன் ஏற்றுக்கொண்டதை விவரிக்கும் வசனமாக பவுல் இதனை எடுத்துக்கொள்கிறார். பழைய ஏற்பாட்டு வசனத்தைப் பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தும்போது, அவருடைய விருப்பத்திற்கு இணங்க வேறு பொருளில் பயன்படுத்தலாம் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

**9:27** இருபத்தேழாம் வசனத்திலிருந்து இருபத்தொன்பதாம் வசனம் வரையிலுமுள்ள பகுதி, எஞ்சிய சிறுபான்மை இஸ்ரவேலரைத் தவிர மற்ற அனைத்து இஸ்ரவேலரும் நிராகரிக்கப்படுவதைப் பற்றிப் பேசுகிறது. மீதியாயிருக்கும் கொஞ்சம் **இஸ்ரவேலரே** இரட்சிக்கப்படுவார்கள் என்று **ஏசாயா** முன்மொழிந்தான் (ஏசா. 10:22).

**9:28 "அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார்"** (ஏசா. 10:23) என்று ஏசாயா உரைத்தபோது, பாலஸ்தீனத்தின்மீது பாபிலோன் தொடுக்கவிருந்த படையெடுப்பையும், இஸ்ரவேலர் நாடுகடத்தப்படுவதையுமே முன்மொழிந்தான். தேவனுடைய நியாயத்தீர்ப்பே இங்கு காரியம் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த வசனத்தை எடுத்துரைக்கும் பவுல், இஸ்ரவேலுக்கு முன் நடந்தது போலவே, தன்னுடைய காலத்திலும் இனிமேல் நடக்கப்போகிறது என்று கூறுகிறார்.

**9:29** ஏசாயா முன்னே சொன்னபடி (தன்னுடைய தீர்க்கதரிசனத்தின் முன்பகுதியில் காணப்படுவதுபோல): பரலோகச் **சேனைகளின் கர்த்தர்**, சில மக்களை உயிரோடு **வைக்காதிருந்தாரானால்**, இஸ்ரவேல் முழுவதும் **சோதோமைப் போலாகி கொமோராவுக்கு** ஒப்பாக அழிக்கப்பட்டிருக்கும் (ஏசா. 1:9).

**9:30** சபையின் காலப்பாகுபாட்டைப் பொருத்தமட்டில் இவை எல்லாவற்றிற்கும் **என்ன** முடிவு? என்று பவுல் வினவுகிறார். **நீதியைத் தேடாத** மக்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவர்களும், உண்மையாகவே பொல்லாங்கைப் பின்தொடர்ந்து வாழ்ந்தவர்களும், தாங்களாகவே நீதியைத் தேடாமல் திரிந்தவர்களுமாகிய புறவினத்தவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்தின் மூலமாக **நீதியை அடைந்தார்கள்** என்பது முதல் முடிவாகும். எல்லாப் புறவினத்தவர்களுமல்ல, கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் மட்டுமே நீதிமான்களாக்கப்பட்டார்கள்.

**9:31** இதற்கு மாறாக, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாக நீதிமானாக்கப்படுவதைத் தேடின **இஸ்ரவேலர் நீதியை** அடையும் படியாக ஒரு **நியாயப்பிரமாணத்தையும்** கண்டடையவில்லை.

**9:32** அதன் காரணம் மிகத்தெளிவாக இருக்கிறது. கிறிஸ்துவினிடத்தில் வைக்கும் **விசுவாசத்தினால்** நீதிமானாக முடியும் என்பதை நம்ப அவர்கள் மறுத்தார்கள். மாறாக, தங்களுடைய சொந்தத் தகுதியால் சுயமாக நீதியை அடைய முடியும் என்று அவர்கள் விடாப்பிடியுடன் செயல்பட்டார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய **இடறுதற்கான கல்லின்மேல்** அவர்கள் **இடறினார்கள்.**

**9:33** ஏசாயாவின் மூலமாகக் கர்த்தர் இதனையே முன்னுரைத்தார். மேசியா எருசலேமிற்கு வருகை புரியும்போது இருவகையான விளைவுகள் உண்டாகும். சில மனிதர்களுக்கு அவர் **இடறுதற்கான கல்லாகவும், தவறுதற்கான கன்மலையாகவும்** விளங்குவார் (ஏசா. 8:14). **அவரிடத்தில்** நம்பிக்கை கொள்ளும் மற்றவர்களோ **வெட்கப்படுவதற்கோ** புறக்கணிக்கப்படுவதற்கோ, ஏமாற்றம் அடைவதற்கோ ஏதொரு காரணமும் இல்லை (ஏசா. 28:16).

**ஆ. இஸ்ரவேலின் நிகழ்காலம் [அதி. 10]**

**10:1** இரட்சிக்கப்படாத யூதர்களுக்குப் பவுல் ஆற்றிய போதனைகள் யாவும் கசப்பு மிகுந்தவையாக இருந்தன. இஸ்ரவேலைக் காட்டிக் கொடுப்பவர் என்றும், அந்நாட்டின் எதிரி என்றுமே அவரைக் குறித்து அவர்கள் கருதினார்கள். ஆயின், **இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே** அவருடைய இருதயத்திற்கு மிகுந்த மனமகிழ்ச்சி அளிக்கக்கூடியதும், **தேவனை நோக்கி** ஊக்கத்தோடு அவர் ஏறெடுக்கும் மன்றாட்டுமாகும் என்று தனது கிறிஸ்தவச் சகோதரர்களுக்கு பவுல் இங்கு உறுதியளிக்கிறார்.

**10:2** அவர்கள் தேவனற்றவர்களும், இறைப்பற்று இல்லாதவர்களுமாக இருக்கிறார்கள் என்று அவர்களைக் குற்றஞ்சாட்டுவதற்கு மாறாக, **தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியம் உண்டென்று** அப்போஸ்தலன் நற்சான்று பகர்கிறார். யூத சமயச் சடங்குகளையும் பண்டிகைகளையும் அவர்கள் மிகுந்த கவனத்துடன் கைக்கொண்டபடியினாலும், அதற்கு எதிரான எந்தக் கோட்பாட்டையும் அவர்கள் பொறுத்துக்கொள்ளக் கூடாதவராய் இருந்ததாலும் இது தெளிவாய்ப் புலனாயிற்று. ஆயின் **வைராக்கியம்** மட்டும் போதாது. அது சத்தியத்துடன் இணைந்து செயல்படவேண்டும். இல்லையேல் அது நன்மைக்குப் பதிலாக மிகுந்த தீமை விளைவிக்கும்.

**10:3 அவர்கள் தேவநீதியை அறியாத தினாலே** வீழ்ந்து போனார்கள். அதாவது, கிரியைகளினாலன்றி விசுவாசக் கோட்பாட்டினாலேயே தேவன் நீதிமானாகக் கணக்கிடுகிறார் என்பதை அவர்கள் **அறியாதிருந்தார்கள்**. மாறாக, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதினாலே **சுயநீதியை** அடையமுடியும் என்றெண்ணி அதையே அவர்கள் நாடினார்கள். தங்களுடைய சொந்தத் திறமையினாலும், சொந்தக் குணவியல்புகளினாலும், சொந்தச் செயல்களினாலும் தேவனுடைய நல்லெண்ணத்தைப் பெறமுடியும் என்று அவர்கள் முயற்சி செய்தார்கள். துன்மார்க்கரான பாவிகள் தேவனுடைய குமாரனிடத்தில் நம்பிக்கைகொள்வதினால் மட்டுமே நீதிமான்களாகக் கணக்கிடப்படுவர் என்னும் தேவ திட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிவதற்கு மாறாக, பிடிவாதமாக அதனை எதிர்த்து நின்றார்கள்.

**10:4** அவர்கள் **கிறிஸ்துவை** விசுவாசித்திருந்தால், அவரே **நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்** என்பதை அறிந்துகொண்டிருப்பார்கள். பாவத்தை வெளிப்படுத்துவதும், அக்கிரமக்காரரைக் கண்டித்துணர்த்தி ஆக்கினைக்குட்படுத்துவதுமே நியாயப்பிரமாணத்தின் செயலாக இருக்கிறது. ஒருக்காலும் அது நீதியைத் தருவதில்லை. நியாயப்பிரமாணத்தை மீறுவதோ மரணத்தை வருவிக்கும். நியாயப்பிரமாணத்தை மக்கள் மீறியதற்கான தண்டனையை, கிறிஸ்து தமது மரணத்தின் மூலமாகச் செலுத்தித் தீர்த்து விட்டார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தனது இரட்சகராக ஒரு பாவி ஏற்றுக்கொண்ட பின்னர், அவனைக் குறைகூறுவதற்கு நியாயப்பிரமாணத்தினிடத்தில் ஒன்றுமில்லை. தனக்குப் பதிலாளாக கிறிஸ்து மரணம் அடைந்த காரணத்தினால், அவனும் நியாயப்பிரமாணத்துக்கு மரித்துவிட்டான். அவனைப் பொருத்தமட்டில் நியாயப்பிரமாணம் முடிவுக்கு வந்துவிட்டது. அதன் மூலமாக நீதியை அடையமுடியும் என்று அவன் செய்த வீணான முயற்சியும் முடிவுக்கு வந்துவிட்டது.

**10:5** நியாயப்பிரமாணத்தின் சொற்களுக்கும் விசுவாசத்தின் சொற்களுக்கும் இடையே இருக்கும் வேறுபாடுகளை பழைய ஏற்பாட்டு மொழியிலும் நாம் கேட்க முடியும். எடுத்துக்காட்டாக,

லேவியராகமம் 18:5 -இல், **நியாயப்பிரமாணம்** எதிர்பார்க்கிற **நீதியை** நிறைவேற்றுகிறவன், அவ்வாறு செய்வதால் **பிழைப்பான்** என்று **மோசே எழுதியிருக்கிறான்**. அவனுடைய நிறைவேற்றுதல் மற்றும் அவனுடைய செயல்கள் ஆகியவையே வலியுறுத்தப்பட்டுள்ளன.

உண்மையில் எந்தப் பாவியான மனிதனும் நிறைவேற்றக் கூடாத கருத்தளவிலான கூற்றாக இது இருக்கிறது. நியாயப்பிரமாணத்தை நிறைவாகவும் என்றென்றும் நிரந்தரமாகவும் ஒரு மனிதன் நிறைவேற்றுவானாயின், அவன் மரணத்துக்குள்ளாக்கும் ஆக்கினையை அடையமாட்டான் என்றே இவ்வசனம் கூறுகிறது. ஆனால் நியாயப்பிரமாணமானது *ஏற்கனவே* பாவிகளாக இருந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் *ஏற்கனவே* மரண ஆக்கினையை அடைந்தவர்கள். ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து அவர்கள் நியாயப்பிரமாணத்தை நிறைவாகக் கைக்கொள்வார்களாயினும், அவர்களுடைய முந்தின பாவங்களுக்கான தண்டனையைச் செலுத்த வேண்டியவர்களாக இருப்பதினால் அவர்கள் இழப்பை அடைவது உறுதி. ஆகவே, நியாயப்பிரமாணத்தின் மூலமாக நீதியை அடையமுடியும் என்று நம்பிக்கை கொண்டிருக்கும் எந்த மனிதனும், முதலிலிருந்தே தோல்வியைச் சந்திப்பதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறான்.

**10:6** விசுவாசத்தின் சொற்கள் நியாயப்பிரமாணத்தின் சொற்களிலிருந்து வேறுபட்டவையாக இருக்கின்றன என்பதைக் காண்பிக்கும் பொருட்டு முதலாவதாக, உபாகமத்திலிருந்து 30:12,13 ஆகிய வசனங்களைப் பவுல் மேற்கோள் காட்டுகிறார். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

> ''நாங்கள் அதைக்கேட்டு, அதன்படி செய்யும் பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யார்?'' என்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள் ளதும் அல்ல.
>
> ''நாங்கள் அதைக்கேட்டு, அதன்படி செய்யும் பொருட்டு, எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார்?'' என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல.

உபாகமத்தின் பின்னணியைக் காணுமிடத்து, இந்த வசனங்கள் விசுவாசத்தையோ நற்செய்தியையோ குறிப்பதில்லை என்பது வெளிப்படை. ஆகவே நமக்கு இது மிகுந்த ஆவலை அளிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆங்கு, இந்த வசனங்கள் நியாயப்பிரமாணத்தைக் குறித்தே பேசுகின்றன. குறிப்பாக, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் திரும்பு" என்னும் கட்டளையையே இவை குறிக்கின்றன (உபா. 30:10). நியாயப்பிரமாணமானது மறைத்துவைக்கப்பட்டதோ, தொலைதூரத்தில் உள்ளதோ, அணுகக் கூடாததோ அன்று என்று தேவன் கூறுகிறார். ஒரு மனிதன் அதனைக் கண்டுபிடிக்க **பரலோகத்திற்கு** ஏறிச்செல்ல வேண்டியதில்லை அல்லது கடல்கடந்து செல்லவும் வேண்டியதில்லை. அது கைகளுக்கு அருகில் இருக்கிறது; கீழ்ப்படிவதற்கென்று காத்துக்கொண்டிருக்கிறது.

இந்த வசனங்களைக் கையாளும் பவுல், அவற்றை நற்செய்தியோடு பொருத்திப் பேசுகிறார். **கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்திற்கு** ஏறிச்செல்லும்படியாக எவனையும் விசுவாசத்தின் சொற்கள் கட்டளையிடுவதில்லையென்று பவுல் கூறுகிறார். அது நிச்சயமாக ஒருவராலும் செய்ய இயலாத செயலாகும். ஆயினும் அது எவ்விதத்திலும் தேவையற்றதே ஆகும். ஏனெனில் ஏற்கனவே கிறிஸ்து தமது மானிடப் பிறப்பின் மூலமாகக் கீழே இறங்கி வந்துவிட்டார்!

**10:7** உபாகமம் 30:13 -ஆம் வசனத்தை எடுத்து எழுதும்போது, அப்போஸ்தலன் "சமுத்திரத்தைக் கடந்து அதைக்கொண்டு வருகிறவன் யார்?" என்பதை மாற்றி **"பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்?"** என்று எழுதுகிறார். அவர் குறிப்பிடுவது யாதெனில், **கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணும்படி** புதைகுழிக்குள் **இறங்கிச்** செல்லும்படியாக எந்த மனிதனையும் நற்செய்தி கேட்டுக்கொள்வதில்லை என்பதேயாகும். அது யாராலும் முடியாத ஒன்றாகும் என்பது மட்டுமின்றி, அது தேவையற்றதுமாகும். ஏனெனில், கிறிஸ்து மரித்தோரிலிருந்து ஏற்கனவே உயிரோடு எழுந்துவிட்டார். யூதர்கள் ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் அரிதான கிறிஸ்துவைப் பற்றிய இரண்டு உபதேசங்களை 10:6,7 ஆகிய வசனங்களில் நாம் காண்கிறோம். அவை யாவன, ஒன்று அவரது மானிடப் பிறப்பு, பிறிதொன்று அவருடைய உயிர்த்தெழுதல். இருந்தபோதிலும் அவன் இரட்சிப்பை அடைவதற்கென இவ்விரண்டு சத்தியங்களையும் நம்ப வேண்டியவனாக இருக்கிறான். இந்த இரண்டு உபதேசங்களை மீண்டும் 10:9,10 ஆகிய வசனங்களில் காண்கிறோம்.

**10:8** மனிதனால் செய்ய இயலாத செயலைச் செய்யும்படியோ, ஏற்கனவே கர்த்தர் நிறைவேற்றி முடித்த செயலை மீண்டும் செய்யும்படியோ நற் செய்தி கூறவில்லையெனில் அது **சொல்லுகிறது** என்ன?

நற்செய்தியானது சமீபத்தில் உள்ளது, அணுகுவதற்கு எளியது, அறிவுக்குப் புலப்படக்கூடியது, எளிதில் பெறக்கூடியது, எல்லாருக்கும் தெரிந்த படி சொல்லக்கூடியது (உன் வாயினாலே அறிக்கையிடக் கூடியது), மனத்திற்கு எளிதாய்ப் புரியக் கூடியது (உன் இருதயத்தில்) என்று கூற உபாகமம் 30:14 -ஆம் வசனத்தை பவுல் எடுத்துக் கொள்கிறார். விசுவாசத்தினால் இரட்சிப்பு உண்டாகும் என்று பவுலும் பிற அப்போஸ்தலரும் பிரசங்கித்த செய்தியே நற்செய்தியாகும்.

**10:9** அதனை இங்கு சுருங்கக் கூறுவோம்: முதலாவதாக, நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மானிடப்பிறப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். பெத்லகேம் தொழுவத்தில் பிறந்த குழந்தையே ஜீவனுக்கும் மகிமைக்கும் கர்த்தர் என்றும், புதிய ஏற்பாட்டு இயேசுவே பழைய ஏற்பாட்டுக் கர்த்தர் (யெகோவா) என்றும் நம்பவேண்டும்.

இரண்டாவதாக, அவருடைய உயிர்த்தெழுதலைப் பற்றிய சத்தியத்தையும், அதனோடு தொடர்புடைய அனைத்து உண்மைகளையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய இரட்சிப்பிற்குத் தேவையான செயலைக் கிறிஸ்து நிறைவேற்றி முடித்துவிட்டார் என்பதையும், அச்செயலில் தேவன் மனநிறைவு அடைந்துள்ளார் என்பதையும் மெய்ப்பிக்கும்படி **தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்**. மனப்பூர்வமாகவும், உணர்ச்சிகளின் அடிப்படையிலும், தீர்மானிக்கும் ஆற்றலின் அடிப்படையிலும் இதனை நம்புவதே, **இருதயத்தில்** விசுவாசிப்பது என்பதன் பொருளாகும்.

ஆகவே, **கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசி**. இதுவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் அவருடைய கிரியையையும் தனிப்பட்ட முறையில் தனக்குரியதாக்கிக் கொள்வது என்பதன் விளக்கம். இதுவே இரட்சிப்பைத் தரும் விசுவாசமாகும்.

"இயேசுவை இரட்சகர் என்று ஏற்றுக்கொள்கிற ஒருவன், அவரைக் கர்த்தராக ஏற்றுக்கொள்ளாதிருப்பானானால் அவன் இரட்சிப்படைய முடியுமா?" என்னும் கேள்வி அவ்வப்போது எழுகிறது. "நான், இயேசுவை என்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவரைக் கர்த்தராக முடிசூட்ட நான் விரும்பவில்லை" என்று சொல்லுகிற மனிதன் தன்னுடைய மனதில் நிச்சயமற்றவனாக இருக்கிறான். அப்படிப்பட்டவனை திருமறை ஊக்குவிப்பதில்லை. அதற்கு மாறாக, இயேசுவைக் கர்த்தராக ஏற்று அவருக்குக் கீழ்ப்படிவதை *இரட்சிப்படைவதற்கான நிபந்தனையாக* ஆக்குகிறவர்கள் ஒரு பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. "எந்த அளவிற்கு அவரைக் கர்த்தராக ஏற்றுக்கொள்ள வேண்டும்?" என்பதே அந்தக் கேள்வி. பரிபூரணமாகவும், முற்றிலுமாகவும் அவருக்குத் தங்களை ஒப்புவித்திருப்பதாக சில கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். நாம் நற்செய்தியைப் பகிர்ந்தளிக்கும் வேளையில் *நீதிமானாக்கப்படுவதற்கு விசுவாசம் ஒன்று மட்டுமே நிபந்தனையாக இருக்கிறது* என்று உறுதியுடன் கூற வேண்டும். ஆனாலும் பாவிகளிடத்திலும் பரிசுத்தவான்களிடத்திலும் இயேசு கிறிஸ்துவே கர்த்தர் (யெகோவா - தேவன்) என்றும், அவ்விதமாக அவரை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும் தொடர்ந்து நாம் நினைவுபடுத்த வேண்டும்.

**10:10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்** என்று பவுல் தொடர்ந்து விளக்கம் அளிக்கிறார். இது வெறுமனே அறிவுபூர்வமாக ஒப்புக்கொள்வது மட்டுமன்று. ஒருவர் தனது உளப்பூர்வமாக அவரை உண்மையாக ஏற்றுக் கொள்வதையே இது குறிக்கிறது. அவ்வாறு ஒரு மனிதன் செய்கிறபோது, அவன் உடனடியாக நீதிமானாக்கப்படுகிறான்.

அடுத்தது, **இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்**; அதாவது தான் ஏற்கனவே அடைந்த இரட்சிப்பை விசுவாசியானவன் வெளிப்படையாக அறிக்கை செய்கிறான். இரட்சிக்கப்படுவதற்கு அறிக்கை செய்தல் ஒரு *நிபந்தனையன்று*. ஆனால் என்ன நடந்தது என்பதை வெளிப்படையாக அறிக்கை செய்வதைத் தவிர்க்க முடியாது: "இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை உடையவராக இருப்பீர்கள் எனில், அவருக்காக நீங்கள் நிச்சயமாகப் பேச வேண்டும்." உண்மையாகவே ஒரு மனிதன் ஒன்றை நம்புவான் என்றால், அவன் அதைக்குறித்து மற்றவர்களிடம் சொல்ல விரும்புவான். ஆகவே மெய்யாக ஒருவன் மீண்டும் பிறக்கும்போது, அதனை மறைத்து வைப்பது தகுதியாய் இராது. அவன் கிறிஸ்துவை அறிக்கை செய்கிறான்.

ஒருவன் இரட்சிக்கப்பட்டவுடன் அதைக் குறித்து அவன் வெளியரங்கமாக அறிக்கை செய்வான் என்றே வேதம் கருதிக்கொள்கிறது. அவை இரண்டும் சேர்ந்தே செல்லுகின்றன. "நம்முடைய கர்த்தர், 'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்' என்று சொன்னதுபோல கர்த்தராகிய கிறிஸ்துவை வாயினால் அறிக்கை செய்யவில்லையென்றால் இரட்சிப்பைக் குறித்து நம்மால் பேச முடியாது" என்று கெல்லி என்பார் உரைத்துள்ளார்.[40] இதனைக்குறித்து டென்னி என்பார் கூறியுள்ளதாவது:

> நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் என்பது இரண்டு செயல்கள் அல்ல, மாறாக ஒரே செயலின் இரு பக்கங்களாகும்.[41]

ஒன்பதாம் வசனத்தில் முதலாவதாக அறிக்கையும் பின்னர் விசுவாசமும் சொல்லப்பட்டுள்ளன, ஆனால் பத்தாம் வசனத்தில் விசுவாசம் முதலிலும் அறிக்கை பின்னரும் சொல்லப்பட்டுள்ளன. அதன் காரணம் என்னவென்று கேள்வி எழுகிறது. அதன் விடையைக் கண்டுபிடிப்பது கடினமன்று. ஒன்பதாவது வசனத்தில் மானிடப் பிறப்பும் உயிர்த்தெழுதலும் வலியுறுத்தப்பட்டுள்ளன. மானிடப் பிறப்பு முதலில் இடம் பெறுகிறது - இயேசுவே கர்த்தர். அதன் பின்னர் உயிர்த்தெழுதல் - மரித்தோரிலிருந்து தேவன் அவரை எழுப்பினார். பத்தாவது வசனத்தில் பாவியான ஒருவன் இரட்சிப்படையும் தருணத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் காலவரிசை வலியுறுத்தப்பட்டுள்ளது. முதலாவதாக அவன் **விசுவாசிக்கிறான்,** பின்னர் அவன் வெளியரங்கமாகத் தனது இரட்சிப்பைக் குறித்து **அறிக்கை செய்கிறான்**.

**10:11 அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை** என்பதை வலியுறுத்தும்படி ஏசாயா 28:16 -ஆம் வசனத்தை இப்பொழுது அப்போஸ்தலன் மேற்கோள் காட்டுகிறார். வெளியரங்கமாகக் கிறிஸ்துவை அறிக்கை செய்யவேண்டும் என்ற எண்ணம் வெட்கத்தை ஏற்படுத்தும் என்னும் அச்சம் உண்டாகக்கூடும், ஆனால் உண்மை அதற்கு மாறானதே. **இவ்வுலகில்** நாம் அறிக்கை செய்வது, அவர் நம்மைப் **பரலோகில்** அறிக்கை செய்ய வழிநடத்தும். நாம் கொண்டிருக்கிற நம்பிக்கை நம்மை ஒருக்காலும் ஏமாற்றமடையச் செய்யாது.

எவனோ என்ற சொல் பின்வரும் செய்தியோடு இணைக்கும் சொல்லாக விளங்குகிறது - அதாவது, தேவனுடைய மகிமையின் இரட்சிப்பு, புறவினத்தவர் மற்றும் யூதர்கள் எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

**10:12** எல்லோரும் பாவிகளாக இருக்கின்ற காரணத்தினால், இரட்சிப்பின் அவசியத்தைப் பொருத்தமட்டில் யூதர்களுக்கும் புறவினத்தவருக்கும் எவ்வித வேறுபாடும் இல்லையென்று ரோமர் 3:23 -இல் கற்றுக்கொண்டோம். இரட்சிப்பு கிடைக்கக்கூடிய தன்மையில் **வித்தியாசம் இல்லை** என்று இப்பொழுது நாம் கற்றுக்கொள்கிறோம். கர்த்தர் ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு மட்டும் இறைவன் அல்லர். அவர் மனுக்குலத்தினர் **எல்லோருக்குங் கர்த்தரானவர்**. அவர் **தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும்** கிருபையிலும் இரக்கத்திலும் **ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்.**

**10:13** நற்செய்தியானது உலக முழுமைக்கும் பொதுவானது என்பதை மெய்ப்பிக்கும் பொருட்டு யோவேல் 2:32 -ஆம் வசனம் எடுத்தாளப்பட்டுள்ளது. இரட்சிப்பின் வழியைக்குறித்து இதைக்காட்டிலும் எளிமையான சொற்களால் சொல்லுவதை ஒருவரும் வரவேற்கமாட்டார்கள்: **"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்."** இங்கு **கர்த்தருடைய நாமம்** என்று சொல்லப்பட்டிருப்பது **கர்த்தரையே** குறிப்பதாகும்.

**10:14** ஆனால் இப்படிப்பட்ட நற்செய்தியானது உலகமெங்கிலும் பறைசாற்றப்படவேண்டுமென்பது அதற்கு நிபந்தனையாக இருக்கிறது. யூதர்களுக்கும் புறவினத்தவர்களுக்கும் இரட்சிப்பானது கிடைக்கக் கூடியதாக இருப்பினும் அதைக் குறித்து அவர்கள் கேள்விப்படாதிருந்தால் அதனால் என்ன பயன்? கிறிஸ்தவ ஊழியத்தின் இதயத்துடிப்பை இங்கே காண்கிறோம்.

யூதர்களும் புறவினத்தவர்களும் இரட்சிப்படைவதற்கான வழியை, "எப்படி" என்ற மூன்று கேள்விகளால் பின்னோக்கிச் சென்று அப்போஸ்தலன் விளக்குகிறார் (எப்படித் தொழுதுகொள்ளுவார்கள்... விசுவாசிப்பார்கள்... பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால்... கேள்விப்படுவார்கள்.) கீழே கொடுக்கப்பட்டபடி அவற்றைத் தலைகீழாக மாற்றிச் சொன்னால் அது தெளிவாக விளங்கும்.

தேவன் தமது ஊழியக்காரரை அனுப்புகிறார்.

அவர்கள் இரட்சிப்பின் நற்செய்தியைப் பிரசங்கிக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் ஜீவனைத் தர தேவன் முன் வருகிறார் என்பதைப் பாவிகள் கேட்கிறார்கள்.

கேட்கிறவர்களில் சிலர் அச்செய்தியை விசுவாசிக்கிறார்கள்.

விசுவசிக்கிறவர்கள் அவரைத் தொழுது கொள்கிறார்கள்.

தொழுதுகொள்கிறவர்கள் இரட்சிக்கப்படு கிறார்கள்.

தேவன் ஒரு முடிவைத் தமது சித்தமாகக் கொண்டிருப்பார் என்றால், அந்த முடிவை அடை வதற்கான வழியும் அவருடைய சித்தமாகவே இருக்கும் என்னும் கொள்கையின் அடிப்படை யில் இந்தத் தர்க்கம் நிறுவப்பட்டிருக்கிறது என்று ஹாட்ஜ் என்பார் குறிப்பிடுகின்றார்.[42] கிறிஸ்தவ ஊழிய இயக்கங்களுக்கு இதுவே அடிப்படைக் காரணமாக இருக்கிறது. புறவினத்தவருக்கு நற்செய்தியைத் தான் அறிவிப்பது சரியானதே என்று மெய்ப்பிக்க பவுல் இந்தக் கொள்கைளை எடுத்துரைக்கிறார். ஆயின் விசுவாசிக்காத யூதர் கள் இக்கொள்கை மன்னிக்கப்பட முடியாதது என்றே கருதினார்கள்.

**10:15** தேவனே அனுப்புகிறவராக இருக்கின் றார். நாமோ **அனுப்பப்பட்டவர்களாக** இருக்கி றோம். அதைக் குறித்து நாம் என்ன செய்கி றோம்? **நற்காரியங்களைச் சுவிசேஷமாய்க்** கொண்டுவந்தவரைப் புகழ்ந்து ஏசாயா உரைத் தது போன்று **அழகிய பாதங்களை** உடைய வராய் நாம் இருக்கின்றோமா (ஏசா. 52:7)? சுவி சேஷகனுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவை என்று ஏசாயா எழுதி மேசியாவைக் குறிப்பிடு கிறான். "அவருடைய" என்னும் சொல் இங்கே "அவர்களுடைய" என்று மாறியிருக்கிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு அவர் **அழகிய பாதங் களுடன்** வந்தார். காணாமற்போனவர்களும் மரித்துப்போனவர்களுமாக மக்கள் கூட்டம் இருக் கின்ற இவ்வுலகில் நற்செய்தியை அறிவிக்க **அழகிய பாதங்களுடன்** செல்லுவதற்கான நற்பேற்றை இப்பொழுது நாம் பெற்றிருக்கிறோம்.

**10:16** ஆனால் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் சுவிசேஷத்திற்குச் செவி சாய்க்கவில்லை என் பதே பவுலின் தீராத வருத்தத்திற்குக் காரணமா யிருந்தது. **"கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?"** என்று ஏசாயா வினவியபோது இதனையே முன் மொழிந்தான் (ஏசா. 53:1). "பலர் அல்ல" என்பதே அக்கேள்விக்குத் தரக்கூடிய பதிலாகும். மேசியா வின் முதலாம் வருகை முன்னுரைக்கப்பட்ட போதும் பலர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

**10:17** கேட்கின்ற செய்தியிலிருந்து ஊற்றென விசுவாசம் உண்டாகிறது என்றும், அந்தச் செய்தி யானது மேசியாவைப் பற்றிய **வசனத்திலிருந்து** வருகிறது என்றும், ஏசாயா நூலிலிருந்து வச னத்தை எடுத்தாளும்போது பவுல் கவனிக்கிறார். ஆகவே அவர் தம் முடிவினை இங்ஙனம் தீட்டு கிறார்: **விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.** எழுதிவைக்கப்பட்டுள்ள **தேவனுடைய வசனமா கிய** திருமறையிலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி நாம் பிரசங்கிப்பதை மனிதர் கள் கேட்கும்போது அவர்களிடத்தில் அவர் களுக்கு **விசுவாசம்** உண்டாகும்.

ஆனால் செவிகளினால் கேட்பதுமட்டும் போதாது. திறந்த இருதயத்துடனும் திறந்த மன துடனும் தேவனுடைய சத்தியங்கள் காண்பிக் கப்படுவதற்கு உகந்த வண்ணம் ஒரு மனிதன் கேட்க வேண்டும். அவ்வாறு அவன் கேட்கு மிடத்து, அந்த வசனம் ஒலிக்கும் சத்தியங்களை உடையதாயிருக்கிறது என்பதை அறிவான். அந்த வசனமே அதில் உரைக்கப்பட்டுள்ள சத்தி யங்களுக்கு உறுதியையும் அளிக்கும். அப் பொழுது அவன் விசுவாசிப்பான். இங்கு **கேள்வி** என்று குறிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிற சொல் செவியோடு மட்டும் சம்பந்தப்பட்டது அன்று என்று நாம் தெளிவாய்ப் புரிந்துகொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக அந்தச் செய்தி *படிக்கக்கூடிய தாக* இருக்கலாம். ஆகவே "கேட்பது" என்னும் சொல்லானது வசனத்தை எவ்வழியிலாவது பெற்றுக்கொள்வதையே குறிக்கின்றது.

**10:18** அவ்வாறாயின் எது பிரச்சினையாக இருக்கிறது? பிரகடனப்படுத்தப்பட்ட நற்செய்தியை யூதர்களும் புறவினத்தவர்களும் **கேள்விப்பட வில்லையா**? ஆம். அவர்கள் கேள்விப்பட்டிருக் கிறார்கள் என்பதை மெய்ப்பிக்க சங்கீதம் 19:4 -ஐ பவுல் எடுத்தாள்கிறார். கேள்விப்பட்டார்கள்:

**"அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவை களின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது"**

சங்கீதம் 19 -இலிருந்து எடுத்தாளப்பட்ட இச் சொற்கள் நற்செய்தியைப் பற்றிப் பேசவில்லை என்பது நமக்கு வியப்பளிக்கக்கூடியதாக இருக் கிறது. மாறாக, தேவனுடைய மகிமையைச் சூரிய னும் சந்திரனும் நட்சத்திரங்களும் உலகெங்

கிலும் பறைசாற்றுகின்றன என்பதையே அவ்வசனம் விளக்கிக் கூறுகிறது. ஆனாலும் அந்த வசனத்தைப் பவுல் கடன்பெற்று, நாம் ஏற்கனவே உரைத்ததுபோல, அவருடைய நாட்களில் உலகெங்கிலும் பறைசாற்றப்பட்ட நற்செய்தியைப் பொருத்தும் அது உண்மையாயிருக்கிறது என்று கூறுகிறார். தேவ ஆவியானவரின் ஏவுதலின் அடிப்படையில் பழைய ஏற்பாட்டு நூலிலிருந்து பல பகுதிகளை அவ்வப்போது எடுத்துரைத்து அப்போஸ்தலன் புதிய கருத்துகளோடு பொருத்திப் பேசுகிறார். அந்த வார்த்தைகளை முதலாவதாகக் கொடுத்த அதே ஆவியானவர், பிறகு வேறு வகையில் பொருள் விளக்குவதற்கென அவற்றைப் பயன்படுத்த அதிகாரம் உடையவராக இருக்கின்றார்.

**10:19** புறவினத்தவர் அழைக்கப்பட்டதும், **பெரும்பாலான** யூதர்கள் நற்செய்தியைப் புறக்கணித்ததும் **இஸ்ரவேல்** நாட்டில் எதிர்பாராநிகழ்ச்சிகளாக நடைபெறவில்லை. என்ன நடக்கும் என்பதை அவர்களுடைய வேதமே மிகச்சரியாய்ச் சொல்லியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, புறவினத்து நாட்டினராலே இஸ்ரவேலுக்கு **எரிச்சல் உண்டாக்கப்**போவதாகவும், **புத்தியீனமாகச்** சிலை வணக்கம் செய்த **ஜனங்களாலே** இஸ்ரவேலுக்குக் கோபமூட்டப் போவதாகவும் தேவன் எச்சரித்தார் (உபா. 32:21).

**10:20** இன்னும் சற்றுக் கடினமான சொற்களைக்கொண்டு, கர்த்தர் கூறினதாக **ஏசாயா** கூறுகிறான்: புறவினத்தவர்கள் உண்மையாகவே கர்த்தரைத் தேடவில்லை. ஆனாலும் அவர்கள் அவரைக் கண்டறிந்தார்கள். அவரை விசாரித்துக் கேளாத மக்களுக்கும் அவர் **வெளியரங்கமானார்** (ஏசா. 65:1). மொத்தமாகப் பார்க்கும்போது, புறவினத்தவர் தேவனைத் தேடவில்லை. அவர்கள் தங்களுடைய சொந்தச் சமயங்களில் மனநிறைவு கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களில் பலர் நற்செய்தியைக் கேட்டபொழுது அதற்குத்தக்கபடி **பதிலுரைத்தார்கள்**. ஒப்பிட்டுப் பார்க்கும்போது, யூதர்களைக் காட்டிலும் புறவினத்தவர் அதிகமான அளவில் நற்செய்தியை ஏற்றுக்கொண்டார்கள்.

**10:21** புறவினத்தவர்கள் இவ்வாறு நற்செய்தியைக் கேட்டு யெகோவாவைச் சுற்றிலும் சூழ்ந்து கொள்கையில், கர்த்தர் தமது கைகளை அசைத்துத் தம்மிடம் வரும்படியாக இஸ்ரவேல் மக்களை அழைக்கும் படவுருவினை ஏசாயா வரைந்து காட்டுகிறான். ஆயினும், அவர்களோ தங்களுடைய கீழ்ப்படியாமையினாலும் பிடிவாதத்தினாலும் எதிர்த்து நின்றதையே அவர் சந்திக்க நேர்ந்தது.

### இ. இஸ்ரவேலின் எதிர்காலம் [அதி. 11]

**11:1** இஸ்ரவேலின் எதிர்காலம் எவ்வாறு இருக்கும்? இஸ்ரவேலைக் குறித்த தேவனுடைய திட்டம் முற்றுப்பெற்றுவிட்டது என்றும், சபையே தேவனுடைய தற்காலிக இஸ்ரவேல் என்றும், இஸ்ரவேலுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் யாவும் சபைக்கே பொருந்தும் என்றும் சிலர் போதிக்கின்றனர். இது உண்மையா?[43] இக்கருத்தை மறுத்துரைக்கும் வலிமை வாய்ந்த வேத பகுதிகளில் ரோமர் 11 - ஆவது அதிகாரமும் ஒன்றாகும்.

**"தேவன் தம்முடைய ஜனங்களை** முற்றிலுமாகத் **தள்ளிவிட்டாரோ?"** என்னும் பவுலுடைய முதல் கேள்விக்கு "இஸ்ரவேலைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனையும் தேவன் தள்ளிவிட்டாரோ?" என்றே பொருள்கூற வேண்டும். தள்ளிவிடவில்லையே! 11:15 -ஆம் வசனத்தில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பது போல அவர் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டிருந்தாலும், அவர்கள் *அனைவரையும்* அவர் புறக்கணித்துவிடவில்லை. எல்லாரும் தள்ளிவிடப்படவில்லை என்பதற்குப் பவுல் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். அவர் **ஆபிரகாமின் சந்ததியில்** தோன்றினவரும், **பென்யமீன் கோத்திரத்தைச்** சேர்ந்தவருமான ஓர் **இஸ்ரவேலனே**. அவர் யூதர் என்பது மறுக்கக் கூடாத சான்றுமிக்க உண்மையாகும்.

**11:2** ஆகவே, **"தேவன் தாம் முன்னறிந்து கொண்ட ஜனங்களை முற்றிலுமாகத் தள்ளிவிடவில்லை"** என்றே இவ்வசனத்தின் முந்தின பகுதியைப் புரிந்துகொள்ள வேண்டும். **எலியாவின்** காலத்திலும் அதுபோன்ற சூழ்நிலையே இருந்தது. நாட்டின் பெரும்பாலோர் தேவனைவிட்டு விலகிச் சிலைகளைப் பின்பற்றிச் சென்றார்கள். ஆகவே அவன் இஸ்ரவேலுக்காக மன்றாடுவதற்குப் பதிலாக, அதற்கு எதிராக ஜெபித்தான். அந்த அளவிற்குச் சூழ்நிலைகள் கேடு நிறைந்திருந்தன!

**11:3 தீர்க்கதரிசிகளைக்** கொலை செய்து அவர்களுடைய சத்தத்தை அந்த மக்கள் ஓய்ந்து போகச் செய்தார்கள் என்று அவன் **கர்த்தரிடத்தில்** நினைவுபடுத்தினான். தேவனுடைய **பலிபீடங்களை** அவர்கள் **இடித்துப்போட்டார்கள்**. தேவனுக்காக உண்மையாகப் பேசுகிறவர்களில்

தான் ஒருவன் மட்டுமே எஞ்சியிருந்ததாக அவன் எண்ணிக்கொண்டான். சடுதியில் வரக்கூடிய ஆபத்தை அவனுடைய **பிராணன்** எதிர்நோக்கி யிருந்ததாகவும் அவன் எண்ணினான்.

**11:4** ஆனால் எலியா அச்சம் கொண்டிருந்தது போன்று சூழ்நிலை அவ்வளவு இருளடைந்த தாகவோ, நம்பிக்கையற்றதாகவோ இருக்க வில்லை. **பாகாலைத்** தொழுதுகொள்ளப் பின்பற் றிச் செல்லாத **ஏழாயிரம் பேரை மீதியாகத் தாம் வைத்திருந்ததாக** தேவன் தீர்க்கதரிசியிடம் நினைவுபடுத்தினார்.

**11:5** அந்நாட்களில் எது உண்மையாயிருந் ததோ, அதுவே இந்நாட்களிலும் உண்மையாக இருக்கிறது. தமக்கென்று ஒரு சாட்சி இல்லாதபடி தேவன் ஒருக்காலும் விட்டுவிடுகிறதில்லை. தம்மாலே தெரிந்துகொள்ளப்பட்ட உண்மை யுள்ள **மீதியானவர்கள்** சிலரை அவர் எப்பொழு தும் உடையவராக இருக்கிறார். அவர்கள் அவரு டைய **கிருபைக்குப்** பாத்திரமான விசேஷித்த வர்கள் ஆவார்கள்.

**11:6** இந்த மீதியான சிலரை, தேவன் அவர் களுடைய **கிரியைகளினால்** தெரிந்தெடுப்ப தில்லை. அதற்கு மாறாக தம்முடைய இறை யாண்மைத் தெரிந்தெடுப்பின் **கிருபையினா லேயே** தெரிந்துகொண்டிருக்கிறார். **கிருபை** மற்றும் **கிரியை** ஆகிய கொள்கைகள் இரண்டும் ஒன்றோடொன்ற எவ்விதத் தொடர்பும் அற்றவை யாக இருக்கின்றன. ஓர் அன்பளிப்பைச் சம் பாதிக்க முடியாது. இலவசமாகத் தரப்படுவதை விலைகொடுத்து வாங்க முடியாது. தகுதிக்கு அப் பாற்பட்டதைத் தகுதியினால் அடைய முடியாது. தேவனுடைய தெரிந்தெடுப்பு **கிரியையை** அடிப் படையாகக் கொண்டிராமல் **கிருபையை** அடிப் படையாகக் கொண்டிருப்பது எத்தனை நற்பேறாக விளங்குகிறது. அவ்வாறு இல்லையெனில் ஒரு வரும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

**11:7** கிறிஸ்து நிறைவேற்றி முடித்த கிரியை யினால் உண்டான நீதியை இஸ்ரவேலர் நாடா மல், தங்களுடைய சொந்த முயற்சியினால் அதைத் தேடியதால், அவர்கள் அதனை அடையக்கூடா மல் தோற்றுப்போனார்கள் என்பதே நாம் எடுக்கக் கூடிய முடிவாக இருக்கிறது. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மீதியானவர்களோ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் கொண்ட நம்பிக்கை யினாலே நீதியை அடைந்து அதில் வெற்றிபெற் றார்கள். நுண்ணிய முறையில் பகுத்தறியக் கூடாத வகையில் அந்நாட்டினர் குருடர்களா யிருந்தார்கள். அவர்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால், அவரை ஏற்றுக் கொள்வதற்கான ஆற்றலும் ஆவலும் இன்றி குன்றிப்போனார்கள்.

**11:8** பழைய ஏற்பாடு இவ்வாறு நடக்குமென்று சரியாய் முன்னுரைத்தது (ஏசா. 29:10; உபா. 27:4). ஆவிக்குரிய உணர்ந்துகொள்ளக்கூடாத மதி மயக்கத்தின் நிலையில் இருந்த அவர்களை தேவன் கைவிட்டார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அவர்கள் மேசியாவாகவும் இரட்சக ராகவும் காண மறுத்தபடியால் அவரைக் காண் பதற்குரிய ஆற்றலை அவர்கள்இழந்துபோனார் கள். தேவனுடைய வேண்டியழைக்கும் சத் தத்தை அவர்கள் கேட்க மறுத்ததினால், இப் பொழுதோ அவர்கள் ஆவிக்குரிய செவிடர்களா கிப் போனார்கள். பயங்கரமான நியாயத்தீர்ப்பு **இன்றையத்தினம் வரைக்கும்** அவர்கள்மேல் தொடர்கிறது.

**11:9** இஸ்ரவேலின்மீது வரக்கூடிய நியாயத் தீர்ப்பை **தாவீதும்** எதிர்நோக்கினான். **அவர் களுடைய பந்தி அவர்களுக்குச் சுருக்கும் கண்ணியுமாக ஆகக்கடவது** என்று நிராகரிக் கப்பட்ட கர்த்தர் தேவனிடத்தில் கூறுவதாக அவன் தனது சங்கீதத்தில் கூறினான் (சங். 69:22, 23). கிறிஸ்துவின் மூலமாகப் பொழியப்படுகிற சிலாக்கியங்கள் மற்றும் ஆசிர்வாதங்கள் அனைத்தும் மொத்தமாக இங்கு **பந்தி** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சாபமாக மாறிப் போயிற்று.

**11:10** பாடுகளை அனுபவித்த இரட்சகர், அவர் களுடைய **கண்கள் காணாதபடிக்கு அந்தகாரப் படக்கடவது** என்றும் கடும் உழைப்பினால் அவர் களுடைய முதுகு எப்பொழுதும் குனிந்திருக்கக் கடவது என்றும் (அல்லது அவர்களுடைய இடுப்புகள் முதிர்வயதினர் தள்ளாடுவதுபோலத் தள்ளாடக்கடவது) தேவனிடத்தில் வேண்டு வதாக அந்தச் சங்கீதத்தில் எழுதப்பட்டுள்ளது.

**11:11** இப்பொழுது பவுல் வேறொரு கேள்வியை எழுப்புகிறார். **விழுந்து போகும்படிக்கா இடறி னார்கள்?** *முடிவாக* அல்லது *நிரந்தரமாக* என்னும் ஒரு சொல்லை இக்கேள்வியுடன் நாம் சேர்க்க வேண்டும். ஒருக்காலும் திரும்ப எழுந்திராத படியா அவர்கள் இடறி விழுந்தார்கள்? அப்படிப் பட்ட கருத்தைத் திட்டவட்டமாக அப்போஸ்தலன் மறுத்துரைக்கிறார். அவர்கள் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாகும். அவர்களுடைய

வீழ்ச்சியினால் **புறவினத்தவருக்கு இரட்சிப்பு கிடைக்க** வேண்டும் என்பதே அவருடைய நோக்க மாயிருந்தது. அது இஸ்ரவேலுக்கு **வைராக்கி யத்தை** எழுப்பிவிடும். முடிவில் இஸ்ரவேல் தேவ னிடத்தில் கொண்டு வரப்படுவதற்காகவே இந்த **வைராக்கியம்** திட்டமிடப்பட்டது.

இஸ்ரவேலின் தவறுதலைப் பவுல் மறுத்து ரைக்கவில்லை. உண்மையில் இதே வசனத்தில் அவர் அதை ஒப்புக்கொள்கிறார். **அவர்களுடைய தவறுதலினாலே புறவினத்தவருக்கு இரட்சிப்பு கிடைத்தது**. அடுத்த வசனத்தில், "அவர்களு டைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமாயிருக்கு மானால்" என்று அவர் கூறுகிறார். நிரந்தரமாக இஸ்ரவேலை தேவன் தள்ளிவிட்டார் என்ற கருத்தை அவர் மிக வன்மையாக எதிர்க்கிறார்.

**11:12** நற்செய்தியை இஸ்ரவேல் நிராகரித்ததின் காரணமாக, அந்நாடு ஒதுக்கி வைக்கப்பட்டு, நற் செய்தி **புறவினத்தவரைச்** சென்றடைந்தது. இந் தப் பொருளில் யூதர்களுடைய **தவறு உலகத் திற்கு ஐசுவரியமாயிற்று**. மேலும் இஸ்ரவேலின் குறைவு புறவினத்தவருக்கு ஆதாயமாயிற்று.

அது உண்மையானால், இஸ்ரவேல் முன்னி ருந்த நிலைமைக்குக் கொண்டு வரப்படும்போது அது உலகம் முழுவதற்கும் **எவ்வளவு அதிக மாய்** நன்மை பயக்கும்! மகா உபத்திரவ காலம் முடிவடையும் தருணத்தில் இஸ்ரவேல் கர்த்தரி டத்தில் மனந்திரும்பும், அப்பொழுது அது உலக நாடுகள் அனைத்திற்கும் ஆசிர்வாதத்திற்கான வாய்க்காலாகத் திகழும்.

**11:13,14** இப்பொழுது அப்போஸ்தலன் புற வினத்தவர்களை நோக்கிப் பேசுகிறார் (11:13-24). ரோமாபுரியிலுள்ள புறவினக் கிறிஸ்தவர்களிடம் அவர் பேசுகிறவதாகச் சிலர் எண்ணுகின்றனர். ஆனால் இந்தப் பகுதி அவர்களிடத்தில் அல்ல, வேறு மனிதர்களிடமே பேசப்படுகிறது. அதாவது புறவின நாடுகள் அனைத்தையுமே இது குறிக் கிறது. இஸ்ரவேல் நாட்டைக் குறித்துப் பேசியது போலவே, புறவின நாடுகளைப் பற்றியும் பவுல் பேசுகிறார் என்று அறிந்தால் மட்டுமே இப் பகுதியை ஒருவரால் புரிந்துகொள்ள முடியும். தேவனுடைய சபையைக் குறித்து அவர் பேச வில்லை. இல்லையெனில் வெட்டுண்டு போகக் கூடிய நிலையைச் சபை சந்திக்க வேண்டியதா யிருக்கும் (11:22). அது வேதத்தில் சொல்லப்பட்டி ருக்கிற உண்மைக்கு முரணானது ஆகும்.

புறவினத்தவருடைய அப்போஸ்தலனாக பவுல் இருக்கிறதினாலே, அவர்களிடத்தில் ஒளிவு மறைவின்றி அவர் பேசுவது முற்றிலும் இயல் பானதே.

அவ்வாறு அவர் பேசுவதாலே அவருடைய **ஊழியத்தை** நிறைவேற்றுகிறார். அவருடைய நாட்டைச் சேர்ந்த **சிலர்** எவ்வாறேனும் **வைராக் கியம்** அடைந்து **இரட்சிப்படைய வேண்டும்** என் பதே அவருடைய விருப்பமாயிருந்தது. ஒருவரை யும் அவரால் இரட்சிக்க முடியாது என்பதை அவரும் அறிவார், நாமும் அறிவோம். ஆனால் இரட்சிப்பின் தேவன் மட்டுமே செய்யக்கூடிய செயலை, அவருடைய ஊழியக்காரர்கள் தாங் களே செய்வதாகக் கூறும் அளவிற்கு, அவர் களோடு அவர் தம்மை இணைத்துக் கொள்கிறார்.

**11:15** பன்னிரண்டாம் வசனத்தில் காணப் படுகிற அதே வாதம் இங்கு வேறு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பூமிக்குரிய மக்களாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட நிலையி லிருந்து இஸ்ரவேலர் ஒதுக்கி வைக்கப்பட்டபோது தேவனிடத்தில் சிலாக்கியம் பெறும் நிலைக்குப் புறவினத்தவர் கொண்டு வரப்பட்டார்கள். புற வினத்தவர் தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டார்கள் என்று இவ்வுண்மை உருவகமாகச் சொல்லப்பட் டுள்ளது. கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்தில் இஸ்ரவேலர் முன்னிருந்த நிலை மையை அடைவது உலகம் முழுவதும் மறுபிறப்பு அடைவதற்கு அல்லது உயிர்த்தெழுதல் நடப்ப தற்கு ஒப்பாக விளங்கும்.

இஸ்ரவேல் நாட்டிற்குச் சின்னமாக விளங்கும் யோனாவின் அனுபவத்தைக் கொண்டு இதனை விளக்க முற்படுவோம். புயலில் சிக்குண்ட கப்பலி லிருந்து யோனா கடலுக்குள் எறியப்பட்டபோது, அதன்விளைவாக கப்பல் நிறைய இருந்த புற வினத்தவர் மீட்பை அல்லது இரட்சிப்பைப் பெற்ற னர். ஆனால், யோனா முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டு நினிவே நகரத்தாரிடம் பிரசங் கம் ஆற்றியபோது, அந்த நகரத்தில் இருந்த புறவினத்தவர் முழுவதும் காக்கப்பட்டனர். ஆகவே, இஸ்ரவேல் புறக்கணிக்கப்பட்டிருக்கும் கொஞ்சகாலத்தில் நற்செய்தி புறவினத்தவரில் சிறுபான்மையினரைச் சென்றடைந்தது. ஆனால் இஸ்ரவேல் முன்னிருந்த நிலையை அடையும் போது, புறவினத்தவரிலிருந்து திரளான மக்கள் கூட்டம் தேவனுடைய அரசிற்குள் கொண்டு வரப்படும்.

**11:16** இப்பொழுது பவுல் இரண்டு உவமை களைக் கூறி இவ்வுண்மையை விளக்க முற்படு கிறார். **முதற்பலனாகிய மாவு மற்றும் பிசைந்த**

**மாவு** ஆகியவற்றைப் பற்றிய உவமை முதலில் சொல்லப்பட்டுள்ளது. இரண்டாவது உவமை **வேரையும் கிளைகளையும்** பற்றியதாகும். பிசைந்த மாவிலிருந்து கொஞ்சம் எடுத்து, அதனைக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் காணிக்கையாகச் செலுத்த வேண்டுமென்று எண்ணாகமம் 15:19-21 ஆகிய வசனங்களில் படிக்கிறோம். பிசையப்பட்ட எல்லா மாவிலிருந்தும் கொஞ்சம் கர்த்தருக்கென்று பிரித்து வைக்கப்பட்டது என்பதே இங்கு தர்க்கத்திற்கென்று எடுத்துக் கொள்ளப்பட்ட பொருளாகும்.

ஆபிரகாம் **முதற்பலனாகிய** மாவிற்கு ஒப்பாக இருக்கிறான். அவன் **பரிசுத்தமானவன்** என்று சொல்லுமிடத்து, தேவனுக்கென்று பிரித்துவைக்கப்பட்டவன் என்பது பொருளாகும். அவனைப் பொருத்தமட்டில் இது உண்மையாயின், அவனுடைய சந்ததியைப் பொருத்தும் இது உண்மையாகும். தேவனுக்கு முன்பாக வெளியரங்கமான சிலாக்கியங்களுக்கு அவர்கள் பிரித்து வைக்கப்பட்டார்கள்.

இரண்டாவது உவமை **வேரையும் கிளைகளையும்** பற்றியதாகும். வேர் பிரித்து வைக்கப்பட்டால் **கிளைகள்** யாவும் பிரித்து வைக்கப்பட்டவையாகவே விளங்கும். புறவினத்தவர்களிலிருந்து, தேவனுக்கென்று ஒரு புதிய சமுதாயத்தை உண்டாக்கும்பொருட்டு **வேராகிய** ஆபிரகாம் பிரித்து வைக்கப்பட்டான். ஆபிரகாம் பிரித்தெடுக்கப்பட்டவனானால் அவனுடைய சந்ததி முழுவதும் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்னும் பொருளில் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

**11:17** வேரையும் கிளைகளையும் பற்றிய உவமையை அப்போஸ்தலன் தொடர்ந்து பேசுகிறார்.

முறித்துப்போடப்பட்ட கிளைகள், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரின் விசுவாசிக்காத மக்களைப் படவுருவகமாகக் காட்டுகின்றன. மேசியாவை நிராகரித்ததன் காரணமாக, தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்னும் நற்பேற்றை அவர்கள் இழந்து போனார்கள். ஆனால் சில கிளைகள் மட்டுமே முறித்துப் போடப்பட்டன. இஸ்ரவேலில் மீதியான சிலர், பவுல் உட்பட, கர்த்தரை ஏற்றுக்கொண்டனர்.

**காட்டு ஒலிவ மரமானது** புறவினத்தவர்களைக் குறிக்கிறது. அவர்கள் மொத்தமாக ஓர் இனத்தவராக எண்ணப்படுகிறார்கள். ஒலிவமரத்தில் அவர்கள் **ஒட்டவைக்கப்பட்டிருக்கிறார்கள்**.

**ஒலிவ மரத்தின் வேருக்கும் சாரத்துக்கும்** உடன்பங்காளிகளாகப் புறவினத்தவர் பங்கேற்றார்கள். முன்னதாக இஸ்ரவேலுக்கு அளிக்கப்பட்ட சாதகமான நிலையில் புறவினத்தவருக்கும் பங்கு கிடைத்தது. அந்தச் சாதகமான நிலையானது இன்றைக்கு விசுவாசிக்கும் மீதியான வர்களுக்கும் உண்டாயிருக்கிறது. இந்த விசுவாசத்தில் ஒலிவ மரத்தின் அடிமரம் என்று சொல்லப்பட்டிருப்பது இஸ்ரவேல் அல்ல என்பதை நாம் முக்கியமாக நினைவுகூர வேண்டும். பல நூற்றாண்டுகளாக தேவனுடைய நற்பேற்றைப் பெற்றவர்களாக வழிவந்த மக்களையே அது குறிக்கிறது. அந்த அடிமரமானது இஸ்ரவேல் என்று நீங்கள் கருதுவீர்கள் எனில், இஸ்ரவேலானது இஸ்ரவேலிலிருந்து வெட்டப்பட்டு இஸ்ரவேலிலேயே ஒட்டவைக்கப்பட்டது போன்ற விபரீதமான படத்தையே காணவேண்டியதாயிருக்கும்.

**காட்டு ஒலிவ மரமானது சபையைக் குறிப்பதில்லை** என்பதை நாம் நினைவுகூருவது இன்றியமையாததாகும். இல்லையெனில் மெய்யான விசுவாசிகள் தேவனுடைய ஆதரவிலிருந்து வெட்டுண்டுபோகக்கூடிய ஒரு நிலையை எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கும். ஆயின் அவ்வாறு நடைபெறுவதற்கான சாத்தியக்கூறு ஏதுமில்லை என பவுல் ஏற்கனவே விளக்கிக் கூறியுள்ளார் (ரோமர் 8:38,39).

அந்த மரத்தின் அடிப்பகுதியானது பல நூற்றாண்டுகளாக நற்பேற்றைப் பெற்றவர்களாக வழிவந்த மக்கள் என்று நாம் குறிப்பிட்டோம். அதன் பொருள் யாது? சிறப்பான இடத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாகச் சில குறிப்பிட்ட மக்களை தேவன் பிரித்து வைத்தார். அவரிடத்தில் அவர்கள் மிக நெருக்கமாக இருக்கும்படியாக அச் சிறப்பு அளிக்கப்பட்டது. உலகத்தின் ஏனையோரிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு சிறப்பான சலுகைகளை அடையும்படியான மேனிலையை அவர்கள் பெற்றார்கள்.

“சிலாக்கியம் பெற்ற நாடு என்னும் நிலை” என்று இன்று நாம் சொல்லக்கூடிய மேன்மையை அவர்கள் அனுபவித்தார்கள். வரலாற்றின் வெவ்வேறு காலங்களில் இவ்வகையான ஒரு சிறப்பு மிக்க கூட்டத்தை தேவன் எப்பொழுதும் உடையவராக இருப்பார்.

இந்தச் சிறப்பான நற்பேற்றைப் பெற்றவர்களாக வழிவந்தவர்களில் இஸ்ரவேலர் முதலாவது இடத்தை வகித்தனர். பண்டைய காலத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட உலகிற்குரிய

மனிதர்கள் அவர்களே. அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ளாததன் நிமித்தம் அவர்களிலிருந்து **சில கிளைகள் முறித்துப்போடப்பட்டன**. இவ்வாறாக, அவர்கள் பெற்றிருந்த "தனிச் சலுகை பெற்ற குமாரன்" என்னும் நிலையை இழந்து போனார்கள். அந்த ஒலிவ மரத்தில் புறவினத்தவர்கள் **ஒட்டவைக்கப்பட்டார்கள்**. மேலும் விசுவாசிகளான யூதரோடு அவர்களும் அதனுடைய **வேருக்கும் சாரத்துக்கும்** பங்குள்ளவர்களானார்கள். அந்த **வேர்** ஆபிரகாமையே சுட்டிக்காட்டுகிறது. நற்பேறு பெற்ற வழிவந்தோருக்கு அவனே தொடக்கமானவன். ஒலிவ மரத்தின் **சாரம்** அதனுடைய உற்பத்தித் திறனைக் குறிக்கிறது. அதாவது அதனுடைய வளமிக்க ஒலிவப் பழங்களையும் எண்ணெயையும் அது குறிக்கிறது. அந்த **ஒலிவ மரத்தோடு** இணைந்திருக்கின்ற காரணத்தினால் அதிலிருந்து பெறக்கூடிய நற்பேறுகளைச் **சாரம்** என்ற சொல் இவ்விடத்தில் குறிக்கிறது.

**11:18** 'உங்களைக் காட்டிலும் நான் பரிசுத்தமானவன்' என்னும் கருத்துடையவராகப் புறவினத்தவர் நடந்துகொள்ளக்கூடாது. யூதர்களைக் காட்டிலும் மேற்பட்டவர்கள் என்று அவர்கள் பெருமை கொள்ளலாகாது. நற்பேறு பெற்ற வர்களாக வழி வந்தோரின் தொடக்கத்திற்கும் தங்களுக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை என்ற உண்மையைக் காணாதவர்கள் போல **பெருமை பாராட்டுதலுக்கு** அது ஒப்பாகும். அதற்கு மாறாக, நற்பேறு பெற்றவர்களாகிய வழிவந்தோரே புறவினத்தவரை அவர்களுடைய சிறப்பான நிலையை அடையச் செய்தவர்கள் ஆவார்கள்.

**11:19** "**நானும்** மற்ற புறவினக் கிளைகளும் **ஒட்டவைக்கப்படுவதற்கு** யூதக் **கிளைகள் முறித்துப்போடப்பட்டன**" என்று பவுல் யாருடன் கற்பனை செய்து உரையாடுகிறாரோ அந்தப் புறவினத்தவன் **சொல்லுவான்** என்று அவர் எதிர்பார்க்கிறார்.

**11:20** அந்தக் கூற்று ஓரளவு உண்மையுள்ளதாக இருக்கிறது என்று அப்போஸ்தலன் ஒப்புக் கொள்கிறார். யூதக் கிளைகள் **முறிக்கப்பட்டு** புறவினத்தவர் கொண்டுவரப்பட்டுள்ளனர். அது இஸ்ரவேலின் **அவிசுவாசத்தினாலே** உண்டானதேயொழிய, புறவினத்தவர் தேவனிடத்தில் கொண்டுள்ள சிறப்பான நிலையினால் உண்டாகவில்லை. புறவினத்தவர் விசுவாசத்தினால், ஓர் இனத்தினரைப் போன்று அங்கே ஒட்டவைக்கப்பட்டனர். **நீ விசுவாசத்தினால் நிற்கிறாய்** என்னும் கூற்று, மெய்யான விசுவாசிகளுடன் பவுல் பேசுகிறது போன்று தோன்றுகிறது. ஆனால் அந்தச் சொற்றொடர் அப்படிப்பட்ட பொருளுடைய தாயிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. யூதர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், புறவினத்தவர் தங்களில் கூடுதலான விசுவாசத்தை வெளிப்படுத்தினர் என்பதே அச்சொற்றொடரின் பொருளாகும். "இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை" என்று இயேசு கிறிஸ்து நூற்றுக்கு அதிபதியிடம் கூறினார் (லூக். 7:9). "ஆதலால் இரட்சிப்பு புற ஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, அவர்கள் அதற்கு செவிகொடுப்பார்கள்!" என்று பவுல் சில ஆண்டுகளுக்குப் பின்னர் ரோமாபுரியில் கூறினார் (அப். 28:28). "அவர்கள் செவிகொடுப்பார்கள்" என்பதைக் கவனியுங்கள். இன்றைய நாட்களில் புறவினத்தவரை ஓர் இனமாகப் பார்க்கையில் அவர்கள் இஸ்ரவேலைக் காட்டிலும் நற்செய்தியை அதிகமாக ஏற்றுக்கொள்கிறார்கள். இங்கு நிற்பது என்னும் சொல் தவறி வீழ்தலுக்கு எதிர் மறையாகும். தங்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பான நிலையிலிருந்து இஸ்ரவேல் தவறினார்கள். அந்த இடத்தில் புறவினத்தவர் ஒட்டவைக்கப்பட்டனர்.

ஆனால் நிற்கிறவன் விழாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவன். பெருமையினால் செருக்கடையாதபடிக்குப் புறவினத்தவர் **பயந்திருக்க** வேண்டும்.

**11:21** நற்பேறு பெற்றவர்களாக வழிவந்தோரிலிருந்து **சுபாவக்கிளைகளை** வெட்டிப்போட **தேவன்** தயங்கவில்லை. அவ்வாறாயின் அதே சூழ்நிலையில் காட்டு ஒலிவ மரக் கிளைகளைத் **தப்ப விடுவதற்கான** காரணம் ஏதுமில்லை.

**11:22** ஒலிவ மரத்தைக் குறித்த உவமையில் தேவனுடைய இரண்டு மாறுபட்ட பண்புக் கூறுகளைக் காண்கிறோம். ஒன்று அவருடைய **தயவு** மற்றொன்று அவருடைய **கண்டிப்பு**. நற்பேற்றைப் பெற்ற நாடு என்ற நிலையிலிருந்து இஸ்ரவேல் அகற்றப்பட்டதிலிருந்து அவருடைய **கண்டிப்பு** தெரிகிறது. நற்செய்தியோடு புறவினத்தவர்களை நோக்கி திரும்பியதிலிருந்து அவருடைய **தயவு** தெரிகிறது (அப். 13:46; 18:6 ஆகிய வசனங்களைக் காண்க). ஆனால் அந்தத் தயவு என்றென்றும் நிலைத்திருக்கும் என்று எண்ணலாகாது. இயேசு கிறிஸ்து பூமியில் ஊழியம் செய்த நாட்களில் புறவினத்தவளிடம் கண்ட திறந்த மனதுடைய நிலையை தொடர்ந்து வெளிப்படுத்த

வில்லையெனில், அவர்களும் வெட்டுண்டு போகக்கூடிய நிலையைச் சந்திக்க நேரிடும் (மத். 8:10; லூக். 7:9).

சபையைக் குறித்தோ, தனிப்பட்ட விசுவாசிகளைக் குறித்தோ பவுல் பேசவில்லை என்பதை நாம் தொடர்ந்து நினைவுகூர வேண்டியவர்களாயிருக்கிறோம். புறவினத்தவர்களைப் பற்றியே அவர் பேசுகிறார். கிறிஸ்துவின் சரீரத்தை அதனுடைய சிரசினின்று ஏதொன்றும் பிரிக்காது. தேவனுடைய அன்பினின்று ஒரு விசுவாசியை ஏதொன்றும் பிரிக்காது. ஆனால் புறவினத்தவர் இப்பொழுது பெற்றிருக்கிற சிறப்பான சிலாக்கியத்திற்குரிய நிலையினின்று பிரிக்கப்படக்கூடும்.

**11:23** இஸ்ரவேல் வெட்டுண்டு போன நிலைமையே அதனுடைய முடிவாக இருக்கப்போவதில்லை. ஒரு தேசமாக **அவிசுவாசத்திலே** இருக்கும் அவர்கள் அந்நிலையில் தொடர்ந்து **நிலைத்திராதிருந்தால்,** முன்னிருந்த தனிச்சலுகை பெற்ற நிலைக்கு மீண்டும் தேவனால் கொண்டுவரப்படாதிருக்க ஒரு காரணமுமில்லை, அவ்வாறு செய்யாதிருக்க தேவன் வல்லமையற்றவர் அல்லவே.

**11:24** உண்மையில் தம்முடைய சிலாக்கியம் பெற்ற நிலைக்கு இஸ்ரவேலை மீண்டும் நிறுவுவது, புறவினத்தவரை அந்நிலைக்குக் கொண்டுவந்த செயலைக் காட்டிலும் தேவனுக்கு எளிதாமே. தேவனுடைய தனிச்சலுவை பெற்ற மரத்தின் ஆதிக்கிளைகள் இஸ்ரவேல் மக்களே. ஆகவே அவர்கள் **சுபாவக்கிளைகள்** என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் புறவினத்தவர்களோ **காட்டு** ஒலிவ மரத்திலிருந்து வந்தவர்கள். ஒரு காட்டு ஒலிவக்கிளையை **நல்ல ஒலிவ மரத்திலே** ஒட்டவைப்பது இயற்கைக்கு அப்பாற்பட்டது. பவுல் சொல்லுவது போல அது **சுபாவத்திற்கு விரோதமானது.** சுபாவக் கிளைகளை அதனுடைய மூல மரமாகிய **நல்ல ஒலிவ மரத்திலே** ஒட்டவைப்பது இயல்பான செயலாகும்.

**11:25** முன்னிருந்த நிலைக்கு இஸ்ரவேலைக் கொண்டு வருவது சாத்தியமானது மட்டுமன்று, அது நிச்சயமாய் நிகழக்கூடியதுமாகும் என்று பவுல் இப்பொழுது வெளிப்படுத்துகிறார். பவுல் தாம் வெளிப்படுத்துகிறதை ஓர் **இரகசியம்** என்று கூறுகிறார். அதாவது இதுவரை அறியப்படாத உண்மை. எவ்வித உதவியும் இன்றி மனிதனுடைய அறிவுக் கூர்மையினால் கண்டு அறியக் கூடாத உண்மை இப்பொழுது வெளிப்படுத்தப்படுகிறது. புறவினத்தவர் தங்களுடைய சொந்த **எண்ணத்திலே புத்திமான்கள்** என்று கருதி, யூதர்களைத் தாழ்வாக நினைக்காதிருக்கும்படி பவுல் எல்லாவற்றையும் சரியாக விளக்கிக் கூறுகிறார். இந்த **இரகசியம்** பின்வருமாறு காணப்படும்:

**இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.** அந்த நாடு முழுவதும் அதனால் பாதிக்கப்படாமல், விசுவாசிக்காத மக்கள் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்தக் கடினமான மனது சிறிது காலத்திற்குரியதே. புறவினத்தவருடைய நிறைவு உண்டாகும்வரை அந்நிலை தொடரும். சபையில் கடைசி அங்கமாக ஒருவர் சேருவதே புறவினத்தவருடைய நிறைவு என்று குறிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது சபையாகிய கிறிஸ்துவின் சரீரம் நிறைவடைந்து விண்ணுலகிற்கு எடுத்துக் கொள்ளப்படும். புறவினத்தவருடைய காலமும் **புறவினத்தவருடைய நிறைவும்** வெவ்வேறானவை என்பதை நாம் பகுத்துணர வேண்டும் (லூக். 21:24). புறவினத்தவருடைய நிறைவும் சபை எடுத்துக் கொள்ளப்படுதலும் ஒரே நேரத்தில் நிகழும் சம்பவங்களாகும். பாபிலோன் சிறையிருப்பே "புறவினத்தவருடைய காலத்தின்" தொடக்கமாகும் (2 நாளா. 36:1-21). ஆளுகை செலுத்துபவராக கிறிஸ்து இப்புவிக்குத் திரும்பும் நிகழ்ச்சியே அதனுடைய முடிவாகும். இக்காலம் முழுவதும் புறவினத்தவர் யூதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவர்.

**11:26** சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, பகுத்தறியக்கூடாத கடினமான மனது இஸ்ரவேலினின்று நீங்கும். ஆயினும் இஸ்ரவேலர் அனைவரும் உடினடியாக இரட்சிப்படைவர் என்பது பொருளன்று. உபத்திரவ காலத்தின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை யூதர்கள் மனந்திரும்புவார்கள். இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் கிறிஸ்து இப்புவிக்குத் திரும்பும் முன்னர் தெரிந்துகொள்ளப்பட்ட மீதியானவர் அனைவருடைய இரட்சிப்பும் நிகழாது.

விசுவாசிக்கிற எல்லா இஸ்ரவேலரையுமே, **இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்** என்று பவுல் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது விசுவாசிக்காத இஸ்ரவேலர் அனைவரும் அழிக்கப்பட்டுபோவார்கள் (சக. 13:8,9). "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று சொல்லுகிறவர்கள் மட்டுமே இறையரசில் நுழைவதற்கென காக்கப்படுவார்கள்.

**சீயோனுக்கு** மீட்பர் வந்து, **யாக்கோபை விட்டு** அக்கிரமத்தை விலக்குவார் என்று ஏசாயா இதனைக் குறித்தே கூறினான் (ஏசா. 59:20). கிறிஸ்து பெத்லகேமிற்கு வந்ததை இது குறிப்பிட வில்லை, சீயோனுக்கு அவர் வரும் நிகழ்ச்சியே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைக் கவனிக் கவும். அதாவது அவருடைய இரண்டாம் வரு கையை இது குறிக்கிறது.

**11:27** புதிய **உடன்படிக்கையின்** ஆதாரத்தில் அவர்களுடைய பாவங்களை தேவன் நீக்குகின்ற நிகழ்ச்சியை ஏசாயா 27:9 - ஆம் வசனமும், எரேமியா 31:33, 34 -ஆம் வசனங்களும் குறிப்பிடுகின்றன.

**11:28** இஸ்ரவேலின் நிகழ்காலத்தைக் குறித்து நாம் சுருக்கமாகச் சொல்வோமாயின், முதலாவது **சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்**. நற்செய்தியானது புறவினத்தவரிடம் செல்லும்படி யாக, தேவனிடத்தில் தனிச்சலுவை பெற்ற நிலை யிலிருந்து தள்ளப்பட்டும் ஒதுக்கி வைக்கப்பட் டும், அந்நியராக்கப்பட்டும் **அவர்கள் பகைஞரா யிருக்கிறார்கள்.**

ஆனால் இது சித்திரத்தின் ஒரு பகுதியே யாகும். **தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்ட வர்களாயிருக்கிறார்கள்**. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களே அந்தப் பிதாக்கள்.

**11:29** அவர்கள் இன்னும் அன்புகூரப்பட்டவர் களாக இருப்பதற்குக் காரணம் யாதெனில் தேவ னுடைய **கிருபைவரங்களும் அழைப்பும்** ஒருக் காலும் செல்லாதவையாக்கப்படுவதில்லை. தேவன் தமது கிருபை வரங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளமாட்டார். நிபந்தனையற்ற வாக் குறுதியைக் கொடுப்பாராயின், அதினின்று அவர் ஒருக்காலும் பின்செல்லுவதில்லை. 9:4,5 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள சிறப்பான நற் பேறுகளை அவர் இஸ்ரவேலுக்குக் கொடுத்தார். இஸ்ரவேல் மக்களை அவருடைய பூமிக்குரிய மக்களாக அழைத்தார் (ஏசா. 48:12). இவ்விதமாக மற்ற நாடுகளிலிருந்து அவர்களை அவர் பிரித் தெடுத்தார். அவருடைய நோக்கங்களை எதுவும் மாற்ற முடியாது.

**11:30 முற்காலத்தில்** புறவினத்தவர் பழக்கப் படுத்தப் பெறாதவர்களாகவும், **கீழ்ப்படியாத** மக்களுமாக இருந்தார்கள். மேசியாவையும் இரட் சிப்பின் நற்செய்தியையும் இஸ்ரவேல் ஏளனத்துடன் புறக்கணித்தபோது, தம்முடைய இரக்கத்தினால் தேவன் புறவினத்தவரிடத்தில் திரும்பினார்.

**11:31** ஏறக்குறைய அதே வரிசையில் நிகழ்ச்சி கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பிற்காலத்தில் நடை பெறும். இஸ்ரவேல் இப்பொழுது கீழ்ப்படியாமை யில் இருக்கிறது. புறவினத்தவர் மீது காட்டப்படும் **இரக்கத்தினாலே** அவர்களுடைய வைராக்கியம் எழுப்பிவிடப்படும். அப்பொழுது அவர்கள்மீது **இரக்கம்** காண்பிக்கப்படும். இஸ்ரவேலர் மீது புற வினத்தவர் காட்டும் இரக்கத்தினாலே அவர்கள் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்படுவார் கள் என்று சிலர் போதிக்கிறார்கள். ஆயின் அது அவ்வாறன்று என்று நாம் அறிவோம். கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை யின் காலத்தில் இஸ்ரவேல் அதனுடைய முன்னி ருந்த நிலையை அடையும் (11:26,27 வசனங் களைக் காண்க).

**11:32** இந்த வசனத்தை முதன்முதலில் நாம் படிக்கும்போது, யூதர்களையும் புறவினத்தவர் களையும் நியாயமற்ற முறையில் தேவன் ஆக்கி னைக்குள்ளாகத் தீர்த்துவிட்டார் என்று நினைக் கத் தோன்றும். அதைக்குறித்து அவர்களால் ஒன்றும் செய்ய இயலாதவராயிருக்கிறார்கள் என்றும் நாம் எண்ணுகிறோம். ஆயின் அந்த சிந்தனைக்கு இங்கே இடமில்லை. அவிசுவாசம் அவர்களுடைய சொந்தச் செயலாகவே இருக் கிறது. யூதர்களும் புறவினத்தவரும் கீழ்ப்படி யாமைக்குள் இருப்பதைக் கண்ட தேவன், அவர் கள் இருவகுப்பாரும் அந்நிலையில் சிறைப்பட்டி ருப்பதாகச் சித்தரிக்கிறார். அவர் நியமித்த நிபந் தனைகளினாலேயன்றி அவர்களால் அந்நிலை யிலிருந்து விடுதலைபெற இயலாது. இதுவே இவ்வசனத்தின் பொருளாகும்.

யூதர்களுக்கும் புறவினத்தவர்களுக்கும் தேவன் தம்முடைய **இரக்கத்தைக் காண்பிக்கத்தக்க தாக**, அந்தக் **கீழ்ப்படியாமை** வாய்ப்பை நல் கிற்று. பூமியனைத்திலுமுள்ள மனிதர்கள் யாவரும் இரட்சிப்பை அடைவார்கள் என்பது இவ்வசனத் தின் பொருளன்று. புறவினத்தவரிடம் தேவன் தமது **இரக்கத்தைக்** காண்பித்து இருக்கிறார். யூதர்களிடமும் அவர் தமது **இரக்கத்தை** இனி மேல் விளங்கச் செய்வார். ஆயினும் புவிமக்கள் அனைவருடைய இரட்சிப்பிற்கும் இவ்விரக்கம் உறுதி அளிப்பதில்லை. தேசங்களின் அடிப்படை யில் தேவன் காண்பிக்கிற இரக்கத்தைக் குறித்தே இங்கு சொல்லப்பட்டுள்ளது. இதைக் குறித்து ஜார்ஜ் வில்லியம்ஸ் என்பார் கூறுவதாவது:

> எபிரெய மற்றும் புறவின தேசங்கள் என்னும் இரு சாராரும் தேவனால் சோதிக்கப்பட்டு, அச்

சோதனையில் தோற்றுப் போயினர். ஆதலால் அவிசுவாசத்திற்குள்ளாக தேவன் அவர்களை அடைத்துப் போட்டுவிட்டார். தகுதியோ செயல் சிறப்போ அவர்களிடம் இல்லாத காரணத்தினால் தேவனிடத்திலிருந்து சலுகைகளைப் பெறுவதற்குரிய எல்லா உரிமைகளையும் அவர்கள் இழந்து போனார்கள். இதனிமித்தம் அவருடைய ஆராயப்படாத கிருபையின் ஐசுவரியத்தின் இரக்கம் அவர்கள் எல்லோர் மேலும் பொழியப்படுவதற்கு ஏதுவாயிற்று.[44]

**11:33** முடிவுரையாக இங்கு ஒரு துதிப்பாடல் எழுதப்பட்டிருக்கிறது. அது முழு மடலையும் அங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீக அதிசயங்களையும் திரும்பிப் பார்க்கிறது. நீதியுள்ள தேவன் துன்மார்க்கரான பாவிகளை இரட்சித்த பின்னரும் எங்ஙனம் நீதியுள்ளவராகவே விளங்குகிறார் என்னும் வியத்தகு தேவ திட்டத்தைப் பவுல் விளக்கிக் கூறினார். மேலும் கிறிஸ்துவின் செயல் எவ்வாறு தேவனுக்கு அதிக மகிமையையும், ஆதாம் பாவத்தினால் இழந்துபோனதைக் காட்டிலும் மனிதனுக்கு அதிக நற்பேறுகளையும் கொண்டு வந்தது என்பதையும் அவர் விளக்கினார். ஒருக்காலும் நியாயப்பிரமாணம் தரக் கூடாத பரிசுத்த வாழ்க்கையை, கிருபையானது எவ்வாறு உண்டுபண்ணுகிறது என்பதையும் அவர் கூறினார். தேவனுடைய முன்னறிவு தொடங்கி இறுதியில் அடைகிற மகிமைப்படுதல் வரையிலான முறிக்க முடியாத சங்கிலி போன்ற அவருடைய நோக்கங்களைப் பவுல் ஆராய்ந்து பார்த்தார். தொடர்ந்து தேவனுடைய இறையாண்மைத் தெரிந்தெடுப்பையும் அதனுடன் தொடர்புடைய மனிதனுடைய பொறுப்பையும் குறித்த கோட்பாட்டை வகைப்படுத்தி விளக்கினார். இஸ்ரவேல் மற்றும் புறவின நாடுகளுடன் காலப்போக்கு பாட்டின் அடிப்படையில் தேவன் கொண்டுள்ள ஈடுபாடு, நீதியும் இணக்கமும் உடையதாக இருக்கிறது என்பதை அவர் கண்டறிந்தார். இவை யாவற்றையும் விளக்கிக் கூறியவரின் உள்ளத்தில் புகழ்ச்சியும் ஆராதனையும் நிறைந்து பாடலாகப் பொங்கி எழும் நிகழ்ச்சியைக் காட்டிலும் வேறெதுவும் பொருத்தமாக இருக்காது.

**ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது!**

தேவனுடைய **ஐசுவரியம்!** அவர் இரக்கத்தில், அன்பில், கிருபையில், உண்மையில், வல்லமையில், தயவில், ஐசுவரியம் நிறைந்தவராய் இருக்கிறார்.

தேவனுடைய **ஞானம்!** அவருடைய ஞானம் எல்லைக்குட்படாதது, ஆராய்ந்து முடியாதது, ஒப்பிடக்கூடாதது, வெல்ல இயலாதது.

தேவனுடைய **அறிவு!** "தேவன் சர்வஞானி ஆவார். அவர் எல்லாவற்றையும் அறிந்தவர்; அறிவுக்குப் பொருத்தமானவை யாவற்றையும், உண்மையானவை யாவற்றையும், நிகழ்ச்சிகள் யாவற்றையும், படைப்புகள் யாவற்றையும், கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் யாவற்றையும் அவர் அறிவார்" என்று திருவாளர் ஆர்தர் W. பிங் எழுதியுள்ளார்.[45]

அவருடைய வழிகள் **ஆராயப்படாதவைகள்**! சாவுக்குட்பட்ட மனிதனால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு அவை ஆழமானவை. படைப்பு, வரலாறு, மீட்பு, இறையருள் ஆகிய வற்றை திட்டமிட்டுச் செயல்படுத்தியிருக்கிற வழிகள் நம்முடைய குறைந்த அறிவிற்கு அப்பாற்பட்டவை.

**11:34** கர்த்தர் எந்த அளவிற்கு வெளிப்படுத்த எண்ணம் கொண்டிருக்கிறாரோ, அந்த அளவிற்கும் மேலாக படைக்கப்பட்ட ஏதொன்றும் **கர்த்தருடைய சிந்தையை அறிய** முடியாது. ஆனாலும், நாம் காண்கிறது கண்ணாடியில் பார்க்கிறது போலத் தெளிவற்றே காணப்படும் (1 கொரி. 13:12). தேவனுக்கு ஆலோசனை சொல்லுவதற்கு எவனுக்கும் அருகதையில்லை. நம்முடைய ஆலோசனை அவருக்குத் தேவையில்லை. அதனால் அவருக்கு எவ்விதப் பயனுமில்லை (ஏசா. 40:13 -ஐக் காண்க).

**11:35** தேவன் எவருக்கும் கடன்பட்டவர் அல்லர் (யோபு 41:11 -ஐக் காண்க). திரும்பச் செலுத்த வேண்டிய நிலைமைக்கு நித்தியமான வரை உட்படுத்தும்படியாக அவருக்கு எந்த அன்பளிப்பை நம்மால் முந்திச் செலுத்த முடியும்?

**11:36** சர்வ வல்லவர் எல்லாம் நிறைந்தவராயிருக்கிறார். நன்மையானவை எல்லாவற்றிற்கும் அவர் ஆதாரமானவர். அவரே இப்பிரபஞ்சத்தின் தேவைகளைச் சந்தித்து, யாவற்றையும் தாங்கி நடத்துகிறவர். படைக்கப்பட்டவை யாவும் அவருக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அவருக்கு **மகிமை** உண்டாகும்படி யாவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே நடக்கக்கடவது! **அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக.** ஆமென்.

## 3. கடமை ஆற்றுதல்: நற்செய்தியை வாழ்ந்து காட்டுதல் [அதி. 12-16]

"*கிருபையினால் நீதிமான்களாக்கப்பட்ட வர்கள் தங்களுடைய அனுதின வாழ்க்கை யில் அதனை எங்ஙனம் பிரதிபலித்துக் காட்ட வேண்டும்?*" என்னும் கேள்விக்கான விடையை இம்மடலின் எஞ்சிய பகுதி தருகின்றது. பிற விசுவாசிகளினிடத்தில், நாம் வாழ்கின்ற சமுதாயத்தில், நம்முடைய எதிரிகளினிடத்தில், அரசினிடத்தில், மற்றும் வலிமையற்ற விசுவாசி களினிடத்தில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் எவை என்பதைப் பவுல் விளக்குகிறார்.

### அ. தனிநபர் ஒப்புவித்தல் [12:1,2]

12:1 முதல் பதினோரு அதிகாரங்களில் **தேவ னுடைய இரக்கங்களைக்** குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கருத்தோடும் பற்றோடும் ஆராய்ந்து பார்க்குங்கால், நம்மு டைய **சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்ற** முடிவுக்கே அது நம்மை வழி நடத்துகிறது. நம்முடைய சரீரங்கள் என்று சொல்லுமிடத்து அது நம்முடைய உறுப்புகள் அனைத்தையும், மற்றும் அதன் விரிவாக்கமாக, நமது வாழ்க்கை முழுவதையும் குறிக்கிறது.

முற்றிலுமாக ஒப்புவித்தல் **புத்தியுள்ள ஆரா தனையாகும்**. தேவனுடைய குமாரன் எனக்காக தமது உயிரைக் கொடுத்தார் எனில், குறைந்தது அவருக்காகவே நான் வாழ வேண்டும் என்பதே **புத்தியுள்ள ஆராதனை** என்பதன் பொருளாகும். "இயேசு கிறிஸ்துவே தேவன் என்றால், மற்றும் எனக்காக அவர் மரித்தார் என்றால், நான் அவருக் காகச் செலுத்தக் கூடிய தியாகம் எதுவும் பெரி தானது அன்று" என்று பிரிட்டிஷ் மாவீரர் C. T. ஸ்டட் கூறினார். இதே கருத்தினை ஐசக் வாட்ஸ் என்பாரின் சிறப்புமிகு பாடல் வலியுறுத்துகிறது. "வியக்கத்தக்கதும் தெய்வீகமானதுமான அன்பு எனது இதயத்தையும், வாழ்வையும், எனதுடைமை யாவற்றையும் உரிமையாய்க் கோருகின்றது."[46]

**புத்தியுள்ள ஆராதனை** என்னும் சொற் றொடர் "ஏற்புடைய பலி" என்றும் மொழிபெயர்க் கப்படும். விசுவாசிகளும் ஆசாரியர்களுமாகிய நாம் தேவனிடத்தில் அடிக்கப்பட்ட விலங்குகளின் சடலங்களுடன் வருவதில்லை. மாறாக, ஒப்புவிக் கப்பட்ட வாழ்க்கை என்னும் ஆவிக்குரிய பலியோடு நாம் அவரிடத்தில் வருகிறோம். மேலும் அவருக் கென்று நாம் ஊழியம் செய்கிறவர்களாக நம்மைத் தருகிறோம் (ரோமர் 15:15). புகழ்ச்சியை ஏறெடுக் கிறோம் (எபி. 13:15); மற்றும் நமது உடைமை களைச் செலுத்துகிறோம் (எபி. 13:16).

12:2 இரண்டாவதாக, **நாம் இந்தப் பிரபஞ்சத் திற்கு ஒத்த வேஷந்தரியாமல்** இருக்க வேண்டு மென்று பவுல் வற்புறுத்துகிறார். "உங்களைச் சூழ இருக்கும் உலகம் உங்களை இறுக்கி அதனு டைய அச்சில் வார்க்க இடங்கொடுக்காதீர்கள்" என்று இதனைத் திரு. பிலிப்ஸ் பொழிப்புரையாக வழங்கியுள்ளார். நாம் இறையரசிற்குள்ளாக நுழை யும்போது நம்முடைய சொந்த சிந்தனைகள், வாழ்க்கை முறைகள் யாவற்றையும் விட்டொ ழிக்க வேண்டும்.

தேவனின்றி மனமகிழ்ச்சியாக இருக்கும்படி மனிதன் தனக்கென்று ஏற்படுத்திக் கொண்ட சமுதாயம் அல்லது அமைப்பையே இங்கு **பிரபஞ் சம்** என்னும் சொல் குறிக்கிறது. (எழுத்தின்படி அச்சொல் காலம் என்று பொருள்படும்.) தேவனுக்கு எதிரான பகைமை உணர்ச்சி கொண்ட ஓர் அரசே இந்த அமைப்பாகும். இந்தப் பிரபஞ்சத்தின் தேவ னும் அதிபதியுமாகச் சாத்தான் விளங்குகிறான் (2 கொரி. 4:4; யோவான் 12:31; 14:30; 16:11). மனந் திரும்பாத மனிதர் யாவரும் அவனுடைய குடிமக் கள்ஆவர். மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவற்றின் மூலமாக மனிதர்களைக் கவர்ந்து தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்துக்கொள்ள அவன் முயற்சி செய்கிறான் (1 யோவான் 2:16). இவ்வுலகம் தனக் குச் சொந்தமானபடி அரசியல், கலை, இசை, சமயம், களியாட்டுகள், சிந்தனைமுறைகள், வாழ்க்கை முறைகள் ஆகியவற்றைக் கொண்டி ருக்கிறது. அதனுடைய நாகரிகத்திற்கும் பழக்க வழக்கத்திற்கும் ஏற்ப ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டுமென்று அது எதிர்பார்க்கிறது. இவ்வுலகிற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள் ளாத கிறிஸ்துவையும் அவரைப் பின்பற்று வோரையும் இவ்வுலகம் வெறுக்கிறது.

**இப்பிரபஞ்சத்திலிருந்து** நம்மை விடுவிக்கும் படி கிறிஸ்து மரணமடைந்தார். இந்த உலகம் நமக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது. நாம் இந்த உலகத்திற்குச் சிலுவையில் அறை யுண்டிருக்கிறோம். விசுவாசிகள் இந்த உலகத்தில் அன்புகூருகிறவர்களாயிருப்பார்கள் என்றால் அது கர்த்தருக்கு முற்றிலும் உண்மையற்ற நிலை யாகவே இருக்கும். உலகத்தைச் சிநேகிக்கிற வன் தேவனுக்குப் பகைஞனாயிருக்கிறான்.

கிறிஸ்து உலகத்தாரல்லாததுபோல விசுவாசிகளும் உலகத்தாரல்லர். ஆயினும், இந்த உலகம் பொல்லாங்கினால் நிறைந்துள்ளது எனவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் பற்றுறுதி கொள்கிறவர்கள் மட்டுமே இரட்சிக்கப்படுவார்கள் எனவும் சான்று பகரும்படியாக அவர்கள் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். நாம் இவ்வுலகினின்று பிரிந்து வாழ்கிறவர்களாக இருப்பது மட்டுமின்றி நம்முடைய **மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடையவும்** வேண்டும். அதாவது, வேதம் வெளிப்படுத்தியிருக்கிற வண்ணமாக, தேவன் சிந்திக்கிறபடியே நாமும் சிந்திக்க வேண்டும். அவ்வாறு செய்யுங்கால், நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய நேரடியான வழிநடத்துதலை நம்மால் அனுபவிக்க முடியும். அவருடைய **சித்தம்** விருப்பமற்றதும் கடினமுமாயிராமல் **நன்மையும் பிரியமும் பரிபூரணமுமாயிருக்குமென்று** நாம் கண்டறிவோம்.

தேவனுடைய சித்தத்தை அறிவதற்கு மூன்று முக்கியமான வழிமுறைகள் உள்ளன என்பதை இங்கு காண்கிறோம். *முதலாவது* ஒப்புக்கொடுக்கப்பட்ட சரீரம், *இரண்டாவது* பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை, *மூன்றாவது* மறுரூபமாகும் மனம்.

### ஆ. ஆவிக்குரிய வரங்களினால் கடமை ஆற்றுதல் [12:3-8]

**12:3** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் என்னும் முறையில் பவுலுக்கு **அருளப்பட்ட கிருபையினாலே** அவர் பேசுகிறார். நேர்மையானதும் கபடானதுமான பல்வேறு வகையான நினைவுகளைக் குறித்து அவர் இங்கு விளக்கமளிக்கப் போகிறார்.

முதலாவதாக, எவனொருவனும் தன்னைக் குறித்து உயர்வு மனப்பான்மை கொள்ளும்படி ஊக்கமளிக்கக்கூடியது ஒன்றும் நற்செய்தியில் இல்லையென்று அவர் கூறுகிறார். நமக்களிக்கப்பட்ட கிருபைகளைத் தாழ்மையுடன் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்துகிறார். நம்முடைய முக்கியத்துவத்தை நாம் ஒருபோதும் கூடுதலாகக் கருதலாகாது. மற்றவர்கள் மீது நாம் பொறாமையும் கொள்ளலாகாது. மாறாக, நாம் ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள் என்றும், கர்த்தருக்கென்று இன்றியமையாத பணியினை ஆற்றக் கடமைப்பட்டவராக இருக்கிறோம் என்றும் நாம் உணரவேண்டும். சபையாகிய சரீரத்தில் தேவன் நமக்குப் பகிர்ந்து அளித்துள்ள நிலையைக் குறித்து நாம் களிகூர்கிறவர்களாகவும், தேவன் தந்தருளுகிற வல்லமையின்படி நமது வரங்களைப் பயன்படுத்துகிறவர்களாகவும் விளங்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.

**12:4** மனித **சரீரத்தில் அநேக அவயவங்கள்** இருக்கின்றன. இருந்தபோதிலும் ஒவ்வொரு அவயவத்திற்கும் செயல்படுத்த வேண்டிய தனித்தன்மை வாய்ந்த வேலை உண்டு. ஒவ்வொரு அவயவமும் சரியானபடி வேலை செய்வதைப் பொருத்தே சரீரத்தின் நலமும் செழிப்பும் விளங்கும்.

**12:5** இவ்வாறுதான் கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது. அங்கே ஒருமைப்பாடு விளங்குகிறது **(ஒரே சரீரம்)**, பல்வேறு வகையான வேற்றுமைகள் காணப்படுகின்றன **(அநேகர்)**, ஒருவரையொருவர் சார்ந்துகொள்ளும் தன்மை காணப்படுகிறது **(ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்)**. தன்னலம் கருதியோ, காட்சிப் பொருளாய் வெளிப்படுத்தும் பொருட்டோ, நாம் பெற்றிருக்கிற வரத்தைப் பயன்படுத்தாமல் **சரீரத்தின்** நன்மையைக் கருதியே அவற்றைப் பயன்படுத்தவேண்டும். எந்த வரமும் தன்னில்தானே நிறைவுடையதுமில்லை, தேவையற்றதுமில்லை. இவையெல்லாவற்றையும் நாம் உணருவோமென்றால், தெளிந்த எண்ணமுள்ளவர்களாயிருக்கிறோம் என்பது பொருளாகும் (12:3).

**12:6** சில வரங்களின் பயன்பாடுகளைக் குறித்து பவுல் இப்பொழுது அறிவுரை வழங்குகிறார். இங்கு சொல்லப்பட்டுள்ள பட்டியலில் எல்லா வரங்களும் இடம்பெறவில்லை. சிந்தனையைத் தூண்டுவதற்காக இவை கொடுக்கப்பட்டுள்ளனவேயொழிய, முழுப்பட்டியலும் இங்கு தரப்படவில்லை.

**நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே** நம்முடைய **வரங்கள்** வெவ்வேறாக இருக்கின்றன. வெவ்வேறு வகையான **வரங்களை** வெவ்வேறு மனிதர்களுக்கு தேவனுடைய கிருபையானது பகுத்து அளித்துள்ளது. நாம் என்ன **வரத்தை** உடையவர்களாக இருப்பினும், அதனைப் பயன்படுத்துவதற்கு உரிய வலிமையையும் ஆற்றலையும் தேவன் நமக்குத் தந்தருளுகிறார். ஆகவே நல்ல உக்கிராணக்காரர்களாக விளங்கி தேவன் அருளியுள்ள ஆற்றல்களைப் பயன்படுத்துவது நம்முடைய பொறுப்பாகும்.

யாரெல்லாம் தீர்க்கதரிசன வரத்தை உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் யாவரும் தங்களுடைய விசுவாசத்திற்கு ஏற்றதாகத் தீர்க்கதரிசனம் சொல்லக்கடவர்கள். தீர்க்கதரிசியான வன் கர்த்தருடைய சொற்களை அறிவித்து, தேவனுடைய சார்பில் பேசுகிறவனாக இருக்கிறான்.

அவனுடைய பேச்சில் வருமுன் உரைப்பது இருக்கலாம், எனினும் கண்டிப்பாக வருமுன் உரைப்பது அப்பேச்சின் மூலக்கூறாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. "சபையின் தொடக்க காலத்தில் தேவ ஆவியானவருடைய நேரடியான ஏவுதலினாலே மனிதர்கள் பேசினார்கள். அதில் வேறு எந்தக் குறுக்கீடும் இல்லை. கோட்பாட்டு உண்மைகள், உடனடியாகச் செய்ய வேண்டிய கடமைகள், எதிர்கால நிகழ்ச்சிகள் போன்றவற்றைப் பற்றிய தெய்வீகச் செய்தியை அவர்கள் அறிவித்தார்கள்" என்று திருவாளர் ஹாட்ஜ் எழுதியுள்ளார்.[47] புதிய ஏற்பாட்டில் அவர்களுடைய இறைப்பேருரைகள் நமக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. பரிசுத்தவான்களுக்கு விசுவாசப்பிரமாணமானது ஒருமுறை ஒப்புவிக்கப் பட்டுவிட்டபடியால் இன்றைய நாட்களில், ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள நிறைவான கிறிஸ்தவக் கோட்பாட்டு உண்மைகளோடு கூட்டிச் சேர்க்கத்தக்க வகையில், ஆவியின் ஏவுதலாகத் தீர்க்கதரிசனத்தின் வாயிலாகப் புதிய கோட்பாடு ஒன்றும் தரப்படுவது இல்லை (யூதா 3 -ஐக் காண்க). ஆகவே இன்றைய நாட்களில் தீர்க்கதரிசியானவன், திருமறையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளபடி, தேவனுடைய சித்தத்தை எடுத்துரைக்கிறவனாகவே இருக்கிறான். இதைக் குறித்து ஸ்ட்ராங் என்பார் கூறுவதாது:

> தற்கால மெய்த்தீர்க்கதரிசனம் யாதெனில், கிறிஸ்துவின் செய்திகளை மீண்டும் வெளியிடுவதேயாகும். திருமறையில் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகளைப் பிரகடனப்படுத்துவதும், விளக்கிக் கூறுவதுமாகவே அது இருக்கின்றது.[48]

நம்மில் தீர்க்கதரிசன வரத்தைப் பெற்றவர்கள் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக் கடவோம். விசுவாசப்பிரமாணம் என்பது "விசுவாசத்திற்குரிய விதிகள் அல்லது ஒழுங்குமுறைகள்" என்று பொருள்படும். வேதத்தில் காணப்பட்டுள்ளபடி கிறிஸ்தவ விசுவாசத்தின் உபதேசங்களுக்கேற்ப தீர்க்கதரிசனம் போதிக்கப்படவேண்டும் என்பதாம். "நம்முடைய விசுவாசத்தின் பங்கின்படி" என்றும் இதற்குப் பொருள் கூறுவர். அதாவது தேவன் நமக்களித்த விசுவாசத்தின் அளவின்படி என்பதாம். பல வசன மொழிபெயர்ப்பில் "நம்முடைய" என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அச்சொல் மூல மொழியில் இல்லை.[49] (தமிழ் மொழி பெயர்ப்பில் அச்சொல் சேர்க்கப்படவில்லை.)

**12:7 ஊழியம்** என்பது பரந்த பொருளுடைய சொல்லாகும். கர்த்தருக்குப் பணிபுரிவதை இது குறிக்கிறது. குருமார்களின் பதவியையோ, அலுவல்களையோ, சமயச் சடங்குகளையோ இது குறிப்பதில்லை (இன்றைய நாட்களில் அவ்வாறான பொருள் கொடுக்கப்படுகிறது). **ஊழிய** வரங்கள் பெற்றவன்அடிமையின் இதயம் பெற்றவனாயிருக்கிறான். பணிபுரிவதற்கான சந்தர்ப்பத்தைக் கண்டு அவன் அதைப் பற்றிக் கொள்கிறான்.

தேவனுடைய வார்த்தையை விளக்கிக் கூறும் ஆற்றல் படைத்தவன் **போதிக்கிறவன்** ஆவான். கேட்போருடைய இருதயத்தில் அதனை அவன் விளங்கச் செய்கிறான். நம்முடைய வரம் எதுவாயிருப்பினும், நாம் அதற்கு நம்மை முழு இருதயத்தோடு ஒப்புவிக்க வேண்டும்.

**12:8** பரிசுத்தவான்களின் உள்ளங்களை எழுச்சியடையச் செய்து, பொல்லாங்கின் ஒவ்வொரு தோற்றத்தையும் விட்டு விலகுவதற்கு ஏதுவாகவும், பரிசுத்தத்திலும் ஊழியத்திலும் கிறிஸ்துவுக்காகப் புதிய சாதனைகளைப் படைப்பதற்கு ஏதுவாகவும் வற்புறுத்துவதே **புத்தி சொல்லுதல்** என்னும் வரமாகும்.

**பகிர்ந்து கொடுத்தல்** தெய்வீக அருட்கொடையாகும். பிறருடைய தேவைகளை அறிந்து உதவிசெய்வதற்கான மனவிருப்பத்தையும் நிறைவேற்றும் இயல்பையும் ஒருவர் கொண்டிருத்தலே இந்த வரமாகும். அதனை அவன் **வஞ்சனையில்லாமல்** செய்யக்கடவன். (முதலாளியான வன்) *தலைமைத்துவம்* ஓர் உள்ளூர் சபையின் மூப்பர்களோடு தொடர்புடையது என்பதை ஓரளவு உறுதியாய்ச் சொல்லலாம் (உதவிக்காரர்களையும் ஒருவேளை இது குறிக்கலாம்). ஒரு மூப்பர் உடன்மேய்ப்பராய் இருக்கிறார். அவர் மந்தைக்கு முன்மாதிரியாக நின்று அவர்களை **ஜாக்கிரதையோடு** வழிநடத்துகிறார்.

துயரத்தில் மூழ்கியிருப்போருக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் உதவிசெய்யக்கூடிய ஆற்றலும் திறமையும் உடைய நிலையே **இரக்கஞ்செய்தல்** என்னும் வரமாகும். இவ்வரமுடையோர் இதனை உற்சாகத்துடனே செய்யக்கடவர். உண்மையில் நாம் அனைவருமே உற்சாகத்தோடு இரக்கஞ்செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு கிறிஸ்தவப் பெண்மணி கூறிய நிகழ்ச்சியைக் காண்போம்: எனது தாயார் வயது முதிர்ச்சி அடைந்தபோது அவருக்கு உதவி தேவைப்பட்

டது. என் கணவரும் நானும் என் தாயாரை எங்க ளுடன் வந்து தங்குமாறு அழைத்துச் சென்றோம். அவருடைய வசதிக்காக என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்தேன். அவருக்காகச் சமையல் செய்தேன், துணிகளைத் துவைத்துக் கொடுத்தேன். வெளியே வாகனத்தில் அழைத் துச் சென்றேன். அவருடைய பொதுவான தேவை அனைத்தையும் செய்தேன். வெளியரங்கமாக இவற்றை நான் செய்தபோதும் உள்ளத்தில் நான் மகிழ்ச்சியற்றவளாகவே இருந்தேன். வழக்கமான அலுவல்கள் தடைபடுகின்றனவே என்னும் மனக் கசப்பு என்னையறியாமலேயே என் உள்ளத்தில் இருந்தது. "என்னைப் பார்த்து நீ ஏன் சிரிப்ப தில்லை, நீ எப்பொழுதும் சிரிக்கமாட்டாயா?" என்று என் தாயார் சிலவேளைகளில் கூறு வதுண்டு. நான் இரக்கம் பாராட்டினேன், ஆனா லும் அதனை உற்சாகத்துடனே செய்யவில்லை.

### இ. சமுதாயத் தொடர்புடைய கடமைகள் (12:9-21)

**12:9** அடுத்ததாக, மற்ற கிறிஸ்தவர்களோடும் மனந்திரும்பாத மக்களோடும் ஈடுபடுகிற செயல் களில் ஒவ்வொரு விசுவாசியும் தன்னில் வளர்த் துக்கொள்ள வேண்டிய சில குணநலன்களை பவுல் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

**அன்பானது மாயமற்றதாயிருக்க** வேண்டும். அது முகமூடி அணிந்த ஒன்றாக இருக்கலாகாது. அது மெய்யானதாக, மனமார்ந்ததாக, இயற்கை யானதாக இருக்கவேண்டும்.

எல்லாவிதத் **தீமைகளையும் வெறுத்தவர் களாவும்**, ஒவ்வொரு **நன்மையையும் பற்றிக் கொண்டவர்களாகவும்** நாம் இருக்க வேண்டும். எல்லாவிதப் போலியான நடத்தைகளும், அன்பற்ற தன்மையும், பகைமையும், வெறுப்பும் தீமை என்றே இவ்வசனத்தின் பின்னணி இயம்புகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அன்பின் ஒவ்வொரு வெளிப்பாடும் இதற்கு எதிர்மறையான நன்மை யாக விளங்குகிறது.

**12:10** விசுவாசக் குடும்பத்திற்குள்ளாக இருக் கிறவர்களிடத்தில் நாம் தொடர்புகொள்ளும் வேளை யில் அன்பை மென்மையான நேசத்தோடு வெளிப் படுத்திக் காட்டவேண்டும். அவர்களிடம் நாம் அக்கறையற்ற முறையிலோ சர்வ சாதாரண மாகவோ நடந்துகொள்ளக்கூடாது.

நம்மைக் காட்டிலும் பிறரைக் கனப்படுத்தும் படியாக நாம் நடந்துகொள்ள வேண்டும். புகழ் பெற்ற இறையியல் அறிஞர் சிலருடன், கிறிஸ்து வின் மனமகிழ்ச்சிக்குரிய ஊழியர் ஒருவர் மேடைக் குச் செல்ல அதற்கு அருகில் இருந்த அறையில் காத்திருந்தார். சிலர் இவருக்கு முன்னதாகவே மேடைக்குச் சென்றுவிட்டனர். இவருடைய முறை வந்தபோது அரங்கில் இருந்தோர் இடிமுழக்கம் போல கரவொலி எழுப்பினர். அந்த ஊழியரோ உட னடியாக ஓரமாகச் சென்று மற்றவர்கள் பாராட் டைப் பெறும்படியாக அவரும் சேர்ந்து கரவொலி எழுப்பினார். பிறர் அந்தப் பாரட்டிற்கு உரியவர்கள் என்று அவர் மனமார எண்ணினார்.

**12:11** "ஆர்வத்தில் ஊக்கம் குன்றிட வேண் டாம், ஆவியின் ஒளிச்சுடர் செந்தழல் வீசட்டும், அயராது கர்த்தருக்குப் பணிசெய்யுங்கள்" என்று அழகுற இவ்வசனத்தை மொழிபெயர்த்துள்ளார் திருவாளர் மோ.்பட். எரேமியாவின் சொற்கள் நமக்கு நினைவிற்கு வருகின்றன. "கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப் பட்டவன்" (எரே. 48:10).

உதிர்ந்து விழுகிற இலையும்
சொட்டும் கண்ணீர்த் துளியும்
சடுதியில் மறைந்து போகும்
மனிதனின் வாழ்வும் அதுவே!

வாழும் நாட்கள் கொஞ்சம்
உலகில் பாவம் மிஞ்சும்
காலம் வீணாய்ப் போகுதே
கடமை ஆற்றிட எழுந்துவா!

**12:12** நம்முடைய தற்காலச் சூழ்நிலைகள் எதுவாயிருப்பினும், நாம் பெற்றிருக்கிற **நம்பிக் கையிலே** களிகூர முடியும், களிகூரவேண்டும். இரட்சகரின் வருகை, நமது சரீரங்களின் மீட்பு, நிலைபேறான மகிமை இவையே நம்முடைய நம்பிக்கை. **உபத்திரவத்திலே பொறுமையா யிருக்க** வேண்டுமென்று நமக்கு அறிவுரை வழங் கப்பட்டிருக்கிறது. அதாவது மன உரத்துடன் அதனை நாம் தாங்கிக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் வெற்றிகொள்கிற நீடித்த பொறுமையானது, அப்படிப்பட்ட கடுந்துயரத் தைப் பேரின்பமாக மாற்றும். நாம் **ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருக்க** வேண்டும். **ஜெபத் தின்** வாயிலாகவே வெற்றிகள் பெறப்படுகின்றன. நம்முடைய வாழ்க்கையில் வலிமையைக் கொண்டுவருவதும், இருதயத்திற்கு சமாதானத் தைத் தருவதும் **ஜெபமே**. சாவுக்கேதுவான மனிதன் எந்த அளவிற்கு சர்வவல்லவருக்கு நெருக்கமாக வரமுடியுமோ அந்த அளவிற்கு நெருக்கமாக நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் திருப்பெயரால் மன்றாடுகின்ற தருணத்தில்

வருகிறோம். ஆகவே நாம் ஜெபத்தை அசட்டை செய்வோமெனில், நமக்கே பெரும் தீங்கு விளை விக்கிறவர்களாக இருப்போம்.

**12:13** தேவையுடைய **பரிசுத்தவான்கள்** எங்கும் இருக்கின்றார்கள் - வேலையில்லாதவர் கள், மருத்துவச் செலவினால் பணப்பற்றாக்குறை உள்ளவர்கள், மறக்கப்பட்ட பிரசங்கிகள், அறி யப்படாத இடங்களில் வசிக்கும் ஊழியர்கள், வரு மானம் இல்லாத வயது முதிர்ந்தோர். இப்படிப் பட்டவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தலே மெய் யான சரீரமாகிய சபை வாழ்க்கையின் பொருள் ஆகும்.

"தேவையுள்ளவர்களுக்கு ஒருவேளை உணவோ, ஒரு படுக்கையோ தருவதற்கு ஒரு போதும் தயங்க வேண்டாம்" (JBP). **உபசரிப்பு** என்பது ஒரு மறந்துபோன கலையாக இருக்கிறது. வீடுகள் சிறியதாயிருக்கின்றன என்று பலர் கூறி, வருகை புரிகின்ற கிறிஸ்தவர்களை வரவேற் காமல் இருக்கின்றார்கள். வேலை மிகுதி, வசதிக் குறைவு ஆகியவற்றை எதிர்கொள்ள நாம் ஒரு வேளை தயங்குகிறவர்களாக இருக்கிறோம். ஆனால், இறைமக்களுக்கு விருந்தோம்பல் புரி வோமென்றால், அது கர்த்தருக்கே விருந்தோம் பல் புரிவதற்கு ஒப்பாகும் என்பதை நாம் மறந்து விடுகிறோம். கர்த்தர் தங்குவதற்கு விரும்பிய பெத்தானியாவின் இல்லத்தைப் போன்று நமது இல்லங்கள் திகழ வேண்டும்.

**12:14** நம்மைத் துன்பப்படுத்துபவர்களுக்கு எதிராக நாமும் துன்பப்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்யாமல், அவர்களிடத்தில் தயவு பாராட்டும்படியாக நாம் அழைக்கப்பட்டிருக் கிறோம். இரக்கமற்றவர்களிடத்திலும், தீங் கிழைப்போரிடத்திலும் அன்பு பாராட்டுவதற்கு தெய்வீக வாழ்க்கை தேவை. சபித்தலும், பழி வாங்குதலுமே இயற்கையாக மனிதன் செய்யக் கூடியவை.

**12:15** பிறர் களிகூரும்போது பொறாமைப்படு வதும், பிறர் துக்கமுற்ற வேளையில் அதனைக் காணாதது போலப் புறக்கணிப்பதும் நம்முடைய இயல்பாகும். ஆனால் மற்றவர்களுடைய இடத் தில் நாம் இருப்பதுபோல கற்பனை செய்து கொண்டு அவர்களுடைய மகிழ்ச்சியில் நாமும் மகிழ்வதும், அவர்களுடைய துக்கத்தில் நாமும் துன்புறுவதும் தேவனுடைய வழியாகும்.

**12:16 ஒருவரோடொருவர் ஏக சிந்தையுள்ள வர்களாயிருங்கள்** என்று கூறுமிடத்து, அடிப் படையில் முக்கியமற்றவற்றில் ஒருமனப்பான்மை உடையவர்களாக இருக்க வேண்டுமென்பது பொருளன்று. ஒத்த கருத்து உடையவர்களாக இருப்பதைக்காட்டிலும் இணக்கமுள்ள உற வோடு திகழ்வது மேலானது ஆகும்.

தன்னையே உயர்வாக எண்ணிக்கொள்ளக் கூடிய தன்மை நம்மிடத்தில் சிறிதளவும் இராதபடி அதனை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். செல்வந்தர்களிடத்திலும் உயர்பதவியில் இருப்ப வர்களிடத்திலும் எவ்வாறு நடந்துகொள்வோமோ அதுபோலவே **தாழ்மையான** மனிதர்களிடத் திலும் மனமுவந்து சென்று பழக வேண்டும். புகழ் பெற்ற கிறிஸ்தவர் ஓரிடத்திற்கு வருகைபுரிந்த போது, அவர் உரையாற்ற வேண்டிய சபை அங்கத்தினர் பலர் அவரை வரவேற்கக் குழுமி யிருந்தனர். சுகபோக வாகனத்தில் வந்திருந்த ஒருவர், ஆடம்பர விடுதி ஒன்றில் தங்குவதற்கு அவரை அழைத்தார். "இங்கே வருகிற பிரசங்கி களை யார் கவனித்துக்கொள்வார்" என்று வந்தவர் வினவினார். முதிய தம்பதிகளை அவரி டம் சிலர் காட்டினார்கள். அவர்களுடைய எளிமை யான வீடு அருகில் இருந்தது. "அங்குதான் நான் தங்க விரும்புகிறேன்" என்று அவர் கூறினார்.

ஒரு விசுவாசியானவன் தன்னையே **புத்தி மான் என்று எண்ணக்கூடாது** என்று அப்போஸ் தலன் மீண்டும் எச்சரிக்கிறார். தேவனிடத்தி லிருந்து பெற்றுக் கொள்ளாதது ஏதொன்றும் நம் மிடத்தில் இல்லை என்ற அறிவு, தற்பெருமை யிலிருந்து நம்மைக் காக்கும்.

**12:17** தீமைக்கு தீமை செய்தல், உலகத்தின் பொதுவான வழக்கமாக இருக்கிறது. பதிலடி கொடுத்தல், பழிவாங்குதல், அவனுடைய தகுதிக்கு ஏற்றபடி கொடுத்தல் என்றெல்லாம் மனிதர்கள் பேசுகின்றார்கள். ஆனால் மீட்கப்பட்டோருடைய வாழக்கையில், பழிவாங்குவதால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு இடமில்லை. அதற்கு மாறாக, வாழ்க்கையில் எல்லாவிதச் சூழ்நிலையிலும், வையப்படும்போதும், தீங்கிழைக்கப்படும்போதும் நாம் நேர்மையாய் நடந்துகொள்ள வேண்டும். *நாடுங்கள்* என்பது *சிந்தித்துச் செயலாற்றுங் கள்* அல்லது *செய்வதற்குக் கவனமுள்ளவர் களாயிருங்கள்* என்று பொருள்படும்.

**12:18** தேவையற்றபடி எரிச்சல் உண்டுபண்ணு கிறவர்களாகவோ, சச்சரவு பண்ணுகிறவர்களா கவோ கிறிஸ்தவர்கள் இருக்கக்கூடாது. சண்டை யிடுவதாலோ, கோபமடைவதாலோ தேவனு டைய நீதியை நிலைநிறுத்த முடியாது. நாம் சமா தானத்தில் பிரியமாயிருக்க வேண்டும். பிறரோடு

சமாதானத்தை உண்டு பண்ணவேண்டும். நாமும் சமாதானமாய் இருக்க வேண்டும். மற்றவர்கள் மனது புண்படும்படி நாம் நடந்துகொண்டாலோ, நமது மனம் புண்படும்படி மற்றவர்கள் நடந்து கொண்டாலோ, சமாதானம் உண்டாகும்படி அய ராது முயற்சி செய்யவேண்டும்.

**12:19** நமக்கு எதிராக தவறிழைக்கப்படும் போது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தை நாம் எதிர்த்து நிற்க வேண்டும். **கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்** என்னும் சொற்றொடர் உங்க ளுக்காக தேவன் அதைக் கவனித்துக்கொள்ள விட்டுவிடுங்கள் என்றோ, பணிவுள்ள ஆவியோடு துன்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இடம் கொடுங்கள் என்றோ பொருள்படும். இந்த வசனத் தின் ஏனைய பகுதி முதலாவது பொருளே சரியா னது என்று கருதச் செய்கிறது. அதாவது தேவனு டைய கோபாக்கினை அதைப் பார்த்துக் கொள்ளும் படி நாம் அதனை விட்டுவிடுதலாகும். **பழிவாங்கு தல்** தேவனுடைய தனியுரிமையாகும். அவருடைய உரிமையில் நாம் தலையிடக் கூடாது. அவரே சரியானபடி சரியான நேரத்தில் பதிற்செய்வார். இதைக்குறித்து லென்ஸ்கி என்பார் எழுதுகிறார்.

> தவறு செய்கிறவர்களிடத்தில் நியாயத்தை நிலைநிறுத்துவதற்கென வெகு காலத்திற்கு முன்னமே தேவன் எல்லாவற்றையும் முடிவு செய்து விட்டார். அவர்களில் ஒருவரும் தப்பிக்க முடியாது. ஒவ்வொரு வழக்கிலும் நியாயம் விளங்கும். அந்த நியாயம் நிறைவாய்ச் செய் யப்படும். அதில் நம்மில் யாரேனும் தலையிடு வோமென்றால் அது நமது அகந்தையின் உயர்மட்டநிலை என்றே கருதப்படும்.[50]

**12:20** எதிர்த்துச் செயல்புரியாமல் அடக்கத் துடன் இருப்பதற்கும் அப்பாற்சென்று கிறிஸ்தவம் சுறுசுறுப்பாக ஈகை பாராட்டும். அது எதிரிகளை வன்முறையால் அழிப்பதில்லை. மாறாக, அன்பி னாலே அவர்களை மனமாற்றம் அடையச் செய் கிறது. **சத்துரு பசியாயிருக்கும்**போது அது அவ னுக்கு உணவளிக்கிறது, அவனுடைய தாகத்தை நிவர்த்தி செய்கிறது. இவ்வாறாக **அக்கினித் தழலை அவன் தலையின்மேல்** குவிக்கிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள மரபுமொழியைச் சரியாக நாம் புரிந்துகொள்ளாத காரணத்தினால் **அக்கினித் தழலைக் குவிக்கும்** செய்கை கொடு ரமாகத் தோன்றுகிறது. அக்கினித்தழலை ஒருவனு டைய தலையின் மீது குவிப்பதாவது, மரபிற்கு அப் பாற்பட்டு வியக்கத்தக்க வகையில் விருந்தோம் பல் புரிந்து அவனை வெட்கப்படுத்துவதாகும்.

**12:21** இந்த வசனத்தின் முந்தின பகுதிக்கு, திருவாளர் டார்பி இவ்வாறு விளக்கமளித்துள் ளார்: "என்னுடைய கசப்பான மனநிலை, உன்னை கசப்பான மனநிலை உள்ளவனாக ஆக்குமென் றால், நீ தீமையினாலே வெல்லப்பட்டுவிட் டாய்."[51]

"நான் ஒரு மனிதன்மேல் வெறுப்படைந்து, என் வாழ்க்கை பாழாகும்படி அவன் செய்வதற்கு இடங்கொடுக்க மாட்டேன்" என்று மாபெரும் அறிவியல் அறிஞர் ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர் கூறியுள்ளார்.[52] விசுவாசியாகிய அவர் தீமை யினால் வெல்லப்படுவதற்கு இடம் கொடுக்க வில்லை.

**தீமையை நன்மையினாலே வெல்லு.** தவ றென்று கருதப்படுகிறவற்றைத் தடைசெய்வ தோடு, உடன்பாடானவற்றைச் செய்யும்படி புத்தி புகட்டுவதே கிறிஸ்தவப் போதனையின் குண நலனாகும். **தீமையை நன்மையினாலே** அடக்கி யாள முடியும். இந்தப் படைக்கலனை நாம் அவ் வப்போது பயன்படுத்த வேண்டும்.

ஆபிரகாம் லிங்கனிடம் மிகுந்த காழ்ப்புணர்ச்சி யுடன் ஸ்டேன்டன் நடந்து கொண்டார். 'கொரில் லாவைக் காண்பதற்கு ஆப்பிரிக்கா செல்ல வேண்டியதில்லை. உண்மையான கொரில்லா இல்லியனாய்ஸ் மாகாணத்தில் ஸ்ப்ரிங்.பீல்டில் இருக்கிறது' என்று அவர் லிங்கனை வசைபாடி னார். ஆனால் லிங்கனோ அதைப் பொருட்படுத்த வில்லை. பின்னர் ஸ்டேன்டனைப் போர்க்கால அமைச்சராக லிங்கன் நியமித்தார். அவரே அந்தப் பதவிக்குத் தகுதியானவர் என்றும் அவர் மனமார நம்பினார். லிங்கன் கொலை செய்யப் பட்டபோது 'மனிதர்களுக்குள் மாபெரும் தலை வர்' என்று ஸ்டேன்டன் அவரைப் போற்றினார். அன்பு வென்றது![53]

### ஈ. அரசுடன் தொடர்புடைய கடமைகள் (13:1–7)

**13:1** விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டவர்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஆளு கைக்குக் **கீழ்ப்பட்டிருக்கக்** கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். உண்மையில் இந்தக் கடமை யுணர்வு ஒவ்வொரு குடிமகனுக்கும் இருக்க வேண்டும். எனினும் விசுவாசிகளைக் குறித்து அக்கறை கொண்டவராகவே அப்போஸ்தலன் இங்கு பேசுகிறார். பெருவெள்ளஅழிவிற்குப் பின் னர், "மனுஷருடைய இரத்தத்தை எவன் சிந்து கிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" என்று ஆணையிட்டு தேவன் மனித ஆளுகையை ஏற்படுத்தினார். குற்ற

வழக்குகளை விசாரிக்கவும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கவும் தேவையான அதிகாரத்தை அந்த ஆணை மனிதனுக்குத் தந்தது.

ஒவ்வொரு முறையான சமுதாயத்திலும் சில அதிகாரங்கள் உள்ளன. அச்சமுதாயத்தில் உள்ளவர்கள் அந்த அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அங்ஙனம் இல்லையேல், அரசும் ஆளுகையும் அற்ற அராஜகமே அங்கு தலைவிரித்தாடும். அந்நிலையில் மனிதனால் தொடர்ந்து வாழ இயலாது. அரசு இல்லாத நிலையைக் காட்டிலும் எந்தவொரு அரசும் சிறந்ததே. அதன் நிமித்தமே மனித ஆளுகையை தேவன் நிறுவியிருக்கிறார். அவருடைய சித்தமின்றி எந்த அரசும் நிறுவப்படுவதில்லை. ஆளுகை புரிவோரது அனைத்துச் செயல்களையும், தேவன் அங்கிகரிக்கிறார் என்பது இதன் பொருளன்று. கைக் கூலி, காட்டுமிராண்டித்தனம், கொடுங்கோல் ஆட்சி போன்றவற்றை அவர் ஏற்றுக்கொள்வதில்லை. ஆயினும், **உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கின்றன** என்னும் கூற்று உண்மையானதே.

ஒரு குடியாட்சியில் அல்லது ஒரு சட்டபூர்வமான முடியாட்சியில் அல்லது ஒரு சர்வாதிகார ஆட்சியிலும் கூட விசுவாசிகள் வெற்றியுள்ள வாழ்க்கையை வாழமுடியும். எந்த ஒரு ஆட்சியிலும், ஆளுகைபுரிகின்ற மனிதர்களைப் பொருத்தே அதன் மேன்மை விளங்கும். இதன் காரணமாகவே எந்தவொரு அரசும் நிறைவான தாக இல்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மன்னராகக் கொண்ட நிறைவான நன்மை செய்கிற முடியாட்சி ஒன்றே குறைபாடற்ற அரசாகத் திகழும். மனித ஆளுகைக்குக் கீழ்ப்படிதல் என்னும் பொருள் பற்றிய இத்திருமறைப் பகுதியை பவுல் எழுதிய காலத்தில் கொடுங்கோல் மன்னன் நீரோ ஆட்சி புரிந்தான் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். ரோமாபுரியில் பாதி அழிந்து போகத்தக்க தீவிபத்து உண்டானதற்குக் கிறிஸ்தவர்களே காரணம் என்று அவன் குற்றம் சாட்டினான். (அவனுடைய குடிவெறியாட்டின் சமயத்தில், அவனே தீ விபத்து ஏற்படுத்தும்படி கிறிஸ்தவர்களைத் தீக்கொளுத்தி ஒளிதரும் விளக்குகளாகப் பயன்படுத்தினான். சிலரை விலங்குகளின் தோலுக்குள் வைத்துத் தைத்து, அவர்களை மூர்க்கமான நாய்களுக்கு உணவாகப் போடுவித்தான். அவர்களைத் துண்டம் துண்டமாக அவை குதறிப்போட்டன.)

**13:2** இருந்தபோதிலும் அரசிற்குக் கீழ்ப்படியாமல் கிளர்ச்சி செய்வது, தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமல் கிளர்ச்சி செய்வதாகவே கருதப்பட்டது. சட்டப்படியான **அதிகாரத்திற்கு** அவ்வாறு **எதிர்த்து நிற்கிறவர்கள்** தண்டனை அடைகிறார்கள், தண்டனைக்குப் பாத்திரராகவும் இருக்கிறார்கள்.

இதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. ஒரு கிறிஸ்தவனிடத்தில் பாவம் செய்யும்படியாகவோ, அவனது பற்றினைக் கைவிடும்படியாகவோ அரசாங்கம் கட்டளை இடுமாயின், அதற்கு அவன் கீழ்ப்படியக் கூடாது (அப். 5:29). மனிதனுடைய மனச்சாட்சிக்குக் கட்டளையிட எந்த அரசிற்கும் உரிமையில்லை. ஆகவே, தேவனுக்குக் கீழ்ப்படிவதால் மனிதனுடைய கோபத்திற்கு ஆளாகக் கூடிய சந்தர்ப்பங்களை விசுவாசி சந்தித்தே ஆக வேண்டும். அத்தருணங்களில் குறைகூறாமல் தண்டனையை ஏற்க அவன் ஆயத்தமாயிருக்க வேண்டும். சூழ்நிலை எதுவாயிருந்தாலும் அவன் அரசிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவோ, அவ்வரசைக் கவிழ்ப்பதற்கான சதியில் ஈடுபடவோ கூடாது.

**13:3** சரியானதைச் செய்கிறவர்கள் அதிகாரிகளுக்கு அஞ்ச வேண்டியதில்லை என்பதே பொதுவான விதியாகும். சட்டத்தை மீறுகிறவர்களே தண்டனையைக் குறித்து அச்சமடைய வேண்டும். ஆகவே, ஒருவன் அபராதம் செலுத்தாமலும், விசாரிக்கப்படாமலும், சிறைப்பிடிக்கப்படாமலும் தனது வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டுமானால் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்த குடிமகனாக விளங்க வேண்டும். அவ்வாறு வாழ்கிறவன் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவானேயொழிய அவர்களுடைய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகமாட்டான்.

**13:4** குடியரசுத் தலைவராகவோ, ஆளுநராகவோ, மாநகரத் தலைவராகவோ, நீதிபதியாகவோ ஆளுகை செய்கிறவர் இருப்பினும் அவர் **தேவ ஊழியக்காரராகவே** இருக்கிறார். அதாவது அவர் தேவனுடைய வேலைக்காரராகவும் பிரதிநிதியாகவும் விளங்குகிறார். தேவனை அவர் அறியாதவராக இருக்கலாம், ஆனாலும் உத்தியோக பூர்வமாய் அவர் கர்த்தருடைய மனிதனாகவே இருக்கிறார். இதன் காரணமாகவே பொல்லாங்கான அரசனாகிய சவுலை, கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்று மீண்டும் மீண்டும் தாவீது குறிப்பிட்டான் (1 சாமு. 24:6, 10; 26:9,11,16,23). தாவீதின் உயிருக்கு ஊறு விளைவிக்கும்படி சவுல் பலமுறை முயற்சி செய்தபோதும், அரசனுக்கு எதிராகச் செயல்பட தன்

மனிதர்களை அவன் அனுமதிக்கவில்லை. ஏன்? சவுல் அரசனாக இருந்ததால், கர்த்தரால் நியமிக்கப்பட்டவன் என்று கருதியே தாவீது அவ்வாறு நடந்துகொண்டான்.

தேவனுடைய ஊழியக்காரர்கள் என்னும் நிலையில், மக்களுக்கு எது **நன்மை** பயக்குமோ, அதை அவர்கள் நாட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களது பாதுகாப்பு, அமைதி மற்றும் பொதுவான வாழ்க்கை நலம் ஆகியவற்றிற்காக அவர்கள் பாடுபடவேண்டும். எவனொருவன் சட்டத்தை மீறுகிறானோ, அவன் விசாரிக்கப்பட்டு தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டும். அந்த அதிகாரம் அரசிற்கு உண்டு. **பட்டயத்தை விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை** என்னும் சொற்றொடர், தேவன் அரசாங்கத்திற்கு அளித்துள்ள அதிகாரத்தை வலியுறுத்திக் கூறும் வாசகமாயிருக்கிறது. **பட்டயம்** என்னும் சொல் எந்த இடர்ப்பாட்டையும் விளைவிக்காத அதிகாரத்தைக் காட்டும் சின்னம் அன்று. அவ்வாறு கூற நினைத்திருந்தால் செங்கோல் என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கலாம். ஆட்சி புரிவோரின் உச்ச அளவிலான அதிகாரத்தைப் **பட்டயம்** குறிப்பதாகத் தோன்றுகிறது. அதாவது மரண தண்டனையைச் செலுத்தக்கூடிய அதிகாரத்தை அது சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, மரண தண்டனையானது பழைய ஏற்பாட்டுக் காலத்திற்கே உரியது, புதிய ஏற்பாட்டுக் காலத்திற்கு உரியதன்று என்று சொல்லுவதற்கில்லை. அரசாங்கம் கொலைக் குற்றவாளிக்கு மரண தண்டனையைக் கொடுக்க அதிகாரம் பெற்றதாயிருக்கிறது என்பதை இங்கே புதிய ஏற்பாடு குறிப்பாய்க் காட்டுகிறது. யாத்திராகமம் 20:13 - ஆம் வசனத்தை மேற்கோள் காட்டி இதற்கு எதிராக மனிதர்கள் வாதாடுகிறார்கள்: "கொலை செய்யாதிருப்பாயாக." அந்தக் கற்பனையாது கொலையைக் குறிப்பிடுகிறது. ஆயின் மரணதண்டனை கொலை அல்லவே. (kill என்ற சொல்லும் murder என்ற சொல்லும் வெவ்வேறு பொருள் உடையவை. KJV மொழிபெயர்ப்பில் kill என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதன் எபிரெய மூலச் சொல் murder என்னும் பொருளுடையதாகும். இச்சொல்லே NKJV மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது.)[54] சிலவகையான கொடூரமான குற்றங்களுக்குத் தண்டனையாக மரணதண்டனையை பழைய ஏற்பாடு விதித்துள்ளது.

ஆட்சி புரிகிறவனை **தேவ ஊழியக்காரன்** என்று மீண்டுமாக அப்போஸ்தலன் நினைவூட்டுகிறார். ஆனால் இம்முறை, **தீமைசெய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே** என்று அவர் சேர்த்து எழுதுகிறார். அதாவது, **நன்மை** செய்யும்படியான **தேவ ஊழியக்காரனாக** அவன் இருப்பதோடு, சட்டத்தை மீறுகிறவனைத் தண்டித்து தேவனுக்காக நீதி வழங்குகிற வேலைக்காரனாகவும் இருக்கிறான்.

**13:5** இரண்டு காரணங்களுக்காக நாம் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியக்கூடிய குடிமக்களாக இருக்க வேண்டுமென்று இவ்வசனம் கூறுகிறது - தண்டனை கிடைக்குமே என்ற அச்சம், நல்ல **மனச்சாட்சியைக்** காத்துக்கொள்ளும்படியான விருப்பம்.

**13:6** அரசாங்கத்திற்குக் கீழ்ப்படியக்கூடிய குடிமகனாக இருப்பதோடு, **வரி** செலுத்தி அதனுடைய நிதி நிலையைத் தாங்க வேண்டிய கடமையும் நமக்குண்டு. சட்டமும் ஒழுங்கும் உள்ள சமுதாயத்தில் வாழ்வது நமக்கு நல்லது. காவல்துறை, தீயணைப்புத்துறை போன்ற பல சமுதாயச் செலவுகளில் நம்முடைய பங்குகளைச் செலுத்த நாம் முன்வர வேண்டும். நிலையான சமுதாயத்தைப் பராமரிக்கிற தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு, அரசாங்க அலுவல் தங்களுடைய நேரத்தையும் திறமைகளையும் செலவிடுகின்ற காரணத்தினால் அவர்கள் ஆதரிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவார்கள்.

**13:7** விண்ணுலகக் குடிமக்களாக விசுவாசிகள் விளங்குகிறார்கள் என்னும் உண்மையானது, அரசாங்கத்திற்கு அவர்கள் செய்ய வேண்டிய பொறுப்புகளிலிருந்து அவர்களை விடுவிக்காது (பிலி. 3:20). விதிக்கப்படுகின்ற வருமானவரி, சொத்துவரி போன்ற அனைத்து வரிகளையும் செலுத்துவது அவர்கள் கடமையாகும். மேலும், ஒரு நாட்டிலிருந்து வேறு நாட்டிற்குப் பொருட்களை ஏற்றுமதி செய்கிறபோது **தீர்வையையும்** அவர்கள் செலுத்த வேண்டும். சட்ட ஒழுங்குகளைப் பராமரிக்கிறவர்களுக்கு **பயத்துடன்** கூடிய மரியாதையை அவர்கள் செலுத்தவேண்டும். மேலும் அரசாங்க ஊழியர்களின் *பதவிக்கும் அதிகாரங்களுக்கும்* **கனத்தைச்** செலுத்த வேண்டும் (அந்த அரசு ஊழியர்களின் *தனிப்பட்ட* வாழ்க்கை ஒரு வேளை மதிக்கப்படக் கூடாததாக இருக்கலாம்)

நாட்டின் குடியரசுத்தலைவர், பிரதம மந்திரி ஆகியோரை அவதூறாகக் கிறிஸ்தவர்கள் பேசக்

கூடாது. அரசியல் நிகழ்ச்சிகள் தீவிரமாக இருக்கக்கூடிய நேரங்களிலும் நாட்டை ஆளுவோர் மீது களங்கம் விளைவிக்கத் தக்கவாறு விசுவாசிகள் பேசக்கூடாது. "உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக" என்று எழுதியிருக்கிறதே (அப். 23:5).

### உ. எதிர்காலத்தைக் குறித்த பொறுப்புகள் (13:8-14)

**13:8** "நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறித்த காலத்தில் செலுத்துங்கள்" என்பதே இந்த வசனத்தின் முந்தைய பகுதியின் பொருளாகும். எந்தவொரு வகையிலும் கடன் படக்கூடாது என்பது இதன் பொருளன்று. நமது சமுதாயத்தில் சில கடன்கள் தவிர்க்க முடியாதவையாகும். பெரும்பாலோர் தொலைபேசி, மின் கட்டணம், நீர்க் கட்டணம் போன்றவற்றை ஒவ்வொரு மாதமும் இறுதியில்தான் கட்டுகிறோம். சில ஒப்பந்தக் கடன்களைப் பெறாமல் வாணிபம் செய்வது முடியாத செயலாகும்.

ஆயினும், இது குறித்து நம்மை வழிநடத்துகிற சில விதிகளும் இருக்கின்றன. தேவையற்றவற்றிற்காக நாம் கடன் பெறக்கூடாது. கடனைத் திரும்பச் செலுத்துவதற்கு வகையில்லாத போது கடன்பெறக்கூடாது. கூடுதலான வட்டி செலுத்தும்படி தவணைமுறைத் திட்டங்களில் பங்குபெறக்கூடாது. பொருட்களின் மதிப்பு விரைவாகக் குறைந்துபோகுமென்றால், அப்பொருட்களை வாங்குவதற்குக் கடன்பெறக் கூடாது. நம்முடைய வரவுக்குத்தக்கதாக நாம் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். கடன் பெற்றவர் கடன் கொடுத்தவருக்கு அடிமை என்பதை மனதிற் கொண்டு நிதிநிலைப் பொறுப்புகளைச் சீராக வகிக்க வேண்டும் என்பதே நாம் பொதுவாகப் பெறுகின்ற ஆலோசனையாகும்.

அன்பு என்னும் **கடன்** எல்லாவற்றிலும் தலையாய கடனாக எப்பொழுதும் விளங்குகிறது. இம்மடலில் 'அன்பு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள எல்லா இடங்களிலும் (12:10- ஆம் வசனத்தைத் தவிர - சினேகம்) தெய்வீக அன்பைக் குறிக்கும் அகாபே (agape) என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. அ.ீ.து ஆழமானதும், தன்னலமற்றதும், ஒருவர் மேல் மற்றொருவர் செலுத்தும் மனித நேசத்திற்கு மேலானதுமான அன்பைக் குறிக்கிறது. இவ்வேற்றுலக **அன்பானது,** எவர் மேல் செலுத்தப்படுகிறதோ அவருடைய குண நலத்தை அடிப்படையாகக் கருதாமல் தகுதிக்கு அப்பாற்பட்டுச் செலுத்தப்படுகிறதாக விளங்குகிறது. அன்பு செலுத்தத் தக்கவர்களிடம் மட்டுமின்றி, எதிரிகளிடமும் செலுத்தப்படக்கூடியதாக இது விளங்குகிறது.

கொடுப்பதினாலே இந்த அன்பு வெளிப்படுகிறது. பொதுவாக, கொடுப்பதும் தியாக மனப்பான்மையுடன் கொடுக்கப்படவேண்டும். தேவன் தமது ஒரேபேறான குமாரனைத் தந்தருளி இவ்வுலகத்தின் மீது அன்புகூர்ந்ததும் இவ்வகைப்படும். சபையின் மீது அன்பு பாராட்டிய கிறிஸ்து, தம்மையே அதற்காகக் கொடுத்தார்.

இவ்வன்பின் அடிப்படைக்கூறு உணர்ச்சிகளைச் சார்ந்திராமல், **சித்தத்தைச்** சார்ந்ததாயிருக்கிறது. அன்புகூர வேண்டுமென்ற கட்டளையை நாம் பெற்றிருப்பதால், அது தெரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்று அறிகிறோம். எதிர்பாராத நேரங்களில் கட்டுக்கடங்காத உணர்ச்சிகளாக நம்மை ஆட்கொள்ளக் கூடியதாக அன்பு வெளிப்படுமென்றால், அதற்கு நம்மைப் பொறுப்பாளிகளாக்க முடியாது. அன்பில் உணர்ச்சிகளும் சம்பந்தப்பட்டிருக்கக் கூடும் என்பதை அது மறுப்பதில்லை.

தெய்வீக அன்பை மனந்திரும்பாத மனிதர்களால் வெளிப்படுத்திக் காட்ட முடியாது. உண்மையில், தன்னுடைய சொந்த பலத்தினால் ஒரு விசுவாசியினாலும்கூட இவ்வன்பை வெளிப்படுத்திக் காட்ட இயலாது. உள்ளுறையும் தூய ஆவியின் வல்லமையினால் மட்டுமே ஒருவரால் இந்த அன்பை வெளிப்படுத்திக் காட்ட முடியும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆள்தன்மையில்தான் இவ்வுலகில் அன்பானது நிறைவாக வெளிப்பட்டது.

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதினாலே, நாம் தேவனிடத்தில் கொண்டிருக்கும் அன்பு வெளிப்படுகிறது.

தன்னுடைய அயலானிடத்தில் **அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்**. குறைந்தது, பிறனிடத்தில் அன்புகூருவாயாக என்னும் கட்டளையை அது நிறைவேற்றுகிறது.

**13:9** அயலானுடைய மனதிற்கு ஒவ்வாத செயல்களைத் தடைசெய்யும் **கற்பனைகளை** அப்போஸ்தலன் பிரித்துக் கூறுகிறார். **விபசாரம், கொலை,** களவு, பொய்ச்சாட்சி, இச்சை ஆகிய வற்றிற்கு எதிரான கற்பனைகளே அவை. பிறருடைய சரீரங்களை அன்பு பயன்படுத்தாது, ஆனால் ஒழுக்கமின்மை அவ்வாறு பயன்படுத்து

கிறது. வேறு ஒருவருடைய உயிரை அன்பு எடுக்காது, ஆனால் கொலை அவ்வாறு செய்கிறது. அன்பு வேறு ஒருவருடைய சொத்தைக் **களவாடாது,** ஆனால் திருட்டு அவ்வாறு செய்யும். அன்பு வேறு ஒருவருக்கு நியாயத்தை மறுக்காது. ஆனால் பொய்ச்சாட்சி மறுக்கும்.[55] மற்றவர்களுடைய உடைமைகளின் மீது அன்பு ஆசைப்படாது, ஆனால் இச்சை ஆசைப்படும்.

**வேறே எந்தக் கற்பனையும்.** "உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்று பவுல் இதனைக் குறிப்பிட்டிருக்கலாம். ஆயின், **"உன்னிடத்தில் அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக"** என்னும் கற்பனைக்குள்ளாக எல்லாம் அடங்கியுள்ளது. உங்களிடத்தில் எவ்வாறு நேசத்துடனும், கருத்தோடும், தயவோடும் நடந்துகொள்வீர்களோ அதுபோலவே பிறரிடமும் நடந்துகொள்ளுங்கள்.

**13:10 அன்பானது** வேறு ஒருவருக்குப் **பொல்லாங்கு செய்யாது.** மாறாக, அது பிறர் நலம் நாடி, யாவரையும் கனம் பண்ணும். ஆகவே அன்புகூருகிற எவனும் இரண்டாவது கல்லில் எழுதப்பட்ட **நியாயப்பிரமாணங்களை** நிறைவேற்றுகிறவனாயிருக்கிறான்.

**13:11** இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதி ஆவிக்குரிய வகையில் விழிப்புள்ளவர்களாகவும், நன்னெறி ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் வாழ்வதற்கு உற்சாகப்படுத்துகிறது. **காலம்** குறுகியதாக இருக்கிறது. கிருபையின் காலகட்டம் முடிவிற்கு வருகிறது. இது கடைசிக் காலமாக இருப்பதால், சோம்பலையும் செயலற்ற தன்மையையும் தவிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய **இரட்சிப்பு** முன்னிருந்ததைக் காட்டிலும் **இப்பொழுது அதிக சமீபமாயிருக்கிறது.** நம்முடைய பிதாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்ல நமது இரட்சகர் வந்து கொண்டிருக்கிறார்.

**13:12** தற்காலம், முடிவடையவிருக்கிற பாவம் நிறைந்த இரவைப் போன்றதாயிருக்கிறது. நிலை பேறான மகிமையாகிய **பகல்** விசுவாசிகளுக்காகப் புலருகின்றது. இவ்வுலகின் அழுக்கான கந்தையாகிய ஆடையைத் **தள்ளிவிட** வேண்டுமென்பதே இதன் பொருளாகும். அதாவது அநீதியோடும் பொல்லாங்கோடும் தொடர்புடைய எல்லாவற்றையும் நாம் ஒதுக்கித் தள்ளவேண்டும். நாமோ **ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ள** வேண்டும். அதாவது தூய வாழ்க்கைக்குத் தேவையான பாதுகாப்புக் கவசத்தை நாம் அணிந்துகொள்ள வேண்டும். அந்தப் படைக்கலன்களை எபேசியர் 6:14-18 ஆகிய வசனங்களில் விரிவாய்க் காணலாம். மெய்யான கிறிஸ்தவ நடத்தையின் கூறுகளை அப்படைக்கலன்கள் விளக்கிக் காட்டுகின்றன.

**13:13** நமது நடைமுறைக் கிறிஸ்தவ நடத்தை இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். நாம் **பகலின்** பிள்ளைகளாக இருப்பதால் வெளிச்சத்தின் பிள்ளைகளாக **நடக்க** வேண்டும். களியாட்டங்கள், குடிவெறி, காமவெறி ஆட்டங்கள், சீர்கெட்ட ஒழுக்கக்கேடுகள் மற்றும் வாக்குவாதம், பொறாமை இவைபற்றி கிறிஸ்தவர்கள் என்ன செய்வது? இவையொன்றும் அவர்களுக்குள் காணப்படலாகாது.

**13:14** நாம் பின்பற்ற வேண்டிய முதலாவது மிகச் சிறந்த செயல்முறைக் கொள்கை யாதெனில், **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுவதே** ஆகும். அவர் வாழ்ந்தது போன்று வாழ்ந்து, அவரையே நமது வழி நடத்துபவராகவும் மாதிரியாகவும் கொண்டு, அவருடைய வாழ்க்கையை முழுமையாய்ப் பின்பற்றுவதே இதன் பொருளாகும்.

இரண்டாவதாக, நாம் **துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாதிருக்க** வேண்டும். இங்கு **உடல்** அல்லது மாம்சம் என்பது முந்தின சீர்கெட்ட சுபாவமாகும். வசதிகள், சுகபோகம், தவறான சிற்றின்ப உறவுகள், வீணான பொழுதுபோக்குகள், உலகீய இன்பங்கள், மதுமயக்கம், பொருளாசை ஆகியவற்றை ஓயாமல் நாடுவது அந்தப் பழைய இயல்பாகும். சோதனைகளைத் தூண்டிவிடக்கூடிய பொருட்களை வாங்குவோமென்றால் பாவம் செய்யக்கூடிய எண்ணத்திற்கு நம்மை ஒப்புவிப்போமென்றால், ஆவிக்குரிய வற்றைக் காட்டிலும் சரீரத்திற்குரியவற்றிற்கு முதலிடம் கொடுப்போமென்றால் நாம் **உடலைப் பேணுகிறவர்களாயிருப்போம்.** மாம்சத்திற்குக் கொஞ்சமும் இடம் கொடுக்கக் கூடாது. அதாவது, "மாம்சம் இன்ப நடனம் ஆடுவதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது" (JBP).

அறிவுக்கூர்மை படைத்தவரும், மாம்சத்திற்குரிய வாழ்க்கை வாழ்ந்தவருமான அகஸ்டின் மனந்திரும்புவதற்கு இந்த வேதபகுதியே காரணமாயிருந்தது. அவர் 14 - ஆவது வசனத்திற்கு வந்தபோது தம்மைக் கர்த்தரிடத்தில் ஒப்புவித்தார். அதுமுதல் அவர் வரலாற்றில் "பரிசுத்த" அகஸ்டின் என்று அழைக்கப்பட்டார்.

### ஊ. பிற விசுவாசிகளுடன் தொடர்புடைய கடமைகள் (14:1-15:13)

**14:1** இரண்டாம் நிலை முக்கியத்துவம் வாய்ந்த சில நடைமுறைச் செயல்களில் எங்ஙனம் இறை மக்கள் நடந்துகொள்ள வேண்டும் என்னும் இன்றியமையாத கோட்பாடுகளை ரோமர் 14:1-15:13 ஆகிய வசனங்கள் விளக்கிக் காட்டுகின்றன. இவற்றில் உண்டாகும் கருத்து வேறுபாடுகளின் காரணமாக விசுவாசிகளுக்கிடையில் சச்சரவுகள் ஏற்படுகின்றன. ஆயின் அப்படிப்பட்ட முரண்பாடுகள் தேவையற்றவை என்பதை இப் பகுதியில் காணலாம்.

முக்கியமற்றவற்றில் ஆதாரமற்ற மனஐயங்கள் கொண்ட ஒருவனே **பலவீனமுள்ள** கிறிஸ்தவன் ஆவான். இந்த வேதபகுதியின் பின்னணியில் காணும்போது, யூதர்களால் தவிர்க்கப்பட வேண்டிய உணவை உண்பது குறித்தோ, சனிக்கிழமைகளில் அலுவல் புரிவது குறித்தோ மனஐயம் கொண்டிருக்கும் ஒரு யூதக் கிறிஸ்தவனாக அவன் இருக்கக்கூடும்.

*முதலாவது செயல்முறைக் கொள்கையானது:* உள்ளூர் சபை ஐக்கியத்தில் **பலவீனமுள்ள** கிறிஸ்தவன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். ஆயினும் அவனுடைய அதிகமான மனஐயங்களைக் குறித்துக் **குற்றமாய்** நினைத்து அவனோடு வழக்காடும் எண்ணத்தோடு ஐக்கியம் கொள்ளலாகாது. அடிப்படை முக்கியத்துவம் இல்லாதவற்றில் உடன்பாடின்றி கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியுள்ள ஐக்கியம் கொண்டிருக்க முடியும்.

**14:2** புதிய ஏற்பாட்டுப் போதனைகளின் அடிப்படையில் கிறிஸ்தவ சுயாதீனத்தை முற்றிலுமாக அனுபவித்து நடக்கிற ஒரு விசுவாசி எல்லா உணவுப்பொருட்களும் சுத்தமானவை என்று நம்புகிறான். அவன் தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் அவை பரிசுத்தமாக்கப்படும் என்று நம்புகிறான் (1 தீமோ. 4:4,5). பலவீனமான மனச்சாட்சி உள்ள விசுவாசியோ, பன்றி இறைச்சி அல்லது வேறு எந்த இறைச்சியோ உண்பது குறித்து மனதில் குத்தப்பட்டவனாக இருக்கிறான். ஒருவேளை அவன் புலால் உண்ணாதவனாக இருக்கலாம்.

**14:3** ஆகவே ஒருவரையொருவர் சகித்துக் கொள்ளுதல் *இரண்டாவது செயல்முறைக் கொள்கையாக* இருக்கிறது. முதிர்ச்சி அடைந்த விசுவாசி பலவீனமான சகோதரனை **அற்பமாய்** எண்ணக்கூடாது. அதுபோலவே அந்தப் பலவீனமான சகோதரன், பன்றி இறைச்சி, இரால், கடல் நண்டு ஆகிவற்றை உண்கிற சகோதரனைக் **குற்றவாளியாகத் தீர்க்கக்கூடாது. தேவன் அவனைத்** தமது குடும்பத்தில் **ஏற்றுக்கொண்டிருக்கிறார்**. அவனும் கிறிஸ்துவுக்குள்ளான நல்ல தகுநிலையை உடையவனாக இருக்கிறான்.

**14:4** *மூன்றாவது செயல்முறைக் கொள்கையாவது,* ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருடைய **வேலைக்காரனாக** இருக்கிறான் என்பதாகும். நாம் எஜமானனுக்குரிய இடத்தை எடுத்துக் கொண்டு பிறரைக் குற்றவாளியாகத் தீர்க்க உரிமையற்றவர்கள் ஆவோம். ஒவ்வொருவனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டவனாகவோ நிராகரிக்கப் பட்டவனாகவோ தீர்ப்பது **அவனுடைய எஜமானனே** ஆவார். ஒருவன் மற்றொருவனை அன்பில்லாதபடி தாழ்வாக எண்ணுவானெனில் இவ் வகையான கருத்துடையவனாக இருக்கின்ற காரணத்தினால் தனது விசுவாசக் கப்பலை உடைத்துப்போடுவது நிச்சயம். ஆகவே அப்படிப் பட்ட மனப்பான்மை தவறானதாகும். ஒரு பொருளைக் குறித்து வெவ்வேறு கருத்துடைய இரு சாராரையும் **தேவன்** தாங்கக்கூடியவராக இருக்கிறார். அவருடைய **வல்லமை** அதற்குப் போதுமானது ஆகும்.

**14:5** ஓய்வுநாள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்று சில யூதக் கிறிஸ்தவர்கள் அந்நாட்களில் எண்ணிக்கொண்டிருந்தார்கள். சனிக்கிழமைகளில் எந்தவொரு வேலையும் செய்யலாகாது என்றே அவர்கள் நினைத்தார்கள். இப்பொருளில் அவர்கள் **ஒருநாளை மற்றொரு நாளிலும்** சிறப்பாகக் கருதினார்கள்.

மற்ற கிறிஸ்தவர்களோ இந்த யூத மனஐயங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் **எல்லா நாட்களையும்** ஒரேவிதமாக எண்ணினார்கள். ஆறு நாட்களை உலகப்பிரகாரமான நாட்கள் என்றும் ஒருநாளை புனிதமான நாள் என்றும் அவர்கள் கருதவில்லை. அவர்களுக்கு எல்லா நாட்களும் புனித நாட்களே.

அவ்வாறாயின் கர்த்தருடைய நாளாகிய வாரத்தின் முதல் நாளைக் குறித்து என்ன சொல்லுவது? கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் அதற்குச் சிறப்பிடம் ஏதும் இல்லையா? அது கர்த்தருடைய உயிர்த்தெழுந்த நாள் என்று புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறோம் (லூக். 24:1-9). அடுத்து வந்த இரண்டு கர்த்தருடைய நாட்களில், தமது சீடர்களை இயேசு கிறிஸ்து சந்தித்தார் (யோவான் 20:19,26). வாரத்தின் முதல் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில் தூய ஆவியானவர் கொடுக்கப்பட்டார். முதற்கனித் திருவிழா நடந்து ஏழு

ஞாயிற்றுக்கிழமைகளுக்குப் பின்னர் பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடப்பட்டது (லேவி. 23:15,16; அப். 2:1) முதற்கனி இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாகும் (1 கொரி. 15:20,23). வாரத்தின் முதல் நாளிலே சீடர்கள் அப்பம் பிட்கிறதற்காகக் கூடினார்கள் (அப். 20:7). வாரத்தின் முதல் நாளில் காணிக்கையெடுக்கும் படியாகக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுக்கு பவுல் அறிவுரை வழங்கினார். ஆகவே, புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய நாள் சிறப்பான முறையில் தனிப்படுத்தப்பட்ட நாளாக இருக்கிறது. ஆனால், ஓய்வு நாளைப்போன்று, நாம் அதனைச் **சமயச்சார்புடைய கடமைகளுக்கு உரியநாள்** என்று கருதாமல், **தனிச்சிறப்பு வாய்ந்த நாள்** என்று கருதுவோமாக. பொதுவான அலுவல்களிலிருந்து விலகி, அந்த நாளை ஆராதனைக்கும் கர்த்தருக்குப் பணிபுரிவதற்கென்றும் அதனைப் பிரித்து வைத்துக்கொள்வோமாக.

ஓய்வு நாளைக் கைக்கொள்ள வேண்டுமென்று புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களுக்கு எங்கும் கட்டளை கொடுக்கவில்லை. ஆயினும் நடைமுறையில் ஏழு நாட்களில் ஒரு நாளை, அல்லது ஆறு நாட்கள் வேலைக்குப் பிறகு ஒரு நாளை இளைப்பாறுதலுக்கென்று ஒதுக்க வேண்டுமென்று கருதுகிறோம்.

இப்பொருள்பற்றி ஒருவர் என்ன கருத்து கொண்டிருந்தாலும், கடைப்பிடிக்க வேண்டிய செயல்முறைக் கொள்கையாவது: **அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்**. நன்னெறி சார்ந்தவற்றில் சரி தவறு என்று உறுதி செய்ய இயலாத காரியங்களில் மட்டுமே இப்படிப்பட்ட செயல்முறைக் கொள்கையைக் கடைப்பிடிக்கலாம் என்பதை இப்பொழுது நாம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த அடிப்படை உபதேசங்களில் தனிப்பட்டவர்களின் கருத்துகளுக்கு இடமில்லை. ஆனால் தம்மில்தாமே தவறு அல்லது சரி என்று சொல்லக்கூடாதவற்றில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஐக்கியம் கொள்வதற்கு இவற்றை உரைகற்களாகப் பயன்படுத்தக் கூடாது.

**14:6 நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன்** என்று இங்கு குறிப்பிட்டுள்ளது, சனிக்கிழமைகளில் அலுவல் புரிவது தவறு என்னும் கருத்தைக் கொண்டிருந்த யூத விசுவாசியையேயாகும். ஓய்வு நாளைக் கைக்கொள்ளுவதின் மூலம் இரட்சிப்பைப் பெறலாம் அல்லது அதனைத் தக்க வைத்துக்கொள்ளலாம் என்று அவன் எண்ணுவதில்லை. என்றாலும் அவ்வாறு கைக்கொள்ளுவதின் மூலம் **கர்த்தரைப்** பிரியப்படுத்தலாம் என்று அவன் எண்ணுகிறான். அதுபோலவே, **நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும்** கிறிஸ்துவைக் கனப்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அவ்வாறு செய்கிறான். கிறிஸ்துவே மெய்ப்பொருள் என்றும் மற்றவை விசுவாசத்திற்குரிய நிழல் என்பதையும் அவன் அறிந்திருக்கிறான் (கொலோ. 2:16,17).

யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட உணவுப் பொருட்களை உண்பதற்கு விடுதலை பெற்றவன் தன் தலையைத் தாழ்த்தி அவற்றிற்காக **தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறான்.** அதுபோலவே வலுக்குன்றிய மனச்சான்று உடையவன் யூதர்களுக்கென்று நியமிக்கப்பட்ட உணவுகளை மட்டும் உண்டு தேவனுக்கு நன்றி செலுத்துகிறான். இருவருமே தேவனுடைய நற்பேற்றை நாடுகின்றனர்.

இவ்விருவருடைய செய்கைகளிலும் **தேவன்** கனத்தையும் நன்றியையும் பெறுகிறபடியால், ஆங்கு பூசலும் சச்சரவும் ஏற்படக் காரணமாக இது அமைவது ஏன்?

**14:7** ஒரு விசுவாசியின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் கிறிஸ்துவின் கர்த்தத்துவம் விளங்குகிறது. நாம் எல்லாரும் நமக்காக வாழ்கிறதில்லை, கர்த்தருக்காகவே வாழ்கிறோம். நாம் நமக்காகச் சாகிறதில்லை, கர்த்தருக்காகவே சாகிறோம். நாம் செய்கிறதும் பேசுகிறதும் பிறரிடத்தில் செயல்விளைவு உண்டுபண்ணுவது உண்மைதான். ஆனால் அதைப்பற்றி இங்கு குறிப்பு ஏதும் இல்லை. இறைமக்களின் வாழ்க்கையின் இலக்கும் நோக்கமுமாக கர்த்தரே விளங்க வேண்டுமென்று பவுல் இங்கு வலியுறுத்துகிறார்.

**14:8** நம்முடைய வாழ்க்கையில் நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் கிறிஸ்துவின் சோதனைக்கும் அங்கீகாரத்திற்கும் கீழ்ப்பட்டிருக்கிறது. அவருடைய சமுகத்தில் நமது செயல்கள் எங்ஙனம் தோற்றமளிக்கும் என்று அவற்றை நாம் சோதித்து அறிகிறோம். நம்முடைய சாவிலும் கர்த்தரை மகிமைப்படுத்த விரும்புகிறோம். ஏனெனில் அவரோடு என்றென்றுமாக இருக்கப்போகிறோம். இவ்வாறு நம்முடைய வாழ்விலும் சாவிலும் அவருடையவர்களாக இருக்கிறோம்.

**14:9** கிறிஸ்து மரித்தும் எழுந்தும் பிழைத்தும் இருக்கிறார். அதற்கான காரணங்களில் ஒன்று,

அவர் நம்முடைய ஆண்டவராக இருக்க வேண்டும் என்பதாகும். ஆகவே நாம் அவருக்கு மன முவந்த குடிமக்களாகவும், நன்றியறிதலுள்ள இருதயத்துடனும் மகிழ்ச்சியுடனும் பக்தியைச் செலுத்துகிறவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் செத்து, நம்முடைய உடல்கள் புதைகுழிகளிலும், ஆவிகளும் ஆத்துமாக்களும் அவருடைய சமுகத்திலும் இருக்கும்போதும் நம்மீது அவருடைய கர்த்தத்துவம் தொடரும்.

**14:10** மேற்கூறியவை உண்மையாக இருக்கின்ற காரணத்தினால், தேவையற்ற மன ஐயங்களைக் கொண்ட யூதக் கிறிஸ்தவன், யூதப்பண்டிகை நாட்களைக் கைக்கொள்ளாமலும், புறக்கணிக்கப்பட்ட உணவை உண்டும் வாழ்கிற சகோதரனைக் குற்றவாளியாகத் தீர்க்கக்கூடாது. அதுபோல, வலிமைகுன்றிய **சகோதரனை** வலிமைமிக்கவன் **அற்பமாய் எண்ணக்கூடாது.** உண்மை யாதெனில், **நாமெல்லோரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கப் போகிறோம்.**[56] அதுவே நம்மைக் குறித்த சரியான மதிப்பீடாகும்.

விசுவாசிகளுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுடைய ஊழியத்தோடு சம்பந்தமுடையதாக இருக்குமேயொழிய, அவர்களுடைய பாவத்தைச் சார்ந்ததாக இருக்காது (1 கொரி. 3:11-15). அ.·.து புனராய்விற்கும் பரிசளிப்புக்குமான நேரமாகும். புறவின நாடுகள் அடையவிருக்கிற நியாயத்தீர்ப்போடு இதனைச் சோதித்துப் பார்த்துக் குழப்பம் அடையக்கூடாது (மத். 25:31-46). பெரிய வெள்ளைச்சிங்காசன நியாயத்தீர்ப்போடு இதனை ஒன்றுபடுத்தியும் குழப்பம் கொள்ளலாகாது (வெளி. 20:11-15). பொல்லாங்காய் வாழ்ந்து மரித்தோர் யாவரும் அடையவிருக்கும் கடைசி நியாயத்தீர்ப்பே பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு ஆகும்.

**14:11** நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு (பீமா) முன்பாக நிற்கப் போகிறதை உறுதிப்படுத்தும் வண்ணம் ஏசாயா 45:23 மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. ஆங்கு யெகோவா தாமே அதனை உறுதிப்படுத்தும் வகையில் அவருக்கு முன்பாக **முழங்கால் யாவும் முடங்கும்** என்று கூறியிருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரம் அவருடையது என்று ஒப்புக்கொள்ளப்படுவதை அது தெரிவிக்கிறது.

**14:12 ஆதலால்,** நம்மில் ஒவ்வொருவனும் *தன்னைக்குறித்து* தன்னுடைய சகோதரர்களைக் குறித்து அல்ல, தன்னைக்குறித்தே **தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.** நாம் ஒருவரையொருவர் அளவுக்கு அதிகமாகவும், சரியான அதிகாரமோ அறிவுமோ இன்றியும் நியாயந்தீர்க்கிறோம்.

**14:13** சரியா தவறா என்று உறுதியாய் சொல்லக்கூடாதவற்றில் உள்ள கருத்து வேறுபாடுகளைக் குறித்து உடன் சகோதரர்களை விசாரிக்க நாம் நியாயாசனத்தில் அமராமல், சகோதரருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையுண்டாகும்படி எதையும் செய்யாதிருக்கத் **தீர்மானித்துக்கொள்ளுவோம்.** மேற்கூறிய யாவும் அடிப்படை முக்கிய மற்றவை. இவற்றில் ஏதொன்றும் ஒரு சகோதரன் **இடறுவதற்கான** முக்கியத்துவம் வாய்ந்ததன்று.

**14:14** எந்த உணவுப்பொருளும் சமய முறைப்படி தீட்டுள்ளதல்ல. நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக வாழ்கின்ற யூதனே அவ்வாறு எண்ணுவான். நாம் உண்கிற உணவு தேவ வசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும் (1 தீமோ. 4:5). அது தேவ வசனத்தினால் பரிசுத்தமாக்கப்படும் என்று கூறுமிடத்து, வேதம் அதை நன்மைக்கென்று சிறப்பான முறையில் தனிப்படுத்தி வைத்திருக்கிறது என்னும் பொருளைத் தருகிறது. தேவனுடைய மகிமைக்கென்றும், அவருக்கு ஊழியம் செய்யும் பொருட்டு நாம் வலிமை பெற வேண்டுமென்றும் அவ்வுணவை ஆசிர்வதித்துத் தரும்படி நாம் தேவனிடத்தில் விண்ணப்பிக்கிறதால் அது பரிசுத்தமாக்கப்படுகிறது. ஆனாலும், எடுத்துக்காட்டாக பன்றி இறைச்சியை உண்பது தவறு என்று ஒரு பலவீனமான விசுவாசி கருதுவானென்றால் அது அவனுக்குத் தவறேயாகும். தேவன் அவனுக்குக் கொடுத்த மனச்சாட்சியை அது மீறுகிறதாக இருக்கும்.

**ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்ல வென்று** பவுல் கூறுமிடத்து, கருத்து வேறுபாடுகள் உள்ள இந்தப் பொருட்களைப் பற்றியே அவர் பேசுகிறார் என்று நாம் அறிய வேண்டும். இவ் வாழ்க்கையைத் தீட்டுப்படுத்தக்கூடிய பற்பலப் பொருட்கள் உள்ளன. காமவிகாரப் புத்தங்கள், கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிற நகைச்சுவைகள், அருவருப்பான திரைப்படங்கள், சிற்றின்பச் சீர்கேடுகள் போன்ற யாவும் தீட்டானவையே. சொல்லப்பட்டிருக்கிற வேத வசனத்தின் பின்னணியில் பவுல் கூறியவற்றை நாம் பகுத்தறிய வேண்டும். மோசேயின் நியாயப்பிரமாணம் தீட்டானது என்று குறிப்பிட்டுள்ள உணவுப்பொருட்களைக் கிறிஸ்தவர்கள் உண்பதால் சமய முறைப்படி தீட்டடைய மாட்டார்கள் என்பதே கருத்து.

**14:15** இரால் நண்டு போன்றவற்றை உண்பது தவறு என்று கருதுகிற பலவீனமான **சகோதரனுடன்** உணவு உண்ணும்படியாக அமர்ந்திருக்கையில், அவன் அவ்வாறான கருத்துடையவன் என்று நான் அறிந்தும், என்னுடைய உரிமை என்று கருதி அவற்றை உண்ணலாமா? அவ்வாறு நான் செய்வேனென்றால் நான் **அன்பில்** நடக்கிறவன் அல்லன். ஏனெனில் அன்பு தன்னில் அல்ல, பிறர்மேல் கருத்துடையதாக இருக்கிறது. அன்பானது ஒரு சகோதரனுடைய நலத்தை விரும்பி, தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுக்கிறது. எவன் ஒருவனுக்காகக் **கிறிஸ்து மரித்தாரோ அவனுடைய** ஆவிக்குரிய நலத்தைக் காட்டிலும் ஒரு வட்டில் உணவு முக்கியமன்று. ஆகிலும் இத்தகைய செயல்களில் தன்னலத்துடன் என்னுடைய உரிமையை விட்டுக்கொடுக்காமல் நடந்து கொள்வேனென்றால், பலவீனமான சகோதரனுடைய வாழ்க்கையில் சரிசெய்ய இயலாத சேதத்தை உண்டுபண்ணுகிறவனாயிருப்பேன். ஆட்டுக்குட்டியானவருடைய உன்னத செங்குருதியாகிய சிகரம் போன்ற விலை கொடுத்து மீட்கப்பட்டதே அவனுடைய ஆத்துமா என்பதை நினைவுகூருவீர்கள் எனில் நீங்கள் விட்டுக்கொடுப்பது அதற்கு ஈடாகாது என்று உணர்வீர்கள்.

**14:16** ஆகவே இவ்வகையான முக்கியமற்ற செயல்களில், அவை தம்மிலே குறையற்றவையாயும், அனுமதிக்கப்படக் கூடியவையாயும் இருப்பினும், நாம் "கட்டுப்பாடு இல்லாமலும்" "அன்பற்ற முறையிலும்" நடந்து, பிறர் நம்மைக் குற்றஞ் சாட்ட இடமளிக்கக் கூடாது என்பதே நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைக் கொள்கையாகும். ஒரு கலம் கூழுக்காக நமது நல்ல பெயரை இழப்பதற்கு அது ஒப்பாகும்.

**14:17 தேவனுடைய ராஜ்யத்தில்** மேலானவையாக எண்ணப்படுபவை ஆவிக்குரிய உண்மைகளேயல்லாமல் உணவுப்பொருட்களைக் குறித்த விதிமுறைகள் அல்ல. **தேவனுடைய ராஜ்யத்தில்** தேவனே ஒப்புயர்வற்ற மன்னனாக இருக்கிறார். அதனுடைய பரந்த பொருளில், தேவனை விசுவாசிக்கிறோம் என்று வாயளவில் சொல்லுகிறவர்களும் இடம் பெறுவார்கள். ஆனால் அதனுடைய உள்ளான பொருளில், மறுபடியும் பிறந்தவர்கள் மட்டுமே அதற்குள்ளாக இடம் பெறுவார்கள். இந்தப் பொருளில்தானே தேவனுடைய ராஜ்யம் என்னும் சொற்றொடர் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இறையரசின் குடிமக்கள் சாப்பாட்டுப் பிரியராகவோ, பசிவெறி பிடித்தவராகவோ, மதுவைச் சுவைத்துத் தரமிடுபவராகவோ இருக்கமாட்டார்கள். அவர்களோ **சமாதானமுள்ள** மனநிலையினாலும், **பரிசுத்த ஆவியில் சந்தோஷப்படும்** மனப்பக்குவத்தாலும் நடைமுறை **நீதியைத்** தங்கள் வாழ்வின் குணவியல்பாக வெளிப்படுத்திக் காட்டுபவராக இருப்பார்கள்.

**14:18** ஒரு மனிதன் எதை உண்கிறான் அல்லது எதை உண்ணாதிருக்கிறான் என்பது பெரிதன்று. தேவனுடைய கனத்தையும், மனிதனால் ஏற்றுக்கொள்ளப்படுவதையும் வெற்றி கொள்வதே பரிசுத்த வாழ்வாகும். நீதி, சமாதானம், சந்தோஷம் ஆகியவற்றை முதன்மையாகக் கருதுகிறவர்கள் **கிறிஸ்துவின்** படிப்பினைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு **ஊழியஞ்செய்கிறார்கள்**.

**14:19** *இன்னுமொரு நடைமுறைக்கொள்கை* மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகிறது. அறிவுக்கு ஒவ்வாத காரணங்களுக்காகச் சண்டையிட்டுக் கொள்ளாமல், கிறிஸ்தவ ஐக்கியத்தில் **சமாதானமும்** இணக்கமும் நிலைத்திருக்க எல்லாவித முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். நம்முடைய உரிமைகளை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு மற்றவர்களை இடறிவிழச் செய்யாமல், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் அவர்கள் கட்டப்படும்படியாகக் கடும்முயற்சி செய்ய வேண்டும்.

**14:20 தேவன்** தம்முடைய பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் ஒரு **கிரியையை** நடப்பிக்கிறார். **போஜனம்,** பானங்கள் அல்லது நாட்கள் போன்ற முக்கியமற்ற காரணங்களுக்காகப் பலவீனமான சகோதரனுடைய வாழ்க்கையில் தேவன் நடத்துகிற கிரியைக்குத் தடையுண்டாக்குவதை நினைத்துப்பார்த்தாலே பெரும் அச்சம் ஏற்படுகிறது. இறைமக்களுக்கு இப்பொழுது எல்லா உணவுப் பொருட்களும் தூய்மையானவையே. ஆயினும் ஒரு சகோதரனுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் மனம் புண்படுவதற்கோ, இடறி விழுவதற்கோ காரணமாகும்படி ஒரு குறிப்பிட்ட உணவை உண்பது தவறாகும்.

**14:21** ஒரு **சகோதரன்** மனம் புண்படுவதற்கோ, ஆவிக்குரிய குறைச்சல் உண்டாவதற்கோ காரணமானவனாயிருப்பதைக் காட்டிலும் **மாம்சம்** உண்ணாமலிருப்பதும் **மதுபானம்** குடிக்காமலிருப்பதும் அல்லது **மற்றெதையாகிலும்** செய்யாமலிருப்பதும் ஆயிரம் மடங்கு சிறந்ததாகும். ஒரு **பலவீனமான** சகோதரனிடத்தில் அக்கறை கொள்வதற்காக, நம்முடைய சட்டபூர்வமான

உரிமைகளை விட்டுக்கொடுப்பது ஒரு சிறிய விலையைக் கொடுப்பதற்கு ஒப்பாகும்.

**14:22** எந்தவொரு உணவையும் நன்றியறித லோடு பெற்றுக்கொள்ளும்படி தேவன் தந்திருக் கிறார் என்ற நினைவோடு உண்ணுவதற்கு நான் முழு விடுதலை உடையவனாக இருக்கிறேன். ஆனால் பலவீனமான விசுவாசிகளுக்கு முன்பாக அந்த உரிமையைத் தேவையற்ற முறையில் கர்வத்துடன் செயல்படுத்தக் கூடாது. அந்த உரிமையைத் தனிமையில் பயன்படுத்தலாம். அங்கு அதன் காரணமாக ஒருவரும் மனம் புண்படமாட்டார்கள்.

எவ்விதத் தேவையற்ற ஐயப்பாடுகளாலும் விலங்கிட்டுக் கொள்ளாமல், கிறிஸ்தவச் சுதந் திரத்தை நிறைவாக அனுபவித்து நடப்பது நல்லது. ஆனால் மற்றவர்களுடைய மனம் புண்படும்படி நடக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகாதபடி, சட்டப்படியான உரிமையை விட் டுக் கொடுப்பது அதனினும் நன்று. எவனொருவன் மற்றவர்கள் இடறுவதற்குக் காரணமாக இல்லாம லிருக்கிறானோ அவன் பாக்கியவான்.

**14:23** ஒரு பலவீனமான சகோதரனைப் பொருத்தமட்டில், அவனுடைய மனச்சாட்சியில் தவறென்று ஐயப்படுகிற ஏதொன்றையும் உண்பது தவறு. அவன் அந்த உணவை உண்பது **விசுவாசச் செயல்** அன்று. அது துர்மனச்சாட்சி யாகக் கருதப்படும். ஒருவன் தன்னுடைய மனச் சாட்சியை மீறுவது பாவம்.

ஒரு மனிதனுடைய மனச்சாட்சி தவறற்ற வழிகாட்டியல்ல என்பது உண்மையே. அந்த மனச்சாட்சி தேவனுடைய வார்த்தையினாலே கற்பிக்கப்பட வேண்டியது அவசியம். "ஒருவன் தன்னுடைய மனச்சாட்சியின்படி நடக்க வேண் டும்; அது பலவீனமாக இருந்தாலும் அதன்படியே நடக்க வேண்டும். இல்லையெனில் அவனுடைய நன்னெறி சார்ந்த மனித இயல்பு பயனற்றுப் போய்விடும் என்று பவுல் எழுதியுள்ளார்" என மெர்ரில் அங்கர் என்பார் கூறுகிறார்.[57]

**15:1** நடத்தை சரியா தவறா என்பது குறித்து மாறுபட்ட கருத்துகள் உண்டாகும்போது நடந்து கொள்ள வேண்டியமுறை என்ன என்பது பற்றிய முந்தின அதிகாரத்தின் பொருளே இந்த அதி காரத்திலும் முதல் பதின்மூன்று வசனங்களில் தொடர்கிறது. யூதர்களிலிருந்து மனந்திரும்பிய வருக்கும் புறவினத்தவரிலிருந்து மனந்திரும்பி யவருக்கும் இடையே இதன் காரணமாகப் பதற் றம் ஏற்பட்டது. ஆகவே இந்த யூத மற்றும் புறவினக் கிறிஸ்தவர்களுக்கிடையே இணக்க முள்ள உறவு நிலைத்திருக்க வேண்டுமென்று பவுல் வேண்டுகிறார்.

**பலமுள்ளவர்கள்** (அதாவது சரி தவறு என்று அறியக்கூடாதவற்றில் முழுச் சுதந்திரம் உடைய வர்கள்) தன்னலம் உள்ளவர்களாய்த் தங்களு டைய உரிமையை நிலைநாட்டும்படி தங்களுக்கே **பிரியமாய் நடக்கக்கூடாது**. மாறாக, பலவீன முள்ள சகோதரர்களைத் தயவோடும் கருதுத லோடும் நடத்தி அவர்களுடைய மிகுதியான **பலவீனங்களுக்கு** இடங்கொடுக்க வேண்டும்.

**15:2** இங்கே கைக்கொள்ள வேண்டிய நடை முறைக் கொள்கையாவது: தங்களையே பிரியப் படுத்தும்படி நடக்கக்கூடாது என்பதே. **பிறனுக் குப் பிரியமாய்** வாழ்ந்து, அவனுக்கு **நன்மை** செய்து, விசுவாசத்தில் கட்டப்படும்படி நடந்து கொள்ள வேண்டும். இதுவே கிறிஸ்தவ அணுகு முறையாகும்.

**15:3** கிறிஸ்து நமக்கு முன்மாதிரியைத் தந் திருக்கிறார். அவர் தம்மையே பிரியப்படுத்தாமல், தம்முடைய பிதாவைப் பிரியப்படுத்தும்படியாக வாழ்ந்தார். "உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது" என்று அவர் கூறினார் (சங். 69:9). மனிதர்கள் தேவனை நிந் தித்தபோது, அதைத் தனக்கே வந்த அவமான மாக ஏற்றுக்கொண்டார்; இவ்வாறு தேவனுடைய மகிமை ஒன்றே இன்றியமையாதது என்று அதனை முற்றிலுமாக நிலைநிறுத்தினார் என்பதே இதன் பொருளாகும்.

**15:4** பழைய ஏற்பாட்டில் காணப்படும் வேத வசனங்கள் நமக்குப் போதனையாக எழுதப்பட் டுள்ளன என்பதை நினைவூட்டும் வண்ணம் சங்கீதத்திலிருந்து இங்கு மேற்கோள் காட்டப்பட் டுள்ளது. அவை நமக்கு நேரடியாக எழுதப்படா விடினும், நல்ல பல படிப்பினைகளாக அமைந்துள் ளன. பிரச்சினைகளையும், சச்சரவுகளையும், உபத்திரவங்களையும், இடர்ப்பாடுகளையும் சந் திக்கும் போதெல்லாம், நாம் உறுதியாக நிற்பதற் குத் தேவையான பாடங்களைத் திருமறையானது கற்பித்து **ஆறுதல்** அளிக்கிறது. இவ்வாறாக, அலைகளுக்குள்ளாக நாம் மூழ்கிப்போகாமல், முடிவுவரை கர்த்தர் நம்மை வழிநடத்துவார் என் னும் **நம்பிக்கையினாலே** தாங்கப்படுகிறோம்.

**15:5,6** பலமுள்ளவர்களும் பலவீனர்களும், புறவினக் கிறிஸ்தவர்களும் யூதக் கிறிஸ்தவர் களும், **கிறிஸ்து இயேசுவின் மாதிரியின்படியும்** அவருடைய போதனையின்படியும் இணக்கத்

துடன் வாழ வேண்டுமென்று, நீடிய பொறுமையையும் **ஆறுதலையும்** அளிக்கும் **தேவனுடைய** விருப்பத்தை வெளிப்படுத்தும்படி இந்த ஆய்வு பவுலை வழிநடத்தியது.

இதன் விளைவாகப் பரிசுத்தவான்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனைத் தொழுதுகொள்ள ஒருமனப்படுகிறார்கள். என்ன அழகிய சித்திரம்! இரட்சிக்கப்பட்ட யூதரும் இரட்சிக்கப்பட்ட புறவினத்தவரும் **ஒரே வாயினால்** கர்த்தரை ஆராதிக்கின்றனர்!

வாயைக் குறித்து ரோமர் மடலில் நான்கு குறிப்புகள் உள்ளன. அவற்றை ஒன்றிணைத்துப் பார்க்குங்கால் "இரட்சிப்படைந்த நல்லதொரு ஆத்துமாவின்" வாழ்க்கை வரலாறாக அது திகழ்கிறது. தொடக்கத்தில் அவனுடைய வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருந்தது (3:14). பின்னர் அவனுடைய வாய் அடைக்கப்பட்டு, குற்றமுள்ளவனாக நியாயாதிபதிக்கு முன்னர் கொண்டுவரப்பட்டான் (3:19). அடுத்ததாக தன் வாயினாலே இயேசுவைக் கர்த்தரென்று அறிக்கை செய்கிறான் (10:9). மேலும், முடிவில் அவனுடைய வாய் சுறுசுறுப்பாகக் கர்த்தரைப் புகழவும் ஆராதிக்கவும் செய்கிறது.

**15:7** இவையெல்லாவற்றிலிருந்தும் இன்னொரு நடைமுறைக் கொள்கை பிறக்கிறது. முக்கியமற்ற காரியங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், **கிறிஸ்து** நம்மை **ஏற்றுக்கொண்டதுபோல**, நாமும் **ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள** வேண்டும். உள்ளூர் சபையில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான மெய்யான அடிப்படைக் காரணம் இதுவே ஆகும். சபைப்பிரிவு, ஆவிக்குரிய முதிர்ச்சி, சமுதாய நிலை ஆகியவற்றின் அடிப்படையில் நாம் ஏற்றுக்கொள்வதில்லை. **கிறிஸ்து** யாரை ஏற்றுக்கொண்டிருக்கிறாரோ அவரை **தேவனுக்கு மகிமையுண்டாகும்படி** நாம் **ஏற்றுக்கொள்ள** வேண்டும்.

**15:8** இயேசு கிறிஸ்துவின் ஊழியம் யூதர்கள் மற்றும் புறவினத்தவர் ஆகிய இரு சாராரிடத்திலும் விளங்கியது என்றும் அதன் காரணமாக, நம்முடைய இருதயம் அந்த இரு சாராரையும் ஏற்றுக்கொள்ளக்கூடியபடி பெரியதாயிருக்க வேண்டும் என்றும் பவுல் அடுத்து வரும் ஆறு வசனங்களில் தன் வாசகர்களுக்கு நினைவூட்டுகிறார். உண்மையாகவே, யூத மக்களாகிய விருத்த சேதனம் பெற்றவர்களுக்கு ஊழியம் செய்ய இயேசு கிறிஸ்து வந்தார். இஸ்ரவேலுக்கு மேசியாவை அனுப்புவதாக தேவன் அவ்வப்போது வாக்களித்தார். அந்த வாக்குத்தத்தங்களின் உண்மையை அவருடைய வருகை உறுதிப்படுத்தியது.

**15:9** ஆனால் **புறவினத்தவர்களுக்கும்** கிறிஸ்து ஆசிர்வாதத்தைக் கொண்டுவந்தார். அனைத்து நாட்டு மக்களும் நற்செய்தியைக் கேட்க வேண்டும் என்றும், விசுவாசிக்கிறவர்கள் **தேவனுடைய** பெரிதான **இரக்கத்திற்காக** அவரை **மகிமைப்படுத்த வேண்டும்** என்றும் தேவன் நோக்கம் கொண்டார். இவ்வுண்மை யூதர்களுடைய வேதத்தில் அவ்வப்போது முன்னுரைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அவர்கள் இது குறித்து வியப்படையத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக சங்கீதம் 18:49-இல் அநேக புறவின விசுவாசிகளுக்கு மத்தியில் மேசியா தேவனுக்குப் புகழ்ச்சியாகப் **பாடும்** நாளை தாவீது எதிர்பார்த்தான்.

**15:10 அவருடைய ஜனங்களாகிய** இஸ்ரவேலரோடு புறவினத்தவர்கள் களிகூருவார்கள் என்று உபாகமம் 32:43 சித்திரித்துக் காட்டுகிறது.

**15:11** மேசியாவின் ஆயிரம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் **கர்த்தரைத் துதிக்கும்**படியாக இஸ்ரவேல் **புறவினத்தவர்களை** அழைப்பதாக சங்கீதம் 117:1 -இல் நாம் காண்கிறோம்.

**15:12** இறுதியாக, மேசியாவின் ஆட்சியில் **புறவினத்தவரும்** இடம் பெறுவார்கள் என்று கூறி **ஏசாயா** தன் சான்றைக் கூட்டி வழங்குகிறான் (ஏசாயா 11:1,10). மேசியாவினிடத்திலிருந்தும் நற்செய்தியினிடத்திலிருந்தும் வருகிற நற்பேறுகளைப் **புறவினத்தவரும்** பங்கிட்டுக்கொள்வர் என்பதே இங்கு கூறப்படும் குறிப்பாகும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **ஈசாயின் வேர்**; அதாவது அவரே ஈசாயைப் படைத்தவர். ஈசாயினிடத்திலிருந்து துளிர்த்தவர் என்பது பொருளன்று (அதுவும் ஒரு பொருளில் உண்மையாகும்.) வெளிப்படுத்தின விசேஷம் 22:16 -இல் தாவீதின் வேரும் சந்ததியும் என்று தம்மைக் குறித்து இயேசு கிறிஸ்து பேசுகிறார். அவருடைய தெய்வீகத்தின்படி அவர் தாவீதின் படைப்பாளர்; அவருடைய மனிதத் தன்மையின்படி அவர் தாவீதின் சந்ததியாவார்.

**5:13** கிருபை நிறைந்த வாழ்த்துரையோடு பவுல் இப்பகுதியை நிறைவு செய்கிறார். **தேவனிடத்தில் நம்பிக்கை** கொள்கிறதாலே, கிருபையின் மூலமாக நல்ல நம்பிக்கையைத் தருகிறவர், பரிசுத்தவான்கள் அனைவரையும் **எல்லாவித**

**சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிரப்புவார்.** ஒருவேளை, புறவின விசுவாசிகளை மனதிற்கொண்டே பவுல் இந்த மன்றாட்டை ஏறெடுக்கிறதாகத் தோன்றுகிறது. ஆனாலும் அது எல்லோருக்கும் பொருத்தமானதாகக் காணப் படுகிறது. **பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நம் பிக்கை பெருகுகிறவர்கள்,** முக்கியமற்ற காரி யங்களைக் குறித்துச் சண்டையிட்டுக்கொள்ள நேரமற்று இருக்கின்றார்கள் என்பது உண் மையே. நம்முடைய பொதுவான நம்பிக்கை யானது கிறிஸ்தவ வாழ்க்கையில் வலிமை மிக்க வகையில் இணைக்கும் சக்தியாக விளங்குகிறது.

### எ. பவுலின் முன்னேற்பாடுகளில் கிறிஸ்தவ வாழ்க்கை (15:14-33)

**15:14** இந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதியில் ரோமாபுரிக் கிறிஸ்தவர்களுக்கு இம்மடலை எழுதியதற்கான காரணத்தையும் அவர்களைச் சந்திக்க அவர் கொண்ட விருப்பத்தையும் பற்றி பவுல் கூறுகிறார்.

ரோமாபுரிக் கிறிஸ்தவர்களை அவர் இதுவரை காணாதிருந்தும், அவருடைய அறிவுரைகளை அவர்கள் வரவேற்பார்கள் என்று அவர் **நிச்சயத் திருக்கிறார்.** அ.்.து அவர்களுடைய **நற்குணத் தின்** அடிப்படையில் எழுந்த நம்பிக்கையாகும். கிறிஸ்தவ உபதேசங்களைக் குறித்த **அறிவோடு** அவர்கள் இருந்தார்கள் என்னும் உறுதியோடும் அவர் இருந்தார். பிறருக்குப் **புத்திசொல்லும் படியான** நிலைக்கு அவர்களை அவ்வறிவு தகுதி யாக்கிற்று.

**15:15,16** அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சி யில் அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். மேலும் அவர்களுக்கு அறிமுகம் இல்லாதவராக அவர் இருந்தார். ஆனாலும் அவர்களுடைய சிலாக் கியங்களையும் பொறுப்புகளையும் குறித்து அவர் களுக்கு நினைவூட்ட பவுல் தயங்கவில்லை. இந்த ஒளிவு மறைவு இன்மையை, அவரை அப் போஸ்தலனாக நியமித்த தேவன் அவருக்கு **அளித்த கிருபையினாலே** பெற்றார்.

**புறவின மக்களிடையே இயேசு கிறிஸ்து விற்காகப்** பணிபுரிய ஒருவகை ஆசாரியனாக தேவனால் அவர் நியமிக்கப்பட்டார். **தேவனு டைய சுவிசேஷ ஊழியமாகிய** தனது அலு வலை ஆசாரியப் பணியாக எண்ணிப் பார்த்து, அவ்வூழியத்தில் புதுப்பிறப்பின் மூலமாகப் **பரி சுத்த ஆவியினால்** பிரித்தெடுக்கப்பட்டவர் களான **புறவின மக்களை** பவுல் தேவனுக்குப் **பிரியமான பலியாக** ஒப்புவித்தார். இதுகுறித்து G. கேம்ப்பெல் மோர்கன் ஆர்ப்பரிக்கிறார்:

> நம்முடைய நற்செய்திப் பணியிலும், மேய்ப்பர் வேலையிலும் இஃது எவ்வளவாக ஒளிச்சுட ரைப் பொழிகிறது! நற்செய்திப் பிரகடனத்தினால் வெல்லப்பட்ட ஆத்துமா பாதுகாப்பானதும் ஆசிர்வாதமுமான இடத்திற்குக் கொண்டுவரப் படுவது மட்டுமின்றி தேவனுக்குக் காணிக்கை யாகவும் விளங்குகிறது. அவர் மனநிறைவு கொள்ளத்தக்க அன்பளிப்பாகவும், அவர் எதிர் நோக்கிய காணிக்கையாகவும் அவன் திகழ் கிறான். கிறிஸ்துவைப் பற்றிய பொருளில் கவனமாகவும், பொறுமையாகவும் கற்பிக்கப் பட்டதும், அவருடைய சாயலுக்கு ஒப்பான சாய லுக்கு மாறுவதற்கு ஏதுவாக்கப்பட்டதுமான ஒவ்வொரு ஆத்துமாவும் பிதாவைக் களிகூரச் செய்யும். எனவே மனிதர்களுடைய இரட்சிப் பிற்காக மட்டுமின்றி, தேவனுடைய உள்ளத் திற்கு மனநிறைவு அளிக்கும்படியாகவும் நாம் உழைக்கிறோம். இதுவே மிகுந்த ஆற்றல்மிக்க செயல் நோக்கமாகும்.[58]

**15:17** பவுல் மேன்மை பாராட்டலில் ஈடுபடுவார் எனில், அது அவருடைய சொந்தக் குணநலன் களைக் குறித்ததாயிராது. **கிறிஸ்து இயேசுவைக்** குறித்தே அவர் மேன்மை பாராட்டினார். மேலும் அவர் தன்னுடைய சொந்தச் சாதனைகளைக் குறித்து மேன்மை பாராட்டாமல், அவர் மூலமாகச் செயலாற்ற தேவன் மனமகிழ்ச்சி கொண்டிருந் தார் என்பதை அறிந்து அதில் மேன்மை பாராட்டி னார். கிறிஸ்துவின் தாழ்மையுள்ள ஊழியக்காரன் எவனும் ஒவ்வாத முறையில் பெருமை பாராட்ட மாட்டான். மாறாக, தேவன் தமது திருநோக்கத்தை நிறைவேற்றத் தன்னைப் பயன்படுத்துகிறார் என்ற உண்மையை உணர்ந்திருப்பான். தன்னில் ஒரு மேன்மையும் இல்லை என்ற அறிவு, பெருமை கொள்ளும்படி எழுகிற எந்தவொரு ஏவுதலையும் தணியச்செய்யும். கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளாத ஏதொன்றும் தன்னிடத்தில் இல்லை யென்றும், தூய ஆவியானவர் தருகின்ற வல்லமை யினாலன்றி கிறிஸ்துவுக்காக ஏதொன்றையும் தன்னால் செய்ய இயலாதென்றும் அவன் அறிந் திருக்கிறதே அந்த அறிவு.

**15:18** பிறருடைய ஊழியங்களின் மூலமாக, **கிறிஸ்து என்ன** செய்தார் என்பதைப் பற்றிச் **சொல்ல** பவுல் **துணியவில்லை. புறவினத்தவர்** கீழ்ப்படியும் பொருட்டு கர்த்தர் எவ்வாறு தன்னைப் பயன்படுத்தினார் என்பதை மட்டுமே அவர் பேசு

கிறார். அதற்கென பவுல் ஆற்றிய பிரசங்கங்கள், அதன் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட செய்திகள் மற்றும் அவர் ஆற்றிய செயல்கள், அதாவது அற்புத அடையாளங்கள் ஆகியவற்றைப் பற்றி மட்டுமே பேசுகிறார்.

**15:19** அப்போஸ்தலனுடைய செய்திகள் ஆவிக்குரிய பாடங்களைக் கற்பித்தன, மற்றும் திகைப்பூட்டக்கூடிய ஏவுதல்களை உண்டுபண்ணின. இவற்றை அற்புத அடையாளங்களினாலும், ஆவியானவரின் பலவகையான வல்லமை மிகுந்த செயல்களினாலும் கர்த்தர் உறுதிப்படுத்தினார். இதன் விளைவாக **எருசலேம்** தொடங்கி ஒரு வளையம் போல் விரிவாக்கம் அடைந்து **இல்லிரிக்கம்** வரைக்கும் அவர் **கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்தார்.** (இல்லிரிக்கம் என்னும் நாடு மக்கெதோனியாவின் வடபுறம் அட்ரியாடிக் கடற்கரையில் அமைந்துள்ளது.) எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் வரை என்பது அவருடைய ஊழியத்தின் நிலப்பரப்பைக் குறிக்கிறதேயொழிய, ஊழியத்தின் கால வரிசையைக் காட்டவில்லை.

**15:20,21** அதுவரை நற்செய்தி பிரசங்கிக்கப்படாத பகுதிகளில் சுவிசேஷத்தை அறிவிப்பதே இந்த வழியை பவுல் நாடியதற்கான காரணம் ஆகும். கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படாத புறவினத்தவர்களே பவுல் அறிவித்த செய்தியைக் கேட்டவர்களில் பெரும்பாலோர் ஆவர். அவ்வகையில், அவர் வேறொருவர் கட்டின **அஸ்திபாரத்தின்** மேல் கட்டவில்லை. புது இடங்களுக்கு முன்னோடியாகப் பவுல் சென்ற செயலை மாதிரியாக மற்ற ஊழியர்களும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்ற நிபந்தனையில்லை. எடுத்துக்காட்டாக ஓரிடத்தில் புதிய சபைகள் நிறுவப்பட்ட பிறகு அங்கு சென்று போதிக்கும்படியாகச் சிலர் அழைப்பைப் பெறுகின்றனர்.

இதுவரை நற்செய்தி அறிவிக்கப்படாதிருந்த புறவினத்தவர் **காண்பார்கள்**, இதுவரை நற்செய்தியைக் கேள்விப்படாதிருந்தவர்கள் அதனை உணர்ந்து மெய்யான விசுவாசத்துடன் ஏற்றுக் கொள்வார்கள் என்று ஏசாயா முன்னுரைத்தது நிறைவேறும்படியாகப் புறவின மக்களிடையே முன்னோடி ஊழியத்தை பவுல் செய்தார்.

**15:22,23** உழப்படாத நிலத்தை உழும்படியாகப் பவுல் கொண்ட விருப்பத்தினால் ஏற்பட்ட வேலை மிகுதியானது, அவர் முன்னமே ரோமாபுரிக்குச் செல்வதைத் தடைசெய்தது. 15:19 ஆம் வசனத்திலே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் **இப்பொழுது** அடித்தளம் போடப்பட்டுவிட்டது. அந்த அடித்தளத்தின் மீது பிறரால் கட்ட இயலும். ஆகவே நீண்ட காலமாகப் பவுல் ரோமாபுரிக்குச் செல்ல வேண்டும் என்று கொண்டிருந்த **விருப்பம்** நிறைவேற வகையுண்டாயிற்று.

**15:24** ஸ்பானியா நாட்டிற்குச் செல்லும் வழியில் ரோமில் தங்க வேண்டுமென்று அவர் திட்டமிட்டார். அவர்களிடத்தில் சகல விதத்திலும் ஐக்கியம் பெற்று மகிழ்ந்திருக்க வேண்டுமென்ற அவரது விருப்பம் நிறைவேறும்படி அவரால் அங்கு நீண்டகாலம் தங்கியிருக்க முடியாது. எனினும், அவர்களைக் **கண்டுகொள்ளவும்** ஓரளவு மனநிறைவு அடையவும் கூடும் என எண்ணினார். மேலும் ஸ்பானியாவிற்குச் செல்வதற்கான அவருடைய தேவைகளை அவர்கள் சந்திப்பார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

**15:25** ஆனால் அதற்கு முன்னதாக அவர் **எருசலேமுக்குப் பிரயாணம்** செய்ய வேண்டும். யூதேயாவில் உள்ள தேவையுள்ள **பரிசுத்தவான்களுக்காகப்** புறவின நாடுகளில் இருக்கும் சபைகளில் திரட்டிய நிதியை அங்கு சென்று கொடுக்க வேண்டும். இந்தப் பணத்தைக் குறித்தே நாம் 1 கொரிந்தியர் 16:1 மற்றும் 2 கொரிந்தியர் 8,9 ஆகிய பகுதிகளில் படிக்கிறோம்.

**15:26,27 தரித்திரராய்** இருந்த கிறிஸ்தவர்களின் கடுமையான வறுமையை நீக்கும்பொருட்டு மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் இருந்த விசுவாசிகள் மகிழ்ச்சியுடன் பணம் கொடுத்தார்கள். கொடுத்தவர்கள் தாங்களாகவே மனமுவந்து கொடுத்தார்கள். அச்செயல் அவர்களுக்குப் பொருத்தமானதாகவும் இருந்தது. யூத விசுவாசிகள் மூலமாகவே நற்செய்தியைப் பெற்று அவர்கள் ஆவிக்குரிய நன்மைகளை அடைந்தார்கள். ஆகவே அவர்கள் யூத சகோதரர்களுக்குப் **பொருள் சகாயம்** செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பது செய்யக்கூடாத பெரிதான செயலல்ல.

**15:28,29** வாக்குரைத்த வண்ணம் பணத்தைக் கொடுத்து அந்தப் பணியை **நிறைவேற்றிய** பிறகு, பவுல் ஸ்பானியாவுக்குச் செல்லும் வழியில் ரோம் நகருக்கு வருகை புரிவார் என்றும், தேவனுடைய திருவார்த்தையைப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் பிரசங்கிக்கும் வேளைகளிலெல்லாம் **கிறிஸ்து, சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசிர்வாதத்தைப்** பொழிவார் என்றும் இந்த நற்பேற்றின் நிறைவோடு அவர் ரோமாபுரிக்கு செல்லவிருந்தார் என்றும் அவர் முழு நம்பிக்கை உடையவராக இருந்தார்.

15:30-32 அவர்களுடைய ஊக்கமான **ஜெபங்களை** வேண்டியவராக அப்போஸ்தலன் இந்தப் பகுதியை முடிக்கிறார். **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு** அவர்கள் பரஸ்பர இணக்கமுள்ள ஐக்கியத்தைக் கொண்டிருந்தார்கள். தூய **ஆவியானவரிடத்திலிருந்து** வந்த அன்பை உடைய வராய் அவர்கள் இருந்தார்கள். இவையிரண்டும் அவருடைய வேண்டுதலுக்கு ஆதாரமாயிருந்தன. அவருக்காக அவர்கள் **ஜெபங்களில்** தேவனை நோக்கிப்போராட வேண்டுமென்று அவர் விண்ணப்பிக்கிறார். "அரங்கத்தில் போட்டியிடுபவர்கள் எவ்வாறு தங்களுடைய முழு உள்ளத்தையும் ஆத்துமாவையும் ஈடுபடுத்திச் சண்டையிடுகிறார்களோ அதுபோன்று ஜெபிக்க வேண்டும் என்று இந்த அழைப்பு விளங்குகிறது" என்று லென்ஸ்கி என்பார் கூறியுள்ளார்.[59]

நான்கு பிரத்யேக ஜெபக்குறிப்புகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. *முதலாவதாக*, அவர் முன்னர் இருந்தது போன்று நற்செய்தியை வன்மையாக எதிர்த்து நின்ற வைராக்கியமிக்க **யூதேயா** நாட்டு மக்களிடத்திலிருந்து அவர் **தப்பவேண்டுமென்று** விண்ணப்பிக்க வேண்டுகிறார்.

இரண்டாவதாக, உதவிப் பணத்தை யூதப் **பரிசுத்தவான்கள்** நற்கிருபையுள்ள உள்ளத்தோடு ஏற்றுக்கொள்வதற்காக ரோமாபுரி விசுவாசிகள் விண்ணப்பிக்க வேண்டுமென்று விரும்புகிறார். புறவின விசுவாசிகளைக் குறித்தும், அவர்களிடையே நற்செய்தியைப் பிரசங்கிக்கும் ஊழியர்களைக் குறித்தும் யூத விசுவாசிகள் தவறான சமயக் கருத்துடையவராக இருந்தார்கள். மேலும் "தர்மப்பணத்தைப்" பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லும்போது அது மனிதர்களுடைய உள்ளத்தைப் புண்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். கொடுப்பதைக் காட்டிலும் பெற்றுக்கொள்வதற்கு அதிக கிருபை தேவைப்படுகிறது!

*மூன்றாவது வேண்டுதல்* யாதெனில், அவருடைய ரோமாபுரி வருகை மகிழ்ச்சியுள்ளதாகவும் இருக்க அதைக் கர்த்தர் தகுதியுள்ளதாக ஆக்க வேண்டும் என்பதாகும். எல்லாவற்றிலும் கர்த்தருடைய வழிநடத்துதல் இருக்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறதை **தேவசித்தத்தினாலே** என்னும் சொற்றொடர் வெளிப்படுத்துகிறது.

*இறுதியாக*, கொந்தளிப்பு மிகுந்ததும், சோர்வடையச் செய்ததுமான ஊழியத்தின் இடையே **இளைப்பாறுதலுக்கு** ஏதுவாக அவருடைய வருகை விளங்கவேண்டுமென்று நாடுகிறார்.

15:33 இந்த அதிகாரத்தைப் பவுல் ஜெபத்துடன் முடிக்கிறார். சமாதானத்தின் ஆதாரமாகிய தேவன் அவர்களுடைய பங்காக விளங்க வேண்டுமென்று அவர் விண்ணப்பிக்கிறார். இந்தப் பதினைந்தாம் அதிகாரத்தில், *பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன்* என்றும் (வச. 6), *நம்பிக்கையின் தேவன் என்றும்* (வச. 13), இங்கே *சமாதானத்தின் தேவன்* என்றும் தேவன் அழைக்கப்படுகிறார். இப்பொழுதும் நித்தியத்திலும் எளிய விசுவாசிக்குத் தேவையான எல்லா நன்மைக்கும் அவரே ஆதாரமாயிருக்கிறார். **ஆமென்.**

### ஏ. பிறர் மேன்மை அறிந்து பாராட்டுதலில் கிறிஸ்தவ வாழ்க்கை (16:1-27)

இந்தக் கடைசி அதிகாரத்தை மேலோட்டமாகப் பார்க்கையில், நமக்கு எவ்விதச் சம்பந்தமற்றதும், கவர்ச்சியற்றதுமாகத் தோன்றுகிற நீண்ட தொரு பெயர்ப்பட்டியலைக் காண்கிறோம். என்றாலும் இதனை ஊன்றிப் படிப்போமென்றால், புறக்கணிக்கப்பட்ட இந்த அதிகாரம் விசுவாசிகளுக்குப் பற்பல இன்றியமையாத பாடங்கள் புகட்டுவதை அறிய முடியும்.

**16:1 கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி** என்று **பெபேயாள்** அறிமுகப்படுத்தப்படுகிறாள்.[60] ஏதோ சிறப்பான பட்டத்தைப் பெற்றவர்களின் வகுப்பைச் சேர்ந்தவள் என்று அவளைக் குறித்து நாம் சிந்திக்கத் தேவையில்லை. எந்த ஒரு சகோதரியும், உள்ளூர் சபையோடு இணைந்து பணிபுரிகிறவளாக இருப்பாளென்றால் அவள் "உதவிக்காரி" என்று அழைக்கப்படுவாள்.

16:2 தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் ஒரு சபையிலிருந்து இன்னொரு சபைக்குப் பயணப்பட்டுச் சென்றபோது அறிமுக மடல் ஒன்றை எடுத்துச் சென்றார்கள். அவ்வாறு பயணம் செய்பவரை வரவேற்கும் சபைக்கு மதிப்பையும், வருகை புரிவோருக்கு உதவியையும் அத்தகைய மடல் தருகிறது.

ஆகவே, இங்கே பெபேயாளை அப்போஸ்தலன் அறிமுகப்படுத்துகிறார். மேலும், **பரிசுத்தவான்களுக்கேற்றபடி** மெய்யான விசுவாசியாக அவள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று அவர் வேண்டுகிறார். அவளுக்கு என்னென்ன உதவிகளை அவர்களால் செய்யக் கூடுமோ அவற்றைச் செய்யும்படியாகவும் அவர் வேண்டுகிறார். பவுலுக்கும் மற்றும் பலருக்கும் அவள் தன்னையே ஒப்புவித்து உதவி செய்தவள் என்று அவளைக் குறித்த

பாராட்டையும் அவர் இங்கு தெரிவிக்கிறார். கெங்கிரேயாவில் பிரசங்கிகளுக்கும் மற்ற விசுவாசிகளுக்கும் எப்பொழுதும் விருந்தோம்பல் பராட்டியவளும் அயர்ச்சியின்றி உழைத்தவளுமாக அவள் இருந்திருக்கக் கூடும்.

**16:3** அடுத்தபடியாக, பிரிஸ்கில்லாள் மற்றும் ஆக்கில்லா ஆகியோருக்குத் தனது வாழ்த்தை பவுல் தெரிவிக்கிறார். **கிறிஸ்து இயேசுவுக்கு** அவர் ஆற்றிய பணியில் துணிவுமிக்க **உடன் வேலையாட்களாக** உழைத்தவர்களே அவர்கள். கிறிஸ்துவுக்காகத் தங்களையே ஊற்றி, தியாகமாய் உழைக்கும் தம்பதிகளுக்காக எவ்வாறு நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்!

**16:4** ஒரு சந்தர்ப்பத்தில் பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் பவுலுக்காகத் தங்கள் **கழுத்தைக்கொடுத்து** உயிரையே பணயம் வைத்தார்கள். அந்த வீரச் செயலைப் பற்றிய விவரங்கள் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. எனினும் அப்போஸ்தலன் அதற்காக நன்றியறிதல் உடையவராக இருக்கிறார். அதுபோல மனந்திரும்பிய **புற வினத்தவர்களால்** ஆன **சபையாரெல்லாரும்** அவர்களுக்குச் செய்யப்பட்ட சேவைக்காக நன்றியுடையவராய் இருக்கின்றார்கள்.

**16:5 அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள்**. விசுவாசிகள் ஒன்று கூடுகிற சபையானது அவர்களுடைய வீட்டிலே கூடியது என்பதுதான் இதன் பொருளாகும். இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி வரை சபைக் கட்டிடங்கள் என்றால் என்னவென்று தெரியாது. இதற்கு முன்னர், பிரிஸ்கில்லாளும் ஆக்கில்லாவும் கொரிந்துப் பட்டணத்தில் வசித்தபோது அவர்களுடைய இல்லத்தில் சபை கூடிவந்தது.

**எப்பனெத்** என்னும் பெயர் "புகழப்படத்தக்க" என்று பொருள்படும். அகாயா மாநிலத்தில் முதன்முதல் மனந்திரும்பிய இந்த மனிதன் தன்னுடைய பெயருக்கு எற்ற வண்ணம் திகழ்ந்ததில் எவ்வித ஐயமுமில்லை.[61] **எனக்குப் பிரியமானவன்** என்று பவுல் இவனைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**16:6** பெண்கள் பெருமளவில் பயனுள்ளவர்களாக இருந்ததை முதன்மைப்படுத்திக் கூறும்படி இந்த அதிகாரத்தில் சிறப்பான வகையில் அவர்களது பெயர்கள் காணப்படுகின்றன (வசனங்கள் 1,3,6,12 மற்றும் பல). பரிசுத்தவான்களுக்காக **மரியாள்** மிகக் கடுமையாகப் பணியாற்றினாள்.

**16:7 அன்றோனீக்கு, யூனியா** ஆகிய இருவரும் எப்பொழுது பவுலுடன் **காவலில் கட்டுண்டவர்களாக** இருந்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. என் இனத்தார் என்று இங்கு அப்போஸ்தலன் குறிப்பிட்டிருப்பதால் அவர்கள் அவரது நெருங்கிய உறவினரா அல்லது உடன் யூதர்கள் மட்டுமா என்பதைக் குறித்து உறுதியாக நம்மால் சொல்ல முடியாது. அப்போஸ்தலருக்குள் பெயர் பெற்றவர் என்னும் சொற்றொடர் அப்போஸ்தலர்களால் மதிக்கப்பட்டவர்கள் என்று பொருள்படுமா அல்லது அவர்களே புகழ்பெற்ற அப்போஸ்தலர்களாகத் திகழ்ந்தார்கள் என்று பொருள்படுமா என்பதையும் நாம் அறியமாட்டோம். பவுல் கிறிஸ்தவராக மாறுகிறதற்கு **முந்தியே** அவர்கள் கிறிஸ்தவர்களாகிவிட்டார்கள் என்பதை மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம்.

**16:8** அடுத்ததாக, அப்போஸ்தலனுக்குப் **பிரியமான அம்பிலியாவைச்** சந்திக்கிறோம். இவர்கள் கல்வாரியோடு தொடர்பற்றவர்களாக இருந்திருப்பார்களெனில், இவர்களில் எவர் ஒருவரையும் நாம் அறிந்திருக்க மாட்டோம். நம்மைக் குறித்தும் மேன்மையானது அது ஒன்றே.

**16:9** உடன் வேலையாள் என்னும் பட்டத்தை **உர்பான்** பெறுகிறான். மேலும் **ஸ்தாக்கி எனக்குப் பிரியமானவன்** என்று அழைக்கப்படுகிறான். கிறஸ்துவின் நியாயாசனத்தைப் போன்று ரோமர் 16 -ஆவது அதிகாரம் காணப்படுகிறது. அங்கே கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளபடி விளங்கின ஒவ்வொரு நிகழ்ச்சியும் நினைவுகூரப்பட்டுப் புகழப்படும்.

**16:10** பெரும் சோதனையில் அகப்பட்ட **அப்பெல்லே,** அதை வென்று வாகை சூடி **கிறிஸ்துவுக்குள் உத்தமன்** என்ற முத்திரையைப் பெறுகிறான்.

**அரிஸ்தொபூலுவின் வீட்டாரை** பவுல் வாழ்த்துகிறார். மகா ஏரோதின் பேரனுக்குச் சொந்தமான கிறிஸ்தவ அடிமைகளை அவர் குறிப்பிடுகிறார் என்றே தோன்றுகிறது.

**16:11 ஏரோதியானும்** ஒரு அடிமையாக இருந்திருப்பான். பவுலுக்கு இனத்தானாகிய அவன் ஒருவனே அரிஸ்தொபூலுவின் வீட்டாரில் ஒரேஒரு யூத அடிமையாக இருந்திருப்பான்.

மேலும் **நர்கீசுக்குச்** சொந்தமான அடிமைகளில் சிலர் விசுவாசிகளாக இருந்தார்கள். சமுதாய நிலையில் மிகவும் தாழ்மையான இடத்தில் இருந்தவர்களும் சிறப்பான கிறிஸ்தவ வாழ்த்துகளைப் பெறுவதில் விலக்கப்படவில்லை. இந்தப் பெயர்ப்பட்டியலில் அடிமைகளின் பெயர்கள் இடம் பெற்றிருப்பது, கிறிஸ்துவுக்குள்ளாகச்

சமுதாய ஏற்றத்தாழ்வுகள் முற்றிலும் துடைத்த ழிக்கப்பட்டு நாம் அனைவரும் ஒன்றாயிருக் கிறோம் என்னும் இன்பமான உண்மையை நினைவுபடுத்துகிறது.

**16:12 திரிபேனாள்** மற்றும் **திரிபோசாள்** என்னும் பெயர்கள் முறையே "கவர்ச்சியான" என் றும் "சுகபோகமான" என்றும் பொருள்படும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய பணியில் கடுமையாக உழைத்தவர்கள். உள்ளூர் சபை களில் மிகவும் அவசியமானவர்கள் என்று கருதப் பட்ட ஊழியக்காரிகளில் **பிரியமான பெர்சியா ளும்** ஒருத்தி. அப்படிப்பட்டவர்கள் இருக்கும்வரை அதிகமாகப் புகழப்படுகிறதில்லை.

**16:13** ரூபு என்பான் இயேசு கிறிஸ்துவுக்காகச் சிலுவையைச் சுமந்த சீமோனின் மகனாக இருக்கலாம் (மத். 27:32). இரட்சிப்பிற்காக மட்டு மின்றி கிறிஸ்தவ நற்குணமுடையவனாகவும் அவன் **கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட் டான்.** அதாவது அவன் ஒரு நேர்த்தியான பரிசுத்த வான். தாய் பராட்டும் தயவைப் பவுலுக்குக் காட்டி யவர் ரூபின் தாய். அதன் காரணமாக "என் தாய்" என்ற நேசமான பட்டத்தை அவள் ஈட்டினாள்.

**16:14,15** பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா ஆகி யோரின் வீட்டில் கூடிய சபையைப் போல, வேறொரு வீட்டில் கூடிய சபையில் **அசிங்கிரீத்து, பிலெகோன், எர்மா, பத்திரொபா**, மற்றும் **எர்மே** ஆகியோர் அயராது உழைத்தவர்கள் (16:3,5). **பிலொலோகு, யூலியாள், நேரே மற்றும் அவனுடைய சகோதரி ஒலிம்பா** ஆகியோர் இன் னொரு வீட்டில் கூடிய சபையின் முக்கியமான உறுப்பினர்களாக இருந்தார்கள் போலும்.

**16:16** பரிசுத்தவான்கள் நேசத்துடன் வாழ்த் தும் முறையாக, பரிசுத்த முத்தத்தைப் பயன்படுத் தினார்கள். இன்றைய நாட்களிலும் சில நாடுகளில் இம்முறை பயன்படுத்தப்படுகிறது. ஒழுங்கின்மை யினின்று காத்துக்கொள்ளும் பொருட்டு பரிசுத்த முத்தம் என்று அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. நம்முடைய பண்பாட்டில் **முத்தத்திற்குப்** பதிலாக இரு கைகூப்பி வணக்கம் தெரிவிக்கப்படுகிறது.

பவுல் இம்மடலை அகாயாவிலிருந்து எழுதி னார். அங்குள்ள **சபையாரும்** வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

**16:17** இரகசியமாய்ச் சபைக்குள்ளே நுழைகிற துன்மார்க்கரான போதகர்களைப் பற்றி ஒரு எச்சரிக்கையைக் கொடுக்காமல் இம்மடலை அப்போஸ்தலனால் நிறைவுசெய்ய முடியவில்லை. தங்களுக்கென்று ஒரு கூட்டத்தைக் கூட்டிக் கொண்டு, விழிப்போடு இல்லாத மக்களின் விசு வாசத்தை அழித்துவிடும்படி வலை விரிக்கிற மனிதர்களினின்று கிறிஸ்தவர்கள் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்கள் **கற்றுக்கொண்ட** ஆரோக்கியமான **உபதேசத் திற்கு விரோதமாகப்** போதிக்கிறவர்களைக் கண்டறிந்து அவர்களைவிட்டு முழுவதுமாக **விலகவேண்டும்.**

**16:18** இந்தக் கள்ளப்போதகர்கள் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக்** கீழ்ப்படிவதில்லை. தங்களுடைய சொந்த **வயிற்றுக்கே** கீழ்ப்படிகின் றார்கள். அவர்கள் தங்களுடைய வயப்படுத்துகிற சொற்களாலும் **இச்சகப் பேச்சினாலும்** வரும் ஆபத்தை முன்னுணர்ந்திராதவர்களை வஞ்சிப் பதில் வெற்றியடையக் கூடியவராய் இருக்கின் றார்கள்.

**16:19** தனது மடலை வாசிப்போர் கர்த்தருக் குக் **கீழ்ப்படியக்** கூடியவராக இருப்பது எல்லோ ருக்கும் தெரியவந்திருப்பது குறித்து பவுல் **சந் தோஷப்படுகிறார்**. இருந்தபோதிலும் அவர்கள் **நன்மையான** போதகங்களை அறியவும் கீழ்ப் படியவும், **தீமையான** சொற்களை பதிற்செய்யா மல் விட்டு விலகவும் வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

**16:20** இவ்விதமான வழியில், **சமாதானத்தின்** ஆதாரமாகிய **தேவன், சாத்தான்**மேல் அவர் களுக்குச் சடுதியில் வெற்றியைத் தருவார்.

மகிமையை நோக்கிச் செல்லும் அவர்களு டைய பீடுநடையில் தேவையான அனைத்துச் சாத்தியக்கூறுகளையும் பெற்றுக்கொள்ள வேண்டு மென்ற விருப்பத்தை, அப்போஸ்தலன் தனது தனிச்சிறப்புமிக்க வாழ்த்தில் கூறுகிறார்.

**16:21** பவுலுக்கு விசுவாசத்தில் உத்தம குமார னும் உண்மையுள்ள உடன் ஊழியனுமாக **தீமோத்தேயு** விளங்கினான் என்பதை நாம் அறிவோம். ஆனால் **லூகி** என்பவன் யூதப் பெற் றோருக்குப் பிறந்தவன் என்பதைத் தவிர நமக்கு வேறு எதுவும் தெரியாது. யாசோன், **சொசிபத்தர்** ஆகியோரை நாம் ஏற்கனவே கண்டிருக்கிறோம் (அப். 17:5; 20:4). அவர்களும் யூத குலத்தைச் சார்ந்தவர்களே ஆவார்கள்.

**16:22 இந்த நிருபத்தை** பவுல் சொல்ல, எழுதி யவன் **தெர்தியு** என்பவனாவான். அவன் தன்னு டைய வாழ்த்துதலைப் படிப்போருக்குத் தெரி விக்க உரிமை எடுத்துக்கொள்கிறான்.

**16:23** புதிய ஏற்பாட்டில் காயு என்னும் பெயருடைய நான்கு நபர்களைக் காணமுடியும். 1 கொரிந்தியர் 1:15 -இல் சொல்லப்பட்டவனே இவன் என்று கருதத் தோன்றுகிறது. பவுலுக்கு மட்டுமின்றி, இன்னும் தேவையுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் விருந்தோம்பல் புரிவதில் இவன் பெயர் பெற்றவனாயிருந்தான். கொரிந்துப் **பட்டணத்து உக்கிராணக்காரனாக எரஸ்து** விளங்கினான். அப்போஸ்தலர்கள் 19:22 மற்றும் அல்லது 2 தீமோத்தேயு 4:20 -இல் குறிப்பிடப்பட்டுள்ளவன் இவனோ என்பதை நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது. **குவர்த்து** என்பவன் **சகோதரன்** என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளான். ஆயினும் சகோதரன் என்னும் சொல் என்னவொரு கனத்தையும், என்னவொரு மேன்மையையும் உடையதாயிருக்கிறது!

**16:24 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக.** மடலை எழுதி முடிக்கும் தறுவாயில் பவுல் வழங்குகிற தனிச்சிறப்பு மிக்க வாழ்த்துரை இதுவே ஆகும். 20 -ஆவது வசனத்திலும் இதே வாழ்த்துரையை அவர் வழங்கியிருக்கிறார். அனைவரோடும் என்ற சொல் இங்கே சேர்க்கப்பட்டிருக்கிறது. பல வேதாகமக் கையெழுத்துப் பிரதிகளில் இதுவே கடைசி வசனமாக இருக்கிறது. 25-27 ஆகிய வசனங்களில் உள்ள துதிப்பாடல் 14 ஆவது அதிகாரத்தைத் தொடர்ந்து இடம் பெறுகிறது. 20 -ஆவது வசனம் அலெக்ஸாண்டிரியா பிரதியில் விடுபட்டுள்ளது. இரண்டு வாழ்த்துரைகளும், துதிப் பாடலும் நூல் இறுதியில் அழகுற அமைந்துள்ளன. இரண்டும் ஆமென் என்று முடிவடைகின்றன.

**16:25,26** ஒரு துதிப்பாடலுடன் இம்மடல் முடிவடைகிறது. இது தேவனை நோக்கி ஏறெடுக்கப் பட்டதாகும். அவரே தம்முடைய மக்களைப் பவுல் பிரசங்கித்த **சுவிசேஷத்தின்படி** உறுதியாய் நிற்கச் செய்ய **வல்லவராயிருக்கிறார்.** பவுல் அந்த நற்செய்தியை **என் சுவிசேஷம்** என்று மீண்டும் அழைக்கிறார். இதுவே இரட்சிப்பிற்குரிய ஒரே வழியாம். ஆயினும் "புறவினத்தவருக்கு அப்போஸ்தலன்" என்னும் அடிப்படையில் பவுலுக்கு இது ஒப்புவிக்கப்பட்டது. அதே சமயம் பேதுரு இச்செய்தியை யூதர்களுக்கு அறிவித்தார். **ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து** இப்பொழுது **வெளிப்பட்டிருக்கிற** உன்னத உண்மை **இயேசு கிறிஸ்துவைப்** பற்றியதாகும். இதுவே உலகத்திற்குப் பிரகடனப்படுத்தப்படும் செய்தியாகும். முன்னர் மனிதர்களால் அறியப்படாததும், மனித ஞானத்தினால் ஒருக்காலும் கண்டுபிடிக்கக்கூடாததும், ஆனால் இப்பொழுது வெளிப்பட்டதுமாயிருக்கிற ஒன்றே புதிய ஏற்பாட்டில் இரகசியம் என்று அழைக்கப்படுகிறது.

இங்கே பேசப்படுகிற இரகசியமானது, கிறிஸ்துவின் நற்செய்தியில் விசுவாசிக்கிற யூதரும், விசுவாசிக்கிற புறவினத்தவரும் உடன் சுதந்தரர்களாகவும், கிறிஸ்துவின் சரீரத்தில் உடன் அங்கங்களாகவும், அவருடைய வாக்குத்தத்தத்தின் உடன் பங்காளிகளாகவும் ஆக்கப்படுவதைக் குறித்த சத்தியமேயாகும்.

இப்பொழுது அந்த இரகசியமானது தீர்க்கதரிசிகளின் எழுத்துகளினாலே **வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது** - பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளினால் அன்றி, புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளினால் எழுதப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டு வேதத்தில் அது அறியப்படவில்லை. ஆனால் புதிய ஏற்பாட்டுத் **தீர்க்கதரிசன ஆகமங்களில்** அது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (எபே. 2:20; 3:5 வசனங்களைக் காண்க).

இந்த நற்செய்தியானது **சகல நாடுகளும்** அறியும்படியும், அந்த **விசுவாசத்திற்குக்** கீழ்ப்படிகிற யாவரும் **இரட்சிக்கப்படும்படியும்** தேவன் இதனைக் கட்டளையிட்டார்.

**16:27** தூய ஞானத்திற்கு ஆதாரமானவரும், அதனை வெளிப்படுத்துகிறவரும் **தேவன் ஒருவரே** ஆவார். நம்முடைய **மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்** அவருக்கே என்றென்றைக்கும் **மகிமை** உண்டாவதாக.

இவ்வாறாக பவுல் எழுதிய, இந்த உன்னதமான நிருபம் முடிவடைகிறது. இதற்காகக் கர்த்தருக்கு எவ்வளவு கடன்பட்டவர்களாக நாம் இருக்க வேண்டும்! இந்த மடல் இல்லையென்றால் நாம் எவ்வளவு வறியவர்களாகக் காணப்படுவோம்! ஆமென்.

# அடிக்குறிப்புகள் - End Notes

1 (1:5) "பரிசுத்தமுள்ள ஆவியின்படி" என்னும் சொற்றொடர் கிறிஸ்துவின் சொந்த பரிசுத்த இயல்பையே குறிக்கிறது என்ற சில வேத விரிவுரையாளர்கள் கருதுகிறார்கள். அதாவது அவருடைய சொந்த மனித ஆவி என்று அவர்கள் கருதுகிறார்கள்.

2 (1:29) பிரதியெடுத்தவர்கள் சில பிரதிகளில் வேசித்தனம் என்ற சொல்லைத் தவறுதலாக எழுதாமல் விட்டிருக்கக் கூடும் என்பதை அறிவது எளிது: கிரேக்க மொழியில் Porneia என்ற செல்லும் அதற்கு அடுத்து வரக்கூடிய Poneria (துரோகம்) என்ற சொல்லும் ஒன்றுபோலக் காணப்படுகின்றன.

3 (1:31) இந்த வசனத்தில் ஐந்து சொற்களிலும் அகரம் சேர்க்கப்பட்டு எதிர்மறைப் பொருளை அவை பெற்றிருக்கின்றன. தமிழில் விசுவாசம், அவிசுவாசம் என்று சொல்லப்படுவதுபோல கிரேக்க மொழியில் aspondous (unforgiving) மற்றும் astorgous (Unloving) ஆகிய சொற்கள் இந்த வசனத்தில் உள்ளன. (தமிழில் உணர்வில்லாதவர்கள், உடன்படிக்கைகளைக் கைக்கொள்ளும் தன்மை இல்லாதவர்கள், சுபாவ அன்பில்லாதவர்கள், இணக்கமில்லாதவர்கள், இரக்கமில்லாதவர்கள் என்று இச்சொற்கள் காணப்பட்டிருக்குமானால், எல்லாச் சொற்களிலும் இல்லாதவர்கள் என்னும் எதிர்மறைப் பொருளைத் தரக்கூடிய இல்லாதவர்கள் என்னும் விகுதி இடம் பெற்றிருக்கும்.)

4 (2:4) A.P. Gibbs, *Preach and Teach the Word*, P. 12/4.

5 (2:6) Lewis S. Chafer, *Systematic Theology*, III:376

6 (3:22) NU text omits "and on all."

7 (3:23) Literally "sinned" (aorist, not perfect).

8 (Excursus) The same is true in Hebrew and Greek.

9 (3:24) Arthur T. Pierson, *Shall we Continue in Sin?* p. 23

10 (3:24) Paul Van Gorder, *in our Daily Bread*.

11 (3:30) இந்தச் சொற்களுக்கிடையே சாதுரியமான முறையில் வேறுபாட்டைக் காண்பதற் காகச் செய்யப்படுகிற முயற்சிகள் திருப்திகரமானதாக இல்லை என்று கேன்ஃபீல்டு என்பார் கூறுகிறார். இதனைச் சொல்லாட்சித்திறமை என்று அகஸ்டின் கூறுவது பெரும்பாலும் சரியா கத் தோன்றுகிறது.

12 (4:1) "மாம்சத்தின்படி நம்முடைய (முற்) தகப்பனாகிய ஆபிரகாம் என்னத்தைக் கண்டடைந்தான்" என்றும் மொழிபெயர்க்கலாம்.

13 (4:13) *Daily Notes Of The Scripture Union*, (furthur documentation unavailable).

14 (4:19) சில பிரதிகளில் எண்ணாதிருந்தான் என்ற சொல் எண்ணியிருந்தான் என்று காணப்படுகிறது. ஆயினும் பொருள் ஒன்றே.

15(4:24) C. H Mackintosh, *The Mackintosh Treasury: Miscellaneous Writings* by C. H. Mackintosh, p.66

16 (5:11) KJV மொழிபெயர்ப்பில் ஒப்புரவாகுதல் என்ற சொல்லுக்குப் பதிலாக பாவநிவாரணம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது. அது சரியானதே ஆகும். அச்சொல்லும் ஒப்புரவாகுதல் என்னும் பொருளையே தருகிறது (1611).

17 (6:1) J. Oswald Sanders, *Spiritual Problems,* p. 112.

18 (6:5) Charles Hodge, *The Epistle to the Romans,* p. 196.

19 (6:11) Ruth Paxson, *The Wealth, Walk, and Warfare of the Christian*, p. 108.

20 (6:11) C. E. Macartney, *Macartney's Illustrations*, pp.378,379.

21 (6:14) James Denny, S*t.Paul's Epistle to the Romans*," The Expositor's Greek Testament, II:635.

22 (6:19) Charles Gahan, *Gleanings in Romans,* in loco.

23 (6:21) Marcus Rainsford, *Lectures on Romans VI*, p. 172.

24 (6:21) Pierson, *Shall We Continue in Sin?* P. 45.

25 (7:15) Harry Foster, *Article in Toward the Mark*, p. 110.

26 (7:23) George Cutting, *"The Old Nature and the New BIrth"* (booklet), p. 33.

27 (8:1) "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படியே நடக்கிறவர்களுக்கு" என்னும் சொற்கள் 4 – ஆவது வசனத்திலிருந்து தவறுதலாக இங்கே சேர்க் கப்பட்டுவிட்டது என்று பரவலாகக் கருதப்படுகிறது. இருந்தபோதிலும் இந்தச் சொற்கள் பெரும்பான்மை யான பிரதிகளில் இடம்பெற்றுள்ளன. கிறிஸ்துவுக் குள்ளாக இருப்போருடைய பண்புகளை விவரிக்கும் சொற்களாகவே இருக்கின்றன எனப் பொருள் கொள் ளலாம்.

28 (8:10) NKJV மொழிபெயர்ப்பாளர்கள் Pneuma என்னும் சொல் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் 'Spirit' என்று கருதியவர்களாக 'S' என் னும் முதல் எழுத்தைத் தடித்த எழுத்தாகப் பதிப்பித் துள்ளார்கள். மூலப் பிரதியில் அச்சொல்லின் அனைத்து எழுத்துகளும் தடித்த எழுத்துகளாகவே உள்ளன. ஆகவே இவ்வசனத்திற்கு எவ்வாறு பொருள் கூறு கிறோம் என்பதே கவனிக்கவேண்டியது. நாம் இதனை (மனிதனுடைய) விசுவாசியின் ஆவியைக் குறிப்ப தாகவே கருதுகிறோம்.

29 (8:15) 28 –ஆம் அடிக்குறிப்பு எண்ணுக் கான விளக்கத்தைக் காண்க. இங்கே ஆவி என்னும் சொல் மனிதனுடைய ஆவியைக் குறிக்காமல், அடி மைத்தனத்திற்கு எதிரான மனப்பான்மையைக் குறிப் பிடுகிறது என்றே கொள்ளவேண்டும்.

30 (8:18) எபிரெய மொழியில் மகிமை என்னும் சொல் (பாரம்) என்னும் சொல்லிருந்து பிறந்தது. கிரேக்க மொழியில் இது மறைக்கப்பட்டிருந்தாலும் இங்கே யூதர்கள் சொல்விளையாட்டைக் காண முடியும்.

31 (8:31) This was John Calvin's life verse.

32 (8:32) C. H Mackintosh (furthur documentation unavailable).

33 (8:37) A very literal rendering is "We super - conquer" (hupernikomen).

34 (8:39) These words were used in astrology, for example.

35 (9:4) The New Scofield Reference Bible, p. 1317.

36 (9:5) See Hodge, Romans, pp. 299-301 for a detailed exposition of this question.

37 (9:16) G. Campbell Morgan, Searchlights from the Word, pp. 335, 336.

38 (9:21) Albert Barnes, Barnes's Notes on the New Testament, p. 617.

39 (9:23) Charles R. Erdman, The Epistle of Paul to the Romans, p. 109.

40 (10:10) William Kelly, Notes on the Epistle to the Romans, p. 206.

41 (10:10) James Denny, Quoted by Kenneth Wuest in Romans in the Greek New Testament , p. 178.

42 (10:14) Hodge, Romans, p. 545.

43 (11:1) இஸ்ரவேலுக்கு வாக்குரைக்கப்பட்ட ஆசிர்வாதங்கள் சபைக்குப் பொருந்தும் என்று கருது கிற பலர், அதற்கு எதிராக முன்னுரைக்கப்பட்ட சாபங் களை அப்படியே விட்டுவிடுவது வருத்தத்திற்குரியது.

44 (11:32) George Williams, *The Student's Commentary on the Holy Scriptures*, p. 871.

45 (11:33) Arthur W. Pink, *The Attributes of God,* p. 13.

46 (12:1) Norman Grubb, C. T. Studd, *Cricketer and Pioneer,* p. 141.

47 (12:6) Hodge, *Romans,* p. 613.õ

48 (12:6) A. H. Strong ,*Systematic Theology*, p. 12.

49 (12:6) இங்கே மூல மொழியில் சுட்டிடைச் சொல் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை நடைமுறையில் காணும்போது சில சந்தர்ப்பங்களில் பிரதிப்பெயர்ச் சொல்லுக்கு ஒப்பாகவே இருக்கிறது.

50 (12:19) R. C. H. Lenski, *St.Paul's Epistle to the Romans*, p. 780.

51 (12:21) J. N. Darby, *From footnote on Romans 12:21 in his New Translation.*

52 (12:21) George Washington Carver (furthur documentation unavailable).

53 (12:21) Quoted by Charles Swindoll in *Growing Strong in the Seasons of Life*. pp. 69,70.

54 (13:4) "kill" மற்றும் "slay" என்னும் வினைச் சொற்களுக்கு எபிரெய மொழிச் சொற்கள் qatal, harag என்பன. ஆனால் murder (rahats) என்னும் சொல்லே பத்துக் கட்டளைகளில் பயன்படுத்தப்

பட்டுள்ளது. அதனுடைய கிரேக்க மொழிபெயர்ப் பும் தெளிவாக இருக்கிறது.

55 (13:9) (NU) பழைமைப் பிரதியில் இந்தக் கட்டளை விடுபட்டுள்ளது.

56 (14:10) பழைமைப் பிரதிகளில் (NU) "தேவ னுடைய நியாயாசனம்" என்று காணப்படுகிறதே யொழிய "கிறிஸ்துவினுடைய நியாயாசனம்" என்று காணப்படவில்லை (TR மற்றும் M பிரதிகளில் "கிறிஸ்துவினுடைய நியாயாசனம்" என்று காணப் படுகிறது). கிறிஸ்துவே நியாயாதிபதியாக விளங்கு வார் என்பதை நாம் அறிவோம். ஏனெனில் பிதா நியாயத்தீர்ப்புச் செய்யும் அதி காரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22).

57 (14:23) Merrill F. *Unger, Unger's Bible Dictionary,* p. 219.

58 (15:16) Morgan, *Searchlights,* p. 337.

59 (15:30) Lenski, *Romans,* p. 895.

60 (16:1) diakonos ("servant", "deacon') என்னும் சொல்லின் பெண்பால் (ஊழியக்காரி). இங்கு பெண்கள் குறிப்பிட்ட பணியைச் செய்தார்கள் என்ப தைக் கூறவே இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது என்பது புலப்படும்.

61 (16:5) NU பழைமைப் பிரதியில் ஆசியா என்றே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆனால் பவுல் இதனைக் கொரிந்துப் பட்டணத்திலிருந்து எழுதி னார், அப்பட்டணம் அகாயாவில் இருக்கிறது).

### Bibliography


Cranfield, E. E. B. *The Epistle to the Romans,* Vol. 1 (ICC), Edinburgh:: T. & T. Clark Ltd., 1975.

Denney, James. "*St. Paul's Epistles to the Romans," The Expositor's Greek Testament, Vol 2*. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1961.

Erdman, C. R. *The Epistle of Paul to the Romans.* Philadelphia: The Westminster Press, 1925.

Gahan, Charles. *Gleanings in Romans,* Published by author.

Hodge, Charles. *Commentary on the Epistle to the Romans.* New York:: George H. Doran Company, 1886.

Kelly, William. *Notes on the Epistle to Romans.* London:: G. Morrish, 1873.

Lenski, R. C. H. *St. Paul's Epistle to the Romans. Minneapolis:* Augaburg Publishing House, 1961.

Newell, William R. *Romans Verse by Verse.* Chicago:: Moody Press, 1938.

Rainsford, Marcus. *Lectures on the Romans* VI, London: Charles J. Thynne, 1998.

Shedd, William G. T. *A Critical and Doctrinal Commentary on the Epistle of St., Paul to the Romans.* Grand Rapids: Zondervan, 1967.

Stifler, James M. *The Epistle to the Romans: A Commentary Logical and Historical.* Chicago: Moody Press, 1960.

Wuest, Kenneth S. *Romans in the Greek New Testament.* Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 19642.

## பண்டைய ரோமாபுரி அரங்கம்



Courtesy: www.colosseum.net

## கொரிந்துப் பட்டணத்து அப்பொல்லோ கோவில்



Courtesy: www.wordpress.org

அப்போஸ்தலனாகிய பவுல்

# கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம்

## முன்னுரை

''திருச்சபை வரலாற்றில் இணையற்ற ஒரு சிறு பகுதி'' – வைசாக்கர்

### 1.வேத நூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

பொல்லாங்கு நிறைந்த கொரிந்துப் பட்டணத்தில் செயல்பட்டுவந்த சபை எதிர்கொண்ட பிரச்சினைகளைப் பவுல் திறம்பட இந்நூலில் கையாண்டுள்ளார் என்னும் பொருளில் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் மடல் "பிரச்சினைகளின் நூல்" என்று பெயர் பெற்றது. அந்நிலையில், இன்றைய நாட்களில் பிரச்சினைகளால் அடித்துச் செல்லப்படும் சபைகளுக்கு இந்நூல் மிகவும் தேவையானது ஆகும். பிரிவினைகள், தலைவர்களுக்குச் செலுத்தப்படும் வீரவழிபாடு, திருமணஞ்சார்ந்த பிரச்சினைகள், ஐயத்திற்கிடமான நடைமுறை வழக்கங்கள், ஆவிக்குரிய வரங்களின் பயன்பாட்டு ஒழுங்குகள் ஆகிய பிரச்சினைகள் இந்நூலில் திறம்படக் கையாளப்பட்டுள்ளன.

இந்நூலில் காணப்படுகிற செய்திகள் அனைத்துமே பிரச்சினைகள் பற்றியவையே என்று கருதுவது தவறு! அன்பைப் பற்றிய மிகவும் அழகிய கட்டுரையாகிய 1 கொரிந்தியர் 13 -ஆவது அதிகாரம் இந்நூலில்தானே இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரை திருமறையில் மட்டுமின்றி அனைத்து இலக்கியங்களிலும் சிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது. உயிர்த்தெழுதலைப் பற்றிய குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்த படிப்பினை (கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும், நமது உயிர்த்தெழுதலும் அதி. 15), கர்த்தருடைய பந்தியைப் பற்றிய நடைமுறை ஒழுங்கு (அதி. 11), பணம் சேர்க்கப்படுதலில் பங்கு வகித்தல் குறித்த கட்டளை (அதி. 16) ஆகிய அனைத்தும் இந்நூலில் காணக்கிடக்கின்றன.

கொரிந்தியரின் முதல் மடல் இல்லையேல் நாம் வறுமையுற்றவர்களாகவே விளங்குவோம். கிறிஸ்தவ நடைமுறைப் பயிற்சியின் அரும்பொருட் செல்வப் புதையலாக இந்நூல் திகழ்கிறது.

### 2. நூலாசிரியர்

கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதல் மடல் என்று நாம் அழைக்கிற இந்நூல் பவுலின் எழுதுகோலால் இயற்றப்பட்டது என்னும் உண்மை நம்பத்தகுந்தது என்று வேத அறிஞர் யாவரும் ஒப்புக்கொள்கின்றனர். இம்மடலில் சில "இடைச்செருகல்கள்" இடம்பெற்றுள்ளன என்று சில எழுத்தாளர்கள் (பெரும்பாலும் தாராளக்கொள்கையைப் பின்பற்றுபவர்கள்) கருதுகிறார்கள். ஆயின் இக்கருத்துகள் கையெழுத்துப் பிரதிகளின் சான்றை ஆதாரமாகக் கொண்டவை அல்ல. பவுல் கொரிந்தியருக்கு முந்தி எழுதிய மடல் (வேத நூல் வரிசையில் இடம்பெறாதது) ஒன்றினை 1 கொரிந்தியர் 5:9 -ஆம் வசனம் குறிப்பாய்த் தெரிவிக்கிறது. அம்மடலைக் கொரிந்துப் பட்டணத்தார் தவறாகப் புரிந்துகொண்டனர்.

முதலாம் கொரிந்தியர் நூலின் ஆசிரியர் பற்றிய ***புறச்சான்றுகள்*** மிகவும் பழைமை வாய்ந்தவை. இந்நூல் பற்றி ரோமாபுரி கிலமந்து (கி. பி. 95) "மனதிற்கினிய அப்போஸ்தலனாகிய பவுலின் மடல்" என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். இந்நூலைப் பற்றி எழுதிய பிற எழுத்தாளர்கள் பாலிகார்ப், ஜஸ்டின் மார்டியர், அத்தெனாகோரஸ், ஐரேனியஸ், அலெக்சாந்திரியா கிலமந்து மற்றும் தெர்தூலியன் ஆவார்கள். முரடோரியன் வேதத்தொகுப்பில் இந்நூல் இடம் பெற்றுள்ளது. கள்ள போதகரான மார்சியனின் வேதத் தொகுப்பில் (அப்போஸ்தலிக்கன்) இந்நூல் கலாத்தியர் மடலுக்குப் பிறகு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறியவை போன்றே ***அகச்சான்றுகளும்*** மிகவும் வலிமைபடைத்தவை. 1:1 மற்றும் 16:21 -ஆகிய வசனங்களில் எழுத்தாளரே தன்னை பவுல் என்று குறிப்பிட்டதுபோக, 1:12-17; 3:4,6,22 ஆகிய பகுதிகளில் காணப்படுகிற தருக்கங்கள் பவுலே இம்மடலை எழுதினார் என்பதை ஆதரிக்கின்றன. அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் மற்றும் பவுல் எழுதிய பிற மடல்கள் ஆகியவற்றுடன் இந்நூல் கொண்டுள்ள நிகழ்வுப் பொருத்தங்கள் மற்றும் அப்போஸ்தலனுடைய மெய்யான கரிசனையை வெளிப்படுத்தும்

தனித்தன்மை வாய்ந்த பகுதிகள் இந்நூல் பவுலின் பெயரால் எழுதப்பட்ட போலியான நூல் என்னும் கருத்தைத் தகர்த்தெறிகின்றன. மேலும் இந்நூல் பவுலால் எழுதப்பட்டதே என்னும் கருத்தை மேற்கூறிய சான்றுகள் ஐயத்திற்கிடமற்றபடி நம்பச் செய்கின்றன.

### 3. எழுதப்பட்ட காலம்

இந்நூலை எபேசு நகரத்திலிருந்து எழுதிய தாகப் பவுல் கூறுகிறார் (16:8,9 மற்றும் 19 -ஆம் வசனத்தையும் ஒப்பிடுக). அவர் மூன்று ஆண்டு கள் அங்கு தங்கி திருப்பணி ஆற்றினார். ஆகவே அவர் தங்கியிருந்த நாட்களின் பிற்பகுதியில், ஏறத்தாழ கி. பி. 55 அல்லது 56 -இல் இந்நூலை எழுதியிருக்கக்கூடும். சில அறிஞர்கள் இந்நூல் கி. பி. 55 -க்கும் முன்னரே எழுதப்பட்டது என்று கருதுகிறார்கள்.

### 4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

பண்டைய காலத்துக் கொரிந்துப் பட்டணம் ஏதென்ஸ் (அத்தேனே) நகரத்தின் மேற்கு திசை யில் தென்கிரேக்கு நிலப்பரப்பில் அமைந்திருந் தது (இப்பொழுதும் அங்குதான் இருக்கிறது). பவுல் வாழ்ந்த நாட்களில் வணிகப்பெருஞ்சாலை யில் மிக முக்கியமான இடத்தில் இப்பெருநகரம் அமைந்திருந்தது. இந்த நகரம் உலகச்சந்தை யில் முக்கியமான இடத்தை வகித்த காரணத் தால், பெருமளவில் போக்குவரத்து நிலவிவந் தது. இங்கு வாழ்ந்த மக்கள் அருவருக்கத்தக்க சமயச் சார்புடையோராயிருந்தனர். ஆகவே இந் நகரத்தில் மிகக் கேவலமான முறையில் ஒழுக் கக்கேடுகள் நடந்துவந்தன. இதன் காரணமாக கொரிந்து என்னும் சொல் முற்றிலும் அருவருப் பையும் சரீர இச்சைகளையும் குறிக்கும் சொல் லாயிற்று. இதனால் இந்நகரத்தின் மதிப்பு கீழ் நிலைக்குச் சென்றதுமன்றி, *ஒழுக்கமற்ற வாழ்க்கை நடத்துதல்* என்னும் பொருள் தரக் கூடிய *கொரிந்தியோசோமை* என்னும் ஒரு வினைச் சொல்லும் உருவாகக் காரணமாயிற்று.

தனது இரண்டாவது திருப்பணிப் பயணத்தின் போது அப்போஸ்தலனாகிய பவுல் முதன் முதலா கக் கொரிந்து பட்டணத்திற்கு வருகை புரிந்தார் (அப். 18). முதலில், தனது கூடாரம்பின்னும் தொழி லில் உடன் உழைத்தவர்களாகிய பிரிஸ்கில் லாள் ஆக்கில்லா தம்பதியோடு யூதர்கள் நடு வில் அவர் நற்செய்திப் பணியாற்றினார். பெரும் பாலான யூதர்கள் அவருடைய செய்தியை மறுத் துரைத்த காரணத்தால், அவர் கொரிந்து நகரில் வாழ்ந்த புறவினத்தாரை நோக்கித் திரும்பினார். நற்செய்தி அறிவிக்கப்பட்டதன் மூலமாக ஆத்து மாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள், கிறிஸ்தவ சபை ஒன்று நிறுவப்பட்டது.

ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் கழித்து, பவுல் எபேசு நகரத்தில் திருப்பணியாற்றி வந்தபோது, கொரிந்து நகரத்திலிருந்து ஒரு மடலைப் பெற் றார். அந்தச் சபையின் வழக்கத்தில் காணப்பட்ட சில கவலைக்கிடமான பிரச்சினைகள், மற்றும் கிறிஸ்தவ நடைமுறையில் எழக்கூடிய ஐயங்கள் பற்றிய கேள்விகள் அந்த மடலில் காணப்பட்டன. அந்த மடலுக்கு விடைதரும் பொருட்டு, கொரிந்தி யருக்கு எழுதின முதலாம் நிருபம் எழுதப்பட்டது.

அப்போஸ்தலனாகிய பவுல் திகிலுற்ற நிலை யில் கண்ட போலி நடத்தைகள், தவறுகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றை மிகச்சாதாரண மாக எண்ணிய உலகப்பிரகாரமான ஜென்ம சுபாவமுள்ள சபையை எவ்வாறு திருத்துவது என் பதே இம்மடலின் கருப்பொருளாகும். "சபை யானது இந்த உலகத்தில் இருக்கிறது, அது அவ்வாறுதான் இருக்க வேண்டும்; ஆனால் இந்த உலகமோ அந்தச் சபைக்குள் இருந்தது, அது அவ்வாறு இருக்கக்கூடாது" என்ற திருவாளர் மோ.்.பட் பொருட்செறிவுடன் கூறியிருக்கிறார்.

பல சபைக்கூட்டங்களில் அந்நிலை இன்றும் பெருமளவில் காணப்படுகிறது. ஆகவே கொரிந் தியர் முதல் மடல் இன்றைய காலகட்டத்திற்கும் பொருத்தமுடையதாக விளங்கி நிலைநிற்கிறது.

## பொருட்சுருக்கம்

**1. அறிமுகம் (1:1-9)**

அ. வாழ்த்துரை (1:1-3)

ஆ. தொழுதுகொள்ளுதல் (1:4-9)

**2. சபையில் காணப்பட்ட ஒழுங்கின்மை (1:10-6:20)**

அ. விசுவாசிகளுக்குள் பிரிவினைகள் (1:10-4:21)

ஆ. விசுவாசிகளுக்குள்ளாகக் காணப்பட்ட ஒழுக்கக்கேடு (அதி. 5)

இ. விசுவாசிகளுக்குள் நீதிமன்ற வழக்குகள் (6:1-11)

ஈ. சரியா தவறா என்பதைச் சீர்தூக்கி அறிந்து நடப்பதில் விசுவாசிகளிடத்தில் காணப்பட்ட மந்தநிலைமை (6:12-20)

**3. சபையைப் பற்றிய வினாக்களுக்கான அப்போஸ்தலனின் விடைகள் (அதி. 7-14)**

அ. திருமணமான நிலைமை மற்றும் திருமணமாகா நிலைமை (அதி. 7)

ஆ. சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுவது பற்றிய கேள்விக்கான பதில் (8:1-11:1)

இ. பெண்கள் தலையில் முக்காடு இட்டுக் கொள்வது பற்றிய அறிவுரை (11:2-16)

ஈ. கர்த்தருடைய பந்தியைக் குறித்த அறிவுரை (11:17-34)

உ. ஆவியானவரின் வரங்களைக் குறித்தும், சபையில் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் கொடுக்கப்பட்ட அறிவுரைகள் (அதி. 12-14)

**4. உயிர்த்தெழுதலை மறுத்துரைப்போருக்குப் பவுல் தரும் விடை (அதி. 15)**

அ. உயிர்த்தெழுதலின் தவறாத் தன்மை (15:1-34)

ஆ. உயிர்த்தெழுதலுக்கு எதிரான மறுப்புகள் குறித்த ஆராய்ச்சி (15:35-57)

இ. உயிர்த்தெழுதலின் வெளிச்சத்தில் கொடுக்கப்பட்ட இறுதியான வேண்டுகோள் (15:58)

**5. பவுல் கொரிந்தியருக்கு அளித்த இறுதி அறிவுரை (அதி. 16)**

அ. பணம் சேர்க்கப்படுதலைக் குறித்த அறிவுரை (16:1-4)

ஆ. அவருடைய தனிப்பட்ட முன்னேற்பாடுகள் (16:5-9)

இ. இறுதி அறிவுரைகளும் வாழ்த்துகளும் (16:10-24)

## பொருட்சுருக்க அட்டவணை

| தலைப்பு | குலோவேயாளின் புகாருக்கு பதில் நடவடிக்கை | | கேள்விப்பட்டவற்றிக்கான பதில் நடவடிக்கை | | | எழுப்பிய வினாக்களுக்கான விடைகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கருத்து | அறிமுகம் | சபையில் நிலவிய ஒழுங்கின்மைகள் | | | | சபையில் நிலவிய இடர்பாடுகள் | | | | | | |
| பகுப்பு | வாழ்த்துரை தொழுகை | விசுவாசி களுக்குள் பிரிவினைகள் | விசுவாசி களுக்குள் ஒழுக்கக்கேடு | விசுவாசி களுக்குள் நீதிமன்ற வழக்குகள் | சரி / தவற்றை சீர்தூக்கு தல் | திரு மணம் | சிலை களுக்குப் படைத்ததை உண்ணுதல் | சபையின் ஆராதனை | | வரங்கள் | உயிர்த் தெழுதல் | இறுதி உரை |
| | | | | | | | | முக்காடு இடுதல் | கர்த்தரு டைய பந்தி | | | |
| அப்போஸ் தலனின் ஈடுபாடு | அக்கறை | | கண்டனம் | | | ஆலோசனைகள் | | | | | | |
| வசனம் | 1:1 - 9 | 1:10-4:21 | 5:1-20 | 6:1-11 | 6:12-20 | 7:1-40 | 8:1-11:1 | 11:2-16 | 11:17-34 | 12:1-14:40 | 15:1-58 | 16:1-24 |

## விளக்கவுரை

### 1. அறிமுகம் (1:1-9)

#### அ. வாழ்த்துரை (1:1-3)

**1:1** தமஸ்குவுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் **அப்போஸ்தலனாகும்படி பவுல் அழைக்கப்பட்டார்**. இந்த அழைப்பு மனிதனிடத்திலிருந்தோ, மனிதன் மூலமாகவோ வராமல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் இருந்தே நேரடியாக வந்தது. **அப்போஸ்தலன்** என்னும் சொல் "அனுப்பப்பட்டவர்" என்று பொருள்படும். முதலாவது அப்போஸ்தலர்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் அவருக்குச் சாட்சிகளாக விளங்கினார்கள். அவர்கள் பிரசங்கித்த செய்தியைத் தெய்வீகமானது என்று உறுதிப்படுத்த, அற்புத அடையாளங்களையும் செய்தார்கள். கெர்ஹார்டு டெர்ஸ்டீகன் என்பாருடைய சொற்களில், பவுல் பெற்ற அழைப்பு உண்மையாகவே வெளிப்படுத்தப்படுகிறது:

> இறைமைந்தன் கிறிஸ்தேசு
> அடிமையென்னை அழைத்திட்டார்
> மறைபொருளை அறிந்திடாத
> மாந்தரிடம் அனுப்பிவைத்தார்
> குறைவுடைய அடியேனும்
> அவர்பணியைச் செய்திடவே
> துளையிட்ட திருக்கரத்தால்
> உயர்தகுதி தந்திட்டார்!

**சொஸ்தெனே** என்னும் ஒரு **சகோதரன்** தன்னுடன் இருப்பதாக பவுல் எழுதுகையில், தனது வாழ்த்துரையில் அவனுடைய பெயரையும் இணைத்துக் கொள்கிறார். ஜெப ஆலயத் தலைவனாகிய சொஸ்தெனே என்பவன் கிரேக்கர்களால் பகிரங்கமாக அடிக்கப்பட்டதை நடபடிகள் 18:17 - இல் காண்கிறோம். அந்த மனிதனே இவன் என்று நம்மால் உறுதியாகக் கூற இயலாது. பவுல் ஆற்றிய பிரசங்கத்தின் வாயிலாக அந்தத் தலைவன் இரட்சிப்படைந்து, இப்பொழுது அவருடைய நற்செய்திப் பணியில் உதவியாக இருந்தான் என்று எண்ண வாய்ப்புண்டு.

**1:2** எல்லாவற்றிற்கும் முதலாவதாக **கொரிந்து விலே இருக்கிற தேவனுடைய சபை** என்னும் முகவரிக்கு இம்மடல் எழுதப்பட்டுள்ளது. தேவனுடைய சபை நிறுவக்கூடாதபடி இப்புவியில் எந்தவொரு இடமும் அவ்வளவு சீர்கெட்டதாக இல்லை என்னும் உண்மை நமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகிறது. மேலும் அங்குள்ள சபை மக்கள், **கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயும் இருந்தார்கள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். **பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்** என்னும் சொல், இவ்வுலகினின்று தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்று இங்கே பொருள்படும். கிறிஸ்துவுக்குச் சொந்தமான அனைவருடைய *தகுநிலையையும்* இது குறிக்கிறது. அவர்களுடைய *நடைமுறை நிலைமை* அவர்களது அனுதின தூய வாழ்வின் மூலமாகப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

கிருபையின் பிறிதொரு செயலே பரிசுத்தமாக்கப்படுதல் என்று சிலர் வாதாடுகின்றனர். ஒரு மனிதனிடத்தினின்று முற்றிலுமாகப் பாவ இயல்பு நீக்கப்படுதலை அது குறிக்கிறது என்றும் அவர் கூறுவர். இந்த வசனத்தில் அந்த போதனை மறுத்துரைக்கப்படுகிறது. நடைமுறைப் பரிசுத்தத்தில் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டுமோ அதனின்று மிகத் தாழ்வுற்ற நிலையிலேயே கொரிந்தியர் வாழ்ந்தனர். ஆயினும் அவர்கள் தகுநிலையில் **பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்** என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பரிசுத்தவான்கள் என்னும் அடிப்படையில் அவர்கள் மாபெரும் ஐக்கியத்தில் உறுப்பினர்கள் ஆவர்: **பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும்**... இந்த மடலில் காணும் படிப்பினைகள், முதலாவதாக கொரிந்து நகரப் பரிசுத்தவான்களுக்காக எழுதப்பட்டிருந்தாலும், உலகம் முழுவதும் பரந்து விளங்கும், கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை ஏற்றுக்கொண்டோரின் ஐக்கியத்தில் பங்கு வகிக்கும் அனைவரையும் கருத்திற்கொண்டே எழுதப்பட்டுள்ளன.

**1:3** கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தைச் சிறப்பான பொருளாகக் கொண்ட மடலே முதல் கொரிந்தியர் ஆகும். பல பிரச்சினைகளையும் மற்றும் தனிப்பட்டோரின் வாழ்க்கையில் காணப்படும் பிரச்சினைகளையும் குறித்து விவாதிக்கும் அப்போஸ்தலன், இயேசு கிறிஸ்துவே கர்த்தர் என்றும், தாங்கள் செய்கிற அனைத்தையும் இந்தப் பெரிதான உண்மையை மனதிற்கொண்டே செய்ய வேண்டும் என்றும் தமது வாசகர்களுக்கு அவ்வப்போது நினைவூட்டுகிறார்.

தனது தனித்தன்மை வாய்ந்த வாழ்த்தை 3 - ஆவது வசனத்தில் பவுல் தெரிவிக்கிறார். அவருடைய முழு நற்செய்தியையும் **கிருபையும் சமாதானமும்** தொகுத்துரைக்கின்றன. ஒவ்வொரு ஆசிர்வாதத்திற்கும் **கிருபையே** பிறப்பிடமாகத் திகழ்கிறது. தேவனுடைய கிருபையை ஏற்றுக் கொண்ட மனிதன் தன் வாழ்வில், அதன் விளைவாகச் **சமாதானத்தைப்** பெறுகிறான். இந்தப் பெரிதான நன்மைகள் **நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்தும்** வருகின்றன. பிதாவாகிய தேவன் என்று சொன்ன அதே மூச்சில் **கர்த்தராகிய இயேசு** என்று சொல்ல பவுல் தயங்கவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனோடு கொண்டுள்ள சமத்துவத்தை எடுத்தியம்பும் இதுபோன்ற நூற்றுக்கணக்கான சொற்றொடர்கள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. அவற்றில் இதுவும் ஒன்று.

**ஆ. தொழுதுகொள்ளுதல் [1:4-9]**

**1:4-6** தனது வாழ்த்துரையை முடித்துக் கொண்ட அப்போஸ்தலன், தொடர்ந்து கொரிந்தியர்களுக்காகவும், அவர்களது வாழ்வுதனில் தேவன் நிகழ்த்திய வியத்தகு செயல்களுக்காகவும் இப்பொழுது ஸ்தோத்திரிக்கிறார் (வச. 4-9). தன்னுடைய உடன் சகோதரர்களுடைய வாழ்க்கையில் நன்றிபாராட்டத்தக்க ஏதேனும் இருக்கிறதா என்று கண்டறியும் பண்பாளராகவே பவுல் எப்பொழுதும் நடந்து கொண்டார். ஒருவேளை அவருடைய உடன் சகோதரர்களுடைய நடைமுறை வாழ்க்கை பாராட்டக் கூடியதாக இல்லாதிருந்தால், குறைந்தது தேவன் அவர்களுக்குச் செய்த நன்மைகளுக்காக **ஸ்தோத்திரிக்கிறவராக** அவர் விளங்கினார். அதுவே இங்கு நடந்தது. ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்று அழைக்கத்தக்கபடி கொரிந்தியர்கள் நடந்துகொள்ளவில்லை. எனினும் **இயேசு கிறிஸ்துவின் மூலமாய்** அவர்களுக்கு **அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக** அவர் ஸ்தோத்திரிக்கிறார்.

கொரிந்தியரிடத்தில் ஒரு குறிப்பிட்ட வகையில் தேவ கிருபையானது வெளிப்படுத்தப்பட்டது. அது யாதெனில் அவர்களிடத்தில் நிறைவானபடி பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் அருளப்பட்டிருந்தன. **எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும்** என்று அந்த வரங்களைப் பவுல் குறிப்பிடுகிறார். பாஷைகளைப் பேசுதல், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல், வியத்தகு அளவில் அறிவு ஆகிய வரங்களை அவர்கள் பெற்றிருந்தனர் என்று நாம் ஊகிக்க கூடும். **உபதேசம்** வெளியரங்கமாகப் பேசுதலையும், **அறிவு** உள்ளார்ந்த வகையில் புரிந்துகொள்ளும் ஆற்றலையும் தெரிவிக்கின்றன.

அவர்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய செயல் நிறைவேறியதற்கான சான்றாக இந்த வரங்கள் விளங்குகின்றன. **இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது** என்று பவுல் கூறும்போது இந்த உண்மையையே அவர் குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியை அவர்கள் கேட்டார்கள், அதனை அவர்கள் விசுவாசத்தினாலே ஏற்றுக்கொண்டார்கள். மேலும், தேவன் தாமே அற்புதமான வல்லமைகளை அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் உண்மையாகவே இரட்சிப்படைந்தவர்கள் என்பதற்கான சான்றினை வழங்கியிருக்கிறார்.

**1:7** வரங்களை உடையவர்கள் என்னும் நிலையில் கொரிந்து சபையினர் வேறு எவரையும் விட குறைவுடையவர்களாக இருக்கவில்லை. ஆயினும் வெறுமனே இந்த வரங்களைப் பெற்றிருந்த நிலையானது அவர்கள் ஆவிக்குரியவர்கள் என்பதற்கான அடையாளம் அல்ல. அவர்கள் வரங்களைப் பெற்றிருந்ததற்காக, கர்த்தருக்கு பவுல் நன்றி செலுத்துகிறார். அவ்வாறு அவர்கள் வரங்களைப் பெற்றிருந்ததற்கான மூல காரணம் அவர்கள் அல்லர். ஒரு மனிதனுடைய சொந்தத் தகுதியைப் பாராமல் விண்ணுலகிற்கு ஏறிச் சென்ற கர்த்தர்தாமே வரங்களை அருளுகிறார். ஒருவன் ஒரு வரத்தை உடையவனாக இருப்பான் என்றால் பெருமை பாராட்டாமல் தாழ்மையுடன் அதனைக் கர்த்தருக்காகப் பயன்படுத்தக்கடவன்.

ஆவியின் கனி என்பது முற்றிலும் வேறு பொருளைக் குறிக்கும் சொற்றொடராகும். ஒரு விசுவாசியானவன் தன்னை முற்றிலுமாகத் தூய ஆவியானவருடைய கட்டுப்பாட்டிற்கு ஒப்புவிப்பதை இது ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. கொரிந்தியர்களுடைய வாழ்க்கையில் ஆவியின் கனி தெளிவாய்க் காணப்பட்டதாகக் கருதி பவுல் அவர்களைப் பாராட்ட இயலவில்லை. மாறாக, கர்த்தர்தாமே தம்முடைய இறையாண்மையில் அவர்களுக்கு அருளியவற்றிற்காக அவர் போற்றுகிறார். இவை யாவும் அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாயிருந்தன.

தாங்கள் பெற்ற இந்த வரங்களைத் தவறாகப் பயன்படுத்தியதற்காகப் பரிசுத்தவான்களை இம்மடலின் பின்பகுதியில் அப்போஸ்தலன் கடிந்து

கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் இந்த வரங்களை அவர்கள் பெருமளவிற்குப் பெற்றிருப்பது குறித்து நன்றி செலுத்துவதில் இங்கு அவர் மனநிறைவு கொள்கிறார்.

**நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுதவற்கு** கொரிந்தியர்கள் **காத்திருந்தார்கள்**. தம்முடைய பரிசுத்தவான்களுக்காகக் கிறிஸ்து வெளிப்படுகிற வருகையை இது குறிக்கிறதா (1 தெச. 4:13-18) அல்லது தம்முடைய பரிசுத்தவான்களோடு கர்த்தர் வருகின்ற வருகையை இது குறிக்கிறதா (2 தெச. 1:6-10) அல்லது இரண்டையுமே இது குறிக்கிறதா என்பது குறித்து வேத மாணாக்கர்களுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. முதலாவது சொல்லப்பட்டிருப்பது விசுவாசிகளுக்காக மட்டும் கிறிஸ்து வெளிப்படுவது ஆகும். ஆனால் இரண்டாவதோ உலகம் முழுவதற்கும் அவர் வெளிப்படுவதாகும். எடுத்துக்கொள்ளப்படுதல் மற்றும் மகிமையோடு கிறிஸ்து வெளிப்படுதல் ஆகிய இரண்டிற்காகவும் விசுவாசிகள் ஆவலோடு **காத்திருக்கின்றனர்**.

**1:8 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே**, கர்த்தர்தாமே பரிசுத்தவான்களைக் **குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் ஸ்திரப்படுத்துவார்** என்று பவுல் நம்பிக்கை கொண்டிருந்ததாக இப்பொழுது தெரிவிக்கிறார். கொரிந்தியர்கள் செய்தவற்றிற்காக அன்றி, தேவன் செய்யப்போகிறதைக் கருத்திற்கொண்டே பவுல் ஸ்தோத்திரிக்கிறார் என்னும் உண்மை மீண்டும் நம்முடைய கவனத்தை ஈர்க்கின்றது. கிறிஸ்துவை அவர்கள் நம்பியதால் மேலும் ஆவியானவரின் வரங்களை தேவன் அவர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தியதால், கிறிஸ்து தம்முடைய மக்களுக்காக வரும்வரை அவர்களை தேவன் காத்துக்கொள்ளுவார் என்று பவுல் நம்பிக்கை கொண்டிருந்தார்.

**1:9 தம்முடைய குமாரனுடன் ஐக்கியமாயிருப்பதற்கு** அவர்களை அழைத்த **தேவன்** உண்மையுள்ளவர் என்பதை ஆதாரமாகக் கொண்டே கொரிந்து சபையாரைக் குறித்து பவுல் திடநம்பிக்கை உடையவராயிருந்தார். மேலும், **கர்த்தருடைய** ஜீவனில் அவர்கள் பங்குகொள்ளும்பொருட்டு தேவன் மிகப்பெரிய விலையைச் செலுத்தியிருக்கின்ற காரணத்தினால், அவர் தம்முடைய கரங்களிலிருந்து நழுவிப்போகும்படி அவர்களை அனுமதிக்கமாட்டார் என்பதையும் பவுல் அறிந்திருந்தார்.

## 2. சபையில் காணப்பட்ட ஒழுங்கின்மை (1:10-6:20)

### அ. விசுவாசிகளுக்குள் பிரிவினைகள் (1:10-4:21)

**1:10** சபை மக்களுக்குள்ளாகக் காணப்பட்ட பிரிவினைகளைப் பற்றிய பிரச்சினை குறித்து எழுதுவதற்கு அப்போஸ்தலன் இப்பொழுது ஆயத்தமாகிவிட்டார் (1:10-4:21). ஒருமைப்பாட்டின் அவசியத்தைக் குறித்த அன்பான முறையீட்டோடு இப்பகுதியை அவர் தொடங்குகிறார். அப்போஸ்தலனுக்குரிய அதிகாரத்தோடு கட்டளையிடுவதற்குப் பதிலாக, ஒரு சகோதரனுக்குரிய கனிவோடு அவர் வேண்டுதல் செய்கிறார். மேலும் **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை** ஆதாரமாகக் கொண்டே ஒருமைப்பாட்டிற்கான வேண்டுதலை அவர் சமர்ப்பிக்கிறார். நாமம் என்று சொல்லுமிடத்து அ.ா.து ஒருவரைக் குறிக்கிறது. அந்த ஒருவராகிய இயேசு கிறிஸ்து யாராக இருக்கிறார் என்பதையும் அவர் என்ன செய்தார் என்பதையும் ஆதாரமாகக் கொண்டே அந்த வேண்டுதல் சமர்ப்பிக்கப்படுகிறது. மனிதர்களுடைய பெயரை கொரிந்தியர் புகழ்ந்து பேசினர்; ஆனால் அச்செயல் பிரிவினைக்கே வழிவகுத்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரைப் புகழ்ந்து பேசுவதே இறைமக்களுக்கிடையே ஒருமைப்பாட்டை உண்டுபண்ணும் என்பதை அறிந்த பவுல் அதையே செய்தார். **ஒரே காரியத்தைப் பேசுதல்** என்பதன் பொருள் யாதெனில் **ஏக மனதும் ஏக யோசனையுமாக** இருப்பதே ஆகும். உண்மையுள்ளவர்களாகவும் விசுவாசமுள்ளவர்களாகவும் இருப்பதில் ஒருமைப்பாட்டோடு விளங்குவதையே அது குறிக்கிறது. விசுவாசிகள் கிறிஸ்துவின் சிந்தையோடு இருப்பார்கள் எனில் இந்த ஒற்றுமையை உருவாக்க இயலும். கிறிஸ்து எவ்வாறு சிந்திக்கிறாரோ அதுபோல அவர்களும் சிந்திப்பதற்குத் தேவையான நடைமுறை போதனைகளைத் தொடர்ந்து வருகிற வசனங்களில் பவுல் தருகிறார்.

**1:11** கொரிந்தியர்களுக்கிடையே இருந்த **வாக்குவாதங்களைக்** குறித்து **குலோவேயாளின் வீட்டாரின்** வாயிலாக பவுல் அறிந்தார். செய்தியைத் தனக்குத் தெரிவித்தவர்களின் பெயர்களை குறிப்பிட்டிருப்பதன் மூலம், பவுல் கிறிஸ்தவ நடத்தையைக் குறித்த மிக முக்கியமான கோட்பாட்டை முன்வைக்கிறார். நம்முடைய பெயரை மேற்கோள் காட்டுவதற்கு அனுமதிக்க நமக்கு விருப்பமில்லையெனில், உடன் விசுவாசி

களைக் குறித்த செய்திகளை நாம் பிறரிடம் சொல்லக்கூடாது. இந்த முன்மாதிரி பின்பற்றப்பட்டால், சபைக்குப் பெருந்தொல்லை அளிக்கக்கூடிய பெரும்பாலான வீண்பேச்சுக்கள் நின்றுபோய் விடும்.

**1:12** உட்பிளவுகளும் கட்சிகளும் உள்ளூர் சபையில் காணப்பட்டன. ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்களுக்கென்று தனிப்பட்ட தலைவரை உரிமை கொண்டாடினர். சிலர் **பவுலைத்** தங்களுடைய தலைவராகக் கொண்டிருந்தனர். சிலர் **அப்பொல்லோ**வையும் சிலர் **கேபா**வையும் (பேதுரு) தலைவர்களாக உரிமை கொண்டாடினர். சிலரோ தாங்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தர்கள் என்று சொல்லிக் கொண்டனர். ஒருவேளை அவர்கள் மட்டுமே **கிறிஸ்துவைச்** சேர்ந்தவர்கள், மற்றவர்களோ அவரைச் சேராதவர்கள் என்றும் கூறினார்கள் போலும்!

**1:13** பிரிவினை மனப்பான்மைக்கு எதிரான சீற்றத்துடன் கூடிய கடிந்துகொள்ளுதலை 13-17 வசனங்களில் காண்கிறோம். இவ்வாறான கட்சிகளைச் சபையில் உருவாக்குவது **கிறிஸ்துவின்** சரீரத்திற்குரிய ஒருமைப்பாட்டை மறுத்துரைப்பதாகும். மனிதர்களாகிய தலைவர்களைப் பின்பற்றுவது, தங்களுக்காகச் சிலுவையில் அறையப்பட்டவரை ஏளனப்படுத்துவதாகவே கருதப்படும். ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிந்தபோது அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்கு உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்று உறுதிமொழி கூறினார்கள்; ஆயின் இப்பொழுது மனிதர்களுடைய பெயரை உயர்த்திப் பேசுவதால் தாங்கள் எடுத்த உறுதிமொழியை மறந்துவிட்டார்கள்.

**1:14-16** கொரிந்து சபையில் கட்சிகள் எழுந்த நிலையில், அங்கிருந்த ஒரு சிலருக்கே பவுல் **ஞானஸ்நானம் கொடுத்ததை** எண்ணி நன்றி செலுத்துகிறார். **காயு** மற்றும் **கிறிஸ்பு** ஆகியோருக்கு ஞானஸ்நானம் அளித்ததாக அவர்களுடைய பெயரைப் பவுல் குறிப்பிடுகிறார்.

தன்னுடைய **பெயரில் ஞானஸ்நானம் கொடுத்ததாக** எவராவது **சொல்ல** வேண்டுமென்று அவர் ஒருபோதும் விரும்பியதில்லை. அதாவது தனக்காகப் பலர் மனந்திரும்ப வேண்டுமென்றோ அல்லது தன்னுடைய பெயர் அங்கே நிறுவப்பட வேண்டுமென்றோ அவர் முயற்சி செய்யவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மனிதர்களுக்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்பதே அவரது ஒரே நோக்கமாக விளங்கியது.

**ஸ்தேவானுடைய வீட்டாருக்கும்** அவர் **ஞானஸ்நானம் கொடுத்ததை** மீண்டும் எண்ணிப்பார்த்து நினைவுகூர்ந்தார். ஆனால் வேறு **யாருக்காவது** ஞானஸ்நானம் கொடுத்தாரா **இல்லையா** என்பது அவருடைய நினைவிற்கு வரவில்லை.

**1:17 ஞானஸ்நானம் கொடுப்பதை** முதலாவது காரணமாக வைத்து **கிறிஸ்து** அவரை **அனுப்பவில்லை**. மாறாக **சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவே** அனுப்பினார் என்று பவுல் விளக்கம் அளிக்கிறார். பவுல் ஞானஸ்நானத்தை நம்பவில்லை என்பது இதன் பொருளன்று. அவர் ஞானஸ்நானம் கொடுத்தவர்களது பெயரை ஏற்கனவே குறிப்பிட்டுவிட்டார். மாறாக, அவருடைய முக்கியமான அலுவல் அதுவன்று. ஸ்தல சபையிலுள்ள ஒரு சில கிறிஸ்தவர்களிடம் அவர் அந்த வேலையை ஒப்படைத்திருக்கக் கூடும். மேலும் இரட்சிப்பிற்கு ஞானஸ்நானம் அவசியம் இல்லை என்பதற்கு இந்த வசனம் சான்று பகர்கின்றது. அதுவே உண்மையானால், கிறிஸ்புவையும், காயுவையும் தவிர அவர் வேறு ஒருவரையும் இரட்சிக்கவில்லை என்றாகிவிடுமே, அதற்காக அவர் தேவனை ஸ்தோத்திரிப்பதாகக் கூறுகிறாரா! அதை ஒப்புக்கொள்ள முடியாதே.

பதினேழாவது வசனத்தின்பின்பகுதியில், தொடர்ந்து வரும் வசனங்களில் காணப்படும் பொருளை நோக்கி பவுல் மிக எளிதாகக் கடந்து செல்கிறார். **கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானத்தோடு** அவர் **சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை**. அவருடைய நாவன்மையினாலும் ஆரவார மொழிநடையினாலும் மனிதர்கள் கவர்ந்து இழுக்கப்பட்டிருந்தார்களானால், **கிறிஸ்துவின் சிலுவையைப்** பற்றிய மெய்யான பொருளை எடுத்தியம்பும் அவருடைய முயற்சியில் அந்த அளவிற்குப் தோற்றுப் போய்விட்டார் என்பதே பொருளாகும்.

கிரேக்க இனத்தைச் சேர்ந்தவர்களாக கொரிந்தியர்கள் இருந்ததால், மனித ஞானத்தின் மீது மிகுந்த பற்று உடையவர்களாக அவர்கள் இருந்தார்கள் என்பதை நாம் நினைவுகூர்வோம். தொடர்ந்து வருகிற பகுதியைப் புரிந்துகொள்வதற்கு அது உதவிபுரியும். அவர்கள் தத்துவ ஞானிகளை நாட்டின் நாயகர்கள் என்று கருதினார்கள். இப்படிப்பட்ட எண்ணம் ஏற்கனவே சற்று கொரிந்து சபைக்குள்ளாக உட்புகுந்துவிட்டது. அறிஞர் குழாம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் நற்செய்தியை மாற்றி வழங்க வேண்டும் என்ற

விருப்பம் உடையோரும் அச்சபையில் இருந்தனர். ஞானிகளுக்கு மத்தியில் நற்செய்தியானது செல்வாக்குப் பெறவில்லை என்று அவர்கள் கருதி, நற்செய்தியோடு சாதுரியத்தைக் கூட்டவேண்டுமென்று விரும்பினார்கள். இவ்வாறு அறிவாற்றலை ஆராதிக்கும் இயல்பு, அங்குள்ளோருக்கிடையே கட்சிகள் உருவாகவும் தங்களுக்கென்று மனிதத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் ஒரு காரணமாயிற்று. பெரும்பாலோர் ஏற்றுக்கொள்வதற்கு உகந்த வண்ணம் நற்செய்தியை மாற்றி அமைக்க வேண்டுமென்ற முயற்சி தவறான வழிகாட்டியாயிற்று. தேவனுடைய ஞானத்திற்கும் மனித ஞானத்திற்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. இரண்டிற்கும் இணக்கம் உண்டுபண்ண வேண்டுமென்று முயற்சி செய்வதில் எவ்விதப் பயனும் இல்லை.

மனிதர்களைப் புகழ்வது மதியீனமான செயல் என்று எடுத்துக்காட்டும் பவுல், நற்செய்தியின் மெய்யான சுபாவத்திற்கு இச்செயல் பொருத்தமற்றதாயிருக்கிறது என்றும் தொடர்ந்து வலியுறுத்துகிறார் (1:18-3:4). உண்மையான ஞானம் என்று மனிதன் கருதுகிற எல்லாவற்றிற்கும் சிலுவையைக் குறித்த செய்தி நேர்மாறானதாக இருக்கிறது என்பதே அவருடைய முதலாவது விளக்கமாகும் (1:18-25).

**1:18 சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது.** இதைக் குறித்து பர்னஸ் என்பார் மிகச்சரியாகச் சொல்லியிருக்கிறார்:

> அவமானத்திற்கும் கனவீனத்திற்கும் உரிய எல்லாவிதச் சிந்தனைகளோடும் சிலுவை மரணம் தொடர்புடையதாக இருக்கிறது. சிலுவையில் அறையப்பட்ட ஒரு மனிதனது பாடுகள் மற்றும் மரணத்தின் மூலமாகவே இரட்சிப்பு உண்டாகிறது என்னும் பேச்சு பலருடைய உள்ளத்தில் முழுவதும் ஏளனமான கிளர்ச்சியை உண்டுபண்ணுவதற்குத் தகுந்த காரணமாயிருக்கிறது.[1]

கிரேக்கர் ஞானத்தின்மீது பற்றுடையோராக இருந்தனர். (தத்துவ ஞானி என்ற சொல்லுக்கு இதுவே பொருளாகும்). ஆனால் அவர்களுடைய ஞானத்தினால் உண்டான பெருமையைக் கவருவதற்கு நற்செய்தியில் ஒன்றுமில்லை.

**இரட்சிக்கப்படுகிறவர்களுக்கே** அந்த நற்செய்தி **தேவபெலனாயிருக்கிறது.** அவர்கள் நற்செய்தியைக் கேட்கிறார்கள். விசுவாசத்தினாலே அதை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே மறுபிறப்பு என்னும் அதிசயம் நிகழ்கிறது. கெட்டுப்போகிறவர்கள் மற்றும் இரட்சிக்கப்படுகிறவர்கள் என்று இரு வகுப்பு மக்களே உள்ளனர் என்னும் ஆழ்ந்த உண்மையை இவ்வசனத்தில் காண்பீர்களாக. இருவகுப்பாருக்கும் இடையில் ஏதொரு கூட்டத்தாரும் இல்லை. மனிதர்கள் மனித ஞானத்தின் மீது பற்றுடையோராய் இருக்கலாம், ஆனால் நற்செய்தி மட்டுமே மனிதர்களை இரட்சிப்பண்டை வழிநடத்தக் கூடிய தாயிருக்கிறது.

**1:19** மனித ஞானத்தை வலிந்து சென்று தாக்கக்கூடியதாக நற்செய்தி விளங்குகிறது என்பதை ஏசாயா முன்னுரைத்துள்ளான் (ஏசா. 29:14):

**"ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன்".**

"சனகெரிப் யூதாவிற்கு எதிராகப் போர் தொடுத்து அச்சமூட்டிய தருணத்தில் எகிப்தின் உறவை நாடவேண்டுமென்று யூதாவின் 'ஞானிகள்' கூறிய ஆலோசனையை தேவன் முறியடித்த நிகழ்ச்சியே" இச்சொற்களின் பின்னணியாக இருக்கிறது என்று வைகிலி.ப் வேத விளக்க வுரையில் S. லூயி ஜான்சன் என்பார் குறிப்பிடுகிறார்.[2] மனிதர்களின் சிந்தனையில் மதியீனமாகத் தோன்றுகிற வழிகளில், தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றுவதில் களிகூருகிறார் என்பது எத்தனை உண்மையாயிருக்கிறது. இப்புவியின் ஞானிகள் ஏளனம் செய்யக்கூடிய முறைகளை அவ்வப்போது பயன்படுத்தி, அவற்றின் வியத்தகு நுணுக்கத்தோடும் திறமையோடும் தாம் விரும்புகிற விளைபயனை அவர் அடைகிறார் அல்லவா. எடுத்துக்காட்டாக, தனது தகுதியினாலோ முயற்சியினாலோ இரட்சிப்பைப் பெறலாம் என்று மனித ஞானம் அவனுக்கு உறுதி அளிக்கிறது. தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ளலாம் என்று மனிதன் செய்கிற அனைத்து முயற்சிகளையும் புறம்பே தள்ளிவிட்டு, தேவனை அடைவதற்கான ஒரே வழியாகிய கிறிஸ்துவை நற்செய்தி முன்னிறுத்துகிறது.

**1:20** அடுத்ததாக வீரார்ந்த வகையில் பவுல் ஓர் அறைகூவலை விடுக்கிறார்: **"ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத்தின் தர்க்க சாஸ்திரி எங்கே?"** இரட்சிப்பின் திட்டத்தை வகுத்தபோது தேவன் அவர்களிடம் அறிவுரை

கோரினாரோ? அவர்களுடைய சொந்த ஞானத் தின்படி திட்டத்தை வகுத்துக்கொள்ளுங்கள் என்று விட்டிருந்தால் இப்படிப்பட்ட திட்டத்தை அவர்களால் உருவாக்கியிருக்க முடியுமா? தேவன் சொன்ன ஏதொன்றையும் அவர்களால் உண்மையல்லவென்று மெய்ப்பிக்க முடியுமா? "முடியாது" என்பதே உறுதியோடு கூறப்படுகிற விடையாகும். **இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கிவிட்டார்**.

**1:21** மனிதன் தனது சுய ஞானத்தினால் தேவ ஞானத்தை அறியமுடியாது. பல நூற்றாண்டு களாக இதற்கான வாய்ப்பை மனுக்குலத்திற்கு நல்கினார், ஆயினும் அதன் விளைவு தோல்வியே ஆகும். பின்னர் மனிதர்களுக்குப் **பைத்திய மாகத் தோன்றுகிற** சிலுவையைப் பற்றிய **பிரசங் கத்தினாலே, விசுவாசிக்கிறவர்களை இரட் சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று**. பிரசங் கத்தில் பைத்தியமாக இருப்பது என்பது சிலுவை யைக் குறிக்கிறது. ஐயத்திற்கிடமின்றி, அது பைத்தியமன்று என்பதை நாம் அறிவோம். ஆயின் அறியாமையில் உழன்று கிடக்கும் மனிதனின் சிந்தைக்கு அது மதியீனமாகத் தோன்றுகிறது. மனித வரலாற்றின் தத்துவம் முழுவதையும், அதன் நூல்களின் தொகை முழு வதையும் இருபத்தோராவது வசனம் தனக்குள் உள்ளடக்கியிருக்கிறது. இதனை நாம் மேலோட்ட மாகப் படித்துவிட்டு விரைவாகக் கடந்து செல்லா மல், பொதிந்து கிடக்கும் உண்மைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கக்கடவோம்.

**1:22 அடையாளத்தைக் கேட்பது யூதர்களு டைய** தனிப்பட்ட இயல்பாகும். சில அற்புதங் களைச் செய்து காட்டினால் அவற்றைக் கண்டு நம்புவது அவர்களது மனோபாவமாகும். ஆனால் கிரேக்கரோ அதற்கு மாறாக ஞானத்தைத் தேடு கிறவர்களாக இருந்தனர். காரண காரியங்களை ஆராய்வதிலும், வாதாடுவதிலும், தருக்கம் செய் வதிலும் அவர்கள் விருப்பமுடையவராய் இருந் தார்கள்.

**1:23** ஆனால் பவுல் அவர்களுடைய வேட் கைக்கு விருந்தளிக்கவில்லை. "**நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்**" என்று அவர் கூறுகிறார். "அவர் அடையாளத்தை விரும்புகிற யூதரு மல்லர், ஞானத்தை விரும்புகிற கிரேக்கருமல் லர், மாறாக இரட்சகரை விரும்புகிற கிறிஸ்தவர்" என்று ஒருவர் கூறியுள்ளார்.

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து **யூதருக்கு இடறலாயிருந்தார்**. ரோமர்களுக்குக் கீழாகக் கொடுமைக்கு ஆளான யூதர் அதினின்று தங்களை விடுவிக்க வல்லமை பொருந்திய இராணுவத் தலைவரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அதற்குப் பதிலாக, அவமானச் சிலுவையில் அறையுண்ட இரட்சகரையே நற்செய்தி கொடுத் தது. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து கிரேக் கருக்குப் பைத்தியமாயிருந்தார். வலிமையற்ற தும் தோல்வியடைந்ததுமாகத் தோன்றுகிற மரணத்தை அடைந்த ஒருவர் அவர்களுடைய பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பார் என்பதை அவர் களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

**1:24** ஆனால், யூதரும் கிரேக்கரும் எவற்றைத் தேடினார்களோ அவை வியக்கத்தக்க வகையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் இருப் பது விநோதமானதே. அவருடைய அழைப்பின் சத்தத்தைக் கேட்டு அவரிடத்தில் நம்பிக்கை கொள்கிற யூதருக்கும் கிரேக்கருக்கும் கிறிஸ்து தேவ பெலனும் தேவ ஞானமுமாக ஆகிறார்.

**1:25** உண்மையில் தேவனிடத்தில் பைத்திய மாகவும் பலவீனமாகவும் எதுவுமில்லை. ஆனால் **மனிதர்களுடைய** பார்வையில், தேவனிடத்தில் **பைத்தியமாய்க்** காணப்படுவது எதுவோ, அது மனிதர்களுடைய மிகச்சிறந்த **ஞானத்திலும்** அதிக **ஞானமாய் இருக்கிறது** என்றே இந்த வசனத்தில் அப்போஸ்தலன் கூறுகிறார். மேலும் மனிதர்களுடைய பார்வையில், தேவனிடத்தில் பலவீனமாய்க் காணப்படுவது எதுவோ, அது **மனிதர்களால்** உண்டுபண்ணக்கூடிய எல்லாவற் றையும்விட **பலம்** மிகுந்ததாய் இருக்கிறது.

**1:26** நற்செய்தியைப் பற்றி உரைத்த அப் போஸ்தலன், இப்பொழுது அந்த நற்செய்தியின் மூலமாக தேவனால் அழைக்கப்பட்ட மனிதர் களைப் பற்றிப் பேசத் தொடங்குகிறார் (வச. 26-29). **மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநே கர்** அழைக்கப்படவில்லை என்று கொரிந்திய ருக்கு அவர் நினைவூட்டுகிறார். 'ஒருவருமில்லை' என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்படாமல் 'அநேக ரில்லை' என்று சொல்லப்பட்டிருப்பதை அவ்வப் போது சிலர் சுட்டிக்காட்டுவதுண்டு. இந்த இரண்டு சொற்களுக்கும் உள்ள சிறிய வேற்றுமையின் காரணமாக, தான் இரட்சிக்கப்பட்டதாக பிரபுக்கள் குலத்தில் பிறந்த ஒரு சகோதரி கூறுவதுண்டு.

கொரிந்து நகர விசுவாசிகள் ஞானம் மிகுந்த மேல்குடி சமுதாயத்தில் இருந்து தோன்றியவர்கள்

அல்லர். உரத்த சத்தத்தோடு ஒலிக்கும் தத்துவ ஞானத்தினால் அவர்கள் அழைக்கப்படவில்லை. மாறாக எளிமையான நற்செய்தியினால்தான் அவர்கள் அழைக்கப்பட்டார்கள். பின்னர் எதன் காரணமாக அவர்கள் மனித ஞானத்திற்கு முக்கியத்துவம் அளித்து, உலக ஞானிகளின் மனதிற்கு உகந்த வண்ணம் நற்செய்தியை மாற்றி அமைக்க வேண்டும் என்று எண்ணுகிற பிரசங்கிகளைப் புகழ்கிறார்கள்?

ஒரு சபையை மனிதர்கள் கட்ட வேண்டுமானால், அந்தச் சமுதாயத்தில் இருக்கும் புகழ் பெற்ற பிரமுகர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க முற்படுவார்கள். ஆனால் மனிதர்களால் மேன்மையாக மதிக்கப்படுகிறவர்களை தேவன் விடுத்துச் செல்கிறார் என்று இருபத்தாறாவது வசனம் நமக்குக் கற்பிக்கிறது. பொதுவாக அவரால் அழைக்கப்படுகிறவர்கள், உலகத்தால் மேன்மையாகக் கருதப்படுகிறவர்கள் இல்லை.

**1:27 ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பல வீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.** எரிக் சாயர் கூறுகிறபடி:

> பயனற்ற பொருளைக் கொண்டு தரம் மிகுந்த கலைப்பொருள் செய்யப்படுமாயின் அதனை உருவாக்கியவன் புகழப்படுவான்; சிறிய படையைக் கொண்டு மாபெரும் வெற்றியை அடைந்தால் வெற்றி பெற்றவனுக்கே புகழ்ச்சி உண்டாகும்.[3]

எரிகோவின் அலங்கம் விழுந்து நொறுங்குவதற்கு தேவன் எக்காளத்தைப் பயன்படுத்தினார். மீதியானியரின் பெரும்படையைத் தோற்கடிக்க கிதியோனின் படைவீரர்களை 32000-த்திலிருந்து 300 -ஆகக் குறைத்தார். சம்காரின் கையினால் பெலிஸ்தரைத் தோற்கடிக்க ஒரு தாற்றுக்கோலை அவர் பயன்படுத்தினார். கழுதையின் ஒரு தாடையெழும்பினால் முழுப்படையையும் தோற்கடிக்க சிம்சோனைப் பயன்படுத்தினார். சில அப்பங்களையும் மீன்களையும் கொண்டு நம்முடைய கர்த்தர் 5000 பேருக்கும் மேலாக உணவளித்தார்.

**1:28** "மதியீனர்களைக் கொண்ட தேவனுடைய ஐந்தாம் தரப்படை" என்று ஒருவர் கூறியதை இதனோடு சேர்த்துரைக்கலாம். **உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும்** என்று பவுல் சேர்த்துக் கூறுகிறார். இப்படிப்பட்ட நம்பிக்கையற்ற பொருட்களினாலே உள்ளவைகளை தேவன் அவமாக்கினார். அதாவது இந்த உலகத்தின் கண்களுக்கு மதிப்பற்றவர்களாகத் தோன்றுகிற மக்களைத் தெரிந்தெடுத்து, அவர்கள் மூலமாகத் தாம் மகிமை அடைவதை அவர் விரும்புகிறார். சமுதாயத்தில் மேம்பட்டவர்களையும் முகஸ்துதி செய்பவர்களாகவும், மிகவும் தாழ்மையான பரிசுத்தவான்களை மதிக்காதவர்களாகவும் நடந்துகொள்ளும் கிறிஸ்தவர்களுக்கு இந்த வசனங்கள் கடிந்துரையாக விளங்குகின்றன.

**1:29** இவ்வுலகத்தாரின் கண்களுக்கு ஒன்றுமற்றவர்களாகத் தோன்றுகிற மனிதர்களை தேவன் தெரிந்துகொள்ளுவதின் நோக்கம் யாதெனில், மகிமை முழுவதும் மனிதனையல்ல, அவரையே சேரவேண்டும் என்பதேயாகும். இரட்சிப்பானது முழுவதும் அவரைச் சார்ந்ததாக இருக்கிறபடியால், புகழ்ச்சியைப் பெற்றிடவும் அவரே தகுதி உடையவர்.

**1:30,31** நாம் யாரென்றும் நமது உடைமை யாதென்றும் காணுமிடத்து, யாவும் அவரிடத்தினின்றே வந்துள்ளன. அவை தத்துவ ஞானத்திலிருந்து உருவானவை அல்ல. ஆகையால், மனிதனுடைய புகழ்ச்சிக்கு அங்கே இடமில்லை. முதலாவதாக, கிறிஸ்து **நமக்கு ஞானமானார்**. அவரே தேவ ஞானமாகத் திகழ்கிறார் (வச. 24). அவரே இரட்சிப்பிற்குரிய வழியாக தேவ ஞானத்தினால் தெரிந்துகொள்ளப்பட்டவர். நாம் அவரைப் பெற்றிருக்கும்போது, நாம் தகுநிலை ஞானத்தை உடையவர்களாகவும், அதனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்பை உடையவர்களாகவும் இருக்கிறோம். இரண்டாவதாக, அவர் நம்முடைய **நீதியாக** இருக்கிறார். விசுவாசத்தின் மூலமாக, பரிசுத்த தேவனால் நாம் நீதிமான்களாகக் கணக்கிடப்பட்டிருக்கிறோம். மூன்றாவதாக, அவர் நம்முடைய **பரிசுத்தமுமாக** இருக்கிறார். தனிப்பட்ட வகையில் நம்மிடத்தில் எவ்விதப் பரிசுத்தமும் இல்லை. ஆனால் அவருக்குள்ளாக நாம் தகுநிலைப் பரிசுத்தத்தைப் பெற்றிருக்கிறோம். மேலும் அவருடைய வல்லமையினால் பரிசுத்தத்தில் ஒரு படியிலிருந்து இன்னொரு படிக்கு மறுரூபம் அடைகிறவர்களாக இருக்கிறோம். இறுதியாக, அவர் நம்முடைய **மீட்புமாக** இருக்கிறார். கர்த்தருடைய வீட்டில் அவரோடுகூட இருக்கும்படியாக நம்மை அழைத்துச் செல்ல அவர் வரும்போது நமது மீட்பின் கடைசிக் கட்டம் நிறை

வேறும் என்பதை இ.ீ.து ஐயமற எடுத்தியம்பு கிறது. அந்நாளிலே நமது ஆவி, ஆத்துமா, சரீரம் எல்லாவற்றிலும் மீட்பின் நிறைவு விளங்கும்.

இந்த உண்மையை ட்ரெய்ல் என்பார் மிகத் தெளிவாகச் சித்திரித்துள்ளார்:

> கிறிஸ்துவற்ற ஞானம் சாபத்தை வருவிக்கும் மதியீனமாகும் – கிறிஸ்துவற்ற நீதி குற்றவு ணர்வும் ஆக்கினையுமாகும் – கிறிஸ்துவற்ற பரிசுத்தம் அழுக்கும் பாவமுமாகும் – கிறிஸ்து வற்ற மீட்பு சிறையிருப்பும் அடிமைத்தனமும் ஆகும்.[4]

A. T. பியர்சன் என்பார் இந்த வசனத்தை நம்மு டைய கர்த்தரின் வாழ்வோடும் ஊழியத்தோடும் ஒப்பிட்டுப் பேசுகிறார்:

> அவருடைய செயல்களும், சொற்களும், நடை முறைப் பழக்கங்களும் அவர் தேவனுடைய ஞானம் என்பதை வெளிப்படுத்தின. தொடர்ந்து வருவன அவருடைய மரணமும் அடக்கமும் உயிர்த்தெழுதலுமாகும். இவை யாவும் நம்மு டைய நீதியோடு தொடர்புடையவை. பின்னர் நாற்பது நாட்கள் மனிதர்களோடு அவர் நடந் ததும், உயர வானத்திற்கு எழுந்ததும், ஆவி யின் வரத்தை அளித்ததும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கும் காலமும் ஆகும். இவை யாவும் நம்முடைய பரிசுத்தமாக்கப்படு தலோடு தொடர்புடையவை. பின்னர் அவரு டைய வருகை, இது நம்முடைய மீட்போடு தொடர்புடையதாகும்.[5]

இந்த நன்மைகள் யாவும் கர்த்தரிடத்தி லிருந்தே நம்மிடத்திற்கு வரும்படியாக தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். இதனை அடிப்படையாகக் கொண்டு பவுல் எழுப்புகிற வாதம், "மனிதனில் ஏன் மேன்மை பாராட்டுகிறீர்கள்? மேற்கூறியவற் றில் எந்த ஒரு செயலையும் உங்களுக்காக அவர் களால் செய்ய முடியாதே" என்பதாகும்.

**2:1** கொரிந்து சபையினரிடத்தில் தான் ஆற் றிய பணியைக் குறித்தும், அதுகாலை தனது புகழ்ச் சியை நாடாமல் தேவனுடைய புகழ்ச்சியையே தான் நாடியதைக் குறித்தும் அங்குள்ள பரிசுத்த வான்களுக்கு அப்போஸ்தலன் இப்பொழுது நினைவுபடுத்துகிறார். **தேவனைப் பற்றிய சாட் சியை அறிவிக்கிறவராக** அவர், அவர்களிடத் தில் வந்தார். **சிறந்த வசனிப்போடாவது ஞானத் தோடாவது** அதனை அவர் அறிவிக்கவில்லை. தன்னை நாவன்மை மிக்கவர் என்றோ தத்துவ ஞானி என்றோ பகட்டாய்க் காட்டிக்கொள்ளச் சிறிதளவு விருப்பமும் அவரிடத்தில் இல்லை. இங்ஙனம் கூறுகையில் ஆத்துமாவிற்குரிய ஊழியத்திற்கும் ஆவிக்குரிய ஊழியத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அப்போஸ் தலன் இங்கு வலியுறுத்துகிறார். பொதுவாக, மனிதர்களுடைய மனம் கிளர்ச்சியடையத்தக்க வகையில் களிப்பூட்டுகிறதும், பொழுதுபோக்கு கிறதுமான செயல்களையே ஆத்துமாவிற்குரிய ஊழியம் என்று கூறுகிறோம். அதற்கு மாறாக, கிறிஸ்துவுக்குப் புகழ்ச்சி உண்டாகத் தக்கதாக தேவனுடைய திருமொழியின் உண்மைகளை எடுத்தியம்புவதும், கேட்போருடைய இருதயத் தையும் மனச்சாட்சியையும் தொடுகிறதுமான ஊழியமே ஆவிக்குரிய ஊழியமாகும்.

**2:2 இயேசு கிறிஸ்துவே, சிலுவையில் அறையப்பட்ட அவரே** பவுல் ஆற்றிய செய்தி யின் கருப்பொருளாக இருந்தார். **இயேசு கிறிஸ்து** என்னும் சொற்றொடர் ஒருவரைச் சுட்டிக்காட்டு கிறது. **சிலுவையில் அறையப்பட்ட அவர்** என்பது, அவர் செய்த செயலைக் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமையும், அவருடைய செயலுமே நற்செய்திப் பிரகடனத் தின் கருப்பொருளாகும்.

**2:3** அடுத்ததாக, தன்னுடைய நடைமுறைத் தோற்றத்தில் எவ்வித மேன்மையும் கவர்ச்சியும் இருந்ததில்லை என்பதைப் பவுல் வலியுறுத்து கிறார். **பலவீனத்தோடும் பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும்** அவர்களோடு அவர் இருந்தார். மகத்துவமுள்ள வல்லமையானது பவுலின் மூலமாக உண்டாகாமல் தேவனால் உண்டாகும் படி நற்செய்தியாகிய பொக்கிஷம் மண்பாண்டத் தில் இருந்தது. வலிமை மிக்கவை தோற்கடிக்கப் படும்படி வலிமை குன்றியவற்றை தேவன் பயன் படுத்துகிறார் என்பதற்குப் பவுல் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினார்.

**2:4,5** பவுல் பேசிய **பேச்சும்** அவர் ஆற்றிய **பிரசங்கமும் மனித ஞானத்திற்குரிய நயவசன முள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தி னாலும் உறுதிப்பட்டதாயிருந்தன. பேச்சு** என்னும் சொல் அவர் பேசிய கருத்துக்களையும் பாணியையும் குறிக்கின்றன என்று சிலர் கூறு கின்றனர். தனிப்பட்டோருக்கு அவர் அளித்த சாட்சியே அவருடைய பேச்சு என்றும், குழுவாகக் கூடியவருக்கு அவர் கொடுத்த செய்தியே **பிரசங் கம்** என்றும் பிறர் விளக்கம் அளிக்கின்றனர்.

இந்த உலகம் நிர்ணயிக்கின்ற தகுதியின் அடிப் படையில் ஒருக்காலும் அவரால் பேச்சுப்போட்டி யில் வெற்றிபெற்றிருக்க முடியாது. ஆயினும் பாவத்தைக் குறித்து மனிதர்களைக் கண்டித்து உணர்த்தவும், அவர்கள் தேவனிடத்தில் மனந் திரும்பவும் அந்தச் செய்தியையே தேவ ஆவி யானவர் பயன்படுத்தினார்.

தன்னுடைய பிரசங்கங்களைக் கேட்போர், ஜீவனுள்ள கர்த்தரிடத்தில் ஆர்வம் கொள்வதற் குப் பதிலாக, தன்னிடத்திலும் தனது நடை முறைத்தோற்றத்திலும் ஆர்வமுடையவராக மாறிவிடக்கூடிய பேராபத்தை அவர் அறிந்திருந் தார். தனது சொந்த ஆற்றலினாலே மனிதர்களை ஆசிர்வதிக்கவோ இரட்சிக்கவோ இயலாதென்று அறிந்திருந்த அப்போஸ்தலன், அவர்கள் **மனிதர் களுடைய ஞானத்தை** நம்பாமல் **தேவனை** நம்பும்படியாக அவர்களை வழிநடத்தினார். நற் செய்தியைப் பிரசங்கிக்கிறவர்களும், தேவனு டைய வார்த்தையைப் போதிக்கிறவர்களும் இதனை உறுதியுடன் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் நோக்கமுடையோராய் இருத்தல் அவசியம்.

**2:6** நற்செய்தி காட்டும் **ஞானம்** முதலாவதாக தேவனைப் பிறப்பிடமாகக் கொண்டதாகும் (வச. 6,7). தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம். நல்ல வளர்ச்சி அடைந்தவர்களே தேறினவர்கள் ஆவர். ஆயினும் அது **இப்பிரபஞ் சத்தின் ஞானமல்ல, இப்பிரபஞ்சத்தின் பிரபுக் களுடைய** கண்களுக்கு ஞானமாய்த் தோன்று கிறதுமல்ல. காலையில் தோன்றி மாலையில் மறைந்து போகிறவற்றிற்கு ஒப்பாகவே உலக ஞானமும் தானாகவே அழிந்துபோகும்.

**2:7 இரகசியமான தேவ ஞானத்தையே நாங்கள் பேசுகிறோம்.** முன்பு மறைவாக வைக் கப்பட்டு, சபையின் தொடக்க காலத்திலே அப் போஸ்தலர்களாலும் தீர்க்கதரிசிகளாலும் விசு வாசிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டுச் சத்தியமே **இரகசியம்** எனப்படும். இந்த இரகசியத்தை **உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தி மறைத்து வைத்திருந்தார்.** யூதர் களும் புறவினத்தவர்களும் *இப்பொழுது* கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இணைந்துள்ளனர்; தமக்காகக் காத்திருக்கும் தம்முடைய மக்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வந்து தமது இல் லத்தில் தம்மோடு இருக்கும்படியாக அழைத்துச் செல்வார்; எல்லா விசுவாசிகளும் மரணத்தைக் காணமாட்டார்கள், ஆனால் எல்லாரும் மறுரூப மடைவார்கள். இத்தகைய நிகழ்ச்சிகள் யாவும் நற்செய்தியைக் குறித்த இரகசியத்திற்கு உட் பட்டவையாம்.

**2:8** வானமண்டலத்தில் உள்ள பொல்லாத ஆவிகளும், அவற்றின் பிரதிநிதிகளாக விளங் கும் புவிவாழ் மனிதர்களுமே **இப்பிரபஞ்சத்துப் பிரபுக்கள்** என்று அழைக்கப்படுகிறார்கள். மறை வாய் இருக்கிற தேவ ஞானத்தை அவர்கள் அறிய வில்லை (சிலுவையில் தொங்கிய கிறிஸ்து). தேவனுடைய பரிசுத்த குமாரனை அவர்கள் கொன்றது அவர்களுடைய அழிவிற்கே காரண மாயிற்று என்பதையும் அவர்கள் அறியவில்லை. தேவனுடைய வழியை அவர்கள் **அறிந்திருந் தார்களானால் மகிமையின் கர்த்தரை அவர் கள் சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள்.**

**2:9** வெளிப்பாடு, தெய்வீக ஏவுதல் மற்றும் பொருள் விளங்கச் செய்தல் ஆகியவற்றின் செயல் முறை வளர்ச்சிகள் 9 முதல் 16 வரையிலுள்ள வசனங்களில் விளக்கப்பட்டுள்ளன. இந்த வியத் தகு சத்தியங்கள் எங்ஙனம் பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தப்பட்டன என்றும், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு அவர்கள் எவ் வாறு அந்தச் சத்தியங்களை நமக்குத் தந்திருக் கிறார்கள் என்றும், பரிசுத்த ஆவியானவர் எவ் வாறு அந்தச் சத்தியங்களை நாம் புரிந்துகொள் ளத்தக்கதாகப் பொருள் விளங்கச் செய்கிறார் என்றும் இப்பகுதியில் நமக்குச் சொல்லப் பட்டுள்ளது.

இந்த வசனத்தில் மேற்கோள் காட்டப்பட் டுள்ள ஏசாயா 64:4, வியத்தகு உண்மைகளை தேவன் பாதுகாத்து வைத்திருந்தார் என்றும், அவற்றை மனிதனுடைய இயல்பான புலன்களி னாலே கண்டறிய முடியாது என்றும், அவரிடத்தில் **அன்புகூருகிறவர்களுக்கு** ஏற்ற காலத்திலே அவற்றை தேவன் வெளிப்படுத்துவார் என்றும் கூறுகின்ற தீர்க்கதரிசனமாக விளங்குகிறது. (**கண், காது** மற்றும் **இருதயம்** அல்லது மனது) மூன்று புலன்களினாலே உலகத்திற்குரியவற்றை நாம் கற்றுக் கொள்கிறோம். இங்கு சொல்லப் பட்டுள்ள புலன்களினாலே தெய்வீக உண்மை களை அறிய முடியாது. இவற்றை அறிந்துகொள் வதற்கு தேவ ஆவி தேவை.

விண்ணுலக மகிமைகளை இந்த வசனம் குறிக்கிறது என்று பொதுவாக பொருள் விளக்கம் அளிக்கின்றனர். அந்த அர்த்தத்தை நம்முடைய உள்ளம் ஏற்றுக்கொண்டிருக்குமானால், அங்

கிருந்து அதனை அகற்றுவது கடினம். வேறு ஒரு பொருளை ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம். ஆயின், புதிய ஏற்பாட்டில் முதன் முதல் வெளிப் படுத்தப்பட்டுள்ள ஓர் உண்மையைப் பற்றி இங்கே பவுல் பேசுகிறார். அறிவியல் ஆராய்ச்சி களின் மூலமாகவும் தத்துவ ஞானத்தின் அடிப் படையிலும் மனிதர்களால் இந்த உண்மைகளை அறிந்துகொள்ள முடியாது. நற்செய்தியின் கால கட்டத்தின் தொடக்கத்திலே இந்த வியத்தகு இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டன. மனிதன் தனது மனதின் அறிவினாலே இவற்றை கண்டறி யட்டும் என்று விட்டிருந்தால் ஒருக்காலும் அவ னால் அறிந்திருக்க முடியாது. இறை உண்மை களைக் கண்டறிவதற்கு மனிதனுடைய பகுத் தறிவு முற்றிலும் தகுதியற்றதாயிருக்கிறது.

**2:10 நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்** என்று இங்கே சொல்லப்பட்டிருப்பதாலே ஒன்பதாவது வசனம் விண்ணுலகைக் குறிக்கிறதில்லை என் பது மெய்ப்பிக்கப்படுகிறது. அதாவது பழைய ஏற் பாட்டில் முன்னுரைக்கப்பட்ட இந்தச் சத்தியங்கள் புதிய ஏற்பாட்டுக் காலத்திலே அப்போஸ்தர் களுக்கு வெளியாக்கப்பட்டன. **நமக்கோ** என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது புதிய ஏற்பாட்டை எழுதிய எழுத்தாளர்களைக் குறிக்கிறது. அப் போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தேவ **ஆவி யினாலே** கற்பிக்கப்பட்டனர். ஏனெனில் **அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனு டைய ஆழங்களையும் ஆராய்ந்திருக்கிறார்.** அதாவது, தேவ தலைமையில் ஒருவராகிய ஆவி யானவர் எல்லைக்குள் அடங்கா தமது ஞானத்தி னாலே தேவனுடைய உண்மைகளையெல்லாம் அறிந்து மற்றவர்களுக்கும் விளக்கித்தர திறமை யுடையவராக இருக்கிறார்.

**2:11** மனிதனைக் குறித்த காரியத்திலும்கூட, ஒரு மனிதன் என்ன சிந்திக்கிறான் என்பதை அவ னைத் தவிர வேறு ஒருவரும் அறியமாட்டார்கள். அவனே அதைச் சொல்வதற்கு விரும்பினா லொழிய வேறு எவராலும் அதைக் கண்டுபிடிக்க முடியாது. இருந்தபோதிலும், ஒரு மனிதனைக் குறித்து அறிந்துகொள்ள, ஒருவனுக்கு ஒரு **மனுஷனிலுள்ள ஆவி** வேண்டும். நம்முடைய சிந்தனை யாவற்றையும் ஒரு விலங்கினால் புரிந்துகொள்ள முடியாது. தேவனைக் குறித்தும் அதுபோலவே இருக்கிறது. தேவனுடையவற்றை அறிந்துகொள்ளக்கூடிய ஒரே ஒருவர் **தேவனு டைய ஆவியே** ஆவார்.

**2:12** இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருப் பவை வேதத்தின் எழுத்தாளர்கள் அனைவருக் கும் பொருத்தமாயிருப்பினும், இங்கு காணப்படும் நாங்கள் என்னும் சொல் புதிய ஏற்பாட்டு எழுத் தாளர்களைக் குறிக்கிறது. அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் தூய ஆவியானவரைப் பெற் றுக்கொண்டதால், அவர்தாமே தேவனுடைய ஆழ்ந்த உண்மைகளை அவர்களிடம் பகிர்ந்து கொள்ள ஏதுவாயிற்று. இந்த வசனத்தில் அப் போஸ்தலன் அந்தப் பொருள்படவே பேசுகிறார்: "நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்." தேவனிடத்திலிருந்து புறப்படுகிற ஆவியினால் அன்றி, தெய்வீக உண் மைகளை அப்போஸ்தலர்களால் பெற்றிருக்க முடியாது. அந்த உண்மைகளையே பவுல் பேசு கிறார். அவை நமக்காகப் புதிய ஏற்பாட்டில் பாது காப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

**2:13** புனிதமான வேதத்தை எழுதிய எழுத் தாளர்களுக்கு தேவனுடைய சத்தியங்களைக் குறித்த வெளிப்பாடு எங்ஙனம் அருளப்பட்டது என்பதைப் பற்றிய செயல்முறை விளக்கத்தை அளித்த பவுல், தொடர்ந்து தெய்வீக ஏவுதலின் செயல்முறை விளக்கத்தைத் தருகிறார். இந்த வழியாகவே நாமும் இந்த உண்மைகளை அடைந் திருக்கிறோம். வேதத்தின் சொற்கள் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டவை என்னும் பொருள் குறித்துப் பேசும் வலிமை மிக்க வேத பகுதிகளில் இந்த வசனமும் ஒன்றாகும். இந்தச் சத்தியங் களை நமக்குத் தரும்போது அதற்கான **வார்த் தைகளை** அவர்களாகவே சொந்தமாகத் தெரிந் தெடுக்கவில்லையென்றும், **மனிதஞானம்** கட்ட ளையிட்ட வார்த்தைகளைப் பயன்படுத்த வில்லையென்றும் அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு மிகத் தெளிவாகக் கூறுகிறார். மாறாக, **பரிசுத்த ஆவி போதித்த** அதே வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தினார்கள். ஆகவே வேதத் தின் வார்த்தைகள் யாவும், அதன் மூலப்பிரதி களில் கண்டுள்ளபடி, தேவனுடைய வார்த்தை களாகவே இருக்கின்றன (மேலும், தற்போதைய நிலையில் காணப்படுகிற வேதம் முழுவதும் நம்பத்தகுந்ததாக இருக்கிறது).

இங்கு நாம் கூறிய கருத்திற்கு, கூக்குரலோடு கூடிய சில எதிர்ப்புகள் எழுகின்றன. ஏனெனில் எழுத்தாளர்களுடைய மொழிநடைக்கு தேவன் இடம் தராமல் *இயந்திரம் போன்று* சொல்லி

*எழுதப்பட்டதே* வேதம் என்று நாம் கூறுவதாக அவர்கள் நினைக்கிறார்கள். ஆயினும் பவுல் எழுதியவற்றிற்கும் லூக்கா எழுதியவற்றிற்கும் மொழிநடை வேறுபாடு இருக்கிறது என்பதை நாம் அறிவோம். அவ்வாறாயின், வேதம் தெய்வீக ஏவுதலால் கொடுக்கப்பட்ட வார்த்தைகளால் எழுதப்பட்டது என்ற கருத்திற்கும் எழுத்தாளர்களின் மொழிநடைக்கு ஏற்ப வேதம் திகழ்கிறது என்ற கருத்திற்கும் எவ்வாறு உடன்பாடு காண்பது? இதனை நாம் புரிந்துகொள்ள இயலாத ஏதோ ஒருவகையில் செய்திருக்கிறார். வேதத்தில் உள்ள சொற்கள் அனைத்தையும் கொடுத்தது தேவனே ஆவார். ஆயினும் எழுத்தாளர்களின் தனித்தனி மொழிநடை வேதத்தில் விளங்கும்படி நிறைவான வார்த்தைகளால் அதைத் தந்திருக்கிறார்.

**ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்கிறோம்** என்னும் கூற்றைப் பலவகைகளில் விளக்கிக் கூறலாம். (1) ஆவிக்குரிய உண்மைகளை ஆவியானவர் கொடுத்த வார்த்தைகளினால் கற்றுக்கொடுப்பது (2) ஆவிக்குரிய உண்மைகளை ஆவிக்குரிய மனிதர்களுக்குத் தெரிவிப்பது (3) வேதத்தின் ஒரு பகுதியில் காணப்படும் ஆவிக்குரிய உண்மைகளை வேறொரு பகுதியிலிருக்கும் உண்மைகளோடு ஒப்பிட்டு நோக்குதல் என்று பல விளக்கங்கள் உள்ளன. இந்த வேதபகுதியின் பின்னணியில் காணும்போது முதல் விளக்கம் மிகப் பொருத்தமானதாக இருக்கிறது என நாம் நம்புகிறோம். தெய்வீக உண்மைகளை வெளிப்படுத்தும் பொருட்டு, அதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளைத் தந்து பரிசுத்த ஆவியானவரே ஆவிக்குரிய ஏவுதலைச் செயல்படுத்துகிறார் என்று இங்கு பவுல் கூறுகிறார். ஆகவே இவ்வசனத்தின் பொழிப்புரையாக, 'ஆவிக்குரிய உண்மைகளை ஆவிக்குரிய வார்த்தைகளினாலே வழங்குதல்' என்று நாம் கூறலாம்.

நாங்கள் **பேசி** என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய "நாங்கள் எழுதி" என்று சொல்லப்படவில்லை. ஆகவே இந்தப் பகுதியானது ஆவிக்குரிய ஏவுதலைக் குறிப்பதில்லை என்று சில வேளைகளில் எதிர்க்கப்படுகிறது. . ஆனால் ஆவிக்குரிய ஏவுதலினால் எழுதப்பட்டவற்றைக் குறிக்க, "பேசி" (சொன்னான்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம் (எ. கா., யோவான் 12:38,41; அப். 28:25; 2 பேதுரு 1:21).

**2:14** நற்செய்தி வெளிப்படுத்தப்பட்டது தெய்வீகமானது, அது எழுதப்படுவதற்குத் தேவையான ஏவுதலும் தெய்வீகமானது. இவை மட்டுமின்றி தேவ ஆவியின் வல்லமையால் மட்டுமே இது மனிதர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று இங்கு கற்றுக்கொள்கிறோம். எவ்வித உதவியுமின்றி **ஜென்மசுபாவ மனிதனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்.** அவை ஆவிக்கேற்ற பிரகாரமாய் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியதாக இருப்பவை. ஆகவே அவனால் அவற்றை அறிந்துகொள்ள முடியாது.

வேன்ஸ் ஹேவ்னர் என்பார் இதனை வண்ணப் பொலிவுடன் கூறி அறிவுரை நல்குகிறார்:

> தேவனுடைய திட்டத்தை, புதுப்பிறப்பை அடைந்திராத மனிதர்களிடம் விளக்கிக் கூறும்படி ஞானமுள்ள கிறிஸ்தவன் தனது நேரத்தை வீணடிக்க மாட்டான். பன்றிகளுக்கு முன்பு முத்தை வீசியெறியக்கூடாது. அதற்குப் பதிலாக, கண்தெரியாத ஒருவனிடத்தில் கதிரவன் மறைவதை விளக்கிக் கூறலாம் அல்லது அணு ஆற்றலைக் குறித்து நகரப் பூங்காவின் நடுவில் இருக்கும் நினைவுச் சின்னத்திடம் உரையாடலாம். ஜென்ம சுபாவ மனிதனால் இவற்றை அறிந்துகொள்ள முடியாது. தூய ஆவியானவரின் உதவியின்றி தேவனுடைய வெளிப்பாட்டை அறிந்துகொள்ள முயற்சி செய்வது கதிரவனின் ஒளிக்கீற்றை ஒருவன் தூண்டில் முள்ளினால் பிடிக்க முயற்சி செய்வதற்கு ஒப்பாகும். ஒருவன் ஆவியில் பிறவாமலும் அவரால் போதிக்கப்படாமலும் இருப்பானாயின், இவை யாவும் முற்றிலும் அவனுக்கு அந்நியமாயிருக்கும். முனைவர் பட்டம் ஒருவனுக்கு உதவி செய்வதில்லை. ஆவிக்குரிய உலகைப் பொருத்தமட்டில் அது 'பகட்டாயிருந்தாலும் பயனற்ற ஒன்றாகும்![6]

**2:15** இதற்கு மாறாக, தேவனுடைய ஆவியின் மூலமாக ஆவிக்குரிய வெளிச்சத்தைப் பெற்றவன், இந்த வியத்தகு உண்மைகளைப் புரிந்து கொள்ளக் கூடியவனாக இருக்கிறான். மனம் மாற்றம் பெற்றிராத ஒரு மனிதனாலே **அவன் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.** ஒருவேளை அவன் தச்சனாகவோ, குழாய்களைப் பழுது பார்க்கிறவனாகவோ, மீன்பிடிக்கிறவனாகவோ

இருக்கலாம்; ஆயினும் பரிசுத்த வேத எழுத்து களைத் திறம்படப் படிக்கிறவனாக அவன் இருப் பான். "தூய ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் கிறிஸ்தவன் வேதத்தை நன்கு சோதித் துப் பார்க்கிறான், ஆராய்ந்து பார்க்கிறான், கூர்ந்து பார்க்கிறான்; பின்னர் அதில் அடங்கியுள்ள செய்தி களைப் புரிந்துகொண்டு அவற்றைப் பாராட்டி களி கூர்கிறான்" (KSW). இந்த உலகிற்கு அவன் ஒரு புதிராக விளங்குகிறான். அவன் வேதக் கல் லூரிக்கோ பள்ளிக்கோ சென்றிருக்கமாட்டான். ஆனாலும் அவன் தேவனுடைய வார்த்தையின் ஆழமான இரகசியங்களைப் புரிந்துகொள்ளவும் ஒருவேளை மற்றவர்களுக்கு அதைக் கற்பிக் கவும் கூடியவனாக இருப்பான்.

**2:16** இப்பொழுது அப்போஸ்தலன் ஏசாயா வுடன் சேர்ந்து சொல்வன்மைமிக்க வகையில் ஒரு கேள்வியை எழுப்புகிறார்: "கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்?" ஒரு கேள்வி எழுப்பப்படு மாயின் அதற்குரிய பதிலையும் தரவேண்டும். மனிதனுடைய ஞானத்தினாலோ அவனுடைய வலிமையினாலோ தேவனை அறிந்திட இயலாது. அவர் தம்மை வெளிப்படுத்த சித்தம் கொண்டால் ஒழிய அவரை அறிந்துகொள்ள முடியாது. இருந்த போதிலும் கிறிஸ்துவின் சிந்தையை உடைய வராக இருப்போர் தேவனுடைய ஆழ்ந்த சத்தியங் களைப் புரிந்துகொள்ள முடியும்.

மேற்கூறிய சத்தியங்களை மீண்டும் காண் போம். முதலாவது, வெளிப்பாடு குறித்து சொல் லப்பட்டுள்ளது (வச. 9-12). முன்னர் மனிதர்கள் அறிந்திராத சத்தியங்களை தேவன் தூய ஆவி யானவரின் மூலமாக வெளிப்படுத்தினார். இந்த உண்மைகள் தேவனுடைய ஆவியின் மூலமாக இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் வெளிப் படுத்தப்பட்டன.

இரண்டாவதாக, தெய்வீக ஏவுதல் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது (வச. 13). இந்த உண்மை களை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதற் காக அப்போஸ்தலர்கள் (வேதாகமத்தின் மற்ற எழுத்தாளர்களும்) பரிசுத்த ஆவியானவர் பயன் படுத்தும்படி போதித்த அதே வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள்.

இறுதியாக, பொருள் விளக்கம் அளிக்கும் வெளிச்சத்தைக் குறித்து காண்கிறோம் (வச. 14-16). இந்த உண்மைகள் அதிசயிக்கத் தக்கபடி வெளிப்படுத்தப்பட்டுள்ளன; மேலும் அதிசயிக்கத் தக்கபடி தெய்வீக ஏவுதலினால் எழுதப்பட்டுள் ளன. ஆனால் அவற்றை, பரிசுத்த ஆவி அருளும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

**3:1** கொரிந்துப் பட்டணத்திற்கு முதன் முறையாக பவுல் வருகை புரிந்தபோது அங்கு விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் பலவீன மானவர்களாகவும் வளர்ச்சியற்றவர்களாகவும் இருந்த காரணத்தினால் பால் போன்ற எளிய வேத வார்த்தைகளை அவர் அவர்களுக்குப் புகட்டினார். அவ்வாறு கொடுக்கப்பட்ட படிப்பினை கள் அவர்கள் இருந்த நிலைக்கு ஏற்றதாயிருந் தன. அவர்கள் விசுவாசத்தில் புதியவர்களாக இருந்த காரணத்தினால் ஆவிக்குரிய ஆழமான அறிவுரைகளை அவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது. **கிறிஸ்துவுக்குள் குழந்தை களாகவே** அவர்கள் இருந்தார்கள்.

**3:2** கிறிஸ்துவைப் பற்றிய அடிப்படை உண் மைகளை மட்டுமே பவுல் அவர்களுக்குப் போதித் திருந்தார். அதனை **பால்** என்று அவர் கூறுகிறார். அவர்கள் வளர்ச்சியற்றவர்களாயிருந்த காரணத் தினால் அவர்களால் **போஜனத்தை** உண்ண முடியவில்லை. "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக் கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்" என்று இதே மனப்பாங்குடன் கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து தமது சீடர்களிடம் கூறி னார் (யோவான் 16:12). கொரிந்தியர்களைப் பொருத்தமட்டில் வருத்தத்திற்குரிய காரியம் என்ன வென்றால், அப்போஸ்தலனிடமிருந்து ஆழமான உண்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற முன்னேற்றத்தை அவர்கள் இன்னும் அடைய வில்லை என்பதேயாகும்.

**3:3** அந்த விசுவாசிகள் **இன்னமும் மாம்சத் திற்குரியவர்களாக**, அதாவது தங்களுடைய ஆத்துமாவில் உலகப் பொருட்களில் நாட்ட முடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக் குள்ளாக இருந்த பொறாமையும் வாக்குவாதமும் அவர்களுடைய நிலைமையை வெளிப்படுத்தின. அப்படிப்பட்ட நடத்தை இந்த உலகிற்குரியவர் களுடையதாக இருக்கிறதேயொழிய, தேவ ஆவி யினால் நடத்தப்படுகிறவர்களுக்கு உரியதன்று.

**3:4** **பவுல்** மற்றும் **அப்பொல்லோ** ஆகிய மனிதர்களைத் தலைவர்களாகக் கொண்டு, தங்களுக்குள்ளாகக் கட்சிகளை உருவாக்கி மனிதர்களுடைய தரத்திற்கு ஏற்றபடியே, அவர் கள் நடந்துகொண்டார்கள். "நீங்கள் மனித மார்க்கமாய் நடக்கிறீர்கள் அல்லவா?" என்று

பவுல் வினவியபோது இப்பொருள்படவே வின வினார்.

மனிதர்களைப் புகழ்ந்து பேசுவது தவறென் பதை நற்செய்தியின் மெய்யான இயல்பைக் கருத் திற்கொண்டு இதுகாறும் அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கிக் கூறினார். தனது எண்ணத்தை இப்பொழுது கிறிஸ்தவ ஊழியத்தை நோக்கித் திருப்பியவராக, அதன் அடிப்படையிலும் சமயத் தலைவர்களின் பெயரில் கட்சிகளை உருவாக் கிக்கொண்டு அவர்களை உயர்த்திப் பேசுவது மதி யீனமான செயல் என்று அவர் மெய்ப்பிக்கிறார்.

**3:5** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை கொரிந் துப் பட்டணத்தார் விசுவாசிப்பதற்கு **அப்பொல் லோவும் பவுலும் ஏதுவாயிருந்த** வேலைக்காரர் தானே (ஊழியக்காரர் என்னும் சொல் வேலைக் காரர் என்று லத்தீன் மொழியில் பொருள்படும்). அவர்கள் கர்த்தருக்காக வேலை செய்கிறவர் களாக மட்டுமே இருந்தார்கள். அவர்கள் எதிர் மாறான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தலைவர்கள் அல்லர். வேலைக்காரரை எஜ மானாக உயர்த்துவது மதியீனமான செயல் என்ப தைக் கொரிந்தியர் அறியாதிருந்தனர். இது பற்றி, "வீட்டுடைமைகளை வேலைக்காரர்கள் பங்கிட் டுக்கொள்வதாகக் கற்பனை செய்துபாருங்கள்!" என்று விநோதமாகத் திருவாளர் அயர்ன்சைடு விளக்கம் அளித்துள்ளார்.

**3:6** ஒரு வேலையாள் செய்யக்கூடிய செயல் மிகவும் கொஞ்சமானதே என்று பயிர்த்தொழி லிருந்து ஒரு உவமையை எடுத்துரைத்து பவுல் விளக்குகின்றார். **பவுல்** நடவு செய்யக்கூடும், **அப்பொல்லோ** நீர்பாய்ச்ச முடியும். ஆனால் **தேவனால்** மட்டுமே **விளையச் செய்ய** முடியும். அதுபோன்று இந்நாட்களிலும் நம்மில் சிலரால் நற்செய்தியைப் பிரசங்கிக்க முடியும்; இரட்சிக்கப் படாத உறவினர்களுக்காகவும் நண்பர்களுக் காகவும் நம் அனைவராலும் ஜெபிக்க முடியும். ஆனால் உண்மையான இரட்சிப்பின் செயலைக் கர்த்தரால் மட்டுமே செய்ய முடியும்.

**3:7** மேற்கூறிய கருத்தின் அடிப்படையில் ஒப் பிட்டுக் காணுமிடத்து உண்மையாகவே நடுகிற வரும் நீர்பாய்ச்சுகிறவரும் மிகவும் முக்கியமான வர்கள் அல்லர். அவர்களுக்குள் உயிரை உண்டுபண்ணக்கூடிய ஆற்றல் இல்லை. அவ் வாறு இருக்கையில் கிறிஸ்தவ ஊழியக்காரர் களுக்கிடையே பொறாமையும் போட்டியும் இருப் பது ஏன்? ஒவ்வொருவரும் அவரவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்ய வேண்டும். கர்த்தர் தமது நன்மையின் கரத்தை நீட்டும்போது அதில் அவர்கள் மகிழ வேண்டும்.

**3:8 நடுகிறவனும் நீர்பாய்ச்சுகிறவனும்** ஒரே நோக்கமும் இலட்சியமும் உடையவர்களாக **ஒன்றாயிருக்கின்றார்கள்.** அவர்களுக்குள்ளாக பொறாமை இருக்க வேண்டிய அவசியமில்லை. ஊழியத்தைப் பொருத்தமட்டில் அவர்களுக் குள்ளாக எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லை. வரப் போகிற ஒரு நாளில் **அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறு வான்**. கிறிஸ்துவின் நியாயாசன நாளே அந்த நாள்.

**3:9** எல்லாரும் தேவன் ஒருவருக்கே பொறுப் பாளிகளாக இருக்கின்றனர், அவனுடைய ஊழி யக்காரர்கள் அனைவரும் **உடன்வேலையாட் கள்** ஆவர். பயிர் விளைவிக்கும்படி பண்படுத்தப் பட்ட **தேவனுடைய பண்ணையில்** அனைவரும் ஒன்றிணைந்து உழைக்கின்றனர். சித்திரத்தைச் சற்று மாற்றி வரைவோமென்றால், ஒரே **மாளிகை யில்** பணிபுரிகிறவர்களாக அவர்கள் இருக்கிறார் கள். "நாம் அனைவரும் தேவனுக்குச் சொந்த மான உடன் வேலையாட்கள், ஒருவரோடொரு வர் இணைந்து வேலை செய்கிறோம்."[7]

**3:10** மாளிகையைப் பற்றிய நினைவினை தொடர்ந்து தனது மனதிற் கொண்டவராக, முத லாவதாக அப்போஸ்தலன் தான் நிறைவேற்றிய அனைத்தும் **தேவ கிருபையின்படியே** நடந்த தென்று எல்லாவற்றிற்கும் தனது நன்றியைத் தெரிவிக்கிறார். அதாவது தகுதியற்ற தனக்கு அப்போஸ்தலனுடைய பணியைச் செய்வதற் குரிய தகுதியைத் தந்தவர் தேவனே என்று அவர் இங்கு கூறுகிறார். பின்னர், கொரிந்துப் பட்டணத் தில் சபை தொடங்கப்பட்டதில் தான் ஆற்றிய பங் கைக் குறித்து, **"புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல அஸ்திபாரம் போட்டேன்"** என்று விவரிக் கிறார். கிறிஸ்துவைப் பிரசங்கித்தவராக, சிலு வையில் அறையப்பட்ட அவரையே பிரசங்கித்த வராக அவர் கொரிந்துப் பட்டணத்திற்கு வந்தார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஸ்தல சபையானது நிறுவப்பட்டது. **"வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான்"** என்று அதனுடன் சேர்த்து உரைக்கிறார். அங்கு ஏற்கனவே அவர் நிறுவிய அஸ்திபாரத்தின் மீது, பின்னர் வருகை புரிந்த மற்ற போதகர்கள் கட்டினார்கள் என்று ஐயத்திற்கு இடமற்றபடி அவர் கூறுகிறார். ஆயி னும், **"அவனவன் தான் அதின்மேல் இன்னவித மாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்"**

என்று அப்போஸ்தலன் எச்சரிக்கிறார். சபையில் போதிக்கும் ஊழியம் மிகவும் முக்கியமானது என்றே அவர் இங்கு கூறுகிறார். பிரிவினையைத் தோற்றுவிக்கும் உபதேசங்களோடும் தேவனுடைய திருமறைக்கு மாறான போதனைகளோடும் கொரிந்து நகரத்திற்குச் சிலர் வருகை புரிந்திருந்தனர். அந்தப் போதகர்களைப் பற்றிய எண்ணங்கொண்டவராகவே பவுல் இந்த வரிகளை எழுதியுள்ளார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**3:11** ஒரு கட்டிடத்திற்கு ஒரு அஸ்திபாரம் போதுமானது. அது ஒருமுறை போடப்பட்டுவிட்டால், மீண்டும் அஸ்திபாரம் போடத் தேவையில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கான அஸ்திபாரத்தைப் போட்டுவிட்டார். அந்த **அஸ்திபாரம் இயேசு கிறிஸ்துவே** ஆவார். அதாவது, அவருடைய ஆள்தன்மையும் அவர் நிறைவேற்றிய செயலுமே அஸ்திபாரமாகத் திகழ்கிறது.

**3:12** ஒரு உள்ளூர் சபையில் தொடர்ந்து கொடுக்கப்படுகின்ற போதனைகள், வெவ்வேறு தரமுடையவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சில போதனைகள் நிலைபேறான மதிப்புடையவை. அவை **பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கல்** ஆகியவற்றிற்கு ஒப்பாக இருக்கின்றன. இங்கு **விலையேறப்பெற்ற கல்** என்று குறிப்பிடப்பட்டிருப்பது வைரம், மாணிக்கம் அல்லது வேறு எந்த இரத்தினக் கல்லோ அல்ல, மாறாக, கருங்கல், பளிங்குக்கல், சலவைக்கல் போன்ற கல்லென்றே தோன்றுகிறது. இந்தக் கற்களே அதிக செலவுமிக்க ஆலயங்களைக் கட்டப் பயன்படும் கற்களாகும். சில போதனைகள் நிலைத்துநிற்கும் தகுதியில்லாமல் காணப்படும், ஒருவேளை எந்த மதிப்பும் இல்லாமல் காணப்படும். அப்படிப்பட்ட போதனைகள், **மரம், புல், வைக்கோல்** ஆகியவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளன.

எல்லாக் கிறிஸ்தவ விசுவாசிகளின் வாழ்க்கையையும் பொதுவான முறையில் குறிப்பிடுவதற்கு இந்த வேத பகுதியைப் பெரும்பாலோர் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு நாளும் நாம் கட்டுகிறவர்களாக இருக்கிறோம் என்பது உண்மையே. நாம் ஆற்றிய பணியின் விளைவுகள் வரவிருக்கின்ற ஒருநாளில் வெளிப்படும். இருந்த போதிலும், இந்தப் பகுதியானது முதலாவது பிரசங்கிகளையும் போதகர்களையும் குறிக்கிறது என்றும், எல்லா விசுவாசிகளையும் அந்த நிலையில் குறிக்கிறதில்லை என்றும் வேதத்தைக் கவனத்தோடு படிக்கிற அனைவரும் குறித்துக் காண விரும்புவார்கள்.

**3:13** வரவிருக்கிற அந்த நாளில், **அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாள்** என்பது கிறிஸ்துவின் நியாயாசன நாளைக் குறிப்பிடுகிறது. அந்த நாளிலே கர்த்தருக்காக ஆற்றிய பணி யாவும் ஆய்வு செய்யப்படும். அவ்வாறு செய்யப்படுகின்ற ஆய்வு **அக்கினியின்** செயலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. தேவனுக்கு மகிமையையும் மனிதனுக்கு ஆசிர்வாதத்தையும் கொண்டுவந்தவையே பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் என்று குறிப்பிடப்பட்டுள்ளன. அவை அக்கினியால் பாதிக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக, தேவனுடைய மக்களுக்கிடையே பிரச்சினைகளை எழுப்பிய போதனைகள், அவர்களுக்கு எவ்விதத்திலும் படிப்பினை புகட்டாத போதனைகள் யாவும் சுட்டெரிக்கப்படும். **அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.**

**3:14** சபையோடு தொடர்புடைய பணி மூவகைப்படும். இந்த வசனத்தில் முதல் வகையைக் காண்கிறோம். இது பயன் விளைவிக்கும் பணியாகும். இவ்வகையைச் சேர்ந்த ஊழியன் வாழ்நாட் காலத்தில் ஆற்றிய பணி கிறிஸ்துவின் நியாயசனத்தில் சோதிக்கப்பட்டு **நிலைநிற்கும்**. அந்த ஊழியனும் **கூலியைப்பெறுவான்**.

**3:15** இரண்டாவது வகையான வேலை எவ்விதப் பயனும் அற்றதாகும். இந்த வகையான பணியைச் செய்தவன் **நஷ்டமடைவான்**. ஆயினும் **அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்.** "நஷ்டம் என்று சொல்லுமிடத்து, ஒருவன் தான் ஏற்கனவே பெற்றிருப்பதை இழந்து போக வேண்டுமென்னும் அவசியமில்லை" என்று திரு E. W. ரோஜர் குறிப்பிட்டுள்ளார்.[8] ஒரு விசுவாசியினுடைய பாவங்களைக் குறித்தோ அவற்றிற்கான தண்டனையைக் குறித்தோ கிறிஸ்துவின் நியாயாசனம் சோதிக்கப் போகிறதில்லை என்பதைப் பற்றி நாம் தெளிவுடையவர்களாக இருக்க வேண்டும். ஒரு விசுவாசியின் பாவங்களுக்கான தண்டனையைக் கல்வாரியில் நடப்பட்ட சிலுவையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஏற்கனவே ஏற்றுக்கொண்டுவிட்டார். அந்தப் பிரச்சினை என்றென்றைக்குமாக முடிவுகட்டப்பட்டுவிட்டது. ஆகவே விசுவாசியின் இரட்சிப்பைப் பற்றிய பேச்சிற்கே கிறிஸ்துவின் நியாயாசனத்தில் இடமில்லை. மாறாக, அவனுடைய ஊழியத்தைப்

பற்றிய பொருளே ஆய்வுக்குரிய ஒன்றாக அங்கு காணப்படும்.

இரட்சிப்பிற்கும், உழைப்பிற்கான கூலிக்கு முள்ள வேறுபாட்டினைப் பகுத்துணரத் தவறிய ரோமக் கத்தோலிக்க சபையினர் இவ்வசனத் தைப் பயன்படுத்தி, இறந்தவருடைய ஆத்துமா தேவனை அடைவதற்கு முன்னர் தூய்மை அடை வதற்கான ஓரிடம் உண்டு என்று போதிக்கின் றனர். இவ்வசனத்தைக் கவனமாகப் படிப்போர் அத்தகைய இடம் இருப்பதாக இங்கு ஒன்றும் சொல்லப்படவில்லை என்பதை அறிவர். ஒரு மனிதனுடைய குணவியல்பை நெருப்பு துய்மைப் படுத்தும் என்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை. அதற்கு மாறாக, ஒரு மனிதனுடைய வேலை அல்லது ஊழியம் எத்தன்மையானது என்ப தையே நெருப்பு சோதிக்கும். அந்த நெருப்பினால் அவனுடைய ஊழியங்கள் சுட்டெரிக்கப்பட்டா லும் அந்த மனிதன் இரட்சிப்படைகிறான்.

தேவனுடைய வார்த்தையானது அக்கினிக்கு ஒப்பிடப்பட்டுள்ளதை இவ்வசனத்தோடு தொடர்பு படுத்திப் பார்க்கும்போது ஒரு சிந்தை நம்முடைய கவனத்தைக் கவருகிறது (ஏசாயா 5:24; எரே. 23:29 - ஆகிய வசனங்களைக் காண்க). கிறிஸ்து வின் நியாயாசனத்திலே நம்முடைய ஊழியத் தைச் சோதிக்கப்போகிற தேவனுடைய அதே வார்த்தைகளை இப்பொழுதே நாம் கிடைக்கப் பெற்றிருக்கிறோம். ஆகவே வேதத்தில் நமக்குக் கற்பிக்கப்பட்டுள்ளபடி நாம் கட்டுகிறவர்களா யிருப்போமென்றால், வரவிருக்கிற அந்த நாளிலே நம்முடைய ஊழியங்கள் சோதிக்கப்பட்டு நிலைக்கும்.

**3:16** விசுவாசிகள் **தேவனுடைய ஆலயமா யிருக்கிறார்கள் என்றும்** (கிரேக்குமொழியில் ஆலயத்தின் உட்பகுதி அல்லது பரிசுத்த ஸ்தலம் என்று பொருள்படும்), **தேவனுடைய ஆவி** அவர்களில் **வாசமாயிருக்கிறார்** என்றும் பவுல் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் தூய ஆவியானவர் குடியிருக்கும் ஆலயமாக விளங்குகிறார் என்பது உண்மையே, ஆயினும் அந்தச் சிந்தனை இங்கு இல்லை. விசுவாசிகளின் ஒருங்கிணைந்த சமுதாயத்தை சபையாகக் காணும் அப்போஸ்தலன், அவர்கள் பரிசுத்த மேன்மையை அடைந்து தாங்கள் பெற்ற அழைப்பிற்குத் தகுந்தவண்ணம் காணப்பட வேண்டுமென்று விரும்புகிறார்.

**3:17** உள்ளூர் சபையில் காணப்படும் மூன்றா வது வகையான வேலை, கேடு விளைவிக்கக் கூடியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கொரிந்து சபைக்குச் சில கள்ள போதகர்கள் வருகை புரிந்து, அங்கிருந்த விசுவாசிகள் பரிசுத்த வழி யைப் பின்பற்றுவதற்குப் பதிலாக, தங்களுடைய வாழ்க்கையில் பாவத்தைப் பெருக்கிக் கொள்ளக் கூடிய வழியைச் சார்ந்துகொள்வதற்கான அறிவு ரைகளை வழங்கினார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு தேவனுடைய ஆலயத் தைப் பாழ்படுத்துவது தவறான செயல் என்று அவர்கள் எண்ணியும் பார்க்கவில்லை. எனவே வீறுகொண்டு எழுந்த பவுல், "**ஒருவன் தேவனு டைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்**" என்று முழக்கமிடுகிறார். இந்த ஆழ்ந்த கருத்தினை உள்ளூர் சபையின் பின்னணியில் காண்கையில் இதன் பொருள் தெளிவாகிறது. எவனொருவன் ஒரு ஸ்தல சபை யில் நுழைந்து அதனுடைய சாட்சியைக் கெடுக் கிறானோ **அவனை தேவன் கெடுப்பார்**. இந்தப் பகுதியானது கள்ள போதகர்களைக் குறித்துப் பேசுகிறது. அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் மெய்யான விசுவாசிகள் அல் லரே. இந்தக் குற்றத்தின் தன்மை அலட்சியப் படுத்தக் கூடாதது என்பதை இவ்வசனத்தின் கடைசிப்பகுதி வலியுத்துகிறது: "**தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்**.

**3:18** கிறிஸ்தவ வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் உள்ளது போலவே கிறிஸ்தவ ஊழி யத்திலும், தன்னையே ஏமாற்றிக் கொள்ளக் கூடிய ஆபத்து இருக்கிறது. அநேகமாய், கொரிந்து பட்டணத்திற்கு வந்த சில ஆசிரியர்கள் தங்களை மிகுந்த ஞானமுடையோராய் எண்ணி னார்கள் என்றே தோன்றுகிறது. எவனொருவன் தன்னுடைய உலக ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிறவனாக இருக்கிறானோ அவன் உல கத்தின் கண்களுக்கு மதியீனனாகக் காணப்படும் படி மாறுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். அப் பொழுதுதான் அவன் தேவனுடைய மதிப்பீட்டின் படி **ஞானியாகிறான்**. கோடட் என்பார் இதனைப் பொழிப்புரையாக வழங்கியுள்ளது நமக்கு உதவி யாயிருக்கிறது:

> கொரிந்துப் பட்டணத்தைச் சேர்ந்தவனோ வேறு ஒருவனோ யாராக இருப்பினும் அவன் உங்களுடைய சபைகளில் நற்செய்தியைப் பிர சங்கிக்கிறவனாக இருக்கையில் தன்னையே ஞானியென்றும் சிந்தனைச் சிற்பியென்றும் உயர்வாய் மதிக்கிறவனாக இருப்பின், தான்

பெருமை பாராட்டுகிற ஞானம் ஒழிந்து போகும் படியான ஒரு நெருக்கடி நிலையைச் சந்திக்கும் வரை அவனால் உண்மையான ஞானத்தை அடைய முடியாது என்பதை அறியக்கடவன். அந்தப் பெருமைக்குரிய உலக ஞானம் ஒழிந்துபோன பின்னரே உன்னதத்திலிருந்து வருகிற ஞானத்தை அவன் பெறுவான்.[9]

**3:19 இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது.** சோதனை செய்து பார்த்து, மனிதன் தேவனைக் கண்டு பிடிக்க முடியாது; குற்றம் இழைத்தோர், ஒழுக்கங் கெட்டவர்கள், கலகக்காரர்கள் போன்ற பாவிகளுக் காக, தேவன் மனிதனாக மாறி, தமது ஜீவனைக் கொடுக்கும்படியான இரட்சிப்பின் திட்டத்தை மனித ஞானத்தினால் தீட்டியிருக்கவும் முடியாது. இங்கு யோபு 5:13 -ஆம் வசனம் மேற்கோள் காட் டப்பட்டுள்ளது. ஞானம் என்று மனிதன் கருது கின்ற யாவற்றையும் தேவன் தோற்கடித்து, தமது நோக்கத்தை நிறைவேற்றுகிறார் என்பதை அந்த மேற்கோள் காட்டுகிறது. மேலும் மனிதன் தன்னு டைய எல்லாப் படிப்பறிவினாலும் கர்த்தருடைய திட்டத்தைத் தோற்கடிக்க முடியாது. மாறாக, அவர் கள் உலக ஞானத்தை உடையவராயிருந்தும் அற்பமானவர்களும் அதிகாரம் அற்றவர்களு மாகவே இருக்கிறார்கள் என்பதை தேவன் அவ் வப்போது வெளிப்படுத்துகிறார்.

**3:20** இவ்வுலகத்தில் **ஞானமுள்ள** மனிதர் களுடைய விவேகமுள்ள சிந்தனைகளையெல் லாம் கர்த்தர் **அறிந்திருக்கிறார்** என்றும், அவை யாயும் **வீணானவை**, வெறுமையானவை, பயனற்றவை என்பதை அவர் அறிந்திருக்கிறார் என்றும் வலியுறுத்தும்படியாக சங்கீதம் 94:11 -ஆம் வசனம் இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

உலக ஞானம் நம்பத் தகுந்தது அல்ல என்று கூற பவுல் இவ்வளவு சிரமப்படுவதேன்? கொரிந் தியர்கள் உலக ஞானத்தை மதித்ததோடு, அந்த ஞானத்தை வியத்தகு அளவிற்கு உடையவராய்த் தங்களைக் காட்டிக் கொண்ட தலைவர்களை அவர்கள் பின்பற்றிய காரணத்தினால் பவுல் இவ்வளவு வேதனை அடைகிறார்.

**3:21** மேற்கூறிய எல்லாவற்றையும் காணு மிடத்து, **ஒருவனும் மனிதரைக் குறித்து மேன்மை பாராட்டக் கூடாது** என்பது தெளிவாகிறது. மேலும் கர்த்தருடைய மெய்யான ஊழியக்காரராகிய நாம் அவர்களைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்றும் அவர்களே நம்மைச் சேர்ந்தவர்கள் என்றும் அறியக்கடவோம். **எல்லாம் உங்களு டையதே.**

**3:22** "தேவனுடைய பிள்ளையின் உடைமை களின் பட்டியல்" என்று ஒருவர் இவ்வசனத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். **பவுல்** என்னும் சுவி சேஷகனோ, **அப்பொல்லோ** என்னும் போத கனோ, **கேபா** என்னும் மேய்ப்பனோ யாராயிருப் பினும் கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் யாவரும் நம்முடையவர்கள். அவ்வாறு இருக்கும்போது, நாம் அவர்களில் ஒருவருக்குச் சொந்தமானவர் கள் என்று கூறுவது தவறாகும். இந்த **உலகம்** நமக்குரியது. கிறிஸ்துவின் உடன் சுதந்தரராகிய நாம் ஒரு நாளில் அதன் உரிமையாளராக விளங்குவோம். எனினும் அதற்கு முன்னரே நாம் பெற்றுள்ள தெய்வீக வாக்கினால் அது நம்முடை யதே. இப்பொழுது அதைப் பேணிக் காப்பவர் நமக்காக உழைக்கின்றனர் என்பதை அறியா திருக்கின்றனர். **ஜீவனும்** நம்முடையது. இவ்வுல கில் நாம் வாழும் நாட்களை மட்டும் இது குறிப் பிடாமல், ஜீவன் என்னும் சொல்லின் மெய்யான முழுப் பொருளில் அது நம்முடையதாயிருக் கிறது. மேலும் **மரணமும்** நம்முடையது. அறியப் படாத இருளுக்குள் ஆத்துமாவை அனுப்புகிற ஒன்றே மரணம் என்ற அச்சம் இனி நமக்கில்லை. இப்பொழுது அது நம்முடைய ஆத்துமாவை விண்ணுலகிற்கு அழைத்துச் செல்லும் தேவனு டைய தூதனாக விளங்குகிறது. அதுபோலவே **நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களா கிலும்** எல்லாம் நம்முடையவை. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு எல்லாப் பொருட் களும் ஊழியம் செய்கின்றன என்று ஒருவர் சரியாகச் சொல்லியிருக்கிறார். "உலக மீட்பில் தேவனுடைய கூட்டாளியாகிய மனிதனுக்காக வானத்தில் தத்தம் பாதையில் ஓடும் விண்மீன் களும் போராடுகின்றன" என்று A.T. இராபர்ட்சன் ஒருமுறை கூறியுள்ளார்.

**3:23** எல்லாக் கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவுக் குச் சொந்தமானவர்கள். மற்றவர்கள் நீங்கலா கத் தங்களுக்கே அவர் உரியவர் என்று கொரிந் துப் பட்டணத்தில் சிலர் உரிமை கொண்டாடினர். "கிறிஸ்துவின் கட்சி" என்று ஒரு கட்சியை அவர் கள் உருவாக்கிக் கொண்டார்கள். ஆனால் அப் படிப்பட்ட தர்க்கத்தைப் பவுல் தவறென்று மறுத் துரைக்கிறார். நாம் யாவரும் கிறிஸ்துவினுடைய வர்கள்; கிறிஸ்து தேவனுடையவர். இவ்வாறு பரிசுத்தவான்களின் உண்மையானதும் உகந்த துமான மேன்மையின் புகழ்ச்சியைப் பவுல்

எடுத்துரைப்பதன் மூலமாக, சபையில் கட்சிகளை உருவாக்குவதும் பிரிவினைகளைத் தோற்றுவிப் பதும் தவறென்று துணிவாக எடுத்துரைக்கிறார்.

**4:1** தன்னைக் குறித்தும் மற்ற அப்போஸ்தலர் களைக் குறித்தும் கொரிந்துப் பட்டணத்துப் பரி சுத்தவான்கள் சரியாக மதிப்பிடும்படி, **தங்களை ஊழியக்காரர்களென்றும்** அதாவது கிறிஸ்து விற்கு உதவியாட்கள் என்றும் **தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும்** அவர்கள் நோக்கிப் பார்க்க வேண்டுமென்று அவர் களிடம் பவுல் கூறுகிறார். மற்றொருவருடைய உடைமைகளையோ சொத்தையோ பராமரிக்கிற ஊழியக்காரனே உக்கிராணக்காரன் ஆவான். முன்பு மறைவாக வைக்கப்பட்டு, புதிய ஏற்பாட்டுக் காலத்திலே அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்க தரிசிகளுக்கும் தேவன் வெளிப்படுத்தியவை **தேவனுடைய இரகசியங்கள்** எனப்படும்.

**4:2 உக்கிராணக்காரர் உண்மையுள்ளவ ரென்று காணப்படுதலே** அவர்களைப் பொருத்து மிகவும் இன்றியமையாத தேவையாகும். புத்தி சாலித்தனம், ஞானம், செல்வம் மற்றும் வெற்றி ஆகியவற்றையே மனிதன் உயர்வாய்க் கருது கிறான்; ஆனால் தேவனோ, இயேசு கிறிஸ்து விற்கு எல்லாவற்றிலும் உண்மையுள்ளவராக இருக்கிறவர்களையே எதிர்பார்க்கிறார்.

**4:3 உக்கிராணக்காரரிடத்தில்** காணப்பட வேண்டிய **உண்மையுள்ள** தன்மையின் தரத்தை மனிதர்கள் நிர்ணயிப்பது கடினம். எனவேதான் கொரிந்து சபையாராலோ **மனிதனுடைய விசா ரணையினாலோ** தான் தீர்ப்பைப் பெறுவது தனக்கு **மிகவும் அற்பகாரியமாயிருக்கிறது** என்று பவுல் இங்கு கூறுகிறார். எவ்விதத்திலும் தகுதியற்ற மனிதர்கள், தேவனுக்கு மெய்யான நிலையில் விசுவாசமாயிருப்பதைக் குறித்து முறையான தீர்ப்பை வழங்க இயலாதவர்களா யிருக்கின்றனர் என்பதைப் பவுல் தெளிவாய் அறி கிறார். "**நானும் என்னைக் குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை**" என்று அவர் தொடர் கிறார். தனக்குச் சாதகமாகவே எப்பொழுதும் தீர்ப்பு வழங்குகிற மனிதக் குடும்பத்தில் தான் பிறந்திருப்பதை அவர் அறிந்திருக்கிறார்.

**4:4** கிறிஸ்தவ ஊழியத்தைப் பொருத்தமட்டில் அவருக்கு எதிராகவொரு குற்றச்சாட்டினைச் சுமத்துவதற்கு ஏதுவாக உண்மையற்றபடி அவர் செயல்பட்டதாக அவருக்கு நினைவில்லை என் னும் பொருள்படவே "**என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்**" என்று அப்போஸ்தலன் கூறுகிறார். தன்னுடைய வாழ்க் கையில் ஒரு பாவத்தையும் அறியவில்லை என்றோ, பாவமற்ற நிறைவான நிலையிலிருந்து தான் ஒருக்காலும் வீழ்ச்சியடையவில்லை என்றோ அவர் கணப்பொழுதும் சிந்திக்கவில்லை! கிறிஸ் தவ ஊழியத்தைப் பற்றியும் அதில் விசுவாசத் தோடு நடந்துகொள்வது பற்றியுமே இந்த வேத பகுதி பேசுகிறது. ஆகவே அதன் அடிப்படையில் இவ்வசனத்தின் பொருளைச் சிந்திக்க வேண்டும். அவருக்கு எதிராக ஏதொரு குற்றத்தையும் அவர் அறியாதிருந்தாலும் **அதினாலே அவர் நீதிமானா கிறதில்லை**. இதுபற்றித் தீர்ப்புச் செய்ய அவருக் குப் போதுமான தகுதியில்லை. எல்லாவற்றிலும் நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே ஆவார்.

**4:5** இதனைக் கருத்திற்கொண்டவராக, கிறிஸ்தவ ஊழியத்தைப் பற்றி மதிப்பிடும்போது மிகுந்த கவனமுள்ளவர்களாக நாம் நடந்து கொள்ள வேண்டும். கவர்ச்சிமிக்கதும் உணர்ச்சி மேலிடச் செய்கிறதுமான ஊழியத்தைப் புகழ்ந்து பேசவும், எளிமையானதும் தோற்றத்தில் பகட் டற்றதுமான ஊழியத்தைக் குறைத்துப் பேசவும் நாம் முற்படுகிறோம். **கர்த்தர் வருமளவும்** காத் திருப்பதும் அந்தக் **காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லா திருப்பதுமே** கடைப்பிடிக்கத்தக்க பாதுகாப்பான கொள்கையாகும். கண்களினால் காண்பதை மட்டுமின்றி இருதயத்தின் நோக்கங்களையும் அவர் நியாயந்தீர்க்கக் கூடியவராய் இருக்கிறார். அவர் **இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்**. தன்னை முன்னிறுத்தி, தனக்கு மகிமை உண்டாக்குகிற செயல்களைச் செய்கிற எவனும் பரிசைப் பெறமாட்டான்.

**அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்** என்னும் கூற்று, ஒவ்வொரு விசு வாசியினுடைய ஊழியமும் மனநிறைவானதாகக் கருதப்பட்டு அந்நாளில் நன்மதிப்பைப் பெறும் என்னும் பொருளுடையதன்று. புகழ்ச்சியை அடைவதற்குத் தகுதியான ஊழியத்தைச் செய்த ஒவ்வொருவனும் மனிதனிடத்திலிருந்தல்ல, தேவனிடத்திலிருந்தே புகழ்ச்சியைப் பெறுவான் என்பதே அதன் பொருளாகும்.

தொடர்ந்து வருகிற எட்டு வசனங்களில், கொரிந்து சபையில் உண்டான பிரிவினைகளுக் குக் காரணம் பெருமையே என்று மிகத் தெளி வாக அப்போஸ்தலன் கூறுகிறார்.

**4:6** கிறிஸ்தவ ஊழியத்தைக் குறித்தும், மனி தர்களைத் தலைவர்களாகத் தெரிந்துகொண்டு

அவர்களைப் பின்பற்ற முற்படுவது குறித்தும் விளக்கிக் கூறுவதற்காகத் தன்னையும் **அப்பொல்லோவையும்** எடுத்துக் காட்டுகளாகப் பயன்படுத்தியதாகப் பவுல் முதலாவதாகக் கூறுகிறார் (3:5-4:5). பவுலையும் அப்பொல்லோவையும் சுற்றி கட்சிகளை உருவாக்கியது மட்டுமின்றி, தங்களுடைய சபையிலும் சிலரைத் தலைவர்களாகக் கொண்டு கட்சிகளை அவர்கள் உருவாக்கினார்கள். ஆனாலும் கிறிஸ்தவ மரியாதையின் நிமித்தமும் மென்மையான இயல்பினாலும் **பவுல்** தன்மீதும் **அப்பொல்லோ** மீதும் எல்லாவற்றையும் **வைத்து**, தங்களுடைய மாதிரியின் மூலம் அங்குள்ள பரிசுத்தவான்கள் கற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்பினார். அவர்கள் தங்களுடைய தலைவர்களைப் பற்றி மிகைப்படுத்திய எண்ணங் கொள்ளலாகாது என்றும் அந்தத் தலைவர்களின் பெயரில் கட்சிகளை உருவாக்கி அவர்களது பெருமைக்கு மனநிறைவு ஏற்படுத்தக்கூடாது என்றுமே பவுல் கூறினார். எந்த ஒரு செயலையும், எந்த ஒரு மனிதனையும் வேத எழுத்துக்களின் அடிப்படையிலேயே பரிசுத்தவான்கள் மதிப்பீடு செய்ய வேண்டுமென்றும் அவர் விரும்பினார்.

**4:7** கிறிஸ்துவைக் குறித்து போதிக்கிற ஒருவன் மற்றொருவனைக் காட்டிலும் வரம் மிகுந்தவனாக இருப்பானென்றால், தேவன் அவனை அவ்வாறு ஆக்கியிருக்கிறார் என்பதே காரணமாகும். அந்த மனிதன் பெற்றிருப்பவை யாவற்றையும் கர்த்தரிடத்திலிருந்தே பெற்றுக்கொண்டிருக்கிறான். இவ்வுண்மை நம் அனைவருக்கும் பொருந்தும். நம்முடையவை அனைத்தும் நமக்கு தேவனால் கொடுக்கப்பட்டவையே. அவ்வாறு இருக்கையில் நம்மைக் குறித்து நாம் பெருமை கொள்வதும் வானளாவப் புகழ்வதும் ஏன்? நம்முடைய திறமைகளும் வரங்களும் நமது சாதுரியத்தினால் உண்டானவை அல்லவே.

**4:8** கொரிந்தியர்கள் தன்னிறைவு பெற்றுவிட்டனர்; **இப்பொழுது திருப்தி அடைந்துவிட்டனர்**. தங்களிடையே ஆவிக்குரிய வரங்கள் பெருகியிருந்தது குறித்து அவர்கள் பெருமைகொண்டிருந்தார்கள்; அவர்கள் **ஐசுவரியவான்களாயிருந்தார்கள்**. அவர்கள் சுகபோகமாகவும், எல்லா வசதிகளோடும், எவ்விதக் கவலை அற்றவர்களாகவும் வாழ்ந்தார்கள். தங்களுடைய தேவையைப் பற்றிய உணர்வற்றவர்களாக அவர்கள் இருந்தார்கள். ஏற்கனவே ஆளுகை புரிகிறவர்களாக அவர்கள் தங்களைக் குறித்து எண்ணிக்கொண்டார்கள். அப்போஸ்தலர்கள் இன்றி ஆளுகிறவர்கள்போல் நடந்துகொண்டார்கள். ஆட்சிபுரிகின்ற காலம் வந்திருந்தால் **நலமாயிருக்கும்** என்று அவரும் அவர்களோடே **ஆளுகிறவராய்** இருப்பாரே என்று பவுல் கூறுகிறார்! "நமது வாழ்வின் காலம் ஆளுகைக்குரிய பயிற்சியின் காலம்" என்று ஒருவர் அதற்கு இடைப்பட்ட காலத்தைப் பற்றி கூறியிருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் இப்புவிக்கு வந்து, தம்முடைய அரசை நிறுவும் காலத்தில் கிறிஸ்தவர்கள் யாவரும் அவருடன் ஆளுகை செய்வார்கள். ஆனால் அதற்கு இடைப்பட்ட காலத்தில் மறுத்துரைக்கப்பட்ட இரட்சகரின் நிந்தையைப் பகிர்ந்து கொள்ளுதலே நம்முடைய சிலாக்கியமாகும். இதுபற்றி H. P. பார்கர் எச்சரிக்கிறார்.

> நம்முடைய அரசர் தமது கிரீடத்தைப் பெறுவதற்கு முன்னர் நாம் அதை நாடுவது ஐயத்திற்கு இடமின்றி உண்மையற்ற தன்மையின் வெளிப்பாடாகும். ஆயினும் கொரிந்துப் பட்டணத்தில் இருந்த சில கிறிஸ்தவர் அவ்வாறே நாடினர். அப்போஸ்தலரே கிறிஸ்துவின் நிந்தையைச் சுமந்தனர். ஆனால் கொரிந்துப் பட்டணத்துக் கிறிஸ்தவர்களோ "ஐசுவரியவான்களாகவும்" "கனம்பொருந்தியவர்களாகவும்" இருந்தார்கள். அவர்களுடைய கர்த்தரும் எஜமானும் கடினமான வாழ்க்கையையே வாழ்ந்தார். ஆனால் அவர்களோ சுகபோக வாழ்க்கையை நாடினார்கள்.[10]

முடிசூட்டு விழாக்களில், அரசன் முடிசூட்டப்படும்வரை அங்குள்ள பிரபுக்கள் தங்களுடைய மகுடங்களைச் சூட்டிக்கொள்ளமாட்டார்கள். ஆனால் கொரிந்தியர்களோ இதைத் தலைகீழாக மாற்றினார்கள்; இன்னும் கர்த்தர் நிராகரிக்கப்பட்டவராக இருக்கையில் அவர்கள் ஏற்கனவே ஆளுகிறவர்களாகக் காணப்பட்டார்கள்.

**4:9** தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்னும் மனப்பான்மையுடன் வாழ்ந்த கொரிந்தியர்களுக்கு மாறான நிலைமையே **அப்போஸ்தலர்களுடைதாயிருந்தது** என்று பவுல் இங்கு விளக்குகிறார். கொடிய விலங்குகள் இருக்கும் அரங்கிற்குள் எறியப்பட்டவர்களாகத் தாங்கள் இருந்ததாக அவர் சித்திரிக்கிறார். அந்நிலைமை **மனிதர்களுக்கும் தூதர்களுக்கும்** காட்சிப் பொருளாயிருந்தது. "சபை அரியாசனத்திலும் அப்போஸ்தலர்கள் பட்டயத்திற்குக் கீழாகவும் இருந்த அதே காலத்தில், கொரிந்தியர்கள் சுயத்தில் மனநிறைவு கொண்டவர்களாகவும் பெருமை

பாராட்டுகிறவர்களாகவும் இருப்பதற்குரிய சமயமாக இருக்க முடியாதே" என்று கோடட் என்பார் கூறியுள்ளார்.

**4:10 கிறிஸ்துவினிமித்தம்** அப்போஸ்தலர்கள் **பைத்தியக்காரர்களைப்** போல நடத்தப்பட்டபோது, பரிசுத்தவான்களோ **புத்திசாலிக்** கிறிஸ்தவர்கள் என்று சமுதாயத்தில் பெயர் பெற்று செல்வாக்குடன் வாழ்ந்தார்கள். அப்போஸ்தலர் **பல வீனராய்** இருந்தனர். ஆனால் கொரிந்தியர்களுக்கு எவ்விதத்திலும் பலவீனக் குறைவு ஏற்படவில்லை. அப்போஸ்தலர்கள் கனவீனப்படுத்தப்பட்ட அதே நேரத்தில் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் புகழப்பட்டார்கள்.

**4:11** வெற்றி பெற்றதற்குரிய அறிகுறியோ ஆளுகிறதற்குரிய நேரமோ இன்னும் வரவில்லை என்பதை அப்போஸ்தலர் அறிந்திருந்தனர். **பசியிலும் தாகத்திலும்** நிர்வாணத்திலும் உபத்திரவத்திலும் அவர்கள் அலைக்கழிக்கப்பட்டார்கள். அவர்கள் பின்தொடர்ந்து துரத்தப்பட்டு **வீடுகள் இல்லாதிருந்தார்கள்**.

**4:12** அவர்கள் தங்களுடைய சொந்தக் கைகளினாலே வேலைசெய்து தேவைகளை நிவர்த்திசெய்துகொண்டார்கள். அவர்கள் வையப்படும்போது ஆசீர்வாதத்தையே மொழிந்தார்கள். மற்றவர்கள் சண்டையிட வந்தபோது அவர்கள் எதிர்த்துச் சண்டையிடவில்லை. எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள்.

**4:13** அவர்கள் தூஷிக்கப்பட்டபோது, அவ்வாறு தூஷித்தவர்களிடத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படியாக வேண்டினார்கள். சுருங்கக் கூறின், **உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப் போடுகிற அழுக்கைப்போலவும்** கருதப்பட்டார்கள். கிறிஸ்துவுக்காக அவர்கள் பட்ட பாடுகளின் விவரங்கள் நம்முடைய இருதயங்களோடு பேச வேண்டும். இந்த நாட்களில் பவுல் அப்போஸ்தலன் வாழ்வாராயின், அவர் கொரிந்தியர்களிடம் பேசியதுபோல நம்முடனும், "எங்களையல்லாமல் நீங்கள் அரசர்களைப்போல ஆளுகிறீர்களே" என்று சொல்லுவாரல்லவா?

**4:14** பதினான்கு முதல் இருபத்தோராம் வசனம் வரைக்கும், பிரிவினைகளைப் பற்றி, தனது இறுதியான எச்சரிக்கையைப் பவுல் வழங்குகிறார். இதுவரைக்கும் வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசியதைக் கருத்திற்கொண்டு, அவர்களை **வெட்கப்படுத்தும்படி** தான் இவற்றை எழுத வில்லை என்றும் அவர்கள் தனக்குப் **பிரியமான பிள்ளைகளென்று** புத்திசொல்லுவதாகவும் கூறி விளக்குகிறார். கசப்பின் மிகுதியால் அவ்வாறு எழுதவில்லை. மாறாக அவர்களுடைய ஆவிக்குரிய நலனைக் கருத்திற்கொண்டு மனமார்ந்த பற்றுதலினாலே அவர் அவ்வாறு எழுதினார்.

**4:15 கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள்** அவர்களுக்கு **இருந்தாலும்**, விசுவாசத்தில் ஒரே ஒரு தகப்பன் மட்டுமே இருப்பதாக அவர்களிடத்தில் அப்போஸ்தலன் நினைவூட்டுகிறார். அவர்களைக் கர்த்தரிடத்தில் வழிநடத்தியவர் பவுலே. அவரே அவர்களுடைய ஆவிக்குரிய தகப்பன். அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்படி பலர் அவ்வழியாக வந்திருக்கலாம். எனினும் அவர்களுக்கு ஆட்டுக்குட்டியானவரைச் சுட்டிக்காட்டியவருடைய இளகிய இருதயம் வேறு எவருக்கும் இருந்திருக்காது. போதிக்கும் ஊழியத்தைக் குறைகூறும் நோக்கத்துடன் இச்சொற்களைப் பவுல் எழுதவில்லை. பரிசுத்தவான்கள் மீது, அவர்களைக் கிறிஸ்துவினண்டை வழிநடத்தினவர்களுக்கு இருக்கும் தனிப்பட்ட ஆர்வத்திற்கு ஒப்பான ஆர்வத்தை, கிறிஸ்தவ ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் பலர் கொண்டிருப்பதில்லை என்பதை நாம் அறிவோம். அதனையே பவுல் இங்கு குறிப்பிடுகிறார்.

**4:16 ஆகையால்**, தன்னைப் பின்பற்றும்படியாக பவுல் அவர்களை வற்புறுத்துகிறார். 9 முதல் 13 ஆம் வசனம் வரை அவர் விளக்கிக் கூறியுள்ளபடி, தன்னலமில்லாமல் கிறிஸ்துவினிடத்தில் தான் கொண்டிருந்த பக்தியையும், உடன் விசுவாசிகளிடத்தில் தளர்ச்சியடையாமல் தான் செலுத்திய அன்பையும், அவர்களுக்காக அயராது செய்த சேவையையும் அவர்கள் பின்பற்ற வேண்டுமென்று பவுல் நாடுகிறார்.

**4:17** இந்த இலக்கினை அவர்கள் அடைவதற்கு உதவும்படி, தனக்குப் **பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள** அவரது **குமாரனாகிய தீமோத்தேயுவை** அவர்களிடத்தில் அவர் **அனுப்பினார்**. எல்லாச் சபைகளிலும் அவர் போதித்த பிரகாரமாக கிறிஸ்துவுக்குள்ளான அவரது நடத்தைகளை ஞாபகப்படுத்தும்படி தீமோத்தேயுவுக்கு அவர் கட்டளை கொடுத்திருந்தார். அவர் என்ன போதித்தாரோ அதன்படியே தான் நடந்ததாக பவுல் இங்கு கூறுகிறார். கிறிஸ்தவ ஊழியத்தில் பங்குபெறுகிற ஒவ்வொருவருக்கும் இது பொருத்தமுடையதாகக் காணப்பட வேண்டும்.

**4:18** தீமோத்தேயுவை அவர்களிடம் அனுப்பியது குறித்து இவ்வாறு பவுல் விளக்கம் அளிக்கையில், அவரை இழிவாகப் பேசிய சில கொரிந்தியர்கள், பவுல் தானே வருவதற்கு அச்சம் கொண்டிருந்தார் என்று உடனடியாகக் கூற முனைந்தனர் போலும். பவுல் **வரமாட்டார்** என்று கூறி அந்த மனிதர்கள் **இறுமாப்படைந்திருந்தனர்**.

**4:19 ஆனாலும் கூடிய விரைவில் கர்த்தருக்குச் சித்தமானால்** அவர் **வருவதாக** வாக்குரைக்கிறார். அவர் வரும்போது, ஆவிக்குரிய **பெலம்** இல்லாதவர்களும் கட்டுப்பாடற்ற முறையில் பேசியவர்களுமாகிய அந்த மனிதர்களுடைய இறுமாப்பை வெளிப்படுத்துவார்.

**4:20** தேவனுடைய ராஜ்யம் பேச்சை ஆதாரமாகக் கொண்டிராமல் செயல்களையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. ஆகவே பெலமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அது வெற்று அறிக்கைகளைக் கொண்டிராமல் மெய்ப் பொருளாய் இருக்கிறது.

**4:21** அவர்களிடத்தில் பவுல் வரும்பொழுது அவர் நடந்துகொள்ளும் முறை அவர்களுடைய நிலைமையைப் பொருத்ததாகவே அமையும். அவர்கள் பணிவற்ற ஆவியை உடையவர்களாக நடந்துகொண்டால் அவர் **பிரம்போடு வருவார்**. அவர்கள் தாழ்மையோடும் அடக்கத்தோடும் நடந்துகொள்வார்கள் எனில் அவர் **அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும்** அவர்களிடத்தில் வருவார்.

### ஆ. விசுவாசிகளுக்குள்ளாகக் காணப்பட்ட ஒழுக்கக்கேடு (அதி. 5)

ஒரு சபையின் உறுப்பினர்களில் ஒருவன், வெளியரங்கமான பாவத்தைச் செய்வானானால் அங்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதைக் குறித்து ஐந்தாவது அதிகாரம் வலியுறுத்துகின்றது. உலகினர் கண்களுக்கு முன்பாகச் சபையின் தூய்மை காக்கப்படுவதற்கும், தூய ஆவியானவர் அச்சபையில் தொடர்ந்து துக்கப்படாமல் செயல்புரிவதற்கும் ஒழுங்கு நடவடிக்கை அவசியமாகும்.

**5:1** கொரிந்து சபையின் ஐக்கியத்தில் இருந்த ஒருவன் **விபச்சாரத்தில்** ஈடுபட்டதாக அங்கு பரவலாகச் **சொல்லப்பட்டது** என்பது தெளிவாய்த் தெரிகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பாவம் மிகக் கேவலமானது. அவ்வகையான பாவத்தை தேவனற்ற அஞ்ஞானிகளும் பழக்கமாகக் கொண்டிருப்பதில்லை. அதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமாயின் அந்த மனிதன் தன் தகப்பனுடைய மனைவியுடன் தகாத பாலுறவு கொண்டிருந்தான். இங்கே தகப்பனுடைய மனைவி என்று சொல்லப்பட்டிருப்பவள் அவனுக்கு மாற்றாந்தாய் ஆவாள். பெரும்பாலும் அவள் அவிசுவாசியாக இருந்திருக்கக் கூடும்; ஏனெனில் அவள் மீது நடவடிக்கை எடுப்பதைப்பற்றி அங்கு ஒன்றும் சொல்லப்படவில்லை. அவள்மீது சபைக்கு எந்த அதிகாரமும் இல்லை.

**5:2** இதனைக் குறித்து கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் எடுத்த நடவடிக்கை யாது? ஆழ்ந்த துக்கத்திற்குள் மூழ்குவதற்குப் பதிலாக அவர்கள் செருக்கும் அகங்காரமும் உடையவராய் இருந்தனர். ஒருவேளை பாவம் இழைத்தவன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அப்பாவத்தைப் பொறுத்துக்கொள்ளும் அளவிற்கு இறுமாப்படைந்திருந்தனர் போலும். அல்லது ஆவிக்குரிய வரங்களை அவர்கள் ஏராளமாகப் பெற்றிருந்ததன் காரணமாக, நடந்த நிகழ்ச்சியைக் குறித்துக் கவலையற்றவர்களாயிருந்தனர் போலும். அல்லது பரிசுத்தத்தைக் காட்டிலும் எண்ணிக்கையில் அவர்கள் அதிக நாட்டமுடையவராய் இருந்தனர் போலும். பாவம் அவர்களை அந்த அளவிற்கு திடுக்கிடச் செய்யவில்லை.

**இப்படிப்பட்ட காரியஞ்செய்தவனை நீங்கள் உங்களைவிட்டு நீக்காமலும் துக்கப்படாமலும், இறுமாப்படைந்திருக்கிறீர்கள்**. அந்த விசுவாசிகள் கர்த்தருக்கு முன்பாக சரியானபடி தாழ்மையான மனோபாவம் உடையவர்களாக இருந்திருப்பார்கள் எனில், கர்த்தர் தாமே தவறிழைத்தவன் மீது ஏதோ ஒரு வகையில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பார் என்று இவ்வசனம் குறிப்பாய்த் தெரிவிக்கிறது. எர்ட்மென் என்பார் இதுபற்றி கூறுகிறார்:

> கிறிஸ்தவ சபையின் உண்மையான புகழ்ச்சி, மேன்மை தாங்கிய போதகர்களின் நாவன்மையிலோ அவர்கள் பெற்றிருக்கிற வரங்களிலோ உன்னதாயிராமல், அஃது அச்சபை உறுப்பினர்களுடைய நன்னெறி ஒழுக்கத்தின் தூய்மையிலும் அவர்களது சீரிய வாழ்க்கையிலுமே இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்துகொண்டிருக்க வேண்டும்.[11]

**5:3** அவர்களுடைய சிரத்தையற்ற போக்கிற்கு மாறாக, தான் அவர்களோடு இல்லாதிருந்தும், அவர்களோடுகூட இருக்கிறது போல எண்ணி

அப்போஸ்தலன் ஏற்கனவே தீர்ப்புச் செய்து விட்டார்.

**5:4** தவறிழைத்தவனுக்கு எதிராக நட வடிக்கை எடுக்கும் பொருட்டு சபை கூடியிருப்ப தாக அவர் சித்திரம் தீட்டுகிறார். சரீரத்தின்படி அவர் அவர்களோடு இல்லை. ஆயினும் **ஆவி யில்** அவர் அவர்களோடே இருக்கிறார். **கர்த்தரா கிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே** அவர்கள் **கூடிவந்திருக்கின்றனர்**. இப்படிப்பட்ட செயல்கள் நடக்கின்றபோது, உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்குரிய அதிகாரத்தைச் சபைக்கும் அப்போஸ்தலர்களுக்கும் கர்த்தரா கிய இயேசு கிறிஸ்து தந்திருக்கிறார். ஆகவே, **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத் தில்** பவுல் நடவடிக்கை எடுக்கிறார்.

**5:5 அப்படிப்பட்டவனுடைய ஆவி கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக் கப்படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுப்பதே** அவர் எடுத்த நடவடிக்கையாகும். இங்கு சொல்லப்பட்டிருக்கிற வாசகத்தின் பொருளைப் பற்றி விளக்கவுரை யாளர்களுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவு கிறது. ஒரு உள்ளூர் சபையின் ஐக்கியத்தினின்று விலக்கி வைக்கிற நடவடிக்கை இது என்று சிலர் கூறுகின்றனர். சபைக்கு அப்பாற்பட்ட உலகம் சாத்தானுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறது (1 யோவான் 5:19). ஆகவே "சாத்தானுக்கு ஒப்புக் கொடுப்பது" என்பது சபையினின்று விலக்கிவைத் தலை மட்டுமே குறிக்கிறது என்று அவர்கள் கூறுகின்றனர். சாத்தானுக்கு ஒப்புவிப்பதென்பது அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட தனி வகையான அதிகாரம் என்றும் இக்காலத் தில் அந்த அதிகாரம் நடைமுறையில் இல்லை என்றும் வேறொரு சாரார் கூறுகின்றனர்.

மேலும், **மாம்சத்தின் அழிவு** என்னும் சொற் றொடரின் பொருளைக் குறித்தும் கருத்து வேறு பாடு நிகழ்கிறது. அந்த மனிதனுடைய வாழ்க்கை யில் காணப்பட்ட பாவ இச்சைகள் மற்றும் பாவப் பழக்கங்களின் வலிமையைத் தகர்த்தெறியும்படி யாக தேவன் பயன்படுத்துகிற சரீரப்பிரகாரமான பாடுகள் என்று பலர் நினைக்கின்றனர். கொஞ்சம் கொஞ்சமாக மரணத்தை அனுபவிக்கிற செயலே **மாம்சத்தின் அழிவு** என்றும், மனம் வருந்துவதற் கும் அதன் காரணமாக மன்னித்து விடப்படுவதற் கும் அந்த மனிதனுக்கு அது நேரத்தை அளிக்கும்.

பொருள் எதுவாயிருப்பினும், விசுவாசிகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கையின் மூலமாக அவர்களை முன்போல மீண்டும் கர்த்தரோடு ஐக் கியம் கொள்ளச் செய்வதே நோக்கமாயிருக்க வேண்டும் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். ஐக்கியத்தினின்று விலக்குதலோடு அது முடி வடைந்து விடுகிறதில்லை. மாறாக அது முடி வுக்கு வழியாக இருக்கிறது. அதன் இறுதியான நோக்கம் யாதெனில், அவனுடைய **ஆவி கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக் கப்படுவதே** ஆகும். அதாவது, அந்த மனிதன் நித்திய அழிவை அடையமாட்டான் என்பதே இங்கு நாம் பெறும் சிந்தனை ஆகும். அவன் செய்த பாவத்திற்காக இவ்வுலக வாழ்வினில் அவன் ஒழுங்குபடுத்தப்படுகிறான். ஆனால் அவனோ **இயேசு கிறிஸ்துவின் நாளுக்கென்று இரட்சிக்கப்பட்டிருக்கிறான்**.

**5:6** கொரிந்தியர்கள் தங்களைக் குறித்து **மேன்மை பாராட்டுவதை** அதாவது அல்லது பெருமைகொள்வதைக் குறித்து பவுல் இப்பொழுது கடிந்து கொள்கிறார். இவ்வாறு ஒருமுறைதான் நடந்தது என்று சொல்லி அவர்கள் தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக்கொண்டிருந்தார் கள். ஆனால் **கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று** அவர்கள் அறிந்திருக்க வேண்டும். **புளித்தமா** இங்கு ஒழுக் கக்கேடு என்னும் பாவத்தைச் சித்திரிக்கின்றது. சபையில் காணப்படும் சிறிதளவு பாவத்தை அவர் கள் பொறுத்துக்கொள்வார்களெனில், அது வளர்ந்து பெருகி அச்சபையின் ஐக்கியம் கடுமை யாகப் பாதிப்படைந்துவிடும். சபையின் நற்பெயர் நிலைநிற்க நீதியுள்ள தெய்வீக ஒழுங்கு நட வடிக்கை எடுக்கப்படுவது அவசியமாகும்.

**5:7** இவ்விதமாக, **பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போட** வேண்டுமென்று அவர் கள் கட்டளை பெற்றார்கள். அதாவது, **புதிதாய்ப் பிசைந்த மாவாய்** அவர்கள் காணப்படும்படி பொல்லாங்கின்மீது வன்மையான நடவடிக்கை எடுக்கவேண்டும். **நீங்கள் புளிப்பில்லாதவர் களாய் இருக்கிறீர்கள்** என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். தேவன் தாமே அவர்களைப் பரிசுத் தர்களாகவும், நீதிமான்களாகவும், தூய்மையான வர்களாகவும் கிறிஸ்துவுக்குள் காண்கிறார். தொடர்ந்து, அவர்களுடைய தகுநிலைக்கு ஏற்ப அவர்களது நடைமுறை வாழ்க்கையும் இருக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் வலியுறுத்து கிறார். *தகுநிலையின்படி* அவர்கள் புளிப்பில் லாதவர்கள். அதுபோன்றே அவர்களுடைய *நடைமுறை வாழ்வும்* புளிப்பற்றதாக விளங்க

வேண்டும். அவர்களது பெயருக்கு ஏற்றாற்போல இயல்பும், அவர்களது கொள்கைக்கு ஏற்றாற் போல நடத்தையும் துலங்க வேண்டும்.

**ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.** புளிப்பில்லாத அப்பத்தை நினைத்த அப்போஸ் தலனின் மனது பஸ்கா பண்டிகையை நோக்கிப் பின்னோக்கிச் செல்கிறது. அப்பண்டிகையின் முதல் நாளின் முந்தின மாலை ஒவ்வொரு யூதனும் தனது இல்லத்திலிருக்கும் எல்லாப் புளிப்பையும் வெளியேற்ற வேண்டும். அன்று யூதன் செய்த செயலைக் காண்போம். அவன் மாப்பிசையும் பாத்திரத்தை எடுத்து அதைச் சுரண்டி நன்றாகத் தூய்மைப்படுத்தினான். புளிப்பு இருந்த இடத்தைத் தேய்த்து அது இருந்த சுவடு தெரியாதபடி சுத்தம் செய்தான். தன் கையில் விளக் கைப் பிடித்துக்கொண்டு வீட்டில் எங்கேனும் புளிப்பு அகற்றப்படாமல் இருக்கிறதா என்று தேடிப்பார்த்து, எங்கும் இல்லையென்று உறுதி கொண்டான். பின்னர் தன் கைகளை தேவனை நோக்கி உயர்த்தி, "ஓ தேவனே, என்னுடைய வீட்டிலிருந்து எல்லாப் புளிப்பையும் அகற்றிவிட் டேன். எனக்குத் தெரியாமல் வீட்டில் எங்கேனும் புளிப்பு இருக்குமென்றால் என் முழு இருதயத் தோடு அதனையும் அகற்றிவிடுகிறேன்" என்று அறிக்கையிட்டான். பொல்லாப்பிலிருந்து விலகி, இந்நாட்களில் விசுவாசிகள் அப்படிப்பட்ட வாழ்க் கையை வாழ வேண்டுமென்பதற்கு இது ஒரு நிழல்படமாக விளங்குகிறது.

பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட செயல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அடைந்த மரணத்திற்கு மாதிரியாக அல்லது நிழற்படமாக விளங்கிற்று. *மாதிரிகளைக்* கொண்டு போதிக்கும் கொள்கையை உறுதிப்படுத்தும் பல புதிய ஏற்பாட்டு வசனங்களில் இதுவும் ஒன்று. அதாவது பழைய ஏற்பாட்டில் காணப்படும் மனிதர் கள் மட்டுமின்றி நிகழ்ச்சிகளும் வரப்போகிற நிகழ்ச்சிகளுக்கு *மாதிரிகள்* அல்லது நிழல் களாக விளங்கின. நம்முடைய பாவங்களை நீக்கும்படி, தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை நேரடியாகச் சுட்டிக்காட்டும் சம்பவங்களாகப் பல இருந்தன.

**5:8** இங்கே பண்டிகை என்று சொல்லப்பட்டிருப் பது பஸ்காவையோ கர்த்தருடைய பந்தியையோ குறிக்காமல் விசுவாசியின் முழு வாழ்க்கையை யும் பொதுவாகக் குறிக்கின்றது. நம்முடைய வாழ் நாட்காலம் முழுவதும் பாவம் என்னும் **பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல் லாப்பு என்னும் புளித்த மாவோடும் அல்ல,** மகிழ்ச்சி என்னும் பண்டிகையாகக் கொண்டாடப் பட வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் களிகூரும் போது மற்றவர்களைக் குறித்து தீமையான எண் ணம் கொள்ளலாகாது. அப்பம் போன்றவற்றைச் செய்வதற்குப் பயன்படும் காடி போன்ற பொருட் களைப்பற்றி அப்போஸ்தலன் இங்கு பேசவில்லை என்பது இதிலிருந்து தெளிவாகிறது. எதனோடு பாவம் தொடர்புகொள்கிறதோ அதனை அது தீட் டுப்படுத்தக் கூடியதாக இருக்கிறது என்பதையே பவுல் இங்கு வலியுறுத்துகிறார். ஆகவே **துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே** நம்முடைய வாழ்க்கையை நடத்திட வேண்டும்.

**5:9 விபச்சாரக்காரரோடே கலந்திருக்கக் கூடாதென்று** பவுல் முன்னரே ஒரு மடலில் எச்ச ரித்து எழுதியிருப்பதாக இங்கு கூறுகிறார். வேதா கமம் தேவ ஆவியின் ஏவுதலினாலே எழுதப்பட் டது என்னும் உண்மை அந்த மடல் காணாமல் போனதினாலே எவ்விதத்திலும் பாதிப்படைய வில்லை. பவுல் எழுதிய எல்லா மடல்களும் ஆவி யின் ஏவுதலினாலே எழுதப்பட்டவை அல்ல. எவற்றை தேவன் தகுதியானவை என்று கண் டாரோ அவ்றையே தூய வேதாகமத்தில் தக்க வகையில் ஏவுதலினாலே எழுதும்படி செய்தார்.

**5:10 விபச்சாரக்காரரோடு** கலந்திருக்கக் கூடாது என்று எழுதியிருப்பதன் பொருள் என்ன வென்று அப்போஸ்தலன் இங்கு விளக்கம் தருகிறார். துன்மார்க்கரோடு எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்கக் கூடாது என்று அவர் கூற வில்லை. இவ்வுலகில் இருக்கும்வரை இரட்சிக்கப் படாதவர்களோடு நாம் தொடர்புகொள்ள வேண்டி யவர்களாகவே இருக்கிறோம். அவர்கள் எந்த அளவிற்குப் பாவத்திலே வீழ்ந்து போயிருக் கிறார்கள் என்பதை எவ்விதத்திலும் நம்மால் அறிந்துகொள்ள முடியாது. பாவிகளிடத்தி லிருந்து முழுவதுமாகப் பிரிந்து தனிமையாக வாழ வேண்டுமானால், **நீங்கள் உலகத்தை விட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்குமே.**

ஆகவே இவ்வுலகத்திலுள்ள விபசாரக்காரர், பொருளாசைக்காரர், விக்கிரகாராதனைக்காரர் ஆகிய மக்களோடு எவ்விதத்திலும் தொடர்பு கொள்ளாமல் முழுவதும் தனிமையாக வாழ வேண்டுமென்று பவுல் சொல்லவில்லை. **பொரு ளாசைக்காரர்** என்பவர்கள் தொழில் மற்றும் நிதி சம்பந்தப்பட்ட விசயங்களில் நேர்மையற்றவர்கள்

ஆவார்கள். எடுத்துக்காட்டாக, வரி செலுத்தாமல் குற்றமிழைத்தோர் இச்சையின் காரணமாகச் சபையிலிருந்து விலக்கிவைக்கப்பட வேண்டும். இன்னல்கள் உண்டாக்குவோம் கொலை செய்வோம் என்று அச்சுறுத்தி வன்முறையின் மூல மாகத் தங்களுடைய செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் **கொள்ளைக்காரர்களின்** செயலாகும். மெய்யான தேவனைத் தவிர வேறு ஒருவரை அல்லது வேறு ஒன்றை ஆராதிக்கும்படி தங்களை ஒப்புவிப்பது **விக்கிரகாராதனை** ஆகும். ஒழுக்கக்கேடு என்னும் பயங்கரமான பாவம் பெரும்பாலும் விக்கிரகாராதனையோடு இணைந்த செயலாக இருக்கிறது.

**5:11** மேற்கூறிய பயங்கரமான பாவங்களில் ஈடுபடக்கூடிய பெயரளவிலான ஒரு **சகோதரனுடன்** ஐக்கியம் கொள்ளலாகாது என்று எச்சரிக்கவே பவுல் உண்மையில் விரும்புகிறார். இந்த வசனத்தைக் கீழ்க்காணும்படி பொழிப்புரையாக நாம் எழுத வேண்டும்:

> பாலியல் ஒழுக்கக்கேடு, பொருளாசை, சிலை வணக்கம், கீழ்த்தரப் பேச்சு, குடிவெறி மற்றும் கொள்ளையடித்தல் இவற்றில் ஏதொன்றிலாவது ஈடுபடும் ஒரு பெயர்க் கிறிஸ்தவனோடு உடன் அமர்ந்து உண்ணவும் வேண்டாம் என்றே நான் முன்னர் கூற விழைந்தேன்; இப்பொழுது மீண்டும் அதனையே வலியுறுத்துகிறேன்.

இரட்சிக்கப்படாதவர்களோடு நாம் அவ்வப்போது தொடர்புகொள்வது அவசியமாகும். அவ்வாறு தொடர்பு கொள்வதன் மூலமாகவே அவர்களிடத்தில் நம்முடைய சாட்சியைப் பகிர்ந்து கொள்ள முடியும். பேச்சளவில் கிறிஸ்தவனாக இருந்து பாவத்தில் வாழ்கிற ஒரு கிறிஸ்தவனோடு பழகுவதைக் காட்டிலும் இரட்சிக்கப்படாதவர்களோடு பழகுவது ஆபத்தானதல்ல. பாவத்தில் வாழ்கிற பெயர்க் கிறிஸ்தவனுடைய பாவ வாழ்க்கை ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதே என்று தோன்றும்படி நாம் எதையும் செய்யக்கூடாது.

பத்தாவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற பாவிகளின் பட்டியலோடு உதாசினன் வெறியன் ஆகிய இரு வகையினரை இங்கு பவுல் சேர்த்துச் சொல்லுகிறார். வன்மையானதும் கட்டுங்கடங்காததுமான சொற்களால் மற்றவர்களுக்கு எதிராகப் பேசக்கூடியவனே **உதாசினன்** ஆவான். தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தக் கூடாமல் தகாத வார்த்தைகளை ஒரு தடவை ஒருவர் பேசிவிட்டார் என்பதற்காக அவரை சபையின் ஐக்கியத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டுமா? அவ்வாறு நாம் எண்ணவில்லை. உதாசினமாகப் பேசுவதைத் தன் வழக்கமாகக் கொண்டிருப்பவனைப் பற்றியே இது குறிக்கிறது என்று கருதுகிறோம். மற்றவர்களை இழிவாகப் பேசும் இயல்புடைய ஒரு மனிதனே **உதாசினன்** ஆவான். எப்படியிருந்தாலும் இது நம்முடைய சொற்களைக் காத்துக்கொள்ளுவதற்கு ஓர் எச்சரிக்கையாக விளங்குகிறது. "தங்கள் நாவைக் குறித்துக் *கவனமற்றவர்களாக* இருந்ததாகப் பலர் கூறுகின்றனர்; ஆனால் அவர்கள் தங்களது இயந்திரத் துப்பாக்கியைக் குறித்துக் கவனமற்ற முறையில் பயன்படுத்தியதாகவே கூறவேண்டும்" என்று முனைவர் அயர்ன்சைடு குறிப்பிட்டுள்ளார்.

போதையளிக்கும் பானங்களை மிகுதியாகக் குடிக்கும் பழக்கம் உள்ளவனே **குடிகாரன்** ஆவான்.

இவ்வகைப் பழக்கமுள்ள கிறிஸ்தவனோடு நாம் அமர்ந்து உண்ணவும் கூடாது என்றுதான் அப்போஸ்தலன் அறிவுரை வழங்குகிறாரா? ஆம், இதுவே இவ்வசனம் கற்பிக்கும் பாடமாகும்! கர்த்தருடைய பந்தியில் அவனுடன் நாம் பங்கு கொள்ளக்கூடாது. ஒன்றாகக்கூடி விருந்துண்ணவும் கூடாது. இதற்குச் சில விதிவிலக்குகள் உள்ளன. எடுத்துக்காட்டாக கிறிஸ்தவளாயிருக்கக்கூடிய மனைவி, சபை ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட்ட தன் கணவனுடன் சேர்ந்து உணவு உண்ண கடமைப்பட்டிருக்கிறாள். ஆனால் மேற்கூறிய பாவங்களைச் செய்யும் குற்றமுடைய பேச்சளவிலான விசுவாசியுடன் சமுதாய உறவைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென்பதே பொதுவான விதியாகும். அது செய்த பாவத்தின் கொடுமையை அவர் உணருவதற்கும், மனம் வருந்திச் சீர்படுவதற்கும் ஏதுவாகும். ஆயக்காரருடனும் பாவிகளுடனும் கர்த்தர் உணவு உட்கொண்டார் என்பதைச் சுட்டிக்காட்டி யாரேனும் இதற்கு மறுப்புத் தெரிவிப்பார்கள் எனில், அந்த மனிதர்கள் அவரைப் பின்பற்றவில்லை என்பதையும், கர்த்தர் அவர்களைத் தமது சீடர்களாகக் கருதவில்லை என் பதையும் நாம் குறித்துக்காட்ட வேண்டும். ஒழுக்கக் கேடாக வாழும் கிறிஸ்தவர்களுடன் நாம் ஐக்கியம் கொண்டிருக்கக் கூடாது என்றே இந்தப் பகுதி நமக்குக் கற்பிக்கிறது.

**5:12** இரட்சிக்கப்படாதவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்ய வேண்டிய பொறுப்பு கிறிஸ்தவர்களுடையதன்று என்பதை இவ்வசனத்தில்

காணப்படும் இரண்டு கேள்விகள் வெளிப்படுத்து கின்றன. இனி வரவிருக்கின்ற ஒரு நாளில் நம் மைச் சூழ இருக்கின்ற துன்மார்க்கரான மனிதர் களைக் கர்த்தர்தாமே நியாயந்தீர்ப்பார். ஆனால் சபையின் ஐக்கியத்தில் **இருக்கிறவர்களைக் குறித்துத்** தீர்ப்புச் செய்ய வேண்டிய பொறுப்பு நம்முடையதாகும். தெய்வீக ஒழுங்கைக் கடைப் பிடிப்பது உள்ளூர் சபையின் கடமையாகும்.

"நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படா தபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று கர்த்தர் போதித்திருக் கிறாரே என்று எவரேனும் மறுத்துக் கூறுவாரெ னில், அங்கு அவர் நோக்கங்களைக் குறித்துப் பேசியிருக்கிறார் என்று நாம் விடைபகர வேண் டும். மனிதர்களுடைய நோக்கங்களை நாம் குற்றந்தீர்க்கக் கூடாது. ஏனெனில் அதற்கு வேண் டிய தகுதிகள் நமக்கில்லை. ஆனால் தேவனு டைய சபையின் பரிசுத்தத்திற்குரிய நற்பெயரை நிலைநிறுத்துவதற்காகவும், குற்றம் செய்த சகோதரன் கர்த்தருடன்கூடிய ஐக்கியத்தில் முன் னிருந்த நிலைமைக்கு மீண்டும் கொண்டுவரப்படு தற்காகவும் அவன் செய்ததாக அறிந்த பாவங் களை நாம் நியாயம் தீர்க்கவேண்டு மென்று தேவ னுடைய வார்த்தை அதே தெளிவுடன் வலியுறுத்து கிறது.

**5:13** இரட்சிக்கப்படாதவர்களாகிய **புறம்பே இருக்கிறவர்களுக்குத்** தீர்ப்பு வழங்கும் பொறுப்பை **தேவனே** கவனித்துக்கொள்வார் என்றே இங்கு பவுல் விளக்கமளிக்கிறார். ஆனால் அதற்கு முன்னதாக **அந்தப் பொல்லாதவனை** அவர்கள் நடுவிலிருந்து வெளியேற்றவேண்டிய தீர்ப்பைச் செயல்படுத்தும் கடமை கொரிந்தியர் களைச் சார்ந்ததே. அந்தச் சகோதரன் சபையின் ஐக்கியத்தில் இல்லை என்பதைச் சபையில் வெளியரங்கமாக அறிவிக்கவும் வேண்டும். மெய் யான வருத்தத்தோடும் தாழ்மையோடும் அந்த அறிக்கை செய்யப்படவேண்டும். அவ்வாறு நெறி தவறிச் சென்றவர் ஆவிக்குரிய நிலையில் புதுப் பிக்கப்படுவதற்காக தொடர்ந்து சபை மக்கள் ஜெபிக்க வேண்டும்.

### இ. விசுவாசிகளுக்குள் நீதிமன்ற வழக்குகள் (6:1-11)

விசுவாசிகளுக்கிடையே நடைபெறும் நீதி மன்ற வழக்குகளைக் குறித்த அறிவுரைகளை இவ்வதிகாரத்தின் முதல் பதினோரு வசனங்கள் எடுத்தியம்புகின்றன. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் சிலர் தங்கள் உடன் சகோதரர் களுக்கு எதிராக இவ்வுலகத்தின் நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத் திருந்தார்கள் என்னும் செய்தி பவுலின் செவி களை எட்டியது. ஆகவே இது குறித்த அறிவுரை களை நிலையான அறுவுரைகளாகச் சபைக்கு அவர் வகையறுத்துக் கொடுத்திருக்கிறார். "நீங் கள் அறியீர்களா?" என்னும் கேள்வி மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளதைக் கவனியுங்கள் (வச. 2,3,9,15,16,19).

**6:1** அவர்களில் ஒருவன் தன் சகோதரனுக்கு எதிராக **வழக்காடும்படி அநீதக்காரரிடத்தில்** அதாவது இரட்சிக்கப்படாத நீதிபதிகளிடத்திலோ குற்றவியல் நடுவர்களிடத்திலோ செல்ல எண் ணம் கெண்டிருந்தான் என்ற செய்தி திகிலூட்டும் முதற்கேள்வியை எழுப்பியது. மெய்யான நீதியை அறிந்தவர்கள் நீதியைத் தங்களுடைய குணவியல்பாகக் கொண்டிராத மனிதர்களிடம் செல்லுவது ஒவ்வாத செயலென பவுல் எண்ணு கிறார். நீதியை நாடும் கிறிஸ்தவர்கள் அதனைக் கொஞ்சமும் தரவியலாதவர்களிடம் செல்வதைக் குறித்து கற்பனை செய்து பாருங்கள்!

**6:2 உலகத்தை** ஒருநாள் **நியாயந்தீர்க்கப் போகிறவர்கள்** தங்களுக்குள்ளாக எழும் அற்பமான வழக்குகளைத் தீர்க்க தகுதியற்றவர் களாக இருப்பது இன்னுமொரு ஒவ்வாத நிலை மையாக காணப்படுகிறது. கிறிஸ்து அதிகாரத் தோடும் புகழ்ச்சியோடும் மீண்டும் இப்புவிக்கு வரும்போது விசுவாசிகள் அவருடன் சேர்ந்து இவ் வுலகினை ஆளுவர் என்றும், நியாயம் விசாரிக் கும் அலுவல் விசுவாசிகளுக்கு அளிக்கப்படும் என்றும் திருமறை கற்பிக்கிறது. கிறிஸ்தவர்கள் **உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள்** எனில், அவர்களைத் தொல்லைகளுக்கு உட்படுத்தும் சிறுசிறு வேறுபாடுகளை இப்பொழுது அவர் களால் தீர்த்துக்கொள்ள முடியாதா?

**6:3 தேவதூதர்களையும்** அவர்கள் **நியாயந் தீர்ப்பார்கள்** என்று கொரிந்தியர்களுக்கு பவுல் நினைவூட்டுகிறார். ஒரு பெருஞ்சிறப்பு வாய்ந்த உண்மையை அப்போஸ்தலன் தனது தருக்கத் தின் இடையில் உட்புகுத்தியிருக்கும் விதத்தைக் காணுங்கால் அது நமக்கு மிகுந்த வியப்பினைத் தருகிறது. எவ்வித ஆர்ப்பரிப்புமின்றி அல்லது படிப் படியாக வெளிப்படுத்தாமலும், கிறிஸ்தவர்கள் ஒருநாள் **தேவதூதர்களையும் நியாயந்தீர்ப் பார்கள்** என்னும் பேருண்மையை அவர் கூறு கிறார். யூதா 6; 2 பேதுரு 2:4,9 ஆகிய வசனங்களின் மூலமாக தேவதூதர்கள் நியாயந்தீர்க்கப்படு

வார்கள் என்பதை அறிவோம். கிறிஸ்துவே நியாயாதிபதி என்பதையும் நாம் அறிவோம் (யோவா. 5:22). நாம் அவரோடு இணைக்கப்பட்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு, வரவிருக்கிற ஒரு நாளில் நாம் தேவதூதர்களை நியாயந்தீர்ப்போம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவதூதர்களை நியாயம் விசாரிக்கக் கூடிய தகுதியை நாம் உடையவராய் இருக்கிறோம் என்று கருதுவோமானால், **இந்த ஜீவனில்** நாள்தோறும் உண்டாகும் பிரச்சனைகளை நம்மால் தீர்த்துக்கொள்ள முடியும்.

**6:4 இந்த ஜீவனுக்கேற்ற வழக்குகள் உங்களுக்கு இருந்தால், தீர்ப்புச் செய்கிறதற்கு, சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை நியமித்துக்கொள்ளுங்கள்.** இரட்சிக்கப்படாத நீதிபதிகள் சபையின் நன்மதிப்பையோ கனத்தையோ பெறுவதில்லை. அவர்கள் ஆற்றுகின்ற தொழிலின் நிமித்தமாக அவர்கள் மதிக்கப்படுகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சபையின் காரியங்களைப் பொருத்தமட்டில் அவர்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அதன் காரணமாகவும் பவுல் கொரிந்தியர்களை இவ்வாறு வினவுகிறார்:

> உங்களுக்குள்ளாக எழும் பிரச்சினையில் ஒருதலைப் பட்சமற்ற நியாயத்தை நாடி சபைக்கு அப்பாற்பட்ட, ஆவிக்குரிய பகுத்தறிவற்ற மனிதர்கள் என்று சபை கருதுகிற மனிதர்களை நீதிபதிகளாக நியமித்துக் கொள்வீர்களா?

**6:5** அவர்கள் வெட்கப்படவேண்டும் என்ற இக்கேள்வியைப் பவுல் அவர்களிடத்தில் கேட்கிறார். தங்களுடைய ஞானத்தையும், தாங்கள் பெற்றிருக்கிற மேலான வரங்களையும் நினைத்துப் பெருமை பராட்டுகிற சபையில், **சகோதரனுக்கும் சகோதரனுக்கும்** இடையே காணப்படும் வழக்குகளைத் தீர்க்கிறதற்கு **விவேகமுள்ளவன்** ஒருவனும் **இல்லையா?**

**6:6** ஒரு கிறிஸ்தவ **சகோதரன்** குடும்பப் பிரச்சினைகளின் காரணமாக கிறிஸ்துவுக்குள்ளான தன்னுடைய உடன் **சகோதரன்** ஒருவனுக்கு எதிராக இறை நம்பிக்கையற்ற உலகினர் முன்னிலையில் **வழக்காடுகிறதால்,** நியாயந்தீர்க்கும் அளவிற்கு ஞானமுள்ள மனிதன் ஒருவனும் அங்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மெய்யாகவே இது வருத்தத்திற்குரிய சூழ்நிலையே ஆகும்.

**6:7 "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது"** என்னும் கூற்று இந்த விசயத்தில் அவர்கள் முற்றிலும் தவறானவர்கள் என்பதைக் காட்டுகிறது. ஒருவருக்கெதிராக, மற்றொருவர் வழக்காட வேண்டும் என்று அவர்கள் நினைத்திருக்கவும் கூடாது. "பவுலே, நீங்கள் இதைப் புரிந்து கொள்ளவில்லை. அந்தச் சகோதரன் தொழிலில் என்னை ஏமாற்றி விட்டான்" என்று ஒருவேளை ஒரு கிறிஸ்தவன் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம். **"அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை?"** என்பதே பவுல் பகரும் விடை. இப்படிப்பட்ட மனோபாவம் உடையவனாகவே கிறிஸ்தவன் நடந்துகொள்ள வேண்டும். தவறு செய்கிறதைக் காட்டிலும் தவறைச் சகித்துக்கொள்ளுதல் மேலானதாகும்.

**6:8** ஆனால் கொரிந்தியர்கள் அப்படிப்பட்ட மனோபாவம் உடையவர்களாக நடந்துகொள்ளவில்லை. அநியாயத்தையும் வஞ்சிக்கப்படுதலையும் மனமுவந்து ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அவர்களே மற்றவர்களுக்கு எதிராக, ஏன் தங்களுடைய உடன் சகோதரர்களுக்கு எதிராக **அநியாயஞ் செய்தார்கள்.**

**6:9 அநியாயம்** செய்வதைத் தங்களுடைய வாழ்வின் இயல்பாகக் கொண்டிருக்கும் மக்கள் **தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை** என்பதை அவர்கள் மறந்துவிட்டனரோ? அவ்வாறு அவர்கள் மறந்து போயிருப்பார்கள் எனில் **தேவனுடைய ராஜ்யத்தில்** பங்கு பெறுவதற்குத் தகுதியற்ற பாவிகளின் பட்டியலை அவர்களுக்கு நினைவூட்டும்படி பவுல் இங்கு தருகிறார். அப்படிப்பட்ட பாவச் செயல்களைத் தங்களுடைய பழக்கமாகக் கொண்டு, கிறிஸ்தவர்கள் தாங்கள் பெற்ற இரட்சிப்பை இழந்துவிடுவார்கள் என்னும் பொருள்பட அவர் ஒன்றையும் இங்கு கூறவில்லை. மாறாக, அவ்விதப் பாவச் செயல்களைத் தங்களுடைய பழக்கமாகக் கொண்டிருப்போர் கிறிஸ்தவர்களே அல்லர் என்றே அவர் கூறுகிறார்.[12]

இந்தப் பட்டியலில் **வேசி மார்க்கத்தார் விபசாரக்காரரிடத்திலிருந்து** வேறுபடுத்திக்காட்டப்பட்டுள்ளனர். மணமாகாத ஒருவர் கொள்ளுகிற தகாத பாலுறவு வேசிமார்க்கம் எனவும், மணமான ஒருவர் அவ்வித நடத்தையில் ஈடுபடுவது விபசாரம் என்றும் இங்கு பொருள்படும். ஐந்தாவது அதிகாரத்தில் இரண்டு பட்டியல்களிலும் இடம்பெற்றிருக்கிற **விக்கிரகாராதனைக்காரர்** மீண்டும் இங்கே சொல்லப்பட்டுள்ளனர். **சுய**

**புணர்ச்சிக்காரர்** என்பார் தங்களுடைய சரீரங் களை நெறிபிறழ்ந்த வகையில் ஓரினச் சேர்க்கை யில் பயன்படுத்துவற்கு இடங்கொடுப்பவர்கள் ஆவர். **ஆண்புணர்ச்சிக்காரர்** என்பார் மற்றவர் களோடு ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் ஆவர்.

**6:10** அந்தப் பட்டியலில் **திருடர், பொருளா சைக்காரர், வெறியர், உதாசினர், கொள்ளைக் காரர்** சேர்க்கப்பட்டிருக்கின்றனர். தங்களுடைய தல்லாதவற்றை எடுத்துக்கொள்பவர் **திருடர்** ஆவர். மிகவும் துன்மார்க்கமான தீயொழுக்கங் களோடு எல்லா இடங்களிலும் பொருளாசை சேர்க்கப்பட்டிருப்பதை எண்ணிப் பாருங்கள். அதனை மனிதர்கள் தவறில்லை யென்று நினைப் பது மட்டுமின்றி, அதைப் பொருட்படுத்துவதே இல்லை. ஆனால் தேவன் அதை மிகக்கடுமை யாகக் கண்டிக்கிறார். சொத்துக்களின்மீது அளவிற்கு மிஞ்சிய வகையில் விருப்பம்கொண்டு, அவற்றை அடைவதற்கு நேர்மையற்ற வழி களைக் கையாளுபவனே **பொருளாசைக்காரன்** ஆவான். போதையளிக்கும் பானங்களுக்குத் தங்களை அடிமைப்படுத்திக் கொள்பவர்களே **வெறியர்** ஆவர். மற்றவர்களைத் தகாத வார்த்தை களினாலே பேசுபவர் **உதாசினர்** ஆவர். மற்ற வர்களுடைய வறுமையையும் தேவைகளையும் சாதகமாக்கிக்கொண்டு அளவுக்கதிகமாக ஆதா யம் அடைகிறவர்கள் **கொள்ளைக்காரர்** ஆவர்.

**6:11** மேற்கூறிய பாவங்களைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் வழக்கமாகச் செய்து வந்தார்கள் என்று பவுல் கூறவில்லை. அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்னர் அவற்றைத் தங்களுடைய இயல்பாகக் கொண்டிருந்தார்கள் என்று அவர் எச்சரிக்கிறார் - **அவர்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள். ஆயினும்** அவர்கள் **கழுவப்பட்டார்கள், பரிசுத்தமாக்கப் பட்டார்கள்** மற்றும் **நீதிமான்களாக்கப்பட் டார்கள்**. பாவத்திலிருந்தும் அசுத்தத்திலிருந்தும் கிறிஸ்துவின் மேன்மையான குருதியினாலே அவர்கள் **கழுவப்பட்டார்கள்**. மேலும் தேவனு டைய வார்த்தையின் மூலமாக எல்லாத் தீட்டு களிலிருந்தும் தொடர்ந்து கழுவப்பட்டார்கள்.

தேவ ஆவியின் செயலாக்கத்தினால் அவர் கள் **பரிசுத்தமாக்கப்பட்டார்கள்**. அதாவது உல கத்தினின்று தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட் டார்கள். **கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினா லும், நமது தேவனுடைய ஆவியினாலும்** அவர் கள் **நீதிமான்களாக்கப்பட்டார்கள்**. அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் நிறை வேற்றிய செயலின் அடிப்படையில் அவர்கள் தேவனுடைய முன்னிலையில் நீதிமான்களாக எண்ணப்பட்டார்கள். இங்கே பவுல் கூறுகிற அறி வுரை யாது? அதை கோடட் என்பார் மிகச் சரியா கக் கூறியிருக்கிறார்: "ஆழம் காண இயலாத கிரு பையை விடுத்து கடந்து செல்லக்கூடாது."

### ஈ. சரியா தவறா என்பதைச் சீர்தூக்கி அறிந்து நடப்பதில் விசுவாசிகளிடத்தில் காணப்பட்ட மந்தநிலைமை (6:12-20)

**6:12** ஒரு செயல் சரியா அல்லது தவறா என் பதைச் சீர்தூக்கி அறிவதற்கான விதிமுறை களை இந்த அதிகாரத்தின் கடைசி வசனங்களில் அப்போஸ்தலன் வகையறுத்து முன்மொழிகிறார். ஒரு செயல் செய்யப்படுவதற்குரிய அதிகாரத் திற்கு உட்பட்டிருக்கலாம், ஆயினும் அதனால் எவ்விதப் பயனுமிருக்காது. இதுவே முதலாவது விதி. "**எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரம் உண்டு**" என்று பவுல் கூறுகையில் எல்லாச் செய்கைகளும் அதற்குள் உட்பட்டிருந் தன என்னும் பொருளில் அவர் கூறவில்லை. எடுத்துக்காட்டாக மேலே சொல்லப்பட்டிருக்கிற எந்தப் பாவத்தையும் செய்ய அவருக்கு அதிகார மில்லை. மாறாக, சரியா தவறா என்று அறியக் கூடாத செயல்களைப் பற்றியே இங்கு பவுல் பேசு கிறார். எடுத்துக்காட்டாக அப்போஸ்தலனுடைய காலத்தில் பன்றி இறைச்சி உண்பது சரியா தவறா என்பது விசுவாசிகளுக்கிடையில் சர்ச்சைக்குரிய ஒரு பொருளாக இருந்தது. உண்மையில் அது சரி அல்லது தவறு என்று சொல்வதற்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருந்தது. ஒரு மனிதன் பன்றி இறைச் சியை உண்கிறானா இல்லையா என்பது தேவனுக்கு ஒரு பொருட்டே இல்லை. சில செய்கைகள் அதிகாரத்திற்கு உட்பட்டவையாக இருந்தாலும் அவற்றில் ஒரு பயனும் இல்லை என்றே பவுல் இங்கு உரைக்கிறார். சில செயல்களைச் செய் வதற்கான அதிகாரத்தை உடையவனாக நான் இருப்பினும், அவற்றை நான் செய்கிற தருணத் தில் காண்போர் சிலர் இடறுவதற்குக் காரணமா யிருப்பின், அச்செயல்கள் என்னால் செய்யப்படு வதற்கு ஏற்றவையல்ல.

இரண்டாவது விதி யாதெனில், சில செயல் களைச் செய்வதற்கான **அதிகாரமிருந்தாலும்** அவை அடிமைப்படுத்தக் கூடியன என்பதே யாகும். "**நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட் டேன்**" என்று பவுல் கூறுகிறார். மதுபானம், புகை யிலை, போதைப்பொருட்கள் ஆகியவற்றைக்

குறித்து இந்த விதி சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பொருட்களும் இன்னும் சில பொருட்களும் பயன் படுத்துகிறவர்களை அடிமைப்படுத்தக் கூடியன. ஆகவே இப்பொருட்களுக்குத் தன்னை அடிமைப் படுத்தும்படி கிறிஸ்தவன் இவற்றைப் பயன்படுத் தக் கூடாது.

**6:13** மூன்றாவது விதி என்னவெனில் சில செயல்கள் செய்யப்படுவதற்கு நிறைவான அதி காரம் உடையவையாக இருப்பினும் அவற்றின் மதிப்பு நிலையானதன்று. "**வயிற்றுக்குப் போஜ னமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனா லும் தேவன் இதையும் அதையும் அழியப்பண் ணுவார்**" என்று பவுல் கூறுகிறார். **உணவை** ஏற்றுக்கொண்டு அதைச் செரிக்கச் செய்யும் அமைப்புடையதாக மனிதனுடைய **வயிறு** உரு வாக்கப்பட்டுள்ளது என்பதே இதன் பொருளாகும். அதுபோலவே, **உணவுப்** பொருட்களும் மனித னுடைய வயிற்றினால் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவகையில் உண்டாக்கப்பட்டுள்ளன. ஆயி னும் நாம் உணவுக்காக வாழக் கூடாது. ஏனெ னில் அதன் மதிப்பு குறுகிய காலத்திற்குரியது. விசுவாசியானவன் தன் வாழ்க்கையில் அளவு கடந்த வகையில் அதற்கு முக்கியத்துவம் அளிக் கக் கூடாது. உங்களுடைய பசியைத் திருப்திப் படுத்துவதே வாழ்வின் மிகப்பெரிய செயல் என்ற எண்ணத்துடன் வாழாதீர்கள்.

இவ்வாறு வயிறானது உணவை ஏற்றுக் கொள்ளவும் அதனைச் செரிக்க வைக்கவும் தக்கபடி வியத்தகு முறையில் உருவாக்கப்பட்டி ருப்பினும் ஒன்று மட்டும் நிச்சயம்; **சரீரமோ வேசித்தனத்திற்கல்ல**, மாறாக **கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்**. ஒழுக்கக் கேட்டிற்கும், தூய்மையற்ற நோக்கங் களுக்காகவும் மனிதனுடைய சரீரம் பயன்படும் என்று, அதனை உருவாக்கியபோது தேவன் எண்ணவில்லை. மாறாக கர்த்தருடைய புகழ்ச் சிக்காகவும் அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட ஊழியத்திற்காகவும் பயன்படக்கூடிய வகையில் சரீரத்தை அவர் உருவாக்கியிருக்கிறார்.

நம்மைத் திகைக்கச் செய்யும் செய்தி ஒன்று இவ்வசனத்தில் உள்ளது. அதனை நாம் கவனிக் காமல் விட்டுவிடக் கூடாது. **சரீரம் கர்த்தருக்கே உரியது** என்பது மட்டுமின்றி, அதனைக் காட்டி லும் மிகுந்த வியப்பைத் தரும் சிந்தனை யாதெ னில் **கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்** என்பதே. அதாவது கர்த்தர் நம்முடைய சரீரங்களிலும், அவற்றின் நலனிலும், அவற்றின் உகந்த பயன் பாடுகளிலும் அக்கறை உடையவராக இருக் கிறார். நம்முடைய சரீரங்களைப் பரிசுத்தமும் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் (ரோமர் 12:1). "கர்த்தரின்றி சரீரமானது அதனுடைய மெய் யான மேன்மையை அடையாது; அதனுடைய அழியா நிலையைச் சென்றடையாது" என்று எர்ட்மான் என்பார் கூறியுள்ளார்.[13]

**6:14** கர்த்தர் சரீரத்திற்கு உரியவர் என்னும் உண்மை இவ்வசனத்தில் தொடர்ந்து விளக்கப் பட்டிருக்கிறது. **கர்த்தராகிய** இயேசுவை மரித் தோரிலிருந்து **எழுப்பியது** மட்டுமின்றி, **தேவன் நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்பு வார்**. நம்முடைய சரீரங்களின் மீதான அவரு டைய அக்கறை நம்முடைய மரணத்தோடு முடி வடைந்து விடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் மகிமை நிறைந்த சரீரத்திற்கு ஒப்பாக ஒவ் வொரு விசுவாசியின் சரீரமும் காணும்படி, அவற்றை அவர் **எழுப்பப்** போகிறார். நித்தியத் திலே சரீரமற்ற ஆவிகளாக நாம் இருக்கப் போவ தில்லை. மாறாக, நம்முடைய ஆவியும் ஆத்து மாவும் நம்முடைய மகிமையடைந்த சரீரத்தோடு இணைக்கப்பட்டு, விண்ணுலகின் மேன்மைகளை என்றென்றும் அனுபவிப்போம்.

**6:15** நம்முடைய வாழ்க்கையில் தனிப்பட்ட வகையிலான பரிசுத்தத்தையும், நமது சரீரங் களின் பரிசுத்தத்தையும் காத்துக்கொள்வது இன்றியமையாதது என்பதை மேலும் வலியுறுத் தும்படி, நம்முடைய **சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள்** என்று அப்போஸ்தலன் நமக்கு நினைவூட்டுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக விளங்கு கிறான். அவ்வாறாயின், **கிறிஸ்துவின் அவய வங்களை வேசியின் அவயவங்களாக்குவது** முறையாகுமா? இந்தக் கேள்வியை எழுப்பி அதற்கான விடையை மிகுந்த சீற்றத்துடன் உரைக்கிறார் பவுல்: "**அப்படிச் செய்யலா காதே!**"

**6:16** பாலுறவு கொள்கின்ற வேளையில் இரண்டு சரீரங்கள் ஒன்றாக இணைகின்றன. படைப்பின் உதயத்திலே இவ்வாறு சொல்லப் பட்டிருக்கிறது: "**இருவரும் ஒரே மாம்சமாயிருப் பார்கள்.**" (ஆதி. 2:24). இதன் காரணமாக, ஒரு **வேசியோடு** விசுவாசியொருவன் இசைந்திருப் பானாயின், அது கிறிஸ்துவின் ஓர் அங்கத்தை வேசியின் ஓர் அங்கத்துடன் இணைப்பதற்கு ஒப் பாகும். **இருவரும் ஒரே சரீரமாயிருப்பார்கள்**.

**6:17** பாலுறவிலே எவ்வாறு இருவரும் ஒன்றாக இணைகின்றனரோ, அது போலவே ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது **கர்த்தரோடிசைந்திருக்கிறான்**. அந்த விசுவாசியும் கிறிஸ்துவும் **ஒரே ஆவியாயிருக் கிறார்கள்** என்று அது முதல் சொல்லத்தக்கதாக இருவரும் ஒன்றாக இணைகின்றனர். இருவர் ஒன்றாக இணைவதில் நிறைவான ஒன்று சேருதல் இந்த இணைப்பில்தான் சிறந்து காணப்படுகிறது. இதுவே மிக நெருக்கமான ஐக்கியமாகும். இவ் வாறு **கர்த்தரோடு இசைந்திருக்கிறவர்கள்** இந்த ஆவிக்குரிய திருமண உறவிற்கு அப்பாற் பட்ட வேறு எந்த ஐக்கியத்தையும் சகித்துக் கொள்ளக் கூடாது என்பதே பவுல் கூறுகிற கருத்தாகும்.

இது குறித்து A. T. பியர்சன் என்பார் எழுதுகிற தாவது:

> ஆடு தன் மேய்ப்பனைவிட்டு வழி தவறிச் செல்லலாம், திராட்சைச் செடியிலிருந்து கொடி யானது வெட்டி எறியப்படலாம், ஒரு உடலி லிருந்து ஓர் உறுப்பை அகற்றிவிடலாம், தந்தையிடமிருந்து குழந்தையைப் பிரித்துச் செல்லலாம், ஒருவேளை மனைவியும்கூட தன் கணவனைவிட்டுப் பிரிந்து செல்லக்கூடும். ஆனால் இரண்டு ஆவிகள் ஒன்றிணையும் போது எதனால் அவற்றைப் பிரிக்க முடியும்? வெளியரங்கமான எந்தவொரு தொடர்பும் அல்லது ஐக்கியமும் அல்லது திருமண உடன் பாடும்கூட இதுபோன்று இரண்டு உயிர்கள் ஒன்றாக இணைவதைப் போன்று பொருள் பொதிந்த வகையில் உறுதியுடையதாகக் காணப்படுவதில்லை.[14]

**6:18** ஆகவே **வேசித்தனத்திற்கு விலகி யோடும்படியாகக்** கொரிந்தியர்களை அப்போஸ் தலன் எச்சரிக்கிறார். அவர்கள் வேசித்தனத்தில் பொழுதைக் கழிக்கக்கூடாது, அதனுடன் விளை யாடக் கூடாது, அதைக்குறித்துப் படிக்கக் கூடாது. அதைக் குறித்துப் பேசவும் கூடாது. அதனை விட்டு அவர்கள் **விலகியோட** வேண்டும்! யோசேப்பைப் பாவம் பண்ணும்படி போத்திபாரின் மனைவி தூண்டியபோது அவனது நடத்தை வேதாகமத்தில் காணப்படும் அழகிய எடுத்துக் காட்டாக விளங்குகிறது (ஆதி. 39). எண்ணிக்கை யில் பாதுகாப்பு இருக்கிறது என்று சொல்லப்படு வதுண்டு. ஆனால் சில வேளைகளில் விலகி ஓடுவதில் அதிக பாதுகாப்பு இருக்கிறது!

"**மனிதன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத் திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ்செய் கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்**" என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். பல பாவச் செயல்கள் ஒருவருடைய சரீரத்தை *நேரடியாகத்* தாக்குவதில்லை. ஆனால் வேசித்தனமோ அந்த மனிதனின் சரீரத்தை நேரடியாகப் பாதிக்கக் கூடியதாக இருக் கிறது. அதாவது அந்த மனிதன் தன் சொந்தச் சரீரத்தில் அப்பாவத்தின் பலனை அனுபவிக்கக் கூடியவனாக இருக்கிறான். மனிதன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும் என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது விளக்குவதற் குச் சற்று கடினமான ஒன்றாகும். ஆயின், அப் போஸ்தலன் இங்கு ஒப்பிட்டுப் பேசுவதாகவே நாம் கருதுகிறோம். எடுத்துக்காட்டாக பெருந் தீனி உண்ணும் பழக்கமும், குடிவெறியும் ஒரு மனிதனின் உடலைப் பாதிக்கக் கூடியவையாக இருப்பினும், பெரும்பாலான பாவங்கள் அவ்வாறு பாதிப்பதில்லை. மேலும் வேசித்தனம் ஒரு மனித னுடைய சரீரத்தை எந்த அளவிற்கு நேரடியாக வும், மிக அதிக அளவும், கேடு விளைவித்தும் தாக்குகிறதோ அதுபோல பெருந் தீனியும், குடி வெறியும் பாதிப்பதில்லை. திருமணத்திற்கு அப்பாற்கொள்ளும் உடலுறவு அவ்வாறு குற்றம் இழைப்பவருடைய சரீரத்தில் தவிர்க்க முடியாத வண்ணமும் தடைபண்ண முடியாதபடியும் கேடு உண்டாக்கிவிடும்.

**6:19** கொரிந்தியர்கள் பெற்ற அழைப்பு பரிசுத்தமும் மேன்மை வாய்ந்ததுமான அழைப்பு என்று பவுல் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். அவர்களுடைய சரீரமானது **பரிசுத்த ஆவியினு டைய ஆலயமாயிருக்கிறதென்று** மறந்து விட்டார் களா? ஒவ்வொரு விசுவாசியின் சரீரத்திலும் தேவ ஆவியானவர் குடியிருக்கிறார் என்னும் உண்மை வேதத்தில் கூறப்பட்டிருக்கும் ஆழ்ந்த கருத்து டையதாகும். *பரிசுத்த* ஆவியானவர் குடியிருக் கும் இந்தச் சரீரம் **இழிவான** நோக்கங்களுக் குப் பயன்படுத்தப்படுவதைக் குறித்து நாம்சிந்தித் துப்பார்க்கலாமா? நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவர் தங்கும் புனிதத் தலமாக இருப்பது மட்டுமின்றி நாம் **நம்முடையவர்களும் அல்லர்**. ஆகவே நம்முடைய சரீரங்களை நம்முடைய விருப்பங்களுக்கு ஏற்றபடி பயன்படுத்தலாகாது. அதனை ஆராய்ந்து பார்க்குங்கால் நமது சரீரங் கள் நம்முடையவை அல்ல என்பதும் அவை கர்த்தருக்கே உரியவை என்பதுமே முடிவாகும்.

**6:20** படைப்பின்படியும் மீட்பின்படியும் நாம் கர்த்தருக்கு உரியவர்களாவோம். இவ்வசனத்தில் பிந்தின உண்மை கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. கல்வாரியில் அவர் நம்மைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டார். நாம் **கிரயத்திற்குக் கொள்ளப்பட்டோம்**. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செலுத்திய விலையை நம்மீது எழுதி ஒட்டி வைத்திருக்கிறார். அவர் தமது விலையேறப்பட்ட குருதியை விலையாகச் செலுத்தும்படி நம்மை அவ்வளவாக விலை மதித்திருக்கிறார். நம்முடைய பாவங்களை தம்முடைய சரீரத்தில் சிலுவையின்மீது ஏற்றுக்கொள்ளும்படி எவ்வளவாக அவர் நம்மீது அன்பு பாராட்டியிருக்கிறார்!

அவ்வாறாயின், என்னுடைய சரீரத்தை எனக்குச் சொந்தமானதாக நான் இனிமேல் கருதக் கூடாது. என்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப நான் அதனைப் பயன்படுத்துவேனாயின், எனக்குரிய தல்லாததை எடுத்துக்கொள்ளுகிற ஒரு திருடனைப் போல நான் காணப்படுவேன். மாறாக, **தேவனை மகிமைப்படுத்தும்படியாக** என்னுடைய சரீரத்தை நான் பயன்படுத்த வேண்டும். அது அவருக்கே சொந்தம்.

பேட்ஸ் என்பார் வியந்து போற்றுகிறார்:

> தலையே! தமது நெற்றியில் முள்முடி சூடிய வரை நினைத்துப்பார். கைகளே! சிலுவை அறையுண்ட கைகளை உடையவருக்காகக் கடினமாக உழைத்திடுங்கள். கால்களே! யாருடைய கால்கள் உருவக் குத்துண்டதோ அவருடைய நோக்கத்தை நிறைவேற்றும்படி வேகமாக நடவுங்கள். என்னுடைய சரீரமே! யாருடைய சரீரம் சொல்லிமுடியாத வேதனைகளால் சித்ரவதைக்குள்ளானதோ அவருடைய ஆலயமாய்த் திகழ்வாயாக.[15]

நாம் நம்முடைய ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்தக் கடவோம். ஏனெனில் காணக் கூடியதும் காணக்கூடாததுமான மனிதனுடைய கூறுகள் யாவும் **தேவனுக்கு** உரியவை.[16]

## 3. சபையைப் பற்றிய வினாக்களுக்கான அப்போஸ்தலனின் விடைகள் [அதி. 7-14]

### அ. திருமணமான நிலைமை மற்றும் திருமணமாகா நிலைமை [அதி. 7]

**7:1** இதுகாறும் கொரிந்துப் பட்டணத்துச் சபையில் காணப்பட்டதும், தான் நேரடியாகக் கேட்டு அறிந்ததுமான பற்பல தவறுகளைக் களைவதற்கான வழிமுறைகளைப் பவுல் விளக்கினார். இப் பொழுதோ கொரிந்துப் பட்டணத்துப் பரிசுத்தவான்கள் எழுப்பிய வினாக்களுக்கு அவர் பதில் அளிக்க ஆயத்தமாகிவிட்டார். முதலாவதாக, திருமணத்தைப் பற்றியும் திருமணமாகாமல் தனித்திருக்கும் நிலையைப் பற்றியும் அவர் பேசுகிறார். அதற்குரிய பொதுவான விதியாக, **ஸ்திரீயைத் தொடாமலிப்பது மனிதனுக்கு நல்லது** என்று அவர் உரைக்கிறார். ஸ்திரீயைத் தொடாமலிருப்பது என்று அவர் இங்கு குறிப்பிட்டிருப்பது ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வதையே குறிக்கிறது. திருமணமான நிலையைக் காட்டிலும் திருமணமாகாதிருப்பது பரிசுத்தம் மிகுந்தது என்று அப்போஸ்தலன் இங்கு சொல்லவில்லை. எவ்விதத்திலும் தனது கவனத்தைத் திசை திருப்பாமல் முற்றிலுமாகத் தன்னைக் கர்த்தருடைய பணிக்கு ஒருவர் ஒப்புவிக்க விரும்பினால் அவர் திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதே சிறந்தது என்று மட்டுமே அவர் இங்கு கூறுகிறார். பின்வரும் வசனங்களில் இதன் விளக்கம் தரப்படுகிறது.

**7:2** ஆயினும், ஒருவன் தனித்திருக்கும்போது பரிசுத்தக் குறைவு ஏற்படுவதற்கான கடுமையான சோதனை உண்டாகும் என்று பவுல் இங்கு ஒப்புக் கொள்கிறார். அதன் காரணமாக "**வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும்**" என்று கூறி தனது கூற்றின் கடுமையை மட்டுப்படுத்துகிறார். அவனவன் தன் சொந்த மனைவியை உடையவனாயிருக்கவேண்டும் என்று கூறுமிடத்து, அ.ந்.து ஒருவனுக்கு ஒருத்தி என்னும் திருமண முறையைக் குறிக்கிறது. தேவன் தமது மக்களுக்குத் தந்தருளின இக்கொள்கை எப்பொழுதும் நிலைத்திருக்கும்படி இரண்டாம் வசனம் அதனை வலியுறுத்துகிறது.

**7:3** திருமணமான நிலையில் தம்பதிகள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கக் கூடியவர்களாக இருப்பதால் அவரவர் தன்னுடைய இல்லறத் துணைவர்க்கு ஆற்றவேண்டிய **கடமையைச் செய்ய வேண்டும்**. புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன் (நேசத்தைச் செலுத்தக்கடவன்) என்று கணவனுக்குரிய கடமை குறிப்பிடப்பட்டுள்ளது. அவளும் அதுபோலவே செய்யக் கடமை உடையவளாயிருக்கிறாள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பவுல் இப்பொருள் பற்றிப் பேசும் இவ்வேளையில் எத்தகைய மென்மையான சொற்களைப் பயன் படுத்துகிறார் என்பதைக் கவனிக்கவும். அங்கே எவ்வித பண்பற்றதும் கொச்சையானதுமான எண்ணம் இல்லை. இ.ச்.து உலகினின்று எவ்வளவு வேறுபட்டதாயிருக்கிறது!

**7:4** திருமணத்தில் இணைக்கப்பட்ட நிலை யில் **மனைவியானவள்** தன் **புருஷனையும்**, **புருஷன்** தன் **மனைவியையும்** சார்ந்திருக்கின் றனர். இவ்விதமான பரிசுத்த இணைப்பில் தேவ னுடைய ஒழுங்கைத் தொடர்ந்து கைக்கொள் ளும்படி கணவனும் மனைவியும் ஒருவரையொரு வர் சார்ந்தவர்கள் என்பதைக் கருத்தில் கொண்ட வர்களாக இருக்க வேண்டும்.

**7:5** கிறிஸ்டன்சன் என்பார் இது குறித்து எழுதுகிறார்:

> இதனை நாம் ஒளிவு மறைவற்ற சொற்களில் கூறுவோமாயின், தம்பதிகளில் ஒருவர் உடல் உறவு கொள்ள விருப்பம் கொள்வாராயின், அந்த விருப்பத்திற்கு மற்றவர் இணங்க வேண் டும் என்பதேயாம். சிற்றின்பத்தைப் பொருத்த மட்டில் கணவனும் மனைவியும் இவ்வித முறையை முழுமையாகப் பின்பற்றுவார்களா யின் திருமண உறவில் வியத்தகு மனநிறை வைப் பெறுவர். அவ்வாறான உறவு செயற்கை யானதாகவோ கருத்தளவில் மட்டும் உள்ள தாகவோ இராமல் சத்தியத்தில் ஊன்றக்கட்டப் பட்டதாயிருக்கிறது என்பதே அதன் அடிப் படைக் காரணமாகும்.[17]

கொரிந்துப் பட்டணத்தில் முதலாவதாகச் சிலர் இரட்சிப்படைந்த சமயத்தில் திருமண வாழ் வில் கொள்கிற மிக நெருக்கமான உறவு கிறிஸ் தவத் தூய்மைக்கு ஒவ்வாதது என்று கருதத் தொடங்கினர் என்றே தோன்றுகிறது. அவர்களது எண்ணம் தவறானது என்று பவுல் அதனை அவர்களுடைய உள்ளத்தினின்று அகற்றுகிறார். **ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்** என்று கூறி, கிறிஸ்தவத் தம்பதிகளில் ஒருவருடைய சரீரத்தின் மீது மற்றவருக்கு அதிகாரம் உண் டென்பதை மறுத்துரைக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்துகிறார். அதற்கு இரண்டு விதிவிலக் குகள் உள்ளன. முதலாவதாக, கணவனும் மனைவியும் தங்களை **உபவாசத்திற்கும் ஜெபத் திற்கும்** ஒப்புவிக்கும்படி இருவரும் **சம்மதித்துப்** பிரிந்திருக்கலாம். இரண்டாவது நிபந்தனை யாதெனில் அவ்வாறான பிரிவு குறுகிய காலத் திற்கு மட்டுமே நடைமுறையில் இருக்க வேண் டும் என்பதாகும். அவர்களுக்கு **விரதத்துவம்** இல்லாமையால், சாத்தான் அவர்களைத் தூண்டி விடாதபடி கணவனும் மனைவியும் **மீண்டும் கூடிவாழ வேண்டும்**.

**7:6** இந்த வசனம் பலவித ஊகங்களுக்கும் முரண்பாடுகளுக்கும் காரணமாக விளங்குகிறது. “**இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், யோசனையாகச் சொல்லுகிறேன்.**” முன்னர் சொல்லப்பட்ட வசனங்கள் தேவனுடைய ஏவுதலி னால் எழுதப்பட்டவை என்று அப்போஸ்தலன் கருத வில்லை என்று இதற்குச் சிலர் பொருள்கொள்ளு கின்றனர். 1 கொரிந்தியர் 14:37 இல், அப்போஸ் தலன் எழுதியவை யாவும் கர்த்தருடைய கற்ப னைகள் என்று கூறியிருப்பதால் இவ்வாறு பொருள்கொள்ளுதல் ஏற்றுக்கொள்வதற்கு இய லாதது என்பது விளங்கும். சில குறிப்பிட்ட சூழ் நிலைகளில் திருமணத்தில் இணைக்கப்பட்ட தம்பதிகள் இந்தத் திருமணச் செயலுக்கு உட் படாமல் இருப்பது தவறல்ல என்றும் ஆயினும் அது கட்டளையாகக் கொடுக்கப்படாமல், அனு மதிக்கப்பட்ட ஒன்றாகவே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அப்போஸ்தலன் இங்கு கூறு வதாக நாம் கருதுகின்றோம். அதாவது, கிறிஸ் தவத் தம்பதிகள் தடையில்லாதபடி தங்களை ஜெபத்திற்கு ஒப்புவிப்பதற்கென இந்தச் செய லைத் தவிர்க்க வேண்டியதில்லை. ஆறாவது வசனம் திருமணம் செய்துகொள்வதைப் பற்றிய முழுக்கருத்தையும் தெரிவிக்கிறது. கிறிஸ்தவர் கள் திருமணம் செய்துகொள்வதற்கு அனுமதிக் கப்பட்டுள்ளனரே யொழிய அது கட்டளையாகக் கொடுக்கப்படவில்லையென்று இதற்குப் பொருள் கூறுகின்றனர்.

**7:7** திருமணமாகாதிருப்பதைப் பற்றிய அறிவுரைகளைப் பவுல் இப்பொழுது வழங்கத் தொடங்குகிறார். முதலாவதாக, திருமணம் ஆகா திருக்கும் நிலைமை பெரிதும் விரும்பத்தக்க ஒன்று என்று அவர் கருதினார் என்பது தெளி வாகத் தெரிகிறது. ஆயினும் தேவன் அதற்குரிய தகுதியைத் தந்தால் மட்டுமே அதனைப் பின்பற்ற லாம் என்று அவர் ஒப்புக்கொள்கிறார். “எல்லா மனுஷரும் என்னைப் போலவே இருக்க விரும்பு கிறேன்” என்று அவர் கூறுவது, “திருமணமாகாத நிலையையே” குறிக்கிறது என்பது இவ்வசனத் தின் பின்னணியிலிருந்து தெளிவாகிறது. பவுல் திருமணம் செய்துகொள்ளாமலே இருந்தார் என்றும் இதனை அவர் எழுதுவதற்கு முன்னர்

அவருடைய மனைவி இறந்துவிட்டார் என்றும் வெவ்வேறு கருத்துகள் நிலவுகின்றன. எவ்வாறாயினும் அந்தக் கருத்து வேறுபாட்டை நாம் தீர்க்கக் கூடுமாயினும் இங்கு சொல்லப்பட்டுள்ளவற்றின் நோக்கங்களுக்கு அந்தத் தர்க்கம் தேவையற்ற ஒன்றாகும். "**ஆகிலும் அவனவனுக்கு தேவனால் அருளப்பட்ட அவனவனுக்குரிய வரமுண்டு; அது ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு வேறுவிதமாயும் இருக்கிறது**" என்று பவுல் கூறும்போது, சிலர் திருமணம் செய்துகொள்ளாமலேயே இருப்பதற்கு தேவன் கிருபை தருகிறார் என்றும், மற்றவர்களைத் திருமணம் செய்துகொள்ளும்படியாக அவர் அழைத்திருக்கிறார் என்றும் பொருள்படக் கூறியுள்ளார். இ.·.து அவரவருடைய தனிப்பட்ட விஷயமாக இருக்கிறதேயொழிய, இது குறித்து எல்லாருக்கும் பொருத்தமுடைய பொதுவான சட்டம் ஒன்றை இயற்ற முடியாது.

**7:8** ஆகவே, **விவாகமில்லாதவர்களும், கைம்பெண்களும்** அவரைப் போலவே இருந்து விடும்படி அவர் அறிவுரை நல்குகிறார்.

**7:9** இருந்தபோதிலும், திருமணமாகாதிருக்கும் நிலையில் **விரத்தராயிருப்பதற்கு** வலிமையற்றவர்களாக இருப்பார்களெனில், அவர்கள் **திருமணம்** செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். ஏனெனில் **வேகிறதைப் பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம்**. இவ்விதமான காம உணர்ச்சியோடு வேகிற நிலையில் பாவத்தில் வீழ்ந்துவிடக் கூடிய ஆபத்து இருக்கிறது.

**7:10** அடுத்து வருகின்ற இரண்டு வசனங்களும் **விவாகம் பண்ணின**, விசுவாசத் தம்பதிகளுக்கு எழுதப்பட்டவையாகும். **விவாகம் பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது** என்று கூறியிருப்பதன் பொருள் யாதெனில், பவுல் இங்கு போதிக்கிறவை ***கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்புவியில் இருந்தபோது*** ஏற்கனவே கற்பித்தவை என்பதேயாகும். இப்பொருள்பற்றி மிகத் தெளிவான முறையில் கிறிஸ்து ஏற்கனவே கட்டளை கொடுத்திருக்கிறார். எடுத்துக்காட்டாக, உண்மையற்ற முறையில் நடந்துகொள்வதினாலன்றி விவாகரத்து செய்யலாகாது என்று அவர் கட்டளை கொடுத்திருக்கிறார் (மத். 5:32; 19:9). எல்லாவற்றையும் உள்ளடக்கின முறையில், **மனைவியானவள் தன் புருஷனைவிட்டுப் பிரிந்துபோகக் கூடாதென்று** பவுல் அறிவுரை வழங்குகிறார்.

**7:11** ஆயினும், மனைவி தன் கணவனை விட்டுப் பிரிந்து போகக்கூடிய சில இயல்புக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகள் ஏற்படக் கூடும் என்று அவர் ஒப்புக்கொள்கிறார். அப்படிப் பிரிந்து செல்லக் கூடிய சூழ்நிலையிலும் **அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள் அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்**. பிரிந்திருத்தல் திருமணக் கட்டை முரிவடையச் செய்கிறதில்லை; மாறாக தம்பதிகளுக்குள்ளாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை நீக்கி, அவர்களுக்குள்ளான உறவை முந்தின நிலைக்குக் கர்த்தர் கொண்டு வருவதற்கு நல்ல சந்தர்ப்பத்தைத் தருகிறது. மேலும் அவர்கள் கர்த்தரோடும் ஒருவரோடொருவரும் ஐக்கியம் கொள்ள அது வழிவகுக்கிறது. **தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது** என்று **புருஷனுக்குக்** கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. இங்கே எவ்வித விதிவிலக்கும் கொடுக்கப்படவில்லை.

**7:12** தம்பதிகள் இருவரில் ஒருவர் மட்டும் விசுவாசியாயிருக்கும்போது திருமண வாழ்வில் ஏற்படும் பிரச்சினை குறித்து 12 முதல் 24 வரையுள்ள வசனங்களில் விளக்கம் தரப்பட்டுள்ளது. தன்னுடைய விளக்கத்திற்கு, பவுல் முன்னுரையாக, "**மற்றவர்களைக் குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது**" என்று கூறுகிறார். தனது சொந்தக் கருத்தை பவுல் கூறுகிறார் என்றும், இது கர்த்தருடைய கருத்தன்று என்றும் இதற்குப் பொருள்கொள்ளக் கூடாது என மீண்டும் நாம் வலியுறுத்திக் கூறுகிறோம். தொடர்ந்து பவுல் சொல்லப்போகிறவற்றை, **கர்த்தராகிய** இயேசு கிறிஸ்து இப்புவியில் இருந்தபோது கற்பிக்கவில்லை என்று மட்டுமே அவர் இங்கு கூறுகிறார். அதாவது இதற்கு ஒப்பான ஆலோசனைகள் நற்செய்தி நூல்களில் இல்லை. திருமணத்தில் இணைக்கப்பட்ட தம்பதிகளில் ஒருவர் மட்டும் விசுவாசியாக இருக்கக் கூடிய நிலையைப் பற்றி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அப்பொழுது விளக்கம் தரவில்லை. ஆனால் இப்பொழுது அந்தப் பொருள்பற்றி கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலனுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார். ஆகவே இங்கு பவுல் கூறுகிறவை தூய ஆவியின் ஏவுதலினால் எழுதப்பட்ட தேவ வார்த்தைகளாகவே இருக்கின்றன.

மற்றவர்கள் என்னும் சொல் விசுவாசிகளாகிய துணைவரை உடையவராய் இல்லாத கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இரட்சிக்கப்படாதவர்களைக் கிறிஸ்தவர்கள் திருமணம் செய்து

கொள்வதை இந்த வேத பகுதி பொறுத்துக்கொள் கிறது என்பது பொருளன்று. இருவரில் ஒருவர் திருமணமான பின்பு இரட்சிக்கப்படுகிற சூழ் நிலையைப் பெரும்பாலும் இது குறிப்பிடுவதாகக் கருதலாம். "**சகோதரன் ஒருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமா யிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன்.**" இத் திருமறைப் பகுதியைச் சரிவரப் புரிந்துகொள் வதற்கு, தேவன் தம்முடைய மக்களுக்குப் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கொடுத்த கட்டளையை நினைவுபடுத்துவது உதவியாயிருக்கும். புற சமயத்துப் பெண்களை யூதர்கள் மணமுடித்துப் பிள்ளைகளைப் பெற்றபோது, அவர்கள் தமது மனைவிகளையும் பிள்ளைகளையும் அகற்றிப் போடும்படி கட்டளை பெற்றார்கள். இதனை எஸ்றா 10:2,3 மற்றும் நெகேமியா 13:23-25 ஆகிய வேத பகுதிகளில் தெளிவாகக் காண்கிறோம்.

கொரிந்துப் பட்டணத்தில் இப்பொழுது ஒரு கேள்வி எழுந்துள்ளது. மனமாற்றம் அடைந்த பெண், மனமாற்றம் பெறாத தன் கணவன் மற்றும் பிள்ளைகளைக் குறித்து என்ன செய்வது? அல்லது மனமாற்றம் அடைந்த ஆண், மனமாற்றம் பெறாத தன் மனைவி மற்றும் பிள்ளைகளைக் குறித்து என்ன செய்வது? அவன் அவர்களைத் தள்ளிவிட வேண்டுமா? கிருபைக்குக் கீழாக வாழும் இறை மக்களுக்கு, அந்தப் பழைய ஏற்பாட்டுக் கட்டளை உரியதன்று. ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவள் அல் லாத பெண்ணை மனைவியாகக் கொண்டிருப் பானானால், மேலும் **அவனுடனே வாசமா யிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால்**, அவன் அவளை விட்டு விலகிச் செல்லக்கூடாது. ஒரு விசுவாசியானவன் அவிசுவாசப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்வது சரியானது என்னும் பொருள் இங்கில்லை. மாறாக, அவன் மனமாற் றம் பெற்ற தருணத்தில், திருமணமானவனா யிருப்பின், அவன் தன் மனைவியை விட்டு விலகிச் செல்லக்கூடாது என்பதே இங்கு நாம் காணும் அறிவுரையாகும்.

**7:13** அதுபோன்றே, **ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியிருந்தும் அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால்**, அவள் தன் கணவனுடன் சேர்ந்திருக்க வேண் டும். ஒருவேளை, அவனுக்கு முன்பாக அவளு டைய தாழ்மையுள்ளதும் தெய்வீகமானதுமான நடக்கையினால், அவள் அவனைக் கர்த்தருக் கென்று வென்றிடமுடியும்.

**7:14** மெய்யாகவே, கிறிஸ்தவர்கள் அல்லா தோர் வசிக்கும் வீட்டில் ஒரு விசுவாசி இருப்பானா னால், அங்கு பரிசுத்தமாகுதலுக்கான சூழ்நிலை ஏற்படுகிறது. முன்னரே கூறியபடி பரிசுத்தமாகு தல் என்பது பிரித்து வைக்கப்படுதல் என்று பொருள்படும். அவிசுவாசியான கணவன் தனது மனைவியால் இரட்சிக்கப்படுகிறான் என்பதோ பரிசுத்தமாக விளங்குகிறான் என்பதோ இதன் பொருளன்று. மாறாக, வெளியரங்கமான சிலாக் கியங்களுக்குரிய நிலையை அவன் பெற்றுக் கொள்கிறான் என்பதே இதன் பொருளாகும். அவனுக்காக மன்றாடக்கூடிய கிறிஸ்தவப் பெண் மணியை மனைவியாக அவன் பெற்றிருப்பது அவனுடைய நற்பேறு ஆகும். அவளுடைய நடத் தையும் சாட்சியும் தேவனுக்கேற்ற தூண்டுதலை விளைவிக்கும். மனித எண்ணத்தின்படி நாம் பேசுவோமானால், அவிசுவாசியான பெண்ணை மனைவியாகக் கொண்டிருப்பவனோடு தெய்வீக சுபாவமுடைய கிறிஸ்தவப் பெண்மணியை மனை வியாகப் பெற்றிருக்கிற ஒருவனை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பிந்தினவன் இரட்சிப்படைவதற் கான வாய்ப்பு கூடுதலாயிருக்கிறது. இதனைக் குறித்து திருவாளர் வைன் கூறுவதாவது: "மெய் யான மனமாற்றத்தை அடைவதற்குச் சாதகமான ஆவிக்குரிய தூண்டுதலை அவன் பெறுகிறான்."[18] ஒரு கிறிஸ்தவக் கணவனைக் கொண்டிருக்கிற **அவிசுவாசியான மனைவியும்** அவ்வாறான சூழ்நிலையில் **பரிசுத்தமாகக்** கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறாள்.

"**இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவை கள் பரிசுத்தமாயிருக்கின்றன**" என்று அப் போஸ்தலன் தொடர்ந்து கூறுகிறார். பழைய ஏற் பாட்டுக் காலத்தில் பிள்ளைகளும், புற சமயத் தைச் சேர்ந்த மனைவியும் அகற்றப்பட வேண்டும் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டோம். கிருபையின் கால கட்டமாகிய தற்காலத்தில், ஒருவர் விசுவாசி யாகவும் மற்றவர் அவிசுவாசியாகவும் இருக்கக் கூடிய தம்பதிகளின் பிள்ளைகள் **பரிசுத்தமா யிருக்கின்றனர்** என்று பவுல் விளக்கம் அளிக் கிறார். பரிசுத்தமாயிருக்கின்றனர், பரிசுத்தமாக் கப்படுகின்றனர் ஆகிய இரு சொற்களும் ஒரே வேர்ச்சொல்லைக் கொண்டிருப்பதைக் கவனி யுங்கள். அந்தப் பிள்ளைகள் தாங்களாகவே பரிசுத்தமாயிருக்கின்றனர் என்பது அதன் பொரு ளன்று. மாறாக, அவர்கள் நற்பேறு உடைய இடத் தில் வாழ்வதற்கெனப் பிரித்துவைக்கப்பட்டுள்

ளனர் என்பதே இதன் பொருளாகும். அவர்களு டைய பெற்றோர்களில் ஒருவர் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவரும், நற்செய்திக் கதைகளைச் சொல்லுகிறவருமாக இருக்கும் நற்பேற்றை அவர் கள் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இரட்சிக்கப் படுவதற்கான வாய்ப்பு, வலிமை படைத்ததாக இருக்கிறது. தேவனுடைய ஆவியானவர் தமது குடியிருப்பாகத் தெரிந்து கொண்டிருக்கும் ஒரு வரைத் தங்களுடைய பெற்றோர்களில் ஒருவ ராகப் பெற்று அந்த வீட்டில் வசிக்கும் நன்மையை உடையவராய் அவர்கள் இருக்கிறார்கள். இந்தப் பொருளில் அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டுள்ளார் கள். ஒருவர் விசுவாசியாகவும் மற்றவர் அவி சுவாசியாகவும் இருக்கும்போது அந்தத் தம்பதி கள் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வதில் எவ் விதத் தவறும் இல்லை என்பதற்கான உறுதியை இந்த வசனம் தருகிறது. அவர்களுடைய திருமண வாழ்க்கையை தேவன் ஏற்றுக்கொள்கிறார்; மேலும் அவர்களுடைய பிள்ளைகள் முறை கேடாய்ப் பிறந்தவர்கள் அல்லர்.

**7:15** கிறிஸ்தவர் ஒருவருடைய வாழ்க்கைத் துணை இரட்சிக்கப்படாதவராயிருந்து பிரிந்து செல்ல விரும்பினால் அந்தக் கிறிஸ்தவர் எவ்வித மாக நடந்துகொள்ள வேண்டும்? அந்த அவி சுவாசியான ஆணோ பெண்ணோ **பிரிந்து** செல்லு வதற்குக் கிறிஸ்தவர்கள் அனுமதிக்க வேண்டும். “**இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல**” என்னும் சொற்றொடருக்குத் தெளிவான விளக் கம் அளிப்பது மிகவும் கடினமானதாகும். அவி சுவாசி பிரிந்து சென்றால், அந்தப் பிரிவையே முடி வாகக் கருதி, விசுவாசி விவாகரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனைத்துக் காரணங்களும் உள்ளன என்று சிலர் பொருள் கூறுகின்றனர். இவ்வாறு பொருள்கொள்வோர் 15 ஆவது வசனம் வேறு கருத்தை உடைய இடைப்பிறவரல் என்றும், 14 ஆவது வசனத்தோடு 16 ஆவது வசனத்தை இணைத்து, கீழ்வருமாறு படிக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

1. விசுவாசி, அவிசுவாசியோடு தொடர்ந்து சேர்ந்திருப்பதே குறைபாடு இல்லாத நிலை யாகும். ஏனெனில் அந்த வீட்டில் கிறிஸ்த வர் இருப்பதால் மற்றவர் பரிசுத்தமாக்கப் படுவதற்கான தூண்டுதலைப் பெறுவார். இத னைப் பதினான்காவது வசனம் எடுத்தியம்பு கிறது.
2. அவ்வாறு இருவரும் வீட்டில் சேர்ந்திருப்ப தால், அவிசுவாசியை அந்த விசுவாசி கிறிஸ்துவுக்கென்று வென்றிடக் கூடும். இதனைப் பதினாறாவது வசனம் கூறுகிறது.
3. பதினைந்தாவது வசனம் இடைப்பிறவர லாகும். அவிசுவாசி பிரிந்து செல்வாராயின் விசுவாசி விவாகரத்தைப் பெற்றுக்கொள் வதற்கு இவ்வசனம் அனுமதி அளிக்கிறது (மேலும் மறு திருமணம் செய்துகொள்வதற் கும் இதில் வழியுண்டு என்றும் கருதலாம்).

தொடர்ந்து தம்பதிகள் இருவரும் சேர்ந்து வாழ் வதினால், இறுதியில் அவிசுவாசி இரட்சிப்படை யக்கூடும். பிரிந்து செல்வதில் அந்த நம்பிக் கைக்கு இடமில்லை.

ஆனால் பதினைந்தாவது வசனம் பிரிந்து செல்லுதலைப் பற்றி மட்டுமே பேசுகிறது என்றும் அங்கே மண முரிவைப் பற்றியோ மறுமணத்தைப் பற்றியோ ஏதும் சொல்லப்படவில்லை என்றும் பிற வேத மாணாக்கர் வலியுறுத்துகின்றனர். அவிசு வாசி பிரிந்து சென்றால், அவர் அமைதியோடு பிரிந்து செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று மட்டுமே இங்கு பொருள்கொள்ள வேண்டும் என் பதே அவர்கள் கருத்து. அத்திருமண வாழ்க்கை முரிவடையாமல் இருப்பதற்காக அவருடைய மனைவி இதுவரை செய்ததற்கும் கூடுதலாகச் செய்வதற்குக் கடன்பட்டவள் அல்லள். சமாதான மாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத் திருக்கிறார். ஆகவே நாம் நமது உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் காட்டவோ, மற்றவர் பிரிந்து செல்லாதிருக்கச் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவோ கூடாது.

மேற்கூறியவற்றுள் எது சரியான விளக்கம்? உறுதியான முடிவைத் தீர்மானிப்பதற்குக் கூடாத தாக இது இருக்கிறது. தம்பதிகளில் ஒருவர் வேசித்தனம் செய்து உண்மையற்றவராக நடந்து கொண்டால் மட்டுமே விவாகரத்து அனுமதிக்கப் பட்டிருக்கிறது என்று கர்த்தர் மத்தேயு 19:9 -இல் கற்பித்திருக்கிறார் என்று நாம் சிந்திக்கத் தோன்று கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் குற்றம் செய்யாதவர் மறுமணம் செய்துகொள்ளலாம் என்று நாம் நம்புகிறோம். 1 கொரிந்தியர் 7:15 ஆம் வசனத்தைப் பொருத்தமட்டில் அவிசுவாசி, விசு வாசியை விட்டுப் பிரிந்துபோனால், விசுவாசி விவாகரத்தைப் பெற்று மறுமணம் செய்துகொள் ளலாம் என்று நம்மால் உறுதிபடக் கூறமுடியாது. ஆயினும், அவ்வாறு பிரிந்து செல்லும் குற்றம் செய்த ஒருவர் கூடிய விரைவில் புதிய உறவை

ஏற்படுத்திக்கொள்வார் என்பது நிச்சயமாக நிக ழக்கூடிய ஒன்றாகும். அப்பொழுது முந்தின உறவு முரிந்துபோகிறது. இது குறித்து J. M. டேவிஸ் என்பார் எழுதுகிறதாவது:

> பிரிந்து செல்லுகிற அவிசுவாசி, கூடிய விரைவில் வேறொருவரைத் திருமணம் செய்துகொள் வார். அது முந்தின திருமண உறவைத் தானா கவே முரிவடையச் செய்கிறது. தனியே விடப் பட்டவர் தொடர்ந்து திருமணம் செய்துகொள் ளாமலே இருக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்படுவது அவர் மீது நுகத்தைப் பூட்டு வதாகும். பெரும்பாலோர் அந்நுகத்தைச் சுமக் கக் கூடாதவர்களாயிருக்கின்றனர்.[19]

**7:16** ஒருவர் 15 ஆவது வசனத்திற்கு எவ்வித மாகப் பொருள்கொள்கிறாரோ, அதைப் பொருத்தே 16 ஆவது வசனத்தையும் அவர் புரிந்துகொள் கிறார்.

15 -ஆவது வசனம் திருமண முரிவை ஏற்றுக் கொள்கிறதில்லையென்று ஒருவர் எண்ணுவாரா யின், இந்த வசனத்தை அவருக்குக் கிடைத்த நிரூபணமாகக் கருதுகிறார். தம்பதிகளில் அவிசு வாசி பிரிந்து செல்வதற்கு அனுமதிக்கும் விசு வாசி விவாகரத்து கோரக்கூடாது என்றும், அவ்வாறு விவாகரத்து செய்வதால் திருமண உறவு முன் போல் புதிப்பிக்கப்படுவதற்கும், அந்த அவிசுவாசி இரட்சிக்கப்படுவதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய் விடும் என்றும் அக்கருத்து உடையவர் வாதாடு கிறார். மாறாக அவிசுவாசி பிரிந்து செல்லும் போது விவாகரத்து அனுமதிக்கப்படுகிறது என்று நம்புகிற வேறொருவர், இவ்வசனத்தைப் பதி னான்காவது வசனத்தோடு இணைத்துப் பொருள் கொள்கிறார். மேலும் 15 ஆவது வசனம் இடைப் பிறவரல் என்றும் அவர் கருதுகிறார்.

**7:17** முந்தின வாழ்க்கையின் எல்லாக் கூறு களிலிருந்தும், தன்னில்தானே பாவமில்லாத திருமண உறவிலிருந்தும், முற்றிலுமாகப் பிரிந்து வாழ வேண்டுமென்று புதிய விசுவாசிகள் சில வேளைகளில் எண்ணுவதுண்டு. புதிதாக இரட்சிப் பின் மகிழ்ச்சியை அனுபவிப்போர் தான் ஈடுபட்ட அனைத்து வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட எல்லாவற்றையும் வலுக்கட்டாயமாகத் தூக்கி எறிய வேண்டும் என்னும் புரட்சிகரமான செய்கை யில் ஈடுபடக்கூடிய ஆபத்து உள்ளது. தனது நோக் கங்களை நிறைவேற்றுவதற்குக் கிறிஸ்தவம் வலுக்கட்டாயமான புரட்சியைப் பயன்படுத்து வதில்லை. மாறாக அதனுடைய மாற்றங்கள் அமைதியான முறையில் நடைபெறுகின்றன. ஏற்கனவே கொண்டிருக்கிற கட்டுகளிலிருந்து விடுபட கிறிஸ்தவப் பண்புடையோர் மூர்க்கமான புரட்சியில் ஈடுபட வேண்டியதில்லை என்னும் பொதுவான விதியை அப்போஸ்தலன் 17 முதல் 24 வரையிலுள்ள வசனங்களில் முன்னுரைக் கிறார். முதலாவதாக திருமண உறவை மனத்திற் கொண்டே இந்த விதியைக் கூறுகிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. என்றாலும் இனம் மற்றும் சமுதாய உறவுகளுக்கும் இந்த விதி பொருந்தும் என்றே அவர் கூறுகிறார்.

கர்த்தருடைய அழைப்பிற்கு ஏற்ற வண்ணம் ஒவ்வொரு விசுவாசியும் நடந்து கொள்ள வேண் டும். ஒருவன் திருமண வாழ்விற்கென அழைக்கப் பட்டிருந்தால், அவன் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் அதன்படி வாழக்கடவன். திருமணமா காத நிலையில் வாழ்வதற்கென கிருபையை தேவன் அவனுக்கு அருளியிருந்தால், அந்த அழைப்பிற்கு ஏற்ற வண்ணம் அவன் தன் வாழ்க் கையை அமைத்துக் கொள்வானாக. ஒருவன் மனமாற்றம் பெற்ற தருணத்தில் ஒரு அவிசுவாசி யைத் திருமணம் செய்து கொண்டவனாக இருப் பான் எனில், அவன் அந்த உறவை முரித்துப் போடத் தேவையில்லை. மாறாக தன்னுடைய மனைவியின் இரட்சிப்பை நாடி அதற்காக தன் னால் முடிந்த முயற்சிகளைச் செய்ய வேண்டும். இங்கு பவுல் கூறுகிற அனைத்தும் கொரிந்து சபை யாருக்கு மட்டுமின்றி, **எல்லாச் சபைகளிலும்** போதிக்கப்படுகிறது. இது குறித்து திருவாளர் வைன் எழுதியுள்ளதாவது:

> "எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்" என்று பவுல் கூறும்போது ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆணை ஒன்றை அவர் பிறப்பிக்கவில்லை. கொரிந்தியர் களுக்கு அவர் தரும் ஆலோசனையையே அவர் எல்லாச் சபைகளுக்கும் தந்திருக்கிறார் என்பதே இதன் பொருளாகும்.[20]

**7:18** மரபுவழிக் கட்டுகளைக் குறித்து பவுல் 18 மற்றும் 19 -ஆகிய வசனங்களில் விளக்கம் அளிக்கிறார். தன்னுடைய மனமாற்றத்தின்போது ஒருவன் யூதனாயிருந்து விருத்தசேதனத்தின் அடையாளத்தைத் தன் உடலில் உடையவனா யிருந்தால், அதைக் குறித்து கடும் வெறுப்பு கொண்டு முந்தின வாழ்க்கை முறையின் அங்க அடையாளங்கள் அற்றுப்போவதற்கு வழிதேட வேண்டியதில்லை. அதுபோன்றே, ஒருவன் புறச் சமயத்தவனாயிருந்து புதுப்பிறப்பு அடைவானா

னால், அவன் தன்னுடைய புறச் சமயத்துப் பின்னணியை மறைப்பதற்கு யூதனுக்குரிய அடையாளத்தைத் தரித்துக்கொள்ள வேண்டியதில்லை.

ஒரு யூதன் மனமாற்றம் பெற்றால், தனது யூத மனைவியுடன் வாழ்வதற்கு அச்சம் கொள்ளத் தேவையில்லையென்றும், புறவினத்தவன் மனமாற்றம் பெறும்போது அந்தப் பின்னணியிலிருந்து விலகியோட முயற்சி செய்ய வேண்டியதில்லை என்றும் இப்பகுதியை நாம் விளக்கலாம். இவ்வாறான வெளிப்படையான வேறுபாடுகள் உண்மையில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை.

**7:19** கிறிஸ்தவத்தின் இன்றியமையாத இயல்பினைப் பொருத்தமட்டில் **விருத்தசேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுமில்லை. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே** உண்மையில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அதாவது, தேவன் வெளியரங்கமானவற்றில் அல்ல, உள்ளானவற்றில் கருத்துடையவராயிருக்கிறார். கிறிஸ்தவம் உட்புகுந்ததின் நிமித்தம் வாழ்க்கையின் உறவுகள் வன்முறையாக விட்டொழிக்கப்பட வேண்டியதில்லை. "மாறாக, கிறிஸ்தவ விசுவாசத்தின் மூலமாக, விசுவாசியானவன் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் மேலான இடத்திற்கு உயர்த்தப்படுகிறான்"[21] என்று திருவாளர் கெல்லி கூறியிருக்கிறார்.

**7:20 அவனவன்** எந்த **நிலையில்** இருந்து தேவனால் **அழைக்கப்பட்டானோ** அந்த நிலையிலேயே **நிலைத்திருக்கக்கடவன்**. தம்மில் தாமே பாவமற்று விளங்கக்கூடிய நிலைகளையே இது குறிக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஒருவன் தனது மனமாற்றத்தின்போது பொல்லாங்கான தொழிலில் ஈடுபட்டவனாயிருந்தால், அவன் அத்தொழிலிருந்து விடுபட வேண்டியது அவசியம்! இங்கே, தம்மில்தாமே தவறற்ற தாயிருக்கிற செயல்களைக் குறித்தே அப்போஸ்தலன் பேசுகிறார், தொடர்ந்து வருகிற அடிமையைக் குறித்த பொருளில் இவ்வுண்மை மெய்ப்பிக்கப்படுகிறது.

**7:21** ஓர் **அடிமை** இரட்சிப்படையும்போது அவன் செய்ய வேண்டியது என்ன? அவன் தன்னுடைய எஜமானனுக்கு எதிராகக் கலகம் செய்து விடுதலை கோர வேண்டுமா? நம்முடைய "உரிமைகளைப்" பெறுவதற்காக நாம் அலைந்து திரிய வேண்டுமென்று கிறிஸ்தவம் வலியுறுத்துகிறதா? "**அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப்படாதே**" என்று பவுல் இங்கு விடை தருகிறார். "நீ இரட்சிக்கப்பட்ட நேரத்தில் அடிமையாக இருந்தாயா? அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். நீ அடிமையாக இருந்த போதிலும் கிறிஸ்தவத்தின் உன்னதமான ஆசீர்வாதங்களை உன்னால் அனுபவிக்க முடியும்" என்றும் இதனைக் கூற முடியும்.

**நீ சுயாதீனனாகக் கூடுமானால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்**. இந்தப் பகுதிக்கு இரண்டு வகையான விளக்கங்கள் உள்ளன. "அடிமைத்தனத்திலிருந்து உங்களால் விடுதலை பெறக் கூடுமானால், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எல்லாவித முயற்சியினாலும் அதனை அடைந்துகொள்ளுங்கள்" என்பதே இதன் பொருள் என்று சிலர் கருதுகின்றனர். ஒருவேளை அந்த அடிமை விடுதலை பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்திடினும், அவன் விடுதலையைப் பெற வேண்டுமென்று கிறிஸ்தவம் எதிர்பார்க்கிறதில்லை என்று பிறிதொரு சாரார் கருதுகின்றனர். மாறாக தனது அடிமைத்தனத்தை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாட்சியாக விளங்குவதற்குப் பயன்படுத்தவேண்டும். முதல் கூறிய விளக்கமே ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று பலர் கருதுகின்றனர் (அதுவே சரியானதாகத் தோன்றுகிறது). கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே நமக்காக விட்டுச் சென்ற மாதிரியாக அந்த இரண்டாவது விளக்கம் உள்ளது என்பதை அவர்கள் மறந்துவிடலாகாது.

**7:22 கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்**. சுயாதீனனாய்ப் பிறந்தவனையல்ல சுயாதீனனாய் ஆக்கப்பட்டவனையே, அதாவது விடுதலைபண்ணப்பட்ட அடிமையையே இது குறிக்கிறது. அதாவது, தனது இரட்சிப்பின் தருணத்தில் அடிமையாக இருந்த ஒருவன், தனது அடிமைத்தனத்தைத் குறித்துக் கவலை கொள்ள வேண்டியதில்லை, ஏனெனில் **அவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்**. அவனுடைய பாவங்களிலிருந்தும், சாத்தானின் கட்டுகளிலிருந்தும் அவன் விடுதலை பண்ணப்படுகிறான். இதற்கு மாறாக, ஒருவன் இரட்சிக்கப்பட்ட வேளையில் சுயாதீனனாயிருந்தால், அப்பொழுதிலிருந்து அவன் தனது இரட்சகருக்காகக் கைகளும் கால்களும் கட்டப்பட்ட அடிமையாக இருக்கிறான் என்பதை அறிந்திருக்க வேண்டும்.

**7:23** ஒவ்வொரு விசுவாசியும் **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறான்**. அதுமுதல் அவனை

விலைக்கு வாங்கினவராகிய, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உடைமைப் பொருளாக விளங்குகிறான். நாம் கிறிஸ்துவுக்குக் கொத்தடிமைகளாக இருக்க வேண்டுமேயொழிய **மனிதருக்கு அடிமையாகாதிருக்க** வேண்டும்.

**7:24** ஆகவே, ஒருவனுடைய சமுதாயப் பின்னணி எப்படிப்பட்டதாயிருப்பினும், அவன் அந்த நிலைமையிலேயே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன். தேவனுக்கு முன்பாக என்னும் இரண்டு சொற்கள் முழு உண்மையையும் வெளிப்படுத்தும் திறவுகோலாக இருக்கின்றன. ஒருவன் தேவனுக்கு முன்பாக இருப்பானாயின், அடிமைத்தனம் மெய்யான விடுதலையாக விளங்கும். "அது வாழ்வின் எந்தவொரு நிலையையும் மேன்மையுள்ளதாகவும் பரிசுத்தப்படுத்துவதாகவும் ஆக்குகிறது."

**7:25** திருமணம் ஆகாத ஆண் பெண் இருபாலரிடத்தும் அப்போஸ்தலன் தானே உரையாடுகிறதை 25 முதல் 38 வரையிலுள்ள வசனங்களில் காண்கிறோம். கன்னிகை என்னும் சொல் இருபாலருக்கும் பொருந்தும். இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருப்பவை ஆவியின் ஏவுதல் பெற்ற வையல்ல என்று கூறுவதற்கு 25 - ஆம் வசனத்தைச் சிலர் பயன்படுத்துகின்றனர். பவுல் திருமணம் செய்துகொள்ளாதவர் என்னும் காரணத்தினால் அவர் ஆண் வெறிகொண்டவர் என்றும், தனது சுய கருத்துகளை அவர் இங்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்றும் சொல்லும் அளவிற்கு அவர்கள் சென்றுவிட்டார்கள்! அவ்வாறான மனப்பான்மை, வேதம் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது என்பதை வன்மையாக எதிர்க்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கன்னிகைகளைக் குறித்து கர்த்தரால் எனக்குக் கட்டளையில்லை என்று பவுல் உரைக்கும்போது, கர்த்தர் இப்புவியில் ஊழியம் செய்த காலத்தில் இப்பொருள் பற்றி வெளிப்படையான போதனை எதனையும் விடுத்துச் செல்லவில்லை என்று மட்டுமே அவர் பொருள்கொள்கிறார். ஆகவே, அவர் உண்மையுள்ளவராக இருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம் பெற்று அவருடைய அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துகிறதாக பவுல் இங்கு கூறுகிறார். மேலும் இந்த அபிப்பிராயம் தேவனுடைய ஏவுதல் பெற்றதே ஆகும்.

**7:26** பொதுவாக, **இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம்**, திருமணம் செய்துகொள்ளாமலிருப்பது **நலமாயிருக்கும்**. இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பம் என்பது பொதுவாக இவ்வுலக வாழ்க்கையில் ஏற்படும் பாடுகளையே குறிக்கிறது. இந்த மடலை பவுல் எழுதியபோது ஏற்பட்ட கடுமையான துன்ப காலத்தை இது ஒருவேளை குறிக்கக்கூடும். ஆயினும், கர்த்தர் வருமளவும் துன்பம் தொடர்ந்து இருக்கும்.

**7:27** ஏற்கனவே திருமணம் செய்துகொண்டவர்கள், பிரிந்து செல்வதற்கு **வகைதேடக்** கூடாது என்பதே பவுல் தரும் அறிவுரையாகும். மாறாக, ஒருவன் தன் மனைவியை விட்டு அவிழ்க்கப்பட்டிருந்தால், அவன் ஒரு **மனைவியைத் தேடக்கூடாது**. இங்கு மனைவி இல்லாதவனாயிருந்தால் என்று காணும் சொற்றொடர் மணமுரிவு செய்தவனையோ, மனைவியை இழந்தவனையோ மட்டும் குறிப்பிடாமல், திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறவர்களையும் உள்ளடக்கின பொருளுடையதாகும்.

**7:28** திருமணம் செய்துகொள்ளுவதைப் பாவம் என்று இங்கு பவுல் கூறியிருப்பதாக இவ்வசனத்திற்குப் பொருள் கூறக்கூடாது. பாவம் இவ்வுலகிற்குள் நுழையும் முன்னரே ஏதேன் தோட்டத்தில் தேவனால் திருமணம் நிறுவப்பட்டுவிட்டது. "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" என்று தேவன் தாமே ஆணையிட்டிருக்கிறார் (ஆதி. 2:18). "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக" (எபி. 13:4). திருமணம் செய்துகொள்வதைத் தடைசெய்பவர்கள் விசுவாசத்தை மறுத்துரைக்கும் பிற்காலத்தின் அடையாளமாக விளங்குகின்றனர் என்று பவுல் வேறொரு இடத்தில் கூறியிருக்கிறார் (1 தீமோ. 4:1-3).

ஆகவே, "**நீ விவாகம் பண்ணினாலும் பாவமல்ல; கன்னிகை விவாகம் பண்ணினாலும் பாவமல்ல**" என்று பவுல் கூறுகிறார். புதிதாக மனமாற்றம் பெற்ற கிறிஸ்தவர்கள் திருமண உறவில் ஏதோ பாவம் இருக்கிறது என்று ஒருக்காலும் நினைக்கக் கூடாது. இருந்த போதிலும், திருமணம் செய்துகொள்ளும் பெண்கள் **சரீரத்திலே உபத்திரவப்படுவார்கள்** என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். பிள்ளைப்பேற்றினால் உண்டாகும் வேதனை போன்றவற்றை இது குறிப்பிடுகிறது. "**அதற்கு நீங்கள் தப்ப வேண்டுமென்றிருக்கிறேன்**" என்று பவுல் கூறியிருப்பதன் பொருள் (1) திருமணமான நிலையில் உண்டாகும் சரீரப் பாடுகளுக்கு அதாவது, இல்லற வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு **நீங்கள் தப்ப வேண்டு**

**மென்றிருக்கிறேன்** என்பதோ (2) இந்தப் பிரச்சினைகளைக் கணக்கிடுவதிலிருந்து இம்மடலைப் படிப்போர் **தப்ப வேண்டுமென்றிருக்கிறேன்** என்பதோ ஆகும்.

**7:29 காலம் குறுகினதானபடியால்**, கர்த்தருக்குப் பணிபுரியும் வண்ணம், நமது உரிமைகளாகிய இந்த உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடாதென பவுல் வலியுறுத்துகிறார். கிறிஸ்துவின் வருகை சமீபமாயிருக்கிறபடியால், கணவனும் மனைவியும் தங்களுக்குரிய கடமைகளை உண்மையோடு செய்ய வேண்டியவர்களாக இருப்பினும், தங்களுடைய வாழ்க்கையின் எல்லாக் கூறுகளிலும் முதலிடத்தைக் கிறிஸ்துவிற்கு அளிக்க வேண்டும். திருவாளர் அயர்ன்சைடு இது குறித்து இவ்வாறு கூறுகிறார்:

> காலம் மிக வேகமாகக் கடந்து செல்கிறது, கர்த்தருடைய வருகை மிக விரைவில் நடக்க இருக்கிறது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் செயல்புரிய வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புவிக்க நமது சொந்த வசதிகள் தடையாக எழுவதற்கு இடங் கொடுக்கக் கூடாது.[22]

W. E. வைன் கூறுகிறார்:

> ஒரு கணவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வாறு, திருமணமான ஒருவன் நடந்துகொள்ளக் கூடாது என்பது இதன் பொருளன்று. ஆனால் அவன் தன் மனைவியோடு கொண்டிருக்கிற உறவு, தேவனோடு கொண்டிருக்கிற மேலான உறவுக்குக் கீழ்ப்பட்டதாக விளங்க வேண்டும். அவரே அவனுடைய இருதயத்தின் முதலாவது இடத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதை தடைசெய்யக்கூடிய பிற உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது.[23]

**7:30** மகிழ்ச்சிகளும் வருத்தங்களும், வாழ்க்கையின் உரிமைகளும் நம்முடைய வாழ்க்கையில் அளவுக்குமீறி முக்கியமான இடத்தைப் பிடித்துக்கொள்ள இடங்கொடுக்கக் கூடாது. பகற்காலம் இருக்கு மட்டும், நாம் கர்த்தருக்குப் பணிபுரிய வாய்ப்புகளை முயன்று பெறுவதற்கு மேற்கூறிய யாவும் கீழ்ப்பட்டவையாகவே இருக்க வேண்டும்.

**7:31** நம் வாழ்நாட்களை இப்புவியில் நாம் கழிக்கும்போது, உலகீயச் செயல்களில் சிறிதளவு தொடர்புகொண்டிருக்க வேண்டிய அவசியமுண்டு. அவற்றை நம்மால் முழுவதும் தவிர்க்க முடியாது. ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் இவற்றை அனுபவிப்பது நேர்மையானதேயாகும். ஆயினும், நாம் அவற்றை **அனுபவித்தபோதிலும்** தகாதவிதமாய் அனுபவிக்கக் கூடாது என்று பவுல் இங்கு எச்சரிக்கிறார். எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவன் உணவுக்காகவும், உடைக்காகவும், இன்பத்திற்காகவும் வாழக்கூடாது. உணவும் உடைகளும் வாழ்க்கைக்கு முக்கியமான தேவைகள் என்னும் அடிப்படையிலேயே அவற்றைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் அவை அவனுடைய வாழ்க்கையின் கடவுளாக மாறிவிடக் கூடாது. திருமணம், சொத்து, பொருளாதாரம், அல்லது அரசியல், அறிவியல், இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் யாவும் வரையறையின்றி அதனதன் இடத்தை இவ்வுலகில் பெற்றிருக்கின்றன. ஆனால் இவை யாவும் அனுமதிக்கப்பட்டால் ஆவிக்குரிய வாழ்க்கையைத் திசைதிருப்பக் கூடியவையாக மாறிவிடும்.

இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே என்னும் சொற்றொடர் நாடக அரங்கிலிருந்து கடன் வாங்கிய சொற்றொடராகும். காட்சிகள் அங்கு அவ்வப்போது மாற்றம் அடைகின்றன. இன்றைய நாட்களில் நம்மைச் சுற்றிலும் இருப்பவை யாவும் நிலையற்றவை. சேக்ஸ்பியர் எழுதிய புகழ்வாய்ந்த சொற்கள் அதனுடைய குறுகிய காலத் தன்மையை நன்றாக எடுத்துரைக்கின்றன: "உலகம் முழுவதும் நாடக அரங்கமேயாகும்; இங்கு வாழ்கிற ஆண்களும் பெண்களும் நடிகர்களே ஆவார்கள். அவர்கள் அவர்களுக்குரிய நேரங்களில் அரங்கைவிட்டு வெளியே செல்லவேண்டும், உள்ளே நுழைய வேண்டும். ஒருவன் தன்னுடைய காலத்தில் பல வேடங்களில் நடிக்கிறான்."

**7:32** கிறிஸ்தவர்கள் **கவலையற்றவர்களாயிருக்க** வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். கர்த்தருக்குப் பணிபுரிவதைத் தேவையற்ற முறையில் கவலை தடைசெய்கிறது. ஆகவே அவர், **விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்** என்று விளக்க மளிக்கிறார். திருமணம் செய்து கொள்ளாத விசுவாசிகள் யாவரும் எவ்விதத் தடைகளுக்கும் இடங்கொடுக்காமல் கர்த்தருக்குப் பணிவிடை செய்யத் தங்களை ஒப்புவிக்கிறார்கள் என்பது இதன் பொருளன்று. ஆனால் திருமணம் செய்து கொள்ளாத நிலைமை அவ்வாறு ஒப்புவிப்பதற்கு

வாய்ப்பளிக்கிறது. அந்த அளவிற்குத் திருமண மான நிலைமை இடங்கொடுக்கிறதில்லை.

**7:33** அது போலவே, திருமணமானவன் கர்த்தருடைய பணிகளில் மிகவும் கவனத்துடன் செயல்படமாட்டான் என்பது இவ்வசனத்தின் பொருளன்று. ஆனால் பொதுவாக இல்லற வாழ்வில் ஓர் ஆண்மகன் தன்னுடைய மனைவியைப் பிரியப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறான். எண்ணிப்பார்ப்பதற்கு அவனுக்குக் கூடுதலாகப் பல வேலைகள் இருக்கின்றன. "பொதுவாக, திருமணமான ஒருவன் தன்னுடைய பணிகளின் எல்லையைக் கட்டுப்படுத்திக் கொள்கிறான். ஆனால் அவன் திருமணம் செய்துகொள்ளாதவனாயிருந்தால் உலகத்தின் எல்லையெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்க இயலும்" என்று திருவாளர் வைன் குறிப்பிட்டிருக்கிறார்.[24]

**7:34 விவாகமில்லாதவள் சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்; விவாகம் பண்ணினவள் தன் கணவனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்.** இங்கும் சற்று விளக்கமளிக்க வேண்டிய அவசியமுண்டு. திருமணமாகாதவள் அல்லது **கன்னிப்பெண்** தன்னுடைய நேரத்தின் பெரும்பகுதியைக் **கர்த்தருக்குரியவைகளுக்காகச்** செலவிடக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறாள். அவள் "**சரீரத்திலும் ஆத்துமாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி**" என்னும் சொற்றொடர், திருமணமாகாத நிலைமை அதிகப் பரிசுத்தத்தைக் குறிக்கிறது என்னும் பொருளைத் தருகிறதில்லை. ஆனால் அவள் கர்த்தருக்குப் பணிவிடை செய்யும்படி தன்னுடைய சரீரத்தையும் ஆத்துமாவையும் கூடுதலாகப் பிரித்து வைக்க முடியும் என்பதே இதன் பொருளாகும். அவள் அதிகப் பரிசுத்தமுடையவளாக இருப்பாள் என்பது நிச்சயமானதல்ல. ஆனால் அவளுடைய நேரத்தில் தன்னிச்சையாய்ச் செயல்பட அதிக விடுதலை பெற்றிருக்கிறாள்.

**விவாகம் பண்ணினவள் தன் கணவனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்.** திருமணமானவள் திருமணமாகாதவளைக் காட்டிலும் உலகப்பிரகாரமானவள் என்பது இதன் பொருளன்று. ஆனால் அவள் ஒரு நாளின் பெரும் பகுதியை வீட்டுக்காரியங்கள் போன்ற உலகீய செயல்களுக்காகச் செலவிட வேண்டியவளாக இருக்கிறாள். இந்தச் செயல்கள் நியாயமானவை, செய்ய வேண்டியவையே. பவுல் இதனைக் குறைகூறவுமில்லை, குற்றஞ்சுமத்தவுமில்லை. திருமணமாகாதவள் திருமணமான வளைக் காட்டிலும் கர்த்தருக்காக வெவ்வேறு பணிகளைச் செய்வதற்கு நிறைய வாய்ப்புகளைப் பெற்றிருப்பதோடு, அதிகமான நேரத்தைச் செலவிடவும் முடியும்.

**7:35** மனிதர்களை அடிமைப்படுத்தக்கூடிய கண்டிப்பான ஒரு முறைமைக்குள் கொண்டுவர வேண்டும் என்னும் நோக்கத்தோடு பவுல் மேற்கூறிய போதனையைக் கற்பிக்கவில்லை. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையைக் குறித்தும், கர்த்தருக்காக அவர்கள் ஆற்றுகிற பணியைக் குறித்தும் சிந்திக்கும்போது, மேற்கூறிய அறிவுரைகளின் வெளிச்சத்தில் கர்த்தரால் வழிநடத்தப்பட்டு தகுதியுள்ளவர்களாகக் காணப்படும்படி அவர் கற்பித்திருக்கிறார். அவருடைய மனப்பான்மையின்படி திருமணமாகா நிலை சிறந்தது. அந்நிலைமை அந்த மனிதர் **கவலையில்லாமல் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்கும்படியான** வாய்ப்பை அளிக்கிறது. பவுலைப் பொருத்தமட்டில், ஒரு மனிதன் திருமணம் செய்துகொள்வதையோ திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதையோ, எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளலாம். அப்போஸ்தலன் எவரையும் **கண்ணியில் சிக்கவைக்கவோ** அடிமைப்படுத்தவோ விரும்பவில்லை.

**7:36** முப்பத்தாறு முதல் முப்பத்தெட்டு வரையிலான வசனங்கள், இந்த அதிகாரத்திலேயே, ஏன் இந்த மடலிலேயே மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வசனங்களுக்கு அளிக்கப்படுகிற பொதுவான விளக்கம்: பவுல் வாழ்ந்த நாட்களிலே, ஒரு மனிதன் தன்னுடைய வீட்டைக் குறித்த அனைத்துக் காரியங்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தான். அவனுடைய குமாரத்திகள் திருமணம் செய்ய வேண்டுமா, கூடாதா என்பதை அவனே முடிவுசெய்ய வேண்டும். அவர்கள் அவனுடைய அனுமதியின்றித் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. இதன டிப்படையில், ஒருவன் தன்னுடைய குமாரத்திகள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று மறுத்துரைப்பானானால், அவன் நன்மை செய்கிறான் என்றும்; அவர்கள் திருமணம் செய்துகொள்ள அவன் சம்மதித்தால் அவன் பாவம் செய்யவில்லை என்றும் இந்த வசனங்களுக்குப் பொருள் கூறப்படுகிறது.

இறைமக்களுக்கு இன்றைய நாட்களில் கொடுக்கப்படுகின்ற அறிவுரையின் அடிப்படையில் காணும்போது மேற்கூறிய விளக்கம் பொருளற்றதாக விளங்குகிறது. மேலும் இந்த வேத பகுதியின் பின்னணியில் காணும்போது இந்த விளக்கம் பொருத்தமற்றதாக இருப்பதோடு பெருங் குழப்பத்தையும் உண்டுபண்ணுகிறது.

RSV மொழிபெயர்ப்பு கன்னிகை என்ற சொல்லை "திருமணம் நிச்சயிக்கப்பட்டவள்" என்று மொழி பெயர்த்திருக்கிறது. அதனடிப் படையில் காணுமிடத்து, ஒரு பெண்ணைத் தனக் கென்று நிச்சயித்துக் கொண்டவன் அவளைத் திருமணம் செய்து கொள்வது பாவமல்ல. ஆனால் அவன் அவளைத் திருமணம் செய்யாமலிப்பது அதனினும் சிறந்தது. ஆனால் இந்தக் கருத்து பல சிக்கல்களைக் கொண்டிருக்கிறது.

திருவாளர் வில்லியம் கெல்லி, 1 கொரிந்தியர் நூலுக்கு எழுதிய விளக்கவுரையில் இதற்கு மாற்றுக் கருத்தைத் தந்திருக்கிறார். அது சிறப்பு வாய்ந்ததாகத் தோன்றுகிறது. **கன்னிகை** என் னும் சொல் "கன்னிமை"[25] என்றும் மொழிபெயர்க் கப்படக் கூடும் என்று அவர் நம்புகிறார். ஆகவே இந்தப் பகுதி ஒரு மனிதனின் குமாரத்திகளாகிய கன்னிகைகளைக் குறிக்காமல், அவனுடைய மணமாகாத நிலையையே (கன்னிமை) குறிக் கிறது. இந்த விளக்கத்தின்படி ஒருவன் தன்னு டைய மணமாகாத நிலையில் தொடர்ந்து இருப் பானென்றால் அது நன்று. ஆனால் அவன் திரு மணம் செய்துகொள்ள முடிவு செய்வானெனில் **அது பாவமல்ல.**

திருவாளர் டார்பி இக்கருத்தையே தன்னுடைய புதிய மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியிருக்கிறார்:

> ஆகிலும் ஒருவன் தன் கன்னிமை கடந்து போனதினாலே, தான் விவாகம் பண்ணாமலி ருப்பது தனக்குத் தகுதியல்லவென்றும், விவா கம் பண்ணுவது அவசியமென்றும் நினைத் தால், அவன் தன் மனதின்படி செய்யக்கடவன்; அது பாவமல்ல, விவாகம்பண்ணட்டும். ஆயினும் அதற்கு அவசியத்தைக் காணாமல், தன் இருதயத்திலே உறுதியுள்ளவனாயும், சுயசித்தத்தின்படி செய்ய அதிகாரமுள்ளவனா யுமிருந்து தன் கன்னிமையைக் காக்க வேண்டுமென்று தன் இருதயத்தில் தீர்மானிக் கிறவன் நன்மைசெய்கிறான்.

இந்த 36 -ஆவது வசனத்தின் விவரத்தை இன் னும் கூடுதலாக் காணும்போது, ஒருவன் திருமண வயதை அடையும்போது, அவன் தனது கன்னி மையைக் காக்க முடியாதென்று எண்ணுவானா யின், அவன் திருமணம் செய்துகொள்வது பாவ மாகாது. அவன் திருமணம் செய்துகொள்ள வேண் டும் என்று அதனுடைய தேவையை உணர்ந்தால் அவன் **தன் மனதின்படி செய்யக்கடவன்.** அதா வது அவன் திருமணம் செய்யக்கடவன்.

**7:37 ஆயினும்** ஒருவன் தன்னுடைய கவனம் சிதறடிக்கப்படாமல் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடிவு செய்வானானால், தற்கட்டுப்பாடு உடைய வனாயிருந்து திருமணம் செய்ய அவசியத்தைக் காணாமல் திருமணம் செய்யாமலிருக்க முடிவு செய்து, தன்னுடைய எண்ணத்தின்படி தேவனு டைய புகழ்ச்சிக்காக ஊழியம் செய்வானானால் அது நன்மையாயிருக்கும்.

**7:38** மேற்கூறியவற்றின் முடிவாக, திருமணத் திற்குத் தன்னை[26] ஒப்புவிப்பவன் **நன்மை செய் கிறான்.** கர்த்தருக்குப் பெரிய அளவில் ஊழியம் செய்யும் நோக்கத்துடன் திருமணமாகாத நிலை யில் தொடருகிறவன் **அதிக நன்மை செய் கிறான்.**

**7:39** இவ்வதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களும் விதவைகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனைகளைக் கொண்டுள்ளன. **மனைவி யானவள் தன் கணவன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தின்** அடிப்படையில் அவனுக்குக் **கட்டுப்பட்டிருக்கிறாள்.** இங்கு பிரமாணம் என்று சொல்லப்பட்டிருப்பது, தேவன் நியமித்த திருமணப் பிரமாணத்தைக் குறித்த தாகும். ஒரு பெண்ணின் கணவன் இறந்தபின்பு, அவள் வேறொருவனை **விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலை பெற்றிருக்கிறாள்.** இதே உண்மை ரோமர் 7:1-3 ஆகிய வசனங்களில் விளக்கித் தரப்பட்டுள்ளது. அதாவது மரணம் திருமண உறவை முரிக்கிறது. ஆயினும் அப் போஸ்தலன் ஒரு நிபந்தனையை இங்கு சேர்த்துச் சொல்லுகிறார். அவள் **தனக்கு இஷ்டமான வனாயும், கர்த்தருக்கு உட்பட்டவனாயும்** இருக்கிற ஒருவனை விவாகம்பண்ணிக்கொள்ள விடுதலை பெற்றிருக்கிறாள். இதன் பொருள் யாதெனில், முதலாவதாக அவள் திருமணம் செய்துகொள்கிற மனிதன் கிறிஸ்தவனாயிருக்க வேண்டும். ஆனாலும் இவ்வசனத்தில் இதனினும் ஆழமான பொருள் அடங்கியிருக்கிறது. **கர்த்த ருக்கு உட்பட்டது** என்னும் சொற்றொடர், "கர்த்த ருக்குச் சித்தமானது" என்னும் பொருளைக் கொடுக்கிறது. அதாவது அவள் ஒரு கிறிஸ்த

வனைத் திருமணம் செய்துகொண்டாலும், அச் செயல் கர்த்தருடைய சித்தத்திற்கு அப்பாற்பட்ட தாக இருக்கலாம். இந்த முக்கியமான காரியத் தில் அவள் கர்த்தருடைய வழிநடத்துலை நாட வேண்டும். அவளுக்கு எவனைக் கர்த்தர் தரு கிறாரோ அந்த விசுவாசியையே அவள் திரு மணம் செய்துகொள்ள வேண்டும்.

**7:40** ஒரு விதவையானவள் மீண்டும் திரு மணம் செய்யாமலேயே தொடர்ந்து இருப்பாளெ னில் **அவள் பாக்கியவதியாயிருப்பாள்** என்று பவுல் தன்னுடைய கருத்தை வெளிப்படையாகக் கூறுகிறார். 1 தீமோத்தேயு 5:14 -இல் இளம் விதவை மீண்டும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அவர் தீர்ப்பு வழங்கியிருக் கிறார். அதற்கும் இதற்கும் எவ்வித முரண்பாடும் இல்லை. இங்கு அவர் தனது பொதுவான கருத் தைக் கூறுகிறார். 1 தீமோத்தேயுவில் குறிப் பிடத்தக்க விதிவிலக்கை எடுத்துரைக்கிறார்.

மேலும் அவர், "என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று எண்ணுகிறேன்" என்று கூறியிருக்கிறார். மேற்கூறியவற்றைச் சொல்ல பவுல் முழுஉறுதி கொண்டிருக்கவில்லை என்று சிலர் இதனைத் தவறாகப் புரிந்துகொள்கிறார் கள்! அவ்வாறு விளக்கமளிப்பதை நாம் வன்மை யாகக் கண்டிக்கிறோம். இந்தப் பகுதியில் பவுல் கூறியிருப்பவை தேவ ஆவியின் ஏவுதலால் எழு தப்பட்டவை என்பதில் எவ்விதக் கேள்வியு மில்லை. இங்கே அவர் ஓர் உட்பொருளோடு பேசு கிறார். அவருடைய அப்போஸ்தல அதிகாரத்தை யும், அவருடைய போதனையையும் கொரிந்து பட்டணத்தில் சிலர் தாக்கி வந்தார்கள். அவர்கள் தாங்கள் கூறியவற்றில் கர்த்தருடைய சிந்தை யைப் பெற்றிருந்ததாகச் சொல்லி வந்தார்கள். "மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன சொன்னா லும் சரி, என்னிடத்திலும் தேவனுடைய ஆவி உண்டென்று நான் எண்ணுகிறேன். அவர்கள் தேவனுடைய ஆவியைக் கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனாலும் ஆவியான வர் மீது தங்களுக்கு மட்டுமே ஏகபோக உரிமை இருக்கிறது என்று அவர்கள் எண்ணுவதில்லை என்பது நிச்சயம்" என்னும் பொருளிலேயே பவுல் இந்த வசனத்தை எழுதியிருக்கிறார்.

உண்மையிலேயே பவுல் நமக்கு எழுதிய எல்லாவற்றிலும் தேவ ஆவியானவரைக் கொண் டிருந்தார் என்பதை நாம் அறிவோம். மேலும் அவருடைய அறிவுரைகளைப் பின்பற்றுவதே நமக்கு மகிழ்ச்சியின் பாதையாக விளங்கும்.

### ஆ. சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவை உண்ணுவது பற்றிய கேள்விக்கான பதில் (8:1–11:1)

சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவை உட்கொள்வது பற்றிய கேள்விக்கான பதில் 8:1 முதல் 11:1 வரையிலான பகுதியில் உரைக்கப் பட்டிருக்கிறது. புறச்சமய வணக்கத்திலிருந்து புதிதாகக் கிறிஸ்துவிடம் மனமாற்றம் பெற்றவர் களுக்கு இது உண்மையான பிரச்சினையாக விளங்குகிறது. ஒருவேளை அவர்கள் ஒரு கோவி லில் நடக்கும் ஒரு சமுதாய நிகழ்ச்சிக்கு அழைக் கப்படுவார்கள். அங்கு முதலாவது சிலைகளுக் குப் படைக்கப்பட்ட உணவுப்பொருட்களை விருந் தில் பரிமாறுவார்கள். அல்லது அவர்கள் கடைத் தெருவுக்குச் செல்லும்போது, சிலைகளுக்குப் படைக்கப்பட்ட விலங்கை அடித்து அதனுடைய கறியைக் கடைக்காரன் விற்கக்கூடும். அந்த இறைச்சியின் பண்பு எவ்வித மாற்றமும் அடை வதில்லை என்பது உண்மையே. ஆனாலும் ஒரு கிறிஸ்தவன் அந்த இறைச்சியை வாங்கலாமா? கிறிஸ்தவன் ஒருவன் நண்பனுடைய இல்லத் திற்கு அழைக்கப்பட்டிருக்கும்போது, அங்கு ஏதோவொரு சிலைக்குப் படைக்கப்பட்ட உண வைப் பரிமாறக்கூடும். அவன் அதை அறிந்திருந் தும் அந்த உணவை உண்ணலாமா? இந்தக் கேள்விகளுக்கு அப்போஸ்தலன் இங்கு விடை தருகிறார்.

**8:1 விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவை களைக் குறித்த விசயத்தில்** தனக்கும் கொரிந்து பட்டணத்து விசுவாசிகளுக்கும் அறிவு உண் டென்று அப்போஸ்தலன் இங்கு தொடங்குகிறார். அந்தப் பொருள் பற்றி அவர்கள் முழுவதும் அறி வற்றவர்கள் அல்லர். எடுத்துக்காட்டாக, ஒரு கறித்துண்டை ஒரு விக்கிரகத்திற்குப் படைப் பதால், அச்செயலின் மூலமாக அக்கறித்துண்டில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. அதனுடைய நறுமணச் சுவையும், ஊட்டச்சத்தும் முன்னிருந் தது போலவே இருக்கும். ஆனால், **அறிவு இறு மாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத் தியை** உண்டாக்கும் என்று பவுல் இங்கு சுட்டிக் காட்டுகிறார். இச்சொற்றொடரின் மூலம், மேற் கூறியவற்றைப் பொருத்தமட்டில் வெறும் அறிவு மட்டும் போதுமான வழிகாட்டியாக இருக்க முடி யாது என்று அவர் விளக்கமளிக்கிறார். அறிவை மட்டும் கோட்பாடாகக் கொள்வோமென்றால், அது இறுமாப்புக்கு வழிவகுக்கும். உண்மையில் இப்படிப்பட்ட எல்லா விசயங்களிலும் கிறிஸ்தவன்

அறிவை மட்டும் பயன்படுத்தாமல், அன்பைப் பயன் படுத்த வேண்டும். சட்டரீதியாக தனக்குரியது என்று மட்டும் அவன் கருதாமல், மற்றவர்களுக்கு மிகச்சிறந்தது எது என்று அவன் கருதவேண்டும்.

**8:2,3** இரண்டாவது வசனத்தைத் திருவாளர் வைன் பொழிப்புரையாக்கித் தந்துள்ளார்: "ஒரு மனிதன் தான் பூரண அறிவை அடைந்தாயிற்று என்று கற்பனை செய்துகொள்வானானால், அவன் அந்த அறிவை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதைப் புரிந்துகொள்ளவும் தொடங்கவில்லை என்பதே பொருளாகும்." ஓரிடத்தில் அன்பு இல்லையென்றால், அங்கே மெய்யான அறிவு இருக்காது. இதற்கு மாறாக, **தேவனில் அன்பு கூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்.** அதாவது தேவன், அவனுக்கு ஒப்புதல் அளிக்கிறார். ஒரு பொருளில், தேவன் அனைவரையும் அறிந்திருப்பது உண் மையே; மேலும் மற்றொரு பொருளில் அவர் விசு வாசிகளை மட்டும் அறிந்திருக்கிறார். ஆனால் "அறியப்பட்டிருக்கிறான்" என்னும் சொல் அவரு டைய ஒப்புதலை அல்லது சலுகையைப் பெற்றி ருக்கிறான் என்று பொருள்படும். சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுப்பொருள் போன்ற விச யங்களில் ஒருவன் வெறுமனே அறிவை மட்டும் பயன்படுத்தாமல், தேவனிடத்திலும் மனிதனிடத் திலும் அவன் பாராட்டுகிற அன்பையும் அடிப்படை யாகக் கொண்டு முடிவு எடுப்பானானால், அவன் தேவனுடைய ஒப்புதலைப் பெறுவான்.

**8:4** விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவை களைப் பொருத்தமட்டில், விக்கிரகமானது உண் மையான தேவன் இல்லையென்றும், அதற்கு வல்லமையோ அறிவோ அன்போ இல்லையென் றும் விசுவாசிகள் அறிந்திருக்கிறார்கள். சிலை கள் இல்லையென்று பவுல் இங்கு அதனை மறுத்துரைக்கவில்லை. மரத்திலும் கல்லிலும் இருந்து செதுக்கிய உருவங்கள் இருந்தன என் பதை அவர் அறிவார். அந்தச் சிலைகளின்பின் பிசாசுகளின் ஆற்றல் இருந்து செயல்படுகின்றன என்று அவர் பின்னர் ஒப்புக்கொள்கிறார். இந்தச் சிலைகள் தெய்வங்கள் என்று கருதப்படுவ தையே அவர் இல்லையென்று இங்கு வலியுறுத் திக் கூறுகிறார். **ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லை.** அதாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் அவரே.

**8:5** புறசமயத்தின் புராணக்கதைகளில் **தேவர் கள் என்னப்படுகிறவர்கள்** இருக்கிறார்கள் என் பதை பவுல் ஒப்புக்கொள்கிறார். ஜூபிடர், ஜூனோ, மெர்குரி ஆகியவை அவற்றுள் அடங்கும். இந்த தேவர்களில் சிலர் **வானத்திலும்** சீரஸ், நெப்டியூன் போன்ற வேறு தேவர்கள் **பூமியிலும்** வசிப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வகை அர்த்தத்தில் அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருக்கின்றன, அதாவது புராணக் கதை களில் சொல்லப்பட்டுள்ள தேவர்களை மக்கள் தொழுதுகொள்கிறார்கள், அவர்கள் அவற்றிற்கு அடிமைப்பட்டும் கிடக்கிறார்கள்.

**8:6 பிதாவாகிய ஒரே தேவன் இருக்கிறா ரென்று** விசுவாசிகளாகிய நாம் அறிந்திருக் கிறோம். **அவரே மெய்யான தேவன், அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக் கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்.** அதா வது நம்முடைய பிதாவாகிய தேவனே எல்லாவற் றிற்கும் ஆதாரமாயும், சகலத்தையும் படைத்த வராயும் இருக்கிறார். நாம் யாவரும் அவருக் கென்று படைக்கப்பட்டிருக்கிறோம். அவரே நாம் உயிர் வாழ்வதற்கான நோக்கம் என்றும், இலக்கு என்றும் இதனைக் கூறலாம். **ஒரே கர்த்தர்** இருக் கிறார் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அவரே **இயேசு கிறிஸ்து, அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம். அவர் மூல மாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது** என்னும் சொற்றொடர் கர்த்தராகிய இயேசு மத்தியஸ்தரா யிருக்கிறார் அல்லது தேவனுடைய பிரதிநிதி யாக இருக்கிறார் என்று விவரிக்கிறது. **அவர் மூல மாய் நாமும் உண்டாயிருக்கிறோம்** என்னும் சொற்றொடர், அவர் மூலமாய் நாம் படைக்கப் பட்டிருக்கிறோம் என்றும் மீட்கப்பட்டிருக்கிறோம் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

**பிதாவாகிய ஒரே தேவன்** இருக்கிறார் என்றும், இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் இருக்கிறார் என்றும் பவுல் கூறும்போது, கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து தேவன் இல்லை என்று அவர் சொல்லவில்லை. மாறாக, தேவ தலைமை யில் அவ்விரண்டு நபர்களும் படைப்பு மற்றும் மீட்பு ஆகிய செயல்களில் ஆற்றிய பங்கை அவர் இங்கே தெரிவித்திருக்கிறார்.

**8:7 ஆகிலும்,** எல்லாக் கிறிஸ்தவர்களும், குறிப்பாக புதிதாக மனமாற்றம் பெற்றவர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள் பெற்றிருக்கிற விடு தலையைப் புரிந்துகொள்ளவில்லை. சிலை வணக்கப் பழக்கத்தின் பின்னணியிலிருந்து வந்த வர்கள், **விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதை** உட்கொள்ளும்போது விக்கிரக ஆராதனை

செய்வதாக நினைத்துக்கொள்கிறார்கள். அவர்கள் விக்கிரகத்தை உண்மையென்று எண்ணுவதால், அதாவது **அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது.**

இங்கு பலவீனம் என்னும் சொல் சரீரத்தில் இருக்கக்கூடிய பலவீனத்தையோ ஆவிக்குரிய பலவீனத்தையோ குறிப்பதில்லை. சரியா தவறா என்று அறியக்கூடாதவற்றில் தேவையற்ற அளவு மிகவும் விழிப்புடன் அவர்கள் இருக்கிறார்கள் என்பதே அதன் பொருளாகும். எடுத்துக்காட்டாக, தேவனைப் பொருத்தமட்டில், பன்றி இறைச்சியை ஒரு விசுவாசி உண்ணுவதில் தவறென்று அவன் எண்ணியும், அவன் அதனை உண்பானானால் அவன் பாவம் செய்கிறவனாயிருக்கிறான். அவர்களுடைய **மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால், அசுசிப்படுகிறது** என்பதன் பொருள் இதுவே. என்னுடைய மனச்சாட்சி ஒரு செயலைக் குற்றம் என்று தீர்த்தும், அதனை நான் செய்ய முற்படுவேனாயின், நான் பாவம் இழைத்தவனாவேன். "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" (ரோமர் 14:23).

**8:8** உணவானது தன்னில்தானே **தேவனுக்கு** எதிராகப் பெரிதான விளைவு எதையும் ஏற்படுத்துவதில்லை. சில உணவு வகைகளை நாம் தவிர்ப்பதாலே தேவனுக்காக எந்த நற்செயலையும் நாம் செய்துவிடுகிறதுமில்லை. அப்படிப்பட்ட உணவுப் பொருட்களை நாம் உண்ணும் செயல் நம்மைச் சற்று சிறந்த கிறிஸ்தவர்களாக மாற்றுவதும் இல்லை.

**8:9** அவ்வகை உணவுப்பொருட்களை நாம் உண்ணுவதாலே எந்த ஆதாயத்தையும் நான் பெறப்போவதில்லை. ஆனால் அவ்வாறு நான் செய்யும்போது **பலவீனமான** கிறிஸ்தவன் ஒருவன் இடறுவதற்குக் காரணமாகி பெரிதளவு இழப்பையே சம்பாதிக்கிறான். இங்குதான் அன்பின் கோட்பாடு இடம்பெற வேண்டிய தேவை உண்டாகிறது. ஒரு விக்கிரகத்துக்கு முன்னர் காணிக்கையாகப் படைக்கப்பட்ட உணவை உண்ணுவதற்குக் கிறிஸ்தவன் விடுதலை பெற்றிருக்கிறான். ஆனால் அவ்வாறு உண்ணுவதால் ஒரு **பலவீனமான** சகோதரனோ சகோதரியோ இடறல் அடைந்தால் அது பெருந்தவறாகும்.

**8:10** ஒரு விசுவாசி செய்கிற செயல் கேள்விக்குரியது என்று எண்ணுகிற வேறொரு பலவீனமான விசுவாசி, அதைக் காணும்போது, அவனுடைய மனச்சாட்சி அச்செயலை குற்றமாகத் தீர்த்தும், அதனைச் செய்ய ஏவப்படுகிறான். இந்த வசனத்தில், **விக்கிரகக் கோவிலில்** ஒரு விசுவாசி பங்குகொள்கிறதை அப்போஸ்தலன் குற்றம் என்று தீர்க்கிறார். ஏனெனில் வேறொருவரிடத்தில் அச்செயல் தவறான தாக்கத்தை ஏற்படுத்திவிடும். இங்கு, **விக்கிரகக் கோவிலில் பந்தியிருப்பது** என்னும் சொற்றொடரின் மூலம் பவுல் சமுதாய நிகழ்ச்சியையோ திருமணம் போன்ற பொதுவான விழாவையோதான் குறிப்பிடுகிறார். அந்நிகழ்ச்சியில் விக்கிரக ஆராதனையும் இடம்பெற்றிருக்குமாயின் அங்கு உணவு உட்கொள்ளுவது எவ்விதத்திலும் சரியல்ல. அதனைப் பின்னர் பவுல் குற்றமாகத் தீர்க்கிறார் (10:15-26). அறிவுள்ளவனாகிய உன்னை ஒருவன் கண்டால் என்னும் சொற்றொடர், அவன் கிறிஸ்தவ விடுதலையைக் குறித்து முழு அறிவுடையவன் என்றும், விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதை உண்ணுவது தூய்மையற்றதல்ல என்று அவன் அறிந்திருக்கிறான் என்றும் பொருள்படும். அப்படிப்பட்ட செயல் நம்மிடத்தில் என்ன விளைவை உண்டுபண்ணும் என்பதை மட்டும் கருத்தில் கொள்வது முக்கியமான கோட்பாடு அல்ல. அதனினும் முக்கியமானது, மற்றவர்களிடத்தில் அச்செயல் என்ன விளைவை உண்டுபண்ணும் என்று கருதுவதேயாகும்.

**8:11** ஒரு கிறிஸ்தவன் எதைச் செய்வதற்கும் அதிகாரம் உடையவனாய் இருக்கிறான் என்பதைக் குறித்த **அறிவினிமித்தம்,** கிறிஸ்துவுக்குள்ளான வேறொரு சகோதரன் இடறுதலுக்கேதுவாக அவன் அதை ஆரவாரத்தோடு வெளிப்படுத்திக்காட்டுகிறான். **கெட்டுப்போகுதல்** என்னும் சொல் அவன் தன்னுடைய நித்திய இரட்சிப்பை இழந்துபோவான் என்னும் பொருளைத் தருவதில்லை. *வாழ்வை* இழந்துபோகுதல் என்னும் பொருளை அது தருவதில்லை, மாறாக *நல்வாழ்வை* இழந்துபோகுதல் என்றே அச்சொற்றொடர் பொருள்படும். பலவீனமான சகோதரனுடைய சாட்சி பாதிக்கப்படும், மேலும் அவன் கர்த்தருக்காகப் பயன்படுகிற விசயத்தில் பாதகமான சூழ்நிலை ஏற்பட அது காரணமாகிவிடும். **அவனுக்காகக் கிறிஸ்து மரித்தாரே** என்னும் சொற்கள், அந்த பலவீனமான சகோதரனுடைய உணர்ச்சிகள் எவ்வளவு ஆழமாகப் புண்படும் என்பதைக் குறிக்கின்றன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவனிடத்தில் அன்புகூர்ந்து அவனுக்காகத் தன்னுடைய உயிரை மாய்க்க விரும்பினார் என்றால், அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடைசெய்யும்படி ஏதாவது செய்து நாம் இடறல் உண்டாக்கத் துணிவுகொள்ள

லாமா என்பதே பவுல் இங்கு செய்கிற வாத மாகும். சில இறைச்சித் துண்டுகள் அதற்குத் தகுதியானதல்லவே!

**8:12** மேற்கூறிய செயலை, கிறிஸ்துவுக்குள் ளான சகோதரன் ஒருவனுக்கு எதிராக இழைக்கப் படும் பாவச்செயல் அல்லது அவனுடைய **பலவீன முள்ள மனச்சாட்சியைப்** புண்படுத்தும் செயல் என்று மட்டும் நாம் நினைத்துவிடக் கூடாது. இது **கிறிஸ்துவுக்கு விரோதமான** பாவச் செயலாக வும் விளங்குகிறது. அவருடைய சகோதரரில் சிறியோருக்கு எதிராகச் செய்கிற எந்தச் செயலும் அவருக்கே எதிராகச் செய்கிறதாகக் கருதப்படும். சரீரத்தில் ஓர் உறுப்பு புண்படுகிறபோது அதனு டைய தலையும் அதனால் பாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு பொருளைக் குறித்தும் அப்போஸ் தலன் விவரிக்கும் வேளையில், அதனைக் கிறிஸ்து வின் பாவ நிவாரண மரணத்தின் வெளிச்சத்தில் தனது வாசகர்கள் காணும்படி அவர் வழிநடத்து வார் என்று திருவாளர் வைன் குறிப்பிட்டுள்ளார். "தேவனுடைய திருமைந்தராகிய கிறிஸ்துவின் மெய்யான அன்பும், அவருடைய பாடுகளும் மரண வேதனையும் விடுக்கின்ற முறையீடாகவே இது திகழ்கிறது" என்று பர்னஸ் குறிப்பிடுகிறார்.[27] **கிறிஸ்துவுக்கு எதிரான** பாவமே "மிகப்பெரிய குற்றம்" என்று கோடட் குறிப்பிடுகிறார். இதனை உணர்ந்தவர்களாக, நம்முடைய செயல்கள் யாவற்றையும், அவை பிறரிடத்தில் என்ன தாக் கத்தை ஏற்படுத்துகின்றன என்னும் அடிப்படை யில் கவனத்துடன் சோதித்துப் பார்க்க வேண்டி யது அவசியம். மேலும், வேறொரு சகோதரன் புண்படுவதற்குக் காரணமான எந்தச் செயலை யும் செய்யாமல் இருப்பது நமது தகுதியாகும்.

**8:13** ஒரு **சகோதரனுக்கு இடறல் உண்டாக் குவது** கிறிஸ்துவுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற பாவமாதலால், இறைச்சி உண்ணுவது ஒரு சகோ தரனுக்கு இடறலாக இருக்குமென்றால் தான் **என்றைக்கும்** அதைப் **புசிக்கப்போவதில்லை** என்று பவுல் கூறுகிறார். நன்கு வறுத்த இறைச்சித் துண்டைக் காட்டிலும் வேறொரு மனிதனுடைய வாழ்க்கையில் தேவனுடைய கிரியையை நடப் பிக்கச் செய்வதே மிகவும் முக்கியமானது! இன்றைய கால கட்டத்தில் விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்ட உணவை உண்பது பெரும்பாலான கிறிஸ்தவர் களுக்குப் பிரச்சினையாக இருப்பதில்லை. ஆனா லும் தேவனுடைய ஆவியானவர் இப்பகுதியில் நமக்குத் தருகின்ற கோட்பாடுகள் நிலையான முக்கியத்துவம் வாய்ந்தவை. இன்றைய நாட் களில் கிறிஸ்தவ வாழ்க்கையில் பல செயல்கள், திருமறையில் தடைசெய்யப்படாதவையாக இருந்தபோதிலும், பலவீனமான சகோதரரைத் தேவையற்றபடி புண்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. அப்படிப்பட்ட செயல்களில் பங்கு பெற நமக்கு அதிகாரம் இருந்தபோதிலும், கிறிஸ்துவுக்குள்ளாக நாம் பெற்றிருக்கும் சகோ தரர்களின், அதாவது நம்முடைய உடன் விசுவாசி களின் ஆவிக்குரிய நலன் கருதி, அவற்றை நாம் விட்டொழிப்பது மிக நேர்த்தியான செயலாகும்.

முதல் முறையாக ஒன்பதாவதுஅதிகாரத்தை நாம் வாசிக்கும்போது, இங்கு ஏதோ ஒரு புதிய ஆய்வுப்பொருள் பற்றி பேசப்படுகிறது என்ற எண் ணம் தோன்றக்கூடும். ஆயினும் சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுப்பொருட்களைக் குறித்து இன்னும் இரண்டு அதிகாரங்கள் விளக்கமளிக் கின்றன. பிறர் நலன் கருதி சுயத்தை மறுத்து வாழ் வதற்கு நல்லதொரு *எடுத்துக்காட்டாகத் தன்னுடைய வாழ்க்கையையே* பவுல் விவரித் துக்காட்டுகிறார். 8:13 -ஆம் வசனத்தில் முன்னு ரைக்கப்பட்ட கோட்பாட்டிற்கு இணங்க, அவர் அப்போஸ்தலன் என்னும் அடிப்படையில் பெற வேண்டிய பொருளாதார உதவியைத் துறக்க முன் வந்தார். இவ்வகையில் இந்த அதிகாரம் முந்தின அதிகாரத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக விளங்குகிறது.

**9:1** நாம் அறிந்திருக்கிறபடி, கொரிந்துப் பட்ட ணத்தில் இருந்தோரில் சிலர், பவுலின் அதிகாரத் திற்கு எதிராகக் கேள்வி எழுப்பினர். அவர் பன்னி ருவரில் ஒருவரல்லர், ஆகவே அவர் மெய்யான **அப்போஸ்தலன்** இல்லை என்றும் அன்னார் கூறிவந்தனர். தான் மனித அதிகாரத்திற்கு உட் பட்டவர் அல்லர் என்றும், கர்த்தராகிய இயேசு வின் மெய்யான அப்போஸ்தலன் என்றும் கூறி பவுல் அவர்களை எதிர்த்துரைக்கிறார். இரண்டு உண்மைகளின் அடிப்படையில் அவர் தனது உரிமையை நிலைநாட்டுகிறார். முதலாவது, அவர் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை** உயிர்த்தெழுதலில் **தரிசித்தவர்**. அந்நிகழ்ச்சி தமஸ்குவுக்குச் செல்லும் பெரும்பாதையில் நிகழ்ந்தது. மேலும், **"கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்கள் அல்லவா?"** என்னும் கேள்வியை எழுப்பி, அவர் தனது அப் போஸ்தல தகுதிக்குத் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளையே நிரூபணமாகச் சுட்டிக்காட்டு கிறார். அவருடைய அப்போஸ்தல உரிமையைக் குறித்து அவர்களுக்கு ஐயம் ஏற்படுமாயின்

அவர்கள் தங்களையே சோதித்துப் பார்க்கக்கட வர்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களா? அவர்கள் "ஆம்" என்று சொல்லுவார்கள் என்பது உறுதி. நல்லது, கிறிஸ்துவை அவர்களுக்குச் சுட்டிக்காட்டியது யார்? அப்போஸ்தலனாகிய பவுலே அதைச் செய்தவர்! ஆகையால், அவர் கர்த்தருடைய மெய்யான அப்போஸ்தலன் என்ப தற்கு அவர்களே சாட்சிகள் ஆவார்கள்.

**9:2 மற்றவர்கள்** அவரை **அப்போஸ்தலன்** என்று அறியாமல் போகலாம், ஆனால் கொரிந் தியர் நிச்சயமாக அவரை அப்போஸ்தலன் என்று அறிந்திருக்க வேண்டும். அவருடைய **அப்போஸ் தல ஊழியத்திற்கு** அவர்கள் **முத்திரையாய்** இருந்தார்கள்.

**9:3** மூன்றாவது வசனம் முந்தின வசனங் களைப் பற்றியதேயொழிய தொடர்ந்து வரும் செய்தியைப் பற்றியதன்று. (NKJV மொழிபெயர்ப் பில் அவ்வாறு தோன்றும் வண்ணம் நிறுத்தற்குறி கள் இடப்பட்டுள்ளன.) தன்னை **நியாயம் விசா ரித்தவர்களுக்கு** பவுல் கொடுத்த பதில்தான் முந்தின வசனங்கள் என்று அவர் இங்கு கூறு கிறார். அதாவது அவருடைய அப்போஸ்தல ஊழியத்தைக் குறித்து கேள்வி எழுப்பியவர்கட்கு அவர் கொடுத்த பதிலே முந்தின வசனங்கள்.

**9:4** நான்காவது வசனம் முதல் பதினான்கா வது வசனம் வரையிலும், அப்போஸ்தலன் என் னும் அடிப்படையில் அவர் நிதி உதவியைப் பெறு வதற்குரிய **அதிகாரம்** உடையவராயிருந்தார் என்பது பற்றி விவரித்துக் கூறுகிறார். கர்த்தராகிய இயேசுவின் மூலமாக அனுப்பப்பட்டவர் என்னும் நிலையில், விசுவாசிகளிடத்திலிருந்து பவுல் ஊதியம் பெறுவதற்குரிய அதிகாரம் உடையவரா யிருந்தார். ஆயினும் அவர் தனது அதிகாரத்தை ஒருக்காலும் வலியுறுத்தவில்லை. அவர் அவ்வப் போது தன்னுடைய கரங்களைக்கொண்டு கூடா ரம் செய்யும் தொழிலைச் செய்தார். அதன் காரண மாக அவரால் மனிதர்களுக்கு இலவசமாக நற் செய்தியைப் பிரசங்கிக்க ஏதுவாயிற்று. அவர் மெய்யான அப்போஸ்தலன் இல்லை என்பதை அறிந்திருந்த காரணத்தால், நிதி உதவியை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவரைக் குறை கூறியவர்கள் கருதினார்கள் என்பதில் ஐயமில்லை. அவர் இந்தப் பொருள் பற்றிப் பேசுவதற்கு அறிமுகமாக, "புசிக்கவும், குடிக் கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா?" என்னும் கேள்வியை எழுப்புகிறார். அதாவது, அவருடைய சொந்தத் தேவைகளைச் சந்திக்க வேறு வேலை செய்யாமல் அதற்கான பண உதவியை சபையி லிருந்து பெறுவதற்கு அவருக்கு உரிமையில் லையா?

**9:5 மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக் கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில் லையா?** சபைகளிலிருந்து பவுலுக்கும் அவரு டைய மனைவிக்கும் பண உதவி கிடைக்காது என்பதை அவர் அறிந்திருந்த காரணத்தால் அவர் திருமணம் செய்துகொள்ளவில்லை என்று அவருடைய எதிரிகள் கருதினார்கள் என்று தோன்றுகிறது. பேதுருவும் பிற அப்போஸ்தலரும் மற்றும் **கர்த்தருடைய சகோதரரும்** திருமணம் ஆனவர்கள். அவர்களைப் போலவே அப்போஸ் தலனாகிய பவுல் திருமணம் செய்துகொள்ளவும், அவரும் அவருடைய மனைவியும் சபையிலிருந்து நிதி உதவியைப் பெறவும் உரிமையுள்ளவர்கள் என்று அவர் இங்கு கூறுகிறார். "விசுவாசிக்கும் **மனைவியைக் கூட்டிக்கொண்டு** செல்ல" என்னும் சொற்றொடர் திருமணம் செய்துகொள் வதற்கான உரிமையை மட்டும் குறிக்காமல், கணவனும் மனைவியுமாக சபையிலிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கான உரிமையையும் குறிக்கிறது. கர்த்தருடைய சகோதரர் என்னும் சொற்றொடர், அவருடைய தாயின் மக்களாகிய சகோதரர்களை குறிப்பிடுகிறது எனக் கொள்ள லாம், அல்லது ஒன்றுவிட்ட சகோதரர்களை அச்சொற்றொடர் குறிப்பிடக்கூடும். இந்த வசனம் தனியே முழு விவரத்தையும் தருகிறதில்லை. மரியாள் தனது முதற்குமாரனாகிய இயேசுவுக் குப் பிறகு வேறு பிள்ளைகளையும் பெற்றெடுத் தாள் என்பதைப் பல்வேறு வசனங்கள் தெளிவு படுத்துகின்றன (லூக்கா 2:7; மத். 1:25; 12:46; 13:55; மாற்கு 6:3; யோவான் 2:12; கலா. 1:19).

**9:6** பர்னபா நற்செய்தியை அறிவித்து வந்த போது, பவுலைப்போலவே தன்னுடைய பொருட் தேவைகளுக்காக வேலைசெய்துவந்தார் என்றே தோன்றுகிறது. அவ்விருவரும் கைத்தொழில் செய்யாமலிருக்கவும், இறைமக்களாலே பரா மரிக்கப்படவும் உரிமை பெற்றவர்களில்லையா என்று பவுல் இங்கு வினவுகிறார்.

**9:7** முதலாவதாக, பிற அப்போஸ்தலரின் மாதிரியை அடிப்படையாகக்கொண்டு, தானும் நிதி உதவியைப் பெற்றிட உரிமையுடையவர் என்று பவுல் தனது வாதத்தை எடுத்துரைக்கிறார். இப்பொழுது மனிதனுடைய வாழ்க்கைத் தொழி

லைத் தனது வாதத்திற்கு ஆதாரமாக அவர் எடுத்துக்கொள்கிறார். ஒரு போர்வீரன் **தனது சொந்தப் பணத்தைச் செலவழித்து** போருக்குச் செல்கிறதில்லை. **திராட்சைத் தோட்டத்தை உண்டாக்குகிற** எவனும் அதன் பலனைப் பெறாமல் இருக்கமாட்டான். இறுதியாக, **மந்தை மேய்க்கிற** இடையன், மாடுகளிலிருந்து கிடைக்கும் **பாலில்** ஒரு பங்கைத் தனது கூலியாகப் பெறுவதற்கு உரிமை பெற்றிருக்கிறான். கிறிஸ்தவ ஊழியமும் போர்க்களத்திற்குச் செல்லுதல், பயிரிடுதல் மற்றும் மந்தை மேய்க்கிற தொழில் போன்றதேயாகும். எதிரியுடன் போரிடுகிற வேலை, தேவனுக்குக் கனிகொடுக்கிற மரங்களைப் பராமரித்தல், தேவனுடைய மந்தையை மேய்க்கும் உடன்மேய்ப்பனாக ஊழியம் செய்தல் இவையாவும் கிறிஸ்தவ ஊழியத்தின் கூறுகளேயாகும். உலகிற்குரிய தொழில்களில் ஊதியம் பெற்றிட உரிமை இருக்குமாயின், கர்த்தருக்குப் பணிபுரிவதில் எவ்வளவு அதிகமான உரிமை இருக்கும்!

**9:8** தன்னுடைய வாதத்தை எடுத்துரைக்க, பவுல் இப்பொழுது பழைய ஏற்பாட்டை நோக்கித் திரும்புகிறார். தன்னுடைய வாதத்திற்கு மேற்கூறிய உலகிற்குரிய தொழில்கள், அதாவது போர்புரிதல், பயிரிடுதல், மந்தைமேய்த்தல் மட்டுமே இருக்கின்றனவா என்று அவர் வினவுகிறார். வேத எழுத்துகளும் இவைகளைச் சொல்லுகிறதில்லையா?

**9:9** தானியத்தைப் **போரடிக்கும்போது மாடுகளின் வாய் கட்டப்படுவதில்லை** என்று உபாகமம் 25:4 -இல் மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. அறுவடைத் தொழிலில் ஒரு மாடு பயன்படுத்தப்படும் வேளையில், அந்த விளைச்சலில் ஒரு பங்கிற்கு மாடு உரிமையுடையதாய் இருக்கிறது. **தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ?** தேவன் மாடுகளைக் குறித்து அக்கறை கொண்டிருக்கிறார். ஆனால் இந்தச் சொற்கள் பழைய ஏற்பாட்டில் எழுதப்படுவதற்கு, வாயில்லா விலங்குகள் மீது தேவன் கொண்டிருந்த அக்கறை மட்டும் காரணமாகாது. இங்கே நம்முடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய ஆவிக்குரிய ஒரு கோட்பாடும் கொடுக்கப்பட்டுள்ளது.

**9:10 நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ?** "ஆம்" என்பதே இதன் விடை. இந்தச் சொற்கள் எழுதப்படும்போது நம்முடைய வாழ்க்கை நலமே அவருடைய உள்ளத்தில் இருந்தது. ஒருவன் உழுகிறபோது, தனக்கு ஊதியம் கொடுக்கப்படும் என்ற நம்பிக்கையோடு அவன் உழுகிறான். அதுபோலவே ஒருவன் போரடிக்கிற போது, விளைச்சலில் ஒரு பங்கு அவனுடைய வேலைக்குப் பதிலாகத் தரப்படும் என்னும் எதிர் பார்ப்போடு அதனைச் செய்கிறான். கிறிஸ்தவ ஊழியமானது உழுவது, போரடிப்பது போன்ற உழைப்பாக விளங்குகிறது. அப்படிப்பட்ட ஊழியத்தில் ஈடுபடுகிறவர்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழிக்கத் தேவையில்லை என்று தேவன் இங்கு கட்டளையிடுகிறார்.

**9:11** கொரிந்து நகரத்தில் கிறிஸ்தவர்களுக்காகத் தான் **ஞானநன்மைகளை விதைத்திருப்பதாகப்** பவுல் இங்கு கூறுகிறார். அதாவது, அவர் கொரிந்து நகரத்திற்கு வந்து அவர்களிடத்தில் நற்செய்தியைப் பிரசங்கித்ததோடு, மதிப்புமிக்க ஆவிக்குரிய சத்தியங்களையும் கற்பித்தார். அவ்வாறிருக்கையில், அதற்கு மாறாக அவருடைய பணத்தேவையையும் **சரீர நன்மைக்குத்** தேவையானவற்றையும் அவர்களிடம் கேட்பது அளவுக்கு மிஞ்சினதாகுமா? "பிரசங்கிக்கு அளிக்கப்படும் ஊதியம், அவர் கற்பிக்கிற வற்றின் விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைந்த மதிப்புடையது" என்பதே அவருடைய வாதமாகும்.

**9:12** கொரிந்து நகரத்து சபையானது, அங்கே பிரசங்கம் செய்து உபதேசித்து வந்த **மற்றவர்களை** ஆதரித்து வந்தது என்பதைப் பவுல் அறிந்திருந்தார். மற்ற மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைக் குறித்து அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுலுக்குச் செய்ய வேண்டிய கடமையை அவர்கள் உணரவில்லை. ஆகவே, "**மற்றவர்கள் உங்களிடத்தில் இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா?**" பண உதவி பெறுவதற்கான மற்றவர்களுடைய அதிகாரத்தை அவர்கள் அறிந்திருந்தார்கள் எனில், அவர்களுடைய விசுவாசத்தின் தந்தையாகிய பவுல் அவர்கள்மேல் கொண்டிருந்த அதிகாரத்தை அவர்கள் ஏன் அறியவில்லை? அவ்வாறு பண உதவி பெற்றவர்களில் சிலர் யூதமார்க்க போதனைகளைக் கிறிஸ்தவத்தோடு இணைத்து போதித்தவர்கள் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. அவருக்கு **இந்த அதிகாரம்** இருந்தபோதிலும், கொரிந்துப் பட்டணத்தார்மீது அவர் அதைச் செலுத்தவில்லை. அதற்கு மாறாக **சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடி** அவர் **எல்லாப்பாடு**

**களையும்** பட்டார். தனது உரிமையை அவர் வலியுறுத்தவில்லை. மாறாக நற்செய்திக்கு எந்தத் தடையும் ஏற்படாதபடி அவர் வசதிக் குறைவையும் கடுந்துன்பத்தையும் அனுபவித்தார்.

**9:13** அடுத்து, யூத ஆலயத்தில் ஊழியம் செய்தவர்கள் பண உதவி பெற்றுவந்ததைத் தனது வாதத்திற்கு எடுத்துக்காட்டாகப் பவுல் அறிமுகப்படுத்துகிறார். ஆலயத்தில் பணிபுரிந்து வந்தவர்கள், ஆலயத்தின் வருமானத்தினால் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். இந்த அர்த்தத்தில் அவர்கள் **தேவாலயத்திற்குரியவற்றால்** தங்களுடைய வாழ்க்கையை நடத்தினார்கள் என்று கூறலாம். மேலும் **பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை** செய்த **ஆசாரியர் பலிபீடத்துக்குக்** கொண்டுவரப்பட்ட காணிக்கைகளில் ஒரு பங்கைப் பெற்று வந்தார்கள். அதாவது ஆலயத்தைச் சுற்றிலும் சாதாரண வேலைகளைச் செய்த லேவியரும், அதனினும் மேலான புனித அலுவல்களைச் செய்த ஆசாரியரும் ஒரேவிதமாய் அவர்களுடைய பணிக்கான ஊதியத்தைப் பெற்றார்கள்.

**9:14** இறுதியாக, **கர்த்தர்**தாமே கொடுத்த தெளிவான கட்டளையையும் பவுல் இங்கே எடுத்துரைக்கிறார். **சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று** அவர் **கட்டளையிட்டிருக்கிறார்**. கொரிந்துப் பட்டணத்திலிருந்து பவுல் பணஉதவியைப் பெறுவதற்கு அதிகாரம் பெற்றிருந்தார் என்பதற்கு இதுவே தீர்மானமான சான்றாக விளங்கியது. ஆனால் அந்த உதவியை அவர்கள் கொடுக்கவேண்டும் என்று அவர் கட்டாயப்படுத்தாதற்குக் காரணம் என்ன? அதற்கான விடை 15 -18 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

**9:15** தான் **இவற்றில் ஒன்றையும் அநுபவிக்கவில்லை** என்று பவுல் இங்கு விவரிக்கிறார். அதாவது, அவர் தமது உரிமைகளைப் பயன்படுத்தவில்லை. மேலும் அவர்கள் அவருக்கு அந்த நாட்களில் பணம் அனுப்ப வேண்டும் என்பதற்காகவும் அவர் **இவற்றை எழுதவில்லை**. அவருடைய **மேன்மைபாராட்டலை** ஒருவன் கொள்ளையடிப்பதைக் காட்டிலும் அவர் **சாகிறதை நலமென்று** கருதினார்.

**9:16** நற்செய்தியைப் பவுல் அறிவித்து வந்த போதிலும் அவரால் **மேன்மை பாராட்ட** முடியாது என்று அவர் இங்கு கூறுகிறார். அது அவர்மேல் விழுந்த தெய்வீகக் கடமையாக விளங்கியது. இந்தத் தொழிலை அவர் தானாகத் தெரிந்து கொள்ளவில்லை. அவருடைய "தோளில் தேவ தட்டுதல்" நடந்தது, அந்த தெய்வீகக்கட்டளைக்கு அவர் கீழ்ப்படியாமல் போயிருந்தால் அவர் மிகவும் பரிதபிக்கப்படத்தக்க மனிதனாக மாறியிருப்பார். அப்போஸ்தலன் நற்செய்தியைப் பிரசங்கிக்க விருப்பமற்றவராக இருந்தார் என்பது இதன் பொருளன்று; மாறாக, பிரசங்கம் பண்ண வேண்டும் என்னும் தீர்மானம் அவரிடத்திலிருந்து எழவில்லை, அது கர்த்தரிடத்திலிருந்தே வந்தது என்பதே இதன் பொருளாகும்.

**9:17** அப்போஸ்தலனாகிய பவுல் நற்செய்தியை **விருப்பத்தோடு** பிரசங்கித்திருந்தால், அவர் அத்திருப்பணிக்குரிய **பலனைப்** பெற்றிருப்பார். அதாவது, தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான ஆதாரத்தைப் பெறுவதற்கான உரிமையைப் பெற்றிருப்பார். கர்த்தருக்குப் பணிவிடை செய்கிறவர்கள், இறை மக்களாலே ஆதரிக்கப்படவேண்டும் என்னும் உபதேசம் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு நூல்கள் முழுவதிலும் மிகத்தெளிவாகப் போதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில், பவுல் தான் கர்த்தருக்கு சேவைபுரிவதில் மனவிருப்பம் கொண்டிருக்கவில்லையென்று சொல்லவில்லை. மாறாக, அவருடைய அப்போஸ்தல ஊழியத்தில் தெய்வீக வலியுறுத்தல் இருந்தது என்று மட்டுமே இங்கு அவர் சொல்லுகிறார். இதனை மேலும் அவர் வலியுறுத்திச் சொல்லுவதை இந்த வசனத்தின் பின்பகுதி வெளிப்படுத்துகிறது. அவர் **விருப்பமில்லாதவராய்**, அவருடைய மனவிருப்பத்துக்கு எதிராகப் பிரசங்கித்து வந்திருந்தால், அதாவது அவருடைய உள்ளத்தினின்று எரிந்து வெளிப்பட்ட அக்கினியின் நிமித்தம் அதைத் தவிர்க்க முடியாதவராக நற்செய்தியைப் பிரசங்கித்து வந்திருந்தால், அவருக்கு நற்செய்தியைக் குறித்த **உக்கிராண உத்தியோகம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது** என்பதே அதன் பொருளாகும். அவருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளுக்கிணங்க செயல்புரிந்த மனிதனாக அவர் திகழ்ந்தார். ஆகவே அவரால் மேன்மைபாராட்ட முடியாது. (தமிழ் வேதாகமத்தில் காணப்படும் உற்சாகமாய், உற்சாகமில்லாதவராய் என்னும் சொற்கள் இங்கு விருப்பத்தோடு, விருப்பமில்லாதவராய் என்று சரியாக மாற்றப்பட்டுள்ளன.)

இந்தப் பதினேழாவது வசனம் மிகக்கடினமானது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். கொரிந்துப் பட்டணத்தாரால் பவுல் பராமரிக்கப்படுவதற்கு உரிமைகோராததன் காரணம் என்னவெனில்,

அந்த ஊழியத்தை அவர் தாமாகவே தெரிந்து கொள்ளவில்லை என்பதேயாகும். இதுவே இவ் வசனத்தின் பொருள் எனத் தோன்றுகிறது. அவர் அந்த ஊழியத்தைச் செய்யும்படி தேவனின் திருக் கரத்தால் நியமிக்கப்பட்டார். கொரிந்துப் பட்ட ணத்தில் இருந்த கள்ளப்போதகர்கள் பரிசுத்த வான்களால் பராமரிக்கப்படுவதற்கான உரிமை யைக் கோரினார்கள். ஆனால் அப்போஸ்தல னாகிய பவுலோ தான் பெறவேண்டிய பரிசை வேறொரு இடத்திலிருந்து நாடினார்.

நாக்ஸ் என்பார் இதனைக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்த்திருக்கிறார்: "என்னுடைய சொந் தத் தெரிந்தெடுப்பின் மூலமாக நான் செய்கிற ஊழியத்தைச் செய்வேனானால், அதற்கான பலனை என்னால் கோரமுடியும். ஆனால் நான் ஒரு கட்டாயத்தின் அடிப்படையில் இதனைச் செய் யும்போது, எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பைச் செய்கிறவனாகவே காணப்படுவேன்."

திருவாளர் ரைரி விவரிக்கிறார்:

> நற்செய்தி அறிவிப்பதற்கான பொறுப்பி லிருந்து பவுல் தப்பமுடியாது. ஏனெனில் அதற் கான உக்கிராண ஊழியம் (பொறுப்பு) அவ ருக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்தது. அவருக்கு ஊதியம் ஒருபோதும் கொடுக்கப்படவில்லை என்றாலும், அவர் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என்னும் கட்டளையைப் பெற்றிருந் தார் (லூக்கா 17:10 -ஆம் வசனத்தோடு ஒப்பிடுக).[28]

**9:18** அவர் நற்செய்தியைப் பிரசங்கித்தார் என்னும் உண்மையின் அடிப்படையில் அவரால் மேன்மைபாராட்ட முடியாதெனில், அவரால் எதன் அடிப்படையில் மேன்மை பராட்ட முடியும்? அவர் தானாக எதையாவது தெரிவு செய்திருந்தால், அதனடிப்படையில் அவரால் மேன்மைபாராட்ட முடியும், அதாவது அவர் **கிறிஸ்துவின் சுவிசே ஷத்தைச் செலவில்லாமல்** பிரசங்கித்ததே அவருடைய மேன்மைபாராட்டலுக்குக் காரணம். இதனை அவரால் தீர்மானிக்க முடிந்தது. அவர் கொரிந்துப் பட்டணத்து மக்களுக்கு அறிவிக் கவும், தன்னுடைய சொந்த வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான பணத்தைத் தானே உழைத்துச் சம்பாதிக்கவும் தீர்மானித்தார். அதன் காரணமாக, **சுவிசேஷத்தினால்** உண்டான அதிகாரத்தை, அதாவது அதன் மூலமாகத் தான் பராமரிக்கப்படுவதற்கான உரிமையைச் சிறிதள வும் அவர் பயன்படுத்தவில்லை.

அப்போஸ்தலன் இங்கு தனது வாதத்தைக் கூறி முடிக்கும்போது, கடமைக்கும் விருப்பச் செய லுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கிச் சொல்லு கிறார். இங்கே, நற்செய்தியைப் பிரசங்கிப்பதில் அவருக்குத் தயக்கம் உண்டாயிற்று என்ற எண்ணத்திற்குச் சற்றேனும் இடமில்லை. அவர் அதனை மிகுந்த உற்சாகத்துடன் செய்தார். ஆயி னும் உண்மையான பொருளில் காணுமிடத்து, அ.ீ.து ஒரு பயபக்திக்குரிய கடமையாயிருந்தது. அவர்மேல் சுமத்தப்பட்ட கடமையாகவே அது விளங்கியது. ஆகவே, அவ்வாறு அவர் தனது கடமையை ஆற்றுங்கால், மேன்மைபாராட்டு வதற்கு இடமில்லை. நற்செய்தியை அறிவிக்கை யில், நிதி உதவிக்கான உரிமையை அவர் நிலை நாட்டியிருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்ய வில்லை. மாறாக, கொரிந்துப் பட்டணத்தாருக் குச் **செலவில்லாமல்** நற்செய்தியை வழங்கி னார். இ.ீ.து அவருடைய சொந்த விருப்பமாக இருந்ததால், அதில் மேன்மைபாராட்ட ஏதுவா யிற்று. நாம் ஏற்கனவே குறிப்பிட் டதுபோல, பவுல் கூடாரம் பண்ணும் தொழிலைச் செய்து வந்த தால், தான் ஒரு மெய்யான அப்போஸ்தலன் என்று அவரே கருதவில்லையென்று அவரைக் குறைகூறுவோர் கூறினார்கள். அவர் தனது வாழ்க்கைக்கான தேவையை அவரே சந்தித்த செயல், அவர் உண்மையான அப்போஸ்தலன் என்பதை மெய்ப்பிப்பதோடு, அ.ீ.து உன்னத மானதும் விழுமிய செயலாகவும் விளங்கியது என்று அவர் இங்கே விவரிக்கிறார்.

பத்தொன்பது முதல் இருபத்திரண்டு வரை யிலான வசனங்களில், நற்செய்திப் பணியின் நிமித் தம் பவுல் தனது உரிமையை விட்டுக்கொடுத் ததன் மாதிரியை எடுத்தியம்புகிறார். இந்தப் பகுதியை நாம் படிக்கும்போது, வேதத்தில் கூறப் பட்டுள்ள எந்தக் கோட்பாடுகளையும் பவுல் ஒருக் காலும் கைவிட்டதில்லை என்பதை நாம் நினைவு கூர வேண்டியவர்களாக இருக்கிறோம். முடி வானது வழிவகையை நியாயப்படுத்தும் என் பதை அவர் விசுவாசிக்கவில்லை. சரியா தவறா என்று முடிவுசெய்யக் கூடாத காரியங்களைக் குறித்து இங்கு அவர் பேசுகிறார். அவர் யாரை யெல்லாம் சந்திக்க நேரிட்டதோ, அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கு இடங்கொடுத்ததால், நற்செய்தியைக் கேட்பதற்கான திறவுண்ட செவி களை அவர்களிடத்தில் பெற்றார். ஆனால் நற்செய்தியின் சத்தியத்தை விட்டுக்கொடுக்கக் கூடிய ஏதொரு செயலையும் அவர் ஒருபோதும் செய்யவில்லை.

**9:19** ஓர் அர்த்தத்தில் அவர் **ஒருவருக்கும் அடிமைப்படாதவராயிருந்தார்**. அவர்மீது அதி காரம் செலுத்தவோ, அவரைக் கட்டாயப்படுத் தவோ ஒருவராலும் முடியாது. ஆயினும் **அதிக மக்களை ஆதாயப்படுத்தும்படிக்கு** அவர் **எல்லாருக்கும் தன்னையே அடிமைப்படுத்திக் கொண்டார்.** தெய்வீக சத்தியங்களைத் தவிர்க் காமல், கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதா யப்படுத்தும்படி சிலவற்றை அவர் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிருந்தால், அவ்வாறு விட்டுக்கொடுத்தார்.

**9:20 யூதரை** அவர் **ஆதாயப்படுத்தும்படி யூதருக்கு** அவர் **யூதரைப்** போலானார். யூதர்கள் இரட்சிப்படையும் பொருட்டு, அவர் திரும்பவும் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்குத் தன்னைக் கீழ்ப்படுத்திக்கொண்டார் என்பது இதன் பொருளாக இருக்க முடியாது. தீமோத்தேயு, தீத்து ஆகியோர் விருத்தசேதனம் செய்துகொள்ளப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டபோது பவுல் நடந்துகொண்ட விதத்தை எடுத்துக்காட்டாகக் கூறி இவ்வசனத்தை விளக்கலாம். தீத்துவைக் குறித்துப் பார்க்கும் போது, அவர் விருத்தசேதனம் பெறாவிட்டால் இரட்சிப்படைய முடியாது என்று சிலர் வலியுறுத் திக் கூறினார்கள். இ.·.து இறைவனின் கிருபை யால் உண்டாகும் இரட்சிப்பு என்னும் பொருள் மேல் கொண்டுவரப்பட்ட நேரடித்தாக்குதல் என் பதை உணர்ந்த பவுல், தீத்து விருத்தசேதனம் பெறக்கூடாது என வன்மையாக எதிர்த்தார் (கலா. 2:3). ஆயினும், தீமோத்தேயு விருத்தசேதனம் பெறுவதைப் பொருத்தமட்டில், அப்படிப்பட்ட விவாதப்பொருள் எதுவும் இடம்பெறவில்லை. ஆகவே, பலர் நற்செய்தியைக் கேட்பதற்கு வாய்ப்பு உண்டாகும் என்பதைக் கருத்தில் கொண்ட வராக தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணப் படுவதற்கு பவுல் உடன்பட்டார் (அப். 16:3).

**நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர் களை ஆயத்தப்படுத்தும்படிக்கு, நான் நியா யப்பிரமாணத்துக்கு**[29] **கீழ்ப்பட்டவனைப் போலவு மானேன். நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப் பட்டவர்கள்** என்று இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது யூதமக்களையேயாகும். ஆனால், யூதர்களோடு தான் கொண்டிருந்த ஈடுபாட்டைக் குறித்து பவுல் ஏற்கனவே இந்த வசனத்தின் முன்பகுதியில் கூறிவிட்டார். அப்படியிருக்க அவர் மீண்டும் அதே பொருளை இங்கு கூறுவதன் காரணம் என்ன? இதற்குப் பொருள்விளக்கம் அளிக்கையில், இவ் வசனத்தின் முந்தின பகுதியில் அவர் யூதர்களு டைய தேசிய பழக்கவழக்கங்களையும், பிந்தின பகுதியில் அவர்களுடைய சமய வாழ்க்கையை யும் குறிப்பிடுகிறார் என்று பொதுவாகச் சொல்லப் படுகிறது.

இந்த நேரத்தில், சற்று கூடுதலாக விளக்கம் அளிக்கவேண்டியது அவசியம். யூதன் என்னும் நிலையில், பவுல் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவராகப் பிறந்தார். அவர் நியாயப்பிர மாணத்தைக் கைக்கொண்டு, அதன் மூலமாகத் தேவ தயவைப் பெற எண்ணினார். ஆனால் அவ ரால் அப்படிச் செய்ய முடியவில்லை என்பதை அறிந்தார். அவர் எவ்வளவு ஈனமான பாவியாக இருந்தார் என்பதை அது அவருக்கு வெளிப்படுத் திக் காட்டியதோடல்லாமல், அவரை முற்றிலு மாகக் குற்றந்தீர்க்கவும் செய்தது. இறுதியில் அந்த நியாயப்பிரமாணம் இரட்சிப்பிற்கான வழி யல்ல என்பதை அவர் உணர்ந்தார். ஆனால் மனி தனுடைய பாவநிலையையும், அவனுக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதையும் வெளிப்படுத்தும் தேவனுடைய வழியாக அந்த நியாயப்பிரமாணம் விளங்கிற்று. பின்னர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினிடத்தில் பவுல் நம்பிக்கை கொண்டார். அதை அவர் செய்த காரணத்தால் நியாயப்பிரமாணத் தின் குற்றப்படுத்தும் தொனியிலிருந்து விடுதலை பெற்றார். நியாயப்பிரமாணத்தை அவர் மீறியதற் கான தண்டனையை, கல்வாரி சிலுவையில் கர்த்தராகிய இயேசு தீர்த்துவிட்டார்.

அவர் மனமாற்றம் பெற்ற பின்னர், நியாயப்பிர மாணம் இரட்சிப்பிற்கான வழியல்லவென்று அப் போஸ்தலன் கற்றுக்கொண்டார். மேலும் இரட்சிக் கப்பட்ட ஒருவருக்கு அது வாழ்க்கைக் கோட் பாடாகவும் இருப்பதில்லை என்பதையும் அவர் அறிந்தார். விசுவாசி நியாயப்பிரமாணத்திற் கல்ல, கிருபைக்கே கீழ்ப்பட்டிருக்கிறான். அவன் எங்கு வேண்டுமானாலும் சென்று அவன் விருப்பப் படி எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பது இதன் பொருளன்று. மாறாக, தேவனுடைய கிருபையின் மெய்யான பொருள், அப்படிப்பட்ட பாவச்செயல்களைச் செய்வதற்கான விருப்பத் திலிருந்தும் அவனைத் தடுத்து நிறுத்தும் என் பதே ஆகும். தேவ ஆவியானவர் அவனை உறை விடமாய்க் கொண்டிருக்கும் நிலையில், கிறிஸ்த வனது நடத்தை வேறொரு மேலான நிலையை அடைகிறது. அவன் இப்பொழுது, தூயவாழ்க்கையை வாழ விரும்புகிறான். நியாயப்பிரமாணத்தை மீறு வதால் தண்டனையைப் பெறவேண்டும் என்னும் அச்சத்தினால் அல்ல, அவனுக்காக மரண

மடைந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மேலுள்ள அன்பின் நிமித்தம் அவன் தூய வாழ்க்கை வாழ் கிறான். நியாயப்பிரமாணத்தின்கீழ் அச்சமே தூய வாழ்க்கைக்குத் தூண்டுகோலாயிருந்தது. ஆனால் கிருபையின்கீழ் அன்பே தூய வாழ்க்கைக்குத் துண்டுகோலாயிருக்கிறது. அச்சத்தைக் காட்டி லும் அன்பு மிகவும் உயர்ந்த தூண்டுகோலாகும். பேரச்சத்தின் கட்டாயத்தினால் மனிதர்கள் ஒரு போதும் செய்யாததை, அன்பின் நிமித்தம் செய் கிறார்கள்.

இதனை அர்நாட் விவரிக்கிறார்:

> தேவன் எவ்விதமாகக் கோள்களை அவற்றின் பாதைகளில் வைத்து நடத்துகிறாரோ அது போலவே ஆத்துமாக்களைக் கீழ்ப்படியும்படி கட்டுப்படுத்துகிறார். அதாவது அவற்றைச் சுதந்தரமாகச் செல்லும்படி தூக்கி எறிந்துவிடு கிறார். அந்த ஒளிச்சுடர்களை, அவற்றின் மையத்திலிருந்து வெடித்துச் சிதறி விலகிவிடாத படி சங்கிலிகளால் கட்டி வைக்கவில்லை என் பதை அறிவோம். நம் கண்கள் காணாத ஒரு வகை இழுவிசை விதியால் அவை நடத்தப்படு கின்றன... கண்களுக்குப் புலப்படாத அன் பென்னும் கட்டுக்குள் – அவர்களை விலைக்கு வாங்கிய கர்த்தருடைய அன்பு – அவ்வாறு பிணையவிலை கொடுத்து வாங்கப்பட்டவர்கள், தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ள வர்களாய் வாழும்படி நெருக்கப்படுகிறார்கள்.[30]

இந்தச் சுருக்கமான பின்னணியை மனத்திற் கொண்டவராக, இருபதாவது வசனத்தின் பிந்தைய பகுதிக்கு நாம் மீண்டும் செல்லுவோம். **நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆயத் தப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிர மாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப் போலவு மானேன்.** பவுல் யூத மக்களோடு இருந்த நேரங் களில், சரியா தவறா என்று அறியக்கூடா செயல் களில், ஒரு யூதனைப் போலவே செயல்பட்டார். எடுத்துக்காட்டாக யூத மக்கள் உண்ட உணவு களை அவரும் உண்டார். அவர்கள் உண்ண மறுத்த பன்றி இறைச்சி போன்ற உணவு வகை களை உண்ணுவதை அவர் தவிர்த்தார். அவர் ஓய்வுநாட்களில் வேலைசெய்வதைப் பெரும்பா லும் தவிர்த்திருக்கக் கூடும். அவ்வாறு ஓய்வு நாட்களில் அவர் வேலை செய்யாமலிருந்த காரணத்தால், யூதமக்கள் பலர் நற்செய்தியைக் கேட்டு ஆயத்தப்படுவதற்கு ஏதுவாயிற்று.

கர்த்தராகிய இயேசுவுக்குள் மறுபடியும் பிறந்த விசுவாசி என்னும் அடிப்படையில், அப்போஸ்தல னாகிய பவுல் தன்னுடைய வாழ்க்கையின் கோட் பாடாக நியாயப்பிரமாணத்தை ஏற்று அதற்குக் கீழ்ப்படியவில்லை. மனிதர்கள் பலரைக் கர்த்த ருக்காக வெற்றி கொள்ளும்பொருட்டு அவர்களு டைய பழக்க வழக்கங்கள், மரபுகள், ஒரு சார்பு கருத்துகள் ஆகியவற்றை அவர் வெறுமனே ஏற்றுக்கொண்டார்.

**9:21** திருவாளர் ரைரி எழுதுகிறார்:

> பவுல் கபட்டு மனதுடன் இரு முகங்களைக் கொண்டவராகவோ, பல முகங்களைக் கொண்டவராகவோ நடந்துகொள்ளவில்லை. அவர் எல்லாவகை மனிதர்களுக்கும் ஊழியம் செய்யும் வண்ணம், எப்பொழுதும் மாறாத உறுதி யுடனும், கட்டுப்பாடுடைய சுய ஒழுக்கத்துடனும் நடந்துகொண்டார். எல்லையில்லா சதுப்பு நிலத்தில் பாயும் வெள்ளத்தைக் காட்டிலும், குறுகலான கால்வாயில் ஒருமுகப்படுத்தப்பட்ட வெள்ளம் வேகம் நிறைந்ததாய் இருப்பது போல, அவருடைய கட்டுப்படுத்தப்பட்ட சுதந் திரம் கிறிஸ்துவுக்காக அதிக வல்லமையுடைய தாய்த் திகழ்ந்தது.[31]

**நியாயப்பிரமாணம் இல்லாதவர்களுக்காக, பவுல் நியாயப்பிரமாணம் இல்லாதவரைப் போலானார்**. (ஆனால் அவரோ **தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணம் இல்லாதவராய் அல்ல, கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு உட் பட்டவராய் இருந்தார்.**) இங்கே, கலகக்காரரை யும், கட்டுப்பாடற்றவர்களையும் **நியாயப்பிர மாணம் இல்லாதவர்கள்** என்னும் சொற்றொடர் குறிக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் எந்தப் பிரமாணத்தையும் அறியாதவர்கள். ஆனால் இங்கு புறவினத்தாரைக் குறிக்கும் பொதுவான பொருளோடு இச்சொற்றொடர் பயன்படுத்தப்பட் டுள்ளது. நியாயப்பிரமாணமானது யூதர்களுக்கே யன்றி, புறவினத்தாருக்குக் கொடுக்கப்படவில்லை. இவ்வாறாக, புறவினத்தாருடன் பவுல் இருந்த நேரங்களில், இரட்சகருக்கு உண்மையுள்ள வராய் இருப்பதற்கு எந்த இடையூறும் ஏற்படாத அளவிற்கு அவர்களுடைய பழக்கவழக்கங் களுக்கும் உணர்வுகளுக்கும் உடன்பட்டு வந் தார். அப்போஸ்தலன் **நியாயப்பிரமாணம் இல்லாதவரைப் போல** நடந்துகொண்டாலும், **தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணம் இல்லாதவராயிருக்கவில்லை** என்று இதனை

விளக்குகிறார். தன்னுடைய மனவிருப்பத்தின்படி எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று அவர் கருதவில்லை. மாறாக, **கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு** அவர் **உட்பட்டவராயிருந்தார்.** அதாவது அவர் கர்த்தராகிய இயேசுவின் அன்புக்கும், அவருடைய புகழ்ச்சிக்கும், ஊழியத்துக்கும், மகிழ்ச்சிக்கும் கட்டுப்பட்டவராக இருந்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்துக்குக் கட்டுப்படாமல், அவர் அன்பின் பிரமாணத்துக்குக் கட்டுண்டவராயிருந்தார். அவர் கிறிஸ்துவுக்குக் "கட்டுண்டவராயிருந்தார்." "ரோமாபுரியில் இருக்கும்போது ரோமனைப்போல செயல்புரிய வேண்டும்" என்னும் பழமொழியை நாமறிவோம். பவுல் புறவினத்தாருடன் இருந்த வேளைகளில் இரட்சகருக்கு உண்மையுள்ளவராய் இருப்பதற்கு எந்த இடையூறும் உண்டாகாத அளவிற்கு, முடிந்த மட்டும் அவர்களுடைய வாழ்க்கை முறைமைக்கு உடன்பட்டு நடந்தார். இந்த வேத பகுதியானது பண்பாட்டுடன் தொடர்புடையதேயொழிய உபதேசங்களோடும் நெறிமுறைகளோடும் தொடர்புடையதல்ல என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

**9:22** இந்த வசனம் பலவீனரை அல்லது சிறு விசயங்களிலும் மிகுந்த கவனத்தோடு செயல் புரிவோரைப் பற்றிப் பேசுகிறது. அடிப்படை முக்கியத்துவம் அற்ற விசயங்களில் தேவைக்கு அதிகமாக விழிப்புடன் செயல்படுபவர்களாக அவர்கள் இருந்தார்கள். **பலவீனரை ஆதாயப்படுத்தும்படி பலவீனருக்கு** பவுல் **பலவீனரைப் போலானார்.**[32] இறைச்சியை உண்பதால் அவர்களுடைய மனது புண்படுமாயின், அவர் காய்கறி உணவை உண்பவராக இருந்தார். சுருங்கக்கூறின், **எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படி** பவுல் **எல்லாருக்கும் எல்லாமுமானார்.** திருமறைக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்காமல் விட்டுவிடுவதற்கு இந்த வசனத்தை ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. சிலரை நற்செய்திக்குக் செவிமடுக்க ஏதுவாக்கும்படி, அவர்களுடைய பழக்கவழக்கங்களுக்கு இடங்கொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்கும் நிலையையே இந்த வசனங்கள் விவரிக்கின்றன. இங்கே, **எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு** என்று பவுல் சொல்லும்போது, அவரால் மற்றொருவரை இரட்சிக்க முடியும் என்ற எண்ணத்தை அவர் ஒருநொடிப்பொழுதுகூடக் கொண்டிருக்கவில்லை. ஏனென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரால்தான் ஒரு மனிதரை இரட்சிக்க முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். அதே நேரத்தில் நற்செய்திப் பணியில் கிறிஸ்துவுக்காக உழைப்பவர்கள் கிறிஸ்துவோடு மிக நெருக்கமாக இணைக்கப்பட்டிருப்பதைக் காண்பது மனகிளர்ச்சியை ஏற்படுத்துகிறது. மேலும் அந்நிலையில் அவர்கள் ஈடுபட்டிருக்கிற ஊழியத்தைக் குறிக்க **இரட்சிக்கிற** ஊழியம் என்னும் சொற்றொடரைப் பயன்படுத்த கிறிஸ்து அனுமதிக்கிறார். நற்செய்திப் பணிக்கு இங்கே எவ்வளவாக மேன்மையும் மகத்துவமும் புகழ்ச்சியும் அளிக்கப்படுகின்றன!

இருபத்து மூன்று முதல் இருபத்தேழு வரையிலான வசனங்கள், ஒருவன் தற்கட்டுப்பாடு இன்றி நடப்பதால் தன்னுடைய பரிசுப்பொருளை இழந்துபோகிற ஆபத்தை விவரிக்கின்றன. கொரிந்துப் பட்டணத்தாரிடத்திலிருந்து நிதி உதவியைப் பவுல் ஏற்க மறுத்த செயல் அவருடைய கண்டிப்பான தற்கட்டுப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**9:23 சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதனிமித்தமே இப்படிச் செய்கிறேன்.** கர்த்தருடைய பணியில் பவுல் எவ்விதமாகத் தன்னுடைய உரிமையையும் விருப்பத்தையும் துறந்து செயல்பட்டார் என்பதை முந்தைய வசனங்களில் அவர் விளக்கிக் கூறியுள்ளார். அவர் ஏன் இதைச் செய்தார்? **சுவிசேஷத்தின் நிமித்தமே** அவர் **இப்படிச் செய்தார்.** அதன் காரணமாக பின்னொரு நாளில் **சுவிசேஷத்தின்** வெற்றியில் அவர் பங்கு வகிப்பார்.

**9:24** இந்த வசனத்தை எழுதும் வேளையில் கொரிந்துப் பட்டணத்திலிருந்து சற்று தொலைவில் நடைபெற்றுவந்த இஸ்துமியன் விளையாட்டுப் போட்டியை அப்போஸ்தலன் நினைவுகூர்ந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அந்தத் தடகள விளையாட்டுப் போட்டிகளைக் குறித்து கொரிந்து நகரத்து விசுவாசிகள் நன்கு அறிந்திருந்தார்கள். பலர் **பந்தயச்சாலையில் ஓடினாலும்,** எல்லோரும் பரிசு பெறுவதில்லை. கிறிஸ்தவ வாழ்க்கை ஒட்டப் பந்தயத்தைப் போல இருக்கிறது. அதற்குத் தற்கட்டுப்பாடு மிகவும் அவசியம். அதற்குக் கடும் முயற்சி தேவை. அதற்கு இலக்கைக் குறித்த இம்மியும்பிசகாத உறுதி தேவை. கிறிஸ்தவ வாழ்க்கை என்னும் ஓட்டப்பந்தயத்தில் ஒருவர் மட்டுமே பரிசுப்பொருளைப் பெறுவார் என்று இந்த வசனம் பொருள்தருகிறதில்லை. நாம் யாவரும் வெற்றி பெறும் நோக்கத்துடன் ஓட வேண்டும் என்னும் பொருளுடனேயே இந்த வசனம் எழுதப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் கடைப்பிடித்துவந்த சுயத்தை மறுத்தல் என்னும் பயிற்

சியை நாம் அனைவரும் கைக்கொள்ள வேண்டும். ஆனால் இங்கு பரிசுப்பொருள் என்று சொல்லப்பட்டிருப்பது இரட்சிப்பு அல்ல. உண்மையுள்ள ஊழியத்துக்கு அளிக்கப்படும் பரிசுப் பொருளே அது. நம்முடைய ஓட்டத்தில் உண்மையுள்ளவர்களாக இருப்பதன் காரணமாக நமக்கு இரட்சிப்பு அருளப்படுகிறது என்று எங்குமே சொல்லப்படவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின்மீது வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் இரட்சிப்பு தேவனுடைய இலவச ஈவாக அருளப்படுகிறது.

**9:25** இப்பொழுது பவுல் படவுருவை ஓட்டத்திலிருந்து மல்யுத்தத்திற்கு மாற்றுகிறார். **போராடுகிற** அதாவது, மல்யுத்தத்தில் போட்டியிடுகிற யாவரும் **எல்லாவற்றிலும் இச்சையடக்கமாயிருப்பார்கள்** என்று பவுல் தனது வாசகர்களுக்கு நினைவூட்டுகிறார். "நான் புகைப்பிடித்து, மது அருந்தி சற்று நேரம் இன்பமாயிருந்த பின்னர் மல்யுத்தம் செய்யலாமா?" என்று மற்போர் புரிபவர் ஒருவர் தன்னுடைய பயிற்சி ஆசிரியரிடம் வினவினார். "ஆம், நீர் அவ்வாறு செய்யலாம், ஆனால் மற்போரில் நீர் வெற்றிபெறப் போவதில்லை!" என்று ஆசிரியர் விடைபகர்ந்தார். போட்டியாளர்களின் வரிசையிலிருந்து ஒருவர் பரிசைப் பெறும் பொருட்டு நடந்து படிகளில் ஏறுகிற காட்சியைப் பவுல் நினைத்துப் பார்க்கிறார். இது என்ன? **அழிந்துபோகிற கிரீடத்தைத்** தருகிறார்களே! பூமாலை அல்லது இலைகளால் பின்னப்பட்ட வளையம். இவை வெகுவிரைவில் அழிந்துபோகும். ஆனால், இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கிறிஸ்துவுக்காக உண்மையோடு பணிபுரிந்தவர்கள் யாவருக்கும் **அழிவில்லாத கிரீடம்** சூட்டப்படுவது எத்தனை மகிமையாயிருக்கிறது.

> வாடிடும் இலைகளால் பின்னிய முடியினை
> நிலையிலா மனிதன் நாடியே அலைகிறான்.
> நீர்தரும் முடியோ வாழ்வும் புகழ்ச்சியும்
> நன்றியால் பாடியே தலைகளைத் தாழ்த்துவோம்!
> மனுவுரு வெடுத்த அண்ணலின் அரசினில்
> அழிவிலா முடியினைச் சூடியே மகிழுவோம்!
>
> – ஹோரேடியஸ் போனார்

**9:26** இந்த அழிவில்லாத கிரீடத்தின் நிமித்தம், பவுல் நிச்சயமில்லாதவராக ஓடமாட்டார் என்றும், ஆகாயத்தை அடிக்கிறவராகச் சிலம்பம் பண்ணமாட்டார் என்றும் கூறுகிறார். அவருடைய ஊழியம் நோக்கமற்றதாகவோ, பயனற்றதாகவோ இருக்கவில்லை. அவர் தனது கண்களுக்கு முன்பாக உறுதியான இலக்கைக் கொண்டிருந்தார். அவருடைய ஒவ்வொரு செயலும் கணக்கிடப்பட வேண்டும் என்னும் நோக்கமுடையவராக அவர் இருந்தார். அவருடைய நேரமும் ஆற்றலும் வீணாக்கப்படக் கூடாது. வாய்ப்புகளை வீணாக்குவதை அப்போஸ்தலன் சற்றேனும் விரும்பவில்லை.

**9:27** அதற்கு மாறாக, அவர் **மற்றவர்களுக்குப் பிரசங்கம்** பண்ணியபோது, அவரை அவர்கள் ஏற்க மறுத்து **ஆகாதவராகப்** போய்விடாத படி தன்னுடைய **சரீரத்தைக்** கட்டுப்படுத்தி, அதனைத் தனக்குக் **கீழ்ப்படுத்தினார்**. கிறிஸ்தவ வாழ்க்கையில் சுயக்கட்டுப்பாடு, தன்னடக்கம், ஒழுங்குகளுக்குட்படுதல் ஆகியவை தேவை. நம்மை நம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான பயிற்சி நமக்குத் தேவை.

**மற்றவர்களுக்குப் பிரசங்கம்** செய்த பிறகு, அவரே **ஆகாதவராய்ப் போய்விடக் கூடிய** அச்சத்திற்குரிய சூழ்நிலை ஏற்பட வாய்ப்புண்டு என்று அப்போஸ்தலனாகிய பவுல் உணர்ந்தார். இந்த வசனத்தைக் குறித்து பற்பல வாதங்கள் எழுந்துள்ளன. ஒருவன் இரட்சிக்கப்பட்டு பின்னர் அதை இழந்துபோகக் கூடும் என்று இவ்வசனம் கற்பிக்கிறது என்று சிலர் கருதுகிறார்கள். கிறிஸ்துவின் மெய்யான எந்தவொரு ஆடும் இழக்கப்படுவதில்லை என்று புதிய ஏற்பாடு போதிக்கும் பொதுவான சத்தியத்திற்கு இக்கருத்து எதிராக இருக்கிறது.

**ஆகாதவனாய்ப்போவது**[33] என்னும் சொல் மிகவும் ஆழமானது, அது நித்திய அழிவையே குறிக்கிறது என்று வேறொரு சாரார் கூறுகின்றனர். ஆனாலும், இரட்சிக்கப்பட்ட ஒருவர் ஆகாதவராய்ப் போய்விடுவார் என்று பவுல் போதிக்கவில்லை என்று இவ்வசனத்திற்குப் பொருள் கூறும் அவர்கள் தற்கட்டுப்பாட்டைக் கைக்கொள்ளத் தவறுகிறவன் உண்மையில் முதற்கட்டம் இரட்சிக்கப்படவேயில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். இங்கே பவுல் கள்ளபோதகர்கள் எவ்வாறு தங்களுடைய சரீரங்களில் எல்லாவித இச்சைகளுக்கும் இடங்கொடுக்கிறதை நினைவு கூர்ந்தவராக ஒரு பொதுவான விதியை முன்மொழிகிறார். அதன்படி ஒருவன் தன்னுடைய சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தவில்லையெனில், அவன் உண்மையிலேயே இரட்சிக்கப்படவில்லை என்பதற்கு இதுவே நிரூபணமாக இருக்கிறது; மற்றவர்களுக்கு அவன் பிரசங்கம் பண்ணினாலும், அவன் ஆகாதவனாய்ப் போவான்.

மூன்றாவது விளக்கத்தின்படி, பவுல் இங்கு இரட்சிப்பைப் பற்றிப் பேசவே இல்லை. அவர்

ஊழியத்தைக் குறித்தே இங்கு பேசுகிறார். தான் இழந்து போகக்கூடும் என்ற எண்ணத்தை அவர் இங்கு குறிப்பிடவே இல்லை. ஆனால் ஊழியத்தைக் குறித்த பரீட்சையில் அவர் நிற்கும்போது, அங்கே பரிசுப்பொருளைப் பெறாமல் தள்ளிவிடப்படக்கூடும். ஆகாதவனாய்ப் போய்விடுதல் (தகுதியற்ற நிலைமை) என்னும் சொல் இந்த விளக்கத்திற்குச் சரியாகப் பொருத்தமுடையதாக இருப்பதோடு, விளையாட்டுப் போட்டிகளோடு தொடர்புடையதாகவும் இருக்கிறது. மற்றவர்களுக்குப் பிரசங்கம் செய்த பவுல், இனிமேல் பயன்படுத்த முடியாது என்று பரணியில் பூட்டிவைத்த பொருளைப்போல ஆகக்கூடிய மோசமான நிலை ஏற்பட்டுவிடும் என்று உணர்கிறார்.

அது எவ்வாறு இருந்தாலும், இந்தப் பகுதியானது மிகவும் கருத்தூன்றியதாகும். கர்த்தராகிய கிறிஸ்துவுக்காகத் திருப்பணியாற்ற விரும்பும் ஒவ்வொருவரும் இருதயத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு இப்பகுதி காரணமாக விளங்குகிறது. ஒவ்வொருவரும் மனவுறுதியோடு அறிந்து கொள்ள வேண்டியது யாதெனில், தேவகிருபையால் ஒருக்காலும் அனுபவத்தின் அடிப்படையில் இப்பகுதியின் பொருளைக் கற்கக்கூடாது என்பதேயாகும்.

தற்காட்டுப்பாட்டின் தேவையைக் குறித்து, பவுல் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில், இஸ்ரவேலரைக் குறித்த நிகழ்ச்சி அவருடைய மனதிற்தோன்றியது. பத்தாவது அதிகாரத்தில் அவர்கள் எவ்வாறு மனம்போன போக்கில் சென்று, தங்களுடைய சரீரங்களைக் குறித்துக் கவலையற்றவர்களாகக் கட்டுப்பாடின்றி திரிந்தார்கள் என்றும், அதன் காரணமாகத் தகுதியற்றவர்களாகி, சாட்சியை இழந்துபோனார்கள் என்றும் அவர் நினைவுகூருகிறார்.

முதலாவதாக, அவர் இஸ்ரவேலின் நற்பேறுகளைக் குறித்துப் பேசுகிறார் (வச. 1-4); பின்னர் அவர்கள் அடைந்த தண்டனையைக் குறித்துச் சொல்லுகிறார் (வச. 5); இறுதியில் இஸ்ரவேலின் வீழ்ச்சியைக் குறித்துப் பேசுகிறார் (வச. 6-10); அதன் பிறகு இவை யாவும் எவ்வாறு நமக்குப் பொருந்தும் என்று விவரிக்கிறார் (வச. 11-13).

**10:1 யூதப் பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள் என்றும், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள்** என்றும் அப்போஸ்தலன் கொரிந்துப் பட்டணத்தாருக்கு நினைவூட்டுகிறார். இங்கு **எல்லாரும்** என்ற சொல் வலியுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் எகிப்து நாட்டிலிருந்து மீட்கப்பட்ட காலத்தைக் குறித்துப் பின்னோக்கிச் சிந்தித்த பவுல் அவர்கள் எவ்வாறு வியத்தகு வகையில் பகலில் **மேகஸ்தம்பத்தால்** வழிநடத்தப்பட்டார்கள் என்றும் இரவில் அக்கினிஸ்தம்பத்தால் நடத்தப்பட்டார்கள் என்றும் நினைவுகூர்கிறார். அவர்கள் எவ்வாறு சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடந்து வனாந்தரத்திற்குத் தப்பிச் சென்றார்கள் என்பதையும் அவர் பின்னோக்கிக் காண்கிறார். அவர்கள் பெற்ற நற்பேற்றைப் பொருத்தமட்டில் அவர்கள் யாவரும் தெய்வீக வழிநடத்துதலையும் தெய்வீக மீட்பையும் பெற்று அனுபவித்தார்கள்.

**10:2** அதுமட்டுமின்றி, **எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுதல்** என்பது, மோசேயுடன் அவர்கள் ஒன்றிணைக்கப்பட்டார்கள் என்றும், அவருடைய தலைமையை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்றும் பொருள்படும். எகிப்து நாட்டிலிருந்து வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டிற்கு இஸ்ரவேல் மக்களை மோசே வழிநடத்தினார். அப்போது இஸ்ரவேல் நாட்டார் யாவரும் மோசேக்கு உண்மையுள்ளவர்களாகத் தங்களை ஒப்புவித்ததோடு, அவரை தேவனால் நியமிக்கப்பட்ட இரட்சகர் என்றும் அங்கீகரித்தார்கள். "மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்" என்னும் சொற்றொடர் அவர்கள் தேவனோடு ஒன்றிணைக்கப்பட்டார்கள் என்றும் "சமுத்திரத்தின் வழியாய்" என்னும் சொற்றொடர் அவர்கள் எகிப்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டார்கள் என்றும் பொருள்படும் என்று சொல்லப்படுகிறது.

**10:3** அவர்கள் **எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்**. இது மன்னாவைக் குறிக்கிறது. இஸ்ரவேல் மக்கள் பாலைவனத்தின் வழியாகப் பயணம் செய்தபோது அவர்களுக்கு அதிசயமான முறையில் அது வழங்கப்பட்டது. ஞானபோஜனம் என்று சொல்லப்பட்டிருப்பதால் அ.·.து உண்மையான பொருளல்ல என்று நினைக்கலாகாது. அது கண்களுக்குப் புலப்படாதது என்றோ உண்மையானதல்ல என்றோ நினைத்துவிடக் கூடாது. மாறாக, **ஞான** என்னும் சொல் அந்தத் திடப்பொருளாகிய உணவு, ஆவிக்குரிய ஊட்டத்திற்கு அடையாளமாக அல்லது படவுருமாக விளங்கியது என்னும் அர்த்தத்தையே தருகிறது. அந்த ஆவிக்குரிய உண்மையே நூலாசிரியரின் உள்ளத்தில் முதன்மை

யாக இருந்தது. இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் அவ்வுணவு கொடுக்கப்பட்டது என்பதையும் அச்சொல் வெளிப்படுத்துகிறது.

**10:4** அவர்களுடைய பயண காலம் முழுவதும், வியத்தகு வகையில் அவர்கள் குடிப்பதற்குத் தேவையான நீரை தேவன் தந்தருளினார். அது உண்மையான நீராக இருந்தபோதிலும் **ஞானபானம்** என்று இங்கு அழைக்கப்பட்டுள்ளது. ஆகவே அது நிழலாகவோ, ஆவிக்குரிய புத்துணர்ச்சியைக் கொடுக்கும் பொருளாகவோ அர்த்தம் கொள்ளும் வகையில் அப்பெயர் பெற்றது. அது வியத்தகு வகையில் அருளப்பட்டது என்பதையும் அச்சொல் குறிக்கிறது. அந்தத் தண்ணீரைக் கர்த்தர் கொடுக்காதிருந்திருப்பார் எனில், அவர்கள் இறந்துபோவதற்கான சூழ்நிலை பலமுறை ஏற்பட்டிருக்கும். **அவர்களோடே கூடச் சென்ற ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்** என்னும் வாக்கியம் எழுத்தின்படி பொருள்தருவதில்லை. திடப் பொருளாகிய கன்மலை அவர்களோடு பயணம் செய்தது என்று இங்கு பொருள் கொள்ளக்கூடாது. கன்மலை அதினின்று புறப்படுகிற ஆற்றைக் குறிக்கிறது. அது இஸ்ரவேல் மக்களைத் தொடர்ந்து சென்றது. **அந்தக் கன்மலை கிறிஸ்துவே**. அதாவது அவரே அதனைத் தந்தவர். அவரை அந்தக் கன்மலை குறிக்கிறது. அவரே தம் மக்களுக்கு ஜீவ தண்ணீரைத் தருகிறவர்.

**10:5** அவர்களுக்குச் சொந்தமான மேற்கூறிய வியத்தகு நற்பேறுகளை ஒவ்வொன்றாய்க் கணக்கிட்டு சொன்னபிறகு, இஸ்ரவேல் மக்களில் **அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்களுடைய சரீரங்கள் சிதறிக்கிடந்தன** என்று அப்போஸ்தலன் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுக்கு நினைவுபடுத்துகிறார். இஸ்ரவேல் மக்கள் எல்லோரும் எகிப்தைவிட்டு வெளியேறினார்கள்; அவர்கள் எல்லோரும் தங்களுடைய இருதயத்திலும் ஆத்துமாவிலும் தங்களுடைய தலைவனாகிய மோசேயுடன் ஒன்றிணைந்திருந்தார்கள். ஆனாலும், அவர்களுடைய சரீரங்கள் வனாந்தரத்தில் இருந்தபோதிலும், அவர்களுடைய இருதயங்கள் இன்னும் எகிப்திலேயே பின்தங்கி இருந்தன. பார்வோனுடைய அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் சரீரத்தில் விடுதலை பெற்றிருந்தார்கள். ஆனால் இன்னும் அந்த நாட்டின் பாவ இன்பங்களை நாடி இச்சித்தார்கள். எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்பட்ட போர்வீரர்கள் யாவருக்குள்ளும், காலேப் மற்றும் யோசுவா என்னும் இருவர் மட்டுமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டைச் சென்றடைந்து, தங்கள் பரிசுப் பொருளை வென்றார்கள். மற்றவர்கள் எல்லோருடைய உயிரற்ற உடல்களும் **வனாந்தரத்தில்** விழுந்தன. தேவன் அவர்களிடத்தில் பிரியமாயிருக்கவில்லை என்பதை அது நமக்குத் தெரிவிக்கிறது.

முதல் நான்கு வசனங்களில் "எல்லாரும்" என்ற சொல்லும், ஐந்தாவது வசனத்தில் "அதிகமான பேர்" என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். அவர்கள் எல்லாரும் சிலாக்கியம் பெற்றவர்கள். ஆனால் அவர்களில் அதிகமான பேர் அழிந்துபோனார்கள். கோடட் என்பார் வியந்து கூறுகிறார்:

> தங்களைக் குறித்து மனநிறைவு கொண்டிருந்த கொரிந்துப் பட்டணத்தாரின் கண்களுக்கு முன்பாக அப்போஸ்தலன் எத்தகைய காட்சிப் பொருளைக் கொண்டுவந்து நிறுத்துகிறார்: வியத்தகு உணவினாலும் பானத்தினாலும் தெவிட்டிய நிலையை அடைந்த உடல்கள் பாலைவன மணலில் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்தன![34]

**10:6** எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் குடிபெயர்ந்தபோது நடந்த நிகழ்ச்சிகளில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பல பாடங்களைக் காணலாம். இஸ்ரவேல் மக்கள் உண்மையாகவே நமக்குத் **திருஷ்டாந்தங்களாக** இருந்தார்கள். **அவர்கள் இச்சித்தது போல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சித்தால்**, நமக்கு என்ன நடக்கும் என்பதை அவர்கள் காண்பித்தார்கள். பழைய ஏற்பாட்டு நூலை நாம் படிக்கும்போது, ஏதோ வரலாற்று நூலைப் படிக்கிறோம் என்னும் வகையில் படிக்கக்கூடாது. மாறாக இன்றைய நாட்களில் நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த பாடங்கள் இருக்கின்றன என்று ணர்ந்து நாம் அதனைப் படிக்க வேண்டும்.

தொடர்ந்து வருகிற வசனங்களில், அவர்கள் எந்தெந்தப் பாவங்களில் வீழ்ந்து போனார்கள் என்று குறிப்பிட்ட சில பாவங்களை அப்போஸ்தலன் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இந்தப் பாவங்களில் பெரும்பாலானவை சரீரத்தில் உண்டாகும் வேட்கைகளை நிறைவு செய்யக்கூடியவை என்பதைக் கவனிப்பது தகுதியானதாகும்.

**10:7** யாத்திராகமம் 32 -ஆவது அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள பொற்கன்றைத் தொழுது

கொள்ளுதல், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கொண்டாட்டம் ஆகிய நிகழ்ச்சிகள் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. சீனாய் மலையிலிருந்து மோசே இறங்கிவந்தபோது, மக்கள் பொன் கன்றை உண்டுபண்ணியிருந்ததையும், அவர்கள் அதைத் தொழுதுகொண்டதையும் கண்டார். யாத்திராகமம் 32:6 -இல் எவ்வாறு **ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட அதாவது, நடனமாட எழுந்திருந்தார்கள்** என்று வாசிக்கிறோம்.

**10:8** மோவாபியப் பெண்களை இஸ்ரவேல் ஆண்மக்கள் கலப்புத்திருமணம் செய்துகொண்ட பாவம் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (எண். 25). பீலேயாம் என்னும் தீர்க்கதரிசியினால் மயக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் கர்த்தருடைய சொற்களுக்குக் கீழ்ப்படியாமல் ஒழுக்கக்கேட்டில் வீழ்ந்துபோனார்கள். இந்த வசனத்தில் **ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் விழுந்து போனார்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில், இருபத்து நாலாயிரம்பேர் அந்த வாதையால் செத்தார்கள் என்று வாசிக்கிறோம் (எண். 25:9). புனித வேதத்தில் முரண்டுபாடுகள் உள்ளன என்று சொல்லுவதற்கு, குறைகூறுவோர் இந்த வசனத்தைப் பயன்படுத்துவதுண்டு. அவர்கள் இந்தப் பகுதிகளைக் கவனத்தோடு படிப்பார்கள் என்றால் இங்கு முரண்பாடு இல்லையென்பதை அறிந்து கொள்வார்கள். இங்கு *ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் விழுந்து போனார்கள்* என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. *அந்த வாதையில் செத்தவர்களுடைய* மொத்த எண்ணிக்கை *இருபத்து நாலாயிரம்* என்று பழைய ஏற்பாடு கூறுகிறது.

**10:9** உணவைக் குறித்து குறைகூறி, கர்த்தருடைய தயவைப் பற்றிய ஐயத்தை இஸ்ரவேலர் எழுப்பிய நிகழ்ச்சியை இங்கு பவுல் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். அப்பொழுது தேவன் அவர்களுக்குள்ளாகப் **பாம்புகளை** அனுப்பியதால் பலர் அழிக்கப்பட்டார்கள் (எண். 21:5,6). இங்கு மீண்டும் உணவினால் உண்டான திருப்தி அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

**10:10** இங்கு கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோருடைய பாவம் குறிப்பிடப்பட்டுள்ளது (எண். 16:14-47). மீண்டும் உணவு குறைகூறுதலுக்குக் காணரமாயிற்று (எண். 16:14). இஸ்ரவேலர் தங்களுடைய சரீரங்களைக் கட்டுப்படுத்தவில்லை. அவர்கள் தங்கள் சரீரங்களைத் தற்கட்டுப்பாட்டு ஒழுங்குக்குள் வைத்துக் கொள்ளவுமில்லை, கீழ்ப்படுத்தவுமில்லை. மாறாக, மாம்சத்தின் இச்சைகளுக்கு அவர்கள் இடங்கொடுத்தார்கள். அது அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

**10:11** தொடர்ந்து வருகின்ற மூன்று வசனங்களில் அந்த நிகழ்ச்சிகளில் காணப்படும் வாழ்க்கைக்குத் தேவையான நடைமுறைப் பாடங்களை பவுல் எழுதித் தருகிறார். முதலாவதாக, இந்த நிகழ்ச்சிகளின் பொருள் வெறுமனே வரலாற்று முக்கியத்துவம் உடையது மட்டும் அல்ல, இன்றைய நாட்களுக்கும் அது முக்கியத்தும் வாய்ந்தது என்பதாகும். அவை நமக்கு, அதாவது யூதருடைய காலம் முடிவடைந்து நற்செய்தியின் காலத்தில் வாழ்கிற மக்களுக்கு **எச்சரிப்பாக எழுதப்பட்டுள்ளன.** ரெண்டால் ஹாரிஸ் இதனை, "முந்தின காலங்களின் சொத்தைப் பெற்றிருக்கிற நமக்கு, எச்சரிப்பும் பரம்பரைச் சொத்தாகக் கொடுக்கப்பட்டுள்ளது" என்று மொழிந்துள்ளார்.

**10:12** தன்னம்பிக்கைக்கு எதிரான எச்சரிப்பாக அவர்கள் விளங்கினார்கள். **தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்**. இந்த வாக்கியம் பெரும்பாலும், தனது சுய மனநிறைவையே இலக்காகக் கொண்டு பொழுதுபோக்குச் செயல்களில் ஈடுபட்டும் வீழ்ந்து போவதில்லை என்று எண்ணுகிற பலமுள்ள விசுவாசியையே குறிக்கிறது எனலாம். அப்படிப்பட்ட மனிதன் தேவனுடைய சிட்சிக்கிற கரத்தினால் விழுந்து போகக்கூடிய பெரிதான ஆபத்திற்குள் இருக்கிறான்.

**10:13** எனினும் சோதனைக்குட்படுகிற மனிதர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடிய வியத்தகு வார்த்தையைப் பவுல் இங்கு கூட்டி வழங்குகிறார். நாம் சந்திக்கிற பரீட்சைகள், கடுந்துன்பங்கள் மற்றும் சோதனைகள் யாவும் எல்லாருக்கும் பொதுவானவை என்று அவர் கற்பிக்கிறார். ஆயினும் **தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்;** ஆகவே அவர் நம்முடைய **திராணிக்கு மேலாக** நாம் **சோதிக்கப்படுவதற்கு** இடங்கொடுப்பதில்லை. நம்மைச் சோதனைகளிலிருந்தும் பரீட்சைகளிலிருந்தும் விடுதலை பண்ணுவதாக அவர் கூறவில்லை. ஆனால் அவற்றின் கடுமையை ஓர் எல்லைக்குள் வைத்திருக்கப் போவதாக வாக்குறுதி தந்திருக்கிறார். மேலும் அவர் **சோதனையைத் தாங்குவதற்குரிய வலிமையையும் அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும்** உண்டாக்குவதாகக் கூறியுள்ளார்.

கடந்த நூற்றாண்டுகளில், சோதனைகளைச் சகித்த தேவனுடைய பரிசுத்தவான்கள் இந்த வசனத்தினால் பெற்ற ஆறுதலை நினைத்து, இத னைப் படிக்கும் ஒவ்வொருவரும் தொடப்படுவார் கள் என்பது திண்ணம். விசுவாசிக்கும் இளைஞர் இதனைத் தங்களுடைய உயிர்காக்கும் மிதவைப் பொருளாக எண்ணிப் பற்றிக்கொள்கிறார்கள். வயது முதிர்ந்த விசுவாசிகள், ஒரு தலையணை மீது சாய்ந்து இளைப்பாறுவதுபோல இவ்வசனத் தில் இளைப்பாறுகிறார்கள். இந்நிருபத்தின் வாசகர் சிலர், சிலை வணக்கத்திற்குச் திரும்பிச் செல்லுவதற்கான கடுமையான சோதனைக்குள் உட்பட்டிருந்திருக்கக் கூடும். அவர்களுடைய வாழ்க்கையில் தாங்கக்கூடாத அளவிற்குச் சோதனைகள் வருவதற்கு தேவன் இடங்கொடார் என்று இங்கு பவுல் அவர்களுக்கு ஆறுதல் கூறி யிருக்கிறார். அதே நேரத்தில் அவர்கள் தாங்க ளாகவே சோதனைகளை வரவழைத்துக் கொள் ளக் கூடாது என்று எச்சரிக்கப்படவும் வேண்டியதா யிருந்தது.

**10:14** இந்தப் பதினாலாம் வசனம் முதல் அடுத்த அதிகாரத்தின் முதல் வசனம் வரையிலான வேத பகுதி சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுப் பொருட்களை உண்பது பற்றி மிகக் குறிப்பிடத் தக்க வகையில் மீண்டும் விளக்கம் அளிக்கிறது. முதலாவதாக, உருவ வழிபாட்டுக் கோயில் களில் நடைபெறும் விருந்துகளில் விசுவாசிகள் கலந்துகொள்ளலாமா என்னும் கேள்வியைப் பவுல் எடுத்துக்கொள்கிறார் (வச. 14-22).

**ஆகையால், எனக்குப் பிரியமானவர்களே, விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள்.** உருவ வழிபாட்டுக் கோயில்களில் ஏதாவது ஒன்றில் நடைபெறும் விருந்தில் கலந்துகொள்ளும்படி கொரிந்துப்பட்டணத்து விசுவாசிகள் அழைக்கப் பட்டிருக்கக் கூடும். இ.ந்து உண்மையாகவே அவர்களுக்கு ஏற்பட்ட சோதனையாகும். தாங்கள் சோதனைக்கு அப்பாற்பட்டவர்கள் என்று சிலர் நினைத்தார்கள். ஒரு தடவை அவ்வாறு செல்வது நிச்சயமாகத் தங்களைப் பாதிக்காது என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆவியானவரால் ஏவப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அப் போஸ்தல ஆலோசனை, **விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள்** என்பதாகும். அதனைக் குறித்து நன்கு ஆராய்ந்து படிக்க வேண்டும் என்றோ, அத னோடு நன்கு அறிமுகமாக வேண்டும் என்றோ, அதனோடு சற்று விளையாடிப் பார்க்கலாம் என்றோ அவர் இங்கு கற்பிக்கவில்லை. அதனை விட்டு எதிர்த்திசையில் ஓடவேண்டும் என்றே அவர் அவர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

**10:15,16** தான் சொல்லுகிறவற்றை எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய புத்திசாலிகளுடன் உரை யாடுவதைப் பவுல் அறிந்திருந்தார். 16 -ஆம் வசனத்தில் கர்த்தருடைய பந்தியைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார். முதலாவதாக அவர், **"நாம் ஆசீர் வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்து வினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிற தல்லவா?"** என்று கூறுகிறார். **ஆசீர்வாதத்தின் பாத்திரம்** என்பது கர்த்தருடைய பந்தியில் நாம் பயன்படுத்துகிற திராட்சைப்பழப் பிழிவின் **பாத் திரத்தையே** குறிக்கிறது. கிறிஸ்துவின் மரணத் தின் மூலமாக நாம் பெறுகிற பெரிதான **ஆசீர் வாதத்தைப் பற்றியே பாத்திரம்** பேசுகிறது. ஆகவே அது **ஆசீர்வாதத்தின் பாத்திரம்** என்றழைக்கப்படுகிறது. **நாம் ஆசீர்வதிக்கிற** என்னும் சொற்றொடர் "அதற்காக நாம் செலுத்து கிற நன்றியறிக்கை" என்று பொருள்படும். அந்தப் பாத்திரத்தை எடுத்து நம்முடைய உதடுகளுக் கிடையே வைக்கும்போது, கிறிஸ்துவின் இரத்தத் தால் பாய்ந்து வருகிற நன்மைகள் யாவற்றிலும் பங்குபெறுகிறவர்களாக நாம் இருக்கிறோம் என்னும் பொருள்படப் பேசுகிறோம். ஆகவே இந்த வசனத்தைக் கீழ்க்கண்டவாறு பொழிப்புரை யாக நம்மால் வழங்கக்கூடும்:

> கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் வந் திருக்கிற பெரிதான ஆசிர்வாதங்களைக் குறித்து இந்தப் பாத்திரம் பேசுகிறது. இந்தப் பாத்திரத்திற் காகவே நாங்கள் நன்றி செலுத்துகிறோம். கிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகிற நன்மைகளில் அனைத்து விசுவாசிகளும் பங்கடைகிறார்கள் என்ற உண்மைக்கு இது சான்றாக இருக்கிறதேயல்லாமல் வேறென்ன?

நாம் பிட்கிற அப்பமும், ஐக்கியத்தின் அப்ப மாக விளங்கி இதே உண்மைக்குச் சான்றாகத் திகழ்கிறது. கல்வாரியில் ஊன்றப்பட்ட சிலுவை யில் அறையுண்ட அவருடைய சரீரமாகிய பலி யின் மூலமாக நாம் யாவரும் இரட்சிக்கப்பட்டிருக் கிறோம் என்றும், அதன் விளைவாக நாம் அவரு டைய சரீரத்தின் அவயவங்களாக இருக்கிறோம் என்றும் அந்த அப்பத்தை உண்ணும்போது கூறு கிறவர்களாகக் காணப்படுகிறோம். சுருங்கக் கூறின் அந்தப் பாத்திரமும் அந்த அப்பமும் கிறிஸ்து வோடு நாம் ஐக்கியம் கொண்டிருக்கிறோம் என்பதையும் அவர் நமக்காக ஆற்றிய மகிமை

நிறைந்த ஊழியத்தில் நாம் பங்கு பெறுகிறவர் களாக இருக்கிறோம் என்பதையும் பறைசாற்று கின்றன.

கர்த்தருடைய பந்தி நிறுவப்பட்டபோது அப்பமே முதலாவது குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால் இங்கு இரத்தத்தைக் குறிக்கும் பாத்திரம் முதலில் குறிப் பிடப்பட்டுள்ளதன் காரணம் என்ன என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. ஒருவர் கிறிஸ்தவ விசுவாசத் துக்குள்ளாக வருகிறபோது நடைபெறுகிற நிகழ்ச்சிகளின் வரிசை முறையைப் பற்றி பவுல் இங்கு பேசுகிறார் என்பதே அதற்கு நாம் கொடுக் கக்கூடிய விடையாக இருக்கிறது. பொதுவாக, புதிதாக மனந்திரும்பிய விசுவாசி ஒரே சரீரம் என்னும் சத்தியத்தை அறிந்துகொள்வதற்கு முன்னர் கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்துப் புரிந்துகொள்கிறார். ஆகவே இந்த வசனம் நம்மு டைய இரட்சிப்பைக் குறித்த உண்மைகளை நாம் அறிந்துகொண்டிருக்கிற வரிசை முறையில் கூறுகிறது எனலாம்.

**10:17** எல்லா விசுவாசிகளும் பலராயிருந்த போதிலும் **கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக் கிறார்கள்**. அ.·.து **ஒரே அப்பத்தினால்** பிரதிபலித் துக் காட்டப்படுகிறது. கிறிஸ்துவின் சரீரம் ஒப்புக் கொடுக்கப்பட்டதால் பாய்ந்து வரும் நன்மை களில் யாவரும் ஐக்கியம் கொண்டிருக்கிறார்கள் என்னும் பொருளில் **ஒரே அப்பத்தில் பங்கு பெறுகிறோம்** என்று சொல்லப்பட்டுள்ளது.

**10:18** கர்த்தருடைய மேஜையில் உண்ணு வதால் அவரோடு நாம் ஐக்கியம் கொண்டிருக் கிறோம் என்று இந்த வசனங்களில் பவுல் கூறு கிறார். **பலிகளைப் புசித்த** இஸ்ரவேலரைப் பொருத்தமட்டில் இந்தச் சத்தியம் உண்மையா யிருந்தது. அதாவது, அவர்கள் **பலிபீடத்தோடு** ஐக்கியம் கொண்டிருந்தார்கள் என்பது இதன் பொருளாகும். சமாதான பலியே இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது என்பதில் ஐயமேதுமில்லை. பலியில் ஒரு பங்கு பலிபீடத்தில் சுட்டு சாம்பலாக்கப்பட் டது. மற்றொரு பங்கு ஆசாரியருக்காக ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆனால் மூன்றாவது பங்கு பலி செலுத்தியவரையும் அவருடைய உற்றாரையும் சாரும். அவர்கள் அதே நாளில் அந்த பலியை உண்டார்கள். அவ்வாறு பலிகளைப் புசித்தவர் யாவரும் தேவனோடும், இஸ்ரவேல் நாட்டோடும் ஒன்றிணைந்து ஐக்கியப்பட்டார்கள் என்று இங்கு பவுல் வலியுறுத்திக் கூறுகிறார். சுருங்கக் கூறின் அந்தப் பலிபீடம் யாரையெல்லாம் குறித்துப் பேசி யதோ அவர்களுடன் பலிசெலுத்தியவர் ஐக்கியம் பெற்றார்.

இப்பொழுது நாம் கற்றுவருகிற வேதபகுதி யோடு மேற்கூறிய உண்மை எவ்வாறு பொருந்து கிறது? இதனுடைய விடை மிகவும் எளிமை யானது. கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவது கர்த்தரோடு ஐக்கியம் பெற்றிருப்பதைக் கூறு கிறது: சமாதான பலியில் பங்கு பெற்ற இஸ்ர வேலர் யெகோவாவின் பலிபீடத்தோடு ஐக்கியம் கொண்டிருந்தனர். அதுபோலவே சிலை வணக் கத்தின்போது கோவில்களில் கொடுக்கப்பட்ட விருந்தில் பங்கு பெறுகிறவர்கள் அந்தச் சிலை யோடு தங்களை இணைத்துக்கொள்கிறார்கள்.

**10:19 இப்படியிருக்க, விக்கிரகம் ஒரு பொரு ளென்றும், விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு பொருளென்றும் நான் சொல்லுகிறேனோ?** சிலைகளுக்குப் படைக்கப்பட்ட உணவுப்பொருட் களின் பண்பும் குணமும் மாற்றமடைகின்றன என்று பவுல் இங்கு கூறுகிறாரா? அல்லது விக்கிர கம் உண்மையானது என்று அவர் கூறுகிறாரா? அதாவது அவ்வுருவத்தால் கேட்கவும் காணவும் முடியுமென்றும் அதற்கு வல்லமை உண்டென் றும் அவர் இங்கு சொல்லுகிறாரா? இவ்விரண்டு கேள்விகளுக்கும் "இல்லை" என்பதே விடை என்பதில் ஐயமில்லை.

**10:20 புறவினத்தார் பேய்களுக்கே பலியிடு கிறார்கள்** என்று இங்கே பவுல் வலியுறுத்திக் கூறவிரும்புகிறார். ஏதோ விநோதமானதும் மர்ம மானதுமான முறையில் சிலை வணக்கம் பேய் களோடு தொடர்புடையதாயிருக்கிறது. சிலை களைப் பயன்படுத்தி, பேய்கள் அவற்றைத் தொழுது கொள்கிறவர்களுடைய இருதயங்களையும் உள்ளங்களையும் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்கின்றன. சாத்தானாகிய ஒரே பிசாசும் அவ னுக்குக் கீழே பல பேய்கள், அவனுடைய தூதர் களாகவும் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றன. **"நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை"** என்று பவுல் இங்கு சேர்த்து உரைக்கிறார்.

**10:21 நீங்கள் கர்த்தருடைய பாத்திரத் திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும், பேய்களுடைய போஜன பந்திக்கும் (மேஜை) பங்குள்ளவர்களாயிருக் கக் கூடாதே.** இங்கு கிறிஸ்துவின் மூலமாக நாம் பெற்றிருக்கிற நன்மைகளே **கர்த்தருடைய**

**பாத்திரம்** என்று உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இ.ந்.து ஆகுபெயர் என்னும் இலக்கண வகையைச் சார்ந்தது. இதில் பாத்திரமானது பாத்திரத்தில் உள்ளதைக் குறிக்கிறது. இதுபோலவே **கர்த்தருடைய போஜனபந்தியும்** (மேஜை) ஓர் உருவகமாகும். இது கர்த்தருடைய பந்தியை உள்ளடக்கியதாயிருந்தாலும், அதனைப் போன்றதன்று. மேஜை உணவுப்பொருட்கள் வைக்கப்படுவதற்கும், உணவருந்தி ஐக்கியம் கொள்வதற்கும் பயன்படுகிற பொருளாகும். ஆகவே கர்த்தருடைய மேஜை என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது, கிறிஸ்துவுக்குள்ளாக நாம் அனுபவிக்கிற அனைத்து நன்மையுமாகும்.

**நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக் கூடாதே. நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் (மேஜை) பேய்களுடைய போஜனபந்திக்கும் (மேஜை) பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே** என்று இங்கு பவுல் கூறியிருப்பது, உண்மையிலேயே நடைமுறையில் முடியாத செயலல்ல. அது நடைமுறையில் நிகழக்கூடியதே. எடுத்துக்காட்டாக, ஒரு விசுவாசி உருவ வழிபாட்டுக் கோவிலுக்குள் சென்று, அங்கு நடைபெறும் பண்டிகை விருந்தில் கலந்துகொள்ள முடியும். ஆனால் அது சரியா தவறா என்று ஆராயும்போது ஒவ்வாததாகக் காணப்படும். கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையுள்ளவராகவும் அவரிடத்தில் உறுதியான பற்றுடையவராகவும் இருப்போம் என்று சொல்லியும், உருவ வழிபாடு செய்கிறவர்களோடு அவர்கள் படைக்கிறவற்றில் ஐக்கியம் கொள்கிற செயல் நம்பிக்கைத் துரோகமும் உண்மையற்ற தன்மையுமாகவே கருதப்படும். சரியா தவறா என்று பார்க்கும்போது அது நேர்மையற்றதும் முற்றிலும் தவறானதுமாகவும் இருக்கும்.

**10:22** அதுமட்டுமல்லாமல், **கர்த்தருக்கு எரிச்சலை மூட்டாமல்** இதனைச் செய்வது கூடாதசெயல். இதனைத் திருவாளர் வில்லியம் கெல்லி விளக்குகிறார், "பாசம் நெறிதவறிப் போகும்போது அதைக் காணும் அன்பு எரிச்சல் அடைவதைத் தவிர வேறென்ன செய்யும். உண்மையற்ற தன்மையைக் கண்டு சினம் அடையவில்லையென்றால் அதனை அன்பு என்று சொல்ல முடியாது."[35] கர்த்தருக்குப் பிரியமற்ற முறையில் நடந்துகொள்வதும் அவருடைய நீதியான சீற்றத்தைத் தூண்டிவிடுவதுமான செயல்களைச் செய்வதற்குக் கிறிஸ்தவர்கள் பயப்பட வேண்டும். **அவரிலும் நாம் பலவான்கள்** என்று நினைக்கிறோமா? அதாவது, அவருடைய உள்ளத்தைப் புண்படுத்தி, நம்மீது அவர் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியான ஆபத்தான நிலைக்கு நான் துணிந்து ஆளாகலாமா?

**10:23** சிலைகளுக்கு ஏறெடுக்கப்பட்ட பண்டிகை விருந்துகளில் கலந்துகொள்வதைப் பற்றி விளக்கமளித்து வந்த அப்போஸ்தலன், கிறிஸ்தவர்கள் தங்களுடைய அனுதின வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டிய சில பொதுவான கோட்பாடுகளை நோக்கித் திரும்புகிறார். எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு என்று அவர் குறிப்பிடும்போது, வரம்பெதுவும் இல்லாமல் எல்லாவற்றையும் உள்ளடக்கிய பொருளில் அவர் பேசவில்லை. எடுத்துக்காட்டாக, அவருக்குக் கொலை செய்வதற்கோ மது அருந்துவதற்கோ அதிகாரம் உண்டென்று ஒரு நொடிப்பொழுதுகூட அவர் எண்ணிப்பார்க்கவில்லை. இங்கும் சரியா தவறா என்று நிர்ணயிக்க முடியாத செயல்களையே, எல்லாவற்றையும் என்னும் சொல் குறிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். கிறிஸ்தவ வாழ்க்கையில் பற்பல செயல்கள் தம்மில்தாமே எந்தத் தவறுமில்லாத நிலையில் செய்யப்படுவதற்கு நேர்மையானவையாக இருக்கின்றன. ஆயினும் பிற காரணங்களின் நிமித்தம் அவற்றில் கிறிஸ்தவர்கள் கலந்துகொள்ளாமல் இருப்பது ஞான முடைய செயலாகும். ஆகவேதான், "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது" என்று பவுல் கூறுகிறார். எடுத்துக்காட்டாக, ஒரு விசுவாசி செயல் ஒன்றைச் செய்வதற்குப் பூரண அதிகாரம் உடையவனாயிருக்க முடியும்; ஆயினும் அவன் குடியிருக்கிற நாட்டின் பழக்க வழக்கங்களின்படி அது முற்றிலும் ஞானமற்ற செயலாகக் காணப்படும். அதுபோலவே செய்வதற்கு அதிகாரமுடைய செயல்கள் பக்திவிருத்தியை உண்டுபண்ணுவதில்லை. அதாவது ஒரு செயல் சகோதரன் ஒருவனுடைய மகா பரிசுத்த விசுவாசம் கட்டப்படுவதற்கு ஏற்புடையதாக இல்லாதிருக்கலாம். ஆகவே என்னுடைய உரிமையை நிலைநிறுத்தும்படி நான் ஆணவத்துடன் செயல்புரிவது சரியா அல்லது கிறிஸ்துவுக்குள்ளான என்னுடைய சகோதரனுடைய நன்மையைக் கருத்திற்கொள்வது சரியா?

**10:24** நாம் எடுக்கிற தீர்மானங்கள் எல்லாவற்றிலும், அவை நமக்கு என்ன பயன்களை உண்டாக்கும் என்று தன்னலத்தோடு சிந்திக்காமல்,

நம்முடைய அயலகத்தாருக்கு என்ன பயனை உண்டாக்கும் என்று சிந்திக்கக்கடவோம். நாம் உடுத்தும் உடை, உணவு, அருந்துகிற பானம், வாழ்க்கைத்தரம், நாம் கலந்துகொள்கிற பொழுது போக்குகள் யாவற்றிலும், இப்பொழுது நாம் கற்றுவருகிற பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற கோட்பாடுகளைக் கைக்கொள்ள வேண்டும்.

**10:25** விசுவாசி ஒருவன் இறைச்சி வாங்க கடைக்குச் செல்கிறான். அங்கே கடைக்காரனிடத்தில், அந்த இறைச்சி முன்னதாக விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதா என்று கேட்க வேண்டிய அவசியமில்லை. எந்த விதத்திலும் அந்த இறைச்சி பாதிக்கப்பட்டிருக்காது. ஆகவே கிறிஸ்துவுக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா என்ற கேள்வி அங்கே எழுகிறதில்லை.

**10:26** இந்த அறிவுரையைக் கூறுமிடத்து பவுல் சங்கீதம் 24:1 -ஆம் வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்: **"பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது."** நாம் உண்ணுகிற உணவு நமக்காக தேவனால் கிருபையாக அருளப்பட்டதாகும். மேலும் நம்முடைய பயன்பாட்டிற்கென்று சிறப்பாக வழங்கப்பட்டதுமாகும். இருபத்து நாலாவது சங்கீதத்தின் இந்த வசனம், யூதர்கள் உணவு உண்ணுவதற்குமுன் ஏறெடுக்கிற நன்றியில் பொதுவாகச் சொல்லக்கூடியது என்று ஹெய்ன்ரிசி என்பார் கூறுகிறார்.

**10:27** விசுவாசி கேள்வி எழுப்பக்கூடிய வேறொரு சூழ்நிலையை இப்பொழுது பவுல் எடுத்துக்கொள்கிறார். ஒரு **அவிசுவாசி, விசுவாசி** ஒருவரை விருந்துக்கு அழைக்கிறார் எனக்கொள்வோம். கிறிஸ்தவர் அந்த அழைப்பைத் தாராளமாக ஏற்றுக்கொள்ளலாமா? ஆம். நீங்கள் அவிசுவாசி ஒருவருடைய இல்லத்திற்கு அழைக்கப்படும் போது, அங்கு செல்ல விருப்பம் உடையவராக இருந்தால், **மனச்சாட்சியின் நிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசிக்க** நீங்கள் விடுதலை பெற்றிருக்கிறீர்கள்.

**10:28** அவ்வாறு நீங்கள் உணவு அருந்தும் வேளையில், அங்கிருக்கிற வேறொரு பலவீன முள்ள மனச்சாட்சி உடைய கிறிஸ்தவர், உங்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற இறைச்சி முன்னர் சிலைகளுக்குப் படைக்கப்பட்டது என்று கூறுவாரானால், அதனை நீங்கள் உண்ணலாமா? கூடாது. அதனை நீங்கள் உண்ணலாகாது. அவ்வாறு உண்ணுவதால் அவருடைய மனச்சாட்சி புண்படுத்தப்பட்டு அவர் இடறுவதற்குக் காரணமாகி விடும். ஒருவேளை அவிசுவாசியான ஒருவர் கர்த்தரை ஏற்றுக்கொள்வதற்கு அது தடையுண்டாக்குமெனினும் நீங்கள் அதை உண்ணக்கூடாது. இந்த வசனத்தின் இறுதியில் மீண்டும் சங்கீதம் 24:1 மேற்கோள் காட்டப்பட்டுள்ளது: "பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது"[36]

**10:29** ***உங்களுடைய சொந்த மனச்சாட்சியின்*** காரணமாக, மேற்கூறிய சூழ்நிலையில் நீங்கள் உண்ணாமலிருக்கத் தடை ஏற்படாது. விசுவாசி என்னும் அடிப்படையில் அந்த இறைச்சியை உண்ண உங்களுக்கு முழு விடுதலையுண்டு. ஆனால் உங்கள் அருகில் அமர்ந்திருக்கும் பலவீனமான சகோதரனுடைய மனதில் இடறல் ஏற்படும் என்னும் காரணத்தால், அவருடைய **மனச்சாட்சிக்கு** மதிப்பளிக்கும் வகையில் அவ்வுணவை நீங்கள் உண்ணமாட்டீர்கள்.

**"என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்பட வேண்டுவதென்ன?"** என்னும் கேள்வியைக் கீழ்க்காணும் வண்ணம் பொழிப்புரையாகத் தரலாம்:

> அந்த உணவை உண்ணுவதற்கான சுதந்தரத்தை என்னுடைய தன்னல நடத்தையால் காட்சிப் பொருளாக்கி, பிறருடைய மனச்சாட்சியால் குற்றவாளியாக நான் ஏன் காணப்பட வேண்டும்? என்னுடைய சுதந்தரத்தை வெளிக்காட்டி ஏன் அந்த மனிதனுடைய மனச்சாட்சியினாலே குற்றப்படுத்தப்படவேண்டும்? என்னுடைய நன்மை தூஷிக்கப்பட நான் ஏன் இடங்கொடுக்க வேண்டும்? (ரோமர் 14:16 -ஐக் காண்க).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளான உடன் சகோதரன் ஒருவருடைய உள்ளம் புண்படுத்தப்படும் அளவிற்கு ஓர் இறைச்சித் துண்டு முக்கியமானதா? (ஆயினும், பெரும்பாலான விரிவுரையாளர்கள், கொரிந்துப் பட்டணத்தார் எழுப்பக்கூடிய எதிர்க்கேள்வியையே பவுல் இங்கு தனது சொல்லாட்சித் திறனால் முன்மொழிந்து அதற்குரிய விடையைத் தொடர்ந்து வருகிற வசனங்களில் தருகிறார் என்று விளக்கமளித்துள்ளார்கள்.)

**10:30** ஒருபுறம் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்திவிட்டு அவ்வுணவை உண்ணுகிறோம்; மறுபுறம் அதனை உண்ணுவதால் ஒரு சகோதரனைப் புண்படுத்துகிறோம். இவை இரண்டும்

முற்றிலும் முரண்பாடாகத் தோன்றுகின்றன என்று இங்கு அப்போஸ்தலன் கூறுவதாகத் தோன்றுகிறது. பிறர் உங்களைத் **தூஷிக்கக்** காரணமான ஒருபொருள், உங்களால் அனுபவிக்கப்பட சட்டபூர்வமான உரிமை இருந்தபோதிலும், அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவதைக் காட்டிலும் அப்பொருளைத் தவிர்ப்பது நல்லது. இதனை வில்லியம் கெல்லி இவ்வாறு விளக்குகிறார்: "ஒருவர் தன்னுடைய சுதந்தரத்தால் மற்றொருவரால் குற்றப்படுத்தப்படுவதற்கு இடங்கொடுப்பதைக் காட்டிலும், சுயத்தை மறுப்பது சிறந்தது. ஒரு பொருளுக்காக நன்றி செலுத்தித் தூஷிக்கப்படுவதைக் காட்டிலும், அப்பொருளை மறுப்பது சிறந்தது." பிறருள்ளத்தைப் புண்படுத்தி நம்முடைய சுதந்தரத்தை அனுபவிக்க வேண்டுமோ? நன்றிசெலுத்தி, தவறான எண்ணம் ஏற்படவோ, தூய்மை குறையவோ, பழிச்சொல் ஏற்படவோ நான் ஏன் காரணமாக வேண்டும்?

**10:31** கிறிஸ்தவ வாழ்க்கையில் நம்மை வழிநடத்தக்கூடிய இரண்டு முக்கியமான விதிகள் உள்ளன. முதலாவது, **தேவனுடைய மகிமை**, இரண்டாவது நம்முடைய உடன் சகோதரருடைய நன்மை. பவுல் இங்கு முதலாவது விதியைக் கூறுகிறார்: **"ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்."** சில செயல்களைச் செய்வது சரியா தவறா என்ற கேள்வி கிறிஸ்தவ இளைஞரிடையே அவ்வப்போது எழுவதுண்டு. இங்கு கைக்கொள்வதற்கு நல்லதொரு வழிநடத்துதல் கொடுக்கப்பட்டுள்ளது. அதைச் செய்வதால் **தேவனுக்கு** ஏதாவது **மகிமை** உண்டாகுமா? நீங்கள் அச்செயலில் இறங்கும் முன்னர் உங்கள் தலையைத் தாழ்த்தி கர்த்தர் அதில் மகிமையடைய வேண்டும் என்று உங்களால் கேட்கமுடியுமா?

**10:32,33** இரண்டாவது விதி நம்முடைய உடன் மக்கள் அதன் மூலமாக நன்மை பெற வேண்டும். **யூதருக்கும் கிரேக்கருக்கும் தேவனுடைய சபைக்கும்** நாம் எவ்விதத்திலும் **இடறல் அற்றவர்களாயிருக்க** வேண்டும். இங்கே பவுல் எல்லா மனிதர்களையும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறார். யூதர்கள், இஸ்ரவேல் நாட்டைக் குறிக்கின்றார்கள். கிரேக்கர்கள் இரட்சிக்கப்படாத புறவினத்தாரைக் குறிக்கிறார்கள். தேவனுடைய சபையோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளான மெய்யான விசுவாசிகள் யாவரையும், அவர்கள் யூதராயினும், கிரேக்கராயினும் யாவரையும் உள்ளடக்கியதாகும். ஒரு பொருளில், நாம் பிறரிடம் உண்மையோடு சாட்சி கூறும்போது, அவர்களுடைய உள்ளங்களைப் புண்படுத்தி அவர்களுடைய கோபத்திற்கு ஆளாகிறோம். ஆனால் பவுல் அதைக் குறித்து இங்கு சொல்லவில்லை. இங்கு அப்போஸ்தலன் தேவையற்ற வகையில் இடறல் புரிவதையே குறிப்பிடுகிறார். நமதுரிமை என்று அதிகாரத்தோடு அனுபவித்து மற்றவர்களுக்கு இடறல் ஏற்படுத்துவதையே அவர் இங்கு குறிப்பிடுகிறார்.

தனது **சுய பிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடந்ததாகப்** பவுல் இங்கு நேர்மையாகக் கூறுகிறார். மகா அப்போஸ்தலனாகிய பவுலைப் போல தன்னலங் கருதாமல் பிறர் நலங்கருதி வாழ்ந்தவர்கள் ஒரு சிலரே ஆவார்கள்.

**11:1** பதினோராவது அதிகாரத்தின் முதல் வசனம் 10 -ஆவது அதிகாரத்துடன் அதிக தொடர்புடையதாகவே தோன்றுகிறது. தன்னுடைய செயல்கள் பிறரிடம் எவ்விதத் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது என்ற வெளிச்சத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்து அவற்றைக் கட்டுப்படுத்த முயற்சி செய்தவராக இருந்தார் என்று இதுகாறும் பேசிக்கொண்டிருந்தார். இப்பொழுது, அவர் **கிறிஸ்துவை** எவ்வாறு **பின்பற்றி** வந்தாரோ, **அதுபோல** அவர்கள் அவரைப் **பின்பற்ற** வேண்டும் என்று கொரிந்துப் பட்டணத்தாரிடம் கூறுகிறார். அவரைச் சூழ இருந்தோரின் பயன் கருதி அவர் தன்னுடைய தனிப்பட்ட நன்மைகளையும் உரிமைகளையும் துறந்தார். கொரிந்துப்பட்டணத்தாரும் தாங்கள் பெற்றிருக்கிற விடுதலையை சுயநலத்தோடு காட்சிப்பொருளாக்கி கிறிஸ்துவின் நற்செய்திக்கு தடைஏற்படுத்தவோ பலவீனமான சகோதரரைப் புண்படுத்தவோ கூடாது.

### இ. பெண்கள் தலையில் முக்காடு இட்டுக் கொள்வது பற்றிய அறிவுரை (11:2-16)

பதினோராவது அதிகாரத்தின் இரண்டு முதல் பதினாறாம் வசனம் வரையிலான பகுதி பெண்கள் தலையில் முக்காடிட்டுக்கொள்வது பற்றிய பொருளோடு தொடர்புடையது ஆகும். இந்த அதிகாரத்தின் பிந்தைய பகுதி கர்த்தருடைய பந்தியை அவமதிப்பதைப் பற்றிய பொருளைக் குறித்ததாகும் (வச. 17-34). இந்த அதிகாரத்தின் முதல் பகுதி அதிக சர்ச்சைக்குரிய ஒன்றாக விளங்கி வருகிறது. இங்கு சொல்லப்பட்டிருக்கிற அறிவுரைகள்

பவுல் காலத்திற்கு மட்டுமே உரியது என்று சிலர் கருதுகிறார்கள். பெண்களுக்கு எதிராகப் பவுல் கொண்டிருந்த தவறான கருத்தின் அடிப்படையில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார் என்று சொல்லுமளவிற்குச் சிலர் சென்றுவிடுகிறார்கள். அவர் திருமணமாகாதவர் என்னும் காரணத்தினால் இவ்வாறு கூறியிருக்கிறார் என்று அவர்கள் கருதுகிறார்கள்! சிலரோ இங்கு கூறியிருக்கிற போதகங்களை அப்படியே *ஏற்றுக்கொண்டு* அவற்றைக் குறித்து முழு அறிவு இல்லாமலிருந்த போதிலும் கீழ்ப்படிய *நாடுகிறார்கள்*.

**11:2** கொரிந்துப் பட்டணத்தார் **எல்லாவற்றிலும்** அப்போஸ்தலனை நினைத்துக்கொள்கிறார்கள் என்றும், அவர் அவர்களுக்கு **ஒப்புவித்தபடி கட்டளைகளைக் கைக்கொண்டு** வருகிறார்கள் என்றும் கூறி அவர்களை முதலில் பாராட்டுகிறார். இங்கு **கட்டளைகள்** என்று சொல்லப்பட்டிருப்பவை பல ஆண்டுகளாக சபையில் நடைமுறைப்படுத்தப்பட்டு பழக்கவழக்கமாக மாறிப்போனவையல்ல. மாறாக, அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் கூறிய அறிவுரைகளே இங்கு கட்டளைகள் என்று சொல்லப்பட்டுள்ளன.

**11:3** பெண்கள் முக்காடிட்டுக்கொள்கிற பொருளை இங்கு பவுல் அறிமுகப்படுத்துகிறார். அவருடைய அறிவுரையின் பின்னணியில், ஒவ்வொரு சமுதாய அமைப்பும் இரண்டு தூண்களின்மேல் கட்டப்பட்டுள்ளன என்னும் உண்மை விளங்குகிறது. அவையாவன: அதிகாரம் மற்றும் அந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல். இவ்விரண்டு விதிகளும் கடைப்பிடிக்கப்படவில்லையெனில், அந்தச் சமுதாயம் நல்ல முறையில் செயல்பட முடியாது. அதிகாரத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் இடையேயுள்ள பெரிதான மூன்று உறவுகளைப் பவுல் இங்கு குறிப்பிடுகிறார். முதலாவது, ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார். கிறிஸ்து ஆண்டவராகவும், ஆண்மகன் அவருக்குக் கீழ்ப்பட்டவனாகவும் இருக்கிறார்கள். இரண்டாவது, **ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறான்**, தலைமைத்துவம் ஆணுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண் அவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறாள். மூன்றாவது, **கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார்**. தேவ தலைமையிலும் கூட ஒரு நபர் ஆளுகைக்குரிய இடத்தைப் பெற்றிருக்கிறார். மற்றொருவர் மனமுவந்து கீழ்ப்படியும் இடத்தை எடுத்துக்கொள்கிறார். தலைமைத்துவம் கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்கான எடுத்துக்காட்டுகள் தேவன்தாமே வகுத்த அமைப்புகளாக இருக்கின்றன. மேலும் இவை பிரபஞ்சத்தின் ஒழுங்கு முறைக்கு அடிப்படையாக விளங்குகின்றன.

கீழ்ப்படிதல் என்பது தரத்தில் குறைவானது என்னும் பொருளைத் தருவதில்லை என்பதைத் தொடக்கத்திலேயே கூறவேண்டியது அவசியம். பிதாவாகிய தேவனுக்கு கிறிஸ்து கீழ்ப்பட்டிருந்தார். ஆனால் அவர் பிதாவைக் காட்டிலும் தரத்தில் குறைந்தவர் அல்லர். அதுபோலவே பெண்ணும் ஆணுக்குக் கீழ்ப்பட்டவளாயிருந்தபோதிலும், அவள் ஆணைக்காட்டிலும் தரத்தில் குறைந்தவள் அல்ல.

**11:4 ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொண்டிருக்கிற எந்தப் புருஷனும் தன் தலையை** அதாவது கிறிஸ்துவைக் **கனவீனப்படுத்துகிறான்**. அதாவது அந்த மனிதன் கிறிஸ்துவைத் தன் தலையாக அங்கிகரிக்கவில்லை என்பது அதன் பொருளாகும். இவ்வாறாக இச்செயல் மிகப்பெரிய அவமதிப்பாகக் காணப்படும்.

**11:5 ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையை,** அதாவது புருஷனைக் **கனவீனப்படுத்துகிறாள்**. புருஷனுக்கு தேவன் தந்திருக்கிற தலைமைத்துவத்தை அவள் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், அத்தலைமைப் பொறுப்பிற்குத் தான் கீழ்ப்படியப் போவதில்லை என்றும் அவள் கூறுவதாகவே அவளுடைய செயல் காணப்படும்.[37]

இந்தப் பொருள்பற்றி திருமறையில் இந்த ஒரு வசனம் மட்டுமே இருக்குமென்றால், தன் தலையை முக்காடிட்டுக்கொள்கிற பெண், சபையில் ஜெபம் பண்ணுவதும் தீர்க்கதரிசனம் உரைப்பதும் சரியென்றே கருதப்படும். ஆனால் வேறொரு இடத்தில், பெண்கள் சபையில் பேசாமலிருக்கக் கடவர்கள் என்று பவுல் கற்பிக்கிறார் (1 கொரி. 14:34). உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை; அவள் அமைதியாயிருக்க வேண்டும் (1 தீமோ. 2:12).

உண்மையில் சபைக் கூட்டங்களைப் பற்றி எதுவும் 17 -ஆம் வசனம் வரை ஆய்வுக்குக் கொண்டுவரப்படவில்லை. ஆகவே தலையில்

முக்காடிட்டுக் கொள்வது பற்றி 2 முதல் 16 வரை யிலான வசனங்கள் கூறுகிற அறிவுரைகள் சபைக்கூட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று எல்லைக்குட்படுத்திவிடக் கூடாது. எங் கெல்லாம் பெண் ஜெபம்பண்ணுகிறாளோ அல்லது தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறாளோ அங்கெல்லாம் இதனைக் கடைப்பிடிக்க வேண் டும். அவள் சபையில் அமைதியாக ஜெபம் பண்ணுகிறாள், ஏனெனில் வெளிப்படையாக ஆண்கள் மட்டுமே ஜெபம் பண்ணலாம் என்று 1 தீமோத்தேயு 2:8 -ஆம் வசனம் கட்டுப்படுத்து கிறது. மற்ற நேரங்களில் அவள் சத்தமாகவோ அமைதியாகவோ ஜெபம் பண்ணுகிறாள்.மற்ற பெண்களுக்கு உபதேசம் பண்ணுகையில் அவள் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறாள் (தீத்து 2:3-5). அல்லது சிறுபிள்ளைகளுக்கு ஞாயிறு வேதபாட வகுப்பில் அவள் தீர்க்கதரிசனம் உரைக்கிறாள்.

**11:6 ஸ்திரீயானவள் முக்காடிட்டுக்கொள்ளா விட்டால்** அவள் தன் தலைமுடியைக் கத்தரித் துப்போடக்கடவள்; **தலைமயிர் கத்தரிக்கப்படு கிறதும் சிரைக்கப்படுகிறதும்** அவளுக்கு **வெட்கமானால்** அவள் தன் தலைக்கு **முக் காடிட்டுக்கொள்ளக்கடவள்.** ஒரு பெண் தன் தலைக்கு முக்காடிட்டுக்கொள்ளாமலிருப்பது அவளுடைய தலைமுடி கத்தரிக்கப்படுதலுக்கு ஒப்பாகும். ஒரு சிகைத்தொழிலாளி அவ்வாறு செய்ய வேண்டுமென்று இங்கு அப்போஸ்தலன் கட்டளையிடவில்லை. மாறாக, மாற்றமில்லா ஒழுக்கநெறி என்ன கட்டளையிடுகிறது என்றே அவர் கூறுகிறார்!

**11:7** ஏழு முதல் பத்து வரையிலான வசனங் களில், படைப்பின் காலத்தைப் பின்நோக்கிய வராக, புருஷனுக்கு எவ்வாறு ஸ்திரீ கீழ்ப்பட் டவள் என்பதைப் பவுல் கற்பிக்கிறார். அப்போஸ் தலன் வாழ்ந்த காலத்தின் பண்பாட்டின்படி பெண் தலையை முக்காடிட்டுக்கொள்ளுதல் ஏற்புடைய தாயிருந்தது, ஆனால் இப்பொழுதோ அது நமக்குப் பொருந்தாது என்று கூறுகிற கருத்தை இது என்றென்றுக்குமாகப் புதைகுழியில் புதைத் துப்போடுகிறது. புருஷனின் தலைமைத்துவமும், பெண்ணின் கீழ்ப்படிதலும் தொடக்கத்திலிருந்தே தேவனுடைய ஒழுங்காக இருந்துவந்திருக்கிறது.

முதலாவதாக, **புருஷன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான்.** ஆனால் **ஸ்திரீயோ புருஷனுடைய மகிமையாயிருக் கிறாள்.** இப்புவியை ஆளுகை செய்யும்படி ஆண் தேவனுடைய பிரதிநிதியாக இங்கு வைக்கப்பட் டிருக்கிறான் என்பதே இதன் பொருளாகும். முக்காடிடாத ஆண் மகனின் தலை இவ்வுண் மைக்கு சான்று கூறும் அமைதியான எடுத்துக் காட்டு ஆகும். இத்தலைமைத்துவம் ஒருபோதும் பெண்ணுக்குக் கொடுக்கப்படவில்லை. இதற்குப் பதிலாக அவள் **புருஷனுடைய மகிமையாயிருக் கிறாள்**. "புருஷனுடைய அதிகாரத்திற்குச் சிறப்பு மிக்க வகையில் பெண் தன்னை ஒப்புவிக்கிறாள்" என்னும் பொருளில் அவள் காணப்படுகிறாள் என்று திருவாளர் W. E. வைன் விளக்கமளிக் கிறார்.[38]

ஜெபம்பண்ணும்போது **புருஷன் தன் தலையை மூடிக்கொள்ள வேண்டுவதில்லை;** அவ்வாறு அவன் தன் தலையை மூடிக்கொள்வானானால் **தேவனுடைய மகிமையை** மூடுவதற்கு ஒப்பா கும். இது தேவனுடைய மாட்சிமையை அவமதிப் பதாகும்.

**11:8 புருஷன் ஸ்திரீயிலிருந்து** படைக்கப் படவில்லை, **ஸ்திரீயே புருஷனிலிருந்து** படைக் கப்பட்டாள் என்பதைப் பவுல் அடுத்து நினைவு படுத்துகிறார். முதலாவது ஆண்மகனே படைக் கப்பட்டான். அவனுடைய விலாவிலிருந்துதான் பெண் எடுக்கப்பட்டாள். காலவரிசையில் இவ் வாறு ஆண்மகனுக்கு முதன்மையிடம் கொடுக் கப்பட்டமை, அவன் தலைமைத்துவம் உடைய வனாய் இருக்கிறான் என்னும் அப்போஸ்தல னுடைய வாதத்தை வலுப்படுத்துகிறது.

**11:9** இங்கு கூறப்பட்டுள்ள சத்தியத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு, அடுத்ததாக, படைப்பின் நோக்கம் இங்கு எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. **புருஷன்** முக்கியமாக **ஸ்திரீக் காகச் சிருஷ்டிக்கப்பட்டவனல்ல,** மாறாக **ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்ட வள்.** "மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை உண்டாக்குவேன்" என்று கர்த்தர் ஆதியாகமம் 2:18 -இல் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

**11:10** பெண்ணுக்கு ஆண்மகனைக் காட்டி லும் கீழ்ப்பட்ட ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், **ஸ்திரீயானவள் தலையின்மேல் அதிகாரத்தின் அடையாளத்தைப் போட்டுக் கொள்ளக்கடவள்.** அதிகாரத்தின் அடையாளம் என்பது முக்காடு ஆகும். (தமிழில் அதிகாரத்தின் அடையாளம் என்னும் சொற்றொடர் இடம்பெற வில்லை.) அது அவளுடைய அதிகாரத்தைக் குறிப்பிடாமல், அவளுடைய கணவன் அவள் மேல் கொண்டுள்ள அதிகாரத்திற்கு அவள் கீழ்ப்

பட்டிருப்பதைக் காட்டுகிறது. **தூதர்களினிமித்தம்** என்னும் சொல்லைப் பவுல் இங்கு ஏன் சேர்த் திருக்கிறார்? இன்றைய நாட்களில் இப்புவியில் நடப்பவைகளைக் காணும் பார்வையாளர்களாக **தூதர்கள்** இருக்கிறார்கள். அவர்கள் படைப் பின்போது நிகழ்ந்தவற்றைக் கண்டிருக்கிறார் கள். முதலாவது படைப்பில், எவ்வாறு பெண் ணானவள் தலைமைத்துவத்தை கைப்பற்றிக் கொண்டாள் என்பதை அவர்கள் கண்டார்கள். ஆதாம் எடுக்கவேண்டிய தீர்மானத்தை அவள் எடுத்தாள். அதன் காரணமாக, பாவம் மனுக் குலத்தில் உட்புகுந்து, சொல்ல முடியாத அள விற்கு மனவேதனையையும் இன்னல்களையும் உண்டுபண்ணிவிட்டது. முதலாவது படைப்பில் நடந்ததுபோல, புதிய படைப்பிலும் நடந்துவிடக் கூடாது என்று தேவன் நினைத்தார். தேவதூதர் கள் இப்புவியை நோக்கிப் பார்க்கும்போது,பெண் ஆணுக்குக் கீழ்ப்பட்டவளாக நடந்துகொள் வதைக் காணவேண்டும் என்று அவர் விரும்பு கிறார். அதனை அவள் புறத்தோற்றத்திலே காண்பிக்கும்படி தன் தலையை முக்காடிட்டுக் கொள்கிறாள்.

தலையில் முக்காடிட்டுக்கொள்ளுதல் வெளிப் படையான அடையாளமே என்பதைச் சொல்ல நாம் சற்று நிதானிக்க வேண்டியவர்களாக இருக் கிறோம். உள்ளான கிருபையைக் கொண்டிருக் கும் பெண் வெளியரங்கமான அடையாளமாக அதனை அணியும்போதே அது மதிப்புடையதாக இருக்கும். ஒரு பெண் தன் தலையை முக்காடிட் டுக் கொண்டவளாயிருந்தும் தன்னுடைய கண வனுக்குக் கீழ்ப்படியாதவளாகவும் இருக்கக் கூடும் என்றும் இதனை வேறு வகையாகக் கூறலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தலையில் முக்காடிட்டுக் கொள்ளுவதால் எந்தப் பயனும் இல்லை. இங்கு மிகவும் முக்கியமானது யாதெ னில், உண்மையாகவே இருதயம் கீழ்ப்பட்டிருக் கிறது என்னும் நிச்சயம் வேண்டும். அவ்வித நிலைமை இருக்கும்போதே, பெண் அணியும் முக்காடு அர்த்தமுள்ளதாகக் காணப்படும்.

**11:11** ஆண் எவ்விதத்திலும் பெண்ணைச் சார்ந்திருக்க வேண்டியதில்லை என்று பவுல் இங்கு குறிப்பாய்ச் சொல்லுகிறார் என்று தவறாக நினைக்கக் கூடாது. எனவேதான் அவர், **"ஆகி லும் கர்த்தருக்குள் ஸ்திரீயில்லாமல் புருஷ னில்லை, புருஷனில்லாமல் ஸ்திரீயுமில்லை"** என்ற கூறியிருக்கிறார். அதாவது, ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் சார்ந்திருக் கிறார்கள். ஒருவர் மற்றவருக்குத் தேவை. கீழ்ப் பட்டிருத்தல் என்னும் கருத்து, ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் என்னும் கருத்துக்கு முரண் பட்டதல்ல.

**11:12** படைப்பில் **ஸ்திரீயானவள் புருஷனி லிருந்து தோன்றினாள்**. அதாவது, ஆதாமின் விலாவிலிருந்து அவள் படைக்கப்பட்டாள். ஆனால், **புருஷனும் ஸ்திரீயிலிருந்து தோன்று கிறான்** என்று பவுல் குறிப்பிடுகிறார். இங்கு அவர் பிறப்பைக் குறித்துப் பேசுகிறார். பெண்ணே ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். ஒருவர் இல் லாமல் மற்றவர் இருக்க முடியாது என்னும் உண் மையைச் சுட்டிக்காட்டும் வண்ணம் இந்த நிறை வான சமநிலை ஒழுங்கை தேவன் உண்டுபண்ணி யிருக்கிறார்.

**சகலமும் தேவனால் உண்டாயிருக்கிறது.** இவை யாவற்றையும் அவர் தெய்வீகத் தன்மை யினால் நிறுவியிருக்கிறார். ஆகவே குறைகூறு வதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. இந்த உறவுகள் யாவும் **தேவனால்** உருவாக்கப் பட்டவை என்பது மட்டுமின்றி, தேவனை மகிமைப் படுத்துவதே அவற்றின் நோக்கமுமாகும். இவை யாவும் ஆண்மகனைத் தாழ்மையுள்ளவனாக வும், பெண்ணை மனநிறைவு உள்ளவளாகவும் மாற்ற வேண்டும்.

**11:13 ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணுகையில் தன் தலையை மூடிக் கொள்ளாமலிருக்கிறது இலட்சணமாயிருக் குமோ** என்று கொரிந்துப் பட்டணத்தார் **நிதா னிக்க** வேண்டும் என்று பவுல் அவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறார். அவர் அவர்களுடைய உள்ளுணர்வை நோக்கியே இந்த வேண்டு கோளை விடுக்கிறார். ஒரு பெண் தனது தலையை முக்காடிட்டுக்கொள்ளாமல் தேவனு டைய சமுகத்தில் நுழைவது பயபக்திக்குரியதா கவோ தகுதிவாய்ந்ததாகவோ இருக்காது என் பதே இங்கு சொல்லப்பட்டிருக்கிற கருத்தாகும்.

**11:14,15 புருஷன் மயிரை நீளமாய் வளர்க் கிறது** அவமானமாயிருக்கும் என்று **சுபாவமே போதிக்கிறது** என்னும் கூற்று நாம் புரிந்து கொள்ளும்படி தெளிவாகச் சொல்லப்படவில்லை. பெண்களைப் போன்று இயல்பாகவே ஆண் களுக்கு மிக நீளமாகச் சடை பின்னுவதற்கு ஏற்ப முடி வளர்வதில்லை என்று சிலர் கூறுகிறார்கள். ஆண்மகன் தன் தலைமுடியை நீளமாக வளர்க் கும்போது, அவனிடத்தில் பெண்மைத் தோற்றம் காணப்படுகிறது. பெரும்பான்மையான நாடு

களின் வழக்கத்தின்படி பெண்களைக் காட்டிலும் ஆண்கள் குறைந்த நீளமுடைய முடியையே வைத்திருக்கிறார்கள்.

பதினைந்தாவது வசனத்தைப் பலர் தவறாகவே புரிந்துகொண்டிருக்கிறார்கள். பெண்களுக்குத் **தலைமுடியே முக்காடாகக் கொடுக்கப்பட்டிருப்பதால்** அவர்கள் வேறு முக்காடு போட்டுக்கொள்ள வேண்டியதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவ்வாறு போதிப்பது இந்த வேதபகுதிக்கு முற்றிலும் மாறுபட்ட செயலாகும். ஒருவர் இங்கு இரண்டு முக்காடுகளைக் காண வில்லையென்றால், இப்பகுதி மிகுந்த குழப்பத்தையே உண்டுபண்ணும். நாம் மீண்டும் 6-ஆவது வசனத்தைப் படிப்போமானால் அதனை நன்கு உணரலாம். "ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப் போடக்கடவள்" என்று அங்கு படிக்கிறோம். இப்பொழுது நாம் கண்ட விளக்கத்தின்படி, ஒரு பெண் தலைமுடியாகிய முக்காட்டை நீளமாக வைத்திருக்கவில்லையென்றால், அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. இது நகைப்பிற்கிடமாயிருக்கிறது. அவள் தன் தலை முடியை நீளமாக வளர்க்கவில்லையென்றால் அது நிச்சயமாய்க் கர்த்தரிக்கப்பட்டுதானே இருக்கும்!

இங்கு ஆவிக்குரிய மற்றும் இயற்கை உண்மைகளில் ஓர் ஒப்புவமை விளங்குகிறது என்பதே இந்த 15-ஆவது வசனத்தில் கூறப்படுகிற ஆய்வு ஆகும். பெண்ணுக்கு இயற்கையான மகிமையின் முக்காட்டை தேவன் வழங்கியிருக்கிறார். அது போல ஆணுக்கு அவர் கொடுக்கவில்லை. இங்கே ஆவிக்குரியதோர் உண்மை அடங்கியிருக்கிறது. அவள் ஜெபம்பண்ணும்போது தன் தலையை முக்காடிட்டுக்கொள்ள வேண்டுமென்று அது போதிக்கிறது. இயற்கையில் எது உண்மையாக இருக்கிறதோ அது ஆவிக்குரிய செயற்களத்திலும் உண்மையாகவே இருக்கிறது.

**11:16** அப்போஸ்தலன் இந்த வேதபகுதியை, **"ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ்செய்ய மனதாயிருந்தால், எங்களுக்கும் தேவனுடைய சபைகளுக்கும், அப்படிப்பட்ட வழக்கமில்லையென்று அறியக்கடவன்"** என்னும் கூற்றுடன் முடிக்கிறார். சிலர் விளக்கம் அளிக்கிறது போல, பவுல் முன்னர் கூறியிருக்கிற அறிவுரைகள் வற்புறுத்திச் செயல்படுத்தப்படும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல என்பதுதான் பொருளா? பெண்கள் முக்காடிட்டுக்கொள்ளும் வழக்கம் சபைகளில் இல்லை என்பதுதான் பவுல் இங்கு கூறியிருப்பதன் பொருளா? இது கர்த்தருடைய கட்டளை என்று கூறி பெண்கள் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது, இதனை அவரவர்களுடைய விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும் என்று பவுல் கூறுகிறாரா? இப்படிப்பட்ட விளக்கங்கள் விநோதமானவையாக இருக்கின்றன. ஆயினும் இன்றைய நாட்களில் இப்படிப்பட்ட விளக்கங்களைக் கேட்கிறோமே. மேலே சொல்லப்பட்டிருக்கிற விளக்கங்களின்படி, பவுல் கூறியிருக்கிற அறிவுரைகள் யாவும் உண்மையிலேயே முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல, தூய திருமறையில் இவற்றைக் கூறுவதற்காக ஓர் அதிகாரத்தில் பாதியை அவர் வீணாக்கிவிட்டார் என்று பொருளாகிவிடுமே!

இந்த வசனத்திற்கு, முந்தின வேதபகுதியோடு இசைவாகக் காணும்படி குறைந்தது இரண்டு விளக்கங்களைக் கூறலாம். முதலாவது, யாரோ சிலர் இதனை எதிர்த்து **வாக்குவாதஞ் செய்யக்** கூடும் என்று அப்போஸ்தலன் எதிர்பார்த்ததாக இங்கு கூறுகிறார். ஆனால் **எங்களுக்கு அப்படிப்பட்ட வழக்கமில்லை** என்று அவர் தொடர்ந்து கூறுகிறார். அதாவது இதைக் குறித்து வாக்குவாதம் செய்யும் வழக்கம் அவருக்கில்லை. இப்படிப்பட்ட உபதேசங்களைக் குறித்து நாங்கள் வாக்குவாதஞ்செய்ய மாட்டோம், மாறாக கர்த்தர் கற்பித்த உபதேசங்கள் என்று இவற்றை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். மற்றொரு விளக்கம், பெண்கள் தங்கள் தலைகளை முக்காடிட்டுக்கொள்ளாமல் ஜெபம் பண்ணுதல் அல்லது தீர்க்கதரிசனஞ் சொல்லுதல் போன்ற வழக்கம் தேவனுடைய சபைகளுக்கு இல்லையென்று பவுல் இங்கு கூறுகிறார் என்பதேயாகும். இந்த விளக்கத்தையே திருவாளர் வில்லியம் கெல்லி ஆதரித்துள்ளார்.

### ஈ. கர்த்தருடைய பந்தியைக் குறித்த அறிவுரை (11:17-34)

**11:17** கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் ஒன்றுகூடி வந்தபோது அவர்களுக்குள்ளாகப் பிரிவினைகள் இருந்ததால், அவர்களை அப்போஸ்தலன் கடிந்துகொள்கிறார் (வச. 17-19). "நீங்கள் கூடிவந்திருக்கும்போது" என்னும் சொற்றொடர் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளதைக் கவனியுங்கள் (11:17, 18, 20, 33, 34; 14:23, 26). பவுல் ஒப்புவித்த கட்டளைகளை அவர்கள் கைக்கொண்டு வந்ததைக் குறித்து அவர்

அவர்களைப் பாராட்டியதை 11:2 -ஆம் வசனத்தில் காணவியலும். ஆயினும் ஒரு விசயத்தில் அவரால் அவர்களைப் **புகழ முடியவில்லை**. அதைக் குறித்தே அவர் இப்பொழுது பேசவிருக்கிறார். அவர்கள் யாவரும் பொதுவாகக் கூடி வந்தபோது, அவர்களுடைய **கூடிவருதல் நன்மைக்கேதுவாயிராமல் தீமைக்கேதுவாயிருந்தது**. இங்கு நமக்கு முக்கியமான எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நாம் சபைக்கூட்டங்களுக்குச் சென்றுவரும்போது, அவை நன்மையை உண்டாக்காமல் தீமையை ஏற்படுத்தக்கூடிய வையாக அமைய வாய்ப்பு உண்டு என்று நினைவு படுத்தப்படுகிறோம்.

**11:18** அவ்வாறு அவர் கண்டித்துணர்த்தியதன் முதல் காரணம், அவர்களுக்குள்ளாகப் **பிரிவினைகள்,** அதாவது உட்கட்சிப் பிரிவுகள் இருந்தன என்பதேயாகும். அவர்கள் சபையை விட்டுப் பிரிந்து, தனித்தனியே ஐக்கியங்களை ஏற்படுத்தினார்கள் என்பது இதன் பொருளன்று. சபையில் பல கருத்து வேறுபாடுகளைக் கொண்ட உட்பிரிவுகள் இருந்தன என்பதே இதன் பொருளாகும். அவர்களுக்குள்ளாக உட்பிரிவுகள் இருந்தனவேயொழிய, அவர்கள் சபையைவிட்டு வெளியேறி வெவ்வேறு கட்சிகளாகச் செயல்பட வில்லை. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் மாம்சத்திற்குரியவர்களாக இருந்த காரணத்தினால், அவர்களைப் பற்றி இவ்வாறு குறைகூறப் பட்டபோது, பவுல் அதனை **நம்பினார்**. அவர்களுக்குள்ளாகப் பிரிவினைகள் இருந்தமை குறித்து அவர் இந்த மடலில் ஏற்கனவே கடிந்து கொண்டிருக்கிறார்.

F. B. ஹோல் என்பார் இதனை விவரிக்கிறார்:

> கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் மாம்சத் திற்குரியவர்களாக இருந்தார்கள் என்பதைப் பவுல் அறிந்திருந்ததால், அவர்களுக்குள்ளாக கருத்து வேறுபாடுகள்கொண்ட உட்கட்சிப் பிளவுகள் இருந்தன என்னும் புகார் வந்த போது அதனை ஓரளவு ஏற்றுக்கொள்ளக் கூடிய மனதுடையவராகவே அவர் இருந்தார். இங்கே பவுல் அவர்களுடைய நிலையைக் குறித்துச் சிந்திக்காமல், அதனால் உண்டான விளைவைக் குறித்தே பேசுகிறார். அவர்கள் மாம்சத்திற்குரியவர்களாக இருந்தார்கள் என்றும் மாம்சத்திற்குரிய மனிதர்களாக நடந்தார் கள் என்றும் அறிந்திருந்த பவுல், அவர்கள் சில கருத்துகளைத் தங்களுக்குள்ளாக வளர்த்துக் கொண்டு அந்தக் கருத்துகளின் அடிப்படை யில் உட்கட்சிப் பிரிவுகளை உண்டாக்கக்கூடிய பிடிவாத மனித குணத்தை நிச்சயமாகக் கொண்டிருக்கக் கூடும் என்றும் அறிந்திருந் தார். ஆனால் தேவன் அவர்களுடைய இந்தத் தவறை அகற்றி, அவரால் நற்சாட்சி பெற்ற மனிதர்களை அவர்களுக்கு முன்பாக வெளிப் படுத்தும் சந்தர்ப்பங்களை உண்டாக்குவார். அவர்களோ மனிதர்களாக அல்ல, ஆவியின் படி நடக்கிறவர்களாக மாறுவார்கள். அதன் பயனாக அந்தப் பிரிவினை வேலைகள் யாவற் றையும் முற்றிலுமாக அவர் அவர்களைவிட்டு அகற்றுவார்.[39]

**11:19** கொரிந்துப் பட்டணத்தில் ஏற்கனவே உண்டாயிருந்த பிரிவினைகள், மிகுந்த ஆபத்தை விளைவிக்கக்கூடிய அளவிற்குப் பெருகும் என்று பவுல் ஊகித்து முன்னறிந்தார். இந்நிலை சபைக்கு மிகுந்த கேடு உண்டாக்கக் கூடியதாக இருந்தபோதிலும், இதனால் ஒரு நன்மை உண்டாகும். அதாவது, கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளில் உண்மையானபடி ஆவிக்குரியவர்கள் யார் என்றும் **உத்தமர்கள்** யார் என்றும் **தேவனால் வெளிப்படுத்தப்படுவார்கள். மார்க்க பேதங்கள்**[40] **உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே** என்று பவுல் இந்த வசனத்தில் கூறும்போது, அதுவே சரியான ஒழுங்கு[41], அது தேவை என்னும் பொருளில் அவர் கூறவில்லை. சபைகளில் ஏற்படும் பிரிவினையை தேவன் பொறுத்துக்கொள்கிறார் என்பதும் இதன் பொருளன்று. மாறாக, கொரிந்துப் பட்டணத்தில் மாம்சத்திற்குரியவர்களாக விசுவாசிகள் இருந்த காரணத்தினால், அங்கு மார்க்க பேதங்கள் இருப்பதைத் தவிர்க்க முடியாது என்றே அவர் கூறுகிறார். கர்த்தருடைய சிந்தையை அறியச் சிலர் தவறிவிட்டார்கள் என்பதற்குப் பிரிவினை கள் நிரூபணங்களாக விளங்குகின்றன.

**11:20,21** கர்த்தருடைய பந்தியோடு தொடர் புடைய தவறை எடுத்துரைத்து, பவுல் தன்னுடைய இரண்டாவது கண்டனத்தைக் கூறுகிறார். கொரிந்துப் பட்டணத்தார் கர்த்தருடைய இராப் போஜனத்தை அனுசரிக்கும்படி வெளிவேடத்துடன் கூடிவந்த நேரங்களில், கர்த்தர் நியமித்தவண்ணம் அவர்கள் அவரை நினைவுகூர முடியாதபடி அவர்களுடைய நடத்தை மிகுந்த வேதனையளிக்கக் கூடிய நிலையில் இருந்தது. வெளியரங்கமான நிலையில் அவர்கள் செய்யவேண்டிய

செயல்களையெல்லாம் செய்தார்கள். ஆனால் அவர்களுடைய ஒழுகலாறு, கர்த்தரை எவ்விதத் திலும் மெய்யாக நினைவுகூரச் செய்வதாக அமையவில்லை.

சபையின் தொடக்க காலத்தில், கர்த்தரு டைய பந்தியோடு சேர்த்து, கிறிஸ்தவர்கள் அன் பின் விருந்தையும் (அகாபே) கொண்டாடினார் கள். யாவரும் ஒன்றுகூடி உணவருந்திய வழக்க மான நிகழ்ச்சி அன்பின் விருந்து எனப்பட்டது. அது அவர்களுடைய அன்பையும் ஐக்கியத்தை யும் வெளிப்படுத்தும் நோக்குடன் கைக்கொள்ளப் பட்டது. அன்பின் விருந்தின் இறுதியில், அப்பத் திலும், திராட்சைப் பிழிவிலும் விசுவாசிகள் பங்கு பெற்று கர்த்தரை நினைவுகூர்ந்தார்கள். ஆனால், சிறிது காலத்திலேயே விருந்தின் நடைமுறையில் பல தவறுகள் நுழைந்துவிட்டன. எடுத்துக்காட் டாக, அன்பின் விருந்து அதனுடைய உண்மை யான அர்த்தத்தை இழந்துவிட்டது என்பதை இந்த வசனம் குறிப்பாய்த் தெரிவிக்கிறது. கிறிஸ் தவர்கள் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க வில்லை என்பது மட்டுமின்றி, செல்வந்தர்களாக இருந்த விசுவாசிகள் அளவுக்கு மீறி செலவு செய்து உண்டாக்கிய உணவை வறியவர் களோடு பகிர்ந்துகொள்ளாமல் தாங்களே உண்டு அவர்களை அவமானப்படுத்தினார்கள். **சிலர் பசியோடு** திரும்பிச் சென்றார்கள். ஆனால் சிலரோ உண்மையில் குடித்து வெறியாயிருந் தார்கள்! அன்பின் விருந்தைத் தொடர்ந்து கர்த்த ருடைய பந்தி நடைபெற்றதால், ராப்போஜனத் தில் பங்கு பெறும்படி அவர்கள் அமர்ந்திருந்த வேளைகளில் குடித்துவெறியாயிருந்தார்கள்.

**11:22** அவர்களுடைய இழிவான நடத்தையை அப்போஸ்தலன் சீற்றத்துடன் கடிந்துகொள் கிறார். அவர்கள் தொடர்ந்து அதுபோலவே நடக்கவேண்டும் என்று பிடிவாதமாக இருப்பார் கள் என்றால், **சபைக்கூட்டத்தின்** மேன்மை யைக் கருத்தில் கொண்டாவது அவர்கள் அவ் வாறு நடக்கக்கூடாது. அப்படிப்பட்ட நேரத்தில் தன்னடக்கமின்றி நடந்துகொள்ளுவதும், வறிய சகோதரர்களை **அசட்டைபண்ணுவதும்** கிறிஸ் தவ விசுவாசத்திற்கு முற்றிலும் முரண்பட்ட செயல்களாகும். இவ்விதமாகப் பரிசுத்தவான்கள் நடந்துகொண்ட காரணத்தினால், பவுல் அவர் களைப் **புகழவில்லை**. அந்நிலை, புகழ்ச்சிக்கு மாறாக அவர்களைக் கடுமையாகக் குற்றப் படுத்துவதாகவே விளங்கியது.

**11:23** அவர்களுடைய நடத்தைக்கும் கர்த்தரு டைய பந்தியின் மெய்யான பொருளுக்கும் பெருத்த வேறுபாடு இருந்தது என்பதைக் காண்பிக்கும்பொருட்டு, பவுல் முதன்முதலாக அது நிறுவப்பட்ட நேரத்தை நோக்கிப் பின் செல்கிறார். அது பொது விருந்தோ பண்டிகைக் கொண்டாட்டமோ இல்லை, மாறாக கர்த்தருடைய தெய்வீகக் கட்டளையாகும். அதனைப் பற்றிய விளக்கத்தைப் பவுல் **கர்த்தரிடத்திலிருந்து** நேரடியாகப் **பெற்றுக்கொண்டார்**. அதனைக் கைக்கொள்ளும்போது சொல்லப்பட்டவற்றை மீறிச் செயல்படுவது உண்மையில் கீழ்ப்படி யாமை என்றே கருதப்படும். அவர் இங்கு போதிக் கிறவற்றைக் கர்த்தரிடத்திலிருந்து வெளிப்பாட் டின் மூலமாகவே பெற்றுக்கொண்டார்.

முதலாவதாக, **கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரி யிலே** எவ்வாறு **அப்பத்தை எடுத்தார்** என்று அவர் குறிப்பிடுகிறார். எழுத்தின் பிரகாரமாக இந்த வசனம் அவர் "காட்டிக்கொடுக்கப்பட்ட நேரத்திலே" என்று பொருள்படும. அவரைப் பிடித் துக்கொடுப்பதற்கான திட்டம் வெளியே நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில், **கர்த்தராகிய இயேசு** தம்முடைய சீடர்களோடு மேலறையில் கூடி **அப்பத்தை எடுத்தார்**.

அந்த நிகழ்ச்சி இராத்திரியிலே நடைபெற்றது என்னும் உண்மை, கர்த்தருடைய பந்தி அதன் பிறகு இரவு நேரங்களில்தான் அனுசரிக்கப்பட்டது என்னும் பொருளைத் தருகிறதில்லை. அந்த நாட்களில் யூதர்களுக்குக் கதிரவன் மறையும் நேரமே நாளின் தொடக்கமாகும். நமக்கோ கதிரவன் தோன்றும் காலைப்பொழுதே நாளின் தொடக்கமாகும். மேலும் அப்போஸ்தலருடைய *மாதிரிக்கும்* அப்போஸ்தலருடைய *கட்டளைக் கும்* வேறுபாடு உண்டு என்று குறிப்பிடப்பட் டுள்ளது. அப்போஸ்தலர் *செய்த* அனைத்தையும் நாம் செய்யவேண்டிய கட்டாயமில்லை. ஆனால் அவர்கள் *கற்பித்த* அனைத்தையும் நாம் செய்ய வேண்டிய பெரிதான கடமை நமக்குண்டு.

**11:24** முதலாவது, கர்த்தராகிய இயேசு அப் பத்தை எடுத்து, அதற்காக **ஸ்தோத்திரம்** செலுத் தினார். அப்பமானது மனித சரீரத்திற்கு அடையாள மாக விளங்கியது. அவர் இப்புவிக்கு வந்து உல கத்தின் பாவங்களுக்காக மரணமடையும்படி அவருக்கு மனித சரீரம் கொடுக்கப்பட்டதற்காக அவர் தேவனுக்கு நன்றி செலுத்தினார். இதுவே அவர் செலுத்திய ஸ்தோத்திரத்தின் பொருளாகும்.

**"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது"** என்று இரட்சகர் கூறியபோது, அந்த அப்பமானது உண்மையாகவே அவருடைய சரீரமாக *மாறிற்று* என்பதுதான் பொருளா? ரோமக் கத்தோலிக்கருடைய *பொருள் மாற்றக் கொள்கையின்படி*, அப்பமும் திராட்சைப் பிழிவும் எழுத்தின் பிரகாரமாக கிறிஸ்துவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகின்றன என்று வலியுறுத்தப்படுகிறது. லுத்தரன் வகுப்பாருடைய *உடன் பொருண்மைக் கொள்கையின்படி*, அப்பம் திராட்சைப் பிழிவு ஆகியவற்றுடன் கிறிஸ்துவின் மெய்யான சரீரமும் இரத்தமும் உடனிருக்கின்றன என்று கற்பிக்கப்படுகிறது.

இவ்விரு கோட்பாடுகளுக்கும் விடைகொடுக்க வேண்டுமாயின், கர்த்தராகிய இயேசு அந்த நினைவுச் சின்னத்தை நிறுவுகையில், அவருடைய சரீரமானது இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதையும், அவருடைய இரத்தம் இன்னும் சிந்தப்படவில்லை என்பதையும் நினைவு கூர்ந்தால் போதும். **"இது என்னுடைய சரீரமாயிருக்கிறது"** என்று கர்த்தராகிய இயேசு உரைத்தபோது, "இது என்னுடைய சரீரத்திற்கு அடையாளமாயிருக்கிறது" அல்லது "இது உங்களுக்காகப் பிட்கப்படவிருக்கிற என்னுடைய சரீரத்திற்குச் சித்திரமாயிருக்கிறது" என்னும் பொருளிலேயே கூறினார். அப்பத்தை உண்ணுவது, நமக்கு பாவமன்னிப்பு உண்டாகும்படி அவர் அடைந்த மரணத்தை நினைவுகூர்வது என்று பொருள்படும். "என்னை நினைவுகூரும்படி" என்னும் சொற்றொடரில் நம்முடைய கர்த்தருடைய விவரிக்க இயலாத கனிவிரக்கம் அடங்கியிருக்கிறது.

**11:25** கர்த்தராகிய இயேசு பஸ்காவாகிய **போஜனம்பண்ணின பின்பு அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார்**. பஸ்கா விருந்து முடிந்த உடனேயே கர்த்தருடைய பந்தி நிறுவப்பட்டது. அதன் காரணமாகவே, கர்த்தராகிய இயேசு **போஜனம்பண்ணினபின்பு பாத்திரத்தையும் எடுத்தார்** என்று இங்கு சொல்லப்பட்டுள்ளது. பாத்திரத்தைக் குறித்து, அவருடைய **இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை** என்று கூறினார். தேவன் இஸ்ரவேல் நாட்டாருக்கு எரேமியா 31:31-34 -இல் கொடுத்த உடன்படிக்கையின் வாக்குறுதியை இது குறிப்பிடுகிறது. இது நிபந்தனையற்ற வாக்குறுதியாகும். இதன்படி அவர்களுடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் இனி நினைவுகூரப்போவதில்லை என்றும், அவர்களுடைய அநீதியினிமித்தம் இரக்கம் பாராட்டுவார் என்றும் அவர் வாக்குறுதி அளித்தார். இந்தப் புதிய உடன்படிக்கையின் கூறுகள் எபிரெயர் 8:10-12 -ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கையானது தற்காலத்தில் நடைமுறையில் உள்ளது, ஆனால் இஸ்ரவேல் நாட்டாரின் அவநம்பிக்கை அதனை அனுபவிக்கவிடாமல் தடைசெய்கிறது. கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறவர் யாவரும் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நன்மைகளைப் பெறுகிறார்கள். இஸ்ரவேல் மக்கள் கர்த்தரிடமாய்த் திரும்புகிறபோது, அவர்கள் புதிய உடன்படிக்கையின் ஆசிர்வாதங்களை அனுபவிப்பார்கள். அது கிறிஸ்துவின் ஆயிரமாண்டு புவியாட்சியின்போது நிறைவேறும். **புதிய உடன்படிக்கை** கிறிஸ்துவின் **இரத்தத்தால்** உறுதியாக்கப்பட்டது. அதன் காரணமாகவே அவர் பாத்திரத்தைக் குறித்துப் பேசியபோது, **என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது** என்று கூறினார். அந்தப் புதிய உடன்படிக்கையின் அஸ்திபாரம் சிலுவையின் மூலமாகப் போடப்பட்டது.

**11:26** இந்த வசனம், கர்த்தருடைய பந்தி எத்தனை நாட்களுக்கு ஒருமுறை கைக்கொள்ளப்பட வேண்டும் என்னும் கேள்வியை எதிர்கொள்கிறது. **நீங்கள்... புசித்து... பானம்பண்ணும்போதெல்லாம்**. இங்கு சட்டரீதியான விதி கொடுக்கப்படவில்லை. எந்தக் குறிப்பிட்ட நாளும் கொடுக்கப்படவில்லை. சீடர்கள் வாரத்தின் முதல் நாளிலே கர்த்தரை நினைவுகூரும்படி இதனைக் கைக்கொள்ளும் பழக்கம் உடையவராக இருந்தார்கள் என்பது அப்போஸ்தலர் 20:7 -இன் மூலமாகத் தெளிவாகிறது. சபையின் தொடக்க நாட்களில் மட்டும் கைக்கொள்ளும்படியாக இந்த நடைமுறை ஒழுங்கு கொடுக்கப்பட்டது என்று கருதுவது முற்றிலும் தவறானது என்பதைக் **கர்த்தர் வருமளவும்** என்னும் சொற்கள் முழுமையாக மெய்ப்பிக்கின்றன. "அவருடைய இரண்டு வருகைகளுக்கும் பாலமாகக் கர்த்தருடைய பந்தி திகழ்கிறது. மேலும் அது ஒன்றின் நினைவுச் சின்னமாகவும், மற்றதன் வாக்குறுதியாகவும் விளங்குகிறது" என்று திருவாளர் கோடட் அழகுற மொழிந்துள்ளார்.[42]

கர்த்தருடைய பந்தியைக் குறித்த கட்டளைகள் யாவற்றிலும், ஓர் ஊழியன் அல்லது

ஆசாரியன் முன்னின்று நடத்தியதாக ஒரு சொல்லும் சொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இ.ஃ.து எளிமையான நினைவுகூரும் செயலாகவும் தேவனுடைய மக்கள் யாவருக்கும் பொதுவானதாகவும் கொடுக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி, விசுவாசிகள் ஆசாரியர்கள் என்னும் நிலையில் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை அறிக்கை செய்யும் செயலாகவே இது விளங்குகிறது.

**11:27** கர்த்தருடைய பந்தியின் தொடக்கத்தையும் நோக்கத்தையும் குறித்து விவரித்துக் கூறின அப்போஸ்தலன், இப்பொழுது அதில் தவறான முறையில் பங்குகொள்ளுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளை நோக்கித் திரும்புகிறார். எவனொருவன் **அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.** புனிதமான பந்தியிலே பங்குபெறுவதற்கு நாம் அனைவரும் அருகதையற்றவர்கள் ஆவோம். அந்தப் பொருளில் கர்த்தரிடத்திலிருந்து நமக்கு வரக்கூடிய எவ்வித இரக்கத்திற்கும் தயவுக்கும் நாம் தகுதியற்றவர்களேயாவோம். ஆனால் அது இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆய்வுப்பொருள் அல்ல. நம்முடைய தனிப்பட்ட தகுதியின்மையைப் பற்றி அப்போஸ்தலன் இங்கு பேசவில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்களாகிய நாம், அவருடைய நேசகுமாரனின் அனைத்துத் தகுதியின் அடிப்படையிலும் தேவனை அணுகமுடியும். ஆனால், கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் ஒன்றுகூடி வருகிற கொரிந்துப்பட்டணத்தார், அந்நேரங்களில் நடந்துகொண்ட அவமானத்துக்குரிய நடத்தையைக் குறித்தே அவர் இங்கு பேசுகிறார். அவர்களுடைய தகுதியற்றதும், கவனமற்றதுமான நடத்தையினால் அவர்கள் **குற்றமுள்ளவர்களாயிருந்தார்கள்**. அவ்வாறு செயல்படுவது கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றத்தோடு நடந்து கொள்ளுவதாகக் காணப்படும்.

**11:28** கர்த்தருடைய பந்தியினிடமாய் வந்திருக்கும் வேளையில், நாம் நியாயம் தீர்க்கப்பட்ட நிலையில் அதில் பங்குபெற வேண்டும். பாவம் அறிக்கை செய்யப்பட்டு விட்டொழிக்கப்பட்டிருக்க வேண்டும், தவறுகள் இழப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். நாம் புண்படுத்தியவர்களிடம் மன்னிப்பு கேட்டிருக்க வேண்டும். பொதுவாக, நாம் ஆன்ம நலத்துடன் இருக்கிறோமா என்பதைக் குறித்து உறுதி செய்துகொள்ள வேண்டும்.

**11:29** தகுதியற்ற வகையில் போஜனபானம் பண்ணுகிறவன் **கர்த்தருடைய சரீரத்தைக் குறித்து நிதானித்து அறியாதவனாக** அவற்றில் பங்குபெறுகிறான். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படியே கர்த்தருடைய சரீரம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உணரவேண்டும். நாம் தொடர்ந்து பாவத்தில் வாழ்ந்துகொண்டு அதே நேரத்தில் கர்த்தருடைய பந்தியிலும் பங்குபெறுவோம் என்றால், நாம் பொய்யாய் வாழ்கிறவர்களாக இருப்போம். "நியாயந்தீர்க்காத பாவத்துடன் கர்த்தருடைய பந்தியில் நாம் பங்குபெறுவோமானால் அப்பாவத்தை நீக்கும்படி பிட்கப்பட்ட கர்த்தருடைய சரீரத்தைக் குறித்து நிதானித்து அறியாதவர்களாகக் காணப்படுவோம்" என்று F. G. பேட்டர்சன் எழுதுகிறார்.

**11:30** தன்னைத்தானே நியாயந்தீர்க்கக் கொரிந்துப் பட்டணத்தாரில் சிலர் தவறிய காரணத்தால், அவர்கள்மீது தேவனுடைய ஒழுங்கு நடவடிக்கை என்னும் தீர்ப்பு செலுத்தப்பட்டது. பலர் **பலவீனராகவும் வியாதியுள்ளவர்களாகவும்** இருந்தார்கள். பலர் **நித்திரையும் அடைந்தார்கள்**. அதாவது சிலருக்கு சரீரத்தில் நோய் ஏற்பட்டது. சிலரோ விண்ணுலகத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் பாவத்தை நியாயந்தீர்க்காத காரணத்தால், கர்த்தர்தாமே அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று.

**11:31** அதற்கு மாறாக, நம்மை நாமே நியாயந்தீர்ப்போமானால், நாம் சிட்சிக்கப்படுவதற்குரிய தேவை ஏற்படாது.

**11:32** தேவன் நம்மைத் தமது சொந்தப் பிள்ளைகளைப் போல நடத்துகிறார். நாம் பாவத்திலே தொடர்ந்து சென்றுவிடாதபடி அவர் நம்மீது அன்புகூருகிறார். அதன் காரணமாகவே கூடியவிரைவில் நம்முடைய முதுகில் மேய்ப்பனின் வளைதடி குத்தி நம்மை அவரிடமாய் இழுக்கிறதை உணர்கிறோம். எனவேதான் "பரிசுத்தவான்கள் விண்ணுலகிற்குத் (கிறிஸ்துவில்) தகுதியுடையவர்களாக இருப்பது சாத்தியமே. ஆனால் இப்புவியில் நீடித்து வாழ்வதற்கு சாட்சியின் மூலமாகவே தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள்" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

**11:33** அன்பின் விருந்தில் அல்லது அகாபே விருந்தில் கலந்துகொள்ளும்படி விசுவாசிகள் ஒன்று கூடிவரும்போது, அவர்கள் **ஒருவருக்காக ஒருவர் காத்திருக்க** வேண்டும். மற்ற பரிசுத்த வான்களைக் கருத்தில்கொள்ளாமல் தன்னலத் தோடு உண்ணத்தொடங்கக்கூடாது. "ஒருவருக் காக ஒருவர் காத்திருத்தல்" என்னும் சொற் றொடர் 20 -ஆவது வசனத்தில் காணப்படும் "அவனவன் தன்தன் சொந்தபோஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்" என்னும் சொற்றொட ருக்கு முரண்பட்டதாயிருக்கிறது.

**11:34 ஒருவனுக்குப் பசியிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன்**. கர்த்தருடைய பந்தியோடு தொடர்புடையதாக இருந்த அன்பின் விருந் தினை, பொது விருந்து என்று எண்ணி நாம் குழப்ப மடையக் கூடாது. அதன் புனிதத் தன்மையை அவமதிப்பது, **ஆக்கினைக்கேதுவாகக் கூடிவரு வதாகப்** போய்விடும்.

**மற்ற காரியங்களை நான் வரும்போது திட்டம்பண்ணுவேன்**. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் அப்போஸ்தலனுக்கு எழுதிய மடலில் இன்னுஞ்சில சிறு விசயங்கள் இருந்தன என்பதில் ஐயமேதுமில்லை. அந்த விசயங்களைக் குறித்து அவர் அவர்களைச் சந்திக்கச் செல்லும்போது நேரடியாக விளக்கிக் கூறுவதாக இங்கு உறுதி யளிக்கிறார்.

### உ. ஆவியானவரின் வரங்களைக் குறித்தும் சபையில் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் கொடுக்கப்பட்ட அறிவுரைகள் (அதி. 12-14)

ஆவியானவரின் வரங்களைப் பற்றிய விளக் கங்கள் 12 முதல் 14 வரையிலான அதிகாரங் களில் கொடுக்கப்பட்டுள்ளன. கொரிந்து சபை யில், பற்பல பாஷைகளைப் பேசுதல் என்னும் வரத்தைப் பயன்படுத்துவதில் தவறுகள் காணப் பட்டன. அவற்றைச் சரிசெய்யும் நோக்கத்துடன் பவுல் இப்பகுதியை எழுதுகிறார்.

கொரிந்துப் பட்டணத்தில் பற்பல பாஷை களைப் பேசும் வரத்தைப் பெற்ற விசுவாசிகள் இருந்தார்கள். அதாவது பிறநாட்டு மொழிகளைப் பேசும் ஆற்றல் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டி ருந்தது. அந்த மொழிகளை அவர்கள் கற்றிராத போதிலும் அவற்றைப் பேசும் ஆற்றலைப் பெற்றி ருந்தார்கள்.[43] ஆயினும், தேவனை மேன்மைப் படுத்துவதற்கும் மற்ற விசுவாசிகள் கற்பதற்கும் அந்த வரத்தைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் தங்களை மேன்மைப்படுத்துவதற் கென்றே பயன்படுத்தினார்கள். கூட்டங்களில் சிலர் எழுந்து நின்று, மற்றவர்களுக்குப் புரியாத மொழியில் பேசினார்கள். அவ்வாறு அவர்கள் பன் மொழித் திறமை படைத்தவர்கள் என்பதை அறி யும்போது, பிறர் அதன் காரணமாகக் கவர்ந்திழுக் கப்படுவார்கள் என்று எண்ணினார்கள். பற்பல மொழிகளைப் பேசுதல் மற்ற அடையாள வரங் களிலும் மேலானது என்று அதனைப் போற்றினார் கள். மேலும் அவ்வாறு பல மொழிகளைப் பேசிய வர்கள், ஆவிக்குரிய நிலையில் மேம்பட்டவர்கள் என்றும் அவர்கள் கருதினார்கள். ஒருபுறம் அது பெருமைக்கு வழிநடத்திச்சென்றது, மறுபுறம் பொறாமை, தாழ்வு மனப்பான்மை, தகுதியற்ற தன்மை ஆகிய எண்ணங்களைச் சிலரிடம் உரு வாக்கியது. ஆகவே இந்தத் தவறான மனப்பான் மையை நீக்கி அவர்களைச் சீர்பொருந்தச் செய்ய வேண்டிய பொறுப்பு அப்போஸ்தலனைச் சார்ந்திருந்தது. மேலும் பற்பல மொழிகளைப் பேசுதல் தீர்க்கதரிசனம் உரைத்தல் போன்ற வரங்களைப் பயன்படுத்துவதில் கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டிய பொறுப்பும் அவருடைய தாயிற்று.

**12:1 ஆவிக்குரிய** வெளிப்பாடுகள் அல்லது **வரங்களைக்** குறித்தவற்றில் கொரிந்துப் பட்ட ணத்துப் பரிசுத்தவான்கள் **அறியாமை** உடை யோராய் இருக்க பவுல் **மனதற்றவராக** இருந் தார். இவ்வசனத்தில் எழுத்தின்படியான மொழி பெயர்ப்பு "அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வற்றில் **நீங்கள் அறியாமையுள்ளவராய் இருக்க எனக்கு மனதில்லை**" என்பதாகும். பல பிரதிகளில் "*வரங்கள்*" என்னும் சொல், பொருள் நிறைவுறும் பொருட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு களை மட்டுமின்றி, பொல்லாத ஆவிகளின் செயல்களைக் குறித்தும் பவுல் எண்ணிக் கொண்டிருந்தார் என்பதைத் தொடர்ந்து வரும் வசனங்கள் வெளிப்படுத்துகின்றன.

**12:2** மனமாற்றம் அடைவதற்கு முன்னர் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் சிலை வணக்கம் செய்துவந்தார்கள். மேலும் பொல் லாத ஆவிகளுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அவர்கள் அந்த ஆவிகளுக்கு பயந்து வாழ்ந்த தோடு, கொடூரமான பேய்களின் தூண்டுதலால் **ஏவப்பட்டு** வந்தார்கள். அந்த ஆவிகளின் இயற் கைக்கு அப்பாற்பட்ட செய்கைகளை அவர்கள் கண்டும், அவற்றின் ஏவுதலால் சொல்லப்பட்ட வார்த்தைகளைக் கேட்டும் வந்தார்கள். பொல்லாத

ஆவிகளின் தூண்டுதலால் ஏவப்பட்ட கொரிந்துப் பட்டணத்தார் சில சமயங்களில் தங்களுடைய சுயக்கட்டுப்பாட்டை இழந்து, தங்களுடைய உணர்வுநிலைக்கு அப்பாற்பட்ட வகையில் ஆற்றல்பெற்று பேசவும் செயல்புரியவும் செய்தார்கள்.

**12:3** இப்பொழுதோ, விசுவாசிகளாகிய அவர்கள் இரட்சிக்கப்பட்ட நிலையில், எல்லாவித ஆவிக்குரிய வெளிப்பாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்; அதாவது, பொல்லாத ஆவிகளின் சத்தத்தையும், பரிசுத்த ஆவியின் உறுதிமிக்க உண்மையான சத்தத்தையும் வேறுபடுத்தி உணர அறிந்திருக்க வேண்டும். கர்த்தராகிய இயேசுவைக் குறித்து சொல்லப்படுகிற சாட்சியே இங்கு மிகமுக்கியமான சோதனையாகும். **"இயேசு சபிக்கப்பட்டவர்"** என்று ஒருவன் கூறுவானாயின், அவன் பிசாசின் ஏவுதலைக் கொண்டிருக்கிறான் என்பது நிச்சயம். ஏனெனில் பொல்லாத ஆவிகள் இயேசுவின் திருப்பெயரைக் குறிப்பிடத்தக்க வகையில் தூற்றவும் சபிக்கவும் செய்கின்றன. அதுபோன்று இரட்சகரை இழிவுபடுத்தும் வகையில் பேசுவதற்கு எவரொருவரையும் **தேவனுடைய ஆவியானவர்** வழிநடத்தமாட்டார். கர்த்தராகிய இயேசுவை மேன்மைப்படுத்துவதே அவருடைய ஊழியமாக விளங்குகிறது. அவர் மனிதர்களை, இயேசுவைக் கர்த்தர் என்று சொல்லும்படி வழிநடத்துகிறார். அவ்வாறு அவர்கள் கூறும்போது, அது உதட்டளவில் சொல்லப்பட்டதாக இருக்காது. மாறாக, அது அவர்களுடைய இருதயத்தின் நிறைவாகவும் வாழ்க்கையின் செயலாகவும் மனமகிழ்ச்சியடன் வெளிப்படும்.

திரியேக தேவனின் மூன்று நபர்களும் 3-ஆவது வசனத்திலும் 4 முதல் 6 வரையிலான வசனங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதைக் கவனிக்கவும்.

**12:4** சபையில் பரிசுத்த ஆவியின் **வரங்களில்** பல வகைகள் உள்ளன என்பதை அடுத்ததாக எடுத்துக்காட்டும் பவுல், அங்கு தேவ தலைமையில் உள்ள மூன்று நபர்களையும் ஈடுபடுத்துகிற அடிப்படையானதும் மூன்றத்தனையானதுமான ஒருமைப்பாடு உள்ளது என்பதை விளக்குகிறார்.

முதலாவதாக, **வரங்களில் வித்தியாசங்கள் உள்ளன, ஆவியானவர் ஒருவரே**. கொரிந்துப் பட்டணத்தார் பற்பல மொழிகளைப் பேசுதல் என்னும் ஒரே ஒரு வரம்தான் உள்ளது என்பதுபோல நடந்துகொண்டார்கள். "இல்லை ஒரு பொதுவான வரத்தை நீங்கள் பெற்றிருப்பதாலே உங்களுடைய ஒருமைப்பாடு காணப்படாது. மாறாக, எல்லா வரங்களுக்கும் ஆதாரமாகிய பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருப்பதினாலேயே அது காணப்படும்" என்று பவுல் கூறுகிறார்.

**12:5** அடுத்ததாக, **ஊழியங்களிலே வித்தியாசங்கள் உள்ளன** என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். அதாவது சபையிலே ஆற்றப்படுகிற பணிகளில் வேறுபாடுகள் உள்ளன. நம்மெல்லாருக்கும் ஒரே ஊழியம் கொடுக்கப்படவில்லை. ஆனால் நாம் பொதுவாகப் பெற்றிருப்பது என்னவெனில், நாம் ஆற்றுகிற பணிகள் யாவும் **ஒரே கர்த்தருக்குச்** செய்யப்படுகின்றன என்பதே யாகும். அவ்வாறு செய்யப்படுபவை பிறரைக் கருத்திற்கொண்டு (தனக்காக அல்ல) செய்யப்படுகின்றன.

**12:6** தொடர்ந்து காண்கையில், **கிரியைகளில் வித்தியாசங்கள்** இருந்தபோதிலும் அந்த தேவன் ஒருவரே ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவையான ஆவிக்குரிய வரத்தின் ஆற்றலை நல்குகிறார். வரங்களில் ஒன்று மிகுதியான வெற்றிகளைத் தருவதாகவும், வியக்கத்தக்க வகையில் கவர்ச்சி மிகுந்ததாகவும், பிறவரங்களைக் காட்டிலும் அதிக வல்லமை கொண்டதாகவும் இருப்பதாகத் தோன்றினால், அந்த வரத்தைப் பெற்றிருப்பவனுடைய மேன்மைக்கு அவன் காரணமல்ல. தேவனே அதற்கான ஆற்றலைத் தருகிறவராக இருக்கிறார்.

**12:7** ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏதோவொரு வரத்தைக் கொடுத்து, தூய **ஆவியானவர்** அவ்விசுவாசியின் வாழ்க்கையில் தம்மை வெளிப்படுத்துகிறார். பணிபுரிவதற்கு எவ்வித வேலையும் இல்லாமல் எந்த விசுவாசியும் இருப்பதில்லை. மேலும் வரங்கள் முழு சரீரத்தின் நன்மைக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. அவை ஒருவனுடைய தற்புகழ்ச்சிக்காகவோ தன் மனநிறைவுக்காகவோ கொடுக்கப்படவில்லை. மற்றவர்களுடைய நன்மையைக் கருதியே அவை கொடுக்கப்பட்டுள்ளன. இங்கு செய்யப்படுகிற ஆய்வு முழுவதும் இந்தக் கருத்து சுழன்று வருவதைக் காணவியலும்.

மேற்கூறியவை, ஆவியானவரின் வரங்களில் சிலவற்றைக்கொண்ட பட்டியலை நோக்கி நம்மை வழிநடத்துவது இயற்கையே.

**12:8 ஞானத்தைப் போதிக்கும் வசனம்** என்பது தெய்வீக நுண்ணறிவுடன் பேசுவதற்கான இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆற்றலாகும். அது ஒருவேளை கடினமான பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவோ, விசுவாசத்திற்காக உறுதியுடன்

போராடுவதாகவோ, நடைமுறை ஆலோசனை களைத் தருவதாகவோ, பகையுணர்ச்சியுடன் கூடிய அதிகாரிகளிடத்தில் பிறருக்காகப் பரிந்து பேசுவதாகவோ இருக்கலாம். "அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர் களால் கூடாமற்போயிற்று" என்று சொல்லப்படும் அளவிற்கு ஸ்தேவான் ஞானத்தை போதிக்கும் வசனத்தைப் பயன்படுத்தினான் (அப். 6:10).

தெய்வீக வெளிப்பாட்டினாலே பெற்ற செய்தி களை அறிவிக்கும் ஆற்றலே **அறிவை உணர்த் தும் வசனம்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக் கிறேன்" (1 கொரி. 15:51) என்றும், "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக் குச் சொல்லுகிறதாவது" (1 தெச. 4:15) என்றும் பவுல் பயன்படுத்தியுள்ள சொற்றொடர்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாய்த் திகழ்கின்றன. புதிய சத்தியங்களை அறிவித்தல் என்னும் முதன்மை யான பொருளில், அறிவை உணர்த்தும் வசனம் ஒழிந்துவிட்டது. ஏனெனில் கிறிஸ்தவ விசுவாசம் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக் கப்பட்டு விட்டது (யூதா 3). கிறிஸ்தவ உபதேசத் தின் பொருளடக்கம் ஏற்கனவே முழுமையுமாகக் கொடுக்கப்பட்டுவிட்டது. எனினும் அதனுடைய இரண்டாம்தரப் பொருளில், **அறிவை உணர்த் தும் வசனம்** நம்மிடத்தில் இந்நாட்களிலும் காணப் படக்கூடும். கர்த்தரோடு மிக நெருக்கமான ஐக் கியத்துடன் வாழ்கிறவர்களுக்கு விநோதமான வகையில் தெய்வீக அறிவு இப்பொழுதும் வெளிப் படுத்தப்படுகிறது (சங். 25:14 -ஆம் வசனத்தைக் காண்க). அந்த அறிவைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல் **அறிவை உணர்த்தும் வசன மாகும்.**

**12:9** தேவனுடைய சித்தத்தை நாடுகிறவர்கள் எதிர்கொள்கிற மலைபோன்ற எதிர்ப்புகளை அகற்றும் தெய்வீக ஆற்றலே **விசுவாசம்** என்னும் வரமாகும் (13:2). மேலும், தேவன் தமது வசனத் தின் மூலமாகவோ தனிப்பட்ட முறையிலோ சில கட்டளைகளை அல்லது வாக்குறுதிகளைத் தரும்போது, அவற்றைப் பெறுகிறவர் தேவனுக் காக வீரசாகசச் செயல்களைச் செய்வாராயின் அதுவும் விசுவாசமே ஆகும். ஜார்ஜ் முல்லர் விசுவாசத்திற்கு முதல்தரமான எடுத்துக்காட்டாக விளங்கினார். தனது தேவைகளை தேவனைத் தவிர எவருக்கும் தெரியப்படுத்தாமல் 10000 அநாதைப் பிள்ளைகளை 60 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் பராமரித்துவந்தார்.

நோய்களை நீக்கிக் குணமாக்கும் அதிசய மான ஆற்றலே **குணமாக்கும் வரங்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது.

**12:10 அற்புதங்களைச் செய்யும் சக்தி,** பிசாசுகளை விரட்டுதல், பொருட்களை ஒரு நிலையிலிருந்து வேறொரு நிலைக்கு மாற்றுதல், இறந்து போனவரை உயிருடன் எழுப்புதல், இயற்கைப் பொருட்களின்மீது அதிகாரத்தைச் செலுத்துதல் ஆகியவற்றைக் கொண்ட ஆற்ற லையே குறிக்கிறது. சமாரியாவில் பிலிப்பு அற் புதங்களைச் செய்து, நற்செய்தி கேட்கப்படுவதற் கான சூழ்நிலையை உருவாக்கினார் (அப். 8:6,7).

தேவனிடத்திலிருந்து நேரடியாக வெளிப்பாடு களைப் பெற்று, அவற்றைப் பிறருக்கு எவ்வித மாற்றமுமின்றி தெரியப்படுத்துவது என்பதே தீர்க்க தரிசனம் உரைத்தல் என்னும் வரத்தின் மேன்மை யான பொருளாகும். சில வேளைகளில் தீர்க்க தரிசிகள் நிகழ்ச்சிகளை வரும் முன் உரைத்தார் கள் (அப். 11:27, 28; 21:11). பெரும்பான்மையான நேரங்களில் அவர்கள் தேவனுடைய மனதை வெளிப்படுத்தும் செயலை மட்டும் செய்தார்கள். அவர்களும் அப்போஸ்தலரைப் போன்று சபை யின் அஸ்திபாரத்தைக் குறித்து அக்கறை கொண்டிருந்தார்கள் (எபே. 2:20). அவர்கள் அஸ்திபாரம் அல்ல; கர்த்தராகிய இயேசுவைக் குறித்து அவர்கள் கற்பித்தவற்றின் மூலம் சபையின் அஸ்திபாரத்தை இட்டார்கள். அவ்வாறு அஸ்திபாரம் இடப்பட்டு முடிந்தபிறகு தீர்க்கதரிசி களின் தேவை இல்லாமற் போயிற்று. அவர்களு டைய பணி புதிய ஏற்பாட்டுப் பக்கங்களில் நமக் காகப் பாதுகாக்கப்பட்டு உள்ளது. திருமறை நிறைவுபெற்றிருக்கிற நிலையில், தேவனிடத்திலி ருந்து கூடுதலான புதிய சத்தியங்களைத் தான் பெற்றிருப்பதாகக் கூறித் தன்னைத் தீர்க்கதரிசி என்று அழைத்துக்கொள்கிற எந்த மனிதனையும் நாம் நிராகரிக்கிறோம்.[44]

இதனினும் தாழ்ந்த பொருளில், தேவனுடைய வார்த்தையை அதிகாரப்பூர்வமாகவும், அறிவுக் கூர்மையோடும், செயல்திறம் மிக்க வகையிலும் அறிவிக்கிற எந்தப் பிரசங்கியையும் குறிப்பிட நாம் "தீர்க்கதரிசி" என்னும் சொல்லைப் பயன்படுத்து கிறோம். தேவனுக்குப் புகழ்ச்சியைச் செலுத்து வது (லூக்கா 1:67,68), அவருடைய மக்களை உற்சாகப்படுத்திப் பலப்படுத்துவது (அப். 15:32) ஆகியவையும் தீர்க்கதரிசனங்களில் அடங்கும்.

தீர்க்கதரிசியோ மற்றொருவனோ பரிசுத்த ஆவியினால் பேசுகிறானா அல்லது சாத்தானால்

பேசுகிறானா என்பதைக் கண்டுபிடிக்கும் ஆற்றலை **ஆவிகளைப் பகுத்தறிதல்** என்னும் சொற்றொடர் குறிக்கிறது. இந்தச் சிறப்பான வரத்தைப் பெற்றிருக்கும் மனிதன், ஒருவன் ஏமாற்றுகிறவனா சந்தர்ப்பவாதியா என்பதைக் கண்டறிகிறான். இவ்வாறாக, சீமோன் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருந்ததைப் பேதுரு கண்டறிந்தார் (அப். 8:20-23).

நாம் முன்னர் கூறியது போல, **பற்பல பாஷைகளைப் பேசுதல்** என்னும் வரம், ஒருக்காலும் கற்றிராத வேற்றுநாட்டு மொழியைப் பேசும் ஆற்றலைக் குறிக்கிறது. பற்பல மொழிகளைப் பேசுதல் ஓர் அடையாளமாகக் கொடுக்கப்பட்டது, சிறப்பாக அது இஸ்ரவேலருக்கு அளிக்கப்பட்டதாகும்.

இதுவரை தான் கற்றிராத மொழியைப் புரிந்து கொண்டு அந்த மொழியிலே கொடுக்கப்படுகிற செய்தியைத் தனது தாய்மொழியில் மொழி பெயர்த்துப் பேசும் அற்புத வல்லமையே **பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல்** என்னும் வரமாகும்.

இவ்வாறு வரங்களின் பட்டியல் தொடங்குகையில் முக்கியமாக அறிவாற்றலைப் பற்றியதாகவும், முடிவுறும்போது முக்கியமாக உணர்ச்சிகளைச் சார்ந்ததாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. கொரிந்துப் பட்டணத்தாரோ இந்த வரிசையைத் தங்களுடைய சிந்தையில் தலைகீழாக மாற்றிவிட்டார்கள். பற்பல மொழிகளைப் பேசும் வரத்தை அவர்கள் எல்லாவற்றிக்கும் மேலாக மேன்மைப்படுத்தினார்கள். ஒருவன் பரிசுத்த ஆவியை மிக அதிகமாகப் பெற்றிருப்பானாயின் அவனையும் மீறிய வல்லமையால் மிக அதிகமாக ஆட்கொள்ளப்பட்டிருப்பான் என்ற எண்ணம் எப்படியோ அவர்களிடையே நிலவிவந்தது. ஆற்றல், ஆவிக்குரிய நிலை ஆகிய இரண்டையும் ஒன்றென நினைத்து அவர்கள் குழப்பமடைந்திருந்தார்கள்.

**12:11** எட்டு முதல் பத்து வரையிலான வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரங்களும் **அந்த ஒரே ஆவியானவராலே** உருவாக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எல்லோருக்கும் ஒரே வரத்தை அவர் கொடுத்ததாக இங்கும்கூட நாம் பார்க்கிறதில்லை. **அவருடைய சித்தத்தின் படியே** அவர் **அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.** இது மற்றொரு முக்கியமான குறிப்பாகும். ஆவியானவர் தமது இறை அதிகாரத்தில் வரங்களைப் பகிர்ந்தளிக்கிறார். இதனை நாம் உண்மையாகப் புரிந்துகொள்வோமெனில், அ.·.து ஒரு வகையில் பெருமையை விட்டொழிக்கச் செய்யும். ஏனெனில் நாம் அவரிடத்திலிருந்து பெற்றிராத எதையும் நம்மிடத்தில் கொண்டிருப்பதில்லை. மேலும் மற்றொரு வகையில் அது மனநிறைவின்மையை விட்டொழிக்கச் செய்யும். ஏனெனில் எல்லைகளுக்குட்படா ஞானமும் அன்புமே நாம் என்ன வரத்தை பெற்றிருக்க வேண்டுமென்று முடிவு செய்துள்ளது. அந்த முடிவு நிறைவானதாகும். ஒரே வரத்தை யாவரும் நாடுவது தவறாகும். எல்லோரும் ஒரே இசைக் கருவியை வாசிப்பார்களென்றால், இசைக்கலைஞர் குழுவில் இசையொலியின் ஒத்திசைவைக் காணமுடியாது. ஒரு சரீரத்தில் வெறும் நாக்குகள் மட்டும் இருக்குமென்றால், அது கோர உருவமாகக் காணப்படும்.

**12:12** மனித சரீரம் ஒருமைப்பாட்டுக்கும் வேறுபாடுகளுக்கும் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. **சரீரம் ஒன்று**, ஆனாலும் **அவயவங்கள் அநேகம்**. விசுவாசிகள் எல்லோரும் வெவ்வேறு நபர்களாகவும் வெவ்வேறு அலுவல்களைச் செய்கிறவர்களாகவும் இருந்தபோதிலும், அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து சரீரம் என்னும் ஒரே செயல் இயக்கியாக விளங்குகிறார்கள்.

**அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்**. இதனை, "அந்தப்பிரகாரமாக அந்தக் கிறிஸ்துவும் இருக்கிறார்" என்று மிகத் துல்லியமாக மொழிபெயர்க்கலாம். "அந்தக் கிறிஸ்து" என்னும் சொற்றொடர் விண்ணகத்தில் உள்ள மகிமையடைந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மட்டும் குறிப்பிடாமல், விண்ணில் உள்ள சிரசையும், புவியில் உள்ள அவருடைய அவயவங்களையும் சேர்த்துக் குறிக்கிறது. எல்லா விசுவாசிகளும் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்கள் ஆவார்கள். ஒரு நபர் தன்னைப் பிறருக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கத் தனது மனித சரீரத்தையே ஊடகமாகப் பயன்படுத்துகிறார்; அதுபோலவே இந்த உலகத்தில் தம்மை வெளிப்படுத்திக் காட்டுவதற்கு கிறிஸ்துவின் சரீரத்தையே அவர் பயன்படுத்துகிறார். கர்த்தர் தம்மோடுகூட அவருடைய சரீரத்தின் அவயவங்களாகிய நம்மையும் சேர்த்து "அந்தக் கிறிஸ்து" என்னும் சொற்றொடராலே அறியப்படுவதற்கு அனுமதித்துள்ளது அவருடைய வியத்தகு கிருபைக்குச் சான்றாக விளங்குகிறது.

**12:13** நாம் எவ்வாறு கிறிஸ்துவின் சரீரமாக மாறினோம் என்பதைப் பவுல் தொடர்ந்து இங்கு விளக்குகிறார். **எல்லாரும் ஒரே ஆவியினாலே** (அல்லது ஆவிக்குள்ளாக) **ஒரே சரீரத்திற்குள்**

**ளாக** (ஒரே சரீரமாக) **ஞானஸ்நானம் பண்ணப் பட்டோம்**. இங்கு எழுத்தின்படியாக மொழி பெயர்க்கையில் "ஒரே ஆவிக்குள்ளாக"[45] என்னும் சொற்றொடரையே பெறுகிறோம். விசுவாசிகளின் ஞானஸ்நானத்தில் தண்ணீர் என்னும் மூலப் பொருளுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுபவர் அமிழ்த்தப்பட்டு, எவ்வாறு ஞானஸ்நானம் கொடுக் கப்படுகிறதோ, அதுபோலவே ஆவி என்னும் மூலப்பொருளுக்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். அல்லது ஆவியானவர் ஞானஸ்நானம் கொடுக்கும் பிரதிநிதியாகச் செயலாற்றினார் என்னும் பொருளையும் **ஒரே ஆவியினாலே** என்னும் சொற்றொடருக்குக் கொடுக்கலாம். இதுவே மிகவும் ஏற்புடையதும் புரிந்துகொள்ளக்கூடியதுமான பொருளாகும்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெந்தெ கொஸ்தே நாளில் நடைபெற்றது. அந்த நேரத் தில்தான் சபை பிறந்தது. நாம் மறுபடியும் பிறக் கும்போது அந்த ஞானஸ்நானத்தினால் உண் டான நன்மைகளில் பங்குபெறுகிறோம். நாம் கிறிஸ்துவின் **சரீரத்தின்** அவயவங்களாகிறோம்.

இங்கு பற்பல முக்கியமான குறிப்புகளை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். முதலாவது, விசுவாசிகளைக் கிறிஸ்துவின் சரீரத் திற்குள்ளாக வைக்கும், தெய்வீகச் செயலாகப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் விளங்குகிறது. இது தண்ணீர் ஞானஸ்நானத்தைப் போன்றதல்ல. இவ்வுண்மை மத்தேயு 3:11; யோவான் 1:33; அப் போஸ்தலருடைய நடபடிகள் 1:5 ஆகிய வசனங் களின் மூலமாக அறியப்படும். இது விசுவாசிகள் மேலான ஆவிக்குரிய நிலையை அடையும்படி, அவர்கள் இரட்சிக்கப்பட்ட பிறகு நடைபெறுகிற கிருபையின் செயல்பாடு அல்ல. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் யாவரும் ஆவியில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஆவார்கள். ஆயி னும் அவர்களை ஆவிக்குரியவர் அல்லர் (3:1) என்றும் மாம்சத்திற்கு உரியவர்கள் என்றும் பவுல் கடிந்துகொள்கிறார். ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றவர்கள் நிச்சயமாகப் பற்பல மொழிகளைப் பேசுவார்கள் என்பது உண்மையல்ல. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் யாவரும் ஆவியில் ஞானஸ்நானம் பெற்றவர்களே. ஆயினும் எல் லோரும் பற்பல மொழிகளைப் பேசவில்லை (12:30). ஒரு விசுவாசி தன்னை ஆவியானவரு டைய கட்டுப்பாட்டுக்குள் அர்ப்பணம் செய்யும் போது பரிசுத்த ஆவியினால் உண்டாகும் திருப்பு முனைக் கட்ட அனுபவத்தை அவன் பெறுகிறான். மேலும் அவன் உன்னதத்திலிருந்து வல்லமை பெற்றவனாக மாற்றம் அடைகிறான். ஆனாலும் அந்த அனுபவமும் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானமும் ஒன்றல்ல. இரண்டையும் ஒன்று என நினைத்து நாம் குழப்பமடையக் கூடாது.

இந்த வசனம், விசுவாசிகள் **ஒரே ஆவிக்குள் ளாகவே தாகம் தீர்க்கப்பட்டதாக** மேலும் கூறு கிறது. அதாவது, அவர்கள் தேவனுடைய ஆவி யைத் தங்களுக்குள்ளாகக் குடியிருக்கும் நப ராகப் பெற்றிருக்கிறார்கள் என்றும், அவர்களு டைய வாழ்க்கையில் அந்த ஆவியின் திருப்பணி யால் விளையும் நன்மைகளைப் பெற்றிருக்கிறார் கள் என்றும் இச்சொற்றொடர் பொருள்படும்.

**12:14** பற்பல விதமான உறுப்புகள் இன்றி ஒரு மனித **சரீரத்தை** நாம் காண முடியாது. அங்கே பல உறுப்புகள் இருக்கின்றன. ஒன்றிலிருந்து மற் றொன்று வேறு விதமாக இருக்கிறது. அவை யாவும் தலைக்குக் கீழ்ப்படிந்து பிற உறுப்புகளு டன் ஒத்துழைத்து இயங்குகின்றன.

**12:15** இயல்பானதும் நலமானதுமான சரீரம், பற்பல வேறுபாடுகளைக் கொண்ட உறுப்புகளை உடையதாயிருக்க வேண்டியது அவசியம். இ.ந்து இரண்டு ஆபத்துகளிலிருந்து நம்மைக் காக் கிறது. ஒன்று, நம்மை நாமே அற்பமாகக் கருது வதைத் தடைசெய்கிறது (வச. 15-20). இரண்டா வது, பிறரை அற்பமாகக் கருதுவதைத் தடுக் கிறது (வச. 21-25). ஒரு **கையின்** வேலையைக் **கால்** செய்யமுடியாது என்பதால் அதனை முக் கியமற்றது என்று கருதுவது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. கால்களினாலே நிற்க முடியும்; நடக் கவும், ஓடவும், உயர ஏறவும், நடனமாடவும், உதைக்கவும் முடியும்; இன்னும் பல செயல் களைச் செய்யவும் முடியும்.

**12:16 காதானது** தான் **கண்ணாயிராதபடி யினாலே** சரீரத்தைவிட்டு அது விலகிக்கொள்ள முயற்சி செய்யக்கூடாது. செவிட்டுத் தன்மை நம்மைப் பற்றிக்கொள்ளாத நிலையில் நாம் காதின் முக்கியவத்தை உணராமலிருக்கிறோம். அப்படி ஒரு நிலைமை ஏற்படும்போதே, இந்தக் காதுகள் எவ்வளவு சிறப்பான பயனுள்ள வேலை யைச் செய்கின்றன என்பது புலப்படும்.

**12:17** சரீரம் முழுவதும் கண்ணானால், நீங் கள் விநோதமான பொருளாக விளங்கி, வேடிக்கை விளையாட்டு அரங்கில் காட்சிப் பொருளாக வைக் கப்படுவீர்கள். உங்களுக்கு வெறும் காதுகள் மட்டுமே இருக்குமானால், எரிவாயு கசிந்து வரு வதை உணராமல் மயக்கமடைந்து விழுந்து விடு வீர்கள், அல்லது இறக்கவும் நேரிடும்.

சரீரம் முழுவதும் நாக்காக இருந்தால், அச் சரீரம் எவ்வளவு கோரமானதாகவும் விநோத மானதாகவும் இருக்கும் என்பதை அப்போஸ் தலன் இங்கு சொல்ல விழைகிறார். ஆயினும் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள், அந்த ஸ்தல சபையானது நாக்குகளால் நிறைந்த ஐக்கியமாகக் காணப்படவேண்டும் என்று விரும்பு வது போல பற்பல மொழிகளைப் பேசும் வரத்தை அளவிற்கதிகமாய் முக்கியப்படுத்திப் பேசினார் கள். அவ்வாறு இருந்தால் அச்சபை பேசிக் கொண்டே இருக்கும், வேறொன்றும் செய்யாது.

12:18 அவர்களுடைய மடமைக்கு **தேவன்** பொறுப்பாளி ஆகமாட்டார். அவருடைய ஒப்பற்ற ஞானத்தினாலே, அவர் **தமது சித்தத்தின்படி** வெவ்வேறு **அவயவங்களை** அதனதன் இடத்தில் **வைத்து** ஒழுங்குபடுத்தியிருக்கிறார். அவர் என்ன செய்கிறார் என்பதை அறிந்து நாம் அவருக்குரிய மேன்மையைச் செலுத்தவேண்டும்! அவர் நமக்கு கொடுத்திருக்கிற வரம் எதுவாயிருந்தாலும் அதற் காக நாம் அவருக்கு மிகவும் ஆழ்ந்த நன்றியைச் செலுத்தி, அவருடைய மகிமைக்காகவும் பிறரை விசுவாசத்தில் வளர்ப்பதற்காகவும் அந்த வரத்தை மகிழ்ச்சியோடு பயன்படுத்த வேண்டும். பிறருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரத்தின் காரண மாகப் பொறாமைகொள்ளுதல் பாவமாகும். நம் முடைய வாழ்க்கையைக் குறித்து தேவன் கொண் டிருக்கிற நிறைவான திட்டத்திற்கு எதிராக அச் செயல் கலகம் விளைவிக்கிறதாகக் காணப்படும்.

12:19 ஒரே **ஒரு உறுப்புடன்** கூடிய சரீரத்தைச் சிந்தனை செய்து பார்ப்பது கூடாத செயலாகும். ஆகவே, கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் யாவரும் பற்பல மொழிகள் பேசும் வரத்தை மட் டும் கொண்டிருந்தார்கள் என்றால், அவர்கள் ஒரு **சரீரத்தின்** செயல்பாட்டை நிறைவேற்ற முடியாது என்பதை நினைவுகூர வேண்டியவர்களாக இருந் தார்கள். மேலும், கவர்ச்சி குறைந்த வரங்கள், உணர்ச்சிபூர்வமற்ற வரங்கள் ஆகிய இன்ன பிற வரங்களும் தேவையானவையே.

12:20 தேவன் நியமித்த வண்ணம் **அவயவங் கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே**. நம்மு டைய சரீரத்தைப் பொருத்தமட்டில் இந்த உண்மை களில் நமக்கு எவ்வித ஐயமும் ஏற்படுவதில்லை. அது போலவே சபையின் ஊழியங்களிலும் இந்த உண்மைகளில் நமக்கு ஏதொரு ஐயமும் ஏற்படக் கூடாது.

12:21 மற்றொருவர் பெற்றிருக்கிற வரத்தைக் கண்டு பொறாமைகொள்வது எத்தகைய மடமையோ, அதுபோலவே மற்றொருவருடைய வரத்தை இகழ்வதும் மடமையாகும். அல்லது அத்தகையோர் தேவையில்லை என்ற கருது வதும் மடமையேயாகும். **கண்ணானது கையைப் பார்த்து, "நீ எனக்கு வேண்டுவதில்லை" என்றும்; தயையானது கால்களை நோக்கி, "நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை" என்றும் சொல்லக் கூடாது.** செய்யவேண்டியவற்றைக் கண்களால் காணமுடியும், ஆனால் அவற்றை கண்களால் செய்யமுடியாது. அவற்றைச் செய்வதற்கு அவை கைகளையே சார்ந்திருக்கின்றன. மேலும், ஓரிடத் திற்குச் செல்ல வேண்டுமென்பதைத் தலை அறிந் திருந்தாலும் அங்கு அது செல்வதற்குக் கால் களையே சார்ந்திருக்கிறது.

12:22 **சரீரத்தில் சில அவயவங்கள்** மற்ற அவயவங்களைக் காட்டிலும் **பலவீனமுள்ளவை யாக** இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கைக ளைப் போன்று சிறுநீரகங்கள் பலமுள்ளவை யல்ல. ஆனால் சிறுநீரகங்களோ தவிர்க்க இயலா தவை, கைகளோ அப்படியல்ல. நாம் கை கால் கள் இல்லாமல் வாழலாம், ஏன் நாக்கு இல்லாமல் கூட வாழலாம்; ஆனால் இருதயம், நுரையீரல், கல்லீரல் அல்லது மூளை இன்றி நம்மால் வாழ முடியாது. ஆயினும் இந்த இன்றியமையாத உறுப்புகள் தங்களை எல்லோரும் காணும்படி காட்சிப்பொருளாக வைத்துக்கொள்வதில்லை. எவ்வித ஆடம்பரமோ பகட்டோ இன்றி அவை தமது அலுவலைச் செய்துகொண்டிருக்கின்றன.

12:23 சரீரத்தில் சில **அவயவங்கள்** நல்ல தோற்றத்துடன் விளங்குகின்றன. ஆனால் மற்ற உறுப்புகள் அவ்வித அழகு வாய்ந்தவை அல்ல. அவ்வாறு அழகற்றவையாக இருக்கும் உறுப்பு களை மறைக்கும்படி அவற்றின்மீது ஆடை யணிந்து மூடிக்கொள்கிறோம். இவ்வாறு அவய வங்கள் ஒன்றையொன்று கவனித்து, வேறுபாடு கள் அதிகம் தெரியாதபடி சரிசெய்து கொள் கின்றன.

12:24,25 சரீரத்தில் **இலட்சணமுள்ள** அவய வங்களுக்கு அதிக கவனிப்பு தேவையில்லை. ஆனால் **தேவன்** வெவ்வேறு வகைப்பட்ட அவய வங்களை ஒன்றுகூட்டி **சரீரமாக,** உயிர்ப்பொருள் அமைப்பாக ஆக்கியிருக்கிறார். சில அவயவங் கள் அழகுடன் இருக்கின்றன. சில அவயவங்கள் அடக்கத்துடன் உள்ளன. சில வெளியிடங்களில் நன்கு செயல்படுகின்றன. சில அவ்வாறு செயல் புரிவதில்லை. ஆனாலும் தேவன் எல்லா அவய வங்களையும் போற்றிப் பாராட்ட உள்ளுணர்

வைத் தந்திருக்கிறார். மேலும் அவை ஒன்றை யொன்று சார்ந்திருக்கின்றன, அழகற்றவையாக இருக்கும் அவயவங்களின் குறைகளை பிற அவயவங்கள் ஈடு செய்கின்றன என்னும் உண் மையை நாம் அறியும்படியும் அவர் செய்திருக் கிறார்.

இவ்வாறு அவயவங்கள் ஒன்றையொன்று கவனித்துக்கொள்வதால், **சரீரத்திலே** பிரிவினை ஏற்படுவது தடுக்கப்படுகிறது. ஓர் அவயவம் மற்ற அவயவத்திற்கு எது தேவையோ அதைத் தரு கிறது. மேலும் அது தனக்குத் தேவையானதைக் கொடுக்கக் கூடிய அவயவத்தின் உதவியை நாடுகிறது. சபையிலும் இதுபோலவே நடைபெற வேண்டும். ஒரு வரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும்போது அங்கு பிரிவினையும், கருத்து வேறுபாடும் உண்டாகின்றன.

**12:26 ஓர் அவயவம்** பாதிக்கப்படும்போது, அதனால் **எல்லா அவயவங்களும்** பாதிக்கப்படு கின்றன. மனித சரீரத்தைக் குறித்து இது மிகவும் அறியப்பட்ட உண்மையாக இருக்கிறது. காய்ச் சல் தாக்கும்போது சரீரத்தின் ஓர் உறுப்பை மட் டும் தாக்குகிறதில்லை. அது சரீரம் முழுவதையும் தாக்குகிறது. மற்ற நோய்களும் வேதனைகளும் அதுபோலவே செயல்படுகின்றன. கண் மருத் துவர் கண்ணைச் சோதித்துப் பார்க்கையில், மூளையில் கட்டி இருக்கிறதா, சிறுநீரகம் பாதிக் கப்பட்டிருக்கிறதா அல்லது கல்லீரலில் நோயின் தாக்கம் இருக்கிறதா என்பதைக் கண்டறிகிறார். இந்த உறுப்புகள் வெவ்வேறாகவும் தனித்தனி யாவும் இருந்த போதிலும், அவை ஒரே சரீரத்தின் பாகங்களாக இருக்கிற காரணத்தினால் இவ்வாறு காணமுடிகிறது. மேலும் அவை ஒன்றோடொன்று மிக முக்கியமானபடி ஒன்றாக இணைக்கப்பட் டிருக்கின்றன. எனவே ஓர் உறுப்பைத் தாக்கும் நோய் சரீரத்தின் பிற உறுப்புகளையும் தாக்கு கிறது. ஆகவே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை யில் இருக்கும் அங்கங்களைக் குறித்து நாம் மன நிறைவு அற்றவர்களாக இராமல் அல்லது பிறரை நாம் எவ்விதத்திலும் சார்ந்தவர்கள் அல்லரென்று நினைக்காமல் யாவரும் ஒன்றுபட்டவர்கள் என் னும் உண்மையான மனநிலையை உடையோ ராய் இருக்க வேண்டும். மற்றொரு கிறிஸ்தவரைப் புண்படுத்தக்கூடிய எந்தச் செயலும், நம்மையும் மிகுந்த வருத்தத்திற்குள்ளாக்க வேண்டும். அது போலவே வேறொரு கிறிஸ்தவர் **மகிமைப்படுத் தப்படும்போது** நாம் பொறாமைகொள்ளாமல், அவரோடு களிகூர வேண்டும்.

**12:27** கொரிந்துப்பட்டணத்து விசுவாசிகள் **கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறார்கள்** என்று பவுல் இங்கு நினைவூட்டுகிறார். கிறிஸ்துவின் சரீரம் முழுவதும் அவர்கள்தான் என்னும் முழு மைப்பொருளில் இவ்வாறு சொல்லப்படவில்லை. அந்தச் சபையானது கிறிஸ்துவின் ஒரு சரீரம் என்றும் நாம் பொருள்கொள்ளக்கூடாது. ஏனெ னில் ஒரே ஒரு சரீரம்தான் உண்டு. அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு நுண்மாதிரிப்படிவமாக அல்லது சிற்றுரு வாக விளங்கினார்கள் என்றும் பொருள் கூறக் கூடாது. **தனித்தனியே** ஒவ்வொரு விசுவாசியும், அந்தப் பெரிதான கூட்டுறவு அமைப்பில் அங்க மாகத் திகழ்கிறார். இதன் நிமித்தம், ஒவ்வொரு விசுவாசியும் எவ்விதப் பெருமையோ, பொறா மையோ, எவரையும் நான் சார்ந்திருக்க வேண்டி யதில்லை என்ற எண்ணமோ, நான் தகுதியற்ற வன் என்ன எண்ணமோ கொள்ளாமல் தன்னு டைய பணியை நிறைவேற்றக்கடவன்.

**12:28** இப்பொழுது அப்போஸ்தலன் வரங் களின் வேறொரு பட்டியலைத் தருகிறார். இந்தப் பட்டியல்களில் எதுவும் முழுமையானது அல்ல. **தேவனானவர் சபையிலே** இவற்றை **ஏற்படுத்தி யிருக்கிறார்: முதலாவது அப்போஸ்தலர். முத லாவது** என்னும் சொல் எல்லோரும் அப்போஸ் தலர் அல்லர் என்பதைக் காட்டுகிறது. கர்த்த ராலே பன்னிருவர் அவருடைய தூதர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவருடைய இப்புவி ஊழி யத்தின் காலத்தில், அவர்கள் அவரோடிருந்தார் கள் (அப். 1:21,22). அவர்களில் யூதாசைத் தவிர மற்ற அனைவரும் அவர் உயிரோடு எழுந்ததைக் கண்டார்கள் (அப். :2,3,22). அந்தப் பன்னிரு வரைத் தவிர வேறு சிலரும் அப்போஸ்தலராக இருந்தார்கள். அவர்களில் மிகவும் குறிப்பிடத் தக்கவர் பவுல். மேலும் பர்னபா (அப். 14:4,14); கர்த்தருடைய சகோதரராகிய யாக்கோபு (கலா. 1:19); சில்வான், தீமோத்தேயு (1 தெச. 1:1; 2:6) ஆகியோரும் அப்போஸ்தலரே ஆவார்கள். புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோடு சேர்ந்து, அப் போஸ்தலரும் தாங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கற்பித்த உபதேசங்களி னாலே சபையின் அஸ்திபாரத்தைப் போட்டார் கள். அந்தச் சொல்லின் பொருளை நுண்ணிய முறையில் கருதுமிடத்து, தற்காலத்தில் அப் போஸ்தலர் நம்மிடத்தில் இல்லை. அதனுடைய பரந்த பொருளில் நம்மிடையே கர்த்தரால் அனுப் பப்பட்ட தூதர்களும் சபைகளை நிறுவுகிறவர் களும் இருக்கிறார்கள். அவர்களை நாம் **திருப்**

**பணி ஊழியர்கள்** என அழைக்கிறோம். அவர் களை அப்போஸ்தலர் என்று நாம் அழைப்ப தில்லை. இவ்வாறு, திருப்பணி ஊழியர்கள் என அழைப்பதன் மூலமாக, தொடக்ககால அப்போஸ் தலர் பெற்றிருந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட அதி காரத்தையும் ஆற்றலையும் இவர்கள் பெற்றிருப் பார்கள் என்று தவறாகக் கருதுவது தவிர்க்கப்படு கிறது.

அடுத்து வருபவர் **தீர்க்கதரிசிகள். தீர்க்க தரிசிகள்** தேவனுடைய வாக்கை உரைப்பவர்கள் என்று நாம் ஏற்கனவே குறிப்பிட்டோம். தேவனு டைய வார்த்தையானது முழுவதுமாக எழுத்து வடிவில் கொடுக்கப்படுவதற்கு முன்னர் தீர்க்க தரிசிகள் தேவனுடைய வார்த்தைகளை அப் படியே உரைத்தார்கள். **போதகர்கள்** என்போர் தேவனுடைய வார்த்தையை, மக்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கித் தந்தார்கள். இறந்து போனவர்களை உயிரோடு எழுப்புதல், பிசாசுகளைத் துரத்துதல் போன்றவை **அற்புதங் கள்** எனப்பட்டன. முன்னர் சொன்ன பிரகாரமாக சரீரத்தில் ஏற்படக்கூடிய நோய்களை உடனடி யாகக் குணப்படுத்துதல் **குணமாக்கும் வரங்கள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உதவிக்காரர்கள் செய்கிற வேலைகள், அதாவது அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்ட சபையின் பொருட்களோடு சம்பந்தப்பட்ட வேலைகள் இங்கு **ஊழியங்கள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளன. மற்றொரு வகை யில் **ஆளுகைகள்** என்று சொல்லப்பட்டுள்ள வரம் மூப்பர்கள் அல்லது கண்காணிகளோடு தொடர்புடையதாகும். ஓரிடத்தில் கூடுகிற சபையின் மேல் தெய்வீக மற்றும் ஆவிக்குரிய அக்கறை கொண்டுள்ள மனிதர்களே இவர்கள். இறுதியில் **பலவித பாஷைகள்** என்னும் வரம் குறிப்பிடப் பட்டுள்ளது. இங்கு சொல்லப்பட்டுள்ள வரிசை முறையில் முக்கியத்துவம் உள்ளது என்றே நாம் கருதுகிறோம். முதலாவதாக அப்போஸ்தலரைக் குறிப்பிடும் பவுல் இறுதியில் பற்பல பாஷை களைக் குறிப்பிடுகிறார். கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளோ பற்பல பாஷைகளை எல்லாவற் றிக்கும் *முதலாவதாக* வைத்து, அப்போஸ்தல ரைக் குறைவாக மதிப்பிட்டார்கள்.

**12:29,30** எல்லா விசுவாசிகளும் ஒரே வரத் தைப் பெற்றிருந்தார்களா என்னும் கேள்வியை அப்போஸ்தலன் எழுப்பினார். அதாவது எல்லோ ரும் அப்போஸ்தலரா, தீர்க்கதரிசியா, போதகரா அல்லது குணமாக்கும் வரம், ஊழியங்கள், ஆளு கைகள், பற்பல மொழி பேசுதல், மொழிகளுக்குப் பொருளுரைத்தல் என்னும் வரங்களில் ஏதேனும் ஒன்றையே செய்தனரா என்னும் கேள்வியைப் பவுல் எழுப்பியபோது, "இல்லை"[46] என்னும் பதில் கிடைக்கக்கூடிய வகையிலேயே அந்தக் கேள்வி யின் இலக்கணம் அமைந்திருந்தது. ஆகவே ஒவ் வொருவரும் பற்பல மொழிகளைப் பேசும் வரத் தையே பெற்றிருக்க வேண்டும் என்னும் கருத்து தேவனுடைய திருமறைக்கு முரணானது. மேலும் சபையானது பல அவயவங்களைக் கொண்ட சரீரம், அந்த அவயவங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அலுவலைப் பெற்றிருக்கிறது என்னும் தேவனுடைய திட்டத்திற்கு அக்கருத்து ஒவ்வாத தாக இருக்கிறது. எனவே ஒவ்வொருவரும் பற்பல மொழிகளைப் பேசும் வரத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்று சொல்லப்படவுமில்லை, மறை முகமாக வெளிப்படுத்தப்படவுமில்லை.

இங்கு சொல்லப்பட்டது போல, ஒவ்வொரு வரும் பற்பல மொழிகளைப் பேசும் வரத்தைப் பெற்றிருக்க வேண்டிய கட்டாயம் இல்லை, அவ்வாறு பேசவேண்டும் என்று கூறுவது தவறு என்றால், பற்பல மொழிகளைப் பேசுவதே ஆவி யின் ஞானஸ்நானத்திற்கு அடையாளம் என்று கூறுவதும் தவறாகும். அந்த நிலையில் ஒவ்வொரு வரும் அத்தகைய ஞானஸ்நானத்தைப் பெற முடி யாது. ஆனால் ஒவ்வொரு விசுவாசியும் ஆவி யினால் ஏற்கனவே ஞானஸ்நானம் பண்ணப்பட்டி ருக்கிறார் என்பதே உண்மையாகும் (வச. 13).

**12:31 "இப்படியிருக்க, முக்கியமான வரங் களை நாடுங்கள்"** என்று பவுல் கூறும்போது கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் ஓர் உள்ளூர் சபையாக இருந்தார்கள் என்னும் நிலையிலேயே அவர் கூறினார். அவர்களைத் தனித்தனி விசுவாசி களாகக் கருதி அவர் அவ்வாறு பேசவில்லை. மூல மொழியில் வினைச்சொல் பன்மையில் இருக்கின்ற காரணத்தால் இவ்வுண்மையை நாம் அறிகிறோம். அவர்கள் ஒரு சபை என்னும் நிலை யில் படிப்பினையூட்டும் நன்மையான தெரிந் தெடுக்கப்பட்ட வரங்களை அவர்களுடைய நடுவில் பெற்றிருக்க நாட்டம்கொள்ள வேண்டும். கவர்ச்சிமிக்க வரங்களைக் காட்டிலும் அதிக பயனுள்ளவையே சிறந்த வரங்களாகும். எல்லா வரங்களும் தூய ஆவியானவரால் கொடுக்கப் பட்டவை. அவற்றில் எதையும் பயனற்றதாய்க் கரு தக்கூடாது. ஆயினும் சிலவரங்கள் மற்ற வரங் களைக் காட்டிலும் சரீரத்திற்கு மிகுதியாகப் பயன ளிக்கக் கூடியவை. அப்படிப்பட்ட வரங்களையே ஒவ்வொரு உள்ளூர் சபையும் நாடி, தங்கள் மத்தி

யில் அவ்வாறு வரம் பெற்றவர்களை எழுப்பும்படி கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்யவேண்டும்.

**இன்னும் அதிக மேன்மையான வழியையும் காண்பிக்கிறேன்.** இந்தச் சொற்களோடு பவுல் அன்பைப் பற்றிய அதிகாரத்தை (1 கொரி. 13) அறிமுகப்படுத்துகிறார். வெறுமனே வரங்களைப் பெற்றிருப்பது முக்கியமானது அல்லவென்று அவர் கூறுகிறார். அந்த வரங்களை அன்போடு செயல்முறைப்படுத்துவதே முக்கியமானது. அன்பு தன்னைக் குறித்தல்ல, பிறரைக் குறித்தே சிந்திக்கிறது. ஒரு மனிதன் சிறப்பான வகையில் வரங்களைப் பெற்றிருப்பதைக் காண்பது நன்று. ஆனால் தன்னிடத்தில் மக்கள் கவர்ந்திழுக்கப்படுவதற்காக அந்த வரங்களை அவன் பயன்படுத்தாமல், பிறர் விசுவாசத்தில் கட்டப்படுவதற்காகப் பயன்படுத்துவானெனில், அது மிக நன்று என்று கருதப்படும்.

இந்தப் பதின்மூன்றாவது அதிகாரத்தை இதனுடைய பின்னணியிலிருந்து தனிமைப்படுத்திக் காண மக்கள் முயற்சி செய்கிறார்கள். இவ்வதிகாரத்தை அவர்கள் இடைப்பிறவரல் என்று கருதுகிறார்கள். அதாவது ஒரு பொருள் குறித்துப் பேசும்போது இடையிலே வேறு ஒரு பொருளைக் குறித்துப் பேசுவது இடைப்பிறவரல் எனப்படும். பன்னிரண்டு மற்றும் பதினான்கு ஆகிய அதிகாரங்கள் பற்பல மொழிபேசுதல் என்னும் பொருள் குறித்து ஆழமான கருத்துகளைச் சொல்லுவதால் ஏற்படும் இறுக்கமான மனநிலையிலிருந்து விடுபட இந்த அதிகாரம் எழுதப்பட்டுள்ளது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் உண்மை அதுவன்று. இன்றியமையாததும், பவுல் கூறிவருகிற வாதத்தின் தொடர்ச்சியுமாகவே இந்த அதிகாரம் விளங்குகிறது.

பற்பல மொழி பேசும் வரம் கொரிந்துப் பட்டணத்து சபையில் தவறாகப் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக அங்கே பிரிவினை உண்டாயிற்று என்பது வெளிப்படை. இவ்வாறு "தெய்வீக சக்தி பெற்றவர்கள்", தங்களைப் பகட்டாகக் காட்டுவதற்கும், தங்களுக்குத் தாங்களே போதனை தருவதற்கும், தங்களுக்கே மனமகிழ்ச்சி உண்டாக்கும் பொருட்டும் இந்த வரங்களைப் பயன்படுத்தினார்களேயொழிய, அவர்கள் அன்பின் அடிப்படையில் இவற்றைச் செய்யவில்லை. தாங்கள் கற்றிராத ஒரு மொழியில் எல்லோருக்கும் முன்பாகப் பேசுவதில் அவர்கள் மனநிறைவு பெற்றார்கள். ஆனால் அச்செயல், அவர்கள் பேசிய வற்றைக் கேட்டும் பொருள்புரியாமல் அங்கு அமர்ந்திருந்த பிறருக்கு அதிக இடர்ப்பாட்டை உண்டாக்கியது. எல்லா வரங்களும் அன்பின் ஆவியில் செயல்படுத்தப்படவேண்டும் என்று பவுல் இங்கு வற்புறுத்துகிறார். அன்பின் நோக்கம் பிறருக்கு உதவி செய்தலேயொழிய தன்னிறைவு பெறுதல் அன்று.

மேலும் "தெய்வீக சக்தி பெறாதவர்கள்" அன் பற்ற செயல்களைச் செய்து எதிர்த்து நின்றார்கள் என்றே தோன்றுகிறது. பற்பல மொழிகளைப் பேசுதல் பிசாசினால் உண்டானது என்று சொல்லும் அளவிற்கு அவர்கள் சென்றுவிட்டார்கள். அவர்கள் பேசிய கிரேக்கச் சொற்கள், "தெய்வீக சக்தி பெற்றவர்களின்" பற்பல மொழிகளைக் காட்டிலும் மோசமானதாகக் காணப்பட்டன! பற்பல மொழிகளைத் தவறாகப் பயன்படுத்திய செயலைக் காட்டிலும் அவர்களது அன்பற்ற தன்மை மிகவும் மோசமானதாகவே இருந்தது.

ஆகவே அவ்விரு கூட்டத்தாரிடமும் அன்பு காட்டும் பண்பு தேவையாயிருந்தது என்பதைப் பவுல் இங்கு ஞானத்தோடு நினைவூட்டுகிறார். அவர்கள் ஒருவரில் ஒருவர் அன்புகூருகிறவராகச் செயல்படுவார்கள் எனில், பிரச்சினைகள் யாவும் பெரும்பாலும் தீர்க்கப்படும். இந்தப் பிரச்சினையானது விசுவாசிகளை சபையிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கையினாலோ, சபை பிரிந்து இரண்டு படுவதினாலோ தீர்க்கப்படுவதில்லை. மாறாக இப்பிரச்சினை நீங்க அன்பு ஒன்றே தேவைப்படுகிறது.

**13:1** ஒருவர் உலகத்தார் பேசுகிற அனைத்து மொழிகளையும் வானதூதர் மொழியையும் **பேசக் கூடியவராக** இருந்தும், அந்தத் திறமையை பிறருடைய நன்மைக்காகப் பயன்படுத்தவில்லையென்றால், அது உலோகங்கள் ஒன்றோடொன்று மோதி எழுப்புகிற கணீரென்ற **ஓசை** மற்றும் இனிமையான ஒலி ஆகியவற்றைக் காட்டிலும் மேலான பலனைத் தராது. பேசுகிற சொற்கள் புரிந்துகொள்ளக்கூடாததாயிருந்தால், அதில் பயன் ஏதுமில்லை. அப்படிப்பட்டபேச்சு கேட்போருடைய நரம்பு மண்டலத்திற்குப் பெரும்வேதனை தரக்கூடிய பேரொலியாக விளங்குமேயொழிய பெரும்பாலோருக்கு நன்மை பயப்பதில்லை. பற்பல மொழி பேசுதல் நன்மை விளைவிக்கக்கூடியதாக இருப்பதால், அவ்வாறு பேசும்போது அதனுடைய பொருள் கூறப்படவேண்டும். அவ்வாறு சொல்லப்படுகிறவை படிப்பினையூட்டுபவையாக விளங்க வேண்டும். மிக மேன்மையான சொற்பொழிவே இங்கு **தூதர்பாஷை** என்று உருவகப்

படுத்தப்பட்டுள்ளது. அது எவருக்கும் தெரியாத ஒரு மொழியைக் குறிப்பதில்லை. ஏனெனில் தேவ தூதர்கள் மனிதர்களோடு பேசியவை அனைத்தும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய பொதுவான மொழியிலேயே இருந்தன என்பதைத் திருமறையில் காண்கிறோம்.

**13:2** அதுபோல தேவனிடத்திலிருந்து ஒருவர் வியத்தகு வெளிப்பாட்டைப் பெறக்கூடியவராக இருக்கலாம். இதுவரை மனிதர்களுக்கு வெளிப்படுத்தப்படாத மிகப்பெரிதான சத்தியங்களான தேவ **இரகசியங்களை அறிந்துகொள்ளத்தக்கதாக**, அவருக்கு அவை வெளிப்படுத்தப்படக்கூடும். இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் தெய்வீக **அறிவையும்** அவர் பெருமளவில் ஆற்றுப்பெருக்கெனப் பெறக்கூடும். **மலைகளைப் பேர்க்கத்தக்க** திறம் மிக்க வீரசாகச **விசுவாசம்** அவருக்குக் கொடுக்கப்படும். இவ்வகையான வியத்தகு வரங்களை அவர் சரீரமாகிய சபையில் உள்ள மற்ற உறுப்பினர்களுடைய படிப்பினைக்கென்று பயன்படுத்தாமல், தன்னுடைய சொந்த நன்மைக்கென்று பயன்படுத்துவாரெனில், அவ்வரங்கள் யாவும் பயனற்றவையாகவே விளங்கும். மேலும் அந்த வரங்களைப் பெற்றவரும் பிறருக்கு எவ்வித உதவியும் செய்யாத பயனற்ற மனிதராக, அதாவது, **ஒன்றுமில்லை** என்று சொல்லத்தக்க ஒருவராகவே காணப்படுவார்.

**13:3** அப்போஸ்தலன் தனக்குரிய யாவற்றையும் ஏழை எளியோருக்கு **அன்னதானமாகக்** கொடுத்தாலும், அல்லது தன்னுடைய **சரீரத்தையே சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும்**, இந்தத் துணிவுமிக்க செயல்கள் யாவும் **அன்பின்** ஆவியில் செய்யப்படவில்லையெனில் அவருக்கு அதன் காரணமாக எந்த நன்மையும் உண்டாகாது. அவர் தன்னகத்தே மனிதர்களைக் கவர்ந்திழுக்கவும், தனக்குப் பேர்புகழ் உண்டாக்கவும் மட்டுமே இத்துணிவுமிக்க செயல்களைச் செய்பவராக இருப்பாரெனில், அவை வெறும் காட்சிபொருட்களாக இருக்குமேயொழிய பயன் ஏதும் விளையாது.

**13:4** "அன்பைக் குறித்த ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதவேண்டும் என்னும் நோக்கத்துடன் இப்பகுதியை அப்போஸ்தலன் தொடங்கவில்லை. மாறாக புதிய ஏற்பாட்டில் காணப்படும் இலக்கிய நயம்மிக்க சிறந்த படைப்புகளைப் போலவே, இந்தப் பகுதியும் அந்த ஊரில் அப்பொழுது இருந்த சூழ்நிலைக்கு ஏற்ப அறிமுகப்படுத்தப்பட்டது" என்று ஒருவர் கூறியிருக்கிறார். கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் பொறுமையற்றவர்களாகவும், மனநிறைவற்றவர்களாகவும், பொறாமை நிறைந்தவர்களாகவும், தற்பெருமை உள்ளவர்களாகவும், தன்னலம் மிக்கவர்களாகவும், ஒழுங்கில்லாதவர்களாகவும், பிறருடைய உணர்வுகள் விருப்பங்கள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாதவர்களாகவும், சந்தேகப்படுகிறவர்களாகவும், சீற்றத்தை வெளிப்படுத்துகிறவர்களாகவும், குறை காண்கிறவர்களாகவும் இருந்தார்கள் என்று ஹாட்ஜ் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே இப்பொழுது அப்போஸ்தலன் மெய்யான அன்பின் குணநலன்களை எடுத்துரைத்து அதன் வேறுபாட்டை விளக்குகிறார். முதலாவதாக, **அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது**. சினமூட்டும் போது, பொறுமையோடு சகித்துக் கொள்ளுதலே நீடிய சாந்தமாகும். பிறருடைய நலன் கருதி முனைந்து நன்மையான முறையில் செயல்படுவதே தயவு எனப்படும். **அன்புக்குப்** பிறர்மேல் **பொறாமையில்லை**. மாறாக, பிறர் கனப்படுத்தப்படும்போதும், புகழப்படும்போதும் அது மனமகிழ்ச்சி அடைகிறது. **அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது**. தன்னிடத்தில் உள்ளதெல்லாம் தேவனுடைய ஈவாக இருக்கிறது என்று அது அறிந்திருக்கிறது; மேலும் பெருமைபாராட்டுவதற்கு மனிதனிடத்தில் ஒன்றுமில்லை. ஆவியின் வரங்களும் தேவனுடைய இறையாண்மையில் அருளப்படுகின்றன. ஆகவே, ஒருவன் பெற்ற வரம் எவ்வளவு கவர்ச்சி மிகுந்ததாக இருந்தாலும் அவன் பெருமை அடைவதற்கோ இறுமாப்பு கொள்கிறதற்கோ அது காரணமாக இருக்கக் கூடாது.

**13:5** அன்பு **அயோக்கியமானதைச் செய்யாது**. ஒருவன் உண்மையாகவே அன்போடு செயல்புரிவானானால், அவன் மற்றவர்களிடம் மரியாதையுடனும், நலம் கருதுகிறவனாகவும் நடந்துகொள்வான். அன்பு தன்னலம் மிகுந்த நிலையிலே **தற்பொழிவை நாடாமல்**, பிறருக்கு உதவிபுரிவதில் விருப்பமாயிருக்கும். அன்பு **சினமடையாது**, மாறாக, ஏளனமாக எண்ணப்படுவதையும் அவமானப்படுத்தப்படுவதையும் தாங்கிக்கொள்ளும். அன்பு **தீங்கு நினையாது**, அதாவது மற்றவர்களுடைய செயல்களுக்குத் தவறான காரணம் கற்பிக்காது. அவர்களுடைய செயல்களைக் குறித்துச் சந்தேகமும் கொள்ளாது. அது கபடற்றது.

**13:6** அன்பு **அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்**. ஓர் அநீதியான செயலில் ஒருவருக்கு நன்மை உண்டாகுமானால், அதில் அவர் மகிழ்ச்சி அடைகிறார். இது மனித இயல்பில் காணப்படும் தரங்குறைந்த பண்

பாகும். இ.ந்து அன்பின் ஆவியில் காணப்படு வதில்லை. **சத்தியம்** வெற்றிபெறும் ஒவ்வொரு தருணத்திலும் அன்பு **சந்தோஷப்படும்**.

**13:7 சகலத்தையும் தாங்கும்** என்னும் சொற்றொடர், அன்பு **சகலத்தையும்** பொறுத்துக் கொள்ளும் என்னும் பொருளைக் குறிக்கிறது. அல்லது அது பிறருடைய தவறுகளை மூடுகிறது அல்லது மறைத்துக்கொள்கிறது என்னும் பொரு ளையும் கொடுக்கக்கூடும். **தாங்கும்** என்னும் சொல்லை "மூடும்" என்றும் மொழிபெயர்க்கலாம். தேவை ஏற்படும் நேரங்களில் அன்பு உறுதியுடன் தெய்வீக ஒழுங்குக் கட்டுப்பாட்டைச் செயல்படுத் தக் கூடியதாக இருப்பினும் பிறருடைய தவறு களை அது தம்பட்டம் அடிப்பதில்லை.

அன்பு **சகலத்தையும் விசுவாசிக்கும்**. அதா வது, பிறருடைய செயல்களுக்கும், நடக்கும் நிகழ்ச்சிகளுக்கும் சிறந்த அர்த்தத்தையே கொடுக்க அது முயற்சி செய்யும். அன்பு **சகலத் தையும் நம்பும்** என்று சொல்லுமிடத்து, எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்க வேண்டும் என்று அது மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்பது பொரு ளாகும். துன்பங்கள் இழைக்கப்படும் போதும், அவமரியாதையாக நடத்தப்படும் வேளையிலும் அன்பு **சகலத்தையும் சகிக்கும்.**

**13:8** தங்களுக்கு அருளப்பட்ட அன்பை வெளிப் படுத்துவோரின் குணவியல்பினை விளக்கிக் கூறியபின், அப்போஸ்தலன் இப்பொழுது அன்பின் நிலைபேறான தன்மையை எடுத்துரைக்கத் தொடங் குகிறார். பிற வரங்களின் தற்காலிக தன்மை யோடு அன்பின் நிலையான தன்மை எவ்வாறு முரண்பட்டதாக விளங்குகிறது என்பதை அவர் இங்கு கூறுகிறார். **அன்பு ஒருக்காலும் ஒழியாது.** நித்திய காலம் முழுவதும் அன்பு தொடர்ந்து நிலை நிற்கும். அதாவது, நாம் கர்த்தரிடத்திலும், ஒரு வரில் ஒருவரும் தொடர்ந்து அன்புபாராட்டுகிறவர் களாக இருப்போம். ஆனால் இந்த வரங்களோ நிலையானவை அல்ல; கொஞ்ச காலமே இவை செயல்படும்.

எட்டு முதல் பதின்மூன்றாவது வசனம் வரையிலு மான வேத பகுதிக்கு இரண்டு முதன்மையான விளக்கங்களைக் கூறமுடியும், முதலாவது, தீர்க்க தரிசனம் உரைத்தல், பற்பல மொழிகள் பேசுதல், அறிவு ஆகிய வரங்கள் விசுவாசிகள் நித்திய காலத்திற்குள் புகும் வேளையில் நின்று போகும். இக்கருத்து பாரம்பரியமாகச் சொல்லப்பட்டு வரு கிறது. மற்றதோ, இந்த வரங்கள் ஏற்கனவே நின்று போய்விட்டன என்பதாகும். தேவ நூல் தொகுப்பு எழுதி முடிக்கப்பட்ட காலத்திலேயே இந்த வரங் களின் செயல்பாடு முடிவடைந்துவிட்டது என்று கருதப்படுகிறது. இந்த இரண்டு கருத்துகளையும் விளக்கித் தரும் வகையில் 8 முதல் 12 வரையிலான நித்திய நிலை, *வேத நூல் தொகுப்பு எழுதி முடிக்கப்பட்ட காலம்* என்னும் தலைப்புகளின் கீழ் பொழிப்புரையாக வழங்கப்பட்டுள்ளன.

### நித்திய நிலை

**13:8** அன்பு ஒருக்காலும் ஒழியாது. இதற்கு மாறாக, தற்காலத்தில் செயல்பட்டுவரும் தீர்க்க தரிசனங்கள், இறைமக்கள் விண்ணுலகத்தைச் சென்றுசேரும் வேளையில் நின்று போகும். தற் சமயத்தில் அறிவு என்னும் வரம் செயல்பட்டுவரு கிறது. நாம் இறுதியாக குறைவற்ற நிலையை மகிமையில் அடையும்போது, இவ்வரம் நின்று போகும். (அறிவு ஒழிந்து போம் என்று பவுல் சொல் லும்போது, விண்ணுலகில் அறிவு இருக்காது என்ற பொருளோடு அவர் அதைச் சொல்லியிருக்க முடியாது. இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் தெய்வீக உண்மைகளை வெளிப்படுத்தும் அறிவு என்னும் வரத்தையே அவர் இங்கு குறிப்பிட்டி ருக்க வேண்டும்.)

### வேத நூல் தொகுப்பு எழுதி முடிக்கப்பட்ட காலம்

**13:8** அன்பு ஒருக்காலும் ஒழியாது. (பவுல் வாழ்ந்த காலத்தில்) தீர்க்கதரிசனங்கள் செயல் பட்டு வந்தபோதிலும், இவ்வித நேரடியான வெளிப் பாடுகள் புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்டு முடிவு பெறும்போது தேவையற்றுப் போய்விடும். பற்பல மொழிகளைப் பேசும் வரம் பவுல் வாழ்ந்த நாட்களில் இருந்து வந்தது. ஆனால் அந்த வர மானது திருமறையின் அறுபத்து ஆறு நூட்களும் எழுதி முடிக்கப்பட்டபோது நின்றுபோய்விட்டது. அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரு டைய பிரசங்கங்களை உறுதி செய்வதற்கான தேவை அதன்பிறகு இருக்காது (எபி. 2:3,4). அப் போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் தெய்வீக சத்தியமாகிய அறிவு தேவனாலே கொடுக்கப்பட்டு வந்தது. கிறிஸ்தவ உபதேசத்தின் பொருளடக்கம் முழுவதும் ஒருமுறை ஒப்புக்கொடுக்கப்பட்ட நிலையில் இந்த அறிவும் நின்று போகும்.

| நித்திய நிலை | வேத நூல் தொகுப்பு எழுதி முடிக்கப்பட்ட காலம் |
|---|---|
| **13:9** இந்த உலக வாழ்க்கையில், எவ்வளவு சிறப்பான நிலையிலும் நாம் பெற்றிருக்கிற அறிவு குறைவுடையதே ஆகும். அதுபோலவே நாம் பெற்றிருக்கிற தீர்க்கதரிசனங்களும் குறைவானவையே ஆகும். வேதத்தில் சொல்லப்பட்டுள்ள செய்திகளில் பல நமக்குப் புரியவில்லை. தேவன் தந்துள்ளவை பல இரகசியங்களாகவே உள்ளன. | **13:9** அப்போஸ்தலராகிய நாம் குறைவாகவே அறிந்திருக்கிறோம். (அதாவது, ஆவியானவரின் ஏவுதலினாலே தேவனிடத்திலிருந்து நேரடியாக வெளிப்படுத்தப்படும் அறிவை இன்னும் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.) நாம் உரைக்கிற தீர்க்கதரிசனமும் குறைவுள்ளது (ஏனெனில் நாம் பெற்று வருகிற, பகுதி பகுதியாக கொடுக்கப்பட்டு வருகிற வெளிப்பாடுகளையே நம்மால் சொல்ல முடியும்.) |
| **13:10** ஆனால் நிறைவானது வரும்போது, அதாவது, நாம் நித்தியமான உலகில் நிறைவான நிலையைச் சென்றடையும்போது குறைவாகக் கொடுக்கப்பட்டுள்ள அறிவு, குறைவாகக் கொடுக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனம் ஆகிய வரங்கள் நீக்கப்பட்டுபோகும். | **13:10** ஆனால் நிறைவானது வரும்போது, அதாவது, புதிய ஏற்பாட்டின் கடைசி நூல் எழுதப்பட்டு வேதநூல் தொகுப்பு நிறைவடையும் போது, கொஞ்சம் கொஞ்சமாக வெவ்வேறு காலங்களில் வெளிப்படுத்தப்பட்டு வந்த தெய்வீக சத்தியங்கள் முடிவடைந்து நின்று போகும். இவ்வாறு சத்தியங்கள் சொல்லப்பட்டு வருகிற முறையும் ஒழிந்து போம். முழுவதும் நிறைவான தேவனுடைய திருமறை இங்கு கிடைக்கப் பெற்றிருக்கிற நிலையில் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தப்படுகிற முறை தேவையற்றுப் போகும். |
| **13:11** நம்முடைய பேச்சு, புரிந்து கொள்ளும் ஆற்றல், சிந்தனைகள் யாவும் மிகவும் குறுகியதாகவும் முதிர்ச்சியடையாததாகவும் இருக்கின்ற நிலையில், நமது இப்புவி வாழ்வு குழந்தைப் பருவத்தோடு ஒப்பிடக் கூடியதாய் உள்ளது. நம்முடைய விண்ணுலக நிலை இளமைப் பருவத்தோடு ஒப்பிடத்தக்கது. அதன் பிறகு நமது குழந்தைப் பருவநிலை கடந்துபோன ஒன்றாகக் காணப்படும். | **13:11** அடையாள வரங்கள் சபையின் குழந்தைப் பருவத்தோடு தொடர்புடையன. அந்த வரங்கள் குழந்தைத்தனமானவை அல்ல. அவையாவும் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட அவசியமான வரங்களாகும். நிறைவான தேவ வெளிப்பாடு திருமறையில் கொடுக்கப்பட்டிருக்கிற நிலையில் அற்புத வரங்கள் தேவையற்று விலக்கப்பட்டுப் போகும். இங்கு குழந்தை[47] என்னும் சொல் முழுமையான பேச்சாற்றல் பெறாத குழந்தை எனப்பொருள்படும். |
| **13:12** நாம் இப்புவியில் வாழ்கின்ற காலமெல்லாம், ஒரு மங்கிப்போன கண்ணாடியில் காண்கிறதுபோல, எல்லாவற்றையும் மங்கலாகவும் தெளிவற்ற வகையிலும் காண்கிறோம். ஆனால் விண்ணுலகமோ, முகமுகமாய்க் காண்கிறது போல விளங்கும். அதாவது பார்வையை மறைக்கக்கூடிய எவ்விதப் பொருளும் இடையில் இருக்காது. இப்பொழுதோ நம்முடைய அறிவு குறைவுடையது. ஆனால் நாம் விண்ணகம் சென்ற பிறகு நாம் அறியப்பட்டிருக்கிற வண்ணமாகவே காண்போம். அதாவது நாம் முழுமையாய்க் காண்போம். விண்ணகத்திலும் நாம் பரிபூரண அறிவைப் பெற்றிருக்கமாட்டோம். இறைவன் ஒருவரே எல்லாம் அறிந்தவர். ஆனால் அப்பொழுது நமது அறிவு, இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் பல மடங்கு பெரிதாயிருக்கும். | **13:12** இப்பொழுது (அப்போஸ்தலருடைய காலத்தில்) கண்ணாடியில் மங்கலாக நாம் காண்கிறோம். நம்மில் (அப்போஸ்தலரில்) ஒருவரும் முழுமையான வெளிப்பாட்டைப் பெறவில்லை. அதில் ஒரு பங்கே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு புதிரில் உள்ள சிறு சிறு பகுதிகளைப் போல அது உள்ளது. வேத நூல் தொகுப்பு முழுவதுமாக எழுதிக் கொடுக்கப்பட்ட நிலையில், மங்கிய தன்மை நீங்கி நாம் தெளிவாகக் காண்போம். (அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்னும் நிலையில்) நமது அறிவு இப்பொழுது குறைவானதாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் கடைசி நூல் எழுதப்பட்டவுடனே, நாம் முழுவதும் அறிந்தவர்களாக இருப்போம். மேலும் இதுவரை இல்லாத அளவிற்கு மிக நெருங்கிய நிலையில் அதாவது உள்ளார்ந்த நிலையில் அறிந்திருப்போம். |

**13:13** திருவாளர் கெல்லி கூறியதுபோல **விசுவாசம், நம்பிக்கை, அன்பு** ஆகியவை "கிறிஸ்தவத்தின் குணவியல்பினை வெளிப்படுத்திக் காட்டும் முதன்மையான நன்னெறிக் கோட்பாடுகளாகும்." தூய ஆவியானவரின் இந்தக் கிருபைகள் அவர் அருளிய வரங்களைக் காட்டிலும் மேன்மையானவையாகவும் நீடித்து நிலைத்திருப்பவையாகவும் திகழ்கின்றன. சுருங்கக் கூறின், ஆவியின் வரங்களைக் காட்டிலும் ஆவியின் கனிகள் மிகவும் முக்கியமானவை.

மேலும், கிருபைகளில் **அன்பே பெரியது.** ஏனெனில் அதுவே பிறருக்கு மிகவும் பயனுள்ளதாக விளங்குகிறது. அது தன்னலத்தை மையமாகக் கொண்டிராமல் பிறர் நலத்தையே மையமாகக் கொண்டிருக்கிறது.

இந்த அதிகாரத்தை விட்டு நாம் கடந்து செல்வதற்கு முன், சில கருத்துகளைக் குறிப்பிட வேண்டும். மேற்கூறியது போல 8 முதல் 12 வரையிலான வசனங்களுக்கு, இக்கால வாழ்க்கைக்கும் நித்திய நிலைக்கும் உள்ள வேறுபாடே பெரும்பாலோர் ஏற்றுக்கொண்ட விளக்கமாக இருக்கிறது.

ஆனால் பக்தி நிறைந்த கிறிஸ்தவர்கள் பலர், வேதநூல் தொகுப்பு எழுதி முடிக்கப்பட்ட காலம் என்னும் தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட விளக்கத்தையே சரியென்று ஒப்புக்கொள்கிறார்கள். தேவனுடைய வார்த்தையான திருமறையானது எழுத்துவடிவில் நிறைவாக எழுதிக்கொடுக்கப்பட்டதற்கு முன் அப்போஸ்தலர் அதனைப் பிரசங்கித்து வந்தனர். அதுகாலை அவர்களது செய்தியினை உறுதிசெய்யும் வகையில் அடையாள வரங்கள் கொடுக்கப்பட்டன. இதுவே அவற்றின் நோக்கம் என்று அவர்கள் நம்புகிறார்கள். மேலும் புதிய ஏற்பாடு முற்றிலுமாக எழுதி முடிக்கப்பட்ட நிலையில் அற்புத வரங்களின் தேவை அற்றுப் போய்விட்டது என்றும் அன்னார் நம்புகின்றனர். இந்த இரண்டாவது விளக்கம் கருத்தூன்றிய வகையில் சிந்தித்துப் பார்ப்பதற்கு ஏற்படையது. ஆயினும் இவ்விளக்கத்தை முற்றுமுடிய மெய்ப்பிப்பது அரிது. அப்போஸ்தலருடைய காலத்தின் இறுதியில், அடையாள வரங்கள் பெரும்பாலும் ஒழிந்துவிட்டன என்று நாம் நம்பிய போதிலும், தேவன் விரும்பினால் அவற்றை இந்த நாட்களில் பயன்படுத்த மாட்டார் என்று உறுதியாக நம்மால் கூறமுடியாது. எந்த விளக்கத்தை நாம் ஒப்புக் கொண்டாலும், ஆவியின் வரங்கள் குறைவானவை மற்றும் தற்காலிகமானவை என்றும், ஆவியின் கனியோ நித்தியமானது மற்றும் மிகவும் மேன்மையானது என்றும் நாம் அறிந்து அவ்வுண்மையைப் பற்றிக்கொள்ள வேண்டும். நாம் அன்பைக் கடைப்பிடிக்கிறவர்களாக இருப்போம் என்றால், வரங்களை நாம் தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து அது நம்மைக் காக்கும். மேலும் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதால் உண்டாகும் சச்சரவு பிரிவினை ஆகியவற்றிலிருந்தும் நாம் காக்கப்படுவோம்.

**14:1** முந்தின அதிகாரத்தோடு இந்த வசனம் நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிறது என்பது வெளிப்படை. கிறிஸ்தவர்கள் **அன்பை நாட** வேண்டும். அவர்கள் எப்பொழுதும் பிறருக்குப் பணிபுரிய முயற்சி செய்ய வேண்டும் என்பதே இதன் பொருளாகும். மேலும் அவர்கள் தங்களுடைய சபைகளுக்கு **ஞானவரங்கள்** தேவை என்றும் **விருப்பங்**கொள்ள வேண்டும். ஆவியானவர் தமது விருப்பப்படி வரங்களைப் பகிர்ந்தளிக்கிறார் என்பது உண்மையாயினும், உள்ளூர் சபைகளில் மிகவும் பயன்படக்கூடிய வரங்களை நமது விண்ணப்பமாகக் கேட்க முடியும் என்பதும் உண்மையாயிருக்கிறது. அதன் காரணமாகவே தீர்க்கதரிசன வரமானது மிகச்சிறப்பான முறையில் விரும்பப்படத்தக்கது என்று பவுல் இங்கு தெரிவிக்கிறார். மேலும் அவர் தீர்க்கதரிசன வரமானது ஏன் குறிப்பாக, பற்பல மொழிகளைப் பேசும் வரத்தைக் காட்டிலும் மிகுதியாகப் பயன் விளைவிக்கக் கூடியது என்று தொடர்ந்து விவரிக்கிறார்.

**14:2** அந்நிய பாஷையில் பேசுகிறவன், மொழிபெயர்ப்பின்றி பேசுவானானால் அதன் காரணமாக சபை மக்களுக்கு பயன் ஏற்படுவதில்லை. அவன் என்ன பேசுகிறான் என்பதை தேவன் அறிவார். ஆனால் சபை மக்களுக்கோ அது வேறு நாட்டு மொழியாக இருப்பதால், அதனைப் புரிந்துகொள்ள முடியாது. இதுவரை அறிந்திராத உண்மைகளை அவன் விளக்கிக் கூறக்கூடும். ஆனாலும் அவன் பேசுவது அந்நிய மொழியாக இருப்பதால், அது எவ்வித நன்மையையும் உண்டாக்குவதில்லை.

**14:3** இதற்கு மாறாக தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன், மக்களை எழுப்புகிறான், அவர்களுக்கு உற்சாகமூட்டுகிறான், அவர்களுக்கு ஆறுதலும் அளிக்கிறான். அவன் அவ்வூர் மக்கள் பேசுகிற மொழியில் பேசுவதே இதற்குக் காரணம். அதுவே இந்த வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. தீர்க்கதரிசனம் உரைக்கிறவன் மக்களை எழுப்புகிறான், அவர்களுக்குக் கிளர்ச்சியூட்டுகிறான், அவர்களை ஒன்றுபடுத்துகிறான் என்று சொல்

லும்போது, பவுல் இங்கே தீர்க்கதரிசனம் உரைக் கிறவன் யார் என்னும் வரையறையைக் கூற வில்லை. மக்கள் அறிந்த மொழியில் செய்தி கொடுக்கப்படும்போது இவ்வித விளைவுகள் ஏற்படும் என்று மட்டுமே அவர் கூறுகிறார்.

**14:4** பிறர் அறியாமல் தனியே தன்னுடைய வளர்ச்சிக்காக ஒருவர் பற்பல மொழி பேசும் வரத் தைப் பயன்படுத்துவது சரியானது என்று சொல்லு வதற்குப் பொதுவாக இந்த வசனத்தைப் பயன் படுத்துகிறார்கள். ஆனால் "சபை" என்னும் சொல் இந்த அதிகாரத்தில் ஒன்பது முறை பயன்படுத்தப் பட்டுள்ளது (வச. 4, 5, 12, 19, 23, 28. 33, 34, 35). ஆகவே ஒரு விசுவாசி தனியறையில் பிறர் அறியாமல் எவ்வாறு தனது ஆவிக்குரிய வாழ்க்கையை நடத்துகிறார் என்பது பற்றி பவுல் இங்கு பேச வில்லை என்பதற்கு இதுவே போதுமான சான்றாக விளங்குகிறது. மாறாக அவர் சபையில் பற்பல மொழி பேசுவதைக் குறித்தே இங்கு விளக்க மளிக்கிறார். இந்தப் பகுதியின் பின்னணியைக் காணுங்கால், சுய வளர்ச்சிக்காகப் பற்பல மொழி களைப் பேசுவதை இங்கு பவுல் ஆதரித்து வாதா டாமல், பிறருக்குப் பயன் ஏதும் உண்டாக்காத வரத்தை சபையில் பயன்படுத்தலாகாது என்று கண்டிக்கிறார் என்பதை உணரமுடியும். அன்பு தன்னைக் குறித்தல்ல, பிறரைக் குறித்தே சிந்திக் கிறது. பற்பல மொழி பேசும் வரத்தை அன்பின் அடிப்படையில் பயன்படுத்தினால், அது ஒரு வருடைய சுய நன்மைக்கல்ல, பிறர் நன்மைக் காகச் சிறந்து விளங்கும்.

**தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.** அவன் தன்னுடைய வரத்தை சுய மேம்பாட்டிற்காக விளம் பரப்படுத்தாமல் சபை மக்கள் புரிந்துகொள்ளும் மொழியில் ஆக்கபூர்வமான வகையில் பேசுகிறான்.

**14:5** பற்பல மொழி பேசும் வரத்தைப் பவுல் ஏளனப்படுத்திப் பேசவில்லை. அது பரிசுத்த ஆவி யின் வரம் என்பதை அவர் அறிந்திருக்கிறார். ஆவியானவரிடத்திலிருந்து வருகின்ற ஏதொன் றையும் அவரால் ஏளனப்படுத்த முடியாது, ஏளனப் படுத்தவும் மாட்டார். **"நீங்களெல்லாரும் அந் நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன்"** என்று அவர் கூறுமிடத்து, அவ்வரம் தனக்கு மட்டுமே உரிமையானது அல்லது நன்மைபெற்ற ஒருசிலருக்கு மட்டுமே உரிமையானது என்னும் சுயவிருப்பத்தைத் துறந்து செயல்புரிகிறார். அவரு டைய அவா, மோசேயின் கூற்றுக்கு ஒப்பாயிருக் கிறது: "கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லத்தக்கதாக, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப் பண்ணினால் நலமாயிருக்குமே" (எண். 11:29). ஆனாலும் இவ்வாறு பவுல் சொல்லும்போது, எல்லா விசுவாசிகளும் ஒரே வரத்தைப் பெற்றி ருக்க வேண்டும் என்பது தேவனுடைய விருப்ப மன்று என்பதை அறிந்திருந்தார் (12:29,30-வசனங்களைக் காண்க).

அதனைக் காட்டிலும், கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் **தீர்க்கதரிசனம்** உரைப்பதில் பவுல் மிகுதியாக விருப்பமுடையவராயிருந்தார். ஏனெ னில் அதன் மூலமாக அவர்கள் ஒருவரையொரு வர் ஊன்றக்கட்டுகிறவர்களாக இருப்பார்கள். அவர்கள் பற்பல மொழிகளைப் பேசும்போது அவற்றைக் கேட்கிறவர்களுக்கு மொழிபெயர்த் துச் சொல்லப்படவில்லையென்றால் எதுவும் புரியாது. அவர்களுக்கு எவ்விதப் பயனும் ஏற் படாது. **பக்திவிருத்தி** அடையச் செய்வதையே பவுல் முக்கியமாகக் கருதினார். "பக்திவிருத்தி உண்டாக்கும் ஒரு செயலோடு ஒப்பிட்டுப் பார்க் கும்போது, ஆவிக்குரிய மனதிற்கு திகைக்கச் செய்யும் வேறொரு செயல் தாழ்ந்த மதிப்புடைய தாகவே காணப்படும்" என்று திருவாளர் கெல்லி இதற்கு விளக்கமளிக்கிறார்.[48]

**அந்நியபாஷைகளில் பேசுகிறவன் அர்த் தத்தையுஞ் சொல்லாவிட்டால்** என்னும் சொற் றொடர் "அந்நியபாஷைகளில் பேசுகிறவனே அதற்கான அர்த்தத்தையுஞ் சொல்லாவிட்டால்" என்றோ "வேறொருவர் அதற்கான அர்த்தத்தைச் சொல்லாவிட்டால்" என்றோ பொருள்படும்.

**14:6** கொரிந்துப் பட்டணத்துக்கு பவுல் வருகை புரிந்தபோது, அவரே **அந்நிய பாஷைகளைப் பேசி யிருந்தாலும்,** அவர் கூறியவை அவர்களுக்குப் புரியவில்லை என்றால், அதனால் பயன் ஏதும் இல்லை. **இரகசியங்களை வெளிப்படுத்துகிற, அறிவுண்டாக்குகிற** அல்லது **தீர்க்கதரிசன மாக**, போதகமாக அவர் கூறிய செய்திகளை அவர்களால் புரிந்துகொண்டிருக்க முடியும். இரக சியங்களை வெளிப்படுத்துகிறவை மற்றும் அறிவுண்டாக்குகிறவை ஆகிய இரண்டும் மனதின் ஏற்புத்திறனோடு சம்பந்தப்பட்டவை என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தல் மற்றும் போதித்தல் ஆகிய இரண்டும் அவற்றை வெளிப்படுத்திச் சொல்லும் திறமையோடு சம்பந்தப்பட்டவை என் றும் விளக்கவுரையாளர்கள் கருதுகிறார்கள். சபை பயனடைய வேண்டுமென்றால் செய்தியானது புரிந்துகொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும்

என்பதே பவுல் இங்கு வலியுறுத்துகிற கருத்தாகும். தொடர்ந்து வருகிற வசனங்களில் அவர் இதனை மெய்ப்பிக்கிறார்.

**14:7** முதலாவதாக, அவர் இசைக்கருவிகளை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துகிறார். **புல்லாங்குழலையும் சுரமண்டலத்தையும்** வாசிக்கும் போது ஸ்வரத்தில் **வேறுபாட்டைக் காட்டாவிட்டால்**, வெளிப்படுகிற தொனி **குழலாலே** ஊதப்படுகிறதா, **சுரமண்டலத்தில்** வாசிக்கப்படுகிறதா என்பதை ஒருவராலும் புரிந்துகொள்ள முடியாது. ஸ்வரத்தில் காணப்படுகிற தனித்தன்மை, தாளத்தில் வெளிப்படுகிற வேறுபாடு, மற்றும் தொனியில் காட்டப்படுகிற தெளிவு இவை யாவும் இசையின் ரசனையை ஊக்குவிக்கிற கூறுகளாக விளங்குகின்றன.

**14:8** எக்காளத்தைக் குறித்தும் மேற்கூறியது உண்மையாகவே இருக்கிறது. போர்புரிவதற்காக அழைப்பு விடுக்கும்போது, அந்தச் சத்தமானது தெளிவாகவும் அதற்குரியதாகவும் இருக்க வேண்டும். இல்லையெனில் ஒருவனும் **யுத்தத்திற்கு ஆயத்தப்பட மாட்டான்**. எக்காளம் வாசிக்கிறவன் வெறுமனே எழுந்து நின்று ஏற்றத்தாழ்வற்ற நீண்டதொரு முழக்கத்தை எழுப்புவானென்றால், ஒருவனும் அதைக்கேட்டு கொதித்தெழமாட்டான்.

**14:9** அதுபோலவே மனிதனுடைய பேச்சும் இருக்க வேண்டும். நாம் பேசுகிற பேச்சு தெளிவற்று இருக்குமென்றால், என்ன சொன்னோம் என்பதை ஒருவராலும் புரிந்துகொள்ள முடியாது. அது **ஆகாயத்திலே பேசுகிறதாகக்** காணப்படும். (இங்கு 9 -ஆவது வசனத்தில் "நாவு" என்னும் சொல் பேசுகின்ற உறுப்பைக் குறிக்கிறதேயொழிய அந்நிய பாஷையைக் குறிப்பதில்லை). இங்கே நடைமுறைப் பயிற்சிக்கான பாடம் கற்பிக்கப்படுகிறது. அதாவது, அந்த ஊழியமோ போதகமோ தெளிவானதாகவும் எளிமையானதாகவும் இருக்க வேண்டும். அது மிகுந்த "ஆழமானதாகவும்", கேட்போருடைய அறிவுக்கு மேற்பட்டதாகவும் இருக்குமென்றால் அதனால் அவர்களுக்கு எவ்விதப் பயனுமில்லை. பேச்சாளருக்கு அது ஓரளவு மனநிறைவைக் கொடுக்கக்கூடும். ஆனால் அது இறைமக்களுக்குப் பயனளிப்பதில்லை.

**14:10** இந்த உண்மையை விளக்கிக்கூற இன்னுமொரு உவமையைப் பவுல் இங்கு முன்வைக்கிறார். இந்த உலகில் வழங்கிவரும் **எத்தனையோவிதமான** மொழிகளைப் பற்றி அவர் இங்கு கூறுகிறார். மனிதர்களால் பேசப்படுகிற மொழிகளைக் காட்டிலும் பரந்த பொருளை அவர் குறிப்பிடுகிறார். மற்ற உயிரினங்கள் வெளிப்படுத்தும் கருத்துப் பரிமாற்றமும் இதனுள் அடங்கும். பறவைகள் எழுப்பும் ஓசைகளும், விலங்குகள் கீச்சிடும் சத்தமும் உறுமுகிற சத்தமும் பவுலின் சிந்தனைக்கு வந்தனபோலும். பறவைகள் உடலுறவு கொள்வதற்காகவும், ஓரிடத்திலிருந்து வேறுதொலைதூர நாடுகளுக்குச் செல்வதற்காகவும், குஞ்சுகளுக்கு உணவு கொடுப்பதற்காகவும் வெவ்வேறு ஒலிகளை எழுப்புகின்றன என்பதை நாம் அறிவோம். ஆபத்து நேரிடுவதற்கான அறிகுறிகளைக் கண்டறியும் விலங்குகள், அதற்கேற்ற எச்சரிப்பை வெளிப்படுத்தும் வண்ணம் ஒருவகையான ஓசையை எழுப்புகின்றன. இந்த ஓசைகள் அனைத்தும் குறிப்பிட்ட அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றன என்றே பவுல் இங்கு கூறுகிறார். **அவற்றில் ஒன்றும் அர்த்தமில்லாத தல்ல**. ஒவ்வொரு ஓசையும் ஒரு குறிப்பிட்ட செய்தியைக் கூறும்படியே எழுப்பப்படுகிறது.

**14:11** மனிதனுடைய பேச்சிலும் இது உண்மையாகவே விளங்குகிறது. ஒருவன் தெளிவான உச்சரிப்போடு பேசவில்லையென்றால், ஒருவராலும் அவன் பேசுகிறதைப் புரிந்து கொள்ளமுடியாது. அவன் பேசுகிற பேச்சு பொருளற்ற பிதற்றலாகவே காணப்படும். உங்களுடைய மொழியைப் புரிந்துகொள்ள முடியாத ஒருவரோடு கருத்துப் பரிமாற்றம் செய்ய நீங்கள் செய்கிற முயற்சியைப் போல வேறு எந்த அனுபவமும் வேதனையை அளிக்காது.

**14;12** இதன் காரணமாக, கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் **ஆவிக்குரிய வரங்களில்** கொண்டிருந்த நாட்டத்தோடு, **சபைக்குப் பக்திவிருத்தி** உண்டாக்கத்தக்க விருப்பத்தை ஒன்றுசேரப் பண்ண வேண்டும். "நீங்கள் சிறந்து விளங்க வேண்டும் என்ற செயல்களில், சபை பக்திவிருத்தி அடைய வேண்டும் என்னும் விருப்பத்தை இலக்காகக் கொண்டிருங்கள்" என்று மோ.ப்ட இவ்வசனத்தை மொழிபெயர்க்கிறார். ஆவிக்குரிய வரங்களில் அவர்கள் கொண்டிருந்த நாட்டத்தைப் பவுல் உற்சாகமிழக்கச் செய்யவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக, அவர்கள் அந்த வரங்களைப் பயன்படுத்துவதால் மிகவுயர்ந்த இலக்கை அவர்கள் அடைய வேண்டும் என்பதற்காக அவர்களை வழிநடத்தி ஆலோசனை கூறுவதே அவருடைய விருப்பமாக இருந்தது.

**14:13** ஒருவன் **அந்நிய பாஷையில் பேசுவானானால், அதன் அர்த்தத்தையும்** தான் சொல்ல

வேண்டும் என்று **அவன் விண்ணப்பம் பண்ண வேண்டும்**. அல்லது அதனுடைய அர்த்தத்தை வேறொருவன் சொல்லவேண்டும் என்று அவன் விண்ணப்பம் பண்ணவேண்டும் என்பது இவ் வசனத்தின் பொருளாயிருக்கலாம்.[49] அந்நிய பாஷைகளில் பேசுகிற வரத்தைப் பெற்ற மனிதன் அதற்கு அர்த்தத்தைச் சொல்லக் கூடிய வரத்தை யும் பெற்றிருக்க வாய்ப்புண்டு. சிலர் அவ்வாறு வரம்பெற்றவர்களாக இருக்கக் கூடுமேயொழிய கட்டாயமாக அவ்வாறிருக்கவேண்டும் என்னும் விதி இல்லை. மனிதனுடைய சரீரம் என்னும் உவ மையில், வெவ்வேறு உறுப்புகளுக்கு வெவ்வேறு அலுவல்கள் உள்ளன என்னும் கருத்து விளங்கு கிறது.

**14:14** ஒரு மனிதன் சபைக்கூட்டத்தில் அந்நிய பாஷையில் விண்ணப்பம் பண்ணினால் அவன் ஆவியில் விண்ணப்பம் பண்ணுகிறவனாக இருப் பான். அதாவது அவனுடைய சொற்கள் எல்லோ ரும் பேசுகிற பொதுவான மொழியாக இல்லாமற் போனாலும், அது அவனுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாக இருக்கும். அந்த விண்ணப்பத்தின் கருத்து பயனற்றதாயிருக்கும் என்பது, அது வேறு எவருக்கும் நன்மை பயக்காது என்று பொருள் படும். சபையில் கூடிய மக்களுக்கு அந்த மனிதன் என்ன கூறுகிறான் என்பது தெரியாது. 14:19 -ஆம் வசனத்தை விளக்குகையில் **என் கருத்து** என்னும் சொற்றொடர் "என்னைப் பற்றிய பிறருடைய கருத்து" என்று பொருள்படும் என்பதைக் காணமுடியும்.

**14:15 இப்படியிருக்க, செய்ய வேண்டுவ தென்ன?** இது ஓர் எளிமையான செயலாகும்: பவுல் **ஆவியினால் விண்ணப்பம்பண்ணுவது** மட்டுமின்றி, பிறர் அதனைப் புரிந்துகொள்ளும் வண்ணமும் **விண்ணப்பம் பண்ணுவார்**. "**நான் கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்**" என்னும் சொற்றொடரின் பொருள் இதுதான். அவர் தனக்குப் புரிந்துகொள்ளும்படி விண்ணப்பம் பண்ணுவார் என்பதல்ல, பிறர் புரிந்துகொள்ளத் தக்கதாக விண்ணப்பம் பண்ணுவதில் உதவி செய்வார். அதுபோலவே அவர் **ஆவியோடு பாடு வார்.** மேலும் பிறர் புரிந்துகொள்ளத்தக்க தாகவும் பாடுவார்.

**14:16** இந்த வேதபகுதியின் சரியான பொருளை இந்த வசனம் மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறது. பவுல் தனது சொந்த ஆவியில் ஸ்தோத்திரம் பண்ணினால், மேலும் அந்த ஸ்தோத்திரத்தின் பொருளை வேறு எவரும் அறிந்துகொள்ள முடிய வில்லையென்றால், அவர் பேசிய மொழியைப் புரிந்துகொள்ளாத ஒருவன் அதன் முடிவில் எவ்வாறு **"ஆமென்" என்று சொல்லுவான்?**

**கல்லாதவன்** என்னும் சொல் செய்தியைக் கேட்கும்படி சபைக்கு வந்து அமர்ந்திருக்கிறவர் களில், பிரசங்கி பயன்படுத்துகிற மொழியை அறியாத ஒருவனையே குறிக்கிறது. பொதுவான சபைக் கூட்டங்களில் விவேகத்தோடு **ஆமென்** என்ற சொல்லைப் பயன்படுத்துவது அங்கீகரிக் கப்பட்ட ஒன்று என்பதை இந்த வசனம் தற்செய லாக எடுத்துரைக்கிறது.

**14:17** வேறுநாட்டு மொழியிலே பேசும் வரத் தைப் பெற்றிருப்பதற்காக, உண்மையிலேயே ஒருவன் தேவனுக்கு **ஸ்தோத்திரம்** செலுத்த கடமைப்பட்டிருக்கிறான். ஆயினும் அவன் பேசு கிறது என்ன என்பதை மக்கள் புரிந்துகொள்ள வில்லையென்றால், அதனால் அவர்கள் **பக்தி விருத்தி** அடையமாட்டார்கள்.

**14:18** கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் **எல்லாரைக்** காட்டிலும் அப்போஸ்தலன் வெளி நாட்டு மொழிகளில் **அதிகமானவற்றைப்** பேசும் ஆற்றலைப் பெற்றிருந்தார் என்பது வெளிப்படை. பவுல் சில மொழிகளைக் கற்றறிந்தார் என்பதை நாம் அறிவோம். ஆனாலும் இங்கு அந்நிய மொழி கள் பேசும் வரத்தையே அவர் குறிப்பிடுகிறார் என்பதில் ஐயமில்லை.

**14:19** மொழிகள் பலபேசும் ஆற்றலைப் பவுல் பெற்றிருந்தபோதிலும், ஒரு வெளிநாட்டு மொழி யில் **பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிற திலும்**, பிறர் புரிந்துகொள்ளத்தக்கபடி, அதாவது அவருடைய **கருத்தோடு ஐந்து வார்த்தை களைப் பேசுவதையே** அவர் விரும்பினார். தற்புகழ்ச்சிக்காக அந்த வரத்தைப் பயன்படுத்து வதில் அவர் விருப்பங்கொள்ளவில்லை. இறை மக்களுக்கு உதவி செய்வதே அவருடைய முதன் மையான நோக்கமாயிருந்தது. ஆகவே, பிறர் புரிந்துகொள்ளத்தக்க வண்ணமே அவர் பேச வேண்டும் என்று தீர்மானித்திருந்தார்.

என் கருத்தோடு என்னும் சொற்றொடர் "பிறர் நோக்குடைய பெயர்ச்சொல்"[50] என்னும் இலக் கணத்தைச் சார்ந்தது. நான் என்ன புரிந்துகொள் கிறேன் என்னும் பொருளை இச்சொற்றொடர் தருகிறதில்லை. மாறாக, நான் பேசும்போது பிறர் என்ன புரிந்துகொள்கிறார்கள் என்பதே இதன் பொருளாகும்.

இந்த வேதபகுதியின் பின்னணியைக் காணும் போது, பவுல் அந்நிய மொழிகளில் பேசியபோது

அவர் என்ன புரிந்துகொண்டார் என்பது அல்ல, மாறாகப் பிறர் அவர் பேசியது என்னவென்று புரிந்துகொண்டார்கள் என்பதே இந்த வசனத்தின் கருத்து என்பதை ஹாட்ஜ் என்பார் விளக்கிக் காட்டுகிறார்:

> பற்பல மொழிகளைப் பேசும் வரத்தை மிகப் பெரிய அருளாக தேவனிடத்திலிருந்து பெற்றிருந்ததற்காகப் பவுல் அவருக்கு நன்றி செலுத்தினார். ஆனால் அவர் அந்த வரத்தைப் பயன்படுத்திய வேளைகளில் அவர் பேசியவற்றினால் அவருக்கும் பயனில்லை, பிறருக்கும் பயனில்லை என்று கருதுவோமானால், அவருடைய கொள்கையின்படி, அவர் அந்த வரத்திற்காக நன்றிசெலுத்தினார் என்பதை நம்ப முடியாது. இக்கருத்துக்கு இணையாக பிறிதொரு கருத்தையும் இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. அதாவது பற்பல மொழிகளைப் பேசுதல் என்னும் செயல் மனதினில் அறிவற்ற நிலையில் பேசுவதாகாது. மேலும் இந்த வரத்தின் இயல்பைப் பொருத்த பொதுவான உபதேசம் யாதெனில், இந்த வேதபகுதியோடு அது எல்லா வகையிலும் முரண்பாடற்றதாக விளங்க வேண்டும் என்பது ஒன்றுதான். கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் எல்லோரையும் விட அதிகமான அந்நிய மொழிகளைப் பவுல் பேசக் கூடியவராக இருந்தபோதிலும் அவர் தனது கருத்தோடு ஐந்து வார்த்தைகளைப் பேசுவதையே அவர் விரும்பினார். அதாவது விளங்கிக்கொள்ள முடியாத அந்நிய மொழியில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுவதைக் காட்டிலும், விளங்கிக்கொள்ளத் தக்கபடி பேசுவதையே அவர் விரும்பினார். சபையில் மற்ற வர்களுக்கு நான் போதிக்க வேண்டும்; மேலும் வாய்மொழியாக உபதேசிக்க வேண்டும், கலாத்தியர் 6:6. கருத்தோடு பேசுவது என்றால் என்ன என்பதை இது தெளிவுபடுத்துகிறது. அதாவது பிறர் விளங்கிக்கொள்ளும்படி உபதேசங்களை அறிவுறுத்துவதையே இது குறிக்கிறது.[51]

**14:20** அடுத்ததாக, கொரிந்துப் பட்டணத்தார் தங்களுடைய சிந்தனையில் வளர்ச்சியற்ற நிலையில் இருந்ததைக் குறித்து அவர்களுக்குப் பவுல் அறிவுரை நல்குகிறார். சிறுவர்கள் பயன்படுகிறவர்களாக இருப்பதைக் காட்டிலும் பொழுது போக்குகளிலும், நிலையான பொருட்களைக் காட்டிலும் பகட்டான பொருட்கள் மீதும் மிகுதியான விருப்பம் கொண்டிருக்கிறார்கள். "இந்த வியத்தகு வரங்களைத் தங்களுடைய புகழ்ச்சிக்காகப் பயன்படுத்தி, சிறுபிள்ளைத்தனமாக மகிழ்ச்சியடைய வேண்டாம். நீங்கள் ஒரு விஷயத்தில் குழந்தைகளைப் போல இருக்கலாம். அது என்னவென்றால் துர்க்குணம் அல்லது பொல்லாப்பு என்பதே. ஆனால் மற்ற விஷயங்களில், வளர்ச்சியடைந்த மனிதர்களைப் போல சிந்திக்க வேண்டும்" என்று பவுல் கூறுகிறார்.

**14:21** விசுவாசிகளுக்கல்ல, **அவிசுவாசிகளுக்கே** பற்பல மொழிகளைப் பேசும் வரம் அடையாளமாகக் கொடுக்கப்பட்டிருந்தது என்பதைப் பவுல் ஏசாயா தீர்க்கதரிசன நூலிலிருந்து மேற்கோளைப் பயன்படுத்தி விளக்குகிறார். இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய செய்தியை ஏற்க மறுத்து அவரை ஏளனம் செய்தார்கள். ஆகவே அவர்களோடு அவர் அந்நிய மொழியிலே பேசப் போகிறதாக தேவன் கூறினார் (ஏசாயா 28:11). அந்தத் தீர்க்கதரிசனம் அசீரியா நாட்டினர் இஸ்ரவேல் மீது போர்தொடுத்த காலத்தில் நிறைவேறியது. அப்பொழுது இஸ்ரவேல் மக்கள் தங்கள் நடுவே அசீரியா மொழி பேசப்பட்டதைக் கேட்டார்கள். தேவனுடைய சொல்லை அவர்கள் ஏற்க மறுத்ததன் காரணமாக, இந்நிகழ்ச்சி அவர்களுக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்டது.

**14:22** தேவன் அந்நிய மொழியை **அவிசுவாசிகளுக்கே அடையாளமாகக்** கொடுக்கத் திட்டமிட்டிருந்தார்; ஆகவே விசுவாசிகள் கூடும் கூட்டத்திலே கொரிந்துப் பட்டணத்தார் அந்நிய மொழியைத் தாராளமாகப் பேசவேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது. இதுவே பவுல் இங்கு எடுத்தியம்பும் வாதம். அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தல் சிறந்தது. ஏனெனில் தீர்க்கதரிசனமானது **அவிசுவாசிகளுக்கல்ல** விசுவாசிகளுக்கே அடையாளமாயிருக்கிறது.

**14:23** **சபையாரெல்லாரும் ஏகமாய்க் கூடி வந்து**, எல்லாக் கிறிஸ்தவர்களும் **அந்நிய மொழிகளிலே** அர்த்தம் கூறாமல் **பேசிக்கொண்டிருக்கும்போது** வெளியிலிருந்து புதிதாய் வந்தவர்கள் அவர்களைக் குறித்து என்ன நினைப்பார்கள்? அது அவர்களுக்கு நற்சான்றாய் இருக்காது. மாறாக அந்தப் பரிசுத்தவான்கள் யாவரும் மனநோயாளிகள் என்றே அவர்கள் கருதுவார்கள்.

இருபத்திரண்டாம் வசனத்திற்கும், 23-25 ஆகிய வசனங்களுக்கும் தோற்றத்தில் முரண்பாடு காணப்படுகிறது. இருபத்திரண்டாம் வசனத்தில் அந்நியமொழி அவிசுவாசிகளுக்கும், தீர்க்கதரிசனம் விசுவாசிகளுக்கும் அடையாளமாக

உள்ளன என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்நிய மொழியானது சபையில் அவிசுவாசிகளைக் குழப்பமடையச் செய்து அவர்கள் இடறுவதற்குக் காரணமாகிவிடும் என்றும், தீர்க்கதரிசனமானது அவர்களுக்குப் பயனுடையதாயிருக்கும் என்றும் பவுல் 23-25 ஆகிய வசனங்களில் கூறுகிறார்.

இவ்வாறு தோற்றத்தில் காணப்படும் முரண்பாட்டிற்கு அளிக்கப்படும் விளக்கம்: இருபத்திரண்டாம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற அவிசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை ஏற்க மறுத்து, சத்தியத்திற்குத் தங்களது இருதயத்தை அடைத்துக்கொண்டவர்கள். ஏசாயா தீர்க்கதரிசனப் பகுதியில் குறிப்பிடப்பட்ட இஸ்ரவேலரைப் போன்று (வச. 21), தங்கள் மீது தேவனுடைய ஆக்கினையை வருவித்துக்கொள்பவருக்கே அந்நிய மொழி அடையாளமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 23 - 25 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ள அவிசுவாசிகள், கற்பிக்கப்படுவதற்கு விருப்பமாயிருப்பவர்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்க தங்கள் உள்ளங்களைத் திறந்திருப்பவர்களாவர். அவர்கள் கிறிஸ்தவ சபைக்கு வந்திருப்பதே இவ்வுண்மையைப் புலப்படுத்துகிறது. அவர்கள் சபைக்கு வரும்போது கிறிஸ்தவர்கள் அர்த்தங்கூறுதல் இல்லாமல் அந்நிய மொழிகளில் பேசுவதைக் கேட்பார்களாகில், அது அவர்களுடைய இடறுதலுக்கு ஏதுவாக இருக்குமேயொழிய எவ்விதப் பயனையும் விளைவிக்காது.

**14:24** கிறிஸ்தவர்கள் பற்பல மொழிகளில் பேசுவதற்குப் பதிலாக, தீர்க்கதரிசனம் கூறுவார்களானால் அவ்வேளையில் சபைக்குள்ளாக நுழைகிற புதிய மனிதர்கள் என்ன சொல்லப்படுகிறது என்பதை நன்கு விளங்கிக்கொள்வதோடு அவர்கள் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும் எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பார்கள். சொல்லப்படுகிற செய்தி என்னவென்று கேட்கிறவர்கள் புரிந்துகொள்ளவில்லையென்றால் பாவத்தைக் குறித்த உண்மையான மனவருத்தம் உண்டாகாது என்று இங்கு அப்போஸ்தலன் வலியுறுத்துகிறார். பற்பல மொழிகள் அர்த்தம் கூறுதல் இல்லாமல் பேசப்படுமாயின், சபைக்குப் புதிதாக வந்தவர்கள் நிச்சயமாக எதையும் விளங்கிக்கொள்ளப் போவதில்லை. தீர்க்கதரிசனம் கூறுகிறவர்கள் அந்த இடத்தில் அந்த நேரத்தில் என்ன மொழியைப் பயன்படுத்துகிறார்களோ அந்த மொழியில்தான் பேசவேண்டும். அதன் விளைவாக அவர்கள் கேட்கிற செய்தியினாலே கவர்ந்திழுக்கப்படுவார்கள்.

**14:25** மனிதனுடைய **இருதயத்தின் அந்தரங்கங்கள்** தீர்க்கதரிசனத்தால் **வெளியரங்கமாகும்.** பேச்சாளர் தன்னோடு நேரடியாகப் பேசுவதாகவே அவன் உணருவான். அவனுடைய ஆத்துமாவில் கண்டித்துணர்த்தும் பணியை தேவ ஆவியானவர் செய்வார். ஆகவே **அவன் முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய்** அவர்களுக்குள்ளே **இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்.**

ஆகவே 22-25 ஆகிய வசனங்களில், அர்த்தம் கூறுதல் இல்லாமல் பற்பல மொழிகள் பேசப்படும் போது, அவிசுவாசிகளுக்கிடையில் பாவமன்னிப்புக்கான மனவருத்தம் உண்டாவதில்லையென்றும், ஆனால் அந்நிலையைத் தீர்க்கதரிசனம் உண்டாக்கும் என்றும் பவுல் கூறுகிறார்.

**14:26** பற்பல மொழிகள் பேசும் வரத்தைப் பயன்படுத்துவதில் சபைகளில் தவறுகள் நுழைந்து விட்ட காரணத்தால், அவ்வரத்தினைப் பயன்படுத்துவதற்குச் சில விதிமுறைகளை வகுத்துக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையை தேவ ஆவியானவர் உணர்ந்தவராக 26 -28 ஆகிய வசனங்களில் அவ்விதிகளை நமக்குத் தந்தருளுகிறார்.

தொடக்க காலத்தில் சபை **கூடிவந்த** போது என்ன நிகழ்ந்தது? அந்தக் கூட்டங்கள் ஒழுங்கு முறைசாரா நிலையில் கட்டுப்பாடு அற்றதாக இருந்தன என்றே 26 -ஆம் வசனத்திலிருந்து தோன்றுகிறது. சபைக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளிய வெவ்வேறு வரங்களைப் பயன்படுத்துவதற்குரிய விடுதலை அப்பொழுது இருந்தது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் **சங்கீதத்தை** எடுத்து வாசித்தான். வேறொருவனோ சில உபதேசங்களைப் போதித்தான். இன்னொருவன் **அந்நிய மொழியிலே** பேசினான். வேறொருவன் தான் நேரடியாகக் கர்த்தரிடத்திலிருந்து பெற்ற **இரகசியத்தை வெளிப்படுத்தினான்.** இன்னொருவன் ஏற்கனவே அந்நிய மொழியிலே சொல்லப்பட்ட செய்தியை **வியாக்கியானம்** செய்தான். இவ்வாறு தேவ ஆவியானவர் வெவ்வேறு சகோதரர்கள் மூலமாகப் பேசும்படி பெற்றிருந்த விடுதலையோடு நடைபெற்ற "கட்டுப்பாடற்ற கூட்டத்திற்கு" பவுல் தனது அங்கீகாரத்தைக் குறிப்பாய்த் தெரிவிக்கிறார். ஆனால், இவற்றையெல்லாம் சொல்லி முடித்தவுடனே, இந்த வரங்களைக் கைக்கொள்வதற்கான முதலாவது கட்டுப்பாட்டு விதியை முன்மொழிகிறார். எல்லாம் **பக்திவிருத்**

**தியைக்** கருத்திற்கொண்டே **செய்யப்படக்கட வது**. ஒரு செயலானது உணர்ச்சிபூர்வமான தாகவோ கவர்ச்சிமிக்கதாகவோ மட்டும் இருந் தால் அதற்கு சபையில் இடமுண்டு என்பது பொரு ளன்று. ஓர் ஊழியம் சபையில் ஏற்றுக்கொள்ளப் பட வேண்டுமென்றால், அது தேவனுடைய மக் களைக் கட்டி எழுப்பும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதுவே பக்திவிருத்தி அதாவது, ஆவிக்குரிய வளர்ச்சி எனப்படும்.

**14:27** இரண்டாவது கட்டுப்பாடு, ஒரு கூட்டத் தில் **மூன்று பேருக்குமேல்** அந்நிய மொழியிலே பேசக்கூடாது. **யாராவது அந்நிய மொழியிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர் மட் டில் அல்லது மிஞ்சினால் மூன்றுபேர் மட்டில் அடங்கவும்.** பெருங்கூட்டமாக மக்கள் வேற்று மொழிகளிலே தாங்கள் பெற்றிருக்கிற திறமையை வெளிப்படுத்தும் வண்ணம் எழுந்து பேசுகிற நிகழ்ச்சிக்கு அங்கு சற்றேனும் இடமில்லை.

மூன்றாவதாக நாம் கற்றுக்கொள்வது, ஒரு கூட்டத்திலே அந்நிய மொழியிலே பேசுவதற்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று பேர் **ஒவ்வொருவராகப்** பேசவேண்டும். அவர்கள் மூவரும் ஒரே நேரத்தில் பேசக்கூடாது என்பதே இதன் பொருள். ஒருவர் பின் ஒருவராக அவர்கள் பேசவேண்டும். அதன் வாயிலாகப் பலர் ஒரே நேரத் தில் பேசுகிற கூச்சல் குழப்பம் ஒழுங்கின்மை யாவும் தவிர்க்கப்படும்.

**அர்த்தம் சொல்லுகிறவன்** அங்கிருக்க வேண்டும் என்பது நான்காவது விதியாகும். **ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்**. ஒருவன் அந்நிய மொழியிலே பேச எழும்போது, அதற்குரிய அர்த்தத்தைச் சொல்லக்கூடிய வேறொருவன் இருக்கிறானா என்பதை முதலா வது அறிந்து பின்னர் பேசக்கடவன்.

**14:28 அர்த்தஞ்சொல்லுகிறவன்** இல்லாவிட் டால், அந்த மனிதன் **சபையிலே பேசாமல்** இருக்க வேண்டும். அவன் அங்கு அமர்ந்திருந்து சத்த மில்லாமல் அந்த அந்நிய மொழியில் **தனக்கும் தேவனுக்கும் தெரியும்படி பேசக்கடவன்.** அவன் வெளியரங்கமாகப் பேசுவதற்கு அனுமதி கொடுக் கப்படவில்லை.

**14:29** இருபத்தொன்பது முதல் முப்பத்தி மூன்று வரையிலான வசனங்களில் தீர்க்கதரிசன வரத்தைப் பயன்படுத்துவது பற்றிய கட்டுப்பாடு கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதலாவதாக, **தீர்க்கதரிசிகள் இரண்டு பேராவது மூன்று பேராவது பேச** அனுமதிக்கப்பட்டார்கள். **மற்ற வர்கள்** அவர்கள் பேசியதை **நிதானிக்கக் கடவர்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது. **மூன்று பேருக்கு** மேல் அப்பொழுது ஒரு கூட்டத்தில் பங்குபெற அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு பேசப்பட்டவை உண்மையாகவே தெய்வீகச் செய்தியா அல்லது அந்த மனிதன் கள்ளத்தீர்க்க தரிசியாக இருந்தானா என்பதை அங்கு கூடி யிருந்த கிறிஸ்தவர்கள் நிதானிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டார்கள்.

**14:30** நாம் முன்னர் கூறியதுபோல, ஒரு தீர்க்கதரிசியானவன் கர்த்தரிடத்திலிருந்து நேரடி யாக இரகசியத்தைப் பெற்று அதனை சபைக்கு வெளிப்படுத்தினான். ஆனால், அவன் அவ்வாறு வெளிப்படுத்திய பிறகும் தொடர்ந்து பிரசங்கித் துக் கொண்டே இருக்கக்கூடும். ஆகவே இங்கு அப்போஸ்தலன் அதற்குரிய விதியைக் கூறு கிறார். ஒரு தீர்க்கதரிசி பேசிக்கொண்டிருக்கை யில், அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருக்கிற வேறொரு தீர்க்கதரிசிக்கு **ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட் டால் முந்திப் பேசியவன்** தான் பேசுகிறதை நிறுத்திவிட்டு புதிதாக வெளிப்பாட்டைப் பெற்ற மனிதன் பேசுவதற்கு இடங்கொடுக்க வேண்டும். முதல் மனிதன் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந் தால், ஆவியானவரின் ஏவுதலில் பேசுவதற்குப் பதிலாக அவன் தனது சொந்த ஆற்றலில் பேசக் கூடிய நிலைமை நிச்சயமாக உண்டாகும் என் பதே இந்த விதி கொடுக்கப்பட்டதற்குக் காரண மாகும். நீண்ட நேரப் பேச்சில், தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒரு மனிதன் தன்னுடைய சொந்த வார்த்தைக்கு மாறக்கூடிய அபாயம் இருக்கிறது. இரகசியத்தை வெளிப்படுத்துதல் எல்லாவற்றிற்கும் மேலானது ஆகும்.

**14:31** தீர்க்கதரிசிகள் **ஒவ்வொருவராகப்** பேச வாய்ப்பு நல்கவேண்டும். எந்த ஒரு தீர்க்கதரிசியும் எல்லா நேரத்தையும் எடுத்துக்கொள்ளக் கூடாது. இவ்வாறு செயல்படுவதால், சபைக்கு மிகச் சிறந்த பயன் விளையும், அதாவது **எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும்** அல் லது புத்திபுகட்டப்படுவதற்கும் ஏதுவுண்டாகும்.

**14:32** மிக முக்கியமான விதி 32 -ஆவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. இங்கு மறைந் திருக்கும் உட்கருத்தை ஆராய்ந்து காணுங் கால், ஒரு மனிதன் எந்த அளவிற்கு மிகுதியாக தேவனுடைய ஆவியைப் பெற்றிருக்கிறானோ அந்த அளவிற்குக் குறைவான சுயக்கட்டுப்பாடு உடையவனாக இருப்பான் என்னும் தவறான

கருத்தைக் கொரிந்துப் பட்டணத்தார் கொண்டி ருந்தனர் என்பது புலப்படும். அப்படிப்பட்டவர்கள் மெய் மறந்த நிலைக்குச் சென்றிருப்பார்கள் என்றும், மிகுதியாக ஆவியைப் பெற்று குறைந்த அறிவோடும் குறைந்த சுயநினைவோடும் இருப் பார்கள் என்றும் கொரிந்து நகரத்தார் வாதாடி னார்கள் என்று கோடட் என்பார் கருதுகிறார். ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மனிதன், தன்னுடைய பேச்சைக் கட்டுப்படுத்த முடியாத வனாகவும், நேரத்தைக் கட்டுப்படுத்த முடியாத வனாகவும் அல்லது பொதுவாக தன்னுடைய செயல்களைக் கட்டுப்படுத்த முடியாதவனாகவும் இருப்பான் என்ற அவர்கள் கருதினார்கள். நாம் காண்கிற இந்த வேதபகுதி, அந்தக் கருத்தை முற்றிலும் தவறானது என்று வலியுறுத்துகிறது. **தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசி களுக்கு அடங்கியிருக்கிறதே**. அப்படியானால் அந்த மனிதனுடைய விருப்பமின்றி அவன் எங்கும் கொண்டுசெல்லப்படவில்லை. தன்னால் தன்னையே கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்லி இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அறிவுரை களை அவன் மீறக்கூடாது. அவன் எவ்வளவு நேரம் பேசவேண்டும் என்பதை அல்லது எப் பொழுது பேசவேண்டுமென்பதை அவனால் தீர்மானிக்க முடியும்.

**14:33 தேவன் கலகத்திற்கு தேவனா யிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக் கிறார்.** அதாவது, கூட்டத்தில் குழப்பமும் கூச்ச லும் ஒழுங்கின்மையும் இருக்குமென்றால் அது தேவ ஆவியானவருடைய கட்டுப்பாட்டுக்குள் இல்லையென்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்!

**14:34** நாம் நன்கு அறிந்திருக்கிறபடி, புதிய ஏற்பாட்டு வசனங்கள் பகுத்து எழுதப்பட்டது மற்றும் நிறுத்தற்குறிகள் இடப்பட்டது இவை யாவும் மூலப்பிரதிகள் எழுதப்பட்டதற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னரே சேர்க்கப்பட்டன. 33 -ஆவது வசனத்தின் பின்பகுதி 33 -ஆவது வசனத்தோடு இணைந்து இருக்கும்போது எங்கும் வியாபித்திருக்கும் தேவனைக் குறித்துப் பேசு கிறது. ஆனால் அது 34 -ஆவது வசனத்தோடு இணைக்கப்படுமானால் அதனினும் சிறப்பான பொருளுடையதாக விளங்கி சபையின் நடை முறைப் பழக்கத்தை விளக்கித் தருகிறது (கிரேக்கு மற்றும் ஆங்கில வேத மொழிபெயர்ப்புகள் சில வற்றில் இவ்வர்த்தத்தைத் தரும்படி நிறுத்தற் குறிகள் இடப்பட்டுள்ளன). எடுத்துக்காட்டாக ASV மொழிபெயர்ப்பில் 34 -ஆவது வசனம் இவ் வாறு காணப்படுகிறது: "பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் இருக்கிறதுபோலவே சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தர வில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது." பவுல் கொரிந்து நகரப் பரிசுத்தவான்களுக்குக் கொடுத்த சபை ஒழுங்குகள் அவர்களுக்காக மட்டுமே கொடுக் கப்பட்டவையல்ல. அந்த ஒழுங்குகள் **பரிசுத்த வான்களுடைய சபைகள் எல்லாவற்றிற்கும்** கொடுக்கப்பட்டவையாகும். பெண்களுக்கு மேன் மையான ஊழியங்கள் கொடுக்கப்பட்ட போதி லும், முழு சபையிலும் வெளியரங்கமாகச் செய் யும்படியான ஊழியம் அவர்களுக்குத் தரப்பட வில்லை. இதுவே புதிய ஏற்பாட்டின் வேறுபாடு அற்ற சாட்சியாகும். அவர்களுக்கு வார்த்தை களால் விவரிக்க இயலாத மிக முக்கியமான வீட்டு அலுவல்களும் பிள்ளைகளை வளர்க்கும் ஊழியமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் சபைகளில் வெளியரங்கமாகப் பேசும் படி அனுமதிக்கப்படவில்லை. புருஷனுக்குக் கீழ்ப்படியும் இடமே அவர்களுக்குக் கொடுக் கப்பட்டுள்ளது.

**வேதமும் அப்படியே சொல்லுகிறது** என்னும் சொற்றொடர் புருஷனுக்குப் பெண்ணானவள் கீழ்ப்படிதல் உள்ளவளாக இருக்க வேண்டும் என்னும் பொருளைப் பற்றியது என்றே நாம் கருதுகிறோம். முதல் ஐந்து ஆகமங்களே இங்கு வேதம் என்று முதன்மைப்படுத்தி, குறிப்பிடப்பட் டுள்ளன. அங்கு கூறப்பட்டுள்ள பிரமாணத்தில் இவ்வுண்மை தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஆதியாகமம் 3:16, "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்" என்று கூறு கிறது.

சபைக்கூட்டம் நடைபெறும் வேளையில் பெண் கள் வாயாடவோ புறம்பேசவோ கூடாதென்று பவுல் அப்போஸ்தலனால் இங்கு தடைசெய்யப் பட்டிருக்கிறார்கள் என்று அவ்வப்போது இவ்வச னத்துக்குப் பொருள் கூறப்படுகிறது. ஆயினும் அப்படிப்பட்ட பொருள்விளக்கம் ஏற்பதற்குத் தகுதியற்றதாக இருக்கிறது. இங்கு பேசுதல் (laleo) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல் லுக்கு கொய்னே கிரேக்க மொழியில் வாயாடுதல் என்னும் பொருள் இல்லை. 21 -ஆவது வசனத்தில் தேவனைக் குறித்து இதே சொல் பயன்படுத்தப்பட்

டுள்ளது. மேலும் எபிரெயர் 1:1 -இலும் இச்சொல் தேவனோடு தொடர்புடையதாகக் காணப்படு கிறது. இச்சொல்லுக்கு அதிகாரத்தோடு பேசுதல் என்பதே பொருளாகும்.

**14:35** உண்மையிலேயே, பெண்கள் வெளி யரங்கமாக சபைகளில் கேள்விகள் கேட்க அனு மதிக்கப்படவில்லை. **அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங் கள் புருஷரிடத்தில் விசாரிக்க** வேண்டும். சில பெண்கள் கேள்விகள் கேட்பதன் மூலமாக முந் தின வசனத்தில் சொல்லப்பட்டுள்ள தடையை மீறக்கூடும். கேள்வி கேட்டல் என்னும் எளிய செயலின் மூலமாக ஒருவர் பிறருக்குக் கற்பிக்க முடியும். ஆகவே இந்த வசனம் அப்படிப்பட்ட எந்த மீறுதலையும் அல்லது தடையையும் தவிர்க்க இடங்கொடுப்பதில்லை.

திருமணமாகாத பெண் அல்லது விதவைக்கு இந்த வசனம் எப்படிப் பொருந்தும் என்னும் கேள் விக்கு, திருமறை ஒவ்வொரு சூழ்நிலைக்கும் தனித்தனியே பதில்கூறாமல் பொதுவான கோட் பாடுகளையே தருகிறது என்பதே விடையாகும். ஒரு பெண்ணுக்குக் கணவன் இல்லையென்றால் அவள் தனது தகப்பனையோ, சகோதரனையோ, சபையின் மூப்பர்களில் ஒருவரையோ கேட்க லாம். உண்மையில் இந்த வசனத்தை, "வீட்டிலே தங்கள் ஆண்மக்களிடத்தில்[52] விசாரிக்கக்கடவர் கள்" என்றே மொழிபெயர்த்திருக்க வேண்டும். **ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கிய மாயிருக்குமே** என்னும் அடிப்படை விதியை நாம் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும்.

**14:36** அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு கற்பித்த கோட்பாடுகளைக் குறித்துப் பெரும் அளவில் எதிர்ப்பு எழக்கூடும் என்பதை அவர் அறிந்திருந்தார் என்பது வெளிப்படை. எந்த அளவிற்கு அவர் கற்பித்தவை சரியானவை! எழக்கூடிய எந்த வாதத்தையும் எதிர்கொள்ளும் பொருட்டு அவர் 36 -ஆவது வசனத்தில் உட்பொரு ளோடு கேள்வி எழுப்புகிறார்: **தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது?** இந்த விஷயங்கள் குறித்து அப்போஸ்தலனைக் காட்டிலும் தங்களுக்கு மிகுதியாகத் தெரியும் என்று கொரிந்துப் பட்டணத்தார் சொல்லிவந்தார் கள். ஒரு சபை என்னும் நிலையில் **தேவ வச னத்தை** அவர்களா உருவாக்கினார்கள் அல்லது அதனை அவர்கள் **மாத்திரமா** பெற்றார்கள் என்று அவர் கேட்டார். அவர்களே இந்த விஷயங் களில் அதிகாரம் உடையவர்கள் என்பதுபோல அவர்கள் நடந்துகொண்டார்கள். ஆனால் உண்மை யாதெனில் தேவவசனம் எந்தச் சபை யிலிருந்தும் உருவாகவில்லை. எந்தச் சபைக் கும் அதன்மேல் தனிப்பட்ட உரிமையும் இல்லை.

**14:37** முன்னர் கூறப்பட்ட ஒழுங்கு முறைகள் யாவும் அப்போஸ்தலனுடைய சொந்தக் கருத்தோ அவருடைய பொருள்விளக்கமோ அல்ல, மாறாக அவை யாவும் **கர்த்தருடைய கற்பனைகள்** என்று அவர் இங்கு வலியுறுத்துகிறார். இதுவே உண்மையென்று எந்தத் **தீர்க்கதரிசியும்** அல்லது மெய்யாக **ஆவிக்குரியவனாய்க்** காணப் படுகிறவனும் **ஒப்புக்கொள்ளுவான்**. பவுல் கற்பித்தவற்றில் சில, குறிப்பாக பெண்களைப் பற்றி உபதேசிப்பவை யாவும் அவருடைய சொந்த ஒருசார்புடைய கருத்து என்று வற்புறுத்திக் கூறு கிறவர்களுக்கு இந்த வசனம் போதுமான விடை யாக அமைகிறது. இந்த விஷயங்கள் பவுல் அப் போஸ்தலனுடைய தனிப்பட்ட கருத்துகளல்ல; மாறாக அவை **கர்த்தருடைய கற்பனைகள்**.

**14:38** சிலர் மேற்கூறியவற்றைச் சரியென்று ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை என்பது உண் மையே. ஆகவே அப்போஸ்தலன் இங்கு **ஒருவன் அறியாதவனாயிருந்தால், அவன் அறியாத வனாயிருக்கட்டும்** என்று கூறுகிறார். இவை யாவும் ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட் டவை என்று ஒப்புக்கொள்ளாமலும், இவற்றிற்குக் கீழ்ப்படிந்து பணிந்து கொள்ளாமலும் இருந்தால், அவன் தொடர்ந்து அறியாதவனாய் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**14:39** வரங்களைப் பயன்படுத்துவது பற்றி மேற்கூறிய நெறிமுறைகளைப் பவுல் இப்பொழுது ஒன்றுகூட்டித் தருகிறார். **சகோதரர் தீர்க்கதரி சனஞ் சொல்ல** நாடவேண்டும்; ஆனாலும் **அந்நிய மொழிகளைப் பேசுகிறதற்குத் தடைபண்ணக்** கூடாது. ஒன்றை அவர்கள் மிகுந்த விருப்பத் தோடு நாடவேண்டும் என்றும் மற்றதை தடைபண் ணக்கூடாது என்றும் கூறி இந்த வசனம் இவ் விரண்டு வரங்களுக்கும் இடையில் உள்ள முக்கியத்துவத்தின் வேறுபாட்டைக் காட்டுகிறது. பற்பல மொழிகளைப் பேசுவதிலும் தீர்க்கதரி சனம் அதிக மதிப்புடையது. ஏனெனில் அதன் மூலமாகப் பாவிகள் கண்டித்துணர்த்தப்படுகிறார் கள், மேலும் பரிசுத்தவான்கள் பக்திவிருத்தி அடைகிறார்கள். பற்பல மொழிகள் பேசும் வரமோ, அர்த்தஞ் சொல்லுதல் இல்லாமல் தேவனோடு பேசுவது, தனக்குத்தானே பேசிக்கொள்வது

ஆகியவற்றைத் தவிர வேறு எந்த நோக்கத்தை யும் நிறைவேற்றுவதில்லை. மேலும் அது ஒருவன் வேற்றுநாட்டு மொழியில் பெற்றிருக்கிற திறமை யைப் பகட்டாய் வெளிப்படுத்த உதவுகிறது. அந் தத் திறமையுங்கூட அவர்களுக்கு தேவனாலே கொடுக்கப்பட்டதேயாகும்.

**14:40 சகலமும் நல்லொழுக்கமாயும் கிரம மாயும் செய்யப்படக்கடவது** என்பவை பவுல் கூறும் இறுதியான எச்சரிப்பின் சொற்கள். இந்தக் கட்டுப்பாட்டு விதிகள் இந்த அதிகாரத்தில் கொடுக் கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். காலங் காலமாக தங்களுக்குப் பற்பல மொழிகளில் பேசும் ஆற்றல் உண்டு என்று கூறிக்கொள்கிறவர் களுடைய கூட்டங்களில் ஒழுங்கு கடைப்பிக்கப் படுகிறதா என்பதை அவர்கள் கவனிக்கத் தவறி விடுகிறார்கள். மாறாக, அவர்களுடைய கூட்டங் களில் பெரும்பாலும் கட்டுப்பாடற்ற உணர்ச்சி களின் காட்சிகளும் பொதுவான குழப்பமுமே மிகுதியாய்க் காணப்படுகின்றன.

சுருங்கக் கூறின் உள்ளூர் சபையில் பற்பல மொழிகளைப் பேசும் வரத்தைக் கீழ்க்கண்ட கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டே பயன்படுத்த வேண்டும்:

1. பற்பல மொழிகள் பேசுவதை நாம் தடைபண் ணக் கூடாது (வச.32 ).
2. ஒரு மனிதன் அந்நிய மொழியில் பேசினால் அங்கு அதற்கான அர்த்தத்தைச் சொல்லுகிற வன் இருக்க வேண்டும் (வச. 27,28).
3. எந்த ஒரு கூட்டத்திலும் மூன்று பேருக்கு மேல் அந்நிய மொழிகளில் பேசக்கூடாது (வச. 27)
4. அவ்வாறு பேசுகிறவர்கள் ஒருவர் பின் ஒரு வராகப் பேச வேண்டும். அதாவது ஒரு நேரத் தில் ஒருவர் மட்டுமே பேசவேண்டும் (வச. 27).
5. அவர்கள் பேசுவது பக்திவிருத்திக்கு ஏது வானதாக இருக்க வேண்டும் (வச. 26).
6. பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும் (வச. 34).
7. எல்லாம் **நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது** (வச. 40)

இவை யாவும் இன்றைய நாட்களில் சபையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நிரந்தரமான கட்டுப் பாட்டு ஒழுங்குகளாகும்.

## 4. உயிர்த்தெழுதலை மறுத்துரைப்போருக்குப் பவுல் தரும் விடை [அதி. 15]

உயிர்த்தெழுதலைக் குறித்த மிக மேன்மை யான அதிகாரமாக இது விளங்குகிறது. கொரிந்து சபையில் நுழைந்த சில போதகர்கள், சரீரப் பிர காரமான உயிர்த்தெழுதல் நடக்கும் என்பதை மறுத்துரைத்தார்கள். அவர்கள் இறந்த பின்பு வாழ்வு உண்டு என்பதை மறுக்கவில்லை. பின்னர் உயிருள்ள ஆவிகளாக நாம் இருப்போமேயொழிய உடல்கூறுகள்கொண்ட சரீரத்தைப் பெற்றிருக்க மாட்டோம் என்றே அவர்கள் எண்ணினார்கள். இவ்வாறு உரைக்கப்பட்ட மறுப்புக்கு அப்போஸ் தலன் இங்கு உன்னதமான விடையைத் தரு கிறார்.

### அ. உயிர்த்தெழுதலின் தவறாத் தன்மை [15:1-34]

**15:1,2** கொரிந்துப் பட்டணத்தாருக்குப் பவுல் முன்னர் **பிரசங்கித்ததும்,** அவர்கள் **ஏற்றுக் கொண்டதும்**, இப்பொழுது அவர்கள் நிலைத்து நிற்பதற்கு ஆதாரமுமான நற்செய்தியை நினை வூட்டுகிறார். அவர்கட்கு இது புதியதோர் உபதேச மன்று. ஆயினும் இத்தகைய இக்கட்டான சூழ் நிலையில் அவர்களுக்கு அதனை நினைவு படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த நற் செய்தியின் வாயிலாகவே அவர்கள் **இரட்சிக்கப் பட்டார்கள்**. தொடர்ந்து பவுல், **"நான் உங்களுக் குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால் - மற்றபடி உங்கள் விசு வாசம் விருதாவாயிருக்குமே"** என்னும் சொற் களைக் கூறுகிறார். உயிர்த்தெழுதலின் நற்செய்தி யின் மூலமாகவே அவர்கள் இரட்சிக்கப்பட்டார் கள் - உயிர்த்தெழுதல் என்னும் ஒரு நிகழ்ச்சி இல்லையெனில், அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக் கவே முடியாது என்பதில் ஐயமேதுமில்லை. இப் பகுதியில் காணப்படும் **ஆல்** என்னும் விகுதி, அவர்களுடைய இரட்சிப்பைக் குறித்து சந்தேகத்தை எழுப்புகிறதில்லை. மேலும் அவர்களுக்குப் பிர சங்கித்த பிரகாரமாய் நடந்துகொண்டதால்தான் அவர்கள் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள் என்றும் இந்த வசனம் சொல்லவில்லை. மாறாக, உயிர்த் தெழுதல் என்னும் நிகழ்ச்சி இல்லையெனில், அவர்கள் இரட்சிக்கப்படவே இல்லை என்று மட்டுமே அவர் கூறுகிறார். அதாவது, சரீரப் பிர காரமான உயிர்த்தெழுதலை மறுத்துரைத்தோர், நற்செய்தியின் முழு உண்மைக்கும் எதிராக நேரடித் தாக்குதல் நடத்தினார்கள். பவுலைப் பொருத்தமட்டில் உயிர்த்தெழுதல் அடிப்படைச்

சத்தியமாகும். அவ்வுண்மை இல்லையெனில் கிறிஸ்தவமே இல்லை. இவ்வாறாக, கொரிந்தியர் கள் பெற்ற நற்செய்திக்கு எதிராகத் தாக்குதல் நடந்து கொண்டிருந்த அவ்வேளையில், அவர் கள் அதே நற்செய்தியை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்று இங்கே அறை கூவல் விடுக்கப்பட்டது.

**15:3** தெய்வீக வெளிப்பாட்டினால் பவுல் **அடைந்த** செய்தியையே, கொரிந்து நகர விசு வாசிகளுக்கு அவர் **ஒப்புவித்திருந்தார்**. அச் செய்தியின் அடிப்படைச் சத்தியங்களில் முதன் மையானது **கிறிஸ்துவானவர் வேதவாக்கியங் களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்** என்பதேயாகும். கிறிஸ்துவின் மரணம் பிறருக் காக அடைந்த மரணம் என்னும் பண்பை உடை யது என்பதை இவ்வசனம் வலியுறுத்துகிறது. அவர் தமது சொந்தப் பாவங்களுக்காக மரணம் அடையவில்லை, இரத்த சாட்சியாகவும் அவர் மரணமடையவில்லை; **அவர் நமது பாவங் களுக்காக மரித்தார். நம்முடைய பாவங்களுக் காகச்** செலுத்த வேண்டிய தண்டனையைச் செலுத்தித் தீர்க்கும்படி அவர் **மரணமடைந்தார்**. இந்நிகழ்ச்சி **வேதவாக்கியங்களில்** சொல்லப் பட்டபடி நிறைவேறியது. இங்கு வேதவாக்கியங் கள் என்னும் சொல் பழைய ஏற்பாட்டைக் குறிக் கிறது. ஏனெனில் புதிய ஏற்பாடு இன்னும் எழுத்து வடிவில் எழுதிக்கொடுக்கப்படவில்லை. மக்க ளின் பாவத்திற்காகக் கிறிஸ்து மரணமடைவார் என்று பழைய ஏற்பாடு மெய்யாகவே முன்னுரைத் துள்ளதா? உறுதியான "ஆம்" என்பதே இதன் விடை. ஏசாயா 53 -இல் 5 மற்றும் 6 -ஆகிய வசனங் கள் இதற்குப் போதுமான சான்றாக விளங்கு கின்றன.

**15:4** கிறிஸ்துவின் அடக்கம் ஏசாயா 53:9 - இலும், அவருடைய உயிர்த்தெழுதல் சங்கீதம் 16:9,10 -ஆகிய வசனங்களிலும் முன்னுரைக்கப் பட்டுள்ளன. பவுல் **வேதவாக்கியங்களின்** சான்று களை எப்படி வலியுறுத்துகிறார் என்பதைக் கவ னிப்பது முக்கியமானது. "திருமறை என்ன கூறு கிறது?" என்னும் கேள்வி நம்முடைய விசுவாசத் தைக் குறித்த எல்லாக் கூறுகளுக்கும் பரீட்சை யாக அமைய வேண்டும்.

**15:5** ஐந்து முதல் ஏழு வரையிலான வசனங் களில், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நேரில் கண்ட சாட்சிகளின் பட்டியல் கொடுக்கப்பட்டுள் ளது. முதலாவது, கர்த்தர் **கேபாவுக்குத்** தரிசன மானார். இது மிகவும் உளங்கனியச் செய்த செயலாகும். கர்த்தரை மும்முறை மறுத்துரைத்த விசுவாசமற்ற அதே சீடர், உயிர்த்தெழுந்த கர்த்த ரைத் தனியாகக் காணக்கூடிய வாய்ப்பு பெற்றமை கிருபைமிக்க சிலாக்கியமேயாகும். உண்மையி லேயே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை மிகப்பெரியது! **பின்பு** கர்த்தர் **பன்னிருவருக்கும்** காட்சி தந்தார். உண்மையில் அத்தருணத்தில் பன்னிரண்டு சீடர்களும் ஒருமித்து இருக்க வில்லை. ஆனால் **பன்னிருவர்** என்னும் கூற்று சீடர்களாகிய குழுவைக் குறிப்பிட பயன்படுத்தப் பட்டது. குறிப்பிட்ட ஒரு தருணத்தில் அனைவரும் ஓரிடத்தில் இல்லையென்றாலும் அந்தச் சீடர் குழுவினர் பன்னிருவர் என்று குறிப்பிடப்பட்டனர். நற்செய்தி நூல்களில் சொல்லப்பட்ட எல்லாத் தரிசனங்களும் இங்கு குறிப்பிடப்படவில்லை என் பதை நாம் குறித்துக்கொள்வோமாக. உயிர்த் தெழுந்த கிறிஸ்து அளித்த காட்சிகளில் தேவனு டைய ஆவியானவர் தாம் பயன்படுத்துவதற்கு எவற்றை முதன்மையானவையாக எண்ணி னாரோ அவற்றை அவர் இங்கே குறிப்பிட்டுள்ளார்.

**15:6 ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோ தரருக்கு** அவர் தந்த காட்சி கலிலேயாவில் நிகழ்ந்தது என்று பொதுவாக நம்பப்படுகிறது. பவுல் இந்த மடலை எழுதியபோது, இவர்களில் பெரும்பாலான சகோதரர் உயிர்வாழ்ந்து கொண் டிருந்தார்கள். சிலரோ கர்த்தருடன் இருக்கும்படி வீடுபேறு எய்தியும் விட்டார்கள். அதாவது, பவுல் கூறியதன் உண்மைத் தன்மையை எவரேனும் எதிர்த்துப்பேச நினைத்தால், நேரடியாகக் கண்ட சாட்சிகள் இன்னும் உயிரோடு இருந்ததால் அவர் களிடம் கேள்வியை எழுப்பலாம்.

**15:7** இங்கு **யாக்கோபு** என்று குறிப்பிடப்பட் டவர் யார் என்பதை அறிவது எவ்வழியிலும் இய லாத செயல். ஆனாலும் பெரும்பாலான விளக்க வுரையாளர்கள் கர்த்தரின் ஒன்று விட்ட சகோதர னாகிய யாக்கோபே இவர் என்று கருதுகிறார்கள். இந்த வசனத்தில், கர்த்தர் **அப்போஸ்தலரெல் லாருக்கும்** காட்சி அருளினார் என்று மீண்டும் சொல்லப்பட்டுள்ளது.

**15:8** அடுத்தபடியாக, உயிர்த்தெழுந்த கிறிஸ்து வோடு தனிப்பட்ட முறையில் பவுல் பெற்ற தொடர் பைக் குறித்துப் பேசுகிறார். இந்நிகழ்ச்சி தமஸ்கு வுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் நடந்தது. அப்பொழுது பவுல் வானத்திலிருந்து தோன்றிய மிகவும் பிரகாசமான ஒளியைக் கண்டார். மேலும் அவர் மகிமையடைந்த கிறிஸ்துவை முகமுக மாய்க் கண்டார். **அகாலப்பிறவி** என்னும் சொல்

குறைப்பிரசவம் என்றோ, உரிய காலத்திற்கு முன்பு நிகழ்ந்த மகப்பேறு என்றோ பொருள்படும். காலத்தைப் பொருத்தமட்டில், முதிர்ச்சி அடைவதற்கு முன்னரே பிறந்த பிறப்பிற்கு ஒப்பானது தனது நிலை என்றும், மற்ற அப்போஸ்தலரைக் காட்டிலும் இதனடிப்படையில் தாழ்ந்தவராக விளங்குவதாகவும் பவுல் இங்கு கூறுகிறார் என்று திருவாளர் வைன் இப்பகுதிக்கு விளக்கமளிக்கிறார். அவர் சபையைத் துன்புறுத்திய தனது கடந்த கால வாழ்க்கையைக் கருத்திற்கொண்டு, தன்னையே நிந்திக்கும் பொருட்டு இச்சொற்றொடரைப் பயன்படுத்துகிறார்.

**15:9** இரட்சகரை நேருக்கு நேராகச் சந்திக்கக் கூடிய நல்வாய்ப்பைத் தான் பெற்றது குறித்துச் சிந்தித்த அப்போஸ்தலன், தன்னுடைய தகுதியற்ற தன்மையைக் குறித்த எண்ணத்தின் ஆவியால் நிரப்பப்படுகிறார். **தேவனுடைய சபையை** அவர் எவ்வாறு **துன்பப்படுத்தினார்** என்பதை எண்ணிப்பார்த்தவர், மேலும் கர்த்தர் எவ்வாறு தன்னை அப்போஸ்தலனாக அழைத்தார் என்பதையும் எண்ணிப்பார்க்கிறார். ஆகவே அவர் புழுதியிலே முகங்குப்புறப் பணிந்தவராக, தன்னைப் பற்றி, **அப்போஸ்தலரில் சிறியவன்** என்றும் **அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல** என்றும் கூறுகிறார்.

**15:10** இப்பொழுது அவர் யாராக இருக்கிறாரோ, **தேவ கிருபையினாலே** அவ்வாறு **இருக்கிறதாக** ஒப்புதல் அளிக்கத் துரிதப்படுகிறார். இந்தக் கிருபையை அவர் வெறுமனே மெய்யான செய்தி என்று மட்டும் ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக இவ்வுண்மை அவரை மிகப்பெரிய கடமைக்கு ஆளாக்கியது; மேலும் அவர் தன்னை இரட்சித்த கிறிஸ்துவுக்காக ஓய்வின்றி உழைத்து வந்தார். ஆகிலும், உண்மையான நிலையில் பவுல் அல்ல, அவருடனே இருந்த **தேவ கிருபையே** அவரோடு சேர்ந்து உழைத்தது.

**15:11** இப்பொழுது பவுல் தன்னைப் பிற அப்போஸ்தலரோடு இணைத்துக்கொண்டு, அவர்களில் பிரசங்கம் செய்தவர்கள் யார் என்பது கேள்வியல்ல, அவர்கள் யாராயிருந்தாலும், யாவரும் நற்செய்திக்கு, குறிப்பாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நிகழ்ச்சிக்குச் சாட்சிகளாக விளங்கினார்கள் என்று உரைக்கிறார்.

**15:12** சரீரப் பிரகாரமான உயிர்த்தெழுதலை மறுத்துரைப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகள் அனைத்தையும் 12 முதல் 19 வரையிலான வசனங்களில் பவுல் பட்டியலிட்டுக் காட்டுகிறார். முதலாவதாக, கிறிஸ்து தாமே உயிரோடு எழவில்லை என்பது அதன் பொருளாகிவிடும். இங்கு பவுல் எழுப்புகிற தர்க்கத்திற்கு விடை கூற இயலாது. சரீரப் பிரகாரமான உயிர்த்தெழுதல் நிகழாது என்று சிலர் கூறுகிறார்கள். அப்படியென்றால், கிறிஸ்து உயிரோடு எழவில்லை என்று பவுல் கூறுகிறார். இதனைக் கொரிந்துப் பட்டணத்தார் ஏற்றுக்கொள்வார்களா? நிச்சயமாக இதனை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஓர் உண்மை மெய்ப்பிக்கப்பட வேண்டுமென்றால், அது ஏற்கனவே ஒருமுறை நடந்திருக்கிறது என்பதை விளக்கிக் காட்டவேண்டும். சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதல் உண்மையென்று மெய்ப்பிக்க, பவுல் தனது வாதத்திற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்கிற சான்று யாதெனில், **கிறிஸ்து** ஏற்கனவே **மரித்தோரிலிருந்து எழுந்தார்** என்னும் உண்மையேயாகும்.

**15:13 மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை** என்பது சந்தேகத்திற்கு இடமற்ற உண்மையாகிவிடும். அந்த முடிவு கொரிந்துப் பட்டணத்தாரை நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளி மனச்சோர்வையும் துக்கத்தையும் ஏற்படுத்திவிடும்.

**15:14 கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவில்லையென்றால்,** அப்போஸ்தலருடைய **பிரசங்கம் விருதா,** அதாவது அந்தப் பிரசங்கத்தில் உண்மை எதுவுமில்லை. அந்தப் பிரசங்கம் ஏன் **விருதாவாகக்** காணப்படும்? முதலாவதாக, கர்த்தராகிய இயேசு மரித்தோரிலிருந்து மூன்றாவது நாள் உயிரோடு எழப்போவதாக வாக்குறுதி கொடுத்திருந்தார். அவர் அந்தச் சமயத்தில் எழாதிருந்திருப்பார் எனில், அவர் ஏமாற்றியிருக்கவேண்டும். அல்லது அவரைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றாகிவிடும். எதுவாயிருந்தாலும், அவர் நம்பிக்கைக்குத் தகுதியானவரல்லர் என்றாகியிருக்கும். இரண்டாவதாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இன்றி, இரட்சிப்பும் இல்லை. கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழாதிருந்தால், மற்ற மனிதர்களுடைய சாவுக்கு மேலான மதிப்பு இவருடைய சாவுக்கு இல்லை என்பதே பொருள். ஆனால் அவரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பி, கிறிஸ்துவின் மீட்புப் பணியில் தேவன் முழு நிறைவு அடைந்ததாகச் சான்று கூறியிருக்கிறார்.

அப்போஸ்தலருடைய செய்தி தவறு என்றால், **விசுவாசமும் விருதா** என்பதில் எவ்வித ஐயமு

மில்லை. ஒரு செய்தி தவறாகவோ விருதாவாகவோ இருக்குமென்றால் அதனை நம்புவதில் எவ்விதப் பயனுமில்லை.

**15:15** அப்போஸ்தலர் தவறான செய்தியைப் பிரசங்கித்து வந்தார்கள் என்பது ஏதோ அப்படியே விட்டுவிடக்கூடிய ஒரு விஷயமல்ல. உண்மையில் அவர்கள் **தேவனுக்கு** எதிராகச் சாட்சி கூறினார்கள் என்று பொருளாகிவிடும். அவர்கள் **மரித்தோரிலிருந்து கிறிஸ்துவை தேவன் எழுப்பினாரென்று சாட்சி சொன்னார்கள்**. தேவன் அவரை உயிரோடு எழுப்பவில்லையென்றால், அப்போஸ்தலர் அவருக்கு எதிராகப் **பொய்ச் சாட்சி** கூறியவர்களாகக் காணப்படுவார்கள்.

**15:16** உயிர்த்தெழுதல் முற்றிலும் முடியாதது என்றால், அதில் விதிவிலக்கு ஒன்றும் இருக்க முடியாது. இதற்கு மாறாக, ஒருமுறை உயிர்த்தெழுதல் ஏற்கனவே நடந்திருக்குமாயின், எடுத்துக்காட்டாக, கிறிஸ்து உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி நடந்தது என்றால், அது இனிமேல் நடைபெறவே நடைபெறாது என்று எண்ணவும் கூடாது.

**15:17 கிறிஸ்து** உயிர்த்தெழவில்லையென்றால், விசுவாசிகளின் விசுவாசம் **வீணானது**. அந்த விசுவாசத்தில் ஏதொரு பயனுமில்லை. மேலும் **பாவங்கள்** மன்னிக்கப்பட்டிரா. ஆகவே உயிர்த்தெழுதல் நிராகரிக்கப்படுதல், கிறிஸ்துவின் செயலின் மதிப்பை நிராகரிப்பதாகும்.

**15:18** மேற்கூறிய நிலையில், விசுவாசிகளாகிய கிறிஸ்தவர்களுடைய மரணத்திற்குப் பிறகு, அவர்களைப் பற்றி எவ்வித நம்பிக்கையும் உண்டாகாது. **கிறிஸ்து** உயிர்த்தெழவில்லை என்றால், அவர்களுடைய விசுவாசம் அவர்களுக்கு எவ்விதப் பயனையும் தராது. **நித்திரை அடைந்தவர்கள்** என்னும் சொற்றொடர் இறந்துபோன விசுவாசிகளின் சரீரங்களையே குறிக்கும். புதிய ஏற்பாட்டில் அச்சொற்றொடர் ஆத்துமாக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படவில்லை. ஒரு விசுவாசி மரணம் அடைகிறபோது, அவருடைய ஆத்துமா கிறிஸ்துவோடு இருக்கும்படி பிரிந்துசென்றுவிடுகிறது. ஆனால் சரீரமோ கல்லறையில் நித்திரை செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கெட்டிருப்பார்கள்** என்னும் சொல்லையும் நாம் சற்று விளக்கிக் கூற வேண்டியது அவசியம். இந்தச் சொல் முற்றிலும் அழிந்துபோவது என்றோ ஒன்றும் இல்லாமல் போவது என்றோ பொருள் படாது. அது இருக்கிற நிலையை இழந்து போவதில்லை, மாறாக நல்ல நிலையில் இருப்பதை இழந்து போவதேயாகும் என்று திருவாளர் வைன் குறிப்பிட்டுள்ளார். ஒருவரோ ஒரு பொருளோ உண்டாக்கப்பட்டதன் நோக்கத்தைப் பொருத்த மட்டில் உண்டாகிற அழிவையே இது குறிக்கிறது.

**15:19** கிறிஸ்து உயிர்த்தெழவில்லையென்றால், இறந்துபோன விசுவாசிகளுடைய நிலையைப் போலவே உயிரோடிருக்கிறவர்களுடைய நிலையும் துயர் மிகுந்ததாகப் போய்விடும். அவர்களும் ஏமாற்றப்பட்டவர்களாகவே காணப்படுவார்கள். அவர்கள் யாவரும் **பரிதபிக்கப்படத்தக்கவர்களாக** இருப்பார்கள். கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளக்கூடிய வருத்தங்கள், துன்பங்கள் சோதனைகள், உபத்திரவங்கள் ஆகியவற்றைக் குறித்து பவுல் எண்ணியிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஒரு பொய்யான காரணத்துக்காக இப்படிப்பட்ட உபத்திரவங்களை அனுபவிப்பது பரிதபிக்கக் கூடிய நிலையாகவே இருக்கும்.

**15:20** வெற்றி முழக்கத்தோடு பவுல் கிறிஸ்து உயிர்த்தெழுந்த உண்மையையும் அதனைத் தொடர்ந்து விளைந்த ஆசிர்வாதங்களையும் அறிவிக்கிறபோது, நம்மை அலைக்கழித்த மன உலைவுகளிலிருந்து விடுதலை அடைகிறோம். **கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.** திருமறையில் *மரித்தோரின் உயிர்த்தெழுதல்* என்னும் சொற்றொடருக்கும் *மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருத்தல்* என்னும் சொற்றொடருக்கும் வேறுபாடு உள்ளது. இதற்கு முந்தின வசனங்கள் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றி விளக்கமளிக்கின்றன. அதாவது மரித்தவர்கள் யாவரும் உண்மையிலேயே உயிரோடு எழுந்திருப்பார்கள் என்னும் பொதுவான உண்மையைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார். அவர் உயிரோடு எழுந்தபோது இறந்துபோனவர்கள் யாவரும் எழவில்லை என்பதே இதன் பொருளாகும். ஆகவே அது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளான உயிர்த்தெழுதலாகும். எனினும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும் விசுவாசிகளின் உயிர்த்தெழுதலும் மட்டுமே மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதாகும்.

**15:21 மனிதன்** மூலமாகவே முதலாவது இந்த உலகத்தில் **மரணம் உண்டானது**. அந்த மனிதனின் பெயர் ஆதாம். அவனுடைய பாவத்தின் மூலமாக எல்லா மனிதர்கள் மேலும் மரணம் வந்தது. அந்த முதலாவது மனிதன் செய்த செயலின் விளைவை அற்றுப்போகச் செய்யும்படி தேவன் தம்முடைய குமாரனை இந்த உலகத்திற்கு

**மனிதராக** அனுப்பினார். மேலும் ஆதாமில் கிடைக்கக் கூடாத ஆசிர்வாதத்தை அடையும்படி விசுவாசிகள் அந்த மனிதரில் உயர்த்தப்பட்டார் கள். இவ்வாறாக, மனிதராகிய கிறிஸ்து இயேசு வின் மூலமாக மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

**15:22 ஆதாமும் கிறிஸ்துவும்** இங்கு கூட்டர சுகளின் தலைவர்களாக அறிமுகப்படுத்தப்படு கிறார்கள். அவர்கள் பிறருக்குப் பிரதிநிதிகளாகச் செயல்புரிந்தார்கள் என்பது இதன் பொருளாகும். அவர்களோடு உறவுகொண்ட மக்கள் யாவரும் அவர்களுடைய செயல்களாலே பாதிக்கப்பட்டார் கள். **ஆதாமின்** வழித்தோன்றல்கள் யாவரும் **மரணம் அடைகிறார்கள்**. அதுபோல **கிறிஸ்து வுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார் கள்**. அகில உலகத்தார் யாவரும் இரட்சிக்கப்படு வார்கள் என்று கற்பிக்க இந்த வசனம் சிலவேளை களில் பயன்படுத்தப்படுகிறது. ஆதாமுக்குள் மரணம் அடைகிற அதே மனிதர்கள் யாவரும் கிறிஸ்துவுக்குள் உயிரோடு எழுந்திருப்பார்கள்; மேலும் இறுதியில் யாவரும் இரட்சிக்கப்படுவார் கள் என்பது அவர்களுடைய கருத்து. ஆனால் இந்த வசனம் அவ்வாறு கூறவில்லை. இங்கு சொல்லப்பட்டுள்ள முக்கியமான கருத்து **ஆதா மோடும் கிறிஸ்துவோடும்** தொடர்புடைய தாகும். **ஆதாமுக்குள்** இருக்கிற **எல்லாரும் மர ணம் அடைகிறார்கள். கிறிஸ்துவுக்குள்** இருக் கிற **எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்**. அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசு வாசிகளாயிருக்கிறவர்கள் மட்டுமே, அவரோடு நித்திய காலமாக வாழும்படி மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பார்கள். 23 -ஆவது வசனத் தில், உயிரோடு எழுப்பப்படுபவர்கள் யார் என்று, அதாவது கிறிஸ்துவின் வருகையின்போது அவ ருக்குச் சொந்தமானவர்கள் யார் என்று வரை யறுத்துச் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் எதிரிகள் அக்கூட்டத்தில் இடம்பெறப் போவ தில்லை. ஏனெனில் அவர்கள் அவருடைய காலடி யில் கிடப்பார்கள் (வச. 25). அவ்விடத்திற்குப் பரலோகம் என்னும் பெயர் பொருந்தாது என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

**15:23** அடுத்து, முதலாவது உயிர்த்தெழு தலில் பங்குபெறும் வெவ்வேறு கூட்டத்தார் அல் லது வகுப்பினர் சொல்லப்பட்டுள்ளனர். முதலா வது **கிறிஸ்து** தாமே உயிர்த்தெழுவார். இங்கு அவர் **முதற்பலனானவர்** என்று குறிப்பிடப்பட் டுள்ளார். முதற்பலன் (கனிகள்) என்பது உண்மை யில் அறுவடை தொடங்குவதற்கு முன் கைப்பிடி யளவு வயல்வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட முதிர்ந்த தானியத்தைக் குறிப்பிடும் சொல்லா கும். பிற்பாடு என்ன நிகழப்போகிறதோ அதற்குப் பிணையமாக, அச்சாரமாக, முன்னுகர்வாக அது விளங்குகிறது. கிறிஸ்துவே முதலாவது எழுந்த வர் என்னும் பொருளை அச்சொல் கட்டாயமாகத் தரவேண்டுமென்பது இல்லை. பழைய ஏற்பாட்டில் உயிரோடு எழுந்த நிகழ்ச்சிகளை நாம் அறி வோம். புதிய ஏற்பாட்டிலும் லாசரு, விதவையின் மகன் மற்றும் யவீருவின் மகள் இறந்த பின்னர் உயிரோடு எழுந்தார்கள். ஆனால் இவர்கள் யாவருடைய உயிர்த்தெழுதலுக்கும் கிறிஸ்து வின் உயிர்த்தெழுதலுக்கும் வேறுபாடு இருந்தது. இவர்கள் யாவரும் உயிர்த்தெழுந்த பின்னர் இறந்து போனார்கள், ஆனால் கிறிஸ்து இறந்து போவதற்காக உயிரோடு எழவில்லை. அவர் முடி வில்லா வாழ்வின் வல்லமையோடு வாழ்வதற் காகவே உயிரோடு எழுந்தார். அவர் மகிமை பொருந்திய சரீரத்தோடு எழுந்தார்.

முதலாவது உயிர்த்தெழுதலில் இரண்டாவது வகுப்பார், அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று விவரிக்கப்பட் டுள்ளனர். விசுவாசிகள் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் நிகழ்ச்சி, உபத்திரவ காலத்தில் இறந்துபோகும் விசுவாசிகளின் உயிர்த்தெழுதல் மற்றும் உபத்திரவ காலத்தின் முடிவில் கிறிஸ்து இவ்வுலகை ஆளுகை செய்யும்படி வரும்போது நடைபெறவிருக்கிற உயிர்த்தெழுதல் இவை யாவும் இதனுள் அடங்கும். கிறிஸ்துவின் வருகை யில் எவ்வாறு கட்டங்கள் இருக்கின்றனவோ அது போல அவருடைய பரிசுத்தவான்களின் உயிர்த் தெழுதலிலும் பல கட்டங்கள் உள்ளன. முதலாம் உயிர்த்தெழுதலில் அதுவரை இறந்தவர்கள் யாவரும் பங்குபெறமாட்டார்கள். கிறிஸ்து வினிடத்தில் விசுவாசம் உள்ளவர்களாக இறந்த வர்கள் மட்டுமே முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள்.

கிறிஸ்துவுக்கு உண்மையோடு வாழ்ந்தவர் கள் அல்லது ஜெயம் பெற்றவர்கள் மட்டுமே அப் பொழுது உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்று சிலர் போதிக்கிறார்கள். ஆனால் இதனை மறுத்துரைப் பதில் திருமறை மிகத்தெளிவாக இருக்கிறது. அவ ருடைய வருகையில் **கிறிஸ்துவுக்கு உரியவர் கள்** அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

**15:24 அதன் பின்பு முடிவு உண்டாகும்** என் னும் சொற்றொடர் *உயிர்த்தெழுதலின் முடி*

வைக் குறிக்கிறது என்றே நாம் கருதுகிறோம். கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சியின் முடிவில், அவருடைய பகைஞர் யாவரையும் அவர் வீழ்த்திய பிறகு, பாவத்தோடு இறந்தவர்கள் யாவரும் உயிருடன் எழுந்திருப்பார்கள். இதுவே கடைசி உயிர்த்தெழுதலாகும். எல்லாக் காலங்களிலும் அவிசுவாசத்தோடு இறந்தவர்கள் யாவரும் பெரிய வெள்ளை சிங்காசனத்திற்கு முன்பாக, தாங்கள் பெறவிருக்கும் நித்திய அழிவைப் பெறும்படி நிற்க வேண்டும்.

ஆயிரமாண்டு ஆட்சியும் சாத்தானின் அழிவும் (வெளி. 20:7-10) முடிவடைந்த பிறகு, கர்த்தராகிய கிறிஸ்து **தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்**. அந்த நேரத்தில் **அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும்** அழித்துப் போட்டிருப்பார். இதுமட்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து *மனிதகுமாரன்* என்னும் நிலையில், தேவனுடைய மத்தியஸ்தராகப் பணியாற்றி ஆளுகை புரிந்து கொண்டிருப்பார். ஆயிரமாண்டு அரசாட்சியின் முடிவில், இப்புவியில் தேவனுடைய நோக்கம் முழு நிறைவாக நடந்து முடிந்திருக்கும். எல்லா எதிர்ப்புகளும் வீழ்த்தப்பட்டு, எல்லாப் பகைஞரும் அழித்துப்போடப்பட்டிருப்பார்கள். *மனித குமாரன்* என்னும் நிலையில் கிறிஸ்து செலுத்திய ஆட்சி முடிவுற்று, பரலோகத்தில் நித்திய ராஜ்யம் தொடங்குவதற்கு வழி உண்டாயிருக்கும். *தேவகுமாரன்* என்னும் நிலையில் அவருடைய ஆட்சி என்றென்றும் தொடர்ந்து நடைபெறும்.

**15:25** இதுகாறும் கூறிய அனைத்தும், அதாவது கலகக்காரர்கள் இருக்கும் இடமெல்லாம் தெரியாமல் போகுமட்டும், பகைமை யாவும் வீழ்த்தப்படும் வரைக்கும் கிறிஸ்துவின் ஆளுகை தொடரும் என்னும் உண்மை இவ்வசனத்தில் வலியுறுத்தப்படுகிறது.

**15:26** கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சிக் காலத்திலும் மரணம் தொடர்ந்து நடைபெறும். குறிப்பாகக் கர்த்தருக்கு எதிராக வெளியரங்கமாகக் கலகம் செய்வோர் அக்காலத்தில் மரணம் அடைவார்கள். ஆனால் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின்போது, **மரணமும்** பாதாளமும் அக்கினிக் கடலிலே எறியப்படும்.

**15:27 சகலமும்** கர்த்தராகிய **இயேசுவின் பாதத்திற்குக் கீழ்ப்படுத்தப்படும்** என்று தேவன் ஆணையிட்டுள்ளார். ஆயினும் எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தியபோது தேவன் கீழ்ப்படுத்தப்படவில்லை என்பதே உண்மை. 27 -ஆவது வசனம் விளங்கிக்கொள்வதற்குச் சற்று கடினமானது. இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள பிரதிப்பெயர்ச் சொற்கள் யாரைக் குறிக்கின்றன என்பது தெளிவாக இல்லை. ஆகவே இவ்வசனத்தை நாம் பொழிப்புரையாக்கித் தருகிறோம்: "தேவன் சகலத்தையும் கிறிஸ்துவின் பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே. ஆகிலும் சகலமும் கிறிஸ்துவின் பாதத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று தேவன் சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தினவராகிய தேவன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தப்படவில்லை என்பது வெளியரங்கமாயிருக்கிறது.

**15:28 சகலமும்** குமாரனுக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட பின்னரும், அவர்தாமே **தேவனுக்கு** என்றென்றும் கீழ்ப்பட்டிருப்பார்.

> தேவன்தாமே கிறிஸ்துவை மன்னராகவும், அவருடைய எல்லாத் திட்டங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் நிருவாகியாகவும் நியமித்தார். எல்லா அதிகாரங்களும் வல்லமையும் அவருடைய கரங்களில் ஒப்புவிக்கப்பட்டன. அவரிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட நிருவாகத்தின் கணக்கை அவர் வரப்போகிற ஒருநாளில் சமர்ப்பிப்பார். எல்லாவற்றையும் அவர் தமக்குக் கீழ்ப்படுத்திய பிறகு, அவர் அரசைத் தமது திருத்தந்தையிடம் மீண்டும் ஒப்புவிப்பார். படைப்புகள் யாவும் நிறைவான நிலையில் தேவனிடமாய்த் திரும்பவும் கொண்டுவரப்படும். எதற்காக அவர் மனிதனாக இந்த உலகத்திற்கு வந்தாரோ அந்த மீட்பின் செயலையும், முன்னிருந்த சீரான நிலைக்குக் கொண்டுவரும் செயலையும் அவர் நிறைவேற்றிய பிறகு, அவர் மனுவுருவெடுத்த தருணத்தில் ஏற்றுக்கொண்ட கீழ்ப்படிதலின் இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வார். தேவன் திட்டமிட்டு நியமித்த எல்லாவற்றையும் நிறைவேற்றிய பிறகு மனிதனாக இருக்கும் நிலையை விட்டுவிடுவாரானால், தேவனையும் மனிதனையும் ஒன்றுகூட்டி இணைத்த அந்தத்தொடர்பே இல்லாமல் போகும். (தெரிந்தெடுக்கப்பட்டது)

**15:29** இந்த வசனம் திருமறை வசனங்கள் அனைத்திலும் மிகவும் கடினமானதும் தெளிவற்றதுமான வசனங்களில் ஒன்றாகும். இதற்குப் பொருள் கூறும் வகையில் பல விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாமலேயே இறந்துபோன

விசுவாசிகளுக்காக உயிரோடு இருக்கும் விசுவாசிகள் ஞானஸ்நானம் பெறுவதை இது குறிக்கிறது என்று சிலர் வலியுறுத்திக் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட பொருள் திருமறைக்கு முற்றிலும் அப்பாற்பட்டதாயிருக்கிறது. இந்த ஒரு வசனத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அவ்வாறு விளக்கம் அளிக்கப்படுவதால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது. வேதத்தில் வேறு வசனங்கள் ஒன்றிணைந்து இக்கருத்தை ஆதரிப்பதில்லை. மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுதல் என்பது, ஞானஸ்நானத்தில் நாமே மரித்தவர்களாக எண்ணிக்கொள்வதே ஆகும் என்று சிலர் இதற்குப் பொருள்கூறுகிறார்கள். இந்தப் பொருள் சரியாக இருக்கும் என்று தோன்றுகிறது; ஆனாலும் இந்த வசனத்தின் பின்னணியோடு இது சரியாகப் பொருந்தவில்லை.

இந்த வசனத்தின் பின்னணியோடு சிறந்த முறையில் பொருந்தக் கூடியதாகக் கீழ்க்கண்ட விளக்கமே காணப்படுகிறது: பவுல் இதை எழுதிய காலத்தில், கிறிஸ்துவுக்கு வெளியரங்கமான முறையில் சாட்சியாக விளங்கத் தீர்மானம் செய்தவர்கள் மிகக் கொடூரமான உபத்திரவத்தைச் சந்திக்க நேர்ந்தது. அந்த உபத்திரவம் அவர்கள் திருமுழுக்கு பெறுகிற தருணத்தில் மிகவும் கேவலமான நிலைக்குச் சென்றுவிடும். மேலும் கிறிஸ்து வின்மீது கொண்டிருக்கும் விசுவாசத்தை வெளியரங்கமாக அறிக்கையிடும் பொருட்டு தண்ணீர் ஞானஸ்நானத்தில் சாட்சியிட்டவர்கள் அதன் பிறகு சிறிது நேரத்திற்குள்ளாக இரத்த சாட்சியாகக் கொல்லப்பட்டார்கள். ஆனால் இத்தகைய கொடூரமான உபத்திரவத்தின் நிமித்தம் பிறர் இரட்சிக்கப்படுவதோ, ஞானஸ்நானத்தில் அவர்களுடைய இடத்தைப் பெறுவதோ நின்றுவிட்டதா? நிச்சயமாக இல்லை. இரத்த சாட்சியாக இறந்து போனவர்களுடைய இடத்தை நிரப்பும்படி புதிதாக ஆட்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தார்கள். அவ்வாறு புதிதாக வந்தவர்கள் ஞானஸ்நானம் பெறும்படி தண்ணீருக்குள் இறங்கியபோது, உண்மையான பொருளில் அவர்கள் **மரித்தவர்களுக்காக** அல்லது *மரித்தவர்களுடைய* **இடத்தில்** (Gk. huper) **ஞானஸ்நானம் பெற்றார்கள்**. இங்கு மரித்தவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர்கள், கிறிஸ்துவுக்காகத் துணிவுடன் சாட்சியாக நின்றதன் காரணமாக மரித்தவர்களே ஆவார்கள். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறப் போவதில்லை என்று கூறினால், மரித்தவர்களுடைய இடத்தில் புதிதாக மனிதர்கள் ஞானஸ்நானம் பெறுவது மதியீனமான செயலாக அல்லவா காணப்படும் என்பதே அப்போஸ்தலன் இப்பொழுது கூறும் வாதம். உயிர்த்தெழுதல் இல்லையென்றால் வீணான காரணத்துக்காகப் போரிடும் படைவீரர்களில் எண்ணிக்கை குறையாதபடி புதிதாகப் போர்வீரர்களைப் போர்க்களத்திற்கு அனுப்புவது போன்ற செயலாகவே மேற்கூறிய நிகழ்ச்சி காணப்படும். நம்பிக்கையற்ற சூழ்நிலையில் போரிடுவதுபோன்ற தொரு செயலாகவே அது காணப்படும். **மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?**

**15:30 நாங்கள் ஏன் எந்நேரமும் நாச மோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?** அப்போஸ்தலன் எப்பொழுதும் ஆபத்தை எதிர்நோக்கியிருந்தார். கிறிஸ்துவைப் பிரசங்கித்ததில் எவ்வித அச்சமுமின்றி அவர் செயல்பட்ட காரணத்தினால், அவர் சென்ற இடமெங்கும் அவருக்குப் பகைஞர் இருந்தார்கள். அவருடைய உயிரை எடுக்கப் பற்பல இரகசியத் திட்டங்கள் போடப்பட்டன. கிறிஸ்துவை அவர் அறிக்கை செய்வதை விட்டிருந்தால், இந்த ஆபத்துகளை அவர் தவிர்த்திருக்கலாம். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறப்போவதில்லை என்றால், உண்மையில் அவர் கிறிஸ்வைப் பிரசங்கிப்பதை விட்டொழிப்பதே அறிவுடைய செயலாக இருந்திருக்கும்.

**15:31 நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசு வினால் உங்களைக் குறித்து, நான் பாராட்டு கிற மேன்மையைக் கொண்டு சந்தோஷமாய்ச் சொல்லுகிறேன்.** இவ்வசனத்தை இவ்வாறு நாம் பொழிப்புரையாகத் தரலாம்: "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக நீங்கள் என்னுடைய பிள்ளைகளாக இருப்பதைக் குறித்து நான் சந்தோஷமாய் இருப்பது எப்படியோ, அப்படியே என்னுடைய வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் சாவின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறேன்."

**15:32 எபேசுவிலே** அப்போஸ்தலன் அனுபவித்த கடுமையான உபத்திரவத்தை அவர் இப்பொழுது மீண்டும் நினைவிற்குக் கொண்டுவருகிறார். அவர் உண்மையிலேயே துஷ்டமிருங்கள் இருந்த இடத்தில் தூக்கி எறியப்பட்டார் என்று நாம் நினைக்கவில்லை. இங்கு அவர் பொல்லாத மனிதர்களையே **துஷ்ட மிருகங்கள்** என்று குறிப்பிடுகிறார். உண்மையில் ரோமக் குடிமகன் என்னும் நிலையில், துஷ்ட மிருகங்களோடுப் போராட வேண்டிய நிலைக்குக் கட்டாயப்படுத்தப்

பட்டிருக்கமாட்டார். அவர் எந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார் என்பதை நாம் அறியோம். அது எதுவாயினும் அப்போஸ்தலன் இங்கு கூறுகிற வாதம் மிகத்தெளிவாய் இருக்கிறது. இறந்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் நடைபெறும் என்னும் உறுதியை அவர் பெற்றிருக்கவில்லை என்றால், ஆபத்து நிறைந்த அந்தப் போராட்டங்களில் அவர் ஈடுபட்டது மதியீனமான செயலாகவே இருந்திருக்கும். மாறாக, "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?" என்னும் தத்துவத்தைக் கடைப்பிடிப்பது, உண்மையில் அவருக்கு ஞானமான செயலாக இருந்திருக்கும்.

ஒருவேளை நமது வாழ்க்கை இப்புவி வாழ்வோடு முடிவடைந்துபோனாலும், நாங்கள் கிறிஸ்தவர்களாகவே இருப்போம் என்று கிறிஸ்தவர்கள் கூறுவதை நாம் சில நேரங்களில் கேட்கிறோம். ஆனால் பவுல் அக்கருத்தை ஒப்புக்கொள்வதில்லை. உயிர்த்தெழுதல் இல்லையென்றால், இந்த உலக வாழ்க்கையை நன்கு அனுபவிப்பதே சிறந்தது. நாம் உணவு, உடை, இன்பம் இவற்றிற்காகவே வாழ்வோம். நாம் எதிர்பார்க்கிற பரலோகம் இது ஒன்றுதான். ஆனால் உயிர்த்தெழுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறப் போகின்ற காரணத்தால், இப்படிப்பட்ட கடந்து செல்லுகிற பொருட்களுக்காக நாம் நம்முடைய வாழ்நாளைக் கழிக்கத் துணிவுகொள்ள மாட்டோம். நாம் உலக வாழ்க்கைக்காக அல்ல பரலோக வாழ்க்கைக் காகவே வாழ்கிறோம்.

**15:33** மேற்கூறியவற்றில் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் **மோசம்போகாதிருக்க** வேண்டும். **ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்**. கொரிந்து சபைக்கு வந்து, உயிர்த்தெழுதலை மறுத்துப் பேசிய கள்ள போதகர்களையே பவுல் இவ்வாறு குறிப்பிடுகிறார். பொல்லாத மக்களோடு அல்லது பொல்லாத உபதேசங்களோடு தொடர்புகொண்டும் கெட்டுப்போகாமல் இருக்க இயலாது என்பதைக் கிறிஸ்தவர்கள் உணரவேண்டும். தீய உபதேசம் நிச்சயமாக ஒருவருடைய வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும். கள்ள போதகங்கள் எவரையும் பரிசுத்தத்திற்குள் வழிநடத்துவதில்லை.

**15:34** கொரிந்துப் பட்டணத்தார் **நீதிக்கேற்ப விழித்திருக்க** வேண்டும். மேலும் அவர்கள் **பாவமும் செய்யக்கூடாது**. இந்தப் பொல்லாத போதகங்களால் அவர்கள் ஏமாந்துபோய்விடக் கூடாது. **சிலர் தேவனைப் பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே. உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன்.** இன்னும் நற்செய்திக் கதையை இதுவரை கேள்விப்பட்டிராத மக்கள் இருக்கிறார்கள்; உலகம் முழுவதும் நற்செய்தி அறிவிக்கப்படாமல் தோல்வியுற்ற நிலையில் இருப்பது குறித்து கிறிஸ்தவர்கள் வெட்கப்பட வேண்டும் என்று இந்த வசனத்திற்குப் பொதுவாக விளக்கம் அளிக்கப்படுகிறது. இது உண்மையாக இருந்த போதிலும், கொரிந்துப் பட்டணத்து ஐக்கியத்தில் இருந்த மனிதர்களில் **சிலர் தேவனைப் பற்றி அறிவில்லாதிருந்தார்கள்** என்பதே இதன் முதன்மையான பொருளாகும். அவர்கள் மெய்யான விசுவாசிகள் அல்லர், ஆட்டின் தோலைப் போர்த்திய ஓநாய்கள், பிறர் அறியாமல் உள்ளே நுழைந்த கள்ளபோதகர்கள். இந்த மனிதர்கள் கிறிஸ்தவரோடு தங்களுடைய இடத்தைப் பெறவும், பொல்லாத போதனைகளைப் போதிக்கவும் அனுமதிக்கப்பட்டது குறித்துக் கொரிந்தியர் **வெட்கப்படவேண்டும்**. துன்மார்க்கர் சபையில் நுழைவதற்கு அனுமதிக்கப்படும் அளவிற்குக் கவனமற்று இருந்த காரணத்தால் சபை மக்களின் ஒழுக்க நெறி நிலையானது தாழ்வடைந்து போயிற்று. இ.்.து எல்லாவிதமான தவறுகளும் சபைக்குள்ளாக நுழைவதற்கு ஏதுவாகத் திறந்த வாசலை ஏற்படுத்திவிட்டது.

### ஆ. உயிர்த்தெழுதலுக்கு எதிரான மறுப்புகள் குறித்த ஆராய்ச்சி (15:35-57)

**15:35** முப்பந்தைந்து முதல் நாற்பத்தொன்பது வரையிலான வசனங்களில், உண்மையில் உயிர்த்தெழுதல் எவ்வாறு நிகழும் என்பது பற்றிய பெரிதான விவரங்களை அப்போஸ்தலன் எழுதுகிறார். சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலை எதிர்த்துக் கேள்வி எழுப்பும் மக்களின் உள்ளங்களில் எழக்கூடிய தவிர்க்க முடியாத இரண்டு கேள்விகளை அவர் எதிர்நோக்குகிறார். முதலாவது கேள்வி: **மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்?** அடுத்த கேள்வி: அவர்கள் **எப்படிப்பட்ட சரீரத்தோடு வருவார்கள்?**

**15:36** முதலாவது கேள்விக்கான விடை 36 - ஆவது வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. இயற்கையில் நிகழக்கூடிய நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்காட்டாகக் கூறி, உயிர்த்தெழுதல் நிகழ்வதற்கான சாத்தியக்கூறு இங்கே விவரிக்கப்படுகிறது. ஒரு விதையானது நிலத்தில் விழுந்து செத்த பிறகே செடியானது வளரும். ஒவ்வொரு சிறு விதையிலும் ஓர் உயிர் மறைந்திருக்கிறது என்னும் மர்மம் நினைத்துப் பார்ப்பதற்கு ஆச்சரிய

மாயிருக்கிறது. நாம் ஒரு விதையை இரண்டாகப் பிரித்து அதனை ஒரு நுண்ணோக்கு ஆடியின் மூலமாகக் கண்டு ஆராய்ச்சி செய்யலாம். ஆனாலும் அதிலுள்ள உயிரைப் பற்றிய இரகசியம் புரிந்துகொள்வதற்குக் கடினமான மர்மமாகவே இருக்கிறது. அந்த விதை நிலத்தில் விழுந்து, நிகழ்வதற்கு அரிதான முறையில், செத்த ஒன்றிலிருந்து உயிர் முளைத்து எழுகிறது.

**15:37** அடுத்து இரண்டாவது கேள்வி எடுத்துக் கொள்ளப்படுகிறது. நீங்கள் ஒரு விதையை **விதைக்கும்போது**, அந்தத் தாவரத்தை விதைப்பதில்லை. அதாவது என்ன தாவரமாக வளர்ந்து வரப் போகிறதோ அதை விதைப்பதில்லை. மாறாக நீங்கள் **வெறும் விதையைத்தான்** விதைக்கிறீர்கள். அது **கோதுமை அல்லது மற்றொரு தானியத்தின் விதையாக** இருக்கும். இதிலிருந்து நாம் என்ன முடிவு செய்கிறோம். அந்தத் தாவரம் விதையைப் போன்று இருக்கிறதா? இல்லை. அந்தத் தாவரம் விதையைப் போல் இருப்பதில்லை. ஆனாலும் அவ்விரண்டிற்கும் மிக முக்கியமான தொடர்பு இருக்கிறது. விதையில்லாமல் தாவரம் இல்லை. மேலும் தாவரமானது விதையிலிருந்தே அதற்குரிய தனிப்பண்புகளை பெறுகிறது. அதுபோன்றதுதான் உயிர்த்தெழுதல்.

> விக்கப்பட்டது எதுவோ அதனுடைய தன்மையையும் அதனுடைய சாரத்தையும் உயிர்த்தெழும் சரீரம் பெற்றிருக்கும். ஆனாலும் அது அதன் அழிவிலிருந்தும், கனவீனத்திலிருந்தும், பலவீனத்திலிருந்தும் தூய்மையாக்கப்பட்டு அழியாததாயும், மகிமையுடையதாயும், பலமுள்ளதாயும் மாற்றம் பெறும். அது அந்தச் சரீரமே ஆகும். ஆனாலும் அது ஒரு தோற்றத்தில் விதைக்கப்படும். வேறொரு தோற்றத்தில் உயிர்த்தெழும் (தெரிந்தெடுக்கப்பட்டது).

**15:38** என்ன விதை விதைக்கப்பட்டதோ அதற்கேற்ற **மேனியை தேவன்** உண்டுபண்ணுகிறார். மேலும் ஒவ்வொரு விதையும் அதனுடைய தாவரத்தையே முளைப்பிக்கிறது. அந்தத் தாவரத்தினுடைய அளவு, நிறம், இலை, பூ போன்ற எல்லாப் பண்புகளும் விதைக்கப்பட்ட விதைக்குள்ளே எப்படியோ உள்ளடங்கியிருக்கின்றன.

**15:39** நம்முடைய சரீரங்களின் தற்போதைய மகிமையிலிருந்து,உயிர்த்தெழுந்த சரீரங்களின் மகிமை வேறுபட்டதாக இருக்கும் என்னும் உண்மையை விளக்கிக் கூறும் பொருட்டு, அப்போஸ்தலனாகிய பவுல் **எல்லா மாம்சமும் ஒரே விதமான மாம்சமல்ல** என்று குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, **மனிதன்** ஒரு வகையான **மாம்சத்தைக்** கொண்டிருக்கிறான், **மிருகங்களின் மாம்சம்** வேறு, **மச்சங்களின் மாம்சம்** வேறு மற்றும் **பறவைகளின் மாம்சம்** வேறு. இவை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டு இருக்கின்றன. ஆனாலும் அவை யாவும் மாம்சமே. ஒன்றைப் போலவே வேறொன்று இல்லை யென்றாலும் அவற்றிற்குள் சில ஒற்றுமைகள் உள்ளன.

**15:40** இப்பூமியோடு தொடர்புடைய மேனிகளுக்கும் விண்மீன்களின் மேனிகளுக்கும் அவற்றினின்று வீசும் சுடரொளியில் வேறுபாடு இருக்கிறது. அதுபோலவே ஒரு விசுவாசியின் தற்போதைய சரீரத்திற்கும், அவன் இறந்த பிறகு பெறுகிற சரீரத்திற்கும் வேறுபாடு இருக்கும்.

**15:41** வானத்தில் உள்ள கோளங்களுக்கிடையே **மகிமையில்** வேறுபாடு இருக்கிறது. எடுத்துக்காட்டாக சூரியன் சந்திரனைக் காட்டிலும் அதிக ஒளி பொருந்தியதாக இருக்கிறது. ஒரு நட்சத்திரம் மற்றொரு நட்சத்திரத்திலிருந்து ஒளி தருவதில் வேறுபடுகிறது.

இப்புவியில் தற்போது நாம் பெற்றிருக்கிற சரீரங்களின் மகிமைக்கும், நாம் உயிர்த்தெழும் போது பெறப்போகிற சரீரங்களின் மகிமைக்கும் வேறுபாடு இருக்கும் என்று பவுல் இங்கு வலியுறுத்திக் கூறுவதாகப் பல விளக்கவுரையாளர்கள் ஒரேவிதமான கருத்துடையோராய் இருக்கிறார்கள். 41 -ஆவது வசனம், விண்ணுலகில் விசுவாசிகளுக்கிடையே மகிமையில் வேறுபாடு காணப்படும் என்று குறிப்பிடுகிறது என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்கிறதில்லை. “வானத்து மேனிகளுக்கிடையே வேறுபாடு இருப்பதைப் பவுல் வலியுறுத்திக் கூறுவதிலிருந்து, உயிர்த்தெழுந்த விசுவாசிகளுக்கிடையே மகிமையில் வேறுபாடு விளங்கும் என்னும் ஒப்புமை கூறப்படுகிறது” என்று ஹோல்ஸ்டன் என்பார் கூறியிருக்கும் கருத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம். நாம் யாவரும் ஒன்றுபோல இருக்க மாட்டோம் என்பது திருமறையின் பல பகுதிகளிலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. ஒழுக்க நெறியில் நாம் யாவரும் கர்த்தராகிய இயேசுவைப் போல இருப்போம். அதாவது நாம் பாவத்திலிருந்து விடுதலை பெற்றிருப்போம். ஆனால் சரீரத் *தோற்றத்தில்* நாம் யாவரும் கர்த்தராகிய இயேசுவைப் போலவே இருக்கப் போவதில்லை. நித்திய காலமெல்லாம்

அவர் தனிப்பட்ட முறையில் அறியப்படத்தக்க வராக இருப்பார். அதுபோல, ஒவ்வொரு கிறிஸ் தவரும் அறியப்படத்தக்கவராகவும் இருப்பார். ஒவ்வொருவருடைய ஊழியத்திலும் அவரவர் கொண்டிருந்த உண்மைத் தன்மையின் அடிப் படையில் வெவ்வேறு விதமான பரிசைப் பெற்றி ருப்பர். அந்த வெகுமதி கிறிஸ்துவின் நியாயாச னத்தில் வழங்கப்படும். விண்ணகத்தில் அனை வரும் ஒப்புயர்வற்ற மனமகிழ்ச்சியைப் பெறுவார் கள். ஆனாலும் சிலர் அதை அனுபவிப்பதில் அதிக **ஆற்றல்** உடையோராய் இருப்பர். நரகத் தில் ஒவ்வொரு மனிதனும் தான் செய்த பாவங் களுக்குத் தக்கதாக பாடுகளை அனுபவிப்பான். அந்தப் பாடுகளில் மனிதனுக்கு மனிதன் வேறு பாடு காணப்படும். அதுபோலவே மகிழ்ச்சியை அனுபவிப்பதிலும் வேறுபாடுகள் விளங்கும். விசுவாசிகள் என்னும் நிலையில் நாம் செய்தவற் றிற்குத்தக்கபடி அவை வழங்கப்படும்.

**15:42** நாற்பத்திரண்டாம் வசனம் முதல் நாற்பத்தொன்பதாம் வசனம் வரையில் தற்போது விசுவாசிகளின் சரீரங்கள் இருக்கும் நிலைக்கும், நித்தியத்தில் அவை அடையப்போகிற நிலைக் கும் இடையில் உள்ள வேறுபாடுகள் விளக்கிக் காண்பிக்கப்பட்டுள்ளன. **அழிவுள்ளதாய் விதைக் கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்.** தற்போது நம்முடைய சரீரங்கள் நோய்க்கும் மரணத்திற்கும் கீழ்ப்பட்டுள்ளன. கல்லறையில் அவை வைக்கப்பட்ட பிறகு, அழுகி மண்ணோடு மண்ணாக மக்கிப்போய் விடுகின்றன. ஆனால் உயிர்த்தெழுந்த சரீரம் அத்தன்மையுள்ளதாய் இருக்காது. அதன் பிறகு அது நோய்க்கும் அழிவுக்கும் கீழ்ப்பட்டிருக்காது.

**15:43** தற்போதைய சரீரம் **கனவீனமுள்ள தாய் விதைக்கப்படும்.** இறந்துபோன சரீரம் மாட்சிமை உடையது அல்லது மகிமை பொருந் தியது என்று சொல்வதற்கு அதில் ஒன்றுமில்லை. ஆனாலும் அதே சரீரம் **மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்.** அதில் சுருக்கங்களோ, தழும்பு களோ, வயதின் முதிர்ச்சியைக் காட்டக்கூடிய அடையாளங்களோ, அதிக எடையோ, பாவத்தின் கறைகளோ இரா.

**பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பல முள்ளதாய் எழுந்திருக்கும்.** வயதின் முதிர்ச்சி யினால் பலவீனம் அதிகரித்து, மரணம் ஏற்படும் போது ஒரு மனிதனின் அனைத்து வலிமையும் அவனைவிட்டு அகற்றப்படும். விண்ணகத்தில் இத்தகைய வருத்தத்திற்குரிய நிலைமைக்கு சரீரம் உட்படாது. மாறாக நாம் இப்பொழுது பெற் றிராத அளவுக்கு ஆற்றலைப் பெற்றிருப்போம். எடுத்துக்காட்டாக, உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, கதவுகள் அடைக்கப்பட்ட அறைக்குள்ளாக நுழைந்தார்.

**15:44 ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்.** இங்கு ஆவிக்குரியது என்று சொல்லும்போது அதில் பருப்பொருள் ஒன்றும் இருக்காது என்பது பொரு ளல்ல என்பதை நாம் கவனத்தோடு வலியுறுத்து கிறோம். உயிர்த்தெழுதலில் நாம் சரீரமற்ற ஆவி களாக இருப்போம் என்று சிலர் கருதுகிறார்கள். இந்தப் பகுதியின் பொருள் அதுவல்ல, அது உண் மையும் அல்ல. உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவின் சரீரம் மாம்சமும் எலும்புகளும் உடையதாய் இருந்தது என்பதை நாமறிவோம். "நீங்கள் காண்கிறபடி, எனக்கு மாம்சமும் எலும்பு களும் உண்டாயிருக்கிறபோல ஒரு ஆவிக்கு இராதே" என்று அவர் கூறினார் (லுக்கா 24:39). ஜென்ம சரீரம் ஆவிக்குரிய சரீரம் இவற்றிற் கிடையே உள்ள வேறுபாடு யாதெனில் முந்தி னது இவ்வுலக வாழ்க்கைக்கு ஏற்றதாகவும், பிந்தினது விண்ணுலக வாழ்க்கைக்கு ஏற்றதாக வும் உள்ளன என்பதேயாகும். முந்தைய நிலை ஆத்துமாவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது, பிந்தைய நிலை ஆவியின் கட்டுப்பாட்டுக்கு உட் பட்டது. ஆவிக்குரிய சரீரம் உண்மையாகவே ஆவியின் அடிமையாக விளங்கும்.

ஆவி, ஆத்துமா, சரீரமாக தேவன் மனித னைப் படைத்தார். அவர் எப்பொழுதும் ஆவி யையே முதலில் குறிப்பிடுகிறார். ஏனெனில் ஆவி யானது முதன்மையான இடத்தை அல்லது அதி காரத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். பாவம் நுழைந்தபோது, விநோத மான ஒன்று நிகழ்ந்தது. தேவன் நியமித்த ஒழுங்கு தலைகீழாக மாறிவிட்டது. அதன் விளைவாக மனிதன் எப்பொழுதும், "சரீரம், ஆத்துமா, ஆவி" என்றே கூறுகிறான். ஆவி பெற்றிருக்க வேண்டிய இடத்தை அவன் சரீரத்திற்குக் கொடுத்துவிட் டான். உயிர்த்தெழுதலில் அவ்வாறு இருக்காது. தேவன் முதலில் விரும்பிய வண்ணம் ஆவி யானது எல்லா அதிகாரமும் உடைய இடத்தைப் பெற்றிருக்கும்.

**15:45 "அந்தப்படியே முந்தின மனிதனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான்" என்று எழுதி யிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்.** மீண்டும் இங்கு **முந்தின மனித**

**னாகிய ஆதாம்** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு வேறுபட்டவனாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறான். தேவன்தாமே ஆதாமின் சுவாசத்தில் ஜீவனை ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான் (ஆதி.2:7). அவனுடைய வழிமரபில் தோன்றிய யாவரும் இதே பண்புகளைப் பெற்றிருக்கிறார்கள். இரட்சகராகிய பிந்தின ஆதாம், உயிர்ப்பிக்கிற ஆவியானார் (யோவான் 5:21,26). முந்தின நிகழ்ச்சியில் ஆதாமுக்கு சரீரப்பிரகாரமான உயிர் *கொடுக்கப்பட்டது*. ஆனால் இரண்டாவதைக் காணும்போது, பிறருக்குக் கிறிஸ்து நித்திய வாழ்வைக் கொடுக்கிறார். இதனை எர்ட்மேன் என்பார் விளக்குகிறார்:

> ஆதாமின் வழித்தோன்றல் என்னும் நிலையில், நாம் அவனைப்போலவே உண்டாக்கப்பட்டிருக்கிறோம், அழிந்துபோகிற சரீரங்களில் குடியிருக்கிற உயிர் வாழ்கின்ற ஆத்துமாக்களாக இருக்கிறோம், மேலும் இவ்வுலகிற்குரிய பெற்றோரின் சாயலைப் பெற்றிருக்கிறோம். ஆனால் கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் என்னும் நிலையில், அழியாத சரீரங்களை இனிமேல்தான் அணிந்துகொள்ளப் போகிறோம், மேலும் நம்முடைய விண்ணக இறைவனின் சாயலை அணிய விருக்கிறோம்.[53]

**15:46** தேவனுடைய பிரபஞ்சத்தில் நிலைநிற்கும் அடிப்படைச் சட்டத்தை இப்பொழுது அப்போஸ்தலன் முன்மொழிகிறார். அது என்னவெனில், **ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்ம சரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது** என்பதே. இதனை நாம் பல வழிகளில் புரிந்துகொள்ளலாம். **ஜென்ம** மனிதனாகிய ஆதாம் மனித வரலாற்றின் அரங்கில் முதலில் வந்தான். அதன் பிறகு **ஆவிக்குரிய** மனிதராகிய இயேசு வந்தார். இரண்டாவதாக, நாம் இவ்வுலகில் **ஜென்ம** மனிதர்களாகப் பிறந்தோம். பின்னர் நாம் மறுபடியும் பிறந்தபோது **ஆவிக்குரியவர்களாக** மாறிவிட்டோம். இறுதியாக, முதலில் நாம் **ஜென்ம** சரீரங்களைப் பெற்றோம், பின்னர் நாம் உயிர்த்தெழும்போது **ஆவிக்குரிய** சரீரங்களைப் பெறுவோம்.

**15:47 முந்தின மனிதன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன்.** அவனுடைய மூலமுதல் **பூமியிலிருந்து** உண்டானது, அவனுடைய பண்புகள் பூமிக்குரியது என்பதே அதன் பொருளாகும். முதலில் அவன் நிலத்தின் **மண்ணிலிருந்து** உண்டாக்கப்பட்டான். மேலும் அவனுடைய வாழ்க்கை, உண்மையான பொருளில் பூமியைச் சார்ந்ததாகவே இருந்தது. **இரண்டாம் மனிதர் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.**[54]

**15:48** நாற்பத்தைந்தாவது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு மனிதர்களில், இயேசு இரண்டாவது நபர். அவர் நித்திய காலமெல்லாம் இருந்தவர். ஆனாலும் அவர் மனிதன் என்னும் நிலையில் ஆதாமுக்குப் பிந்தி வந்தவர். அவர் வானத்திலிருந்து வந்தவர். அவர் செய்தவை, பேசியவை யாவும் வானத்திற்குரியவையாகவும் ஆவிக்குரியவையாகவும் இருந்தன. அவை மண்ணுக்குரியவையாகவோ ஆத்துமாவுக்குரியவையாகவோ இருக்கவில்லை.

இவ்விதமாக இவ்விரண்டு சமுதாயத் தலைவர்கள் இருக்க, இவர்களைப் பின்பற்றுவோரும் அவ்வாறே இருக்கிறார்கள். ஆதாமிலிருந்து பிறந்தவர்கள் அவனுடைய பண்புகளைப் பரம்பரை உடைமைகளாகப் பெற்றிருக்கிறார்கள். மேலும் கிறிஸ்துவுக்குள்ளாகப் பிறந்தவர்கள் **வானத்துக்குரிய** மக்களாவர்.

**15:49** நம்முடைய இயற்கையான பிறப்பின்படி நாம் ஆதாமின் **சாயலை அணிந்திருக்கிறது போல,** நம்முடைய உயிர்த்தெழுதலின் சரீரங்களில் கிறிஸ்துவின் **சாயலை அணிந்துகொள்ளுவோம்.**[55]

**15:50** கர்த்தருடைய வருகையின்போது, இறந்தவர்களும் உயிரோடிருக்கிறவர்களுமாகிய விசுவாசிகளின் சரீரங்கள் மறுரூபம் அடையும் நிகழ்ச்சியைக் குறித்துப் பேச அப்போஸ்தலன் தொடங்குகிறார். அவர் தம்முடைய உரைக்கு முன்னுரையாக **மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது** என்று அறிவிக்கிறார். நாம் பெற்றிருக்கிற தற்போதைய சரீரம் நம்முடைய விண்ணக வீட்டிற்கு அதாவது **தேவனுடைய ராஜ்யத்தின்** நித்திய நிலைமைக்கு ஏற்றதாயிராது. **அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதில்லை** என்பதும் உண்மையே. அதாவது, நோய்வாய்ப்படுதல், அழுகிப்போகுதல், சிதைந்துபோகுதல் ஆகிய பண்புகளைக் கொண்ட நமது தற்போதைய சரீரம், அழிவற்ற சூழ்நிலைக்கு ஏற்றதாயிருக்காது. அவ்வாறாயின், உயிரோடிருக்கும் விசுவாசிகளின் சரீரங்கள் எவ்வாறு விண்ணக வாழ்க்கைக்கு ஏற்றவையாக விளங்கும் என்னும் கேள்வி எழுகிறது.

**15:51** இதனுடைய விடை **இரகசியமாக** இருக்கிறது. நாம் முன்னர் கூறியது போல, அதுகாறும்

அறியப்படாதிருந்த உண்மை அப்போஸ்தல ருக்கு வெளிப்படுத்தப்பட்டு, அவர்கள் மூலமாக நமக்கு அறிவிக்கப்பட்ட செய்தியே **இரகசியம்** ஆகும்.

**நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை.** அதாவது எல்லா விசுவாசிகளும் சாவின் ஊடாகச் செல்லப்போவதில்லை. கர்த்தருடைய வருகையின்போது சிலர் உயிருடன் இருப்பார்கள். ஆனால், நாம் இறந்துபோனாலும் அல்லது அதுவரை உயிருடன் இருந்தாலும், நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். உயிர்த்தெழுதல் இரகசியமாகாது. ஏனெனில் அது பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லோரும் சாகப்போவதில்லை என்னும் உண்மை மற்றும் கர்த்தருடைய வருகையின்போது உயிரோடு இருக்கும் பரிசுத்தவான்கள் மாற்றம் அடைதல் ஆகியவை முன்னர் அறியப்படாதவை.

**15:52** அந்த மாற்றம் **கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு இமைப்பொழுதிலே** சடுதியில் நடைபெறும். இங்கு கடைசி எக்காளம் என்று சொல்லப்பட்டிருப்பது உலகத்தின் முடிவைக் குறிப்பிடுவதில்லை. வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள கடைசி எக்காளத்தையும் இது குறிப்பிடுவதில்லை. மாறாக, கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களுக்காக ஆகாயத்திலே வரும்போது ஒலிக்கும் தேவனுடைய எக்காளமே ஆகும் (1 தெச. 4:16). **எக்காளம்** தொனிக்கும்போது, **மரித்தோர் அழிவில்லாத வர்களாய் எழுந்திருப்பார்கள், மறுரூபம் அடைவார்கள்**. அந்தத் தருணம் எவ்வளவு வியக்கத்தக்கதாய் இருக்கும். பல நூற்றாண்டுகளில், கிறிஸ்துவை விசுவாசித்து, பின்னர் இறந்துபோன பலரையும் பூமியும் கடலும் திரும்பக் கொடுக்கும்! அந்த நிகழ்ச்சியின் பேரளவையும் முக்கியத்துவத்தையும் மனித உள்ளத்தில் எண்ணிப்பார்ப்பது அரிதான செயலாகும். ஆனாலும் ஓர் எளிய விசுவாசி இவ்வுண்மையை விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்கிறான்.

**15:53** கிறிஸ்து மீண்டும் வரும்போது இரு வகையான விசுவாசிகளைக் குறித்து இந்த வசனம் குறிப்பிடுகிறது என்று நாம் கருதுகிறோம். **அழிவுள்ளதாகிய இது** என்பது மண்ணுக்குத் திரும்பிய சரீரங்களைக் குறிக்கிறது. அவர்கள் **அழியாமையைத் தரித்துக்கொள்வார்கள். சாவுக்கேதுவாகிய இது** என்னும் சொற்றொடர் முன்கூறியதற்கு மாறாக, உயிரோடு இருப்பவர்களுடைய சரீரங்களைக் குறிக்கிறது. அவை சாகக் கூடியவை. அந்தச் சரீரங்கள் **சாவாமையைத் தரித்துக்கொள்ளும்.**

**15:54** கிறிஸ்துவுக்குள் இறந்தவர்கள் உயிரோடு எழுந்து, உயிரோடு இருப்பவர்கள் அவர்களோடு மறுரூபம் அடையும்போது, **"மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது" என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்** (ஏசா. 25:8). எத்தனை மகத்துவம் நிறைந்த நிகழ்ச்சி!

C. H. மெக்கின்டோஷ் வியந்து போற்றுகிறார்:

> இதுபோன்ற வல்லமையின் முன்னிலையில் மரணம், கல்லறை, சரீரம் அழுகிப்போகுதல் என்பவையெல்லாம் என்ன? இறந்துபோய் நான்கு நாட்கள் ஆயிற்றே! இந்தப் பேச்சு கடினமான செயலையா குறிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, மண்ணோடு மண்ணாக மக்கிப்போன கோடிக்கணக்கான மனிதர்கள் ஒருநொடிப்பொழுதில் உயிரோடு எழுந்திருப்பார்கள். உன்னதமானவரின் சத்தத்தால், அழியாமையையும், நித்திய மகிமையையும் தரித்துக்கொள்வார்கள்.[56]

**15:55** கர்த்தரை வானத்தில் சந்திக்கும்படி உயிருடன் எழும் விசுவாசிகள் பாடும் ஏளனப் பாடலாக இந்த வசனம் காணப்படுகிறது. அவர்கள் **மரணத்தை** ஏளனம் செய்வதுபோல இது காணப்படுகிறது. ஏனெனில் அவர்களைப் பொருத்த நிலையில் மரணம் அதனுடைய **கூரை** இழந்துவிட்டது. அவர்கள் **பாதாளத்தையும்** ஏளனம் செய்கிறார்கள். ஏனெனில் அது அவர்களைத் தன்னிடம் தனதுரிமையாய்க் கட்டி வைக்க முடியாமல் போரில் தோற்றுப்போயிற்று. **மரணம்** அவர்களை பயமுறுத்துகிறதில்லை. ஏனென்றால் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்றும், தேவனுடைய நேசகுமாரன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் அவர்களும் தேவனுடைய முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக நிற்க முடியும் என்றும் அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

**15:56** பாவத்தினாலன்றி ஒருவர் மீதும் **மரணத்திற்குக் கூர்** இல்லை. அறிக்கை செய்யாததும், மன்னிக்கப்படாததுமான பாவங்களைக் குறித்த நினைவே, மரணத்தைப் பற்றிய அச்சத்தை மனிதனுக்குத் தருகிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன என்னும் அறிவு, மரணத்தை நாம் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் படிச் செய்கிறது. இதற்கு மாறான நிலையில் நாம் இருப்போமானால், நம்முடைய நினைவை பாவம்

ஆட்கொள்ளும், மரணம் பயமுறுத்தும்; இதுவே நித்திய ஆக்கினையின் தொடக்கம்.

**பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.** அதாவது, பாவியை **நியாயப்பிரமாணம்** குற்றப் படுத்துகிறது. தேவனுடைய பரிசுத்த கட்டளை களுக்குக் கீழ்ப்படியாமல் தோல்வியுற்ற அனைவர் மேலும் அது அழிவைத் தீர்ப்பாகக் கூறுகிறது. பாவம் ஒன்றும் இல்லையென்றால் மரணம் என்று எதுவும் நடக்காது என்று நன்றாகச் சொல்லப்பட்டி ருக்கிறது. மேலும் நியாயப்பிரமாணம் இல்லை யென்றால், ஆக்கினைத் தீர்ப்பு நிகழப்போவ தில்லை.

> பாவம் ஆக்கினைத் தீர்ப்பு கொடுக்கப்படவேண் டும் என்று கூறுகிறது. நியாயப்பிரமாணம் அத் தீர்ப்பை வழங்குகிறது. இவையிரண்டும் மரணத்தின் அரியணைக்கு ஆதாரங்களாக இருக்கின்றன. இதன் காரணமாக, இந்த இரண்டு அதிகாரங்களின் மேலும் மீட்பரின் கிரியை கடுந்தாக்குதலை ஏற்படுத்தியிருக் கிறது.[57]

**15:57** அவரிடத்தில் கொண்டிருக்கும் விசு வாசத்தின் மூலமாக, மரணத்தின்மேலும் பாதா ளத்தின் மேலும் நமக்கு **ஜெயம்** உண்டு. மரணத் தின் கூர் உடைக்கப்பட்டுவிட்டது. ஒரு பூச்சி ஒரு வனைக் கொட்டும்போது அதனுடைய கொடுக்கு ஒடிந்து அவனுடைய தசைக்குள்ளாக நின்று போய்விடுமானால், அதன் "கூர்" ஒடிந்து அப்பூச்சி இறந்து போகும்.உண்மையான பொருளில், மர ணம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை யில் தன்னைத்தான் கொட்டி கூரொடிந்து செத்துப் போயிற்று. இப்பொழுது விசுவாசிகளைப் பொருத்த அளவில் சாவின் கூர் ஒடிந்து போயிற்று.

### இ. உயிர்த்தெழுதலின் வெளிச்சத்தில் கொடுக் கப்பட்ட இறுதியான வேண்டுகோள் (15:58)

உயிர்த்தெழுதலின் நிச்சயம் மற்றும் கிறிஸ்து வின்மீது கொண்ட விசுவாசம் விருதாவன்று என்னும் உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் அப்போஸ்தலனாகிய பவுல், தனக்குப் **பிரியமான சகோதரர், கர்த்தருக்குள்படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, உறுதிப்பட்ட வர்களாகவும், அசையாதவர்களாகவும், கர்த் தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகு கிறவர்களாகவும் இருக்க** வேண்டும் என்று புத்திசொல்லுகிறார். உயிர்த்தெழுதலைப் பற்றிய உண்மை எல்லாவற்றையும் மாற்றுகிறது. அது நம்பிக்கை உறுதி ஆகியவற்றைத் தந்து, நம்மை முழ்கடிக்கக்கூடிய கடினமான சூழ்நிலைகளிலும் முன்னேறி போகச் செய்கிறது.

## பவுல் கொரிந்தியருக்கு அளித்த இறுதி அறிவுரை (அதி. 16)

### அ. பணம் சேர்க்கப்படுதலைக் குறித்த அறிவுரை (16:1-4)

**16:1** கொரிந்து நகர சபையில் பணம் சேர்க்கப் பட்டு, அதனை எருசலேமில் இருந்த பரிசுத்தவான் களின் தேவையைச் சந்திக்கும்படி அனுப்புவது குறித்த அறிவுரை 16 -ஆவது அதிகாரத்தின் முதல் வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் களுடைய வறுமைக்குச் சரியான காரணம் எது வென்று தெரியவில்லை. அந்த நாட்டைத் தாக் கிய பஞ்சமே அதன் காரணம் என்று சிலர் கருது கிறார்கள் (அப். 11:28-30). கிறிஸ்துவினிடத்தில் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தை யூதக் கிறிஸ்தவர்கள் அறிக்கை செய்ததன் காரண மாகவே, அவர்களுடைய விசுவாசமற்ற உற வினர்களாலும், நண்பர்களாலும், உடன்வாழ் மக் களாலும் சமுதாயத்தினின்று அவர்கள் விலக்கப் பட்டு, புறக்கணிக்கப்பட்டார்கள் என்று தோன்று கிறது. அவர்கள் நிச்சயமாக தங்களுடைய வேலையை இழந்து போயிருப்பார்கள். மேலும் பலவிதமான பொருளாதார நெருக்கடிக்குள் அவர்கள் உட்படுத்தப்பட்டு, தாங்கள் கிறிஸ்து வின் மீது கொண்டிருந்த விசுவாச அறிக்கையை மறுத்துரைக்கும்படி வற்புறுத்தப்பட்டிருப்பார்கள். இதைக் குறித்து பவுல் ஏற்கனவே **கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குக்** கட்டளை கொடுத்திருக் கிறார். இப்பொழுதோ கலாத்தியா நாட்டுப் பரி சுத்தவான்கள் எவ்வாறு அறிவுறுத்தப்பட்டார் களோ அதுபோலவே கொரிந்து சபை மக்களும் அவரால் அறிவுறுத்தப்பட்டார்கள்.

**16:2** இங்கு கொடுக்கப்பட்டுள்ள கட்டளை ஒரு குறிப்பிட்ட காரணத்துக்காகப் பணம் சேர்க்கப்படு தலைப் பற்றியதாக இருந்த போதிலும், அதில் சம் பந்தப்பட்ட கொள்கைகள் நிரந்தரமான முக்கியத் துவம் வாய்ந்தவை. முதலாவதாக, வாரத்தின் **முதல்நாள் தோறும்** பணம் சேர்க்கப்பட வேண் டும். தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளை அதாவது வாரத்தின் ஏழாவது நாளைக் கட்டாய ஆசரிப்பு நாளாகக் கொண்டாடவில்லை என்பது பற்றிய மிக வலிமையான குறிப்பை இங்கு காண்கிறோம். கர்த்தர் வாரத்தின் முதல் நாளில் உயிர்த்தெழுந்தார், பெந்தெகொஸ்தே நாளும் வாரத்தின் முதல் நாளாகவே இருந்தது, சீடர்கள்

அப்பம் பிட்கும்படி வாரத்தின் முதல் நாளிலே கூடி வந்தார்கள் (அப். 20:7). இப்பொழுது **வாரத்தின் முதல்நாள்தோறும்** பரிசுத்தவான்களுக்காக அவர்கள் **பணத்தைச் சேர்த்துவைக்கும்படி** அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டாவது, ஒவ்வொருவனும் இவ்வாறு பணம் சேர்ப்பதில் பங்குகொள்ள வேண்டும் என்னும் கட்டளை கோட்பாடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. செல்வந்தனும் ஏழையும், அடிமையும் விடுதலை பெற்றவனும் தங்களுடைய உடைமைகளிலிருந்து கொடுக்கும் செயலாகிய பலியைச் செய்ய வேண்டுமென்று கட்டளை பெற்றுள்ளார்கள்.

மேலும், இச்செயலானது ஒழுங்கு முறையோடு செய்யப்பட வேண்டும். வாரத்தின் முதல் நாள்தோறும் அவர்கள் **எதையாவது** தனியே **சேர்த்துவைக்க வேண்டும்.** இது மனம்போனபடி ஒழுங்கற்றோ, ஏதோ ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின் போதோ செய்யப்படுவதில்லை. மற்ற பணங்களிலிருந்து இது தனியே பிரித்து வைக்கப்பட்டு தேவை ஏற்படும்போது சிறப்பான காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படவேண்டும். மேலும் அவர்கள் கொடுப்பது அவரவருடைய அளவுக்குத் தக்கதாயிருக்க வேண்டும். தன்தன் வரவுக்குத் தக்கதாக என்னும் சொற்றொடரினாலே இது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு** என்று அப்போஸ்தலன் கூறியிருக்கிறார். இது கடைசி நேர ஏற்பாடாக இருக்கக்கூடாது என்று பவுல் வலியுறுத்தியுள்ளார். இருதயத்தில் ஆயத்தமற்றபடியும், அதனைப் பற்றி குறிப்பு எழுதி வைக்கப்படாமலும் கொடுக்கக் கூடிய ஆபத்தான நிலை ஏற்பட வாய்ப்பு இருந்ததை அவர் அறிந்திருந்தார்.

**16:3** கிறிஸ்தவ சபையில் சேர்க்கப்படுகிற பணத்தைக் குறித்து அக்கறையோடு செயல்பட வேண்டும் என்பதற்கான மிகவும் முக்கியமான நுண்ணறிவை மூன்று மற்றும் நான்கு ஆகிய வசனங்கள் தருகின்றன. பணத்தை ஒரு தனி மனிதரிடம் ஒப்படைக்கக் கூடாது என்பது முதலாவது கவனிக்கத்தக்கது. பவுலும்கூட அதனைத் தனியே பெற்றுக்கொள்ளக் கூடாது. இரண்டாவதாக, அந்தப் பணத்தை யார் எடுத்துச் செல்வது என்பது பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் எந்தத் தகுதியையும் எடுத்துரைக்காமல் அவருடைய தனிப்பட்ட அதிகாரத்தில் யாரையும் குறிப்பிடவில்லை. மாறாக அந்த முடிவை அவர் உள்ளூர் சபைக்கே விட்டுவிட்டார். அவர்கள் அவ்வாறு மனிதர்களைத் தெரிந்தெடுத்த பிறகு அவர்களைப் பவுல் **எருசலேமுக்கு அனுப்பவிருந்தார்.**

**16:4** அப்போஸ்தலன் எருசலேமுக்குப் போக வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டால் அதை அவர் நன்றென்று கருதினார், ஆனாலும் அந்தச் சபையில் சில சகோதரர் அவருடன் செல்லவேண்டும். **"அவர்கள் என்னுடனேகூட வரலாம்"** என்று அவர் கூறுவதைக் கவனிக்கவும். "நான் அவர்களோடு செல்லுவேன்" என்று அவர் சொல்லவில்லை. பவுல் அப்போஸ்தலன் என்னும் அதிகாரமுடையவர் என்பதற்கு இவ்வசனம் மறைமுகமான குறிப்பாக விளங்குகிறது. கொண்டு செல்லப்படும் பணத்தின் அளவைக் கருத்தில் கொண்டே அப்போஸ்தலன் அங்கு செல்வாரா மாட்டாரா என்பது தீர்மானிக்கப்படும் என்று சில விளக்கவுரையாளர்கள் இதற்குப் பொருள் கூறுகின்றனர். ஆனால் அப்படிப்பட்ட விதியை இத்தனை பெரிய அப்போஸ்தலன் கடைப்பிடித்திருப்பாரா என்பது நம்புவதற்கு அரிதானது.

### ஆ. அவருடைய தனிப்பட்ட முன்னேற்பாடுகள் (16:5-9)

**16:5** பவுல் தனது சொந்த முன்னேற்பாடுகளைக் குறித்து 5-9 ஆகிய வசனங்களில் விளக்குகிறார். இந்த மடலை அவர் எபேசுப் பட்டணத்திலிருந்து எழுதினார். அங்கிருந்து அவர் **மக்கெதோனியா நாட்டின் வழியாகச்** செல்லத் திட்டமிட்டார். பின்னர் அங்கிருந்து தென் திசையிலிருந்த கொரிந்துப் பட்டணத்திற்குப் பயணம் செய்வார்.

**16:6-8** பெரும்பாலும் மழைக்காலம் முடியும் வரை அவர் கொரிந்துப் பட்டணத்துப் பரிசுத்தவான்களுடன் தங்கியிருக்க முடிவு செய்தார். அதன் பின்னர் அவர் அங்கிருந்து எங்கு செல்ல வேண்டுமென்று விரும்புகிறாரோ அவ்விடத்திற்கு அவர்களால் வழியனுப்பப்படவேண்டும். மக்கெதோனியாவுக்குச் செல்லும் வழியில் அவர் அவர்களைச் சந்திப்பதற்கான திட்டம் இப்பொழுது அவருக்கு இல்லை. ஆனால் **கர்த்தர் உத்தரவு கொடுத்தால்,** அவர்களோடு சில காலம் தங்கியிருக்க அவர் விரும்பினார். மக்கெதோனியாவுக்குச் செல்வதற்குமுன் அவர் **பெந்தெகொஸ்தே பண்டிகைவரைக்கும் எபேசு பட்டணத்தில் தங்கியிருக்க** முடிவு செய்திருந்தார். இந்த எட்டாவது வசனத்தின் மூலமாகவே அவர் இந்த மடலை எபேசுவிலிருந்து எழுதினார் என்பது தெரியவருகிறது.

**16:9** அந்த நாட்களில் கிறிஸ்துவுக்காகத் தொண்டுபுரிய மிக அரிய வாய்ப்பு கிடைத்திருந்ததைப் பவுல் அறிந்திருந்தார். அதே சமயத்தில் அவருக்கு **விரோதஞ்செய்தவர்களும் அநேகர்** இருந்தார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். கிறிஸ்தவ ஊழியத்தைப் பற்றிய மாற்றமில்லா சித்திரத்தை இந்த வசனம் வரைந்து தருகிறது: ஒருபுறம், அறுவடைக்கு ஆயத்தமான முதிர்ந்த கதிர்களைக் கொண்ட நிலங்கள்; மறுபுறம், எண்ணிப்பார்ப்பதற்கும் அரிதான தடைகளை உண்டாக்கவும், பிரிவினை செய்யவும், எதிர்த்து நிற்கவும், உறங்காமல் தீவிரமாகச் செயல்புரியவும் கூடிய எதிரி!

### இ. இறுதி அறிவுரைகளும் வாழ்த்துகளும் (16:10-24)

**16:10** தீமோத்தேயுவைக் குறித்து அப்போஸ்தலன் இங்கு ஒரு சொல்லைக் கூட்டி வழங்குகிறார். கர்த்தருக்குத் திருப்பணியாற்றிய இவ்விளைஞன் கொரிந்துப் பட்டணத்திற்கு வந்தால் அவர்கள் அவரைப் **பயமில்லாமலிருக்கும்படி** ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் இயற்கையாகவே துணிவற்ற தன்மை உடையவர்; அந்த மனநிலை இன்னும் தீவிரம் அடையும்படி அவர்கள் எதையும் செய்யக் கூடாது என்பது இவ்வசனத்தின் பொருளாக இருக்கக்கூடும். மாறாக, கர்த்தருடைய ஊழியக்காரராக அவர்கள் தன்னை ஏற்றுக்கொள்ள மாட்டார்களோ என்ற **பயமில்லாமல்** அவர் அங்கு வரவேண்டும் என்பது இதன் பொருளாக இருக்கலாம். "**என்னைப் போல அவரும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறாரே**" என்று பவுல் கூறியதிலிருந்து பிந்தி சொன்ன பொருளே சரியானதாக இருக்கும் என்று தோன்றுகிறது.

**16:11** கிறிஸ்துவுக்காக விசுவாசமுள்ளவராக தீமோத்தேயு ஊழியம் செய்துவந்த காரணத்தால் **அவரை ஒருவரும் அற்பமாக எண்ணக்கூடாது.** அதற்கு மாறாக, அவர் பவுலினிடத்திற்குச் சரியான நேரத்திற்குச் செல்லும்படி, **சமாதானத்தோடே வழிவிட்டனுப்புவதற்கு** அவர்கள் மிகுந்த வாஞ்சையோடு முயற்சி செய்யவேண்டும். தீமோத்தேயுவுடனும் மற்ற **சகோதரருடனும்** மீண்டும் ஒன்று சேரவேண்டும் என்று அப்போஸ்தலன் எதிர்நோக்கியவராக இருந்தார்.

**16:12** இப்பொழுது **சகோதரனாகிய அப்பொல்லோவைக்** குறித்து பவுல் கூறுகிறார். **சகோதரருடன்** சேர்ந்து கொரிந்துப்பட்டணத்திற்குச் செல்லும்படி அவர் மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டார். ஆனால் அந்த நேரத்தில் அவர்களிடத்திற்குச் செல்வது தேவனுடைய சித்தம் என்று அப்பொல்லோவுக்குத் தோன்றவில்லை. ஆனால் பின்னர் வாய்ப்பு கிடைக்கும் போது அவர் கொரிந்துப் பட்டணத்துக்குச் செல்லுவதாகக் குறிப்பிட்டார். இந்த வசனம், கர்த்தருடைய ஊழியர்களுக்கிடையே வழக்கத்தில் இருந்த அன்பின் ஆவியை வெளிப்படுத்துகிறது; ஆகவே இவ்வசனம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. "பொறாமையற்ற அன்பு மற்றும் மரியாதை" ஆகியவற்றின் அழகான சித்திரம் என்று ஒருவர் இதனைப் பெயர்சூட்டி அழைக்கிறார். வேறு ஒருவரிடமிருந்து கட்டளையைப் பெற்று அதன் மூலமாக வழிநடத்தப்படாமல், கர்த்தராலே நேரடியாக வழிநடத்துதலை ஊழியர்கள் பெறும்படியான நிலை அப்பொழுது இருந்து வந்தது என்பதும் புலனாகிறது. அப்பொல்லோ என்ன செய்யவேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுலும்கூட சொல்லுவதற்குரிய அதிகாரத்தைப் பெறவில்லை. "இந்த அதிகாரத்தின் பக்கங்களை என்னுடைய வேதத்திலிருந்து நான் கிழித்துப் போடமாட்டேன். கர்த்தருடைய பணியைச் செய்தவற்கான தேவனுடைய வழிநடத்துதலை ஊழியர்கள் பெறுகிற முறையை நான் அறிந்திட இந்த அதிகாரமே உதவி செய்கிறது" என்று இப்பகுதிக்குத் திருவாளர் அயர்ன் சைடு விளக்கமளிக்கிறார்.[58]

**16:13,14** இப்பொழுது பவுல் இரத்தினச் சுருக்கமாய்ச் சில ஆலோசனைகளைத் தருகிறார். அவர்கள் தொடர்ந்து **விழித்திருக்க** வேண்டும், **விசுவாசத்திலே நிலைத்திருக்க** வேண்டும். மேலும் அவர்கள் **துணிவு மிக்கவர்களாகவும் திடன்கொண்டவர்களாகவும்** இருக்க வேண்டும். ஒருவேளை பவுல் மீண்டும் கள்ள போதகர்களால் எழக்கூடிய ஆபத்தை எண்ணிப் பார்த்தார் போலும். எல்லா நேரங்களிலும் பரிசுத்தவான்கள் எச்சரிக்கையுடையோராய் இருக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய ஆட்சிப்பரப்பில் ஓர் அங்குலத்தைக் கூட விட்டுக்கொடுக்கக் கூடாது. அவர்கள் மெய்யான உற்சாகத்தோடு நடந்துகொள்ள வேண்டும். இறுதியாக அவர்கள் கர்த்தருக்குள் **திடன்கொண்டவர்களாக** இருக்க வேண்டும். அவர்கள் செய்யும் செயல்கள் எல்லாவற்றிலும், **அன்பை** வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் தேவனுக்கும் பிறருக்கும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது இதன் பொருளாகும். தங்களையே அவர்கள் அர்ப்பணிக்க வேண்டும் என்பதும் இதன் பொருளாகும்.

**16:15** அடுத்ததாக, **ஸ்தேவானுடைய வீட்டாரைக்** குறித்த ஓர் அறிவுரை தொடர்கிறது. மன மகிழ்ச்சிக்குரிய இந்தக் கிறிஸ்தவர்கள் **அகாயா நாட்டிலே முதற்பலனானவர்கள்,** அதாவது, **அகாயாவில்** முதலாவது மனந்திரும்பியவர்கள். அவர்களுடைய மனமாற்றத்தின் சமயத்திலிருந்தே, அவர்கள் **பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்யும்படிக்குத்** (சேவைபுரியும்படிக்கு) **தங்களை ஒப்புவித்தவர்கள்** ஆவார்கள். இறை மக்களுக்குப் பணிவிடை செய்யும்படி அவர்கள் தங்களை ஒப்புவித்திருந்தார்கள். **ஸ்தேவானுடைய வீட்டார்** முன்னரே 1:16 -இல் குறிப்பிடப்பட்டுள்ளனர். பவுல் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். **ஸ்தேவானுடைய வீட்டார்** என்பது சிறு குழந்தைகளையும் உள்ளடக்கியது என்று பலர் வலியுறுத்திக் கூறி, குழந்தைகள் ஞானஸ்நானத்தை நியாயப்படுத்த முயற்சி செய்கிறார்கள். ஆனால், இந்த வசனத்தின் மூலம் அங்கு சிறு குழந்தைகள் இல்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது, ஏனெனில் அவர்கள் **பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்குத் தங்களை ஒப்புவித்திருக்கிறார்கள்** என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.

**16:16 இப்படிப்பட்டவர்களுக்கும், வேலை** செய்வதில் உதவி புரிகிறவர்களுக்கும், **பிரயாசப்படுகிறவர்களுக்கும்** கிறிஸ்தவர்கள் **கீழ்ப்படிய வேண்டுமென்று** அப்போஸ்தலன் இங்கு அறிவுரை வழங்குகிறார். புதிய ஏற்பாட்டின் பொதுவான படிப்பினையின்படி கிறிஸ்துவின் திருப்பணிக்காகத் தங்களைத் தனியே பிரித்து வைத்தவர்களிடத்தில் இறைமக்கள் யாவரும் அன்பு பாராட்டி மதிக்க வேண்டும் என்பதை நாம் கற்கிறோம். இதனை நாம் பெருமளவில் கடைப்பிடிப்போமானால், பிரிவினையையும் பொறாமையையும் பெரும்பாலும் தவிர்க்க முடியும்.

**16:17** ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு ஆகியோரின் வருகை பவுலின் இருதயத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்தது. கொரிந்துப் பட்டணத்தார் **செய்திருக்க வேண்டியதை** அவர்கள் நிறைவு செய்தார்கள். கொரிந்துப் பட்டணத்தார் அப்போஸ்தலனாகிய பவுலுக்குப் பாராட்ட வேண்டிய தயவைச் செய்யாமல் புறக்கணித்தார்கள். ஆனால் இவர்களோ அவருக்கு மிகுந்த தயை பாராட்டினார்கள் என்பது இதன் பொருளாக இருக்கக்கூடும். அல்லது தொலைவின் காரணமாக கொரிந்துப் பட்டணத்தார் செய்ய இயலாத வற்றை இந்த மனிதர்கள் நிறைவேற்றினார்கள் என்னும் அதனினும் சிறந்த அர்த்தத்தை இந்த வசனத்திற்குக் கொடுக்கலாம்.

**16:18** அவர்கள் கொரிந்துப் பட்டணத்திலிருந்து செய்திகளைப் பவுலினிடத்திற்குக் கொண்டு வந்தார்கள். பின்னர் அவர்கள் அப்போஸ்தலனிடத்திலிருந்து செய்திகளைத் தங்களுடைய சொந்த சபைக்கு ஏந்திச் சென்றார்கள். மீண்டும் அவர்களை அப்போஸ்தலனாகிய பவுல் உள்ளூர் சபையின் அன்போடுகூடிய மரியாதைக்கு ஒப்புக்கொடுத்தார்.

**16:19 ஆசியா நாட்டிலுள்ள சபைகள்** என்று குறிப்பிடப்பட்டிருப்பவை, (ஆசியாமைனர் என்று இன்று அழைக்கப்படும்) ஆசியா ஆட்சிப் பரப்பில் இருந்த சபைகளைக் குறிக்கின்றன. அந்த ஆட்சிப் பரப்பின் தலைநகரமாக எபேசு நகரம் விளங்கியது. எபேசுப் பட்டணத்தில் அப்பொழுது **ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்** வசித்து வந்தார்கள் என்பது வெளிப்படை. ஒரு காலத்தில் அவர்கள் கொரிந்துப் பட்டணத்தில் வசித்து வந்த காரணத்தால், அங்கிருந்த பரிசுத்தவான்களுக்கு அறிமுகமானவர்களாக இருந்தார்கள். **ஆக்கில்லா** கூடாரம் பின்னும் தொழிலைச் செய்து வந்ததால், பவுலோடு இணைந்து அத்தொழிலில் ஈடுபட்டான். அவர்களுடைய **வீட்டிலே கூடுகிற சபை** என்னும் சொற்றொடர், அந்த நாட்களில் சபை வாழ்க்கை எவ்வளவு எளிமையாயிருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. ஆராதனை, ஜெபம் மற்றும் ஐக்கியம் ஆகியவற்றிற்காகக் கிறிஸ்தவர்கள் அவர்களுடைய இல்லத்தில் கூடி வந்தார்கள். பின்னர் அவர்கள் வேலை செய்யும் இடங்களிலும் சந்தைவெளிகளிலும், உள்ளூர்ச் சிறைச்சாலையிலும், மேலும் எங்கெல்லாம் அவர்களால் முடிந்ததோ அங்கெல்லாம் நற்செய்தியைப் பிரசங்கித்து வந்தார்கள்.

**16:20** சபையில் இருந்த **சகோதரரெல்லாரும்** கொரிந்துப் பட்டணத்திலிருந்த உடன் விசுவாசிகளுக்குத் தங்களுடைய வாழ்த்தைத் தெரிவிக்க சேர்ந்துகொண்டார்கள். அப்போஸ்தலன் தனது மடலைப் படிக்கும் விசுவாசிகள் ஒருவரையொருவர் **பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்தும்படியாகக்** கட்டளையிடுகிறார். அந்த நாட்களில் முத்தமிடுவது, ஆண்களுக்கிடையிலும் பொதுவான வழக்கமாயிருந்தது. பரிசுத்த முத்தம் என்பது பாசாங்கான வாழ்த்துதலோ தூய்மையற்ற வாழ்த்துதலோ அல்ல. ஒழுக்கக் கேட்டினால் அலைக்கழிக்கப்பட்டுள்ள நம்முடைய சமுதாயத்தில், நெறிதவறிய நிலை மிகுந்து கிடக்கும்

இந்தக் காலத்தில், வாழ்த்தும் பொருட்டு முத்தத்தைப் பரவலாக எங்கும் பயன்படுத்துவார்கள் என்றால், ஆபத்து நிறைந்த சோதனைகளை உண்டுபண்ணி ஒழுக்கக்கேடுகளைப் பெரிதளவில் ஏற்படுத்திவிடும். அதன் காரணமாக, முத்தம் தருவதற்குப் பதிலாக ஆங்கிலம் பேசுவோர்க்கிடையே கைகுலுக்குதல் வாழ்த்துதல் அறிவிக்கும் செயலாக விளங்குகிறது. (தமிழ் மக்களிடையே கை கூப்பி வாழ்த்துதல் தெரிவிக்கும் பழக்கம் இருந்து வருகிறது.) வெவ்வேறு நாகரீக வழக்கங்களின் நிமித்தம், வேதத்தில் சொல்லப்பட்டுள்ள வார்த்தைகளைக் கண்டிப்பான முறையில் செயல்படுத்துவதிலிருந்து நாம் பொதுவாகத் தவறக்கூடாது. ஆனாலும் இதுபோன்ற செயல்களில், எழுத்தின் படியாகக் கீழ்ப்படிவது பாவத்திற்கு வழிவகுக்குமானால், அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டின் பண்பாட்டின்படி அது தூய்மையற்றதாகக் காணப்படுமானால் அதைத் தவிர்ப்பது நியாயமானதேயாகும். அதுபோலவே முத்தம் கொடுப்பதற்குப் பதிலாகக் கைகுலுக்குதலும் நியாயமானதே.

**16:21** தன் உடன் ஊழியர்களில் ஒருவரிடம் தன்னுடைய மடல்களை எழுதச்சொல்லி எழுதுவது பவுல் வழக்கமாகச் செய்துவந்த முறையாகும். ஆயினும், இறுதியில் அவர் தனது எழுதுகோலை எடுத்து, தனது சொந்தக் கையெழுத்தாய்ச் சில சொற்களை எழுதுவார். அதன் பிறகு தன்னுடைய தனிப்பண்பு வாய்ந்த **வாழ்த்துலைத்** தெரிவிப்பார். அதனையே அவர் இங்கு செய்கிறார்.

**16:22** கிரேக்கச் சொல் anathema என்பதே இங்கு **சபிக்கப்பட்டவன்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினிடத்தில் அன்புகூராதவன்** ஏற்கனவே ஆக்கினைத்தீர்ப்பு அடைந்தாயிற்று. ஆனால் அவர்களுடைய அழிவு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது வெளிப்படும். கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவனே கிறிஸ்தவன் ஆவான். இப்புவியில் எவரொருவரையும் அல்லது ஏதொன்றையும்விட அவன் கர்த்தராகிய இயேசு வினிடத்தில் அதிகமாக அன்புகூருகிறான். இறைமகனிடத்தில் அன்புகூரத் தவறுகிறவன், இறைவனுக்கு எதிராகவே குற்றமிழைக்கிறான். திருவாளர் ரைல் விளக்குகிறார்:

> கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராதவன் தப்புவதற்குப் பரிசுத்த பவுல் ஏதொரு வழியையும் விட்டுவைக்கவில்லை. அவர் அதிலிருந்து மீள்வதற்கான ஒரு வழியையோ சாக்குப்போக்குச் சொல்வதற்கான ஒரு வாய்ப்பையோ அளிக்கவில்லை. ஒரு மனிதன் அறிவில் மூளையைச் சார்ந்த அறிவு குறைவுடையவனாக இருந்தபோதிலும் இரட்சிக்கப்படக்கூடும். அவன் பேதுருவைப்போல உற்சாகத்தில் குன்றிப் போகலாம், மனிதர்களைக் கண்டு அச்சமடையலாம். தாவீதைப் போன்று அவன் பயங்கரமாக வீழ்ச்சியடைந்தாலும், மீண்டும் உயர எழுவான். ஆனால் ஒருவன் கிறிஸ்துவினிடத்தில் அன்புகூரவில்லையென்றால், அவன் வாழ்வின் சரியான வழியில் இல்லையென்பது பொருளாகும். அவன்மீது சாபம் நிலைநிற்கும். அவன் அழிவை நோக்கிச் செல்லும் விசாலமான பாதையில் செல்கிறவனாக இருக்கிறான்.[59]

**கர்த்தர் வருகிறார்**! (கர்த்தரே வாரும்!) தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்திவந்த அராமியச் சொல்லாகிய *மாரநாதா* என்னும் சொல்லே இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "மாரன் ஆதா" என்று பிரித்துக் கூறினால் அது "நம்முடைய கர்த்தர் வந்திருக்கிறார்" என்றும், "மாரனா தா" என்று பிரித்துக் கூறினால் நமது "கர்த்தர் வருகிறார்" என்றும் பொருள்படும்.

**16:23** பவுலுக்கு மிகவும் பிடித்தமான பொருள் **கிருபையைப்** பற்றியதே ஆகும். அவர் தனது கடிதங்களைத் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் இந்த உன்னதமான குறிப்பைப் பயன்படுத்துவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். அவர் இந்த மடலை எழுதினார் என்பதற்கான மெய்யான அடையாளங்களில் இதுவும் ஒன்று.

**16:24** இந்த மடல் முழுவதும், கிறிஸ்துவின் உண்மையுள்ள அப்போஸ்தலனுடைய இருதயத்துடிப்பை நாம் கேட்டுக்கொண்டிருந்தோம். தனது பிள்ளைகள் பக்திவிருத்தி அடைய வேண்டும், புத்தி புகட்டப்பட வேண்டும், கண்டித்து உணர்த்தப்பட வேண்டும் என்பதற்காக அவர் கொண்டிருந்த ஆர்வத்தைக் குறித்து நாம் கேட்டுக் கொண்டிருந்தோம். அவர்களிடத்தில் அவர் **அன்பு** கொண்டிருந்தார் என்பதில் ஐயமில்லை. அவர்கள் இந்தக் கடைசிச் சொற்களைப் படிக்கும்போது, கள்ள போதகர்கள் சபைக்குள்ளாக வருவதற்கு அனுமதித்ததன் காரணமாகவும், பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தை எதிர்த்து கேள்வி எழுப்பியதற்காகவும், அவரிடத்தில் அவர்கள் முதலில் கொண்டிருந்த அன்பைவிட்டு விலகியதன் நிமித்தமும் பெரும்பாலும் அவர்கள் வெட்கப்பட்டிருப்பார்கள்.

## அடிக்குறிப்புகள்

1 (1:18) Albert Barnes, *Notes on the New Testament, 1 Corinthians*, p.14.

2 (1:19) S. Lewis Johnson, *"First Corinthians"* The Wycliffe Bible Commentary, p. 1232.

3 (1:27) Erich Saucer, *The Dawn of World Redemption,* p. 91.

4 (1:30) Robert Traill, *The Works of Robert Traill,* Vol. 2, Edinburgh: Banner of Truth Trust. reprinted 1975, p. 234.

5 (1:30) Arthur T. Pierson, *The Ministry of Keswick,* First Series, p. 104.

6 (2:14) Vance Havner, further documentation unavailable.

7 (3:9) Charles R. Erdman, *The First Epistle of Paul to the Corinthians,* p. 40.

8 (3:15) E. W. Rogers, *Concerning the Future,* p. 77.

9 (3:18) Frederic L. Godet, *Commentary on First Corinthians, p.* 195.

10 (4:8) H. P. Barker, *Coming Twice,* p. 80

11 (5:2) Erdman, *First Corinthians,* p. 55.

12 (6:9) அரசிற்குள்ளாக "நுழைவதற்கும்" அரசைச் "சுதந்தரித்துக் கொள்வதற்கும்" வேறு பாடு உண்டென்று சிலர் கருதுகிறார்கள். விசுவாசி ஒருவன் தன்னுடைய வாழ்க்கையில் கருத்துடன் ஒரு பாவத்தை வென்றிடாமல் போனாலும் அவன் இரட்சிக்கப்பட்டிருக்கக்கூடும். அவன் இறையரசிற்குள் "நுழைவான்". ஆனால் அவன் அங்கே எதையும் சுதந்தரிக்கமாட்டான் (பரிசுப் பொருள்). ஆனாலும் இந்த வசனம் துன்மார்க்கரை அதாவது புதிய பிறப்பை அடையாதவர்களைக் குறித்தே பேசுகிறது.

13(6:13) Erdman, *First Corinthians,* p.63.

14(6:17) A. T. Pierson, *Knowing the Scriptures,* p. 147.

15(6:20) Edward Herbert Bates. *Spiritual Thoughts from the Scriptures of Truth*, p. 137.

16(6:20) பழைமைப் பிரதி (NU) ஆவியைக் குறிப்பிடவில்லை.

17(7:5) Larry Christenson, The Christian Family, p. 24.

18(7:14) W. E. Vine, First Corinthians, p. 97.

19(7:15) J. M. Davies, further documentation unavailable.

20 (7:17) W. E. Vine, The Divine Plan of Missions, p. 63.

21 (7:19) William Kelly, Notes on the First Epistle to the Corinthians, p. 123.

22 (7:29) Harry A. Ironside, first Epistle to the Corinthians, p. 223.

23 (7:29) Vine, First Corinthians, p. 104.

24 (7:33) Ibid., p. 105.

25 (7:36) இருந்தபோதிலும், **கன்னிகைப் பருவத்தைக்** குறிக்கும் தரமான கிரேக்கச் சொல், Parth-enia என்னும் பண்புப் பெயர்ச்சொல்லாகும். இப் பொருளைக் குறிப்பிட வேண்டுமென்று பவுல் எண்ணியிருந்தால், ஏன் அவர் மத்தேயு 1:23 –இல் "கன்னி" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சாதாரண சொல்லைப் பயன்படுத்தினார் என்பது புரியவில்லை.

26 (7:38) தன்னையே திருமணத்தில் ஈடுபடுத்திக் கொள்கிறவன் என்னும் விளக்கத்தில் **தன்னையே** என்னும் சொல் சேர்க்கப்பட்டுள்ளது. மூல கிரேக்கப் பிரதியில் அச்சொல் இல்லை.

27 (8:12) Barnes, *1 Corinthians,* p.147.

29 (9:20) பழைமைப் பிரதியில் (NU) விளக்கிக் கூறும் சொற்கள் "நான் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாதவனாயிருந்தும்" சேர்க்கப்பட்டுள்ளன. (தமிழில் இச்சொற்றொடர் இடம் பெறவில்லை.)

30 (9:20) William Arnot, *The Church in the House,* pp. 467, 468.

31 (9:21) Charles C. Ryrie, *The Grace Of God*, p. 83.

32 (9:22) பழைமைப் பிரதியில் (NU) "போல" என்னும் சொல் இடம்பெறவில்லை. ஆனால் அச்

சொல் பவுல் கூறும் வாதத்திற்கு மிகவும் முக்கிய மானதாகும். அவர் **உண்மையில்** பலவீனராக மாறவில்லை.

33 (9:27) KJV மொழிபெயர்ப்பில் "ஆகாத வனாய்" என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருப் பதே பிரச்சினைக்குக் காரணம். a-dokimos என்னும் சொல் "ஏற்றுக்கொள்ளப்படவில்லை" என்னும் எளிமையான பொருளையே தருகிறது. விளையாட்டு அரங்கில் "தகுதி பெறவில்லை" என்னும் சொல் இந்தப் பொருளை மிகச் சரியா கத் தெரிவிக்கிறது.

34 (10:5) Godet, *First Corinthians*, pp. 59, 60.

35 (10:22) Kelly, *First Corinthians*, p. 166.

36 (10:28) பழைமைப் பிரதியில் 10:26 –இல் காணப்படும் வாசகம் மீண்டும் சொல்லப்பட்டிருப் பது விடுபட்டுள்ளது.

37 (11:5) 4 மற்றும் 5 ஆகிய வசனங்களின் மூலமாக, ஜெபம்பண்ணுதல் தீர்க்கதரிசனம் சொல்லுதல் ஆகியவற்றோடு தொடர்புடைய நேரங்களில் பெண் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது. அந்த நேரங்களில் ஆண் முக்காடிட்டுக் கொள் ளாமல் இருக்க வேண்டும். பெண்ணுக்கு எதை எப்போது செய்ய வேண்டும் என்பதை அறிவதில் சிரமம் ஏற்படுமாயின் ஆண் என்ன செய்கிறான் என்பதைக் கண்டு அதற்கு மாறாகச் செயல்பட வேண்டும்.

38 (11:7) *Vine Expository Dictionary*, under glory, p. 154.

39 (11:18) F. B. Hole, *"The Administration of the Mystery"* (booklet), p. 5.

40 (11:19) இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல் haireseis ஆனால் இங்கு அச் சொல் **கள்ளபோதகம்** என்னும் பொருளைத் தரு கிறதில்லை. தீத்து 3:10 –இல் இதற்கான விளக் கத்தைக் காண்க.

41 (11:19) **ஒழுக்கநெறியின்** இன்றியமை யாத தன்மையைக் குறிப்பிட opgeilo என்னும் கிரேக்கச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுல் இங்கு **தருக்க ரீதியான** இன்றியமையாமை யைக் குறிக்கும் dei என்னும் சொல்லையே பயன் படுத்தியிருக்கிறார்.

42 (11:26) Godet, *First Corinthians,* p. 163.

43 (12: அறிமுகம்) Glossa (tongue) என்னும் சொல் "மொழி" என்னும் பொருளைத் தரக்கூடிய சாதாரண கிரேக்கச் சொல். அதுபோலவே ஆங் கிலத்தில் எப்பொழுதாவது மொழியைக் குறிக்க அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (எ.கா) the French tongue – பிரெஞ்சு மொழி.

44 (12:10) வேத வசனங்களிலுள்ள சொற் களை மாற்றியமைப்பது அல்லது நிச்சயமாய் நடை பெறாத உண்மையான தவறுகளை மாற்றியமைப் பது என்பதே தீர்க்கதரிசனம் என்று சிலர் இன் றைய நாட்களில் கருதுகிறார்கள். ஜேம்ஸ் அரசன் ஆங்கில மொழியைப் பின்பற்றிய கருத்துகளா கவே இவை இருக்கின்றன. இன்றைய நடைமுறை யில் உள்ள மொழியில் தேவனால் அறிவிக்க முடி யாது என்பதுபோல அவ்விளக்கம் அமைந்திருக் கிறது.

45 (12:13) *en* என்னும் கிரேக்கச்சொல் **இல்**, **மூலமாய்** அல்லது **ஆல்** என்று மொழிபெயர்க்கப் படும். எல்லாச் சொற்களும் மிகச் சரியான வையே. (அதனதன் பின்னணியின் தொடர்பில் இவ்வாறு மொழிபெயர்க்கப்படுகின்றன.) ஆனால் "இல்" என்னும் பொருளையே நாம் பயன்படுத்தி யிருக்கிறோம். இது **எழுத்தின்படி** மிக நெருக்க மான en என்னும் கிரேக்கச் சொல்லோடு தொடர் புடையதாயிருக்கிறது.

46 (12:29,30) இந்தக் கேள்விகள் me என் னும் கிரேக்கச் சொல்லுடன் தொடங்குகின்றன. "நிச்சயமாக எல்லோரும் அந்நிய பாஷையிலே பேசு வதில்லை" என்னும் பொழிப்புரையாக அமையக் கூடியவண்ணம் அக்கேள்வி அமைந்திருக்கிறது. மற்ற கேள்விகளையும் இதுபோலவே பொழிப் புரையாக மாற்றியமைக்கலாம்.

47(13:11) *The word is nepios* (cf. Heb. 5:13).

48(14:5) Kelly, *First Corinthians,* p. 229.

49(14:13) "பேசுகிறவன்" மற்றும் "அர்த்தத் தைச் சொல்லக்கடவன்" ஆகிய இரண்டு வினைச் சொற்களுக்கும் வெவ்வேறு எழுவாய்

இருப்பதற் கான குறிப்பை மூலமொழியில் காண முடியாது.

50 (14:19) "என் கருத்தோடே" என்னும் சொற்றொடரை "என்னைப் பிறர் புரிந்துகொள் ளும்படி" என்று எழுத்தின்படி எழுதவேண்டும். "என்னை" என்னும் சொல் எழுவாயால் குறிப் பிடப்படும் செயப் படுபொருளாகிய செயல்பாட் டைக் குறிக்கிறது. இச்சொற்றொடர் எழுவா யோடு தொடர்புடைய செயல்பாட்டையும் குறிக் கக்கூடும். வேத பகுதியின் பின்னணி இதனுடைய சரியான பொருளை முடிவு செய்யும்.

51(14:19) Charles Hodge, *First Corinthians*, p. 292.

52 (14:35) andres என்னும் கிரேக்கச்சொல் புருஷர், ஆண்கள், மக்கள் இனம் என்னும் பொருட்களை உடைய சொல்லாகும்.

53(15:45) Erdman, *First Corinthians*, p. 148.

54(15:47) பழைமைப் பிரதியில் (NU) "கர்த்த ராகிய" என்ற சொல் விடப்பட்டுள்ளது.

55 (15:49) பெரும்பான்மைக் கிரேக்கப் பிரதி யில் "நாம் அணிந்துகொள்ள வேண்டும்" என் னும் கட்டளையாக இவ்வசனம் காணப்படுகிறது.

56(15:54) C. H. Mackintosh, *The Mackintosh Treasury: Miscellaneous Writings* by C. H. Mackintosh, p. 125.

57(15:56) Godet, *First Corinthians,* p. 446.

58(16:12) Ironside, *First Corinthians*, p. 542.

59(16:22) J. C. Ryle, *Holiness,* p. 235.

## Bibliography


Barnes, Albert. *Notes on the New Testament.* (Vol V, 1 Corinthians). London: Blackie & Son, n.d.

Bates, Edward Herbert. *Spiritual Thoughts from the Scriptures of Truth*. London: Pickering & Inglis, n.d.

Davies, J. M. *The Epistles to the Corinthians*. Bombay: Gospel Literature Service, 1975.

Erdman, Charles R. *The First Epistle of Paul to the Corinthians*, Philadelphia: Westminster Press, 1928.

Godet, F. L. *The First Epistle to the Corinthians*, Grand Rapids: Zondervan Publishing House, 1971.

Grant, F. W. "*1 Corinthians," The Numerical Bible*. *Vol.6, Acts to 2 Corinthians.* New York: Loizeaux Bros., 1901.

Hodge, Charles. *An Exposition on the First Epistle to the Corinthians.* New York: George H. Doran Company, 1857.

Ironside, H. A. *Addresses on the First Epistle to the Corinthians,* New York: Loizeauz Brothers, 1955.

Johnson, S. Lewis. *"First Corinthians," in the Wycliffe Bible Commentary*. Chicago: Moody Press, 1962.

Kelly, William. *Notes on the First Epistle to the Corinthians*. London: G. Morrish, 1878.

Luck. G. Coleman. *First Corinthians.* Chicago: Moody Press, 1958.

Morgan, G. Campbell. *The Corinthian Letters of Paul: An Exposition of I and II Corinthians.* New York: Fleming H. Revell Company, 1946.

Morris, Leon. *The First Epistle of Paul to the Corinthians.* Grand Rapids: Wm. B. Erdmans Publishing Company, 1966.

Robertson, Archibald and Alfred Plummer. *A Critical and Exegetical Commentary on the First Epistle of St. Paul to the Corinthians*. Edinburgh: T. & T. Clark, 1911.

Vine, W. E. *First Corinthians.* London: Oliphants Ltd., 1951.

## தியானாள் கோவில், தியானாள் தேவதை (அப். 19:23-30)



Courtesy: www.wikimedia.org



Courtesy: www.vebidoo.de

அப்போஸ்தலனாகிய பவுல்

# கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபம்

## முன்னுரை

"பவுலுக்கு அருளப்பட்ட வெளிப்பாட்டின் ஒளி ஊடுருவிச் செல்லும் நிழற்படமானது (2 கொரிந்தியர் மடலில்) அனைத்துப் புனித இலக்கியங்களிலும் ஒப்பற்றதாக எனக்குக் காட்சியளிக்கிறது."

– சேட்லர்

### 1. வேதநூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

1 கொரிந்தியர் நூல் மிகப் பரவலாகப் படிக்கப் பட்டும், அதனின்று மிகப் பரவலாகப் பேசப்பட்டும் வருகின்ற வேளையில், 2 கொரிந்தியர் நூல் பிர சங்கிகளால் பெரும்பாலும் புறக்கணிக்கப்படு கிறது. ஆயினும் இது மிக முக்கியமான மடலாகத் திகழ்கிறது. இந்நூல் மொழிபெயர்த்துக் கூறுவதற் குக் கடினமானதாக இருப்பதும், இது எழுதப்பட்ட விதம் உட்பொருள் கொண்டதாக இருப்பதும் இவ் வாறு புறக்கணிக்கப்படுவதன் காரணங்களாகும். இந்நூலின் KJV மற்றும் NKJV மொழி பெயர்ப்பு களில் சாய்ந்த எழுத்துகள் கொண்ட மிகுதியான சொற்கள், இந்த உணர்ச்சிமிக்க மடலைப் புரிந்து கொள்ளும்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பல சொற்களைச் சேர்க்க வேண்டிய தேவை ஏற் பட்டது என்பதை வெளிப்படுத்துகின்றன.

இந்த மடல் மிகவும் கடினமானது. நிதானமாய்க் கூறினால்கூட, பல வசனங்களின் பொருள் தெளி வற்றதாயிருக்கிறது. இதற்குப் பல விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன: (1) பவுல் மிகுதியான அள வில் வஞ்சப்புகழ்ச்சி அணியைப் பயன்படுத்து கிறார். ஆனால் சில வேளைகளில் அவர் அதனை எங்கு பயன்படுத்துகிறார் என்பதை அறிவது அரிது. (2) சில பகுதிகளை நாம் முழுவதுமாக அறிந்துகொள்ள, பவுல் மேற்கொண்ட பயணங் களின் விவரங்கள், அவருடைய உடன் ஊழியர் களின் பயண விவரங்கள் மற்றும் அவர் எழுதிய மடல்களின் விவரங்கள் ஆகியவற்றை மிகச்சரி யான முறையில் அறிந்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. (3) இம்மடல் நெருக்கமானவர் களுக்குத் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டது; இதனுடைய மொழி இருதயத்திலிருந்து பிறந்தது. இவற்றைப் புரிந்துகொள்வது எப்பொழுதும் எளிமையானதன்று.

ஆனால் இந்தப் பிரச்சினைகள் நம்மை ஊக்க மிழக்கச் செய்யக்கூடாது. ஆயினும் இம்மடலின் அடிப்படைச் சத்தியங்கள் அவற்றால் பாதிக்கப் படவில்லையென்பது நமது நற்பேறே ஆகும். அவை விவரங்களை மட்டுமே தெளிவற்றவை யாக மாற்றியிருக்கின்றன.

இறுதியாக, இந்நூல் மிகுதியாக நேசிக்கப்படு கிற மடலாகவும், மிகுதியான அளவில் எடுத்தா ளப்படுகிற நூலாகவும் திகழ்கிறது. இதனைப் படித்த பிறகு அதற்கான காரணத்தை அறிவீர்கள்.

### 2. நூலாசிரியர்

2 கொரிந்தியர் நூலில் அங்குமிங்குமாகச் சில பகுதிகள் "இடைச்செருகலாகச்" சேர்க்கப்பட் டுள்ளன என்று சிலர் கருதினாலும், இதனைப் பவுல் எழுதினார் என்பதை ஒருவரும் ஒட்டு மொத்தமாக மறுத்துரைக்கவில்லை. இருந்த போதிலும் இம்மடலின் ஒருமைப்பாடு மிகத் தெளி வாகக் காணப்படுகிறது (ஒரு செய்தியிலிருந்து வேறொரு செய்தியை நோக்கித் தாவிச்செல்லும் பவுலின் இயல்பை இம்மடல் கொண்டிருக்கிறது.)

2 கொரிந்தியர் பவுல் இயற்றிய நூல் என்பதற் கான புறச்சான்றுகள் மிகவும் வலிமை படைத் தவை. ஆனால் 1 கொரிந்தியரைக் காட்டிலும் இவை சற்று பிந்தின காலத்தைச் சேர்ந்தவை. ரோமாபுரி கிளமெண்ட் மேற்கோள் எடுத்துக் கூறா தது நமக்கு வியப்பைத் தருகிறது. ஆனால் பாலி கார்ப், ஐரேனியஸ், அலெக்சாண்ட்ரியா கிளமெண்ட், தெர்தூலியன், சைப்ரியன் ஆகியோர் இந்நூலி லிருந்து எடுத்து எழுதியுள்ளனர். பவுல் எழுதிய பத்து மடல்களில் இது மூன்றாவது என்று மார்சியன் ஒப்புக்கொள்கிறார். முரடோரியன் வேதநூல் தொகுப்பிலும் இது இடம்பெற்றுள்ளது. கி. பி. 175 - ஆம் ஆண்டிற்குப் பிறகு 2 கொரிந்தியர் நூலுக்கு மிக அதிகமான சான்றுகள் கிடைத்துள்ளன.

இந்த நூலை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினார் என்பதற்கான அகச்சான்றுகள் பெருமளவில் உள்ளன. பிலேமோனுக்கு எழுதிய மடல் நீங்கலாகக் காணும்போது, இம்மடலே மிகவும் தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டதும், குறைந்த உபதேசங்கள் கொண்டதுமான நூலாகும். அப்போஸ்தலனுடைய சொந்த வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்த நுட்பமான விவரங்கள், அவருடைய தனிச்சிறப்பு வாய்ந்த மொழிநடை, மற்றும் 1 கொரிந்தியர், கலாத்தியர், ரோமர் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் ஆகியவற்றுடன் கொண்ட நெருக்கமான தொடர்பு இவையாவும் பவுலே இந்த மடலை எழுதினார் என்னும் வழிவழியாய் நம்பப்படுகிற கருத்தை ஆதரிக்கின்றன. கொரிந்தியருக்கு எழுதப்பட்ட முதலாம் மடல் பவுலால் எழுதப்பட்டது என்பதை உலகம் முழுவதும் ஒப்புக்கொண்டிருக்கிறது. அம்மடலின் ஆசிரியரும் சபை மக்களுமே இந்த மடலுக்கும் உரியவர்கள் என்பது மிகத்தெளிவாய் இம்மடலில் விளங்குகிறது.

### 3. எழுதப்பட்ட காலம்

மக்கெதோனியாவிலிருந்து எழுதப்பட்ட 2 கொரிந்தியர் நூல், பெரும்பாலும் 1 கொரிந்தியர் எழுதப்பட்டு ஓராண்டிற்குள் எழுதப்பட்டிருக்கும் (முந்தின மொழிபெயர்ப்புகளின் அடிக்குறிப்பில் இந்நூல் பிலிப்பி பட்டணத்திலிருந்து எழுதப்பட்டது என்னும் குறிப்பைக் காணலாம்). கி. பி. 57 - ஆம் ஆண்டு என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் பலர் 55 அல்லது 56 என்றும் கூறுகிறார்கள். கி. பி. 53 என்று ஹார்னக் கருதுகிறார்.

### 4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

2 கொரிந்தியர் நூலை நாம் மிக அதிகமாக விரும்புவதற்கான ஒரு காரணம் இந்நூல் அந்த அளவிற்குத் தனிப்பட்ட உறவின் அடிப்படையில் எழுதப்பட்ட நூலாகும். மற்ற நூல்கள் எல்லாவற்றைக் காட்டிலும் இங்கு அப்போஸ்தலனாகிய பவுலின் இருதயத்திற்கு மிக நெருக்கமாக நாம் வருவதை உணர்கிறோம். கர்த்தருடைய திருப்பணியில் அவர் கொண்டிருந்த பெரிய ஆர்வத்தை இங்கே நம்மால் அறியமுடிகிறது. நம்முடைய வாழ்க்கையில் நாம் பெற்ற மிகப்பெரிய அழைப்பின் மேன்மையைச் சற்று பற்றிக்கொள்ள நாம் ஏவப்படுகிறோம். அவர் அடைந்த இன்னல்களின் பட்டியலை வியப்புமிகு அமைதியோடு நாம் வாசிக்கிறோம். பழி பாவங்களுக்கு அஞ்சாத பகைஞர் எழுப்பிய கேள்விகளுக்குச் சீற்றத்துடன் பாய்ந்து வரும் சூடான நீரூற்றென அவருடைய விடைகளை இங்கு காணலாம். சுருங்கக் கூறின், பவுல் தனது ஆத்துமாவின் இரகசியங்கள் அனைத்தையும் இங்கு வெளிக்கொணர்வதாகவே தோன்றுகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் 18 - ஆவது அதிகாரத்தில் பவுல் கொரிந்துப் பட்டணத்துக்கு முதல் முறையாகச் சென்ற நிகழ்ச்சி விவரிக்கப்பட்டிருக்கிறது. அது அவருடைய இரண்டாவது திருப்பணிப் பயணத்தின் போது நிகழ்ந்தது. அத்தேனே பட்டணத்தில் மார்ஸ் மேடையில் நின்று அவர் ஆற்றிய மறக்க முடியாத பிரசங்கத்தைத் தொடர்ந்து சிறிது நாட்களுக்குள்ளாக இந்த நிகழ்ச்சி நடந்தது.

கொரிந்துப் பட்டணத்தில் ஆக்கில்லா பிரிஸ்கில்லாளுடன் சேர்ந்து பவுல் கூடாரம் செய்யும் தொழிலைச் செய்தார்; மேலும் ஜெப ஆலயத்தில் அவர் நற்செய்தியைப் பிரசங்கித்தார். சீலாவும் தீமோத்தேயுவும் மக்கெதோனியாவிலிருந்து வந்து நற்பணிபுரிய அவருடன் சேர்ந்துகொண்டார்கள். அந்த ஊழியம் பதினெட்டு மாதங்கள் தொடர்ந்தது (அப். 18:11).

யூதர்களில் பலர் அவருடைய பிரசங்கத்தைப் புறக்கணித்த காரணத்தினால், அவர் புறவினத்தாரிடமாய்த் திரும்பினார். யூதர்களிலும் புறவினத்தாரிலும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டபோது, யூதமதத் தலைவர்கள் பவுலைக் கல்லியோன் என்னும் அதிபதிக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். ஆனால் அவன் அந்த வழக்கு தன்னுடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று சொல்லி, வழக்கை நீதிமன்றத்திலிருந்து தள்ளுபடி செய்தான்.

அந்த விசாரணை முடிவடைந்த பிறகு, பவுல் கொரிந்துப் பட்டணத்தில் வெகு நாட்கள் தங்கியிருந்தார். அதன் பிறகு அவர் கெங்கிரேயா, எபேசு ஆகிய இடங்களுக்கு வெகுதொலைவு பயணம் செய்தார்.

அவருடைய மூன்றாவது திருப்பணிப் பயணத்தில், அவர் எபேசுவுக்கு வந்து அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார். அந்த நாட்களில் கொரிந்துப் பட்டணத்திலிருந்து சில சகோதரர்கள் ஒரு குழுவாக அவரிடத்திற்குச் சென்று பல விசயங்களில் அவருடைய ஆலோசனைகளைக் கேட்டார்கள். அந்த வினாக்களுக்கு விடையாகவே 1 கொரிந்தியர் மடல் எழுதப்பட்டது.

அவர் எழுதிய மடலுக்குக் கொரிந்தியர் என்ன பதில் செய்தார்கள் என்று அறிய, அதிலும்

முக்கியமாக, பாவம் செய்த அங்கத்தினருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை அறிய அப்போஸ்தலன் மிகுந்த ஆவலுடையவராக இருந்தார். ஆகவே தீத்துவைக் காணவேண்டும் என்னும் நம்பிக்கையுடன் எபேசுவிலிருந்து துரோவா பட்டணத்துக்குச் சென்றார். ஆயினும், தீத்துவை அவர் அங்கு காணாததால், கடல் வழியாக மக்கெதோனியாவுக்குச் சென்றார். அங்கே தீத்து சில நல்ல செய்திகளையும் சில கெட்ட செய்திகளையும் கொண்டு வந்தார். பாவஞ் செய்துவந்த விசுவாசியின்மேல் கொரிந்துப் பட்டணத்துப் பரிசுத்தவான்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தார்கள் - அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதால், அந்த மனிதன் ஆவிக்குரிய வகையில் சீர்பொருந்தினான். அதுவே நல்ல செய்தி. ஆனால் அங்கிருந்த பரிசுத்தவான்கள், எருசலேமில் தேவையுள்ளவர்களாக இருந்த விசுவாசிகளுக்குப் பணம் அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருந்தபோதிலும், எந்தப் பொருளுதவியும் செய்யவில்லை. அது நல்ல செய்தி அல்லவே. இறுதியாக, கள்ள போதகர்கள் மிகத் தீவிரமாகக் கொரிந்துப் பட்டணத்தில் செயல்பட்டார்கள் என்றும், அவர்கள் அப்போஸ்தலனுடைய ஊழியத்தைக் குறைகூறவும், கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்னும் நிலையில் அவர் பெற்றிருந்த அதிகாரத்தை எதிர்த்துக் கேள்வி கேட்கவும் செய்தார்கள் என்றும் தீத்துவின் மூலமாக அவர் அறிந்தார். இதுவே கெட்ட செய்தி.

இந்தச் சூழ்நிலைகள், கொரிந்தியருக்கு இரண்டாவது மடலைப் பவுல் எழுதுவதற்குக் காரணங்களாயின. இம்மடலை அவர் மக்கெதோனியாவிலிருந்து எழுதினார்.

முதல் மடலில், பவுலை நாம் ஒரு போதகராகக் காண்கிறோம். ஆனால் இரண்டாவது மடலில் அவர் மேய்ப்பருடைய பங்கை நிறைவேற்றுகிறார். நீங்கள் கவனமாகக் கேட்பீர்களாகில், இறைமக்களிடத்தில் உண்மையாக அன்பு பாராட்டியவரும், அவர்களுடைய நலனுக்காகத் தன் னையே ஒப்புவித்தவருமாகிய ஒருவருடைய இதயத்துடிப்பைக் கேட்கமுடியும்.

ஆகவே நாம் இந்த மிகப்பெரிய முயற்சியில் இறங்குவோம். "மூச்சென வெளிப்படும் எண்ணங்களையும், சுடர் வீசும் சொற்களையும்" படிக்கும் வேளையில், தேவனுடைய தூய ஆவியானவர் அவற்றை ஒளிவீசி நமக்கு விளங்கும்படி மன்றாடுவோமாக.

## பொருட்சுருக்கம்

**1. திருப்பணி குறித்து பவுல் கூறும் விளக்கம் (அதி. 1-7)**

அ. வாழ்த்துரை (1:1,2)

ஆ. பாடுகளின் நடுவில் ஆறுதலின் ஊழியம் (1:3-11)

இ. பவுல் தனது பயணத்திட்டத்தை மாற்றியதன் காரணத்தை விளக்குதல் (1:12-2:17)

ஈ. திருப்பணி ஆற்றுவதற்கெனப் பவுல் பெற்றிருந்த நற்சான்றுகள் (3:1-5)

உ. முந்தின உடன்படிக்கையும் புதிய உடன்படிக்கையும் வேறுபடுத்திக் காட்டப்படுதல் (3:6-18)

ஊ. தெளிவான நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டிய கடமை (4:1-6)

எ. விண்ணுலகத்தை இலக்காகக் கொண்ட மண்பாண்டம் (4:7-18)

ஏ. கிறிஸ்துவின் நியாயாசனத்தின் வெளிச்சத்தில் வாழுதல் (5:1-10)

ஐ. திருப்பணியில் பவுல் கொண்டிருந்த நல்மனசாட்சி (5:11-6:2)

ஒ. ஊழியத்தில் பவுலின் நடக்கை (6:3-10)

ஓ. திறந்த மனப்பான்மையோடும் நேசத்தோடும் இருக்கும்படி பவுல் வேண்டுகோள் விடுத்தல் (6:11-13).

ஔ. திருமறையின் அடிப்படையில் பிரிந்து வாழ்வதற்கான பவுலின் வேண்டுகோள் (6:14-7:1).

க. கொரிந்துப் பட்டணத்திலிருந்து கிடைக்கப் பெற்ற நல்ல செய்தியின் நிமித்தம் பவுல் அடைந்த மகிழ்ச்சி (7:2-16)

**2. எருசலேமில் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்காகப் பணம் சேகரித்தபோது அதனை நிறைவு செய்யும்படி அப்போஸ்தலன் கூறிய அறிவுரை (அதி. 8,9)**

அ. உதாரத்துவமாய்க் கொடுப்பதில் நல்ல எடுத்துக்காட்டுகள் (8:1-9)

ஆ. பணம் சேகரிப்பதை நிறைவுசெய்யும்படி கொடுக்கப்பட்ட நல்லாலோசனை (8:10,11)

இ. உதாரத்துவமாய்க் கொடுப்பதில் உள்ள மூன்று நல்ல கோட்பாடுகள் (8:12-15)

ஈ. பணம் சேகரிப்பதில் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய மூன்று நல்ல சகோதரர்கள் (8:16-24)

உ. கொரிந்தியரைக் குறித்துப் புகழ்ச்சியாகப் பவுல் பேசியதை மெய்ப்பிக்கும்படி வேண்டுகோள் விடுத்தல் (9:1-5)

ஊ. உதாரத்துவமாய்க் கொடுப்பதால் கிடைக்கும் நல்ல பரிசுகள் (9:6-15)

**3. பவுல் தனது அப்போஸ்தல நியமனத்தை உண்மையென மெய்ப்பித்தல் (அதி. 10-13)**

அ. தன்மீது குற்றஞ்சாட்டுவோருக்குப் பவுல் தருகிற பதில் (10:1-12)

ஆ. பவுல் கைக்கொண்ட கொள்கை: கிறிஸ்துவுக்காகப் புதிய இடங்களைக் கண்டுபிடித்தல் (10:13-16)

இ. பவுல் அப்போஸ்தலனின் மேலான குறிக்கோள்: கர்த்தரால் புகழப்படுதல் (10:17,18)

ஈ. பவுல் தனது அப்போஸ்தல நியமனத்தை வலியுறுத்திக் கூறுதல் (11:1-15)

உ. கிறிஸ்துவுக்காகப் பவுல் அடைந்த பாடுகள் அவருடைய அப்போஸ்தல நியமனத்தை உறுதிப்படுத்தின (11:16-33)

ஊ. பவுல் பெற்ற வெளிப்பாடுகள் அவரது அப்போஸ்தல நியமனத்தை உறுதிசெய்கின்றன (12:1-10)

எ. பவுல் நடப்பித்த அடையாளங்கள் அவருடைய அப்போஸ்தல நியமனத்தை உறுதிப்படுத்துகின்றன (12:11-13)

ஏ. கொரிந்துப் பட்டணத்துக்குப் பவுல் செல்லும்படி ஆயத்தப்படுதல் (12:14-13:1)

ஐ. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளால் பவுல் அப்போஸ்தல நியமனம் உறுதிப்படுத்தப்படுதல் (13:2-6)

ஒ. கொரிந்தியர் நலமானதைச் செய்ய வேண்டுமென்று பவுல் விரும்புதல் (13:7-10)

ஓ. கிருபைநிறை மூவொரு இறைமைக் கோட்பாட்டுடன் பவுல் பிரியாவிடை கூறுதல் (13:11-14)

## பொருட்சுருக்க அட்டவணை

<table>
<tr><td>தலைப்பு</td><td colspan="4">திருப்பணி குறித்து பவுல் கூறும் விளக்கம்</td><td colspan="2">யூதேய பரிசுத்தவான்களுக்குப் பணம் சேகரிப்பதற்கான பவுலின் அறிவுரை</td><td colspan="3">தனது அப்போஸ்தல ஊழியத்தை உண்மையென பவுல் மெய்ப்பித்தல்</td></tr>
<tr><td>பகுப்பு</td><td>வாழ்த்துரை</td><td>பயணத் திட்டத்தை மாற்றுதல்</td><td>ஊழியத்தின் தத்துவம்</td><td>கொரிந்தியரை ஊக்குவித்தல்</td><td>மக்கெதோனியரின் நல்மாதிரி</td><td>கொரிந்தியரை ஊக்குவித்தல்</td><td>குற்றஞ்சாட்டுகிறவர்களுக்குப் பதில்</td><td>தனது அப்போஸ்தல ஊழியத்தை வலியுறுத்துதல்</td><td>கொரிந்தியரைப்பற்றிய வாஞ்சை</td></tr>
<tr><td rowspan="2">அப்போஸ்தலனின் ஈடுபாடு</td><td colspan="4">பவுலின் குணநலன்</td><td colspan="2">பரிசுத்தவான்களுக்கான காணிக்கை</td><td colspan="3">பவுலின் தன்னிலை விளக்கம்</td></tr>
<tr><td colspan="4">பயணத்திட்டம்: எபேசுவிலிருந்து மக்கெதோனியா</td><td colspan="2">ஊழியர்களை கொரிந்துவுக்கு அனுப்புவதற்கான ஆயத்தம்</td><td colspan="3">கொரிந்துவுக்குப் பயணம் செய்ய ஆயத்தம்</td></tr>
<tr><td>வசனம்</td><td>1:1 - 2</td><td>1:3-2:17</td><td>3:1-6:2</td><td>6:3-7:16</td><td>8:1-6</td><td>8:7-9:15</td><td>10:1-18</td><td>11:1-12:13</td><td>12:14-13:14</td></tr>
</table>

## விளக்கவுரை

### 1. திருப்பணி குறித்து பவுல் கூறும் விளக்கம் [அதி. 1-7]

#### அ. வாழ்த்துரை [1:1,2]

**1:1** இம்மடலின் தொடக்கத்திலேயே பவுல் தன்னை **தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகத்** தெரிந்து கொள்ளப்பட்டவர் என்று அறிமுகப்படுத்துகிறார். இந்தக் குறிப்பை அவர் தொடக்கத்திலேயே வலியுறுத்திக் கூறியிருப்பது மிகவும் முக்கியமானது ஆகும். ஏனெனில் பவுல் எப்பொழுதாவது கர்த்தராலே அப்போஸ்தலனாக உண்மையாகவே நியமிக்கப்பட்டாரா என்று கேள்வி எழுப்பிய சிலர் கொரிந்துப் பட்டணத்திலே இருந்தார்கள். இந்த ஊழியத்தை அவர் தனது சொந்த சித்தத்தின்படி தெரிந்துகொள்ளவில்லை என்பதும், மனிதர்களாலே இப்பொறுப்பில் அமர்த்தப்படவில்லை என்பதும், மாறாக அவர் தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினாலே இந்த வேலைக்கு அனுப்பப்பட்டார் என்பதுமே அவர் அவர்களுக்குக் கூறும் விடை. அப்போஸ்தலத் திருப்பணிக்கு அவர் பெற்ற அழைப்பு தமஸ்குவுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சி அவருடைய வாழ்க்கையில் நடந்த மறக்கவியலா அனுபவமாகும். அந்தத் தெய்வீக அழைப்பைக் குறித்த நினைவே அப்போஸ்தலனை பல கசப்பான நேரங்களிலும் இத்திருப்பணியில் நிலைநிற்கும்படி தாங்கி நடத்தியது. அவர் கிறிஸ்துவின் திருப்பணியைச் செய்துவந்த போது, அவ்வப்போது அளவிற்கடங்கா வகையில் நெருக்கப்பட்டார். தெய்வீக அழைப்பின் உறுதியை அவர் பெற்றிராதிருந்தால், அவர் இப்பணியை விட்டவராக வீட்டுக்குச் சென்றிருப்பார்.

முதல் வசனத்தில் தீமோத்தேயுவின் பெயர் சேர்க்கப்பட்டிருப்பதாலே, இம்மடலை எழுதுவதற்கு அவர் உதவி புரிந்தார் என்பது பொருளன்று. இம்மடல் எழுதப்பட்டபோது அவர் பவுலோடு இருந்தார் என்பதையே அது சுட்டிக்காட்டுகிறது. இதற்கும் மேலாக அந்தக் குறிப்பிட்ட காலத்தில் தீமோத்தேயு எங்கெல்லாம் சென்றார் என்பது பற்றி பெருமளவு ஐயப்பாடு நிலவுகிறது.

இம்மடல் **கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கும், அகாயா நாடெங்கும் உள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்** எழுதப்பட்டது. **தேவனுடைய சபை** என்னும் சொற்றொடர் **தேவனுக்குச்** சொந்தமான விசுவாசிகள் அடங்கிய கூட்டம் என்று பொருள்படும். இது ஏதோ புறவின மக்களின் கூட்டமோ, சமயச் சார்பற்ற மனிதர்களின் கூட்டமோ அல்ல. மாறாக, கர்த்தருக்குச் சொந்தமாகும்படி, உலகத்தினின்று பிரித்தெடுக்கப்பட்ட, மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களின் கூட்டமே இது. இம்மடலை எழுதிய வேளையில் அவர் முதன்முதலாகக் கொரிந்துப் பட்டணத்திற்கு எவ்வாறு சென்றார் என்பதையும், எவ்வாறு நற்செய்தியை அங்கே பிரசங்கித்தார் என்பதையும் நினைவுகூர்ந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. சிலைவணக்கத்திலும் ஒழுக்கக் கேட்டிலும் மூழ்கிப்போயிருந்த மக்கள் இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரென்று விசுவாசித்தார்கள். மேலும் அவருடைய வியத்தகு கிருபையால் இரட்சிக்கப்பட்டார்கள். பலவிதமான இடர்ப்பாடுகள் கொரிந்து சபைக்குள்ளாகப் பிறகு உட்புகுந்த போதிலும் மனமகிழ்ச்சிக்குரிய அம்மக்களிடம் உண்டான மிக மேன்மையான மாற்றத்தைக் குறித்த நினைவு அப்போஸ்தலனுடைய இருதயத்திற்குப் பேருவகையைக் கொண்டு வந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுக்கு மட்டுமின்றி **அகாயா நாடெங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்** இம்மடல் எழுதப்பட்டது. கிரேக்க நாட்டின் தென்பகுதியே **அகாயா** என்று பெயர்பெற்றிருந்தது. மக்கெதோனியா என்பது அதே நாட்டின் வடபகுதியாகும்; அதைக்குறித்தும் இம்மடலில் நாம் படிக்கவிருக்கிறோம்.

**1:2** அன்புக்குரிய அப்போஸ்தலனாகிய பவுலோடு நாம் கொண்டிருக்கிற ஐக்கியத்தினாலே இங்கு கிருபையும் சமாதானமும் ஒன்றிணைந்த அருமையான வாழ்த்துதலைப் பெறுகிறோம். இறைமக்கள் இன்னின்னவற்றைப் பெறவேண்டுமென்று அவர் விரும்புகிறபோது, உலகப்பொருட்களாகிய பொன்னையும் வெள்ளியையும் அவர் குறிப்பிடவில்லை. இவை வெகு விரைவாக மறைந்துபோகும் என்பதை மிக நன்றாக அவர் அறிந்திருந்தார். மாறாக, அவர்கள் **கிருபை** மற்றும் **சமாதானம்** போன்ற ஆவிக்குரிய நன்மைகளைப் பெறவேண்டும் என்றே வாழ்த்தினார். விண்ணுலகின் மறுபக்கமாகிய இவ்வுலகில் ஓர் எளிய பாவி அடையக்கூடிய நன்மைகள் ஒவ்வொன்றும் அதற்குள் அடங்கும். "நற்செய்தியின் முதலும் முடிவுமான சொல் கிருபை என்பதாகும்; ஆவிக்குரிய பழுதற்ற நிறைவான நிலையே சமாதானம் - இ.ஃ.து ஆத்துமாவில் கிறிஸ்து நிறைவேற்றி முடித்த செயல்பாடு" என்று

திருவாளர் டென்னி கூறியிருக்கிறார்.[1] இந்த நற் பேறுகள் **நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலிருந்தும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்தும்** பாய்ந்து வருகின்றன. **பிதாவாகிய தேவன்** ஆதாரமாகத் திகழ்கிறார்; **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து** வழியாக விளங்குகிறார். **பிதாவாகிய தேவனுக்கு** இணையாகக் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக்** குறிப்பிட பவுல் தயங்கவில்லை. ஏனெனில் திரியேகத்தில் ஒரு நபரான **கிறிஸ்து பிதாவுக்குச்** சமமானவர்.

### ஆ. பாடுகளின் நடுவில் ஆறுதலின் ஊழியம் (1:3-11)

**1:3** மூன்று முதல் பதினோறாம் வசனம் வரையிலும், அப்போஸ்தலன் தான் அனுபவித்த மனவேதனைக்கும் கடுந்துன்பத்திற்கும் நடுவில் பெற்ற **ஆறுதலுக்காகக்** கிளர்ச்சிப் பெருக்குடன் நன்றிபாராட்டுகிறார். மக்கெதோனியாவில் தீத்து அவருக்குக் கொண்டுவந்த நல்ல செய்தியே அவருடைய **ஆறுதலுக்குக்** காரணம் என்பதில் ஐயமில்லை. அப்போஸ்தலன் கடும்வேதனை அடைந்தாலும் அல்லது ஆறுதல் அடைந்தாலும், அது முடிவில் யாருக்கு அவர் ஊழியம் செய்தாரோ அவர்களுக்கு நன்மையாயிற்று என்று அவர் தொடர்ந்து இங்கு விவரிக்கிறார். **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை** நோக்கி அவர் தமது நன்றியை ஏறெடுக்கிறார். புதிய ஏற்பாட்டில் தேவனுக்குக் கொடுக்கப்பட்ட முழுமையான பெயர் இதுதான். அவர் இனிமேல் ஆபிரகாமின் தேவன் என்றோ, ஈசாக்கின் தேவன் என்றோ, யாக்கோபின் தேவன் என்றோ அழைக்கப்படுவதில்லை. இப்பொழுது அவர் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்** ஆவார். இப்பெயர், கர்த்தராகிய இயேசு தேவனாகவும் மனிதனாகவும் இருக்கிறார் என்னும் உண்மையையும் குறிப்பாய்த் தெரிவிக்கிறது. தேவன் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் *தேவனாக* இருக்கிறார். இது அவர் மனித குமாரனாகிய **இயேசுவோடு** கொண்டிருக்கிற உறவைக் குறிக்கிறது. ஆனால் அந்த தேவன் **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** *பிதாவுமாக* இருக்கிறார். இது அவர் தேவகுமாரனாகிய கிறிஸ்துவோடு கொண்டிருக்கிற உறவைக் குறிக்கிறது. மேலும் தேவன், **இரக்கங்களின் பிதாவும் சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறார்** என்று விவரித்துக் கூறப்பட்டிருக்கிறார். இவரிடத்திலிருந்துதான் எல்லா இரக்கங்களும் ஆறுதல்களும் பெருக்கெடுத்து வருகின்றன.

**1:4** பவுல் அனுபவித்த சகலவிதமான கடுந்துன்பங்களுக்கு ஊடாக, தேவனுடைய ஆறுதல் தரும் சமுகம் தன்னோடு இருப்பதை நினைவிற் கொண்டவராகவே இருந்தார். தேவன் அவருக்கு ஆறுதல் அளித்ததற்கான பலகாரணங்களில் ஒன்றினை அவர் இங்கு எடுத்தியம்புகிறார். தேவனாலே அவர் எந்த **ஆறுதலைக்**கொண்டு **ஆறுதல்**படுத்தப்பட்டாரோ, அதே **ஆறுதலைக்** கொண்டு அவரும் பிறருக்கு **ஆறுதல் அளிக்க** வேண்டும் என்பதே அந்தக் காரணமாகும். வருத்தம் ஏற்படும் காலங்களில் அளிக்கப்படும் துயராற்றும் செயலே "ஆறுதல்" என்னும் சொல்லின் பொருள் என்று நாம் அறிந்திருக்கிறோம். ஆயின் புதிய ஏற்பாட்டில் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்களைக் காணுங்கால், அது பரந்த பொருளைக் கொண்டிருக்கிறது. தேவை ஏற்படும் நேரத்தில் நமது அருகில் இருக்கும் ஒருவரிடத்திலிருந்து வரக்கூடிய உற்சாகமூட்டும் சொற்களையும், புத்திபுகட்டும் வார்த்தைகளையும் அது குறிக்கிறது. நம்மெல்லோருக்கும் இவ் வசனத்தில் ஒரு நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையான பாடமும் இருக்கிறது. நாம் ஆறுதல் பெறும் வேளைகளில், பிறருக்கு அந்த ஆறுதலை அளிக்க நினைவுகொண்டவர்களாக இருக்க வேண்டும். நோய்வாய்ப்பட்டவரைச் சந்திப்பதையோ, மரணவீட்டுக்குச் செல்லுவதையோ நாம் தவிர்க்கக்கூடாது. மேலும் நம்முடைய ஆறுதல் தேவைப்படுவோரைச் சந்திக்க நாம் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். நாம் வசதியாய் இருக்கவேண்டும் என்பதற்காக ஆறுதல் பெறவில்லை. மாறாக, பிறருக்கு நாம் ஆறுதல் அளிப்பவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகவே ஆறுதல்படுத்தப்படுகிறோம்.

**1:5 கிறிஸ்துவினுடைய** ஆறுதல்கள் அவருக்காகச் சகிக்கிற பாடுகளுக்கு இணையாக இருக்கின்ற காரணத்தால் பவுல் பிறரை ஆறுதல்படுத்த முடிந்தது. **கிறிஸ்துவினுடைய பாடுகள்** என்று இங்கு சொல்லப்பட்டிருப்பது பாவமன்னிப்பை அருளும்பொருட்டு இரட்சகர் அடைந்த பாடுகளைக் குறிப்பதில்லை. அவை தனித்துவம் வாய்ந்தவை. எந்த மனிதனாலும் அவற்றைப் பகிர்ந்துகொள்ள முடியாது. ஆனால் கர்த்தராகிய இயேசுவோடு கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் தொடர்பினாலே அவர்களாலும் பாடுகளை அனுபவிக்க முடியும், அனுபவிக்கவும் செய்கிறார்கள். அவர்கள் நிந்தை, நிராகரித்தல், பகைமை, வெறுப்பு, மறுப்பு, காட்டிக்கொடுக்கப்படுதல் இன்ன பல பாடுகளை அனுபவிக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் கிறிஸ்து இப்புவியில் இருந்த காலத்தில் அனுபவித்த காரணத்தினாலே இவை **கிறிஸ்துவினுடைய பாடுகள்** எனப்படுகின்றன. அவருடைய சரீரத்தின் அவயவங்களாகிய விசுவாசிகள் இத்தகைய பாடுகளை அனுபவித்த காரணத்தினால் அவர் இன்னும் இப்பாடுகளை அனுபவிக்கிறவராக இருக்கிறார். **அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்** (ஏசாயா 63:9 -ஐக் காண்க). ஆனால் பவுல் இங்கு குறிப்பிட்டுள்ளது யாதெனில், இந்தப் பாடுகள் அனைத்தும் பெருமளவு ஈடு செய்யப்படும் என்பதேயாகும். அதாவது அதற்கு ஏற்ற அளவு **கிறிஸ்துவின் ஆறுதலில்** பங்கு கிடைக்கும். மேலும் **கிறிஸ்துவின் ஆறுதல்** நிறைவாக மனநிறைவு அடையச் செய்யும்.

**1:6** அப்போஸ்தலன் தான் அனுபவித்த பாடுகளிலிருந்தும், பெற்ற ஆறுதலிலிருந்தும் நன்மை உண்டாகிறதைக் காணமுடிந்தது. அவையிரண்டும் சிலுவையின் மூலமாகப் பரிசுத்தமாக்கப்பட்டன. அவர் **உபத்திரவப்பட்டதால்,** அது பரிசுத்த வான்களுடைய **ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும்** ஏதுவாக மாறிற்று - அது அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பல்ல, மாறாக அவர்கள் பாடுகளின் ஊடாகக் கடந்து செல்வதற்குத் தேவையான வலிமையையே குறிக்கிறது. பவுல் பாடுகளைச் சகித்தபோது அதன் காரணமாக அவர்கள் உற்சாகப்படுத்தப்பட்டு அறைகூவலை ஏற்றார்கள். அவ்வாறு பவுல் பாடுபடுகிறதற்கு தேவன் கிருபையை அருளியதுபோல், அவர்களுக்கும் தேவன் கிருபையருளுவார் என்று அவர்கள் சிந்திப்பதற்கு அ.ீது ஏதுவாக்கிற்று. சாமுவேல் ருத்தர்போர்ட் என்பார் "அடிநிலக் கிடங்குகளில் அவ்வப்போது இன்னலுற்ற" வேளைகளில் கர்த்தருடைய "நல்ல திராட்சைக் கனிரசத்தைக்" காணச் சுற்றிலும் நோக்குவார். ஒரு வேளை அவர் இதனைப் பவுலினிடத்திலிருந்து கற்றுக்கொண்டார் போலும். பவுலோ எப்பொழுதும் தன்னுடைய கண்ணீரில் வானவில்லைக் கண்டுகளித்தார்.

அப்போஸ்தலன் பெற்ற ஆறுதலைக் கண்ட கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் அதே **ஆறுதலால்** நிறைந்து, அவர் அடைந்த பாடுகளுக்கு ஒப்பான பாடுகளை அனுபவித்தபோது பொறுமையோடு அவற்றைச் சகிக்க தெய்வீக ஊக்கம் பெற்றார்கள். கடும்சோதனைகளுக்குள்ளாகக் கடந்துசென்றவர்களே, அதேபோன்ற பாடுகளைச் சகிக்க அழைக்கப்பட்டவர்களுக்குத் தகுதியான வார்த்தையைக் கூறமுடியும். தனது ஒரே குழந்தையைப் பறிகொடுத்த தாயினால் மட்டுமே, அதே விதமான கொடுமையால் தாக்குண்ட பெண்மணிக்கு ஆறுதல் கூறமுடியும். அல்லது, எல்லாவற்றிற்கும் மேலாக, தமது ஒரே பேறான குமாரனை இழந்த பரம தந்தையினால் மட்டுமே, தமக்குப் பிரியமானவர்களை இழந்து தவிக்கும் மக்களை ஆறுதல்படுத்த முடியும்.

**1:7** கிறிஸ்துவுக்காகப் பாடு அனுபவிக்கிறது என்றால் என்ன என்பதைக் கொரிந்தியர் அறிந்து கொண்டதுபோல, கிறிஸ்துவின் ஆறுதலளிக்கும் உதவியையும் அவர்கள் அனுபவிப்பார்கள் என்ற நம்பிக்கையை தான் கொண்டிருப்பதாக அப்போஸ்தலன் இப்பொழுது தெரிவிக்கிறார். கிறிஸ்தவன் ஒருக்காலும் **பாடுகளை** மட்டும் தனித்துப் பெறுவதில்லை. அவற்றைத் தொடர்ந்து **கிறிஸ்துவின் ஆறுதலும்** அவனிடத்திற்கு வந்துசேரும். பவுல் இதைக்குறித்து எப்படிப்பட்ட நம்பிக்கை கொண்டிருந்தாரோ அதுபோல நாமும் நம்பிக்கை பெறமுடியும்.

ஜீவ வசனங்கள் என்னும் திருமறையில் 3 முதல் 7 வரையிலான வசனங்கள் கீழ்க்கண்ட வாறு பொழிப்புரையாகத் தரப்பட்டுள்ளன:

> என்ன வியத்தகு இறைவனை நாம் பெற்றிருக்கிறோம்–அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திருத்தந்தையாவார். இரக்கத்திற்கெல்லாம் அவரே ஆதாரமாகத் திகழ்கிறார். நாம் கடுந்துன்பங்களையும் சோதனைகளையும் எதிர்கொள்கிற வேளைகளில் அவரே நமக்கு வியத்தகுவண்ணம் ஆறுதல் தருகிறார். இங்ஙனம் அவர் செய்வதன் காரணம் என்ன? பிறர் உபத்திரவங்களைச் சந்திக்கிற வேளைகளில் இரக்கத்தையும் உற்சாகத்தையும் நாடுவார்கள். அந்நேரங்களில், தேவன் நமக்களித்த ஆறுதலையும் உதவியையும் நாம் அவர்களிடம் செலுத்தமுடியும்... நாங்கள் உபத்திரவப்பட்டபோது, தேவன் ஆறுதல் அடையச் செய்தார். இதுவும் உங்களுக்கு உதவிசெய்யும் நோக்கத்தினுடனே ஆயிற்று: நாங்கள் அடைகிற பாடுகளுக்கு ஒப்பாக நீங்கள் பாடுகள் அடையும்போது உங்களுக்கு தேவன் அன்பின் ஆறுதலைத் தருவார் என்று எங்களுடைய தனிப்பட்ட அனுபவத்தினாலே காண்பிக்கும் பொருட்டு அப்படியாயிற்று. நீங்கள் பொறுத்துக்கொள்ளத்தக்கதாக அவர் வலிமையைத் தருவார்.

**1:8** உபத்திரவத்தையும் ஆறுதலையும் பற்றி பொதுவான சொற்களாலே பேசிய பவுல் இப் பொழுது, சிறிது காலத்திற்கு முன்னர் அனுப வித்த கடுமையான சோதனையைக் குறிப்பிட் டுப் பேசத் தொடங்குகிறார். **ஆசியாவில்** அவருக்கு **நேரிட்ட உபத்திரவங்களைக்** குறித்து கொரிந் துப் பட்டணத்து **சகோதரர்கள் அறியாமலிருக்க** அவருக்கு மனதில்லை. (**ஆசியா** இங்கு பெரு நிலப்பகுதியைக் குறிப்பதில்லை. இப்பொழுது ஆசியா மைனர் என்று அழைக்கப்படுகிற நிலப் பகுதியின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த மாகாணமே ஆசியா என்றழைக்கப்பட்டது.) அவ ருக்கு நேர்ந்த எந்த உபத்திரவத்தை அப்போஸ் தலன் இங்கு குறிப்பிடுகிறார்? எபேசுப் பட்டணத் தில் நடந்த ஆபத்தான கலவரத்தை அவர் குறிப்பிடுகிறார் போலும் (அப். 19:23-41). மரணத் துக்கு ஏதுவான நோய் ஒன்று தாக்கியது என்று சிலர் கருதுகிறார்கள். கொரிந்துப் பட்டணத்தி லிருந்து வந்த மனதைத் தகர்க்கக்கூடிய செய்தியே அது என்று சிலர் எண்ணுகிறார்கள். இந்த வேத பகுதியின் மதிப்பும், இது தருகிற மகிழ்ச்சியும் நடந்த நிகழ்ச்சியின் விவரங்களை அறிவதனால் உண்டாவதில்லை.

ஆயினும் அந்த இடர்ப்பாடு, பவுல் மனந் தளர்ந்து போகுமளவிற்கு மிகவும் ஆபத்தான தாக இருந்தது. மேலும் அந்த வருத்தம் அவர் **பிழைக்கக்கூடும் என்ற நம்பிக்கை அற்றுப் போகத் தக்கபடி**, சாதாரணமாக பாடுகளைச் சகிப்பதற்குத் தேவையான இயல்பான வலிமைக் கும் **அதிக பாரமானதாக** இருந்தது.

இந்த வசனத்தைத் திருவாளர் பிலிப்பு பொழிப் புரையாக ஆக்கித் தந்திருப்பது நமக்குப் பயனுள் ளதாயுள்ளது: "அந்தச் சமயத்தில் நாங்கள் முழுவதுமாக நசுக்கப்பட்டிருந்தோம்; அந்த பாரம் நாங்கள் தாங்கக் கூடாததாயிருந்தது; உண்மை யில், இதுவே முடிவு என்று நாங்கள் எங்களுக் குள்ளே சொல்லிக்கொண்டோம்."

**1:9** மரணத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒரு மனித னின் நினைவே அவருக்கு இருந்தது என்று சொல்லும்படி அப்போஸ்தலனுடைய தோற்றம் மகிழ்ச்சியற்று காணப்பட்டது. "வாழ்வா மரணமா என்ன நிகழப்போகிறது?" என்று ஒருவர் அவரிடம் கேட்டிருப்பாரெனில், அவர் தன்னிடத்திலே **நம் பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்க** வேண்டும் என்று எண்ணியே "மரணம்" என்றே அவர் விடை கூறியிருப்பார். தேவன் தமது ஊழியனை இத்தகைய கடுந்துயரின் எல்லைக்குக் கொண்டு சென்றார். மரித்தோரை எழுப்புகிற தேவன் என்னும் சொற்றொடர், சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் சொற்றொடருக்கு இணையான பொருளைக் கொண்டிருக்கிறது. மரணத்தை நெருங்கிச் செல்கிற மனிதனுக்கு இருக்கக்கூடிய ஒரே நம்பிக்கை மரித்தோரை உயிரோடு எழுப்பக் கூடிய ஒருவரே ஆவார். அப்போஸ்தலனாகிய பவுல் அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் அப் பொழுது இருந்தார்.

**1:10** ஜேம்ஸ் அரசர் மொழிபெயர்ப்பின்படி (பெரும்பான்மைப் பிரதியின்படி) தப்புவித்தலின் முக்கால நிலைமையைப் பற்றி பவுல் இங்கு பேசுகிறார்: இறந்த காலம் **(தப்புவித்தார்)**, நிகழ் காலம் **(தப்புவிக்கிறார்)**, எதிர்காலம் **(தப்புவிப் பார்)**.[2] எபேசுப் பட்டணத்தில் நடந்த நிகழ்ச்சியே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கருதுவோமா னால், சடுதியில் அது நின்றுபோய் அவர் தப்பிய தையே பவுல் இங்கு சுட்டிக்காட்டுகிறார் எனலாம் (அப். 20:1). கடந்த காலத்தில் அப்போஸ்தல னைத் **தப்புவித்த** அதே தேவன் ஒவ்வொரு நாளும் அவரைத் **தப்புவிக்கிறவராக** இருக்கிறார். மேலும் அப்போஸ்தலன் இந்த உலகத்தின் உபத்திரவங்களிலிருந்தும் கொடுமைகளிலிருந் தும் முழுவதுமாக விடுதலை அடையப்போகிற அந்தக் கடைசி மகத்தான நேரம் வரைக்கும் தேவன் தொடர்ந்து **தப்புவிப்பார்** என்றும் அவர் அறிந்திருந்தார்.

**1:11** இவ்வாறு பவுல் கடுமையான உபத்திர வத்தின் ஊடாகக் கடந்துசென்ற தருணத்தில் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் அவருக் காக மன்றாடியிருப்பார்கள் என்று அவர் பெருந் தன்மையாக ஊகித்தார் என்பதை இங்கு காண் கிறோம். உண்மையில் இந்த மேன்மையான அப்போஸ்தலனைக் குறித்துப் பல விசுவாசிகள் அங்கு குறைகூறியே வந்தார்கள். கிருபாசனத் துக்கு முன்பாக அவரை அவர்கள் நினைவுகூர்ந் தார்களா என்பதே கேள்விக்குறியாக இருந்தது. ஆனாலும் தனது சந்தேகத்தில் அவர்களுக்குச் சாதகமான நிலையைக் கொடுக்க அவர் விருப் பம் கொண்டிருந்தார். **அநேகர் மூலமாய் எங்க ளுக்கு உண்டான தயவு** என்று அவர் குறிப்பிட்டி ருப்பது, பலருடைய மன்றாட்டின் மூலமாகப் பவுல் பெற்ற விடுதலையே ஆகும். தான் ஆபத்தி லிருந்து தப்பியதைப் பரிசுத்தவான்கள் பலர் பரிந்து பேசியதன் நேரடியான விளைவாகவே அவர் எண்ணுகிறார். பலர் மன்றாடினார்கள்,

அவர்களுடைய மன்றாட்டு கேட்கப்பட்டது, ஆகவே யாவரும் தங்களுடைய மன்றாட்டு கேட்கப்பட்ட தன் நிமித்தம் **ஸ்தோத்திரம்** செலுத்த ஏதுவா யிற்று என்று அவர் கூறுகிறார்.

**இ. பவுல் தனது பயணத்திட்டத்தை மாற்றியதன் காரணத்தை விளக்குதல் (1:12-2:17)**

**1:12** விசுவாசிகள் அனைவரோடும் பவுல் எப்போதும் நேர்மையாக நடந்துகொண்டதே அவர் களுடைய ஜெபத்தை அவர் சார்ந்திருந்ததற் கான காரணமென்று அவர் கருதுகிறார். அவர் களோடு அவர் நேர்மையாக நடந்துகொண்டது குறித்து அவரால் மேன்மை பாராட்ட முடியும். மேலும் அவர் அவர்களிடம் **கபடமில்லாமலும் திவ்விய உண்மையோடும்** நடந்த நடக்கையே அவருடைய குணநலனை வெளிப்படுத்தியது என்பதற்கு அவருடைய மனச்சாட்சியே சான்றாக விளங்குகிறது. அதாவது, ஒளிவு மறைவின்றி வெளிப்படும் நம்பகத்தன்மை தேவனிடத்திலி ருந்தே வருகிறது. அவர் **மாம்சத்திற்குரிய** மனித னைப் போலத் தாழ்ந்து போகவில்லை. மாறாக தேவன் அருளிய **கிருபையாலே,** அதாவது தனது தகுதிக்கு அப்பாற்பட்ட வகையிலே தான் பெற்ற வல்லமையாலே, அவர் வெளியரங்கமான உண் மையோடு நடந்துகொண்டார். இவ்வுண்மை கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுக்கு ஒரு சிறப்பான முறையில் வெளிப்பட்டிருக்க வேண்டும்.

**1:13** கொரிந்துப் பட்டணத்தாரோடு அவர் முன்னர் நடந்துகொண்ட முறை எத்தகையது என்பதை வெளிப்படுத்திய அவருடைய நேர்மை, இந்த மடலுக்கும் பொருந்தும். அவர் என்ன நினைக்கிறாரோ அதையே **எழுதுகிறார்**. உட் பொருளோடு அவர் ஏதாவது எழுதியிருக்கிறாரா என்னும் எண்ணத்தோடு அவர்கள் அதை வாசிக்கவேண்டியதில்லை. அவர் எழுதியதன் பொருள் மேலோட்டமாக அறியப்படத்தக்கதாக வும், எளிமையானதாகவும், தெளிவானதாகவுமே இருக்கிறது. அவர்கள் **வாசித்துப்** புரிந்துகொள் ளத்தக்கதாகவே அவர் எழுதியிருக்கிறார். அவர் கள் **முடிவுபரியந்தமும்** அதாவது அவர்களு டைய வாழ்நாட்காலம் முழுவதும் இவ்வுண் மையை ஒப்புக்கொள்வார்கள்.

**1:14** கொரிந்துப் பட்டணத்து சபை பவுலை **ஓரளவே ஒப்புக்கொண்டிருந்தது.** அதாவது அச்சபையில் எல்லோரும் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை, ஒருபகுதி விசுவாசிகள் மட்டுமே அவரை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். **கர்த்தரா கிய இயேசுவின் நாளிலே** அவருக்கு உண்மை யோடிருந்தவர்கள் அவருக்குப் புகழ்ச்சியாக இருப் பார்கள், அவரும் அவர்களுக்குப் புகழ்ச்சியாக விளங்குவார். இந்த இரண்டு உண்மைகளை அவ் வாறு அவருக்கு உண்மையாக இருந்தவர்கள் அறிந்திருந்தார்கள். **கர்த்தராகிய இயேசுவின் நாளிலே** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, கிறிஸ்துவின் நியாயாசனத்தையே குறிப்பிட்டு எதிர்நோக்கியதாக விளங்குகிறது. அந்த நாளிலே மீட்கப்பட்டோர் கிறிஸ்துவுக்காக செய்த சேவை மதிப்பிடப்பட்டு அதற்கேற்ற பரிசு வழங்கப்படும். அந்த நீதிமன்றத்தைப் பவுல் எதிர்நோக்கிய போதெல்லாம், நிச்சயமாக அவருடைய ஊழியத் தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களின் முகங் களைக் கண்டார். அவர்கள் அவருக்கு சந்தோஷ மும் மகிழ்ச்சியின் கிரீடமுமாய் இருப்பார்கள்; அதுபோலவே அவர்கள் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தப்படுவதற்கு அவரே தேவனுடைய கருவியாக விளங்கினார் என்பதற்காக அவர் களும் களிகூருவார்கள்.

**1:15 இப்படிப்பட்ட நம்பிக்கை** என்னும் சொற் றொடர், பவுல் இயேசு கிறிஸ்துவின் மெய்யான அப்போஸ்தலன் என்றும், நேர்மை தவறாதவர் என்றும் அறிந்து அவர்கள் களிகூர்ந்தார்கள் என்ற **நம்பிக்கையை** அவர் **பெற்றிருந்தார்** என்று பொருள்படும். அவர்கள் அவர்மீது நம் பிக்கை, உயர்வான மதிப்பு, பாசம் கொண்டிருந் தார்கள் என்னும் உறுதியோடு அவர் அவர்களி டத்திற்கு வர விரும்பியிருந்தார். அவர் மக்கெ தோனியாவுக்குச் செல்லும் வழியிலும், பின்னர் மக்கெதோனியாவிலிருந்து திரும்பிச் செல்லும் வழியிலும் அவர்களிடத்திற்குச் செல்ல நினைத் திருந்தார். இவ்விதமாக அவர்கள் இரண்டு தடவை பயன்பெற வேண்டும் என்பது அவருடைய எண்ண மாயிருந்தது. ஒருமுறையல்ல இரண்டுமுறை அவர்களை அவர் சந்திக்க நினைத்திருந்தார்.

**1:16** "இரண்டாந்தரமும் பிரயோஜனமுண் டாகும்படி" என்னும் சொற்றொடர் பதினாறாம் வசனத்திலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, பவுல் எபேசுவை விட்டுச் செல்லுகையில் கடல் வழியாக அகாயா நாட்டிற்குச் சென்று, அங்கிருந்த கொரிந்துப் பட்டணத்தில் அவர்களைச் சந்தித்த பிறகு அவர் வடதிசையிலிருந்த **மக்கெதோனியாவுக்குப்** பயணம் செய்வார்; அங்கு அவர் பிரசங்கம் செய்த பிறகு, மீண்டும் தென்திசையில் பயணம் மேற் கொண்டு கொரிந்துப்பட்டணத்துக்குத் திரும்பு வார்; அதன் பிறகு அவர் யூதேயாவுக்குச் செல்ல

விருந்தார்; இவையாவும் அவருடைய திட்டமா யிருந்தன. அவ்வாறு செல்வதற்கான உதவியை அவர்கள் செய்வார்கள் என்று அவர் நம்பிக்கை யோடு இருந்தார். அதாவது அவர்களது விருந் தோம்புதலும் ஜெபமுமே இங்கு உதவி என்று சொல்லப்பட்டுள்ளன. பண உதவியை அவர்களி டமிருந்து ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் முன்பே தீர்மானித்திருந்ததைப் பின்னர் கூறு கிறார் (11:7-10).

**1:17** பவுலின் முந்தின தீர்மானம் நிறைவேற வில்லை. அவர் எபேசுவிலிருந்து துரோவாவுக் குச் சென்றபோது அங்கு தீத்துவை அவரால் காணமுடியவில்லை. ஆகவே அங்கிருந்து அவர் நேரடியாக மக்கெதோனியாவுக்குச் சென்றுவிட் டார். கொரிந்துப் பட்டணத்தின் வழியாக அவர் செல்லவில்லை. ஆகவே அவர், "இப்படி நான் யோசித்தது வீணான செயலா?" என்னும் கேள் வியை இங்கு எழுப்புகிறார். "நிச்சயமற்ற, மாறும் இயல்புள்ள பவுல்! அவர் சொல்லுவது ஒன்று, செய்வது வேறு! அப்படிப்பட்ட மனிதர் அப்போஸ் தலனாக இருக்க முடியுமா?" இதுவே அவரை இழிவுபடுத்தியவர்கள் கூறிய சொற்களாயிருந் தன. அவருடைய திட்டங்கள் யாவும் மாம்சத்தின் படியான **யோசனையா?** அதன் விளைவு ஒரு மணித்துளி "ஆம்" என்றும் அடுத்த மணித்துளி "அல்ல" என்றும் ஆகுமா? அவர் வசதிக்கேற் பவும் காலத்துக்கும் சந்தர்ப்பத்திற்கு ஏற்பவும் வழிநடத்தப்படுகிறாரா? இந்த வசனத்தின் மெய்ப் பொருளைத் தனது பொழிப்புரையில் பிலிப்பு வழங்குகிறார்: "நாம் இந்தத் திட்டத்தை மாற்றிய தன் காரணமாக, நாங்கள் மாறும் இயல்புள்ளவர் கள் என்பதுதானா பொருள்? என்னுடைய திட்டம் வாயினால் "ஆம்" என்று சொல்லப்படும்போது மனதினில் "அல்ல" என்று பொருள்படுமோ?

**1:18** அவருடைய **வார்த்தை** பயணத்திட் டத்தை விடுத்து, அவருடைய பிரசங்கத்தைக் குறித்ததாக மாறுகிறது. அவருடைய சாதாரண உரையாடலில் அவர் நம்பத்தகாதவராக இருந் தால், அவருடைய பிரசங்கத்தை எவ்வாறு நம்பு வது என்று அவரைக் குறைகூறுவோர் குறிப்பிட் டனர் போலும்.

**1:19** அவர் பிரசங்கித்த இரட்சகர் தெய்வீக மும் மாறக்கூடாத தன்மையும் உடையவர்; அவரிடத்தில் உறுதியற்ற நிலையோ மாறும் இயல்போ இல்லை; ஆகவே பவுல் தனது செயல் கள் நம்பத்தகாதவையாக இரா என்று வலியுறுத் திக் கூறுகிறார். அவர் முதல்முறையாக **சில்வான், தீமோத்தேயு** ஆகியோருடன் கொரிந்துப் பட்ட ணத்துக்குச் சென்றபோது (அப். 18:5), அவர்கள் நம்புவதற்குத் தகுதியான **தேவகுமாரனையே** பிரசங்கித்தார்கள். "அந்தச் செய்தியானது நிலை யற்றதல்ல, ஏனெனில் அது மாற்றமில்லாத **தேவ குமாரனைப்** பற்றியது." கர்த்தராகிய இயேசுவை ஆவியால் பிரசங்கம்பண்ணுகிற எவரும், பவுலைக் குறைகூறியவர் சொன்னபிரகாரமாக நடக்கமாட் டார்கள் என்றே அவர் தனது வாதத்தை எடுத் துரைக்கிறார். "பவுலின் வாதத்தை ஒரு மாய் மாலக்காரனால் பயன்படுத்த முடியும், ஆனால் ஆராய்ச்சி செய்கிற எவனாலும் இதனை ஒருக் காலும் புனைந்து உருவாக்க முடியாது" என்று டென்னி என்பார் கூறுகிறார். உண்மையுள்ள தேவனைப் பிரசங்கிக்கிற அவர், எவ்வாறு தனது சொற்களில் உண்மையற்றவராக இருக்க முடியும்?

**1:20 தேவனுடைய வாக்குத்தத்தங்களெல் லாம்**, அவை எத்தனையானாலும், *கிறிஸ்துவில்* நிறைவேறியுள்ளன. தேவனுடைய வாக்குறுதி கள் யாவும் **கிறிஸ்துவுக்குள்** நிறைவேறியிருப்ப தாகக் காண்பவர்கள் யாவரும் **ஆமென்** என்னும் சொல்லைச் சேர்த்துக் கூறுவார்கள்:

> நம்முடைய திருமறை நூலைத் திறந்து அங்கு ஒரு வாக்குறுதியைக் கண்டு, நாம் தேவனை நோக்கிப் பார்க்கிறோம். ''இதனை நீங்கள் கிறிஸ்துவின் மூலமாகப் பெறமுடியும்'' என்று தேவன் கூறுகிறார். கிறிஸ்துவின்மேல் நம் பிக்கை கொண்டவர்களாக நாம் ''ஆமென்'' என்று தேவனுடைய கூற்றை ஆமோதிக்கிறோம். தேவன் கிறிஸ்துவின் மூலமாகப் பேசுகிறார். நாம் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை கொள் கிறோம்; கிறிஸ்து கீழிறங்கி வருகிறார், விசு வாசம் மேலெழுந்து செல்லுகிறது. ஒவ்வொரு வாக்குறுதியும் இயேசு கிறிஸ்துவுக்குள் நிறை வேறுகிறது. அவருக்குள்ளும் அவர் மூலமாக வும், அவை யாவற்றையும் நமக்குரியதாக்கிக் கொள்கிறோம். மேலும், ''ஆம் கர்த்தரே; நான் உம்மை நம்புகிறேன்'' என்று கூறுகிறோம் இது விசுவாசிக்கிற ''ஆம்'' ஆகும்.[3]

எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி இவை யாவும் நிகழ்கின்றன. "மனிதர்களுடைய கற்பனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட வகை யில் தேவன் அவர்களைக் குறித்து நன்மையாகப் பேசியிருந்தவை, ஐயத்திற்கு இடமற்றபடி தவறாத உறுதியோடு அவருடைய குமாரனில் காணப் பட்டு, அவர்களுடைய ஆத்துமாக்களில் உதய

மாகிறபோது அவர் மகிமையடைகிறார்" என்று திருவாளர் டென்னி இதை விளக்குகிறார்.

**எங்களால்** என்னும் சொல், தேவனுடைய வாக்குறுதிகளைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் கிறிஸ்துவில் கண்டு தங்களுக்கு உரியதாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக சில்வான், தீமோத்தேயு, பவுல் போன்ற மனிதர்கள் பிரசங்கம் ஆற்றியதை அவர்களுக்கு நினைவூட்டியிருக்கும். அப்போஸ்தலனுடைய பகைஞர் கூறியபடி அவர் ஏமாற்றுபவராக இருந்திருந்தால், அப்படிப்பட்ட மகத்தான விளைவுகளை உண்டுபண்ணும்படி ஒரு வஞ்சகனையோ ஒரு பொய்யனையோ தேவன் பயன்படுத்தியிருப்பாரா? இல்லை என்பதே அதனுடைய பதில் என்பதில் ஐயமில்லை.

**1:21** கொரிந்துப்பட்டணத்து விசுவாசிகளும் பவுலும் ஒரே வாழ்வு என்னும் கட்டுக்குள்ளாகக் கட்டப்பட்டிருந்தார்கள் என்பதை அவர் தொடர்ந்து இங்கு விளக்கிக்காட்டுகிறார். தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுதல் என்னும் ஊழியத்தின் மூலமாக அவர்கள் **தேவனால்** விசுவாசத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்டு **கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தப்பட்டார்கள்**. மேலும் அவர் அவர்களை **ஆவியால் அபிஷேகம் பண்ணி** தகுதிப்படுத்தி, வல்லமை தந்து, போதித்து வந்தார்.

**1:22** மேலும் அவர் அவர்களை **முத்திரித்து** அவர்களுடைய **இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும்** கொடுத்தார். பரிசுத்த ஆவியானவரின் மேலும் இரண்டு ஊழியங்களை இங்கு நாம் காண்கிறோம். முத்திரை உடைமையின் உரிமையையும் பாதுகாப்பையும் குறிக்கிறது. விசுவாசிக்குள்ளாகப் பரிசுத்த ஆவியானவர் குடியிருக்கும் நிலைமை, அந்த விசுவாசி இப்பொழுது தேவனுக்குச் சொந்தமானவர் என்பதையும் அவர் நித்தியத்திற்கும் பாதுகாக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் குறிக்கும் அடையாளமாயிருக்கிறது. ஆயினும், அந்த முத்திரை கண்களுக்குப் புலப்படுவதில்லை. நாம் அணிகிற ஏதோ ஓர் அடையாள அட்டையினாலே நாம் கிறிஸ்தவர்கள் என்று மக்களால் அறியப்படுவதில்லை. மாறாக, ஆவியினால் நிறைந்த வாழ்க்கையினாலேயே நாம் கிறிஸ்தவர்கள் என அறியப்படுகிறோம். அவர்களுடைய **இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தை** தேவன் கொடுத்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய முழு சுதந்தரத்தைப் பின்னர் பெறுவார்கள் என்பதற்கு வாக்குறுதியின் முன்பணமாகப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டிருக்கிறார். தேவன் ஒரு மனிதனை இரட்சிக்கும் வேளையில், அவர் அவனுக்குள் குடியிருக்கும்படி பரிசுத்த **ஆவியைத்** தருகிறார். பரிசுத்த ஆவியை ஒரு மனிதன் பெறுவது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவாக அவன் தேவனுடைய முழு சுதந்தரத்திற்குள் நுழைவதும் நிச்சயம். இன்றைய நாட்களில் நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் மூலமாக எத்தகைய ஆசிர்வாதங்கள் உண்மையாகத் திகழ்கின்றனவோ, அவை யாவற்றையும் முழுமையான அளவில் பின்னொரு காலத்தில் நமக்குரியவையாகப் பெறப்போகிறோம்.

**1:23** இருபத்தி மூன்றாம் வசனம் முதல் இரண்டாவது அதிகாரத்தின் நான்காவது வசனம் வரைக்கும், மாறும் இயல்புடையவர் என்று பவுலுக்கு எதிராகச் சாட்டப்பற்ற குற்றத்திற்கான பதிலை அவர் நேரடியாக விளக்குகிறார். அதாவது அவர் ஏன் கொரிந்துப்பட்டணத்திற்குச் செல்லவில்லை என்பதற்கான காரணத்தைக் கூறுகிறார். வேறு எந்த மனிதனும் பவுல் செய்த செயலின் உண்மையான நோக்கத்தை அறிய முடியாது என்னும் காரணத்தினால், அவர் இவ்வுண்மைக்குச் **சாட்சியாக தேவனையே** அழைக்கிறார். முன் திட்டமிட்டபடி அவர் **கொரிந்துப்பட்டணத்துக்கு** வருகை புரிந்திருந்தால், அங்கிருந்த சூழ்நிலையின் நிமித்தம் அவர் அவர்களிடம் மிகக்கண்டிப்பாக நடந்துகொண்டிருப்பார். பரிசுத்தவான்கள் சபையில் பாவத்தைப் பொறுத்துக்கொண்டு, அதைக் குறித்து அக்கறையற்றவர்களாக இருந்த காரணத்தால், அவர்களிடத்தில் அவர் நேரடியாகக் கடிந்துபேசியிருப்பார். அவர்களை வேதனையிலிருந்தும் வருத்தத்திலிருந்தும் தப்பவிடும்படிக்கே அவர் அங்கு செல்லாமல் தாமதித்தார்.

**1:24** இவை யாவற்றையும் கூறிய அப்போஸ்தலன், தன்னை ஒருவரும் கொரிந்துப்பட்டணத்தார் மேல் சர்வாதிகாரியாகச் செயல்பட்டதாக நினைத்துவிடக்கூடாது என்று கருதினார். அதன் காரணமாக அவர், "உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினால் நிலைநிற்கிறீர்களே" என்று இங்கு கூறுகிறார். அவர்களுடைய கிறிஸ்தவ **விசுவாசத்தின்மேல்** அப்போஸ்தலன் அதிகாரம் செலுத்த வேண்டும் என்று விரும்பவில்லை. அவர் ஒரு கொடுங்கோல் மன்னன் என்று அவர்கள் நினைத்துவிடக் கூடாது. மாறாக, அவரும் அவருடைய உடன் ஊழியர்களும் அவர்களுடைய **சந்தோஷத்திற்கு** உதவி புரிந்தவர்களே ஆவார்கள். அதாவது,

அவர்களுடைய கிறிஸ்தவப் பயணத்தில் அவர் துணைபுரிந்து, அதன் மூலமாக அவர்களுடைய மகிழ்ச்சி பெருக வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாயிருந்தது.

24 -ஆவது வசனத்தின் பின்பகுதி "*விசுவாசத்தில் உறுதியாக* நிலைநிற்கிறீர்களே" என்றும் மொழிபெயர்க்கப்படக் கூடும். அதாவது, அவர்களுடைய விசுவாசத்தைப் பொருத்தமட்டில் அது சரிசெய்யப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அந்த விஷயத்தில் அவர்கள் போதுமான உறுதியோடு நிலைநின்றார்கள். உபதேசங்களைப் பொருத்தமட்டில் அவர்கள் திருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. அப்போஸ்தலன் விரும்பியதெல்லாம் சபையில் அவர்களுடைய நடக்கைகள் திருத்தப்பட வேண்டியவையாக இருந்தன என்பதே.

**2:1** இந்த வசனம் முந்தின அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களின் கருத்தின் தொடர்ச்சியாகவே விளங்குகிறது. கொரிந்துப் பட்டணத்திற்குச் செல்ல வேண்டும் என்று பவுல் முதலில் தீர்மானம் செய்திருந்தார். ஆனால் அத்திட்டத்தின்படிச் செல்லவில்லை. அதற்கான காரணத்தை அவர் இங்கு விளக்குகிறார். அவர் கடிந்துகொள்ளும்போது அவர்கள் துக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது என்பதால் அவர் அங்கு செல்லவில்லை. அவர் முதல் முறையாகக் கொரிந்துப் பட்டணத்துக்குச் சென்ற நிகழ்ச்சி அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் 18:1-17 -ஆகிய வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குப் பின் அவர் ஒருமுறை அங்கு துக்கத்துடன் சென்றார் என்பது **நான் துக்கத்துடனே உங்களிடத்தில் மறுபடியும் வராதபடிக்கு எனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டேன்** என்னும் வசனத்தினாலே தெரிய வருகிறது. அவ்வாறு அவர் அங்கு இரண்டாம் தடவை சென்றார் என்பதை 2 கொரிந்தியர் 12:14; 13:1 -ஆகிய வசனங்களும் சுட்டிக்காட்டுகின்றன.

**2:2** அப்போஸ்தலன் கொரிந்துப் பட்டணத்துக்குச் சென்றிருந்தால், அவர் அவர்களைக் கடிந்து கொண்டிருப்பார். அது அவர்களைத் துக்கப்படுத்தியிருப்பது நிச்சயம். அதன் நிமித்தம் அவரும் துக்கமடைந்திருப்பார். ஏனெனில் அவர்கள் களிகூர வேண்டும் என்பதே அவருடைய எதிர்பார்ப்பாக இருந்தது. "நான் உங்களைத் துன்பப்படுத்தினால், துக்கமடைந்த உங்களைத் தவிர வேறு யாரால் என்னை மகிழ்ச்சியடையச் செய்யமுடியும்? ஆனால் அந்நிலை எவ்வித ஆறுதலையும் தந்திருக்காது" என்று திருவாளர் ரைரி இதனை விளக்குகிறார்.

**2:3** இவ்வாறு அவருடைய வருகையின் மூலமாக இரு சாராருக்கும் துக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு மடலை எழுதத் தீர்மானித்தார். அம்மடல் எதிர்பார்த்த விளைவை உண்டுபண்ணும் என்று அவர் நம்பினார். அதாவது குற்றமிழைத்த சகோதரனுக்கு எதிராகக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள். அதன் காரணமாக அப்போஸ்தலன் அடுத்த முறை அங்கு பயணம் மேற்கொள்ளும் போது, அவருக்கு மிகவும் பிரியமான அந்த மக்களுக்கும் அவருக்கும் இடையே காணப்பட்ட மனவேற்றுமை நீங்கி ஒற்றுமை விளங்கும்.

மூன்றாவது வசனத்தின் பின்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதம், பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் மடலைக் குறிக்கிறதா அல்லது இப்பொழுது எவருக்கும் கிடைக்காத வேறொரு மடலைக் குறிக்கிறதா? அந்த மடலானது மிகுந்த வியாகுலத்தோடும் மனஇடுக்கத்தோடும் அதிகக் கண்ணீரோடும் எழுதப்பட்டதாக நான்காவது வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதால், அது முதல் கொரிந்தியர் நிருபத்தைக் குறிக்காது என்று பலர் கருதுகிறார்கள். இந்த விவரங்கள் முதல் கொரிந்தியர் மடலுக்கு நன்கு பொருந்துகின்றன என்று வேறு பல அறிஞர்கள் கருதுகிறார்கள். பெரும்பாலும், அவர் வேறொரு கண்டிப்போடு கூடிய மடலை எழுதியிருக்கக் கூடும். அம்மடல் இப்பொழுது இல்லை. துக்கத்தோடு அவர் அங்கு சென்ற நிகழ்ச்சிக்குப் பிறகு (2 கொரி. 2:1) அம்மடலை அவர் எழுதி, தீத்துவின் மூலமாக அனுப்பினார் என்றே தோன்றுகிறது. அந்த மடலையே அவர் 2:4,9; 7:8,12 ஆகிய இடங்களில் குறிப்பிடுகிறார் எனவும் கருதலாம்.

இவற்றுள் எந்தக் கருத்து சரியானது என்பது ஒரு பொருட்டன்று. பவுல் அவர்களிடத்திற்குச் செல்லும்போது அவருக்கு **சந்தோஷத்தைக்** கொடுக்க வேண்டியவர்கள் வருத்தம் அடைவதால் அவர் **துக்கமடையக்கூடாது** என்னும் எண்ணத்தோடு, அவர் அவ்வாறு எழுதினார். அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் அதே விஷயங்கள் அவர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று அவர் நம்பிக்கை கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் ஒழுங்கு நடவடிக்

கைப் பிரச்சினையை தெய்வீக வழியில் நடத்து வது பரஸ்பர களிகூருதலை உண்டாக்கும் என் பதே இதன் பொருளாகும்.

**2:4** ஒரு பெரிய மேய்ப்பனின் முனைப்பான நுண்ணறிவை இந்த வசனத்தில் நாம் காண் கிறோம். கொரிந்துப் பட்டணத்து சபையில் பாவம் பொறுத்துக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி பவுலின் உள்ளத்திற்கு மிகவும் ஆழ்ந்த துக்கத்தைக் கொடுத்தது. அது அவருக்கு **மிகுந்த வியாகுலத் தையும் மனஇடுக்கத்தையும்** கொடுத்ததுமன்றி, அவருடைய கன்னங்களில் சூடான **கண்ணீர்** வடிந் தோடியது. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதைக் காட்டிலும், அவர்கள் பாவத்தைப் பொறுத்துக் கொண்டது அப்போஸ்தலனை அதிகமாகப் பாதித்தது. அவர்களுடைய உணர்வுகளைப் பாதிக்கும்படி இம்மடல் எழுதப்பட்டது என்று அவர்கள் இதற்குத் தவறான பொருள் கொடுக்கக் கூடாது. மாறாக, இம்மடல் அவர் அவர்களிடத் தில் கொண்டிருந்த **அன்பிற்கு** நிரூபணமாயிருந் தது. அவர் இவ்வாறு எழுதியதன் காரணமாக, அந்தச் சூழ்நிலையைச் சரிசெய்வதற்குப் போது மான சமயம் கிடைக்குமென்றும், அதன் பிறகு அவர் கொரிந்துப் பட்டணத்துக்கு மேற்கொள் ளும் பயணம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் என்றும் அவர் நம்பினார். "சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவை." நாம் தெய்வீக முறையில் எச்சரிக்கப்படும்போதும் ஆலோசனை பெறும்போதும் சினங்கொள்ளக்கூடாது. மாறாக, அவ்வாறு ஒருவர் நமக்கு அறிவுரை வழங்குவாரா னால், உண்மையில் நம்மீது அவருக்கு அக்கறை உண்டென்பதை நாம் உணரவேண்டும். நீதி யுள்ள கடிந்துகொள்ளுதல் கர்த்தரிடத்திலிருந்து வருவதாகவே எண்ணி அதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக, நாம் நன்றிக் கடன் உடையோராய் நடந்துகொள்ள வேண்டும்.

**2:5** ஐந்தாவது வசனத்திலிருந்து பதினோரா வது வசனம் வரைக்கும், அந்தப் பிரச்சினையை உண்டுபண்ணிய நிகழ்ச்சியைக் குறித்து அப் போஸ்தலன் நேரடியாக விவரிக்கிறார். அவர் காட்டுகிற அளவுகடந்த கிருபையையும் கிறிஸ்தவ சலுகையையும் கவனியுங்கள். ஒரு தடவை கூட அவர் என்ன குற்றம் என்றோ, அதைச் செய்தது யார் என்றோ சொல்லவில்லை. **துக்கமுண்டாக் கினவன்** என்னும் சொல் 1 கொரிந்தியர் 5:1 -இல் குறிப்பிடப்பட்டுள்ள தகாத உறவு வைத்திருந்த மனிதனையோ, சபையில் பிரச்சினை உண்டுபண் ணின வேறொரு மனிதனையோ குறிக்கலாம். முதலில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதனையே அச் சொல் சுட்டிக்காட்டுகிறது எனக்கொள்வோம். பவுல் அக்குற்றத்தினைத் தனக்கெதிரானது எனக் கருதவில்லை. அச்செயல் விசுவாசிகள் **எல்லா ருக்கும் ஓரளவு துக்கத்தை** உண்டுபண்ணியது.

**2:6** குற்றம் இழைத்தவனுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கொரிந்துப் பட்டணத்து விசு வாசிகள் சம்மதித்திருந்தார்கள். மேலும் அவர் கள் அவனை சபையிலிருந்து வெளியேற்றியிருப் பார்கள் என்றே தோன்றுகிறது. அந்த ஒழுங்கு நடவடிக்கையின் விளைவாக, அவன் உண்மை யாக மனம்வருந்தி, கர்த்தரிடமாய் முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டான். இப்பொழுதோ, அந்த மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட **தண்டனை போதும்** என்று பவுல் கொரிந்தியரிடம் கூறுகிறார். அதனை அவர்கள் தேவையற்ற அளவிற்கு நீடிக்க கூடாது. இந்த வசனத்தில் **"அநேகரால் உண்டான"** என்ற சொற்றொடரைக் காண்கிறோம். "அநேகர்" என்னும் சொல் பெரும்பாலோர் என்று பொருள்படும் எனச் சிலர் கருதுகிறார்கள். ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட மனிதனைத் தவிர மற்ற எல்லா உறுப்பினர்களையும் அச்சொல் குறிக்கும் என்று பிறர் கருதுகிறார்கள். மேலும் இக்கருத்துடையவர்கள் தேவ ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு எங்கே அனுமதி அளிக்கப்படு கிறதோ அங்கெல்லாம் ஒரு மனப்பாட்டுடன் கூடிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

**2:7,8** இப்பொழுது அந்த மனிதன் தன்னுடைய தவறை உணர்ந்து முழுவதும் மனமாற்றம் பெற்ற வனாக இருப்பதாலே, கொரிந்தியர்கள் அவனை மன்னித்து, பலப்படுத்தும்படி தங்களுடைய ஐக் கியத்திற்குள்ளாக மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்யவில்லை யென்றால், **அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்து போகக்கூடிய** ஆபத்து ஏற்படும். அதாவது அவன் தனது மன்னிப்பின் அனுபவத்தைக் குறித்து நம்பிக்கை இழந்தவனாக, மனச்சோர்விலும் அதைரியத்திலும் மூழ்கிப் போய்விடுவான்.

கொரிந்துப் பட்டணத்தார் தங்களுடைய கரங் களை விரித்து மகிழ்ச்சியோடும் கனிவுள்ளத் தோடும் அவனை மீண்டும் ஐக்கியத்திற்குள் சேர்த்துக்கொண்டு, அவனிடத்தில் **அன்பைக் காண்பிக்க** வேண்டும்.

**2:9** முதல் மடலைப் பவுல் கொரிந்தியருக்கு எழுதி, பரிசுத்தவான்களை **சோதனைக்கு** உட்படுத்தினார். அப்போஸ்தலனாலே அவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படிந்தார்களா என்பதைக் காண்பிக்க இங்கே ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. முதலில், அவர்கள் அவனை சபையின் ஐக்கியத்திலிருந்து புறம்பாக்க வேண்டுமென்று ஆலோசனை கொடுத்திருந்தார். அவ்வாறே செய்து, அவர்கள் தங்களுடைய உண்மையான **கீழ்ப்படிதலை** மெய்ப்பித்தார்கள். இப்பொழுது இன்னும் ஒருபடி அவர்கள் முன்செல்ல வேண்டுமென்று பவுல் எதிர்பார்க்கிறார். அதாவது அவர்கள் அந்த மனிதனை மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**2:10** இந்த வசனத்தைத் திருவாளர் பிலிப்பு பொழிப்புரையாகத் தருகிறார்: "ஒரு குறிப்பிட்ட மனிதனை நீங்கள் மன்னிப்பீர்கள் எனில், நானும் அவனை மன்னிப்பது நிச்சயம் என்று நம்புங்கள். நான் ஏதாவது ஒன்றில் அவனைத் தனிப்பட்ட முறையில் மன்னிக்க வேண்டியதாயிருந்தால் கிறிஸ்துவுக்கு முன்பாக அவனை மன்னிக்கிறேன்." குற்றம் செய்த மனிதன் மனந்திரும்பிய நிலையில், பரிசுத்தவான்கள் அவனை மன்னிக்கிறபோது பவுலும் அவர்களோடு முழுமனதோடு ஐக்கியம் கொண்டிருப்பதாக அவர்கள் அறிந்திருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவனுக்கு **எதையாவது** அவர் மன்னிக்க வேண்டியதாயிருந்தால், கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளின் நிமித்தம் அவர் அதை **மன்னிக்கிறார்**. மேலும் அவர் **கிறிஸ்துவினுடைய சந்திதானத்திலே** மன்னிக்கிறதுபோல மன்னிக்கிறார்.

இந்த அதிகாரத்தில் சபையின் ஒழுங்கு நடவடிக்கை வற்புறுத்திக் கூறப்பட்டுள்ள விதம் அதனுடைய முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகிறது. ஆயினும் இன்றைய நாட்களில் நற்செய்திப் பணியாற்றும் பல சபைகளில் இந்தப் பொருள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. திருமறையானது தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது என்று நாங்கள் நம்புகிறோம் என்று நாம் அறிக்கை செய்துவிட்டு, அது நம்முடைய நோக்கங்களுக்கு உடன்படாதிருக்கும் வேளைகளில் அதற்குக் கீழ்ப்படிய மறுக்கும் செயலுக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டு ஆகும்.

**2:11** ஒரு சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் உண்டாயிருக்கும்போது, அது எடுக்கப்படவில்லையென்றால் ஆபத்து ஏற்படுவது போல, மெய்யான மனவருத்தம் உண்டாயிருக்கும்போது மன்னிப்பு வழங்கப்படவில்லையென்றாலும் ஆபத்து ஏற்படுவது நிச்சயம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் **சாத்தான்** தன்னுடைய தந்திரத்தோடு உட்புகுந்து செயல்படுவான். முதலாவது பிரச்சினையில், பாவம் பொறுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் சபையின் சாட்சியை அவன் இடித்துச் சேதப்படுத்துவான். இரண்டாவது பிரச்சினையில் மனம் வருந்தித் திரும்பிய மனிதனை சபை மீண்டும் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், அவன் ஆழ்ந்த துக்கத்திற்குள்ளாக மூழ்கடிக்கப்படுவான். ஒழுக்கக் கேட்டினால் ஒருவனை அழிக்க முடியவில்லையென்றால், சாத்தான் மனந்திரும்பியவனைத் தாங்கொண்ணா துக்கத்திற்குள் ஆழ்த்தி அழிக்க முயற்சி செய்வான்.

**"அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவை அல்லவே"** என்னும் சொற்றொடருக்கு J. ஸிட்லோ பாக்ஸ்டர் என்பார் தருகிற விளக்கம்:

> சத்தியத்திலிருந்து ஆத்துமாக்கள் விலகிப் போவதற்கான எல்லாவிதமான போர்க்கலைகளையும் சாத்தான் பயன்படுத்துகிறான்: சுவகினால் "புடைக்கிறான்" (லூக்கா 22:31), தந்திரங்களினால் அழிக்கத் திட்டமிடுகிறான் (இந்த வசனம்), "முள்ளுகளால் நெருக்குகிறான்" (மத். 13:22), சூழ்ச்சியினால் சதிசெய்கிறான் (எபே. 6:11) பயப்படுத்துகிற கர்ச்சிக்கிற சிங்கமாயிருக்கிறான் (1 பேதுரு 5:8), ஏமாற்றும்படி ஒளியின் வேஷத்தைத் தரித்துக்கொள்கிறான் (2 கொரி. 11:14), அவனுடைய கண்ணிக்குள் சிக்கவைக்க முயற்சி செய்கிறான் (2 தீமோ. 2:26).[4]

**2:12** தன்னுடைய பயணத் திட்டத்தில் மாற்றம் ஏற்பட்டதைக் குறித்து அவர் 4 -ஆவது வசனத்தில் கூறியதன் தொடர்ச்சி இந்த வசனத்தில் காணப்படுகிறது. அவர் முன்னர் கூறியபடி அவரால் கொரிந்துப் பட்டணத்திற்குச் செல்லமுடியவில்லை. கண்டித்துணர்த்தும் கடுமையான ஆவியோடு அவர் அங்கு செல்வது தவிர்க்கப்படவேண்டும் என்னும் எண்ணத்தினால் அவருடைய திட்டம் நிறைவேறாமல் போயிற்று. பன்னிரண்டாம் வசனம் முதல் பதினேழாம் வசனம் வரையிலும், பவுல் ஆற்றிய ஊழியத்தின் முக்கியமான கட்டமாகிய அந்நேரத்தில் என்ன நிகழ்ந்தது என்பதை விளக்குகிறார். முன்னர் கூறியதுபோல, எபேசுப் பட்டணத்தை விட்டுச் சென்ற பவுல், தீத்துவைக் காணும் நோக்கத்துடன் துரோவாவுக்குச் சென்றார். தீத்து கொரிந்துப் பட்டணத்தி

லிருந்து செய்தியைக் கொண்டுவருவார் என அவர் எதிர்பார்த்தார். அவர் துரோவாவைச் சென்றடைந்தபோது **கிறிஸ்துவின் சுவிசேஷத்தை** அறிவிக்கும்படி வியத்தகு வகையில் சந்தர்ப்பத்தின் **கதவு** அவருக்கு முன்பாகத் **திறந்தது.**

**2:13** இத்தகைய பொன்போன்ற சந்தர்ப்பம் கிடைத்தபோதிலும் அப்போஸ்தலனுடைய **ஆவி** அமைதியற்றிருந்தது. அவரைச் சந்திக்க **தீத்து** அங்கில்லை. கொரிந்து சபையின் பாரம் அப்போஸ்தலனுடைய இருதயத்தை அதிகமாகத் தாக்கிக் கொண்டிருந்தது. அவர் துரோவாவில் தங்கியிருந்து கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டுமா? அல்லது அவர் **மக்கெதோனியாவுக்கு** உடனடியாகச் செல்லவேண்டுமா? அவர் முடிவு செய்துவிட்டார்; அவர் மக்கெதோனியாவுக்கு கடல்வழியாகச் செல்ல வேண்டும். இந்த வரிகளைப் படித்தபோது கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் என்ன நினைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதைப் புரிந்துகொள்வது அரிது. அவர்களுடைய நடத்தையே அப்போஸ்தலனுடைய வாழ்க்கையில் மனஉலைவை ஏற்படுத்தியது என்பதையும், அதுவே நற்செய்தியை அறிவிப்பதற்கு அவருக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை மறுத்துரைக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியது என்பதையும் அவர்கள் அறிந்தபோது, இவ்வாறு அற்பமாக நடந்துகொண்டதற்காக வெட்கப்பட்டார்களா?

**2:14** பவுல் அங்கு தோற்றுப்போகவில்லை. கிறிஸ்துவின் பணியைச் செய்யும் பொருட்டு அவர் சென்றமிடமெங்கிலும் வெற்றியே அடைந்தார். அதன் காரணமாக அவர் நன்றியறிதலால் பொங்கியெழுகிறார்: **கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.** A. T. இராபர்ட்சன் விளக்குகிறார்:

> விளக்கமளிக்கும் வண்ணம் ஒரு சொல்லையும் கூறாமல், நம்பிக்கையின்மை என்னும் சேற்றிலிருந்து, பவுல் தாவியெழுந்து ஒரு பறவையைப் போல மகிழ்ச்சியின் உச்சியை நோக்கி ஓடுகிறார். பெருமையும் ஏளனப்போக்கும் கொண்ட பள்ளத்தாக்கு தனக்குக் கீழாக இருக்கும் வண்ணம் மிக உயரமான இடத்தில் பறக்கும் கழுகைப் போன்று அவர் உயரப் பறக்கிறார்.[5]

வெற்றிவாகை சூடிய ரோமப்பேரரசன் மேற்கொள்ளும் அணிவகுப்பின் படவுருவை பவுல் இங்கு இரவலாகப் பெற்று தனது கருத்தை விளக்குகிறார். மாட்சிமை மிக்க வெற்றிகளைப் பெற்று, தங்களுடைய நாட்டிற்குத் திரும்புவோர், கைதிகளைத் தலைநகரத்தின் தெருக்களில் அணிவகுத்துச் செல்லும்படி நடத்துவார்கள். அணிவகுப்பின் இருபுறமும் தூபவர்க்கத்தைச் சுமந்து செல்வோர் நடந்து செல்வார்கள். தூபவர்க்கத்தின் நறுமணம் அந்தக் காட்சியை ஊடுருவிச் செல்லும். இதுபோலவே கர்த்தர் வெற்றி பெற்ற பேரரசராக, துரோவாவிலிருந்து மக்கெதோனியாவுக்கு அணிவகுத்துச் சென்றபோது அப்போஸ்தலனை வழிநடத்திச் சென்றதாகப் பவுல் இங்கு படவுருவாக வர்ணிக்கிறார். தமது ஊழியர்கள் மூலமாக, கர்த்தர் எங்கெல்லாம் செல்கிறாரோ, அங்கெல்லாம் அவர் வெற்றி பெறுகிறார். கிறிஸ்துவைக் குறித்து அறிகிற அறிவின் வாசனை அப்போஸ்தலனின் மூலமாக எல்லா இடங்களிலும் பரப்பப்படுகிறது. F. B. மேயர் என்பார் எழுதுகிறார்:

> அவர்கள் சென்ற இடங்களிலெல்லாம் மனிதர்கள் இயேசுகிறிஸ்துவை மேலும் சிறப்பாக அறிந்தார்கள். எஜமானின் குணவியல்பின் இனிமை எங்கும் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. காற்றில் ஊற்றப்பட்டதும் விநோதமானதுமான நறுமணத்தை மனிதர்கள் அறியத்தொடங்கினார்கள். அது அவர்களை நாசரேத்தூர் மனிதரிடம் கவர்ந்திழுத்தது.[6]

இவ்வாறாக, சாத்தானோடு பவுல் மேற்கொண்ட போரில் தான் தோல்வியடைந்ததாகக் கருதவில்லை. மாறாக, கர்த்தர் வெற்றியடைந்தார், அதனைப் பவுல் பகிர்ந்துகொண்டார்.

**2:15** பவுல் குறிப்பிடுகின்ற வெற்றி அணிவகுப்பில், தூபவர்க்கத்தின் நறுமணம் வெற்றிவீரர்கள் அடைந்த புகழ்ச்சிக்குரிய வெற்றியைக் குறித்தது. அதே நேரத்தில் அது கைதிகள் அடைய விருந்த தண்டனையைத் தெரிவித்தது. இவ்வாறாக, நற்செய்தி அறிவிப்பு இருவகை விளைவுகளை உண்டாக்க வல்லதாயிருக்கிறது என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். அது **இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே** ஒரு பொருளையும், **கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே** முற்றிலும் வேறுபட்ட பொருளையும் குறிப்பிடுகிறது. அதனை ஏற்றுக்கொள்கிறவர்களது புகழ்ச்சிக்குரிய எதிர்காலத்திற்கு அது அச்சாரமாக விளங்குகிறது. பிறருக்கு அது அடையவிருக்கிற அழிவுக்கு முன்னறிவிப்பாக இருக்கிறது. இவ்விரு மாறுபட்ட நிலைகளிலும் தேவனுக்குப் புகழ்ச்சியே உண்டா

கிறது. ஒரு நிலையில் அது அவருக்குக் கிருபை யின் நற்கந்தமாகவும், வேறொரு நிலையில் நியாயத்தீர்ப்பாகவும் விளங்குகிறது. இதனைத் திருவாளர் F. B. மேயர் சிறப்புற விளக்குகிறார்:

> தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக் கிறோம் என்று நம்மைக் குறித்துச் சொல்லுகை யில், மரணமடையும் நோக்கத்துடன் இவ்வுல கிற்கு வந்து வாழ்ந்த இயேசுவின் வாழ்க் கையை தேவனுடைய மனதிற்கு நினைவுபடுத் தும்படி நம்மால் வாழ முடியும் என்னும் பொரு ளோடுதான் சொல்லப்பட்டுள்ளது. மேலும் நம்முடைய வாழ்க்கையை தேவன் ஒவ்வொரு நாளும் கவனித்து வருகிறார் என்னும் உண் மையையும் அது வெளிப்படுத்துகிறது. அவர் நம்மில் இயேசுவைக் காண வேண்டும்; மேலும் அது தேவனுக்கு நறுமணமாக விளங்கிய, காணிக்கையும் பலியுமான இயேசுவின் சீர் மிகுந்த வாழ்க்கையை அவருடைய நினை விற்கு முனிதருடைய வழக்கத்தில் சொல்லப் பட்டுள்ளது) மீண்டும் கொண்டுவரவேண்டும்.[7]

**2:16** கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு **ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும்,** அழிந்து போகிறவர்களுக்கு **மரணத்திற்கேது வான மரண வாசனையாகவும்** விளங்குகிறார் கள். விசுவாசிக்கிறவர்களுக்கு ஜீவனைக் கொண்டுவருகிற "புத்துயிர் அளிக்கும் நறுமண வாழ்க்கையாகவும்", மாறாக விசுவாசிக்க மறுக் கிறவர்களுக்கு "அழிவை உண்டாக்கும் மரண வாசனையாகவும்" நாம் விளங்குகிறோம் என்று திருவாளர் பிலிப்பு கூறுகிறார். இவ்வித இருவகை யான விளைவு, பழைய ஏற்பாட்டில் காணப்படும் ஒரு நிகழ்ச்சியில் அழகுற விவரிக்கப்பட்டுள்ளது. பெலிஸ்தியரால் உடன்படிக்கை பெட்டி கைப்பற் றப்பட்டு அவர்களிடத்தில் இருந்த நாட்கள் முழு வதும் மரணத்தையும் அழிவையும் உண்டுபண் ணிற்று (1 சாமு. 5). ஆனால் அது ஓபேத் ஏதோ மின் வீட்டிற்குள் கொண்டுவரப்பட்டபோது, அது அவனுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் ஆசிர் வாதத்தையும், செல்வத்தையும் கொண்டுவந்தது (2 சாமு. 6:11). இவ்விதமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நற்செய்தியைப் பிரசங்கிக்கும் மாபெரும் பொறுப்பைக் குறித்து பவுல் சிந்தனை செய்தவராக, **"இவற்றை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்"** என்று கதறுகிறார்.

**2:17** "இவற்றை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதி யானவன்?" என்னும் கேள்விக்கு விடையாக "நாங்கள் இருக்கிறோம்" என்னும் சொற்களைச் சேர்த்துக் கூறுவோமானால் 16 மற்றும் 17 ஆகிய வசனங்களுக்கிடையே காணப்படும் தொடர்பு சிறப்பாகக் காணப்படும். "இவற்றை நடப்பிக்கிற தற்கு எவன் தகுதியானவன்? நாங்கள் இருக்கி றோம். ஏனெனில் நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசுவதில்லை, இன்னும் பல தகுதி கள் உள்ளன." (ஆனாலும், 3:5 -ஆம் வசனத் தோடு இதனை இணைத்துப் பார்த்துப் பொருளை உய்த்துணர வேண்டும். ஆங்கு, எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்று பவுல் கூறுகிறார். **அநேகர்**[8] என்னும் சொல், யூத மார்க்கத்து போதனைகளைக் கொரிந்துப் பட்ட ணத்து விசுவாசிகள் கைக்கொண்டு அப்போஸ் தலனை விட்டுவிலக வேண்டும் என்னும் நோக் கத்துடன் செயல்பட்ட போதகர்களைக் குறிக் கிறது. இந்த மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள்? அவர்கள் **தேவவசனத்தில்** கலப் படம் செய்தார்கள். அல்லது அதைக் கொண்டு வாணிபம் செய்தார்கள். அவர்கள் வணிக நோக்கம் உடையவராய் இருந்தார்கள். அவர்கள் ஊழி யத்தை ஆதாயத் தொழிலாக மாற்ற முயற்சி செய் தார்கள். திராட்சை ரசத்தோடு தண்ணீரைக் கலந்து விற்பனை செய்வதைக் குறிக்கவும் கலப்படம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டது. ஆகவே, இந்தக் கள்ளபோதகர்கள் தேவ வசனத் துடன் தங்களுடைய உபதேசங்களையும் சேர்த் துக் கலப்படம் செய்ய முயற்சி செய்தார்கள் என்பது இதன் பொருளாகும். எடுத்துக்காட்டாக, அவர்கள் நியாயப்பிரமாணத்தையும் கிருபையை யும் இணைக்க முயற்சி செய்தார்கள்.

இவ்வாறு தேவ வசனத்தைக் கலப்படம் செய் தவர்கள் அல்லது அதைக்கொண்டு வாணிபம் செய்தவர்களில் பவுல் ஒருவரல்லர். மாறாக, அவர் தனது ஊழியத்தைக் குறித்து சிறப்பான நான்கு பண்புகளைக் கூறியுள்ளார். *முதலாவது* அது **துப்புரவானதாகக்** காணப்பட்டது. அதாவது அது ஒளிவு மறைவு அற்றதாயிருந்தது. அவருடைய ஊழியம் நேர்மையானதாக இருந்தது. எவ்விதச் சூழ்ச்சியும் ஏமாற்று வேலையும் அதில் இடம் பெறவில்லை. எல்லாம் வெளியரங்கமாயிருந் தது. இந்தச் சொல்லுக்கு இராபர்ட்சன் என்பார் "பவுல் விற்கும் பெர்ரி பழங்கள் கூடையின் மேற் பகுதியில் இருப்பது போலவே அடிப்பகுதியிலும் நன்றாக இருக்கின்றன" அடிப்பகுதி மேல்பகுதி யைப் போலவே நன்றாக இருக்கிறது" என்று நகைச்சுவையோடு விளக்கமளிக்கிறார்.

*இரண்டாவதாக*, அவர் தனது ஊழியத்தை, **தேவனால் அருளப்பட்டது** என்று கூறுகிறார். அதாவது, அவர் பேசியவை அனைத்தும் **தேவனால் அருளப்பட்டவையே**. அவர் பேசிய செய்திகள் யாவற்றுக்கும் ஆதாரம் **தேவனே** ஆவார். அவர் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்குத் தேவையான வல்லமையை தேவனிடத்திலிருந்தே பெற்றுக்கொண்டார். *மூன்றாவதாக* அவர் **தேவ சந்நிதியில்** பேசினார். அதாவது, **தேவன்** தொடர்ந்து அவரை நோக்கிப் பார்க்கிறார் என்ற உண்மையை எப்பொழுதும் நினைவிற் கொண்டவராக, அப்போஸ்தலன் கர்த்தருக்கு ஊழியம் செய்தார். அவர் தேவனுக்கு உண்மையுள்ள பொறுப்புணர்வோடு இருந்ததோடு, தேவனுடைய கண்களிலிருந்து ஒன்றையும் மறைக்க முடியாது என்பதையும் அறிந்திருந்தார். *இறுதியாக*, அவர் 'நாங்கள் கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம்" என்று கூறுகிறார். அதாவது, அவர் கிறிஸ்துவின் திருப்பெயரில் பேசினார், **கிறிஸ்துவின்** அதிகாரத்தோடு பேசினார், **கிறிஸ்துவின்** பிரதிநிதியாகப் பேசினார்.

### ஈ. திருப்பணி ஆற்றுவதற்கெனப் பவுல் பெற்றிருந்த நற்சான்றுகள் (3:1-5)

**3:1** இரண்டாவது அதிகாரத்தின் பதினேழாவது வசனத்தின் பின்பகுதியில் அப்போஸ்தலன் தனது ஊழியத்தைப் பற்றி விளக்கமளிக்கும் வகையில் நான்கு சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். அவற்றைக் கேட்போரில் சிலர், குறிப்பாக அவருடைய பகைஞர், இவர் தன்னைத் தானே மெச்சிக்கொள்கிறார் என்று குற்றஞ்சாட்டக்கூடும் என்பதை உணர்ந்தார். ஆகவே, **"எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடங்குகிறோமோ?"** என்னும் கேள்வியோடு அவர் இந்த அதிகாரத்தைத் தொடங்குகிறார். **மறுபடியும்** என்னும் சொல், ஏற்கனவே அவர் தன்னைப் புகழ்ந்தார் என்று பொருள் படுவதில்லை. மாறாக, அவரை அவ்வாறு ஏற்கனவே குற்றஞ்சாட்டினார்கள் என்பதும், அப்படிப்பட்ட குற்றச்சாட்டு மீண்டும் அவர்மீது சுமத்தப்படக்கூடும் என்று அவர் எதிர்பார்த்தார் என்பதுமே இதன் பொருளாகும்.

**அல்லது சிலருக்கு வேண்டியதாயிருக்கிறதுபோல, உங்களுக்கு உபசார நிருபங்களை அனுப்பவும், உங்களிடத்தில் உபசார நிருபங்களைப் பெற்றுக் கொள்ளவும் எங்களுக்கு வேண்டியதோ?** 2:17 -ஆம் வசனத்தில் பவுல் குறிப்பிட்ட கள்ள போதகர்களையே இங்கு சிலர் என்று அவர் குறிப்பிடுகிறார். அந்தக் கள்ள போதகர்கள் **உபசார நிருபங்களை** எருசலேம் சபையிலிருந்து ஒருவேளை பெற்றிருக்கக் கூடும் என்றே தோன்றுகிறது. மேலும் அவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லும்போது கொரிந்துப் பட்டணத்து சபையிலிருந்து **உபசார நிருபங்களைப்** பெற்றுச் சென்றார்கள். சபையின் தொடக்க காலத்தில் ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்குக் கிறிஸ்தவர்கள் சென்றபோது, அவர்களை அறிமுகப்படுத்துவதற்காக சபைகள் உபசார நிருபங்களைப் பயன்படுத்தின. அவ்வழக்கத்தின் பயன் குன்றிப்போக வேண்டும் என்னும் நோக்கத்துடன் அப்போஸ்தலன் இவ்வசனத்தை எழுதவில்லை. அந்தக் கள்ள போதகர்கள் தங்களை அறிமுகப்படுத்துவற்குப் பெற்றிருந்ததெல்லாம் அவர்கள் எடுத்துச்சென்ற உபசார நிருபங்கள் மட்டுமே ஆகும் என்று பவுல் சாதுரியமாக இங்கு கூறுகிறார்! அம்மடல்களைத் தவிர வேறு எந்த நற்சான்றும் அவர்களிடத்தில் இல்லை.

**3:2** கிறிஸ்தவர்கள் யூதமதக் கொள்கைகளைக் கைக்கொண்டு வாழ வேண்டும் என்னும் கருத்துடையோர் சிலர் கொரிந்துப் பட்டணத்துக்கு வந்திருந்தார்கள். அவர்கள் பவுல் அப்போஸ்தல அதிகாரம் உடையவரா என்று கேள்வி எழுப்பினார்கள். அவர் கிறிஸ்துவின் மெய்யான ஊழியக்காரர் என்பதை மறுத்துரைத்தார்கள். இப்படிப்பட்ட ஐயங்களைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளின் உள்ளங்களில் எழுப்பி, அடுத்த முறை அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களிடத்திற்கு வருகைபுரியும் தருணத்தில், அவர்கள் அவரிடத்தில் உபசார மடலைக் கேட்கும் படிச் செய்ய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள் என்றே தோன்றுகிறது. அவர் வரும்போது அவ்வாறு ஒரு மடலைக் கொண்டுவர வேண்டுமா? கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் புறவினத்தார் வணங்கும் வண்ணம் சிலைகளைத் தொழுதுகொண்டிருந்த நாட்களில் அல்லவா அவர் அவர்களிடத்திற்கு வந்தார்? அவர்தானே அவர்களைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தினார்? கொரிந்துப் பட்டணத்தில் மதிப்புமிக்க ஆத்துமாக்களைக் கொடுத்து அப்போஸ்தலனுடைய ஊழியத்திற்குக் கர்த்தர் தமது ஒப்புதலை முத்திரையிட்டு உறுதிப்படுத்தவில்லையா? அதுவே அதற்குரிய விடை. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளோ **இருதயத்தில் எழுதப்பட்டதும், சகல மனிதராலும் அறிந்து வாசிக்கப்பட்டதுமான** பவுலின் **நிருபமாக** விளங்கினார்கள். அவரைப் பொருத்தமட்டில், பேனாவினாலும்

மையினாலும் எழுதப்பட்ட மடல் தேவையில்லை. அவர்களே அவருடைய ஊழியத்தின் கனி, அவருடைய பாசத்தால் அவர்கள் அதிக அக்கறையோடு போற்றிப் பேணப்பட்டார்கள். அதுமட்டுமின்றி, அவர்கள் **சகல மனிதராலும் அறிந்து வாசிக்கப்பட்டவர்கள்**, அதாவது அவர்கள் மன மாற்றம் பெற்ற உண்மை அப்பகுதி மக்கள் யாவரும் நன்கு அறிந்த செய்தியாகும். இந்த மனிதர்களிடத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்ததை அப்பகுதி மக்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் சிலை வணக்கத்தை விடுத்து தேவனிடமாய்த் திரும்பியவர்கள் என்றும், இப்பொழுதோ அவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்றும் அம்மக்களுக்குத் தெரியும். அவர்கள் பவுல் ஆற்றிய தெய்வீக ஊழியத்தின் நிரூபணமாக விளங்கினார்கள்.

**3:3** மேலோட்டமாகக் காணுங்கால், 3 -ஆம் வசனம் 2 -ஆம் வசனத்திற்கு முரண்பட்டதாகத் தோன்றுகிறது. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் தனது மடலாக விளங்கினார்கள் என்று பவுல் ஏற்கனவே குறிப்பிட்டார். இங்கோ, அவர்கள் **கிறிஸ்துவின் நிருபமாக** இருக்கிறார்கள் என்று அவர் கூறுகிறார். இரண்டாம் வசனத்தில், அவர்கள் அவருடைய இருதயத்தில் எழுதப்பட்ட நிருபம் என்று கூறுகிறார். ஆனால் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுடைய இருதயங்களில் கிறிஸ்து அந்த நிருபத்தை எழுதினார் என்பது 3 -ஆம் வசனத்தின் பின்பகுதியிலிருந்து தெளிவாகப் புலப்படுகிறது. இந்த வேறுபாடுகள் எவ்வாறு ஒன்றோடொன்று இசைவாக்கப்படும். 2 -ஆவது வசனத்தில், கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளே தனது அறிமுகக் கடிதம் என்று பவுல் கூறியிருக்கிறார். 3 -ஆவது வசனத்தில் அதற்குரிய விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வசனங்களையும் ஒன்றோடொன்று கீழ்க்கண்டவாறு இணைப்பதன் மூலம் அந்தத் தொடர்பை நம்மால் அறியமுடியும்: "நீங்கள் எங்களுடைய கடிதமாக இருக்கிறீர்கள்... ஏனென்றால், **நீங்கள் கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள்** என்பது மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது." அதாவது, கொரிந்துப் பட்டணத்தார் பவுல் அப்போஸ்தலனுடைய பரிந்துரை மடலாக விளங்கினார்கள், ஏனெனில் அவர்களுடைய வாழ்க்கையில், கிருபையின் செயலைக் கர்த்தர் நிறைவேற்றியிருந்தார் என்பது எல்லோருக்கும் மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தது. அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவர்கள் கர்த்தரிடமாய் வருவதற்குப் பவுல் கருவியாக விளங்கினார் என்பதன் அடிப்படையில் அவர்கள் அவருடைய சான்றுகளாக விளங்கினார்கள். இந்தக் கருத்து **எங்கள் ஊழியத்தினால் உண்டானவர்கள்** என்னும் சொற்றொடரினால் விளங்குகிறது. அவர்களுடைய வாழ்க்கையில் செயலாற்றியவர் கர்த்தராகிய இயேசுவே ஆவார். ஆனால் அவர் அதனைப் பவுல் ஆற்றிய ஊழியத்தின் மூலமாக நிறைவேற்றினார்.

பவுல் அப்போஸ்தலனுடைய பகைஞர் பயன்படுத்திய பரிந்துரைக் கடிதங்கள் **மையால்** எழுதப்பட்டவையாயிருக்க, பவுலின் நிருபம் **ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினால்** எழுதப்பட்டது, ஆகவே அது தெய்வீகமானது. **மையோ** மங்கிப்போகக் கூடியதும், அழிக்கப்படக்கூடியதும், அழிந்துபோகக் கூடியதுமாயிருக்கிறது. ஆனால் **தேவ ஆவியானவர்** மனிதர்களுடைய இருதயங்களில் எழுதும்போது, அது என்றென்றும் நிலைத்திருக்கிறது. மேலும் கிறிஸ்துவின் கடிதம் **கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலே எழுதப்பட்டிருக்கிறது** என்று பவுல் தொடர்ந்து கூறுகிறார். கொரிந்துப் பட்டணத்துக்கு வருகை புரிந்தோர், வணிகக் கூடங்கள் நிறைந்திருந்த பெருஞ்சாலைகளின் நடுவில் நிற்கும் நினைவுச் சின்னங்களின்மேல் கிறிஸ்துவின் மடல் எழுதியிருக்கக் காணவில்லை. மாறாக, அந்த மடல் அங்கிருந்த கிறிஸ்தவர்களின் இருதயங்களிலும் வாழ்க்கையிலும் எழுதியிருந்ததையே அவர்கள் கண்டார்கள்.

**கற்பலகைகளுக்கும்** இருதயங்களாகிய **சதையான பலகைகளுக்கும்** இடையேயுள்ள வேறுபாட்டைப் பவுல் கூறுகிற தருணத்தில், அவருடைய மனதில் நியாயப்பிரமாணத்திற்கும் நற்செய்திக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் குறித்த எண்ணம் உண்டாயிருக்கும் என்பதில் ஐயமில்லை. சீனாய் மலையில் கற்பலகைகளில் நியாயப்பிரமாணம் எழுதப்பட்டது என்பது நிச்சயம். ஆனால் நற்செய்தியைக் குறித்துப் பார்க்கையில், மனிதர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டதும் கிருபையும் அன்பும் நிறைந்ததுமான செய்தியின் மூலமாக தேவன் மனிதர்களின் கீழ்ப்படிதலை ஐயத்திற்கு இடமற்றபடி பெறுகிறார். இன்னும் சிறிது நேரத்திற்குள்ளாக பவுல் இந்தப் பொருள் குறித்து விரிவாகக் கூறவிருக்கிறார். ஆகவே அவர் இங்கு அதைக் குறித்துச் சிறிதளவே குறிப்பிடுகிறார்.

**3:4** தனது அப்போஸ்தல அதிகாரத்தைக் குறித்தும், தன்னிடம் கர்த்தர் ஒப்புவித்த ஊழியத்

தைக் குறித்தும் பவுல் இத்தகைய நம்பிக்கை யோடு பேசியதைக் கேட்டுக்கொண்டிருக்கிற நாம், "இந்தப் பொருள் குறித்து நீர் இத்தகைய உறுதியோடு எவ்வாறு பேசுகிறீர்?" என்று கேட்க ஏவப்படுகிறோம். அதற்குரிய விடை இந்த வசனத் தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனது அப்போஸ் தல அதிகாரத்தைக் குறித்து அவர் எடுத்துரைத்த வாதம், தன்னைத் தானே புகழுவது போல் தோன்றுகிறது, ஆனால் அதனை அவர் இங்கு மறுத்துரைக்கிறார். அவருடைய நம்பிக்கை **தேவனைச்** சார்ந்தது என்று அவர் கூறுகிறார். அதாவது தேவன் சோதித்துப் பார்க்கையில் அந்த நம்பிக்கை நிலைநிற்கக் கூடியதாயிருந் தது. அவர் தன்னிடத்தில் எந்த நம்பிக்கையும் கொண்டிருக்கவில்லை. அவர் தனது ஆற்றலை யும் சார்ந்திருக்கவில்லை. ஆனால் **கிறிஸ்து வின் மூலமாகவே** நம்பிக்கை பெற்றிருந்தார். மேலும் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளின் வாழ்க்கையில் கர்த்தராகிய இயேசு ஆற்றிய செயலின் மூலமாக, அவருடைய ஊழியத்தின் உண்மைத்தன்மை மெய்ப்பிக்கப்பட்டதை அவர் காண்கிறார். கொரிந்துப் பட்டணத்து விசுவாசி களின் வாழ்க்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம், அப்போஸ்தலனுக்குப் புகழுரையாக விளங்கியது.

**3:5** இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக விளங்குவதற்குத் தேவையான தகுதி தன்னிடத் தில் இருந்தது என்றோ, அந்நிலையைத் தானாக அடைந்திருக்க முடியும் என்றோ பவுல் கருத வில்லை என்பதை இங்கு அவர் மறுபடியும் வலி யுறுத்துகிறார். அவருடைய ஊழியத்திற்குத் தேவை யான அதிகாரத்தை அவர் தன்னிடத்திலிருந்து பெறவில்லை. மாறாக அது உன்னதத்திலிருந்து அவருக்குத் தரப்பட்டது. அப்போஸ்தலன் தன் னைத் தானே பாராட்ட ஆர்வம் கொள்ளவில்லை. **தேவன்** அவரை அந்த ஊழியத்திற்குத் தகுதி யானவராக மாற்றியிராவிடில், அவரால் ஒன்றை யும் நிறைவேற்றியிருக்க முடியாது என்பதை அவர் அறிந்திருந்தார்.

### உ. முந்தின உடன்படிக்கையும் புதிய உடன்படிக் கையும் வேறுபடுத்திக் காட்டப்படுதல் (3:6-18)

**3:6** பவுல் ஊழியம் ஆற்றுவதற்காகத் தான் பெற்றிருந்த சொந்த நற்சான்றுகளைக் குறித்தும், தகுதியைக் குறித்தும் விவரித்துக் கூறியபிறகு, இப்பொழுது ஊழியத்தைப் பற்றி விரிவாகப் பேசத் தொடங்குகிறார். தொடர்ந்து வருகிற வசனங் களில் பழைய உடன்படிக்கையையும் (நியாயப் பிரமாணம்) **புது உடன்படிக்கையையும்** (நற் செய்தி) அவர் வேறுபடுத்திக் காட்டுகிறார். இந்தத் தருணத்தில் அவ்வாறு அவர் செய்வதற்கு நல்ல தொரு காரணம் உள்ளது. அவரைக் கடுமை யாகக் குற்றஞ்சாட்டியவர்கள் யாவரும், யூத மார்க்கக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்னும் கருத்துடைய கிறிஸ்தவர்கள் ஆவார் கள். இவர்கள் நியாயப்பிரமாணத்தையும் கிருபை யையும் ஒன்றிணைக்க முயற்சி செய்தவர்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஒருசில பகுதி களைக் கிறிஸ்தவர்கள் கடைப்பிடிப்பதன் மூலமா கவே தேவனால் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப் பட முடியும் என்று அவர்கள் கற்பித்தார்கள். ஆகவே, புதிய உடன்படிக்கையானது பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் மிகவும் மேம் பட்டது என்பதை அப்போஸ்தலன் இங்கு மெய்ப் பித்துக் காட்டப் போகிறார். அதற்கு முன்னுரை யாக, தேவன் தன்னைப் **புது உடன்படிக்கையின்** தகுதியுள்ள ஊழியக்காரராக மாற்றியிருக்கிறார் என்னும் உண்மையைக் குறிப்பிடுகிறார். உடன் படிக்கை என்பது ஒரு வாக்குறுதியாகவோ, ஒப்பந்தமாகவோ, சாசனமாகவோ இருக்கும் என் பதில் ஐயமில்லை. பழைய உடன்படிக்கையா னது தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்ட சட்ட அமைப்பாக விளங்கியது. அதன் அடிப்படை யில், ஆசிர்வாதம் கீழ்ப்படிதலை நிபந்தனை யாகக் கொண்டிருந்தது. அது கிரியையோடு கூடிய உடன்படிக்கையாகும். அது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே செய்யப்பட்ட ஒப்பந்த மாகும். அதன்படி மனிதன் தனது பங்கை நிறை வேற்றுவானானால், தேவன் தமது பங்கை நிறை வேற்றுவார். ஆனால் அது மனிதனைச் சார்ந் திருந்ததால், அதனால் நீதியை உண்டாக்க முடியவில்லை. **புது உடன்படிக்கையோ** நற் செய்தியாகும். அதன் அடிப்படையில், தேவனு டைய கிருபையினால் கிறிஸ்து இயேசுவுக்குள் ளான மீட்பின் மூலமாக அவர் மனிதனை இலவச மாக ஆசிர்வதிக்க உடன்படிக்கை செய்திருக் கிறார். புது உடன்படிக்கையில் அனைத்து அம்சங்களும் தேவனையே சார்ந்திருக்கின்றன, மனிதனை எதுவும் சார்ந்திருக்கவில்லை. ஆகவே பழைய உடன்படிக்கை நிறைவேற்றக் கூடாத தைப் புது உடன்படிக்கையால் நிறைவேற்ற முடியும்.

நியாயப்பிரமாணத்திற்கும் நற்செய்திக்கும் இடையே காணப்படும், கவனத்தை ஈர்க்கக்கூடிய பல வேறுபாடுகளைப் பவுல் இங்கு சுட்டிக்காட்டு கிறார். முதலாவது வேறுபாட்டை அவர் இந்த

வசனத்தில் கூறி இப்பகுதியைத் தொடங்குகிறார். **அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது. எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.** வேதத்தின் ஒரு பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற உள்ளான பொருளுக்குக் கீழ்ப்படிய மனதற்றவராக, அதனை வெளித்தோற்றத்தின்படியும் எழுத்தின் பிரகாரமாகவும் எடுத்துக்கொண்டு மேலோட்டமாக அதற்குக் கீழ்ப்படிய முயற்சி செய்தால், அது உங்களுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக ஊறு விளைவிக்கும் என்று பொதுவாக இப்பகுதிக்கு விளக்கமளிக்கப்படுகிறது. இதற்குப் பரிசேயர் எடுத்துக்காட்டாக இருக்கின்றனர். அவர்கள் தசமபாகம் செலுத்துவதில் மிக நுணுக்கமாகச் செயல்பட்டார்கள்; ஆனால் அவர்கள் பிறரிடம் இரக்கத்தையும் அன்பையும் காட்டத் தவறிவிட்டார்கள் (மத். 23:23). இவ்வாறு *பொருத்திக்காட்டுவது* தவறற்றதாக இருப்பினும், இது சரியான *விளக்கமன்று*. இந்த வசனத்தில் எழுத்து என்பது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது. ஆவி என்னும் சொல் தேவனுடைய கிருபையின் நற்செய்தியாகும். **எழுத்து கொல்லுகிறது** என்று பவுல் கூறுகையில், அவர் நியாயப்பிரமாணத்தின் ஊழியத்தையே குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாணத்தின் பரிசுத்த கற்பனைகளைக் கைக்கொள்ளத் தவறுகிறவர்கள் யாவரையும் அது ஆக்கினைக்குட்படுத்துகிறது, "பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது" (ரோமர் 3:20). "நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன்" (கலா. 3:10). உயிரைத் தருவதற்கான வழியாக நியாயப்பிரமாணம் செயல்படவேண்டும் என்று தேவன் ஒருக்காலும் திட்டமிடவில்லை. மாறாக, பாவத்தைக் குறித்த அறிவை உண்டாக்கவும், பாவத்தைக் குற்றந்தீர்க்கவுமே அவர் அதனை வடிவமைத்தார். புது உடன்படிக்கையோ இங்கு ஆவி என்று அழைக்கப்படுகிறது. முந்தின உடன்படிக்கையில் காணப்படும் மாதிரிகளும் நிழல்களும் ஆவிக்குரிய நிலையில் நிறைவேறியிருப்பதைப் புது உடன்படிக்கை பிரதிபலிக்கிறது. நியாயப்பிரமாணம் ஒருக்காலும் நிறைவேற்றாதிருந்தும் எதை எதிர்பார்த்ததோ, அதனை இப்போது நற்செய்தி நிறைவேற்றியிருக்கிறது.

J. M. டேவிஸ் இதனைத் தொகுத்துரைக்கிறார்:

> முந்தின உடன்படிக்கை தொடங்கிய நாளில், 3000 பேர் சீனாய் மலையில் கொல்லப்பட்டார்கள். அந்நிகழ்ச்சியானது கொல்லுகிற "எழுத்தின்" ஊழியத்தை விவரித்துக்காட்டுகிறது. ஆவியின் ஊழியமோ உயிர்ப்பிக்கும் ஊழியமாகும். அது பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் இரட்சிக்கப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.[10]

**3:7** இரண்டு உடன்படிக்கைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றிய விவரம் 7,8 ஆகிய வசனங்களில் தொடர்கிறது. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது விளங்கிய மகிமைக்கும், நற்செய்தியோடு தொடர்புடைய மகிமைக்கும் இடையேயுள்ள வேறுபாடே இங்கு குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. 3 மற்றும் 4 - ஆகிய அதிகாரங்களில் மகிமை, மகிமையுள்ள ஆகிய சொற்கள் பதினேழு முறை இடம்பெற்றுள்ளன. முந்தின உடன்படிக்கை **எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியம்** என்று அழைக்கப்பட்டுள்ளது. இது பத்துக் கற்பனைகளையே குறிப்பிடுகிறது. அவற்றைக் கைக்கொள்ளாதவர்கள் மரணத்திற்கு ஆளாவார்கள் என்று அவை அச்சுறுத்தின (யாத். 19:13). நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சியின் தொடர்பில் மகிமை காணப்படவில்லை என்று பவுல் கூறவில்லை. அப்படிப்பட்ட கருத்துக்குச் சற்றேனும் இடமில்லை என்பது உறுதி. சீனாய் மலையில் தேவன் மோசேயினிடம் பத்துக் கற்பனைகளைக் கொடுத்தபோது, தெய்வீக பிரசன்னமும் வல்லமையும் பெரிதான அளவில் வெளிப்படுத்தப்பட்டன (யாத். 19). உண்மையில், மோசே தேவனோடு உரையாடிக்கொண்டிருந்த வேளையில், அவனுடைய முகம் பிரகாசிக்கத் தொடங்கியது. அது தேவனுடைய ஒளிப்பிரகாசத்தின் பிரதிபலிப்பே ஆகும். அதன் நிமித்தம் **இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தார்கள்.** அந்த ஒளி கண்களைக் கூசச்செய்யும் அளவிற்குப் பிரகாசமாயிருந்தது. ஆகவே அவர்களால் மோசேயைத் தொடர்ந்து பார்க்கமுடியவில்லை. எனினும் பவுல் இங்கே அதனைத் தொடர்ந்து, **ஒழிந்துபோகிற மகிமையுடைய அந்த ஊழியம்** என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். மோசேயின் முகத்தில் தோன்றிய ஒளி நிரந்தரமானது அல்லவென்பதே இதன் பொருளாகும். அது தற்காலிகமானது, அது **கடந்து சென்ற மகிமை.** பழைய உடன்படிக்கையின் மகிமை

தற்காலிகமானது என்பதே இதன் ஆவிக்குரிய பொருளாகும். நியாயப்பிரமாணம் ஒரு குறிப்பிட்ட அலுவலைக் கொண்டிருந்தது. அது பாவத்தை வெளிப்படுத்தும் பொருட்டு கொடுக்கப்பட்டது. அது தேவனுடைய பரிசுத்தமான கோரிக்கைகளின் காட்சிப்பொருளாக விளங்கியது. அந்தப் பொருளில் அது மகிமையுடையதாக இருந்தது. ஆயினும், விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படி நியாயப்பிரமாணத்தின் முடிவாகக் கிறிஸ்து வரும்வரை அது கொடுக்கப்பட்டிருந்தது (ரோமர் 10:4). அது *நிழலாயிருந்தது;* அவரோ *நிஜமான பொருளாவார்*. வரப்போகிற நன்மைகளின் படவுருவாகவே அது விளங்கியது. அந்த நன்மையான காரியங்கள் யாவும் உலகரட்சகரில் நிறைவேறின.

**3:8** இவ்வாறு நியாயப்பிரமாணம் மகிமையான குணநலனைப் பெற்றிருந்தால் **ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? ஆவிக்குரிய ஊழியம்** என்னும் சொற்றொடர் நற்செய்தியைக் குறிக்கிறது. தேவ ஆவியானவர் நற்செய்திப் பிரசங்கத்தின் மூலமாகச் செயலாற்றுகிறார். அதன் பிரதிபலனாக இரட்சிப்பின் நற்செய்தியை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு தேவ ஆவியானவர் அருளப்படுகிறார். **எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்** என்னும் சொற்றொடர் எதிர்காலத்தைக் குறிப்பிடுவதில்லை. மாறாக அவ்வாறு நிகழ்வதன் நிச்சயத்தையே குறிக்கிறது. ஓர் உண்மை அல்லது நிபந்தனை நிகழுமென்றால், அதைத் தொடர்ந்து மற்ற நிகழ்ச்சி நடைபெறுவது நிச்சயம்.

**3:9** இங்கு பழைய உடன்படிக்கை **ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம்** என்று அழைக்கப்படுகிறது. அதுவே அதனுடைய விளைவாக இருந்தது. அது எல்லா மனிதர்களுக்கும் ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டுவந்தது, ஏனெனில் ஒருவரும் நியாயப்பிரமாணத்தை முற்று முடிய நிறைவேற்ற முடியவில்லை. ஆயினும் அதனுடன் ஓரளவு மகிமை தொடர்புடையதாக இருந்தது. அது உண்மையான நோக்கமும், அந்நேரத்திற்கு உண்மையான பயனும் உடையதாயிருந்தது. ஆனால் **நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுடைதாயிருக்கிறது.** "நீதியைக் கொடுக்கும் ஊழியமானது, நீதியை வெளிப்படுத்தும் ஊழியமாகும். அதன் மூலமாகவே மனிதர்கள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். இவ்வாறாக நியாயப்பிரமாணத்தின் மூலம் அவர்கள் மீது சுமத்தப்பட்ட ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து அவர்கள் விடுதலையடைகிறார்கள்" என்று இதனைத் திருவாளர் ஹாட்ஜ் விவரிக்கிறார்.[11] நற்செய்தியின் மகிமை சரீரக் கண்களுக்குக் கவர்ச்சியூட்டும் தன்மை கொண்டதல்ல. மாறாக ஆழமானதும் நிரந்தரமானதுமான அந்த மேன்மைகள் ஆவிக்குக் கவர்ச்சியைத் தருகின்றன. கல்வாரியின் மகிமை சீனாய் மலையின் மகிமையை மூடி மறைத்துவிட்டது.

**3:10** ஒரு பொருளில் **நியாயப்பிரமாணம் மகிமைப்பட்டிருந்தது.** ஆயினும் அதனைப் புது உடன்படிக்கையோடு ஒப்பிட்டுக் காண்கையில் அ.ந்து ஒரு சிறிதும் **மகிமைப்பட்டதல்ல.** இந்த வசனமானது இரண்டு உடன்படிக்கைகளையும் மிக ஆழமான முறையில் நமக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறது. அவ்விரண்டு உடன்படிக்கைகளையும் ஒன்றையடுத்து ஒன்றை வைத்துப் பார்க்கையில், ஒன்று மற்றொன்றை முழுவதுமாக மங்கச் செய்து விடுகிறது; அதாவது புது உடன்படிக்கை முந்தினதை முழுவதுமாக விஞ்சி நிற்கிறது. "பெரிதான மகிமை, குறைந்த மகிமையை மங்கச் செய்கிறது. ஏதாவது ஒரு நிலையில் மட்டுமாவது பழையது மகிமையில்லாததாகத் தோன்றுகிறது. ஏனெனில் புது உடன்படிக்கை மிகவும் நிறைவான மகிமையுடையது" என்று A. T. இராபர்ட்சன் கூறுகிறார்.[12] "தனது ஆற்றலோடு சூரியன் பிரகாசிக்கும் போது, வானத்தில் வேறொரு மகிமையும் இருப்பதில்லை" என்று டென்னி என்பார் விளக்குகிறார்.[13]

**3:11 அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால்** (எழுத்தின்படி, *மகிமையுடன்* என்று பொருள்படும்), **நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே** (எழுத்தின்படி, *மகிமையில் மகிமையுள்ளது* என்று பொருள்படும்). **உடன்**, **இல்** என்னும் விகுதிகளை நாம் கவனிக்க வேண்டும். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது மகிமை உடன் வந்தது, ஆனால் புது உடன்படிக்கையில் மகிமை ஒரு முக்கிய கூறாக விளங்குகிறது என்பதே இங்கு காணப்படுகிற சிந்தனை. முந்தின உடன்படிக்கை கொடுக்கப்பட்டபோது மகிமை வருகை புரிந்தது, ஆனால் தேவனுடைய கிருபையின் நற்செய்தியானது *தன்னில்தானே* **மகிமையுள்ளதாக** விளங்குகிறது.

நியாயப்பிரமாணம் நிலையற்றதும் தற்காலிகமானதுமாக இருக்க நற்செய்தியோ நிலையானதாக விளங்குகிறது என்று மேலும் ஒரு வேறுபாடு

இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. **ஒழிந்து போவது** என்னும் சொற்றொடர் பத்துக் கற்பனை களையே குறிக்கிறது, **"எழுத்துகளினால் எழு தப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக் கேதுவான ஊழியம்** (வச. 7). ஏழாம் நாள் கூடு பவர்கள் (Seventh Day Adventists) நியாயப்பிர மாணத்தின் சடங்கு ஒழிந்துபோய்விட்டன, ஆனால் பத்துக் கற்பனைகள் நிலைத்திருக் கின்றன என்று கூறுகிறார்கள். அவர்களுடைய கருத்து இங்கு மறுத்துரைக்கப்படுகிறது.

**3:12** நற்செய்தியின் மகிமை மங்கிப்போவது மில்லை, மறைந்துபோவதுமில்லை என்னும் உறுதியே இங்கு நம்பிக்கை என்று அப்போஸ் தலனால் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட உறுதியான நம்பிக்கையின் நிமித்தம் அவர் **மிக வும் தாராளமாய்ப்** பேசுகிறார். அவர் மறைக்க வேண்டியது ஒன்றுமில்லை. அங்கு திரையைப் பயன்படுத்த வேண்டிய தேவையுமில்லை. இந்த நாட்களில் உலகில் உள்ள பல மதங்களில் மர்மங்களாகத் தோன்றும் பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. புதிதாக மதம் மாறியவர் கள் இவ்வித விநோதமான சடங்குகளைச் செய்து தீட்டைக் கழிக்க வேண்டும். ஒரு சடங்கைச் செய்து முடித்த பிறகு அடுத்த சடங்கைச் செய்ய வேண்டும். ஆனால் நற்செய்தியில் அதுபோலச் செய்யவேண்டிய செயல் எதுவுமில்லை. எல்லாம் தெளிவாகவும் வெளியரங்கமாகவும் இருக்கிறது. இரட்சிப்பு, திரியேகம், பரலோகம், நரகம் போன்ற பொருட்கள் குறித்து நற்செய்தி ஒளிவு மறைவு இன்றியும் மிகுந்த உறுதியோடும் பேசுகிறது.

**3:13 மேலும் ஒழிந்து போவதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப் பாராதபடிக்கு, மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட் டுக்கொண்டதுபோல நாங்கள் போடுகிற தில்லை.** இந்த வசனத்தின் பின்னணி யாத்திரா காமம் 34:29-35 இல் காணப்படுகிறது. கர்த்தரு டைய சமுகத்தில் இருந்த பிறகு மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிவந்தபோது, தன்னு டைய முகம் ஒளி பொருந்தியதாய் இருந்தது என் பதை அறியவில்லை. அவனுடைய முகப்பிர காசத்தைக் கண்ட இஸ்ரவேலர் அவனருகில் செல்ல அஞ்சினார்கள். ஆனால் அவனோ அவர் களைத் தன்னருகில் வரும்படி அழைத்தான். அப்பொழுது அவர்கள் அவனருகில் சென்றார் கள். அதன்பிறகு கர்த்தர் அவனிடத்தில் ஒப்பு வித்த எல்லாவற்றையும் அவர்களுக்குக் கட்ட ளைகளாகக் கொடுத்தான். "மோசே அவர் களோடே பேசி முடியுமளவும், தன் முகத்தின் மேல் முக்காடு போட்டுக்கொண்டிருந்தான்" என்று யாத்திராகமம் 34:33 -ஆம் வசனத்தில் படிக்கிறோம். 2 கொரிந்தியர் 3:13 -இல் மோசே அவ்வாறு செய்ததற்கான காரணத்தை அப்போஸ் தலன் விளக்குகிறார். **ஒழிந்து போவதன் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப்பாராதபடிக்கு, மோசே** அவ்வாறு செய்தான். அவனுடைய முகத் தில் பிரகாசித்த ஒளி மங்கிப்போகக் கூடியதா யிருந்தது. அதாவது, தேவன் அவனிடம் ஒப்பு வித்த நியாயப்பிரமாணம் கொஞ்சக்காலத்திற்கு மட்டுமே மகிமையுடைதாய் இருந்தது. அப் பொழுதே அது மறைந்து போகத் தொடங்கியது. மோசே அதனுடைய முடிவை மக்கள் காணக் கூடாது என்று நினைத்தான். அந்த மகிமையை மோசே மறைக்க வேண்டுமென்று விரும்ப வில்லை, மாறாக அந்த மகிமை மறைந்துபோவ தையே மோசே மறைக்க விரும்பினான். திரு வாளர் F.W கிராண்ட் இதனை மிக அழகாக விளக்குகிறார்: "மோசேயின் முகத்தில் இருந்த ஒளி வேறொருவர் முகத்தில் பிரகாசித்த ஒளிக்கு வழிவிட வேண்டியதாயிருந்தது."[14] அந்த நிகழ்ச்சி யானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது நிகழ்ந்தது. அதன் பலனாகப் புது உடன்படிக்கையின் ஊழியக்காரர் தனது முகத்தின்மேல் முக்காடிட்டுக்கொள்ள வேண்டிய தேவையில்லை. நற்செய்தியின் மகிமை ஒருக் காலும் மங்கிப்போவதுமில்லை மறைந்து போவதுமில்லை.

**3:14 அவர்களுடைய மனது கடினப்பட்டது.** மோசே செய்த செயலின் முக்கியத்துவத்தை இஸ்ரவேல் மக்கள் புரிந்துகொள்ளவில்லை. பற்பல நூற்றாண்டுகளாக யூத மக்கள் அந்நிலை யிலேயே இருந்தார்கள். பவுல் இம்மடலை எழு திய நாட்களிலும்கூட நியாயப்பிரமாணமே இரட் சிப்பின் வழி என்று அந்த மக்கள் அதனைப் பற் றிக்கொண்டிருந்தார்கள், அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

**இந்நாள் வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு நீங்காம லிருக்கிறது.** அதாவது, இந்த மடலை அப்போஸ் தலன் எழுதுகையில், **பழைய ஏற்பாட்டை** யூதர் கள் படித்தபோது, முக்காடிற்குப் பின்னர் மோசே யினால் மறைக்கப்பட்டிருந்த இரகசியத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. நியாயப்பிரமாணத்தின் மகிமை ஒழிந்துபோகிற

மகிமை என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. மேலும் அந்த நியாயப்பிரமாணம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது என்பதையும் அவர்களால் புரிந்துகொள்ள முடிய வில்லை.

அது (*அந்த முக்காடு*) **கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது**. முக்காடு என்னும் சொல் சாய்ந்த எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளது. (அதா வது மொழிபெயர்ப்பு செய்தவர்களால் அது சேர்க்கப்பட்டிருக்கிறது. தமிழில் அச்சொல் இல்லை.) முக்காடு அல்ல, *பழைய உடன்படிக் கையே*, கிறிஸ்துவினாலே நீக்கப்பட்டது என்று சிலர் கருதுகிறார்கள். இதனினும் சிறப்பான பொருள் யாதெனில், **பழைய ஏற்பாட்டைப்** புரிந்து கொள்வதில் இருந்த பிரச்சினை, ஒரு மனிதன் கிறிஸ்துவினண்டை வருகிறபோது நீங்கிப்போகி றது என்பதேயாகும். ஹாட்ஜ் என்பார் இதனை அழகுற விளக்கித் தருகிறார்:

> பழைய ஏற்பாட்டு வேதபகுதிகள் கிறிஸ்துவைக் குறித்து முன்னுரைக்கின்றன என்றும், கிறிஸ்து வரும் முன் வரைந்து தரப்பட்டுள்ள படவுருவங் களாக இருக்கின்றன என்றும் விளக்கமளிக்கப் பட்டால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவை யாக விளங்கும். கிறிஸ்துவைப் பற்றிய அறிவு... பழைய ஏற்பாட்டின்மேல் உள்ள திரையை விலக்குகிறது.[15]

**3:15** இங்கு சொல்லப்பட்டுள்ள உவமையில் சற்று மாற்றம் நிகழ்கிறது. பழைய ஏற்பாட்டு எடுத்துக்காட்டில், மோசேயின் *முகத்தின் மேல்* முக்காடு இருந்தது. ஆனால் இப்பொழுதோ யூத மக்களின் *இருதயங்களின்* மேல் அந்த **முக் காடு இருக்கிறது**. இப்பொழுதும்கூட அவர்கள் *கிரியைகளின்* மூலம் நீதியைப் பெறலாம் என்று நினைக்கிறார்கள். அந்தச் செயல் கல்வாரி சிலுவையில் இரட்சகராகிய இயேசுவினால் செய்து முடிக்கப்பட்டுவிட்டது என்பதை அவர்கள் உண ராதிருக்கிறார்கள். நியாயப்பிரமாணம் அவர் களை முழுவதுமாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது என்பதை அறியாமல் அவர்கள் தங்களது சொந்தத் தகுதியின் அடிப்படையில் இரட்சிப்பைப் பெற முயற்சி செய்கிறார்கள். இரட் சிப்பை அடைய இரக்கத்தையும் கிருபையையும் நாடி, கர்த்தரின் கரத்தினிடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதையும் அவர்கள் அறிய வில்லை.

**3:16** இந்த வசனத்தில் **அவர்கள்** என்னும் சொல் ஒருவர் என்று சில மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது. ஆகவே அச்சொல் தனிமனித னாகிய ஒரு *யூதனையோ*, இஸ்ரவேல் *நாட் டையோ* குறிக்கக் கூடும். பொருள் எதுவா யினும், **கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்**. அதாவது இயேசு மேசியாவாக ஏற்றுக்கொள்ளப்படும்போது முக் காடு நீக்கப்படும்; தெளிவற்ற நிலை மறைந்து போகும். அதற்குப் பின் சத்தியம் வெளிச்சம் பெற்று, நியாயப்பிரமாணத்தில் காணப்படும் மாதிரி களும் நிழல்களும் இஸ்ரவேலின் மேசியாவாகிய தேவனுடைய பிரியமான குமாரனில் நிறைவேறி உள்ளன என்பது விளங்கும். இங்கு இஸ்ரவேல் நாடு குறிப்பிடப்பட்டிருக்குமானால், இந்த வசன மானது இனி வரப்போகிற ஒருநாளை முன்னறி விக்கிறது எனக்கொள்ள வேண்டும். அன்று, ரோமர் 11: 25,26,32 -ஆகிய வசனங்களில் முன்னு ரைக்கப்பட்ட வண்ணம் விசுவாசிக்கும் மீதியான வர்கள் **கர்த்தரிடத்திற்குத் திரும்புவார்கள்.**

**3:17** பழைய ஏற்பாட்டின் திறவுகோலாகக் கிறிஸ்து விளங்குகிறார் என்று பவுல் வலியுறுத்தி வந்திருக்கிறார். இங்கு அவர் **கர்த்தரே ஆவி யானவர்** என்று சொல்லி அந்த உண்மையை மீண்டும் வலியுறுத்துகிறார். பெரும்பாலான மொழிபெயர்ப்புகள், NKJV உட்பட, **ஆவியான வர்** என்னும் சொல் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடும் வண்ணம் தடித்த எழுத்துடன் அச்சிட் டுள்ளன. ஆனால் இந்த வசனத்தின் பின்னணி, கர்த்தரே பழைய ஏற்பாட்டின் மெய்ப்பொருளாக இருக்கிறார் என்னும் அர்த்தத்தைத் தரும்படி அச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது. அதாவது "இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக் கிறது" (வெளி. 19;10). பழைய ஏற்பாட்டில் காணப் படும் மாதிரிகளும் நிழல்களும் கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளன. **கர்த்தருடைய ஆவி**[16] **எங் கேயோ, அங்கே விடுதலையுமுண்டு**. இதன் பொருள், கர்த்தராகிய கிறிஸ்து எங்கெல்லாம் கர்த்தராக அதாவது யெகோவாவாக அறியப்பட்டி ருக்கிறாரோ **அங்கே விடுதலையுமுண்டு**. அதா வது, நியாயப்பிரமாணத்தின் கட்டுகளிலிருந்தும், வேதத்தைப் படிக்கும்போது காணப்படுகிற தெளி வற்ற நிலையிலிருந்தும், அவருடைய முகத்தை நோக்கிப் பார்க்கும்போது, இடையில் உள்ள திரை விலக்கப்பட்டு தெளிவாகக் காணும்படி யான விடுதலை உண்டாகும்.

**3:18** பழைய உடன்படிக்கையில் கர்த்தருடைய மகிமையைக் காண்பதற்கு மோசே மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தான். புது உடன்படிக்கையில் நாம் யாவரும் **கர்த்தருடைய மகிமையைக்** .. காணும்படி நற்பேறு பெற்றிருக்கிறோம். மக்களோடு பேசி முடித்த பிறகு மோசேயின் முகத்திற்கு முக்காடு போடவேண்டியது அவசியமாயிருந்தது. ஆனால் **நாமெல்லாரும் திறந்த முகமாய்** இருக்கிறோம். நாம் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட்டவர்களாக, தேவனிடத்திலும் நம்மிடத்திலும் முழுவதும் நேர்மையுள்ளவர்களாக நடந்துகொள்ளும்போது நமது முகங்களுக்கு நாம் முக்காடு போடவேண்டிய தேவையில்லை. இந்திய நாட்டிற்குச் சென்ற முதிர்ச்சியடைந்த ஊழியர் ஒருவர் "நாம் நம்முடைய பாவமாகிய முக்காட்டையும், நாம் செய்கிற பாசாங்குகளையும், நடிப்புகளையும், உண்மையற்ற தோற்றத்தையும், உலகத்தோடு இணக்கமாக இருக்கச் செய்யும் முயற்சிகளையும், அரைகுறைச் செயல்களையும், உண்மையற்ற முறையில் சொல்லுகிற ஆம், இல்லை என்ற சொற்களையும் களைந்து போடவேண்டும்" என்று கூறினார்.

அடுத்துச் செய்ய வேண்டிய செயல், **கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியில் காண்கிறது போலக்** காண்பதே ஆகும். இங்கு **கண்ணாடி** என்று சொல்லப்பட்டிருப்பது திருமறையேயாகும். நாம் திருமறையினிடத்திற்குச் செல்லுங்கால், கர்த்தராகிய இயேசு, அவருடைய பூரண பிரகாசத்துடன் வெளிப்படுத்தப்படுகிறதைக் காண்கிறோம். அவரை இன்னும் நாம் முகமுகமாய்ச் சந்திக்கவில்லை. மாறாகக் கண்ணாடியில் பிரதிபலிப்பது போலவே திருமறைச் சொற்களில் நாம் அவரைக் காண்கிறோம்.

**கர்த்தருடைய மகிமையையே** நாம் காண்கிறோம் என்பதைக் கவனியுங்கள். இங்கு, இவ்வுலகில் மனிதராக வாழ்ந்த இயேசுவின் ஒழுக்க நெறி அழகினைக் குறித்து பவுல் அதிகமாகச் சிந்திக்கவில்லை. மாறாக அவருடைய தற்போதைய மகிமை, அதாவது, தேவனுடைய வலப்புறம் உயர்த்தப்பட்ட கிறிஸ்துவின் மகிமையையே பவுல் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் புகழ்ச்சியைத் திருவாளர் டென்னி குறிப்பிடுகிறார்:

> அவர் திருத்தந்தையின் அரியணையைப் பகிர்ந்துகொள்கிறார். அவரே சபையின் சிரசாகவும், தெய்வீகக் கிருபையை முழுமையாக உடையவரும் தந்தருளுகிறவராகவும் விளங்குகிறார். அவரே உலகத்தை நியாயந்தீர்க்க வெற்றி சிறக்கிறவர். அவரே தமக்குச் சொந்த மானவருக்காகப் பரிந்து பேசுகிறவர்; சுருங்கக் கூறின் அவரே தமது ராஜரீகப் பணிக்கு உரிய அனைத்துச் சிறப்புகளையும் உடையவர்.[17]

உயிர்த்தெழுந்து, விண்ணகம் ஏகியவரும், மேன்மைப்படுத்தப்பட்டவருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் குறித்த சிந்தனையில் நாம் ஆழ்ந்திருக்கும் வேளையில், **அந்தச் சாயலாகத்தானே மறுரூபப்படுகிறோம்**. இங்கு, ஒரு சொல்லில், கிறிஸ்தவப் பரிசுத்தத்தின் மர்மம் அடங்கியிருக்கிறது. கிறிஸ்துவோடு கூடிய தொடர்பில் நிறைந்திருத்தல் சுயத்தில் நிறைந்திருத்தல் அன்று, அது தோல்வியையே கொண்டுவரும். பிறருடன் நிறைந்திருத்தலும் அன்று, அது ஏமாற்றத்தைக் கொண்டுவரும். மாறாக அது கர்த்தருடைய மகிமையில் நிறைந்திருத்தல் ஆகும். அவ்வாறு செய்கையில் நாம் அதிகமதிகமாய் அவரைப் போலாவோம்.

இவ்வியத்தகு மறுரூபப்படும் செயல்முறை வளர்ச்சி, **மகிமையின்மேல் மகிமையடைவதாக** நடைபெறும். அதாவது, இது மகிமையின் ஒரு படிநிலையிலிருந்து அடுத்த படிநிலைக்கு உயருதல் ஆகும். இது உடனடி மாற்றமன்று. கிறிஸ்தவ வாழ்க்கையில் எந்தவொரு அனுபவமும் ஒரு நொடிப்பொழுதில் அவருடைய சாயலை உருவாக்குவதில்லை. அ.்.து ஒரு திருப்புமுனைக் கட்டமல்ல, ஒரு செயல்முறை வளர்ச்சியாகும். அது நியாயப்பிரமாணத்தின் ஒழிந்து போகிற மகிமையைப் போன்றதன்று. மாறாக எப்பொழுதும் வளர்ச்சியடைகிற மகிமையேயாகும்.

இவ்வியத்தகு செயல்முறை வளர்ச்சியின் ஆற்றல் தேவனுடைய பரிசுத்த ஆவியானவரையே சாரும். **ஆவியாயிருக்கிற கர்த்தராலே** ஆகும். நாம் கர்த்தருடைய மகிமையைக் காணுமிடத்து, அவரை நாம் கற்றுக்கொள்கிறோம், அவரைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கிறோம், போற்றி வழிபடும் நோக்கத்துடன் அவரைக் காண்கிறோம். **ஆவியாயிருக்கிற கர்த்தர்** தாமே, கிறிஸ்துவுக்கு ஒப்பாக வளர்ச்சியடைகிற அற்புதத்தை நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றுகிறார்.

கர்த்தரை நோக்கிப் பார்த்த ஸ்தேவான் எவ்வாறு மாற்றம் பெற்றார் என்பதைத் திருவாளர் டார்பி குறிப்பிடுகிறார்.

> ஸ்தேவான் கல்லெறியப்படுகையில், அதனை நாம் அவனிடம் காண்கிறோம். அவன் வானத்தை

நோக்கி தேவனுடைய மகிமையையும் இயேசுவின் மகிமையையும் கண்டான். "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று கிறிஸ்து கூறினார். தேவனுடைய மகிமையில் இயேசுவைக் கண்ட ஸ்தேவான் அந்த ஜெபத்தைத் தனக்குரியதாக ஆக்கிக்கொண்டான்; "இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று அவன் ஜெபித்தான். மேலும் சிலுவையில் தொங்கினபோது கிறிஸ்து, "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று கூறினார். ஸ்தேவான், "கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்றான். அவன் கிறிஸ்துவின் சாயலுக்கு மாற்றம் பெற்றான்.[18]

புது உடன்படிக்கையின் எல்லை கடந்த மகிமையைக் குறித்துச் சிந்தியுங்கள். பழைய உடன்படிக்கையில் ஒரே ஒரு மனிதன் மட்டுமே தனது முகத்தில் மகிமையைப் பெற்றிருந்தான். இன்றைய நாட்களில் செங்குருதியால் விலைக்கு வாங்கப்பட்ட தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் இந்த நற்பேறு உரிமையாக விளங்குகிறது. மேலும், தேவனின் மகிமையை வெறுமனே நம்முடைய முகங்களில் பிரதிபலிக்காமல், புதிய உடன்படிக்கையின் காரணமாக நாம் யாவரும் உண்மையாகவே **ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்** (எழுத்தின்படி, உருமாற்றம் பெறுதல்). மோசேயின் முகம் மகிமையைப் பிரதிபலித்தது, நம்முடைய முகங்களோ உட்புறத்திலிருந்து ஒளிச்சுடர்களைப் பொழிகின்றன.

இவ்வாறு, புது உடன்படிக்கையானது எவ்வாறு பழைய உடன்படிக்கையிலிருந்து வேறுபட்டதாக விளங்குகிறது என்பதைப் பவுல் மறைபொருளாகவும் ஆழ்ந்த ஆவிக்குரிய ஆராய்ச்சிக் கட்டுரையாகவும் எழுதி முடிக்கிறார்.

### ஊ. தெளிவான நற்செய்தியைப் பிரசங்கிக்க வேண்டிய கடமை (4:1-6)

**4:1** நான்காவது அதிகாரத்தின் முதல் ஆறு வசனங்களில், கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் யாவரும் நற்செய்தியின் கருத்தை மிகத்தெளிவாக வழங்க வேண்டிய, உள்ளார்வமிக்க பொறுப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்று பவுல் வலியுறுத்துகிறார். அவ்வாறு வழங்குவதில் எவ்வித முகத்திரைக்கும் இடமில்லை. அதில் எதையும் மறைக்கக் கூடாது, புரிந்துகொள்ளக் கூடாதது எதுவுமில்லை. எல்லாம் தெளிவாகவும் நேர்மையாகவும், கபடற்றதாகவும் இருக்க வேண்டும்.

புது உடன்படிக்கையின் ஆற்றல் மிக்க ஊழியராகச் செயல்படத் தன்னை தேவன் நியமித்த வியத்தகு செயலைக் குறித்துப் பவுல் விவரித்துக் கொண்டிருந்தார். அந்தச் சிந்தனையில் ஒரு குறிப்பை இப்பொழுது அவர் எடுத்துக்கொள்கிறார். கிறிஸ்தவ **ஊழியத்தின்** மாபெரும் நன்மதிப்பை உணர்ந்தவராக, பவுல் தன்னைப் போன்ற ஊழியர் எவரும் உள்ளம் **சோர்ந்து போகிறதில்லை** என்று கூறுகிறார். கிறிஸ்தவ ஊழியத்தில் சோர்வடைவதற்கும், ஊக்கம் குன்றிப் போவதற்கும் பற்பல சந்தர்ப்பங்கள் ஏற்படுவதுண்டு, ஆயினும் தேவை ஏற்படும் ஒவ்வொரு சமயத்திலும் கர்த்தர்தாமே இரக்கத்தையும் கிருபையையும் அளித்து உதவி செய்கிறார். ஆகவே உற்சாகம் குன்றச் செய்வது எவ்வளவு பெரிதாயிருந்தாலும், உற்சாகம் அடையச் செய்வது அதனினும் பெரிதாயிருக்கும்.

பவுல் **சோர்வடையவில்லை**. கோழைத்தனமாகவும் அவர் நடந்துகொள்ளவில்லை. மாறாக, வெல்வதற்கரியதாகத் தோன்றும் தடைகளை எதிர்த்து அவர் உற்சாகத்தோடு முன்னேறினார்.

**4:2** இவ்விரண்டாம் வசனத்திற்குத் திருவாளர் பிலிப்பு வண்ணப்பொலிவுடன் பொழிப்புரை வழங்குகிறார்:

> நாங்கள் ஏமாற்று வித்தை எதையும் செய்கிறதில்லை, தந்திரமான யுக்திகளைக் கையாளுவதில்லை, தேவனுடைய திருமறையை நேர்மையற்ற முறையில் மாற்றி மோசடி செய்வதுமில்லை. நாங்கள் தெளிவான சத்தியத்தையே பேசுகிறோம். ஆகவே தேவனுக்கு முன்பாக, எல்லா மனிதருடைய மனச்சாட்சிக்கும் எங்களை நாங்களே உத்தமரென்று விளங்கப் பண்ணுகிறோம்.

கொரிந்து சபைக்கு வந்திருந்த கள்ள போதகர்களைக் குறித்து அப்போஸ்தலன் மறுபடியும் நினைத்துப் பார்த்தார் என்பதில் ஐயமில்லை. கவர்ச்சியூட்டிப் பாவம் செய்யத் தூண்டும் வெட்கக்கேடான செயல்கள், சத்தியத்தை மாற்றிக் கூறும் தந்திரமான ஏமாற்று வித்தைகள், வஞ்சகமான வாக்குவாதங்கள், திருமறை வசனங்களில் கலப்படம் செய்தல் போன்ற வழிமுறைகளைப் பொல்லாத ஆவிகள் கடைப்பிடிப்பது போலவே,

இந்தக் கள்ள போதகர்களும் கடைப்பிடித்தார் கள். நியாயப்பிரமாணத்தையும் கிருபையையும் ஒன்றிணைக்கும்படி அவர்கள் செய்த செயலையே பவுல் இங்கு தேவ வசனத்தைப் புரட்டுதல் என்று குறிப்பிடுகிறார் என்பதில் ஐயமில்லை.

அப்போஸ்தலன் கடைப்பிடித்த முறையோ முற்றிலும் வேறாயிருந்தது. அது **சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்** என்னும் சொற்களால் விவரிக்கப்பட்டிருக்கிறது. சத்தியம் இரண்டு வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. தெளிவாகவும், புரிந்துகொள்ளக் கூடிய வகையிலும் சத்தியத்தைக் கூறி நாம் அதனை வெளிப்படுத்துகிறோம். மேலும் நாம் அதன்படி வாழ்ந்து காட்டும்போது, நம்முடைய மாதிரியைக் காண்கிறவர்கள் சத்தியம் வெளிப்படுகிறதை அறிந்துகொள்கிறார்கள். இவ்விரு முறைகளையும் பவுல் பயன்படுத்தினார். அவர் நற்செய்தியைப் பிரசங்கித்தார். மேலும் அவர் தனது சொந்த வாழ்க்கையில் அதற்குக் கீழ்ப்படிந்தார். அவ்வாறு செய்து அவர் **தேவனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனச்சாட்சிக்கும் தன்னையே உத்தமரென்று** காண்பிக்க நாடுகிறார்.

**4:3** கட்டளைகள் மூலமாகவும், நடைமுறை வாழ்க்கை மூலமாகவும் தேவனுடைய சத்தியத்தை மனிதர்களுக்குத் தெளிவாக விளங்கச் செய்ய வேண்டுமென்று அப்போஸ்தலன் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டதைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறார். **சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால்**, அல்லது சிலருக்கு அது மறைவாயிருந்தால் நிச்சயமாக அது தேவனுடைய தவறன்று. அது தன்னுடைய தவறாகவும் இருக்கக் கூடாது என்றே பவுல் எதிர்பார்க்கிறார். மேலும் அவர் இந்தச் சொற்களை எழுதுகிற வேளையில் நற்செய்தியைச் சிலர் ஏற்க முற்றிலும் மனதின்றி இருக்கிறார்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவர்கள் யார்? அவர்கள் **கெட்டுப் போகிறவர்களே** ஆவார்கள். ஏன் அவர்கள் அவ்வாறு கண்குருடராக்கப்பட்டிருக்கிறார்கள்? அதற்குரிய விடை அடுத்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**4:4** சாத்தானே குற்றவாளி. அவன் இங்கு **இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்** என்று அழைக்கப்படுகிறான். விசுவாசிக்காத மனிதர்களுடைய மனதிற்கு மேலாகத் திரையிடுவதில் அவன் வெற்றியடைந்திருக்கிறான். **தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிச்** செய்து அவர்கள் இரட்சிப்படையாதபடி அவர்களை அவன் நிலையான இருளுக்குள் அடைத்து வைத்திருக்கிறான்.

இப்பிரபஞ்சத்தில், சூரியன் எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அதனை எப்பொழுதும் நாம் காண்கிறதில்லை. ஏதோ ஒன்று அதற்கும் நமக்கும் இடையில் இருந்து மறைத்துக்கொண்டிருப்பதே அதற்குக் காரணம். நற்செய்தியும் அது போன்றதுதான். **சுவிசேஷத்தின் ஒளி** எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. மனிதர்களுடைய இருதயங்களில் பிரகாசிக்க வேண்டும் என்று தேவன் எப்பொழுதும் விரும்புகிறார். ஆனால் தேவனுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையில் சாத்தான் பலவிதமான தடைகளை ஏற்படுத்துகிறான். பெருமை, எதிர்த்துச் செயல்புரிதல், சுயநீதி, இன்னும் நூற்றுக் கணக்கான செயல்கள் இவற்றில் ஏதேனும் ஒன்று மேகம் போன்று இடையில் தோன்றி மறைக்கக் கூடும். ஆனால் இவை யாவும் உள்ளத்தில் **சுவிசேஷ ஒளி** ஊடுருவிச் செல்வதைத் திறம்படத் தடைசெய்கின்றன. மனிதர்கள் இரட்சிப்படைவதை சாத்தான் முற்றிலும் விரும்புவதில்லை.

**சுவிசேஷமானது மகிமையடைந்த கிறிஸ்துவோடு** சம்பந்தம் கொண்டிருக்க வேண்டும். விசுவாசிகளுடைய காட்சிக்கு நாசரேத்தூர் தச்சர் அறிமுகப்படுத்தப்படுகிறதில்லை. அவமானச் சிலுவையில் கரங்களை விரித்தவண்ணம் தொங்குகிற கிறிஸ்துவை மட்டுமே அது காட்டுகிறதில்லை. மாறாக, மரணமடைந்து, அடக்கம் பண்ணப்பட்டு, மீண்டும் உயிர்த்தெழுந்து, இப்போது விண்ணகத்தில் தேவனுடைய வலப்புறத்தில் வீற்றிருப்பவராகவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இருக்கிறார். விண்ணகத்தில் மகிமையடைந்த தேவ குமாரனே, விசுவாசிகளின் விசுவாசத்திற்குரிய இலக்காக இருக்கிறார்.

**4:5** இந்த ஒரே வசனத்தில் பிரசங்கிக்கிற ஒருவருக்கு மிகவும் எளிமையான கருப்பொருளும், மிகச் சிறந்த கருப்பொருளும் ஒருசேர அடங்கியிருப்பதை நாம் காண்கிறோம். மிகவும் எளிமையான கருப்பொருள் நம்மைப் பற்றியது (நாங்கள் எங்களையே) சொல்லிலும், மிகச்சிறந்த கருப்பொருள் *கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்* பற்றியதாகவும் இருக்கின்றன.

யூதமார்க்கத்து போதனைகள் சிலவற்றைக் கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று கற்பித்தவர்கள் தங்களைக் குறித்துப் பேசுவதி

லேயே பெரும்பாலும் விருப்பங்கொண்டிருந்தார் கள் என்பது தெளிவு. அப்படிப்பட்ட கூட்டத்தாரிடத் திலிருந்து பவுல் தன்னை வேறுபடுத்திக்கொள் கிறார். அத்தகைய தகுதியற்ற பொருள்பற்றிப் பேசி மக்களுடைய நேரத்தை வீணாக்க அவர் விரும்பவில்லை. அவருடைய பிரசங்கத்தின் கருப்பொருள் கிறிஸ்து இயேசுவாகிய கர்த்தரைப் பற்றியதாகவே இருந்தது. மனிதர்கள் எங்கே வந்து தங்களுடைய கால்களை முடக்கி இயசு கிறிஸ்துவைப் பணிந்துகொள்ள விரும்பினார் களோ, தங்களுடைய வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணித்துப் புகழாரம் செலுத்தினார்களோ அவ்விடத்திற்கே அவர் அவர்களை அழைத்துச் செல்ல விரும்பினார்.

அப்போஸ்தலன் தனது உடன் ஊழியர் குழுவை, **இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக் காரரென்று** அறிமுகப்படுத்தினார். அவ்வாறு செய்யும் வேளையில், அவர் தன்னையும் தன் உடன் ஊழியர்களையும் பின்னுக்குத் தள்ளி மறைத்துக்கொண்டார். அவர்கள் வெறும் அடிமை களாகவே இருந்தார்கள். எவ்வழியிலாவது கர்த்தராகிய இயேசுவினிடத்திற்கு மனிதர்களை அழைத்துச் செல்ல அவர்கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தார்கள்.

**4:6** ஒரு பாவியின் மனமாற்றத்தை, படைப்பின் தொடக்கத்திலே வெளிச்சம் உண்டானதிற்குப் பவுல் இங்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். ஆதியில், **தேவன் இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிர காசிக்கும்படி** கட்டளையிட்டார். அவர், "வெளிச் சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று" (ஆதி. 1:3). ஆதியில், **இருளி லிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கும்படி** கட்டளையிட்ட அதே **தேவன்**, எங்கள் இருதயங் களிலே பிரகாசித்தார் என்று பவுல் இங்கே இப் பொழுது கூறுகிறார். இது மிக அழகுடன் திகழ் கிறது. முதலாவது படைப்பில், தேவன் வெளிச்சத் தைப் பிரகாசிக்கும்படி **கட்டளையிட்டார்**. ஆனால், புதிய படைப்பில் தேவன்தாமே, நம்முடைய இருதயங்களுக்குள்ளாகப் பிரகாசிக்கிறார். இது எத்தனை அதிகமாக நமக்குத் தனிப்பட்ட முறை யில் சொந்தமானதாயிருக்கிறது!

புதிய படைப்பில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளுக்கு ஒப்பான படவுருவங்களாக ஆதியாகமம் முதல் அதிகாரத்தின் முன்பகுதியில் விவரிக்கப்பட் டுள்ள நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. முதலில் தேவன் மனிதனைப் பாவமற்றவனாகவே படைத் தார். ஆனால் பாவம் அவனிடம் பிரவேசித்தது, அத னுடன் மிகப்பெரிய அளவில் இருளும் வந்தது.

நற்செய்தி பிரசங்கிக்கப்படுகிறபோது, தேவனு டைய ஆவியானவர் ஒரு மனிதனுடைய இருதயத் தின்மேல் அசைவாடுகிறார். அது முதல் படைப் பிற்குப் பிறகு அவர் ஜலத்தின்மேல் அசைவாடிய செயலைப் போல இருக்கிறது.

அந்த மனிதனுடைய இருதயத்திற்குள்ளாக தேவன் பிரகாசித்து, அவன் ஒரு குற்றமுள்ள பாவி என்றும், அவனுக்கு ஓர் இரட்சகர் தேவை என்றும் உணர்த்துகிறார். "ஆதியாகமத்தில் பொருட் களாலான படைப்பு வெளிச்சத்தோடு தொடங் கியது. அதுபோலவே ஆவிக்குரிய படைப்பிலும் நிகழ்கிறது. பரிசுத்த ஆவியானவரால் தேவன் நம்முடைய இருதயங்களில் பிரகாசிக்கிறார். அத னையடுத்து ஆவிக்குரிய வாழ்க்கை தொடங்கு கிறது" (தெரிந்தெடுக்கப்பட்டது).

**தேவன் நம்முடைய இருதயங்களில் பிர காசிப்பதற்கான** காரணத்தை இந்த வசனம் தொடர்ந்து விளக்குகிறது. **தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமை யின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக** என்று அதிகாரபூர்வமான மொழி பெயர்ப்புகளில் சொல்லப்பட்டிருக்கிறது. **தேவன் தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றச்** செய்வதே அவருடைய நோக்கம் என்று இங்கு வெளிப்படுகிறது. இதனைத் திரு வாளர் J. N. டார்பி குறிப்பிடத்தக்க அளவு மாற்றித் தருகிறார். "தேவனுடைய மகிமையின் அறி வாகிய ஒளி இயேசு கிறிஸ்துவின் முகத்தில் பிர காசிப்பதற்காக" என்று அந்த புதிய மொழி பெயர்ப்பு கூறுகிறது. அதாவது, இந்த **அறிவை** நமக்குத் தரும்படி மட்டும் தேவன் நம்முடைய இருதயங்களில் பிரகாசிக்கவில்லை. மாறாக நம் மூலமாக இந்த அறிவு பிறரிடம் *பிரகாசிக்க வேண்டும்*, நாம் பெற்றிருக்கிற ஆசிர்வாதங் களை நாம் மட்டுமே அனுபவிக்க வேண்டும், நாமே அவற்றிற்கு எல்லையாக விளங்கவேண் டும் என்பது சரியன்று; நாம் அவற்றின் வாய்க்கால் களாக இருக்கிறோம்" (தெரிந்தெடுக்கப்பட்டது).

இதற்கு வேத வசனத்தின் அடிப்படையிலான எடுத்துக்காட்டைப் பவுலின் வாழ்க்கையிலே காணவியலும். தமஸ்குவுக்குச் செல்லும் வழி யில், தேவன் அவருடைய இருதயத்தில் பிரகாசித் தார். தன்னால் வெறுக்கப்பட்டவரும், யூத நாட்டில் ஒரு கல்லறையில் அடக்கம் பண்ணப்

பட்டவரும் மகிமையின் கர்த்தர் என்பதை அவர் அறிந்தார். அன்று முதல் அவர் எங்கும் சென்று இயேசு கிறிஸ்துவின் முகத்தில் தோன்றிய தேவனுடைய அறிவின் ஒளியைப் பரப்பினார்.

### எ. விண்ணுலகத்தை இலக்காகக் கொண்ட மண்பாண்டம் (4:7-18)

**4:7** சொல்ல வேண்டிய செய்தி ஒளிவு மறைவு இன்றி, தெளிவாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்துப் பேசிய பிறகு, அப்போஸ்தலனாகிய பவுல், வியத்தகு நற்செய்தியாகிய பொக்கிஷம் ஒப்புவிக்கப்பட்ட மனிதர்களாகிய உபகரணங்களைக் குறித்து எண்ணுகிறார். மகிமை நிறைந்த சுவிசேஷச் செய்தியே இங்கு **பொக்கிஷம்** என்ற மொழிக்கப்படுகிறது. மறு புறத்தில், பலங்குன்றிய மனிதனுடைய சரீரமே **மண்பாண்டமாக** இருக்கிறது. இரண்டிற்குமுள்ள வேறுபாடு மிகவும் பெரியது. சுவிசேஷமானது எத்திசையில் திருப்பினாலும் மிகப்பிரகாசமாக ஒளிவீசும் விலைமதிப்பு மிகுந்த வைரக்கல் போன்றது. விலைமதிப்பு மிக்க அத்தகைய வைரம் பலங்குன்றியதும் எளிதில் உடையக்கூடியதுமான மண்பாண்டத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது!

சிந்தனைக்கு எட்டிடாத
விண்ணுலகப் பெருஞ்செல்வம்
ஏந்திடுவர் அழகற்ற
உருக்குலைந்த பாத்திரங்கள்.
ஒளிவீசும் கிறிஸ்துவினை
உலகிற்குக் காட்டிடுவர்,
புவிவாழும் தூயவர்கள்
பேருவகை கொள்வாரே!

வறுமையிலே வாடினாலும்
நற்பேற்றைப் பெற்றவராய்
பசியுற்ற நானிலத்தில்
சுமந்தவாறே வாழ்ந்திடுவர்.
தளர்ந்திடாத கரங்களிலே
தரப்பட்ட பெருஞ்செல்வம்
இறைவனது பெரும்ஈவாய்த்
திருமைந்தன் திகழ்கிறாரே!

வெறுமையும் தாழ்மையும்
இவர்களது நற்குணங்கள்
சிறுமையுடன் வாழ்ந்திடுவர்
கவனிப்பார் அற்றவராய்,
திருத்தந்தை பார்வையினில்
பரிசுத்த பாத்திரங்கள்
மகிமைநிறைப் பெருஞ்செல்வம்
கிறிஸ்துவினால் நிறைந்தவர்கள்!

மகிமைதனை மறைத்துநிற்கும்
உலகத்தை வெறுத்திடுவர்,
ஒளிச்சுடரை மங்கச்செய்யும்
தற்புகழை ஒழித்திடுவர்,
ஒப்பில்லாக் கிறிஸ்தரசர்
வியப்புமிகு கதைகூறும்
வெறுமையான பாத்திரங்கள்
கிறிஸ்துவினால் நிறைந்தவர்கள்!
– பிரான்சஸ் பேவன்

**இந்தப் பொக்கிஷமானது** இவ்வாறு **மண்பாண்டங்களில்** சுமக்கப்படவேண்டும் என்று தேவன் நியமித்ததன் காரணமென்ன? **இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்க** வேண்டும் என்பதே இக்கேள்விக்கான விடையாகும். மனிதர்கள் மனிதத் தன்மையுள்ள உபகரணங்களால் நிறைந்திருக்க வேண்டுமென்று தேவன் விரும்பவில்லை. மாறாக அவருடைய சொந்த வல்லமையினாலும் மகத்துவத்தினாலும் அவர்கள் நிறைந்திருக்க வேண்டுமென்றே அவர் எதிர்பார்க்கிறார். ஆகவே அவர் வேண்டுமென்றே பலவீனர்களும், பெரும்பாலும் கவர்ச்சியற்றவர்களுமான மனிதர்களிடமே நற்செய்திச் செல்வத்தை வழங்கியுள்ளார். எல்லாப் புகழும் மகிமையும் படைப்புகளையல்ல, படைப்பாளரையே சாரவேண்டும்.

நாம்பெற்ற பொறுப்புகளை நிறைவேற்ற
நமதாற்றல் போதாது
சீருடனும் சிறப்புடனும் செய்திடுவோம்
அவருடைய வல்லமையால்
புகழ்மாலை நமக்கல்ல, மகிமைநிறை
கர்த்தருக்கே உரியதையா
இவ்வுண்மை அறிவதாலே நம்முள்ளம்
பேருவகை பெற்றிடுதே!
– ஹௌடன்

ஜோவெட் கூறுகிறார்:

> பெருஞ்செல்வத்தின் மகிமையைப் பாத்திரம் எடுத்துக்கொள்ளுமென்றால், அங்கு ஏதோ தவறு இருக்கிறது என்பதே பொருளாகும். நகையைக் காட்டிலும் அதை வைக்கும் பெட்டகம் கவர்ச்சியாக இருக்குமென்றால் அதுவும் தவறே. மாட்டி வைக்கப்பட்டிருந்த சட்டத்தைக் காட்டிலும் சித்திரம் அழகு குறைந்தோ; விருந்து

சாலையில் பரிமாறப் பயன்படும் பாத்திரத்தைக் காட்டிலும் உணவு சுவை குறைந்தோ இருக்கு மென்றால் அது விபரீதமாய்க் காணப்படும். கிறிஸ்தவ ஊழியத்தில் "மகத்துவமுள்ள வல் லமை" தேவனுடையதாயிராமல் நம்முடைய தாக இருக்குமென்றால் அங்கு ஏதோ சாவுக் கேதுவானது உள்ளது என்பதே பொருளாகும். அப்படிப்பட்ட வல்லமை விரைவில் மறைந்து போகும் தன்மையுடையது. பச்சைப் பூண்டு விரைவாக உலர்ந்து விழுவதுபோல, அந்த மகிமையும் புறக்கணித்துத் தள்ளப்படும்.[19]

இந்த ஏழாவது வசனத்தைப் பவுல் எழுதிய போது, அவர் நியாயாதிபதிகள் 7 -ஆவது அதிகா ரத்தை எண்ணிப் பார்த்திருப்பார் என்பது பெரும் பாலும் நிச்சயம். எக்காளங்கள், வெறும்பானை கள், தீவட்டிகள் ஆகியவற்றுடன் கிதியோன் தனது படையைப் போருக்கு ஆயத்தப்படுத்தினான் என்று அங்கு குறித்து வைக்கப்பட்டிருக்கிறது. முன்குறிக்கப்பட்ட சைகை காட்டப்படும்போது, வீரர்கள் யாவரும் எக்காளங்களை ஊதி பானை களை உடைக்க வேண்டும். அவ்வாறு பானை களை உடைக்கும்போது தீவட்டிகள் பளிச் சென்று ஒளிவீசும். அது பகைஞரை மாபெரும் அச்சத்திற்குள்ளாக்கும். அங்கு முந்நூறு பேர் கொண்ட படைக்குப் பதிலாக மிகப்பெரிய படை தங்களை நோக்கி வருகிறது என்று எதிரிகள் நினைத்துக்கொண்டார்கள். கிதியோனின் நிகழ்ச் சியில் பானைகள் உடைக்கப்பட்டபோதே ஒளி வீசியது, அதுபோலேவே நற்செய்தியிலும் காணப் படுகிறது. இதுவே இங்கு நாம் கற்கிற பாடம். மனித சாதனங்கள் உடைக்கப்பட்டு, கர்த்தருக்கு ஒப்புவிக்கப்படும்போதே நம் மூலமாக, நற்செய்தி அதனுடைய எல்லா கம்பீரத்துடன் ஒளிவீசத் தொடங்கும்.

**4:8** பொக்கிஷமானது மண்பாண்டங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்பதால் ஒருபுறம் தோல்வி உண்டாவது போலத் தோன்றினாலும், மறுபுறம் நிலையான வெற்றி கிடைக்கும் என்று அப்போஸ் தலன் இப்பொழுது தொடர்ந்து விளக்கம் அளிக் கிறார். வெளியரங்கமான தோற்றத்தின்படி எல்லா வற்றிலும் பலவீனம் காணப்படும், ஆனால் உண் மையில் ஒப்பில்லாத வல்லமை அங்கு விளங் கும். **நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட் டும் ஒடுங்கிப்போகிறதில்லை** என்று அவர் கூறுகையில், பகைஞராலும் பிரச்சினைகளாலும் அவர் தொடர்ந்து **நெருக்கப்பட்டார்**. ஆனாலும் தடையின்றி நற்செய்தியைப் பிரசங்கிக்க முற்றி லும் இடர்ப்பாடு உண்டாகவில்லை என்னும் பொருள்படவே அவர் இங்கு பேசுகிறார்.

**கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை.** மனித எண்ணத்தின்படி காண்கையில், தனது பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு உண்டு என்பதை யும்கூட பவுல் அவ்வப்போது அறிந்திருக்கவில்லை. ஆனாலும் மனமுறிவு உண்டாகும் நிலை அவரு டைய வாழ்க்கையில் ஏற்பட தேவன் அனுமதிக்க வில்லை. தப்பிச்செல்வதற்கு இயலாதபடி ஒரு குறுகிய இடத்திற்குள்ளாக அவர் கொண்டுவரப் பட்டதில்லை.

**4:9 துன்புறுத்தப்பட்டும் கைவிடப்படுகிற தில்லை.** சில வேளைகளில், அவர் தன்னுடைய பின்புறக் கழுத்தில் பகைவரின் சூடான மூச்சை உணர முடிந்தது. ஆனாலும் அவரைப் பகைவரின் கரங்களில் தேவன் ஒருக்காலும் ஒப்படைக்க வில்லை. **கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிற தில்லை**. பவுல் பலமுறை ஊழியத்தின்போது காயப்பட்டு ஆபத்தான நிலையில் இருந்தார். ஆனாலும் கர்த்தர் அவரை மீண்டும் எழுப்பி மகிமை நிறைந்த நற்செய்தியை ஏந்திச் செல்லும் படி பலப்படுத்தினார் என்பதே இதன் பொருளாகும்.

எட்டு மற்றும் ஒன்பது ஆகிய வசனங்களைப் புதிய வேதாகம விளக்கவுரை (New Bible Commen tary) கீழ்க்காணும் வண்ணம் பொழிப்புரையாகத் தருகிறது:

"உள்ளே அடைத்து வைக்கப்பட்டோம், ஆனா லும் முடமாக்கப்படவில்லை; என்ன செய்வ தென்று தெரியவில்லை, ஆனாலும் நம்பிக் கையை முற்றிலுமாக இழந்துபோகவில்லை; மனிதர்களால் வேட்டையாடப்பட்டோம், ஆனால் தேவனால் கைவிடப்படவில்லை; அடிக்கடி கீழே தள்ளப்பட்டோம், ஆனால் ஒருமுறைகூட முழுவதும் அழிக்கப்படவில்லை."

இவ்விதமான சோதனைகள் மற்றும் பரீட்சை களின் ஊடாகத் தமது ஊழியர் கடந்து செல்ல வேண்டுமென்று கர்த்தர் ஏன் அனுமதித்தார் என்று நாம் வியப்படையக் கூடும். அவர் தனது வழியில் எவ்விதமான இடர்ப்பாடுகளும் இன்றி ஊழியம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தால் இன்னும் திறம்படச் செயலாற்றியிருப்பாரே என்றும் நாம் நினைக்கக்கூடும். ஆனால் இந்த வசனம் முற்றிலும் மாறான கருத்தைக் கற்பிக்கிறது. தமது ஊழியக்காரர்கள் நோய், வருத்தம், பேரிடர், உபத்திரம், தொல்லைகள், துயரங்கள் ஆகியவற்றின் ஊடாகச் செல்லவேண்டும் என்று

தேவன் தமது வியத்தகு ஞானத்தில் மிகச்சரியாக முடிவு செய்திருக்கிறார். மண்பாண்டங்கள் உடைக்கப்பட்டு அதன் மூலமாக நற்செய்தி ஒளி மிகத்தெளிவாகப் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவையாவும் திட்டமிடப்பட்டுள்ளன.

**4:10** தேவனுடைய ஊழியக்காரனின் வாழ்க்கை எப்பொழுதும் தொடர்ந்து **மரணமடைகிறதாக** இருக்கிறது. கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில், எப்பொழுதும் கொடுமைக்கும் உபத்திரவத்துக்கும் ஆளாகக்கூடிய நிலையில்தான் இருந்தார். அதுபோலவே அவரை அடியொற்றிப் பின்பற்றுகிறவர்களும் அதேவிதமான நடத்துதலையே சந்திக்க நேரிடும். ஆனால் அது தோல்வி அல்ல. அதுவே வெற்றிக்கான வழி. இவ்வாறு நாம் நாள்தோறும் மரணமடைவதாலே பிறருக்கு ஆசிர்வாதம் வருகிறது.

இந்த ஒரு வழியாகவே இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை நம்முடைய சரீரங்களின் மூலமாக வெளிப்படக் கூடும். **இயேசுவினுடைய ஜீவன்** என்று சொல்லப்பட்டிருப்பது, அவர் இந்த உலகில் மனிதராக வாழ்ந்த வாழ்க்கையை முதன்மையாகக் குறிப்பதில்லை, மாறாக தேவனுடைய குமாரனாக இப்பொழுது மகிமைப்படுத்தப்பட்டிருக்கிற வாழ்க்கையையே குறிக்கிறது. கிறிஸ்து இவ்வுலகில் இப்பொழுது சரீரப் பிரகாரமாக இல்லை. அவ்வாறாயின் உலகம் அவருடைய வாழ்க்கையை எவ்வாறு காணவியலும்? கர்த்தருடைய ஊழியத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் அடைகிற பாடுகளினாலே அவருடைய வாழ்க்கையானது நம்முடைய **சரீரத்திலே விளங்கும்.**

**4:11 சாவிலிருந்து ஜீவன்** என்னும் சிந்தை இந்த வசனத்திலும் தொடர்கிறது. நம்முடைய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் மிகவும் ஆழமான கோட்பாடுகளில் இதுவும் ஒன்று. விலங்குகளைக் கொன்று கிடைக்கிற கறிவகைகளை நாம் உண்டு அதன் மூலமாக வாழ்வைப் பெறுகிறோம். ஆவிக்குரிய செயற்களத்திலும் அதுவே உண்மையாயிருக்கிறது. "இரத்த சாட்சிகளின் செங்குருதி சபைக்கு வித்தாக இருக்கிறது." சபையானது எவ்வளவு அதிகமாக வேட்டையாடப்பட்டு, துரத்தப்பட்டு, உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறதோ அவ்வளவாகக் கிறிஸ்தவம் வளர்ச்சியடைகிறது.

ஆனாலும் இந்த உண்மை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு மிகவும் கடினமாயிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரருக்குக் கொடுமை விளைவிக்கப்படும் வேளையில் அதனை நாம் பொதுவாக அவல நிகழ்ச்சி என்றே கருதுகிறோம். உண்மையில் இதுவே சாதாரணமாக தேவன் பின்பற்றுகிற வழியாகும். யாரோ சிலருக்குமட்டும் இவ்வாறு நிகழ்கிறது என்று இதனை விதிவிலக்காகக் கொள்ள முடியாது. **இயேசுவினிமித்தம் மரணத்தை** எதிர்நோக்கியிருக்கக் கூடிய நிலை தெய்வீக வழக்கமாயிருக்கிறது. அதன் மூலமாக **சாவுக்கினமான** நம்முடைய சரீரத்திலே **இயேசுவினுடைய ஜீவன்** வெளிப்படுகிறது.

**4:12** அப்போஸ்தலன் இடைவிடாமல் பாடு அனுபவித்ததன் காரணமாக அவர்களுக்கு **ஜீவன்** உண்டாயிற்று என்று, அவர் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுக்குத் தான் முன்னர் கூறியவற்றின் முழுத்தொகையையும் சுருங்கக் கூறி நினைவு படுத்தினார். நற்செய்தியைச் சுமந்தவராகப் பவுல் கொரிந்துப் பட்டணத்திற்குச் சென்றபோதெல்லாம் சொல்லவியலாத கடுந்துன்பத்தை அவர் அனுபவிக்க வேண்டியதாயிற்று. ஆயினும் அது தகுதி வாய்ந்ததே, ஏனெனில் அதன் நிமித்தம் அவர்கள் கர்த்தராகிய இயேசுவை நம்பி, இப்பொழுது நித்திய வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள். பவுல் அடைந்த சரீரப்பிரகாரமான பாடுகளும், இழப்பும், பிறருக்கு ஆவிக்குரிய ஆதாயமாக மாறிற்று. "அவருடைய சாவுக்கேதுவான அனுபவம், அவருடைய ஊழியத்தின் பயனைப் பெற்றவர்களுடைய நன்மைக்கேதுவாக செயலாற்றியது" என்று திருவாளர் இராபர்ட்சன் கூறுகிறார்.[20]

நாம் நோய்வாய்ப்படுகையில் அடிக்கடி கர்த்தரிடத்திற்குச் சென்று, அவருக்கு இன்னும் சிறப்பாக ஊழியம் செய்வதற்கு ஏதுவாக, அந்த நோயிலிருந்து விடுவிக்கும்படி விண்ணப்பித்துக் கதறுகிறோம். ஆனால் அத்தகைய துன்பங்கள் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் வேளைகளில் நமது இயலாத நிலையில் கிறிஸ்துவின் வல்லமை நம்மீது தங்கும்படியாக நாம் அவருக்கு நன்றி செலுத்தி, அவரை மகிமைப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**4:13** நற்செய்தி ஒப்புவிக்கப்பட்ட பாத்திரமாகிய மனிதன் எப்பொழுதும் வலிமை குன்றியவனாகவும், எளிதில் நொருங்கிப் போகும் தன்மை உடையவனாகவும் இருக்கிறான் என்பதைக் குறித்துப் பவுல் பேசிக் கொண்டிருக்கிறார். அவ்வாறாயின் இவை யாவற்றையும் குறித்து அவர் என்ன மனப்பான்மை கொண்டிருக்கிறார்? அவர் தோல்வியடைந்துவிட்டாரா, சோர்வடைந்துவிட்டாரா அல்லது ஊக்கம் குன்றிவிட்டாரா? இல்லை என்பதே அதன் பதிலாகும். அவர் தொடர்ந்து

முன்னேறிச் சென்று நற்செய்தியைப் பிரசங்கிக்க விசுவாசமானது அவரைத் தகுதியாக்குகிறது. ஏனெனில் இந்தப் பாடுகள் நிறைந்த வாழ்க்கைக்கு அப்பால் சொல்லிமுடியாத மகிமை இருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

"விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்" என்று பாடலாசிரியன் சங்கீதம் 116:10 -இல் சொல்லுகிறான். அவன் கர்த்தரை நம்பினான். ஆகவே அவன் பேசியவை அவனுடைய இருதயத்தின் ஆழத்தில் இருந்த விசுவாசத்தின் அடிப்படையில் எழுந்தவையாகும். தன்னுடைய வாழ்விலும் அது உண்மையாயிருக்கிறது என்று பவுல் இங்கு கூறுகிறார். பாடலாசிரியன் அச்சொற்களைக் கூறியபோது எப்படிப்பட்ட விசுவாசத்தின் ஆவியைப் பெற்றிருந்தானோ அதே ஆவியைப் பவுலும் பெற்றிருந்தார். ஆகவே அவர், "நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்" என்று கூறுகிறார்.

அப்போஸ்தலனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களாலும் உபத்திரவங்களாலும் அவருடைய உதடுகள் மூடிக்கொள்ளவில்லை. எங்கெல்லாம் உண்மையான விசுவாசம் இருக்கிறதோ அங்கெல்லாம் பேச்சு வெளிப்படும். அது அமைதியாக இருக்காது.

இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்கள் நிச்சயமாக அவருக்காகப் பேசுவார்கள். ஒருவேளை அதன் நிமித்தம் அவர்கள் தூசிக்கு ஒப்பாகத் தாழ்த்தப்பட்டாலும், "அவரை நான் நேசிக்கிறேன்" என்று கூறுவது திண்ணம். அவரை விசுவாசித்து, அவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் அமைதியாக இருந்து தூய ஆவியானவரை துக்கப்படுத்தக் கூடாது. "அவரை நான் நேசிக்கிறேன்" என்று அவர்கள் தாமதிக்காமல் கூறவேண்டும்.

**4:14** மரணத்தைக் குறித்த ஆபத்து அவரை எப்பொழுதும் எதிர்கொண்டிருந்த போதிலும், அவர் அசைக்கப்படவில்லை என்னும் உண்மை நமக்கு விநோதமாகத் தோன்றுகிறது. அதற்குரிய விடை இந்த வசனத்தில் காணப்படுகிறது. அவர் கிறிஸ்தவ நற்செய்தியை அச்சமின்றி துணிவோடு பேசுவதற்கான இரகசியம் இதில் அடங்கியிருக்கிறது. இந்தப் புவிவாழ்வு, எல்லாம் அல்ல என்பதை அவர் அறிந்திருந்தார். விசுவாசிகள் மரணத்திற்குப் பிறகு உயிர்த்தெழுவார்கள் என்னும் உறுதியான நம்பிக்கை உடையவர்கள். **கர்த்தராகிய இயேசுவை எழுப்பிய** அதே தேவன், அப்போஸ்தலனாகிய பவுலையும் **இயேசுவைக் கொண்டு எழுப்பி**, கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளோடு அவரை **நிறுத்துவார்.**

**4:15** தனக்கு முன்பாக உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கை உறுதியோடும் நிச்சயமாயும் இருந்ததை அறிந்த அப்போஸ்தலன், கடுமையான உபத்திரவங்களுக்குள்ளாகச் செல்ல விருப்பம் கொண்டிருந்தார். அந்தப் பாடுகள் அனைத்தும் இரண்டு வகையான விளைவுகளை உண்டுபண்ணின. அந்தப் பாடுகளின் காரணமாகக் கொரிந்துப்பட்டணத்து விசுவாசிகளுக்கு நன்மை பெருகிற்று. மேலும் **தேவனுடைய மகிமை ஸ்தோத்திரத்தினாலே பெருகுவதற்கு** அது காரணமாயிற்று. இந்த இரண்டு செயல் தூண்டுதல்களும் பவுல் பேசியவற்றிற்கும் செய்தவற்றிற்கும் காரணமாயின. அவர் தேவனுடைய மகிமையையும், தன் உடன் மனிதர்களுடைய ஆசிர்வாதத்தையுமே கருத்தில் கொண்டவராக இருந்தார்.

எவ்வளவு அதிகமாகப் பவுல் பாடுகள்பட்டாரோ அவ்வளவு அதிகமாக தேவனுடைய கிருபை மற்றவர்களுக்குக் கிடைத்தது என்பதை அவர் அறிந்தார். மிகுதியான மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். **ஸ்தோத்திரங்கள் பெருகி தேவனிடமாய்ச்** சென்றடைந்தன, தேவன் அதிகமாய் மகிமையடைந்தார்.

ஜீவ வேதம் (Living Bible) இவ்வசனத்தின் ஆழ்ந்த கருத்தைத் தனது பொழிப்புரையில் சிறப்புற எடுத்தியம்புகிறது:

> எங்களுடைய இந்தப் பாடுகள் உங்களுடைய நன்மைக்காகவே உண்டாயின. உங்களில் பலர் கிறிஸ்துவுக்காக வெல்லப்பட்டதால், அவருடைய பெரிதான தயவுக்காக நன்றி செலுத்த மிகுதியான மக்கள் இருக்கிறார்கள். அதன் நிமித்தம் கர்த்தர் மிகுதியாகப் புகழ்ச்சியடைந்தார்.

**4:16** உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கை உறுதியானதாகத் தனக்கு முன் இருந்த காரணத்தால், பவுல் எல்லா விதமான பாடுகளையும் ஆபத்தையும் எதிர்கொள்ள விருப்பமாயிருந்ததைக் குறித்து அவர் விவரித்துக்கொண்டிருந்தார். **ஆனபடியினாலே** அவர் **சோர்ந்துபோகவில்லை.** ஒருபுறம் சரீரப் பிரகாரமான தேய்வுறுதல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தபோதிலும், மறுபுறம் எல்லாவிதமான எதிரான சூழ்நிலையிலும் அவர் முன்னேறிச் செல்லத்தக்க வகையில் புதிப்பிக்கப்பட்டார்.

**புறம்பான மனுஷனானது அழிந்து போகிறது** என்னும் சொற்றொடருக்குச் சற்று விளக்கம் தேவையாயிருக்கிறது. இது நம்முடைய சரீரங்களில் மிகத் தெளிவாக வெளிப்படுகிறது! ஆனால் கிறிஸ்தவ ஊழியத்திற்குத் தேவையான வல்லமையை தேவன் ஒவ்வொரு நாளும் அனுப்புகிற காரணத்தால், புறம்பான மனுஷன் அழிந்து போனாலும், அந்த உண்மையில் பவுல் மனமகிழ்ச்சி கொள்கிறார்.

"பளிங்குக் கல் அதிகம் அதிகமாகச் செதுக்கப்பட, சிலையும் அதற்கேற்றாற்போல அதிகமாக வளர்கிறது" என்று மைக்கேல் ஏஞ்சலோ கூறியது போல இது உண்மையாயிருக்கிறது.

அயர்ன்சைடு விவரிக்கிறார்:

> பருப்பொருளாலாகிய நம்முடைய சரீரங்கள் ஒவ்வொரு ஏழு ஆண்டுகளுக்குள் முழுவதுமாக மாற்றம் அடைகிறது என்று சொல்லப்படுகிறது... ஆனாலும் அதே ஆட்கள் தான் என்னும் உணர்வு நமக்குள்ளாக இருக்கிறது. நம்முடைய ஆளுமை இந்த ஆண்டுகளில் மாறிப்போவதில்லை. கூட்டுப் புழுவாயிருந்த அதே ஜீவன் தான் வண்ணத்துப் பூச்சியிலும் இருக்கிறது.[21]

**4:17** அப்போஸ்தலனாகிய பவுல் அனுபவித்த கடுந்துன்பங்களைக் குறித்துப் படித்த பிறகு, அவற்றை **இலேசான உபத்திரவம்** என்று அவர் கூறுகிறதைக் கேட்பதற்கு நமக்குக் கடினமாகத் தோன்றுகிறது. ஒரு பொருளில் அவை இலேசானவை அல்ல. அவை கசப்பும் கொடுமையும் நிறைந்தவை.

ஆனால் பவுல் ஒப்பிட்டுக் காட்டுகிறதில் அதனுடைய விளக்கம் அடங்கியிருக்கிறது. அவர் அனுபவித்த துன்பங்களைத் தனியாகக் காண்கையில் அவை மிகவும் கடுமையானவையாகவே காணப்படுகின்றன. ஆனால் அவற்றை வரப்போகிற **நித்திய கனமகிமையோடு**[22] ஒப்பிட்டுக் காணுங்கால் அவை **இலேசானவையாக** இருக்கின்றன. மேலும் அந்த **இலேசான உபத்திரவம் அதிசீக்கிரத்தில் நீங்கும்**, ஆனால் மகிமையோ **நித்தியமானது.** இந்த உலகில் அனுபவிக்கிற உபத்திரவங்களால் நாம் கற்கிற பாடங்கள், வரப்போகிற உலகில் மிகவும் வளமான கனியை நமக்கு ஈட்டித்தரும்.

> "இவ்வுலகில் நாம் இருக்கும்போது சிறிதளவு மகிழ்ச்சி நமக்குள்ளாக உட்புகும். அங்கு நாம் மகிழ்ச்சிக்குள்ளாக உட்புகுவோம். இங்கே சில துளிகள், அங்கே பெருங்கடல்"

என்று திருவாளர் மூர்ஹெட் கூறுகிறார்.[23]

இவ்வசனத்தில் பிரமிட் என்னும் கூம்புவடிவக் கோபுரத்தைக் காணமுடியும் என்று F. E. மார்ஷ் என்பார் குறிப்பிட்டுள்ளார். அதில் உயர ஏறிச் செல்லுகிறவர் வலுவிழந்து போனாலும் சோர்வடைகிறதில்லை. மாறாக அது அவருடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலையும் ஆறுதலையும் தருகிறது.

மகிமை

கனமகிமை

நித்திய கனமகிமை

அதிகமான நித்திய கனமகிமை

மிகவும் அதிகமான நித்திய கனமகிமை

(அதனினும்) மிக அதிகமான நித்திய கனமகிமை[24]

**4:18** இந்த வசனத்தில் **காணுதல்** என்னும் சொல் வெறுமனே மனிதனின் பார்வையை மட்டும் குறிப்பிடுவதில்லை. மாறாக, ஒரு பொருளின் முக்கியத்துவத்தைக் குறித்த கருத்தையும் அது தெரிவிக்கிறது. **காணப்படுகிறவற்றைக்** குறித்துப் பார்க்கும்போது, ஒருவர் வாழ்வதற்குரிய இலக்கு அங்கே இல்லை. இங்கு அவை முதன்மையாக, பவுல் அனுபவித்த உபத்திரவங்கள், சோதனைகள், பாடுகள் ஆகியவற்றையே குறிப்பிடுகின்றன. இவை யாவும் அவர் ஆற்றிய ஊழியத்தினிடையே நடந்த நிகழ்ச்சிகளே ஆகும். அவருடைய ஊழியத்தின் மிகப் பெரிய இலக்கு **காணப்படாதவையே** ஆகும். அவற்றுள் கிறிஸ்துவின் மகிமை, உடன் விசுவாசி பெறுகிற ஆசீர்வாதம், கிறிஸ்துவின் நியாயாசனத்தின்போது தரப்படவிருக்கிற பரிசுப்பொருள் ஆகியவை அடங்கும். இது குறித்து ஜோவெட் விவரிக்கிறார்:

> முதலாவதைக் காணக்கூடியது பார்வை. இரண்டாவதைக் காணக்கூடியது உள்ளார்ந்த நுண்ணறிவு. முதலாவதைக் காண்பதற்கான வழிவகை படைப்போடு தொடர்புடையது, இரண்டாவதைக் காண்பதற்கான வழிவகை ஆவிக்குரியது. முதலாவதை அறிவதற்குரிய முதன்மையான உறுப்பு மூளையின் அறிவாற்றல் ஆகும், இரண்டாவதை அறிவதற்கான உறுப்பு விசுவாசம் ஆகும்... திருமறை நெடுகிலும், காட்சிக்கும் உள்ளார்ந்த நுண்ணறிவுக்கு

முள்ள வேறுபாடு தொடர்ச்சியாக வெளிப்படுத் தப்பட்டிருக்கிறது. மேலும் எல்லா இடங்களிலும் முதலாவதில் காணப்படும் போதாக் குறையை யும், கஞ்சத்தனத்தையும் அளக்கும்படியாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறோம். மேலும் இரண்டா வதன் நிறைவையும் பரந்தகன்ற தன்மையை யும் அதனோடு ஒப்பிட்டுக் காணவும் கற்பிக்கப் பட்டிருக்கிறோம்.

### ஏ. கிறிஸ்துவின் நியாயாசனத்தின் வெளிச்சத்தில் வாழுதல் [5:1-10]

முந்தின அதிகாரத்தில் காணப்படும் வசனங் களோடு இனிவரும் வசனங்கள் நெருங்கிய தொடர்புடையவையாக விளங்குகின்றன. தனது தற்போதைய பாடுகளைக் குறித்தும், தனக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற எதிர்கால மகிமை யைக் குறித்தும் பவுல் பேசிக்கொண்டிருக்கிறார். இது அவரை மரணத்தைக் குறித்த பொருளுக்கு முன்பாகக் கொண்டுவருகிறது. திருமறை யிலேயே இந்த வேத பகுதியில்தான் மரணத் தைப் பற்றிய செய்தி மிகப்பெரிய அளவில் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் கிறிஸ்தவன் அதனுடன் கொண்டிருக்கிற தொடர்பைப் பற்றிய விவரமும் இப்பகுதியில் காணப்படுகிறது.

**5:1** அழிவுக்குரியதான நம்முடைய தற் போதைய சரீரத்தை **பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு** என்று இந்த முதல் வசனத்தில் அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். கூடாரம் நிலை யான குடியிருப்பன்று. புனித யாத்திரை செய் வோரும், நெடும் பயணம் மேற்கொள்வோரும் கூடாரத்தை எடுத்துச் செல்வர்.

சரீர மரணத்தைக் குறிப்பிட **இந்தக் கூடாரம்** கலைக்கப்படுதல் என்னும் சொற்றொடர் பயன் படுத்தப்பட்டுள்ளது. மரணத்தின் போது கூடாரம் கீழே இறக்கப்படும். சரீரம் கல்லறைக்குள் செல்லும், அது அவ்வாறிருக்க விசுவாசியின் ஆவியும் ஆத்துமாவும் கர்த்தருடன் இருக்கும் படியாகச் சென்றுவிடும்.

முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள பாடுகளின் காரணமாகத் தனது பூமிக்குரிய வீடு அழிந்துபோனாலும், **தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு** தனக்கு உண்டென்று அறிந்திருப்பதாகக் கூறி, பவுல் இந்த அதிகாரத்தை மிகுந்த நம்பிக்கையுடன் தொடங்குகிறார். **கூடாரத்திற்கும், கட்டப்பட்ட** கட்டிடத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் கவனி யுங்கள். தற்காலிகமான கூடாரம் கீழே இறக்கப் படும். ஆனால் விசுவாசிக்கென வானங்களுக்கு அப்பாலுள்ள நிலத்தில் நிலையான வீடு காத் திருக்கிறது. அவ்வீடு **தேவனால் கட்டப்பட்டது.** அதாவது தேவனே அதனை நமக்குத் தருகிறவர்.

மேலும் அந்த வீடு கைவேலையல்லாத வீடா கும். தற்போது நாம் பெற்றிருக்கிற சரீரங்களும் கைகளினால் செய்யப்படாதிருக்க, இவ்வாறு பவுல் கூறுவது ஏன்? வரப்போகிற நாளில் நாம் பெற விருக்கிற மகிமையின் சரீரங்கள் கைகளால் செய்யப்பட்டவையல்ல என்று அவர் வலியுறுத்து வதன் காரணம் என்ன? கைவேலையல்லாத என்ற சொற்றொடருக்கு, "இந்தப் படைப்போடு சம்பந்தப்பட்டது அன்று" என்பதே பொருளாகும். இதுவே அக்கேள்விக்கு விடையாகும். எபிரெயர் 9:11 - ஆம் வசனத்தின் மூலமாக இதனை நாம் அறியலாம். அங்கு "கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப் பட்டு, கைகளினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமான கூடாரத்தின் வழியாகப் பிரவேசித்தார்" என்று வாசிக்கிறோம். நம்முடைய எதிர்காலத்தில் நாம் பெறப்போகிற மகிமையின் சரீரங்கள் இந்தப் படைப்போடு சம்பந்தம் உடை யவையல்ல. அவை விண்ணக வாழ்க்கைக்கு ஏற்றவண்ணம் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

விசுவாசியின் எதிர்கால சரீரம் **நித்திய பர லோக வீடு** என்றும் விவரிக்கப்பட்டிருக்கிறது. நோய்வாய்ப்படுதல், நலிவுறுதல், மரணமடைதல் போன்றவற்றால் அந்தச் சரீரம் ஒருக்காலும் தாக்கமடையாது. ஆனால் அது நம்முடைய பரலோக நித்திய வீட்டில் என்றென்றும் பாதுகாக் கப்படும்.

இந்தக் கட்டிடத்தை விசுவாசி தனது மரணத் தின் தருணத்தில் தேவனிடத்திலிருந்து பெறுவான் என்று இந்த வசனம் கூறுவதுபோல் தோன்று கிறது. ஆனால் அது சரியன்று. கிறிஸ்து தம்மு டைய சபைக்காகத் திரும்பி வரும் வரை அவன் மகிமையடைந்த சரீரத்தைப் பெறப்போவ தில்லை (1 தெச. 4:13-18). விசுவாசி மரணம் அடை யும்போது, அவனுடைய ஆவியும் ஆத்துமாவும் கிறிஸ்துவோடு இருக்கும்படிச் சென்றுவிடும். அங்கே அவன் உணர்வுநிலையில் விண்ணுலக மகிமையை அனுபவிப்பான். அவனுடைய சரீரமோ கல்லறையில் வைக்கப்படும். கர்த்தர் திரும்பி வரும்போது, கல்லறையிலிருந்து தூசி எழுப்பப் படும், அதனைப் புதியதும் மகிமையானதுமான சரீரமாக தேவன் மாற்றுவார். அதன் பிறகு அது

ஆவி, ஆத்துமாவுடன் இணைக்கப்படும். இதுவே ஒரு விசுவாசியினிடத்தில் நடைபெறும் மாற்றங்களாகும். அவனுடைய மரணத்திற்கும், கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுக்காக மீண்டும் வரப்போகிற நிகழ்ச்சிக்கும் இடைப்பட்ட காலத்தில், அவன் சரீரமற்ற நிலையில் இருப்பான். ஆனாலும், அவன் முழு நினைவோடு, விண்ணகத்தின் மகிமையைப் பேருவகையோடு அனுபவிக்கமாட்டான் என்பது இதன் பொருளன்று. அவன் அந்நிலையில் பேருவகை கொள்வது உறுதி!

முதல் வசனத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர், **கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் உண்டு** என்னும் சொற்றொடர் மூன்று வகையான வேறுபட்ட விளக்கங்களைக் கொண்டிருக்கிறது என்பதை நாம் குறிப்பிட வேண்டியது அவசியம்:

1. அது பரலோகத்தையே குறிக்கிறது.
2. மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் கொடுக்கப்படும் தற்காலிக சரீரத்தை அது குறிக்கிறது.
3. மகிமையின் சரீரத்தை அது குறிக்கிறது.

முதல் விளக்கம் அது பரலோகத்தைக் குறிப்பிடுவதாகக் கூறுகிறது. பரலோகமே அந்தச் சரீரமாக இருப்பது முடியாத செயல். ஏனெனில் அது பரலோகத்தில் உள்ள **நித்தியமானது** என்று இந்த வசனத்திலும் "பரம வாசஸ்தலம்" (பரலோகத்திலிருந்து வரப்போகிற குடியிருப்பு) என்று அடுத்த வசனத்திலும் சொல்லப்பட்டுள்ளது. இரண்டாவது விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக சரீரத்தைக் குறித்துத் திருமறை எங்கும் எதுவும் சொல்லவில்லை. மேலும் கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் உண்டு என்றே இங்கு சொல்லப்பட்டுள்ளது. ஆகவே தற்காலிக சரீரம் என்னும் விளக்கம் உண்மைக்குப் புறம்பானது. மூன்றாவது விளக்கம் அந்த வீடு மகிமையின் சரீரத்தைக் குறிக்கிறது - இதுவே சரியான விளக்கமாகத் தோன்றுகிறது.

**5:2** அழிந்து போகக்கூடிய தற்போதைய சரீரத்தில், அவ்வப்போது நாம் **தவிக்கும்படி** கட்டாயப்படுத்தப்படுகிறோம். அது நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நம்மைக் கட்டுப்படுத்தி, தடை செய்கிற முறையே அதற்குக் காரணமாக இருக்கிறது. பரலோகத்திலிருந்து வரப்போகிற **நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ளுவதே** நம்முடைய மிகப்பெரிய வாஞ்சையாக இருக்கிறது.

இந்த வசனத்தில் அப்போஸ்தலன் தான் எடுத்துக்கொண்ட படவுருவாகிய கூடாரத்திலிருந்து ஆடைக்கு மாறுவதாகத் தோன்றுகிறது. கூடாரம் பண்ணும் தொழிலைச் செய்துவந்த பவுல், கூடாரம் பண்ணுவதற்கும், ஆடையைத் தைப்பதற்கும் ஒரே விதமான பொருளைப் பயன்படுத்தியதன் காரணமாக உவமைக்கான பொருளை மாற்றினார் என இதற்கு விளக்கமளிக்கப்படுகிறது. அது எதுவாயினும், அவர் தனது மகிமையின் சரீரத்தைப் பெற மிகுந்த வாஞ்சையுடன் இருந்தார் என்பது தெளிவு.

**5:3** இந்த வசனத்தில் **நிர்வாணம்** என்னும் சொல் எதைக் குறிக்கிறது? அந்த மனிதன் இரட்சிக்கப்படவில்லை, ஆகவே அவன் தேவனிடத்திலிருந்து நீதியின் ஆடையைப் பெறவில்லை என்பதுதான் இதன் பொருளா? அந்த மனிதன் இரட்சிக்கப்பட்டவனாயிருந்தும், கிறிஸ்துவின் நியாயாசனத்தில் வெகுமதி எதனையும் அவன் பெறப்போவதில்லை என்பது இதன் பொருளா? அல்லது இரட்சிக்கப்பட்ட அந்த மனிதன் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் சரீரமற்றவனாக இருப்பான் என்பதும், உடலற்ற ஆவி என்னும் பொருளில் நிர்வாணியாக இருப்பான் என்பதுமே இதன் பொருளாகுமா?

உடலற்ற ஆவி அல்லது உடலை ஆடையாக அணியாத நிலை என்பதே இதன் பொருள் என்று இந்த எழுத்தாளர் கருதுகிறார். மரணமடைய வேண்டுமென்பது தன்னுடைய வாஞ்சை என்று பவுல் கூறவில்லை. அதனுடன் அடையப்போகிற உடலற்ற ஆவி என்னும் நிலையையும் அவர் வாஞ்சிக்கவில்லை. மாறாக இறந்துபோன பரிசுத்தவான்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது மகிமையின் சரீரங்களைப் பெறப்போகிற நிகழ்ச்சியையே அவர் அதிகமாக வாஞ்சித்தார்.

**5:4** நான்காவது வசனத்தில் உள்ள கருத்தை அடிப்படையாகக் கொண்டே நாம் 3-ஆவது வசனத்திற்குச் சரியான விளக்கம் அளித்தோம் எனத் தோன்றுகிறது. தற்போது **பூமிக்குரிய இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்வையைக் களைந்துபோட வேண்டுமென்று விரும்பாமல், மரணமானது ஜீவனாலே விழுங்கப்படுவதற்காகப் போர்வை தரித்தவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறோம்** என்று அப்போஸ்தலன் கூறுகிறார். அதாவது, மரணத்திற்கும் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுதற்கும்

இடைப்பட்ட நிலையை, விசுவாசியின் மிகச் சிறந்த நம்பிக்கையாக அவர் கருதவில்லை. மாறாக விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படும் போது, இனி ஒருக்காலும் மரணத்திற்கு உட்படாத சரீரத்தைப் பெறப்போகிற நிகழ்ச்சியையே அவர் மிகச்சிறந்ததாக எண்ணினார்.

**5:5** இந்த நோக்கத்திற்காகவே **தேவன் நம்மை ஆயத்தப்படுத்துகிறார்**. அதாவது, சரீர மீட்பே அந்த நோக்கமாகும். நம்மை குறித்து அவர் கொண்டிருக்கிற மகிமையான நோக்கங்களில் இதுவே சிகரம் போன்றது. இப்போதைக்கு நம்முடைய ஆவியும் ஆத்துமாவும் மீட்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மீட்பில் சரீர மீட்பும் அடங்கும். இதைக் குறித்துச் சற்று சிந்தியுங்கள். இதையே இலக்காகக் கொண்டு தேவன் நம்மை உருவாக்கியிருக்கிறார். மகிமையடைந்த நிலை - அதுவே நமக்காகப் பரலோகத்திலிருக்கிற கைவேலையல்லாத வீடு.

நாம் மகிமையின் சரீரத்தை அடையப்போகிறோம் என்பதில் எவ்வாறு உறுதி கொண்டிருக்க முடியும்? **ஆவியென்னும் அச்சாரத்தை தேவன் நமக்குத் தந்திருக்கிறார்**. இதுவே அதற்கான விடையாகும். நாம் ஏற்கனவே விளக்கிக் கூறியது போல, தேவனுடைய ஆவியை ஒவ்வொரு விசுவாசியும் தன்னிடத்தில் குடியிருக்கும்படியாகப் பெற்றிருப்பது, தேவன் விசுவாசிக்குத் தந்திருக்கிற அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றப் போகிறார் என்பதற்கு அச்சாரமாக விளங்குகிறது. பின்னர் நிகழவிருக்கிற ஒன்றுக்கு ஆவியானவர் முன்னடையாளமாகத் தரப்பட்டிருக்கிறார். தேவ **ஆவியானவர்** தாமே, தேவன் நமக்கு ஏற்கனவே ஒரு பங்காக அளித்ததற்கும், பூரணமாக நமக்கு உரியதாகக் கிடைக்கப்போகிறதற்கும் **அச்சாரமாக** விளங்குகிறார்.

**5:6,7** இத்தகைய மேன்மைதாங்கிய உண்மைகளைக் குறித்த ஆழமான உறுதியே, பவுல் எப்பொழுதும் மிகுந்த உற்சாகத்துடன் விளங்குவதற்கு அவரைத் தகுதியாக்குகிறது. அவர் **இந்தத் தேகத்தில் குடியிருந்த** வரையிலும், **கர்த்தரிடத்தில் குடியிராதவராக** இருந்தார் என்பதை அறிந்திருந்தார். ஆனால் இந்த நிலையானது பவுலைப் பொருத்தமட்டில் மிகச்சிறந்த நிலையல்ல என்பது நிச்சயம். ஆனாலும் அவர் கிறிஸ்துவுக்கு இவ்வுலகில் திருப்பணியாற்றும் பொருட்டும், இறைமக்களுக்கு உதவிபுரியும் பொருட்டும் அந்நிலையில் இருக்க அவர் விருப்பமுடையவராகவே இருந்தார்.

**நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்** என்னும் உண்மை நாம் கர்த்தரிடத்தில் குடியிருக்கவில்லை என்பதற்கு மிகப்பெரிய சான்றாக விளங்குகிறது. நம்முடைய சரீரக் கண்களால் அவரை நாம் ஒருக்காலும் கண்டதில்லை. விசுவாசத்தினால் மட்டுமே நாம் அவரைக் கண்டிருக்கிறோம். நாம் நம்முடைய சரீரத்தில் குடியிருக்கும் வரை, அவரைக் காணும்போது வாழப்போகிற வாழ்க்கையைக் காட்டிலும் நெருக்கத்திலும், அறிவிலும் குறைவுடைய வாழ்க்கையே வாழுவோம்.

**5:8** ஆறாவது வசனத்தில் தொடங்கிய கருத்து மீண்டும் எட்டாவது வசனத்தில் தொடங்கி நிறைவு பெறுகிறது. தனக்கு முன்பாக இருக்கிற அருமையான நம்பிக்கையினால் பவுல் மிகுந்த உற்சாகமுடையவராக இருக்கிறார். அதன் காரணமாக, அவர் **இந்தத் தேகத்தைவிட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறேன்** என்று சொல்ல முடிந்தது. "பரலோக வீட்டைக் குறித்த ஏக்கத்தை" அவர் கொண்டிருந்தார் என்று திருவாளர் பர்னார்ட் கூறுகிறார்.

இதுகாறும் அப்போஸ்தலன் கூறியவற்றிற்கு இந்த வசனம் மாறுபட்டது போன்று தோன்றுகிறது. இதற்கு முந்தின வசனத்தில் அவர் மகிமையின் சரீரத்தை வாஞ்சிப்பதாகக் கூறுகிறார். ஆனால் இங்கு அவர் இந்தத் தேகத்தைவிட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும், அதிகமாய் விரும்புகிறதாகக் கூறுகிறார். அதாவது மரணத்திற்கும் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுகிறதற்கும் இடையேயுள்ள உடலற்ற நிலையில் இருக்க விரும்புவதாக அவர் கூறுகிறார்.

ஆனால் இங்கு எவ்வித முரண்பாடும் இல்லை. கிறிஸ்தவனுக்கு மூன்று நிலைகள் உள்ளன; அவற்றில் எது மிகவும் விரும்பப்படத்தக்கது என்பதே கேள்வி. அழிந்துபோகக் கூடிய இந்த சரீரத்தோடு தற்போது இவ்வுலகில் வாழ்கிற வாழ்க்கை. இரண்டாவதாக, மரணத்திற்கும் கிறிஸ்துவின் வருகைக்கும் இடையில் உள்ள உடலற்ற நிலை. எனினும் இந்த நிலையில் ஆவியும் ஆத்துமாவும் கிறிஸ்துவின் முன்னிலையில் உணர்வு நிலையில் களிகூர்ந்தவையாக இருக்கும். இறுதியாக நம்முடைய இரட்சிப்பு முழு நிறைவு அடையும் நிலையாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையில் நாம் நம்முடைய மகிமையின் சரீரங்களைப் பெற்றவர்களாக விளங்கும் நிலையே அது. முதலாவது நிலை

நல்லது என்றும் இரண்டாவது நிலை சிறந்தது என்றும் மூன்றாவது நிலை எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது என்றும் இந்த வேத பகுதியில் பவுல் கற்பிக்கிறார்.

**5:9** விசுவாசியானவன் **கர்த்தருக்குப் பிரியமானவனாக** இருப்பதைத் தனது விருப்பமாகக் கொண்டிருக்க வேண்டும். அவனுடைய இரட்சிப்பு கிரியைகளைச் சார்ந்தது அல்ல என்றபோதிலும், அவன் பெறப்போகிற பரிசுப்பொருள், அவன் எவ்வளவாகக் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாக விளங்கினானோ அதற்கு நேரடியான விகிதத்தில் அமைந்திருக்கும். *விசுவாசமானது இரட்சிப்போடு* தொடர்புடையது என்றும், *கிரியைகள் பரிசுப்பொருளோடு* தொடர்புடையவை என்றும், விசுவாசி எப்பொழுதும் நினைவிற் கொண்டிருக்க வேண்டும். அவன் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறான், கிரியைகளினால் அல்ல; ஆனால் அவன் இரட்சிக்கப்பட்ட பிறகு, அவன் நற்கிரியைகளைச் செய்ய பேரார்வம் உடையவனாக இருக்க வேண்டும். அவன் அவ்வாறு செய்யுங்கால், அவனுடைய பரிசுப் பொருட்களைப் பெறுவான்.

**சரீரத்தில் குடியிருந்தாலும், குடியிராமற் போனாலும்** கர்த்தருக்குப் பிரியமானவராயிருக்கப் பவுல் விரும்பினார் என்பதைக் கவனியுங்கள். பவுல் இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருந்த நாட்களாயினும் அல்லது அவர் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நின்றுகொண்டிருக்கும் வேளையாயினும், இவ்வுலகில் அவர் ஆற்றிய ஊழியம் கர்த்தருடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணத்தக்கபடி வடிவமைக்கப்பட்டிருந்தது என்பதே இதன் பொருளாகும்.

**5:10 "நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்"** என்பது, அவருக்குப் பிரியமானவர்களாக நாம் இருப்பதற்கான ஒரு நோக்கம் ஆகும். உண்மையில் நாம் அங்கு வந்து வெறுமனே *வெளிப்படப் போவதில்லை*. மாறாக நாம் அங்கு *வெளிப்படுத்தப்படுவோம்*. கிறிஸ்துவின் நீதிமன்றத்தில் நாம் நம்முடைய வாழ்க்கை முழுவதையும் வெளிப்படையாகக் கொண்டு வந்து நிறுத்த வேண்டும்" என்று NEB மொழிபெயர்ப்பு மிகச் சரியாகக் கூறுகிறது. ஒரு மருத்துவருடைய அறையில் அவருக்கு முன்பாக வந்து நிற்பது ஒரு நிலை. ஆனால் அவரால் நாம் முழுவதும் ஒளிக் கதிரின் ஊடாக ஊடுருவிப் பார்க்கப்படுவது மற்றொரு நிலை. கிறிஸ்துவுக்காக நாம் ஆற்றிய திருப்பணி வாழ்க்கையை அவருடைய **நியாயாசனமானது** அது நிகழ்ந்தபடி முற்றிலுமாக வெளிப்படுத்தும். நாம் எந்த அளவு அவருக்கு ஊழியம் செய்தோம் என்பது மட்டுமன்றி நம்முடைய ஊழியத்தின் தரம் எத்தன்மை வாய்ந்தது என்பதும், எந்த நோக்கமானது அவ்வூழியத்தை நாம் செய்யும்படி நம்மைத் தூண்டிவிட்டது என்பதெல்லாம் அங்கு புனராய்வுக்குக் கொண்டுவரப்படும்.

நம்முடைய இரட்சிப்பிற்குப் பிறகு நாம் செய்த பாவங்கள் நமது ஊழியத்தைப் பாதிக்கக் கூடியவையாக இருந்தாலும், ஒரு விசுவாசியின் பாவங்கள், அந்த தெய்வீகமான தருணத்தில் நியாயந்தீர்க்கும்படியாகக் கொண்டுவரப்படப் போவதில்லை. அவற்றிற்கான நியாயத்தீர்ப்பு, ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கர்த்தராகிய இயேசு சிலுவை மரத்தில் நமது பாவங்களைத் தமது தோளில் சுமந்தபோது நிறைவேறிவிட்டது. நம்முடைய பாவங்களுக்கு ஏற்ற கடன் முழுவதையும் அவர் செலுத்தித் தீர்த்துவிட்டார். அந்தப் பாவங்களை மீண்டுமாக தேவன் நியாயாசனத்திற்கு முன்பாகக் கொண்டு வரமாட்டார் (யோவான் 5:24). நாம் கர்த்தருக்காக ஆற்றிய திருப்பணியோடு கிறிஸ்துவின் நியாயாசனம் தொடர்புடையதாக இருக்கிறது. நாம் இரட்சிக்கப்பட்டோமா இல்லையா என்பது அங்கு தீர்மானிக்கப்படுவதில்லை. அது ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட உண்மை. மாறாக, பரிசுப் பொருளைப் பெறுவோமா அல்லது அதை இழந்து போனோமா என்பதே அந்நேரத்தில் எடுக்கப்படும் முடிவாகும்.

### ஐ. திருப்பணியில் பவுல் கொண்டிருந்த நல்மனசாட்சி (5:11-6:2)

**5:11** பாவத்தின் மீது தேவன் செலுத்துகிற பயங்கரமான நியாயத்தீர்ப்பு மற்றும் நரகத்தின் பேரச்சம் விளைவிக்கும் தன்மை ஆகியவற்றைக் குறித்து பவுல் நன்கு அறிந்திருந்த காரணத்தால், அவர் எங்கும் சென்று மனிதர்கள் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களுக்கு அறிவுரை வழங்கினார் என்று இவ்வசனத்திற்குப் பொதுவாகப் பொருள் கூறப்படுகிறது. அது உண்மையாக இருந்த போதிலும், அப்பொருள் இப்பகுதியின் முதன்மையான அர்த்தம் அல்ல என்றே நாம் கருதுகிறோம்.

இரட்சிக்கப்படாதவர்கள்மேல் கர்த்தர் செலுத்த விருக்கிற பயங்கரத்தைக் குறித்து பவுல் இங்கு

அவ்வளவாகப் பேசவில்லை. அவர் கர்த்தர் மீது கொண்டிருந்த *பயபக்திக்குரிய மதிப்பின்* நிமித்தம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய நாட்டம் உடையவராக இருந்தார் என்பதைப் பற்றியே பேசுகிறார். தேவனைப் பொருத்தமட்டில், அப்போஸ்தலனுடைய வாழ்க்கை திறந்த புத்தகமாக விளங்கியது. ஆனாலும், கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள், அவருடைய நற்செய்தி ஊழியத்தில் அவர் நேர்மையோடும் உண்மையோடும் நடந்துகொண்டார் என்பதை அறிந்திருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆகவே அவர் கீழ்க்காணும் பொருளைத் தரக்கூடிய வகையில் பேசுகிறார்.

> கர்த்தர் பயப்படத்தக்கவர் என்பதை நாங்கள் அறிந்திருப்பதால், கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்னும் நிலையில் எங்களுடைய நேர்மையைக் குறித்தும் உண்மையைக் குறித்தும் மனிதருக்குப் புத்தி சொல்லுகிறோம். ஆனால் அவ்வாறு மனிதருக்குப் புத்தி சொல்லுவதில் நாங்கள் வெற்றி பெற்றாலும் வெற்றி பெற வில்லையென்றாலும், நாங்கள் தேவனால் நன்கு அறியப்பட்டிருக்கிறோம். மேலும் கொரிந்தியர்களாகிய உங்களுடைய மனச்சாட்சியிலும் இதுவே காணப்படும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இந்த வசனத்தின் பின்னணியில், மேலே தரப்பட்டிருக்கிற பொருள் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

**5:12** சற்றுமுன்னர் பவுல் கூறியவை தற்புகழ்ச்சி என்று தவறாகப் புரிந்து கொள்ளப்படும் என்பதை அவர் உடனடியாக உணர்கிறார். அவர் அவ்வாறு செய்ய முற்பட்டதாக எவரும் எண்ணிவிடக்கூடாது என்று கருதினார்! ஆகவே **நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளவில்லை** என்று அவர் தொடர்ந்து கூறுகிறார். அவர் தன்னை அவர்களுக்கு முன்பாக, முன்னர் எப்போதோ மெச்சிக்கொண்டார் என்பது இதன் பொருளன்று. ஆனால் அவர் அவ்வாறு செய்ததாக மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டப்பட்டார். அந்த எண்ணம் அவர்களுடைய மனதைவிட்டு அகற்றப்படவேண்டும் என்பதில் அவர் நாட்டம் கொண்டிருந்ததை இப்பகுதியில் தெரிவிக்கிறார்.

அவ்வாறு இருக்குமிடத்து, அவர் தனது ஊழியத்தைக் குறித்து இவ்வளவு நீண்டதொரு விளக்கம் அளிப்பது ஏன்? "**இருதயத்தில் அல்ல, வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிறவர்களுக்கு எதிரே எங்களைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம்**" என்பதே அவர் இதற்குத் தரும் பதில். அவர் தன்னைக் குறித்து மேன்மை பாராட்டுவதில் விருப்பம் கொள்ளவில்லை. மாறாக, கொரிந்துப் பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கு முன்பாக அவர் கள்ளப்போதகர்களால் மிகக் கடுமையாகக் குற்றஞ் சாட்டப்பட்டார் என்பதை அறிந்திருந்தார். அவர்மீது செலுத்தப்பட்ட தாக்குதலுக்கு அந்த விசுவாசிகள் எவ்வாறு விடைகொடுக்க வேண்டும் என்பதில் அவர் கருத்துடையவராக இருந்தார். ஆகவே அவர்களுக்கு முன்பாக அவர் தாக்கப்படும்போது, அவர்கள் என்ன பதில் தந்து அவருக்கு ஆதரவாய்ப் பேசவேண்டும் என்பதற்கான விவரங்களை இங்கு தந்திருக்கிறார்.

அவ்வாறு குறைகூறுவோரைக் குறித்து, இருதயத்திலல்ல, **வெளிவேடத்தில் மேன்மை பாராட்டுகிறவர்கள்** என்று அவர் குறிப்பிடுகிறார். (1 சாமுவேல் 16:7-ஆம் வசனத்துடன் ஒப்பிட்டுக் காண்க). அதாவது அவர்கள் வெளியரங்கமான தோற்றத்தில் விருப்பமுடையவராக இருந்தார்கள். ஆனால் உள்ளான உண்மையிலும், நேர்மையிலும், நீதியிலும் விருப்பங்கொண்டிருக்கவில்லை. தோற்றப்பொலிவு, நாவன்மை, வைராக்கியம் உடையவராகக் காட்சியளித்தல் ஆகியவையே அவர்களுக்கு எல்லாமுமாக இருந்தன. "புறக்கூறுகளில் விருப்பம் உடையவராக இருப்போருக்கு, மேலெழுந்த வகைத் தோற்றங்கள் எல்லாமுமாக இருக்கின்றன. இருதயத்தின் நேர்மை ஒன்றுமற்றதாகவே அவர்களால் கணக்கிடப்படுகின்றன." (தெரிந்தெடுக்கப்பட்டது).

**5:13** பைத்தியம் பிடித்தவர், வெறிகொண்டவர், பலவகையான மனநோய் கொண்டவர் என்றெல்லாம்கூட அப்போஸ்தலன் குற்றஞ்சாட்டப்பட்டதாக இந்த வசனம் தோற்றுவிக்கிறது. திருவாளர் டென்னி குறிப்பிட்டிருப்பதுபோல, "ஆவிக்குரிய மன உலைவோடு" அவர் இருந்தார் என்பதை மறுத்துரைக்கவில்லை. அவர் **பைத்தியம் கொண்டவர்** என்றால், **தேவனுக்காக அப்படியிருந்தார்** என்று மட்டுமே அவர் இங்கு கூறுகிறார். அவருடைய எதிரிகளுக்கு அவர் பைத்தியம் கொண்டவர் போலத் தோன்றினால், உண்மையில் அது அவர் கர்த்தருக்காக உள்ளத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த விசுவாசத்தில் உண்டான நிலையேயாகும். தேவனுடைய

காரியங்களைக் குறித்த பேரார்வத்தின் காரண மாக அவர் சுட்டெரிக்கப்பட்டவராக இருந்தார். இதற்கு மாறாக அவர் **தெளிந்தபுத்தியோடு** இருந்தார் எனில் கொரிந்துப் பட்டணத்து விசுவாசி களின் பொருட்டு அவர் அவ்வாறு இருந்தார். பவுலின் நடத்தையைப் பற்றி இரண்டு விதங் களில் ஏதாவது ஒன்று என விளக்கிக் கூறலாம். ஒரு விதத்தில் காணும்போது அது அவர் தேவ னுக்காகக் கொண்டிருந்த வைராக்கியமாகும், அல்லது அது உடன் விசுவாசிகளின் நலன் கருதி செயல்பட்ட விதமாக இருக்கும். இந்த இரண்டு விதமான நடத்தையிலும், அவருடைய நோக்கங் கள் முழுவதும் சுயநலமற்றவையாகவே இருந் தன. அவரைக் குறை கூறியவர்கள் தங்களைக் குறித்து இவ்வாறு சொல்ல முடியுமா? இதுவே இந்த வசனத்தின் சுருக்கமான பொருளாகும்.

**5:14** சோர்வின்றியும் தன்னலமின்றியும் அப்போஸ்தலன் திருப்பணி ஆற்றுவதற்குத் தூண்டுகோலாக விளங்கியது எது என்பதை, அவருடைய வாழ்க்கை வரலாற்றைப் படிப்பவர் எவரும் தவறவிடமாட்டார். அவர் எழுதிய மடல் கள் எல்லாவற்றிலும் மிகச்சிறந்த பகுதிகளில் ஒன்றான இப்பகுதியில் அதற்குரிய விடையைத் தருகிறார் - **கிறிஸ்துவினுடைய அன்பு**.

கிறிஸ்துவினுடைய அன்பு என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது நம்மீது அவர் கொண்டிருக் கிற அன்பா அல்லது நாம் அவரிடத்தில் கொண்டிருக்கும் அன்பா? அவர் நம்மிடத்தில் கொண்டிருக்கிற அன்பே இங்கு சொல்லப் பட்டிருக்கிறது என்பதில் கேள்வி எதுவுமில்லை. அவர் நம்மிடத்தில் முதலாவது அன்பு செலுத்திய தன் ஒரே காரணமாகவே நாம் அவரிடத்தில் அன்பு செலுத்துகிறோம். அவருடைய அன்பே நம்மை **நெருக்கி ஏவுகிறது**, நம்மை நடத்திச் செல்கிறது. கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் கடைகளுக்குச் செல்லும் கூட்டத்தில் ஒருவர் நடந்து செல்வது எப்படியோ, அவ்விதமாகச் கிறிஸ்துவின் அன்பு நம்மை நடத்திச் செல்கிறது, தன்னிடத்தில் கிறிஸ்து காட்டிய, வியத்தகு அன்பைக் குறித்துப் பவுல் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தபோது, தனக்கு அருமையான கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்காக முன்னேறிச் செல்வ தைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் என்று கூறுகிறார்.

எல்லாருக்காகவும் இயேசு மரணம் அடைந்த போது, அவர் நம்முடைய பிரதிநிதியாகச் செயல் பட்டார். அவர் மரணம் அடைந்தபோது, நாம் **எல் லாரும்** அவருக்குள்ளாக மரணமடைந்தோம். ஆதாமின் பாவம் எவ்வாறு அவனுடைய குடிவழி யில் வந்தவர்களுடைய பாவமாயிற்றோ, அது போலவே கிறிஸ்துவின் மரணம் அவரிடத்தில் விசுவாசம் வைத்தவர்களுடைய மரணமாயிற்று (ரோமர் 5:12-21; 1 கொரி 15:21,22).

**5:15** அப்போஸ்தலன் இங்கு உரைக்கும் வாதம் தடை செய்யக் கூடாதபடி வலிமையுடைய தாயிருக்கிறது. **கிறிஸ்து எல்லாருக்காகவும் மரித்தார்**. அவர் **எல்லாருக்காவும்** மரணம் அடைவதற்கான காரணம் என்ன? அவரிடத்தில் விசுவாசம் உடையோராய்ப் **பிழைத்திருக்கிற வர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திரா மல், தங்களுக்காக மரித்து எழுத்தவருக் கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லா ருக்காகவும் மரித்தார்**. நாம் விரும்புகிறவண் ணம் குறுகிய மனப்பான்மையோடு, தன்னலம் மிக்கவராக இந்த வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தும்படி, நமது இரட்சகர் எல்லாருக்காகவும் மரணமடையவில்லை. மாறாக, இதுமுதல் நாம் நம்முடைய வாழ்க்கையை அவரிடத்தில் விருப் பத்தோடும், மனமகிழ்ச்சியோடு கூடிய பற்றுடனும் ஒப்புவித்து வாழவே, அவர் நமக்காக மரித்தார். திருவாளர் டென்னி இதனை விவரிக்கிறார்.

> நாம் அவருக்கு உரியவர்களாக இருக்கும்படி, எப்பொழுதும் அவர் ஒருவருக்கே உரியவர் களாக இருக்கும்படி கிறிஸ்து தமது அன்பின் காரணமாக, தம்முடைய மரணத்தை அடைந்து நமக்காக மிகப்பெரிய செயலைச் செய்திருக் கிறார். அவருடைய மரணத்திற்கான ஒரே நோக்கம் நாம் அவருடையவர்களாக ஆவதே யாகும்.[26]

**5:16** பெரும்பாலும் பவுல் இங்கே 12 -ஆவது வசனத்தைத் திரும்பவும் குறிப்பிடுகிறார் என்றே தோன்றுகிறது. அங்கே அவர் தம்மைக் குறை கூறியவர்களைக் குறித்து, இருதயத்திலல்ல, வெளிவேடத்தில் மேன்மை பாராட்டியவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். நாம் கிறிஸ்துவினிடத் தில் வரும்போது அங்கே ஒரு புதிய படைப்பு உண்டாகிறது என்று அவர் கற்பித்து அதே பொருளைப் பற்றி மீண்டும் பேசுகிறார். **இது முதற்கொண்டு** நாம் ஜென்ம சுபாவத்தின் படியோ, உலக முறைமைகளின்படியோ, வெளித் தோற்றங்களின் படியோ, மனிதர்கள் அளிக்கும் சான்றிதழ்களின்படியோ, எந்த நாட்டைச் சேர்ந்த வர்கள் என்பதன் அடிப்படையிலோ மனிதர்களை

மதிப்பிடப் போவதில்லை. இந்த விலைமதிப்பு மிக்க ஆத்துமாக்களுக்காக அல்லவோ கிறிஸ்து மரணமடைந்தார் என்று நாம் அவர்களைக் காண் கிறோம். **நாங்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும்,** அதாவது, அவரை வெறு மனே வேறொரு மனிதராக அறிந்திருந்தாலும் இனிமேல் அவரை அவ்வாறு நினைக்கப்போவ தில்லை என்று அவர் தொடர்ந்து சொல்லுகிறார். நாசரேத் என்னும் சிற்றூரில் அயல்வீட்டுக்கார ராகவோ இவ்வுலகத்து மேசியாவாகவோ அறிந் திருப்பது ஒரு நிலை. ஆனால் தேவனுடைய வலது புறத்தில் மகிமை நிறைந்த கிறிஸ்துவாகத் தற்போது உள்ள நிலை வேறொரு நிலையாகும்.

கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் இருந்த போது, மனிதத்தோற்றத்தின்படி அவரை நியாயந் தீர்த்தவர்கள் எவ்வளவாக அவரை அறிந்திருந் தார்களோ அதைக் காட்டிலும், திருமறையின் மூலமாக ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தி யிருக்கிற நிலையில் நாம் அவரை மிக நெருக்க மாகவும் உண்மையானபடியும் அறிந்திருக் கிறோம்.

இதனை டேவிட் ஸ்மித் என்பார் விளக்குகிறார்:

> யூதர்கள் இவ்வுலகிற்குரிய மிகச்சிறந்த மேசி யாவை எதிர்பார்த்த அதே கொள்கையை அப் போஸ்தலனும் ஒரு காலத்தில் கொண்டிருந் தார். ஆனால் இப்பொழுதோ அவரைக் குறித்து உன்னதமான கருத்துடையவராக மாறிவிட்டார். அவருக்கு இப்பொழுது கிறிஸ்து உயிர்த்தெழுந்தவரும் மகிமையடைந்தவரும் ஆவார்; உண்மையாகவே மாம்சத்தின்படி அறியப்படாதவர், ஆவியின்படி அறியப்பட்ட வர்; வரலாற்று மரபின்படி அறியப்படாதவர், மாறாக மிக நெருக்கமாகவும், இன்றியமை யாத வகையிலும் ஐக்கியம் கொண்டவர்.[27]

**5:17 ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்,** அதாவது இரட்சிக்கப்பட்டிருந்தால் அவன் **புது சிருஷ்டியாயிருக்கிறான்**. மனமாற்றத்திற்கு முன்பு ஒருவர் பிறரை மனிதத் தகுதிகளின்படி மதிப்பிடலாம். ஆனால் இப்பொழுதோ எல்லாம் மாறிவிட்டது. **பழைய** மதிப்பிடும் முறைகள் யாவும் ஒழிந்துபோயின, **எல்லாம் புதிதாயின.**

புதிதாக மனமாற்றம் அடைந்தவர்களுக்கு இந்த வசனம் மிக விருப்பமான வசனமாக இருக் கிறது. மேலும் இவ்வசனம் தனிநபர் சாட்சிகளில் அவ்வப்போது சொல்லப்படுகிறது. அவ்வாறு சொல்லப்படும் சில வேளைகளில், இது தவறான எண்ணத்தை உருவாக்கிவிடுகிறது. ஒரு மனிதன் இரட்சிக்கப்படுகையில் அவனுடைய முந்தின நடத்தைகள், கெட்ட எண்ணங்கள், இச்சையுடன் கூடிய பார்வை அனைத்தும் என்றென்றுமாக அவனைவிட்டு நீங்கி, அவன் உண்மையாகவே புதிய மனிதனாக வாழ்கிறான் என்று அச்செய்தி யைக் கேட்பவர்கள் எண்ணங்கொள்வது சாத்தி யமே. ஆனால் இது உண்மையல்ல என்பதை நாம் அறிவோம். இந்த வசனம் ஒரு விசுவாசியின் நடத்தையைக் குறிப்பிடாமல், அவன் பெற்றிருக் கிற தகுநிலையையே குறிப்பிடுகிறது. **ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்** என்று இவ்வசனம் கூறுவதைக் கவனியுங்கள். இந்த வேதபகுதிக் குக் **கிறிஸ்துவுக்குள்** என்னும் சொல் திறவு கோலாக விளங்கிறது. **கிறிஸ்துவுக்குள் பழை யவை ஒழிந்துபோயின**, மேலும் **எல்லாம் புதிதாயின**. ஆனால் "எனக்குள்" இவை யாவும் இன்னும் உண்மையாகவில்லை என்பது வருத் தத்திற்குரிய நிலையாகும்! ஆனால் என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நான் வளர்ச்சியடை கிறபோது, என்னுடைய நடத்தையானது என்னு டைய தகுநிலைக்கு ஏற்றபடி வளர்ச்சியடை கிறது. ஒரு நாளில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் வருகையின் நாளில், இவ்விரண்டு நிலை களும் நிறைவாக இசைந்திருக்கும்.

**5:18 இவையெல்லாம் தேவனாலே உண்டா யிருக்கிறது.** எல்லாவற்றிற்கும் ஒரே ஆதாரமும் தொடக்கமுமாக அவர் இருக்கிறார். மனிதன் பெருமை பாராட்டுவதற்கு ஒன்றுமில்லை. அதே தேவனே **இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புர வாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக் கொடுத்தார்.**

**புதியதும் பொருள் பொதிந்ததுமான வேத அகராதியில்** ஒப்புரவாக்குதலின் வேத உப தேசம் மிக நேர்த்தியான முறையில் சொல்லப் பட்டிருக்கிறது.

> கிறிஸ்துவின் மூலமாகச் சகலத்தையும் ஏற்பு டையதாகத் தன்முன்னர் நிறுத்தும்படி, சிலுவையில் கர்த்தராகிய இயேசு அடைந்த மரணத்தினாலே தேவன் தமது கிருபையில் தமக்கும் மனிதனுக்கும் இடையேயிருந்த தொலைவை நீக்கினார். கிறிஸ்துவின் மரணத் தின் மூலமாக, விசுவாசிகள் பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், கண்டிக்கப்படாதவராக

வும் புதிய சிருஷ்டி நிறுத்தப்படும்படி ஏற் கனவே ஒப்புரவாக்கப்பட்டுவிட்டார்கள். கிறிஸ்து இவ்வுலகத்தில் இருந்தபோது, தேவன் கிறிஸ்து வுக்குள் இருந்து, அவர்களுடைய அக்கிரமங் களை அவர்கள் மீது சுமத்தாமல், உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார், ஆனால் இப்பொழுதோ தேவ அன்பு சிலுவையில் முழு வதுமாக வெளிப்பட்டிருக்கும் நிலையில், அதைக் குறித்த சாட்சி உலகமெங்கும் பரவி, தேவனோடு இணக்கமாகும்படி மனிதனை வருந்தி அழைக்கிறது. தேவன் மனிதனில் தமது மனமகிழ்ச்சியைக் கொண்டிருப்பதே இறுதியான நிலையாகும்.

**5:19 தேவன் கிறிஸ்துவுக்குள் உலகத் தைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொண்டார்** என் னும் செய்தியே ஒப்புரவாக்கும் ஊழியம் என்பதன் விளக்கமாகும். இந்த வாசகத்தை நாம் இரண்டு விதமாகப் புரிந்துகொள்ளலாம். அவையிரண் டுமே திருமறையின் அடிப்படையில் சரியாக இருக்கின்றன. முதலாவது, **தேவன் கிறிஸ்து வுக்குள் இருந்தார்** என்று சொல்லும்போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகம் என்னும் பொருளில் சொல்லுகிறோம். இது உண்மையானது என்பது நிச்சயம். இதனை மற்றொரு வகையிலும் நம்மால் அறிந்துகொள்ள முடியும். அதாவது, **தேவன் உலகத்தைக் கிறிஸ்துவுக்குள் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார்** என்று இதற்குப் பொருள் கூறலாம். இதனை வேறு விதத்தில் சொல்லுவோமெனில், **அவர் உலகத்தை ஒப்புரவாக்கிக்** கொண்டார் என்றும் அவ்வாறு செய்யும்போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நபருக்குள் அதைச் செய்தார் என்றும் சொல்ல வேண்டும்.

இவ்விரண்டு விளக்கங்களில் நாம் எதனை ஏற்றுக்கொண்டாலும் சத்தியமானது மிகத் தெளி வாய் இருக்கிறது. அதாவது, தேவன் தமக்கும் மனிதனுக்கும் இடையில் இருந்த பகைமைக் கான காரணமாகிய பாவத்தை நீக்கும் பொருட்டு அதற்கான செயலைச் சுறுசுறுப்பாய்ச் செய்தார். தேவன் ஒப்புரவாக வேண்டிய அவசியமில்லை. மனிதனே அவரோடு கூட ஒப்புரவாக வேண்டிய வனாக இருக்கிறான்.

உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் (அவர்கள் மீது சுமத்தாமல்), இதனை நாம் ஒரு முறை படிப்போமென்றால், இந்த வசனம் உலகம் முழுவதும் இரட்சிப்படையும் என்று போதிப்ப தாகத் தோன்றக்கூடும். அதாவது கிறிஸ்துவின் செயலினால் எல்லா மனிதர்களும் இரட்சிப்படை வார்கள் என்று தோன்றும். ஆனால் அவ்வாறு கற்பிப்பது, திருமறையின் பிற பகுதிகள் போதிப் பவைக்கு முற்றிலும் முரண்பட்டதாகக் காணப்படு கிறது. மனிதர்களுடைய பாவங்கள் அவர்கள் மீது சுமத்தப்படாதிருக்க தேவன் ஒரு வழியை உண்டு பண்ணியிருக்கிறார். எனினும் அந்த வழியானது எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதா யிருப்பினும், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர் களுக்கே அது பயனளிக்கக்கூடியதாயுள்ளது. இரட்சிக்கப்படாதவர்களின் பாவங்கள் நிச்சய மாக அவர்கள் மேலேயே நிலைநிற்கும். ஆனால் அந்த மனிதர்கள் கர்த்தராகிய இயேசுவை எப் பொழுது இரட்சகராக நம்பி ஏற்றுக்கொள்கிறார் களோ, அத்தருணத்திலேயே அவர்கள் அவருக் குள் நீதிமான்களாக எண்ணப்பட்டு, அவர்களு டைய பாவங்கள் யாவும் குலைத்துப் போடப்படும்.

தேவன் ஒப்புரவாக்கும் ஊழியத்தைச் செய்த தோடு, அவர் தமது ஊழியக்காரரிடம் **ஒப்புர வாக்குதலின் உபதேசத்தை ஒப்புவித்தார்**. அதாவது, எங்கும் சென்று எல்லா மனிதரிடமும், மகிமை நிறைந்த செய்தியை அறிவிக்கும்படி, அந்த வியத்தகு சிலாக்கியத்தை அவர்களிடம் ஒப்புவித்தார். அவ்வித புனிதமான பொறுப்பை அவர் தேவதூதர்களுக்குத் தராமல், எளிய, வலிமையற்ற மனிதர்களிடம் கொடுத்திருக் கிறார்.

**5:20** ஒப்புரவாகுதலின் உபதேசம் தன்னிடத் தில் கொடுக்கப்பட்டிருப்பதாக அப்போஸ்தலன் முந்தின வசனத்தில் கூறினார். மனுக்குலத்திற்கு அச்செய்தியை அறிவிக்கும்படி அவர் அனுப்பப் பட்டார். 5:20 முதல் 6:2 வரையிலான வசனங் களில் ஒப்புரவாகுதலின் உபதேசத்தைக் குறித்த சுருக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றே நாம் கருதுகிறோம். அதாவது பவுல் சென்ற ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பெருநிலப் பகுதியிலும் இரட்சிக்கப்படாத மக்களிடம் அவர் அறிவித்த அதே செய்தியை நாமும் கேட்கும்படி இங்கு கூறி யிருக்கிறார். கொரிந்துப் பட்டணத்து விசுவாசி கள் தேவனோடு ஒப்புரவாக வேண்டும் என்னும் எண்ணத்தில் அவர் அச்செய்தியை இங்கு கூறவில்லை என்பது முக்கியமானது. அவர்கள் ஏற்கனவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக இருக்கிறார்கள். ஆகவே இங்கு காண்பது யாதெனில், பவுல் சென்றவிடமெங் கிலும் இரட்சிக்கப்படாத மக்களிடம் அறிவித்து

வந்த அதே செய்தியைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளும் கேட்கும்படி அவர் அதனை இங்கு கூறுகிறார்.

ஓர் அரசனின் பிரதிநிதியாக வெளிநாட்டில் பணிபுரிகிறவரே, அந்நாட்டின் தூதர் என்றழைக் கப்படுகிறார். கிறிஸ்தவ ஊழியமானது மேன் மைக்கும் பெருமதிப்பிற்கும் உரிய அழைப்பு என்று பவுல் எப்பொழுதும் கூறுகிறார். நாம் வாழும் இவ்வுலகிற்குக் **கிறிஸ்துவினால்** அனுப்பப்பட்ட தூதர் என்று அவர் தன்னை ஒப்பிடுகிறார். அவர் தேவனுடைய **பிரதிநிதியாக** விளங்கினார். தேவன் அவர் மூலமாக **வேண்டிக் கொண்டார்.** ஆனால் இது தூதருக்குப் பொருத்தமான செயல் என்று சொல்ல இயலாதபடி விநோதமாயிருக் கிறது. பொதுவாக, ஒரு தூதர் **வேண்டிக்கொள் வார்** என்று எண்ணியும் பார்க்க முடியாது. ஆனால் அதுவே நற்செய்தியின் மகிமை. உண் மையில் தேவன் தமது முழங்கால்களை முடக்கி, நீர் நிறைந்த கண்களோடு மனிதர்கள் தம்மோடு **ஒப்புரவாக** வேண்டுமென்று கெஞ்சுகிறார். அங்கே பகைமை இருக்கிறது என்றால் அது மனிதனிடத்திலேயே இருக்கிறது. தமக்கும் மனித னுக்கும் இடையே ஐக்கியம் உண்டாகாதபடி இருந்த தடைகள் அனைத்தையும் தேவன் நீக்கிவிட்டார். கர்த்தர் தம்மால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார். இப் பொழுதோ மனிதன் பிடிவாதமாய்ச் செய்துவரு கிற கிளர்ச்சியை விட்டொழிக்க வேண்டும், போர் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும், **தேவனோடு ஒப்புரவாக வேண்டும்.**

**5:21** நம்முடைய ஒப்புரவாகுதலுக்கான அடிப் படை உபதேசத்தை இந்த வசனம் எடுத்துரைக் கிறது. ஒப்புரவாகுதலை தேவன் எவ்வாறு சாத்தி யமாக்குகிறார்? மனந்திரும்புதலோடும் விசு வாசத்தோடும் வருகிற குற்றமுள்ள பாவிகளை அவர் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்? நமது பாவங்களின் பிரச்சினையை முழுவதும் தீர்க்கும் வகையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செயலை நிறைவேற்றி இருப்பதால், தேவனோடு நம்மால் இப்பொழுது ஒப்புரவாக முடியும் என்பதே இக் கேள்விகளுக்கான விடையாகும்.

இதனை நாம் வேறு சொற்களிலும் கூறலாம் : கிறிஸ்துவை தேவன் **நமக்காகப் பாவமாக் கினார்** - அந்தக் கிறிஸ்து **பாவம் அறியாதவர்** - அதன் காரணமாக **நாம் அவருக்குள் தேவனு டைய நீதியாகிறோம்.**

கல்வாரி சிலுவையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்மில் பாவமுள்ளவராக மாறினார் என்று கருதிவிடக் கூடிய ஆபத்தைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அக்கருத்து முற்றிலும் தவறானது. நமது பாவங்கள் அவர் மேல் வைக்கப்பட்டன, ஆனால் அவை அவருக் குள் இல்லை. தேவன் அவரை நமக்காகப் பாவ நிவாரண பலியாக ஆக்கினார் என்பதே நடந்த உண்மை. அவரிடத்தில் நம்பிக்கை கொண்டி ருக்கும் நாம் தேவனால் நீதிமான்களாகக் கணக்கிடப்படுகிறோம். நியாயப் பிரமாணத்தின் கோரிக்கைகள் யாவும் நமது பதிலாளாகிய அவரால் நிறைவு செய்யப்பட்டுவிட்டன.

நீதியை அறியாத **நாம் அவருக்குள் தேவனு டைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார்** என்பது எத்தனை சிறப்புமிக்க உண்மையாக விளங்கு கிறது. எல்லைகளுக்குட்படா இத்தகைய கிருபைக்கு ஈடாக எந்தவொரு மனிதனுடைய நாவாலும் தேவனுக்கு நன்றி செலுத்த இயலாது.

**6:1** கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் தங்களிடம் காண்பிக்கப்பட்ட **கிருபையை** முழு வதும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பவுல் இவ்வசனத்தில் உற்சாகப்படுத்துகிறார் என்று சிலர் கருதுகிறார்கள்.

ஆனால், இரட்சிக்கப்படாத மக்களிடம் தான் பிரசங்கித்த செய்தியின் சுருக்கத்தையே பவுல் இன்னும் வழங்கிக் கொண்டிருக்கிறார் என்றே நாம் கருதுகிறோம். அவிசுவாசிகளுக்கு தேவன் அருளிய வியத்தகு கிருபையைக் குறித்து அவர் ஏற்கனவே கூறிவிட்டார். இப்பொழுது, அத்தகைய **கிருபையை** அவர்கள் **விருதாவாய்ப் பெறக் கூடாது** என்று அவர் அவர்களிடம் வருந்திக் கேட்டுக் கொள்கிறார். நற்செய்தியின் விதையை அவர்கள் தரிசு நிலத்தில் விழச்செய்துவிடக் கூடாது. மாறாக, இரட்சகரைக் குறித்து விவரித் துரைக்கும் அச்செய்தியை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**6:2** ஏசாயா 49:8 ஆம் வசனத்திலிருந்து அப்போஸ்தலன் இங்கு ஒரு மேற்கோளை எடுத்துரைக்கிறார். நாம் அந்த அதிகாரத்தைப் படிப்போமெனில், மேசியாவைத் தமது மக்கள் ஏற்க மறுத்ததன் காரணமாக தேவன் அவர் களோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்தார் என்னும் உண்மை புலப்படும். ஏழாவது வசனத் தில் கர்த்தராகிய இயேசுவை தேசம் நிராகரித் ததைக் காணமுடியும். அந்த நிராகரிப்பு அவரை

மரணத்திற்குக் கொண்டு சென்றது. 8-ஆவது வசனத்தில் யெகோவாவின் சொற்களை நாம் கேட்கிறோம். அங்கு, கர்த்தராகிய இயேசுவின் மன்றாட்டு கேட்கப்பட்டு, தேவன் அவரைப் பத்திரப்படுத்துவார் என்றும் உறுதி தரப்படுகிறது.

**இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன்.** இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. **அநுக்கிரக காலமும், இரட்சணிய நாளும்** மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்ததாலே பிரகடனம் செய்யப்பட்டன.

நற்செய்தியைப் பவுல் பிரசங்கித்த போது, மேற்கூறிய வியத்தகு உண்மையை ஆவலுடன் பற்றிக் கொண்டவராக, அதனையே அவிசுவாசிகளுக்கு அவர் அறிவித்தார்: **"இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்."** அதாவது, ஏசாயா முன்னுரைத்த **இரட்சணிய நாள்** என்னும் காலம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. ஆகவே அநுக்கிரக காலம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கையில் இரட்சகரை மனிதர்கள் நம்பி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பவுல் அவர்களை வற்புறுத்துகிறார்.

### ஒ. ஊழியத்தில் பவுலின் நடக்கை (6:3-10)

**6:3** பவுல் தான் பிரசங்கித்து வந்த செய்தியைப் பற்றி இதுகாறும் கூறினார். இப்பொழுது கிறிஸ்தவ **ஊழியத்தில்** தான் கைக்கொண்ட நடத்தையைக் குறித்துப் பேசத்தொடங்குகிறார். இரட்சிப்பின் செய்தியைக் கேட்காமல் இருக்க ஏதாவது காரணத்தைத் தேடுகிற மக்கள் எப்பொழுதும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்த பவுல், முன்னுக்குப் பின் முரணாக வாழும் ஊழியர்களைக் காணும்போது அவர்கள் சாக்குப் போக்குச் சொல்வதற்கு எளிதாகி விடுகிறது என்பதையும் எண்ணிப் பார்க்கிறார். ஆகவே **ஊழியமானது குற்றப்படுத்தப்படாதபடிக்கு அவர் யாதொன்றிலும் இடறல் உண்டாக்கவில்லை** என்று கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுக்கு நினைவுபடுத்துகிறார். நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று இங்கு ஊழியம் என்று சொல்லப்பட்டிருப்பது, ஏதோ மதிப்பிற்குரிய மதகுரு போன்ற பதவியல்ல, மாறாக அது கிறிஸ்துவுக்கென்று ஆற்றப்படுகின்ற திருப்பணியேயாகும். மனிதர்களால் சமயக் குருமார் பதவியில் நியமிக்கப்படுகின்ற நிகழ்ச்சிக்கு ஒப்பான எவ்வித நிகழ்ச்சிக்கும் இங்கே இடமில்லை. கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர் யாவருக்கும் இவ்வூழியம் உரித்தாகும்.

**6:4** நான்காவது வசனம் முதல் பத்தாவது வசனம் வரையிலும் அப்போஸ்தலன் எவ்வாறு தனது ஊழியத்தை நடத்த விரும்பினார் என்பது பற்றி விவரிக்கிறார். அது நிந்தைக்கு அப்பாற்பட்ட நடத்தையாகும். மகா உன்னதமானவருடைய ஊழியர் என்பதை உணர்ந்தவராக அவர் அத்தகைய அழைப்பிற்குத் தகுதியாக நடக்க வேண்டுமென்னும் நாட்டம் கொண்டிருந்தார். இந்தப் பகுதியைக் குறித்துத் திருவாளர் டென்னி மிக நேர்த்தியான விளக்கம் வழங்கியிருக்கிறார்.

> இங்கு விவாதிக்கப்படும் பொருள்பற்றி அப்போஸ்தலன் சிந்திக்கும் வேளையில், அவருடன் சேர்ந்து பெரிதான ஆழத்திலிருந்து நீரூற்றுகள் உடைந்து பெருக்கெடுத்து குறுகிய நீர்க்காலில் அவர் சிக்கிக் கொண்டவர்போல் காணப்படுகிறார். அவர் பேசத் தொடங்குகையில் ஒன்றோடொன்று தொடர்பற்ற சொற்களை ஒவ்வொன்றாகப் பேசுகிறார். ஆயினும் அவர் பேசி முடிக்கும் முன்னர் விடுதலை பெற்றவராக, எவ்விதத் தடையுமின்றி தனது ஆத்துமாவை ஊற்றிவிடுகிறார்.

நான்கு மற்றும் ஐந்து ஆகிய வசனங்கள், பவுல் அனுபவித்ததும், அவர் கர்த்தருக்கு நேர்மையும் உண்மையுமான ஊழியக்காரராக விளங்கினார் என்பதற்குச் சான்றாகவும் திகழ்ந்த சரீரப்பிரகாரமான உபத்திரவங்களைப் பற்றி விவரிக்கின்றன. அடுத்த இரண்டு வசனங்கள் அவர் வெளிப்படுத்திக் காண்பித்த இனிய கிறிஸ்தவப் பண்புகளைக் குறிப்பிடுகின்றன. தொடர்ந்து 8 முதல் 10 வரையிலான வசனங்களில் கிறிஸ்தவ ஊழியத்திற்கே உரிய முரண்பாடான அனுபவங்களை அவர் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

**மிகுந்த பொறுமையிலும்** என்னும் சொற்றொடர், தனி நபர்களிடமும் உள்ளூர் சபைகளிடமும் பவுல் காட்டிய நீடிய பொறுமையையும், மற்றும் அவர் சென்ற உறுதியின் பாதையிலிருந்து அவரை அகற்ற வேண்டும் என்னும் தீர்மானத்தோடு கொடுக்கப்பட்ட எல்லாவிதமான தொல்லைகளையும் சுட்டிக் காட்டுகிறது என்பதில் ஐயமில்லை.

**உபத்திரவங்கள்** என்னும் சொல், கிறிஸ்துவின் திருப்பெயருக்காக உண்மையாகவே அவர் அடைந்த கொடுமைகளைக் குறிக்கக் கூடும்.

**நெருக்கங்கள்** என்பது உணவு, உடை மற்றும் இருப்பிடம் ஆகியவை இல்லாததால் ஏற்பட்ட வறுமையின் கொடுமையைக் குறிப்பிடுகிறது.

**இடுக்கண்கள்** என்னும் சொல் அவர் அகப் பட்டுக்கொண்ட சாதகமற்ற சூழ்நிலைகளை உட்படுத்தியதேயாகும்.

**6:5** அப்போஸ்தலருடைய நடபடிகள் 16:23 - இல் சொல்லப்பட்டுள்ளபடி பல **அடிகளைப்** பவுல் தாங்கினார். அவர் **காவல்களில்** வைக்கப்பட்ட தைக் குறித்த விவரம் பின்னர் 2 கொரிந்தியர் 11:23 - இல் கூறப்பட்டுள்ளது. அவர் நற்செய்தி யைப் பிரசங்கித்த இடங்களில் தொடர்ந்து ஏற் பட்ட கலவரங்களும் கிளர்ச்சிகளுமே இங்கு **கல கங்கள்** என்று சொல்லப்பட்டுள்ளன. (யூதர்கள் எவ்வாறு இரட்சிப்படைந்தார்களோ அதே வித மாகப் புறவினத்தவரும் இரட்சிப்பு அடைவார்கள் என்னும் செய்தி மிகப்பெரிய அளவில் வன் முறைக் கலவரங்களை உண்டுபண்ணியது). பவுல் செய்துவந்த கூடாரம் பண்ணும் தொழிலும், இன்னபிற கடினமான கைத்தொழில்களும் அவரது **பிரயாசங்களாக** இருந்தன. மேலும் அவர் மேற்கொண்ட பயணங்களைக் குறித்துச் சொல்ல வேண்டியதில்லை. பிசாசின் தந்திரங் களினால் உண்டான ஆபத்துகளிலிருந்தும், எதிரி களின் தாக்குதல்களிலிருந்தும் அவர் தன்னைக் காத்துக்கொள்வதற்காகத் தொடர்ந்து **கண் விழிப்போடு** இருக்க வேண்டியதாயிற்று.

**6:6** பவுல் ஆற்றிய ஊழியம் **கற்பில்** நிறை வேறியது. அதாவது அது ஒழுக்கத்திலும் பரிசுத் தத்திலும் நடைபெற்றது. அங்கு ஒழுக்கக்கேடு இருந்தது என்று நீதியாய்க் குற்றஞ்சாட்டக் கூடாதபடி அது தூய்மையாயிருந்தது.

மேலும் அது **அறிவினால்** நடத்தப்பட்டது. அதாவது அது அறியாமையினால் செய்யப்பட்ட ஊழியமன்று. மாறாக, தெய்வீக முறையில் கொடுக்கப்பட்ட அறிவினால் நிறைவேற்றப்பட்ட ஊழியமாகும். இது பவுல் இயற்றிய மடல்களில் தெய்வீக சத்திய வெளிப்பாடுகளில் வியத்தகு வகையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவருடைய **நீடிய சாந்தத்தைக்** குறித்த நிரூபணம் கொரிந்துப் பட்டணத்து விசுவாசி களுக்குத் தேவையில்லை! அவர்களுடைய பாவத்தைக் குறித்தும் தவறுகளைக் குறித்தும் அவர் பொறுமையோடு நடந்து கொண்ட முறையே அதற்குப் போதுமான நிரூபணமாகும்! மற்றவர் களுக்காக அவர் தம்மையே எவ்விதத் தன்னலமு மின்றி கொடுத்தது அவரது **தயவை** வெளிப் படுத்துகிறது. மேலும் இறை மக்களிடம் அவர் காட்டிய அன்பு மற்றும் பரிவிரக்கம் ஆகியவற்றி லும் அது தெரியவருகிறது.

பவுல் செய்த யாவும் ஆவியின் வல்லமை யால் செய்யப்பட்டவை என்பதையே **பரிசுத்த ஆவியிலும்** என்னும் சொற்றொடர் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் தனது வாழ்வில் பிறரிடம் செலுத்திய அன்பு மாயமற்றதும் உண்மை யானதுமாகும் என்பதை **மாயமற்ற அன்பிலும்** என்னும் சொற்றொடர் வெளிப்படுத்துகிறது. அது அவருடைய செயல் பண்பாகக் காணப்பட்டது.

**6:7 சத்திய வசனத்தில்** என்னும் சொற் றொடர், பவுல் தனது ஊழியத்தைச் **சத்திய வசனத்திற்குக்** கீழ்ப்படிந்தவராகவே நிறை வேற்றினார் என்று குறிப்பிடக்கூடும். அல்லது அவர் எத்தகைய செய்தியைப் பிரசங்கித்தாரோ அதற்கு ஏற்றாற்போல், அதாவது **சத்திய வசனத் திற்கு** ஏற்றாற்போல் அவருடைய ஊழியம் நேர்மையானதாக இருந்தது என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

அப்போஸ்தலன் தனது ஊழியத்தைச் சொந்த வலிமையினால் நிறைவேற்றவில்லை என்பதைத் **திவ்விய பலத்தில்** என்னும் சொற்றொடர் குறிக் கிறது என்பதில் ஐயமெதுவுமில்லை. தேவன் தருகிற பலத்தினாலேயே அவர் அதை நிறை வேற்றினார். அப்போஸ்தலன் என்னும் அடிப்படை யில் அற்புதங்களைச் செய்ய அவருக்கு வலிமை தரப்பட்டது என்பதை இது சுட்டிக் காட்டுகிறது என்று சிலர் கருதுகிறார்கள்.

எபேசியருக்கு எழுதிய மடலில் 6:14-18 ஆகிய வசனங்களில் நீதியாகிய ஆயுதங்களைப் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அப்பகுதி நேர்மையான நடத்தையையும் கொள்கை மாறாத குணப்பண்பையும் சித்திரமாய் வரைந்து காட்டு கிறது. "நடைமுறை நீதியால் அணிவிக்கப்பட்ட மனிதன் வெல்ல இயலாத வலிமை பெற்ற வனாகத் திகழ்கிறான்" என்று ஒருவர் கூறியிருக் கிறார். நமது மனச்சாட்சியானது தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராகக் குற்றமிழைக்காத நிலை யில், பிசாசினால் நம்மீது எதையும் எய்திடமுடி யாது.

**வலதிடது பக்கத்து** என்னும் சொற்றொடருக் குச் சரியான பொருள் எது என்பதில் சற்று ஐயம் ஏற்படுகிறது. பண்டைக் காலப் போர்முறையில் பட்டயத்தை வலது கையிலும், கேடயத்தை இடது கையிலும் வைத்திருப்பார்கள். பட்டயமானது எதிரிகளைத் தாக்கிப் போர் புரிவதற்கும், கேட யமானது தற்காத்துக் கொள்வதற்கும் பயன்படுத் தப்பட்டன. அதனடிப்படையில் காணும்போது,

நற்குணக் கிறிஸ்தவப் பண்பு, சிறந்த தாக்குதலாகவும், பாதுகாவலாகவும் விளங்குகிறது என்று இங்கு பவுல் கூறுகிறார் எனக் கருதலாம். மேற் கூறிய விளக்கமே பொதுவாக, சிறந்த விளக்கமாகக் கருதப்படுகிறது.

**6:8** இந்த வசனம் முதல் பத்தாவது வசனம் வரையிலும் கர்த்தராகிய இயேசுவுக்கென ஆற்றக்கூடிய திருப்பணியில் காணப்படும் ஒன்றுக் கொன்று முரணானவற்றைப் பவுல் விவரிக்கிறார். உண்மையான சீடன் மலையுச்சி போன்ற அனுபவங்கள் மற்றும் பள்ளத்தாக்கு அனுபவங்கள் ஆகியவற்றின் ஊடாகச் செல்வதோடு, இரண்டிற்கும் இடைப்பட்ட எல்லாவித நிலப்பரப்புகளுக்கும் உரிய அனுபவங்களின் ஊடாகவும் செல்கிறான். அவ்வாழ்க்கை **கனத்திற்கும் கனவீனத்திற்கும்** உரியதாக இருக்கிறது. அது வெற்றிக்கும், தோல்வியெனத் தோன்றுவதற்கும், பாராட்டப்படுவதற்கும் குறை கூறப்படுவதற்கும் உரியதாக இருக்கிறது. **துர்க்கீர்த்திக்கும் நற்கீர்த்திக்கும்** இலக்காக உண்மையுள்ள ஊழியக்காரன் இருக்கிறான். அவனுடைய ஆர்வத்தையும் உற்சாகத்தையும் குறித்துச் சிலர் பாராட்டுகிறார்கள், ஆனால் வேறுசிலர் அதனைக் குற்றப்படுத்துகிறார்கள். சிலர் அவனை வஞ்சிக்கிறவன் ஏமாற்றுகிறவன் என்று கூறுகிறார்கள். எனினும் அவன் இவையாவற்றுக்கும் **நிஜஸ்தனாக** விளங்குகிறான். அவன் ஏமாற்றுகிறவன் அல்லன். மாறாக அவன் மகா மேன்மையான தேவனுடைய உண்மையான ஊழியக்காரனாகத் திகழ்கிறான்.

**6:9** ஒரு பொருளின் அதாவது இந்த உலகத்தோடு கூடிய தொடர்பில் பவுல் **அறியப்படாத வராக,** பாராட்டப்படாதவராக, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவராக இருந்தார். ஆனாலும் தேவனாலும் அவருடைய உடன் விசுவாசிகளாலும் நன்றாய் **அறியப்பட்டவராக** இருந்தார்.

அவருடைய வாழ்வு ஒவ்வொரு நாளும் சாகிற தாயிருந்தது. ஆனாலும் அவர் உயிரோடிருந்தார்! அச்சுறுத்தப்பட்டு, வேட்டையாடப்பட்டு, பின் தொடரப்பட்டு, உபத்திரவப்படுத்தப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டு வாழ்ந்த அவர் மிகுந்த பேரார்வத்துடன் நற்செய்தியை அறிவிக்க மட்டும் விடுதலை பெற்றிருந்தார். இது **தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும்** என்னும் சொற்றொடரால் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தண்டிக்கப்படுகிறவர் என்னும் சொல் அவர் மனிதர்களின் மூலமாக அடைந்த தண்டனைகளையே சுட்டிக்காட்டுகிறது. அவருடைய ஆவேசமான வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டதாகப் பல முறை அவர்கள் நினைத்துக்கொண்டார்கள். ஆனால் அவர் வேறு நகரங்களுக்குச் சென்று, கிறிஸ்துவுக்காக வெற்றி பெற்றதைக் குறித்தே அவர்களால் கேட்க முடிந்தது!

**6:10** அந்த ஊழியத்தின் காரணமாகத் துக்கமடைய வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்ட போதிலும் பவுல் **எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவராக** இருந்தார். நற்செய்தியை வேண்டாமென மக்கள் புறக்கணித்ததன் காரணமாகவும் தேவனுடைய மக்கள் அடைந்த தோல்விகளின் நிமித்தமும் அவருடைய சொந்தக் குறைவுகளின் நிமித்தமும் அவர் துக்கமடைந்தார் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் அவர் கர்த்தரைக் குறித்தும் தேவனுடைய வாக்குறுதிகளைக் குறித்தும் சிந்தித்தபோது அவர் உன்னதத்தை நோக்கிப் பார்க்கவும் களிகூரவும் ஏதுவாயிற்று.

உலகத்தின் பொருட்களைப் பொருத்தமட்டில் பவுல் **தரித்திரராகவே** இருந்தார். அவர் சொத்துகளையோ செல்வத்தையோ உடையவராயிருந்தார் என்று நாம் படிப்பதில்லை. ஆனாலும் அவருடைய ஊழியத்தின் மூலமாக வளமாக்கப்பட்ட வாழ்க்கையைப் பெற்ற மனிதர்களை நினைத்துப் பாருங்கள்! அவர் **ஒன்றுமில்லாதவராயிருந்தும், கணக்கில் எடுத்துக்கொள்ளப்படக்கூடிய சகலத்தையும் உடையவராயிருந்தார்.**

"வாழ்க்கையின் நெருக்கடியான கட்டத்தை குறித்து எழுதப்பட்ட வாக்கியங்களில், பவுல் தனது கற்பனை ஓட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டார். அது மேகங்களில் தோன்றும் மின்னல் போலப் பாய்ந்து செல்லுகிறது" என்று திருவாளர் A.T. இராபர்ட்சன் கூறுகிறார்.

### ஒ. திறந்த மனப்பான்மையோடும் நேசத்தோடும் இருக்கும்படி பவுல் வேண்டுகோள் விடுத்தல் (6:11-13).

**6:11 கொரிந்துப்** பட்டணத்தார் தங்களுடைய இருதயங்களை அவருக்குத் திறக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் இப்பொழுது உணர்ச்சியூட்டும் வகையில் வேண்டுகோள் விடுக்கிறார். அவர் தனது அன்பைக் குறித்து அவர்களிடம் வெளிப்படையாகவும் ஒளிவு மறைவு இன்றியும் பேசியிருந்தார். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்பதற்கிணங்க பவுலின் இருதயம் அந்த மக்களிடம் கொண்டிருந்த நேசத்தினால் நிறைந்திருந்தது, அவருடைய வாய் திறந்து பேசியது.

இதுவே இந்த வசனத்தின் பொதுவான பொருளாக இருக்கிறது என்பது **"எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது"** என்னும் சொற்களால் சுட்டிக் காட்டப்படுகிறது. அதாவது அன்பினால் அவர்களை ஏற்றுக்கொள்ள அவர் ஆயத்தமாயிருந்தார்.

இதனைத் திருவாளர் டோசர் விவரிக்கிறார் : "பவுல் உருவத்தில் சிறிய மனிதராக இருந்தார். அவருடைய உள்ளார்ந்த வாழ்வோ விரிவாய் இருந்தது. அவருடைய சீடரின் குறுகிய மனப்பான்மையால் அவருடைய பெரிதான இருதயம் அவ்வப்போது புண்பட்டது. அவர்களுடைய சுருங்கிப் போன ஆத்துமாக்களினால் அவர் மிகவும் புண்பட்டிருந்தார்."

**6:12** கொரிந்தியருக்கும் பவுலுக்கும் இடையே உண்டாயிருந்த பாசத்தில் தடை ஏற்பட்டிருக்குமாயின் அது பவுலினிடத்தில் அல்ல அவர்களிடமே இருந்தது. அவரைத் தங்களிடமாய் வர வேற்க வேண்டுமா கூடாதா என்று உறுதி செய்ய முடியாதபடி அவர்கள் அவர்மீது செலுத்திய அன்பைக் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். ஆனால் அவரோ அவர்கள் மீது செலுத்திய அன்பை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்திக்கொள்ளவில்லை. அவர்கள் பக்கமே அன்பு குறைவுபட்டிருந்தது, அவரிடத்தில் அல்ல.

**6:13** அவர்களிடத்தில் அவர் செலுத்திய அன்பிற்கு ஈடு செய்ய வேண்டுமானால் (விசுவாசத்தில் அவருடைய **பிள்ளைகளாக** இருந்தவர்களிடமே அவர் பேசிக்கொண்டிருக்கிறார்), அவர்கள் அவரிடம் பாராட்டும் பாசத்தை அதிகமாக வெளிப்படுத்திக் காட்ட அனுமதிக்க வேண்டும். பவுல் அவர்களுடைய தகப்பன் என்னும் எண்ணத்துடனேயே நடந்து கொண்டார். அவர்களும் அவரைத் தங்களுடைய விசுவாசத்தில் தகப்பன் என்று கருத வேண்டும். இந்நிலையை தேவன் ஒருவரால் மட்டுமே கொண்டுவர முடியும். ஆனால் அவர்களுடைய வாழ்வில் அவ்வாறு நிகழ அவர்கள் அவருக்கு இடங்கொடுக்க வேண்டும்.

பதினொன்று முதல் பதின்மூன்று வரையிலான வசனங்களின் மோ.ட் மொழிபெயர்ப்பு மேற்கூறிய கருத்தைத் தெளிவுபட விளக்குகிறது:

> "கொரிந்தியரே, உங்களிடத்திலிருந்து நான் எதையும் மறைத்து வைக்கவில்லை. என் இதயமோ உங்களுக்காக விரிவாய்த் திறந்திருக்கிறது. "அதில் ஏதேனும் கட்டுப்பாடு உள்ளதா?" – அது உங்களிடத்தில் தான் இருக்கிறது, என்னிடத்தில் அல்ல. நேர்மையான முறையில் நாம் பரிமாறிக் கொள்ள வேண்டுமா, பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல சொல்லுகிறேன்! உங்களுடைய இருதயங்களை எனக்கு விரிவாய்த் திறவுங்கள்".

### ஒள. திருமறையின் அடிப்படையில் பிரிந்து வாழ்வதற்கான பவுலின் வேண்டுகோள் (6:14–7:1).

**6:14** பதின்மூன்று மற்றும் பதினான்கு ஆகிய வசனங்களுக்கு இடையேயுள்ள தொடர்பு யாதெனில்: பரிசுத்தவான்கள் பவுலினிடத்தில் தங்களுடைய பாசத்தைத் திறந்து காட்ட வேண்டும் என்று முதலில் கூறினார். ஆனால் அதைச் செய்ய வேண்டுமெனில் அவர்கள் எல்லாவிதமான பாவத்திலிருந்தும் அநீதியான செயல்களிலிருந்தும் பிரிந்து வாழவேண்டும் என்று இப்பொழுது கூறுகிறார். கொரிந்துப் பட்டணத்திலிருந்த சபையைக் கள்ளபோதகர் பலர் ஆக்கிரமித்துக் கொண்டதைச் சற்று அவர் சிந்தித்துப் பார்த்தார் என்பதில் ஐயமில்லை.

அந்நிய நுகம் என்னும் சொற்றொடர் உபாகமம் 22:10 ஆம் வசனத்தை குறிப்பாய்த் தெரிவிக்கிறது : "மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக". மாடு சுத்தமான விலங்காகும், கழுதையோ அசுத்தமான விலங்காகும். அவற்றின் நடையும் இழுசக்தியும் ஒன்றோடொன்று பொருத்தமற்றவை. இதற்கு மாறான நிலையில் விசுவாசிகள் கர்த்தராகிய இயேசுவுடன் நுகத்தில் இணைக்கப்படும்போது, அவருடைய நுகம் மெதுவாயும், சுமை இலகுவாயும் இருக்கும் (மத். 11:29,30).

திருமறை முழுவதிலும் பிரிந்து வாழ்வதைக் குறித்துப் பேசும் முக்கியமான பகுதிகளில் 2 கொரிந்தியரில் காணப்படும் இந்த வேதபகுதியும் ஒன்றாகும். விசுவாசிகள் அவிசுவாசிகளிடமிருந்தும், அநீதியிலிருந்தும், இருளிலிருந்தும், பேலியாளிடமிருந்தும், விக்கிரகங்களிலிருந்தும் விலகி வாழ வேண்டும் என்று மிகத் தெளிவான அறிவுரை இங்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திருமண உறவு பற்றி இது பேசுகிறது என்பது நிச்சயம். கிறிஸ்துவுக்குள்ளான ஒரு நபர் இரட்சிக்கப்படாதவரைத் திருமணம் செய்யக்கூடாது. ஆயினும் ஒரு விசுவாசி ஏற்கனவே ஓர் அவிசுவாசியைத் திருமணம் செய்திருந்தால் அவர்கள் பிரிந்து வாழ்வதையோ திருமண உறவை முரித்துக் கொள்வதையோ இப்பகுதி நியாயப்படுத்துவதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், இரட்சிக்கப்படாத நபர் அதன் பயனாக இரட்சிப்

படைய வேண்டும் என்னும் நோக்கத்துடன் அத்திருமண உறவு தொடர்ந்து நீடிக்க வேண்டும் (1 கொரி. 7:12-16).

மேலும் இது தொழில் துறையையும் குறிக்கிறது. ஒரு கிறிஸ்தவன் கர்த்தரை அறியாத வேறொரு மனிதரோடு சேர்ந்து கூட்டு வணிகம் செய்யக்கூடாது. இரகசிய பணித்துறைகளுக்கும் சமுதாய மற்றும் சமய நிறுவனங்களுக்கும் இது பொருந்தும். கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள வராக இருக்கும் ஒருவர் கிறிஸ்து இயேசுவின் திருப்பெயரை வரவேற்காத நிறுவனத்தோடு எவ்வாறு தொடர்ந்து தொடர்புகொள்ள முடியும்? இது சமுதாய வாழ்க்கையோடு எவ்வாறு தொடர்புடையது என்பதைக் காணலாம்: ஒரு கிறிஸ்தவன், இரட்சிக்கப்படாதவர்கள் கிறிஸ்துவுக்காக வெல்லப்பட வேண்டும் என்னும் நோக்கத்துடன், அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். ஆனால் அவர்களுடைய பாவ இச்சைகளிலோ வேறு தகாத நடவடிக்கைகளிலோ அவன் பங்கு பெற்று அவர்களுக்கும் இந்தக் கிறிஸ்தவனுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்று எண்ணங்கொள்ளும்படி நடந்துகொள்ளக் கூடாது. இப்பகுதி சமயச் செயல்பாடுகளுக்கும் பொருந்தக் கூடியதே யாகும். கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றிச் செல்கிற ஒருவர், தெரிந்தே அவிசுவாசிகளை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்கிற ஒரு சபையில் உறுப்பினராகத் திகழ விரும்பமாட்டார்.

பதினான்காம் வசனம் முதல் பதினாறாம் வசனம் வரையிலும் வாழ்க்கையில் காணப்படும் எல்லாவிதமான முக்கியமான உறவுகளும் சொல்லப்பட்டுள்ளன.

*நீதி, அநீதி*, என்பவை ஒழுக்கநெறி சார்ந்த முறைகள் யாவற்றையும் விவரிக்கின்றன.

*ஒளி, இருள்* ஆகியவை தேவனுக்குரியவற்றில் காணவேண்டிய அறிவுத் திறனைப் பற்றியவையாகும்.

*கிறிஸ்து* மற்றும் *பேலியாள்* அதிகார செயற்களத்தைச் சார்ந்தவர்கள். அதாவது, எவரை அல்லது எதை ஒருவர் தனது வாழ்க்கையின் எஜமானனாகக் கொண்டிருக்கிறார் என்பதை இச்செயற்களம் காட்டுகிறது.

*விசுவாசி* மற்றும் *அவிசுவாசி* விசுவாசச் செயற்களத்தோடு தொடர்புடையவர்கள் ஆவர்.

*தேவனுடைய ஆலயம்* மற்றும் *சிலைகள்* ஒரு மனிதனுடைய ஆராதனையோடு சம்பந்தப்பட்டவை.

**நீதியும் அநீதியும்** ஒன்றாக ஐக்கியம் கொண்டிருக்க முடியாது. ஒழுக்க நெறியில் அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. **ஒளியானது இருளோடு** எவ்விதத்திலும் **ஐக்கியம்** கொண்டிருக்க முடியாது. ஓர் அறையில் **ஒளி** புகுந்தறுவாயில் அங்கிருந்து **இருள்** அகன்று போகும். ஒரே நேரத்தில் இரண்டும் ஒன்றுசேர முடியாது.

**6:15 பேலியாள்** என்னும் பெயர் "பயனற்ற தன்மை" அல்லது "பொல்லாங்கு" என்று பொருள்படும். இங்கே பொல்லாங்கான ஒன்றின் பெயராகவே இது விளங்குகிறது. **கிறிஸ்துவுக்கும்** சாத்தானுக்கும் இடையே எப்பொழுதாவது சமாதானம் இருக்க முடியுமா? நிச்சயமாக முடியாது! ஒரு **விசுவாசிக்கும்** ஓர் **அவிசுவாசிக்கும்** இடையே எவ்வித ஐக்கியமும் இருக்க முடியாது. அவ்வாறு ஐக்கியம்கொள்ள முயற்சி செய்வது கர்த்தருக்கு எதிராகத் துரோகம் இழைப்பதாகும்.

**6:16 தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும்** எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. அவ்வாறு இருக்குங்கால், ஜீவனுள்ள **தேவனுடைய ஆலயமாக** விளங்கும் விசுவாசிகள் எங்ஙனம் **விக்கிரகங்களோடு** தொடர்பு கொண்டிருக்க முடியும். செதுக்கப்பட்ட சிலைகள் மட்டுமே இங்கு விக்கிரகங்கள் என்று சொல்லப்படவில்லை. கிறிஸ்துவுக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் வரக்கூடிய ஏதொன்றும் விக்கிரகமேயாகும். ஒருவேளை அவை பணம், இன்பம், புகழ் அல்லது உலகப்பொருட்களாக இருக்கலாம்.

நாம் **ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக** இருக்கிறோம் என்பதற்கு யாத்திராகமம் 29:45; லேவியராகமம் 26:12; எசேக்கியல் 37:27 போன்ற பகுதிகளில் பெரிதான சான்றுகளை அப்போஸ்தலன் காண்கிறார். இது குறித்து டென்னி கூறுகிறார்:

> தேவனுடைய ஆலயத்தின் புனிதத் தன்மை கெடாதபடி காத்துக்கொள்வதில் யூதர்கள் எவ்வித வாஞ்சையுடையவர்களாக இருந்தார்களோ அதுபோலவே கிறிஸ்தவர்கள் இருக்க வேண்டும் என்று பவுல் எதிர்பார்க்கிறார். மேலும் நாம் அந்த ஆலயமாக இருக்கிறோம் என்று அவர் இப்பொழுது கூறுகிறார். நாம் இந்த உலகத்திலிருந்து நம்மைக் குற்றமற்றவர்களாகக் காத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.[33]

**6:17** அது அவ்வாறிருக்க, **பிரிந்துவரும்படி** பவுல் அறைகூவல் விடுக்கிறார். ஏசாயா 52:11 -

இல் இருந்து அவர் மேற்கோள் ஒன்றைக் காட்டு கிறார். தீமையானவற்றினின்று அவருடைய மக்கள் பிரிந்து வாழ்வதற்காக தேவன் வழங்கிய தெளிவான அறிவுரைகளே இவை. கிறிஸ்தவர் கள் இதன் நடுவிலோ, இதனுடைய பங்காகவோ, இதனைச் சரிசெய்யும் பொருட்டோ செயல்பட வேண்டியதில்லை, தேவனுடைய திட்டமானது **"பிரிந்து போங்கள்"** என்பதேயாகும். **அசுத்த மானது** என்னும் சொல் முதன்மையாக புறச்சமய உலகினையே குறிப்பிடுகிறது. இதில் எவ்வித ஐயமில்லையெனினும், எத்தகைய தீமைக்கும் அதாவது பொருளாதாரம், சமுதாயம், சமயம் எதைச் சார்ந்ததாயினும் இச்சொல் பொருந்தக் கூடியதே.

மற்ற விசுவாசிகளிடமிருந்து பிரிந்து செல் வதற்கு இந்த வசனத்தைப் பயன்படுத்தக்கூடாது. "சமாதானக்கட்டினாலே ஆவியின் ஒருமைப் பாட்டைக் காத்துக்கொள்ளும்படி" விசுவாசிகள் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள்.

**6:18** தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப் படியும் பொருட்டு, பல ஆண்டு காலமாக நிலவி வரும் கட்டை அறுத்துக்கொள்வதென்பது கிறிஸ்தவர்களிடம் அவ்வப்போது எழக்கூடிய கடினமான பிரச்சினையாகும். இத்தகைய பிரச் சினையை தேவன் எதிர்பார்த்தவர் என்பதைப் பதினெட்டாம் வசனத்திலிருந்து அறியலாம். முதலில் **"நான் உங்களை ஏற்றுக்கொள் வேன்"** என்று கூறி, தொடர்ந்து **"நான் உங்களுக் குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள்" என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லு கிறார்.** தீமையின் பாளையத்திலிருந்து வெளி யேறி, கிறிஸ்துவுடனே நிற்கிறவர்களுக்குக் கிடைக்கும் பலன் பிதாவோடு புதியதும் மிக நெருக்கமானதுமான ஐக்கியத்தைக் குறித்து அறிந்துகொள்வதேயாகும். அவருடைய வார்த் தைக்குக் கீழ்ப்படிகிறதால் நாம் குமாரரும் குமாரத்திகளும் ஆகிறோம் என்பது இதன் பொருளன்று. இத்தகைய நடத்தையுடையவர் களாக இருக்கும்போது நாம் அவருடைய **குமார ரும் குமாரத்திகளுமாக**க் காணப்படுவோம். மேலும் நாம் இதுவரை அனுபவித்திராத இன்பங் களையும் உவகைகளையும் இதுமுதல் அனுப விப்போம்.

"உண்மையாகப் பிரிந்து வாழ்வதன் ஆசிர் வாதம் மகாதேவனோடு கூடிய மகிமை நிறைந்த தோழமையேயாகும்" (தெரிந்தெடுக்கப்பட்டது).

சுவிசேஷப் பிரகடனம் செய்யும் கிறிஸ்தவர் கள், பிற்காலத்தில் தோன்றிய புராதனக் கொள் கைகளைப் பின்பற்றும் சபைகள் இந்த நாளில் பெருகிவரும் பிரச்சினைகளுக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். "நான் என்ன செய்ய வேண்டும்" என்று அவர்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கின்றனர். தேவனுடைய பதில் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஐக்கியங் களில் கர்த்தராகிய இயேசு, தேவனுக்குப் பிரிய மான குமாரன் என்றும் உலகத்தின் இரட்சகர் என் றும் கனப்படுத்தப்படவில்லையோ, உயர்த்தப் படவில்லையோ அங்கிருந்து அவர்கள் பிரிந்து செல்லவேண்டும். அப்படிப்பட்ட ஐக்கியங்களுக் குள் இருந்து அவர்கள் எதைச் சாதிக்க முடி யுமோ, அதைக்காட்டிலும் வெளியிலிருந்து தேவ னுக்காக அதிகமாக அவர்களால் சாதிக்க முடியும்.

**7:1** இந்த வசனம் ஏற்கனவே சொல்லப்பட் டுள்ள செய்தியோடு மிகவும் நெருங்கிய தொடர் புடையது. இங்கே புதியதொரு பத்தி தொடங்க வில்லை. 6:14 -ஆம் வசனத்தில் தொடங்கிய பத்தியின் தொடர்ச்சியாக இவ்வசனம் விளங்கி, இத்துடன் உட்பிரிவு முடிவடைகிறது.

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாக் குத்தத்தங்கள், முந்தின அதிகாரத்தின் 17 மற்றும் 18 ஆகிய வசனங்களில் சொல்லப் பட்டுள்ளவையே ஆகும். "ஆனபடியால், நீங் கள்... உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரராயிருப்பீர்கள் என்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்." இங்கு உரைக்கப்பட்டுள்ள தேவனுடைய வியத்தகு **வாக்குத்தத்தங்களின்** நிமித்தம், நாம் **மாம்சத் திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக்கொள்வோம்.** மாம்சத்தின் தீட்டு எனப்படுவது எல்லாவிதமான சரீர அசுத்தங்களையும், ஆவியின் அசுசி எனப் படுவது ஒருவருடைய உள்ளான வாழ்க்கையை யும், நோக்கங்களையும், சிந்தனைகளையும் குறிக்கும்.

ஆனால் தேவன் முறையற்றதை மட்டும் குறிப் பிடாமல் முறையானதையும் குறிப்பிடுகிறார். **பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம்.** தீட்டுப்படுத்துகிறவற்றை நாம் விட்டொழிப்பது மட்டுமின்றி, நம்முடைய அனுதின வாழ்க்கையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாறுவதில் வளர்ச்சிய டைய வேண்டும். நாம் இவ்வுலகத்தில் இருக்கும்

போதே நிறைவான பரிசுத்தத்தை நம்மால் அடைந்துவிட முடியும் என்று இந்த வசனம் கூற வில்லை. நம்முடைய வாழ்நாள் எல்லாம் நம்மு டைய நடைமுறைப் பரிசுத்தத்தில் முன்னேற்றம் காணப்படவேண்டும். நாம் நம்முடைய கர்த்தரா கிய இயேசு கிறிஸ்துவை முகமுகமாய்க் காணப் போகிற நாள் வரையிலும், அவரைப் போல மாற்றம் பெறுவதில் வளர்ச்சி அடைகிறோம். அதன் பிறகு நித்திய காலமெல்லாம் நாம் அவரைப் போல் காணப்படுவோம். தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள மரியாதைக்குரிய அச்சம் அல்லது பயபக்தி எவ்வாறு நமதுள்ளத்தில் இருக்கிறதோ அதுபோலவே நாம் பரிசுத்தராக மாறவேண்டும் என்னும் விருப்பமும் நம்முடைய இருதயங்களில் இருக்கவேண்டும். "கர்த்தாவே, பரலோகத்தின் இந்தப் பகுதியாகிய இப்பூவுலகில் ஒரு மனிதனால் எந்த அளவிற்குப் பரிசுத்தமாக வாழ முடியுமோ அந்த அளவிற்கு என்னைப் பரிசுத்தப்படுத்துவீராக!" என்று தேவ மனிதராக விளங்கிய மேக்செய்னி உரைத்த வண்ணம் நாமும் கூறக் கற்றுக்கொள்வோம்.

### க. கொரிந்துப் பட்டணத்திலிருந்து கிடைக்கப் பெற்ற நல்ல செய்தியின் நிமித்தம் பவுல் அடைந்த மகிழ்ச்சி [7:2-16]

**7:2 எங்களுக்கு இடங்கொடுங்கள்** (எங்க ளுக்கு உங்களுடைய இருதயங்களைத் திறவுங் கள்). கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் அவ்வாறு செய்யாதிருக்கக் காரணம் எதுவு மில்லை. பவுல் ஒருவனுக்கும் அநியாயஞ்செய்ய வில்லை, அவர் ஒருவனையும் கெடுக்கவில்லை. அவர் ஒருவனையும் வஞ்சிக்கவில்லை என்று தொடர்ந்து கூறுகிறார். அப்போஸ்தலனைக் குறை கூறியவர்கள் அவருக்கு எதிராக என்ன கூறினாலும், அவர் ஒருவருக்கும் எவ்விதத் தீங்கும் இழைக்கவில்லை. அவர் எவரையும் வஞ் சித்துத் தனது நிதிநிலையை வளமாக்கிக் கொள்ளவுமில்லை.

**7:3** பவுல் கூறியவை அல்லது கூறிக்கொண்டி ருப்பவை, இவற்றில் எதுவும் கொரிந்துப் பட்டணத் தாரைக் குற்றவாளிகளாக்கும் பொருட்டுச் சொல் லப்பட்டதன்று. அவர் அவர்களிடத்தில் கொண்டி ருந்த ஆழமான அன்பானது அவருடைய வாழ் விலும் சாவிலும் தொடர்ந்து நிலைத்திருக்கும் என்று அவர் பலமுறை உறுதியளித்திருந்தார்.

**7:4** கொரிந்துப் பட்டணத்து பரிசுத்தவான் களோடு அவர் மிகவும் நெருக்கமான உறவு கொண்டிருந்ததை மனதிற்கொண்டவராக, அப் போஸ்தலன் அவர்களிடத்தில் **மிகுந்த தைரியத் தோடு** பேச எவ்விதத் தடையும் தனக்கில்லை என்று நினைத்தார். ஆகவே அவர் அவர்களோடு தொடர்பு கொண்டபோது அத்தகைய சொற் களைப் பயன்படுத்தினார். அவர்களோடு அவர் பேசிய விதம் பெரிய அளவில் வெளிப்படையான தாக இருந்தது. அதுபோலவே, அவர் அவர் களைக் குறித்துப் பிறருக்கு முன்பாக **மேன்மை பாராட்டவும்** செய்தார். ஆகவே அவர் அவர்களி டத்தில் ஒளிவு மறைவற்ற வகையில் பேசியதைக் கொண்டு, அவர் அன்புபாராட்டுவதில் குறை வுள்ளவர் என்று தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக அவர்களைக் குறித்து அவர் உண்மையாகவே மேன்மை பாராட்டக்கூடிய வராகவும், சென்ற இடமெங்கிலும் நற்சாட்சி பகரக்கூடியவராகவும் இருந்தார் என்று அவர்கள் உணர வேண்டும். எருசலேமில் வாழ்ந்த ஏழைப் பரிசுத்தவான்களுக்காக அவர்கள் பணம் சேர்க்க வேண்டும் என்று விருப்பங்கொண்டிருந்த மனப் பான்மையே அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க் கையில் அவர் உண்மையாக மேன்மை பாராட்டு வதற்குரிய முதன்மையான காரணமாகத் திகழ்ந் தது எனலாம். அந்தப் பொருள் குறித்து அப் போஸ்தலன் நேரடியாகப் பின்னர் பேசவிருக் கிறார். ஆனால் இங்கே அவர் அதைக் குறித்துக் குறிப்பாய்ச் சொல்லிச் செல்கிறார்.

**ஆறுதலால் நிறைந்திருக்கிறேன். எங்க ளுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்.** இந்தச் சொற்றொடர்களுக்கான விளக்கங்கள் தொடர்ந்து வருகிற வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. தனக்கு ஏற்பட்ட **சகல உபத்திரவத்திலேயும்** பவுல் **சந்தோஷமாயிருந்ததற்கான** காரணம் என்ன? கொரிந்தியரைக் குறித்த நற்சான்றைத் தீத்து கொண்டுவந்ததே அதற்கான காரண மாகும். அவர் களிப்பேருவகை அடைவதற்கும், உற்சாகம் அடைவதற்கும் இதுவே ஆதாரமா யிருந்தது.

**7:5** தீத்துவைத் தேடும்படி எபேசு நகரத்திலி ருந்து பவுல் எவ்வாறு துரோவா பட்டணத்திற்குச் சென்றார் என்பது குறித்து நாம் முன்னமே குறிப் பிட்டோம். அங்கு அவரைக் காணாததால் அவர் **மக்கெதோனியாவுக்குக்** கடல் கடந்து சென் றார். அவர் மக்கெதோனியாவுக்குச் சென்றதன் காரணமாக அவர் விரும்பி **இளைப்பாறுதலை** அடையவில்லை என்று இங்கு விளக்குகிறார். அவர் இன்னும் கவலை அடைந்தவராகவும்,

**உபத்திரவம்** அடைந்தவராகவும் இருந்தார். **புறம்பே** எதிரியானவன் இரக்கமற்றவனாகக் கொடுமை விளைவித்துக் கொண்டிருந்தான்; உள்ளே **பயங்களும்** கவலை நிறைந்த எதிர் பார்ப்புகளும் நிறைந்திருந்தன. தீத்துவை இன் னும் சந்திக்காததன் காரணமாகவும் இந்நிலை அவருக்கு ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை.

**7:6** அச்சூழ்நிலையில் **தேவன்** இடையிற் புகுந்து, **தீத்து வந்ததன்** காரணமாகப் பவுலுக்கு **ஆறுதலை** அளித்தார். அச்சமயத்தில் அப்போஸ் தலன் நீதிமொழிகள் 27:17 -இல் சொல்லப்பட் டுள்ள உண்மையை அனுபவித்தார்: "இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனிதனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்." கிறிஸ்துவினிடம் பக்தி நிறைந்த இவ்விரண்டு ஊழியக்காரரின் மகிழ்ச்சி நிறைந்த சந்திப்பைப் படவுருவாய்ச் சித்திரப்படுத்திக் காணுங்கள். ஒன்றன்பின் ஒன்றாகப் பவுல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகிறார்; தீத்து அவை யாவற்றிற்கும் மிக விரைவாக விடை பகர முயலு கிறார் (நீதிமொழிகள் 25:25 -ஆம் வசனத்தையும் காண்க).

**7:7** தனது நண்பரோடு மீண்டும் இணைக்கப் பட்டது மட்டும் பவுலுக்கு அத்தகைய பெரும் மகிழ்ச்சியை உண்டுபண்ணவில்லை; மாறாக, பவுல் எழுதிய மடலுக்குக் கொரிந்துப்பட்டணத்து விசுவாசிகள் செய்த பதிற்செயல் எவ்வாறு தீத்துவை **ஆறுதல்** அடையச் செய்தது என்ற செய்தியே அவருக்கு மிகுதியான மகிழ்ச்சியைத் தந்தது.

அப்போஸ்தலனாகிய பவுலைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் காணவேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தார்கள் என்னும் செய்தியே அவருக்கு மகிழ்ச்சியூட்டிய நற்செய்தியாயிருந் தது. அந்தப் பரிசுத்தவான்கள் பவுலினிடத்தில் கொண்டிருந்த பற்றுதலை நீக்கிவிடவேண்டும் என்ற தீர்மானத்தோடு கள்ளபோதகர் தீவிர முயற்சி செய்தபோதிலும் அவ்வாறு நிகழவில்லை. அவர்கள் பவுலைக் காணவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தது மட்டுமின்றி, அவர்கள் உண் மையான துக்கத்தையும் வெளிப்படுத்தினார்கள். தங்களுடைய சபையில் பாவத்தைப் பொறுத்துக் கொண்ட கவலையற்ற மனப்பான்மையின் பொருட்டு அவர்கள் **துக்கம்** அடைந்திருக்கக் கூடும். இல்லையேல் அவர்கள் அப்போஸ்தலனு டைய உள்ளத்தில் ஏற்படுத்திய மனக்கவலை யினாலோ கடும் துன்பத்தினாலோ, அவர்கள் **துக்கம்** அடைந்திருக்கலாம். இவ்வாறு அவர்களி டத்தில் துக்கம் ஏற்பட்டதோடு, அவர்கள் பவுலி னிடத்தில் பெருமதிப்பு கொண்டிருந்தார்கள் என்றும் அவரைச் சமாதானப்படுத்த அவர்கள் வாஞ்சையும் கொண்டிருந்தார்கள் என்றும் தீத்து அறிவித்தார்.

ஆகவே அப்போஸ்தலனுடைய மகிழ்ச்சி தீத்துவின் வருகையினால் மட்டுமின்றி, பவுல் கூறிய அறிவுரைகளுக்குக் கொரிந்தியர் கீழ்ப் படிந்தார்கள், மேலும் அவர்கள் அவர்மீது கரி சனை உடையோராய் இன்னமும் இருந்தார்கள் என்னும் செய்திகளினாலும் உண்டாயிற்று.

**7:8 ஆதலால் நான் நிருபத்தினாலே உங்க ளைத் துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத் துக்கப் படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப் பட்டிருந்தும், இப்பொழுது மனஸ்தாபப்படுகிற தில்லை.**

இங்கு பவுல் நிருபம் என்று குறிப்பிடுவது 1 கொரிந்தியர் என்று நாம் அறிந்திருக்கிற நிருப மாக இருக்கலாம். அல்லது நமக்குக் கிடைக்கப் பெற்றிராததும், பரிசுத்தவான்களுக்கு மிகக் கடுமையான முறையில் அறிவுரை வழங்கியது மான இரண்டாவது மடலாக இருக்கலாம்.

அந்த மடலை எழுதியதன் பொருட்டு ஏன் பவுல் மனஸ்தாபம் அடைந்தார் என்பதைச் சற்று நாம் விளக்கிக் கூறவேண்டும். 1 கொரிந்தியர் மட லையே அவர் இங்கு குறிப்பிடுகிறார் எனக் கொள்வோமெனில், அது ஆவியானவரின் ஏவுத லால் எழுதப்பட்டது என்னும் பொருளைப் பாதிக் கிறதில்லை. அங்கு அப்போஸ்தலன் எழுதிய யாவும் கர்த்தருடைய கட்டளைகளே. எனினும் பவுல் இன்னும் மற்ற மனிதர்களைப் போல நம்பிக்கை இழக்கக் கூடிய மனிதனாகவும், மனக் கவலை அடையக்கூடியவராகவுமே இருந்தார். இது குறித்து வில்லியம்ஸ் விளக்கமளிக்கிறார்.

> எழுத்தாளருக்கும் தேவ ஆவியின் ஏவுதலுக் கும் இடையேயுள்ள வேறுபாடு 8 -ஆம் வசனத்தில் வெளிப்படுகிறது. அவர் எழுதிய முதலாம் மடல் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது என்பதை அவர் அறிவார். அம் மடலின் சொற்கள் யாவும் "கர்த்தருடைய கட்டளைகளே" ஆகும். ஆனால் அம்மடலில் சொல்லப்பட்ட விஷயங்களின் விளைவாகக் கொரிந்தியர் அவரிடம் கொண்டிருந்த நட்பை முறித்துக்கொள்வார்களோ என்று வலிமை

> யற்றவரும், மனக்கவலை கொண்டவரும், பாசம் நிறைந்தவருமான அந்த மனிதர் எண்ணினார். அது அவருக்கு வேதனையைக் கொண்டுவரும் அல்லவா. ஒரு தீர்க்கதரிசியின் தனித்தன்மைக்கும், அவருக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளும் செய்திக்கும் இடையே காணப்படும் வேறுபாட்டை விளக்கும் ஆர்வத்தைத் தூண்டும் பகுதியாக இது விளங்குகிறது.[34]

இதனைச் சுருங்கக்கூறின், பவுல் இவ்வாறு கூறுகிறார் எனலாம்: கொரிந்தியர் முதலாவது அவர் எழுதிய மடலைப் படித்தபோது, அது அவர்களைக் கடிந்துரைக்கும் செய்தியாக வந்தது. மேலும் அவர்களுக்கு அது வேதனையை அளித்தது. அவர் அந்த மடலை எழுதிய பிறகு, அதற்குப் பதிலாக அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்ற எண்ணம் அவரை வருத்தியது. அவர் ஏதோ தவறு இழைத்துவிட்டது போன்ற எண்ணம் உடையவராகக் காணப்படவில்லை. இங்கே அப்படிப்பட்ட கருத்து சிறிதளவும் இல்லை. மாறாக, கர்த்தருடைய பணியை நிறைவேற்றும்போது, தேவனுடைய நோக்கங்கள் பிறருடைய வாழ்க்கையில் நிறைவேறும் பொருட்டு அவர்கள் தற்காலிகமாக மகிழ்ச்சியற்ற சூழ்நிலைக்குச் சில வேளைகளில் தள்ளப்படவேண்டிய நிலை ஏற்படும் என்னும் எண்ணமே அவருக்கு வருத்தத்தை ஏற்படுத்தியது.

எட்டாம் வசனத்தின் பிற்பகுதியில், அம்மடல் அவர்களுக்கு **துக்கத்தை** ஏற்படுத்தியது என்றாலும், அது கொஞ்சப்பொழுதே துக்கத்தை ஏற்படுத்தியது என்று அவர் வலியுறுத்துகிறார். அம்மடலின் முதல் விளைவு வேதனை. ஆனால் அந்த வருத்தம் நிலையாக இருக்கவில்லை.

இங்கு அப்போஸ்தலன் விவரிக்கின்ற முழு நிகழ்ச்சியும், ஓர் அறுவை மருத்துவருடைய வேலைக்கு ஒப்பாயிருக்கிறது எனக் கூறலாம். ஒரு மனித உடலில் ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையில் கெட்டுப்போன ஒரு பாகத்தை நீக்கும் பொருட்டு, அவர் அம்மனிதனுடைய சரீரத்தில் ஆழமாக வெட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த நோயாளி மீண்டும் நலம் பெற்றவராக மாறுவதற்கு அறுவைச் சிகிச்சை அவசியம் என்பதை மருத்துவர் அறிந்திருந்த போதிலும், தசையில் ஆழமாக வெட்டி அந்த நோயாளிக்கு வேதனை ஏற்படுத்துவதில் அவர் மகிழ்ச்சியடைவதில்லை. அந்த நோயாளி அவருடைய நெருங்கிய நண்பராக இருந்தால், அவர் அடையப்போகிற வேதனையைக் குறித்து மருத்துவர் முன்னுணர்வு உடையவராக இருப்பார். ஆனாலும் அந்த வேதனை தற்காலிகமானது, மேலும் இறுதியில் நல்ல விளைவு உண்டாக வேண்டும் என்னும் காரணத்தினால் அது செய்யப்படவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

**7:9** கொரிந்தியருக்கு வேதனையை ஏற்படுத்தியதன் பொருட்டு பவுல் **சந்தோஷப்பட வில்லை.** மாறாக அவர்கள் **மனந்திரும்புவதற்கு ஏதுவாகக்** கொஞ்சக் காலம் **துக்கமடைந்ததற்காகவே** அவர் **சந்தோஷப்பட்டார்.** அதாவது, அவர்களுடைய துக்கம், அவர்கள் மனம் மாறுவதற்கும் அதன் காரணமாக வாழ்க்கையில் மாற்றம் உண்டாவதற்கும் ஏதுவாயிற்று. "**மனந்திரும்புதல்** என்பது நோக்கத்தில் ஏற்படும் மாற்றம் மட்டுமன்று. அது பாவத்திலிருந்து அதிக வருத்தத்தோடும் அதைக் குறித்த வெறுப்போடும் தேவன் பக்கமாய் மாற்றம் பெற்ற இருதயத்தோடு திரும்புவதே ஆகும்" என்று ஹாட்ஜ் என்பார் கூறுகிறார்.

கொரிந்தியர் அனுபவித்த துக்கம் தேவனுடைய சித்தத்தின்படி நடந்தது; அப்படிப்பட்ட துக்கத்தைக் காண தேவன் விரும்புகிறார். அவர்களுடைய துக்கமும் மனந்திரும்புதலும் உண்மையானதும் **தேவனுக்கு ஏற்றதுமாக** இருந்த காரணத்தினால், அப்போஸ்தலனாகிய பவுல் கண்டித்துணர்த்திய சொற்கள் அவர்களிடம் நிரந்தரமான வருத்தத்தை உண்டுபண்ணவில்லை.

**7:10** இந்த வசனம் **தேவனுக்கேற்ற துக்கத்திற்கும் லௌகிக துக்கத்திற்கும்** இடையிலுள்ள முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. ஒரு மனிதன் பாவம் செய்து பின்னர் அதற்காகத் துக்கமடைந்து மனந்திரும்புவானால் அந்தத் துக்கமே **தேவனுக்கேற்ற துக்கமாகும்.** தேவன் அவனோடு பேசுகிறதை அவன் அறிந்து, தனக்கெதிராகவும் தன்னுடைய பாவத்திற்கு எதிராகவும் மனம் வருந்தி தேவனுடைய பக்கமாகச் சேர்ந்துகொள்கிறான்.

**தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபத்திற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது.** இங்கு பவுல் ஆத்தும இரட்சிப்பைக் குறித்துச் சிந்திக்கிறார் என்று கருதவேண்டியதில்லை (அது உண்மையானதாகவும் இருக்கக் கூடும்). கொரிந்தியர் ஏற்கனவே இரட்சிப்படைந்து விட்டார்களே.

ஆனால் இங்கு **இரட்சிப்பு** என்னும் சொல், ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் காணப்படும் பாவம், அடிமைத்தனம் அல்லது நச்சரிப்புகள் எத்தன்மை வாய்ந்ததாயினும் அதிலிருந்து கிடைக்கும் விடுதலையைக் குறிக்கவே பயன் படுத்தப் பட்டுள்ளது.

**மனஸ்தாபத்திற்கு இடமில்லாமல்** என்னும் சொற்றொடர் மனந்திரும்புதலைக் குறிக்கிறதா இரட்சிப்பைக் குறிக்கிறதா என்னும் கேள்வி இங்கே எழக்கூடும். மனந்திரும்புதலையும் இரட் சிப்பையும் குறித்து ஒருவரும் எக்காலத்திலும் **மனஸ்தாபப்பட்டதில்லை.** இது இரண்டிற்கும் பொதுவான உண்மையாக இருப்பதால் இதனை அப்படியே விட்டுவிடுகிறோம்.

**லௌகிக துக்கம்** மெய்யான மனந்திரும்பு தல் ஆகாது. அது வெறுமனே இழைத்த தவறுக்கு அடைகிற வருத்தம் மட்டுமே ஆகும். அது கசப் பையும் வன்குணத்தையும் நம்பிக்கையிழந்த நிலையையும் இறுதியில் **மரணத்தையுமே உண்டாக்கும்**. யூதாசின் வாழ்க்கையில் அது நிகழ்ந்தது. அவனுடைய பாவத்தின் விளைவாக கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கையில் நடந்த செயல்களுக்காக அவன் வருந்தவில்லை. மாறாக அவன் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பயங் கரமான விளைவுகளைக் குறித்தே வருந்தினான்.

**7:11** பத்தாவது வசனத்தின் முதல் பகுதியில் அவர் கூறியவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கொரிந் தியருடைய அனுபவம் இருந்தது என்று அப் போஸ்தலன் சுட்டிக்காட்டுகிறார். தேவனுக்கேற்ற துக்கம் என்று அவர் கூறிய **இந்தக் காரியம்** அவர் களுடைய வாழ்க்கையில் வெளிப்பட்டது. "இந்த உண்மைக்குச் சான்றாக அவர்கள் **தேவனுக் கேற்ற துக்கமடைந்தார்கள்**" என்று இன்று நாம் கூறுவோம். அவர்கள் அடைந்த தேவனுக்கேற்ற துக்கத்தின் பல்வகை விளைவுகளை அவர் தொடர்ந்து கூறுகிறார்.

முதலாவது, அது **ஜாக்கிரதையை** உண்டாக் கியது, அதாவது அது அவர்களிடத்தில் வாஞ்சை மிக்க அக்கறையை ஏற்படுத்தியது. முதல் மடலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக் கையை இது குறிப்பிடுமாயின், முதலில் அவர்கள் அதைக்குறித்து எவ்வித அக்கறையும் செலுத்த வில்லை, ஆனால் அதன் பிறகு அந்த முழு நிகழ்ச்சியையும் குறித்து மிகவும் அக்கறை செலுத்தினார்கள் என்று இந்தச் சொற்றொடர் பொருள்படும்.

இரண்டாவதாக **குற்றந்தீர எவ்வளவு நியா யஞ்சொல்லுதலை** அது அவர்களிடத்தில் உண் டாக்கியிருக்கிறது என்று கூறுகிறார். அவர்கள் தங்களைத் தாங்களே நியாயப்படுத்திக்கொள்ள அல்லது சாக்குப்போக்குச் சொல்ல முற்பட்டார் கள் என்பது இதன் பொருளன்று. மாறாக அவர் கள் எவ்விதத் தயக்கமும் இன்றி செயல்பட்டு, தங்கள்மீது மேலும் குற்றச்சாட்டு வராமல் அல் லது குற்றவுணர்வு ஏற்படாமல் இருக்க முயன்றார் கள் என்பதே இதன் பொருளாகும்.

கிறிஸ்துவின் திருப்பெயருக்குப் பாவம் இழைத்த அந்த மனிதன் நிந்தையைக் கொண்டுவந்ததன் நிமித்தம் அவர்கள் அவனிடத்தில் காட்டிய வெறுப்பையே **எவ்வளவு வெறுப்பு** என்னும் சொற்றொடர் குறிப்பிடுகிறது எனலாம். இதனைக் காட்டிலும், அவர்கள் அப்படிப்பட்ட காரியத்தை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் நீண்ட காலமாக அனுமதித்ததன் காரணமாகத் தங்கள் மீதே வெறுப்பு அடைந்தார்கள் என்ற பொருளை யும் இச்சொற்றொடர் தருகிறது.

**எவ்வளவு பயம்** என்பது அவர்கள் கர்த்தரிடத் தில் கொண்டிருந்த பயத்தையே குறிப்பிடுகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனினும், அப் போஸ்தலன் அவர்களிடத்தில் ஒரு தடியோடு வருவார் என்னும் எண்ணத்தினால் அவர்கள் பயந்திருந்தார்கள் என்ற சிந்தையும் இச்சொற் றொடரில் அடங்கும்.

**எவ்வளவு ஆவல்** என்பது எழுத்தின்படி "எவ்வளவு ஏக்கம்" உடையவராய் இருந்தார் எனப்பொருள்படும். பவுல் இப்பொழுது தங்களை வந்து சந்திப்பார் என்று அவர்கள் உண்மையாகத் தங்கள் ஆத்துமாவில் ஏக்கம் கொண்டிருந்தார் கள் என்று பெரும்பான்மையான விளக்கவுரை யாளர்கள் கருதுகிறார்கள். தவறு சரி செய்யப்படு தலையும், பொல்லாங்கு களையப்படுதலையும் காண அவர்கள் மிகுந்த விருப்பங்கொண்டிருந் தார்கள் எனவும் இதற்குப் பொருள் கூறலாம்.

**எவ்வளவு வைராக்கியம்** என்னும் சொற்றொடர் பலவிதங்களில் விளக்கப்படுகிறது. வைராக்கியம் தேவனுடைய மகிமைக்காக என்றும், பாவியை முன்னிருந்த நிலைக்கு மீண்டும் கொண்டுவரு தல் என்றும், அந்தக் காரியத்தில் அவர்கள் தங்க ளைத் தீட்டுப்படுத்திய நிலையிலிருந்து சுத்திகரித் துக்கொண்டது என்றும், அப்போஸ்தலன் பக்க மாய்ச் சேர்ந்துகொண்டது என்றும் பொருள்படும்.

**எவ்வளவு கண்டிப்பு** என்னும் சொற்றொடர் "என்ன தண்டனை" என்றோ "என்ன பழிவாங்குதல்" என்றோ பொருள்படும். சபையில் பாவமிழைத்த மனிதனுக்கு எதிராக அவர்கள் சீர்படுத்தும் செயலைச் செய்தார்கள் என்னும் பொருளையே இது தருகிறது. பாவம் தண்டிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் திட்டவட்டமாக முடிவு செய்தார்கள்.

**"இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லா விதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள்"** என்று பவுல் தொடர்கிறார். அவர்கள் எல்லாவிதத்திலும் சுத்தப்படுத்தப்பட வேண்டியவர்கள் அல்லர் என்பது இதன் பொருளன்று. முதலிலேயே அவர்கள் என்ன சரியான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமோ அதையே அவர்கள் செய்தார்கள் என்பதே இதன் பொருளாகும்.

**7:12** இந்த வசனத்தில் நான்கு பெரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. முதலாவது, **நான் அப்படி எழுதியிருந்தும்** என்று கூறியிருப்பது அவருடைய எந்த மடலைக் குறிப்பிடுகிறது? இரண்டாவது, **அநியாயஞ்செய்தவன்** யார்? மூன்றாவது, இங்கு **அநியாயஞ்செய்யப்பட்டவன்** என்று குறிப்பிடப்பட்டிருப்பது யார்? இறுதியாக இவ்வசனத்தின் பிற்பகுதி உங்களைக்குறித்து எங்களுக்கு உண்டாயிருக்கிற ஜாக்கிரதை என்றா அல்லது எங்களைக் குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற ஜாக்கிரதை என்றா மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்?

இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, நாம் அறிந்திருக்கிற 1 கொரிந்தியர் மடலாக இருக்கலாம், அல்லது நமக்காகப் பாதுகாத்து வைக்கப்படாத வேறொரு மடலாக இருக்கலாம். அநியாயஞ் செய்தவன் என்பவன் 1 கொரிந்தியர் 5 -ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறை தவறி கலவி புரிந்த மனிதனாக இருக்கலாம். அல்லது சபையில் கிளர்ச்சி செய்த வேறொருவனாக இருக்கலாம். முறை தவறி கலவி புரிந்தவனையே பவுல் இங்கு குறிப்பிடுகிறார் எனக் கொள்வோமெனில், அநியாயஞ்செய்யப்பட்டவன் அவனுடைய சொந்தத் தகப்பனே ஆவான். மாறாக தவறிழைத்தவன் சபையில் கலகஞ்செய்தவனானால் அநியாயஞ்செய்யப்பட்டவர் பவுலாகவோ யாரென்று குறிப்பிடப்படாத வேறொரு மனிதராகவோ இருக்கலாம்.

KJV, NKJV ஆகிய மொழிபெயர்ப்புகளில் இந்த வசனத்தின் பிற்பகுதி **தேவனுக்கு முன்பாக உங்களைக் குறித்து எங்களுக்கு உண்டாயிருக்கிற ஜாக்கிரதை உங்களுக்கு வெளிப்படும் பொருட்டே** என்று காணப்படுகிறது. ஆனால் பெரும்பாலான தற்கால மொழிபெயர்ப்புகள் NASB -க்கு ஒத்திருக்கின்றன: அம்மொழிபெயர்ப்பில் இந்த வசனம் "தேவனுக்கு முன்பாக எங்களைக் குறித்து உங்களுக்கு உண்டாயிருக்கிற ஜாக்கிரதை உங்களுக்கு வெளிப்படும் பொருட்டு" என உள்ளது.

**7:13** அம்மடல் எதிர்பார்த்தவிளைவை உண்டுபண்ணியதால், பவுல் **ஆறுதல் அடைந்தார்**. கொரிந்தியர் மனந்திரும்பி பவுலின் பக்கமாய்ச் சேர்ந்துகொண்டார்கள். மேலும் பரிசுத்தவான்களைக் குறித்து **தீத்து** காண்பித்த ஆர்வம் பவுலுக்கு உற்சாகமளித்தது. அவர்களோடு தீத்து கொண்ட தொடர்பினால் அவர் **சந்தோஷப்பட்டார்**.

**7:14** அப்போஸ்தலன் தீத்துவைக் கொரிந்துப் பட்டணத்திற்கு அனுப்பும் முன்னர் அவர் அங்கிருந்த விசுவாசிகளைக் குறித்து மிகவும் புகழ்ந்து பேசினார். இப்பொழுது, அவ்வாறு அவர் **புகழ்ச்சியாய்ப் பேசியதில்** எதுவும் பொய்யானது அல்லவென்று கூறுகிறார். அவர் கொரிந்தியரைப் பற்றிப் பேசியவை யாவும், அவர்கள் நடுவில் தீத்து அடைந்த அனுபவத்தினால் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டன. கொரிந்தியரிடம் அப்போஸ்தலன் கூறியவை அனைத்தும் எவ்வளவு உண்மையோ, அதுபோலவே அவர் தீத்துவிடம் அவர்களைக் குறித்துப் **புகழ்ச்சியாய்ச்** சொன்ன யாவும் உண்மையே.

**7:15** கிரேக்கு நாட்டின் தென்பகுதிக்குத் தீத்து சென்றபோது எப்படிப்பட்ட வரவேற்பு கிடைக்கும் என்பதை அறியாதவராகவே சென்றார் என்பது நிச்சயம். ஒருவேளை அவர் மிகவும் மோசமான சூழ்நிலையையே எதிர்பார்த்திருப்பார். ஆனால் அவர் அங்கு சென்றபோது, கொரிந்தியர் உளங்கனிந்த வரவேற்பளித்தனர். அது மட்டுமின்றி, அப்போஸ்தலனாகிய பவுலினிடத்திலிருந்து தீத்து கொண்டு சென்ற அறிவுரைகளுக்கு அவர்கள் செவிசாய்த்து அவரிடம் பாசத்தைப் பொழிந்தார்கள்.

தீத்துவை அவர்கள் **பயத்தோடும் நடுக்கத்தோடும்** ஏற்றுக்கொண்டார்கள் என்று அப்போஸ்தலன் கூறுகிறபோது, அவர் பயனற்ற நடுக்கத்தையோ கோழைத்தனமான பயத்தையோ குறிப்பிடவில்லை. மாறாகக் கர்த்தருக்கு முன்பாக அவர்கள் அந்த விஷயத்தில் மரியாதைக்குரிய உணர்ச்சியையும், பிரியப்படுத்த வேண்டுமென்னும் வழுவா விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

**7:16 எல்லாவிதத்திலும்** அந்தப் பரிசுத்த வான்களைக் குறித்து பவுல் **திடநம்பிக்கை** கொண்டிருந்தார் என்று சொல்லும்போது அவர் கருதியதற்கும் மேலாக அவருடைய சொற்கள் இருக்கின்றன என்று நாம் நினைத்துவிடக் கூடாது. எந்தவிதமான பாவத்தைச் செய்யவும் தோல்வியடையவும் கூடாதபடி கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் இருந்ததாக அவர் எண்ணினார் என்று நிச்சயமாக அச்சொற்கள் பொருள்படா. மாறாக, அவர்களிடத்தில் அவர் கொண்டிருந்த **திடநம்பிக்கை**, அவற்றைக் குறித்து அவர் தீத்துவினிடத்தில் புகழ்ச்சியாய்ப் பேசியவை எல்லாம் வீணாகப் போய்விடவில்லை என்பதே இதன் பொருளாகும். அவருடைய நம்பிக்கைக்கு அவர்கள் தகுதியுடையவர்கள் என்பதை அவர்கள் மெய்ப்பித்துவிட்டார்கள். முதல் மடலில் எழுதியவற்றிற்கு ஏற்ற நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டதன் நிமித்தம், அவர்களிடத்தில் அவர் கொண்டிருந்த **திடநம்பிக்கை** நியாயப்படுத்தப்பட்டுவிட்டதாக அவர் எண்ணினார் என்ற சிந்தையும் இதனுள் அடங்கும்.

2 கொரிந்தியர் நூலின் முதல் பகுதி இந்த வசனத்துடன் முடிவடைகிறது. இப்பகுதியில் அப்போஸ்தலனுடைய ஊழியத்தின் விவரங்கள் கூறப்பட்டுள்ளதோடு, கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளுக்கும் அவருக்கும் இடையேயுள்ள கட்டுகள் வலிமை பெறுவதற்கு அவருடைய பங்காக எடுக்கப்பட்ட தீர்மானமான முயற்சிகளும் விவரிக்கப்பட்டுள்ளன. அடுத்த இரண்டு அதிகாரங்களில் "கொடுப்பதில் உள்ள கிருபை" என்னும் கருப்பொருள் விவரிக்கப்பட்டுள்ளது.

## 2. எருசலேமில் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்காகப் பணம் சேகரித்தபோது அதனை நிறைவு செய்யும்படி அப்போஸ்தலன் கூறிய அறிவுரை (அதி. 8,9)

### அ. உதாரத்துவமாய்க் கொடுப்பதில் நல்ல எடுத்துக்காட்டுகள் (8:1-9)

**8:1** மக்கெதோனியா நாட்டுச் சபைகளில் இருந்த கிறிஸ்தவர்கள் (வட கிரேக்கு) அசாதாரண முறையில் தேவனுடைய கிருபையை வெளிப்படுத்திக் காண்பித்த விதத்தை விசுவாசிகள் யாவரும் அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார். பிலிப்பு, தெசலோனிக்கேயா ஆகிய இரண்டு நகரங்களிலும் சபைகள் நிறுவப்பட்டிருந்தன.

**தேவனுடைய கிருபையைத்** தாங்கள் பெற்றிருந்ததை மக்கெதோனியா விசுவாசிகள் உதாரத்துவமாய்க் கொடுத்ததினால் வெளிப்படுத்திக் காண்பித்தார்கள்.

**8:2** இந்தக் கிறிஸ்தவர்கள் **மிகுந்த உபத்திரவத்தினால் சோதிக்கப்பட்டார்கள்.** பொதுவாக, அவ்வாறு சோதிக்கப்படுகிற மக்கள் தங்களுடைய எதிர்காலத்திற்கென சேர்த்துவைக்க நாட்டம் கொண்டிருப்பார்கள். மேலும் மக்கெதோனியரைப் போன்று அதிகச் செல்வச் செழிப்பு இல்லாத மனிதர்கள் சேர்த்து வைப்பதையே தங்களுடைய குறிக்கோளாகக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் நிறையப்பணம் இருந்ததில்லை. ஆனால் எருசலேமில் வாழ்ந்த பரிசுத்தவான்களின் தேவை அவர்களிடம் அறிவிக்கப்பட்டபோது கிறிஸ்தவ மகிழ்ச்சியால் நிறைந்தவர்களாக, சாதாரணமாக அவர்கள் நடந்துகொள்ளக்கூடிய முறையை முற்றிலுமாக மாற்றி, மிகவும் தாராளமாய்க் கொடுத்தார்கள். **உபத்திரவம், சந்தோஷம், தரித்திரம்** மற்றும் **உதாரத்துவம்** யாவற்றையும் அவர்களால் ஒன்றுசேர்க்க முடிந்தது.

**8:3** அவர்களுடைய உதாரத்துவம் தனித்தன்மை வாய்ந்த பண்புகளைக் கொண்டிருந்தது. அவர்கள் கொடுத்தது **திராணிக்குத் தக்கதாக** இருந்தது மட்டுமின்றி, **திராணிக்கு மிஞ்சியதாகவும்** இருந்தது. மேலும், அவர்கள் கொடுப்பதற்கு **மனதுள்ளவர்களாக** இருந்தார்கள். அதாவது அவர்களை வற்புறுத்தவோ, நயந்து பேசவோ, புகழ்ந்துபேசி வயப்படுத்தவோ அவசியம் இல்லாதபடி மனமுவந்து கொடுத்தார்கள்.

**8:4** எருசலேமில் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்காகப் பணம் கொடுத்து உதவுவதில் பங்குபெறும் சிலாக்கியத்தைத் தாங்களும் பெறவேண்டும் என்னும் எண்ணத்தில் அவர்கள் பவுலை வேண்டியதோடு துரிதமாகச் செயல்பட்டார்கள். அவர்கள் அந்த நேரத்தில் மிகவும் வறியவர்களாக இருந்த காரணத்தினால் அப்போஸ்தலன் அவர்களிடத்திலிருந்து பணத்தை ஏற்கத் தயங்கினார்போலும். ஆனால் "முடியாது" என்ற பதிலை அவர்கள் ஏற்க மறுத்தார்கள். அவர்கள் தருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றே விரும்பினார்கள்.

**8:5** பெரும்பாலான மனிதர்கள் என்ன செய்வார்களோ, அதைப்போலவே மக்கெதோனியா விசுவாசிகளும் நடந்துகொள்வார்கள் என்றுதான் பவுல் எதிர்பார்த்திருக்கக் கூடும். அதாவது அவர்கள் முதலில் விருப்பமின்றி கொஞ்சமாகத் தருவார்கள், அதன் பிறகு அவர்கள்மேல் கொண்டு வரப்படும் பெரிதான வற்புறுத்தலின் பேரில் தங்களுடைய காணிக்கையை அதிகப்படுத்துவார்கள்.

ஆனால் மக்கெதோனியா விசுவாசிகள் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை! அன்பிற்குரிய இந்தக் கிறிஸ்தவர்கள் மிகப்பெரிய காணிக்கையாக **முன்பு தங்களைத்தாமே ஒப்புக்கொடுத்தார்கள்**. அதன் பிறகு அவர்களுக்குத் தங்களுடைய பணத்தைக் கொடுப்பது எளிதாகிவிட்டது. அவர்கள் தேவனுடைய சித்தத்தின்படி முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள் என்று பவுல் கூறியிருப்பது, முதலாவது அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை முற்றிலுமாகக் கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தார்கள் என்று பொருள்படும். பின்னர் அவர்கள் தங்களை, எருசலேம் விசுவாசிகளுக்காகப் பணம் சேகரிக்கப்படுதலில் மனமுவந்து பவுலுக்கு ஒப்புவித்தார்கள். "நாங்கள் எங்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்துவிட்டோம், இப்பொழுது நீங்கள் அவருடைய ஆட்சியின் பொறுப்பாளர் என்னும் அடிப்படையில் எங்களை உம்மிடத்தில் ஒப்புவிக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவின் அப்போஸ்தலராக நீர் இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுவீராக" என்னும் பொருள்பட அவர்கள் பவுலினிடத்தில் பேசினார்கள்.

"கர்த்தருடைய வேலைக்காகக் கொடுக்கப்படுகிற பணமே மதிப்பு வாய்ந்தது. ஏனெனில் அதுவே தேவனுக்குத் தங்களை ஒப்புவித்தவர்களின் காணிக்கையாக இருக்கிறது" என்று திருவாளர் G. கேம்ப்பெல் மோர்கன் கூறியிருக்கிறார்.

**8:6** மக்கெதோனியரின் எடுத்துக்காட்டைக் கண்ட அப்போஸ்தலன் பெரும் மகிழ்ச்சியடைந்தவராக, கொரிந்தியரும் அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார். ஆகவே தீத்து கொரிந்துப் பட்டணத்தில் தொடங்கிய வேலையை **முடிக்கவும் வேண்டுமென்று** பவுல் **கேட்டுக்கொண்டார்**. அதாவது கொரிந்துப் பட்டணத்திற்குத் தீத்து முதல் முறை வருகைபுரிந்தபோது பணம் சேகரிப்பைக் குறித்த விவரங்கள் அனைத்தையும் அவர்களிடம் கூறினார். இப்பொழுது அவர் மீண்டும் அங்கு செல்லும்போது, அவர்கள் கொண்டிருந்த மனவிருப்பம் செயலாக மாற்றம் பெற ஆவன செய்யவேண்டும்.

**8:7** கொரிந்தியர் பற்பல விஷயங்களில் சிறந்து விளங்கினார்கள் என்பதால் கொடுக்கும் செயலிலும் சிறந்து விளங்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அவர்கள் **விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும்** (அக்கறை), அவரிடத்தில் அவர்கள் கொண்டிருந்த அன்பிலும் பெருகியிருந்தார்கள் என்று அவர் அவர்களைக் குறித்துப் புகழ்ந்து பேசுகிறார். முதல் மடலில் அவர்களது அறிவைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் அவர் புகழ்ந்து பேசினார். இங்கு அவர் இன்னும் பல நற்குணங்களைச் சேர்த்துக் கூறுகிறார். இது தீத்து அங்கு சென்றதன் விளைவு என்பதில் ஐயமில்லை.

**விசுவாசத்தில்** என்னும் சொல் தேவனிடத்தில் அவர்கள் கொண்டிருந்த வலிமை மிக்க விசுவாசத்தையோ, விசுவாசத்தின் வரத்தையோ, தமது உடன் விசுவாசிகளோடு அவர்கள் நடந்து கொண்ட உண்மையுள்ள தன்மையையோ குறிக்கக் கூடும்.

**போதிப்பிலும்** என்னும் சொல் அவர்கள் பற்பல மொழிகளைப் பேசுவதில் திறமை வாய்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை. இதைக் குறித்த விளக்கம் போதுமான அளவு முதல் மடலில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அறிவிலும்** என்பது தெய்வீக வரத்தையோ, தெய்வீக உண்மைகளைப் புரிந்து கொள்ளும் ஆற்றலையோ குறிக்கக் கூடும்.

**எல்லாவித ஜாக்கிரதையிலும்** என்னும் சொற்றொடர் தேவனுக்குரியவற்றில் அவர்களது ஆர்வத்தையும் அக்கறையையும் விளக்குகிறது.

இறுதியாக, அவர்கள் பவுலினிடத்தில் கொண்டிருந்த **அன்பு** பாராட்டுதற்குரியது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது இந்தப் பட்டியலோடு மேலும் ஒரு குணநலனைப் பவுல் சேர்க்க விரும்புகிறார். அதுவே "உதாரத்துவம்" என்னும் பண்பாகும்.

திருவாளர் டென்னி இது குறித்து எச்சரிக்கிறார்:

> ...ஆவிக்குரியவற்றில் நிறைந்திருக்கக் கூடிய ஒருவர், அதாவது ஊக்கமுடையவரும், ஜெபத்தில் தரித்திருப்பவரும், அன்பு பாராட்டுகிறவரும், சபையில் பிரசங்கங்கள் ஆற்றுகிறவருமாகிய ஒருவர் தனக்குச் சொந்தமான பணத்தைக் கர்த்தருக்காகச் செலவிட இயலாதிருக்கிறார்.[36]

**8:8** பவுல் இதனைக் கடுமையான முறையிலோ, கட்டளையாகவோ கூறவில்லை. மாறாக, அவர்களுடைய **அன்பின் உண்மைக்கு** ஒரு பரீட்சையாகவே இதனை முன்னிறுத்த விரும்புகிறார். அதிலும் மக்கெதோனியாக் கிறிஸ்தவர்கள் இந்தச் செயலில் காட்டிய ஆர்வம், அக்கறை ஆகியவற்

றின் வெளிச்சத்தில் காணுங்கால், இச்சொற்கள் அவர்களுக்களிக்கப்பட்ட பரீட்சையேயாகும். இதனைக் கட்டளையாகச் சொல்லவில்லை என்று பவுல் சொல்லும்போது, இது தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதன்று என்னும் பொருளில் சொல்லவில்லை. கொடுக்கும் செயல் விருப்பமுள்ள இருதயத்திலிருந்தே வரவேண்டும் என்றுதான் அவர் இங்கு கூறுகிறார். ஏனெனில், "உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."

**8:9** இத்தருணத்தில்தான் இந்த மிகச் சிறிய மடலில் காணப்படும் உன்னதமான வசனங்களில் ஒன்றை அப்போஸ்தலனாகிய பவுல் அறிமுகப்படுத்துகிறார். மக்கெதோனியாவிலும் கொரிந்துப் பட்டணத்திலும் நிலவிய எளிமையான வாழ்க்கைச் சூழ்நிலைக்கு மாறாக, இவ்வுலகில் வாழ்ந்தவர்களிலேயே மிகவும் உதாரத்துவமாய் வாழ்ந்த வரைப் பற்றிய அழகிய சொல்லோவியத்தை அவர் வரைந்து தருகிறார்.

புதிய ஏற்பாட்டில் **கிருபை** என்னும் சொல் பற்பல பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இங்கு எவ்வித ஐயத்திற்கும் இடமற்றபடி அச்சொல் உதாரத்துவம் என்னும் பொருளையே தருகிறது. கர்த்தராகிய இயேசு எந்த அளவிற்கு உதாரத்துவம் நிறைந்தவர்? அவருடையது அனைத்தையும் நமக்காகத் தந்தருளக்கூடிய அளவிற்கு, அதாவது **அவருடைய தரித்திரத்தினாலே** நாம் நித்தியத்திற்கும் **ஐசுவரியவான்களாகும்** அளவிற்கு அவர் உதாரத்துவம் நிறைந்தவர் ஆவார்.

மூர்ஹெட் என்பார் விவரிக்கிறார்:

> அவர் உடைமை, அதிகாரம், மதிப்பு, தோழமை, மகிழ்ச்சி ஆகியவற்றில் செல்வந்தர் ஆவார். வாழ்க்கை நிலைமை, சூழ்நிலைகள், மனிதனோடு கொண்ட உறவு ஆகியவற்றில் அவர் வறியவரானார். சில வேளைகளில் நாம் சிறிதளவு பணம், உடை, உணவு ஆகியவற்றைத் தரும்படி வேண்டிகொள்ளப்படுகிறோம். அவரோ தம்மையே தந்தருளினார்.[37]

கர்த்தராகிய இயேசு என்றைன்றைக்கும் முன்னிருந்தவர் என்பதை இந்த வசனம் கற்பிக்கிறது. எப்பொழுது அவர் **ஐசுவரியவானாக** இருந்தார்? பெத்லகேமின் குழந்தையாக இவ்வுலகிற்கு அவர் வருகைபுரிந்தபோது செல்வந்தராக இருக்க வில்லை என்பது நிச்சயம்! "அவருடைய கரங்கள் உண்டாக்கிய இவ்வுலகில் வீடற்ற அந்நியராக அலைந்து திரிந்த முப்பத்திமூன்று ஆண்டுக் காலத்தில் அவர் செல்வந்தராக வாழவில்லை என்பது நிச்சயம். விண்ணக வீட்டில் திருத்தந்தையுடன் வாழ்ந்த கடந்தகால நித்தியத்தில் அவர் செல்வந்தராக இருந்தார். ஆனால் அவர் **தரித்திரர்** ஆனார். இது பெத்லகேமை மட்டும் குறிப்பிடுவதில்லை. நாசரேத்து, கெத்செமனே, கபத்தா, கொல்கொதா அனைத்தையுமே குறிப்பிடுகிறது. இவை யாவும் நமக்காகவே. அவருடைய **தரித்திரத்தினாலே** நாம் **ஐசுவரியவான்களாகும்படி** அவர் நமது நிமித்தம் **தரித்திரரானார்**.

இது உண்மையானால், நிச்சயமாக இது உண்மையே, நாம் நம்மையும் நமதனைத்தையும் அவருக்குக் கொடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி பெறுவோம். கிறிஸ்தவர்கள் கொடுப்பது என்னும் பொருளைப் பவுல் விளக்கிக் கூறுகையில், இதனைக் காட்டிலும் மிகவும் வலிமை படைத்த வாதம் வேறு எதுவும் இருக்கமுடியாது.

### ஆ. பணம் சேகரிப்பதை நிறைவுசெய்யும்படி கொடுக்கப்பட்ட நல்லாலோசனை (8:10,11)

**8:10** இப்பொழுது அப்போஸ்தலன் கொரிந்தியரிடமாய்த் திரும்புகிறார். ஏழைப் பரிசுத்தவான்களுக்காகப் பணம் சேரிக்க வேண்டுமென்று மக்கெதோனியர் முடிவு செய்ததற்கு முன்னரே, அவர்கள் அத்தகைய எண்ணம் கொண்டிருந்தார்கள். மக்கெதோனியர் பணம் சேகரிக்கத் தொடங்குவதற்கு முன்னரே, கொரிந்தியர் பணம் சேகரிக்கவும் தொடங்கிவிட்டார்கள். **ஒரு வருஷத்துக்கு** முன்னர் தொடங்கிய செயலில் மாற்றம் இல்லாமலிருக்க அவர்கள் அதனை முடிக்க வேண்டும். அ.·.து அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாயிருக்கும். ஏனெனில் அது அவர்களுடைய உண்மையையும் கொள்கை மாறா நிலையையும் மெய்ப்பித்திருக்கும்.

**8:11** அவர்களுடைய தாமதத்திற்குக் காரணம் எதுவாயிருந்தாலும், அதனை அவர்கள் புறக்கணித்து விட்டு, அவர்கள் காட்டிய **விருப்பத்திற்கிணங்க** பணம் சேகரித்துவந்ததை **நிறைவேற்ற** வேண்டும். அவர்களால் அப்பொழுது எவ்வளவு கொடுக்கத் திராணி உடையவராய் இருந்தார்களோ அதைக் கொடுத்தால் போதும். இனி எதிர்காலத்தில் அடையக்கூடிய செல்வச் செழிப்பினால் கொடுக்க இயலும் என்று அவர்கள் நினைக்கிறதைக் கொடுக்க வேண்டியதில்லை.

### இ. உதாரத்துவமாய்க் கொடுப்பதில் உள்ள மூன்று நல்ல கோட்பாடுகள் (8:12-15)

**8:12** சற்று தாமதித்து அனுப்பினால், எருசலேமில் வாழ்ந்த பரிசுத்தவான்களுக்குக் கூடுதலாக அனுப்ப முடியும் என்னும் எண்ணத்தில் கொரிந்தியர் பணம் சேகரிப்பதைக் காலம் கடத்தினார்கள் போலும். அவர்கள் எவ்வளவு பணம் அனுப்புகிறார்கள் என்பதல்ல முக்கியம் என்று அவர்களுக்கு இங்கு நினைவுபடுத்தப்படுகிறது. இந்த நற்செயலில் அவர்களுக்கு உண்மையாகவே விருப்பம் இருக்குமாயின், தேவன் அந்தக் காணிக்கையை, அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்வார். இருதயத்தின் மனப்பான்மையே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**8:13** கொரிந்தியர் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொள்ளக்கூடாது என்பதே பவுலின் நோக்கமாயிருந்தது. எருசலேம் சபை **சகாயம்** பெறவேண்டும் என்பதற்காக கொரிந்து சபை **வருத்தம்** அல்லது ஏழ்மை அடையவேண்டும் என்பது அவருடைய எண்ணம் அல்ல.

**8:14** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையின் தேவை நிவர்த்தி செய்யப்படுவதற்கான தேவ திட்டத்தையே இந்த வசனம் விளக்கிக் கூறுகிறது. ஓரிடத்தில் வாழும் கிறிஸ்தவர்களுக்குத் தேவை ஏற்படும்போது அந்த இடத்திற்குப் பிற இடங்களிலிருந்து பணம் அனுப்பப்படவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமாகும். இவ்வித மாகத் தொடர்ந்து பணம் அங்கும் இங்குமாக அனுப்பப்படுவதால் உலகம் முழுவதிலும் உள்ள சபைகளில் **சமநிலைப் பிரமாணம்** நிலவும்.

இவ்வாறாக, பவுல் இம்மடலை எழுதுகையில், கொரிந்து, மக்கெதோனியா மற்றும் பல இடங்களிலிருந்து பணம் எருசலேமுக்கு அனுப்பப்பட்டது. பின்னொரு காலத்தில் எருசலேம் பரிசுத்தவான்கள் நல்ல நிலையை அடைவார்கள்; அப்பொழுது கொரிந்துப் பட்டணத்தில் குறிப்பிடத்தக்க வறுமை உண்டாகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் பணம் அனுப்புதலில் திசைமாற்றம் காணப்படும். இந்த வசனத்தில் பவுல் இதைத்தான் சொல்லுகிறார். இப்பொழுதோ எருசலேமில் தேவை இருந்தது. பின்னொரு காலத்தில் கொரிந்துப் பட்டணத்தில் தேவை எழக்கூடும். அந்தச் சூழ்நிலையில் பிறர் அவர்களுக்கு உதவி செய்வார்கள்.

**8:15** சமநிலைப் பிரமாணம் ஒரு மேற்கோளின் மூலமாக வலியுறுத்தப்படுகிறது (யாத்திராகமம் 16:18). மன்னாவைச் சேகரிக்கும்படி இஸ்ரவேல் மக்கள் வெளியே சென்றபோது, சிலரால் அதிகமாகவும் சிலரால் கொஞ்சமாகவும் சேர்க்க முடிந்தது. அது ஒரு பொருட்டாகக் கருதப்படவில்லை. ஒவ்வொருவரும் தங்களுடைய பங்கைப் பெற்றபோது எல்லோருக்கும் ஒரே அளவு மன்னா கிடைத்தது - ஒவ்வொருவருக்கும் ஓர் ஓமர் அளவு மன்னா கிடைத்தது. ஆகவே, **"மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை."** சிலர் மன்னாவைச் சேகரித்து மறைத்து வைக்க நினைத்தார்கள். ஆனால் அது பூச்சிபிடித்து நாற்றமெடுத்தது.

எல்லாரும் சமஅளவு பெற்றது ஏதோ அற்புதத்தினாலோ மந்திர சக்தியினாலோ நடைபெறவில்லை. அதிகமாய்ச் சேர்த்தவர்கள் குறைவாகச் சேர்த்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தாலேயே அப்படியாயிற்று. திருவாளர் ஹாட்ஜ் குறிப்பிடுகிறார்:

> இங்கு கற்பிக்கப்படுகிற பாடம்... யாத்திராகமத்திலும், இங்கு அப்போஸ்தலனாலும் கற்பிக்கப்படுகிற பாடம் யாதெனில், இறை மக்களுக்கிடையே, ஒருவரிடத்தில் பெருகும் செல்வம், வேறொருவருடைய தேவையை நிவர்த்திசெய்யும்படி பயன்படவேண்டும். இந்தப் பிரமாணத்தை எதிர்த்துச் செயல்படுகிற எந்தச் செயலும் வெட்கத்திலும் இழப்பிலும் முடியும். சொத்து மன்னாவைப் போன்றது. அதைப் பதுக்கி வைப்பது ஒவ்வாதது.[38]

கீழே கொடுக்கப்பட்ட மேற்கோளும் மேற்கூறிய கருத்தைச் சார்ந்து எழுதப்பட்டதே ஆகும். இதனை எழுதியவர் யாரென்று தெரியவில்லை:

> வாழ்க்கையில் நலமானவற்றில், ஒவ்வொரு மனிதனும் பங்குபெறவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். சிலர் அதிகமாகச் சேர்க்கிறார்கள், சிலரோ குறைவாகச் சேர்க்கிறார்கள். மிகுதியாக வைத்திருப்பவர்கள் குறைவுபட்டவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். வெவ்வேறு மனிதர்கள் வெவ்வேறு அளவு சொத்துகளைப் பெற்றிருக்கும்படி தேவன் அனுமதிக்கிறார். எனினும் செல்வந்தர் அவற்றைத் தன்னலம் மிக்க வகையில் அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் அல்ல, வறியவரோடு பகிர்ந்துகொள்ளும்படியே தேவன் அப்படிச் செய்திருக்கிறார்.

### ஈ. பணம் சேகரிப்பதில் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய மூன்று நல்ல சகோதரர்கள் (8:16-24)

**8:16** இந்தக் காரியத்தில் மிகச் சிறந்த மனப் பான்மையை வெளிப்படுத்திய **தீத்து** அடுத்த இரண்டு வசனங்களில் பாராட்டப்படுகிறார். முத லாவது, கொரிந்தியரைக் குறித்து அதேவிதமான அக்கறையை **தேவன் தீத்துவின் இருதயத்தில் அருளியதற்காகப்** பவுல் நன்றி செலுத்துகிறார். தனது உடன் வேலையாளின் இருதயத்தில் ஒத்த மனப்பான்மை இருப்பதைப் பவுல் கண்டடைந் தார். கொரிந்தியரைப் பற்றிய பாரம் அப்போஸ் தலனிடத்தில் எவ்வளவு இருந்ததோ, அதே அளவு பாரத்தைத் தீத்துவும் கொண்டிருந்தார்.

**8:17** தான் எழுதிய இந்த மடலோடு தீத்து கொரிந்துப் பட்டணத்திற்குச் செல்ல வேண்டும் என்று பவுல் அறிவுரை நல்கினார். ஆயின் அந்த அறிவுரை தேவையற்றதாய் இருந்தது. ஏனெனில் தீத்து அங்கு செல்ல **மனவிருப்பம்** கொண்டி ருந்தார்.

தீத்து **புறப்பட்டார்** என்னும் சொற்றொடர், அவர் அங்கு வந்து கொண்டிருக்கிறார் என்றே பொருள்படும் என்று தோன்றுகிறது. அதாவது பவுல் எழுதிய போதல்ல, கொரிந்தியர் அந்த மடலைப் படித்தபோது என்ன காலத்தைப் பயன்படுத்த வேண்டுமோ, அதே காலத்தில் அந்த வினைச் சொல்லைப் பவுல் எழுதியிருக்கிறார். தீத்துவே இந்த மடலைக் கொரிந்துப்பட்டணத் திற்கு எடுத்துச் சென்றார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இந்த மடலைப் பவுல் எழுதிமுடிக் கும் வரை அவர் கொரிந்துப் பட்டணத்திற்குச் செல்லவில்லை.

**8:18** தீத்து மேற்கொண்ட திருப்பணியில் உடன் சென்ற வேறு இரண்டு கிறிஸ்தவச் சகோ தரர்களைப் பற்றிய விவரங்களை 18 முதல் 22 வரையிலான வசனங்களில் காணலாம். முதல் சகோதரனைப் பற்றி 18 முதல் 21 வரையிலான வசனங்களும் இரண்டாவது சகோதரனைப் பற்றி 22 -ஆவது வசனமும் விவரிக்கின்றன. இருவரது பெயர்களும் சொல்லப்படவில்லை.

நிதி நிர்வாகத்தைச் சரியானபடி நடத்தவில்லை என்னும் தவறான குற்றச்சாட்டு தன்மீது சுமத்தப் படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்ட அப் போஸ்தலனாகிய பவுல் மேற்கொண்ட சில முக்கியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை இந்த வேதபகுதியில் காணலாம்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முதல் **சகோதரன் சுவிசேஷ ஊழியத்தில்** பங்கு கொண்டிருந்த காரணத்தினால் **புகழ்ச்சிபெற்ற** மனிதராக இருந் தார். இது யாரைக் குறிக்கிறது என்பதில் பெரிய கருத்து வேறுபாடு நிலவுகிறது. சிலர் லூக்கா என்றும், வேறு சிலர் சில்வான் என்றும், இன்னும் சிலர் துரோபிமு என்றும் கூறுகின்றனர். நாம் இந்த மனிதர் யார் என்று ஊகிக்க முயற்சி செய்வதன் காரணமாக இந்தப் பகுதியின் முக்கியத்து வத்தை மறந்து போகிறோம். பெயர் சொல்லப் படாததற்கு நிச்சயம் ஒரு காரணம் இருந்திருக்கு மல்லவா? மெய்யான சீஷத்துவத்தில் அவ்வப் போது புகழ்ச்சிக்கு இடமற்ற சூழ்நிலை ஏற்படும். தொழுநோய்வாய்ப்பட்ட நாகமானுடைய வாழ்க் கையில் மிகப்பெரிய அளவில் பயன்படுத்தப்பட்ட சிறுபெண்ணும் அத்தகைய நிலையிலேயே காட்டப்படுகிறாள். கர்த்தராகிய இயேசுவின் பயன்பாட்டிற்கென்று தன்னுடைய உணவைக் கொடுத்த சிறுவனும் அந்நிலையிலேயே அறி முகப்படுத்தப்படுகிறான்.

**8:19** பெயர் சொல்லப்படாத அந்தச் சகோ தரன், **தர்மப்பணத்தை** எடுத்துச் செல்வதற்கான பயணத்தில் உடன்செல்லும்படி **சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவராயிருந்தார்**. அதா வது, மனமுவந்து கொடுக்கப்பட்ட பணத்தை எடுத்துச்செல்வதற்கு நியமிக்கப்பட்ட நபர்களில் அவரும் ஒருவர் ஆவார். அப்போஸ்தலன் தன்னையும் மற்ற சகோதரர்களையும், இந்தக் கிருபையின் ஊழியத்தை நிறைவேற்றக்கூடிய அடிமைகளாக அல்லது நிருவாகிகளாகவே கண்டார். அவர்கள் அவ்வூழியத்தைக் **கர்த்த ருக்கு மகிமையுண்டாகும்படிச்** செய்தார்கள். எருசலேமில் வாழ்ந்த வறியர்களிடத்தில் அவர் கள் கொண்டிருந்த விருப்பத்தையும் அக்கறை யையும் செயல்முறையில் வெளிப்படுத்த அவர் கள் விரும்பினார்கள்.

**8:20** அந்தப் பணத்தைத் தானே தனியாக நிருவகிக்கவோ, வேறொரு தனிமனிதனிடம் அப் பொறுப்பைத் தரவோ அப்போஸ்தலன் ஞானமற்ற படி முடிவு செய்யவில்லை. இரண்டு அல்லது மூன்று அல்லது அதற்கும் மேற்பட்டோர் அதனை நிருவகிக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தி னார். இந்த 20 -ஆவது வசனத்தில் அவர் அத னையே கூறுகிறார். தவறாகத் திரித்துக் கூறவோ, பழிச்சொல் ஏற்படவோ வகை உண்டாகாதபடி இந்த **மிகுதியான தர்மப் பணத்தைச்** சரியான முறையில் நிருவாகம் செய்ய அவர் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார்.

**8:21** **யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்** என்னும் சொற்றொடர், எல்லாவற்றையும் நேர்மையான முறையில் செய்யத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்று பொருள்படும். தன்னுடைய செயல்கள் கர்த்தருக்கு முன்பாக மட்டுமின்றி, மனிதருக்கு முன்பாகவும் எல்லா நிந்தைச் சொற்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டுமென்று பவுல் மிகுந்த அக்கறை செலுத்தினார். திருவாளர் மோர்கன் குறிப்பிடுவதாவது:

"கிறிஸ்தவக் கூட்டுரிமைகள் ஒரு வேலையைச் செய்யும்போது, அந்த வேலையின் நடவடிக்கைகளில் இந்த உலகத்து மனிதர்கள் எவ்வித ஐயமும் கொள்வதற்கு இடம் உண்டாகாதபடி நேர்மைக்குப் புறம்பானது எதனையும் அனுமதிக்கக் கூடாது."

இந்த வசனம் கிரேக்க மொழி பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகள் 3:3,4 ஆகிய வசனங்களோடு பெரும்பாலும் ஒத்திருக்கிறது.

**8:22** இந்த முக்கியமான அலுவலில் உதவி செய்ய இன்னுமொரு பெயர் குறிப்பிடப்படாத **சகோதரனைப்** பவுல் நியமித்திருந்ததை நாம் இந்த வசனத்தில் காண்கிறோம். அவர் **அநேக காரியங்களில் ஜாக்கிரதையுள்ளவரென்று** அறியப்பட்டவர். இப்பொழுதோ இந்தக் குறிப்பிட்ட பயண அலுவலில் சிறப்பான திறமையுள்ளவர் என்று அவர் காணப்பட்டார். ஏனெனில் அவர் கொரிந்தியரிடம் **மிகுந்த நம்பிக்கை கொண்டவர்** ஆவார்.

இத்தருணத்தில் NKJV மொழிபெயர்ப்பு, நாங்கள் உங்களிடத்தில் கொண்டிருக்கும் **மிகுந்த நம்பிக்கையினாலே** என்று கூறுகிறது. நாங்கள் கொண்டிருக்கும் என்னும் சொற்றொடர் சேர்க்கப்பட்ட பகுதியாகும். அச்சொற்றொடருக்குப் பதிலாக *அவர் உங்களிடத்தில் கொண்டிருக்கும் மிகுந்த நம்பிக்கையினாலே* என்னும் சொற்றொடரே சரியான பொருளைத் தருகிறது என்று பலர் கருதுகிறார்கள். இவ்வாறாக, பவுல் அந்த மனிதனின் முந்தின உண்மைத்தன்மையினால் மட்டுமின்றி, அவர் தற்பொழுது கொரிந்தியரிடம் கொண்டிருந்த **மிகுந்த நம்பிக்கையினாலும்** அவரைத் தகுதியானவர் என்று பாராட்டுகிறார்.

**8:23** ஆகவே, இந்த மூன்று மனிதர்களைக் குறித்து **ஒருவன் விசாரித்தால் தீத்து** பவுலின் **கூட்டாளியும்** கொரிந்தியருக்கான அவருடைய **உடன் வேலையாளுமாய்** இருக்கிறார் என்றும், மற்ற இரு சகோதரர்கள் **சபைகளுடைய ஸ்தானாபதிகளும், கிறிஸ்துவுக்கு மகிமையுமாயிருக்கிறார்கள்** என்றும் கொரிந்தியர் சொல்ல முடியும். **கிறிஸ்துவுக்கு மகிமையாயிருக்கிறார்கள்** என்னும் புகழ்ச்சி இந்த மனிதர்களைக் குறித்த மிக உன்னதமான புகழ்ச்சியாயிருக்கிறது. ஏனெனில் அவர்கள் **சபைகளின்** பிரதிநிதிகளாக இருக்கின்ற காரணத்தால் அவ்வாறு அழைக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய பணியானது மக்களுடைய பார்வையில் ஒளிச்சுடர் வீசக்கூடியபடி அவர்களால் நிறைவேற்றப்படுகிறது. அவர்கள் கர்த்தருக்குப் புகழ்ச்சியாக விளங்கி, அவருடைய மகிமையைப் பிரதிபலிக்கிறார்கள்.

**8:24** மேற்கூறியவற்றின் காரணமாக, அவர்களுக்குக் கொரிந்தியர் நல்ல வரவேற்பு அளிக்க வேண்டும். மேலும் கொரிந்தியரைப் பற்றி பவுல் கூறிய **புகழ்ச்சிக்கு** இணங்க, எருசலேம் பரிசுத்தவான்களுக்கான மிகுதியான தர்மப் பணத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்களுடைய கிறிஸ்தவ **அன்பை** சுற்றிலுமுள்ள சபைகளுக்குத் **திருஷ்டாந்தப்படுத்தும்** செயலாக இது விளங்கும். திருவாளர் பிலிப்பு இதனை மொழிபெயர்க்கிறார்: "அவர்களும் எல்லாச் சபைகளும், உங்களுடைய அன்பு எவ்வளவு உண்மையானது என்றும், நான் உங்களைக் குறித்துச் சொன்ன இனிமையான செய்திகள் யாவும் நியாயமானது என்றும் அறியும்படிச் செய்யுங்கள்!"

### உ. கொரிந்தியரைக் குறித்துப் புகழ்ச்சியாகப் பவுல் பேசியதை மெய்ப்பிக்கும்படி வேண்டுகோள் விடுத்தல் (9:1-5)

**9:1** தேவையுள்ள **பரிசுத்தவான்களுக்குப்** பொருளுதவி செய்வது பற்றி பவுல் கொரிந்தியருக்கு **எழுதவேண்டிய** தேவையில்லை. ஆயினும் அவர் எழுதத்தொடங்கிவிட்டார். ஒருவேளை இந்த வசனம் உட்பொருளோடு ஒரு கருத்தைக் கூறுகிறது போலும். உண்மையில், சில காரணங்களின் பொருட்டு அவர் அவர்களுக்கு இவ்வாறு எழுதவேண்டிய தேவையில்லை. எருசலேம் பரிசுத்தவான்களுக்காகப் பொருள் சேகரிப்பதில் பங்குகொள்ளவேண்டும் என்று அவர்கள் தொடக்கத்தில் தங்களது விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். அவர்களுடைய விருப்பத்தைப் பொருத்த மட்டில், அவர்களைப் போற்றவேண்டும். ஆயினும் அவர்களுடைய முந்தின விருப்பத்தை முறையாக நிறைவேற்றவில்லை. ஆகவேதான் அவர் தேவைக்கு **அதிகமாக** இவ்வாறு எழுத வேண்டிய கட்டாயம் உண்டாயிற்று.

**9:2** அவர்களுடைய **மனவிருப்பத்தைக்** குறித்து கேள்வி எதுவும் எழவில்லை. அந்தப் பொருள் பற்றிய பேச்சு தொடங்கியதிலிருந்து அவர்கள் ஜாக்கிரதையும் விருப்பமும் கொண்டிருந்தார்கள். உண்மையில் பவுல் ஏற்கனவே மக்கெதோனியா நாட்டுக் கிறிஸ்தவர்களிடம் இதைக் குறித்துப் புகழ்ச்சியாகப் பேசிவிட்டார். **அகாயாவில் உள்ளவர்கள் ஓராண்டுக் காலமாக ஆயத்தமாயிருக்கிறார்கள்** என்று அவர் அவர்களிடம் கூறினார். கிரேக்கு நாட்டின் தென்பகுதியே அகாயா ஆகும். இங்கு கொரிந்துப் பட்டணத்தைக் குறிப்பிடும்படி அச்சொல் சொல்லப்பட்டுள்ளது. அங்கு தான் இந்த நகரம் அமைந்திருந்தது. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் ஓராண்டு காலமாக ஆயத்தமாயிருக்கிறார்கள் என்பதை மக்கெதோனியர் கேள்விப்பட்டபோது, அவர்களில் பலர் **எழுப்பிவிடப்பட்டார்கள்**. கிறிஸ்தவர்களுக்குரிய கொடுக்கும் தொற்றுப் பழக்கம் அவர்களையும் தொற்றிக்கொண்டது. அவர்கள் அதற்காகத் தங்களை முழுமனதோடு கொடுக்கத் தீர்மானித்து விட்டார்கள்.

**9:3 இந்தச் சகோதரரை அனுப்பினேன்** என்று பவுல் இங்கு சொல்லும்போது, இந்தச் சகோதரரை இப்பொழுது அனுப்புகிறேன் என்னும் பொருளிலேயே கூறினார். இம்மடலைப் படிப்போரின் காலத்தோடுள்ள தொடர்பில் அவர் இறந்த காலத்தைப் பயன்படுத்தினாரேயொழிய எழுதிய வரின் காலத்தின் தொடர்பில் எழுதவில்லை. இங்கு சகோதரர் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மூன்று பேர் என்பதை முந்திய அதிகாரத்திலிருந்து அறியலாம். அவர்கள் தீத்துவும் பெயர் சொல்லப்படாத மேலும் இருவரும் ஆவர். பணம் சேகரிப்பதில், பவுல் கொரிந்தியரைக் குறித்துச் சொன்ன புகழ்ச்சியான சொற்கள் வீணாகப் போய்விடாதிருக்கும்படி அவர்கள் மூவரும் அங்கு அனுப்பப்பட்டார்கள். பவுல் கொரிந்துப் பட்டணத்திற்குச் செல்லுவதற்கு முன் பணச்சேகரிப்பை நிறைவேற்றி முடிப்பதே அவர்களுடைய வேலையாகும்.

**9:4** மக்கெதோனியாவிலிருந்து தெற்கிலுள்ள கொரிந்துப் பட்டணத்திற்கு அப்போஸ்தலன் பயணம் செய்கையில் மக்கெதோனியா விசுவாசிகளில் ஒருவர் அவரோடு பயணம் செய்யக்கூடும். கொரிந்தியரைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் புகழ்ந்து பேசிய நிலையில், மக்கெதோனியாவிலிருந்து வருகிற அந்த விசுவாசி, எருசலேம் பரிசுத்தவான்களுக்காகக் கொரிந்தியர்கள் நிதி ஒன்றையும் திரட்டவில்லை என்று காண்பாரானால் அது அவருக்கு எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையை உண்டாக்கும்! அவ்வாறு நடக்குமென்றால் கொரிந்து பட்டணத்தாரைக் குறித்து பவுல் கொண்டிருந்த நம்பிக்கை அவமானத்திற்குரியதாகக் காணப்படுமே. மேலும் கொரிந்தியரே தங்களுடைய அலட்சியப் போக்கை எண்ணி வெட்கப்படுவார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

திருவாளர் பிலிப்புவின் மொழிபெயர்ப்பு வண்ணப்பொலிவுடன் திகழ்கிறது:

> என்னுடன் மக்கெதோனியரில் சிலர் பயணப்பட்டு, நான் உங்களை வந்து சந்திக்கையில், உங்களுடைய உதாரத்துவச் செயலைக் குறித்து நீங்கள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று காண்பார்களானால் எனக்கும் உங்களுக்கும் அது என்னவாயிருக்கும்! உங்களைக் குறித்துப் பெருமையும் நம்பிக்கையும் உடையவராய் இருந்த நாங்கள் (உங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை) அதிர்ச்சியடையத்தக்க அவமானத்திற்குள்ளாவோம்.

**9:5** இதன் காரணமாகவே, பவுல் கொரிந்துப் பட்டணத்திற்குச் செல்லுவதற்கு முன், அந்த மூன்று **சகோதரரை** அவர்களிடம் **ஏவி அனுப்புவது** அவருக்கு **அவசியம் என்று காணப்பட்டது.** அவர்கள் எருசலேம் நகர விசுவாசிகளுக்காக **வாக்குத்தத்தம் பண்ணினபடி முன்னதாக உதாரத்துவமாய்க் கொடுத்து ஆயத்தமாயிருக்க** ஏதுவாகும்.

**லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்த** வேண்டும். பலவந்தமாய் விசுவாசிகளிடமிருந்து பணத்தைப் பிழிந்தெடுக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கே இங்கு இடமில்லை. மாறாக இந்த நிதி திரட்டுதல் அவர்களுடைய உதாரத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். மேலும் அது அவர்களால் மனமுவந்து கொடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

### ஊ. உதாரத்துவமாய்க் கொடுப்பதால் கிடைக்கும் நல்ல பரிசுகள் (9:6-15)

**9:6** ஆறாவது வசனத்திலிருந்து பதினைந்தாம் வசனம் வரையில் கிறிஸ்தவக் கொடையினால்

கிடைக்கக்கூடிய வியத்தகு பரிசுப்பொருட்களை யும் நன்மைகளையும் குறித்து அப்போஸ்தல னாகிய பவுல் பட்டியலிட்டுத் தருகிறார். முதலா வது, அறுவடைக்குரிய பிரமாணத்தை முன்வைக் கிறார். வேளாண்மைக் கொள்கையின்படி உதா ரத்துவமாய் விதைத்தால் உதாரத்துவமாய் அறு வடை செய்யமுடியும் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். உழவன் நிலத்தில் விதைக்க ஆயத்தமாயிருக்கிறான் எனக்கொள்வோம். அவன் கையிருப்பில் இருக்கும் தானியத்தை முழுவதும் விதைக்கலாம். இல்லையேல் அதில் ஒரு பங்கை அடுத்துவரும் மாதங்களில் உணவுக் காக ஒதுக்கி வைக்கலாம். இங்கே சொல்லப்பட்டி ருக்கிற கருத்து யாதெனில், எவன் தாராளமாய் **விதைக்கிறானோ** அவன் **விதைத்த** அளவிற்கு ஏற்ப மிகுதியாக **அறுவடை செய்வான்** என்பதே ஆகும்.

வேளாண்மையைப் பொருத்தமட்டில் இதனை நாம் நினைவுகூர வேண்டும். உழவன் எவ்வளவு விதைத்தானோ அதே அளவு அறுவடை செய்ய மாட்டான். மாறாக அவன் விதைத்ததற்கு ஏற்ப பன்மடங்கு மிகுதியாக அறுவடை செய்வான். கிறிஸ்தவக் கொடையும் அதுபோன்றதுதான்: ஒருவர் எவ்வளவு கொடுக்கிறாரோ அதே அளவு தான் பெற்றுக்கொள்வார் என்னும் கேள்விக்கே அங்கு இடமில்லை. அவர் கொடுத்த அளவிற்குப் பன்மடங்கு அதிகமாகத் திரும்பப் பெறுவார். எனினும் நாம் திரும்பப் பெறுவது பன்மடங்கு பண மாக இருக்காது, மாறாகப் பன்மடங்கு ஆவிக் குரிய நன்மைகளாக இருக்கும் என்பது உறுதி.

**9:7 அவனவன் தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்.** அவன் தன்னுடைய உடன டித் தேவை என்ன என்பதைக் கருத்தில் கொண்ட வனாகச் செயல்பட வேண்டியது அவசியம். அவன் தன்னுடைய இயல்பான வாழ்க்கைக்கு நியாய மான தேவைகள் என்ன என்பதையும் அதற்கு என்ன செலவாகும் என்பதையும் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். ஆனால், அதற்கும் மேலாக, தன்னுடைய உடன் கிறிஸ்தவனது தேவைகள் என்ன என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். மேலும் தன்மீது சுமத்துகிற எதிர்பார்ப்புகளையும் அவன் எண்ணிப்பார்க்க வேண்டும். இவை யாவற்றையும் கருத்தில் கொண்டவனாக, அவன் விசனமாகவோ கட்டாயமாகவோ கொடுக்க வேண்டியதில்லை. ஒருவனால் கொடுக்க இய லும், ஆயினும் அதைக் குறித்து அவன் மகிழ்ச்சி யடைகிறதில்லை. ஒருவேளை கட்டாயப்படுத்தப் படுவதாலோ, உணர்ச்சிபூர்வமாக வேண்டுதல் செய்யப்படுவதன் அடிப்படையிலோ ஒருவன் கொடுக்கிறவனாக இருக்கிறான். இங்கு சொல் லப்பட்டுள்ளவற்றில் ஏதொன்றும் தகுதியா யிராது. **உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத் தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.** Hilarious (உவகை மிக்க) என்னும் சொல் **உற்சாகமாய்** (cheerful-hilaron) என்னும் சொல்லிருந்தே பிறந்தது.

தேவனுக்கு உண்மையாகவே நமது பணம் தேவையா? பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் அவருடையவை; அவ ருக்கு ஏதாவது தேவையாயிருந்தால் அவர் நம் மிடம் சொல்லமாட்டார் (சங். 50:10-12). ஆயின், நம்முடைய இருதயத்தின் மனப்பான்மை அவ ருக்கு முக்கியம். தன்னிடத்தில் உள்ளதைப் பிறருடன் பகிர்ந்துகொள்வதால் உண்டாகிற கர்த்தருடைய மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிற கிறிஸ்தவனையே அவர் காண விரும்புகிறார்.

**உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.** ஏனென்று திரு வாளர் ஜேவெட் கூறுகிறார்:

> உற்சாகமாய்க் கொடுப்பது அன்பினின்று பிறந்திருக்கிறது. ஆகவே இஃது அன்புபாராட்டு கிற ஒருவர் மற்றொரு அன்புபாராட்டுகிறவரிடம் செலுத்துகிற அன்பாயிருக்கிறது. மேலும் அந்தக் கூட்டுறவில் அவர் மகிழ்ச்சியடைகிறார். கொடுப்பது என்பது அன்புபாராட்டுதலின் மொழியாகும்; உண்மையில் அங்கு வேறு பேச்சுக்கு இடமில்லை. "தேவன் அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்புகூர்ந்தார்!" அன்பு தனது வாழ்வை, பகிர்ந்தளிப்பதில்தான் கண்டடைகிறது. தன்னை ஒப்புவிப்பதால் உண்டாகிற உவகையே, அன்பு தன்னகத்தே கொண்டிருக்கிற ஒரே பெருமை. அன்பு எல்லா வற்றையும் உடையதாயிருந்தாலும், அதனிடத் தில் ஒன்றுமில்லை.[40]

**9:8** இங்கே ஒரு வாக்குறுதி தரப்பட்டிருக்கிறது. ஒருவன் உண்மையாகவே தாராளமாய்க் கொடுக்க மனதுள்ளவனாயிருந்தால், அவன் அதற்குரிய வாய்ப்பைப் பெறும்படி சூழ்நிலையைத் தேவன் உருவாக்குகிறார். இங்கே கிருபை என்னும் சொல் கொடுப்பதற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்குரிய ஆதாரம் என்னும் பொருளைக் கொண்டிருக்கிறது. இவ்வகை ஆதாரங்களை ஏற்படுத்த **தேவன் வல்லவராயிருக்கிறார்.**

அதன் காரணமாக நாம் **சம்பூரணம் உடையவர்களாய்** இருப்பதோடு, நாம் கொண்டிருக்கிறவற்றைப் பிறரோடு பகிர்ந்தளிக்கிறவர்களாகவும் காணப்படுவோம். இவ்வாறாக நாம் **நற்கிரியைகளில் பெருகுகிறவர்களாக** விளங்குவோம்.

இந்த வசனத்தில் வரக்கூடிய எல்லாம் என்ற சொல்லைக் கவனியுங்கள். எல்லா **(சகலவித) கிருபை, எப்பொழுதும்** (எல்லா நேரங்களிலும்), **எல்லாவற்றிலும் சம்பூரணம்**, எல்லாவித **(சகலவித) நற்கிரியை.**

**9:9** இப்பொழுது அப்போஸ்தலன் சங்கீதம் 112:9 -ஆம் வசனத்தை மேற்கோளிட்டுக் காட்டுகிறார். **வாரியிரைத்தான்** என்னும் சொல் விதைவிதைப்பதைக் குறிக்கிறது. தாராளமாய் விதைக்கிற ஒரு மனிதன் இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறான். அல்லது குறிப்பிடத்தக்க வகையில் அவனுடைய தயவு பாராட்டுகிற பண்பு இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவன் சிறப்பாக **ஏழைகளுக்குக் கொடுப்பதில்** தயவு பாராட்டுகிற செயலைச் செய்துவந்தான். அந்தச் செயலினாலே அவன் தன்னுடைமையை இழந்து போனானா? இல்லை! **அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.** ஓர் உழவன் தனது தானியத்தைத் தூவி விதைக்கிற செயலுக்கு ஒப்பாக, நாம் தயவு பாராட்டுகிறவர்களாக இருப்போமென்றால், நாம் விண்ணகத்தில் நம்முடைய செல்வத்தைச் சேர்த்து வைக்கிறவர்களாக இருப்போம். நம்முடைய அருட்குணம் **என்றென்றைக்கும் நிலைநிற்கும்.**

**9:10 விதைக்கிற** மனிதனின் எடுத்துக்காட்டு தொடர்கிறது. விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிற அதே தேவன், பிறருக்கு இரக்கம் பாராட்டுகிறவர்கள் நிச்சயமாக அதற்குரிய பரிசுப்பொருட்களை அறுவடை செய்வதை உறுதிப்படுத்தக் கவனமுள்ளவராக இருக்கிறார். அந்தப் பரிசுப்பொருட்களின் அட்டவணை இங்கு தரப்பட்டுள்ளது. முதலாவது, நீங்கள் விதைத்த விதையைப் **பெருகப்பண்ணுவார்.** அவருடைய மக்களுக்கு இரக்கம் பாராட்டுவதனால், அவர் மிகுதியான வாய்ப்புகளையும், மிக அதிகமான பயன்களையும் உண்டாக்குவார். மேலும், **உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.** எருசலேமில் வாழ்ந்த பரிசுத்த வான்களுக்குக் கொடுப்பதில் கொரிந்தியர் நீதியுடையவராக இருந்தார்கள். அந்தக் கொடையின் பயனாக, நித்திய ஈவு என்னும் விளைச்சலை அவர்கள் பெறுவார்கள். அவர்களுடைய கொடுக்கும் திறனை தேவன் பெருகச்செய்த காரணத்தினால், அவர்கள் உதாரத்துவத்தில் பெருகினார்கள். அதன் விளைவாக அவர்கள் பெறவிருக்கிற பரிசுகளும் பெருகும்.

**9:11** கர்த்தருக்குக் கொடுப்பதன் காரணமாக எவனொருவனும் ஒருக்காலும் வறியவனாக மாறமாட்டான் என்று இந்தப் பகுதி மிகத்தெளிவாகக் கூறுகிறது. இதற்கு மாறாக, இரக்கம் பாராட்டுகிற ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு எதிர்ச்செயல் இருக்கிறது. கொடுத்த ஈவுக்கு இணையற்ற வகையில் பன்மடங்கு மிகுதியாக பரிசுப்பொருட்கள் கிடைக்கும். இவ்வாறாகக் கொரிந்தியர்கள் தங்களது கொடுக்கும் தன்மையினாலே **எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்கள் ஆவார்கள்**. அது அவர்களுடைய **மிகுந்த உதார குணத்தை** மேலும் வெளிப்படுத்தச் செய்யும். கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் கொடுக்கத் தக்க கிருபையில் வளர்ச்சியடைகிறதைக் காணும் அப்போஸ்தலர்கள் தேவனுக்கு நன்றி செலுத்துவார்கள்.

**9:12** கொரிந்துப் பட்டணத்திலிருந்து அனுப்பப்பட்ட தர்மப்பணம் பகிர்ந்து அளிக்கப்பட்டபோது, அது அங்கிருந்த பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்கியது மட்டுமின்றி, பலர் தேவனுக்கு நன்றி செலுத்துவதற்கும் காரணமாயிற்று. மீண்டும் மீண்டும் **ஸ்தோத்திரம் செலுத்துவதைக்** குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்திக் கூறுகிறதை நாம் கவனித்து வந்தோம். கர்த்தருக்கு நன்றி செலுத்தத்தக்கபடி பயன் விளைவிக்கிற ஏதொரு செயலும் பவுல் அப்போஸ்தலனுடைய பார்வையில் பெரிதான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

**9:13** கொரிந்தியரின் கொடை மேலும் பல நன்மைகளைப் பிறப்பிக்கக் கூடியதாயிருக்கும். இந்தப் புறவினக் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் உண்மையாகவே **கிறிஸ்து** கிரியை செய்து வந்திருக்கிறார் என்பதற்கான நிரூபணமாக அது யூதேயாக் கிறிஸ்தவர்களிடம் விளங்கியிருக்கும். ஒரு காலத்தில் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளைப் போன்ற புறவினக் கிறிஸ்தவர்களைக் குறித்து யூதேயாக் கிறிஸ்தவர்கள் ஐயம் கொண்டிருந்தார்கள். பெரும்பாலும் அவர்கள் முழுமையான கிறிஸ்தவர்கள் அல்ல என்றே யூதேயாக் கிறிஸ்தவர்கள் கருதி வந்தார்கள். ஆனால் கொரிந்தியரின் விசுவாசத்திற்கு இந்த இரக்கம் பாராட்டல் மிகப்பெரிய நிரூபணமாக விளங்கியிருக்கும். கிறிஸ்துவினுடைய சுவி

சேஷம் அகாயாவில் செய்த செயலுக்காகவும், தங்களுக்காகக் கொரிந்தியர் உதாரத்துவமாய்க் கொடுத்ததற்காகவும் யூதேயாக் கிறிஸ்தவர்கள் தேவனை மகிமைப்படுத்தியிருப்பார்கள்.

**9:14** மேற்கூறியவை மட்டுமல்ல! இன்னும் இரண்டு நன்மைகள் தொடருகின்றன. கொரிந்தி லிருந்து எருசலேமுக்குத் தர்மப்பணம் அனுப் பப்படுகின்ற காரணத்தால், இதுமுதல் யூதேயாக் கிறிஸ்தவர்கள் கொரிந்துப் பட்டணத்துப் பரிசுத்த வான்களுக்காக ஜெபம் செய்யக் கவனமுள்ளவர் களாக இருப்பார்கள். மேலும் அவர்களுக் கிடையே வலிமையான அன்பிணக்கம் நிலவும். கொரிந்தியர் காண்பிக்கும் **மிகவும் விசேஷித்த கிருபையின் நிமித்தம்** எருசலேமில் வாழ்ந்த பரிசுத்தவான்கள் அவர்கள்மேல் **வாஞ்சையா யிருப்பார்கள்**.

**9:15** இத்தருணத்தில் பவுல் வியப்பின் மிகுதி யால் பூரித்து முழங்குகிறார்! இந்த வசனம் வேத அறிஞர்கள் பலருக்குப் புதிராகத் தோன்றுகிறது. இதுவரை சொல்லப்பட்ட செய்திகளுடன் இவ்வச னம் நெருங்கிய தொடர்புடையது என்பதை அவர் களால் காணமுடியவில்லை. அவருடைய **சொல்லி முடியாத ஈவு** என்பதன் பொருள் என்னவாயிருக் கும் என்று அவர்கள் வியந்து நிற்கிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்தவர்கள் கொடுப்பதைப் பற்றிய செய்தியைச் சொல்லி முடிக்கும் தறுவாயில் எல்லோரிலும் மிகப்பெரிய கொடைவள்ளலாகிய **தேவனைப்** பற்றியே நினைக்க ஏவப்பட்டார் என்று நாம் கருதுகிறோம். மேலும் அவர் பெரிதான அருட்கொடையாகிய **ஈவைப்** பற்றியும் - அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் சிந்திக்கிறார். ஆகவே இந்த உன்னதமான செய்தியோடு பவுல் கொரிந் தியருக்குச் சொல்லவேண்டியவற்றைச் சொல்லி முடிக்கிறார். அவர்கள் தேவனுடைய பிள்ளைகளும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுமாக இருக் கிறார்கள். அவ்வாறாயின் அவர்கள் இத்தகைய மேன்மைக்குரியமாதிரியைப் பின்பற்றக்கடவர்கள்!

## 3. பவுல் தனது அப்போஸ்தல நியமனத்தை உண்மையென மெய்ப்பித்தல் [அதி. 10-13]

இம்மடலின் கடைசி நான்கு அதிகாரங்களும், தனது அப்போஸ்தல நியமனத்தைப் பவுல் உண்மையென மெய்ப்பிக்கும்படி கூறிய வாதங் களை விவரிக்கின்றன. பவுல் எழுதிய இந்தக் குறிப்பிட்ட வேத பகுதியைக் குறித்து அப்போஸ் தலனாகிய பேதுரு எழுதிய சொற்கள் மிகப் பொருத்தமாகக் காணப்படுகின்றன. "அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது." பவுலைக் குறைகூறியவர் கள் அவருக்கு எதிராகச் சாட்டின குற்றச் சாட்டு களுக்கு அவர் இங்கே விடைபகர்கிறார் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. ஆயினும் அவருக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றங்கள் என்னவென் பதை, அவர் விடையாகக் கூறிய இந்தப் பகுதி யிலிருந்து நாம் ஊகித்து அறிந்து நாமே முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தப் பகுதி முழுவதிலும் அப்போஸ்தலன் மிகப்பெரிய அளவில் உட்பொருளோடு கூடிய சொற்களைப் பயன்படுத்துகிறார். அவ்வாறு அவர் எந்தெந்த இடங்களில் எழுதியிருக்கிறார் என்பதை அறிந்து கொள்வதில்தான் சிக்கல் இருக்கிறது.

ஆயினும், தேவனுடைய மேன்மையான திருமறையில் இது மிகவும் பலனளிக்கிற பகுதி களில் ஒன்றாக விளங்குகிறது. இப்பகுதி இல்லா திருந்தால் நாம் நிச்சயம் மிகவும் வறியவர்களா கப் போயிருப்போம்.

### அ. தன்மீது குற்றஞ்சாட்டுவோருக்குப் பவுல் தருகிற பதில் [10:1-12]

**10:1** முதல் ஆறு வசனங்களில், இவ்வுலக மனிதர்களின் வழக்கத்தின்படி அப்போஸ்தலன் நடந்துகொள்கிறார் என்று குற்றஞ்சாட்டுவோருக்கு அவர் தரும் பதிலைக் காண்கிறோம்.

முதலாவது, அவர் தன்னைப் **பவுலாகிய நான்** என்று அறிமுகப்படுத்துகிறார். இரண்டா வது, அவர் ஆணவப்போக்குடன் நடந்துகொள் ளாமல் பரிசுத்தவான்களிடம் பணிவுடன் வேண் டிக்கொள்கிறார். மூன்றாவது, அவர் தனது வேண்டுதலைக் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக் கிறார். கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் மனித ராக இருந்தபோது கைக்கொண்ட வழிமுறை யைக் குறித்தே அவர் சிந்திக்கிறார் என்பதில் ஐயமில்லை. இரட்சகரின் புவி வாழ்க்கையைப் பற்றிய சில குறிப்புகளைப் பவுல் கூறுகிறதை இங்கு இணை பொருளாகக் காண்கிறோம். பொது வாக அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்துவை விண்ணகம் சென்றவராகவும், மகிமையடைந்த வராகவும், தேவனுடைய வலதுபுறத்தில் இருப்ப வராகவுமே குறிப்பிடுவது வழக்கம்.

மேலும், பவுல் தன்னைப் பற்றி விவரிக்கை யில், அவர் "**உங்களுக்கு முன்பாக இருக்கும் போது தாழ்மையாயும், தூரத்தில் இருக்கும்**

**போது உங்கள்மேல் கண்டிப்பாயும்"** இருந்ததாகக் கூறுகிறார். இது உட்பொருளோடு பேசப்பட்டது என்பது வெளிப்படை. மனிதர்களுக்கு முன்பாக இருந்தபோது பவுல் கோழையாக நடந்து கொண்டார் என்றும் அவர் தொலைவில் இருந்த போது ஒரு சிங்கத்தைப் போன்று துணிவோடு இருந்தார் என்றும் அவருடைய எதிரிகள் கூறினார்கள். அவர் தனது மடல்களில் தனது அதிகாரத்தின் மூலம் அடக்கி ஒடுக்குகிற மனப்பான்மையோடு எழுதியிருப்பதால் அவருடைய கண்டிப்பு தெரிய வருகிறது என்று அவர்கள் கூறினார்கள்.

**10:2** இந்த வசனம் முதல் வசனத்தின் பின் பகுதியோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. அங்கு அவர் கொரிந்தியரிடத்தில் வேண்டிக்கொள்வதாகக் கூறுகிறார். ஆனால் அவருடைய வேண்டுதல் என்னவென்று அங்கு சொல்லவில்லை. இங்கு அவர் அதனை விளக்குகிறார்: **"எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக் குறித்து நான் கண்டிப்பாயிருக்க வேண்டுமென்று நினைத்திருக்கிற தைரியத்தோடே, உங்கள்முன்பாக இருக்கும்போது, நான் கண்டிப்புள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கெள்கிறேன்."** அவர் மாம்சத்தின்படி நடக்கிறார் என்று குற்றஞ்சாட்டுகிறவர்களிடத்தில் அவர் **கண்டிப்பாயிருக்க** நினைத்ததுபோல கொரிந்தியரிடத்தில் **கண்டிப்பாயிருக்க** வேண்டும் என்று நினைக்கவில்லை.

**10:3** அப்போஸ்தலர்கள் மாம்ச சரீரங்களில் வாழ்ந்தவர்களாக இருந்தபோதிலும், அவர்கள் தங்களது கிறிஸ்தவப் போராட்ட வாழ்க்கையை மாம்சீக முறைகளின்படி நடத்தவில்லை என்பதே இங்கு சொல்லப்பட்டுள்ள கருத்தாகும்.

**10:4** கிறிஸ்தவப் **போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவை அல்ல.** எடுத்துக்காட்டாக, கிறிஸ்தவன் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு நற்செய்தியைப் பரப்பும்போது வாளையோ, துப்பாக்கியையோ, நவீனகாலப் போர்யுக்திகளையோ கையாளுவதில்லை. ஆனால் இவை மட்டுமே மாம்சத்துக்கேற்ற போராயுதங்கள் என்று அப்போஸ்தலன் சொல்லவில்லை. கிறிஸ்தவன் தனது நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு செல்வத்தையோ, புகழ்ச்சியையோ, அதிகாரத்தையோ, செல்வாக்கையோ, அறிவுக்கூர்மையையோ பயன்படுத்துவதில்லை.

மாறாக, அவன் **அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ள** யுக்திகளையே கையாளுகிறான். ஜீவனுள்ள தேவனிடத்தில் கொண்டிருக்கும் விசுவாசம், ஜெபம், தேவனுடைய திருமறைக்குக் கீழ்ப்படிதல் ஆகியவையே இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு மெய்யான போர் வீரனும் பயன்படுத்தும் திறமைவாய்ந்த போராயுதங்களாக இருக்கின்றன. இவற்றின் மூலமாகவே **அரண்கள் நிர்மூலமாக்கப்படுகின்றன**.

**10:5** நான்காவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ள "அரண்கள்" எவையென்று இந்த வசனம் கூறுகிறது.

சத்தியத்திற்கு விரோதமாக மனிதன் எழுப்பும் எல்லாவித மேட்டிமையான **தர்க்கங்களுக்கும்** எதிராகப் போர்புரியும் வீரனாகவே பவுல் தன்னைக் கண்டார். இந்தத் தர்க்கங்களின் உண்மையான குணத்தைப் பற்றி **தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழுகிற எல்லா மேட்டிமை** என்னும் சொற்றொடர் விவரிக்கிறது. தங்களுடைய அமைப்புகளில் இறைவனுக்கு இடம் தராத அறிவியல் அறிஞர்கள், பரிணாமக் கோட்பாட்டாளர்கள், தத்துவஞானிகள், சமய மேதைகள் ஆகியோர் இன்றைய நாட்களில் எழுப்பும் வாதங்களையே இது குறிப்பிடுகிறது. இவர்களோடு போர் நிறுத்த உடன்பாடு செய்துகொள்ளும் எண்ணம் அப்போஸ்தலனுக்குச் சிறிதளவும் இல்லை. மாறாக, **எந்த எண்ணத்தையும்** கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துவதே அவருடைய எண்ணமாயிருந்தது. எல்லா மனிதர்களுடைய போதனைகளும் அபிப்பிராயங்களும் கர்த்தராகிய இயசு கிறிஸ்துவின் போதனைகளின் வெளிச்சத்தில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு நியாயந்தீர்க்கப்பட வேண்டும். மனிதர்களுடைய தர்க்கங்களைப் பவுல் அப்படியே பயனற்றது என்று தள்ளிவிடமாட்டார். ஆனால், நம்முடைய விவேகம் கர்த்தரை எதிர்த்துச் செயல்படவோ, அவருக்குக் கீழ்ப்படியாதிருக்கவோ நாம் அனுமதிக்கக் கூடாது என்று பவுல் எச்சரிக்கிறார்.

**10:6** கிறிஸ்துவின் போர்வீரர் என்னும் நிலையில், கொரிந்தியர் முதலாவதாகத் தங்களுடைய **கீழ்ப்படிதலை** வெளிப்படுத்திக் காட்டியபோது, அப்போஸ்தலன் **எல்லாக் கீழ்ப்படியாமைக்குத் தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயிருந்தார்.** கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் எல்லாவற்றிலும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை உறுதிசெய்வதற்கு முன்னர் அவர் அங்கிருந்த கள்ளபோதகர்களுக்கு எதிராகச் செயல்படப்போவதில்லை என்று முடிவு செய்திருந்தார்.

**10:7** இந்த வசனத்தின் முதற்பகுதி ஒரு கேள்வியாக அமைந்திருக்கிறது: **"வெளித்தோற்றத்தின்படி பார்க்கிறீர்களா?"** (NKJV). அது கேள்வியாக அமையாமல் ஓர் உண்மையை எடுத்துரைக்கும் கூற்றாக இருக்கலாம், "நீங்கள் எல்லாவற்றையும் மேலோட்டமாகப் பார்க்கிறீர்கள்" (NIV). அல்லது அது ஒரு கட்டளையாகவுங்கூட சொல்லப்பட்டிருக்கலாம், "உங்கள் கண்களுக்கு முன்னர் என்ன இருக்கிறதோ அதை அவ்வாறே காணுங்கள்" (RSV), அதாவது, "உண்மைகளை எதிர்கொள்ளுங்கள்."

இதனை நாம் கூற்று என்று எடுத்துக்கொள்வோமெனில், கொரிந்தியர் பொதுவான ஒரு மனிதனை அவன் ஆதிக்கம் செலுத்தக்கூடியவனா, மனதில் பதியத்தக்க வகையில் பேசும் திறன் கொண்டவனா, தர்க்க ஆற்றல் மிக்கவனா அல்லது அப்படிப்பட்ட திறமைகள் அவனிடம் இல்லையா என்று நிதானித்துப் பார்க்கும் இயல்புடையோராய் இருந்தார்கள் என்றே முடிவு செய்ய வேண்டும். அவர்கள் இவ்வாறாக வெளித்தோற்றத்தினால் ஊசலாடக் கூடியவர்களாக இருந்தார்களே ஒழிய உள்ளான உண்மையைக் குறித்துக் கவலையற்றவராக இருந்தார்கள்.

**ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்குரியவனென்று நம்பினால், தான் கிறிஸ்துவுக்குரியவனாயிருக்கிறதுபோல நாங்களும் கிறிஸ்துவுக்குரியவர்களென்று அவன் தன்னிலே தானே சிந்திக்கக்கடவன்.** "நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்" (1 கொரி. 1:12) என்று கூறியவர்களைப் பற்றியே பவுல் இங்கு குறிப்பிடுகிறார் என்று தோன்றுகிறது; பெரும்பாலும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள மற்ற கூட்டத்தாரை அவர் இங்கு குறிப்பிடவில்லை என்றே தோன்றுகிறது. எவரொருவரும் கிறிஸ்துவைத் தனக்கு மட்டுமே சொந்தமானவர் என்று உரிமை கோர முடியாது என்று அவர்களுக்குப் பவுல் விடை பகர்கிறார். அவர்கள் எவ்வாறு கர்த்தரைச் சேர்ந்தவர்களோ அதுபோலவே அவரும் கர்த்தரைச் சேர்ந்தவர் ஆவார்.

மற்றவர்களைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ள மனமற்ற கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவைச் சேர்ந்த வரல்லர் என்று பவுல் இங்கே மறுத்துரைக்கவில்லை. ஆகவே இந்தப் பகுதியில் அவர் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டிருந்த கள்ளபோதகர்களையும், வஞ்சனை செய்துவந்த ஊழியர்களையும் குறித்துப் பேசியிருப்பார் என்று எண்ணியும் பார்க்க முடியாது (11:14). இந்த மடலில் இரட்சிக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்படாதவர்கள் ஆகிய இருசாரருக்குள்ளும் எதிரிகளாயிருந்த சிலரைக் குறித்துப் பவுல் பேசுகிறார் என்றே தோன்றுகிறது.

**10:8** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் என்னும் நிலையில் பவுலுக்கு, அவர் நிறுவிய சபைகளின்மேல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. பரிசுத்தவான்களை மகா பரிசுத்தமான விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதே அந்த அதிகாரத்தின் நோக்கமாயிருந்தது. இதற்கு மாறாக, கள்ளபோதகர்கள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றிராத அதிகாரத்தைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள்மேல் செலுத்தினார்கள். அது மட்டுமின்றி, பரிசுத்தவான்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுடைய விசுவாசம் தகர்ந்துபோகத்தக்கதாகவே அவர்கள் தங்களுடைய அதிகாரத்தைச் செலுத்தினார்கள். ஆகவே பவுல் தனக்குக் **கர்த்தர் கொடுத்த அதிகாரத்தைக்** குறித்து மிக அதிகமாகப் புகழ்ந்து பேசினாலும் அதற்காக அவர் வெட்கப்படவில்லை. அவருடைய உரிமைகள் யாவும் உண்மையென்பது இறுதியில் மெய்ப்பிக்கப்படும்.

**10:9** தனது **நிருபங்களாலே** கிறிஸ்தவர்களைப் **பயமுறுத்துகிறவராக தோன்றக்கூடாது** என்னும் எண்ணத்திலேயே அவர் இதை எழுதியிருக்கிறார். அதாவது, தேவனால் தனக்கு அருளப்பட்ட அதிகாரத்தைக் குறித்து அப்போஸ்தலன் புகழுவதை, கிறிஸ்தவர்கள் தங்களைப் பயமுறுத்தும்படி அவர் பேசுகிறார் என்று தவறாக நினைத்துவிடக் கூடாது என்பதே அவருடைய விருப்பம். அவ்வாறு அவர் பேசுவதன் நோக்கமே, தன்னைக் குறைகூறுகிறவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதே ஆகும். மாறாக, அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தும்படியே அந்த அதிகாரம் அவருக்கு அருளப்பட்டது. மேலும் அதற்காகவே அவர் அதனைப் பயன்படுத்தி வருகிறார் என்று கொரிந்தியர் நினைவுகூர வேண்டும்.

**10:10** அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எதிராக என்ன குற்றச்சாட்டு கூறப்பட்டதோ அதனை நாம் இங்கு கேட்கும்படியாக அனுமதிக்கப்பட்டிருக்கிறோம். அவர் பயமுறுத்தும்படியான நிருபங்களை எழுதியிருப்பதாக அவருடைய எதிரிகள் குற்றஞ்சாட்டினர், ஆனாலும் **அவருடைய சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் (பேச்சு) அற்பமுமாயிருக்கிறது என்றார்கள்.**

**10:11** பவுல் அவர்களிடமாய் வந்திருக்கும் போது, அவருடைய மடல்களில் அவர் எப்படிப் பட்டவராக இருந்தார் என்று அவரைக் குறைகூறிய வர்கள் சொன்னார்களோ அதுபோலவே இருப் பார் என்று **சிந்திக்கக்கடவர்**. பவுல் தனது மடல் களின் மூலமாக அதிக பாரத்தை அவர்கள்மீது செலுத்தினார் என்பது இதன் பொருளல்ல. அவர் கள்தான் அவரைப் பற்றி அவ்வாறு சொன்னார் கள். அவர்களை அவர் நேருக்கு நேராகச் சந்திக் கும்போது, அவர்களிடத்தில் மிகவும் கண்டிப்பாக நடந்துகொள்வார் என்றே அவர் இங்கு சொல்லு கிறார். அவரிடத்தில் எவ்விதக் கோழைத்தனமும் இருக்காது.

**10:12** தங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பழக்கம் உடையராய்க் கள்ளபோதகர் கள் இருந்தார்கள் என்பது நிச்சயம். கொரிந்திய ருடைய பார்வையில் அவர் நகைப்பிற்கிடமான வர் என்று தோன்றச் செய்வதை அவர்கள் தங்கள் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களை மிக முக்கியமான வட்டத்துக்குள் அதா வது மிகச்சிறந்த பிரமுகர்களாக எண்ணினார் கள். அவர்களுடைய எண்ணத்தின்படி ஒருவரும் அவர்களுக்கு இணையானவர் அல்லர். அவர் களைக் காட்டிலும் சிறந்தவர் எவரும் இல்லை. ஆகவே பவுல் வஞ்சப் புகழ்ச்சியாகக் கூறுகிறார், **"ஆகிலும் தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; தங்களைக்கொண்டு தங்களை அளந்து கொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக் கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல."** பவுல் தனது மடல்களில் பலமுள்ளவர் என்று அவர் கள் குற்றஞ்சுமத்தினார்கள். ஆனால் அவரே இங்கு **தங்களைத் தாங்களே மெச்சிக்கொள் ளுகிற சிலரோடு** தன்னை ஒப்பிடத் துணிய மாட்டேன் என்று சொல்லுகிறார். அதாவது அவர் கள் மதிப்பிடுவதற்கான அளவுகோலாகத் தங்க ளுடைய சொந்த வாழ்க்கையை மட்டுமே கருது கிறார்கள்.

தன்னையே மதிப்பிடுவதற்கான அளவு கோலாகக் கொண்டிருக்கிற ஒருவனுக்கு, தான் எப்பொழுதும் சரியாக நடந்துகொள்வதாகவே தோன்றும் என்பது நிச்சயம்! அவனிடத்தில் முன்னேற்றத்திற்குக் கொஞ்சமும் இடமில்லை. இவ்வாறு செய்கிறவர்கள் புத்திமான்கள் அல்ல. "இதுவே கேடு உண்டாக்குகிற பிளவுகளுக்குக் காரணமாயிருக்கிறது. இத்தகைய குழுவினர் தங்களைத் தாங்களே மெச்சிக்கொண்டு, தங்க ளுடைய சபையில் இருக்கும் சிறப்பானவற்றைப் புறக்கணிக்கிறார்கள்" என்று மிகச் சரியாகச் சொல்லப்பட்டுள்ளது.

### ஆ. பவுல் கைக்கொண்ட கொள்கை: கிறிஸ்து வுக்காகப் புதிய இடங்களைக் கண்டுபிடித்தல் (10:13-16)

**10:13** ஊழியத்தில் **தேவன்** பவுலுக்கு பகிர்ந்து கொடுத்த **அளவுப் பிரமாணத்தின்படியே** அவர் தன்னைப் புகழ நோக்கங்கொண்டிருந்ததாக 13 முதல் 16 வரையிலான வசனங்களில் கூறுகிறார். தற்புகழ்ச்சிக்காக அவர் வேறொருவருடைய ஊழி யத்தில் தலையிடும் வழக்கத்தைக் கொண்டி ருக்கவில்லை. யூதமார்க்கத்தையும் பின்பற்ற வேண்டும் என்று கூறிவந்த கிறிஸ்தவர்களையே இது குறிப்பிடுகிறது என்பதில் ஐயமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் அல்லது வேறு சில கிறிஸ்தவர்களால் நிறுவப்பட்ட சபைகளுக்குள் ளாக நுழைந்து செயல்படுவதை அவர்கள்தான் தங்களுடைய வழக்கமாகக் கொண்டிருந்தார் கள். வேறொருவருடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டுவதற்கு அது ஒப்பாக இருந்தது. அவர்கள் தங்களைப் புகழும்போது, அது வேறொருவரு டைய ஊழியத்தில் மேன்மைபாராட்டுவதாக இருந்தது.

மேலும் பவுல் தான் கிறிஸ்துவுக்காக ஆற்றிய திருப்பணிக்கு அப்பாலுள்ள ஊழியங்களைக் குறித்த விசயங்களில் **மேன்மைபாராட்டுவ தில்லை** என்று கூறுகிறார். மாறாக, எங்கெல்லாம் தேவன் அவருடைய திருப்பணியைக் கனப்படுத் தினாரோ அந்த இடங்களைக் குறித்தும் அந்த நபர்களைக் குறித்துமே அவர் மேன்மைபாராட்டி னார். இது கொரிந்துப் பட்டணத்தையும் உட் கொண்டதே ஆகும். ஏனெனில் அவர் அங்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்றதோடு, அதன் விளைவாக ஒரு சபையும் அங்கு நிறுவப்பட்டது.

ஆர்தர் S. வே என்பார் இவ்வசனத்தை மிகச்சரி யாக மொழிபெயர்த்திருக்கிறார்:

> ஆனால் நான் – நான் சிறப்புரிமையாகப் பெற்ற எல்லைக்கு அப்பால் என்னுடைய அதிகாரத் தைச் செலுத்தி என்னை நானே வீணாகப் புகழ விரும்பவில்லை. தேவனால் எனக்கு அருளப் பட்ட ஆட்சி எல்லைக்குள் என்னுடைய செய லாக்கங்களைக் கட்டுப்படுத்திக்கொள்கிறேன் – அந்த எல்லைக்குள் நான் உங்களுக்குச் செய்த ஊழியமும் அடங்கும் என்பது நிச்சயம்.

உண்மையில், நற்செய்தியைப் புறவினத்த வருக்கு ஏந்திச்செல்லவேண்டும் என்னும் பொறுப்பை நிறைவேற்ற பவுல் கர்த்தரால் நியமிக் கப்பட்டார். அந்தப் பொறுப்பின் எல்லைக்குள் கொரிந்துப் பட்டணமும் அடங்கும். எருசலேமில் இருந்த அப்போஸ்தலரும் இதற்கு ஒப்புக்கொண் டார்கள். ஆனால் இப்பொழுது கள்ளபோதகர் எருசலேமில் இருந்து வந்து, அப்போஸ்தலனா கிய பவுலுக்கு தேவன் கொடுத்த பகுதிகளுக்குள் வரம்புமீறி நுழைகிறார்கள்.

**10:14** அப்போஸ்தலன் அளவுக்கு மிஞ்சி தன்னைத்தான் மேன்மைபாராட்டவில்லை. தேவன் தாமே அவருக்கு ஓர் ஆட்சி எல்லையை நியமித்திருத்தார். அந்த ஆட்சி எல்லைக்குள் கொரிந்துப் பட்டணமும் இடம் பெற்றிருந்தது. அவர் கொரிந்துப் பட்டணத்துக்கு வருகை புரிந்தார், நற்செய்தியை அறிவித்தார், ஒரு சபையை நிறு வினார். கொரிந்துப் பட்டணம் வரை அவர் வரா திருந்திருப்பார் எனில், அவருடைய முறையான எல்லைக்கு அப்பால் தன்னைப் புகழ்ந்துகொள் கிறார் என்று அவரைக் குற்றஞ்சாட்டலாம்.

அவர் கொரிந்தியரைச் சென்றடைய சோதனை, பரீட்சை, கடுந்துன்பம், தொல்லைகள் ஆகியவற் றின் ஊடாகச் செல்ல வேண்டியதாயிற்று. ஆனால் இப்பொழுது பிறர், அவர் முன்சென்று திருப்பணி ஆற்றிய எல்லைக்குள் ஊடுருவி வந்து, தங்களைத் தாங்களே மிகப்பெரிய அள வில் புகழ்ந்துகொள்கிறார்கள்.

இந்தக் கடினமான வசனத்தை NIV கீழ்க் கண்டவாறு மொழிபெயர்த்திருக்கிறது:

> ‘‘நாங்கள் உங்களிடத்திற்கு வராமல் இருந் திருப்போமென்றால், எங்களை நாங்களே அளவுக்கு மிஞ்சிப் புகழ்வதாக காணப்பட்டிருக் கும். ஆனால் நாங்களோ கிறிஸ்துவின் நற் செய்தியை ஏந்தினவர்களாக உங்களுடைய இடம் மட்டும் வந்தோம். ஆகவே எங்களை நாங்களே மெச்சிக்கொள்வதில் அளவுக்கு மிஞ் சிச் செல்லவில்லை.’’

**10:15** தான் கிறிஸ்துவுக்காக ஆற்றின திருப் பணியினாலன்றி உண்டான விளைவுகளுக்காக மேன்மைபாராட்டக்கூடாது என்று அப்போஸ் தலன் தீர்மானித்திருந்தார். ஆனால் இந்த விச யத்தில் யூதமார்க்கத்தைப் பின்பற்ற வேண்டு மென்று கூறிவந்த கிறிஸ்தவர்கள் குற்றமுடைய வராயிருந்தார்கள். அவர்கள் பிறருடைய உழைப் பிலே மேன்மைபாராட்டினார்கள். அவர்கள் பவுல் அப்போஸ்தலனுடைய ஆடுகளைத் திருட முயன் றார்கள், அவருடைய குணநலனைக் கொலை செய்தார்கள், அவருடைய போதனையை மறுத் துப் பேசினார்கள், தவறான முறையில் அதிகாரம் செலுத்தினார்கள்.

கொரிந்தியருடைய விசுவாசம் விருத்தி யாகும்போது, அவர்களுடைய விசுவாசமே வெளிப்பட்டு, அவர் அங்கிருந்து தேவனுடைய அப்போஸ்தலனாக வேறு இடங்களுக்குச் செல்ல உதவிசெய்யும் என்று பவுல் நம்பிக்கை கொண்டி ருந்தார். இவ்வாறு அவர் தனது ஊழியத்தை விரிவாக்கம் செய்தபோது, தான் வகுத்த விதியை, தொடர்ந்து தவறாமல் கைக்கொண்டார்.

ஆனால் அவர் கொரிந்துப் பட்டணத்தில் எதிர்கொண்ட உபத்திரவங்கள் அவருடைய நேரம் முழுவதையும் ஆக்கிரமித்துக்கொண்டதோடு, அவர் அந்த எல்லைக்கு அப்பால் செல்வதைத் தடைசெய்து அவரிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற இடங்கொடுக்க வில்லை.

**10:16** கொரிந்துப் பட்டணத்துக்கு **அப்புற மான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப் பதே** (பெரும்பாலும் கிரேக்கின் மேற்பகுதி, இத் தாலியா மற்றும் ஸ்பானியா ஆகிய பகுதிகளாக இருக்கக்கூடும்) அவருக்குத் தகுதியானதாகும். மாறாக **மற்றவர்களுடைய எல்லைக்குள்ளே செய்யப்பட்டவற்றை** தாங்கள் செய்ததாகப் பவுல் மேன்மைபாராட்டுவது அவருக்குத் தகுதி யானது அல்ல. பிறருடைய ஊழிய எல்லைகளுக் குள்ளாக அனுமதியின்றி உட்புகுவது அப்போஸ் தலனாகிய பவுலின் நோக்கமன்று. அல்லது அவர் ஓரிடத்திற்குச் செல்லும் முன்னர், வேறொருவர் அங்கு நிறைவேற்றிய ஊழியத்தின் பலனில் மேன்மைபாராட்டுவது அவருடைய விருப்பமு மன்று.

### இ. பவுல் அப்போஸ்தலனின் மேலான குறிக்கோள்: கர்த்தரால் புகழப்படுதல் (10:17,18)

**10:17** ஒருவன் **மேன்மைபாராட்டினால்,** அவன் **கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கட வன்.** அந்த மனிதனின் மூலமாகக் **கர்த்தர்** என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறாரோ அதில் மட்டுமே அவர் **மேன்மைபாராட்ட** வேண்டும் என் பதுதான் இதன் பொருள் என்பதில் ஐயமில்லை. இதுவே அப்போஸ்தலனுடைய வாதத்தின் பொது வான இலக்காக இருந்தது.

**10:18** தற்புகழ்ச்சி தேவனுடைய பாராட்டைப் பெறுவதில்லை. கர்த்தர் உங்களுடைய ஊழியத்தை ஆசீர்வதித்திருக்கிறாரா? ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா? அவர்கள் விசுவாசத்தில் ஊன்றக் கட்டப்பட்டிருக்கிறார்களா? சபைகள் நிறுவப்பட்டுள்ளனவா? உங்களுடைய பிரசங்கத்தினால் மனமாற்றம் பெற்றவர்களை உங்களால் சுட்டிக்காட்ட முடியுமா? அதன் மூலமாக தேவன் உங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்று மெய்ப்பிக்க முடியுமா? இந்தக் கேள்விகளைப் பவுலின் எதிரிகள் எதிர்கொள்ள வேண்டியவராயிருந்தார்கள். இவையே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அப்படிப்பட்ட சான்றுகளைக் காட்டி, தன்னைக் கர்த்தர் அந்த ஊழியத்தில் நிலைபெறச் செய்திருக்கிறார் என்று வெளிப்படுத்த பவுல் விருப்பமுடையவராக இருந்தார்.

இந்த அதிகாரத்திலும் அடுத்த அதிகாரத்திலும் புத்தியீனம் என்று அவர் அழைக்கிற செயலில் ஈடுபடுகிறார். தன்னைக் குறித்துப் புகழ்ந்து பேசுகிற புத்தியீனமான செயலை அவர் செய்யப் போகிறார். இவ்வாறு செய்யவேண்டும் என்று சிறிதளவும் அவர் விரும்பவில்லை. மேலும் இது அவருக்கு நிச்சயமாகப் பிரியமற்ற செயலாகவும் இருந்தது. ஆனாலும் அவர் இவ்வாறு தன்னைத் தானே மதியற்றவராக ஆக்கிக்கொள்வதைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் சகித்துக் கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறார்.

கள்ளபோதகர்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து பேசுவதில் பெருமளவு ஈடுபட்டிருந்தார்கள் என்பது வெளிப்படை. தங்களுடைய ஊழியத்தைக் குறித்தும் வியத்தகு வெற்றிகளைக் குறித்தும் அவர்கள் புகழ்ச்சிமிக்க செய்தித் தொகுப்பை அறிவித்துக்கொண்டிருந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. பவுல் இதுபோல ஒருக்காலும் செய்ததில்லை. அவர் கிறிஸ்துவைப் பிரசங்கித்தாரேயொழிய தன்னைக் குறித்துப் பிரசங்கம் செய்யவில்லை.

தங்களைத் தாங்களே புகழ்ந்து பேசும் பிரசங்கங்களைக் கொரிந்தியர் கூடுதலாகப் பாராட்டினார்கள் என்றே தோன்றுகிறது. ஆகவே பவுல் அப்படிப்பட்ட செயலில் சிறிதுநேரம் ஈடுபடப்போவதாக அவர்களிடம் கூறுகிறார்.

### ஈ. பவுல் தனது அப்போஸ்தல நியமனத்தை வலியுறுத்திக் கூறுதல் (11:1-15)

**11:1** என் புத்தியீனத்தை நீங்கள் சற்றே சகித்தால் நலமாயிருக்கும் - என்னைச் சகித்துமிருக்கிறீர்களே. பவுல் தன்னைக் குறித்துப் புகழ்ந்து பேசுகையில் அதனைக் கேட்கும் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் அதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். எனினும் அவர்கள் ஏற்கனவே அவ்வாறு பொறுத்துக் கொண்டிருந்தார்கள் என்று எண்ணிய பவுல், அந்த வேண்டுகோள் தேவையற்றது என்று உணர்கிறார்.

**11:2** இவ்வாறு அவர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தமைக்கு மூன்று காரணங்களைத் தொடர்ந்து கூறுகிறார். அவர் கிறிஸ்தவர்களுக்காக **தேவவைராக்கியம் கொண்டிருந்தார்**; இதுவே அதற்கான முதலாவது காரணம். அவர் அவர்களைக் **கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக் கொடுக்க** வேண்டுமென்று **நியமித்திருந்தார்.** கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளின் ஆவிக்குரிய நலனைக் குறித்த அக்கறையை அவர் தனிப்பட்ட வகையில் கொண்டிருந்தார். அன்றைய நாட்களில் நிலவிவந்த கள்ளபோதகத்தினால் கொரிந்தியர் கறைபடா வண்ணம் பாதுகாக்கப்பட்டு கர்த்தராகிய இயேசுவிடம், வரப்போகிற ஒரு நாளில், அதாவது, விசுவாசிகள் யாவரும் நடுவானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் நாளில், ஒப்படைக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர்களைக் குறித்து இவ்வாறு வைராக்கியம் உடையவராக அவர் இருந்த காரணத்தினால் புத்தியீனமாய்த் தோன்றுகிற வண்ணம் அவர் நடந்து கொண்டார்.

**11:3** கொரிந்தியருடைய **மனது கிறிஸ்து வைப் பற்றிய உண்மையினின்றும்**, அவரிடம் கொண்டிருந்த பற்றினின்றும் **விலகும்படி கெடுக்கப்படுமோவென்று** பவுல் **பயந்ததே**, அவர் அவ்வாறு புத்தியீனமாய்த் தோன்றும்படி நடந்து கொண்டதற்கு இரண்டாவது காரணமாகும். இங்கே **உண்மையென்று** சொல்லப்பட்டிருப்பது, நேர்மையான மனதோடு நடந்துகொள்வது என்னும் பொருளைத் தருகிறது. அவர்கள் தங்களைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே ஒப்புக்கொடுத்தவர்களாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். வேறு எதுவும் அவர்களுடைய இருதய வாஞ்சையைக் கவர்ந்திழுப்பதற்கு அவர்கள் இடங்கொடுக்கக்கூடாது என்றும் அவர் விரும்பினார். கர்த்தருக்கு அவர்கள் தங்களை ஒப்புவித்த தன்மையில் ஏதொரு கறையும் பட்டிருக்கக்கூடாது என்றும் அவர் விரும்பினார்.

**சர்ப்பமானது** எவ்வாறு **தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது** என்பதை அப்

போஸ்தலன் நினைவுகூருகிறார். அவளுடைய மனதை அல்லது புத்திகூர்மையைத் தொடும்படி அவன் அதைச் செய்தான். அதுபோலவே கொரிந்துப் பட்டணத்தில் இருந்த கள்ளபோதகர்களும் நடந்துகொண்டார்கள். கொரிந்தியருடைய கற்பு வேறுபடாமலும் குற்றப்படாமலும் காக்கப்பட வேண்டும் என்பதைப் பவுல் தனது இருதயத்தின் விருப்பமாகக் கொண்டிருந்தார்.

இங்கு ஏவாளுக்கும் சர்ப்பத்துக்கும் இடையே நடந்த நிகழ்ச்சியைப் பவுல் கதையென்று சொல்லாமல் உண்மைச் சம்பவமாக வருணிப்பதைக் கவனியுங்கள்.

**11:4** கள்ளபோதகர்கள் கூறுவதைக் கேட்க, கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் ஆயத்தம் உடையோராய் இருந்ததே, அப்போஸ்தலன் சற்று புத்தியீனமாய் நடந்துகொள்ளக் காரணமாயிருந்தது.

உண்மையில் ஒருவன் கொரிந்துப் பட்டணத்துக்கு வந்து **வேறொரு இயேசுவைப்** பிரசங்கித்து, பரிசுத்த ஆவியானவர் அல்லாமல் **வேறொரு ஆவியைத்** தருவதாகக் கூறி, **வேறொரு சுவிசேஷத்தை** அறிவித்தபோது, கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் அவனை விருப்பத்தோடு ஏற்றுக்கொண்டார்கள். இப்படிப்பட்ட கருத்துகளை அவர்கள் மனவிருப்பத்தோடு சகித்துக் கொண்டார்கள். பவுல் அவர்களைப் பார்த்து, "பிறரிடம் நீங்கள் இவ்விதமாக நடந்துகொள்கிறீர்கள், என்னிடம் ஏன் நீங்கள் அவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது?" என்று ஏளனத்தோடு பேசுகிறார்.

**"நன்றாகச் சகித்திருப்பீர்கள்!"** என்று அவர் இறுதியில் கூறியிருப்பதை, வஞ்சப்புகழ்ச்சியாகப் புரிந்துகொள்ள வேண்டும். கள்ளபோதகத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டதை அப்போஸ்தலன் ஆதரிக்கவில்லை. மாறாக அவர்கள் எளிதில் ஏமாறக்கூடியவர்களாகவும், பகுத்தறிவதில் குறைவுடையவர்களாகவும் இருந்தது குறித்து அவர் இடித்துரைக்கிறார்.

**11:5** பவுலை அவர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணம் யாதெனில், அவர் **மகா பிரதான அப்போஸ்தலரிலும் ஒன்றிலும் குறைவுள்ளவர் அல்ல**வென்பதே ஆகும். மகாபிரதான என்னும் சொல் ஏளனமாகச் சொல்லப்பட்டுள்ளது. அது எழுத்தின்படி "மிகச் சிறந்த" என்று பொருள்படும். (தற்கால சொல் வழக்கில் "மிகச்சிறந்த" என்று சொல்லலாம்).

பேதுருவே அப்போஸ்தலர்களில் முதன்மையானவராக இருந்தார் என்றும், அவருக்கு "போப்" என்னும் பதவி கொடுக்கப்பட்டிருந்தது என்றும், அவருடைய வழியில் போப் பதவியில் நியமிக்கப்பட்டவர்கள் அத்தகைய முதன்மையைப் பெற்றுக் கொண்டார்கள் என்றும் சொல்லப்படுகிற கருத்தை, சீர்திருத்தவாதிகள் இந்த வசனத்தைக் கொண்டு எதிர்க்கின்றனர்.

**11:6** பவுல் **பேச்சிலே கல்லாதவராக** இருந்திருக்கக்கூடும், ஆனாலும் அவர் **அறிவில்** குறைவுள்ளவரல்ல. கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிவை கொரிந்தியர் அப்போஸ்தலன் மூலமாகவே பெற்றுக்கொண்டார்கள். ஆகவே அவர் அறிவில் குறைவானவர் அல்லவென்பதைக் அவர்கள் நிச்சயமாக அறிந்திருப்பார்கள். பவுலின் குறைவு ஒருவேளை நாவன்மையைப் பற்றியதாகவே இருந்திருக்கும். அவர் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் பேசியிருப்பார் என்பது வெளிப்படை. அவர்களே இதற்குச் சான்று பகர வேண்டியவராயிருந்தார்கள்.

**11:7** அப்போஸ்தலனாகிய பவுலை மறுத்து நிற்கக்கூடிய மனப்பான்மையைக் கொரிந்தியர் கொண்டிருந்ததன் காரணம், ஒருவேளை அவர்கள் **உயர்த்தப்படும்படி** அவர் தன்னைத்தானே **தாழ்த்தின** வெறுப்பூட்டிய செயலேயொழிய, அவருடைய கரடுமுரடான பேச்சு அல்ல. இந்த வசனத்தின் ஏனைய பகுதி அவர் இங்கே என்ன சொல்லுகிறார் என்பதன் விளக்கமேயாகும். அப்போஸ்தலன் கொரிந்தியரோடு இருந்தபோது அவர்களிடமிருந்து எவ்விதப் பொருளாதார உதவியையும் பெறவில்லை. அவர்கள் உயர்ந்த இடத்தை அடையும்படி அவர் தாழ்மையான இடத்தைத் தெரிந்துகொண்ட செயல், அவர் செய்த பாவம் என்று அவர்கள் கருதினார்கள்போலும்.

**11:8** **"மற்ற சபைகளைக் கொள்ளையிட்டேன்"** என்று அவர் கூறிய சொற்கள் உயர்வு நவிற்சியணியாக அமைந்துள்ளது. உள்ளத்தில் உண்மையான தாக்கத்தை உண்டாக்கும் வண்ணம் மிகைப்படுத்திச் சொல்லப்பட்ட கூற்றாக இது விளங்குகிறது. அவர் உண்மையில் மற்ற சபைகளைக் கொள்ளையடிக்கவில்லை; மாறாக, அவர் கொரிந்துப் பட்டணத்தில் கர்த்தருடைய திருப்பணியைச் செய்துவந்தபோது, அவர்களிடத்தில் எவ்வித வருமானத்தையும் பெறாமல் அவர்களுக்கு ஊழியஞ்செய்யும்படி **மற்ற சபை**

**களிடத்திலிருந்து** பொருளுதவியைப் பெற்றுக் கொண்டதாகவே இங்கு கூறுகிறார்.

**11:9** அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துப் பட்டணத்தில் தங்கியிருந்தபோது உண்மையில் அவருக்குத் தேவை ஏற்பட்டது. அவர் தமது **குறைவைக்** கொரிந்தியருக்குத் தெரியப்படுத்தி அவர்களிடமிருந்து உதவியை நாடினாரா? நிச்சயமாக அவர் அவ்வாறு செய்யவில்லை. **மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர்** அவருக்கு ஏற்பட்டிருந்த குறைவைத் தங்களுடைய பொருளுதவியால் நிறைவாக்கினார்கள்.

கொரிந்தியருக்குப் **பாரமாயிராதபடி** தன்னால் முடிந்த எல்லாவிதமான முறைகளிலும் அப்போஸ்தலன் எச்சரிக்கையாக இருந்தார். மேலும் அவர் தொடர்ந்து அவ்வாறு இருக்க விருப்பமும் கொண்டிருந்தார். அவர் அப்போஸ்தலன் என்னும் நிலையில் கொரிந்துப்பட்டணத்து விசுவாசிகளாலே பராமரிக்கப்படுவதற்கான தனது உரிமையை வலியுறுத்தவில்லை.

**11:10** கொரிந்துப் பட்டணம் அகாயா நாட்டில் அமைந்திருந்தது. அதுவே அவருடைய புகழ்ச்சிக்கு ஆதாரமாயிருந்தது. அதனை ஒருவரும் அவரிடத்திலிருந்து கொள்ளையிட அனுமதிக்கப் போவதில்லை என்று பவுல் தீர்மானித்திருந்தார். அவர் அவர்களுடைய பராமரிப்பைத் தவிர்க்கிறார் என்று காரணங்காட்டி, அவருக்கு எதிராகப் பேசுவோரையே பவுல் இங்கு குறிப்பிடுகிறார் என்பதில் ஐயமில்லை. அவர் உண்மையான அப்போஸ்தலன் இல்லை, ஆகவேதான் கிறிஸ்தவர்களால் பராமரிக்கப்படுவதை அவர் வலியுறுத்தவில்லை என்று அவர்கள் கூறினார்கள் (1 கொரி. 9). அவரைக் குறைகூறியவர்கள் இவ்வாறு குற்றஞ்சுமத்திய பின்னரும், கொரிந்தியரிடம் பணஉதவி பெற்றுக்கொள்ளாமலேயே அவர்களுக்கிடையே ஊழியம் செய்ததற்காக அவர் தொடர்ந்து தன்னையே புகழ்ந்தார்.

**11:11** அவர் இவ்வாறு தன்னையே புகழ்ந்து பேசுவதன் காரணம் **என்ன**? அவர் கொரிந்தியரைச் **சிநேகியாதபடியினாலேயா**? அவ்வாறு இல்லை என்பதை **தேவன் அறிவார்**! அவர்களுக்காக அவருடைய இருதயத்தில் ஆழ்ந்த பாசம் நிறைந்திருந்தது. அப்போஸ்தலன் என்ன செய்தாலும் அவர் குறைகூறப்பட்டார். அவர் ஒரு வேளை அவர்களிடமிருந்து பண உதவி பெற்றிருந்தால், அவர் அவ்வாறு பணம் பெற்றுக்கொண்டதன் நிமித்தமே அவர் பிரசங்கம் செய்கிறார் என்று அவர்கள் குற்றம் சுமத்தியிருப்பார்கள். அவர் அவர்களிடத்தில் பண உதவி பெற்றுக்கொள்ளாததால், அவர் அவர்களிடத்தில் அன்புகூரவில்லை என்று அந்த எதிரிகள் கூறினார்கள். ஆனால் அந்த விசயத்தில் எது உண்மை என்பதை **தேவன் அறிவார்**. அது போதும் என்று சொல்லி பவுல் அத்துடன் அதனை விட்டுவிட்டார்.

**11:12** யூத சம்பிரதாயங்களைக் கைக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியவர்கள் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளிடம் பணத்தை எதிர்பார்த்தார்கள், பணம் வேண்டுமென்று கேட்டு, பெற்றுக்கொண்டார்கள். பெரும்பாலான கள்ள போதகத்தைத் தழுவிய கூட்டத்தாரைப் போன்று, இவர்களும் பொருளாதார உதவி இல்லையென்றால் ஊழியம் செய்திருக்க மாட்டார்கள். பணம் பெறக்கூடாது என்னும் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று பவுல் தீர்மானித்திருந்தார். கள்ளபோதகர் தற்புகழ்ச்சி செய்வதில் இவரோடு போட்டியிட வேண்டுமென்றால், அவர்கள் இந்தக் கொள்கையைப் பின்பற்றக்கடவர்கள். ஆனால் பண உதவியின்றி ஒருக்காலும் அவர்களால் தற்புகழ்ச்சி செய்ய இயலாது என்பதை அவர் அறிந்திருந்தார். இவ்வாறாக, அவர் தன்னையே புகழ்ந்து பேசுவதற்கான ஆதாரத்தை அவர்களிடமிருந்தே பெற்றுக்கொண்டார்.

**11:13** இந்த மனிதர்களைக் குறித்து பவுல் போட்டிருந்த எடை இந்த மடலில் இதுவரை மறைவாயிருந்தது, இறுதியில் அது வெடித்துச் சிதறுகிறது. அவரால் இனிமேல் அடக்கி வைக்க முடியாது! அவர்கள் யாரென்று அவர் சொல்லியே ஆக வேண்டும். **அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள்**, அதாவது அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் அப்போஸ்தலராக ஒருக்காலும் நியமிக்கப்படவில்லை. அவர்கள் தாங்களாகவே அந்தப் பதவியை ஏற்படுத்திக் கொண்டார்கள், இல்லையேல் மற்ற மனிதர்களால் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் **கபடமுள்ள வேலையாட்கள்**. அவர்கள் ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்குச் சென்று தங்களுடைய கள்ள போதகங்களைப் பின்பற்றும்படி மக்களைத் தூண்டிவிட்டு ஆதாயம் தேடினார்கள் என்பதை இந்தச் சொற்றொடர் விவரிக்கிறது. **கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்கள்**. அவர்கள் கிறிஸ்துவின் பிரதிநிதி என்று காட்டிக்கொண்டார்கள். **அப்படிப்பட்ட** மனிதர்களுக்கு இணையாக நடக்க பவுலுக்குச் சற்றேனும் விருப்பமில்லை.

இவ்வாறு யூத சம்பிரதாயங்களைக் கைக் கொள்ள வேண்டுமென்று போதித்தவர்களைப் பற்றி அப்போஸ்தலன் கூறியவை, உண்மை யாகவே இன்றைய நாளில் உள்ள கள்ளப் போத கர்களுக்குப் பொருத்தமாய் இருக்கின்றன. "பாவ மானதை உள்ளபடியே நாம் காண்போமானால், நம்மைப் பாவம் செய்யும்படி அது தூண்டுவ தில்லை; அதனுடைய ஆற்றல் வெளிப்பட அது மாறுவேடந் தரிக்கவேண்டியது அவசியம். சில கருத்துகள் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றின் மூலம், அது நல்லதென்று தன்னை வெளிப்படுத்தி மனிதனைக் கவர்ந்திழுக்கிறது" (தெரிந்தெடுக் கப்பட்டது).

**11:14** அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எதிரி களாகக் கொரிந்துப் பட்டணத்தில் இருந்தவர் கள், தங்களைக் கிறிஸ்துவின் அப்போஸ்தலரா கக் காட்டிக்கொண்டார்கள் என்று இப்பொழுது தான் அவர் கூறினார். ஆனால் அவர்களுடைய எஜமானுடைய தந்திரங்களைக் குறித்து அவர் சிந்தித்துப் பார்த்தபோது அவர் ஆச்சரியப்பட விலை: **அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளி யின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே.**

பொதுவாக, இன்றைய நாட்களில் சாத் தானைச் சித்திரமாய் வரைந்து காட்டுபவர்கள், ஏதோ அவனுக்குக் கொம்பு முளைத்துள்ளது போலவும், அருவருப்பான தோற்றமுடையவனாக வும், வால் ஒன்றையும் வரைந்து காட்டுகிறார்கள். ஆனால், உண்மையில் அவன் மனிதனுக்குத் தன்னை வெளிப்படுத்துகையில் அவ்வாறு தோற்றமளிப்பது இல்லை.

வேறு சிலர், சாத்தானை சாக்கடையில் புரண்டு அழுக்கடைந்த தெருவில் வசிக்கிற ஒரு குடிகாரனைப் போல காட்டுகிறார்கள். ஆனால் இந்தச் சித்திரங்கள் யாவும் உண்மையில் சாத் தான் எவ்வாறு இருக்கிறானோ அதை மாற்றிக் காட்டுபவையாக இருக்கின்றன.

மேலும் சாத்தானோ **ஒளியின் தூதனைப் போல** மாறுவேடம்அணிந்திருக்கிறான் என்று இந்த வசனம் கூறுகிறது. அவனை நாம் ஓர் எடுத் துக்காட்டின் மூலமாகச் சொல்ல வேண்டுமா னால், ஒரு சமயத் தலைவனைப் போன்று நீண்ட அங்கிகளைத் தரித்தவனாக, அலங்கார ஆலயத் தின் பிரசங்க மேடையில் நின்றுகொண்டு, சுவிசேஷத்தை அறிவிக்கும் போதகனைப் போல காட்சியளிப்பான் என்றே சொல்ல வேண்டும். அவன் சமயத்தைச் சார்ந்த சொற்களை, அதா வது, தேவன், இயேசு, வேதம் போன்ற சொற் களையே பேசுவான். ஆனால் அவன் மனிதர்களு டைய நற்செயல்களால் அல்லது மனிதனுடைய தகுதியினால் இரட்சிப்பு உண்டாகிறது என்று கூறி, தன்னைக் கேட்கிறவர்களைத் தவறான வழியிலே நடத்துவான். கிறிஸ்துவின் குருதி யினாலே மீட்பு உண்டாகிறது என்று அவன் பிரசங்கம் செய்வதில்லை.

**11:15** சாத்தான் ஒரு வேதபுத்தகத்தைத் தூக் கிக்கொண்டு செல்லும்போது சாத்தானுக்குரிய தன்மைகளை வெளிப்படுத்துகிறதுபோல வேறு எந்தச் சமயத்திலும் வெளிப்படுத்துவதில்லை என்று ஒருமுறை J. N. டார்பி கூறினார். இந்தக் கருத்தையே நாம் இந்த வசனத்தில் காண் கிறோம். சாத்தானே தன்னை வேறு வேடத்தில் காட்டுகிறவனாக இருக்கும்போது, அவனுடைய பிரதிநிதிகள் அதேவிதமாகச் செயல்படுவதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. அவர்கள் எவ் வாறு தோற்றமளிக்கிறார்கள்? கள்ளபோதகர் களைப் போலவா? நாத்திகர்களைப் போலவா? சமய நம்பிக்கை அற்றவர்களாகத் தோற்றமளிக் கின்றனரா? இல்லை என்பதே இந்தக் கேள்வி களுக்கெல்லாம் பதில் ஆகும். அவர்கள் **நீதி யின் ஊழியக்காரராகத்** தோற்றமளிக்கிறார் கள். சமயப்பணி ஆற்றுகிறவர்கள் போலப் பேசு கிறார்கள். மக்களைச் சத்தியத்திலும் நீதியிலும் வழிநடத்துகிறவர்கள்போலப் பேசுகிறார்கள். ஆனால் அவர்கள் யாவரும் பொல்லாங்கனின் பிரதிநிதிகள் ஆவர்.

**அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக் குத் தக்கதாயிருக்கும்.** அவர்கள்அழிக்கிறார் கள் - அவர்கள் அழிக்கப்படுவார்கள். அவர்களு டைய செயல்கள் மனிதர்களை அவர்களுடைய அழிவுக்கு நேராக வழிநடத்தும். இறுதியிலே அவர்களே நித்திய அழிவை சென்றடைவார்கள்.

### உ. கிறிஸ்துவுக்காகப் பவுல் அடைந்த பாடுகள் அவருடைய அப்போஸ்தல நியமனத்தை உறுதிப்படுத்தின (11:16-33)

**11:16** இவை யாவற்றையும் பேசுகிறதன் காரணமாக, பவுல் தன்னையே புகழ்ந்து பேசுகிற **புத்தியீனன்** என்று ஒருவரும் நினைக்கமாட்டார் கள் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார். ஆனால் அவர்கள் அவ்வாறு நினைத்தாலும், அவர் **சற்றே மேன்மைபாராட்டும்படி** அவரைப் **புத்தியீன னைப்போல ஏற்றுக்கொள்ளும்படி** வேண்டு கிறார்.

இந்த வசனத்தின் பிற்பகுதியில் **"நானும்"** என்னும் சொல்லில் காணப்படும் **உம்** என்னும் விகுதியைக் கவனியுங்கள்: **நானும் சற்றே மேன்மை பாராட்டும்படி**. அந்த விகுதி உண்மையான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. கள்ளபோதகர் மிக அதிக அளவில் தற்புகழ்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள். "நீங்கள் ஒருவேளை என்னை ஒரு புத்தியீனனைப் போலக் காண்பீர்கள். ஆனால் நான் புத்தியீனன் அல்ல. அப்படியிருந்தாலும் இந்த மனிதர்களைப்போல நான் சற்று தற்புகழ்ச்சியில் ஈடுபடும்படி என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்னும் பொருளில் பவுல் பேசினார்.

**11:17** இந்த வசனத்திற்கு இரண்டு விளக்கங்களைக் கூறலாம். இங்கு பவுல் கூறியிருப்பது, உண்மையாகவே தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டதாயினும், **கர்த்தருடைய** கட்டளையாக அவருக்குக் கொடுக்கப்பட்டதன்று என்று சிலர் கருதுகிறார்கள்.

இங்கு பவுல் தற்புகழ்ச்சியாகப் பேசுகிற செயல் கர்த்தருக்கு ஏற்ற செயல் அல்ல, அதாவது கர்த்தர் காண்பித்த மாதிரியின்படி அவர் செய்யவில்லை. கர்த்தர் ஒருக்காலும் தம்மையே புகழ்ந்து பேசவில்லை. இது இரண்டாவது விளக்கமாகும்.

திருவாளர் பிலிப்பு முதல் விளக்கத்தின் அடிப்படையில் தனது மொழிபெயர்ப்பை எழுதியிருக்கிறார்: "கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டபடி நான் இப்பொழுது பேசவில்லை. மாறாக தற்புகழ்ச்சியைத் தன் தொழிலாகக் கொண்ட புத்தியீனனைப் போல நான் பேசுகிறேன்."

ஆனால் நாம் இரண்டாவது விளக்கத்தையே ஏற்றுக்கொள்கிறோம். அதாவது, **மேன்மை பாராட்டும் செயல்** கர்த்தருக்கேற்ற செயலன்று. தன்னைத் தானே புகழுகிற செயலினாலே புத்தியீனமாகத் தோன்றுகிறபடி பவுல் நடந்துகொள்கிறார். திருவாளர் ரைரி விளக்கமளிக்கிறார்: "சில குறிப்பிடத்தக்க உண்மைகளை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரும்படி தனது சொந்த உள்ளுணர்வுக்கு மாறாக, பவுல் மேன்மை பாராட்டுகிற செயலில் ஈடுபட வேண்டியதாயிற்று"[41]

**11:18** தூய்மையற்ற மனித இயல்புக்கு ஏற்றபடி தற்புகழ்ச்சியில் மிக அதிகமான அளவில் ஈடுபட்ட மனிதர்களுடைய பேச்சைக் கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகள் சமீப காலமாகக் கேட்டிருந்தார்கள். அந்தக் கள்ளப்போதகரின் தற்புகழ்ச்சிக்குப் போதுமான காரணங்கள் இருந்தன என்று கொரிந்தியர் எண்ணினார்கள் எனில், பவுல் பாராட்டிய தற்புகழ்ச்சியானது நல்ல காரணங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கக்கடவர்கள்.

**11:19** பவுல் மீண்டும் தனது தாக்குதலைத் தொடங்கிவிட்டார். தன்னிடத்தில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் அவர்களைக் கேட்டுக்கொண்டாரோ, அதுபோல அவர்கள் நாள்தோறும் பிறரிடம் நடந்து கொண்டார்கள். அவர்கள் புத்தியீனமான செயலினால் ஏமாற்றப்படக் கூடாதவர்கள் என்றும், அந்த அளவிற்குப் புத்திமான்கள் என்றும் நினைத்தார்கள். ஆனால் உண்மையில் அவ்வாறுதான் நடந்தது என்பதை அவர் தொடர்ந்து விளக்குகிறார்.

**11:20** அவர்கள் விவரிக்கப்பட்ட மனிதனைச் **சகிக்க** விரும்பினார்கள். இங்கே விவரிக்கப்பட்ட மனிதன் யார்? யூத சம்பிரதாயங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று போதித்த மனிதனையே இங்கு காண்கிறோம் என்பதில் ஐயமில்லை. அவன் கொரிந்துப் பட்டணத்தாரை பட்சித்த கள்ள அப்போஸ்தலன். முதலாவதாக, அவன் அவர்களைச் **சிறையாக்கினான்**. இது ஐயத்திற்கு இடமற்றபடி நியாயப்பிரமாணத்திற்கு அவர்களை அடிமைப்படுத்தும் எண்ணமேயாகும் (அப். 15:10). கிறிஸ்துவின் மீதுவைக்கும் விசுவாசம் இரட்சிப்படைய பேதுமானதன்று என்றும், மனிதர்கள் அதற்காக மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும் என்றும் அவன் கற்பித்தான்.

இரண்டாவதாக, அவன் விசுவாசிகளைப் பட்சித்தான். அதாவது அவன் விசுவாசிகள் மேல் பெரும் பொருளாதாரச் சுமையைச் சுமத்தினான். அவன் அன்பின் அடிப்படையில் அவர்களுக்கு ஊழியம் செய்யவில்லை. மாறாக அவன் செய்த ஊழியத்திற்குப் பணத்தைப் பிரதிபலனாக எதிர்பார்த்தான்.

**ஒருவன் உங்களைக் கைவசப்படுத்தினால்** என்னும் சொற்றொடர் மீன்பிடித்தல் அல்லது வேட்டையாடுதல் என்னும் தொழிலை உவமையாகக் கொண்டு சொல்லப்பட்டிருக்கிறது. கள்ளபோதகன் இந்த மக்களைத் தன்னுடைய விருப்பத்தின்படி நடத்தி தனது இரையாக ஆக்கிக் கொள்ள முயன்றான்.

பெருமையினாலும் தற்புகழ்ச்சியினாலும் தங்களையே உயர்த்திப் பேசக்கூடிய குணத்தை இந்த மனிதர்கள் கொண்டிருந்தார்கள். மற்றவர்

களைக் குறைகூறுவதன் மூலமாக இவர்கள் எப் பொழுதும் தங்களை மனிதர்களுடைய பார்வை யில் பெரிய மனிதர்களாகக் காண்பிக்க முயற்சி செய்தார்கள்.

இறுதியாக, அவர்கள் விசுவாசிகளின் **முகத் தில் அறைந்து** பெரிதான அளவில் இகழ்ச்சியை ஏற்படுத்தினார்கள். நாம் இதனை எழுத்தின்படி யான செயல் என்று புரிந்துகொள்ளத் தயக்கம் காட்டக்கூடாது. ஏனெனில் அகந்தை நிறைந்த சபைத்தலைவர்கள் காலங்காலமாக உண்மை யாகவே தங்கள் சபை உறுப்பினர்களை முகத் தில் அறைந்து தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தினார்கள்.

இத்தகைய கள்ள போதகர்களின் இழிவான நடத்தைகளைக் கொரிந்தியர் சகிக்க விருப்பங் கொண்டிருந்ததைக் கண்ட அப்போஸ்தலன் திகைத்து நிற்கிறார். ஆயினும், அவர் தனது அன் பினாலே கூறிய எச்சரிப்புகளையும் அறிவுரை களையும் அவர்கள் தாங்கிக்கொள்ள விருப்ப மற்றிருந்தார்கள்.

இதனைத் திருவாளர் டார்பி கூறுகிறார்: "தவ றானதைச் சகிக்க மக்கள் விரும்புவது வியப்பை ஏற்படுத்துகிறது - சத்தியத்தைச் சகிப்பதிலும் அவர்கள் மிக அதிகமாகத் தவறானதையே சகிக் கிறார்கள்." [42]

**11:21** "நான் உங்களிடத்தில் இருந்தபோது, இந்த மனிதர்களைப் போல என்னுடைய அதி காரத்தை உறுதிப்படுத்த முடியாதபடி நான் பலவீ னனாகவும் பயந்தவனாகவும் இருந்தேன்" என்று பவுல் கூறுவதாகச் சிலர் பொருள் கூறுகிறார்கள்.

"இதைச் சொல்லுவதன் மூலம், என்னையே நான் இகழ்கிறேன். ஏனெனில் அதுவே வலிமை என்றால் நான் பலவீனனாகவே இருந்து கொள் கிறேன்" என்று வேறு சிலர் இதற்குப் பொருள் கூறுகிறார்கள். திருவாளர் பிலிப்பு மொழிபெயர்த் துக் கூறியிருக்கிற வாசகம் இதற்குப் பொருத்த முடையதாக இருக்கிறது: "நான் ஒருக்காலும் அதைப்போன்ற கடுமையான செயல்களை உங்களிடத்தில் நிறைவேற்ற துணிவுகொண்ட தில்லை என்றுரைக்கப் பெரும்பாலும் வெட்கப்படு கிறேன்."

கள்ள போதகர்கள் நடந்துகொண்ட முறையே உண்மையான வலிமை என்றால், அவருடைய புத்தியீனத்தில் அவர் கூறுவதாவது, அவர் அப் படிப்பட்ட வலிமையை ஒருக்காலும் காட்டிய தில்லை, மாறாக துணிவற்ற தன்மையையே அவர் காட்டியிருக்கிறார். எனினும் அவர் உடனடி யாகத் தொடர்ந்து கூறுவதாவது, இந்த மனிதர் கள் எந்தெந்த முறைகளில் **துணிவை** வெளிப் படுத்த காரணம் கொண்டிருக்கிறார்களோ, நிச்ச யமாக அவர் அவர்களைப் போலவே துணிவைக் காட்ட உரிமை பெற்றிருக்கிறார் என்பதே. மோ.ப் என்பார் இதனை அழகுற மொழிகிறார்: "அவர்கள் தங்களுடைய விருப்பப்படி தங்க ளையே புகழ்ந்துகொள்ளட்டும். நானும் அவர் களுக்குச் சமமானவனே (இது ஒரு மதியீனனு டைய செயல் என்பதை நினைவிற்கொள்ளுங் கள்)." இந்த அறிமுகத்தோடு அப்போஸ்தல னாகிய பவுல் இம்மடலின் மிக உன்னதமான பகுதிகளில் ஒன்றை வெளியிடுகிறார். இங்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மெய்யான ஊழியக்காரர் என்னும் நிலையில் தனது உரிமை களை நிலைநாட்டுகிறார்.

பவுல் மெய்யான அப்போஸ்தலனா என்னும் கேள்வி கொரிந்து சபையில் எழுப்பப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் தெய்வீக அழைப்பைப் பெற்றதற்கான நிருபணமாக அவர் எந்தச் சான்றிதழைக் காட்டுவார்? எடுத்துக்காட் டாக மற்ற பன்னிரண்டு அப்போஸ்தலருக்கு அவ ரும் சமமானவர் என்பதைக் கேட்போர் மன நிறைவு அடையும்படி அவர் எவ்வாறு நிரூபிப்பார்?

அவர் தன்னுடைய விடையைக் கூற ஆயத்த மாயிருக்கிறார். ஆனாலும் நாம் எதிர்பார்த்த தற்கு இது முற்றிலும் சரியாக இல்லை. அவர் ஒரு சமயக்கல்லூரியில் இருந்து பட்டப்படிப்புக்கான சான்றிதழைக் கொண்டுவந்து காட்டவில்லை. இந்த வேலைக்கு இவரை நாங்கள் நியமித் திருக்கிறோம் என்று எழுதி, எருசலேம் சகோதரர் கையெழுத்திட்ட அதிகார பூர்வமான ஒரு மடலை அவர் கொண்டுவந்து காட்டவில்லை. அவர் தனது சொந்தத் திறமைகளையோ சாதனை களையோ பட்டியலிட்டுக் காட்டவில்லை. மாறாக, அவர் தனது நற்செய்தித் திருப்பணியின் நிமித்தம் அடைந்த பாடுகளை வரிசைப்படுத்தி ஒன்றன்பின் ஒன்றாக ஓடும் படக்காட்சியாக நமக்கு முன்பாகக் கொண்டுவருகிறார். 2 கொரிந்தியர் நூலில் காணப் படும் அவலச்சுவைக் காட்சிகளைக் காணத் தவறாதீர்கள். கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்பட்டவராகவும், கிறிஸ்துவின் நற்செய்தி அறி விக்கப்படாததன் காரணமாக மக்கள் அழிந்து போகக் கூடாது என்னும் வேட்கையுடன் சொல்லி முடியாத உபத்திரவங்களை அனுபவிக்க விருப் பம் கொண்டவராகவும், இடைவிடாமல் திருப்

பணியை நிறைவேற்றும் பொருட்டு தரைமார்க்க மாகவும் கடல்வழியாகவும் தீவிரமாய் பயணம் மேற்கொண்ட அஞ்சாநெஞ்சம் கொண்ட பவுலைச் சித்திரித்துப் பாருங்கள். நாம் உள்ளத்தில் ஆழ மாக அசைக்கப்படாமலும் வெட்கப்படாமலும் இந்த வசனங்களை வாசிப்பது அரிது.

**11:22** கள்ள போதகர்கள் தங்களுடைய யூத குலமரபைக் குறித்துப் பெருமையாகப் பேசித் திரிந்தார்கள். அவர்கள் தங்களைக் கலப்படமற்ற **எபிரெயர்** என்றும் **இஸ்ரவேலின்** மரபில் தோன்றியவர் என்றும் **ஆபிரகாமின் சந்ததியார்** என்றும் கூறி பெருமைப்பட்டுக் கொண்டார்கள். இவ்விதமாக அவர்கள் தோன்றிய குடிவழி மரபு அவர்களுக்கு தேவனுடைய பார்வையில் தனிச் சிறப்பைக் கொடுத்திருக்கிறது என்னும் தவறான நம்பிக்கையில் பேசிவந்தார்கள். பண்டைக்கால இறை மக்களாகிய இஸ்ரவேலர், மேசியாவை ஏற்க மறுத்ததன் காரணமாக தேவனால் தள்ளி வைக்கப்பட்டனர் என்பதை அவர்கள் உணர வில்லை. தேவனுக்கு முன்பாக இப்பொழுது யூதனுக்கும் புறவினத்தானுக்கும் எவ்வித வேறு பாடும் இல்லை என்பதை அவர்கள் அறியாதிருந் தார்கள். எல்லோரும் பாவிகளே, எல்லோரும் கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே இரட்சிப்படைய முடியும்.

இவ்விதமாக அவர்கள் மேன்மைபாராட்டு வதில் எவ்விதப் பயனுமில்லை. அவர்களுடைய குடிவழிமரபு அவர்களுக்குப் பவுலைக் காட்டிலும் எந்த விதத்திலும் மேன்மையைத் தருவதில்லை; ஏனெனில் பவுலும் எபிரெயரே, இஸ்ரவேலரே மற்றும் **ஆபிரகாமின் சந்ததியே.** ஆனால் இவை யாவும் அவர் அப்போஸ்தலன் என்று மெய்ப் பிப்பது இல்லை. ஆகவே அவர் தனது வாதத்தின் முக்கியமான பகுதிக்குச் செல்ல விரைகிறார்: ஒரு விசயத்தில் அவரைக் காட்டிலும் அவர்கள் மேம்பட்டவர்கள் அல்ல - கடுந்துன்பம் மற்றும் பாடுகள்.

**11:23** அவர்கள் **கிறிஸ்துவின் ஊழியக்கார ராக** இருப்பதைத் தங்களுடைய வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர்கள். அவரோ "பற்றி லும், உழைப்பிலும், பாடுகளிலும்" அடிமையாக இருந்தார். பாடுகள் அனுபவித்த இரட்சகருடைய சீடராகத் தான் இருந்ததை அப்போஸ்தலனாகிய பவுலால் ஒருக்காலும் மறக்கமுடியவில்லை. பணிவிடைசெய்கிறவன் தன்னுடைய எஜமானி லும் மேலானவனாக இருக்கமுடியாது என்பதை அவர் அறிந்திருந்தார். மேலும் ஓர் அப்போஸ் தலன் தன்னுடைய எஜமானர் இந்த உலகத்தில் நடத்தப்பட்டதிலும் மேலான நடத்துதலை எதிர் பார்க்க முடியாது. எந்த அளவிற்குக் கூடுதலான உண்மையோடு அவர் கிறிஸ்துவுக்காகப் பணி விடை செய்கிறாரோ அந்த அளவிற்கு மனிதர் களால் பாடுகள் பெருகும் என்பதை அவர் அறிந் திருந்தார். அந்தப் பாடுகளே அவருக்கு, கிறிஸ் தவ ஊழியர்களுக்கான அடையாளச் சின்னமாக காட்சியளித்தது. இவ்வாறு அவர் மேன்மை பாராட்டுவது **புத்தியீனமான** செயலாக அவருக் குத் தோன்றிய போதிலும், உண்மையைப் பேசுவது அவசியமாய்க் காணப்பட்டது. மேலும் இந்தக் கள்ள போதகர்கள் பாடு அனுபவித்ததன் மூலமாகப் புகழ் பெறவில்லை. அவர்கள் இலகு வான பாதையைத் தெரிந்தெடுத்திருந்தார்கள். அவர்கள் நிந்தையையும் உபத்திரவங்களையும் கனவீனப்படுதலையும் தவிர்த்தார்கள். இதன் காரணமாக, கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய பவுலைக் குறைகூறுவதற்கு அவர்கள் அருகதை அற்றவர்களாக இருந்தார்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

இப்பொழுது பவுல் தனது அப்போஸ்தல நிய மனத்தை உண்மையானது என்று உறுதிசெய்யும் படி அனுபவித்த பாடுகளை வரிசையாகப் பட்டி யலிட்டுக் காண்பிப்பதை நாம் காணவிழைவோம்.

**நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்.** அவர் திருப்பணி ஊழியத்தின் பொருட்டு மேற்கொண்ட பயணத்தின் பரப்பை நினைத்துப் பார்க்கிறார். மத்தியதரைக் கடலைச் சூழ்ந்திருந்த நாடுகள் எங்கிலும் பயணம் செய்து கிறிஸ்துவை யாவரும் அறியும்படி அறிவித்திருந்தார்.

**நான் அதிகமாய் அடிபட்டவன்.** யூதர் களிலும் புறவினத்தாரிலும் கிறிஸ்துவுக்கு எதிரி களாயிருந்த மனிதர்கள் அடித்த அடியை அவர் எண்ணிப்பார்க்கிறார். அதனுடைய விவரமே இங்கு சொல்லப்பட்டுள்ளது.

**அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன்.** இந்த மடல் எழுதிய நாள் வரை பவுலின் வாழ்க் கையில் காவலில் வைக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் ஒரே ஒரு நிகழ்ச்சிதான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் 16:23 -இல் காண்கிறோம். அங்கு பவுலும் சீலாவும் பிலிப்பு நகரத்தில் சிறையில் அடைக்கப் பட்ட விவரம் சொல்லப்பட்டுள்ளது. பலமுறை பவுல் சிறையில் அடைக்கப்பட்டவர் என்றும் இருட் டறை அவருக்குப் புதியது அல்ல என்பதும் இந்தப் பகுதியிலிருந்து தெரியவருகிறது.

**அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.** இதனை எழுதிய வேளையில் அப்போஸ்தலன் லீஸ்திராவில் மரணத்திலிருந்து மயிரிழையில் தப்பிய நிகழ்ச்சியை எண்ணிப் பார்த்திருப்பார் என்பதில் சற்றேனும் ஐயமில்லை (அப். 14:19). ஆனாலும் அவர் அனுபவித்த உபத்திரவங்களின் காரணமாக உயிர் போய்விடுமோ என்று கருதத்தக்கபடி நடந்த இதற்கொத்த வேறு நிகழ்ச்சிகளையும் அவர் திரும்பிப் பார்த்திருப்பார்.

**11:24** ஒரு சமயத்தில் நாற்பதுக்கும் கூடுதலான அடிகளை அடிக்கக்கூடாது என்று மோசே யூதர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான் (உபா. 25:3). இந்தக் கட்டளையை மீறாதபடி தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்துடன், யூதர்கள் பொதுவாக முப்பத்தொன்பது அடிகளையே கொடுப்பார்கள். ஆனாலும் இவ்விதத் தண்டனையானது, கடுமையான குற்றம் இழைத்தவருக்கே கொடுக்கப்படும். இங்கு அப்போஸ்தலனாகிய பவுலுக்கு மாம்சத்தின்படி அவருடைய சொந்த இனத்தார் இந்தக் கடுமையான தண்டனையை வெவ்வேறு தருணங்களில் **ஐந்து தரம்** வழங்கினார்கள்.

**11:25 மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன்.** புதிய ஏற்பாட்டில் இது போன்ற நிகழ்ச்சி நடந்த ஒரே இடம் பிலிப்பு பட்டணமாகும் (அப். 16:22). ஆனால் பவுல் இத்தகைய வேதனை மிகுந்ததும் இழிவானதுமான நிகழ்ச்சிகளை இன்னும் இரண்டு முறை அனுபவித்திருக்கிறார்.

**ஒருதரம் கல்லெறியுண்டேன்.** லீஸ்திராவில் நடந்த நிகழ்ச்சியையே இது குறிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே அதனை நாம் குறிப்பிட்டுள்ளோம் (அப். 14:19). அப்பொழுது கல்லெறியுண்ட பவுல் இறந்துபோனவர்போலக் காணப்பட்டார். அவரது உடலை நகரத்திற்கு வெளியே இழுத்துக்கொண்டு வந்துபோட்டார்கள்.

**மூன்று தரம் கப்பற்சேதத்தில் இருந்தேன்.** பவுல் அனுபவித்த சோதனைகள் யாவும் மனிதர்களால் ஏற்பட்டவையல்ல. சில வேளைகளில் அவர் இயற்கையின் சீற்றத்துக்கும் ஆளானார். இங்கு சொல்லப்பட்டுள்ள கப்பற்சேத நிகழ்ச்சி எதுவும் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. (அப்போஸ்தலர் 27 -இல் சொல்லப்பட்டுள்ள கப்பற்சேதம் பவுல் ரோமாபுரிக்குச் சென்றபோது நிகழ்ந்தது. அது அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் நடந்ததாகும்.)

**கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.** மீண்டுமாக, இந்த நிகழ்ச்சியைக் குறித்த அனுபவத்தை அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் நாம் காண்கிறதில்லை. இது நிலத்தின் அடியில் இருக்கக்கூடிய இருட்டறையைக் குறிக்கிறதா அல்லது கடலைக் குறிக்கிறதா என்று தெரியவில்லை (தமிழில் கடல் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது). கடல் என்றால் ஒரு மிதவையைப் பிடித்துக் கொண்டிருந்தாரா, திறந்த படகிலே அமர்ந்திருந்தாரா? ஒருவேளை நேரடியாக ஒரு நாள் முழுவதும் நீந்தி, அற்புதமான முறையிலே கர்த்தரால் காப்பாற்றப்பட்டிருக்கக்கூடும்.

**11:26 அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்.** பெரும்பாலான வேத நூல்களின் கடைசிப் பக்கங்களில் "அப்போஸ்தலனாகிய பவுலின் திருப்பணிப் பயணங்கள்" என்னும் தலைப்புடன் சில வரைபடங்களைக் காணமுடியும். அவர் சென்ற இடங்களை வரைபடங்களில் காணப்படும் கோடுகளின் மூலமாகக் காண்பீர்கள் எனில், போக்குவரத்துவசதியற்ற அந்த நாட்களில் அவர் அடைந்த வருத்தத்தை ஓரளவு உங்களால் புரிந்துகொள்ள முடியும்!

தொடர்ந்து, தான் சந்தித்த வெவ்வேறான எட்டு வகை அபாயங்களைப் பவுல் பட்டியலிட்டுக் கூறுகிறதைக் காணமுடியும். **ஆறுகளால் வந்த மோசங்கள்** கரைபுரண்டு ஓடுகின்ற வெள்ளப் பெருக்கைக் குறிப்பிடுகிறது. **கள்ளரால் வந்த மோசங்கள்**, அவர் பயணம் சென்ற பாதைகள் பெரும்பாலும் கள்ளர்களுடைய தாக்குதல்களுக்கு உட்பட்டிருந்தன என்பதைக் காட்டுகிறது. அவருடைய **சொந்த ஜனங்களாகிய** யூதர்கள் மற்றும் **அந்நிய ஜனங்களாகிய** புறவினத்தார் ஆகியோருக்கு அவர் நற்செய்தியை அறிவித்தபோது அவர்களால் அவருக்கு **மோசங்கள்** ஏற்பட்டன. லீஸ்திரா, பிலிப்பு, கொரிந்து, எபேசு போன்ற **பட்டணங்களில்** அவருக்கு **மோசங்கள்** ஏற்பட்டன. மேலும் அவர் **வனாந்தரத்தில் மோசங்களைச்** சந்திக்க நேர்ந்தது. ஆசியா மைனர், ஐரோப்பா ஆகிய பகுதிகளில் மக்கள் தொகை மிகக்குறைவாக இருந்தது. அந்த இடங்களையே பவுல் இங்கு குறிப்பிடுகிறார். **சமுத்திரத்தில் உண்டான மோசங்கள்** என்பது ஒருவேளை புயல், கடலின் அடியில் மறைந்திருந்த பாறைகள் அல்லது கடற்கொள்ளைக் கூட்டம் போன்றவற்றைக் குறிக்கக்கூடும். கடைசியாக, **கள்ளச் சகோதரரால் உண்டான மோசங்கள்**. நியாயப்பிரமாணத்தை வலியுறுத்திய

வர்கள் தங்களைக் கிறிஸ்தவ போதகர்களாகக் காட்டிக்கொண்டார்கள். அவர்களால் வந்த மோசங்களைப் பவுல் இங்கு குறிப்பிடுகிறார்.

**11:27 பிரயாசம்**, பவுல் ஆற்றிய இடைவிடாத ஊழியத்தைக் குறிக்கிறது. **வருத்தம்** என்னும் சொல் அவர் ஆற்றிய ஊழியத்தினால் ஏற்பட்ட உடல்வருத்தம், சோர்வு ஆகியவற்றைக் குறிக் கிறது.

**அநேகமுறை கண்விழிப்புகள்**, அவர் மேற்கொண்ட பயணங்களில் வெளியிடங்களில் அவ்வப்போது தூங்க நேரிட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், எல்லாத் திசைகளி லிருந்தும் ஆபத்து எப்பொழுது வேண்டுமானா லும் வரலாம் என்ற நிலையில் அவர் பலமுறை தூங்காமல் கண்விழிக்க நேரிட்டிருக்கும்.

**பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உப வாசங்களிலும்.** கர்த்தருக்கு ஊழியம் செய்யச் சென்ற இடங்களில் பலமுறை பசியோடும் தாகத் தோடும் இருக்கக்கூடிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக் கும். **உபவாசம்** என்பது அவராக மனமுவந்து செய்த உபவாசத்தைக் குறிக்கக் கூடும். ஆனால் பெரும்பாலும் உணவுப் பற்றாக்குறையினால் அவர் உபவாசம் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றே தோன்றுகிறது.

**குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்தேன்.** சடுதியில் மாறிய வானிலை, மேலும் தரங் குறைந்த காலணிகள், போதாத உடைகள் இவை யாவும் அவருடைய வாழ்வில் பெரிய அளவில் வசதியின்மையையும் வேதனையையும் உண்டு பண்ணின. திருவாளர் ஹாட்ஜ் விளக்கமளிக் கிறார்:

> அப்போஸ்தலர்களிலே மிகப்பெரியவர், இங்கே நமக்கு முன்பாகக் காட்சி தருகிறார். அவரு டைய முதுகு அடிக்கடி சவுக்கினால் அடிக்கப்பட் டுக் கிழிந்து புண்ணாகப் போயிற்று. பசியினா லும், தாகத்தினாலும், இயற்கைச் சீற்றத்தினா லும், குளிரினாலும், நிர்வாணத்தினாலும், யூதர்கள் மற்றம் புறவினத்தார் ஆகியோரு டைய உபத்திரவங்களாலும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் துரத்தப்பட்டதினாலும், தங்குவதற்கு இடமில்லாததாலும் அவருடைய உடல் முற்றிலும் சேதமடைந்து போயிற்று. வேறு எல்லா வேத பகுதிகளைக் காட்டிலும் இந்தப் பகுதியானது, இன்றைய நாட்களில் கிறிஸ்து வுக்காக மிகக்கடுமையாக உழைக்கக் கூடிய ஊழியக்காரரையும் வெட்கத்தால் முகத்தை மறைத்துக்கொள்ளச் செய்கிறது. இந்த அப் போஸ்தலனோடு ஒப்பிடத்தக்க அளவிற்கு அவர் கள் என்ன செய்திருக்கிறார்கள்? பவுல் அப் போஸ்தலன் பாடு அனுபவிப்பதில் எப்படி முதன்மையானவராக இருந்தாரோ, அதுபோல இப்பொழுது மகிமையில் எல்லோரிலும் சிறந்த வராகத் திகழ்கிறார் என்னும் உண்மை நமக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது.[43]

**11:28 இவை முதலானவையல்லாமல்**, அதாவது ஏதோ வரிசை முறையில் நடக்கிறது என்று சொல்லக்கூடாததும் இயல்புக்கு அப்பாற் பட்டதுமான இந்த நிகழ்ச்சிகள் மட்டுமின்றி, **எல் லாக்** கிறிஸ்தவ **சபைகளைக்** குறித்தும் தொடர்ச் சியான பாரத்தினால் **நாள்தோறும்** பவுல் நெருக் கப்பட்டார். எல்லாப் பாடுகளுக்கும் மேலான இந் தப்பாடு எவ்வளவு குறிப்பிடத்தக்கதாய் இருக் கிறது! பவுல் மெய்யான மேய்ப்பராகத் திகழ்ந் தார். கர்த்தருடைய மக்களிடத்தில் அவர் அன்பு பாராட்டி, அவர்களிடத்தில் அக்கறை செலுத்தி னார்! அவர் கூலிக்கு அமர்த்தப்பட்ட மேய்ப்பர் அல்ல. அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக் குக் கீழ் பணிபுரிந்த மெய்யான மேய்ப்பர் ஆவார். இந்த உண்மையை நிலைநாட்டுவதே அவரு டைய விருப்பமாயிருந்தது. அதனையே இப்பகுதி யில் காண்கிறோம். எந்தவொரு நேர்மையான மனிதனும் அதை ஒப்புக்கொள்வான். இதனை வெளிப்படுத்துவதில் அவர் நிச்சயமாக வெற்றி பெற்றிருக்கிறார். அவர் சபைகளுக்காகக் கொண்டி ருந்த பாரத்தை இந்தப் பழமொழி நமது நினை விற்குக் கொண்டுவருகிறது, "சபையை உரு வாக்குவது இருதயத்தை நொறுக்கும் செயல், சபையைச் சீராக்குவது முடிவுபெறாத செயல்."

**11:29** இந்த வசனம் முந்தின வசனத்துடன் மிக நெருங்கியது. முந்தின வசனத்தில், தான் நாள் தோறும் சபையின் பாரத்தைச் சுமந்து சென்றதாக அப்போஸ்தலன் கூறினார். இங்கே அதனுடைய விளக்கத்தைக் கூறுகிறார். ஒரு **பலவீனமுள்ள** கிறிஸ்தவனைக் குறித்துக் கேள்விப்பட்டபோது, அவரும் பலம் இழந்தவராக உணர்ந்தார். பிறரு டைய பாடுகளை அவர் பரிவுடன் சகித்தார். கிறிஸ்துவுக்குள்ளான ஒரு சகோதரன் மனம் புண்படும்படி நிகழ்ச்சி நடந்தபோது இவருடைய **மனது பற்றியெரிந்தது.** எவை இறைமக்களைப் பாதித்தனவோ அவையாவும் அவரையும் பாதித் தன. அவர்களுடைய துக்கங்களில் அவர் வருத்த முற்றார். அவர்களுடைய வெற்றிகளில் அவர் களி

கூர்ந்தார். இவையாவும் கிறிஸ்துவின் ஊழியக் காரனை முற்றிலும் சோர்வடையச் செய்து பல மிழக்கச் செய்தன. பவுல் எவ்வளவாய் இதனை நன்கு அறிந்திருந்தார்!

**11:30** அவருடைய வெற்றிகளோ அவருடைய வரங்களோ திறமைகளோ அல்ல, அவருடைய பலவீனங்களும், நிந்தைகளும், அவமதிப்பு களுமே அவர் சகித்தவை. இவையாவும் அவர் மேன்மைபாராட்டுவதற்குக் காரணங்கள் ஆயின. பொதுவாக மனிதர்கள் இவற்றில் மேன்மை பாராட்டுவதில்லை, இவற்றால் மனிதர்கள் புகழ் பெறுவதும் இல்லை.

**11:31**அவர் அடைந்த இகழ்ச்சிகளையும் பாடுகளையும் குறித்து நினைத்துப் பார்க்கை யில், பவுல் தனது வாழ்நாள் முழுவதும் நடந்த நிகழ்ச்சிகளில் மிகவும் தாழ்ந்தது என்று கருதக் கூடிய நிகழ்ச்சியைக் குறித்துச் சிந்திக்க உள்ளு ணர்வால் உந்தப்பட்டார். தனது பலவீனங்களைக் குறித்து அவர் மேன்மைபாராட்டுவார் எனில், தமஸ்குவில் நடந்த அந்த நிகழ்ச்சியைக் குறித்து அவரால் சொல்லாமல் இருக்க முடியாது. எப்படிப் பட்ட மனிதனுக்கும் அத்தகைய அவமானத்துக் குரிய அனுபவத்தைக் கூறுவதென்பது மனித இயல்புக்கு முரண்பட்ட செயலாகும். ஆனால் இங்கு அவர் கூறுவதன் உண்மையை உறுதி செய்ய **தேவனையே** சாட்சியாக அழைக்கிறார்.

**11:32** இந்த நிகழ்ச்சியைக் குறித்த முழு விவரங்களும் அப்போஸ்தலருயை நடபடிகள் நூலில் 9:19-25 ஆகிய வசனங்களில் கொடுக்கப் பட்டுள்ளன. **தமஸ்குவுக்கு** அருகில் அவர் மன மாற்றம் பெற்ற பிறகு, அங்கிருந்த ஜெபாலயத் தில் பவுல் நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கி னார். அவர் பிரசங்கம் பண்ணத் தொடங்கிய போது, அது மக்களிடையே அதிக ஆர்வத்தைத் தூண்டிவிட்டது. ஆனால் சிறிதுகாலம் சென்றபின் யூதர்கள் அவரைக் கொலைசெய்யத் திட்டமிட் டார்கள். **அவரைப் பிடிக்க வேண்டும்** என்னும் எண்ணத்துடன் அந்த நகரத்தின் வாசலில் இரவும் பகலும் அவர்கள் காவல்வைத்திருந்தார்கள்.

**11:33** ஓரிரவில் சீடர்கள் அப்போஸ்தலரை ஒரு **கூடையிலே** வைத்து, கோட்டை **மதில் ஜன்னல் வழியாக** நகரத்துக்கு வெளியே தரையிலே **இறக்கிவிட்டார்கள்**. அவர் இவ்விதமாக அங்கி ருந்து தப்பிக்க ஏதுவாயிற்று.

பவுல் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதன் கா ரணம் என்ன? J. B. வாட்சன் என்பார் விளக்கமளிக் கிறார்:

> அவமானமாகவும் ஏளனமாகவும் மனிதர்கள் கருதக்கூடிய நிகழ்ச்சியை இவர் மேன்மை யாகப் பற்றிக்கொண்டிருக்கிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு பணிபுரிவதையே தனது முதன்மையான குறிக்கோளாகக் கொண்டிருந் ததற்கு மற்றுமொரு நிரூபணமாக இதனை அவர் முன்மொழிகிறார். கிறிஸ்துவுக்காக தன் னுடைய பெருமையைத் தியாகம் செய்யவும், மனிதர்களுடைய பார்வையில் ஒரு கோழை யாகக் காணப்படவும் அவர் ஆயத்தமாயிருந் தார்.[44]

### ஊ. பவுல் பெற்ற வெளிப்பாடுகள் அவரது அப்போஸ்தல நியமனத்தை உறுதி செய்கின்றன (12:1-10)

**12:1** அப்போஸ்தலன் **மேன்மைபாராட்டாமல்** இருந்திருப்பார் எனில் அது நன்றாயிருந்திருக்கும் என்று கூறுகிறார். அது **தகுதியான** செயலும் அல்ல, அதனால் எந்தப் பயனும் இல்லை. ஆனால் இருக்கின்ற சூழ்நிலையில் அது தேவையாயிருக் கிறது. ஆகவே அவர் தன்னுடைய ஊழிய வாழ்க் கையில் நடந்த மிகவும் இழிவான நிகழ்ச்சியை முதலில் சொல்லிவிட்டு, அதன் பிறகு மிகவும் மேன்மையான நிகழ்ச்சியை நோக்கிச் செல் கிறார். இப்பொழுது, கர்த்தரை நேரடியாகச் சந் தித்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறவிருக்கிறார்.

**12:2 பதினாலு ஆண்டுகளுக்கு முன்னே** இந்த அனுபவத்தைப் பெற்ற ஒரு மனிதனைப் பவுல் அறிந்திருந்தார். அந்த மனிதன் யாரென்று அவர் இங்கு வெளிப்படுத்தவில்லையென்றபோதிலும், அவர் தன்னைப் பற்றியே இங்கு பேசுகிறார் என்ப தில் எவ்விதக் கேள்வியுமில்லை. இத்தகைய உயர்வான அனுபவத்தைக் குறித்துப் பேசுங் கால், அவர் தன்னைக் குறிப்பிட்டுப் பேசாமல், பொதுவாகப் பேசும் வழக்கத்தைக் கொண்டிருந் தார். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள **மனிதன் கிறிஸ்து வுக்குள்** இருந்தான். அதாவது, அவன் ஒரு கிறிஸ்தவன்.

பவுல் அப்பொழுது **சரீரத்தில் இருந்தாரா, சரீரத்திற்குப் புறம்பாயிருந்தாரா** என்பது அவ ருக்குத் தெரியாது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி, லீஸ்திராவில் நடந்த நிகழ்ச்சியைப் போன்று, பவுல் வாழ்க்கையில் ஏற்பட்ட உபத்திர வங்களில் ஒரு சமயத்தில் நடந்திருக்கும் என்று சிலர் ஊகிக்கிறார்கள். மேலும், பவுல் அப்பொழுது இறந்துபோனார் என்றும், விண்ணகம் சென்றார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்த

வேதபகுதி அப்படிப்பட்ட விளக்கமே சரியானது என்று வலியுறுத்துவதில்லை. உண்மையில், அவர் அப்பொழுது **சரீரத்தில் இருந்தாரா** அல்லது **சரீரத்திற்குப் புறம்பாயிருந்தாரா,** அதாவது, உயிரோடு இருந்தாரா அல்லது இறந்துபோனாரா என்பது பவுலுக்கே தெரியவில்லை என்றால், அதனுடன் இன்னும் கூடுதலான வெளிச்சத்தைச் சேர்க்கத் தற்கால விளக்கவுரையாளர்கள் முயலுவது நமக்கு விநோதமாயிருக்கிறது.

அந்த மனிதன் **மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்** என்பது மிகவும் முக்கியமானது. மூன்று வானங்கள் இருப்பதாகத் திருமறை குறிப்பாய் தெரிவிக்கிறது. நமக்கு மேலாக இருக்கக் கூடிய வாயு மண்டலம், அதாவது நீலவானம் முதல் வானமாகும். இரண்டாவது வானம் விண்மீன்கள் நிறைந்த பகுதியாகும். மிகவும் உயர்ந்ததும் தேவனுடைய அரியணை இருப்பதுமான இடமே மூன்றாவது வானமாகும்.

தொடர்ந்து சொல்லப்பட்டிருக்கும் விவரங்களைக் காண்கையில், அப்போஸ்தலனாகிய பவுல் எடுத்துக்கொள்ளப்பட்ட அந்தப் பேரின்ப இடமும், மனந்திரும்பிய கள்ளன் இறந்த பிறகு அவனைக் கர்த்தராகிய இயேசு அழைத்துச் சென்ற இடமும் ஒன்றே என்பதை அறிய முடியும். அதுவே தேவனுடைய குடியிருப்பு.

**12:3,4** பரதீசில் பேசப்பட்ட மொழியை பவுல் அங்கு கேட்டார். அவர் அந்த மொழியைப் புரிந்து கொண்டார். ஆனால் அவர் அங்கு கேட்ட சொற்களில் எதனையும் அவர் பூமிக்குத் திரும்பிய பிறகு பேசும்படி அனுமதிக்கப்படவில்லை. அந்த வார்த்தைகள் வாக்குக்கெட்டாதவை. அதாவது அவற்றை இங்கு வெளியிடக்கூடாதபடி மிகவும் புனிதத்தன்மை வாய்ந்தவை. திருவாளர் G. கேம்ப்பெல் மோர்கன் இதனை விவரிக்கிறார்:

> தாங்கள் கண்ட தரிசனங்களையும், பெற்றுக் கொண்ட வெளிப்பாடுகளையும் குறித்துப் பேசுவதற்குச் சிலர் ஆர்வம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆர்வம், அந்தத் தரிசனங்களும் வெளிப்பாடுகளும் "கர்த்தரிடத்திலிருந்து வந்தவையல்ல" என்பதற்கான ஆதாரமா இல்லையா என்பதல்ல கேள்வி. அவை கொடுக்கப்படுகின்றபோது (சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அவை இறையூழியர்களுக்கு அளிக்கப்படுகின்றன என்பது உண்மையே), அவர்கள் பயபக்தியுடன் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள். அவர்கள் அந்த அனுபவங்களைப் பற்றி விவரிக்கவோ விவாதிக்கவோ கூடாதபடி பெருந்தன்மை மிக்கவர்களாகவோ, அவற்றில் அதிகமாக மூழ்கிப்போனவர்களாகவோ இருக்கிறார்கள். ஆனால் அந்த அனுபவங்களின் தாக்கம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் அவர்கள் ஆற்றும் ஊழியங்களில் வெளிப்படும்.[45]

**12:5** பலவீனங்களைக் குறித்து மேன்மை பாராட்டுவதில், அப்போஸ்தலன் தன்னைப் குறிப்பிடத் தயங்குவதில்லை. ஆனால் தரிசனங்களையும் வெளிப்பாடுகளையும் குறித்து மேன்மை பாராட்டும்படி அவற்றைத் தன்னோடு நேரடியாகத் தொடர்புபடுத்தி அவர் பேசமாட்டார். ஆனால் அந்த அனுபவங்களை அவருக்குத் தெரிந்த வேறொரு மனிதனுடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளாக விவரிப்பார். அந்த அனுபவங்களைப் பெற்றவர் அவர்தான் என்பதை அவர் மறுத்துரைக்கவில்லை. மாறாக தன்னை நேரடியாக அந்த அனுபவங்களோடு இணைத்துப் பேசுவதையே அவர் மறுத்துரைக்கிறார்.

**12:6** அப்போஸ்தலன் **மேன்மைபாராட்டும்படி** இன்னும் பல மகத்தான அனுபவங்களை அவர் பெற்றிருக்கிறார். அவர் இவ்வாறு மேன்மை பாராட்டும் செயலில் ஈடுபட **மனதாயிருந்தாலும்**, அவ்வாறு செய்ய அவர் **புத்தியீனன்** அல்ல. அவர் சொல்லுவதெல்லாம் **சத்தியமே**. ஆனால் அவர் அவ்வாறு செய்யப்போவதில்லை. ஏனெனில், உண்மையில் அவர் எப்படிப்பட்டவர் என்பதை அவரது செயலைக் காண்பதன் மூலமாகவோ அவரது பேச்சைக் கேட்பதன் மூலமாகவோ தெரிந்துகொள்ளுவதற்கு மேலாக **ஒருவனும்** நினைக்கக்கூடாது என்று அவர் எண்ணினார்.

**12:7** இந்த வேதபகுதி முழுவதும் கிறிஸ்துவின் ஊழியக்காரன் ஒருவனுடைய வாழ்க்கையின் சரிநுட்பமான விவரமாக இருக்கிறது. தமஸ்குவில் நடந்த மிகவும் அவமானத்துக்குரிய நிகழ்ச்சியும் இங்கே சொல்லப்பட்டுள்ளது. மேலும் இங்கு பவுல் பெற்ற எழுச்சிமிக்க வெளிப்பாடாகிய மிக உன்னதமான நிகழ்ச்சியும் இடம் பெற்றிருக்கிறது. ஆனால் இத்தகைய உண்மையான நிகழ்ச்சியை அனுபவித்த கர்த்தருடைய ஊழியக்காரன் எவனும் **மாம்சத்தில் முள் ஒன்றையும்** அனுபவிக்கும்படி நடத்தப்படுவான். அதனையே நாம் இங்கு காண்கிறோம்.

இந்த வசனத்திலிருந்து நாம் பல விலை மதிக்கமுடியாத பாடங்களைக் கற்கிறோம்.

முதலாவது, கர்த்தர் அருளுகிற தெய்வீக வெளிப்பாடுகளுங்கூட நம்மிடத்தில் உள்ள **மாம்சத்தைச்** சீராக்குவதில்லை. பரதீசின் மொழியை அப்போஸ்தலன் கேட்ட பிறகும், அவர் முந்தின இயல்பை உடையவராக இருந்தார். மேலும் பெருமை என்னும் கண்ணியில் அகப்பட்டுக் கொள்ளக் கூடிய ஆபத்தில் அவர் இருந்தார். திருவாளர் R. J. ரெய்டு கூறியதாவது:

> பரதீசில் பேசப்பட்டதும் மொழிபெயர்த்துச் சொல்ல முடியாததுமான மொழியைக் கேட்ட "கிறிஸ்துவுக்குள்ளான மனிதன்" தேவனுடைய சமுகத்தில் பாதுகாப்பாக இருந்தான். ஆனால் அவன் பூமிக்குத் திரும்பியபோது, அவனுடைய பரதீசு அனுபவத்தைக் குறித்து அவனிடத்தில் இருந்த மாம்சம் பெருமை பாராட்டாதபடிக்கு அவனுக்கு "மாம்சத்தில் ஒரு முள்" தேவைப்பட்டது.[46]

பவுல் **மாம்சத்திலே** பெற்றிருந்த **முள்** என்ன? அவருடைய வாழ்க்கையில் தேவன் அனுமதித்திருந்த சரீரப்பிரகாரமான சோதனை என்பதே அந்த முள் என்று நாம் யாவரும் ஐயத்திற்கிட மற்றபடி கூறலாம். பல நூற்றாண்டுக் காலமாக சோதனைகள் பரீட்சைகள் ஆகியவற்றின் ஊடாகக் கடந்து சென்ற பரிசுத்தவான்கள் அப்போஸ்தலனோடு நெருக்கமான உறவை அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் கர்த்தர் அந்த முள் என்னவென்பதைச் சொல்லாமல் விடுத்தார் என்பதில் சந்தேகமில்லை. அது ஒருவேளை ஒரு வகையான கண் நோயாகவோ,[47] காது வலியாகவோ, மலேரியாவாகவோ, தலைவலியாகவோ, அவருடைய பேச்சோடு தொடர்புடைய குறையாகவோ இருக்கலாம். திருவாளர் மூர்ஹெட் கூறுகிறார்: "பெயர் சொல்லப்படாததாயினும், வேதனை மிக்க அனுபவத்தைப் பவுல் பெற்றிருந்தார். அதன் காரணமாக, பலவகை இன்னல்களை அனுபவிக்கும் மக்கள் அவருடைய அனுபவத்தின் மூலமாக உற்சாகமடையவும் உதவிபெறவும் தக்கதாக அவருடைய முள் என்னவென்று சொல்லப்படாமல் மறைக்கப்பட்டது போலும்."[48] பவுல் அனுபவித்த சோதனையினின்று, நாம் அனுபவிப்பவை முற்றிலும் வேறுபட்டவையாக இருக்கக்கூடும். ஆனால் அவை அதே பயிற்சியையும் கனிகளையும் உண்டாக்க வேண்டும்.

தன்னுடைய **மாம்சத்தில்** கொடுக்கப்பட்டிருந்த அந்த **முள்ளை**, தன்னைக் **குட்டும் சாத்தானுடைய தூதன்** என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார். கர்த்தருடைய பணியைப் பவுல் நிறைவேற்றாமல் தடைசெய்யும்படியான சாத்தானுடைய முயற்சியையே அது குறிக்கிறது என்று கருதலாம். ஆனால் தேவனோ சாத்தானிலும் பெரியவர். அவர் அந்த முள்ளைக் கொண்டு பவுலைத் தாழ்த்தி, அவர் மூலமாகக் கர்த்தருடைய ஊழியம் விரிவாக்கம் அடையும்படிச் செய்கிறார். கிறிஸ்துவுக்காக ஆற்றப்படும் ஊழியத்தின் வெற்றி பலவீனமான ஊழியனையே சார்ந்திருக்கிறது. அவன் எவ்வளவுக்கெவ்வளவு பலவீனமாக இருக்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு கிறிஸ்துவின் வல்லமை அவனுடைய பிரசங்கத்தில் உடன் செல்லும்.

**12:8** தன்னுடைய மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள் நீங்கும்படி பவுல் **மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டார்.**

**12:9** பவுலுடைய மன்றாட்டிற்கு விடை கொடுக்கப்பட்டது. ஆனால் அது அவர் எதிர்பார்த்த வண்ணம் இல்லை. "நான் அந்த முள்ளை நீக்கப் போவதில்லை; ஆனால் அதனினும் மேலானதை நான் செய்வேன். அதைத் தாங்கிக்கொள்ளத் தக்க சமாதானத்தைத் தருவேன். பவுலே, இதனை நீ நினைத்துக்கொள். நீ கேட்டதை நான் உனக்குத் தரவில்லையாயினும், உனக்கு எது மிகவும் தேவையோ அதனைத் தருகிறேன். உனது பிரசங்கத்தோடு உடன் இருக்கும்படி என்னுடைய அதிகாரமும் வலிமையும் தேவை அல்லவா? அவை வேண்டுமென்றால், நீ பலவீனமான நிலையில் இருக்க வேண்டியது அவசியம். அதுவே அதற்குரிய சிறப்பான வழியுமாகும்" என்னும் பொருளில் தேவன் பவுலோடு பேசினார்.

மும்முறை பவுல் ஏறெடுத்த மன்றாட்டிற்கு, தேவன் மீண்டும் மீண்டும் இதனையே விடையாகக் கூறினார். இந்த உலகம் முழுவதிலும், இன்னல்கள் அனுபவிக்கிற இறைமக்களுக்கு தேவன் தொடர்ந்து வழங்குகிற விடை இதுவேயாகும். சோதனைகளும் இன்னல்களும் நீக்கப்படுவதற்கும் மேலாக, இறைமகன் அவர்களிடத்தில் உடனிருத்தல், அவருடைய வலிமை மற்றும் செயலாக்கம் மிக்க உறுதிமொழி ஆகியவையே சிறந்தவை.

**என் கிருபை உனக்குப் போதுமானதாக (இருக்கிறது)** என்று கர்த்தர் உரைப்பதைக் கவனியுங்கள். அவருடைய கிருபை உங்களுக்குப் போதுமானதாக இருக்கும்படி அவர் செயல்புரிய வேண்டுமென்று நாம் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. அது ஏற்கனவே **இருக்கிறது!**

கர்த்தர் உரைத்த மறுமொழியினால் அப் போஸ்தலன் முழு மனநிறைவு அடைந்தார். ஆகவே அவர், **"ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்"** என்கிறார்.

கர்த்தர் தமது செயல்களில் விளங்கும் ஞானத்தைக் குறித்து விளக்கிக் கூறியபோது, அதுவே தான் விரும்பிய ஒரே வழியாக இருந்தது என்னும் பொருள்பட பவுல் பேசினார். ஆகவே அந்த முள்ளின் நிமித்தம் குறைகூறாமலும் முணு முணுக்காமலும், அவர் தமது **பலவீனங்களைக் குறித்து மேன்மைபாராட்டினார்.** அவர் தனது முழங்காலில் நின்று அவற்றிற்காகக் கர்த்தருக்கு நன்றி செலுத்தினார். கிறிஸ்துவின் வல்லமை அவர்மேல் தங்கும்படி அவர் அவற்றை மகிழ்ச்சி யோடு சகித்தார். இதனைத் திருவாளர் J. ஆஸ் வால்ட் சேண்டர்ஸ் அழகுற மொழிகிறார்.

> "எதைக் குணப்படுத்த முடியாதோ, அதைச் சகித்தே ஆகவேண்டும்" என்பது உலகத்தின் தத்துவம். ஆனால், "எதைக் குணப்படுத்த முடி யாதோ அதை மகிழ்வுடன் அனுபவிக்க முடி யும். நான் பலவீனத்தையும், இன்னல்களை யும், இழப்புகளையும், இடர்ப்பாடுகளையும் மகிழ்வுடன் அனுபவிக்கிறேன்" என்று பவுல் வனப்புமிக்க வகையில் சான்று கூறுகிறார். தேவனுடைய கிருபையானது அதனுடைய நிறைவில் தன்னிடமாய் வரக்கூடிய புதிய சந்தர்ப்பங்களை அவர் வரவேற்கத் தக்கபடி வியப்பு மிகுந்ததாய் இருக்கிறது. "நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டு வேன்... எனது முள்–அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது."[49]

போலந்து நாட்டின் உயர்குடிப் பெருமகன் ஒரு வரது மனைவி விரக்தியும் ஏமாற்றமும் நிறைந்த வராக நெடுநாள் வாழ்ந்தார். எனினும் எம்மா பிசின்ஸ்கா என்னும் அந்தப் பெண்மணியின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் அன்னாரது வெற்றி மிக்க விசுவாசத்திற்குச் சிறந்ததொரு புகழுரையை வழங்கியுள்ளார்: "அம்மையார் கேட்டுக்கொண்டவை தேவனால் மறுக்கப்பட்டன. ஆனால் அவற்றைக் கொண்டு அன்னார் மிகச் சிறந்த மலர்ச்செண்டுகளை உண்டுபண்ணி யிருக்கிறார்!"

**12:10** இங்கு பட்டியலிடப்பட்டுள்ள அனுபவங் களில் **பிரியப்படுவது** முற்றிலும் இயலாத செயல் என்பதே இயல்பான பேச்சு. ஆனால் இந்த வசனத் தில் சொல்லப்பட்டுள்ளதை அறிந்துகொள் வதற்கு, **கிறிஸ்துவினிமித்தம்** என்னும் சொல் திறவுகோலாக விளங்குகிறது. அவர் நிமித்தமாக வும், அவருடைய நற்செய்தி விரிவாக்கம் அடைய வேண்டும் என்பதற்காகவும், நமக்காகவோ நமக் குப் பிரியமானவரின் பொருட்டோ சாதாரணமாக நாம் சகிக்க மறுப்பனவற்றை ஏற்க விரும்ப வேண்டும்.

நம்முடைய சொந்த பலவீனம் மற்றும் ஒன்று மற்ற தன்மை ஆகியவற்றைக் குறித்த உணர்வை நாம் கொண்டிருக்கும் தருணத்தில்தான் பெரு மளவு தேவனுடைய வல்லமையைச் சார்ந்திருக் கிறோம். அவருடைய வல்லமையானது நம்மிடத் தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்னும் முழு நம்பிக்கையில் அவரைச் சார்ந்துகொள்ளும் போதே, நாம் உண்மையாக **பலமுள்ளவரா யிருப்போம்.**

பிரிட்டிஷ் பேரரசில் அடிமைத்தனத்தை ஒழிக்க நடைபெற்ற போராட்டத்தை முன்னின்று நடத்திய வில்லியம் வில்பர்போர்ஸ் என்பார் சரீரப்பிரகாரமாக பலவீனரும் நலிந்தவருமா யிருந்தார். ஆனால் அவர் ஆழ்ந்த இறைப்பற்று உடையவராயிருந்தார். அவரைக் குறித்து, "ஓர் இராலைப் போன்று தோற்றமளித்தவர் திமிங் கலத்தைப் போல மாற்றம் பெற்றதை நான் கண்டேன்" என்று போஸ்வெல் என்பார் கூறினார்.

மத்தேயு 5:11,12 -ஆகிய வசனங்களில் கர்த்தர் கூறியவற்றிற்கு, இந்த வசனத்தில் பவுல் கீழ்ப்படி கிறார். மனிதர்கள் அவரை நிந்தித்துத் துன்பப் படுத்தியபோது அவர் களிகூர்ந்தார்.

### எ. பவுல் நடப்பித்த அடையாளங்கள் அவருடைய அப்போஸ்தல நியமனத்தை உறுதிப்படுத்துகின்றன (12:11-13)

**12:11** இத்தருணத்தில், தன்னுடைய மேன்மை பாராட்டுவதாகத் தோன்றும் செயலில், பவுல் சோர்வடைந்துவிட்டது போலத் தோன்றுகிறது. அவர் இதுகாறும் செய்த **மேன்மைபாராட்டிய** செயலின் மூலமாகப் புத்தியீனனானதாகக் கருது கிறார். அவர் அவ்வாறு செய்திருக்கக் கூடாது. உண்மையில் அவர் அவ்வாறு செய்யும்படி **பலவந்தம்** பண்ணியவர்கள் கொரிந்தியரே ஆவர். கொடுமை நிறைந்த தாக்குதல்களை அவ ருடைய எதிரிகள் அவர் மேல் சுமத்தியபோது,

அவர்கள் அல்லவா அவருக்காகப் பரிந்து பேசியிருக்க வேண்டும். அவர் தன்னில்தானே **ஒன்றுமில்லாதவராக** இருந்தபோதிலும், அவர்கள் எந்த **மகாபிரதான அப்போஸ்தலரில்** மேன்மை பாராட்டினார்களோ, அவர்களைக் காட்டிலும் இவர் எவ்வகையிலும் நிச்சயமாகத் தாழ்ந்தவர் இல்லை.

**12:12** அவர் கொரிந்துப் பட்டணத்திற்குச் சென்று நற்செய்தியைப் பிரசங்கித்தபோது **அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்களாலே** தேவன் அவருடைய பிரசங்கத்தை உறுதிப்படுத்தினார். இந்த அப்போஸ்தலர் கர்த்தராலே அனுப்பப்பட்டவர்கள் என்று அவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்கும் மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே தேவன் அவர்களுக்கு இப்படிப்பட்ட அற்புத வல்லமையுள்ள அடையாளங்களைச் செய்வதற்கான ஆற்றலைத் தந்தார்.

அதிசயங்கள், அற்புதங்கள், வல்லமைகள் என்னும் சொற்கள் மூன்று வெவ்வேறு வகையான அற்புதச் செயல்களைக் குறிப்பதில்லை. மாறாக அற்புதச் செயல்களின் மூன்று அம்சங்களையே அவை சுட்டிக்காட்டுகின்றன. மனித அறிவுக்கு, குறிப்பிட்ட ஒரு பொருளை அறிவிக்கும்படிச் செய்யப்படும் அற்புதங்களே **அடையாளங்கள்** எனப்படும். இதற்கு மாறாக, **அதிசயங்கள்** எனப்படுபவை மனித உணர்ச்சிகளை பெருமளவில் எழுப்பிவிடக்கூடிய அளவிற்குக் குறிப்பிடத்தக்கவை. மனித ஆற்றலுக்கு அப்பற்பட்ட வகையில் செய்யப்பட்ட செயல்களே இங்கு **வல்லமைகள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

அவர்களுக்குள்ளே **அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள்** *நடப்பிக்கப்பட்டன* என்று பவுல் கூறுவது எண்ணிப்பார்ப்பதற்கு இனிமையானது. அவர் இங்கே செயப்பாட்டு வினையைப் பயன்படுத்துகிறார். அச்செயல்களுக்கான புகழை அவர் உரிமைபாராட்டவில்லை. அவற்றை தேவனே அவர் மூலமாகச் செய்தார் என்று கூறுகிறார்.

**12:13** அற்புதச் செயல்களைப் பொருத்தமட்டில், கொரிந்தியர் சிறிதளவும் **மற்ற சபைகளுக்குக் குறைவாயிருந்ததில்லை.** அப்போஸ்தலனாகிய பவுல் **மற்ற சபைகளுக்குச்** சென்றபோது என்னென்ன அற்புதச் செயல்களைச் செய்தாரோ, அத்தனை செயல்களையும் அவர் கொரிந்துப் பட்டணத்தில் செய்ததால் அவர்கள் எல்லா அற்புதங்களையும் கண்டிருந்தார்கள். அவ்வாறாயின் அவர்கள் எந்த அர்த்தத்தில் **மற்ற சபைகளுக்குக் குறைவுபட்டவர்கள்?** பவுல் எந்த விதத்திலும் கொரிந்தியருக்குப் பாரமாயிருந்து அவர்களை **வருத்தப்படுத்தவில்லை.** அதுவே அவர் கண்ட ஒரே வேறுபாடு. அதாவது, அவர்களிடத்திலிருந்து அவர் பண உதவியை நாடவில்லை. இது ஒருவேளை அவர்களைக் **குறைவாக்கியிருந்தால்**, இந்த **அநியாயத்தை** அவருக்கு அவர்கள் மன்னிக்க வேண்டுமென்று அவர் வேண்டுகிறார். அப்போஸ்தலருக்குரிய இந்த ஓர் "அடையாளத்தை" மட்டுமே அவர் அவர்களிடத்தில் வலியுறுத்தவில்லை.

### ஏ. கொரிந்துப் பட்டணத்துக்குப் பவுல் செல்லும்படி ஆயத்தப்படுதல் (12:14-13:1)

**12:14 இதோ, உங்களிடத்திற்கு மூன்றாந்தரம் வர ஆயத்தமாயிருக்கிறேன்.** கொரிந்துப் பட்டணத்துக்குச் செல்ல அப்போஸ்தலனாகிய பவுல் மும்முறை ஆயத்தமாயிருந்தார் என்று நாம் பொருள்கொள்ளலாம், ஆனால் அங்கு ஒரு முறை மட்டுமே சென்றிருந்தார். அவர் அங்கு இரண்டாவது தடவை செல்லவில்லை, ஏனெனில் அவர் விசுவாசிகளிடத்தில் கடுமையாக நடந்து கொள்ள விரும்பவில்லை. இப்பொழுது அவர் அவர்களிடத்திற்குச் செல்ல **மூன்றாந்தரம் ஆயத்தமாயிருந்தார்.** அதாவது,அவர் அங்கு செல்வது இரண்டாவது தடவையே ஆகும்.

அல்லது அவர் அங்கு கூடிய விரைவில் **மூன்றாந்தரம்** செல்லவிருந்தார் என்றும் இதற்குப் பொருள் கூறலாம். கொரிந்துப் பட்டணத்திற்கு அவர் மேற்கொண்ட முதல் பயணம் அப்போஸ்தலர் 18:1 -இல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் இரண்டாம் முறை அங்கு துயரத்தோடு சென்றார் (2 கொரி. 2:1; 13:1). இது அவர் மேற்கொண்ட மூன்றாவது பயணமாகும்.

அவர் அவர்களிடத்திற்கு வருகைபுரியும்போது **அவர்களை வருத்தப்படுத்தப் போவதில்லை** என்று தீர்மானித்திருந்தார். அதாவது அவர்களிடத்திலிருந்து அவர் பொருள் உதவியைப் பெறமாட்டார் என்பதே இதன் பொருள். பொருளுதவியைப் பெற்றுக்கொள்ளும் விசயத்தில் அவர் அவர்களைச் சார்ந்திருக்கப் போவதில்லை. அவர் அவர்களுடைய பொருட்செல்வத்தையல்ல, அவர்களையே நாடுகிறார் என்பதே இதற்கான காரணமாகும். பொருட்களைக் காட்டிலும், மனிதர்களிடமே அவர் மிகுதியாக அக்கறை கொண்டிருந்தார்.

அவர் கொரிந்தியருக்கு ஒரு தகப்பனாகச் செயல்படவே விரும்புகிறார். **பெற்றோருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும்.** நாம் அறிந்திருக்கிறபடி, இது வாழ்க்கையைக் குறித்த ஒரு கூற்றாகவே இருக்கிறது. பொதுவாகக் காணும்போது, **பிள்ளைகளுக்கு** உணவையும் உடையையும் தரும்படி **பெற்றோர்களே** கடினமாக உழைத்து, மிகுந்த கவனத்தோடு செயல்படுகிறார்கள். மேலும் **பெற்றோர்களுக்கான** இப்படிப்பட்ட தேவைகளைப் **பிள்ளைகள்** நிறைவேற்றுவதில்லை. ஆகவே, பவுல் ஒரு தகப்பனைப்போலச் செயல்படுவதற்கு, அவரை அனுமதிக்கும்படி வேண்டிக்கொள்கிறார்.

இந்த வாக்கியத்தில் அதிகப்படியான பொருள் கொள்ளாமலிருக்க நாம் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். தங்களுடைய பிள்ளைகளுடைய எதிர்காலத் தேவைக்காகப் பெற்றோர்கள் பொருட்செல்வத்தைச் சேர்த்துவைக்க வேண்டும் என்பது இதன் பொருளன்று. எதிர்காலத் தேவைக்கும் இதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை; தற்போதைய தேவைகளைக் குறித்தே இந்த வசனம் பேசுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துப் பட்டணத்தில் கர்த்தருக்காகப் பணியாற்றியபோது அவருடைய அப்போதைய தேவையைக் குறித்தே இங்கு அவர் பேசுகிறார். அங்கிருந்த பரிசுத்தவான்களை அவர் சார்ந்திருக்கப் போவதில்லை என்றே அவர் தீர்மானித்திருந்தார். அவருடைய கடைசி நாட்களுக்காக அவர்களோ அவர்களுடைய வருங்காலத் தேவைகளுக்காக அவரோ செல்வத்தைச் சேர்த்து வைக்க விரும்பினார் என்னும் எண்ணம் இந்த வசனத்தில் சிறிதளவும் இல்லை.

**12:15** கொரிந்துப் பட்டணத்திலிருந்த இறைமக்கள்மேல் அப்போஸ்தலனாகிய பவுல் தணியாத பாசம் கொண்டிருந்ததன் அழகிய ஒளிக்கீற்றை நாம் இங்கு காண்கிறோம். அவர் தன்னைத் தளர்ச்சியற்ற ஊழியத்திற்கும், அவர்களுடைய ஆத்துமாக்களுக்கான பலியாகவும், அதாவது, அவர்களுடைய ஆவிக்குரிய நலனுக்காக **சந்தோஷமாகக்** கொடுக்க அவர் விருப்பமுடையவராக இருந்தார். அவர்கள் நடுவே இருந்த கள்ளபோதகர்களைக் காட்டிலும், அவர் அவர்களிடம் பெருமளவு அன்புபாராடினார், எனினும் அவர்களோ அவரிடத்தில் **குறைவாகவே அன்புகூர்ந்தார்கள்.** ஆனாலும் அது அவரிடத்தில் எவ்விதமனவேற்றுமையையும் உண்டுபண்ணவில்லை. அவர்களிடத்திலிருந்து அன்பைத் திரும்பப்பெறுவதற்கான நம்பிக்கை அவருக்கு இல்லாதிருந்தபோதிலும், அவர் அவர்கள்மேல் தொடர்ந்து அன்புசெலுத்தி வருவார். இந்தச் செயலில் உண்மையாகவே அவர் கர்த்தரைப் பின்பற்றினார்.

**12:16** அப்போஸ்தலனுக்கு எதிராக அவருடைய எதிரிகள் கூறிய அதே சொற்களை அவர் இங்கு பயன்படுத்துகிறார். "உங்களிடத்திலிருந்து பவுல் நேரடியாகப் பணத்தைப் பெறவில்லை. ஆனாலும் அவர் அதைத் தந்திரமாக உங்களிடத்திலிருந்து பெறுகிறார். உங்களிடத்திற்குச் சில பிரதிநிதிகளை அனுப்பித் தனக்காகப் பணத்தைப் பெற்றுக்கொள்கிறார்" என்று அவர்கள் கூறினார்கள்.

**12:17** நான் உங்களிடத்திலிருந்து நேரடியாகப் பணத்தைப் பறிக்கவில்லையென்றால், நான் உங்களிடத்திற்கு அனுப்பியவர்களில் யாராவது அப்படிச் செய்தார்களா? அவருக்கு எதிராகக் கூறப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையா என்று அப்போஸ்தலன் கொரிந்தியரிடம் நேரடியாகவே கேட்கிறார்.

**12:18** அவர் எழுப்பிய கேள்விக்கு அவரே விடை தருகிறார். **தீத்துவை** அவர்களிடத்திற்குச் செல்லும்படி **கேட்டுக்கொண்ட** அப்போஸ்தலன் அவரைத் தனியாக அனுப்பவில்லை. **அவருடனேகூட** வேறொரு **சகோதரனையும்** பவுல் அனுப்பினார். பவுலின் நோக்கத்தில் எவ்விதத் தவறும் கற்பிக்கப்படக் கூடாது என்னும் எண்ணத்தில் அவர் அவ்வாறு செய்தார். தீத்து கொரிந்துப் பட்டணத்துக்கு வந்தபோது நிகழ்ந்தது என்ன? அவர் பவுலுடைய உரிமையை வற்புறுத்தினாரா? கொரிந்தியர் அவரை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டாரா? அவர்களிடத்திலிருந்து அவர் ஆதாயத்தைத் தேடினாரா? இல்லை, தீத்து தன்னுடைய தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு ஏதோவொரு தொழிலைச் செய்திருப்பார் என்றே நாம் இந்தப் பகுதியிலிருந்து அறிகிறோம். "நாங்கள் ஒரே ஆவியையுடைவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடந்தோமல்லவா?" என்னும் கேள்வி இதை நமக்கு வெளிப்படுத்துகிறது. அதாவது, பவுலும் தீத்துவும் கொரிந்தியரிடத்திலிருந்து எந்த உதவியையும் பெறாதிருக்க வேலை செய்ய வேண்டும் என்னும் கொள்கையைப் பின்பற்றினார்கள்.

**12:19** பவுல் சொன்ன எல்லாவற்றிலிருந்தும், அவர்களை நியாயாதிபதிகள் என்று கருதி அவர்

களிடத்தில் சாக்குப்போக்குச் சொல்லுவதே அவருடைய நோக்கம் என்று கொரிந்தியர் எண்ணியிருக்கக் கூடும். மாறாக, அவர்கள் ஊன்றக் கட்டப்பட வேண்டும் என்னும் நோக்கத்தோடு, உண்மையில் அவர் இந்தச் சொற்களையெல்லாம் **தேவனுக்கு முன்பாக** எழுதினார். அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் பலப்படுத்தப்பட வேண்டும், அவர்களுக்கு எதிராக எழக்கூடிய ஆபத்துகளைக் குறித்து எச்சரிக்க வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாயிருந்தது. தன்னுடைய நற்பெயரைக் காக்க வேண்டும் என்பதிலும் அவர்களுக்கு உதவி செய்வதையே அவர் தனது விருப்பமாகக் கொண்டிருந்தார்.

சகலத்தையும் *நாங்கள் செய்கிறோம்* என்னும் சொற்கள் இந்த வசனத்தில் சேர்க்கப்பட்டவை. சகலத்தையும் நாங்கள் எழுதுகிறோம் என்னும் சொற்கள் இங்கு சேர்க்கப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் (2 கொரி. 13:10,11 வசனங்களோடு ஒப்பிடுக).

**12:20** கொரிந்துப் பட்டணத்திற்குப் பவுல் சென்றபோது, அவர்கள் ஒருவரிலொருவர் அன்புபாராட்டுகிறவர்களாகவும், கள்ளபோதகர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டவர்களாகவும், அப்போஸ்தலருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் என்றே அவர் விரும்பினார்.

மேலும் அவர் அங்கு சென்றபோது, அவர் மகிழ்ச்சியோடு செல்ல வேண்டுமேயொழிய, உள்ளத்தில் பாரத்தோடு செல்லக்கூடாது என்று விரும்பினார். ஆனால் அவர்களைக் காணும்போது, அவர்களிடத்தில் விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல், கோட்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள் இன்னும் பல உலகப்பிரகாரமான கேடுகளில் சிக்கினவர்களாக இருந்தால் அது அவருக்கு அதிக வேதனையை உண்டாக்கும்.

**12:21** இந்தக் கொரிந்தியர் பவுலின் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமானவர்கள். அவர்கள் அவருடைய மகிமையாகத் திகழ்ந்தார்கள். அவர் அவர்களிடமாய் வந்து, அவர்களுடைய நிலையைக் குறித்து வெட்கமடையக் கூடாது. மேலும் அவர், பாவம் செய்தவர்களாகிய அநேகர் தங்களுடைய அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பவில்லை என்று கண்டு அவர் துக்கம் அடையக்கூடாது என்றே விரும்பினார்.

பாவம் செய்தவர்களாகிய அநேகர் என்று பவுல் இங்கு யாரைக் குறிப்பிடுகிறார்? அவர்கள் கொரிந்து சபையில் இருந்தவர்கள் என்று கருதுவது சரியானதே; அவ்வாறு இல்லையெனில், அவர்களிடத்தில் பேசும்படி சபைக்கு இவ்வாறு எழுதவேண்டிய அவசியம் இல்லையே. ஆனால் அவர்கள் உண்மையான விசுவாசிகள் என்று நாம் ஊகிக்க முடியாது. அவர் இந்தப் பாவங்களை வழக்கமாகக் கொண்டிருந்தவர்கள் (தமிழில் வழக்கமாகக் கொண்டிருந்தவர்கள் என்று இல்லை) என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட நடத்தைகளைத் தங்களுடைய குணப்பண்பாகக் கொண்டிருப்பவர்கள் தேவனுடைய அரசைச் சுதந்தரிக்க மாட்டார்கள் என்று வேறுபகுதியில் தெளிவுபடுத்தியிருக்கிறார் (1 கொரி. 6:9,10). அவர்கள் மனந்திரும்பவில்லையென்றும், அவர்கள் சபைக்குப் புறம்பாக்கப்படவில்லையென்றும் அப்போஸ்தலன் துக்கம் அடைந்திருப்பார்.

இந்த அதிகாரம் மூன்றாவது வானத்தோடு தொடங்குகிறது. ஆனால் அது இழிவான பாவங்களைக் கொண்ட இவ்வுலகோடு முடிவடைகிறது என்று திருவாளர் டார்பி குறிப்பிடுகிறார். இவையிரண்டிற்கும் இடையே பரிகாரம் இருக்கிறது என்று அவர் கூறுகிறார் - அப்போஸ்தலனாகிய பவுல்மீது தங்கிய கிறிஸ்துவின் வல்லமை.[50]

**13:1** பவுல் மிக விரைவாகக் கொரிந்துப் பட்டணத்திற்குச் செல்லவிருந்தார். அவ்வாறு அவர் அங்கு போகும்போது, விசுவாசிகளிடத்தில் காணப்பட்ட பாவம் விசாரிக்கப்படும். அந்த விசாரணைகள் யாவும், உபாகமம் 19:15 -இல் கொடுக்கப்பட்டுள்ள தெய்வீக விதியின் பிரகாரமாக நடத்தப்படும்: **"சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே நிலைவரப்படும்."** பவுல் அப்பொழுது வழக்கு விசாரணையைத் தான் நடத்தப் போவதாகச் சொல்லவில்லை. அது உள்ளூர் சபையாலே நடத்தப்படும். இவர் அங்கே விசாரணையின்போது ஓர் ஆலோசகராக நடந்துகொள்வார்.

### ஐ. கொரிந்துப் பட்டணத்து விசுவாசிகளால் பவுல் அப்போஸ்தல நியமனம் உறுதிப்படுத்தப்படுதல் (13:2-6)

**13:2** பவுல் கொரிந்துப் பட்டணத்துக்கு இரண்டாம் முறை சென்றிருந்தபோது, மற்றபடி குறிப்பிடப்படாத சந்திப்பின்போது, குற்றம் இழைத்தோர் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியிருந்தார். **இப்பொழுது**, அவர்களை விட்டுத் **தூரமாயிருந்த**போதும், அவர் **மீண்டும்** அவர்களிடத்திற்குச் செல்லும்போது,

பாவஞ்செய்தவர்களைத் **தப்பவிடப் போவ தில்லையென்று** முன்னறிவிக்கிறார்.

**13:3** பவுல் உண்மையான அப்போஸ்தலன் அல்லவென்று எண்ணும்படியாகக் கள்ள போத கர்கள் கொரிந்தியரை வஞ்சித்திருந்தார்கள். பவுல் தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரபூர்வ மான பிரதிநிதி என்பதற்கான **அத்தாட்சியைக்** காட்டும்படி அவர்கள் அறைகூவல் விடுத்திருந் தார்கள். உண்மையாகவே **கிறிஸ்து** அவர் மூலமாகப் **பேசினார்** என்பதற்கு என்ன சாட்சி இருக்கிறது? அவர்களுடைய அதிகப்பிரசங் கித்தனமான கேள்வியைச் சொல்லி அப்போஸ் தலன் தனது பதிலைக் கூறத்தொடங்குகிறார்: **"கிறிஸ்து எனக்குள்ளே பேசுகிறாரென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே..."**

அவ்வாறு கூறிய பிறகு அப்போஸ்தலன் இடைப்பிறவரலாக ஓர் உண்மையைக் கூறுகிறார்: அவர்களிடத்தில் கிறிஸ்து தம்மை **வல்லமை யோடு** வெளிப்படுத்தினார். அவர்கள் நற்செய் தியை உளமார ஏற்றுக்கொண்டபோது, அவர் களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களைக் குறித்துப் பார்க்கும்போது அவற் றில் **பலவீனமானது** எதுவும் இல்லை.

**13:4** இரட்சகருடைய வாழ்விலும், அவருடைய ஊழியக்காரர்களுடைய வாழ்விலும் பலவீனத்தி லிருந்து வல்லமை உண்டாயிற்று என்று சொல் லக்கூடிய முரண்பாடு போன்று தோற்றமளிக்கும் நிகழ்ச்சிகளைப் பவுல் நினைவூட்டும் வண்ணம் "பலவீனம்" "வல்லமை" என்னும் சொற்களை இங்கு பயன்படுத்தியுள்ளார். நம்முடைய கர்த்தர் **சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனு டைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்.** அதுபோலவே அவருடைய சீடர்களும் தனிப்பட்ட நிலையில் அற்பமானவர்களாக இருந்தார்கள், ஆனாலும் கர்த்தர் தமது **வல்லமையை** அவர் கள் மூலமாக வெளிப்படுத்தினார். "**உங்களிட மாய் விளங்கிய தேவனுடைய வல்லமை யினால் அவருடனேகூடப் பிழைக்கிறோம்"** என்று பவுல் கூறுகிறபோது அவர் உயிர்த்தெழு தலைக் குறித்துப்பேசவில்லை. மாறாக, அவர் அவர்களிடமாய்ச் செல்லும்போது, பாவம் செய்த வர்களைக் குறித்த நடவடிக்கையில் அவர் **தேவ னுடைய வல்லமையை** வெளிப்படுத்துவார். அவர் பலவீனரும் வெறுக்கத்தக்கவருமாய் இருந்தார் என்று அவர்கள் கூறினார்கள். அவரோ ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் வலிமையுடைய வராய் விளங்குவார் என்பதைக் காட்டப்போகிறார்!

**13:5** இந்த வசனம் 3 -ஆவது வசனத்தின் முந்தின பகுதியோடு தொடர்புடையது: "கிறிஸ்து எனக்குள்ளே பேசுகிறாரென்பதற்கு அத்தாட்சி தேடுகிறீர்களே... **நீங்கள் விசுவாசமுள்ளவர் களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்."** அவருடைய அப்போஸ்தல ஊழி யத்திற்கு அவர்களே அத்தாட்சியாயிருந்தார்கள். அவர் மூலமாகவே அவர்கள் இரட்சகரண்டை வழிநடத்தப்பட்டார்கள். அவருடைய சான்றா தாரங்களை அவர்கள் காணவேண்டும் என்று நினைத்தால், அவர்களையே அவர்கள் நோக்கிப் பார்க்க வேண்டும்.

நாம் நம்முடைய இரட்சிப்பின் உறுதியைப் பெறுவதற்காக, *நமக்குள்ளாக* நோக்கிப் பார்க்க வேண்டும் என்று கற்பிக்க இந்த வசனம் அவ்வப் போது தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அச்செயல் நம்பிக்கை இழக்கச் செய்வதோடு ஐயங்களையும் ஏற்படுத்தக்கூடும். எல்லாவற் றிற்கும் முன்னதாக தேவனுடைய வார்த்தையே இரட்சிப்பின் உறுதியைத் தருகிறது. கிறிஸ்து வின்மீது நாம் நம்பிக்கை வைத்த அதே தருணத் தில், நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் என்னும் உண்மையைத் திருமறையின் அதிகாரத்தி னாலே அறியலாம். காலம் செல்லச் செல்ல புதிதான ஜீவனின் மற்ற சான்றுகளைக் கண்டறிய முடியும். அவையாவன: பரிசுத்த வாழ்வின்மீது புதிய அன்பு, பாவத்தின்மீது புதிய வகையில் வெறுப்பு, சகோதரரிடத்தில் அன்பு, நடைமுறை நீதி, கீழ்ப்படிதல், உலகத்திலிருந்து பிரிந்து வாழ்தல்.

தங்களுடைய இரட்சிப்பை மெய்ப்பிக்க கொரிந்தியர் தங்களையே சோதித்துப் பார்க்க வேண்டும் என்று பவுல் இங்கு கூறவில்லை. மாறாக,அவர்களுடைய இரட்சிப்பிலே அவரு டைய அப்போஸ்தல நியமனத்தின் உண்மை யைக் காணும்படியாகவே அவர் கூறுகிறார்.

அங்கே இரண்டு சாத்தியக்கூறுகளே இருந் தன: ஒன்று **இயேசுகிறிஸ்து** அவர்களுக்குள் ளாக இருந்தார், இல்லையேல் அவர்கள்போலி யானவர்கள் அதாவது **பரீட்சைக்கு நிற்கத் தகுதியற்றவர்கள். நில்லாதது** என்னும் சொல், உலோகம் சோதிக்கப்பட்டு உண்மையானது அல்ல என்பதைக் குறிக்கப் பயன்படும் சொல்லா கும். ஆகவே, ஒன்று கொரிந்தியர் உண்மையான விசுவாசிகளாக இருக்க வேண்டும் இல்லையேல், பரீட்சையில் தோற்றுப்போய் **நிற்கத் தகுதியற்ற வர்களாக** இருக்க வேண்டும்.

**13:6** அவர்கள் தங்களை உண்மையான விசுவாசிகள் என்று முடிவு செய்வார்களெனில், அப்போஸ்தலனாகிய பவுலும் உண்மையான வரென்றும், **நில்லாதவரல்லவென்றும்** உறுதி யாகும். கொரிந்தியருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட அற்புதமான மாற்றம் ஒரு கள்ள போதகரின் மூலமாக உண்டாயிருக்க முடியாது.

### ஒ. கொரிந்தியர் நலமானதைச் செய்ய வேண்டுமென்று பவுல் விரும்புதல் (13:7-10)

**13:7** கொரிந்து சபையில் பாவஞ்செய்தவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதைக் குறித்து பவுல் தொடர்ந்து எழுதுகிறார். தங்கள் நடுவிலே பாவத்தைக் கண்டும் அதனைப் பொறுத்துக் கொள்ளக்கூடிய **பொல்லாப்பைக்** கொரிந்தியர் செய்யாமலிருக்க, பவுல் **தேவனை நோக்கி விண்ணப்பம்** செய்கிறார். மாறாக, அவர்கள் ஒழுங்கை நிலைநாட்ட இடைவிடாமல் செயலாற்ற வேண்டும். மேலும் பாவம் செய்துவந்த அங்கத் தினரைச் சீர்பொருந்தச் செய்யவேண்டும். ஏதோ அவர் **பரீட்சைக்கு நின்றவரென்று காணப்படும் பொருட்டு** இவ்விதமாக அவர் மன்றாடவில்லை; தன்னை நல்லநிலையில் காட்டவேண்டும் என்ப தற்காகவும் அவர் இவ்வாறு செய்யவில்லை. தன்னுடைய அதிகாரத்திற்கு ஓர் அத்தாட்சியாக அவர்களுடைய கீழ்ப்படிதலைச் சுட்டிக்காட்ட லாம் என்னும் நோக்கத்துடனும் அவர் இந்த ஆலோசனைகளைக் கொடுக்கவில்லை. அந்தச் சிந்தனைக்குச் சற்றேனும் இடமில்லை. அது நியாயமானதும் நேர்மையானதுமாக இருப்பதால் அவர்கள் அதைச்செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஒருவேளை அதன் காரணமாக, அவர் **பரீட்சைக்கு நில்லாதவர் போலிருந் தாலும்**, அவர்கள் அதைச் செய்ய வேண்டு மென்றே அவர் விரும்புகிறார்.

பவுல் தன்னலமற்றவர் என்பதற்கான சான்றை நாம் இங்கு மீண்டும் காண்கிறோம். தன்னைப் பிறர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கான எண்ணம் அவருக்கு இருந்ததில்லை. மாறாக அவருடைய ஜெப எண்ணங்கள் யாவும் பிறர் நலம் கொண்டவையாகவே இருந்தன. ஒரு வேளை பவுல் தடியோடு கொரிந்துப் பட்டணத் துக்குச் சென்று, தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டி, ஒழுங்கு நடவடிக்கைகளைக் குறித்த கட்டளைகளில் அவர்களது கீழ்ப்படிதலைப் பெற்று, அதனைக் கள்ளபோதகர்களுக்கு எதி ரான வாதமாகப் பயன்படுத்தியிருக்கலாம். அதனைத் தன்னுடைய சட்டபூர்வமான அதிகாரம் என்று அவர் கூறவும் செய்யலாம். பவுல் கொரிந் தியரை விட்டுத் தொலைவில் இருந்தபோதே, அவர்களாகவே தேவையான ஒழுங்கு நடவடிக் கைகளை எடுப்பார்களெனில், அது பிரமாணங் களுக்கு உட்பட்டு நடக்கவேண்டும் என்று கருது கிறவர்களுக்கிடையே இவருக்குச் சாதகமற்ற நிலையை ஏற்படுத்தினாலும், அவ்வாறு அவர்கள் நடந்துகொள்வதையே இவர் விரும்புகிறார்.

**13:8** இந்த வசனத்தில் காணப்படும் **நாங்கள்** என்னும் சொல், பெரும்பாலும் அப்போஸ்தல ரைக் குறிக்கக்கூடும். அவர்கள் அனைவரும் செய்கிறவை, எவ்விதத் தன்னல நோக்கமு மின்றி, தேவனுடைய சத்தியம் எங்கும் பரவ வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே செய்யப் படவேண்டும். ஒழுங்கு நடவடிக்கை எடுக்கின்ற விசயத்திலும்கூட, தனிப்பட்ட ஒருவருடைய பழி வாங்கும் எண்ணம் தலைதூக்கக்கூடாது. எல் லாம் இறைவனின் புகழ்ச்சிக்காகவும், உடன் கிறிஸ்தவரின் நலனுக்காகவுமே நடக்க வேண்டும்.

**13:9** மீண்டும் இங்கு அப்போஸ்தலன் கொரிந் தியரோடு கொண்டிருந்த தொடர்பில் தன்னிடம் சற்றேனும் தன்னல எண்ணம் இல்லையென்று கூறுகிறார். அவருடைய பலவீனம், அவமதிப்பு, நிந்தை ஆகியவை, தேவனுக்குரியவற்றில் அவர்கள் பலப்படுவதற்குக் காரணமாக அமையு மென்றால் அதன் நிமித்தம் அவர் **சந்தோஷமே** அடைந்தார். இவ்வாறு அவர் களிகூர்ந்த சமயத் தில் அவர்கள் **நற்சீர் பொருந்தும்படிக்கு விண் ணப்பம்** செய்தார். அவர்களுக்கு நடுவில் பாவம் செய்து உள்ளத்தைப் புண்படுத்திய மனிதர் களுக்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கை களைக் குறித்த விசயத்தில், அவர்கள் சீர் பொருந்தி நிறைவானவர்களாக ஆகவேண்டு மென்று பவுல் விண்ணப்பம் செய்தார். தேவனு டைய சித்தம் முழுவதுமாக அவர்களிடத்தில் நிறைவேற வேண்டுமென்பது அவருடைய ஊக்க மான விருப்பமாயிருந்தது. "அவர்கள் குழப்பத் திலும், சச்சரவுகளிலும், தீமையிலும் வீழ்ந்து போயிருந்தார்கள். அந்நிலையிலிருந்து அவர் கள் முற்றிலுமாக நற்சீர் பொருந்த வேண்டு மென்று பவுல் விண்ணப்பம் பண்ணினார்" என்று திருவாளர் ஹாட்ஜ் அழகுறக் குறிப்பிடுகிறார்.[51]

**13:10** அவர்கள் நற்சீர்பொருந்துவதை நோக்கமாகக்கொண்டே பவுல் இந்த மடலை அவர்களுக்கு எழுதினார். **கர்த்தராலே அதி காரம்** பெற்றவராக அவர் அவர்களிடமாய் வந் திருந்தபோது, **கண்டிதம் பண்ணாதபடிக்கு**,

மேற்கூறிய விளைவுகள் அவர்களிடத்தில் நிறை வேறும் பொருட்டு அவர்களை விட்டுத் **தொலை வில் இருந்தபோதே** இதை அவர் எழுதினார். மாறாக அவர் அவர்களிடத்திற்கு வந்தபோது அவர்களிடம் கண்டிப்போடு நடந்திருந்தால், அது அவர்களை **இடித்துப்போடுவதற்காக அல்ல, ஊன்றக் கட்டுவதற்கான** செயலாகவே அமைந் திருக்கும்.

### ஓ. கிருபைநிறை மூவொரு இறைமைக் கோட் பாட்டுடன் பவுல் பிரியாவிடை கூறுதல் (13:11-14)

**13:11** சீற்றம் மிகுந்த இந்த மடலை அப்போஸ் தலன் சடுதியில் முடிவுக்குக் கொண்டு வருகிறார். அவர்களுக்குப் **பிரியாவிடை** (கிரேக்க மொழி யில் இருப்பது போலவே தமிழில் சந்தோஷமா யிருங்கள் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள் ளது.) கூறியவுடனே நான்கு அறிவுரைகளை அவர் கூறுகிறார். முதலாவது, அவர்கள் **நற்சீர் பொருந்த** வேண்டும். இதே வினைச்சொல் மத்தேயு 4:21 -இல் வலைகளைப் பழுதுபார்த்தல் என்னும் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே "உங்கள் வழிகளைப் பழுதுபாருங்கள்" என்னும் பொருளையும் கூறலாம். சண்டைபோடு வதையும், பாவம் செய்வதையும் அவர்கள் விட் டொழித்து, ஒருவரோடொருவர் இணக்கமாக வாழவேண்டும்.

**ஆறுதலடையுங்கள்**. உற்சாகமடைதல் அல்லது அறிவுரைபெறுதல் என்றும் இதற்குப் பொருள் கூறலாம். அப்போஸ்தலனாகிய பவுலால் அவர்கள் கண்டிப்பாக உணர்த்துவிக்கப்பட் டார்கள். இந்த அறிவுரைகளை அவர்கள் நல்ல உள்ளத்தோடு ஏற்று, அவற்றின் பிரகாரமாகச் செயல்படும்படி அவர் இங்கு கூறுகிறார்.

**ஏகசிந்தையாயிருங்கள்**. கிறிஸ்தவர்கள் ஏகசிந்தையாயிருப்பதற்கு ஒரேவழி *கிறிஸ்து வின் சிந்தையைப்* பெறுவதே ஆகும். இ.·.து அவர் சிந்திக்கிற வண்ணம் சிந்திப்பதாகும். அவர் களுடைய எல்லா சிந்தனைகளையும், விவாதங் களையும் அவருக்குக் கீழ்ப்படுத்துவதே ஏக சிந்தையாயிருப்பதாகும்.

**சமாதானமாயிருங்கள்**. அவர்களுக்குள் ளாக வாக்குவாதங்களும் சச்சரவுகளும் இருந் தன என்பது 12:20 -ஆம் வசனத்திலிருந்து தெரிய வருகிறது. பிரமாணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்னும் கொள்கையை நுழையவிட் டால் இந்நிலை ஏற்படுவது நிச்சயம். ஆகவே, முதலாவது குற்றம் புரிந்தோர்மீது அவர்கள் நட வடிக்கை எடுக்கவேண்டும், அதன்பிறகு தங்களு டைய உடன் கிறிஸ்தவர்களோடு அவர்கள் சமாதானமாயிருக்க வேண்டும்.

இதனை அவர்கள் செய்வார்களெனில், **அன் புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன்** அவர்களோடு இருப்பார். ஒரு பொருளில் கர்த்தர் தம்முடைய மக்களோடு *எப்பொழுதும்* இருக் கிறார். ஆனால், மேற்கூறியவற்றில் அவர்கள் கீழ்ப்படிவார்கள் எனில், அவர்தாமே தம்மை மிகச் சிறப்பான வகையில் நெருக்கமாகவும் பிரிய மாகவும் வெளிப்படுத்துவார் என்னும் பொருளை யும் இது உடையதாயிருக்கிறது.

**13:12** அப்போஸ்தலருடைய நாட்களில், **பரி சுத்த முத்தம்** செய்து வாழ்த்துதல் கிறிஸ்தவர் களிடையே நிலவிவந்த தனிச்சிறப்பு மிக்க வழக்க மாகும். அது பரிசுத்த முத்தம் என்னும் பெயரைப் பெற்றிருக்கிறது. ஆகவே அது வெறுமனே செயற் கையான பாசத்தைக் காட்டும் அடையாளம் அல்ல, மாறாக அது கபடற்றதும் தூய்மையானது மாகும் என்பது புலப்படுகிறது. இன்றைய நாட்களி லும் பல நாடுகளில் கிறிஸ்தவர்களுக்கிடையே இப்பழக்கம் நிலவிவருகிறது. ஆயினும் சில நாடுகளில் ஆணுக்கு ஆண் முத்தம் செய்வது ஓரினச்சேர்க்கைக்கு அடையாளமாக கருதப்படு கிறது. கிறிஸ்தவச் சாட்சிக்கு அவப்பெயர் உண் டாக்குமானால் இவ்வழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை. அப்படிப் பட்ட சூழ்நிலையில் பரிசுத்த கைகுலுக்கல் போது மானது. ஹாட்ஜ்என்பார் கூறுகிறார்:

> இது என்றென்றும் கட்டாயமாகக் கைக் கொள்ள வேண்டிய கட்டளையல்ல. இந்தக் கட்டளையின் உட்பொருள் யாதெனில், கிறிஸ் தவர்கள் அவரவர் வாழ்கின்ற காலத்திற்கும், சமுதாய சூழ்நிலைக்கும் தக்கவண்ணம் ஒருவருக்கொருவர் அன்பை வெளிப்படுத்திக் காட்டவேண்டும் என்பதே ஆகும்.[52]

**13:13 பரிசுத்தவான்கள் எல்லோரும்** கூறு கிற வாழ்த்துதல், கொரிந்தியர் எப்படிப்பட்ட ஐக் கிய எல்லைக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறார் கள் என்பதை நினைவுபடுத்துகிறது. அவர்களு டைய வளர்ச்சியையும், கர்த்தருக்கு அவர்கள் கீழ்ப்படிகிறதையும் காண மற்ற சபை மக்கள் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை யும் இது தெரிவிக்கிறது.

**13:14** புதிய ஏற்பாட்டு நூலில் காணப்படும் மிக இனிமையான வாழ்த்துரைகளில் ஒன்றை இங்கு

நாம் காண்கிறோம். இந்த ஒரே ஒரு வாழ்த்துரை மட்டுமே மூவொரு இறைவனின் மூன்று நபர்களையும் உள்ளடக்கியதாகும். திருவாளர் லென்ஸ்கி முடிவுரை வழங்குகிறார்:

> நுண்மாண் நுழைபுலமிக்க புதிய ஏற்பாட்டு வாழ்த்துரையோடு அப்போஸ்தலன் தனது கரங்களைக் கொரிந்தியர்மீது விரிக்கிறபோது, அவருடைய பேச்சின் தொனி அமைதி என்னும் ஆழத்துக்குள் மூழ்குகிற படவுருவை நாம் இங்கு காண்கிறோம். ஆனால் அந்த வாழ்த்துரை நமது இதயங்களில் என்றென்றும் நிலைத்திருக்கிறது.[53]

## அடிக்குறிப்புகள் - End Notes

1 (1:2) James Denny, The Second Epistle to the Corinthians, p.11.

2 (1:10) நடுநிலைப் பிரதியில் (NU) ஒரு இறந்தகால வினைச்சொல்லும் இரண்டு எதிர் கால வினைச்சொற்களும் இடம்பெற்றுள்ளன.

3 (1:20) H. W. Cragg, The Keswick Week, p. 126.

4 (2:11) J. Sidlow Baxter, Awake My Heart, taken from the Nov. 10 reading, "Intoxication with error."

5 (2:14) A. T. Robertson, The Glory of the Ministry, p. 32.

6 (2:14) Frederick Brotherton Meyer, Paul, p. 77

7 (2:15) Ibid., p. 78.

8 (2:17) பெரும்பான்மைப் பிரதியில் "மற்ற வர்களைப் போல" என்னும் கண்டிப்பான சொற் கள் இடம்பெற்றுள்ளன; இது உயர்வு நவிற்சியா கச் சொல்லப்பட்டது என்பதில் ஐயமேதுமில்லை. இவ்வகை உயர்வு நவிற்சிச் சொற்களை 2 கொரிந்தியரில் அவ்வப்போது காண லாம்.

9 (2:17) Robertson, *Ministry,* p 47.

10 (3:6) J. M. Davies, *The Epistles to the Corinthians,* pp. 168, 169

11 (3:9) Charles Hodge, *A Commentary on the Second Epistle to the Corinthians,* p.61.

12 (3:10) Robertson, *Ministry,* p. 70.

13 (3:10) Denny, *Second Corinthians,* p. 123.

14 (3:13) F. W. Grant, *"2 Corinthians," The Numerical Bible,* VI:547.

15 (3:14) Hodge, *Second Corinthians,* p. 71.

16 (3:17) NKJV மொழிபெயர்ப்பாளர்கள் இதனைப் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் சொல் என்று கருதியே பெரிய எழுத்துகளால் எழுதியுள்ளனர். இதனுடைய மூலமும் எல்லாம் தடித்த எழுத்துகளால் ஆனது. ஆகவே இரண் டில் எந்தப் பொருளையும் எடுத்துக்கொள்ளலாம்.

17 (3:18) Denny, *Second Corinthians,* pp. 139, 140.

18 (3:18) J. N. Darby, *Notes on I and II Corinthians,* pp. 189, 190.

19 (4:7) J. H. Jowett, *Life in the Heights.* p. 65.

20 (4:12) Robertson, *Ministry,* p. 157.

21 (4:16) H. A. Ironside, further documenta-tion unavailable.

22 (4:17) "மகிமை" என்னும் சொல் எபிரெய மொழியில் "கனமானது" என்னும் வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. பவுல் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியதற்கான காரணத்தை இது விளக்குகிறது. (தமிழில் "கன மகிமை" என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.)

23 (4:17) William C. Moorehead, Outline Studies in the New Testament: Acts to Ephesians, p. 191.

24 (4:17) F. E. Marsh, Fully Furnished, p. 103.

25 (4:18) Jowett, Life in the Heights, pp. 68,69.

26 (5:15) Denny, Second Corinthians, p. 199.

27 (5:16) David Smith, further documentation unavailable.

28 (5:18) A New and Concise Bible Dictionary, p. 652.

29 (6:4) Denny, Second Corinthians, p. 230.

30 (6:9) "அறியப்படாதவரென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்" என்னும் வாசகம் ஜான் நெல்சன் டார்பி (1800–1822) அவர்களின் கல்லறையின்மேல் பொறிக்கப்பட்டிருப்பது மிகப் பொருத்தமானதே. இவரும் பவுல் அப்போஸ்தலனைப்போல உலகமெங்கும் சென்று திருப்பணியாற்றினார்.

31 (6:10) Robertson, *Ministry,* p. 238.

32 (6:11) A. W. Tozer, *The Root of the Righteous,* 1955.

33 (6:16) Denny, *Second Corinthians,* p. 246.

34 (7:8) George Williams, *Student's Commentary on the Holy Scriptures,* p. 904.

35 (7:9) Hodge, *Second Corinthians*, p. 182.

36 (8:7) Denny, *Second Corinthians*, p. 267.

37 (8:9) Moorehead, *Acts to Ephesians,* pp. 179, 180.

38 (8:15) Hodge, *Second Corinthians,* p. 206.

39 (8:21) Campbell Morgan, *Searchlights from the Word,* p. 345.

40 (9:7) Jowett, *Life in the Heights,* p. 78.

41 (11:17) Charles C. Ryrie, *The Ryrie Study Bible, New King James version,* p. 1797.

42 (11:20) J. N. Darby. *Notes on I and II Corinthians,* p. 236.

43 (11:27) Hodge, *Second Corinthians,* p. 275.

44 (11:33) J. B. Watson, further documenta-tion unavailable.

45 (12:4) Morgan, *Searchlights*, p. 346.

46 (12:7) R. J. Reid, *How Job Learned His Lesson,* p. 69.

47 (12:7) கலாத்தியர் **4:15; 6:11** ஆகிய வசனங்களைக் காண்க.

48 (12:7) Moorehead, *Acts to Ephesians,* p. 197.

49 (12:9) J. Oswald Sanders, *A Spiritual Clinic,* pp. 32,33.

50 (12:21) Darby, *I and II Corinthians,* p. 253.

51 (13:9) Hodge, *Second Corinthians,* p. 309.

52 (13:12) Ibid., p. 312

53 (13:14) R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's First and Second Epistles to the Corinthians,* p. 1341.

## Bibliography

Darby, J. N. *Notes on I and II Corinthians*. London: G. Morrish, n.d.

Davies, J. M. *The Epistles to the Corinthians*. Bombay: Gospel Literature Service, 1975.

Denny, James. *The Second Epistle to the Corinthians.* London: Hodder & Stoughton, 1894.

Erdman, C. R. *Second Epistle of Paul to the Corinthians.* London: Philadelphia: Westminister Press, 1929.

Grant, F. W. *"2 Corinthians," The Numerical Bible. Vol.6, Acts - 2 Corinthians.* New York: Loizeaux Brothers, 1901.

Hodge, Charles. *The Second Epistle to the Corinthians.* London: The Banner of Truth Trust, 1959.

Hughes, Philip E. *Commentary on the Second Epistle to the Corinthians.* Grand Rapids: Wm. B. Eerdmans publishing Co., 1962.

Kelly. William. *Notes on the Second Epistle to the Corinthians.* London: G. Morrish, 1882.

Lenski, R. C. H. *The Interpretation of St. paul's First and Second Epistles to the Corinthians.* Columbus: Wartburg Press, 1937.

Luck, G. Coleman. *Second Corinthians*. Chicago: Moody Press, 1959.

Robertson, A. T. *The Glory of the Ministry.* New York: Fleming H. Revell Co., 1911.

Wilson, Geoffrey B. *2 Corinthians: A Digest of Reformed Comment.* London: The Banner of Truth Trust, 1973.

அப்போஸ்தலனாகிய பவுல்

# கலாத்தியருக்கு எழுதின நிருபம்

## முன்னுரை

''அகில உலகிற்கும் எல்லாக் காலத்திற்கும் உரிய ஆன்மீக விடுதலைக்கான பேருரிமைப் பத்திரம்.''

– சார்லஸ் R. எர்ட்மேன்

### 1. வேதநூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளைப் பேசுவோரில் பெரும்பான்மை மக்கள் கெல்ட்டிய இனத்தவர் ஆவர் - அதாவது ஸ்காட்லாந்து, அயர்லாந்து, வேல்ஸ் அல்லது பிரிட்டன் நாட்டினர். இந்த இனத்தார் தங்களுடைய முன்னோருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய தொடக்க மடல்களில் ஒன்றை எழுதினார் என்பதை அறிவார்களாகில், அது அவர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்து இழுக்கக் கூடியதாக இருக்கும் ("கலாத்தியா", "கெல்ட்," மற்றும் காவ்ல்" ஆகிய சொற்கள் ஒன்றோடொன்று தொடர்புடையன).

ஏறத்தாழ கி.மு 278 - இல் ஐரோப்பியாவில் வாழ்ந்த கால்ஸ் என்னும் இனத்தார் பலர், தற்போது துருக்கி என்று அழைக்கப்படும் நாட்டிற்குக் குடியேறினர். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வசித்த அம்மக்களின் நாடு "கலாத்தியா" என்னும் பெயர் பெற்றது. கலாத்தியருடைய நிலையற்ற தன்மையில் "கெல்ட்டிக்" இனத்தாரின் இயல்பைக் காண்பதாகப் பலர் எண்ணுகிறார்கள் (எடுத்துக்காட்டாக, அப். 13; கலா. 3:1).

அது அவ்வாறு இருக்க, கலாத்தியருக்கு எழுதப்பட்ட மடல் தொடக்க காலக் கிறிஸ்தவத்தில் மிக முக்கியமான பங்கை நிறைவேற்றியிருக்கிறது. ரோமர் மடலின் "முந்தின வரைவு" என்று இம்மடலைக் குறித்து அவ்வப்போது சொல்லப்படுகிறது (கிருபையின் நற்செய்தி, ஆபிரகாம், நியாயப்பிரமாணம் போன்ற பல பொருட்களைக் குறித்த விவரங்கள் இரண்டு மடல்களிலும் ஒரேவிதமாகக் காணப்படுகின்றன). ஆயினும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று கூறும் யூதமார்க்கத்தின் "மேசியாக் கூட்டத்தாராகிய" பிரிவே கிறிஸ்தவம் என்னும் நிலைக்கு மாற்றம் பெறுவதிலிருந்து, அதனைக் காப்பாற்றக் கூடிய கண்டிப்பான தீவிரமிக்க முயற்சியாக இம்மடல் விளங்குகிறது. கலாத்தியர் இந்தக் கடிதத்திற்கு எவ்வாறு பதிற்செயல்புரிந்தார்கள் என்பதை நாம் அறியோம். ஆனால் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இன்றி, கிருபையின் சுவிசேஷம் வெற்றி பெற்றது. மேலும் கிறிஸ்தவம் உலகளாவிய விசுவாசமாகப் பரவியது.

சீர்திருத்த காலத்தின்போது, லுத்தர் கலாத்தியர் மடலை "என் கெய்தே" (அவர் தனது மனைவியை அன்போடு அழைத்த பெயர்) என்று குறிப்பிடும் அளவிற்கு முக்கியம் வாய்ந்ததாகக் கருதினார். அவர் கலாத்தியருக்கு எழுதிய விளக்கவுரை அறிஞர்களை மட்டுமின்றி பொதுமக்களையும் ஆட்கொண்டது. அவ்விளக்கவுரை இன்னும் அச்சிடப்பட்டு படிக்கப்படுகிறது.

### 2. நூலாசிரியர்

கலாத்தியர் மடல் பவுல் எழுதியது என்னும் உண்மைக்கு எதிராகக் கடுமையான வாதம் ஒருக்காலும் எழுப்பப்படவில்லை. பாலிகார்ப், இக்னேசியஸ், ஜஸ்டின் மார்டியர், ஆரியன், ஐரேனியஸ், தெர்த்தூலியன், அலெக்சாண்ட்டிரிய கிளமெந்து ஆகியோர் இதனைப் பவுல் எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். முரடோரியன் வேத நூல் தொகுப்பில் இது பவுல் எழுதிய நூல் என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவேளை பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தை இந்நூல் வன்மையாகக் கண்டித்து எழுதப்பட்டிருப்பதால், இது மார்சியன் தொகுப்பில் முதலிடம் பெற்றது போலும். இவ்வாறாகப் புறச்சான்று வலிமைபடைத்ததாக விளங்குகிறது.

இந்நூலைப் பவுலே எழுதினார் என்பதற்கான அகச்சான்று, அவர் தன்னைப் பற்றி குறிப்பிட்ட பகுதிகளில் தொடங்குகிறது (1:1; 5:2). மேலும் அவர் மடலின் இறுதியில் "என் கையெழுத்தாய் எவ்வளவு (பெரிய எழுத்துகளால்) எழுதினேனென்று பாருங்கள்" (6:11) என்று எழுதிய குறிப்

பிலும் இது புலப்படுகிறது. அப்போஸ்தலன் கண்நோய் உடையவராயிருந்தார் என்பதையே இது குறிக்கிறது என்று பரவலாகக் கருதப்படு கிறது. ஒரு காலத்தில் கலாத்தியர் பவுலுக்காகத் தங்களுடைய கண்களைப் பிடுங்கிக் கொடுக் கவும் ஆயத்தமாயிருந்தார்கள் என்னும் செய்தி யும் இக்கருத்தை ஆதரிக்கும் சான்றாகும். பல வரலாற்றுக் குறிப்புகள் அப்போஸ்தலர் நடபடி கள் நூலோடு பொருந்தியிருக்கின்றன. விருத்த சேதனத்தைக் குறித்த கருத்து வேறுபாடு, பவுல் மெய்யான அப்போஸ்தலனா, என்பவை கி. பி. 50 - 60 ஆண்டுகளில் சர்ச்சைக்குரியவையாக இருந் தன. ஆனால் அவை பிற்பாடு ஓய்ந்துபோயின.

## 3. எழுதப்பட்ட காலம்

"கலாத்தியா நாட்டிலுள்ள சபைகள்" மற்றும் "கலாத்தியர்" ஆகிய சொற்றொடர்களின் துல்லி யமான பொருளைச் சார்ந்தே இம்மடலின் எழுதப் பட்ட காலத்தை அறிய முடியும். ஆசியா மைனர் என்னும் நிலப்பகுதியின் தென்பாகத்தை இது குறிப்பிடுமென்றால் எருசலேம் சபைமன்றம் கூடிய காலத்திற்கும் முந்தைய காலத்தை எடுத்துக் கொள்ளலாம். அதன் வடபகுதியை அச்சொற் றொடர்கள் குறிப்பிடுமென்றால் பிந்தின காலத் தது என்றே சொல்லவேண்டும்.

புவியியல் அமைப்பின்படி "கலாத்தியா" என்ற சொல் வடபகுதியையும், அரசியல் அமைப்பின் படி அச்சொல் தென்பகுதியையும், அதாவது ரோம அரசின் ஒரு மாகாணமாக விளங்கிய கலாத்தியாவைக் குறிக்கும்.

அச்சொற்றொடர்கள் வட கலாத்தியா பகுதி களையே குறிக்கின்றன என்னும் கொள்கை பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஏற்றுக்கொள் ளப்பட்டிருந்தது. ஜெர்மானிய அறிஞர்கள் இன் னும் அதே கருத்தைப் பெரும்பாலும் கொண்டிருக் கிறார்கள். பவுல் அந்தப் பகுதி "கலாத்தியரி டையே" ஊழியம் செய்ததற்கான சான்றுகள் இல்லை. ஆயினும் இந்தக் கருத்தை அடியோடு மறுத்துவிட முடியாது.

தென் கலாத்தியா பகுதியையே அச்சொற் றொடர்கள் குறிக்கின்றன என்று சர் வில்லியம் ராம்சே பிரபலப்படுத்திய பின்னர், அந்தக் கருத்தை இங்கிலாந்து மற்றும் வடஅமெரிக்கா ஆகிய நாடு களைச் சேர்ந்தோர் பரவலாக ஏற்றுக்கொண்டார் கள். பவுல் அந்தப் பகுதியில் ஆற்றிய திருப்பணி யைக் குறித்து லூக்கா மிக விவரமாக எழுதி யிருப்பதால் (பிசிதியாவில் இருந்த அந்தியோகியா, இக்கோனியம், லீஸ்திரா, தெர்பை), அங்கிருந்த விசுவாசிகளுக்கு இம்மடலை அப்போஸ்தலன் எழுதியிருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தனது முதல் திருப் பணிப் பயணத்தின்போது தென் கலாத்தியாவில் ஊழியம் செய்தார். அவர் தனது இரண்டாவது பயணத்தின்போது அந்த இடங்களுக்கு மீண்டும் சென்றார். ஆகவே கலாத்தியா நிருபம் முந்திய காலத்தது என்று கணக்கிடலாம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலில் 15 - ஆவது அதிகாரத்தில் எருசலேம் சபை மன்றம் கூடியது (கி. பி. 49). அதற்கு முன்னமே இம்மடல் எழுதப்பட்டதாகக் கொள்வோமெனில், விருத்த சேதனம் செய்துகொள்ள வேண்டும் என்னும் கொள்கை ஏன் சர்ச்சைக்குரியதாக இருந்தது என்பதை அது விளக்கிக் கூறும். ஜெர்மானிய அறிஞரும் பழைமைப் பற்றாளருமாகிய தியோடர் ஜாஹன், பவுல் தனது இரண்டாவது பயணத்தின் போது கொரிந்துப் பட்டணத்திலிருந்து இம் மடலை எழுதினார் எனக் கூறுகிறார். அவ்வாறு கொள்வோமெனில் இம்மடலே பவுல் எழுதிய முதலாவது மடலாகும்.

அச்சொற்றொடர்கள் வட கலாத்தியா பகுதி யைக் குறிக்கிறது எனக் கொள்வோமெனில், இம்மடல் கி. பி. 53 அல்லது அதற்குப் பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

தென்கலாத்தியா கொள்கையே சரியானதாக இருக்குமென்றால் (நாமும் அவ்வாறே நம்பு கிறோம்), புறவினக் கிறிஸ்தவர்கள் விருத்த சேதனம் பெற வேண்டுமா என்ற கேள்விக்கு முடிவெடுக்கும்படி எருசலேம் சபை மன்றம் கூடிய தற்கு முன்னமே இந்த மடல் எழுதப்பட்டிருக்கும் அவ்வாறெனில் இம்மடல் கி. பி. 48 -இல் எழுதப் பட்டதாகும்.

## 4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

அப்போஸ்தலனாகிய பவுல் மேற்கொண்ட திருப்பணி ஊழியத்தின் தொடக்கத்தில், அவர் ஆசியா மைனர் என்னும் நிலப்பகுதிக்குச் சென்று, கிறிஸ்துவின்மீது வைக்கும் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகும் என்கிற புகழ்ச்சி மிக்க செய்தியை அறிவித்தார். அவரைக் கேட்ட வர்களில் பலர் இரட்சிப்படைந்தார்கள், சபைகள் நிறுவப்பட்டன, அவற்றில் பல கலாத்தியா நாட் டில் இருந்தன. கலாத்தியா நாட்டு மக்கள் மன உலைவு கொண்டவர்கள், பேரார்வம் மிக்கவ ர்கள், எளிதில் மாறும் இயல்புடையவர்கள் என்று பெயர்பெற்றிருந்தார்கள்.

பவுல் அந்த இடத்தைவிட்டுச் சென்றபிறகு, கள்ள போதகர்கள் சபைக்குள் நுழைந்து தவறான உபதேசத்தை அறிமுகப்படுத்தினார் கள். கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத் தோடு, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வ தாலேயே இரட்சிப்பைப் பெறமுடியும் என்று அவர்கள் கற்பித்தார்கள். அவர்களுடைய செய்தி கிறிஸ்தவமும் யூதமார்க்கமும் சேர்ந்த கலப்பட மாக இருந்தது. அதனைக் கிறிஸ்துவும் மோசே யும் சேர்ந்ததென்றும் சொல்லலாம். பவுல் மெய் யான அப்போஸ்தலன் இல்லையென்றும், ஆகவே அவருடைய செய்தி நம்பத்தகுந்ததல்லவென்றும் அவர்கள் கூறினார்கள். பிரசங்கம் ஆற்றியவர் நம்பத்தகாதவர் என்பதால், அவரது பிரசங்கமும் நம்பத்தகாதது என்ற முடிவுக்கு வரும்படியான சூழ்ச்சிவேலை செய்தார்கள். அவர்களுடைய பொல்லாங்கான ஆலோசனையால் கலாத்திய விசுவாசிகளில் பலர் பாதிக்கப்பட்டார்கள்.

கலாத்தியாவிலிருந்து அந்தச் செய்தி பவுலைச் சென்றடைந்தபோது, எத்தகைய வேதனையும் ஏமாற்றமும் அவருடைய இருதயத்திற்கு உண்டா யிருக்கும்! அந்த மக்களிடையே அவர் ஆற்றிய பணி யாவும் வீணாகிவிட்டதா? யூதமார்க்கத்து போதனைகளிலும் நியாயப்பிரமாணத்திற்குரிய போதனைகளிலும் சிக்கிக்கொண்டிருந்த கிறிஸ்த வர்களை அவற்றிலிருந்து விடுவிக்க முடியுமா? பவுல் உடனடியானதும் உறுதியானதுமான செயலைச் செய்ய ஏவப்பட்டார். அவர் தனது எழுதுகோலையெடுத்து, விசுவாசத்தில் தனது பிரியமான பிள்ளைகளான கலாத்தியருக்கு இந்த சீற்றம் மிகுந்த மடலை எழுதினார். தொடக்கத்தி லிருந்து முடிவு வரை இரட்சிப்பைக் கிருபையே அருளுகிறது எனவும், நியாயப்பிரமாணத்தை முழுமையாகவோ, அதில் ஒரு பகுதியையோ கடைப்பிடிப்பதால் இரட்சிப்பை அடைய முடியாது எனவும் இம்மடலில் அவர் விளக்கிக் கூறுகிறார். நற்செயல் இரட்சிப்பிற்கான நிபந்தனையல்ல, அது இரட்சிப்பின் கனியேயாகும். கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்திற்கு இறந்துவிட்டான், அவன் தூயவாழ்க்கை நடத்துகிறான். அவன் நடத்தும் தூயவாழ்க்கை அவனுடைய சொந்த முயற்சி யினால் உண்டானதல்ல, மாறாக அவனுள்ளில் குடியிருக்கும் தேவனுடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினாலேயே அவன் அவ்வாறு வாழ் கிறான்.

## பொருட்சுருக்கம்

**1. தனிப்பட்ட முறையில் எழுதப்பட்ட பகுதி: பவுல் தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டுதல் (அதிகாரங்கள் 1,2)**

அ. பவுல் இம்மடலை எழுதுவதற்கான நோக்கம் (1:1-10)

ஆ. தனது செய்தியைக் குறித்தும் ஊழியத்தைக் குறித்தும் பவுல் ஆதரித்துப் பேசுதல் (1:11-2:10)

இ. பவுல் பேதுருவைக் கடிந்துகொள்ளுதல் (2:11-21)

**2. உபதேசப் பகுதி: விசுவாசத்தினால் மட்டுமே நீதி உண்டாகிறது என்னும் கொள்கையைப் பவுல் உறுதிப்படுத்துதல் (3:1-5:1)**

அ. நற்செய்தியின் மாபெரும் சத்தியம் (3:1-9)

ஆ. நியாயப்பிரமாணமும் வாக்குத்தத்தமும் (3:10-18)

இ. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் (3:19-29)

ஈ. பிள்ளைகளும் புத்திரர்களும் (4:1-16)

உ. அடிமைத்தனம் அல்லது விடுதலை (4:17-5:1)

**3. நடைமுறை சார்ந்தவை: ஆவியில் பெறும் கிறிஸ்தவத் தன்னுரிமையைப் பவுல் நிலைநாட்டுதல் (5:2-6:18)**

அ. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கோட்பாட்டினால் உண்டாகும் இடர் (5:2-15)

ஆ. பரிசுத்தத்திற்கான வலிமை (5:16-25)

இ. நடைமுறை வாழ்க்கைக்கான அறிவுரைகள் (5:26-6:10)

ஈ. முடிவுரை (6:11-18)

## பொருட்சுருக்க அட்டவணை

| தலைப்பு | கிருபையின் சுவிசேஷத்தைப் பாதுகாத்தல் | | கிருபையின் சுவிசேஷத்தை உறுதிசெய்தல் | | கிருபையின் சுவிசேஷத்தை நிலைநாட்டுதல் | |
|---|---|---|---|---|---|---|
| பகுப்பு | பவுலின் அப்போஸ்தல ஊழியம் | பவுலின் அப்போஸ்தல அதிகாரம் | நீதிச்சட்டத்தின் அடிமைத்தனம் | கிருபை அருளும் விடுதலை | ஆவியின் கனி | ஆவியின் கனிகள் வெளிப்படுதல் |
| அப்போஸ்தலனின் ஈடுபாடு | சுய அனுபவ விளக்கம் | | உபதேச விளக்கம் | | நடைமுறை அறிவுரைகள் | |
| | விடுதலையின் வியாபகம் | | விடுதலையைப் பற்றிய விளக்கம் | | விடுதலையை அனுபவமாக்குதல் | |
| வசனம் | 1:1-24 | 2:1-21 | 3:1-29 | 4:1-31 | 5:1-26 | 6:1-18 |

## விளக்கவுரை

### 1. தனிப்பட்ட முறையில் எழுதப்பட்ட பகுதி: பவுல் தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டுதல் [அதிகாரங்கள் 1,2]

#### அ. பவுல் இம்மடலை எழுதுவதற்கான நோக்கம் [1:1-10]

**1:1** தொடக்கத்திலேயே, தான் பெற்ற **அப்போஸ்தல** அழைப்பு தெய்வீகமானது என்று **பவுல்** வலியுறுத்துகிறார். **மனிதரிடத்தில்** அது தொடங்கவுமில்லை, அல்லது தேவனிடத்திலிருந்து அவருக்கு ஒரு **மனிதர் மூலமாகச்** சொல்லப்படவுமில்லை. அது நேரடியாக **இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும்** உண்டாகி அவரிடத்திற்கு வந்தது. இவ்விதமாக தேவனாலே மட்டும் அழைக்கப்பட்ட மனிதன், தேவனுக்கு மட்டுமே உத்திரவாதம் அளிக்க வேண்டியவனாகவும், தேவனுடைய செய்தியை எந்த மனிதனுக்கும் அஞ்சாமல் பிரசங்கிக்க உரிமை பெற்றவனாகவும் இருக்கிறான். ஆகவே பவுல் தன்னுடைய செய்தி மற்றும் தன்னுடைய ஊழியம் ஆகியவற்றைப் பொருத்தமட்டில் மற்ற பன்னிரு அப்போஸ்தலரையும் வேறு எவரையும் சார்ந்திருக்கவில்லை.

இந்த வசனத்தில், கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்துச் சொல்லப்பட்டதோடு, அது குறிப்பாய்ச் சுட்டியும் காட்டப்பட்டிருக்கிறது. இங்கு **மனிதர் மூலமாக அல்ல**, மாறாக **இயேசு கிறிஸ்துவின் மூலமாக** என்னும் சொற்றொடரில் அவ்வுண்மை சொல்லப்பட்டிருக்கிறது. **இயேசு கிறிஸ்துவையும் பிதாவாகிய தேவனையும்** பவுல் ஒன்றாக இணைத்திருக்கிற விதம் அதனைக் குறிப்பாய்க் சுட்டிக்காட்டுகிறது. இங்கு ஒருவரோடொருவர் சமத்துவ நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் **இயேசுவை மரித்தோரிலிருந்து** உயிரோடு **எழுப்பியவர் பிதாவாகிய தேவனே** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. கலாத்தியருக்குப் பவுல் இதனை நினைவுபடுத்துவதற்கு நல்ல காரணம் இருந்தது. நம்முடைய இரட்சிப்பின் பொருட்டு கிறிஸ்து ஆற்றிய செயலில் தேவன் முழுமையான மனநிறைவு பெற்றார் என்பதற்கு அவரது உயிர்த்தெழுதல் நிரூபணமாகத் திகழ்கிறது. ஆனால் கலாத்தியரோ இரட்சகரின் செயலில் முழுவதுமாக மனநிறைவு அடையவில்லை என்பது வெளிப்படை. ஏனெனில் அதன் காரணமாகவே, அவர்கள் தங்களது சொந்த ஆற்றலினால் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு கிறிஸ்துவின் கிரியையை முன்னேற்றம் அடையச் செய்யவேண்டுமென்று முயற்சி செய்தார்கள்.

கர்த்தராகிய இயேசு இப்புவியில் ஊழியம் செய்தபோது அவராலே பன்னிரு அப்போஸ்தலர் அழைக்கப்பட்டார்கள். ஆனால் இதற்கு மாறாக, பவுல் *உயிர்த்தெழுந்த* கிறிஸ்துவாலே அழைக்கப்பட்டார். அதுமுதல், உயிர்த்தெழுதல் அவருடைய செய்தியின் முக்கிய பகுதியாகத் திகழ்ந்தது.

**1:2** தன்னுடன் **இருந்த சகோதரர் எல்லோரோடும்** அப்போஸ்தலன் தன்னை இணைத்துக் கொள்கிறார். நற்செய்தியின் சத்தியத்தைக் கலாத்தியர் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டுமென்று அந்தச் **சகோதரர்** யாவரும் பவுலுடன் சேர்ந்து வேண்டுகிறார்கள். கலாத்தியா நாட்டில் இருந்த சபைகளுக்கு எழுதப்பட்ட மடல் வேண்டுமென்றே உள்ளன்பை வெளிப்படுத்தாதபடி எழுதப்பட்டது என்பது வெளிப்படை. பொதுவாக, பவுல் விசுவாசிகளுக்கு எழுதிய மடல்களில், "தேவனுடைய சபை", "பரிசுத்தவான்கள்", 'கிறிஸ்து இயேசுவுக்குள்ளான உண்மையுள்ளவர்கள்" என்று குறிப்பிட்டிருப்பதைக் காணமுடியும். அவ்வப்போது அவர் கிறிஸ்தவர்களுக்காக தேவனுக்கு நன்றிகூறுவதும் அவர்களுடைய குணநலன்களுக்காக தேவனைப் புகழ்வதும் அவருடைய வழக்கமாகும். மேலும் அவர் அடிக்கடி தனிநபர் பெயர்களைக் கூறுவதுண்டு. ஆனால் அப்படிப்பட்ட ஒன்றையும் நாம் இங்கு காண்கிறதில்லை. கலாத்தியரிடம் காணப்பட்ட தவறு கடுமையானதாக இருந்த காரணத்தினால் அவர் அவர்களிடம் கண்டிப்போடும் அன்பை வெளிப்படுத்தாத வண்ணமும் இருக்க வேண்டிய தாயிற்று.

**1:3 கிருபை** மற்றும் **சமாதானம்** ஆகிய இரண்டு சொற்களும் நற்செய்தியில் காணப்படும் மிக மேன்மையான சொற்களாகும். தேவபக்தியற்ற பாவிகளிடம் பொருத்தமற்ற வகையில் தேவன் காட்டும் தயவே **கிருபை** எனப்படும். மனிதன் செய்ய வேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக, தேவன் இதைச் செய்தார் என்று கூறி, இலவசமான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி கிருபையானது மனிதர்களை அழைக்கிறது. "நல்ல மனிதர்களைத் தேடி அவர்களை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, கிருபையானது பயனற்றவர்களையும், குற்றம் புரிந்தவர்களையும், பேச இயலாதவர்களையும், உதவியற்றவர்களையும்

தேடி அவர்களை இரட்சித்து, பரிசுத்தவான் களாக்கி மகிமைப்படுத்துகிறது" என்று திருவாளர் ஸ்கோபீல்டு கூறுகிறார்.

கிருபையினால் உண்டாகும் விளைவே **சமாதானமாகும்.** பாவியான ஒரு மனிதன் இரட்சகரை ஏற்றுக்கொள்ளும்போது, அவன் தேவனிடத்தில் **சமாதானம்** அடைகிறான். அவனுடைய பாவங்களுக்கான தண்டனை செலுத்தப்பட்டுவிட்டது, அவனுடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுவிட்டன, அவன் ஒருக்காலும் ஆக்கினைத் தீர்ப்பு அடையப்போவதில்லை என்னும் அறிவினால் அவன் இளைப்பாறுதல் அடைகிறான். ஆனால் கிருபையானது இரட்சிப்பது மட்டுமின்றி, தொடர்ந்து *பேணிக்காக்கிறது.* நாம் *தேவனிடத்தில் சமாதானம்* பெற்றிருக்கக்கூடிய நன்மை மட்டும் நமக்குப் போதாது, *தேவனுடைய சமாதானமும்* நமக்குத் தேவை. கலாத்தியருக்குத் தனது மடலை எழுதத் தொடங்குகிற பவுல், இந்த ஆசிர்வாதங்களை அவர்கள் பெறவேண்டுமென்று வாழ்த்துகிறார். நியாயப்பிரமாணத்தின் மூலமாக இந்த நன்மைகளைப் பெறமுடியாது என்பதைக் கலாத்தியர் நிச்சயமாக அறிந்திருந்தார்கள். நியாயப்பிரமாணம் அதனுடைய கற்பனைகளை மீறுகிறவர்கள்மீது சாபத்தையே கொண்டு வந்தது. அது எந்த ஆத்துமாவுக்கும் சமாதானத்தை ஒருக்காலும் கொண்டுவந்ததில்லை.

**1:4** அடுத்தபடியாக பவுல் தன்னுடைய வாசகர்களுக்கு இரட்சிப்பின் மிகப் பெரிய விலையை நினைவுபடுத்துகிறார். இந்தச் சொற்களைக் கவனியுங்கள்: **நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த** கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. பாவத்தின் பிரச்சினையைத் தீர்க்க அவர் **தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்திருக்கிறார்** என்றால், அந்தச் செயலோடு, நாம் ஒன்றையும் கூட்டவும் தேவையில்லை, கூட்டவும் முடியாது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படி பிரமாணத்தைக் கடைப்பிடித்து உதவவும் தேவையில்லை. கிறிஸ்து ஒருவரே இரட்சகர், அவர் போதுமானவரும் ஆவார். **இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று நம்மை விடுவிக்கக்** கிறிஸ்து மரணம் அடைந்தார். இன்றைய நாட்களில் காணப்படும் ஒழுக்கக்கேடுகள், அரசியல் சீர்கேடுகள் ஆகியவற்றை மட்டும் இது குறிக்காமல், கிறிஸ்துவினிடத்தில் வைக்கும் விசுவாசத்தோடு சடங்குகள் சம்பிரதாயங்கள் ஆகியவற்றையும் சேர்க்கவேண்டும் என்று கற்பிக்கிற சமய உலகத்தையும் இது குறிக்கிறது. எப்படிப்பட்ட அமைப்பிலிருந்து கலாத்தியர் விடுவிக்கப்பட்டார்களோ, அதே அமைப்பை நோக்கிச் சென்று கொண்டிருந்த விசுவாசிகளுக்கு ஏற்ற தருணத்தில் கொடுக்கப்பட்ட நினைவூட்டுதலாக இது விளங்குகிறது. அவர்கள் அந்த அமைப்பிலிருந்து விடுவிக்கப்படவே கிறிஸ்து மரணமடைந்தார்! கிறிஸ்துவின் மீட்பு **நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படி** ஆனதாகும். இந்தச் சொற்றொடர் யாருக்கு மேன்மையைச் செலுத்த வேண்டுமோ அவருக்கே செலுத்துகிறது. மனிதனுடைய நலிந்த முயற்சிகளால் இது உண்டாகவில்லை, மாறாக தேவனுடைய இறையாண்மையில் உண்டானதே இந்த மீட்பு. கிறிஸ்துவே இரட்சிப்பிற்கான தேவனுடைய வழியாக இருக்கிறார், வேறு வழியில்லையென்று இச்சொற்றொடர் வலியுறுத்துகிறது.

இந்த உலகத்தைச் செம்மைப்படுத்துவதில் இறைவனுக்கு விருப்பமில்லை அல்லது மனிதனை இவ்வுலகில் வசதியாக இருக்கச் செய்வதும் அவருடைய எண்ணமில்லை, மாறாக இவ்வுலகினின்று அவனை விடுவிப்பதே அவருடைய நோக்கமாகும் என்று இந்த வசனம் நினைவூட்டுகிற ஒன்றாக விளங்கவேண்டும். அவருக்கு முதன்மையானது எதுவோ அதனுடன் நம்முடைய முதன்மையானதும் இணைந்திருக்க வேண்டும்.

**1:5** கிருபையின் நற்செய்தியின்படி, மனிதனுடைய இரட்சிப்பிற்கான மகிமை யாவும் பிதாவாகிய தேவனையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையுமே சென்றடைகிறது. நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமாக மனிதன் தன்னை உடன் இரட்சகராக்கி அந்த மகிமையைப் பகிர்ந்து கொள்ள முடியாது.

இந்த ஐந்து வசனங்களில் காணப்படும் ஒவ்வொரு சொற்றொடரும் பொருட்செறிவு மிக்கதாயிருக்கிறது. குறைவான சொற்களில் நிறைவான சத்தியங்கள் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு முக்கியமான பொருட்களைப் பவுல் முட்டைக்கரு போன்று இங்கு கூறியிருக்கிறார். இந்த மடலின் எஞ்சிய பகுதி முழுவதையும் அந்தப் பொருட்களே நிரப்புகின்றன. ஒன்று, அப்போஸ்தலன் என்னும் நிலையில் அவர் தனிப்பட்ட முறையில் பெற்றிருந்த அதிகாரம்; மற்றொன்று, தேவனுடைய கிருபையின் நற்செய்தி. இப்பொழுது அங்கு நிலவிய பிரச்சினையைக் குறித்து அவர் கலாத்தியரிடம் நேரடியாகப் பேச ஆயத்தமாகிறார்.

**1:6,7** தவறானதை ஏற்றுக்கொள்ளுவதற்குக் கொரிந்தியர் ஆயத்தமாயிருந்ததைக் குறித்துப் பவுல் உடனடியாக எதிர்க்கிறார். நற்செய்தியின் சத்தியத்தை அவர்கள் இவ்வளவு சீக்கிரமாக விட்டுவிட்டதைக் குறித்து அவர் திகைப்படை கிறார். மேலும் அவர்களுடைய நடத்தை தவறான நற்செய்தியின் பொருட்டு தேவனையே விட்டு ஓடுவதாக இருக்கிறது என்று கண்டிப்பான முறை யில் கடிந்து கொள்கிறார். தேவன் அவர்களைக் **கிறிஸ்துவின் கிருபைக்குள்ளாக** வரும்படி **அழைத்தார்**; ஆனால் அவர்களோ தங்களை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படுத்திக் கொண் டார்கள். அவர்கள் மெய்யான நற்செய்தியை ஏற்றுக்கொண்டிருந்தார்கள்; ஆனால் இப் பொழுதோ அவர்கள் கொஞ்சமேனும் நல்ல செய்தி என்று சொல்லக்கூடாத **வேறொரு சுவிசேஷத்தின்** பொருட்டு அந்த நற்செய்தியை விட்டுவிட்டார்கள். அவர்கள் இப்பொழுது ஏற்றுக் கொண்டிருக்கிற செய்தியோ, கிருபையும் நியா யப்பிரமாணமும் கலந்ததும், மெய்வழியிலிருந்து விலகச்செய்வதுமான செய்தியாகும்.

**1:8,9** வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிக் கிற எந்த மனிதன் மேலும் பவுல் இரண்டு கண்டிப் பான தேவ சாபங்களை உரைக்கிறார். அழிவுக் குப் பாத்திரமான பாவிகளுக்கு தேவன் ஒரே ஒரு செய்தியைத் தான் வைத்திருக்கிறார்: நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலன்றி கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு அவர் இரட்சிப்பை அருளுகிறார். இரட்சிப்படைய வேறு வழிஉண்டு என்ற அறிவிக்கிறவர்கள் யாவரும் நிச்சயமாக அழிவையே அடைவார்கள். ஆத்துமாக்கள் நித்திய அழிவை அடையத்தக்க செய்தியைப் பிரசங்கிப்பது எவ்வளவு ஆபத் தானது! அப்படிப்பட்ட கள்ள போதகர்களைப் பவுல் பொறுத்துக்கொள்ளவில்லை, நாமும் அவர் களைப் பொறுத்துக்கொள்ளக்கூடாது. ஜான் ஸ்டாட் என்பார் எச்சரிக்கிறார்:

> சபைகளில் பலர் கனம்பொருந்தியவர்களாக, வரம் பெற்றவர்களாக, போதகர்களாக இருப் பது குறித்து நாம் மனக்குழப்பம் அடைய வேண்டியதில்லை. அவர்கள் நம்மிடத்தில் கௌரவம் மிக்கவர்களாக, அதிகாரம் உடைய வர்களாக, புலமை பெற்றவர்களாக வரலாம். அவர்கள் பிஷப்பாகவோ, ஆர்ச் பிஷப்பாகவோ, பல்கலைக்கழகப் பேராசிரியர்களாகவோ, ஒருவேளை போப்பாண்டவராகவோ இருக்க லாம். ஆனால், அப்போஸ்தலர் பிரசங்கித் ததும், புதிய ஏற்பாட்டில் பதிவு செய்து வைக்கப் பட்டிருக்கிறதுமான சுவிசேஷத்தை விடுத்து, வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் அவர்களை நிராகரிக்க வேண்டும். "ஒரு பிர சங்கியின் வெளித்தோற்றம் அவர் அறிவிக்கும் செய்தியை உறுதிப்படுத்துகிறதில்லை; மாறாக அவர் அறிவிக்கிற செய்தியின் தன்மையே அந்தப் பிரசங்கி மெய்யானவர் என்று உறுதிப் படுத்தும்" என்று முனைவர் ஆலன் கோல் இதனை விளக்குகிறார்.[1]

**வானத்திலிருந்து வருகிற தூதன்** என்று அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறாரே தவிர, "தேவனிடத்திலிருந்து வருகிற தூதன்" என்று சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். **வானத்திலிருந்து வருகிற தூதன்** தவறான செய்தியை அறிவிப்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியும், ஆனால் தேவனிடத்திலிருந்து வருகிற தூதனால் அவ்வாறு செய்ய முடியாது. நற்செய்தியின் தனிச்சிறந்த பண்பை இதனைக் காட்டிலும் தெளிவாகச் சொல்லுவதற்கு வேறு சொற்கள் இல்லை. இது ஒன்றே இரட்சிப்படை வதற்கான ஒரே வழி. சொந்த முயற்சிக்கும் மனித னுடைய தகுதிக்கும் அங்கே இடமில்லை. பணமு மின்றி விலையுமின்றி சுவிசேஷத்தினால் மட்டுமே இரட்சிப்பைத் தரமுடியும். நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடிக்காதவர்கள் மேல், அந்தப் பிரமாணமே சாபத்தைக் கொண்டுவருகிறது. சுவிசேஷமோ அச்சத்தியத்தை ***மாற்றுபவர்கள்*** மீது சாபத்தைக் கொண்டுவருகிறது.

**1:10** தன்னைக் கேட்போருக்கு ஏற்ற விதமாகப் பவுல் செய்தியை மாற்றி அறிவித்ததாக அவரு டைய பகைஞர் அவர்மீது குற்றஞ்சாட்டினார்கள் என்பதை இத்தருணத்தில் அவர் நினைவுகூர்ந் தார் போலும். ஆகவே, "ஒரே ஒரு சுவிசேஷம் தான் உள்ளது என்று நான் உறுதியாகச் சொல் வதன் மூலம் **மனிதரையா** அல்லது தேவனையா யாரைப் **பிரியப்படுத்த** முயலுகிறேன்" என்று அவர் கேட்கிறார். விண்ணகம் செல்ல ஒரே ஒரு வழிதான் உண்டு என்று அவர் கூறிய கருத்தை மனிதர்கள் விரும்பவில்லை, ஆகவே அவர் **மனிதரைப் பிரியப்படுத்தவில்லை** என்பது நிச்சயம். மனிதர்களுக்கு ஏற்றபடி தனது செய்தி யைப் பவுல் மாற்றிப் பேசியிருந்தால், அவர் **கிறிஸ்துவின் ஊழியக்காரராக** இருந்திருக்க முடியாது. அவ்வாறு அவர் பேசியிருந்தால், உண்மையில் அவர் தேவ கோபத்தைத் தன்மீது வருவித்துக் கொண்டிருப்பாரே.

### ஆ. தனது செய்தியைக் குறித்தும் ஊழியத்தைக் குறித்தும் பவுல் ஆதரித்துப் பேசுதல் (1:11–2:10)

**1:11,12** தனது செய்தியையும் ஊழியத்தையும் ஆதரித்து அப்போஸ்தலன் இப்பொழுது ஆறு வாதங்களை முன்மொழிகிறார். முதலாவது, அவர் தெய்வீக வெளிப்பாட்டினாலே சுவிசேஷத்தைப் பெற்றாரேயொழிய, மனிதர்களிடத்திலிருந்து பெறவில்லை. அது **மனிதருடைய யோசனையின்படியானதல்ல** என்னும் சொற்றொடர், அது மனிதர்களிடத்திலிருந்து தொடங்கவில்லை என்னும் பொருளிலேயே சொல்லப்பட்டுள்ளது. ஒரு நொடிப்பொழுது ஆழ்ந்த சிந்தனை இதனை உறுதிப்படுத்தும். பவுல் அறிவித்த சுவிசேஷம் தேவனிடத்திலிருந்தே உண்டானது, மனிதனிடத்திலிருந்து ஒன்றும் தோன்றவில்லை. இங்கு சொல்லப்பட்டிருக்கிற இரட்சிப்பு மனிதனால் புனையப்பட்டது அல்ல! பவுல் இதனை வேறொரு மனிதனிடத்திலிருந்து **பெறவுமில்லை**, நூல்களிலிருந்து இது அவருக்குக் **கற்பிக்கப்படவுமில்லை**. **இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து** அவர் இதனை நேரடியாகவே பெற்றார்.

**1:13,14** இரண்டாவதாக, பவுல் தன்னுடைய நற்செய்தியில் யூத நியாயப்பிரமாணத்தைச் சேர்க்கவில்லையென்பதால், அவருக்கு **யூத மார்க்கத்தைக்** குறித்து ஒன்றும் தெரியாது என்பது பொருளல்ல. அவரது பிறப்பினாலும், அவர் பெற்ற பயிற்சியினாலும், அவர் நியாயப்பிரமாணத்தில் அதிக ஈடுபாடு உடையவராயிருந்தார். அவர் தனது சொந்தச் சித்தத்தின்படி, **சபையை மிகவும் துன்பப்படுத்திய** கொடூரமான மனிதராக இருந்தார். அவர் தனது **பிதாக்களுடைய பாரம்பரியத்திற்காக** மிகுந்த வைராக்கியம் கொண்டிருந்தார். அவருடைய வயதுடையவர்கள், யூதர்கள் பலரையும் அவர் மிஞ்சினவராக இருந்தார். ஆகவே அவர் நியாயப்பிரமாணத்தைக் குறித்து ஒன்றும் அறியாதவராக இருந்த காரணத்தினால்தான், நியாயப்பிரமாணம் இன்றி விசுவாசத்தினால் இரட்சிப்பு உண்டாகிறது என்று அவர் பிரசங்கித்தார் என்று கூற சற்றேனும் இடமில்லை. பின் ஏன் அவர் தனது பிரசங்கத்தில் அதனை விட்டுவிட்டார்? அவருடைய பின்னணிக்கும், அவருடைய இயல்பான விருப்பத்துக்கும் அவருடைய முழு சமய வளர்ச்சிக்கும் எதிராக அவருடைய சுவிசேஷம் இருப்பதற்குக் காரணம் என்ன? ஏனெனில் அது அவருடைய சொந்த எண்ணத்தினால் உண்டாகவில்லை, தேவனிடத்திலிருந்து அவருக்கு அது நேரடியாகக் கொடுக்கப்பட்டது என்பதே அதன் காரணம்.

**1:15-17** மூன்றாவதாக, முதல் சில ஆண்டுகள் அவர் ஆற்றிய ஊழியம் மற்ற **அப்போஸ்தலரைச்** சார்ந்திருக்கவில்லை. இப்பொழுது பவுல் தனது சுவிசேஷம் எந்த மனிரையும் சார்ந்ததல்ல என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறார். அவர் இரட்சிக்கப்பட்ட பிறகு, தலைவர்களாயிருந்தவர்களோடு **உடனே யோசனை பண்ணவில்லை**, அவர் மற்ற அப்போஸ்தலர் இருந்த **எருசலேமுக்குச் செல்லவுமில்லை**. அதற்குப் பதிலாக அவர் **அரபி தேசத்திற்குச்** சென்று, **மறுபடியும் தமஸ்குவுக்குத் திரும்பினார்**. அவருடைய உடன் அப்போஸ்தலரை மதிக்காமல் எருசலேம் செல்லுவதைத் தவிர்த்தார் என்று கருதுவதற்கு இடமில்லை. மாறாக, அவர் புறவினத்தாரிடம் ஊழியம் செய்யும்படி தனிச்சிறந்த வகையில் உயிர்த் தெழுந்த கர்த்தராலே நேரடியாக நியமிக்கப்பட்டார் (2:8). ஆகவே அவருடைய சுவிசேஷத்திற்கும் ஊழியத்திற்கும் எந்த மனிதனின் ஒப்புதலும் தேவையில்லாமல் போயிற்று. அவர் முற்றிலுமாகப் பிறரைச் சார்ந்திராதவராக இருந்தார்.

இந்த வசனங்களில் காணப்படும் பல சொற்றொடர்களைக் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியம். 15 -ஆவது வசனத்தில் உள்ள, **நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல், என்னைப் பிரித்தெடுத்த தேவன்** என்னும் சொற்றொடரைக் கவனியுங்கள். தன்னுடைய பிறப்பிற்கு முன்னமே, ஒரு சிறப்பான ஊழியத்திற்காக, தேவன் தன்னைப் பிரித்தெடுத்து விட்டார் என்பதைப் பவுல் அறிந்திருக்கிறார். தேவன் தம்முடைய கிருபையினாலே அழைத்தார் என்று அவர் தொடங்குகிறார். தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் அவர் அடைந்த மன மாற்றத்தையே அவர் இங்கு குறிப்பிடுகிறார். அவருடைய சொந்தத் தகுதிக்கு எது கொடுக்கப்பட வேண்டுமோ அதை அவர் அன்று பெற்றிருப்பார் என்றால், அவர் நரகத்திற்குள் தள்ளப்பட்டிருப்பார். ஆனால் கிறிஸ்துவோ வியத்தகு கிருபையினாலே அவரை இரட்சித்து, அவர் அழித்துப் போடவேண்டுமென்றிருந்த விசுவாசத்தைக் குறித்துப் பிரசங்கம் செய்யும்படியாக அனுப்பினார். பதினாறாவது வசனத்தில் **குமாரனை எனக்குள் வெளிப்படுத்த** தேவன் பிரியமாயிருந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. இது, தேவன் நம்மை அழைத்திருப்பதன் தேவனுடைய உன்னதமான

நோக்கத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது - நமக் குள்ளாக அவருடைய குமாரனை வெளிப்படுத்து வதன் மூலமாக, நாம் கர்த்தராகிய இயேசுவை இந்த உலகிற்குப் பிரதிபலிப்போம். நம் மூல மாகக் கிறிஸ்துவைக் காட்சிப்பொருளாக்கி (வச. 16-23), அக்காட்சியின் மூலமாக தேவன் மகிமைப் படும்படி (வச. 24) அவர் நம்முடைய இருதயங் களுக்குக் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவை புறவினத்தாரிடம் பிரசங்கிப்பதே பவுலுக்கு அளிக்கப்பட்ட ஊழியமாகும்.

17 -ஆவது வசனத்தில், **"அரபி தேசத்திற்குப் புறப்பட்டுப் போனேன்"** என்று அவர் கூறுகிறார். தேவனுடைய ஒவ்வொரு ஊழியக்காரனுக்கும் தனித்து இருந்து தியானிக்க வேண்டிய காலம் தேவை. பாலைவனத்தின் பின்புறமாய் மோசே நாற்பது ஆண்டுகள் செலவிட்டான். யூதேயா நாட்டின் மலைப்புறங்களில் ஆடுகளை மேய்த்த போது தாவீது தேவனோடு தனித்திருந்தான்.

**1:18-20** நான்காவதாக, இறுதியில் பவுல் எருசலேமுக்குச் சென்றபோது, அங்கு அவர் **பேதுருவையும் யாக்கோபையும்** சந்தித்தார். அதைத்தவிர, யூதேயா சபைகளுக்கு அவர் அவ்வளவு அறிமுகம் அற்றவராகவே இருந்தார் (1:21-24). அவர் மற்ற அப்போஸ்தலரைச் சார்ந் திருக்கவில்லை என்பதை மெய்ப்பிக்க, அவர் இரட்சிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் எருசலே முக்குச் செல்லவில்லை என்பதைக் குறிப்பிடு கிறார். அவர் அங்கு **பேதுருவோடு**[2] அறிமுகம் ஆகவேண்டும் என்னும் எண்ணத்துடனேயே சென்றார். அந்தப் பயணம் அவருடைய விருப்பத் தின்படியானதேயொழிய, ஊழியத்தோடு சம்பந் தப்பட்டதல்ல (அப். 9:26-29). அங்கே அவர் **கர்த்த ருடைய சகோதரனாகிய யாக்கோபையும்** சந்தித்தார். அவர் பேதுருவோடு பதினைந்து நாட்கள் மட்டுமே தங்கியிருந்தார். அது பயிற்சி பெறுவதற்குப் போதுமான காலம் அல்லவே! மேலும், கர்த்தருடைய இந்த ஊழியக்காரரோடு, எல்லாவிதத்திலும் சமமானவராக இருந்தார் என்பதையே இந்த வேதபகுதி சுட்டிக்காட்டு கிறது.

**1:21-24** அதன்பிறகு, அவர் சீரியா, சிலிசியா ஆகிய நாடுகளில் அதிகமான காலத்தைச் செல விட்டார். அதன் காரணமாக, யூதேயா தேசத்தில் இருந்த சபைகளுக்கு அவர் அறியப்படாத வராகவே இருந்தார். கிறிஸ்தவர்களை இவ்வள வாகக் கொடுமைப்படுத்திய இந்த மனிதன் இப்பொழுது கிறிஸ்தவனாக மாற்றம் பெற்றிருக் கிறார் என்றும், அவரைக் குறித்துப் பிரசங்கிக் கவும் செய்கிறார் என்றுமே அவர்கள் அறிந்திருந் தார்கள். ஆகவே பவுலின் வாழ்க்கையில் நடந்த மாற்றத்தின் பொருட்டு அவர்கள் தேவனை மகி மைப்படுத்தினார்கள். (நம்முடைய வாழ்க்கை யில் ஏற்பட்ட மாற்றத்தின் பொருட்டு மற்றவர்கள் தேவனை மகிமைப் படுத்துகிறார்களா?)

**2:1** ஐந்தாவதாக, பின்னர் பவுல் எருசலேமுக் குச் சென்றபோது, அங்கிருந்த அப்போஸ்தலர் அவர் அறிவித்த நற்செய்தி தெய்வீகமானது என்று ஒப்புக்கொண்டனர் (2:1-10). சபை எருசலே மில் தொடங்கியது, பெரும்பாலும் அப்போஸ் தலர் அதனையே தங்கள் தலைமையிடமாகக் கருதினார்கள். ஆகவே கிறிஸ்தவர்களில் சிலர் அங்கிருந்த சபையைத் "தாய் சபை" என்று எண்ணினார்கள். பவுல் அந்த சபையைச் சேர்ந்த அப்போஸ்தலர் இல்லையென்பதால், அவர் தன் னைச் சற்று தரம் குறைந்தவர் என்றே கருத வேண்டும் என்று அவர்கள் எண்ணினார்கள். அதற்குப் பதிலுரைக்கும் எண்ணத்தோடு பவுல் கடைசியாக **எருசலேம்** சென்று வந்த விவரத் தைக் கூறுகிறார். பதினான்கு ஆண்டுகள் கழித்து இந்த நிகழ்ச்சி நடந்தது என்று சொல்லும்போது, அவர் மனமாற்றம் அடைந்ததிலிருந்தா அல்லது முதல் தடவை அவர் எருசலேமுக்குச் சென்றதி லிருந்தா அந்தக் காலத்தைக் கணக்கிட வேண்டு மென்பது தெரியவில்லை. பர்னபா என்னும் உடன் ஊழியரோடும், பவுலின் ஊழியத்தால் மனமாற் றம் பெற்ற தீத்து என்னும் புறவினத்தானோடும் அவர் எருசலேம் செல்ல வேண்டும் என்னும் வெளிப்பாட்டைப் பெற்றார் என்பதை நாம் அறி வோம். யூத சம்பிரதாயங்களைப் பின்பற்ற வேண் டும் என்று கற்பித்த கிறிஸ்தவர்களே விருத்த சேதனம் பெறவேண்டும் என்று வற்புறுத்தினார் கள். நற்செய்தியின் சத்தியம் ஆபத்தான நிலை யில் இருந்ததை உணர்ந்த அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களை வன்மையாக எதிர்த்து நின் றார். (எந்த முக்கியமான கொள்கையும் அதில் சம்பந்தப்படவில்லை என்பதால், பின்னர் பவுலே தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணுவித் தார் - அப். 16:13.) E. F. கேவன் கூறுகிறார்:

> ஒருவன் நீதிமானாக வேண்டும் என்னும் எண்ணத்தில் செய்கிற குற்றமில்லாத எளிய சடங்கே விருத்தசேதனம் என்று முன்பின் சிந்தனை செய்யாமல் செயல்படுகிற மனிதர் கள் நினைக்கக்கூடும் என்பதைப் பவுல் கண்டார்.ஆனால் விருத்தசேதனமோ, நியாயப்

பிரமாணத்தின்படி செய்யப்படும் சடங்காகவும், கிருபையினால் இரட்சிப்பு உண்டாகிறது என னும் அடிப்படைக் கொள்கையை மறுத்துரைக் கிற செயலாகவும் இருக்கிறது.[3]

**2:2** பவுல் எருசலேமைச் சென்றடைந்தபோது, **புறஜாதிகளிடத்தில்** அவர் **பிரசங்கித்த சுவிசே ஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காண்பித் தார்; ஆயினும் அவர் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர் களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித் தார்.** பவுல் சபை அங்கத்தினர்கள் யாவரிடமும் பேசாமல், ஆவிக்குரிய தலைவர்களிடம் மட்டும் பேசியதன் காரணம் என்ன? அவர் ஏதோ தவறான சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்திருந்தால், அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்களிடம் பேசினாரா? நிச்சய மாக இல்லை! அப்போஸ்தலன் கூறுகிற கருத் திற்கு இது முற்றிலும் மாறானது. அவர் பிரசங் கித்த செய்தி அவர் பெற்ற தெய்வீக வெளிப்பாடு என்றே அவர் வலியுறுத்தினார். தான் அறிவித்த உபதேசம் சத்தியமானது என்பதில் அவருக்கு எவ்வித ஐயமுமில்லை. இதற்கான உண்மை யான விளக்கத்தை வேறு வகையில்தான் காண வேண்டும். முதலில் தலைவர்களிடம் பேசுவதே பொதுவாக மரியாதைக்குரியது. மேலும் பவுல் பிரசங்கித்த நற்செய்தி மெய்ம்மைத் தன்மை உடையது என்பதில் தலைவர்கள் முழுவதுமாக மனநிறைவு அடையவேண்டியது விரும்பத்தக் கது. அதில் அவர்களுக்கு ஏதேனும் கேள்வி களோ பிரச்சினைகளோ இருக்குமென்றால், முதலிலேயே பவுல் அவர்களுக்கு விடைகூற நினைத்தார். அதற்குப் பின் அவர் மற்ற அப்போஸ் தலருடைய ஆதரவோடு சபைக்கு முன் செல்ல முடியும். மிகுந்த எண்ணிக்கையில் உள்ள மனிதர் களோடு ஈடுபடும்போது, அந்தக் கூட்டத்தார் உணர்ச்சிபூர்வமான பேச்சின் காரணமாக ஒரு பக்கமாய்ச் சாய்ந்துவிடக் கூடிய ஆபத்தான சூழ் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, மக்கள் கூட்டத்தின் இழுபறியற்ற சூழ்நிலையில், தனது சுவிசேஷத்தின் விவரத்தைப் பவுல் **தனிமை யாய்க்** கூற விரும்பினார். அவ்வாறு பவுல் செய் திராவிடில், சபையானது யூதர்களின் அணி என்றும், புறவினத்தார் அணி என்றும் இரண்டு படக்கூடிய ஆபத்தான நிலைக்குச் சென்றிருக் கும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால், அவர் எருசலே முக்குச் சென்றதன் நோக்கமே தோல்வியடைந் திருக்கும். அவர் **ஓடுகிறதும், ஓடினதும் வீணா காதபடிக்கு** என்று சொன்னதற்கு இதுதான் பொருள்.

**2:3** நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமா என்னும் கேள்வி முழுவதும் முக்கிய மான வகையில் தீத்துவைக் குறித்ததாயிருந்தது. புறவினத்தானாயிருந்து மனமாற்றம் பெற்ற அந்த மனிதனை எருசலேம் சபையில் ஏற்றுக்கொள் வதா, இல்லை முதலாவது அவன் **விருத்தசேத னம்**[4] பெறவேண்டுமா? குறிப்பிடத்தக்க வகையில் கருத்துப் பரிமாற்றமும் விவாதமும் நடந்து முடிந்த பிறகு, இரட்சிக்கப்படுவதற்கு விருத்த சேதனம் தேவையில்லையென்று அப்போஸ்தலர் முடிவுசெய்தார்கள். பவுல் பாராட்டத்தக்க வெற்றி யைப் பெற்றார்.[5]

**2:4** பவுல் எருசலேமுக்குச் சென்றதன் கார ணம் 2 -ஆவது வசனத்தின் முந்தின பகுதியையும் 4 -ஆவது வசனத்தின் பிந்தின பகுதியையும் இணைத்துப் பார்த்தால் தெளிவாகப் புலப்படும்: "நான் தேவ அறிவிப்பினால் போய்... **பக்க வழி யாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று.**" இந்நிகழ்ச்சி ஏற்கனவே அந்தி யோகியா நகரத்தில் நடந்தது (அப். 15:1,2). எருச லேமில் இருந்து வந்த சில யூத போதகர்கள், தங்களைக் கிறிஸ்தவர்களாகக் காட்டியவர் களாக, எப்படியோ அந்தியோகியா சபைக்குள் **பக்கவழியாய் நுழைந்து** இரட்சிப்பிற்கு விருத்த சேதனம் அவசியம் என்று போதித்தார்கள்.

**2:5** பவுலும் பர்னபாவும் அவர்களை வன்மை யாக எதிர்த்தார்கள். மேலும் அந்தப் பிரச்சி னையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, பவுலும் பர்னபாவும் மற்றவர்களுடன் எருசலேமுக்குச் சென்று, அங்கிருந்த அப்போஸ்தலர் மூப்பர் ஆகி யோருடைய கருத்தைப் பெற எண்ணினார்கள்.

**2:6** எருசலேமில் மதிப்பிற்குரிய தலைவர் களாகக் கருதப்பட்டவர்கள், பவுல் அறிவித்து வந்த செய்தியோடோ, அவருடைய அப்போஸ் தல தகுதியோடோ **ஒன்றையும் கூட்டவில்லை (போதிக்கவில்லை).** இது மிகவும் குறிப்பிடத் தக்கது. முந்தின அதிகாரத்தில், அவர் மற்ற அப்போஸ்தலரிடம் கொண்டிருந்த தொடர்பு மிகக் குறைவானது என்று வலியுறுத்திச் சொல்லி யிருந்தார். இப்பொழுதோ, இறுதியாக அவர் அவர்களோடு கலந்துரையாடியபோது, அவர்கள் பிரசங்கித்த அதே நற்செய்தியைத்தான் பவுலும் பிரசங்கித்தார் என்பதை அவர்கள் ஒப்புக்கொண் டார்கள். இது எவ்வளவு முக்கியமான குறிப்பு! எந்த விதத்திலும் பவுல் அறிவித்த நற்செய்தி

குறைவுடையது அன்று என்று யூதத்தலைவர்கள் ஒப்புக்கொண்டார்கள். பவுல் அவர்களை எந்த விதத்திலும் சார்ந்திருக்கவில்லை, அவர் களாலே அவர் போதிக்கப்படவும் இல்லை, ஆனா லும் அவர்கள் அறிவித்த நற்செய்தியும் அவரு டைய நற்செய்தியும் எல்லாவிதத்திலும் ஒன்றா கவே இருந்தது. (மற்ற அப்போஸ்தலரைப் பவுல் அற்பமாகக் கருதவில்லை. கர்த்தராகிய இயேசு இந்தப் பூமியில் இருந்தபோது, அவர்கள் அவரோடு உடன்சென்றவர்களாக இருந்ததால், அவரைக் காட்டிலும் எவ்விதத்திலும் உயர்வைப் பெற வில்லை என்று அவர் எண்ணியதால்தான், **அவர் கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும்** என்று கூறுகிறார். அப்படிப்பட்ட புறம்பான சிறப்புகளைக் கொண்டு தேவன் மனிதனைத் தனிப்பட்ட வகையில் ஏற்றுக்கொள்கிறதில்லை.)

**2:7,8 பேதுரு** எவ்விதமாக யூதர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி அனுப்பப்பட் டாரோ, அதே விதமாக விருத்தசேதனம் இல்லாத வர்களுக்கு, அதாவது **புறவினத்தாருக்கு** நற் செய்தியை எடுத்துச்செல்லும்படி பவுலின் தகுதிக் கும் மேற்பட்ட வகையில் அந்த மேன்மை அவ ருக்கு ஒப்புவிக்கப்பட்டது என்று எருசலேமில் இருந்த அப்போஸ்தலர் அறிந்து கொண்டார்கள். அவ்விருவரும் ஒரே நற்செய்தியைத்தான் பிரசங் கித்தார்கள், ஆனால் முதன்மையாக வெவ்வேறு இனத்தாருக்குப் பிரசங்கித்தார்கள்.

**2:9,10** சபையின் தூண்களாகக் கருதப்பட்ட **யாக்கோபு, கேபா** (பேதுரு), **யோவான்** ஆகி யோரும்கூட, தேவன் பவுல் மூலமாகச் செயல் பட்டார் என்பதை **அறிந்தவர்களாக, புறவினத் தாருக்கு** அவரும் **பர்னபாவும்** நற்செய்தியை அறிவிக்கும்படி, அவர்களுக்கு வலதுகை கொடுத்தார்கள். இது அதிகாரபூர்வமான நிய மனம் அல்ல, மாறாக பவுல் ஆற்றிய ஊழியத்தில் அவர்கள் காட்டிய அன்பின் பிரதிபலிப்பே ஆகும். பவுலும் பர்னபாவும் தரித்திரரை **நினைத்துக் கொள்ளும்படி** மட்டுமே அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். பவுலும் அதைக் குறித்துக் **கருத்துள்ளவராயிருந்தார்**.

### இ. பவுல் பேதுருவைக் கடிந்துகொள்ளுதல் (2:11-21)

**2:11** பவுல் பெற்றிருந்த அப்போஸ்தல நிய மனத்தைக் குறித்து எழுந்த எதிர்ப்புக்கு அவர் ஆறாவதும் இறுதியுமான பதிலைத் தருகிறார். அவர் கூறுகிற பதில் அவர் அப்போஸ்தலனாகிய பேதுருவைக் கடிந்து கொண்டதன் அவசியத் தைக் குறித்ததாகும் - **பேதுருவோ**[f] அப்போஸ் தலரில் முதன்மையானவர் என்று பெரும்பாலான யூதக் கிறிஸ்தவர்களால் கருதப்பட்டார். (பேதுரு சபையின் தவறில்லாத தலைவராக இருந்தார் என்னும் கருத்தை இந்த வேதபகுதி வன்மையாக மறுத்துரைக்கிறது.)

**2:12** பேதுரு அந்தியோகியாவுக்கு முதலில் வந்தபோது, தன்னுடைய கிறிஸ்தவ விடுதலை யில் நிறைவான மகிழ்ச்சியோடு, **புறஜாதியா ரோடு சாப்பிட்டார்**. யூத மரபுவழியின்படி அவர் இவ்வாறு உணவருந்தியிருக்க முடியாது. சிறிது காலம் கழித்து, எருசலேமில் இருந்த யாக்கோ பினிடத்திலிருந்து சிலர் ஒரு குழுவாக அந்தி யோகியாவுக்கு அங்கிருந்த சபை மக்களைக் காணும்படி வந்தார்கள். அவர்கள் யாக்கோபின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டார். ஆனால் அவரோ அதனைப் பின்னர் மறுத்துரைத்தார் (அப். 15:24). அவர்கள் சில நியாயப்பிரமாணச் சடங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற கொள்கையைப் பற்றிக்கொண்டிருந்த யூதக் கிறிஸ்தவர்கள் எனத் தோன்றுகிறது. அவர்கள் அந்தியோகியாவுக்கு வந்தபோது, தனது நடத் தையைக் குறித்த விவரம், எருசலேம் சபையில் பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என் னும் கொள்கையுடையோரைச் சென்றடையும் என்று **பயந்து** பேதுரு புறவினத்தாருடன் கொண் டிருந்த ஐக்கியத்தை நிறுத்திக்கொண்டார். அவ்வாறு அவர் செய்ததன் நிமித்தம், சுவி சேஷத்தின் மாபெரும் உண்மைகளில் ஒன்றை மறுத்துரைத்தார். கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக விசுவாசிகள் யாவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதே அவ்வுண்மை. எந்த நாட்டைச் சேர்ந்த வர் என்ற வேறுபாடு ஐக்கியத்தைப் பாதிப்ப தில்லை. "விருத்தசேதனமற்றவர்களுடன் சேர்ந்து அவர் உணவு உண்ண மறுத்ததினால், அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளாக இருந்த போதிலும், அவர்கள் இன்னமும் தீட்டானவர் களும் அசுத்தமானவர்களுமாகவே இருக்கிறார் கள் என்றும், விசுவாசத்தினால் உண்டாகும் நீதியைக் காட்டிலும் மோசே நியமித்த சடங்கு அதிக பரிசுத்தத்தை உண்டாக்கும் என்றும் அவர் உறுதி கொண்டிருந்தது போன்ற ஒருபொருள் தொக்கி நிற்கிறது" என்று திருவாளர் பின்லே கூறுகிறார்.

**2:13** மற்றவர்களும் பேதுருவின் மாதிரியைப் பின்பற்றினார்கள். பவுலின் மதிப்பு மிக்க உடன் ஊழியராகிய **பர்னபாவும்** அவருடன் சேர்ந்து

கொண்டார். இந்தச் செயலினால் உண்டாகக் கூடிய பாதிப்பை உணர்ந்த பவுல், துணிவோடு பேதுருவின் மாயத்தைக் குறித்துக் குற்றஞ்சுமத் தினார். பவுல் கடிந்துரைத்த சொற்கள் 14 -21 ஆகிய வசனங்களில் இடம் பெற்றுள்ளன.[7]

**2:14** கிறிஸ்தவன் என்னும் நிலையில், தேசிய வேறுபாடுகளை தேவன் கருத்தில் கொள்வ தில்லை. எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் எவ்வித வேறுபாடும் இல்லை என்பதைப் பேதுரு அறிந்திருந்தார். அவர் ஒரு புறவினத்தனாக வாழ்ந்தார், அவர்களுடைய உணவை உண்டார், இது போன்று பல நடந்தன. ஆனால் கடைசியில் அவர் புறவினத்தாரோடு சேர்ந்து உண்ண மறுத்த செயல், தூய்மை பெறுவதற்கு யூதர்களுடைய பிரமாணங்களையும் சடங்குகளையும் கைக் கொள்வது அவசியம் என்று சொல்வதுபோலக் காணப்பட்டது. மேலும் புறவின விசுவாசிகள் **யூதர் முறையாக நடக்க வேண்டும்** என்று கூறுவதாகவும் காணப்பட்டது.

**2:15** பவுல் இங்கு வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசுகிறார். **யூதர்கள்** மேன்மையானவர்கள், **புறவினத்தாரோ** இழிந்தவர்கள் என்ற எண்ணம் பேதுருவின் உள்ளத்தை விட்டு நீங்காமல் நீடித்து நிற்பதை அவருடைய நடத்தை வெளிப் படுத்தவில்லையா? புறவினத்தானாகிய கொர் நேலியு இரட்சிப்படைவதற்கு முன்னர், எந்த மனிதனையும் தீட்டானவன் அல்லது அசுத்தமான வன் என்று அழைக்கக்கூடாது என்று தேவன் போதித்திருந்ததால் அவர் இந்த உண்மையை நன்கு அறிந்திருந்தாரே (அப். 10; 11:1-18).

**2:16** இரட்சிக்கப்பட்ட யூதர்கள் நியாயப்பிர மாணத்தில் இரட்சிப்பு இல்லை என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். நியாயப்பிரமாணத்தை முற்றிலுமாக ஒருவர் கடைப்பிடிக்கவில்லை யென்றால் அது அவரை மரணத்திற்குள்ளாகத் தீர்த்தது. இது எல்லோர் மேலும் சாபத்தைக் கொண்டுவந்தது. ஏனெனில் எல்லோரும் அதனு டைய புனிதமான கற்பனைகளை மீறியிருக்கிறார் களே. இங்கே இரட்சகர் ஒருவரே விசுவாசத்தின் மெய்யான கருப்பொருளாக அறிமுகப்படுத்தப் படுகிறார். **"யூதர்களாகிய நாமும்கூட"** என்று இங்கு பவுல் கூறியிருப்பது, நியாயப்பிரமாணத் தைக் கைக்கொள்வதால் அல்ல, **கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயே** இரட்சிப்பு உண்டாகிறது என்னும் முடிவுக்குக் கொண்டு வருகிறது. புறவினத்தாரை நியாயப்பிரமாணத் திற்குப் பேதுரு உட்படுத்திய காரணம் என்ன? மனிதர்கள் என்ன செய்ய வேண்டுமென்று நியா யப்பிரமாணம் கூறுகிறதேயொழிய, அதைச் செய் வதற்கான ஆற்றலைத் தருவதில்லை. அது பாவத்தை வெளிப்படுத்தக் கொடுக்கப்பட்டதே யொழிய, இரட்சகராகத் தரப்படவில்லை.

**2:17** பவுலும் பேதுருவும் கிறிஸ்து ஒருவரிடத் திலேயே நீதிமான் ஆவதை நாடினார்கள். அந்தியோகியாவில் பேதுருவின் நடத்தை, அவர் இன்னும் முழுவதுமாக நீதிமானாகவில்லை என்றும், தன்னுடைய இரட்சிப்பை நிறைவாக்க மீண்டும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் சொல்லுவதுபோல இருந்தது. அது அவ்வாறாயின் கிறிஸ்து நிறைவான மற்றும் போதுமான இரட்சகர் அல்லர் என்றாகிவிடும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட கிறிஸ்து விடம் செல்கிறோம். அதற்குப்பின் மேலும் ஓரிடத்திற்குச் செல்ல வேண்டுமெனில், கிறிஸ்து தனது வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத **பாவத்திற்குக் காரணராகி** விடுவாரே? நாம் நீதிமான்களாகும்படி, கிறிஸ்துவைச் சார்ந்தவர் களாக ஒப்புதல் அறிக்கை செய்தோம். அவ்வாறி ருக்க, நம்மைப் பாவிகள் என்று குற்றந்தீர்த்த நியாயப்பிரமாணத்தினிடமாய்த் திரும்பச் செல் வோமெனில், நாம் கிறிஸ்தவராக நடக்கிறோமா? அப்படிப்பட்ட செயலைக் கிறிஸ்து ஒப்புக்கொள் வார் என்று எதிர்பார்க்கலாமா? அந்தச் செயல் கிறிஸ்துவைப் **பாவத்திற்குக் காரணராக்கி விடுமே**. இதற்குப் பவுல் சீற்றத்துடன் **அல்லவே** என்று பதிலுரைக்கிறார்!

**2:18** கிறிஸ்துவின்மேல் கொண்ட விசுவாசத் திற்காக, பேதுரு பிரமாண அமைப்பு அனைத்தை யும் விட்டுவந்தார். தேவனிடத்தில் தயவைக் கண்டடையும் பொருட்டு யூதருக்கும் புறவினத் தாருக்கும் எவ்வித வேற்றுமையும் இல்லை யென்று அவர் மறுத்துரைத்தாரே. இப்பொழுதோ, அவர் புறவினத்தாரோடு உணவு உண்ண மறுத்ததன் காரணமாக, அவர் முன்னர் இடித்துப் போட்டவற்றையே மறுபடியும் கட்டுவதாகக் காணப் பட்டது. அவ்வாறு அவர் செய்ததன் மூலம் தான் **மீறுதல்** செய்தவர் என மெய்ப்பித்தார். ஒன்று, அவர் கிறிஸ்துவுக்காக நியாயப்பிரமாணத்தை விட்டுவந்தது தவறு, அல்லது இப்பொழுது நியா யப்பிரமாணத்திற்காகக் கிறிஸ்துவை விட்டுச் செல்வது தவறு!

**2:19** பிரமாணத்தை மீறுவதற்கான தண்டனை மரணம். பாவி என்னும் நிலையில் நான் நியாயப் பிரமாணத்தை மீறினேன். ஆகவே அது என்னை

மரணத்திற்குள்ளாகத் தீர்த்தது. ஆனால் நான் பிரமாணத்தை மீறியதால், நான் அடைய வேண்டிய தண்டனையாகிய மரணத்தைக் கிறிஸ்து என்னுடைய இடத்தில் அடைந்து தீர்த்தார். இவ்வாறாக, கிறிஸ்து இறந்தபோது நான் இறந்தேன். அவர் நியாயப் பிரமாணத்திற்கு மரணமடைந்தார், அதாவது அதனுடைய நீதியான கோரிக்கைகள் அனைத்தையும் அவர் செலுத்தித் தீர்த்தார். ஆகவே, கிறிஸ்துவுக்குள்ளாக நான் **நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே**.

கிறிஸ்தவன் **நியாயப்பிரமாணத்திற்கு மரித்துவிட்டான்**. இனிமேல் அதைக்குறித்து அவன் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. அவ்வாறாயின் அவன் பத்துக் கட்டளைகளைத் தன் விருப்பப்படி மீறலாமா? இல்லை, அவன் இப்பொழுது தூய வாழ்க்கை வாழ்கிறான், நியாயப் பிரமாணத்தின் மேல் உள்ள அச்சத்தினால் அல்ல, அவனுக்காக மரணமடைந்த ஒருவர் மீது கொண்டிருக்கிற அன்பினால் அவன் அவ்வாறு நடக்கிறான். நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும், அதுவே வாழ்க்கைக்கான மாதிரி என்ற எண்ணத்துடன் இருக்கிற கிறிஸ்தவன், தன்னைச் சாபத்திற்குக் கீழ்ப்படுத்திக் கொள்கிறான். மேலும் நியாயப்பிரமாணத்தில் ஒன்றை மட்டும் கைக்கொண்டுவிட்டு, அதனை முழுவதுமாகச் செய்யவேண்டிய பொறுப்பு இல்லையென்று கூறமுடியாது. நாம் **தேவனுக்கென்று பிழைக்க** ஒரே வழி நியாயப்பிரமாணத்துக்கு மரணமடைவதே ஆகும். நியாயப்பிரமாணமானது ஒருக்காலும் பரிசுத்த வாழ்க்கையை உண்டுபண்ணாது. தேவனும் அவ்வாறு நிறைவேறும் என்று எதிர்பார்க்கவில்லை. 20 -ஆவது வசனத்தில் பரிசுத்தம் பெறுவதற்கான வழிமுறை சொல்லப்பட்டுள்ளது.

**2:20** விசுவாசி **கிறிஸ்துவுடனே** அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருக்கிறான். கல்வாரியில் அவர் சிலுவையில் அறையப்பட்டது மட்டுமின்றி, அங்கு நானும் **சிலுவையில் அறையுண்டேன்** - அவருக்குள்ளாகச் சிலுவையில் அறையுண்டேன். தேவனுடைய பார்வையில் நான் ஒரு பாவி என்னும் நிலை முடிந்துபோன ஒன்றாக இருக்கிறது என்பதே இதன் பொருளாகும். என்னுடைய சொந்த முயற்சிகளால், இரட்சிப்பைப் பெறுவதற்கான தகுதியை அடையவோ சம்பாதிக்கவோ முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டேன் என்பது இதன் பொருளாகும். நான் ஆதாமின் பிள்ளை என்ற நிலை, நியாயப்பிரமாணத்தின் காரணமாக ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்ட நிலை, மறுபிறப்படையாத முந்தின மனிதன் என்ற நிலை எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டன என்பதும் இதன் பொருளாகும். முந்தின கேடுற்ற "நான்" இப்பொழுது சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. என்னுடைய அனுதின வாழ்க்கையில் அதற்கு எந்த உரிமையும் கிடையாது. தேவனுக்கு முன்னான எனது *தகுநிலையில்* அது உண்மையாயிருக்கிறது. எனது நடத்தையிலும் அது உண்மையாக இருக்கவேண்டும்.

விசுவாசியானவன் ஒரு தனி மனிதனாக அல்லது தனி ஆளுமையுடன் வாழ்வது முடிந்து போன ஒன்று என்று சொல்ல முடியாது. ஆனால் இறந்து போனவனாக தேவன் கண்ட அதே மனிதன் இப்பொழுது வாழ்கிறதில்லை. **இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறவர்**. நான் விரும்புகிற வண்ணம் என்னுடைய வாழ்க்கையை வாழுவதற்காக, இரட்சகர் மரணம் அடையவில்லை. இது முதல் அவர் எனக்குள்ளாக அவருடைய வாழ்க்கையை வாழும்படிக்கே அவர் எனக்காக மரணம் அடைந்தார். இந்த மனித சரீரத்தில் இப்பொழுது **நான் பிழைத்திருக்கிறதோ, தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்**. விசுவாசம் என்பது நம்பிக்கைக் குரியது அல்லது சார்ந்திருத்தல் என்று பொருள் படும். கிறிஸ்துவுக்குத் தன்னை ஒப்புவித்து, தன்னுடைய வாழ்க்கையில் அவர் வாழும்படியாக அனுமதித்து, தொடர்ந்து கிறிஸ்துவைச் சார்ந்து வாழ்கிறவனாகவே கிறிஸ்தவன் இருக்கிறான்.

இவ்வாறாக விசுவாசியின் வாழ்க்கையின் கோட்பாடு நியாயப்பிரமாணம் அல்ல, கிறிஸ்துவே அவனுடைய வாழ்வின் கோட்பாடாகத் திகழ்கிறார். அது கடுமுயற்சிக்குரியது அல்ல, மாறாக நம்பிக்கையினால் செயல்படுத்துவதாகும். அவன் பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கான காரணம் தண்டனை கிடைக்கும் என்னும் பயம் அன்று. மாறாக, அவனிடத்தில் **அன்புகூர்ந்து** அவனுக்காகத் **தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனின்** நிமித்தம் அவ்வாறு வாழ்கிறான்.

உங்களுடைய சரீரத்தில் கர்த்தராகிய இயேசு வாழ்வு வெளிப்படவேண்டுமென்னும் மன்றாட்டுடன், நீங்கள் எப்பொழுதாவது அவரிடம் உங்களுடைய வாழ்க்கையை ஒப்புவித்திருக்கிறீர்களா?

2:21 **தேவனுடைய** நிபந்தனையற்ற இரட்சிப் பாகிய ஈவில் அவருடைய **கிருபையைக்** காண லாம். மனிதன் அதனைச் சம்பாதிக்க முயற்சி செய்யும்போது, அவன் அதனை இழந்து போகி றான். மனிதனுடைய தகுதியினாலோ அவனு டைய முயற்சியினாலோ அதனைப் பெறமுடியு மென்றால், அது கிருபையாக இருக்க முடியாது. பவுல் கடைசியாகப் பேதுருவைத் தாக்கிய செயல் ஆற்றல் மிக்கதாயிருந்தது. யூதர்களுடைய ஆசா ரங்களின் காரணமாகப் பேதுருவால் தேவனிடத் தில் சில நன்மைகளைப் பெறமுடியுமென்றால், **கிறிஸ்து மரித்தது** பயனற்ற செயலாயிருக்குமே; உண்மையில் அவர் தனது உயிரை வீணாக எறிந்துவிட்டார் என்றே சொல்லவேண்டும். வேறு எந்தச் செயலின் மூலமாகவும் மனிதனால் நீதி யைப் பெறமுடியாது என்னும் காரணத்தினா லேயே கிறிஸ்து மரணம் அடைந்தார். நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வதாலும் அவனால் அதனை அடைய முடியாது.

க்ளோ என்பார் கூறுகிறார்:

> கிரியையினால் இரட்சிப்பு உண்டாகிறது என்னும் கொள்கையே, கேடு நிறைந்த கள்ள உபதேசமாகும், அது சபைகளைக் களங்கப் படுத்துகிறது, சமயக் கோட்பாட்டைப் புளிப்புள் ளதாக்குகிறது, நம்முடைய உள்ளங்களைப் பெருமையினால் ஆணவம் பெறச் செய்கிறது. "இரட்சிப்பைப் பெறுவதற்குப் பதிலாக அதனை முயற்சியினால் சம்பாதிக்க முடியும் என்ற எண்ணமே பிரிவினையினாலும், கள்ள உபதேசத்தாலும் சபையைப் பெரிதும் தாக்கி யிருக்கிறது. தேவன் மனிதர்களுக்காகக் கிரியை செய்வதை அவர்கள் நோக்கிப் பார்க்க வேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக அவர்கள் தேவனுக்காகக் கிரியை செய்ய வேண்டும் என்று சொல்வதாலேயே பிரசங்கங் கள் ஆற்றல் அற்றவையாக இருக்கின்றன என்று நான் நம்புகிறேன்" என்று திருவாளர் ஜான் ரஸ்கின் எழுதுகிறார்.[8]

## 2. உபதேசப் பகுதி: விசுவாசத்தினால் மட்டுமே நீதி உண்டாகிறது என்னும் கொள்கையைப் பவுல் உறுதிப்படுத்துதல் (3:1-5:1)

### அ. நற்செய்தியின் மாபெரும் சத்தியம் (3:1-9)

3:1 உய்த்துணரும் ஆற்றல், பகுத்தறிவு ஆகியவற்றில் அவர்கள் குறைவுடையவர்களாக இருந்தார்கள் என்பதை அவர்களுடைய செயல் பாடுகள் வெளிப்படுத்தின. கிருபையிலிருந்து நியாயப்பிரமாணத்திற்கு மாற்றம் பெறச்செய்வது **மயக்கும்** செயலாகும். மந்திர வாய்ப்பட்டினாலே ஒருவரை அமைதியாக்கி, அவர் எச்சரிக்கையற்ற நிலையில் இருக்கும்போது உண்மைக்குப் பதிலாகப் பொய்யை நம்பச்செய்வதே இந்த மயக் கும் செயலாகும். "**உங்களை மயக்கினவன் யார்?**" என்று பவுல் வினவியபோது, யார் என்பதன் ஒருமைச் சொல்லையே பயன்படுத்தியிருக்கிறார் (கிரேக்கு, tis).[9] அது பன்மைச் சொல் அல்ல. ஆகவே இந்தக் கள்ளத்தனமான உபதேசத் தைக் கற்பித்தவன் பிசாசு என்பதை அச்சொல் சுட்டிக் காட்டுகிறது எனக்கொள்ளலாம். நியாயப் பிரமாணத்தின் சாபத்திலிருந்தும் அடிமைத்தனத் திலிருந்தும் என்றென்றும் விடுவிக்கும் செயலைச் செய்தது சிலுவையே என்பதை வலியுறுத்தும் வண்ணம், பவுல் கலாத்தியருக்கு **இயேசு கிறிஸ் துவைச் சிலுவையில் அறையப்பட்டவராக** அறிமுகப்படுத்தினார். அவ்வாறிருக்க அவர் களால் எவ்வாறு நியாயப்பிரமாணத்திற்குத் திரும்பிச்செல்ல முடிந்தது? அதன் மூலமாக அவர்கள் சிலுவையை அசட்டை செய்துவிட்டார் கள். சத்தியம் அவர்களை அனுபவபூர்வமாக நிலைநிற்கச் செய்யவில்லையா?

3:2 இந்த முழுப்பிரச்சினைக்கும் தீர்வுகாண ஒரு கேள்வி போதுமானதாக இருக்கிறது. அவர் கள் மனந்திரும்பிய நாளை நோக்கித் திரும்பிச் செல்லட்டும்-ஆவியானவர் அவர்களுடைய சரீரங்களுக்குள்ளாகக் குடியிருக்கும்படி உட் புகுந்த நாள் அதுவே. அவர்கள் எவ்வாறு **ஆவி யைப் பெற்றார்கள்**? கிரியையினாலா, விசு வாசத்தினாலா? விசுவாசத்தினாலேயே அவர்கள் ஆவியைப் பெற்றார்கள் என்பதில் ஏதொரு ஐயமுமில்லை. எவரும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு ஆவியானவரைப் பெற்றதில்லை.

3:3 நியாயப்பிரமாணத்தைக் கொண்டு அவர் களால் இரட்சிப்பைப் பெறமுடியவில்லையெனில், எவ்வாறு அவர்களால் அதன்மூலம் பரிசுத்தத்தில் வளரமுடியும்? அல்லது எவ்வாறு அதன் மூலம் கிறிஸ்தவ முதிர்ச்சியைப் பெறமுடியும். இரட்சிப் பைப் பெறுவதற்கு ஆவியின் வல்லமை தேவை யெனில், அதனை நிறைவு செய்ய மாம்சீக முயற்சிகளால் முடியுமா?

3:4 கலாத்தியர் முதலாவதாகக் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்தபோது கொடுமையான உபத்திரவத்தைச் சந்திக்கத் தாங்களே இடங்

கொடுத்ததுபோல ஆயிற்று. அந்த உபத்திரவத்தில் ஓரளவு கிருபையின் சுவிசேஷத்தை வெறுத்த யூத மதவெறியர் மூலமாகவே ஏற்பட்டது. அவ்வாறு அவர்கள் பட்டபாடுகள் யாவற்றையும் **வீணாய்ப்பட்டார்களா**? இவ்விதமாக அவர்கள் நியாயப்பிரமாணத்தினிடமாய்த் திரும்பிச் சென்றதன் மூலம், உபத்திரவம் கொடுத்தவர்களுடைய செயல் சரியென்று கூறுவது போலாகிவிட்டது. **அவை யாவும்** உண்மையில் **வீணாய்ப் போயிற்று**. எதன் பொருட்டு அவர்கள் **பாடுகளை** அனுபவித்தார்களோ, அந்த நற்செய்தியினிடமாய் அவர்கள் மீண்டும் வருவார்கள் என்று பவுல் தொடர்ந்து நம்பிக்கை கொண்டிருந்தார்.

**3:5** இந்த வசனத்திலுள்ள **நடக்கிறவர்** என்னும் சொல் யாரைக் குறிக்கிறது?[10] அது தேவனையா, பவுலையா அல்லது அவர் அம்மடலை எழுதிய போது கலாத்தியாவில் ஊழியம் செய்துவந்த வேறொரு ஊழியரையா, யாரைக் குறிக்கிறது என்னும் கேள்வி எழுகிறது. முடிவில் அச்சொல் தேவனையே குறிப்பிட வேண்டும். ஏனெனில் அவர் ஒருவராலேயே பரிசுத்த **ஆவியைத்** தரமுடியும். ஆயினும், அதன் உடன் இணைப்பான பொருளில், தேவன் தமது சித்தத்தை நிறைவேற்றப் பயன்படுத்துகிற கிறிஸ்தவ ஊழியரையும் குறிக்கக் கூடும். கிறிஸ்தவ ஊழியம் மிக மேன்மை வாய்ந்தது என்னும் கருத்தை இது வெளிப்படுத்திக் காட்டுகிறது. "மெய்யான கிறிஸ்தவம், அது எத்தகையதாக இருந்தாலும், அது பிறருக்குப் பரிசுத்த ஆவியை வெளிப்படுத்துகிறது. உண்மையில் இது பரிசுத்த ஆவியானவரைப் பகிர்ந்தளிக்கும் செயலாகும்" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

அப்போஸ்தலன் ஒருவேளை தன்னைக் குறித்தே பேசுவாரென்றால், அவர் பிரசங்கம் செய்த வேளைகளில் அதனோடு செய்யப்பட்ட அற்புதங்களையும், அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட செயலையுமே நினைவுகூருகிறார் என்றே கொள்ளவேண்டும் (எபி. 2:4). ஆனால் அங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வினைச் சொல் கடந்தகால அனுபவங்களைக் குறிப்பிடவில்லை யென்று காட்டுகிறது. மாறாக, அவர் இந்த மடலை எழுதிய அதே நாட்களில் நடந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகளே இவை. 1 கொரிந்தியர் 12:8-11 ஆகிய வசனங்களில் பவுல் விளக்கிக் கூறியுள்ளபடி, மனமாற்றம் பெற்ற பிறகு விசுவாசிகளுக்கு வியத்தகு வரங்கள் தந்தருளப் பட்டுள்ளன என்பதையே பவுல் இங்கு குறிப்பிடுகிறார் எனத் தோன்றுகிறது.

**அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்? விசுவாசக் கேள்வியினாலே** என்பதே இதன் விடையாகும். பரிசுத்த ஆவியானவர் சரீரத்தில் குடியிருக்கும் செயலும், அதனைத் தொடர்ந்து அவர் விசுவாசியினிடத்தில் புரிகிற செயலும் ஒருக்காலும் சம்பாதிக்கப்படுவதில்லை, தகுதியினால் பெறப்படுவதுமில்லை. மாறாக அவை எப்பொழுதும் கிருபையினால் தந்தருளப்படுகின்றன, **விசுவாசத்தினால்** பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக, விசுவாசத்தினால் நன்மைகள் உண்டாகின்றனவேயொழிய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதாலே அல்ல என்பதைக் கலாத்தியர் தங்களுடைய சொந்த அனுபவங்களாலே அறிந்திருக்க வேண்டும்.

தனது வாதத்தை மெய்ப்பிக்க இரண்டாவது சான்றுக்காக, பவுல் இப்பொழுது எந்த வேத வசனங்களைக் கொண்டு விருத்தசேதனம் தேவை என்று கள்ள போதகர்கள் கூறி வந்தார்களோ அதே வசனங்களிடமாய்த் திரும்புகிறார்! உண்மையாகவே பழைய ஏற்பாடு என்ன கூறுகிறது?

**3:6** தேவன் கலாத்தியரிடையே ஈடுபட்ட விதம் முற்றிலும் விசுவாசத்தையே அடிப்படையாகக் கொண்டது என்பதைப் பவுல் வெளிப்படுத்திக் காட்டினார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் அதே போல மனிதர்கள் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள் என்பதைப் பவுல் இப்பொழுது மெய்ப்பித்துக் காட்டுகிறார். ஐந்தாவது வசனத்தில் காணப்படும் கேள்வி: "அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ?" "விசுவாசக் கேள்வியினாலே" என்பதே இதன் விடையாகும். அந்த விடையினை மனதிற்கொண்டவராக அவர் ஆறாவது வசனத்தைத் தொடங்குகிறார். **அப்படியே ஆபிரகாம்**.. அவனும் அதே விதமாக நீதிமானாக்கப்பட்டான் - அதாவது விசுவாசக் கேள்வியினாலேயே.

அநேகமாக யூத போதகர்கள் ஆபிரகாமைத் தங்களுடைய நாயகனாகவும் எடுத்துக்காட்டாகவுமே பயன்படுத்திவந்தார்கள். அவனுடைய அனுபவமாகிய விருத்தசேதனத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தார்கள் (ஆதி. 17:24,26). அவ்வாறாயின் அந்த மனிதர்களோடு, அவர்களுடைய வாதத்தின் அடிப்படையிலேயே பவுல்

போரிட வேண்டும். ஆபிரகாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டான்? **ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்**. ஒரு பரிசைப் பெறுவதற்குத் தகுதிபடைத்த செயலினால் அவன் இரட்சிக்கப்படவில்லை. அவன் **தேவனை விசுவாசித்தது** மட்டுதான் அவன் செய்தது. அதனுடன் தகுதி எதுவும் சேர்க்கப்படவில்லை. உண்மையில், ஒரு மனிதன் தேவனை விசுவாசிக்காமல் இருப்பதற்கு, அவன் மதிகேடனாகத்தான் இருக்க வேண்டும். இரட்சிப்போடு சம்பந்தப்பட்டு காண்கையில் மனிதனால் செய்யக் கூடியதெல்லாம் தேவனை விசுவாசிப்பதேயாகும். அது அவன் பெருமை பாராட்டுவதற்கு ஏதொரு வாய்ப்பையும் தருகிறதில்லை. மனித முயற்சியோடு கூடிய "நற்கிரியை" அல்ல இது. இது மாம்சத்திற்கு எந்த இடத்தையும் தருகிறதில்லை. ஒரு படைப்பு தனது படைப்பாளரையோ, ஒரு பிள்ளை தனது பிதாவையோ நம்புகிறதிலும் மிகச்சரியானது எது?

யாரெல்லாம் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் யாவரையும் அவர் நீதிமான்கள் என்று அறிக்கை செய்யும் செயலே நீதிமான்களாக்கப்படுதல் என்னும் செயலாகும். பாவிகளுக்குப் பதிலாளாக அவர்களுடைய பாவங்களுக்குரிய தண்டனையைச் செலுத்தும்படி கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரணம் அடைந்த காரணத்தால், தேவன் இவ்விதமாகச் சரியான முறையில் பாவிகளோடு ஈடுபட முடிகிறது. விசுவாசியை நீதிமானாக்கி அவன் தன்னில் ஏதொரு பாவமும் இல்லாத நிலைக்கு தேவன் மாற்றுகிறார் என்பது நீதிமானாக்கப்படுதல் என்பதன் பொருளல்ல. இரட்சகர் நிறைவேற்றிய செயலின் அடிப்படையில், தேவன் அவனை நீதிமானாகக் கணக்கிடுகிறார். விசுவாசிக்கிற பாவிக்கு நீதிமான் என்னும் தகுநிலையை தேவன் கொடுத்து, அவனைப் பரலோகத்திற்குத் தகுதியுள்ளவனாக்குகிறார். பின்னர் அவர் அவனுக்குச் செய்த நன்மைக்கு நன்றிசெலுத்தும் வகையில் அவன் நீதிமானாக வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நீதிமானாக்கப்படுதலுக்கும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்பது இங்கே மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகும். அது முழுவதுமாக விசுவாசக் கோட்பாட்டைச் சார்ந்ததாகும்.

**3:7** கலாத்தியர் ஆபிரகாமின் உண்மையான புத்திரர் ஆகவேண்டுமென்றால் அவர்கள் விருத்தசேதனம் பெறவேண்டும் என்று யூதபோதகர்கள் உறுதியாகக் கூறிவந்தார்கள் என்பதில் எவ்விதஐயமுமில்லை. பவுல் இதனை எதிர்க்கிறார். யூதராகப் பிறந்தவர்கள் அல்லது யூதர்களாக மதமாற்றம் அடைந்தவர்கள் ஆகியோர் **ஆபிரகாமின்** உண்மையான **பிள்ளைகள்** அல்ல. மாறாக விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டவர்களே ஆபிரகாமின் பிள்ளைகள். விருத்தசேதனம் அடைவதற்கு ***முன்னமே*** ஆபிரகாம் நீதிமானாகக் கணக்கிடப்பட்டதாகப் பவுல் ரோமர் 4:10,11 ஆகிய வசனங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆபிரகாம் இன்னும் புறவினத்தான் என்னும் நிலையில் இருந்தபோதே நீதிமானாக்கப்பட்டான் என்றும் இதனைக் கூறலாம்.

**3:8** புறவினத்தாரையும் யூதரையும் தேவன் விசுவாசக் கோட்பாட்டின் அடிப்படையில் நீதிமான்களாக ஆக்குவார் என்று வேதம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே கண்டது. இங்கு பழைய ஏற்பாடு ஒரு தீர்க்கதரிசியாக வருணிக்கப்படுகிறது. விசுவாசத்தினாலே புறவினத்தார் பெறுகிற ஆசிர்வாதங்களைப் பழைய ஏற்பாடு முன்கண்டது மட்டுமின்றி அதனை ஆபிரகாமுக்கு ஆதியாகமம் 12:3 -இல் முன்னுரைத்தும் இருக்கிறது: "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசிர்வதிக்கப்படும்."

ஆதியாகமத்திலிருந்து எடுத்தாளப்பட்ட இந்த மேற்கோளை முதன்முறையாகப் படித்தபோது, இதற்கு இப்படிப்பட்ட பொருள் உண்டென்பதைப் பவுல் எவ்வாறு கண்டுபிடித்தார் என்பது நமக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தது. ஆனாலும், பழைய ஏற்பாட்டில் இந்த வசனத்தை எழுதிய பரிசுத்த ஆவியானவர், எல்லா நாடுகளுக்கும் விசுவாசத்தினாலே இரட்சிப்பு உண்டாகிறது என்னும் நற்செய்தியை இது கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருந்தார். அதே ஆவியானவரின் ஏவுதலால் பவுல் இதனை எழுதியிருப்பதால், இத்தகைய ஆதாரபூர்வமான பொருளை விளக்கித் தரும்படி அவருக்கு ஆற்றல் தரப்பட்டது. **உனக்குள்** - அதாவது, ஆபிரகாமோடு, ஆபிரகாம் எப்படியோ அதுபோலவே **சகல ஜாதிகளும்** - புறவினத்தாரும் யூதரும். **ஆசிர்வதிக்கப்படும்** - இரட்சிக்கப்படுவார்கள். எவ்வாறு ஆபிரகாம் இரட்சிக்கப்பட்டான்? **விசுவாசத்தினாலே**. சகல ஜாதிகள் எவ்வாறு இரட்சிக்கப்படுவார்கள்? ஆபிரகாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டானோ அதுபோலவே - விசுவாசத்தினாலே. மேலும், அவர்கள் புறவினத்தார் என்னும் நிலையிலேயே இரட்சிப்படைவார்கள், யூதர்களாக மாற்றம் பெற்று அவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை.

**3:9** எவரெல்லாம் தேவனிடத்தில் **விசுவாசம்** வைக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் **விசுவாசமுள்ள ஆபிரகாமோடு**, யூத வேத எழுத்துகளின் ஆதாரத்தின் அடிப்படையில் நீதிமான்களாக **ஆக்கப்படுகிறார்கள்**.

### ஆ. நியாயப்பிரமாணமும் வாக்குத்தத்தமும் (3:10-18)

**3:10** நியாயப்பிரமாணம் ஆசிர்வாதத்தை அருளுவதற்கு மாறாக சாபத்தையே தரக்கூடியதாக இருக்கிறது என்பதைப் பவுல் புனித எழுத்துகளின் அடிப்படையில் விளக்கிக்காட்டுகிறார். நியாயப்பிரமாணத்தை மீறியவர்கள் யாவரும் என்று இந்த வசனம் கூறவில்லை. மாறாக, **"நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும்"** என்றே இது கூறுகிறது. அதாவது, நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதன் அடிப்படையில் தேவனிடத்தில் தயவுபெற நாடுகிறவர்கள் என்பதே இதன் பொருளாகும். அவர்கள் **சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்**, அதாவது, மரண ஆக்கினை பெற்றிருக்கிறார்கள். **அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே** (உபா. 27:26). ஒரு நாள் அல்லது ஒரு மாதம் அல்லது ஓர் ஆண்டு நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டால் போதாது. ஒவ்வொருவரும் அதற்குக் கீழ்ப்படிவதில் **நிலைத்திருக்க** வேண்டும். முழு நிறைவான கீழ்ப்படிதல் இருக்கவேண்டும். பத்துக் கட்டளைகளுக்கு மட்டும் கீழ்ப்படிவது போதாது. மோசே எழுதிய ஐந்து நூல்களிலும் காணப்படும் அறுநூறுக்கும் மேற்பட்ட பிரமாணங்கள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்!

**3:11** பழைய ஏற்பாட்டு வசனங்களின் மூலமாகக் கள்ளபோதகர்கள் மீண்டும் தவறென்று மறுத்துரைக்கப்படுகிறார்கள். தேவன் எப்பொழுதுமே மனிதர்களை **விசுவாசத்தின்** மூலமாகவே நீதிமான்களாக்குகிறார் என்பதை மெய்ப்பிக்கப் பவுல் ஆபகூக் தீர்க்கதரிசியின் நூலிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். அந்த மேற்கோள் மூலமொழியாகிய கிரேக்கில் இவ்வாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது: "நீதிமான் விசுவாசத்தினாலே பிழைப்பான்." கிரியைகளினால் அல்லாமல், விசுவாசத்தினாலே நீதிமான்களாகக் கணக்கிடப்பட்டவர்கள் யாவரும் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் இதனைக் கூறலாம். விசுவாசத்தினாலே ஒரு முறை இரட்சிக்கப்பட்டவர்கள் **பிழைப்பார்கள்**.

**3:12** மனிதர்கள் விசுவாசிக்க வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறுவதில்லை. கட்டளைகளைக் கைக்கொள்ள *முயற்சி செய்யுங்கள்* என்றுகூட அது கேட்பதில்லை. கண்டிப்பான முறையில், முழுவதும், மிகச்சரியானபடி, லேவியர் ஆகமத்தில் சொல்லிக்கொடுக்கப்பட்டுள்ள வண்ணம் கீழ்ப்படிய வேண்டும் என்றே அது கட்டளையிடுகிறது. இது விசுவாசத்திற்கு எதிர்மாறான கோட்பாடாக இருக்கிறது. "செய்து வாழ்" என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. "விசுவாசித்து வாழ்" என்று விசுவாசம் கூறுகிறது. பவுல் கூறும் வாதம் இதுதான்: நீதிமானாகிய மனிதன் விசுவாசத்தினாலே பிழைப்பான். **நியாயப்பிரமாணத்திற்குக்** கீழிருக்கும் மனிதன் **விசுவாசத்தினாலே** வாழ்கிறதில்லை. ஆகையால் அவன் தேவனுக்கு முன்பாக *நீதிமானாகக்* காணப்படுவதில்லை. **"அவைகளைச் செய்கிற மனிதனே அவைகளால் பிழைப்பான்"** என்று பவுல் சொல்லுகிறபோது அது கருத்தளவிலான மூதுரை, அல்லது அந்த நிலையை அடையமுடியாத கருத்தளவிலான நிலை என்றே அவர் கூறுகிறார்.

**3:13** மீட்கப்படுதல் என்பது திரும்ப விலை கொடுத்து வாங்குவது என்றோ ஒரு விலை கொடுத்து விடுவித்தல் என்றோ பொருள்படும். **நியாயப்பிரமாணத்தின் சாபம்** மரணமாகும் - கட்டளைகளை மீறுவதற்குரிய தண்டனை. நியாயப்பிரமாணம் கோரிய மரணமாகிய தண்டனையைச் செலுத்த வேண்டிய மக்களாகிய நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவர்களை மீட்கும்படி அவரே அந்த தண்டனையைச் செலுத்தினார். (யூதர்கள் மனுக்குலத்திற்குப் பிரதிநிதிகளாக இருந்தபோதிலும், **நம்மை** என்னும் பிரதிப்பெயர்ச் சொல்லைப் பவுல் பயன்படுத்தியபோது விசுவாசிக்கும் யூதர்களை முதன்மைப்படுத்தியே பேசுகிறார் என்பதில் ஐயமில்லை.)

சிண்டிலேன் ஜோன்ஸ் கூறுகிறார்:

> தங்களைப் பாதி அளவே கிறிஸ்து விலைக்கு வாங்கியிருக்கிறார் என்று கலாத்தியர் கற்பனை செய்துகொண்டார்கள். விருத்தசேதனத்திற்குக் கீழ்ப்படிதல், யூதச்சடங்குகள் மற்றும் பண்டிகைகள் ஆகியவற்றை அனுசரித்தல் போன்ற வற்றால் மீதிப் பாதியைத் தாங்களே வாங்க வேண்டுமென்றும் எண்ணினார்கள். இதன் காரணமாகவே அவர்கள் கள்ளபோதகர்களால் வழிவிலகிச் செல்ல ஏவப்பட்டவர்களாகவும், கிறிஸ்தவத்தையும் யூதமார்க்கத்தையும் கலப்படம் செய்ய ஆயத்தப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். பவுல் இங்கு கூறுகிறார்:

"நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி முழுவதுமாகக் கிறிஸ்து மீட்டுக் கொண்டார்" வெல்ஸ் மொழிபெயர்ப்பு).[11]

பாவங்களுக்கு எதிரான தேவனுடைய அச்ச முண்டாக்குகிற கோபத்தைச் சகித்தவராகக் **கிறிஸ்து** மனிதர்களுக்குப் பதிலாக மரணமடைந்ததாலே, அவர்களை **மீட்டுக்கொண்டார்**. மனிதனுடைய பதிலாள் என்னும் நிலையில் தேவனுடைய **சாபம்** அவர் மேல் விழுந்தது. அவர் தம்மில் பாவமுள்ளவராக மாறவில்லை. ஆனால் மனிதனின் பாவங்கள் அவர்மீது வைக்கப்பட்டன.

தமது உலக வாழ்க்கையின் காலத்தில் கிறிஸ்து பரிபூரணமாகப் பத்துக் கட்டளைகளைக் கைக்கொண்டதன் மூலமாக மனிதர்களை **நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நீங்கலாக்கி** மீட்டுக்கொள்ளவில்லை. அவர் நியாயப்பிரமாணத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த செயல் நம்முடைய கணக்கில் வரவு வைக்கப்பட்டதாக வேதம் போதிக்கவில்லை. மாறாக நியாயப்பிரமாணத்தின் அச்சமூட்டும் சாபமாகிய மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டதன் காரணமாக அவர் மனிதர்களை நியாயப்பிரமாணத்திலிருந்து மீட்டுக்கொண்டார். அவருடைய மரணம் நிகழவில்லையென்றால் இரட்சிப்பு இல்லை. குற்றவாளிகள் என்று தீர்க்கப்பட்டவர்கள் மரத்தில் தூக்கப்படும்போது, அவர்கள் தேவனுடைய சாபத்திற்கு உட்பட்டவர்கள் என்பதற்கு அடையாளமாக அந்நிகழ்ச்சி விளங்குகிறது என்று நியாயப்பிரமாணம் கற்பித்தது (உபா. 21:23). தம்முடைய படைப்புகளின் சாபத்தைச் சுமந்தவராக இரட்சகர் எப்படிப்பட்ட மரணமடைவார் என்பதன் தீர்க்கதரிசனத்தைத் தூய ஆவியானவர் அந்த வேதபகுதியில் காண்கிறார். வானத்திற்கும் பூமிக்கும் தகுதியற்றவர் போல இரண்டிற்கும் இடையே அவர் தொங்கவிடப்பட்டார். சிலுவையில் அடிக்கப்பட்டு அவர் அடைந்த மரணத்தில், அவர் மரத்தில் தூக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது (அப். 5:30; 1 பேதுரு 2:24).

**3:14** ஆபிரகாமையும் அவன் மூலமாக இந்த உலகம் முழுவதையும் ஆசிர்வதிக்கப் போவதாக தேவன் வாக்குறுதி தந்திருந்தார். விசுவாசத்தைக் கொண்டு கிருபையினாலே இரட்சிக்கப்படுவதே **ஆபிரகாமுக்கு உண்டான ஆசிர்வாதமாகும்.** தேவன் கோரிய மரணதண்டனை முதலாவது செலுத்தப்படவேண்டும். தேவன் தமது கிருபையில் யூதர்களையும் புறவினத்தாரையும் சென்றடையும்படி கர்த்தராகிய இயேசு சாபமாக்கப்பட்டார். (ஆபிரகாமின் சந்ததியாகிய) கிறிஸ்துவில் இப்பொழுது எல்லா நாடுகளும் ஆசிர்வதிக்கப்படுகின்றன.

ஆதியாகமம் 12:3 -இல் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய வாக்குறுதியில் தூய ஆவியானவர் பற்றிய குறிப்பு எதுவுமில்லை. ஆனால் தேவன் ஆபிரகாமோடு செய்த இரட்சிப்பைப் பற்றிய நிபந்தனையற்ற உடன்படிக்கையில் பரிசுத்த ஆவியானவரின் வரமும் சேர்த்து உரைக்கப்பட்டது என்று பவுல் அப்போஸ்தலன் தேவனாலே ஏவப்பட்டவராக இங்கு கூறுகிறார். அது அங்கே கருவுருவில் இருந்தது. நியாயப்பிரமாணம் வழியில் தடையாக இருந்தவரை பரிசுத்த ஆவியானவராலே வரமுடியாத நிலையே இருந்தது. ஆவியானவர் கொடுக்கப்படுவதற்கு, முதலாவதாகக் கிறிஸ்து மரணமடைந்து மகிமைப்பட்டிருக்க வேண்டும் (யோவான் 16:7).

நியாயப்பிரமாணத்தினால் அல்ல, விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு உண்டாகிறது என்று அப்போஸ்தலன் முதலாவதாக, கலாத்தியருடைய அனுபவத்தின் மூலமாகவும், இரண்டாவதாக பழைய ஏற்பாட்டு வசனங்களின் மூலமாகவும் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார். இப்பொழுது அவர் அதனை அனுதின வாழ்க்கை நிகழ்ச்சியின்மூலம் விவரிக்கத் திரும்புகிறார்.

இந்தப் பகுதியில் பவுல் எடுத்துரைக்கிற வாதத்தை இவ்விதமாகத் தொகுத்துரைக்க முடியும்: ஆதியாகமம் 12:3 -இல், இப்புவி வாழ் அனைத்து இன மக்களையும் ஆபிரகாமின் மூலமாக ஆசிர்வதிக்கப் போவதாக தேவன் வாக்குரைத்தார். இரட்சிப்பைப் பற்றிய வாக்குறுதியில் புறவினத்தாரும் யூதரும் இடம் பெறுவர். ஆதியாகமம் 22:18 -இல் தேவன், மேலும் ஒரு வாக்குறுதியை நல்கினார்: "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." இங்கு அவர் சந்ததி (ஒருமை) என்னும் சொல்லைப் பயன்படுத்தினாரேயொழிய, "சந்ததிகள்" (பன்மை) என்னும் சொல்லைப் பயன்படுத்தவில்லை. தேவன் இங்கே ஒரு மனிதரைக் குறிப்பிட்டுள்ளார்; ஆபிரகாமின் நேரடிச் சந்ததியான கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே அவர் (லூக்கா 3:34). அனைத்து நாட்டினரையும், அவர்கள் புறவினத்தாராயினும் யூதராயினும் கிறிஸ்துவின் மூலமாக ஆசிர்வதிக்கப் போவதாக தேவன் வாக்குரைத்தார் என்றும் இதனைக் கூறலாம். இந்த வாக்குறுதி நிபந்தனையற்றது. நற்கிரியைகளைச் செய்வதோ, சட்டப்பிரகாரமான

பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதோ இங்கு நிபந்தனைகளாகக் கூறப்படவில்லை. இந்த எளிமையான வாக்குறுதியை வலிமையான விசுவாசத்தினாலே பெற வேண்டும்.

430 ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தால் அந்த வாக்குறுதியோடு சில நிபந்தனைகளைச் சேர்க்கவோ, அதனை மாற்றவோ முடியாது. மனித உடன்படிக்கைகளில் இது நீதியாயிருக்காது. தெய்வீகச் செயல்களில் இதனை எண்ணிப்பார்க்கவும் முடியாது. ஆகவே, கிறிஸ்துவின் மூல மாகப் புறவினத்தாருக்கு தேவன் உரைத்த ஆசிர்வாத வாக்குறுதி, விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால் அல்ல என முடிவு செய்யலாம்.

**3:15** மனிதர்களுடைய நடவடிக்கைகளின்படி, ஓர் உடன்படிக்கையோ சாசனமோ கையெழுத்திடப்பட்டு முத்திரையிடப்பட்டால், ஒருவரும் அதனை மாற்றவேண்டும் என்றோ அதனோடு எதனையும் சேர்க்க வேண்டும் என்றோ நினைக்க மாட்டார்கள். மனிதர்களுடைய உடன்படிக்கைகள் இவ்வாறு மீறப்பட முடியாதவையென்றால், தேவனுடைய உடன்படிக்கை நடைபெறாமல் போகுமா?

**3:16** தொடக்கத்தில் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் (இஸ்ரவேல் மக்கள்) விசுவாசத்தின் அடிப்படையில் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்ட போதிலும், அதே இஸ்ரவேலர் பின்னர் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படுத்தப்பட்டார்கள் என்று இதற்கு விளக்கமளித்து யூதமார்க்கச் சார்புடையோர் வாதாடியிருப்பார்கள் என்பது நிச்சயம். ஆகவே முதலாவதாக விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்ட கலாத்தியர், இப்பொழுது பத்துக் கட்டளைகளையும் கைக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களுடைய வாதம். இதற்குப் பவுல் விடைபகர்கிறார்: **ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும்** (ஒருமை) **வாக்குத்தத்தங்கள்** கொடுக்கப்பட்டன. "சந்ததி" என்னும் சொல் சில வேளைகளில் ஒரு பெருங்கூட்டத்தைக் குறிக்கலாம்; ஆயினும் இங்கே அது ஒரு நபரை, அதாவது கிறிஸ்துவைக் குறிக்கிறது. (நாம் பழைய ஏற்பாட்டைப் படிக்குங்கால் இதனை ஒருக்காலும் உணர்ந்திருக்கமாட்டோம், ஆனால் தேவனுடைய ஆவியானவர் இதனை நமக்கு தெளிவுபடுத்துகிறார்.)

**3:17** ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குறுதி நிபந்தனையற்றது; அது கிரியையைச் சற்றேனும் சார்ந்திருக்கவில்லை. ஆபிரகாமுக்கு ஒரு சந்ததியைத் (கிறிஸ்து) தருவதாக தேவன் எந்த நிபந்தனையும் சேர்க்காமல் ஒப்புக்கொண்டார். அவனுக்குப் பிள்ளை இல்லாதிருந்தும், அவன் தேவனை விசுவாசித்தான், இவ்வாறாக வர விருந்த கிறிஸ்துவையும் விசுவாசித்தான், மேலும் அதன் மூலமாக நீதிமானாக்கப்பட்டான். அதன் பிறகு **நானூற்று முப்பது வருஷங்கள்** கழித்து வந்த **நியாயப்பிரமாணத்தினால்**, இரட்சிப்பைக் குறித்த **வாக்குத்தத்தத்தை** எந்த வகையிலும் பாதித்திருக்க முடியாது. அதனால் அந்த வாக்குறுதியைத் தகர்த்துப் போடவோ, அதனுடன் எந்த நிபந்தனையையும் சேர்க்கவோ முடியாது.

430 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த நியாயப்பிரமாணம், முன்னர் கொடுக்கப்பட்ட வாக்குறுதியைச் செல்லுபடியற்றதாக ஆக்கும் திறம் கொண்டது என்று ஒருவேளை யூதமார்க்கச் சார்புடையோர் கூறியிருப்பார்கள். "நிச்சயமாக இல்லை" என்னும் பொருளில் பவுல் விடை கூறுகிறார்: "அந்த வாக்குறுதியானது ஒரு சாசனத்தைப் போன்றது, ஒரு மரணத்தினால் அது உறுதிப்படுத்தப்பட்டது (உடன்படிக்கையின் பலி), ஆதி. 15. 7-11; எபி. 9:15-22 வசனங்களையும் காண்க). அதனைத் தள்ளுபடி செய்ய முடியாது."

ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை தேவன் யாக்கோபினிடத்தில் உறுதிசெய்த நாளிலிருந்து அந்த 430 ஆண்டுகள் கணக்கிடப்பட்டுள்ளன. அந்தச் சமயத்தில்தான் யாக்கோபு எகிப்துக்குச் செல்ல ஆயத்தம் செய்துகொண்டிருந்தான் (ஆதி. 46:1-4). அப்பொழுது தொடங்கி, இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு மூன்று மாதங்கள் கழித்த பின்னரே அந்த ஆண்டுகள் முடிவுபெற்றன.

**3:18** விசுவாசத்தினாலே அல்லது கிரியையினாலே ஏதாவது ஒன்றினாலேதான் **சுதந்தரம்** உண்டாக வேண்டும். அது ஆபிரகாமுக்கு நிபந்தனையற்ற வாக்குத்தத்தத்தினாலே கொடுக்கப்பட்டது என்று திருமறை தெளிவுபடுத்துகிறது. இரட்சிப்பும் அது போன்றதே ஆகும். அது நிபந்தனையற்ற ஈவாகத் தரப்பட்டிருக்கிறது. அதற்காக ஒரு கிரியையைச் செய்ய வேண்டும் என்னும் எண்ணம் அங்கு சிறிதளவும் இல்லை.

### இ. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் (3:19-29)

**3:19** அப்படியானால் நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? பவுல் வழக்காடியதுபோல, தேவன் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியை **நியாயப்பிரமாணம்** செல்லுபடியற்றதாக ஆக்கவு

மில்லை, அதனோடு வேறு ஒரு நிபந்தனையைச் சேர்க்கவுமில்லை என்றால் அதன் **நோக்க மென்ன**? பாவத்தின் மெய்யான இயல்பு மீறுதல் என்பதை வெளிப்படுத்துவதே நியாயப்பிர மாணத்தின் நோக்கமாயிருந்தது. நியாயப்பிர மாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னமே பாவம் இருந்தது. ஆனால் நியாயப்பிரமாணம் வரும் வரை அதனை மீறுதல் என்று மனிதன் அறியா மலிருந்தான். அறிந்த நியாயப்பிரமாணத்தை மீறிச் செயல்படுவதே மீறுதல் ஆகும்.

பாவிகளாயிருந்த தேசத்தாருக்கே நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது. அவர்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ வலிமை யற்றவர்களாக இருந்த காரணத்தினால், அதனைக் கைக்கொண்டு அவர்களால் நீதியைப் பெறமுடிய வில்லை. மனிதர்கள் எந்த அளவிற்கு நம்பிக்கை யற்ற பாவிகளாக இருந்தார்கள் என்பதைக் காட் டும்படியே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. அதனிமித்தம் மனிதர்களை தேவன் தமது கிருபை யினாலே இரட்சிக்கும்படி அவர்கள் அவரிடத்தில் கதறிஅழ ஏதுவாயிற்று. ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கை நிபந்தனையற்றது, அது அவனுக்கு நன்மையை அருளும்படியாகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியாகும். நியாயப்பிர மாணமோ சாபத்தையே வருவித்தது. மனிதனு டைய தகுதியற்ற தன்மையை உணர்த்தி, தேவனி டத்திலிருந்து பெறக்கூடிய நிபந்தனையற்ற நன் மைகளைப் பெற்றுக்கொள்ளும்படி நியாயப்பிர மாணம் அவனுக்கு விளக்கிக் காட்டியது. மனிதன் நன்மையைப் பெற வேண்டுமானால், அதை அவன் தேவனிடத்திலிருந்து தான் பெறமுடியும்.

**சந்ததி** கிறிஸ்துவே. ஆகவே கிறிஸ்துவின் வருகை மட்டும் தற்காலிக பயனுக்கென நியா யப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. நன்மையைத் தரும்படியாக ஆபிரகாமுக்கு வழங்கப்பட்ட வாக் குறுதி அவர் மூலமாகவே வர வேண்டும். பொது வாக இரண்டு பேருக்கு இடையே ஒப்பந்தம் ஏற்பட ஒரு **மத்தியஸ்தன்** தேவை, அவரே இடையீட் டாளராகச் செயல்புரிபவர். நியாயப்பிரமாணம் இரண்டு முரண்பாடுள்ளவர்களோடு சம்பந்தம் உடையதாயிருந்தது - தேவன் மற்றும் இஸ்ர வேல். மோசே நடுவில் நின்று செயல்புரிந்தான் (உபா. 5:5). தேவன் நியாயப்பிரமாணத்தை மோசேயிடம் கொடுக்க, தமது தூதர்களையே அனுப்பினார் (உபா. 33:2; சங். 68:17; அப். 7:53; எபி. 2:2). தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே உள்ள தொலைவை இவ்வாறு மோசேயும், தேவதூதர்களும் அந்தச் செயலில் பங்கேற்றதன் மூலமாக வெளிப்படுத்தினார்கள்; அந்த மக்கள் அவருடைய சமுகத்தில் நிற்கத் தகதியற்றவராக இருந்தார்கள்.

**3:20** உடன்படிக்கை செய்கிறவர் ஒருவரே யென்றால், மேலும் அவர் நிபந்தனையற்ற வாக்குறுதியைத் தந்திருந்தால், அதாவது மற்ற கட்சிக்காரர் ஏதொன்றையும் செய்ய வேண்டியது இல்லையென்றால், அங்கே **மத்தியஸ்தன்** தேவையில்லை. நியாயப்பிரமாணம் கொடுக்கப் பட்டபோது மத்தியஸ்தன் தேவைப்பட்டான், ஆகவே அந்த உடன்படிக்கையில் தனது பங்கை மனிதன் நிறைவேற்ற வேண்டியவனாக இருந் தான் என்பதே அதன் பொருளாகும். இது நியாயப் பிரமாணத்தின் குறைபாடாகும்; செய்ய இயலாத மனிதர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று அது வலியுறுத்தியது. ஆபிரகாமுக்கு தேவன் வாக்க ளித்தபோது, அவர் ஒருவரே அந்த உடன்படிக் கையைச் செய்தவர். எல்லாம் தேவனையே சார்ந்திருந்தது, மனிதனைச் சார்ந்தது எதுவு மில்லை. இதுவே அந்த வாக்குறுதியின் வலிமை. அங்கே மத்தியஸ்தன் யாரும் இல்லை, ஏனெனில் அங்கு மத்தியஸ்தன் தேவைப்படவில்லை. [12]

**3:21 வாக்குத்தங்களை நியாயப்பிரமாணம்** நீக்கிவிட்டதா? அல்லது அதனுடைய இடத்தை நியாயப்பிரமாணம் பிடித்துக்கொண்டதா? **அல் லவே!** பாவிகள் நிறைவேற்றக்கூடிய நியாயப் பிரமாணத்தைக் கொடுத்து, தேவன் விரும்பிய நிறைவான நிலையை அதன்மூலம் அவர்கள் அடைவார்களெனில், நிச்சயமாக நியாப்பிர மாணத்தைக் கைக்கொள்வதால் இரட்சிப்பைப் பெற்றிருக்க முடியும். கொஞ்சம் குறைவான விலைகொடுத்து பாவிகளை இரட்சிக்க முடிந் திருக்குமென்றால், தேவன் தம்முடைய அன்பின் குமாரனைச் சாகும்படி இந்த உலகத்திற்கு அனுப்பியிருக்கமாட்டார். ஆனால் நியாயப்பிர மாணத்தினால் மனிதர்களை இரட்சிக்க முடியாது என்பதை விளக்கிக் காட்ட அதற்கு நீண்ட காலம் கொடுக்கப்பட்டது மட்டுமின்றி, மிகுதியான மக்களும் அதற்குக் கீழ்ப்படுத்தப்பட்டார்கள். இந் தப் பொருளில் நியாயப்பிரமாணம் "மாம்சத்தி னாலே பலவீனமாயிருந்தது" (ரோமர் 8:3). மனி தர்களுடைய நம்பிக்கையற்ற நிலையை அவர் களுக்குக் காட்டி, தேவனுடைய இலவசமான கிருபையினாலே மட்டுமே இரட்சிப்பைத் தரமுடி யும் என்பதை வலியுறுத்துவதே நியாயப்பிர மாணத்தினால் செய்ய முடிந்த செயலாகும்.

**3:22** நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களையும் சேர்த்து எல்லா மனிதர்களும் பாவிகளே என்று பழைய ஏற்பாடு காண்பித்தது. **இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற** இரட்சிப்பைக் குறித்த **வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி**, பாவத்தைப் பற்றிய உணர்வை மனிதன் முழுவதுமாக அறிந்திருக்க வேண்டியது அவசியமாயிற்று. இந்த வசனத்தில் மிக முக்கியமான சொற்களாக **விசுவாசத்தினாலே அளிக்கப்படும்படி**, **விசுவாசமுள்ளவர்களுக்கு** ஆகியவை விளங்குகின்றன. இங்கே "செயல்புரிதல்", "நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுதல்" ஆகிய சொற்கள் சொல்லப்படவில்லை.

**3:23** இங்கு **விசுவாசம்** என்று சொல்லப்பட்டிருப்பது கிறிஸ்தவ விசுவாசம் ஆகும். கர்த்தராகிய இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், விண்ணகம் ஏகுதல் மற்றும் பெந்தெகொஸ்தே நாளில் நற்செய்தி அறிவிக்கப்படுதல் ஆகிய நிகழ்ச்சிகளின் மூலமாகத் தொடங்கப்பெற்ற காலகட்டத்தையே இது குறிக்கிறது. அதற்கு முன்னர் யூதர்கள், ஒரு சிறையில் அல்லது காவலில் வைக்கப்பட்டதுபோல, **நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தார்கள்**. நியாயப்பிரமாணம் அவர்களிடம் எதிர்பார்த்த செயல்கள் அவர்களுக்கு வேலியாக இருந்தன. மேலும் அவர்களால் அதனைக் கடைப்பிடிக்க முடியவில்லை, ஆகவே இரட்சிக்கப்படுவதற்கு **விசுவாசமே** வழியாக இருக்கிறது என்று அந்த வழியில் நெருக்கப்பட்டார்கள். நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை உண்டு என்கிற மகிமை நிறைந்த செய்தியை நற்செய்தியானது அறிவிக்கும் வரை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டோர் அதில் இவ்விதமாக அடைக்கப்பட்டிருந்தார்கள்.

**3:24** நியாயப்பிரமாணம் இங்கே சிறுபிள்ளைகளின் பாதுகாவலராகவும் வழிநடத்துபவராகவும் அல்லது **உபாத்தியாய்ச்** சித்திரிக்கப்படுகிறது.[13] இது பாடம் கற்பிக்கிற செயலை வலியுறுத்திக் காட்டுகிறது; தேவனுடைய பரிசுத்தத்தைக் குறித்த பாடத்தை நியாயப்பிரமாணம் கற்பித்தது. மேலும் அது மனிதனுடைய பாவ இயல்பைக் குறித்தும், மனிதன் பாவப்பரிகாரம் அடைய வேண்டிய தேவை குறித்தும் அது கற்பித்தது. இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள சொல் சிறுபிள்ளைகளையும், வளர்ச்சியடையாதவர்களையும் கவனித்து அவர்கள் ஒழுங்குடன் செயல்படும்படி பயிற்சி அளிக்கிற ஒருவரையே குறிப்பிடுகிறது.

**நம்மை வழிநடத்துகிற** என்னும் சொற்கள் மூலமொழியில் இடம்பெறவில்லை. ஆனால் KJV மொழிபெயர்ப்பாளர்களால் அவை சேர்க்கப்பட்டுள்ளன. அந்தச் சொற்களை நாம் விட்டுவிட்டால் நியாயப்பிரமாணம் கிறிஸ்து வரை, யூதப் பாதுகாவலராய்த் திகழ்ந்தது என்றே இந்த வசனம் கற்பிக்கிறது. அதாவது, கிறிஸ்துவின் வருகை வரை அல்லது கிறிஸ்துவின் வருகையைக் கருத்தில் கொண்டு என்பதே இதன் பொருளாகும். திருமணம், சொத்துகள், உணவுவகைகள் இன்னும் பல காரியங்களைக் குறித்த விதிமுறைகளாலே இஸ்ரவேல் மக்களை நியாயப்பிரமாணம் ஒரு தனிப்பட்ட தேசமாகப் பாதுகாத்து வந்தது என்ற ஒரு பொருளையும் இங்கு காணலாம். விசுவாசம் வந்தபோது பல நூற்றாண்டுகளாகப் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு இந்த நாட்டிற்கே அது முதலாவதாக அறிவிக்கப்பட்டது. மீட்பராகிய கிறிஸ்து நிறைவேற்றிய செயலின் அடிப்படையிலே **விசுவாசத்தினாலே** நீதிமானாக்கப்படுதல் வாக்களிக்கப்பட்டது.

**3:25** நியாயப்பிரமாணம் **உபாத்தியாய்** இருக்கிறது. ஆனால் கிறிஸ்தவ **விசுவாசம்** பெறப்பட்ட பிறகு, விசுவாசிக்கும் யூதர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் **கீழானவர்கள்** அல்லவே. அவ்வாறிருக்க, ஒருபோதும் அந்த உபாத்திக்குக் கீழ்ப்பட்டிராத கலாத்தியரைப் போன்ற புறவினத்தார் சற்றேனும் அதற்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லையே! 24 -ஆவது வசனம் மனிதன் *நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாக்கப்படுவதில்லை* என்று போதிக்கிறது. 25 -ஆவது வசனம் நீதிமானாக்கப்பட்ட மனிதனுக்கு *நியாயப்பிரமாணம் வாழ்வின் கொள்கையாக விளங்குவதில்லை* என்று கற்பிக்கிறது.

**3:26** "நாம்" என்ற பிரதிப்பெயர்ச்சொல் நீங்கி, **"நீங்கள்"** என்ற சொல் இடம் பெற்றுள்ளதைக் கவனியுங்கள். யூதர்களைப் பற்றி பவுல் பேசுகையில், கிறிஸ்துவின் வருகை மட்டும் அவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள் என்பதை விளக்கிக்காட்டினார். விசுவாசத்தினாலே மனிதர்கள் நீதிமான்களாகிறார்கள் என்கிற சத்தியம் அறிவிக்கப்படும்படி, அந்த மக்களை நியாயப்பிரமாணம் பிரித்துவைத்திருந்தது. அவர்கள் நீதிமான்களாக ஆனபோது, அவர்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்ட

நிலையிலிருந்து விடுபட்டார்கள். மேலும் யூதர்கள் என்னும் தனிப்பட்ட நிலையும் இல்லாமற் போயிற்று. **நீங்கள்** என்னும் பிரதிப்பெயர்ச்சொல் இந்த வசனத்திலும் இந்த அதிகாரத்தின் முடிவு வரையிலும் இரட்சிக்கப்பட்ட யூதர்களையும் புற வினத்தாரையும் உட்கொண்டதாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்களே **கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறவர்கள்.**

**3:27** மனமாற்றம் பெறுகின்ற தருணத்தில் கிறிஸ்துவோடு இணைக்கப்படும் நிகழ்ச்சி நடைபெறுகிறது, அது நீரில் பெறப்படும் திருமுழுக்கினாலே உறுதிசெய்யப்படுகிறது. திருமுழுக்கு ஒரு மனிதனை கிறிஸ்துவின் அங்கமாகவோ, இறையரசின் வாரிசாகவோ மாற்றமடையச் செய்வதில்லை. கிறிஸ்துவோடு இணைந்தவன் என்பதை வெளிப்படையாகக் காட்டுவதே ஞானஸ்நானமாகும். இதனைப் பவுல் கிறிஸ்துவைத் "தரித்துக்கெள்ளுதல்" என்று கூறுகிறார். ஒரு போர்வீரன், தான் ஒரு நாட்டின் படையைச் சேர்ந்தவன் என்பதை வெளிப்படுத்தும்படி எவ்வாறு சீருடையை அணிந்துகொள்கிறானோ, அது போலவே விசுவாசியும் தான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்பதை வெளிப்படுத்திக் காட்டும் படி நீரில் **ஞானஸ்நானம்** பெறுகிறான். இவ்வாறு அவன் செய்வதன் மூலம் கிறிஸ்துவின் தலைமைக்கும் அதிகாரத்திற்கும் கீழ்ப்பட்டவன் என்பதைப் பகிரங்கமாக அறிவிக்கிறான். தான் தேவனுடைய புத்திரன் என்பதை ஒரு காட்சிப்பொருளாக அவன் காண்பிக்கிறான்.

நீரில் பெறுகிற ஞானஸ்நானத்தின் மூலமாக ஒருவன் கிறிஸ்துவோடு இணைக்கப்படுவதாக அப்போஸ்தலன் இங்கு கூறவில்லை என்பது நிச்சயம். அப்படியிருக்குமென்றால் விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிப்பு உண்டாகிறது என்னும் அவருடைய அடிப்படைக் கொள்கைக்கு இது முற்றிலும் மாறுபாடானதாக இருக்குமே.

ஒரு விசுவாசியைக் கிறிஸ்துவின் சரீரத்தில் இடம்பெறச் செய்யும் ஆவியின் ஞானஸ்நானத்தையும் பவுல் இங்கு குறிப்பிடவில்லை என்பது புலனாகிறது (1 கொரி. 12:13). பரிசுத்த ஆவியினால் பெறுகின்ற ஞானஸ்நானத்தைக் காணவியலாது. கிறிஸ்துவை வெளியரங்கமாகத் "தரித்துக் கொள்ளுதல்" என்பதற்கும் ஆவியின் ஞானஸ்நானத்திற்கும் எவ்விதப் பொருத்தமும் இல்லை.

இங்கு சொல்லப்பட்டிருக்கிற ஞானஸ்நானம் கிறிஸ்துவுக்குள்ளாகப் பெறுகிற ஞானஸ்நானம் ஆகும் (JND). இஸ்ரவேலர் எவ்விதமாக மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்களோ, அதாவது அவனை அவர்கள் தங்களுடைய தலைவனாக ஏற்று அவனோடு தங்களை இணைத்துக் கொண்டார்களோ, அதுபோலவே விசுவாசிகள் இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறார்கள். அதன் மூலம் அவர்கள் கிறிஸ்துவைத் தங்களுடைய உரிமை பெற்ற கர்த்தராக ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை அது குறிப்பிடுகிறது.

ஞானஸ்நானத்தின் மூலமாக மாம்சமும் அதனுடைய முயற்சியின் மூலமாக நீதியைப் பெற முடியும் என்ற எண்ணமும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை விசுவாசி வெளிப்படுத்துகிறான். வாழ்க்கையின் முந்தின வழிமுறை முடிவுபெற்றுவிட்டது என்பதையும், புதிதான வாழ்க்கை முறை தொடங்கியிருக்கிறது என்பதையும் அவன் தெரிவிக்கிறான். நீரில் பெற்ற திருமுழுக்கின் மூலமாகக் கிறிஸ்துவோடு அவர்கள் இறந்து விட்டார்கள் என்றும், அவரோடு அடக்கம் பண்ணப்பட்டுவிட்டார்கள் என்றும் கலாத்தியர் அறிக்கை செய்தார்கள். கிறிஸ்து எவ்வாறு நியாயப்பிரமாணத்திற்கு மரணம் அடைந்தாரோ அதுபோலவே அவர்களும் நியாயப்பிரமாணத்திற்கு இறந்துவிட்டார்கள். ஆகவே அவர்கள் தங்களுடைய வாழ்வின் விதியாக அதைக் கொண்டிருக்க வேண்டும் என்று விருப்பம் கொள்ளலாகாது. கிறிஸ்து எவ்விதமாகத் தமது மரணத்தின் மூலம், யூதன் புறவினத்தான் என்ற வேறுபாட்டைத் தகர்த்தெறிந்தாரோ, அது போலவே அவர்களும் தேசிய வேறுபாடுகளுக்கு இறந்துவிட்டார்கள். அவர்கள் **கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டார்கள்**. அதாவது, அவர்கள் இப்பொழுது முற்றிலும் புதிதான வாழ்வை வாழ்கிறார்கள்- கிறிஸ்துவின் வாழ்வை வாழ்கிறார்கள்.

**3:28** இந்த வகுப்பாரிடையே நியாயப்பிரமாணம் வேறுபாடுகளை உண்டுபண்ணியிருந்தது. எடுத்துக்காட்டாக யூதன் புறவினத்தான் ஆகியோருக்கிடையே வேறுபாடு உண்டு என்பதை உபாகமம் 7:6; 14:1,2 ஆகிய வசனங்களில் அது வலியுறுத்துகிறது. ஒரு புறவினத்தானாகவோ, அடிமையாகவோ, பெண்ணாகவோ தான் உருவாக்கப்படவில்லை என்பதற்காக யூத ஆண்மகன் தனது காலை மன்றாட்டில் தேவனுக்கு நன்றி செலுத்தினான். **கிறிஸ்து இயேசுவுக்குள்** இந்த வேறுபாடுகள் யாவும் மறைந்துவிடுகின்றன. அதாவது,

தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிற விசயத்தில் இந்த வேறுபாடுகள் ஒன்றுமில்லை. புறவினத் தானைக் காட்டிலும் யூதன் அதிகமாக விரும்பப் படுவதில்லை. ஓர் அடிமையைக் காட்டிலும் விடுதலை பெற்ற மனிதன் கூடுதலாகச் சலுகை பெறுவதில்லை, ஓர் ஆண், பெண்ணைக் காட்டிலும் சிலாக்கியம் பெற்றவனாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் யாவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் காரணத்தால் எல்லோரும் ஒரேவிதமான தகுதியுடையவர்களாகவே இருக்கிறார்கள்.

இங்கு சொல்லப்படாத எதனையும் இந்த வசனம் சொல்லுவதாக நாம் நினைத்துக்கொள்ளக்கூடாது. அனுதின வாழ்வைப் பொருத்தமட்டில் (சபையில் ஆற்றப்படுகிற வெளியரங்கமான ஊழியத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை) ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை தேவன் கருத்தில் கொண்டிருக்கிறார். இரு பாலருக்கும் தனித்தனியே அறிவுரைகளைப் புதிய ஏற்பாடு வழங்குகிறது. மேலும் அது அடிமைகளிடமும் எஜமான்களிடமும் தனித்தனியே பேசுகிறது. ஆனால் தேவனிடத்திலிருந்து நன்மையைப் பெற இவையாவும் பொருட்டல்ல. **கிறிஸ்து இயேசுவுக்குள்** இருப்பதே மேலான நிலை ஆகும். (இது நாம் பெற்றிருக்கிற விண்ணுலகத் தகுதிநிலையைக் குறிக்கிறதேயொழிய, நம்முடைய இவ்வுலக இருப்பு நிலையைக் குறிப்பதில்லை.) தேவனுக்கு முன்பாக விசுவாசிக்கிற யூதன், மனந்திரும்பிய புறவினத்தானைக் காட்டிலும் சிறிதளவும் மேலானவன் அல்லன்! "நியாயப்பிரமாணம் உண்டு பண்ணின எல்லா வேறுபாடுகளையும் தேவன் தந்தருளிய *பெருங் கல்லறை* விழுங்கிவிட்டது" என்ற திருவாளர் கோடட் கூறுகிறார். ஆகவே கிறிஸ்து இல்லாமற் போகும்படிச் செய்த வேறுபாடுகளை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்து, கூடுதலான பரிசுத்தத்தைக் கிறிஸ்தவர்கள் நாடுவார்கள் என்றால் அது எந்த அளவிற்கு மதியீனமாகக் காணப்படும்.

**3:29** நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால் ஆபிரகாமின் சந்ததியாக மாறமுடியும் என்ற எண்ணத்தினால் கலாத்தியர் ஏமாற்றப்பட்டார்கள். ஆனால் பவுல் அதைத் தவறென்று விளக்குகிறார். கிறிஸ்துவே ஆபிரகாமின் சந்ததி; ஆபிரகாமுக்கு வாக்குறுதி பண்ணப்பட்ட சுதந்தரம் கிறிஸ்துவில் நிறைவேறியது. பாவிகள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தபோது, அவர்கள் அவரோடு ஒன்றாக இணைக்கப்பட்டாகள். இவ்வாறாக அவர்கள் **ஆபிரகாமின் சந்ததியாயும்**, மேலும் கிறிஸ்துவுக்குள், தேவனுடைய ஆசிர் வாதங்கள் அனைத்திற்கும் சுதந்தரராயும் மாற்றம் பெற்றார்கள்.

### ஈ. பிள்ளைகளும் புத்திரர்களும் (4:1-16)

**4:1,2** தன்னுடைய மகன் முழுவளர்ச்சி அடையும்போது, அவனிடத்தில் தனது சொத்துகளின் மேலுள்ள அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டுமென்று விரும்புகிற செல்வந்தனாகிய ஒரு தகப்பனின் படவுருமாக இப்பகுதி விளங்குகிறது. ஆயினும், அவன் **சிறுபிள்ளையாக இருக்கும் காலமளவும்**, அந்தச் சுதந்தரவாளியின் தகுதி ஓர் **அடிமைக்கு** ஒப்பாகவே விளங்குகிறது. அவன் இதனைச் செய்ய வேண்டும், அதனைச் செய்யக் கூடாது என்ற கட்டளைகளுக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்து வருகிறான். அவனுடைய சொத்துகளைக் கவனிப்பதற்குக் **காரியக்காரனும்**, அவனுடைய தனிப்பட்ட தேவைகளைக் கவனிப்பதற்கு **வீட்டுவிசாரணைக்காரனும்** இருக்கிறார்கள். தனது வாரிசு உரிமையாகப் பெறப்போகிற சொத்துகள் அவனுடையவை என்பது நிச்சயமாயினும், அவன் வளர்ச்சியடையும்வரை அவற்றின் மேல் அவனால் அதிகாரம் செலுத்தமுடியாது.

**4:3** நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்திருந்த யூதர்களுடைய நிலையும் இதுபோலவே இருந்தது. அவர்கள் அடிமைகளைப் போலவே, நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளால் சூழப்பட்டு, **சிறு பிள்ளைகளாகவே** இருந்தார்கள். அவர்கள் இவ்வுலகத்தின் வழிபாடுகளுக்கு அதாவது, யூத சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அடிமைகளாயிருந்தார்கள் என்பதே இதன் பொருளாகும். கிறிஸ்துவில் தேவன், பிதாவாகிய தேவனாக வெளிப்படுத்தப்பட்டும், அவரை அவ்விதமாக அறியாத மக்களுக்கென, யூத மார்க்கச் சடங்குகளும் மரபுமுறைகளும் வடிவமைக்கப்பட்டிருந்தன. எழுத்துகள் பொறித்த சிறுசிறு கட்டைத் துண்டுகளைக் கொண்டு ஒரு சிறு பிள்ளை சொற்களின் எழுத்துகளைக் கூட்டி, அவற்றின் அடிப்படை விதிகளைக் கற்றுக்கொள்வது போலவும், படங்களைக் கொண்டு பொருட்களை அடையாளங்காட்டக் கற்றுக்கொள்வது போலவும் அச்சடங்குகள் அமைந்திருந்தன. பௌதிக சம்பந்தமானதும் வெளியரங்கமானதுமான வழிமுறைகளில் ஆவிக்குரிய உணர்வுகளைக் கவருகிற நிழல்களும் படவுருவங்களுமே நியாயப்பிரமாணமாகும். விருத்த

சேதனம் இதற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. யூத சமயத்து முறைமைகள் பௌதீக சம்பந்தமானவை, வெளியரங்கமானவை, குறுகிய காலத்துக்குரியவை. மாறாக, கிறிஸ்தவமோ ஆவிக்குரியதும், உள்ளார்ந்ததும், நிலையானதுமாகும். இவ்வித வெளியரங்கமான செயல்கள் **சிறுபிள்ளைகள் அடிமைகளாக** இருக்கும் நிலைக்கு ஒப்பானவை.

**4:4,5** சுதந்தரவாளிகள் வளர்ச்சியடையக் கூடிய காலம் என்று பரலோக பிதா நியமித்த காலத்தையே, காலம் நிறைவேறினபோது என்னும் சொற்றொடர் குறிக்கிறது (2 -வது வசனத்தைக் காண்க).

இரட்சகருடைய தேவத் தன்மையையும், மனிதத் தன்மையையும் ஒரு சில சொற்களால் ஒருங்கே உரைக்கும் வியத்தகு கூற்றினை 5 -ஆம் வசனத்தில் நாம் பெற்றிருக்கிறோம். அவரே தேவனுடைய நித்திய குமாரன். ஆயினும் அவர் **ஸ்திரீயினிடத்திற் பிறந்தவர்**. இயேசு வெறுமனே மனிதராக மட்டும் இருந்திருப்பார் என்றால், அவர் **ஸ்திரீயினிடத்திற் பிறந்தவர்** என்னும் சொற்றொடர் காரணமின்றி சொல்லப்பட்ட சொற்களாகவே காணப்பட்டிருக்கும். வெறுமனே மனிதனாக இருக்கும் ஒருவன் வேறு எவ்விதமாகப் பிறப்பான்? நம்முடைய கர்த்தரைப் பொருத்த மட்டில் மேற்காணும் சொற்றொடர், அவருடைய ஒப்பற்ற ஆளுமையையும், அவருடைய தனித் தன்மை வாய்ந்த பிறப்பையும் குறிக்கிறது.

ஓர் இஸ்ரவேலராக அவர் இந்த உலகத்தில் பிறந்த காரணத்தினாலே, அவர் **நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராகப்** பிறந்தார். தேவனுடைய குமாரன் என்னும் நிலையில், கர்த்தராகிய இயேசு ஒருக்காலும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவராக இருக்க வேண்டிய தேவையில்லை. அவரே அதைத் தந்தவர். அவர் தமது வாழ்க்கையில் நியாயப்பிரமாணத்தைப் பெரிதாக உயர்த்தும்படிக்கும், தமது மரணத்தில் அதன் சாபத்தைச் சுமந்து தீர்க்கும்படிக்கும், அவர் தம்மையே அந்த **நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படுத்தினார்**.

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளத் தவறியவர்கள், அதற்கென ஒரு விலையைச் செலுத்தவேண்டும் என்று அது கோருகிறது. அந்த விலை மரணமே ஆகும். தேவன் மனிதர்களைப் புத்திரர் என்னும் வியத்தகு நிலைக்கு கொண்டு வருவதற்கு முன்னர் அந்த விலை செலுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆகவே கர்த்தராகிய இயேசு மனித இனத்தின் ஓர் உறுப்பினராக யூதநாட்டிற்கு வந்து, நியாயப்பிரமாணம் கோரிய விலையைச் செலுத்தினார்.

அவர் தேவனாக இருக்கின்ற காரணத்தினால், அவருடைய மரணம் எல்லைக்குட்படா மதிப்புடையதாக விளங்கியது. அதாவது, பாவிகள் எத்தனை பேர்களாக இருந்தாலும், விலை போதுமானதாக இருந்தது. அவர் மனிதராக இருந்த காரணத்தினால், மனிதனுக்கு பதிலாளாக அவரால் மரணமடைய முடிந்தது. "இயல்பின்படி மனித புத்திரர்களாகிய நாம் தேவனுடைய புத்திரர்களாக மாற்றமடைய, இயல்பின்படியே தேவகுமாரனாக இருக்கிற கிறிஸ்து மனித குமாரனாக மாறினார். என்னே வியத்தகு பரிமாற்றம்!" என்று திரு. கோவட் கூறுகிறார்.

மனிதர்கள் அடிமைகளாக இருந்தவரை, அவர்களால் **புத்திரர்களாக** மாற்றம்பெறமுடியவில்லை. அவர்களைப் புத்திரர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகக் கிறிஸ்து, அவர்களை நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். தேவனுடைய புத்திரர்களாக மாற்றம் பெறுவது என்பதற்கும், தேவனுடைய குமாரர் என்பதற்குமுள்ள வேறுபாட்டைக் கவனிக்கவும் (ரோமர் 8:14,16 - ஆகிய வசனங்களுடன் ஒப்பிட்டுக் காண்க). ஒரு விசுவாசி தேவனுடைய குடும்பத்தில் ஒரு பிள்ளையாகப் (புத்திரனாக) பிறக்கிறான் (யோவான் 1:12-ஆம் வசனத்தைக் காண்க). இங்கே விசுவாசிகள் புத்திரர்கள் என்னும் நிலையில் பெறக்கூடிய சிலாக்கியங்களும் பொறுப்புகளும் வலியுறுத்தப்படாமல், அவர்களுடைய தெய்வீகப் பிறப்பே வலியுறுத்தப்படுகிறது. மேலும், அந்த விசுவாசி அந்தக் குடும்பத்தில் புத்திரனாக ஏற்றுக்கொள்ளப்படுகிறான். ஒவ்வொரு கிறிஸ்தவனும் உடனடியாக தேவனுடைய புத்திரனாகவும், அவன் எந்தச் சொத்திற்கு வாரிசு உரிமையைப் பெறுகிறானோ, அதனுடைய சுதந்தரவாளியாகவும் ஆகிறான். இவ்வாறாக, பரிசுத்தவான்களில் குழந்தைப்பருவ நிலையில் கிறிஸ்தவர்கள் இருப்பதாகப் புதிய ஏற்பாடு கருதுவதுமில்லை, அப்படிப்பட்ட அறிவுரைகளைத் தருவதுமில்லை. அனைவரும் வளர்ச்சியடைந்த புத்திரர்களாகவே கருதப்படுகிறார்கள்.

ரோமருடைய பண்பாட்டின்படியான சுவிகாரத்திற்கும், தற்காலத்தில் நடைமுறையிலுள்ள சுவிகாரத்திற்கும் வேறுபாடு உண்டு. தற்காலத்தில் ஒருவர் வேறொருவருடைய புத்திரனைத் தனது

சொந்த புத்திரனாகத் தத்தெடுப்பது சுவிகாரம் என்றழைக்கப்படுகிறது. ஆனால் புதிய ஏற்பாடு, எல்லா சிலாக்கியங்களும் பொறுப்புகளும் உள்ள வளர்ச்சியடைந்த நிலைக்கு விசுவாசிகளைக் கொண்டுவருவதையே சுவிகாரம் என்று அழைக்கிறது.

**4:6** இந்த நிலையின் மேன்மையை தேவனுடைய **புத்திரராய் இருக்கிறவர்கள்** உணர வேண்டுமென்று, தேவன்தாமே பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரை அவர்களுக்குள்ளாகக் குடியிருக்கும்படி **அனுப்பினார்**. பரிசுத்தவான்கள் தேவனைப் பிதாவே என்று அழைக்கத்தக்கதாக, ஆவியானவர் புத்திரசுவிகாரத்தைக் குறித்த விழிப்புணர்வை அவர்களுக்குள்ளாக உண்டுபண்ணுகிறார். "தந்தை" என்னும் பொருளுடைய அராமிக் மற்றும் கிரேக்கு மொழிச் சொற்கள் இரண்டையும் ஒன்றிணைத்து, தேவனை அழைக்க வழக்கமாகப் பயன்டுத்தப்பட்ட சொற்றொடரே "அப்பா பிதாவே" என்பது. அடிமையான வன் ஓர் இல்லத்தின் தலைவரை இவ்விதமாக அழைக்க முடியாது. அன்பையும் நம்பிக்கையையும் ஒருங்கே வெளிப்படுத்துகிற இச்சொற்றொடர், அந்த இல்லத்தின் உறுப்பினர்களுக்கென்று சிறப்பாக ஒதுக்கப்பட்டதாகும். இந்த வசனத்தில் திரியேக தேவனின் மூன்று நபர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன - பிதா, குமாரன், ஆவி என்னும் வரிசையில் அவை சொல்லப்பட்டுள்ளன.

**4:7** விசுவாசியானவன் **இனிமேல் அடிமையாய்** இருப்பதில்லை. அவன் தேவனுடைய புத்திரனாயிருக்கிறான். தேவனுடைய குமாரன் என்னும் நிலையில் கிறிஸ்து அவருடைய எல்லாச் செல்வத்திற்கும் வாரிசாக இருக்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் **கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய சுதந்தரனாய் இருக்கிறான்**.[14] தேவனுடையவை யாவும் விசுவாசத்தினாலே அவனுக்குரியவையாகும்.

இந்நாட்களில் இஸ்ரவேலில் ரபீக்களுக்கான சமயப் பள்ளிகளில், சாலொமோனின் உன்னதப் பாட்டு மற்றும் எசேக்கியேல் 1 ஆகிய நூல்களை அங்கு பயிலும் மாணாக்கர் நாற்பது வயதை எட்டும்வரை படிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இளைஞரின் உள்ளத்திற்கு சாலொமோனின் உன்னதப்பாட்டு அதிகமாகப் பால்வகைக் கவர்ச்சியூட்டும் எனக் கருதப்படுகிறது. எசேக்கியேல் 1 மாற்றமில்லா தேவனின் புகழ்ச்சியை விவரிக்கும் வருணனைகளைக் கொண்டுள்ளது. ஆகவே நாற்பது வயதுக்கு உட்பட்ட ஒரு மனிதன் அந்நூலைப் படிப்பானானால் நெருப்பானது அங்கிருந்து புறப்பட்டு அந்த மனிதனை அழித்துவிடும் என்று தால்முத் கூறுகிறது. நாற்பது வயதுவரை நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவன் ஒரு *மனிதனாகக்* கருதப்படுவதில்லை என்பதை இது காட்டுகிறது. (பதின்மூன்று வயதை எட்டும்போதே யூதச்சிறுவன் "உடன்படிக்கையின் புத்திரன்" என்னும் நிலையை அடைகிறான் - barmitzrah என்று இது அறியப்படுகிறது. அவன் நியாயப்பிராணத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய பொறுப்பை அப்பொழுது பெறுகிறான் என்பதே "உடன்படிக்கையின் புத்திரன்" என்னும் சொற்றொடரின் பொருளாகும்.) நாற்பது வயது ஆகும்வரை யூத புராதன நம்பிக்கையின்படி ஒவ்வொரு யூதனும் சிறுவயதினன் என்றே கருதப்படுகிறான்.

ஆனால் கிருபைக்குக் கீழ்ப்பட்ட விசுவாசிகள் அவ்வாறு கருதப்படுவதில்லை. அவர்கள் இரட்சிக்கப்பட்ட தருணத்திலேயே முழு வாரிசு உரிமைகளும் அவர்களுடையதாகின்றன. மேலும் அவர்கள் வயது வந்தவர்களாக, வளர்ச்சியடைந்த புத்திரர்களாகவும் புத்திரிகளாகவும் கருதப்படுகிறார்கள். அவர்கள் திருமறை முழுவதையும் படிக்கவும், அனுபவிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும், அதனைத் தங்களுடையதாகப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இந்த உண்மைகளின் வெளிச்சத்தில் ஹாரிசன் என்பார் கொடுத்துள்ள அறிவுரை மிகப் பொருத்தமாகத் திகழ்கிறது.

> அவருடைய அன்பின் பிள்ளையே, அனைத்தும் உங்களுக்கு உரியவை. இதனை அவர் 1 கொரிந்தியர் 3:22,23 ஆகிய வசனங்களில் கூறியிருக்கிறார். உங்களால் புரிந்துகொள்ளக் கூடிய கற்பனை ஆற்றலின் உச்சிக்கு அப்பால், அது உங்களை ஏவிவிடக்கூடியதாயிருக்கிறது. இந்த அகில உலகத்தைக் குறித்து எண்ணிப்பாருங்கள். அவரும் அவருடையதும் உங்களுடையல்லாமல் யாருடையது? அவ்வாறாயின் நீங்கள் ராஜரீகச் சிறப்போடு வாழுங்கள்.[15]

**4:8** ஒரு காலத்தில் கலாத்தியர் சிலைக்கு அடிமைப்பட்டு வாழ்ந்தார்கள். அவர்களுடைய மனமாற்றத்திற்கு முன்னர், மரத்தினாலும் கல்லினாலும் செய்யப்பட்டட **தேவர்களல்லாத** சிலைகளை வணங்கிக் கொண்டிருந்தார்கள். நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்பட்ட நிலையே அது.

**4:9** அவர்களுடைய நடத்தைக்கு அவர் களால் என்ன காரணத்தைச் சொல்ல முடியும்? அவர்கள் **தேவனை** அறியும் நிலையைப் பெற்றி ருந்தார்கள், அதாவது, அவரை அவர்களால் ஆழமான முறையில் அனுபவிக்க முடியவில்லை. குறைந்தபட்சம் அவரால் அவர்கள் **அறியப்பட் டிருந்தார்கள்**. அதாவது அவர்கள் இரட்சிக்கப் பட்டிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் அவரு டைய அதிகாரத்திலிருந்தும் (அவர்கள் வாரிசு உரிமையாகப் பெற்றிருந்த) செல்வத்திலிருந் தும், பெலனற்றதும் வறுமையானதுமான நியாயப் பிரமாணத்தோடு தொடர்புடைய காரியங்களா கிய விருத்தசேனம், பரிசுத்தநாட்கள், உணவு குறித்த விதிகள் ஆகியவற்றிடமாய்த் திரும்பி விட்டார்கள். என்றைக்கும் இரட்சிக்கக் கூடாத தும், மேம்பாடு அடையச் செய்யக்கூடாததும், மாறாக ஏழ்மையடையச் செய்வதும், அடிமைப் படுத்துவதுமான காரியங்களுக்கு அவர்கள் தங்களை மீண்டும்உட்படுத்திக் கொண்டார்கள்.

நியாயப்பிரமாணம் மற்றும் அதனோடு தொடர் புடைய சடங்குகள் யாவற்றையும் பெலனற்றவை, வெறுமையானவை என்று பவுல் அழைக்கிறார். தேவனுடைய பிரமாணங்கள் யாவும், அவற்றிற் குரிய காலத்திலும், இடத்திலும் அழகானவை யாக இருந்தன. ஆனால் அவற்றின் பதிலாளாகக் கர்த்தராகிய இயேசு தம்மையே ஒப்புவித்தபோது, அவை ஐயத்திற்கு இடமற்றபடி தடைகளாக மாறி விடுகின்றன. கிறிஸ்துவினிடத்திலிருந்து நியாயப் பிரமாணத்தினிடமாய்த் திரும்பிச் செல்வது சிலை வணக்கமேயாம்.

**4:10,11** கலாத்தியர் ஓய்வு நாட்களையும், பண்டிகைகளையும், **காலங்களையும்** யூத கால அட்டவணையின்படி கைக்கொண்டு வந்தார்கள். அவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அறிவித்தபோதிலும் நியாயப்பிரமாணச் சடங்கு களைக் கைக்கொண்டு அதன் வாயிலாகத் தங்களுக்கு தேவனிடத்தில் தயவு கிடைக்கும் என்று எண்ணியதால், அவர்களைக் குறித்துப் பவுல் கவலைகொண்டார். மறுபடியும் பிறந்தவர் களும்கூட **நாட்களையும், மாதங்களையும், வருஷங்களையும்** அனுசரிக்கக் கூடும். தங்களு டைய சொந்த ஆற்றலால் தேவனுடைய பாராட்டு தலைப் பெறமுடியும் என்று கூடுதலான மன நிறைவை அவரவர் செய்யும் செயல்கள் சிலருக் குக் கொடுக்கிறது. ஆனால், மனிதன் சற்றுப் பல முடையவனாக இருக்கிறான், எனவே அந்த அளவிற்கு அவனுக்கு இரட்சகர் தேவையில்லை என்று சொல்லுவதுபோல இது இருக்கிது.

இவ்வாறு பவுல் கலாத்தியருக்கு எழுதுவா ரெனில், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளு வதால் பரிசுத்தத்தை அடைய முடியும் என்னும் எண்ணத்தோடு இந்நாட்களில் செயல்படுகிற கிறிஸ்தவர்களுக்கு அவர் என்ன எழுதுவார்? யூத மார்க்கத்தின் பாரம்பரியச் செயல்கள் சிலவற் றைக் கிறிஸ்தவத்திற்குள் புகுத்தியது குறித்து அவர் குற்றஞ்சாட்ட மாட்டாரா? மனிதர்கள் சில ரைப் பாதிரிகளாக ஊழியத்திற்கு நியமித்தல், அவர்கள் வேறுவிதமான ஆடைகளை அணிதல், ஒய்வுநாளைக் கடைப்பிடித்தல், பரிசுத்த ஸ்தலம், மெழுகுவர்த்திகள், புனிதநீர், மற்றும்பல இவை யாவும் அத்தகையப் பாரம்பரியச் செயல்கள் அல்லவா?

**4:12** முதல்முறையாக அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியருக்கு நற்செய்தியைப் பிரசங்கித் ததற்காக நன்றிபாராட்ட வேண்டும் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் என்பது வெளிப் படை. அவர்கள் தவறிழைத்த போதிலும் அவர்களுக்காகப் பவுல் கவலை கொண்டிருந்த காரணத்தினால், அவர் அவர்களைச் "**சகோ தரர்**" என்று அழைக்கிறார். முன்னர் பவுல் நியா யப்பிரமாணத்திற்கு அடிமைப்பட்டவராயிருந் தார். ஆனால் இப்பொழுதோ, அவர் கிறிஸ்துவுக் குள்ளாக நியாயப்பிரமாணத்திற்கு விடுதலை பெற்றிருக்கிறார். ஆகவே அவர் "**என்னைப் போலாகுங்கள்**" என்று கூறுகிறார். அதாவது, நியாயப்பிரமாணத்திற்கு விடுதலை பெற்ற அவர், இனி ஒருக்காலும் அதற்கு அடிமையாக வாழப் போவதில்லை. ஆனால் புறவினத்தாராகிய கலாத்தியர் ஒருக்காலும் அடிமைகளாக வாழ்ந்த தில்லை. இப்பொழுதும் அவர்கள் அதற்கு அடிமை கள் அல்லர். எனவேதான் அப்போஸ்தலன் இவ் வாறு பேசுகிறார்: "நான் ஒரு யூதனாயிருந்தேன். புறவினத்தாராகிய நீங்கள் எப்பொழுதும் பெற்றி ருந்த விடுதலையைப் போலவே, நான் பெற்ற விடுதலையை அனுபவித்துக் கொண்டிருந்தேன். **நான் உங்களைப் போலுமானேன்**."

**எனக்கு நீங்கள் அநியாயம் ஒன்றும் செய்ய வில்லை**. பவுல் தன்னுடைய மனதில் என்ன நினைத்தவராக இவ்வாறு எழுதினார் என்பது தெளிவற்றதாயிருக்கிறது. அவர்கள் அவரை நடத்தியவிதம் குறித்து, அவர் தனிப்பட்ட முறை யில் எவ்வித வருத்தமும் அடையவில்லை என்று பவுல் கூறுவதாகவே தோன்றுகிறது. அதாவது, அவரைவிட்டுத் திரும்பி அவர்கள் கள்ள போதகர் களிடமாய்ச் சென்றுவிட்ட செயல், தேவனுடைய சத்தியத்திற்கு உண்டாக்கிய இடர்ப்பாட்டைப்

போல, அவருக்குத் தனிப்பட்ட முறையில் இடர்ப் பாட்டை ஏற்படுத்தவில்லை. அச்செயல் அவர்கள் தங்கள் மேல் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட அநியாயமேயாகும்.

**4:13 சரீர பலவீனத்தோடு**[16] முதன்முறையாக அவர்களுக்குச் **சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது**. பலவீனமானவர்கள், அற்பமானவர்கள், வறியவர்கள் ஆகியோரையே தேவன் பெரும் பாலும் தமது வேலையைச் செய்யும்படி பயன் படுத்தி வருகிறார். அவ்வாறு செய்வதன் மூலம் புகழ்ச்சி அவருக்கு உரியதாயிருக்கிறதே யொழிய மனிதனை அது சென்றடைவதில்லை.

**4:14** பவுலின் சரீரத்தில் உண்டாயிருந்த நோய் அவருக்கும் அவருடைய சொற்களைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கும் ஒரு **சோதனையாக** இருந்தது. ஆனாலும் அவருடைய புறத்தோற்றத்தினாலோ, அவருடைய பேச்சினாலோ கலாத்தியர் அவரைப் புறக்கணித்துத் தள்ளவில்லை. மாறாக, அவரை ஒரு **தேவ தூதனைப் போல ஏற்றுக்கொண்டார்கள்**. அதாவது, தேவனாலே அனுப்பப்பட்ட ஒரு தூதனாக அவரை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். மேலும் அவர்கள் அவரைக் **கிறிஸ்து இயேசு வைப்போல** ஏற்றுக்கொண்டார்கள். அவர் கர்த்தரின் பிரதிநிதியாக இருந்த காரணத்தினால், அவர்கள் கர்த்தரை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்களோ, அதுபோல அவரை ஏற்றுக்கொண்டார்கள் (மத். 10:40). பவுல் உரைத்த சொற்களை தேவனுடைய சொற்களாகவே அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். கர்த்தருடைய செய்தியை உரைக்கும் மக்களைக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும். நாம் அவர்களை உளங்கனிந்த வகையில் வரவேற்கும்போது, நாம் கர்த்தரையே அவ்விதமாக வரவேற்கிறோம் (லூக். 10:16).

**4:15** அவர்கள் முதன்முறையாக நற்செய்தியைக் கேட்டபோது, அது அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு **ஆனந்தபாக்கியமாக** இருந்தது என்பதை ஒப்புக்கொண்டார்கள். அவர்கள் தங்களுடைய **கண்களைப் பிடுங்கி**, பவுலுக்குக் கொடுக்கக் கூடிய அளவிற்கு அவர்களுடைய பாராட்டுதல் பெரிதாயிருந்தது. (பவுல் மாம்சத்திலே பெற்றிருந்த முள் கண்நோய் என்பதன் குறிப்பாக இது விளங்குகிறது.) ஆனால் அந்த நன்றிபாராட்டுதல் இப்பொழுது எங்கே போயிற்று? காலைப் பனிபோல் அது மறைந்து போனது வருத்தத்திற்குரிய நிலையாகும்.

**4:16** அவர்கள் பவுலைப் பற்றி கொண்டிருந்த எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன? அவர் இன்னமும் அதே செய்தியைத்தான் பிரசங்கிக்கிறார். நற்செய்தியின் **சத்தியத்திற்காக** மிகுந்த வாஞ்சையோடு போராடுகிறவராகவே அவர் செயல்புரிகிறார். இது அவரை அவர்களுடைய **சத்துருவாக** மாற்றியிருந்தால், அவர்களுடைய நிலைமை உண்மையிலேயே ஆபத்தானதாகவே இருந்திருக்கும்.

### உ. அடிமைத்தனம் அல்லது விடுதலை (4:17-5:1)

**4:17** கள்ள போதகர்களுடைய நோக்கங்கள் பவுலின் நோக்கங்களிலிருந்து வேறுபட்டவையாக இருந்தன: அவர்கள் தங்களை ஒரு கூட்டத்தார் பின்பற்றி வரவேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் பவுலோ கலாத்தியருடைய ஆவிக்குரிய மேம்பாட்டைக் குறித்தே கருத்துடையவராக இருந்தார் (4:17-20). கலாத்தியருடைய அன்பைப் பெற கள்ளபோதகர் தங்களுடைய முயற்சியில் வைராக்கியம் உடையோராய் இருந்தார்கள், ஆனால் அவர்களுடைய நோக்கங்களோ நேர்மையற்றவையாக இருந்தன. அவர்கள் **உங்களைப் புறம்பாக்க விரும்புகிறார்கள்**. அப்போஸ்தலனாகிய பவுலோடும் மற்ற போதகர்களோடும் கலாத்தியர் கொண்டிருந்த தொடர்பை அறுத்துப்போட வேண்டுமென்று யூதமார்க்கத்துச் சார்புடையோர் விரும்பினார்கள். தங்களைப் பின்பற்றுவோர் பெருங்கூட்டத்தினராக இருக்க வேண்டுமென்றும், அந்நிலையை அடையும் பொருட்டு ஒரு தனிப்பிரிவினையை உண்டு பண்ண வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள்." விதிகளுக்கும் சில ஒழுங்குமுறைகளுக்கும் அடிமைப்படும் ஒரு நிலைக்குக் கிறிஸ்தவம் திரும்புகிறபோது, சீர்திருத்த காலத்திற்கு முந்தின இடைநிலைக் காலத்தில் இருந்ததுபோல, அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அவ்வாறு போதிப்பவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும், அவர்களுடைய மேலாடையின் இழைகளில் கட்டிவிடப்பட்டவர்களாகவும் இருப்பதைத் தவிர்க்க முடியாது" என்று திருவாளர் ஸ்டாட் எச்சரிக்கிறார்.[17]

**4:18** "நான் உங்களை விட்டுத் தூரமாயிருந்த காலத்தில், மற்றவர்கள் உங்களிடம் அதிக கவனம் செலுத்தினாலும், அவர்களுடைய நோக்கங்கள் தூய்மையாகவும், நல்ல காரணங்கள் கொண்டதாகவும் இருந்தால், அதைக் குறித்து நான் பொருட்படுத்தமாட்டேன்" என்னும் பொருளில் பவுல் பேசுகிறார்.

**4:19** தன்னுடைய சிறுபிள்ளைகள் என்று பவுல் கலாத்தியரை அழைத்தன் மூலம் அவரே அவர்களுக்குக் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டியவர் என்பதை நினைவுபடுத்தினார். அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காக அல்ல, அவர்களிடத்தில் **கிறிஸ்து உருவாக** வேண்டுமென்பதற்காகவே அவர் இப்பொழுது பிரசவ வேதனையை மீண்டும் அனுபவிக்கிறார். தேவன் தமது மக்களைக் குறித்துக் கொண்டிருக்கிற முழுமையான நோக்கம் அவர்கள் கிறிஸ்துவைப் போலாக வேண்டும் என்பதுதான் (எபே. 4:13; கொலோ. 1:28).

**4:20** கலாத்தியருடைய உண்மையான நிலைமை என்ன என்பதைக் குறித்துப் பவுல் குழப்பமுற்றிருந்தார் என்பதே இந்த வசனத்தின் பொருளாக இருக்கவேண்டும். அவர்கள் சத்தியத்தைவிட்டு விலகிச் சென்றுவிட்டார்கள் என்பது அவரைச் **சந்தேகத்திற்குட்படுத்தியது**. அவர்களைக் குறித்து உறுதியோடும், மறுப்புக்கு இடமின்றிப் பேசவும், தனது குரலை **வேறு வகையாக** மாற்றிப் **பேசவும்** தன்னால் இயல வேண்டுமென்று அவர் விருப்பம் கொண்டிருந்தார். அல்லது அவர் ஒருவேளை தன்னுடைய மடலுக்கு என்னவிதமான பதிற்செயல் புரிவார்கள் என்று குழப்பமடைந்தார் போலும். இதற்குப் பதிலாக அவர்களுடன் அவர் நேரடியாகப் பேசியிருக்க வேண்டும். அப்பொழுது அவர் தன்னுடைய பேச்சை வேறு வகையாக மாற்றிப் பேசியிருக்க முடியும். அவர்கள் அவருடைய கடிந்துரையை ஏற்றுக்கொண்டிருந்தால், அவர் அவர்களிடம் மென்மையாகப் பேசியிருப்பார். மாறாக, அவர்கள் இறுமாப்போடும், எதிர்த்தும் செயல்பட்டிருந்தால், அவர் கண்டிப்போடு பேசியிருப்பார். ஆனால் அவர் அவர்களைக் குறித்துக் குழப்பமுற்றவராக இருந்ததால், அவருடைய செய்திக்கு அவர்கள் என்ன பதிற்செயல் புரிவார்கள் என்று அவரால் சொல்லமுடியவில்லை.

யூதமார்க்க போதகர்கள் ஆபிரகாமைக் குறித்து வானளாவப் பாராட்டி அவனுடைய மாதிரியைப் பின்பற்றி விருத்தசேதனம் பெறவேண்டும் என்று வலியுறுத்தியதால், பவுல் ஆபிரகாமின் குடும்ப வாழ்க்கையின் வரலாற்றை நோக்கித் திரும்பிய வராக, பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் அடிமைத்தனமேயொழிய, அதனைக் கிருபையோடு இணைக்க முடியாது என்று விளக்கிக் காட்டுகிறார்.

ஆபிரகாமும் சாராளும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள், மனித இயல்பின்படிப் பேசினால், பிள்ளைப்பேறு அடையக்கூடாதவர்களாக இருந்தார்கள். ஆயினும் தேவன் ஆபிரகாமுக்கு ஒரு மகன் பிறப்பான் என்று வாக்குறுதி கொடுத்திருந்தார். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், இவ்வாறாக அவன் நீதிமானாக்கப்பட்டான் (ஆதி. 15:1-6). சிலகாலம் கழித்து, வாக்களிக்கப்பட்ட மகனுக்காகக் காத்திருந்த சாராள் நம்பிக்கையிழந்து போனவளாக, தன்னுடைய அடிமைப் பெண் ஆகாரின் மூலமாக ஆபிரகாம் ஒரு மகனைப் பெறவேண்டும் என்று ஆலோசனை கூறினாள். அவளுடைய ஆலோசனையின்படி ஆபிரகாம் நடந்ததால், இஸ்மவேல் பிறந்தான். அவன் வாக்குத்தத்தத்தின் புத்திரன் அல்லன். மாறாக அவன் ஆபிரகாமின் பொறுமையின்மை, மாம்சீகம், நம்பிக்கையின்மை ஆகிய வற்றின் மகனாகவே இருந்தான் (ஆதி. 16).

பின்னர் ஆபிரகாமுக்கு நூறு வயதானபோது, வாக்குத்தத்தத்தின் பிள்ளையாகிய ஈசாக்கு பிறந்தான். அவனுடைய பிறப்பு அற்புதமான நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை. அது தேவனுடைய வல்லமையுள்ள ஆற்றலினால் மட்டுமே நடந்த செயலாகும் (ஆதி. 21:1-5). ஈசாக்கு பால்மறந்த போது வழக்கத்தின்படி நடைபெற்ற விருந்தில், தனது மகனை இஸ்மவேல் எள்ளி நகையாடியதைச் சாராள் கண்டாள். அதனிமித்தம், இஸ்மவேலையும் அவனுடைய தாயையும் வீட்டைவிட்டு வெளியேற்றும்படி அவள் ஆபிரகாமுக்குக் கட்டளையிட்டாள், "இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தர வாளியாயிருப்பதில்லை" (ஆதி. 21:8-11). இதுவே அப்போஸ்தலன் தனது வாதத்திற்கு எடுத்துக் கொண்ட கதையின் பின்னணியாகும்.

**4:21** **நியாயப்பிரமாணம்** என்னும் சொல் இந்த வசனத்தில் இரண்டு வேறு வகையான பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் முறை, பரிசுத்தத்தை அடைவதற்கான வழியாக நியாயப்பிரமாணம் குறிப்பிடப்பட்டுள்ளது; இரண்டாம் முறை பழைய ஏற்பாட்டு நூல்களை (ஆதியாகமம் முதல் உபாகமம் வரை) சிறப்பாக ஆதியாகமத்தைக் குறிக்கிறது. "**நியாயப்பிரமாணத்தைக்** கைக்கொண்டு தேவனிடத்தில் சலுகையைப் பெற வேண்டும் என்று **விரும்புகிற நீங்கள், நியாயப்பிரமாண** நூலில் சொல்லப்பட்டிருக்கிற செய்தியைக் **கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள்**" என்று பவுல் கூறுகிறார்.

**4:22,23** இஸ்மவேலும் ஈசாக்கும் ஆபிரகாமின் **இரண்டு குமாரர்** ஆவர். ஆகார் **அடிமையான**

**வள்**, சாராள் **சுயாதீனமுள்ளவள்**. ஆபிரகாமின் திட்டமிட்ட சூழ்ச்சியின் குறுக்கீட்டால் இஸ்மவேல் பிறந்தான். இதற்கு மாறாக தேவனுடைய **வாக்குத்தத்தத்தின்படி** ஈசாக்கு ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டான்.

**4:24** இந்தக் கதை **ஞான அர்த்தமுள்ளது**. இதனுடைய பொருள் மேலோட்டமாகத் தோன்றுவதற்கும் மேலாக ஆழமானது. இந்த நிகழ்ச்சியின் உண்மையான கருத்து வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை, அது குறிப்பாய் அறியப்படுகிறது. இவ்வாறாக, ஈசாக்கு இஸ்மவேல் ஆகியோரின் கதை ஆவிக்குரிய ஆழ்ந்த அர்த்த முடையது, அதனை இப்பொழுது பவுல் விளக்கிக் கூறத் தொடங்குகிறார்.

அவ்விரண்டு பெண்களும் **இரண்டு ஏற்பாடுகளாம்**: ஆகார் நியாயப்பிரமாண உடன்படிக்கை, சாராளோ கிருபையின் உடன்படிக்கை. **சீனாய் மலையில்** நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. அரபி மொழியில் "ஆகார்" என்னும் சொல் "கன்மலை" என்று பொருள்படும், மேலும் அரபு மக்கள் சீனாய் மலையைக் "கன்மலை" என்றே அழைக்கிறார்கள், இது விநோதமாயிருக்கிறது.

**4:25 சீனாய் மலையில்** கொடுக்கப்பட்ட ஏற்பாடு அடிமைத்தனத்தை உண்டாக்கியது; இவ்வாறாக, அடிமைப் பெண்ணாகிய ஆகார் நியாயப்பிரமாணத்துக்குப் பொருத்தமான அடையாளமாயிருக்கிறாள். **ஆகார்** யூத நாட்டின் தலைநகரமாகிய **எருசலேமுக்கு**, அதாவது, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதால் மட்டுமே நீதியை அடைய முடியும் என்று இன்னமும் அதனைத் தேடிக்கொண்டிருக்கிற இரட்சிக்கப்படாத இஸ்ரவேலரின் நகரத்திற்கு அடையாளமாயிருக்கிறாள். இவர்களும், இவர்களுடைய **பிள்ளைகளும்**, அதாவது, இக்கொள்கையைப் பின்பற்றுகிறவர்களும் **அடிமைப்பட்டிருக்கிறார்கள்**. பவுல் விசுவாசிக்காத இஸ்ரவேலரைச் சாராளோடு தொடர்புபடுத்தாமல் ஆகாரோடு தொடர்புபடுத்துவது, மேலும் அவர்களை ஈசாக்கோடு தொடர்புபடுத்தாமல் இஸ்மவேலோடு தொடர்புபடுத்துவது கடுமையான வருணனையாகும்.

**4:26** விசுவாசத்தினாலே நீதிமான்களாக ஆக்கப்படுகிறவர்களின் தலைநகரம் விண்ணக **எருசலேம்** ஆகும். யூதர் புறவினத்தார் ஆகிய அனைத்து விசுவாசிகளுக்கும் அதுவே **தாய்**.

**4:27** ஏசாயா 54:1 -இல் இருந்து எடுக்கப்பட்ட இந்த மேற்கோள், விண்ணக நகரத்தின் பிள்ளைகள், பூமிக்குரிய எருசலேமின் பிள்ளைகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகுதியானோராய் இருப்பார்கள் என்பதற்கு முன்னறிவிப்பாகத் திகழ்கிறது. நீண்ட காலமாக **மலடியாய்** இருந்த பெண்மணியே **சாராள். புருஷனுள்ளவள்** என்று இங்கே ஆகார் குறிப்பிடப்பட்டுள்ளாள். சாராளின் அல்லது விண்ணக எருசலேமின் வெற்றி முடிவானது என்பதை எவ்வாறு நம்மால் புரிந்துகொள்ள முடியும்? புறவினத்தாராயினும் யூதராயினும் விசுவாசத்தினாலே தேவனிடத்தில் வந்து சேருகிறவர்களாகிய வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாகிய ஆகாரின் பிள்ளைகளைக் காட்டிலும் **அதிகமானபேர்** என்பதே இக்கேள்விக்கான விடையாகும்.

**4:28** மெய்யான விசுவாசிகள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். இயல்பான முறையில் உண்டாகும் வாரிசு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. மாறாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக விசுவாசத்தினால் அதிசயமான முறையில் பிறக்கும் தெய்வீகப் பிறப்பே கணக்கிடப்படும்.

**4:29** இஸ்மவேல் ஈசாக்கை ஏளனம் செய்தான், மாம்சத்தினாலே பிறந்தவர்கள் **ஆவியினாலே பிறந்தவர்களைத் துன்பப்படுத்துவது** எப்பொழுதும் உண்மையாயிருக்கிறது. நம்முடைய கர்த்தரும், அப்போஸ்தலனாகிய பவுலும் இரட்சிக்கப்படாதவர்களாலே துன்பப்படுத்தப்பட்டு அடைந்த பாடுகளை எண்ணிப்பாருங்கள். இஸ்மவேல் ஈசாக்கை ஏளனம் செய்த செயல், ஏதோ அற்பமானது என்று தோன்றலாம். ஆனால் திருமறை அதைக் குறித்து வைத்திருக்கிறது. அந்த நிகழ்ச்சியிலே இன்றைக்கும் நிலைத்திருக்கிற ஒரு கோட்பாட்டைப் பவுல் காண்கிறார். **மாம்சத்திற்கும் ஆவிக்கும்** இடையேயுள்ள பகைமையே அந்தக் கோட்பாடு.

**4:30 வேதத்திடம்** கலாத்தியர் கேட்டுப்பார்க்கட்டும், அவர்கள் இந்தத் தீர்ப்பைக் கேட்பார்கள். நியாயப்பிரமாணத்தையும் கிருபையையும் கலப்படம் செய்யமுடியாது; மனிதனுடைய தகுதியினாலோ மாம்சீக முயற்சியினாலோ தேவனுடைய ஆசிர்வாதங்களைப் பெறுவது இயலாத செயல்.

**4:31** கிறிஸ்துவின்மீது நம்பிக்கை கொண்டவர்கள் எவருக்கும், தேவ தயவைப் பெறுவதற்

கான வழிமுறையாக நியாயப்பிரமாணத்தோடு எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் சுயாதீன மானவளுடைய பிள்ளைகள். அவர்கள் தங்களு டைய தாயின் சமுதாய நிலையாகிய சுயாதீனத் தோடு பின்தொடர்கிறார்கள்.

**5:1** நான்காவது அதிகாரத்தின் கடைசிவசனம் விசுவாசியின் தகுநிலையை விளக்கிக் கூறு கிறது - அவன் சுயாதீனமுள்ளவன். ஐந்தாவது அதிகாரத்தின் முதல் வசனம் அவனுடைய நடை முறை வாழ்க்கையைக் குறிக்கிறது - அவன் ஒரு **சுயாதீனமுள்ள** மனிதனாக வாழவேண்டும். நியாயப்பிரமாணத்துக்கும் கிருபைக்கும் இடையு யேள்ள வேறுபாட்டைக் குறித்த மிக அருமை யான விளக்கம் அளிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். "நீ உன்னுடைய விடுதலையைச் சம்பாதித்தால், நீ விடுதலை பெறுவாய்" என்று நியாயப்பிரமாணம் சொல்லும். ஆனால் கிரு பையோ, "கிறிஸ்துவின் மரணமாகிய மிகப்பெரிய விலைக்கிரயத்தினாலே நீ விடுதலை பண்ணப் பட்டிருக்கிறாய். அவருக்கு நன்றி செலுத்தும் வகையில், **கிறிஸ்து** உனக்கு **உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிரு**" என்று கூறுகிறது. நியாயப்பிரமாணம் கட்டளை யிடுகிறது. எனினும் செயலாற்றலைத் தருகிற தில்லை. நியாயப்பிரமாணம் என்ன எதிர்பார்க் கிறதோ அதனை தேவனே தருகிறார். பின்னர் தூய ஆவியானவரின் வல்லமையாலே, மனிதன் தான் பெற்ற தகுநிலைமைக்கு உகந்த வாழ்க் கையை வாழ்வதற்கான ஆற்றலைத் தந்து, அவ்வாறு அவன் வாழ்வதினாலே பரிசையும் தருகிறார்.

திருவாளர் C. H. மெக்கின்டோஸ் கூறுகிறார்.

> "வலிமையற்ற ஒருவனிடமிருந்து வலி மையை நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கிறது. மேலும் அவன் அதனை வெளிப்படுத்திக் காட்ட முடியாதபோது, அது அவனைச் சபிக்கிறது. வலிமையற்ற ஒருவனுக்கு வேண்டிய வலி மையை நற்செய்தி தருகிறது.அவன் அதனை வெளிப்படுத்தக் காட்டும்போது அவனை வாழ்த்து கிறது."[18]

"ஓடுமகனே" எனச்சொல்லும் கற்பனைகள்
கால்களையோ கைகளையோ தருவதில்லை.
"பறந்திடுவாய்" என்றழைக்கும் நற்செய்தி
சிறகளித்து எனைத்தாங்கி நடத்திடுதே!

## 3. நடைமுறை சார்ந்தவை: ஆவியில் பெறும் கிறிஸ்தவத் தன்னுரிமையைப் பவுல் நிலைநாட்டுதல் (5:2-6:18)

### அ. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கோட்பாட்டினால் உண் டாகும் இடர் (5:2-15)

**5:2** நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கோட்பாடு கிறிஸ்துவைப் பயனற்றவராக ஆக்குகிறது. புறவின விசுவாசி கள் இரட்சிப்பை அடையும் பொருட்டு **விருத்த சேதனம்** பண்ணப்பட வேண்டுமென்று யூத மார்க்கச் சார்புடையோர் வலியுறுத்தினார்கள். அப்போஸ்தலன் என்னும் அதிகாரத்துடன் பேசு கிற பவுல், அவ்வாறு விருத்தசேதனத்தைச் சார்ந் திருப்பது, **கிறிஸ்துவைப்** பயனற்றவராக ஆக் கும் செயல் என்று கண்டித்துணர்த்துகிறார். ஜேக் ஹண்டர் என்பார் கூறுகிறார்:

> கலாத்தியரின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்ட பவுலின் பார்வையில், விருத்தசேத னம் வெறுமனே ஒரு அறுவைச் செயலா கவோ, சமயச் சடங்காகவோ தோன்றவில்லை. நற்செயல்களைப் புரிவதாலே இரட்சிப்பு உண் டாகிறது என்னும் கோட்பாட்டின் சின்னமாகவே அது தோன்றியது. தெய்வீகக் கிருபைக்கும் மேலாக, மனித முயற்சி தேவை என்னும் வேறு வகையான சுவிசேஷக் கொள்கையை அது அறிவித்தது. கிருபையை அகற்றிவிட்டு அதனு டைய இடத்தை நியாயப்பிரமாணம் பிடித்துக் கொள்வதாக அது இருந்தது; கிறிஸ்துவின் இடத்தை மோசே பிடித்துக் கொண்டான்; ஒன் றைக் கிறிஸ்துவோடு சேர்த்தபோது அவரிடத்தி லிருந்து ஒன்றை எடுத்து விடுவதாகவே காணப் பட்டது; கிறிஸ்துவை நிறைவு செய்யும் வகை யில் ஒன்றைச் சேர்த்துக் காண்பது அவரை அகற்றிவிடுவதா கவே காணப்படும். கிறிஸ்து ஒருவரே இட்சகர் – அவர் தன்னந்தனியான வர், ஒருவரையும் அவரோடு சேர்க்க முடியாது. விருத்தசேதனம் என்பது கிறிஸ்துவினிடத்தி லிருந்து ஒன்றை வெட்டியெடுத்தல் ஆகும்.[19]

**5:3** நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கோட்பாடு, **நியாயப்பிர மாணம் முழுவதையும்** மனிதர்கள் **நிறைவேற்ற வேண்டும்** என்று வலியுறுத்துகிறது. நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்ட மக்கள் எளிமை

யான கட்டளைகளை நிறைவேற்றிவிட்டு மற்ற கட்டளைகளைப் புறக்கணிக்க முடியாது. விருத்த சேதனம் செய்துகொண்டு தேவனைப் பிரியப்படுத்தலாம் என்று முயற்சி செய்கிற மனிதன், **நியாயப் பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான்**. இவ்வாறாக ஒரு மனிதன் ஒன்று முழுவதும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனாக இருக்கிறான், இல்லையேல் நியாயப்பிர மாணத்துக்குச் சிறிதளவும் கீழ்ப்பட்டவன் அல்ல. அவன் முழுவதும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனாக இருப்பான் என்றால் கிறிஸ்துவினால் அவனுக்கு எவ்விதப் பயனும் இல்லை என்பது வெளிப்படை. கர்த்தராகிய இயேசு *நிறைவான* இரட்சகர் மட்டுமல்ல; அவர் ஒருவரே இரட்சகர். ஏற்கனவே விருத்தசேதனம் பண்ணப்பட்ட எவரையும் பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடவில்லை, மாறாக முழுவதும் நீதிமானாக்கப்படுவதற்காக இந்தச் சடங்கைச் செய்ய வேண்டும் என்று செயல்படுகிறவர்களையும், தேவனாலே ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வது அவசியம் என்று வற்புறுத்திக் கூறுகிறவர்களையுமே அவர் குறிப்பிடுகிறார்.

**5:4** நீதியை அடைவதற்குக் கிறிஸ்து ஒருவர் மட்டுமே நம்பிக்கையாயிருக்கிறார் என்னும் உண்மையை முழுவதும் கைவிட்ட நிலை என்பதே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கோட்பாட்டின் பொருளாகும். இந்த வசனம் பற்பல வாதங்களுக்கு இடமளித்துள்ளது. வெவ்வேறு விளக்கங்கள் பல இதற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் அவை யாவற்றையும் பொதுவாக மூன்று பிரிவுகளாகத் தொகுத்துரைக்கலாம்.

1. ஒருவன் உண்மையாக இரட்சிப்பைப் பெற்று, பின்னர் பாவத்தில் வீழ்ந்து போய், அதன் நிமித் தம் கிருபையினின்று விழுந்தவனாக என்றென்றைக்குமாக இழந்து போனவனாகக் கூடிய வாய்ப்பு உண்டென்று இங்கு பவுல் கற்பிப்பதாகப் பலர் கருதுகிறார்கள். இதுவே "இரட்சிப்பு இழந்துபோகக் கூடியது என்னும் உபதேசம்" என்று அறியப்படுகிறது.

   இந்த விளக்கம் இரண்டு நிர்ப்பந்திக்கிற காரணங்களால் செல்லத்தக்கதல்ல என்று நாம் நம்புகிறோம்: முதலாவதாக, இரட்சிக்கப்பட்ட மனிதன் பாவத்தில் வீழ்ந்துபோவதைக் குறித்து இந்த வசனம் விவரிக்கவில்லை. உண்மையில் பாவத்தில் வீழ்ந்துபோவதைக் குறித்து ஒன்றும் இங்கு சொல்லப்படவில்லை. மாறாக, ஒழுக்கத்தோடும், மதிப்போடும், நேர்மையோடும் வாழ்ந்து, அதன் வாயிலாக இரட்சிப்பில் நிலைநிற்கலாம் என்று நம்புகிற மனிதர்களைப் பற்றியே இந்த வசனம் பேசுகிறது. ஆகவே இந்தப் பகுதியானது இரட்சிப்பு இழந்துபோகக்கூடியது என்று கற்பிப்பவர்களுக்கு எதிராகவே செயல்புரிகிறது. கிறிஸ்தவன் தான் பெற்ற இரட்சிப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றால், அவன் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், பரிபூரண வாழ்க்கையை வாழ வேண்டும், பாவமில்லாதபடி வாழ வேண்டும் என்றெல்லாம் அவர்கள் போதிக்கிறார்கள். ஆயினும், நியாயப்பிரமாணச் செயல்களினால் அல்லது சொந்த முயற்சிகளினால் நீதிமான்கள் ஆவதற்கு நாடுகிறவர்களைப் பற்றி திருமறை **கிருபையினின்று விழுந்தவர்கள்** என்றே கூறுகிறது.

   இரண்டாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொரு மெய்யான விசுவாசியும் நித்தியமாக இரட்சிப்பைப் பெற்றிருக்கிறான், கிறிஸ்துவின் ஆடுகளில் ஒன்றும் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, இரட்சகர் நிறைவேற்றி முடித்த செயலையே இரட்சிப்பு முழுவதுமாக சார்ந்திருக்கிறது, அது மனிதர்களுடைய அற்பமான செயல்களைச் சார்ந்தது அன்று என்று புதிய ஏற்பாடு போதிக்கிற மாற்றமில்லா உண்மைகளுக்கு முன்னர் சொல்லப்பட்ட வாதம் முரண்பட்டதாயிருக்கிறது (யோவான் 3:16,36; 5:24; 6:47;10:28).

2. கர்த்தராகிய இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்து அதன் மூலமாகத் தொடக்கத்தில் இரட்சிக்கப்பட்டு, பின்னர் அதனைத் தக்க வைத்துக் கொள்ளவோ, பரிசுத்தத்தை அடையவோ தங்களை நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படுத்திக் கொண்டவர்களையே இந்த வசனம் குறிப்பிடுகிறது என்பது இதற்குக் கொடுக்கப்படும் இரண்டாவது விளக்கமாகும். அவர்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்டார்கள், ஆனால் இப்பொழுது அதில் நிலைநிற்க நியாயப்பிரமாணம் தேவை என்றும் இந்தக் கொள்கையைக் கூறலாம். கிருபையினின்று வீழ்ந்துபோகுதல் என்று கூறப்படுவதைக் குறித்து, பிலிப்பு மௌரா என்பார் சொல்லியிருப்பதாவது: "பரிசுத்தவான்களை அவர்களுக்குள்ளாக இருக்கும் ஆவியானவரின் செயலாக்கத்தினாலே நிறை

வாக்குகிற தேவனுடைய வழியினின்று விலகிச் செல்வதும், வெளியரங்கமான சடங்குகள் பண்டிகைகள் ஆகியவற்றின் மூலமாக நிறைவானவர்களாக வேண்டும் என்று விரும்புவதுமே இக்கொள்கையாகும். மாம்சத்திற்குரிய மனிதர்கள் மட்டுமின்றி பரிசுத்தவான்களும்கூட இக்கொள்கையை அனுசரிக்கக் கூடும்."

இக்கருத்து திருமறைக்கு முரணானது. முதலாவது பரிசுத்தத்தையோ தூய்மையடைவதையோ நாடுகிற கிறிஸ்தவர்களைக் குறித்து இந்த வசனம் போசாமல், நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறதினாலே நீதிமான்களாக ஆக வேண்டும் என்று விரும்புகிற இரட்சிக்கப்படாத மனிதர்களைப் பற்றியே இது பேசுகிறது. "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற மனிதர்கள்" - இந்தச் சொற்களை உற்றுக் கவனியுங்கள். இரண்டாவதாக, இரட்சிக்கப்பட்ட மனிதர்கள், பின்னர் கிறிஸ்துவினின்று வெட்டுண்டு போகக்கூடிய நிலை ஏற்படலாம் என்று இந்த வசனம் போதிப்பதுபோல இவ்விளக்கம் பொருள் தருகிறது. தேவனுடைய கிருபையைக் குறித்த சரியான கருத்துகளோடு இவ்விளக்கம் பொருந்தாத தாயிருக்கிறது.

3. கிறிஸ்தவர்கள் என்று தங்களைக் குறித்து அறிக்கை செய்தபோதிலும் உண்மையில் இரட்சிக்கப்படாத மனிதர்களைக் குறித்தே பவுல் இங்கு பேசுகிறார் என்பது மூன்றாவது விளக்கமாகும். அவர்கள் நீதிமான்கள் ஆக வேண்டுமென்று நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் இரண்டு இரட்சகர்களைக் கொண்டிருக்க முடியாது என்று அப்போஸ்தலன் கூறுகிறார். அவர்கள் கிறிஸ்துவை அல்லது நியாயப்பிரமாணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் நியாயப்பிரமாணத்தைத் தெரிந்தெடுப்பார்களெனில், நீதியை அடைவதற்கான ஒரே வழியாகிய கிறிஸ்துவைவிட்டுத் துண்டிக்கப்பட்டவர்களாக, **கிருபையினின்று விழுந்து போனவர்களாகக்** காணப்படுவார்கள். ஹாக், வைன் ஆகியோர் இதனைத் தெளிவாக விளக்கிக்கூறுகிறார்கள்.

> ஒரு மனிதனுக்கு கிறிஸ்து எல்லாமுமாக இருக்க வேண்டும், இல்லையேல் ஒன்றுமற்றவராக இருக்க வேண்டும்; ஏதோ ஒரு எல்லைக்கு உட்பட்ட நம்பிக்கை அல்லது துண்டுபட்ட விசுவாசம் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எவனொருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் நீதிமானாக்கப்படுகிறானோ அவன் கிறிஸ்தவன்; எவனொருவன் நியாயப்பிரமாணத்தின் செயல்களினால் நீதிமானாக விரும்புகிறானோ அவன் கிறிஸ்தவன் அல்ல.[20]

**5:5** ஒரு மெய்யான விசுவாசியின் நம்பிக்கை நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதினாலேயே நீதிமானாக முடியும் என்னும் கொள்கையைச் சார்ந்தவருடைய நம்பிக்கையினின்று எவ்வளவு மாறுபட்டதாக இருக்கிறது என்பதைப் பவுல் விளக்கிக்காட்டுகிறார். கிறிஸ்தவன் **நீதி கிடைக்குமென்று நம்பிக்கையோடு காத்திருக்கிறான்**. கர்த்தர் எப்பொழுது வருவார், எப்பொழுது அவன் மகிமையடைந்த சரீரத்தைப் பெறுவான், இனி பாவம் செய்யமுடியாது என்னும் நிலையை எப்பொழுது அடையமுடியும் என்னும் நேரத்திற்காக நம்பிக்கையோடு காத்திருக்கிறான். கிறிஸ்தவன் நீதியை அடைய நம்பிக்கையோடு காத்திருந்ததாகச் சொல்லப்படவில்லை என்பதைக் கவனியுங்கள்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக அவன் ஏற்கனவே தேவனுக்கு முன்பாக நீதியான தகுநிலையைப் பெற்றிருக்கிறான் (2 கொரி. 5:21). ஆனால் அவன் தன்னில்தானே முழுமையான நீதியை அடையும் நேரத்திற்காகக் காத்திருக்கிறான். அவன் தன்னால் செய்ய முடிந்த ஒரு செயலின் மூலமாக அந்நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கையோடு இருப்பதில்லை. மாறாக **ஆவியைக்கொண்டு விசுவாசத்தினாலே** அதனை அடைய முடியும் என்றே அவன் நம்பிக்கை கொண்டிருக்கிறான். பரிசுத்த ஆவியானவர் அதனை முழுமையாகச் செய்யப்போகிறார். அது தன்னிடத்தில் நடைபெறப்போகிறது என்னும் விசுவாசத்தோடு மட்டுமே அவன் தேவனை நோக்கிப் பார்க்கிறான். இதற்கு மாறாக, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறவன், தனது சொந்தச் செயல்களினாலோ சமயச் சடங்குகளினாலோ அதனைச் சம்பாதிக்க நாடுகிறான். ஆனால் இவ்விதமாக நீதியை அடைய முடியாதென்பதால், இது வீணான நம்பிக்கையேயாகும்.

இந்த வசனத்தில் பவுல், **நாங்கள்** என்னும் பிரதிப்பெயர்ச்சொல்லைப் பயன்படுத்தியிருப்பதைக் கவனியுங்கள். இச்சொல் மெய்யான கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. ஆனால் அவர் 4-ஆவது வசனத்தில், நியாயப்பிரமாணத்தின்

கிரியைகளினாலே நீதிமான்களாக விரும்புகிற மக்களைக் குறிக்கும் வகையில் "நீங்கள்" என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார்.

**5:6** நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிற கொள்கை **ஒன்றுக்கும் உதவாது**. கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிற மனிதனை (கிறிஸ்தவன்) **விருத்த சேதனம்** எந்த வகையிலும் சிறப்பானவனாக மாற்றுவதில்லை, **விருத்தசேதனமில்லாமை** அவனைக் குறையுள்ளவனாக மாற்றுவதுமில்லை. **அன்பினால் கிரியை செய்கிற விசுவாசம்** ஒன்றையே தேவன் விசுவாசியினிடத்தில் எதிர்பார்க்கிறார். தேவனை முழுவதுமாகச் சார்ந்திருப்பதே **விசுவாசம்** ஆகும். விசுவாசம் செயலற்றதாக இருப்பதில்லை; அது தேவனுக்கும் மனிதனுக்கும் தன்னலமற்ற வகையில் சேவைபுரிய தன்னை வெளிப்படுத்துகிறது. அந்தச் சேவை அனைத்திற்கும் நோக்கமாயிருப்பது **அன்பே** ஆகும். இவ்வாறாக **விசுவாசம் அன்பின்** மூலமாகக் கிரியை செய்கிறது; அது அன்பினால் ஏவப்படுகிறதேயொழிய நியாயப்பிரமாணத்தினால் அன்று. தேவன் சடங்குகளில் விருப்பங்கொள்வதில்லை, தெய்வீக வாழ்வின் உண்மையையே அவர் விரும்புகிறார். இந்த உண்மை திருமறையில் பல இடங்களில் காணப்படுகிறது.

**5:7** நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிற கொள்கை **சத்தியத்திற்குக்** கீழ்ப்படியா நிலையாகும். கிறிஸ்தவ வாழ்க்கையில் கலாத்தியர் நல்ல தொரு தொடக்கத்தைத் தொடங்கியிருந்தார்கள், ஆனால் யாரோ ஒருவர் அவர்களைத் **தடை செய்து**விட்டார். யூத மார்க்கச் சார்புடையவர், நியாயப்பிரமாணத்தை வலியுறுத்துபவர், கள்ள அப்போஸ்தலர் ஆகியோரே அவ்வாறு தடை செய்தவர்கள். அவர்களுடைய தவறான போதனைகளை ஏற்றுக்கொண்டதன் மூலமாக, பரிசுத்தவான்கள் தேவனுடைய **சத்தியத்திற்குக்** கீழ்ப்படியவில்லை.

**5:8** நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தும் கொள்கை தெய்வீகமானது அன்று. இங்கு **போதனை** என்னும் சொல் நம்பிக்கை என்றோ உபதேசம் என்றோ பொருள்படும். **உங்களை அழைத்தவர்** என்னும் சொற்றொடர் தேவனைக் குறிக்கிறது. ஆகவே, விருத்தசேதனம் செய்ய வேண்டும், நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பனவற்றைக் கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்துடன் சேர்க்க வேண்டும் என்னும் நம்பிக்கை பிசாசினிடத்திலிருந்து வந்ததேயன்றி தேவனிடத்திலிருந்து வந்ததன்று.

**5:9** நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தும் கொள்கை மென்மேலும் தீமையையே வருவிக்கும். **புளிப்பு** என்னும் சொல் பொதுவாக தீமையைக் குறிக்கும்படியே திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கே அது யூத மார்க்கச் சார்புடையோரின் தீமையான உபதேசத்தைக் குறிக்கிறது. புளிப்பு அல்லது நுரைக்கச்செய்யும் காடி தன்னோடு தொடர்புகொள்ளும் எந்த உணவையும் பாதிக்கும் இயல்புடையது. எந்தச் சிறு தவறும் இறுதியில் தவிர்க்க இயலா அளவிற்குத் தீமையைப் பெருகச் செய்யும். தீமை ஒருக்காலும் செயலற்று இருப்பதில்லை. அதனுடைய பொய்யை மறைக்க அதிகமான பொய்யைச் சேர்த்துக் கூறும். நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தும் கொள்கை வெள்ளைப்பூண்டு போன்றது. அதில் கொஞ்சம் என்று சொல்லக்கூடிய ஒரு நிலை இல்லை. ஒரு சபையில் ஒரு சிலர் தவறான உபதேசத்தைப் பற்றிக்கொண்டவர்களாக இருந்தால், அவர்களோடு வன்மையாக ஈடுபடாவிடில், மென்மேலும் பலர் அவர்களைப் பின்பற்றுவார்கள்.

**5:10** நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தும் கொள்கை அதைப் போதிப்பவர்கள்மேல் ஆக்கினையைக் கொண்டுவரும். தவறான உபதேசங்களைக் கலாத்தியர் நிராகரிப்பார்கள் என்னும் நம்பிக்கை பவுலுக்கு இருந்தது. அவருடைய **நம்பிக்கையோ கர்த்தருக்குள்** இருந்தது. அதாவது, இந்த விசயத்தில் கர்த்தர்தாமே அவருக்கு உறுதியளித்திருந்தார் என்று இதற்குப் பொருள் கூறலாம். அல்லது, கர்த்தரை அவர் அறிந்திருந்தபடி, அலைந்து திரிகிற தமது ஆடுகளை பெரிய மேய்ப்பர் திரும்பவும் முன்னிருந்த நிலைக்குச் சீர்படுத்துவார் என்று அவர் உறுதியோடு இருந்தார். ஒருவேளை அவர் கலாத்தியருக்கு அப்பொழுது எழுதிய மடலின் மூலமாக அந்நிலைமை உண்டாகும் என்று அவர் நம்பினார் போலும்.

ஆனால் கள்ளபோதகர்களோ தண்டனை அடைவார்கள், தேவனே அவர்களைத் தண்டிப்பார். தவறான உபதேசத்தைக் கற்பித்து சபையைச் சேதப்படுத்துவது மிகவும் ஆபத்தான செயலாகும் (1 கொரி. 3:17). எடுத்துக்காட்டாக, ஒருவன் தானே குடிகாரனாக இருப்பதைக் காட்டிலும், குடிப்பது அனுமதிக்கப்பட்ட செயல் என்று கற்பிப்பது அதிகக் கேடானது. அதுபோலவே கள்ள போதகர்கள், பலரைத் தங்களைப் போன்றவர்களாக மாற்றுகிறார்கள்.

**5:11** நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தும் கொள்கை **சிலுவையினால் வரும் இடறலை** ஒழித்து விடும். விருத்தசேதனம் பண்ணவேண்டும் என்று பவுல் இடையிடையே போதித்தார் என்னும் நகைப்பிற்கிடமான குற்றச்சாட்டை மறுத்து விடைகூறுகிறார். அவர் இன்னமும் யூதர்கள் மூலமாகத் **துன்பப்படுத்தப்படுகிறார்**. அவர் விருத்தசேதனம் பண்ணவேண்டும் என்று கற்பித்தால் உடனடியாக அவ்வாறு துன்பமடைவது நின்றுபோகும், ஏனென்றால் அவ்வாறு கற்பிப்பது **சிலுவையைப்** பற்றிப் பிரசங்கம் செய்வதை விட்டுவிட்டதாகப் பொருள்படும். மனிதனுக்கு **சிலுவை இடறலாயிருக்கிறது**. இரட்சிப்பைச் சம்பாதிக்க அவன் ஒன்றும் செய்ய வேண்டிய தில்லை என்று சிலுவை கூறுவதால், அது அவனுக்கு இடறலாயிருக்கிறது. மாம்சத்திற்கும் அதனுடைய முயற்சிக்கும் அது எவ்வித இடத்தையும் தருவதில்லை. மனிதனுடைய கிரியைக்கு அது முற்றுப்புள்ளியைக் கொண்டுவருகிறது. விருத்தசேதனத்தைப் பிரசங்கித்து கிரியைக்கு பவுல் முக்கியத்துவம் அளிப்பாரென்றால், சிலுவையின் அர்த்தம் முழுவதையும் ஒதுக்கிவைத்து விடுவதாக அது விளங்கும்.

**5:12** தொல்லை கொடுப்பவர்கள் தறிப்புண்டு போனால் என்று அப்போஸ்தலன் விரும்புவதை நாம் எழுத்தின்படியே புரிந்துகொள்ளக்கூடும். அதாவது அவர்கள் ஆண்மை அகற்றப்பட வேண்டும் என்றே அவர் விரும்பினார். மற்றவர்களை விருத்தசேதனம் செய்வதற்கு அவர்கள் கத்தியைப் பயன்படுத்தப் பேரார்வம் கொண்டிருந்தார்கள். இப்பொழுதோ அவர்கள் அண்ணகர்களாக்கப்பட அந்தக் கத்தியைப் பயன்படுத்த வேண்டும். ஆனால் இதனை உருவகப்பொருளாகக் கொண்டு பொருள் கூறுவதே தகுதியாயிருக்கும். அதாவது, கள்ள போதகர்கள் கலாத்தியரைவிட்டு அகற்றப்பட வேண்டும் என்றே பவுல் விரும்பினார்.

தங்களுடைய விருப்பப்படி மனிதர்கள் வாழலாம் என்று கிருபையின் நற்செய்தி அனுமதிக்கிறது என்ற குற்றச்சாட்டு எப்பொழுதும் கூறப்படுகிறது. "விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது என்றால், இரட்சிக்கப்பட்ட பிறகு ஒரு மனிதனுடைய நடத்தையைக் கட்டுப்படுத்த முடியாது" என்று மனிதர்கள் கூறுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவம் தருகிற சுதந்தரம் ஒரு மனிதனைப் பாவம்செய்ய அனுமதிக்கிறது என்று பொருள் கொள்ளக் கூடாது என்று பவுல் உடனடியாகக் கூறுகிறார். கர்த்தராகிய இயேசுவின் வாழ்வு விசுவாசியின் வாழ்க்கைக்கு அளவு கோலாயிருக்கிறது. மேலும் அவன் பாவத்தை வெறுக்கும்படியும், தூய்மையை விரும்பும்படியும் கிறிஸ்துவின் அன்பு அவனை நெருக்கி ஏவுகிறது.

எல்லை கடந்த சுதந்தரத்தைக் குறித்து அப் போஸ்தலன் தனது வாசகர்களை எச்சரிக்க வேண்டியது மிக அவசியம். சிறிது காலம் நியாயப் பிரமாணத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கையை வாழ்கிற மனிதர்கள், சுதந்திரத்தைப் பெறுகிறபோது, அடிமைத்தனத்திலிருந்து கட்டுப் பாடற்ற வாழ்விற்குப் போகக்கூடிய ஆபத்து உண்டாகிறது. நியாயப்பிரமாணத்திற்கும் எல்லை கடந்த சுதந்திரத்திற்கும் இடைப்பட்ட சரியான நிலையிலேயே விடுதலை காணப்பட வேண்டும். கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்திற்கு விடுதலை பெற்றிருக்கிறான், ஆனால் அவன் கட்டுப்பாடற்றவன் அல்லன்.

**5:13** கிறிஸ்தவச் **சுயாதீனம்** பாவத்தை அனுமதிக்கிறதில்லை. மாறாக அது அன்புநிறைந்த சேவையையே ஊக்குவிக்கிறது. கிறிஸ்தவன் குணநலங்கள் யாவற்றுக்கும் **அன்பே** செயல் நோக்கமாகக் காணப்படுகிறது. ஆனால் நியாயப் பிரமாணத்திற்குக் கீழாக, தண்டனையைக் குறித்த அச்சமே செயற்காரணமாக விளங்குகிறது. 'அன்பின் அடிமைகள் உண்மையாக விடுதலை பெற்றவர்கள்" என்று .'.பின்லே கூறுகிறார்.

கிறிஸ்தவனின் *விடுதலை கிறிஸ்து இயேசுவுக்குள்* இருக்கிறது (2:4). ஆனால் இங்கு பாவம் செய்வதற்கான விடுதலை என்ற பொருளுக்கு இடமில்லை. நாம் பெற்றிருக்கிற இந்த விடுதலையை **மாம்சத்தின்** செயல்பாடுகளுக்கான அடிப்படையாக ஒருக்காலும் மாற்றக்கூடாது. பகைவரின் கடற்கரையில் கைப்பற்றப்பட்ட இடத்தைப் போர்தொடுக்கிற படை எவ்வாறு தொடர்ந்து வெற்றி பெறுவதற்கான போர்முகமாகப் பயன்படுத்துமோ, அதுபோலவே மாம்சமானது எல்லை கடந்த சுதந்தரத்தைச் சிறிதளவு பெறுமெனில், அதனைப் பெருமளவில் விரிவாக்கம் செய்யும்.

"ஒருவருக்கொருவர் அடிமைகளாகுங்கள்" என்பதே நாம் பெற்ற சுயாதீனத்தைப் பயன்படுத்தும் வழியாகும். A. T. பியர்சன் கூறுகிறார்:

> தகுதியான கட்டுப்பாட்டிற்குக் கீழடங்கியிருப்பதிலேயே மெய்யான சுயாதீனம் காணப்படும். இரு கரைகளுக்கும் இடையில் ஆற்றுவெள்ளம் பாய்ந்தோட விடுதலை பெற்றுள்ளது. அவ்வாறு இல்லையென்றால் அது சேறும் சகதியுமான ஏரியைச் சென்றடையும், கட்டுப்பாடு இல்

> லாத கோள்கள் தங்களுக்கும் அண்ட சராசரத் திற்கும் கேட்டையே உண்டாக்கும். நம்மை ஒரு வேலிக்குள் அடைக்கும் பிரமாணம் மற்றவர் களை வெளியே தள்ளிவிடுகிறது: நாம் கொண் டிருக்கிற கட்டுப்பாடு நமது சுயாதீனத்தைக் கட்டுப்படுத்தி, நம்மை உறுதிப்படுத்திப் பாது காக்கிறது. நம்மீது செலுத்தப்படும் கட்டுப்பாடு அல்ல, தகுதிவாய்ந்த கட்டுப்பாடும், உற்சாக மான கீழ்ப்படிதலும் சுயாதீன மனிதனை உருவாக்குகிறது.[21]

**5:14** இந்த வசனத்தை மேலோட்டமாகப் படிக்கும்போது விசுவாசிகள் நியாயப்பிரமாணத் துக்குக் கீழானவர்கள் அல்லரென்று இந்த மடல் முழுவதும் வலியுறுத்திய பவுல், இங்கு அதை அவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவதுபோல விநோதமாகக் காணப்படு கிறது. தம்முடைய வாசகர் மீண்டும் நியாயப் பிரமாணத்தினிடமாய்ச் செல்லவேண்டும் என்று அவர் இங்கு சொல்லவில்லை. நியாயப்பிர மாணம் எதை மனிதர்களிடம் எதிர்பார்த்ததோ, எதை அவர்களிடம் அதன் மூலமாக உருவாக்க முடியவில்லையோ, அதனையே கிறிஸ்தவ சுயா தீனம் நடைமுறையின் விளைவாகத் திகழச் செய்யும் என்றே அவர் இங்கு கூறுகிறார்.

**5:15** நியாயப்பிரமாணத்தை வலியுறுத்தும் கொள்கை, சச்சரவுகளை உண்டாக்குவது நிச்ச யம். கலாத்தியாவில் அவ்வாறு நடந்தது வெளிப் படை. எத்தனை விநோதமாக இது இருக்கிறது! இங்கே மனிதர்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கட்டுப்பட்டு வாழ விரும்பினார்கள். தங்களுடைய அயலகத்தாரிடம் அன்புபாராட்ட வேண்டும் என்று நியாயப்பிரமாணம் கற்பிக்கிறது. ஆயினும் அதற்கு முற்றிலும் மாறானபடியே நடந்தது. அவர்கள் புறங்கூறி ஒருவரையொருவர் விழுங்கிப் போட் டார்கள். இந்த நடத்தை மாம்சத்திலிருந்து முளைத்தெழும்பும்படி நியாயப்பிரமாணம் இடம் கொடுத்ததால், அங்கே இவ்வாறு நிகழ்ந்தது.

### ஆ. பரிசுத்தத்திற்கான வலிமை [5:16-25]

**5:16** விசுவாசியானவன் மாம்சத்தின்படி நடக் காமல் **ஆவிக்கேற்றபடி நடக்க** வேண்டும். **ஆவியில் நடத்தல்** (அல்லது ஆவியால் நடத்தப் படுதல்) என்பது அவர் நம்மை அவருடைய வழி யில் நடத்துவதற்கு அனுமதித்தல் என்று பொருள் படும். அவருடன் கொண்டிருக்கிற தொடர்பில் நிலைத்திருத்தல் என்பதும் இதன் பொருளாகும். அவருடைய பரிசுத்தத்தின் வெளிச்சத்தில் தீர்மானங்களை எடுப்பதும் ஆவியில் நடத்தலே ஆகும். கிறிஸ்துவோடு நேரத்தைச் செலவிடு வதும் இதுவே. ஏனெனில், விசுவாசியைக் கர்த்த ராகிய இயேசுவோடு ஈடுபாடுகொள்ளச் செய்வது ஆவியானவரின் ஊழியமாகும். இவ்வாறாக நாம் **ஆவியில் நடக்கும்போது,** மாம்சம் அல்லது சுய வாழ்வு இறந்துபோனதாகக் கருதப்படும். நாம் கிறிஸ்துவோடும் பாவத்தோடும் ஒரே நேரத்தில் ஈடுபாடுகொள்ள முடியாது.

இது குறித்துத் திருவாளர் ஸ்கோ.்.பீல்டு கூறுவதாவது:

> கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரச்சினையானது ஓர் உண்மையைச் சார்ந்திருக்கிறது. அதாவது, இவ்வுலகில் கிறிஸ்தவன் வாழ்கிற காலமெல் லாம் ஒரு வகையில் இரண்டு மரங்களைப் போல இருக்கிறான் – முதலாவது மாம்சமாகிய பழைய மரம், இரண்டாவது புதிய பிறப்பினால் தெய்வீக சுபாவம் நடப்பட்ட புதிய மரம். எவ்வாறு இந்தப் பழைய மரத்தைக் கனியற்றுப் போகும் படிச் செய்வது, மற்றும் புதிய மரத்தைக் கனி தரச் செய்வது என்பதே பிரச்சினையாகும். ஆவிக்கேற்றபடி நடப்பதே அப்பிரச்சினை யைத் தீர்ப்பதற்குரிய ஒரே வழியாகும்.[22]

இந்த வசனமும் தொடர்ந்து வருகிற வசனங் களும், **மாம்சமானது** கிறிஸ்தவனுக்குள்ளாக இன்னமும் இருக்கிறது என்பதை வெளிப்படுத்து கிறது. பாவ சுபாவம் முற்றிலுமாக அவனைவிட்டு அகற்றப்பட்டுவிட்டது என்னும் கருத்து தவறென் பதும் இதன் மூலம் மெய்ப்பிக்கப்படுகிறது.

**5:17** ஆவியும் மாம்சமும் ஒன்றோடொன்று எப்பொழுதும் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. விசுவாசிகள் மனமாற்றம் பெற்ற தருணத்தில் தேவன் அவர்களுடைய மாம்ச சுபாவத்தை அவர்களை விட்டு நீக்கியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்ய அவர் நினைக்கவில்லை. அதன் காரணம் என்ன? அவர்கள் தங்களுடைய பலவீனத்தைக் குறித்துத் தொடர்ந்து நினைவு கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்றும், அவர்களுடைய ஆசாரியரும் அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறவருமாகிய கிறிஸ்துவை அவர் கள் எப்பொழுதும் சார்ந்து வாழவேண்டும் என்றும் அவர் விரும்பினார். மேலும் புழுக்களைப் போன்ற அந்த மக்கள் தம்மை இரட்சித்தவரை இடைவிடாமல் புகழ்ந்து தொழுதுகொள்வதற்கு அதுவே காரணமாகவும் விளங்கும். அந்தப் பழைய சுபாவத்தை நம்மைவிட்டு அகற்றுவதற்

குப் பதிலாக, தேவன் நமக்கு அவருடைய சொந்தப் பரிசுத்த ஆவியை நமக்குள்ளாகக் குடியிருக்கும்படியாகத் தந்தருளியிருக்கிறார். தேவனுடைய ஆவியும் நமது மாம்சமும் எப்பொழுதும் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் நாம் விண்ணுலக வீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை அப்போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். அவ்வாறு போர் நடக்கும் போது, தன்னை ஆவியானவருக்கு ஒப்புவிப்பதே விசுவாசியின் பங்காகும்.

**5:18** ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் **நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள்** அல்ல. இந்த வசனத்தை இரண்டு விதமாகப் புரிந்து கொள்ளலாம்: **ஆவியினால் நடத்தப்படுதல்** கிறிஸ்தவர்களுக்குரிய பண்பாக விளங்குகிறது. ஆகவே எந்தவொரு கிறிஸ்தவனும் **நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவன்** அல்லன், அவர்கள் தங்கள் சொந்த முயற்சியைச் சார்ந்து வாழ்கிறவர்கள் அல்லர். அவர்களுக்குள்ளாக இருக்கும் பாவத்தின் செயல்களை **ஆவியானவரே** எதிர்த்து நிற்கிறார். அவர்களாகவே சொந்தமாக அவற்றை எதிர்த்து நிற்கிறதில்லை. மேலும் **ஆவியினாலே நடத்தப்படுதல்** என்பது மாம்சத்திற்கு மேலாக உயர்த்தப்பட்டு கர்த்தரோடு ஐக்கியப்பட்டிருத்தல் என்றும் பொருள்படும். ஒருவர் அவ்வாறு கர்த்தரோடு இசைந்திருக்கும் போது, அவர் நியாயப்பிரமாணத்தையோ மாம்சத்தையோ சிந்தித்துப் பார்க்கமாட்டார். மனிதர்கள் நியாயப்பிரமாணத்தை நீதிமானாக்கப்படுதலுக்குரிய வழியாக நோக்கிப் பார்க்கும்படி அவர்களை தேவனுடைய ஆவியானவர் வழிநடத்தமாட்டார். மாறாக, உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒருவரே தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஆதாரமாக இருக்கிறார் என்று அவர்களுக்கு அவர் சுட்டிக்காட்டுகிறார்.

**5:19-21** நியாயப்பிரமாணமானது மாம்சத்தின் ஆற்றலை நோக்கி முறையிடுகிறது என்று நாம் முன்னமே குறிப்பிட்டுள்ளோம். எப்படிப்பட்ட **கிரியைகளை** வீழ்ந்துபோன மனித சுபாவம் உண்டு பண்ணுகிறது? **மாம்சத்தின் கிரியைகள்** எவை என்பதை அடையாளம் காண்பது கடினமான செயலன்று. அவை யாவருக்கும் **வெளியரங்கமாயிருக்கின்றன**. திருமண உறவில் உண்மையற்று நடப்பதே **விபசாரம்**[23] ஆகும். முறைகேடான பாலுறவு **வேசித்தனம்** ஆகும். ஒழுக்க நெறிகளில் தவறுதல் காமவெறி போன்றவை **அசுத்தம்** எனப்படும். எவ்விதக் கட்டுப்பாடுமின்றி வெட்கமற்ற முறையில் நடந்துகொள்வதே **காம விகாரம்** ஆகும். விக்கிரகங்களைத் தொழுது கொள்ளுவது இங்கு **விக்கிரகாராதனை** என்று குறிப்பிடப்படவில்லை. பிசாசுகளை வணங்குதல் அதனோடு சேர்ந்து செய்யப்படுகிற ஒழுக்கக் கேடு ஆகியவையே விக்கிரகாராதனை ஆகும். **பில்லிசூனியம்** என்பது மாந்திரிகமாகும். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க மொழிச் சொல் மருந்தோடு தொடர்புடையது (Pharmakeia). பில்லிசூனியத்தில் போதை மருந்துகள் பயன்படுத்தப்படுவதால், அந்தச் சொல் தீய ஆவிகளோடு கூடுதல் என்றும் மாயவித்தை செய்தல் என்றும் பொருள் பெற்றது. கெட்ட நிமித்தம், துரதிருஷ்டம் ஆகிய அர்த்தங்களையும் இச்சொல் கொண்டுள்ளது. பிறர்மீது கடும் பகைமை கொள்ளுதல் **பகைகள்** ஆகும். பூசல், முரண்பாடு மற்றும் சச்சரவுகள் யாவும் உள்ளடங்கியதே **விரோதங்கள்** ஆகும். நம்பிக்கையின்மை, சந்தேகம் ஆகியவையே **வைராக்கியங்கள்** என்பன. கடுஞ்சீற்றம், தீவிர உணர்ச்சி ஆகியவை **கோபங்கள்** என்று சொல்லப்பட்டுள்ளன. மற்றவர்களுக்கு இழப்பு நேரிடினும், தான் முதன்மையானவனாக இருக்க வேண்டும் என்று சச்சரவு செய்வதே **சண்டைகள்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உடன்பாடின்மையால் ஏற்படுவது **பிரிவினைகள்** ஆகும். பிடிவாத குணமுள்ளவர்கள் உட்பிரிவுகளை உண்டாக்குவார்கள். அவர்களைக் குறிக்க **மார்க்கபேதங்கள்** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றவர்கள் வெற்றி பெறும் போதும் செழித்தோங்கும் போதும் **பொறாமைகள்** உண்டாகும். சட்ட விரோதமாக மற்றவர்களைக் கொலை செய்வதே **கொலைகள்**[24] ஆகும். **வெறிகள்** குடிபோதையைக் குறிக்கிறது. குடிகாரர்கள் பொழுது போக்கும்படி கட்டுக்கடங்காத வகையில் கூடுவது **களியாட்டுக்கள்** எனப்படும்.

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை யென்று பவுல் முன்னே சொன்னதுபோல மீண்டும் தனது வாசகர்களை இங்கு எச்சரிக்கிறார். ஒரு குடிகாரன் இரட்சிப்படைய முடியாது என்று இந்த வேதபகுதி கற்பிக்கிறதில்லை. ஆனால் மேற்கூறிய மாம்சத்திற்குரிய கிரியைகளைத் தங்களுடைய வாழ்க்கையின் இயல்புகளாகக் கொண்டிருக்கும் மனிதர்கள் இரட்சிக்கப்படவில்லை என்றே இப்பகுதி கூறுகிறது.[25]

கிறிஸ்தவர்களை அங்கமாகக் கொண்டுள்ள சபைகளுக்கு இவ்விதமாகப் பவுல் எழுதுவதன்

காரணம் என்ன? ஏனெனில் இரட்சிக்கப்பட்டவர் கள் என்று தங்களைக் குறித்து அறிக்கை செய்ப வர்கள் அனைவரும் மெய்யாகவே தேவனுடைய பிள்ளைகள் அல்லர். இவ்வாறாக, புதிய ஏற்பாடு நெடுகிலும் வியத்தகு ஆவிக்குரிய உண்மைகளை யும் கடுமையான எச்சரிப்புகளையும் தூய ஆவி யானவர் கிறிஸ்துவின் திருப்பெயரை அறிக்கை செய்பவர்களுக்கு மிகுதியாக வழங்குகிறார்.

**5:22,23** மாம்சத்தின் *கிரியைகளுக்கும்* **ஆவி யின் கனிக்கும்** உள்ள வேறுபாட்டை அப்போஸ் தலன் வகைப்படுத்திக் கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது. மனித ஆற்றலினால் உண்டாக்கப்படு வதே கிரியைகள் ஆகும். திராட்சைச் கொடியில் நிலைத்திருக்கிற கிளையில் கனி வளர்கிறது (யோவான் 15:5). ஒரு தொழிற்சாலைக்கும் ஒரு தோட்டத்துக்கும் உள்ள வேறுபாடு போலவே கிரி யைக்கும் கனிக்கும் இடையே வேறுபாடு விளங்கு கிறது. கனி என்பது பன்மையில் அல்ல, ஒருமை யில் சொல்லப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். கிறிஸ்துவைப் போலாகுதல் என்னும் ஒரேவகைக் **கனியைப்** பரிசுத்த ஆவியானவர் உற்பத்தி பண்ணுகிறார். கீழே சொல்லப்பட்டிருக்கிற பண்பு கள் யாவும் தேவனுடைய பிள்ளையாக இருப்ப வனுடைய வாழ்க்கையை விவரிக்கின்றன. மனித இருதயமாகிய வயல் நிலத்திற்குப் புறம்பானவை யாக இந்தப் பண்புகள் யாவும் இருக்கின்றன என்று முனைவர் C. I. ஸ்கோபீல்டு கூறியிருக்கிறார்.

தேவன் அன்பாக இருக்கிறார். நாமும் அவ் வாறுதான் இருக்க வேண்டும். 1 கொரிந்தியர் 13 -ஆம் அதிகாரத்தில் இதைக்குறித்து மிக அழகாக விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதனு டைய முழுமையும் கல்வாரி சிலுவையில் வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. தேவனிடத்திலும் அவரு டைய செயல்களோடு கொண்ட ஈடுபாடுகளிலும் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைவதே **சந்தோ ஷம்** ஆகும். இதனை யோவான் 4:34 -இல் கிறிஸ்து வெளிப்படுத்தியிருக்கிறார். **சமாதானம்**, தேவனு டைய சமாதானத்தையும் கிறிஸ்தவர்களுக்குள் ளாகக் காணப்படும் இணக்கமான உறவையும் சேர்த்துக் குறிப்பிடக்கூடும். மீட்பரின் வாழ்க்கை யில் விளங்கிய சமாதானத்தை லூக்கா 8:22-25 -இல் காணலாம். இன்னல்கள், தொல்லைகள், உபத்திரவங்கள் ஏற்படும் வேளைகளில் பொறுமை யோடு இருப்பதே **நீடிய பொறுமை** ஆகும். இதன் ஒப்பற்ற எடுத்துக்காட்டினை லூக்கா 23:34 எடுத்தியம்புகிறது. **தயவு** என்பது மென்னயம் ஆகும். சிறுபிள்ளைகளிடையே கர்த்தர் காண் பித்த மனப்பான்மையில் இது நல்லமுறையில் விளக்கப்பட்டிருக்கிறது எனக் கூறலாம் (மாற்கு 10:14). பிறரிடம் காட்டும் தயவே **நற்குணமாகும்.**

நற்குணத்தை நாம் செயலில் காணவேண்டு மாயின், லூக்கா 10:30-35 ஆகிய வசனங்களைப் படிக்கிறதைத் தவிர வேறுவழியில்லை. **விசு வாசம்** என்பது தேவனிடத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கை, நம்முடைய உடன் கிறிஸ்தவர்களி டம் கொண்டிருக்கும் நம்பிக்கை, மெய்ப்பற்று அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலை; இவற்றில் இறுதியாகச் சொல்லப்பட்டிருக்கும் சொல்லே பெரும்பாலும் இதன் பொருளாகும். தம்முடைய சீடர்களுடைய கால்களை இயேசு கிறிஸ்து கழுவியபோது எடுத்துக்கொண்ட தாழ் வான நிலையே **சாந்தம்** ஆகும் (யோவான் 13:1-17). ஒருவன் தன்னையே கட்டுப்படுத்துகிற செயல், சிறப்பாக பாலுணர்ச்சிகளை அடக்கிக் காத்தல் **இச்சையடக்கம்** எனப்படும். நம்முடைய வாழ்க்கை ஒழுங்குகளுக்கு உட்பட்டதாக விளங்க வேண்டும். இச்சை, உணர்ச்சிகள், நாட்டங்கள், மனநிலை ஆகியவை யாவும் ஆளுகைக்கு உட் பட்டிருக்க வேண்டும். நாம் எல்லாவற்றிலும் நிதா னத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். சாமுவேல் சேட்விக் என்பார் இது குறித்துக் கூறுவதாவது:

> ஆங்கிலச் செய்தித்தாளில் இந்தத் திருமறைப் பகுதி இதுபோன்று காணப்படும்: ஆவியின் கனியானது பாசமிக்க, அன்புபாராட்டுதற்குரிய தன்மையாகும்; அது ஒளிவீசும் ஆவியும் பேரு வகை கொண்ட மனநிலையுமாகும்; கடுந் தொல்லை தரக்கூடிய மனிதர்களால் ஏற்படக் கூடிய எரிச்சலூட்டும் சூழ்நிலைகளில் பொறு மையைக் காத்துக்கொள்வதும் அதுவே; உலைவற்ற உள்ளமும் அமைதியான பாங்கும் ஆவியின் கனியேயாம்; பரிவுடைய உள்நோக் கமும் சாமர்த்தியமாக உதவிபுரிகிற தன்மையும் அதுவே; பெருந்தன்மையோடு மதிப்பீடு செய் தலும் பரந்த உள்ளத்தோடு நன்மைபுரிதலும் அதுவேயாகும்; எல்லாச் சூழ்நிலைகளிலும் விசுவாசத்தோடும் நம்பிக்கைக்குரிய வகை யிலும் நடந்துகொள்ளுதல்; பிறருடைய மகிழ்ச்சியில் தன்னலம் மறந்து நடந்துகொள் ளும் தாழ்மை; எல்லாவற்றிலும் சுயத்தை ஆளுகை செய்து சுயத்தை கட்டுப்படுத்துவது நிறைவின் கடைசி அறிகுறியாகும். 1 கொரிந் தியர் 13 -ஆவது அதிகாரத்தோடு இது எவ்வளவாகக் கருத்தைக் கவரும் வகையில் தொடர்புடையதாக இருக்கிறது![26]

அப்போஸ்தலனாகிய பவுல் மறைபொருளோடு கூடிய கருத்தினைக் கூறி இந்தப் பட்டியலை முடிக்கிறார்: **"இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை."** நிச்சயமாக இல்லை! இந்தப் பண்புகள் தேவனுக்கு இன்பமானவை, பிறருக்கு நன்மை பயக்கிறவை, நமக்கும் நல்லவை. ஆயின் இந்தக் கனி எவ்வாறு உண்டாக்கப்படுகிறது? இது மனிதனுடைய முயற்சியால் உண்டாகக் கூடியதா? அவ்வாறு உண்டாவதில்லை என்பது திண்ணம். கிறிஸ்தவர்கள் கர்த்தரோடு ஒன்றிணைந்து வாழ்வதனால் உண்டாவதாகும். பாசமிகுந்த பக்தியோடு இரட்சகரை நோக்கிப் பார்ப்பதாலும், அனுதின வாழ்வில் அவருக்குக் கீழ்ப்படிவதாலும், தூய ஆவியானவர் அவர்களுடைய வாழ்க்கையில் வியத்தகு அற்புதங்களை நிகழ்த்துகிறார். அவர் அவர்களைக் கிறிஸ்துவின் சாயலுடையோராய் மாற்றுகிறார். அவரையே நோக்கிப் பார்ப்பதாலே அவர்கள் அவரைப் போல ஆகிறார்கள். திராட்சைச் செடியிலிருந்து அதன் கிளைகள் எவ்வாறு தங்களுக்குத் தேவையான ஜீவனையும் ஊட்டத்தையும் பெற்றுக்கொள்கின்றனவோ, அதுபோலவே மெய்யான திராட்சைச் செடியாகிய கிறிஸ்துவினிடத்திலிருந்து அவருக்குள்ளாக இருக்கும் விசுவாசிகள் தேவை அனைத்தையும் பெற்றுக்கொண்டவர்களாக, தேவனுக்குக் கனிதரும் வாழ்க்கையை வாழ்வதற்கான ஆற்றலைப் பெறுகிறார்கள்.

**5:24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தைச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.** இங்கு வினைச்சொல்லின் காலம்[27], நிச்சயமாக ஏற்கனவே நடந்து முடிந்த நிகழ்ச்சியைக் குறிப்பதாகவே விளங்குகிறது. அந்நிகழ்ச்சி நாம் மனமாற்றம் பெற்ற தருணத்தில் மெய்யாகவே நடந்து முடிந்துவிட்டது. நம்முடைய பழையதும் தீமையானதும் கெட்டுப்போனதுமான முந்தின இயல்பு, நாம் மனந்திரும்பியபோது அதனுடைய ஆசைகளோடும் இச்சைகளோடும் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது. இனிமேல் நம்முடைய வீழ்ந்துபோன இயல்புக்கு உணவூட்டும்படி நாம் வாழக்கூடாது. அதாவது அந்த இயல்பு நம்மீது ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கக் கூடாது. இந்தத் தீர்மானத்தை நாம் நமது வாழ்க்கையில் தொடர்ந்து புதிப்பிக்க வேண்டும். மேலும் நம்முடைய மாம்சத்தை இடைவிடாமல் மரணத்தின் இடத்திலே வைக்க வேண்டும்.

**5:25** பிழைத்திருந்தால் என்னும் சொல்லில் **'ஆல்'** என்னும் விகுதி "அதன் காரணமாக" என்று பொருள்படும். பரிசுத்த ஆவியானவர் நம்மிடத்திலே கிரியை செய்கின்ற காரணத்தினால் நாம் நித்திய ஜீவனைப் பெற்றிருக்கிறோம்; ஆகவே அதே ஆவியானவரின் வல்லமையால் நாம் புதிதான வாழ்வை வாழக்கடவோம். நியாயப்பிரமாணம் ஒருக்காலும் ஜீவனைத் தந்ததில்லை; கிறிஸ்தவ வாழ்வின் விதியாக ஒருக்காலும் அது கொடுக்கப்படவும் இல்லை.

### இ. நடைமுறை வாழ்க்கைக்கான அறிவுரைகள் (5:26-6:10)

**5:26** இந்த வசனத்தில் தவிர்க்க வேண்டிய மூன்று வகையான மனப்பான்மைகள் சொல்லப்பட்டுள்ளன:

1. வீண்புகழ்ச்சி - **வீண்புகழ்ச்சியை விரும்பாமல் இருக்கக்கடவோம்.** (நம்மைக் குறித்து) தவறான அல்லது வீணான கருத்து உடையோராய் இருப்பது. வீண்பெருமை அல்லது வீண்புகழ்ச்சி பாராட்டுகிற மனிதர்களாகக் கிறிஸ்தவர்கள் இருப்பதை தேவன் விரும்புகிறதில்லை. கிருபையினாலே இரட்சிப்பைப் பெற்ற ஒரு பாவி அவ்விதமாக இருப்பது பொருத்தமற்ற நிலையாகும். நியாயப்பிரமாணத்திற்குக் கீழான மனிதர்கள் தங்களுடைய பரிதவிக்கத்தக்க சாதனைகளைக் குறித்து பெருமை பாராட்டுகிறார்கள், மேலும் தங்களுடைய தகுதிக்கு ஒப்பான நிலையில் இல்லாதவர்களைப் பழித்துரைக்கிறார்கள். நியாயப்பிரமாண சார்புடைய கிறிஸ்தவர்கள் குற்றப்படுத்துகிற காரியங்களைக் குறித்து, அதே விதமான கருத்து கொண்டிராத மற்ற கிறிஸ்தவர்களை இகழ்கிறார்கள்.
2. கோபமூட்டுதல் - **ஒருவரையொருவர் கோபமூட்டாமல் இருக்கக்கடவோம்.** ஒருவர் தன்னுடைய சொந்தத் கருத்துகளை ஆதரித்துப் பேசாத மற்றவர்களிடம் கோபமூட்டும் படியோ அதிகாரத் தொனியோடு எதிர்த்தோ பேசுவது ஆவியினால் நிறைந்த வாழ்க்கையை மறுப்பதாகும். பிறருடைய இருதயங்களில் தோன்றுகிற சோதனைகளையும், பிரச்சினைகளையும் அவர்களுடைய சூழ்நிலைகளின் வழியாகச் செல்லாத ஒருவர் அறிவது இயலாத செயலாகும்.
3. பொறாமை கொள்ளுதல் - **ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமல் இருக்கக்கடவோம்.** வேறொருவருடைய உடைமை தனக்கு வேண்டுமென்று விரும்புகிற செயல், மேலும் அந்தப் பொருள்மேல் தனக்கு எவ்வித

உரிமையும் இல்லாதபோது அதை விரும்பு கிற செயல் பொறாமை என்னும் பாவமாகும். வேறொருவருடைய பெரிதான வெற்றி, திறமை, உடைமை, அழகிய தோற்றம், இவற் றைக் கண்டு கறுவுதல் பொறாமையாகும். நியாயப்பிரமாணத்தைச் சீராகக் கடைப்பிடிப் பவர்களாகத் தோன்றுகிற மனிதர்களைக் கண்டு, திறமையற்றவர்களும் பலவீனமான பண்புகள் உடையவர்களுமாகிய மனிதர்கள் பொறாமை கொள்வது நிகழக்கூடியதே. இப் படிப்பட்ட பண்புகள் கிருபைக்கு அப்பாற்பட் டவை. மெய்யான விசுவாசி மற்றவர்களைத் தன்னைக் காட்டிலும் மேலானவர்களாகக் கருத வேண்டும். நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்போர் வீண்புகழ்ச்சியை விரும்பு கிறார்கள். பிறர் கவனிக்காதபடி சேவைபுரி வதும், காணாத வகையில் உழைப்பதும் மெய்யாகவே மேன்மையாகும்.

**6:1** பாவம் செய்யும் ஒரு விசுவாசியை மற்ற கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடத்தவேண்டும் என்பது பற்றிய அழகிய விளக்கத்தை இங்கு நாம் காண்கிறோம். குற்றம் இழைத்தோர்மீது நியாயத் தீர்ப்பு வழங்வேண்டுமென்று நியாயப்பிரமாணம் கூறுகையில், அதற்கு முற்றிலும் மாறான நிலை யில் இது இருக்கிறது என்பதில் ஐயமில்லை. **ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால்** என்னும் சொற்றொடர் தொடர்ந்து பாவம் செய் யும் இயல்புள்ள மனிதனைக் குறிப்பிடாமல், ஏதோவொரு பாவச்செயலைப் புரிந்துவிட்ட ஒரு மனிதனையே குறிப்பிடுகிறது. அந்த மனிதனிடத் தில் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டியது அவ சியம் - மாம்ச சுபாவமுள்ள கிறிஸ்தவர் தன்னு டைய கடினமான, நட்புணர்வற்ற மனப்பான்மை யில் நன்மையான விளைவை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, அதிகக் கேட்டையே ஏற்படுத்துவார். மேலும் கர்த்தரோடு தொடர்பற்ற நிலையில் இருக்கும் அந்த மனிதர் கூறும் நல்லாலோசனை களை ஏற்க, குற்றம் இழைத்த மனிதர் ஒப்புக் கொள்ள மாட்டார்.

இந்த வசனம் ஆர்வத்தைத் தூண்டிவிடுகிற ஒரு கேள்வியை எழுப்புகிறது. ஒருவர் மெய்யா கவே ஆவிக்குரியவராக இருப்பாரென்றால், தான் ஆவிக்குரியவன் என்று அவர் ஒப்புக்கொள் வாரா? ஆவிக்குரிய மனிதர்கள் தங்களுடைய குறைவுகளைக் குறித்து அதிகக் கருத்துடைய வர்களாக இருக்கமாட்டார்களா? அவ்வாறு இருக்க, தன்னை ஆவிக்குரிய மனிதன் என்று வெளிப் படுத்தும்படியான, சீர்பொருந்தச் செய்கிற வேலையை யார் செய்வார்? அச்செயல் தன்னடக்க மின்மையை வெளிப்படுத்தாதா? அதற்குரிய விடையைக் காண்போம்: உண்மையிலே ஆவிக் குரிய நிலையில் இருக்கும் ஒருவர், தனது நிலை யைக் குறித்துப் பெருமை பாராட்டமாட்டார், எனி னும் மேய்ப்பனின் மென்மையான இருதயத்தை அவர் கொண்டிருப்பார். அதன் நிமித்தம் குற்றம் இழைத்த மனிதனைச் சீர்பொருந்தச் செய்ய வேண்டும் என்னும் உணர்வு அவருக்குள் ஏற் படும். அவர் பெருமையோடு அல்லது தான் உயர்ந்தவர் என்னும் மனப்பன்மையோடு செயல் படமாட்டார். மாறாக, தானும் **சோதிக்கப்படக் கூடும்** என்னும் நினைவோடு, **சாந்தமுள்ள ஆவியோடே** செயல்படுவார்.

**6:2** பாரங்கள் என்னும் சொல் தோல்விகள், சோதனைகள், பரீட்சைகள், துன்ப அனுபவங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. இடர்ப்பாடு களையோ, கடுந்துன்பங்களையோ அனுபவிக் கிற மனிதர்களை விட்டுத் தொலைவில் நின்று குறைகூறாமல், அவர்கள் அருகே ஓடிச்சென்று கூடுமான வழிகளிலெல்லாம் உதவிபுரியவேண்டும்.

புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய இயேசு தம்மு டைய மக்களுக்குக் கொடுத்துள்ள அனைத்துக் கட்டளைகளும் **கிறிஸ்துவின் பிரமாணத்தில்** அடங்கியுள்ளன. "நீங்கள் ஒருவரிலொருவர் அன் பாயிருங்கள்" என்னும் கட்டளையால் இதனைச் சுருங்கக் கூறலாம் (யோவான் 13:34; 15:12). **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதாலே** இதனை நாம் நிறைவேற்றுகிறோம். மோசேயின் பிரமாணத்தி லிருந்து **கிறிஸ்துவின் பிரமாணம்** முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது. கீழ்ப்படிதலின் மூலமாக வாழ்வு தரப்படும் என்று மோசேயின் பிரமாணம் வாக்களித்தது, ஆனாலும் அவற்றை நிறை வேற்றுவதற்குரிய ஆற்றலைத் தரவில்லை. மேலும் தண்டனை கிடைக்கும் என்னும் அச் சத்தை ஊட்டி, கீழ்ப்படிதலை நிறைவேற்றும்படி ஊக்கமளித்தது. இதற்கு மாறாக கிறிஸ்துவின் பிரமாணம் ஏற்கனவே ஜீவனைப் பெற்ற மக்க ளுக்கு அன்புடன் கூடிய அறிவுரையாகத் திகழ் கிறது. பரிசுத்த ஆவியின் வல்லமையால் விசு வாசிகள் அந்தக் கட்டளைகளைக் கைக்கொள் தவற்கான ஆற்றல் அவர்களுக்குத் தரப்படு கிறது. மேலும் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பே அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான நோக்கமாக இருக்கிறது.

**6:3** நாம் அனைவரும் ஒரே மண்ணினாலே உருவாக்கப்பட்டவர்கள். ஒரு சகோதரன் பாவம் செய்வதைக் காணும்போது, அந்த நிலையில் நாமும் இருக்கக்கூடும் என்பதை நினைவுகூர வேண்டும். பிறரைக் காட்டிலும் தான் உயர்ந்த வன் என்னும் மனப்பான்மை கொண்ட கிறிஸ் தவன், தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்பவ னாக இருக்கிறான். பிறருடைய பாரத்தைச் சுமப் பது நம்முடைய தகுதிக்குக் குறைவானது என்று நாம் ஒருக்காலும் நினைவுகூரலாகாது.

**6:4** பிறருடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்து மன நிறைவுகொள்கிற பழக்கத்துக்கு எதிரான எச்ச ரிப்பாகவே இந்த வசனம் காணப்படுகிறது. ஆனால் கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நாம் தனிப்பட்ட நிலையில் சோதிக்கப்படுவோமே யொழிய, மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து சோதிக்கப்படப்போவதில்லை என்பதை அப் போஸ்தலன் இங்கு சுட்டிக்காட்டுகிறார். ஆகவே நம்மை நாமே கவனித்துப் பார்த்தவர்களாக, *பிறருடைய* தோல்விகளிலல்ல *நம்முடைய* கிரியையில் களிகூரக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**6:5** இந்த வாழ்க்கையில் ஒருவருக்கு உண்டா கக்கூடிய வருத்தங்களையும், பாடுகளையும், பிரச்சினைகளையும் மற்றவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று பவுல் இரண்டாவது வசனத்தில் கற்பித்திருக்கிறார். ஐந்தாவது வசனத்திலோ, கிறிஸ்துவின் நியாயாசனத்திலே ஒவ்வொருவரும் **தன்தன் பாரத்தைச் சுமக்க** வேண்டியவனாக இருப்பான் என்னும் கருத்து கூறப்பட்டுள்ளது.

**6:6** தங்களுடைய கிறிஸ்தவ போதகர்களை விசுவாசிகள் ஆதரிக்க வேண்டிய பொறுப்பைப் பெற்றிருக்கிறார்கள். **சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்** என்னும் சொற் றொடர் வாழ்க்கைக்குத் தேவையான பொருளுதவி யைச் செய்தல் மற்றும் அவர்களை ஜெபத்தில் தாங்கி திவ்விய அக்கறை செலுத்துதல் என்று பொருள்படும்.

**6:7** தேவனுடைய ஊழியக்காரர்களைக் கவனிக்கத் தவறுவதைப் பிறர் அறியாமற் போனா லும், தேவன் அதைக் காண்கிறார், மேலும் அதற் கேற்ற அறுவடையைத் தருகிறார். நாம் எதை விதைக்கிறோமோ அதையே **அறுக்கிறோம்**. மேலும், நாம் எவ்வளவு விதைக்கிறோமோ அதனினும் பன்மடங்கு அறுவடை செய்வோம். ஓர் உழவன் கோதுமையை விதைத்தால், கோது மையை முப்பது மடங்கோ அறுபது மடங்கோ நூறு மடங்கோ அறுவடை செய்வான். "இங்கு ஆவியானவர் பாவிகளுடைய பாவங்களைக் குறித்துப் பேசவில்லை. மாறாக பரிசுத்தவான் களின் கஞ்சத்தனத்தைப் பற்றியே பேசுகிறார்" என்று திருவாளர் ஸ்கோ.·.பீல்ட் குறிப்பிடுகிறார்.

இது விரிவான விளக்கத்தைக் கொண்டிருப் பது உண்மையே, அதில் எவ்வித ஐயமுமில்லை, "அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்த வர்கள், அதையே அறுக்கிறார்கள்" (யோபு 4:8); மேலும் "அவர்கள் காற்றை விதைத்து, சூறைக் காற்றை அறுப்பார்கள்" (ஓசியா 8:7). "ஒரு பாடம், ஒரே ஒரு பாடம், எவ்வித மாற்றத்துக்கும் இட மின்றி வரலாறு திரும்பும் என்று சொல்லப்படு கிறது. ஒரு நன்னெறிக் கோட்பாட்டிலேயே உலகம் நிறுவப்பட்டிருக்கிறது, நன்மை முடிவில் நல்லது பயக்கும், அதுபோலவே பொல்லாங்கு முடிவில் தீமையே பயக்கும்" என்று வரலாற்று அறிஞர் J. A. ·.பிரௌடி கூறினார்.[28]

**6:8** நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் என்பது பொதுவான பொருளில் சொல் லப்பட்டுள்ளது உண்மையெனினும் கிறிஸ்தவர் கள் கொடுப்பதைப் பற்றிய அறிவுரையே இங்கு நினைவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அந்தப் பொருளின் வெளிச்சத்தில் **மாம்சத்திற்கென்று விதைக்கிற வன்** என்னும் சொற்றொடர், ஒருவர் தனக்கென் றும், தன்னுடைய இன்பத்திற்காகவும், வசதி களுக்காகவும் மிகுதியாகச் செலவு செய்தல் என்று பொருள்படும். **ஆவிக்கென்று விதைக்கிற வன்** என்பது தேவனுடைய விருப்பங்கள் விரிவாக் கம் அடைவதற்கென்று ஒருவர் தனது பணத்தைச் செலவிடுதல் ஆகும்.

மேற்கூறியவற்றில் முந்தினதைச் செய்கிறவர் கள், தங்களுடைய முதிர்வயதின்போது தாங்கள் வாழ்ந்த மாம்சம் நலிவடைந்து மடிந்துபோவதை அறிந்து இவ்வுலக வாழ்க்கையின்போதே ஏமாற் றமும் இழப்பும் மிகுந்த அறுவடையையே அறுப் பார்கள். மேலும் வரப்போகிற காலத்தில், நித்திய வெகுமதிகளையும் இழந்துபோவார்கள். **ஆவிக் கென்று விதைக்கிற** மனிதர்கள், **ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பார்கள். நித்திய ஜீவன்** என்னும் சொற்றொடர் இரண்டு வகையாக வேதத் தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (முடிவில்லா வாழ்வு என்றே இதனை மொழிபெயர்த்திருக் கிறார்கள் - தமிழில் நித்திய ஜீவன் என்றே இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது): (1) ஒவ்வொரு விசுவாசியும் தற்காலத்தில் பெற்றிருக்கிற உடை

மையாக இது இருக்கிறது (யோவான் 3:36). (2) இவ்வுலகில் விசுவாசி தனது வாழ்க்கையை முடிக்கும் தறுவாயில் பெற்றுக்கொள்கிற ஒன்றாகவும் இது விளங்குகிறது (ரோமர் 6:22). ஆவிக்கென்று விதைக்கிறவர்கள் மற்ற கிறிஸ்தவர்களைப் போலல்லாமல், இவ்வுலக வாழ்க்கையின்போதே இங்கேயே நித்திய ஜீவனை இன்பமாக அனுபவிப்பார்கள். மேலும், அவர்கள் தங்களுடைய விண்ணக வீட்டினைச் சென்றடையும்போது, உண்மையுள்ள தன்மையோடு சேர்ந்து வருகிற பரிசுப்பொருட்களை அறுவடைசெய்வார்கள்.

**6:9** பரிசுப்பொருட்கள் உடனடியாகத் தரப்படாவிட்டாலும், அவை நிச்சயமாகக் கிடைக்கும்; ஆகவே ஒருவரும் தளர்ந்து போகக்கூடாது என்று பவுல் தனது வாசகர்களுக்கு நினைவூட்டுகிறார். கோதுமை மணிகளை நிலத்தில் விதைத்த நாளுக்கு அடுத்த நாளில் நாம் அறுவடை செய்ய முடியாது. ஆவிக்குரிய செயற்களத்திலும், உண்மையோடு விதைத்தவர்கள் **ஏற்ற காலத்தில்** பரிசுப்பொருட்களைப் பெறுவார்கள்.

**6:10 விசுவாசக் குடும்பத்தார்** என்னும் சொற்றொடர் சபைப் பாகுபாடுகள் அல்லது பிரிவினைகள் இவற்றைக் கருத்தில் கொள்ளாமல், இரட்சிக்கப்பட்ட அனைவரையும் குறிக்கும் சொற்களாகும். விசுவாசிகளுக்கு மட்டுமே நன்மை செய்ய வேண்டும் என்று நாம் அதற்கு ஓர் எல்லையை வகுத்துக்கொள்ளக்கூடாது, ஆனாலும் அவர்களுக்குச் சிறப்பான வகையில் நன்மை செய்ய வேண்டும். எவ்வளவு கொஞ்சமாக நாம் தீங்கு விளைவிக்க முடியுமோ என்று எதிர்மறை வாசகமாக இங்கு சொல்லப்படவில்லை, மாறாக, எவ்வளவு அதிகமாக நம்மால் **நன்மை** செய்ய முடியும் என்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். ஜான் வெஸ்லி அவர்கள் இதனைப் பொருட்செறிவோடு கூறினார்: "உங்களால் செய்யமுடிந்த எல்லா நன்மைகளையும், எல்லா வழிகளிலேயும், எவர்களுக்கெல்லாம் உங்களால் செய்ய முடியுமோ அவர்களுக்கெல்லாம், எவ்வளவு காலம் உங்களால் முடியுமோ அவ்வளவு காலம் முழுவதும் செய்யுங்கள்."

### ஈ. முடிவுரை (6:11-18)

**6:11 என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேன் என்று பாருங்கள்!** (எவ்வளவு பெரிய எழுத்துகளாக என் சொந்தக் கையினாலே நான் எழுதினேனென்று பாருங்கள்.) பவுல் தன்னுடைய வழக்கத்தின்படி உதவியாளரிடம் ஒப்புவிக்காமல், தன் கைப்பட இந்த மடலை எழுதினார். அவர் **பெரிய எழுத்துகளாக** எழுதிய செயல், அவர் நியாயப்பிரமாணத்தை வலியுறுத்திய மனிதர்களோடு போராட வேண்டுமென்று கொண்டிருந்த ஆழ்ந்த உணர்வுகளையும், யூதமார்க்கச் சார்புடையோரின் தவறுகள் எவ்வளவு ஆபத்து நிறைந்தவை என்று அவர் கருதினார் என்பதையும் குறிக்கக்கூடும். இல்லையேல், இந்தப் பகுதியிலும், மற்றும் சில பகுதிகளிலும் சொல்லப்பட்டுள்ளவற்றிலிருந்து பலர் கருதுவதுபோல பவுலின் கண்பார்வை குன்றிப் போய் இருந்ததால் அவர் பெரிய எழுத்துகளாக எழுதினார் போலும். இரண்டாவது கருத்தே சரியானது என்று நாம் கருதுகிறோம்.

**6:12** தங்களைப் பெருங்கூட்டத்தார் பின்பற்றி வர வேண்டும் என்று மக்களைச் சேர்க்கும் யூத மார்க்கச் சார்புடையோர், **மாம்சத்தின்படி நல்வேஷமாய்க் காணப்பட விரும்புகிறார்கள்**. விருத்தசேதனத்தை வலியுறுத்தி அவர்கள் இதனைச் செய்யக்கூடும். தங்களுடைய பழக்கத்தை மாற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படாத வரை, பற்பல சடங்குகளையும் பண்டிகைகளையும் மனிதர்கள் அவ்வப்போது கடைப்பிடிக்க விருப்பமுடையவராய் இருக்கிறார்கள். தகுதிகளைத் தாழ்த்தி சபை அங்கத்தினர்களைக் கூட்ட வேண்டும் என்று செயல்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது. இப்படிப்பட்ட கள்ள போதகர்களின் உண்மையற்ற தன்மையைக் கண்ட பவுல், **கிறிஸ்துவினிமித்தம் துன்பப்படாதபடிக்கே** அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறார். தேவனைப் பிரியப்படுத்தும்படி மாம்சமும் அதன் ஆற்றல்களும் செய்கிற முயற்சிகளை ஆக்கினைக்கு உட்படுத்திய நிகழ்ச்சியையே சிலுவை சுட்டிக்காட்டுகிறது. மாம்சீக இயல்புக்கும், அதனுடைய மிக மேன்மையான ஆற்றல்களுக்கும் மரணத்தையே சிலுவை தீர்ப்பாக வழங்கியிருக்கிறது. தீமையிலிருந்து பிரிந்து வாழ்வதே சிலுவை என்பதன் பொருளாகும். ஆகவே, சிலுவையின் புகழ்ச்சிமிக்க செய்தியை மனிதர்கள் வெறுக்கிறார்கள், மேலும் அதனை அறிவிக்கிறவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள்.

**6:13 நியாயப்பிரமாணத்தை** வலியுறுத்தியவர்கள் உண்மையில் அதனைக் கைக்கொள்ள வேண்டும் என்று விரும்பவில்லை. அவர்கள் விரும்பியதெல்லாம், தங்களைப் பெருங்கூட்டத்தார் பின்பற்றுகிறார்கள் என்று தங்களைக் குறித்தே மேன்மைபாராட்டும்படி, மனமாற்றம்

அடைவதற்கு ஓர் எளிய வழியை உண்டுபண்ண வேண்டும் என்பதுதான். "தன்னில்தானே எவ் விதத் திறனும் இல்லாத ஒரு நிலைக்கு மனிதர் களை மாற்றம் அடையச் செய்ய வேண்டும் என் னும் முயற்சியே இது; ஏனெனில் விருத்தசேதனம் பெற்றவர்களாலும்கூட நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியவில்லை" என்று பாய்ஸ் என்பவர் கூறுகிறார்.

**6:14** பவுல் மேன்மைபாராட்டுவதற்குரிய ஆதாரம் மனிதர்களின் மாம்சத்தில் இல்லை; மாறாக அது நம்முடைய **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையிலேயே** இருக்கிறது. அந்தச் சிலுவையில்தான் பவுலுக்கு இவ்வுலகம் செத்துப்போயிற்று, பவுலும் இவ்வுலகிற்குச் செத்துப் போனார். ஒரு மனிதன் இரட்சிக்கப்படும் போது, இவ்வுலகம் அவனிடம், நீ போகலாம் என்று கூறி வழியனுப்பி வைக்கிறது. அவனும் இவ்வுலகத்திற்கு விடை கூறி வழியனுப்பி வைக் கிறான். உலகத்தைப் பொருத்தமட்டில், அது தரும் கணப்பொழுது நிலைத்திருக்கக் கூடிய இன்பங்களில் அவன் ஆர்வமற்றவனாக இருக்கிற காரணத்தால் பயனற்றவனாகவே கருதப்படு வான். அவனைக் கவர்ந்து இழுக்கக்கூடிய ஆற்றலை உலகம் இழந்து போய்விட்டது, ஏனெ னில் அவனை முழுவதும் மனநிறைவு அடையச் செய்கிற வேறொருவரை அவன் கண்டடைந் திருக்கிறான். "அவன் இனிமேல் அதனை ஒருக் காலும் விசுவாசிக்கப் போவதில்லை, அதில் இனி மேல் பெருமை பாராட்டப் போவதுமில்லை, இனி மேல் அதைப் புகழ்ந்து பேசப்போவதுமில்லை. அவனைக் கவர்ந்து இழுக்கக்கூடிய ஆற்றலை யும், அவன்மேல் ஆதிக்கம் செலுத்தக்கூடிய தன்மையையும் இவ்வுலகம் பறிகொடுத்துவிட் டது, அதனுடைய புகழ்ச்சி அதனைவிட்டு அகற் றப்பட்டுவிட்டது" என்று .'.பின்லே கூறுகிறார். இவ் வாறாக, சிலுவை இந்த உலகத்திற்கும், தேவனு டைய மக்களுக்கும் இடையே பெருந்தடையா கவோ, பிரிவினைக் கோடாகவோ விளங்குகிறது.

**6:15** இந்த மடலில் கூறப்பட்டுள்ள மிக முக் கியமான கிறிஸ்தவக் கோட்பாடுகளில் ஒன்றினை இந்த வசனம் எடுத்துரைக்கிறது. இதனை நாம் மேலோட்டமாக படிக்குங்கால், அவ்வாறு தோன்று கிறதில்லை.

**விருத்தசேதனம்** வெளிப்புறத்தில் செய்யப் படுகிற ஒரு சடங்காக இருந்து வந்துள்ளது. இந்தச் சடங்கை நிறைவேற்றுவதில்தான் எல் லாம் அடங்கியிருக்கிறது என்னும் நிலையை யூதமார்க்க போதகர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். யூதமார்க்கத்தின் ஆதாரமாக விருத்தசேதனம் விளங்கியது. "**விருத்தசேதனம்** ஒன்றுமில்லை" என்னும் சொற்களை விளாசிய பவுல் அதனை ஒதுக்கித் தள்ளிவிட்டார். சடங்குகளோ, யூத மார்க்கமோ, நியாயப்பிரமாணக் கோட்பாடோ எதுவாயினும் ஒரு பயனுமில்லை. அவற்றுடன் **விருத்தசேதனமும் ஒன்றுமில்லை** என்று பவுல் கூட்டி வழங்குகிறார். இவ்வாறான சடங்குகளைச் செய்கிறதில்லை என்று சிலர் தங்களைக் குறித் துப் பெருமை பாராட்டிக்கொண்டார்கள். சபைக் கூட்டங்களில் எந்தச் சடங்கையும் செய்யாமல் சிலர் அதற்கு எதிர்த்து நின்றார்கள். இவ்வாறு செயல்படுவதிலும் எந்த மேன்மையும் இல்லை.

தேவனால் மெய்யாகப் பாராட்டைப் பெறுவது **புது சிருஷ்டியே** ஆகும். அவர் மறுரூபமடைந்த வாழ்வைக் காணவே விரும்புகிறார். "கெட்ட மனிதர்களை நல்லவர்களாகவும், பாவத்தின் அடிமைகளை தேவனுடைய புத்திரர்களாகவும் மாற்றமடையச் செய்வதே மெய்யான கிறிஸ்த வம்" என்று .'.பின்லே எழுதுகிறார். எல்லா மனிதர் களும் இருவகைப் படைப்புகளில் ஒருவகையைச் சேர்ந்தவராயிருப்பார்கள். இவ்வுலகில் பிறந்த நிலையில், அவர்கள் பாவ இயல்புள்ளவர்களாக, உதவியற்றவர்களாக, ஆக்கினைக்குட்பட்டவர் களாக இருக்கிறார்கள். தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொள்ள அவர்கள் செய்கிற முயற்சி கள், அல்லது நல்ல நடத்தை அல்லது நற்செயல் கள் ஆகியவற்றின் மூலமாக தங்களுடைய இரட் சிப்பிற்காக தேவனுக்கு உதவி செய்தல் யாவும் வீணானவை, அவை அவர்களை எவ்விதத்திலும் மாற்றுவதில்லை. **புதுசிருஷ்டியானது** உயிர்த் தெழுந்த கிறிஸ்துவினால் வழிநடத்தப்படுகிறது, அதில் பாவத்திலிருந்து மீட்கப்பட்ட அனைவரும் இடம் பெறுவர், அவருக்குள்ளாக அவர்கள் புதி தான ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள். தொடக்கத் திலிருந்து முடிவுவரை **புதுசிருஷ்டி** கிறிஸ்து வையே முழுவதுமாகச் சார்ந்திருப்பதால், நல் நடத்தை அல்லது நற்செயல் மூலமாக தேவனு டைய தயவைப் பெறலாம் என்னும் எண்ணம் அங்கு சற்றேனும் இல்லை. சடங்குகளைக் கைக் கொள்வதால் அல்ல, கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்து, அவர் தம்முடைய வாழ்க்கையை விசு வாசியினிடத்தில் வாழ்வதற்கு விசுவாசி அனு மதிப்பதினாலேயே பரிசுத்த வாழ்வு உண்டா கிறது. புதுசிருஷ்டியானது பழைய வாழ்க்கையின் முன்னேற்றமோ, அதனுடன் ஒன்றைச் சேர்ப்பதோ அல்ல, மாறாக அது முற்றிலும் மாறுபட்டது.

**6:16** பவுல் எந்தப் **பிரமாணத்தைக்** குறித்து இங்கு பேசுகிறார்? இது புது சிருஷ்டியின் **பிர மாணமே** ஆகும். "இது புது சிருஷ்டியினைச் சேர்ந்ததா?" என்னும் கேள்வியினாலே போத கத்தை நியாயந்தீர்த்து, அதனைச் சேர்ந்தது அல்ல என்று அறியும்போது அத்தகைய போத கத்தை நிராகரிப்பவர் யாவருக்கும், **சமாதானம்** மற்றும் **இரக்கம்** ஆகிய இரட்டத்தனையான ஆசிர்வாதங்களை அவர் அறிவிக்கிறார்.

**தேவனுடைய இஸ்ரவேலருக்கும் உண்டா யிருப்பதாக.** பலர் சபையையே இது குறிக்கிறது என்று பொருள்கொள்கின்றனர். ஆயினும் தேவ னுடைய இஸ்ரவேலர் பிறப்பின்படி யூதராயும், கர்த்தராகிய இயேசுவை மேசியாவாக ஒப்புக் கொண்டவராயும் இருக்கிறவர்களையே குறிக் கிறது. யாரெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு அடிமைப்பட்டு நடக்கிறார்களோ அவர்களுக்குச் சமாதானமும் இல்லை இரக்கமும் இல்லை, மாறாக இவ்விரண்டும் புதுசிருஷ்டியில் இடம் பெற்றிருப்போரின் பங்காகும்.

**6:17** ஒரு காலத்தில் நியாயப்பிரமாணத்துக்கு அடிமைப்பட்டிருந்த பவுல், அந்த அடிமைத்தனத் திலிருந்து கர்த்தராகிய இயேசுவினால் விடுவிக் கப்பட்டார். இப்பொழுதோ அவர் கர்த்தருடைய மனமுவந்த அடிமையாக மாறிவிட்டார். அடிமை கள் எவ்வாறு தங்களுடைய எஜமானனின் அடையாளத்தினால் குறியிடப்பட்டிருந்தார் களோ அதுபோலவே பவுல், **கர்த்தராகிய இயேசுவுக்குச்** சொந்தம் என்பதற்கான **அச்ச டையாளங்களைத்** தனது **சரீரத்திலே** தரித்துக் கொண்டிருந்தார். அவை எவை? துன்பப்படுத்தின வர்களுடைய கரங்களினாலே அவருடைய சரீரத் திலே உண்டான தழும்புகள். இப்பொழுது அவர் கூறுகிறார்: "ஒருவனும் என்னை மீண்டும் தன்னு டையவன் என்று உரிமை பாராட்டாதிருப்பானாக. நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்பட்டவன் என்று குறிப்பிடும் விருத்தசேதனமாகிய அடையாளத் தைக் குறித்து ஒருவனும் என்னிடம் பேசாதிருப் பானாக. என்னுடைய புதிய எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் அடையாளக் குறியை நான் இப்பொழுது தரித்திருக்கிறேன்."

**6:18** அப்போஸ்தலன் தனது எழுதுகோலைக் கீழே வைக்கப் போகிறார். ஆனால் அவர் ஒரு சொல்லைச் சொல்லி முடிக்க வேண்டும். அது என்ன சொல்? **கிருபை** - அவருடைய நற்செய்தி யின் பண்பை விவரிக்கும் சொல்லாகும். **கிருபை,** நியாயப்பிரமாணம் அன்று. அந்தக் கிருபையைப் பற்றிய கருத்தோடுதான் அவர் தனது கடிதத் தைத் தொடங்கினார் (1:3); அந்தக் கருத்தோடு அவர் தனது கடிதத்தை எழுதி முடிக்கிறார். **நம்மு டைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்.**

## நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தும் கொள்கை

கலாத்தியர் மடலின் ஓர் ஆய்வினைக் கற்று முடித்த ஒருவர், நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் போதகர் களைப் பவுல் மிகத் திறம்படத் தோற்கடித்து விட்டார், ஆகவே இனிமேல் ஒருக்காலும் அக் கொள்கை சபைக்குத் தொல்லையாயிருக்கப் போவதில்லை என்று முடிவு செய்யக்கூடும். ஆனால், வரலாறும் அனுபவமும் அம்முடிவு தவறு என்றே கூறுகின்றன! நியாயப்பிரமாணத் தைக் கட்டாயமாகக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கொள்கை சரியானதுதான் என்று பலர் நம்புகிற அளவிற்குக் கிறிஸ்தவ உலகின் மிக முக்கியமான கூறாக அது மாறிவிட்டது.

ஆம், நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துவோர் பலர் இன்னும் நம்மோடு இருக்கிறார்கள். தங்களைக் கிறிஸ்து வின் ஊழியக்காரர் என்று சொல்லிக்கொண்டு, திடப்படுத்துதல், ஞானஸ்நானம், சபை உறுப் பினர் நிலை ஆகியவை இரட்சிக்கப்பட தேவை யானவை என்றும், நியாயப்பிரமாணமே விசுவாசி யின் நடைமுறை வாழ்க்கைக்கான கோட்பாடு என்றும் கற்பிக்கிறவர்களை நாம் என்ன பெயர் சொல்லி அழைப்பது? மனிதர்களால் ஏற்படுத்தப் பட்ட ஆசாரிய முறைமை, அந்த ஆசாரியர்கள் அணிவதற்கென்று சிறப்பான ஆடைகள், தேவா லயத்தின் மாதிரியைப் பின்பற்றிக் கட்டப்பட்ட தேவாலயங்கள், வடிவமைக்கப்பட்ட பலிபீடங் கள், நிறைவேற்ற வேண்டிய சடங்குகள் மற்றும் நாற்பது நாள் நோன்பு, பண்டிகைகள், உபவாச நாட்கள், ஆகிய விவரங்களைக் கொண்ட நாட் காட்டிகள் இவை யாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கிறிஸ்தவத்திற்குள் புகுத்தியது யூத மார்க்கமேயன்றி வேறு எது?

ஓய்வுநாளைக் கைக்கொள்ளாவிட்டால் இறுதியில் இரட்சிப்பை இழந்து போவார்கள் என்று விசுவாசிகள் எச்சரிக்கப்படுகிறார்கள். இது கலாத்திய சபைகளில் காணப்பட்ட கள்ள போதக மேயன்றி வேறு என்ன? நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று வற்புறுத்தும்

தற்காலப் பிரசங்கிகள், கிறிஸ்துவை விசுவாசிக் கிறதாக அறிக்கை செய்யும் மனிதர்களுடைய வாழ்க்கையில் பெருமளவு ஆக்கிரமிப்பு செய் திருக்கிறார்கள். இதன் காரணமாக, அவர்களு டைய போதகங்களைக் குறித்து ஒவ்வொரு விசுவாசியும் எச்சரிக்கப்பட வேண்டும். மேலும் அவர்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்று அறிவுரை வழங்கப்படுதலும் அவசியம்.

ஓய்வுநாளை அனுசரிக்க வேண்டும் என்று கூறும் தீர்க்கதரிசிகள், கிறிஸ்துவின்மீது வைக் கும் விசுவாசத்தினாலே இரட்சிப்பு உண்டாகும் என்னும் நற்செய்தியை முதலில் அறிவிப்பதையே தங்களுடைய வழக்கமாகக் கொண்டிருப்பார் கள். எச்சரிக்கையற்றவர்களைக் கவர்ந்து இழுக் கத்தக்கபடி, மிகவும் விரும்பத்தக்க நற்செய்திப் பாடல்களை அவர்கள் பயன்படுத்துவார்கள். மேலும் திருமறை வசனங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பவர்கள்போலத் தோற்ற மளிப்பார்கள். ஆனால் வெகுநாட்கள் செல்லு முன்பே, தங்களைப் பின்பற்றுவோரை மோசே யின் நியாயப்பிரமாணத்திற்கு அடிமைப்படுத்தி விடுவார்கள்; குறிப்பாக ஓய்வுநாளைக் கைக் கொள்ள வேண்டும் என்னும் கட்டளைக்குக் கீழாக்கிவிடுவார்கள் (ஓய்வுநாள் வாரத்தின் ஏழாம் நாளாகிய சனிக்கிழமை ஆகும்).

கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு இறந்துவிட்டார்கள் என்று பவுல் மிகத் தெளிவாக கற்பித்துள்ள போதிலும், எங்ஙனம் அவர்கள் இவ்வாறு துணிவுடன் செயல்படுகிறார்கள்? கலாத்தியர் மடலில் மிகத் தெளிவாக உண்மை கள் சொல்லப்பட்டிருப்பினும் அவற்றிக்கு மாறு பட்ட வழியில் அவர்கள் எவ்வாறு செயல்புரிகிறார் கள்? நன்னெறி சார்ந்த பிரமாணங்களுக்கும், சடங்குகளுக்குரிய பிரமாணங்களுக்கும் வேறு பாட்டை குறிப்பிடத்தக்க வகையில் வகுத்து வைத்திருக்கிறார்கள் என்பதே அதனுடைய விடையாகும். பத்துக்கட்டளைகளே நன்னெறி சார்ந்த பிரமாணங்கள். உணவு, தொழுநோய், தேவனுக்குச் செலுத்தப்படும் காணிக்கை போன் றவை பற்றி தேவன் கொடுத்த ஒழுங்குகள் அனைத்தும் சடங்குகளுக்குரியவை.

நன்னெறி சார்ந்த நியாயப்பிரமாணம் தள்ளப் படவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். தேவனுடைய நித்திய சத்தியத்தின் வெளிப்பாடே இந்தப் பிரமாணம். விபசாரம், கொலை அல்லது வேசித்தனம் போன்றவற்றைச் செய்தல் எப் பொழுதும் தேவனுடைய பிரமாணத்திற்கு முரண் பாடான செயலாகும். ஆயினும், சடங்குகளுக் குரிய பிரமாணம் கிறிஸ்துவில் தள்ளப்பட்டுப் போயிற்று. ஆகவே, கிறிஸ்தவர்கள் நியாயப்பிர மாணத்திற்குச் செத்துவிட்டார்கள் என்று பவுல் கற்பிக்கிறபோது, அவர் சடங்குகளுக்குரிய பிரமாணத்தைப் பற்றிப் பேசுகிறாரேயொழிய, பத் துக் கட்டளைகளைக் குறித்தல்ல என்று அவர் கள் முடிவு செய்கிறார்கள்.

நன்னெறி சார்ந்த பிரமாணம் இன்னும் செய லில் இருப்பதால், கிறிஸ்தவர்கள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஓய்வுநாளை அனுசரிக்க வேண்டும், அதாவது அந்த நாளில் ஒரு வேலை யும் செய்யக்கூடாது என்பதே இதன் பொருளா கும். ரோமன் கத்தோலிக்க சபையின் போப்பாக இருந்த ஒருவர் ஓய்வுநாளை அனுசரிப்பதற்குப் பதிலாக ஞாயிற்றுக் கிழமையை அனுசரிக்க வேண்டும் என்று, திருமறைக்கு முற்றிலும் முரண்பட்ட நிலையில் அறிவித்துவிட்டார் என்று அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

இந்த விவாதம் தருக்க ரீதியாகச் சரியான தாகவும், கவர்ச்சிகரமானதாகவும் தோற்றமளிக் கிறது. ஆயினும், இதிலுள்ள பெரிதான குற்றத் திற்குரிய அம்சம் யாதெனில் இது தேவனுடைய வசனத்திற்கு முற்றிலும் முரண்பட்டதாயிருக் கிறது! கீழ்க்கண்ட குறிப்புகளைக் கவனிக்கவும்:

1. கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசியைப் பொருத்து, 2 கொரிந்தியர் 3:7-11 ஆகிய வச னங்களில் பத்துக் கட்டளைகள் "ஒழிந்து போகிறவை" என்று திட்டவட்டமாகக் கூறப்பட் டுள்ளது. ஏழாவது வசனத்தில், நியாயப்பிர மாணமானது, "எழுத்துகளினால் எழுதப்பட் டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேது வான ஊழியம்" என்று விளக்கப்பட்டிருக் கிறது. இங்கு குறிப்பிடப்பட் டுள்ளது நன்னெறி சார்ந்த பிரமாணமேயொழிய சடங்குகளுக் குரியதாக இருக்க முடியாது. தேவனுடைய விரல்களினாலே கற்களில் பதிக்கப்பட்டவை பத்துக்கட்டளைகளேயாகும் (யாத். 31:18). பதினோராவது வசனத்தில், மரணத்துக்கு ஏதுவான ஊழியம் மகிமையுள்ளதாயிருந்த போதிலும் *ஒழிந்துபோகும்* என்று நாம் வாசிக்கிறோம். இதைக் காட்டிலும் உறுதி யான விளக்கம் ஏதும் இருக்க முடியாது.
2. ஓய்வுநாளை ஆசரிக்கும்படி புறவினத்தவன் எவனுக்கும் கட்டளை கொடுக்கப்படவில்லை. நியாயப்பிரமாணம் யூதருக்கு மட்டுமே கொடுக்

கப்பட்டது (யாத். 31:13). தேவன் தாமே ஏழாம் நாளில் ஓய்ந்திருந்த போதிலும், இஸ்ரவேல் மக்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுப் பதற்கு முன், அவர் அவ்வாறு செய்ய வேண்டு மென்று எவரிடமும் சொல்லவில்லை.

3. கத்தோலிக்க போப் ஒருவர் ஆணையிட்ட தன் காரணமாகக் கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளுக் குப் பதிலாக வாரத்தின் முதல் நாளுக்கு மாற வில்லை. மீட்பின் கிரியை நிறைவேற்றப்பட்டு விட்டது என்பதன் நிரூபணமாக, கர்த்தராகிய இயேசு அந்நாளில் உயிரோடு எழுந்த கார ணத்தினால், நாம் கர்த்தருடைய நாளை ஆராதனைக்கும், சேவைபுரிவதற்கும் என்று பிரித்து வைத் திருக்கிறோம் (யோவான் 20:1). மேலும், கர்த்தருடைய மரணத்தைத் தெரி விக்கும்படி, தொடக்க காலச் சீடர்கள் அந்த நாளில்தான் அப்பம் பிட்கக் கூடிவந்தார்கள் (அப். 20:7). மேலும், கர்த்தர் கிறிஸ்தவர் களுக்குக் கொடுத்த செழிப்புக்கு ஏற்றபடி, அவர்கள் தங்களுடைய காணிக்கை களை வாரத்தின் முதல்நாள்தோறும் சேர்த்து வைக்கவேண்டும் என்று தேவன் அந்நாளைத் திட்டம்பண்ணி வைத்திருக்கிறார் (1 கொரி. 16:1,2). மேலும், வாரத்தின் முதல்நாளில்தான் பரிசுத்த ஆவியானவர் விண்ணகத்திலிருந்து அனுப்பப்பட்டார்.

   பரிசுத்தத்தை அடைவதற்கான வழி என்றோ, தண்டனைக்குப் பயந்தோ கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய நாளைக் "கைக்கொள்கிற தில்லை." தங்களுக்காகத் தம்மையே தந்த ஒருவருக்கு நேயம் மிகுந்த பற்றினைச் செலுத்தும் பொருட்டு அவர்கள் வாரத்தின் முதல்நாளைப் பிரித்து வைத்திருக்கிறார்கள்.

4. நன்னெறி சார்ந்த பிரமாணம், சடங்குகளுக் குரிய பிரமாணம் என்று பவுல் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. மாறாக, நியாயப்பிரமாணம் முழுவதையும் சேர்த்து ஒரு அடிப்படைக் கூறா கவே அவர் கருதினார். மேலும், நீதியை அடையும்படி எவரொருவர் அதைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று விரும்பி, அதைச் செய்யமுடியாமல் தோல்வியடைகிறாரோ அவர்மீது சாபம் நிலைத்திருக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

5. பத்துக் கட்டளைகளில் ஒன்பது புதிய ஏற்பாட் டில் நன்னெறி சார்ந்த கட்டளைகளாக இறை மக்களிடம் மீண்டும் உரைக்கப்பட்டுள்ளன. இயல்பாகவே இவை நல்லவை, இவை கெட்டவை என்று சொல்லத்தக்க காரியங்க ளோடு இந்தக் கட்டளைகள் தொடர்புடையன வாய் இருக்கின்றன. இவற்றில் விடுபட்ட கட் டளை ஓய்வுநாளைக் குறித்த கட்டளை யாகும். ஓய்வு நாளைக் கைக்கொள்வது இயல்பாகவே நல்லது கெட்டது என்று பகுத் துக்கூற முடியாத கட்டளை யாகும். கிறிஸ்த வர்கள் இந்தக் கட்டளையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எங்கும் சொல்லப்பட வில்லை. மாறாக, இதனைக் கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கவில்லையென்றால் அவர்களைக் *குற்றப்படுத்தக்கூடாது* என்றே தெளிவு படச் சொல்லப்பட்டுள்ளது! (கொலோ. 2:16).

6. பழைய ஏற்பாட்டின்படி ஓய்வுநாளை மீறுவதற் கான தண்டனை மரணமாக இருந்தது (யாத். 35:2). ஆனால், இந்தக் கட்டளையைக் கைக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவோர், அதனை மீறுகிற விசுவாசிகளுக்கு இந்தத் தண்டனையை வழங்குவதில்லை. இவ் வாறாக அவர்கள் அந்தப் பிரமாணத்தை அவ மதித்து, அது கோருகிற தண்டனையைச் செலுத்தாத காரணத்தினால் அவர்கள் அத னுடைய அதிகாரத்தை அழித்துப்போடுகிறார் கள். மொத்தத்தில் அவர்கள், "இது தேவனு டைய கட்டளையாக இருக்கிறது, இதனை நீங்கள் கைக்கொள்ள வேண்டும், இதனை நீங்கள் மீறுவீர்கள் என்றால் ஒன்றும் நடக் காது" என்று சொல்வதுபோல் இருக்கிறது.

7. நியாயப்பிரமாணமல்ல, கிறிஸ்துவே விசுவாசி யின் வாழ்க்கைக்கான கோட்பாடாக விளங்கு கிறார். அவர் நடந்தவண்ணம் நாமும் நடக்க வேண்டும். இது நியாயப்பிரமாணம் விதித் திருக்கிற தகுதியைக் காட்டிலும், மேலான தகுதியை நியமித்திருக்கிறது (மத். 5:17-48) தூய வாழ்க்கை வாழும்படி தூய ஆவியான வரால் நாம் வல்லமை பெறுவோம். நாம் கிறிஸ்துவின்மேல் கொண்டிருக்கும் அன்பின் நிமித்தம் தூய்மையாக வாழ நாம் விரும்புகி றோம். மாம்சத்தின்படி நடக்காமல் ஆவியின் படி நடக்கிறவர்களாலே நியாயப்பிரமாணம் எதிர்பார்த்த நீதி நிறைவேறுகிறது (ரோமர் 8:4).

ஆகவே, விசுவாசிகள் ஓய்வுநாளை அனு சரிக்க வேண்டும் என்று கற்பிப்பது, திருமறைக்கு முற்றிலும் முரண்பட்டதாக இருக்கிறது (கொலோ. 2:16). மேலும் அது "வேறோரு சுவிசேஷமாகவே" இருக்கிறது, அதன்மேல் தேவனுடைய வசனம் சாபத்தைக் கூறுகிறது (கலா. 1:7,9).

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கொள்கை, எந்த வகையில் நம்முன் தோன்றினாலும் அதனுடைய பொல்லாங்கான உபதேசத்தைப் பகுத்தறியும்படியான ஞானம் நம் ஒவ்வொருவருக்கும் தேவனிடத்திலிருந்து கொடுக்கப்படுவதாக! நீதிமானாக்கப்படுவதையோ பரிசுத்தவான்களாக்கப்படுவதையோ சடங்குகளினாலோ, மனித முயற்சிகளினாலோ நாம் ஒருக்காலும் நாடாமல், ஒவ்வொரு நல்ல தேவைக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரையே முற்றிலுமாக நாடக்கடவோம். நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்னும் கொள்கை தேவனை அவமதிப்பதாகவே இருக்கிறது. ஏனெனில் அது உண்மைக்கு மாற்றுப் பொருளாக நிழலைக் காட்டுகிறது-கிறிஸ்துவுக்கு மாற்றுப் பொருளாக சடங்குகளை ஏற்கும்படி கூறுகிறது.

## அடிக்குறிப்புகள் - End Notes

1 (1:8,9) John Stott, *Only One Way: The Message of Galatians,* pp. 27, 28.

2 (1:18-20) நடுநிலைப்பிரதியில் கேபா (பேதுரு என்பதன் அராமிக் மொழிச் சொல்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3 (2:1) E. F. Kevan, *The Keswick Week* 1955, p. 29 .

4 (2:3) ஆண்களுக்குச் செய்யப்படுகிற சிறிய தொரு அறுவைச் சிகிச்சையே விருத்தசேதனமாகும். தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாகவே, அவனையும் அவனுடைய சந்ததியாரையும் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று அவர் கட்டளையிட்டார். அவர் அவர்களுடைய தேவனாக இருப்பார் என்பதும், அவர்கள் அவருடைய மக்களாக இருப்பார்கள் என்பதுமே அந்த உடன்படிக்கையின் சாராம்சமாகும் (ஆதி. 17:1–11). அது சரீரப்பிரகாரமான அடையாளமாக இருந்தது மட்டுமின்றி, அது ஆவிக்குரிய சின்னமாகவும் விளங்கியது. அது தேவனிடத்தில் ஆபிரகாம் நம்பிக்கையாயிருந்தான் என்பதற்கு அடையாளமாகவே விளங்கியது. தேவனிடத்தில் ஆபிரகாம் நம்பிக்கையாயிருந்தான் என்பதற்கு அடையாளமாகவே ஆபிரகாம் விருத்தசேதனம் பண்ணப்பட்டான் (ரோமர் 4:11). யூதர்கள் அதனுடைய ஆவிக்குரிய அர்த்தத்தை விரைவில் மறந்துபோனார்கள், மேலும் அதனை வெறும் சடங்காகவே கைக்கொண்டார்கள். இவ்வாறாக அச்செயல் தேவனைப் பொருத்தமட்டில் மதிப்பற்றதாகப் போய்விட்டது.

புதிய ஏற்பாட்டில் விருத்தசேதனம் தொடர்ந்து பண்ணப்பட வேண்டுமென்னும் கட்டளையில்லை. ஏனெனில் புறவினத்தாரிடத்திலும் யூதரிடத்திலும் ஒரேவிதமாக தேவன் கிருபையினால் ஈடுபடுகிறார். சபையின் தொடக்க காலத்தில், யூத விசுவாசிகளில் ஒரு கூட்டத்தார் இரட்சிக்கப்படுவதற்கு விருத்தசேதனம் தேவையென்று வலியுறுத்தினார்கள். ஆகவே, இந்தக் கூட்டத்தார் ''விருத்தசேதனமுள்ளவர்கள்'' என்று அழைக்கப்பட்டார்கள் (கலா. 2:12).

5 (2:3) எருசலேமில் நடைபெற்ற கூட்டத்தைப் பற்றி முழு விளக்கம் அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் 15 –வது அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கவனமாகப் படிக்க வேண்டும்.

6 (2:11) 2 –ஆவது குறிப்பைக் காணவும்.

7 (2:13) நிறுத்தற்குறிகள், மேற்கோள் நிறுத்தற்குறிகள் யாவும் பதிப்பகத்தாருடையவை. சிலர் மேற்கோள் இந்த வசனத்துடன் முடிவடைகிறது என்றும், 15–21 ஆகிய வசனங்கள், பவுல் பேதுருவுடன் பேசியதற்கு பின்னர் கூறிய விளக்கமென்றும் கருதுகிறார்கள்.

8 (2:21) W. M. Clow, *The Cross in the Christian Experience,* p. 114.

9 (3:1) கிரேக்கு மொழியில் யார் என்று வினவுவதற்கு, ஒருமையிலும் பன்மையிலும் வெவ்வேறு சொற்கள் உள்ளன. ஆயினும் இக்கேள்விக்குப் பன்மையில் விடைகூறுவதை முற்றிலும் தவறு என்று சொல்ல முடியாது.

10 (3:5) மிகப் பழைய பிரதிகளில் HE என்னும் சொல் தடித்த எழுத்துகளிலேயே காணப்படுகிறது. (பின்னர் சிறிய எழுத்துகளில் அச்சொல் மாற்றம் பெற்றது.) ஆகவே இந்தப் பகுதியின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு இது தடித்த எழுத்தைக் கொண்டு தொடங்கிய சொல் என்றே ஆசிரியர் கருதுகிறார்.

11 (3:13) J. Cynddylan Jones, *Studies in the Gospel According to St. John,* p. 113

12 (13:20) இங்கு உரைக்கப்பட்டுள்ள கருத்திற்கும், பின்னர் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகக் கிறிஸ்து வருணிக்கப்பட்டிருக்கிற கருத்திற்கும் (எபி. 9:15) முரண்பாடு இருப்பது போலத் தோன்றினாலும், மத்தியஸ்தர் என்னும் சொல் வெவ்வேறு கருத்தோடு இவ்விரண்டு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனிடத்திலிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்று, அதனை இஸ்ரவேல் மக்களிடம் அறிவிக்கும் மத்தியஸ்த ஊழியத்தையே மோசே நிறைவேற்றினான். அவன் இடையாளாக அல்லது மனிதர்களின் பிரதிநிதியாகச் செயல்பட்டான். கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் என்னும் நிலை மிகவுயர்ந்த பொருள் கொண்டதாக இருக்கிறது. இந்த உடன்படிக்கையின் ஆசிர்வாதங்களை தேவன் மக்களுக்கு நீதியாக அளிப்பதற்கு முன்னர், கர்த்தராகிய இயேசு மரணம் அடைய வேண்டியதாயிருந்தது. ஒருவருடைய மரணமே அவர் எழுதிய கடைசிச் சாசனத்தை நடைமுறைக்குக் கொண்டுவருகிறது. ஆகவே புதிய உடன்படிக்கையை அவர் தமது இரத்தத்தினாலே முத்திரையிட்டார். அவர் தம்மையே எல்லோரையும் மீட்கும் பொருளாக ஒப்புக்கொடுத்தார் (1 தீமோ. 2:6). தம்முடைய மக்களுக்கு அவ்வுடன்படிக்கையின் ஆசிர்வாதங்களைக் கிறிஸ்து உறுதிப்படுத்துவதோடு, தமது உடன்படிக்கையின் மக்களைப் பகைத்து வெறுக்கிற இவ்வுலகில் அவர்களைக் காத்துவருகிறார். இதனை அவர் மகாபிரதான ஆசாரியராகவும், பரிந்துபேசுபவராகவும் இருந்து, தமது மத்தியஸ்த ஊழியத்தின் ஒரு பங்காகச் செயல்படுத்துகிறார்.

13 (3:24) Paidagogos என்னும் கிரேக்கச் சொல் (அதிலிருந்தே pedagogy) என்னும் ஆங்கிலச் சொல் பிறந்தது) "சிறுவர் தலைவன்" என்று பொருள்படும். பெரும்பாலும் அத்தகைய மனிதர்கள் அடிமைகளாகவே இருந்தார்கள். சிறுவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வதே அவர்களது முக்கியமான வேலையாயிருந்தது. சில வேளைகளில் அவர்கள் கற்பிக்கவும் செய்தார்கள்.

14 (4:7) நடுநிலைப்பிரதியில் "தேவன் மூலமாய்ச் சந்ததியாயிருக்கிறாய்" என்றே எழுதப்பட்டுள்ளது.

15 (4:7) Norman B. Harrison, *His Side Versus Our Side,* p. 71.

16 (4:13) பவுலின் "பலவீனத்தைக்" குறித்து பல கருத்துகள் உள்ளன. ஒருவகைக் கண்நோய் என்றும், அது மத்திய கிழக்குப் பகுதியில் பரவலாக இருக்கிறவற்றில் ஒன்று என்றும் கருதப்படுகிறது. மலேரியா, கடுந்தலைவலி, இழுப்புநோய் இன்னும் பலநோய்களில் ஒன்று என்றும் கருதுவோர் உளர்.

17 (4:17) Stott, *Galatians,* p. 116.

18 (5:1) C. H. Mackintosh, *Genesis to Deuteronomy*, pp. 232,233.

19 (5:2) Jack Hunter, *What the Bible Teaches, Galatians - Philemon*, p. 78.

20 (5:4) C. F. Hoog and W. E. vine, *Epistle of Paul the Apostle to the Galatians*, p. 241.

21 (5;13) Arthur T. Pierson, further documentation unavilable.

22 (5:16) C. I. Scofield, *In Many Pulpits with Dr. C. I. Scofield,* p. 234.

23(5:19-21) நடுநிலைப் பிரதியில் விபசாரம் என்னும் சொல் இடம்பெறவில்லை. வேசித்தனம் (Porneia) என்று மொழிபெயர்க்கப்பட்ட சொல்லில் (கலவியல் ஒழுக்கக்கேடு) விபசாரம் என்னும் பொருளும் அடங்கியுள்ளது. ஆனாலும் திருமண உறவுக்கு அப்பாற்பட்ட ஒழுக்கக்கேடாகிய விபசாரத்தைப் பவுல் குறிப்பிட்டுச் சொல்லாமல், மாம்சத்தின் கேடுகளின் பட்டியலை எழுதியிருப்பார் என்று கருதுவதற்கு இடமில்லை.

24(5:19-21) நடுநிலைப் பிரதியில் கொலைகள் (Phonoi) என்னும் சொல்லும் இடம்பெறவில்லை. இதற்கு முந்தின சொல்லாகிய பொறாமைகள் (phthonoi) என்னும் சொல்லும் ஒன்றுபோலக் காணப்படுவதால் பிரதியெடுப்பவர்கள் இதனை விட்டிருக்கலாம்.

25(5:19-21) 1 கொரிந்தியர் 6:9 –இன் விளக்கத்தைப் படியுங்கள்

26 (5:22,23) Samuel Chadwick, quoted by James A. Stewart, *Pastures of Tender Grass*, p. 253.

27 (5:24) estaursan என்னும் கிரேக்கச் சொல் செயல் முடிவுற்று தற்காலத்தில் அது பயனளிக்கும் விளைவுடையதாக இருக்கிறது என்பதைத் தெரிவிக்கும் வினைச் சொல்லாகும். ஆனாலும் மூல மொழியில் அது வினையைக் குறிப்பிடுகிறதேயொழிய, வினைப்பயனை வலியுறுத்துகிறதில்லை.

28 (6:7) J. A. Froude, further documentation unavaileble, pp. 27, 28.

**Bibliography**

Cole, Alan. *The Epistle of Paul to the Galatians.* Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Company, 1965.

Eadie, John. *Commentary on the Epistle of Paul to the Galatians*. Edinburgh: T. and T. Clark, 1884.

Harrison, Norman B. *His side Versus Our Side*. Minneapolis: The Harrison Service, 1940.

Hogg, C. F., and W. E. Vine. *Epistle to the Galatians*. Glasgow: Pickering and Inglis, 1922.

Ironside, Harry A. *Expository Messages on the Epistle to the Galatians*. New York: Loizeaux Brothers, 1941.

Kelly, William. *Lectures on the Epistle of Paul the Apostle to the Galatians*. London: G. Morrish, n.d.

Lightfoot, J. B. *The Epistle of St. Paul to the Galatians*. Grand Rapids: Zondervan Publishing House, 1962.

Mackintosh, C. H. *Genesis to Deuteronomy*. Neptune, N.J.: Loizeaux Bros.

Stott, John R. *Only one Way: The Message of Galatians*. Downers Grove, IL: Inter-Varsity Press, 1968.

அப்போஸ்தலனாகிய பவுல்

# எபேசியருக்கு எழுதின நிருபம்

## முன்னுரை

“பவுல் எழுதியவற்றுள் மகுடமாகத் திகழும் மடல்” – J. ஆர்மிடேஸ் ராபின்சன்

“பவுலின் மூன்றாவது வான மடல்.” – A. T. பியர்சன்

### 1. வேதநூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

பவுல் எழுதிய மடல்களில் எபேசியர் மடல் சில கூறுகளில் தனிச்சிறப்பு வாய்ந்ததாகத் திகழ் கிறது. அவையாவன: வாழ்த்து, நன்றி பாராட்டு தல், கோட்பாடு படிப்படியாக வெளிப்படுத்தப்படு தல், அதைத் தொடர்ந்து அந்தக் கோட்பாடு நமது கடமையாக நடைமுறைப்படுத்தப்படுதல். எபேசியர் மடல் மெய்யான ஒரு கடிதமாக இருந்தபோதி லும், பெரும்பாலும் அது ஒரு சமயச் சொற்பொழி வைப் போலவோ, மன்றாட்டுகளும் துதிப்பாடலும் அடங்கிய ஒரு கிறிஸ்தவக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலைப் போலவோ காணப்படுகிறது. இந்த மடலில் “நாம் ஆழ்ந்த அமைதிக்குள்ளாகவும், புனித இடத்தின் இரகசியத்திற்குள்ளாகவும் செல்லுகிறோம்... இங்கே தியானம், தொழுகை, சமாதானம் ஆகியவை அடங்கிய இளைப்பாறு தலின் சூழ்நிலை மேலோங்கி நிற்கிறது” என்று கூறுகிறார் மூர்ஹெட்.[1]

மேற்கூறப்பட்டுள்ள திருவாளர் இராபின்சனின் கருத்தைப் பற்பல விளக்கவுரையாளர்கள் ஒப்புக் கொண்ட போதிலும், பதினெட்டு அல்லது பத் தொன்பது நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்து வந்த கிறிஸ்தவ போதனையைப் புறக்கணித்து விட்டு சில நவீன காலத்து அறிஞர்கள் இம் மடலைப் பவுல் எழுதியிருக்க முடியாது என்று மறுத்துரைக்கிறார்கள். ஆனால் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு காணும்போது இந்தக் கருத்து உண்மையானதாக இருக்குமா?

### 2. நூலாசிரியர்

புறச்சான்றுகளைக் கருத்திற்கொண்டு காணும் போது, எபேசியர் மடலை எழுதியவர் அப்போஸ் தலனாகிய பவுல்தான் என்னும் கருத்து உறுதி யும் வலிமையும் கொண்டதாகத் திகழ்கிறது. பவுல் எழுதிய மடல்களுள் வேறு எந்த மடலும் இந்த அளவிற்குத் தொடர்ச்சியான சான்று களைத் தொடக்க காலத்திலிருந்து பெற்ற தில்லை. ரோமாபுரி கிளமெண்ட், இக்னேஷியஸ், பாலிகார்ப் ஆகியோர் தொடங்கி, ஹெர்மாஸ் மற்றும் அலெக்சாண்ட்ரியா கிளமெண்ட், ஐரேனி யஸ், ஹிப்போலிடஸ் ஆகியோர் வரை இந்தப் பட்டியல் நீண்டுகொண்டு போகிறது. மார்சியன் இம்மடலைத் தனது வேதத் தொகுப்பில் சேர்த் திருந்த போதிலும், இதனை “லவோதிக்கேய ருக்கு” எழுதியது என்றே குறிப்பிடுகிறார். முரெ டோரியன் வேதத் தொகுப்பும் இம்மடலைப் பவுல் எழுதியது என்றே குறிப்பிடுகிறது.

இம்மடலின் ஆசிரியர் தன்னைப் பவுல் என்று இரண்டுமுறை (1:1; 3:1) குறிப்பிட்டுள்ளது அகச் சான்றுகளில் ஒன்றாகும். மேலும் இம்மடலில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் கொலோசெயர் மடலின் செய்திகளுக்கு (சில அம்சங்களில்) ஒத்திருக்கின்றன; மேலும் இவையிரண்டும் அடுத் தடுத்து மிக நெருங்கிய கால அளவிற்குள் எழுதப் பட்டிருக்க வேண்டும். எபேசியர் மடலின் அமைப்பு, முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல, பவுல் எழுதிய முறையையே கொண்டிருக்கிறது. இந் நூலில் சில புதிய சிந்தனைகளைப் பவுல் அறி முகப்படுத்தியிருக்கிறார் என்பது ஒப்புக்கொள் ளப்பட வேண்டியதாகும்; ஆனால் ஒரு நூலாசிரி யர் போலியானவர் என்று குற்றஞ்சாட்டப்படாமல் இவ்வாறு புதிய கருத்துகளை அறிமுகப்படுத்து வது இயலாத செயலாகும். இவ்வாறு செய்ய வில்லையெனில் பரிசுத்தவான்களை முதிர்ச்சி யடைந்த விசுவாசிகளாக வளர்ச்சிபெறச் செய் வதற்கான வாய்ப்புகளைத் திருமறை எழுத்தாளர் கள் பெறுவது அரிது.

இம்மடலை எழுதியவர் பவுல் அல்லவென்று முதன்முதலில் மறுத்துரைத்தவர் பெரும்பாலும் ஜெர்மானியரான ஸ்கிலீயர்மாக்கர் என்னும் தாரா ளக்கொள்கையாளர் என்றே தோன்றுகிறது.

மொ.ப., குட்ஸ்பீட் போன்ற நவீன காலத்தவர் பலர் அதே கருத்தைப் பின்பற்றுகின்றனர். சொல் லாட்சி, மொழிநடை, கோட்பாடுகளில் "ஆழமான கருத்துகள்," மற்றும் அகவுணர்வு வாதங்கள் யாவும் ஒன்றுசேர்ந்து மேலே சொல்லப்பட்டுள்ள கருத்தை மறுத்துரைத்து, இம்மடலின் ஆசிரியர் அப்போஸ்தலன் என்று வலியுறுத்துகின்றன. இருந்தபோதிலும் மேலே சொல்லப்பட்டுள்ள ஊகங்கள் எல்லாவற்றிற்கும் மனநிறைவு உண் டாக்கும் வகையில் பதில்கூற முடியும். இந்நூலை எழுதியவர் பவுல் என்பதற்கான தவிர்க்க இயலா பற்பல புறச்சான்றுகள் மற்றும் வேதஅறிவு பெற்ற விரிவுரையாளர்கள் எபேசியர் நூலைப் பவுலின் உளப்பாங்காகக் காண்கிறது மட்டுமின்றி, திரு வாளர் கோலரிட்ஜ் குறிப்பிட்டிருப்பது போல, இந்நூல் அவரால் எழுதப்பட்ட "மிகுதியான தெய் வத்தன்மையின் எழுத்துகள்" என்னும் கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் காணும்போது இதன் உண்மைத்தன்மையை ஒப்புக்கொள்ளவே வேண்டும்.

### 3. எழுதப்பட்ட காலம்

கொலோசெயர், பிலிப்பியர் மற்றும் பிலேமோன் ஆகிய மடல்களோடு எபேசியர் மடலும் சேர்த்து "சிறையிருப்புக் கால மடல்கள்" என்று அழைக் கப்படுகின்றன. எந்தச் சிறையிருப்பை இது குறிக் கிறது என்பது விவாதத்திற்குரிய பொருளாகும் (3:1; 4:1). செசரியாவில் பவுல் சிறையில் அடைக் கப்பட்டிருந்த இரண்டாண்டுக் காலத்தையோ, மெய்ப்பிக்கப்படாத எபேசு நகரச் சிறையிருப்புக் காலத்தையோ இது குறிக்கக்கூடும் என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் அவர் முதல் தடவை ரோமாபுரியில் சிறையில் வைக்கப்பட்டிருந்த காலத்தையே இது குறிக்கும் என்பதற்கான சான்றுகள் மிகுதியாயிருக்கின்றன (கி. பி. 60 -ஐக் கடந்தவுடனே). கொலோசெயர் மடலைப் போலவே இந்த மடலும் ஆசியா நாட்டிற்கு தீகிக்கு என்பவ ரால் எடுத்துச் செல்லப்பட்டது (6:21,22). இரண்டு மடல்களிலும் கோட்பாடுகள் ஒன்றுபோல இடம் பெற்றிருப்பதற்கான காரணத்தை இது விளக்கு கிறது. இந்தமடல்களை அப்போஸ்தலன் எழுதிய போது அப்போஸ்தலனுடைய உள்ளத்தில் ஒரே விதமான கருத்துகள் புத்துணர்ச்சியோடு நிலவின.

### 4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

எபேசியர் மடலில் முக்கியமான ஆய்வுப் பொருள், "இரகசியம்" என்று பவுலால் அழைக்கப் படும் பொருளேயாகும். அது விளக்கிக் கூறவிய லாத பொருள் என்னும் அர்த்தத்தில் அவர் அவ் வாறு கூறவில்லை. மாறாக, இதுவரை வெளிப் படுத்தப்படாததும், இப்பொழுது வெளிப்படுத்தப் பட்டதுமான வியத்தகு சத்தியமே அது என்று அவர் கூறுகிறார்.

விசுவாசிக்கிற யூதர்களும், விசுவாசிக்கிற புறவினத்தாரும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக இப்பொழுது ஒன்றாயிருக்கிறார்கள் என்னும் அறிவிப்பே இந்நூலின் கருப்பொருளாகத் திகழ் கிறது; இதுவே பயபக்திக்குரிய உண்மையாக விளங்குகிறது. அவர்கள் கிறிஸ்துவின் சரீர மாகிய சபையில் உடன் அங்கங்களாக விளங்கு கிறார்கள். இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவுடன் விண்ணகத்தில் அமர்ந்திருக்கிறார்கள். எதிர் காலத்தில் அவர்கள் எல்லாவற்றிற்கும் தலையா கிய அவருடைய மகிமையில் பங்குபெறுவார்கள்.

இந்த இரகசியமானது எபேசியர் மடலின் ஆறு அதிகாரங்களிலும் காணப்படுகிறது.

முதல் அதிகாரத்தில் அந்த இரகசியமானது தேவனுடைய சித்தத்தின் இரகசியம் என்று அழைக் கப்பட்டு, பரலோகத்தில் இருக்கிறவை மற்றும் பூலோகத்தில் இருக்கிறவை யாவும் கிறிஸ்துவுக் குள்ளாகக் கூட்டப்படும் காலத்தை எதிர்நோக்கி யிருக்கிறது (வச. 9,10). விசுவாசிக்கிற யூதர்கள் (வச. 11 -நாங்கள்), விசுவாசிக்கிற புறவினத்தார் (வச. 13 -நீங்கள்) யாவரும் அந்த நாளில் மகிமை யில் அவரவருடைய பங்கைப் பெறுவார்கள். அவர்கள் யாவரும் அவருடைய சரீரமாகவும் அவருடைய நிறைவாகவும் (வச. 22,23) விளங்கி அவரோடு சேர்ந்து இப்பிரபஞ்சம் முழுவதையும் அரசாளுவார்கள்.

இரண்டாவது அதிகாரம், யூதர்களும் புற வினத்தாரும் தேவனுடைய கிருபையினாலே எவ்வாறு இரட்சிக்கப்படுகிறார்கள் என்னும் செயல்பாட்டை விளக்கிக் கூறுகிறது; அவர்கள் எவ்வாறு தேவனோடு இணக்கம் பெறுகிறார்கள், எவ்வாறு ஒருவரோடொருவர் இணக்கம் பெறு கிறார்கள் என்பனவற்றையும் அது விளக்கிக் கூறுகிறது; அவர்கள் கிறிஸ்துவோடு ஒன்றி ணைக்கப்பட்டிருப்பதால் எவ்வாறு ஒரு புதிய மனிதனாக மாற்றம் பெற்றிருக்கிறார்கள் என் பதையும் அது விளக்கிக் கூறுகிறது; மேலும் தேவன் தமதுஆவியின் மூலமாகத் தங்கும் உறைவிட மாகிய பரிசுத்த ஆலயமாக அவர்கள் எவ்வாறு மாற்றம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அது விளக்கிக் கூறுகிறது.

மூன்றாவது அதிகாரம் இரகசியத்தின் முழு நிறைவான விளக்கத்தைத் தருகிறது. அங்கே

அது "அந்தக் கிறிஸ்துவின்" இரகசியம் என்று அழைக்கப்படுகிறது (வச. 4-JND). கிறிஸ்துவே தலையாகவும், எல்லா விசுவாசிகளும் அவருடைய சரீரமாகவும் இணைந்து இருக்கிறார்கள் என்பதே இதன் பொருளாகும். இந்தச் சரீரத்தில் புறவின விசுவாசிகள் உடன் சுதந்தரராக, உடன் அங்கங்களாக, தேவனுடைய வாக்குறுதிக்கு உடன் பங்காளிகளாக இருக்கிறார்கள் (வச. 6).

நான்காவது அதிகாரம், அந்தச் சரீரத்தின் ஒருமைப்பாட்டையும், அது நிறைவான நிலையை அடைவதற்காக தேவன் வகுத்த திட்டத்தையும் வலியுறுத்துகிறது (வச. 1-16).

ஐந்தாவது அதிகாரத்தில், அந்த இரகசியமானது கிறிஸ்துவும் சபையும் என்று அழைக்கப்படுகிறது (வச. 32). கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையேயுள்ள உறவு, விசுவாசிக்கிற கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள உறவுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது.

இறுதியாக, ஆறாவது அதிகாரத்தில், பவுல் நற்செய்தியின் இரகசியம் என்று அதைக் குறித்துப் பேசுகிறார். அதற்காக அவர் சங்கிலியால் பிணைக்கப்பட்ட தூதராக விளங்கினார் என்பதை எடுத்துரைக்கிறார் (வச. 19,20).

புறவின விசுவாசிகளைக் குறித்த இந்தச் செய்திகள் அடங்கிய மடல் அவர்களிடம் அனுப்பப்பட்டபோது, எவ்விதத் தாக்கத்தை அவர்களிடையே உண்டுபண்ணியிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முயற்சி செய்யுங்கள். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு அவர்கள் யூதர்களைப் போலவே இரட்சிக்கப்பட்டது மட்டுமன்றி, அவர்களுக்கு இணையான சிலாக்கியத்தைப் பெறும் இடத்தையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்னும் எண்ணம் அவர்களுடைய உள்ளத்தை நிரப்பியிருக்கிறது. தேவனுடைய பார்வையில் அவர்கள் பெற்றிருக்கும் தகுநிலையைப் பொருத்தமட்டில், அவர்கள் எவ்விதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்லர். மேலும் அவர்கள் கிறிஸ்துவின் சரீரம் என்னும் நிலையிலும், அவருடைய மணவாட்டி என்னும் நிலை யிலும் அவருடைய பிரபஞ்ச ஆளுகையின் மகிமையில் பங்கு பெற்றவர்களாக அவரோடு முடிசூட்டப்படுவதே அவர்களைக் குறித்த தீர்மானமாகும்.

எபேசியர் மடலின் மற்றொரு முக்கியமான கருப்பொருள் அன்பு (கிரேக்கு, அகாபே, சித்தத்தில் வெளிப்படுத்தப்படுகிற அன்பு). இந்தக் கருத்தோடு பவுல் இம்மடலைத் தொடங்கியிருக்கிறார், முடிக்கவும் செய்திருக்கிறார் (1:4; 6:24). மேலும் அவருடைய வேறு எந்த மடலிலும் இல்லாதபடி அன்பு என்னும் சொல்லின் வினைச் சொல்லையும் பெயர்ச்சொல்லையும் மிகுதியான அளவில் பவுல் இம்மடலில் பயன்படுத்தியிருக்கிறார். இது பரிசுத்த ஆவியானவரின் முன்னறிவைக் காட்டுகிறது, ஏனெனில் இன்னும் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு மிகப்பெரியதும், செயலாக்கம் மிக்கதுமான சபையானது கள்ள உபதேசத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்னும் கட்டளைக்குத் தொடர்ந்து கீழ்ப்படிந்து கொண்டிருந்தது; ஆனாலும் அவர்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தர் எபேசு சபைக்கு எழுதிய கடிதத்தில் அவர்களுக்கு எதிராகக் கூறுகிறார் (வெளி. 2:4).

## பொருட்சுருக்கம்

### 1. கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசியின் தகுநிலை (அதி. 1-3)

அ. வாழ்த்துரை (1:1,2)

ஆ. கிருபையின் நன்மைகளுக்காகப் பவுல் தேவனுக்குச் செலுத்தும் புகழுரை (1:3-14)

இ. பரிசுத்தவான்களுக்காகப் பவுல் ஏறெடுத்த நன்றியும் மன்றாட்டும் (1:15-23)

ஈ. புறவினத்தவரும் யூதரும் இரட்சிப்படையும்படி தேவனுடைய வல்லமை வெளிப்படுதல் (2:1-10)

உ. விசுவாசிக்கிற யூதரும் புறவினத்தாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இணைதல் (2:11-22)

ஊ. இரகசியத்தைப் பற்றிய ஓர் இடைப் பிறவரல் (3:1-13)

எ. பரிசுத்தவான்களுக்காகப் பவுல் ஏறெடுத்த ஜெபம் (3:14 -19)

### 2. கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளின் நடைமுறை வாழ்க்கை (அதி. 4-6)

அ. கிறிஸ்தவ ஐக்கியத்தில் ஒருமைப்பாட்டிற்கான வேண்டுகோள் (4:1-6)

ஆ. சரீரத்தின் அவயவங்கள் சீரான முறையில் செயல்படுவதற்கான திட்டம் (4:7-16)

இ. புதிதான நன்னெறி ஒழுக்கத்தை அடையும்படி அறிவுறுத்துதல் (4:17-5:21)

ஈ. கிறிஸ்தவ இல்லத்தில் காணப்படவேண்டிய தனிப்பட்டோரது கடமையுணர்வுக்கான வேண்டுதல் (5:22-6:9).

உ. கிறிஸ்தவப் போராட்டம் பற்றிய அறிவுரைகள் (6:10-20)

ஊ. பவுலின் தனிப்பட்ட வாழ்த்துகள் (6:21-24)

## பொருட்சுருக்க அட்டவணை

| தலைப்பு | கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளின் தகுநிலை | | | | | கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளின் நடைமுறை வாழ்க்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகுப்பு | தேவனுக்குச் செலுத்தும் புகழுரை | பவுலின் நன்றியும் மன்றாட்டும் | யூதர் புறவினத்தவர் இணைதல் | ஓர் இடைப் பிறவரல் | பரிசுத்தவான் களுக்கான பவுலின் ஜெபம் | ஐக்கியத்தின் ஒற்றுமை | வாழ்கையில் தூய்மை | இல்லத்திலும் பணித்தலத்திலும் நடத்தை | போராட்டத்தில் செயல்முறை |
| கருத்து | விசுவாசம் | | | | | நடத்தை | | | |
| | விசுவாசியின் சிறப்புரிமை | | | | | விசுவாசியின் கடமைகள் | | | |
| வசனம் | 1:1 - 14 | 1:15-23 | 2:1-22 | 3:1-13 | 3:14-21 | 1:1-16 | 4:17-5:21 | 5:22-6:9 | 6:10-24 |

## விளக்கவுரை

### 1. கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசியின் தகுநிலை [அதி. 1-3]

#### அ. வாழ்த்துரை [1:1,2]

**1:1 பவுல்** என்னும் பெயருக்கு "சிறிய" என்பது பொருள். அவருடைய உடலைப் பொருத்தமட்டில், இந்த வருணனை சரியானதாக இருக்கக் கூடும், ஆயின் ஆவிக்குரிய நிலையில் அவருடைய செயல்திறம் அளவுகடந்தது. அவர் தன்னை **இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன்** என்று அறிமுகப்படுத்துகிறார். உயிர்த்தெழுந்த கர்த்தராலே ஒரு சிறப்பான ஊழியத்திற்கென்று அவர் நியமிக்கப்பட்டவர் என்பதே இதன் பொருளாகும். புறவினத்தாருக்கு *நற்செய்தியை* அறிவிப்பதும், *சபையைக்* குறித்த பெரிதான சத்தியத்தைக் கற்பிப்பதுமே அந்த ஊழியம் (3:8,11). எபேசியர் மடல் சபையைக் குறித்த விவரங்களைக் கூறுவதாலும், இந்த உண்மையானது முதலில் அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டதாலும், பவுல் தன்னை அப்போஸ்தலன் என்று அறிமுகப்படுத்தியிருப்பது சாலவும் பொருத்தமானதே. அவர் அவ்வாறு தன்னை அறிமுகப்படுத்தியிருப்பது பெருமையின் அடையாளமன்று; மாறாக இந்த அறிமுகம் அவர் இப்பொருள் குறித்துப் பேசுவதற்குப் பெற்றிருந்த அதிகாரத்தைப் பற்றிய விளக்கமாகும். அந்த அதிகாரத்தினுடைய ஆதாரம் அவருக்கு எங்கிருந்து வந்தது என்பதை, **தேவனுடைய சித்தத்தினாலே** என்னும் சொற்றொடர் விளக்கிக் கூறுகிறது. பவுல் தனது ஊழியத்தை ஒரு தொழிலாக மேற்கொள்ளவில்லை. எந்த மனிதனும் அந்த வேலையில் அவரை அமர்த்தவில்லை. தொடக்கத்திலிருந்து முடிவுவரை அது திவ்விய அழைப்பாகவே இருந்தது (கலா. 1:1).

இம்மடல் **எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருந்த பரிசுத்தவான்களுக்கு** எழுதப்பட்டது. இவ்வுலகினின்று இறைவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களே பரிசுத்தவான்கள் ஆவார்கள். மறுபடியும் பிறந்த விசுவாசிகள் யாவருக்கும் புதிய ஏற்பாட்டில் இப்பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒரு விசுவாசி **கிறிஸ்துவுக்குள்** பெற்றிருக்கிற தகுநிலையை இது சுட்டிக்காட்டுகிறதேயொழிய, அவன் யாராக இருக்கிறான் என்பதை இது குறிப்பிடுவதில்லை. விசுவாசிகள் யாவரும் எப்பொழுதும் பரிசுத்தமாக நடந்துகொள்ளவில்லையென்றாலும், அவர்கள் எல்லோரும் கிறிஸ்துவுக்குள் **பரிசுத்தவான்களாகவே** இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, கொரிந்தியர் மடலில் சொல்லப்பட்டுள்ள விவரங்களைக் காணுமிடத்து, அங்கிருந்த விசுவாசிகள் எல்லோரும் தூய வாழ்க்கை வாழவில்லையாயினும், பவுல் அவர்களைப் பரிசுத்தவான்கள் என்றே அழைத்தார் (1 கொரி. 1:2). ஆயினும், நம் முடைய தகுநிலைக்கு ஏற்ப நமது நடைமுறை வாழ்க்கை அமைந்திருக்க வேண்டுமென்பதே தேவனுடைய விருப்பமாகும்: **பரிசுத்தவான்கள்** பரிசுத்தராக விளங்கவேண்டும்.

**கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாயிருக்கிறவர்கள்** (உண்மையுள்ளவர்கள்). உண்மையுள்ளவர்கள் என்னும் சொல் "விசுவாசிக்கிறவர்கள்" என்று பொருள்படும். (தமிழில் விசுவாசிக்கிறவர்கள் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.) இவ்வாறாக இந்த விவரம் அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும். **விசுவாசிகள்** நம்பத்தகுந்தவர்களாக, நம்பிக்கைக்குகந்தவர்களாக இருக்க வேண்டுமென்பது ஐயத்திற்கிடமற்றது. ஆயின் இங்கு முதன்மையான கருத்து யாதெனில், அவர்கள் கிறிஸ்து இயேசுவைத் தங்களுடைய ஒரே கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டவர்கள் என்பதேயாகும்.

பெரும்பாலான பிரதிகளில் எபேசுவிலே என்னும் சொல் இடம்பெற்றிருந்தபோதிலும், இரண்டு பழைமைப் பிரதிகளில் அச்சொல் இடம்பெறவில்லை. பல வேத அறிஞர்கள் இதனைச் சுற்றறிக்கை மடல் எனவும், வெவ்வேறு இடங்களில் சபைகளாகக் கூடிய கிறிஸ்தவர்களிடையே படிக்கும்படியாக இம்மடல் எழுதப்பட்டது எனவும், அவ்விடங்களில் எபேசு நகரம் மிகவும் புகழ் வாய்ந்ததாக இருந்தது எனவும் கருதுகிறார்கள். எனினும் அத்தகையோரின் கருத்து இம்மடலில் உண்மைத்தன்மையையும், இது நமக்களிக்கும் பயன்பாட்டையும் எவ்விதத்திலும் குறைத்துவிடவில்லை.

**1:2** அடுத்தபடியாக, பரிசுத்தவான்களுக்கு அப்போஸ்தலன் கூறிய வாழ்த்துரை இடம்பெற்றிருக்கிறது. இங்கு காணப்படும் ஒவ்வொரு சொல்லும் ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்தது - இன்றைய நாட்களில் நாம் பயன்படுத்துகிற பற்பல வெற்றுரைகளைப்போல இந்த வாழ்த்துரை அமையவில்லை.

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான தெய்வீக உதவியே **கிருபை** என்பதன் பொருளாகும். இழந்து போனவருடைய தகுதிக்கு

அப்பாற்பட்ட வகையில் அளிக்கப்பட்ட தயவாகிய தேவ கிருபையினாலே பவுலின் வாசகர்கள் ஏற் கனவே இரட்சிக்கப்பட்டவர்கள். இப்பொழுதோ அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப் பாடுகள், சோதனைகள், வருத்தங்கள் ஆகிய வற்றை எதிர்கொள்ள அவர்களுக்கு தேவனிடத் திலிருந்து கிடைக்கக்கூடிய வலிமை தேவை. எபேசு நகர இறைமக்கள் இதனைப் பெற அப் போஸ்தலன் வாழ்த்துகிறார்.

ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த வாழ்க்கைச் சூழ் நிலைகள் அனைத்திலும் அமைதியைத் தரும் ஆவியே **சமாதானம்** என்பதன் பொருளாகும். பரிசுத்தவான்கள் தங்களது மனமாற்றத்தின் போது தேவனோடு சமாதானத்தைப் பெற்றிருக் கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் தேவனுடைய சமாதானம் தேவை. அதா வது, சூழ்நிலைகளைச் சார்ந்திராத அமைதியும், மாற்றத்திற்கு இடமற்ற மனவமைதியும், அதன் வாயிலாக எல்லாவற்றையும் மன்றாட்டின் மூல மாக தேவனிடத்திற்கு எடுத்துச்செல்லும் நிலை யுமே சமாதானம் ஆகும் (பிலி. 4:6,7).

முதலில் **கிருபை**, அடுத்தது **சமாதானம்**, இவ் வரிசைமுறை கவனிக்கத்தக்கது. திருமறை முழு வதிலும் இதே வரிசைமுறை கடைப்பிடிக்கப்பட் டுள்ளது. பாவத்தின் கேள்விக்கு உற்ற விடை யினைக் **கிருபை** செயல்படுத்திய பிறகே **சமா தானம்** அறியப்படும். விசுவாசி வாழ்க்கைக்குத் தேவையான வலிமையை, தனது தகுதிக்கு அப்பாற்பட்ட வகையில் தேவ கிருபையினாலே பெற்ற பிறகே **சமாதானத்தை** அனுபவிக்கக் கூடியவனாக மாறுகிறான். வாழ்க்கையில் ஏற்படு கின்ற பற்பல மனநிலை மாற்றங்களிலும் இதுவே நிறைவான சமாதானமாகத் திகழ்கிறது.

**கிருபை** (Charis) தனிச்சிறப்பு வாய்ந்த வகை யில் கிரேக்கச் சொல்லாகும். யூதர்கள் வாழ்த் துரையாக **சமாதானம்** (எபிரெய மொழி: shalom) என்னும் சொல்லைப் பயன்படுத்தி வந்தார்கள். இரண்டையும் சேர்த்துக் காணுங்கால், இவ்வுல கம் முழுவதற்குமான நற்செய்தியின் சிற்றுருவை நாம் காண்கிறோம். நாம் இவ்விரண்டையும் ஒன்று சேர்க்கும்போது, எபேசியர் மடலில் பவுல் விளக்கிக் கொடுத்திருக்கும் புதிய ஏற்பாட்டுத் திருச்சபையின் அனைத்து உண்மைகளையும் ஒட்டுமொத்தமாகக் கண்டடைகிறோம் - கிறிஸ்து வுக்குள் யூதனும் புறவினத்தானும் ஒருடலாக மாறுகின்றனர்.

**நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் சமாதானமும் உண்டாகின்றன. கர்த்தராகிய இயேசுவைப் பிதாவாகிய தேவனோடு** சமநிலை யில் வைக்க, பவுல் தயங்கவில்லை: அவர் **பிதாவை** எவ்வளவாகக் கனம் பண்ணினாரோ அதுபோலவே குமாரனையும் கனம்பண்ணினார். நாமும் அவ் விதமாகவே செய்யவேண்டும் (யோவான் 5:23).

**நம்முடைய பிதாவாகிய தேவன்** ஆகிய சொற் கள் வியத்தகு வகையில் ஒன்றிணைக்கப்பட்டி ருப்பதை நாம் கவனிக்காமல் விட்டுவிடாதிருப் போமாக. **தேவன்** என்ற சொல்லை தனித்து நாம் காண்போமெனில், அவர் எல்லைக்குட்படா உயர் வும், அணுகுதற்கரிய மேன்மையும் உடையவர் என்பது அங்கு வெளிப்படுவதைக் காணவியலும். இதற்கு மறுபுறமாக **பிதா** என்னும் பெயர், அவர் நமக்கு உற்ற நேயராக அருகிலும், அணுகுவதற் குரிய அன்பருமாகத் திகழ்கிறார் என்பதைத் தெரிவிக்கிறது. இவ்விரண்டு சொற்களையும் **நம்முடைய** என்னும் பிரதிப் பெயர்ச்சொல்லால் இணைக்கும்போது நிலைபேற்றைக் குடியிருப் பாகக் கொண்ட உயர்வும் உன்னதமும் நிறைந்த **தேவன், கர்த்தராகிய இயேசுவின்மேல்** விசு வாசம் கொண்டு மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரி டமும் அன்பு பாராட்டும் பிதாவாக இருக்கிறார் என்னும் திகைக்கச் செய்யும் பேருண்மையை நாம் பெறுகிறோம்.

நம்முடைய இரட்சகரின் முழுமையான பட்டம் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்து** என்பதாகும். கர்த்தர் என்னும் சொல், அவர் நம்முடைய சர்வ அதிகாரமுமுடைய எஜமானர் என்பதைத் தெரி விக்கிறது. நாம் யாராக இருக்கிறோம், நமது உடைமைகள் ஆகிய எல்லாவற்றின் மேலும் அவர் முழு உரிமை கொண்டவராக இருக்கிறார் என்பதை அச்சொல் தெரிவிக்கிறது. அவர் நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கிறவர் என் பதை இயேசு என்னும் சொல் தெரிவிக்கிறது. அவர் தெய்வீக அபிஷேகம் பெற்ற தீர்க்கதரிசி யாகவும், ஆசாரியராகவும், அரசராகவும் திகழ் கிறார் என்பதைக் கிறிஸ்து என்னும் பெயர் குறிப் பிடுகிறது. அவருடைய பெயரைக் கேட்கின்ற ஒவ்வொரு விருப்பமுள்ள காதுக்கும் அது எத் தனை உண்மைகளை வெளிப்படுத்துகிறது!

### ஆ. கிருபையின் நன்மைகளுக்காகப் பவுல் தேவனுக்குச் செலுத்தும் புகழுரை (1:3-14)

**1:3** தனது சுருக்கமான வாழ்த்துரையைக் கூறிய பிறகு, உன்னதமான புகழ்ச்சிப் பாடலினாலே

பவுல் தனது குரலை உயர்த்துகிறார்; புதிய ஏற்பாட்டுத் தொழுகையின் சில உன்னதமான உயரங்களுக்கு அவர் பறந்து செல்கிறதையும், கிருபையின் நன்மைகளுக்காகப் பொங்கி வழியும் இருதயத்தோடு அவர் தேவனைப் புகழுகிறதையும் இங்கு நாம் காண்கிறோம். தொடக்கமில்லாத நித்தியத்தின் கடந்த காலத்திலிருந்து, முடிவுறா நித்தியத்தின் எதிர்காலம் வரைக்கும் இரட்சிப்பின் பொருட்டு தேவன் நிகழ்த்திய செயல்களைப் பவுல் 3 முதல் 14 வரையிலான வசனங்களில் தேடிச் செல்கிறார். இவை யாவும் தேவனுடைய சித்தத்தின் இரகசியத்தைக் குறித்த ஆய்வுரையின் தேவையை உணர்த்துகிறது: விசுவாசிக்கிற யூதர்களும் புறவினத்தாரும் புகழ்ச்சிக்குரிய சுதந்தரத்தின் உடன் பங்காளிகளாக விளங்குவதே அந்த இரகசியம்.

யாரெல்லாம் **தேவனை** அறிந்திருக்கிறார்களோ அவர்கள் யாவரும் அவரைப் புகழ்ந்து போற்றும்படியான அழைப்போடு பவுல் இப்பகுதியைத் தொடங்குகிறார். அதாவது, புகழ்ச்சியினாலும் அன்பின் ஆராதனையினாலும் அவருடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டு வருவதே அவ்வழைப்பின் பொருளாகும். **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனே ஸ்தோத்தரிக்கப்படத்** தக்கவர். சில நேரங்களில் இயேசு தேவனை **தேவன்** என்று அழைத்தார் (மத். 27:46). வேறு சில நேரங்களில் அவர் பிதா என்று கூப்பிட்டுப் பேசினார் (யோவான் 10:30). இங்கு ஆசிர்வதிக்கப்படத் தக்கவரே ஆசிர்வதிக்கிறவராகவும் இருக்கிறார். அவரை நாம் தொழுதுகொள்வதால் ஆசிர்வதிக்கிறோம் (ஸ்தோத்தரிக்கிறோம்). அவருடைய கிருபையின் செல்வத்தை நம்மீது பொழிந்தருளி நம்மை உவகைபெறச் செய்து, அவர் நம்மை ஆசிர்வதிக்கிறார்.

**அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசிர்வாதத்தினாலும் நம்மை ஆசிர்வதித்திருக்கிறார்**. கிருபையின் கூம்புவடிவக் கோபுரத்தை இங்கு காண்கிறோம்.

**ஆசிர்வாதம்**

**ஆவிக்குரிய ஆசிர்வாதம்**

**ஆவிக்குரிய சகல ஆசிர்வாதம்**

**உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசிர்வாதம்**

**கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசிர்வாதம்**

அவருடைய இதயமும் கையும் எவ்வளவு தாராளமாய் இருக்கின்றன என்பதை முதலில் கவனியுங்கள் - **ஆவிக்குரிய சகல ஆசிர்வாதம்**. இவை யாவும் *ஆவிக்குரிய* ஆசிர்வாதங்கள் என்பதையும் கவனியுங்கள். நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக இஸ்ரவேல் நாட்டிற்கு அளிக்கப்பட்ட ஆசிர்வாதங்களோடு ஒப்பிட்டு முரண்பாடுகளைக் காண்பதன் மூலம் இதனை நாம் எளிதில் விளக்கிக் கூறவியலும். பழைய ஏற்பாட்டில், உண்மையுள்ளவனும் கீழ்ப்படிந்து வாழ்ந்தவனுமாகிய யூதனுக்கு கொடுக்கப்பட்ட ஆசிர்வாதங்கள், நீண்ட வாழ்க்கை, பெரிய குடும்பம், செழிப்பு மிக்க மகசூல் மற்றும் பகைஞரிடமிருந்து பாதுகாப்பு ஆகியவையே (உபாகமம் 28:2-8). இதற்கு மாறாக, கிறிஸ்தவத்தின் ஆசிர்வாதங்கள் ஆவிக்குரியவை. அதாவது, அவை சடப்பொருளால் ஆனவை அல்ல. கண்களுக்குப் புலப்படாதவை, அழிவில்லாதவை. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும் சில ஆவிக்குரிய ஆசிர்வாதங்களை அனுபவித்தார்கள் என்பது உண்மையே. ஆனாலும் இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் இன்புற்று அனுபவிக்கிற ஆசிர்வாதங்கள் முற்காலங்களில் அறியப்படாதவை. இதனை நாம் காணவிருக்கிறோம்.

நம்முடைய ஆசிர்வாதங்கள் "*உன்னதங்களிலே*" உள்ளவை. உலகத்தில் இருக்கிற சடப்பொருள்களாலான ஆசிர்வாதங்களுக்குப் பதிலாக அவை உன்னதங்களிலே உள்ள **ஆவிக்குரிய** ஆசிர்வாதங்களாகும். **உன்னதங்களிலே** என்னும் சொல் ஐந்துமுறை எபேசியர் மடலில் கையாளப்பட்டுள்ளது:

1:3 நம்முடைய ஆவிக்குரிய ஆசிர்வாதங்களின் செயற்களம்.

1:21 கிறிஸ்து அரியணையில் தற்போது அமர்ந்திருக்கும் காட்சி

2:7 நாம் கிறிஸ்துவுக்குள் தற்போது அமர்ந்திருக்கும் அரியணையின் காட்சி.

3:10 சபையில் தேவனுடைய ஞானம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை தேவதூதர்கள் இருந்து காண்கிற இடம்.

6:12 தற்போது நமக்கு எதிராகப் பொல்லாத ஆவிகள் போராடுகிறபோது அவற்றை நாம் எதிர்த்து நிற்கத் தேவையான ஆற்றலின் பிறப்பிடம். (தமிழில் வானமண்டலங்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.)

இந்தப் பகுதிகள் யாவற்றையும் நாம் ஒன்று சேர்த்துக் காண்கையில் **உன்னதங்கள்** என்னும் சொல்லின் ஆவிக்குரிய திட்டவட்டமான பொருளைக் காணவியலும்.

"விசுவாசியானவன் ஆவியின் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே இணைக்கப்பட்டிருப்பதால் உண்டாகிற அவனுடைய தகுநிலை மற்றும் அனுபவம் ஆகியவற்றின் செயற்களம்" என்று இதனைத் திருவாளர் அங்கர் விவரிக்கிறார். ஆவிக்குரிய ஆசிர்வாதங்கள் அனைத்தும் ***கிறிஸ்துவுக்குள்*** இருக்கின்றன. அவர்தாமே சிலுவையில் நிறைவேற்றி முடித்த செயலினாலே அவை யாவற்றையும் நமக்காகச் சேகரித்து வைத்திருக்கிறார். இப்பொழுது அவை யாவும் அவர் மூலமாக நமக்கு ஆயத்தமாயுள்ளன. விசுவாசிகளுக்காக தேவன் வைத்திருக்கிற அனைத்தும் கர்த்தராகிய இயேசுவுக்குள்ளாகவே இருக்கின்றன. அந்த ஆசிர்வாதங்களை நாம் பெறுவதற்கு, நாம் விசுவாசத்தினாலே கிறிஸ்துவோடு இணைக்கப்படுவோம். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாகும் அத்தருணத்திலேயே, சகல ஆசிர்வாதங்களுக்கும் சொந்தக்காரனாகிறான். "இரட்சிக்கப்பட்ட அனைவருடைய பங்குமான கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் நிலை யாதெனில், கிறிஸ்து செய்த அனைத்திலும், அவர் யாராக இருக்கிறாரோ அந்நிலையின் எல்லாவற்றிலும், அவர் எவ்வாறு இருக்கப்போகிறாரோ அந்நிலையின் எல்லாவற்றிலும் பங்கு பெறுவதே ஆகும்" என்று சா.்.பர் என்பவர் எழுதுகிறார்.[2]

எபேசியர் மடலில் உள்ள மிக முக்கியமான சொற்களில் ***கிறிஸ்துவுக்குள்*** என்னும் சொல்லும் ஒன்று. புதிய ஏற்பாட்டில் மிக நெருக்கமான உறவுகொண்ட இரண்டு சத்தியங்கள் உள்ளன. ஒன்று விசுவாசியின் தகுநிலையைக் குறித்த சத்தியம். மற்றதோ விசுவாசியின் இருப்பு நிலையைக் (நடைமுறை வாழ்க்கை) குறித்ததாகும்.

முதலாவது, விசுவாசியின் தகுநிலை. இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஒன்று "ஆதாமுக்குள்" இருக்க வேண்டும், இல்லையேல் "கிறிஸ்துவுக்குள்" இருக்க வேண்டும். "ஆதாமுக்குள்" இருக்கிறவர்கள் யாவரும் தங்களுடைய பாவத்தில் இருப்பதால், தேவனுக்கு முன்பாகக் குற்றவாளிகளெனத் தீர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே தேவனுக்கு மன நிறைவு உண்டாக்கவோ, அவருடைய சலுகையைப் பெறவோ எந்த உரிமையும் இல்லை. அவர்களுக்கு எது தகுதியானதோ அதனை அவர்கள் பெறவேண்டும் என்றால், அவர்கள் நித்திய அழிவையே அடைவார்கள்.

ஒரு மனிதன் மனமாற்றம் பெற்ற பிறகு, அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆதாமின் பிள்ளையாக தேவன் பார்க்கிறதில்லை. மாறாக அவர் அவனைக் **கிறிஸ்துவுக்குள்ளாக** இருப்பவனாகக் காண்கிறார், அந்த அடிப்படையிலேதான் அவர் அவனை ஏற்றுக் கொள்கிறார். இதனைக் கூர்ந்து கவனிப்பது முக்கியம். விசுவாசிக்கிற பாவியானவன் தன்னில் தானே யாராக இருக்கிறான் என்பதினால் ஏற்கப்படுவதில்லை, மாறாக அவன் **கிறிஸ்துவுக்குள்** இருப்பதாலேயே ஏற்கப்படுகிறான். அவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது, கிறிஸ்துதாமே ஏற்றுக்கொள்ளப்படுவது போன்ற ஆடையினால் போர்த்தப்பட்டவனாக அவன் தேவனுக்கு முன்பாக நிற்கிறான். தேவனுடைய தயவையும் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுதலையும் கிறிஸ்து எவ்வளவு காலம் பெற்றிருப்பாரோ, அதாவது நித்திய காலமாக, அதுபோலவே அவனும் அவற்றைப் பெற்றிருப்பான்.

விசுவாசியின் தகுநிலை, அவன் **கிறிஸ்துவுக்குள்** யாராக இருக்கிறான் என்பதேயாகும். ஆனால் இந்தச் சித்திரத்திற்கு வேறொரு பக்கமும் இருக்கிறது. அது விசுவாசியின் நடைமுறை வாழ்க்கையாகும். அவன் தன்னில்தானே யாராக இருக்கிறான் என்பதே அந்நிலை. அவனுடைய தகுநிலை நிறைவாயிருக்கிறது. ஆனால் அவனுடைய நடைமுறை வாழ்க்கையோ நிறைவற்றதாயிருக்கிறது. அவனுடைய நடைமுறை வாழ்க்கையானது இப்பொழுது வளர்ச்சியடைந்து அவனுடைய தகுநிலைக்கு ஏற்றதாகக் காணப்படவேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாகும். அவன் விண்ணகத்திற்குச் செல்லும் வரை அந்த வளர்ச்சி பரிபூரணத்தை அடையாது. ஆனால் அவன் இப்புவியில் இருக்கும் காலத்தில் பரிசுத்தமாக்கப்படுதல், வளர்ச்சி, கிறிஸ்துவைப் போலாகுதலில் முன்னேற்றம் ஆகியவற்றில் தொடர்ந்து பெருக வேண்டியவனாக இருக்கிறான்.

விசுவாசியின் தகுநிலைக்கும் அவனுடைய இருப்பு நிலைக்குமுள்ள வேறுபாட்டை நாம் அறிந்துகொள்கிறபோது, ஒன்றோடொன்று முரண்பாடு உள்ளவையாகத் தோன்றுகிற வசனங்களின் இணக்கத்தை நாம் அறிந்துகொள்ள முடியும்.

| | |
|---|---|
| விசுவாசிகள் பரிபூரணப்படுத்தப்பட்டுள்ளார்கள் (எபி. 10:14) | விசுவாசிகள் பூரண சற்குணராயிருக்க வேண்டும் (மத். 5:48) |
| விசுவாசிகள் பாவத்துக்கு மரித்திருக்கிறார்கள் (ரோமர் 6:2) | விசுவாசிகள் பாவத்துக்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டும் (ரோ. 6:11) |
| விசுவாசிகள் பரிசுத்த ஜாதியாக இருக்கிறார்கள் (1 பேதுரு 2:9) | விசுவாசிகள் பரிசுத்தராக இருக்க வேண்டும் (1 பேது. 1:15) |

மேல்சொல்லியவற்றில் முதல்பத்தி தகுதி நிலையையும், இரண்டாவது பத்தி நடைமுறை வாழ்க்கையையும் குறிப்பிடுகின்றன.

பவுல் எபேசியருக்கு எழுதிய இம்மடலை இரண்டு பகுதிகளாகப் பகுத்து காண்போமாகில், இவ்விரண்டு உண்மைகளுக்கும் அவை இணையாக உள்ளன: (அதி. 1-3): நம்முடைய தகு நிலை - நாம் கிறிஸ்துவுக்குள் யாராக இருக்கிறோம்; (அதி. 4-6): நம்முடைய நடைமுறை வாழ்க்கை - நாம் யாராக இருக்க வேண்டும். முதல்பகுதி உபதேசத்தோடு தொடர்புடையது, இரண்டாவது பகுதி கடமையோடு தொடர்புடையது. நம்முடைய தகுநிலையானது, முதல் மூன்று அதிகாரங்களில், "கிறிஸ்துவுக்குள்," "கிறிஸ்து இயேசுவுக்குள்," "அவருக்குள்," என்னும் சொற்றொடர்களின் மூலமாக அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடைசி மூன்று அதிகாரங்களில் "கர்த்தருக்குள்" என்னும் சொல் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு, விசுவாசியானவன் கிறிஸ்துவைக் கர்த்தராகக் கொண்டிருப்பதாலே அவருக்கு எத்தகைய பொறுப்புடையவனாக இருக்கிறான் என்னும் உண்மை வலியுறுத்தப்பட்டுள்ளது. இம்மடலின் முதல் பகுதியில் விசுவாசியனாவன் கிறிஸ்துவுக்குள்ளாகப் பரலோகத்தில் வீற்றிருக்கும் காட்சி படவுருவாக வரையப்பட்டுள்ளது, கடைசிப் பகுதியோ அவனை அடுக்களையில் இருப்பவனாகக் காட்டுகிறது என்று ஒருவர் அழகுற மொழிந்துள்ளார்.

இப்பொழுது நாம் **கிறிஸ்துவுக்குள்** பெற்றிருக்கும் **உன்னத** இடங்களுக்குரிய **ஆவிக்குரிய ஆசிர்வாதங்களில்** சிலவற்றைக் காண ஆயத்தமாயிருக்கிறோம்.

**1:4** முதலாவது, தெரிந்தெடுத்தல் என்று பொதுவாக அறியப்படுகிற ஒன்று. **தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார்.**

**அவர் நம்மைத் தெரிந்துகொண்டார்** என்னும் சொற்களாலே தெரிந்தெடுப்பைக் குறித்த உறுதியான உண்மை சொல்லப்பட்டிருப்பதை முதலாவது கவனியுங்கள். அடுத்தபடியாக அவ்வுண்மையின் தகுநிலை அம்சம் **கிறிஸ்துவுக்குள்** என்னும் சொல்லால் கூறப்பட்டுள்ளது: கர்த்தராகிய இயேசு என்னும் நபர், மற்றும் அவர் ஆற்றிய செயல்கள் ஆகியவற்றில் தமது மக்களுக்காக தேவன் கொண்டிருந்த நோக்கங்கள் நிறைவேறின. தேவனுடைய தெரிந்தெடுப்பின் காலம் உலகத்தோற்றத்துக்கு முன்னே என்னும் சொற்றொடரால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நோக்கம் யாதெனில், **அவருக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாக இருக்க வேண்டும்** என்பதே ஆகும். நாம் அவருடன் விண்ணகத்தில் சேரும் வரை இந்த நோக்கமானது முழுமையுமாக நிறைவடையாது (1 யோவான் 3:2). ஆனால் நாம் இங்கு இருக்கும் காலத்திலேயே இந்த நடைமுறை வளர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்க வேண்டும்.

மன்றாட்டு:
"கர்த்தரே, நீர் என்னை இப்பொழுது
பரிசுத்தப்படுத்தியருளும்.
ஏனெனில் இதுவே என்னைக் குறித்து
நீர் கொண்டிருக்கும் இறுதியான
நோக்கமாகும். ஆமென்."

## தெய்வீகத் தெரிந்தெடுப்பு

தெரிந்தெடுப்பைக் குறித்த கோட்பாடு மனித உள்ளத்தில் கடுமையான பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. ஆகவே, இப்பொருள் குறித்துத் திருமறை என்ன கற்பிக்கிறது, என்ன கற்பிக்கவில்லை என்பதை நாம் முழுநிறைவாய்ச் சிந்திக்கக் கடவோம்.

முதலாவது, இரட்சிப்புக்கென்று மனிதர்களை தேவன் தெரிந்தெடுக்கிறார் என்று இது கற்பிக்கிறது (2 தெச. 2:13). விசுவாசிகள் "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" என்று அழைக்கப்பட்டுள்ளார்கள் (1 பேதுரு 1:2). நற்செய்திக்கு இணங்கிப் பதிலுரைப்பதன் மூலம் தங்களுடைய தெரிந்தெடுப்பை மனிதர்களால் அறியமுடியும் என்று இக்கொள்கை கற்பிக்கிறது: யாரெல்லாம் நற்செய்தியைக் கேட்டு விசுவாசிக்கிறார்களோ அவர்கள் யாவரும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஆவார்கள் (1 தெச. 1:4-7).

இதனுடைய மறுபுறத்தில் மனிதர்களை அழிவுக்கென்று தேவன் தெரிந்தெடுத்ததாகத் திருமறை எங்கும் கூறவில்லை. அவர் சிலரை இரட்சிக்கும்படி தெரிந்தெடுக்கிறார் என்னும் உண்மை, மற்ற யாவரையும் எவ்வித விசாரணையும் இன்றி நித்திய அழிவுக்கெனத் தீர்க்கிறார் என்னும் பொருளைத் தருகிறதில்லை. இரட்சிக்கப்படுவதற்குத் தகுதியான எவரையும் அவர் ஆக்கினைத் தீர்ப்பு அடையச் செய்கிறதில்லை (அவ்வாறு தகுதிவாய்ந்தவர் எவருமில்லை). மாறாக நித்திய அழிவுக்கெனத் தீர்க்கப்படவேண்டிய சிலரை அவர் இரட்சிக்கிறார். பவுல் தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் குறித்து எழுதியபோது, "தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்களை மகிமையடையும்படி ஆயத்தப்படுத்தினார் என்று குறிப்பிட்டுள்ள அதே நேரத்தில், மனிதர்களை அவர் அழிவுக்கென்று ஆயத்தப்படுத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார்: இந்நிலையை அவர்கள் தாங்களாகவே தெரிந்து கொள்கிறார்கள்.

தெரிந்தெடுத்தல் என்னும் கொள்கை, தேவனை தேவனாகவே இருக்கச் செய்கிறது. அவர் இறையாண்மை உடையவர், அதாவது, அவர் தமது விருப்பப்படி எதை வேண்டுமானாலும் செய்யலாம், எனினும் அவர் அநீதியான எதையும் செய்ய ஒருக்காலும் விருப்பங்கொண்டதில்லை. அவர்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று விடப்படுவார்களானால், மனிதர்கள் யாவரும் இழந்து போனவர்களாகவே காணப்படுவார்கள். சிலருக்கு இரக்கத்தைக் காண்பிக்க தேவனுக்கு உரிமையில்லையா?

ஆனால் இந்தக் கதைக்கு மறுபக்கம் இருக்கிறது. இறையாண்மைத் தெரிந்தெடுப்பைக் கற்பிக்கும் அதே திருமறை மனிதனுடைய பொறுப்பையும் கற்பிக்கிறது. எவரொருவரும் தான் இரட்சிக்கப்படாததற்கு தெரிந்தெடுப்புக் கொள்கையைக் காரணமாகக் கூறக்கூடாது. எங்குமுள்ள எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் உண்மையான வழிமுறையை ஏற்படுத்தி வைத்திருக்கிறார் (யோவான் 3:16; 3:36; 5:24; ரோமர் 10:9,13). எவர் ஒருவரும் தன்னுடைய பாவங்களுக்காக மனம்வருந்தி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தினாலே இரட்சிப்படைய முடியும். ஆகவே ஒருவன் இழந்துபோவானானால், அவ்வாறு தேவன் விருப்பங்கொண்டதனால் அன்று; மாறாக அவன்தானே இழந்து போகுதலைத் தெரிந்து கொண்டதால் அப்படியாயிற்று.

தெய்வீகத் தெரிந்தெடுத்தல், சத்தியத்தை ஏற்பவர் அனைவருக்கும் இலவசமாக இரட்சிப்பு அருளப்படுகிறது ஆகிய இரண்டையும் ஒரே திருமறை கற்பிக்கிறது என்பதே உண்மை. இரண்டு கோட்பாடுகளும் ஒரே வசனத்தில் காணப்படுகின்றன: "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37). இவ்வசனத்தின் முதல் பாதி, தேவனுடைய இறைமைத் தெரிந்தெடுப்பைக் கூறுகிறது; பிந்தின பாதி, எல்லோருக்கும் இரக்கம் அருளப்படுவதற்கான வாக்கு சொல்லப்பட்டுள்ளது.

மனிதனுடைய மனதிற்கு இது இடர்ப்பாட்டை ஏற்படுத்துகிறது. எவ்வாறு தேவன் சிலரைத் தெரிந்துகொண்டு, எல்லா மனிதருக்கும் இரட்சிப்பை இலவசமாகத் தருவதாகக் கூற முடியும்? ஒளிவு மறைவின்றிச் சொல்லவேண்டுமானால், இது ஒரு இரகசியம். ஆனால் அந்த இரகசியம் நம்மிடத்தில்தான் இருக்கிறது; தேவனிடத்தில் இல்லை. இரண்டு கொள்கைகளையும் திருமறை போதிக்கின்ற காரணத்தினால், இரண்டையுமே நம்புவது சிறந்தது. தெரிந்தெடுத்தல் மற்றும் மனிதனுடைய சொந்த விருப்பம் இரண்டிற்கும் இடையே எங்கேயோ சாத்தியமானது இருக்கிறது என்று கருதுவதற்கு இடமில்லை. ஒன்றுக்கொன்று வேறுபட்ட கோட்பாடுகளான இரண்டிலும் சத்தியம் இருக்கிறது. W. G. பிளெய்க்கி இதனைத் தொகுத்து உரைக்கிறார்:

> இறைமைத் தெரிந்தெடுப்பு, உலகளாவிய வகையில் இலவசமாக அருளப்படும் இரக்கத்தை ஏற்க வேண்டிய மனிதனுடைய பொறுப்பு இவையிரண்டும் திருமறையில் காணப்படுகின்றன. நம்முடைய தருக்க முறையினால் இரண்டையும் ஒன்றோடொன்று இணக்குவிக்க முடியவில்லை. நம்முடைய உள்ளங்களில் இவை இரண்டிற்கும் இடம் கொடுக்கப்பட வேண்டும்.[3]

**1:5,6** தேவனுடைய கிருபையின் கருவூலத்தில் காணப்படும் இரண்டாவது ஆவிக்குரிய ஆசிர்வாதம் முன்குறித்தல் ஆகும். இ.·.து ஓரளவு இறைமைத் தெரிந்தெடுப்போடு தொடர்புடையதாகத் தோன்றினாலும் இரண்டும் ஒன்றல்ல. தேவன் மனிதர்களை இரட்சிப்புக்கென்று தெரிந்து கொள்ளுதலே இறைமைத் தெரிந்தெடுப்பாகும். ஆனால் முன்குறித்தல் என்பது இதற்கு ஒருபடி மேலானதாகும். இரட்சிக்கப்படவிருக்கிற அனை

வரையும் அந்தக் காலத்திற்கு முன்னரே தேவன் தமது குடும்பத்திலே புத்திரராகச் சுவிகரித்துக் கொள்ளுதல் என்பதே இதன் பொருளாகும். அவர் நம்மைத் தமது புத்திரராகச் சுவிகரிக்காமலே இரட்சிக்க முடியுமென்றாலும், அவர் இரண்டையும் செய்ய முடிவு செய்துவிட்டார்.

4 முதல் 6 வரையிலான வசனங்கள் ஒன்றோடொன்று இணைந்துள்ளன என்பது கவனிக்கத் தக்கது. அன்பில்... அவர் நம்மை முன்குறித்திருக்கிறார்.

தேவனுடைய ஒப்பற்ற அன்பு இவ்விதக் கிருபையோடு அவரை நம்மிடத்தில் ஈடுபடச் செய்தது என்பதை இது நினைவுபடுத்துகிறது.

சுவிகாரப் புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார் என்னும் சொற்றொடரில் நாம் புகழ்ச்சிக்குரிய சுவிகாரத்தைக் குறித்த உண்மையைப் பெற்றிருக்கிறோம். புதிய ஏற்பாட்டில், விசுவாசியானவன் ஒரு மகனுக்குரிய அனைத்து சலுகைகளோடும் பொறுப்புகளோடும், வயதுக்குவந்து வளர்ச்சியடைந்தவனாக தேவ குடும்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதே புத்திரசுவிகாரம் என்பதற்குக் கொடுக்கப்பட்ட பொருள் விளக்கம் ஆகும் (கலா. 4:4-7). அந்தச் சுவிகார ஆவியில் தேவனைப் பிதாவே என்றழைக்கும் உள்ளுணர்வை விசுவாசியின் உள்ளத்தில் அவர் விதைக்கிறார் (ரோமர் 8:15).

இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே நாம் சுவிகாரப் புத்திரராக ஆக்கப்பட்டிருக்கிறோம். நாம் நம்முடைய பாவங்களிலேயே இருந்திருப்போமென்றால், தேவனுக்கு நெருக்கமானவர்களாகவும், பிரியமானவர்களாகவும் இருக்கக்கூடிய இந்நிலைக்கு நம்மை அவரால் கொண்டுவந்திருக்க முடியாது. இதன் நிமித்தமே கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்து, அவருடைய சாவு, அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மூலமாக, தேவன் மனநிறைவு அடையக்கூடிய வகையில் பாவமென்னும் சர்ச்சைக்குரிய பொருளை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டார். அவர் கல்வாரியில் செலுத்திய பலியின் எல்லைக்குட்படா மதிப்பு, தேவன் நம்மை அவருடைய புத்திரராக சுவிகரிக்க ஏதுவாக்கிற்று.

மேலும் இ.ந்து அவருடைய தயவுள்ள சித்தத்தின்படியே நிறைவேறியது. நாம் முன்குறிக்கப்பட்டதற்கான இறைமை நோக்கமாக இது விளங்குகிறது. "அவர் ஏன் இதைச் செய்தார்?" என்னும் கேள்விக்கான விடையை இது கூறுகிறது. இது அவருடைய தயவுடைய சித்தமே அல்லாமல் வேறல்ல. அவருடைய ஒரேபேறான குமாரனுடைய சாயலுக்கு ஒப்பான சாயலைப் பெற்றவர்களாகவும், அந்தக் குமாரனோடு என்றென்றும் இருக்கிறவர்களாகவும் பல புத்திரர்கள் பிதாவைச் சூழ்ந்துகொள்ளும்வரை, அவர் மனநிறைவு அடையமாட்டார்.

பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக அவர் நம்மை ஏற்படுத்தினார். முதலில் நாம் தெரிந்துகொள்ளப்பட்டதிலும் முன்குறிக்கப்பட்டதிலும் தேவனுடைய கிருபை விளங்கியதைக் குறித்துச் சிந்தித்த பவுல், இப்பல்லவியைக் கூறித் தனது தியானத்தைச் சற்று நிறுத்திய போது, அது உடனடியாக வியந்து போற்றுவதாகவும், விளக்கமளிப்பதாகவும், ஊக்கமளிப்பதாகவும் வெளிப்பட்டது. இது ஒரு வியந்து போற்றுதலாகக் காணப்படுகிறது -- அத்தகைய கிருபையின் எல்லை கடந்த புகழ்ச்சிகளால் ஏற்படும் பரிசுத்த மூச்சுத் திணறலாக இது காணப்படுகிறது. இது ஒரு **விளக்கமளிக்கும்** சொற்றொடராக விளங்குகிறது -- நம்மிடத்தில் காண்பிக்கப்படும் கிருபையின் அனைத்துச் செயல்களின் கருப்பொருளும் விளைவுமே அவருடைய சொந்த **மகிமையாகும்**. இத்தகைய ஒப்பில்லாத தயவிற்காக அவருக்கு நித்திய புகழ்ச்சி செலுத்தப்பட வேண்டும். **நமக்குத் தந்தருளப்பட்ட அவருடைய கிருபை** - (இலவசமாக) நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் என்னும் சொற்றொடரைக் கவனியுங்கள். அந்தக் **கிருபையைப்** பெற்றுக் கொண்டவர்கள் நாம். அந்தக் கிருபையை நாம் அடைவதற்கான வாய்க்கலாக அவர் இருக்கிறார் -- **பிரியமானவருக்குள்**. இறுதியாக அது நமக்கு ஊக்கமளிப்பதாக விளங்குகிறது. "அவருடைய மகிமை நிறைந்த **கிருபைக்காக** அவரைப் **புகழ்ந்து** போற்றுவோம்" என்று பவுல் கூறுகிறார். நாம் தொடர்ந்து செல்வதற்கு முன்னர் அவருக்குப் **புகழ்ச்சியைச்** செலுத்துவோம்!

விண்ணக வேந்தர் வழிகள் யாவும்
மன்னரின் குணங்களைப் பறைசாற் றிடுமே!
உன்னதர் பண்புகள் வீசிடும் ஒளிகளில்
அண்ணலின் கிருபை ஒளிமிகப் பெரிதே!
மன்னிப்பை அருளிய ஒப்பற்ற தயவை
எண்ணிய அடிமை ஓயாமல் பாடுவேன்!

**1:7** தேவன் தமது மக்களுக்காக வகுத்த நித்திய திட்டத்தின் பயபக்தியூட்டுகிற ஆராய்ச்சி

யைப் பின்தொடர்கிற நாம் மீட்பின் சத்தியத்தினி டமாய் வருகிறோம். பாவத்தின் கட்டிலிருந்தும் குற்றவுணர்விலிருந்தும் நம்மை விடுவித்து சுதந்தரமான வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்திய கிறிஸ்துவின் செயலை இது விளக்கிக் கூறுகிறது. கர்த்தராகிய இயேசுவே மீட்பர் **(பாவமன்னிப் பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டா யிருக்கிறது).** நாமே மீட்கப்பட்டவர்கள். **அவரு டைய இரத்தம்** மீட்பின் விலை; அதைக் காட்டி லும் குறைவானது எதுவும் இச்செயலைச் செய்ய இயலாது.

மீட்பின் பயன்களில் ஒன்று **பாவமன்னிப்பு** ஆகும். **பாவமன்னிப்பும் மீட்பும்** ஒன்றல்ல. மீட்பின் கனிகளில் ஒன்றே பாவமன்னிப்பு. நம்மு டைய பாவங்களுக்கான பரிகாரம் முழுவதையும் கிறிஸ்து செலுத்திய பிறகே அவற்றை மன்னிக்க முடியும். அது சிலுவையில் நிறைவேற்றி முடிக்கப் பட்டுவிட்டது. இப்பொழுது, இதற்கும் மேலாகக் கண்டிப்பான நீதியால் வேறு எதையும் எதிர் பார்க்க முடியாது, இரக்கம் தனது பண்டக சாலையைத் திறந்து பொழிகிறது.

**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே** என்னும் சொற்றொடரில் நாம் பெற்றிருக் கிற **மன்னிப்பின்** அளவு கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுடைய **கிருபையின் ஐசுவரியத்தை** நம் மால் அளக்கக்கூடுமானால், அவர் நம்மை முழு வதுமாக மன்னித்த மன்னிப்பின் அளவை அள விடக் கூடும். அவருடைய கிருபை அளவற்றது! அதுபோலவே அவருடைய மன்னிப்பும் அளவற்றது!

**1:8** அவருடைய கிருபையினாலே அவர் நம்மைத் தெரிந்தெடுத்தார், நம்மை முன்குறித் தார், நம்மை மீட்டார். ஆனால் அத்துடன் முடி வடையவில்லை. அந்தக் கிருபையை தேவன் **சகல ஞானத்தோடும் புத்தியோடும்** நம்மி டத்தில் அளவிற்கதிகமாய் **பெருகப்பண்ணி னார்.** அவர் தமது திட்டத்தையும் நம்மீது கொண் டிருக்கிற நோக்கத்தையும் நம்மிடத்தில் கிருபை யாகப் பகிர்ந்துகொண்டார் என்பதே இதன் பொருளாகும். சபை மற்றும் பிரபஞ்சம் ஆகியவற் றைக் குறித்த அவருடைய திட்டத்தை அறிந்து கொள்ளக்கூடிய ஞானமும் நுண்ணறிவும் நமக் குத் தேவை என்பதே அவருடைய விருப்பமாகும். ஆகவே அவர் நம்மை அவருடைய நம்பிக் கைக்கு உகந்தவர்களாக கருதி, வரலாறு எந்தக் குறிக்கோளை நோக்கிச் செல்கிறதோ, அந்தப் பெரிதான குறிக்கோளை நம்மிடம் உள்ளதை உள்ளவாறே வெளிப்படுத்தியிருக்கிறார்.

**1:9,10** தேவன் எல்லாவித ஞானத்தோடும் விவேகத்தோடும் எந்தவொரு குறிப்பிட்ட வழி யில் நம்மைப் பெருகச் செய்திருக்கிறார் என்ப தைப் பவுல் இப்பொழுது விளக்கிக் கூறுகிறார். அதாவது, அவர் **தம்முடைய தயவுள்ள சித்தத் தின் இரகசியத்தை** நமக்கு **அறிவித்தார்.** கிறிஸ்துவைப் பற்றியதும், சபையைப் பற்றியது மான புகழ்ச்சிக்குரிய உண்மை, இதுவே இம்மட லின் முதன்மையான கருத்தாக விளங்குகிறது. இது ஓர் **இரகசியமாகும்.** இது ஏதோ புலப்படாத ஒன்று என்ற கருத்து இங்கில்லை. ஆனால் முந்தைய காலத்தில் அறியப்படாத ஒரு புனித மான இரகசியம், இப்பொழுது பரிசுத்தவான் களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் புகழ்ச்சிக்குரிய திட்டம் தேவனுடைய இறையாண் மைச் சித்தத்தில் தோன்றியது. வேறு எந்தத் தாக்கத்தினாலும் இது உண்டாகவில்லை: இது அவருடைய **தயவுள்ள சித்தமேயாகும்.** இத்திட் டத்தின் மேன்மையான பொருள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார். **தமக்குள்ளே தீர்மானித்திருந்த** என்னும் சொற்றொடரால் இவ்வுண்மை புலப்படுகிறது.

தேவனுடைய திட்டத்தின் இரகசியத்தைப் பற்றிய விளக்கத்தைப் பவுல் இப்பொழுது பெரி தான அளவில் விவரித்துக் கூறுகிறார். இந்த அதி காரத்தில் அவர் அந்த இரகசியத்தின் எதிர்காலத் தைக் குறித்தே குறிப்பிட்டுச் சொல்லுகிறார். 2 மற்றும் 3 ஆகிய அதிகாரங்களில் அந்த இரகசி யத்தின் தற்கால நிலையைப் பற்றிய கூடுதலான வெளிச்சத்தை நம்மால் காணமுடியும். **காலங் கள்** (நிருவாகம் அல்லது ஆட்சி, Gk - oikonomia) **நிறைவேறும்போது** என்னும் சொற்றொடர் ஒரு குறிப்பிட்ட காலத்தைப் பவுல் நினைவில் கொண்டிருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்து மீண்டும் இப்புவிக்கு வருகைபுரிந்து அரசர்க்கெல்லாம் அரசராகவும் கர்த்தருக்கெல் லாம் கர்த்தராகவும் ஆட்சிபுரியும் ஆயிரமாண் டுக் காலத்தை இது குறிப்பிடுகிறது என்று நாம் அறிந்திருக்கிறோம். இவ்வுலகின் மனித வரலாற் றில் இறுதிக்கால ஆட்சி அல்லது நிருவாகத் தைக் குறித்த சிறப்பான திட்டத்தை தேவன் தீர்மானித்து வைத்திருக்கிறார்.

"கிறிஸ்துவை நோக்கிச் சகலத்தையும் கவ னிக்கச் செய்வதே" அத்திட்டமாகும் (JND). ஆயிரமாண்டுக் காலத்தில் **பரலோகத்தில் இருக்கிறவை** மற்றும் **பூலோகத்திலிருக் கிறவை** யாவும் **கிறிஸ்துவுக்குள்** ஒன்று கூட்டப்

படும். புறக்கணிக்கப்பட்டவரும், கைவிடப்பட்ட வருமாக இப்பொழுது இருக்கிற இரட்சகர், அக் காலத்தில் முதன்மையானவராகவும், எல்லாரு டைய கர்த்தராகவும், உலகம் முழுவதற்கும் ஆராதனைக்குரிய கருப்பொருளாகவும் விளங்கு வார். இதுவே தேவனுடைய திட்டமாகும் - விண்ணகத்திற்கும் புவிக்கும் உரிய அனைத்தின் மேலும் அவ்வாட்சியின் போது கிறிஸ்துவைத் தலையாக நிறுவுதலே அத்திட்டமாகும்.

"பரலோகத்தில் உள்ள பொருட்கள், பூமியின் மேலுள்ள பொருட்கள்" (JND) என்று கிறிஸ்து வின் ஆட்சி எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது. பெல்லட் என்பார் எழுதுகிறார்:

> இதுவரை வெளிப்படுத்தப்படாத இரகசியமாக விளங்குகிறது. ஏசாயா தீர்க்கதரிசனத்தில் இப் புவியில் நடைபெறவிருக்கும் ஆயிரமாண்டு ஆட்சியைக் குறித்த அழகான சித்திரத்தை நாம் காண்கிறோம். ஆனால் விண்ணகத்தில் உள்ள அனைத்திற்கும் கிறிஸ்து தலைமை யாக விளங்கும் ஆயிரமாண்டு ஆட்சியைப் பற்றி ஏசாயா எங்கேனும் கூறியிருக்கின் றானா? மகிமை நிறைந்த மனிதனிடமாய் விண் ணகத்தில் உள்ளவையும் இப்புவியில் உள்ள வையும் ஒன்றுகூட்டப்படும் என்று ஏசாயா எப்பொழுதாவது கூறியிருக்கின்றானா?[4]

சர்வ உலகமும் இரட்சிக்கப்படும் என்னும் தவறான கோட்பாட்டிற்கு ஆதரவாக இந்த ஒன்ப தாவது வசனம் சிலவேளைகளில் பயன்படுத்தப் படுகிறது. எல்லாப் பொருட்களும் எல்லா மனிதர் களும் முடிவில் கிறிஸ்துவுக்குள்ளாகச் சீர் பொருந்தி ஒப்புரவாகிவிடுவார்கள் என்று இந்த வசனம் திரித்துக் கூறப்படுகிறது. ஆனால் அக் கருத்து இப்பகுதிக்குப் புறம்பானதாக காணப்படு கிறது. பவுல் இங்கே அகில உலக ஆட்சியைக் குறித்துப் பேசுகிறாரேயொழிய அகில உலக இரட்சிப்பைக் குறித்துப் பேசவில்லை!

**1:11,12** விசுவாசிக்கிற யூதரும் விசுவாசிக்கிற புறவினத்தாரும் தேவனுடைய இம்மாபெரும் திட் டத்தில் அவரவர் பங்கைப் பெறுவார்கள் என்பது இந்த இரகசியத்தின் ஓர் அம்சமாக விளங்கு கிறது. 11 மற்றும் 12 ஆகிய வசனங்களில் அப் போஸ்தலன் யூத விசுவாசிகளோடு தொடர் புடைய வகையில் அந்த இரகசியத்தைப் பற்றிப் பேசுகிறார். 13 -வது வசனத்தில் புறவின விசுவாசி களுடைய தொடர்பிலும், 14 -வது வசனத்தில் இரு சாராரையும் சேர்த்துப் பேசுகிறார்.

யூத வழிமரபில் தோன்றிய கிறிஸ்தவர் களைக் குறித்து, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப்பட்டோம் என்று பவுல் எழுதுகிறார். அவர்கள் பங்குபெறு வதற்கான உரிமையை, அவர்களுடைய முந் தைய தேசிய முன்னுரிமையாகப் பெறவில்லை. மாறாக, கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கப்பட்டதன் மூலமாக மட்டுமே இதனைப் பெற்றார்கள். இங்கு சுதந்தரம் என்று சொல்லப்பட்டிருப்பது அவர் களும், மற்றும் அனைத்து விசுவாசிகளும் ஓர் அற்புதமான உலகில் கிறிஸ்துவின் சரீரமாகவும், ஆட்டுக்குட்டியானவரின் மணப்பெண்ணாகவும் வெளிப்படுத்தப்போகிற நேரத்தை எதிர்நோக்கி யிருக்கிறது.

தேவனுடைய இறைமைச் சித்தத்தின் அடிப் படையில், நித்தியத்தின் காலமெல்லாம் இப்படிப் பட்ட முன்னுரிமைக்காக யூதக் கிறிஸ்தவர்கள் முன்குறிக்கப்பட்டிருக்கிறார்கள். தமது சித்தத் தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றை யும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின் படியே நாங்கள் முன்குறிக்கப்பட்டுள்ளோம்.

இவ்வாறு முன்குறிக்கப்பட்டதன் நோக்கம் யாதெனில், அவர்கள் கிறிஸ்துவின் மகிமைக்குப் புகழ்ச்சியாக இருக்கவேண்டும் என்பதேயாகும். அதாவது, பக்குவப்படுத்தப்படாத மூலப்பொருட் களைக் கொண்டு அவரால் என்ன செய்ய முடியும் என்பதற்குச் சான்றாக அவர்கள் இப்பொழுது தேவனுடைய கிருபையின் வெற்றிச் சின்னங் களாக திகழ்கிறார்கள்; அதன் காரணமாக அவ ருக்கு மகிமை உண்டாகிறது.

கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையா யிருந்த நாங்கள் என்று தன்னைக் குறித்தும் விசுவாசிக்கிற மற்ற யூதர்களைக் குறித்தும் அப்போஸ்தலன் பேசுகிறார். கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் நற்செய்தியை ஏற்றுக் கொண்ட மீதியான பக்தி நிறைந்த யூதர்களையே அவர் நினைவில் கொண்டிருக்கிறார். நற்செய்தி யானது முதலில் யூதர்களுக்குப் பிரசங்கிக்கப் பட்டது. இஸ்ரவேல் நாட்டில் பெரும்பான்மை யோர் அதனைச் சற்றேனும் விருப்பமற்ற முறை யில் நிராகரித்தார்கள். ஆனால் பக்திநிறைந்த மீதியான யூதர்கள் கர்த்தராகிய இயேசுவினிடத் தில் விசுவாசம் வைத்தார்கள். அவர்களில் ஒருவரே பவுல்.

இரட்சகர் இரண்டாம் முறை பூமிக்கு வருகை புரியும்போது, அது வேறுவிதமாக இருக்கும்.

அப்பொழுது இஸ்ரவேல் நாடு, தாங்கள் குத்தின வரை நோக்கிப்பார்த்து அவருக்காகப் புலம்பி, ஒருவன் தன் ஒரே மகனுக்காக துக்கிக்கிறது போலத் துக்கமடைவார்கள் (சக. 12:10). இந்தப் பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள், 'மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார்' என்று எழுதப்பட்டிருக்கிறது (ரோமர் 11:26).

யூதப் பின்னணியைச் சேர்ந்த பவுலும் அவர் காலத்துக் கிறிஸ்தவர்களும், இஸ்ரவேல் நாட்டில் ஏனையோர் மாற்றம் அடைவதற்கு முன்னரே மேசியாவினிடத்தில் நம்பிக்கை வைத்தார்கள். அதன் காரணமாகவே அவர், "கிறிஸ்துவின்மேல் முன்னமே நம்பிக்கையாயிருந்த நாங்கள்" (FWG) என்ற செற்றொடரைப் பயன்படுத்துகிறார்.

மேசியாவினிடத்தில் "முன்னமே நம்பிக்கை" கொண்டிருந்தவர்கள், அவருடன் சேர்ந்து இப் புவியை ஆளுவார்கள். அந்நாட்டின் மீதியானவர் கள் அவருடைய அரசின் பூமிக்குரிய குடிமக்களாக விளங்குவார்கள்.

**1:13** இப்பொழுது, யூதர்களாகப் பிறந்த விசுவாசிகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்த பவுல் புறவினத்தாராகப் பிறந்த விசுவாசிகளிடமாய்த் திரும்புகிறார். "நாங்கள்" என்ற சொல்லிலிருந்து **"நீங்கள்"** என்ற சொல்லுக்கு அவர் மாறியதால் இது புலப்படுகிறது. பிற தேவர்களை வணங்கிக்கொண்டிருந்த நிலையிலிருந்து மனமாற்றம் பெற்றவர்களுக்கும், யூதராயிருந்து மனமாற்றம் பெற்றவர்களுக்கும் தேவனுடைய சித்தத்தின் இரகசியத்தில் பங்குண்டு. ஆகவே இங்கு அப்போஸ்தலன் எபேசுப் பட்டணத்து மக்களும், பிற புறவினத்தவரும் எவ்விதமாகக் கிறிஸ்துவோடு ஒருங்கிணைக்கப்பட்டார்கள் என்ற விவரங்களைத் தேடிச்செல்கிறார்.

அவர்கள் சுவிசேஷத்தைக் **கேட்டார்கள்.**

அவர்கள் கிறிஸ்துவில் **விசுவாசித்தார்கள்.**

அவர்கள் **வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டார்கள்.**

முதலாவதாக, அவர்களுடைய **இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டார்கள்.** அடிப்படையில், கர்த்தராகிய இயேசுவினிடத்தில் வைக்கும் விசுவாசத்தின் மூலமாகப் பெறுகிற இரட்சிப்பைப் பற்றிய நற்செய்தியையே இது குறிக்கிறது. ஆனால் இதன் விரிவான பொருளில், கிறிஸ்துவின் போதனைகளையும் அப்போஸ்தலருடைய போதனைகளையும் இது உள்ளடக்கியதாக இருக்கிறது.

இந்தச் செய்தியைக் கேட்டவர்களாக, அவர்கள் விசுவாசம் என்னும் ஐயத்திற்கு இடமற்ற செயலின் மூலமாகக் கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புவித்தார்கள். அவர் ஒருவரிடம் மட்டுமே **இரட்சிப்பைக்** கண்டடைய முடியும்.

அவர்கள் **விசுவாசித்த** உடனேயே, **வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டார்கள்.** ஒவ்வொரு மெய்யான விசுவாசியும், அவன் தேவனுக்குச் சொந்தமானவன் என்பதற்கும், அவன் தன்னுடைய மகிமையடைந்த சரீரத்தைப் பெறும் வரைக்கும் தேவனாலே காக்கப்படுவான் என்பதற்கும் அடையாளமாக தேவனுடைய ஆவியைப் பெறுகிறான். சட்ட சம்பந்தமான விஷயங்களில் முத்திரையானது எவ்வாறு ஒருவரது உடைமையுரிமையையும் பாதுகாப்பையும் குறிக்கிறதோ, அதுபோலவே தெய்வீகக் காரியங்களிலும் காணப்படும். நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் (1 கொரி. 6:19,20) என்பதையும், மீட்பின் நாள்வரை நாம் காக்கப்படுவோம் என்பதற்கான உத்தரவாதம் (எபே. 4:30) என்பதையும் நம்முள்ளில் குடியிருக்கும் ஆவியானவர் சுட்டிக்காட்டுகிறார்.

நம்முடைய முத்திரை **வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவி** என்றழைக்கப்படுகிறது. முதலாவது, அவர் *பரிசுத்த* ஆவியானவர் ஆவார்; அவர் தம்மில்தாமே பரிசுத்தமாக இருக்கிறார். இரண்டாவது, அவர் *வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட* ஆவியானவர். அவர் பிதாவினால் வாக்குறுதி பண்ணப்பட்டவர் (யோவேல் 2:28; அப். 1:4); கர்த்தராகிய இயேசுவினாலும் வாக்குறுதி பண்ணப்பட்டவர் (யோவான் 16:7). தேவன் விசுவாசிக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறும் என்பதற்கு அவரே உத்தரவாதமாகவும் திகழ்கிறார்.

இந்த மடலில் மீண்டும் மீண்டும் திரியேக தேவனின் குறிப்பைக் காணவியலும். அவற்றில் முதற்சுற்று 13 -ஆவது வசனத்தில் முடிவடைகிறது.

பிதாவாகிய தேவன் (வச. 3)

குமாரனாகிய தேவன் (வச. 6)

பரிசுத்த ஆவியாகிய தேவன் (வச. 13)

**1:14** மீண்டுமாகப் பவுல் பிரதிப் பெயர்ச் சொற்களை மாற்றுகிறார். "நாங்கள்" என்று 12 -ஆவது

வசனத்திலும், “நீங்கள்” என்று 13 -ஆவது வசனத்திலும் சொல்லப்பட்டுள்ள பெயர்ச்சொற் களை ஒன்று சேர்த்து **நம்முடைய** என்ற சொல்லை அவர் இந்த வசனத்தில் பயன்படுத்து கிறார். இத்தகைய திறமையான இலக்கியக் கலையின் மூலமாக, 2 மற்றும் 3 ஆகிய அதி காரங்களில் எதனை முழுமையாக விளக்கித் தரப்போகிறார் என்பதைப் பற்றிய குறிப்பைத் தெரிவிக்கிறார் - விசுவாசிக்கிற யூதர்களும், விசுவாசிக்கிற புறவினத்தாரும் ஒன்றிணைந்து புதிய உயிர்ப்பொருளாகிய சபை உருவாகுதலை அவர் விளக்கிக் கூறவிருக்கிறார்.

**நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாகப்** பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். இது முன் பணம், முழுத்தொகையும் பின்னர் அளிக்கப்படும் என்பதற்குத் தரப்பட்ட உறுதிமொழியாகும். முன் பணமானது பின்னர் தரப்படும் முழுத்தொகை யைப் போன்ற அதே பண்புடையது, ஆயினும் தொகையில் அதே அளவு கிடையாது.

நாம் இரட்சிக்கப்பட்ட உடனேயே, கிறிஸ்து வுக்குள்ளாக நமக்குச் சொந்தமான செல்வங் களில் சிலவற்றைப் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தத் தொடங்குகிறார். அதாவது அவர் வரவிருக்கிற மகிமையின் முன்கூட்டிய அனுபவத் தைத் தருகிறார். ஆயினும் ஒருநாளில் நாம் முழுச் சுதந்தரத்தையும் பெறப்போகிறோம் என்ற உறுதியை நாம் எவ்வாறு அடைவோம்? பரிசுத்த ஆவியானவரே அதற்கு **அச்சாரமாக** அதாவது உத்தரவாதமாகத் திகழ்கிறார்.

முத்திரை என்னும் நிலையில், நாம் சுதந்தரத் தைப் பெற்றுக்கொள்ளும்படி பாதுகாக்கப்படு வோம் என்ற உறுதியையும் அவர் தருகிறார். அச்சாரம் என்னும் நிலையில் நமக்காக அந்தச் **சுதந்தரம்** பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது என்று அவர் உறுதி அளிக்கிறார்.

**அவருக்குச் சொந்தமானவர்கள்** (விலைக்கு வாங்கப்பட்ட சொத்து) **அவருடைய மகிமைக் குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள்** என்பதற்கு ஆவியானவரே உத்தரவாதமாகத் திகழ்கிறார். முழுமையான **மீட்பையே** உத்தரவாதம் எதிர் நோக்கியிருக்கிறது. முதற்கனிகள் பின்னர் வரப் போகிற முழுமையான அறுவடையை எதிர் நோக்கியிருப்பது போல இது காணப்படுகிறது. **அவருக்குச் சொந்தமானவர்கள்** மீட்கப்படும் போது முன்பணம் என்னும் நிலையில் ஆவியான வர் செய்யும் பணி நிறைவுபெறும். ஆனால் **அவருக்குச் சொந்தமானவர்கள்** (விலைக்கு வாங்கப்பட்ட சொத்து) என்னும் சொற்றொடரை எந்தப் பொருளில் பவுல் கையாளுகிறார்?

1. **நம்முடைய சுதந்தரம்** என்னும் பொருளில் அந்தச் சொற்றொடரை அவர் பயன்படுத்தி யிருக்கலாம். கர்த்தராகிய இயேசுவின் மூல மாக தேவனுடைய உடைமைப் பொருட்கள் யாவும் நமக்குச் சொந்தமானவையாகும்: நாம் தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே (ரோமர் 8:17; 1 கொரி. 3:21-23). பாவத்தினால் இந்த அண்டசராசரமே தீட்டுப்பட்டுவிட்டது, அனைத்தும் ஒப்புரவாக் கப்பட்டு, தூய்மைப்படுத்தப்படவேண்டும் (கொலோ. 1:20, எபி. 9:23). கிறிஸ்து ஆளுகை செய்யும்படி இப்புவிக்கு மீண்டும் வருகைபுரி யும் போது, ஏகமாய்த் தவிக்கிற படைப்பு அழி வுக்குரிய அடிமைத்தனத்தினின்று மீட்கப் பட்டு, தேவனுடைய புத்திரரின் புகழ்ச்சிக் குரிய விடுதலைக்குள்ளாகப் புகும்.

2. **அவருக்குச் சொந்தமானவர்கள்** (விலைக்கு வாங்கப்பட்ட சொத்து) என்னும் சொற்றொடர் விசுவாசியின் சரீரத்தைக் குறிக்கக்கூடும். நம்முடைய ஆவிகளும் ஆத்துமாக்களும் நாம் முதன்முதலாக விசுவாசித்தபோது மீட் கப்பட்டுவிட்டன; ஆனால் நம்முடைய சரீரங் கள் மீட்படைவது வரப்போகிற நாளுக்குரிய தாகும். நாம் பாடுபடுகிறோம், வயது முதிர்ச்சி யடைகிறோம், மரணமடைகிறோம்; இவ் வுண்மை நம்முடைய சரீரங்கள் இன்னும் மீட்கப்படவில்லை என்பதை மெய்ப்பிக்கிறது. கிறிஸ்து நமக்காக வரும்போது (1 தெச. 4:13-18), நம்முடைய சரீரங்கள் அவருடைய மகிமை யான சரீரத்திற்கு ஒப்பாகப் புதிய நிலைக்கு மறுரூபப்படுத்தப்படும் (பிலி. 3:21). அப்பொழுது அவை முழுவதுமாக, என்றென்றுக்குமாக மீட்கப்படும் (ரோமர் 8:23).

3. இறுதியாக, **அவருக்குச் சொந்தமானவர்கள்** என்னும் சொற்றொடர் சபையைக் குறிக்கக் கூடும் (1 பேதுரு 2:9) “அவருக்குச் சொந்தமான ஜனமாக இருக்கிறீர்கள்”). இந்தக் காரியத்தில், மீட்பு எனப்படுவது சபை எடுத்துக்கொள்ளப் படுவதை எதிர்நோக்கிக் காத்திருக்கும் நிலை யாகும். அப்பொழுது, கிறிஸ்து சபையைக் கறைதிரை முதலானவை ஒன்றுமில்லாமல் மகிமையுள்ள சபையாகத் தமக்குமுன் நிறுத்து வார் (எபே. 5:27). தேவனுக்குச் **சொந்தமானது** என்பதில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் களும் அடங்குவர் என்று சிலர் கருதுகிறார்கள்.

நாம் எந்தக் கருத்தைக் கொண்டிருந்தாலும், முடிவில் உண்டாகிற பயன் **அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியே** ஆகும். தம்முடைய மக்களுக்காக தேவன் வகுத்த வியத்தகு திட்டம், அப்பொழுது மகிமையான நிறைவை அடைந்திருக்கும். மேலும் அவர்தாமே இடைவிடாத புகழ்ச்சிக்கு இலக்காகத் திகழ்வார். தேவனுடைய செயல்கள் யாவும், அவர் மேன்மை அடைவதையும் மகிமை பெறுவதையுமே நோக்கமாகவும் தவிர்க்க முடியாத விளைவாகவும் கொண்டிருக்கின்றன என்று பவுல் இந்த அதிகாரத்தில் மும்முறை நமக்கு நினைவூட்டியிருக்கிறார்.

> தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக (வச. 5)
>
> நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படி (வச. 11)
>
> **அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக** (வச. 14)

### இ. பரிசுத்தவான்களுக்காகப் பவுல் ஏறெடுத்த நன்றியும் மன்றாட்டும் (1:15-23)

**1:15** மூன்றாம் வசனம் முதல் பதினான்காம் வசனம் வரையிலுள்ள முந்தின பகுதியில் (கிரேக்கு மொழியில் ஒரே வாக்கியமாக அமைந்துள்ளது!) கடந்த கால நித்தியத்திலிருந்து, எதிர்கால நித்தியம் வரையிலும் தேவனுடைய திட்டம் எவ்வகையில் நிறைவேறுகிறது என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் எழுச்சிமிக்க ஆராய்ச்சியாக விவரிக்கிறார். நம்முடைய மனதை ஆட்கொள்ளக்கூடியதும், பயபக்திக்குரிய தெய்வீக ஏவுதலைக்கொண்டதுமான சிந்தனைகளின் வழியாகப் பவுல் அலைந்து திரிகிறதையும், அவ்வித தெய்வீகத் திட்டங்களைப் பற்றிய ஆவிக்குரிய வெளிச்சத்தைத் தனது வாசகர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கொண்டிருந்து ஜெப பாரத்தை அவர்களோடு பகிர்ந்து கொள்கிறதையும் இப்பகுதியில் காணவியலும். கிறிஸ்துவுக்குள்ளாக அவர்கள் பெற்றிருந்த புகழ்ச்சிக்குரிய சிலாக்கியங்களைப் பற்றியும், எல்லாப் படைப்புகளுக்கும் மேலான தலையாகக் கிறிஸ்து சபைக்குத் தந்தருளப்படுவதற்குத் தேவையான பேராற்றலைக் குறித்தும் அவர்கள் அறிந்து போற்றவேண்டும் என்பதே அவருடைய விருப்பமாயிருந்தது.

**ஆனபடியினாலே** என்னும் தொடக்கம், 3-14 ஆகிய வசனங்களில் விளக்கிக் கூறப்பட்டுள்ள விவரங்களைப் பின்னோக்கிப் பார்க்கிறது; அப் பகுதியில், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களுக்கு தேவன் செய்ததும் செய்யப் போகிறதுமான அனைத்து நன்மைகளும் சொல்லப்பட்டுள்ளன.

**கர்த்தராகிய இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்கள் எல்லார்மேலுமுள்ள உங்கள் அன்பையுங்குறித்து நான் கேள்விப்பட்டேன்.** இந்தச் செய்தியைப் பவுல் கேட்டபோதுதான் தன்னுடைய வாசகர்கள் முன்னர் சொல்லப்பட்டுள்ள ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்னும் உறுதியைப் பெற்றார். மேலும் அது அவரை அவர்களுக்காக மன்றாடும்படி உந்தித்தள்ளியது. அவர்கள் **கர்த்தராகிய இயேசுவின்மேல் கொண்டிருந்த விசுவாசம்**, அவர்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் அற்புதத்தை நோக்கி அவர்களை வழிநடத்தியது. பரிசுத்தவான்கள் எல்லார் மேலும் அவர்கள் கொண்டிருந்த அன்பு, அவர்களுடைய மறுரூப மனமாற்றத்தை வெளிப்படுத்திக் காட்டியது.

இந்த மடலானது எபேசுப் பட்டணத்து விசுவாசிகளுக்குத் தனிப்பட எழுதப்பட்டதன்று என்னும் கருத்துடைய வேத அறிஞர்கள் சான்றாக இந்த வசனத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள். தனது வாசகர்களுடைய விசுவாசத்தைக் குறித்து அப்போஸ்தலன் கேள்விப்பட்டார் -- அவர் அவர்களை இதுவரை கண்டதில்லை என்ற குறிப்பு இங்கே தொனிக்கிறது. ஆனால் அவர் எபேசுப் பட்டணத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகளைச் செலவிட்டார் (அப். 20:31). ஆகவே, இம்மடலானது பல்வேறு உள்ளூர் சபைகளுக்கு அனுப்பப்பட்டது என்றும் அவற்றில் ஒன்றே எபேசு சபை என்றும் அவர்கள் தீர்மானிக்கிறார்கள்.

ஆயினும் இத்தகைய கருத்து, நாம் இந்த வசனத்தில் கற்கிற பாடங்களைப் பாதிப்பது இல்லை என்பது நமது நற்பேறு ஆகும். எடுத்துக்காட்டாக, கர்த்தராகிய இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசம் என்னும் சொற்றொடரில், கர்த்தர்தாமே விசுவாசத்தின் மெய்ப்பொருளாகக் காட்டப்பட்டிருக்கிறார். நாம் சபையின் விசுவாச அறிக்கையிலோ, சபையிலோ, கிறிஸ்தவர்களிலோ விசுவாசம் வைக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை. உயிர்த்தெழுந்து, தேவனுடைய வலது புறமாக உயர்த்தப்பட்ட கிறிஸ்துவே இரட்சிப்பிற்குரிய விசுவாசத்திற்கு இலக்காகத் திகழ்கிறார்.

**பரிசுத்தவான்கள்** *எல்லார்* **மேலுமுள்ள உங்கள் அன்பு** என்னும் சொற்றொடரில் வேறொரு பாடம் நமக்குக் கற்பிக்கப்பட்டிருக் கிறது. நம்முடைய பகுதியில் கூடிவரும் மக்க ளோடு மட்டும் நாம் அன்புபாராட்டி அதற்கோர் எல்லையை வகுக்கக்கூடாது. மாறாக, கிறிஸ்து வின் செங்குருதியால் கழுவப்பட்ட அனைத்து சபை விசுவாசிகள் மேலும் நமது அன்பு பாய்ந்து செல்லவேண்டும்.

மூன்றாவது பாடத்தை, விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவை ஒன்று சேர்ந்திருப்பதில் காண வியலும். சிலர் தங்களுக்கு விசுவாசம் உண் டென்று கூறுவார்கள், ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் அன்பைப் பார்ப்பது அரிதாயிருக் கும். இன்னும் சிலர் பெரிதான அன்பை வெளிப் படையாய்த் தெரிவிக்கிறார்கள், ஆனால் அவர் கள் கிறிஸ்துவிடம் விசுவாசம் வைக்க வேண்டும் என்பதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வதில்லை. மெய்யான கிறிஸ்தவம் ஆரோக்கியமான உப தேசமும் வாழ்க்கையும் ஒன்றிணைந்த நிலையே ஆகும்.

**1:16** எபேசுப் பட்டண விசுவாசிகளின் விசுவாச மும் அன்பும், அவர்களுக்காகப் பவுல் கர்த்தரைப் புகழ்ந்து போற்றும்படியும், இடைவிடாமல் ஜெபிக் கும்படியும் தூண்டிவிட்டன. திரு. ஸ்கேராஜ்ஜி இதனை அழகாக விவரிக்கிறார்:

> புகழ்ந்து போற்றுதல் ஏற்கனவே இடப்பட்ட அஸ்திபாரத்திற்காகக் செலுத்தப்பட வேண்டும், ஆனால் பரிந்து பேசுதல் மேலே எழுப்பப்படு கிற கட்டடத்திற்காக ஏறெடுக்கப்படவேண்டும். ஏற்கனவே நிறைவேற்றப்பட்டவையின் பொருட்டு புகழ்ந்து போற்ற வேண்டும், ஆனால் இனி நடைபெற வேண்டியவையின் பொருட்டு பரிந்து பேசவேண்டும். அவர்களுடைய வாழ்க் கையில் உண்மையாக நடந்த செயல்களுக் காகப் புகழ்ச்சி செலுத்தப்படவேண்டும், ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் என்ன நடக்கவேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டிருக்கிறாரோ அதற்காக மன்றாட வேண்டும்.

**1:17** ஒரு தேவ மனிதனுடைய ஜெப வாழ்க்கை யைப் பற்றிய காட்சியைக் காண்பது எத்தகைய நற்பேறாக விளங்குகிறது. உண்மையில் ஜெப வாழ்க்கையைப் பற்றிய காட்சிகளை, இந்த இடத் திலும் இதே மடலில் 3:14-21 ஆகிய வசனங்களி லும் காணமுடியும். இங்கு ஆவிக்குரிய வெளிச் சத்திற்காகவும், அடுத்த பகுதியில் ஆவிக்குரிய ஆற்றலுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள் ளது. இங்கு **தேவனை** நோக்கி ஜெபம் ஏறெடுக் கப்பட்டுள்ளது. அங்கு அது பிதாவினிடத்தில் ஏறெடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறையும் பவுல் ஏறெடுத்த மன்றாட்டுகள் இடைவிடாதவை யாகவும், குறிப்பிட்டும், மக்களுடைய அப்போதைய தேவையைக் கருதியும் ஏறெடுக்கப்பட்டன. இங்கே, ஜெபமானது **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவரை** நோக்கி ஏறெடுக்கப்பட்டுள் ளது. **மகிமையின் பிதா** என்னும் சொற்றொடர் கீழ்க்காணும் பொருட்களில் ஒன்றைத் தரக் கூடும். தேவன்

1. எல்லா மகிமைக்கும் ஆதாரமாக அல்லது தொடக்கமாக இருக்கிறார்.
2. எல்லா மகிமைக்கும் பாத்திரர், அல்லது
3. தேவனுடைய மகிமையின் வெளிப்பாடாகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே இவர்.

**தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும், தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டு மென்று** அந்த ஜெபம் தொடர்கிறது. பரிசுத்த ஆவி யானவரே ஞானத்தை அளிக்கிற ஆவி (ஏசாயா 11:2), மற்றும் **தெளிவை** அளிக்கிற (வெளிப் படுத்துகிற) ஆவி (1 கொரி. 2:10). ஒவ்வொரு விசு வாசியின் உள்ளத்திலும் அவர் குடியிருப்பதால், பரிசுத்த ஆவியானவரை அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பவுல் ஜெபம் பண்ணி யிருக்க முடியாது. மாறாக, அவர்கள் ஒரு சிறப் பான அளவு வெளிச்சத்தை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்றே அவர் ஜெபித்தார்.

அறிவைத் தருகிற செயலோடு சம்பந்தப்பட் டதே **தெளிவு** ஆகும். அதனை நம்முடைய வாழ்க்கையில் முறையாகப் பயன்படுத்துவதோடு சம்பந்தப்பட்டதே **ஞானம்** என்றழைக்கப்படு கிறது. பொதுவான **அறிவைக்** குறித்து அப்போஸ் தலன் சிந்திக்கவில்லை. அவரை அறிந்துகொள் ளுதல் (Gk.epignosis) என்னும் குறிப்பிட்ட அறி வையே அவர் இங்கு குறிப்பிடுகிறார். விசுவாசி கள் ஆழமானதும், ஆவிக்குரியதும், அனுப வத்தை அடிப்படையாகக் கொண்டதுமான தேவ அறிவைப் பெற்றிருக்க வேண்டுமென்றே அப் போஸ்தலன் விரும்பினார். அறிவுக் கூர்மை என்னும் ஆற்றலினாலே இந்த அறிவைப் பெற முடியாது. மாறாக, ஆவியானவரின் கிருபைநிறை

ஊழியத்தினாலேயே அவர்கள் அதைப் பெற முடியும்.

டேல் என்பார் விவரிக்கிறார்:

> எபேசுப் பட்டணத்து விசுவாசிகள் ஏற்கனவே தெய்வீக வெளிச்சத்தைப் பெற்றவர்கள், இல்லையெனில் அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்திருக்க முடியாது. ஆனால் அவர்களுக் குள்ளாகக் குடியிருந்த தெய்வீக ஆவியானவர் அவர்களுடைய பார்வையை இன்னும் கூடு தலாகத் தெளிவுள்ளதாகவும், ஆர்வமுள்ள தாகவும், ஆற்றல் மிக்கதாகவும் ஆக்க வேண்டும் என்றும் அதன் காரணமாக தெய் வீக வல்லமையும், அன்பும், மேன்மையும் அவர் களுக்கு முழுமையான அளவில் வெளிப்பட வேண்டும் என்றும் பவுல் மன்றாடினார். இந் நாட்களில் மனிதர்களின் மிகவும் கவர்ச்சிகர மானதும் கிளர்ச்சியூட்டக்கூடியதுமான கண்டு பிடிப்புகளை மிக விரைவாக வெளிக்கொணர் கிறார்கள். அவை எதிர்மாறான ஆவலுடைய வையாக இருந்தபோதிலும் அவற்றால் கிறிஸ்த வர்களும்கூட கவரப்படுகிறார்கள், கிறிஸ்துவில் வெளிப்படுகிற தேவ வெளிப்பாட்டைக் குறித்து அவர்கள் அக்கறையற்று இருக்கிறார்கள். இந்நிலையில் "ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி" தந்தருளப்பட வேண்டுமென் னும் தனிச்சிறப்பு வாய்ந்த தேவைக்காக சபை ஊக்கமாக மன்றாட வேண்டும். அவர் இந்த மன்றாட்டிற்கு விடைபகர வேண்டுமாயின், "காணப்படுகிறவை மற்றும் இவ்வாழ்வுக்குரி யவை" ஆகியவற்றோடு தொடர்புடைய பொருட் களால் நாம் இனிமேல் மயங்கிப் போய்விடக் கூடாது. மாறாக, "காணப்படாதவையும் நித்திய மானவையுமான" தெய்வீகக் காரியங்கள் இவ் வாழ்வுக்குரியவற்றை ஒளிமங்கச் செய்ய வேண்டும்.[5]

**1:18** ஆவிக்குரிய வெளிச்சத்தின் ஆதாரமா கத் திகழ்பவர் தேவனே ஆவார் என்று நாம் கண் டோம்; பரிசுத்த ஆவியானவர் அதனைக் கொண்டு வருகிற கால்வாயாக விளங்குகிறார்; அதன் மிக உன்னதமான கருப்பொருள் தேவனைப் பற்றிய அறிவேயாகும். அந்த ஒளியைப் பெறும் உறுப்பு களை நாம் இப்பொழுது காணமுற்படுவோம்: *உங்கள் இருதயங்களின் கண்கள் (மனக் கண் கள்) பிரகாசமடைய வேண்டும்* (NKJV ஓரம்).[6]

இந்தப் படவுருவ விளக்கம், தெய்வீக உண் மைகளைச் சரியாகப் புரிந்துகொள்ளும் செயல், நம்முடைய கூரிய ஆய்வுணர்வுத் திறத்தைச் சார்ந்தது அல்ல, மாறாக மென்மையான **இருத யங்களையே** சார்ந்தது என்று தெரிவிக்கிறது. இது பாசம், மனது ஆகியவற்றோடு தொடர்புடை யது. தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கே அவர் வெளிப்பாடுகளைத் தருகிறார். விசுவாசி களாகிய நாம் யாவரும் மிகவும் கூடுதலான நுண் ணறிவு ஆய்வுத் திறத்தை உடையவர்கள் அல்ல; ஆயினும் ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடத்தில் அன்புகூருகிற இருதயத்தைப் பெற்றிருப்பதால், அவன் தெய்வீக வெளிப்பாடுகளைப் பெறுவ தற்கான சாத்தியக்கூறு மிகுந்து காணப்படுகிறான்.

தெய்வீக அறிவின் குறிப்பிட்ட மூன்று எல்லை களைப் பரிசுத்தவான்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பவுல் அவர்களைக் குறித்து விருப்பங்கொண்டிருந்தார். அவையாவன:

1. **அவர் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை** (வச. 18)
2. **பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டா யிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம்** (வச. 18)
3. **விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்** (வச. 19)

**அவர் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை** எதிர்காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அவர் நம்மை அழைத்த போது, இறுதியில் நாம் எந்த இடத்தைச் சென்ற டையப் போகிறோம் என்று அவர் தமது உள்ளத் தில் நினைத்திருந்தார் என்பதையும் இது குறிப் பிடுகிறது. நாம் கிறிஸ்துவைப் போல மாற்றம் பெற்று அவரோடுகூட என்றென்றும் இருப்போம் என்னும் உண்மையும் இதனுள் அடங்கும். நாம் தேவனுடைய புத்திரராக அண்டசராசரத்தில் வெளிப்படுத்தப்பட்டு, அவருடைய கறைதிரை யற்ற மணவாட்டியாக அவருடன் சேர்ந்து அர சாளுவோம். இவ்வாறு நிறைவேறும் என்று நம்பிக்கை கெண்டிருக்கிறோம் என்பதால், அதில் ஏதோ சந்தேகம் இருக்கிறது என்பது பொரு ளல்ல. மாறாக அந்நிலை நமது இரட்சிப்பின் ஓர் எதிர்கால அம்சமாக இருக்கிறது, அதையே நாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம் என்பதே அதன் பொருளாகும்.

பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டா யிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின்

ஐசுவரியம் என்பது விசுவாசிகள் ஆராய்ந்து பார்க்க வேண்டிய எல்லைவரம்பற்ற இரண்டாவது ஆய்வுப்பொருள். இப்பொருளின் எல்லையற்ற தன்மையும் மேதகைமையும் வெளிப்பட வேண்டும் என்னும் நோக்கத்தோடு, பவுல் ஒரு சொல்லின் மேல் மற்றொரு சொல்லை அடுக்கிக் கொண்டே போகிற விதத்தைக் கவனித்துப் பாருங்கள்.

**தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரம்**

**பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரம்**

**பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தின் மகிமை**

**பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம்**

இதனை இரண்டுவழிகளில் நாம் புரிந்து கொள்ளலாம். இரண்டும் ஆழ்ந்த பொருளுடைய வையாக இருப்பதால், இரண்டையுமே நாம் இங்கு தருகிறோம். முதலாவது பொருளில், **பரிசுத்தவான்கள்** அவருடைய **சுதந்தரமாக** இருக்கிறார்கள் என்றும், அவர்களை அவர் காணும்போது ஒப்பிடக்கூடாத மதிப்புமிக்க செல்வமாக இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. தீத்து 2:14; 1 பேதுரு 2:9 ஆகிய பகுதிகளில் விசுவாசிகள் "அவருடைய சொந்த ஜனங்கள்" என்று விவரிக்கப்பட்டுள்ளார்கள். இழிந்தவர்களும் பயனற்றவர்களுமாயிருந்த பாவிகள் கிறிஸ்துவின் மூலம் இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய இருதயத்தில் அவருடைய சுதந்தரம் என்று அவரால் அழைக்கப்படும்படியான இடத்தைப் பெறுவது நிச்சயமாக அவருடைய சொல்லிமுடியாத கிருபையின் விளம்பரக் காட்சியாகவே இருக்கிறது.

இரண்டாவது, **சுதந்தரம்** என்று சொல்லப்பட்டிருப்பது நாம் பெறப்போகிற செல்வமேயாகும். சுருங்கக் கூறின், இந்த அண்டசராசரம் முழுவதும் கிறிஸ்துவுக்குக் கீழாகக் கொண்டுவரப்படும், நாமும் அவருடைய மணவாட்டி என்னும் நிலையில் அவரோடு சேர்ந்து இதனை அரசாளுவோம். உண்மையாகவே அவர் நமக்காகச் சேர்த்து வைத்திருக்கிற மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று நாம் அறிவோமானால் இந்த உலகத்தின் கவர்ச்சிகளிலிருந்தும் இன்பங்களிலிருந்தும் அது நம்மைக் கொள்ளையிடும்.

**1:19-21** விசுவாசிகளுக்காகப் பவுல் ஏறெடுக்கிற மூன்றாவது விண்ணப்பம் யாதெனில், இவையாவற்றையும் நாம் அடையும்படி செய்கிற தேவனுடைய **வல்லமையை** அறிந்து போற்றுதலே ஆகும். **விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்தில் காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம்.**

இதனைத் திருவாளர் F. B. மேயர் விவரிக்கிறார்:

> "இது வல்லமை. இது அவருடைய வல்லமை. இது மாபெரும் வல்லமை; இதனினும் குறைவானது போதாது. இது அளவுகடந்த மாபெரும் வல்லமை, நமது எண்ணங்களைச் சிதறடித்தாலும் அவை எல்லாவற்றையும் கடந்த வல்லமை"[7]

நம்மை மீட்கும் பொருட்டு தேவன் இந்த வல்லமையைப் பயன்படுத்தினார். நம்மைப் பாதுகாக்கும் பொருட்டும் அவர் இதே வல்லமையைப் பயன்படுத்துகிறார். நாம் மகிமையடையும்படியாகவும் அவர் இதே வல்லமையைப் பயன்படுத்துகிறார். நாம் மகிமையடையும்படியாகவும் அவர் இதே வல்லமையைப் பயன்படுத்துவார். லூயிஸ் ஸ்பெர்ரி சே.ர்.பர் எழுதுகிறார்:

> தேவனுடைய நோக்கங்களில் தெரிந்தெடுப்பு, முன்குறித்தல், ஒப்புயர்வற்ற வகையில் புத்திரராகச் சுவிகரித்தல் ஆகிய யாவும் நிறைவேறும்படி தேவன் பயன்படுத்துகிற வல்லமையின் மேன்மையை விசுவாசி அறிந்து போற்றுவதற்காக அவனுடைய இருதயத்தில் அதனைப் பதியவைக்கப் பவுல் விரும்புகிறார்.[8]

இந்த வல்லமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்படி, **மரித்தோரிலிருந்து** உயிரோடு கிறிஸ்து **எழுப்பப்பட்டு,** தேவனுடைய வலப்புறத்திலே முடிசூட்டப்பட்டவராக அமர்த்தப்படுவதற்கு தேவன் பயன்படுத்திய **வல்லமையை** அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கிறார்; இதுவே இந்த உலகம் அறிந்த தேவ வல்லமையின் காட்சிப்பொருளாகும். இந்த அண்டசராசரம் தேவ வல்லமையின் மிகப்பெரிய காட்சிப்பொருள் என்று ஒருவேளை நாம் நினைக்கக்கூடும். அல்லது அற்புதமான வகையில் அவர் தமது மக்களைச் சிவந்த சமுத்திரத்தின் வழியாக நடத்தி வந்ததை அவருடைய மிகப்பெரிய வல்லமை என்று நினைக்கலாம். ஆனால் அதுவல்ல! கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும், பரலோகம் சென்ற நிகழ்ச்சிக்கும் மிகப்பெரும் அளவில் தெய்வீக ஆற்றல் வெளிப்பட வேண்டியதாயிருந்தது என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது!

இதன் காரணம் என்ன? கிறிஸ்துவைக் கல்லறையிலேயே பூட்டிவைத்து அல்லது அவரைப் பரலோகத்திற்குச் செல்லவிடாமல் தடுத்து தேவனுடைய நோக்கத்தை முறியடிக்க வேண்டுமென்று நரகத்தின் சேனைகள் யாவும் ஒன்று கூட்டப்பட்டன என்றே தோன்றுகிறது. ஆனால் எல்லாவிதமான எதிர்ப்புகளையும் தோற்கடித்து தேவன் வெற்றி சிறந்தார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும், அவர் விண்ணகத்திற்குச் சென்றதும் சாத்தானுக்கும் அவனுடைய சேனைக்கும் கிடைத்த சின்னாபின்னமாக்கப்பட்ட தோல்வியாகும். மேலும் அது தேவ வல்லமைக்குக் கிடைத்த வெற்றியின் மகிமை நிறைந்த காட்சிப் பொருளாகும்.

இதனை விளக்கிக்கூற ஒருவரும் போதுமான வரல்லர். ஆகவே பவுல் விசையியக்கத்தின் சொற்களஞ்சியத்திலிருந்து பற்பல சொற்களைக் கடன்பெற்று, நமக்காகப் பயன்படுத்தப்பட்ட வல்லமையைப் பற்றிய தமது விளக்கத்தில் அச்சொற்களைப் பயன்படுத்துகிறார்: "அவர் **கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பிய** போது அவரிடத்தில் **நடப்பித்த** அவருடைய **பலத்த சத்துவத்தின் வல்லமையின்** *செயலாக்கத்தின்*படியே." கருத்தாழத்தின் பாரத்தால் சொற்கள் வளைந்து போயின என்றே தோன்றுகிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வெவ்வேறு சொற்களின் பொருள் வேறுபாட்டை நாம் அறிந்து கொள்ளத் தேவையில்லை. அந்த வல்லமையின் மகத்துவத்தை நாம் அறிந்து அவருடைய சர்வ வல்லமைக்காக அவரை வியந்து போற்றுதலே தகும்! மேயர் விளக்கமளிக்கிறார்:

> வியத்தகு பாரந்தூக்கி ஒன்று அங்கே இருந்தது! இறப்பின் கல்லறையிலிருந்து நித்திய இறைவனின் அரியணை வரை செல்ல வேண்டும், அவர் ஒருவரே சாவாமை உடையவர். கல்லறையின் இருளிலிருந்து எதிர்கொள்ள இயலாத ஒளியினிடத்திற்குச் செல்லவேண்டும். இந்தச் சிறிய உலகிலிருந்து அண்டசராசரத்தின் நடுவிலுள்ள தலைநகரத்திற்கு செல்ல வேண்டும். உங்கள் விசுவாசத்தின் அளவு கோலை எடுத்து அளக்கமுடியாத இந்தப் பாதாளத்தை அளந்து பாருங்கள். இதன் ஊடாக உங்கள் கர்த்தரை எடுத்துச்சென்ற அந்த வல்லமையைக் கண்டு வியந்து போற்றுங்கள்.[9]

திருமறையின்படி, மனித வரலாற்றிலேயே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே, அத்தகைய முதல் நிகழ்ச்சியாகும் (1 கொரி. 15:23). மரித்தோரிலிருந்து சிலர் எழுப்பப்பட்டார்கள், ஆனால் அவர்கள் மீண்டும் இறந்துபோனார்கள். கர்த்தராகிய இயேசுவே முடிவில்லா வாழ்வின் சத்துவத்தினாலே முதலாவது எழுந்தவர். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் விண்ணகம் சென்ற நிகழ்ச்சியையும் தொடர்ந்து, தேவன் **அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார்.** தேவனுடைய வலது பாரிசம் சிறப்புரிமை பெற்ற இடத்தையும் (எபி. 1:13), வல்லமையையும் (மத். 26:64), தனிச்சிறப்பையும் (எபி. 1:3), பேரின்பத்தையும் (சங். 16:11), ஆளுகையையும் (1 பேதுரு 3:22) குறிக்கிறது.

மேலும் அந்த இடம் **உன்னதங்களில்** இருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. இது தேவனுடைய குடியிருப்பையும் உட்கொண்டிருக்கிறது. மாம்சமும் எலும்புகளும் உடைய உண்மையான சரீரத்தை, இனி சாவை அடைய இயலாத மகிமையின் சரீரத்தை உடையவராகக் கர்த்தராகிய இயேசு இப்பொழுது அந்த இடத்தில்தான் இருக்கிறார். அவர் இருக்கும் இடத்திற்கு நாம் விரைவாகச் செல்லப் போகிறோம்.

நமது இரட்சகர் மகிமையடைந்த நிகழ்ச்சி, **எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக** என்று மேலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. எல்லா அரசர்களுக்கும் அதிகாரத்திற்கும், அது மனிதராயிருந்தாலும் தேவதூதராயிருந்தாலும், இப்பொழுதானாலும் எப்பொழுதானாலும், மேலான அதிகாரத்தைக் கர்த்தராகிய இயேசு உடைய வராயிருக்கிறார்.

உன்னதங்களில் வெவ்வேறு வகையான தூதர்கள் இருக்கிறார்கள். சிலர் தீயவர், சிலர் நல்லவர். அவர்களுக்கு வெவ்வேறு அளவில் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, மனிதர்கள் குடியரசுத் தலைவர், ஆளுநர், மாநகரத் தலைவர், மாநகர உறுப்பினர் போன்று வெவ்வேறு அளவில் அதிகாரம் உடையவராய் இருப்பதுபோல, தூதர்கள் வெவ்வேறு அளவில் அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய ஆளுகை, **அதிகாரம், வல்லமை** எவ்வளவா

யிருந்தாலும் கிறிஸ்து அவர்கள் எல்லோருக்கும் மேலானவர்.

நாம் வாழ்கிற இந்த நாட்களில் மட்டுமின்றி, வரவிருக்கிற **மறுமையிலும்** இது உண்மையாக விளங்கும். அதாவது, கிறிஸ்துவின் ஆயிரமாண்டுப் புவியாட்சியிலும் இது உண்மையாயிருக்கும். அப்பொழுது அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் விளங்குவார். எல்லாப் படைப்புக்கும், ஏதொரு விதிவிலக்கும் இல்லாத படி எல்லாப் படைப்புக்கும் மேலாக அவர் உயர்த்தப்படுவார்.

**1:22,23** மேலும், தேவன் **எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்.** மனிதர்கள் தேவதூதர்கள் மட்டுமின்றி, உயிருள்ளவை உயிரற்றவை ஆகிய எல்லாப் படைப்புகளும் உட்பட இந்த அண்டசராசரம் முழுவதும் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கும். எபிரெய மடலின் ஆசிரியர் இன்னும் அவருக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம் என்று நமக்கு நினைவுபடுத்துகிறார் (எபி. 2:8). அது உண்மைதான். இந்த அண்டசராசரத்தின் ஆளுகை, கிறிஸ்துவுக்கு உரியதாயிருந்தாலும் இன்னும் அதனை அவர் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. எடுத்துக்காட்டாக, மனிதர்கள் அவருக்கு எதிராகக் கலகம் விளைவிக்கிறார்கள், மறுதலிக்கிறார்கள், எதிர்த்து நிற்கிறார்கள். ஆனால் தேவனோ தமது குமாரன் இப்பிரபஞ்சத்தின்மேல் அவருடைய ஆளுகையைச் செலுத்துவார் என்று பிரகடனம் செய்கிறார். மேலும் அது இப்பொழுதே நிகழ்ந்தாற்போல உண்மையாய் இருக்கிறது.

தொடர்ந்து வருகிற பகுதி நம்புதற்கு அரிதாயிருக்கிறது. ஆணிகளால் அறையுண்ட கரங்களை உடையவரே இந்தப் பிரபஞ்சத்தின்மேல் தமது ஒப்புயர்வற்ற அதிகாரத்தைச் செலுத்த விருக்கிறவர். இவ்வாறு மகிமைநிறைந்தவரையே தேவன் திருச்சபைக்குத் தந்தருளியிருக்கிறார்! தேவனுடைய சித்தத்தின் வியத்தகு இரகசியத்தை இங்கு பவுல் வெளிப்படுத்துகிறார். இத்தகைய உச்சகட்ட அறிவிப்பை நோக்கி தேவன் நம்மை ஒவ்வொரு படியாக அழைத்துச் செல்கிறார். அவர் தனது வருணிக்கும் ஆற்றலின் மூலமாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், மகிமை பெற்றதையும், ஆளுகையையும் விவரித்துக் கூறுகிறார். எல்லா மகிமையும் நிறைந்த கர்த்தரைக் குறித்த சிந்தனையில் ஆழ்ந்து பயபக்தியில் நம் இருதயங்கள் மூழ்கியிருக்கையில் அப்போஸ்தலன், "அவர் தமது அதிகாரத்தில் **சபைக்கு அவரை எல்லாவற்றிக்கும் மேலான தலையாகத் தந்தருளினார்"** என்று கூறுகிறார்.

நாம் இந்த வசனத்தைக் கவனமற்றபடி படிப்போமானால், கிறிஸ்து **சபைக்குத்** தலையாக இருக்கிறார் என்றே இது கூறுகிறது என்பதை நிச்சயமாகப் புரிந்துகொள்வோம். அது உண்மையாக இருந்தபோதிலும், இந்த வசனம் இன்னும் மிகுதியாகப் பேசுகிறது. **சபையானது** பிரபஞ்சத்தின்மேல் ஆட்சிசெலுத்த அதிகாரம் பெற்ற வரோடு மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறது என்றும் இந்த வசனம் கூறுகிறது.

வானத்திலும் பூமியிலும் உள்ள எல்லாப் ***படைப்புகளுக்கும்*** மேலாகக் கிறிஸ்து மிகவுயர்ந்தவர் என்று நாம் 20 -ஆவது வசனத்தில் கற்றோம். மேலும் அவ்வுயர்வு இம்மைக்கு மட்டுமின்றி மறுமைக்கும் உரியதாயிருக்கிறது. 22 -ஆவது வசனத்தில் **எல்லாம்,** படைப்புகள் எல்லாம் **அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்**பட்டுள்ளன என்று கற்கிறோம். எல்லை கடந்த அவருடைய ஆட்சியில் அவரோடு இணைந்திருக்கும்படி சபையானது தனிச்சிறப்புடன் கூடிய அழைப்பைப் பெற்றிருக்கிறது என்று இப்பொழுது நாம் கற்கிறோம். சபையானது அவருடைய ஆட்சியில் பங்கு வகிக்கும். மற்ற படைப்புகள் யாவும் அவருடைய ஆட்சிக்குக் கீழ்ப்பட்டிருக்கும்.

முதல் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவு எவ்வளவு நெருக்கமானது என்பதைக் கற்கிறோம். இரண்டு உருவகங்கள் கொடுக்கப்பட்டுள்ளன: (1) சபை **அவருடைய சரீரமாயிருக்கிறது;** (2) **மேலும் அது எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாக** இருக்கிறது.

தலைக்கும் **சரீரத்திற்கும்** இடையே உள்ள உறவைக் காட்டிலும் நெருக்கமான உறவு எதுவும் கிடையாது. உயிர்த்துடிப்புள்ள இந்த இணைப்பின் மூலமாக அவை ஒன்றாயிருக்கின்றன. ஒரே ஆவி அவற்றிற்குள்ளாகக் குடியிருக்கிறார். பெந்தெகொஸ்தே நாள் முதல் சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரை உலகத்திலிருந்து வெளியே வரும்படி அழைக்கப்பட்ட மக்களின் கூட்டமே சபை ஆகும்; அவர்கள் வியத்தகு கிருபையினாலே இரட்சிக்கப்பட்டவர்கள்; மேலும் கிறிஸ்துவின் **சரீரம்** என்னும் சிறப்புமிக்க தனியுரிமை அதற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

வேறு காலகட்டங்களில் வாழ்ந்த விசுவாசிகள் இந்தச் சிறப்பைப் பெற்றதுமில்லை, பெறப் போவதுமில்லை.

**எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்பு கிறவருடைய நிறைவாக சபை** இருக்கிறது என்பது இரண்டாவது விவரமாகும். ஒரே நேரத் தில் எல்லா இடங்களிலும் இருக்கிறவராகிய கிறிஸ்துவுக்கு நிறைவு செய்யும் பொருளாக சபை இருக்கிறது என்பதே இதன் நேரடியான பொருளாகும். நிறைவு செய்யும் பொருள் நிறைவு செய்கிறது அல்லது நிரப்புகிறது. இரண்டு பொருட் களை ஒன்றிணைக்கும்போது ஒரு முழுமை ஏற்படுகிறது என்பதை இது குறிப்பாய்த் தெரிவிக் கிறது. எவ்வாறு ஒரு சரீரமானது தலையை நிறைவு செய்கிறதோ, அதுபோல சபையானது கிறிஸ்துவை நிறைவு செய்கிறது.

கிறிஸ்து நிறைவானவர் அல்ல என்றோ, முடிவுபெறாதவர் என்றோ இது குறிப்பாய்த் தெரிவிக்கிறது என்று எவரும் நினைத்துவிடக் கூடாது. எனவேதான் பவுல், எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர் என்று அடை மொழியாகக் கூறியிருக்கிறார். அவரை நிரப்பு வதற்கு எதுவும் தேவையில்லை, அவர் முடிவு பெறாத நிலையில் இருக்கும்படி அவரிடத்தில் எந்தக் குறைவும் இல்லை. கர்த்தராகிய கிறிஸ்து தாமே **எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவர்.** அவரே இப்பிரபஞ்சத்தில் எங்கும் பரவியிருக்கிறவர், அதன் தேவைகளையெல் லாம் நிறைவு செய்கிறவர்.

இதைப் புரிந்துகொள்வது என்பது நமது அறிவுக்கு மேற்பட்டது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தேவனுடைய எல் லைகடந்த சிந்தனையாற்றலையும் திட்டத்தை யும் நம்மால் வியந்து போற்றத்தான் முடியும். இவை எல்லாவற்றையும் நம்மால் புரிந்துகொள்ள இய லாது என்பதைச் சொல்லியே ஆகவேண்டும்.

### ஈ. புறவினத்தவரும் யூதரும் இரட்சிப்படையும்படி தேவனுடைய வல்லமை வெளிப்படுதல் (2:1-10)

**2:1** முதல் அதிகாரத்தின் கடைசிப்பகுதிக்கும் அதைத் தொடர்ந்து வருகிற வசனங்களுக்கும் இடையேயுள்ள இன்றியமையாத தொடர்பினை அதிகாரங்களின் பிரிவு மங்கலாக்கி விடக்கூடாது. அங்கே கிறிஸ்துவைக் கல்லறையிலிருந்து உயிரோடு எழுப்பி, மகிமையினாலும் கனத்தினா லும் முடிசூட்டிய தேவனுடைய பலத்த சத்துவத்தின் வல்லமையைக் கண்டோம். இப்பொழுது நம்மு டைய சொந்த வாழ்க்கையில், நமது ஆவிக்குரிய மரணத்திலிருந்து நாம் எழுப்பப்பட்டு, கிறிஸ்து வுடனேகூட உன்னதங்களில் உட்காரவைக்கப் படுவதற்கு அதே வல்லமை எவ்வாறு செயல் பட்டது என்பதைப் பார்க்கப் போகிறோம்.

இந்தப் பகுதி ஆதியாகமம் முதல் அதிகாரத் திற்கு ஒத்திருக்கிறது. இவ்விரண்டு பகுதிகளிலும் நாம் காணக்கூடியவை: (1) பாழ்நிலை, ஒழுங் கற்ற நிலை, சீர்குலைவு ஆகியவற்றின் காட்சி (ஆதி. 1:2; எபே. 2:1-3); (2) தெய்வீக வல்லமை அறிமுகப்படுத்தப்படுதல் (ஆதி. 1:2; எபே. 2:4); (3) புதிய ஜீவன் படைக்கப்படுதல் (ஆதி. 1:3-31; எபே. 2:5-22).

எபேசியர் 2 -ஆவது அதிகாரம் தொடங்கு கையில், நாம் மரணப் பள்ளத்தாக்கில் வீழ்ந்து கிடக்கும் ஆவியில் செத்த பிணங்களாகக் காட்சி யளிக்கிறோம். அது முடிவுறும் போது, நாம் உன்னதங்களில் கிறிஸ்துவுடனேகூட உட்கார வைக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, ஆவியான வராலே தேவன் நம்மில் குடியிருக்கும்படியான வாசஸ்தலமாகக் கட்டப்படுவதையும் காணலாம். இவையிரண்டிற்கும் இடையே குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கொண்டுவந்த பலத்த வல்லமை யின் அதிசயத்தை நாம் காணவியலும்.

புறவினத்தவரும் யூதரும் இரட்சிப்படைவதில் தேவ வல்லமை செயல்புரிவதை முதல் பத்து வசனங்களும் விளக்குகின்றன. கந்தைத் துணி யிலிருந்து இத்தகைய மாபெரும் செல்வத்தை எந்தச் சிண்டரல்லாவும் பெற்றதில்லை!

இந்த மடலை வாசிக்கும் புறவின விசுவாசி கள் இரட்சிப்படைவதற்கு முன்னர் **மரித்தவர் களாகவும்** சீர்கெட்டவர்களாகவும், பேய்த் தனமானவர்களாகவும், கீழ்ப்படியாதவர்களாக வும் இருந்தார்கள் என்பதை முதல் இரண்டு வச னங்களில் பவுல் அவர்களுக்கு நினைவூட்டு கிறார். அவர்களுடைய **அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும்** அவர்கள் ஆவிக்குரிய நிலையில் **மரித்தவர்களாக** இருந்தார்கள். அதாவது அவர்கள் தேவனோடு உள்ள தொடர் பில் உயிரற்றவராயிருந்தார்கள். அவரோடு அவர்களுக்கு எவ்வித முக்கியமான தொடர்பும் இல்லை. தேவன் இல்லை என்றாற்போல் அவர் களது வாழ்க்கை இருந்தது. அந்த மரணத்திற்குக் காரணம் **அக்கிரமங்களும் பாவங்களுமே** ஆகும். அறிந்தோ அறியாமலோ செய்த எல்லா வகைத் தவறான செயல்களும் அல்லது தேவனுடைய நிறைவான நிலைக்குக் குறை

வான எண்ணங்கள், பேச்சுகள், செயல்கள் யாவும் **பாவங்களாகும்**. அறிந்த பிரமாணத்தை வெளிப்படையாக மீறுகிற பாவங்களே **அக்கிர மங்களாகும்**. அதனுடைய விரிவான பொருளில், தவறான நடவடிக்கைகளும், பெருந்தவறுகளும் அக்கிரமங்கள் ஆகும்.

**2:2** எபேசுப் பட்டணத்து விசுவாசிகள் முன்னர் சீர்கெட்டவர்களாகவும் இறந்து போனவர்களாக வும் இருந்து வந்தார்கள். அவர்கள் **இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி நடந்துவந்தார்கள்**. இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேடம் தரித்திருந்தார் கள். அந்நாட்களுக்குரிய பாவங்களில் அவர்கள் ஈடுபட்டுவந்தார்கள். இவ்வுலகம் ஓர் அச்சைக் கொண்டிருக்கிறது, அதனுடைய பக்தர்களை அது அந்த அச்சுக்குள் வார்த்து விடுகிறது. வஞ் சனை, ஒழுக்கக்கேடு, பக்தியின்மை, தன்னலம், வன்முறை, கலகம் இவை யாவுமே அந்த அச்சு. சுருங்கக்கூறின், அது சீர்கேட்டின் அச்சு. எபே சியர் அவ்வாறுதான் வாழ்ந்தார்கள்.

அதுமட்டுமின்றி அவர்களது நடத்தை பேய்த் தனமாயிருந்தது. அவர்கள் **ஆகாயத்து அதி காரப் பிரபுவின்** மாதிரியைப் பின்பற்றினார்கள். ஆகாய மண்டலத்தை ஆட்சி எல்லையாக்கிக் கொண்ட தீய ஆவிகளின் தலைவன் அவர்களை வழிநடத்தினான். "இப்பிரபஞ்சத்தின் தேவனா கிய" பிசாசுக்கு அவர்கள் மனமுவந்து கீழ்ப்படிந் தார்கள். மனமாற்றம் அடையாத மனிதர்கள் அவ்வப்போது விலங்குகளுக்கும் கீழாக இழி வாக நடந்துகொள்வதற்கான காரணத்தை இது விளக்கிக் கூறுகிறது.

இறுதியாக, அவர்கள் கீழ்ப்படியாதவர்களாக அதாவது **கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத் தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆவிக் கேற்றபடி** நடந்துவந்தார்கள். இரட்சிக்கப்படாத வர்கள் அனைவரும் **கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்** ஆவார்கள். அதாவது அவர்கள் தேவனுக்குக் **கீழ்ப்படியாத** குணத்தைக் கொண் டிருந்தார்கள். அவர்கள் சாத்தானால் வலிமை பெற்றவர்களாக, கர்த்தரைப் புறக்கணித்தவர் களாக, கனவீனப்படுத்தினவர்களாக, அவருக் குக் கீழ்ப்படியாதவர்களாக வாழ்ந்தார்கள்.

**2:3** நீங்கள் என்னும் பிரதிப்பெயர்ச்சொல்லி ருந்து நாம் என்னும் பிரதிப் பெயர்ச்சொல்லுக்குப் பவுல் மாறுகிறார். ஆகவே அவர் இப்பொழுது யூத விசுவாசிகளை முதன்மைப்படுத்திப் பேசுகிறார் என்பதை அது உணர்த்துகிறது (மனமாற்றம் அடைவதற்கு முன்னர் எந்தவொரு மனிதனைப் பொருத்தும் அவர் கூறுகிறவை உண்மையாகவே இருக்கின்றன). அவர்களை மூன்று சொற்கள் விளக்கிக் கூறுகின்றன: உலக வாழ்விற்குரியது, நேர்மையற்ற நிலை, குற்றவாளிகள் எனத் தீர்க் கப்பட்ட நிலை.

**அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற் காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்தோம்.** பவுலும் அவருடைய உடன் கிறிஸ்த வர்களும் புதிய பிறப்பு அடைவதற்கு முன்னர், கீழ்ப் படியாமையின் பிள்ளைகளோடுதான் நடந்தார் கள். அவர்களுடைய வாழ்க்கை *இவ்வுலகத்திற் குரியதாயிருந்தது*. அது அவர்களுடைய மாம்ச இச்சைகளையும் வேட்கைகளையும் நிறைவு செய்யக் கூடியதாகவே இருந்தது. பவுலும் தன்னு டைய வெளியரங்கமான வாழ்க்கையில் ஒழுக்கத் தோடு நடந்துகொண்டபோதும், அது உண்மை யில் எவ்வளவு தன்னலமுள்ளதாக இருந்தது என்பதை இப்பொழுது உணர்ந்தார். மேலும் அவர் தன் வாழ்க்கையில் செய்த எல்லாச் செயல் களைக் காட்டிலும், தன்னில்தானே அவர் மிகவும் கேடுற்றவராக இருந்தார்.

மனமாற்றம் பெறாத யூதர்கள் தங்களுடைய **மாம்சமும் மனதும் விரும்பினவற்றைச் செய்து** வந்தார்கள். இயற்கையான விருப்பங்களைக் கைவிட்ட நிலையையே இது குறிப்பிடுகிறது. நேர்மையான வேட்கைகள் தொடங்கி, பல்வேறு வகையான ஒழுக்கக்கேடுகள் மற்றும் நெறி பிறழ்ந்த செயல்கள் வரை யாவும் மாம்சமும் மனதும் விரும்பினவை என்பதையே சாரும்; இங்கே மிக மோசமான பாவங்களே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன என்றே தோன்றுகிறது. மேலும் பாவச் செயல்களோடு பவுல் இங்கு பாவ எண்ணங்களையும் குறிப்பிடுகிறார் என்பதைக் கவனியுங்கள். F. B. மேயர் எச்சரிக்கிறார்:

> மாம்சத்தின் விருப்பங்களில் ஈடுபடுகிறது எவ்வளவு கேடு உண்டாக்கக் கூடியதோ, அது போலவே மனதின் விருப்பங்களில் ஈடுபடு வதும் கேடு உண்டாக்கக் கூடியதே ஆகும். கற்பனை என்னும் வியக்கத்தக்க திறமை நமக்குக் கொடையாக வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலமாகத் தூய்மையற்ற கற்பனை யுலகில் திரிவது, வெறி கொண்ட குதிரையின் கழுத்தில் கடிவாளத்தைத் தூக்கி எறிவதற்கு ஒப்பாகும். அது எப்பொழுதும் இறுதிவரை தொடராமல் அமைவுறுகிறது. ஓர் ஆன்மா ஓடிச் சென்று ஒரு வனதேவதையோடு நடனம்

> புரிவதை எந்த மனிதனுடைய கண்களாலும் காணமுடியாது. அல்லது இச்சையென்னும் தீவுக்குள்ளாகச் சென்று, அந்தக் குறுக்கும் நெடுக்குமான சிக்கலான வழியில் குழப்ப மடைந்து வெளிவரமுடியாமல் தவிக்கிற நிலை யாகவும் அது காணப்படும். அருகில் இருப்ப வரால் கண்டுணரமுடியாதபடி அது போகிறதும் வருகிறதுமாயிருக்கிறது. பனிபோன்ற வெண் மையான தூய்மைக்குக் கொடுக்கப்படும் நன்மதிப்பை அது இழந்துபோவதுமில்லை. மணவாளனை எதிர்நோக்கியிருக்கும் கன்னிப் பெண்களுக்கு நடுவே விழித்திருக்கக்கூடிய நிலையையும் அது தொடர்ந்து பெற்றிருக் கிறது. ஆனால் இப்படிப்பட்ட வழக்கம் நியாயந் தீர்க்கப்படாமலோ, அறிக்கை செய்யப்படா மலோ இருக்குமென்றால், இவற்றைச் செய்கிற மனிதனிடத்தில் அது கீழ்ப்படியாமையின் பிள்ளை, கோபாக்கினையின் மகன் என்பதன் அடையாளமாகவே காணப்படும்.[10]

இரட்சிக்கப்படாத யூதர்களைப் பற்றி, பவுல் கூறிய கடைசி விளக்கமாக இது அமைந்திருக் கிறது: **சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளா கவே** அவர்கள் இருந்தார்கள். கோபம், பகைமை, கசப்பு, கடுஞ்சினம் ஆகியவை அவர்களுடைய இயல்பான மனநிலையின் வெளிப்பாடுகளாக இருந்தன என்பதே இதன் பொருளாகும். பிறரிடம் அவர்கள் இதனையே பகிர்ந்துகொண்டார்கள். அவர்கள் தேவனுடைய கோபாக்கினைக்கு உட்பட்டிருந்தார்கள் என்பது ஐயத்திற்கு இடமற்ற உண்மையாகும். அவர்கள் மரணத்திற்கும் ஆக் கினைத் தீர்ப்புக்கும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். 2 மற்றும் 3 ஆகிய வசனங்களில் மனிதனுடைய மூன்று பகைஞர் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனி யுங்கள்: உலகம் (வச. 2), பிசாசு (வச. 2), மாம்சம் (வச. 3).

**2:4 தேவனோ** என்னும் சொலில் ஆனால் என் னும் பொருளைத் தருகிற "ஓகாரம்", இலக்கியங் கள் எல்லாவற்றிலும் ஒரு பொருளிலிருந்து வேறு பொருளை நோக்கிக் கொண்டு செல்லும் சொற் களில் மிகவும் குறிப்பிடத்தக்கதும், நாவன்மை மிக்கதும், அகத்தூண்டுதல் உண்டுபண்ணக் கூடியதுமான சொல்லாகும். வியக்கத்தக்க மாற் றம் ஏற்பட்டுள்ளது என்பதை இச்சொல் சுட்டிக் காட்டுகிறது. மரணப்பள்ளத்தாக்கின் பேரழிவு, நம்பிக்கையின்மை ஆகியவற்றிலிருந்து, தேவனு டைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்தின் சொல்லிமுடியாத பெருமகிழ்ச்சிக்குள்ளாகக் செல்லுகிற மாற்றமே இது.

இந்த மாற்றத்தின் மூலகாரணர் **தேவனே** ஆவார். வேறு எவராலும் இதைச் செய்திருக்க முடியாது, வேறு எவரும் இதைச் செய்யவும் இல்லை.

ஆசிர்வதிக்கப்பட்ட தேவனின் ஒரு குண வியல்பு, **இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்** என்ப தாகும். நாம் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமோ, அவ்வாறு நடத்தப்படாததன் மூலம் அவர் நம் மிடத்தில் தமது இரக்கத்தைக் காட்டுகிறார் (சங். 103:10). "இந்த இரக்கத்தை அவர் ஆறாயிரம் ஆண்டுகளாகப் பயன்படுத்தி வருகிறார், கணக் கில் அடங்காதோர் இதன் பயனை அனுபவித்து வந்திருக்கிறார்கள், ஆயினும் இந்தச் சுரங்கத் தின் செல்வம் தீர்ந்துபோகவில்லை" என்று இயாடி என்பார் குறிப்பிடுகிறார்.[11]

அவர் தலையிடுவதன் காரணத்தை, **நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினா லே** என்னும் சொற்களில் காணலாம். அவரு டைய அன்பு மிகப்பெரியது, ஏனெனில் அவரே அதனுடைய ஆதாரமாயிருக்கிறார். ஒருவர் வழங்குகிற கொடையின் சிறப்பில், அன்னாரது சிறப்பு ஒளிவீசிப் பிரகாசிப்பது போல, தேவனு டைய மிக உன்னதமான மேன்மை எல்லாவற் றிற்கும் மேலான ஒளியைக் கூட்டித்தருகிறது. இந்தப் பிரபஞ்சத்தின் சர்வவல்ல அரசரால் அன்பு கூரப்படுவது மிக மேன்மையானதாகும். எடுத்துக் காட்டாக நம்முடன்வாழ் மனிதராலே அன்புகூரப் படுவதைக் காட்டிலும் தேவனாலே அன்புகூரப்படு வது மேலானது, ஏனெனில் அவர் அதற்காகக் கொடுத்த விலை மிகப்பெரியது. அன்பு கர்த்தரா கிய இயேசுவை அனுப்பியது, தேவனுடைய ஒரேபேறான குமாரனை அது அனுப்பியது, கல் வாரியில் கடும் வேதனையோடு அவர் மரணம் அடையும்படி அவ்வன்பு அவரை அனுப்பியது. தேவனுடைய அன்பு தனது ஆராய்ந்து முடியாத செல்வத்தைத் தமது மக்களின் மேல் பொழி வதால் அவ்வன்பு மிகப்பெரியதாகும்.

**2:5** அன்புகூரப்படுகிற மனிதர்களின் தகுதி யின்மை, இனிய இயல்பற்ற தன்மை ஆகியவற் றைக் காணும்போது தேவனுடைய அன்பு எவ் வளவு பெரிதென்று புலப்படுகிறது. நாம் **அக்கிர மங்களில் மரித்தவர்களாயிருந்தோம்.** நாம் தேவனுக்குப் பகைஞராயிருந்தோம். நாம் கதியற்றவர்களும் அவமதிக்கப்பட்டவர்களுமா

யிருந்தோம். இவை இப்படியிருந்தபோதிலும் அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தார்.

நம்மீது தேவன் பாராட்டிய அன்பின் நிமித்தமும், கிறிஸ்து நிறைவேற்றிய மீட்பின் திட்டத்தின் நிமித்தமும் நாம், (1) **கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட்டவர்களாகவும்,** (2) அவரோடுகூட எழுப்பப்பட்டவர்களாகவும் (3) அவரோடுகூட உட்காரவைக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறோம்.

நாம் அவரோடு இணைக்கப்பட்டிருப்பதன் விளைவாக, நாம் பெற்றிருக்கிற ஆவிக்குரிய தகுநிலையை இந்தச் சொற்றொடர்கள் விவரிக்கின்றன. அவர் நமக்காகச் செயலாற்றியது மட்டுமின்றி, நம்முடைய பிரதிநிதியாகவும் செயலாற்றினார்; அதாவது அவர் செய்தது *நாம் செய்தது போலாயிற்று*. ஆகவே அவர் இறந்தபோது நாமும் இறந்தோம். அவர் அடக்கம்பண்ணப்பட்டபோது நாமும் அடக்கம்பண்ணப்பட்டோம்.

அவர் உயிர்ப்பிக்கப்பட்டு, எழுப்பப்பட்டு, உன்னதங்களிலே உட்கார வைக்கப்பட்டபோது, நாமும் அவ்வாறே ஆனோம். அவருடைய தியாகச் செயலின் பயன்கள் யாவற்றையும், நாம் அவரோடு கொண்டிருக்கிற இணைப்பால் அனுபவிக்கிறவர்களானோம். அவரோடுகூட உயிர்ப்பிக்கப்பட்டோம் என்னும் சொற்றொடர், மனந்திரும்பிய யூதர்களும் மனந்திரும்பிய புறவினத்தாரும் புதிதான ஜீவனுள்ளவர்களாகக் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்னும் பொருளைத் தருகிறது. அவருக்கு உயிர்த்தெழுந்த வாழ்வைக் கொடுத்த அதே வல்லமை, நமக்கும் அதே வாழ்வைக் கொடுத்திருக்கிறது.

மேற்கூறியவற்றால் ஏற்பட்ட வியப்பு, பவுலின் சிந்தனை ஓட்டத்தைத் தடைசெய்து **கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்** என்று கூறி ஆச்சரியப்படச் செய்தது. ஆக்கினைத் தீர்ப்புக்கு உரியவர்களாயிருந்த மனிதர்களிடம் அதற்கு முற்றிலும் எதிர்மாறான முறையில் ஆழம்காண இயலாத அளவிற்கு தேவன் தமது தயவைக் காட்டியிருப்பதன் காரணமாக அவர் வியப்பில் மூழ்கிப்போனார். அதுவே **கிருபை**!

நாம் அடைய வேண்டிய தண்டனையை நாம் அடையாமலிருப்பது என்பதே இரக்கம் என்ற சொல்லின் பொருளாகும் என்று ஏற்கனவே கண்டோம். நாம் அடையக்கூடாத இரட்சிப்பை அடைவதே கிருபையாகும். இதனை நாம் நமது ஊதியமாகப் பெறாமல், இலவச ஈவாகப் பெறுகிறோம். மேலும் அதனைக் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவருக்கில்லை, அப்படிப்பட்டவரிடத்திலிருந்தே அது வருகிறது. திருவாளர் A. T. பியர்சன் கூறுகிறார்:

> இது தன்னார்வத்துடன் செயல்பட்ட அன்பின் கிரியையே ஆகும். இதனை தேவன் செய்ய வேண்டும் என்னும் கட்டாயம் எதுவுமில்லை. தேவனுடைய அன்பு விலங்கிடப்படவுமில்லை, வற்புறுத்தப்படவுமில்லை. அது தானாக மனமுவந்து வறியவர்களாகிய பாவிகளினிடத்தில் தனது அன்பை வெளிப்படுத்தியது. அத்தகைய அன்பே கிருபையின் மகிமையை நிலைநாட்டியது.[12]

**2:6,7** கிறிஸ்துவுடன் நாம் உயிர்ப்பிக்கப்பட்டது மட்டுமின்றி, நாம் அவரோடுகூட எழுப்பவும் பட்டோம். மரணமும் நியாயத்தீர்ப்பும் எவ்வாறு அவருக்குப் பின்புறமாக இருக்கின்றனவோ, அதுபோலவே அவை நமக்கும் பின்புறமாக இருக்கின்றன. நாம் கல்லறையின் மறுபக்கமாகிய உயிர்த்தெழுதலின் பக்கமாக நிற்கிறோம். அவரோடு நாம் இணைக்கப்பட்டதன் விளைவாக நாம் பெற்ற மகிமையான தகுதியே இது. தகுநிலையின் அடிப்படையில் இது உண்மையாக இருப்பதால், நாம் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தவர்களைப் போல வாழவேண்டும்.

நாம் பெற்றிருக்கிற தகுதி நிலையின் வேறொரு அம்சம் யாதெனில், நாம் **கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் அவரோடேகூட உட்கார** வைக்கப்பட்டிருக்கிறோம். நாம் அவருடன் இணைக்கப்பட்டிருப்பதன் காரணமாக, நாம் ஏற்கனவே இந்தப் பொல்லாத உலகத்தினின்று விடுவிக்கப்பட்டவர்களாகவும் **கிறிஸ்துவுக்குள்** மகிமையில் உட்கார வைக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகிறோம். இவ்விதமாகவே தேவன் நம்மைக் காண்கிறார். நமது விசுவாசத்தின் மூலமாக நாம் இவ்வுண்மையை அறிந்து போற்றுவோமானால், நமது வாழ்க்கையின் குணத்தை அது மாற்றும். அப்பொழுது நாம் தொடர்ந்து இவ்வுலகத்திற்குரியவர்களாக இருக்க மாட்டோம். மாறிப்போகிறவை, நிலையற்றவை ஆகியவற்றில் நாம் ஈடுபாடு கொள்ளவும் மாட்டோம். மாறாக, தேவனுடைய வலதுபாரிசத்தில் கிறிஸ்து வீற்றிருக்கும் மேலானவற்றைத் தேடுவோம் (கொலோ. 3:1).

5 மற்றும் 6 ஆகிய வசனங்களில் மிக முக்கியமானது கிறிஸ்து இயேசுவுக்குள் என்னும் சொற்

றொடரேயாகும். அவருக்குள்ளாகத்தானே நாம் உயிர்ப்பிக்கப்பட்டோம், எழுப்பப்பட்டோம், உட்காரவும் வைக்கப்பட்டிருக்கிறோம். அவர் நம்முடைய பிரதிநிதியாக இருக்கிறார்; ஆகவே அவருடைய வெற்றிகளும் அவருடைய தகுதியும் நம்முடையவை. "வியத்தகு சிந்தனை! ஒரு மகதலேனா மரியாளும், சிலுவையில் அறையப்பட்ட ஒரு கள்ளனும் தேவகுமாரனுடைய மகிமைக்குக் கூட்டாளிகள்" என்று வியந்து போற்றுகிறார் திரு ஜார்ஜ் வில்லியம்.

மாற்றத்தை உண்டுபண்ணக்கூடிய கிருபையின் அற்புதம், நித்திய வெளிப்பாட்டின் கருப்பொருளாகத் திகழ்கிறது. இந்தப் பாவ வனத்திற்குத் தமது குமாரனை அனுப்பியதில் தேவன் எவ்வளவு பெரிய விலையைச் செலுத்த வேண்டியதாயிருந்தது என்றும், நமது பாவங்களைக் கர்த்தர் சிலுவையைச் சுமக்க, அவர் எவ்வளவு பெரிய விலையைச் செலுத்த வேண்டியதாயிருந்தது என்றும் முடிவில்லா காலங்கள் முழுவதிலும் தேவன் பரலோக மக்கள் கூட்டத்திடம் வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார். இந்தப் பொருள் பற்றிய விளக்கம் முழுவதையும் சொல்லி முடிக்க இயலாது. இதனுடைய முக்கியத்துவத்தை விவரிக்கும்படி, மீண்டுமாகப் பவுல் சொற்களை அடுக்கிக் கொண்டே போகிறார்.

**அவர் நம்மிடத்தில் வைத்த தயவு**

**அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே அவருடைய கிருபை**

**அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே அவருடைய கிருபையின் ஐசுவரியம்**

**அவர் நம்மிடத்தில் வைத்த தயவினால் அவருடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியம்**

இவ்விதமாக தேவன் நித்தியம் முழுவதுமாக வெளிப்படுத்திக்கொண்டே இருப்பாரென்றால், நாமும் என்றென்றுமாக அவரிடம் கற்றுக் கொண்டே இருப்போம் என்னும் உண்மை இப்பொழுது தொடர்கிறது. பரலோகம் நம்முடைய பள்ளிக்கூடம். தேவன் நம்முடைய ஆசிரியர். அவருடைய **கிருபையே** நாம் கற்கும் பாடமாயிருக்கும். நாம் மாணவர்களாக இருப்போம். அந்தப் பள்ளியின் காலத்திட்டம் நித்தியம்.

நாம் பரலோகத்திற்குச் செல்லும் வேளையில் எல்லாவற்றையும் அறிந்துவிடுவோம் என்னும் கருத்திலிருந்து இவ்வுண்மை நம்மை விடுவிக்க வேண்டும். தேவன் ஒருவரே எல்லாவற்றையும் அறிந்தவர். ஒருக்காலும் நாம் அவருக்குச் சமமாக ஆகமாட்டோம்.[13]

இ.ந்து ஓர் ஆர்வமிக்க கேள்வியை எழுப்புகிறது. நாம் விண்ணகத்திற்குச் செல்லும்போது எந்த அளவுக்கு அறிந்திருப்போம்? மேலும் இது ஓர் ஆலோசனையைத் தருகிறது. நாம் விண்ணகப் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு ஆயத்தமாக இப்பொழுதே திருமறையில் சிறப்புநிலைக் கல்வியைப் பெற வேண்டும்.

**2:8** தொடர்ந்து வருகிற மூன்று வசனங்கள், நாம் திருமறையில் காண்கிறபடி, இரட்சிப்பிற்கான எளிய திட்டத்தைப் பற்றிய மிகத் தெளிவான வாசகத்தை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன.

தேவனுடைய **கிருபையில்தான்** எல்லாம் தொடங்குகிறது: அதனைத் தந்தருளும்படியான தொடக்கத்தை அவரே செய்கிறார். எவ்விதத் தகுதியும் அற்ற மனிதர்களுக்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமை மற்றும் அவர் நிறைவேற்றிய செயல் ஆகியவற்றின் அடிப்படையில் இரட்சிப்பு கொடுக்கப்படுகிறது.

அது தற்போதைய உடைமையாகக் கொடுக்கப்படுகிறது. இரட்சிக்கப்பட்டவர்களால் அதை அறியமுடியும். எபேசியருக்குப் பவுல் எழுதுகையில் **நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள்** என்று கூறினார். அவர் அதை அறிந்திருந்தார், அவர்களும் அதை அறிந்திருந்தார்கள்.

நித்திய வாழ்வாகிய அந்த ஈவை நாம் **விசுவாசத்தைக் கொண்டு** என்னும் வழியின் மூலமாகப் பெறுகிறோம். தான் இழந்து போனவன் என்றும், குற்றமுள்ள பாவி என்றும் கருதியவனாக ஒரு மனிதன், கர்த்தராகிய இயேசுவே இரட்சிப்புக்கான ஒரே நம்பிக்கையாக இருக்கிறார் என்று ஏற்றுக்கொள்வதே **விசுவாசம்** என்பதன் பொருளாகும். கர்த்தராகிய இயேசுவிடம் ஒருவன் தன்னை ஒப்புவிப்பதே உண்மையான இரட்சிப்பிற்கான விசுவாசமாகும்.

இரட்சிப்பை ஒரு மனிதனால் சம்பாதிக்க முடியும் அல்லது ஒருவன் அதைப் பெறுவதற்குத் தகுதியுடையவனாக இருக்கிறான் என்னும் கருத்து, **இது உங்களால் உண்டானதல்ல** என்னும் சொற்களால் தவறென்று தகர்த்து எறியப்படுகிறது. இறந்து போனவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்கள் தண்டனை பெறுவதற்கு மட்டுமே தகுதியானவர்கள்.

**இது தேவனுடைய ஈவு.** இலவசமாகவும் எந்த நிபந்தனை இன்றியும் கொடுக்கப்படுகிற அன்ப

ளிப்பே ஈவு என்பதில் ஐயமெதுவுமில்லை. இந்த ஒரே அடிப்படையில்தான் தேவன் இரட்சிப்பைத் தந்தருளுகிறார். **கிருபையினாலே, விசுவாசத்தைக்கொண்டு** தரப்படுவதே **தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பு.** எங்குமுள்ள எல்லா மனிதர்களுக்கும் இது தரப்படக்கூடியதாயிருக்கிறது.

**2:9** இது **கிரியைகளினால் உண்டானதல்ல.** அதாவது, பரிசைப் பெறுவதற்கான தகுதி வாய்ந்தது என்று சொல்லப்படக்கூடிய செயலைச் செய்வதன் மூலமாக ஒருவன் சம்பாதிக்கக்கூடியதல்ல இது. இதனை எதன் மூலமாகவும் சம்பாதிக்க முடியாது, எடுத்துக்காட்டாக:

1. உறுதிப்படுத்துதல் என்னும் தீக்கைச் சடங்கு
2. ஞானஸ்நானம்
3. சபை உறுப்பினராக ஏற்றுக்கொள்ளப் படுதல்
4. சபைக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்
5. இராப்போஜனம்
6. பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்க முயற்சி செய்தல்
7. மலைப்பிரசங்கத்திற்கு உகந்த முறையில் வாழ்க்கை நடத்துதல்
8. தானதர்மம் செய்தல்
9. நல்ல அயலகத்தானாக நடந்துகொள்ளுதல்
10. ஒழுக்க நெறியோடும், மதிக்கத்தக்க வகையிலும் நடந்துகொள்ளுதல்

மனிதர்கள் **கிரியைகளினால்** இரட்சிக்கப்படுவதில்லை. அவர்கள் விசுவாசத்தோடு **கிரியைகளைச் *சேர்ப்பதாலும்*** இரட்சிக்கப்படுவதில்லை. அவர்கள் **விசுவாசத்தின்** மூலமாக ***மட்டுமே*** இரட்சிக்கப்படுகிறார்கள். எந்த வகையைச் சேர்ந்த கிரியையானாலும் அல்லது எந்த அளவு கிரியையானாலும், நித்திய வாழ்வை அடைவதற்கான உபாயமாக அதனை நீங்கள் சேர்க்கும் அத்தருணத்திலேயே இரட்சிப்பானது கிருபையினால் அல்ல என்றாகிவிடும் (ரோமர் 11:6). இவ்வாறு மனிதர்களுடைய கிரியைகள் விலக்கப்பட்டிருப்பதற்கான ஒரு காரணம், மனிதர்களுடைய பெருமை பாராட்டுதலைத் தவிர்ப்பதே ஆகும். ஒருவன் தனது கிரியைகளால் இரட்சிக்கப்பட முடியுமென்றால், அவன் தேவனுக்கு முன்பாக மேன்மைபாராட்ட இடம் உண்டாகுமே. இது முடியாத செயலாகும் (ரோமர் 3:27).

ஒருவன் தன்னுடைய சொந்த நற்கிரியையினால் இரட்சிப்பைப் பெற முடியுமென்றால், கிறிஸ்து மரணமடைந்த செயல் தேவையற்றதாகிவிடுமே (கலா. 2:21). வேறு எந்த வழியிலும், குற்றமுள்ள பாவிகள் இரட்சிப்படைய முடியாது என்னும் காரணத்தினால்தான் கிறிஸ்து மரணமடைந்தார் என்று நாம் அறிவோம்.

ஒருவன் தன்னுடைய சொந்த நற்கிரியையினால் இரட்சிப்பைப் பெற முடியுமென்றால், அவனே அவனுடைய இரட்சகனாக விளங்குவான், மேலும் அவன் தன்னைத்தானே தொழுதுகொள்ள வேண்டும். ஆனால் இது தேவன் தடைசெய்துள்ள சிலை வணக்கமாகும் (யாத். 20:3).

ஒருவன் கிறிஸ்துவினிடத்திலே கொண்டிருக்கிற விசுவாசம், மற்றும் அவனுடைய சொந்த நற்கிரியைகள் ஆகியவற்றின் மூலமாக இரட்சிப்பைப் பெறமுடியுமென்றால், அங்கே இரண்டு இரட்சகர்கள் - இயேசு மற்றும் அந்தப் பாவி - என்னும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற நிலை ஏற்பட்டுவிடுமே. அவ்வாறான சூழ்நிலையில் கிறிஸ்து இரட்சகருக்குரிய மகிமையை வேறு ஒருவரோடு பகிர்ந்துகொள்ள நேரிடுமே. இதனை அவர் அனுமதிக்க மாட்டார் (ஏசா. 42:8).

இறுதியாக, ஒருவன் தனது இரட்சிப்பிற்காக ஒரு பங்கைச் செலுத்தும்படி கிரியைகள் புரிந்து அதனைப் பெறமுடியுமென்றால், தேவன் அதனை அவனுக்குத் தரும்படி கடனாளியாகிறார். இதுவும் நடைமுறையில் சாத்தியமற்றது. தேவன் ஒருவருக்கும் கடனாளியாக இருக்க முடியாது (ரோமர் 11:35).

கிரியைகளுக்கு எதிர்மாறாக, மேன்மை பாராட்டுதலை விசுவாசம் புறம்பே தள்ளிவிடுகிறது (ரோமர் 3:27). ஏனெனில் அது தகுதியினால் பெறுவதன்று. கர்த்தரை ஒருவன் விசுவாசித்ததற்காகப் பெருமைபாராட்ட முடியாது. அவரிடத்தில் விசுவாசம்கொள்வது ஒரு மனிதன் செய்யக்கூடிய மிகவும் தெளிந்த அறிவுள்ளதும், பகுத்தறிவுள்ளதும், விவேகம் நிறைந்ததுமான செயலாகும். தன்னைப் படைத்தவரையும், தன்னுடைய மீட்பரையும் நம்புவதே தருக்கரீதியானது, பகுத்தறிவுக்கு உகந்தது. நாம் அவரை நம்பவில்லையென்றால், எவரை நம்பமுடியும்?

**2:10** நாம் **தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்** என்பதே இரட்சிப்பின் விளைவாக இருக்கிறது - இது தேவனுடைய கைவேலை, நம்முடைய செயல் அல்ல. மறுபடியும் பிறந்த விசுவாசி

தேவனுடைய சிறந்த வேலைப்பாடாக இருக் கிறான். இந்தக் கலைப்பொருளைச் செய்வதற்கு அவர் பயன்படுத்திய மூலப்பொருட்களை எண் ணிப்பார்க்கும்போது அவருடைய சாதனையின் செயற்கரிய தன்மை புலப்படும். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவை ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5:17) என்று சொல்லப்பட்டிருக்கிறபடி உண்மையா கவே இந்தக் கலைப்பொருள் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட புதிய படைப்பேயொழிய வேறல்ல.

இந்தப் புதிய படைப்பின் நோக்கம் **நற்கிரியை களைச் செய்கிறதற்கு** என்னும் சொற்களாலே அறியப்படும். நாம் **நற்கிரியைகளால்** இரட்சிக் கப்படவில்லை என்பது எவ்வாறு உண்மையோ, அதுபோலவே நாம் நற்கிரியைகளைச் செய்கிற தற்காக இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதும் உண்மையே. **நற்கிரியைகள் வேர் அல்ல,** அது கனியேயாகும். *நாம் இரட்சிக்கப்படும்படி கிரியைகளைச் செய்கிறதில்லை, மாறாக நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதாலேயே நற்கிரியை களைச் செய்கிறோம்.*

சத்தியத்தின் இந்தப் பண்புநலனே யாக்கோபு 2:14-26 இல் வலியுறுத்தப்பட்டுள்ளது. "கிரியை களில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது" என்று யாக்கோபு கூறுகிறபோது, விசுவாசத்தோடு கிரியையையும் சேர்ப்பதாலே இரட்சிப்பு உண்டா கிறது என்னும் பொருளில் அவர் அவ்வாறு கூற வில்லை; மாறாக, அத்தகைய விசுவாசம் **நற்கிரி யைகளைச்** செய்யும்படியான வாழ்வை ஏற் படுத்துகிறது. நம்முடைய விசுவாசத்தின் உண் மைத் தன்மையை நற்கிரியைகள் மெய்ப்பிக் கின்றன. **நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப் பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்** என்று பவுல் முழுமனதோடு ஒப்புக்கொள்கிறார்.

தேவனுடைய வரிசைமுறை இதுவே:

விசுவாசம்→இரட்சிப்பு→ நற்கிரியை →பரிசு

விசுவாசம் இரட்சிப்பினிடமாய் வழிநடத்தும். இரட்சிப்பு **நற்கிரியைகளை** விளைவிக்கும். நற்கிரியைகளுக்கான பரிசை அவர் தருவார்.

ஆனால் கேள்வி ஒன்று எழுகிறது: நான் எப்படிப்பட்ட நற்கிரியைகளைச் செய்யவேண்டு மென்று எதிர்பார்க்கப்படுகிறது? பவுல் விடை பகர்கிறார், **நற்கிரியைகள், அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.** ஒவ்வொரு வாழ்வின் வரைபடமும் தேவனிடத்தில் இருக் கிறது என்றும் இதனைச் சொல்லலாம். நம்மு டைய இரட்சிப்புக்கு முன்னர் நம்முடைய ஆவிக் குரிய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்று அவர் ஒரு வரைபடத்தை வரைகிறார். நம்மைக் குறித்த அவருடைய சித்தத்தை நாம் அறிந்து அதற்குக் கீழ்ப்படிவதே நமது பொறுப்பாகும். நம்முடைய வாழ்க்கைக் கான திட்டத்தை நாம் தீட்ட வேண்டிய அவசிய மில்லை. நமக்காக அவர் வரைந்த வாழ்க்கைத் திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்வதே தகும். இது நம்மை எரிச்சலிலிருந்தும் கடுஞ்சீற்றத்திலிருந் தும் விடுவித்து, நம்முடைய வாழ்க்கையானது அவருக்கு மிக அதிகமான மகிமையைக் கொண்டுவரும்படியும், பிறருக்கு மிக அதிகமான ஆசிர்வாதத்தைக் கொண்டுவரும்படியும், நாம் மிகப்பெரிய பரிசுப் பொருளைப் பெறும்படியாக வும் அமையவும் இது உறுதிதரும்.

நாம் என்ன நற்கிரியைகளைச் செய்ய வேண்டுமென்று நம் ஒவ்வொருவருடைய தனிப் பட்ட வாழ்க்கையைக் குறித்தும் தேவன் திட்ட மிட்டிருக்கிறார் என்பதை அறிய:

(1) நம்முடைய வாழ்க்கையில் பாவம் இருக் கிறது என்பதை அறிந்தவுடன் அதை அறிக்கை யிட்டு விட்டுவிடவேண்டும்; (2) நாம் இடைவிடா மலும் எவ்வித நிபந்தனையின்றியும் நம்மை அவருக்கு ஒப்புவிக்கவேண்டும்; (3) அவருடைய சித்தத்தை அறியும்படி தேவனுடைய திருமறை யைப் படிக்க வேண்டும், மேலும் அவர் என்ன சொல்லுகிறாரோ அதைச் செய்ய வேண்டும்; (4) ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் நேரத்தைச் செலவிடவேண்டும்; (5) ஊழியம் செய்வதற்கான வாய்ப்பு வரும்போது அதைப்பற்றிக்கொள்ள வேண்டும்; (6) மற்ற கிறிஸ்தவர்களோடு ஐக்கி யத்தை வளர்த்துக்கொண்டவர்களாக அவர்களு டைய ஆலோசனைகளுக்கு இடங்கொடுக்க வேண்டும். தேவன் நம்மை நற்கிரியைகளைச் செய்வதற்கென்று ஆயத்தப்படுத்துகிறார். நாம் நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக அவர் நற் கிரியைகளையும் ஆயத்தப்படுத்துகிறார். பின்னர் நாம் அவற்றைச் செய்யும்போது அவர் நமக்குப் பரிசுகளை வழங்குகிறார். அவருடைய கிருபை எத்தகைய மேன்மையுடையதாக இருக்கிறது!

### உ. விசுவாசிக்கிற யூதரும் புறவினத்தாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இணைதல் [2:11-22]

புறவினத்தவரிலும் யூதரிலும் ஒவ்வொரு தனிமனிதனும் இரட்சிப்படைவதன் வரலாற்றை விளக்கும்பொருட்டு, பின்னோக்கிச் சென்ற வராகப் பவுல் அதனை இரண்டாம் அதிகாரத்தின் முதல் பகுதியில், விவரிக்கிறார். இப்பொழுது அவர்களுக்கிடையே நிலவிய தேசிய வேறுபாடு கள் நீக்கப்பட்டிருப்பதையும், அவர்கள் கிறிஸ்து வுக்குள்ளாக ஒன்றிணைக்கப்பட்டிருப்பதையும், அவர்கள் சபையாக உருவாக்கப்பட்டிருப்பதை யும், கர்த்தருடைய பரிசுத்த ஆலயமாக விளங்கு வதையும் குறித்த விவரங்களை நோக்கி அவர் முன்செல்கிறார்.

**2:11** தன்னுடைய வாசகர்கள் தங்களுடைய மனமாற்றத்திற்கு முன்பு பிறப்பினால் புறவினத்த வராக இருந்தார்கள் என்றும், அதன் நிமித்தம் யூத மக்களாலே புறக்கணிக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள் என்றும் பவுல் அவர்களுக்கு 11 மற்றும் 12 ஆகிய வசனங்களில் நினைவூட்டு கிறார். முதலாவது, அவர்கள் இழிவாகக் கருதப் பட்டார்கள். அவர்களை யூதமக்கள் விருத்த சேதனமில்லாதவர்கள் என்று அழைத்ததாலே இது அறியப்படுகிறது. அதாவது புறவினத்தார் தங்களுடைய சரீரத்தில் அறுவைச் சிகிச்சையின் அடையாளத்தைப் பெறவில்லை, ஆனால் இஸ்ர வேலரோ தேவனுடைய உடன்படிக்கையின் மக்கள் என்பதற்கான அந்த அடையாளத்தைப் பெற்றிருந்தார்கள் என்பதும் இதன் பொருளாகும். "விருத்தசேதனமில்லாதவர்கள்" என்னும் பெயர் இன அடிப்படையிலான அவமரியாதைச் சொல் லாகும். இந்த நாட்களிலும்கூட சில இனத்தார் இழிவாகக் கருதப்பட்டு, அவ்விதமாகப் பிறர் அவர்களுடைய இனத்தின் பெயரைச் சொல்லி அழைக்கிறார்கள். புறவினத்தானாகிய கோலி யாத்தை, "ஜீவனுள்ள தேவனுடைய சேனை களை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம்" என்று தாவீது குறிப்பிட்டபோது அத்தகையதொரு வேதனை யளிக்கும் பொருளை அச்சொல் கொண்டிருந்தது என்பதை உணருகிறோம் (1 சாமு. 17:26).

இதற்கு மாறாக, யூதர்கள் தங்களைக் குறித்து **விருத்தசேதனமுடையவர்கள்** என்று சொல்லிக் கொண்டார்கள். இந்தப் பெயரில் அவர்கள் பெருமை கொண்டிருந்தார்கள். தேவனாலே தெரிந்துகொள்ளப்பட்ட பூமிக்குரிய மக்கள் என்று அவர்கள் அறியப்படவும், புறவினத்தாரிடத் திலிருந்து பிரிந்து வாழ்வதற்கும் இந்தப்பெயர் காரணமாயிற்று. இவ்வாறு அவர்கள் தங்களைக் குறித்து மேன்மைபாராட்டிக்கொள்வதை மறுத் துரைக்கும் நோக்கத்தோடு பவுல் இதனை **மாம் சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்த சேதனம்** என்று குறிப்பிடுகிறார். இது வெறுமனே சரீரப்பிரகாரமானதுதான். அவர்கள் தேவனோடு உடன்படிக்கை செய்த மக்கள் என்று அறியப்பட வெளியரங்கமான அடையாளத்தைப் பெற்றிருந் தார்களேயொழிய, உள்ளான வகையில் கர்த்தரி டத்தில் விசுவாசம் வைத்திருந்ததற்கான எந்த அடையாளத்தையும் பெற்றிருக்கவில்லை. "ஆத லால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம் பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேத னமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகா மல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்ட வனுக்குரிய புகழ்ச்சி மனிதராலே அல்ல, தேவ னாலே உண்டாயிருக்கிறது" (ரோமர் 2:28,29).

யூதர்கள் தங்களுடைய இருதயத்தில் விருத்த சேதனத்தைப் பெற்றிருந்தார்களோ இல்லையோ, அவர்களோ உயர்ந்த மனிதர்கள் என்றும், புற வினத்தாரோ இழிவானவர்கள் என்றும் அவர்கள் எண்ணிக்கொண்டார்கள் என்னும் குறிப்பைப் பதினோராவது வசனம் தருகிறது. இந்த உலகத் திலே நிலவிவந்த இன மற்றும் சமய வேறுபாடு கள் எல்லாவற்றிலும் மிகப்பெரிய அளவில் இருந்தது யூதர்களுக்கும் புறவினத்தாருக்கும் இடையே இருந்த வேறுபாடே ஆகும். தேவனுக்கு முன்பாக மிகப்பெரிய சிறப்புரிமையை யூதர்கள் அனுபவித்துவந்தார்கள் (ரோமர் 9:4,5). புறவினத் தானோ அந்நியனாக இருந்தான். அவன் மெய் யான தேவனை நியமிக்கப்பட்ட முறையில் தொழுதுகொள்ள வேண்டுமென்றால், அவன் உண்மையாகவே யூத மதத்தைத் தழுவ வேண் டும் (ராகாப், ரூத் ஆகியோரை ஒப்பிட்டுக் காண்க). எருசலேம் நகரில் இருந்த தேவாலயம் ஒன்றே தேவன் தமது திருப்பெயரைத் தாங்கும்படி இவ் வுலகில் நியமித்த இடமாகும், மனிதர்கள் அவரை நெருங்கிச் சேர்வதற்கான இடம் அது ஒன்றுதான். புறவினத்தார் அந்த ஆலயத்தின் உட்பிரகாரத் திற்குள் அனுமதிக்கப்படவில்லை. மீறியவர்கள் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தீரு, சீதோன் பகுதிகளிலிருந்து வந்த புற வினப் பெண்மணி ஒருத்தி கர்த்தராகிய இயேசு வோடு உரையாடிய வேளையில், கர்த்தர் அவ ளைச் சோதிக்கும்படி, யூதர்களை வீட்டில்

வசிக்கும் பிள்ளைகளாகவும், புறவினத்தாரை மேஜையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகளாகவும் வருணித்தார். தான் ஒரு சிறிய நாய்க்குட்டியே என்று ஒப்புக்கொண்ட அந்தப் பெண், பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகள் தனக்கு வேண்டும் என்று விண்ணப்பித்தாள். அவளுடைய விசுவாசத்திற்கான பரிசை அவள் பெற்றாள் என்பதைக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை (மாற்கு 7:24-30). இங்கு எபேசியர் 2:11 -இல் தனது வாசகர்கள் முன்னர் புறவினத்தாராக இருந்தார்கள் என்றும், ஆகவே அவர்கள் இழிவாகக் கருதப்பட்டவர்கள் என்றும் பவுல் அவர்களுக்கு நினைவூட்டுகிறார்.

**2:12** புறவினத்தவர் **கிறிஸ்துவைச் சேராத வர்களாகவும்** இருந்தார்கள்: அவர்களுக்கு மேசியா இல்லை. இஸ்ரவேல் நாட்டாருக்கே அவர் வாக்குறுதி பண்ணப்பட்டிருந்தார். மேசியாவின் ஊழியத்தின் மூலமாக எல்லா இனத்தாருக்கும் ஆசிர்வாதம் சென்றடையும் என்று முன்னுரைக்கப்பட்ட போதிலும் (ஏசாயா 11:10; 60:3), அவர் ஒரு யூதராகப் பிறந்து முதலில், "காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" ஊழியம் செய்ய வேண்டியதாக இருந்தது (மத். 15:24). மேசியாவைச் சேராதவர்களாக இருந்தது மட்டுமின்றி, புறவினத்தார் **இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களாகவும்** இருந்தார்கள். புறம்பானவன் என்று சொல்லும்போது அந்த நாட்டைச் "சேராதவன்" என்று பொருள்படும். அவன் அந்நியனும் பரதேசியுமாக இருக்கிறான், குடிமகனுக்குரிய எந்த உரிமையும், சிறப்புகளும் அவனுக்கு இலை. இஸ்ரவேல் சமுதாயத்தைப் பொருத்தமட்டில், புறவினத்தார் அந்தச் சமுதாயத்திற்கு வெளியே இருந்தவர்கள், வெளியிலிருந்து உள்ளே பார்க்க மட்டுமே முடியும். மேலும் அவர்கள் **வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியராக** இருந்தார்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தாவீது, சாலொமோன் போன்ற மனிதர்களின் மூலமாக தேவன் **இஸ்ரவேல்** தேசத்தோடு **உடன்படிக்கைகள்** செய்திருந்தார். இந்த உடன்படிக்கைகள் யூதர்களுக்கு ஆசிர்வாதங்களை வாக்குரைத்திருந்தன. நடைமுறையில் பார்க்கும்போது எல்லாப் பயன்களையும் அடைய முடியாதபடி புறவினத்தார் வேலிக்கு அப்பால் இருந்தார்கள். அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்னும் அடிப்படையிலும், தனிநபர் என்னும் அடிப்படையிலும் **நம்பிக்கை இல்லாதவர்களாகவே** இருந்தார்கள். நாட்டின் அடிப்படையில் காணும்போது, அவர்களுடைய நிலம், அரசாங்கம், மக்கள் ஆகியவை நிலைத்திருக்கும் என்ற உறுதி அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. தனிப்பட்ட நிலையில் அவர்களுடைய வெளித்தோற்றம் வறண்டு போயிருந்தது. அவர்களுக்குக் கல்லறையைத் தவிர வேறு நம்பிக்கை எதுவுமில்லை. அவர்களுடைய எதிர்காலம் நட்சத்திரம் இல்லாத இரவு போன்றது என்று ஒருவர் கூறினார். கடைசியாக, அவர்கள் **இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தார்கள்.** அவர்கள் நாத்திகர்களாக இருந்தார்கள் என்பதல்ல இதன் பொருள். அவர்கள் மரத்தினாலும் கல்லினாலும் செய்யப்பட்ட தங்களுக்குச் சொந்தமான தேவர்களைக் கொண்டிருந்தார்கள். அவற்றையே அவர்கள் வணங்கினார்கள். ஆனால் ஒரே ஒரு மெய்யான தேவனாகிய கர்த்தரை அவர்கள் அறிந்திருக்கவில்லை. தேவனற்ற, தேவனுக்கு விரோதமான உலகில் அவர்கள் தேவனற்ற மனிதர்களாக இருந்தார்கள்.

**2:13 (ஆனால்) இப்பொழுது** என்னும் சொற்கள் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குச் சடுதியில் மாற்றம் ஏற்படுகிறதைக் குறிப்பிடுகிறது (2:4 -ஆம் வசனத்தோடு ஒப்பிடுக). தொலைதூரத்திலிருந்தும், புறம்பாக்கப்பட்ட நிலையிலிருந்தும் புறவினத்தாராகிய எபேசியர் விடுவிக்கப்பட்டு, தேவனுக்கு மிக நெருக்கமான இடத்திற்கு உயர்த்தப்பட்டார்கள். அவர்கள் மனந்திரும்பிய நேரத்தில் இந்த மேன்மையை அடைந்தார்கள். அவர்கள் இரட்சகரை விசுவாசித்தபோது, தேவன் அவர்களைக் **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக** வைத்து, அந்தப் பிரியமானவருக்குள் ஏற்றுக் கொண்டார். அதுமுதல் கிறிஸ்து தேவனுக்கு எப்படி நெருக்கமானவராக இருக்கிறாரோ, அது போலவே அவர்களும் தேவனுக்கு நெருக்கமானவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் **கிறிஸ்து இயேசுவுக்குள்** இருக்கிறார்கள். இத்தகைய வியப்புமிகு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான விலை **கிறிஸ்துவின் இரத்தமேயாகும்.** தேவனுக்குச் சமீபமாக வந்து, தனிச்சிறப்பு வாய்ந்த உரிமைகளைப் புறவினப் பாவிகள் பெற்றிட வேண்டுமெனில், முதலாவது அவர்களுடைய பாவங்களிலிருந்து கழுவப்படவேண்டும். **கிறிஸ்து** கல்வாரியில் சிந்திய **இரத்தம்** மட்டுமே இதனைச் செய்ய முடியும். விசுவாசம் என்னும் குறிப்பிட்டதொரு செயலின் மூலமாக எபேசியர் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபோது, அவருடைய விலைமதிப்புள்ள இரத்தத்தின் கழுவும் தன்மையின் மதிப்பு அவர்களுடைய கணக்கில் வரவுவைக்கப்பட்டது.

இயேசுகிறிஸ்து அவர்களை தேவனுக்குச் **சமீபமாகக்** கொண்டுவந்தது மட்டுமின்றி, அவர்களை ஒரு புதிய சமுதாயமாக உருவாக்கினார். அந்தச் சமுதாயத்தில் யூதருக்கும் புறவினத்தாருக்கும் இடையே தொன்றுதொட்டு நிலவி வந்த பகை நீக்கப்பட்டுவிட்டது. புதிய ஏற்பாட்டின் காலம் தொடங்கும்வரை, இவ்வுலக மக்கள் யூதர் என்றும் புறவினத்தார் என்றும் இரு வகுப்பாராகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். நமது இரட்சகர் மூன்றாவது வகுப்பாரை அறிமுகப்படுத்தியிருக்கிறார். அதுவே தேவனுடைய சபை (1 கொரி. 10:32). தொடர்ந்து வருகிற வசனங்களில் எவ்வாறு விசுவாசிக்கிற யூதர்களும் விசுவாசிக்கிற புறவினத்தாரும் கிறிஸ்துவுக்குள்ளாக ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், எவ்வாறு அவர்கள் இந்தப் புதிய சமுதாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் நம்மால் காணவியலும். அங்கே யூதனென்றோ புறவினத்தானென்றோ எவ்வித வேறுபாடும் இல்லை.

**2:14 எப்படியெனில் அவரே நம்முடைய சமாதான காரணர்.** "அவர் சமாதானத்தை உண்டாக்கினார்" என்று சொல்லப்படவில்லை என்பதைக் கவனியுங்கள். அதுவும் ஐயத்திற்கு இடமற்றபடி உண்மையாக இருக்கிறது என்பதை நாம் அடுத்த வசனத்தில் காணவிருக்கிறோம். இங்கே **அவர்தாமே நம்முடைய சமாதானமாக** இருக்கிறார் என்பதே சொல்லப்பட்டுள்ள உண்மை. ஆனால் எவ்வாறு ஒரு நபர் சமாதானமாக இருக்க முடியும்? (தமிழில் அவரே நம்முடைய சமாதானம் என்று சொல்லப்படாமல் சமாதான காரணர் என்று சொல்லப்பட்டுள்ளது.)

இது இவ்வாறு நிகழ்கிறது: யூதன் ஒருவன் கர்த்தராகிய இயேசுவை விசுவாசிக்கும்போது, தன்னுடைய தேசிய தனித்தன்மையை இழந்து போகிறான்; அதுமுதல் அவன் "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறான். அதுபோலவே புறவினத்தவன் ஒருவன் இரட்சகரை ஏற்றுக்கொள்ளும்போது, அவன் தொடர்ந்து புறவினத்தானாக இருப்பதில்லை; அதுமுதல் அவன் "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறான். ஒரு காலத்தில் பகையினால் பிரிக்கப்பட்டிருந்த விசுவாசியான யூதனும் விசுவாசியான புறவினத்தானும் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கப்பட்டுவிட்டார்கள். கிறிஸ்துவோடு அவர்கள் இணைக்கப்பட்டிருப்பதன் காரணத்தால் அவர்கள் ஒருவரோடொருவர் இணைக்கப்படுவது இன்றியமையாததாக ஆயிற்று. ஆகவே அந்த மனிதர், மீகா முன்னுரைத்தது போல **சமாதானமாக** இருக்கிறார் (மீகா 5:5).

அவர் நம்முடைய சமாதானமாக இருந்து, செய்கிற செயலின் நோக்கம் 14-18 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

மேலே நாம் விளக்கிக்கூறியுள்ள, ஒன்றாக இணைக்கும் செயல் முதலாவது வேலையாகும். **இருதிறத்தாரையும் ஒன்றாக** இணைத்தார். அதாவது, விசுவாசிக்கும் யூதரும் விசுவாசிக்கும் புறவினத்தாரும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளனர். இனிமேல் யூதரென்றும் புறவினத்தாரென்றும் இல்லை, மாறாக அவர்கள் கிறிஸ்தவர்கள். நாம் மிகச் சரியாகக் குறிப்பிடவேண்டுமென்றால் யூதக்கிறிஸ்தவர்கள் புறவினக் கிறிஸ்தவர்கள் என்று வேறுபடுத்திக் கூறுவது சரியல்ல. இவர் இந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது போன்ற மாம்சீக வேறுபாடுகள் அனைத்தும் சிலுவையில் அறையப்பட்டுவிட்டன.

கிறிஸ்துவின் இரண்டாம் கட்ட வேலை தகர்க்கும் வேலை என்று அழைக்கப்படுகிறது. **பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரை அவர் தகர்த்தார்.** அது உண்மையான சுவர் அல்லவென்பது நாம் அறிந்ததே. ஆனால், இஸ்ரவேல் மக்களை மற்ற இனத்தாரிடத்திலிருந்து பிரித்துவைத்த மோசேயின் நியாயப்பிரமாணத்தில் இருந்த கட்டளைகள், கண்ணுக்குப் புலப்படாத தடைச்சுவராக விளங்கியது. தேவாலயச் சுற்றுப் பகுதியில் புறவினத்தாரின் பிரகாரம் என்று அழைக்கப்பட்ட இடம் வரைக்கும் யூதரல்லாதோர் அனுமதிக்கப்பட்டார்கள். அதற்கு அப்பால் அவர்கள் செல்லாதபடி சுவர் ஒன்று இருந்தது. அந்தச் சுவர் இதனை உருவகப்படுத்திக் காட்டியது. அந்தச் சுவரில் தொங்கிய எச்சரிப்புப் பலகைகளில் இவ்வித வாசகங்களைக் காணமுடியும்: "வேறு இனத்தைச் சேர்ந்தவர் எவரும் இந்தத் தடைச்சுவருக்கு உள்ளே இருக்கும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லக்கூடாது. எவரொருவர் இத்தடையை மீறினவராகப் பிடிக்கப்படுவாரோ அவர் மரணத்தைச் சந்திக்க நேரிடும். அதற்கு அவரே பொறுப்பாளி."

**2:15** கிறிஸ்து ஆற்றிய வேலையில் மூன்றாவது கட்டம் யூதருக்கும் புறவினத்தாருக்கும் இடையே உள்ள குமுறிக்கொண்டிருக்கும் **பகையும்,** மேலும் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள பகையும் நீக்கப்பட்ட செயல்களேயாகும். **சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணமே** இந்தப் பகைக்குக் குற்றமில்லாத காரணம் என்று பவுல் குறிப்பிடுகிறார். மோசேயின் நியாயப்பிரமாணம் ஒரே ஒரு சட்டத்தொகுப்பாகும்.

ஆனாலும் அது பல பகுதிகள் கொண்டதும், சம் பிரதாயங்கள் நிறைந்ததுமான கட்டளைகளைக் கொண்டுள்ளது. அவற்றில் வாழ்க்கையின் பல அம்சங்களோடு தொடர்புடைய சமயக்கொள்கை களும் கட்டளைகளும் இடம்பெற்றுள்ளன. வாழ்க் கையின் எல்லா அம்சங்களும் அவற்றில் அடங் கும் என்று சொல்ல முடியாது. நியாயப்பிரமாணம், பரிசுத்தமாயும், நீதியாயும், நன்மையாயும் இருக் கிறது (ரோமர் 7:12). ஆனால் மனிதனுடைய பாவம் நிறைந்த இயல்பு பிறரிடம் பகைமை கொள்வதற்கு நியாயப்பிரமாணத்தைப் பயன் படுத்திக்கொண்டது. நியாயப்பிரமாணம் இஸ்ர வேல் மக்களை இவ்வுலகத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்று கருதிய தால், யூதர்களில் பலர், அகந்தை கொண்டவர் களாகவும் புறவினமக்களை இழிவாகக் கருது பவர்களாகவும் மாறிவிட்டார்கள். இதன் காரண மாகப் புறவினத்தாரும் யூதர்கள் மேல் மிகுந்த பகைமையுணர்வு கொண்டார்கள். இதுவே யூதர்களுக்கு எதிரான உணர்வு (anti -semitism) என்று அறியப்படுகிறது. பகைமைக்குக் காரணமா யிருந்த நியாயப்பிரமாணத்தைக் கிறிஸ்து எவ் வாறு ஒழித்தார்? முதலாவது, நியாயப்பிர மாணத்தை மீறியதற்கான தண்டனையைச் செலுத்தும்படி அவர் மரணமடைந்தார். இவ் வாறாக தேவன் நீதியாக எதிர்பார்த்த எல்லாவற் றையும் நிறைவேற்றி, அவரை முழுமையாக மனநிறைவு அடையச் செய்தார். இப்பொழுது "கிறிஸ்துவுக்குள்ளாக" இருக்கிறவர்களுக்கு எதிராக ஏதொன்றையும் நியாயப்பிரமாணத்தால் சொல்ல முடியாது. அவர்கள் செலுத்த வேண்டிய தண்டனை முழுவதுமாகச் செலுத்தப்பட்டுவிட் டது. விசுவாசிகள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழல்ல, கிருபைக்குக் கீழாகவே இருக்கிறார்கள். ஆனாலும், அவர்கள் தங்களுடைய மனவிருப்பத் தின்படி வாழ்க்கை நடத்தலாம் என்பது இதன் பொருளன்று. அவர்கள் இப்பொழுது கிறிஸ்து வுக்குச் சிறைப்பட்டவர்களாக இருக்கிறார்கள்; ஆகவே அவர்கள் அவருடைய விருப்பத்திற்கு இணங்கியே வாழவேண்டும்.

நியாயப்பிரமாணத்தினால் தூண்டிவிடப்பட்ட பகைமையை ஒழித்ததன் விளைவாக, கர்த்தர் தாமே புதிய படைப்பை உருவாக்கி அறிமுகப் படுத்த ஏதுவாயிற்று. அவர் **இருதிறத்தாரையும் தமக்குள்ளாக**, அதாவது விசுவாசிக்கிற யூதரை யும் விசுவாசிக்கிற புறவினத்தாரையும் ஒரு **புதிய மனிதனாகச் சிருஷ்டித்தார்** - சபையைச் சிருஷ்டித்தார். அவரோடு இணைக்கப்பட்டிருப் பதன் மூலமாக முன்னர் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்கள் இப் பொழுது **புதிய** ஐக்கியத்தைப் பெற்றிருக்கிறார் கள். சபை புதியது என்று கூறுமிடத்து, இத்தகைய உயிர்ப்பொருள் இதுவரை இருந்ததில்லை என்பதே இதன் பொருள். இதனைக் காண்பது முக்கியம். பழைய ஏற்பாட்டுக் கால இஸ்ரவேலின் தொடர்ச்சியல்ல புதிய ஏற்பாட்டுக் காலச் சபை. இதற்கு முந்தி இருந்த ஏதொரு அமைப்பைப் போலவோ அல்லது இனிமேல் வரப்போகிற ஏதொரு அமைப்பைப் போலவோ இராமல் முழு வதும் வேறுபட்டே இந்தச் சபை தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. கீழ்வருபவையின் மூலமாக இவ்வுண்மை தெளிவாக அறியப்படும்:

1. புறவினத்தவன் ஒரு யூதனைப் போலவே சம உரிமைகளையும் சிலாக்கியங்களையும் பெற்றவனாயிருக்கிறான் என்னும் நிலையில் சபை **புதியதாயிருக்கிறது.**
2. யூதரும் புறவினத்தாரும் கிறிஸ்தவர்களாக ஆவதால் தங்களுடைய இனத் தனித்துவங் களை இழந்துபோகவேண்டும் என்னும் நிலையில் சபை **புதிதாயிருக்கிறது.**
3. யூதர்களும் புறவினத்தாரும் கிறிஸ்துவின் சபையில் உடன் அங்கங்களாக இருக்க வேண்டும் என்னும் நிலையில் சபை **புதிய தாயிருக்கிறது.**
4. யூதன் கிறிஸ்துவின் அரசாங்கத்தில் குடிமக னாக இருப்பதற்குப் பதிலாக, அவன் கிறிஸ்து வோடு ஆளப்போகிறான் என்ற நம்பிக்கை கொண்டிருப்பதால் சபை **புதியதாயிருக் கிறது.**
5. யூதன் இனிமேல் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ் இருக்கப் போவதில்லை என்னும் நிலை யில் சபை **புதியதாயிருக்கிறது.**

தனித்தன்மையுடைய அழைப்பையும், தனித் தன்மையுடைய இலக்கையும், தேவனுடைய நோக்கங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த இடத்தை யும் சபை பெற்றிருப்பதால் அது ஒரு புதிய படைப்பாகும். ஆனால் கிறிஸ்து நிறைவேற்றிய செயலின் பயன் அத்துடன் முடிவடைகிறதில்லை. அவர் யூதருக்கும் புறவினத்தாருக்கும் இடையில் **சமாதானத்தை** ஏற்படுத்தினார். பகைக்கான காரணத்தை நீக்கி, புதிய இயல்பை நல்கி, புதிய ஐக்கியத்தை ஏற்படுத்தி அவர் இதைச் செய்தார். இன வேறுபாடுகள், பிரிவினைகள், யூத சமுதா

யத்திற்கு எதிரான உணர்வு, மதவெறி மற்றும் மனிதர்களுக்கு இடையிலான பல்வகையான சண்டைகள் யாவற்றுக்கும் சிலுவையே தேவன் அளித்த விடையாகும்.

**2:16** யூதரும் புறவினத்தாரும் ஒருவரோடொருவர் ஒப்புரவாகும்படி, கிறிஸ்து அவர்கள் **இருதிறத்தாரையும் தேவனோடு ஒப்புரவாக்கினார்.** இஸ்ரவேல் நாட்டாரும் புறவினத்தாரும் பொதுவாக ஒருவருக்கொருவர் கசப்புமிகுந்த பகைமை கொண்டிருந்தார்கள்; ஆனாலும் ஒரு பொருளில் அவர்கள் ஒரே மனநிலை உடைய வராக இருந்தார்கள் - அது என்னவெனில் அவர்கள் இருசாராரும் தேவனுக்குப் பகைஞராயிருந்தார்கள். அந்தப் பகைக்குக் காரணம் பாவமேயாகும். இயேசு கிறிஸ்து தமது சிலுவை மரணத்தின் மூலமாக அந்தக் காரணத்தை நீக்கிப் **பகையையும்** ஒழித்தார். அவரை ஏற்றுக் கொண்டவர்கள் நீதிமான்களாக எண்ணப்பட்டார்கள், மன்னிக்கப்பட்டார்கள், மீட்கப்பட்டார்கள், பொறுத்தருளப்பட்டார்கள், மேலும் பாவத்தின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். பகைமை ஒழிந்து போயிற்று; இப்பொழுதோ அவர்கள் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு விசுவாசிக்கிற யூதரையும் புறவினத்தாரையும் இணைத்து **ஒரே சரீரமாக** மாற்றினார், அதுவே சபை. மேலும் அவர் அந்தச் சரீரத்தைப் பகையின் சுவடுகள் அனைத்தையும் நீக்கி தேவனிடத்தில் சமர்ப்பிக்கிறார்.

நம்மோடு தேவன் இணக்கம்கொள்ள வேண்டிய தேவையில்லை. அவர் ஒருபோதும் நம்மைப் பகைத்தது இல்லை. ஆனால் நாமோ அவரோடு கூட ஒப்புரவாக வேண்டிய தேவை இருந்தது. நம்முடைய கர்த்தர் சிலுவையில் நிறைவேற்றிய செயல், நாம் அவருக்கு முன்பாக எதிரிகளாக அல்ல, நண்பர்களாக கொண்டுவரப்பட ஒரு நீதியான அஸ்திபாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

**2:17** பதினான்காம் வசனத்தில் கிறிஸ்து நம்முடைய சமாதானமாக *இருக்கிறார்*. பதினைந்தாம் வசனத்தில் அவர் சமாதானத்தை *உண்டுபண்ணியிருக்கிறார்*. இப்பொழுது **அவர் வந்து சமாதானத்தைச் சுவிசேஷமாய் அறிவித்தார்** என்று காண்கிறோம். அவர் எப்பொழுது எவ்வாறு வந்தார்? முதலாவது, அவர்தாமே உயிர்த்தெழுதலில் வந்தார். இரண்டாவது, அவர் பரிசுத்த ஆவியில் பிரதிநிதியாக வந்தார். அவர் உயிர்த்தெழுதலில் **சமாதானத்தைப் பிரசங்கித்தார்,** அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு முதலில் பேசிய சொற்களில் ஒன்று **சமாதானம்** ஆகும் (லூக்கா 24:36; யோவான் 20:19, 21,26). பிறகு அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையிலே அப்போஸ்தலரை எங்கும் செல்லும்படி அனுப்பி அவர்கள் மூலமாகச் **சமாதானத்தைப் பிரசங்கித்தார்** (அப். 10:36). சமாதானத்தின் நற்செய்தி தூரமாயிருந்த உங்களுக்கும் (புறவினத்தார்), சமீபமாயிருந்த அவர்களுக்கும் (யூதர்கள்) பிரசங்கிக்கப்பட்டு, ஏசாயா 57:19 -இல் கொடுக்கப்பட்ட தேவனுடைய வாக்குறுதி கிருபையாக நிறைவேற்றப்பட்டது.

**2:18** தேவனுடைய சமுகத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் சேரும் சிலாக்கியத்தை ஒரே சரீரமாக விளங்கும் சபையின் அங்கங்களாயிருப்பவர்கள் பெற்றிருப்பது, அவர்களுக்கும் தேவனுக்கும் இடையே சமாதானம் நிலவுகிறது என்பதற்கான நடைமுறை நிரூபணமாகத் திகழ்கிறது. இது பழைய ஏற்பாட்டுக் கால சமுதாய முறைமைக்கு முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது. அக்காலத்தில் தேவனுடைய சமுகமாயிருந்த மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியன் ஒருவன் மட்டுமே செல்ல முடியும். மேலும் அவன் ஆண்டிற்கு ஒருமுறை, ஒரு குறிப்பிட்ட நாளிலே மட்டும்தான் அங்கு நுழைய முடியும். இயாடி என்பார் இந்த வேறுபாட்டை விளக்குகிறார்.

> ஒரு நாட்டின் ஒரு கோத்திரத்தின் ஒரு மனிதன் ஆண்டிற்கு ஒருமுறை, வெறுமனே மாதிரியாகவும், மீண்டும் மீண்டும் அதே விதமாகவும் பெற்றிருந்த தனிச்சிறப்பை, இப்பொழுது மிகத் தொலைவிலிருக்கும் புறவினத்தானும் கிறிஸ்துவுக்குள்ளாக இடைவிடாமல் சிறப்பு வாய்ந்த ஆவிக்குரிய உரிமையாகப் பெற்றிருக்கிறான்.[14]

இந்த அண்டசராசரத்தின் அரசருக்கு முன் முழுற்காற்படியிட்டு, அவரைப் **பிதாவே** என்று அழைக்கத் தக்கதாக, எந்தவொரு விசுவாசியும் ஜெபத்தின் மூலமாக விண்ணகத்தின் அரியணை இருக்குமிடத்திற்குச் செல்லமுடியும்.

ஜெபத்தின் இயல்பான வரிசைமுறை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. முதலாவது, இது **அவர் மூலமாய்** (கர்த்தராகிய இயேசு) ஏறெடுக்கப்பட வேண்டும். அவர் ஒருவரே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான மத்தியஸ்தர். தேவனு

டைய சமுகத்திற்கு நாம் செல்லக்கூடாதபடி இருந்த சட்டப்பிரகாரமான ஒவ்வொரு தடையையும் அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவை அகற்றிவிட்டன. இப்பொழுது அவர் உன்னதத்தில் வாழ்கிறவராக இருக்கிறார்; அங்கு அவர் மத்தியஸ்தராக இருந்து நாம் தேவனோடு கொண்டிருக்கிற ஐக்கியத்தைச் சீராகக் காத்துவருகிறார். நாம் அவருடைய திருப்பெயரின் மூலமாக தேவனை நெருங்கிச் சேருகிறோம், நமக்குச் சொந்தமாக எவ்விதத் தகுதியும் இல்லை, ஆகவே நாம் அவருடைய தகுதியை வேண்டுகிறோம். அந்த ஜெபத்தில் **நாம் இருதிறத்தாரும்**, அதாவது விசுவாசிக்கிற யூதரும் விசுவாசிக்கிற புறவினத்தாரும் பங்குபெறுகிறோம். அவரைக் கிட்டி **சேருவதற்கான** சலுகையைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய ஜெபத்தில் நமக்கு உதவி செய்பவர் பரிசுத்த ஆவியானவர் - **ஒரே ஆவியினாலே.** "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோமர் 8:26).

நாம் நெருங்கிச் சேருகிறவர் **பிதா**. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களில் ஒருவரும் தேவனைப் பிதாவென்று அறியவில்லை. கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு முன் படைப்புகள் படைப்பாளருக்கு முன் நிற்பதுபோல, மனிதர்கள் தேவனுக்கு முன் நின்றார்கள். அவர் உயிர்த்தெழுந்த பிறகே, 'நீ என் சகோதரிடத்திற்குப் போய், 'நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்' என்று அவர்களுக்குச் சொல்" என்று கூறினார்(யோவான் 20:17). அவருடைய மீட்பின் செயலின் விளைவாக, அதன் பிறகே விசுவாசிகள் முதன்முதலாக தேவனைப் **பிதா** என்று அழைக்க முடிந்தது. இந்த வசனத்தில் திரியேக தேவனின் மூன்று நபர்களும் ஓர் எளிய விசுவாசியின் ஜெபத்தில் நேரடியாக ஈடுபாடு கொண்டிருப்பதைக் காணலாம்: அவன் **பிதாவாகிய** தேவனிடத்தில் ஜெபத்தை ஏறெடுக்கிறான், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் **மூலமாக** அவன் அவரிடத்திற்குச் செல்கிறான், மேலும் இதனைப் பரிசுத்த **ஆவியின்** வல்லமையால் செய்கிறான்.

**2:19** இந்த அதிகாரத்தின் கடைசி நான்கு வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல், விசுவாசிகளாகிய புறவினத்தார் பெறுகின்ற குறிப்பிடத்தக்க சிறப்பு உரிமைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அவர்கள் இனிமேல் **அந்நியரும் பரதேசிகளுமாயிருப்பதில்லை**. இனி ஒருக்காலும் அவர்கள் அந்நியரோ, நாய்களோ, விருத்த சேதனம் பெறாதவர்களோ, புறம்பானவர்களோ அல்லர். அவர்கள் இப்பொழுது புதிய ஏற்பாட்டுக் காலப் **பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாராக** இருக்கிறார்கள். யூத வழிமரபில் வந்து விசுவாசிகளானோர் புறவின விசுவாசிகளைக் காட்டிலும் அனுகூலமான நிலையைப் பெறுகிறதில்லை. கிறிஸ்தவர்கள் எல்லோரும் பரலோகத்தின் முதல்தர குடிமக்களாகவே இருக்கிறார்கள் (பிலி. 3:20,21). மேலும் அவர்கள் **தேவனுடைய வீட்டாருமாக** இருக்கிறார்கள். தெய்வீக அரசில் அவர்கள் உயர்தரக் குடிமக்களாக ஆக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் சுவிகரிக்கப்பட்டுமிருக்கிறார்கள்.

**2:20** இறுதியாக, அவர்கள் திருச்சபையின் அங்கத்தினர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இதனை அவர்கள் பரிசுத்த ஆலயத்தின் கட்டுமானப் பணியில் கற்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று பவுல் படவுருவில் காட்டுகிற வண்ணமாகவும் குறிப்பிடலாம். இந்த ஆலயத்தைக் குறித்த விவரங்களை அப்போஸ்தலன் மிக விரிவான முறையில் விளக்குகிறார் - **அஸ்திபாரம்**, அதனுடைய **மூலைக்கல்**, அதனை ஒன்றிணைக்கும் பொருள், அதனுடைய ஐக்கியமும் சீரான இணக்கமும், அதனுடைய வளர்ச்சி மேலும் அதனுடைய தனிச்சிறப்பு வாய்ந்த கூறுகள்.

*அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் இந்த ஆலயம்* கட்டப்பட்டதாக இருக்கிறது. இது புதிய ஏற்பாட்டுக் கால அப்போஸ்தலரையும் தீர்க்கதரிசிகளையும் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டுக்கால தீர்க்கதரிசிகளை இது குறிப்பிடுவதில்லை. ஏனெனில் அவர்களுக்குச் சபையைக் குறித்து ஒன்றும் தெரியாது. **அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும்** திருச்சபையின் அஸ்திபாரம் என்பது இதன் பொருளன்று. கிறிஸ்துவே திருச்சபையின் **அஸ்திபாரம்** ஆவார் (1 கொரி. 3:11). கர்த்தராகிய இயேசுவின் ஆளுமை மற்றும் அவர் ஆற்றிய செயல் ஆகியவற்றைக் குறித்த அவர்களுடைய போதனையே அவர்கள் இட்ட அஸ்திபாரம். **அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும்** அறிக்கை

யிட்டவை, கற்பித்தவை ஆகியவற்றின் மூல மாகக் கிறிஸ்து வெளிப்படுத்தப்பட்டு அவர்மேல் சபை நிறுவப்பட்டுள்ளது. ஜீவனுள்ள தேவனு டைய குமாரனாகிய கிறிஸ்து என்று பேதுரு அறிக்கையிட்டபோது, அந்தக் கல்லின்மேல் அவர் தமது சபையைக் கட்டப்போவதாக அறிவித் தார். அதாவது, கிறிஸ்துவே தேவனாலே அபி ஷேகம் பண்ணப்பட்டவர், மேலும் அவரே தேவனு டைய தனிச்சிறப்புமிக்க குமாரன் என்னும் வலிமை மிக்க சத்தியத்தின்மேல் சபையைக் கட்டப்போவ தாக அறிவித்தார் (மத். 16:18). வெளிப்படுத்தின விசேஷம் 21:14 -இல், பரிசுத்த எருசலேம் நகரத்தின் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களோடு அப்போஸ்தலர் தொடர்புகொண்டிருப்பதாகக் காணவியலும். அவர்கள் அஸ்திபாரமல்ல, அஸ்திபாரத்தோடு தொடர்புகொண்டிருந்தார் கள். ஏனென்றால் அவர்களே முதன்முதலாகக் கிறிஸ்துவைப் பற்றியதும் சபையைப் பற்றியது மான மாபெரும் சத்தியத்தைக் கற்பித்தார்கள். ஒரு கட்டடத்தின் அஸ்திபாரத்தை ஒருமுறைதான் போடவேண்டும். இந்த வேலையை **அப்போஸ் தலரும் தீர்க்கதரிசிகளும்** ஒரே தடவையில் செய்து முடித்துவிட்டார்கள். அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் இப்பொழுது நம்மிடத்தில் இல்லையென்றாலும் அவர்கள் இட்ட **அஸ்தி பாரம்** புதிய ஏற்பாட்டுத் திருமறையில் நமக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது. சற்றுக் குறைவான பொருளில் காணும்போது, எல்லாக் காலத்திலும் மனிதர்கள் அப்போஸ்தலருக்குரிய தும், தீர்க்கதரிசிகளுக்குரியதுமான பணிகளைச் செய்கிறார்கள். அத்தகைய குறைவான பொரு ளில், திருப்பணி ஊழியர்களும், சபைகளை நிறுவுகிறவர்களும் அப்போஸ்தலர்களாக இருக் கிறார்கள். மேலும் ஆவிக்குரிய வளர்ச்சியை முன்னிட்டுத் திருமறையிலிருந்து கற்பிக்கிறவர் கள் தீர்க்கதரிசிகள் ஆவார்கள். ஆனால் முதன் மையான பொருளில் அவர்கள் அப்போஸ்தலரோ தீர்க்கதரிசிகளோ அல்லர்.

**இயேசு கிறிஸ்து** ஆலயத்தின் **அஸ்திபாரம்** மட்டுமின்றி, **மூலைக்கல்லாகவும்** இருக்கிறார். அவருடைய எண்ணற்ற மகிமைகளையும், பல தரப்பட்ட ஊழியங்களையும் முழுவதும் வெளிப் படுத்திக் காண்பிக்கத்தக்க வேறொரு சித்திரமோ மாதிரியோ இல்லை. **மூலைக்கல்** என்பதற்கு மூன்று விளக்கங்களைக் கூறவியலும். அவையனைத் தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சபையின் ஒப்பற்றதும், எல்லாவற்றிற்கும் முதன்மையானதும், தவிர்க்க இயலாததுமான சிரசாகக் காட்டுகின்றன.

1. **மூலைக்கல்** என்று குறிப்பிடும்போது பொது வாக நாம் ஒரு கட்டடத்தின் முன்புறம் மூலை யில் கீழே வைக்கப்படும் கல்லையே குறிப்பிடு கிறோம். கட்டடத்தின் பிற பகுதிகள் அனைத் தும் அக்கல்லால் தாங்கப்படுவதுபோல் தோன்று வதால், அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த சிலவற்றை இது குறிப்பதாயிற்று. இந்தப் பொருளில் இது கர்த்தருக்கு மெய்யான மாதிரியாயிருக்கிறது. மேலும் இது இரண்டு சுவர்களை ஒன்றாக இணைப்பதால், அவர் மூலமாகச் சபையில் விசுவாசிகளாகிய யூதரும் புறவினத்தாரும் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிற தைக் குறிப்பதாகவும் கருதப்படுகிறது.
2. தேவ அறிஞர் சிலர் பிரதான **மூலைக்கல்** என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொல், கட்டடத்தின் மேல்வளைவின் தலைக்கல் லைக் குறிக்கிறது என்று கருதுகிறார்கள். மேல் வளைவின் மிக உயர்ந்த இடத்தில் இந்தக் கல் வைக்கப்பட்டு மற்ற கற்களுக்கு ஆதரவு தருகிறது. அதுபோல கிறிஸ்துவும் சபையில் ஒப்பற்றவராக விளங்குகிறார். மேலும் அவர் இன்றியமையாதவராகத் திகழ் கிறார்: அவரை நீக்கினால் மற்ற அனைத்தும் இடிந்துவிழும்.
3. ஒரு கூம்பின் (பிரமிட்) தலைக்கல் என்றும் இதற்குப் பொருள்கொள்ளலாம். கட்டடத்தின் மிக உயர்ந்த இடத்தில் இக்கல் வைக்கப்பட் டுள்ளது. அக்கல்லின் அளவு மற்றும் அமைப்பு தனித்தன்மை வாய்ந்தவை. இந்தக் கல்லின் கோணங்கள் முனைகள் ஆகியவையே அந் தக் கட்டடத்தின் அமைப்பை நிர்ணயிக்கும். இவ்வாறே கிறிஸ்துவும் சபையின் சிரசாக இருக்கிறார். அவருடைய ஆளுமை மற்றும் ஊழியம் ஆகியவற்றில் அவர் தனிச்சிறப்பு உடையவராயிருக்கிறார். சபைக்குத் தனித் தன்மை வாய்ந்த சிறப்புகளைக் கொடுத்த வரும் அவரே. முதலாவது அதனுடைய அஸ்திபாரம்:

**2:21 அவர்மேல்** என்னும் சொற்கள் கிறிஸ்து வைக் குறிக்கின்றன. சபையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அவரே மூலகாரணராக இருக் கிறார். பிளெய்க்கி கூறுகிறார்:

> அவருக்குள் நாம் சபையில் சேர்க்கப்பட்டுள் ளோம்; அவருக்குள் நாம் சபையில் வளர்கிற வர்களாக இருக்கிறோம்; அவருக்குள் மாளிகை முழுவதும் நிறைவான முடிவை நோக்கி வளர்கிறது. அப்பொழுது தலைக்கல் வெளியே

கொண்டுவரப்படும். "கிருபை, அதற்குக் கிருபை" என்று பெருஞ்சத்தம் தொனிக்கும்.[15]

ஆலயத்தின் ஐக்கியமும் சீரான இணக்கமும் **மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப் பட்டு** என்னும் சொற்றொடர்களாலே சுட்டிக்காட் டப்பட்டுள்ளன. பல தனிநபர்களாகிய அங்கத்தினர் களாலே அந்த ஐக்கியம் உருவாக்கப்பட்டிருக் கிறது. அந்த மாளிகையில் ஒவ்வொரு அங்கத் தினருக்கும், அவரவருக்குத் தகுதியான குறிப் பிட்ட இடம் இருக்கும். மரணப்பள்ளத்தாக்கி லிருந்து தேவனுடைய கிருபையினாலே தோண்டி யெடுக்கப்பட்ட கற்கள் மிக நேர்த்தியாக அந்த மாளிகையில் பொருத்தப்பட்டிருக்கும். இந்த மாளிகையின் தனிச்சிறப்பு யாதெனில் இது வளர்ச்சியடைகிற மாளிகையாகும். ஏதோ கற் களையும் சாந்தையும் கொண்டு ஒரு கட்டடத்தில் சில அறைகளைச் சேர்த்துக் கட்டுவதுபோல, சபையின் வளர்ச்சி காணப்படுவதில்லை. இதற்கு மாறாக, ஒரு மனித சரீரம் போன்ற ஓர் உயிர்ப் பொருள் வளர்ச்சியடைகிறதை எண்ணிப்பாருங் கள். அது போன்றே சபையின் வளர்ச்சியும் விளங்குகிறது. சபையானது உயிரற்ற ஒரு கட்ட டம் அல்லவென்பது யாவரும் அறிந்ததே. அது ஒரு நிறுவனமும் அல்ல. அது கிறிஸ்துவைத் தலையாகவும், விசுவாசிகள் அனைவரையும் சரீரமாகவும் கொண்டதோர் உயிர்ப்பொருள். அது பெந்தெகொஸ்தே நாளில் பிறந்தது, அன்று முதல் தொடர்ந்து வளர்ச்சியடைகிறது, மேலும் அது சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரை வளர்ந்துகொண்டேயிருக்கும்.

இவ்வாறு வளர்ச்சியடைவதும், உயிருள்ள பொருட்களால் ஆனதுமான சபை **கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயம்** என்று விவரிக்கப்பட்டிருக் கிறது. இங்கே ஆலயம் என்று கூற, பவுல் பயன் படுத்தியுள்ள சொல் வெளிப்பிரகாரத்தைக் குறிக் கும் சொல் அல்ல, மாறாக, உள்ளே இருந்த தூய இடத்தைக்குறிக்கும் சொல்லாகும் (கிரேக்கு, naos); சுற்றுப்புறத்தையல்ல பரிசுத்த ஸ்தலத்தை அது குறிக்கிறது. ஆலயக் கட்டடத்தின் பிரதான பகுதியையே அவர் நினைத்துக் கொண்டிருந் தார். அந்தப் பகுதியில்தான் மகாபரிசுத்த ஸ்தலம் அமைந்திருந்தது. அங்குதான் தேவன் வாசம் பண்ணினார், மேலும் அங்கு அவர் பளிச்சிட்டு ஒளிதரக்கூடிய மகிமையின் மேகத்திலிருந்து தம்மை வெளிப்படுத்தினார்.

இங்கு நாம் கற்கவேண்டிய பல பாடங்கள் உள்ளன: (1) சபையில் தேவன் குடியிருக்கிறார். இரட்சிக்கப்பட்ட யூதர்களும் புறவினத்தாரும் பரி சுத்த ஸ்தலமாக விளங்கி, தேவன் தம்முடைய மகிமையை வெளிப்படுத்தும்படியாக அங்கே குடியிருக்கிறார் (2) **ஆலயம் பரிசுத்தமுள்ளது.** அது உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, புனிதமான நோக்கங்களுக்காக அவருக்கு ஒப்பு விக்கப்பட்டிருக்கிறது. (3) போற்றுதலும், புகழ்ச்சி யும், ஆராதனையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் மூலமாக தேவனுக்கு உயர்ந்து செல்லும்படி யாக சபை அதற்குரிய இடமாகத் திகழ்கிறது.

மேலும் இந்தப் **பரிசுத்த ஆலயமாகிய** சபை **கர்த்தருக்குள்** இருப்பதாகப் பவுல் விளக்கு கிறார். அதாவது கர்த்தராகிய இயேசுவே அதனு டைய பரிசுத்தத்திற்கு மூலகாரணமாக விளங்கு கிறார். அவரோடு இணைக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில் அதன் அங்கத்தினர்கள் தகு நிலைப் பரிசுத்தராக விளங்குகிறார்கள். அவரி டத்தில் அவர்கள் காண்பிக்கும் அன்பின் மூல மாக அவர்கள் நடைமுறைப் **பரிசுத்தத்தோடு** வாழ வேண்டும்.

**2:22** இந்த வியத்தகு ஆலயத்தில் விசுவாசி களாகிய புறவினத்தார், விசுவாசிகளாகிய யூத ருக்குச் சமமான நிலையைப் பெற்றிருக்கிறார் கள். இவ்வுண்மையை முதன்முறையாகக் கேள்விப்பட்ட எபேசியரும் பிறரும் எவ்விதமாக எழுச்சி பெற்றிருப்பார்களோ அதுபோலவே இதனை வாசிக்கையில் நாமும் எழுச்சி பெற வேண்டும். விசுவாசிகள் **ஆவியினாலே தேவனு டைய வாசஸ்தலமாக** இருக்கிறார்கள் என்பது அவர்கள் பெற்றுள்ள மிக மேன்மையான தகுதி யாகும். தேவன் தமது மக்களோடு ஐக்கியம் கொண்டவராக வசிக்க ஓர் இடத்தைக் கொடுப் பதே ஆலயத்தின் நோக்கமாகும். சபையே அந்த இடம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் புறவினத் தாருடைய தகுதி எத்தன்மையுடையதாயிருந்தது என்பதைத் தற்போதைய தகுதியுடன் ஒப்பிட்டுக் காண்போம். அக்காலத்தில் அவர்கள் தேவனு டைய வாசஸ்தலத்திற்கு அருகில் செல்ல அருகதை யற்றவர்களாயிருந்தார்கள். இப்பொழுது அவர் கள்தாமே அந்த வாசஸ்தலத்தின் நல்லதொரு பங்காகத் திகழ்கிறார்கள்!

சபையோடுள்ள தொடர்பில் தேவத்துவ தலை மையில் உள்ள ஒவ்வொரு நபரும் பங்கு வகிக் கிற ஊழியத்தை கவனித்துப் பாருங்கள்: (1) **அவ ருக்குள்**, அதாவது, கிறிஸ்துவுக்குள். அவரோடு கொண்டுள்ள ஐக்கியத்தில் நாம் ஆலயமாகக் கட்டப்பட்டுவருகிறோம். (2) **தேவனுடைய வாசஸ்**

**தலமாக** இருக்கிறோம். இந்த ஆலயமே பிதாவாகிய **தேவனுடைய** பூமிக்குரிய வாசஸ்தலமாக விளங்குகிறது. (3) **ஆவியினாலே.** பரிசுத்த ஆவியானவர் என்னும் நபராக தேவன் சபையில் வாசமாயிருக்கிறார் (1 கொரி. 3:16).

இந்த அதிகாரம் இறந்துபோனவர்களும், இழிவாகக் கருதப்பட்டவர்களும், பேய்த்தன்மை கொண்டவர்களும், கீழ்ப்படியாதவர்களுமாயிருந்த புறவினத்தாரைக் குறித்த விவரங்களோடு தொடங்கியது. அதே புறவினத்தார் எல்லாக் குற்றவுணர்வுகளிலிருந்தும் தீட்டுகளிலிருந்தும் கழுவப்பட்டவர்களாகவும், ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கட்டப்பட்டவர்களாகவும் சித்திரிக்கப்பட்ட நிலையிலே இந்த அதிகாரம் முடிவடைகிறது.

### ஊ. இரகசியத்தைப் பற்றிய ஓர் இடைப் பிறவரல் (3:1-13)

**3:1** முதல் வசனத்தில் பவுல் ஒரு செய்தியை அறிவிக்கத் தொடங்குகிறார். ஆனால் அது இரண்டாம் வசனத்தில் தடைபட்டுவிடுகிறது. முதலில் சொல்லப்பட்ட செய்தி 14 -ஆம் வசனம் வரை மீண்டும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த இடைப்பட்ட வசனங்கள் ஓர் இடைப்பிறவரலாக அமைந்திருக்கிறது. இப்பகுதியின் கருத்து கிறிஸ்துவையும் சபையையும் பற்றிய இரகசியமாகும்.

தேவனுடைய நிருவாகத்தில் இப்போதைய சபையின் காலகட்டம் ஓர் இடைப்பிறவரலாக விளங்குவதால், இந்தப் பொருள் பற்றிய விவரங்கள் நமக்கு விசேஷித்த வகையில் ஆர்வத்தைத் தூண்டிவிடுகிறது. இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்கிக் கூறவியலும்: பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற வரலாற்றின் பெரும்பகுதி, முதன்மையாக தேவன் யூதமக்களோடு ஈடுபட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியதே ஆகும். உண்மையில், ஆதியாகமம் 12 -ஆம் அதிகாரம் முதல் மல்கியா 4 -ஆம் அதிகாரம் வரையிலும் விவரிக்கப்பட்டிருப்பவை, பெரும்பாலும் ஆபிரகாமையும் அவனுடைய வழியில் வந்த மக்களையும் குறித்த செய்திகளேயாகும். கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தபோது அவரை இஸ்ரவேல் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் காரணமாக, தேவன் அவர்களை இந்த பூமிக்குரிய தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் என்னும் நிலையிலிருந்து தற்காலிகமாக ஒதுக்கிவைத்தார். இப்பொழுது நாம் சபையின் காலகட்டத்தில் வாழ்கிறோம். இக்காலத்தில் தேவனுக்கு முன்பாக யூதர்களும் புறவினத்தாரும் ஒரே நிலையில் இருக்கிறார்கள். சபையின் நிறைவு நிகழ்ந்து, அது விண்ணுலகிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு, தேவன் மீண்டும் இஸ்ரவேலோடு தேசிய அடிப்படையில் தமது நிருவாகத்தைத் தொடங்குவார். தீர்க்கதரிசனக் கடிகாரத்தின் முள் மீண்டும் நகரத் தொடங்கும். ஆகவே தேவன் முந்தைய காலத்திலும் எதிர்காலத்திலும் இஸ்ரவேல் மக்களைக் குறித்த தமது நிருவாகத்தின் இடைப்பட்ட காலத்தில், இந்தச் சபையின் காலகட்டம் ஒருவகை இடைப்பிறவரலாக நிலவிவருகிறது. இது தேவனுடைய திட்டத்தில் புதியதொரு நிருவாகமாக இருக்கிறது - இது இதற்கு முந்தின காலத்தில் இருந்ததும் பிந்தின காலத்தில் இருக்கப்போவதுமாகிய எல்லாவற்றிலும் தனிச்சிறப்பு வாய்ந்ததும் வேறுபட்டதுமாயிருக்கிறது.

இரண்டு முதல் பதிமூன்று வரையிலான வசனங்களில் இந்த இடைப்பிறவரலைக் குறித்த விரிவான விளக்கத்தைப் பவுல் நேர்த்தியான வகையில் தந்திருக்கிறார். காலப்பாகுபாட்டின் இடைப்பிறவரலைக் குறித்து விளக்குகையில் பவுல் இலக்கியஞ்சார்ந்த இடைப்பிறவரலைப் பயன்படுத்தியிருப்பது முன்திட்டமிட்டது அல்ல, மாறாக, தற்செயலானதேயாகும்.

பவுல் இந்தப் பகுதியை, **இதனிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாயிருக்கிற உங்கள் பொருட்டுக் கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன்** என்று கூறித் தொடங்குகிறார். விசுவாசிக்கிற புறவினத்தார் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருப்பதன் விளைவாகப் பெற்றிருக்கிறதும் சற்றுமுன்னர் கூறப்பட்டதுமான சலுகைகளைப் பின்னிட்டுப் பார்க்கிறார் என்பதை **இதனிமித்தம்** என்னும் சொல் சுட்டிக்காட்டுகிறது.

பவுலின் முதலாம் ரோமச் சிறையிருப்பின் போது இம்மடல் எழுதப்பட்டது என்று பொதுவாக நம்பப்படுகிறது. ஆனால் அவர் தன்னைக் குறித்து ரோம நாட்டின் கைதி என்று இங்கு குறிப்பிடவில்லை. அவ்வாறு எழுதியிருந்தால் ஒரு வேளை தோல்வி மனப்பான்மையையோ, தன்னைக் குறித்து தானே இரக்கம் பாராட்டுகிற உணர்வையோ, பிறர் பரிவுகாட்டவேண்டும் என்னும் நாட்டத்தையோ அது குறிக்கக்கூடும். பவுல் தன்னைக் **கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டுண்டவர்** என்றே குறிப்பிடுகிறார்; இது அந்த நிலையை அவர் ஏற்றுக்கொண்டிருப்பதன் மேன்மையையும் வெற்றியையும் சுட்டிக்காட்டுகிறது. ரூத் பாக்ஸன் இதனை நன்கு விளக்குகிறார்:

> பவுல் ஆவியிலே கட்டப்படவில்லை, ஆகவே எபேசு மடலில் சிறையின் மணத்தை நுகர முடியாது. அவர் அங்கே ரோம நாட்டுக் கைதியாக இருந்தார், ஆனால் அதனை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. மாறாக, இயேசு கிறிஸ்துவின் கைதி என்றே குறிப்பிடுகிறார். இத்தகைய வேற்றுலக வெற்றியின் இரகசியம் என்ன? பவுலின் சரீரம் சிறையில் நலிவுற்றிருக்கையில், அவரது ஆவி விண்ணகத்தில் கிறிஸ்துவோடு இருக்கிறது.[16]

அவருடைய சிறையிருப்பிற்கான காரணம் நிச்சயமாகப் புறவினத்தாரே ஆவர். விசுவாசிக்கிற புறவினத்தார் இப்பொழுது கிறிஸ்துவின் திருச்சபையில் விசுவாசிக்கிற யூதர்களுக்குச் சமமான உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருக்கிறார்கள் என்று அவர் கற்பித்து வந்ததால் அவருடைய ஊழிய நாட்கள் முழுவதும் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க நேரிட்டது. எபேசுப் பட்டணத்தைச் சேர்ந்த துரோப்பீமு என்பவனை, புறவினத்தார் நுழையக்கூடாது என்று தடைசெய்யப்பட்ட ஆலயப் பகுதிக்குள் அழைத்துச் சென்றதாக அவர் தவறாகக் குற்றஞ்சாட்டப்பட்டதே, இறுதியில் அவர் கைதுசெய்யப்படுவதற்கும் இராயனால் விசாரிக்கப்படுவதற்கும் காரணமாயிற்று (அப். 21:29). ஆனால் அந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்படுவற்கு முன்னமே, சமயத் தலைவர்களின் கடுமையான பகைமைக்கு அவர் ஆளாயிருந்தார்.

**3:2** இப்பொழுது பவுல் தனது எண்ண ஓட்டத்தை நிறுத்தியவராக, ஓர் இரகசியத்தைக் குறித்த உவமையைத் தொடங்குகிறார். இதனை நாம் முன்னர் காலப்பாகுபாட்டின் இடைப்பிறவரலைக் குறித்த விளக்கத்தில் அவர் பயன்படுத்தியுள்ள இலக்கியஞ் சார்ந்த இடைப்பிறவரல் என்று குறிப்பிட்டோம்.

இரண்டாம் வசனத்தில் **கேட்டிருப்பீர்களே** என்னும் சொல்லின் தொனி, அப்போஸ்தலன் புறவினத்தாருக்கிடையே ஆற்றிய சிறப்பான திருப்பணியைக் குறித்து அவருடைய மடலின் வாசகர்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டார்களோ என்னும் ஐயத்தைத் தோற்றுவிக்கிறது. உண்மையில், பவுல் இந்த மடலை எவர்களுக்கு எழுதினாரோ அவர்களை அவர் அறிந்திருக்கவில்லை என்றும், ஆகவே இம்மடல் எபேசுப் பட்டணத்தாருக்கு எழுதப்பட்டது அன்று என்றும் மெய்ப்பிக்க இந்த வசனம் சிலவேளைகளில் பயன்படுத்தப்படுகிறது. கேட்டிருப்பீர்களே என்னும் சொல் ஐயத்திற்கு இடமற்றபடி கேட்டிருக்கிறீர்கள் என்னும் பொருளையும் உடையதாயிருக்கிறது. திருவாளர் பிலிப்பு "நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறபடியால்" என்றே மொழிபெயர்த்திருக்கிறார். இந்தச் சிறப்பான ஊழியம் அவருக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்தது என்பதை அவர்கள் நிச்சயமாக அறிந்திருந்தார்கள். இவ்வூழியத்தை, **தெய்வ கிருபைக்குரிய நியமம்** என்று அவர் குறிப்பிடுகிறார். இங்கு நியமம் என்று சொல்லப்பட்டிருப்பது, நிருவாகப் பணியைக் குறிக்கும். வேறொருவருடைய சொத்தை நிருவகிக்கும் பணியைச் செய்பவர் உக்கிராணக்காரர் என்று அழைக்கப்படுகிறார். பவுல் தேவனுக்கு உக்கிராணக்காரராகப் பணிபுரிந்தார். புதிய ஏற்பாட்டுத் திருச்சபையைக் குறித்த சத்தியங்களைத் தெரியப்படுத்துவதே அவருக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியம். தேவனுடைய கிருபையின் உக்கிராண ஊழியமாக அது இருந்தது என்பதைக் குறைந்தது மூன்று விதமாக நாம் புரிந்துகொள்ளலாம்.

1. தெரிந்துகொள்ளப்பட்டவரோடுள்ள தொடர்பில். இத்தகைய மேன்மையான நற்பேற்றை பவுல் பெற்றுக்கொள்ளும்படி தெரிந்தெடுக்கப்பட்டது அவருடைய தகுதிக்கு அப்பாற்பட்ட வகையில் பெற்ற தயவாகும்.
2. செய்தியின் உட்பொருளோடுள்ள தொடர்பில். அந்தச் செய்தியானது தேவன் இலவசமாகத் தகுதியற்றோருக்கு வழங்கிய தயவு என்று பொருள்படும்.
3. அதனைப் பெற்றுக்கொண்டவர்களோடுள்ள தொடர்பில். இத்தகைய தயவைப் பெற்றிட புறவினத்தார் எத்தகைய தகுதியும் அற்றவர்கள் என்று பொருள்படும்.

கிருபையின் செய்தி புறவினத்தாருக்கு வழங்கப்படும்படி இந்த உக்கிராண ஊழியம் கிருபையாகப் பவுலுக்கு ஒப்புவிக்கப்பட்டது.

**3:3-6** இந்த **இரகசியத்தைப்** பவுல் வேறு எவரிடத்திலிருந்தும் கற்றுக்கொள்ளவில்லை, அவருடைய சொந்த அறிவினாலும் அவர் இதைப் பெற்றுக்கொள்ளவில்லை. இது தேவனிடத்திலிருந்து நேரடியாக உண்டான **வெளிப்பாட்டினாலே** அவருக்கு **வெளிப்படுத்தப்பட்டது**. இது எங்கே எப்படி நிகழ்ந்தது என்பது சொல்லப்படவில்லை. மனந்திரும்பிய யூதர்களும் புறவினத்தாரும் ஒன்றிணைந்த சபையைக் குறித்த தமது திட்டத்தை தேவன் அவருக்கு ஏதோவொரு அற்புதமான வகையில் வெளிப்படுத்தினார் என்பதை மட்டுமே நாம் அறிவோம். இதுவரை அறியப்படா

ததும், மனித அறிவினாலே அறியக்கூடாததும், இப்பொழுது தெய்வீக வழியில் வெளிப்படுத்தப் பட்டதுமான புனிதமான மர்மமே **இரகசியம்** என்று நாம் முன்னமே குறிப்பிட்டுள்ளோம். இந்த **இரகசியத்தைக்** குறித்து அப்போஸ்தலன் ஏற்கனவே குறிப்பாய்த் தெரிவித்திருக்கிறார் (1:9-14,22,23; 2:11-22).

அவர் இந்தப் பொருள் பற்றி ஏற்கனவே எழுதியிருப்பவை, கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்த தெளிவான அறிவை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்தார் என்பதை அவருடைய வாசகர்களுக்கு வெளிப்படுத்திக்காட்டப் போதுமானவை. பிளேய்க்கி என்பார் இந்தப் பகுதியைக் கீழ்க்கண்டவாறு பொழிப்புரையாகத் தருகிறார்:

> இதனைக் குறித்து, அதாவது நான் முன்னே எழுதியவை: அந்தப் பொருள் குறித்து இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளத் தக்க வகையில், அதனை மேலும் விரிவாக இப்பொழுது எழுதுகிறேன்; உங்களுக்கு இதைக் குறித்து விளக்கித் தருகிறவர் இந்த இரகசியத்தைக் குறித்த எல்லா விவரங்களையும் முழுவதுமாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்படி இதனை விவரிக்கிறேன்.[17] (வச. 5,6)

"அந்தக் கிறிஸ்துவின் இரகசியம்" என்று டார்பி மொழிபெயர்த்திருக்கிறார். இந்த மொழி பெயர்ப்பு ஒரு மறைபொருளைக் கொண்டிருக்கிறது. அதாவது இந்த விசித்திரமான கிறிஸ்து சிரசையும் சரீரத்தையும் ஒருசேரக் கொண்டவர். (இன்னொரு இடத்தில் கிறிஸ்து என்ற பெயரில் கர்த்தராகிய இயேசுவும் அவருடைய மக்களும் ஒருசேரக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் - 1 கொரி. 12:12).

அந்த இரகசியத்தைக் குறித்த முழுமையான வரையறை 3 மற்றும் 6 ஆகிய வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது அந்த இரகசியம் என்னவென்பதையும் பின்னர் அந்தக் கிறிஸ்துவின் இரகசியம் என்னவென்பதையும் பவுல் விளக்கிக் கூறுகிறார்.

முதலாவது, **இது முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படாத** ஒரு சத்தியமாகும். இதனைக் குறித்து நாம் பழைய ஏற்பாட்டில் காணவேண்டுமென்று முயற்சி செய்வது வீணான செயல் என்பதே இதன் பொருளாகும். அங்கே இதைக் குறித்த சில நிழல்களையும் சித்திரங்களையும் காணமுடியும். ஆனால் இந்தச் சத்தியமோ அந்நாட்களில் அறியப்படவில்லை.

இரண்டாவது, இது இப்பொழுது **பரிசுத்த ஆவியானவராலே தேவனுடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்ட** சத்தியமாகவும் இருக்கிறது. தேவனே இந்தச் சத்தியத்தை வெளிப்படுத்தியவர். **அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும்** இந்த வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்; பரிசுத்த ஆவியானவர் இந்த வெளிப்பாட்டை அவர்கள் பெறுவதற்கான வழியாக விளங்கினார்.

**அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்** என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் பழைய ஏற்பாட்டுக் காலத்தவரல்லர், புதிய ஏற்பாட்டுக் காலத்தவர் என்பதை நாம் புரிந்துகொள்ளவில்லையென்றால், இந்த வசனம் முரண்பாடு உடையதாகக் காணப்படும். முற்காலங்களில் இந்தச் சத்தியம் வெளிப்படுத்தப்படவில்லை என்று முதலாவது சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த உண்மையைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் அறிந்திருக்கவில்லை. அவ்வாறிருக்க பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இறந்துபோன மனிதர்களால் இது எவ்வாறு பவுல் வாழ்ந்த நாட்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க முடியும்? கிறிஸ்துவையும் சபையையும் பற்றிய பெரிதான உண்மையானது, உயிர்த்தெழுந்த கர்த்தராலே தமது பிரதிநிதிகளாகச் செயல்புரியும்படி சிறப்பானதோர் ஊழியத்திற்குத் தெரிந்தெடுக்கப்பட்டு, சபையின் காலகட்டத்தில் வாழ்ந்த பவுலைப் போன்ற சில மனிதர்களுக்கு அறிவிக்கப்பட்டது என்பதே இப்பகுதிக்கான பொருளாகும். (இந்தப் புனிதமான இரகசியமானது தனக்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்டது என்று பவுல் உரிமைகோரவில்லை. வெளிப்பாட்டைப் பெற்ற பலரில் அவரும் ஒருவர். ஆனாலும் அவருடைய நாட்களில் வாழ்ந்த புறவினத்தாருக்கு இவ்வுண்மையை அறிவிக்கும்படி தெரிந்தெடுக்கப்பட்ட பலரில் பவுலே முதன்மையானவர். மேலும் அவர், தொடர்ந்து வரும் தலைமுறையினருக்குத் தனது மடல்களின் மூலமாக அவ்வுண்மையை வெளிப்படுத்துகிறார்.)

மேலே கொடுக்கப்பட்ட கருத்துக்கு முற்றிலும் மாறான கருத்தைக் கிறிஸ்தவர்களில் பலர் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லுவதே முறையானது. பழைய எற்பாட்டுக் காலத்திலேயே சபை இருந்தது என்று அவர்கள் கூறுகிறார்கள்; ஆனால் சபையைப் பற்றிய உண்மை இப்பொழுது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டி

ருக்கிறது. "அந்த இரகசியமானது இந்த நாட்களில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது போன்று முற்காலங்களில் வெளிப்படுத்தப்படவில்லை. முற்காலத்தில் அது அறியப்பட்டிருந்தது, ஆனால் இந்தக் காலத்தில் அறியப்பட்டிருந்த அளவிற்கு அறியப்படவில்லை. நாம் இப்பொழுது முழுமையான அறிவைப் பெற்றிருக்கிறோம். ஆனால் நாம் இன்னும் தேவனுடைய இஸ்ரவேலராக இருக்கிறோம், அதாவது தேவனுடைய மக்கள் என்னும் நிலை இன்னும் தொடர்கிறது" என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய கருத்தை வலியுறுத்த அவர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:38 -ஆம் வசனத்தைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அங்கு இஸ்ரவேல் நாடு "வனாந்தரத்திலே இருந்த சபை" என்று அழைக்கப்படுகிறது. (KJV - 1611: Church; NKJV, NASB: Congregation). தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் வனாந்தரத்திலிருந்த சபை என்று அழைக்கப்பட்டிருப்பது உண்மையாயினும், அவர்களுக்கும் கிறிஸ்தவ சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ekklesia என்னும் கிரேக்கச் சொல் பொதுவான சொல்லாகும். அது எந்தவொரு சபையையும் அல்லது கூட்டத்தையும் அல்லது அழைக்கப்பட்ட மக்களையும் குறிக்கக்கூடும். அச்சொல் அப்போஸ்தலர் 7:38 -இல் இஸ்ரவேலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பதோடு, அப்போஸ்தலர் 19:32,41 ஆகிய வசனங்களில் புறச்சமய மக்களின் கும்பலைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அங்கு கூட்டம் (assembly) என்று அந்தச் சொல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆகவே வேத பகுதியின் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு, அது எந்தச் சபையைக் குறிக்கிறது என்று நாம் தீர்மானிக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் சபை இருந்தது, ஆனால் இக்காலத்தில் அது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டிருப்பது போல முற்காலங்களில் வெளிப்படுத்தப்படவில்லை என்பதே ஆறாவது வசனத்தின் பொருள் என்று கூறப்படுவதை எவ்வாறு மறுத்துரைப்பது? இதற்குரிய விடையை கொலோசெயர் 1:25 -ஆம் வசனத்தில் காணலாம். அங்கு, "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவ வசனத்தை..." என்று ஒளிவுமறைவற்ற வகையில் இதற்கான விளக்கம் சொல்லப்பட்டுள்ளது. அது எந்த அளவிற்கு வெளிப்படுத்தப்பட்டது என்பதல்ல கேள்வி, மாறாக அது வெளிப்படுத்தப் பட்டதா இல்லையா என்பதே கவனிக்க வேண்டிய உண்மை.

இப்பொழுது நாம் அந்த இரகசியத்தின் முக்கியமான உண்மையைக் காணவிருக்கிறோம்; அதாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில் விசுவாசிக்கும் **புறவினத்தார் உடன் சுதந்தரருமாய்,** உடன் அங்கங்களுமாய், சுவிசேஷத்தினாலே **கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாய் இருக்கிறார்கள்.** மனந்திரும்பிய புறவினத்தார் இப்பொழுது மனந்திரும்பிய யூதர்களுக்கு இணையான பதவியையும் உரிமைகளையும் பெற்றிருக்கிறார்கள் என்றும் இதனைச் சொல்லலாம்.

முதலாவது, அவர்கள் **உடன் சுதந்தரர்.** வாரிசு உரிமையைப் பொருத்தமட்டில் அவர்கள் இரட்சிக்கப்பட்ட யூதர்களுக்குச் சமமான பங்கைப் பெறுகிறார்கள். அவர்கள் தேவனுடைய சுதந்தரர், கிறிஸ்துவுக்கு **உடன் சுதந்தரர்.** மேலும் மீட்கப்பட்ட அனைவருக்கும் உடன் சுதந்தரராய் இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, அவர்கள் **ஒரே சரீரத்தின்** உடன் அங்கங்களாக இருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது தொலைவிலோ அனுகூலமற்ற நிலையிலோ இல்லை, மாறாக சபையில் இரட்சிக்கப்பட்ட யூதர்களுக்குச் சமமான இடத்தில்தான் இருக்கிறார்கள்.

இறுதியாக, **சுவிசேஷத்தினாலே கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளாகப்** புறவினத்தார் இருக்கிறார்கள். இங்கு வாக்குத்தத்தம் என்று சொல்லப்பட்டிருப்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கக் கூடும் (அப். 15:8; கலா. 3:14). அல்லது **சுவிசேஷத்திலே**, கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்போருக்கு உரைக்கப்பட்ட எல்லா வாக்குறுதிகளையும் குறிக்கக் கூடும். இவை எல்லாவற்றிலும் புறவினத்தார் யூதர்களுக்குச் சமமான பங்குவகிப்பவர்களாக இருக்கிறார்கள்.

பழைய ஏற்பாட்டு நிருவாகத்தில் மேற்கூறிய வற்றுள் எதுவும் உண்மையல்ல, எதிர்காலத்தில் கிறிஸ்துவின் அரசிலும் அவை உண்மையாய் இரா.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், இஸ்ரவேல் தேவனுக்கு முன்பாகச் சலுகைகள் நிறைந்த தனியிடத்தைப் பெற்றிருந்தது. தேவன் கொடுத்த வாக்குறுதியில் புறவினத்தானுக்குத் தனக்குச்

சமமான பங்கு இருக்கிறது என்று ஒரு யூதனிடம் கூறினால் அவன் எள்ளி நகையாடியிருப்பான். ஆனாலும் நிச்சயமாக அதில் எந்த உண்மையும் இல்லை. புறவினத்தாருக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பைக் குறித்து இஸ்ரவேல் நாட்டின் தீர்க்க தரிசிகள் முன்னுரைத்தார்கள் (ஏசாயா 49:6; 56:6,7). ஆனாலும், புறவினத்தார் யூதர்களோடு ஒரே சரீரத்தின் அங்கங்களாக இருப்பார்கள் என்றும், யூதர்களுக்கு அங்கு எவ்வித முன்னுரிமையும் இருக்காது என்றும் பொருள்தரக்கூடிய ஏதொரு குறிப்பையும் பழைய ஏற்பாட்டில் காண முடியாது.

நம்முடைய கர்த்தர் நிறுவப்போகிற அரசில் இஸ்ரவேல் எல்லா நாடுகளிலும் பிரதானமான தலைமையிடத்தைப் பெற்றிருக்கும் (ஏசாயா 60:12); புறவின நாடுகள் ஆசிர்வதிக்கப்படும், ஆனாலும் அது இஸ்ரவேல் மூலமாகவே நிறைவேறும் (ஏசாயா 60:3; 61:6; சக. 8:23).

இஸ்ரவேல் பெற்ற அழைப்பு முதன்மையாக, பூமிக்குரிய இடங்களில் தற்காலிக ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாகவே கொடுக்கப்பட்டது (உபா. 28; ஆமோஸ் 9:13-15). ஆனாலும் அதற்கென்று மட்டும் அது அழைக்கப்படவில்லை. மாறாக, சபையோ உன்னதங்களில் ஆவிக்குரிய ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படி அழைப்பைப் பெற்றிருக்கிறது (எபே. 1:3). தேவனாலே தெரிந்து கொள்ளப்பட்ட பூமிக்குரிய மக்கள் என்னும் நிலைக்கு இஸ்ரவேல் அழைக்கப்பட்டது. சபையானது கிறிஸ்துவின் விண்ணக மணவாட்டியாக அழைக்கப்பட்டுள்ளது (வெளி. 21:2,9). கிறிஸ்துவின் ஆயிரமாண்டு அரசாட்சியின்போது இஸ்ரவேல் ஆசிர்வதிக்கப்படும் (ஓசியா 3:5). சபையானது அவருடைய மகிமையில் பங்கு பெற்ற நிலையில் இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் அவரோடு சேர்ந்து ஆட்சி செய்யும் (எபே. 1:22,23).

ஆகவே சபையும் இஸ்ரவேலும் ஒன்றல்ல, அதுபோல சபையும் ஆயிரமாண்டு அரசும் ஒன்றல்ல, இவ்வுண்மையைப் பற்றிய தெளிவோடு இருக்க வேண்டும். இது புதியதொரு சமுதாயமாகும். தனித்தன்மை வாய்ந்த ஐக்கியமுமாகும். மேலும் திருமறையில் நாம் காணக்கூடிய மிக அதிகமான நன்மைகளைப் பெற்ற விசுவாசிகள் ஒன்றிணைந்த சரீரமாகவும் இது திகழ்கிறது. கிறிஸ்து விண்ணகம் ஏகி, தூய ஆவியானவர் கொடுக்கப்பட்ட பிறகே சபை தொடக்கம் பெற்றது (அப். 2). பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் மூலம் சபை உண்டாக்கப்பட்டது (1 கொரி. 12:13). சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளிலே அது நிறைவு பெறும். அப்பொழுது கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் யாவரும் பரலோக வீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1 தெச. 4:13-18; 1 கொரி. 15:23, 51-58).

**3:7** புறவினத்தாரும் யூதரும் சபையில் சமமான பங்கைப் பெற்றிருக்கிறார்கள் என்று வலியுறுத்திய பவுல், அந்தச் சபையில் தனக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தைக் குறித்து விவாதிக்கத் தொடங்குகிறார் (வச. 7-9).

முதலாவது, அவர் சுவிசேஷத்துக்கு **ஊழியக்காரனானார்**. "ஊழியர் (Minister) என்ற சொல் தவறான பொருளைத் தரக்கூடியதாயிருக்கிறது. இந்த நாட்களில் ஒரு சபையின் போதகரைக் குறிக்க அச்சொல் பயன்படுத்தப்படுகிறது" என்று திருவாளர் வெஸ்ட் கூறுகிறார். புதிய ஏற்பாட்டில் அச்சொல் அந்தப் பொருளில் எங்கும் பயன்படுத்தப்படவில்லை. அந்தச் சொல்லின் பொருள் வேலையாள் அல்லது பணிவிடை செய்பவர் என்பதே ஆகும்; அந்த இரகசியத்தோடுள்ள தொடர்பை அடிப்படையாகக்கொண்டு அவர் கர்த்தருக்குப் பணியாற்றினார் என்று இங்கு கூறுகிறார்.

தகுதியற்றவருக்கு வழங்கப்பட்ட ஓர் ஈவாகவே அந்த ஊழியத்தின் தன்மை விளங்குகிறது: **எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே**. இது வெறுமனே கிருபையின் காட்சிப்பொருள் அல்ல, தற்பெருமையும் சுயநீதியும் உடையவராயிருந்த பரிசேயனிடமாய்ச் சென்று, அவருடைய ஆத்துமாவை இரட்சித்து, ஓர் அப்போஸ்தலனாக நியமித்து, வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலை வழங்கி, அந்த வேலைக்குத் தேவையான வலிமையைக் கொடுத்து, எதிர்பார்த்த பயனை விளைவித்த தேவனுடைய சத்துவத்தை அது மெய்ப்பித்துக் காட்டியது. ஆகவே தேவனுடைய **பலத்த சத்துவத்தால் அந்த வரம்** தனக்கு வழங்கப்பட்டது என்று பவுல் கூறுகிறார்.

**3:8 பரிசுத்தவான்கள் எல்லோரிலும் சிறியவர்** என்று அப்போஸ்தலன் தன்னைக் குறித்துச் சொல்லுகிறார். இது சிலருக்குப் போலியான தாழ்மையாகத் தோற்றமளிக்கக் கூடும். ஆனால் உண்மையில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட ஒருவர் தன்னைக் குறித்துச் செய்கிற மெய்யான மதிப்பீடு இதுவாகவே காணப்படும். கிறிஸ்துவை அவருடைய மகிமையில் காண்கிற எவரொரு

வரும் தன்னுடைய சொந்த பாவமுள்ள நிலை யையும் பயனற்ற நிலையையும் உணருவார். பவுலைப் பொருத்தமட்டில், அவர் அவ்வப்போது நினைவுகூரத்தக்க வகையில் அவர் சபையை உபத்திரவப்படுத்தியதன் மூலம் (கலா. 1:13; பிலி. 3:6), அவர் கர்த்தராகிய இயேசுவையே உபத்திர வப்படுத்தியிருந்தார் (அப். 9:4). இவ்வாறு அவர் நடந்துகொண்டிருந்த போதிலும், புறவினத் தாருக்கு நற்செய்தியை அறிவிக்கும் சிறப்பான பணியைச் செய்யும்படி, கர்த்தர்தாமே அவரை ஊழியக்காரராக நியமித்தார் (அப். 9:15; 13:47; 22:21; கலா. 2:2,8). பேதுரு எவ்வாறு யூதருடைய அப்போஸ்தலராக விளங்கினாரோ அதுபோல, பவுலும் புறவினத்தாருக்கு அப்போஸ்தலராக விளங்கினார். அவருடைய ஊழியம் இரண்டு வகையில் அமைந்திருந்தது: அது சுவிசேஷத் தைக் குறித்ததாயிருந்தது. முதலாவது, மனிதர் கள் எவ்வாறு இரட்சிக்கப்படுவது என்பதை அவர் கூறினார், பின்னர் புதிய ஏற்பாட்டுச் சபையின் சத்தியத்தினிடமாய் அவர் அவர்களை நடத்தி னார். நற்செய்தி அறிவிப்பதோடு வேலை முடிந்துவிட்டது என்று அவர் நினைக்கவில்லை, மாறாக, அந்தந்த நாடுகளில் புதிய ஏற்பாட்டுச் சபைகளை நிறுவி அவற்றைப் பலப்படுத்துவதற் கான முதற்படியாகவே அவர் அதைக் கருதினார்.

அவருடைய ஊழியத்தின் முதல் வேலை, **கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக் கிறதாகவே** இருந்தது. இதனைத் திருவாளர் பிளேய்க்கி அழகுற விவரிக்கிறார்:

> விலைமதிப்புமிக்கதும், எல்லைகளுக்குட்படா நிறைவானதுமான பொருட்களைக் குறித்த கருத்தைத் தெரிவிக்கக் கூடிய இரண்டு கவர்ச்சிகரமான சொற்கள் ஐசுவரியம் மற்றும் அளவற்ற என்பனவாம். பொதுவாக விலை மதிப்பு மிக்க பொருட்கள் அரிதாகவே இருக் கும். அவை கிடைப்பதற்கு அரிதாயிருப்பதால் அவற்றின் விலை அதிகமாயிருக்கும். ஆனால் இங்கே மிகவும் விலையேறப்பட்ட பொருளானது எல்லைகளுக்குட்படா அளவு கிடைக்கக் கூடியதாகவும் இருக்கிறது – இரக் கம் பாராட்டுதல் அன்புகூருதல், தகுதிப்படுத்து தல், பரிசுத்தப்படுத்துதல், தேற்றுதல், மறுரூபப் படுத்தும் வல்லமை எல்லாவற்றிலும், எவ்வித எல்லையுமின்றி, எல்லாத் தேவைகளையும், நாட்டங்களையும், இருதயத்தின் விருப்பங் களையும் நிறைவுசெய்யக்கூடியதும், இன்றும் என்றும் நிலைத்திருக்கக்கூடியதுமான ஐசுவரியம்.[18]

ஒரு மனிதன் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்த உடனேயே ஆவிக்குரிய பெருஞ் செல்வந்தனாகிவிடுகிறான்; கிறிஸ்துவுக்குள் அவன் எடுக்க எடுக்க வற்றாத பெருஞ்செல்வத் திற்கு உரிமையாளனாக விளங்குகிறான்.

**3:9-11** பவுல் ஆற்றிய ஊழியத்தின் இரண் டாம் பகுதி, "மறைந்திருந்த இரகசியத்தின் நிரு வாகம்" இன்னதென்று **எல்லாருக்கும் வெளிப் படையாகக் காண்பிக்கும்** ஊழியமாகும் (JND). அதாவது, அந்த **இரகசியம்** எவ்வாறு நடைமுறை யில் திறம்படச் செயலாற்றப்பட்டது என்பதைக் குறித்த வெளிச்சத்தை அவர்கள் பெற வேண்டும்.

தேவன் இக்காலத்திற்கென வகுத்த திட்டம், தமது திருப்பெயருக்காக ஒரு கூட்ட புறவினத்தார் அழைக்கப்பட வேண்டுமென்பதே ஆகும் (அப். 15:14), அவ்வாறு அழைக்கப்பட்ட கூட்டமே அவரு டைய குமாரனுடைய மணவாட்டி. இத்திட்டத்தில் ஈடுபடுவது யாவும் அந்த **இரகசியத்தின்** நிரு வாகம் ஆகும் (உக்கிராண ஊழியம் NKJV அடிக் குறிப்பு).[19] எல்லாரும் என்று இங்கு குறிப்பிடப் பட்டிருப்பது எல்லா விசுவாசிகளையும் குறிக்கும். அந்த **இரகசியத்தின்** ஆழமான உண்மைகளை இரட்சிக்கப்படாத மக்களாலே புரிந்துகொள்ள முடியாது (1 கொரி. 2:14). ஆகவே இங்கு எல்லா ரும் என்று பவுல் குறிப்பிடும்போது, எல்லா வகை யான இரட்சிக்கப்பட்ட மக்களையும், அதாவது யூதர்கள், புறவினத்தார் மற்றும் அடிமைகள், சுயாதீனர் அனைவரையும் குறிக்கும்படியே கூறி யிருக்கிறார்.

இந்த இரகசியமானது, **தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்தது.** இந்தத் திட்டம் தேவனுடைய உள்ளத்தில் அநாதி கால மாக இருந்து வந்தது, ஆனால் அவர் இதனை மனித வரலாற்றின் **ஆதிகாலங்களில்** இரகசிய மாக வைத்திருந்தார் என்பதே இந்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள உண்மை. திருச்சபை அல் லது உலக மகா சபை என்பது புதியது, தனித் தன்மை வாய்ந்தது, இதற்கு முன் இப்படிப்பட்ட ஏதொன்றும் இருந்ததில்லை என்னும் உண் மையை வலியுறுத்திக் கூறி, நமது உள்ளத்தில் பதிய வைக்க பரிசுத்த ஆவியானவர் மிகுந்த கவனத்தோடு இருக்கிறார் என்பதை நாம் மீண் டும் இங்கு காண்கிறோம். முற்காலத்தில் தேவனைத்

தவிர வேறு எவருக்கும் இவ்வுண்மை தெரியாது. **எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளாக இது மறைத்து** வைக்கப்பட்டிருந்தது. பொருட்களால் ஆன இந்தப் பிரபஞ்சத்தை தேவனே உருவாக்கினார், **காலங்களைச் சிருஷ்டித்த வரும் அவரே,** மேலும் அவர் திருச்சபையையும் சிருஷ்டித்தார். ஆனாலும் கிறிஸ்துவின் முதலாம் வருகை மட்டும் இந்தப் புதிய சிருஷ்டிப்பைக் குறித்த உண்மையை அவர் தமது ஞானத்தில் மறைத்து வைக்கத் தீர்மானித்திருந்தார்.

தேவன் தம்முடைய **அநந்த ஞானத்தை** வான சேனைகளுக்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமென்று தீர்மானித்திருப்பது இந்த இரகசியத்தோடு சம்பந்தப்பட்ட அவருடைய தற்கால நோக்கங்களில் ஒன்றாகும். மீண்டும் பவுல் ஒரு பள்ளியை உருவகமாகக் கொண்டு விளக்குகிறார். இப்பிரபஞ்சம் ஒரு பள்ளிகூடம். வானுலக சேனைகள் யாவரும் அங்கே மாணாக்கராக இருக்கிறார்கள். அங்கு கற்பிக்கப்படும் பாடம் "பல பண்புக்கூறுகள் கொண்ட **தேவனுடைய ஞானம்**". சபை அந்தப் பாடத்தை விளக்கிக் கற்பிக்க உதவும் காட்சிப்பொருளாகும். அவருடைய ஆராய்ந்துமுடியாத நியாயங்களை வானசேனைகள் கண்டு வியந்துபோற்றவும், அவருடைய வழிகள் எத்தகைய முடிவுகளைக் கொண்டிருக்கின்றன என்று அவை கண்டு அதிசயிக்கவும் பேரார்வம் கொண்டிருக்கின்றன. தேவன் தமக்கே மகிமை உண்டாகத்தக்கதாக, பாவத்தை வென்று மேன்மை பெற்றதை அவை கண்டுகளித்தன. புவியில் மிகவும் மோசமாக இருந்த மக்களுக்காக விண்ணகத்தில் வாழ்ந்த மிகவும் சிறப்பான வரை அனுப்பியதை அவை கண்டன. அவர் எவ்வாறு மிகப்பெரிய விலையைக் கொடுத்துத் தமது எதிரிகளை மீட்டுக்கொண்டார் என்றும், அவர்களைத் தமது அன்பினாலே வெற்றி சிறந்தார் என்றும் அவை கண்டன. உன்னதத்திலுள்ள சகல ஆவிக்குரிய ஆசிர்வாதங்களினாலும் அவர் அவர்களை ஆசிர்வதித்ததையும் அவை கண்டன. பாவத்தை உலகில் நுழையும்படி அனுமதிக்காதிருந்தால் தேவனுக்கு எவ்வளவு மகிமையுண்டாயிருக்குமோ அதைக் காட்டிலும் அதிக மகிமை கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய மீட்பின் செயலால் அவருக்கு உண்டாயிற்று என்பதையும், விசுவாசிக்கிற யூதர்களும் புறவினத்தாரும் அச்செயலால் அதிக ஆசிர்வாதங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அவை கண்டன. தேவன் யாவற்றையும் நியாயமாய்ச் செய்தார் என்று மெய்ப்பிக்கப்பட்டது, கிறிஸ்து மேன்மையடைந்தார்; சாத்தான் தோற்கடிக்கப்பட்டான். சபையானது கிறிஸ்துவுக்குள் அரியணையில் அமர்த்தப்பட்டு அவருடைய மகிமையில் பங்கு பெற்றது.

அந்த இரகசியம், அது மறைவாயிருந்த நிலை, இறுதியில் அது வெளியரங்கமாக்கப்பட்ட செயல், தேவனுடைய ஞானத்தை அது வெளிப்படுத்தும் தன்மை இவையாவும் **தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே** நிறைவேறியுள்ளன. சாத்தான் வீழ்ந்து போவான் என்பதையும், மனிதன் பாவத்தில் அவனைப் பின்பற்றிச் செல்வான் என்பதையும் இந்த உலகம் படைக்கப்படுவதற்கு முன்னமே தேவன் அறிந்திருந்தார். அவர் ஏற்கனவே எதிர் நடவடிக்கைக்கான மிகச் சிறந்த திட்டத்தை ஆயத்தப்படுத்தியிருந்தார். கிறிஸ்து மனுவுரு எடுத்த நிகழ்ச்சி, அவருடைய மரணம், உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி, விண்ணகம் ஏகிய நிகழ்ச்சி, அவர் மகிமையடைந்த நிகழ்ச்சி ஆகியவற்றின் மூலமாக இத்திட்டம் செயலாற்றப்பட்டது. முழு நிகழ்ச்சிநிரலும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு திட்டமிடப்பட்டு, அவர் மூலமாகவே அனைத்தும் நிறைவேறின. இப்பொழுது தேவனால் துன்மார்க்கரான யூதரையும் புறவினத்தாரையும் இரட்சிக்க முடியும். அவர்களைக் கிறிஸ்துவின் அங்கங்களாக மாற்ற முடியும், அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மறுரூபப்படுத்த முடியும், ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த வகையில் நித்தியம் முழுவதும் அவர்களை ஆட்டுக்குட்டியின் மணவாட்டியாகக் கனப்படுத்த முடியும்.

**3:12** கிறிஸ்து ஆற்றிய செயலினாலும், நாம் அவரோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதாலும், நம்முடைய மன்றாட்டு கேட்கப்படும் என்னும் முழு நம்பிக்கையோடும், நாம் கடிந்துகொள்ளப்படமாட்டோம் என்னும் அச்சமற்ற உறுதியோடும், தேவனுடைய சமுகத்தில் உட்செல்லக்கூடிய சொல்லிமுடியாத சலுகையை நாம் இப்பொழுது பெற்றிருக்கிறோம் (யாக். 1:5). நாம் பெற்றிருக்கிற தைரியம் மதித்துப் போற்றுகிற மனப்பான்மையாகும். பிள்ளைகள் தங்கள் தகப்பனை அழைப்பதற்கு ஒப்பானபடி, நாம் அச்சமற்ற தன்மையைப் பெற்றிருக்கிறோம். ஜெபத்தின் மூலமாக தேவனோடு பேசக்கூடிய சுதந்தரத்தை நாம் பெற்றிருப்பதையே சேரும்சிலாக்கியம் என்னும் சொற்றொடர் குறிக்கிறது. நாம் வரவேற்கப்படுவோம், கேட்கப்படுவோம், ஞானமும் அன்பும் நிறைந்த

பதில் தரப்படும் என்னும் உறுதியே நாம் பெற்றிருக்கிற திடநம்பிக்கையாகும். இவை யாவற்றையும் நாம் **அவரைப் பற்றும் விசுவாசத்தால் பெற்றிருக்கிறோம்,** அதாவது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்கிற விசுவாசத்தினால் இவை உண்டாகும்.

**3:13** எபேசுப் பட்டணத்துப் பரிசுத்தவான்கள் பவுல் அடைந்த பாடுகளைக் கண்டு மனச்சோர்வு அடைந்துவிடக் கூடாது என்று எண்ணியவராக, தான் ஆற்றிய ஊழியத்தின் மேன்மையையும், அதன் மூலமாகப் பாய்ந்துவரும் வியத்தகு பயன்களையும் கருத்திற்கொள்ளுமாறு அவர் அவர்களை உற்சாகப்படுத்தினார். புறவினத்தாருக்கு ஆற்றவேண்டிய பணியை நிறைவேற்றும் பொருட்டு **உபத்திரவங்களை** அனுபவிப்பதில் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். அவர் அடைந்த துன்பங்களால் அவர் மனச்சோர்வு அடையவில்லை. மாறாக, கர்த்தராகிய இயேசுவின் நிமித்தம் அதனைத் தகுதியானது என்று அவர் கருதியதைக் கண்டு அவர்கள் மேன்மைபாராட்ட வேண்டும் என்றே கூறினார். அவர் அனுபவித்த **உபத்திரவங்களால்** அவர்களுக்கும் மற்ற புறவினத்தாருக்கும் ஏற்பட்ட நன்மைகளை நினைத்து அவர்கள் களிகூர வேண்டும். தற்போது அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததை அவர்கள் இழிவாகக் கருதாமல் மகிமை என்றே கருதவேண்டும்.

### எ. பரிசுத்தவான்களுக்காகப் பவுல் ஏறெடுத்த ஜெபம் (3:14-19)

**3:14,15** பவுல் முதல் வசனத்தில் தொடங்கியதும், இரகசியத்தைக் குறித்த இடைப்பிறவரலால் தடைபட்டுப் போனதுமான செய்தியை அப்போஸ்தலன் இப்பொழுது மீண்டும் தொடர்கிறார். புறவினத்தார் தங்களுடைய இயல்பின்படி எப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள், கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருப்பதன் காரணமாக எந்நிலைக்கு மாறியிருக்கிறார்கள் என்பதை விவரித்துக் காட்டும் 2 - அதிகாரத்தை இதனிமித்தம் என்னும் சொல் திரும்பிப் பார்க்கச் செய்கிறது. வறுமை, மரணம் ஆகியவற்றிலிருந்து வியத்தகு வகையில் அவர்கள் ஐசுவரியத்திற்கும் மகிமைக்கும் உயர்த்தப்பட்ட செயல், அவர்கள் அடைந்த உயர்வான நிலையை எப்பொழுதும் மகிழ்ச்சியோடு அனுபவித்தவர்களாக வாழவேண்டும் என்று பவுல் தேவனிடம் மன்றாடுவதற்கு ஊக்கமளித்தது.

"**நான்... முழங்காற்படியிட்டு**" என்னும் சொற்றொடர் அவர் அமர்ந்திருந்த நிலையைக் குறிக்கிறது. முழற்காற்படியிடுதல் என்னும் சொல் எப்பொழுதுமே இவ்வாறுதான் அமர்ந்திருக்க வேண்டும் என்று சொல்லுவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால் ஆத்துமா இத்தகைய நிலையில் தான் இருக்கவேண்டும். நாம் நடக்கும்போது, அமர்ந்திருக்கும்போது, சாய்ந்திருக்கும் போது எந்நிலையிலும் ஜெபம் பண்ணலாம். ஆனால் நம்முடைய ஆவி தாழ்மையிலும் மரியாதை கொடுப்பதிலும் பணிவுள்ளதாகக் காணப்பட வேண்டும்.

அந்த மன்றாட்டு பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட்டது. பொதுவான பொருளில் மனுக்குலம் அனைத்திற்கும் தேவனே பிதாவாக இருக்கிறார். அதாவது, அவரே அவர்களைப் படைத்தவர் (அப். 17:28,29). ஓர் எல்லைக்குட்பட்டு இதன் பொருளைக் கூறுவோமானால், விசுவாசிகள் யாவருக்கும் அவர் பிதாவாக இருக்கிறார். அதாவது, அவர் தமது ஆவிக்குரிய குடும்பத்தில் அவர்களைப் பெற்றார் (கலா. 4:6). தனிச்சிறப்பு வாய்ந்த நிலையில் அவர் நம்முடைய **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாயிருக்கிறார்**. இதன் பொருள் யாதெனில் அவர்கள் இருவரும் சமமாக இருக்கிறார்கள் (யோவான் 5:18).

பிதாவினுடைய ஒரு குறிப்பிட்ட பணியைப் பவுல் நோக்கிப் பார்த்தவராக அவரைப் **பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்திற்கும் நாமகாரணர்** என்று அழைக்கிறார். இதன் பொருள் கீழ்வருபவையாக இருக்கலாம்:

1. பரலோகத்திலும் பூலோகத்திலும் மீட்கப்பட்ட யாவரும் அவரைக் குடும்பத்தின் தலைவராக நோக்கிப் பார்க்கிறார்கள்.
2. படைப்புகள் அனைத்தும், அவை தேவ தூதர்களாயினும், மனிதர்களாயினும், தனிப்பட்ட வகையிலும், குடும்பங்களாகவும் தாங்கள் பெற்ற வாழ்விற்காக நன்றிக்கடன்பட்டவர்களாக இருக்கிறார்கள். பரலோகத்தில் உள்ள குடும்பங்கள் எனப்படுவது, வெவ்வேறு தரத்தில் படைக்கப்பட்ட தேவதூதர்களாவர். பூலோகத்திலுள்ள குடும்பங்கள், நோவாவின் வழியில் பிறந்து வெவ்வேறு இனங்களாகப் பிரிந்து, இப்பொழுது பூமியில் பற்பல நாடுகளாக இருக்கிறவர்கள் ஆவார்கள்.
3. இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்துத் தந்தை நிலைகளும், அவற்றின் பெயர்களை அவரிடத்திலிருந்தே பெற்றிருக்கின்றன. தேவனுடைய தந்தை நிலை முதலாவதும் மற்றும் கருத்தளவில் மிகச் சிறந்ததும் ஆகும். மற்ற எல்லாவிதத் தந்தை உறவுகளுக்கும் இதுவே

மூலமுதல் மாதிரியாகும். திருவாளர் பிலிப்பு இந்த வசனத்தை இவ்வாறு மொழிபெயர்த்திருக்கிறார்: "பூமியைச் சார்ந்தவை அல்லது பரலோகத்தைச் சார்ந்தவை யாவும் அவற்றின் தந்தை நிலையின் பெயர்களை அவரிடத்திலிருந்தே பெற்றிருக்கின்றன."

**3:16,** பவுலின் விண்ணப்பத்தின் பேரள வினைக் காணுங்கால் நம்மால் வியந்து போற்றுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது: அவர் **தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின் படியே** உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய வகையில் **வல்லமையாய்ப் பலப்பட வேண்டுமென்று** அவர் கேட்கப்போகிறார். ஆனால் அதனுடைய அளவு என்ன? ஜெமிசன், ஃபாசட் மற்றும் பிரௌன் விடை கூறுகிறார்கள்: "ஏராளமாக, அவருடைய மகிமையின் ஐசுவரியத்திற்கு ஏற்றபடி, நம்முடைய இருதயங்களின் குறுகிய தன்மைக்கு ஏற்றபடியல்ல."[20] "ஐசுவரியத்திலிருந்து" என்பதற்கும் "**ஐசுவரியத்தின்படி**" என்பதற்கும் இடையே வேறுபாடு உள்ளது என்று அவ்வப்போது பிரசங்கிகள் குறிப்பிடுவதுண்டு. ஒரு செல்வந்தன் சிறிதளவு பணத்தைக் கொடுக்கக்கூடும். அது அவனுடைய செல்வத்திலிருந்து கொடுக்கப்பட்டதாகும். ஆனால் அது அவனுடைய செல்வத்திற்குப் பொருத்தமானதல்ல! தேவன் தம்முடைய நிறைவான ஐசுவரியத்தின்படியே வல்லமையைக் கொடுக்க வேண்டுமென்று பவுல் விண்ணப்பிக்கிறார். கர்த்தரோ தமது மகிமையின் ஐசுவரியத்தில் எல்லைக்குட்படாத நிலையில் இருப்பதால், பரிசுத்தவான்களாகிய நாம் பெருவெள்ளத்தைச் சந்திக்க ஆயத்தப்படுவோம்! இவ்வளவு பெரிதான அரசரிடம் நாம் ஏன் இவ்வளவு குறைவாகக் கேட்க வேண்டும். ஒருமுறை நெப்போலியனிடம் மிகப்பெரிய தொகையை ஒருவன் கேட்டபோது, அதை அவனுக்கு உடனடியாகத் தரும்படி ஆணையிட்டான். "இவன் தனது விண்ணப்பத்தின் பெரிய அளவினால் என்னை கனப்படுத்தினான்" என்று அதற்கான காரணத்தையும் அரசன் கூறினான்.

கிருபைநிறை கிறிஸ்துராஜன்
கிருபாசனம் வந்திடுவீர்,
பெரியதொரு பட்டியலை
வேண்டுதலாய்த் தந்திடுவீர்,
ஏதொன்றும் அண்ணலுக்குப்
பெரிதில்லை அறிந்திடுவீர்,
அவரன்பும் வல்லமையும்
கேட்டதெலாம் தந்திடுமே!
– ஜான் நியூட்டன்

பவுல் என்னென்ன வேண்டுதல்களைக் குறிப்பிட்டுச் சமர்ப்பிக்கிறார் என்பதை நாம் இப்பொழுது காண விழைவோம். ஒன்றோடொன்று தொடர்பற்ற விண்ணப்பங்களின் வரிசை என்று நாம் நினைக்காமல், ஒவ்வொரு விண்ணப்பமும் தொடர்ந்து வருகிற அடுத்த விண்ணப்பத்திற்கு அடிகோலுகிறது என்பதை நாம் உணர்ந்து அதனுடைய வளர்ச்சியை நினைத்துப் பார்க்க வேண்டும். அவற்றை ஒரு கூம்புபோல (பிரமிட்) உருவகப்படுத்திப் பாருங்கள்: முதல் விண்ணப்பம் அந்தக் கூம்பின் அடித்தளமாக விளங்கும் கற்களாக இருக்கின்றன. மன்றாட்டு தொடர்கிறபோது பவுல் மகிமை நிறைந்த உச்சநிலையை நோக்கி அதைக் கட்டுகிறார்.

அவர்கள் **அவருடைய ஆவியினாலே உள்ளான மனிதனில் வல்லமையாய்ப் பலப்பட** வேண்டுமென்பதே முதலாவது விண்ணப்பமாகும். இங்கு கேட்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதம் ஆவிக்குரிய வல்லமையாகும். வியத்தகு அற்புதங்களைச் செய்வதற்கான வல்லமை வேண்டுமென்று அவர் கேட்கவில்லை, மாறாக முதிர்ச்சியும், நிலையான தன்மையும் அறிவுக்கூர்மையும் உடைய கிறிஸ்தவர்களாக மாற்றம் பெறுவதற்குத் தேவையான ஆவிக்குரிய வல்லமை வேண்டுமென்றே விண்ணப்பம் ஏறெடுக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவரே இந்த வல்லமையைத் தருகிறவர். நாம் தேவனுடைய திருமறையை உட்கொள்பவர்களாகவும், ஜெபத்தில் தூய்மையான காற்றைச் சுவாசிப்பவர்களாகவும், ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய திருப்பணியில் பயிற்சி மேற்கொள்கிறவர்களாகவும் இருந்தால் மட்டுமே அவரால் அந்த வலிமையை நமக்குத் தரமுடியும் என்பதில் எவ்விதஐயமுமில்லை.

இந்த வல்லமையை **உள்ளான மனிதனே** அனுபவிக்க முடியும். அதாவது, நம்முடைய இயல்பின் ஆவிக்குரிய பகுதியினால் மட்டுமே அதனை அனுபவிக்க முடியும். இந்த உள்ளான மனிதனே தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் பிரியமாயிருக்கிறான் (ரோமர் 7:22). புறம்பான மனிதன் அழிந்து போனாலும், இந்த **உள்ளான மனிதன்** நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறான் (2 கொரி. 4:16). அது தேவனைச் சாந்திருந்த போதிலும், நம்முடைய **உள்ளான மனிதனுக்கு** வல்லமையும், வளர்ச்சியும், பெருக்கமும் தேவை.

**3:17** விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்க வேண்டும் என் பது அடுத்தபடியாகும். இது ஆவியின் எழுச்சி யூட்டும் செயலின் விளைவாகும்: நம்முடைய இருதயங்களில் கிறிஸ்து வாசமாயிருக்கும்படி நாம் பலப்படுத்தப்படுகிறோம். உண்மையில், ஒரு விசுவாசி மனமாற்றம் அடைந்த தருணத்தில் கர்த்தராகிய இயேசு குடியிருக்கும்படி அவனைத் தெரிந்துகொள்கிறார் (யோவான் 14:23; வெளி. 3:20). ஆனால் இந்த மன்றாட்டில் அந்தப் பொருள்பற்றி, செய்தி எதுவுமில்லை. அவர் ஒரு விசுவாசிக்குள் இருக்கிறாரா என்ற கேள்வி இங்கு எழவில்லை, மாறாக, அவர் தமது சொந்த வீட்டில் தான் இருக்கிறார் என்ற உணர்வைப் பெற்றிருக் கிறாரா என்பதே கேள்வி! இரட்சிக்கப்பட்ட ஒவ் வொரு மனிதனும் அவர் நிரந்தரமாகத் தங்கும் வாசஸ்தலமாக இருக்கிறான், ஆனால் அவர் ஒவ்வொரு அறைக்குள்ளும், அந்தரங்கச் சிற்ற றைக்குள்ளும் சென்று காணக்கூடிய நிலையில் அந்த விசுவாசி இருக்கவேண்டும் என்பதே ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பமாகும். ஒரு விசுவாசி தன்னுடைய பாவமுள்ள சொற்கள், எண்ணங் கள், நோக்கங்கள், செயல்கள் ஆகியவற்றின் மூலமாக அவரை வருத்தம் அடையும்படி செய் திருக்கக் கூடாது. அவர் விசுவாசியோடு தடை படாத ஐக்கியத்தை அனுபவிக்கக் கூடிய நிலை காணப்படவேண்டும். கிறிஸ்தவனுடைய இருதய மானது இவ்வாறாகக் கிறிஸ்து வசிக்கும் வீடாக மாறுகிறது. பெத்தானியாவில் இருந்த மாத்தாள், மரியாள், லாசரு ஆகியோரது வீட்டைப்போல அவர் தங்கியிருப்பதற்கு அது அவர் பிரியப்படுகிற வீடாக விளங்கவேண்டும். இருதயம் என்பது, ஆவிக்குரிய வாழ்வின் மையம் என்பதில் ஐய மில்லை. அதுவே ஒருவனுடைய நடத்தையின் எல்லாக் கூறுகளையும் கட்டுப்படுத்துகிறது. உண்மையில் நாம் படிக்கிற நூல்கள், நாம் செய் கிற வேலைகள், நாம் உண்கிற உணவுகள், நாம் செலவழிக்கிற பணம், நாம் பேசுகிற சொற்கள், சுருங்கக் கூறின் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியும் கிறிஸ்துவை எஜ மானாகக் கொண்டதாக விரிவாக்கம் பெற்றிருக்க வேண்டும் என்பதே அப்போஸ்தலனுடைய மன்றாட்டாகும்.

நாம் மிகுதியாகப் பரிசுத்த ஆவியினால் வலிமை பெறுவோமானால், நாம் இன்னும் கூடுதலாகக் கிறிஸ்துவுக்கு ஒப்பாக விளங்குவோம். நாம் கூடு தலாகக் கிறிஸ்துவைப் போல ஆவோமெனில், "அவர் நம்முடைய இருதயங்களில் தங்கி, தமது சொந்த வீட்டில் இருப்பதுபோல நிறைவான எண் ணம் கொள்வார்" (KSW).

அவர் நம்மில் வாசமாயிருப்பதைக் குறித்த மகிழ்ச்சியை நமது **விசுவாசத்தினாலே** அனுபவிப் போம். தொடர்ந்து அவரைச் சார்ந்திருக்கக் கூடிய நிலை, தொடர்ந்து அவரிடம் ஒப்புவிக்க வேண் டிய செயல், அவர் தமது சொந்த வீட்டில் இருக் கும் உணர்வை எப்பொழுதும் கொண்டிருக்கும் படி நடந்துகொள்ளுதல் இவையாவும் அதற்குத் தேவை. **விசுவாசத்தினாலே**, "அவருடைய பிர சன்னத்தை நடைமுறைப்படுத்துகிறோம்" என்று லாரன்ஸ் கவர்ச்சியாகக் கூறியிருக்கிறார்.

இதுவரை பவுல் ஏறெடுத்த மன்றாட்டில், திரி யேகரின் மூன்று நபர்களும் தொடர்பு கொண்டி ருக்கிறார்கள். **கிறிஸ்து** விசுவாசிகளுடைய **இரு தயங்களில்** வாசம் பண்ணுகிறதை நிறைவாக உணர்ந்திருக்கும்படி (வச. 17) அவர்கள் ஆவி யினாலே பலப்படுத்தப்பட வேண்டுமென்று பிதா கேட்டுக்கொள்ளப்படுகிறார் (வச. 15). ஜெபத்தின் மிகவுயர்ந்த சிலாக்கியங்களில் ஒன்று, நித்திய மான தேவதலைமையைப் பிறருக்காகவும் நமக் காகவும் செயல்புரியச் செய்வதாகும்.

கிறிஸ்து ஒரு கிறிஸ்தவனுக்குள்ளாக எவ் விதத் தடையுமின்றி நெருங்கியிருக்க அனுமதிக் கப்படுகிறபோது அதன் விளைவாக அவன் **அன் பிலே வேரூன்றி** நிலைபெற்றவனாகிறான். இங்கே பவுல் தாவரவியலிலும், கட்டடத் தொழிலிலும் சொற்களைக் கடன்பெற்று விவரிக்கிறார். ஒரு தாவரத்தின் வேரே அதற்குத் தேவையான ஊட் டச்சத்தைக் கொடுத்து ஆதரிக்கிறது. "அன்பென் னும் வயல்நிலத்தில் நம்முடைய வாழ்க்கையின் வேர்கள் படர்ந்திருக்க வேண்டும்; நம்முடைய விசுவாசமானது கன்மலையின்மேல் இளைப்பாற வேண்டும்" என்று திருவாளர் ஸ்க்ரோஜி என்பார் கூறினார்.[21] **அன்பிலே வேரூன்றி நிலைபெற்றி ருத்தல்** என்பது அன்பில் நிலைத்திருத்தலே வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும் என்று பொருள்படும். தயவு காட்டுதல், தன்னலம் கருதாமை, நொறுங்குண்ட தன்மை, சாந்தம் ஆகியவற்றைக் கைக்கொள்ளுதலே அன்பு கூரும் வாழ்க்கை முறையாகும். அது கிறிஸ்து வின் வாழ்க்கை, விசுவாசியினிடத்தில் வெளிப்படு வதாகும் (1 கொரி. 13:4-7 வசனங்களைக் காண்க).

**3:18** முந்தின வசனங்களில் ஏறெடுக்கப்பட் டுள்ள விண்ணப்பங்கள், தேவனுடைய பிள்ளை யாக இருக்கிறவன், **சகல பரிசுத்தவான்களோ**

**டுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகல மும், நீளமும், ஆழமும், உயரமும்** இன்ன தென்று நிறைவாக அறிந்து பற்றிக்கொள்வதற்கு ஆயத்தப்படும்படி, அவனை ஆவிக்குரிய வளர்ச் சியும் பெருக்கமும் அடையச்செய்வதற்கான பொதுவான கோட்பாடுகளை வரைந்துதரும் திட்டமாகும்.

அந்த அளவுகளைக் குறித்து நாம் சிந்திப்ப தற்கு முன்னர், சகல **பரிசுத்தவான்களோடுங்கூட** என்னும் சொற்றொடரைக் கவனிப்போம். எந்த வொரு தனி விசுவாசியாலும் இந்தப் பொருளில் ஒரு சிறு பகுதிக்கு மேலாகப் புரிந்துகொள்ளக் கூடாதபடி இது மிகப்பெரியதாக இருக்கிறது. ஆகவே இதைக் குறித்துப் படிப்பதும், விவாதிப் பதும், மற்றவர்களேடு இதைக் குறித்துப் பகிர்ந்து கொள்வதும், மிக அவசியம். பயிற்சிபெற்ற சில விசுவாசிகள் ஒன்றுகூடித் தியானிக்கும் வேளை யில் பரிசுத்த ஆவியானவர் திருமறையிலிருந்து கூடுதலான வெளிச்சத்தை அவர்களுக்குத் தந்தருளுவார்.

அளவுகள் எதைக் குறிக்கின்றன என்று வசனத்தில் சொல்லப்படாவிட்டாலும் அவை கிறிஸ்துவின் அன்பைக் குறிக்கின்றன என்றே பொதுவாகக் கருதப்படுகிறது. (தமிழில் கிறிஸ்து வின் அன்பைக் குறிப்பதாகவே வெளிப்படை யாகக் சொல்லப்பட்டுள்ளது.) கிறிஸ்துவின் அன் பைக் குறிப்பதாக எடுத்துக் கொள்வோமானால், அந்த அளவுகளின் விளக்கத்தைக் கீழ்க்கண்ட வாறு காணலாம்.

அகலம் - இந்த உலகம் (யோவான் 3:16)
நீளம் - என்றென்றும் இருக்கக்கூடியது (1 கொரி. 13: 8)
ஆழம் - சிலுவையின் மரணபரியந்தம் (பிலி. 2:8)
உயரம் - பரலோகம் (1 யோவான் 3:1-2)

F. B. மேயர் இதனை அழகுற விளக்குகிறார்:

> நமக்கு முன் வானவிளிம்பு எவ்வளவு தொலைவு இருக்கிறதோ அதுபோலவே நமக்குப் பின்புறமும் வானவிளிம்பு இருக் கிறது. நாம் இயேசுவின் முகத்தை ஆயிரக் கணக்கான ஆண்டுகள் நோக்கிக் கொண்டி ருந்த பிறகும், அதனுடைய அழகு நாம் அந்த முகத்தை முதன்முதலாகப் பரலோகத்தின் வாசலில் கண்டபோது எப்படி இருந்ததோ அதுபோலவே புதுப்பொலிவுடன் விளங்கும்.[22]

இந்த அளவுகள் எபேசியர் மடலில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள இரகசியத்தைப் பற்றிய தாகவும் இருக்கக்கூடும். உண்மையில் இந்த அளவுகளைப் பற்றிய குறிப்புகளை இதே வேத பகுதியில் நம்மால் காணமுடியும்:

1. **அகலம்** 2:11-18 ஆகிய வசனங்களில் விவரிக் கப்பட்டிருக்கிறது. யூதர்களையும் புறவினத் தாரையும் இரட்சிக்கும்படியும், அவர்களை சபையில் சேர்க்கும்படியும் தேவனுடைய கிருபை அகன்றிருக்கும் தன்மையை இது குறிக்கிறது. மனுக்குலத்தின் இவ்விரண்டு பிரிவினரையும் இரகசியமானது உள்ளடக் கிக் கொள்கிறது.

2. **நீளம்** நித்தியம் முதல் நித்தியம் வரை நீண்டு இருக்கிறது. கடந்த காலத்தின் தொடர்பில், உலகத்தோற்றத்துக்கு முன்னே விசுவாசி கள் கிறிஸ்துவுக்குள்ளாகத் தெரிந்துகொள் ளப்பட்டார்கள் (1:4). எதிர்காலத்தின் தொடர் பில், கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத் தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபை யின் மகாமேன்மையான ஐசுவரியம் நித்தியத் தில் முடிவில்லாமல் விளக்கித்தரப்படும் (2:6).

3. 2:1-3 ஆகிய வசனங்களில் **ஆழம்** மிகத் தெளி வாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. சொல்லக் கூடாத பாவக்குழியிலும், சீர்கேட்டிலும் நாம் மூழ்கிக் கிடந்தோம். துர்நாற்றமும் சீர்கேடும் நிறைந்திருக்கும் இப்புவிக்குக் கர்த்தராகிய இயேசு நமக்காக மரணம் அடையும் பொருட்டு வந்தார்.

4. **உயரத்தை** 2:7 -ஆம் வசனத்தில் காண் கிறோம். கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டது மட்டு மின்றி, அவருடைய மகிமையில் பங்குகொள் ளும்படி உன்னதங்களிலே முடிசூட்டப்பட்ட வர்களாகவும் இருக்கிறோம்.

இவ்வாறாக இந்த அளவுகள் அளக்க இய லாப் பெரும் பரப்பாக விளங்குகின்றன, உண்மை யில் இவை எல்லையற்ற பேரளவுகளே ஆகும். "நாம் செய்ய முடிந்ததெல்லாம், இந்தப் பரிசுத்த சொற்களின் பெருஞ்சந்தடிக்குள் இவற்றின் செயல்முறை ஒழுங்கை நினைவிற்கொள்ளு தலேயாகும்" என்று திருவாளர் ஸ்க்ரோஜி கூறுகிறார்.

**3:19** பரிசுத்தவான்கள் **கிறிஸ்துவின் அன்பை,** அறிவுக்கெட்டாத அந்த அன்பை அனுபவபூர்வ மாக **அறிந்துகொள்ள** வேண்டும் என்பதே அப்போஸ்தலனின் அடுத்த விண்ணப்பமாகும். இதனை முழுவதுமாக அவர்களால் ஆராய்ந்து அறிய முடியாது, ஏனெனில் இது கரையில்லாத

பெருங்கடலைப் போன்றது. ஆனால் ஒவ்வொரு நாளும் இதனைக் குறித்து மென்மேலும் கற்றறிய முடியும். ஆகவேதான், அவர்கள் நம்முடைய வியத்தகு கர்த்தரின் வியத்தகு அன்பைக் குறித்து ஆழமான, அனுபவபூர்வமான அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பவுல் ஜெபிக்கிறார்.

தேவனுடைய **சகல பரிபூரணத்தாலும் நீங்கள் நிறைய வேண்டும்** என்று பவுல் ஜெபிக்கிறபோது, இந்த உன்னதமான மன்றாட்டு அதனுடைய உச்சநிலையைச் சென்றடைகிறது. (பரிபூரணத்தால் - பரிபூரணம் வரை எழுத்தின்படி 'வரை' - கிரேக்கு. eis). **தேவனுடைய சகல பரிபூரணமும்** கர்த்தராகிய இயேசுவுக்குள் வாசமாயிருக்கிறது (கொலோ. 2:9). எந்த அளவு அதிகமாக அவர் நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கிறாரோ, அந்த அளவு அதிகமாக தேவனுடைய சகல **பரிபூரணத்தை** நோக்கி நாம் நிரப்பப்படுவோம். தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நாம் ஒருக்காலும் நிரப்பப்படமாட்டோம். ஆனால் அதுவே நாம்முன்னேறிச் செல்ல வேண்டிய இலக்காக இருக்கிறது.

இதனை நாம் இவ்வாறு விளக்கிக் கூறிய போதிலும், நாம் இன்னும் சென்றடையாத ஆழமான கருத்துகள் இதில் அடங்கியுள்ளன என்பதைச் சொல்லியே ஆகவேண்டும். நாம் திருமறைக்கு விளக்கம் அளிக்கும் வேளைகளில், நம்முடைய புரிந்துகொள்ளும் ஆற்றல் அல்லது விளக்கமளிக்கும் ஆற்றல், இவற்றிற்கு அப்பாற்பட்ட சத்தியங்களோடு நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை நாம் நன்கறிவோம். இந்த வசனத்திற்கு விளக்கமளிக்க நாம் ஓர் உவமையைப் பயன்படுத்தலாம், எடுத்துக்காட்டாக ஒரு சிமிழைக் கடலுக்குள் மூழ்கச் செய்யும்போது அது கடல் நீரினால் நிறைந்திருக்கிறது. ஆனால் அந்தக் கடல்நீரில் மிகக் கொஞ்சமான அளவே அந்தச் சிமிழுக்குள் இருக்கும்! இவையெல்லாவற்றையும் நாம் கூறிய போதிலும் அந்த இரகசியம் இன்னும் நீடித்திருக்கிறது. தேவனுடைய வார்த்தையைக் காணும் நாம் அதனால் ஆட்கொள்ளப்படுகிறோம், அதன் எல்லைகடந்த நிலையைக் கண்டு மலைத்து நிற்கிறோம்.

### ஏ. பவுலின் துதிப்பாடல் (3:20,21)

**3:20** ஆத்துமாவை உணர்ச்சி பெருகச் செய்யும் துதிப்பாடலோடு பவுல் ஏறெடுத்த மன்றாட்டு முடிவடைகிறது. இதற்கு முந்தைய விண்ணப்பம் மிகப்பெரியது, துணிச்சலானது, நடைபெற முடியாதது போன்று தோற்றமளிக்கக் கூடியது. ஆனால் நாம் **வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும்** மிகவும் அதிகமாய் தேவனால் செய்யமுடியும். அவருடைய ஆசிர்வாதத்தின் பேரளவை விளக்கிக் கூறும் வகையில் பவுல் தனது சொற்களால் ஒரு கூம்பினைக் கட்டுகிறார். அங்கே தேவனுடைய வல்லமை காட்சியளிக்கிறது:

**வல்லவர்**

**செய்ய வல்லவர்**

**நாம் வேண்டுகிறதைச் செய்ய வல்லவர்**

**நாம் வேண்டுகிறதையும் நினைக்கிறதையும் செய்ய வல்லவர்**

**நாம் வேண்டுகிறவை நினைக்கிறவை யாவற்றுக்கும் அதிகமாய்ச் செய்ய வல்லவர்**

**நாம் வேண்டுகிறவை நினைக்கிறவை யாவற்றுக்கும் மிகவும் அதிகமாய்ச் செய்ய வல்லவர்**

தேவன் மன்றாட்டுக்கு விடை பகர்வதன் வழிமுறையை, **நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே** என்னும் சொற்றொடர் தெரிவிக்கிறது. கிறிஸ்துவைப் போன்ற குணநலனை நம்மிடத்தில் உண்டாக்க நாட்டம்கொண்டு, பாவத்தின் காரணமாக நம்மைக் கண்டித்து, நம்முடைய ஜெபங்களில் நம்மை வழிநடத்தி, நமது ஆராதனையில் நம்மை ஏவி, நமது பணியில் செய்ய வேண்டியதைச் சுட்டிக்காட்டி, நமது வாழ்க்கையில் தொடர்ந்து கிரியை நடப்பிக்கிற பரிசுத்த ஆவியானவரை இது குறிக்கிறது. நாம் எவ்வளவு அதிகமாக அவருக்கு நம்மை ஒப்புவிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் நாம் கிறிஸ்துவின் சாயலைப் பெறுவதற்கான அவருடைய கிரியை பயன்விளைவிக்கக் கூடியதாய் இருக்கும்.

**3:21 அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக.** ஆமென். நித்திய நித்தியமாகப் புகழப்படுவதற்கு தேவன் தகுதியுடையவராயிருக்கிறார். அவருடைய ஞானமும் வல்லமையும் வான சேனைகளிலும், சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும்; விலங்குகளிலும், பறவைகளிலும், மச்சங்களிலும், அக்கினியிலும், கல்மழையிலும், உறைந்த மழையிலும், மூடுபனியிலும், பெருங்காற்றிலும், மலைகளிலும், குன்றுகளிலும், மரங்களிலும், அரசர்களிலும், முதிர்வயது மற்றும் இளம் வயதுடைய மனிதர்களிலும்; இஸ்ரவேலிலும், பிறநாடுகளிலும் காட்சியளிக்கின்றன. இவையாவும் கர்த்தருடைய திருப்பெயரைத் துதிக்க விருப்பங்கொண்டிருக்கின்றன.

ஆனால் இன்னொரு கூட்டம் தேவனுக்கு முடிவில்லா **மகிமையைச்** செலுத்துகிறது; அதுவே **சபை**. கிறிஸ்து அதனுடைய சிரசாக விளங்குகிறார், விசுவாசிகள் அதனுடைய சரீரமாக விளங்குகிறார்கள். அவருடைய ஒப்பற்ற வியத்தகு கிருபைக்கு இந்த மீட்கப்பட்ட சமுதாயம் நித்திய சாட்சியாக விளங்கும். திருவாளர் வில்லியம் எழுதுகிறார்:

> சபையிலும் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலும் சதா காலங்களிலும் தேவனுடைய நித்திய மகிமையானது தேவன் மற்றும் பிதா என்னும் நிலையில் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். அற்புதமான அறிக்கை! அந்த நித்திய மேன்மையை வெளிப்படுத்தும் ஊடகமாகச் செயல்படுவது, கிறிஸ்துவையும் சபையையும் கொண்ட ஒரே சரீரம்.[23]

"துதி செலுத்துதலாகிய ஆராதனை, சபையின் அங்கங்களுடைய தூய்மையான வாழ்க்கை, நற்செய்தி இவ்வுலகம் முழுவதும் அறிவிக்கப்படுதல், மனுக்குலத்தின் கடும் துன்பத்திலும், அதனுடைய தேவையிலும் உதவுதல்" ஆகியவற்றின் மூலமாகச் சபையானது தொடர்ந்து தேவனுடைய திருப்பெயருக்கு மகிமையைச் செலுத்த வேண்டும் (எர்ட்மேன்).

**தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களுமே** இந்தப் புகழ்ச்சி செலுத்தப்படுவதற்கான கால அளவாகும். சபையிலும் கிறிஸ்து இயேசுவிலும் இவ்விதமாக என்றென்றும் தேவனுக்குப் புகழ்ச்சியைச் செலுத்தும்படி பவுல் அழைப்பு விடுக்கும்போது, அதற்கு நாம் தரும் பதில் நம்முடைய இருதயத்திலிருந்து தோன்றும் இதயபூர்வமான **ஆமென்** ஆகும்!

## 2. கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளின் நடைமுறை வாழ்க்கை (அதி. 4-6)

### அ. கிறிஸ்தவ ஐக்கியத்தில் ஒருமைப்பாட்டிற்கான வேண்டுகோள் (4:1-6)

**4:1** எபேசியருக்கு எழுதப்பட்ட மடலின் பெரும் பிரிவு இங்கு தொடங்குகிறது. இதற்கு முந்தைய அதிகாரங்கள் கிறிஸ்தவ அழைப்பைக் குறித்துச் சொல்லுகின்றன. கடைசி மூன்று அதிகாரங்களிலும், கிறிஸ்தவன் தான் **அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவானாக** நடந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறான். இதுகாறும், கிருபையானது நம்மை எப்படிப்பட்ட தகுநிலைக்கு உயர்த்தியிருக்கிறது என்னும் கருத்து மேலோங்கி இருந்தது. இதுமுதல், அந்தத் தகுநிலை எவ்வாறு நமது நடைமுறை வாழ்க்கையில் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுவோம். கிறிஸ்துவுக்குள்ளாக நாம் பெற்றிருக்கிற உயர்வான தகுநிலை, அதற்கு ஏற்ற திவ்விய நடத்தைக்கு நம்மை அழைக்கிறது. இவ்வாறாக, எபேசியர் மடல் உன்னதத்திலிருந்து (அதி. 1-3) உள்ளூர் சபையையும், வீட்டையும், பொதுவான சமுதாயத்தையும் நோக்கித் திரும்புகிறது (அதி. 4-6) என்னும் கூற்று உண்மையாக இருக்கிறது. "சபையில் ஒருமைப்பாட்டையும், தனிப்பட்ட வாழ்க்கையில் தூய்மையையும், வீடுகளில் இணக்கமான சூழ்நிலையையும், பொல்லாங்கான அதிகாரங்களோடு நமது போராட்டத்தில் உறுதியையும் நாம் பேணி வளர்க்க வேண்டும்" என்று பிந்தின அதிகாரங்கள் கற்பிக்கின்றன என்று திருவாளர் ஸ்காட் குறிப்பிடுகிறார்.

இரண்டாவது முறையாகத் தன்னைக் **கட்டுண்டவர்** என்று பவுல் குறிப்பிடுகிறார். இந்த முறை **கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவர்** என்று குறிப்பிடுகிறார். "உலகம் எதனை இழிவு என்று கருதுகிறதோ அதனை மிக உயர்ந்த மேன்மை என்று அவர் எண்ணுகிறார்; ஒரு மன்னன் தனது மணிமுடியில் மேன்மை பாராட்டுவதைக் காட்டிலும் அவர் கிறிஸ்துவின் நிமித்தம் கட்டுண்ட தனது நிலையில் அதிகமாக மேன்மை பாராட்டுகிறார்" என்று தியோடோரெட் விவரிக்கிறார்.

கர்த்தருக்கு உண்மையோடும் கீழ்ப்படிதலோடும் நடந்து கொண்டதால் சிறையில் கட்டுண்டவராக இருந்த பவுல் தனது வாசகர்களைத் தாங்கள் பெற்ற **அழைப்புக்குப் பாத்திரவான்களாக** நடந்துகொள்ளும்படி அறிவுறுத்துகிறார். அவ்வாறு அவர்கள் நடக்க வேண்டுமென்று அவர் கட்டளையிடவுமில்லை கண்டிக்கவுமில்லை. மாறாக, கிருபையின் மொழியில் கனிவோடும், அன்புள்ளத்தோடும் அவர் அவர்களிடத்தில் வேண்டுகிறார்.

**நடத்தல்** என்னும் சொல் இம்மடலில் ஏழு முறை இடம் பெற்றிருக்கிறது (2:2,10; 4:1,17; 5:2,8,15). இது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளின் தன்மையும் எத்தகைய தாயிருக்க வேண்டும் என்பதை விவரிக்கிறது. ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாகத் திகழ்கிறான் என்னும் மேன்மையான தகுநிலைக்கு ஏற்ப வாழ்கிறதே **பாத்திரவானாக** நடந்துகொள்ளுதல் என்பதன் பொருளாகும்.

4:2 வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் கிறிஸ்துவைப் போன்றதொரு ஆவியை வெளிப் படுத்திக் காட்டுவது அவசியம். இதற்குத் தேவை யானவை:

**மனத்தாழ்மை** - கர்த்தராகிய இயேசுவோடு கொண்டுள்ள நெருங்கிய தொடர்பினால் உண் டாகிற மெய்யான தாழ்மையே இது. ஒன்றுக்கும் பயனற்ற நம்முடைய தன்மையை மனத்தாழ்மை நினைவுபடுத்தி, நம்மைக் காட்டிலும் பிறரை மேலாகக் கருதச்செய்கிறது. இது ஆணவம் இறுமாப்பு ஆகியவற்றுக்கு எதிர்மாறானது.

**சாந்தம்**-தேவனோடு தொடர்புள்ள செயல் களில் எவ்வித எதிர்ப்புமின்றி அவருக்கு ஒப்புவித் துக் கீழ்ப்படிகிற மனப்பான்மை, மனிதன் கொடூர மாகச் செயல்படுகிறபோது அதற்கு எதிராகப் பழி வாங்கும் எண்ணத்துடன் செயல்படாதிருத்தல், இவையே சாந்தம் எனப்படும். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று சொன்ன வருடைய வாழ்க்கையில்தான் இது சிறப்பாகக் காணப்படுகிறது.

> இது எத்தகைய அளவிற்கு மலைக்கச் செய்கிற வியத்தகு கூற்றாக இருக்கிறது! இந்த உலகங் களை உண்டாக்கியவர், வான மண்டலத்தில் விண்மீன்களைத் தூக்கி எறிந்து அதனதன் பெயரால் அழைக்கிறவர், எண்ணிக்கையில் அடங்கா விண்மீன் கூட்டங்களை அவற்றின் பாதைகளில் நடத்திப் பாதுகாப்பவர், பர்வதங் களைத் துலாக்கோலாலும் மலைகளைத் தராசாலும் நிறுக்கிறவர், தீவுகளை ஒரு அணுவைப் போலத் தூக்குகிறவர், கடல் நீரைத் தமது கைப்பிடியினால் அளக்கிறவர், அவ ருக்குமுன் இவ்வுலகத்தின் குடிமக்கள் வெட்டுக் கிளிகளைப் போலக் காட்சியளிக்கிறார்கள். அவர் மனுவுரு எடுத்து இவ்வுலகிற்கு வருகை புரிந்தபோது, தமது இருதயத்தில் சாந்தமும் மனத்தாழ்மையும் உடையவராக வந்தார். கருத் தளவில் முழு நிறைவான மனிதனை எழுப்பி அதற்குள்ளே அவர் சென்றுவிடவில்லை; அவர்தாமே அந்த முழு நிறைவான மனிதர்.[24]

**நீடிய பொறுமை** - எரிச்சலடையும்படி நீண்ட நேரம் தூண்டிவிடப்பட்டும், சீரான மனநிலை மற்றும் பொறுமையுள்ள ஆவி உடையோராய் நடந்துகொள்ளுதலே நீடிய பொறுமை எனப் படும். இதனைக் கீழ்க்கண்ட கதையால் விளக் கிக் கூறலாம். ஒரு சிறு நாய்க்குட்டியையும் ஒரு பெரிய நாயையும் கற்பனை செய்துகொள்ளுங் கள். அந்த நாய்க்குட்டி பெரிய நாயைப் பார்த்து குரைத்து, அதைச் சீண்டிவிட்டு, தாக்கவும் செய் கிறது. அந்தப் பெரிய நாயோ நாய்க் குட்டியைச் சீறிப்பாய்ந்து, ஒரே கடியில் குதறிப்போட்டிருக்க முடியும். ஆனால் நாய்க்குட்டியின் துடுக்குத் தனமான செயல்களைச் சகித்துக்கொண்டு அது மிகுந்த பொறுமையோடு அமைதியாயிருக்கிறது.

**அன்பினாலே ஒருவரையொருவர் தாங்கி** - அதாவது பிறருடைய தவறுகள் குறைவுகள் ஆகியவற்றைத் தாங்கிக்கொள்ளுதல்; மாறுபட்ட பண்புகள், திறமைகள், சுபாவங்கள் உள்ள மனி தர்களைப் பொறுத்துக்கொள்ளுதல். உள்ளத் தில் மனக்கசப்போடு இருந்துகொண்டு, வெளி யில் மரியாதையுடன் நடந்துகொள்ளுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. எரிச்சலடையச் செய்கிற வர்கள், தொல்லை கொடுக்கிறவர்கள், இக்கட் டான சூழ்நிலையை ஏற்படுத்துகிறவர்கள் ஆகி யோரிடம் உண்மையாக அன்புபாராட்டுதல் என்பதும் இதன்பொருளாகும்.

**4:3 சமாதானக்கட்டினால் ஆவியின் ஒரு மையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிருங்கள்.** திருச்சபையை தேவன் உருவாக் கியபோது, மனுக்குலத்தில் நிலவிய மிகப்பெரிய பிரிவினையை - யூதர்களுக்கும் புறவினத்தாருக் கும் இருந்த பிளவை நீக்கினார். இந்த வேறுபாடு கள் யாவும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒழிந்து போயின. ஆனால் அவர்களுடைய ஒன்றிணைந்த வாழ்க்கையில் இது எவ்வாறு செயல்படும்? அவர் களுடைய உள்ளத்தில் முந்தின பகைமை யுணர்ச்சி இன்னும் தொடர்கிறதா? "யூதர்களு டைய கிறிஸ்தவ சபை" என்றும், "புறவினத்தாரின் கிறிஸ்தவ சபை" என்றும் சபைகள் நிறுவப்பட வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக் கிறதா? பிரிவினைகள், உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருக்கிற பகைமைகள் ஆகியவற்றி லிருந்து கிறிஸ்தவர்கள் காக்கப்பட அவர்களுக் குள்ளாக ஒருமைப்பாடு தேவை என்று பவுல் அவர்களிடம் வேண்டுகிறார்.

அவர்கள் **ஆவியில் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு** எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும். மெய்யான விசுவாசிகள் யாவரையும் பரிசுத்த **ஆவியானவர்** கிறிஸ்துவுக்குள் ஒன்றி ணைத்துள்ளார். ஒரே **ஆவியானவர்** குடியிருக் கும் இடமாகச் சபையென்னும் சரீரம் விளங்கு கிறது. இது அடிப்படை **ஒருமைப்பாடாக** விளங்கு கிறது. இதனை ஏதொன்றாலும் அழிக்க முடியாது.

ஆனால் அவர்களுக்குள்ளாக ஏற்படக்கூடிய சண்டைகள், சச்சரவுகள் யாவும் அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர் என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும். **ஆவியில் ஒருமையைக் காத்துக் கொள்வது** என்பது ஒருவரோடொருவர் சமாதானமாக வாழ்வது என்று பொருள்படும். சுபாவத்தில் வெவ்வேறு வகையான வேறுபட்ட பண்புகளைக் கொண்ட சரீரத்தின் அங்கங்களை இறுகக்கட்டி ஒன்றிணைப்பது சமாதானம் என்னும் தசை நாராகும். பொதுவாக வேறுபட்ட கருத்துகள் உண்டாகும்போது, பிரிவினை உண்டாகி, தனிக் கட்சி உருவாகிவிடும். ஆனால் ஆவிக்குரிய விளைவோ, "அடிப்படைச் சத்தியங்களில் ஒருமைப்பாடு, ஐயத்திற்கு இடமான செயல்களில் சுதந்தரம், எல்லாவற்றிலும் அன்பு" என்று காணப்பட வேண்டும். ஓர் உள்ளூர் சபையையோ, தேவனுடைய வேறு எந்த ஊழியத்தையோ கவிழ்த்துப்போட போதுமான மாம்சம் நம்மிடத்தில் இருக்கிறது. ஆகவே நாம் நம்முடைய சொந்த விருப்பு வெறுப்புகளை, சிறுசிறு வேறுபாடுகளை அடக்கி ஆட்கொண்டவர்களாக, தேவனுடைய மகிமைக்காகவும் அனைவருடைய ஆசீர்வாதத்திற்காகவும் ஒன்றிணைந்து **சமாதானத்தோடு** செயல்பட வேண்டும்.

**4:4** வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தாமல், மெய்யான கிறிஸ்தவ ஒருமைப்பாட்டை உருவாக்கும் அடிப்படைக் காரியங்களான ஆக்க பூர்வமான ஏழு உண்மைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

**ஒரே சரீரம்.** இனம், நிறம், நாடு, பண்பாடு, மொழி, சுபாவம் ஆகியவற்றில் வேறுபாடுகள் மிகுந்து காணப்படினும் ஒரே ஒரு சரீரம் மட்டுமே உள்ளது. அது மெய்யான விசுவாசிகளால், பெந்தெகொஸ்தே நாள் முதல் சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரை இரட்சிக்கப்படுகிற மக்களால் ஆனது. சபைப் பாகுபாடுகள், உட்பிரிவுகள், கட்சிகள் ஆகியவை இந்தச் சத்தியங்கள் செயல்படுவதைத் தடை செய்கின்றன. மனிதர்களால் உண்டுபண்ணப்பட்ட இந்த வேறுபாடுகள் அனைத்தும் இரட்சகர் திரும்பி வரும்போது மறைந்து போகும். "பெயர்கள், உட்பிரிவுகள், கட்சிகள் இவையாவும் வீழ்ந்து போகட்டும்; எல்லாவற்றிலும் எல்லாமுமாக இயேசு கிறிஸ்துவே திகழட்டும்." இதுவே தற்காலத்தில் நம்முடைய பொன்மொழியாக விளங்க வேண்டும்.

**ஒரே ஆவி.** அதே பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியினிடத்திலும் தனித்தனியே குடியிருக்கிறார் (1 கொரி. 6:19). அவரே கிறிஸ்துவின் சரீரத்திலும் குடியிருக்கிறார் (1 கொரி. 3:16).

**ஒரே நம்பிக்கை.** சபையின் அங்கங்களாகிய விசுவாசிகள் யாவரும் ஒரே இடத்திற்குச் சென்று சேரும்படியாக அழைக்கப்பட்டுள்ளார்கள். அது கிறிஸ்துவோடு கூட, அவரைப்போல, அவருடைய மகிமையில் பங்குபெற்று முடிவில்லாமல் என்றென்றும் வாழும்படியான இடம். இயேசு கிறிஸ்து திரும்பி வரும்போதும் அதற்குப் பின்னரும் பரிசுத்தவான்கள் அடையப்போகிற அனைத்து நன்மைகளையும் **ஒரே நம்பிக்கை** என்ற சொற்றொடர் உட்கொண்டதாக இருக்கிறது.

**4:5 ஒரே கர்த்தர்.** "வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம்..." (1 கொரி. 8:5,6; மேலும் 1 கொரி. 1:2 -ஆம் வசனத்தையும் காண்க).

**ஒரே விசுவாசம்.** இதுவே கிறிஸ்தவ விசுவாசம், உபதேசத்தின் முக்கிய பகுதி. "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம்" (யூதா 3). இது நமக்காகப் புதிய ஏற்பாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது.

**ஒரே ஞானஸ்நானம்.** இரட்டத்தனையான பொருளில் இது உண்மையாயிருக்கிறது. முதலாவது, ஆவியினால் கொடுக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை வைக்கிற யாவரும் சரீரத்தில் வைக்கப்படுகிறார்கள் (1 கொரி. 12:13). அடுத்ததாக, மனமாற்றம் பெற்றவர்கள், **ஒரே ஞானஸ்நானத்தின்** மூலமாக தாங்கள் கிறிஸ்துவோடு மரணத்திலும், அடக்கத்திலும், உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்பட்டதை அறிக்கை செய்கிறார்கள். இன்றைய நாட்களில் பலவிதமான முறைகளில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டாலும், புதிய ஏற்பாடு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுக்கப்படுகிற விசுவாசிகளின் ஞானஸ்நானத்தை ஒப்புக்கொள்கிறது. ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதின் மூலம் சீடர்கள் கிறிஸ்துவினிடத்தில் தாங்கள் கொண்டிருக்கிற விசுவாசத்தை அறிக்கை செய்கிறார்கள்; பழைய மனிதன் அடக்கம் செய்யப்பட்டுவிட்டான், புதிதான ஜீவனுள்ளவர்களாக வாழத் தீர்மானித்திருக்கிறோம் என்னும் உறுதிமொழிகளையும் அவர்கள் அதன் மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.

**4:6 ஒரே தேவன்.** மீட்கப்பட்ட அனைவருக்கும் **ஒரே தேவனும் பிதாவும் உண்டு** என்று தேவனுடைய பிள்ளையாக இருக்கிற ஒவ்வொருவனும் ஒப்புக்கொள்கிறான். அவரே:

**எல்லார்மேலும்** - இப்பிரபஞ்சம் முழுமைக்கும் ஒப்புயர்வற்ற சர்வாதிகாரியாகத் திகழ்கிறார்.

**எல்லாரோடும்** - அவர் எல்லார் மூலமாகவும் கிரியை செய்கிறார். அவர் தமது நோக்கங்களை நிறைவேற்றும்படி எல்லாவற்றையும் பயன்படுத்துகிறார்.

**உங்கள் எல்லாருக்குள்ளும்** - எல்லா விசுவாசிகளுக்குள்ளும் அவர் குடியிருக்கிறார். ஒரே நேரத்தில் அவர் எல்லா இடங்களிலும் பிரசன்னமாயிருக்கிறார்.

### ஆ. சரீரத்தின் அவயவங்கள் சீரான முறையில் செயல்படுவதற்கான திட்டம் (4:7-16)

**4:7** கிறிஸ்துவின் சரீரத்தின் ஒருமைப்பாட்டிற்கான உபதேசம் இரட்டை உண்மைகளை உடையதாயிருக்கிறது, அதன் அவயவங்கள் வேறுபாடுகள் உடையவை. ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு குறிப்பிட்ட வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த இரண்டு அங்கத்தினரும் ஒன்றுபோல இருப்பதில்லை, எந்த இரண்டு பேரும் ஒரே வேலையைச் செய்கிறதில்லை. கிறிஸ்து வினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, அதாவது எந்த வேலைக்குத் தகுதியானவர் என்று அவர் கண்டு அதைத் தருகிறார். இங்கு கிறிஸ்துவின் ஈவு என்று சொல்லப்பட்டிருப்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுமென்றால் (யோவான் 14:16,17; அப். 2:38,39), பரிசுத்த ஆவியானவர்தாமே ஒவ்வொரு பரிசுத்த வானுக்கும் ஏதோவொரு வரத்தை நல்குகிறார் என்று பொருள்படும். மேலும் அவரே அந்த வரத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான ஆற்றலையும் தருகிறார். ஒவ்வொரு அங்கத்தினரும் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நிறைவேற்றி வருகிறபோது, கிறிஸ்துவின் சரீரமானது ஆவிக்குரிய நிலையிலும் எண்ணிக்கையிலும் வளர்ச்சியடைகிறது.

**4:8** தேவனுடைய பிள்ளையாக இருக்கும் ஒவ்வொருவனும் தன்னுடைய வேலை என்னவென்பதை அறிந்து அதனை நிறைவேற்றத் தக்கதாகக் கர்த்தர்தாமே சபையின் ஊழிய **வரங்களை** வழங்கியிருக்கிறார். இவற்றை முந்தின வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஈவுகளோடு சேர்த்துப்பார்த்து நாம் குழப்பமடையக்கூடாது. ஒவ்வொரு விசுவாசிக்கும் ஏதோவொரு **வரமாவது** கொடுக்கப்பட்டிருக்கும் (வச. 7). ஆனாலும் ஒவ்வொருவரும் 13 -ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற **வரங்களில்** ஒருவராக இருக்க மாட்டார்கள். அந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற வரங்கள் யாவும் சரீரத்தின் வளர்ச்சிக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்பான **வரமாவார்கள்**.

முதலாவது, உயிர்த்தெழுந்து, விண்ணுலகு ஏகிய, மகிமையடைந்த கர்த்தர்தாமே இந்த விசேஷித்த வரங்களை நல்குகிறவர் என்று கண்டறிகிறோம். மேசியா விண்ணகம் செல்லுவார், அவருடைய பகைஞரை வென்று அவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோவார், அவருடைய வெற்றிக்குப் பரிசாக **மனிதர்களுக்கு வரங்களைப்** பெறுவார் எனக்கூறும் தீர்க்கதரிசன வசனம் சங்கீதம் 68:18 -ஐப் பவுல் இங்கு மேற்கோள் காட்டுகிறார்.

**4:9** ஆனால் இது ஒரு பிரச்சினையை எழுப்புகிறது! எவ்வாறு மேசியா விண்ணகம் ஏகுவார்? நித்திய காலமெல்லாம் அவர் தமது திருத்தந்தையாகிய தேவனோடு பரலோகில் வாழவில்லையா? அவர் விண்ணகம் ஏறினார் என்றால், முதலாவது அவர் அங்கிருந்து கீழே இறங்கிவர வேண்டும். அவருடைய விண்ணகம் ஏறிய நிகழ்ச்சி சங்கீதம் 68:18-இல் உரைக்கப்பட்டிருப்பது, அவர் முதலாவது இறங்கி வந்தார் என்னும் உண்மையைக் குறிப்பாய்த் தெரிவிக்கிறது. ஆகவே நாம் 9 -ஆவது வசனத்தை இவ்வாறு பொழிப்புரையாகத் தருகிறோம். "சங்கீதம் 68 -இல், இப்பொழுது **ஏறினார் என்பதினாலே அவர் அதற்கு முன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார் என்று விளங்குகிறதல்லவா?**" இதுவே நடந்தது என்பதை நாம் நன்கறிவோம். கர்த்தராகிய இயேசு பெத்லகேம் முன்னணையில் **இறங்கினார்**, மேலும் சிலுவை மரணத்திற்குப் பின்னர் கல்லறைக்குள் இறங்கினார். சில வேளைகளில் **பூமியின் தாழ்விடங்களில்** என்னும் சொற்றொடர் பாதாளத்தையோ நரகத்தையோ குறிக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சொல்லப்பட்டிருக்கிற வாதத்தோடு இது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை: அவர் விண்ணகம் ஏறுவதற்கு முன்னதாக பூமிக்கு அவர் இறங்கி வரவேண்டிய அவசியம் உண்டாகிறதேயொழிய, நரகத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. மேலும் கிறிஸ்து மரணம் அடைந்தபோது அவருடைய ஆவி பரலோகத்திற்குச் சென்றதாகத்

திருமறையில் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய நரகத்திற்குச் சென்றதாகச் சொல்லப்படவில்லை (லூக்கா 23:43,46).

புதிய ஆங்கில வேதம் (NEB) இந்த வசனத்தை இவ்வாறு மொழிபெயர்த்திருக்கிறது: "ஏறினார் என்னும் சொல், அதற்கு முன்னே அவர் கீழான இடத்திற்கு, இந்த பூமியாகிய தாழ்விடத்திற்கு இறங்கினார் என்று குறிப்பாய்க் காட்டுகிறது."

**4:10** சங்கீதம் 68:18 -இல் சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனமும், அதில் குறிப்பாய்ச் சொல்லப் பட்டுள்ள **இறங்கி**வருதலும், கர்த்தராகிய இயேசு வின் மனுவுரு எடுத்த நிகழ்ச்சி, அவருடைய மரணம், அடக்கம் ஆகியவற்றின் மூலமாக மிகத்துல்லியமாய் நிறைவேறின. பரலோகத்தி லிருந்து இறங்கினவரே பாவத்தையும், சாத்தா னையும், பேய்களையும், மரணத்தையும் வென்று, வாயு மண்டலங்களுக்கும் விண்மீன்கள் அடங் கிய **வானங்களுக்கும் மேலாக உன்னதத் திற்கு ஏறி, எல்லாவற்றையும் நிரப்பத்தக்க தாகச்** செயல்பட்டார்.

அவர் எல்லாவற்றையும் நிரப்புகிறார் என்று கூறும்போது, அவரே எல்லா ஆசிர்வாதங்களுக் கும், சகல நற்குணங்களுக்கும் மூலகாரணராக வும் எல்லாவற்றிற்கும் மேலான சர்வ அதிகாரம் உடையவராகவும் இருக்கிறார் என்னும் பொரு ளையே தருகிறது. "சிலுவையின் ஆழத்திற்கும் மகிமையின் உயரத்திற்கும் இடையில் அவர் நிரப்பாத எந்தவொரு இடமும் இல்லை" என்று இதனை வருணிக்கிறார் F. W. கிராண்ட்.[25]

8 முதல் 10 வரையிலான வசனங்களின் முக் கிய பொருளாக விண்ணகம் சென்ற கிறிஸ்துவே வரங்களை நல்கியவர் என்னும் கருத்து விளங்கு கிறது. அவர் பரலோகத்துக்குச் செல்வதற்கு முன் அப்படிப்பட்ட வரங்கள் இல்லை. பழைய ஏற்பாட் டுக் காலத்தில் சபை இல்லை என்னும் வாதத் திற்கு இது மற்றுமொரு சான்றாக விளங்குகிறது; ஒருவேளை அப்படி இருந்திருந்தால் அது வரங் களற்ற சபையாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

**4:11-13** அந்த வரங்களின் பெயர்கள் இப்பொழுது சொல்லப்பட்டுள்ளன. நம்மை ஆச்சரியப்படுத்தும் வகையில் அந்த வரங்கள் மனிதர்களாயிருக் கிறார்கள். இவை இயல்பாக அமைந்த ஆற்றல் களோ திறமைகளோ அல்ல. **அவர், சிலரை அப் போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளா கவும், சிலரைச் சுவிசேஷராகவும், சிலரை மேய்ப் பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.**

**அப்போஸ்தலர்.** தேவ செய்தியைப் பிரசங் கிக்கவும், சபைகளை நிறுவவும் கர்த்தராலே நேரடியாக நியமிக்கப்பட்டவர்களே அப்போஸ் தலர். அவர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் கண்ட மனிதர்களாயிருக்க வேண்டும் (அப். 1:22). அற்புதங்களைச் செய்ய வல்லவராக இருந் திருக்க வேண்டும் (2 கொரி. 12:12), அவர்கள் பிரசங்கித்த செய்தியை அந்த அற்புதங்கள் உறுதிப்படுத்தின (எபி. 2:4). புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோடு சேர்ந்து சபையின் அஸ்தி பாரத்தை இடுவது அவர்களுடைய முதன்மை யான ஊழியமாயிருந்தது (எபே. 2:20). அப்போஸ் தலர் என்று இந்த வேத பகுதியில் குறிப்பிடப்பட்டி ருப்பது, கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு அப் போஸ்தலராக இருந்த மனிதர்களை மட்டுமே குறிக்கிறது.

**தீர்க்கதரிசிகள்.** தேவனுடைய வாக்குகளை எடுத்துரைக்கிறவர்கள் அல்லது அவருடைய பிரதிநிதிகளே தீர்க்கதரிசிகள். அவர்கள் கர்த்த ரிடத்திலிருந்து நேரடியாக வெளிப்பாடுகளைப் பெற்று, சபைக்கு அவற்றை எடுத்துரைத்தார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியின் மூலமாகப் பேசியதே தேவ வார்த்தையாகும்.

**முதன்மையான பொருளில் நம்மிடையே இப் பொழுது அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் இல்லை.** திருச்சபையின் அஸ்திபாரம் இடப்பட்டு, புதிய ஏற்பாட்டு வேதநூல் தொகுப்பு முழுவதுமாக எழுதிக்கொடுக்கப்பட்டதோடு அவர்களுடைய ஊழியம் நிறைவுபெற்றுவிட்டது. பவுல் இங்கு புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளைப் பற்றியே பேசுகிறார் என்பதை நாம் ஏற்கனவே வலியுறுத் திக் கூறினோம். கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் னரே கிறிஸ்துவால் அவர்கள் கொடுக்கப்பட்டார் கள். பழைய ஏற்பாட்டுத் **தீர்க்கதரிசிகளையே** இந்தப் பகுதி குறிப்பிடுகிறது என்று கருதுவோமா னால், அது இந்த வேதபகுதிக்கு அதிகக் கடினத் தையும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத நிலையையும் கொடுத்துவிடும்.

**சுவிசேஷகர்.** இவர்கள் இரட்சிப்பின் நற்செய்தி யைப் பிரசங்கிக்கிறவர்கள். இழந்துபோன மனிதர் களை கிறிஸ்துவுக்காக வெற்றிகொள்ளும்படி யான தெய்வீக ஆற்றலைப் பெற்றவர்கள். ஒரு பாவியின் நிலை எத்தன்மையாக இருக்கிறது என்பதை அறியவும், அவருடைய மனச்சாட்சியை ஊடுருவி ஆராயவும், அவர் எழுப்பும் எதிர்ப்பு களுக்கு விடைபகரவும், கிறிஸ்துவுக்காக உறுதி எடுக்க உற்சாகப்படுத்தவும், மனந்திரும்பியவர்

வசனத்தின் மூலமாக உறுதிபெற வழிநடத்தவும் கூடிய சிறப்பான திறமையை இவர்கள் பெற்றிருக் கிறார்கள். சுவிசேஷகர் ஓர் உள்ளூர் சபையி லிருந்து வெளியே சென்று உலகிற்கு நற்செய்தி யைப் பிரசங்கித்து, பின்னர் ஆவிக்குரிய உணவை யும் உற்சாகத்தையும் பெறும்படி மனந்திரும்பிய மனிதர்களை உள்ளூர் சபையினிடமாய் வழி நடத்த வேண்டும்.

**மேய்ப்பர்.** கிறிஸ்துவுக்குக்கீழ் அவருடைய ஆடுகளைப் பராமரிக்கும் ஊழியத்தைச் செய்யும் மனிதர்களே மேய்ப்பர் ஆவார்கள். அவர்கள் ஆடுகளை வழிநடத்தி, தேவையான உணவை ஊட்டுகிறார்கள். ஞானத்தோடு ஆலோசனை நல்குதலும், திருத்துதலும், உற்சாகப்படுத்து தலும், ஆறுதல் அளிப்பதும் அவர்களுடைய ஊழியங்களாகும்.

ஒரு ஸ்தல சபையின் மூப்பர்களுடைய வேலைக்கு மிக நெருங்கிய ஊழியத்தைச் செய் கிறவர்களாக மேய்ப்பர்கள் இருக்கிறார்கள். இதில் காணவேண்டிய முக்கியமான வேறுபாடு யாதெனில், மேய்ப்பர் ஒரு வரமாகக் கொடுக்கப்பட்டிருக் கிறார், ஆனால் மூப்பர் ஓர் அலுவலைக் குறிக்கும் பெயராகும். ஒரு ஸ்தல சபையின் பல மேய்ப்பர் கள் இருப்பதாகவே புதிய ஏற்பாடு கூறுகிறது (அப். 20:17,28; 1 பேதுரு 5:1,2). ஒரு சபையில் ஒரே ஒரு மேய்ப்பர் என்றோ, தலைமை தாங்குகிற ஒரே ஒரு மூப்பர் என்றோ இது கூறுவதில்லை.

வேதம் என்ன கூறுகிறது என்று விளக்கிக்கூறி, அதனுடைய பொருளை விவரித்து, பரிசுத்தவான் களுடைய இருதயங்களுக்கும் மனச்சாட்சிகளுக் கும் அதனை நடைமுறையில் உரியதாக்குவதற் கான தெய்வீக ஆற்றலைப் பெற்றவர்களே **போத கர்கள்** ஆவார்கள். ஒரு சுவிசேஷகன் வேதபகுதி ஒன்றையெடுத்து அதனுடைய பின்னணிக்கு அப்பாற்பட்ட வகையிலும் அதிலிருந்து நற்செய் தியை வழங்குகிறார். ஆனால் போதகரோ அந்தப் பகுதி அதனுடைய பின்னணியோடு எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்கிறது என்று விளக் கிக் காண்பிக்கிறார்.

**மேய்ப்பர்களும் போதகர்களும்** இந்த வசனத்தில் ஒன்றிணைத்துக் கூறப்பட்டுள்ளதால், சிலர் இங்கு ஒரு வரம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆகவே இதனை "மேய்ப்பர்-போதகர்" என்றே வாசிக்க வேண்டும் என்றும் கருதுகிறார் கள். ஆனால் அவ்வாறு கருத வேண்டிய கட்டாய மில்லை. ஒரு மனிதர் மேய்ப்பருக்குத் தேவை யான இருதயம் இல்லாதிருந்தும் அவர் போதக ராகச் செயல்படக்கூடும். மேலும் ஒரு மேய்ப்பர் கற்பிக்கும் வரத்தைக் குறிப்பிடத்தக்க வகையில் பெறாதவராயிருந்தும் வேதத்தைப் பயன்படுத்தக் கூடியவராக இருப்பார். இந்தப் பகுதியில் மேய்ப் பரும் போதகரும் ஒரே மனிதர்களைக் குறிப்பிடு மென்றால், அதே இலக்கண[26] விதியின் அடிப் படையில் அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் 2:20 -ஆம் வசத்தில் ஒரே மனிதர்களையே குறிப்பிடுவதாகக் கருத வேண்டும்.

ஒரு இறுதியான சொல். தெய்வீக வரங்களுக் கும், இயல்பான ஆற்றல்களுக்கும் இடையே யுள்ள வேறுபாட்டைப் பகுத்துணர நாம் கவன முடையவராக இருக்க வேண்டும். புதிய ஏற்பாட் டின் அடிப்படையில், இரட்சிக்கப்படாத எந்த மனிதனும் ஒரு சுவிசேஷகராகவோ, மேய்ப்ப ராகவோ, போதகராகவோ இருக்க முடியாது. கிறிஸ்தவனுங்கூட ஒரு குறிப்பிட்ட வரத்தைப் பெற்றிராவிடில், அந்த அலுவலைச் செய்ய முடி யாது. பரிசுத்த ஆவியானவர் தரும் வரங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டவை. மனித ஆற்றலில் அவர் செய்ய இயலாததைச் செய்யும்படி அவ ரைத் தகுதிப்படுத்துவது வரங்களே.

இந்த வரங்களின் செயல்பாடு அல்லது நோக் கங்கள் எவை என்பதை இப்பொழுது காணவிருக் கிறோம். **பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக் காகவும், கிறிஸ்துவின் சரீரமான சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவுமே** இந்த வரங் கள் அருளப்பட்டுள்ளன. அதனுடைய செயல் வளர்ச்சி:

1. அந்த **வரங்கள்** பரிசுத்தவான்களைச் சீர் பொருந்தச் செய்கின்றன.
2. அதன் பிறகு அந்தப் **பரிசுத்தவான்கள்** பணி புரிகிறார்கள்.
3. அதன் பிறகு **சரீரம்** கட்டப்படுகிறது.

இந்த **ஊழியமானது** இதனைத் தங்களது தொழிலாகக்கொள்ள வேண்டும் என்று பயிற்சி பெற்ற சில மனிதர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட வேலையல்ல. இந்தச் சொல் **பணிபுரிதல்** என்ற பொருளை மட்டுமே கொண்டிருக்கிறது. இதனுள் எல்லாவகையான ஆவிக்குரிய அலுவல்களும் அடங்கும். எல்லா விசுவாசிகளும் ஊழியத்தில் பங்குபெற வேண்டும் என்றே இந்த வசனம் கற்பிக் கிறது.


எல்லாக் கிறிஸ்தவர்களும் கர்த்தருக்குப் பணிபுரியும் பொருட்டுச் சீர்பொருந்த வேண்டும்

அல்லது தகுதிபெற வேண்டும் என்பதற்காகவே வரங்கள் கொடுக்கப்படுகின்றன. இவ்வாறாக, **கிறிஸ்துவின் சரீரம் பக்திவிருத்தி அடைகிறது.** வேன்ஸ் ஹேவ்னர் தனது தனிச் சிறந்த நடையில் இதனை விளக்குகிறார்:

> ஒவ்வொரு கிறிஸ்தவரும் திருப்பணி ஊழிய ராக இருப்பதால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் அதற்கென நியமிக்கப்படுகிறார். நற்செய்தி யானது ஏதோ சபைக்கு வந்து கேட்கக்கூடிய ஒன்றல்ல, மாறாக சபைக்கு வெளியே சொல் லப்பட வேண்டிய ஒன்றாகும் என்று சொல்லப் பட்டிருக்கிறது – நாம் யாவரும் அதற்கென நியமிக்கப்பட்டிருக்கிறோம். "கிறிஸ்தவம் பொது உறுப்பினர்கள் என்று அழைக்கப்படும் சாட்சிகளைக் கொண்டே தொடங்கப்பட்டது; ஆனால் இப்பொழுதோ அது மதத்தைத் தொழி லாகக்கொண்ட வல்லுநர்களின் பிரசங்க மேடையாகிவிட்டது, பொது உறுப்பினர்களோ அதற்குப் பொருளாதார உதவிசெய்யும் பார்வை யாளர்களாக மாறிவிட்டார்கள்" என்றும் சொல் லப்படுகிறது! இந்நாட்களில் "முழுநேரக் கிறிஸ்தவ வேலைக்கு" சபையில் கூலிக்கு ஆட்களை அமர்த்துகிறோம்; அவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் வேலைசெய்யும் போது, நாம் சபையில் அமர்ந்து அதனைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவரும் முழுநேரக் கிறிஸ்தவப் பணிக் காகத் தெரிந்தெடுக்கப்பட்டவரே ஆவார். ஆனாலும் மேய்ப்பர்கள், போதகர்கள், சுவி சேஷகர்கள் என்போரது தனிப்பட்ட ஊழியமும் உண்டு. ஆனால் எதற்காக? . . . பரிசுத்தவான் கள் ஊழியம் செய்யத்தக்கதாகச் சீர்பொருந்து வதற்காகவே.[27]

இவ்வாறு தெய்வீகத் தன்மையால் கொடுக்கப் பட்ட மனிதர்கள், சபைமக்கள் எப்பொழுதும் தங்க ளையே சார்ந்திருக்கும்படி ஊழியம் செய்யக் கூடாது. மாறாக, பரிசுத்தவான்களே அந்த ஊழி யத்தைத் தொடர்கிறவர்களாக மாற வேண்டும்; இதுவே அவர்களது ஊழியத்தின் இலக்காக இருக்க வேண்டும். இதனைக் கீழ்க்கண்ட வரைபடத்தின் மூலம் விளக்குவோம்.

மேலே உள்ள படத்தில் மையத்திலுள்ள வட் டம் ஒரு வரம் பெற்ற போதகரைக் குறிப்பதாகக் கொள்வோம். அவர் தன்னைச் சூழ இருக்கும் வட்டங்களாகிய மனிதர் தகுதிபெறும்படி ஊழியம் செய்ய வேண்டும். அதாவது அவர்கள் விசுவாசத் தில் கட்டப்பட வேண்டும். பின்னர் அவர்கள் தேவ னிடத்திலிருந்து பெற்ற வரங்களுக்குத் தக்கதாக



ஊழியத்தைத் தொடர வேண்டும். இவ்விதமாகச் சபையானது பெருகி வளருகிறது. அளவிலும் ஆவிக்குரிய வகையிலும் கிறிஸ்துவின் சரீரம் இவ்விதமான தெய்வீகத் திட்டத்தின்படி வளர்ச்சி யைப் பெறுகிறது.

கிறிஸ்தவ ஊழியத்தை குறிப்பிட்ட ஒரு சில ருக்கே உரிமையானது என்று கட்டுப்படுத்துவது, இறைமக்களின் வளர்ச்சியைத் தடைசெய்கிறது, உலகம் முழுவதும் நற்செய்தி பரவுவதற்கான வாய்ப்பைக் குன்றச்செய்கிறது, வளர்ச்சியைத் தடுத்துவிடுகிறது. குருப்பட்டம் பெற்றவர்கள் என்றும், பொது உறுப்பினர்கள் என்றும் வேறு படுத்திக் காண்பது திருமறைக்கு முற்றிலும் முரணானது. இதுவே நற்செய்தி பரவுவதற்கு மிகப்பெரிய தடையாக விளங்குகிறது.

"இந்த வளர்ச்சி எவ்வளவு காலம் நீடிக்கும்?" என்னும் கேள்விக்குப் பதினோராம் வசனம் விடைதருகிறது. **ஒருமைப்பட்டவர்களாக**, முதிர்ச்சி பெற்றவர்களாக, கிறிஸ்துவுக்கு ஒப் பான வளர்ச்சியடைந்தவர்களாக நாம் **அனை வரும்** ஆகும்வரை தொடரும் என்பதே இதன் விடையாக இருக்கிறது.

**ஒருமைப்பாடு.** கர்த்தர் தமது சபையைப் பரலோக வீட்டிற்கு எடுத்துச் செல்லும்போது நாம் அனைவரும் விசுவாசத்தில் ஒருமைப்பட்டவர் களாக இருப்போம். "நாம் இப்பொழுது கண்ணாடி யிலே நிழலாட்டமாய் பார்க்கிறோம்." இது பற்பல விஷயங்களைப் பொருத்து உண்மையாயிருக் கிறது. பல பொருட்களைக் குறித்து நாம் கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறோம். அப்பொழுது நாம் அனைவரும் ஒரே கருத்து உடையவர்களாக இருப்போம். மேலும் **நாம் தேவனுடைய குமார னைப் பற்றும் அறிவில் ஒருமைப்பட்டவர் களாக** இருப்போம். கர்த்தர் எவ்வாறு இருப்பார், அவர் கற்பித்தவைகளின் விளைவுகள் என்ன

வாக இருக்கும் ஆகியவற்றில் நாம் வெவ்வேறு கருத்துகள் உடையவராயிருக்கிறோம். அப் பொழுது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம், நாம் அறியப்பட்டிருக்க வேண்டிய பிரகாரமாக அறிந்திருப்போம்.

**முதிர்ச்சி.** சபை எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தில் நாம் அனைவரும் முழு வளர்ச்சியை அதாவது முதிர்ச்சியைப் பெற்றிருப்போம். நம்முடைய தனிப்பட்ட நிலையிலும் கிறிஸ்துவின் சரீரம் என்னும் நிலையிலும் ஆவிக்குரிய வளர்ச்சியில் பூரண நிறைவைப் பெற்றிருப்போம்.

**ஒத்திருத்தல்.** நாம் அனைவரும் ஒத்தவர் களாக இருப்போம். ஒவ்வொருவரும் நன்னெறி சார்ந்த பண்புகளில் **கிறிஸ்துவைப்** போலிருப் போம். உலக மகா சபையானது முழு வளர்ச்சி யடைந்த சரீரமாக, மகிமை நிறைந்த சரீரத்திற்கு மிகப் பொருத்தமான நிலையில் காணப்படும். "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற வராகிய கிறிஸ்துவின் நிறைவு சபையேயாகும்" (FWG). சபையின் **நிறைவான வளர்ச்சியின் அளவு** என்பது, சபையின் வளர்ச்சியைக் குறித்து தேவன் என்ன திட்டம் வைத்திருந்தாரோ, அந்த அளவிற்கு முழுவளர்ச்சி அடைகிற நிலையையே குறிக்கிறது.

**4:14** தேவன் நியமித்த முறையில் வரங்கள் செயல்புரிகின்றபோது, மேலும் பரிசுத்தவான்கள் கர்த்தருக்காக உழைப்பதில் தீவிரமாக இருக்கும் போது, மூன்று அபாயங்கள் தவிர்க்கப்படுகின் றன. அவையாவன: முழுவளர்ச்சி அடையாத நிலை, உறுதியற்ற நிலை, எளிதில் ஏமாறக்கூடிய நிலை.

**முழுவளர்ச்சியடையாத நிலை.** கிறிஸ்து வுக்காக முழுமூச்சோடு தீவிரமாக ஊழியத்தில் ஒருக்காலும் ஈடுபடாத விசுவாசிகள், ஆவிக்குரிய குழந்தைகள் என்னும் நிலையிலிருந்து ஒருக் காலும் வெளிவரமாட்டார்கள். பயிற்சி குறை வினால் அவர்கள் வளர்ச்சி குன்றியவராயிருப் பார்கள். அத்தகைய மக்களைக் குறித்தே, "காலத் தைப் பார்த்தால், போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருக்கிறது" என்று எபிரெய மடலின் ஆசிரியர் குறிப்பிட்டார் (எபி. 5:12).

**உறுதியற்ற நிலை.** ஆவிக்குரியவற்றில் நிலை யற்ற தன்மை மற்றுமொரு அபாயமாகும். முதிர்ச் சியடையாத கிறிஸ்தவர்கள் விந்தையான செயல் களினாலும் ஏமாற்றுகின்ற கொள்கைகளாலும் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் நாடோடி போன்று காற்றினாலே அலைக் கழிக்கப்பட்டு அலைகிற சமயத்தாராக, கவர்ந்தி ழுக்கும் மாயையைப் பின்பற்றிச் செல்லுவார்கள்.

**எளிதில் ஏமாறக்கூடிய தன்மை**. எல்லா ஆபத்துகளிலும் மிகவும் மோசமானது வஞ்சிக் கிற செயலே ஆகும். குழந்தைகளாயிருக்கிற வர்கள் நீதியின் வார்த்தையில் பழக்கமற்றவரா யிருக்கிறார்கள். நல்லது எது, தீயது எது என்று பகுத்தறியக் கூடிய ஆற்றல் அற்ற புலன்களை அவர்கள் உடையவர்களாக இருக்கிறார்கள் (எபி. 5:13,14). கள்ள உபதேசத்தைப் பின்பற்றுகிற ஒருவனுடைய வைராக்கியத்தையும், உண்மை யுள்ளவன் என்ற தோற்றத்தையும் கண்டு இவர்கள் எளிதில் கவர்ந்திழுக்கப்படுவதைத் தவிர்க்க இயலாது. அவன் சமயத் தொடர்புள்ள சொற்களைக் கையாளுவதைக் காணும் இவர் கள், அவன் உண்மையான கிறிஸ்தவன் என்று எண்ணுகிறார்கள். அவர்கள் திருமறையை நன்கு கற்றறிருந்திருப்பார்கள் எனில், அவனுடைய ஏமாற்று வித்தைகொண்ட சொற்களை அவர் களால் ஊடுருவிப் பார்த்திருக்க முடியும். ஆனால் இப்பொழுதோ அவர்கள் அவனுடைய தந்திர முள்ள போதகமாகிய காற்றினாலே அலை களைப் போல அடிபட்டு, வேதத்தின் கொள்கை களுக்கு மாறுபட்டதும் சூது நிறைந்ததுமான கள்ள உபதேசங்களுக்குள்ளாக வழிநடத்தப் படுகிறார்கள்.

**4:15** இந்தப் பத்தியில் கடைசி இரண்டு வசனங் களும் கிறிஸ்துவின் சரீரம் முறையான வளர்ச்சி யடைகின்ற விதத்தை விளக்குகின்றன. முதலா வது, உபதேசங்கள் சரியாகப் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியம்: **சத்தியத்தைக் கைக் கொண்டு**... விசுவாசத்தின் அடிப்படைக் கொள்கை களைக் கைக்கொள்வதில் சிறிதளவும் விட்டுக் கொடுக்கக் கூடாது. இரண்டாவது சரியான மன நிலையைக் கொண்டிருத்தல்: **அன்புடன் சத்தி யத்தைக் கைக்கொண்டு.** வேறு எந்தவிதமாகச் சத்தியத்தைக் குறித்துப் பேசினாலும் அது ஒரு சார்பான சாட்சியாகவே காணப்படும். திருவாளர் பிளாய்க்கி அறிவுரை வழங்குகிறார்:

> சத்தியம் என்னும் மூலக்கூறுக்குள்ளாகவே நாம் வாழவேண்டும், நடக்கவேண்டும், நம்மு டைய முழுமையும் அதற்குள்தான் இருக்க வேண்டும்... ஆனால் அந்தச் சத்தியமானது பிரிக்கமுடியாதபடி அன்புடன் திருமணம் செய்துவைக்கப்படவேண்டும்; கடுமையான

> முறையில் சொல்லப்படும் நற்செய்தி, நற்செய்தியல்ல. இன்பமளிக்கும் திறன்கொண்ட நற்செய்தி, செய்தியளிப்பவரின் கரடுமுரடான மனநிலையினால் பயனற்றுப்போகிறது.[28]

பின்னர் வரங்கள் பரிசுத்தவான்களைத் தகுதிப்படுத்துவதினாலும், அவர்கள் திருப்பணியில் தீவிரமாக ஈடுபடுவதாலும் **கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளர்கிறவர்களாக** இருப்பார்கள். கிறிஸ்துவே அவர்களுடைய வளர்ச்சியின் இலக்காயிருக்கிறார்; அந்த வளர்ச்சியின் எல்லை **எல்லாவற்றிலேயும்** என்று சொல்லப்பட்டுள்ளது. அவர்களுடைய வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளிலும் அவர்கள் அதிகமாகக் கிறிஸ்துவைப் போல மாறுகிறார்கள். சபையில் தலையானவர் எவ்வாறு தமது வழியில் செயல்படுகிறாரோ, அதுபோல அவருடைய சரீரமானது வளர்ச்சியின் காரணமாக இன்னும் மிகத் துல்லியமாக இந்த உலகிற்கு அவரைப் பிரதிபலித்துக் காட்டும்!

**4:16** சபையின் வளர்ச்சிக்குக் கர்த்தராகிய இயேசு இலக்காக இருப்பது மட்டுமின்றி, அவரே அந்த வளர்ச்சிக்கு மூலகாரணராகவும் இருக்கிறார். அவர் மூலமாகச் **சரீரம் முழுவதும் வளர்ச்சியடைவதில்** ஈடுபடுகிறது. **சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு** என்னும் சொற்றொடரினாலே, சரீரத்தின் அங்கங்கள் ஒன்றோடொன்று வியத்தகு வகையில் இணைக்கப்பட்டிருப்பதன் மேன்மை விளங்குகிறது. ஒவ்வொரு அங்கமும் அதனதன் இடத்தில் வைக்கப்படுவதற்கும், அதனதன் வேலையைச் செய்வதற்கும், மற்ற அங்கங்களோடு இசைவாய்க் கூட்டி இணைக்கப்படவும், அதன் மூலமாகச் சரீரமானது நிறைவான வளர்ச்சிபெற்று ஓர் உயிர்ப்பொருளாகக் காட்சிதரும்படி மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாக, ஒவ்வொரு அங்கத்தின் முக்கியத்துவமும், அதனுடைய தவிர்க்க இயலாத தன்மையும் குறிப்பிடப்பட்டுள்ளன. **அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு.** மனித சரீரமானது முதன்மையாக எலும்புகள், உறுப்புகள், தசை ஆகியவற்றைக் கொண்டதாக இருக்கிறது. எலும்புகள் யாவும் மூட்டுகளினாலும் தசைநார்களினாலும் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளன. உடலுறுப்புகளும் கூட தசைநார்களோடு இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மூட்டும் தசைநாரும் சரீரத்தின் வளர்ச்சிக்கும் அதனுடைய பயன்பாட்டிற்கும் உரிய வேலையைச் செய்கிறது. அதுபோலவே கிறிஸ்துவின் சரீரமும் இயங்குகிறது. எந்தவொரு உறுப்பும் தேவையற்றதல்ல. மிக எளிமையான விசுவாசியும்கூட சபைக்குத் தேவைப்படுகிறான்.

ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய பங்கை நேர்த்தியாய் நிறைவேற்றுகிறபோது சபையானது இசைவாக இணைக்கப்பட்டு வளர்ச்சி பெற்ற நல்லதொரு சரீரமாகக் காணப்படும். உண்மையில் **சரீரமே சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது.** இது முரண்பாடான கூற்றாகக் காணப்பட்டபோதிலும் இதுவே உண்மை. சரீரத்தினாலே வளர்ச்சியானது தூண்டிவிடப்படுகிறது; அதாவது அதனுடைய உறுப்பினர்கள் வேதத்திலிருந்து உணவை உட்கொண்டு, ஜெபித்து, ஆராதித்து, கிறிஸ்துவுக்காகச் சான்று கூறி, செயல்படுகிறபோது அவ்வளர்ச்சி ஏற்படுகிறது. இதுவே இதனுடைய எளிய பொருள். திருவாளர் சே.ஃபர் கூறியதுபோல "சபையானது மனித உடலைப் போன்று அதனுடைய வளர்ச்சிக்கு அதுவே காரணமாயிருக்கிறது." அதனுடைய அளவில் அது வளர்ச்சி அடைவதுபோல **அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறது.** சபையில் ஒருவருக்கொருவர் கொண்டிருக்க வேண்டிய அக்கறையைக் குறித்து இது பேசுகிறது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக நிலைத்திருந்து, சபையில் அவரவருடைய வேலையை நேர்த்தியாகச் செய்கிறபோது, அவர்கள் அன்பிலும் ஒருமைப்பாட்டிலும் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமாக வளர்ச்சியடைகிறார்கள்.

### இ. புதிதான நன்னெறி ஒழுக்கத்தை அடையும்படி அறிவுறுத்துதல் (4:17-5:21)

**4:17** புதிதான நன்னெறி ஒழுக்கத்தை அடையும்படி அப்போஸ்தலன் கூறும் நாவன்மை மிக்க வேண்டுகோள் இங்கு தொடங்கி 5:21 -ஆம் வசனம்வரை தொடர்கிறது. **கர்த்தருக்குள் சாட்சியாக** அதாவது **கர்த்தருடைய** அதிகாரத்தினாலே மற்றும் தெய்வீக ஏவுதலினாலே, கிறிஸ்தவர்கள் தங்களுடைய முந்தின வாழ்க்கையின் சுவட்டை, புழுதி படிந்த மேலாடையைக் கழற்றி எறிவது போல அடியோடு களைந்தவர்களாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்குணங்களையும் மேதகைமையையும் அணிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் வற்புறுத்துகிறார். **மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையில் நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள்.** அவர்கள் இனிமேல் புறவினத்தாரல்லர். அவர்கள் இப்பொழுது கிறிஸ்தவர்கள். அவர்

களுடைய வாழ்க்கையில் அதற்கேற்ற மாற்றம் காணப்படவேண்டும். கிறிஸ்து இல்லாத புறவின நாடுகள் அறியாமையிலும், இழிவான நிலை யிலும் மூழ்கிப்போய்க் கிடப்பதைப் பவுல் கண் டார். அவர்களுடைய நிலைமையை பயங்கரமான ஏழு குணங்கள் வெளிப்படுத்தின. அவையாவன:

*குறிக்கோள் அற்ற தன்மை.* அவர்கள் **தங்க ளுடைய வீணான சிந்தையிலே** நடந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை வெறுமையாயிருந் தது, குறிக்கோள் அற்றதாயிருந்தது. கனியற்றதா யிருந்தது. அவர்கள் தீவிரமாகச் செயல்புரிந்தார் கள், ஆனாலும் முன்னேற்றம் இல்லை. அவர்கள் நீர்க்குமிழ்களையும் நிழல்களையும் பின் தொடர்ந்தார்கள், வாழ்க்கைக்குத் தேவையான சத்தியங்களை அசட்டை செய்தார்கள்.

**4:18** *கண்பார்வையற்ற நிலை.* "அவர்கள் மாயத் தோற்றமுள்ள உலகத்தில் கண்கள் கட் டப்பட்டு பார்வையற்றவரைப் போல வாழ்ந்தார் கள்" (JBP). **அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட் டிருந்தார்கள்.** முதலில் ஆவிக்குரிய சத்தியங் களை அறிவதற்குத் தேவையான ஆற்றலற்ற தன்மையைத் தங்களுடைய பிறப்பிலேயே கொண்டிருந்தார்கள். பின்னர் மெய்யான தேவனைக் குறித்த அறிவை அவர்கள் நிராகரித் ததால், கர்த்தருடைய தண்டனையாகக் குருட் டுத் தன்மையைப் பெற்றிருந்தார்கள்.

*தேவனற்ற நிலை.* அவர்கள் **அறியாமை யினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியரா யிருந்தார்கள்.** அல்லது அவர்கள் தேவனை விட்டு வெகுதொலைவில் இருந்தார்கள். இது அவர்களுடைய சொந்த விருப்பத்தினாலும், உள்ளார்ந்த அறியாமையினாலும், தங்களுடய இருதயங்களைக் கடினப்படுத்திக்கொண்ட தாலும் உண்டான நிலைமையாகும். படைப்பின் மூலமாகவும், மனச்சாட்சியின் மூலமாகவும் தேவன் கொடுத்த வெளிச்சத்தை அவர்கள் ஏற்க மறுத்த வர்களாக, சிலைவணக்கத்திற்குத் திரும்பினார் கள். அதன் பிறகு அவர்கள் தேவனை விட்டு வெகுதொலைவு விலகிச் சென்றுவிட்டார்கள்.

**4:19** *வெட்கமற்ற நிலை.* அவர்கள் உணர் வில்லாதவர்களாக இருந்தார்கள். திருவாளர் W. C. ரைட் விளக்கமளிக்கிறார்:

> "வேதனை தரும் எண்ணங்களுக்கு முடிவு கண்டவர்களாக" என்று இதனை மௌல் மொழிபெயர்க்கிறார். இது எவ்வளவு பொருட் செறிவு மிக்கதாயிருக்கிறது! முதல் தடவை மனச்சாட்சியை மீறுகிறபோது, அது சடுதியில் கடும் வேதனையைத் தருகிறது. அந்த மனச் சாட்சி எதிர்த்துப் பேசுகிறதைக் கேட்க முடிகிறது. அந்தச் சத்தத்தை அடக்கிவிட்டால், பிற்பாடு அந்தச் சத்தம் தெளிவற்று அவசரத் தன்மையை இழந்துபோகிறது; அந்த எதிர்ப்புணர்ச்சி நினைவுக்கு வருகிறதில்லை. வேதனையின் கடுமை குறைந்து பின்னர் இறுதியில் "வேதனை அறவே இல்லாமல் அதற்கு முடிவு ஏற்பட்டு விடுகிறது."[29]

*ஒழுக்கக் கேடு.* அவர்கள் மனப்பூர்வமாக **காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்தார்கள்.** அதாவது, கீழ்த்தரமான ஒழுக்கக்கேடுகளுக்குத் தங்களை ஒப்புவித்தார்கள். புறவினத்தாருடைய முதன்மையான பாவம் ஒழுக்கக்கேடே ஆகும். அது இன்னமும் அவர்களிடையே தொடர்கிறது. அதற்கு இணையான அளவு இல்லை என்று சொல்லத்தக்கபடி அவர்கள் மிகவும் கீழ்நிலைக் குச் சென்றுவிட்டார்கள். சோதோம் கொமோரா வின் சுவர்கள் வெட்கக்கேடு மற்றும் பண்பாடற்ற நிலை ஆகியவற்றின் கதையைக் கூறும். அதே பாவங்கள் இன்றைய புறவின உலகத்தின் நடத் தையாக இருக்கின்றன.

*இழிநிலை.* அவர்கள் ஒழுக்கக் கேட்டில் ஈடு பட்டு **சகலவித அசுத்தங்களையும்** செய்தார் கள். அவர்கள் **காமவிகாரத்தைத்** தங்களுடைய தொழிலாக அல்லது வியாபாரமாகச் செய்யும் அளவிற்கு எல்லாவிதமான **அசுத்தங்களுக்கும்** அவர்கள் தங்களை ஒப்புவித்தார்கள் என்னும் பொருள் இங்கே தொக்கி நிற்கிறது.

*மிகுந்த பேராசை. ஆவலோடு.* அவர்கள் மனநிறைவு அடையவே இல்லை. அவர்களுக்குப் போதும் என்னும் நிலை உண்டாகவே இல்லை. அவர்களுடைய பாவம் அதே பாவத்தை மென் மேலும் செய்யும்படி பேரளவில் வேட்கையைத் தூண்டிவிட்டது.

**4:20** எபேசுப் பட்டணத்தார் கிறிஸ்துவை அறிந்தவர்களாக அவரிடத்தில் அன்புகூர்ந்தார் கள், அவரிடத்தில் மேற்கூறிய பாவங்கள் ஒன்று மில்லை. அவர் முற்றிலும் வேறுபட்டவராக இருந் தார். தூய்மை, ஒழுக்கம் ஆகியவற்றின் திருவுரு வாக விளங்கினார். அவர் பாவத்தை அறிய வில்லை, அவர் பாவம் செய்யவில்லை, அவரிடத் தில் பாவமில்லை.

**4:21 நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே.** இந்த வசனம் ஏகாரத்தில் முடிவடைகிறது. எபேசுப் பட்டணத்தார் மனமாற்றம் அடைந்தவர்களா என்னும் ஐயத்தை எழுப்பும்படி இச்சொற்றொடர் எழுதப்படவில்லை. கிறிஸ்துவினிடத்தில் **கேட்டவர்கள்,** மேலும் **அவரால் போதிக்கப்பட்டவர்கள்,** அவரே பரிசுத்தம், தெய்வீகம் ஆகியவற்றின் சாரம் என்பதை அறிந்து கொண்டார்கள் என்பது மட்டுமே இவ்வசனம் வலியுறுத்துகிற பொருளாகும். கிறிஸ்துவினிடத்தில் கேட்டவர்கள் என்று சொல்லும்போது, விசுவாசம் என்னும் கேள்வியாற்றலோடு **அவரிடத்தில் கேட்டவர்கள்** என்பதே பொருள்; அதாவது அவரைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டவர்கள். எபேசியர் தங்களுடைய மனமாற்றத்திற்குப் பிறகு, கர்த்தரோடு தொடர்ந்து நடந்து ஐக்கியம் கொண்டிருந்ததால் பெற்றுக்கொண்ட அறிவுரையையே **அவரால் போதிக்கப்பட்டவர்கள்** என்னும் சொற்றொடர் குறிப்பிடுகிறது. "ஒருவர் இயேசுவோடு தனிப்பட்ட உறவு கொண்டிருப்பதால் எல்லாச் சத்தியங்களும் வேறுவிதமான வண்ணப் பொலிவையும் வேறுவிதமான பண்பையும் பெறுகின்றன. கிறிஸ்து என்னும் நபரன்றி சத்தியத்தில் வலிமையில்லை" என்று திருவாளர் பிளாய்க்கி கூறுகிறார்.[30] **இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே.** அவர் சத்தியத்தைப் போதித்தது மட்டுமன்றி, அவரே மனுவுருவெடுத்த சத்தியமும் ஆவார்(யோவான் 14:6). **இயேசு** என்னும் பெயர், அவர் இப்புவியில் வாழ்ந்த வாழ்க்கையை நோக்கி பின்னிட்டு அழைத்துச் செல்கிறது. ஏனெனில் அதுவே அவர் மனுவுருவெடுத்தபோது பெற்ற பெயர். அவர் இந்த உலகத்தில் மனிதராக வாழ்ந்த களங்கமற்ற வாழ்க்கையில் புறவினத்தாரின் நடத்தைக்கு முற்றிலும் முரண்பாடான நடத்தையையே நாம் காண்கிறோம்; அவர்களுடைய வாழ்க்கையைக் குறித்து அப்போஸ்தலன் சற்று முன்னர் விளக்கிக் கூறினாரே.

**4:22** நம்முடைய மனமாற்றத்தின்போது **முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளின்** மூலமாகக் **கெட்டுப்போகிற பழைய மனிதனை** நாம் களைந்து போட, கிறிஸ்துவின் பள்ளியில் கற்றுக்கொண்டோம். ஒருவன் தன்னுடைய மனமாற்றத்திற்கு முன்னர், அதாவது அவன் ஆதாமின் பிள்ளையாக இருந்த காலத்தில், அவன் யாராக இருந்தானோ அந்நிலையே **பழைய மனிதன்** என்பதன் பொருளாகும். மோசம் போக்கும் கேடுநிறைந்த வேட்கைகளின் மூலமாக அது கெட்டுப்போயிருக்கிறது. அந்த வேட்கைகள் முதலில் இன்பமானவையாகவும், நல்ல வாய்ப்புகளை உண்டாக்கக் கூடியவையாகவும் காணப்படும்; ஆனால் அவை செய்து முடிக்கப்பட்டபின் அருவருப்பானவையாகவும் ஏமாற்றத்தை உண்டுபண்ணுகிறவையாகவும் காணப்படும். நடைமுறையில் ஒரு விசுவாசி தன்னை இறந்துபோனவனாகவே கருதவேண்டும். இங்கு பவுல் நம்முடைய தகுநிலை உண்மையையே வலியுறுத்துகிறார். நாம் **பழைய மனிதனை** என்றைக்குமாகக் **களைந்துபோட்டு** விட்டோம்.

**4:23** இயேசுவின் பாதத்தில் எபேசியர் கற்றுக் கொண்ட இரண்டாவது பாடம், அவர்கள் **உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களானார்கள்** என்பதே ஆகும். அவர்களுடைய சிந்தை முழுதிசைமாற்றம் பெற்றுவிட்டது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. தூய்மையற்ற நிலையிலிருந்து பரிசுத்தத்தை நோக்கி அவர்களுடைய உள்ளம் மாற்றமடைந்துவிட்டது. இரட்சிக்கப்படாத மனிதனுடைய மனநிலையின்படியல்ல, தேவனுடைய மனநிலைக்கு ஏற்ப அவர்களுடைய சிந்தனை மாறும்படி தேவ ஆவியானவர் ஏவிவிடுகிறார்.

**4:24** என்றென்றைக்குமென அவர்கள் **புதிய மனிதனைத் தரித்துக்கொண்டார்கள்** என்பது அவர்கள் கற்றுக்கொண்ட மூன்றாவது பாடமாகும். கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் விசுவாசியாராக இருக்கிறான் என்பதையே **புதிய மனிதன்** என்னும் சொற்றொடர் குறிப்பிடுகிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவை ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17). புதிய வகை மனிதன் தேவனுடைய சாயலாக, அதாவது அவரைப்போல சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். அது **மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும்** தானாக வெளிப்படுகிறது. பிறரிடம் முறையாக நடந்துகொள்ளுதலே நீதி என்பதன் பொருளாகும். "தேவனிடத்தில் பக்தி உடையவராய் இருந்து, அவருக்கு உரிய இடத்தில் அவரை வைப்பதே" பரிசுத்தம் எனப்படும் என்று திரு. F. W. கிராண்ட் வரையறுத்துக் கூறுகிறார்.[31]

**4:25** விசுவாசிகளின் தகுநிலையிருந்து அவர்களுடைய நடைமுறை வாழ்க்கையை நோக்கி இப்பொழுது பவுல் திரும்புகிறார். அவர்கள் இப்பொழுது கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருப்பதால்

தங்களுடைய பழைய மனிதனைக் களைந்து விட்டு, புதிய மனிதனைத் தரித்துக்கொண்டு விட் டார்கள். இதன் காரணமாக அவர்கள் தங்களு டைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் திகைக் கச் செய்யும் வேறுபாட்டை வெளிப்படுத்திக் காட்டவேண்டும்.

அவர்கள் முதலாவது, **பொய்யைக் களைந்து,** உண்மையுள்ள தன்மையை அணிந்து கொள் வதாலே இதைச் செய்ய முடியும். எல்லாவிதமான நேர்மையற்ற தன்மையும் பொய்தான். ஒரு வேளை அது உண்மையைச் சற்று மறைத்துப் பேசு வதாகவோ, மிகைப்படுத்திப் பேசுவதாகவோ, ஏமாற்றுவதாகவோ, வாக்குறுதிகளை நிறைவேற் றத் தவறுவதாகவோ, நம்பிக்கைத் துரோகம் செய்வதாகவோ, முகத்துதி செய்வதாகவோ, வருமானத்தை மறைத்து வரி செலுத்தாமல் இருப் பதாகவோ இருக்கலாம். ஒரு கிறிஸ்தவனுடைய ஆம், ஆம் என்றே காணப்படவேண்டும்; அவனு டைய இல்லை, இல்லை என்றே காணப்பட வேண் டும். கிறிஸ்தவனுடைய சொற்கள் முழுவதும் நம்பிக்கைக்கு உரியதாக விளங்க வேண்டும். ஒரு கிறிஸ்தவன் தனது உண்மையுள்ள தன்மை யைக் கெடுத்துக்கொள்ளத்தக்கதான கீழ்நிலைக் குச் செல்வானானால் அவனுடைய வாழ்க்கை திருமறையாகத் திகழாமல் அவதூறாகவே காணப்படும்.

உண்மை என்பது நாம் பிறர் எல்லோருக்கும் செலுத்த வேண்டிய கடனாக இருக்கிறது. ஆயினும், **பிறன்** என்ற சொல்லைப் பவுல் இங்கு பயன்படுத்துகிறபோது, அவர் நம்முடைய உடன் விசுவாசிகளைக் குறித்தே நினைத்துப் பார்க் கிறார். நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாக இருக்கிறபடியால் என்னும் சொற்றொடரால் அவர் அந்த உட்கருத்தைக் கொண்டிருந்தார் என்பது தெளிவு (ரோமர் 12:5; 1 கொரி. 12:12-27 ஆகிய வச னங்களோடு ஒப்பிடுக). ஒரு கிறிஸ்தவன் வேறொரு கிறிஸ்தவனிடம் பொய் சொல்லுவது நினைத்துப் பார்க்கவும் கூடாததாயிருக்கிறது; ஏனெனில் ஒரு சரீரத்திலுள்ள நரம்பு, தனக்கு எதிராக பேராபத்து நெருங்கி வருகிறபோது, மூளைக்கோ கண் ணுக்கோ வேண்டுமென்றே தவறான செய்தியை அனுப்புவதுபோல அது இருக்கும்.

**4:26** நமது வாழ்க்கையில் புதிப்பிக்கப்பட வேண்டிய இரண்டாவது அம்சம், பாவத்தோடு கூடிய **எரிச்சல்,** நீதியுள்ள கோபம் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும். சில வேளைகளில் ஒரு விசு வாசி நீதியாகக் **கோபம்** அடையக்கூடிய சூழ் நிலை ஏற்படலாம்; எடுத்துக்காட்டாக தேவனுக்கு எதிராகப் பழிசுமத்தப்படும் வேளையில் அவன் கோபமடைகிறான். அப்படிப்பட்ட தருணங்களில் கோபப்படவேண்டும் என்று கட்டளை கொடுக்கப் பட்டுள்ளது: **கோபங்கொள்ளுங்கள்.** பொல் லாங்குக்கு எதிராக கோபம்கொள்வது நீதி யானதே. ஆனால் வேறு சில தருணங்களில் கோப மடைவது பாவமாகக் காணப்படும். பகைமை யுணர்ச்சி, பொறாமை, மனக்கசப்பு, பழிவாங்கும் எண்ணம், தனக்கு எதிராகக் குற்றமிழைக்கும் போது ஏற்படக்கூடிய வெறுப்பு ஆகியவை நீதி யற்ற நிலையையே காட்டுகின்றன. "எவனொரு வனும் கோபமடையக் கூடும், அது எளிது; ஆனால் சரியான நபருக்கு எதிராக, சரியான அளவு, சரியான சமயத்தில், சரியான நோக்கத்தோடு, சரியான முறையில் கோபமடைவது எளிதன்று" என்று அரிஸ்டாட்டில் கூறினார்.

ஒரு விசுவாசி நீதியற்றபடி எரிச்சல் அடைய இடம் கொடுத்தால், அவர் அதனை உடனடியாக அறிக்கைசெய்து விட்டுவிட வேண்டும். தேவனி டத்திலும், யாருக்கு எதிராகக் கோபம் அடைந் தாரோ அவரிடத்திலும் அறிக்கை செய்ய வேண் டும். எவரொருவருக்கும் எதிராக வெறுப்பை வளர்த்துக்கொள்ளக்கூடாது, மனக்கசப்பை மறைத் துவைத்துக்கொள்ளக்கூடாது, எரிச்சலைத் தொடரவிடக்கூடாது. சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. தேவனோடு அல்லது நம்முடைய உடன் சகோ தரரோடு கொண்டிருக்கிற ஐக்கியத்தைப் பாழ் படுத்தக் கூடிய ஏதென்றையும் நாம் உடனடி யாகச் சரிசெய்ய வேண்டும்.

**4:27** எரிச்சலின் காரணமாக எழுந்த பாவங் கள் அறிக்கை செய்யப்படாதிருக்குமானால் அவை காலூன்றி கிரியை நடப்பிக்க பிசாசுக்கு இட மளித்து விடுகின்றன. அல்லது பிசாசு தனது நட வடிக்கைகளுக்கான இடமாக அதைப் பிடித்துக் கொள்கிறான். வேண்டுமென்றே நாம் அவனுக்கு உதவி செய்யவில்லையென்றாலும், இப்படிப்பட்ட பல செயல்களை அவன் எளிதில் கண்டுபிடித்து விடுகிறான். ஆகவே, நாம் பகைமை, எரிச்சல், பொறாமை, வெறுப்பு, வெறி ஆகியவற்றை நம்மு டைய வாழ்க்கையில் பொறுத்துக்கொள்ளக் கூடாது. இந்தப் பாவங்கள் கிறிஸ்தவ சாட்சியைக் கெடுத்துவிடுகின்றன, இரட்சிக்கப்படாதவரை இட றிவிழச் செய்கின்றன, விசுவாசிகளின் உணர்ச் சியைப் புண்படுத்துகின்றன, மேலும் ஆவிக்குரிய நிலையிலும் சரீரப்பிரகாரமாகவும் இவை நமக் குத் தீங்கு விளைவிக்கின்றன.

**4:28** அடுத்தபடியாக, ஒன்றுக்கொன்று முரண் பாடான நடத்தைகளான திருடுதல் கொடுத்தல் ஆகியவற்றைப் பற்றி பவுல் தன்னுடைய கவனத் தைத் திருப்புகிறார். பழைய மனிதன் திருடு கிறான், புதிய மனிதன் கொடுக்கிறான். பழைய மனிதனைக் களைந்து போடுங்கள்; புதிய மனித னைத் தரித்துக்கொள்ளுங்கள்! கிறிஸ்தவர்கள் பாவமற்ற நிறைவான நிலையைப் பெற்றிருக் கிறார்கள் என்னும் தவறான எண்ணத்தை, இங்கு பவுல் கூறுகிற, **"திருடுகிறவன் இனித் திருடா மலிருக்கக்கடவன்"** என்னும் அறிவுரை தவ றென்று மெய்ப்பிக்கிறது. அவர்களுக்கு இன்னும் பழையதும், தீமையானதும், தன்னலமிக்கதுமான சுபாவம் இருக்கிறது, அதனை அவர்கள் தங்களு டைய அனுதின அனுபவத்தில் இறந்துபோன தாகக் கருதவேண்டும். திருட்டு பலவகைப்படும், அது மிகப்பெரிய களவாடுதலாக இருக்கலாம் அல்லது கடன்களைத் திரும்பச் செலுத்தாததாக வும் இருக்கலாம், நாம் அலுவலக நேரத்தில் கிறிஸ்துவுக்குச் சாட்சி கூறுவதும் நேரத்தைத் திருடுகிறதாகும்; பிறர் எழுதியவற்றைத் திருடு தல், தவறான எடைக் கற்களைப் பயன்படுத்து தல், செலவினங்களைத் தவறாகக் காட்டுதல் யாவும் திருட்டைச் சேர்ந்ததே ஆகும். திருடக் கூடாது என்னும் கட்டளை புதியது அல்ல என்பது தெரிந்ததே. மோசேயின் நியாயப்பிரமாணம் திருடுவதைத் தடை செய்திருந்தது (யாத். 20:15). தொடர்ந்து வருகிற அறிவுரை இப்பகுதி கிறிஸ்த வர்களுக்கே உரியது என்பதைத் தெளிவுபடுத்து கிறது. நாம் திருடாமல் இருப்பது மட்டுமின்றி, பற்றாக்குறை உள்ளவர்களுக்குக் கொடுத்து உதவத்தக்க வகையில் நேர்மையான வேலை செய்ய வேண்டும். நியாயப்பிரமாணம் அல்ல, கிருபையே பரிசுத்தத்திற்கான வலிமையைத் தருகிறது. கிருபையின் ஆக்கபூர்வமான வலி மையே ஒரு திருடனைப் பரோபகாரியாக மாற்றும்.

இது அடிப்படை மாற்றத்தை உண்டாக்கக் கூடியதும் புரட்சிகரமானதுமாகும். ஒரு மனிதன் தனது சொந்தத் தேவைகளையும் விருப்பங் களையும் நிறைவு செய்வதற்காக உழைப்பதே பொதுவான இயல்பாகும். அவர்களுடைய வரு மானம் கூடக்கூட, அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் உயருகிறது. அவர்களுடைய வாழ்க்கை யின் ஒவ்வொரு செயலும் சுயத்தை முன்னிட்டே நடைபெறுகிறது. உலகீய வேலை உயர்வானது, அதிக மதிப்புடையது என்னும் கருத்தை இந்த வசனம் குறிப்பாய்த் தெரிவிக்கிறது. ஒரு குடும்பம் ஓரளவு தகுதியான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டு விளங்கத் தேவையானவற்றைப் பெற் றுக்கொள்ள அதுவே வழியாகும். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மனிதர்களுடைய ஆவிக்குரிய **குறைச்சலையும்,** இவ்வுலக வாழ்க்கையின் குறைச்சலையும் நீக்கவும் இது வழிவகுக்கிறது. இந்தக் **குறைச்சல்** எவ்வளவு பெரிதாயிருக் கிறது!

**4:29** இப்பொழுது அப்போஸ்தலன் எவ்வாறு பேசுவது என்னும் பொருள்பற்றி கூறத்தொடங்கு கிறார். எவ்விதப் பயனும் இல்லாத பேச்சு, புத்தி புகட்டக் கூடிய பேச்சு ஆகியவற்றிற்கு இடையே யுள்ள வேறுபாட்டை அவர் இங்கு விவரிக்கிறார். கெட்ட வார்த்தை என்று இங்கு சொல்லப்பட்டிருப் பது பொதுவாக, கீழ்த்தரமான உரையாடலையும் வேறொரு பொருளோடு பேசுவதையுமே குறிப் பிடுகிறது. ஒழுக்கக்கேடானவற்றை நகைச்சுவை போலப் பேசுவது, தெய்வநிந்தனை, இழிவான கதைகள் யாவும் இவற்றுள் அடங்கும். ஆனால் இங்கு இது மேலும் விரிவான பொருளைக் கொண்டிருக்கிறது. அற்பமானதும், வெறுமை யானதும் வீணானதும் பயனற்றதுமான உரை யாடல்களையும் இச்சொல் குறிக்கிறது. 5:4 -ஆம் வசனத்தில் பவுல் கீழ்த்தரமான பேச்சைப் பற்றி எழுதுகிறார். இங்கே, பயனற்ற பேச்சை நாம் விட் டொழித்து, ஆக்கபூர்வமான உரையாடலையே நடைமுறைப் படுத்தவேண்டுமென்று அவர் அறிவுறுத்துகிறார். கிறிஸ்தவர்களது பேச்சு:

*அறிவுபுகட்டுவதாக இருக்க வேண்டும்.* அது கேட்போரை விசுவாசத்தில் உறுதிப்படுத்து கிற பயனை விளைவிக்க வேண்டும்.

*பொருத்தமானதாக இருக்க வேண்டும்.* அது சூழ்நிலைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

*கிருபையுள்ளதாக இருக்க வேண்டும்.* அது கேட்கிறவர்களுக்கு கிருபையைப் பகிர்ந்த ளிப்பதாக இருக்க வேண்டும்.

**4:30 அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக் கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.** இந்த வசனத்தை இதற்கு முந்தின வசனத்தோடு சேர்த்துப் பார்த்தால், பயனற்ற பேச்சு பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது என்பது இதனுடைய பொருளாகும். இவ்வசனத்தை 25-28 வசனங்களோடு தொடர்புபடுத்தியும் காணலாம். அவ்வாறு காண்கையில், பொய் கூறுதல், நீதி யற்ற கோபம், திருடுதல் ஆகிய செயல்களும் அவரைத் துக்கப்படுத்துகின்றன என்பது புலப் படும். இன்னும் விரிவான பொருளில் காணு

மிடத்து, அவரைத் துக்கப்படுத்துகிற ஏதொரு செயலிலிருந்தும், எல்லாச் செயலிலிருந்தும் நாம் விலகியிருக்க வேண்டும் என்று இவ்வசனம் புத்தி புகட்டுவதாக அறிய முடியும்.

இதற்கு மூன்று ஆணித்தரமான காரணங்கள் கூறப்படுகின்றன:

1. அவர் ***பரிசுத்த ஆவியானவர்***. பரிசுத்த மற்ற ஏதொரு செயலும் அவருக்கு அருவருப் பானதாக இருக்கிறது.
2. அவர் **தேவனுடைய** பரிசுத்த ஆவியாக இருக் கிறார். அதாவது மூவொரு இறைவனில் ஒரு நபராக அவர் இருக்கிறார்.
3. நாம் **மீட்கப்படும் நாளுக்கென்று** அவரால் **முத்திரிக்கப்பட்டிருக்கிறோம்.** ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது போல, முத்திரை உடைமையுரிமையையும் பாதுகாப்பையும் குறிக்கிறது. கிறிஸ்து நமக்காக வந்து நம்மு டைய இரட்சிப்பு நிறை வாகும்வரை நாம் காக் கப்படுவோம் என்னும் உறுதியைத்தருகிற முத்திரையாக அவர் விளங்குகிறார். விசுவாசி கள் பாவம் செய்யக்கூடாது என்பதற்குப் பவுல் மிக வலிமையான காரணங்களில் ஒன்றாக நித்திய பாதுகாப்பைப் பயன்படுத்துவது நமது கவனத்தைத் தூண்டுகிறது.

பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்த முடி யும் என்ற உண்மை, அவர் ஒரு நபர் என்பதையும் வெறுமனே ஒரு செயலைத் தூண்டிவிடக் கூடிய ஆற்றல் கூறு அல்ல என்பதையும் காட்டுகிறது. மேலும் அது, அவர் நம்மீது அன்புகூருகிறார் என்பதையும் தெரியப்படுத்துகிறது, ஏனெனில் அன்புகூருகிற ஒருவரையே துக்கப்படுத்த முடி யும். கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதும், விசு வாசியை அவருடைய சாயலாக மாற்றுவதுமே தேவனுடைய ஆவியானவருடைய சிறப்பான ஊழியமாகும் (2 கொரி. 3:18). ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்கிறபோது, அவர் தமது ஊழியத் திலிருந்து அவனைச் சீர்பொருந்தச் செய்யும் ஊழியத்தினிடமாய்த் திரும்ப வேண்டிய தேவை ஏற்படுகிறது. அந்த விசுவாசியின் ஆவிக்குரிய வளர்ச்சி பாவத்தினால் தடைபடுகிறதைக் காண் கிறபோது, அது அவரைத் துக்கப்படுத்துகிறது. அப்பொழுது அவர் அந்தக் கிறிஸ்தவனை மனந் திரும்பி அப்பாவத்தை அறிக்கை செய்யும்படி யான நிலைக்கு வழிநடத்துகிறார்.

**4:31** நாவினாலும், மனதினாலும் செய்யக் கூடிய அனைத்துப் பாவங்களையும் விட்டொ ழிக்க வேண்டும். அவற்றுள் பலவற்றை அப் போஸ்தலன் இங்கு பட்டியலிட்டுக் காட்டுகிறார். அவற்றை நம்மால் துல்லியமாக வேறுபடுத்திக் காட்ட முடியாது, எனினும் அவற்றின் ஒட்டு மொத்த அர்த்தம் மிகத்தெளிவாக இருக்கிறது.

**கசப்பு** - உள்ளத்தில் ஏற்படும் குமுறல், எரிச்சல், பிறரை மன்னிக்க விருப்பமற்ற தன்மை மற்றும் கொடூரமான எண்ணங்கள்.

**கோபம்** - கடுஞ்சீற்றம், வன்முறையோடு கூடிய வெறி, சடுதியில் தோன்றும் கடுங்கோபம்.

**மூர்க்கம்** - மனநிறைவற்ற தன்மை, வெறுப்பு, பகைமை.

**கூக்குரல்** - கோபத்தினால் சத்தமாகக் கூக் குரலிடுதல், கூச்சலிடுதல், சிறுசிறு விஷயங் களுக்காகக் கோபத்தோடு சண்டையிடுதல், எதிர்ப்பவர்களை அடக்கும்படி சத்தமிடுதல்.

**தூஷணம்** - வசைச்சொற்கள், அவதூறாய்ப் பேசுதல், பழிதூற்றி நிந்தித்தல்.

**துர்க்குணம்** - மற்றவர்களுக்கு தீமை ஏற் படவேண்டுமென்று எண்ணுதல், காழ்ப்புணர்ச்சி, குறுகிய மனப்பான்மை.

**4:32** மனநிலையில் ஏற்படக்கூடிய மேற்கூறப் பட்டுள்ள பாவங்களை விட்டொழித்து, கிறிஸ்து வைப் போலாகுதலுக்கான குணங்களால் அந்தக் காலியிடங்களை நிரப்பும்படி பயிற்சி மேற் கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்டுள்ளவை நம்முடைய சுபாவத்தில் ஏற்படக்கூடிய பாவங் களாகும். கீழ்வருபவை இயற்கைக்கு அப்பாற் பட்ட நற்குணங்களாகும்.

***தயவு*** - பிறர் நன்மை கருதி, தன்னலமற்ற வகையில் செயல்படுதல், தன்னுடையவற்றைத் தியாகம் செய்து பிறருக்கு உதவிசெய்ய விருப் பங்கொள்ளுதல்.

***மனவுருக்கம்*** - பிறரிடம் பரிவும் பாசமும் இரக் கமும் காட்டும் மனப்பான்மை, மேலும் அவர்களு டைய பாரத்தைச் சுமக்க விருப்பங்கொள்ளுதல்.

***மன்னித்தல்*** - பிறருடைய குற்றங்களை மன்னிக்க ஆயத்தமாயித்தல், தனக்கு எதிராகச் செய்யப்பட்ட குற்றங்களைப் பொருட்படுத்தாமல் இருத்தல், பழிக்குப் பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணத்தை உள்ளத்தில் வைக்காமல் அதனை அறவே அகற்றுதல்.

தேவன்தாமே மன்னிக்கும் மனப்பான்மைக்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். அவர் மன்னிக்கிறதற்கு அடிப்படையாக விளங்குவது,

கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நிறைவேற்றிய செயலாகும். நாமோ மன்னிப்பைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாயிருக்கிறோம். சரியான இழப்பீடு செய்யப்படாமல் தேவன் பாவத்தை மன்னிக்க இயலாது. அவர் தமது அன்பின் காரணமாக, அவருடைய நீதி விரும்பியபடி, இழப்பை ஈடுசெய்யக்கூடிய பரிகாரத்தை ஏற்படுத்தினார். கிறிஸ்துவுக்குள், அதாவது அவருடைய ஆளுமை மற்றும் அவருடைய செயல் ஆகியவற்றில் பிதா, நீதியின் ஆதாரத்தைக் கண்டுபிடித்தவராகப் பாவத்தை மன்னிக்கக் கூடியவராக இருக்கிறார்.

"கோடிக்கணக்கான ரூபாய்" பணத்தை நாம் கடனாகச் செலுத்த வேண்டிய தருணத்தில் அவர் நமக்கு அதைத் தள்ளுபடி செய்து மன்னித்தார். அவ்வாறிருக்க, பிறர் நமக்கு "ஒருசில ரூபாயைக்" கடனாகச் செலுத்த வேண்டியபோது, நாம் அதனை மன்னிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் (மத். 18:23-28. JBP). திருவாளர் லென்ஸ்கி அறிவுரை நல்குகிறார்:

> எனக்கு எதிராக ஒரு மனிதர் தவறிழைத்த உடனே அவரை நான் மன்னிக்க வேண்டும். அப்பொழுது என்னுடைய ஆத்துமா எவ்விதக் களங்கமும் அற்றதாய் இருக்கும். அந்தத் தவறை அவருக்கு எதிராக எனதுள்ளத்தில் தொடர்ந்து வைத்திருப்பேனென்றால், நான் தேவனுக்கு எதிராகவும், அந்த மனிதருக்கு எதிராகவும் பாவம் இழைத்தவனாகக் காணப்படுவேன். மேலும் நான் தேவனிடத்தில் பெறுகிற பாவ மன்னிப்பை அது இடருக்குள் உட்படுத்துகிறது. அந்த மனிதர் மனம் வருந்துகிறாரா, அதற்குரிய சரியான நடவடிக்கையில் ஈடுபடுகிறாரா, என்னிடத்தில் பாவமன்னிப்பைக் கேட்கிறாரா அல்லது ஏதொன்றையும் செய்யவில்லையா இவற்றில் எதனாலும் எவ்வித மாற்றமும் இல்லை. நான் அவரை உடனடியாக மன்னித்துவிட்டேன். தான் செய்த தவறுக்கு அவர் தான் தேவனை எதிர்கொள்ள வேண்டும். அது தேவனுக்கும் அவருக்கும் இடையேயுள்ள விவகாரம். ஆனாலும் நான் செய்ய வேண்டிய உதவி யாதெனில், மத்தேயு 18:15 இன்னும் சில பகுதிகளில் சொல்லப்பட்டிருக்கிறவற்றின் படி நான் செயல்படுவதேயாகும். என்னுடைய முயற்சி வெற்றியடைகிறதா இல்லையா என்பது ஒரு பொருட்டே அல்ல. அந்த முயற்சி தொடங்குவதற்கு முன்னமே நான் அவரை மன்னித்திருக்க வேண்டும்.[32]

**5:1** மன்னிப்பதற்கு மாதிரியாக தேவன் திகழ்கிறார் என்று 4:32 -ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை ஆதாரமாகக் கொண்டே பவுல் இங்கு அறிவுரை நல்குகிறார். இதுவே இங்கு காணப்படும் தொடர்பு: கிறிஸ்துவில் தேவன் உங்களை மன்னித்திருக்கிறார். இப்பொழுது நீங்கள் ஒரு வரையொருவர் மன்னிப்பதில் **தேவனைப் பின்பற்றுகிறவர்களாக** விளங்க வேண்டும். **நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல** என்னும் சொற்களில் சிறப்பான நோக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது. பொதுவாக மனித வாழ்க்கையில் பிள்ளைகள் குடும்பப் பண்புகளைக் கொண்டிருப்பார்கள். அந்தக் குடும்பத்தின் பெயரை நிலைநிறுத்த வேண்டுமென்று அவர்களிடம் எதிர்பார்க்கப்படும். ஆவிக்குரிய வாழ்வில், நாம் நம்முடைய பிதாவை இவ்வுலகிற்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அவருடைய **பிள்ளைகள்** என்னும் நிலையில் நாம் கொண்டிருக்க வேண்டிய நன்மதிப்பிற்கு ஏற்ற வண்ணம் நம்முடைய நடத்தை காணப்பட முயற்சி செய்ய வேண்டும்.

**5:2** நாம் கர்த்தரைப் பிரதிபலித்துக் காட்ட வேண்டிய இன்னொரு அம்சம் **அன்பிலே நடப்பதாகும்**. பிறருக்காக நம்மையே தந்தருளுவதே **அன்பிலே நடப்பது** என்னும் சொற்றொடரின் பொருளாகும். இதனை இந்த வசனத்தின் ஏனைய பகுதி விளக்கிக் கூறுகிறது. நம்முடைய நிறைவான மாதிரியான கிறிஸ்துவே அதைச் செய்தார். இ.ந்து ஆச்சரியமான உண்மை! அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தார். கல்வாரியில் அவர் நமக்காகத் தம்மையே மரணத்தில் ஒப்புவித்த செய்கை அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்தமைக்கு நிரூபணமாக விளங்குகிறது.

அவருடைய ஈவு **தேவனுக்குக் காணிக்கையாகவும் பலியாகவும்** விளங்கிற்று என்று இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. தேவனுக்குச் செலுத்தப்படுகின்ற ஏதொன்றும் **காணிக்கை** ஆகும்; **பலி** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதில் மரணம் என்னும் அம்சமும் அடங்கியிருக்கிறது. அவரே மெய்யான தகன **பலி.** அவரே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றத் தம்மை முழுவதுமாக ஒப்புவித்தவர். அவர் தம்மைச் சிலுவையின் மரண பரியந்தம் ஒப்புவித்தார். சொல்லிமுடியாத பயபக்தியோடுகூடிய அவருடைய **சுகந்த வாசனையான பலி** என்னும் புகழுரையை அது பெற்றிருக்கிறது. திருவாளர் F. B. மேயர் விளக்குகிறார்: "அந்த அன்பு அளவிடுவதற்கரியது, என்ன விலை செலுத்தவேண்டும் என்பதைப் பொருட்படுத்தா

தது, அந்த அன்பின் மூலமாக விண்ணகத்தைச் சுகந்த வாசனையில் நிரப்பியதும், தேவனுடைய இதயத்திற்குப் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது மான காட்சிப்பொருள், இயல்பில் எவ்விதத் தகுதி யும் இல்லாத மனிதர்களுக்காக வைக்கப் பட்டது."[33]

பிறருக்காகத் தம்மையே கொடுத்து, கர்த்தரா கிய இயேசு தமது பிதாவைப் பிரியப்படுத்தினார். நாமும்கூட பிறருக்காக நம்மையே கொடுத்து தேவனுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவர முடியும் என்பதே இங்கு நாம் கற்கும் பாடம். இதனை, "பிறர், பிறர், ஆம் பிறரே என் வாழ்வின் நோக்க மாக இருக்கட்டும்; நான் பிறர்க்கென வாழ்ப வனாக விளங்க, நீர் எனக்கு உதவி செய்யும். அதன் மூலமாக நான் உம்மைப் போல வாழ்வேனே!" என்று வேண்டுகிறார் சார்லஸ் D. மெய்க்ஸ்.

**5:3** மூன்றாவது மற்றும் நான்காவது வசனங் களில் அப்போஸ்தலன் மீண்டும் தவறான பாலுறவு என்னும் பாவத்தைப் பற்றிப் பேசத் திரும்பு கிறார். மேலும் அவர் அந்தப் பாவத்திலிருந்து விசுவாசிகள் பரிசுத்தவானுக்குரிய பிரிந்துவாழ் வதைக் கைக்கொள்ள வேண்டுமென்று அறிவு றுத்துகிறார். அவர் பலவகையான ஒழுக்கக்கேடு களைக் குறிப்பிடுகிறார்:

**வேசித்தனம்.** விபசாரம், வேசித்தனம் ஆகிய இரண்டு சொற்களும் ஒரே வசனத்தில் சொல்லப் பட்டிருக்கிற இடங்களிலெல்லாம் வேசித்தனம் என்ற சொல் திருமணமாகாத நபர்களுக்கிடையே நிகழும் தவறான பாலுறவையே குறிக்கும். ஆயினும் அவ்வாறு அந்தச் சொல் வேறுபடுத்திக் காட்டப்படவில்லை. ஆகவே இது எல்லாவகை யான பாலுறவு ஒழுக்கக் கேடுகளையும் குறிப்பிடு கிறது என்றே தோன்றுகிறது. ("இழிவான இலக் கியம்" அதாவது "வேசித்தனம் போன்றவற்றைப் பற்றி எழுதுவது" யாவும் வேசித்தனத்தோடு தொடர்புடையவை.)

**அசுத்தம்.** இதுவும் ஒழுக்கங்கெட்ட செயல் களையே குறிப்பிடுகிறது. ஆனால் தூய்மையற்ற படங்கள், அருவருக்கத்தக்க புத்தகங்கள் மற்றும் காம உணர்வுகளைத் தூண்டிவிடுகிற பொருட் கள் ஆகியவற்றோடு பண்பாடு அற்ற வாழ்க்கை முறை இவையாவும் வெறித்தனமான வேட்கை யைத் தூண்டிவிடுகின்றன.

**பொருளாசை.** பொதுவாக இதனை நாம் பணத்தின்மீது கொண்டிருக்கும் ஆசையைக் குறிக்கும் சொல் என்றே கருதுகிறோம். ஆனால் இச்சொல் இங்கு சிற்றின்ப வேட்கையையே குறிக் கிறது. திருமணத்திற்கு அப்பாற்பட்ட கலவியில் ஈடுபட்டு மனநிறைவு அடைய முடியாத வேட்கை யைத் தணித்துக்கொள்வதற்கான நாட்டம். (யாத். 20:17 -ஆம் வசனத்தைக் காண்க: "பிறனு டைய மனைவியை ... இச்சியாதிருப்பாயாக.")

இவை **பேர்முதலாய்** கிறிஸ்தவர்களுக் கிடையே **சொல்லப்படவும் கூடாது.** விசுவாசி கள் இந்தப் பாவங்களைச் செய்தார்கள் என்று இவற்றின் பெயர்களைச் சொல்லக்கூடாது என் பதுதான் இதன் பொருள் என்பதைச் சொல்ல வேண்டிய தேவையில்லை. இவ்வித நடத்தை யைக் குறித்து விவாதித்து இவற்றின் பாவ அவமான உணர்வுகளைக் குறைத்துவிடக் கூடாது. இச்செயல்களைக் குறித்து சர்வசாதார ணமாகப் பேசுவது, சாக்குப் போக்குகளைக் காரணங்களாகக் கூறுவது, இவற்றைப் பற்றி தொடர்ந்து நன்கு அறிந்தாற்போல் உரையாடு வது அனைத்தும் எப்பொழுதும் பேராபத்தை விளைவிக்கக் கூடியன. பவுல் தன்னுடைய அறிவு ரையை, **பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி** என் னும் சொற்றொடரால் வலியுறுத்துகிறார். இந்த உலகத்தின் கேட்டிலிருந்து விசுவாசிகள் பிரித் தெடுக்கப்பட்டுள்ளார்கள்; இப்பொழுதோ அவர் கள் அந்தகார வெறிச் செயல்களிலிருந்தும் பேச்சுகளிலிருந்தும் விலகித் தங்களுடைய பிரித் தெடுக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும்.

**5:4** அவர்களுடைய பேச்சு எல்லாவிதமான கறைகளுக்கும் விலகியிருக்க வேண்டும்:

**வம்பு.** அருவருப்பான கதைகள், காம வெறியை மறைமுகமாகக் கொண்ட கேலிப் பேச்சு கள் மற்றும் எல்லாவிதமான அருவருப்பானதும் பண்பாடற்றதுமான பேச்சுகள்.

**புத்தியீனமான பேச்சு.** ஒரு மூடன் பேசுவது போன்று பயனற்ற உரையாடலில் ஈடுபடுவது. சாய்க்கடைப் பேச்சும் இதில் சேரும்.

**பரியாசம்.** ஆபாசமானதும், உள்ளர்த்தம் கொண்டதுமான நகைச்சுவை. ஒரு செயலைக் குறித்துப் பேசி, அதைக் குறித்த நகைச்சுவை களைக் கூறி, உங்களுடைய உரையாடலில் அந்தப் பொருள்பற்றிப் பேசுவது, உங்களுடைய மனதிற்குள் அதனை அறிமுகப்படுத்தி அதனை நீங்கள் உண்மையிலேயே செய்யும்படியான ஒரு நெருக்கத்திற்குள் கொண்டு வந்துவிடும்.

பாவத்தைப் பற்றிய நகைச்சுவையைக் கூறுவது எப்பொழுதும் ஆபத்தானதாகும். தகுதியற்றதும் இழிவானதுமான பேச்சுகளில் தன்னுடைய நாவை ஒரு கிறிஸ்தவன் ஈடுபடுத்துவதற்குப் பதிலாக தான் வாழ்க்கையில் பெற்ற சகல நன்மைகளுக்காகவும் இரக்கங்களுக்காகவும் தேவனுக்கு மனமுவந்து ஸ்தோத்திரத்தை ஏறெடுக்கும் பழக்கத்தை கொண்டிருப்பானானால் அதுவே தகுதியானதாகக் காணப்படும். இது கர்த்தருக்கு மனமகிழ்ச்சியையும், பிறருக்கு நல்லதொரு மாதிரியையும், அவனுடைய சொந்த ஆத்துமாவுக்குப் பயனையும் விளைவிக்கும்.

**5:5** ஒழுக்கங்கெட்ட மனிதர்களைக் குறித்து தேவன் கொண்டிருக்கும் மனப்பான்மையைப் பற்றி தவறாகக் கருதுவதற்கு எவ்வித இடமுமில்லை: அவர்களுக்கு **தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமில்லை.** பாலுறவுப் பாவங்களில் ஈடுபடுகிறவர்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் என்றும், அவர்களுக்கு மனநிலை மருத்துவம் தேவையென்றும் இந்த நாட்களில் உலகம் கொண்டிருக்கிற கருத்துக்கு மேற்கூறிய தீர்ப்பு முற்றிலும் முரண்பாடானதாக இருக்கிறது. ஒழுக்கங்கெட்ட நடத்தையை மனிதர்கள் நோய் என்று குறிப்பிடுகிறார்கள்; தேவனோ அதைப் பாவம் என்று கூறுகிறார். மனிதர்கள் அதைப் பொறுத்துக்கொள்கிறார்கள்; தேவனோ அது தண்டனைக்குரியது என்கிறார். உளநிலையைப் பகுத்தாராய்ந்து சரிசெய்வதே இதற்கு விடை என்று மனிதர்கள் கூறுகிறார்கள்; தேவனோ மறுபிறப்பு அடைவதே இதற்கு விடை என்று கூறுகிறார்.

மூன்றாவது வசனத்தில் சொல்லப்பட்டுள்ள அதே குற்றவாளிகள் இங்கு மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளார்கள் - விபசாரக்காரன், அசுத்தன், பொருளாசைக்காரன். இங்கு பொருளாசைக்காரன் விக்கிரகாராதனைக்காரனாகவும் இருக்கிறான் என்னும் சிந்தனை சேர்க்கப்பட்டுள்ளது. தேவன் எப்படிப்பட்டவர் என்பதைக் குறித்த தவறான எண்ணம் உடையவனாக இருப்பது, அவன் விக்கிரக ஆராதனைக்காரனாக இருப்பதற்கான காரணங்களில் ஒன்றாகும்: அந்த மனிதனுடைய எண்ணத்தின்படி தேவன் சிற்றின்ப வேட்கையை அனுமதிக்கிறவர் ஆவார், இல்லையெனில் அவன் எவ்வாறு பொருளை இச்சிக்கத் துணிவுகொள்வான். பொருளாசையானது விக்கிரக ஆராதனையாக விளங்குவதற்கு இன்னொரு காரணம் என்னவெனில், அந்த மனிதன் தேவனுடைய சித்தத்திற்கு மேலாக, தன்னுடைய சித்தத்தை வைப்பதாகும். படைப்பாளரைத் தொழுதுகொள்வதற்குப் பதிலாகப் படைப்பைத் தொழுதுகொள்வது அதற்கான மூன்றாவது காரணமாகும் (ரோமர் 1:25).

அப்படிப்பட்ட மனிதர்களுக்கு ராஜ்யத்தில் சுதந்தரம் இல்லையென்று பவுல் கூறும்போது, அவர் அந்தப் பொருள்படவே மிகச்சரியாகச் கூறுகிறார். இப்படிப்பட்ட பாவ வாழ்க்கை வாழ்கிறவர்கள் இழந்து போனவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் தங்களுடைய பாவங்களோடுதான் இருக்கிறார்கள், மேலும் அவர்கள் நரகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். தற்காலத்தில் காணக்கூடாத நிலையில் இருக்கும் அந்த ராஜ்யத்தில் அவர்கள் இடம்பெற்றிருக்க மாட்டார்கள். விண்ணுலக நித்திய ராஜ்யத்தில் இடம்பெறாதபடி என்றென்றைக்குமாக அவர்கள் புறம்பே தள்ளப்படுவார்கள். அவர்கள் ஏற்கனவே ராஜ்யத்தில் இடம் பெற்றவர்களாயிருந்து, கிறிஸ்துவின் நியாயாசனத்தில் தங்களுடைய பரிசுப் பொருளை இழந்து போவார்கள் என்று அப்போஸ்தலன் இங்கு சொல்லவில்லை. இங்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள பொருள் இரட்சிப்பேயொழிய பரிசுப்பொருட்களல்ல. அவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களே அல்லர் என்பதைத் தங்களுடைய வாழ்க்கையின் மூலமாக மெய்ப்பிக்கிறார்கள். மனம் வருந்தி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலே வைக்கும் விசுவாசத்தினாலே அவர்கள் இரட்சிப்பைப் பெறமுடியும் என்பது உண்மையே. ஆனால் மெய்யாகவே அவர்கள் மனந்திரும்பியிருந்தால், மேலே சொல்லப்பட்டுள்ள பாவங்களை அதன்பிறகு தொடர்ந்து செய்யமாட்டார்கள்.

**தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே** என்னும் சொற்றொடரில் கிறிஸ்துவின் தெய்வீகம் குறிப்பாய் உணர்த்தப்படுகிறதைக் கவனியுங்கள். கிறிஸ்து ராஜ்யத்தின் அரசர் என்னும் நிலையில் பிதாவாகிய தேவனுக்குச் சமமான நிலையில் வைக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

**5:6** இவ்வுலகில் பெரும்பாலான மனிதர்கள் சிற்றின்ப ஒழுக்கக்கேடுகளைக் குறித்து மிக அதிகமான அளவில் கருணையும் சகிப்புத் தன்மையும் உடைய மனப்பாங்கைக் கொண்டிருக்கிறார்கள். உடலில் உண்டாகக் கூடிய வேட்கை

களை நிறைவு செய்வது மனிதனுக்குத் தேவை யானதும் பலனளிக்கக் கூடியதுமாயிருக்கிறது என்றும், அவற்றைக் கட்டுப்படுத்துவதால் மனிதர் கள் தாறுமாறான எண்ணம் உடையவர்களாக வும் செயலற்றவர்களாகவும் மாறிவிடுவார்கள் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். நாம் எப்படிப் பட்ட நாகரிகத்தில் வாழ்கிறோமோ அதைப் பொருத்தே எது சரி எது தவறு என்பது முடிவு செய் யப்படவேண்டும். இன்றைய பண்பாட்டின்படி "திருமணமாவதற்கு முன் கூடிவாழ்வது," "திரு மணத்திற்கு அப்பாற்பட்டு பாலுறவுகொள்வது", "ஓரினச்சேர்க்கை" ஆகியவை ஏற்றுகொள்ளப் பட்டிருக்கின்றன, ஆகவே அவற்றைச் சட்டப்படி சரியானவை என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள் (தேவனுடைய திருமறை இவற்றை வேசித்தனம், விபசாரம், அவலட்சணம் என்று கூறி குற்றப்படுத்துகிறது). ஆனால் இதில் ஆச்சரியம் என்னவென்றால், பாலுறவு ஒழுக்கக் கேடுகளைச் சட்டப்படி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிற மனிதர்களில் சிலர், கிறிஸ்தவ சபைகள் என்று சொல்லிக்கொள்ளும் சபைகளில் மிகவுயர்ந்த பதவி வகிப்பவர்கள் ஆவார்கள். ஆகவே சாதா ரண உறுப்பினர்களாக இருக்கும் மனிதர்கள் ஒழுக்கக் கேடான செயல்களை ஒழுக்கக்கேடு என்று நினைக்கும் நிலையிலிருந்து, பிரபலமான சமயத்தலைவர்களின் மூலமாக உறுதியைப் பெற்றவர்களாக முந்தின கொள்கைகள் வழக்கற் றுப் போயின என்று நினைக்கும் நிலைக்கு மாறிவிட்டார்கள்.

இவ்வித முரண்பாடான பேச்சைக்கேட்டு, கிறிஸ்தவர்கள் ஏமாந்துபோய்விடக்கூடாது. **இப் படிப்பட்டவைகளின் நிமித்தமாகக் கீழ்ப்படி யாமையின் பிள்ளைகள்மேல் கோபாக்கினை வருகிறது.** வேசித்தனம், விபசாரம் போன்ற பாவங் களின்மேல் தேவன் எப்படிப்பட்ட மனப்பான்மை கொண்டிருக்கிறார் என்பதை எண்ணாகமம் 25:1-9 வசனங்களில் காணமுடியும்; மோவாபியப் பெண் களோடு இஸ்ரவேலர் பாவம் செய்த காரணத் தினால் அவர்களில் இருபத்து நாலாயிரம் பேர் செத்தார்கள். சோதோம் கொமோரா ஆகிய பட்ட ணங்கள் மேல் வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் பொழியப்பண்ணி கர்த்தர் அழித் துப் போட்டதன் மூலமாக ஓரினச் சேர்க்கையைக் குறித்து அவர் கொண்டிருந்த மனப்பான்மை வெளிப்படுகிறது (ஆதி. 19:24,28).

ஆனால் அப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற் பட்டமுறைகளில் தண்டனைகளை வழங்குகிற தில் மட்டுமே தேவன் தம்முடைய கோபாக் கினையை வெளிப்படுத்துகிறதில்லை. சிற்றின்பச் சீர்கேடுகளில் ஈடுபடுகிறவர்கள் இன்னும் பல வழி களில் அவருடைய தண்டனையைப் பெறுகிறார் கள். உடலைப் பாதிக்கக்கூடிய பலவகைப் பாலி யல் நோய்கள், மனநோய்கள், நரம்புத் தளர்ச்சி கள், குற்றவுணர்வினால் ஏற்படக்கூடிய மன நிலைப் பாதிப்புகள் போன்றவை. மனிதனுடைய ஆளுமையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ் விதப் பாவங்களைச் செய்கிறவர்கள் ஆண்தன் மையை இழந்துவிடுகிறார்கள் (ரோமர் 1:27). அது மட்டுமின்றி விபசாரக்காரருக்கும் வேசித்தனம் செய்கிறவர்களுக்கும் இறுதியில் நித்திய ஆக் கினை வழங்கப்படும் என்பதில் ஐயமில்லை (எபி. 13:4). கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுக்கு எவ் வித இரக்கமும் காண்பிக்கப்படமாட்டாது - கீழ்ப் படியாத ஆதாமின் வழித்தோன்றல்கள், பிடிவாத மாக அவனுடைய வழியைப் பின்பற்றி தேவனுக் குக் கீழ்ப்படிகிறதில்லை (வெளி. 21:8).

**5:7** இப்படிப்பட்ட அக்கிரமம் நிறைந்த நடத் தைகளில் விசுவாசிகள் சிறிதும் பங்குகொள்ளக் கூடாது என்று கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டிருக் கிறார்கள். அவ்வாறு செய்வது, கிறிஸ்துவின் திருப்பெயரைக் கனவீனப்படுத்துவதாகவும், பிறருடைய வாழ்க்கையைக் கெடுத்துவிடுவதாக வும், தனது சொந்த சாட்சியைப் பேரழிவுக்குள் உட்படுத்துவதாகவும், பெருவெள்ளம்போல் பாய்ந்துவருகிற தண்டனைகளை வரவழைப்ப தாகவும் காணப்படும்.

**5:8** ஏழாவது வசனத்தில் சொல்லப்பட்டிருக் கிற தவிர்க்க இயலாத கட்டளையைச் செயல் படுத்துவதற்கு உதவியாக அப்போஸ்தலன் இப்பொழுது, **அந்தகாரம்** மற்றும் **வெளிச்சம்** ஆகியவற்றைக் குறித்த பொருட்செறிவுமிக்க போதனை உரையை வழங்குகிறார்(வச. 8-14). **முற்காலத்தில்** எபேசுப் பட்டணத்தார் **அந்தகார மாயிருந்தார்கள், இப்பொழுதோ** அவர்கள் **கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறார்கள்.** அவர்கள் அந்தகாரத்தில் இருந்தார்கள் என்று பவுல் கூறவில்லை, மாறாக அவர்கள் தாமே அந்தகாரத்தின் மனுவுருவாக இருந்தார்கள். இப்பொழுது கர்த்தரோடுள்ள இணைப்பின் மூலமாக அவர்கள் **வெளிச்சமாக** மாறிவிட்டார் கள். அவர் ஒளியாயிருக்கிறார்; அவர்கள் அவ ருக்குள் இருக்கிறார்கள்; ஆகவே அவர்கள் இப்பொழுது **கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக் கிறார்கள்.** அவர்களுடைய நடைமுறை வாழ்க்கை, அவர்களுடைய தகுநிலைக்கு ஏற்றவண்ணம்

இருக்க வேண்டும். அவர்கள் **வெளிச்சத்தின் பிள்ளைகளாக** நடக்க வேண்டும்.

**5:9** இங்கு காணப்படும் இடைப்பிறவரல், வெளிச்சத்தில் நடக்கிறவர்கள் தருகிற **கனி** எத்தகையது என்பதை விளக்குகிறது.

**ஆவியின் கனி**[34] எல்லா வகையான **நற்குணத்தையும், நீதியையும், உண்மையையும்** உடையதாயிருக்கிறது. இங்கு **நற்குணம்** என்று சொல்லப்பட்டிருப்பது எல்லாவிதமான நல்லொழுக்க மேன்மைகளையும் உட்கொண்டதாயிருக்கிறது. தேவனோடும் மனிதனோடும் ஈடுபடுகிற சகல விஷயங்களிலும் நேர்மையாக விளங்குவது என்பதே நீதி என்பதன் பொருளாகும். **உண்மை** என்பது கள்ளமின்மை, நியாயம், தவறற்ற தன்மை ஆகியவையே. இவை யாவற்றையும் ஒன்று கூட்டினால், இருளார்ந்த அந்தகாரத்தின் நடுவே கிறிஸ்துவால் நிறையப்பெற்ற ஒளிவீசும் வாழ்க்கையைக் காண்பீர்கள்.

**5:10** வெளிச்சத்தில் நடக்கிறவர்கள், முந்தின வசனத்தில் பட்டியலிடப்பட்டுள்ள கனி வகையை உண்டுபண்ணுவது மட்டுமின்றி, **கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று** அறிந்துகொள்வார்கள். அவர்கள் தங்களுடைய ஒவ்வொரு எண்ணத்தையும், சொல்லையும், செயலையும் சோதனைக்குட்படுத்துவார்கள். இதைக் குறித்துக் **கர்த்தர்** என்ன நினைப்பார்? அவருடைய சமுகத்தில் இது எவ்விதமாகக் காணப்படும்? வாழ்க்கையின் ஒவ்வொரு கூறும், அதாவது, உரையாடல், வாழ்க்கைத்தரம், ஆடைகள், நூல்கள், தொழில், களியாட்டுகள், பொழுதுபோக்குகள், வீட்டுச் சாமான்கள், நட்புகள், விடுமுறைகள், வாகனங்கள் மற்றும் விளையாட்டுகள் ஒவ்வொன்றும் பல்நோக்கு ஒளிவிளக்குகளால் ஆராயப்படும்.

**5:11 கனியற்ற அந்தகாரக் கிரியைகளில்** ஈடுபடுவதன் மூலமாகவோ, அதைக்குறித்து பொறுமையைக் கடைப்பிடித்து, கருணையுள்ளத்தோடு நடந்துகொள்வதன் மூலமாகவோ **உடன்பாடு**கொள்ளக் கூடாது. தேவனையும் மனிதனையும் பொருத்தமட்டில் **அந்தகாரக் கிரியைகள்** கனியற்றவை. இவ்விதமான முற்றிலும் கனியற்ற தன்மையைக் குறித்தே ரோமாபுரிக் கிறிஸ்தவர்களிடம் அப்போஸ்தலனாகிய பவுல் ஒருமுறை, "இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது?"என்னும் கேள்வியைத் கேட்கத் தூண்டியது (ரோமர் 6:21). இதற்கும் மிகுதியாய் **அந்தகாரக் கிரியைகள்** இருக்கின்றன: மங்கலான ஒளியை உடைய உலகத்திற்கே அவை சொந்தமாயுள்ளன, இழுத்து மூடப்பட்டுள்ள போர்வை, மூடப்பட்ட கதவுகள், இரகசிய அறைகள். மனிதருடைய கிரியைகள் பொல்லாதவையாக இருக்கிறபடியால் அவர்கள் ஒளியை வெறுத்து **அந்தகாரத்தை** விரும்புகிறார்கள். அவர்களது இயல்பான பண்பை இது பிரதிபலிக்கிறது (யோவான் 3:19). கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு விசுவாசியானவன் விலகியிருக்க வேண்டுமென்னும் அழைப்பைப் பெற்றிருப்பது மட்டுமின்றி, அவற்றை அவன் கடிந்துகொள்ள வேண்டுமென்னும் நேரடியான அழைப்பையும் பெற்றிருக்கிறான். இதனை அவன் இரண்டு வழிகளில் செய்கிறான்: முதலாவது பரிசுத்தமான வாழ்க்கையின் மூலமாக, இரண்டாவது, பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலால் கடிந்துகொள்ளும் சொற்களைப் பேசுவதால் அவை நிறைவேறுகின்றன.

**5:12** கிறிஸ்தவர்கள் ஏன் ஒழுக்கங்கெட்ட நடத்தைகளுக்கு உடந்தையாயிருக்கக் கூடாது, மற்றும் அதனை ஏன் கடிந்துகொள்ள வேண்டும் என்பதற்கான காரணத்தை இப்பொழுது பவுல் விவரிக்கிறார். இரகசியமான இடங்களில் மனிதர்கள் செய்யக்கூடிய வெறுக்கத்தக்கப் பாவங்களைக் குறித்துச் **சொல்லுவதும் அவலட்சணமாக** இருக்கிறது. அவ்விழிந்த பாவங்களைப் பற்றிப் பேசுவதே இழிவானால், அவற்றைச் செய்வது எவ்வளவு இழிவாகக் காணப்படும். சுபாவத்திற்கு முரணான பாவங்களை மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். அவற்றை விளக்கிக் கூறுவதே கேட்போருடைய உள்ளத்தை மாசுபடுத்திவிடும், அந்த அளவிற்கு அவை கீழ்த்தரமானவை. ஆகவே கிறிஸ்தவர்கள் அதைக் குறித்துப் பேசுவதிலிருந்தும் தடைசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

**5:13** இருளில் இருப்பதெல்லாம் **வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்.** ஆகவே பரிசுத்தமான கிறிஸ்தவனுடைய வாழ்க்கை, அதற்கு முரணாக விளங்குகிற புது பிறப்படையாத வாழ்க்கையின் பாவத்தன்மையை வெளிப்படுத்துகிறது. மேலும் அந்தப் பாவங்களைத் தகுதியான சொற்களால் கடிந்துகொள்ளும்போது, அந்தப் பாவங்களின் உண்மையான நிலை வெளிப்படும். பிளேய்க்கி என்பார் இதனை எடுத்துக்காட்டினால் விளக்குகிறார்:

> எடுத்துக்காட்டாக, பரிசேயருடைய மாய்மாலத்தைக் கர்த்தர் கடிந்துகொண்டபோது பரிசேயரின் செயல்கள் மிகவும் பொல்லாதவையாக

> இருந்தன என்பதை அதற்கு முன்னர் சீடர்கள் அறிந்திருக்கவில்லை, ஆனால் கிறிஸ்து சத்தியம் என்னும் தூய்மையான வெளிச்சத்தை அதன்மேல் வீசச்செய்தபோது, அவற்றின் உண்மையான பண்பு வெளியரங்கமாகக் காணப்பட்டது–அது வெளிப்பட்டது, அது இன்னமும் வெளிப்படுகிறது, அதனுடைய அருவருப்பு வெளியரங்கமாயிருக்கிறது.[35]

இந்த வசனத்தின் பின்பகுதி, *வெளியரங்கமாக்கப்படுவதெல்லாம்*, **வெளிச்சமாயிருக்கிறது** என்று இன்னும் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம்.[36] கிறிஸ்தவர்கள் வெளிச்சத்தைப் போல ஊழியம் செய்வார்கள் என்றால், மற்றவர்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள். இதுவே இந்த வசனத்தின் பொருளாகும். வெளிச்சத்தின் கண்டித்துணர்த்தும் ஊழியத்தின் மூலமாகப் பொல்லாத மனிதர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றம் அடைகிறார்கள்.

ஆனாலும் இது விதிவிலக்கில்லாத ஒரு விதி அல்ல என்பது உண்மையே. அந்த வெளிச்சத்திற்கு முன் கொண்டுவரப்படுகிறவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்தவராகிறதில்லை. ஆனால் ஆவிக்குரிய ஆட்சியில், வெளிச்சமானது தன்னையே மீண்டும் உருவாக்கும் தன்மையுடையது என்பது பொதுவான கோட்பாடு ஆகும். இந்தக் கோட்பாட்டை விளக்கக்கூடிய ஓர் எடுத்துக்காட்டை 1 பேதுரு 3:1 -இல் காணலாம். விசுவாசிகளாயிருக்கிற மனைவிகள், அவிசுவாசிகளாயிருக்கிற தங்களுடைய கணவர்களை தங்களுடைய மாதிரியான வாழ்க்கையின் மூலம் கிறிஸ்து வினிடமாய்க் கொண்டுவர அறிவுறுத்தப்படுகிறார்கள்: "அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால்... போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்." இவ்வாறாக கிறிஸ்தவ மனைவிகளின் வெளிச்சம் மெய்யான இறைவனை அறியாத கணவன்மார்களின் அந்தகாரத்தின்மேல் வெற்றி சிறக்கிறது. அந்தக் கணவர்கள் வெளிச்சமாக மாற்றம் பெறுகிறார்கள்.

**5:14** விசுவாசியின் வாழ்க்கை எப்பொழுதும் ஒரு சமயவுரையைப் பிரசங்கிப்பதாகக் காணப்பட வேண்டும், சுற்றிலுமுள்ள இருளை வெளிப்படுத்துவதாக அமையவேண்டும், மேலும் அது அவிசுவாசிகளுக்கு எப்பொழுதும் அழைப்பு விடுப்பதாகத் திகழவேண்டும்:

> **"தூங்குகிற நீ விழித்தெழு**
> **மரித்தோரை விட்டு எழுந்திரு**
> **அப்பொழுது கிறிஸ்து உன்னைப்**
> **பிரகாசிப்பிப்பார்."**

இதுவே இருளில் உறங்குகிறவர்களும், ஆவிக்குரிய நிலையில் இறந்துபோனவர்களுமாயிருக்கிற மனிதர்களிடம் பேசுகிற வெளிச்சத்தின் தொனியாகும். வெளிச்சமானது அவர்களை ஜீவனிடத்திற்கும் ஒளியினிடத்திற்குமாய் அழைக்கிறது. அவர்கள் அந்த அழைப்பிற்கு இணங்குவார்கள் என்றால் **கிறிஸ்து** அவர்கள்மேல் ஒளி வீசி அவர்களுக்கு **வெளிச்சத்தைத் தருவார்.**

**5:15** அடுத்துவரும் ஏழு வசனங்களில் மதியீனமான நடத்தைக்கும் கவனமுள்ள நடத்தைக்கும் உள்ள வேறுபாடுகளை, செய்யக்கூடாதவை செய்ய வேண்டியவை என்னும் அறிவுரைகளின் மூலமாகப் பவுல் விளக்கிக் கூறுகிறார். முதலாவது, தன்னுடைய வாசகர்கள் **ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போலக் கவனமாய் நடக்க** வேண்டும் என்னும் பொதுவான அறிவுரையை அப்போஸ்தலன் வழங்குகிறார். முன்னர் கூறியதுபோல **நடத்தல்** என்னும் சொல், எபேசியருக்கு எழுதப்பட்ட மடலில் மிகவும் முக்கியமான சொற்களில் ஒன்றாகும். "ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கைச் சக்கரம் முழுவதையும்" குறிக்கும்படியாக இச்சொல் ஏழுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. **கவனமாய் நடக்க** வேண்டும் என்பது தேவனுடைய பிள்ளைகள் என்னும் தகுநிலையின் வெளிச்சத்தில் நடப்பதாகும். அந்த உயர்வான நிலையிலிருந்து இவ்வுலகத்து மனிதர்களைப் போல, கீழ்த்தரமான நிலைக்கு இறங்கிவருவதே **ஞானமற்றவர்களைப்போல** நடந்துகொள்ளுதல் என்பதன் பொருளாகும்.

**5:16 ஞானமாய் நடந்துகொள்ளுதல்.** நாம் **காலத்தைப்** பயன்படுத்த வேண்டுமென்று, அதாவது, எல்லாச் சந்தர்ப்பங்களையும் நாம் ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நம்மை அழைக்கிறது. ஒவ்வொரு நாளும் அதனுடைய திறந்த வாசலைத் தன்னுடன் அழைத்து வருகிறது, அதனுடைய வாய்ப்பு பரந்திருக்கிறது. பரிசுத்தத்தை வெளிக்காட்டும் வாழ்க்கை, இரக்கத்தினால் செய்யப்படும் செயல்கள், பயன்

விளைவிக்கும் சொற்கள் ஆகியவை **காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்** என்பதன் பொருளாகும். நாம் வாழ்கின்ற இந்த **நாட்கள் பொல்லாத** குணம் உடையதாயிருப்பதால், இதைக் குறித்துச் சிறப்பான முறையில் விரைந்து செயல்படவேண்டும் என்று வற்புறுத்தப் படுகிறோம். எப்பொழுதும் தேவன் மனிதனோடு போராடிக்கொண்டிருக்கமாட்டார், கிருபையின் காலம் விரைவில் முடிவடைந்துவிடும், இவ்வுலகில் தொழுதுகொள்வதற்கும், சான்று பகர்வதற்கும், ஊழியம் செய்வதற்கும் இப்பொழுதிருக்கிற வாய்ப்புகள் யாவும் மிகவிரைவில் என்றென்றைக்குமாக இல்லாமற்போகும்.

**5:17** ஆகவே நாம் **மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ள** வேண்டும். இது மிகவும் முக்கியமானது. பொல்லாங்கு பெருகுகிறது, காலம் குறுகியதாயிருக்கிறது, ஆகவே நாம், நாமாகத் தெரிந்துகொண்ட வெறித்தனமானதும் பரபரப்புடன் கூடியதுமான செயல்களில் நமது காலத்தைக் கழிக்கும்படி ஏவப்படுவோம். ஆனால் இது நம்முடைய ஆற்றல் அனைத்தையும் வீணாக்குவதற்கு ஒப்பாகவே காணப்படும். ஒவ்வொரு நாளும் நம்மைக் குறித்த தேவனுடைய **சித்தம்** இன்னதென்று அறிந்து அதன்படி செய்துமுடிப்பதே மிகவும் இன்றியமையாததாகும். இதுவே திறமையோடும் எதிர்பார்த்த பயனை விளைவிக்கும் தன்மையோடும் செயல்படுவதற்கான ஒரே வழியாகும். மாறாக, **கர்த்தருடைய சித்தம்** சிறிதளவும் இல்லாமல் நம்முடைய சொந்த எண்ணங்களினாலும் சொந்த வலிமையினாலும் கிறிஸ்தவத் திருப்பணியை ஆற்றக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து தேவனுடைய **சித்தம்** இன்னதென்று உணர்ந்து, அதற்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து வாழ்வதே ஞானத்தின் வழியாகும்.

**5:18 துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல்.** நம்முடைய கிறிஸ்தவப் பண்பாட்டின்படி, இந்தக் கட்டளை அதிர்ச்சியூட்டுவதும் தேவையற்றதுமாகத் தோன்றுகிறது. ஏனெனில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் முற்றிலுமாகக் குடியைத் தவிர்த்த வாழ்க்கையையே வாழ்வின் விதியாகக் கடைப்பிடித்து வருகிறார்கள். ஆனால் அனைத்து நாகரிக விசுவாசிகளுக்கும் திருமறை எழுதப்பட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது; பல நாடுகளில் இன்றுங்கூட மது பொதுவாக உணவருந்துகிற வேளைகளில் பரிமாறப்படுகிறது. மது அருந்துவதை வேதம் குற்றம் என்று சொல்லவில்லை, மாறாக அதைத் தவறாகப் பயன்படுத்துவதையே குற்றம் என்று தீர்க்கிறது. அதனை மருந்தாகப் பயன்படுத்துவது பரிந்துரைக்கப்பட்டுள்ளது (நீதி. 31:6; 1 தீமோ. 5:23 -தமிழில் திராட்சைரசம் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது). கர்த்தராகிய இயேசு கலிலேயாவில் கானாவூர்த் திருமணத்தில் குடிப்பதற்கு மதுவை (திராட்சைரசம்) உண்டாக்கினார் (யோவான் 2:1-11).

ஆனால் கீழ்வரும் சந்தர்ப்பங்களில் மதுவைப் பயன்படுத்துவது தவறாகக் காணப்பட்டு தடை செய்யப்பட்டிருக்கிறது:

1. அது மட்டுமீறிய நிலைக்கு வழிநடத்தும்போது (நீதி. 23:29-35).
2. அது வழக்கமான செயலாக மாறுகிறபோது (1 கொரி. 6:12).
3. வேறொரு விசுவாசியின் பலவீனமான உள்ளத்தைப் புண்படுத்துகிறபோது (ரோமர் 14:13; 1 கொரி. 8:9).
4. ஒரு கிறிஸ்தவனது சாட்சி சமுதாயத்திற்கு ஊறுவிளைவித்து, தேவனுடைய மகிமைக்குக் காரணமாக அது செயல்படாதபோது (1 கொரி. 10:31).
5. அதைக் குறித்துக் கிறிஸ்தவனுடைய உள்ளத்தில் சந்தேகம் எழும்போது (ரோமர் 14:23)

**மதுபான வெறிகொள்வதற்கு** மாற்றாகப் பவுல் பரிந்துரை செய்வது யாதெனில் **ஆவியில் நிறைவதே** ஆகும். இரண்டும் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதைக் காண்கையில் முதலில் நாம் திகைப்படைகிறோம். ஆனால் இரண்டு நிலைகளையும் நாம் ஒப்பிட்டு, வேறுபடுத்திக் காணும்போதே, அப்போஸ்தலன் இவ்விரண்டு நிலைகளையும் ஏன் தொடர்புபடுத்தியிருக்கிறார் என்பது புலனாகும்.

முதலாவது, அவற்றிற்கு இடையிலான ஒப்புமைகளைக் காணலாம்:

1. இரண்டு நிலைகளிலும், தனக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றலுக்குக் கீழ் அந்த மனிதன் இருக்கிறான். ஒரு நிலையில் அவன் மதுவின் வெறியூட்டும் தன்மைக்குக் கீழ் இருக்கிறான். இன்னொரு நிலையில் அந்த ஆற்றல் பரிசுத்த ஆவியின் ஆற்றலாகும்.
2. இரண்டு நிலைகளிலும் அந்த மனிதன் உணர்ச்சிப்பெருக்குடன் காணப்படுகிறான்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியினால் உண்டான உணர்ச்சிப் பெருக்கு புதிய மதுபானத்தால் உண்டானது என்று தவறாகக் கருதப்பட்டது (அப். 2:13).

3. இரண்டு நிலைகளிலும் அந்த மனிதனின் நடை பாதிக்கப்படுகிறது - குடிவெறியில் அவனுடைய சரீர நடை பாதிக்கப்படுகிறது; மற்றொரு நிலையில் அவனுடைய ஒழுக்க நெறி நடத்தை மாற்றமடைகிறது.

ஆனால் அவ்விரண்டு நிலைகளுக்கிடையே இரண்டு வகையான முரண்பாடுகள் மிகத் தெளிவான முறையில் காணப்படுகின்றன.

1. *குடியில்*, **வெறியும்** மட்டுமீறிய தீயொழுக்கமும் காணப்படும். ஆனால் ஆவியின் நிறைவில் அப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படா.

2. குடியில் இச்சையடக்கம் இல்லாமற் போகிறது. ஆனால் ஆவியின் கனியோ இச்சையடக்கமாகும் (கலா. 5:23). ஒரு விசுவாசியானவன் ஆவியினால் நிறையும்போது, தன்னுடைய செயல்களைக் கட்டுப்படுத்த முடியாதபடி சுய நினைவை இழந்து உணர்ச்சிவயப்பட்டு செயல் புரிகிறதில்லை; ஒரு தீர்க்கதரிசியின் ஆவி தீர்க்கதரிசிக்கு அடங்கியிருக்கிறது (1 கொரி. 14:32).

**ஆவியினால் நிறைந்திருப்பது**, தேவன் தமது இறைமைச் சித்தத்தினால் ஈவாக அளித்த நிலைமை என்பது போன்று திருமறையில் சில இடங்களில் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக யோவான் ஸ்நானகன் அவருடைய தாயின் வயிற்றில் இருந்தது முதல் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார் (லூக்கா 1:15). அப்படிப்பட்ட நிகழ்ச்சியில், எந்தவித முன் நிபந்தனையையும் நிறைவேற்றாமல் அந்த நபர் ஆவியின் நிறைவைப் பெற்றதாகவே காணப்படுகிறது. அப்படிப்பட்ட நிலையைப் பெற வேண்டுமென்று அவர் எந்தச் செயலையும் செய்யவில்லை, ஜெபிக்கவுமில்லை. கர்த்தர்தாமே அவருடைய சொந்த விருப்பத்தின்படி அதைக் கொடுக்கிறார். ஆனால் எபேசியர் 5:18 -ஆம் வசனத்தில் **ஆவியினால் நிறைந்திருக்க** வேண்டுமென்று விசுவாசி கட்டளை பெற்றிருக்கிறான். அவன் அதற்கென தனது பங்கை நிறைவேற்ற வேண்டும். அவன் சில முன்நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். அது தானாக நடைபெறுகிறதில்லை; மாறாக, கீழ்ப்படிதலினால் விளையும் பயனாகும்.

இதன் காரணமாக, பரிசுத்த ஆவியின் வேறு சில ஊழியங்களிலிருந்து ஆவியினால் நிறையப் பெறுவது வேறுபடுத்திக் காட்டப்படவேண்டும். கீழ்க்கண்ட செயல்பாடுகளில் எதுவும் ஆவியினால் நிரப்பப்படுவது ஆகாது:

1. ***பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்***. ஒரு விசுவாசியைக் கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக இடம்பெறச் செய்யும் பரிசுத்த ஆவியின் செயலாக்கமே ஞானஸ்நானமாகும் (1 கொரி. 12:13).

2. ***பரிசுத்த ஆவி சரீரத்தில் குடியிருத்தல்***. இந்த ஊழியத்தின் மூலமாகத் தேற்றரவாளர் கிறிஸ்தவனின் சரீரத்தைத் தமது குடியிருப்பாகத் தெரிந்துகொண்டு, அவன் பரிசுத்தத்தோடு வாழ்கிறதற்கும், ஆராதிக்கிறதற்கும், ஊழியம் செய்கிறதற்கும் அதிகாரமளிக்கிறார் (யோவான் 14:16).

3. ***அபிஷேகம்***. ஆவியானவர் தாமே அபிஷேகமாக விளங்கி, தேவனுடைய பிள்ளைக்குக் கர்த்தரைக் குறித்தவற்றைக் கற்றுக் கொடுக்கிறார் (1 யோவான் 2:27).

4. ***அச்சாரமும் முத்திரையும்***. பரிசுத்த ஆவியானவர் அச்சாரமாக விளங்கி பரிசுத்தவானுக்கு அவன் பெறவிருக்கும் சுதந்தரத்திற்கான உத்தரவாதம் அளிக்கிறார். அவரே முத்திரையாக விளங்கி அந்தச் சுதந்தரத்திற்குப் பரிசுத்தவானைப் பாதுகாத்துத் தருவதாக உறுதிமொழி தருகிறார் (எபே. 1:13,14).

ஒருவர் இரட்சிக்கப்படுகிற தருணத்தில், அவரிடத்தில் நிகழ்கின்ற ஆவியானவரின் ஊழியங்களாக இவை உள்ளன. கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் தானாகவே ஞானஸ்நானத்தையும், அவர் சரீரத்தில் வாசம் செய்யும் நிலையையும், அபிஷேகத்தையும், அச்சாரத்தையும் முத்திரையையும் பெறுகிறார்.

ஆனால் ஆவியின் நிறைவு என்பது வேறு. ஒரு சீடனுடைய வாழ்க்கையில் என்றென்றைக்குமாக ஒரு முறை மட்டுமே ஏற்படுகிற திருப்புமுனை அனுபவமல்ல இது. மாறாக இது தொடர்ந்து நடைபெறுகிற நிகழ்ச்சியாகும். இந்தக் கட்டளை எழுத்தின்படி மொழிபெயர்க்கப்பட்டிருக்குமானால், "ஆவியினால் நிரப்பப்பட்டவர்களாக இருங்கள்" என்றே காணப்படும். இது ஒரு திருப்புமுனை நிகழ்ச்சியாகத் தொடங்கும். ஆனால் இது ஒவ்வொரு கண நேரமாகத் தொடர்ந்து நடைபெறுகிற நிகழ்ச்சியாக இருக்க வேண்டும். இன்றைக்கு

நிகழ்கிற ஆவியின் நிறைவு நாளைக்குப் பயன் விளைவிக்காது. மேலும் நாம் இதனை மிக அதிக மாக வாஞ்சிக்கக் கூடிய நிலையாகவும் இது இருக்கிறது. உண்மையில், ஒரு விசுவாசி இவ்வுல கில் இருக்கிறபோது காணப்படவேண்டிய மிகச் சிறந்த நிலையையே இது குறிக்கிறது. கிறிஸ்த வனின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் துக்கத்திற்கு உள்ளாகாதபடி தமது நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவராக விளங்குவாரானால், அது ஆவியினால் நிரப்பப்படுதல் என்பதன் பொரு ளாகும். மேலும் அந்த விசுவாசி அந்த நேரத் திற்குரிய தேவனுடைய திட்டத்தில் தனது பங்கை நிறைவேற்றுவதாகவும் அது அமையும்.

அவ்வாறாயின், ஒரு விசுவாசி எவ்வாறு **ஆவி யின் நிறைவைப்** பெற முடியும்? எபேசியர் மடலில் அப்போஸ்தலன் அதை நமக்கு விளக்கிக் கூறவில்லை. நாம் **ஆவியினால் நிறைந்திருக்க** வேண்டும் என்னும் கட்டளையை மட்டுமே அவர் இங்கு கூறியிருக்கிறார். ஆனால் திருமறையின் பிற பகுதிகளிலிருந்து ஆவியின் நிறைவைப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிய முடியும்:

1. நம்முடைய வாழ்க்கையில் அறிந்த பாவங்கள் அனைத்தையும் அறிக்கை செய்ய வேண்டும் (1 யோவான் 1:5-9). அத்தகைய பரிசுத்தமான ஒருவர், பாவத்தைக் குறித்த குற்றவுணர்வு இல்லாதபடி தனது வாழ்க்கையைத் தடை யின்றி நடத்தமாட்டார் என்பதில் சந்தேக மில்லை.

2. நாம் முழுவதுமாக அவருடைய கட்டுப் பாட் டுக்குள் நம்மை ஒப்புவிக்க வேண்டும் (ரோமர் 12:1,2). நம்முடைய சித்தம், ஆய்வுத்திறம், சரீரம், நேரம், ஆற்றல்கள், செல்வங்கள் யாவற்றையும் ஒப்புவிப்பதாக அது அமையும். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அவருடைய ஆட்சிக்குக் கீழாக ஒப்புவித்த லாக அது காணப்படும்.

3. கிறிஸ்துவின் வசனம் நம்மிடத்தில் நிறைந்து விளங்க வேண்டும் (கொலோ. 3:16). தேவ வசனத்தை வாசிப்பது, அதனைப் படிப்பது, அதன்படி நடப்பது யாவும் இதனுள் அடங்கும். கிறிஸ்துவின் வசனம் நம்மிடத்தில் நிறைந் திருக்கும்போது **ஆவியின்** நிறைவினால் என்னென்ன விளைவுகள் உண்டாகுமோ, அதே விளைவுகள் உண்டாகும் (எபே. 5:19; கொலோ. 3:16).

4. இறுதியாக, நம்முடைய சுயத்தை நாம் முழு வதுமாக நம்மைவிட்டு அகற்ற வேண்டும் (கலா. 2:20). ஒரு புதிய பொருளால் ஒரு பாத்திரத்தை நிரப்ப வேண்டுமானால், முத லில் அந்தப் பாத்திரத்தில் இருக்கும் பழைய பொருளை அகற்றி அதனை வெறுமையாக்க வேண்டும். அவரால் நாம் நிறைந்திருக்க, முதலில் நமது சுயத்தை வெளியேற்றி நம்மை வெறுமையாக்க வேண்டும்.

பெயர் அறியப்படாத ஒருவர் இவ்வாறு எழுதி யிருக்கிறார்:

> உங்களுடைய பாவபாரம் முழுவதையும் அவரிடம் விட்டுவிட்டு, நீங்கள் கிறிஸ்துவினால் நிறைவேற்றி முடிக்கப்பட்ட செயலில் இளைப் பாறுவதுபோல, உங்களுடைய வாழ்க்கையின் பாரங்களையும் ஊழியத்தின் பாரங்களையும் விட்டுவிட்டு, பரிசுத்த ஆவியானவரின் செயல் பாட்டில் இளைப்பாறுங்கள். ஒவ்வொரு நாள் காலையிலும் நீங்கள் உங்களைப் பரிசுத்த ஆவியானவரிடம் ஒப்புவித்துவிட்டு, அவரால் நடத்தப்படுவதற்கு இடங்கொடுங்கள், அவருக் குப் புகழ்ச்சியைச் செலுத்தும்படி தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள்; மேலும் அவரே உங்களையும் உங்களுடைய நாளையும் நிருவகிக்கும்படி அவரிடம் விட்டுவிட்டு நீங்கள் அமைதியாக இருங்கள். மகிழ்ச்சியோடு அவ ரைச் சார்ந்திருக்கவும், அவருக்குக் கீழ்ப்படிய வும் கற்றுக்கொள்ளுங்கள்; அவர் உங்களை வழிநடத்தி, அறிவுபுகட்டி, கடிந்துகொண்டு, கற் பித்து, பயனுள்ளவர்களாக நீங்கள் விளங்க பயிற்சி தருவார் என்று எதிர்பார்த்துக் காத்திருங் கள்; மேலும் அவர் தமது சித்தத்தை உங்களி லும் உங்களோடும் செயல்படுத்த இடங் கொடுங்கள். காட்சிக்கும் உணர்வுகளுக்கும் அப்பாற்பட்டு அவருடைய செயல்பாடுகள் நிகழ் கின்றன என்பதே உண்மையென்று அறிந்த வர்களாக அவற்றையே சார்ந்துகொள்ளுங் கள். நம்முடைய வாழ்வின் அரசராகப் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே திகழ்கிறார் என்பதை நம்பி நாம் அவருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படி வோமாக. நம்மைக் குறித்த பொறுப்பை நாமே வகிக்க வேண்டும் என்னும் சுமையிலிருந்து விடுபடுவோமாக. அப்பொழுது அவருடைய சித்தம் தேவனுக்கு மகிமையாக நம்மிடத்தில் நிறைவேறி ஆவியின் கனி காணப்படும்.

**ஆவியின் நிறைவைப் பெற்றிருப்பதாக** ஒரு மனிதனால் அறிந்திருக்க முடியுமா? உண்மையில், நாம் எவ்வளவாகக் கர்த்தரை நெருங்கியிருக்கிறோமோ, அவ்வளவாக நம்முடைய முற்றிலும் தகுதியற்ற நிலையையும் நம்முடைய பாவமான நிலையையும் உணர்ந்தவர்களாக இருப்போம் (ஏசா. 6:1-5). அவருடைய சமுகத்தில், நாம் பெருமைபாராட்டும்படியான ஏதொரு நன்மையும் நம்மிடத்தில் இருப்பதாகக் காண முடியாது (லூக்கா 5:8). மற்றவர்களைக் காட்டிலும் ஆவிக்குரிய நிலையில் நாம் மேலானவர்கள் என்பதை நாம் அறிந்திருக்க மாட்டோம், "நாம் அடைந்தாயிற்று" என்னும் எண்ணம் நமக்குச் சற்றேனும் இருக்காது. ஆவியின் நிறைவைப் பெற்ற விசுவாசி கிறிஸ்துவினால் நிறைந்திருப்பாரேயொழிய தன்னைக் குறித்த சிந்தனையில் அவர் மூழ்கியிருக்க மாட்டார்.

அதே நேரத்தில், தேவன் தன்னிடத்திலும் தனது மூலமாகவும் செயலாற்றுகிறார் என்னும் உணர்வை, அவர் பெற்றிருப்பார். இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதை அவர் காண்பார். சூழ்நிலைகள் அதிசயமான முறையில் ஒன்றுகூடுகின்றன. தேவனுக்கென்று சில ஆத்துமாக்கள் தொடப்படுகிறார்கள். தெய்வீக கால ஒழுங்கின்படி நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நிகழ்கின்றன. இயற்கைச் சூழ்நிலைகளும்கூட அவருக்குச் சாதகமாகச் செயல்படுகின்றன. கர்த்தருடைய ரதத்தோடு அவை சங்கிலியால் இணைக்கப்பட்டதுபோல யாவும் நிகழ்கின்றன. இவை எல்லாவற்றையும் அவர் காண்கிறார்; தேவன் தனக்காகவும் தனது மூலமாகவும் செயல்படுகிறதை உணர்கிறார்; ஆனாலும்கூட இவை எல்லாவற்றிலும் தனக்கு எவ்விதமான புகழும் ஏற்படாதவாறு அவற்றிலிருந்து விநோதமான வகையில் தொடர்பற்றவராக இருப்பதாக உணர்கிறார். அவருடைய உள்ளார்ந்த நிலையில் இவையாவும் கர்த்தருடையவை என்பதை அறிந்துகொள்கிறார்.

**5:19** ஆவியின் நிறைவினால் உண்டாகக் கூடிய நான்கு விளைவுகளை இப்பொழுது அப்போஸ்தலன் விவரிக்கிறார். முதலாவது, ஆவியின் நிறைவைப் பெற்ற கிறிஸ்தவர்கள் **ஒருவரோடொருவர் சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும்** பேசிக் கொள்கிறார்கள். தெய்வீக உள்ளார்ந்த நிறைவு வாயைத் திறக்கச் செய்து, கர்த்தரைக் குறித்த விவரங்களைப் பேசச்செய்கிறது. மேலும் இது இருதயத்தை விரிவாக்கி மற்றவர்களோடு இந்த விவரங்களைப் பகிர்ந்துகொள்ளச் செய்கிறது. மேற்கூறப்பட்ட மூன்றும் சங்கீதப் புத்தகத்தின் பகுதிகள் என்று சிலர் நினைக்கிறார்கள். தாவீது, ஆசாப் மற்றும் சிலரால் ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்ட பாடல்களையே **சங்கீதங்கள்** என்று நாம் கருதுகிறோம். தேவனுக்கு ஆராதனையும் புகழ்ச்சியும் செலுத்தும்படி ஆவியானவரின் ஏவுதலின்றி எழுதப்பட்ட பாடல்களே **கீர்த்தனைகள்** ஆகும். தேவனை நோக்கி நேரடியாக ஏறெடுக்கப்படாதவையாக இருந்த போதிலும், ஆவிக்குரிய கருத்துகளைக் கொண்டிருக்கும் பிற பாடல் தொகுப்புகளே ஞானப்பாட்டுகள் ஆகும்.

**ஆவியின் நிறைவை** வெளிப்படுத்தும் இரண்டாவது சான்று உள்ளார்ந்த மகிழ்ச்சியும், தேவனுக்குச் செலுத்தப்படுகிற புகழ்ச்சியுமேயாகும்: **உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி**. ஆவியினால் நிறைந்த வாழ்க்கை மகிழ்ச்சியினால் நிறைந்து பூரித்துப் பொங்கி வரும் ஊற்றுபோல விளங்கும் (அப். 13:52). சகரியா இதற்கோர் எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறார்: அவர் தூய ஆவியால் நிரப்பப்பட்டிருந்தபோது தன் முழு இருதயத்தோடு கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணினார் (லூக்கா 1:67-69).

**5:20** மூன்றாவது விளைவு, நன்றி செலுத்துவது ஆகும்; **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.** எங்கே ஆவியானவர் ஆளுகை செய்கிறாரோ அங்கே **தேவனுக்கு** நன்றி பாராட்டப்படும், அங்கே வியந்துபோற்றக் கூடிய ஆழ்ந்த உணர்வும், சடுதியில் அது ஸ்தோத்திரமாக வெளிப்படுதலும் காணப்படும். இது எப்பொழுதோ தோன்றுகிற நிகழ்ச்சியாக இராமல், தொடர்ந்து நிகழும். இன்பமான நேரங்களில் மட்டுமின்றி எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரம் செலுத்தப்படும். மகிழ்ச்சி நிறைந்த காலங்களில் யார் வேண்டுமானாலும் நன்றி செலுத்த முடியும்; ஆனால் வாழ்க்கையில் புயல் தோன்றும் காலங்களில் ஆவியானவரின் வல்லமையால் மட்டுமே ஒருவரால் தேவனுக்கு நன்றி செலுத்த முடியும்.

எல்லா மகிழ்ச்சியையும் அடைய குறுகியதும், நிச்சயமானதுமான வழி இதுவே:

> உங்களுக்கு ஏற்படுகிற எல்லாவற்றிற்காகவும்
> தேவனுக்கு ஸ்தோத்திரமும் நன்றியும்

செலுத்துவதை வழக்கமாகக் கொள்ளுங்கள். உங்களுக்குப் பேரிடராகத் தோன்றும் நிகழ்ச்சி உண்டாகிறபோது, அதற்காக நீங்கள் தேவனுக்கு நன்றியும் ஸ்தோத்திரமும் செலுத்துவீர்களானால், அதனை நீங்கள் ஆசிர்வாதமாக மாற்றுகிறீர்கள் என்பது நிச்சயம். நீங்கள் அற்புதங்களைச் செய்யக்கூடியவராக இருப்பினும், நன்றிபாராட்டும் மனநிலையைக் கொண்டிருப்பதைக் காட்டிலும் மேலான செயல் எதையும் நீங்களாகவே செய்ய முடியாது; ஏனெனில் நன்றிபாராட்டும் மனநிலையில் ஒரு சொல்லையும் பேச வேண்டிய தேவையில்லை, அது தொடுகிற அனைத்தும் களிகூருதலாக மாற்றம் அடைகிறது (தெரிந்தெடுக்கப்பட்டது).

**5:21** ஆவியின் நிறைவின் நான்காவது சான்று, **தெய்வ பயத்தோடு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருப்பது** ஆகும். எர்ட்மேன் அறிவுறுத்துகிறார்:

இந்தச் சொற்றொடர் அவ்வப்போது புறக்கணிக்கப்படுகிறது... ஆவிக்குரியவர் என்பதை அறிவதற்கான சோதனையின் பெயரை இது குறிப்பிடுகிறது, கிறிஸ்தவர்களோ இதனைப் பயன்படுத்துவதில்லை. . . அல்லேலூயா என்று கத்துவதும், ஆர்ப்பரித்துப் பாடுவதும், "தெரியாத மொழிகளில்" ஸ்தோத்திரம் செலுத்துவதாகத் தோன்றும் சொற்களைச் சத்தமிட்டுக் கூறுவதும் "ஆவியினால் நிறைவது" என்பதற்கான அடையாளம் என்று பலர் நினைக்கிறார்கள். இவையாவும் போலியானவையாகவும், ஏமாற்றுவித்தைகளாகவும், பொருளற்றவையாகவும் இருக்கலாம். உடன் கிறிஸ்தவர்களுக்குக் கீழ்ப்படிதல், நடத்தையில் தன்னடக்கத்தோடு இருந்தல், தாழ்மை, சச்சரவு செய்ய விருப்பமற்ற தன்மை, நீடிய பொறுமை, தயவு – இவையாவும் ஐயத்திற்கிடமற்றபடி ஆவியானவரின் வல்லமைக்கு அடையாளங்களாக இருக்கின்றன. . . . இவ்வாறு உடன் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிதலைக் "கிறிஸ்துவினிடத்தில் கொண்டுள்ள பயத்தில்" வெளிப்படுத்திக் காண்பிக்க வேண்டும். அதாவது, எல்லோருக்கும் கர்த்தராகவும் எஜமானராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டவருக்குச் செலுத்தப்படும் மரியாதையோடு இக்குணங்கள் வெளிப்பட வேண்டும்.[37]

இவ்வாறாக இந்த நான்கு விளைவுகளும் பரிசுத்த ஆவியின் நிறைவினால் உண்டாகிறவை - பேசுதல், பாடுதல், நன்றி செலுத்துதல் மற்றும் கீழ்ப்படிதல். எனினும் குறைந்தது இன்னும் நான்கு விளைவுகள் உள்ளன:

1. பாவத்தைக் கடிந்துகொள்ளுதலில் துணிவு (அப். 13:9-12); மேலும் கர்த்தருக்குச் சான்று பகர்வதில் துணிவு (அப். 4:8-12,31; 13:52-14:3).
2. ஊழியம் செய்வதற்கான வலிமை (அப். 1:8; 6:3,8; 11:24).
3. தன்னலமின்மை, பெருந்தன்மை (அப். 4:31,32).
4. கிறிஸ்துவைப் புகழ்ந்து பேசுதல் (அப். 9:17, 20), தேவனையும் புகழ்ந்துபேசுதல் (அப். 2:4,11; 10:44,46).

ஆவியினால் நிரப்பப்படுவதற்கு நாம் மிகுந்த ஆர்வத்தோடு கூடிய விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும், ஆனால் அது நம்முடைய சொந்த மகிமைக்காக இல்லாமல் தேவனுடைய மகிமைக்காகவே விளங்க வேண்டும்.

### ஈ. கிறிஸ்தவ இல்லத்தில் காணப்படவேண்டிய தனிப்பட்டோரது கடமையுணர்வுக்கான வேண்டுதல் (5:22-6:9).

**5:22** இங்கு ஒரு புதிய பகுதி தொடங்குகிறது, ஆயினும் இதற்கு முந்தின வசனத்தோடு மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. தெய்வீக நிறைவினால் ஏற்படுகிற விளைவுகளில் ஒன்று ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதல் என்று பவுல் அங்கு குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவ இல்லத்தில் காணப்படவேண்டிய கீழ்ப்படிதல் என்னும் தேவ சித்தத்தின் மூன்று குறிப்பிட்ட இலக்குகளை அவர் 5:22 முதல் 6:9 வரையிலான இந்தப் பகுதியில் வரைந்து தருகிறார்.

*மனைவிகள்* தங்களுடைய *சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படிய வேண்டும்*.

*பிள்ளைகள்* தங்களுடைய *பெற்றோருக்குக்* கீழ்ப்படிய வேண்டும்.

*அடிமைகள்* தங்களுடைய *எஜமானருக்குக்* கீழ்ப்படிய வேண்டும்.

விசுவாசிகள் யாவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள் என்னும்உண்மை, உலகீய உறவுகள் அற்றுப்போகும் என்னும் பொருளைத் தருகிறதில்லை. தேவன் நிறுவின பற்பல வகையான அதிகாரங்களையும் அரசாங்கத்தையும் நாம் இன்னமும் மதிக்க வேண்டும். நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சமுதாயம் சார்ந்து செயல்படத்தக்க ஆதரவளிக்கும் இரண்டு தூண்களாக அதிகாரமும் கீழ்ப்படிதலும் விளங்கு

கின்றன. அதிகாரம் செலுத்தக்கூடிய சிலர் இருக்கவேண்டும், அந்த ஆளுகைக்குச் சிலர் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க வேண்டும். தேவ தலைமைத்துவத்திலும்கூட காணப்படும் அள விற்கு இது அடிப்படைத் தத்துவமாக விளங்கு கிறது: "கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக் கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்" (1 கொரி. 11:3). மனிதன் ஆட்சி செலுத்தும்படியான அரசை தேவனே நியமித் திருக்கிறார். ஓர் அரசாங்கம் எவ்வளவு பொல்லாங்கு நிறைந்ததாக இருக்குமென்றாலும் தேவனுடைய எண்ணத்தின்படி அவ்வாட்சி, அரசாங்கமே இல்லாத நிலையைக் காட்டிலும் மேலானதாகும். கர்த்த ருக்குக் கீழ்ப்படியாத அல்லது அவரை மறுத் துரைக்கிற நிலையாக அது இல்லாதவரைக்கும் அந்த அரசிற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். அரசாங்கங்கள் இல்லையேல் அது அராஜமாக இருக்கும், அராஜகத்தில் எந்தவொரு சமுதாய மும் நீடித்திருக்க முடியாது.

மேலே சொல்லப்பட்டுள்ள கருத்து வீட்டிற்கும் பொருந்தும். அங்கே ஒரு தலைமை இருக்க வேண்டும், மேலும் அந்தத் தலைமைக்குக் கீழ்ப் படிதலும் காணப்பட வேண்டும். அந்தத் தலை மைத்துவத்தை தேவன் ஆணுக்கே கொடுக்க வேண்டுமென்று நியமித்திருக்கிறார். முதலாவது ஒரு ஆணைப் படைத்து இவ்வுண்மையை உறுதி யாக்கியிருக்கிறார். பின்னரே அந்த ஆணுக்காகப் பெண்ணையும் அவர் படைத்தார். இவ்வாறாக, படைப்பின் வரிசைமுறை மற்றும் நோக்கம் ஆகிய இரண்டிலும் ஆண் மகனை அதிகாரத்தின் இடத் திலும், பெண்ணைக் கீழ்ப்படிதலின் இடத்திலும் அவர் வைத்தார்.

கீழ்ப்படிதல் என்பது ஒருக்காலும் தரம் குறைந் தது என்னும் பொருளைத் தருகிறதில்லை. பிதாவாகிய தேவனுக்குக் கர்த்தராகிய இயேசு கீழ்ப்படிதல் உள்ளவராக இருக்கிறார், ஆனால் அவர் எந்த விதத்திலும் பிதாவைக் காட்டிலும் தரத்தில் குறைந்தவரல்லர். அதுபோலவே பெண் ணானவள் ஆணைக் காட்டிலும் தரத்தில் குறைந் தவள் அல்ல. பல வழிகளில் அவள் அவனைக் காட்டிலும் உயர்ந்தவளாக இருக்கக் கூடும் - கடவுள் பற்று, இரக்கம் பாராட்டுதல், விழிப் புணர்ச்சி, வீறார்ந்த உளவலிமை போன்றவற்றில் அவள் மேம்பட்டுக் காணப்படலாம். ஆனால் **மனைவிகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல,** தங்களுடைய **சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியவேண்டும்.** தன்னுடைய கணவனு டைய அதிகாரத்திற்கு ஒரு மனைவி கீழ்ப்படிகிற போது, கர்த்தருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படி கிறவளாக இருக்கிறாள். இந்த விஷயத்தில் மனமற்று தயங்குதல், எதிர்த்து நிற்றல் போன்ற மனப்பான்மைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

தேவன் நியமித்த முறைமைக்குக் கீழ்ப்படிய வில்லையெனில் பெருங்குழப்பங்கள் உண்டா கும் என்பதற்கு வரலாற்றில் எடுத்துக்காட்டுகள் மிகுந்திருக்கின்றன. தலைமைத்துவத்தை எடுத் துக்கொண்டவளாக, கணவனுடைய ஸ்தானத் தில் செயல்பட்டபோது ஏவாள் பாவத்தை மனுக் குலத்திற்கு அறிமுகப்படுத்தினாள். அது மட்டு மின்றி, பேரழிவை ஏற்படுத்தக்கூடிய பல விளைவு களும் உண்டாயின. பெண்கள் அதிகாரமுடைய தலைமைப் பதவி வகிக்க வேண்டும் என்று தேவன் ஒருக்காலும் நினைத்ததில்லை; ஆனால் தலை மைப் பதவியை எடுத்துக்கொண்ட பெண்களின் மூலமாகச் சமீப காலங்களில் பற்பல கள்ளச் சமயக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. பெண் கள் தங்களுக்கென்று தேவன் நியமித்த எல்லை யைத் தாண்டி செயல்படுவதால் ஓர் உள்ளூர் சபையை உடைத்துப்போட முடியும், ஒரு திருமண உறவை முரித்துவிட முடியும், ஒரு வீட்டையும் அழித்துவிட முடியும்.

இதற்கு மாறாக, ஒரு பெண்மணி தேவன் தனக்கு நியமித்த வேலையைச் செய்வாளானால் அதனினும் கவர்ச்சிமிக்கது வேறொன்றும் இல்லை. அத்தகைய பெண்ணின் முழு உருவப்படம் நீதி மொழிகள் 31 -ஆவது அதிகாரத்தல் வரைந்து தரப்பட்டுள்ளது. கர்த்தருக்கு மனமகிழ்ச்சியை உண்டு பண்ணக்கூடிய ஒரு மனைவி மற்றும் தாய் எத்தகையவள் என்பதற்கு நீடித்து நிற்கும் நினை வுச் சின்னத்தை அங்கு காண்கிறோம்.

**5:23 மனைவி** தன் **புருஷனுக்குக்** கீழ்ப் படிவதற்கான காரணம் என்னவெனில் அவன் அவளுக்குத் **தலையாயிருக்கிறான்**. கிறிஸ்து சபையோடு என்ன உறவு கொண்டிருக்கிறாரோ அதே உறவைக் கணவனும் தன் மனைவியினிடத் தில் கொண்டிருக்கிறான். **கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார்; அவரே சரீரத்திற்கு இரட்சகராயிருக்கிறார்.** (இரட்சகர் என்னும் சொல் இங்கு பாதுகாப்பவர் என்று பொருள்படும். 1 தீமோ. 4:10 JND மொழிபெயர்ப்பில் இதே பொரு ளில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது). அது போல புருஷன் மனைவிக்குத் தலையாயிருக் கிறான். மேலும் அவனே அவளுடைய பாதுகாவ லனும் ஆவான். தலை என்னும் நிலையில் அவன்

அவளிடத்தில் அன்புகூருகிறான், முன் நடக்கிறான், வழி காட்டுகிறான்; பாதுகாவலன் என்னும் நிலையில் அவன் தேவையானவற்றைத் தருகிறான், ஆபத்திலிருந்து பாதுகாக்கிறான், அவளிடம் அக்கறை செலுத்துகிறான்.

இந்நாட்களில் இந்த போதனைக்கு எதிராகக் கடும் எதிர்ப்பு தோன்றியிருக்கிறது என்பதை நாம் அறிவோம். பவுல் பிரம்மச்சாரி வெறிகொண்டவர், ஆண்வர்க்க வெறி கொண்டவர், பெண்களை வெறுத்தவர் என்றெல்லாம் மக்கள் அவர் மீது குற்றஞ் சுமத்துகிறார்கள். அல்லது அவர் வாழ்ந்த காலத்தின் சமுதாய வழக்கத்தை அவருடைய சொற்கள் பிரதிபலிக்கின்றன, அது இந்நாட்களுக்குப் பொருந்தாது என்றெல்லாம் அவர்கள் கூறுகிறார்கள். திருமறை தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது என்பதை இத்தகைய அறிவிப்புகள் நேரடியாகத் தாக்கக் கூடியவை. இங்கு காணப்படும் சொற்கள் வெறுமனே பவுலுடைய சொற்கள் அல்ல, இவை தேவனுடைய சொற்களாகும். அவற்றை மறுப்பது அவரையே மறுப்பதாகும். மேலும் அது இன்னலையும் பேரிடரையும் வருவிக்கும்.

**5:24** சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாகத் திகழ்கிறது என்னும் உண்மையோடு ஒரு மனைவியின் பங்கு ஒப்பிடப்படுவதால் உண்டாகும் மேன்மையைக் காட்டிலும் மேலான மேன்மை இல்லை. சபை எவ்வாறு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதோ அதே மாதிரியை மனைவி பின்பற்ற வேண்டும். அவள் **எந்தக் காரியத்திலும் கீழ்ப்பட்டிருக்க வேண்டும்** -- தேவனுடைய சித்தத்திற்கு ஏற்புடையதாக இருக்கும் **எந்தக் காரியத்திலும்** அவள் கீழ்ப்படிய வேண்டும். கர்த்தராகிய இயேசுவினிடத்தில் அவள் கொண்டிருக்கிற விசுவாசத்தில் உண்மையற்றவளாக நடந்து கொள்ளும்படி அவளுடைய கணவன் கட்டளையிடுவானானால், அந்தச் சூழ்நிலையில் மனைவி தன் கணவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை. ஆனால் வாழ்க்கையின் பொதுவான உறவுமுறைகளில், அவள் தன் கணவனுக்கு, ஒருவேளை அவன் அவிசுவாசியாக இருந்தாலும், கீழ்ப்படிய வேண்டியவளாக இருக்கிறாள்.

**5:25 மனைவிகளுக்குச்** சொல்லப்பட்டுள்ள மேற்கூறிய அறிவுரைகள் தனித்து இருக்குமானால், அதாவது அவற்றிற்கு ஒப்பான சீரிய அறிவுரைகள் **புருஷருக்குக்** கொடுக்கப்படாதிருந்தால், அவை நடுநிலை தவறிய ஒரு சார்புடைய அறிவுரைகளாகவே காணப்படும். ஆனால் திருமறைச் சத்தியம் அழகிய நிலையில் சமத்துவப்படுத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். **புருஷர்களும்** அவற்றிற்கேற்ற தகுதியைக் கொண்டிருக்க வேண்டுமென்று திருமறை எதிர்பார்க்கிறது. **புருஷர்கள்** தங்கள் மனைவிகளைக் கீழ்ப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்று அது சொல்லவில்லை; அவர்கள் தங்களுடைய மனைவிகளினிடத்தில், **கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்தது போல** அன்புபாராட்ட வேண்டுமென்றே திருமறை கூறுகிறது. **சபையில் கிறிஸ்து** அன்புகூர்வது போல தன்னுடைய மனைவியினிடத்தில் அன்பு பாராட்டுகிற கணவனிடத்தில் மனைவி யாராயிருந்தாலும் கீழ்ப்படிய மறுத்துரைக்க மாட்டாள் என்று நன்றாகச் சொல்லப்பட்டுள்ளது. தன்னுடைய மனைவியினிடத்தில் அளவுக்கு மீறி அன்பு பாராட்டுவதால், தான் தேவனுக்கு அதிருப்தி உண்டாக்கிவிட்டதாக அஞ்சிய ஒரு மனிதனைக் குறித்து ஒருவர் எழுதினார். ஒரு கிறிஸ்தவ ஊழியர் அந்த மனிதனிடம், "கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்ததைக் காட்டிலும் நீங்கள் உங்கள் மனைவியிடம் அன்புகூர்கிறீர்களா?" என்று வினவினார். "இல்லை" என்று விடைபகர்ந்தார் அவர். "நீங்கள் அதையும் மிஞ்சிய அளவிற்கு உங்களுடைய மனைவியிடம் அன்புகூர்ந்தால்தான் அது அளவுக்கு மீறியது என்று கருதப்படும்" என்று கூறினார் ஊழியர். சபையின் மீது கிறிஸ்து கொண்டிருக்கிற அன்பு மூன்று கம்பீரமான செயல்களால் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அவை கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் உட்கொண்ட நிலையில் பரவியிருக்கின்றன. கடந்த காலத்தில், அவர் சபைக்காகத் **தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததன்** மூலமாக தமது அன்பை வெளிப்படுத்தினார். இது அவர் தம்மையே தியாகமாகச் சிலுவையில் பலியாகச் செலுத்தியதைக் குறிக்கிறது. அங்கே அவர் தமக்கு ஒரு மணவாட்டியைச் சம்பாதிக்கும்படி மிகப்பெரிய விலையைச் செலுத்தினார். ஆதாமின் விலாவிலிருந்து ஏவாள் கொண்டுவரப்பட்டதுபோல இரட்சகரின் காயப்பட்ட விலாவிலிருந்து **சபை** உருவாக்கப்பட்டது என ஒரு பொருளில் இதனை விளக்கிக் கூறலாம்.

**5:26** நிகழ்காலத்தில் அவர் சபையின்மீது கொண்டிருக்கும் அன்பு பரிசுத்தப்படுத்தும் அவருடைய ஊழியத்தினாலே வெளிப்படுகிறது: **தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும். பரிசுத்தமாக்குதல்** என்பது பிரித்து வைத்தல் என்று பொருள்படும். தகு

நிலையின் அடிப்படையில் சபையானது ஏற் கனவே பரிசுத்தமாக்கப்பட்டுவிட்டது. நடைமுறை யில் அது ஒவ்வொரு நாளும் பிரித்து வைக்கப்படு கிறது. ஒழுக்க நெறியிலும் ஆவிக்குரிய வண்ண மும் அது ஒரு நடைமுறைப் பயிற்சியில் வழிநடத் தப்பட்டு ஆயத்தப்படுத்தப்படுகிறது. அகாஸ் வேரு மன்னனுக்கு முன் எஸ்தர் கொண்டுவரப்படு வதற்கு முன் ஓராண்டுக் காலம் அவள் சுத்தி கரிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டது போல இது காணப்படுகிறது (எஸ். 2:12-16). இந்தப் பரிசுத்த மாக்கப்படுதல் என்னும் பயிற்சி **திருவசனத்தைக் கொண்டு தண்ணீர்** முழுக்கின் மூலமாக நடை பெறுகிறது. இதனை எளிமையான சொற்களால் நாம் சொல்ல வேண்டுமானால், கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு அவற்றிற்குக் கீழ்ப்படி கிறதனாலே விசுவாசிகளின் வாழ்க்கை தூய் மைப்படுத்தப்படுகிறது என்று சொல்லலாம். "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தி னாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர் கள்" என்று இயேசு தமது சீடர்களிடம் கூறினார் (யோவான் 15:3). மேலும் அவர் தம்முடைய மகா பிரதான ஆசாரியர் என்னும் நிலையில் ஏறெடுத்த ஜெபத்தில், "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்று கூறினார் (யோவான் 17:17). பாவத்தின் எல்லாக் குற்றவுணர்விலிருந் தும் தண்டனையிலிருந்தும் எவ்வாறு கிறிஸ்து வின் இரத்தம் சுத்தப்படுத்துகிறதோ, அது போலவே தேவனுடைய திருமறை பாவத்தின் தீட்டிலிருந்தும், கறையிலிருந்தும் தொடர்ந்து சுத்திகரிக்கிறது. சபையானது தற்காலத்தில் எழுத்தின்படியான தண்ணீரினால் அல்ல, தேவனு டைய வார்த்தை என்னும் சுத்திகரிப்புப் பொரு ளாலே கழுவப்படுகிறது என்று இப்பகுதி கற்பிக் கிறது.

**5:27** கடந்த காலத்தில், நம்முடைய *மீட்பின்* மூலமாகக் கிறிஸ்துவின் அன்பு வெளிப்படுத்தப் பட்டது. தற்காலத்தில் அது நம்முடைய *பரிசுத்த மாக்கப்படுதல்* என்னும் செயலினாலே வெளிப் படுத்தப்படுகிறது. எதிர்காலத்தில் நம்முடைய மகிமைப்படுதலிலே அது வெளிப்படுத்தப்படும். அவர் தாமே, **கறைதிரை முதலானவை ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வார்.** அந்தச் சமயத்தில் சபை அழகின் முகட்டை எட்டி, ஆவிக்குரிய நிறைவைப் பெற்றிருக்கும்.

A. T. பியர்சன் மிகச்சரியாக வியந்து போற்று கிறார்:

> இதனைக் குறித்துச் சிந்தித்துப் பாருங்கள் – இறுதியில் சர்வஞானமுள்ள கண் நம்மை நோக்கிப் பார்க்கையில், ஒரு மனிதனுடைய முகத்தில் ஒரு பருவோ ஒரு மச்சமோ இருப்பது போன்று ஏதொன்றையும் அவருடைய களங்க மற்ற தூய்மையினால் கண்டுபிடிக்க முடியாது. இது நம்புதற்கரியது![38]

F. W. கிராண்ட் என்பார் இதனை ஆமோதிக் கிறார்:

> அதைக் குறித்துப் பார்க்கும்போது அங்கே வயது முதிர்ச்சியின் அறிகுறி இல்லை, எந்தக் குறைபாடும் இல்லை, வனப்பும் நித்தியமும் நிறைந்த நிலைபேறான இளமையைத் தவிர வேறு எதுவும் அவருக்குப் பொருந்தாது, அவரு டைய பாசத்தின் புதுமைப் பொலிவு ஒருக் காலும் இளைப்படைவதில்லை, நலிவடைவது என்றால் என்னவென்று அதற்குத் தெரியாது. அப்பொழுது சபையானது பரிசுத்தமாயும் குற்ற மற்றதாகவும் காணப்படும். சபையின் வர லாற்றை முழுவதுமாக நாம் அறிந்திருந்தும், பாவத்தின் மீதும் பொல்லாங்கின் மேலும் தேவன் எவ்வாறு மகிமையோடு வெற்றி சிறந்து அதைத் தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறார் என்பதை நாம் அறியாதிருப்போமெனில் அது கேட்பதற்கு எத்தனை விநோதமாயிருக்கும்.[39]

**5:28** சபையின்மீது கிறிஸ்து கொண்டிருக்கும் அன்பைக் குறித்துப் பறைசாற்றும் உன்னதமான வீரகாவியத்தில் உயரப் பறந்துசென்ற பவுல் இப் பொழுது இந்த மாதிரியையே கணவன்மார்கள் பின்பற்ற வேண்டும் என்று கூறி முந்தைய பொருள் நோக்கித் திரும்புகிறார்: **அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்.** கிறிஸ்துவின் அன்பை அவர்கள் பின்பற்றவேண்டுமென்றால், அவர்கள் **தங்கள் மனைவிகளை** உண்மையாகவே **தங்களுடைய சொந்த சரீரங்களாகப் பாவிக்க வேண்டும்.**

22 முதல் 33 வரையிலான வசனங்களில், கிரேக்க மொழியில், ஆறு இடங்களில் "சொந்த" என்னும் சொல் இடம்பெற்றிருக்கிறது. இவ்வாறு "சொந்த" என்னும் சொல் வற்புறுத்தக்கூடிய வகையில் பயன்படுத்தப்பட்டிருப்பது, தம்முடைய

மக்களுக்கு ஆண் ஒருவனுக்கு ஒரு மனைவி என்னும் திட்டத்தை தேவன் கொண்டிருந்தார் என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறது. பல மனைவிகளை ஒருவன் திருமணம் செய்துகொள்ளலாம் என்று அவர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அனுமதித்திருந்த போதிலும், அவர் ஒருக்காலும் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை.

கணவன் மனைவிக்கு இடையிலான நெருங்கிய உறவைப் பவுல் வெவ்வேறு வகையில் விளக்கிக் கூறியிருப்பது ஆர்வமூட்டுவதாக இருக்கிறது. ஒருவன் தன்னுடைய மனைவியினிடத்தில் அன்புகூர்வது, அவன் தன்னுடைய சொந்த சரீரத்தை அன்புகூருவதாகவும் (வச. 28), **தன்னில் தானே** அன்புகூருவதாகவும் (28,33), தன்னுடைய சொந்த மாம்சத்தில் அன்புகூருவதாகவும் (வச. 29) அமையும் என்று அவர் கூறுகிறார். திருமணம் இரண்டு நபர்களுக்கிடையிலான இணைப்பாக இருப்பதாலும், இருவர் ஒரே மாம்சமாக மாறுவதாலும், **தன்னுடைய மனைவியில் அன்புகூருகிறவன்** உண்மையான பொருளில் **தன்னில் தான் அன்புகூருகிறவனாக** இருக்கிறான்.

**5:29** தன்னுடைய சொந்த உடலைப் பேணிப் பாதுகாக்கும் உள்ளுணர்வைக் கொண்டவனாக மனிதன் பிறந்திருக்கிறான். உணவு உண்டு, ஆடை அணிந்து, உடலைக் குளிப்பாட்டி அதனைப் பேணிப் பாதுகாக்கிறான். வசதிக் குறைவுகள், வேதனைகள், இடையூறுகள் ஆகியவற்றினின்றும் அவன் உடலைக் காக்கிறான். அவன் இவ்விதமாகப் பேணிப் பாதுகாப்பதன் அடிப்படையிலேயே அது தொடர்ந்து நிலைத்திருக்கும். இவ்வாறு ஒருவன் தன்னுடைய உடலை அக்கறையுடன் பேணிப்பாதுகாக்கும் செயல், **கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதற்கு** ஒரு மங்கலான எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**5:30 நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாக இருக்கிறோம்.** தேவனுடைய கிருபை பெருமளவில் திகைப்பூட்டுவதாக இருக்கிறது! அது நம்மைப் பாவத்திலிருந்தும் நரகத்திலிருந்தும் இரட்சித்தது மட்டுமின்றி, **கிறிஸ்துவினுடைய** மறைபொருளான **சரீரத்தின் அவயவங்களாக** அவரோடு இணைக்கவும் செய்திருக்கிறது. அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பைக் குறித்து எவ்வளவாக இது எடுத்தியம்புகிறது: அவர் தமது சொந்த சரீரத்தைப் பேணிப் பாதுகாப்பதுபோல நம்மைப் பேணிப் பாதுகாக்கிறார். அவர் செலுத்தும் அக்கறை: அவர் உணவூட்டுகிறார், பரிசுத்தப்படுத்துகிறார், பயிற்றுவிக்கிறார். அவருடைய பாதுகாப்பு: அவர் தமது **அவயவங்கள்** இன்றி விண்ணுலகில் இருக்க மாட்டார். நாம் அவருடன் சேர்ந்து வாழும்படி அவரோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். எவையெல்லாம் அவயவங்களைப் பாதிக்கின்றனவோ அவையாவும் அவரையும் பாதிக்கின்றன.

**5:31** திருமண உறவை நிறுவியபோது தேவன் கொண்டிருந்த முதலாவது கருத்தைக் கூறும்படி அப்போஸ்தலன் இப்பொழுது ஆதியாகமம் 2:24 - ஆம் வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். ஒரு மனிதன் தன்னுடைய பெற்றோர்களோடு கொண்டிருக்கும் உறவுக்கும் மேலாக, தன்னுடைய மனைவியினிடத்தில் காண்பிக்க வேண்டிய அதிக விசுவாசத்திற்குரிய உறவை அது முதலாவது எடுத்துரைக்கிறது. திருமண உறவின் மிக மேலான நிலையை அடையும்படி அவன் தன்னுடைய பெற்றோர்களை விட்டுவிட்டு **தன்னுடைய மனைவியோடு இசைந்திருக்கிறான்.** திருமண உறவில் காணப்படும் இரண்டாவது அம்சம், கணவனும் மனைவியும் **ஒரே மாம்சமாக** மாறுகிறார்கள்: அங்கே இரண்டு நபர்களுக்கிடையிலான உண்மையான இணக்கம் உண்டாகிறது. இவ்விரு அடிப்படை உண்மைகளை மனதிற் கொண்டால் பெற்றோர்களால் உண்டாகும் தொல்லைகளும், திருமண உறவில் ஏற்படும் சச்சரவுகளும் நீங்கும்.

**5:32 இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன்.** இதுவரை அறியப்படாத ஒரு வியத்தகு உண்மையை எடுத்துரைத்து, திருமண உறவைப் பற்றிய தன்னுடைய விவாதத்தின் உச்சிக்குச் செல்கிறார் பவுல். அதாவது, ஒரு மனைவி அவளுடைய கணவனுக்கு எப்படி இருக்கிறாளோ, அதுபோலவே **சபை கிறிஸ்துவுக்கு** இருக்கிறது.

இந்த இரகசியம் பெரியது என்று பவுல் கூறுமிடத்து, இது ஏதோ புரிந்துகொள்வதற்கு இயலாதது என்று கூறவில்லை. மாறாக, இந்த உண்மையின் உட்பொருள் பேராற்றல் விளைவிக்கக் கூடியது என்னும் பொருள்படவே அவர் இவ்வாறு கூறுகிறார். முற்காலங்களில் தேவனுக்குள் மறைத்து வைக்கப்படிருந்த வியத்தகு நோக்கமே இரகசியம் ஆகும். ஆனால் அது இப்பொழுது வெளியரங்கமாக்கப்பட்டுள்ளது. அந்த நோக்கம் யாதெனில், பன்னாட்டு மக்களிலிருந்து ஒரு கூட்டத்தை அழைத்து அதனை அவருடைய மகிமை நிறைந்த குமாரனின் சரீரமாகவும் மணவாட்டி

யாகவும் மாற்றுவதே ஆகும். **கிறிஸ்துவுக்கும் சபைக்கும்** இடையிலான உறவில், திருமண உறவு தன்னுடைய பரிபூரண மாதிரியைக் கொண்டிருக்கிறது.

மகிமையின் கர்த்தர், திருமன்றத்தைத் தமது உடல் எனவும் தமது மணவாட்டி எனவும் கருதிய வராகத் தமது செங்குருதியைச் சிந்தினார். இந்த உணர்வன்றோ அவருடன் ஒரே ஆவியால் இசைந் திருப்பதன் பொருள் - மேரி பௌலி பீட்டர்ஸ்.

**5:33** கணவன்மார்களுக்கும் மனைவிகளுக் கும் இதுகாறும் அப்போஸ்தலன் கூறிய அறிவுரை யின் ஒட்டுமொத்தக் கருத்து ஒரே வாக்கியமாக இந்தக் கடைசி வசனத்தில் தரப்பட்டுள்ளது. புரு ஷர்களுக்கு இறுதியான அறிவுரை: **உங்களில் அவனவன்,** எந்த விதிவிலக்கும் இன்றி, **தன்னி டத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவி யினிடத்திலும் அன்புகூரக்கடவன்.** வெறுமனே உங்களிடத்தில் அன்புகூருவதைப் போலல்ல, உங்களுடைய மனைவி உங்களோடு ஒன்றாக இணைக்கப்பட்டவள் என்ற உண்மையை ஏற்றக் கொண்ட நிலையில் நீங்கள் அன்புகூரவேண்டும். மனைவிகளுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரை: நீங்கள் தொடர்ந்து உங்களுடைய **புருஷனிடத் தில் பயபக்தியாயிருந்து,** அவனுக்குக் கீழ்ப்படி யுங்கள். இங்கே சற்று நிறுத்தி, சிந்தித்துப் பாருங்கள்! இக்காலத்தில் கிறிஸ்தவர்கள் எங் கும் பரவலாக இங்கு கூறப்பட்டுள்ள தெய்வீக அறிவுரைகளைப் பின்பற்றுவார்களானால் என்ன விளைவு உண்டாகும்? இதற்குரிய விடை என்ன வென்பதில் ஏதொரு ஐயமுமில்லை. அங்கே சண்டையில்லை, பிரிவினை இல்லை, திருமண முரிவு இல்லை. நம்முடைய இல்லங்கள் இப் பொழுது இருப்பதைக் காட்டிலும் மேலான நிலையை அடையும். அங்கு பரலோகத்தின் அனுபவம் முன்கூட்டியே, இப்பொழுதே அனுபவ மாகும்.

**6:1** ஒருவருக்கொருவர் கீழ்ப்படியும் செயல் ஆவியின் நிறைவினால் உண்டாகக் கூடிய விளைவுகளில் ஒன்று என்பதை நாம் 5 -ஆது அதிகாரத்தில் கற்றோம். எடுத்துக்காட்டாக, ஆவி யினால் நிறைந்த மனைவி தன்னுடைய கண வனுக்குக் கீழ்ப்படிகிறாள். ஆவியினால் நிறைந்த **பிள்ளைகள்** மனமுவந்து தங்களுடைய பெற் றோர்களுடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படிகிற தைக் குறித்து இங்கு நாம் கற்கிறோம். பிள்ளை கள் யாவரும் அவரவருடைய **பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டியது** இன்றி யமையாத கடமையாக விளங்குகிறது. பிள்ளை கள் கிறிஸ்தவர்களா அல்லது பெற்றோர்கள் கிறிஸ்தவர்களா என்பது எந்த வேறுபாட்டையும் ஏற்படுத்துகிறதில்லை. பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவு பற்றிய கட்டளை விசுவாசிகளுக்கு மட்டுமன்றி, மனுக் குலம் அனைத்திற்கும் கொடுக்கப்பட்டதாகும். கர்த்தருக்குள் கீழ்ப்படிய வேண்டும் என்னும் கட்டளை, முதலாவது, அவர்கள் கர்த்தருக்கு எப்படிப்பட்ட மனப்பான்மையுடன் பெற்றோர்களுக் கும் கீழ்ப்படிய வேண்டுமோ அத்தகைய மனப் பான்மையுடன் கீழ்ப்படிய வேண்டும் என்று பொருள்படும். அதாவது, அவர்களுடைய கீழ்ப் படிதல் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல இருக்க வேண்டும். இரண்டாவதாக, அவர்கள் தேவனு டைய சித்தத்திற்கு ஏற்றவிதமான காரியங்கள் எல்லாவற்றிலும் தங்களுடைய பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் இது பொருள்படும். அவர்கள் பாவச்செயல்களைச் செய்ய வேண்டும் என்று பெற்றோர்கள் கட்டளையிடுவார்களா னால், அவர்கள் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப் படிய வேண்டியதில்லை. அப்படிப்பட்ட தருணத் தில் அவர்கள் மரியாதையுடன் மறுத்துரைத்து, அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளைத் தாழ்மையோடும், எவ்விதமான எதிர்ச்செயலில் ஈடுபடாமலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனா லும் மற்ற எல்லா விஷயங்களிலும் அவர்கள் தங்களுடைய பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

அவர்கள் ஏன் கீழ்ப்படிய வேண்டும் என்பதற் கான நான்கு காரணங்கள் கொடுக்கப்பட்டுள் ளன. முதலாவது, அது **நியாயமானது.** வளர்ச்சி யடையாதவர்களும், உணர்ச்சிவயப்படுகிறவர் களும், அனுபவமற்றவர்களுமான பிள்ளைகள், வயதில் மூத்தவர்களும், ஞானத்தில் சிறந்தவர் களுமான பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்னும் அடிப்படையிலான கொள்கையினா லேயே குடும்ப வாழ்க்கை என்னும் கட்டமைப்பு கட்டப்பட்டுள்ளது.

**6:2,3** இரண்டாவது காரணம் இது திரு மறையை ஆதாரமாகக் கொண்டது. இங்கு பவுல் யாத்திராகமம் 20:12 -ஆம் வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்: உன் தகப்பனையும் உன் தாயை யும் கனம்பண்ணுவாயாக (உபா. 5:16 -ஆம் வசனத்தையும் காண்க). பத்துக் கட்டளைகளில் ஒரு குறிப்பிட்ட ஆசிர்வாதத்தோடு கூடிய **வாக் குத்தத்தம்** இணைந்த **முதலாங் கற்பனை**

இதுவேயாகும். பிள்ளைகள் தங்களுடைய பெற்றோருக்கு மரியாதை செலுத்த வேண்டுமென்றும், அன்புபாராட்ட வேண்டுமென்றும், கீழ்ப்படிய வேண்டுமென்றும் இக்கட்டளை வலியுறுத்துகிறது.

மூன்றாவது காரணம், பிள்ளைகளுடைய சிறந்த நன்மையை இது கருத்தில் கொண்டதாக இருக்கிறது: **உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும்**. தன்னுடைய பெற்றோரிடத்திலிருந்து எந்த அறிவுரையையும், எந்த தண்டனையையும் பெறாத பிள்ளைக்கு என்ன நடக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்! அவன் தனிப்பட்ட முறையில் இழிந்த நிலைக்குச் சென்றுவிடுவான், சமுதாயத்தில் சகிக்க இயலாதவனாகக் காணப்படுவான்.

நான்காவது காரணம், கீழ்ப்படிதல் முழுமையான வாழ்வைத் தரும்: பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருக்கும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிகிற யூதச் சிறுவன் நீடித்த வாழ்வைப் பெற்றான். இந்த நற்செய்தியின் காலத்தில் இந்த விதிக்கு விலக்கு இல்லாமல் இல்லை. பெற்றோருக்கு பிள்ளைகள் கீழ்ப்படிகிற செயலோடு நீடித்த வாழ்வு எப்பொழுதும் தொடர்புடையதாக இருப்பதில்லை. கடமைவீரனாய்ச் செயல்படுகிற மகன் சிறுவயதில் இறக்க நேரிடும். ஆனால் பொதுவாகக் காணுமிடத்து, ஒழுங்கும் கீழ்ப்படிதலும் உள்ள வாழ்க்கை, உடல்நலமும் நீண்ட ஆயுளும் உள்ள வாழ்க்கைக்குச் சாதகமான நிலையை உண்டுபண்ணுகிறது. ஆனால் கலகம் உண்டாக்குகிறதும் முரட்டுத்தனமும் உள்ள வாழ்க்கை உரிய காலத்திற்கு முந்தி முடிவடைந்து போகிறதை அவ்வப்போது காணமுடியும்.

**6:4** பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட அறிவுரைகளுக்குச் சமமானபடி இப்பொழுது **பிதாக்களுக்கு** அறிவுரை வழங்கப்படுகிறது. பொருத்த மற்ற முறையில் காரியங்களைச் செய்யும்படி வற்புறுத்தி, வரம்பு மீறிய வகையில் கண்டித்து, ஓயாமல் சீண்டிவிட்டுப் **பிள்ளைளை** அவர்கள் **கோபப்படுத்தக்** கூடாது. மாறாக அவர்களைக் **கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும்** பேணி வளர்க்க வேண்டும். **சிட்சை** எனப்படுவது ஒழுங்கு முறையோடு தவறுகளைக் கண்டித்து வளர்ப்பதுமாகும்; வாய்மொழியாகவோ, அடித்தோ சிட்சை வழங்கப்படும். போதனை எனப்படுவது எச்சரித்து, கண்டித்து, கடிந்துகொள்ளுதல் ஆகும். பிள்ளைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி "**கர்த்தருக்கு** உட்பட்டதாக இருக்க வேண்டும்", அதாவது, திருமறையில் கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதற்கு ஏற்ப, அவருடைய பிரதிநிதி என்னும் நிலையில் ஒருவராலே செயல்படுத்தப்பட வேண்டும்.

ஜான்வெஸ்லி, சார்ல்ஸ் வெஸ்லி ஆகியோரின் தாயாராகிய சூசன்னா வெஸ்லி (அவர் பதினேழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தவர்) ஒருமுறை இவ்வாறு எழுதியிருக்கிறார்:

> தன்னுடைய பிள்ளையின் சுயசித்தத்தை அடக்கிக் கீழ்ப்படுத்த முயற்சி செய்கிற தகப்பன், பின்னையின் ஆத்துமாவைப் புதுப்பித்து, இரட்சிக்கிற செயலில் தேவனோடு சேர்ந்து உழைக்கிறார். ஆனால் அந்தப் பிள்ளைக்குச் செல்லம் கொடுத்துக் கெடுக்கிற தகப்பன், தன்னிடத்தல் இருக்கிற எல்லாவற்றாலும் பிசாசின் வேலையைச் செய்கிறவராக,பிள்ளை ஆன்மீக வாழ்க்கை வாழ்வதற்கு இயலாதவனாக மாற்றம் அடையச் செய்கிறவராக, அவன் இரட்சிப்பை அடைய முடியாதபடி ஆக்குகிறவராக மற்றும் அந்தப் பிள்ளையின் ஆத்துமாவும் சரீரமும் என்றென்றும் நரகத்திற்குச் சென்றழியும் நிலைக்குக் கொண்டு போகிறவராக இருக்கிறார்.[40]

**6:5** கிறிஸ்தவ இல்லத்தில் காணப்பட வேண்டிய கீழ்ப்படிதலின் மூன்றாவதும், இறுதியுமான இடம் **எஜமான்களுக்கு** வேலைக்காரர்கள் கீழ்ப்படிகிறதாகும். பவுல் இங்கு பயன்படுத்துகிற சொல் அடிமைகள் என்று பொருள்படும். ஆனால் இந்த விதிகள் எல்லா விதமான **வேலைக்காரருக்கும்** பணிவிடைக்காரர்களுக்கும் பொருந்தும்.

முதலாவதாக, வேலைக்காரர்கள் **சரீரத்தின்படி தங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்குப்** பணிபுரிய வேண்டும். **சரீரத்தின்படி எஜமான்களாயிருக்கிறவர்கள்** என்னும் சொற்றொடர், சரீரத்தின்படியோ, அறிவாற்றலின்படியோ செய்கிற வேலைகளின்மீது மட்டுமே எஜமான்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை நமக்கு நினைவுறுத்துகிறது. மாறாக, எஜமான் தன்னுடைய வேலைக்காரரின் ஆவிக்குரிய காரியங்களில் தலையிடமுடியாது, அவர்களுடைய மனச்சாட்சிக்குக் கட்டளை கொடுக்கவும் முடியாது.

இரண்டாவதாக, வேலைக்காரர்கள் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். **பயத்தோடும் நடுக்கத்தோடும்** என்னும் சொற்றொடர் அச்சத்தால் ஒடுங்கி கொத்தடிமையைப் போல்

இருக்கும் நிலையையோ, பேரச்சத்தினால் இழிந்த நிலையில் இருப்பதையோ குறிப்பதில்லை. அந்தச் சொற்கள் கடமையோடு கூடிய மரியாதையையும், கர்த்தருக்கும் எஜமானுக்கும் மனம் புண்படும் வண்ணம் நடந்துகொள்ள நேரிடுமோ என்ற **பயத்தையுமே** குறிப்பிடுகின்றன.

மூன்றாவதாக, செய்கிற வேலை மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும், அல்லது **கபடற்ற மனதோடு** விளங்க வேண்டும். நாம் ஒவ்வொரு மணிநேரச் சம்பளத்திற்கும் 60 மணித்துளிகள் வேலையைச் செய்ய முயற்சி செய்கிற வர்களாய் விளங்க வேண்டும்.

**6:6** அடுத்ததாக, நாம் செய்கிற வேலை **கிறிஸ்துவுக்கு செய்கிற ஊழியமாக** இருக்க வேண்டும். உலகப்பிரகாரமான வேலை, புனிதமான வேலை என்று உண்மையிலேயே வேறுபாடு எதுவும் இல்லை என்பதை இந்தச் சொற்கள் வெளிப்படுத்துகின்றன. நாம் செய்கிற வேலைகள் அனைத்தும் அவருக்காகவே செய்யப்படுகிறவை என்று காணப்பட வேண்டும். அவற்றின் நோக்கங்கள் அவரைப் பிரியப்படுத்துகிறவையாகவும், கனப்படுத்துகிறவையாகவும், மற்றவர்களை அவரிடத்திற்குக் கவர்ந்து இழுக்கிறவையாகவும் இருக்க வேண்டும். மிகச் சாதாரணமான தாழ்ந்த வாழ்க்கைத்தொழில்கள் தேவனுடைய மகிமைக்கென்று செய்யப்படுகிறபோது, அவை மேம்பாடு உடையவையாகவும் மதிக்கத்தக்கவையாகவும் விளங்கும். ஒரு வேளை அது பாத்திரங்களைக் கழுவும் தொழிலாகவும் இருக்கக்கூடும்! இதன் காரணமாகவே சில கிறிஸ்தவ இல்லத்தரசிகள் தங்களுடைய அடுப்படியிலுள்ள கழுவும் தொட்டிக்கு மேலாக, "இங்கு தெய்வீக ஊழியம் நாளொன்றுக்கு மும்முறை செய்யப்படுகிறது" என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

நாம் நம்முடைய முதலாளி பார்க்கும் போது மட்டுமின்றி எப்பொழுதும் கடுமையாக உழைக்கிறவர்களாக இருக்க வேண்டும், நம்முடைய எஜமானர் எப்பொழுதும் கவனித்துக்கொண்டிருக்கிறார் என்னும் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். முதலாளி வெளியே சென்றிருக்கும்போது வேலையில் தளர்ச்சியடைவது இயற்கையே; ஆனால், அது ஒருவகை நேர்மையற்ற தன்மையேயாகும். கிறிஸ்தவனின் உற்பத்தியின் தரம், மேற்பார்வையாளர் எங்கு அமர்ந்திருக்கிறார் என்பதைப் பொருத்து ஏற்றத்தாழ்வு அடையக்கூடாது. முதலாளி கவனிக்கவில்லை என்று கூறி, தான் செலுத்திய பணத்திற்கு அதிகமாகச் சரக்கைத் தரும்படி ஒரு வாடிக்கையாளர் விற்பனை செய்பவரிடம் கேட்டார். ஆனால் அந்த விற்பனையாளர், "என்னுடைய எஜமானர் எப்பொழுதும் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்" என்று பதிலுரைத்தார்! கிறிஸ்துவினுடைய ஊழியக்காரர் என்னும் நிலையில் நாம் **மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்ய வேண்டும்**, அதாவது, அவரைப் பிரியப்படுத்த வேண்டும் என்னும் நேர்மையான விருப்பத்தோடு செயல்புரிய வேண்டும். எர்ட்மேன் என்பார் கூறுகிறார்:

> இவை போன்ற கருத்துகளின் அடிப்படையில் காணுமிடத்து, உழைப்பானது அளவிட முடியாத அளவிற்கு மேன்மையுடையதாய் விளங்குகிறது. மிகவும் தாழ்ந்த ஓர் அடிமையின் உழைப்பானது கர்த்தருக்கு விருப்பமானபடியும், நல்நோக்கத்துடனும், மனப்பூர்வமான ஆயத்தத்தோடும் வைராக்கியத்தோடும், கர்த்தருடைய பாராட்டைப் பெறுவதற்கான தகுதியோடும் செய்யப்படும்போது மிகவுயர்ந்ததாகக் கருதப்படும்.[41]

**6:7,8** அடுத்தபடியாக, நாம் **நல்மனதோடே** ஊழியஞ் செய்ய வேண்டும். உள்ளத்தில் மனக்கசப்போடு குமுறியவர்களாக இருந்துகொண்டு, வெளியில் முறையாக நடந்துகொள்பவர்கள் போலக் காட்டிக்கொள்ளாமல், உண்மையாகவே மனமகிழ்ச்சியுடனும் மனவிருப்பத்துடனும் செயல்படவேண்டும். ஒருவேளை எஜமானன் ஒடுக்கி பாரஞ்சுமத்துபவனாகவும், அவதூறாகப் பேசுபவனாகவும், அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பவனாகவும் இருந்தாலும்கூட **மனிதருக்கென்று ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென்றே** ஊழியஞ்செய்ய வேண்டும். இத்தகைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் நடந்துகொள்கிற பண்பே, நாம் வாழ்கிற உலகினில் பெருந்தொனியோடு பேசக் கூடியதாக இருக்கிறது.

எல்லா வேலைகளையும் கிறிஸ்துவுக்கென்றே செய்வதற்கான செயலூக்கம் அப்படிப்பட்ட ஒவ்வொரு நல்ல வேலைக்கும் அவர் பரிசு தருவார் என்னும் வாக்குறுதியிலே காணப்படுகிறது. ஒருவன் **அடிமையானாலும் சுயாதீனனானாலும்** எவ்வித வேறுபாடும் இல்லை. செய்யப்படுகிற வேலை மனதிற்கினிமையானதாக இருந்தாலும் அல்லது மனதிற்கு ஒவ்வாததாக இருந்தாலும் கர்த்தருக்கென்று செய்யப்படுகிறபோது,

அவர் அதனைக் கவனித்து ஒவ்வொரு வேலை யாளுக்கும் பரிசினை வழங்குவார்.

அடிமைகள் பற்றிய இந்தப் பகுதியை விட்டுச் செல்லுமுன் சில விளக்கங்களை அளிக்க வேண் டியது அவசியம்:

1. புதிய ஏற்பாடு அடிமை வழக்கத்தை ஒட்டு மொத்தமாகக் குற்றமெனத் தீர்க்கவில்லை. உண்மையில், மெய்யான விசுவாசியானவன் கிறிஸ்துவுக்கு அடிமையாக (கட்டுண்ட பணி விடையாள்) இருப்பதையே அது விரும்புகிறது (வச. 6). ஆனால் அடிமைத்தனத்தின் தவறான பயன்பாடு, எங்கெல்லாம் சுவிசேஷம் சென் றதோ அந்த இடங்களிலிருந்து அகன்று போயிற்று - முதன்மையாக ஒழுக்கநெறி சீர் திருத்தத்தினாலே அந்நிலை மாற்றம் அடைந்துவிட்டது.
2. புதிய ஏற்பாடு அரசர்களிடம் பேசியிருப்பதைக் காட்டிலும், அடிமைகளிடத்திலேயே அதிக மாகப் பேசியிருக்கிறது. அநேக ஞானிகளோ, வல்லவர்களோ, பிரபுக்களோ அழைக்கப்பட வில்லை என்பதன் பிரதிபலிப்பாக இது காணப் படுகிறது (1 கொரி. 1:26). பெரும்பாலான கிறிஸ்தவர்கள், பொருளாதாரம் மற்றும் சமு தாய ஏற்றத்தாழ்வு ஆகியவற்றின் அடிப்படை யில் காணும்போது, ஏழை எளிய மக்களா கவே இருக்கிறார்கள். பெரும்பாலான குற்றே வல் புரியும் வேலைக்காரர்கள், கிறிஸ்தவத் தின் மிகச்சிறந்த ஆசிர்வாதங்களுக்குப் புறம் பானவர்கள் அல்லர் என்பதை, அடிமைகளை முக்கியப்படுத்திப் பேசும் இந்த வேதப்பகுதி வெளிப்படுத்துகிறது.
3. அடிமைகளுக்கென்று மேலே சொல்லப்பட் டுள்ள அறிவுரைகளின் விளைபயன் கிறிஸ் தவத்தின் தொடக்க நாட்களிலே, கிறிஸ்தவ அடிமைகள், மற்ற புறச்சமய அடிமைகளைக் காட்டிலும் ஏலத்தில் அதிக விலைகொடுத்து வாங்கப்பட்டார்கள் என்னும் உண்மையில் வெளிப்பட்டுக் காணப்படுகிறது. இந்நாட் களில் கிறிஸ்தவ அலுவலர்கள், தேவனுடைய கிருபையினாலே தொடப்படாத மற்ற அலு வலர்களைக் காட்டிலும் தங்களுடைய முத லாளிகளுக்கு அதிகமாகப் பயனளிக்கிறவர் களாக விளங்கவேண்டும்.

**6:9** எஜமானர்களும் வேலைக்காரர்களைப் போலவே அதே பொதுவான கோட்பாடுகளால் வழிநடத்தப்பட வேண்டும். அவர்கள் நேர்மை யானவர்களாகவும், தயவுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்; முக்கியமாக அவர்கள் தவறான சொற்களையோ **கடுஞ்சொற்களையோ** பயன்படுத்தாதிருக்கக் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இவ் விதமான காரியங்களில் அவர்கள் ஒழுங்கைக் கடைப்பிடிப்பார்களானால், அவர்கள் தங்கள் வேலைக்காரர்களுக்குச் சரீரப்பிரகாரமான கெடுதியைச் செய்யமாட்டார்கள். அவர்கள் தங்க ளுக்கும் ஓர் **எஜமானர்** இருக்கிறார் என்பதை எப்பொழுதும் நினைவுகூர வேண்டும்; அந்த **எஜமானர் பரலோகத்தில் இருக்கிறவர்,** அவரே வேலைக்காரர்களுக்கும் எஜமானர் என்பதையும் அவர்கள் நினைவுகூரவேண்டும். உலகப்பிரகார மான வேறுபாடுகள் அனைத்தும் கர்த்தருடைய சமுகத்தில் சரிசமமாக்கப்படும். எஜமானனும் வேலைக்காரனும் ஒருநாளில் கர்த்தருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

### உ. கிறிஸ்தவப் போராட்டம் பற்றிய அறிவுரைகள் (6:10-20)

**6:10** பவுல் தனது மடலின் இறுதிப் பகுதிக்கு வந்துவிட்டார். தேவனுடைய குடும்பத்தார் அனை வரோடும் பேசியபின், அவர் அவர்களைக் கிறிஸ்து வின் போர்வீரர்கள் என்று அழைத்து, அவர்களது உணர்ச்சியைத் தூண்டும் வகையில் முறையிடு கிறார். மெய்யான இறைமக்கள் யாவரும் கிறிஸ் தவ வாழ்க்கையானது போராட்டம் மிகுந்தது என் பதை வெகுவிரைவாகக் கற்றுக் கொள்கிறார்கள். சாத்தானின் சேனை கிறிஸ்துவுக்காகச் செய்யப் படுகிற வேலைக்கு முட்டுக்கட்டை போட்டு, அது நிறைவேறாமல் தடைசெய்யக் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறது, மேலும் அது ஒவ்வொரு போர்வீரனையும் போராட்டத்திலிருந்து கீழே தள்ளிவிட முயற்சி செய்கிறது. ஒரு விசுவாசி எந்த அளவிற்குச் செயல் திறமையோடு கர்த்தருக்காக உழைக்கிறானோ, அந்த அளவிற்குக் கொடூர மான முறையில் எதிரியின் தாக்குதல்களை அவன் சந்திக்க நேரிடும்: பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருக்கிறவர்களுக்கு எதிராகத் தனது போர்த் தள வாடங்களைப் பிசாசு வீணாக்குவதில்லை. நம்மு டைய சொந்த வலிமையைக் கணக்கிடும்போது, நாம் சாத்தானுக்கு எந்த விதத்திலும் நிகரானவர் கள் அல்லர். ஆகவே முதலாவதாக நாம் ஆயத் தப்படுவதற்கான கட்டளை கொடுக்கப்பட்டுள் ளது; நாம் **கர்த்தரிலும்** எல்லைக்குட்படா ஆதா ரமாகிய **அவருடைய சத்துவத்தின் வல்லமை யிலும்** தொடர்ந்து பலப்பட வேண்டும். தங்களு டைய சொந்த பலவீனத்தையும், செயல் திறமை

யற்ற தன்மையையும் மனதிற்கொண்டவர் களாக, அவரை மட்டும் சார்ந்து செயல்படுகிற மக்களே தேவனுடைய சிறந்த போர்வீரர்கள் ஆவார்கள். "பலமுள்ளவைகளை வெட்கப்படுத் தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவை களைத் தெரிந்துகொண்டார்" (1 கொரி. 1:27). நம்மு டைய பலவீனமே **அவருடைய சத்துவத்தின் வல்லமையினிடத்தில்** நம்மை வழிநடத்துகிறது.

**6:11** இரண்டாவது கட்டளையானது, தெய் வீகப் போர்த்தளவாடங்களின் தேவையைக் குறித் ததாகும். விசுவாசிகள் **பிசாசின்** போர்த் தந்திரங் களை **எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களா கும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை யும் தரித்துக்கொள்ள வேண்டும்**. ஓரிரு ஆயுதங் கள் போதா, முழுக் கவசத்தையும் அணிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது. தேவன் நமக்குத் தந்திருக்கிற முழுப் படைக்கவசத்தையும் அதா வது ஒன்றும் குறையாமல் எல்லாவற்றையும் அணிந்திருந்தால் மட்டுமே நாம் ஊறு விளையா மல் காக்கப்படுவோம். பிசாசு பல்வேறு தந்திரங் களைக் கொண்டிருக்கிறான்: ஊக்கங் குன்றச் செய்தல், ஏமாற்றமடையச் செய்தல், குழப்பம், ஒழுக்கநெறியில் தோல்விகள், கோட்பாட்டில் தவறுகள். நம்முடைய பலவீனம் எங்கே இருக் கிறது என்பதை அறிந்தவனாக அவன் அதை நோக்கித் தாக்குகிறான். ஒரு வழியில் அவன் நம் மைப் பயனற்றவர்களாக ஆக்கமுடியவில்லை யென்றால், வேறொரு வழியைப் பின்பற்றுகிறான்.

**6:12** தேவனற்ற தத்துவஞானிகளிடமும், தந்திரம் நிறைந்த மதகுருக்களிடமும், கிறிஸ்துவை மறுத்துரைக்கும் கள்ளக் குழுவினரிடத்திலும், தேவ நம்பிக்கையற்ற அரசாங்கத்தினரிடத்திலும் நாம் எதிர்த்து வாதாடுவது போன்ற செயல்கள் அல்ல நாம் எதிர்கொள்கிற போராட்டம். நம்மு டைய போராட்டம் பேய்களுக்கு எதிரானவை, வீழ்ந்துபோன தூதர்களின் பட்டாளத்துக்கு எதி ரானவை, தங்களுடைய பயங்கரமான ஆற்றலை அவிழ்த்துவிடுகிற தீய ஆவிகளுக்கு எதிரா னவை. நாம் அவற்றைக் காணமுடியாவிட்டாலும், நம்மைச் சூழ எப்பொழுதும் பொல்லாத தீய ஆவிகள் இருந்துகொண்டே இருக்கின்றன. ஒரு மெய்யான விசுவாசிக்குள்ளாக அசுத்த ஆவிகள் குடியிருக்க முடியாது என்பது உண்மையே. ஆனாலும் அந்த விசுவாசியை அவற்றால் துன் புறுத்தி அலைக்கழிக்க முடியும். மனக்கோளாறு உடைய நிலையில் ஒரு கிறிஸ்தவன் பேய் வணக்கத்தைப் பற்றிய பொருள் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது; அவன் பேய் களைப் பற்றிய பயத்தோடு தன் வாழ்க்கையை நடத்தவும் கூடாது. அவை கொண்டுவரும் கடுந் தாக்குதல்களை தேவனுடைய போர் ஆயுதங் களைக் கொண்டு உறுதியாக எதிர்த்து நிற்பதே அவன் செய்யவேண்டிய செயலாகும். வீழ்ந்து போன தேவதூதர்களைக் குறித்து, **துரைத்தனங் கள், அதிகாரங்கள்** என்றும், **இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள்** என்றும், **வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள்** என்றும் அப்போஸ்தலன் குறிப்பிடு கிறார். இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு களை விளக்கிக் கூறுவதற்குத் தேவையான ஞானம் நம்மிடத்தில் இல்லை; ஒருவேளை ஆவி களை ஆளுகை செய்யக் கூடிய அதிகாரங்களின் வெவ்வேறு படிநிலைகளை இது குறிக்கக் கூடும்: மனித எண்ணத்தின்படி குடியரசுத் தலைவர்கள், ஆளுநர்கள், நகரமன்றத் தலைவர்கள், நகர மன்ற உறுப்பினர்கள் போன்ற பதவிகளாக இவை இருக்கக் கூடும்.

**6:13** பவுல் இம்மடலை எழுதியபோது, இவ்வாறு போர்க்கவசத்தை முழுமையாக அணிந்த ஒரு போர்வீரனால் காவல் காக்கப்பட்டிருப்பார் என்றே தோன்றுகிறது. இயல்பான வாழ்க்கைக் கூறுகளி லிருந்து ஆவிக்குரிய பாடங்களைக் கண்ட பவுல் அவற்றைத் தன்னுடைய கருத்தைக் கூறப் பயன்படுத்துகிறார்; நாம் நம்முடைய வலது இடது பக்கங்களில் அச்சமூட்டுகிற எதிரிகளால் சூழப் பட்டிருக்கிறோம்; சண்டை வலுத்து மிகவும் கடுமையாக நடந்துகொண்டிருக்கும்போது அவற்றை **எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர் களாகும்படி,** நாம் **தேவனுடைய சர்வாயுதவர்க் கத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்**. மேலும் சண்டை முடிந்து போர்முகத்தின் புகையாவும் நம்மைவிட்டு விலகிச் சென்ற பிறகும் நாம் நின்று கொண்டிருக்கிறவர்களாகக் காணப்பட வேண் டும். எதிரியானவன் நம்மை நோக்கிப் பெருவெள் ளத்தைப் போல வருகின்ற வேளையைத் **தீங்கு நாள்** என்று பவுல் குறிப்பிடுகிறார் போலும். சாத்தானுடைய தாக்குதல்கள் அலைகளைப் போல முன்னோக்கி வருவதும் பின்னிட்டுச் செல் வதுமாகக் காணப்படும். நம்முடைய கர்த்தர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்ட பிறகு, பிசா சானவன் அவரைவிட்டுச் **சிலகாலம்** விலகிப் போனான் (லூக்கா 4:13).

**6:14** போர்க்கவசத்திலுள்ள ஆயுதங்களில் முதலாவது குறிப்பிடப்பட்டுள்ளது **சத்தியம்** என்னும்

வார்க்கச்சையாகும். தேவனுடைய வார்த்தை யாகிய **சத்தியத்தை** உறுதியாகப் பற்றிக்கொள் வதில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம், ஆனால் அந்தச் **சத்திய மானது** நம்மை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டியதும் அவசியமே. நாம் நம்முடைய அனுதின வாழ்க்கையில் சத்தியத்தைப் பயன் படுத்த வேண்டும். எல்லாவற்றையும் அந்தச் **சத்தியத்தைக்** கொண்டு சோதிக்கும்போது, போராட்டத்தில் நாம் வலிமைபெற்று பாதுகாப்பை யும் அடைவோம்.

இரண்டாவது ஆயுதம் **நீதியென்னும் மார்க்க வசமாகும்**. ஒவ்வொரு விசுவாசியும் தேவனு டைய நீதி என்னும் ஆடையை அணிந்தவராக இருக்கிறார் (2 கொரி. 5:21), ஆனாலும் அவர் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில், நேர்மை யையும் நீதியையும் வெளிப்படுத்திக்காட்ட வேண்டும். "ஒரு மனிதன் அனுபவபூர்வமான நீதி யால் அணிவிக்கப்பட்டவனாக இருப்பானென் றால், தாக்க இயலாத வலிமையை அவன் பெற்றி ருப்பான். குற்றம் சுமத்தப்படுகின்றபோது வார்த் தைகள் பாதுகாப்பைத் தருகிறதில்லை. ஆனால் நேர்மையான வாழ்க்கை அதைத் தருகிறது" என்று ஒருவர் கூறியிருக்கிறார். தேவனுக்கும் மனிதனுக்கும் எதிரான குற்றத்தில் நம்முடைய மனசாட்சி வெறுமையாக இருக்குமென்றால், நம்மீது தனது ஆயுதத்தை எறிவதற்குப் பிசாசி னிடத்தில் ஒன்றும் இருக்காது. சங்கீதம் 7:3-5 ஆகிய வசனங்களில் தாவீது நீதியென்னும் மார்க்கவசத்தை அணிந்தவனாகக் காணப்படு கிறான். கர்த்தராகிய இயேசுவோ அதனை எப் பொழுதும் அணிந்தவராகத் திகழ்கிறார் (ஏசாயா 59:17).

**6:15** போர்வீரன் **சமாதானத்தின் சுவிசேஷத் திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவனாகக்** காணப்பட வேண்டும். சமாதானத்தின் நற்செய்தியை அறி விக்கும்படியான ஆயத்தத்தோடு அவன் வெளியே செல்ல வேண்டும் என்னும் கருத்தை இது எடுத் துரைக்கிறது, ஆகவே எதிரியின் எல்லைக்குள் ளாகச் செல்லுகிற செயல் இங்கு சொல்லப்பட்டி ருக்கிறது. நாம் நம்முடைய கூடாரத்தில் இளைப் பாறுகிற தருணத்தில், பேராபத்தில் இருக் கிறோம். சமாதானத்தைக் கூறி, நற்காரியங் களைச் சுவிசேஷமாய் அறிவித்து மலைகளின் மேல் நடந்து வருகிற இரட்சகரின் அழகிய பாதங் களில் நம்முடைய பாதுகாப்பு விளங்கிவருகிறது (ஏசாயா 52:7; ரோமர் 10:15). "என் பாதங்கள் உமக் கென்று துரிதமாய் நடந்து அழகிய பாதங்களாகத் திகழப் பயன்படுத்துவீராக" என்று பிரான்சஸ் ரிட்லே ஹேவர்கல் கூறுகிறார்.

**6:16** மேலும் அந்தப் போர்வீரன், **பொல்லாங் கன் எய்கிற** அதிக வேகமான **அக்கினியாஸ் திரங்களைத்** தடுத்து நிறுத்தி, எவ்விதக் காயத் தையும் ஏற்படுத்தாமல் கீழேவிழும்படி செய்யக் கூடிய **விசுவாசமென்னும் கேடகத்தைப்** பிடித் துக்கொள்ள வேண்டும். கர்த்தரிடத்திலும் அவரு டைய வார்த்தையினிடத்திலும் கொண்டிருக்கிற உறுதியான நம்பிக்கையே இங்கு **விசுவாசம்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சோதனைகள் கொழுந்துவிட்டு எரிகிறபோது, சூழ்நிலைகள் எதிராகச் செயல்படுகிறபோது, சந்தேகங்கள் உள்ளத்தைத் தாக்குகிறபோது, பேரழிவுகள் ஏற்படுமென்று அச்சம் உண்டாகிறபோது **விசு வாசம்** மேல்நோக்கிப் பார்த்து, "நான் தேவனை விசுவாசிக்கிறேன்" என்று கூறுகிறது.

**6:17** தேவன் தருகிற **தலைச்சீரா இரட்சண்ய மாகும்** (ஏசாயா 59:17). போர் எவ்வளவு கடுமை யாக நடந்தாலும், கிறிஸ்தவன் இறுதி வெற்றி தனக்கு நிச்சயமாகக் கிடைக்கும் என்னும் உறுதி யோடு அச்சமின்றி இருக்கிறான். அவன் பின்வாங் காமலும், பணிந்துவிடாமலும் இருக்கும்படியான பாதுகாப்பை அவனுக்குத் தருவது இறுதிவெற்றி தனக்கே என்னும் உறுதியேயாகும். "தேவன் நம் முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமா யிருப்பவன் யார்?" (ரோமர் 8:31).

இறுதியாக, அந்தப் போர்வீரன் **தேவவசன மாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.** சாத்தானோடு எதிர்த்துப் போரிட்டபோது நம்முடைய கர்த்தர் இந்தப் **பட்ட யத்தைப்** பயன்படுத்திய நிகழ்ச்சி இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. அவர் மூன்றுமுறை தேவ வசனத்தை எடுத்துக் கூறினார் - ஏதோ மனதிற்கு வந்த வசனத்தை அவர் சொல்லவில்லை, அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றபடி தூய ஆவியானவர் தந்தருளின வசனத்தையே அவர் பயன்படுத்தினார் (லூக்கா 4:1-13). தேவ வசனம்[42] என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது முழு வேதமும் அல்ல, அந்தச் சூழ்நிலைக்குப் பொருத்தமான குறிப்பிட்ட வேத பகுதியே ஆகும்.

டேவிட் வாட்சன் விளக்குகிறார்:

> நமக்குத் தேவையான எல்லாப் பாதுகாப்பை யும் தேவன் தருகிறார். கர்த்தரோடு நாம் நடக்கிற

> நடையில், நம்முடைய வாழ்க்கை தேவனோடும் மற்றவர்களோடும் நேர்மையானதாக (நீதி) விளங்குகிறது, நாம் செல்கிற இடங்களிலெல்லாம் சமாதானத்தை நாடுகிறோம், பொல்லாங்கனிடத்திலிருந்து வருகிற அக்கினியாஸ்திரங்களை அவித்துப் போடத்தக்கதாக விசுவாசம் என்னும் கேடகத்தை நாம் உயர்த்திப் பிடிக்கிறோம். நம்முடைய நம்பிக்கையை அசைத்து நிலைகுலையச் செய்கிற அச்சம் மற்றும் சந்தேகம் ஆகியவற்றிலிருந்து நம்முடைய உள்ளங்கள் பாதுகாக்கப்படுகின்றன, பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தேவனுடைய வார்த்தையை ஆற்றல்மிக்க வகையிலே நாம் பயன்படுத்துகிறோம் என்னும் பற்பல வளையங்கள் போன்ற உண்மைகள் அடங்கியிருக்கின்றன. திரும்பத் திரும்ப தேவனுடைய வார்த்தை என்னும் பட்டயத்தினால் எதிரியை உருவக் குத்தினதாலேயே, கர்த்தராகிய இயேசு அவனை வெற்றிகொண்டார் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.[43]

**6:18** சர்வாயுதவர்க்கத்தின் ஓர் ஆயுதமாக **ஜெபம்** குறிப்பிடப்படவில்லை. ஜெபம் என்னும் சூழ்நிலையில்தான் போர்வீரன் வாழவேண்டும், மூச்சுவிடவேண்டும் என்று நாம் கூறுவோமானால், அதனுடைய முக்கியத்துவத்திற்கு அளவுக்கு மீறி மதிப்பு கொடுப்பதாக ஆகாது. இப்படிப்பட்ட ஆர்வத்தில்தான் அவன் தனது போர்க் கவசத்தை அணிந்து எதிரியை எதிர்கொள்ள வேண்டும். ஜெபம் தொடர்ந்து செய்யப்பட வேண்டும், சிற்சில சமயங்களில் மட்டுமே செய்யப்படுகிறதல்ல; அதை வழக்கமாகக் கொண்டிருக்க வேண்டுமேயொழிய ஒருமுறை செய்துவிட்டு நிறுத்திவிடுவதாக இருக்கக் கூடாது. அந்தப் போர் வீரன் இதற்கும் அதிகமாக, எல்லா வகையான **ஜெபங்களையும்** செய்ய வேண்டும்: வெளிப்படையானது, தனிப்பட்ட முறையில் செய்யப்படுவது; தீர்மானித்துச் செய்யப்படுவது, தன்னிச்சையாக வெளிப்படுவது; வேண்டுதல், பரிந்து பேசுதல்; அறிக்கை செய்தல், தன்னையே தாழ்த்துதல்; ஆராதிப்பது, நன்றிசெலுத்துதல்.

மேலும் **ஜெபம் ஆவியினாலே** செய்யப்பட வேண்டும், அதாவது, ஆவியினாலே ஏவப்பட்டதும் அவராலே வழிநடத்தப்பட்டதாகவும் விளங்க வேண்டும். சம்பிரதாய முறையில் செய்யப்படுகிற ஜெபங்கள் வெறுமனே மனப்பாடம் செய்து பொருளற்ற முறையில் ஒப்புவிப்பதாகக் காணப்படும் (அவற்றின் பொருளைக் குறித்து எவ்விதச் சிந்தனையும் அற்றவகையில் ஜெபிப்பது). நரகத்தின் சேனைகளுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற போரில் இப்படிப்பட்ட **ஜெபத்திற்கு** என்ன மதிப்பு இருக்கும்? ஜெபம் செய்வதில் விழிப்புடன் இருக்க வேண்டும்: **அதன் பொருட்டு விழித்திருங்கள்.** தூக்கக் கலக்கம், அலைபாய்கிற மனது, மற்ற செயல்களில் மூழ்கிப் போயிருத்தல் ஆகியவற்றிலிருந்து விடுபட நாம் விழிப்புள்ளவராக இருக்க வேண்டும். ஆவிக்குரிய ஆர்வம், விழிப்புணர்வு, ஒருமித்த கவனம் ஆகியவை **ஜெபத்திற்குத்** தேவையானவை ஆகும். மேலும் ஜெபத்தில் **மனவுறுதி** தேவை. நாம் தொடர்ந்து கேட்க வேண்டும், தேட வேண்டும், தட்ட வேண்டும் (லூக்கா 11:9). **சகல பரிசுத்தவான்களுக்காகவும் வேண்டுதல்கள்** ஏறெடுக்கப்படவேண்டும். அவர்களும் போரில் ஈடுபடுகிறார்கள், ஆகவே அவர்களுடைய உடன்போர்வீரர்களாகிய நாம் அவர்களை **ஜெபத்தில்** ஆதரிக்க வேண்டும்.

**6:19,20** பவுலின் தனிப்பட்ட தேவையைப் பற்றி திருவாளர் பிளேய்க்கி குறிப்பிடுகிறார்:

> மதகுருவுக்குரிய கருத்து இங்கு சிறிதும் இல்லையென்பதைக் கவனியுங்கள்! இது காறும் எபேசுப் பட்டணத்து விசுவாசிகள் அனைவருக்கும் தேவையான கிருபையின் பண்டசாலை பவுலினிடத்தில் நிறைந்திருந்தது, இப்பொழுது ஜீவனுள்ள பண்டசாலையில் இருந்து அவருக்குத் தேவையான கிருபை அருளப்படும் வண்ணம் அவர்களுடைய ஜெபம் தேவையாயிருக்கிறது.[44]

சிறைச்சாலையிலிருந்து பவுல் இம்மடலை எழுதுகிறார். ஆனாலும் அவர் அங்கிருந்து விரைவாக விடுதலை பெறவேண்டும் என்பதற்காக ஜெபிக்கும்படி கேட்கவில்லை. மாறாக, அவர் **சுவிசேஷத்தின் இரகசியத்தை தைரியமாய் அறிவிக்கும்படி** அவருடைய **வாய் திறக்கவும் வாக்கு** அருளப்படவும் வேண்டுமென்று அவர்கள் ஜெபிக்க வேண்டும், இதுவே அவருடைய விண்ணப்பம். எபேசியர் மடலில் இரகசியம் என்னும் சொல்லை இங்குதான் பவுல் கடைசியாகப் பயன்படுத்துகிறார். அவர் கைதியாக இருப்பதற்கு அதுவே காரணம் என்று இங்கு குறிப்பிடுகிறார். ஆனாலும் அதற்காக அவர் வருத்தம் அடையவில்லை. அதற்கு முற்றிலும் மாறான நிலையையே காண்கிறோம்! அவர் இன்னும் அதிகமாக அந்தச் செய்தியைப் பிரகடனப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்.

பொதுவாக வெளிநாட்டிலிருந்து வருகிற தூதர்கள் கைதுசெய்யப்படுவதிலிருந்தும், சிறையில் அடைக்கப்படுவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறார்கள். ஆனால் மனிதர்கள் எதை வேண்டுமானாலும் பொறுத்துக்கொள்வார்கள், சுவிசேஷத்தை அவ்வாறு பொறுத்துக்கொள்வதில்லை. வேறு எந்தப் பொருளும் இவ்விதமான எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டிவிடுகிறதில்லை, விரோதத்தையோ சந்தேகத்தையோ தோற்றுவிப்பதுமில்லை, இத்தகைய துன்புறுத்தலையும் உண்டாக்குவதுமில்லை. ஆகவேதான் கிறிஸ்துவின் பிரதிநிதி **சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாக** இருக்கிறார். இதனை இயாடி என்பார் மிக அழகாக விவரிக்கிறார்:

> மிகப்பெரிய வல்லரசு நாட்டிலிருந்து வருகை புரிந்த தூதர், ஒப்பற்ற மேன்மையும் மிக அவசரமானதுமான செய்தியை ஏந்திவந்தவர், அவரது நற்சான்றுகள் தவறற்ற வகையில் நம்பகத்தன்மை உடையவை, ஆனாலும் அந்தத் தூதர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.[45]

விசுவாசிக்கிற யூதர்களும் விசுவாசிக்கிற புறவினத்தாரும் இப்பொழுது ஒரு புதிய சமுதாயமாக உருவாக்கப்பட்டிருக்கிறார்கள், நன்மையான சிலாக்கியங்களைச் சரிசமமாகப் பங்கிட்டுக்கொள்கிறார்கள், கிறிஸ்துவைத் தங்களுடைய தலையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று பவுல் பிரகடனப்படுத்திய செய்தியின் குறிப்பிட்ட பாகமே குறுகிய மனப்பான்மை கொண்ட சமயவாதிகளின் பகைமையைத் தூண்டிவிட்டது.

### ஊ. பவுலின் தனிப்பட்ட வாழ்த்துகள் (6:21-24)

**6:21,22** பவுல் எவ்வாறு இருக்கிறார் என்பதை எபேசுப் பட்டணத்து விசுவாசிகள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவர் **தீகிக்குவை** ரோமாபுரியிலிருந்து அவர்களிடமாய் அனுப்புகிறார். அவர் **தீகிக்குவைப் பிரியமான சகோதரன்** என்றும் **கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரன்** என்றும் பாராட்டுகிறார். புதிய ஏற்பாட்டில் இந்த மனிதனைக் குறித்து ஐந்து குறிப்புகளே உள்ளன. கிரேக்கு நாட்டிலிருந்து ஆசியாவிற்குச் சென்றபோது பவுலோடு சென்றவர்களில் இவரும் ஒருவர் (அப். 20:4). கொலோசெ பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனுடைய செய்தியைக் கொண்டு போனவரும் இவரே (கொலோ. 4:7). எபேசியரிடமாய் அனுப்பப்பட்டவரும் இவரே (6:21 மற்றும் 2 தீமோ. 4:12 ஆகிய வசனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும்). ஒருவேளை கிரேத்தா தீவிலிருந்த தீத்து விடமாய் இவர் அனுப்பப்பட்டிருக்கக் கூடும் (தீத்து 3:12). இவருடைய இரட்டத்தனையான தற்போதைய ஊழியம், சிறைச்சாலையில் பவுல் எவ்வாறு இருக்கிறார் என்பதைப் பரிசுத்தவான்களுக்கு அறிவிக்க வேண்டியது மற்றும் அவர்களுக்கு ஏற்படக்கூடிய தேவையற்ற பயத்தை அகற்றி அவர்களுடைய **இருதயங்களுக்கு** உற்சாகமளிப்பது ஆகியவையே.

**6:23** கடைசி வசனங்களில், பவுலின் தனிச் சிறப்பு வாய்ந்த வாழ்த்துதலை நாம் பெற்றிருக்கிறோம் - சமாதானமும் கிருபையும். இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து தன்னுடைய வாசகர்களுக்கு அவர் ஒட்டுமொத்த வாழ்த்துதலையும் தெரிவிக்கிறார். மேலும் யூதர்கள் மற்றும் புறவினத்தார் ஆகியோருடைய இவ்விரண்டு வாழ்த்துச் சொற்களையும் ஒன்று சேர்ப்பதால், அவர் மறைமுகமாக நற்செய்தியின் இரகசியத்தை இறுதியாக ஒருமுறைகூட குறிப்பிடுகிறார் போலும். யூதர்களும் புறவினத்தாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே அந்த இரகசியம். இந்த வசனத்தில் தன்னுடைய வாசகர்கள் **சமாதானத்தையும் விசுவாசத்தோடு கூடிய அன்பையும்** பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அவர்களுடைய ஒவ்வொரு வாழ்க்கைச் சூழ்நிலையிலும் சமாதானமானது அவர்களுடைய இருதயங்களைக் காவற்காக்கும் கோட்டையாகத் திகழும். தேவனைத் தொழுதுகொள்வதற்கும் ஒருவரோடொருவர் சேர்ந்து பணிபுரிகிறதற்கும் தேவையான ஆற்றலை **அன்பானது** தந்து, அவர்களைப் பலப்படுத்தும். அவர்களுடைய கிறிஸ்தவப் போராட்டத்திற்குத் தேவையான வலிமையை **விசுவாசம்** கொடுக்கும். இவை முதலான எல்லா ஆசிர்வாதங்களும் **பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும்** உண்டாகின்றன. அவர்கள் சமமானவர்களாக இல்லாதிருந்தால் இந்த அனுபவம் நிறைவேற முடியாது.

**6:24** இறுதியாக, அழிந்துபோகாத உண்மையான அன்புடன் **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறஸ்துவினிடத்தில் அன்புகூருகிறவர்கள் கிருபையைப்** பெற வேண்டும் என்று அப்போஸ்தலன் வாழ்த்துகிறார். மெய்யான கிறிஸ்தவ அன்பு நிலைத்த தன்மையை உடையதாயிருக்கிறது: அதனுடைய சுடரொளி சில வேளைகளில் படபடவென்று அடித்து ஒடுங்கிச் சிறியதாகிப் போகலாம், ஆனால் அது அணைந்து போகாது.

ரோமச் சிறைச்சாலை உன்னதமான கைதியை இழந்து வெகுகாலம் கடந்து போயிற்று. போற்று தற்குரிய அப்போஸ்தலன் தன்னுடைய பரிசுப் பொருளை அடையும்படி விண்ணகத்திற்குச் சென்றுவிட்டார், அங்கே தனது அன்பரின் முகத் தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய மடலோ இன்னமும் நம்மிடத்தில் இருக்கிறது. அவருடைய இருதயத்திலிருந்தும் அவருடைய எழுதுகோலிலிருந்தும் வந்தபோது அது எத்தகைய புதுப்பொலிவோடும் வாழ் வோடும் இருந்ததோ அதுபோலவே இன்னமும் இருக்கிறது. இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் அதனுடைய அறிவுரை வார்த்தைகளின் மூல மாகவும், ஆவியானவரின் ஏவுதலோடும், கடிந்து ணர்த்தி, புத்திபுகட்டி தொடர்ந்து பேசிவருகிறது.

எபேசியருக்கு நாம் எழுதியிருக்கிற விளக்க வுரையை முடிக்கும்போது திருவாளர் H. W. வெப்-பெப்லோ என்பவரின் சொற்களோடு நாம் கொண் டுள்ள இணக்கமுள்ள மனநிலையைக் காண் கிறோம்:

> தேவனுடைய திருமறையில் இத்தகைய கம்பீர மானதும் மிகச்சிறந்ததுமான படைப்பு வேறில்லை: ஆகவே, இம்மடலுக்கு விளக்க மளிப்பதற்கென்று நமக்கு கொடுக்கப்பட்ட இடத்தை, எந்த மனிதனாலும், தேவனிடத்தி லிருந்து செய்தியை ஏந்திவருபவர் என்ற நிலை யிலும்கூட, சரியான முறையில் பயன்படுத்தி யிருப்பார் என்று கூறவியலாது! நம்முடைய தேவனுக்குப் புகழ்ச்சியை உண்டாக்கத்தக்க தாகவும், பரிசுத்தமாய் வாழ்வதற்கான பாடங் களையும் இதுவரை இல்லாத அளவிற்கு உன்னதமானதும், உயர்வானதுமான வாழ்வை வாழ்வதற்கான பாடங்களையும் நாடியவர் களாகவும் நாம் அதனிடமாய் நெருங்கிச் சேரமுடியுமென்று நான் நம்பு கிறேன்.[46]

## அடிக்குறிப்புகள் - End Notes

1 (Intro) William G. Moorehead,*Outline Studies in Acts and the Epistles,* p. 214.

2 (1:3) Lewis Sperry Chafer, *The Ephesian Letter,* p. 74.

3 (Excursus) W. G. Blaikie, *"Ephesians,"Pulpit Commentary, XLVI:3.*

4 (1:10) John G. Bellet, *Brief Notes on the Epistle to the Ephesians,* pp.6,7.

5 (1:17) R. W. Dale, *The Epistle to the Ephesians; Its Doctrines and Ethics*, p. 133.

6 (1:18) மிகப் பழைமையான பிரதியிலும், இன்றும் நிலைத்திருக்கும் பெரும்பாலான பிரதி களிலும் "அறியும்படிக்கு" என்ற சொல்லுக்குப் பதிலாக இருதயங்கள் (எழுத்தின்படி kardias – ஒருமை) என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டுள் ளது. ஆகவே அடிக்குறிப்பில் காணப்படும் சொல் ஐயத்திற்கிடமற்றபடி சரியானதேயாகும்.

7 (1:19) F. B. Meyer, *Key Words of the Inner Life,* p.92.

8 (1:19) Chafer, *Ephesian Letter,* p. 57.

9 (1:20) Meyer, *Key words,* p.93.

10 (2:3) Ibid, p.140.

11 (2:4) John Eadie, *Commentary on the Epistle to the Ephesians,* p.141.

12 (2:5) A. T. Pierson, *"The Work of Christ for the Believer," The Ministry of Keswick*, First Series, pp.118,119.

13 (2:7) நாம் பரலோகத்தில் சர்வஞானம் உடையவர்களாக இருப்போம் என்று மெய்ப்பிக்க **1** கொரிந் தியர் **13:12** மற்றும் **1** யோவான் **3:2** ஆகிய வசனங்கள் சில வேளைகளில் பயன்படுத் தப்படுகின்றன. ஆனாலும் முதலாவது வசனம் ஒருவரையொருவர் அறிந்திருப்பதைப் பற்றியே பேசுகிறது, இரண்டாவது வசனம் நன்னெறி ஒழுக்கம் மற்றும் சரீர நிலை ஆகியவற்றில் கிறிஸ்துவைப் போல இருக்கும் நிலையைப் பற்றியே பேசுகிறது.

14 (2:18) Eadie, *Ephesians,* p.187.

15 (2:21) Blaikie, *"Ephesians," XLVI: 104*.

16 (3:1) Ruth Paxson, *The Wealth, Walk and Warfare of the Christian,* p. 57.

17 (3:4) Blaikie, *"Ephesians," XLVI:104.*

18 (3:8) Ibid, XLVI:105,106.

19 (3:11) உக்கிராண ஊழியம் அல்லது காலப் பாகுபாடு என்னும் சொல்லுக்கு இணையான கிரேக்க மொழிச் சொல், முக்கியமாக தடித்த எழுத்துகளில் ஐக்கியம் என்னும் சொல்லுக்கு இணையான கிரேக்க மொழிச் சொல்லைப் போலவே தோற்றமளிக்கும் (OIKONOMIA மற்றும் KOINOMIA ஆகிய சொற்களை ஒப்பிட்டுப்பாருங்கள்). எனவே அடிக்குறிப்பில் காணப்படும் சொல்லே சரியானது; பாரம்பரியமாக வழக்கில் இருக்கும் ஐக்கியம் என்னும் சொல்லுக்கு அதிக ஆதரவு இல்லை.

20 (3:16) Jamieson, Fausset, and Brown, *Commentary Practical and Explanatory on the Whole Bible*, VI:408.

21 (3:17) W. Graham Scroggie, *"Paul's Prison Prayers,"* the Ministry of Keswick, Second Series, p. 49.

22 (3:18) Meyer, *Key words*, pp. 53,54.

23 (3:21) George Williams, *The Student's Commentary on the Holy Scriptures*, p. 925.

24 (4:2) Walter C. Wright, *Ephesians*, p. 85.

25 (4:10) F. W. Grant, *"Ephesians,"* The Numerical Bible, Acts to 2 Corinthians, VI:341.

26 (4:13) இரண்டு வேலைகள், பதவிகள் அல்லது பண்புகள் ஆகியவற்றின் பெயர்ச்சொற்கள் ஒன்றாக kai (and) என்னும் சொல்லால் இணைக்கப்படும்போது, மேலும் அவற்றில் முதற் சொல் மட்டும் சுட்டிடைச் சொல்லைக் கொண்டிருக்குமானால் "கிரான்வில்லே ஸ்சார்ப் விதியின்" அடிப்படையில், அவ்விரண்டு சொற்களும் ஒரு நபரையே குறிப்பிடும். இத்தகைய சொற்களின் அமைப்பிற்கு "தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து" என்னும் சொற்றொடர் (2 பேதுரு 1:1) நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துகையில் KJV மொழி பெயர்ப்பாளர்களைக் காட்டிலும் தாராளக்கொள்கையைப் பின்பற்றிய RSV மொழிபெயர்ப்பாளர்கள் கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை ஒப்புக்கொள்ளும் படி கிரேக்க மொழி இலக்கணத்தின் அடிப்படையில் வற்புறுத்தப்பட்டார்கள். (கிரேக்க மொழி இலக்கண விதி 18 –ஆம் நூற்றாண்டின் இறுதி வரை இவ்வளவு தெளிவாக வரையறுத்துக் கூறப்படவில்லை). எபேசியர் 4:13 –இல் காண்கிறபடி இரண்டு பெயர்ச்சொற்களிலும் இந்த அமைப்பு மிக நெருங்கிய வகையில் காணப்பட்டாலும், பன்மைச் சொல்லில் இந்த விதி எப்பொழுதும் கடைப்பிடிக்கப்படுகிறதில்லை ("வேதபாரகர் மற்றும் பரிசேயர்" போன்ற சொற்றொடர்களை ஒப்பிட்டுப் பாருங்கள்).

27 (4:12) Vance Havner, *Why Not Just Be Christians*, p. 63.

28 (4:15) Blaikie, *"Ephesians,"* XLVI:151.

29 (4:19) Wright, *Ephesians*, p.100.

30 (4:21) Blaikie, *"Ephesians,"* XLVI:151.

31 (4:24) Grant, *"Ephesians,"* p. 344.

32 (4:32) R. C. H. Lenski, *The Interpretation of St. Paul's Epistle to the Galatians, to the Ephesians, and to the Philippians*, p. 588.

33 (5:2) Meyer, *The Heavenlies,* p. 25.

34 (5:9) The NU text reads light (photos) for Spirit (Pneumatos).

35 (5:13) Blaikie, *"Ephesians,"* XLVI:209.

36 (5:13) *Bishop Ellicott and Dean Alford preferred this translation*.

37 (5:21) Charles R. Erdman, *Ephesians,* p. 106.

38 (5:27) Pierson, *"The Work of Christ,"* p. 18.

39 (5:27) Grant, *"Ephesians,"* VI:350.

40 (6:4) Quoted by William W. Orr in *Bible Hints on Rearing Children,* pp.19.

41 (6:6) Erdman, *Ephesians,* pp. 119.

42 (6:17) பரவலாக அறியப்பட்டுள்ள logos என்னும் சொல்லைப் பவுல் இங்கு பயன்படுத்தவில்லை; ஆனால் rhema (rhetoric என்னும் ஆங்கிலச் சொல்லுடன் தொடர்புடையது), அதாவது

திட்டவட்டமாய்க் கூறப்பட்ட சொல் அல்லது பேச்சு என்னும் பொருளுடைய சொல்லையே அவர் பயன்படுத்தியிருக்கிறார். குறிப்பிட்ட தேவைக் காக தேவனிடத்திலிருந்து வந்த குறிப்பிட்ட "வார்த்தையே" இது. logos மற்றும் rhema ஆகிய சொற்கள் ஏறத்தாழ ஒரே பொருளை உடையவை.

43 (6:17) David Watson, *Discipleship,* p. 183.

44 (6:19) Blaikie,Ephesians, *"Ephesians,"* XLVI:260.

45 (6:20) Eadie, *Ephesians,* p. 480.

46 (6:24) H. W. Webb-Peploe, *"Grace and Peace in Four Pauline Epistles,"* The Ministry of Keswick, First Series, p. 69.

**Bibliography**

1. Bellet, John G. *Brief Notes on the Epistle to the Ephesians*. London: G. Morrish, n.d.

2. Blaikie, W. G.. *"Ephesians," Pulpit Commentary,* Vol.XLVI. New York: Funk&Wagnalls, n.d.

3. Chafer, Lewis Sperry. *The Ephesian Letter*. Findlay, Ohio: Dunham Publishing Company, 1935.

4. Dale, R. W. *The Epistle to the Ephesians: Its Doctrine and Ethics.* London:Hodder and Stoughton,1893.

5. Eadie, John. *Commentary on the Epistle to the Ephesians.* Grand Rapids: Zondervan Publishing House, 1957.

6. Erdman, Charles R. *The Epistle of Paul to the Ephesians.* Philadelphia: Westminster Press, 1931.

7. Flint, V. Paul. *Epistle to the Ephesians: To the Praise of His Glory.* Oak Park, IL:Emmaus Bible School, n.d.

8. Meyer, Frederick Brotherton. *Key Words of the Inner Life: Studies in the Epistle to the Ephesians.* Fleming H. Revell Company, 1893.

9. --------. *The Heavenlies.* Westchester, IL: Good News Publishers, n.d.

10. Paxson, Ruth. *The Wealth, Walk and Warfare of the Christian.* New York: Fleming H. Revell Co.,1939.

11. Wright, Walter C. *Ephesians.* Chicago: Moody Press, 1954.

அப்போஸ்தலனாகிய பவுல்

# பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

## முன்னுரை

''கிருபை என்னும் மேலுறையால் கட்டப்பட்டு, கிருபையை வெளிப்படுத்தும் பண்பைத் தன்னகத்தே கொண்ட சிறு நூல்.'' – J. H. ஜோவெட்

### 1. வேத நூல் தொகுப்பில் தனிச்சிறப்பு மிக்க இடம்

ஒரு பேரூரில் ஒரு கிறிஸ்தவச் சமயப்பிரிவின் "முதல் சபை" தொடங்கப்பட்டால் அதனுடைய ஆதரவாளர்களுடைய கண்களில் அந்தச் சபை சிறப்பான மதிப்பைப் பெற்றிருக்கும். அவ்வாறு இருக்குமிடத்து, கிறிஸ்தவ வரலாற்றில் சமயப் பிரிவுகள் தோன்றுவதற்கு முன்னர், ஒரு குறிப் பிட்ட நகரத்தில் அல்ல, ஐரோப்பா பெருநிலப் பகுதி யிலேயே முதலாவது தொடங்கப்பட்ட சபை எவ் வளவு முக்கியத்துவம் பெற்றதாக இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்! அத்த கைய மேன்மைகள் பெற்ற சபையே, முற்காலத்து மக்கெதோனியா நாட்டில் (கிரேக்கு நாட்டின் வட பகுதி), பிலிப்பி நகரத்தில் கூடிவந்த சபை. "மக்கெ தோனியா அழைப்பை" ஏற்றுக்கொண்ட பவுல், தனது நற்செய்திப் பயணத்தைக் கிழக்கு நோக் கித் தொடராமல், மேற்கு திசையில் திரும்பி ரோமப் பேரரசின் பல எல்லைகளில் திருப்பணி ஆற்றியமை குறித்து மேலைநாட்டுக் கிறிஸ்தவர்கள் எவ்வள வாகக் களிகூர வேண்டும்! (கிறிஸ்தவர்கள் அல் லாதோரும், தாங்கள் அனுபவிக்கிற நற்பயன்கள் கிறிஸ்தவத்தினால் விளைந்த துணைப்பயன்கள் என்பதை அறிவார்களானால், அவர்களும் அதன் நிமித்தம் களிகூர வேண்டியவர்களாக இருக் கிறார்கள்.) மேலும் நற்செய்தியானது ஐரோப்பா வில் வேரூன்றி நிலைத்திராவிடில், இன்றைய நாட்களில் நடப்பதற்கு எதிர்மாறாக, ஆசியா பெரு நிலப்பகுதியிலிருந்து திருப்பணி ஊழியர்களை ஐரோப்பாவிற்கும் வடஅமெரிக்காவிற்கும் அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

பிலிப்பி சபை தாராளமாய்க் கொடுக்கக்கூடிய பண்பு பெற்றிருந்தது; அவ்வப்போது அந்தச் சபை பவுலுக்குப் பணத்தை அனுப்பி அவரை ஆதரித் தது. மனித எண்ணத்தில் சொல்லப்போனால், "உங் களுக்கு எனது நன்றி" என்னும் மடலை அப்போஸ் தலன் எழுதுவதற்கு இதுவே காரணமாயிற்று.

ஆயின் பிலிப்பியர் மடல் இதனினும் மிகமிக மேலானது. உண்மையாகவே இம்மடல் சந்தோ ஷத்தின் மடலாகும். இதன் நான்கு அதிகாரங் களில் "சந்தோஷம்"என்னும் சொல் பன்னிரண்டு இடங்களுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டுள் ளது. இன்பமான நேரங்களிலும், இக்கட்டான நேரங் களிலும் எவ்வாறு சந்தோஷமாயிருக்க முடியும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார் (4:11). மேலும், இந்த "மகிழ்ச்சியின் மடலில்" வாத எதிர்வாதத் தர்க்கமோ, கடிந்துணர்த்தும் எதிர்ப்புரைகளோ இடம்பெறவில்லை.

கிறிஸ்தவர்கள் மகிழ்ந்திருப்பதற்கான முதன் மையான காரணம், தேவனுடைய குமாரன் இவ் வுலகிற்கு மனிதராக வருவதற்கு, அதுவும் ஓர் அடிமையாக வர விருப்பம் கொண்டதே ஆகும்! அவர் நோய்களைக் குணப்படுத்துவதோடும், அறிவுரை வழங்குவதோடும் நிறுத்திக் கொள்ள வில்லை. அவர் மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் சென்றார். இந்தப் பேருண்மையை, பிலிப்பியர் 2:5-11 ஆகிய வசனங் கள் ஓர் அழகிய பகுதியாக வரைந்து தந்துள்ளது. இந்தப் பகுதி கிறிஸ்தவத்தின் தொடக்க காலத் தில் வழங்கிவந்த கீர்த்தனை என்றும், அத னையே பவுல் எடுத்தாண்டுள்ளார் என்றும் பலர் கருதுகின்றனர். ஒருவேளை அந்தக் கீர்த்தனை யைப் பவுலே எழுதியிருக்கவும் கூடும். மேலும் தாழ்மையின் மூலமாக ஒருமைப்பாட்டைக் கற்பிக் கும்படி இப்பகுதி இம்மடலில் இடம்பெற்றுள்ளது. புதிய ஏற்பாட்டில், கோட்பாடு கடமையினின்று ஒருக்காலும் வேறுபிரிக்கப்படவில்லை. தற்காலத் தில் சபை மக்கள், இரண்டையும் வேறு பிரித்துக் காண்பது வருத்தத்திற்குரிய விளைவுகளையே உண்டு பண்ணுகிறது.

மேலும், பிலிப்பியருக்கு எழுதப்பட்ட இம்மடல், தேவனுடைய திருமறை முழுவதிலும் மிகவும் மனமகிழ்ச்சி ஊட்டக்கூடியதும், கவர்ச்சிமிக்கதும் ஆகும்.

## 2. நூலாசிரியர்

பிலிப்பியர் மடல் பவுலால் எழுதப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை என்று பெரும்பாலான அறிஞர்கள் கருதுகின்ற வேளையில், அதனை மேலும் உறுதிசெய்யும் பொருட்டு நாம் சான்று களை அளிக்கிறோம். இரண்டு மடல்கள் ஒன்று சேர்க்கப்பட்டிருப்பதற்கான சுவடுகளைக் காண் பதாகச் சில அறிஞர்கள் எண்ணுகிறார்கள், அல் லது, குறைந்தது அடிமை வருணனைப் பகுதி யேனும் (2:5-11) இடைச்செருகலாக இருக்கும் என்பது அன்னாருடைய கருத்து. இந்தக் கருத்து களுக்குச் சான்றாகக் கையெழுத்துப் பிரதிகள் எதுவும் இல்லை.

புறச்சான்றுகள் மிகவும் வலிமைகொண்டவை. தொடக்க காலத்திலே, இம்மடல் பவுல் எழுதியது என்று அவ்வப்போது குறிப்பிட்டு, இதிலிருந்து மேற்கோள்களை எடுத்துப் பயன்படுத்தியவர்கள் பட்டியலில் இக்னேஷியஸ், ரோமாபுரிக் கிளமண்ட், பாலிகார்ப், ஐரேனியஸ், அலெக்சாண்ட்ரியா கிள மண்ட், தெர்த்தூலியன் ஆகியோர் இடம் பெற் றுள்ளார்கள். மார்சியன் மற்றும் முரடோரியன் ஆகிய இரண்டு தொகுப்புகளிலும், இம்மடல் பவுல் எழுதியது என்னும் கருத்தோடு இடம் பெற்றுள்ளது.

முதல் அதிகாரம் முதல் வசனத்தில் பவுலின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இம்மடல் முழுவதும் மொழிநடையிலும், சொல் லாட்சியிலும் பவுலின் தொனி ஒலித்துக் கொண்டி ருக்கிறது. இம்மடல் பவுலால் எழுதப்பட்டதல்ல என்பதற்கான வாதம், மடலின் முதல் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கண்காணிகள் உதவிக் காரர்கள் என்னும் பெயர்கள், பவுல் வாழ்ந்த நாட்களுக்குப் பின்னரே இது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன என்பது போன்ற சிறு விஷயங்களைச் சார்ந்திருக்கிறது. முதல் நூற்றாண்டிற்குப் பின்னர் பிஷப்ஸ் (bishops) என்னும் சொல்லுக்குக் கொடுக்கப்பட்ட பொருளை அதற்குள் புகுத்திப் படித்தோமானால் மேலே சொல்லப்பட்டுள்ள வாதம் சரியாய் இருக் கும். மேய்ப்பர்கள் திருமடல்களிலும், அப்போஸ் தலருடைய நடபடிகள் 20:28 -லும் மூப்பர்கள் என் னும் சொல்லுக்கு இணையாகவே பிஷப்ஸ் என்னும் சொல்லைப் பவுல் பயன்படுத்தியிருக்கிறார். (கிரேக்கு episkopoi - மேற்பார்வையாளர்கள் அல்லது கண்காணிகள் என்னும் வேலையைக் குறிக்கும் சொல்லாகும் - தமிழில் கண்காணிகள் என்னும் சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது). மேலும் இம்மடல் ஓர் உள்ளூர் சபைக்கு எழுதப்பட்டி ருந்தபோதிலும், அந்தக் கூட்டத்தில் கண்காணி கள் பலராக இருந்ததைக் கவனிக்க வேண்டும்.

அகச்சான்றுகளை மிக அழகாகச் சுருங்கக் கூறியுள்ளார் திருவாளர் H. A. A. கென்னடி

> பவுல் எழுதிய மடல்களில் வேறு எந்த மடலும், பவுலால் எழுதப்பட்டதுதான் என்பதற்கான ஆதாரத்தை, இம்மடல் போன்று முற்றுமுடியப் பெற்றதில்லை. இங்கே சூதுவாது இல்லை, உணர்வுகளின் மென்னயத்தைக் காண் கிறோம், முனைந்து ஈடுபடச் செய்யும்படியான ஏவுதலின்றி இருதயம் வெளிப்படையாகப் பொங்கி வழிகிறதையும் இங்கு நாம் காண் கிறோம்.[1]

## 3. எழுதப்பட்ட காலம்

எபேசியர், கொலோசெயர், பிலேமோன் ஆகிய மடல்களைப் போன்று பிலிப்பியர் மடலும் சிறைச் சாலையிலிருந்து எழுதப்பட்டதாகும். ஆகவே இவையாவும் "சிறைச்சாலை மடல்கள்" அல்லது "சிறையிருப்பு மடல்கள்" என்னும் வகையைச் சேர்ந்தவை. ஆனால் மற்ற மூன்று மடல்களும் பெரும்பாலும் ஒரே காலத்தில் எழுதப்பட்டு, ஒரே காலத்தில் அனுப்பப்பட்டவை (ஏறத்தாழ கி. பி. 60) என்று உறுதிசெய்யப்பட்டிருந்த போதிலும், பிலிப்பியர் மடல் நிச்சயமாகச் சிறிது காலத்திற் குப் பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும். மார்சியன் என்பார், பவுல் இந்த மடலை ரோமாபுரியில் இருந்து எழுதியதாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். 1:13; 4:22 ஆகிய வசனங்களுக்கு இக்கருத்து மிகச்சரியாகப் பொருந்துகிறது. இந்த வசனங் கள், ரோமாபுரியிலிருந்து இம்மடல் அனுப்பப்பட் டது என்பதைக் குறிப்பாய்த் தெரிவிக்கின்றன. ரோமாபுரியில் இரண்டாண்டுக் காலம் பவுல் கைதி யாக இருந்தார். அந்த நாட்களின் இறுதியில் இது எழுதப்பட்டது என்பதற்கான குறிப்பை இம்மடலி லேயே காணமுடியும். எடுத்துக்காட்டாக, அந்த நிலையான பட்டணத்திற்கு பவுல் வருகைபுரிந்து, அங்கு நற்செய்தியைப் பிரசங்கிக்கச் சிலகாலம் சென்றிருக்கும் என்பதை 1:12-18 ஆகிய வசனங் கள் தெரிவிக்கின்றன. மேலும் பவுல் மேல் தொட ரப்பட்ட வழக்கு (பெரும்பாலும் அவருக்குச் சாதக மாக) முடிவுசெய்யப்படும், அவர் விடுதலையடை வார் என்னும் குறிப்பு 1:12, 13, 19, 23-26 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றன.

இந்த உண்மைகளையும், மடல்களை எழுது வதற்குச் செலவிட்ட காலத்தையும் சந்திப்பு

களுக்கான காலத்தையும், இந்த மடலில் குறிப் பாய்ச் சொல்லப்பட்டுள்ளபடி பணம் அனுப்புவதற் கான கால இடைவெளிகளையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது இந்த மடல் கி. பி. 61 -இல் எழுதப் பட்டது என முடிவு செய்யலாம்.

## 4. பின்னணியும் கருப்பொருளும்

அப்போஸ்தலனாகிய பவுல் தனது திருப்பணி ஊழியத்தின் இரண்டாவது பயணத்தின்போது துரோவா பட்டணத்திற்கு வருகை புரிந்த நாள், கிறிஸ்தவத் திருப்பணி ஊழியத்தில் பெருஞ் சிறப்புவாய்ந்த நாளாகும். துரோவா பட்டணம் ஆசியா மைனர், நிலப் பகுதியின் வடமேற்குக் கடற் கரையில் அமைந்திருந்த நகரமாகும், ஏஜியன் கடலின் மறுபுறம் கிரேக்க நாடாகும். ஓர் இரவில், மக்கெதோனியா தேசத்து மனிதன் ஒருவன் அப் போஸ்தலனுக்குத் தரிசனமாகி, "நீர் மக்கெ தோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று வேண்டினான் (அப். 16:9). உடனடியாக, பவுல், தீமோத்தேயு, லூக்கா மற்றும் சீலா ஆகியோருடன் மக்கெதோனியா செல்ல ஆயத்தப்பட்டார். முதன்முதலாக அவர் கள் ஐரோப்பா பெரு நிலப்பகுதியில் நெயாப் போலி என்னும் இடத்தில் கால்வைத்தார்கள், பின்னர் அங்கிருந்து உள்நாட்டுப் பகுதியில் அமைந்திருந்த பிலிப்பி பட்டணத்திற்குப் பயணம் மேற்கொண்டார்கள். அந்த நாட்களில் பிலிப்பி பட்டணம் ரோமக் குடியிருப்பாக இருந்தது, ரோம அதிகாரிகளே அதனை ஆளுகை செய்தார்கள், அங்கு வாழ்ந்த மக்கள் ரோமக் குடிமக்களுக் குரிய அனைத்து உரிமைகளையும் சலுகை களையும் பெற்றிருந்தார்கள்.

ஓய்வுநாளிலே நற்செய்திப் பணியாளர்கள் ஜெபம் பண்ணுவதற்காக வழக்கமாகக் கூடிவந்த ஆற்றுப்படுகைக்குச் சென்றார்கள் (அப். 16:13). அவர்களில் ஒரு பெண் தியாத்தீரா ஊராளும், இரத்தாம்பரம் விற்றுவந்தவளுமான லீதியாள். அவள் நற்செய்தியை ஏற்றுக்கொண்டபோது, அவளே ஐரோப்பா பெருநிலப்பகுதியில் கிறிஸ்த வளாக மனமாற்றம் பெற்ற முதல் நபர் என்று அறியப்பட்டாள்.

ஆனால் பவுல் பிலிப்பி பட்டணத்தில் தங்கி யிருந்த காலம் முழுவதும் அமைதியாக இருக்க வில்லை. அங்கு குறிசொல்ல ஏவுகிற ஆவி பிடித்த இளம் பெண் (பின் நடக்கவிருக்கும் நிகழ்ச்சி களை முன்னரே சொல்லுதல்) கர்த்தருடைய ஊழியர்களைக் கண்டு, சிலநாட்கள் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து, "இந்த மனிதர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள்" என்று சத்தமிட்டாள் (அப். 16:17). தீய ஆவியினால் பிடிக்கப்பட்ட ஒருத்தி யின் சாட்சியை ஏற்க மறுத்தவராக, அப்போஸ் தலன் அந்தத் தீய ஆவியை அவளை விட்டு வெளி யேறும்படி அதட்டினார். அந்தப் பெண் குறிசொல்லி வந்ததால் அதிக ஆதாயத்தைப் பெற்று வந்த அவளுடைய எஜமான்கள் நடந்ததைக் கண்ட போது பவுலின்மீது கடுங்கோபம் கொண்டார்கள். பவுலையும் சீலாவையும் அவர்கள் சந்தை வெளி யில் இழுத்துக்கொண்டுபோய் ரோம அதிகாரி களுக்கு முன்பாக நிறுத்தினார்கள். அந்த அதிகாரிகளோ அவர்களை அடித்து, சிறையில் போடுமாறு கட்டளையிட்டார்கள்.

பிலிப்பி பட்டணத்து, சிறைச்சாலையில் நடந் தவை யாவும் இப்பொழுது எல்லோருக்கும் தெரிந் ததே. நடு இரவில் பவுலும் சீலாவும் ஜெபித்து தேவனைப் புகழ்ந்து பாடினார்கள். சடுதியில் அங்கு மிகப் பெரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டது. சிறைச்சாலையின் கதவுகள் யாவும் திறவுண்டன, கைதிகளுடைய சங்கிலிகள் யாவும் அறுந்து போயின. கைதிகள் தப்பிச் சென்றுவிட்டார்கள் என்று எண்ணியவனாகச் சிறைச்சாலைக்காரன் தன்னையே கொலை செய்துகொள்ள முயன்ற போது, கைதிகள் எவரும் தப்பிச் செல்லவில்லை என்று உறுதி கூறினார். உடனே சிறைச்சாலைக் காரன், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கதறினான். அப்பொழுது மறக்க முடியாத விடை கிடைத்தது, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது இரட் சிக்கப்படுவாய்" (அப். 16:31). பிலிப்பி பட்டணத் தில் தேவனுடைய கிருபை மேலும் ஒரு நினைவுப் பரிசை வென்றது. அடுத்தநாள் விடியற்காலை யில் பவுலும் அவருடைய உடன் ஊழியர்களும் லீதியாளின் வீட்டுக்குச் சென்று அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அங்கிருந்து சென்றார் கள் (அப். 16:40).

ஏறத்தாழ பத்து ஆண்டுகள் கழித்து, பவுல் பிலிப்பியருக்கு இம்மடலை எழுதினார். அப் பொழுது அவர் மீண்டும் சிறையில் அடைக்கப்பட் டிருந்தார். பவுல் சிறையில் இருந்ததைக் கேள்வி யுற்ற பிலிப்பியர் அவருக்குப் பணத்தை ஈவாக அனுப்பினார்கள். இந்தப் பணத்தை எடுத்துச் செல்லும்படி எப்பாப்பிரோதீத்து அனுப்பப்பட்டார். பணத்தைக் கொடுத்த பிறகு சிறிதுகாலம் அங்கு தங்கியிருந்து பவுலின் பாடுகளில் அவருக்கு உதவி செய்ய எப்பாப்பிரோதீத்து விரும்பினார். இந்தக் கடமைகளைச் செய்து வந்தபோது அவர்

நோய்வாய்ப்பட்டார், உண்மையில் அவர் மரணத்திற்குச் சமீபமாயிருந்தார். ஆனால் தேவனோ அவரிடம் இரக்கம்பாராட்டி அவரைக் குணமாக்கி எழச் செய்தார். இப்பொழுது அவர் தன்னுடைய சொந்த ஊரில் உள்ள சபைக்குத் திரும்பிச் செல்ல ஆயத்தமாகிவிட்டார். ஆகவே அப்போஸ்தலன் இந்த நன்றி மடலை அவர் மூலமாக அனுப்புகிறார்.

பிலிப்பியருக்குப் பவுல் எழுதிய மடல் எல்லா மடல்களிலும் மிகவும் தனிப்பட்ட உறவுடன் கூடியதும், நேசம் மிக்கதுமான மடலாகும். பிலிப்பி பட்டணத்தில் கூடிவந்த சபை அவருடைய உள்ளத்தில் பாசத்திற்குரிய மிக உயர்வான மதிப்பைப் பெற்றிருந்தது என்பதை இம்மடல் வெளிப்படுத்துகிறது. இதனை நாம் படிக்குங்கால் அந்தப் பெரிய அப்போஸ்தலனுக்கும் அவரால் நிறுவப்பட்ட சபைக்கும் இடையே ஒரு மென்மையான பாசக்கட்டு இருந்தது என்பதை கண்டு போற்றுகிறோம்.

## பொருட்சுருக்கம்

1. பவுலின் வாழ்த்தும், புகழ்ச்சியும், மன்றாட்டும் (1:1-11)
2. பவுலின் சிறையிருப்பு, நம்பிக்கை, மேலும் விடாமுயற்சியுடன் இருக்கும்படியாக விண்ணப்பித்தல் (1:12-30)
3. கிறிஸ்துவின் தாழ்மை மற்றும் தியாகம் ஆகியவற்றின் முன்மாதிரியின் அடிப்படையில் இணக்கம் கொண்டிருக்கும்படி புத்தி புகட்டுதல் (2:1-16)
4. கிறிஸ்துவின் சாயலுக்கு முன்மாதிரிகள் - பவுல் தீமோத்தேயு எப்பாப்பிரோதீத்து (2:17-30)
5. கள்ளபோதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை (3:1-3)
6. பவுல் தனது பரம்பரை மேன்மைகளையும், தனிப்பட்ட சாதனைகளையும் கிறிஸ்துவுக்காகத் துறந்துவிடுதல் (3:4-14)
7. அப்போஸ்தலன் எடுத்துக்காட்டாய் விளங்கியவண்ணம், விண்ணக நடத்தையின்படி நடக்கவேண்டுமென்று கொடுத்த அறிவுரை (3:15-21)
8. ஒருவருக்கொருவர் இணக்கம், ஒருவருக்கொருவர் உதவிசெய்தல், மகிழ்ச்சி, நீடிய பொறுமை, மன்றாட்டுணர்வு, கட்டுப்பாடுள்ள சிந்தனை வாழ்க்கை - இவற்றிற்கான வேண்டுகோள் (4:1-9)
9. பரிசுத்தவான்களின் அன்பளிப்புகளுக்காகப் பவுல் கூறும் நன்றிகள் (4:10-20)
10. முடிவுரை வாழ்த்துகள் (4:21-23)

## பொருட்சுருக்க அட்டவணை

| தலைப்பு | காலச் சூழலில் கிறிஸ்து | | கிறிஸ்துவின் சிந்தை | | கிறிஸ்துவைப் பற்றிய அறிவு | | கிறிஸ்து அருளும் சமாதானம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பகுப்பு | பவுலின் சிறையிருப்பு | நம்பிக்கை பொறுமைக்காக வேண்டுதல் | கிறிஸ்துவின் முன்மாதிரி | தீமோத்தேயு எப்பாப்பிரோதீத்து | சாதனைகளைத் துறத்தல் | விண்ணக நடத்தை | வாழ்க்கைத் தரம் | ஈகைக்காக நன்றி |
| கருத்து | கிறிஸ்துவின் பங்களிப்பு | | கிறிஸ்துவின் முன்மாதிரி | | கிறிஸ்துவைத் தொடருதல் | | கிறிஸ்துவின் வல்லமை | |
| | பவுலின் அனுபவம் | | பவுலின் குறிப்பிடத்தக்க முன்மாதிரி | | பவுலின் அறிவுரைகள் | | பவுலின் நன்றியுரை | |
| வசனம் | 1:1-16 | 1:17-30 | 2:1-16 | 2:17-30 | 3:1-14 | 3:15-21 | 4:1-9 | 4:10-23 |

## விளக்கவுரை

### 1. பவுலின் வாழ்த்தும், புகழ்ச்சியும், மன்றாட்டும் (1:1-11)

**1:1** இந்த மடலின் தொடக்கத்தில் பவுலும் தீமோத்தேயும் ஒன்றாகச் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளார்கள். இம்மடலை எழுதுவதற்குத் தீமோத்தேயு உதவி செய்தார் என்பது இதன் பொருளன்று. முதன் முதலாகப் பவுல் பிலிப்பி பட்டணத்துக்குச் சென்றபோது, தீமோத்தேயுவும் அவருடன் இருந்த காரணத்தினால் அங்கு இருந்த பரிசுத்தவான்கள் அவரையும் அறிந்திருந்தார்கள். இப்பொழுது **பவுல்** மடலை எழுதத் தொடங்குகிற வேளையில் **தீமோத்தேயு** அவருடன் இருந்தார்.

பவுல் இப்பொழுது வயது முதிர்ந்தவராயிருந்தார் (பிலே. 8), ஆனால் தீமோத்தேயுவோ இன்னும் இளைஞராகவே இருந்தார். இவ்வாறாக இளைஞரும் முதியவரும் எஜமானர்களுள் சிறந்த வருக்கு ஊழியம் செய்யும்படி ஒரே நுகத்தில் பிணைக்கப்பட்டிருந்தார்கள். "வசந்த காலமும் இலையுதிர்காலமும் இணைந்துள்ளன; மிகுந்த ஆர்வமும் அனுபவமும் ஒன்று சேர்ந்துள்ளன; தூண்டுதல் உணர்ச்சியும் ஞானமும் இணைந்துள்ளன; இளம் நம்பிக்கையும் அமைதியும் ஆழ்ந்த உறுதியும் ஒன்றாகப் பிணைந்துள்ளன" என்று இதனை அழகாக விவரிக்கிறார் ஜோவெட்.[2]

இருவரும் இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இருவரும் தங்களுடைய எஜமானரிடத்தில் அன்புகூர்ந்தனர். கல்வாரியின் கட்டுகள் அவர்கள் என்றென்றும் இரட்சகருக்குத் திருப்பணியாற்றும்படி அவர்களைக் கட்டிவைத்தன.

இந்த மடல் **பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரருக்கும்** எழுதப்பட்டிருக்கிறது. அனைவரும் (எல்லோரும்) என்னும் சொல் இந்த மடலில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. பவுலின் பாசத்தோடுகூடிய ஆர்வம் கர்த்தருடைய அனைத்து மக்களிடமுமாய்ப் பாய்ந்து சென்றது.

**பிலிப்பி பட்டணத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள்** என்னும் சொற்றொடர் விசுவாசிகளின் இருவகைத் தகுதியை விவரித்துக் கூறுகிறது. அவர்களுடைய ஆவிக்குரிய தகுநிலையைக் காணுமிடத்து அவர்கள் **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக** தேவனால் பிரித்துவைக்கப்பட்டார்கள். அவர்கள் இருந்த இடம் **பிலிப்பி பட்டணமாகும்**. ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் இருந்தார்கள்.

அதன் பிறகு அப்போஸ்தலன் **கண்காணிகள், உதவிக்காரர்** என்று குறிப்பிடுகிறார். இங்கு **கண்காணிகள்** எனப்படுபவர்கள் சபையிலுள்ள மூப்பர்கள் அல்லது மேய்ப்பர்கள் ஆவார்கள். தேவனுடைய மந்தையைக் குறித்து ஆர்வம் கொண்டவர்களாக மேய்ப்பருக்குரிய ஊழியத்தைச் செய்பவர்கள், மேலும் தங்களுடைய தெய்வீக முன்மாதிரியின் மூலம் மந்தைக்கு வழிகாட்டிகளாக விளங்குபவர்களே கண்காணிகள் ஆவார்கள். இதற்கு மாறாக, **உதவிக்காரர்** சபையில் பணிவிடை செய்பவர்களாக விளங்கி, அதனுடைய நிதிபரிபாலனம் போன்ற காரியங்களை முதன்மையாகக் கருத்திற்கொண்டவர்களாக உழைப்பவர்கள் ஆவார்கள்.

பரிசுத்தவான்கள், கண்காணிகள் மற்றும் உதவிக்காரர் ஆகிய மூன்று வகுப்பாரே சபையில் இருந்தார்கள். குருமார் போன்ற பதவிகள் அங்கு இருந்திருக்குமென்றால், பவுல் அதையும் குறிப்பிட்டிருப்பார். ஆனால் அவர் கண்காணிகள் (பன்மை) உதவிக்காரர் (இதுவும் பன்மையே) ஆகியோரைப் பற்றியே பேசுகிறார்.

தொடக்க நாட்களில் சபை வாழ்க்கையின் எளிமை படவுருவில் குறிப்பிடத்தக்க வகையில் வரைந்து தரப்பட்டுள்ளது. பரிசுத்தவான்கள் முதலில் குறிப்பிடப்பட்டு, அடுத்ததாக *ஆவிக்குரிய வழிகாட்டிகள்*, கடைசியில் *இம்மைக்குரிய ஊழியங்களைச் செய்பவர்கள்* குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அவ்வளவுதான்!

**1:2** பவுலின் தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்த்துகளில், பரிசுத்தவான்கள் **கிருபையும் சமாதானமும்** பெறவேண்டுமென்று விரும்புகிறார். பாவியான ஒருவன் மனந்திரும்புகிறபோது பெறுகிற கிருபையின் அளவினாலானதல்ல இந்தக் **கிருபை,** இதனை அவன் தேவைப்படும் போதெல்லாம் பெறும்படி, இடைவிடாமல் கிருபாசனத்தண்டை சென்று பெற்றுக்கொள்ள வேண்டும் (எபி. 4:16). அதுபோலவே, அவர்கள் பெறவேண்டும் என்று பவுல் வாஞ்சிக்கிற சமாதானம், அவர்கள் ஏற்கனவே தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட சமாதானத்தின் அளவின்படியானது அல்ல; இங்கு சொல்லப்பட்டுள்ள தேவனுடைய சமாதானமோ ஜெபத்தினாலும் நன்றிசெலுத்துவதினாலும் பெறுவதாகும் (4:6,7).

இவ்விரண்டு ஆசிர்வாதங்களும் **பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினாலும் உண்டாகின்றன.** அப்போஸ்தலன் பிதாவைக் கனம் பண்ணுகிறபடியே அப்போஸ் தலன் குமாரனையும் கனம் பண்ணுகிறார் (யோவான் 5:23). இயேசு கிறிஸ்து தேவன் என்ப தில், பவுலுக்கு எவ்வித மாறுபட்ட எண்ணமு மில்லை.

**1:3-6** நன்றிபாராட்டும் பாடலோடு பவுல் இப் பொழுது பொங்கி எழுகிறார். ஆனால் இது அப் போஸ்தலனுக்குப் புதிதல்ல. முதன்முறையாகப் பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்துக்கு வருகை புரிந்த தறுவாயில் அங்கிருந்த சிறைச்சாலையின் சுவர்கள் அவர்களுடைய பாடல்களை எதி ரொலித்தனவே. இந்தச் சொற்களை அவர் எழு தும்போது, பெரும்பாலும் அவர் ரோமச் சிறைச் சாலையில்தான் இருந்திருக்க வேண்டும். ஆனா லும் அவர் இன்னமும் "இரவுநேரக் கீதங்களைப்" பாடிக்கொண்டு இருக்கிறார். வெல்லப்பட இயலாத பவுல்! பிலிப்பியரைக் குறித்து **நினைக்கிறபொழு தெல்லாம்** அவருடைய இருதயத்தில் நன்றி பாராட்டுதல் விழித்து எழுகிறது. அவர்கள் அவரு டைய விசுவாசத்தின் பிள்ளைகளாக இருந்தது மட்டுமின்றி, அவர்கள் பலவழிகளில் முன்மாதிரி யான சபையின் அங்கங்களாக இருந்தார்கள் என்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள்.

அவர் பிலிப்பியருக்காக ஏறெடுத்த **ஒவ்வொரு விண்ணப்பத்திலும் சந்தோஷத்தோடு** வேண்டு தல்களைச் சமர்ப்பித்தார். அவர்களுக்காக மன்றாடுவது அவருக்கு நிறைவான மனமகிழ்ச்சி யைத் தந்த செயலாகும் - மந்தமான சுவையற்ற வேலையல்ல. இந்தப் பகுதியிலிருந்தும், பவுல் எழுதிய இதுபோன்ற பல பகுதிகளிலிருந்தும் அவர் ஒரு ஜெபமனிதராக இருந்தார் என்பதை நாம் அறிகிறோம். தேவனாலே அவர் வியத்தகு வகையில் பயன்படுத்தப்பட்டார் என்பதற்கு நாம் வேறு காரணங்களைத் தேடிச்செல்ல வேண்டிய தேவையில்லை. அவர் பற்பல இடங்களுக்குப் பய ணம் செய்தார், கிறிஸ்தவர்கள் பலரை அறிந் திருந்தார்; இவற்றை நாம் எண்ணிப்பார்க்கும் போது, அவர் தனிப்பட்ட வகையிலும் மிக நெருக் கமாகவும் அவர்களைக் குறித்து அக்கறை யுடையவராகவும் இருந்தார் என்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

**சுவிசேஷம்** அவர்களுக்கு **அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும்** அதைப் பரப்புவ தற்கு அவர்கள் **உடன்பட்டவர்களாக** இருந்தார்கள் என்னும் உண்மை அவர் நன்றிபாராட்டுவதற்குக் குறிப்பிடத்தக்க காரணமாயிருந்தது. **உடன்பட்ட வர்கள்** என்னும் சொல் பொருளாதார உதவி என்னும் பொருளை உட்படுத்தியதாக இருந் தாலும் அது அவர்களது ஜெப உதவியையும், நற்செய்தி பரவுவதற்காக முழுமனதோடு ஈடுபட்ட தையும் குறிக்கிறது. **நாள்முதல்** என்று இங்கு பவுல் குறிப்பிட்டிருப்பதால், இந்த மடலைப் பிலிப்பி சபையில் படித்தபோது, சிறைச்சாலைக் காரன் இன்னும் உயிரோடிருந்து கேட்டிருப்பான் என்பதை எண்ணிப்பார்க்கும்போது யாராலும் வியப்படையாமல் இருக்கமுடியாது. அவ்வாறு இருந்திருப்பின், பிலிப்பி நகர விசுவாசிகளுக்குப் பவுல் எழுதியிருக்கிற இந்த அறிமுகம் நிச்சய மாக அவனுடைய உள்ளத்தில் உடனடியாக உணர்ச்சியைத் தட்டியெழுப்பியிருக்கும்.

தங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் அந்த விசுவாசிகள் தொடங்கின நல்ல தொடக் கத்தைக் குறித்து அப்போஸ்தலன் சிந்திக்க லானார்; தேவன் **தொடங்கின நற்கிரியையை** அவர் முடிப்பார் என்று பவுல் **நம்பிக்கை** கொண்டி ருந்தார்.

> இறைவனின் நற்குணம் தொடங்கிய பணியினை
> குறைவற்ற கரங்களின் வல்லமை முடித்திடும்;
> அண்ணலின் வாக்குகள் ஆம்என்ப ஆமென்என்ப
> பின்னடைவு இன்றியே தடையின்றி நிறைவுறும்.
> - அகஸ்டஸ் M. டாப்லேடி

இங்கு **நற்கிரியை** என்று சொல்லப்பட்டிருப் பது அவர்களுடைய இரட்சிப்பேயாகும். அல்லது நற்செய்தியின் விரிவாக்கத்தின் பொருட்டு அவர் கள் நிதிஉதவுவதில் முனைப்போடு பங்கு பெற் றதை இச்சொல் குறிப்பிடக்கூடும். இயேசு **கிறிஸ்துவின் நாள்** என்னும் சொற்றொடர், அவர் தம் மக்களை விண்ணுலகத்திற்கு அழைத்துச் செல்லும்படி மீண்டும் வருகிற நேரத்தைக் குறிக் கிறது, மேலும் கிறிஸ்துவுக்காக ஆற்றப்பட்ட திருப்பணிகள் புனராய்வு செய்யப்பட்டு பரிசளிப்பு விழா நடைபெறும் அவருடைய நியாயாசனத்தை யும் குறிக்கக் கூடும்.

**1:7** பிலிப்பியருக்காகத் தான் நன்றிபாராட்டிய செயல் நியாயமானதே என்று பவுல் உணர்கிறார். பவுல் **சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லி அதைத் திடப்படுத்திவரும்** பொருட்டு விசாரிக் கப்பட்டார், சிறையில் அடைக்கப்பட்டார் அல்லது நீண்ட பயணம் மேற்கொண்டார்; இவை எல்லா வற்றிலும் அவர்கள் அவரோடு எவ்வாறு தோள் கொடுத்து நின்றார்கள் என்னும் மறக்கவியலா

நினைவுகளை அவர் தனது இருதயத்தில் செல்வப் பெட்டகமாகச் சேர்த்துவைத்திருந்தார். **சுவிசேஷத்திற்காக உத்தரவுசொல்லுதல்** என்பது குறை கூறியவர்களுக்கு உரிய விடை பகர்ந்த ஊழியமாகும். மாறாக, ஏற்கனவே விசுவாசிகளாக இருந்தவர்களுடைய இருதயங்களில், செய்தியை உறுதிப்படுத்தும்படி செய்யப்பட்ட ஊழியமே **திடப்படுத்துதல்** என்னும் ஊழியமாகும். "சுவிசேஷம் பகைஞரை நிலைகுலையச் செய்வதோடு நண்பர்களைப் பலப்படுத்தவும் செய்கிறது"[3] என்று திருவாளர் W. E. வைன் கூறுகிறார். கடுமையான எதிர்ப்பின் மத்தியில் கர்த்தருடைய திருப்பணியைத் தொடர்ந்து நிறைவேற்றும்படி தேவன் அருளுகிற தகுதிக்கும் அப்பாற்பட்ட ஆற்றலே **கிருபை** என்பதன் பொருளாகும்.

**1:8** அவர்கள் உண்மையோடு ஒத்துழைத்த செயலின் நினைவு, அவர்களோடு மீண்டும் இருக்க வேண்டும் என்னும் **வாஞ்சையை** அப்போஸ்தலனுக்கு ஏற்படுத்தியது. **இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே** அவர்களைக் குறித்த ஆர்வம் அவரிடத்தில் **எவ்வளவோ** மிகுதியாயிருந்ததற்கு அவர் **தேவனைச் சாட்சியாக** அழைக்கிறார். பவுல் யூதராகப் பிறந்தவர், அவர் புறவினத்தில் தோன்றிய மக்களுக்கே எழுதினார் என்பதை நாம் நினைவுகூரும்போது, அன்பைக் குறித்து அவர் தெரிவித்திருக்கிற சொற்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. முற்காலத்தில் இருந்த பகைமையை தேவனுடைய கிருபை உடைத்தெறிந்துவிட்டது, அவர்கள் யாவரும் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள்.

**1:9** நன்றிபாராட்டுதல் இப்பொழுது மன்றாட்டிற்கு வழிவிடுகிறது. செல்வத்தையா, வசதியையா அல்லது அவர்கள் தொல்லைகளிலிருந்து விடுபட வேண்டுமென்றா பவுல் வேண்டுகிறார்? இல்லை, அவர்களது **அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும்** தொடர்ந்து பெருக வேண்டுமென்றே அவர் கேட்கிறார். கிறிஸ்தவ வாழ்வின் முதன்மையான நோக்கம் தேவனிடத்தில் அன்புகூர்வதும், உடன்விசுவாசியினிடத்தில் அன்புகூர்வதுமே ஆகும். ஆனால் அன்பானது வெறுமனே உணர்ச்சிபூர்வமானதல்ல. கர்த்தருக்காக நாம் செய்கிற ஆக்கபூர்வமான பணிகளில், நாம் நம்முடைய நுண்ணறிவையும் பகுத்தறியும் ஆற்றலையும் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் நம்முடைய முயற்சிகள் அனைத்தும் வீணாய்ப் போவதற்கே தகுதியானவையாகக் காணப்படும். ஆகவே, பிலிப்பியர் கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்திக் காட்டுகிறவர்களாகத் தொடரவேண்டும் என்றும், அவர்களுடைய அன்பின் வெளிப்பாடு முழு **அறிவோடும் எல்லா உணர்வோடும்** திகழவேண்டும் என்றும் பவுல் இங்கு ஜெபிக்கிறார்.

**1:10** இவ்வாறு தெளிவுபடுத்தப்பட்ட அன்பானது, **உத்தமமானவை** யாவற்றையும் பகுத்தறியத் தக்க ஆற்றலை அவர்களுக்குத் தரும். வாழ்க்கைக் கூறுகளில் சில நல்லவை, வேறு சில சிறந்தவை. நல்லது அவ்வப்போது சிறந்ததுக்கு விரோதியாயிருக்கிறது. ஆக்கபூர்வமான ஊழியத்தில் இந்த வேறுபாடுகள் காணப்படவேண்டும்.

இவ்வாறு தெளிவுபடுத்தப்பட்ட அன்பு, நேர்மையற்ற செயல்களையும் வெளிப்படையான தவறுகளையும் அவர்கள் செய்யாதபடி தடை செய்யும். அவர்கள் **துப்புரவானவர்களாக**[4] இருக்க வேண்டுமென்று பவுல் விரும்புகிறார். அதாவது, **கிறிஸ்துவின் நாளை** எதிர்நோக்கிய நிலையில் அவர்கள் முழுவதும் ஒளிவு மறைவு அற்றவர்களாகவும் குற்றங்குறைவு இல்லாதவர்களாகவும் இருக்க வேண்டும். **இடறலற்றவர்கள்** என்பது பாவமற்ற நிலையைக் குறிப்பதில்லை. நாம் அனைவரும் பாவங்கள் செய்கிறோம், ஆனால் **இடறலற்றவர்** என்பவர் பாவத்தை அறிக்கை செய்து அதை விட்டு விடுபவரே ஆவார்; மேலும் அவர் யாருக்கு எதிராகப் பாவம் செய்தாரோ அவரிடம் மன்னிப்பைக் கேட்பதும், எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் இழப்பீடு செய்தலும் இடறலை நீக்கும்.

**கிறிஸ்துவின் நாள்,** 5 -ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல, விசுவாசியின் எடுத்துக் கொள்ளப்படுதலையும், அவர்கள் செய்த வேலைகளுக்குத் தக்க நியாயம் வழங்குதலையும் குறிக்கும்.

**1:11** கிறிஸ்தவர்கள் **இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால்** நிறைந்தவர்களாகிக் காணப்பட வேண்டுமென்பதே அப்போஸ்தலனுடைய ஜெபத்தின் கடைசி விண்ணப்பமாகும்; அதாவது, **நீதி** உண்டுபண்ணுகிற **கனிகளால்** நிறைய வேண்டும், அல்லது நீதியுள்ள வாழ்வை உண்டுபண்ணுகிற கிறிஸ்தவப் பண்புகளால் நிறைந்திருக்க வேண்டும். இந்தப் பண்புகளுக்கு மூல காரணராக விளங்குபவர் **இயேசு கிறிஸ்துவே** ஆவார், மேலும் அதன் நோக்கம் **தேவனுக்கு உண்டாகும் மகிமையும் துதியுமே**

**ஆகும்.** பவுல் ஏறெடுக்கும் இந்த ஜெபம் ஏசாயா வின் (61:3) சொற்களுக்கு இணையாக உள்ளது, "தேவன் மகிமையடையும்படி **(தேவனுக்கு மகிமை யும் துதியும் உண்டாகும்படி),** கர்த்தர் நாட்டின **(இயேசு கிறிஸ்துவினால் வருகிற)** நீதியின் விருட்சங்கள் என்னப்படுவார்கள் **(நீதியின் கனி களால் நிறைந்தவர்களாவார்கள்).**"

"நாம் கிறிஸ்துவுடன் கொண்டிருக்கிற உற வோடு மிக நெருக்கமானதும், அவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பதுமே கனி என்னும் சொல்லின் பொரு ளாகும். திராட்சைச் செடியின் கொடிகள் கனிதர வேண்டியது அவசியம்" என்று லேமேன் ஸ்ட்ராஸ் எழுதுகிறார்.[5]

## 2. பவுலின் சிறையிருப்பு, நம்பிக்கை, மேலும் விடாமுயற்சியுடன் இருக்கும்படியாக விண்ணப்பித்தல் (1:12-30)

**1:12** ஜெபம் முடிவடைந்துவிட்டது. அடுத்த தாகப் பவுல் தன்னுடைய ஆசிர்வாதங்களைத் திரும்பக் கூறுகிறார், அதாவது, அவருடைய சிறையிருப்பின் காரணமாக விளைந்த பயன் களைப் பற்றிப் பேசுகிறார். "பேரிடரில் நற்பேறு" என்று இந்தப் பகுதியைப் பெயரிட்டு அழைக் கிறார் திருவாளர் ஜோவெட்.

தனக்குச் **சம்பவித்தவற்றை சகோதரர் அறியவேண்டுமென்று** அப்போஸ்தலன் விரும் பினார், அதாவது, அவர் விசாரணை செய்யப்பட் டது, சிறையில் அடைக்கப்பட்டது ஆகியவை நற்செய்திக்குத் தடையுண்டாக்கும் என்று எதிர் பார்க்கப்பட்ட போதிலும், அதற்கு மாறாக **சுவி சேஷம் பிரபலமடைந்தது.** பேய்களும் மனிதர் களும் போடுகின்ற திட்டங்களை முறியடித்து, சோகம் உண்டாகும் என்று நினைக்கும்போது வெற்றியையும், சாம்பலிலிருந்து அழகையும் எவ்வாறு தேவன் உண்டுபண்ணுகிறார் என்ப தற்கு இது மற்றுமொரு வியத்தகு எடுத்துக்காட் டாகத் திகழ்கிறது. "மனிதன் தன்னுடைய பொல் லாப்பை உடையவனாயிருக்கிறான், ஆனால் தேவனுடைய வழியோ வேறு."

**1:13** முதலாவதாக, பவுலின் கட்டுகள் **கிறிஸ்து வுக்குள்ளான கட்டுகள்** என்பது **வெளியரங்க மாயிருக்கிறது.** ஏதோ குற்றமிழைத்து, தீமைசெய் தவர் என்னும் நிலையில் அவர் சிறையில் அடைக் கப்படவில்லை, மாறாக அவர் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக விளங்கியதன் காரணமாகவே சிறை யிலடைக்கப்பட்டார் என்னும் செய்தி பரவலாகத் தெரிந்திருந்தது என்பதே இதன் பொருளாகும்.

அவர் **கட்டுகளால்** பிணைக்கப்பட்டிருந்ததன் உண்மையான காரணம் **அரண்மனைச்** சேவர் களுக்கும் மற்ற எல்லா இடங்களில் உள்ளவர் களுக்கும் நன்கு தெரிந்திருந்தது. அரண்மனை யெங்கும் உள்ளவர்கள் என்னும் சொற்றொடர் (1) அரண்மனைச் சேவகர்கள் அனைவரையும், அதாவது, பேரரசன் குடியிருந்த அரண்மனை யைக் காவல் காத்த சேவகர்கள் அனைவரையும் குறிக்கக்கூடும் அல்லது (2) நீதிமன்றம் முழு வதையும் குறிக்கக் கூடும். நீதிமன்றம் அரண் மனை என்று அழைக்கப்பட்டு அதில் இருந்த அனைத்து மனிதர்களையும் சேர்த்து இங்கு குறிப்பிட்டிருப்பதாகவும் கொள்ளலாம். அதன் பொருள் எதுவாக இருப்பினும், அவருடைய சிறை யிருப்பு அவர் இருந்த இடத்தில் ரோமப் பேரரசின் அதிகாரத்தின் பிரதிநிதிகளுக்கெல்லாம் சாட்சி யாக விளங்கியது என்றே பவுல் இங்கு கூறுகிறார்.

T. W. ட்ரூரி என்பார் எழுதுகிறார்:

> கைதியின் கரத்தில் ஆணிகள் பூட்டி இறுகக் கட்டிய ரோமக் கட்டுப்பாட்டின் சங்கிலி, அவரது அருகினில் கிறிஸ்துவுக்காகப் பொறுமையோடு பாடுகள் அனுபவிக்கிற கதையினைக் கேட்கும் படி நிச்சயமாய் ஒருவனைக் கொண்டுவரும். அவர்களில் ஒருவன் அடுத்த நாள் நீரோவின் உதவியாளாகச் செயல்படுவான் என்பதும் நிச்சயம்.[6]

**1:14** அவரது சிறையிருப்பினால் விளைந்த நற்பயன்களில் இரண்டாவது யாதெனில் இன்னும் பல கிறிஸ்தவர்கள் அச்சமின்றி கர்த்தராகிய இயேசுவுக்குச் சாட்சிபகர உற்சாகப்படுத்தப்பட் டார்கள். கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கொடுமை கள் இழைக்கப்படும் காலங்களில், இயற்கையாக அச்சமும் நாணமும் மிக்க அமைதியான விசுவாசி கள் துணிவுடன் கர்த்தருக்குச் சாட்சி கூறுகிறவர் களாக மாறிவிடுகிறார்கள்.

**1:15** சில இருதயங்களில் போட்டியும் பொறா மையுமே நோக்கமாக இருந்தது. அவர்கள் **கிறிஸ்துவைப் பொறாமையினாலும்** பகைமை யினாலும் பிரசங்கித்தார்கள்.

மற்றும் பலருடைய நோக்கம் நேர்மையும் உத்தமுமாக விளங்கியது; அவர்கள் அப்போஸ் தலனுக்கு உதவிசெய்ய வேண்டும் என்னும் நேர்மையான முயற்சியோடும் **நல்மனதோடும்** கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள்.

**1:16** இவ்வாறு பிரசங்கிப்பதன் மூலம் அப் போஸ்தலனுடைய சிறைவாசம் மிகக்கடுமை

யானதாக ஆக்கப்படும் என்று பொறாமையினால் பிரசங்கிப்பவர்கள் நினைத்தார்கள். அவர்களுடைய செய்தி நல்லதுதான், ஆனால் அவர்களுடைய மனநிலை சரியில்லை. மாம்சத்தின் ஆற்றலினாலும், பேராசை, சச்சரவு, பெருமை, பொறாமை ஆகியவற்றின் தூண்டுதலினாலும் கிறிஸ்தவ ஊழியத்தைச் செய்ய முடியும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது அது அதிக துக்கத்தை உண்டாக்குகிறது. நாம் கர்த்தருக்காக உழைக்கும் போது நம்முடைய நோக்கத்தைக் குறித்து எச்சரிப்புடையவர்களாக இருக்க வேண்டும் என்று இந்த வசனம் கற்பிக்கிறது. நம்மை நாமே காட்சிப் பொருளாக வைத்து சுயத்தை வெளிப்படுத்துவது, தவறான சமயக்கொள்கைகளை உடைய குழுவின் முன்னேற்றத்திற்காகச் செயல்படுவது மற்ற கிறிஸ்தவர்கள் தோல்வி அடைய வேண்டும் எனச் செயல்புரிவது ஆகியவற்றை நாம் செய்யக் கூடாது.

நம்முடைய அன்பானது ஞானத்திலும் பகுத்தறிவிலும் செயல்படுவதன் தேவைக்கு நல்ல தொரு எடுத்துக்காட்டை இங்கு காண்கிறோம்.

**1:17** பவுல் **சுவிசேஷத்தை** நிலைநிறுத்த உறுதிகொண்டிருந்தார் என்பதைச் சிலர் **அறிந்த வர்களாகத்** தூய்மையும் நேர்மையும் மிக்க **அன்பினாலே** நற்செய்தியை அறிவித்தார்கள். அங்கே தன்னலமில்லை, பிரிவினையில்லை, அவர்களுடைய உழைப்பிலே இரக்கமின்மை யில்லை. **சுவிசேஷத்திற்காகப்** பவுல் துணிவுடன் நின்றதன் காரணமாகவே சிறையில் அடைக்கப்பட்டார் என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். ஆகவே அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த வேளையில், அந்த வேலையைத் தொடர்ந்து செய்ய அவர்கள் உறுதிபூண்டிருந்தார்கள்.

**1:18** சிலருடைய தவறான நோக்கத்தின் பொருட்டு பவுல் சோர்வடையவில்லை. இரண்டு வகுப்பாராலும் கிறிஸ்து அறிவிக்கப்பட்டார். அது அவருடைய களிகூருதலுக்குப் பெரிதான காரணமாயிற்று.

இப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலைகளிலும் கூட, பவுல் தன்னைக் குறித்து வருத்தம் அடையவுமில்லை, பிறருடைய இரக்கத்தை நாடவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாக, அவர் கர்த்தருடைய மகிழ்ச்சியினாலே நிறைந்திருக்கிறார்; அது மட்டுமின்றி தன்னுடைய வாசகர்களும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமென்று உற்சாகப்படுத்துகிறார்.

**1:19** எதிர்கால வாய்ப்பு உற்சாகமளிப்பதாக இருக்கிறது. நிகழ்ச்சிகள் யாவும் தன்னுடைய விடுதலையை நோக்கிச் செல்லும் என்பதை அப்போஸ்தலன் அறிந்திருந்தார். இங்கு **இரட்சிப்பு** என்று குறிப்பிடப்பட்டுள்ளது அவருடைய ஆத்தும இரட்சிப்பைக் குறிப்பதில்லை, மாறாக அவருடைய சிறையிருப்பில் இருந்து விடுதலை செய்யப்படுவார் என்பதே இதன் பொருளாகும். அவர் விடுதலை அடைவதற்கு தேவன் பயன்படுத்தும் வழிமுறை பிலிப்பியருடைய **வேண்டுதலும், இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின்** ஊழியமுமே ஆகும். எளிய விசுவாசிகளின் வேண்டுதலுக்குப் பவுல் தரும் முக்கியத்துவம் வியப்பினை ஏற்படுத்துகிறது. ரோமாபுரியின் திட்டங்களையும் அதனுடைய வீறார்ந்த வலிமையையும் தோற்கடிக்கத் தேவையான ஆற்றலை அவர் அவர்களிடத்தில் காண்கிறார். கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஜெபத்தின் மூலமாக அரசாங்கங்களின் முடிவைத் தீர்மானித்து வரலாற்றை மாற்றக்கூடிய ஆற்றல் உடையவராய் இருக்கிறார்கள் என்பது உண்மையே.

**இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவி** என்பது, அவருக்காகப் பரிசுத்த **ஆவியின்** வல்லமை அளவிற்கதிகமாய் விரிவடைந்தது என்று பொருள்படும். அதாவது, ஆவியானவர் அவருக்கு அருளவிருந்த வலிமையை இது குறிக்கிறது. பொதுவாக, "சூழ்நிலைகள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும், விசுவாசிகள் உறுதியாக நிற்கும்படி ஆவியானவர் தந்தருளுகிற எல்லையற்ற வாய்ப்பு வளங்களையே" இது குறிக்கிறது.

**1:20** கிறிஸ்தவர்களுடைய ஜெபங்களையும், பரிசுத்த ஆவியானவரின் உதவியையும் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் நினைத்துப் பார்த்த வராக, தனது அடக்கமுடியாத ஆவலையும் **நம்பிக்கையையும்** குறித்து ஒருக்காலும் **வெட்கமடையப் போவதில்லை** என்றும், அதற்கு மாறாக எல்லா நேரங்களிலும் அச்சமின்றி மிகுந்த துணிவோடு கிறிஸ்துவுக்குச் சாட்சிபகர விரும்புவதாகவும் கூறினார்.

நீதிமன்ற விசாரணையின் முடிவு எதுவாக இருந்தாலும், ஒருவேளை அவர் விடுதலை செய்யப்படலாம் அல்லது கொலை செய்யப்படலாம், அது எதுவாக இருந்தாலும் அவருடைய நோக்கமெல்லாம் **கிறிஸ்து** அவருடைய **சரீரத்தினாலே மகிமைப்பட** வேண்டும் என்பதேயாகும். கிறிஸ்துவைப் பெரியவராக்குதல் என்னும் பொருளோடு மிகைப்படுத்துதல் **(மகிமைப்படுத்துதல்)** என்னும்

சொல் இங்கு பயன்படுத்தப்படவில்லை. அவர் ஏற்கனவே பெரியவராக இருக்கிறார், நாம் செய்கிற ஏதொன்றும் அவரை மேலும் பெரியவராக்குவதில்லை. ஆனால் கிறிஸ்து மற்றவர்களாலே மதிக்கப்படுவதற்கு அல்லது புகழப்படுவதற்குக் காரணமாக நடந்துகொள்ளுதல் என்பதே இச்சொல்லின் பொருளாகும். நம்முடைய வாழ்க்கையில் நமது சரீரங்களினாலே கிறிஸ்து எவ்வாறு மகிமைப்படுத்தப்படுவார் என்பதைத் திருவாளர் கை கிங் என்பார் விவரிக்கிறார்:

> அவருக்கு மகிழ்ச்சியோடு சாட்சி கூறுவதாலே உதடுகளால் அவரை மகிமைப்படுத்த முடியும்; அவருடைய வேலையைச் செய்யும்படி மகிழ்ச்சியோடு ஈடுபடுவதில் கைகளினால் அவரை மகிமைப்படுத்த முடியும்; அவருடைய செய்தியை ஏந்தியவராக மகிழ்ச்சியோடு பயணம் செய்வதாலே கால்களினாலே அவரை மகிமைப்படுத்த முடியும்; ஒருவர் பாரத்தை ஒருவர் மகிழ்ச்சியோடு சுமப்பதாலே தோள்களினால் அவரை மகிமைப்படுத்த முடியும்.[7]

நம்முடைய சரீரத்தில் அடையும் **சாவினாலும்** நாம் **கிறிஸ்துவை மகிமைப்படுத்த** முடியும். அவருக்காக உழைப்பதால் சரீரங்கள் பயனற்றுப் போய்விடும்; காட்டுமிராண்டிகளுடைய ஈட்டிகளால் சரீரங்கள் துளைக்கப்பட்டன; சரீரங்கள் கற்களினால் கிழிக்கப்பட்டன அல்லது கழுமரத்தில் கட்டி வைக்கப்பட்டுச் சுட்டெரிக்கப்பட்டன.

**1:21** இங்கு பவுல் வாழ்க்கையைக் குறித்த தனது தத்துவத்தை ரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறார். செல்வம், புகழ்ச்சி, இன்பம் இவற்றிற்காக அவர் வாழவில்லை. அவருடைய வாழ்வின் நோக்கம் கர்த்தரிடத்தில் அன்புகூர்வது, அவரைத் தொழுதுகொள்வது, அவருக்காகப் பணிபுரிவது ஆகியவையே. அவருடைய வாழ்க்கை **கிறிஸ்துவின்** வாழ்க்கையைப் போல விளங்கவேண்டும் என்றே அவர் விரும்பினார். பவுலின் வாழ்க்கையில் இரட்சகர் வாழ வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாயிருந்தது.

**சாவு எனக்கு ஆதாயம்.** கிறிஸ்துவோடு இருப்பதும் அவரைப்போல என்றென்றும் இருப்பதுமே **சாவது** ஆகும். பாவம் செய்யாத இருதயத்தோடும் வழிவிலகாத கால்களோடும் அவருக்காக உழைப்பதே சாவு. சாவு நமக்கு ஆதாயம் என்று சாதாரணமாக நாம் எண்ணுகிறதில்லை. இன்றைய நாட்களில் பொதுவாக வழங்கி வருகிற கருத்து யாதெனில் "ஜீவன் பூமிக்குரிய ஆதாயம், சாவு அதற்கு வந்த முடிவு" என்பதேயாகும். இது மிகுந்த வருத்தத்திற்குரியதாகும். "நம்முடைய செல்வமெல்லாம் சடுதியில் கெட்டழிந்து போகிற இருண்ட வழியென்று மரணத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கருதவில்லை; மாறாக ஒளியினிடமாய் வழிநடத்தக்கூடிய பாதுகாப்பான பாதை, ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குக் கிருபையாகச் செல்வதற்கான வழியே மரணம்" என்கிறார் திருவாளர் ஜோவெட்.[8]

**1:22** பவுல் **சரீரத்தில்** இன்னும் சிறிது காலம் வாழவேண்டுமென்று தேவன் விரும்புவார் என்றால், அது அவருக்குக் கனிகொடுக்கும் கிரியையை என்னும் பொருளையே தருகிறது. கர்த்தருடைய மக்களுக்கு இன்னும் கூடுதலாக அவரால் உதவி செய்ய முடியும். ஆனால் அவர் நேசிக்கிற இரட்சகரிடம் செல்வதா, அவருக்குப் பிரியமான கர்த்தருடைய ஊழியத்தைச் செய்துகொண்டு பூமியிலே தொடர்ந்து இருப்பதா - இதைக் குறித்து முடிவு செய்வது அவருக்கு மிகக் கடினம். எதைத் **தெரிந்துகொள்வது** என்று அவருக்குத் தெரியவில்லை.

**1:23** பரலோக வீட்டிற்குச் செல்வது அல்லது கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்தலனாக பூமியில் தொடர்ந்து இருப்பது, **இவ்விரண்டு** சாத்தியக் கூறுகளில் எதைத் தெரிந்து கொள்வது என்பது கடினமான தீர்மானம் என்பதையே, **"இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்"** என்னும் சொற்களால் பவுல் கூறுகிறார்.

**தேகத்தை விட்டுப்பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருப்பது அதிக நன்மையானது** என்று அந்நிலையையே அவர் மிகுந்த ஆர்வத்தோடு வாஞ்சித்தார். தன்னுடைய சொந்த விருப்பங்களை மட்டுமே கருத்திற்கொண்டவராகச் செயல்படுவாராயின் நிச்சயமாக தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருப்பதையே அவர் தெரிந்துகொள்வார்.

ஆத்துமாவின் உறக்கம் என்னும் கோட்பாட்டில் பவுலுக்கு நம்பிக்கையில்லை என்பதைக் கவனியுங்கள். மரணத்தின் போது கிறிஸ்தவன் கிறிஸ்துவுடனே இருக்கும்படியாகச் செல்கிறான் என்றும், கர்த்தருடைய சமுகத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிகிற அறிவோடு மகிழ்ந்திருப்பான் என்றுமே அவர் நம்பினார். "கிறிஸ்து எனக்கு ஜீவன், உறக்கம் எனக்கு ஆதாயம்" என்றோ, "தேகத்தைவிட்டுப் பிரிந்து உறங்குவது அதிக நன்மையானது" என்றோ இன்றைய நாளில் கூறுவது எவ்வளவு நகைப்புக்கு இடமான பேச்சாகக்

காணப்படும். விசுவாசி மரணமடைகிறபோது அவனுடைய சரீரத்தின் நிலைமையைக் குறிக் கும்படியாக "நித்திரை" என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிறதேயொழிய (தெச. 4:14), ஆத்துமாவின் உறக்கத்தைக் குறிக் கும்படி அச்சொல் பயன்படுத்தப்படவில்லை. "ஆத்துமாவின் உறக்கம்" புனைந்து உரைக்கப் பட்டுள்ள கட்டுக்கதையேயாகும்.

மேலும், இந்தச் சாவை இரட்சகருடைய வருகையோடு சேர்த்துக் குழப்பமடையக் கூடாது என்பதையும் கவனியுங்கள். மரணத்தின்போது நாம் அவரோடு இருக்கும்படியாகப் போகிறோம். சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர் நம்மி டத்திற்கு வருகிறார்.

**1:24** இன்னும் சிறிதுகாலம் பவுல் இப்புவியில் பிலிப்பியருக்காக வாழவேண்டியது **அதிக அவசி யம்.** இந்தப் பரந்த மனதுடைய மனிதரின் தன்னல மற்ற தன்மை ஒருவருடைய உள்ளத்தில் ஆழ மான நற்கருத்தை ஏற்படுத்தாமல் இருக்க முடி யாது. அவர் தன்னுடைய சொந்த வசதியையோ நலத்தையோ குறித்துச் சிந்திக்கவில்லை. மாறாக, கிறிஸ்துவின் நோக்கம் நிறைவேற எது காரணமாக இருக்குமோ அதற்காகவும், மற்றும் அவருடைய மக்களின் நலனுக்காகவும் செயல் படவே அவர் விரும்பினார்.

**1:25,26 இந்த நிச்சயத்தைக் கொண்டிருந்து** - பரிசுத்தவான்களுக்கு அறிவுரை வழங்கி, ஆறுதல் அளித்து, உற்சாகப்படுத்தும்படி இன் னும் அவர் இப்புவியில் இருக்கவேண்டிய தேவை யுண்டு - தான் உடனடியாகச் சாவைச் சந்திக்கப் போவதில்லை என்று பவுல் அறிந்திருந்தார். அதனை அவர் எவ்வாறு அறிந்திருந்தார்? பரி சுத்த ஆவியானவர் இதைக் குறித்த அறிவை அவருக்குத் தரும்படி, அவர் கர்த்தரிடம் மிக நெருக்கமாகப் பழகினார் என்று நாம் கருது கிறோம். "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது" (சங். 25:14), தேவனுக்குள்ளாக மிக ஆழமாக வாழ்கிறவர் கள், அமைதியாகத் தியானிக்கிறவர்கள், இன் றைய நாள் வாழ்க்கையின் இரைச்சலிலும் பெருங் கூட்டத்திலும் சந்தடியிலும் அமிழ்ந்து மறைந்து கிடக்கிற இரகசியங்களைக் கேட்கிறார்கள். நீங்கள் கேட்க வேண்டுமென்றால் அருகில் இருக்க வேண்டும். பவுல் அருகில் இருந்தார்.

பவுல் சரீரத்தில் தொடர்ந்து இருந்தால் பிலிப்பி பட்டணத்து விசுவாசிகள் கர்த்தரிடத்தில் நம் பிக்கை கொள்வதன் மூலமாக அடையக்கூடிய ஆவிக்குரிய வளர்ச்சியிலும் மகிழ்ச்சியின் பெருக் கத்திலும் முன்னேற்றம் பெறுவதற்கான வேலை யைச் செய்ய ஏதுவாகும்.

இன்னும் நீண்டகாலம் இப்புவியில் வாழும்படி யாகவும் திருப்பணி ஆற்றும்படியாகவும் அவர் விடப்பட்டிருந்ததாலே, அது பிலிப்பியருடைய **மகிழ்ச்சி பெருகுகிறதற்குக்** காரணமாயிற்று. அது மீண்டும் அவர்களைச் சந்திக்க ஏதுவாக் கும். அவர் மீண்டும் பிலிப்பி பட்டணத்துக்கு வந்த போது, அவர்கள் தங்களுடைய கரங்களை நீட்டி அவரை அணைத்துக்கொண்டவர்களாக முத்த மிட்டிருப்பார்கள், மேலும் மிகுந்த மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு நன்றி செலுத்தியிருப்பார்கள் என் பதை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகி றதா? "பவுலே, நாங்கள் உங்களுக்காக ஜெபித் தோம். ஆனால் உண்மையிலேயே உங்களை மீண்டும் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை எங்க ளுக்கு இல்லை. ஆனால் கர்த்தர் எங்களுக்கு மீண்டும் உங்களைத் தந்திருக்கிறார். அதற்காக அவருக்கு நாங்கள் எப்படி நன்றி செலுத்துவோம்!" என்று ஒருவேளை அவர்கள் கூறியிருப்பார்கள்.

**1:27 "எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்"** என்று பவுல் இப்பொழுது ஓர் எச்சரிப்பைக் கூறுகிறார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வைப் போல இருக்க வேண்டும். பரலோகக் குடி மக்கள் அதற்கு ஏற்றாற்போல் நடந்துகொள்ள வேண்டும். நம்முடைய தகுநிலையின்படி நாம் யாராக இருக்கிறோமோ அதுபோலவே நம்மு டைய நடைமுறை வாழ்க்கை அமைய வேண்டும்.

இவ்விதமாக நாம் முரண்பாடு அற்றவர்களாக இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த பிறகு, அப்போஸ்தலன் நாம் மாறாத் தன்மை யோடு ஒரே சீராக நடந்துகொள்ள வேண்டு மென்று அறிவுறுத்துகிறார். முக்கியமாக, அவர் அவர்களிடத்திற்கு வந்தாலும் **வராமலிருந் தாலும்**, அவர்கள் எல்லோருக்கும் பொதுவான **ஆவியிலே** உறுதியாய் நிற்கிறார்கள் என்றும், ஒருமனப்பாட்டுடன் **சுவிசேஷத்தின் விசுவாசத் திற்காக** அதாவது கிறிஸ்தவ விசுவாசத்திற்காக வாஞ்சையோடு உழைக்கிறார்கள் என்றும் அவர்களைக் குறித்துக் கேள்விப்பட வேண்டு மென்று விரும்புகிறார். அவர்கள் ஒருவரோடொரு வர் சண்டையிட்டுக்கொள்ளாமல் ஒன்றுசேர்ந்து பகைஞனுடன் போரிட வேண்டும், ஏனெனில் கிறிஸ்தவர் யாவரும் ஒரே பகைவனை எதிர் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**1:28** சுவிசேஷத்தின் பகைஞரைக் கண்டு அவர்கள் **மருளாதிருக்க** வேண்டும். இன்னல்களைச் சந்திக்கின்ற வேளையில் துணிவுடன் செயல்படுவது இரண்டு வகையான பொருளைக் கொண்டிருக்கிறது. முதலாவது, தேவனுக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு அது ஒரு தீய அறிகுறியாக விளங்குகிறது. இரண்டாவது, எதிரியின் கடுமையான தாக்குதலைத் துணிவுடன் எதிர்கொள்கிற மக்களுடைய **இரட்சிப்பிற்கு** அது அடையாளமாயிருக்கிறது. இங்கு **இரட்சிப்பு** என்னும் சொல் அதனுடைய எதிர்காலப் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது. அதாவது, முடிவில் அவர்கள் ஆவியிலும் ஆத்துமாவிலும் மீட்கப்பட்டதை மட்டுமின்றி, அவர்கள் அடையவிருக்கிற சரீர மீட்பையும் இச்சொல் சுட்டிக்காட்டுகிறது.

**1:29 கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிப்பது** மட்டுமின்றி அவருக்காகப் **பாடுபடுவதும்** கிறிஸ்தவர்களுக்கு அருளப்பட்ட நற்பேறு என்பதைப் பிலிப்பியர் நினைவுகூர வேண்டும்.

ஒருமுறை முனைவர் கிரி.ச்.பத் என்பார் வெறுப்புணர்ச்சிகொண்ட காட்டுமிராண்டித் தனமான மக்களால் சூழப்பட்டு அடிக்கப்பட்டபோது, தன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டார். பின்னர் அவர் தனது கைகளை எடுத்தபோது அவருடைய முகம் இரத்தத்தினால் குளிப்பாட்டியது போல இருந்தது. அதைக் குறித்து அவர் எழுதிய தாவது: "அப்பொழுது அவர் மிகவும் மேன்மைப் படுத்தப்பட்ட வியத்தகு உணர்வைப் பெற்றவராக இருந்தார், கிறிஸ்துவின் திருப்பெயருக்காகப் பாடு அனுபவிக்கத் தகுதியானவர் என்று கணக்கிடப்பட்டதன் நிமித்தம் அவர் பெருமகிழ்ச்சி அடைந்தார்." பாடு அனுபவிப்பதையுங்கூட கிறிஸ்தவம் மிக உன்னதமான நிலை என்று கருதுவது குறிப்பிடத்தக்கது அல்லவா? "ஓர் அற்பமான விசுவாசியும்கூட எல்லை கடந்தவரோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கும்போது அழிந்துபோகாத அக்கினியாகக் கொழுந்துவிட்டு எரியக் கூடியவனாக இருக்கிறான்" என்பது உண்மையாக விளங்குகிறது. சிலுவை மேன்மைப்படுத்தி உயர்த்துகிறது.

**1:30** இந்த வசனத்தோடு "நீங்கள் இதில் ஈடுபாடு கொண்டிருக்கிறதாலே" என்னும் சொற்களைச் சேர்த்துப் படிப்போமானால், முந்தின வசனத்தோடு இதற்குள்ள தொடர்பினை நன்கு புரிந்துகொள்ள முடியும்:

> நான் பிலிப்பி பட்டணத்திலே இருந்தபோது நீங்கள் என்னிடத்திலே கண்டதும் இன்னமும் நான் ஈடுபட்டு வருகிறதாக இப்பொழுது நீங்கள் கேள்விப்படுகிறதுமான போராட்டத்தில் நீங்கள் ஈடுபாடு கொண்டிருக்கிறதாலே, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கு உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.

## 3. கிறிஸ்துவின் தாழ்மை மற்றும் தியாகம் ஆகியவற்றின் முன்மாதிரியின் அடிப்படையில் இணக்கம் கொண்டிருக்கும்படி புத்தி புகட்டுதல் (2:1-16)

பிலிப்பி பட்டணத்து சபையானது பல அம்சங்களில் முன்மாதிரியாக விளங்கியது. அங்கிருந்த விசுவாசிகள் பவுலின் பாராட்டைப் பெறுவதற்கான பல நிகழ்வுகளும் உண்டாயின, ஆனாலும் அங்கே உட்பூசல் மறைவாய் இருந்து கொண்டுதான் இருந்தது. அங்கு இரண்டு பெண்களுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவிவந்தது. அவர்கள் எயோதியாளும் சிந்திகேயாளுமே (4:2). இதனை நாம் நினைவிற்கொண்டவர்களாக இந்த இரண்டாம் அதிகாரத்தைப் படிப்பது நல்லது; ஏனெனில் இறைமக்களிடையே சச்சரவுகள் வருவதற்கான காரணத்தையும், அதைப் போக்குவதற்கான வழிவகையையும் அப்போஸ்தலன் இந்தப் பகுதியில் நேரடியாக விவரிக்கிறார்.

**2:1** உண்டானால் என்னும் சொல்லில் காணப்படும் "ஆல்" என்னும் விகுதி ஐயத்தை ஏற்படுத்தும்படி சேர்க்கப்பட்டதல்ல, அது வாதத்திற்காகச் சேர்க்கப்பட்டதேயாகும். விசுவாசிகள் இணக்க முடையவர்களாகவும் ஒத்துழைக்கிறவர்களாகவும் விளங்குவதற்கு நான்கு சிறப்பான காரணங்களை இந்த வசனம் பட்டியலிட்டுத் தருகிறது. "**கிறிஸ்துவுக்குள்ளாக** இவ்வளவு அதிகமாக நாம் உற்சாகத்தைப் பெற்றிருப்பதாலும், அவருடைய **அன்பு** இவ்வளவு பெரிதான வகையில் செயல்புரியும்படி நம்மைத் தூண்டி விடுகிறதன்மை உடையதாக இருப்பதாலும், பரிசுத்த **ஆவியானவர்** இத்தகைய வியத்தகு **ஐக்கியத்துக்குள்** நம்மைக் கொண்டு வந்திருப்பதாலும், கிறிஸ்தவத்தில் இவ்வளவு மிகுதியான மென்மையுடன் கூடிய **பட்சமும் இரக்கமும்** உண்டாயிருப்பதாலும் நாம் ஒருவரோடொருவர் இசைந்து மகிழ்ச்சியோடு இருக்கக்கூடிய நிலையைப் பெற்றிருக்க வேண்டும்" என்னும் பொருளோடு அப்போஸ்தலன் இங்கு பேசுகிறார்.

இந்த நான்கு நோக்கங்களைத் திருவாளர் F. B. மேயர் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்:

1. உற்சாகப்படுத்தி இணங்கச் செய்கிற கிறிஸ்துவின் தன்மை
2. அன்பு பாராட்டுகிற மென்மையான அக்கறை.
3. ஆவியானவரின் பகிர்ந்து அளிக்கும் தன்மை.
4. மனிதத் தன்மையும் பரிவும்.[9]

கிறிஸ்துவினிடத்தில் யாவரும் கொண்டிருக்கிற பொதுவான பக்தி, யாவரும் பரிசுத்த ஆவியான வரைப் பொதுவாகப் பெற்றிருக்கும் நிலை ஆகிய வற்றின் அடிப்படையில் ஒருமைப்பாட்டைப் பெற வேண்டுமென்று அப்போஸ்தலன் இங்கு வேண்டு கோள் விடுக்கிறார். **கிறிஸ்துவுக்குள்** இருக்கும் எல்லாவற்றினாலும், அவருடைய சரீரத்தின் அங் கங்களாக இருப்பவர்கள் நோக்கத்திலும், பாசத் திலும், இணக்கத்திலும், பரிவிரக்கத்திலும் ஒருமைப்பாடு உடையவராயிருக்க வேண்டும்.

**2:2** மேற்கூறப்பட்டுள்ள வாதங்கள் பிலிப்பியரி டத்தில் முக்கியத்துவம் பெறும் என்றால், அவற் றின் அடிப்படையில், அவர்கள் அவருடைய **சந்தோஷத்தை நிறைவாக்க** வேண்டும் என்று பவுல் அவர்களிடத்தில் மன்றாடுகிறார். இது வரைக்கும், உண்மையிலேயே பிலிப்பியர் பவுலுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்து வந்திருக்கிறார்கள். அதனை அவர் ஒரு நொடிப் பொழுதாகிலும் மறுத்துரைக்கவில்லை, ஆனால் அவருடைய சந்தோஷத்தின் பாத்திரத்தை அவர்கள் நிரம்பி வழியச் செய்ய வேண்டுமென்று இப்பொழுது வேண்டுகிறார். அவர்கள் **ஏக சிந்தை யும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்திப்பதால்** இதனைச் செய்ய முடியும்.

கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒரே விதமாகச் சிந்திக்க வேண்டும். ஒரே விதமாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் இதன் பொருளா? அப் படிப்பட்ட சிந்தனையை நாம் தேவனுடைய திரு மறையில் எந்த இடத்திலும் காணமுடியாது. கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கியமான அடிப் படைச் சத்தியங்களில், நிச்சயமாக நாம் ஒரு மனப்பாடு கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால் பற்பல சிறு விஷயங்களில் நாம் பல்வேறு கருத்துகளை உடையவராய் இருக்கிறோம் என் பது மறுத்துரைக்க முடியாத உண்மையாயிருக் கிறது. ஒரே மாதிரியான நிலை, ஒருமைப்பாடு ஆகிய இரண்டும் ஒன்றல்ல. ஒரே மாதிரியான நிலை இல்லாமல் ஒருமைப்பாட்டுடன் இருக்க முடியும். சில விஷயங்களில் நாம் ஒத்த கருத்து இல்லாதவர்களாக இருந்தாலும், முக்கியமான கோட்பாடுகளில் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாமல் இருக்குமென்றால், நம்முடைய கருத்து வேறு பாடுகளைப் பிறர்நலம் கருதி ஒதுக்கித் தள்ளி விட்டு இசைந்திருக்க முடியும்.

**ஏகசிந்தை** உடையவராய் இருப்பதென்பது கிறிஸ்துவின் சிந்தையை உடையவராய் இருப் பது என்றும், அவர் காண்பதுபோல் காண்பது என்றும், அவர் பதிற்செயல் புரிவதுபோல் புரிவது என்றும் பொருள்படும். **ஏக அன்பு** உடையவராய் இருப்பதென்பது, கர்த்தர் நம்மிடத்தில் காண் பித்த அதே அன்பைப் பிறரிடத்தில் காட்டவேண் டும் என்றும், அந்த அன்பைச் செலுத்துவதற்குத் தரவேண்டிய விலை கணக்கிடப்படவில்லை என்றும் பொருள்படும். **இசைந்த ஆத்துமாக் களாய்** இருப்பது என்பது ஒரே நோக்கத்தை இலக் காகக் கொண்டு இசைவாக ஒருங்கிணைந்து செயல்படுவது என்று பொருள்படும். **ஒன்றையே சிந்தித்தவர்களாக** இருக்க வேண்டும் என்பது நம்முடைய செயல்களையெல்லாம் வழிநடத்து வது கிறிஸ்துவின் சிந்தையே என்று காண்பிக்கும் படி ஒருமைப்பாட்டுடன் செயல்புரிவது என்று பொருள்படும்.

**2:3 ஒன்றையும்**, அது எதுவாக இருந்தாலும் **வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யக்கூடாது,** ஏனெனில் இறைமக்களுடைய ஒருமைப்பாட்டிற்கு இரண்டு பெரிய எதிரிகளாக இருப்பவை இவையே. முதன்மையானவராக இருக்க வேண்டும், அதற்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று எண்ணு வதே **தன்னல விருப்பம்** (வாது) ஆகும், வீண் பெருமை என்னும் சொல் பெருமை அல்லது தன் னையே காட்சிப்பொருளாகக் காட்டிக்கொள்வது என்னும் பொருளைத் தருகிறது. எங்கெல்லாம் மனிதர்கள் தங்களைச் சுற்றிலும் ஒரு கூட்டத் தைச் சேர்க்க வேண்டும் என்றும், தங்களுடைய சொந்த நலன்களை முன்னிறுத்தியும் செயல்படு கிறார்களோ அங்கெல்லாம் உட்பூசல், சச்சரவு ஆகியவற்றிற்கான விதை விதைக்கப்படுவதைக் காணமுடியும். அதற்கான பரிகாரத்தை நாம் இந்த வசனத்தின் பின்பகுதியில் காணலாம். **மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களி லும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர் கள்**. குற்றவாளிகளுடைய ஒழுக்கநெறிப் பண்பு கள் நம்முடைய ஒழுக்கநெறிப் பண்புகளைக்

காட்டிலும் மேலானவை என்று நாம் கருதவேண்டும் என்பது இதன் பொருளன்று. மாறாக, பிறருடைய நலனை நம்முடைய நலனைக் காட்டிலும் மேலாகக் கருதி, தன்னலமின்றி பிறருக்காக வாழ்வது என்பதே இவ்வசனத்தின் பொருளாகும். இவ்விதமான புத்திமதிகளை இறைவனுடைய திருமறையிலிருந்து படிப்பது மிகஎளிது, ஆனால் இதனுடைய மெய்யான பொருள் என்னவென்று அறிந்து நமக்குரியதாக ஏற்று மேன்மைபாராட்டி, உண்மையாக வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவது மிகக் கடினம். நம்மைக் காட்டிலும் பிறரை **மேன்மையானவர்களாக எண்ணுவது** மனித உள்ளத்திற்கு முற்றிலும் அப்பாற்பட்ட செயலாகும். இதனை நம்முடைய சொந்த ஆற்றலினால் செய்ய முடியாது. பரிசுத்த ஆவியானவர் உள்ளத்தில் குடியிருந்து அவராலே நாம் ஆற்றல் மிக்கவர்களாக மாற்றம் பெறுவதினாலேயே இதனை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முடியும்.

**2:4** தன்னுடைய வாழ்க்கையின் தேவைகளை விடுத்து, பிறருக்கானவற்றைக் குறித்து அதிக கருத்து உடையவர்களாக நடந்துகொள்வதாலே இறைமக்களிடத்தில் இதுபோன்ற பிரச்சினைகள் நீங்குவதற்கு வழியுண்டாகும். இந்த அதிகாரத்தில் பிறர் என்னும் சொல் உண்மையான பொருளில் மிக முக்கியமானதாக விளங்குகிறது. தன்னலம் கருதி சச்சரவுகளில் ஈடுபடுகிறவர்களிலிருந்து மேம்பட்டவர்களாக விளங்க வேண்டுமெனில், நம்முடைய வாழ்க்கையை உழைப்பிற்கு ஒப்புவிக்க வேண்டும். "மற்றவர்கள், ஆம் கர்த்தாவே மற்றவர்கள், இதுவே என் வாழ்வின் குறிக்கோளாக விளங்கட்டும். நான் உம்மைப் போல் வாழும்படி, பிறருக்காக வாழ நீர் எனக்கு உதவிபுரிவீராக" - சார்லஸ் D. மேய்க்

**2:5 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியை இப்பொழுது பவுல் பிலிப்பியருடைய கண்களுக்கு முன்பாக உயரத் தூக்கிக் காண்பிக்கப் போகிறார். கிறிஸ்து எப்படிப்பட்ட மனப்பான்மையை வெளிப்படுத்திக் காண்பித்தார்? பிறரிடம் அவர் நடந்துகொண்ட முறையின் குணநலன்கள் யாவை? கர்த்தராகிய இயேசுவின் சிந்தையை அழகுற விளக்கிக் கூறுகிறார் திருவாளர் கை கிங்: (1) தன்னலமற்ற சிந்தை; (2) தியாக மனப்பான்மை கொண்ட சிந்தை; (3) சேவைபுரியும் மனப்பான்மை. கர்த்தராகிய இயேசு பிறரைக் குறித்தே எப்பொழுதும் சிந்தனை கொண்டவராக இருந்தார்.[10]

தம்வருத்தம் எண்ணவில்லை,
அதன்நிமித்தம் அழுவுமில்லை,
நம்நலனைக் கருதியவராய்ச்
செங்குருதி வியர்த்தாரே!
– சார்லஸ் H. கேம்ரியல்

**2:6** கிறிஸ்து இயேசு **தேவனுடைய ரூபமாயிருந்தார்** என்று நாம் வாசிக்கும்போது, அவர் நித்திய காலமெல்லாம் **தேவனாகவே** இருந்தார் என்று கற்கிறோம். அவர் வெறுமனே தோற்றத்தில் தேவனை ஒத்திருந்தார் என்பது இதன் பொருளன்று. மாறாக இந்தச் சொல்லின் முழு உண்மையான பொருளில் அவர் மெய்யான தேவனாகவே இருக்கிறார்.

ஆனாலும், அவர் **தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை.** ஆளுமை மற்றும் பதவிநிலை ஆகியவற்றில் தேவனுக்குச் சமமாய் இருப்பதில் உள்ள வேறுபாட்டைக் குறித்து அறிந்துகொள்வது இங்கு மிகவும் முக்கியமானதாகும். அவருடைய ஆளுமையைப் பற்றி சிந்திக்கும்போது, கிறிஸ்து எப்பொழுதும் தேவனுக்குச் சமமானவராக இருந்தார், இருக்கிறார், இருப்பார். அதனை விட்டுவிடுவது அவருக்கு இயலாத செயலாகும். ஆனால் பதவிநிலைச் சமத்துவம் என்பது வேறு. நித்திய காலமாகக் கிறிஸ்து பதவி நிலையிலும் தம்முடைய பிதாவுக்குச் சமமானவராக இருந்து பரலோகத்தின் மகிமைகளை அனுபவித்து வந்திருக்கிறார். ஆனால், இந்தப் பதவி நிலையை என்ன நேரிட்டாலும் விடாமல் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் **எண்ணவில்லை.** இழந்துபோன மனுக்குலம் மீட்கப்படவேண்டும் என்னும் சூழ்நிலை ஏற்பட்டபோது, அவர் தாம் பதவி நிலையில் **தேவனுக்குச் சமமாயிருப்பதைத்** துறந்துவிட்டார். பரலோகத்தின் இன்பங்களையும் மகிழ்ச்சியையும் துறந்தார். எல்லாச் சூழ்நிலைகளிலும் இறுகப் பற்றிக்கொள்ள வேண்டிய ஒன்று என்று அவர் அதனைக் குறித்து **எண்ணவில்லை.**

இவ்வாறாக அவர் இவ்வுலகிற்கு வரவும் அவருக்கு எதிராகப் பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களைச் சகிக்கவும் விருப்பங்கொண்டார். பிதாவாகிய தேவன் ஒருக்காலும் முகத்தில் துப்பப்படவில்லை, அடிக்கப்படவில்லை, சிலுவையில் அறையப்படவுமில்லை. இந்தப் பொருளில், பிதா குமாரனைவிடப் பெரியவர் - அவருடைய ஆளுமையில் அல்ல; அவருடைய பதவி நிலையில், அவர் வாழ்ந்த விதத்தில் பிதா குமாரனிலும் பெரியவராயிருக்கிறார். இந்த உண்மையைக்

கர்த்தராகிய இயேசு, யோவான் 14:28 -இல் வெளிப்படுத்தியிருக்கிறார்: "நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" அவர் தமது சொந்த வீடாகிய பரலோகத்திற்குச் சென்ற தாலே அதை அறிந்த சீடர்கள் களிகூர வேண்டும் என்று இதனை வேறுசொற்களில் கூறலாம். இப்புவியில் இருந்தபோது அவர் கொடுமையாக நடத்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்டார். அவர் தமது பிதாவைக் காட்டிலும் கீழான சூழ்நிலையில் இருந்தார். இந்தப் பொருளில் அவருடைய பிதா அவரிலும் பெரியவர். ஆனால் அவர் மீண்டும் பரலோகத்திற்குச் சென்ற பிறகு, அவர் தம்முடைய பிதாவுக்கு அவருடைய ஆளுமையிலும் அவருடைய சூழ்நிலைகளிலும் சமமானவராக இருந்து வருகிறார்.

கி.'.போர்ட் என்பார் விளக்கமளிக்கிறார்:

> இங்கு அவருடைய பண்புநலனைப் பற்றியோ உட்கூறுகளைப் பற்றியோ பேசவில்லை. ஆனால் இந்த இரண்டாம் சொற்றொடரில் (தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்), இருப்பு நிலை விவரிக்கப்பட்டிருக்கிறது. அவருடைய *இருப்பு நிலை*, ஒருநிலையிலிருந்து வேறு நிலைக்கு மாற்றம் அடைந்ததேயொழிய, அவருடைய முக்கியமான உட்கூறுப்பண்புகள் எவ்வித மாற்றமும் அடையக்கூடாதவை. அப்போஸ்தலனாகிய பவுல் கூறிய எடுத்துக்காட்டையே நாம் எடுத்துக்கொள்வோம்: "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி. 8:9). இங்கே ஒவ்வொரு பகுதியிலும் அவருடைய மாற்றம் ஏற்பட்டதைக் காணமுடியும். ஆனால் அவருடைய இயல்பிலே எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. வறியவன் ஒருவன் செல்வந்தனாக மாற்றம் அடைகிறபோது இருப்புநிலையில் மாற்றம் ஏற்படுகிறது, ஆனால் அவன் மனிதன் என்னும் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படுவதில்லை. அதுபோலவே தேவகுமாரனிடத்திலும் நிகழ்ந்தது; அவர் ஐசுவரியத்திலும் மகிமையிலும் வாழ்ந்த *இருப்பு நிலையிலிருந்து* நமக்காகக் கீழே இறங்கி வந்தார். அந்த ஐசுவரியமும் மகிமையும் அவருக்கு ஏற்புடையதாக விளங்கி அவருடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்திக்காட்டப் போதுமானவையாக இருந்தன. அவருடைய மனித வாழ்க்கையை எண்ணிப்பார்க்கும்போது, அது எல்லைகடந்த அளவு தாழ்மையானதாகவும் வறுமையுடன் கூடிய *இருப்பு நிலையாகவும்* காணப்பட்டது. அதனை அவர் மனித இயல்போடு சேர்த்து ஏற்றுக்கொண்டார்.[11]

**2:7 தம்மைத்தாமே வெறுமையாக்கி** - இது எழுத்தின்படியான மொழிபெயர்ப்பாக இருக்கிறது. "கர்த்தராகிய இயேசு தம்மிடத்தில் எதை வெறுமையாக்கினார்?" என்னும் கேள்வி உடனடியாக எழுகிறது.

இந்தக் கேள்விக்கு விடை கூறுகையில் மிகக் கவனத்தோடு இருக்க வேண்டும். வெறுமையாக்கினார் என்னும் சொல்லுக்கு விளக்கமளிக்க முயன்ற மனித முயற்சிகள் அவருடைய தெய்வீக இயல்புகளைக் கிறிஸ்துவினிடத்திலிருந்து உரிந்து போட்டுவிட்டன. எடுத்துக்காட்டாக, கர்த்தராகிய இயேசு இவ்வுலகத்தில் இருந்தபோது சர்வ ஞானமும் அல்லது சர்வ வல்லமையும் உடையவராக இருக்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள். அல்லது அவர் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இருக்கவில்லை என்றும் சிலர் கூறுகிறார்கள். அவர் மனிதராக வந்தபோது தாமாக மனமுவந்து இந்த இறை இயல்புகளை ஒதுக்கி வைத்துவிட்டு வந்தார் என்று அவர்கள் கூறுகிறார்கள். வேறு சிலர் எல்லா மனிதர்களைப் போலவும் தவறான கருத்தை உடையவராகவும், அவருடைய நாட்களில் வழங்கிவந்த கருத்துகளையும் புனைகதைகளையும் நம்பக்கூடிய குறையுடைய மனிதராகவும் இருந்தார் என்று சொல்லக்கூடிய அளவிற்குச் சென்றுவிட்டார்கள்!

இவை யாவற்றையும் நாம் முழுமையாக மறுத்துரைக்கிறோம். தேவ இயல்புகளில் எதனையும் கர்த்தராகிய இயேசு ஒதுக்கிவைத்துவிட்டு இந்த உலகத்திற்கு வரவில்லை. அவர் இவ்வுலகில் மனிதராக வாழ்ந்தபோது,

அவர் எல்லாம் அறிந்த சர்வ ஞானியாகவே இருந்தார்.

அவர் சர்வ வியாபியாகவே, அதாவது ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் இருக்கிறவராக இருந்தார்.

அவர் எல்லா அதிகாரமும் உடைய சர்வ வல்லவராக இருந்தார்.

*அவர் தம்முடைய இருப்பு நிலையில் தேவனுக்குச் சமமாயிருப்பதை விடுத்த வராக இறைமையின் மகிமையை மனித சரீரமாகிய மாம்சத்தில் திரையிட்டு மறைத்துக் கொண்டார்; இதுவே தம்மைத்தாம் வெறுமையாக்கும்படி கிறிஸ்து செய்த செயலாகும்.* மறைத்து வைக்கப்பட்டிருந்தாலும் மகிமையானது அவரிடத்தில் இருந்தது; ஆனால் சில வேளைகளில் அது பிரகாசித்தது. அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக மறுரூபமலை நிகழ்ச்சியைக் கூறலாம். தேவனுடைய இயல்புகளைக் கொண்டி ராத தருணம் என்று அவருடைய புவி வாழ்க்கை யில் ஒரு நொடிப்பொழுதாகிலும் இருந்ததில்லை.

இறைமையின் உடையினைக்
களைந்தவர் களிமண்ணைத்
திரையாக்கி மறைத்தனர் தெய்வீகம் –
மறைத்திடாமல்
அவ்வுருவில் பேரன்பைக் காட்டியே
தந்திட்டார்
இவ்வுலகில் மனிதர்க்கு மீட்பு.

நாம் முன்னர் குறிப்பிட்டது போல, "அவர் தம் மைத்தாமே வெறுமையாக்கினார்" என்னும் சொற்களுக்கு விளக்கமளிக்கும்போது மிகுந்த எச்சரிப்பு உடையவராக இருக்க வேண்டும். தொடர்ந்து வருகிற சொற்றொடர்கள் இதற்கு விளக்கமளிக்கும்படி விட்டுவிடுவதே மிகவும் பாதுகாப்பான வழியாகும். **அவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானதன்** மூலமாக அவர் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். இதுவரை பெற்றிராத *மனிதநிலையை* தம்மீது ஏற்றுக்கொண்டதன் மூலமாக அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கினார் என்றும் இதனைக் கூறலாம். அவர் தமது இறைமையைப் புறம்பே தள்ளிவைத்து விடவில்லை, அவர் தம்முடைய பரலோக இடத்தை மட்டுமே விட்டுவந்தார், சிறிது காலத்திற்கு மட்டுமே அவ்விடத்தை விட்டு வந்தார்.

அவர் வெறுமனே மனிதராக மட்டும் இருந் திருந்தால், அச்செயல் வெறுமையாக்கும் செய லாக இருந்திருக்காது. நாம் இவ்வுலகத்தில் பிறந்தபோது நம்மை நாமே வெறுமையாக்கிக் கொள்ளவில்லை. ஆனால் தேவன் மனிதராகப் பிறக்க வேண்டுமென்றால், அச்செயல் தம்மைத் தாமே வெறுமையாக்கும் செயலாகும். உண்மை யான தேவனால் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

**அவர் அடிமையின் ரூபமெடுத்தார்.** இரட் சகர் மனுவுருவெடுத்த நிகழ்ச்சியையும் அவரு டைய இவ்வுலக வாழ்க்கையையும் யோவான் 13:4 -ஆம் வசனம் மிக அழகிய சொற்களால் சுருக்க மாகச் சொல்லுகிறது: "இயேசு...வஸ்திரங் களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டார்." சீலை அல்லது துவாலை என்பது பணிவிடைக்கு அடையாளமாக இருக்கிறது. அது அடிமைகள் பயன்படுத்திய ஆடையாகும். அது நம்முடைய சீர்மிகு கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவால் பயன்படுத்தப்பட் டது, ஏனெனில் அவர் "ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட் கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக் கவும் வந்தார்" (மத். 20:28). இந்தப் பகுதியில் அடுக்கடுக்காக வரும் சிந்தனைகளைக் குறித்து நினைவுகூரும்படி நாம் சற்று நிதானிப்போம். பிலிப்பியில் இருந்த பரிசுத்தவான்களுக்கிடையே உட்பூசல் நிலவிவந்தது. அவர்கள் கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருக்க வேண்டும் என்று பவுல் அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார். கிறிஸ்தவர்கள் தாழ்மையான இடத்தை எடுத்துக் கொள்ளவும், பிறருக்குப் பணிவிடை செய்யவும், தங்களுடைய வாழ்க்கையைத் தியாகமாக ஒப்புக்கொடுக்கவும் விருப்பமுடையவர்களாக இருப்பார்களெனில் அங்கு சண்டைகள் ஏற்படா என்பதே இங்கு கூறப்பட்டுள்ள வாதமாகும். *பிற ருக்காகச் சாக விரும்புகிற மனிதர்கள் பொது வாக அவர்களோடு சண்டைபோட மாட்டார் கள்.*

கிறிஸ்து எக்காலத்திலும் இருந்தவர், ஆனால் இவ்வுலகிற்கு **மனுஷி சாயலில்** வந்தார், அதா வது "உண்மையான மனிதராக" வந்தார். கர்த்த ருடைய இறைமை எவ்வளவு உண்மையோ, அதுபோல அவருடைய மனித நிலையும் உண்மை யானதே ஆகும். அவர் மெய்யான தேவனும் மெய்யான மனிதரும் ஆவார். இது எளிதில் புரிந்துகொள்ள முடியாத மர்மமாக இருக்கிறது! படைக்கப்பட்ட எந்த உள்ளத்தினாலும் இதனைப் புரிந்துகொள்ள முடியாது.

**2:8** தேவனுடைய அன்பான குமாரன் அடைந்த தாழ்மையின் மிகுந்த ஆழத்தை இந்த வேத பாகத்தின் ஒவ்வொரு பகுதியும் விவரித்துக் கூறு கிறது. அவர் பரலோகத்தின் மகிமையை விடுத்து வர விருப்பங்கொண்டது மட்டுமல்ல! அவர்

தம்மைத்தாமே வெறுமையாக்கினார்! அவர் அடிமையின் ரூபத்தை எடுத்துக்கொண்டார்! அவர் மனிதராக மாறினார்! ஆனால் இப்பொழுது அவர் **தம்மைத்தாமே தாழ்த்தினார்** என்று நாம் படிக்கிறோம். நம்முடைய குற்றவுணர்வுள்ள ஆத்துமாக்களை இரட்சிக்கும்படி அவர் இறங்கிச் செல்லாத தாழ்மையான இடம் இதனினும் வேறில்லை. அவருடைய மகிமை நிறைந்த திருப் பெயருக்கு என்றென்றும் ஸ்தோத்திரம் உண்டா வதாக!

அவர் **மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராக** மாறியதாலே தம்மைத்தாமே தாழ்த்தினார். இது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக் கிறது! இதற்காக அவர் தமது உயிரையே விலை யாகக் கொடுக்க நேரிட்ட போதிலும், அவர் கீழ்ப் படியத் தயங்கவில்லை. மரணபரியந்தம் கீழ்ப் படிந்தார் என்பது அவர் முடிவுவரை கீழ்ப்படிந்தார் என்று பொருள்படும். விலையுயர்ந்த ஒரு முத் தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற் றையும் விற்று அதனை மிகப்பெரிய விலைக்கு வாங்கிய வணிகர் மெய்யாகவே அவர்தான் (மத். 13:46).

**சிலுவை மரண பரியந்தமும்.** சிலுவையில் அறையப்பட்டுக் கொலைசெய்யப்படுவது மிகவும் அவமானத்திற்குரிய தண்டனையாகும். கொலை காரர்களுக்கென்று நியமிக்கப்பட்ட தூக்குமரம், மின்சாரநாற்காலி அல்லது நச்சுவாயுக்கூடம், இவற்றோடு அதனை ஒப்பிடலாம். விண்ணுலகத் திலேயே மிகவும் சிறந்தவர் இவ்வுலகிற்கு வருகை புரிந்தபோது, அவருக்கென்று நியமிக்கப்பட்ட **மரணம்** இதுதான். அவர் படுக்கையிலே இயல் பான மரணத்தை அடையும்படியாக அனுமதிக்கப் படவில்லை. அவருடைய மரணம் விபத்திலே ஏற்பட்டதும் அல்ல. அவர் அவமானத்திற்குரிய மரணமாகிய **சிலுவை மரணத்தையே** அடைய நேரிட்டது.

**2:9-11** இப்பொழுது உடனடி மாற்றம் ஒன்று நிகழ்கிறது. இதற்கு முந்தின வசனம் கர்த்தராகிய இயேசு என்ன செய்தார் என்பதை விவரிக்கிறது. அவர் தமது உரிமையைத் துறக்கும்படியாகச் சென்ற பாதையை அது விவரிக்கிறது. அவர் தமக்கென்று பேர்புகழை நாடவில்லை. அவர் தம்மைத் தாமே தாழ்த்தினார்.

ஆனால் இப்பொழுது, **தேவன்** என்ன செய் தார் என்பதைச் சிந்தித்துப் பார்க்கத் திரும்பு கிறோம். இரட்சகர் தம்மைத்தாதே தாழ்த்தினார் என்றால், தேவனோ அவரை எல்லாவற்றிக்கும் மேலாக உயர்த்தினார். அவர் தமக்கென்று பேர் புகழை நாடவில்லை என்றால், தேவனோ அவ ருக்கு **எல்லா நாமத்திற்கும் மேலான நாமத் தைத் தந்தருளினார்.** அவர் பிறருக்குப் பணி விடை செய்யும்படி தமது முழங்காலை முடக் கினார் என்றால், **முழங்கால் யாவும் முடங்கும் படி** தேவன் கட்டளையிட்டார்.

பிலிப்பியருக்கு இங்கு என்ன பாடம் கற்பிக்கப் படுகிறது - நாம் என்ன பாடம் கற்கிறோம்? உயரச் செல்வதற்கான வழி கீழே செல்வதே ஆகும். நம்மை நாமே உயர்த்தாமல், பிறருக்குப் பணி விடைக்காரராக நாம் செயல்புரிவோமானால் தேவன் ஏற்ற காலத்தில் நம்மை உயர்த்துவார்.

தேவன் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பி, வானங்களைத் திறந்து, அவரைத் தமது வலப்புறம் அமரும்படியாகத் தம்மண்டை ஏற்றுக்கொண்டு உயர்த்தினார். அது மட்டுமின்றி தேவன் அவருக்கு **எல்லா நாமத் திற்கும் மேலான நாமத்தைத் தந்தருளினார்.**

இங்கு **நாமம்** என்பது என்னவென்பதில் அறிஞர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு நிலவு கிறது. இயேசு என்ற நாமத்தையே இது குறிக் கிறது என்றும் யெகோவா என்னும் பெயர் இதற் குள் அடங்கியிருக்கிறது என்றும் சிலர் கூறுகிறார் கள். ஏசாயா 45:22,23 - ஆகிய வசனங்களில் முழங்கால் யாவும் தேவனுக்கு முன்பாக முடங் கும் (யெகோவாவுக்கு முன்பாக முடங்கும்) என்னும் கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது.

**எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்** என்பது இப்பிரபஞ்சத்தில் மிகவுயர்ந்த இடத்தைக் குறிக்கும்படியான உருவகச் சொற்களேயொழிய வேறல்ல என்று சிலர் கருதுகிறார்கள். ஒப்புயர் வற்ற நிலையையும் மேலான ஆளுகையையுமே குறிக்கிறது என்பதே இதன் பொருளாகும். இவ்விரண்டு விளக்கங்களும் ஏற்றுக்கொள்ளப் படத் தக்கவையே.

கிறிஸ்து நிறைவேற்றிய மீட்பின் செயலில் தேவன் முழுமையான மனநிறைவைப் பெற்றார். அதன் காரணமாக அவர் **முழங்கால் யாவும்** கிறிஸ்துவுக்கு முன்பாக **முடங்கும்படி,** அதாவது **வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர்** யாவருடைய முழங்காலும் முடங்கும்படியான தீர்மானத்தைச் செய்தார். இந்த உயிரினங்கள் யாவும் இரட்சிக்கப்படும் என்பது இதன் பொரு ளன்று. இப்பொழுது அவருக்கு முன்பாக *விருப் பத்துடன்* முழங்கால் முடக்காதவர்கள் ஒரு நாளில் முழங்கால் முடக்க *வற்புறுத்தப்*

**படுவார்கள்.** அவருடைய கிருபையின் காலத்தில் இணங்க விருப்பமற்று இருக்கும் மக்கள், அவருடைய நியாயத்தீர்ப்பின் நாளிலே அவருக்குக் கீழ்ப்படுத்தப்படுவார்கள்.

ஒப்பற்ற கிருபையினாலே, கர்த்தர் மகிமையின் நிலையிலிருந்து பெத்லகேமுக்கும், கெத்செமனேவுக்கும், பின்னர் கல்வாரிக்கும் பயணம் மேற்கொண்டார். தேவனோ இதற்குப் பிரதிபலனாக, இப்பிரபஞ்சத்தின் வழிபாட்டுப் புகழுரையினாலே கனத்தையும், அவருடைய கர்த்தத்துவத்திற்கு இப்பிரபஞ்ச அங்கீகாரத்தையும் தந்தருளுவார். அவர் கூறிய உறுதியான சொற்களை ஏற்க மறுத்தவர்கள் ஒருநாளில் தாங்கள் மதியீனமாக நடந்து கொண்டதையும், மாபெரும் தவறிழைத்ததையும், நாசரேத்தூர் இயேசுவே மகிமையின் கர்த்தர் என்பதையும் ஒப்புக்கொள்வார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமை மற்றும் அவருடைய செயல் ஆகியவற்றை எடுத்தியம்பும் இந்த மகா உன்னதமான வேத பகுதியை விட்டுச் செல்லும் முன், பிலிப்பி சபையில் நிலவிய சிறு பிரச்சினையின் காரணமாக இப்பகுதி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் மீண்டும் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். கர்த்தரைக் குறித்த ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதவேண்டும் என்ற நோக்கத்தோடு பவுல் இதனைத் தொடங்கவில்லை. மாறாக, பரிசுத்தவான்களுடைய சுயநலத்தையும், பிரிவினை மனப்பான்மையையும் சரிசெய்ய வேண்டுமென்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. அவர்களுடைய நிலையிலிருந்து குணப்படுத்தக் கூடியது கிறிஸ்துவின் சிந்தையே ஆகும். ஒவ்வொரு சூழ்நிலைக்கும் தகுந்த வண்ணம் பவுல் கர்த்தரை அறிமுகப்படுத்துகிறார். “எளிதில் ஊறுவிளைவிக்கக் கூடியது, துயர் உண்டாக்கக் கூடியது அல்லது விருப்பமற்றது எதுவாக இருந்தாலும் அதைக் குறித்துப் பவுல் பேசவேண்டுமானால், அவரால் அந்த உண்மையை, கவனத்தைச் சட்டென ஈர்க்கக்கூடிய அழகோடும், களிமண்ணின்மேல் சீராகப் பதித்துவைக்கப்பட்டுள்ள விலையுயர்ந்த ஆபரணமாகத் தோற்றமளிக்கும் வகையிலும் எடுத்துரைக்க முடியும்” என்று கூறுகிறார் திரு. எர்ட்மேன்.[12]

**2:12** கிறிஸ்துவின் முன்மாதிரியை, சுடர்விளக்கு போன்ற தெளிவோடு விளக்கக் கூடிய அப்போஸ்தலன், இப்பொழுது அதனடிப்படையில் தான் கூறவேண்டிய புத்திமதியை எடுத்துரைக்க ஆயத்தமாகிவிட்டார்.

பவுல் பிலிப்பியரோடு இருந்த காலத்தில், அவர்கள் **எப்பொழுதும் அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்.** அவர் **தூரமாயிருந்த இப்பொழுதோ** அவர்கள் **அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும்** தங்கள் **இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட** வேண்டும்.

அதிகக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ள வேறொரு வேத பகுதியினிடமாய் நாம் மறுபடியும் வந்திருக்கிறோம். முதற்கண், நாம் மிகத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டியது யாதெனில், கிரியைகளினால் இரட்சிப்பைப் பெறமுடியும் என்று பவுல் இங்கு கற்பிக்கவில்லை என்பதே. தான் எழுதிய அனைத்துப் பகுதிகளிலும் கிரியைகளினால் இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியாது, மாறாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில்தான் இரட்சிப்பைப் பெறமுடியும் என்றே அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அப்படியானால் இந்த வசனத்தின் பொருள் என்ன?

1. தேவன் நமக்குள்ளாகத் தந்திருக்கிற இரட்சிப்பைக் கொண்டு நாம் திறம்பட வேலை செய்ய வேண்டும். நித்தியவாழ்வை தேவன் நமக்கு இலவசமான ஈவாகத் தந்திருக்கிறார். நாம் அனுபவ பூர்வமான பரிசுத்தத்தோடு அந்த வாழ்வைத் திறம்பட வாழ்ந்திட வேண்டும்.
2. பிலிப்பி பட்டணத்தில் அப்பொழுது நிலவி வந்த பிரச்சினைக்குரிய தீர்வே இங்கு **இரட்சிப்பு** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கூச்சல், குழப்பம் மற்றும் சச்சரவு ஆகியவற்றால் தொல்லைக்கு உட்பட்டிருந்தார்கள். அப்போஸ்தலன் அதற்குரிய பரிகாரத்தை இங்கு தந்திருக்கிறார். கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டவர்களாக அவர்கள் இப்பொழுது அந்தப் பரிகாரத்தைக் கைக்கொள்ள வேண்டும். இவ்வாறாக அவர்கள் தங்களுடைய **இரட்சிப்பு**, அல்லது அவர்களுடைய பிரச்சினைக்குரிய தீர்வு நிறைவேறப் **பிரயாசப்பட** வேண்டும்.

இங்கு சொல்லப்பட்டிருக்கிற **இரட்சிப்பு**, ஆத்துமாவின் இரட்சிப்பு அல்ல, மாறாக தேவனுடைய சித்தத்தைச் செய்யாதிருக்கும்படி கிறிஸ்தவனைத் தடைசெய்கிற கண்ணியிலிருந்து பெறுகிற விடுதலையே இரட்சிப்பு ஆகும். தற்காலத்தில் அனுபவிக்கக்கூடிய எல்லாவிதமான தீமைகளிலிருந்தும் பெறுகிற விடுதலையையே இரட்சிப்பு என்னும் சொல் குறிக்கிறது என்று திருவாளர் வைன், இக்கருத்தோடு உடன்பாடுகொண்டவராகக் கூறுகிறார்.

இரட்சிப்பு என்னும் சொல்லுக்குப் பல்வேறு பொருட்கள் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1:19 -ஆம் வசனத்தில் அச்சொல் சிறைச்சாலையிலிருந்து பெறுகிற விடுதலையைக் குறிக்கிறது என்று நாம் முன்னமே கண்டோம். 1:28 -ஆம் வசனத்தில் நம்முடைய சரீரங்கள் இறுதியில் அடையவிருக்கிற இரட்சிப்பை, அதாவது பாவத்தின் முன்னிலையிலிருந்து நாம் அடையவிருக்கிற விடுதலையை அது குறிப்பிடுகிறது. ஒவ்வொரு இடத்திலும் ஓரளவு அதனுடைய பின்னணியைக் கருத்திற்கொண்டு அதனுடைய பொருளைத் தீர்மானிக்க வேண்டும். இந்தப் பகுதியில், பிலிப்பியர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த சச்சரவு போன்றவற்றிலிருந்து பெறக்கூடிய தீர்வையே இரட்சிப்பு என்னும் சொல் குறிப்பிடுகிறது என்று நாம் கருதுகிறோம்.

**2:13 தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும்** அவர்களில் **உண்டாக்குகிறவராக** இருக்கிற காரணத்தால் அவர்கள் தங்களுடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட முடியும் என்று பவுல் அவர்களுக்கு இப்பொழுது நினைவுபடுத்துகிறார். தேவனே அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் படியான விருப்பத்தை அல்லது வாஞ்சையை நமக்குள்ளாக வைக்கிறார் என்பது இதனுடைய முதலாவது பொருளாக இருக்கிறது. அடுத்தபடியாக, அந்த விருப்பத்தை நிறைவேற்றும்படியான ஆற்றலை நமக்குள்ளாக **உண்டாக்குகிறவராகவும்** இருக்கிறார்.

இங்கு மீண்டுமாக தெய்வீகமும் மனிதத்தன்மையும் வியத்தகு வகையில் ஒன்றுசேருகிற நிலையைக் காண்கிறோம். ஒரு பொருளில் நாம் நம்முடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்னொரு பொருளில் தேவன்தாமே நாம் அதைச்செய்யும்படியாக நிறைவேற்றுகிறவராக இருக்கிறார். (இருந்தபோதிலும், பாவங்கள் மன்னிக்கப்படுவதை இது குறிப்பதாக எடுத்துக்கொள்ளக் கூடாது, அல்லது இது மறுபிறப்பையும் குறிப்பிடுவதில்லை. மீட்பு முழுவதும் தேவனுடைய கிரியையையே சார்ந்திருக்கிறது. நாம் விசுவாசிக்க மட்டுமே செய்கிறோம், பின்னர் இரட்சிப்புக்குள்ளாகப் பிரவேசிக்கிறோம்.)

**2:14-16** நாம் அவருடைய தயவுள்ள சித்தத்தைச் செய்கிறபோது, அதனை எவ்வித முறுமுறுப்பின்றியும் கேள்விகள் எழுப்பாமலும் செய்ய வேண்டும்: "ஏனோதானோவென்று அல்ல, வெற்றியுடன் அதைச் செய்து முடிக்கவேண்டும்". **முறுமுறுப்பும், தர்க்கிப்பும்** மிகுந்த ஆபத்தை விளைவிக்கும்.

நாம் முறுமுறுப்பையும் தர்க்கிப்பையும் தவிர்க்கிறபோது, நாம் **குற்றமற்றவர்களும் கபடற்றவர்களுமாக** (அதாவது நேர்மையானவர்களும் சூதுவாது இல்லாதவர்களுமாக) இருக்க முடியும். குற்றமற்றவர்கள் என்று சொல்லும்போது, ஒரு மனிதனுக்கு எதிராக எந்தக் குற்றத்தையும் நிலைநாட்ட முடியாது என்பதே பொருளாகும் (தானி. 6:4 -ஆம் வசனத்தைக் காண்க). **குற்றமற்ற** மனிதன் பாவம் செய்யக்கூடும், ஆனால் அவன் மன்னிப்புக் கேட்கிறான், அறிக்கை செய்கிறான், எங்கெல்லாம் அதைச் சரி செய்ய முடியுமோ அங்கெல்லாம் சீர்பொருந்துகிறான். இங்கு **கபடற்றவன்** என்று சொல்லப்பட்டிருப்பது நேர்மையான அல்லது வஞ்சகமில்லாத மனிதன் என்று பொருள்படும்.

**தேவனுடைய பிள்ளைகள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே மாசற்றவர்களாக இருக்க** வேண்டும். மாசற்ற வாழ்க்கையின் மூலமாக, இறைமக்கள் இந்த உலகமென்னும் இருள் சூழ்ந்த பின்னணியில் மிகத்தெளிவாகத் தனித்தன்மையுடன் பளிச்சிடுவார்கள்.

இந்தச் சிந்தனையானது, இருள் சூழ்ந்த இரவில் பிரகாசிக்கிற **சுடர்கள்** என்று அவர்களைக் குறித்துப் பவுல் சிந்திக்கும்படி வழிநடத்தியது, இரவு எந்த அளவிற்கு இருளாயிருக்கிறதோ அந்த அளவிற்குச் **சுடரானது** பிரகாசமாயிருக்கும் அல்லது தீப்பந்தத்தை ஏந்தி வருகிறவர்கள் பிரகாசமாயிருப்பார்கள். அவர்களால் ஒளியைப் படைக்க முடியாது. ஆனால் பிறர் அவர்களில் இயேசுவைக் காணும்படி, கர்த்தருடைய மகிமையை அவர்களால் பிரதிபலித்துக்காட்ட முடியும்.

**ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு** (உறுதியாக அல்லது முன்புறமாகப் பிடித்துக் கொண்டு). நாம் சுடர்களைப் போலப் பிரகாசிக்கிறவர்களாக இருக்கலாம், ஆனாலும் நம்முடைய பேச்சின் மூலமாகச் சாட்சி கூறாமல் இருப்பதற்கு அதைக் காரணம் காட்டக்கூடாது. நம்முடைய வாழ்க்கை மற்றும் பேச்சு, இவ்விரண்டு முறைகளிலும் நாம் சாட்சி கூற வேண்டும்.

இந்தச் செயல்களையெல்லாம் பிலிப்பியர் நிறைவேற்றுவார்களானால், **கிறிஸ்துவின் நாளில்** அப்போஸ்தலன் மகிழ்ச்சியோடு இருப்பதற்கு அது காரணமாக இருக்கும் என்பதை அவர்

அறிந்திருக்கிறார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கு மட்டும் அவர் பொறுப்புடையவர் அல்ல, ஒவ்வொருவரையும் கிறிஸ்துவுக்குள் நிறைவானவர்களாக நிறுத்த வேண்டியதும் அவருடைய பொறுப்பாகும் (கொலோ. 1:28).

**கிறிஸ்துவின் நாள்** என்பது அவருடைய வருகையையும், விசுவாசிகளின் ஊழியத்திற்கு தீர்ப்பு வழங்கப்படுதலையும் குறிக்கும் (1:6, 10). கர்த்தருடைய ஊழியத்தில் பிலிப்பியர் உண்மையுள்ளவர்களாக இருப்பார்களானால் அந்த நாளில் பவுலின் பிரயாசம் **வீணாகப் போகவில்லை** என்பது புலப்படும்.

## 4. கிறிஸ்துவின் சாயலுக்கு முன்மாதிரிகள் - பவுல் தீமோத்தேயு எப்பாப்பிரோதீத்து (2:17-30)

தாழ்மையான சிந்தை உடையவர் என்பதற்குக் கர்த்தராகிய இயேசுவே முதன்மையான எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார் என்று இதற்கு முந்தின பகுதியில் பவுல் விளக்கிக் கூறியிருக்கிறார். "அவர் தேவன், நாமோ அழிந்து போகிறவர்கள்" என்று எதிர்த்துக் கூற சிலர் ஏவப்படலாம். ஆகவே இப்பொழுது, கிறிஸ்துவின் சிந்தையை வெளிப்படுத்திக் காண்பித்த மூன்று மனிதர்களைப் பவுல் முன் மாதிரிகளாக நிறுத்துகிறார் - பவுல், தீமோத்தேயு, எப்பாப்பிரோதீத்து. கிறிஸ்து சூரியன் என்றால் இவர்கள் அந்தச் சூரியனின் மகிமையைப் பிரதிபலித்துக் காட்டும் சந்திரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இருண்ட உலகிலே ஒளிச் சுடர்களாக விளங்குகிறார்கள்.

**2:17** பிலிப்பியர் ஆற்றிய சேவையையும், தனது சேவையையும் விவரிக்கும்படி அப்போஸ்தலன் மிகவும் அழகிய உருவகத்தைப் பயன்படுத்துகிறார். யூதர்கள் மற்றும் புறச்சமயத்தார் ஆகியோரிடையே பொதுவாக வழக்கத்தில் இருந்த ஒரு நிகழ்ச்சியை இங்கு அவர் படவுருவாக விவரிக்கிறார். வார்க்கப்படுகின்ற **பானபலி** அல்லது ஒரு பலியானது செலுத்தப்படுகின்ற போது அதன்மேல் **வார்க்கப்படுகின்ற** பானம்; இதுவே இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட படவுருவம்.

இங்கே பிலிப்பியர் பலிசெலுத்துகிறவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அவர்களுடைய **விசுவாசமே பலி**. பவுல் இங்கு பானபலியாக இருக்கிறார். அவர் பிலிப்பியருடைய **விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும்** இரத்த சாட்சியாக வார்க்கப்பட்டுப் போவதற்கு மிகுந்த மகிழ்ச்சி உடையவராக இருந்தார்.

திரு. வில்லியம்ஸ் விளக்குகிறார்:

> பிலிப்பியருடைய சுயதியாகத்தையும் அவர்களுடைய ஊக்கத்தையும் தன்னுடைய தியாகத்தோடும் ஊக்கத்தோடும் அப்போஸ்தலன் இங்கு ஒப்பிட்டு அவர்களுடையதைப் பெரிதுபடுத்தி, தன்னுடையதைச் சிறிதாக்குகிறார். நற்செய்தியின் பொருட்டு அவர்களும் அவரும் தங்களுடைய உயிரையே கொடுக்கிறார்கள், ஆனால் அவர்களுடைய செயலை அவர் மிகப்பெரிய பலியாகக் கருதுகிறார், தன்னுடையதையோ அதன்மேல் ஊற்றப்படுகிற பானபலியாகவே கருதுகிறார். இந்த அழகிய உவமையின் மூலமாக வெகுவிரைவில் அவர் இரத்த சாட்சியாக மரணம் அடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று கூறுகிறார்.[13]

இதுவே அவருக்கு நியமிக்கப்பட்ட பங்காக இருக்குமென்றால், அவ்வாறே நடக்கட்டும் என்று அவர் **மகிழ்ந்து சந்தோஷப்படுவார்**.

**2:18 இதனிமித்தம்** பிலிப்பியரும் பவுலுடன் சேர்ந்து **மகிழ்ந்து சந்தோஷப்படவேண்டும்**. அவர் இரத்தசாட்சியாக மரணமடையக் கூடிய நிலை ஏற்படுமென்று, அதனை அவர்கள் சோக நிகழ்ச்சியாக எதிர்நோக்கக் கூடாது. மாறாக அவர் அவ்வாறு வீடுபேறு அடைவதைக் குறித்து அவரை அவர்கள் வாழ்த்த வேண்டும்.

**2:19** இதுவரை, தன்னையே தியாகமாகச் செலுத்துகிற அன்பிற்குப் பவுல் இரண்டு எடுத்துக்காட்டுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார் - கர்த்தராகிய இயேசு மற்றும் பவுல். இருவரும் தங்களுடைய உயிரை மரணத்தில் ஊற்ற மனமுவந்து முன்வந்தார்கள். தன்னலமின்மைக்கு மேலும் இரண்டு மாதிரிகள் - **தீமோத்தேயு, எப்பாப்பிரோதீத்து.**

கூடியவிரைவில் **தீமோத்தேயுவைப்** பிலிப்பி பட்டணத்துக்கு **அனுப்பவும்**, அவர்களைக் குறித்த செய்தியைக் கேட்டு **மனத்தேறுதல்** அடையவும் கூடுமென்று அப்போஸ்தலன் நம்பிக்கை கொண்டிருந்தார்.

**2:20** பிலிப்பி பட்டணத்து விசுவாசிகளின் ஆவிக்குரிய நிலையைக் குறித்து அக்கறை கொண்ட பவுலின் உடன் ஊழியர்களிலேயே தீமோத்தேயு தனிச்சிறப்பு வாய்ந்தவராக இருந்தார். பவுல் தீமோத்தேயுவைக் குறித்துக் கொண்டிருந்த அதே நம்பிக்கையோடு அவர்களிடத்திற்கு அனுப்புவதற்கு **வேறு ஒருவரும்** அங்கு இல்லை. தீமோத்தேயுவைப் போல ஓர் இளைஞனுக்குக் கிடைத்த மிக உயர்வான புகழுரையாக இது விளங்குகிறது!

**2:21** மற்றவர்களோ **தங்களுக்குரிய** தனிப் பட்ட விருப்பங்கள் என்னும் கடலால் சூழப்பட்ட வர்களாக மாறிப்போய்விட்டார்கள். அவர்கள் **கிறிஸ்து இயேவுக்கு உரியவற்றைத்** தேடு வதற்கு நேரமற்றபடி இந்த உலக வாழ்க்கையின் நாட்டங்களில் தங்களது எல்லா நேரத்தையும் செலவழித்தார்கள். இன்றைய நாட்களில் வீடு, குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி, இன்னும் பல பொருட்களை உலகமாக்கிக் கொண்ட நமக்கு இங்கே ஒரு பாடம் இருக்கிறதல்லவா? (லூக்கா 8:14 -ஆம் வசனத்தைக் காண்க).

**2:22** தீமோத்தேயு விசுவாசத்தில் அப்போஸ் தலனுடைய குமாரனாக இருந்தார். மேலும் அவர் அந்தப் பங்கை மெய்யான உண்மையோடு நிறைவேற்றினார். **அவருடைய உத்தம குணத் தையும்** அவருடைய உண்மையான தகுதியை யும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ஒரு குமாரன் எவ்விதமாகத் தன்னுடைய **தகப்பனோடு** சேர்ந்து உழைப்பானோ, அதே விதமாக சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் தீமோத்தேயு பவுலோடு இணைந்து **ஊழியஞ்செய்தார்.**

**2:23,24** இராயனுக்கு அவர் விடுத்த முறை யீட்டிற்கான பதில் என்னவென்பதை அறிந்த வுடனே, தான் தகுதியான மனிதன் என்று மெய்ப் பித்த தீமோத்தேயுவைப் பிலிப்பியரிடமாய் அனுப்ப வேண்டுமென்று பவுல் எண்ணங்கொண் டிருந்தார். **ஆகையால் என் காரியங்கள் இன்ன படி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே** என்னும் சொற்களில் இந்த அர்த்தத்தையே அப்போஸ் தலன் கொண்டிருந்தார் என்பதில் ஐயம் இல்லை. அவருடைய முறையீட்டிற்கு வெற்றி கிடைக்கும் என்றும் அவர் சிறைச்சாலையிலிருந்து விடுதலை பெற்றவராகப் பிலிப்பியரிடமாய் மீண்டும் ஒரு முறை செல்ல முடியும் என்றும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

**2:25** அடுத்தபடியாக, கிறிஸ்துவின் சிந்தையை **எப்பாப்பிரோதீத்துவிடம்** காண்கிறோம். கொலோ செயர் 4:12 -இல் காணப்படும் எப்பாப்பிரா என்ற மனிதனும் இவரும் ஒருவர்தானா என்பதை நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது. அது எதுவானாலும், இவர் பிலிப்பி பட்டணத்தில் வாழ்ந்தவர், அங்கிருந்த சபைக்குச் செய்தியை எடுத்துச் சென்றவரும் இவரே.

இவரைக் குறித்து (1) **என் சகோதரன்;** (2) என் **உடன் வேலையாள்;** (3) என் **உடன் சேவ கன்** என்று பவுல் பேசுகிறார். முதல் பட்டம் அன் பைக் குறித்தும், இரண்டாவது கடினமான உழைப்பைக் குறித்தும், மூன்றாவது போராட் டத்தைக் குறித்தும் பேசுகிறது. மற்றவர்களுடன் சேர்ந்து அவர் உழைக்கக் கூடியவராக இருந் தார்; கிறிஸ்தவ வாழ்க்கையிலும் ஊழியத்திலும் இது மிகவும் இன்றியமையாத பண்பு என்பது நிச்சயம். யாரையும் சார்ந்திராமல் தன்னுடைய சொந்த வழியில் தன்னந்தனியாக ஒரு விசுவாசி பணிபுரிவதென்பது ஒருநிலை. ஆனால் மற்றவர் களோடு இணைந்து உழைப்பதில், "பின்பாட்டுப் பாடுவது", தனிப்பட்டவர்களுடைய கருத்து வேறுபாடுகளுக்கு இடங்கொடுப்பது, தன்னுடைய சொந்தக் கருத்துகளையும் விருப்பங்களையும் குழுவின் நலன் கருதி விட்டுவிடுவது ஆகிய இவையாவும் கடினமானவை. நாம் **உடன் வேலையாட்களாக உடன் சேவகர்களாக** விளங்குவோம்.

மேலும், அவரைக் குறித்து **உங்கள் ஸ்தானா பதியும், என் குறைச்சலுக்கு உதவி செய்த வரும்** என்று பவுல் பேசுகிறார். அவருடைய ஆளுமை குறித்து, பயனுடைய குறிப்பு ஒன்றை இது தருகிறது. அவர் சாதாரண அல்லது மிகவும் தாழ்வான வேலையையும் செய்ய விருப்ப முடையவராக இருந்தார். இன்றைய நாட்களில் பலர் வெளிப்படையானதும், இன்பமானதுமான வேலைகளை மட்டும் செய்ய விருப்பங் கொண் டிருக்கிறார்கள். ஆனால் சிலர் வழக்கமான வேலைகளை அமைதியாகவும் மிகத் திறம்பட வும் செய்கிறார்கள், அவர்களுக்காக நாம் எவ்வளவு நன்றிக்கடன்பட்டிருக்கிறோம். கடின மான வேலையைச் செய்வதில் எப்பாப்பிரோ தீத்து தன்னையே தாழ்த்திக்கொண்டார். ஆனால் அவருடைய உண்மையுள்ள சேவை யைக் குறித்து வருங்காலச் சந்ததி படிக்க வேண் டும் என்ற நோக்கத்தோடு அதைக் குறித்த விவரத்தை பிலிப்பியர் 2 -ஆவது அதிகாரத்தில் இடம்பெறச்செய்து தேவன்அவரை உயர்த் தினார்.

**2:26** பவுலுக்கு உதவிசெய்யும் பொருட்டு 700 கல் தொலைவு பயணம் மேற்கொள்ளும்படி எப்பாப்பிரோதீத்துவைப் பரிசுத்தவான்கள் அனுப்பிவைத்தார்கள். உண்மையுள்ள ஸ்தானா பதி அதன் நிமித்தம் நோய்வாய்ப்பட்டார்; உண் மையில் அவர் மரணத்திற்கு மிக அருகில் சென்றுவிட்டார். இது அவருக்குப் பெரும் கவ லையை ஏற்படுத்திவிட்டது. அந்தக் கவலை நோயினால் ஏற்பட்டதல்ல. மாறாக அதைக் குறித் துப் பரிசுத்தவான்கள் கேள்விப்படுவார்களே என்பதுதான் அவருடைய கவலைக்குக் காரணம்.

அவர்கள் அதைக்குறித்துக் கேள்விப்பட்டால், இவ் விதமாகத் தொலைதூரப் பணயத்தை மேற்கொள் ளச் செய்து, அவருடைய உயிருக்கே அது ஆபத் தாகப் போய்விட்டதே என்று அவர்கள் தங்கள் மீதே குற்றஞ்சாட்டி, தம்மையே கடிந்துகொள் வார்கள் என்று எண்ணியவராக அவர் கவலை கொண்டார். எப்பாப்பிரோதீத்துவினிடம் நாம் நிச்சயமாக, "தன்னிடத்திலிருந்து தானே ஈடுபாடு அற்றிருக்கும் இருதயத்தைக்" காண்கிறோம்.

தங்களுடைய நோய்களைக் குறித்தும், நட வடிக்கைகளைக் குறித்தும் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கிற வழக்கத்தைப் பல கிறிஸ்தவர் கள் கொண்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரிய நிலையாகும். பெரும்பாலான நேரங்களில் இவை சுய வாழ்வுப் பாவங்களோடு இணைந்த வெளிப் பாடுகளாகவே இருக்கின்றன: தன்மீது பரிவு கொள்ளுதல், தன்னைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருத்தல், தன்னைப் பற்றியே விளம்பரம் செய்தல்.

**2:27** எப்பாப்பிரோதீத்து **வியாதிப்பட்டு மரணத் திற்குச் சமீபமாயிருந்தார், ஆகிலும் தேவன் அவருக்கு இரங்கினார்**. தெய்வீக சுகமளிப்ப தைப் பற்றிய வெளிச்சத்தை இந்தப் பகுதி தருவ தால், இது மிகவும் நமக்குப் பயனுடையதாக விளங்குகிறது:

1. முதலாவதாக, நோய் எப்பொழுதும் பாவத் தின் விளைவாக உண்டாவதில்லை என்று இங்கு கற்கிறோம். தன்னுடைய கடமையை உண்மையாய் நிறைவேற்றிய காரணத் தினால் நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதனை இங்கு காண்கிறோம் (வச. 30 -ஐப் பார்க்க வும்). **".... கிறிஸ்துவின் ஊழியத்தினிமித் தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தார்."**

2. இரண்டாவதாக, எல்லா நேரங்களிலும் உடனடியாகவும் அற்புதமான முறையிலும் குணப்படுத்த தேவன் சித்தம் கொண்டி ருப்பதில்லை என்று நாம் கற்கிறோம். எப் பாப்பிரோதீத்துவின் சுகவீனம் நீண்டநாட் கள் இருந்ததாகவும் அவர் கொஞ்சம் கொஞ்சமாகக் குணமடைந்ததாகவுமே தோன்றுகிறது (2 தீமோ. 4:20; 3 யோவான் 2 - ஆகிய வசனங்களையும் காண்க).

3. மூன்றாவதாக, குணமடைவது தேவனுடைய இரக்கமேயொழிய, அதனை நம்முடைய உரிமையாக அவரிடத்தில் கேட்கமுடியாது என்று நாம் கற்கிறோம்.

எப்பாப்பிரோதீத்துவினிடத்தில் மட்டுமின்றி தன்னிடத்திலும் **தேவன் இரக்கம்** பாராட்டின தாகப் பவுல் கூறுகிறார். தனக்குத் **துக்கத்தின் மேல் துக்கம் உண்டாகாதபடிக்கு** தேவன் இரங் கினதாகப் பவுல் இங்கு தொடர்ந்து கூறுகிறார்.

தான் சிறை வைக்கப்பட்டிருந்ததைக் குறித்து அப்போஸ்தலன் ஏற்கனவே மிகுந்த துக்கம் உடையவராயிருந்தார். எப்பாப்பிரோதீத்து இறந்து போயிருந்தால் அவருக்கு இன்னும் கூடுதலாகத் துக்கம் உண்டாயிருக்கும்.

**2:28** இப்பொழுது எப்பாப்பிரோதீத்து நன்கு குணமடைந்துவிட்டதன் காரணமாக பவுல் **அவரை அதிசீக்கிரமாய்** வீட்டிற்கு **அனுப்பி விட்டார்**. மீண்டும் தங்களிடமாய் அன்பான சகோ தரன் வந்து சேர்ந்ததன் காரணமாக பிலிப்பிய ருக்கு **மிகுந்த சந்தோஷம்** உண்டாயிருக்கும், அதன் நிமித்தம் பவுலின் துக்கம் குறைந் திருக்கும்.

**2:29** அவர்கள் எப்பாப்பிரோதீத்துவை மகிழ்ச்சி யோடு ஏற்றுக்கொள்வது மட்டுமின்றி, அவர்கள் அந்தப் பிரியமான தேவனுடைய மனிதனைக் **கனப்படுத்தவும்** வேண்டும். கர்த்தருடைய ஊழி யத்திலே ஈடுபடுவதென்பது மிகுந்த மேன்மை யானதும் நற்பேறும் ஆகும். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு மிகவும் அறிமுகமானவர்களாக இருந்தாலும்கூட, பரிசுத்தவான்கள் இவ்வுண் மையை உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**2:30** முன்னர் குறிப்பிட்டதுபோல, எப்பாப் பிரோதீத்துவின் சுகவீனத்திற்கு அவர் **கிறிஸ்து வுக்காக** ஓய்வின்றி உழைத்த உழைப்பே நேரடி யான காரணமாகும். கர்த்தருடைய பார்வையில் இது விலைமதிப்பு மிகுந்த ஒன்றாகும். கர்த்தருக் காக *எரிந்து சாம்பலாவது, துருப்பிடித்துப் போவதைக் காட்டிலும் சிறந்தது*. நோயினா லும் விபத்தினாலும் இறந்துபோய் அப்படிப்பட்ட வர்களுடைய கணக்கில் ஒருவராக இருப்பதைக் காட்டிலும், இயேசுவுக்காகத் திருப்பணி ஆற்றி அந்தச் சேவையில் இறந்துபோவது மேல்.

"நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய ஊழியத் திலே உங்கள் குறைவை நிறைவாக்கும்படி" என்னும் சொற்றொடர், பிலிப்பி பட்டணத்தார் சேவை செய்வதை விட்டுவிட்டார்கள், அவர்கள் செய்ய வேண்டியதை எப்பாப்பிரோதீத்து நிறை வேற்றினார் என்னும் பொருளைத் தருகிறதா? இது பொருளாக இருக்காது என்றே தோன்று கிறது, ஏனெனில் முதலாவதாக, பிலிப்பி பட்டணத்

தில் இருந்த பரிசுத்தவான்கள்தான் எப்பாப்பிரோ தீத்துவைப் பவுலிடம் அனுப்பியவர்கள்.

அவர்கள் யாவரும் ரோமாபுரிக்குச் சென்று அப்போஸ்தலனுக்கு நேரடியாக உதவி செய்ய முடியவில்லை. ஏனெனில் அவர்கள் இருந்த இடம் ரோமாபுரியில் இருந்து வெகு தொலைவில் இருந்தது. இதனையே அவர்கள் அவருக்குச் செய்ய வேண்டிய ஊழியம் என்று அவர் குறிப் பிட்டிருப்பதாக நாம் கருதுகிறோம். அவர்கள் நேரடி யாக வந்து செய்ய முடியாததை அவர்களுடைய பிரதிநிதியாக எப்பாப்பிரோதீத்து செய்தார் என்று பவுல் இங்கு கூறுகிறாரேயொழிய அவர் பிலிப் பியரைக் கடிந்துகொள்ளவில்லை.

## 5. கள்ளபோதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை (3:1-3)

**3:1 மேலும் (கடைசியாக), என் சகோதரரே** என்னும் சொற்கள் இந்த மடலை பவுல் முடிக்கப் போகிறார் என்னும் பொருளைத் தருகிறதில்லை. "எஞ்சிய விசயங்களைக் குறித்து ..." என்பதே இந்தச் சொற்களின் எழுத்தின்படியான பொருளா கும். இதே சொற்கள் மீண்டும் 4:8 -ஆம் வசனத் தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அவர்கள் **கர்த்தருக்குள் சந்தோஷப்பட** வேண்டுமென்று அவர்களுக்குப் பவுல் புத்திமதி கூறுகிறார். சூழ்நிலைகள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும், கிறிஸ்தவன் எப்பொழுதும் கர்த்த ருக்குள் உண்மையான மகிழ்ச்சியைக் கண்ட டையக் கூடியவனாக இருக்கிறான். "அவனுடைய அனைத்துப் பாடல்களுக்கான ஆதாரமும் உயர விண்ணகத்திலிருக்கிறது." அவனிடத்திலிருந்து முதலாவது இரட்சகரை அபகரித்துக்கொண்டா லொழிய உண்மையாக அவனுடைய மகிழ்ச் சியை எதனாலும் கொள்ளையிட முடியாது, ஆனால் இரட்சகரை அவனிடத்திலிருந்து கொள் ளையிடுவது என்பது இயலாத செயலாகும். இயற் கையான மகிழ்ச்சியானது, வேதனை, வருத்தம், நோய், ஏழ்மை, அவல நிகழ்ச்சி ஆகியவற்றின் மூலமாகப் பாதிக்கப்படும். ஆனால் கிறிஸ்தவனு டைய சந்தோஷம் வாழ்க்கையின் பெரிய அலை களுக்கு மேலாகச் சவாரி செய்கிறது. சிறைச் சாலையிலிருந்து பவுல் அறிவுரை வழங்குகிறார் என்னும் உண்மையே இதற்கு நிரூபணமாகக் காணப்படுகிறது. இவரைப் போன்ற மனிதரிடத் திலிருந்து வருகிற அறிவுரையை நாம் நிச்சய மாக ஏற்றுக்கொள்ளலாம்.

அவர் ஏற்கனவே எழுதியவற்றை மீண்டும் எழுதுவதற்கு வருத்தம் அடையவில்லை. ஏனெனில் அது பிலிப்பியருடைய பாதுகாப்பிற் கானது என்பதை அவர் அறிவார். தான் எழுதிய வற்றை அவர் எவ்வாறு மீண்டும் எழுதுகிறார்? **கர்த்தருக்குள் சந்தோஷமாக இருங்கள்** என்று அவர் வற்புறுத்தியதை இச்சொற்றொடர் குறிப் பிடுகிறதா? அல்லது பின்வரும் வசனங்களில் யூத மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டுமென்று வற் புறுத்துகிற மக்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர் எழுதியிருப் பதைக் குறிப்பிடுகிறதா? இரண்டாவது சொல்லப் பட்டதே சரியானது என்று நாம் கருதுகிறோம். இரண்டாவது வசனத்தில் மும்முறை **எச்சரிக்கை யாயிருங்கள்** என்னும் சொல்லை அவர் பயன் படுத்துகிறார். இவ்வாறு அவர் மீண்டும் மீண்டும் எழுதுவது அவருக்கு **வருத்தமல்ல**, ஆனால் அது அவர்களுக்கு உண்மையான பாதுகாப்பு ஆகும்.

**3:2** அவர்கள் **நாய்களுக்கு, பொல்லாத வேலையாட்களுக்கு** மற்றும் **சுன்னத்துக்கார ருக்கு** எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இந்த மூன்று சொற்களுமே ஒரே வகையான மனிதர் களின் கூட்டத்தையே பெரும்பாலும் குறிப்பிடு கின்றன. யூதமார்க்க நியாயப்பிரமாணத்திற்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என் றும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வ தாலும் சடங்குகளைச் செய்வதாலுமே நீதியைப் பெற முடியும் என்றும் வற்புறுத்திவந்த கள்ள போதகர்களையே இவை குறிப்பிடுகின்றன.

முதலாவது அவர்கள் **நாய்கள்**. வேதத்தின் படி நாய்கள் சுத்தமில்லாத விலங்குகள். யூதர் கள் புறவினத்தாரைக் குறிப்பிட இந்தப் பெய ரையே பயன்படுத்தினார்கள்! கிழக்கு நாடுகளில் நாய்கள் வீடுகள் அற்ற பிராணிகள், தெருக்களில் கட்டுப்பாடின்றி ஓடி உணவுக்காக அலைந்து திரிந்து கொண்டிருக்கும். இங்கே பவுல் அத னைத் தலைகீழாக மாற்றி, சபைகளைக் களங் கப்படுத்த வேண்டும் என்று முயன்று கொண்டி ருந்த யூத கள்ள போதகர்களைக் குறிக்க அச் சொல்லைப் பயன்படுத்துகிறார். அவர்கள் உண் மையாகவே வெளியே வாழ்ந்தவர்கள், சடங்கு களையும் பண்டிகைகளையும் சார்ந்துகொண்டு வாழ முயற்சி செய்தவர்கள், "விருந்துண்ண அமர்ந்திருக்கும்போது கீழே விழுந்த துணிக்கை களைப் பொறுக்குகிறவர்களாக" அவர்கள் செயல்பட்டார்கள்.

இரண்டாவதாக அவர்கள் **பொல்லாத வேலை யாட்கள்**. மெய்யான விசுவாசிகள் என்று அறிக்கை

செய்தவர்களாக, தங்களுடைய தவறான உப தேசங்களைப் பரப்பும்படி கிறிஸ்தவ ஐக்கியங் களுக்குள்ளாக அவர்கள் நுழைந்து செயல்பட் டார்கள். அவர்களுடைய வேலைகள் பொல்லாத விளைவையே உண்டுபண்ணின.

அடுத்ததாக, அவர்களைப் பவுல் **சுன்னத்துக் காரர்** என்று அழைக்கிறார். (*அங்கபங்கம்* என்னும் பொருள்தரக்கூடிய சொல் தமிழில் சுன் னத்துக்காரர் என்று மொழிபெயர்க்கப்பட்டுள் ளது.) விருத்தசேதனத்தைக்குறித்து அவர்கள் கொண்டிருந்த மனப்பாங்கைக் குறிப்பிட இந்த ஏளனச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருவன் இரட்சிப்பைப் பெற விருத்தசேதனம் பெறவேண் டும் என்று அவர்கள் கட்டாயப்படுத்தினார்கள் என்பதில் ஐயமில்லை. இதன் மூலமாக அவர்கள் கூறியதெல்லாம் சரீரப்பிரகாரமான, எழுத்தின் படியான விருத்தசேதனம் மட்டுமே ஆகும். இதனு டைய ஆவிக்குரிய பொருளைக் குறித்து அவர் கள் சிறிதளவும் பொருட்படுத்தவில்லை. விருத்த சேதனம் மாம்சம் அடையவேண்டிய மரணத் தைக் குறிக்கிறது. மாம்சீக உணர்வுகளுக்கு இடம்கொடுக்கக் கூடாது என்பதே இதன் பொரு ளாகும். எழுத்தின்படியான விருத்தசேதனத்தை அவர்கள் வலியுறுத்திய அதே நேரத்தில், மாம்சம் தன்னிச்சையாகச் செயல்பட முழு அனுமதி கொடுத்தார்கள். அந்த மாம்சமானது சிலுவை யில் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டுவிட்டது என்பதை அவர்கள் இதயபூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் வெறுமனே மாம் சத்தை அறுத்துப்போட்டவர்கள் என்றும், சடங் கிற்கும் அதில் மறைந்துள்ள பொருளுக்கும் உள்ள வேறுபாட்டை அறியக்கூடாதவர்கள் என்றும் இங்கு பவுல் கூறுகிறார்.

**3:3** இவற்றிற்கு எதிர்மாறான நிலையில், **நாமே** (மெய்யான விசுவாசிகள்) **விருத்தசேத னமுள்ளவர்கள்** என்று பவுல் கூறுகிறார். யூதப் பெற்றோருக்குப் பிறந்தவர்கள் அல்ல, அல்லது எழுத்தின்படி விருத்தசேதனம் செய்து கொண்ட வர்கள் அல்ல, மாறாக மாம்சம் எந்த நன்மையை யும் உண்டாக்குவதில்லை என்று உணர்ந்தவர் கள், மேலும் மனிதன் தன்னுடைய சொந்த முயற்சி யால் தேவனுடைய அங்கீகாரத்தின் புன்னகை யைப் பெறுவதற்கு எதையும் செய்ய முடியாது என்று உணர்ந்தவர்களே விருத்தசேதனமுள்ள வர்கள் ஆவார்கள். மெய்யான விருத்தசேதன முள்ளவர்கள் பற்றிய மூன்று குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளைப் பவுல் இங்கு தருகிறார்:

1. அவர்கள் **ஆவியினாலே** (அல்லது ஆவி யில்) **தேவனுக்கு ஆராதனை செய்கிறார் கள்**. அதாவது, அவர்களுடைய ஆராதனை மெய்யான ஆவிக்குரிய ஆராதனை, வெறு மனே சடங்குகள் அல்ல. மெய்யான ஆரா தனையில் விசுவாசத்தினாலே ஒருவன் தேவனுடைய சமுகத்திற்குள்ளாக நுழை கிறான்; தன்னுடைய அன்பையும், புகழ்ச் சியையும், தொழுகையையும், வணக்கத் தையும் பொழிகிறான். இதற்கு மாறாக உணர்ச்சிபூர்வமான ஆராதனை அழகிய கட்டடங்களாலும், ஒப்பனை மிகுந்த பொருட் களாலும், விரிவான சடங்குகளாலும், நுட்ப மான சித்திர வேலைகள் கொண்ட ஆசாரிய உடைகளாலும், மேலும் பல கிளர்ச்சி மிகுந்த செயல்களாலும் நிறைந்துவிளங்கும்.
2. மெய்யான விருத்தசேதனத்தின் அங்கத் தினர்கள் **கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிறார்கள்** (மகிமைப் படுத்துகிறார்கள்). அவர் ஒருவரே மேன்மை பாராட்டுவதற்கான ஆதாரமாகத் திகழ் கிறார். தனிப்பட்ட திறமைகளைக் குறித்தோ, பண்பாட்டுப் பின்னணியின் மேம்பாடு குறித்தோ, புனித ஆசாரங்களில் கொண் டுள்ள நம்பிக்கையிலோ அவர்கள் மேன்மை பாராட்ட மாட்டார்கள்.
3. அவர்கள் மாம்சத்தின்மேல் நம்பிக்கையா யிருப்பதில்லை. முதலாவது அவர்கள் தங்களுடைய மாம்சீக முயற்சியினால் இரட் சிப்பைப் பெறமுடியுமென்று நினைப்ப தில்லை. இரட்சிப்படைந்த பிறகும் அவர் கள் தங்களுடைய சொந்த வலிமையைச் சார்ந்திருப்பதில்லை. தங்களுடையமுந்தைய ஆதாமின் இயல்பில் அவர்கள் எந்த நன்மையையும் தேடுகிறதில்லை, ஆகவே அதில் எந்த நன்மையும் இல்லாததைக் கண்டு சோர்ந்து போகிறதுமில்லை.

### 6. பவுல் தனது பரம்பரை மேன்மைகளையும், தனிப்பட்ட சாதனைகளையும் கிறிஸ்துவுக்காகத் துறந்துவிடுதல் (3:4-14)

**3:4** கள்ள போதகர்கள் தங்களுடைய உலகீய மேன்மைகளைக் குறித்தும் சாதனைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டியதை எண்ணிப் பார்த்த பவுலின் உதடுகளில் புன்னகை மலர்ந் திருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் தற் பெருமையாகப் பேசமுடியுமென்றால், அவரால்

**அதிகமாய் அப்படிச் செய்ய முடியுமல்லவா!** அடுத்த இரண்டு வசனங்களில், ஒரு மனிதன் சாதாரணமாக மேன்மைபாராட்டுகிற இயல்பான திறமைகளில் அவர் எந்த அளவிற்கு முதன்மையான நிலையில் இருந்தார் என்பதை விவரித்துக் காட்டுகிறார். "மனிதர்களுடைய எதிர்காலக் கனவுகளைக் கிளர்ச்சிபெறச் செய்வதும், ஆர்வங்களைத் தூண்டிவிடுகிறதுமான அனைத்து வகை உயர்குடி மேன்மைகளும் அவருக்குச் சொந்தமாயிருந்தன என்றே தோன்றுகிறது."

இந்த இரண்டு வசனங்களைக் குறித்து, அர்னாட் என்பவர் கூறியிருப்பதாவது: "ஒரு சுய நீதியுடைய பரிசேயனின் விற்பனைக் கையிருப்புப் பொருட்களின் விவரப் பட்டியல் இங்கு வரைந்து தரப்பட்டுள்ளது. அழுக்கான கந்தைகளைக் காட்சிப் பொருளாக வைத்து அவற்றை வெளியரங்கமான கோலமாக்கிக் காட்டுவதில் அந்தப் பரிசேயன் பெருமகிழ்ச்சி அடைகிறான்."

குலமரபில் பெருமை (வச. 5); புராதன நம்பிக்கையில் பெருமை (வச. 5); செயல்நடவடிக்கையில் பெருமை (வச. 6); நன்னடத்தையில் பெருமை (வச. 6) ஆகியவற்றைக் குறித்து அப்போஸ்தலன் பேசுகிறதை நீங்கள் கவனித்திருப்பீர்கள்.

**3:5** பவுலின் இயல்பான மேன்மைகளும், உலகீய மேன்மைகளும் இங்கு பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன.

**எட்டாம்நாளில் விருத்தசேதனமடைந்தவர்** - பிறப்பின்படி அவர் யூதர். அவர் இஸ்மவேல் இனத்தைச் சேர்ந்தவரோ யூதமார்க்கத்திற்கு மதமாற்றம் பெற்றவரோ அல்லர்.

**இஸ்ரவேல் வம்சத்தார்** - தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பூமிக்குரிய மக்களில் ஒருவர்.

**பென்யமீன் கோத்திரத்தார்** - உயர்குடித் தலைவர் என்று கருதப்பட்ட கோத்திரம் (நியா. 5:14), இஸ்ரவேல் நாட்டிற்கு முதல் அரசனைக் கொடுத்த கோத்திரம்.

**எபிரெயரில் பிறந்த எபிரெயர்** - இஸ்ரவேல் நாட்டின் பூர்வீகமொழி, மரபு மற்றும் வழக்காறு ஆகியவற்றைக் கைவிடாமல் பின்பற்றிவந்த பிரிவினையைச் சேர்ந்தவர்.

**நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்** - பரிசேயர் புராதன நம்பிக்கையில் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். ஆனால் சதுசேயரோ உயிர்த்தெழுதல் குறித்த கோட்பாட்டைக் கைவிட்டுவிட்டார்கள்.

**3:6 பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தியவர்** - கிறிஸ்தவர்கள் என்னும் "தவறான சமய உட்பிரிவை" முற்றிலுமாக ஒழித்துவிட வேண்டுமென்று அவர் முயற்சி செய்தபோது அதனை தேவனுக்கென்று ஆற்றுகிற கடமை என்றே பவுல் மனமார நம்பினார். கிறிஸ்தவத்தில் தன்னுடைய சொந்தச் சமயத்திற்கு ஆபத்து ஏற்படும் என்று கண்டவராக அதனை அவர் அழித்துப்போட வேண்டுமென்று நினைத்தார்.

**நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவர்** - நியாயப்பிரமாணத்தை நிறைவாகக் கைக்கொண்டு வந்தார் என்பது இதன் பொருளன்று. அவ்வாறு அவர் கைக்கொள்ளவில்லை என்று ரோமர் 7:9,10 ஆகிய வசனங்களில் அவரே அறிக்கை செய்கிறார். அவர் தன்னைக் குறித்துக் **குற்றஞ்சாட்டப்படாதவர்** என்று கூறுகிறாரேயொழிய, பாவமில்லாதவர் என்று சொல்லவில்லை. நியாயப்பிரமாணத்தின் எந்தவொரு பகுதியை மீறினாலும், அந்தந்த நேரங்களிலெல்லாம் அதற்குரிய பலியைச் செலுத்தத் தவறவில்லை என்று நாம் முடிவு செய்ய மட்டுமே முடியும். யூதமார்க்கத்தின் விதிகளை எழுதியிருக்கிற பிரகாரமாகக் கடைப்பிடிப்பதில் பிடிவாதமாய் இருந்தவர் என்றும் இதனை வேறுவகையாகச் சொல்லலாம்.

இவ்வாறாக, பிறப்பு, குடிவழி மரபு, புராதன நம்பிக்கை,வைராக்கியம், தனிப்பட்ட நீதி ஆகிய வற்றில் கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் சிறப்பு வாய்ந்த மனிதராக தர்சு நகரத்துப் பவுல் விளங்கினார்.

**3:7** ஆனால் இப்பொழுது அப்போஸ்தலன் மிகப்பெரிய அளவில் சுய மேன்மையை மறுத்துரைக்கும் அறிக்கையைச் செய்கிறார். இங்கே அவருடைய சொந்த "லாப நஷ்டக் கணக்கை" நம்மிடம் விவரிக்கிறார். ஒருபுறம் அவர் மேலே சொல்லப்பட்டுள்ள குறிப்புகளைப் பட்டியலிடுகிறார், இவை யாவும் அவருக்கு **லாபமானவையாக** இருந்தன. இன்னொருபுறம் **கிறிஸ்து** என்னும் ஒரே பெயரை எழுதுகிறார். கிறிஸ்து வினிடத்தில் அவர் கண்டடைந்த பெருஞ்செல்வத்தோடு ஒப்பிடுகையில் மேலே கூறப்பட்டவை ஒன்றுமற்றவையாகக் காணப்படுகின்றன. அவற்றை அவர் **கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினார்.** இது குறித்து, கைகிங் என்பார் கூறுவதாவது: "எல்லா நிதிபரிபாலனத்திலும் லாபம், எல்லாவித உலகப்பொருட்களிலும்

லாபம், எல்லாவிதச் சரீரப்பிரகாரமான நிலை யிலும் லாபம், எல்லாவித அறிவுக்கூர்மையிலும் லாபம், எல்லா ஒழுக்கநெறியிலும் லாபம், எல்லா வித மத ஒழுங்குகளிலும் லாபம் - இந்த எல்லா லாபங்களையும் மிகப்பெரிதான லாபத்தோடு ஒப்பிட்டுக் காண்கையில் இவை யாவும் உண்மை யில் லாபமற்றவையே." [14]

இவை எல்லாவற்றிலும் நம்பிக்கை கொண்டி ருந்த காலம் வரையிலும் இவரால் இரட்சிப்பைப் பெற்றிருக்க முடியாது. அவர் இரட்சிக்கப்பட்ட அதே தருணத்தில், அவர் கர்த்தருடைய மகிமை யைக் கண்டதால் இவை யாவும் அவருக்கு ஒன்று மற்றவை என்றே காணப்பட்டன, மற்ற மகிமைகள் மகிமையாகவே தோற்றமளிக்கவில்லை.

**3:8** இரட்சிப்பின் பொருட்டு, பவுல் கிறிஸ்து வினிடமாய் வருகைபுரிந்தபோது, **கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன் மையோடு** ஒப்பிட்டுப் பார்த்து, மேலே சொல்லப் பட்டுள்ளவை தகுதியற்றவை என்று உணர்ந்து, **எல்லாவற்றையும்** ஒதுக்கித் தள்ளினார். **அறி கிற அறிவின் மேன்மை** என்று இங்கு குறிப் பிடப்பட்டிருப்பது எபிரெய மொழி வழக்கமாகும். இதனை "மேன்மையான அறிவு" என்றோ, "அறி வதனால் உண்டாகிற இணையற்ற மேன்மை" என்றோ கூறலாம்.

குலமரபு, நாட்டின்மேன்மை, பண்பாடு, புகழ், கல்வி, சமயம், தனிப்பட்ட சாதனைகள் இவை யாவும் மேன்மை பாராட்டுவதற்குக் காரண மானவை என்று கூறி பவுல் யாவற்றையும் புறம்பே தள்ளினார். உண்மையில், இவை யாவற்றையும் **கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்** பொருட்டு சாணத்தைப் போலவும் **குப்பையைப்** போலவும் அவர் எண்ணினார் (வச. 9,11).

இந்த வசனங்களில் பவுல் நிகழ்கால வினைச் சொற்களைப் பயன்படுத்தியிருந்தாலும், அவர் முதன்மையாக மனமாற்றம் பெற்ற தருணத் தையே எண்ணிப்பார்க்கிறார். கிறிஸ்துவை ஆதா யப்படுத்திக்கொள்ளும்படிக்கு, எவற்றை அதிக மேன்மையானவை என்று எப்பொழுதும் கருத வேண்டுமென்று அவருக்குச் சொல்லிக்கொடுக் கப்பட்டிருந்தனவோ அவற்றினின்று அவர் தன்னு டைய முகத்தைத் திருப்பிக்கொண்டார். அவர் கிறிஸ்துவை ஆதாயப்படுத்த வேண்டுமென்றால், "போய் வா" என்று அவருடைய தாயின் மதத்திற் கும், தந்தையின் மரபு உரிமைக்கும், தன்னு டைய சொந்த சாதனைகளுக்கும் விடைதர வேண்டியவராக இருந்தார்.

அவ்வாறே அவர் செய்தார்! யூதமார்க்கம் இரட்சிப்பிற்கானது என்னும் எண்ணத்திலிருந்து அவர் முற்றிலுமாகத் தனது தொடர்பை அறுத்துக் கொண்டார். அவ்வாறு செய்தபோது அவருடைய உறவினர்களால் வாரிசு உரிமைகளை இழந் தார், முந்தைய நண்பர்களால் கைவிடப்பட்டார், அவருடைய உடன் நாட்டினரால் துன்புறுத்தப்பட் டார். அவர் கிறிஸ்தவராக ஆனபோது எழுத்தின் படி **எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டார்** (வச. 11).

எட்டாவது வசனம் நிகழ்காலத்தில் அமைந் திருப்பதால் பவுல் இன்னமும் கிறிஸ்துவை ஆதா யப்படுத்த முயற்சி செய்வது போலத் தோன்று கிறது. அவர் முதன்முதல் எப்பொழுது கிறிஸ்து வைத் தனது கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக் கொண்டாரோ அப்பொழுதே அவர் கிறிஸ்துவை வெற்றிகொண்டுவிட்டார். ஆனால் நிகழ்கால வாக்கிய அமைப்பானது அவர் இன்னமும் அதே மனப்பான்மை உடையவராக இருக்கிறார் என்ப தைச் சுட்டிக்காட்டுகிறது. கர்த்தராகிய இயேசுவை அறிகிற அறிவின் மதிப்போடு பிற மேன்மைகளை ஒப்பிட்டுப் பார்த்த பவுல் அவை யாவற்றையும் குப்பையாகவே இன்னமும் கருதிக்கொண்டிருக் கிறார். "கிறிஸ்துவே எனக்கு ஆதாயமாகத் திகழவேண்டும்" என்பதே அவருடைய இருதயத் தின் வாஞ்சையாக இருந்தது. பொன்னோ, வெள் ளியோ, சமயப் புகழோ அல்ல, கிறிஸ்துவே அவருக்கு ஆதாயம்.

**3:9 கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர் என்று காணப்படும்படிக்கு.** கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறவராகத் தான் காணப்பட வேண்டும் என்று அவர் இன்னமும் முயற்சி செய்து கொண்டி ருப்பதாகவே இந்த வசனத்தில் தோன்றுகிறது. அவர் இரட்சிக்கப்படுவதற்கு முன், அவரை எதிர்கொண்ட மிகப்பெரிய தீர்மானம் செய்ய வேண்டிய தருணத்தை அவர் பின்னோக்கிப் பார்த்தார் என்பதே உண்மை. தன்னுடைய சொந்த முயற்சியினால் இரட்சிப்பைச் சம்பாதிக்க வேண்டும் என்னும் எண்ணத்தை உதறித்தள்ளி விட்டு, வெறுமனே கிறிஸ்துவை விசுவாசிக்க அவர் விருப்பம் கொண்டாரா? என்ன முடிவு செய்ய வேண்டுமென்பதை அவர்முடிவு செய்து விட்டார்.கிறிஸ்துவுக்குள் இருக்கிறவராகக் காணப்படும் பொருட்டு, மற்ற எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டார். கர்த்தராகிய இயேசுவை அவர் விசுவாதித்த அந்தத் தருணத்திலேயே, தேவனுக்கு முன்பாக அவர் புதியதொரு தகு நிலையைப் பெற்றார். அதன் பிறகு அவர்

ஆதாமின் பாவமுள்ள பிள்ளையாகக் காணப்பட வில்லை. இப்பொழுதோ, பிதாவாகிய தேவனுக்கு முன்பாகக் கர்த்தராகிய இயேசு என்னென்ன நன்மைகளை அனுபவித்துக்கொண்டிருக் கிறாரோ அவை யாவற்றையும் அனுபவிக்கிற வராக இவர் கிறிஸ்துவுக்குள் காணப்பட்டார்.

அதுபோலவே நியாயப்பிரமாணத்தைக் கைக் கொள்வதினாலே அடைய வேண்டுமென்று விரும்பிய அவருடைய சொந்த நீதியாகிய அழுக் கான கந்தைகளைப் புறக்கணித்து விட்டு, இரட் சகரை ஏற்கிற ஒவ்வொருவர் மேலும் அருளப்படு கிற **தேவனுடைய நீதியை** அவர் தெரிந்து கொண்டார். இங்கே நீதியானது உடைக்கு அல்லது போர்வைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. தேவனுடைய தயவைப் பெறும்படி அவருக்கு முன்பாக நிற்பதற்கு மனிதனுக்கு நீதி தேவையா யிருக்கிறது. ஆனால் மனிதனால் அதை உண் டாக்க முடியாது. ஆகவே, யாரெல்லாம் தம்மு டைய குமாரனைக் கர்த்தரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ அவர்களுக் கெல்லாம் தேவன் கிருபையினாலே தம்முடைய சொந்த நீதியைத் தருகிறார். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை (கிறிஸ்துவை) **தேவன்** நமக்காகப் பாவமாக்கினார்"(2 கொரி. 5:21).

பவுல் இன்னமும் தேவனுடைய நீதியைப் பெறவில்லை என்னும் பொருளை எட்டு மற்றும் ஒன்பது ஆகிய வசனங்கள் தருகிறதில்லை என் பதை நாம் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்பு கிறோம். இதற்கு மாறாக, அவர் தமஸ்குவுக்குச் சென்றபோது அந்த நெடுஞ்சாலையில் புதிய பிறப்பை அடைந்த தருணத்திலேயே, அது அவரு டைய உடைமைப் பொருளாயிற்று. ஆனால் இந்த நிகழ்கால வாக்கிய அமைப்பு, அந்த முக் கியமான நிகழ்ச்சி பவுலின் வாழ்க்கையில் தொடர்ந்து நிலை கொண்டிருக்கிறது என்றும், அவர் புறக்கணித்துத் தள்ளிய எல்லாவற்றையும் விட கிறிஸ்து மிகுந்த மேன்மையுடன் இருக் கிறார் என்னும் எண்ணம் இன்னும் அவரை ஆட் கொண்டிருக்கிறது என்றும் சுட்டிக்காட்டுகிறது.

**3:10** நாம் இந்த வசனத்தைப் படித்துக்கொண் டிருக்கையில், அப்போஸ்தலனுடைய வாழ்க்கை யின் உணர்ச்சிபூர்வமான நிலையின் முதன்மை யான நிகழ்வினிடமாய் வந்திருக்கிறோம். "கிறிஸ்து வைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண் டும் என்னும் ஆன்மாவின் நாட்டம்" என்று இத னைத் திருவாளர் F. B. மேயர் கூறுகிறார்.

அவ்வப்போது இந்தப் பகுதியைத் "தத்து வார்த்தப்படுத்தி" பொருள் கூறப்படுகிறது. அதன் படி பாடுகள், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய சொற்களுக்கு எழுத்தின்படியான பொருள் தரப்படுவதில்லை. மாறாக, சில குறிப்பிட்ட ஆவிக் குரிய அனுபவங்களை விவரித்துச் சொல்ல இந்தச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த அனுபவங்களாவன: மனவேதனை, சுயத்திற்கு மரணமடைதல், உயிர்த்தெழுந்த வாழ்வை வாழ்ந்துகாட்டுவது போன்றவை. ஆனால் இந்தப் பகுதிக்கு எழுத்தின் பிரகாரமாகவே பொருள் கொள்ள வேண்டுமென்றே நாம் கருதுகிறோம். கிறிஸ்து வாழ்ந்த படியே தானும் வாழவேண்டும் என்று பவுல் கூறுகிறார். இயேசு பாடுகள் அனுப வித்தாரா? பவுலும் பாடுகள் அனுபவிக்க விரும்பு கிறார். இயேசு மரணம் அடைந்தாரா? அப்படி யானால் கிறிஸ்துவுக்காக ஆற்றும் திருப்பணி யில் பவுலும் இரத்த சாட்சியாகச் சாக விரும்பு கிறார். மரித்தோரிலிருந்து இயேசு உயிரோடு எழுந்தாரா? அப்படியானால் பவுலும் அதே விதமாக நிகழ வேண்டுமென்று விரும்புகிறார். எஜமானனைக் காட்டிலும் வேலையாள் பெரிய வனல்ல என்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே அவர் கிறிஸ்துவை அவருடைய **பாடுகளிலும், மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும்** பின்பற்ற விரும்பினார். இந்தக் கருத்தை எல்லோரும் பின் பற்ற வேண்டும் என்று அவர் சொல்லவில்லை, மாறாக, அவருக்கு வேறு எந்த வழியும் இருக்க முடியாது.

**நான் அவரை அறிகிறதற்கு.** அவரை அறி வது என்னும் சொற்றொடர் ஒவ்வொரு நாளும் மிக நெருக்கமான வழியில் அப்போஸ்தலன் கிறிஸ்துவோடு பழகி அதன் விளைவாக அவர் இன்னும் கூடுதலாகக் கிறிஸ்துவைப் போல மாற்றமடைவது என்று பொருள்படும். கிறிஸ்து வின் வாழ்வு தன்னிடத்தில் மீண்டும் உருவாக வேண்டும் என்று அவர் விரும்பினார்.

**அவருடைய உயிர்த்தெழுதலின் வல் லமை.** கர்த்தரை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பிய வல்லமை, இந்தப் பிரபஞ்சம் ஒருக் காலும் காணாத மிகப்பெரிய வல்லமையின் காட்சிப்பொருளாகத் திருமறையில் வெளிப்படுத் தப்பட்டிருக்கிறது (எபே. 1:19,20). அவருடைய சரீரத்தை அந்தக் கல்லறையிலேயே பூட்டி வைத்துவிட வேண்டுமென்று தீய ஆவிகளின் சேனை முழுவதும் தீர்மானம் செய்திருந்தன என்றே தோன்றுகிறது. கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து மூன்றாவது நாள் உயிரோடு

எழுப்பி நரகத்தின் சேனையை தேவனுடைய வல்லமை தோற்கடித்தது. இதே வல்லமை எல்லா விசுவாசிகளும் தங்களுடைய விசுவாசத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுடைய அதிகாரத்திற்குக்கீழ் வைக்கப்பட்டிருக்கிறது (எபே. 1:19). தன்னுடைய வாழ்விலும் சாட்சி கூறுவதிலும் இந்த வல்லமையை அனுபவிக்க வேண்டும் என்பதே பவுலின் பேராவல் என்று இங்கு கூறுகிறார்.

**அவருடைய பாடுகளின் ஐக்கியம்.** கிறிஸ்துவுக்காகப் பாடுபடுவதற்கு தெய்வீக வலிமை தேவை. எனவேதான் **அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை, அவருடைய பாடுகளின் ஐக்கியத்திற்கு** முந்திச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வாழ்க்கையில், மகிமையடைவதற்கு முன்னர் பாடுகள் அடைய நேரிட்டது. அவ்வாறாயின் பவுலின் வாழ்க்கையிலும் அது போலவே நடக்க வேண்டும். கிறிஸ்துவின் பாடுகளில் அவர் பங்குபெற வேண்டும். கிறிஸ்துவின் பாடுகளில் பாவத்திற்குப் பரிகாரமாகச் செயல்படக்கூடிய ஆற்றல் இருந்தது போல், அவருடைய பாடுகளில் இல்லை என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனாலும் அவருடைய கர்த்தரை நிராகரித்து அடித்து, சிலுவையில் அறைந்து கொலைசெய்த இந்த உலகத்தில் அவர் செல்வச் செழிப்போடும் இன்பமாகவும் வாழ்வது பொருத்தமற்ற செயல் என்பதையும் அவர் அறிந்திருந்தார். “ஒலிவ மலை வெற்றியிலே பங்குபெறுவது அவருக்கு மனநிறைவு அளிக்கவில்லை; கெத்செமனேயில் வேதனையையும், குளிரையும், தனிமையையும் அவர் சற்று உணர விரும்பினார்” என்று திருவாளர் ஜோவெட் கூறுகிறார்.[15]

**அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி.** நாம் முன்னர் குறிப்பிட்டது போல, சிலுவையில் அறையப்பட்ட வாழ்க்கையை அவர் வாழவேண்டும் என்று விரும்பியதாகவும், அனுபவபூர்வமாக அவர் பாவத்திற்கும் சுயத்திற்கும் உலகத்திற்கும் மரணமடைய விரும்பியதாகவும் இந்தச் சொற்றொடருக்குப் பொருள் கூறப்படுகிறது. ஆனால் அவ்வாறு கொடுக்கப்படுகிற விளக்கம், இந்தப் பகுதியின் அதிர்ச்சியூட்டும் ஆற்றலை அபகரித்துக்கொள்கிறது. மேலே சொல்லப்பட்ட பொருளை இது தந்தாலும், அதற்கும் மேலான பொருளை இது கொண்டிருக்கிறது. கல்வாரி சிலுவையில் மரணமடைந்த ஒருவரை, பயபக்தியுடன் கூடிய பேரார்வத்துடன் பின் தொடர்ந்தவராகவே பவுல் இருந்தார். அது மட்டுமின்றி கிறிஸ்தவ சபையின் முதல் இரத்த சாட்சியின் மரணத்தின்போது இவர் அங்கு இருந்தார்; உண்மையில் அவரைக் கொலை செய்வதற்கு இவரும் உடந்தையாயிருந்தார்! பவுல் தன்னுடைய வாழ்வை அவ்விதமாகவே மரணத்தில் ஊற்ற வேண்டும் என்று உண்மையான ஆவலுடன் இருந்தார் என்றே நாம் நம்புகிறோம். அவர் இரத்தசாட்சியாக மரணத்தை அடைந்து பரலோகத்திற்குச் செல்வதற்குப் பதிலாக, வேறு ஒரு சுகபோக வழியில் அங்கு சென்று ஸ்தேவானைச் சந்திப்பது அவருக்கு இக்கட்டை ஏற்படுத்திவிடும் என்று அவர் நினைத்தார் போலும். இந்தக் கருத்தைத் திருவாளர் ஜோவெட் ஆதரிக்கிறார்:

> “இரத்தம் சிந்துதல்” இல்லாத செலவினங்களில் பல கிறிஸ்தவர்கள் மனநிறைவு அடைகிறார்கள். தங்களால் எளிதில் விட்டுவிடக்கூடிய பொருட்களை, அவர்கள் கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள் கொடுக்கிற ஈவுகள் அவர்களோடு உணர்ச்சிபூர்வமான வகையில் தொடர்பற்றவையேயாகும். அவற்றை விட்டுக் கொடுப்பதில் இரத்தம் சிந்தும்படியான கட்டாயம் ஏற்படுவதில்லை. உயிருக்கு ஆபத்து இல்லை என்னும் சூழ்நிலையில் மட்டுமே அவர்கள் தியாகச் செயலில் ஈடுபடுவார்கள். இன்றியமையாதவை அவர்களிடத்தில் கேட்கப்படுமானால், அவர்களை அங்கு காணமுடியாது. வெற்றி விழாக்களில் அவர்கள் முன்னணியில் நிற்பார்கள். வண்ண அலங்கரிப்புகளுக்காகக் கொடிகள் பனைஓலைகள் ஆகியவற்றிற்காக அவர்கள் மிகுந்த விருப்பத்துடன் சிறிது பணத்தைச் செலவழிக்கவும் செய்கிறார்கள். ஆனால் “மகிழ்ச்சி ஆரவாரம்” மற்றும் “ஓசன்னாக்கள்” ஆகியவை தீய அறிகுறியோடுகூடிய முணுமுணுப்புகளாகவும், பயமுறுத்தலாகவும் மாறுகிறபோது, கல்வாரி நிகழ்ச்சி கூடிய விரைவில் நிகழப்போகிறது என்ற நிலை ஏற்படுகிறதுபோது, அவர்கள் பாதுகாப்பான மறைவிடங்களுக்கு ஓசை ஏற்படாமல் நழுவிச் சென்று விடுகிறார்கள்.
>
> ஆனால் இங்கே ஒரு அப்போஸ்தலன், இணையில்லாததும் ஆபத்தானதுமான ஒரு நிகழ்ச்சியை மிகுந்த மகிழ்ச்சியுடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார். இறையரசின் ஊழியத்தில் அவருடைய இரத்தத்தின் வீரியம்

கொஞ்சம் கொஞ்சமாகக் கசிவதைக் குறித்து அவர் பொறுமையற்றவராக இருக்கிறார்! அதை முழுவதுமாக ஊற்றிவிடுவதற்கான தேவை ஏற்படவேண்டுமென்று அவர் மிகுந்த ஆவலுடன் இருக்கிறார்![16]

ஹாட்சன் டைலர் இதே சிந்தனையைக் கொண்டவராக எழுதுகிறார்:

இந்த உலகம் வாழ்வதற்காக நாம் நம்மையே ஒப்புவிக்க வேண்டிய தேவை உண்டாகிறது... கனிதருவதில் சிலுவையைச் சுமப்பது சம்பந்தப்பட்டிருக்கிறது. "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்." கர்த்தராகிய இயேசு எவ்விதமாக கனிதருகிறவராக மாறினார் – அவர் தமது சிலுவையைச் சுமந்தது மட்டுமின்றி, அங்கே மரணம் அடைந்ததன் மூலமாகவே கனிதருகிறவராக விளங்கினார். இந்தச் செயலில் நாம் அவருடன் கூடுதலாக ஐக்கியமாயிருக்க வேண்டும் என்று அறிந்திருக்கிறோமா? இங்கே இரண்டு கிறிஸ்துகள் இல்லை – சுகபோக வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்புகிற கிறிஸ்தவர்களுக்காக, சுகபோக வாழ்க்கை நடத்திய கிறிஸ்து, மற்றும் அபூர்வமான கிறிஸ்தவர்களுக்காகப் பாடுகள் அடைந்து கடினமாக உழைத்த கிறிஸ்து? ஒரே ஒரு கிறிஸ்து மட்டுமே இருக்கிறார். நாம் கனிதரும்படி அவரிடத்தில் நிலைத்திருப்போமா?[17]

இறுதியாக, C. A. கோட்ஸ் என்பவர் கூறுகிறார்:

பவுலின் இருதயம் முதன்மையாக வாஞ்சித்தது யாதெனில் மகிமையடைந்த கிறிஸ்துவைக் குறித்த அறிவேயாகும். அவர் எங்கே இருக்கிறாரோ அந்த இடத்தைச் சென்றடைய வேண்டும் என்ற ஊக்கமான வாஞ்சையை உருவாக்காமல் இந்த விருப்பம் உண்டாகாது. ஆகவே அவரிடத்தில் நோக்கமாயிருக்கும் இருதயம், அவர் எந்தப் பாதையில் சென்று மகிமையின் இடத்தைச் சென்றடைந்தாரோ அந்தப் பாதையை நோக்கி உள்ளார்ந்த வகையில் திரும்பி, அவர் சென்ற பாதையில் சென்று அவர் இருக்கும் இடத்திற்குச் சென்று அவரிடத்தில் சேரவேண்டும் என்று மிகுந்த வாஞ்சையோடு விரும்புகிறது. "அவர் எவ்வாறு அந்த மகிமையைச் சென்றடைந்தார்? அது உயிர்த்தெழுதலின் மூலமாக நிறைவேறியதா? உயிர்த்தெழுதலுக்கு முன் பாடுகளும் மரணமும் அவசியமாயிருக்கவில்லையா?" என்று இருதயம் வினவுகிறது. "உயிர்த்தெழுதலில் மகிமைபெற்ற அவரிடமாய்ச் சென்று சேர்வதற்கு, எந்தப் பாதையானது அவரை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றதோ அதே பாதையைத் தவிர வேறு எதுவும் எனக்கு மகிழ்ச்சியைத் தராது" என்று இருதயம் விடைபகர்கிறது. இதுவே ஓர் இரத்த சாட்சியின் மனோபாவமாகும். இரத்த சாட்சியின் பாதையாகிய பாடுகள் மரணம் என்னும் பாதையாக நடக்கவும், அவருடைய இருதயத்தைக் கவர்ந்த பாக்கிய வானாகிய கர்த்தர் சென்ற அதே பாதையில் சென்று உயிர்த்தெழுதலையும் மகிமையையும் அடையவும் பவுல் விரும்பினார்.[18]

**3:11** இங்கு மீண்டுமாக விளக்கமளிப்பதில் ஒரு சிக்கலை நாம் எதிர்கொள்கிறோம். இந்த வசனத்திற்கு நாம் எழுத்தின்படி பொருள் கொள்ள வேண்டுமா அல்லது தத்துவக் கோட்பாடுடன் பொருள் கூறவேண்டுமா? பலவகையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை இங்கு தரப்பட்டுள்ளன:

1. மரித்தோரிலிருந்து தான் உயிரோடு எழுப்பப்படுவது குறித்த உறுதியான நம்பிக்கை பவுலுக்கு இல்லை, ஆகவே உயிர்த்தெழுதலில் பங்குபெற வேண்டும் என்பதை உறுதிசெய்வதற்காக எல்லாவிதமான கடின முயற்சிகளையும் மேற்கொள்கிறார். இந்தக் கருத்து பொருத்தமற்றதாக இருக்கிறது! உயிர்த்தெழுதல் கிருபையினால் அருளப்படுகிறதேயொழிய மனிதனுடைய கிரியைகளினால் உண்டாவதில்லை என்று பவுல் இடையறாது கற்பித்து வந்தார். மேலும் அவர் தான் உயிர்த்தெழுதலில் பங்கடைவது குறித்து, திடநம்பிக்கை கொண்டிருந்ததைத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் (2 கொரி. 5:1-8).

2. பவுல் இங்கு சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசவில்லை. ஆனால் இந்த உலகத்தில் உயிரோடு இருந்தபோதே பவுல் உயிர்த்தெழுந்த வாழ்க்கையை வாழ்ந்துகாட்ட வேண்டும் என்னும் விருப்பம் உடையவராக இருந்தார். பெரும்பாலான விளக்கவுரையாளர்கள் இந்தக் கருத்தையே உடையவர்களாக இருக்கிறார்கள்.

3. பவுல் இங்கு சரீரப்பிரகாரமான உயிர்த்தெழுதலைக் குறித்தே பேசுகிறார். ஆனாலும் தனக்கு உயிர்த்தெழுதலில் பங்கடைவது குறித்த சந்தேகம்உண்டென்று அவர் இங்கு சொல்லவேயில்லை. மாறாக, உயிர்த்தெழுதலைச் சென்றடையும் வழியில் சந்திக்க வேண்டிய பாடுகள் குறித்த கவலை தனக்கில்லை என்றே அவர் கூறுகிறார். உயிர்த்தெழுவதற்கு முன் தற்காலத்தில் சோதனைகளை எதிர்கொள்ளவும் துன்பங்களின் ஊடாகச் செல்லவும் அவர் விருப்பமுடையவராக இருந்தார். "எப்படியாயினும்" என்னும் சொல் சந்தேகத்தை வெளிப்படுத்த வேண்டும் என்னும் கட்டாயமில்லை (அப். 27:12; ரோமர் 1:10, 11:14 ஆகிய வசனங்களைக் காண்க). மாறாக அவற்றின் விலையைக் கணக்கிடாத ஊக்கமான விருப்பத்தையோ எதிர்பார்ப்பையோ இது குறிக்கக் கூடும்.

மூன்றாவது விளக்கத்தோடு நாம் உடன்பாடு கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவுக்கு ஒப்பாக வேண்டுமென்பதே அப்போஸ்தலனுடைய விருப்பமாயிருந்தது. கிறிஸ்து பாடுபட்டார், மரணமடைந்தார், மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பப்பட்டார். ஆகவே இதைக் காடிலும் சிறந்த வழி தனக்கு வேண்டுமென்று அவர் விரும்பவில்லை. வசதி, சுகபோகம், இலகுவான வாழ்க்கை இவற்றின்மேல் நாம் கொண்டிருக்கிற விருப்பம், இது போன்ற வசனங்களின் கூர்மையை அல்லது செதுக்கிச் சீர்படுத்தும் தன்மையை அகற்றிவிடுவதற்குக் காரணமாகிவிடுமோ வென்று நாம் அஞ்சுகிறோம். திருமறையிலுள்ள ஏனைய வசனங்களின் வெளிச்சத்தில், இது போன்ற சில குறிப்பிட்ட வசனங்களுக்கு வசனத்தில் உள்ளபடியே, அதாவது எழுத்தின்படியே பொருள் கூறுவது பாதுகாப்பானது அல்லவா?

இந்த வசனத்தை விடுத்துச் செல்வதற்கு முன், பவுல் *மரித்தோருக்குள்ளாக* **இருந்து உயிரோடு எழுவதைக்** குறித்துப் பேசுவதை நாம் கவனிக்க வேண்டும். மரித்தோர் அனைவரும் உயிரோடு எழுந்திருப்பதை இது குறிப்பிடவில்லை. மாறாக சிலர் **உயிர்த்தெழுவதைக்** குறித்தே இது விவரிக்கிறது, மற்றவர்கள் கல்லறையிலேயே இருப்பார்கள். 1 தெசலோனிக்கேயர் 4:13-18 மற்றும் 1 கொரிந்தியர் 15:51-57 ஆகிய வசனங்களிலிருந்து, கிறிஸ்துவின் வருகையின்போது விசுவாசிகள் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்பதை அறிந்திருக்கிறோம் (கர்த்தர் சபையை எடுத்துக் கொள்ள வரும்போது சிலர் எழுந்திருப்பார்கள், உபத்திரவ காலத்தின் முடிவில் சிலர் எழுந்திருப் பார்கள்). ஆனால் இறந்துபோன மற்றவர்களோ கிறிஸ்து ஆயிரமாண்டு இப்பூமியில் ஆளுகை செய்துமுடித்த பிறகே எழுந்திருப்பார்கள் (வெளி. 20:5 -ஆம் வசனத்தோடு ஒப்பிடுக).

**3:12** ஏற்கனவே தேறினவராக மாறிவிட்டதாக அப்போஸ்தலன் தன்னைக் குறித்து எண்ணவில்லை, முந்தின வசனத்தில் சொல்லப்பட்டுள்ள உயிர்த்தெழுதலைத் தேறினவர் என்னும் சொல் குறிப்பிடுவதில்லை. மாறாக அச்சொல் கிறிஸ்துவுக்கு ஒப்பானவராக ஆவதைக் குறித்த எல்லா விவரங்களையுமே குறிப்பிடுகிறது. பாவ மற்ற நிலையை இவ்வுலக வாழ்க்கையின் போதே அடையமுடியும் என்றோ, இன்னமும் முன்னேறுவதற்கு இயலாது என்னும் நிலையை அடைந்தாயிற்று என்றோ அவர் கருதவில்லை. "மனநிறைவு வளர்ச்சியின் கல்லறை" என்பதை அவர் அறிந்திருந்தார்.

ஆகவே, கர்த்தராகிய இயேசு அவரை இரட்சித்ததன் நோக்கம் அவரிடத்தில் நிறைவேறும் பொருட்டு அவர் தொடர்ந்து உறுதியுடன் முன்னேறிச் செல்லுகிறார். தமஸ்குவுக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் **கிறிஸ்து இயேசு** அப்போஸ்தலனைப் பிடித்துக்கொண்டார். அந்தப் பெருஞ் சிறப்புவாய்ந்த சந்திப்பின் நோக்கம் என்ன? ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவால் என்ன செய்ய முடியும் என்பதை தேவன் வெளிப்படுத்தும்படியாக, அதுமுதல் ஒரு முன்மாதிரியான பரிசுத்தவானாக முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதே அந்த நோக்கமாகும். அவர் இன்னமும் கிறிஸ்துவுக்கு நிறைவான அளவில் ஒப்பாகவில்லை. அந்த வளர்ச்சியானது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. மேலும் தேவனுடைய கிருபையின் செயலாகிய இந்த வளர்ச்சி தொடரவேண்டும் எனவும், ஆழமாகச் செயல்பட வேண்டும் எனவும் பவுல் உள்ளத்தில் பேரார்வம் கொண்டிருந்தார்.

**3:13** தன்னுடைய உடைமைப் பொருட்கள் குறித்து அப்போஸ்தலன் மனநிறைவு உடையவராக இருந்தபோதிலும் (4:11), அவருடைய ஆவிக்குரிய நிறைவு குறித்து ஒருபோதும் மனநிறைவு அடையவில்லை. இன்றைய நாட்களில் நாம் சொல்லுகிறதுபோல, "அடைந்தாயிற்று" என்று அவர் தன்னைக்குறித்து **எண்ணவில்லை.** அவ்வாறாயின் அவர் செய்கிறது என்ன?

ஆனால் அவர் **ஒன்று செய்கிறார்.** அவர் ஒரே நோக்கமுடைய மனிதர். அவர் ஒரே குறிக் கோளும் ஒரே பேரார்வமும் கொண்டிருந்தார். இந்த விஷயத்தில் அவர் "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்" என்று சொன்ன தாவீதை ஒத்திருக்கிறார்.

**பின்னானவைகளை மறந்து** என்னும் சொற் றொடர் அவருடைய பாவங்களையும் தோல்வி களையும் மட்டும் குறிப்பிடாமல், இந்த அதிகாரத் தில் முன்பு அவர் குறிப்பிட்டுள்ள அவருடைய இயல்பான நற்பேறுகளையும் வெற்றிகளையும் சாதனைகளையும் குறிப்பிடுவதோடு, அவரு டைய ஆவிக்குரிய வெற்றிகளையும் குறிக்கும்.

**முன்னானவைகளை நாடி, தொடருகிறேன்.** அதாவது கிறிஸ்தவ வாழ்க்கையில் பெறக்கூடிய நன்மைகளும், ஆற்றவேண்டிய பொறுப்புகளுமே இவை. ஒருவேளை ஆராதனையாக, ஊழியமாக அல்லது கிறிஸ்தவக் குணநலன்களில் தனிப்பட்ட வளர்ச்சியாக இவை இருக்கலாம்.

**3:14** தன்னுடைய வலிமை முழுவதையும் செலவழித்து, கடுமையான முயற்சியோடு **கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி** ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிற வீரனாகப் பவுல் தன்னையே நோக்கிப் பார்க் கிறார்.

ஓட்டப்பந்தயப் பாதையின் முடிவு எல்லையே **இலக்கு** என்பதாகும். வெற்றி பெறுகிறவர் பெறும் பரிசுப்பொருளே **பந்தயப்பொருள்** ஆகும். இங்கு ஒருவருடைய வாழ்க்கையின் முடிவு அல்லது இன்னும் குறிப்பிடத்தக்க வகையில் சொல்லப் போனால், கிறிஸ்துவின் நியாயாசனமே **இலக்கு** என்று சொல்லப்பட்டுள்ளது. நன்றாக ஓடியவர் கள் பெறப்போகிற பரிசாகிய நீதியின் கிரீடமே **பந்தயப்பொருளாகும்,** இதனைப் பவுல் வேறொரு இடத்தில் குறிப்பிட்டுள்ளார் (2 தீமோ. 4:8)

**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பு** என்பதில், தேவன் நம்மை இரட் சித்ததில் கொண்டிருந்த நோக்கங்கள் அனைத் தும் அடங்கும். இரட்சிப்பு, கிறிஸ்துவுக்கு ஒப்பாக மாறுதல், அவருடன் சேர்ந்து உடன்பங்காளியாக விளங்குதல், பரலோகத்தில் ஒரு வீடு, இன்னும் எண்ணிலடங்கா ஆவிக்குரிய நன்மைகள் யாவும் இந்த நோக்கங்களில் அடங்கும்.

## 7. அப்போஸ்தலன் எடுத்துக்காட்டாய் விளங்கியவண்ணம், விண்ணக நடத்தையின்படி நடக்கவேண்டுமென்று கொடுத்த அறிவுரை (3:15-21)

**3:15** கிறிஸ்துவுக்காகப் பாடுபடுகிறதிலும், மரணமடைவதிலும், கர்த்தராகிய இயேசுவைப் போல மாற்றம்பெற வாஞ்சையோடு செய்கிற கடும் முயற்சிகளிலும் பவுல் கொண்டிருந்த விருப்பத்தில், தேறினவர்கள் யாவரும் பங்குபெற வேண்டும். கிறிஸ்தவ விசுவாசத்தில் காணப்பட வேண்டிய நிறைவான கருத்து இதுவேயாகும். இதனைச் சிலர் தீவிரவாதக் கொள்கை, புரட்சிகர மானது, வெறிகொண்டது என்று கூறலாம். தங்களுக்காகக் கல்வாரியில் தம்முடைய உயிரின் இரத்தத்தைச் சிந்திய ஒருவருக்காக, முழுவளர்ச்சி யடைந்த மக்கள் இது ஒன்றையே தெளிந்த அறி வோடும், பகுத்தறிவுக்கு ஏற்றவிதத்திலும், நியாயமாகவும் செய்யக்கூடிய பதிற்செயலாகக் காண்கிறார்கள் என்று அப்போஸ்தலன் இங்கு கூறுகிறார்.

**எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால் அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.** இவ்விதமான ஆபத்தான நடைமுறைக் கோட்பாட்டைக் கைக் கொள்ள எல்லோரும் தன்னோடு உடன்படமாட் டார்கள் என்று பவுல் உணர்ந்தார். ஆனாலும் ஒருவர் இந்தப் பொருள் பற்றிய சத்தியத்தை உண்மையாகவே அறிய வேண்டும் என்று விரும் பினால் **தேவன்** அதனை அவருக்கு **வெளிப் படுத்துவார்** என்று தாம் நம்பிக்கை கொண்டி ருப்பதாக அவர் கூறுகிறார். நாம் அந்தச் சத்தி யத்தை அறிய விருப்பமற்றவராக இருப்பதே, நாம் சொகுசாக வாழ்க்கை வாழ விரும்புவதற்கும், கிறிஸ்தவ வாழ்க்கையில் நிறைவுபெற்று விட் டோம் என்று எண்ணுவதற்கும் காரணமாகும். கருத்தளவிலான கிறிஸ்தவத்தின் எதிர்பார்ப்பு களுக்குக் கீழ்ப்படிய நாம் விருப்பமற்றவர்களா யிருக்கிறோம். எவர்கள் சத்தியத்தைப் பின்பற்ற விருப்பமுடையவர்களாக இருக்கிறார்களோ அவர் களுக்குச் சத்தியத்தைக் காண்பிக்க விரும்பு கிறார்.

**3:16** இதற்கிடையே கர்த்தர் நமக்குக் கொடுத் திருக்கிற வெளிச்சத்தின்படி நாம் வாழவேண்டு மென்று அப்போஸ்தலன் தொடர்ந்து அறிவுறுத்து கிறார். கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்னும் முழுமையான

அறிவை அடையும் வரை காலத்தைக் கடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று இங்கு சொல்லப் படவில்லை. சிலுவையைக் குறித்த உட்பொருள் முழுமையாகக் கர்த்தரால் நமக்கு வெளிப்படு வதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கும் போது, நாம் எதுவரையில் சத்தியத்தைப் பெற்றிருக் கிறோமோ அந்த அளவிற்கு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**3:17** இந்த விதமாகப் பேசிவந்த பவுல் இப் பொழுது புத்திபுகட்டத் திரும்புகிறார். முதலாவது பிலிப்பியர் தன்னைப் பின்பற்றுகிறவர்களாகக் காணப்படவேண்டுமென்று உற்சாகமூட்டுகிறார். இவ்வாறான சொற்களை எழுதக்கூடியபடி அவரு டைய வாழ்க்கை எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்த தற்கான புகழுரையாக இது விளங்குகிறது. "நான் செய்கிறபடி அல்ல, நான் சொல்லுகிறபடி செய் யுங்கள்" என்னும் வேடிக்கையான பேச்சை நாம் அவ்வப்போது கேட்கிறோம். ஆனால் அப்போஸ் தலன் அப்படிச் சொல்லவில்லை! கிறிஸ்துவுக் காகவும் அவருடைய திருநோக்கங்களுக்காக வும் முழுமனதுடன் கூடிய பயபக்தியோடு வாழ்ந்த தனது வாழ்க்கையை அவரால் முன்மாதிரியாக உயர்த்திப் பிடிக்க முடிந்தது.

> தான் பிறருக்கு முன்மாதிரியாகத் திகழவேண் டும் என்பதற்காகவே தேவனுடைய இரக்கம் தனக்கு அளிக்கப்பட்டது என்று பவுல் எண் ணியதால், கிறிஸ்தவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதன் கருத்துச் சுருக்கத்தை வரைந்து அளிக்கும் நோக்கத்தோடு அவரு டைய மனமாற்றத்திற்குப் பிற்பட்ட வாழ்நாள் முழுவதையும் ஒப்புவித்தவராக வாழ்ந்தார். இயேசு கிறிஸ்து பவுலினிடத்தில் என்ன நடப் பித்தாரோ அதுபோல அவரால் பிறரிடமும் நடப்பிக்க முடியும் என்பதற்கு அவர் முன்மாதிரி யாகத் திகழும்படி தேவன் அவரை இரட்சித்தார். உங்களுக்கும் எனக்கும் தமது இரக்கத்தை அளிப்பதில், மேற்கூறிய சிறந்த நோக்கத்தைக் கர்த்தர் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில் லையா? வருங்கால விசுவாசிகள் யாவருக்கும் முன்மாதிரியாகத் திகழும்படியே அவர் நம்மை இரட்சித்தார் என்று நான் நம்புகிறேன். அவரு டைய கிருபையால் இரட்சிக்கப்பட்ட மக்களுக்கு எடுத்துக்காட்டுகளாக நாம் உழைக்கிறோமா? அது அவ்வாறு செயல்படுவதாக![19]

**நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்**. பவுல் எத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தாரோ அதுபோல வாழ்ந்த பிறரை இது குறிக்கிறது. அடுத்த வசனத்தில் சொல்லப்பட்டுள்ள வண்ணம் அவர்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் அவர்களைக் குறித்துக்கொள்ள வேண்டும் என்றல்ல, மாறாக அவர்களுடைய காலடிகளைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டும் என்னும் நோக் கத்தோடு அவர்களைக் கவனிக்க வேண்டும்.

**3:18** விசுவாசிகள் எவர்களைப் *பின்பற்ற வேண்டும்* என்று 17 -ஆவது வசனத்தில் சொல் லப்பட்டிருப்பது போல, இந்தப் பகுதியானது நாம் யாரைப் *பின்பற்றக் கூடாது* என்று சொல்லு கிறது. இவர்கள் யாரென்று அப்போஸ்தலன் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர்கள் இரண் டாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யூத முறை மையை வலியுறுத்தும் கள்ளபோதகர்களா அல்லது சுதந்தரத்தைத் தங்களுக்குக் கிடைத்த அனுமதிச் சீட்டு என்று கருதி கட்டுப்பாடின்றி வாழ் கிறவர்களும், கிருபையைப் பாவம் செய்தவற் கான சாக்காகப் பயன்படுத்தி வாழ்கிறவர்களு மாகிய பெயர்க் கிறிஸ்தவ போதகர்களா என்று அவர் விளக்கிக் கூறவில்லை.

இத்தகைய மனிதர்களைக் குறித்து பரிசுத்த வான்கள் கவனத்தோடு இருக்க வேண்டுமென்று அப்போஸ்தலன் ஏற்கனவே எச்சரித்திருக்கிறார், இப்பொழுது அவர் மீண்டும் **கண்ணீரோடு** எச்சரிக்கிறார்.இவ்விதமாக வெளிப்படையாகக் கடிந்துகொள்கிற வேளையில் எதற்காகக் கண்ணீர் சிந்த வேண்டும்? தேவனுடைய சபைகளில் இந்த மனிதர்கள் விளைவித்த கேட்டின் நிமித்தமாகவே அவர் கண்ணீர் சிந்தினார். அவர்கள் பாழாக்கி விட்ட வாழ்க்கைகளைக் குறித்து அவர் வருந் தினார். கிறிஸ்துவின் திருப்பெயருக்கு அவர்கள் கொண்டுவந்த அவமானத்தின் காரணமாக அவர் வருந்தினார். சிலுவையின் மெய்யான அர்த் தத்தை அவர்கள் மங்கிப்போகச் செய்ததன் நிமித்தம் அவர் வருந்தினார். ஆம், கிறிஸ்துவின் **சிலுவைக்குப் பகைஞரைக்** கடிந்துகொள்கிற வேளையிலும்கூட உண்மையான அன்பு, கண்ணீர் சிந்தக் கூடியதாக இருக்கிறது. அது கொலைகார நகரமாகிய எருசலேமுக்காகக் கர்த்தராகிய இயேசு கண்ணீர் சிந்தியதற்கு ஒப்பாயிருக்கிறது.

**3:19** இந்த மனிதர்கள் நித்திய அழிவை நோக் கிச்சென்றவர்கள்: அவர்கள் நிர்மூலமாக்கப்படு வார்கள் என்பது இதன் பொருளன்று. மாறாக, தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்பாகிய அக்கினிக் கடலையே இது குறிக்கிறது.

**அவர்களுடைய தேவன் வயிறு.** சமய ஊழியங்கள் என்று சொல்லி அவர்கள் செய்த செயல்கள் யாவும் உணவுப் பொருட்கள் மற்றும் பானங்கள் ஆகியவற்றை வாங்கும் பொருட்டே செய்யப்பட்டவை; சரீரப்பிரகாரமான நாட்டங்களை நிறைவு செய்வதே அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது. "அவர்களுடைய வாழ்க்கையில் ஆலயங்கள் அல்ல, எல்லாம் அடுப்படிதான்"என்று திருவாளர் F. B. மேயர் தன்னுடைய நுண்ணறிவுத் திறத்தால் இந்த மனிதர்களைக் குறித்து விவரித்துக் கூறுகிறார்.

அவர்களுடைய **மகிமை அவர்களுடைய இலச்சையே.** அவர்கள் எதற்காக வெட்கப்பட்டிருக்க வேண்டுமோ அவற்றில் அவர்கள் மேன்மை பாராட்டினார்கள் - அவர்களுடைய நிர்வாணம் மற்றும் ஒழுக்கமற்ற நடத்தை.

அவர்கள் **பூமிக்கடுத்தவைகளைக்** குறித்தே நோக்கமுடையவராய் இருந்தார்கள். உணவு, உடை, மரியாதை, வசதி, சுகபோக வாழ்க்கை இவையே அவர்களுக்கு முக்கியமானவையாக இருந்தன. நித்தியத்தைக் குறித்தவை, விண்ணகப் பொருட்கள் ஆகியவை, இந்த உலகத்தின் இழிவான காரியங்களில் அவர்கள் உழன்று கிடந்ததைக் குறித்து எவ்விதக் கலக்கத்தையும் அவர்களிடத்தில் உண்டுபண்ணவில்லை. அவர்கள் தொடர்ந்து என்றென்றும் இந்த உலகத்திலேயே வாழப்போகிறதுபோல வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

**3:20** மேலே சொல்லப்பட்டவைகளுக்கு முரண்பாடான, மெய்யான விசுவாசிகளின் பரலோக மனப்பான்மையை அப்போஸ்தலன் இப்பொழுது கூறுகிறார்.

இந்த மடல் எழுதப்பட்ட காலத்தில், பிலிப்பி பட்டணமானது ஒரு ரோமக் குடியிருப்பாக இருந்தது (அப். 16:12). பிலிப்பியர்கள் ரோம அரசுக் குடிமக்களாக, அந்த அரசின் பாதுகாப்பையும் சிறப்புரிமைகளையும் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். அதே நேரத்தில் அவர்கள் தங்களுடைய சொந்த உள்ளூர் அரசின் குடிமக்களாகவும் இருந்தார்கள். இந்த உண்மைகளின் பின்னணியில், அங்கிருந்த விசுவாசிகளின் குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது என்று அப்போஸ்தலன் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். "ஆனால் நாமோ பரலோகக் குடியேற்ற நாடாக இருக்கிறோம்" என்று திருவாளர் மோ.ப. இந்த வசனத்தை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

கிறிஸ்தவர்கள் இவ்வுலக நாடுகளின் குடிமக்கள் இல்லையென்று இந்த வசனம் பொருள் தருகிறதில்லை. நாம் அரசாங்கங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று திருமறை திட்டவட்டமாகக் கூறுகிறது. ஏனெனில் ஆளுகை புரிவோர் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள் (ரோமர் 13:1-7). கர்த்தராலே வெளிப்படையாகத் தடைசெய்யப்பட்டுள்ளவை தவிர, எல்லாவற்றிலும் விசுவாசிகள் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். பிலிப்பியர்கள் உள்ளூர் அதிகாரிகளுக்கும் ரோமாபுரியில் இருந்த பேரரசனுக்கும், விசுவாசத்தோடு இருக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். அதுபோலவே விசுவாசிகள் தங்களுடைய நாடுகளின் அரசாங்கங்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டியவராக இருக்கிறார்கள், ஆனால் அவர்களுடைய முதலாவது விசுவாசம் விண்ணக அரசர் கர்த்தருக்கே உரியது.

நாம் பரலோகக் குடிமக்களாக இருப்பது மட்டுமின்றி, நாம் விண்ணகத்திலிருந்து **நம்முடைய இரட்சகர் வர** (ஆவலோடு) **எதிர்பார்த்துக்** கொண்டிருக்கிறவர்களாகவும் காணப்படுகிறோம்! (ஆவலோடு) எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்னும் சொற்கள் மூலமொழியில், சடுதியில் நிகழக் கூடிய ஒரு நிகழ்ச்சியை வாஞ்சையோடு எதிர்பார்க்கிற செயலைக் குறிக்கும்படியான மிக வலிமை படைத்த சொல்லாகும். ஏதோ ஒன்றைப் பார்க்கும்படியாக அல்லது கேட்கும்படியாகத் தலையையும் கழுத்தையும் நுழைத்துப் பார்ப்பது போன்ற வாஞ்சையுடன் கூடிய எதிர்பார்ப்பு என்பதே இச்சொல்லின் எழுத்தின்படியான பொருளாகும்.

**3:21** கர்த்தராகிய இயேசு பரலோகத்திலிருந்து வரும்போது, நம்முடைய சரீரங்களை மாற்றுவார். மனித சரீரம் தன்னில்தானே எந்த இழிதகைமையோ பொல்லாங்கோ உடையதல்ல. இதனைத் தவறாகப் பயன்படுத்துவதில் தான் தீமை இருக்கிறது.

ஆனால் இந்தச் சரீரம் **அற்பமான சரீரம்.** இது தாழ்வான குணங்களை உடைய சரீரமாகும். சுருக்கங்கள், தழும்புகள், வயது முதிர்ச்சி, பாடுகள், நோய்கள் மற்றும் மரணம் யாவும் இந்தச் சரீரத்தைக் தாக்கக் கூடும். இது நம்மைக் கட்டுப்படுத்தி இறுக்கிப் பிடித்துக்கொள்கிறது!

கர்த்தரோ இதனை மகிமையின் சரீரமாக **மறுரூபப்படுத்துவார்.** இதனுடைய முழு அர்த்தத்தையும் நாம் அறிய மாட்டோம். அதற்குப் பிறகு இந்தச் சரீரத்திற்கு அழிவோ மரணமோ ஏற்படாது,

காலம் மற்றும் இயற்கைத் தடைகள் எதுவும் இதனைக் கட்டுப்படுத்தாது. இது உண்மையான சரீரமாகவே இருக்கும். ஆனாலும் பரலோகச் சூழ் நிலைக்கு நிறைவானபடி தகுதிபெற்றிருக்கும். கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுந்த **சரீரத் திற்கு** இது ஒப்பாயிருக்கும்.

நாம் அனைவரும் ஒரே சரீரத் தோற்றமுடைய வராக இருப்போம் என்பது இதன் பொருளன்று! இயேசு உயிர்த்தெழுந்த பிறகு, அவர்தான் எனத் தெளிவாக அறியக்கூடியவராக இருந்தார். ஒவ் வொரு தனி மனிதனும் (ஆண் பெண் இருபால ரும்) அவனவனுக்குரிய சரீரப்பிரகாரமான அடை யாளத்தை நித்தியத்தில் பெற்றிருப்பான் என்ப தில் எவ்வித ஐயமுமில்லை.

தேவனுடைய இயல்புகளோடுள்ள தொடர் பில் காணும்போது, நாம் கர்த்தராகிய இயேசுவைப் போல இருப்போம் என்று இந்த வேத பகுதி கற்பிக் கிறதில்லை. நாம் சர்வ ஞானம் உடைய வராகவோ சர்வ வல்லமை உடையவராகவோ இருக்க மாட்டோம். அது மட்டுமின்றி, நாம் ஒரே நேரத்தில் பல இடங்களில் இருக்கவும் மாட்டோம்.

ஆனால் ஒழுக்கநெறியில் கர்த்தராகிய இயேசு வைப் போல இருப்போம். நாம் என்றென்றும் பாவத்திற்கு நீங்கலானவர்களாக இருப்போம். நம்முடைய ஆர்வத்தை நிறைவு செய்ய இந்தப் பகுதி போதுமானதாக இல்லை, ஆனாலும் நம்முடைய மனமகிழ்ச்சியை நிறைவுசெய்வதாக வும், நம்பிக்கையை ஊக்குவிப்பதாக இருக் கிறது.

**அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப் படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்ல மையோடு செயல்படுகிறார்.** நம்முடைய கர்த்தர் எல்லாவற்றையும் **தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளும்படி** எந்த வல்லமையோடு பின்னர் செயல்புரியப் போகிறாரோ அந்த வல்லமை யினாலேயே நம்முடைய சரீரங்களை மறுரூபப் படுத்தப் போகிறார். அவர் "இரட்சிக்க வல்லவரா யிருக்கிறார்" (எபி. 7:25); அவர் "உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி. 2:18); அவர் "காக்க வல்லவராயிருக்கிறார்" (யூதா 24). அவர் **கீழ்ப் படுத்த வல்லவராக** இருக்கிறார் என்று நாம் இங்கு கற்கிறோம். "இந்த தேவன் என்றென்றைக் குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்" (சங். 48:14).

## 8. ஒருவருக்கொருவர் இணக்கம், ஒருவருக்கொருவர் உதவிசெய்தல், மகிழ்ச்சி, நீடிய பொறுமை, மன்றாட்டுணர்வு, கட்டுப்பாடுள்ள சிந்தனை வாழ்க்கை - இவற்றிற்கான வேண்டுகோள் (4:1-9)

**4:1** முந்தின வசனத்தில் விசுவாசிகளின் உள்ளங்களுக்கு முன்பாக வியத்தகு நம்பிக் கையை ஒரு காட்சிப்பொருளாக நிறுத்தி வைத்த தன் அடிப்படையில், அவர்கள் **கர்த்தருக்குள் நிலைத்திருக்க** வேண்டுமென்று இப்பொழுது அப்போஸ்தலன் அறிவுரை நல்குகிறார். விசுவாசி களின் பிரியத்திற்குரிய பெயர்களால் இந்த வசனம் நிறைந்திருக்கிறது. முதலாவதாக, பவுல் அவர்களைச் **சகோதரரே** என்று அழைக்கிறார். பின்னர் அவர் அவர்களிடத்தில் கொண்டுள்ள வாஞ்சையைக் குறிப்பிடுகிறார். அவர் மீண்டும் அவர்களோடு இருக்க வேண்டுமென்பதே இந்த வாஞ்சையாகும். மேலும் அவர் அவர்களைக் குறித்து **சந்தோஷமும் கிரீடமும் ஆனவர்கள்** என்று குறிப்பிடுகிறார். தற்காலத்தில் அவர்கள் அவருடைய மகிழச்சியாக இருக்கிறார்கள் என் றும், கிறிஸ்துவின் நியாயாசனத்தில்அவருடைய கிரீடமாக இருப்பார்கள் என்னும் பொருள்படவே அவர் பேசுகிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இறுதியாக, **பிரியமானவர்களே** என்னும் சொல் லோடு இந்த வசனத்தை அவர் நிறைவு செய் கிறார். உண்மையாகவே அப்போஸ்தலன் மனி தர்கள்மேல் அன்புபாராட்டினார். அவர் கர்த்தருக் காக உழைத்த உழைப்பில் செயல்திறம் மிக்க வராக இருந்ததற்கான காரணங்களில் இதுவும் ஒன்று என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**4:2** பிலிப்பி பட்டணத்தில் இருந்த சபையில் எயோதியாள் மற்றும் சிந்திகேயாள் என்னும் பெயருடைய இரண்டு பெண்கள் இருந்தார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் இணக்கமாகச் செல்வதில் உடன்பாடு அற்றவர்களாக இருந் தார்கள். அவர்கள் உடன்பாடற்ற நிலையில் இருந்த தற்கான காரணம் இங்கு கொடுக்கப்படவில்லை (அவ்வாறு விவரம் தரப்படாதது நேர்மையானதே!)

எயோதியாளிடம் *கெஞ்சிக் கேட்கிறேன்*, சிந்திகேயாளிடம் *கெஞ்சிக் கேட்கிறேன்* என்று இந்த வசனத்தில் கெஞ்சிக்கேட்கிறேன் என்னும் சொல் இரண்டு முறை பயன்படுத்தப்பட்டிருப்ப தால், ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட புத்திமதி யைப் போலவே மற்றவருக்கும் கொடுக்கப்பட்டது என்பதைக் காட்டுகிறது (தமிழில் **புத்திசொல்லு**

**கிறேன்** என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அதுவும் ஒருமுறைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது). அவர்கள் **கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்கும்படி** பவுல் வற்புறுத்துகிறார். நம்முடைய அனுதின வாழ்க்கையில் எல்லாவற்றிலும் நாம் யாவரும் ஒருமைப்பாட்டுடன் இருப்பதென்பது இயலாத செயலாகும்; ஆனால், கர்த்தரைக் குறித்த காரியங்களைப் பொருத்தமட்டில், நம்முடைய அற்பமானதும் தனிப்பட்டதுமான வேறுபாடுகளை அகற்றி கர்த்தர் மேன்மை அடையும்படியாகவும் அவருடைய ஊழியம் முன்னேற்றம் அடையும்படியாகவும் நடந்துகொள்வது செயல்படுத்தக் கூடியதே ஆகும்.

**4:3** இங்கு பவுல் யாரை உத்தம கூட்டாளி (நுகத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டவன்)[20] என்று அழைக்கிறார் என்பதில் வேறுபட்ட ஊகங்கள் நிலவுகின்றன. தீமோத்தேயு, லூக்கா ஆகியோருடைய பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆனால் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நபர் எப்பாப்பிரோதீத்துவாகவே இருக்க வேண்டும். **சுவிசேஷ விஷயத்தில்** பவுலுடன் சேர்ந்து **மிகவும் பிரயாசப்பட்ட** இந்தப் பெண்களுக்கு **உதவியாயிருக்கும்படி** அவருக்கு இங்கு அறிவுரை வழங்கப்படுகிறது. (இந்தப் பெண்களுக்கு என்பதற்குப் பதிலாக **அவர்களுக்கு** என்று தமிழில் எழுதப்பட்டுள்ளது.) **அவர்களுக்கு** என்னும் சொல் எயோதியாள் மற்றும் சிந்திகேயாள் என்பவர்களையே குறிக்கிறது என்று நாம் கருதுகிறோம். அனுபவம் எந்த ஆலோசனை சிறந்தது என்று மெய்ப்பித்திருக்கிறதோ அதையே அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு தருகிறார். இரண்டு பேர் சண்டையிட்டுக்கொள்ளும்போது, அந்த விவகாரத்தை யாரையும் சார்ந்திராத, ஆவிக்குரிய நிலையில் நியாயமானது எது என்று கண்டறியத்தக்க முதிர்ச்சி அடைந்த ஒருவரிடம் எடுத்துச்செல்லும்போது, பெரும்பாலும் அது தீர்க்கப்படும்.அவர் எவ்வித விசாரணையுமின்றி தான் எடுத்த தீர்மானத்தை அவர்கள் மேல் சுமத்துவார் என்பதல்ல, மாறாக சண்டையிட்டுக்கொள்கிற மனிதர்களுக்கு தேவ வசனத்திற்கு ஏற்றவிதமாக அதனடிப்படையிலேயே அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வை அவர் ஏற்படுத்துவார்.

**"அவர்கள் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள்"** என்னும் சொற்றொடருக்கு விளக்கமளிப்பதில் கவனம் உடையவராயிருக்கவேண்டும். அவர்கள் அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து நற்செய்தியைப் பிரசங்கித்தார்கள் என்பதே இதன் பொருள் என்று கற்பனையுங்கூட செய்து பார்க்கக்கூடாது. பெண்கள் நற்செய்தி ஊழியத்தில் பலவிதங்களில் பங்கு கொள்ள முடியும் - கிறிஸ்துவின் ஊழியர்களுக்கு விருந்தோம்புதல், வீடுகள் சந்திப்பு, இளம் பெண்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் கற்பித்தல் போன்றவை. மேலும் எல்லோர் முன்னிலையிலும் போதித்தல் அல்லது பிரசங்கித்தல் போன்ற ஊழியங்களை மேற்கொள்ளாமல் அவர்களால் நற்செய்தி நற்பணியில் ஈடுபடமுடியும்.

இங்கு மற்றுமோர் உடன் ஊழியரின் பெயர் **கிலேமெந்து** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவரைக் குறித்து உறுதியாக வேறு எந்தச் செய்தியையும் அறியமுடியவில்லை. **மற்ற என் உடன்வேலையாட்கள்** என்று குறிப்பிடும் பவுல், **அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கின்றன** என்று தொடர்ந்து கூறுகிறார். கிறிஸ்துவினிடத்தில் கொண்டிருக்கும் விசுவாசம் மற்றும் அவருக்காக ஆற்றும் திருப்பணி ஆகியவற்றோடு இணைந்துள்ள நித்திய வாழ்வு சொல்லிமுடியாத நற்பேறு ஆகியவற்றை வெளிப்படுத்தும் மிகச் சிறப்பான கூற்றை இங்கு நாம் காண்கிறோம்.

**4:4** முழு சபையையும் நோக்கித் திரும்பிய வராக, பவுல் இப்பொழுது தனது சிறப்பு மிக்க அறிவுரையை நல்குகிறார். அவர் கூறும் புத்திமதியின் இரகசியம் கர்த்தருக்குள் என்னும் சொல்லில் காணப்படுகிறது. வாழ்க்கையின் சூழ்நிலை எத்தகைய இருள் சூழ்ந்ததாக இருப்பினும், எப்பொழுதும் கிறிஸ்தவனால் **கர்த்தருக்குள் சந்தோஷமாய் இருக்க** முடியும்.

கிறிஸ்தவ மகிழ்ச்சியில் தனது அனுபவத்தைத் திருவாளர் ஜோவெட் பகிர்ந்தளிக்கிறார்:

> நம்முடைய அப்போதைய சூழ்நிலைகளைச் சார்ந்திராத மனநிலையே கிறிஸ்தவ சந்தோஷம் எனப்படும். அது நம்முடைய சுற்றுப்புறச் சூழ்நிலைகளைச் சார்ந்திருக்குமானால், நிச்சயமாக அது கடுங்காற்று வீசக்கூடிய இரவில் பாதுகாப்பற்று எரியும் மெழுகுவர்த்தியைப் போல நிலையற்றதாகவே காணப்படும். ஒரு கணப்பொழுது அந்த மெழுகுவர்த்தி பளிச்சென்று சீராக எரியும், அடுத்த நொடியில் சுவாலை திரியின் ஓரத்தை நோக்கிச் சாய்ந்துவிடும். அப்பொழுது வெளிச்சம் குறைந்துவிடும், அல்லது வெளிச்சம் இல்லாமலே போய்விடும். ஆனால் கிறிஸ்தவ மகிழ்ச்சிக்கும் எரிதில்

மாறிப்போகிற வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கும் எவ்வித உறவும் இல்லை, கடந்து செல்லுகிற நாளின் காரணமாக அது பாதிக்கப்படுவதில்லை. ஒரு சமயம் என்னுடைய சூழ்நிலைகள் யாவும் ஒன்றோடொன்று இசைந்து வசந்த காலத்தென்றலைப் போலக் காணப்படுகிறது, சிறிது நேரத்திற்குள்ளாக அது இருள்சூழ்ந்து மனச்சோர்வை ஏற்படுத்துகிற கடுங்குளிராக மாறி விடுகிறது. ஒருநாள் நான் திருமண விழாவில் பங்குபெறுகிறேன், அடுத்தநாள் நான் திறந்த கல்லறைக்கு முன்பாக நிற்கிறேன். ஒருநாள், என்னுடைய ஊழியத்தில், கர்த்தருக்காகப் பத்து ஆத்துமாக்களை மனந்திரும்பச் செய்து வெற்றிபெறுகிறேன். தொடர்ந்து பல நீண்ட நாட்கள், ஒருவரைக் கூட என்னால் வெற்றி கொள்ள முடியவில்லை. ஆம், நாட்கள் மாறிப் போகிற வானிலை போலக் காணப்படுகின்றன. கிறிஸ்தவ மகிழ்ச்சி என்றென்றும் மாறாதது. மகிமைநிறைந்த நிலைபேற்றினை அது பெற்றிருப்பதன் மர்மம் என்ன?

அந்த இரகசியம் இங்கே இருக்கிறது. "இதோ! உன்னோடுகூட நான் எல்லா நாட்களிலும் இருக்கிறேன்." மாறிப் போகிற நாட்களில், "அவர் மாறாதவராயிருக்கிறார். அவர் சோர்வடைவதுமில்லை." வானிலை நன்றாக இருக்கும் போது உடன் இருந்துவிட்டு, இருளும் குளிரும் பெருகுகிற காலத்தில் என்னைத் தனியே விட்டுச் செல்கிறவரல்ல அவர். நான் செல்வச் செழிப்பில் இருக்கும் நாட்களில் மட்டும் என்னோடு இருந்துவிட்டு, வறுமையிலும் தோல்வியிலும் நான் கடந்து செல்லுகிற நாட்களில் காணாமற்போகிறவரல்ல அவர். நான் மாலை அணிந்திருக்கும்போது என் அருகில் நின்று காட்சிதந்துவிட்டு, நான் முள்முடி சூடியிருக்கும் போது அவர் தம்மை மறைத்துக்கொள்ளவும் மாட்டார். "எல்லா நாட்களிலும்" அவர் என்னோடு இருக்கிறார். வளமிக்க நாட்களிலும்,இன்னல் பெருகுகிற நாட்களிலும்; சாவு மணி அடிக்கிற போதும், திருமண மணி தொனிக்கிற போதும் அவர் என்னோடு இருக்கிறார். "எல்லா நாட்களிலும்."– வாழ்வின் நாளிலும், சாவின் நாளிலும், நியாயத்தீர்ப்பின் நாளிலும் அவர் என்னோடு இருக்கிறார்.[21]

**4:5** அவர்களுடைய **சாந்தகுணம் எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்க** வேண்டுமென்று இப்பொழுது பவுல் அவர்களிடம் வற்புறுத்தி வேண்டுகிறார். இதனை இசைந்துகொடுப்பது, இனிமையான பகுத்தறிவுக்கு ஏற்றபடி நடந்து கொள்வது, தன்னுடைய சொந்த வழியை விட்டுக் கொடுப்பது, என்றும் மொழிபெயர்க்கலாம். இதன் பொருளை *அறிந்துகொள்வதில்* எந்தச் சிரமமும் இல்லை, மாறாக **எல்லா மனிதருக்கும் தெரிந்திருக்கும்படியாக** இந்தக் கட்டளைக்குக் *கீழ்ப்படிவதே* மிகவும் கடினமானது.

**கர்த்தர் சமீபமாயிருக்கிறார்** என்னும் சொற்றொடர் கர்த்தர் இப்பொழுது இந்த இடத்தில் இருக்கிறார் என்றோ, கர்த்தருடைய வருகை விரைவில் நிகழும் என்றோ பொருள்படும். இரண்டும் உண்மையே, ஆனாலும் நாம் பிந்திய கருத்தை ஆதரிக்கிறோம்.

**4:6 ஒன்றுக்குங் கவலைப்படாமல்** இருப்பதென்பது ஒரு கிறிஸ்தவனால் உண்மையாகவே இருக்கக்கூடிய நிலையாகுமா? நம்பிக்கையுடைய ஜெபம் என்னும் ஆதாரத்தை நாம் பெற்றிருக்கும்வரை இது சாத்தியமானதே. நம்முடைய வாழ்க்கை எவ்வாறு பாவத்தின் அலைக்கழிப்புகளிலிருந்து விடுபட்டு இருக்க முடியும் என்பதற்கான விளக்கத்தை இந்த வசனத்தின் எஞ்சிய பகுதி தருகிறது. எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் **ஜெபத்தின்** மூலமாகக் கொண்டுபோக வேண்டும். **எல்லாவற்றையும்** என்பதன் பொருள் *எல்லாவற்றையும்* என்பதுதான். அவருடைய பாசத்திற்குரிய பராமரிப்புக்கு எதுவும் பெரிதான தல்ல, பராமரிக்கக் கூடாதபடி எதுவும் சிறியது மல்ல!

**ஜெபம்** ஒரு செயலாக இருப்பதோடு, அது ஒரு சூழ்நிலையாகவும் இருக்கிறது. குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட விண்ணப்பங்களோடு ஜெபத்தில் நாம் கர்த்தருடைய முன்னிலைக்கு வருகிறோம். ஆனால் நாம் ஜெபம் என்னும் *சூழ் நிலையில்* வாழவும் கூடும். நம்முடைய வாழ்வின் மனநிலை ஜெபம்நிறைந்த மனநிலையாக இருக்க வேண்டும். இந்த வசனத்திலுள்ள **ஜெபம்** என்னும் சொல், நம்முடைய வாழ்க்கையின் ஒட்டுமொத்த மனோபாவத்தையே குறிப்பிடுகிறது. ஆனால் **வேண்டுதல்** என்னும் சொல் நாம் கர்த்தரிடத்தில் கொண்டு வருகிற **விண்ணப்பங்களைக்** குறிக்கிறது.

எனினும், நம்முடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடு தேவனுக்குத் தெரியப்படுத்த

வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். ஒருவர் இந்த வசனத்தைச் சுருங்கக் கூறியிருக்கிறார்: "ஒன்றுக்கும் கவலைப்படாமல், ஒவ்வொன்றுக்காகவும் ஜெபித்து, எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்தரிப்போம்."

**4:7** இவ்வித மனநிலைகள் நம்முடைய வாழ்க்கையின் பண்புகளாக விளங்குமானால் **எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம்** நம்முடைய **இருதயங்களையும்** நம்முடைய **சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.** ஒரு விசுவாசி தேவன்மேல் சாய்ந்து இறுகப் பற்றிக்கொள்ளுவானானால், அவனுடைய ஆத்துமாவில் வெள்ளம்போல் நிறைந்து வழிகிற பரிசுத்த இளைப்பாறுதல் மற்றும் மனநிறைவு ஆகிய உணர்வுகளே **தேவ சமாதானம்** ஆகும்.

என்னிடத்தில் நிலைத்திருங்கள்
எனமொழிந்த அருள்நாதர்
நன்மைகளால் நிறைவடைய
வாக்குரைத்தார் – உரைத்தபடி
இன் வாழ்வில் இளைப்பாறி
மனவமைதி பெற்றிருப்பான்
தன்வாழ்வை ஒப்புவித்தோன் இசைந்து.

**எல்லாப் புத்திக்கும் மேலானது சமாதானம்.** உலக மனிதர்களால் இதனைச் சிறிதளவும் புரிந்துகொள்ள முடியாது, இதனைப் பெற்றுக் கொண்டிருக்கிற கிறிஸ்தவர்களாலும்கூட இதில் அடங்கியுள்ள இரகசியத்தின் வியத்தகு ஆதாரத்தைக் கண்டடைய முடியாது. சோக நிகழ்ச்சிகள், எதிர்மாறான சூழ்நிலைகள் ஏற்படுகிற தருணங்களில் மனக்கவலையின்றி தாங்கள் இருப்பதைக் குறித்து அவர்கள் வியப்படைகிறார்கள்.

இந்தச் சமாதானமானது இருதயத்தை அரண் போல் சூழ்ந்துகொண்டு சிந்தனை வாழ்க்கையைப் பாதுகாக்கிறது. நரம்புக்கோளாறுகள், பதற்றம், மனவேதனை, மனத்தளர்ச்சி ஆகியவை பெருகியிருக்கும் இந்த நாட்களில் இந்த அருமருந்தல்லவா தேவை.

**4:8** சிந்தனை வாழ்க்கையைக் குறித்த இறுதியானதோர் ஆலோசனையை இப்பொழுது அப்போஸ்தலன் வழங்குகிறார். நாம் சிந்திக்கிற வற்றை நம்மால் கட்டுப்படுத்த முடியும் என்றே வேதம் எல்லா இடங்களிலும் கற்பிக்கிறது. நாம் வரவேற்காத எண்ணங்களால் நம்முடைய மனது நிறைந்திருப்பதால் அதிலிருந்து நம்மால் தப்பிக்க முடியாது என்னும் தோல்வியுற்ற மனப்பான்மையுடன் செயல்படுவது பயனற்றது. நிச்சயமாக நம்மால் அதைத் தடைசெய்ய முடியும் என்பதே உண்மை. நாம் நேர்மையான சிந்தனை உடையவராக இருப்பதில்தான் அந்த இரகசியம் அடங்கியிருக்கிறது. இது நன்கு அறியப்பெற்ற கோட்பாடு என்று பெயர்பெற்றிருக்கிறது - ஒரு புதிய பற்றின் வெளியேற்றும் ஆற்றல். ஒரு மனிதனால் ஒரே நேரத்தில் தீய சிந்தனைகளையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்த சிந்தனைகளையும் கொண்டிருக்க முடியாது. அவ்வாறிருக்கும்போது, தீய நினைவுகள் அவனுடைய உள்ளத்தில் எழும்போது, கிறிஸ்துவின் ஆளுமையையும் அவருடைய செயல்களையும் குறித்துச் சிந்தித்து, தீய நினைவுகளை உடனடியாகக் களைய வேண்டும். நல்லறிவு பெற்ற இந்நாள் உளநூல் வல்லுநர்களும், மனநோய் மருத்துவர்களும் இந்த விஷயத்தில் அப்போஸ்தலனாகிய பவுலின் எண்ணத்தில் உடன்பாடு கொள்கிறார்கள். நேர்மையற்ற சிந்தனைகளினால் உண்டாகும் ஆபத்தைக் குறித்து அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

எட்டாவது வசனத்தில் கர்த்தராகிய இயேசுவைக் காண்பதற்கு, அதை நீங்கள் உற்றுப் பார்க்க வேண்டிய தேவையில்லை. **உண்மை, ஒழுக்கம், நீதி, கற்பு, அன்பு, நற்கீர்த்தி,** நற்குணம், **புகழ்** ஆகிய யாவும் அவரிடத்தில் காணப்படுகின்றன. இந்தப் பண்புகள் ஒவ்வொன்றாய் நாம் நோக்கிப்பார்ப்போம்: **உண்மை** என்பது தவறானதோ பொய்த்தோற்றமோ அல்ல, மாறாக அது மெய்யானதும் இயல்பானதும் ஆகும். **ஒழுக்கம்** என்பது மதிப்பிற்குரியது அல்லது ஒழுக்க நெறியின்படி கவர்ச்சிமிக்கது என்று பொருள்படும். **நீதி** என்பது தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் நேர்மையாக நடந்துகொள்வதாகும். **கற்பு** எனப்படுவது ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் காணப்பட வேண்டிய உயர்வான ஒழுக்கமாகும். **அன்புள்ளது** என்னும் சொல் காண்பதற்கும் மனதிற்கொள்வதற்கும் கவர்ச்சியானது என்றும் மற்றும் ஒப்புக்கொள்வதற்கு உரியது என்றும் பொருள்படும். **நற்கீர்த்தி** என்பது "உயர்வாய் மதிப்பிடத்தக்கது என்றோ "நேர்மையாய்" ஒலிப்பது என்றோ மொழிபெயர்க்கப்படும். **புண்ணியம்** (நற்குணம்) ஒழுக்கநெறியின் உயர்ந்த நிலை என்பதில் ஐயமில்லை. **புகழ்** புகழ்ந்து போற்றக் கூடியது என்று பொருள்படும்.

ஏழாவது வசனத்தில், பரிசுத்தவான்களின் இருதயங்களும் அவர்களுடைய சிந்தனைகளும்

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவனால் காக்கப் படும் என்று பவுல் உறுதியளித்திருக்கிறார். ஆனாலும் இந்த விஷயத்தில் அவர்களுக்கும் பொறுப்பு உண்டு என்று அவர்களுக்கு நினைவு படுத்த அவர் மறக்கவில்லை. ஒரு மனிதன் தன்னுடைய சிந்தனை வாழ்க்கையைத் தூய்மை யாக வைத்துக்கொள்ள விருப்பமற்றவனாக இருப்பானென்றால் தேவன் அவனுடைய சிந் தனை வாழ்க்கையைப் பாதுகாக்க மாட்டார்.

**4:9** மீண்டும் அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை ஒரு முன்மாதிரியான பரிசுத்தவானாக முன் நிறுத்துகிறார். அவர்கள் அவரிடத்தில் **கற் றுக்கொண்டவற்றையும்**, அவருடைய வாழ்க் கையில் **கண்டவற்றையும்** கைக்கொள்ள வேண்டுமென்று பவுல் அவர்களை வலியுறுத்து கிறார்.

இந்த அறிவுரையானது எட்டாவது வசனத் தைத் தொடர்ந்து உடனடியாகச் சொல்லப்பட்டி ருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. நேர்மையான சிந்தனையின் விளைவு நேர்மையான வாழ்க்கை யாகும். ஒரு மனிதனுடைய சிந்தனை வாழ்க்கை தூய்மையானதாக இருக்குமானால், அவனு டைய வாழ்க்கையும் தூய்மையாக இருக்கும். இதற்கு மாறாக, ஒரு மனிதனுடைய மனது தீமை யின் ஊற்றாக இருக்குமென்றால் அதனின்று புறப்பட்டுவரும் ஓடையும் அழுக்கு நிறைந்ததாக இருக்கும் என்று உறுதியாகச் சொல்லமுடியும். ஒரு மனிதன் ஒருவகையான பாவத்தைத் தொடர்ந்து நீண்ட நாட்கள் சிந்தித்துக்கொண்டி ருப்பானானால், அவன் அந்தப் பாவத்தைச் செய்துவிடுவான் என்பதை நாம் நினைவிற் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனுடைய முன்மாதிரியைப் பின் பற்றுவதில் உண்மையோடு இருப்பவர்களுக்குச் சமாதானத்தின் தேவன் உடனிருப்பார் என்னும் வாக்குறுதி தரப்பட்டுள்ளது. ஏழாவது வசனத்தில் ஜெப உணர்வோடு இருப்பவர்களுடைய பங்காக தேவ சமாதானம் வாக்குரைக்கப்பட்டிருக்கிறது. இங்கே பரிசுத்தமாய் இருப்பவர்களுக்கு சமா தானத்தின் தேவன் உடனிருப்பவராக வாக்கு ரைக்கப்பட்டிருக்கிறார். சத்தியத்தின் உருவக மாகத் திகழ்வோருக்கு மிக நெருக்கமாகவும் பிரியமாகவும் தேவன்தாமே தற்கால அனுபவ மாக உடனிருப்பார் என்பதே இப்பகுதியின் கருத் தாக விளங்குகிறது.

## 9. பரிசுத்தவான்களின் அன்பளிப்புகளுக்காகப் பவுல் கூறும் நன்றிகள் (4:10-20)

**4:10** நிதி உதவியோடுள்ள தொடர்பில் பிலிப்பி பட்டணத்து சபைக்கும் பவுலுக்கும் இடையே நிலவிய உறவு பற்றி 10-19 ஆகிய வசனங்களில் பவுல் பேசுகிறார். நிதி நெருக்கடி மற்றும் பின்னடைவு ஆகிய அனுபவங்களின் ஊடாகச் செல்லும்படியாக அழைக்கப்பட்ட தேவ னுடைய பரிசுத்தவான்களுக்கு இந்த வசனங்கள் எத்தனை பொருளுடையவையாக இருக்கும் என்பதை யாராலும் விளக்கிக் கூறமுடியாது.

**மறுபடியும்,** அதாவது சிறிது கால இடை வெளிக்குப் பிறகு, பிலிப்பியர் கர்த்தருடைய ஊழியத்திற்கு ஆக்கபூர்வமான நிலையில் உதவியை அனுப்பியதற்காகப் பவுல் **சந்தோ ஷப்படுகிறார்.** அவர்கள் உதவியை அனுப்பாத அந்த இடைவெளி நாட்களுக்காக அவர் அவர் களைக் குறைகூறவில்லை. அவர்கள் அவருக் குப் பணம் அனுப்ப விரும்பினார்கள், ஆனால் அவர்களுக்குச் சமயம் மாத்திரம் நேரிடவில்லை என்று அவர் புகழுரையே வழங்குகிறார். "உங்க ளிடத்தில் அக்கறை குறையவில்லை, மாறாக அதை வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்பே குறைந்து போயிற்று" என்று திருவாளர் மோ.ப்பட் இதனை மொழிபெயர்த்திருக்கிறார்.

**4:11** நிதியைப் பற்றிய அனைத்து விவரங் களையும் எழுதுகையில் பவுல் மென்னயத்தை யும் அடக்கத்தையும் கையாளுகிற முறை அழகு பொருந்தியதாகக் காணப்படுகிறது. பணப் பற்றாக்குறை உண்டென்று தான் குறைசொல்லு வதாக அவர்கள் நினைத்துவிடக் கூடாது என்றே அவர் கருதுகிறார். மாறாக, இவ்விதமான உலக வாழ்க்கைக்குரிய காரியங்களுக்கு அவர் முற்றி லும் அப்பாற்பட்டவராக இருக்கிறார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்றே அவர் விரும் பினார். அவருடைய நிதி நிலைமை எப்படிப்பட்ட தாக இருந்தாலும் அவர் **மனரம்மியமாக இருக் கக் கற்றுக்கொண்டிருந்தார்.** செல்வச்செழிப் பைக் காட்டிலும் போதுமென்ற மனது உண்மை யிலேயே சிறந்தது. ஏனெனில், "போதுமென்ற மனது செல்வத்தை உண்டுபண்ணவில்லை யென்றாலும், அது அதன்மேல் உள்ள நாட் டத்தை அகற்றி, செல்வச்செழிப்பு உள்ள மன நிலையை உருவாக்கிவிடுகிறது."

"வெறும் வயிறோடு தலையை உயர்த்தி நடப் பது, வெறும் பையோடு நேர்மையான பார்வையைக் கொண்டிருப்பது, சம்பளமில்லாமல் மகிழ்ச்சி நிறைந்த இருதயம், பிறர் உண்மையற்றவர் களாக இருந்தாலும் தேவனிடத்தில் களிகூருவது இவை யாவற்றையும் ஒரு விசுவாசி கற்றிருப்பது ஆசிர்வாதத்திற்குரிய இரகசியமாகும்" (தெரிந் தெடுக்கப்பட்டது).

**4:12 தாழ்ந்திருக்கப்** பவுலுக்குத் தெரியும். அதாவது, வாழ்க்கையின் குறைந்த பட்சத் தேவைகள் இல்லாத நிலையை இது குறிக்கிறது; **வாழ்ந்திருக்கவும் தெரியும்.** அதாவது ஒரு குறிப் பிட்ட நேரத்தில் அவருடைய உடனடித் தேவை களுக்கு மேல் அவர் பெற்றிருக்கும் நிலையை இது குறிக்கிறது. **எவ்விடத்திலும் எல்லாவற்றி லும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக் கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும்** அவர் **கற்றுக்கொண்டிருந்தார்.** இப்படிப்பட்ட பாடத்தை அப்போஸ்தலன் எவ்வாறு **கற்றுக் கொண்டார்?** அது ஒரு எளிமையான வழிமுறையே யாகும்: தேவனுடைய சித்தத்தின்படி அவர் வாழ்ந்தார் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டி ருந்தார். அவர் எங்கிருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் அவர் தெய்வீக நியமனத்தினாலேயே அங்கு இருந்தார் என்பதை அறிந்திருந்தார். அவர் **பட்டினியாயிருந்தால்,** அதன் காரணம் அவர் பட்டினியாயிருக்க வேண் டும் என்று தேவன் விரும்பியதேயாகும். அவர் **திருப்தியாயிருந்தால்** அதற்குக் காரணம் அவர் அவ்வாறு இருக்க வேண்டுமென்று கர்த்தர் திட்டமிட்டிருந்தார். சுறுசுறுப்போடும் உண்மை யோடும் தனது அரசரின் பணியில் ஈடுபட்டிருந்த தால், "ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்மு டைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது" என்று அவரால் சொல்ல முடிந்தது.

**4:13** பலருக்குப் புதிராயிருக்கக் கூடிய சொற் களை அப்போஸ்தலன் இங்கு தொடர்ந்து கூறு கிறார்: **"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு."** அவரால் இதனை எழுத்தின்படி சொல்லியிருக்க முடியுமா? தன்னால் செய்ய முடி யாதது ஒன்றுமில்லை என்று உண்மையாகவே அப்போஸ்தலன் நம்பினாரா? இதற்கான விடை இதுதான்: **எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு** என்று அவர் சொன்னபோது, அவர் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டிருந்தாரோ அவை **எல்லாவற்றையும் செய்ய** அவருக்கு பெலன் இருந்தது என்பதே பொருளாகும். கர்த்தருடைய கட்டளைகள் கர்த்த ரால் செயலாற்றக்கூடியவையேயாகும். ஒரு வேலையைச் செய்வதற்குத் தேவையான கிருபை யைத் தந்தருளாமல் அவர் அந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று தேவன் கட்டளையிட மாட்டார் என்பதை அவர் அறிந்திருந்தார். எல்லா வற்றையும் என்னும் சொல் துணிவுமிக்க அருஞ் செயல் என்னும் பொருளோடு சொல்லப்பட வில்லை, அதனினும் பெரிதான இழப்புகளையும் பசியையுமே அது குறிக்கிறது.

**4:14** மேற்கூறியபடி அவர் பேசிய போதிலும், அவருடைய **உபத்திரவத்தில்** பிலிப்பியர் அவ ரோடு **உடன்பட்டது** நலமான செயல் என்று அவர் கள் அறிந்திருக்க வேண்டுமென்று விரும்பினார். அவருடைய சிறையிருப்பின்போது அவருடைய தேவைகளை நிறைவு செய்யும்படி அவர்கள் அனுப்பிய பணத்தையே இது பெரும்பாலும் குறிக்கக்கூடும்.

**4:15** தொடக்கத்தில், **கொடுப்பது** என்னும் கிருபையின் செயலில் **பிலிப்பியர்** சிறந்து விளங் கினார்கள். பவுல் ஊழியம் செய்யத் தொடங்கிய நாட்களில், அவர் **மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது,** பிலிப்பியரைத் தவிர வேறு எந்தச் **சபையும்** அவருக்கு நிதிஉதவி செய்யவில்லை.

விலைமதிப்பு மிக்க அரிய சொற்களைக் கொண்ட தேவனுடைய திருமறையில், தோற்றத் தில் முக்கியமற்றதாகக் காட்சியளிக்கும் இத்த கைய விவரங்கள் என்றென்றும் நிலைத்திருக் கும்படி இவ்வாறு பதிவுசெய்து வைக்கப்பட்டிருப் பது குறிப்பிடத்தக்க செயலாகும். கர்த்தருடைய ஊழியர்களுக்குக் கொடுப்பது கர்த்தருக்கே கொடுப்பதாகும் என்று இந்தப் பகுதி நமக்குக் கற்பிக்கிறது. அவர் ஒவ்வொரு காசைக் குறித்தும் அக்கறையுடையவராக இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் தமக்கே செய்ததாகப் கணக் கிட்டு, அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி நன்றாய் அளந்து பரிசளிப்பார்.

**4:16** அவர் **தெசலோனிக்கே** பட்டணத்தில் இருந்தபோது அவர்கள் அவருடைய தேவைக் காக **இரண்டொருதரம் அனுப்பினார்கள்.** அவர்கள் கொடுப்பதில் கர்த்தருடைய வழிநடத்து தலைப் பெற்றுக்கொள்ளும்படியாகக் கர்த்த ருக்கு மிகநெருக்கமாக வாழ்ந்தார்கள் என்பது வெளிப்படை. அப்போஸ்தலனாகிய பவுலைக் குறித்த பாரத்தைப் பரிசுத்த ஆவியானவர் அவர் களுடைய இருதயங்களில் வைத்தார். அதனு

டைய விளைவாக அவர்கள் அவருக்கு **இரண்டொருதரம்,** அதாவது இரண்டுமுறை பணம் அனுப்பினார்கள். தெசலோனிக்கே பட்டணத்தில் பவுல் சிறிது காலம் மட்டுமே தங்கியிருந்தார். இதனை நாம் நினைவுகூருங்கால், அவரிடத்தில் பிலிப்பியர் எவ்வளவாக அக்கறை கொண்டிருந்தார்கள் என்பது புலப்படும். இது எத்தனை பெருஞ் சிறப்பு வாய்ந்த செயலாகும்.

**4:17** பவுல் சிறிதளவும் தன்னலம் அற்றவராக இருந்தார் என்பதை இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது. அவர்களுடைய உபகாரத்தைக் காட்டிலும் அவர்களுடைய ஆதாயத்தைக் குறித்து எண்ணியவராகவே அவர் இறும்பூது எய்தினார். தனக்குக் கிடைக்கக்கூடிய நிதிஉதவியைக் காட்டிலும், விசுவாசிகளுடைய கணக்கில் பலன் பெருகுவதையே அவர் கூடுதலாக வாஞ்சித்தார். கர்த்தருக்குப் பணம் கொடுக்கும்போது இதுவே மிகச்சரியாக நிகழ்கிறது. இவையாவும் கணக்குப் புத்தகங்களில் எழுதப்பட்டு, வரும்நாளில் நூறு மடங்காகத் தரப்படும்.

நம்முடைய உடைமைகள் யாவும் கர்த்தருக்குச் சொந்தமானவையே. நாம் அவருக்குக் கொடுக்கும்போது, அவருக்குச் சொந்தமானதையே கொடுக்கிறோம். தங்களுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைக் கர்த்தருக்குச் செலுத்தவேண்டுமா கூடாதா என்று வாதாடுகிற கிறிஸ்தவர்கள் கருத்தைத் தவறவிட்டுவிட்டார்கள் என்பதே பொருளாகும். தசமபாகம் அல்லது பத்தில் ஒரு பங்கு என்பது நியாயப்பிரமாணத்தின்படி இஸ்ரவேலர் குறைந்தபட்சம் செலுத்த வேண்டிய காணிக்கையாகும். இந்தக் கிருபையின் காலத்தில், "கர்த்தருக்கு நான் எவ்வளவு கொடுக்க வேண்டும்?" என்பதல்ல எழுப்ப வேண்டிய கேள்வி. மாறாக, "எனக்கென்று எவ்வளவு பணத்தை வைத்துக்கொள்ள நான் துணிவு கொள்வேன்" என்பதே கேட்கவேண்டிய கேள்வி. கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்காததாலே மனிதர்கள் அழிந்துபோகாதபடி கர்த்தருடைய ஊழியத்திற்கென்று தன்னுடைய வருமானத்தில் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்னும் விருப்பத்தோடு சிக்கனமாகவும் தியாக மனப்பான்மையோடும் வாழ்வதே கிறிஸ்தவர்களுடைய வாஞ்சையாக இருக்க வேண்டும்.

**4:18 எல்லாம் எனக்குக் கிடைத்தது** என்று பவுல் சொல்லுகிறபோது,எனக்குத் **தேவையான எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது** என்னும் பொருளிலேயே அவ்வாறு கூறுகிறார். இந்த இருபத்தோராம் நூற்றாண்டில், வாணிக மனப்பான்மை மேலோங்கி நிற்கிற காலகட்டத்தில் கர்த்தருடைய ஊழியர் பணத்திற்காக இரந்து திரிவதற்குப் பதிலாக, தனக்கு எல்லாம் நிறைவாக இருக்கிறது என்று கூறுவாரானால் அது விநோதமாகத் தோன்றும். எந்தவிதமான தங்குதடையுமின்றி இந்நாட்களில் பிச்சையெடுக்கும் வேண்டுகோள்கள் தேவனுடைய பார்வையில் அருவருப்பும், கிறிஸ்துவின் திருப்பெயருக்கு கொண்டுவரப்படும் நிந்தையுமாகும். அவை முற்றிலும் தேவையற்றவை. "தேவனுடைய ஊழியமானது தேவனுடைய வழியில் செய்யப்படுமாயின் தேவனிடத்திலிருந்து பெறக்கூடிய பணவளம் ஒருக்காலும் குன்றிப் போகாது" என்று ஒருமுறை ஹாட்சன் டேய்லர் கூறினார். தேவனுக்காக ஊழியம் செய்தல், தேவனுடைய ஊழியம் இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கண்டுணர நாம் தவறிவிடுகிறோம் என்பதே இன்றைய நாட்களில் எழுந்துள்ள பிரச்சினை. கிறிஸ்தவ ஊழியம் என்னும் பெயரளவிலான ஊழியங்களில் ஈடுபடுவது சாத்தியமானதே, ஆனால் அதில் தேவனுடைய சித்தம் அறவே இல்லாமல் இருக்கலாம். பணம் பெரிதளவில் இருக்குமென்றால், தேவனுடைய அனுமதியின்றி புதிய ஊழியத்தில் முன்கூட்டிய சிந்தனை எதுவுமின்றி துணிவுடன் நுழையக்கூடிய பேராபத்து ஏற்பட வாய்ப்புண்டு. மீண்டும் ஹாட்சன் டேய்லர் கூறியதை மேற்கோளிட்டுக் காட்டுகிறோம்: "பணப்பற்றாக்குறையைக் கண்டு நாம் பயப்படத் தேவையில்லை, பரிசுத்தப்படுத்தப்படாத பெருமளவு பணத்தைக் கண்டே நாம் அச்சம்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்."

பிலிப்பியரிடமிருந்து அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எப்பாப்பிரோதீத்து கொண்டுவந்த அன்பின் ஈவு, **சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக இருந்தது** என்று விவரிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரே ஒருமுறை இதே சொற்கள் கிறிஸ்துவைக் குறிக்கும்படியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன (எபே. 5:2). பிலிப்பியர் தியாக மனப்பான்மையோடு கொடுத்த காணிக்கையைப் பற்றி தேவன் எவ்வாறு எண்ணுகிறார் என்பதைக் கூறி பவுல் அதை மேன்மைப்படுத்துகிறார். அது சுகந்த வாசனையுடன்கூடிய **பலியாக** அவரிடமாய் மேலெழுந்து சென்றது. அது தேவனுக்கு **உகந்ததும் பிரியமானதுமாய்** இருந்தது.

திருவாளர் ஜோவெட் வியந்து போற்றுகிறார்:

> உள்ளூரில் காட்டுகிறதாகத் தோன்றும் தயவு எத்தனை பெரிதாயிருக்கிறது! நாம் ஒரு தரித்திரனுக்கு பணிவிட செய்தோம் என நினைக்கிறோம். உண்மையில் நாம் மன்னரோடு அளவளாவினோம். நம்மைச் சுற்றியுள்ள சிறு பகுதிக்குள்ளாக அந்த நறுமணம் அடைபட்டுக் கிடக்கும் என்று கற்பனை செய்து கொண்டோம். ஆனால், எத்தனை ஆச்சரியம் அதனுடைய நறுமணம் இப்பிரபஞ்சம் முழுவதையும் கவர்ந்து கொண்டது. நாம் பவுலோடு மட்டும் உறவாடினோம் என்று நினைத்தோம். ஆனால் பவுலுடைய இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசுவுக்கே பணிவிடை செய்துகொண்டிருந்தோம் என்பதை இப்பொழுது உணருகிறோம்.[22]

**4:19** இந்த முழு அதிகாரத்திலும் நன்கு அறிப்பட்டதும், நன்கு விரும்பப்பட்டதுமான வசனத்தைப் பவுல் கூட்டி வழங்குகிறார். அவர்களுடைய உண்மையுள்ள உக்கிராண ஊழியத்தைக் குறித்த விவரங்களைத் தொடர்ந்து, வாக்குறுதி உரைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய பொருளுடைமைகளை, தங்களுடைய சொந்த வாழ்க்கைத் தேவைகளையே பாதிக்கக்கூடிய அளவிற்கு தேவனுக்குக் கொடுத்துவிட்டதால், தேவன்தாமே அவர்களுடைய ஒவ்வொரு **குறைவையும்** நிறைவாக்குவார். இந்த வசனத்தை இதனுடைய பின்னணியிலிருந்து எடுத்து, தேவனுடைய ஊழியத்தைக் குறித்துச் சற்றும் நினைவிற் கொள்ளாமல், தங்களுக்கே வீண் செலவு செய்துகொண்டு திரிகிற கிறிஸ்தவர்கள் சாய்ந்து இளைப்பாறுவதற்குப் பயன்படுத்துவது எவ்வளவு எளிதாயிருக்கிறது! "அது எல்லாம் சரிதான். உங்கள் குறைவுகளையெல்லாம் தேவன் நிறைவாக்குவார்."

பொதுவான அர்த்தத்தில், தம்முடைய மக்களுடைய குறைவுகளை தேவன் நிறைவாக்குவார் என்பது உண்மையாக இருப்பினும், கிறிஸ்துவுக்குக் கொடுப்பதில் யாரெல்லாம் உண்மையோடும் விசுவாசத்தோடும் செயல்புரிகிறார்களோ அவர்கள் யாவரும் ஒருக்காலும் குறைவுபடாமல் இருப்பார்கள் என்று இங்கு குறிப்பிட்டு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவன் தம்முடைய *ஐசுவரியத்திலிருந்து* தம்முடைய மக்களுடைய குறைவுகளைத் தீர்ப்பார் என்று சொல்லப்படாமல், **தம்முடைய ஐசுவரியத்தின்படி கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்** என்றே சொல்லப்பட்டிருக்கிறது என்று அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரு கோடீஸ்வரன் பத்து ரூபாயை ஒரு பிள்ளைக்குக் கொடுப்பானாயின் அவன் தம்முடைய *ஐசுவரியத்திலிருந்து* கொடுப்பவனாகக் காணப்படுவான்; அவனே நல்ல நோக்கத்திற்காக ஒரு லட்சம் ரூபாயைத் தருகிறான் என்றால், அச்செயல் அவனுடைய *ஐசுவரியத்தின்படி* கொடுப்பதாக விளங்கும். தேவன் கொடுப்பதோ, அவருடைய ஐசுவரியத்தின்படி கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்கும் செயலாக விளங்குகிறது, இதனைக் காட்டிலும் செல்வத்தில் பெரியது வேறு எதுவும் இல்லை!

பத்தொன்பதாம் வசனம் விசுவாசம் என்னும் வங்கியில் பணம் எடுப்பதற்கான ஒரு காசோலைக்கு ஒப்பாக இருக்கிறது என்று திருவாளர் வில்லியம்ஸ் கூறுகிறார்:

**என் தேவன்** - வங்கியின் பெயர்.

**நிறைவாக்குவார்** - தரப்படும் என்பதற்கான வாக்குறுதி.

**உங்களை குறைவையெல்லாம்**- காசோலையின் மதிப்பு.

**தம்முடைய ஐசுவரியத்தின்படி** - வங்கியின் மூலதனம்.

**மகிமையிலே** - வங்கியின் முகவரி.

**கிறிஸ்து இயேசுவுக்குள்** - காசோலை வரைந்தவரின் கையொப்பம், அது இல்லையெனில் அந்தக் காசோலைக்கு மதிப்பு எதுவும் இல்லை.[23]

**4:20** தேவைகள் யாவும் தேவனால் ஏராளமாக நிறைவு செய்யப்படுகிறதை எண்ணிப்பார்த்த அப்போஸ்தலன் புகழுரையோடு பூரித்து எழுதுகிறார். தேவையான பொருட்களைத் தருவதில் மட்டுமின்றி, வழிகாட்டியாக அமைந்து, சோதனைகளில் உதவிசெய்து, தளர்ந்துபோன விசுவாச வாழ்க்கையை உயிர்பெறச் செய்யும் தேவனுடைய கிருபையோடு கூடிய அக்கறையை நாள்தோறும் அனுபவிக்கும் தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவரும் ஏறெடுப்பதற்கு இது தகுதியான சொற்றொடராக விளங்குகிறது.

### 10. முடிவுரை வாழ்த்துகள் [4:21-23]

**4:21** அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து விசுவாசிகளுக்கு எழுதிய மடலை,

அவர்கள் சபையாக ஒன்றுகூடி வாசிக்கக் கேட்டுக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணிப் பார்த்த வராக, **கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்த வான்கள் யாவருக்கும்** அவர் வாழ்த்துதல் சொல்லுவதோடு, அவரோடிருக்கிற **சகோதரர்கள்** கூறுகிற வாழ்த்துதலையும் அறிவிக்கிறார்.

**4:22 இராயனுடைய அரண்மனையில்** உள்ளவர்கள் என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதால், இதனை நேசிக்கும்படியாக நாம் வற்புறுத்தப்படுகிறோம். நம்முடைய கற்பனைகள் மகிழ்ந்து ஆரவாரிக்கும்படி மிகுந்த ஆற்றலுடன் ஏவப்படுகின்றன. நீரோவின் வீட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளவர் யார்? அப்போஸ்தலனாகிய பவுலைக் காவல் காக்கும்படி பணியில் இருந்த படைவீரர்களில், அவருடைய ஊழியத்தின் நிமித்தம் சிலர் இரட்சிக்கப்பட்டார்கள், அவர்களை இந்தச் சொற்றொடர் குறிப்பிடுகிறதா? அந்த அரண்மனையில் வேலை பார்த்த அடிமைகளா? அல்லது விடுதலை பெற்ற அடிமைகளா? ரோம அரசாங்கத்தின் அதிகாரிகள் சிலரையும் அந்தச் சொற்றொடர் உட்கொண்டதாக இருக்கிறதா? யாரென்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால், தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரண்மனைகளில் இடம்பிடித்த சிலத்திப் பூச்சிகள் என்னும் உண்மைக்கு இவர்கள் அழகிய எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கிறார்கள் (நீதி. 30:28)! நற்செய்திக்கு எல்லைகள் வகுக்கப்படவில்லை. கடினமான எந்தச் சுவரையும் அது ஊடுருவிச் செல்லும். நற்செய்தியை அழித்துவிட வேண்டும் என்று செயல்படுகிற மக்களின் நடுவே அது நடப்பட்டு, துளிர்விடும். உண்மையாகவே இயேசு கிறிஸ்துவின் சபையை நரகத்தின் வாசல்கள் வெற்றி கொள்வதில்லை!

**4:23** இப்பொழுது பவுல் தன்னுடைய தனிச் சிறப்பு உடைய வாழ்த்துதலைக் கூறி முடிக்கிறார். இந்த மடலின் முதல் பக்கத்தில் **கிருபை** சுடரொளி வீசியது, மீண்டும் அது மடலின் முடிவில் காணப்படுகிறது. மனிதனுடைய இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். எல்லாக் காலத்திலும் மிகப் பெரிய கருத்தாக விளங்கும், **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்** மூலமாக வெளிப்படுகிற தேவனுடைய **கிருபை** பவுலின் இருதயத்தை நிரப்பி, பொங்கி வழிகிறது. இந்த மதிப்புமிக்க சத்தியமானது அவருடைய வாழ்க்கையின் எல்லா நாளங்களிலும் பாய்ந்து செல்லும் என்பது நமக்கு வியப்பை ஏற்படுத்துகிறதில்லை.

> பால் ரீஸ் என்பார் முடிவுரை வழங்குகிறார்:
>
> மனுக்குலத்தின் மிகப்பெரிய மனிதன் தன்னுடைய மடல்களிலேயே கிளர்ச்சி மிக்க மடலை எழுதியிருக்கிறார். அன்பின் கடமை முடிவுபெற்றது. பகல் முடிந்து போயிற்று. அப்போஸ்தலனின் மணிக்கட்டில் இன்னமும் சங்கிலிகள் கட்டப்பட்டிருக்கின்றன. போர்வீரர்கள் இன்னமும் காவல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். பவுலின் உள்ளம் இவற்றில் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. அவருடைய மனது தெளிவாயிருக்கிறது! அவருடைய இருதயம் பிரகாசிக்கிறது!
>
> அடுத்த நாள் காலையில் எப்பாப்பிரோதீத்து பிலிப்பி பட்டணத்தை நோக்கி விறுவிறுப்பாக நடக்கத் தொடங்கினார்![24]

# அடிக்குறிப்புகள் - End Notes

1. (Intro) H. A. A. Kennedy, "Philippians", *The Expositor's Greek Testament*, III:407.

2. (1:1) J. H. Jowet, *The High Calling*, p. 2.

3. (1:7) W. E. Vine, *The Epistles to the Philippians and Colossians*, p.23.

4. (1:11) "துப்புரவானவர்கள்" என்னும் சொல்" கலப்படமற்ற" அல்லது "சூரிய ஒளியில் நிலைத்து நிற்கிற" என்று பொருள்படும். (கிரேக்கு – eilikrines). பிந்தின பொருள் சரியாக இருக்கு மெனில் "மெழுகு பூசப்படாத" என்னும் பொருளையே அது தரக்கூடும். வெள்ளைப் பளிங்குக் கல்லைச் செதுக்கி நேர்மையான சிற்பி குறைபாடுகளைக் களைவான். "நேர்மையற்ற சிற்பியோ" பழுதான பகுதிகளை மெழுகைப் பூசி நிரப்புவான். ஆனால் மெழுகு பூசப்பட்ட சிலை வெயிலில் வைக்கப்படும்போது, குறைபாடுகள் வெளிப்பட்டு, சிற்பி மூடிமறைக்க நினைத்த வற்றை வெளியரங்கமாக்கும்.

5. (1:11) Lehman Strauss, *Devotional Studies in the Philippians, p. 63*

6. (1:13) T. W. Drury, *The Prison Ministry of St. Paul*, 22.

7. (1:20) Guy King, *Joy Way*, p. 33

8. (1:21) Jowett, *Calling*, p. 34

9. (2:1) F. B. Meyer, *Devotional Commentary on Philippians,* pp. 77-79.

10. (2:5) King, *Joy Way*, p. 51.

11. (2:6) E. H. Gifford, *The Incarnation*, pp. 44,45.

12. (2:11) Charles R. Erdman, further documentaion unavilable.

13. (2:17) George Williams, *The Student's Commentary on the Holy Scriptures*, p. 931.

14. (3:7) King, *Joy Way*, p. 81.

15. (3:10) Jowett, *Calling*, p. 217.

16. (3:10) Ibid., pp. 81,82

17. (3:10) Hudson Taylor, qutoed by Mrs. Howard Taylor in *Behind the Ranges*, p. 170.

18. (3:10) C. A. Coates, *The Paths of Life and Other Address, Philippians,* p. 127.

19. (3:17) Strauss, *Philippians,* p. 202.

20. (4:3) "நுகத்தில் ஒன்றாக இணைக்கப் பட்டவன்" (கிரேக்கு su (n) zugos). இது ஒருவரு டைய பெயராக இருக்கக்கூடும் (synzygus). வேறு இடங்களில் இந்தப் பெயர் காணப்பட வில்லை யெனினும் ஓர் அடிமை இப்படிப்பட்ட பெயரைப் பெற்றிருக்கக்கூடும்.

21. (4:4) Jowett, *Day by Day*, pp. 169-171.

22. (4:18) Ibid., p. 225.

23. (4:19) Williams, *Student's Commentary*, p. 934.

24. (4:23) Paul Rees, *The Adequate Man*, p. 127.

### Bibliography


Erdman, C. R. *The Epistle of Paul to the Philippians*. Philadelphia: Westminster Press, 1928.

Gifford, E. H. *The Incarnation: A Study of Philippians*. London: Hodder & Stoughton, 1897.

Jowett, J. H. *The High Calling*. London: Andrew Melrose, 1909.

Kelly, William. *Lectures on Philippians and Colossians*. London: G. Morrish, n.d.

Kennedy, H. A. A. *"Philippians", The Expositor's Greek Testament*, Vol. III. Grand Rapids: Wm. B. Erdmans Publishing Co., 1961.

King, Guy H. *Joy Way*. London: Marshall, Morgan & Scott, Ltd., 1954.

Meyer, F. B. *Devotional Commentary on the Philippians*. Grand Rapids: Kregel Publication, 1979.

Rees, Paul. *The Adequate Man*. Westwood, N. J. : Fleming H. Revell Co., 1959.

Strauss, Lehman. *Devotional Studies in Philippians*. Neptune, N. J.: Loizeaux Bros. Publishers, 1959.

Vine, W. E. *The Epistle of Paul to the Philippians and Colossians*. London: Oliphants, 1955.

## பண்டைய எபேசு அரங்கம்



Courtesy: www.wikimedia.org

## பண்டைய பிலிப்பி பட்டணம்



Courtesy: www.wikimedia.org

அப்போஸ்தலனாகிய பவுல்

# கொலோசெயருக்கு எழுதின நிருபம்

## முன்னுரை

"கொலோசெயரின் திருமடலின் உள்ளே புகுந்து, ஆங்கு ஆவியின் ஏவுதலைப் பெற்ற மொழியினை அணிந்த வண்ணம் வலம்வரும் ஆவிக்குரிய சிந்தனைகளை மீண்டும் சிந்தித்து உய்த்துணருவது, நம்முடைய ஆத்துமாக்களை அந்தச் சிந்தனைகளின் ஒளியினாலும் வல்லமையினாலும் நிரப்பி, நம்முடைய வாழ்க்கையை அதன் அச்சுக்குள் வார்த்து, எல்லாக் காலங்களிலும், ஏன் நித்தியத்திலும்கூட நம்மை வளம்பெறச் செய்யும்." – R. C.H. லென்ஸ்கி

### 1. வேதநூல் வரிசையில் தனிச்சிறப்பு மிக்க இடம்

பவுல் எழுதிய மடல்களில் பெரும்பாலானவை மிகப்பெரிய அல்லது முக்கியமான நகரங்களில் இருந்த சபைகளுக்கு எழுதப்பட்டவை. ரோமாபுரி, கொரிந்து, எபேசு, பிலிப்பி ஆகியவையே அவை. ஆனால் கொலோசெ என்னும் நகரம் முன்னொரு காலத்தில் சிறப்பு பெற்றிருந்தபோதிலும், அங்கிருந்த சபை தொடக்ககால சபை வரலாற்றில் நன்கு அறியப்பட்டிருக்கவில்லை. சுருங்கக் கூறின், அங்கிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆவியின் ஏவுதலால் இந்த மடல் எழுதப்படாமல் இருந்திருக்குமாயின், பண்டைய வரலாற்றைப் படிக்கும் மாணாக்கர் மட்டுமே இந்த நகரத்தின் பெயரை அறிந்திருப்பார்கள்.

இந்த இடம் குறிப்பிடத்தக்கதாக இல்லாதிருந்தும், அப்போஸ்தலன் அங்கிருந்தவர்களுக்கு எழுதிய மடல் மிகவும் முக்கியமானது. யோவான் நற்செய்தி நூல் முதல் அதிகாரம், எபிரெயர் முதல் அதிகாரம் ஆகியவற்றுடன் இணைந்து கொலோசெயர் முதல் அதிகாரம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முழுநிறைவான இறைமைத் தன்மையைப் பற்றிய வியத்தகு விளக்கத்தைத் தந்தருளுகிறது. கிறிஸ்தவச் சத்தியங்கள் அனைத்திற்கும் அடித்தளமாக விளங்குவது இந்தக் கோட்பாடே ஆகும். ஆகவே, இதனுடைய மதிப்பை நம்மால் இதனினும் மிகைப்படுத்திச் சொல்ல முடியாது.

இந்த மடலில் ஒருவரோடொருவர் கொண்டுள்ள தொடர்புகள், கள்ளச் சமயக் குழுக்கள், கிறிஸ்தவ வாழ்க்கை ஆகியவை பற்றிய அறிவுரைகள் ஏராளமாக வழங்கப்பட்டுள்ளன.

### 2. நூலாசிரியர்

பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும், இந்த மடல் பவுலால் எழுதப்பட்டது என்பதை எவரேனும் மறுத்துரைத்ததாக ஆதாரம் எதுவும் இல்லை. அந்த அளவிற்கு இம்மடல் நிறைவான சான்றுகளைக் கொண்டிருக்கிறது. புறச்சான்று மிக வலிமை படைத்ததாக விளங்குகிறது. இந்த மடலிலிருந்து மேற்கோள்கள் எடுத்துப் பயன்படுத்தியவர்கள் அவ்வப்போது இதன் ஆசிரியர் பவுல் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இக்னேஷியஸ், ஜஸ்டின் மார்டியர், அந்தியோகியா தியோபிலஸ், ஐரேனியஸ், அலெக்சாண்ட்ரியா கிளமண்ட், தெர்தூலியன், ஓரிஜன் ஆகியவர்களே அவர்கள். மார்சியன் மற்றும் முரடோரி ஆகிய இரு வேத நூல் தொகுப்புகளும் கொலோசெயர் மடலின் உண்மைத்தன்மையை ஒப்புக்கொள்கின்றன.

அகச்சான்றினை நோக்குங்கால், அதில் ஓர் எளிய உண்மையைக் காண முடியும். இந்நூலாசிரியர் தன்னுடைய பெயர் பவுல் என்பதை மும்முறை குறிப்பிட்டுள்ளார் (1:1,23; 4:18). மேலும் அந்த இடங்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகள் யாவும் பவுல் எழுதியது என்ற உண்மைக்கு இசைந்திருக்கின்றன. கோட்பாட்டு விளக்கத்தைத் தொடர்ந்து கடமைகள் கூறப்பட்டிருக்கும் முறை பவுலுக்கே உரிய தனித்தன்மையாகும். பவுல் இந்த மடலை எழுதினார் என்பதற்கான மிகவும் வலிமையுடைய சான்றாக விளங்குவது இதன் ஆசிரியர் பிலேமோனுடன் கொண்ட தொடர்பேயாகும். அவ்விதமாக பிலேமோனுடன் நெருங்கிய தொடர்பினைக்கொண்டிருந்தது பவுல்தான் என்று அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். அவருக்குப் பவுல் எழுதிய சிறிய மடலில் குறிப்பிடப்பட்டுள்ள அதே ஐந்து மனிதர்களின் பெயர்களும்

கொலோசெயர் மடலிலும் இடம்பெற்றுள்ளார் கள். குறைகாண்பவராயிருந்த ரேனன் என்பவ ரும்கூட இந்த மடல் பிலேமோனின் மடலோடு கொண்ட ஒத்த தன்மையைக் கண்டு கவரப்பட் டார். ஆனாலும் அவர் கொலோசெயர் மடலைக் குறித்து ஐயம் கொண்டிருந்தார்.

இந்த மடல் பவுல் எழுதியதல்ல என்னும் வாதம், இம்மடலில் காணப்பெறும் சொல்லாட்சி, கிறிஸ்து இயல் கோட்பாடு, ஞானமார்க்கத்தாரைப் பற்றிய குறிப்புகளாகத் தோன்றுபவை ஆகியவற்றையே மையமாகக் கொண்டிருக்கிறது. முதல் காரணத் தைக் குறித்துக் காணும்போது, பவுலுக்கு மிக விருப்பமான சொற்களுக்குப் பதிலாகப் புதிய சொற்கள் இம்மடலில் பயன்படுத்தப்பட்டுள்ளன. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவரும் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்தவரும், பழைமைப் பற்றாளரு மாகிய சல்மான் என்னும் அறிஞர் சாதுரியமாக இதை மறுக்கிறார்: "ஒரு மனிதன் புதிய படைப் பினை உருவாக்கும் வேளையில் இதுவரை தான் பயன்படுத்தாத சொற்களை அந்நூலில் பயன் படுத்துவதால், அது தான் எழுதியதல்ல என்றாகி விடும் என்று எண்ணி அப்புதிய சொற்களைப் பயன்படுத்தமாட்டான் என்னும் வாதத்தை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன்."[1] கொலோசெயர் மடலில் காணப்படும் கிறிஸ்து இயல் பற்றிய பகுதிகளைக் காணும்போது, பிலிப்பியர் மற்றும் யோவான் நற்செய்தி நூல் ஆகியவற்றில் காணப்படும் கிறிஸ்து இயல் பற்றிய குறிப்புகளோடு ஒத்திருக்கின்றன. கிறிஸ்துவின் இறைமையை, இரண்டாம் நூற் றாண்டில் புறச்சமயத்தின் தொடர்பினால் உண் டான சில மாறுபாடான கோட்பாடுகளுக்கு ஏற்ப மாற்ற நினைக்கும் மனிதர்களுக்கே கிறிஸ்து இயல் பற்றிய குறிப்புகள் தொல்லை கொடுக்கும்.

ஞானமார்க்கம் (Gnosticism) பற்றிய குறிப்பு களைக் காண்கையில், தாராள மனப்பான்மை கொண்ட ஸ்காட்லாந்து அறிஞர் மோ.்.பட் என்பவ ருடைய கருத்தை அறிவது நல்லது: கொலோசெ பட்டணத்தில் முதல் நூற்றாண்டிலேயே ஞான மார்க்கத்தாரின் கோட்பாடு தொடக்க நிலையில் இருந்தது.[2]

இம்மடலைப் பவுல் எழுதினார் என்னும் உண்மை வலிமை மிக்க அடித்தளத்தின்மேல் நிற்கிறது.

### 3. எழுதப்பட்ட காலம்

"சிறையிருப்புக்கால மடல்களில்" ஒன்றாகிய கொலோசெயர், பவுல் செசரியாவில் கைதியாக இருந்த சமயத்தில் எழுதப்பட்டது என்று கருத இட முண்டு (அப். 23:23; 24:27). ஆயினும் அவருக்கு அந்நாட்களில் விருந்தோம்புதல் புரிந்தவர் சுவி சேஷகனாகிய பிலிப்பு ஆவார். அவ்வாறிருக்க, மரியாதையும் இனிய பண்புநலனும் கொண்ட பவுல் அங்கிருந்து எழுதியிருந்தால் பிலிப்புவின் பெயரைக் குறிப்பிடாமல் விட்டிருக்கமாட்டார். எபேசு நகரத்தில் சிறையில் அடைக்கப்பட்ட போது இம்மடல் எழுதப்பட்டிருக்கக் கூடும் என்ற கருத்தும் கூறப்பட்டுள்ளது, ஆனால் அவ்வாறி ருக்க சாத்தியமில்லை. பவுல் ரோமாபுரியில் கைதியாக இருந்த காலத்தின் இடையில்தான், அதாவது கி. பி. 60 -இல் இம்மடலையும் பிலே மோன் மடலையும் எழுதியிருக்க வேண்டும் (அப். 28:30,31).

இந்நூலில் சொல்லப்பட்டுள்ளவற்றைப் புரிந்து கொள்வது, இது என்ன சூழ்நிலையில் எழுதப்பட் டது என்பதைப் பற்றிய முழு அறிவைச் சார்ந்த தல்ல. இந்தப் பொதுவான உண்மை நமது நற் பேறே ஆகும்.

### 4. நூலின் பின்னணியும் கருப்பொருளும்

ஆசியா மைனர் என்னும் நிலப்பகுதியில் இருந்த பிரிகியா மாகாணத்தில் அமைந்திருந்த ஒரு நகரமே கொலோசெ பட்டணமாகும். இந்தப் பட்டணம் லவோதிக்கேயாவிலிருந்து கிழக்கே பத்து கல் தொலைவிலும், எராப்போலியிலிருந்து தென்கிழக்கே பதின்மூன்று கல் தொலைவிலும் இருந்தது (4:13-ஆம் வசனத்தைக் காண்க). மேலும் இது எபேசுப் பட்டணத்திலிருந்து கிழக்கே ஏறத்தாழ 100 கல் தொலைவில், காட்மியன் மலைத்தொடரில் அமைந்திருந்த ஒரு கணவா யின் தொடக்கத்தின் அருகே இருந்தது (அந்தக் குறுகிய பள்ளத்தாக்கு 12 கல் நீளமானது). மேலும் இந்தப் பட்டணம் ஐபிராத்திலிருந்து மேலை நாடுகளுக்குச் செல்லும் நெடுஞ்சாலை யில் லைகஸ் என்னும் ஆற்றின் கரையிலே இருந்தது. அந்த ஆறு கொலோசெயை அடுத்து மேற்கு நோக்கி லவோதிக்கேயாவின் வழியாகப் பாய்ந்து மயிண்டர் ஆற்றோடு சென்று சேரும். கொலோசெயில் இருந்து குளிர்ந்த நீரும், எராப் போலியிலிருந்து ஊற்றெடுத்துப் பாயும் வெந் நீரும் லவோதிக்கேயாவில் ஒன்று சேர்ந்து அந்த இடத்தில் "வெதுவெதுப்பான" நீராக மாறும். எராப்போலி மருத்துவத்திலும் சமயத்திலும் புகழ் பெற்ற நகரமாக இருந்தது. அந்தப் பள்ளத்தாக் கின் தலைநகரமாக லவோதிக்கேயா விளங் கியது. புதிய ஏற்பாட்டிற்கு முந்தைய காலத்தில்

கொலோசெ அதைக் காட்டிலும் பெரிய நகரமாக இருந்தது. கொலோசெஸ் (colossus) என்னும் சுண்ணாம்புக் கல்லால் ஆன பல விசித்திரமான உருவப்படிவங்கள் அந்த இடத்தில் இருந்ததன் காரணமாக இப்பெயரை அந்நகரம் பெற்றிருந்தது போலும்.

கொலோசெ பட்டணத்திற்கு முதன்முதலாக நற்செய்தி எவ்வாறு சென்றது என்பது தெரிய வில்லை. இந்த மடலை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியபோது, அங்கிருந்த விசுவாசிகளை அவர் அதுவரை கண்டதில்லை (2:1). எப்பாப்பிரா என்பவரே அந்த இடத்திற்கு இரட்சிப்பின் நற் செய்தியைக் கொண்டுவந்தார் என்று பொதுவாக நம்பப்படுகிறது (1:7). அப்போஸ்தலன் எபேசுப் பட்டணத்தில் தங்கியிருந்த மூன்று ஆண்டுக் காலத்தின்போது, அவர் மூலமாகவே எப்பாப்பிரா மனந்திரும்பியிருக்க வேண்டும் என்று பலர் நம்புகிறார்கள். பிரிகியா ரோமப்பேரரசின் கீழி ருந்த ஆசியா நாட்டின் ஒரு பகுதியாகும், பவுல் பிரிகியா சென்றிருந்தார் (அப். 16:6; 18:23); ஆனா லும் அவர் கொலோசெ சென்றதில்லை (2:1).

ஒருவகையான கள்ள போதகம் பின்னர் பெரும் வளர்ச்சி பெற்று ஞானமார்க்கம் (Gnosticism) என்னும் பெயர்பெற்றது. அதன் தொடக்க நிலையில் அது கொலோசெ சபையைத் தாக்கக் கூடிய பேராபத்து அந்நாட்களில் இருந்தது என்பதை இம்மடலின் மூலமாக நாம் அறிகிறோம். ஞானமார்க்கத்தார் தங்களுடைய அறிவைக் (கிரேக்கு -Gnosis) குறித்துப் பெருமை கொண் டிருந்தார்கள். அப்போஸ்தலனைக் காட்டிலும் தங்களுக்கு மேலான தகவல்கள் தெரியும் என் றும், அவர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்தவர் களுக்கே உரிய ஆழமான மர்மங்களை அறி வதற்கான தீட்சையைப் பெற்றால்தான் உண்மை யான மகிழ்ச்சியைப் பெறமுடியும் என்றும் ஞான மார்க்கத்தார் கூறிவந்தார்கள்.

ஞானமார்க்கத்தாரில் சிலர் கிறிஸ்துவின் மனிதநிலை மெய்யானதல்ல என்று அவ்வுண் மையை மறுத்தார்கள். தேவனிடத்திலிருந்து வந்த ஒருவகையான தெய்வீக சக்தியே கிறிஸ்து வானவர் என்றும், அது இறங்கி வந்து இயேசு என்னும் மனிதர் ஞானஸ்நானம் பெற்றபோது அவர்மீது அமர்ந்தது என்றும் அவர்கள் கூறினார் கள். கிறிஸ்து என்னும் அந்த தெய்வீக சக்தி அவர் சிலுவையில் அறையப்படுவதற்குச் சற்று முன்னர் அவரைவிட்டுச் சென்றுவிட்டது என்றும் அவர்கள் கூறினார்கள். ஆகவே, இயேசு மரண மடைந்தார், கிறிஸ்து மரணமடையவில்லை என்பதே நிகழ்ந்த நிகழ்ச்சி என்பது அவர்களு டைய கருத்து.

ஞானமார்க்கத்தாரில் குறிப்பிட்ட சில பிரி வினர், தேவனுக்கும் பருப்பொருளுக்கும் இடை யில் வெவ்வேறு தரத்தில் அல்லது படிநிலையில் ஆவிகள் இருக்கின்றன என்று கற்பித்து வந்தார் கள். பாவம் தோன்றியதற்கான காரணத்தை விளக்கும் பொருட்டு அவர்கள் இந்தக் கருத்தை மேற்கொண்டார்கள். திருவாளர் A. T. இராபர்ட்சன் இதனை விவரிக்கிறார்:

> இப்பிரபஞ்சத்தின் தோற்றத்தைக் குறித்தும், பாவத்தின் நிலைத்த தன்மையைக் குறித்தும் ஞானமார்க்கத்தார் சில ஊகங்களைக் கொண் டிருந்தார்கள். அதன்படி தேவன் நல்லவர், ஆனாலும் பாவம் நிலையானது, பருப் பொருள்களிடத்தில் உள்ளார்ந்த நிலையில் பாவம் நிலைகொண்டிருந்தது என்பதே அவர் களது கோட்பாடு. ஆனாலும் நல்லவராகிய தேவனால் பாவத்தை உண்டாக்கியிருக்க முடியாது. ஆகவே அவர்கள் தேவனுக்கும் பருப்பொருட்களுக்கும் இடையே பல தொடர்ச்சி யான வெளிப்பாடுகள் தோன்றின என்று ஊகித்தார்கள். அதாவது தேவனிடத்திலி ருந்து கடவுட்கூறு தோன்றியது, அந்தக் கடவுட் கூறி லிருந்து வேறொரு கடவுட்கூறு தோன்றியது, அதிலிருந்து இன்னுமொரு கடவுட்கூறு தோன் றியது. இவ்வாறு தொடர்ந்துகொண்டே இருந் தது. இந்தத் தொடர்ச்சியான வெளிப்பாட்டில் தேவனை விட்டு வெகுதொலைவில் இருந்த ஒரு கடவுட்கூறு, அதாவது தேவனைக் கறை படுத்த முடியாத அளவு அது தொலைவில் இருந்த போதிலும், படைக்கக்கூடிய ஆற்றலை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நெருக்கத்திலிருந்த அந்தக் கடவுட்கூறு பாவ முள்ள பருப்பொருளைத் தோற்றுவித்துவிட்டது.[3]

சரீரமானது உள்ளார்ந்த நிலையில் பாவ முடையது என்று ஞானமார்க்கத்தாரில் சிலர் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அதன் நிமித் தம், அவர்கள் மேலான ஆவிக்குரிய நிலையைப் பெறும்பொருட்டு, சுயத்தை மறுத்தல் அல்லது தன்னையே துன்புறுத்திக்கொள்ளுதல் என்னும் துறவற நிலையைக் கைக்கொண்டு வந்தார்கள். வேறு சிலரோ இதற்கு முற்றிலும் மாறுபட்ட வேறொரு எல்லைக்குச் சென்று விட்டார்கள், அவர்கள் சரீரம் ஒரு பொருட்டன்று, அதற்கும்

ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று சொல்லி சிற்றின்பம் போன்ற சகலவிதப் பாவங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

மேலும் இரண்டு தவறுகள் சிறிதளவு கொலோசெ சபையில் இருந்தன. அவையாவன, அறவொழுக்கம் தேவையில்லை, சமயப்பற்றே போதுமானது என்பது ஒரு கருத்து, மற்றது யூதமார்க்கச் சார்புடைமை. முதலாவது கருத்தின்படி கிருபையின் கீழாக ஒருவன் சுயக்கட்டுப்பாட்டுடன் வாழவேண்டிய தேவையில்லை, மாறாக அவன் தன்னுடைய சரீர வேட்கைகளுக்கு முழு இடம் கொடுத்து வாழலாம். இரண்டாவது, பழைய ஏற்பாட்டு யூத மார்க்கம் படிப்படியாகத் தாழ்நிலைக்குச் சென்று, ஒருவன் சடங்குகளைக் கைக்கொள்வதால் தேவனுக்கு முன்பாக நீதியை அடையமுடியும் என்று கற்பிக்கக்கூடிய ஓர் அமைப்பாக மாறி விட்டது.

கொலோசெ பட்டணத்தில் இருந்த தவறுகள் இந்நாட்களிலும் நம்மிடையே நிலவுகின்றன. கிறிஸ்தவ அறிவியல் (Christian Science), சித்து நிலை (Theosophy), மோர்மோனிசம், யெகோவா சாட்சிகள், ஐக்கிய ஒருமைப்பாடு (Unity), இன்னும் பல குழுவினரிடையே ஞானமார்க்கக் கோட்பாடுகள் மீண்டும் தோன்றியுள்ளன. நாம் கிருபையின் கீழாக இருப்பதன் காரணமாக, நாம் சுயக்கட்டுப்பாடின்றி நமது இஷ்டம் போல வாழலாம் என்று கூறிபவர்கள் எல்லோரும் ஆண்டினோமியனிஸம் என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள் ஆவார்கள். யூத மார்க்கம் முதலில் தேவனாலே கொடுக்கப்பட்ட வெளிப்பாடு ஆகும். எபிரெயர் மடலிலும் இன்னும் பல புதிய ஏற்பாட்டுப் பகுதிகளிலும் விளக்கப்பட்டிருப்பதுபோல யூதமார்க்கத்தின் முறைமைகளும் சடங்குகளும் ஆவிக்குரிய சத்தியங்களை நிழலாட்டமாகக் கற்பிக்கும்படி கொடுக்கப்பட்டவை. இந்த முறைமைகள் தேவனிடத்திலிருந்து நன் மதிப்பைப் பெறுவதற்கான ஓர் அமைப்பாக மாறிவிட்டன, மேலும் இவற்றின் ஆவிக்குரிய அர்த்தங்கள் பெரும்பாலும் அவ்வப்போது புறக்கணிக்கப்பட்டு போயின. இந்த விதமான கருத்து, பல சமய அமைப்புகளில் இன்றைய நாட்களில் காணப்படுகிறது. தான் பாவி என்னும் நிலையில் இருக்கிறதையும், தேவனிடத்திலிருந்து மட்டுமே வரக்கூடிய இரட்சிப்பு தனக்கு தேவை என்பதையும் மறுத்துரைத்து, தன்னுடைய சொந்த செயல்களின் மூலமாகத் தகுதியைப் பெற முடியும் என்றும், தேவனிடத்திலிருந்து தயவைப் பெற முடியும் என்றும் இந்தக் கோட்பாடு கற்பிக்கிறது.

கொலோசெயர் மடலில், அப்போஸ்தலனாகிய பவுல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆளுமை மற்றும் கிரியை ஆகியவற்றின் மகிமையைக் காட்சிப்பொருளாக விளக்கிக் காட்டி, மேற்கூறிய தவறுகளைத் திறம்பட மறுத்துரைக்கிறார்.

இந்த மடலானது எபேசியருக்கு எழுதப்பட்ட மடலோடு கவர்ச்சியூட்டி ஆட்கொள்ளக்கூடிய அளவிற்கு ஒத்திருக்கிறது. ஆயினும் இந்த ஒத்த தன்மையானது மீண்டும் கூறுதலின்றி காணப்படுகிறது. விசுவாசிகள் கிறிஸ்துவோடு உன்னதத்தில் அமர்ந்திருக்கிறவர்களாக எபேசியர் மடல் காட்டுகிறது. இதற்கு மாறாக, விசுவாசிகளைப் பூமியில் இருக்கிறவர்களாகவும் அவர்களுடைய புகழ்ச்சிமிக்க தலையாகிய கிறிஸ்து விண்ணகத்தில் இருக்கிறவராகவும் கொலோசெயர் மடல் காட்டுகிறது. விசுவாசியானவன் கிறிஸ்துவுக்குள்ளாக இருக்கிறான் என்னும் உண்மை எபேசியர் மடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கொலோசெயர் மடலில் விசுவாசிக்குள்ளாகக் கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாகத் திகழ்கிறார் என்னும் உண்மை வலியுறுத்தப்பட்டுள்ளது. “எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபை” (எபே. 1:23) என்று கூறி எபேசியர் மடலில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே கிறிஸ்துவின் சரீரத்தின் ஒருமைப்பாடு அங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. கொலோசெயர் மடலில் முதல் அதிகாரத்தில் கிறிஸ்துவின் தலைமை விவரிக்கப்பட்டு, நாம் அவருக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக, “அந்தத் தலையை நாம் பற்றிக்கொள்ள” வேண்டியதன் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது (2:18,19). எபேசியர் நிருபத்தில் உள்ள 155 வசனங்களில் 54 வசனங்களுக்கு இணையான வசனங்கள் கொலோசெயர் மடலில் இடம்பெற்றுள்ளன.

## பொருட்சுருக்கம்

**1. கிறிஸ்து எல்லாவற்றிற்கும் முதல்வரானவர் என்னும் கோட்பாட்டு விளக்கம் (அதி. 1,2)**

அ. வாழ்த்துரை (1:1,2)

ஆ. விசுவாசிகளுக்காகப் பவுல் நன்றி பாராட்டுதலும் மன்றாடுதலும் (1:3-14).

இ. சபையின் சிரசாகிய கிறிஸ்துவின் மகிமைகள் (1:15-23)

ஈ. பவுலுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியம் (1:24-29)

உ. பகுத்தறிவு வாதம், சட்டங்களுக்கு முதன்மை நிலை அளித்தல், தியானத்தில் இறைவனோடு இணையும் நிலை, கடுந்துறவு நிலை ஆகியவை உண்டுபண்ணும் இடர்களுக்கு எதிரான கிறிஸ்துவின் போதுமான தன்மை (2:1-23)

**2. எல்லாவற்றிற்கும் முதல்வராகிய கிறிஸ்துவுக்கு விசுவாசிகள் ஆற்றவேண்டிய கடமை (அதி. 3,4).**

அ. விசுவாசிகளின் புதுவாழ்வு: பழைய மனிதனைக் களைந்துவிட்டு, புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுதல் (3:1-17)

ஆ. கிறிஸ்தவ இல்லங்களின் அங்கத்தினர்களுக்கு ஏற்புடைய நடத்தை (3:18-4:1)

இ. விசுவாசிகளின் ஜெப வாழ்க்கையும், அவர்களுடைய வாழ்க்கை மற்றும் பேச்சின் மூலமாகச் சான்று பகருதலும் (4:2-6)

ஈ. பவுலின் உடன் ஊழியர் சிலரைப் பற்றிய குறிப்புகள் (4:7-14)

உ. வாழ்த்துகளும் அறிவுரைகளும் (4:15-18)

## பொருட்சுருக்க அட்டவணை

| தலைப்பு | முதல்வராகத் திகழும் கிறிஸ்து | | | | முதல்வராகிய கிறிஸ்துவுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| பகுப்பு | ஆரம்ப உரை | முதல்வராகிய கிறிஸ்து | பவுலுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியம் | கிறிஸ்துவில் பெறும் விடுதலை | விசுவாசிகளின் தகுநிலை | விசுவாசிகளின் நடத்தை | முடிவுரை |
| கருத்து | போதனை | | | | நடத்தை | | |
| | நமக்காகக் கிறிஸ்து நிறைவேற்றியவை | | | | நம்மூலம் கிறிஸ்து நிறைவேற்ற வேண்டியவை | | |
| வசனம் | 1:1-14 | 1:15-23 | 1:24-29 | 2:1-23 | 3:1-4 | 3:5-4:6 | 4:7-18 |

## 1. கிறிஸ்து எல்லாவற்றிற்கும் முதல்வரானவர் என்னும் கோட்பாட்டு விளக்கம் [அதி. 1,2]

### அ. வாழ்த்துரை [1:1,2]

**1:1** புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், ஒரு மடலை எழுதத் தொடங்குகையில் அதனை எழுதுபவர் தனது பெயரைக் குறிப்பிடுவது வழக்க மாயிருந்தது. அந்நிலையில் **பவுல்** தன்னை **தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்து வின் அப்போஸ்தலன்** என்று அறிமுகப்படுத்து கிறார். கர்த்தராகிய இயேசுவால் பிரத்யேகமான முறையில் ஒரு தூதராக அனுப்பட்ட ஒருவரே அப்போஸ்தலன் ஆவார். அவர்கள் பிரசங்கித்த செய்தியை உறுதிசெய்யும் வகையில், அற்புதங் களைச் செய்யும் ஆற்றல் அப்போஸ்தலருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது (1 கொரி. 12:12). மேலும், சில விசுவாசிகளின்மேல் அப்போஸ்தலர் தங்க ளுடைய கரங்களை வைத்தபோது சில நேரங் களில் பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டதாக நாம் படிக்கிறோம் (அப். 8:15-20; 19:6). இன்றைய நாட் களில் முழுமையான பொருளில் இப்புவியில் அப் போஸ்தலர் ஒருவரும் இல்லை. முதல் பன்னி ரண்டு அப்போஸ்தலருடைய வழிவந்தவர்கள் என்று மனிதர்கள் உரிமைகோருவது பெருந் தவறாகும். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்னும் தனிச்சிறப்பு பெற்ற வரத்தைப் பெற்றோர் முதன்மையாக சபைக்கு அடித்தளமிடுகிற ஊழியத்தையே செய்தார்கள்; இதற்கு மாறாக சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகியோர் நிறைவேற்றுகிற பணியானது இக்காலகட்டத் திலும் தொடர்கிறது (எபே. 4:13). இவ்வுண்மை யைச் சுட்டிக்காட்டுவதற்கு எபேசியர் 2:20 -ஆம் வசனம் பலரால் பயன்படுத்தப்படுகிறது.

தான் பெற்ற அப்போஸ்தலர் என்னும் நிலைக்கு ஆதாரம் **தேவனுடைய சித்தம்** என்று கூறுகிறார் பவுல் (அப். 9:15; கலா. 1:1 -ஆகிய வசனங்களை யும் காண்க). அவர் தனக்கென்று தெரிந்து கொண்ட வாழ்க்கைத் தொழில் அல்ல இது. அல் லது இதற்காக அவர் மனிதர்களிடத்திலிருந்து பயிற்சி எதையும் பெறவில்லை. ஏதோ மனித நியமனத்தால் இது அவருக்குக் கிடைத்த பதவி யுமல்ல. இது "மனிதனிடத்திலிருந்து" வந்ததல்ல (அதனுடைய மூல காரணம் என்னும் நிலையில்), இது "மனிதன் மூலமாகவும்" வந்ததல்ல (அதனு டைய வழிதுறை என்னும் நிலையில்). இதற்கு மாறாக, தேவன்தாமே அவரை அப்போஸ்தல னாகத் தெரிந்துகொண்டார் என்னும் புனிதமான உணர்வோடு அவருடைய ஊழியம் முழுவதும் நடைபெற்றது.

இந்த மடலைப் பவுல் எழுதுகையில், சகோ தரனாகிய தீமோத்தேயு அவருடன் இருந்தார். பவுல் தீமோத்தேயுவைக் குறித்துக் கொண்டி ருந்த மனப்பான்மையில் பணித்துறை அதிகாரம், பதவி என்னும் வேறுபாடு சிறிதளவும் இல்லா ததை நாம் கவனிப்பது நல்லது. அவர்கள் இரு வரும் பொதுப்படையான சகோரத்துவத்தின் அங்கங்களாக இருந்தார்கள். அங்கே சமயக் குருமார்கள் என்றும், வெவ்வேறு படிநிலையில் உயர் பதவி வகிப்போர் என்றும் எவரும் இல்லை, பகட்டான பதவிகளோ வேறுபடுத்திக்காட்டும் ஆடைகளோ அங்கு இல்லை.

**1:2** இந்த மடல் **கொலோசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசி களுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதப் பட்டிருக்கிறது.** எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் புதிய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு அழகிய பெயர்களை இங்கு காண்கிறோம். **பரி சுத்தவான்கள்**, உலகத்திலிருந்து தேவனுக் கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பது இதன் பொருளாகும், அதன் காரணமாக அவர்கள் பரி சுத்தமாக வாழ வேண்டும். **விசுவாசிகளுமா யிருக்கிற சகோதரர்கள்** என்னும் பெயர் கர்த்த ராகிய இயேசுவின்மீது கொள்ளும் விசுவாசத் தின் மூலமாக எல்லோருக்கும் பொதுவான திருத் தந்தையின் பிள்ளைகள் அவர்கள் என்னும் உண் மையைச் சுட்டிக்காட்டுகிறது. அவர்கள் விசுவா சிக்கிற சகோதரர்களும் சகோதரிகளும் ஆவார் கள். கிறிஸ்தவர்கள் சீடர்கள் என்றும், விசுவாசி கள் என்றும் புதிய ஏற்பாட்டின் வேறுபகுதிகளில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

**கிறிஸ்துவுக்குள்** என்னும் சொல் அவர்களு டைய ஆவிக்குரிய தகுநிலையைக் குறிக்கிறது. அவர்கள் இரட்சிக்கப்பட்டபோது, தேவன் அவர் களைப் "பிரியமானவருக்குள் ஏற்றுக்கொண்டு" கிறிஸ்துவுக்குள் வைத்தார். அது முதல், அவர் கள் கிறிஸ்துவின் வாழ்வையும் இயல்பையும் பெற்றிருக்கிறார்கள். அதுமுதல், தேவன் அவர் களை ஆதாமின் பிள்ளைகளாகவோ மறுபிறப்பு பெறாதவர்களாகவோ காணாமல், தமது சொந்த குமாரனை ஏற்கும் அனைத்துத் தன்மைகளிலும் அவர்களை அவர் காண்பார். எந்த மனித உள்ளத் தினாலும் புரிந்துகொள்ள இயலாத அளவிற்கு மிகுந்த நெருக்கத்தையும், ஒப்புதலையும், பாது காப்பையும் கிறிஸ்துவுக்குள் என்னும் சொல்

தெரியப்படுத்துகிறது. அந்த விசுவாசிகள் இருந்த இடம் எதுவென்பதைக் **கொலோசெ பட்டணத்தில் இருக்கிற** என்னும் சொற்றொடர் தெரிவிக்கிறது. அங்கு நற்செய்தி பிரசங்கிக்கப்பட்டு ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படாமல் போயிருந்தால் அந்த இடத்தைக் குறித்து எப்பொழுதாவது கேள்விப்பட்டிருப்போமா என்பது சந்தேகமே.

இனிமையான வாழ்த்துதலைக் கூறி இப் பொழுது பவுல் அங்கிருந்த பரிசுத்தவான்களை வாழ்த்துகிறார்: **நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கிருபை, சமாதானம்** ஆகிய இரண்டு சொற்களைத் தவிர வேறு எந்த இரண்டு சொற்களும் இவற்றைக் காட்டிலும் கிறிஸ்தவத்தின் ஆசிர்வாதத்தை தங்களிடத்தில் கொண்டிருக்கா. பொதுவாக வழக்கில் இருந்த கிரேக்கச் சொல் **கிருபை**, அதுபோல பொதுவான வாழ்த்துச் சொல்லாக யூதர்கள் வழங்கிவந்த சொல் **சமாதானம்** ஆகும். சந்திப்பின்போதும் பிரியும் போதும் இந்தச் சொற்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. பாவ இயல்போடும் இழந்துபோன நிலையிலும் இருந்த மனுக்குலத்தினிடமாய் அன்புடனும் மென்னயமிக்க இரக்கத்துடனும் தேவன் தம்மையே தாழ்த்திவந்த நிகழ்ச்சியைக் **கிருபை** படவுருவில் காட்டுகிறது. தேவனுடைய கிருபையை இலவச ஈவாக ஒருவன் ஏற்றுக்கொள்கிறபோது அவனிடத்தில் நிகழ்கிற விளைவுகளை ஒட்டு மொத்தமாக எடுத்துரைக்கிறது **சமாதானம்.** இது குறித்து R. J. லிட்டில் கூறியிருப்பதாவது: "கிருபை என்பதற்குப் பல பொருட்கள் உள்ளன. அது ஒரு கையொப்பமிட்ட எழுதப்பெறாத காசோலை போன்றது. கிறிஸ்தவ மரபுரிமைச் சொத்தின் ஒரு பங்கே சமாதானம் ஆகும் என்பது நிச்சயம், அதனைச் சாத்தான் கொள்ளையடிக்க அனுமதித்துவிடக் கூடாது." இந்தச் சொற்களின் வரிசைமுறை குறிப்பிடத்தக்கது. முதலாவது **கிருபை,** அடுத்தது **சமாதானம்.** தேவன் முதலில் தமது அன்பிலும் பரிவிலும் நம்மிடத்தில் ஈடுபடாதிருந்திருப்பார் எனில், நாம் இன்னமும் நமது பாவங்களில்தான் இருந்திருப்போம். ஆனால் தேவன்தாமே இதற்கான முயற்சியைத் தொடங்கி வைத்துத் தமது குமாரனை நமக்காகச் சாகும்படி அனுப்பியதால், நாம் இப்பொழுது தேவனோடு சமாதானம் பெற்றிருக்கிறோம், மேலும் தேவனுடைய சமாதானம் நம்முடைய ஆத்துமாக்களில் நிறைந்திருக்கும். இவையெல்லாவற்றையும் சொல்லியபோதிலும், பெருஞ்சிறப்புவாய்ந்த இந்தச் சொற்களுக்குப் போதுமான அளவிற்கு விளக்கமளிக்க முடியவில்லையே என்று மனத் தளர்ச்சியே உண்டாகிறது.

### ஆ. விசுவாசிகளுக்காகப் பவுல் நன்றி பாராட்டுதலும் மன்றாடுதலும் (1:3-14).

**1:3-5** கிறிஸ்தவத்தின் பொன்மொழி என்னும் சொற்களால் பரிசுத்தவான்களுக்கு வாழ்த்துரை வழங்கிய அப்போஸ்தலன் தனக்கே உரிய வேறொரு செயலையும் செய்கிறார். அவர் தனது முழங்காலில் நின்று ஸ்தோத்திரம் செலுத்தி, வேண்டுதல் செய்கிறார். அப்போஸ்தலன் எப் பொழுதும் தனது ஜெபத்தைக் கர்த்தருக்குச் செலுத்தும் ஸ்தோத்திரத்தோடே தொடங்கிய தாகவே தோன்றுகிறது. இது நாம் பின்பற்றுவதற்கு நல்லதொரு பழக்கமாக விளங்குகிறது. அவருடைய ஜெபம் **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனிடமாய்** ஏறெடுக்கப்படுகிறது. ஜெபமானது இப்பிரபஞ்சத்தின் இறையரசரைக் கேட்கச் செய்யும் சொல்லிமுடியாத நற்பேற்றைப் பெற்றிருக்கிறது. ஆனால், "எல்லைக்குட்படா உன்னதமான தேவனுடைய பயபக்திக்குரிய சமுகத்தில் நின்று ஒரு சாதாரண மனிதன் பேச எவ்வாறு துணிவுகொள்வான்?" என்று ஒரு கேள்வி எழக்கூடும். நம்முடைய வேத பகுதியில் அதற்குரிய விடை கொடுக்கப்பட்டிருக்கிறது. மகிமை நிறைந்தவரும் மகாமாட்சிமை பெற்றவருமாகிய இப்பிரபஞ்சத்தின் இறைவன் **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதா** ஆவார். எல்லைக்குட்படா உயர்ந்தவர் மிக நெருக்கமானவராக மாறினார். கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் என்னும் நாம் அவருடைய வாழ்வில் பங்கு பெற்றிருப்பதால், தேவன் நமக்கும் பிதாவாக இருக்கிறார் (யோவான் 20:17). நாம் கிறிஸ்துவின் மூலமாக அவரண்டை நெருங்கிச் சேர முடியும். **எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.** இந்தச் சொற்றொடரை நாம் தன்னந்தனியே பார்ப்போமானால் இது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் பவுல் இதுவரை தான் சந்தித்திராத மக்களின்மீது இத்தகைய ஆர்வம் உடையவராக இருக்கிறார் என்பதைக் கூறும் பகுதியாக இது விளங்குகிறது என்பதை நினைவுகூருவோமெனில் இச்சொற்றொடர் புதியதொரு பொருளைத் தரும். நம்முடைய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் போன்றோரை அவ்வப்போது கிருபாசனத் தண்டை கொண்டுவந்து நினைவுகூருவதே

நம்மால் இயலாத செயலாக இருக்கிறது. ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் வைத்திருந்த ஜெபப் பட்டியலை பாருங்கள்! அவருக்கு அறிமுகமான வர்களுக்கு மட்டுமின்றி, பிறர் மூலமாகக் கேள்விப்பட்ட தொலைதூரத்திலிருந்த அறிமுகமாகாத கிறிஸ்தவர்களுக்காகவும் அவர் ஜெபம் செய்தார். உண்மையாகவே பவுலின் சோர்வுறாத ஜெப வாழ்க்கை, அவரைக் குறித்து அதிகமாக அறிந்துகொள்ள நமக்கு உதவுகிறது.

கொலோசெ பட்டணத்தார் **கிறிஸ்து இயேசு வின்மேல்** கொண்டிருந்த **விசுவாசத்தைக் குறித்தும், பரிசுத்தவான்கள்மேல்** கொண்டிருந்த **அன்பைக் குறித்தும்** அவர் கேள்விப்பட்டார். முதலில் அவர்கள் **கிறிஸ்து இயேசுவின் மேல்** கொண்டிருந்த **விசுவாசத்தைக்** குறிப்பிடுகிறார். இந்த இடத்தில்தான் நாம் முதலாவது தொடங்க வேண்டும். பிறரிடம் தாங்கள் கொண்டிருக்கிற அன்பைக் குறித்து இடைவிடாமல் பேசுகிற சமயச்சார்புடைய மக்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் அவரிடத்தில் கேட்பீர்களென்றால், கர்த்தராகிய **இயேசுவினிடத்தில்** அவர்களுக்கு **விசுவாசம்** இல்லையென்பதை அறிந்துகொள்வீர்கள். அப்படிப்பட்ட அன்பு வெறுமையானதும் அர்த்தமற்றதுமாக இருக்கிறது. இதற்கு மாறாக, **கிறிஸ்துவினிடத்தில்** தங்களுக்கு **விசுவாசம்** உண்டென்று பலர் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய வாழ்க்கையில் **அன்பிற்கான** அடையாளம் இருக்கிறதா என்று பார்ப்பது வீணான செயலாகவே முடியும். அவர்களுடைய விசுவாசம் உண்மையானதுதானா என்று பவுல் கேள்வி எழுப்புகிறார். இரட்சகரிடம் உண்மையான விசுவாசம் இருக்க வேண்டும், அந்த விசுவாசம், தேவனிடத்திலும் உடன் விசுவாசியினிடத்திலும் வெளிப்படுத்தப்படுகிற அன்பை அடையாளமாகக் கொண்டிருக்க வேண்டும்.

**கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசம்** என்று பவுல் விசுவாசத்தைப் பற்றிப் பேசுகிறார். இதனைக் கவனிப்பது மிகவும் முக்கியமானது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே விசுவாசத்திற்கான இலக்காக இருக்கிறார் என்று எப்பொழுதும் கூறுகிறது திருமறை. ஒரு வங்கியின்மேல் ஒருவன் வரையறையற்ற வகையில் நம்பிக்கை கொண்டிருக்கக் கூடும். ஆனால் அந்த வங்கியானது நம்பத்தகுந்ததாக இருந்தால்தான் அதன்மேல் கொண்டிருக்கும் விசுவாசம் சரியானதாக இருக்கும். நன்கு நிருவகிக்கப்படாத வங்கியில் போடப்பட்டுள்ள பணம் விசுவாசத்தினால் பாதுகாப்பாக இருக்காது. ஆவிக்குரிய வாழ்க்கையும் அது போன்றதே ஆகும். விசுவாசம் தன்னில் தானே போதுமானது அன்று, அந்த விசுவாசம் கர்த்தராகிய இயேசுவை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டும். அவர் ஒருபோதும் கைவிடமாட்டார், ஆகவே அவரை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை.

அவர்களுடைய **விசுவாசத்தையும்,** அவர்களுடைய **அன்பையும்** குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கேள்விப்பட்டிருந்தார் என்பது, நிச்சயமாக அவர்கள் இரகசிய விசுவாசிகள் அல்லர் என்பதைக் காட்டுகிறது. ஒரு மறைமுகச் சீடனாகவே இருக்க வேண்டும் என்று நினைக்கிற எவருக்கும், உண்மையில், புதிய ஏற்பாடு எந்த விதத்திலும் ஊக்கமளிப்பதில்லை. ஒரு மனிதர் உண்மையாகவே இரட்சகரைப் பெற்றிருந்தால், அவர் வெளியரங்கமாகக் கிறிஸ்துவை அறிக்கை செய்வது தவிர்க்க முடியாத செயலாகும் என்பதே தேவனுடைய வார்த்தை போதிக்கிற பாடமாகும்.

**பரிசுத்தவான்கள் எல்லோர்மேலும்** கொலோசெயருடைய அன்பு பரவியிருந்தது. அவர்கள் செலுத்திய அன்பு ஏதோ குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்தவர்களிடம் என்றோ, ஒரு பிரிவினரைச் சேர்ந்தவர்களிடம் என்றோ குறுகிப் போகவில்லை. அவர்களுடைய உடன் விசுவாசிகளிடத்தில் மட்டும் அவர்கள் அன்புபாராட்டாமல், உண்மையான விசுவாசிகள் எங்கெல்லாம் இருந்தார்களோ அங்கெல்லாம் அவர்களுடைய அன்பு தடையின்றிப் பாய்ந்து சென்றது, மற்றும் அது கனிவுடையதாகவும் இருந்தது. நம்முடைய அன்பு நம்முடைய சொந்த ஸ்தல சபை மக்களிடம் அல்லது உள்நாட்டுச் சுவிசேஷகர்களிடம் மட்டுமே செலுத்தப்படவேண்டியது என்று அதனை ஓர் எல்லைக்குள் உட்படுத்தி, குறுகிய மனப்பான்மை உடையதாக மாற்றிவிடக் கூடாது என்னும் பாடத்தை நாம் இங்கு கற்கிறோம். கிறிஸ்துவின் மந்தை எங்கிருந்தாலும் அதனைக் கண்டுணர வேண்டும், மேலும் எப்படியெல்லாம் அவர்களிடம் அன்பு பாராட்ட முடியுமோ அப்படியெல்லாம் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

நான்காவது வசனம் எவ்வாறு இதற்கு முந்தின வசனத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது என்பது சற்று தெளிவற்றதாயிருக்கிறது. இது இதனைத் தொடர்ந்து வருகிற ஐந்தாவது வசனத்தோடு மிகவும் நெருங்கியதாகவே தோன்றுகிறது. (தமிழில் அவ்வாறே தெளிவான தொடர்புடன்

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது): **பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையின் நிமித்தம்** ... ஸ்தோத்தரிக்கிறோம். அல்லது இது 3 -ஆவது வசனத்தோடு தொடர்புடையதா? பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பு **பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையின் நிமித்தம்** உண்டாயிருக்கிறது. இவ்விரண்டு விளக்கங்களில் எந்த விளக்கத்தையும் நாம் எடுத்துக்கொள்ளலாம். அவர்களுடைய விசுவாசத்திற்காகவும் அன்புக்காகவும் மட்டுமின்றி அப்போஸ்தலன் அவர்கள் எதிர்காலத்தில் ஒரு நாளில் தங்களுடைய உரிமையாகப் பெறவிருக்கிற சுதந்தரத்திற்காகவும் நன்றி செலுத்துகிறார். இன்னொரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறதை எதிர்நோக்கியவராக, கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசமும், பரிசுத்தவான்கள் எல்லோர் மேலும் அன்பும் காட்டப்படுகின்றன. இது எதுவாக இருந்தாலும், பவுல் இங்கு கிறிஸ்தவ வாழ்க்கையின் முதன்மையான மூன்று பண்புகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்: விசுவாசம், அன்பு, மற்றும் **நம்பிக்கை.** இவை மூன்றும் மீண்டும் 1 கொரிந்தியர் 13:13; 1 தெசலோனிகேயர் 1:3; 5:8 ஆகிய இடங்களிலும் சொல்லப்பட்டுள்ளன. "கடந்த காலத்து நிகழ்ச்சியை விசுவாசம் சார்ந்திருக்கிறது, அன்பு நிகழ்காலத்தில் கிரியை செய்கிறது, நம்பிக்கை எதிர்காலத்தை நோக்கியிருக்கிறது" என்கிறார் லைட்.ஃபுட் என்பார்.[4]

**1:6** இந்த வசனத்தில், **நம்பிக்கை** என்னும் சொல், ஏதோ ஒன்றிற்காகக் காத்திருக்கும் அல்லது எதிர்நோக்கியிருக்கும் மனப்பான்மையைக் குறிக்காமல், மாறாக ஒரு மனிதன் எதை விரும்புகிறானோ அதையே குறிக்கிறது. இங்கு, நாம் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நித்திய சுதந்தரத்திற்குள் நுழையும்போது நாம் அடைகிற பூரணமான இரட்சிப்பு என்பதே நம்பிக்கை என்னும் சொல்லின் பொருளாகும். ஏற்கனவே கொலோசெயர் இந்த **நம்பிக்கையைக்** குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஒருவேளை எப்பாப்பிரா அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தபோது அவர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள் போலும். அவர்கள் என்ன கேள்விப்பட்டார்கள் என்பதைச் சத்திய வசனமாகிய சுவிசேஷம் என்னும் சொல் விளக்கிக் கூறுகிறது. இங்கே சுவிசேஷம் எனப்படுவது ***மெய்யான*** நல்ல செய்தி என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. பவுல் இந்த மடலை எழுதிய காலத்தில் நிலவிவந்த ஞான மார்க்கத்தாரின் (Gnostics) ***கள்ள உபதேசத்தைக்*** குறித்து அவர் எண்ணியிருப்பார் என்றே தோன்றுகிறது. ஒரு விஷயத்தைக் குறித்து தேவன் என்ன சொல்லுகிறாரோ அதுவே "சத்தியம்" என்று யாரோ ஒருவர் சத்தியத்திற்கான வரையறையைக் கூறியிருக்கிறார் (யோவான் 17:17). **சுவிசேஷம்** சத்தியமாய் இருக்கிறது, ஏனெனில் அது தேவனுடைய வார்த்தை.

சுவிசேஷத்தின் சத்தியம், அந்த நாட்களில் அறியப்பட்டிருந்த உலகமெங்கும் பரவியது போலவே கொலோசெ பட்டணத்திற்கும் வந்தது. இதனை நாம் முழுநிறைவான பொருளில் எடுத்துக்கொள்ளக்கூடாது. ***உலகத்தில் வசித்த ஒவ்வொரு மனிதனும்*** சுவிசேஷத்தைக் கேட்டிருந்தான் என்பது இதன் பொருளன்று. உலகத்தில் இருந்த பல்வேறு நாட்டுக் குடிமக்களில் சிலர் அந்த இரட்சிப்பின் நற்செய்தியைக் கேட்டிருந்தார்கள் என்பதே இதன் பொருளாக இருக்கக் கூடும், அதாவது ஒருபகுதி நிறைவேறுதலாகவே இது விளங்கியது (அப். 2). எல்லா மனிதருக்கும் சுவிசேஷம் உரியது, ஆகவே எவ்வித உள்நோக்கத்தோடும் கட்டுப்படுத்தாமல் அது எல்லா நாடுகளிலும் பரப்பப்பட்டது என்பதும் இதன் பொருளாக இருக்கலாம். அது உண்டு பண்ணின தவிர்க்கக்கூடாத விளைவுகளைப் பவுல் இங்கு விவரிக்கிறார். அந்தச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட கொலோசெ பட்டணத்திலும், **உலகத்தின்** மற்ற எல்லாப் பகுதிகளிலும் அது கனிகளைக் கொடுத்து வளர்கிறதாக இருந்தது (NKJV - அடிக்குறிப்பு[5]). நற்செய்தியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட பண்பை இது காட்டும்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இயற்கையைக் காண்கையில் ஒரு செடியானது கனிதருகிற அதே வேளையில் வளர்ச்சியடைகிறதில்லை. பல நேரங்களில், அந்தச் செடியானது கனிகளைத் தரும்படியாக வெட்டிச் சுத்தம் செய்யப்பட வேண்டும். ஏனெனில் அதனைக் கட்டுப்பாடின்றி வளரவிட்டால் அந்தத் தாவரமானது அதனுடைய நாட்களிலெல்லாம் இலைகளாலும் கிளைகளாலும் பெருகி அங்கே கனிகள் காணப்படா. ஆனால் சுவிசேஷத்தில் இரண்டும் ஒரே நேரத்தில் நிகழ்கின்றன. ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதிலும், பரிசுத்தவான்கள் ஊன்றக் கட்டப்படுவதிலும் சுவிசேஷம் கனிதருகிறதாயிருக்கிறது. ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு அது பரவுகிறதாகவும் இருக்கிறது.

கொலோசெ பட்டணத்தார் சுவிசேஷத்தைச் **சத்தியத்தின்படி அறிந்துகொண்ட நாள்முதல்** இதுவே அவர்களுடைய வாழ்க்கையில் விளைந்த பயனின் சுருக்கம். கொலோசெ சபை எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்திருந்தது. மேலும் அங்கிருந்த விசுவாசிகளுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய வளர்ச்சியும் நிகழ்ந்தது.

முதல் நூற்றாண்டில் சுவிசேஷம் மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்ததாகவே தோன்றுகிறது. பலருடைய கற்பனைக்கும் அப்பாற்பட்ட வகையில் அது ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா ஆகிய பெரு நிலப்பகுதிகளையெல்லாம் சென்றடைந்தது. இருந்தபோதிலும், இவ்வுலகம் முழுவதும் அது சென்றடைந்துவிட்டது என்று நினைப்பதற்கான ஆதாரம் இல்லை. சுவிசேஷச் செய்தியை மிக அழகிய முறையில் விவரித்துக்கூற **தேவ கிருபை** என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய கோபாக்கினைக்குப் பாத்திரரான குற்றவுணர்வுள்ள மனிதர்கள்மேல் அருளப்பட்ட தேவனுடைய கிருபையைப் பற்றிய வியத்தகு சத்தியத்தைக் காட்டிலும் வேறு எதன் வாயிலாக நற்செய்தியின் சுருக்கத்தை மிக அழகிய முறையில் தொகுத்து உரைக்க முடியும்.

**1:7** அங்கிருந்த விசுவாசிகள் சுவிசேஷச் செய்தியை எப்பாப்பிராவினிடத்தில் கேட்டார்கள் என்றும், அவர் மூலமாகவே அதனைத் தங்களுடைய வாழ்க்கையில் அனுபவபூர்வமாக அறிந்தார்கள் என்றும் அப்போஸ்தலன் மிகத்தெளிவாக இங்கு கூறுகிறார். எப்பாப்பிரா **பிரியமான உடன் வேலையாளாகவும்,** அவர்களுக்காகக் கிறிஸ்துவின் **உண்மையான ஊழியக்காரராகவும்** இருந்தார் என்று அப்போஸ்தலன் பாராட்டுகிறார். அப்போஸ்தலனாகிய பவுலினிடத்தில் எவ்விதக் கசப்பும் பொறாமையும் இல்லை. மற்றொரு பிரசங்கி பாராட்டைப் பெற்றபோது இது அவரை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. உண்மையில், கர்த்தருடைய மற்ற ஊழியர்களுக்குப் பாராட்டை அறிவிக்க அவர்தான் முன்னணியில் இருந்தார்.

**1:8 ஆவிக்குள்ளான அன்பைக்** கொலோசெயர் கொண்டிருந்தார்கள் என்று பவுல் எப்பாப்பிராவின் மூலமாகவே தெரிந்துகொண்டார். இது வெறுமனே மனிதர்கள் காண்பிக்கிற பாசம் அல்ல. மாறாக, உள்ளுறையும் தேவனுடைய **ஆவி** உண்டாக்குகிறதும், கர்த்தர் தம்முடைய மக்கள் மீது காட்டுகிறதுமான உண்மையான **அன்பே** இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மடலில் பரிசுத்த ஆவியைப் பற்றிய ஒரே குறிப்பு இதுதான்.

**1:9** இவ்விதமாகப் பவுல் தன்னுடைய நன்றி பாராட்டுதலை முடித்தபிறகு, பரிசுத்தவான்களின் சில குறிப்பிட்ட தேவைகளுக்காக வேண்டுதல் செய்யத் தொடங்குகிறார். அப்போஸ்தலனுடைய ஜெப விருப்பங்கள் எவ்வளவு விரிவானவையாக இருந்தன என்பதைக் குறித்து நாம் முன்னமே குறிப்பிட்டோம். ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருந்த தேவனுடைய மக்களின் தேவைக்கு உகந்தவண்ணம் குறிப்பிட்டு, அவர் எப்பொழுதும் ஜெபிக்கக் கூடியவராக இருந்தார் என்பதையும் நாம் சுட்டிக் காட்ட வேண்டியவராயிருக்கிறோம். பொதுப் படையாக அவர் ஜெபிக்கவில்லை. இங்கே அவர் கொலோசெயருக்காக வெவ்வேறான நான்கு வேண்டுதல்களை ஏறெடுப்பதாகவே தோன்றுகிறது: (1) ஆவிக்குரிய நுண்ணறிவு; (2) தகுதியான நடத்தை; (3) மிகுதியான வல்லமை; (4) நன்றிபாராட்டும் மனப்பான்மை.

அவருடைய ஜெபத்தில் அற்பமான தன்மையோ கஞ்சத்தனமோ எதுவும் இல்லை. *எல்லா, சகலவித,* ஆகிய சொற்கள் 9,10,11 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் இது தெளிவாக ஐயத்திற்கிடமின்றி தெரிகிறது: (1) **எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும்** (வச. 9); (2) கர்த்தருக்கு (முழுவதும்) பிரிய முண்டாக (வச. 10); (3) சகலவித நற்கிரியை (வச. 10); (4) எல்லா வல்லமையாலும் (வச. 11); (5) எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் (வச. 11).

**இதனிமித்தம்** என்னும் சொல் முந்தின வசனத்தோடு தொடர்புபடுத்துகிறது. எப்பாப்பிராவின் அறிக்கையின் நிமித்தம் என்பது இதனுடைய பொருளாகும் (வச. 3,4,8). கொலோசெ பட்டணத்து விசுவாசிகளைக் குறித்தும், அவர்களுடைய விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகியவற்றைக் குறித்தும் அப்போஸ்தலன் முதன்முதலாகக் **கேட்ட நாள்முதல்**, அவர்களுக்காக ஜெபிப்பதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். முதலாவது, அவர்கள் **எல்லா ஞானத்திலும் ஆவிக்குரிய விவேகத்திலும்** தேவனுடைய **சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படும்படியாக** அவர் ஜெபித்தார். ஞானமார்க்கத்தார் பெருமைப்படக்கூடிய அறிவிலே அவர்கள் மனநிறைவு பெறவேண்டுமென்று அவர் ஜெபிக்கவில்லை. தேவனுடைய திருமறையிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடி அவருடைய **சித்தத்தின்** பூரண **அறிவிலே** அவர்கள் உட்புக வேண்டுமென்று அவர் விரும்புகிறார். இந்த ஞானமானது உலகீயமானதோ, இம்மைக்குரியதோ அன்று.

ஆவிக்குரிய **ஞானம்** என்றும் **ஆவிக்குரிய விவேகம்** என்றும் இதனுடைய குணநலன் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. அறிவை மிகச் சிறந்த வகையில் பயன்படுத்துவதே **ஞானம்** என்று சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய சித்தத் திற்கு எது உடன்பட்டதாக இருக்கிறது எது முரண் பட்டதாக இருக்கிறது என்பதைக் காண்பதே **விவேகம்** ஆகும்.

**1:10**. ஒன்பதாவது வசனத்திற்கும் பத்தாவது வசனத்திற்கும் மிக முக்கியமான தொடர்பு இருக் கிறது. தேவனுடைய சித்தத்தைக் குறித்த அறி விலே கொலோசெயர் நிரப்பப்பட வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் ஏன் விரும்புகிறார்? அவர்கள் வல்லமை மிக்க பிரசங்கிகளாகவும் மனவெழுச்சியைத் தூண்டிவிடுகிற போதகர் களாகவும் விளங்க வேண்டும் என்பதற்காகவா? தங்களுக்கென்று ஞானமார்க்கத்தார் ஆதர வாளர்களைத் திரட்ட விரும்புவதுபோல, இவர் களும் பெருமளவு ஆதரவாளர்களைத் திரட்ட வேண்டும் என்பதற்காகவா? இல்லை. ஆவிக் குரிய ஞானத்தையும் விவேகத்தையும் கிறிஸ்த வர்கள் பெற வேண்டும் என்பதற்கான உண்மை யான நோக்கம், **கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய்** அவர்கள் **நடந்து கொள்ள** வேண்டும் என்பதுதான். வழிநடத்துதல் என்னும் பொருளைக் குறித்து இங்கு நாம் மிக முக்கியமான பாடத்தைக் கற்கக்கூடியவராய் இருக்கிறோம். நம்முடைய ஆர்வத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காக தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துகிறதில்லை. நம்மு டைய பெரிய விருப்பங்கள் அல்லது பெருமை ஆகியவற்றை ஊக்குவிக்கத் தேவையான வற்றை அளிப்பதும் அதன் நோக்கமல்ல. மாறாக, நாம் செய்கிற எல்லாச் செயல்களிலும் அவருக் குப் பிரியமாக நடந்துகொள்ள வேண்டும் என்ப தற்காகவே, அவர் நமது வாழ்க்கையைக் குறித்த சித்தத்தை வெளிப்படுத்துகிறார்.

**சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து**. ஒரு மனிதன் நற்கிரியைகளால் இரட்சிக் கப்படுவதில்லை, எனினும் அவன் நற்கிரியை களுக்காகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறான் என் பது நிச்சயம் என்னும் பயனுள்ள உண்மை நினைவுபடுத்தப்பட்டுள்ளது. ஆத்துமாக்கள் இரட் சிப்படைவதில் நற்கிரியை முற்றிலும் பயனற்ற தாயிருக்கிறது என்பதை வலியுறுத்துகிறபோது, நாம் சிலவேளைகளில் கிறிஸ்தவர்களுக்கு நற்கிரியைகளில் நம்பிக்கை இல்லை என்னும் எண்ணத்தை உருவாக்கிவிடுகிறோம். உண் மைக்கு வெகுதொலைவில் இதைப் போல இருப் பது வேறு எதுவுமில்லை. "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்" என்று நாம் எபேசி யர் 2:10 -ஆம் வசனத்தில் கற்கிறோம். "இந்த வார்த்தை உண்மையுள்ளது; தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவற்றைக் குறித் துத் திட்டமாய் போதிக்க வேண்டுமென்று விரும்பு கிறேன்" என்று மீண்டும் பவுல் தீத்துவுக்கு எழுதினார் (தீத்து 3:8).

**சகலவித நற்கிரியைகளிலும்** அவர்கள் கனிகளைத் தரவேண்டும் என்பது மட்டுமின்றி அவர்கள் **தேவனை அறிகிற அறிவிலே** விருத்தி யடைய வேண்டும் என்பதும் பவுலின் விருப்பமா யிருந்தது. இது எவ்வாறு நிறைவேறுகிறது. முதலாவது, தேவனுடைய திருமறையைக் கவனத்தோடு படிப்பதால் இது நிறைவேறுகிறது. அதைத் தொடர்ந்து அவருடைய போதகங் களுக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு உண்மையாக உழைப்பதன் மூலம் இது நிறைவேறுகிறது. (இரண்டாவது சொல்லப்பட்டுள்ள கருத்து இங்கு முக்கியப்படுத்திச் சொல்லப்பட்டுள்ளது.) இவை யாவற்றையும் நாம் செய்கிறபோது **கர்த்தரு டைய** ஆழமான அறிவுக்குள் உட்புகுவோம். "அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்" (ஓசியா 6:3).

அறிவைக் குறித்த சொற்கள் முதல் அதிகாரத் தில் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டிருக்கிற தைக் கவனித்து, அது பயன்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு முறையும் ஒரு குறிப்பிட்ட முன்னேற் றம் அதனைக் குறித்த கருத்தில் காணப்படுகிறது என்பதை உணருங்கள். 6 -ஆவது வசனத்தில் தேவகிருபையை அவர்கள் அறிந்தார்கள். 9 - ஆவது வசனத்தில் அவர்கள் அவருடைய சித்தத் தைக் குறித்த அறிவைப் பெற்றார்கள். 10 -ஆவது வசனத்தில் அவர்கள் தேவனை அறிகிற அறி விலே விருத்தியடைந்தார்கள். முதலாவது குறிப்பு இரட்சிப்பைப் பற்றியது என்று நாம் கூறலாம்; இரண்டாவதை வேத வசனத்தைக் கற்பது என் றும், மூன்றாவதை ஊழியத்தையும் கிறிஸ்தவ வாழ்க்கையையும் குறித்தது என்றும் நாம் கூற முடியும். ஆரோக்கியமான உபதேசம் நேர்மை யான நடத்தையை நோக்கி வழிநடத்த வேண் டும், அது கீழ்ப்படிதலுள்ள ஊழியத்தில் வெளிப் பட வேண்டும்.

**1:11** பரிசுத்தவான்கள், **மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்பட** வேண்டுமென்று அப்போஸ்தலன் தனது மூன்றாவது வேண்டுதலை ஏறெடுக்கிறார். (இங்குள்ள முன்னேற்றத்தைக் கவனியுங்கள்: நிரப்பப்படுதல், வச. 9; கனிகள் தருதல், வச. 10; பலப்படுத்தப்படுதல், வச. 11.) கிறிஸ்தவ வாழ்க்கையானது வெறுமனே மனித ஆற்றலினால் வாழக்கூடியதல்ல. அதற்குக் தெய்வீக ஆற்றல் தேவை. ஆகவே, உயிர்த்தெழுந்த தேவகுமாரனுடைய வல்லமையை விசுவாசிகள் அறியவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். மேலும் அவர்கள் இதனை மகிமையான அவருடைய வல்லமையின்படி அறிய வேண்டுமென்று அவர் விரும்புகிறார். இந்த வல்லமையானது அவருடைய மகிமையான வல்லமையிலிருந்து கிடைக்கப்பெற வேண்டுமென்பதல்ல பவுலின் வேண்டுதல், மாறாக அது அவருடைய மகிமையின் வல்லமையின்படி கிடைக்கப்பெற வேண்டும். அவருடைய மகிமையின் வல்லமை எல்லை கடந்தது, அதுவே ஜெபத்தின் எதிர்பார்ப்பு எல்லையாகும். "மகிமையின் வல்லமை பெற்றுக்கொள்வோரின் தேவைக்குத் தக்கபடி தரப்படுவதில்லை, அது தெய்வீகக் கையிருப்புக்குத்தக்கபடி தரப்படும்" என்று கூறுகிறார் திருவாளர் பீக்.[6]

இந்த வல்லமையைக் கிறிஸ்தவர்கள் பெற வேண்டுமென்று பவுல் விரும்புவதன் காரணம் என்ன? அவர்கள் வெளியே சென்று வியத்தகு அற்புதங்களைச் செய்ய வேண்டுமென்பதுதான் அதற்குக் காரணமா? அவர்கள் செத்தவர்களை உயிரோடு எழுப்ப வேண்டும், நோயுற்றோரைக் குணமாக்க வேண்டும், பிசாசுகளைத் துரத்த வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமா? மீண்டும் "இல்லை" என்பதே இதற்கான விடையாகும். தேவனுடைய பிள்ளை சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையையும் நீடிய சாந்தத்தையும் பெற்றிருக்க இந்த வல்லமை தேவை. இதனை மிகுந்த எச்சரிப்போடு கவனிக்க வேண்டியது அவசியம்! கிறிஸ்தவ உலகில் பல பாகங்களில், பலபாஷைகளைப் பேசுதல், நோயுற்றவர்களைக் குணமாக்குதல், உணர்ச்சிகளைத் தூண்டிவிடுகிற அற்புதச் செயல்கள் எனப்படுகிறவற்றைக் குறித்து பெரிதான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் நாம் வாழ்கிற இந்நாட்களில் இவற்றிலும் பெரிய அற்புதம் இருக்கிறது: தேவனுடைய பிள்ளையானவன் பாடுகளைப் பொறுமையோடு சகித்து, சோதனைகளின் நடுவில் தேவனுக்கு நன்றி செலுத்துவதே அந்த அற்புதம்!

1 கொரிந்தியர் 13:4 -ஆம் வசனத்தில், நீடிய சாந்தம் தயவுடன் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது. இங்கே அது **சந்தோஷத்துடன்** இணைக்கப்பட்டுள்ளது. சர்வ சிருஷ்டியும் தவிக்கின்றன, அதில் பங்குகொள்ளாமல் தப்பிக்க முடியாதவர்களாகவே நாம் பாடுபடுகிறோம். நமக்குள்ளாக சந்தோஷத்தை நிலையாகப் பெற்றிருப்பதற்கும், பிறரிடம் தயவை வெளிப்படுத்துவதற்கும் தேவனுடைய வல்லமை தேவை. அதுவே கிறிஸ்தவனது வெற்றி. **பொறுமைக்கும் நீடிய சாந்தத்திற்கும்** உள்ள வேறுபாட்டினை, முறுமுறுக்காமல் சகித்துக்கொள்வதற்கும், எதிர்ச்செயல் புரியாமல் சகித்துக் கொள்வதற்கும் இடையே உள்ள வேறுபாட்டோடு ஒப்பிட்டு விளக்கிக் கூற முடியும். தன் வாழ்க்கையில் பொறுமையோடு பாடுபடவும், கடுமையான சோதனையின் நடுவே தேவனைப் புகழவும் கூடியவனாக இருக்கின்ற விசுவாசியின் வாழ்க்கையில் தேவனுடைய பெரிதான நோக்கங்களில் ஒன்றை அவருடைய கிருபை நிறைவேற்றியிருக்கிறது.

**1:12** **ஸ்தோத்திரிக்கிறோம்** என்று இந்த வசனத்தில் காணப்படும் சொல் கொலோசெயருடன் தொடர்புடையதேயொழிய, பவுலுடன் தொடர்புடையதல்ல (இச்சொல் பன்மைச் சொல்லாகும்). எல்லா வல்லமையோடும் அவர்கள் பலப்படுத்தப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, அவர்கள் நன்றி செலுத்தும் மனோபாவத்துடன் இருக்க வேண்டும் என்பதும் பவுலின் ஜெபமாயிருக்கிறது. அதாவது, **ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு** அவர்களைத் **தகுதியாக்கின பிதாவை** அவர்கள் தவறாமல் தங்களுடைய நன்றியை வெளிப்படுத்தி **ஸ்தோத்திரிக்க** வேண்டும். ஆதாமின் பிள்ளைகள் என்னும் நிலையில் விண்ணக மகிமைக்கு நாம் தகுதியானவர்கள் அல்ல. உண்மையில், இரட்சிக்கப்படாத மனிதர்கள் ஏதோ ஒரு விதத்தில் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள் எனில், அவர்களால் அதை மகிழ்ச்சியோடு அனுபவிக்க முடியாது. மாறாக அவர்கள் அங்கே பெருந்துன்பம் உடையவர்களாக இருப்பார்கள். பரலோகத்தைப் புகழ்ந்து பாராட்டுவதற்கும் ஒரு தகுதி தேவை. கர்த்தராகிய இயேசுவில் விசுவாசிகளாயிருக்கிற நாமும் கூட, நாமாகவே விண்ணகத்திற்குரிய தகுதியைப் பெற்றிருப்பதில்லை. நாம் மகிமையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமையைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில்தான் நம்மால் கண்டடைய முடியும்:

சொந்தமாக நின்றிடத் தகுதியற்ற
அடிமைக்குத்
தம்தகுதி தந்திட்டார் மனுவேலர் –
மகிமைநிறை
மன்னவரின் உறைவிடமாம் உன்னதத்தில்
நின்றிடவும்
இன்னுமொரு தகுதியில்லை அறிவீர்.

ஒரு மனிதனை தேவன் இரட்சிக்கும் போது, அவர் உடனடியாக அந்த மனிதனுக்கு விண்ணகத்திற்குத் தேவையான அனைத்துத் தகுதிகளையும் அருளுகிறார். அந்தத் தகுதி கிறிஸ்துவே. ஏதொன்றாலும் அத்தகுதியை அதனினும் மேம்பாடு அடையச் செய்ய இயலாது. இந்தப் பூமியில் ஒருவர் நீண்ட காலமாகக் கர்த்தருக்குக் கீழ்படிந்தவராகவும் உண்மையோடு ஊழியம் செய்தவராகவும் வாழ்ந்திருந்தாலும், அவர் விண்ணகம் செல்வதற்கு இரட்சிக்கப்பட்ட அன்று எந்த அளவிற்குத் தகுதி உடையவராக இருந்தாரோ அதைக்காட்டிலும் கூடுதலான தகுதியை அவர் பின்னர் அடைந்திருக்கமாட்டார். நாம் மகிமை அடைவதற்கான உரிமையைப் பெற்றுத் தந்தது அவருடைய இரத்தமே. நம்முடைய சுதந்தரம் **ஒளியில்** இருக்கிறது, "அது பரலோகத்தில் நமக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது," ஆயினும் நம்முடைய "சுதந்தரத்திற்கு அச்சாரமாகத்" தூய ஆவியானவரை நாம் இந்தப் பூமியிலேயே பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் "ஆவியின் முதற் பலன்களை" அனுபவிக்கிற இதே நேரத்தில், எதிர்காலத்தில் பெறப்போகிறதைக் குறித்து களிகூர முடியும்.

**1:13** "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக" மாற்றும் பொருட்டு தேவன் **இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தியிருக்கிறார்** (1 யோவான் 2:11 -ஆம் வசனத்துடன் ஒப்பிடுக). இஸ்ரவேல் மக்களிடத்தில் நடந்த நிகழ்ச்சியின் மூலமாக இதனை விளக்கிக் கூறலாம். அந்த நிகழ்ச்சியானது யாத்திராகமத்தில் குறித்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது அவர்கள் எகிப்தில் குடியிருந்தார்கள். அவர்கள்மேல் வைக்கப்பட்டிருந்த விசாரணைக்காரர்களால் அடிக்கப்பட்டவர்களாக, அவர்கள் தேவனிடத்தில் பெருமூச்சுகளோடு முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். தேவன் வியத்தகு வகையில் தலையிட்டு, அச்சமூட்டக்கூடிய அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவித்து, வனாந்தரத்தின் வழியாக வாக்குறுதி பண்ணப்பட்ட நாட்டிற்கு வழிநடத்தினார். அதற்கொப்பாக, பாவிகள் என்னும் நிலையில் நாம் சாத்தானுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தோம், ஆனால் கிறிஸ்துவின் மூலமாக நாம் அவனுடைய பிடியிலிருந்து **விடுதலையாக்கப்பட்டோம்**. மேலும் நாம் இப்பொழுது கிறிஸ்துவின் **ராஜ்யத்தின்** குடிமக்களாக இருக்கிறோம். சாத்தானின் அரசு இருள் சூழ்ந்தது - அங்கே ஒளியில்லை, அர வணைப்பு இல்லை, மகிழ்ச்சி இல்லை. ஆனால் கிறிஸ்துவின் **ராஜ்யம்** அன்பை ஆதாரமாகக் கொண்டது, அங்கு அம்மூன்றும் இருக்கின்றன என்பதை இது காட்டுகிறது.

பல்வேறு அம்சங்களில் கிறிஸ்துவின் **ராஜ்யம்** திருமறையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவர் முதல் முறை இவ்வுலகிற்கு வந்தபோது, இஸ்ரவேல் நாட்டிற்கு எழுத்தின்படியான ராஜ்யத்தைத் தருவதாகக் கூறினார். ரோம அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேண்டுமென்று யூதர்கள் விரும்பினார்கள், ஆனாலும் அவர்கள் தங்கள் பாவத்திற்காக மனம்வருந்த விரும்பவில்லை. ஆவிக்குரிய நிலையில் தம்மோடு சீரான உறவு கொண்ட மக்களையே கிறிஸ்துவால் ஆளுகை செய்ய முடியும். அது அவர்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டபோது, அவர்கள் தங்களுடைய அரசரை ஏற்க மறுத்துச் சிலுவையில் அறைந்து கொலைசெய்தார்கள். அதைத் தொடர்ந்து கர்த்தராகிய இயேசு பரலோகத்திற்குச் சென்றுவிட்டார். நாமோ அந்த ராஜ்யத்தை மர்மமான நிலையில் பெற்றிருக்கிறோம் (மத். 13). அந்த ராஜ்யமானது வெளித்தோற்றத்தில் காணப்படுகிறதில்லை என்பதே இதன் பொருளாகும். இங்கு அரசர் இல்லை. ஆனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இந்தக் காலகட்டத்தில் யாரெல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் யாவரும் அவரைத் தங்களுடைய உரிமைபெற்ற அரசராக அங்கிகரித்திருக்கிறார்கள். அதனடிப்படையில் அவர்கள் அவருடைய ராஜ்யத்தின் குடிமக்களாக இருக்கிறார்கள். வரப்போகிற ஒரு நாளில் கர்த்தராகிய இயேசு இந்தப் பூமிக்கு மீண்டும் வருவார், எருசலேமைத் தலைநகராகக்கொண்டு தமது அரசை நிறுவுவார், ஆயிரமாண்டுகள் அரசாளுவார். அந்த நாட்களின் இறுதியில், தம்முடைய எதிரிகளையெல்லாம் தம்முடைய கால்களுக்குக் கீழ்ப்படுத்தி, பின்னர் தமது அரசைப் பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நிறுத்துவார். அது நித்திய ராஜ்யத்தின் தொடக்கமாக இருக்கும், மேலும் அது என்றென்றும் நிலைத்திருக்கும்.

**1:14** தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யத்தைக் குறித்துக் கூறிய பவுல், கர்த்த ராகிய இயேசுவின் ஆளுமை மற்றும் செயல் ஆகியவற்றைக் குறித்து தேவனுடைய திருமறை யில் சொல்லப்பட்டிருக்கிற மிகவும் கம்பீரமான பகுதிகளில் ஒன்றினை எடுத்துரைக்கத் தொடங்கு கிறார். பவுல் தனது ஜெபத்தை முடித்துவிட்டாரா அல்லது நாம் இப்பொழுது படிக்கப்போகிற பகுதி யும் அதனைச் சேர்ந்ததா என்பதைப் பகுத்தறி வது கடினம். ஆனால் அது பெரிதான முக்கியத் துவம் வாய்ந்த விஷயமல்ல. ஏனென்றால் தொடர்ந்து வருகிற வசனங்கள் கலப்படமற்ற ஜெபமாகக் காணப்படவில்லை எனினும், அவை நிச்சயமாகக் கலப்படமற்ற ஆராதனையாக விளங்குகின்றன.

"கர்த்தராகிய இயேசு வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்கு இந்த வியத்தகு பகுதியில் புகழ்ந்து போற்றப்பட்டிருக்கிறார். எனினும் அவரு டைய பெயர் எந்த வடிவத்திலும் இங்கு ஒரு தடவைகூட குறிப்பிடப்படவில்லை" என்று ஸ்டார்ஸ் என்பார் குறிப்பிட்டுள்ளார். இது மிகவும் குறிப் பிடத்தக்க ஒன்றாக இருப்பினும், இதில் ஆச்சரி யப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தப் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற விவரங்களை நிறைவாகக் கொண்டிருக்கிறவர் நம்முடைய ஆசிர்வதிக்கப் பட்ட இரட்சகரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும். இந்தப் பகுதியானது தோட்டக்காரரிடத் தில் மரியாள் கேட்ட கேள்வியை நம்முடைய நினைவிற்குக் கொண்டுவருகிறது: "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன்" (யோவான் 20:15). அவருடைய பெயரை அவள் குறிப்பிடவில்லை. அவளுடைய மனதில் ஒரே ஒருவர்தான் இருந்தார்.

கிறிஸ்து முதலாவதாக, **அவருக்குள்...**[7], **பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக் கிறது** என்னும் நிலையில் அறிமுகப்படுத்தப்படு கிறார். பாவமென்னும் அடிமைச் சந்தையி லிருந்து நாம் விலைக்கு வாங்கப்பட்ட செயலை **மீட்பு** என்னும் சொல் விளக்கிக் கூறுகிறது. கர்த்த ராகிய இயேசு, நாம் இருந்த நிலையிலே, நமக்கு ஒரு விலையைக் கூறினார். அவர் நம்மை எவ்வள வாக மதித்தார். "நான் என்னுடைய இரத்தத்தைச் சிந்தி, அவர்களை விலைக்கு வாங்கும் அள விற்கு அவர்களை உயர்வாய் மதிப்பிடுகிறேன்" என்னும் பொருள்பட அவர் பேசினார். அந்த அளவிற்கு மிகப்பெரிய விலைகொடுத்து நாம் வாங்கப்பட்டிருப்பதால், நாம் இனி நமக்குச் சொந்தமானவர்கள் அல்ல என்னும் தெளிவு பெற்றிருக்க வேண்டும்; நாம் விலைக்கு வாங்கப் பட்டவர்கள். ஆகவே நாம் நமக்கென்று தெரிந்து கொண்ட பாதையில் நம்முடைய வாழ்க்கையை நடத்தக்கூடாது. நாம் நம்முடைய வாழ்வில் நம்மு டைய மனம்போன போக்கில் செயல்படுவோ மென்றால், நாம் நமக்குச் சொந்தமல்லாததை எடுத்துக்கொண்டவர்களாகக் காணப்படுவோம், மேலும் நாம் அதனிமித்தம் திருடர்களாவோம் என்று யேல் நகரத்து போர்டன் குறிப்பிட் டுள்ளார்!

அவர் நம்மை மீட்டுக்கொண்டது மட்டுமின்றி, அவர் நமக்குப் **பாவமன்னிப்பையும்** கொடுத் திருக்கிறார். நம்முடைய பாவங்களால் உண் டான கடனை தேவன் தள்ளுபடி செய்துவிட்டார் என்பது இதன் பொருளாகும். அதற்குரிய தண்ட னையைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவை யில் செலுத்தித் தீர்த்துவிட்டார். அதனை மீண் டும் செலுத்தத் தேவையில்லை. கணக்கு செலுத் தித் தீர்க்கப்பட்டு, முடிக்கப்பட்டுவிட்டது. தேவன் நம்முடைய பாவங்களை மன்னித்தது மட்டு மின்றி, அவற்றை கிழக்குக்கும் மேற்குக்கும் எவ் வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் நம்மை விட்டு விலக்கினார் (சங். 103:12).

### இ. சபையின் சிரசாகிய கிறிஸ்துவின் மகிமை கள் (1:15-23)

**1:15** அடுத்த நான்கு வசனங்களில் நாம் கர்த்தராகிய இயேசுவை, (1) தேவனோடு அவருக் குரிய உறவு (வச. 15); (2) படைப்புகளோடு அவ ருக்குரிய உறவு (வச. 16,17); (3) சபையோடு அவ ருக்குரிய உறவு (வச. 18) என்னும் நிலைகளில் விவரிக்கப்பட்டவராகப் பெற்றிருக்கிறோம்.

**அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம்** என்று கர்த்தர் இங்கு விவரித்துக் கூறப்பட்டுள் ளார். **தற்சுரூபம்** என்னும் சொல் தன்னகத்தே குறைந்தது இரண்டு கருத்துகளைக் கொண்டிருக் கிறது. முதலாவது, தேவன் எப்படி இருப்பார் என்பதை நாம் காணும்படி கர்த்தராகிய இயேசு சாத்தியமாக்கியிருக்கிறார் என்னும் எண்ணத்தை இது தருகிறது. தேவன் ஆவியாயிருக்கிறார், ஆகவே அவர் அதரிசனமானவர். ஆனால் கிறிஸ்து என்னும் ஆள்தன்மையில், அழிந்து போகிற கண்கள் காணும்படியாக தேவன் தம் மைக் காண்பித்தார். இந்தப் பொருளில் கர்த்தரா கிய இயேசு அதரிசனமான தேவனுடைய தற்சுரூப மாக இருக்கிறார். அவரை யாரெல்லாம் கண்டார்

களோ, அவர்கள் தேவனைக் கண்டார்கள் (யோவான் 14:9 -ஐக் காணவும்). ஆனால் தற்சுரூபம் என்னும் சொல் "பிரதிநிதி" என்னும் கருத்தையும் தெரிவிக்கிறது. தேவன் தம்முடைய விருப்பங்களுக்குப் பிரதிநிதியாக இருக்கும்படி முதலில் ஆதாமை இவ்வுலகினில் வைத்தார்.

ஆனால் ஆதாமோ அதில் தோல்வியடைந்தான். ஆகவே தேவன் தமது ஒரேபேறான குமாரனைத் தமது பிரதிநிதியாக, தமது விருப்பங்களில் அக்கறைகொள்ளும்படியாக, தாம் மனிதனிடத்தில் கொண்டிருக்கும் அன்பின் இருதயத்தை அவனுக்கு வெளிப்படுத்தும்படியாக இவ்வுலகிற்கு அனுப்பினார். இந்தப் பொருளில், அவர் தேவனுடைய தற்சுரூபமாக இருக்கிறார். **தற்சுரூபம்** என்னும் இதே சொல் 3:10 -ஆம் வசனத்தில், கிறிஸ்துவின் சாயலாக விசுவாசிகள் இருக்கிறார்கள் என்று குறிப்பிடும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிறிஸ்து **சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார் (சர்வ சிருஷ்டி அல்லது படைக்கப்பட்ட ஒவ்வொரு படைப்புக்கும்). இதன் பொருள் என்ன? சில கள்ள போதகர்கள் கர்த்தராகிய இயேசுவும் சிருஷ்டிக்கப்பட்ட ஒருவர் என்று இதற்குப் பொருள் கூறுகிறார்கள். தேவன் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிகளிலும் இவரே முதலாவது நபர் என்பதே அவர்களுடைய கருத்து. அவர்களில் சிலர், தேவனுடைய கரத்திலிருந்து வந்த எல்லாப் படைப்புகளுக்குள்ளும் அவரே மிகப்பெரிய படைப்பு என்று சொல்லுமளவிற்குச் செல்ல விருப்பங் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய திருமறை கூறும் போதனைக்கு இதைக் காட்டிலும் நேரடியான முரண்பாடு வேறு எதுவும் இருக்காது.

"முந்தின பேறுமானவர்" என்னும் சொற்றொடர் குறைந்தது வேதத்தில் மூன்று அர்த்தங்களைக் கொண்டிருக்கிறது. லூக்கா 2:7 -ஆம் வசனத்தில் இச்சொல் எழுத்தின்படியான பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே மரியாள் தான் பெற்றெடுத்த முதற்பேறான குமாரனைக் கொண்டுவந்தாள். அவள் பெற்றெடுத்த பிள்ளைகளில் கர்த்தராகிய இயேசுவே முதல் குழந்தை என்பதுதான் அதனுடைய பொருள். இதற்கு மாறாக, யாத்திராகமம் 4:22 -இல் ஒரு உருவகச் சொல்லாக இது பயன்படுத்தப்பட்டுள்ளது. "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன் (முதற்பேறான குமாரன்)." இந்த வசனத்தில் உண்மையாகவே ஒரு பிள்ளை பிறந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்னும் கருத்திற்கு இடமில்லை. ஆனால் இஸ்ரவேல் நாடானது அவருடைய திட்டங்களிலும் நோக்கங்களிலும் தனிச்சிறப்பு மிக்க இடத்தைப் பெற்றிருந்தது என்பதைக் கூறுவதற்காகக் கர்த்தர் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறார். இறுதியாக, சங்கீதம் 89:27 -இல், "முதற்பேறானவன்" என்னும் சொல் தலைசிறந்த இடத்தை, அதாவது ஒப்புயர்வற்ற நிலை மற்றும் தனித்தன்மை வாய்ந்த நிலை ஆகியவற்றில் தலைசிறந்த இடத்தைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளது. தனது முதற்பேறான தாவீதை, இவ்வுலக அரசர்களுக்கெல்லாம் மேலாக உயர்த்தப்போவதாக தேவன் இங்கு கூறுகிறார். உண்மையில், மாம்சத்தின்படி தாவீது ஈசாயின் கடைசி மகனாவான். ஆனால் தேவன் அவனுக்கு ஒப்புயர்வற்ற நிலை, முதன்மை, அரசுரிமை ஆகியவற்றைத் தர முடிவு செய்துவிட்டார்.

கொலோசெயர் 1:15 -இல் **சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்** என்னும் சொற்றொடரில் மிகச்சரியாக இந்தச் சிந்தனை இருக்கிறதல்லவா? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தேவனுடைய தன்னிகரில்லாத ஒரே குமாரன். ஒரு பொருளில் விசுவாசிகள் யாவரும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசு, வேறு எவருக்கும் பொருந்தாத நிலையில், தேவனுடைய குமாரனாக இருக்கிறார். மேலும் அவர் எல்லாவற்றின் மேலும் ஒப்புயர்வற்ற வகையில் முதன்மையானவராக இருக்கிறார். மேன்மையிலும், ஆளுகையிலும் முதல் நிலை அவருடையது. சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர் என்னும் சொற்றொடர் இந்த இடத்தில் பிறப்போடு எவ்விதத்திலும் தொடர்புடையது அன்று. நித்திய உறவில் அவர் தேவனுடைய குமாரன் என்பது மட்டுமே அதனுடைய பொருளாகும். ஸ்தான அடிப்படையில் அவருடைய ஒப்பற்ற தகுதியின் உரிமையை இது குறிக்கிறதேயொழிய, காலத்தின் முதன்மையை இது குறிப்பதில்லை.

**1:16** கர்த்தராகிய இயேசு படைக்கப்பட்ட ஒருவர் என்று கற்பிக்க 15 -ஆவது வசனத்தைக் கள்ள போதகர்கள் பயன்படுத்துகிறார்கள் (குறிப்பாக அவர்கள் KJV மொழிபெயர்ப்பை எடுத்துக் கொள்கிறார்கள்). கள்ளக் குழுவினர் பயன்படுத்துகிற அதே வேத பகுதியிலிருந்து அவர்களுடைய தவறை மறுத்துரைக்க முடியும். அவ்வாறுதான் இங்கு இருக்கிறது. பதினாறாவது வசனம் அவர்

படைக்கப்பட்ட படைப்பு அல்லவென்றும் மாறாக அவரே படைப்பாளர் என்றும் கூறுகிறது. **சகல மும்** அதாவது அண்டசராசரத்தில் இருக்கிற அனைத்தும், **அவருக்குள் படைக்கப்பட்டன** (அவரால்) என்பது மட்டுமின்றி **அவரைக் கொண் டும் படைக்கப்பட்டன** என்று நாம் இந்த வசனத் தின் மூலமாக அறிகிறோம். இங்கு பயன்படுத்தப் பட்டுள்ள முன்னிடைச் சொற்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கருத்தைத் தருகின்றன. முதலாவது **அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டன** என்று படிக்கிறோம். சிருஷ்டிப்பிற்குத் தேவை யான வல்லமை அவர்தான் என்பதே இங்கு சொல் லப்பட்டிருக்கிற கருத்து. அவரே தோற்றுவித்த வர். இந்த வசனத்தின் பின்பகுதியில் **சகலமும் அவரைக்கொண்டும் சிருஷ்டிக்கப்பட்டன** என்று படிக்கிறோம். படைப்பில் அவர் பிரதிநிதி யாகச் செயல்பட்டார் என்னும் கருத்தை இது குறிப்பிடுகிறது. தேவ தலைமையில், சிருஷ்டிப் பின் செயலைச் செய்து முடித்தவர் இந்த நபரே ஆவார். அதுவுமல்லாமல், **சகலமும் அவருக் கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன.** படைப்புகள் யாவும் அவர் ஒருவருக்காகவே படைக்கப்பட்டன, படைப்பின் குறிக்கோள் இங்கு சொல்லப்பட்டுள் ளது.

**சகலமும் கிறிஸ்துவைக் கொண்டு சிருஷ் டிக்கப்பட்டன** என்பதை வலியுறுத்தும் பொருட்டு, **பரலோகத்தில்** உள்ளவையானாலும், **பூலோ கத்தில்** உள்ளவையானாலும் என்று கூறி பெரிதான அளவில் பேசுகிறார் பவுல். அவர் சில பொருட்களைப் படைத்தார், ஆனாலும் தொடக் கத்தில் அவரும் படைக்கப்பட்டவர்தான் என்று சொல்லுவதற்கு யாருக்கும் இங்கே இடம் தரப்பட வில்லை.

கர்த்தருடைய படைப்பில் **காணப்படுகிறவை காணப்படாதவை** யாவும் இடம் பெற்றிருந்தன என்று அப்போஸ்தலன் தொடர்ந்து கூறுகிறார். **காணப்படுகிறவை** என்னும் சொல்லுக்கு விளக் கம் தேவையில்லை. ஆனால், **காணப்படாதவை** என்று கூறியபோது அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய ஆவலைத் தூண்டிவிட்டதை உணர்ந் தார், இதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஆகவே அவர் **காணப்படாதவை** என்னும் சொல் லுக்கான விவரங்களைத் தருகிறார். சிங்காசனங் கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதி காரங்கள் இவை யாவும் அவற்றுள் அடங்கும். இந்தப் பெயர்கள் யாவும் தேவதூதர்களின் பதவிப் பெயர்கள் என்றே நாம் கருதுகிறோம். ஆனாலும் இந்தப் புத்தியுள்ள உயிரினங்களுக்கு இடையே யுள்ள படிநிலை வேறுபாட்டை நாம் அறியோம்.

தேவனுக்கும் ஜடப்பொருளுக்கும் இடையே பற்பல படிநிலைகளில் ஆவிகள் இருக்கின்றன, அவை வெவ்வேறு வகுப்பைச் சேர்ந்தவை என்று ஞானமார்க்கத்தார் கற்பித்தார்கள். இந்த வகுப் பாரிடையே கிறிஸ்துவும் ஒருவர் என்று அவர்கள் கூறினார்கள். நம்முடைய நாட்களில், கிறிஸ்து மிகவும் உயர்ந்த ஆவி என்றும், அவர் ஆறாவது வானத்தைச் சேர்ந்தவர் என்றும் ஆவியுலகக் கோட்பாட்டாளர்கள் கருதுகிறார்கள். யெகோவா சாட்சிகள், நம்முடைய கர்த்தர் இவ்வுலகிற்கு வருவதற்கு முன் ஒரு படைக்கப்பட்ட தேவ தூத ராக இருந்தார் என்றும், அவர்தான் பிரதான தூதனாகிய மிகாவேல் என்றும் கற்பித்து வரு கிறார்கள்! இங்கே பவுல், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே சகலத்தையும், காணப்படுகிறவை காணப்படாதவை அனைத்தையும் படைத்தவர், அதாவது தேவ தூதர்களைப் படைத்தவரும் அவரே என்று முடிந்த அளவிற்குத் தெளிவான சொற்களாலே கூறி, நகைப்பிற்கிடமான கற் பனைக் கருத்துகளையெல்லாம் வன்மையாகக் கண்டித்து மறுத்துரைக்கிறார்.

**1:17 அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.** "அவர் எல்லாவற்றிற்கும் முந்தி இருக்கிறார்" என்றே பவுல் கூறுகிறார். "அவர் எல்லாவற்றிற்கும் முந்தி இருந்தார்" என்று அவர் கூறவில்லை. தெய்வம் காலத்தைக் கடந்தவர் என்பதை விளக்கிக் கூறும் வகையில், திருமறையில் நிகழ்கால வினைச் சொற்கள் அவ்வப்போது பயன்படுத்தப்பட்டுள் ளன. எடுத்துக்காட்டாகக் கர்த்தராகிய இயேசு கூறியதைக் காண்போம்: "ஆபிரகாம் உண்டா வதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" (யோவா. 8:58).

படைக்கப்பட்ட ஏதொன்றும் இல்லாததற்கு முன்னமே கர்த்தராகிய இயேசு இருந்தார் என்பது மட்டுமின்றி, **எல்லாம் அவருக்குள் நிலைநிற் கவும்** செய்கிறது. இப்பிரபஞ்சத்தைத் தாங்கும் ஆதாரமாக அவர் இருக்கிறார், மேலும் அது தொடர்ந்து இடைவிடாமல் இயங்குவதற்கு அவரே மூலகாரணராக இருக்கிறார். அவர்தாமே விண் மீன்களையும் கதிரவனையும் நிலவையும் கட்டுப் படுத்துகிறார். அவர் பூமியில் இருந்த நாட்களி லும், இந்தப் பிரபஞ்சம் ஒழுங்கான முறையில் இயங்குவதற்குத் தேவையான விதிகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.

**1:18** கர்த்தராகிய இயேசுவின் ஆளுகை இப் பிரபஞ்சத்தின் இயற்கை சார்ந்த இயக்கங்களின் மேல் செலுத்தப்பட்டதுமின்றி, ஆவிக்குரிய உலகின்மேலும் அது விரிவடைந்திருக்கிறது. **அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்.** தற்போதைய காலப்பாகுபாட்டில், கர்த்தராகிய இயசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற அனைவரும் ஒன்றுசேர்ந்து கிறிஸ்துவின் **சரீரம்** அல்லது **சபை** என்று அறியப்பட்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் தன்னை வெளிப்படுத்துவதற்குத் தனது சரீரத்தை ஓர் ஊடகமாகப் பயன்படுத்துவதுபோல, கிறிஸ்துவின் சரீரத்தை உலகில் தமது ஊடகமாகத் தெரிந்துகொண்டு அவர் தம்மையே இவ்வுலகிற்கு வெளிப்படுத்துகிறார். மேலும் அவரே **சரீரத்துக்குத் தலையானவர்.** தலை வழிநடத்துதல், அதிகாரம், கட்டுப்படுத்தி இயக்குதல் ஆகியவை குறித்துப் பேசுகிறது. அவர் சபையில் **எல்லாவற்றிலும் முதல்வர்** என்னும் இடத்தைப் பெற்றிருக்கிறார்.

அவரே **ஆதியாக** இருக்கிறார். அவர் புது சிருஷ்டிப்பின் ஆதியுமாய் இருக்கிறார் என்றே நாம் இதனைப் புரிந்துகொள்கிறோம் (வெளி. 3:14 -ஆம் வசனத்தைக் காண்க), அதாவது ஆவிக்குரிய வாழ்வின் ஆதாரமாக இருக்கிறார். தொடர்ந்து வருகிற, **மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்** என்னும் சொற்றொடரில் இது மேலும் விளக்கப்படுகிறது. மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் கர்த்தராகிய இயேசுவே முதன் முதலில் எழுந்தவர் என்பது இதன் பொருளன்று என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்திக் கூற கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும், இறந்து போனவர்கள் உயிரோடு எழுந்த நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால் கர்த்தராகிய இயேசுவே, *இனி இறந்து போகாதிருக்கும்படி* மரித்தோரிலிருந்து எழுந்தவர்களில் முதலாவது நபர், அவரே மகிமையடைந்த சரீரத்தோடு முதலாவது எழுந்தவர், மேலும் அவர் புது சிருஷ்டியின் தலையாக எழுந்தவர். அவர் உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி ஒப்பற்றது. மேலும் அவரிடத்தில் விசுவாசத்தோடு இருக்கிறவர்களும் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்பதற்கு அது அச்சாரமாயிருக்கிறது. ஆவிக்குரிய சிருஷ்டிப்பில் அவரே ஒப்புயர்வற்றவராக இருக்கிறார்.

ஆல்.்.பிரட் மேஸ் என்பார் இதனை அழகுற விவரிக்கிறார்:

> எந்த இடத்திலும் கிறிஸ்து இரண்டாவதாக இருக்க முடியாது. அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் என்பதால் அவரே "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவராக" இருக்கிறார் (கொலோ. 1:15,16). மீட்கப்பட்டவர்கள், விண்ணகக் குடும்பம் என்பவர்களுடன் உள்ள தொடர்பில், அவர் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவராகவும் இருக்கிறார். இவ்வாறாக, சிருஷ்டிப்பு மீட்பு ஆகிய இரண்டுமே, ஒப்புயர்வற்ற வகையில் அவரே முதல்வராயிருக்கிறார் என்னும் மேன்மையை அவருக்கு அளிக்கின்றன. எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும் படியான இந்த மேன்மை, அவர் யார் என்ன செய்தார் என்பனவற்றின் காரணத்தினால்தான் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவரே எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார்.[8]

இவ்வாறாக, கர்த்தராகிய இயசு இரண்டு நிலைகளில் முதன்மைத்துவத்தைக் கொண்டிருக்கிறார் - முதலாவது படைப்பில் முதல்வராயிருக்கிறார், அடுத்தது சபையில் முதல்வராயிருக்கிறார். அவர் முதல்வராயிருக்கும்படி தேவன் ஆணையிட்டிருக்கிறார். கிறிஸ்துவை என்னதான் உயர்த்திப் பேசினாலும், அவருடைய தெய்வீகத்தை அவரிடத்திலிருந்து அபகரித்து, அவரை வெறுமனே படைக்கப்பட்ட ஒருவராகக் காட்ட நினைத்த அக்காலத்து மனிதர்களுக்கு (ஏன் இக்காலத்தில் இருப்பவர்களுக்குங்கூட) எத்தகையதொரு விடை இங்கு தரப்படுகிறது!

**எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி** என்னும் சொற்றொடரை நாம் படிக்கின்ற வேளையில், "என்னுடைய வாழ்க்கையில் அவர் முதல்வராயிருக்கிறாரா?" என்னும் கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்க வேண்டியது தகும்.

**1:19** திருவாளர் டார்பி இந்த வசனத்தை இவ்விதமாக மொழிபெயர்த்திருக்கிறார்: "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள்ளே வாசமாயிருக்க பிரியப்பட்டது." ஏதோ ஒரு குறிப்பிட்ட நேரத்தில், சகல பரிபூரணத்தையும் குமாரனுக்குள் வாசமாயிருக்கும்படி செய்வதற்குப் பிதா பிரியம் கொண்டார் என்பது போல ஜேம்ஸ் அரசர் மொழிபெயர்ப்புப் பாரம்பரியம் தோற்றுவிக்கிறது (அந்த மொழிபெயர்ப்பில் சாய்ந்த எழுத்துகளில் உள்ள சொற்களைக் காணுங்கள் - அவை மூல மொழியான கிரேக்கில் இல்லை). இதனுடைய

உண்மையான பொருள் யாதெனில், தேவத் துவத்தின் **சகல பரிபூரணமும்** கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வாசமாயிருந்தன என்பதேயாகும்.

ஞானமார்க்கத்துக் கள்ள போதகர்கள், தேவனுடைய வீட்டுக்குச் செல்வதற்குக் கிறிஸ்து "பாதி வழியாக" இருக்கிறார் என்று கற்பித்தார் கள்; தொடர் சங்கிலியில் அவர் அவசியமான இணைப்பு என்றும் அவர்கள் கூறினார்கள். ஆனால் அவரிலும் சிறந்த இணைப்புகள் அவ ரைத் தொடர்ந்து உள்ளன, "அவரிடத்திலிருந்து முன்னே செல்லுங்கள், அப்பொழுது நீங்கள் நிறைவை அடைவீர்கள்" என்று அவர்கள் வலி யுறுத்தினார்கள். "இல்லை, கிறிஸ்துதாமே முழு நிறைவாக இருக்கிறார்!" என்று பவுல் பதில் தருகிறார்.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள் *வாசமா யிருக்கின்றன*. இங்கு வாசமாயிருத்தல் என்னும் சொல் நிரந்தரமாகக் குடியிருத்தலைக் குறிக் கிறது.[9] ஏதோ சிறிதுகாலம் வருகைபுரிந்து, பின்னர் அங்கிருந்து மறைந்துபோவது போன்ற தன்று இது.

**1:20** பத்தொன்பதாவது வசனம் இருபதாவது வசனத்துடன் இவ்வாறு இணைக்கப்பட்டிருக் கிறது: **அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தி னாலே, சமாதானத்தை உண்டாக்கி... அவர் மூலமாய்** (கிறிஸ்து) எல்லாவற்றையும் தம் மோடு **ஒப்புரவாக்கிக்கொள்ளவும்** *பிதாவுக் குப் பிரியமாயிற்று.* சகல பரிபூரணமும் கிறிஸ்து வுக்குள் நிறைவாய் வாசம்பண்ணுவது தேவத் துவத்திற்கு மிகவும் பிரியமானது (வச. 19); அது மட்டுமின்றி கிறிஸ்து எல்லாவற்றையும் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொள்ள வேண்டுமென்பது தேவத் துவத்திற்குப் பிரியமானதாகும் என்றும் இதனை வேறு வகையாகக் கூறலாம்.

இந்த அதிகாரத்தில் இரண்டு ஒப்புரவுகள் சொல்லப்பட்டுள்ளன: (1) பொருட்களை ஒப்புரவு அடையச் செய்தல் (வச. 20); (2) மனிதர்களை ஒப்புரவு அடையச் செய்தல் (வச. 21). முதலாவது இனிமேல் நடக்கவிருப்பது ஆகும், இரண்டா வதோ, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவர்களி டம் ஏற்கனவே நடந்து முடிந்த செயலாகும்.

## ஒப்புரவு

முன்னிருந்த சரியான உறவு அல்லது சீரான நிலைமைக்குக் கொண்டுவருவது அல்லது பகைமை இருந்த இடத்தில் சமாதானத்தை உண்டுபண்ணுவது என்பதே ஒப்புரவாக்குதல் என்னும் சொல்லின் பொருளாகும். மனிதனோடு ஒப்புரவு கொள்ளும்படியான தேவை தேவனுக்கு இருந்ததாகத் திருமறையில் எங்கும் சொல்லப் படவில்லை. மாறாக, மனிதனோ தேவனோடு ஒப்புரவாக வேண்டிய தேவை உடையவனாக எப்பொழுதும் இருந்தான். மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை (ரோமர் 8:7). ஆகவே, மனி தன் தேவனோடு ஒப்புரவாக வேண்டிய தேவை உண்டு.

பாவம் உலகத்திற்குள் உட்புகுந்த வேளை யில், தேவனோடு மனிதன் கொண்டிருந்த உற வில் முரிவு ஏற்பட்டுவிட்டது. அவன் தேவனிடத் தில் பகைமை உணர்வு கொள்ளத் தொடங்கிவிட் டான். ஆகவே அவன் ஒப்புரவாக வேண்டிய தேவையுள்ளவனாக இருக்கிறான்.

ஆனால் பாவம் மனித வர்க்கத்தைப் பாதித் ததோடு, படைப்புகள் யாவற்றையும் பாதித்தது.

1. கடந்த காலத்தில் சில தேவதூதர்கள் பாவம் செய்தார்கள். (ஆயினும், இந்த தேவதூதர் கள் எப்பொழுதாவது ஒப்புரவு ஆவார்கள் என்பதற்கான எந்தக் குறிப்பையும் தேவனு டைய வார்த்தையில் எங்கும் நாம் காண்கிற தில்லை. "மகாநாளின் நியாயத்தீர்ப்புக் கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்" என்று இவர்களைப்பற்றிய குறிப்பை யூதா 6 -ஆவது வசனத்தில் காண்கிறோம்.) தேவன் தம்முடைய தூதரின் மேலும் புத்தியீனத் தைச் சுமத்துவதாக யோபு 4:18 -இல் எலிப் பாஸ் கூறுகிறான்.

2. பாவம் உட்புகுந்ததால் விலங்கினம் பாதிக் கப்பட்டது: "மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால்.. அந்தச் சிருஷ்டியானது ... மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகை யால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இது வரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது" (ரோமர் 8:19-22). விலங்கினங்கள் நோய் வாய்ப்படுகின்றன, வேதனையடைகின்றன, மரணமடைகின்றன, பாவத்தின் சாபத்திலி ருந்து விலங்குகளுக்கு விலக்களிக்கப்பட வில்லை என்பதற்கு இவ்வுண்மை அடை யாளமாயிருக்கிறது.

3. ஆதாம் பாவம் செய்த பிறகு நிலத்தை தேவன் சபித்தார் (ஆதி. 3:17). களைகள், முட்செடிகள், புதர் பூண்டுகள் யாவும் இதனை வெளிப்படுத்துகின்றன.

4. யோபு என்னும் நூலில் நட்சத்திரங்களும் தேவனுடைய பார்வைக்குக் சுத்தமானவை அல்ல என்று பில்தாத் கூறுகிறான் (யோபு 25:5). வானத்தின் கோள்களையும் பாவம் தாக்கியிருக்கிறது என்பது இதனால் தெரிய வருகிறது.

5. பரலோகத்தில் உள்ளவையுங்கூட சுத்திகரிக்கப்பட வேண்டியவை என்று எபிரெயர் 9:23 -ஆம் வசனம் கூறுகிறது. இதில் சொல்லப்பட்டுள்ள செய்தியின் பொருள் முழுவதையும் நாம் அறிய மாட்டோம். சாத்தான் அங்கு வருகைபுரிவதன் காரணமாக பரலோகத்தில் உள்ளவையுங்கூட தீட்டுப்பட்டுவிட்டன, அவனே தேவனிடத்திற்கு வந்து சகோதரர் மேல் குற்றம் சுமத்துகிறவன் (யோபு 1:6,7; வெளி. 12:10). இது தேவன் குடியிருக்கும் இடம் என்று சிலர் கருதுகிறார்கள். வேறு சிலர் இது நட்சத்திரங்கள் இருக்கக்கூடிய வானம் என்று கூறுகிறார்கள். அவ்வாறு விண்கோள்கள் அடங்கிய வானத்தில் தேவனைச் சந்திக்க சாத்தானுக்கு அனுமதி உண்டு என்று அவர்கள் கூறுகிறார்கள். அது எதுவாயினும் தேவனுடைய அரியணை பாவத்தினால் தீட்டுப்படவில்லை.

கிறிஸ்து மரணமடைந்ததற்கான காரணங்களில் ஒன்று, மனிதர்களும் பொருட்களும் தேவனோடு ஒப்புரவாகவேண்டும் என்பதுதான். அதனைச் செய்யும் பொருட்டு பகைமை, மனமுரிவு ஆகியவற்றிற்கான காரணத்தை அவர் நீக்க வேண்டியதாக இருந்தது. தேவன் மனநிறைவு அடையும்படி அவர் பாவத்தின் கேள்வியைத் தீர்த்ததாலே, அதனை அவர் திறம்படச் செய்து முடித்தார்.

கொலோசெயர் முதல் அதிகாரத்தில் ஒப்புரவுக்கான செயற்பரப்பின் எல்லை சொல்லப்பட்டுள்ளது: (1) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொண்டவர்கள் யாவரும் தேவனோடு ஏற்கனவே ஒப்புரவாக்கப்பட்டுவிட்டார்கள் (வச. 21). கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் செயல் மனிதவர்க்கம் அனைத்தும் ஒப்புரவாகப் போதுமானதாக இருந்தபோதிலும், யாரெல்லாம் அதனைத் தங்களுக்குரியதாக்கிக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே அது பயனளிக்கும் (2) இறுதியில், பூமியில் உள்ளவையும் பரலோகத்தில் உள்ளவையும், எல்லாப் பொருட்களும் ஒப்புரவாக்கப்படும் (வச. 20). பாவத்தினால் தீட்டுப்பட்டிருக்கக்கூடிய விலங்கினங்களையும், உயிரற்ற பொருட்களையும் இது குறிக்கிறது. ஆனாலும் இது சாத்தானைக் குறிப்பதில்லை; விசுவாசிக்காத மனிதர்களையும், வீழ்ந்து போன தூதர்களையும் இது குறிப்பதில்லை. அவற்றின் நித்திய அழிவு வேதவசனங்களில் மிகத்தெளிவாக முன்னுரைக்கப்பட்டுள்ளது.

ஒப்புரவாக்கப்படுதலின் விளைபயன் "பூமிக்குக் கீழே உள்ளவற்றிற்கு" விரிவாக்கம் செய்யப்படும் என்று சொல்லப்படவில்லை. ஒப்புரவாக்கப்படுதல் என்பதற்குக் கீழ்ப்படுத்தப்படுதல் என்பதற்கும் வேறுபாடு உண்டு. இரண்டாவதாகச் சொல்லப்பட்டுள்ள உண்மையை பிலிப்பியர் 2:10 விளக்குகிறது: "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்." இதனை டார்பி அவர்கள், "வானத்திற்குரியவர், பூமிக்குரியவர், அக்கினிக்குரியவர்" என்று மொழிபெயர்த்திருக்கிறார். படைக்கப்பட்டவை யாவும், வீழ்ந்து போன தூதர்களும்கூட கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக முழங்காற்படியிடும்படி வற்புறுத்தப்படுவார்கள். ஆனால் அவர்கள் ஒப்பரவு அடைவார்கள் என்பது இதன் பொருளன்று. இதனை நாம் வலியுறுத்திக் கூறுவதற்கான காரணம் யாதெனில், கொலோசெயர் 1:20 -ஆம் வசனம், சாத்தான், வீழந்துபோன தூதர்கள் மற்றும் விசுவாசிக்காத மனிதர்கள் உட்பட இந்த அண்டசராசரம் முழுவதும் இறுதியில் தேவனோடு ஒப்புரவாக்கப்படும் என்று தவறாகப் போதிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய வேதபகுதி ஒப்புரவாகுதல், பூலோகத்தில் உள்ளவை, பரலோகத்தில் உள்ளவை ஆகியவற்றிற்கு மட்டுமே உரியது என்று ஓர் எல்லைக்கு உட்படுத்துகிறது. "பூமிக்குக் கீழானோர்" அதாவது நரகத்திற்குரியவர் இதில் இடம்பெற மாட்டார்கள்.

**1:21** கொலோசெயரைப் பொருத்தமட்டில் ஒப்புரவாகுதல் அவர்களிடம் ஏற்கனவே நிறைவேறி முடிந்த செயலாக இருக்கிறது என்று பவுல் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். கொலோசெயர் மனமாற்றம் அடையும் முன்னர் புறவினப் பாவிகளாக இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் தேவனுக்கு **அந்நியராகவும்**, அவர்களுடைய **துர்க்கிரியைகளால்** மனதிலே அவருடைய

**சத்துருக்களாகவும்** இருந்தார்கள் (எபே. 4:17, 18). அவர்கள் ஒப்புரவாக வேண்டிய கட்டாயத்திற் குள் இருந்தார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவோ அவருடைய ஒப்பற்ற கிருபையினாலே தாமாகவே முன்வந்து அந்தக் கிரியையைத் தொடங்கி வைத்தார்.

அவர் அவர்களைத் தம்முடைய **மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப் பொழுது ஒப்புரவாக்கினார்.** அது அவருடைய வாழ்வினாலே உண்டாகவில்லை, மாறாக அவரு டைய **மரணத்தினாலே** உண்டாயிற்று. **அவரு டைய மாம்ச சரீரம்** என்னும் சொற்றொடர், ஒப் புரவு என்னும் செயலைக் கர்த்தராகிய இயேசு, தம்முடைய உண்மையான சரீரத்தில், சிலுவை மரணத்தின் மூலமாக நிறைவேற்றி முடித்தார் என்னும் பொருளையே தருகிறது (ஞானமார்க்கத் தார் கூறியது போன்று அவர் ஆவியாய் இருந்து செய்யவில்லை). மனுவுருவில் வந்த செயல் மீட்பைச் செயல்படுத்துவதற்கு அவசியமாயிருந் தது என்று எபிரெயர் 2:14-16 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருப்பதை இதனுடன் ஒப்புநோக்குங் கள். ஞானமார்க்கத்தாரின் கருத்து இதனை மறுத்துரைக்கிறது.

ஒப்புரவாகுதலின் வியத்தகு விளைபயன், **உங்களைப் பரிசுத்தராகவும், குற்றமற்றவர் களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்தும்படிக்கு** என்னும் சொற் களாலே விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அக்கிரமக் காரராகிய பாவிகள் தங்களுடைய முந்தின பொல்லாத வாழ்க்கையிலிருந்து ஆசிர்வாதத் தின் ஆளுகைக்குள்ளாகக் கொண்டுவரப்பட்டி ருக்கிறார்கள் என்னும் உண்மை எத்தனை மகத்தான கிருபையாக இருக்கிறது!

திருவாளர் C.R. எர்ட்மேன் நன்கு கூறினார்: "கிறிஸ்துவுக்குள், அருகிலுள்ளவரும், அக்கறை செலுத்துகிறவரும், காதுகொடுத்துக் கேட்கிற வரும், இரக்கம் பாராட்டுகிறவரும், இரட்சிக்கிற வருமாகிய தேவனைக் கண்டடைகிறோம்."[10]

பாவமற்றவராக, கறைதிரை அற்றவராக, எந்தக் குற்றமும் சுமத்தப்படாதவராக நாம் பிதா வாகிய தேவனுக்கு முன்பாக இன்னொரு நாளில் நிறுத்தப்படப் போகிறோம், அப்பொழுது ஆராதிக் கிறவர் என்னும் நிலையில் நாம் கிறிஸ்துவை எல்லா மேன்மைக்கும் பாத்திரர் என்று மகிழ்ச்சி யோடு அறிக்கை செய்வோம் (வெளி. 5); அந்த நேரத்தில்தான் தம் மக்களுக்காகக் கிறிஸ்து நிறைவேற்றிய ஒப்புரவாகுதலின் முழுப்பயன்பாடு காணப்படும்.

**1:22** இப்பொழுது அப்போஸ்தலனாகிய பவுல் "ஆல்"[11] விகுதிகொண்ட வேத பகுதிகளில் ஒன்றை இங்கு சேர்க்கிறார். இந்தப் பகுதிகள் தேவனுடைய பிள்ளைகள் பலருக்குப் பெருமள வில் மனவுறுதியை இழக்கச் செய்திருக்கின்றன. இதனை மேலோட்டமாகப் படிக்குங்கால், நம்மு டைய இரட்சிப்பு தொடர்வதற்கு, நாம் **விசுவாசத் திலே** தொடர்ந்திருக்க வேண்டும் என்று இந்த வசனம் கற்பிப்பது போலத் தோன்றுகிறது. இது அவ்வாறு இருப்பின் இதனை, கிறிஸ்துவின் எந்த ஆடும் அழிந்து போவதில்லை என்று அறிவிக்கும் யோவான் 10:28,29 போன்ற மற்ற வசனங்களோடு எவ்வாறு இணங்குமாறு செய்யமுடியும்?

இந்தக் கேள்விக்கு விடைபகர விழையும் வேளையில், விசுவாசியின் நித்திய பாதுகாப்பு புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட ஆசிர்வாதத்திற்குரிய சத்தி யம் என்பதைத் தொடக்கத்திலேயே சொல்ல நாம் விரும்புகிறோம். இருந்தபோதிலும், இந்த வசனத்தில் காணப்படுவதுபோல, மெய்யான விசுவாசம் நிரந்தரமான பண்பை உடையதா யிருக்கும் என்றும், மெய்யாகவே தேவனாலே பிறந்தவர்கள் இறுதிவரை விசுவாசத்துடன் இருப் பார்கள் என்றும் வேத வசனங்கள் கற்பிக்கின்றன. தொடர்ச்சி உண்மைநிலைக்கு நிரூபணமாகத் திகழ்கிறது. கிறிஸ்தவன் பின்னடைவு அடையக் கூடிய ஆபத்து உண்டென்பதில் ஐயமில்லை. ஆனால் கிறிஸ்தவன் மீண்டும் எழுவதற்காகவே வீழ்கிறான் (நீதி. 24:16). அவன் தன்னுடைய விசு வாசத்தை விட்டுவிடுவதில்லை.

கிறிஸ்துவின் பெயரை அறிக்கை செய்கிற மக்கள் யாவரும் தங்களுடைய அறிக்கை உண் மையானதுதானா என்று சோதித்து அறிவதற் காக, இதுபோன்ற "ஆல் விகுதிபெற்ற பகுதிகள்" என்னும் பெயரால்அழைக்கப்படும் வசனங்கள், அறைகூவல்களாக வேதத்தில் இடம்பெறத் தகுதி யானவை என்று தேவ ஆவியானவர் கண்டார். இந்தப் பகுதிகளின் கூரான முனையை மழுங்கச் செய்யும்படி எதையும்கூற நாம் விரும்பவில்லை. "வேதத்தில் காணப்படும் இவ்வித "ஆல்" என்னும் விகுதிபெற்ற பகுதிகள் இவ்வுலகில் பெயரளவில் அறிக்கை செய்யும் கிறிஸ்தவர்களை நோக்கிப் பார்த்து, அவர்களுடைய ஆத்து மாவினிடமாய் வருகிற ஆரோக்கியமான பரீட்சைகளாக விளங்கு கின்றன" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

அறைகூவல் விடுக்கும் இந்த வசனங்களுக்கு விளக்கமளிக்கிறார் பிரிட்ஹேம் என்பார்:

> கிருபையைப் பற்றிய பூர்த்தியானதும் முழு நிறைவானதுமான அறிக்கையைச் சொல்லு மிடங்களிலெல்லாம், பெயரளவிலான விசு வாசத்தில் நிற்கிற ஒருவரது கேடுபயக்கக் கூடிய குறைவைச் சுட்டிக்காட்டும் எச்சரிப்பையும் அவற்றோடு கூட்டி வழங்குவதை ஆவியான வர் வழக்கமாகக் கொண்டிருக்கிறார் என் பதைத் திருமறையை மிகுந்த கவனத்தோடு படிக்கிற வாசகர் அறிந்துகொள்வார்.. நேர்மை யற்ற அறிக்கை செய்வோரின் காதுகளில் வெறுப்பூட்டும் ஒலியென விழும் எச்சரிப்புகள், பயபக்தியுள்ள ஆத்துமாக்களால் அருமருந் தென விருப்பத்தோடு பருகப்படும்.. இத்தகைய படிப்பினைகள் விசுவாசத்தை உற்சாகப்படுத் தும் நோக்கத்துடன் நமக்கு அளிக்கப்பட்டிருக் கின்றன; மேலும் இவை வருவன பொருட்படுத் தாமல், சுயநம்பிக்கையோடு கிறிஸ்துவைப் பெயரளவில் அறிக்கை செய்கிறவர்களை முன் உணர்த்திக் குற்றப்படுத்தும்.[12]

**சுவிசேஷத்தோடு** உடன்வருகிற அல்லது **சுவிசேஷம்** ஏவிவிடுகிற **நம்பிக்கையைவிட்டு அசையாதிருக்கும்படி** கொலோசெயரை அப் போஸ்தலன் வற்புறுத்துகிறார். அவர்கள் எப்பாப் பிராவினிடத்தில் கற்றறிந்த **விசுவாசத்தில் ஸ்திரமாயும் உறுதியாயும் நிலைத்திருக்க** வேண்டும். இவை யாவற்றையும் முக்கியமாக அவர் தனது உள்ளத்தில் ஞானமார்க்கத்தாரை நினைவிற்கொண்டவராகவே கூறுகிறார் என்ப தில் எவ்வித ஐயமுமில்லை.

**1:23 வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டி களுக்கும்** (அல்லது சிருஷ்டிப்புகளுக்கும்) **பிரசங்கிக்கப்பட்டிருக்கிற** ஒன்றே சுவிசேஷம் என்று பவுல் மீண்டும் பேசுகிறார். சுவிசேஷ மானது எல்லாச் சிருஷ்டிப்புகளையும் நோக்கிச் செல்லுகிறது, ஆனால் இன்னமும் சகல சிருஷ்டி களையும் எழுத்தின்படி சென்றடையவில்லை. உலகமெங்கும் சுவிசேஷமானது பிரசங்கிக்கப் படுவது அதனுடைய உண்மைத்தன்மைக்கு அளிக்கப்பட்ட நற்சான்று என்று பவுல் வாதாடு கிறார். எங்குமுள்ள மனிதர்களுடைய தேவை களுக்கு ஏற்றாற்போல அது நெகிழும் தன்மை உடையது என்பதற்கான சான்றை அவர் இங்கு காண்கிறார். அந்த நாட்களில் உலகத்தில் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனும் நற்செய்தியைக் கேட்டிருந்தான் என்னும் பொருளை இவ்வசனம் தருகிறதில்லை. அது முடிவுற்ற நிலையைக் குறிப்பதில்லை, மாறாக அது இன்னமும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஒன்றாகும். மேலும் நற்செய்தியானது வேதாகம உலகத் திற்கு, அதாவது மத்திய நாடுகளுக்குச் சென்று விட்டது.

பவுல் தன்னை ஊழியர் என்று கூறுகிறார். இந்த லத்தீன் சொல் "வேலையாள்" என்று பொருள்படும். இங்கு அதிகாரம் பதவி என்ற எண் ணத்திற்குச் சற்றேனும் இடமில்லை. இது தாழ் மையான ஊழியத்தைக் குறிக்கிறதேயொழிய மிக உயர்வான பதவி என்று குறிப்பிடுவதில்லை.

### ஈ. பவுலுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஊழியம் (1:24-29)

**1:24** முதல் அதிகாரத்தின் கடைசி ஆறு வசனங்களும் பவுலின் ஊழியத்தைப் பற்றிப் பேசு கின்றன. முதலாவதாக, அது பாடுகளின் சூழ் நிலையில் செய்யப்பட்டது. சிறைச்சாலையி லிருந்து எழுதியவராக, தான் பரிசுத்தவான்களுக் காகப் படுகிற **பாடுகளில்**, அதாவது அவர்கள் பொருட்டு அனுபவிக்கிற பாடுகளில் **இப்பொழுது** மகிழ்ச்சியடைந்திருப்பதாகப் பவுல் கூறுகிறார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வேலையாள் என்னும் நிலையில் அவர் கடுந்துன்பங்களையும் இன்னல்களையும் உபத்திரவங்களையும் அனுப விக்கும்படி அழைக்கப்பட்டார். இவையாவும் இவ ருக்குக் கிடைத்த தனிப்பட்ட சலுகை - **கிறிஸ்து வினுடைய உபத்திரவங்களில்** விடுபட்டுப் போனவற்றை நிரப்பும்படியான சலுகை. இங்கு அப்போஸ்தலன் கூறுவதன் பொருள் என்ன? முதலாவதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அடைந்த பாவபரிகாரத்திற்கான பாடுகளை இது குறிப்பதாக இருக்க முடியாது. அவை யாவும் ஒரே முறை செய்து முடிக்கப்பட்டு விட்டன, எந்த மனிதனும் எப்பொழுதேனும் அதில் பங்குபெற முடியாது. ஆனால் ஒரு பொருளில் கர்த்தராகிய இயேசு இன்னமும் பாடுகளை அனுபவித்துக்கொண்டிருக்கிறார். தமஸ்கு நெடுஞ்சாலையில் தர்சுப் பட்டணத்து சவுல் தரை யிலே தள்ளிவிடப்பட்டபோது, வானத்திலிருந்து வந்த ஒரு சத்தத்தைக் கேட்டார், "சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" சவுல் நெஞ்சறிந்து கர்த்தரைத் துன்பப்படுத்தவில்லை, அவர் கிறிஸ்தவர்களைத்தான் துன்பப்படுத்தி வந்தார். ஆயினும், விசுவாசிகளைத் துன்பப்படுத் தியதில், அவர் இரட்சகரையே துன்பப்படுத்தினார்

என்பதை அவர் அப்பொழுது கற்றுக்கொண்டார். பூமியில் இருக்கிற சரீரம் துன்பம் அனுபவிக்கிற போது, விண்ணகத்தில் இருக்கிற தலை அதை உணர்கிறது.

இவ்வாறாக, கர்த்தராகிய இயேசுவின் நிமித்தம் கிறிஸ்தவர்கள் கடந்துசெல்ல வேண்டிய பாடுகள் அனைத்தையும், கிறிஸ்துவின் உபத்திரவங்களில் இன்னும் நிறைவேறாத பாகம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் நினைத்துப்பார்க்கிறார். நீதியின் நிமித்தம் அடைகிற பாடுகள், அவர் நிமித்தம் அடைகிற பாடுகள் (அவருடைய நிந்தையைச் சுமத்தல்), நற்செய்தியின் நிமித்தம் அடைகிற பாடுகள் யாவும் இவற்றில் அடங்கும்.

ஆனால் **கிறிஸ்துவினுடைய உபத்திரவங்கள்** என்பது கிறிஸ்துவுக்காக அடைகிற பாடுகளை மட்டும் குறிப்பதில்லை. நம்முடைய இரட்சகர் இவ்வுலகத்தில் இருந்தபோது என்னென்ன வகையான பாடுகளையெல்லாம் அனுபவித்தாரோ அதே வகையான பாடுகளையெல்லாம் இவை குறிக்கும். ஆனாலும் அவற்றின் கடுமை மிகவும் குறைவாக இருக்கும்.

அப்போஸ்தலன் தன்னுடைய **மாம்சத்தில்** அடைந்த உபத்திரவங்கள், கிறிஸ்துவின் **சரீரத்தின்** நிமித்தம் அடைந்த பாடுகளாகும், அதாவது **சபைக்காக** அடைந்த பாடுகளே அவை. இரட்சிக்கப்படாத மனிதர்கள் அடைகிற பாடுகள், ஒரு பொருளில் நோக்கமற்றவை. அவற்றோடு உயர்வான நன்மதிப்பு எதுவும் இணைக்கப்படவில்லை. அவை யாவும் என்றென்றும் அவர்கள் அனுபவிக்கப்போகிற நரகத்தின் கடும்வேதனையின் முன்னனுபவமேயாகும். ஆனால் கிறிஸ்தவர்களுடைய பாடுகள் அப்படிப்பட்டவையல்ல. அவர்கள் கிறிஸ்துவுக்காகப் பாடுகள் அனுபவிக்கிறபோது, உண்மையாகவே கிறிஸ்துவும் அவர்களோடு சேர்ந்து பாடுபடுகிறார்.

**1:25,26 அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்.** 23 -ஆவது வசனத்தின் முடிவில் இதே சொற்றொடரை பவுல் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் இந்த இரண்டு பயன்பாடுகளுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. அப்போஸ்தலனுக்கு இரட்டத்தனையான ஊழியங்கள் இருக்கின்றன: முதலாவது, நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படியாக அவர் நியமிக்கப்பட்டார் (வச. 23). இரண்டாவதாக, அவர் சபையின் வியத்தகு இரகசியத்தைப் பற்றி கற்பிக்கும்படி அனுப்பப்பட்டார் (வச. 25). கிறிஸ்துவின் மெய்யான ஊழியர் ஒவ்வொருவரும் கற்க வேண்டிய உன்மையான பாடம் இங்கு இருக்கிறது. நற்செய்தியின் மூலமாக மனிதர்களைக் கிறிஸ்துவினண்டை கொண்டுவந்துவிட்டு, அவர்களால் முடிந்த அளவிற்குச் சிறப்பாக வாழட்டும் என்று கைவிட்டுவிட்டுச் செல்வதல்ல நம்மிடம் எதிர்பார்க்கப்பட்ட ஊழியம். மாறாக, நம்முடைய சுவிசேஷ முயற்சிகளை, புதிய ஏற்பாட்டு ஸ்தல சபைகளை நிறுவும்படியான நோக்கத்தோடு செயல்படுத்த வேண்டும். அந்த இடங்களில்தான் மனமாற்றம் பெற்ற மனிதர்கள் தங்களுடைய மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் கட்டப்பட்டு, சபையின் சத்தியங்களில் பலப்படுத்தப்படுவார்கள். நம்முடைய கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் உணவூட்டப்படும் நிலையங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும், அங்கு அவர்கள் ஊட்டம்பெற்று வளர்ச்சியடைய வேண்டும் என்றும் விரும்புகிறார்.

இவ்வாறாக, கொலோசெயர் முதல் அதிகாரத்தில் (1) கிறிஸ்துவின் இரட்டத்தனையான முதன்நிலை (2) கிறிஸ்துவின் இரட்டத்தனையான ஒப்புரவு (3) பவுலின் இரட்டத்தனையான ஊழியம் ஆகியவற்றைக் கண்டோம். 26 -ஆம் வசனத்தில், "**அந்தச் சபைக்கு நான் ஊழியக்காரனானேன்**" என்று பவுல் கூறுகிறார். இங்கு அவர் சபையோடு தொடர்புடைய ஊழியத்தைக் குறிப்பிடவில்லை. இதே வசனத்தில் வருகிற பிறிதொரு சொற்றொடரினாலே இது அறியப்படும்: **உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே** (விநியோகம் அல்லது உக்கிராண ஊழியம்) இது ஆயிற்று. உக்கிராண ஊழியன் வேறொருவருடைய உடைமைகளை அல்லது சொத்துக்களைப் பராமரிக்கும் ஊழியத்தைச் செய்கிறான். சபையைப் பற்றிய மிகப்பெரிய சத்தியம் மிகச் சிறப்பான வகையில் பவுலிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த காரணத்தால் அவர் உக்கிராண ஊழியராக விளங்கினார். கிறிஸ்துவின் சரீரத்தைக் குறித்த இரகசியம் அவருக்கு மட்டுமே வெளிப்படுத்தப்பட்டது என்று சொல்லமுடியாது, ஆயினும் அவரே இந்த விலைமதிப்புடைய சத்தியத்தை புறவினத்தாருக்கு அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர். கிறிஸ்துவோடுள்ள உறவில் சபை பெற்றுள்ள தனிச்சிறந்த தகுதி, அதனுடைய ஊழியங்கள், அதனுடைய அமைப்பு, அதனுடைய தனித்தன்மை வாய்ந்த நம்பிக்கை மற்றும் இலக்கு, அதனுடைய வாழ்வையும் ஒழுங்கையும் குறித்த இன்னபிற சத்தியங்கள் இவை யாவும் பவுலுக்கும் பிற அப்போஸ்தலருக்கும் தேவனால் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. இவை யாவற்றையும் புறவினத்தா

ருக்கு அறிவிக்கும்படி பவுல் தெரிந்துகொள்ளப் பட்டார்.

**உங்கள்பொருட்டு இது எனக்கு அளிக்கப் பட்டது** என்று அவர் கூறுகையில், அவர் கொலோசெ பட்டணத்து விசுவாசிகளைப் புறவினத்தார் என்று எண்ணிப்பார்த்தவராகப் பேசினார். அப்போஸ் தலனாகிய பேதுரு யூத மக்களுக்குப் பிரசங்கிக் கும்படி அனுப்பப்பட்டார், அதே திருப்பணியைப் புறவினத்தாரிடம் செய்யும்படி பவுலிடம் இந்தப் பொறுப்பு ஒப்புவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் காணப்படும் மிகவும் கடின மான சொற்றொடர்களில் ஒன்று, **தேவவசனத் தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு** என்னும் சொற்றொடரேயாகும். இதன் மூலமாகப் பவுல் சொல்ல விரும்புவது என்ன என்பதைத் துல்லியமாக அறியக் கூடுமா? முதலாவதாக, வேதத்தின் கடைசிப் புத்தகத்தை எழுதி இவர் தேவனுடைய திருமறையை முடிக்கவில்லை என்பதை நாம் அறிவோம். நமக்குத் தெரிந்த வரையில், காலக் கணக்கின்படி, திருமறையின் இறுதி நூலாகச் சேர்க்கப்பட்ட வெளிப்படுத்தின விசேஷம் அப்போஸ்தலனாகிய யோவானால் எழுதப்பட்டதாகும். அப்படியானால் எந்த அர்த்தத் தில் பவுல் தேவ வசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்தினார் அல்லது முடித்தார்.

முதலாவதாக, **தெரியப்படுத்தினார்** என்னும் சொல், பிறர் அறியும்படியாக முழுவதுமாக அறி விப்பது என்று பொருள்படும் (தமிழில் இச்சொல் சரியான பொருளைத் தருகிறது). அதன்படி, தேவனுடைய ஆலோசனை முழுவதையும் பவுல் அறிவித்தார். இரண்டாவதாக கோட்பாடுகள் அடங்கிய தேவனுடைய வார்த்தையை அவர் முழுமையாக முடித்துவிட்டார். அந்த இரகசியத் தின் பெரிதான சத்தியமானது புதிய ஏற்பாட்டு வெளிப்பாட்டில் தலைக்கல்லாக விளங்குகிறது. ஐயத்திற்கு இடமற்றவகையில், புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள எல்லாச் சத்தியங்களின் நிறைவையும் அவர் எழுதியவற்றில் காணமுடி யும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய நூல் களில் காணமுடியாத,விசுவாசத்தைக் குறித்தப் பெரிதான இரகசியங்கள் எதுவும் பவுல் எழுதி முடித்த பிறகு எழுதப்பட்ட நூல்களில் இடம்பெற வில்லை. உண்மையான பொருளில், சபையைக் குறித்த இரகசியத்தின் வெளிப்பாடு தேவனுடைய வார்த்தையில் நிரப்பப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு எந்தச் சத்தியமும் அதே பொருளில் புதியதாய்ச் சேர்க்கப்படவில்லை.

**இரகசியத்தைக்** குறித்த தேவனுடைய வார்த்தையைப் பவுல் நிறைவு செய்திருப்பதை 25 -ஆவது வசனமானது தாங்கி நிற்கிறது, அதாவது, அந்த இரகசியம் **ஆதிகாலங்களுக்கும் தலை முறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்க ளுக்கு வெளியாக்கப்பட்டிருக்கிறது** என்னும் சொற்களில் இவ்வுண்மை காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் இரகசியம் என்று சொல்லப்பட்டிருக் கிற எந்த உண்மையும் முன்னர் வெளிப்படாமலி ருந்து, இப்பொழுதோ புதிய ஏற்பாட்டு அப்போஸ் தலர்களாலும் தீர்க்கதரிசிகளாலும் மனிதர்களுக் குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. தன்னுடைய சொந்த அறிவினாலே மனிதன் இந்த உண் மையை ஒருக்காலும் அறிந்திருக்க முடியாது, ஆனால் இதனை மனிதர்கள் அறியும்படியாக தேவன் கிருபையாக அருள்பாலித்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சபையைப் பற் றிய சத்தியம் தெரியப்படுத்தப்படவில்லை என்று போதிக்கும் பல புதிய ஏற்பாட்டு வசனங்களில் இதுவும் ஒன்று. இந்த இரகசியமானது **ஆதி காலங்களுக்கும் தலைமுறை தலைமுறைக் கும் மறைவாயிருந்தது** (எபே. 3:2-13; ரோமர் 16:25-27). ஆகவே சபையானது ஆதாமில் அல் லது ஆபிரகாமில் தொடங்கியது என்று பேசுவது தவறு. பெந்தெகொஸ்தே நாளில்தான் சபை தோற்றுவிக்கப்பட்டது. மேலும் சபையைப் பற்றிய சத்தியம் அப்போஸ்தலர்களால் வெளிப்படுத்தப் பட்டன. பழைய ஏற்பாட்டில் காணப்படும் இஸ்ர வேலைப் போன்றதல்ல சபை. முற்காலத்தில் அது இருக்கவில்லை.

கல்தேய நாட்டில் ஊர் என்னும் பட்டணத்தி லிருந்து ஆபிரகாம் தேவனால் அழைக்கப்பட்ட அந்த அழைப்போடு இஸ்ரவேல் தோன்றியது. பிற நாடுகள் யாவும் அவரவருடைய பாவங்களுக் கும் சிலைவணக்கத்திற்கும் ஒப்புவிக்கப்பட்டார் கள். ஆபிரகாமின் சந்ததியிலிருந்து அவர் ஒரு தேசத்தை உருவாக்கினார். அவர்கள் பிற நாட் டாரினின்று வேறுபட்டவர்களாக, பிரிந்து வாழ்ந்த வர்களாக இருந்தார்கள். சபையோ இதற்கு முற்றிலும் தலைகீழானதாக இருக்கிறது, இங்கு எல்லா இனங்களிலிருந்தும் நாடுகளிலிருந்தும் விசுவாசிகள் ஒரே சரீரமாக இணைக்கப்பட்டு ஒழுக்கநெறியிலும் ஆவிக்குரிய நிலையிலும் பிற மனிதர்களிடத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்டிருக் கிறார்கள். பல விஷயங்களினால் சபையானது இஸ்ரவேலின் தொடர்ச்சியல்ல என்பது புலப்படும்.

ரோமர் 11 -ஆவது அதிகாரத்தில் பவுல் கூறியுள்ள 'ஒலிவமர" உவமை இவற்றில் ஒன்றாகும். தனிப் பட்ட யூதன் கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது சபையின் அங்கமாக மாறுகிறான் (கொலோ. 3:10, 11) என்பது உண்மையாயினும் இஸ்ரவேல் தனது தனித்தன்மையைக் காத்து வருகிறது என்பதைக் கூற அந்த உவமை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**1:27** இந்த **இரகசியத்தில்** அடங்கியிருந்த சத்தியத்தை நாம் கீழ்க்கண்டவாறு தொகுத்து உரைக்கலாம்: (1) சபை கிறிஸ்துவின் சரீரம். மெய் யான விசுவாசிகள் யாவரும் அதன் அங்கங்க ளாக இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் கிறிஸ்து வின் மகிமையில் என்றென்றும் பங்கு வகிக்கக் கூடிய நிலையை அடைவார்கள் என்பது முன்தீர் மானிக்கப்பட்ட ஒன்றாகும். (2) அந்தச் சரீரத்தின் தலையாக விளங்குகிறார் கர்த்தராகிய இயேசு. அவரே அதற்கு உயிரையும் ஊட்டத்தையும் கொடுத்து வழிகாட்டியாக விளங்குகிறார். (3) சபையில் அனுமதிக்கப்படுவதில் யூதர்களுக்கு எந்த முன்னுரிமையும் கிடையாது; புறவினத் தாருக்கு எவ்வித அனுகூலமின்மையும் கிடை யாது. யூதர் புறவினத்தார் இருதிறத்தாரும் விசு வாசத்தின் மூலமாகவே அந்தச் சரீரத்தின் அங் கங்களாக மாறி ஒரு புதிய மனிதனாக உருவாகி யிருக்கிறார்கள் (எபே. 2;15; 3:6). புறவினத்தான் இரட்சிக்கப்படக்கூடும் என்பது பழைய ஏற்பாட்டில் மறைக்கப்பட்ட உண்மையல்ல. ஆனால் மன மாற்றம் பெற்ற புறவினத்தார் கிறிஸ்துவின் சரீரத் தில் உடன் அங்கங்களாக விளங்குவார்கள், அவரோடு மகிமையில் உடன் இருப்பவர்களாகக் காணப்படுவார்கள், அவரோடு ஆளுகை செய் வார்கள் என்பதெல்லாம் முன்னர் ஒருக்காலும் அறியப்படாத உண்மைகளாயிருந்தன.

புறவினத்தாரின் இருதயத்தில் கர்த்தராகிய இயேசு குடியிருக்க விருப்பங்கொண்டிருக்கிறார் என்பதுதான் பவுல் 27 -ஆவது வசனத்தில் வலியுறுத்திக் கூறுகின்ற இரகசியத்தின் ஒரு குறிப்பிட்ட அம்சமாகும். **கிறிஸ்துவானவர் மகி மையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப் பதே அந்த இரகசியம்**. புறவினத்தாராகிய கொலோசெ பட்டணத்தாரிடம் இது சொல்லப்பட் டது. "ஆபிரகாமின் வழியில் பிறந்த ஒருவனு டைய உள்ளத்தில் அவர் குடியிருப்பதென்பது அவருடைய மனமிரங்கிய செயல், ஆனால் ஒரு புறவினத்தானின் உள்ளத்தைத் தமது குடியிருப் பாகத் தெரிந்துகொள்வதென்பது நம்புதற்கரிய வியத்தகு செயல்" என்று திகைக்கிறார் திரு வாளர் F. B. மேயர். ஆயினும், இதுவே அந்த இரக சியத்தில் அடங்கியிருந்த உண்மையாகும் - புற ஜாதிகள் சுவிசேஷத்தினால் உடன் சுதந்தரரு மாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத் துக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்கள் என்பதே அவ்வுண்மை (எபே. 3:3). இந்தச் சத்தி யத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் பொருட்டு அப்போஸ்தலன், வெறுமனே "இந்த இரகசியம்" என்றோ "இந்த இரகசியத்தின் மகிமை" என்றோ கூறாமல், "**இந்த இரகசியத்தி லுள்ள மகிமையின் ஐசுவரியம்**" என்றே கூறு கிறார். இது மகிமை நிறைந்த இரகசியம், இது மிக நெருங்கிய வகையில் கவனிக்கப்படுவதற்கு தகுதிவாய்ந்தது என்னும் உண்மை, தனது வாச கர்களுடைய உள்ளங்களில் ஆழமாகப் பதிய வேண்டும் என்றே அப்போஸ்தலன் சொற்களின் மேல் சொற்களை அடுக்கிக்கொண்டே போகிறார்.

**கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கை யாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசி யம்.** உள்ளத்தில் குடியிருக்கும் **கிறிஸ்துவான வர்** விசுவாசிகளின் **மகிமையின் நம்பிக்கை யாக** இருக்கிறார். நாம் விண்ணுலகம் செல்வதற் கான உரிமைப் பத்திரமாக விளங்குபவர் நமது இரட்சகரைத் தவிர வேறு யாருமில்லை. அவர் நமக்குள்ளாகக் குடியிருக்கிறார் என்னும் உண்மை, நாம் ஏற்கனவே விண்ணுலகம் சென்று சேர்ந்தாற் போன்ற நிச்சயத்தைக் கொடுத்திருக்கிறது.

**1:28 அவரையே நாங்கள் அறிவித்து** என்னும் சொற்றொடர் குறிப்பிடத்தக்கதாக இருக் கிறது. **அவர்** என்னும் சொல் கர்த்தராகிய இயேசு வைக் குறிக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை (வச. 27). தான் ஒரு நபரைப் பிரசங்கித்ததாகப் பவுல் இங்கு கூறுகிறார். அரசியலிலோ, தத்துவ ஞானத்திலோ அவர் தனது நேரத்தை வீணடிக்க வில்லை; மாறாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வைக் குறித்தே அவர் தன்னுடைய உள்ளத்தை ஒருமுகப்படுத்தியிருந்தார், ஏனெனில் கிறிஸ்துவே கிறிஸ்தவம் என்னும் உண்மையை அவர் நன் குணர்ந்திருந்தார். **எந்த மனிதனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும் படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனிதனுக்கும் புத்திசொல்லி, எந்த மனிதனுக் கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணு கிறோம்.** பிரியமான அப்போஸ்தலனுடைய ஊழி யத்தைக் குறித்த தெளிவான அறிவை நாம் இங்கு பெறுகிறோம். அது மனிதனோடு மனிதன்

தொடர்புகொண்டு செய்த ஊழியமாய் இருந்தது. வரப்போகிற பயங்கரமான கோபாக்கினையைக் குறித்துச் சொல்லி அவர் இரட்சிக்கப்படாதவர் களை எச்சரித்தார். கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்த பெரிதான சத்தியங்களை அவர் பரிசுத்த வான்களுக்குக் கற்பித்தார்.

அடுத்ததாக, தொடர் ஊழியத்திற்கு அவர் கொடுத்த முக்கியத்துவத்தைக் காண்கிறோம். யாரிடமெல்லாம் அவர் இரட்சகரை சுட்டிக்காட்டி னாரோ அவர்களைக் குறித்த மெய்யான பொறுப் புடையவராக அவர் இருந்தார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டால் போதும், அதன் பிறகு அங்கி ருந்து சென்றுவிடலாம் என்று அவர் நினைத்து மனநிறைவு கொள்ளவில்லை. **எந்த மனிதனை யும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்த** வேண்டுமென்று அவர் விரும்பினார். தேவனுக்கு பலி செலுத்தும் ஓர் ஆசாரியனாக, பவுல் தன்னை உருவகப்படுத்திக்கொள்கிறார். இங்கே சொல்லப்பட்டுள்ள பலிகள் ஆண்களும் பெண்களுமே ஆவார்கள். அவர்களை எந்த நிலையில் அவர் கர்த்தருக்குப் படைக்கிறார்? அவர்கள் வெறுமனே பலவீனர்களாக, கிறிஸ்து வுக்குள் குழந்தைகளாக இருக்கிறார்களா? இல்லை, அவர்கள் வளர்ச்சியடைந்தவர்களாக, நிறைவானவர்களாக, வாலிப வயதை எட்டிய கிறிஸ்தவர்களாகக் காணப்பட வேண்டுமென் பதே அவருடைய விருப்பமாயிருந்தது. சத்தியத் தில் ஊன்றக் கட்டப்பட்டவர்களாக அவர்கள் விளங்கவேண்டுமென்று அவர் விரும்பினார். நாம் கிறிஸ்துவினிடத்தில் நடத்தினவர்களைக் குறித்து நமக்கு இத்தகைய பாரம் உண்டா?

**1:29** இதனை இலக்காகக் கொண்டு அப் போஸ்தலன் கடுமையாக உழைத்தார். மற்ற அப் போஸ்தலரும் அதேபோலக் கடுமையாக உழைத் தார்கள். ஆனாலும், தனது சொந்த ஆற்றலினால் அவர் இதைச் செய்யவில்லை என்பதை உணர்ந் தார். மாறாக அவர் அவருக்குள்ளே **வல்லமை யாய்க் கிரியை நடப்பித்த அவருடைய பலத் தின்படி போராடிப் பிரயாசப்பட்டார்.** கர்த்தராலே வல்லமை பெற்ற காரணத்தினாலேயே அவரால் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முடிந்தது என்பதை உணர்ந்தார் என்று இதனை வேறு சொற்களிலும் கூறலாம். அவர் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குச் சென்று சபைகளை நிறுவி, தேவனுடைய பரி சுத்தவான்களுக்குத் தேவையான ஆவிக்குரிய உணவை ஊட்டிவந்த செயல் கர்த்தர் அவரிடத் தில் **வல்லமையாய்க் கிரியை நடப்பித்ததன்** விளைவு என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

குறிப்பாகத் திருவாளர் பிலிப்புவின் மொழி பெயர்ப்பில் 28 மற்றும் 29 -ஆம் வசனங்கள் மிகுந்த பயனளிக்கக் கூடியவையாக உள்ளன:

> ஆகவே, இயல்பாகவே நாங்கள் கிறிஸ்துவை அறிவிக்கிறோம். நாங்கள் சந்திக்கிற ஒவ் வொருவரையும் எச்சரிக்கிறோம்; அவரைக் குறித்து நாங்கள் அறிந்த எல்லாவற்றையும் நாங்கள் யாருக்கெல்லாம் சொல்லிக்கொடுக்க முடியுமோ அவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொடுக்கிறோம். முடியுமானால், ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவுக்குள்ளான முழு வளர்ச் சியை அடையும்படி இதனை நாங்கள் செய் கிறோம். தேவன் எனக்குத் தருகிற எல்லாப் பலத்தோடும் எல்லா நேரங்களிலும் இதனைச் செய்யவே நான் போராடுகிறேன்.

### உ. பகுத்தறிவு வாதம், சட்டங்களுக்கு முதன்மை நிலை அளித்தல், தியானத்தில் இறைவனோடு இணையும் நிலை, கடுந்துறவு நிலை ஆகியவை உண்டுபண்ணும் இடர்களுக்கு எதிரான கிறிஸ்துவின் போதுமான தன்மை (2:1-23)

**2:1** இந்த வசனம் முதல் அதிகாரத்தின் கடைசி இரண்டு வசனங்களோடு மிக நெருங்கிய தொடர்பு உடையதாயிருக்கிறது. ஒவ்வொரு விசு வாசியையும் தனது கற்பித்தல் பிரசங்கித்தல் ஆகிய பெருமுயற்சிகளின் மூலமாகக் கிறிஸ்து வுக்குள் நிறைவான வளர்ச்சி பெற்றவனாக நிறுத்த விரும்புவதைக் குறித்து அப்போஸ்தல னாகிய பவுல் அங்கு விவரித்துக் கூறினார். இங்கு அவருடைய கடும்முயற்சிகள் வேறு வகையைச் சார்ந்தவை. இப்பொழுது அவை ஜெபத்தில் செய்யப்படும் மிகுந்த போராட்டம் என்று குறிப் பிடப்பட்டுள்ளன. மேலும் இங்கு அவர் செய்கிற மிகுந்த போராட்டம் இதுவரை அவர் நேரில் சந்தித்திராத மனிதர்களுக்காகச் செய்யப்படுவ தாகும். கொலோசெ பட்டணத்து விசுவாசிகளைக் குறித்து அவர் கேள்விப்பட்ட நாள்முதற்கொண்டு அவர்களுக்காகவும், அருகிலிருக்கும் லவோதிக் கேயாவில் இருக்கிறவர்களுக்காகவும், இன்னும் அவர் பார்த்திராத வேறுபல கிறிஸ்தவர்களுக் காகவும், அவர் இந்தப் போராட்டத்தைச் செய் கிறார் (வெளி. 3:14-19 ஆகிய வசனங்களில் அங்கிருந்த சபை பிற்காலத்தில் எத்தகைய வருத் தத்திற்குரிய நிலையில் இருந்தது என்பதைக் காணலாம்).

வெளியரங்கமாக ஊழியத்தில் ஈடுபடுவதற் குரிய நல்வாய்ப்பை இதுவரை பெற்றிராத மனிதர் களுக்கு ஆறுதலாக முதல் வசனம் திகழ்கிறது. மனிதர்களுடைய முன்னிலையில் நாம் ஆற்றக் கூடிய பணிகளோடு நம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்று இந்த வசனம் கற்பிக்கிறது. நாம் நம்முடைய அறைகளில் முழங்கால்களில் நின்று தனிமையில் கர்த்தருக் குச் சேவைபுரிய முடியும். நாம் வெளியரங்கமாக ஊழியம் செய்கிறவர்களாக இருப்போமானால், அந்த ஊழியத்தின் செயல்திறம் நாம் தனிமை யில் தேவனுடைய முன்னிலையில் செய்கிற தியானத்தைச் சார்ந்ததாகவே இருக்கும்.

**2:2** பவுல் ஏறெடுத்த மன்றாட்டின் உட்பொருள் இந்த வசனத்தில் துல்லியமாகக் கொடுக்கப்பட் டுள்ளது. **அவர்களுடைய இருதயம் தேற்றப்பட வேண்டும்** என்பதே அவருடைய மன்றாட்டின் முதற்பங்காகும். ஞானமர்க்கத்தாருடைய போத கங்களின் காரணமாக கொலோசெயர் ஆபத்திற் குள் இருந்தார்கள். ஆகவே, இங்கு **தேற்றுதல்** என்னும் சொல் உறுதிப்படுத்துதல் அல்லது வலிமையூட்டுதல் என்று பொருள்படும்.

அவர் அன்பினால் இணைக்கப்பட வேண்டும் என்பது ஜெபத்தின் இரண்டாவது பாகமாகும். பரிசுத்தவான்கள் மகிழ்ச்சியும் அன்பும் நிறைந்த ஐக்கியத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பார்கள் எனில், பகைஞனின் கடுந்தாக்குதலை வலிமை யோடு எதிர்த்து நிற்க முடியும். மேலும் அவர்களு டைய இருதயங்கள் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பில் மகிழ்ந்திருந்தால், கிறிஸ்தவ விசுவாசத் தைக் குறித்த ஆழமான சத்தியங்களை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்துவார். கர்த்தரிடத் தில் நெருங்கியிருக்கிறவர்களுக் கெல்லாம் அவர் தம் இரகசியங்களை வெளிப்படுத்துகிறார் என்பது வேதத்தில் காணப்படும் நன்கு அறியப் பட்ட உண்மையாயிருக்கிறது. எடுத்துக்காட்டாக அப்போஸ்தலனாகிய யோவான் இயேசு கிறிஸ்து வின் மார்பில் சாய்ந்திருந்தவர்; அவருக்கு மிகப் பெரிய அளவில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு கொடுக்கப்பட்டது தற்செயலாக நடந்த செயல் அல்ல.

அடுத்ததாக அவர்கள் **எல்லா ஐசுவரியத்திற் கும் உரியவர்களாக வேண்டுமென்ற பூரண நிச்சயத்தின் அறிவுக்குள்ளாக** உட்புக வேண்டு மென்று பவுல் மன்றாடினார். கிறிஸ்தவ விசுவாசத் தின் உண்மைகளை அவர்கள் **அறிந்துகொள் ளுகிற உணர்வுக்குள்ளாக** எந்த அளவிற்கு ஆழமாகச் சென்றார்களோ, அந்த அளவிற்கு அதிகமாக அவர்களுடைய உண்மையுள்ள தன் மையில் மனநிறைவு பெற்றிருந்தார்கள். கிறிஸ் தவ விசுவாசத்தில் அவர்கள் எந்த அளவிற்கு அதிகமாக ஊன்றக் கட்டப்பட்டிருந்தார்களோ அதற்குத் தக்கவகையில், அந்த நாட்களில் கற்பிக்கப்பட்டுவந்த கள்ள போதகங்களினால் இழுத்துச் செல்லப்படக்கூடிய ஆபத்து அவர் களை நெருங்காதிருந்தது.

**பூரண நிச்சயம்** என்னும் சொற்றொடர் புதிய ஏற்பாட்டில் மூன்று தடவை பயன்படுத்தப்பட்டிருக் கிறது. (1) விசுவாசத்தின் பூரண நிச்சயம் - தேவனு டைய வார்த்தையிலும், நமக்காக அவர் வெளிப் படுத்திய அவருடைய சாட்சியிலும் நாம் இளைப் பாறுகிறோம் (எபி. 10:22). (2) உணர்வின் பூரண நிச்சயம் - நாம் அறிந்து நிச்சயத்தைப் பெறு கிறோம் (கொலோ. 2:2). (3) நம்பிக்கையின் பூரண நிச்சயம் - வரப்போகிற விளைபயனின் மேல் நம்பிக்கைகொண்டு நாம் முன்னேறிச் செல்லுகிறோம் (எபி. 6:12).

பவுல் ஏறெடுத்த மன்றாட்டின் உச்சநிலை, **பிதா வாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை** அவர்கள் **அறிந்துகொள்ள** வேண்டும் என்னும் சொற்களில் காணப்படுகிறது.

அவர்கள் **பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்து வுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ள வேண்டும்** என்று பவுல் கூறியதன் பொருள் என்ன? அவர் இன்னமும் சபையின் சத்தியத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார் - சரீரத்தின் தலை கிறிஸ்து, விசுவாசிகள் யாவரும் அதன் அங்கங்கள். ஆனால் கிறிஸ்துவின் தலைமைத் துவம் என்னும் அந்த இரகசியத்தின் ஓர் அம்சத் தைக் குறித்து அவர் தன்னுடைய மனதில் நினைத்துக்கொண்டிருக்கிறார். இந்தச் சத்தியத் தைப் பரிசுத்தவான்கள் அறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதே அவருடைய பேராவலாக இருந்தது. அவர்கள் தங்களுடைய சிரசின் மேன் மையைக் குறித்து அறிந்திருப்பார்களெனில், அவர்களை அச்சுறுத்திக்கொண்டிருந்த ஞான மார்க்கத்தாரின் மூலமாகவோ, வேறு கள்ள போதகக் குழுக்களினாலோ இழுத்துச் செல்லப் பட மாட்டார்கள்.

பரிசுத்தவான்கள் கிறிஸ்துவையும் அவரிடத் திலிருந்து கிடைக்கப்பெறும் வாய்ப்பு வளங்களை யும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், அவரிடத்திலிருந்து தேவையான வலிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் பவுல்

விரும்புகிறார். அவர்கள் கிறிஸ்துவைக் காண வேண்டுமென்று அவர் விரும்புகிறார். இதனை ஆல்.ஃபிரட் மேஸ் இவ்வாறு கூறுகிறார்:

> அனைத்து இறைமைப் பண்புகளையும் ஒருங்கே கொண்டவரும், எல்லை கடந்த, சொல்லிமுடியாத, அளப்பதற்கரிய வாய்ப்பு வளங்களைக் கொண்டவருமாகிய கிறிஸ்து தம்முடைய மக்களிடத்தில் இருக்கையில் அவர்கள் ஏதொன்றுக்கும் அவரை விடுத்து வேறெங்கும் செல்லத் தேவையில்லை. "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" (கொலோ. 1:27). அந்தச் சத்தியம் வல்லமையோடு அறியப்பட்டிருக்கிற நிலையில், லவோதிக்கேயாவின் பெருமைக்கும், பகுத்தறிவுவாத இறைமைக் கோட்பாட்டிற்கும், பாரம்பரியச் சமய முறைமைகளுக்கும், பிசாசுகளின் பிடியிலுள்ள ஆவிகளின் உலகத்திற்கும், இன்னபிற எதிர்ப்புகளுக்கும் மோசடிகளுக்கும் மாற்றுமருந்தாகத் திகழ்கிறது.[13]

2:3 கிறிஸ்துவுக்குள் **ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.** தெய்வீக வெளிப்பாடுகள் அடங்கிய வேதத்தில் காணப்படுகின்ற சத்தியங்களுக்கு அப்பாற்பட்ட மிகவும் மேலான அறிவைத் தாங்கள் பெற்றிருந்ததாக ஞானமார்க்கத்தார் பெருமைப்பட்டார்கள் என்பது நிச்சயம். கிறிஸ்து அல்லது கிறிஸ்தவத்தில் காணப்படுகிற ஞானத்தைக் காட்டிலும் கூடுதலான ஞானத்தை அவர்கள் பெற்றிருந்ததாக நினைத்துக்கொண்டார்கள். ஆனால், சிரசாகிய கிறிஸ்துவுக்குள் **ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம்** மறைந்திருக்கின்றன என்று இங்கு பவுல் கூறுகிறார். ஆகவே, விசுவாசிகள் எதையும் தேடி திருமறையில் எழுதப்பட்டுள்ளவற்றிற்கு அப்பாற் செல்லத் தேவையில்லை. கிறிஸ்துவுக்குள்ளான **பொக்கிஷங்கள்** நம்பிக்கையற்ற வனுக்கு மறைந்திருக்கின்றன. அவற்றிற்குள்ளாக நுழைய விழையும் விசுவாசிகளும்கூட கிறிஸ்துவை மிக நெருக்கமான முறையில் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

> கிறிஸ்து விசுவாசிக்குள் அவனுடைய சிரசாகவும், நடுநாயகராகவும், வாய்ப்பு வளமாகவும் திகழ்கிறார். அவருடைய ஆராய்ந்து முடியாத ஐசுவரியத்தின் பேரளவினாலும், எல்லாவற்றிற்கும் முதல்வர் என்னும் செழிப்பின் எல்லை கடந்த மேன்மையினாலும், அவரே தேவன் என்னும் சிறப்பான இயல்பின் பண்பினாலும், படைப்பு, மீட்பு ஆகியவற்றில் அவர் செய்து முடித்த சாதனைகளினாலும், அவருடைய ஆளுமை, ஒழுக்கம், மற்றும் ஆளுகை ஆகிய வற்றின் மகிமையினாலும் அவர் நிறைந்து, வெற்றறிக்கை செய்கிறவர்கள், அதிகாரங்கள், ஆவியுலகத் தரகர்கள், குறை கூறுகிறவர்கள் இன்னும் பலர் அவருக்கு எதிராக அணி வகுத்து நிற்கும்போது அவர்கள் யாவரையும் புறம்பாக்குகிறார். (தெரிந்தெடுக்கப்பட்டது)

இந்த வசனத்தில் கண்களுக்குப் புலப்படுவதற்குக் கூடுதலாகப் பொருள் அடங்கியிருக்கிறது. கிறிஸ்துவுக்குள் சகல **அறிவும்** காணப்படுகிறது. அவரே சத்தியத்தின் மனுவுருவாய் வந்தவர். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று அவர் கூறினார். சத்தியமானது எதுவும் அவருடைய சொற்களோடும் அவருடைய செயல்களோடும் முரண்பாடு கொண்டிருப்பதில்லை. **அறிவுக்கும் ஞானத்துக்கும்** உள்ள வேறுபாடு அவ்வப்போது இவ்வாறு விளக்கிக் கூறப்படுகிறது: சத்தியத்தைப் புரிந்து கொள்வதே அறிவு, கற்றுக்கொண்ட சத்தியத்தைக் கடைப்பிடிக்கும் ஆற்றலே **ஞானம்.**

2:4 எல்லா ஞானமும் அறிவும் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், கள்ளக் குழுக்களின் **நயவசனிப்பினாலே** வஞ்சிக்கப்பட கிறிஸ்தவர்கள் இடங்கொடுக்கக் கூடாது. ஒரு மனிதனிடத்தில் சத்தியம் இல்லையென்றால், அவன் தனக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொள்ள தன்னுடைய செய்தியைப் புத்திசாலித்தனமாக வெளிப்படுத்த வேண்டும். இவ்விதமாகவே கள்ள போதகர்கள் எப்பொழுதும் செய்கிறார்கள். அவர்கள் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் வாதம் செய்து, தங்களுடைய ஊகங்களின் ஆதாரத்தில் கல்விபுகட்டும் முறையைச் செயல்படுத்துகிறார்கள். இதற்கு மாறாக, தேவனுடைய சத்தியத்தை ஒருவன் பிரசங்கிக்கும்போது நாவன்மையான பேச்சு அல்லது தந்திரமான உரையாடல் போன்ற செயல்களை அவன் சார்ந்திருக்க வேண்டிய தேவையில்லை. ஒரு சிங்கம் எவ்வாறு தன்னைக்

காத்துக்கொள்ளுமோ, அவ்விதமாகவே சத்தி யத்திற்கு சிறந்த வாத முறை அந்தச் சத்தியமே யாகும்.

**2:5** கொலோசெயர் எதிர்கொண்டிருந்த பிரச்சினைகள், இடர்ப்பாடுகள் என்னவென்பதை அப்போஸ்தலனாகிய பவுல் மிகத்தெளிவாக அறிந்திருந்தார் என்பதை இந்த வசனம் காண் பிக்கிறது. சோதனைக்கு ஆயத்தமாக அணி வகுத்து நின்ற படைவீரர்களைப் பார்வையிடும் படி முன்நிற்கும் ஒரு படைத்தலைவராக அவர் தன்னை உருவகப்படுத்திக்கொள்கிறார். ஒழுங்கு, உறுதி ஆகிய இரண்டு சொற்களும் இராணுவத் தில் பயன்படுத்தப்படும் சொற்கள். படைவீரர் களின் கூட்டம் முறையாக அணிவகுத்து நிற் பதை ஒழுங்கு என்னும் சொல் விளக்கிக் கூறு கிறது. அந்த அணிவகுப்பின் உறுதியான தோற் றத்தையே உறுதி என்னும் சொல் விளக்கிக் கூறுகிறது. தேவனுடைய திருமறைக்கு உண்மை யானபடி கொலோசெயர் நிற்பதைக் கண்ட பவுல் (தன்னுடைய சரீரத்தில் அல்ல ஆவியிலே) களி கூருகிறார்.

**2:6,7** முதன்முதலில் எவ்வாறு தொடங்கினார் களோ அதே வழியில் அவர்கள் முன்னேறிச் செல்ல வேண்டுமென்று பவுல் இப்பொழுது அவர் களுக்கு உற்சாகமளிக்கிறார். அவர்களுடைய தொடக்கம் விசுவாசமேயாகும். **ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் நடவுங்கள்**. இங்கே **கர்த்தர்** என்னும் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது. அதாவது அவரிடத்தில் மனப்பூர்வமான நிறைவை அவர்கள் கண்டார்கள் என்பதை ஒப்புக்கொண்டி ருந்தார்கள். அவர் அவர்களுடைய இரட்சிப்புக்கு போதுமானவராக இருந்ததோடு, அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதற்கும் அவர் போது மானவராக இருந்தார். கிறிஸ்துவின் கர்த்தத்து வத்தை ஏற்றுக்கொண்டவர்களாக, அந்நிலையில் பரிசுத்தவான்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டுமென்று இப்பொழுது அப்போஸ்தலன் வற்புறுத்துகிறார். மனிதர்களுடைய போதனை கள் எவ்வளவுதான் மனநிறைவு அளிப்பது போலக் காணப்பட்டாலும், அவர்கள் கர்த்தரை விட்டு விலகிச் செல்லக்கூடாது. கிறிஸ்தவ வாழ்க் கையைக் குறிப்பிடும்படி அவ்வப்போது பயன் படுத்தப்படுகிற சொல் **நடத்தல்** என்னும் சொல் லாகும். அது செயலாக்கத்தையும் முன்னேற்றத் தையும் குறிப்பிடுகிறது. நீங்கள் நடக்கும்போது ஒரே இடத்தில் இருக்க முடியாது. அதுபோலவே கிறிஸ்தவ வாழ்க்கையிலும் நடை பெறுகிறது, நாம் ஒன்று முன்செல்கிறவர்களாக இருக் கிறோம், இல்லையேல் பின்னோக்கிச் செல்லு கிறோம்.

பவுல் முதலாவது பயிர்த்தொழிலிலிருந்து ஒரு சொல்லைப் பயன்படுத்துகிறார். அடுத்தபடியாக கட்டிடக்கலைச் சொல்லைப் பயன்படுத்துகிறார். வேர்கொள்ளுதல் என்னும் சொல் நாம் மனமாற் றம் பெற்ற தருணத்தில் நிகழ்ந்த செயலைக் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நிலத் திற்கு ஒப்பிடப்பட்டு நாம் அவருக்குள்ளாக வேர் கொண்டவர்களாக இருக்கிறோம் என்றும், நமக் குத் தேவையான சத்துணவை அவரிடத்திலி ருந்தே பெற்றுக்கொள்கிறோம் என்றும் சொல்லு வதாக இந்தச் சொல் அமைந்துள்ளது. மேலும், நம்முடைய வேர்கள் ஆழமாக இருக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தையும் இது வலியுறுத்து கிறது. அவ்வாறு ஆழமான வேரைக் கொண்டிருந் தால் நம்மை எதிர்த்து பெருங்காற்று வீசும்போது, நாம் அசைக்கப்பட மாட்டோம் (மத். 13:5,20,21).

அடுத்ததாக, பவுல் ஒரு கட்டடத்தை நோக்கித் திரும்புகிறார். **அவர்மேல் கட்டப்படுங்கள்**. இங்கே கர்த்தராகிய இயேசு அஸ்திபாரமாக வருணிக்கப்படுகிறார், நாம் **அவர்மேல் கட்டப் பட்டு** வருகிறோம். அவரே நித்திய கன்மலை (லூக்கா 6:47-49). நாம் என்றென்றைக்குமென ஒரேமுறை **வேர்கொண்டிருக்கிறோம்**. ஆனால் தொடர்ந்து **கட்டப்பட்டு** வருகிறோம்.

மேலும், **விசுவாசத்திலே உறுதிப்பட்டவர் களாக** இருக்கிறோம். விசுவாசத்திலே நிறுவப்பட் டது மட்டுமின்றி **உறுதிப்படுத்தப்பட்டும்** இருக் கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து நடைபெறுகிற வளர்ச்சி என்னும் சிந்தனையை இங்கு காணமுடியும். எப்பாப்பிரா வின் மூலமாகவே கொலோசெயர் கிறிஸ்தவத் தின் அடிப்படைச் சத்தியங்களைக் கற்றுக்கொண் டார்கள். அவர்கள் கிறிஸ்தவப் பாதையிலே தொடர்ந்து நடக்கிறபோது, இந்தச் சீரிய சத்தியங் கள்அவர்களுடைய இருதயங்களிலும், வாழ்க் கையிலும் தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட வேண் டும். இதனுடைய எதிர்நிலையையே 2 பேதுரு 1:9 - இல் காண்கிறோம். ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லையெனில் அது ஐயத்தை வருவித்து மகிழ்ச்சி அற்ற நிலையையும், நற் செய்தியின் நற்பயன்களை அனுபவிக்கக் கூடா நிலையையும் உருவாக்கும்.

இந்த வருணனையைப் பவுல் **ஸ்தோத்திரத் தோடே அதில் பெருகுவீர்களாக** என்னும் சொற் களோடு முடிக்கிறார். கிறிஸ்தவர்கள் கோட்பாடு களைக் கற்றுக்கொண்டு உணர்ச்சிகள் அற்ற நிலையில் இருக்கவேண்டுமென்று அவர் நினைக்க வில்லை. மாறாக, அவர்களுடைய இருதயங்கள் நற்செய்தியின் வியத்தகு உண்மைகளால் சிறைப்பட்டு, அவற்றினின்று புகழ்ச்சியும் நன்றி பாராட்டுதலும் ஊற்றெனப் பொங்கிவழிய வேண்டு மென்று அவர் விரும்புகிறார். கிறிஸ்தவத்தினால் பெற்ற ஆசிர்வாதங்களுக்காகச் செலுத்தப்படு கிற **ஸ்தோத்திரம்,** கள்ள உபதேசங்களின் நச்சுத்தன்மைக்கு வியத்தகு மாற்று மருந்தாகத் திகழ்கிறது.

இந்த வசனத்தை ஆர்தர் வே என்பார் கீழ்க் கண்டவாறு மொழிபெயர்க்கிறார்: "உறுதியாக வேர்கொண்ட மரங்களைப் போலிருங்கள், தொடர்ந்து உயருகிற கட்டடத்தைப் போலிருங் கள், உங்களைச் சுற்றிலும் அவருடைய பிரசன் னம் இருப்பதை உணருங்கள், உங்களுடைய விசுவாசத்தில் அசைக்கப்படாதிருங்கள் (இந் நிலையை அடைய உம்முடைய பயிற்சியே வழிநடத்தியது), ஸ்தோத்திரத்திலே பொங்கி வழியுங்கள்".

**2:8** லைகஸ் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த கொலோசெ பட்டணத்து விசுவாசிகளை அச்சுறுத் திக்கொண்டிருந்த குறிப்பிட்ட தவறுகளை நேரடியாகச் சுட்டிக்காட்டி அறிவுரை வழங்க இப்பொழுது பவுல் ஆயத்தமாகிவிட்டார். **லௌகீக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும் ஒருவரும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.** கள்ளபோதகம் பயனுள்ளதனைத்தையும் மனிதர் களிடத்திலிருந்து கொள்ளையிடுகிறது, ஆனால் அதற்குப் பதிலாகக் குறிப்பிடத்தக்க வகையில் எதையும் அளிப்பதில்லை. லௌகிக ஞானம் என்பது எழுத்தின்படி "ஞானத்தின்மேலுள்ள பற்று" என்று பொருள்படும். அது தன்னில்தானே தீமையானது அல்ல, ஆனால் மனிதன் கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் ஞானத்தை நாடுவது தீமையாய்க் காணப்படும், தெய்வீக வெளிப்பாட்டினால் மட்டுமே அறியப்படக் கூடிய வற்றைத் தன்னுடைய சொந்தப் பகுத்தறிவி னாலும் ஆராய்ச்சியினாலும் அறிய முற்படு வதைக் குறிப்பிடவே இங்கு இந்தச் சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது (1 கொரி. 2:14). தேவனைக் காட்டிலும் மனிதனுடைய பகுத்தறிவை உயர் வாகக் கருதச் செய்வதோடு, படைப்பாளருக்குப் பதிலாக படைப்பைத் தொழுதுகொள்ளச் செய்வ தால் இது தீமையானதே ஆகும். இந்த நாட்களில் வாழ்கிற தாராளக் கொள்கையாளர்கள் எவ்வித மாகத் தங்களுடைய பகுத்தறிவையும் நுண்ணறி வையும் குறித்து மெச்சிக்கொள்கிறார்களோ அவ்வாறே பகுத்தறிவு வாதத்தினருடைய நடத் தையும் இருந்தது. தவறானதும் மதிப்பற்றதுமான போதனைகளையே **மாயமான தந்திரம்** என்னும் சொற்றொடர் குறிப்பிடுகிறது. தங்களைச் சுற்றி லும் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளாக இருப்பவர் களுக்கு மட்டும் மர்மமான சத்தியங்களை வெளிப் படுத்திக் காட்ட முடியும் என்று இந்த மனிதர்கள் வெற்றறிக்கை செய்கிறார்கள். உண்மையி லேயே அப்படிப்பட்டது எதுவுமில்லை. ஆனால், அது மனிதனுடைய ஆவலுக்குஉணவளித்து அவர்களைப் பின்பற்றி நடக்கும்படி ஒரு கூட் டத்தை உருவாக்குகிறது. மேலும் அது, "தெரிந் தெடுக்கப்பட்ட சிலர்" என்னும் கூட்டத்தின் உறுப் பினர்கள் என்னும் உள்ளுணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தி, அவர்களுடைய தற்பெருமைக்கு மனநிறைவைக் கொடுக்கிறது.

பவுல் தாக்கிப் பேசுகிற இந்த **லௌகிக ஞான மும் மாயமான தந்திரமும் மனிதர்களின் பாரம் பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றின தல்ல.** இங்கு மனிதர்களின் பாரம்பரிய நியாயம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது, மனிதர்களாலே கண்டுபிடிக்கப்பட்டதும், வேதத்தை மெய்யான அடித்தளமாகக் கொண்டிராததுமான சமய போதனைகளையேயாகும். (வசதிக்கேற்றபடி ஒரு வழக்கத்தை மாற்றமில்லாதபடி நிலை நிறுத்துவதே பாரம்பரியம் ஆகும். அல்லது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்றபடி தொடங்கப்பட்ட வழக்கமாகவும் அது இருக்கலாம்.) உலக வழி பாடுகள் யூதச் சடங்குகள், பண்டிகைகள், சட்ட திட்டங்கள் ஆகியவற்றைக் குறிக்கும். இவற்றின் மூலமாக மனிதர்கள் தேவனுடைய தயவைப் பெற முயற்சி செய்தார்கள்.

> நடக்கவிருக்கிற நிகழ்ச்சிகளுக்கு நிழலாக விளங்கிய மோசேயின் நியாயப்பிரமாணம், தனது நோக்கத்தை நிறைவேற்றி முடித்திருக் கிறது. கிறிஸ்துவின் வருகைக்காக இருத யத்தை ஆயத்தப்படுத்திய ஒரு "தொடக்கப் பள்ளியாக" அது விளங்கியது. அதனை நோக்கி மீண்டும் திரும்பிச் செல்வது, தேவனு டைய குமாரனை நீக்கிவிட்டு அந்த இடத்தில்

கைவிடப்பட்ட முறைமையைக் கொண்டுவரத் திட்டமிடுகிற கள்ள போதகர்கள் நினைத்ததைச் செய்வதாக அமையும் (அனுதினக் குறிப்பு - வேதாகம ஐக்கியம்).

எல்லாப் போதகங்களையும், அவை கிறிஸ்து வின் கோட்பாடுகளுக்கு இசைந்து இருக்கின்ற னவா அல்லது முரண்பட்டு இருக்கின்றனவா என்று கொலோசெயர் சோதித்துப் பார்க்க வேண்டு மென்று பவுல் விரும்பினார். இந்த வசனத்திற் கான பிலிப்பு அவர்களின் மொழிபெயர்ப்பு பயன ளிக்கக்கூடியதாக இருக்கும்: "பகுத்தறிவு வாதம் அல்லது சத்தமிட்டுப்பேசுகிற வெற்றுரை ஆகிய வற்றின் மூலமாக ஒருவரும் உங்களுடைய விசுவாசத்தைக் கொள்ளையிட இடங்கொடுக் காமல் கவனமாயிருங்கள். இத்தகைய வீணுரை கள் யாவும் இந்த உலக இயல்புகளின்படி தோன் றிய மனித எண்ணங்களை ஆதாரமாகக்கொண் டவை, மேலும் இவை கிறிஸ்துவை அசட்டை செய்து புறக்கணிக்கின்றன!"

**2:9** அப்போஸ்தலனாகிய பவுல் தமது வாசகர் களைத் திரும்பவும் கிறிஸ்துவின் ஆளுமையினி டமாய் அவ்வப்போது அழைத்துக்கொண்டு வருவது நம்முடைய காட்சிக்கு வியப்பளிக்கிறது. இங்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தெய் வத்தன்மையைக் குறித்து மிகவும் பயபக்திக் குரிய வகையிலும், ஐயத்திற்கு இடமற்ற வகை யிலும் பேசுகிற வசனங்களில் ஒன்றை அவர் தரு கிறார். **ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாச மாயிருக்கிறது.** கிறிஸ்து தேவனாக இருக்கிறார் என்னும் உண்மைக்கு மிகவும் கருத்தோடு ஒன்றுசேர்த்து கொடுக்கப்பட்டிருக்கிற சான்றைக் கவனியுங்கள். முதலாவதாக அவருடைய தெய் வத்தன்மை சொல்லப்பட்டிருக்கிறது: **"தேவத் துவம் ... சரீரப்பிரகாரமாக** அவருக்குள் வாசமா யிருக்கிறது." இரண்டாவதாக, அவருடைய தெய்வத்தன்மையின் நீள அகலமாகிய வீச்சைக் காண்கிறீர்கள்: **"தேவத்துவத்தின் *பரிபூரணம்* சரீரப்பிரகாரமாக** அவருக்குள் வாசமாயிருக் கிறது". இறுதியாக அவருடைய தெய்வத்தன்மை யின் முழுமையான நிறைவைக் காண்கிறோம்: **"தேவத்துவத்தின் பரிபூரணம் *எல்லாம்* சரீரப் பிரகாரமாக** அவருக்குள் வாசமாயிருக்கிறது". (வெவ்வேறு பெயரில் இயங்கிக்கொண்டிருக்கும் ஞானமார்க்கத்தாருக்குத் திறமைமிக்க விடை யாக இவ்வசனம் இருக்கிறது - கிறிஸ்டியன் சயின்ஸ், யெகோவா சாட்சிகள், யூனிடி, தியோஸபி, கிறிஸ்டா டெல்பியானிசம், மற்றும் பல).

திருவாளர் வின்சென்ட் கூறுகிறார்: "இந்த வசனம் தனிச்சிறந்த இரண்டு உண்மைகளை வலியுறுத்திக் கூறுகிறது: (1) தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் நித்தியமாகக் கிறிஸ்துவுக் குள் வாசமாயிருக்கிறது...; (2) தேவத்துவத்தின் பரிபூரணம்... மனிதனின் சரீரத்தில் இருந்தவ ராகிய அவருக்குள் வாசமாயிருக்கிறது."[14] முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள கள்ள போதகக் கூட்டத்தினர் பலர், ஏதோ ஒருவகை தெய்வத்தன்மை இயேசு வுக்குள் இருந்தது என்று ஒப்புக்கொள்வார்கள். இந்த வசனமோ **தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம்** அவருடைய மனித நிலையில் அவ ரோடு இருந்தது என்று சான்று கூறி மெய்ப்பிக் கிறது. இங்கு கூறப்படுகிற வாதம் தெளிவாக இருக்கிறது - கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நபரில் மனநிறைவு ஏற்படுத்தக்கூடிய தன்மை இருக்கும்போது, அவரை அவமதிப்பதும், அலட்சியம் செய்வதுமான போதகங்களில் நாட் டங்கொள்வது ஏன்?

**2:10** கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எல்லா விதத்திலும் போதுமானவராக இருக்கிறார் என்றும் அவருக்குள் அவர்கள் நிறைவான தகுநிலை யைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் தனது வாசகர் கள் ஆழ்ந்துணர வேண்டுமென்று அப்போஸ் தலன் இன்னமும் முயற்சி செய்கிறார், 9 -ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற சத்தியத்தைத் தொடர்ந்து 10 -ஆவது வசனத்தில் இவ்வுண்மை வெளிப்படுத்தப்பட்டிருப்பது தேவனுடைய அற்புத மான கிருபை என்றே சொல்ல வேண்டும். தேவத் துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அருக்குள் வாசமாயிருக்கிறது, விசுவாசி **அவ ருக்குள் பரிபூரணமாயிருக்கிறான்**. வேதத் துவத்தின் பரிபூரணமெல்லாம் விசுவாசிக்குள் குடியிருப்பதாக இதற்குப் பொருள் கூறக்கூடாது என்பதில் ஐயமில்லை. மேற்கூறப்பட்டுள்ள சத்தி யமானது ஒரே ஒருவரிடத்தில்தான் உண்மையாக இருந்தது, எப்பொழுதும் அவரிடத்தில் மட்டுமே அது உண்மையாயிருக்கும். அவர்தாம் கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து. ஆனால், விசுவாசியான வன் தன்னுடைய வாழ்க்கைக்கும் தன்னுடைய தெய்வீக பக்திக்கும் தேவையான எல்லாவற்றை யும் கிறிஸ்துவுக்குள் பெற்றிருக்கிறான் என்பதே இந்த வசனம் கற்பிக்கிற பாடமாகும். நம்முடைய பரிபூரணத்திற்குத் திருவாளர் ஸ்பர்ஜன் சிறந்த தொரு விளக்கத்தைத் தருகிறார்: (1) யூதச்

சடங்குகளின்றி நாம் பரிபூரணராயிருக்கிறோம் (2) பகுத்தறிவுக் கோட்பாடு இல்லாமல் நாம் பரிபூரணராயிருக்கிறோம் (3) பாரம்பரிய மூட வழக்கங்கள் இன்றி நாம் பரிபூரணராயிருக்கிறோம் (4) மனித மேல்நிலைத் தகுதியின்றி நாம் பரிபூரணாயிருக்கிறோம்

சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிற ஒருவருக்குள் நாம் பரிபூரணராயிருக்கிறோம். ஞானமார்க்கத்தார் தேவதூதர்களைப் பற்றிய பொருளில் மிகப்பெரிய நாட்டம் கொண்டிருந்தார்கள். இந்த அதிகாரத்தில் பின்னர் இது பற்றிய குறிப்புகளைக் காணலாம். ஆனால் கிறிஸ்துவோ எல்லா தேவதூதர்களுக்கும் பிறப்பிடமாய் இருக்கிறார். மேலும் தேவ தூதர்களைப் படைத்த படைப்பாளரை நம்முடைய பற்றுக்கு இலக்காகக் கொள்ளாமலும், அவரோடு ஐக்கியங்கொண்டு களிகூராமலும் தேவதூதர்களைக் குறித்த சிந்தனையில் ஆழ்ந்திருப்பது நகைப்பிற்கிடமான செயலாகும்.

**2:11** யூதமார்க்கத்திற்கே சிறப்பான வகையில் உரியதான சடங்கு **விருத்தசேதனம்** ஆகும். இது ஒரு சிறிய அறுவைச் செயலாகும், இதன்படி ஆண் குழந்தையின் நுனித்தோல் கத்தியால் வெட்டப்படும். ஆவிக்குரிய நிலையில் இது மாம்சத்தின் சாவைக் குறிக்கிறது; அல்லது பாவம் நிறைந்த, கெட்டுப்போன, மறுபடியும் பிறக்காத மனிதனின் இயல்பைக் களைந்துபோடுவது என்று இதனைச் சொல்லலாம். ஆனால் யூதர்கள் எழுத்தின்படியான சடங்கில் ஈடுபாடுகொண்டார்களே தவிர, அதனுடைய ஆவிக்குரிய பொருளைப் புறக்கணித்து விட்டார்கள். இது மிகுந்த வருத்தத்திற்குரிய நிலையை உருவாக்கிவிட்டது. சடங்குகளினாலும், நற்செயல்களினாலும் தேவனுடைய தயவைப் பெறலாம் என்று முயற்சி செய்வதன் மூலம், மனிதனுடைய மாம்சத்தில் தேவனைப் பிரியப்படுத்தக்கூடிய ஏதோ ஒன்று உண்டு என்று சொல்வது போலாகிவிட்டது. ஆனால் சத்தியத்திற்குத் தூரமானது இதனினும் வேறில்லை.

இந்த வசனம் சரீரப்பிரகாரமான **விருத்தசேதனத்தை** நமக்கு முன்பாகக் கொண்டுவருவதில்லை, மாறாகக் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டிருக்கிற ஒவ்வொருவரிடத்திலும் இது உண்மையாயிருக்கிறது. **கையால் செய்யப்படாத விருத்தசேதனம்** என்னும் சொற்றொடரினாலே இது புலனாகிறது. இந்த வசனம் கற்பிப்பது யாதெனில்: ஒவ்வொரு விசுவாசியும் **கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தைப்** பெற்றிருக்கிறார். **கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனம்** என்பது அவர் கல்வாரியில் அடைந்த சிலுவை மரணத்தையே குறிக்கிறது. இங்கு எழுகிற சிந்தனை என்னவெனில், கர்த்தராகிய இயேசு இறந்தபோது, விசுவாசியும் அவரோடு மரணம் அடைந்தான். அவன் பாவத்திற்கும் (ரோமர் 6:11), நியாயப்பிரமாணத்திற்கும், சுயத்திற்கும் (கலா. 2:20), உலகத்திற்கும் (கலா. 6:14) மரணம் அடைந்தான். (இந்த விருத்தசேதனமானது "கைகளினால் செய்யப்பட்டதல்ல." அதாவது மனிதனுடைய தகுதியினால் அல்ல மனிதனுடைய கரங்களினால் இது உண்டானதல்ல என்பதே இதன் பொருளாகும். மனிதன் தன் தகுதியினாலோ சம்பாத்தியத்தினாலோ இதைப் பெற முடியாது. இது தேவனுடைய செயல்.) இவ்விதமாக அவர் மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து போட்டார். ஒருவன் இரட்சிப்பைப் பெறும்போது, அவன் கிறிஸ்துவோடு அவருடைய மரணத்தில் இணைகிறான். மேலும் மாம்சீக முயற்சிகளினால் இரட்சிப்பைச் சம்பாதிக்க முடியும் அல்லது சொந்தத் தகுதியினாலே அதை அடைந்துவிட முடியும் என்னும் எண்ணத்தை அறவே அகற்றிவிடுகிறான். "நம்முடைய கர்த்தருடைய மரணமானது கனியை அகற்றியது மட்டுமின்றி, அதைத் தாங்கி நிற்கிற வேரையும் அடியோடு பிடுங்கி புறம்பே தள்ளிவிடுகிறது" என்று திருவாளர் சாமுவேல் ரிடவுட் எழுதுகிறார்.

**2:12** விருத்தசேதனம் என்னும் பொருள்பற்றி பேசிக்கொண்டிருக்கும் பவுல் இப்பொழுது **ஞானஸ்நானத்தைக்** குறித்து பேசத் திரும்புகிறார். மாம்சத்தின் மரணத்தைக் குறித்து விருத்தசேதனம் பேசுகிறதுபோல, **ஞானஸ்நானம்** பழைய மனிதனுடைய அடக்கத்தைக் குறித்துப் பேசுகிறது. இவ்வாறாக நாம் படிக்கிறோம்: **ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடுகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.** நாம் கிறிஸ்துவுடனேகூட இறந்தது மட்டுமின்றி, அவரோடுகூட **அடக்கமும் பண்ணப்பட்டிருக்கிறோம்** என்பதே இங்கு நாம் கற்கின்ற பாடம். இது நம்முடைய ஞானஸ்நானத்தில் படவுருவில் காட்டப்படுகிறது. இச்செயல் நாம் மனமாற்றம் பெற்ற தருணத்தில் நடைபெற்றது. ஆனால் நாம் ஞானஸ்நானத்தின் போது தண்ணீருக்குள் சென்ற வேளையில் வெளியரங்கமான அறிக்கையாக வெளிப்படுத்

தப்பட்டது. அடக்கம் பண்ணப்படுதலே ஞானஸ் நானம் ஆகும், மேலும் இதில் நாம் ஆதாமின் பிள் ளைகள் என்னும் நிலைமை எல்லாவற்றுக்கும் அடக்கம் பண்ணப்படுகிறோம். தேவனைப் பிரியப் படுத்தக்கூடிய நிலையில் நம்மிடத்தில் ஏதொன் றும் ஒருக்காலும் இருந்ததில்லை என்று ஒப்புக் கொண்டவர்களாக, நாம் ஞானஸ்நானத்தில் நம்முடைய மாம்சத்தை தேவனுடைய பார்வையி லிருந்து அகற்றிவிடுகிறோம். நாம் கிறிஸ்து வோடு சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டது மட்டுமின்றி, புதிதான வாழ்வில் நடக்கும்படியாக அவரோடுகூட எழுப் பப்பட்டும் இருக்கிறோம். இவை யாவும் நாம் இரட்சிப்படைந்த தருணத்தில் நிறைவேறின. கிறிஸ்துவை **மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத் தினாலே** இவை யாவும் நிகழ்ந்தன.

**2:13** இவை யாவும் கொலோசெயருக்குப் பொருந்தும் என்பதை இப்பொழுது அப்போஸ் தலன் எடுத்துரைக்கிறார். அவர்களுடைய மனமாற்றத்திற்கு முன், அவர்கள் தங்களுடைய **பாவங்களினாலே மரித்தவர்களாயிருந்தார் கள்**. அவர்கள் தங்களுடைய பாவங்களினாலே ஆவிக்குரிய நிலையில் தேவனுக்கு மரித்தவர் களாக இருந்தார்கள் என்பதே இதன் பொரு ளாகும். அவர்களுடைய ஆவிகள் இறந்து போயிருந்தன என்பது இதன் பொருளன்று. மாறாக தேவனோடுகூடிய தொடர்பில் அவர்களது ஆவி கள் அசைவற்றுக் கிடந்தன என்பதும், தேவனு டைய தயவைப் பெறும்படியாக அவர்களால் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் அவர்கள் இருந்தார்கள் என்பதுமே இதன் பொருளாகும். அவர்கள் தங்களுடைய **பாவங்களினாலே** மட்டுமின்றி, தங்களுடைய **மாம்ச விருத்தசேதன மில்லாமையினாலேயும்** மரித்தவர்களாக இருந் தார்கள் என்று பவுல் கூறுகிறார். புறவின மக் களைக் குறிப்பிடும்படி விருத்தசேதனம் என்னும் சொல் புதிய ஏற்பாட்டில் அவ்வப்போது பயன்படுத் தப்பட்டுள்ளது. கொலோசெயர் புறவினத்தாரா யிருந்தார்கள். இவ்வுலகில் தேவனுடைய மக்க ளாகத் தெரிந்தெடுக்கப்பட்ட யூத குலத்தின் அங்கத்தினர்கள் அல்லர் அவர்கள். ஆகவே அவர்கள் தேவனை விட்டுச் சற்று தொலைவான இடத்தையே பெற்றிருந்தார்கள். மேலும் அவர் கள் தங்களை முழுவதுமாக மாம்சமாகிய கடி வாளத்திற்கும் அதனுடைய இச்சைகளுக்கும் ஒப்புவித்திருந்தார்கள். அவர்கள் நற்செய்தி யைக் கேட்டபோதே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். அப்பொழுது அவர்கள் கிறிஸ்துவோடு **உயிர்த்து எழுப்பப்ப ட்டு**, அவர்களுடைய **அக்கிரமங்களெல்லாம் மன்னிக்கப்பட்டன.** கொலோசெயரின் வாழ்க்கை முறை முற்றிலுமாக மாற்றமடைந்ததே அப் பொழுது நடந்த நிகழ்ச்சி என்றும் இதனைக் கூற லாம். பாவிகள் என்னும் நிலையிலான அவர்களு டைய வரலாறு முடிவுக்கு வந்துவிட்டது. இப் பொழுதோ, அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய படைப்புகளாக மாறிவிட்டார்கள். அவர்கள் உயிர்த்தெழுதலின் பக்கமாய் வாழ்ந்துகொண்டி ருந்தார்கள். ஆகவே மாம்சத்தில் இருந்த மனிதர் கள் என்று அவர்களைச் சுட்டிக்காட்டிய நடத்தை கள் யாவற்றிற்கும் "செல்லுங்கள்" என்று அவர் கள் கூற வேண்டும்.

**2:14** கிறிஸ்துவின் செயலில் அடங்கியிருந்த வேறொன்றையும் இப்பொழுது பவுல் தொடர்ந்து விவரிக்கிறார். **நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து வெற்றி சிறந்தார்.** நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோ தமாகவும் இருந்த கையெழுத்து என்பது நியாயப் பிரமாணத்தைக் குறிக்கிறது. ஒரு பொருளில், பத்துக் கட்டளைகள் நமக்கு எதிராக இருந்தன, அவற்றை நம்மால் பூரணமாகக் கடைப்பிடிக்கக் கூடாதிருந்த நிலையில் அவை நம்மீது குற்றஞ் சுமத்தின. ஆனால் பத்துக் கட்டளைகளை மட்டும் அவர் எண்ணாமல், இஸ்ரவேலுக்குக் கொடுக் கப்பட்ட சடங்குகளாலான பிரமாணத்தையும் மனதிற்கொண்டவராகவே இவ்வாறு கூறியிருக் கிறார். சடங்குகளாலான பிரமாணத்தில், பரிசுத்த நாட்கள், உணவுகள், சமயச் சடங்குகள் ஆகி யவை பற்றிய எல்லாவிதமான கட்டளைகளும் இடம் பெற்றிருந்தன. இவை யாவும் வகுத்துத்தரப் பட்டுள்ள யூத மார்க்கத்தின் ஒரு பாகமாகும். இவை யாவும் கர்த்தராகிய இயேசுவின் வருகையை எதிர்நோக்கியவை. அவருடைய ஆளுமைக்கும் அவருடைய செயலுக்கும் நிழலாகவே இவை யாவும் அமைந்துள்ளன. அவர் சிலுவையில் அடைந்த மரணத்தின் மூலமாக, இவை யாவற் றையும் **நடுவிலிராபடிக்கு எடுத்து, சிலுவை யின்மேல் ஆணியடித்துப்** போட்டார். கடன் திரும்பச்செலுத்தப்படும்போது எவ்வாறு கடன் பத்திரம் ரத்து செய்யப்படுமோ அதுபோலவே எல்லாம் நிகழ்ந்தன. இதனைத் திருவாளர் மேயர் இவ்வாறு விளக்குகிறார்: "கிறிஸ்து சிலுவையில்

அடைந்த மரணத்தின் மூலமாக, அவர் மனிதனுக்காக நியாயப்பிரமாணத்தின் சாபத்தைத் தமது மரணத்தின் மூலமாகச் சகித்தார் என்ற அளவில், மனிதர்கள்மேல் குற்றஞ்சுமத்திய நியாயப்பிரமாணம் தனது தண்டனையளிக்கும் அதிகாரத்தை இழந்துவிட்டது, மேலும் அவருடைய மரணமே நியாயப்பிரமாணத்தை முடிவுக்குக்கொண்டு வந்துவிட்டது."[15] "நியாயப்பிரமாணம் மரணமடைய வில்லை, ஆனால் நாமே அதற்கு மரணமடைந்து விட்டோம்" என்று திருவாளர் கெல்லி மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

கடன் தீர்க்கப்படும்போது, கடன் வாங்கியவர் மீது தனக்கு ஏதொரு உரிமையும் இல்லை என்று கடன் கொடுத்தவர் எழுதிக்கொடுத்த பத்திரத்தைப் பொதுவான இடத்தில் எல்லோரும் அறியும் படியாக ஆணியடித்துத் தொங்கவிடும் பழக்கம், பழங்கால வழக்கமாக இருந்தது. அதனையே பவுல் பயன்படுத்தியுள்ள சொற்கள் குறிப்பிடுகின்றன என்றே தோன்றுகிறது.

**2:15** சிலுவையில் அடைந்த மரணத்தின் மூலமாகவும், பின்னர் உயிர்த்தெழுந்து விண்ணுலகத்திற்கு ஏறிச்சென்றதன் மூலமாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பொல்லாங்கான **அதிகாரங்களைத்** தோற்கடித்து, அவற்றை **வெளியரங்கமான கோலமாக்கி, அவற்றின்மேல் வெற்றி சிறந்தார்.** இங்கு சொல்லப்பட்டிருக்கிற வெற்றி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி என்று எபேசியர் 4 -ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற அந்த வெற்றியே ஆகும். அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுந்த நிகழ்ச்சி, விண்ணுலகு ஏகிய நிகழ்ச்சி யாவும், நரகத்தின் சேனைகள் மேலும், சாத்தானின் சேனைகள்மேலும் அவருக்குக் கிடைத்த புகழ்ச் சிக்குரிய வெற்றியாகும். அவர் தமது விண்ணுலக வீட்டிற்குத் திரும்பிச்செல்லும்போது, ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவியின் ஆளுகைக்கு உட்பட்ட ஆகாய மண்டலத்தின் வழியாகவே சென்றார்.

பேய் வணக்கஞ்செய்துவந்த மக்கள் இரட்சிக்கப்பட்ட பிறகும், பொல்லாத ஆவிகளைக் குறித்த பயத்தினால் தொல்லைகளுக்கு உட்பட்டவர்களாக இருந்தால், அவர்களுக்கு இந்த வசனம் சிறப்பான ஆறுதலைக் கொடுக்கக் கூடும். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் எதைக் குறித்தும் அச்சமடையத் தேவையில்லை, ஏனெனில் அவர் **துரைத்தனங்களையும் அதிகாரங்களையும்** உரிந்துபோட்டார்.

**2:16** இப்பொழுது அப்போஸ்தலன் தான் சற்று முன்னர் கூறியதைக் கொலோசெ விசுவாசிகளுக்கு உரியதாக்கிக் காட்டுகிறார். மேற்கூறப்பட்டுள்ளவற்றை நாம் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம். கொலோசெயர் தங்களுடைய மாம்சத்தின் மூலமாக தேவனைப் பிரியப்படுத்தச் செய்த முயற்சிகளுக்கு இறந்துபோய் விட்டார்கள். அவர்கள் மரணமடைந்தது மட்டுமின்றி, கிறிஸ்துவோடு அடக்கம் செய்யப்பட்டு, கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டு, ஒரு புதிய வகையான வாழ்க்கையைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் என்னென்னவற்றுக்கெல்லாம் இறந்துபோனார்களோ, அவற்றினிடமாய்த் திரும்பக் கொண்டு போக முயற்சி செய்கிற ஞானமார்க்கத்தாரையும் யூதச் சார்புடையோரையும் என்றென்றைக்குமாக விட்டுவர வேண்டும். **ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக.** எல்லா மனித மதங்களும் மனிதர்களைச் சமயச் சடங்குகளுக்கும், விதிகளுக்கும், ஒழுங்கு முறைகளுக்கும் சமய ஆண்டுக் குறிப்பேட்டிற்கும் அடிமைப்படுத்தியிருக்கின்றன. இந்த ஆண்டுக் குறிப்பேட்டில் ஆண்டுக்கொருமுறை வரும் புனித நாட்கள், மாதாந்திர பண்டிகைகள் (பௌர்ணமி போன்ற நாட்கள்) வாராந்தர நாட்கள் (ஓய்வு நாட்கள்) ஆகியவற்றைப் பற்றிய குறிப்பைக் காணலாம். **"ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக"** என்னும் சொற்றொடர், கிறிஸ்தவன் பன்றியிறைச்சியை உண்கிறான், பண்டிகை நாட்களை அனுசரிக்கிறதில்லை என்றெல்லாம் ஒருவரும் அவர்களைக் குற்றஞ்சுமத்த முடியாது, அவ்வாறு குற்றஞ்சுமத்துவது நியாயமானதல்ல என்னும் பொருளையே தருகிறது. சில கள்ளக் குழுக்கள், எடுத்துக்காட்டாக ஆவியுலகத்தோடு தொடர்புகொள்ள முடியும் என்னும் கோட்பாட்டினர் (Spritism), தங்களுடைய அங்கத்தினர் புலால் உண்ணக்கூடாது என்று வற்புறுத்துகிறார்கள். ரோமக் கத்தோலிக்கர் வெள்ளிக்கிழமைகளில் புலால் உண்ணக்கூடாது. துக்க நாட்களில் சில உணவு வகைகளை உண்ணக்கூடாது என்று சில சபைப் பாகுபாடுகள் கூறுகின்றன. மோர்மோன் என்னும் கூட்டத்தார், காப்பி தேநீர் போன்ற பானங்களைப் பருகுவது நற்சாட்சி பெற்றிருப்போருக்கு உகந்தசெயல் அல்லவென்று சொல்லுகிறார்கள். ஏழாம் நாள் கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளைக் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்

கள். கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட கட்டளைகளுக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. நியாயப்பிரமாணம், ஓய்வுநாள், பிரமாணங்களைக் கைக்கொள்ளுதல் ஆகியவை பற்றி முழுமையாக அறிந்திட மத்தேயு 5:18, 12:8 மற்றும் கலாத்தியர் 6:18 ஆகிய பகுதிகளில் காணப்படும் சிறப்புக் கட்டுரைகளைக் காணவும்.

**2:17** யூதமதச் சடங்குகள் யாவும் **வருங்காரியங்களுக்கு நிழலாயிருந்தன, அவற்றின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது.** (பொருள் - சரீரம்). பழைய ஏற்பாட்டில் இவை யாவும் வரப்போகிற நிகழ்ச்சிகளுக்கு முன்படமாக நிறுவப்பட்டன. எடுத்துக்காட்டாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் பெறுகிற இளைப்பாறுதலைக் குறிக்கும் நிழலாக விளங்கியது ஓய்வுநாள். இப்பொழுதோ கர்த்தராகிய இயேசு வந்துவிட்டார். பின்னர் ஏன் மனிதர்கள் இன்னமும் நிழல்களைப் பற்றிக்கொள்ள வேண்டும்? படத்தில் வரையப்பட்டுள்ள ஒரு மனிதர் உடனிருக்கும்போது, அந்தப் படத்தை வைத்துக் கொண்டு அதில் நேரத்தைச் செலவழிப்பதுபோல இது காணப்படுகிறது.

**2:18,19** இந்த வசனத்தின் துல்லியமான பொருளை அறிவது மிகக் கடினமானது. ஏனெனில் ஞானமார்க்கத்தார் கற்பித்த எல்லாவற்றையும் நாம் முழுவதுமாகத் தெரிந்துகொள்ளவில்லை. ஒருவேளை இந்த மனிதர்கள் தங்களால் நேரடியாக தேவனிடத்தில் சேரமுடியாது என்று சொல்லித் தாழ்மையானவர்கள் போல் நடித்தார்கள் என்றே தோன்றுகிறது. மேலும், தேவதூதர்கள் மூலமாகவே தேவனிடத்தில் சேரமுடியும் என்று கற்பித்துத் தங்களுடைய **மாயமான தாழ்மையில் தேவதூதர்களை** ஆராதித்தார்கள், அவர்கள் கர்த்தரையோ தொழுது கொள்ளவில்லை. இந்த நாட்களில் இதற்கொப்பான ஒன்றை இவ்வுலகில் காண்கிறோம். ரோமக் கத்தோலிக்கர் தங்களால் நேரடியாக தேவனிடத்திலோ கர்த்தராகிய இயேசுவினிடத்திலோ ஜெபத்தை ஏறெடுக்க முடியாது என்று சொல்லி, "மரியாளின் மூலமாக இயேசுவினிடத்தில்" என்னும் கொள்கையைப் பின்பற்றுகிறார்கள். இது அவர்களிடத்தில் காணப்படும் **மாயமான தாழ்மையாகும்**, மேலும் அவர்கள் படைக்கப்பட்ட ஒருவரைத் தொழுதுகொள்கிறார்கள். திருமறைக்குப் பொருத்தமற்ற வழக்கங்களின் மூலமாக, கிறிஸ்தவர்கள் தாங்கள் பெற்ற பரிசைப் பிறர் கொள்ளையிடுவதற்கு அனுமதிக்கக் கூடாது. வேதம் மிகத் தெளிவாக இருக்கிறது, "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" (1 தீமோ. 2:5).

அப்போஸ்தலனாகிய பவுல் புரிந்துகொள்வதற்குக் கடினமான சொற்களைத் தொடர்கிறார்: **காணாதவைகளிலே**[16] **துணிவாய் நுழைந்து.** தாங்கள் ஆழமான, மர்மமான இரகசியங்களைப் பெற்றிருப்பதாகவும், மேலும் இந்த இரகசியங்களைப் புரிந்துகொள்வதற்கு ஒரு மனிதன் தீட்சை பெற வேண்டும் என்றும் அவர்கள் போதித்தார்கள். இரகசியங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டது தரிசனங்கள் என்னும் கற்பனையான காரியங்கள் என்றே தோன்றுகிறது. இன்றைய நாட்களிலும் கூட கிறிஸ்தவக் கேட்பாடுகளை மாற்றி, தவறான கொள்கைகளைப் பின்பற்றும் மோர்மோனிசம், ஸ்பிரிட்டிசம், கத்தோலிசிசம், ஸ்வீடன்போர்ஜியானிசம் ஆகிய குழுவினர் தரிசனங்கள் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அந்தக் கூட்டத்தாரில் மிக முக்கியமான உறுப்பினர்கள் என்று கருதப்படுவோர் தங்களுடைய இரகசியங்களைக் குறித்த அறிவை நினைத்துப் பெருமைப்படுகிறார்கள். ஆகவே, பவுல் அப்படிப்பட்டவனைக் குறித்து, **தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிறவன்** என்று கூறுகிறார். மற்றவர்களைக் காட்டிலும் தாங்கள் மேலானவர்கள் என்று கருதிக்கொண்டு இந்த மனிதர்கள் இவ்விதமான ஆழமான இரகசியங்களுக்குச் சென்றால்தான் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்னும் எண்ணத்தை உருவாக்கி விட்டார்கள். இவ்விதமான நடத்தையையே இந்நாட்களில் இயங்கி வரும் இரகசிய ஒருமைப்பாடு கொண்ட நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் இங்கு சொல்லியே ஆகவேண்டும். கர்த்தரோடு ஒருமைப்பாடு கொண்டு நடக்கின்ற கிறிஸ்தவனுக்கு இத்தகைய கூட்டத்தாரைக் குறித்து நினைக்க நேரமுமில்லை, அவர்களிடம் இரக்கமுமில்லை.

இந்த மனிதர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்திற்கிணங்க பற்பல சமயப் பழக்கவழங்களைக் கடைப்பிடித்து வந்தார்கள் என்பது முக்கியமான குறிப்பாகும். அவற்றிற்குத் திருமறை ஆதாரம் எதுவுமில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லை. அவர்கள் தங்களுடைய மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருந்தார்கள், ஏனெனில் அவர்கள் என்ன செய்யவேண்டும் என்று நினைத்

தார்களோ அதையே செய்தார்கள், அவர்கள் கர்த்தரைச் சார்ந்து எதையும் செய்யவில்லை; ஆனால் அவர்களுடைய நடத்தையோ தாழ்மை யானதாகவும் சமயச் சார்புடையதாகவும் தோற்ற மளித்தது.

**தலையைப் பற்றிக் கொள்ளாமல்.** கர்த்தரா கிய இயேசு இங்கு சரீரத்தின் தலை என்று குறிப் பிடப்பட்டுள்ளார். கிறிஸ்துவே தலையாக இருக் கிறார் என்ற உணர்வோடும், நம்முடைய தேவை கள் யாவற்றையும் எடுக்க எடுக்கக் குறையாத அவருடைய செழிப்பிலிருந்து பெற்றுக்கொண்ட உணர்வோடும், எல்லாவற்றையும் அவருடைய புகழ்ச்சிக்காகச் செய்வதே "தலையைப் பற்றிக் கொள்ளுதல்" என்பதன் பொருள். நம்முடைய தேவைகளுக்காகவும் அவருடைய வழிநடத்து தலுக்காகவும் மகிமையின் கர்த்தரை நோக்கிப் பார்த்தவர்களாக அவரோடு எப்பொழுதும் தொடர்பு கொண்டவர்களாக வாழ்வது என்பதும் இதன் பொருளாகும். இது மேலும் கீழ்க்காணும் சொற் றொடரில் விவரிக்கப்பட்டிருக்கிறது: **கணுக்களா லும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப் பட்டு தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதும்.** சரீரத்தின் பல்வேறு உறுப்புகள் **கணுக்களாலும் கட்டுகளாலும்** இணைக்கப்பட் டுள்ளன. சரீரமானது தலையோடு இணைக்கப்பட் டுள்ளது. சரீரமானது வழிநடத்தப்படுதலுக்கும் அறிவுரைகளுக்கும் தலையையே நோக்கிப் பார்க்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு வலியுறுத்துகிற சிந்தனை இதுதான். கிறிஸ்து வின் சரீரத்தின் அங்கங்களாக உலகில் இருப் போர் அனைவரும் தங்களுடைய மனநிறைவை யும், போதுமென்ற மனப்பான்மையையும் அவரி டத்தில் கண்டடைய வேண்டும், கள்ள போதகர் களுடைய வாதங்கள் மனநிறைவு அளிப்பது போல் தோன்றினாலும் அவற்றால் கவர்ந்திழுக் கப்பட இடங்கொடுக்கக்கூடாது.

ஒவ்வொரு கணத்திலும் கர்த்தரையே சார்ந்து வாழ்வதன் அவசியத்தைத் **தலையைப் பற்றிக் கொள்ளுதல்** என்னும் சொற்றொடர் வலியுறுத்து கிறது. நேற்றைய தினத்தில் பெற்ற உதவி இன் றைக்குப் போதாது. கடந்து சென்ற அணை நீரைக் கொண்டு மாவரைக்க முடியாது. எங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் தலையைப் பற்றிக் கொள்கிறார் களோ, அங்கெல்லாம் சரீரத்தின் அவயவங்கள் யாவும் ஒன்றுகூட்டப்பட்ட நிலையில், உடனடி யாகப் பதில் விளைவு உண்டாகும் என்பதையும் நாம் இங்கு சொல்லியே ஆகவேண்டும்.

**2:20 உலகத்தின் வழிபாடுகள்** என்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருப்பது சடங்குகளும் விதிமுறைகளுமேயாகும். எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டுச் சடங்குகள் யாவும் உலகத் தின் கோட்பாடுகள் ஆகும், அதாவது இவை யாவும் மதத்தோடு தொடர்புடைய மூல உபதேசங்களாக இருக்கின்றன (கலா. 4:9-11). ஒருவேளை ஞான மார்க்கத்தார் அல்லது புறச்சமயத்தார் ஆகியோ ருடன் தொடர்புடைய சடங்குகளையும் விதி முறைகளையும் பவுல் நினைத்துக் கொண்டிருந் தார் போலும். குறிப்பாக, அப்போஸ்தலன் கடுந் துறவு நிலையைக் குறித்து இங்கு பேசிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய சமுகத்தில் தனது தகுநிலையை இழந்துபோன யூத மார்க்கத் திலிருந்தோ, தேவனிடத்தில் எந்தவொரு நேரத் திலும் தகுதியைப் பெற்றிராத ஞானமார்க்கம் போன்ற ஏதொரு கள்ளக் குழுவினிடமிருந்தோ இந்தக் கடுந்துறவு நிலை தோன்றியிருக்கக் கூடும். கொலோசெயர் ஏற்கனவே கிறிஸ்து வுடனேகூட மரித்துவிட்ட காரணத்தினால், அவர் கள் ஏன் இன்னும் உலக வழக்கத்திற்குத் தங்களை உட்படுத்திக்கொள்ள விரும்புகிறார் கள் என்று பவுல் அவர்களை வினவுகிறார். அவ்வாறு செயல்படுவது, தாங்கள் உலகத்தோடு கொண்டிருந்த தொடர்பை ஏற்கனவே துண்டித் துக் கொண்டார்கள் என்பதை மறந்துபோய் விட்டார்கள் என்பதாகிவிடுமே. "கிறிஸ்தவன் விதிமுறைகளுக்கு இறந்துபோய்விட்டான் என்பது உண்மையானால் அவன் ஏன் இன்னமும் ஞானஸ் நானத்தையும் கர்த்தருடைய பந்தியையும் அனு சரிக்க வேண்டும்" என்ற கேள்வி சிலருடைய உள்ளங்களில் எழக்கூடும். இந்த இரண்டு கட்ட ளைகளும் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருக் கின்றன என்பது எளிதில் காணக்கூடிய விடை யாகும். இருந்தபோதிலும், "கிருபையின் வழி வகையாக" இருந்து, நம்மை விண்ணுலகத்திற்கு அதிகத் தகுதியுடையவர்களாகவோ, தேவனு டைய சமுகத்தில் தகுதி பெற்றவர்களாகவோ நாம் மாற்றம் பெற இவை உதவுவதில்லை. மாறாக, இவை முறையே கிறிஸ்துவோடு இணக் கம் கொண்ட நிலையை வெளிப்படுத்துவதாக வும், அவருடைய மரணத்தில் அவரை நினைவு கூருகிற செயலாகவும் காணப்பட்டு, கர்த்தருக் குக் கீழ்ப்படிகிற எளிமையான செயல்களாக விளங்குகின்றன. சில சலுகைளைப் பெற்று அனுபவிப்பதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய பிரமாணங்கள் அல்ல இவை.

2:21,22 இந்த வசனத்தில் **"என்கிற"** என்ற சொல் (தமிழில்) சேர்க்கப்பட்டிருப்பதால், இதனுடைய பொருள் தெளிவாக இருக்கிறது. அதாவது, "இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிற வர்கள் போல" (வச. 20) என்று கூறிய பவுல், **"தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?"** (வச. 21) என்று தொடர்ந்து கேட்கிறார். இங்கே பவுல் கொலோசெ பட்டணத்தாரை தொடாதே, ருசி பாராதே, தீண்டாதே என்று கட்டளையிடுவதாகச் சிலர் போதிப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது! ஆனால் அதற்கு முற்றிலும் மாறானதே இந்தப் பகுதிக்கான பொருளாகும். (தமிழ் மொழிபெயர்ப்பு பொருள் தெளிவுடையதாக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.)

இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற சொற்களின் வரிசைமுறை தலைகீழாக மாற்றம் பெற்றிருக்கவேண்டும் என்று திருவாளர் வில்லியம் கெல்லி போன்ற சான்றோர்கள் கூறியிருப்பதை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும்: "தீண்டாதே, ருசிபாராதே, தொடவும் செய்யக்கூடாது." இந்தச் சொல் வரிசை மாற்றம் செய்யப்படுவதால் துறவு நிலையின் அதிகப்படியான கடுமை விளங்குகிறது.

இந்த வசனத்தில் காணப்படும் பிற சொற்கள் பொருளை இன்னும் கூடுதலாக விளக்கிக் கூறுகின்றன. இந்தத் தடைகள் யாவும் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவை. **மனிதருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து** என்னும் சொற்றொடரில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மெய்யான சமயத்தின் சாரம் ஜீவனுள்ள கிறிஸ்துவோடு தொடர்பில்லாமல் உணவோடும் பானத்தோடும் தொடர்புடையதாயிருக்கும்.

வேமௌத் என்பார் 20 -22 வசனங்களைக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்க்கிறார்:

> நீங்கள் கிறிஸ்துவோடு இவ்வுலகத்திற்கு இறந்து, உலகத்தின் மூல உபதேசங்களுக்குத் தப்பியிருக்கிற நிலையில், உங்களுடைய வாழ்வானது இன்னும் உலகத்திற்கு உரியது என்று எண்ணியது போல, "இதனைத் தீண்டாதீர்கள்"; "இதனை ருசிபார்க்காதீர்கள்"; "பிறபொருட்களைத் தொடவும் செய்யாதீர்கள்" என்னும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது ஏன்? இந்தக் கட்டளைகள் யாவும் பயன்படுத்திய பிறகு தூக்கி எறியப்படுகிற பொருட்களைப் போன்றவை – மனிதர்களுடைய தடையுத்தரவாகவும் படிப்பினையாகவுமே இவை இருக்கின்றன.

2:23 மனிதர்களுடைய சமயத்தின் நடைமுறைச் செயல்களாகிய **இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் ஞானமென்கிற பெயரில்** தோன்றச் செய்கின்றன. **சுய இஷ்டமான ஆராதனை** என்பது, தங்களுடைய சொந்தக் கருத்தின்படி எது சரியாகத் தோன்றுகிறதோ அதையே ஆராதனை முறையாகக் கைக்கொள்வது என்பதாகும். அது தேவனுடைய திருமறைக்குப் பொருத்தமற்றதாக இருந்தாலும் அவர்கள் அதைக் குறித்துக் கவலைப்படுகிறதில்லை. அவர்கள் சமயத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் போல் தோற்றமளித்தாலும், அது மெய்யான கிறிஸ்தவமாக இருப்பதில்லை. **மாயமான தாழ்மை** என்னும் சொற்றொடருக்கு ஏற்கனவே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தேவனை நேரடியாக நெருங்கிச் சேர்வதற்குத் தங்களிடத்தில் தகுதியில்லை என்பது போல அவர்கள் போலியாக நடித்தார்கள். ஆகவே அவர்கள் தேவதூதர்களை மத்தியஸ்தராகப் பயன்படுத்தினார்கள். **சரீர ஒடுக்கம்** கடுந்துறவு நிலையைக் குறிக்கிறது. சுயத்தை வெறுத்தல் அல்லது தன்னையே கொடுமைகளுக்கு உட்படுத்திக்கொள்வது ஆகியவற்றின் மூலமாக மனிதன் மேலான பரிசுத்தத்தை அடைவது என்பதே இதன் பொருளாகும். இதனை நாம் இந்து மதத்திலும், தியானத்தின் மூலமாக இறைவனோடு ஒன்றிணைய முடியும் என்று கற்பிக்கிற கிழக்கத்திய சமயங்களிலும் காண முடியும்.

மேற்கூறப்பட்டுள்ள செயல்களைச் செய்வதால் என்ன பயன் உண்டாகிறது? இக்கேள்விக்கான விடையை இந்த வசனத்தின் இறுதிப் பகுதி மிகவும் நேர்த்தியான வகையில் எடுத்துரைத்துள்ளது: **இவை மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.** இவை யாவும் வெளித்தோற்றத்தில் மிக நேர்த்தியாகக் காணும்படி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவை **மாம்சத்தைத்** தவறான வழியில் பயன்படுத்துவதிலிருந்து ஒரு மனிதனுக்கு வெற்றியைத் தருவதில்லை. (நல்ல நோக்குடன் எடுக்கப்பட்ட வாக்குறுதிகளும்கூட இலக்கை அடையத் தவறிவிடுகின்றன.) எந்தவொரு தவறான திட்டமும் மனிதனை மேன்மையடையச் செய்வதில்லை. மாம்சத்தின் மூலமாக தேவனுடைய

சலுகையைப் பெறமுடியும் என்ற எண்ணத்தை உருவாக்க முயற்சி செய்கிறபோது, அவர்களால் தங்களுடைய மாம்சீக உணர்ச்சிகளையும் இச்சைகளையும் கட்டுப்படுத்த இயலாமல் போய் விடுகிறது. நாம் மாம்சத்திற்கும் அதனுடைய ஆசை இச்சைகளுக்கும் இறந்துபோனோம், இதுமுதல் தேவனுடைய புகழ்ச்சிக்காக வாழ் கிறோம், இதுவே கிறிஸ்தவ மனோபாவம் ஆகும். இதனை நாம் நமக்குத் தண்டனை வருமே என்ற அச்சத்தினால் செய்கிறதில்லை, மாறாக நமக் காகத் தம்மைத்தாமே ஒப்புவித்தவர் மேல் கொண்டிருக்கும் அன்பினாலே செய்கிறோம். இதனைத் திருவாளர் A. T. இராபர்ட்சன் அழகுற மொழிகிறார்: "நாம் சரியானதை எவ்விதத் தடையு மின்றி செய்யும்படியாக நம்மை ஆக்குவது அன்புதான். நாம் எதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று முடிவுசெய்யும் செயலை அன்பு எளிமையாக்குகிறது. கடமையின் முகத்தோற் றத்தை அன்பு அழகுபடுத்துகிறது. நாம் கிறிஸ்து வோடு கொண்டிருக்கிற ஐக்கியத்தை அன்பு இனிமையாக்குகிறது. நற்குணத்தின் திருப் பணியை அன்பு தன்னுரிமையாக மாற்றுகிறது."

## 2. எல்லாவற்றிற்கும் முதல்வராகிய கிறிஸ்துவுக்கு விசுவாசிகள் ஆற்றவேண்டிய கடமை [அதி. 3,4].

### அ. விசுவாசிகளின் புதுவாழ்வு: பழைய மனிதனைக் களைந்துவிட்டு, புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளுதல் [3:1-17]

**3:1 நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண் டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத் தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவை களைத் தேடுங்கள்.** இந்த வசனத்தில் பயன் படுத்தப்பட்டுள்ள **'ஆல்'** என்னும் விகுதி அப் போஸ்தலனாகிய பவுலின் உள்ளத்தில் ஐயம் உண்டாயிருந்தது என்னும் கருத்தை வெளிப் படுத்துவதில்லை. வாதம் செய்வதற்காக "ஆல்" என்னும் விகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இது அழைக்கப்படுகிறது. இதனை *ஆகையால்* என்றும் மொழிபெயர்க்கலாம்: "நீங்கள் கிறிஸ்து வுடன்கூட எழுந்தீர்கள் ஆகையால்..."

இரண்டாவது அதிகாரத்தில் சொல்லப்பட்டி ருப்பதுபோல, விசுவாசியானவன் கிறிஸ்துவோடு இறந்தவனாகவும், அவரோடுகூட அடக்கம்பண் ணப்பட்டவனாகவும், மரித்தோரிலிருந்து அவ ரோடுகூட உயிரோடு எழுந்தவனாகவும், காணப் படுகிறான். இவை யாவற்றுக்கும் ஆவிக்குரிய பொருள் யாதெனில், நம்முடைய முந்தின வாழ்க் கைக்கு "நீங்கள் போகலாம்" என்ற அறிவிப்பைக் கொடுத்துவிட்டு நாம் முற்றிலும் புதிதான வாழ்க் கைக்குள்ளாகப் புகுந்துவிடுவதே ஆகும். அதா வது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த் தெழுந்த வாழ்க்கைக்குள்ளாக நாம் நுழைந்து விட்டோம். நாம் **கிறிஸ்துவுடனே எழுந்துவிட் டோம்,** ஆகையால் **மேலானவைகளை** நாம் **தேடவேண்டும்.** நாம் இன்னமும் இந்தப் பூமி யில்தான் இருக்கிறோம், ஆனால் விண்ணுலக வாழ்க்கை முறையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**3:2** கிறிஸ்தவனது வாழ்க்கையைக் குறித்த நோக்கம் பூமியினாலே கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது. காரியங்கள் நம்முடைய சரீரக் கண்களுக்கு என்னவிதமாகக் காட்சியளிக்கின்ற னவோ, அதே நிலையில் நாம் அவற்றைக் குறித்து முடிவு செய்யக் கூடாது. அவை தேவனுக்கும் நித்தியத்திற்கும் எத்தகைய முக்கியத்துவம் கொண்டிருக்கின்றன என்று அறிந்து நாம் முடிவு செய்ய வேண்டும். முதல் வசனத்தில் உள்ள தேடுங்கள் என்ற சொல் அனுபவரீதியான பெரு முயற்சியையும், இரண்டாவது வசனத்தில் உள்ள **நாடுங்கள்** என்னும் சொல் உள்ளான தூண்டு தலையும் மனநிலையையும் குறிக்கிறது என்று திருவாளர் வின்சென்ட் கருகிறார். **நாடுங்கள்** என்று இங்கு சொல்லப்பட்டிருப்பதும், "அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" என்று பிலிப்பியர் 3:19 -இல் சொல்லப்பட்டிருப்பதும் ஒரே வினைச் சொல்லைக் கொண்டிருக்கின்றன. திரு வாளர் A. T. இராபர்ட்சன் எழுதுகிறார்: "கிறிஸ் தவன் விண்ணுலகையே தேடுகிறான், விண்ணுல கைக் குறித்தே சிந்திக்கிறான் என்பதே ஞானஸ் நானம் பெற்ற வாழ்க்கை என்பதன் பொருளாகும். அவனுடைய பாதங்கள் பூமியின்மேல் இருக்கின் றன, ஆனால் அவனுடைய தலையோ விண்மீன் களோடு இருக்கிறது. அவன் பரலோகக் குடிமகன் போல இவ்வுலகத்தில் வாழ்கிறான்."[17]

இரண்டாவது உலகப்போரின்போது, ஒரு கிறிஸ்தவ இளைஞன், "நம்முடைய குண்டுவீச்சு வீரர்கள் நேற்று இரவு மீண்டும் எதிரிகளுடைய எல்லைக்குமேல் பறந்தார்கள் என்று நினைக் கிறேன்" என்று உற்சாகத்துடன் கூறினான். "தேவனுடைய சபை குண்டு வீச்சு வீரர்களைக் கொண்டிருந்ததாக எனக்குத் தெரியாது" என்று முதிய விசுவாசி ஒருவர் அதற்குப் பதிலுரைத்தார். பெண்களும் குழந்தைகளும் அழிந்துபோவதில்

அவர் மகிழ்ச்சியடையவில்லை, மாறாக அவர் காரியங்களை தெய்வீக நோக்கத்துடன் பார்த் தார் என்பதில் ஐயமில்லை.

திருவாளர் F. B. ஹோல் நம்முடைய தகு நிலையைக் குறித்து மிகத் தெளிவாக விளக்கி யிருக்கிறார்.

> நாம் கிறிஸ்துவோடு அவருடைய மரணத்தில் இணைக்கப்பட்டிருப்பதற்கு சரிநேர் படிவமாக, நாம் கிறிஸ்துவோடு அவருடைய உயிர்த்தெழு தலில் இணைக்கப்பட்டிருக்கிற நிலை விளங்கு கிறது. முதலாவது சொல்லப்பட்டுள்ள செயலி னால் நாம் இப்பொழுது மனிதனுடைய உலகத் திலிருந்தும், மனிதனுடைய சமயத்திலிருந் தும், மனிதனுடைய ஞானத்திலிருந்தும் வேறு பிரிந்தவர்களாக இருக்கிறோம். இரண்டாவது செயலின் மூலமாக நாம் தேவனுடைய உலகத்தோடும் அங்குள்ள எல்லாவற்றோடும் தொடர்பு உடையவர்களாக மாற்றப்பட்டிருக் கிறோம். மூன்றாவது அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்கள், நாம் எப்படிப்பட்ட ஆசிர்வாதமான நிலைக்குக் கொண்டுவரப்பட்டி ருக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகின்றன.[18]

**3:3** விசுவாசி **மரித்துவிட்டான்** என்று பவுல் கூறும்போது, அவர் தகுநிலையைக் குறிப்பிடு கிறாரேயொழிய இருப்பு நிலையைக் குறிப்பிட வில்லை. நாம் கிறிஸ்துவோடு அவருடைய மர ணத்தில் இணைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தி னால், நாம் கிறிஸ்துவோடு மரணமடைந்தவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நம்மு டைய இருதயமே இதனை எதிர்த்து வாதம்புரிய எப்போதும் ஆயத்தமாயிருக்கிறது, ஏனெனில் நாம் பாவத்திற்கும் சோதனைக்கும் உயிருள்ள வர்களாக இருக்கிறோம் என்பதை உணரு கிறோம். ஆனால் விசுவாசத்தின் மூலமாக நாம் கிறிஸ்துவோடு மரித்துவிட்டோம் என்று நாமே எண்ணிக்கொள்கிறோம் என்பது வியத்தகு உண்மையாக இருக்கிறது. நம்முடைய வாழ்க் கையின் நன்னெறி சார்ந்தவற்றில் இது உண்மை யாக மாறிவிட்டது. நாம் ஏற்கனவே இறந்து போனவர்கள் என்னும் நிலையில் வாழ்வோமென் றால், நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கைக்கு ஒப்பான வாழ்வை அதிகமாகப் பெறக்கூடிய நிலையை அடைவோம். இவ்வுலக வாழ்க்கையில் நம்மால் நிறைவான நிலையை அடைய முடியாது என்பது நிச்சயம். ஆனால் இந்த நடைமுறை வளர்ச்சியானது ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் நிகழ்ந்துகொண்டே இருக்க வேண்டும்.

நாம் **மரித்தது** மட்டுமின்றி, நம்முடைய **ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக் கிறது.** உலகத்திற்குரிய மனிதனுடைய விருப்பத் திற்கும் நோக்கத்திற்கும் உரியவை யாவும் இந்தக் கோளில் நிறைந்திருக்கின்றன. ஆனால், விசுவாசியின் மிகப்பெரிதான விருப்பத்திற்கு உரியவை யாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் நபரில் ஒருங்கே அடங்கியிருக்கின்றன. நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக் குள் மறைந்திருக்கிற காரணத்தினால், இந்த உலகத்திற்குரிய சிறுசிறு விஷயங்களில், முக் கியமாக நம்மைச் சூழ இருக்கிற சமய உலகத் தின் காரியங்களில் நம்முடைய ஈடுபாட்டைச் செலுத்தக்கூடாது.

ஆனால் **உங்களுடைய ஜீவன் கிறிஸ்து வுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது** என்னும் சொற்றொடரில் வேறொரு சிந்தையும் அடங்கியிருக்கிறது. இந்த உலகமானது நம்மு டைய ஆவிக்குரிய வாழ்க்கையைக் காண்கிற தில்லை. மனிதர்கள் நம்மைப் புரிந்துகொள்கிற தில்லை. அவர்களைப் போல் நாம் வாழ்கிற தில்லை என்பது அவர்களுக்கு விநோதமாயிருக் கிறது. நம்முடைய சிந்தனைகளை நம்முடைய நோக்கங்களை, நம்முடைய வழிகளை அவர் களால் புரிந்துகொள்ள முடிகிறதில்லை. "அவரை உலகம் காணாமலும் அறியாமலும்" இருக்கிறது என்று சத்திய ஆவியானவரைக் குறித்துச் சொல் லப்பட்டிருப்பதுபோல, நம்முடைய வாழ்க்கையும் இருக்கிறது. அது **கிறிஸ்துவுடனே தேவனுக் குள் மறைந்திருக்கிறது.** "உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" என்று யோவான் முதல் மடலில் 3:1 -ஆவது வசனம் கூறுகிறது. இந்த உலகம் நம்மை அறிய வில்லை என்பதிலேயே மெய்யான வேறுபாடு நிலவுகிறது, ஆனால் அது நம்மைத் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறது.

**3:4** விசுவாசியானவன் கிறிஸ்துவுக்குள்ளா கப் பெற்றிருக்கிற தகுதியை விளக்கிக் கூறு மிடத்து, அதனுடைய உச்சநிலையாக, கிறிஸ்து மீண்டும் வருவதை அப்போஸ்தலன் நினைத்துப் பார்க்கிறார். **நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.** தற்காலத் தில் நாம் அவரோடு எழுப்பப்பட்ட நிலையில், இவ்

வுலக மனிதர்களாலே காணக்கூடாததும் புரிந்து கொள்ள முடியாததுமான வாழ்க்கையை வாழ் கிறோம். ஆனால் கர்த்தராகிய இயேசு தம்மு டைய பரிசுத்தவான்களுக்காக வரப்போகிற நாள் வரும். அப்பொழுது நாம்**அவரோடேகூட மகி மையிலே வெளிப்படுவோம்.** அப்பொழுது மனி தர்கள் நம்மையும், நாம் ஏன் இவ்விதமாக நடந்து கொண்டோம் என்பதையும் புரிந்துகொள் வார்கள்.

**3:5** மூன்றாவது வசனத்தில் நாம் இறந்துவிட்டோ மெனச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இங்கே, நாம் நம்முடைய **அவயவங்களை அழித்துப் போட வேண்டுமென்று** அறிவுறுத்தப்பட்டிருக் கிறோம். ஒரு விசுவாசியின் தகுநிலைக்கும் இருப்புநிலைக்கும் உள்ள வேறுபாட்டை விளக் கிக்கூறும் மிகத்தெளிவான எடுத்துக்காட்டினை இவ்விரு வசனங்களில் நாம் காண்கிறோம். ஒருவன் இறந்துபோனான் என்னும் சொற்றொடர் அவனது தகுநிலையைக் குறிக்கிறது. அவன் தன்னைப் பாவத்திற்கு மரித்தவனாக எண்ணிக் கொண்டு **பூமியில்** செயல்புரிகிற தன்னுடைய **அவயவங்களை அழித்துப்போடுவதே** அவனு டைய இருப்புநிலையாகும். நாம் கிறிஸ்துவுக்குள் யாராக இருக்கிறோம் என்பதே நம்முடைய தகு நிலையாகும். நம்மில் நாமே யாராக இருக்கி றோம் என்பதே நம்முடைய இருப்பு நிலையாகும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாக நாம் பெற்றிருக்கிற இல வசமான ஈவே நம்முடைய தகுநிலையாகும். தேவனுடைய கிருபைக்கு நாம் செய்கிற பதிற் செயல் நமது இருப்புநிலையை எடுத்துரைக் கிறது.

இங்கே நாம் நியாயப்பிரமாணத்திற்கும் கிருபைக்கும் உள்ள வேறுபாட்டைக் கவனிக்க வேண்டியவராயிருக்கிறோம். "பாவத்திலிருந்து விடுதலை பெற்ற வாழ்க்கையை நீ நடத்துவா யென்றால், கிறிஸ்துவோடு மரித்த நிலையை நான் உனக்குத் தருவேன்" என்று தேவன் சொல்லவில்லை. அது நியாயப்பிரமாணமாகும். அவ்வாறு இருப்பின், நம்முடைய தகுநிலை யானது நமது சொந்த முயற்சியைச் சார்ந்திருக் கும். ஒருவராலும் அந்தத் தகுநிலையைத் தானாகவே அடைய முடியாது என்பதை நாம் சொல்லவேண்டிய தேவையில்லை. அதற்குப் பதிலாக, "கர்த்தராகிய இயேசுவை யாரெல்லாம் விசுவாசிக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் எனது பார்வையில் தனிச்சிறப்பு மிக்க தகுதியை இலவசமாகத் தருவேன். இப்பொழுது நீங்கள் வெளியே சென்று அத்தகைய பரம அழைப்பிற் குத் தகுதியான வாழ்க்கையை வாழுங்கள்" என்று தேவன் கூறுகிறார். இதுவே கிருபை!

நம்முடைய பூமிக்குரிய **அவயவங்களை அழித்துப் போடுங்கள்** என்று அப்போஸ்தலன் கூறுகையில், நம்முடைய சரீரத்தின் எந்தவொரு அவயவத்தையும் உள்ளபடியே அழித்துப்போட வேண்டுமென்று சொல்லவில்லை! இது ஓர் உருவகமாகச் சொல்லப்பட்டுள்ளது. தொடர்ந்து வருகிற வார்த்தைகள் இதனுடைய விளக்கத் தைத் தருகின்றன. இங்கு அவயவங்கள் என்னும் சொல் பல்வேறு வகையான இச்சைகள், வெறுப்பு கள் ஆகியவற்றையே குறிக்கும். அவற்றின் விவரங்கள் தொடர்ந்து சொல்லப்பட்டுள்ளன.

**விபசாரம்** என்பது முறையற்ற வகையில் செய்யப்படுகிற கலவியையே பொதுவாகக் குறிக் கிறது, குறிப்பாக அது திருமணம் ஆகாதவர் களுக்கிடையே நடக்கிற கலவி அல்லது ஒழுக் கக் கேடான செயலாகும் (மத். 15:19;மாற்கு. 7:21). சிலவேளைகளில் இச்சொல், பரந்தபொருளில், சிற்றின்ப ஒழுக்கக் கேட்டைக் குறிக்கும்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **அசுத்தம்** சிந்த னையில், வார்த்தையில் அல்லது செயலில் காணப்படும் தூய்மையற்ற நிலையைக் குறிக் கும். இங்கே இது சரீரத்தில் காணப்படும் அழுக் கைக் குறிப்பிடாமல், ஒழுக்கநெறி சார்ந்த செயல் களில் காணப்படும் அழுக்கையே குறிப்பிடுகிறது. **மோகம்** என்பது கடிவாளம் இல்லாத வீரியம் மிகுந்த இச்சையைக் குறிக்கிறது. **துர்இச்சை** என்பது தீவிரம் வாய்ந்ததும் வன்முறையோடு கூடிய வரம்புகடந்த விருப்பத்தையும் குறித்துக் காட்டுகிறது. பொதுவாக, பொருளாசை என்னும் சொல் பேராசையை அல்லது இன்னும் வேண்டும் என்ற விருப்பத்தைக் குறிப்பிட பயன்படுத்தப் படும், ஆனால் இங்கே தூய்மையற்ற வகையில் சிற்றின்ப வேட்கையைத் தணித்துகொள்ளும் செயலாகிய விக்கிரகாராதனையை அது குறிக் கிறது.

செயல்களில் தொடங்கிய பட்டியல் உள்ளு ணர்வுகளை நோக்கி நகருகிறது. பலவகையான சிற்றின்பப் பாவங்கள் இங்கு விவரிக்கப்பட்டுள் ளன. பின்னர் அவற்றின் மறைவிடத்தை நோக்கி அந்தப் பட்டியல் பின்னோக்கிச் செல்லுகிறது, அதாவது, மனிதனுடைய பொருளாசை மிக்க இருதயத்தை நோக்கி அது செல்லுகிறது. சிற்றின் பத்தில் உள்ளார்ந்த வகையில் தவறு எதுவும்

இருப்பதாகத் திருமறை கற்பிக்கிறதில்லை. மனிதன் இனப்பெருக்கம் செய்யும் ஆற்றலுடன் தேவனால் படைக்கப்பட்டிருக்கிறான். ஆனால் தேவன் கிருபையாகத் தமது படைப்புகளுக்கு அருளிய நன்மைகளை ஒழுக்கக் கேட்டிற்கும் முறைகேடான நோக்கங்களுக்கும் பயன்படுத்து கிறபோது அங்கே பாவம் உண்டாகிறது. பவுல் வாழ்ந்த நாட்களில் ஒழுக்கக்கேடு என்னும் பாவ மானது புறவினத்தாரிடையே நிலவிவந்த முதலா வது பாவமாக இருந்தது. விசுவாசிகள் தங்க ளைத் தூய ஆவியானவருக்கு ஒப்புவிக்காத போது, அவர்களுடைய வாழ்க்கையில் சிற்றின் பச் சீர்கேடு உட்புகுந்து அவர்களுடைய வீழ்ச்சிக் குக் காரணமாகிவிடுகிறது.

**3:6** இவ்விதமான கொடுஞ்செயலைச் செய்து விட்டு, தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள் ளலாம் என்று மனிதர்கள் நினைக்கிறார்கள். வானங்கள் அமைதியாக இருப்பதுபோலத் தோன்று கின்றன, ஆகவே மனிதன் தன்னுடைய துணிவில் பெருகுகிறான். ஆனால் தேவன் பரியாசம் பண்ண வொட்டார். **கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கினை வந்து** இறங்கும். இந்த உலக வாழ்க்கையிலேயே இத்தகைய பாவங்களுக்கான விளைவுகள் உண்டாகும். சிற்றின்பச் சீர்கேட்டின் நிமித்தமாக மனிதர்கள் தங்களுடைய சொந்தச் சரீரங்களிலேயே பலனை அனுபவிப்பார்கள். மேலும், இனி வரப்போகிற நியாயத்தீர்ப்பின் நாளிலே மிகவும் பயங்கரமான அறுவடையை அவர்கள் பெற நேரிடும்.

**3:7** இரட்சிப்படைவதற்கு முன் கொலோசெ நகர விசுவாசிகள் இத்தகைய பாவங்களில் ஈடுபட் டுக் கொண்டிருந்தார்கள் என்று பவுல் நினைவு படுத்துகிறார். ஆனால் தேவனுடைய கிருபையோ அங்கு பிரசன்னமாகி, அவர்களைத் தூய்மை யற்ற நிலையிலிருந்து விடுவித்தது. அவர்களு டைய வாழ்க்கை என்னும் வரலாற்றில், கிறிஸ்து வின் செங்குருதியினாலே மூடப்பட்ட ஓர் அத்தியா யமாக அது இருக்கிறது. இப்பொழுதோ அவர்கள் தேவனுக்காக வாழும்படி ஆற்றலைக் கொடுக் கக்கூடிய புதிய வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள். "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக் கேற்றபடி நடக்கவும்கடவோம்" என்னும் வசனத் தைக் காண்பீர்களாக (கலா. 5:25).

**3:8** இவ்வுளவு பெரிதான விலை கொடுத்து அவர்கள் மீட்கப்பட்டிருப்பதாலே, அழுக்கான கந்தையைப் போன்ற இவையனைத்தையும் அவர்கள் இப்பொழுது **விட்டுவிட** வேண்டும். ஐந்தாவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற தூய்மையற்ற இச்சைகளை மட்டும் அப்போஸ் தலன் குறிப்பிடாமல், தொடர்ந்து அவர் சொல்ல விருக்கிற பலவகையான பொல்லாத பகைமை உணர்ச்சிகளையும் விட்டுவிட வேண்டுமென்று குறிப்பிடுகிறார்.

**கோபம்** என்பது கடுமையான விருப்பமற்ற மனப்பான்மையையோ, மனக்கசப்பையோ, பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணத்தையோ, ஏற்கனவே முடிவுசெய்யப்பட்ட வெறுப்பு உணர்ச்சி யையோ குறிக்கிறது என்பது உறுதி. **மூர்க்கம்** எனப்படுவது வன்முறையாக வெளிப்படும் கடுமை யான கோபத்தைக் குறிப்பிடுகிறது. வேறொருவரு டைய குணநலன்களையும் மதிப்பையும் கெடுக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் நடந்துகொள் கிற பொல்லாங்கான முறையே **பொறாமை** என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. பிறர் இன்ன லுறுவதைக் கண்டு மனமகிழ்ச்சியடைகிற காரணமற்ற வெறுப்பையும் இது குறிப்பிடுகிறது. இங்கு **தூஷணம்** என்னும் சொல் திட்டுதல் என்று பொருள்படும். அதாவது, பிறரை மட்டுமீறிய வார்த்தைகளால் பேசுவது என்பதும் இதன் பொருளாகும். **வம்பு வார்த்தைகள்** எனப்படுவது வெட்கக்கேடான பேச்சாகும். ஒழுக்கங்கெட்ட, மரியாதையில்லாத களங்கப்படுத்தும் வகையில் பேசுகிறதையே இச்சொல் குறிப்பிடுகிறது. இழிவு படுத்தும் வகையிலும் தூய்மையற்ற வகையிலும் பேசுவதையும் இது குறிப்பிடுகிறது. இந்தப் பட்டியலில் அப்போஸ்தலன் உள்ளுணர்வுகளி லிருந்து செயல்களை நோக்கிச் செல்லுகிறார். மனக்கசப்பானது மனிதனுடைய உள்ளத்திலே தொடங்குகிறது, பின்னர் மேலே சொல்லப்பட் டுள்ள பலவகையான வழிகளில் அது தானாக வெளிப்படுகிறது.

**3:9** இந்த வசனத்தில், அப்போஸ்தலன், "உங்களுடைய நடக்கையானது உங்களுடைய தகுநிலைக்கு ஏற்றாற்போல் இருக்கட்டும்" என்னும் பொருளில் பேசுகிறார். **நீங்கள் பழைய மனிதனைக் களைந்து போட்டீர்களே**; இப் பொழுது நீங்கள் நடைமுறையில், பொய்களைச் சொல்லுவதைத் தவிர்த்து, பழைய மனிதனைக் களைந்து போடுங்கள். பொய்சொல்லுதல் பழைய மனிதனைச் சேர்ந்த செயல்களில் ஒன்று. தேவனு டைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய வாழ்க் கையில் உண்மையைத் திரித்துக் கூற சோதிக் கப்படுகிறோம். ஒருவேளை வருமானவரி செலுத் துவதில் சில உண்மைகளை மறைத்து அறிக்கை

சமர்ப்பிப்பது அல்லது தேர்வில் ஏமாற்றுவது, அல்லது ஒரு நிகழ்ச்சியை மிகைப்படுத்திச் சொல்லுவது போன்ற எதுவாகவும் அது இருக்கலாம். தவறான அறிக்கை செய்வது அல்லது தவறான அபிப்பிராயத்தை உருவாக்குவது போன்ற பொய்கள் பிறருக்குத் துன்பத்தை விளைவித்து இரட்டிப்பான அளவு கொடுமையானதாகக் காணப்படும்.

**3:10** நாம் பழைய மனிதனைக் களைந்து போட்டது மட்டுமின்றி, நம்மைச் **சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனிதனைத் தரித்துக்கொண்டிருக்கிறோம்.** மறுபடியும் பிறக்காத குணங்களை உடையவராக இருந்தோம் என்பதை பழைய மனிதன் என்னும் சொற்றொடர் எவ்விதமாகக் குறிப்பிடுகிறதோ அதுபோல, புதிய மனிதன் என்னும் சொற்றொடர் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்னும் நம்முடைய புதிய தகுதியைக் குறிப்பிடுகிறது. அங்கே ஒரு புதிய சிருஷ்டிப்பு உண்டாயிருக்கிறது, நாம் புது சிருஷ்டிகளாக இருக்கிறோம். இந்தப் புதிய மனிதன் மென்மேலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல வளரவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாயிருக்கிறது. நாம் நம்முடைய தற்போதைய வளர்ச்சியைக் கண்டு ஒருக்காலும் மனநிறைவு அடையக் கூடாது, மாறாக நாம் மென்மேலும் வளர்ந்து இரட்சகருக்கு ஒப்பாகக் காணப்படுவதையே நம்முடைய இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். அவரே நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார், நம்முடைய வாழ்க்கைக்கு அவரே இலக்கணமாகவும் விளங்குகிறார். வரப்போகிற நாளில், நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது, நாம் பிறரைக் காட்டிலும் எவ்வளவு சிறப்பாக வாழ்ந்தோம் என்பதல்ல, மாறாக, கர்த்தராகிய இயேசுவின் வாழ்க்கையோடு எந்த அளவிற்கு நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட முடியும் என்பது கணக்கிடப்பட்டு நாம் தீர்க்கப்படுவோம்.

> நம்முடைய சரீரங்களின் அமைப்பில் தேவனுடைய சாயல் காணப்படுவதில்லை. மாறாக, புதிதாக்கப்பட்ட மனதிலும் இருதயத்திலும் விளங்குகிற அழகிலேயே அது காணப்படுகிறது. பரிசுத்தம், அன்பு, தாழ்மை, சாந்தம், தயவு, பிழைபொறுத்தல் ஆகியவையே தெய்வீகக் குணத்தை உருவாக்குகின்றன. (வேதாகம ஐக்கியத்தின் அனுதினக் குறிப்பு)

**3:11** அப்போஸ்தலன் தனது பேச்சில் குறிப்பிடும் புது சிருஷ்டிப்பில் **கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.** ஒருவனது நாடு, சமயம், பண்பாடு, சமுதாயப் படிநிலை இவையாவும் கணக்கிடப்படுவதில்லை. தேவனுக்கு முன் விசுவாசிகள் யாவரும் ஒரே அளவிலான தகு நிலையையே பெற்றிருக்கிறார்கள், ஓர் உள்ளூர் சபையின் ஐக்கியத்தில் இதே மனப்பான்மை பின்பற்றப்பட வேண்டும்.

சபையில் வேறுபாடுகள் இல்லையென்பது இதன் பொருளன்று. சிலர் சுவிசேஷகர் என்னும் வரத்தையும், சிலர் மேய்ப்பர் என்னும் வரத்தையும், சிலர் போதகர் என்னும் வரத்தையும் பெற்றிருக்கிறார்கள். சபையில் சிலர் மூப்பர்களாக இருக்கிறார்கள், சிலர் உதவிக்காரர்களாக இருக்கிறார்கள். ஆகவே இந்த வசனமானது முறையான வேறுபாட்டைக் குறைவுபடுத்திப் பேசுகிறதில்லை.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடுகள் அனைத்தும் இந்த உலகத்தில் நீக்கப்பட்டுவிட்டன என்று கற்பிக்க இந்த வசனத்தைப் பயன்படுத்தக்கூடாது. அதுவல்ல இங்கு சொல்லப்படுகிற செய்தி. இன்னமும் **கிரேக்கரும் யூதரும்** இருக்கிறார்கள். இங்கே கிரேக்கர் எனப்படுபவர் பொதுவாகப் புறவினமக்களே ஆவார்கள். **விருத்தசேதனம் உள்ளவர்கள் விருத்தசேதனம் இல்லதவர்கள்** என்பவர்களும் இருக்கிறார்கள். பொதுவாக புதிய ஏற்பாட்டில் இந்த இரண்டு சொற்றொடர்களும் யூதரையும் புறவினத்தாரையும் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் இங்கே இந்தச் சொற்றொடர்கள் யூதமக்கள் கைக்கொண்டதும், புறவினத்தார் புறக்கணித்ததுமான அந்தச் சடங்கையே குறிப்பிடுகின்றன எனக் கொள்ள வேண்டும்.

இன்னமும் **புறஜாதியான்** (பண்பாடு அற்ற மனிதன்) மற்றும் **புறதேசத்தான்** என்பவர்களும் இருக்கிறார்கள். இந்த இரண்டு வகுப்பாரும் ஒருவரோடொருவர் மாறுபட்டவர்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காக இங்கு சொல்லப்படவில்லை. புறதேசத்தான் புறஜாதியானாகவே இருந்தான். ஆனால் புறஜாதியாருக்குள்ளே புறதேசத்தார் மிகவும் பின்தங்கியவர்களாக இருந்தவர்கள், அவர்கள் மிகவும் கொடூரமானவர்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும் இருந்தவர்கள். இறுதி

யாகச் சொல்லப்பட்டிருக்கிற வேறுபாடு **சுயாதீனன்** மற்றும் **அடிமை** என்பவர்களைப் பற்றியதே. சுயாதீனன் என்பவர் ஒருக்காலும் அடிமைத்தனத்தில் இருந்ததில்லை. அவர்கள் சுயாதீனராகவே பிறந்தவர்கள். கிறிஸ்தவர்களுக்கு இந்த உலகீய வேறுபாடுகள் ஒரு பொருட்டே அல்ல. கிறிஸ்துவே உண்மையில் மதிப்பிற்குரியவர், அவரே ஒரு விசுவாசிக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாக இருக்கிறார். கிறிஸ்தவனுடைய வாழ்வில் அவரே நடுநாயகராகவும் சுற்றிலும் சூழ்ந்தவருமாக இருக்கிறார்.

இந்த உண்மையைத் துணிவோடு கூறுகிறார் பிஷப் ரைல் என்பார்:

> கிறிஸ்துவே எல்லாமுமாக இருக்கிறார் என்னும் மூன்று சொற்கள் கிறிஸ்தவத்தின் சாரமும் பொருளுமாக இருக்கின்றன. நம்முடைய இருதயங்கள் இவற்றோடு ஒன்றுபட்டுச் செல்லுமாயின், நம்முடைய ஆத்துமாக்களுக்கு அது நன்மை பயக்கும்... பலர் தங்களுடைய மதங்களில் கிறிஸ்துவுக்கு ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தருகிறார்கள், ஆனால் அவர் எந்த இடத்தைப் பெறவேண்டும் என்று தேவன் நினைத்தாரோ அந்த இடத்தை அவர்கள் தருவதில்லை. அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு, கிறிஸ்து மட்டும் "எல்லாவற்றிலும் எல்லாமுமாக" இருப்பதில்லை. ஒருவேளை அது கிறிஸ்துவும் சபையுமாக இருக்கலாம்– அல்லது கிறிஸ்துவும் நற்கருணையுமாக இருக்கலாம் – அல்லது கிறிஸ்துவும் அவர் நியமித்த ஊழியக்காரராகவும் இருக்கலாம் – அல்லது கிறிஸ்துவும் அவர்களுடைய சொந்த நற்குணமுமாக இருக்கலாம் – அல்லது கிறிஸ்துவும் அவர்களுடைய சொந்த ஜெபமுமாக இருக்கலாம் – அல்லது கிறிஸ்துவும் அவர்களுடைய சொந்த உண்மையுள்ள தன்மையும் தானதருமமுமாக இருக்கலாம். அவர்கள் அனுபவரீதியாக இவற்றின் மேல் தங்களுடைய ஆத்துமாக்களை இளைப்பாறச் செய்கிறார்கள்.[19]

**3:12** நாம் புதிய மனிதனைத் தரித்துக்கொண்டதாகப் பவுல் பத்தாவது வசனத்தில் கூறினார். இப்பொழுது, நம்முடைய அனுதின வாழ்வில் இதனைக் கைக்கொள்ளுவதற்கான சில நடைமுறை ஆலோசனைகளைத் தருகிறார். முதலாவதாக, அவர் கொலோசெயரை **தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்** என்று அழைக்கிறார். இந்த உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவனால் அவர்கள் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்னும் உண்மையை இது குறிக்கிறது. தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் என்னும் கிருபையானது தெய்வீக வெளிப்பாட்டின் இரகசியங்களில் ஒன்று. தேவன் தம்முடைய இறைமை ஆட்சியின் மூலமாக மனிதர்களைக் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாகத் தெரிந்துகொண்டார் என்று அவருடைய திருமறை கற்பிக்கிறது என்று நாம் நம்புகிறோம். எந்த மனிதனையும் தேவன் அழிவுக்கென்று தெரிந்துகொண்டதாக நாங்கள் நம்புகிறதில்லை. அவ்வாறு போதிப்பது வேதத்திற்கு நேர் முரணானது ஆகும். தேவனுடைய தெரிந்தெடுப்பின் கிருபையை நாம் எந்த அளவிற்கு நம்புகிறோமோ, அந்த அளவிற்கு மனிதனுடைய பொறுப்பையும் நம்புகிறோம். மனிதர்களுடைய மனவிருப்பமின்றி தேவன் அவர்களைத் தெரிந்துகொள்வதில்லை. "தேவனுடைய முன்னறிவின்படியே தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்று கூறுகிற அதே வேதம், "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" என்றும் கூறுகிறது.

அடுத்ததாக, பவுல் கொலோசெயரைப் **பரிசுத்தரும் பிரியருமாய்** என்று அழைக்கிறார். பரிசுத்தர் என்னும் சொல் பரிசுத்தவான்களாக ஆக்கப்பட்டவர்கள் அல்லது உலகத்திலிருந்து தேவனுக்கென்று பிரித்து வைக்கப்பட்டவர்கள் என்று பொருள்படும். நம்முடைய தகுநிலையின்படி நாம் பரிசுத்தராக இருக்கிறோம், நம்முடைய நடைமுறை வாழ்க்கையிலும்கூட நாம் பரிசுத்தராக இருக்கவேண்டும். ஏனெனில் நாம் தேவனுடைய அன்பிற்கு இலக்காக இருக்கிறோம், ஒவ்வொரு வகையிலும் நாம் அவரைப் பிரியப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தை அது தருகிறது.

நாம் ஆடையைப்போல உடுத்திக் கொள்ள வேண்டிய கிறிஸ்தவனுக்குரிய இனிய பண்புகளைப் பற்றி இப்பொழுது பவுல் விளக்கிக் கூறுகிறார். **உருக்கமான இரக்கம்** என்பது பரிவுணர்வுள்ள இருதயத்தைக் குறிக்கும். தன்னலமற்ற மனப்பான்மையோடு பிறருக்கு உதவி செய்வது **தயவு** எனப்படும். அன்புணர்வு அல்லது நல்லெண்ணம் என்றும் இதைச் சொல்லலாம். **மனத்தாழ்மை** பணிவடக்கத்தைக் குறித்துப் பேசுகிறது, பணிந்து போவதற்குரிய விருப்பம் மற்றும் தன்னைக் காட்டிலும் பிறரை மேன்மையாகக் கருதுதல். **சாந்தம்** பலவீனத்தைக் குறிப்பதில்லை. மாறாக தன்னைத்தான் வெறுத்து

எல்லா மனிதர்களோடும் இனிய பண்போடு நடந்துகொள்ளுவதையே இது குறிக்கிறது. திருவாளர் வைன் கூறுகிறார்:

> ஒருவன் தன்னையே காத்துக்கொள்ள இயலாதவனாக இருப்பான் என்றால், பொதுவாக அவன் சாந்தகுணமுள்ளவன் என்று கருதப்படுகிறான்; ஆனால் கர்த்தரோ சாந்தகுணமுள்ளவராக இருந்தார், ஏனெனில் கணக்கிட முடியாத அளவிற்கு ஏராளமாய் தேவனுடைய வாய்ப்பு வளங்கள் அவருடைய அதிகாரத்திற்குக் கீழிருந்தன. எதிர்மறையாகக் காணும்போது, சாந்தம் தன்னுடைய எண்ணத்தை வலியுறுத்திக் கூறாமலும், தன்னலம் இல்லாமலும் இருக்கும் நிலையாகும். நெருக்கடியான சூழ்நிலையிலும் தன்னிறைவோடு இருக்கக் கூடிய மனநிலையை அது குறிக்கிறது; அங்கே செருக்கு இல்லை, மனச் சோர்வும் இல்லை; ஏனெனில் சுயத்தைக் குறித்த எண்ணம் சற்றேனும் இல்லை.[20]

"பெருமையற்ற நிலையை" **மனத்தாழ்மை** என்று கூறுவோமானால், "பேரார்வம் அற்ற நிலையை" **சாந்தம்** என்று கூறவேண்டும். சினமூட்டுகிறபோது பொறுமையைக் காத்துக்கொள்வதே **நீடிய பொறுமை** ஆகும். மேலும் அவ்வாறு சகித்துக்கொள்வதோடு, மகிழ்ச்சியோடும் பிறரிடம் தயவோடும் நடந்துகொள்வதையும் அது குறிக்கிறது.

**3:13** சொல்லிய செயலை முடிக்காமலோ, விசித்திரமான முறையிலோ நம்முடைய சகோதரர்கள் நடந்துகொள்ளும்போது பொறுமையோடு நடந்துகொள்வதே, **ஒருவரையொருவர் தாங்குதல்** என்னும் சொற்றொடரின் பொருளாகும். நாம் பிறருடன் வாழும்போது, அவர்களுடைய குறைபாடுகளை நாம் காண்பதைத் தவிர்க்க முடியாது. நம்முடைய சொந்தப்போக்கிலே நாம் நடந்துகொள்கிறபோது நம்மிடம் பொறுமையைக் காட்ட நம்முடைய சகோதரர்களுக்கு தேவகிருபை தேவைப்படுகிறது, அது போலவே பிறரிடம் நாம் பொறுமையோடு நடந்துகொள்வதற்கு நமக்குத் தேவையானது தேவ கிருபையே. நாம் ஒருவரையொருவர் தாங்க வேண்டும்.

**ஒருவர்பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.** இந்த ஆணைகளை இறைமக்கள் கடைப்பிடிப்பார்கள் எனில், அவர்களுக்குள்ளாக வெகுவிரைவில் தீர்க்கப்படாத சச்சரவுகள் இரா. நம்முடைய மனது புண்படும்படியாக மற்றவர்கள் நடந்துகொள்ளும்போது நாம் மன்னிக்கக் கூடியவர்களாகச் செயல்பட வேண்டும். "ஆனால் அவர் தான் எனக்கு எதிராகக் குற்றம்புரிந்தார்..." என்று பலர் குற்றஞ்சுமத்துவதை அவ்வப்போது கேட்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில்தான் நாம் பிறரை மன்னிக்கும்படியாக அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். பிறர் நம்முடைய மனதைப் புண்படுத்த வில்லையென்றால், நாம் மன்னிக்க வேண்டிய தேவை ஏற்படாதே. ஒருவேளை நாம் குற்ற மிழைத்தவராக இருப்போமென்றால், நாம் யாருக்கு எதிராகக் குற்றம்புரிந்தோமோ அவரிடம் சென்று மன்னிக்கும்படியாகக் கேட்டிருக்க வேண்டும். நமக்கு எதிரான குற்றத்தைக் குற்றமாகக் கருதாமல் இருப்பது பொறுமையாகும். அந்தக் குற்றத்தைத் தொடர்ந்து மனதில் நினைக்காமல் விட்டுவிடுவது மன்னிப்பதாகும். **கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்** என்னும் வசனத்தில் மன்னிக்கும் செயலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற செயலூக்கத்தைக் காட்டிலும் பெரிதான செயலூக்கம் வேறில்லை. **கிறிஸ்து** எவ்வாறு நம்மை மன்னித்தார்? ஒரு காரணமுமின்றி அவர் நம்மை மன்னித்தார். அவ்வாறே நாமும் செய்ய வேண்டும். அவர் நம்மை இலவசமாக மன்னித்தார். நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். அவர் மன்னித்ததோடு மறந்தும் விட்டார். அவ்வாறே நாமும் செய்ய வேண்டும். இந்த வியத்தகு மனோபாவத்தை நம்முடைய உன்னதமான கர்த்தர் எவ்விதமாகக் கொண்டிருந்தாரோ அதுபோலவே நாமும், அதே பாணியிலும் அதே அளவிலும் கொண்டிருக்க வேண்டும்.

**3:14 அன்பு** என்று இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது நம்முடைய நற்குணங்களையெல்லாம் ஒன்றாகக் கட்டி நம்மைப் **பூரண சற்குணமுள்ளவர்களாகக்** காட்டும் மேலாடையையோ கச்சையையோ குறிக்கக் கூடியதாயிருக்கிறது. கிறிஸ்தவக் குணநலனின் அனைத்து அம்சங்களையும் ஒன்றோடொன்று இணங்கச் செய்து இறுகக் கட்டுவது இந்த அன்புதான். ஒருவன் தன்னுடைய இருதயத்தில் உண்மையாக அன்பில்லாதவனாக இருந்தும், சில நற்குணங்களை வெளிப்படுத்திக் காட்ட முடியும். ஆகவே நாம் செய்கிற அனைத்தையும், நம்முடைய சகோதரரிடத்தில் கொண்டிருக்கிற மெய்யான அன்பின் ஆவியிலே செய்ய வேண்டுமென்று பவுல் இங்கு வலியுறுத்துகிறார். நம்முடைய செயல்பாடுகள் மனவெறுப்போடு செய்யப்படாமல், அவை அன்பு நிறைந்த

இருதயத்தில் பிறக்க வேண்டும். ஞானமார்க் கத்தார் அறிவையே **பூரண சற்குணத்தின் கட்டு** என்று கருதினார்கள். ஆனால் **அன்பே பூரண சற் குணத்தின் கட்டு** என்று பவுல் வலியுறுத்தி, அந் தத் தவறான கருத்தைத் திருத்துகிறார்.

**3:15 தேவசமாதானம்** நம்முடைய **இருதயங் களில்** ஒரு நடுவர் போலச் செயல்பட வேண்டும். ஏதாவது ஒரு செயலில் நமக்கு ஐயம் ஏற்படுமென் றால், "இது சமாதானத்தை உண்டாக்குமா?" என்றோ, "இந்தச் செயலை நான் செய்த பிறகு என்னுடைய இருதயத்தில் சமாதானம் இருக் குமா?" என்றோ நம்மை நோக்கி நாமே கேள் வியை எழுப்ப வேண்டும்.

நாம் கர்த்தரிடத்திலிருந்து அவருடைய வழி நடத்துதலை நாடும் வேளைகளில் இந்த வசனம் நமக்குப் பேருதவியாக இருக்கும். நீங்கள் ஒருசில செயல்களைச் செய்ய முற்படும்போது, அவற்றில் நீங்கள் ஈடுபடவேண்டுமென்று உண் மையாகவே தேவன் விரும்புவாரென்றால், அதைக் குறித்து அவர் உங்களுக்குப் பூரண சமாதானத் தைத் தருவது நிச்சயம். உங்களுக்கு அவ்வித **சமாதானம்** இல்லையேல் நீங்கள் அவ்விதம் செய்யக்கூடாது. "நீங்கள் செல்லுவதற்கு இருளா யிருந்தால், நீங்கள் இருந்த இடத்திலேயே இருப் பதற்கு அது வெளிச்சமாக இருக்கும்" என்று சொன்னாற்போல் இது இருக்கிறது.

நாம் தனிப்பட்ட முறையிலும் சபையிலும் அவ ருடைய சமாதானத்தை அனுபவிக்க வேண்டு மென்று அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த வச னத்தின் அடுத்த பகுதியை நாம் கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது. **இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்.** நாம் மற்ற கிறிஸ்தவர்களிடத்திலிருந்து பிரிந்து தனிமை யில் வாழ்வது நம்முடைய சமாதானத்தை அனுபவிப்பதற்குரிய ஒரு வழியாகும். ஆனால் அது தேவனுடைய நோக்கமல்ல. தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசலை (குடும்பங் களை) ஏற்படுத்துகிறார். நாம் உள்ளூர் சபையில் ஒன்றுகூட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். மற்ற கிறிஸ்தவர்களுடன் கூடி வாழ்வதென்பது சில வேளைகளில் நம்முடைய பொறுமையைச் சோதிக்கக்கூடியதாக இருந்தாலும், வேறு எந்த வகையிலும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை யில் உருவாக்க முடியாத நற்குணங்களை வளர்த் துக் கொள்வதற்கு தேவன் இதையே நிறுவியிருக் கிறார். ஆகவே உள்ளூர் சபைகளில் நம்முடைய பொறுப்புகளைச் செய்யாமல் நாம் அவற்றைப் புறக் கணிக்கக் கூடாது. அல்லது கோபமூட்டப்படுவதி னாலோ எரிச்சல் பண்ணப்படுவதினாலோ அந்த வேலைகளிலிருந்து நாம் விலகிக் கொள்ளவும் கூடாது. மாறாக நாம் நம்முடைய உடன் சகோ தரர்களோடு இசைந்து வாழ நாட்டம்கொண்டவர் களாக இருந்து, நம்முடைய செயலிலும் பேச் சிலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

**நன்றியறிதல் உள்ளவர்களுமாயிருங்கள்.** இந்தப் பல்லவி பவுல் எழுதிய மடல்களில் திரும் பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு ஒரு நல்ல காரணம் இருக்க வேண்டும்: **நன்றியறிதல்** உள்ள மனப்பான்மை மிக முக்கியமானது என்று தேவனுடைய ஆவியானவர் கருதுகிறார். அவ் வாறுதான் இருக்குமென்று நாம் நம்புகிறோம்! ஒருவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்து மட்டுமின்றி அவருடைய சரீர நன்மை களையும் முக்கியமாக அவர் கருதுகிறார். நீண்ட காலமாகத் திருமறை கற்பித்து வருவதை மருத்து வர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்: மனமகிழ்ச்சி யும் **நன்றியறிதலும்** உள்ள மனப்பான்மை சரீரத் திற்கு நன்மை பயக்கும். கவலை, மன அழுத்தம், குறைகூறுகிற மனப்பான்மை ஒருவருடைய நலத் திற்குக் கேடுவிளைவிக்கும் என்பது நிச்சயம். நன்றியறிதல் நம்முடைய தற்போதைய சூழ்நிலை களால் தீர்மானிக்கப்படுகிறது என்று நாம் பொது வாக எண்ணுகிறோம். ஆனால் நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய இனிய பண்பாக இது விளங்கு கிறது என்று இங்கு பவுல் கூறுகிறார். **நன்றியறி தல் உள்ளவர்களாக** இருக்க நாம் கடமைப்பட்ட வர்கள். உலகத்திலுள்ள எல்லா மனிதருக்குள் ளும், நாம் மகத்துவமானதைப் பெற்றிருக் கிறோம் என்பதால் நன்றிகூருவதற்குக் கடமைப் பட்டிருக்கிறோம் (உபா. 33:29 -ஆம் வசனத்தோடு ஒப்பிட்டுப்பாருங்கள்). இந்தப் பொருள் பற்றிய விளக்கத்திற்குக் குறைவில்லை, நம்முடைய தன்னலமுள்ள இருதயங்களே குறைவுடையன.

**3:16** இந்த வசனத்தில் நிறுத்தற்குறிகள் எவ்வாறு இடவேண்டும் என்பதில் கருத்து வேறு பாடு நிலவுகிறது. புதிய ஏற்பாட்டு மூலமொழியில் நிறுத்தற்குறிகளே இல்லை. இப்படிப்பட்ட வசனங் களின் பொருள் பெரும்பாலும் நிறுத்தற்குறி களின் மூலமாகவே தீர்மானிக்கப்படுகின்றன. கீழ்வருவது சரியாயிருக்கும் என்று நாம் கருது கிறோம். **கிறிஸ்துவின் வசனம் உங்களுக் குள்ளே பரிபூரணமாக வாசமாயிருப்பதாக, சகல ஞானத்தோடும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு; சங்கீதங்களி**

**னாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டு களினாலும் உங்கள் இருதயத்திலே கர்த்த ரைப் பக்தியுடன் பாடுங்கள்.**

இவ்வாறாக இந்த வசனத்தில் மூன்று பகுதி கள் உள்ளன. முதலாவது, **கிறிஸ்துவின் வசனம்** நமக்குள்ளே **பரிபூரணமாக வாசமாயிருக்க** இடம்கொடுக்க வேண்டும். **கிறிஸ்துவின் வசனம்** எனப்படுவது திருமறையில் அறியப்படும் கிறிஸ்து வின் போதனைகளே ஆகும். அவருடைய பரி சுத்த வார்த்தையினாலே நமது இருதயங்களை யும் உள்ளங்களையும் நிரப்பி, அதற்குக் கீழ்ப் படிந்து நடக்க நாட்டம் உடையவர்களாக நாம் இருப்போமென்றால், நம்முடைய இருதயங்களில் **கிறிஸ்துவின் வசனம்** குடியிருப்பது திண்ணம்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது கருத்து, **சகல ஞானத்தோடும்** நாம் **ஒருவருக் கொருவர் போதித்து புத்திசொல்லக்கடவோம்** என்பதாகும். தன்னுடைய உடன் சகோதர சகோ தரிகளைக் குறித்து ஒவ்வொரு விசுவாசிக்கும் இந்தப் பொறுப்பு உண்டு. கோட்பாடுகளோடு தொடர்புடையது **போதித்தல்**. கடமைகளைக் குறித்துப் **புத்திசொல்லுதல்** செய்யப்பட வேண் டும். நாம் திருமறையிலிருந்து பெற்ற அறிவை நம்முடைய சகோதரர்களிடத்தில் பகிர்ந்து கொள்ள நாம் கடன்பட்டிருக்கிறோம். மேலும் அவர்களிடத்திலிருந்து பயபக்திக்குரிய ஆலோ சனைகளைப் பெறுவதும் நம்முடைய பொறுப் பாகும். நாம் ஞானமற்றதும் அன்பில்லாததுமான வார்த்தைகளை மிகுந்த ஆற்றலோடு பேசுவ தைக் காட்டிலும், ஞானத்தோடு போதித்து புத்தி சொல்வது ஏற்றுக்கொள்ளப்படும்.

மூன்றாவதாக, நாம் **சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளி னாலும்** நம்முடைய இருதயங்களில் **கர்த்தரைப் பக்தியுடன் பாட வேண்டும். சங்கீதங்கள்** எனப் படுவது தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட் டவை. அதே பெயரைக் கொண்ட நூலாக வேதத் தில் இவை இடம்பெற்றுள்ளன. இஸ்ரவேலின் ஆராதனையில் இது ஒரு பகுதியாக விளங்கி, பாடப்பட்டு வந்தன. கீர்த்தனைகளோ, பிதாவா கிய தேவனை நோக்கியோ, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கியோ ஆராதனையாகவும் புகழ்ச்சியாகவும் ஏறெடுக்கப்பட்டவை. எடுத்துக் காட்டாக:

இயேசுவே, உந்தன் சிந்தனை
மாபெரும் இன்பமே,
கண்ணார உம்மைக் காண்கையில்
அதிலும் இன்பமாம்.
– பெர்னார்ட் கிளேவாக்ஸ்

**சங்கீதங்களைப்** போல ஆவியினால் ஏவப் பட்டு எழுதப்பட்டவை என்று **கீர்த்தனைகளைக்** குறித்துச் சொல்ல முடியாது. **ஞானப்பாட்டுகள்** என்பவை கிறிஸ்தவ அனுபவங்களின் அடிப்படை யில் எழுதப்பட்ட சமயப்பாடல்கள் ஆகும். இதனு டைய எடுத்துக்காட்டினைக் கீழ்வரும் வரிகளில் காணமுடியும்.

கஷ்ட நஷ்டமுண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்;
மோசம் நாசம் நேரிட்டாலும்
ஜெபதூபம் காட்டுவோம்,
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்,
நீக்குவாரே மனச்சோர்வை
தீயகுணம் மாற்றுவார்.
– ஜோஸஃப் ஸ்கிரைவன்

இத்தகைய வெவ்வேறு வகையான பாடல்களை நாம் நம்முடைய **கர்த்தருக்கு இருதயத்திலே** நன்றிசெலுத்தியவர்களாக அதாவது **பக்தியுடன்** பாடவேண்டும். எப்படிப்பட்ட இசையைக் கிறிஸ்த வன் பயன்படுத்த வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சொல்ல வேண்டியது நல்லது. கிறிஸ்த வர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் பெரும் பாலோருடைய இசைப்பாடல்கள் மெல்லிசைப் பாடல்களாகவோ, மேற்போக்கானபடி கருத்தாழ மற்றவையாகவோ இருக்கின்றன. இவ்வகையாக இசைகளில் பெரும்பாலானவை திருமறைக்கு முரண்பட்டவையாக உள்ளன. இதனினும் கூடுத லாக இவ்வுலகத்தாருடைய களியாட்டங்களுக்கு ஏற்ப கொடூரமான முறையில் நடனமாடச் செய் யும் இசை, கிறிஸ்துவின் திருப்பெயருக்குக் களங் கத்தை உண்டுபண்ணுகிறது.

பதினாறாவது வசனம் எபேசியர் 5:18,19 ஆகிய வசனங்களுக்கு மிக நெருங்கியதாக இருக்கிறது: "துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து; சங்கீதங் களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டு களினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு , உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள். "இரண்டு பகுதி களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினைக் காணும்போது, பதினாறாவது வசனத்தில் "ஆவி யினால் நிறைந்து" என்பதற்குப் பதிலாக, **"கிறிஸ்து**

**வின் வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாக வாசமாயிருப்பதாக”** என்று பவுல் கூறுகிறார். மகிழ்ச்சியோடும், பயனுள்ள வகையிலும், கனி தருகிற வகையிலும் வாழ்கிற வாழ்க்கைக்கு ஆவியினால் நிறைந்து இருப்பதும், கிறிஸ்துவின் வசனத்தினால் நிறைந்து இருப்பதும் தேவை யானவை என்றும் இதனை வேறு சொற்களில் கூறலாம். தேவனுடைய வார்த்தையினால் நாம் நிறைந்திராவிட்டால், நாம் ஆவியின் நிறைவைப் பெறமாட்டோம்; நாம் நம்முடைய உள்ளான மனிதனைத் தூய ஆவியானவரின் கட்டுப்பாட்டுக் குள் செயல்படும்படியாக ஒப்புவிக்கவில்லை யென்றால், நம்முடைய வேத தியானம் செயல் திறமுள்ளதாக இருக்காது. ஆகவே தேவனு டைய ஆவியினால் நிறைவது என்பதும் தேவனு டைய வார்த்தையினால் நிறைந்திருப்பது என் பதும் ஒன்றுதான் என்று முடிவுசெய்யாமல் இருக்க முடியுமா? இது ஏதோ புரியாத புதிராக, உணர்ச்சிப் பெருக்கினால் வாழ்க்கையில் ஏற்படு கிற திருப்புமுனையல்ல, மாறாக ஒவ்வொரு நாளும் படிப்படியாக வேதத்தை உட்கொள்வது, வசனங்களைத் தியானிப்பது, அவற்றிற்குக் கீழ்ப் படிவது, அவற்றின்படி வாழ்வது, இதுவே இங்கு காணப்படும் கருத்தாகும்.

**3:17** கிறிஸ்தவர்கள் என்னும் நிலையில் நம்முடைய நடத்தையை நியாயந்தீர்ப்பதற்கான அனைத்துக் கூறுகளும் அடங்கிய விதி என்று இந்தப் பதினேழாவது வசனத்தைக் கூறலாம். சில செயல்கள் சரியானவையா தவறானவையா என்று முடிவெடுப்பது, குறிப்பாக இளைஞர் களுக்கு இந்நாட்களில் மிகக் கடினமான ஒன்றாக இருக்கிறது. இந்த வசனத்தை மனப்பாடம் செய்து, பயன்படுத்தும்போது, அத்தகைய பிரச்சினை களில் பெரும்பாலானவற்றிற்குத் தீர்வைக் கண்டு பிடிக்க இது ஒரு திறவுகோலாக விளங்கும் என்று மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. “நான் இதனைக் **கர்த்தராகிய இயேசு** கிறிஸ்துவின் **நாமத்தி னாலே** செய்யலாமா? இவ்வாறு செய்வது அவ ருக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவருமா? இதில் அவருடைய ஆசிர்வாதம் வந்து தங்கும் என்று நான் எதிர்பார்க்க முடியுமா? அவர் மீண்டும் வரும் போது இந்தச் செயலைச் செய்துகொண்டிருக்க விரும்புவேனா?” என்பதே நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய சோதனை. இந்தப் பரீட்சையானது நாம் பேசுகிற பேச்சுக்கும் நாம் செய்கிற செயலுக் கும் பொருந்தும் என்பதைக் கவனித்துப் பாருங் கள். இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் நம்மு டைய வாழ்க்கை முழுவதையும் மேம்படுத்து கிறது. எல்லாவற்றையும் கர்த்தருக்காகவும் அவருடைய புகழ்ச்சிக்காகவும் செய்யக் கிறிஸ்த வர்கள் கற்றுக்கொள்ளும்போது அது விலை மதிக்கத்தக்க இரகசியமாக இருக்கும். மீண்டும் ஒருமுறை அப்போஸ்தலன் **“அவர் முன்னிலை யாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங் கள்”** என்னும் சொற்களைச் சேர்க்கிறார். நன்றி! நன்றி! நன்றி! கிருபையினால் இரட்சிக்கப்பட்டு விண்ணுலக அரண்மனைகளை நோக்கிச் செல் பவர்கள் என்றென்றும் கடைப்பிடிக்க வேண்டிய கடைமையாக இது இருக்கிறது.

### ஆ. கிறிஸ்தவ இல்லங்களின் அங்கத்தினர் களுக்கு ஏற்புடைய நடத்தை (3:18–4:1)

கிறிஸ்தவ இல்லங்களில் உள்ள உறுப்பினர் களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் தொடர் வரிசையில் புத்திமதி புகட்டுகிறார். இந்தத் தொடர் ஆலோசனை நான்காவது அதிகாரத்தின் முதல் வசனம் வரைக்கும் நீடிக்கிறது. மனைவி களுக்கும், கணவர்களுக்கும், பிள்ளைகளுக் கும், பெற்றோர்களுக்கும் அவர் ஆலோசனை தருகிறார். வேலைக்காரர்களுக்கும் வீட்டு உரிமை யாளர்களுக்குங்கூட ஆலோசனை தரப்பட்டுள் ளது. இதுவரை சொல்லப்பட்டுவந்துள்ள கருத்து களிலிருந்து சடுதியில் மாற்றம் ஏற்பட்டு, இல்லங் களில் காணப்படும் வாழ்க்கைமுறை போன்ற உலகப்பிரகாரமான பொருள்பற்றி பவுல் பேசத் தொடங்குகிறார் என்னும் எண்ணம் இந்தப் பகுதியைப் படிக்கத் தொடங்கும்போது ஏற்படு கிறது. ஆனால் இந்தப் பகுதியானது மிகவும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

## கிறிஸ்தவ இல்லம்

கிறிஸ்தவ வாழ்க்கையில் இல்லம் முக்கிய மான சக்தியாக விளங்குகிறது என்று தேவன் கருதுகிறார். “தொட்டிலைத் தாலாட்டுகிற கரமே உலகத்தை ஆளுகிறது” என்பது நன்கு அறியப் பட்ட ஒரு கூற்றாகும். அதில் மேலோட்டமாகத் தோன்றுகிற உண்மையிலும் மிகப்பெரிய அளவு உண்மை அடங்கியிருக்கிறது. வாழ்க்கைக்குத் தேவையான பல பயனுள்ள காரியங்கள் காப்பாற் றப்படுவதற்காக தேவன் குடும்பம் என்னும் அமைப்பைத் திட்டமிட்டு நிறுவியிருக்கிறார். வீட் டிற்குக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் குறையக் குறைய, நம்முடைய நாகரிகம் வெகு விரைவாகச் சீரழிந்துகொண்டிருக்கிறது. ஆவிக் குரிய நற்பண்புகளை வளர்த்துக்கொள்வதற் கான வழிதுறையாக தேவன் குடும்ப வாழ்க்

கையை நிறுவியிருக்கிறார் என்பதைச் சிறப்பான முறையில் கற்பிக்கும்படி பவுல் தீமோத்தேயுவுக்கு முதல் மடலை எழுதியிருக்கிறார். ஒருவர் தனது இல்லத்தில் நன்னடத்தையை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிற நிலையில், அவர் சபையை முன்னின்று நடத்துவதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறார் என்னும் உண்மை வளர்ந்து வெளிப்பட்டுக் காணப்படும்.

கிறிஸ்தவ இல்லங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில அடிப்படைக் கோட்பாடுகளை கீழ்வரும் வசனங்களில் நாம் பெற்றிருக்கிறோம். இந்தப் பகுதியை நாம் படிக்கையில் நாம் "செய்ய வேண்டும்" என்று வலியுறுத்திச் சொல்லப்பட்டவற்றை அறிந்திருப்பது அவசியம்.

1. ஒவ்வொரு இல்லத்திலும் குடும்ப பலிபீடம் இருக்க வேண்டும் - பரிசுத்த வேதத்தைப் படிப்பதற்கும் ஜெபம் செய்வதற்கும் ஒவ்வொரு நாளும் குடும்பத்தினர் ஒன்றுகூடுகிற நேரமே இது.

2. வீட்டில் தகப்பன் அதிகாரத்தின் ஸ்தானமாக விளங்க வேண்டும். அவன் அதனை ஞானத்தோடும் அன்போடும் செயல்படுத்த வேண்டும்.

3. மனைவியும் தாயுமாயிருக்கிறவள், தான் தேவனுக்கும் வீட்டிற்கும் செலுத்த வேண்டிய கடமை, வீட்டில்தான் இருக்கிறது என்று உணர வேண்டும். பொதுவாக, மனைவி வெளியே சென்று வேலை செய்வது ஞான முடைய செயலல்ல. எனினும் இதற்கு விதிவிலக்கு உண்டு என்பதில் ஐயமில்லை.

4. கணவனும் மனைவியும் தங்களுடைய பிள்ளைகளுக்குமுன் பயபக்தியுள்ள முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். எல்லாக் காரியங்களிலேயும் அவர்கள் ஒற்றுமையுடன் காணப்பட வேண்டும்; தேவை ஏற்படும்போது பிள்ளைகளிடத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதிலும் இந்த ஒற்றுமை விளங்க வேண்டும்.

5. குடும்ப ஒற்றுமை எப்பொழுதும் பராமரிக்கப்பட வேண்டும். தொழில், சமுதாய வாழ்க்கை, ஒருவேளை கிறிஸ்தவ ஊழியம் ஆகியவற்றில் நேரம் எல்லாவற்றையும் செலவழிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, பிள்ளைகளிடத்தில் கொண்டிருக்க வேண்டிய பற்று, தோழமை, அறிவுரை வழங்குதல், ஒழுங்கு நடவடிக்கை ஆகியவற்றில் குறைவு ஏற்படக்கூடும். "உமது அடியான் அங்கும் இங்கும் அலுவலாயிருக்கும்போது, அவன் போய்விட்டான்" (1 இராஜா. 20:40) என்று பல பெற்றோர் ஒழுங்கற்று மனம்போன போக்கிலே போன மகனையோ மகளையோ பற்றி வருத்தத்தோடு அறிக்கை செய்திருக்கிறார்கள்.

6. பிள்ளைகளை ஒழுங்குபடுத்துவதில் மூன்று முக்கியமான அறிவுரைகள் தரப்பட்டுள்ளன. கோபத்தினாலே தண்டனை கொடுக்காதீர்கள், நீதியற்ற முறையில் தண்டனை கொடுக்காதீர்கள், காரணத்தைச் சொல்லாமல் தண்டனை கொடுக்காதீர்கள்.

7. இளம் பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது பிள்ளைகளுக்கு நல்லது என்பதை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் (புலம்பல் 3:27). வேலை செய்வதில் ஒழுங்கு, தங்களுக்குள்ள பொறுப்பை உணர்ந்து ஏற்றுக் கொள்ளுதல், பணத்தின் மதிப்பு இவையாவற்றையும் பிள்ளைகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

8. எல்லாவற்றிற்கும் மேலாக, தங்களுடைய பிள்ளைகள் இவ்வுலக வழக்கத்தின்படி அதிகாரம் புகழ் போன்றவற்றில் மாபெரும் வெற்றியைப் பெறவேண்டும் என்று பேராவல் கொள்ளக்கூடாது. மாறாக, வாழ்க்கையைக் கர்த்தருக்காகச் செலவிடுவதே மிகவும் பயன்தரக்கூடிய செயல் என்று அவர்களிடம் எப்பொழுதும் உயர்த்திப் பேச வேண்டும். சிலருக்கு, அது ஒருவேளை திருப்பணியில் முழுநேரமும் செலவிடுதல் என்னும் பொருளைத் தரக்கூடும், வேறு சிலருக்கு உலகீய அலுவல்களில் கர்த்தருக்காகப் பணிபுரிவது என்னும் பொருளை அது தரக்கூடும். இரண்டில் எதுவாக இருந்தாலும் கர்த்தருக்காகப் பணியாற்றுவதே முதன்மையான நோக்கமாயிருக்க வேண்டும். நாம் வீட்டில் இருந்தாலும், எங்கிருந்தாலும், நாம் கர்த்தருக்குப் பிரதிநிதிகளாக இருக்கிறோம் என்னும் உண்மையை நினைவில் கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஆகவே நாம் பேசுகிற ஒவ்வொரு சொல்லும், நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் அவருக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும், உண்மையில் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டுக் காணப்பட வேண்டும்.

**3:18** அப்போஸ்தலனின் முதலாவது ஆணை மனைவிகளை நோக்கிச் சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் **கர்த்தருக்கேற்கும்படி,** தங்களுடைய சொந்தப் **புருஷருக்குக் கீழ்ப்படிய** வேண்டுமென்று கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது. தெய்வீகத் திட்டத்தின்படி கனவனே வீட்டின் தலைவனாயிருக்கிறான். கணவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டிய ஸ்தானமே மனைவிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவளுக்கு அதிகாரம் செலுத்தவோ தலைமை தாங்கவோ இடமில்லை. மாறாக தலைமைத்துவத்தைப் பின்பற்றிச் செல்லுவதே அவளுக்குத் தரப்பட்ட இடம், எனினும் கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தை விட்டுக் கொடுக்காதபடி எங்கெல்லாம் இதைக் கைக் கொள்ள முடியுமோ அங்கெல்லாம் அவள் இதைக் கைக்கொள்ள வேண்டும். உண்மையில், சில சந்தர்ப்பங்களில் மனைவியானவள் கணவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கக் கூடிய நிலை ஏற்படலாம், ஆனாலும் அவள் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ளவளாகவே அந்தச் சந்தர்ப்பங்களில் விளங்குவாள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அவள் முதலாவது கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையுள்ளவளாக இருக்க வேண்டும். ஒருவேளை ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் கணவன் பின் தங்கிய நிலையில் இருந்தால், அவன் தன்னுடைய தலைமையிடத்தை வீட்டில் முறையாக நிறைவேற்ற அவள் அவனுக்கு உதவிசெய்ய வேண்டும். அவள் தன்னுடைய கணவனைக் காட்டிலும் அதிக சாதுரியமானவள் என்பதால் வீட்டின் அதிகாரத்தைத் தான் எடுத்துக்கொள்ளக் கூடாது.

**3:19** தேவனுடைய திருமறையில் யாவும் சம நிலைப்படுத்தப்பட்டு நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பது மிக அழகாக இருக்கிறது. மனைவிகளுக்கு அறிவுரை கொடுத்துவிட்டு அப்போஸ்தலன் நிறுத்தி விடவில்லை. **புருஷர்களுக்கும்** பொறுப்பு உண்டு என்று சொல்ல அவர் ஆயத்தமாகி விட்டார். அவர்கள் தங்களுடைய **மனைவிகளில் அன்புகூர வேண்டும், அவர்கள்மேல் கசந்து கொள்ளக்கூடாது.** இந்த எளிமையான கட்டளைகள் பின்பற்றப்பட்டால், திருமண வாழ்க்கையில் உண்டாகக்கூடிய பலவிதமான பிரச்சினைகள் காணாமல் போய்விடும். இல்லங்கள் யாவும் கர்த்தருக்குள் அதிக மகிழ்ச்சியோடு காணப்படும். உண்மையில், தன்னுடைய மனைவியினிடத்தில் மெய்யாகவே அன்புகூருகிற கணவனுக்குக் கீழ்ப்படிய எந்தவொரு மனைவியும் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டாள். தனக்குக் கீழ்ப்படிதலுள்ள மனைவியாக ஆக்குவது கணவனின் வேலை என்று இங்கு சொல்லப்படவில்லை. அவள் கீழ்ப்படியவில்லையென்றால் அதனைக் கர்த்தரிடம் அவன் எடுத்துச் செல்ல வேண்டும். அவளுடைய கீழ்ப்படிதல் "கர்த்தருக்கேற்கும்படி" மனமுவந்து செய்யப்படுவதாக இருக்க வேண்டும்.

**3:20 "உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது"** என்று பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எல்லாக் காலங்களிலும், இரண்டு எளிமையான கோட்பாடுகளின் அடிப்படையில் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து நிலைநிற்கின்றன - அதிகாரமும் கீழ்ப்படிதலும். இங்கு கீழ்ப்படிதல் பற்றிய விவரத்தையே நாம் காண்கிறோம். இந்தக் கீழ்ப்படிதல் **எல்லாக் காரியத்திலேயும்** செய்யப்பட வேண்டும் என்பதைக் கவனியுங்கள். மனதிற்குகந்த காரியங்களில் மட்டுமின்றி, இயல்பாக மனதிற்குப் பிடிக்காத காரியங்களிலும் கீழ்ப்படிய வேண்டும் என்பதுதான் இதன் பொருளாகும்.

இரட்சிக்கப்படாத பெற்றோர்களையுடைய கிறிஸ்தவப் பிள்ளைகள் அவ்வப்போது பெருந்தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். அந்தப் பிள்ளைகள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க விரும்புகிறார்கள், ஆனாலும் அவர்களுடைய பெற்றோர்களிடத்திலிருந்து பல விதமான கோரிக்கைகளை அவர்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. பொதுவாக, அவர்கள் தங்களுடைய பெற்றோர்களைக் கனப்படுத்தினால், தேவன் அதற்குப் பிரதிபலனாக அவர்களைக் கனம்பண்ணுவார். அவர்கள் தங்களுடைய பெற்றோர்களுடைய வீடுகளில் இருக்கும் வரையிலும், அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் உள்ளன என்று மிகத் திட்டவட்டமானபடி சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்து கற்பித்திருக்கிற எந்தவொரு கட்டளைக்கும் முரண்பாடானபடி அவர்கள் எதையும் செய்யக்கூடாது என்பதில் ஐயமில்லை, ஆனால் சாதாரணமாக அப்படிப்பட்ட செயல்களைச் செய்யும்படி கூறப்படுவதில்லை. மாறாக, அவர்களுக்கு மிகவும் விருப்பமற்ற செயல்களைச் செய்யும்படி அவ்வப்போது வற்புறுத்தப்படுவார்கள், அது நிச்சயமாக தவறான அல்லது பாவமான செயல் என்று காணப்படாவிட்டால் அவர்கள் அதனைக் கர்த்தருக்கென்று செய்ய வேண்டும். இந்த வகையில் அவர்கள் தங்களுடைய பெற்றோர்களுக்கு முன்பாக நல்ல சாட்சிகளாக விளங்கி, அவர்களைக் கர்த்தருக்கென்று வெற்றிகொள்ள முடியும்.

**3:21 பிதாக்கள்** தங்களுடைய **பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி,** அவர்களுக்குக் கோப மூட்டக்கூடாது. இந்தக் கட்டளையானது தாய்மார் களுக்குச் சொல்லப்படாமல் **பிதாக்களுக்கு** மட்டும் சொல்லப்பட்டிருப்பது நமது ஆவலைத் தூண்டிவிடுகிறது. ஒரு தாயைக் காட்டிலும் ஒரு தந்தை இந்தத் தவறைச் செய்யக்கூடிய ஆபத்து அதிகம் என்று இந்த வசனம் வெளிப்படுத்து கிறதோ? பெரும்பாலும் தாய்மார்களே பிள்ளை களைக் கெடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார் கள் என்று திருவாளர் கெல்லி கருதுகிறார்.

**3:22** இந்த வசனம் முதல் இந்த அதிகாரம் முடியும்வரை தேவ ஆவியானவர் **வேலைக்கார ரோடு** அல்லது அடிமைகளோடு பேசுகிறார். அடிமைகளுக்காகப் புதிய ஏற்பாடு ஒதுக்கியிருக் கிற பகுதியின் அளவைக் காணும்போது அது நமக்கு வியப்பளிக்கிறது. எந்தக் காரணமுமின்றி இது செய்யப்படவில்லை. ஒருவருடைய சமுதாய நிலை எவ்வளவு தாழ்வானதாக இருந்தாலும் அது ஒரு பொருட்டன்று, அவர் தேவனுடைய திருமறைக்கு உண்மையுள்ளவராக இருந்து தனது கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவுயர்ந்த இடத்தை அடைய முடியும் என்பதை இது காட்டு கிறது. கிறிஸ்தவ மக்களில் பெரும்பாலோர் வேலை செய்பவர்களாக இருப்பார்களேயொழிய, அதிகாரம் செலுத்தக்கூடிய பதவிகளை வகிக்க மாட்டார்கள் என்று தேவன் தம்முடைய முன்னறி வில் அறிந்திருந்தார் என்பதை இது பிரதிபலிக் கிறது என்றும் சொல்லலாம். எடுத்துக்காட்டாக, நாடுகளை ஆளுகிறவர்களுக்குப் புதிய ஏற்பாட் டில் அறிவுரைகள் எதுவும் கொடுக்கப்பட்டிருப்ப தாகக் காணப்படவில்லை, ஆனால் பிறருக்காக வேலைசெய்வதில் தங்களுடைய வாழ்க்கையை ஒப்புவித்தவர்களுக்குக் குறிப்பிடத்தக்க அளவு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. பவுல் வாழ்ந்த காலத்தில் அடிமைகள் எவருடைய கவனத்தை யும் அதிகமாகப் பெறவில்லை. ஆனால் இந்த மடல்களில் அவர்களைக் குறித்து இந்த அள விற்கு அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டிருக் கிறது என்னும் உண்மை முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களை ஆச்சரியத்திற்குள் ஆழ்த்தியி ருக்கும். ஆனாலும் எந்த அளவிற்குத் தாழ்வான நிலையில் மனிதர்கள் இருந்தாலும், தேவனு டைய கிருபையானது அவர்களை நோக்கி இறங்கிச் செல்லுகிறது என்பதை இந்தப் பகுதி வெளிப்படுத்துகிறது. திருவாளர் C. H. மெக்கின் டோஷ் கூறுகிறார்: "தேவனுடைய ஊழியத்திலி ருந்து அடிமையானவன் புறம்பே தள்ளப்பட வில்லை. அவன் தேவனுடைய பார்வையில் தன்னுடைய கடமையை மட்டுமே செய்து, அவன் தேவ உபதேசத்தை அலங்கரித்து அவருக்குப் புகழ்ச்சியைக் கொண்டுவர முடியும்."

**சரீரத்தின்படி** தங்களுடைய **எஜமான்களாக இருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலும் வேலைக்காரர்கள் கீழ்ப்படிய** வேண்டும் என்று கட்டளை பெற்றிருக்கிறார்கள். **சரீரத்தின்படி எஜமானர்கள்** என்று இங்கு ஒரு கனிவான நினைவூட்டுதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல் லோருக்கும் மேலானவரும் தமது பிள்ளைகளில் மிகவும் தாழ்மையானவர்களுக்கு என்ன செய்யப் படுகிறது என்பதைக் காண்கிறவருமாகிய ஒரு எஜமானர் இருக்கிறார். வேலைக்காரர்களோ, **மனிதர்களுக்குப் பிரியமாயிருக்க விரும்புகிற வர்களாகப் பார்வைக்கு ஊழியஞ் செய்யா மல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக கபட மில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்ய வேண்டும்.** (இதற்கு நல்லதொரு எடுத்துக்காட்டி னைப் பழைய ஏற்பாட்டில், ஆதியாகமம் 24:33 - இல் காணலாம்.) குறிப்பாக ஒடுக்கப்படும் வேளை களில், முதலாளி கவனிக்கவில்லையென்றால், தன்னுடைய வேலையைத் தளர்த்திக்கொள்ளக் கூடிய சோதனை எழும். ஆனால் கிறிஸ்தவ வேலைக்காரனோ தனது எஜமானர் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை அறிந்த வனாக, உலகச் சூழ்நிலைகள் எவ்வளவு கசப் பானதாக இருப்பினும், கர்த்தருக்கென்று செய் வதுபோல, அவன் தன்னுடைய வேலையைச் செய்வான். **கபடமில்லாத இருதயத்தோடே** என் னும் சொற்றொடர், அவன் தூய்மையான நோக் கத்தை உடையவனாயிருப்பான், அதாவது, கர்த்தராகிய இயேசுவைப் பிரியப்படுத்துவதே தன்னுடைய நோக்கம் என்று உணர்ந்திருப்பான்.

புதிய ஏற்பாட்டில் அடிமைத்தனம் வெளிப்படை யாகத் தடைசெய்யப்படவில்லை என்பது நம்மு டைய ஆவலைத் தூண்டுகிறது. சமுதாயம் நிறுவியவற்றை சுவிசேஷமானது தன்னுடைய புரட்சியின் மூலமாகத் தூக்கி எறிந்துவிடவில்லை. ஆனாலும், எங்கெல்லாம் சுவிசேஷம் சென் றதோ, அங்கெல்லாம் அடிமைத்தனம் வேரோடு பிடுங்கி எறியப்பட்டு முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு விட்டது. அவ்வாறாயின் இந்த அறிவுரைகள் நமக்கு எவ்விதப் பயனையும் தரா என்பது இதன் பொருள் அல்ல. இங்கு சொல்லப்பட்டிருக்கிறவை அனைத்தும் அலுவல் புரிவோருக்கும், அலு வலில் அமர்த்துவோருக்கும் பொருந்தும்.

**3:23,24 எதைச் செய்தாலும்** அதை மனிதர் களுக்கென்று செய்யாமல், அதைக் **கர்த்தருக் கென்று மனர்பூர்வமாய்ச்** செய்ய வேண்டும். (மனப்பூர்வமாய் - எழுத்தின்படி "ஆத்துமாவி லிருந்து".) கிறிஸ்தவ ஊழியத்தின் எல்லாக் கூறுகளிலும், அதுபோல வாழ்க்கையின் பல தரப்பட்ட நிலைகளிலும் விரும்பத்தகாத சில வேலைகள் இருக்கின்றன. அவற்றை நாம் தவிர்க்க முற்படுகிறோம் என்பதைச் சொல்ல வேண்டிய தேவையில்லை. ஆனாலும் மிகவும் இழிவான அந்த வேலையைக் கர்த்தருக்கென்று செய்வதால் அதனைப் புகழ்ச்சிக்கும் கனத்திற் கும் உரியதாக மாற்றமுடியுமென்று இந்த வசனம் கற்பிக்கிறது. இந்தப் பொருளில், உலகப்பிரகார மான வேலை புனிதமான வேலை என்ற வேறுபாடு இல்லை. எல்லாம் புனிதமானதுதான். இது மிகவும் சிறப்பான அலுவல் அல்லது பெரிதான வெற்றியாகத் தோன்றுகிறது என்னும் கருத்தோடு பரிசுகள் வழங்கப்படமாட்டா; திறமைகளின் அடிப் படையிலோ நல்வாய்ப்புகளைக் கருத்திற் கொண்டோ அவை வழங்கப்படமாட்டா; மாறாக உண்மையுள்ள தன்மையே அங்கு கணக்கிடப் படும். ஆகவே தாழ்நிலையிலுள்ள வேலைகளை உண்மையோடு கர்த்தருக்கென்று செய்வார்கள் எனில், இங்கு அத்தகைய வேலைகளைச் செய்கிறவர்கள் அங்கு பெருஞ்சிறப்பு பெறுவார் கள். அடுப்படியில் பாத்திரங்களைக் கழுவும் தொட்டிக்கு மேலே இரண்டு பொன்மொழிகள் எழுதி வைக்கப்பட்டிருக்கும்: "ஏனோதானோ என்றல்ல, வெற்றி முழக்கத்தோடு," "தெய்வீக ஊழியம் இங்கு ஒவ்வொரு நாளும் மும்முறை செய்யப்படுகிறது."

தற்காலத்தில் **கர்த்தர்** எல்லாவற்றையும் குறித்து வைக்கிறார், அவருக்கென்று செய்யப்படு கிற அனைத்தும் அவருடைய கவனத்தை ஈர்க்கும். "மனிதனுடைய தயவுக்குத் தக்கதாக தேவன் தயவைத் திரும்பக் கொடுப்பார்." இவ்வுல கத்தில் எந்தச் சொத்தையும் பெற்றிராதவர்கள் **சுதந்தரமாகிய பலனைப்** பரலோகத்தில் பெறுவார்கள். நாம் செய்ய விரும்பாததைத் செய் யும்படியாக நாம் அடுத்த தடவை அழைக்கப்படும் போது, அது ஒருவேளை சபையில் இருக்கலாம் அல்லது வீட்டில் இருக்கலாம் அல்லது அலுவல் புரியும் இடத்தில் இருக்கலாம், இதனை நினைவு கூர்ந்தவர்களாக, எவ்விதமான குறையும் சொல் லாமல், நம்மால் செய்யமுடிந்த அளவிற்குச் சிறப் பாகச் செய்யக்கடவோம்.

**3:25** இந்த வசனத்தைப் பவுல் எழுதியபோது, யாரை மனதில் நினைத்திருந்தார் என்பதை அவர் குறிப்பிடவில்லை. பெரும்பாலும் தன்னுடைய வேலைக்காரரை ஒடுக்கிய நியாயமற்ற ஓர் எஜ மானனையே நினைத்திருப்பார் என்றே தோன்று கிறது. ஒருவேளை ஒரு கிறிஸ்தவ அடிமை, தன்னுடைய எஜமானனின் நீதிக்குப் புறம்பான கோரிக்கைகளுக்குக் கீழ்ப்படிவதில் சலிப் படைந்து போயிருக்கக்கூடும். "இதைக் குறித்துப் பொருட்படுத்த வேண்டாம், எல்லாவற்றையும் தேவன் அறிந்திருக்கிறார், அவர் தவறுகளையும் அறிந்து அதற்குரியவற்றைச் செய்வார்" என்று பவுல் கூறுகிறார்.

இந்த அறிவுரையானது எஜமானர்களுக்கும் ஏற்புடையதாக இருந்தபோதிலும், இங்கே முதன் மையாக இது வேலைக்காரர்களுக்கே கொடுக் கப்பட்டிருக்கிறது. அறைகுறை வேலை, ஏமாற்று வேலை, சோம்பித்திரிதல் இன்னும் வேறுவகை யான நேர்மையற்ற தன்மை இவையாவும் கவனிக் கப்படாமல் போகா. தேவனிடத்தில் **பட்சபாதமே இல்லை**. எல்லோருக்கும் அவரே எஜமானர். மனிதர்களுக்குள்ளே இருக்கிற வித்தியாசங்கள் அவருக்கு ஒரு பொருட்டே அல்ல. அடிமையான வர்கள் தங்களது எஜமானரைக் கொள்ளையிட் டால் (ஒநேசிமு அவ்வாறு செய்தான் என்பது தெரிந்ததே), அவர்கள் கர்த்தருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

**4:1** நியாயமாய்ப் பார்த்தால் இந்த வசனம் மூன்றாவது அதிகாரத்தின் கடைசி வசனமாகத் தான் இருக்க வேண்டும். **எஜமான்கள்** தங்களு டைய **வேலைக்காரருக்கு நீதியும் செவ்வை யுமானதைச்** செய்ய வேண்டும். அவர்கள் தங்க ளுடைய வேலைக்காரருக்கு உரிய சம்பளத் தைக் கொடுக்காமல் நிறுத்திவைக்கக் கூடாது, அவர்கள் செய்த வேலைக்குத் தகுந்த சம்பளத் தைக் கொடுக்க வேண்டும். கிறிஸ்தவர்களாகிய முதலாளிகளுக்கே இங்கு நேரடியாக அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. வறியவரை ஒடுக்குவதை தேவன் வெறுக்கிறார். தங்களுடைய தொழிலாளி களிடம் நேர்மையற்ற முறையில் நடந்து, அதன் மூலமாகச் செல்வத்தைப் பெருக்கிக்கொண்ட மனிதர்கள் தரும் காணிக்கைகளை தேவன் ஏற்றுக்கொள்கிறதில்லை. "உன்னுடைய பணத்தை நீயே வைத்துக்கொள், நீ இதனைச் சம்பாதித்த விதத்தை நான் விரும்புகிறதில்லை" என்னும் பொருள்பட தேவன் பேசுகிறார் (யாக்கோபு 5:1-4 வசனங்களைக் காண்க). அவர்களுக்கும் ஒரு

**எஜமானர் பரலோகத்தில் இருக்கிறார்.** அந்த எஜமானர் தமது எல்லா வழிகளிலும் நீதியும் நேர்மையும் உடையவராய் இருக்கிறார்.

இந்தப் பகுதியை முடிக்கும் முன்னர், அப் போஸ்தலனாகிய பவுல் அனுதின வாழ்க்கைக் குரிய விஷயங்களைக் கிறிஸ்துவின் நீண்ட ஆய்வு ஒளிக்குக் கீழாக திரும்பத் திரும்பக் கொண்டுவருகிற காட்சியைக் காண்பது கவர்ச்சி யுடையதாய் இருக்கிறது: (1) மனைவிகள் - கர்த்த ருக்கேற்கும்படி (வச. 18). (2) பிள்ளைகள் - இது கர்த்தருக்குப் பிரியமானது (3) வேலைக்காரர் - கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் (வச. 22). (4) வேலைக்காரர் - கர்த்தருக்கென்றே செய்யுங்கள் (வச. 24).

### இ. விசுவாசிகளின் ஜெப வாழ்க்கையும், அவர்களுடைய வாழ்க்கை மற்றும் பேச்சின் மூலமாகச் சான்று பகருதலும் (4:2-6)

**4:2** இறைமக்கள் தங்களுடைய ஜெப வாழ்க் கையில் விடா முயற்சியுடன் இருக்க வேண்டும் என்று அறிவுரை கூறுவதில் பவுல் சோர்வடைய வில்லை. நாம் விண்ணகம் சென்று சேர்ந்த பிறகு வருத்தமடைவதற்கான காரணங்களில் ஒன்று நாம் கூடுதலான நேரத்தை மன்றாட்டில் செலவிட வில்லையே என்பதாக இருக்கும்; குறிப்பாக நம்முடைய மன்றாட்டுகள் எந்த அளவிற்கு விடை பகரப்பட்டிருக்கின்றன என்பதை அறியும்போது அந்த வருத்தம் கூடுதலாக இருக்கும். மன்றாட்டு என்னும் பொருள்பற்றிக் காணுங்கால், பல கேள்விகளுக்கு விடை கூற இயலாதபடி, அது மிகப்பெரிதான மர்மமாக விளங்குகிறது. ஆனால் இதைக் குறித்து கிறிஸ்தவன் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மை யாதெனில், அவன் அதனைப் பகுத்து ஆய்வு செய்யவோ, நுணுகிக் காணவோ கூடாது; அதனுடைய ஆழ்ந்த மர்மங் களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் தேடித்திரியக் கூடாது. இதற்கான சிறந்த அணுகுமுறை எளிய விசுவாசத் தோடு தொடர்ந்து மன்றாடுவதே ஆகும்; அறிவுக் கூர்மையினால் ஒருவனுக்கு எழும் ஐயங்களை ஒருபுறம் ஒதுக்கித் தள்ள வேண்டும்.

நாம் **இடைவிடாமல் ஜெபம்பண்ணுவது** மட்டுமின்றி, நாம் அதில் **விழித்திருக்கவும்** வேண்டும். கர்த்தராகிய இயேசு கெத்செமனே தோட்டத்தில் இருந்தபோது, தமது சீடர்களிடத் தில் விடுத்த வேண்டுதலை இந்த வசனம் நினைவு படுத்துகிறது: "நீங்கள் சோதனைக்கு உட்படாத படிக்கு ஜெபம்பண்ணுங்கள்." அவர்கள் விழித் திருக்கவில்லை, ஆகவே உறங்கிப்போய்விட் டார்கள். நாம் உறங்காதபடி விழித்திருப்பது மட்டு மின்றி, நம்முடைய எண்ணங்கள் அங்குமிங்கும் அலையாதபடியும், உற்சாகம் குன்றிப்போகாத படியும், உண்மையற்றுப் போய்விடாதபடியும் காத் துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஜெப நேரத்தை எதுவும் கொள்ளைகொண்டு போகாத படி நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும் (எபே. 6:18). மேலும், நம்முடைய மன்றாட்டுகள் **ஸ்தோத்திரத்துடன்** கூடியதாக இருக்கவேண் டும். ஏற்கனவே விடைதரப்பட்ட நம்முடைய மன்றாட்டுகளுக்காக நாம் ஸ்தோத்திரம் செலுத்து வதோடு, பதில் தரப்படாத மன்றாட்டுகளுக்காக வும் நன்றி செலுத்தவேண்டும். திருவாளர் கை கிங் இதனை நயம்படத் தொகுத்து உரைத்திருக் கிறார்: "நமக்கு எது சிறந்ததோ அது நமக்குக் கிடைக்க வேண்டுமென்று அவருடைய அன்பு விரும்புகிறது; நமக்கு எது சிறந்தது என்பதை அவருடைய ஞானம் அறிந்திருக்கிறது; நமக்கு எது சிறந்ததோ அதை அவருடைய வல்லமை தந்தருளுகிறது."[21]

**4:3,4** கொலோசெயர் தனக்காகவும் ஜெபம் செய்ய நினைவுகொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று பவுல் வேண்டிக்கொள்கிறார்; அவரோடு ரோமாபுரியில் உடன் இருக்கிற கர்த்த ருடைய ஊழியர்களுக்காகவும் அவர்கள் மன்றாட வேண்டுமென்றும் அவர் விரும்புகிறார். சிறைச்சாலையிலிருந்து அவர் விடுதலை அடை வதற்காக அவர்கள் மன்றாடவேண்டுமென்று அவர் கேட்கவில்லை, மாறாக அவர் திருவசனத் தைப் பிரசங்கம் செய்யும்படி வாசலை தேவன் திறந்தருள வேண்டுமென்று அவர்கள் மன்றாட வேண்டும். இது மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தேவன் தனக்குக் கதவுகளைத் திறக்க வேண்டுமென்பது அவருடைய விண்ணப்ப மாகும். இதில் எவ்வளவு முக்கியமான பாடம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது! நாம் எங்கும் சுற்றித்திரிந்து, கிறிஸ்தவ ஊழியத்தின் பொருட்டு நமக்கு நாமே கதவுகளைத் திறக்கக்கூடிய வாய்ப் பும் உண்டு. ஆனால் இந்த ஆபத்தை நாம் தவிர்க்க வேண்டியது அவசியம். கர்த்தர் நமக்குக் கதவுகளைத் திறப்பாரென்றால், நாம் நம்பிக்கை யுடன் அதற்குள் நுழைவோம், அவர் வழிநடத்து கிறார் என்ற உணர்வோடு நுழைவோம். இதற்கு மாறாக நமக்கு நாமே கதவுகளைத் திறந்திருந் தால், நாம் கர்த்தருடைய சித்தத்தின்படி செயல் படுகிறோமா என்ற நிச்சயம் இருக்காது; கர்த்தரு டைய ஊழியம் என்னும் பெயரளவிலான அந்த

ஊழியத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு நாம் உலகீய வழிகளைப் பின்பற்ற கீழ்நிலைக்குச் சென்றுவிடுவோம். **கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற பவுல் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச, திருவசனம் செல்லும்படியான வாசல் திறக்கப்பட** வேண்டுமென்பதே அவருடைய குறிப்பிட்ட விண்ணப்பமாயிருந்தது. **கிறிஸ்துவினுடைய இரகசியம்** என்று இந்த வசனத்தில் சொல்லப் பட்டிருப்பது சபையைக் குறித்த சத்தியமாகும்; "புறவினத்தாருக்கான கிறிஸ்து" என்னும் சொற் றொடரில் அந்தக் குறிப்பிட்ட அம்சம் வரையறுத் துக் கூறப்படும். நற்செய்தியின் சிறப்பு அம்சமாக அது விளங்குகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கிக்கும்படி அவருக்கு அந்தச் சிறப்பான அம்சம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. யூதர்கள் எவ்வாறு இரட்சிப்படைய முடியுமோ அதே முறை யில் புறவினத்தாரும் இரட்சிப்படைய முடியம் என்று அவர் துணிவுடன் கூறியதால் இந்த ஊழி யம் அவருக்கு ஒப்புவிக்கப்பட்டது. மேலும் யூதத் தலைவர்கள் இதனிமித்தமே அவரை இறுதியில் ரோமாபுரிக்குக் கைதியாக அனுப்புவதில் வெற்றி கண்டார்கள்.

பவுல் சிறையில் இருந்தபோது சபையைக் குறித்த இந்தப் பெரிதான இரகசியம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது என்று சிலர் கருதுகிறார் கள். ஆகவே அவர்கள் இந்தச் சிறையிருப்பு மடல்களுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து நற்செய்தி நூல்களுக்கும் புதிய ஏற் பாட்டின் பிற நூல்களுக்கும் அதிக முக்கியத் துவம் இல்லை என்று தோன்றும்படி நடந்து கொள்கிறார்கள். ஆனால், அந்த இரகசியத்தைப் பிரசங்கித்ததன் காரணமாகவே அவர் சிறையில் அடைக்கப்பட்டார் என்பது இந்த வசனத்திலி ருந்து மிகத் தெளிவாக விளங்குகிறது. ஆகவே அவர் கைது செய்யப்படுவதற்கு முன்னமே இந்த இரகசியம் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இதனை **வெளிப்படுத்துவதற்கு** அவர் பேராவல் கொண்டிருந்தார். அதாவது, மக்கள் உடனடியாகப் புரிந்துகொள்ளும்படி மிகத் தெளி வான முறையில் பிரசங்கிக்க வேண்டுமென்று அவர் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தார். கிறிஸ்துவை அறியச் செய்ய வேண்டுமென்னும் நாட்டமுடைய ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதே விருப்பத்தைக் கொண்டிருக்க வேண்டும். "மதி நுட்பம் உடையராக" இருப்பதில் எந்த நன்மையும் இல்லை. மனுக்குலத்தின் பெரும்பான்மை மக்க ளைச் சென்றடைவதை நாம் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அதற்காக, செய்தியை எளிமையாகவும் தெளிவாகவும் நாம் கொடுக்க வேண்டும்.

**4:5** கிறிஸ்தவர்கள் **புறம்பேயிருக்கிறவர் களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத் தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள** வேண் டும். அவர்களுடைய அனுதின வாழ்க்கையில் அவர்களை அவிசுவாசிகள் மிகக் கவனமாகப் பார்க்கிறார்கள் என்பதை விசுவாசிகள் உணர்ந் திருக்க வேண்டும். நம்முடைய பேச்சைக் காட்டி லும் நம்முடைய நடத்தையில் இந்த உலகம் அதிக ஆர்வம் உடையதாயிருக்கிறது. "எந்த வொரு நாளிலும் ஒரு பிரசங்கத்தைக் கேட்பதைக் காட்டிலும் அதைப் பார்க்கவே விரும்புகிறேன்" என்று எட்கார் கஸ்ட் கூறியிருக்கிறார். தன்னு டைய உதடுகளினால் விசுவாசி கிறிஸ்துவை அறிக்கை செய்ய வேண்டியதில்லை என்பது இதன் பொருள் அன்று. ஆனால் இங்கு சொல்லப் பட்டிருக்கிற செய்தி என்னவெனில் நம்முடைய நடத்தையானது நம்முடைய பேச்சுக்கு ஏற்புடைய தாக இருக்க வேண்டும். "பகட்டான பேச்சு, இழி வான நடத்தை" என்று ஒருவரும் நம்மைக் குறித்துச் சொல்லக் கூடாது.

**காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள் ளுதல்** என்பது "சந்தர்ப்பங்களை வாங்குதல்" என்று பொருள்படும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வின் இரட்சிப்பின் வல்லமையைக் குறித்துச் சான்றுகூற ஒவ்வொரு நாளும் நாம் பல சந்தர்ப் பங்களைச் சந்திக்க நேரிடும். இவ்விதமாக நம்மிடமாய் வரக்கூடிய சந்தர்ப்பங்களை விரைந்து சென்று கைப்பற்ற வேண்டும். "வாங்குதல்" என்னும் சொற்றொடரில், அங்கு ஒரு விலை கொடுக்கப்பட வேண்டும் என்னும் சிந்தனை அடங்கியிருக்கிறது. ஆனால் அது என்ன விலை யாயினும், நம்முடைய உன்னதமான இரட்ச கரை, அவரை அறியாத மக்களிடம் பகிர்ந்தளிக்க நாம் ஆயத்தத்தோடு இருக்க வேண்டும்.

**4:6 அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று** நாம் **அறியும்படிக்கு,** நம்முடைய **வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயும்** இருக்கவேண்டும். நம்முடைய உரையாடல்கள் எப்பொழுதும் **கிருபை பொருந்தினதாயும்,** மரியாதை உடையதாயும், தாழ்மையானதாயும், கிறிஸ்துவின் உரையாடலைப் போன்றதாயும் இருக்க வேண்டும். அது வம்பளப்பதாகவோ,

முட்டாள்தனமான தாகவோ, அசுத்தமானதாகவோ, கடுமையான தாகவோ இருக்கக்கூடாது. **உப்பால் சாரமேறியது** என்னும் சொற்றொடர் பல அர்த்தங்களை உடையது. நம்முடைய உரையாடல் கிருபை பொருந்தினதாக இருந்தாலும், அது அதற்கு நிகராக நேர்மையானதாகவும் கபடற்றதாகவும் இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள் என்று சில விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள். உணவின் சுவையை **உப்பு** கூட்டி வழங்குவதால், நம்முடைய உரையாடல் மந்தமானதாகவோ, உணர்ச்சியற்று ஒரே மாதிரியாகவோ, கிளர்ச்சி அற்றதாகவோ இருக்கக்கூடாது, மாறாக அது எப்பொழுதும் பயனுள்ளதும் நன்மை விளைவிப் பதுமாக இருக்கவேண்டும் என்பதே இதன் பொருள் என்று வேறு சிலர் கருதுகிறார்கள். சமயச் சார்பற்ற எழுத்தாளர்கள் "நகைச்சுவையைக்" குறிப்பிட "உப்பு" என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் என்று லைட்.புட் என்பார் கூறுகிறார். பவுல் நகைச்சுவையை ஞானமாக மாற்றுகிறார். கர்த்தராகிய இயேசுவின் பேச்சை ஆய்ந்துணருவதே இதன் பொருளை அறிவதற்கான சிறந்த வழியாக விளங்கும் என்றே தோன்றுகிறது. விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் பார்த்து, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே" என்று அவர் கூறினார். இங்கு நாம் கிருபையையும் உப்பையும் ஒருங்கே காண்கிறோம். யாக்கோபின் கிணற்றண்டையில் ஒரு பெண்மணியிடம் கர்த்தராகிய இயேசு மீண்டும் பேசுகிறார்: "தாகத்துக்குத் தா.. நீ போய், உன் கணவனை இங்கே அழைத்துக் கொண்டு வா." அவருடைய பேச்சின் முதல் பகுதி கிருபை உடையது, பிந்தினதோ நமக்கு உப்பை நினைவுபடுத்துகிறது.

**அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு.** கொலோசெயரிடம், வெளித்தோற்றத்தில் நியாயமென்று காணப்பட்ட கள்ள உபதேசங்களோடு வந்த ஞானமார்க்கத்தாரையே அப்போஸ்தலனாகிய பவுல் நினைத்துக் கொண்டிருந்தார் என்றே தோன்றுகிறது. இந்தக் கள்ள போதகர்களுக்கு ஞானத்தோடும் உண்மைத்தன்மையோடும் கூடிய சொற்களால் விடைகூற அவர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

### ஈ. பவுலின் உடன் ஊழியர் சிலரைப் பற்றிய குறிப்புகள் (4:7-14)

**4:7** இந்த மடலை ரோமாபுரியிலிருந்து கொலோசெ பட்டணத்திற்கு அனுப்புவதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் தெரிந்தெடுத்த மனிதரே **தீகிக்கு** என்பவர் எனத் தெரிகிறது. "ஆரவார மிக்க ரோமாபுரி ஆடம்பரத்தையும் மிஞ்சி, வரை தோலில் எழுதப்பட்ட அந்த மடல் நீடித்திருக்கும் என்றும், அதில் அவருடைய பெயர் எழுதப்பட்டிருப்பதால், இந்த உலகம் முழுவதும் எல்லாக் காலத்திலும் அவருடைய பெயர் அறியப்பட்டிருக்கும் என்றும் தீகிக்குவிடம் சொல்லப்பட்டிருந்தால் அது அவருக்கு எந்த அளவிற்கு வியப்பைத் தந்திருக்கும் என்று திருவாளர் மாக்லேரன் படவுருவில் காண்கிறார்.

தீகிக்கு அவர்களிடம் வரும்போது அப்போஸ்தலனைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அறிவிப்பார் என்று பவுல் பரிசுத்தவான்களுக்கு உறுதி கூறுகிறார். மீண்டுமாக, இந்தச் சகோதரனைக் குறித்து அப்போஸ்தலன் சிறப்பாக வழங்கியுள்ள புகழுரைச் சொற்களைப் படிப்பது உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது. **பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு** என்று அவர் அழைக்கிறார். இந்த நாட்களிலே சபையின் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற சமயப்பதவிகளின் பெயர்கள் பெருந்தொனியுடன் ஒலிக்கின்றன. ஆனால் அவற்றைக் காட்டிலும் இங்கு தரப்பட்டுள்ள பட்டங்கள் எவ்வளவு சிறப்பு வாய்ந்தவையாகத் திகழ்கின்றன! இவற்றை எவ்வளவு அதிகமாக நாம் நாடவேண்டும்!

**4:8** கொலோசெ பட்டணத்துக்குத் தீகிக்கு மேற்கொண்ட பயணம் இருநோக்கு உடையதாயிருந்தது. முதலாவது, பவுலைப் பற்றிய விவரங்களையும் அவரோடு இருந்த உடன் ஊழியர்களைப் பற்றிய விவரங்களையும் நேரடியாகச் சொல்லக்கூடிய வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது, மேலும் அவர் கொலோசெயருடைய **இருதயங்களைத் தேற்றுவார்.** மீண்டும் இங்கே தேற்றுதல் என்னும் சொல் ஆறுதல் அளிப்பது என்னும் பொருளைக் காட்டிலும் கூடுதலாக "பலப்படுத்தப்படுதல்" அல்லது "உற்சாகப்படுத்தப்படுதல்" என்னும் பொருளைத் தருகிறது என்றே தோன்றுகிறது (2:2 -ஆம் வசனத்தைக் காண்க). அந்த நாட்களில் நிலவிவந்த கள்ளபோதகங்களை எதிர்த்து நிற்கத்தக்க வலிமையைப் பெற்றுக் கொள்வதற்கு உதவிசெய்வதே அவருடைய ஊழியத்தின் பொதுவான விளைபயனாக இருந்தது.

**4:9** அப்போஸ்தலனாகிய பவுல் பிலேமோனுக்கு எழுதிய மடலில் கூறப்பட்டுள்ள அழகிய கதை

யினை **ஒநேசிமு** என்னும் பெயர் நம் கண்முன் கொண்டுவருகிறது. தண்டனையிலிருந்து தப்பும் படி ரோமாபுரிக்கு ஓடிச்சென்ற அடிமையே ஒநேசிமு என்பவர். எப்படியோ அவருக்கு பவுலோடு தொடர்பு ஏற்பட்டது, அவர் அந்த அடிமைக்குக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி வைத்தார். இப்பொழுது ஒநேசிமு முன்னர் தனக்கு எஜமான னாயிருந்த கொலோசெ பட்டணத்து பிலேமோனி டமாய்த் திரும்பி வரப்போகிறார். கொலோசெ பட்ட ணத்து சபையின் மடலைத் தீகிக்கு எடுத்து வரு கின்ற அதே வேளையில், ஒநேசிமு பிலேமோனுக் குப் பவுல் எழுதிய மடலை எடுத்துக் கொண்டுவரு வார். அவ்விரு சகோதரரும் பவுல் எழுதிய இரண்டு மடல்களை ஏந்தியவராக வந்தபோது, அங்கிருந்த விசுவாசிகள் எவ்வளவாகக் கிளர்ச்சி அடைந் திருப்பார்கள் என்பதை நமது மனக்கண்முன் காட்சியாகக் கொண்டுவருவோம்! மாலையில் நெடுநேரம் சென்ற பிறகும், அமர்ந்திருந்தவர் களாக, ரோமாபுரி என்ன நிலையில் இருந்தது, தன்னுடைய இரட்சகருக்காகப் பவுல் எவ்வளவு உற்சாகத்துடன் அங்கு ஊழியம் செய்து வந்தார் என்ற விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்திருப் பார்கள்.

**4:10** கர்த்தருக்காக ஆற்றிய பணியின் நிமித் தம் முன்னர் கைது செய்யப்பட்ட நிகழ்ச்சியைத் தவிர **அரிஸ்தார்க்கு** என்ற மனிதனைப் பற்றி வேறு எதுவும் நமக்குத் தெரியாது. அந்த நிகழ்ச்சி அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் 19:29 -இல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது அவர் பவுலோடுகூடக் **காவலிலிருக்கிறார்.**

இங்கே **மாற்கு பர்னபாவுக்கு இனத்தான்** என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார். இந்த இளைஞன் பவுலும் பர்னபாவும் திருப்பணியைத் தொடங்கிய காலத்தில் அவர்களோடு பயணத்தைத் தொடங் கினார். அவருடைய தோல்வியின் நிமித்தமாக, அவரை உடன் அழைத்துச் செல்லக்கூடாது என்று பவுல் தீர்மானித்தபோது, பர்னபாவோ அவரை அழைத்துச் செல்ல வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். அவ்விரு மூத்த ஊழியர் களுக்கிடையே பிணக்கம் ஏற்பட அது காரணமா யிற்று. ஆனாலும் அந்தத் தோல்வியோடு மாற்கு வின் ஊழியம் நிறைவுபெற்றுவிடவில்லை. இப் பொழுதோ அன்புக்குரிய பவுலின் நம்பிக்கை யினைப் பெறும்படியாக மாற்கு சீர்பொருந்தினார்.

கொலோசெ பட்டணத்துக்கு மாற்கு வருவா ரென்றால், அங்குள்ள பரிசுத்தவான்கள் அவரை **அங்கிகரிக்க** வேண்டும். **இவரைக் குறித்துக் கட்டளை பெற்றீர்களே** என்னும் சொற்றொடர், மாற்குவைக் குறித்துக் கொலேசெ பட்டணத்தார் முன்னரே ஏதோ கட்டளை பெற்றிருந்தார்கள் என் னும் பொருளைத் தருகிறது என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. சற்று முன்னர், **இவர் உங்களிடத்தில் வந்தால் இவரை அங்கிகரித் துக் கொள்ளுங்கள்** என்று பவுல் கூறிய கட்டளை யையே அவர் குறிப்பிடுகிறார் என்றும் பொருள் கொள்ளலாம். (தமிழில் இவ்விரண்டு சொற் றொடர்களும் முன்பின் இருக்கின்றன.) **பெற்றீர் களே** என்னும் வினைச்சொல், சற்று முன்னர் அந்த அறிவுரையைக் கொலோசெ பட்டணத்தார் பவுல் எழுதிய மடலை வாசித்துக் கேட்ட முந்தின தருணத்தையே குறிக்கிறது. மாற்கு எழுதிய இரண்டாவது நற்செய்தி நூல், நாமும் கூட ஒவ் வொரு நாளும் நற்செய்தியை எழுதிக் கொண்டி ருக்கிறோம் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது:

நண்பரே! நீர் எழுதும் நற்செய்தி
நாளொன்றுக்கொரு பகுதி,
அன்பரே நீர்புரியும் செயல்களும்
பேச்சுமே அச்செய்தி அறிவீரோ!

உண்மையோ அல்லவோ உம்செய்தி
பலரும் படிப்பாரே அச்செய்தி
சொல்லுவீர்! எச்செய்தி நற்செய்தி
உம்வாழ்வில் வரைந்திடுவீர் அச்செய்தி!

**4:11** பவுலோடு உடன் ஊழியம் செய்த இன் னொருவருடைய பெயர் **யுஸ்து என்னப்பட்ட இயேசு** என்பதாகும். இயேசு என்னும் பெயர் அந்நாட்களில் பொதுவாக வழக்கில் இருந்தது. இந்நாட்களிலும்கூட சில நாடுகளில் அந்தப் பெயர் சூட்டப்பட்டு வருகிறது. "யோசுவா" என் னும் எபிரெயப் பெயருக்கு இணையான கிரேக்கப் பெயரே இது. தேவனுடைய குமாரனுடைய பெயரை வேறொருவர் கொண்டிருப்பது பொருந்தா ஒன்றென நினைத்து, அன்னாருடைய கிறிஸ்தவ நண்பர்கள் அவரை யுஸ்து என்று அழைத்தார் கள் என்பதில் ஐயமில்லை.

இங்கு குறிப்பிடப்பட்ட மூன்று நபர்கள் மட்டுமே யூதர்களாயிருந்து மனமாற்றம் பெற்றவர்கள். முன்பு யூதர்களாயிருந்து, தங்களுடைய இரட்சிப் புக்குப் பிறகு **தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு** பவுலின் **உடன் வேலையாட்களாக உழைத்து** அவருக்கு **ஆறுதல் செய்து வந்த வர்கள்.**

**4:12** இவ்விதமாக, அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய மடலை முடிவுக்குக் கொண்டு

வருகிற தருணத்தில், கொலோசெ பட்டணத்தில் தனக்குப் பிரியமாயிருந்த பரிசுத்தவான்களுக்குத் தன்னுடைய சொந்த வாழ்த்துகளைக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டுமென்று **எப்பாப்பிரா** அவருக்கு நினைவுபடுத்துகிறார். எப்பாப்பிரா கொலோசெ நகரத்தைச் சேர்ந்தவர். அவர்கள் **தேவனுக்கு சித்தமான எல்லாவற்றிலும் தேறின வர்களாகவும் பூரண நிச்சயம் உள்ளவர்களாகவும் நிலைநிற்க வேண்டுமென்று** தன்னுடைய ஜெபங்களில் இடைவிடாமல் நினைவுகூர்ந்தவராக இருந்தார்.

**4:13** கொலோசெ நகரத்தில் இருந்த விசுவாசிகளுக்காக மட்டுமின்றி, **லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும்** எப்பாப்பிரா போராடினார் என்னும் உண்மைக்குப் பவுல் இங்கு **சாட்சி கூறுகிறார்**. தனக்கு அறிமுகமான இறைமக்களிடத்தில் இவருக்குத் தனிப்பட்ட ஆர்வம் இருந்தது. இவரிடம் நீண்டதொரு ஜெபப் பட்டியல் இருந்தது, அந்தப் பட்டியலில் இருந்த ஒவ்வொரு பெயரையும் ஒவ்வொரு நாளும் அவர் தன்னுடைய ஜெபத்தில் நினைவுகூர்ந்தார் என்பதில் ஐயமில்லை. “நீங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் முழு ஈடுபாடு கொண்டிருக்க வேண்டுமென்றும், வளர்ச்சியும் உறுதியும் உடைய நம்பிக்கையோடு நிலைநிற்க வேண்டுமென்றும் அவர் உங்களுக்காக கடுமையாக மன்றாடுகிறார்” (NEB).

**4:14 பிரியமான வைத்தியனாகிய லூக்கா, தேமா** ஆகியோருடைய வாழ்த்துதலைப் பவுல் இப்பொழுது தெரிவிக்கிறார். இங்கே ஒரு முரண்பாடான பாடத்தைப் பெற்றிருக்கிறோம். குறிப்பிடத்தக்க அளவுக்கு அப்போஸ்தலனாகிய பவுலோடு பயணம் மேற்கொண்டவரும், அவர் நோய்வாய்ப்பட்ட நேரங்களிலும், இன்னல்களுக்குட்படுத்தப்பட்ட வேளைகளிலும், கைதியாகச் சிறையில் இருந்த காலத்திலும் உடனிருந்து அவருக்கு சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரிய நிலையிலும் ஊழியம் செய்தவர் லூக்கா.

இதற்கு மாறாக, தேமா அப்போஸ்தலனுடன் சிறிது காலம் இருந்தார். ஆனால் அவரைக் குறித்து “தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்” என்று பவுல் இறுதியில் சொல்லவேண்டிய தேவை ஏற்பட்டது (2 தீமோ. 4:10).

### உ. வாழ்த்துகளும் அறிவுரைகளும் (4:15-18)

**4:15 லவோதிக்கேயாவில் இருந்த சகோதரருக்கும், நிம்பாவிற்கும் அவருடைய வீட்டில் கூடிய சபைக்கும்** இப்பொழுது வாழ்த்துகள் தெரிவிக்கப்படுகின்றன. லவோதிக்கேயா சபையைக் குறித்து நாம் மீண்டும் வெளிப்படுத்தின விசேஷம் 3:14-22 ஆகிய வசனங்களில் படிக்கிறோம். அங்கிருந்த சபை தேவனுடைய காரியங்களைக் குறித்து வெதுவெதுப்பாக மாறிவிட்டது. அது பொருட்செல்வத்தில் முழு ஈடுபாடு கொண்டதாகவும், தன்னைக் குறித்து மனநிறைவு கொண்டதாகவும் மாறிவிட்டது. எல்லாம் நன்றாக இருக்கிறது என்று எண்ணியவர்களாக, தங்களுடைய நிர்வாணத்தை அவர்கள் உணராதிருந்தார்கள். நிம்பா (ஆண்), நிம்பாள் (பெண்) இவற்றில் எது சரி என்பதைக் குறித்து பிரதிகளில் முரண்பாடு இருக்கிறது. ஆனால் கொலோசெ பட்டணத்தில் அந்த வீட்டில் ஒரு சபை கூடிவந்தது என்பதைத் தெரிந்துகொண்டால் அது போதும். அந்த நாட்களில் கிறிஸ்தவர்கள் இந்நாட்களைப் போல பெரிதும் கம்பீரமானதுமான கட்டடங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆனாலும், ஓர் உள்ளூர் சபையில் பெரிய கட்டடத்தைக் காட்டிலும், கவர்ச்சியான அலங்கரிப்பைக் காட்டிலும் தேவனுடைய வல்லமையே மிகவும் இன்றியமையாதது என்பதை நம்மில் பலரும் உடனடியாக ஒப்புக்கொள்ளுவோம். வல்லமை அலங்கார மாளிகைகளைப் பொருத்ததல்ல. அலங்கார மாளிகைகளே பல நேரங்களில் வல்லமைக்குத் தடையாக இருக்கின்றன.

**4:16** இந்த மடலைக் கொலோசெ பட்டணத்தில் படித்து முடித்த பிறகு, **லவோதிக்கேயா சபைக்கு** அனுப்ப வேண்டும், அங்கும் அது **வாசிக்கப்பட** வேண்டும். இந்தக் கட்டளை நிறைவேற்றப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த மடலில் சொல்லப்பட்டுள்ள அறிவுரைக்கு, குறிப்பாக அது நீண்டநாட்கள் நிலைத்திருக்கும்படி, லவோதிக்கேயா சபை மக்கள் செவிகொடுக்கவில்லை என்பது வெளிப்படுத்தின விசேஷத்தின் மூன்றாவது அதிகாரத்திலிருந்து புலப்படுகிறது.

**லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபம்** கொலோசெ பட்டணத்தில் வாசிக்கப்பட வேண்டும் என்று பவுல் அறிவுறுத்துகிறார். இங்கு எந்த மடல் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அறிவது

இயலாத செயல். "பவுல் எபேசியருக்கு எழுதிய" மடல் என்று பெயர்பெற்ற கடிதமே இங்கு குறிப் பிடப்பட்டுள்ளது என்று சிலர் கருதுகிறார்கள். எபேசியர் 1:1 -ஆம் வசனத்தில் "எபேசுவிலே" என்று காணப்படும் சொல் சில பழம் பிரதிகளில் விடுபட்டுள்ளது. ஆகவே எபேசியருக்கு எழுதப் பட்ட மடல் உண்மையில் ஒரு சுற்றறிக்கை மடல் என்றும், அது எபேசு, லவோதிக்கேயா, கொலோசெ போன்ற பல நகரங்களில் படிக்கப்பட வேண்டும் என்று நம்புவதற்கு இது காரணமாயிற்று. கொலோசெயருக்கு எழுதிய மடலில் உள்ளது போல இல்லாமல், எபேசு மடலில் தனிப்பட்ட வகையிலான குறிப்புகள் மிகக் குறைவாகவே இடம் பெற்றுள்ளன; இவ்வுண்மை இந்தக் கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது.[22]

**4:17 அர்க்கிப்பு கர்த்தரிடத்தில் பெற்ற ஊழி யத்தை நிறைவேற்றும்படி** கவனமாக இருக்க வேண்டுமென்று இங்கு சொல்லப்பட்டுள்ளது. மீண்டுமாக, இங்கு என்ன ஊழியம் குறிப்பிடப் பட்டுள்ளது என்பது தெளிவாகச் சொல்லப்பட வில்லை. பிலேமோனின் மகனே அர்க்கிப்பு என் றும் அவர் கொலோசெ சபையில் சுறுசுறுப்பாக செயல்படுகிறவராக இருந்தார் என்றும் பலர் கருதுகிறார்கள். இந்த இடத்தில் அர்க்கிப்பு என்னும் பெயருக்குப் பதிலாக நமது பெயரை இட்டு நாம் படிப்போமென்றால் இது பொருள் மிகுந்த வசனமாக விளங்கும்; தேவ ஆவியான வர், **"நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாக"** என்று நம்மிடத்தில் கூறுகிற சத்தத்தைக் கேட் போம். நம்மில் ஒவ்வொருவருக்கும் கர்த்தரு டைய ஊழியத்தில் ஒரு பங்கு அளிக்கப்பட் டுள்ளது, அதனை எந்த அளவு செய்திருக் கிறோம் என்னும் கணக்கை ஒரு நாளில் நாம் ஒப்புவிக்க வேண்டும்.

**4:18** இந்தச் சமயத்தில், அப்போஸ்தலன் எழுதுகோலை எடுத்துத் தனது **கையினால்,** தனது கடைசி **வாழ்த்தை,** தன்னுடைய புறவினப் பெயராகிய **பவுல்** என்னும் பெயரை எழுதிக் கையெழுத்திடுகிறார். அவருடைய கரங்களில் சங்கிலி கட்டப்பட்டிருக்கிற நிலையில், அது அவருக்கு அதிக இடர்பாட்டைக் கொடுத்திருக் கும். ஆனாலும் அது "நான் கட்டப்பட்டிருக்கிறதை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று அவர் கொலோசெயரிடம் கூறும்படி அவருக்கு நினைவு படுத்தியிருக்கும். "சமயவுரை அறிஞரைக் கட்டிய சங்கிலிகள் இறைவனின் திருமறையை கட்டி வைக்க முடியாது என்பதற்கான அடையாளமாக விளங்குவது யாதெனில் எழுதுகோல் மற்றும் சங்கிலி ஆகியவற்றின் ஒலியேயாகும்."[23] பின்னர் **கிருபை உங்களோடிருப்பதாக** என்னும் சொற் களோடு அவர் மடலை முடிக்கிறார். "கிருபை என் னும் சொல்லைக் காட்டிலும் வளம் மிக்க சொல் வேறில்லை. அதுவே ஈவாக நமக்கு அளிக்கப் பட்ட இறைமகனிடத்தில் காணப்படும் நிறைவான இறை அன்பினை நம்மிடமாய்ச் சுமந்து வரு கிறது" என்கிறார் திருவாளர் A. T. இராபர்ட்சன்.[24] **ஆமென்.**

## அடிக்குறிப்புகள் - End Notes

1 (Intro) George Salmon, *A Historical Introduction to the study of the New Testament*, p. 384.

2 (Intro) *New Bible Commentary*, p. 1043.

3 (Intro) A T. Robertson, *Paul and the Intellectuals*, p. 16.

4 (1:5) J. B. Lightfoot, *Saint Paul's Epistles to the Collosians and to Philemon*, p. 134.

5. (1:6) பழைமைப் பிரதியிலும் (NU) பெரும்பான் மைப் பிரதியிலும் (M) "அது வளர்கிறதுமாயிருக் கிறது" என்னும் சொற்கள் சேர்க்கப்பட் டுள்ளன.

6 (1:11) A. S. Peake, "Colossians", *The Expositor's Greek Testament*, III:499.

7. (1:14) "அவருடைய இரத்தத்தினாலே" என்னும் சொற்கள் இதற்கு இணையான எபே சியர் 1:7 –இல் என்னும் பகுதியில் இடம்பெற்றி ருக்கிறது. ஆனால் பழைமைப் பிரதியிலும் (NU) பெரும்பான் மைப் பிரதியிலும் (M) இச்சொற்கள் இடம்பெற வில்லை.

8 (1:18) Alfred Mace, furthur documentation unavailable.

9. (1:19) oikeo என்ற சொல்லின் அழுத்த மான சொல் அமைப்பாகிய kakoikeo என்னும்

சொல் ''அவரிடத்தில் குடியிருந்து தமக்கு வீடாக்கிக் கொண்டன'' என்னும் பொருளைத் தருகிறது.

10 (1:21) Charles R. Erdman, Epistle of Paul to the Colossians and Philemon, p. 46.

11. (1:22) ''ஆல்'' என்னும் விகுதிக்குக் கிரேக்க மொழியில் இரண்டு சொற்கள் உள்ளன (நை மற்றும் நயே). எழுத்தாளர் அல்லது பேசுகிறவர் எதைச் சொல்ல விழைகிறார் என்பதைக் குறிப்பிட பல வகையான இலக்கண அமைப்புகளும் அம்மொழியில் உள்ளன. இங்கு சொல்லப்பட்டுள்ளவாக்கிய அமைப்பின்படி அவர்கள் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருப்பார்கள் என்னும் பொருளோடுதான் பவுல் பேசுகிறார்.

12 (1:22) Pridham, further documentation unavailable.

13 (2:2) Alfred Mace, further documentation unavailable.

14 (2:9) Marvin Vincent, *Word Studies in the New Testament*, II:906.

15 (2:14) H. A. W. Meyer, *Critical and Exegetical Handbook to the Epistles to the Philipplians and Colossians,* p. 308.

16. (2:18) ''காணாதவை'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''காண்கிறவை'' என்ற சொல்லே பழைமைப் பிரதியில் இடம்பெற்றுள்ளது. ஆனால் இரண்டின் பொருள்விளைவும் ஒன்றுதான். அவர்கள் எதையாவது உண்மையில் கண்டாலும் காணா விட்டாலும் அவை இம்மைக்குரிய வெறுமையே யாகும்.

17 (3:2) Robertson, *Intellectuals*, p.149.

18 (3:2) F. B. Hole, *Paul's Epistles,* Volume Two, p. 105.

19 (3:11) J. C. Ryle, *Holiness*, pp. 436, 455.

20 (3:12) W. E. Vine, *Expository Dictionary of New Testament Words*, p. 56.

21 (4:2) Guy King, *Crossing the Border*, p. 111.

22. (4:16) பவுல் மூன்று ஆண்டுகள் எபேசுவில் தங்கியிருந்தார். அவர் அதிகமான விசுவாசிகளை அறிந்திருந்தார். எனவே சிலருடைய பெயரை மட்டும் எழுதிவிட்டு மற்றவர்களுடைய பெயரை எழுதாமல் விட்டுவிட்டால், அது பெயர் விடப்பட்டவர்களின் உள்ளத்தைப் புண்படுத்தக் கூடியதாகக் காணப்படும்.

23 (4:18) *New Bible Commentary*, p. 1051.

24 (4:18) Robertson, *Intellectuals*, p. 211.

## BIBLIOGRAPHY

(Colossians and Philemon)

Carson, Herbert M. *The Epistles of Paul to the Colossians and Philemon*, Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1960.

English, E. Schuyler. *Studies in the Epistles to the Colossians*. New York: Our Hope Press, 1944.

Erdman, Charles R. *Epistles of Paul to the Colossians and Philemon*. Philadel-phia: Westminister Press, 1933.

King, Guy. *Crossing the Border*, London: Marshall, Morgan and Scott, Ltd., 1957.

Lightfoot, J. B. *Saint Paul's Epistles to the Colossians and the Philemon*. Grand Rapids: Zondervan Publishing House, reprint of 1879 edition by Macmilan.

Maclaren, Alexander. *"Colossians and Philemon," The Expositor's Bible*. London: Hodder and Stoughton, 1888.

Meyer, H. A. W. *Critical and Exegetical Handbook ot the Epistles to the Philippians and Colossians*. New York: Funk and Wagnalls/ 1884.

Nicholson, W. R. *Popular Studies in Colossians: Oneness with Christ*. Grand Rapids: Kregel Publications, 1903.

Peake, Arthur S. *"Colossians", The Expositor's Greek Testament*. Vol. 3. Grand Rapids: Wm. B. Eerdmans Publishing Co., 1961.

Robertson, A. T. *Paul and the Intellectuals*. Nashville: Sunday School Board of the Southern Baptist Convention, 1928.


Rutherfurd, John. *St. Paul's Epistles to Colossae and Laodicea*. Edinburgh: T. & T. Clark, 1908.

Sturz, Richard. *Studies in Colossians*. Chicago: Moody Press, 1955.


Thomas, W. H. Griffith. *Studies in Colossians and Philemon*. Grand Rapids: Baker Book House. 1973.


Vine, W. E. *The Epistle to the Philippians and Colossians*. London: Oliphants, 1955.

# எருசலேம்




புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எருசலேம் நகரம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை ஊகித்து ஓவியர் தீட்டிய படம். ஏரோது அரசன் புதுப்பித்துக்கட்டிய தேவாலயம் சதுர வடிவமாக முன்பகுதியில் உள்ளதைக் காணலாம்.



பவுல் அப்போஸ்தலனின்
முதலாவது ஊழியப் பயணம்
அப். 12:24-14:28
SCALE OF MILES
0 50 100 200 300
வ
கருங்கடல்
தல்மத்தியா
இத்தாலியா
ஆட்ரியாட்டிக் கடல்
ரோம்
மூன்று சத்திரம்
அப்பியுபுரம்
புத்தேயோலி
மக்கெதோனியா
பிலிப்பி
அப்பொலோனியா
தெசலோனிக்கே
நெயாப்போலி
பெரோயா
துரோவா
கப்பதோக்கியா
பெர்கமு
சிமிர்னா
ஏஜியன்
கடல்
அதேனே
கொரிந்து
அகாயா
லீதியா
எபேசு
மிலேத்து
பிரிகியா
அந்தியோகியா
இக்கோனியா
பிசிதியா
வீஸ்திரா
பம்பிலியா
அத்தாலியா
பெர்கே
தொர்பை
லீசியா
மீரா
தர்சு
அந்தியோகியா
செலுக்கியா
சிசிலியா
மெலித்தா
கிரேத்து
பாப்போ
தீப்புரு
சாலமி
சிரியா
சீதோன்
தீரு
தமஸ்கு
செசரியா
எருசலேம்
மத்திய தரைக்கடல்
சிரேனே
அலைக்சாண்டியா
எகிப்து
யூதேயா
அரபு தேசம்
சுவிசேஷம் மக்கள் நடுவில் பிரிவினையை வருவித்தலும், கற்றுப்புறங்களில் அறிவித்தலும் அப். 14:4–6
பவுலின் பிரசங்கத்தை யூதரில் சிலர் ஏற்றுக் கொள்ளுதலும் சிலர் புறக்கணித்தலும் அப். 13:42,45
பவுல் சப்பாணியை குணமாக்குதல் அப். 14:8–12
பர்னபாவும் சவுலும் கர்த்தர் அழைத்த ஊழியத்திற்குப் புறப்படுதல் அப். 13:3,4
சுவிஷேசம் அறிவிக்கப்பட்டு அநேகர் சீஷராகுதல் அப். 14:21
ரோம அதிபதி முதலாளோர்க்கு கர்த்தருடைய உபதேசம் அறிவிக்கப்படுதல் (அப். 13:6–12)


பவுல் அப்போஸ்தலனின்
இரண்டாவது ஊழியப் பயணம்
அப். 15:36-18:22
SCALE OF MILES
0 50 100 200 300
வ
இத்தாலியா
ரோம்
மூன்று சத்திரம்
அப்பியுபுரம்
புத்தேயோலி
தல்மத்தியா
ஆட்ரியாட்டிக் கடல்
மக்கெதோனியா
பிலிப்பி
நெயாப்போலி
அப்பொலோனியா
தெசலோனிக்கே
பெரோயா
மூன்று ஓய்வுநாட்கள் யூதருக்குப் பிரசங்கித்தல் 17:1–3
லீதியாளின் மனமாற்றம் பவுல் சிறைப்பட்டு விடுதலையடைதல் 16:12–40
மக்கெதோனியா அழைப்பு 16:8,9
அநேகர் விசுவாசித்தார்கள் 17:10–15
அறியப்படாத தேவனை அறிவித்தல் 17:16–34
சீலா, தீமோத்தேயு வருகை, பவுல் யூதருக்குப் பிரசங்கித்தல் 18:1–18
தெசலோனிக்கே
அதேனே
கொரிந்து
அகாயா
சிசிலியா
மெலித்தா
கருங்கடல்
பித்தினியா, பொந்து
கலாத்தியா
கப்பதோக்கியா
துரோவா
மீசியா
பெர்கமு
சிமிர்னா
லீதியா
எபேசு
மிலேத்து
ஏஜியன் கடல்
பிரிகியா
அந்தியோகியா
லிகோனியா
இக்கோனியா
பிசிதியா
பம்பிலியா
பெர்கே
அத்தாலியா
லீசியா
மீரா
தெர்பை
லீஸ்திரா
எருசலேம் தீர்மானத்தை கைக்கொள்ளச் செய்தல் 16:4
பவுலும் சீலாவும் அந்தியோகியா விலிருந்து புறப்படுதல் 15:40
தீமோத்தேயுவைச் சந்தித்தல் 16:1–3
தர்சு
செலூக்கியா
சிசிலியா
அந்தியோகியா
சீடர்களைத் திடப்படுத்துதல் 18:22,23
சீப்புரு
சாலமி
பாப்போ
சீரியா
சீதோன்
தீரு
தமஸ்கு
சீடர்களை விசாரித்தல் 18:22
செசரியா
எருசலேம்
யூதேயா
அரபு தேசம்
மத்திய தரைக்கடல்
சிரேனே
அலைக்சாண்டியா
எகிப்து
ஜெபாலயத்தில் பிரசங்கித்தல் 18:19–21
சிரேத்தா

பவுல் அப்போஸ்தலனின்
மூன்றாவது ஊழியப் பயணம்
அப். 18:23-21:16
SCALE OF MILES
0 50 100 200 300
வ
கருங்கடல்
மத்திய தரைக்கடல்
எகிப்து
சிரியா
பாலஸ்தீனா
கலாத்தியா
பிரிகியா
கலாத்தியா, பொந்து
மக்கெதோனியா
அகாயா
ஆசியா
கிரேத்தா
சிசிலியா
மெலித்தா
இத்தாலியா
ரோம்
தல்மத்தியா
அட்ரியாட்டிக் கடல்
ஏஜியன் கடல்
பவுல் மக்கெதோனி யாவைச் சந்தித்தல் 20:1
துரோவாவுக்குப் புறப்படுதல் 20:6
வியாழன் பரிந்த வாலிபனை உயிர்ப்பித்தல் 20:8–12
திரளானோடு கலாசாலையில் பேசித்தல், திபிரானார் பற்றிய கலகம் 19:1–20:1
பவுல் கிரேக்க நாட்டை அடைதல் 20:2
பவுல் பட்டணத்தை விட்டுப் புறப்படுதல் 20:17–38
கலாத்தியா சபைகளைச் சந்தித்தல் 18:23
பவுல் பயணத்தைத் தொடங்குதல் 18:23
தீரு பட்டணத்தில் சீடர்களைச் சந்தித்தல் 21:4
சேசரியாவில் வீட்டில் தங்குதல் 21:8–16
சகோதரர்களால் எருசலேமில் வரவேற்கப்படுதல் 21:17
சகோதரர்களை வினவுதல் 21:7


பவுல் அப்போஸ்தலன்
கைதியாக ரோமாபுரிக்கு
மேற்கொண்ட பயணம்
அப். 21:26-28:31
SCALE OF MILES
0 50 100 200 300
வ
பவுல் வீட்டுக்காவலில் வைக்கப்படுதல் 28:16–31
இத்தாலியா
ரோம்
மூன்று சத்திரம்
அப்பியுபுரம்
பவுல் சகோதரர்களைக் கண்டு தைரியமடைதல் 28:15
புத்தேயோலி
சகோதரர்களுடன் ஏழு நாட்கள் தங்குதல் 28:14
ஒரு நாள் தங்குதல் 28:13
ரேகியு துறைமுகம்
சிசிலியா
சீரகூசா 28:12
மூன்று நாட்கள் தங்குதல் 28:12
மெலித்தா
கப்பல் சேதமடைதல், மூன்று மாதங்கள் தங்குதல் 28:1–11
யூரோக்கிலிதோன் கடுங்காற்றில் அகப்பட்ட இடம் 24:14,15
தல்மத்தியா
ஆட்ரியாட்டிக் கடல்
கருங்கடல்
மக்கெதோனியா
பிலிப்பி
நெயாப்போலி
அப்பொலோனியா
தெசலோனிக்கே
பெரோயா
துரோவா
பித்தினியா, பொந்து
கலாத்தியா
கப்பதோக்கியா
பெர்கமு
லிகோனியா
அந்தியோகியா
இக்கோனியா
லீஸ்திரா
ஏஜியன் கடல்
அதேனே
கொரிந்து
அகாயா
எபேசு
மிலேத்து
பிசிதியா
பம்பிலியா
அத்தாலியா
பெர்கே
தெர்பை
சிசிலியா
தர்சு
செலுக்கியா
அந்தியோகியா
லீசியா
மீரா
லசேய பட்டணம்
நல்ல துறைமுகம்
சல்மோனே
கிரேத்தா
கப்பல் மாறுதல் 27:6
பிரயாசத்துடன் கிளீது பட்டணத்திற்கு எதிரே வருதல் 27:7
பயணம் செய்வது ஆபத்து என்று பவுல் எச்சரித்தல் 27:8–10
சீப்புரு
சாலமி
பாப்போ
சிரியா
பவுல் நண்பர்களால் பராமரிப்படைதல் 27:3
சீதோன்
தீரு
பித்தலோமாய்
செசரியா
மத்திய தரைக்கடல்
சிரேனே
அலைக்சாண்டியா
எகிப்து
யூதர்களால் கலவரம் மூளுதல் பவுல் பதிலளித்தல் 21:27–23:32
எருசலேம்

## அத்தேனே பட்டணத்தில் பவுல் நற்செய்தியை அறிவித்த மார்ஸ்மேடை (அப். 17:16-34)



Courtesy: www.wikimedia.org